KAUTALYA'S ARTHASASTRA

A TAMIL TRANSLATION WITH NOTES

ANNAMALAI UNIVERSITY

1955

Price Rs. 17[illegible]

X
N55
112010

KAUTALYA'S ARTHASASTRA

A TAMIL TRANSLATION WITH NOTES

BY

Mahamahopadhyaya,
Pandithamani, M. KATHIRESA CHETTIAR

AND

Siromani, Vidwan, P. S. RAMANUJACHARI
Department of Tamil Research, Annamalai University

WITH A FOREWORD

BY

Diwan Bahadur T. M. NARAYANASWAMI PILLAI, M.A., B.L., M.L.C.,
Vice-Chancellor, Annamalai University.

ANNAMALAI UNIVERSITY

1955

கௌடலீயம் பொருணூல்

தமிழ் மொழிபெயர்ப்பு

(விளக்கவுரையுடன் கூடியது)

மொழிபெயர்ப்பாசிரியர்கள் :

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, முதுபெரும்புலவர்
மு. கதிரேசச்செட்டியாரவர்கள்
1—3 அதிகரணங்கள்.

சிரோமணி, வித்துவான், பி. ஸ்ரீ. இராமாநுஜாசாரி
4—15 அதிகரணங்கள்.

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தாரால்
வெளியிடப்பட்டது.

1955

அணிந்துரை

T. M. நாராயணசாமி பிள்ளையவர்கள், M.A., B.L., M.L.C.
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பண்டைய நாகரிகத்தின் நமது பாரதநாட்டின் பழைமைவாய்ந்த நூல்களுள் கௌடலியர் இயற்றிய அர்த்தசாஸ்திரம் என்னும் வடமொழிப் பனுவல் தனிச் சிறப்புடையதொரு நூலாகும். அர்த்த சாஸ்திரத்தின் ஆசிரியரைப்பற்றியும் அவர் அந்நூலை இயற்றிய காலத்தைப்பற்றியும் ஆராய்ச்சியாளருள்ளும் சரித்திர ஆசிரியருள்ளும் அபிப்பிராய பேதங்கள் உள்ளன. நாம் இப்போது அவற்றை ஆராயத் தேவை இல்லை. எனினும் இந்நூல் மிகப் பழைமையானதொரு நூல் என்பதிலோ அல்லது இதன் ஆசிரியர் கசடறக் கற்றுக் கலைகளில் வல்லதொரு கவின்பெறு மேதை என்பதிலோ யாருக்கும் ஐயம் நிகழாது என்பதுமட்டும் உறுதி. அர்த்தசாஸ்திரத்தில் இடையிடையே வெளியிடப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் பல அனைவரது அங்கீகாரத்துக்கும் பாத்திரமில்லாமல் இருக்கலாம். ஆனால் இக் காரணம்பற்றி மட்டும் இந்நூலின் சிறப்பும் உயர்வும் சிறிதும் குறைந்துவிடா என்பதில் ஐயமில்லை. இந் நூலாசிரியரின் காலத்தையும் அவரது காலத்தின் கலை முதலியவற்றின் வளர்ச்சி நிலையையும் அடிப்படையாகக்கொண்டு இந் நூலை ஆராய்ந்து மதிப்பிடுவதே அறிவுடையோரின் கடமையாகும்.

சுமார் 2400 வருஷங்களுக்கு முன்பே இந்த அரசியல் ஞானத்தையும், சமூகப் பொருளாதார அறிவையும் அற்புதமானதொரு வழியில் இவர் எடுத்துரைத்திருக்கிறார். Politics, Political Philosophy, Economics, State Craft, Diplomacy என்று ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய அரசியல் நூல், அரசியல் தத்துவம், பொருளாதார நூல், இராஜதந்திரம், பிறநாட்டுடன் உறவாடுதல் என்னுமித் துறைகளில் அரிய பெரிய விஷயங்களைப் புதிதாக ஆழ்ந்த கருத்துடன் இந்நூல் எடுத்துக் காட்டியிருக்கிறது. நந்தர்களை முறியடித்தும் சீர்குலைந்திருந்த மகதநாட்டை ஒருமைப்படுத்திச் சந்திரகுப்தனைச் சிங்காதனத்திலேற்றிவைத்தும் மௌரிய சாம்ராஜ்யத்திற்கே காரணகர்த்தாவாக இருந்தவர் இக் கௌடலியராவர். அந்த மௌரிய சாம்ராஜ்ய

மானது இந்திய சரித்திரத்திலேயே ஒரு தனிச்சிறப்புப் பெற்றிருந்தது. அந்த சாம்ராஜ்ய காலத்தில்தான் இந்தியக் கலைகளும், இந்திய நாகரிகங்களும் உன்னதமான நிலையை அடைந்திருந்தன. அந்த உன்னதமான நிலைக்கெல்லாம் வித்திட்டவர் இக் கௌடலியரே ஆவார். சரித்திரப் போக்கில் பார்த்தால் இவருடைய நூல் இந்திய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் சிறந்ததொரு நூலாகவும் விளங்குகிறது.

இத்தகையதொரு இணையற்ற நூலைத்தமிழ் நாட்டவரும் படித்துணர இதை மொழிபெயர்த்தல் மிகவும் வேண்டப்படுவதொன்றே. காலஞ்சென்ற மகாமகோபாத்யாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் இப் பணியை ஆற்றத் தாமே முன்வந்தார்கள். பண்டிதமணியவர்கள் தமிழ், வடமொழி எனும் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற விற்பன்னராக விளங்கியவர். கல்வி, கேள்வி, அறிவு முதலிய செல்வத்தைப்பெற்று மாசறு காட்சியின் மாண்புடையவராகத் திகழ்ந்த அப் பெரியார் ஆராய்ச்சித்திறனும் அளவின்றிப் பெற்றிருந்தார். வெகு நாட்களுக்கு முன்பே வடமொழி நூல்களாகிய **சுக்கிர நீதியையும் மிருச்சகடிகத்தையும்** தமிழாக்கித் தந்து தம் புகழ் நிறுவிய அப்பெரியார் அர்த்தசாஸ்திரத்தையும் மொழிபெயர்க்க முன்வந்ததுகண்டு நாம் அதை வரவேற்றோம். ஆனால் அவர்களது முழுத்தொண்டினையும் தமிழ்த்தாய் அடைந்து மகிழ இயலாமல்போய்விட்டது. கௌடலீயத்தின் முதல் மூன்று அதிகரணங்களே அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டன. அதற்கு மேல் அவரது உடல் நலக் குறைவால் அப்பணி தடைப்பட்டது.

பின்னர், அவர்களுடனேயே அவருக்கு உதவியாயிருந்த இச் சர்வகலாசாலை ஆசிரியர் ஸம்ஸ்கிருத சிரோமணி, தமிழ் வித்துவான், P. S. இராமானுஜாசாரி அவர்கள், பண்டிதமணியவர்கள் போக்கிலேயே நான்காம் அதிகரணம்முதல் எஞ்சிய அதிகரணங்களையும் மொழிபெயர்த்துப் பூர்த்தி செய்து இந்த முழு நூலையும் வெளிவரும்படி உலகத்திற்கு உதவி செய்திருக்கிறார். இராமானுஜாசாரியாரவர்கள் வடமொழியையும், தமிழையும் நன்கு பயின்றவர்; நல்ல குணம் வாய்ந்தவர்; இடையறாது உழைப்பவர்; தக்கவரால் வழிகாட்டப் பெற்றவர். இவரது மொழிபெயர்ப்பு, பண்டிதமணியவர்களது மொழிபெயர்ப்பின் பண்புடையது என்பதை இந் நூலைப் படித்தவர் உணர்வது ஒருதலை. இவருக்கு உதவியாயிருந்தவர் குணத்திலும், படிப்பிலும், உழைப்பிலும் குன்றென உயர்ந்த வித்துவான் க. வெள்ளைவாரணனார் ஆவர்.

காலஞ்சென்ற பண்டிதமணி, இராமானுஜாசாரியார், வெள்ளை வாரணன் என்ற இம்மூவர்க்கும் பொதுமக்களின் நன்றி உரியதாகுக. ஆட்சிநூல் துறையில் மூன்று நூல்களை உலகில் முக்கியமாகச் சொல்லலாம். அவையாவன :– ஸம்ஸ்கிருதத்தில் அர்த்த சாஸ்திரம், தமிழில் திருக்குறள் (இறைமாட்சி முதலிய துறைகள்), இத்தாலிய மொழியில் Machiavalli-யின் Prince என்பவையாம். சில பாகங்களில் Prince-க்கும் இந்தக் கௌடலியரின் அர்த்த சாஸ்திரத்துக்கும் ஒற்றுமை இருக்கிறது. குறளுக்கும் அர்த்த சாஸ்திரத்துக்கும் இடையே ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் இருக்கின்றன. இந்த ஒற்றுமைகளை ஆங்காங்கு பண்டிதமணி அவர்களும், ஆச்சாரியார் அவர்களும் எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். இப்பர்கம் நமக்கு நன்றாகப் பயன் தரும் என்பதில் சந்தேகமில்லை. அரசன் எப்படிக் குடிகளைக் காக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது வியக்கத்தக்கதொன்றும். தற்காலத்தில் ஒரு Welfare State-க்குள்ள கடமைகளையெல்லாம் அக்காலத்திலேயே அரசனுக்குரியனவாக, விளக்கமாக விரித்துரைத்திருக்கின்றார் கௌடலியர். முதல் நூல் ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பு ஆசிரியர்களுக்கும் நமது நன்றி உரியதாகுக. தமிழ் நாட்டு அறிஞர் இந்நூலைப் படித்துப் பயன் துய்ப்பாராக!

அண்ணாமலைநகர்
7—10—1955

T. M. நாராயணசாமி பிள்ளை.

முகவுரை

(பேராசிரியர், வித்துவான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, M A., B.L.,
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்.)

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது திருவள்ளுவர் காலத்திற்கு முன்னரே தமிழ்நாட்டில் வழங்கிவரும் பழமொழியாகும். இப்பழமொழி, நாட்டினை ஆட்சிபுரியும் வேந்தனுக்கும் அவன் ஆணை வழி நடக்கும் குடிமக்களுக்கும் பொதுவாக உரியது. இப்பழமொழிப் பொருளை நன்குணர்ந்த தமிழ்மக்கள், தாங்களும் தங்களைக் காக்கும் கடமைபூண்ட அரசாங்கமும் பொருளை மேன்மேலும் பெற்றுச் சிறத்தற்குரிய வழிதுறைகளை இடைவிடாது ஆராய்ந்து அரசியல் ஆணைக்கு அடங்கியிருந்து மக்கள் அறநெறி தவறாது பொருளீட்டும் நெறி முறையினை விளக்கி நூல் இயற்றியுள்ளார்கள். இங்ஙனம் இயற்றப்பெற்ற நூலைப் பொருள்புரிநூல் என்ற பெயராற் பெருங் கதையாசிரியர் பாராட்டிப் போற்றியுள்ளார். இவ்வாறு பொருளீட்டும் வழிதுறைகளைக் குறித்துத் தமிழ்முன்னோர் ஆராய்ந்து இயற்றிய பொருள் நூல் இடைக்காலத்தில் அழிந்துபோனாலுங்கூட, மக்கள் அறத்தினாற் பொருளீட்டி அப்பொருளால் இன்பம் நுகர்தற் குரிய வாழ்க்கைமுறையினை அறிவுறுத்தும் முப்பாலாகிய திருக்குறள் நம் தமிழ்முன்னோரது பொருள்புரிநூற் புலமையை உலகத்தார்க்கு விளங்க அறிவுறுத்துவதாக அமைந்துள்ளமை மகிழ்ச்சிக் குரியதாம்.

அரசாங்கத்துக்குப் பொருள்வரும் வழிதுறைகளை மேலும் மேலும் உண்டாக்கலும், அவ்வழிகளால் வந்த பொருள்களை யெல்லாம் ஒருசேரத் தொகுத்தலும், தொகுத்த பொருள்களைப் பிறர் கொள்ளாமற் போற்றிக் காத்தலும், அங்ஙனம் காத்த பொருள்களைத் தன் நாட்டுமக்களுக்குப் பயன்படும் வண்ணம் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் செலவு செய்தலும் வல்லவனே அரசனவான் எனத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். ஆகவே, அறத்தின் வழியாற் பொருளையீட்டி, அப்பொருளைக்கொண்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ்தற்குரிய நெறிமுறைகளை அரசியல் ஆணையோடு தொடர்புபடுத்தி அறிவுறுத்தும் நூலாகப் பண்டைநாளிற் பொருள்புரிநூல் இயற்றப் பெற்றிருந்தமை நன்கு புலனாகின்றது.

தமிழ்நாட்டுப் பொருள்நூல் அமைப்பினை உணர்ந்து கொள்ளுதற்கு இப்பொழுது கிடைத்துள்ள சங்க இலக்கியங்களும் திருக்குறளும் ஓரளவே துணைசெய்வன. இந்நிலையில் வடநாட்டு மக்களிடையே வழங்கிய பொருள் நூற் பொருளை யுணர்ந்து கொண்டால் அக்

காலத்தில் வடநாட்டில் அமைந்த ஆட்சிமுறையினையும் சமூக அமைப்பினையும் ஒருவாறு உய்த்துணர்ந்துகொள்ளுதற்கு வசதியா கும் என்ற நோக்கத்தினாலும் வடநாட்டில் வழங்கிய அரசியல் அமைப்புக்கும், நம் தமிழ்வேந்தர் அரசியலமைப்புக்கும் இடையே அமைந்த ஒற்றுமைவேற்றுமைகளை உணர்தற்கு வடமொழியில் அமைந்த பொருள்நூற் பயிற்சி ஓரளவு துணை செய்வதாகும் என்ற கருத்தினாலும் வடமொழியிற் சிறப்புடையதாகப் போற்றப் பெற்று வரும் கௌடலீய அர்த்தசாஸ்திரத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்மொழிவாயிலாக மொழிபெயர்த்து வெளியிடத் துணிந்தார்கள். கடைச் சங்க நாளில் வாழ்ந்த தமிழ் மக்கள் வடமொழியாளர் இயற்றிய அர்த்த சாஸ்திரங்களையும் நன்கு பயின்று அந்நூல்களிலே காணப்படும் ஒற்றுமைவேற்றுமை களைத் தம் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். தேவர், கள்ளுண்ணாதவர். அவரது வாழ்க்கைமுறையை யொட்டிப் பொருள் நூல் செய்தவர் தேவகுருவாகிய வியாழன். அசுரர், கள்ளுண்போர். அவரது வாழ்க்கை முறையை யொட்டிப் பொருள் நூலியற்றியவர் அசுரகுருவாகிய வெள்ளி. இச்செய்தியினை,

> "நறவினை வரைந்தோர்க்கும் வரையார்க்கும் அவையெடுத்து
> அறவினை யின்புறூஉம் அந்தணர் இருவரும்
> திறம்வேறு செய்தியின் நூல்நெறி"

எனவரும் மருதக்கலி 35-ஆம் பாடற் பகுதியால் நன்குணரலாம்.

இவ்விருவர் செய்த பொருள் நூல்களையும் இவர்க்குப் பின் வந்த ஆசிரியர்கள்கொண்ட கொள்கைகளையும் பகுத்து ஆராய்ந்து பொருள் நூல் இயற்றியவர் சந்திரகுப்தன் ஆட்சிக் காலத்து அவனுக்கு அமைச்சராய் அரசியல் நுட்பத்திற் சிறந்து விளங்கிய சாணக்கிய ராகிய கௌடலீயர் ஆவர். அவரால் இயற்றப்பெற்ற பொருள் நூல் கௌடலீயம் என்னும் பெயருடையதாகும். இந்நூல் வட மொழியில் எழுதப்பட்டிருப்பினும் தமிழ் நாட்டுடன் மிகவும் நெருங் கிய தொடர்புடையதென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதன் பிரதி தமிழ் நாட்டில் தான் கிடைத்தது. இதனைத் தமிழில் மொழி பெயர்த்தற்கு எண்ணிய நம் பல்கலைக் கழகத்தார் இதனை மொழி பெயர்க்குந் திறமுடையார் செந்தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமைப் பெருஞ் செல்வராய்த் திகழும் மகாமகோபாத்தியாய பண் டிதமணி முதுபெரும் புலவர் திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களே யெனத் தெளிந்து, இம் மொழிபெயர்ப்புப் பணியை அவர்கள்பால்

ஒப்படைத்தார்கள். நம் பண்டிதமணியவர்கள் சுக்கிரநீதி வடமொழி நூலையும் மிருச்ச கடிகம் எனும் பெயருடைய வடமொழி நாடகத்தையும் செவ்விய தமிழ் நடையில் சுவைபெற மொழிபெயர்த்து வெளியிட்ட மொழிபெயர்ப்பினைக் கற்று மகிழ்ந்த தமிழ் மக்கள் அவர்களால் மொழி பெயர்க்கப் பெற்ற கௌடலீயமாகிய பொருள் நூலையும் விரும்பிப் பயில்வார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இந்நூலின் மொழிபெயர்ப்புப் பணியினை நம் பண்டிதமணியவர்கள், வித்துவான் திரு P.V. சோமசுந்தரம், சிரோமணி திரு. S. இராசகோபால சாஸ்திரி என்னுமிருவரையும் உதவியாளராகக் கொண்டு 1942-ஆம் ஆண்டில் தொடங்கி நிகழ்த்தி வந்தார்கள். 1944-ஜூலை மாதத்தில் திரு. S. இராசகோபால சாஸ்திரி விலகிக்கொண்டமையால், வடமொழி உதவியாளராக வித்துவான், சிரோமணி திரு. P. S. இராமாநுஜாச்சாரி நியமிக்கப்பெற்றார். தமிழ் உதவியாளராக இருந்த வித்துவான் திரு. P. V. சோமசுந்தரம் அவர்களும் 1945-ல் தம் சொந்த அலுவல் கருதி விலகிக்கொண்டார். இந்நிலையில், வடமொழி உதவியாளரான திரு. P. S. இராமாநுஜாச்சாரியை மட்டும் துணையாகக்கொண்டு கௌடலீயத்தின் முதற் பகுதியையும் இரண்டாம் பகுதியிற் சில அத்தியாயங்களையும் பண்டிதமணியவர்கள் தெளிவும் இனிமையும் அமைந்த தமிழ்நடையில் மொழிபெயர்த்து உதவினார்கள். இந்நூலில் மூன்று அதிகரணங்களை மட்டும் மொழிபெயர்த்து முடித்த நிலையில், பண்டிதமணியவர்கள் உடல்நலங் குன்றியமை காரணமாக, 1946 ஆகஸ்டில் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற வேண்டியது அவசியமாயிற்று. அவ்வாறு ஓய்வு பெறும்போது, தம்முடன் கூடவிருந்து மொழிபெயர்ப்புப் பணியில் உதவி வந்த P. S. இராமாநுஜாச்சாரியிடம் எஞ்சிய அதிகரணங்களை மொழிபெயர்க்கும் பணியை ஒப்படைக்கலாம் என்று பல்கலைக் கழகத்தாருக்குத் தெரிவித்திருந்தபடியால் பல்கலைக் கழகத்தாரும் அதற்கு உடன்பட்டனர். எனவே, நான்காம் அதிகரணம் முதல் இந்நூல் முடியவுள்ள எஞ்சிய 12 அதிகரணங்களை மொழிபெயர்த்தவர் நம் பண்டிதமணியவர்களுடன் உடனிருந்து இம்மொழிபெயர்ப்புத் துறையில் பழக்கம் பெற்றிருந்த திரு. P. S. இராமாநுஜாச்சாரியவர்களாவர். திரு. பண்டிதமணியவர்களின் மொழிபெயர்ப்பினை அடியொற்றியே இந்நூலின் மற்ற அதிகரணங்களும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலில் அதிகரணம் பிரகரணம் அத்தியாயம் என்ற பகுதிகளின் பெயர்களாக அமைந்துள்ள குறியீட்டுச் சொற்கள் யாவும் திரு. பண்டிதமணியவர்களால்

அமைத்துக்கொள்ளப்பட்டனவாதலின் இந்நூலின் பிற்பகுதியும் அவர்கள் மொழிபெயர்ப்பென்றே சொல்லத்தக்க வகையில் அமைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய தொன்றும்.

P. S. இராமாநுஜாச்சாரியால் மொழிபெயர்க்கப்பட்ட 12 அதிகரணங்களையும், அவற்றிற்குரிய விளக்கவுரைப் பகுதிகளையும் தொடக்கம் முதல் முடிவுவரை படித்துப் பார்த்துத் தமிழ் நடையைச் சீர்மை செய்து, வேண்டிய திருத்தங்களை ஏற்ற முறையில் அமைத்துத்தந்து, விளக்கவுரைப் பகுதியில் திருக்குறள் முதலிய பழந்தமிழ் நூல்களிலுள்ள ஒப்புமைப் பகுதியைச் சேர்த்துக் கொடுத்து அவ்வத்தியாயங்களின் மொழி பெயர்ப்புப் பகுதியையும் விளக்கவுரைப் பகுதியையும் திகழுற அமைத்துதவியவர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனவார்.

கோ. சுப்பிரமணிய பிள்ளை.

"கௌடலீயம்" என்னும் பொருள் நூலின் முதற் பகுதியின் * முன்னுரை

கௌடலீயம் என்ற பொருணூலை நன்கு ஆராய்ந்து புதுக்கி மிகவும் தகுதியான முறையில் சிறந்த வனப்புறச் செய்து யாவரும் எளிதில் உணரும் வண்ணம் நெடுங்காலம் தன்னிடத்து வைத்து ஒழுங்கு செய்தமைத்தமையால் இவ் "வநந்தசயன" வடமொழி நூல் வெளியீட்டுநிலையம் திருவருட்பாங்கால் வளர்ச்சியடைந்து வருகின்றது.

பொருணூலாராய்ச்சியின் இன்றியமையாமை

மைசூர் நகரத்திலுள்ள நூல் நிலையத்தில் சாமா சாஸ்திரி யென்பார் சோதகராகவிருக்கும்பொழுது அங்குள்ள கையெழுத்துப்படியொன்றை ஆதாரமாகக் கொண்டு 1909-ஆம் ஆண்டில் கௌடலீயம் என்ற நூல் வெளியிடப்பட்டது. இவ்வரிய நூல் இதற்கு முன் வெளிவராததொன்றெனக் கருதி அவாவுடன் ஆராய்ந்தறியுங்கால் பாடங்களிற் பல வழுக்கள் காணப்பட்டன. மேலும் முதல் வாக்கியங்களிற் சேரத்தக்க சொற்களை பின் வாக்கியங்களின் சேர்த்தலும், பின் சேர்த்தற்குரியவற்றை முன் சேர்த்தலும் ஆகிய இவை போன்ற பல குற்றங்கள் காணப்பட்டன. இந்நூல் பதவாக்கியங்கள் குற்றமற்ற நிலையில் சீர்பெற அமைந்திருப்பினும் பொருட்சிறப்பாற் பெருமுயற்சி படைத்த புலவனாலும் அறிதற்கரியது; எனிற் குறையிருப்பிற் கூறுவதென்னை? இப்பொருணூலின் பல படிகளைச் சேகரித்து மூலத்தை ஒழுங்குபெற ஆராய்ந்து வெளியிட்டாலன்றி இந் நீதிநூலின் உண்மையுருவம் நன்கு புலப்படாதென்று எனக்கு ஓரெண்ணம் தோன்றியது.

புதிய படிகளைத் தொகுத்தல்

பின்னர் இந்நூலின் படிகளைப் பெரிதும் முயன்று தேடிய எனக்கு இந்நாட்டைச் சார்ந்த திருப்பாப்பூரிலுள்ள துறவிகளின் மடத்தில் பழமையிற் சிறந்தனவும் உயர்ந்தனவுமாகிய பலவகை நூல்களைக் கொண்டு திகழும் நூல் நிலையத்தினின்றும் மலையாள எழுத்தில் தெளிவுற வரையப்பட்டு முழுதும் அடங்கிய ஓலைப்படிகள் கிடைத்தன. அவற்றுள் ஒன்று முந்நூறு நானூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகவும் முறிந்த பழைய ஏடுகள் உள்ளதாகவும் காணப்

---

* இது, முதனூலில் T. கணபதி சாஸ்திரியாரால் எழுதப்பட்ட முன்னுரையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

பட்டது. அது "அ" என்ற பெயருள்ளது. மற்றது சற்றேறக் குறைய நூறாண்டுகளை யடுத்து எழுதப்பட்டதாகவும் உறுதியான ஏடுகளுடன் கூடியதாகவும் காணப்பட்டது. அது "ஆ" என்னும் பெயருடையது. சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல் நிலையத்தில் இரண்டு படிகள் கிடைத்தன; அவற்றுள் ஒன்று இந் நாட்டைச் சார்ந்த இடப்பள்ளி யரண்மனையிலுள்ள மலையாள எழுத்தில் வரையப்பட்ட ஏட்டுப்படியிலிருந்து பெரும்பாலும் பிழை யற முற்றும் வரையப்பட்டது. அது "இ" என்னும் பெயருடையது. மற்றது தெலுங்கெழுத்துப் புத்தகத்தினின்றும் அவ்வெழுத் தாலேயே படி யெடுக்கப்பட்டது; பிழை நிரம்பியது. கண்டக சோதனுதிகரணம் ஏழாம் பிரகரணம்முதலுள்ளது. அது "ஈ" என்னும் பெயருடையது. இந்த "இ, ஈ" என்னும் புத்தகங்களி னின்றும் எல்லாப் பாட பேதங்களும் தனித்தனியே எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. கொச்சி சமஸ்தானத்தின் நூல் நிலையத்தில் ஐந்தாவதாக ஒரு படி கிடைத்தது. முதற் புத்தகத்திற்கு முற்பட்ட தாகவும் எழுத்து உருவம் அளவு முதலியன ஒத்ததாகவும் ஒருவர் கையால் எழுதப்பட்டதாகவும் பெரும்பாலும் முறிந்த ஏடுகளே நிறைந்ததாகவும் எடுத்துப் பிரித்துப் பார்ப்பதற்கும் தகுதியற்ற தாகவும் இருந்தமையின் அதனை விடுக்க நேர்ந்தது.

உரையுடன் வெளியிட வேண்டியதன் இன்றியமையாமை

இத்தகைய பல படிகளைக் கொண்டு ஆராயப் புகுந்தபோது மைசூர் நூல் நிலையத்தின் பரிசோதகரொருவர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார் என்னும் செய்தியை யான் கேள்வியுற்றேன். அம் மொழிபெயர்ப்பு என் முயற்சிக்குச் சிறிது உதவியாக அமையுமென்று கருதி அதனை வரவழைத்தேன். அதன் முகவுரையில் "இது மூலத்திற்குச் சரியான மொழி பெயர்ப்பன்று" என அம்மொழி பெயர்ப்பாளரே கூறியுள்ளார். புத்தகத்தின் மூல பாடங்களிலும் வரையப்பட்ட பல ஐயக் குறிகள் காணப் பட்டன. ஐயக் குறிப்பில்லாத பலவிடங்களில் பொருள் நன்கு விளக்கப்படாமையும் வேறுபாடுங் காணப்பட்டன. உதாரண மாக அவற்றுள் ஒன்றை ஈண்டெடுத்துக் கூறுவேன், முதலதி கரணம் ஏழாம் அத்தியாயத்தில் "மர்யாதாம் ஸ்தாபயேத்—ஆசார் யாந் அமாத்தியாந்வா" என்ற வாக்கியம் காணப்படுகிறது. இதனல் அரசியல் அறம் பல கூறி அவற்றுள் மிகச் சிறந்த நல்லறமொன்று இங்குக் கூறப்படுகின்றது. அஃதாவது:—பிறர் வயப்படாத பெரியா

ரொருவர் தீய வழியிற் செல்லும் அரசனைத் தடுத்து நல்வழிப்படுத்து வாராயின் அவரை அரசன் தனக்குரிய நியாமகராகக் கொள்ளல் வேண்டும் என்பது. இவ்விடத்தில் அரசன் உலகை அடக்கியாளும் பெருந்திறலமைந்தவனாயினும் தன்னை அடக்கி நல்வழிப்படுத்தும் பெரியாரை நியாமகராகக் கொள்ளல்வேண்டும் என்னும் இவ்வாழ்ந்த உட்கருத்து நூலாசிரியரால் வெளிப்பட்டுள்ளது. ஆங்கில மொழி பெயர்ப்பாளர் இவ்வரிய பொருளுங் கூறவில்லை. "ஆசாரியர்களை யும் அமைச்சர்களையும் பூசித்தல் வேண்டும்" என மாறுபடவும் கூறி யுள்ளார். இப்பொருள் எச்சொல்லால் எவ்வுரையினுற் கொள்ளப் பட்டதென யான் அறிகிலேன். "மர்யாதா" என்ற சொற்குக் கன்னடம் தமிழ் தெலுங்கு முதலிய மொழிகளின் வழக்கிற்கிணங்க பகுமானம் எனப் பொருள் கொண்டு வடமொழியினும் இவ்வாறு உரை செய்யின் மொழி பெயர்ப்பினையே தக்க சான்றாகக் கொள்ளும் பல மாணவரும் "மர்யாதா" என்ற சொற்பொருளை உணராதவ ராகவும், நூலாசிரியரின் உட்கருத்தின் பெருமை விளங்காதவராக வும் ஆவர். இத்தகைய வழுக்கள் இதிற் பல காணலாம். கௌட லீயமெனும் இப்பொருணூலின் மூல ஆராய்ச்சிமட்டும் போதாதென் றும் முற்கூறியபடி மொழிபெயர்ப்பாலமைந்த பொருளுணர்ச்சியி னின்றும் உண்மைப் பொருள் புலனாகவேண்டும் என்றும் கருதியே சிறந்த உரையுடன் வெளியிடல் வேண்டுமென்றெண்ணினேன்.

பழய உரைப்பகுதிகள் கிடைத்தமை

இப்பொருணூலின் உரைநூல் எங்ஙனம் கிடைக்குமெனத் தேடுங்கால் ஸ்ரீ பட்டஸ்வாமியால் இயற்றப்பட்டதும் ஆழ்ந்த கருத் தமைந்ததும் இரண்டாம் அதிகரணம் எட்டாம் அத்தியாய முதல் அவ்வதிகரண முடிவு வரையுள்ளதுமாகிய "பிரதி பத பஞ்சிகை" என்னும் உரைநூலொன்று சென்னை நூல்நிலையத்தினின்றும் கிடைத்தது. இரண்டாவது மாதவயஜ்வா என்பவரால் இயற்றப் பெற்றதும் நய சந்திரிகை எனப் பெயரியதும் ஏழாம் அதிகரணம் ஏழாம் அத்தியாய முதல் பன்னிரண்டாம் அதிகரணம் நான்காம் அத்தியாயத்திற் சில பாகம் வரையுள்ளதுமான ஒருரை நூல் கிடைத் தது. இவ்விரண்டு உரைகளும் கேரளதேயத்திற் கிடைத்த பனை யோலைப் படியினின்றும் எழுதப்பட்டன. வேறு படிகளைக்கொண்டும் திருத்தவியலாத வழுக்கள் மிகுதியாகக் காணப்பட்டன. இவ் வுரைப் புத்தகங்களில் மூலபாடங்களும் மிகுதியான பாகம் சிதைந் தனவாகக் காணப்பட்டன. இந்நிலையில் வேறு புத்தகமும் கிடைப் பது அரிதெனக்கருதித் தேடாதொழிந்து தலையிடைகடையிலா இவ்

வுரை நூலை வெளியிடுதல் பயன்பெறுமெனக் கருதி அவற்றை விடுத்தேன். பெருமுயற்சி செய்து அவற்றை ஆராய்ந்ததில் அவ்வம் மூல பாடப்பொருள்களை அறிதற்கு அவை உதவியாக இருந்தன. மேலும் இந்நகரத்துள்ள அரசாங்க நூல் நிலையத்தில் இருநூறு மூந்நூருண்டுகட்கு முற்பட்டதும் பட்டஸ்வாமியாரின் உரையினைப் பின்பற்றியதுமாகிய மலையாள மொழியில் இயற்றப்பட்ட ஒருரை நூற்படி ஏழாமதிகரணம் வரை கிடைத்தது. இப் படிக்கு நேரான படி சென்னை நூனிலையத்தும் உள்ளது இது பல பாகங்களில் பிழையமைந்தும் சில வாக்கியங்கள் இல்லாமலும் ஐந்தாறத்தியாயங்கள் இல்லாமலும் இருப்பினும் மூலப்பொருளை அறியவும் மூலத்தை உறுதி செய்யவும் உதவியது. இவ்வளவிலேனும் பொருள்களை அறிதற்குக் கருவி கிடைத்தமை இறைவன் திருவருள் ஆகும். இப் பெரும் பொருணூலில் வழக்கறிந்த பெரியார் மாட்டுத் தெளியற்பாலனவாய பொருள் பலவுள; இத்தகைய கருவிகளை யான் எய்தாதிருப்பின் சிற்சில இடங்களில் எனது அறியாமை நிலைபெற்றிருக்கும்.

புத்துரை வரைந்தமை

இவ்விதம் பல மூல புத்தகங்களும் உரைகளும் கிடைத்தமையின் நீண்டகாலப் பெருமுயற்சியால் இப் பொருணூலின் உண்மைப் பொருளை உணர்ந்தேன். அறிய விரும்புவார் பொருட்டு வெளியிட வேண்டிய இதனைப் பழமையான உரைகளின் வாக்கியங்கள் சில இல்லாத இடங்களில் அவ்வாக்கியங்களைப் பின்பற்றிய என் சொந்த வாக்கியங்களைச் சேர்த்து உரையெழுதி முடித்தேன். இத்தகைய நன்முயற்சி இனிது முடிவடைதற்கு ஸ்ரீபத்மநாபஸ்வாமி கருணைக்கு நிகரான எனது புரவலரும் வஞ்சி நாட்டரசருமான ஸ்ரீ மூலராம வர்ம மஹாராஜா அவர்களது கருணையே முதற் காரணமாக நிகழ்ந்தமையால் அன்னார் திருநாமமே இப் பேருரைக்குத் தக்கதெனக் கருதி "ஸ்ரீ மூலம்" என உரைக்குப் பெயரிட்டேன். ஸ்ரீ மூலம் என்பது செல்வத்திற்குக் காரணம் என்னும் பொருளினதாம். நம் அரசர் மூல நாளிற் பிறந்தமையால் அந்த ஸ்ரீ மூலம் என்னும் பெயரால் உலகத்தில் விளங்குகின்றார். அத்தகைய இவ்வுரையோடு இப் பொருணூலை இப்பொழுது அச்சிடத் தொடங்குகின்றேன்.

புதிய பதிப்பின் சிறப்பியல்.

இந்நூலை நன்கு திருத்தி யமைத்த பிறகு இதன் உருவம் புத்துருவமாகவே தோன்றியது. இதிற் பல படிகளைக் கொண்டு பாட

பேதங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் புத்தகத்திற் காணப் படாத பல சிறந்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதிற்கண்ட பல் பிழைகள் விலக்கப்பட்டன. சில படிகளிற் காணப்பட்ட பொருணயமுள்ள பாடபேதங்களும் உரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய முழு வரலாறும் படிப்பவர்க்குப் புலனுகுமென எண்ணியே இவண் விரிக்கவில்லை.

பகுதிகளின் பாகுபாடு

இப்பொருணூல் பெருநூலாதலின் மூன்று பாகங்களாக வெளியிடல் நலமெனக் கருதி முதற்பாகம் வெளியிடப்பட்டது. மற்றிருபாகமும் நிரலே கூடிய விரைவில் வெளிவரும். பதினைந்து அதிகரணங்களடங்கிய இந்நூலின் முதற்பகுதியில் இரண்டு அதிகரணங்கள் உள்ளன. இரண்டாம் பகுதியில் ஆறு அதிகரணங்களும் மூன்ரும் பகுதியில் ஏழு அதிகரணங்களும் அடக்கி அமைக்கப்படும். அவற்றுள் முதலாவதான வைநயிகாதிகரணத்தில் இருபத்தொரு அத்தியாயங்கள் உள்ளன. இரண்டாவதான அத்தியக்ஷ ப்ரசாரம் என்னும் அதிகரணத்தில் முப்பத்தாறத்தியாயங்கள் உள்ளன. இவற்றின் அமைந்த பொருள்களின் விளக்கம் பிரகரணப் பொருளடக்கத்திற் காணலாம்.

கௌடல்யர் முதலிய பெயர்கள்

பெருமைசால் இந்நூலாசிரியர்க்குக் கௌடல்யர், சாணக்கியர், விஷ்ணுகுப்தர் என இம்மூன்று திருப்பெயர்களும் விளங்குகின்றன. இவர் குடலர் எனும் முனிவர்குலத் துதித்தலின் அம்மரபு தோன்ற "கௌடல்யர் எனவும், சணகமென்னும் நாட்டிற் பிறந்தமையால் இடந்தோன்றச் சாணக்கியர் எனவும் பிரசித்தராயினர். விஷ்ணு குப்தர் என்பது விஷ்ணுவினுற் காக்கப்பட்டவர் என்னும் பொருளில் விஷ்ணுபக்தராகிய அவர் தந்தையாரால் நாமகரண ஸம்ஸ்காரத் தால் இட்ட பெயராகும். ஆதலினன்றே காமந்தகனும் தனது நீதிசாரசயமங்கலத்தில் "ஸம்ஸ்காரத்தால் விஷ்ணுகுப்தர் என்றும் மரபினுற் கௌடல்யர் என்றும் இடத்தாற் சாணக்கியர் என்றும் பெயர் வாய்ந்ததாகக் கூறியுள்ளார். "கௌடில்யர்" என இடையில் இகரமுள்ள பெயர் பிழை. "ஷ்யஞ்" என்ற விகுதிக்குப் பகுதியான குடிலசப்தம் கோத்திரார்த்தமாகிய மரபு தோற்றும் இருடிவாசகமாகவும், வஞ்சகன் என்ற பொருளிலும் நிகண்டுகளில் ஓரிடத்தும் காணப்படவில்லை, இகரமற்ற குடல

சப்தமோ கோத்திரப்பிரவர்த்தக இருடிவாசகமாக நாநார்த்தார் ணவ சம்க்ஷேபம் என்ற நிகண்டிற் கேசவ ஸ்வாமி கூறியுள் ளாராதலின் "ஷ்யஞ்" என்னும் விகுதிக்குப் பகுதியான குடலர் எனும் பதத்தின் தொடர்பு இலக்கண அமைதியிற் கௌடல்யர் என்று விளங்குகின்றது. ஆதலாற் கிடைத்துள்ள எல்லா மூலப் பகுதிகளிலும் உரைப்பகுதிகளிலும் வேறு மொழிகளிலுள்ள பொழிப்புரைகளிலும் கௌடல்ய என்ற இகரமற்ற பெயரே காணப் படுகின்றது. "கௌடில்ய" என்னும் பெயர் யாண்டும் காணப்பட வில்லை. அறியாமையாலமைந்த கௌடில்யர் என்ற பிழையான பாடமே நமது முதற்பகுதியில் நாற்பது பக்கங்கள் வரை கவன மின்மையாற் சேர்ந்தது. மேல் கௌடலீயம் என்ற திருத்தம் அமைக்கப்பெற்றுளது.

சாணக்கியரின் காலம்

"மகத நாட்டிற் குசுமபுரம் என்பது தலைநகரம். அந்நகரை நவநந்தர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் ஒருபொழுது அங்கு வந்த சாணக்கியரை அவமதித்தனராதலின் மிகச் சினமடைந்த சாணக்கி யர் அவ்வரசர்களை அடியோடு களைந்து அவர்களுடைய அரியணையில் சந்திரகுப்தனை அமர்த்தினர்" என்னும் இவ்வரலாறு மிகவும் பிரசித்த மாக வுள்ளது. சந்திரகுப்தன்காலத்தவரான இவர் காலமும் கி. மு. நான்காம் நூற்ருண்டு ஆதலே வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவருக்குப் பிந்தியவரான காமந்தகன் முதலியோ ரும் இவரையும் இவரது பொருணூலையும் விதந்தெடுத்துக் கூறியுள் ளார். ஆயின் ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரியார் மாணவருள் ஒருவ ரான சுரேச்சுவராசாரியார் என்ற விச்சுவரூபர் தாம் யாக்ஞ்யவல்கிய ஸ்மிருதிக்கு எழுதிய "பாலக்கிரீடை உரை நூலில்" (அநந்தசயந வட மொழிநூல் வெளியீடு) பொருணூலைப்பற்றிக் குறிப்பிடுமிடத் துச் சாணக்கியரையாதல் இவரது பொருள்நூலையாதல் குறிப் பிட்டுக் கூறவில்லை. அவ்வளவில் இப்பொருணூல் அவர்க்கு முற்காலத்தில் இல்லை என்ருதல் அல்லது இவரால் அறியப் படாதவர் கௌடல்யர் என்ருதல் எண்ணுவதற்கில்லை; ஏனெ னில் அவர் அறிந்திருப்பினும் கூருது விடுத்தமை முறையே என அவரது உரைநூல் முன்னுரையில் எடுத்துக் காட்டி யுள்ளேன். அவை வருமாறு:—"பாலக்கிரீடை யென்னும் நூல் மிகப் பழமையானதென்பதற்கும் அந்நூல் தனக்கு முந்திய நூல் களைப் பெரிதும் போற்றுந் தன்மையதென்பதற்கும் அந்நூலிலேயே அகச்சான்றுகள் உள்ளன. அந்நூல் கி. பி. ஆண்டிலுள்ள ஒரு நூலை

யாதல் ஒரு நூலாசிரியரையாதல் கூறவில்லை. ஆனால் கி. மு. ஆண்டி லுள்ள வேதங்களும், ஸ்மிருதிகளும் ஸ்மிருதி கர்த்தர்களும் அவர்களை ஒத்தவர்களும் அதன்கட் கூறப்பட்டனர். பொருணூலைக் கூறு மிடத்து கௌடலியத்தைக் கூறாது இதற்கு முதனூலாய பார்கற் பத்தியம் வைசாலாக்கம் என்னும் இவைகளைக் கூறியுள்ளார். எவ்வாறெனில் யாக்ஞ்யவல்கிய ஸ்மிருதியின் ஆசாராத்தியாயத்தில் 307—323-ஆம் சுலோகங்களின் உரையில் பார்கற்பத்தியத்தின் வசனங்களையும் 328-ஆம் சுலோகத்தின் உரையில் விசாலாக்கப் பொரு ணூலின் வசனங்களையும் காட்டியுள்ளார். பிறநூல்களால் எளிதிற் புலனாகும் என நூலாசிரியர் கூறாது விடுத்தனவும் பிரகரணங்களுக் கேற்ப எடுத்துக் கூறவேண்டுவனவுமாகிய பொருள்களை முதனூ லாசிரியர்களால் அறியப்பட்டனவும் காலத்தால் முற்பட்டனவும் ஒத்த காலத்தனவுமாகிய நூல்களையே சான்றாகக் கொண்டு விளக்கு வது உரையாசிரியரின் இயல்பாதலின் இவ்விச்சுவரூபாசாரியரும் பார்கற்பத்தியமும் வைசாலாக்கமும் யாக்ஞ்யவல்கியரால் அறியப் பட்டனவெனக் கருதித் தன் உரைநூலில் அவ்விரண்டையும் குறிப் பிட்டார்; கௌடலீயத்தை அவர்க்குப் பிற்காலத்ததென்றும் அவரால் அறியப்படாததென்றும் கருதிக் குறிக்காது விடுத்தார். கௌடலியர் யாக்ஞ்யவல்கியருக்குப் பிற்காலத்தவரென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் இப்பொருணூலின் அறுபத்து நான்காம் அத்தியாயத்தில் வணிகனுக்கும் அரசர்குலப் பெண்ணுக்கும் பிறந்தவன் மாகதன், அரசற்கும் பார்ப்பனப் பெண்ணிற்கும் பிறந்தவன் சூதன்" எனப் பிரதிலோமர்களைக் கூறுமிடத்து விளக்கியும், பிருது சக்கர வர்த்தியின் வேள்விச்சாலையிற் பிறந்தவர்களான சூதமுனிவரும் அவ்வரசனைப் புகழும் மாகதனும் இவர்களாகார் எனவும் இவர்கள் அந்தணரினும் அரசரினும் சிறந்தவர் எனவும் கூறியுள்ளார். இஃதுண்மையே; இவ்வாறே விஷ்ணுபுராணம் முதலம்சம் பதின் மூன்றாம் அத்தியாயத்தினும் பிருதுசக்கரவர்த்தியின் வேள்வியிற் சூதர் பிறந்தவர் என்பதும், விஷ்ணு அம்சம் உள்ளவர் என்பதும், அந்தணர் என்பதும் வெளியாகின்றன. அக்கினிபுராணம் முதலத்தி யாயத்தினும் கூர்மபுராணம் முதலத்தியாயத்தினும் இச்செய்திகள் கூறப்பட்டுள்ளன. கௌடலியர் அவர்கள் வரலாற்றையும் புராணப் பிரசங்க வன்மையையும் நன்குணர்ந்தவராவார். ஆதலின் சூதருக்கு இவர் மிகவும் பிற்பட்டவராவர். அன்றேற் சூதர் கூறும் புராணங் களின் பழமையென்ற பெருமையே மாறுபடும். இதனை ஆராய்ந்த துணையானே சாணக்கியரினும் சூதர் முற்பட்டவர் என்றது போல சூதருடன் ஒருசாலைமாணவரான வைசம்பாயனர் மாணவரான யாக்ஞ்யவல்கியரும் முற்பட்டவர் என்பது போதரும்.

மேலும் யாக்ஞயவல்கியஸ்மிருதியின் இரண்டாம் அத்தியாயத்தின் கண்ணுள்ள சுலோகங்களும் தருமத்தீயம் என்ற அதிகரணத்தின் வாக்கியங்களும் சொல்லானும் பொருளானும் தொடரானும் ஒத்திருத்தலின் சாணக்கியர் முற்கூறியுள்ள மிருதியைப் பெரிதும் பின்பற்றியவர் என்பது நன்கு போதரும். ஆதலின் ஸ்மிருதியின் உரையாசிரியரை நிகர்த்தவர் கௌடலியர் என்பது புலனும்.

கௌடலியர் இயற்றிய வேறு நூல்கள்.

அரிய பெரிய பல பொருள்களைத் தன்னுட் கொண்டு இப்பொருணூல் மிளிர்வதால் இதன் ஆசிரியர் பல்கலை வல்லுநராகவும் சிறந்த அறிஞராகவும் காணப்படுகிறுர். ஆதலின் இவரியற்றிய வேறு சில நூல்களும் இருத்தல் வேண்டும் என்றும் புலப்படுகின்றது. பட்டஸ்வாமியார் தமது உரையில் அத்தியக்ஷாதிகரணம் பன்னிரண்டாம் அத்தியாயத்தில் "சுல்பதாதீ சாத்திர ரஸ,' என்ற பதத்திற்கு உரை விரிக்குங்கால் தாதுகௌடலீயம் என்று குறிப்பதாலும் வராகமிகிரர் என்ற சோதிட பண்டிதர் தாமியற்றிய சோதிடப் பிருகத் சங்கிதையில் "ஆசார்ய விஷ்ணு குப்தராற் கூறப்பட்டது" என்று இவரது கூற்றை மேற்கோளாக எடுத்தாண்டிருப்பதாலும், காமசூத்திர சயமங்களையில் மிலேச்ச விகற்பங்களை விரித்துரைக்குங்கால் "இவ்வாறே கௌடலீயத்தில்" என்று ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டியிருப்பதாலும் சாணக்கியரின் அறிவின் பெருமையும், பிற நூல்களும் இயற்றியுள்ளார் என்பதும் நன்கு போதரும். இந்நூலில் ஆரிடப் பிரயோகங்கள் பலவுள. அவைகளை அடுத்த பகுதியிற் காணலாம்.

கௌடலியரால் எடுத்தாளப்பட்ட முதலாசிரியர் ஆவார் :—

1. மாநவா:—மநுவும் அவர் வழியினரும்.
2. பார்ஹஸ்பத்தியா:—பிருகற்பதியும் அவர் வழியினரும்.
3. ஔசநஸா:—சுக்கிரனும் அவர் வழியினரும்.
4. பாரத்துவாஜா:—துரோணுசாரியர்.
5. விசாலாக்ஷா:—இன்னுரென விளங்கவில்லை.
6. பராசர:—இவர் பிரசித்தர்.
7. பிசுந:—நாரதர்.
8. கௌணபதந்த:—வீட்டுமர்.
9. வாத வியாதி:—உத்தவர்.
10. பாகு தந்தீபுத்ர :—இந்திரன்.

பெருநூல் வல்லுநராகிய இப் பதின்மருள் விசாலாக்ஷர் என்பாரொருவரே இன்னுரெனப் புலப்படவில்லை. எனினும் விச்சுவரூபர் குறித்தமை முன் காட்டப்பட்டது.

நூற்பெருமை

அறத்தகையாளனும் வினைசெயல்வல்லானும் மடியிலாதவனும் பிறரிழைக்கும் தீமைக்குத் தக மாறிழைக்கும் திறலாளனும் சிறந்த அறிஞனுமான ஒருவன் தனது குடும்பத்தைக் காப்பதுபோல அரசனும் அடையப் பெறுதவொன்றை அடைதலானும் அடைந்த தொன்றைக் காத்தலானும் ஆக்கம் காவல் எனும் இரண்டையு மெய்தித் தன்னுட்டிலுள்ள குடும்பங்களனைத்தையும் காக்கத்தக்க கருவிகளைப் பொதுவாகவும் சிறப்பாகவும் இந்நூல் கூறுகின்றது. குடிகளிடமிருந்து இறைவாங்கும் முறைகளையும், ஈட்டிய பொருளைச் செலவு செய்யவேண்டிய நெறிகளையும் கூறியுள்ளார். அதிகாரிகள் அமைச்சர்கள் அரசனை அடுத்தவர் என்னுமிவர்களால் குடிகளுக்குத் தீங்கு நேராமை, குடிகளும் அரசியலும் மாறுபடாமை என்னு மிவற்றிற்குரிய நெறிகளும், குற்றங்கண்டவிடத்துத் தக ஒறுக்கு முறையால் ஒறுத்தலும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அரசற் கின்றியமையாததும் நன்மை தீமைகளை நாடியறிதற்கு தக்க கருவியும் ஆராய்ந்தறியும் திறன் மிகப் பொருந்தியதும் அரசனின் உயிர்நிலையுமாகிய ஒற்றின் அமைப்பும் கூறப்பட்டுள்ளது. மிக விரிப் பானேன்? அரசன் தன்னகரை நன்கு காப்பதுடன் பகைவரின் தலை நகரை முற்றுதற்குரிய சிறந்த பல முறைகளும் பொதுவாகவும் நடு நிலையாகவும் நுணுக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. பொருணூல்கள் அனைத்தினும் இஃதொன்றே சிறப்புற்று விளங்குவதெனக் கூறலாம். முன்னோர்களின் அரசியல் இந்நூனெறியைக் கடைப்பிடித்தே நிகழ்ந்தமையின் சீருஞ் சிறப்பும் எய்தியதென இப்பொருணூலால் அநுமானம் செய்கின்றோம்.

இரண்டாம் பகுதியின்

முன்னுரை

இவ்விரண்டாம் பகுதியில் ஐந்து அதிகரணங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. இதனை வெளியிடவிருக்கும்பொழுது பஞ்சாப் மாகாணத்தைச் சார்ந்த லாகூரினின்றும் வெளிவந்ததும் ஜெர்மன் தேயத்தவரான பண்டித ஜாலி என்பாரால் தொகுக்கப்பட்டது மான புதியதோர் கௌடலீயப் பொருளுரலின் பதிப்பினைக் கண்டேன். இதிற் கண்ட பாடபேதங்களையும், மைசூர் புத்தகத்தி லுள்ளனவும், நமது புத்தகத்திலுள்ளனவுமாகிய பாடபேதங்களுடன் சேர்த்து ஒன்றற்கொன்று மாறுபட்ட பொருள்களையும் மூன்றும் பகுதியின் இறுதியிற்றெரிவிப்போம். லாகூர்ப் புத்தகத்தின் முன்னுரையில் இப்பொருணூலைப்பற்றிய பல செய்திகள் விரிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சாலியினுடையவும் பிறருடையவுமாகிய மேற்கோளற்ற சில அபிப்பிராயங்களை யீண்டு எடுத்துக் கூறுவோம்.

இந்நூலின் முதலத்தியாயத்து இறுதிக் கண்ணுள்ள சுலோகத் தானும், இரண்டாம் அதிகரணம் பத்தாம் பிரகரணத்தினிறுதிச் சுலோகத்தானும், இந்நூலின் முடிவிலுள்ள இரண்டு சுலோகங்களானும், இந்நூலின் அமைந்த பல வாக்கியங்களைப் பிற நூலாசிரியர் கௌடலீய கௌடலியர் என்னும் பெயர்க்குறிப்புடன் தக்க சான்றாக எடுத்தாண்டிருத்தலானும், இந்நூலாசிரியர் சந்திர குப்தனைத் தழுவிய விஷ்ணுகுப்தர் எனப் பெயரிய சாணக்கியரே என்னும் உலகின் கொள்கை பொருத்தமே.

இதில் மாறுபட்டவர்கள் இரண்டு மூன்று பேர்களாவர். ஒருவர் ஆஸ்டிரியா தேசத்தவரான பண்டித விண்டரனிட்ஸன். மற்றவர் ஜெர்மன் தேயத்தவரான ஜாலி'என்பார். பிறிதொருவர் ஆங்கிலேய பண்டிதரான கீத் என்பார். இம்மூவரும் சந்திரகுப்தனது காலத்தில் சாணக்கியர் என்ற பொருணூலாசிரியர் ஒருவரும் இருந்ததில்லை எனக் கருதுகின்றனர். அதற்குச் சான்றுகள் பின்வருமாறு:—

1. சந்திரகுப்தனது சாம்ராச்சியம் தன்னால் நிலை நாட்டப் பட்டது என்றும் அவர்க்குத் தலைநகர் பாடலிபுத்திரம் என்றும் தனது நூலில் ஓரிடத்தும் கூறப்படவில்லை.

2. சிற்றரசியலே அன்றிப் பேரரசியல் கூறப்படவில்லை.

3. சந்திரகுப்தனைப் புகழ்ந்து பேசும் மேகாஸ்தநீசன் என்னும் யவனன், தானியற்றிய நூலில் இத்தகைய பெருமைவாய்ந்த கௌடலியரைப் பெயரளவினும் குறிப்பிட்டு உரையாமையின் சந்திரகுப்தனது காலத்தில் இவர் இல்லை.

4. இந்நூலிற் பலவிடத்தும் கௌடலியர் என்னும் பெயர் குறிக்கப் படுகின்றதாகலின் இவர் இந்நூலாசிரியரினும் வேறுபட்டவர். மேலும் யோகவிருத்தம் ஆறும் அத்தியாயத்தில் "கௌடலியர் இங்ஙனம் கூறுவர்" என்று பூர்வபக்க வாக்கியமாக அமைத்துச் சித்தாந்த வாக்கியமாகப் பாரத்துவாச வாக்கியத்தைக் கூறியிருப்பதாலும் இவர் அக்காலத்தவரில்லை யென்பது புலனும்.

5. கௌடிலியர் என்ற சொல் 'குடில' என்றதன் அடியாக வந்து இழிபொருளைத் தோற்றுவதால் தமது நூலில் இத்தகைய பெயரைத் தன் பெயராகக் குறிப்பிட மாட்டாராகலின் இவர் இந்நூலாசிரியரல்லர் என்பது வெளிப்படை என்பன.

இவை யாவும் பயனற்ற கூற்றென்பது, எனது எண்ணம். மேற்கூறிய ஒவ்வொன்றிற்கும் மறுப்புப் பின்வருமாறு :—

1. நூலிடையில் "சந்திரகுப்த ராச்சியம் நிலை நாட்டப்பட்டது" என எடுத்துக்காட்டாகத் தம்மைத் தெரிவிக்கு முகத்தானும் கூறலாம்; பொதுவான அரசியன் முறைகளைக் கூறுமிந்நூலில் சரித்திரப் பிரசித்தரான அரசர்களுடைய ஒழுக்கங்களை உதாரணமாக எடுத்துக் காட்டுவது பொருத்தமேயன்றி, இதனை வெளியிடல் தற்புகழ்ச்சியாகும்; "என்னால் நந்த ராச்சியம் நாசம் செய்யப்பட்டது" என்று நூல் முடிவிற் கூறப்பட்டிருத்தலால் தன் பெருஞ் செயல் கூறப்பட்டதுடன் சந்திரகுப்தனது பேரரசியலும் வெளியிடப்பட்டதாகும். இம்மட்டிற் பாடலீபுத்திரத்தின் குறிப்பும் வெளியிடப்பட்டதேயாம். நூல் நடுவில் இயைபு அமையாமையின் பாடலீபுத்திரன் பெயர் குறிக்கப்படவில்லை. "மகதம், மதுரை" முதலிய குறிப்புக்களோவெனின் அவைகள் பஞ்சு பட்டு முதலிய பொருள் விளையும் நிலமாதலின் கருவூலத்தியை திருமணி ஆய்தல் எனும் பிரகரணத்தில் விளைநிலப் பகுதியிற் கூறப்பட்டுள்ளன. பாடலீபுத்திரத்தில் அத்தகைய பொருள்விளைவின்மையின் கூறப்படவில்லை.

2. இதிற் கூறப்பட்ட அரசியல்முறைகள் யாவும் சிற்றரசியல் பேரரசியல் இவைகளுக்குரியனவேயாம். "அறுவகைக் குணங்கள்" என்னும் அதிகரணத்தில், பதினைந்து, பதினாறும் அத்தியாயங்களில் சக்கரவர்த்தியினிடம் சிற்றரசர் நடக்கவேண்டிய முறையும், சிற்றரசர்களிடத்தில் சக்கரவர்த்திகள் நடக்கவேண்டிய முறையும் நன்கு கூறப்பட்டுள்ளன. ஆதலின் பேரரசியலும் முறைகளும் கூறப்பட்டனவேயாம்.

3. மேகாஸ்த நீசனுல் எழுதப்பட்ட நூல் இல்லாதன புகுத்தி யும் இருப்பன விடுத்தும் பலவழுக்கள் நிறைந்தும் உள்ளது. அத் தகையார் தம்மால் கூறப்படாத தொன்றில் மேற்கோளாசிரியராக அமைவதெங்ஙனம்? அன்றியும் அவர் கௌடலியரை அறிந்தவரா யினும் கூருது விடுத்தமை பொருத்தமே. கௌடலியர் இறந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் சந்திரகுப்தனது ஆணை தனதுரிமை பற்றி வேரூன்றிச் சிறந்து விளங்கும்பொழுதும் குடிகளும் சாணக்கியரின் பெருமையைப் படிப்படியாக மறந்து வரும்பொழுதும் இம் மேகாஸ்த நீஸ் சந்திரகுப்தனை அடைந்தவர். இங்ஙிலையில் சந்திரகுப்தனது பெருமையில் வியப்படைந்தவரும் பிற நாட்டினின்றும் வந்தவரும் முன் செய்தியறியும் விருப்பற்றவருமாகிய இவர் மக்களின் வாயிலாகக் கௌடலியரின் சிற்சில திறமையைக் கேட்டும் அதனை உய்த்துணரும் ஆவலற்றவராயினர். ஆதலிற்றமது நூலில் இவரைப் பற்றி யெழுதவில்லை. சந்திரகுப்தனையே புகழ்ந்து பேசும் இயல் புடைய இவர் சாணக்கியரைப்பற்றிய உலகவாதம் குறைந்தமையின் அறியாமலுமிருக்கலாம். மேகாஸ்தநீஸர் தமது நூலிற் கௌடலிய ரைப்பற்றிக் கூருமைக்கு இத்தகைய பலகாரணங்கள் அறியக்கிடக்கு மளவில் பலவாண்டுகளாக உலகம் புகழும் கீர்த்தியுள்ளவரும் விஷ்ணுபுராணம் வாயுபுராணம் முதலியவற்ருல் வருணிக்கப்பட்ட பெருமை படைத்தவருமாகிய கௌடலியர் சந்திரகுப்தன் காலத்தில் இருக்கப் பெருதவர் எனக் கூற யாவர் முற்படுவர்? அங்ஙனமே கூறும் ஜாலி என்பாரும் பொருளுண்மை அறியாமை, அவமதித்தல் காரணமான மேகாஸ்தநீசன் மௌனமும் பரதகண்ட முன்செய்தி நிர்ணய விஷயத்தில் தக்க சான்ருகும் என்றும், பாரததேசத்தவர் களால் கையாளப்பட்டனவும் பொருத்தமான பொருள் மலிந்தனவு மாகிய புராணங்கள் என்ற பண்டைநூல்களின் உண்மையையும் கெடுக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

4. முதலிற் பிறர் மதத்தைக் கூறிப் பிறகு தக்க மேற்கோளுடன் அம்மதத்தைக் கண்டனம் செய்யுமுகத்தால் சிந்தாந்தமாகத் தம் மதத்தைக்கூறுதலும், தமது மதத்தை முதலிற் கூறிப் பிறர்மதத்தை அநுவாதம் செய்து கண்டிப்பதும் நூலாசிரியர் வழக்காதலின், இந் நூலாசிரியரானும் இவ்விருமுறைகளுள் இரண்டாவதான முறையே கையாளப்பட்டது. "கௌடலியர் இங்ஙனம் கூறுவர்" என் னும் இடனெல்லாம் கௌடலியர் என்ற நான் கூறுகிறேன் என்றே பொருள் கூறவேண்டும். "நான் கூறுகிறேன்" என்னும் சொல் செருக்கிக் கூறுவதாக அமையும் என்றும் "கோணுர்த்தீயர் கூறுவர்" என்றபடி முன்னைய ஆசிரியர் கொள்கையும் இஃதென்றும் கருதியே இங்ஙனம் கூறினர் என்க. காலத்தில் முற்பட்ட பாரத்து வாசர் அவரினும் பிற்காலத்தவரான கௌடலியரைக் கண்டித்தல்

பொருந்தாமையானும் பிற்காலத்தவரான இவர் முற்காலத்தவரான பாரத்துவாசராதியரைக் கண்டித்தல் இயையும் ஆகலானும் கௌடலியர் சந்திரகுப்தன்காலத்தவர் என்பதும் இந்நூலாசிரியர் என்பதும் இனிது விளங்கும்.

5. கௌடிலியர் என்ற பெயரளவில் இழிபொருள் தோன்றி னும் இதுவும் 'குத்ஸா' என்ற இழிபொருட் பகுதியினடியாகப் பிறந்த கௌத்ஸர் என்ற பதம்போலச் சிறந்த பதமென்றே உபந்தி யாசகர் அரங்கசாமி ஆசாரியரால் சமாதானம் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் ஆராயுமிடத்து, கௌடிலியர் என்று இடையில் இகரம் அமைந்த சொல் முன்னோர்களால் எடுத்தாளப்படாமையின் அது எழுதியவரும் படிப்பவருமாகிய இருசாராருடைய குற்றமான வழக்கென்றே கொள்ளல் வேண்டும். பழய படிகளிலும் அவற்றின் உரைகளிலும் காமந்தக நீதிசாரவுரை செயமங்கலத்திலும் கௌட லியர் என்றே காணப்படுவதால் கௌடில்யர் என்னும் சொல் பிழை யேயாமென விளங்கும். இதுபற்றி முதற்பகுதியில் விரித்துக் கூறி யுள்ளதைக் காண்க. இதனாற் சாணக்கியர் சந்திரகுப்தனது காலத் தவர் அல்லர் என்பதும் இவரால் இப்பொருணூல் இயற்றப்பட்ட தில்லையென்பதும் புறக்கணிக்கப்பட்டனவாமாதலின் சந்திரகுப்த னுடனிருந்த இவரால் இயற்றப்பட்ட இந்நூலின் காலமும் கி. மு. நான்காம் நூற்றாண்டென்பது பெறப்பட்டது.

இப்பொருணூல் அங்ஙனம் பழமையென்பதிற் சிற்சில குற்றங் கணிகழுமெனச் சாலி முதலியோர் கூறும் கூற்றுக்கும் இதனடியில் மறுப்புக் கூறுவாம் :—

சுச்சுருத சங்கிதையாதிய நூல்களினும் இப்பொருணூலில் தாது இரதவாதங்கள் மிகைபடக் கூறியிருத்தலின் அவை மலிந்து கிடந்த காலத்தில் இந்நூலுண்டாதல் வேண்டும் எனும் ஊகத்தினால் அவை சுருங்கியிருந்த காலத்தவரான சுச்சுருதராதியரினும் இவர் பிற்பட்ட வர் என்றும் கி. மு. முதல் நூற்றாண்டிலுள்ள சுச்சுருத சங்கிதை யாதிய நூல்களுக்கும் இந்நூல் பிற்பட்டதென்றும் விண்டரனிட்சன் கூறுகின்றார். இதுவும் பொருத்தமற்றதேயாம்.

சுச்சுருதராதியரினும் தாது இரதவாதங்கள் இப்பொருணூலில் மிகைபடக் கூறியிருத்தலொன்றைக் காரணமாகக் கொண்டு அவர் காலத்துச் சுருங்கியிருந்த இவை இந்நூலாசிரியர்காலத்து விரிவெய் தின எனக்கூறுவது பொருத்தமின்று. ஏனெனில் எப்பொழுதும் ஒரு நிலையிலுள்ள இவைகளை சுச்சுருதர் சுருக்கியும் சாணக்கியர்

விளக்கியும் உள்ளார் எனக் கூற இடமுளது. சுச்சுருதாதிய நூல்களோ வைத்திய சாத்திரங்கள். அவற்றிற்கு வேண்டிய அளவில் இவை கூறப்பட்டிருக்கலாம். அரசியலை முக்கியமாகக் கொண்ட இப்பொருணூலில் பொன் வெள்ளி உண்டாக்கல், பகைவரை வேறல் இவற்றிற்குரிய ஓஷதிகளைச் சேகரித்தற்குரிய கருவியாக மிகைபடக் கூறலும் பொருத்தமே. "தாது கௌடலீயம்" என்னும் நூலில் மிக விரிவாகக் கூறப்பட்ட இவற்றை அவ்வப்பிரகரணங்கட்கேற்பக் கூறியிருத்தலை மேற்கொண்டு இவ்வாசிரியரது காலத்தை அநுமானித்தல் பொருந்தாது.

2. யாக்ஞ்ய வல்கிய ஸ்மிருதி கி.பி. மூன்றும் நூற்றுண்டிலுண்டானது. இதனை இப்பொருணூல் பெரிதும் தழுவி இருத்தலின் இதற்குப் பிந்தியது என சாலி கூறுவர்—இவ்வுரையும் பயனற்றது. இவ்வறநூல் கி.பி. மூன்றும் நூற்றுண்டில் உண்டானதென்பதற்குச் சிறிதும் ஆதாரம் கிடையாது. பொருணூல் கி. மு. நான்காம் நூற்றுண்டில் உண்டானது என்று நன்கு புலப்படுவதால் இந்நூற்கும் முதனூலாய அவ்வற நூல் இதனினும் பழமையதென்றும் பாணிநீய வியாகரணத்தில் "கர்காதிப்யோ யஞ்" என்ற சூத்திரத்தில் கர்க்காதிகணத்தில் யக்ஞ வல்க என்ற பதத்தைக் கூறி அதனடியாகப் பிறந்த யாக்ஞ்ய வல்கிய என்ற சொல்லுக்கு யக்ஞய வல்கருடைய மரபிற் பிறந்தவர் என்ற பொருளை உணர்த்துவதால் இவரும் இவரது நூலும் பாணிநிமுனிவர்க்கும் முன்னரே இருத்தல்வேண்டும் என்பது போதரும்.

3. திருஷ்டுப் சந்தத்திலும் வாக்ய முறையிலும் இந்நூல் பழமையானது என்று புலப்படவில்லை என்று கீத் என்பார் கூறுகின்றார்—அதுவும் நியாயமில்லை. ஏனெனில் திருஷ்டுப் சந்தத்தை மேற்கோடல் பழமைபற்றி விரோதமாகுமா? அல்லது இச்சந்தத்தில் நான்கு பாதங்களும் ஓரிலக்கண முறையில் அமைந்தமை அதற்கு விரோதமாகுமா?

வேதங்களிலன்றிப் பிறவிடங்களில் சந்தவேறுபாடு அமைத்தல், ஆக்கியோன் கருத்திற்கிணங்கப் பொதுவாகலின் திருஷ்டுப் சந்தத்தைப் பற்றுதல் பழமை குறித்து விரோதமாகாது. நான்கடிகளிலும் ஓரிலக்கண அமைப்பும், அங்ஙனம் அமையாமையும் ஆசிரியரின் விருப்பிற்கியைய நிகழ்வனவும்வரையறையற்றனவும்,மேற்கோளற்றனவுமாம் வாக்கிய முறை யமைப்பில் பழமையதென்பது கீத் என்னும் பெரியாருக்குப் புலனாகவில்லை. அவ்வமைப்புமுறையில் இது

மகாபாடியமாதிய பெரு நூல்களினும் பழமையதென்பது எனக்குப் புலனாகின்றது. இதன் துணிபு அறிஞர் வயத்தது.

"இந்நூலிற் காணப்படும் பிரகரணங்கள் அனைத்தையும் பல அறிஞர் புனைந்துளார் என்றும், பின்னை ஒருவர் ஒன்றுபடத் தொகுத்துளார் என்றும்" ஒரு சாரார் கூறுவர். அங்ஙனம் கூறுவதும் பயனிலதாகும். "இவ்வாசிரியர் பெரிய வமிசத்திற் பிறந்தவர். நான்கு வேதங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர். ஆபிசாரமென்ற வச்சிரத்தினால் நந்தராசன் என்ற மலையைத் தகர்த்தவர். சிறந்த மந்திரசக்தியுள்ளவர். பொருணூற் கடலில் நீதி யென்னும் அமுதம் எடுத்தவர்" எனக் காமந்தக நீதிநூலில் பிரபலமான பொருள்களை நன்குணர்ந்தவர் என்று வியந்து கூறியிருத்தலின் பல பிரகரணங்களைத் தொகுத்து இவரே இந்நூலியற்றியவர் எனப் புலப்படுகின்றது.

காமந்தகர் கி. மு. முதல் நூற்றாண்டில் இருந்தமையால் சாணக்கியரைப்பற்றி நம்மினும் நன்குணர்ந்தவராவார். மேலும் இவர் கி. மு. முதல் நூற்றாண்டில் இருந்தவர் என்பதில் ஐயமிருப்பினும் ஏழாம் நூற்றாண்டிலிருந்த பவபூதியினும் முற்பட்டவர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆதலிற் பவபூதி யென்பார், தாமியற்றிய மாலதீமாதவம் என்னும் நாடகத்தில் நீதிசார நூலாசிரியனாகிய காமந்தகனை மூலமாகக்கொண்டு நீதிப் பிரயோகத்திற்றிறலமைந்த காமந்தகீ எனப் பெயரமைத்துப் "பரிவிராசிகை" என்னும் பெண்ணைப் பாத்திரமாகக் கோடல் மிகப் பொருத்தமே.

இங்ஙனமாக அமைந்த காமந்தகீ என்னும் சொல், பிரசித்தமான காமந்தகனை மூலமாகக் கொண்டதன்றாகலின் பொருளற்றது" என சாலி கூறுகிறார். மாலதீமாதவத்தில் அத்தகைய பொருளற்ற கூற்று ஒன்றேனும் இலது. "மாலதீ, மாதவன்" என்ற சொற்கள் சிருங்கார ரசத்தைப் பெருக்கும் பொருளின் பெயராய்த் தலைவன் தலைவியரைக் குறித்தன. அகோரகண்டன், கபாலகுண்டலையென்ற சொற்கள், சண்டீ தேவியின் பூசனையாற்றும் தன்மையை வெளியிடுகின்றன. புத்தரட்சிதையென்னும் சொல் புத்தமதச் சேர்க்கையையும் புத்த முனிவர்க்கு மாணவியாம் தன்மையையும் உணர்த்துமாகலின் காமந்தகீயெனுஞ் சொல்லும் காரணம்பற்றி வந்தமையின் காரணப் பெயராதலன்றி இடுகுறியாகாது என்ற இவை முதலியன அறிஞர்களால் உய்த்துணரக் கிடக்கின்றன. பல பொருள்களை உணர்ந்த கௌடலியரை உலகமறியும். பல பொருள்களைக் கண்டுணர்ந்த இவர் ஒருவரே உலகில் ஒப்பற்றவர் என்பதிற் பொருமை

கொள்ளலாகாது. உலகிற் சிறந்த அறிவாற்றலாதிய நற்குணங்கள் நிரம்பப்பெற்றுன் ஒருவன் முற்றும் உணர்ந்த முன்னவனை ஒக்கு மெனின் அவனைப் பல் பொருளறிந்தவன் எனக் கூற வேண்டுவ தென்னை : இதனுல் மகாபாரதம் முதலிய நூல்களில் பிரசித்தரான பெரியோர்களுடைய வாக்கியங்களைப் பூர்வபக்கமாகவும் கௌடலி யரின் வாக்கியங்களைச் சித்தாந்தமாகவும் அமைத்து யாரோ ஒரு பண்டிதரால் இப்பொருணூல் இயற்றப்பட்டதென்ற சாலி கூற்று விலக்கப்பட்டது, காமந்தகன் முதலியோரின் பேருரைகள் இதற்குச் சான்றுக விளங்குகின்றன. மேலும் இந்நூலில் மேற்கோளாகக் எடுத்தாளப்பட்ட நூல்களும் பாரத்துவாசாதியர்களாலியற்றப்பட வில்லை என்றே சாலியின் கருத்து வெளியாகின்றது. அது முற்றிலும் தவறு. ஏனெனில் விச்சுவரூபாசாரியராலியற்றப்பட்ட யாக்ஞ்ய வல்கிய ஸ்மிருதியின் உரையில் பார்கற்பத்திய வசனங்களையும், வைசா லாக்க வசனங்களையும் மேற்கோளாகவும் உதாரணமாகவும் எடுத்துக் காட்டப் பட்டமையின் விச்சுவரூபருடைய காலத்தில் இவை இருந்து, பிறகு இறந்திருக்கவேண்டுமென ஊகிக்க இடனுளது. இது போன்றே இவைகளோடு ஒருங்கு கூறப்பட்ட பரத்துவாசருடைய பொருணூலும் இருந்து, பின் இறந்திருக்கவேண்டுமென ஊகிக்க இடனுண்டு.

இவ்விதம் பல ஊகங்களை முக்கியமாகக் கொண்ட சாலி முதலி யோரின் கருத்துக்களும் வழுக்களும் ஆராயப்பட்டன. இனி இதனி லும் ஆராயவேண்டுவதில்லையென்றே கருதுகிறேம். ஆயினும் பிறர் அறிவினுக்கெட்டாததான சாலியின் விசேடித்த பொருளறியும் ஊகத்தை மாத்திரம் சிறிது ஆராய்ந்து இதனை முடிப்போம்.

" இப்பொருணூலுக்குச் " சமாநதந்திரம் " என்ற ஒரு பெயருண் டென்று யாம் இதுவரை அறிந்திலோம்" என்று சாலி கூறுகிறுர்; மனு ஸ்மிருதியின் மேதாதிதீய பாடியத்தின் ஏழாம் அத்தியாயத்தின் 191-ஆம் சுலோக உரையில் சமானதந்திரத்தாற் கூறப்பட்டதென்று தொடங்கிக் கௌடலீயம் பத்தாம் அதிகரணம் ஐந்தாம் அத்தியாயம் " மானுஷம் கர்மலோகம் பாலயதி " என்ற சுலோகமும், 205-ஆம் சுலோகத்தில் " இவ்விதமே சமாநதந்திரத்திலும்" என்று கூறி ஆறும் அதிகரணம் இரண்டாம் அத்தியாயம் ' தெய்வம் மானுஷம் ஹி கர்மலோகம் யாபயதி " என்ற வாக்கியமும் காணப்படுகின்றன. இக் காரணம் பற்றி இப்பொருணூலுக்கும் சமாநதந்திரம் என்னும் பிறிதொரு பெயருண்டென்றும் அது காண்டற்கு மிக அரிய தென்றும் சாலி கருதுகிறுர். இஃது ஆராய்ந்தறியாத விஷயமாம்.

"சமாநதந்திரம்" என்ற சொல் பண்புத்தொகையால் ஒற்றுமையாகிய சாத்திரமென்று பொருளமையுமாகலின் பிறநூல்களினும் இப்பதம் வழங்கு மிடங்களில் இப்பிரகரணத்திற்கு ஒப்பான வேறு சாத்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது என்றே பொருள் கொள்ளல் வேண்டும். இம் மனுஸ்மிருதிக்கு ஒற்றுமையான சாத்திரம் இவ்விடத்தில் கௌடலீயமே. மற்றைய விடங்களில் அவ்வப் பிரகரணங்களுக்கேற்ப மற்றச் சாத்திரங்களாகும். மேலும் சமாநதந்திரம் என்னும் சொல் மேதாதிபாடியத்திதியல் மாத்திரமேயன்றி சமான தந்திர சித்த என்ற நியாய சூத்திரங்களிலும் காணப்படுகின்றது. இங்ஙனமே பிறசாத்திர உரை நூல்களினும் இச் சொல் வழங்கப்படும். ஆகலின் கௌடலீயம் பொருணூலுக்குச் சமான தந்திரம் என்ற பெயர் இல்லை என்பது புலனும்.

மேலும் ஒற்றுமைச் சாத்திரங்களிற் பலவிதமாகவும் கூறுவதுண்டு. "சமாநம், பூர்வேண சமாநம், பிராக்வத், பூர்வவத், ஏதேந வ்யாக்கியாதம்" என்று பலவிதமாகக் கூறுவது சாத்திரமரபாதலின் இப்பொருணூலுக்கு சமாநதந்திரம் என்னும் பெயரில்லை என்றும் இது சந்திரகுப்தனது மந்திரியான கௌடலியராலேயே இயற்றப்பட்டதென்றும் தெள்ளிதின் விளங்கும்.

கௌடலீயம் மூன்றும் பகுதியின்

முன்னுரை

இம்மூன்றும் பகுதியுடன் இப்பொருணூல் முடிவெய்தும். மைசூர்ப் புத்தகத்தினின்றும் லாகூர்ப் புத்தகத்தினின்றும் விலக்கப் பட்டனவும் பொருள் ஒத்தனவுமாகிய பாடபேதங்களை இப்பகுதி யின் முடிவில் முதற்கூறுகவும், உரைநூலாற் பொருள் தெரிய வேண்டிய பலசொற்களை இரண்டாங் கூறுகவும், கி. மு. நான்காம் நூற்றுண்டிலமைந்த ஆருஷப் பிரயோகங்களை மூன்றுங் கூறுகவும் அமைத்துள்ளேன். ஔபநிடதம் என்ற அதிகரணம், வஞ்சித்தல் என்ற பிரகரணத்தை வியப்புண்டாக்கல், மருந்துமந்திரப்பிரயோகம் என இரண்டு பிரகரணங்களாகப் பிரித்து அவற்றுள், முதற் பிரகரணத்தில் ஒரு மாதம் உண்ணுமைக்கு அநுகூலமாவனவும் பசிப் பிணியை நீக்குதற்குரியனவுமாகிய யோகங்களும் இரண்டாம் அத்தியாயத்தில் இருளில் உருவமறியும் உபாயமும் நிழல் அமையா மற் செல்லுதற்குரிய உபாயமும் ஆகிய ஐந்து யோகங்களும் பறவை விலங்கு முதலியவைகளின் மறைவும் ஆகிய வியப்பை உண்டு பண்ணத்தக்க பல யோகங்களும் கூறப்பட்டுள்ளன. அவைகள் பயனுடையவாதல் அநுட்டானத்தாற் காணத்தக்கது. அநுட்டான மோ வைத்திய முறைகள் மந்திரப் பிரயோகங்கள் ஆகிய இவற்றின் உண்மையறிவைப்பற்றி நிகழ்வதாம். அவ்வுண்மை அறிவும் அநுட் டானத்திற் சிறந்த ஆசிரியர்களின் உபதேசவயத்ததாகும். ஆதலின் இதன் பயன்பெற விரும்புவோரனைவரும் அத்தகைய ஆசிரியர் உப தேசமொன்றையே நாடவேண்டும் என்பது புலனும். "மழை விரும்புவார் "காரீரீ" என்ற வேள்வியை வேட்டல் வேண்டும் என்ற சுருதி வாக்கியத்தில் உரையாசிரியர் எங்ஙனம் பொருள் கூறுமளவில் முயன்றனரோ அங்ஙனமேயன்றி அதன் பயன் எய்துமளவில் யாம் உரியமல்லேம். இதனைக் கருதியே இப்பிரகரணத்தின் இறுதி யில் "இவற்றிற்கு இயன்றவரை பொருள் கூறியுள்ளேம்; பயன் பெறும் முறை அவ்வம்மரபு பற்றியதாகும் என வரைந்தோம்.

பொறியடக்கம் என்னும் பிரகரணத்தில் இராவணனும் துரி யோதனனும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டனர். புருடவி தனம் என்னும் பிரகரணத்தில் சூதாடுவோரைக் குறிக்குமிடத்துத் துரியோதனனும் சயச்சேனனும் குறிப்பிடப்பட்டனர். அவரால் தோல்வியடைந்த நளனும் தருமபுத்திரனும் குறிக்கப்பட்டுள்ளார்.

ஆதலின் மகாபாரதத்தைக் கௌடலியர் மேற்கோளாகக் கொண்டவர் என்பது விளங்கும். பொறியடக்கத்திற் கூறப்பட்ட தம்போற்பவன், கார்த்த வீரியார்ச்சுனன், வாதாபி, விருஷ்ணி இவர்களின் சரிதங்கள் மகாபாரதத்திலடங்கின வென்பது வெளிப்படை. ஆயின் தாண்டக்கியன், கராளன் இவர்கள் வரலாறு யாண்டுளது என்பது புலனாகவில்லை. இங்ஙனமே ஐந்தாம் அதிகரணம் ஒழுக்கவரையறை என்னும் பிரகரணத்தில் குறிக்கப்பட்ட காத்தியாயனர், கணிங்கர் முதலியவர்களின் வரலாறு எனக்குக் கிடைத்த உரையின் வாயிலாக அறிந்து கூறப்பட்டது. இவ் வரலாறு எந்த முதனூலில் உள்ளதென்று அறியக்கூடவில்லை.

முதற் பகுதியின் முகவுரையில் முதலாசிரியரின் பெயர்க் குறிப்பில் அரசிளங்குமரரைக் காத்தல் எனும் பிரகரணத்தில் குறிக்கப்பட்ட ஆம்பீயர் என்னும் பெயர் எழுதுவோன் தவற்றினால் விடப்பட்டது. அதனால் உரையினும் வெளியாகவில்லை. அப்பொருளை ஈண்டு எடுத்து விளக்குவாம். அம்ப :—நீர் ; அதன் புதல்வன் என்னும் பொருள் தரும் இலக்கண அமைதியில் ஆம்பி :— அதாவது நீருருவமான கங்கையின் புதல்வன் பீஷ்மர் என்றும், அவரது வழியினர் ஆம்பீயர் என்றும் அறிதல் வேண்டும். "கௌணபதந்தர்" என்றே குறிக்காது இங்ஙனம் குறித்தமை அவர்களின் மதவேறுபாட்டையும் ஒருவித சித்திரத்தையும் குறித்தற்காம் எனக்கொள்க.

பாகுதந்தீ புத்திரன் — இந்திரன், பிசுநன் — நாரதன், வாதவியாதி — உத்தவர், என உரைப் புத்தகங்களில் இருந்தவாறு குறிப்பிட்டிருப்பினும் பொருட்பொருத்தமும் அமைந்துள்ளன. பகுதந்தன் —யானைக்கு இயற்கையாக அமைந்துள்ள இரண்டு தந்தங்களையன்றி நான்கு தந்தங்களை உடைமையால் இப்பெயர் ஐராவதத்தைக் குறிக்கும். அதனைச் சார்ந்தவள் என்ற இலக்கண முறையால்—உடைமை, உடையான் சம்பந்தம்பற்றி "பாகு தந்தீ" என்பது அதிதியைக் குறிக்கும். அன்னவள் புதல்வன் எனவே இந்திரன் எனப் பொருள் பெற்றும்.

பிசுநன்—நாரதன் ; இயற்கையிற் கலகஞ்செய்ய ஆர்வமுள்ளவனாக விருத்தலின் இப்பெயர் உலகறிந்ததே ; வாதவியாதி—உத்தவர் வாயு சம்பந்தமான பிணியுடையராகலின் இப்பெயர் அமைந்தது. இதுபற்றியே மகாகவியும் சிசுபாலவதம் இரண்டாம் சருக்கத்தில் இவரைப் பவன வியாதி என்று கூறிப் போந்தனர்.

கௌடலியர் இப்பொருணூலில் துரோணர் முதலியோரின் பெயரைக் குறிப்பதால் அவர்கள் பொருணூலியற்றியுள்ளார் என்பது போதரும். இச்செய்தி இரண்டாம் பகுதியின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. துரோணர் முதலியோர் அரசியன் முறையிற் பெரிதும் பயின்றவரும் மிகவும் பெருந்திறலமைந்தவருமாகலின் அவராற் சில நூல்கள் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் அந்நூல்கள் கௌடலியர் காலத்தில் இருந்து,பிறகு இறந்துபட்டன என்பதும் ஊகித்துணரக் கிடக்கின்றன. இங்ஙனமே பாணினி காலத்திருந்த கார்க்கிய வியாகரணம் பின்னர் இறந்ததும் இதனை யொக்கும். கௌடலியராற் பெரிதும் எடுத்தாளப்பட்ட பார்கற்பத்தியம் வைசாலாக்கம் என்ற நூல்கள் யாக்ஞ்யவல்கிய ஸ்மிருதியின் உரையாசிரியரான விச்சுவரூபர் காலத்தில் இருந்தனவென்று முதற்பகுதியின் முன்னுரையிற் கூறினோம். அங்ஙனமே அவர்களுடன் எடுத்தாளப்பட்ட துரோணர் முதலியோர் நூல்களும் இருந்தனவென்றே அநுமானித்தல் வேண்டும்.

இரண்டாம் பகுதியின் முன்னுரையில் லாகூர்ப்புத்தகத்தின் பரிசோதகரான விண்டரனிட்ஸன் கூறிய சிலவற்றை ஆராய்ந்தோம். இனி கல்கத்தா 'ரிவ்யூ' பத்திரிகையில் வெளிவந்ததும் கௌடலியப் பொருணூல் பற்றியதுமாகிய அவரது விரிவுரையிற் கண்ட சில குற்றங்களை ஈண்டு ஆராய்வாம்.

அவர் ஆராய்தற்கு நிலைபெறாத சில யுத்திகளைக் கொண்டு பொருளை நிலைநாட்டப் பெரிதும் முயன்று கூறுகின்றனர். அவற்றுள் மூன்று செய்திகளே பதிலிறுக்கத்தக்கன எனக் கருதுகிறோம். ஒன்று கௌடலியர் சந்திரகுப்தனது காலத்தவரில்லை என்பதை மேகாஸ்தநீஸர் உடன்படாமை கொண்டு கூறுகின்றார். இரண்டு–அரிய பலவேறு நுணுகிய பொருள்களை ஒரே நூலாசிரியர் உணர்ந்திருப்பது அரிது எனக் கூறுகிறார். மூன்று—இப்பொருணூலிற் குற்றங்கள் பல அமைந்துள்ளன என்றும் வெளியிடுகின்றனர். முதலிரண்டு செய்திகளுக்கும் இரண்டாம் பகுதியின் முன்னுரையில் சாணக்கியர், சந்திரகுப்தன் மந்திரியென்றும் அவரே இப்பொருணூலியற்றியுள்ளார் என்றும் பல் பொருளுணரும் பேராற்றல் படைத்தவர் என்றும் கூறி மறுத்தோம். கௌடலியருக்கும் மேகாஸ்தநீசருக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றிப் பேசுவதும் முறையில்லை. கௌடலியர் விதிவிலக்குகளை மாத்திரம் எடுத்துக்காட்ட முன் வந்தவர். மேகாஸ்தநீசர் பிறநாட்டிலிருந்து வழிப்போக்காக வந்தவர் நேரிற்கண்ட விரும்பத்தக்கது, வெறுக்கத் தக்கது நடு

நிலையிலிருக்கத் தக்கது என்னும் இவைகளில் முறையே புகழ்தல், இகழ்தல், வாளாவிருத்தல் என்ற இம் முறையை அநுட்டிப்பவராதலின் முற்றிலும் வேறுபட்ட இவர்களைக் குறித்து எவ்வகையானும் பேசுதல் தக்கதன்று.

மூன்ருவது ஆராயப்படுகின்றது :—இப்பொருணூலில் ஒற்றரை அமைத்தன் முதலியவைகளால் பகைவரான சிற்றரசர்கள் அமைச்சர்கள் தன் மைந்தர்கள் இவர்களை வஞ்சித்தல் அடக்குதல் கொலை முதலியனவும் சில வமயங்களில் மக்களிடமிருந்து பொருள் கோடற்குரிய பல வுபாயங்களும், யோகவிருத்தமென்னும் அதிகரணத்து ஐந்து ஆறும் அத்தியாயங்களில் மந்திரிகள் அரசனை வயப்படுத்தும் உபாயமும், அரசன் யாரினும் வல்லானுகவிருக்கப் பல வுபாயங்களும் கூறப்பட்டுள்ளன. இவை மிகவும் தீய செயல்கள் ஆகுமென்றும் இப்பொருணூலியற்றும் பெருந்தகையாளர்க்கு இஃதறநெறி ஆகாதென்றும் விண்டரனிட்ஸன் கருதுகின்ருர்.

புத்த முனிவரேனும் பொருணூலியற்ற முற்படுவாராயின் பகைவரை வெல்லும் இத்தகை உபாயங்களை விலக்கமுடியாமையால் வெளிப்படுத்தும் இயல்பினராவார். சிறந்த நற்குணமுள்ளவனும் வலியற்றவனும் உதவியற்றவனும் ஆகிய அரசன் மிக்க வலியுள்ள அரசனுல் கலக்கமுறும்பொழுது அவன் தனது அரசுரிமையைக் காவல் புரிதற்கு உபாயத்தைத் தேடல் வேண்டும். அத்தருணம் அவன் ஆசிரியர் "உனதரசைப் பகைவரிடம் கொடுத்து நீ வானப்பிரத்தன், சந்நியாசி இவர்களின் நெறியினை மேற்கொண்டொழுகலாம்" என்று உபதேசிப்பது நியாயமாகுமா? இங்ஙனம் கூறுவது பொருந்தாதாகலின் எவ்வாற்ருனும் அறநெறி வழுவினும் சரீரத்தையும் நாட்டையும் காத்தல் வேண்டும் என்று இத்தகைய உபாயங்களைக் கூறவேண்டும். அங்ஙனம் கூறின் அவ்வுபாயங்களால் அரசாட்சியை நிலை நாட்டிக் கொண்டு கிணறு தோண்டுகிறவன் அதிலிருந்து ஊறும் நீரினுல் தன்மேலுள்ள சேற்றைக் கழுவுவது போல செங்கோல் செலுத்தும் புண்ணியத்தால் வஞ்சனை செய்த பாவம் போம் என்று உபதேசிக்கும் ஆசிரியர்க்கு அறநெறித்தவறென்பது உண்டாகுமா? ஆதலின் தீயவழிச் செல்வோரைக் கெட்டவுபாயத்தால் அடக்க வேண்டும் என்று முன்ஞேர்கள் கூறியுள்ளார்கள். இத் தீய வுபாயங்களைத் தீநெறிச் செல்வோரிடத்தன்றி நல்லோரிடத்து உபயோகிக்கலாகாதென்று இந்நூலாசிரியர் கருதுகிருர்.

மிக்க பொருட் சேர்க்கையால் நடைபெறவிருக்கும் அரசியல் அஃதில்லாவிடில் பாழ்படும். அத்தகைய தீங்கு நேராவண்ணம் காத்தற்கு அப்பொருள் இன்றியமையாததாகும். பொருளீட்டுதற் குரிய வழிகள் பலவற்றுள் குடிகளின் மனம் வருந்தாவண்ணம் அவரிடமிருந்து பொருளீட்டுதல் வேண்டும் என்றும் பொருட் செலவு மிகைபடச் செய்யவேண்டிய அமயம் நேரில் அவர்கள் மனம் வாடாமல் மறைவான சில உபாயங்களால் பொருளீட்டல் வேண்டும் என்றும் கூறினர். அம்மட்டில் கௌடலியரின் அறநிலை மாறிய தென்னை ? அங்ஙனம் ஈட்டப்பட்ட பொருளால் அரசியல், இனிது நடைபெறும். அதனுல் புண்ணியம் மேன்மையுறும். ஆதலின், வஞ் சனை செய்த பெரும் பாவமும் அறவே ஒழியும்.

" அரசராவார் பிறரை வஞ்சித்தல் என்னும் கல்வியைக் கற்ப வர் " என ஆன்ருேர் கூறுவர் என்று கவிதிலகரான காளிதாசரும் சாகுந்தலத்தில் கூறியதும் ஈண்டு உணரற்பாலது.

மந்திரிகள் அரசர்களை வயப்படுத்தும் உபாயமும் அரசனது ஆற்றலைத் தம்வயப்படுத்தும் உபாயமும் கூறப்பட்டிருக்கின்றன என விண்டரனிட்சன் கூறுகிருர். அது முற்றிலும் முரண்பட்டது. அவ்வதிகரணத்தின் ஐந்தாம் அத்தியாயத்தில் ஒரு தொழிலில் நியமனம் செய்யப்பட்டவர் அத்தொழிலினை ஒழுங்குபெறச் செய்தல் வேண்டும் என்றும், அரசற்குச் சில தீங்குகள் நேரும் சமயத்தில் அவைகளை அவர்கள் எவ்வாற்ருனும் விலக்க முற்படல்வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளன. ஆரும் அத்தியாயத்தில் " தந்தையை யிழந்த அரசிளங் குமரனைக் கொன்று, அவனது அரசை அமைச்சன் கைப்பற்றவேண்டும் என்ற பாரத்துவாசமதத்தைப் பல யுக்திகளால் மறுத்துத் தந்தையின் இடத்து மகனை அமைத்து முடிசூட்டி அவனுக் குரிய நன்மைகளையே அமைச்சர் எவ்வாற்ருனும் செய்து வரல் வேண்டும் என்று விளக்கப்பட்டுள்ளது.

இவ் வத்தியாயங்களின் பொருள் இங்ஙனம் நன்கு புலனுகவும் விண்டரனிட்சனுக்கு மாறுபட்ட பொருள் எங்ஙனம் கிடைத்ததோ அறிகிலோம்.

ஆதலின் மறச் செயல்களை இப்பொருளூல் தெரிவிக்கின்றமை நீங்கியதுடன் அரசியன்முறை அநுட்டித்தலாகிய அறப் பொருளு ணர்த்தும் தன்மையும் பெறப்பட்டது. எனவே இப் பொருள் நூல் அறநூலையும் ஒக்கும் என்பது புலனும். உலகாயத நூலும் இப் பொருளூலும் ஒக்கும் என்று முன்னவர் கூறியுள்ளார். உலகாயதம்

என்ற சொற்கு நாத்திகம் என்ற பொருள் அவர் கருத்திற்கு இயையுமாயின் அக் கூற்று இதனாற் புறக்கணிக்கப்பட்டதாம். ஆன்வீக்ஷகி என்றதிலடங்கிய தர்க்க சாஸ்திரம் என்ற பொருள் இச் சொற்கு அவர் கொண்டதாயின் அது எல்லாச் சாத்திரங்கட்கும் உதவியாயிருத்தலின் இப்பொருணூலுக்கும் பொருந்தும்.

மேற்கூறிய ஐயங்கட்கு விடையளித்தற்கே இந்நூலிறுதியில் இப்பொருணூல் அறம் பொருளின்பங்களை நடைபெறச் செய்கின்றது; காக்கின்றது என்று கூறப்பட்டுள்ள சுலோகத்தின் உரையில் யான் வரைந்தவை இங்குணர்தற்பாலன.

ஒற்றரை அமைத்தன் முதலியவற்றால் பலவிதமான பிறவஞ்சனைகளைச் செய்தல், இரகசியக் கொலைகள், பிறர்க்குத் தீங்கிழைத்தன் முதலிய கூறும் இந்நூல் யாங்ஙனம் அறமுணர்த்திக் காக்கும் நூலாகும்? எனப் பூருவபக்கம் எடுத்துக்கொண்டு இதற்குச் சித்தாந்த முகமாக குடிகளைக் காத்தல் அரசர்க்குரிய கடமை. அதனை அரசன் அறநெறியினின்று பகைவரை வெல்லும் விருப்புள்ளவனாகக் காத்தல் வேண்டும். சிற்றரசர் அறத்தாறு செல்பவர் எனினும் இராகத் துவேஷாதிகளால் உண்டாகும் பொறாமை பொருணசை இவை வயப்பட்டுப் பல தீய உபாயங்களால் அவ்வரசனைக் கோற முயல்கின்றனர். இங்ஙனம் நிகழ்வது அரசியன்னெறிக்கியல்பாகலின், ஓர் அரசன் ஏனையோராற் றுன்புறுத்தப்படாதவனாகவும், பிறரைத் துன்புறுத்தாதவனாகவும் பிறர்களாற் செய்யப்பட்ட தீங்குகளை விலக்கிக் கொள்ளாதவனாகவும் இருப்பது யாங்ஙனம் அமையும்? பிறர் செய்யும் கொடுமைகளை விலக்காவிடின் தனது அரசு நிலைப்பது அரிதன்றோ! ஆதலின் பிறர் செய்வினைகளைக் களைதற் பொருட்டே அரசன் இவ்வுபாயங்களை அறிதல் வேண்டும் என்றும், அதன் மூலம் நாடு நலமெய்த அறம் செழித்தோங்கும் என்றும், இப்பொருணூல் இயற்றப்பட்டிருப்பதால் "இந்நூல் அறம் பொருள் இன்பம் இவற்றைக் காக்கும்" எனக் கூறினர் என்க.

எக்காரியம் செய்யினும் அதனை எண்ணித்துணியும் ஒருவன் யாவற்றினும் சிறந்த பொருள்களை உணர்த்தும் இப்பொருணூலை உணர்தற்கும் அதன் வழி ஒழுகுவதற்கும் இயலாத நிலையில் யானியற்றுவேன் என்று கருதவும் முற்படான். இந்நிலையில் இப்பொருணூல் பொருளறிவும் அவ்வழி ஒழுக்கமும் அற்ற ஒரு பண்டிதரால் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று விண்டரனிட்ஸன் எவ்வாறு கூறினரோ அறியோம்! இந்நூலிற் பல பொருள்களைத் திரட்டிக்

கூறியிருத்தலின் அங்ஙனம் கூறுவது பண்டிதர்க்கே அமையுமன்றி அரசியனடத்துவோர்க் கமையாது என்றும் கூறுகின்றார். நூல்களிற் பல பொருள்களைத் திரட்டியமைத்தல் அவற்றின்படி ஒழுகாமைக்குக் காரணமாயின் பிரமசூத்திரம், மீமாஞ்சை வியாகரணம் இவைகளை முறையே இயற்றிய வியாசர், சைமினி, பாணினி இவர்களும் தாமியற்றியவாறு ஒழுக்கமில்லாதவர் என்றே கொள்ள நேரும். மேலும் சீர்பெற அரசியற்றும் தன்மையும், சொல்லணிதுலங்க நூலியற்றுந் தன்மையும் முரணுன குணங்களாகா வென்பதும், இவ்விரண்டும் ஓரிடத்தமையும் என்பதும் இவராற் கருதப்படவில்லை.

மற்ெருரு செய்தி ஈண்டுக் குறித்தற்பாலது. "இப்பொருணூலிற் பல்வகைப் பொருள்களின் பெயர்களும் பற்பல நாடுகளின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை யாவும் சந்திரகுப்தனது காலத்தில் இப்பரதகண்டத்தில் இருந்தனவாக அறியக்கூடவில்லை என வரைந்து இதனை இப்பொருணூல் சாணக்கியரால் இயற்றப் படவில்லை என்பதற்குச் சான்ருகக் காட்டி. ஒரு பண்டிதர் எனக்கு ஒரு முடங்கல் விடுத்தார்; அதனை ஈண்டுச் சிறிது ஆராய்வாம்.

இந்நூலிற் காணப்படும் பல பொருட் பெயரும் பல நாடுகளின் பெயரும் சந்திரகுப்தன் காலத்திலிருந்த பரத கண்டத்து மக்களால் அறியப் படாதவை என இவர் எங்ஙனம் அறிந்தார். காட்சியளவையாலறிந்தோம் எனக் கூற இயலாது; அவ்வளவையை நிகர்த்த ஆப்தவாக்கியத்திளுலாவது, அல்லது முதலாசிரியன் உரைகளாலாவது எழுதியிருப்பரோ எனின் அங்ஙனம் கூற ஒரு சிறிதும் இடனில்லை. ஒன்றை மற்ெருன்ருகக் கருதும் மதியினது இயல்புபற்றி நிகழும் ஊகத்தினல் இங்ஙனம் கூறலாமெனின் ஊகமும் மிக வலிய அளவைகளை முரணு திருப்பிற் கொள்ளத் தக்கது. இன்றேற்றள்ளத் தக்கது. கொள்ளத்தக்க அவ்வூகந்தானும், அதனை விலக்கத்தக்க பிற ஊகந்தோன்று மளவேயன்றித் தனித்து நிலைத்ததாகாது. இந்நூலின் முதலிடைகளிலும் சந்திரகுப்தன் அரசியலை நிலைநாட்டியவரும் விஷ்ணுகுப்தன் சாணக்கியன் எனப் பெயர் வாய்ந்தவரும் ஆகிய கௌடலியரே இப்பொருணூலியற்றியுள்ளார் என்பதும் தெள்ளிதின் விளக்கப்பட்டது. ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்தமையின் நம்மிலும் இப்பொருணூலுக்கு நெருங்கிய காலத்தவரும் இதிலமைந்த பொருள்களையெல்லாம் முற்றும் உணர்ந்தவருமாகிய காமந்தகரும் தமது நீதிசாரத்தில் இவரையும் இவரது நூலையும் மிகைபடப் புகழ்ந்துள்ளார்.

இந்நூலிற் கௌடலியர்பெயர் அமைந்திருப்பதும் காமந்தகன் புகழ்ந்திருப்பதுமாகிய இவ்விரண்டும் கண்கூடாக விளங்குகின்றன. இவ்வளவைகளை ஆராய்தற்கு நிலைக்காத நம் ஊகம் புறக்கணிக்கும் எனக் கூறுவது,

"அலைகதிர் ஞாயிற்றை இருளும் அடக்கும்"

என்பதை ஒக்குமென்பதே எனது துணிபு. ஆகலின் இவ்விரண்டு அளவைகளானும் முற்கூறியுள்ள பூருவ பக்கங்கள் யாவும் தள்ளத் தக்கன. இந்நூலிற் கண்ட பொருளும் நாடுகளின் பெயர்களும் சந்திரகுப்தன் காலத்திலிருந்த இப் பரதகண்டத்து உதித்தவர்களால் அறியப்பட்டனவென்பதும் கௌடலியரால் இந்நூல் இயற்றப்பட்டதென்பதும் இனிது புலனாம்.

பதிப்புரை

வித்துவான், சிரோமணி, P. S. இராமாநுஜாச்சாரி,
தமிழாராய்ச்சித்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

'கௌடலீயம் பொருணூல்' என்னும் இம்மொழிபெயர்ப்பு நூலுக்கு முதனூலாக உள்ளது 'கௌடலீய அர்த்த சாஸ்திரம்' என்ற வடமொழி நூலாகும். இந்நூல், அதிகரணம் பிரகரணம் அத்தியாயம் என்ற மூவகைப் பிரிவினைத் தன்னுட் கொண்டதாகத் திகழ்கின்றது. அதிகாரமெனத் தமிழில் கூறப்படுவதுபோல், அதிகரணம் என்ற இவ் வடமொழிப் பெயரும், பல உட்பிரிவுகளைத் தன்னகத்தேகொண்ட ஒரு பெரும் பிரிவினை உணர்த்துவதாகும். இந்நூலில் நூற்றெண்பது சூத்திரங்கள் உள்ளன. இச்சூத்திரங்களைப் பாடிய (பாஷ்ய) முறையில் விரித்து விளக்கும் ஒவ்வொரு சூத்திரப் பொருளே ஒவ்வொரு பிரகரணப் பொருளாக அமைந்துள்ளது. ஒரு பிரகரணத்தின் பகுதியையோ அன்றி, பல பிரகரணங்களின் தொகுதியையோ விரிவாக விளக்கிக்கூறும் பகுதியை அத்தியாயம் என வழங்குவர் முதனூலாசிரியர். சூத்திரமெனப்படும் பிரகரணங்கள் நூற்றெண்பதை விளக்கிக்கூறுவதாக நூற்றைம்பது அத்தியாயங்கள் இந்நூலில் அமையப் பெற்றுள்ளன. பிரகரணம் எனப்படும் ஒரு சூத்திரத்தின் பாடியமாகவுள்ள பொருள் பல கூறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பின், அப்பொருளை அக் கூறுபாடுகளுக் கேற்ற முறையில் பல அத்தியாயங்களால் விளக்கிக் கூறுகின்றார். அதே நிலையில் பல பிரகரணங்களிற் கூறப்படும் பொருள்கள் தம்முள் நெருங்கிய தொடர்புடையவாயின், அப்பொருள்களை ஒரே அத்தியாயத்தாலும் சிலவிடங்களில் கூறுகிறார். ஆகவே நூற்றெண்பது சூத்திரங்களுக்குப் பாடியமாக அமைந்துள்ள (நூற்றெண்பது பிரகரணங்களைத் தன்பாற் கொண்ட) நூற்றைம்பது அத்தியாயங்களாம் உட்பிரிவினையுடைய பதினைந்து அதிகரணங்களாகிற பெரும் பிரிவினைக் கொண்டது இம் முதனூலாகும்.

மேற்கூறப்பட்ட பதினைந்து அதிகரணங்களின் பெயர்களையும், அவ்வதிகரணங்களில் விளக்கப்படும் பிரகரணங்களின் பெயர்களையும் தொகுத்துக் கூறுவதாக இந்நூலின் முதல் அத்தியாயம் அமைந்துளது. எனவே, நூல் நுதலிய பொருளனைத்தையும் தொகுத்து

விளக்கிக் கூறும் பதிகமாக இவ்வத்தியாயம் கூறப்பட்டிருக்கிறது எனப் பகர்தல் ஏற்புடையதாகும்.

ஒன்று முதல் ஐந்து வரையிலுள்ள ஐந்து அதிகரணங்களை ஒரு பகுதியாகவும், ஆறு முதல் பதின்மூன்று வரையிலுள்ள எட்டு அதிகரணங்களை ஒரு பகுதியாகவும், பதினான்காம் அதிகரணத்தை ஒருபகுதியாகவும் பதினைந்தாம் அதிகரணத்தை ஒரு பகுதியாகவும் கொள்ளும் இம்முறையால் மேற்கூறிய பதினைந்து அதிகரணங்களையும் நான்கு கூறுகப் பிரிக்கலாம். இந்நான்கனுள் முதற்பகுதியாய் அமைந்த ஐந்து அதிகரணங்களில், 'பயிற்சி பகர்தல்' என்ற அதிகரணம் முதலாவதாகும். கல்விகற்றலைப்பற்றிக் கூறுதல் என்பது இதன்பொருள். காவற்சாகாடுகைத்தற்றொழிலை மேற்கொண்ட அரசன், கல்வியறிவு உலகியலறிவு முதலியவற்றைப் பெற்றவனுதல் வேண்டும். இன்றேல் உற்றூர் உறவினருடன் அவன் அழிவெய்தி, நாட்டு மக்களையும் கேடுறச் செய்வான். இதுபற்றியே திருவள்ளுவரும் இறை மாட்சியை அடுத்து, 'கல்வி' என்ற அதிகாரத்தையமைத்து, அரசனுக்குக் கல்விப் பயிற்சியின் இன்றியமையாமையை வற்புறுத்தியுள்ளார். இவ்வதிகரணத்தில், அரசன் பயில வேண்டிய கல்வி வகைகள் அவற்றின் இயல்புகள், அக்கல்வியிற் சிறந்தோரைத் துணையாகக் கோடல், கேள்வியறிவு முதலியவற்றின் சிறப்பு, வருணச்சிரம தருமங்கள், அத்தருமங்களின் வழீஇயினுரைத் தண்ட முதலியவற்ருல் ஒறுத்து நன்னெறியுய்த்தல், பொறியடக்கத்தை மேற்கோளாத தாண்டக்கியன், இராவணன், துரியோதனன் முதலியவர்களை எடுத்துக்காட்டு முகமாக, பொறியடக்கத்தை அறிவின் பயனாக மேற்கொள்ளுதலை வற்புறுத்துதல், குடிமக்களின் தூய்மை தூய்மையின்மைகளை ஒற்றர்வாயிலாகத் தெளிந்து கொள்ளுதல், அமைச்சர் முதலியோருடன் செயன் முறைகளைப் பற்றிச் சூழ்ந்தறியும் முறை, நாளைப் பல கூருக்கி, ஒவ்வொரு கூற்றிலும் அரசன் செய்யவேண்டிய கடமைகள், மனைவி மக்கள் முதலியோரால் தனக்கு நேரும் கேடுகளைப் போக்கிக்கொள்ளுதற்குரிய விதிமுறை, உணவுப்பொருளில் நஞ்சு கலக்கப்பெற்றிருத்தலைக் கண்டுகொள்ளுதற்குரிய நெறிகள், முதலிய செய்திகள் விளக்கப்படுகின்றன. இவ்வதிகரணம் 18 பிரகரணங்களை விரித்துரைக்கும் 20 அத்தியாயங்களைத் தன்பாற் கொண்டுள்ளது. இந்நூலின் முதலத்தியாயம் அதிகரணப் பிரகரணங்களின் பெயர்க்குறிப்பாக அமைந்துளதால் அதைச் சேர்த்து 21 அத்தியாயங்களுடன் முதலதிகரணம் முடிவுறுகிறது.

முதலதிகரணத்திற் கூறிய கல்வி கேள்வி முதலியவற்றைப் பெற்றுத் திகழும் அரசன், தன்னாட்டுக்கு வேண்டிய காரியங்களை, அவ்வத் தொழிற்றலைவர்மூலமாகவே நடத்தவேண்டியவனாகலின், அரசியல்வினைபுரியும் தலைமையதிகாரிகளாக யார் யார் நியமிக்கப் பெறவேண்டியவர் என்பதையும், அவர்களுடைய செயன்முறைகள் எவை என்பதையும் விளக்குதற்குத் தொழிற்றலைவர்செயன்முறை என்ற அதிகரணம் இரண்டாவதாக அமைந்துள்ளது.

நாட்டையமைக்குமுறை, உழவர் உழவுத்தொழில்களைக் கண் காணித்தற்குரிய விதிகள், மனைவிமக்களைப் போற்றாதவர்க்குரிய தண்டவகைகள், துறவு பூணுதற்குரியாரை விளக்குதல், நாட்டை விட்டு வெளியேற்றுதற்குரியாரைக் களைந்து நாட்டினைக் காக்கும் முறை, வேளாண்மைத் தொழிற்குப் பயன்படாத நிலங்களைப் பல் வேறு வகையிற் பயன்படுத்தல், நாட்டிற்கு வேண்டிய அரண்வகை கள், இராசவீதி முதலியவற்றின் அமைப்பு அகலம் முதலியன, நகரத்தெய்வம், கொற்றவை, திருமால் முதலிய தெய்வங்களின் திருக்கோயில்களின் அமைப்புமுறை, சுடலை முதலியன அமைய வேண்டிய இடம், உணவுப் பொருளைச் சேமித்துவைத்துப் பயன் படுத்தல், நாட்டின் வருவாய் செலவுகளைச் சீர்செய்தல், அரசியல் வினையாளர் முதலியோரையாளுதற்றிறன், முத்து பவழம் முதலியன தோன்றுமிடம், அவற்றின் உயர்வு தாழ்வுகளைக் காணும் வழி, ஆகரத்தொழிலைப் போற்றுமுறை, நால்வகைப் படைகளில் குதிரை யானை முதலியவற்றிற்குரிய உணவுவகை அளவு முதலியன. படைத் தலைவர்களின் தொழின்முறை என்பனவாதிய செய்திகள் 38 பிர கரணங்களை விரிக்கும் 36 அத்தியாயங்களால் இவ்வதிகரணத்தில் கூறப்படுகின்றன.

கல்வித்துறைக் கண்காணிப்பு, அரசியலுறுப்புக்கள் முதலிய வற்றையுடைய அரசன் குடிமக்களைத் தீய நெறியினின்றும் விலக்கி நன்னெறியிலுய்த்தலைச் செய்யவேண்டிய கடப்பாடுடையனாகலின், 'அறநிலையாட்சி' என்ற அதிகரணம் மூன்றாவதாக அமைந்துள்ளது. அறநிலை = தத்தமக்குரிய அறத்தின் வழி நிற்றல். ஆட்சியாவது, அங்ஙனம் அந்நெறியில் நின்று, உலகியல் வழக்குகளைத் தீர்க்கும் அரசியலதிகாரிகளின் ஆளுதற்றன்மையாம். எற்று நடத்தற்குரிய வழக்குகள், ஏற்றற்குத் தகுதியற்றவை, வழக்குக்கு அடிப்படையாக வுள்ள எண்வகை மணம் தாயபாகம் முதலியவற்றினியல்புகள், பணியாளர் அடிமை முதலியவரை நடத்தவேண்டிய முறை, முறை பிறழ்ந்தார்க்குரிய தண்டவகைகள் முதலியன 19 பிரகரணங்களைக்

கொண்ட 20 அத்தியாயங்களால் இம்மூன்றும் அதிகரணம் விளக்கு கிறது.

'சிறுபகை களைதல்' என்பது நான்காவது அதிகரணமாகும். இதனை 'கண்டகசோதனம்' என முதனூல் கூறும். கண்டகம் என்பது 'முள்' என்றும் சோதனம் என்பது அதனை ஆய்ந்து நீக்கித் தூய்மை செய்தல் என்றும் பொருள்படும். நம் உடற் பகுதியில் முள் தைத்துவிடின், களையப்படாத அம்முள் நாளடைவில் உடலை ஊறு படுத்துவதுபோன்று, நாட்டிலுள்ள தச்சர் முதலிய சிற்பிகளாலும், அரசியலதிகாரிகளாலும் குடிமக்களுக்கு நேரும் இடரினைக்களையாது விடின், நாட்டிற்கே கேடு நேர்ந்து, அரசியலறம் சிதைந்தழியுமாகலின், அத்தீங்குகளையகற்றுதற்குரிய விதிமுறைகளை விளக்குதற்கு இவ் வதிகரணம் தொடங்கப்படுகிறது. கொல்லர், தட்டார், வணிகர், அரசியலதிகாரி முதலியவர்களால் குடிமக்களுக்கு நேரும் தீங்குகள், அவற்றைக் களைதற்குரிய உபாயம், தீ, வறுமை முதலிய தெய்வத் தாலான பேரச்சங்களின் வகைகள், அவற்றைத் தடுக்குமுறை, கள்வரைக் கண்டுபிடித்தற்குரிய உபாய வகைகள், நஞ்சு, கொலை, தூக்கிடுதல் முதலியனகாரணமாக விரைவிலிறந்தாரைப் பற்றிய ஆராய்ச்சி முதலிய செய்திகள் 13 பிரகரணங்களையுடைய 13 அத்தி யாயங்களால் இந்நான்காவது அதிகரணத்திற் கூறப்படுகின்றன.

அரசனுக்கும் நாட்டுமக்களுக்கும் இடர்விளைக்கும் உட்பகைவ ராயுள்ள சிற்றரசர் அரசியலதிகாரிகள் முதலியவரை, ஒற்றரைக் கொண்டு உணர்ந்த அரசன், அவர்களை வஞ்சக முறையால் மறைந்து ஒறுத்தடக்குவது என்னும் பொருள்பயக்கும் 'வஞ்சித்தொறுத்தல்' என்பது ஐந்தாவது அதிகரணமாகும்.

பொருளைக்கொண்டே நீக்குதற்குரிய துன்பத்தை அரசன் எய்தினனாக, அவனுக்குப் பொருள்நிலை குறைந்தநிலையில் குடி மக்களுக்கு எவ்வகையிலும் வெறுப்பு நேராத முறையில் அவர்களிட மிருந்து பொருளையீட்டுதற்குரிய வியக்கத்தக்க பலவகை உபாயங் கள், நற்குண நற்செயல்களையுடைய அமைச்சர் முதலிய துணைவரைப் போற்றும் முறை, அவ்வமைச்சர் முதலியோர் அரசரிடம் மேற் கொள்ளவேண்டிய ஒழுங்குகள், ஏதேனுமொரு காரணம்பற்றி அமைச்சர் முதலியோர்க்கு அரசுரிமை வந்தெய்தின், அதை அரசன் மகனுக்கே உரியதாக்கல் என்ற தனித்தலைமையரசு முதலிய பொருள் கள், இவ்வதிகரணத்தில் தெள்ளிதிற் புலப்படுத்தப்படுகின்றன.

மேற்கூறியவாறு முதற்கூறாக அமைந்த இவ்வைந்து அதிகரணங் களால், அரசன் தன்னாட்டின் ஏமாலங்களைச் சூழ்ந்தறிந்து கையாள

வேண்டிய விதிமுறைகள் அறிவுறுத்தப்படுகின்றன. எனவே, தன்னாட்டில் எவ்வகையான இடையூறுமின்றிக் குடிமக்கள் அனைவரும் இன்புற்று வாழ்தற்கு இன்றியமையாதனவாகவுள்ள ஒழுகலாறுகளைத் தெளிவுபடுத்தும் பகுதி, ஐந்து அதிகரணங்களையுடையது. இவ்வொழுகலாற்றினைத் ‘தந்திரம்’ என்பர் வட நூலார்.

தன்னாட்டிற்கு இன்றியமையாதனவாக வேண்டப்படும் செயன்முறைகளை முறைப்படச் செய்துமுடித்த அரசன், தன் அரசாட்சியை மேலும் மேலும் விரிவுபடுத்திக் கொள்ளுதற்குரிய விதிமுறைகளைக் கையாளுதல் இயல்பாக வேண்டப்படுதலின், மண்டலயோனி என்ற ஆறும் அதிகரணம் முதல் 13-ஆம் அதிகரணம் ஈறாக உள்ளதும் இரண்டாம் பகுதியாக மேற்கூறப்பட்டதுமான எட்டு அதிகரணங்களால், பகைநாடுகோடற்குரிய விதிமுறைகள் விரித்துரைக்கப்படுகின்றன. இவ்விதிமுறை ‘ஆவாபம்’ என்று வழங்கப்படும்.

வெற்றிவிரும்பும் அரசன், பகைவர், நடுவன், அயலான் என்ற நால்வகை உறுப்புக்களின் தொகுதி, மண்டலம் எனப்படும். இது சந்தி விக்கிரகம் முதலிய அறுவகைக் குணங்களுக்கு மூலகாரணமாயிருத்தலின் மண்டலயோனி எனப்பட்டது. அரசு, அமைச்சு முதலிய எழுவகை அங்கங்களுக்குள தாம் நிறைவு இத்தன்மைத்து, பகைவரைக் களைதற்குரிய காலம் இடம் முதலியன இவை என்பவற்றை மண்டலயோனி என்ற ஆறும் அதிகரணம் இரண்டு பிரகரணங்களைக் கொண்ட இரண்டு அத்தியாயங்களால் விளக்குவதாகும்.

பகைவரைத் தன்வயப்படுத்திக்கொள்ள விரும்பும் அரசன், அவர்களின் ஆற்றல் முதலியவற்றிற்கேற்ப, சந்தி விக்கிரகம் முதலிய அறுவகைக் குணங்களில் ஒன்றையோ, இரண்டு முதலியவற்றையோ, ஏற்றல் வேண்டும் என்பதைக் கூறும்பொருட்டு அறுவகைக் குணங்கள் என்ற ஏழாம் அதிகரணம் அடுத்து வைக்கப்படுகிறது. இதில், பகை களைதற்குரிய உபாயங்களான சந்தி முதலியவற்றிற்குள தாம் ஏற்றத்தாழ்வுகள், அவ்வுபாயங்களை யேற்றற்குரிய காலம் முதலியன, மேற்சேறற்குரியார் பலராயவிடத்து, மேற்சேறற்குரிய விதிமுறை, முதலியன கூறப்படுகின்றன.

‘விதனம் விளம்பல்’ என்பது எட்டாவது அதிகரணமாகும். விதனங்கள் துன்பந்தருவன. இவற்றின் இயல்பு, இருப்பிடம் முதலியவற்றைப் பற்றிக் கூறுதல் என்பது இதன் பொருள். பகைவனது விதனத்தில் மேற்சேறல், பகைவனுக்கும் தனக்கும் ஒரே காலத்தில் விதனமிருப்பின், அவ்விதனங்களின் வன்மை மென்மைகளை

யாராய்தல், இவ்வாராய்ச்சியில், பல்வேறு முன்னையாசிரியரின் கொள்கைகளைக் கூறி மறுத்து, நூலாசிரியர் தம் கொள்கையைக் கூறுதல், வேட்டம், கடுஞ்சொல் முதலிய எழுவகை விதனங்களால் உண்டாம் குற்றங்கள், அவற்றின் சிறுமை பெருமைகள், நெருப்பு, நீர், வறுமை முதலியவற்றால் நேரும் துன்பங்களின் காரணங்கள், வகைகள், அவற்றைத்தடுத்தற்குரிய உபாயங்கள், அரசன் அமைச்சர் முதலியோர், பல்வேறுவகைப்படைகள் இவற்றுக்குளதாம் விதனங்களின் இயல்பு, நீக்குமுறை முதலிய செய்திகள் இவ்வதிகரணத்தில் புலப்படுத்தப்படுகின்றன.

பகைவனுடன் போர் செய்ய முயலும் அரசன், போர் குறித்துச் செல்லுமுன் ஆராய்ந்து செய்யவேண்டிய செயன்முறைகளைப் பற்றிக் கூறுவதான 'போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்' என்ற அதிகரணம் ஒன்பதாவதாகும்.

போர்ச்செலவு வகைகள், போர் வகைக்கேற்ற பருவங்களின் வரையறை, போர் குறித்துச் செல்லுமுன் தன்னாட்டின் பகுதிகளிற் காவலமைக்கும் முறை, படைகளை யியக்கும் நெறி, படைகளின் முயற்சி, எதிர்ப்படை வகுத்தலைப்பற்றிய விதிகள், போர்க்காலத்தில் உண்டாம் இடர்கள், அவற்றைக் களையும் முறை, முதலியவை இதில் 12 பிரகரணங்களைக் கொண்ட ஏழு அத்தியாயங்களால் கூறப்படுகின்றன.

போர் குறித்துப் புறப்படவேண்டிய நிலையிலுள்ள அரசன், போருக்கு முன்னும் பின்னும் மேற்கொள்ளவேண்டிய செயன்முறைகளைப் போர்நிகழ்ச்சி என்ற பத்தாவது அதிகரணம் விளக்குவதாகும்.

பகைப்படையை நோக்கிச் செல்லும்போது, நீரற்ற பாலைவனம் முதலிய கடும்வழிச்செலவு முதலியவற்றால் தன் படைக்குண்டாம் துன்பங்களைப் போக்கிக் காத்தல், பாசறை யமைக்கும் முறை, படைகளின் தன்மைக்கேற்ற போர்க்களவியல்புகள், போர் அணிவகுப்பு என்பவற்றின் வகைகள், பகைப்படையைத் தாக்குமுறை என்பவை இந்த அதிகரணத்தில் உரைக்கப்படுகின்றன.

குழூஉச்செயல் என்பது பதினோராவது அதிகரணமாகும். அம்பு, வாள் முதலிய படைக்கருவிகளைத் தம்மிடத்தே வைத்துக்கொண்டு, ஒன்றுகூடி அரசற்கு அடங்காது ஒழுகுவோரது கூட்டம், குழூஉ எனப்படும். அரசன், ஒறுத்தல் வேறுபடுத்தல் முதலிய உபாயங்களை மேற்கொண்டு, அக்குழுவினரால் நேரும் பல்வேறு இடர்களைப்

போக்கும் நெறிகள் இதில் புலனுகின்றன. இது 2 பிரகரணங்களை விளக்கும் ஒரு அத்தியாயத்தைத் தன்பாற் கொண்டுள்ளது.

அடுத்தது 'ஆற்றலிலான் செயல்' என்ற அதிகரணமாகும். ஆற்றல், படை முதலியவற்ருல் தன்னினும் மிக்கான் ஒரு அரசன், தன்னுடன் சந்தியை விரும்பாதபோது, குறைந்த ஆற்றலுள்ள அரசன் மேற்கொள்ளவேண்டிய செயன்முறைகள் என்பது இதன் பொருள்.

தலையிடை கடையாய தூதுவரின் இயல்பு முதலியன, சந்தி செய்தற்குரிய விதிகள், அறிவுரை முதலியவற்ருல் பகைவரைத் தன் வயப்படுத்தல், தீ, நஞ்சு முதலியவற்றைக்கொண்டு பகைவரைத் துன்புறுத்தும் முறைகள், பகைவருக்கு உணவுப்பொருள் முதலியவை கிட்டாதபடி தடை செய்தல் முதலியன இதில் 9 பிரகரணங்களை யுடைய 5 அத்தியாயங்களால் விரித்துணர்த்தப்படுகின்றன.

பகைவருடைய அரணை அடைதற்குரிய உபாயங்கள் என்னும் பொருளதான 'பகையரண் எய்தும் வழி' என்ற அதிகரணம் பதின் மூன்ருவதாகும்.

அச்சுறுத்தல் முதலிய உபாயங்களை மேற்கொண்டு, பகை யரணின்கண் உள்ளாரைத் தன்வயப்படுத்தற்குரிய வஞ்சக முறை கள், பகைவரை வெளியேற்றுதற்குரிய உபாயங்கள், பகைநாட்டின ருக்குத் தன்பாலுளதாம் ஐயுறவு முதலியவற்றை நீக்கி நம்பிக்கை யூட்டுதற்குரிய நெறிவகைகள் முதலியவற்றை இவ்வதிகரணம் விளக்கிக் கூறுவதாகும்.

இதுகாறும், தன்னுட்டைக் காத்தல், பகைநாடு கோடல் என்ற இரு பயனையடியொற்றி, மேற்கொள்ளவேண்டிய செயன்முறைகள் தனித்தனியே விளக்கப்பட்டன. இனி, அவ்விரண்டுக்கும் பொதுவாக வேண்டப்படும் செயன்முறைகளை, 'மறைவுச் செயல்' என்ற 14-ஆம் அதிகரணம் விளக்கிக் கூறும். இவ்வதிகரணம் மூன்ரும் பகுதியாக மேற் கூறப்பட்டது. பகைவரையழித்தற்குரிய மருந்து மந்திரம் முதலியவற்றைப் பகைவர் அறியாவாறு மறைவாக உப யோகித்தல் என்பது இதன் பொருள். பக்கத்திற்கு ஒருமுறை புசித்தல், திங்களுக்கொருமுறை புசித்தல், உருவமாறுபாடு, குட்டம் முதலிய தொத்துநோய்வகைகளை யுண்டாக்குதல், உண்டான அவற்றை யகற்றுதல், இருளிலும் பொருளைக் காண்டல், பிறர்க்கு உருவம் தோன்ருவாறு இயங்குதல், காவலர் முதலியோரை உறங்கச்

செய்தல் முதலிய பலவகைச் செயல்களுக்குரிய மருந்துவகைகளையும், மந்திரவகைகளையும் இவ்வதிகரணம் விளக்கிக் கூறுகின்றது.

இனி, இப்பதினான்கு அதிகரணங்களால் கூறப்படும் பொருட் டொகுதியினை இனிது விளங்கிக்கொள்ளுதற்கு இன்றியமையாதன வாக வேண்டப்படும் முப்பத்திரண்டு உக்திகளை, இலக்கணங்களா லும் உதாரணங்களாலும் விளக்கிக் கூறும் நான்காம் பகுதியாகப் பதினைந்தாம் அதிகரணம் அமைந்துள்ளது. இவ்வாற்றான் நூற் பொருளமைதி ஒருவாறு கூறப்பட்டது.

தமிழ்மொழியினைச் சிறப்புற்று விளங்கச் செய்யும் நூல்களை முதனூல், வழிநூல் என்ற இரு கூறாகப் பகுப்பர். இவ்விரண்ட னுள் வழிநூல் என்பது, தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்த்ததர்ப்பட யாத்தல் என்று நால்வகைப்படும். இந்நான்கனுள் இறுதியிற் கூறப்பட்ட மொழிபெயர்த்ததர்ப்பட யாத்தல் என்பது பிறமொழியிலுள்ள பொருட்டொகுதியினை அவை கிடந்தவாற்றானே தமிழ்மொழியால் விளக்கிக் கூறுவதாகும். மொழிபெயர்த்தல் என்ற பெயரே, பொருட்பிறழ்ச்சி சிறிதேனும் ஏற்கற்பாலதன்று என்பதைப் புலப்படுத்தும். தமிழ்மொழியின் ஆக்கத்தில் நோக்கங் கொண்ட முன்னையாசிரியர், அதற்கு வேற்றுமொழிப் பொருளைத் தமிழில் மொழி பெயர்த்துரைத்தலையும் ஒன்றாக எண்ணி, அதனை வழிநூல்களின் வகையுட்படுத்திக் கூறுவாராயின், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு இம்மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை தெள்ளிதிற் புலனும். இச் சிறப்புப் பற்றியன்றே, மேனாட்டவர் தந்தம் மொழி களுக்கு வளர்ச்சியைக் கருதி, திருக்குறள், சாகுந்தலம் முதலிய பிற மொழி நூல்களைத் தம் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள்!

இக்கருத்தையடியொற்றியே, தமிழ்மொழி வளர்ச்சியிற் கருத் துக்கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், இப்பொருள் நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடக் கருதி, நம் பண்டித மணியிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தனர். பண்டிதமணியவர்கள் இப்பணியை மேற்கொண்ட காலத்தில், அவர்களுக்கு உதவியாள னாய் யான் நியமனம் பெறுதற்குரிய முயற்சியைச் செய்து, இப் பணியில் ஈடுபடும் பேற்றினைப் பெறுதற்கு உறுதுணையாயிருந்தவர், தத்துவப் பேராசிரியர் கல்வித்துறைத் தலைவர் திருவாளர் R. இராமாநுஜாச்சாரியார் அவர்களும் தமிழ்ப்பேராசிரியர் பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும், வட மொழி விரிவுரையாளர், K. ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்களும் ஆவர்.

அன்னாரின் பேருதவிக்கு யாண்டும் யான் கடமைப்பட்டுள்ளேன். பண்டிதமணியவர்கள் முதல் மூன்று அதிகரணங்களின் மொழி பெயர்ப்பு முற்றிய நிலையில், உடல்நலக் குறைவினால் விலகிக் கொள்ளுங்கால் எழுதிய குறிப்பின்படி, இந்நூலின் எஞ்சிய பகுதியையும் மொழி பெயர்க்கும் பணியைப் பல்கலைக் கழகத்தார் என்க்கு அளித்தனர். பண்டிதமணியவர்களின் மொழி பெயர்ப்பு முறையைத் தழுவியே, என்னாலும் நான்காம் அதிகரணம் முதல் பதினைந்தாம் அதிகரணம் முடியவுள்ள, எஞ்சிய நூற்பகுதி மொழிபெயர்த்து விளக்கவுரையுடன் எழுதி முடிக்கப்பட்டது. முதனூலில் திரு. T. கணபதி சாஸ்திரியாரால் எழுதப்பட்ட முன்னுரையின் தமிழ் மொழி பெயர்ப்பு, இந்நூலைப் படிப்பவர்களுக்குப் பயன்படுமென்று கருதி, இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

அரும்பதம் குறியீட்டுச் சொற்கள் முதலியவற்றின் அகராதியில் குறிப்பிட்ட சொற்கள், இந்நூலில் பல இடங்களில் பயின்று வந்திருப்பினும், அவற்றைப் பற்றிய விளக்கம் முதன் முதலாக வந்துள்ள பக்கத்தின் எண் மட்டுமே காட்டப்பட்டிருக்கின்றது.

பொருளை யுணர்த்தும் முறையில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனிச் சிறப்புண்டு. அச்சிறப்பியல்புடன் கூடிய மொழியிலுள்ள பொருட்டொகுதியினைப் பிறழ்ச்சியின்றி நேரான மொழி பெயர்ப்பு வகையில் பிறிதொரு மொழியால் புலப்படுத்துவதென்பது எளிதன்று. இம் மொழிபெயர்ப்பு, மேற்கூறிய முறையில் முதனூலுடன் சிறிதளவும் பிறழ்ச்சியின்றி நெருங்கிய தொடர்பு பெற்று விளங்குவதாகும். எனவே நேர் மொழி பெயர்ப்பால் பலவிடங்களில் எளிய முறையில் பொருட்டுணிவு புலனாவதரிதாயிருக்கக்கூடும். ஆதலின் விளக்கவுரை மூலத்தில் ஆங்காங்கு எண்களிட்டு, அவ்வெண் முறையே கீழ்க்குறிப்பில், சொற்பொருள் விரிப்பனவாகவும், தொடர்ப்பொருள் விரிப்பனவாகவும், இயைபு விளக்குவனவாகவும், திரண்ட கருத்தைத் தெரிவிப்பனவாகவும், பிற விளக்கங்களாகவும் அமைந்துள்ளது. இம் முதனூலின் முகவுரையில்—"இந்நூல் பதவாக்கியங்கள் குற்றமற்ற நிலையில் சீர்பெற அமைந்திருப்பினும் பொருட் சிறப்பால் பெருமுயற்சி படைத்த புலவராலும் அறிதற்கரியது" என்ற கருத்து உணர்த்தப்பட்டிருக்கின்றது. பொருளறிவைப்பற்றி இக் கருத்து எழுவதாயின், அப்பொருளை யுணர்ந்து சிறிதும் பிறழ்ச்சியின்றி வேறொரு மொழியில் இனிது புலப்படுமாறு உணர்த்துவதில் உண்டாம் இடர்ப்பாடு கூறவேண்டாவாயிற்று. நேர் மொழிபெயர்ப்பால் விளங்காத கருத்தை இனிது விளக்குதற்கெழுந்த மேற்கூறிய

கீழ்க்குறிப்புப் பகுதியில், மூலத்துடன் ஒத்த கருத்துள்ள திருக்குறள் முதலிய தமிழ்நூற் பகுதிகளும் எடுத்துக்காட்டாக இடம் பெற்றிருக்கின்றன. மூலத்திலுள்ள சில குறியீட்டுச் சொற்களை மொழிபெயர்க்குங்கால் ஒரு சொற்குப் பல சொற்றொடர்களைக் கையாள நேரிடக்கூடிய சில இடங்களில் அம் மூலச்சொற்களே இம் மொழிபெயர்ப்பிலும் அமைந்துள. அச் சொற்களின் விளக்கங்கள் விளக்கவுரைப் பகுதியால் புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. குறியீட்டுச்சொற்களுக்கு மாறுபாடு நேராமற் காத்தற்கும், பொருள்மயக்கத்தைத் தடுத்தற்கும் இம்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மொழிபெயர்க்குங்கால், ஆங்கில மொழிபெயர்ப்பு, வடமொழி யுரை இவற்றை ஒப்பு நோக்கி நூலாசிரியர் கருத்துக்கேற்புடைய பொருள்கள் ஆராய்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இம்முதனூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு மூலத்துக்கு நேரான மொழிபெயர்ப்பன்று என்பதை அந் நூல் முகவுரையிலிருந்தே காணலாம். நேராக மொழிபெயர்த்தலை மேற்கொண்டதால், வடமொழிக்கே சிறப்பாகவுள்ள சில சொன்னடையைக் கொண்ட பகுதியைத் தமிழ் மரபிற்கேற்ற நடையில் மொழிபெயர்க்கக் கூடாத இடங்களில் (   ) இக்குறியீட்டினுள் ஏற்ற சொற்களைச் சேர்த்து முடிவுகாட்டிக் கருத்தை விளக்கியிருத்தல் காணலாம். மேற்குறிப்பிட்ட குறியீட்டினுள் உள்ள சொற்களுக்குரிய சொல் முதனூலில் இல்லை யென்பதை இக்குறியீடு புலப்படுத்துவதாகும்.

இம் மொழிபெயர்ப்புவேலையை யான் மேற்கொண்ட காலத்துத் தமிழாராய்ச்சித் துறைப் பேராசிரியராயிருந்து என்னை ஊக்கிய பேரறிஞர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்களுக்கும், இப்பால், இந்நூல் இனிது நிறைவேறுதற்கு ஆவன செய்தும், முகவுரை உதவியும் சிறப்பித்த, தமிழாராய்ச்சித் துறைப் பேராசிரியர் திருவாளர் வித்துவான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L., அவர்களுக்கும், எனக்கு இன்னோரன்ன தமிழ்ப் பணியை உதவி ஆதரித்து வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கும், என்னுடைய உளமார்ந்த நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், இந்நூலில் யான் மொழிபெயர்த்த மூலத்தையும் விளக்கவுரையையும் அவ்வப்போது சலிப்பின்றிப் படித்துத் திருத்தியும், ஏற்ற இடங்களில் திருக்குறள் முதலிய நூல்களிலிருந்து ஒப்புமைப்பகுதிகளும் விளக்கங்களும் எழுதியளித்தும், அச்சிடுங்கால் உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலியன புரிந்தும் உதவிய

தமிழாராய்சித்துறை விரிவுரையாளர் வித்துவான் திரு. க. வெள்ளை வாரணனுர் அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

இந்திய நாட்டின் பண்டையரசியலமைப்பினை அறிதற்குக் கருவியாகிய இப்பொருள் நூலின் மொழிபெயர்ப்பினை யேற்று ஆதரிக்குமுகத்தால், இதுபோன்று வடமொழியிலுள்ள சிறந்த பல நூல்கள் தமிழில் வெளிவருதற்குத் தமிழன்பர் தக்கவாறு ஊக்கு விப்பர் என நம்புகின்றேன்.

P. S. இராமாநுஜாச்சாரி.

பொருளடக்கம்

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்		பக்கம்
		முதலதிகரணம்—பயிற்சி பகர்தல்		...2 —127
1	—	அதிகரணப் பிரகரணங்களின் பெயர்க்குறிப்பு	...	2
2	1	வித்தை விளம்பல்—ஆன்வீட்சிகீயின் இயல்பு	...	22
3	,,	,, திரையீயின் இயல்பு	...	26
4	,,	,, வார்த்தை தண்டநீதிகளின் இயல்பு	...	33
5	2	பெரியோரிணக்கம்	...	37
6	3	பொறியடக்கம்—குற்றங்கடிதல்	...	41
7	,,	,, அதனையுடைய அரசனியல்பு	...	44
8	4	அமைச்சரை யமைத்தல்	...	48
9	5	மந்திரிபுரோகிதரை யமைத்தல்	...	52
10	6	உபதைகளால் அமைச்சர் முதலியோரின் மனவியல்பு ஆராய்தல்	...	56
11	7	ஒற்றரை யமைத்தல்	...	61
12	8	ஒற்றூடல்	...	66
13	9	தன்னாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைக் காத்தல்	...	74
14	10	பகைவர்நாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைத் தன்வயப்படுத்தல்	...	78
15	11	மந்திராதிகாரம்	...	83
16	12	தூதுவிடுத்தல்	...	92
17	13	காவலன்புதல்வர்காப்பு	...	98
18	14, 15	விலக்கப்படும் மக்கள் வேந்தன்பாலொழுகல், விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல்	...	105
19	16	அரசனது செயன்முறை	...	109
20	17	அரண்மனை யமைத்தல்	...	114
21	18	தற்காப்பு	...	121

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்	பக்கம
		2-ஆம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை	...128–403
22	1	நாடு அமைத்தல் ...	128
23	2	உழவிலா நிலத்தைப் பயனுற அமைத்தல் ...	137
24	3	அரண் அமைத்தல் ...	140
25	4	அரணுள் அமைத்தல் ...	149
26	5	பொருட்பண்டாரம் புரப்போன் செய்தி ...	155
27	6	இறைப்பொருள் தொகுப்போன் ஏற்கும் பொருள்நெறி ...	161
28	7	பொருட்கணக் கெழுதுவோர்ப் பொருந்ததிகாரம் ...	170
29	8	வினைவலார் கவர்பொருள் மீட்டுக் கொணர்வித்தல் ...	180
30	9	தலைமைவினையாளர் தகைமை யாராய்தல் ...	190
31	10	முடங்கல் விதிமுறை ...	197
32	11	கருவூலத்தியை திருமணி ஆய்தல் ...	208
33	12	ஆகரத் தொழில்நிலை ...	226
34	13	அக்கசாலையிற் பொற்றொழிற்றலைவன் ...	238
35	14	அங்காடித்தெருவில் பொன் வினைஞன் செயல் ...	249
36	15	உணவுப் பொருள்நிலையத் தலைவன் ...	260
37	16	விலைப்படுபண்டத் தலைவன் ...	271
38	17	குப்பியத் தலைவன் ...	276
39	18	படைக்கல நிலையத் தலைவன் ...	280
40	19	துலைமுதலளவையின் நிலை யாராய்தல் ...	286
41	20	நிலம்பொழுதளவை ...	293
42	21	உல்குபொருள் தலைவன் ...	300
43	,,	,, உல்கு வரையறை ...	307
44	22	இழைநெய்தற் றொழிற்றலைவன் ...	311
45	23	உழவுத் தொழிற் றலைவன் ...	315
46	24	கள்வினைத் தலைவன் ...	323
47	25	இறைச்சித் தொழிற் றலைவன் ...	331

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்	பக்கம்
48	26	வரைவின்மகளிரை நடத்தும் தலைவன் ...	335
49	27	மரக்கலத் தலைவன் ...	342
50	28	ஆனினத் தலைவன் ...	349
51	29	குதிரைத் தலைவன் ...	358
52	30	யானைத் தலைவன் ...	368
53	,,	,, யானைப் பயிற்சி ...	373
54	31–33	தேர்த்தலைவன், காலாட்படைத் தலைவன், படைத் தலைவன் தொழின் முறை ...	379
55	34, 35	இலச்சினைத் தலைவன், புன்னிலத் தலைவன் ...	383
56	36, 37	நாட்டு வருவாய்த் தலைவன் செயல், இன்னிலை வாணிகத் தவக்குறியினராக ஒற்றரை யமைத்தல் ...	386
57	38	நகரத்தலைவன் செயல் ...	393

3-ஆம் அதிகரணம்—அறநிலையாட்சி ...404-568

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்	பக்கம்
58	1, 2	வழக்கியல் நிறுத்தல், வழக்குரை வரைதல் ...	404
59	3	மணவியல்—மண அறம், சீதன விதி, பின் மணப்பொருள் ...	421
60	,,	,, பணிசெயல், குடியோம்பப் பணித்தல், கொடுமை, வெறுப்பு, விலக்கியன மேற்கோடல், உதவியைத் தடுத்தல் ...	435
61	,,	,, வெளியேறுதல், பின்தொடர்தல், சிலநாட் பிரிவு, பலநாட் பிரிவு ...	444
62	4	தாயபாகம்—தாயமுறை ...	453
63	,,	,, பகுதிக்கூறு ...	461
64	,,	,, புதல்வர் வகை ...	468
65	5	நிலவழக்கு—மனை நிலம் ...	475
66	,,	,, நில விலை ...	481
67	5, 6	,, புன்னில வயல்வழித் தடை, கட்டுப்பாடு கடவாமை ...	490

அத்தி யாயம்	பிரகர ணம்	பொருள்		பக்கம்
68	7	கடன் கோடல்	...	499
69	8	அடைக்கலப் பொருளியல்	...	510
70	9	அடிமைப் பணியாளர் இயல்பு	...	521
71	10	கூடித் தொழில் புரிதல்	...	529
72	11	விற்றுக்கொண்டு மாறுபடல்	...	536
73	12–14	நல்கியதை நல்காமை, உரிமையில்லா தவன் விற்றல், உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு	...	540
74	15	வன்செய்கை	...	548
75	16	வன்சொல்	...	551
76	17	தண்டக்கொடுமை	...	555
77	18, 19	சூது புள் விலங்கு விளையாட்டு, ஒழிபு	...	562

4-ஆம் அதிகாரணம்—சிறுபகை களைதல் ...569–659

78	1	காருகரால் தீங்கு நேராமற் காத்தல்	...	569
79	2	வணிகர்களால் தீங்கு நேராமற் காத்தல்	...	581
80	3	தெய்விகப்பேரச்ச மாற்றம்	...	588
81	4	ஏமாற்றிப் பிழைப்பவரால் தீங்கு நேராமற் காத்தல்	...	595
82	5	சித்தவுருவினரால் வஞ்சகரை வெளிப்படுத்தல்	...	600
83	6	ஐயுறவுருச் செயல்களாற் கள்வரைப் பிடித்தல்	...	605
84	7	விரைவிலிறந்தானை ஆராய்தல்	...	613
85	8	சொற் செயல்களால் வினுதல்	...	619
86	9	அதிகாரிகளால் தீங்கு நேராமற் காத்தல்	..	627
87	10	உறுப்பொன்று களைதற்கொத்த பொருட்டண்டம்	...	635
88	11	சுத்த சித்திர தண்டவிதி	...	640
89	12	கன்னியைத் துன்புறுத்தல்	...	645
90	13	நெறி கடத்தற் றண்டம்	...	652

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்	பக்கம்
		5-ஆம் அதிகாரணம்—வஞ்சித்தொறுத்தல்	...660–717
91	1	மறைவிறெறுத்தல் ...	660
92	2	பொன் முதலியவற்றை மிகுதியாகக் கோடல் ...	673
93	3	துணைவரைப் புரத்தல் ...	686
94	4	அமைச்சர் முதலியோர் இயல்பு ...	695
95	5	ஒழுக்க வரையறை ...	702
96	6, 7	அரசியற் புத்தமைப்பு, தனித் தலைமையரசு ...	709
		6-ஆம் அதிகரணம்—மண்டலயோனி	...718–734
97	1	அங்கங்களின் நிறைவு ...	718
98	2	வினை செயல் பயனுகர் கருவி ...	726
		7-ஆம் அதிகரணம்—அறுவகைக் குணங்கள்	...735–905
99	1, 2	அறுகுண வரையறை, குறைவொப்பு மிகுதிகளின் துணிபு ...	735
100	3	வலியதைப் பற்றி யொழுகல் ...	745
101	4, 5	குறைவொப்பு மிகுதியாம் வலிநிலைகளுட் குணநலம் பற்றல், இழிந்தோன் சந்திகளை ஏற்றல் ...	751
102	6–10	பொருதிருத்தல், நட்புக்கொண்டிருத்தல், பொருதுமேற்சேறல், நட்புக்கொண்டுமேற்சேறல், கூடி மேற்சேறல் ...	760
103	11–13	கலக்கமுடையானும் தீங்குபுரிபவனுமாகிய பகைவரிருவருள் மேற்சேறற்குரியானைத் துணிதல், பிரகிருதிகளின் குறை பொருணசை வெறுப்புக் காரணம், கூடித் தொடர்ந்து செல்வோரை ஆராய்தல் ...	769

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்		பக்கம்
104	14, 15	சந்தி செய்துகொண்டோர் பிரிந்து சேறல், வரையறை யுடையது வரையறை யில்லது பிரிந்தவனைப் பற்றியது என்னும் சந்திகள்	...	780
105	16	பிரித்தலைக் காரணமாக உடைய சந்தி விக்கிரகங்கள்	...	792
106	17, 18	மேற்சேறற்குரியான் செயல், அருளுதற்குரிய நண்பர்கள்	...	802
107	19	நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள்— நட்புச்சந்தி, பொருட்சந்தி	...	811
108	,,	,, நிலச்சந்தி	...	822
109	,,	,, முடிவுறுத சந்தி	...	829
110	,,	,, செயற்சந்தி	...	838
111	20	பக்கத்துறையும் பகைவன் செயல்	...	845
112	21	குறைந்த ஆற்றல்களின் நிறைவு	...	856
113	22, 23	வலியவனோடு பொருது மறைந்து கோடற்குரிய காரணங்கள், படைவலியால் தாழ்த்தப்பட்டோன் செயல்	...	864
114	24	படைவலியாற் பகைவனைத் தன்பாற்படுத்துவோன் செயல்	...	873
115	25, 26	சந்திகன்மம், சந்தியின் விடுதலை	...	881
116	27–29	நடுவன்பால் ஒழுகல், நொதுமலன் பால் ஒழுகல், மண்டலசரிதம்	...	894

8-ஆம் அதிகாரணம்—விதனம் விளம்பல் ...906–962

117	1	பகுதிகளின் விதனக்குழு	...	906
118	2	அரசற்கும் அரசியற்குமுரிய விதனவாராய்ச்சி	...	919
119	3	புருட விதனக்குழு	...	926
120	4–6	துன்பக்குழு, தடைக்குழு, பொருள் கொடாமைக்குரிய காரணக்குழு	...	938
121	7, 8	படை விதனக்குழு, நட்டோர் விதனக்குழு	...	952

அத்தியாயம்	பிரகரணம்	பொருள்	பக்கம்
		9-ஆம் அதிகாரணம்—போர்ச்செலவு	
		மேற்கொள்வோன் செயல்	963-1045
122	1, 2	ஆற்றல் இடம் காலங்களின் வன்மை மென்மை யறிதல், மேற்சேறற்குரிய காலங்கள் ...	963
123	3-5	படை செலுத்தற்குரிய காலங்கள், சந்நாக குணங்கள், எதிர்ப்படையின் செயல் ...	974
124	6, 7	பின்னர் நிகழும் கொடுஞ்செயல்களை ஆராய்தல், அகப்புறப் பகுதிகளின் சினமடக்கல் ...	986
125	8	குறைவழிவூதியங்களின் ஆராய்ச்சி ...	998
126	9	அகப்புற இடர்கள் ...	1006
127	10	வெறுக்கத்தக்கவரும் பகைவரும் விளைக்கும் இடர்கள் ...	1014
128	11, 12	பொருளழிவையங்களோடு அமைந்த இடர்கள், அவற்றைக் களையும் உபாய விகற்பங்களால் உண்டாம் சித்திகள் ...	1028
		10-ஆம் அதிகாரணம்—போர்நிகழ்ச்சி	1046-1098
129	1	பாசறை யமைத்தல் ...	1046
130	2, 3	பாசறைநோக்கிச் சேறல், படைவிதணம் கடும்வழிச் செல்லுங்காலம் இவற்றினின்றும் படைகளைக் காத்தல் ...	1050
131	4-6	வஞ்சகப் போர்வகைகள், தன் படைகளை ஊக்கமுறுத்தல், தன் படைக்குப் பகைப்படையினும் விழுமிய அமைப்பு ...	1057
132	7, 8	போர்க்களவியல்பு, யானை குதிரை தேர் காலாட்களின் செயல்கள் ...	1069
133	9-11	பக்க கக்க நடுவிடங்களில் படையளவிற்குத் தக வகுப்புக்களைப் பிரித்தமைத்தல், வன்படை மென்படைகளைப் பிரித்தமைத்தல், யானை குதிரை தேர் காலாட்படைகளின் போர் வகைகள் ...	1077
134	12, 13	தண்டம் போகம் மண்டலம் அசங்கதம் என்னும் படைவகுப்பமைத்தல், அவற்றுள் எதிர்ப்படை வகுப்பமைத்தல் ...	1090

அத்தி யாயம்	பிரகர ணம்	பொருள்	பக்கம்
		11-ஆம் அதிகரணம்—சூழுஉச் செயல்	1099–1110
135	1, 2	வேறுபடுத்தலே மேற்கோடல், மறைவிற் கோறல் ...	1099
		12-ஆம் அதிகரணம்—ஆற்றலிலான்செயல்	1111-1144
136	1	தூதுவன் செயல் ...	1111
137	2	அறிவுப்போர் ...	1117
138	3, 4	படைத்தலைவர் கொலை, மண்டலத்தை ஊக்குதல் ...	1124
139	5, 6	படைக்கலம் நெருப்பு நஞ்சு இவற்றை மறைவிற் பிரயோகித்தல், கூலம் முதலிய சுமப்போர் நட்புப்படை புல் விறகு கொணர்வோர் இவர்களைக் கோறல் ...	1129
140	7—9	கபடோபாயத்தால் அழித்தல், தண்டத்தால் அழித்தல், தனியனை வேறல் ...	1135
		13-ஆம் அதிகரணம்—பகையரண் எய்தும் வழி	1145-1187
141	1	வேறுபடுத்தல் ...	1145
142	2	உபாயத்தால் வெளிப்படுத்தல் ...	1151
143	3	ஒற்றர்களை நிலைப்படுத்தல் ...	1160
144	4, 5	சூழ இருக்கச்செய்தல், இடுக்கட்படுத்தல் ...	1171
145	6	எய்திய அரணை இனிதின் அடக்கல் ...	1183
		14-ஆம் அதிகரணம்—மறைவுச்செயல்	1188-1222
146	1	பகைக்கொலைப் பிரயோகம் ...	1188
147	2	வஞ்சித்தல்—வஞ்சித்தலில் வியப்புண்டாக்கல் ...	1198
148	,,	,, வஞ்சித்தலில் மருந்து மந்திரப்பிரயோகம் ...	1207
149	3	தன் படைக்குண்டாம் இடர்களுக்கு மறுதலை ...	1220
		15-ஆம் அதிகரணம்—தந்திரயுக்தி	1223-1230
150	1	தந்திர யுக்திகள் ...	1223

உ

கணபதி துணை

கௌடலீயம்—பொருணூல்

ஆசிரியர்வணக்கம்

[1]வெள்ளி வியாழன் விரைமல ரடியிணை
யுள்ளுற வேத்துதும் உலகில்
தெள்ளிதிற் [2]பொருணூல் திகழ்தரற் பொருட்டே.

முதல் அத்தியாயம் :—அரசியல்

நிலத்தைக் கொள்ளுதல், அதனைக் காத்தல் என்னும் இவை குறித்து [3] முன்னையாசிரியர்களால் எத்துணைப் பொருள் நூல்கள் கூறப்பட்டனவோ அவற்றைப் [4] பெரும்பாலும் திரட்டி

முதல் அத்தியாயக் குறிப்புரை.

1. வெள்ளியும் வியாழனும் பொருள் நூலாக்கிய ஆசிரியர்களுள் தலைவராவர். இவ்விருவராலும் முறையே ஔசநசம், பார்கற்பத்தியம் என்னும் நூல்கள் இயற்றப்பட்டனவாம் ; இவற்றுள் ஔசநசம் என்பதன் சுருக்கமே சுக்கிரநீதியாகும் ; உசநஸ்-சுக்கிரன். "வெள்ளியும் பொன்னும் என்பார் விதிமுறை" [கம்பர்-யுத்த-திருமுடி-செ-39] என்று கம்பர் குறித்தனவும் இந்நூல்களையேயாம்.

2. பொருள், மக்கள்வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அஃது ஈண்டுத் தனக்காதாரமாகவுள்ள நிலத்தைக் குறிப்பதாகும். நிலம் மக்களை யுடைத்து ; அதனைக் கொள்ளுதல் காத்தற்குரிய வழிகளைக் கூறும் நூல்கள் பொருள் நூல்களாகும்.

3. முன்னையாசிரியர்கள்-வெள்ளி, வியாழன் முதலியோர்.

4. பெரும்பாலும் என்றமையால் சிறுபான்மை சிற்சில இடங்களில் இவ்வாசிரியர் தங்கொள்கைகளையும் வெளிப்படுத்தியுள்ளார் என்பது புலனும்.

இப்பொருள் நூல் [6]ஒன்று செய்யப்படுகின்றது.

---

[7]அதிகரணப் பிரகரணங்களின் பெயர்க்குறிப்பு வருமாறு:—

முதல் அதிகரணம்

* பயிற்சிபகர்தல்

1. வித்தை விளம்பல். 2. பெரியோரிணக்கம். 3. பொறி

---

5. சுட்டு, முன்னரே அறிவின் அமைந்துகிடந்தமையை உணர்த்தும்.

6. இதனுல் இவ்வொரு நூலை ஆராயுமளவில் முன்னை ஆசிரியர்களின் கொள்கைகளெல்லாம் எளிதிற் புலனுகும் என்பதை உணர்த்துமுகத்தான் இந்நூற்கு முதனூல்கள் உண்டென்பதும், அம்முதனூல்களான் எய்தப் பெறுத சில பொருள்களும் இதன்கண் அறியப்படும் என்பதும் போதரும்.

7. இனி அப்பொருள் நூலின் அதிகரணப் பிரகரணங்களைப் பற்றிய இப்பெயர்க்குறிப்பு முறையே சுருக்கிக் கூறப்படும். ஓரினப் பொருளை விதந்து கூறுவது பிரகரணம் எனவும், ஒன்று முதல் பல பிரகரணங்களை உடையது அதிகரணம் எனவும் கொள்க. இந்நூல் பதினைந்து அதிகரணங்களாகவும், நூற்றெண்பது பிரகரணங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள், முதலில் அவற்றின் பொருள், பெயர், முறை, அளவு என்னும் இவற்ருன் மாணுக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டுப் பெயர்க்குறிப்புக் கூறப்படுகின்றது. இந்நூற்கணுள்ள பதினைந்து அதிகரணங்களுள் ஒன்று முதல் ஐந்து அதிகரணங்கள் தொண்ணூற்றைந்து சூத்திரங்களை உடையனவாய்த் தந்திரம் என்னும் பொருள்பற்றினவாம். ஆறுமுதல் பதின்மூன்று வரையுள்ள எட்டு அதிகரணங்கள் எண்பத்தொருசூத்திரங்களையுடையனவாய் ஆவாபம் என்னும் பொருள்பற்றினவாம். தந்திரம்—தன்னுடு நலம் பெறுதற்குரிய செயல். ஆவாபம்—பகைநாடு கோடற்குரிய உபாயம். பதினன்காம் அதிகரணம் மூன்று சூத்திரங்களையுடையது; தந்திரம், ஆவாபம் என்னும் இவற்றிற்கு மிகவும் துணை நிற்பது. பதினைந்தாம் அதிகரணம் ஒரு சூத்திரத்தையுடையது; இந்நூலில் எடுத்தாளப்படும் முப்பத்திரண்டு தந்திரவுத்திகளுக்கும் இலக்கணமும் உதாரணமும் காட்டி விளக்குவது. அரசன் தந்திரத்துக்கும், ஆவாபத்துக்கும் அதிகாரியாவான்.

* பயிற்சி என்பது வித்தைமுதலியவற்றைக் கற்றல்; அதனைக் கூறுதலின், இது 'பயிற்சிபகர்தல்' என்னும் பெயர்த்தாயிற்று.

1. பயிற்சி பகர்தல் என்னும் முதல் அதிகரணத்துள் அடங்கிய பிரகரணங்களைக் கூறத் தொடங்குகின்ருர். பிரகரணத்தின் பெயர்களாகிய வித்தை விளம்பல் முதலிய இவையெல்லாம் சூத்திரங்களாகவே கொள்ளப்

யடக்கம். 4. அமைச்சரை அமைத்தல். 5. மந்திரி புரோகிதரை அமைத்தல். 6. உபதைகளால் அமைச்சர் முதலியோரின் மன வியல்பு ஆராய்தல். 7. ஒற்றரை அமைத்தல். 8. ஒற்றுடல். 9. தன்னாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைக் காத்தல். 10. பகைவர்நாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைத் தன்

படும். "சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனடியிற் செறித்தினிது விளக்கித் திட்பநுட்பம்" சிறந்திருத்தலின் "வித்தை விளம்பல்" என்னுமிது சூத்திரமேயாகும். இதன் பொருளையே பின்னர் மூன்று அத்தியாயங்களால் இவ்வாசிரியர் மிக முயன்று விரித்துரைப்பர். ஆதலின் அவ்விரிவுரையே இதற்கு அகலவுரையாம் நிலையில் அமைந்துளது. இங்ஙனமே "பெரியோரிணக்கம்" முதலியனவும் சூத்திரங்களாம். மற்றைய அதிகரணங்களிற் கூறப்பட்டவற்றிற்கும் இஃதொக்கும். இது கருதியன்றே இந்நூலின் இறுதியில் "விஷ்ணுகுப்தன் தானே சூத்திரமும் பாடியமும் இயற்றினன்" என்று கூறியது பொருத்தமாதல் அறிக. அதிகரண இயைபு பிரகரண இயைபு முதலியன அவ்வவ்வதிகரணப் பிரகரணங்களின் தொடக்கத்தில் கூறப்படும். கல்வியறிவும் உலகியல் அறிவும் இல்லாத அரசன் தன் னாட்டைக் காத்தற்குத் தகுதியற்றவனாவான். ஆதலின் கல்விப்பயிற்சியின் இன்றியமையாமை நோக்கி முதலில் "வித்தைவிளம்பல்" என்னும் பிரகரணம் கூறப்பட்டது.

5. மந்திரி—அமைச்சர்தலைவன்.

6. உபதை—மறைவிற் செய்யும் சோதனை.

7—8 ஒற்றர்-அரசற்கு வேண்டும் செய்திகளை மறைவிற் சென்று அறிந்து கூறுவோர். அன்னாரை அமைச்சருடன் கூடிய அரசன் கட்டளையிடுதலும், அரசன் தனியே கட்டளையிடுதலும் ஆகிய வேறுபாடு பற்றி, முறையே இரண்டு பிரகரணங்களாகக் கூறினர்.

9. நல்லவர்—பகைவரால் வேறுபடுக்கத்தகாதவர்; அரசன்பால் அன்புள்ளவர். தீயவர்—பகைவரால் வேறுபடுக்கத்தக்கவர்; வெகுளி, பொருணசை முதலிய குற்றம் உடையார். இவர்களைக் காத்தலாவது:— நல்லோரைப் பட்டம், பரிசு முதலியன உதவி மேன்மேலும் சிறப்பித்துப் பகைவரான் வேறுபடுக்கப்படாத நிலையில் வைத்தலும், தீயோரை அவர்பா லுள்ள வெகுளி முதலிய குற்றங்களை உபாயத்தான் விலக்கிப் பகைவர் சூழ்ச்சிவயப்படாதிருக்கச் செய்தலுமாம்.

10. நல்லவர் தீயவர்களினியல்பு மேற்கூறப்பட்டது. அவர்களைத் தன் வயப்படுத்தலாவது:—அன்னார்க்கு ஏற்றபெற்றி சூழ்ச்சிமேற்கொண்டு பகையரசனின் வேறுபடுத்துத் தன்வயப்படுத்தல்.

வயப்படுத்தல். 11. மந்திராதிகாரம். 12. தூதுவிடுத்தல். 13. காவலன் புதல்வர் காப்பு. 14. விலக்கப்படும் மக்கள் வேந்தன்பாலொழுகல். 15. விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல். 16. அரசனது செயன்முறை. 17. அரண்மனை அமைத்தல். 18. தற்காப்பு.

2-ஆம் அதிகாரணம்

*தொழிற்றலைவர் செயன்முறை

1. நாடமைத்தல். 2. உழவிலாநிலத்தைப் பயனுற

---

11. மந்திரம்—அரசன் தான் செய்யக்கருதும் காரியத் தொடக்கத்தில் அது நிறைவேறுதற்குரிய வழிகளை ஆராய்தல். தன்னாடு காத்தலும் பிறர் நாடுகோடலும் அரசற்குரிய தொழில். அது மந்திரத்தைப்பற்றி நிகழ்வதாம். மந்திரம்—சூழ்ச்சி.

13. "காவலன் புதல்வர் காப்பு" என்பதற்கு அரசன் தன் மக்களால் தனக்குக் கேடு வராமல் காத்துக்கோடல் எனவும், பகைவரால் வேறு படுக்கப்படாமல் தன் மக்களைக் காத்தல் எனவும் பொருள்கொள்ளலாம். முன்னையது சிறந்தது.

14. அரசன் தன் புதல்வர் பலர் அரசுரிமைக்குத் தக்காராக அவருள் ஒருவனை அமைத்துழி மற்றையோர் அவ்வுரிமையினின்றும் விலக்கப்பட்டவராவார். அங்ஙனம் விலக்கப்பட்டார் அரசனிடத்து ஒழுகவேண்டும் முறையைக் குறிப்பதாகும்.

18. தற்காப்பாவது :—அரசன் பகைவர்முதலியோரால் தனக்குக் கேடுநேராவண்ணம் தன்னைக் காத்துக்கோடல்.

2-ஆம் அதி. குறிப்புரை.

தொழிற்றலைவர்—அரசியல்வினைபுரியும் தலைமை அதிகாரிகள்.

2. உழவிலாநிலமாவது :—வேளாண்டொழிற்குத் தகுதியற்ற காடு, மலை, பள்ளம் முதலியன.

அமைத்தல். 3. அரணமைத்தல். 4. அரணுள் அமைத்தல். 5. பொருட்பண்டாரம் புரப்போன் செய்தி. 6. இறைப்பொருள் தொகுப்போன் ஏற்கும் பொருணெறி. 7. பொருட்கணக்கெழுதுவோர்ப் பொருந்ததிகாரம். 8. வினைவலார் கவர்பொருள் மீட்டுக் கொணர்வித்தல். 9. தலைமைவினையாளர் தகைமையாராய்தல். 10. முடங்கல் விதிமுறை. 11. கருவூலத்தியை திருமணியாய்தல். 12. ஆகரத்தொழினிலை. 13. அக்கசாலையிற் பொற்றொழிற்றலைவன். 14. அங்காடித் தெருவிற் பொன்வினைஞன் செயல்.

---

3. அரண்—கடல், மலை, நிலம், காடு முதலிய இயற்கை அரண்களும், மதில், அகழி முதலிய செயற்கை அரண்களுமாம்.

4. அரணுள் அமைத்தல்–அரசவீதி,அரண்மனைமுதலியன அமைத்தல்.

5. பண்டாரம்—கருவூலம், களஞ்சியம் முதலியன.

6. இறைப்பொருள்—அரசற்கு மற்றையரசர்களாலும் குடிமக்களாலும் அரசிறையாக இறுக்கப்படும் பொருள். கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாய சுங்கம் முதலியனவுமாம்.

7. பொருட்கணக் கெழுதுவோர்—பொருட்கணக் கெழுதும் இடத்திலிருந்து கணக்கு வரைவோர்.

8. கொணர்வித்தல்—அரசன் தன்பாற் கொண்டுவரச்செய்தல்.

10. முடங்கல்—அரசன் வேற்றுநாட்டு மன்னர்க்கும் தன் வினைஞர்க்கும் அறிவிக்கவேண்டிய செய்திகள் எழுதப்படும் ஓலை முதலியன.

11. கருவூலத்திற் சேர்க்கத்தக்க அழகிய மணி முதலியவற்றின் நன்று தீது ஆராய்தல்.

12. ஆகரம்—தங்கம், வெள்ளி, மணி முதலியவைகளின் பிறப்பிடம்.

13. அக்கசாலை—பொன், வெள்ளி முதலிய உலோகத்தொழில் செய்யும் இடம். பொற்றொழில்—பொன், வெள்ளி முதலியவற்றால் அணிகலன் முதலியன இயற்றும் தொழில். முதனூலில் "அத்தியக்ஷன்," என்பது "தலைவன்" என மொழிபெயர்க்கப்பட்டது. "அத்தியக்ஷன்"—ஒவ்வொரு தொழிற் றலைமையிடத்தும் இருந்து மேற்பார்ப்போன்; தலைமையதிகாரி. தலைவன் என்பது இலக்கணையால் அவன் செயலையுணர்த்தும். இவ்வதிகரணத்திற் பின் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

14. அங்காடி—கடை. பொன்வினைஞன்—பொற்பணி முதலியன செய்விப்போன்.

15. உணவுப்பொருள்நிலையத் தலைவன். **16.** விலைப்படுபண்டத் தலைவன். **17.** குப்பியத் தலைவன். **18.** படைக்கலநிலையத் தலைவன். **19.** துலைமுதலளவையின் நிலையாராய்தல். **20.** நிலம் பொழுதளவை. **21.** உல்குபொருட் டலைவன். **22.** இழைநெய் தற்றொழிற்றலைவன். **23.** உழவுத்தொழிற் றலைவன். **24.** கள் வினைத் தலைவன். **25.** இறைச்சித் தொழிற் றலைவன். **26.** வரைவின்மகளிரை நடத்துந் தலைவன். **27.** மரக்கலத் தலைவன். **28.** ஆனினத் தலைவன். **29.** குதிரைத் தலைவன். **30.** யானைத் தலைவன். **31.** தேர்த் தலைவன். **32.** காலாட்படைத் தலைவன். **33.** படைத் தலைவன் றொழின்முறை. **34.** இலச்சினைத் தலைவன். **35.** புன்னிலத் தலைவன். **36.** நாட்டு வருவாய்த் தலைவன் செயல். **37.** இன்னிலை வாணிகத் தவக்குறியினராக ஒற்றரை யமைத்தல். **38.** நகரத் தலைவன் செயல்.

---

15. உணவுப்பொருள்—நெல் முதலிய தானியங்களும் எண்ணெய், உப்பு முதலியனவுமாம்.

17. குப்பியம்—அகக்காழன, புறக்காழனவாகிய மரம் புற்களும், செடி கொடிகளும், பொன் வெள்ளி யல்லாத செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களுமாம்.

19. துலைமுதலளவை—நிறுத்தலளவை, முகத்தலளவை முதலிய அளவுகருவிகள். நிலை—ஏற்றத்தாழ்வின்மை.

20. நில அளவை—காவத முதலியன. கால அளவை—விநாடி முதலியன.

21. உல்குபொருள்—அரசற்குக் கொடுக்கப்படும் சுங்கப்பொருள்.

24. கள்வினை—கள் வடித்தல் விற்றலாகிய தொழில்கள்.

34. பத்திர முதலியவற்றில் அரசன் பெயர், உருவம் முதலிய அடையாளங்களைப் பதிப்பிக்கும் தொழிற்சாலைத் தலைவன்.

35. புன்னிலம்—பசு முதலியன மேய்தற்குரிய புல், நீர் முதலியவை களையுடைய நிலம்.

37. குறியினரென்பதை இன்னிலை முதலியவற்றோடும் ஒட்டுக. இன்னிலை—இல்லறநிலை. நாட்டு நிகழ்ச்சிகளை மறைவிலறிந்து கூறுதற்கு ஒற்றர்களை இல்லறத்தான் முதலியோர் வேடம் புனைவித்து விடுதல்.

3-ஆம் அதிகாரணம்

* அறநிலையாட்சி

1. வழக்கிய னிறுத்தல். **2.** வழக்குரை வரைதல். **3.** மணவியல். **4.** தாயபாகம். **5.** நில வழக்கு. **6.** கட்டுப்பாடு கடவாமை. **7.** கடன் கோடல். **8.** அடைக்கலப் பொருளியல். **9.** அடிமைப்பணியாளர் இயல்பு. **10.** கூடித் தொழில்புரிதல். **11.** விற்றுக்கொண்டு மாறுபடல். **12.** நல்கியதை நல்காமை. **13.** உரிமையில்லாதவன் விற்றல். **14.** உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு. **15.** வன்செய்கை. **16.** வன்சொல்.

3-ஆம் அதி. குறிப்புரை.

* அறநிலையாட்சி—அறநூல்களை ஆராய்ந்து அந்நெறியில் நின்று உலகியல்வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரிகளின் ஆளுதற்றன்மை.

4. தாயம்—தந்தை முதலியோர்க் குரியதாய் மைந்தர் முதலியோராற் கூறிட்டுக் கொள்ளத்தக்க பொருள்.

6. கட்டுப்பாடு—ஒருவன் இதனை யான் செய்வேனென்று துணிதலையும், பலர் கூடி இஃதிவ்வாறு செய்யத்தக்கதென்று துணிதலையும் பற்றி நிகழ்வதாம்.

9. அடிமையாளரியல்பு, பணியாளரியல்பு எனக் கொள்க. அடிமையாளர்—பிறர்வயப்பட்டுப் பணிசெய்பவர்.

10. வணிகராதல், பிறராதல் பலர்கூடி வாணிக முதலிய கூட்டுத் தொழில்புரிதல்.

11. விற்றுக்கொண்டு மாறுபடல், விற்று மாறுபடல், கொண்டு மாறுபடல் என இயையும். விற்று மாறுபடல்—விலை பெற்று அதற்குரிய பொருளைக் கொடுக்க மறுத்தல். கொண்டு மாறுபடல்—விலை கொடுத்து அதற்குரிய பொருளை யேற்றுக்கொள்ள மறுத்தல்.

12. நல்கியது—அற முதலியன குறித்துக் கொடுப்பதாக உறுதி கூறப்பட்ட பொருள்.

17. தண்டக் கொடுமை. 18. சூது புள் விலங்கு விளையாட்டு. 19. ஒழிபு.

4-ஆம் அதிகரணம்

* சிறுபகைகளைதல்

1. காருகரால் தீங்குநேராமற் காத்தல். 2. வணிகர்களால் தீங்கு நேராமற் காத்தல். 3. தெய்விகப் பேரச்ச மாற்றம். 4. ஏமாற்றிப் பிழைப்பவரால் தீங்கு நேராமற் காத்தல். 5. சித்த

---

17. தண்டக்கொடுமை—தடி முதலிய கருவிகளாலும் கையாலும் ஊறுபடப்புடைத்தல்.

18. புள் விலங்கு—கோழி, யாடு முதலியன.

19. ஒழிபு—இவ்வத்தியாயத்திற் கூறப்படாத வழக்குநிலை சில வற்றைக் கூறும் பிரகரணம்.

4-ஆம் அதி. குறிப்புரை.

* அரசன் தன் நாட்டினுள்ளும் அரணுள்ளும் காருகர் முதலிய உட்பகையால் நேருந் தீங்குகளைப் பரிகரித்தல்.

1. காருகர்—தச்சர், கொல்லர், தட்டார் முதலிய சிற்பத் தொழிலாளர். இவர்களால் தம் நாட்டினர்க்குத் தீங்கு வாராதபடி காத்தல்.

2. வாணிகர்களால் நேரும் தீங்கு—நிறுத்தலளவை முதலியவற்றால் கொள்வது மிகைபடலும், கொடுப்பது குறைபடலுமாம்.

3. தெய்விகப்பேரச்சம்—நீர், நெருப்பு, வறுமை முதலியவற்றால் உண்டாம் பயம்; மாற்றம்—அதற்கு எதிர்ச்செயல்.

4. ஏமாற்றம்—வஞ்சித்தல்; கைக்கூலி முதலியவை பெறுதல். கைக்கூலியை இக்காலத்தார் “இலஞ்சம்” என்ப.

5. சித்தவுருவினர்–மழித்தல், நீட்டல் முதலிய தவவேடமுடையோர். துயில்வித்தல், மறைதல் முதலியவற்றைச் செய்யும் மந்திரங்களாற் கள்வர் முதலியோரை வெளிப்படுத்தல்,

உருவினரால் வஞ்சகரை வெளிப்படுத்தல். 6. ஐயுறலுருச்செயல்களாற் கள்வரைப் பிடித்தல். 7. விரைவில் இறந்தானை ஆராய்தல். 8. சொற்செயல்களால் வினுதல். 9. அதிகாரிகளால் தீங்கு நேராமற் காத்தல். 10. உறுப்பொன்று களைதற்கொத்த பொருட்டண்டம். 11. சுத்த சித்திர தண்டவிதி. 12. கன்னியைத் துன்புறுத்தல். 13. நெறிகடத்தல்.

---

6. ஐயுறல்—தன்னைக் குறித்துப் பிறர்பால் நிகழ்வதும், பிறரைக் குறித்துத் தன்பால் நிகழ்வதும் என இருதிறப்படும். உரு—களவுசெய்யப்பட்ட பொருளோடு காணப்படுவது. செயல்—கன்னமிடல் முதலியன.

7. நோய் முதலியனவின்றி அகாலத்தில் விரைவில் உயிர் நீங்கினானைப் பற்றி, இவன் தற்கொலையால் மாண்டானே? அல்லது பிறராற் கொல்லப்பட்டானே? எனச் சோதித்தல்.

8. சொற்களான் வினுதல், செயல்களான் வினுதல் என இயையும். கள்வனொருவனை, இன்சொற்கூறியாதல், அடித்தொறுத்தாதல் உண்மை வெளிப்படச்செய்தல்.

9. அதிகாரிகள் — தலைமைவினையாளரும் அவர்க்குட்பட்ட வினையாளரும் ஆவர். தீங்கு—குடிகளைத் துன்புறுத்தல், பொருள்கவர்தல் முதலியன.

10. களவு முதலிய தீச்செயல் செய்தாற்குக் கால் கை முதலியவற்றுள் ஒன்றைக் களைதலாக விதிக்கப்படும் தண்டத்தை விலக்கி அதற்குத் தகப் பொருள் இறுக்கச்செய்தல்.

11. சுத்தம், சித்திரம் எனத் தண்டவிதி இருவகைப்படும். சுத்த தண்டம்—துன்பம் நிகழாவாறு கொல்லுதல். சித்திரதண்டம் — சித்திர வதை; ஊறுபடுத்திக் கொல்லுதல்.

12. கன்னி — பெதும்பைப்பருவத்தவள். துன்புறுத்தல்—வலிந்து புணர்தல் முதலியன. இதற்குரிய தண்டவிதி இதன்கட் கூறப்படும்.

13. நெறிகடத்தல் — உண்ணத் தகாதவற்றை உண்டல், சேரத் தகாதவளோடு சேர்தல் முதலியன. இதற்குரிய தண்டம் இதன்கட் கூறப்படும்.

5-ஆம் அதிகாரணம்

* வஞ்சித்தொறுத்தல்

1. மறைவின் ஒறுத்தல். 2. பொன் முதலியவற்றை மிகுதியாகக்கோடல். 3. துணைவரைப் புரத்தல். 4. அமைச்சர் முதலியோர் இயல்பு. 5. ஒழுக்கவரையறை. 6. அரசியற் புத்தமைப்பு. 7. தனித் தலைமையரசு.

6-ஆம் அதிகாரணம்

* மண்டலயோனி

1. அங்கங்களின் நிறைவு. 2. வினைசெயல் பயனுகர்கருவி.

5-ஆம் அதி. குறிப்புரை.

* வஞ்சிது ஒறுத்தல் — சிற்றரசர்கள், அதிகாரிகள் குடிமக்கள் இவர்களுள் அரசற்கும், நாட்டுக்கும் இடர்விளைக்கும் உட்பகைவராக வுள்ளவர்களை ஒற்றராலுணர்ந்து அரசன் கட்டளையிட அதனையேற்று மறைவாக அவர்களை ஒறுத்தடக்குதல்.

1. பிறர் அறியர்வாறு ஒறுத்தல்.

2. மிகுதி—முன் ஏற்பட்ட அளவின் அதிகம். அரசனுக்குப் பொருணிலை குறையுங்கால் அளவின்மிகக் கொள்ளுதலை யுணர்த்துவது.

3. துணைவராவார்—அரசற்கு அறிவுநூல், வினை என்பவற்றில் துணைநின்றுதவுவோர்.

4. அமைச்சர் முதலியோர் அரசனிடத்து எவ்வாறொழுகல்வேண்டும் என்பதை உணர்த்துவது.

6. எக்காரணத்தினுலாவது ஓரரசன் அரசியற்குதவாதுகை, அவன் புதல்வனுக்கு முடிசூட்டி முன்னை அரசியலைப் புதுப்பித்தமைத்தல்.

7. தனித்தலைமை—பொதுவறப் புரக்கும் உரிமை.

6-ஆம் அதி. குறிப்புரை.

* மண்டலமாவது—வெற்றியை விரும்புவோன், பகைவன், நடுவன், அயலான் என்னும் நால்வகை உறுப்புக்களையுடையது. யோனி—பொருள். பின்வரும் ''அறுவகைக்குணம்'' என்னும் அதிகரணத்திற்கு இது பொருளாகும் என்பதாம்.

1. அங்கங்கள்–அரசியற்குரிய உறுப்புக்கள். அவை–அரசு, அமைச்சு, நட்பு, பொருள், நாடு, அரண், படை என்னும் ஏழுமாம்.

2. வினைசெயற்கருவி, பயனுகர்கருவியென இயையும். வினையாவது—தனக்குரியவும், பிறர்க்குரியவும் என இருவகைப்படும். தனக்குரியன—அரணமைத்தல் முதலியன. பிறர்க்குரியன—சந்தி, விக்கிரகம் முதலியன,

7-ஆம் அதிகாரணம்

* அறுவகைக்குணங்கள்

1. அறுகுண வரையறை. *2.* குறைவொப்புமிகுதிகளின் துணிபு. *3.* வலியதைப்பற்றி யொழுகல். *4.* குறைவொப்பு மிகுதியாம் வலிநிலைகளுட் குணநலம்பற்றல். *5.* இழிந்தோன் சந்திகளை யேற்றல். *6.* பொருதிருத்தல். *7.* நட்புக்கொண் டிருத்தல். *8.* பொருது மேற்சேறல். *9.* நட்புக்கொண்டு

7-ஆம் அதி. குறிப்புரை.

* அறுவகைக்குணங்கள்—சந்தி, விக்கிரகம், யானம், ஆதனம், சமாச் சிரயம், துவைதீபாவம் என்பன. இவற்றை முறையே நட்பாக்கல், பகை யாக்கல், மேற்சேறல், இருத்தல், கூட்டல், பிரித்தல் என்று கூறுவர் பரிமேலழகர் (திருக்குறள் 425 உரை).

1. அறுகுணம்—சந்தி விக்கிரகம் முதலியன.

2. குறைவு ஒப்பு மிகுதிகள்—பொருள் படைகளைப் பற்றியவை.

3. வலியதைப்பற்றி யொழுகலாவது—முற்கூறிய அறுவகைக்குணங் களையும் இவ்விரண்டாகக்கொண்டு ஒத்தவலியுடைய இரண்டனுள் தனக்கு நலந்தரும் ஆற்றலுடையதை மேற்கோடல்.

4. பகைவன்வலியினும், தன்வலி குறைதல், ஒத்தல், மிகுதல் என்னும் இவற்றுள் எத்தகையதெனச் சீர்தூக்கிப்பார்த்து மிக்கதைப்பற்றி யொழுகல்.

5. வலிகுறைந்தானொருவன் வலிமிக்க அரசற்குப் பொருள், படை, நிலங்களைக் கொடுத்துச் சந்திசெய்வித்துக்கோடல் நன்றென்பது.

6. இருத்தல்–அறுவகைக்குணங்களுள் ஒன்று. பொருதிருத்தலாவது– பகைவனோடு போருளுற்றித் தன்னாட்டின்கண் இருத்தல்.

7. நட்புக்கொண்டிருத்தலாவது–போர்ச்செலவு வலியற்றிருக்குங்கால் பகைவனோடு சந்திசெய்துகொண்டிருத்தல். சந்தி—நட்பாக்கல்.

8. பொருது மேற்சேறல்—பின்றொடர்ந்த பகைவரோடு பொருது, தன்னோடெதிர்த்த பகைவனைநோக்கிச் செல்லுதல். மேற்சேறலை யான மென்ப.

9. நட்புக்கொண்டு மேற்சேறலாவது — ஒரு பகைவனைக்குறித்துச் செல்லுங்கால் தன்னைப் பின்றொடரும் மற்றொரு பகைவனோடு சந்திசெய்து கொண்டு மேற்சேறல்.

மேற்சேறல். 10. கூடி மேற்சேறல். 11. கலக்கமுடையானும் தீங்குபுரிபவனுமாகிய பகைவர் இருவருள் மேற்சேறற்குரியானைத் துணிதல். 12. பிரகிருதிகளின் குறை பொருணசை வெறுப்புக் காரணம். 13. கூடித் தொடர்ந்துசெல்வோரை ஆராய்தல். 14. சந்திசெய்துகொண்டோர் பிரிந்துசேறல். 15. வரையறையுடையது, வரையறையில்லது, பிரிந்தவனைப்பற்றியது என்னும் சந்திகள். 16. பிரித்தலைக் காரணமாகவுடைய சந்தி விக்கிரகங்கள். 17. மேற்சேறற்குரியான் செயல். 18. அருளுதற்குரிய நண்பர்கள்.

---

10. கூடி மேற்சேறலாவது—தன்னிற் குறை வொப்பு மிகுதியான் வன்மைவாய்ந்த துணைவர் பலருங்கூடிப் பகைமேற் செல்லுதல்.

11. இருதிறத்துப் பகைவருட் சேறற்குரியான் :—பல பகைவரையும் விதனங்களையும் உடையான். தீங்குபுரிபவன்—நாடோறும் தனக்கு இடர் விளைப்பவன். இவ்விருவருள் யாரைநோக்கிப் போர்செய்யப் புறப்படல் வேண்டுமென்பதை ஆராய்ந்து துணிதலைக் கூறுவது.

12. பிரகிருதிகள்—புரோஹிதன் அமைச்சன் முதலியோர். அவர்கள் பால் குறைமுதலியன உண்டாதற்குரிய காரணங்களைக் கூறுவது.

13. கூடித் தொடர்ந்துசெல்வோர் — வெற்றிகுறித்துச் செல்லும் பேரரசனைப் பிரியாது பின்றொடர்ந்து கூடிச்செல்லும் சிற்றரசர்கள்.

14. பகைவரிருவர் ஒருவரையொருவர் சந்திசெய்துகொண்டபின் இருவரும் மற்றொருபகைவனை வேறல்கருதித் தனித்தனியே வெவ்வேறு திக்குகளை நோக்கிப் போதல்.

15. காலம்,இடம், காரியம் எனும் இவற்றால் வரையறைசெய்யப்பட்டு நிகழ்வது வரையறையுடையதெனவும், அதற்கு மறுதலையாயது வரையறையில்லதெனவும், எக்காரணத்தாலேனும் தன்னில் நீங்கினானோடு சந்திசெய்து கொள்வது பிரிந்தவனைப்பற்றியதெனவும் கொள்க.

16. பிரித்தலை (துவைதீபாவத்தை)க் காரணமாகக்கொண்டு நிகழும் சந்திவிக்கிரகங்களின் இயல்பைக் கூறுவது.

17. மேற்சேறற்குரியவன் — தன்னைக்குறித்து வரும் பகைவனை எதிர்த்து மேற்செல்பவன். அவன் தன்னைப் பின்தொடர்ந்து கூடிவரும் துணைவர்பால் நடந்துகொள்ளவேண்டியதும், அத்துணைவர் அவன்பால் நடந்துகொள்ளவேண்டியதுமாகிய ஒழுங்குகள்.

18. ஓரரசன் தன்னாட்டை அடுத்த நாட்டிற்கு அடுத்துள்ள நாட்டு நண்பருள் யார்க்கு உதவிபுரிந்து அருள்வேண்டுமென்பது இதன்கட் கூறப்படும்.

19. நட்பு, பொருள், நிலம் செயல்களாலாம் சந்திகள். 20. பக்கத் துறையும் பகைவன்செயல். 21. குறைந்த ஆற்றல்களின் நிறைவு. 22. வலியவனேடு பொருது மறைந்துகோடற்குரிய காரணங்கள். 23. படைவலியால் தாழ்த்தப்பட்டோன் செயல். 24. படைவலி யாற் பகைவனைத் தன்பாற்படுத்துவோன் செயல். 25. சந்தி கன்மம். 26. சந்தியின் விடுதலை. 27. நடுவன்பால் ஒழுகல். 28. நொதுமலன்பால் ஒழுகல். 29. மண்டலசரிதம்.

---

19. ஒருவனேடொருவன் செய்துகொள்ளும் சந்திக்கு நட்புமுதலியன காரணமாகுமென்பது.

20. ஓர் அரசன் போர்குறித்துச் சென்றிருக்குங்கால் அடுத்திருக்கும் பகைவன் அவ்வரசனது நிலப்பகுதியைக் கவர்தல் இதன்கட் கூறப்படும்.

21. ஆற்றல்களாவன—அறிவு ஆண்மை பெருமை என்னும் இவை. இவற்றை முறையே மந்திரசக்தி, உற்சாகசக்தி, பிரபுசக்தி யென்ப முதனூலார்.

22. வலியவன்—ஆற்றன்மிக்க பகைவன். மறைந்துகோடல்—தன் அரண்புகுதல்.

23. பகைவன் படைவன்மையால் தாழ்த்தப்பட்ட அரசன், வெற்றி விருப்பால் அப்பகைவனைக் குறித்துச் செய்யவேண்டியன கூறுவது.

24. தன் படைவன்மையாற் பகைவனைவென்று தன்பாற் கொளைவித்தோன் செயற்பாலன கூறுவது.

25. சந்திகன்மம்—சூளுறவு முதலியவற்ருல் நட்பை உறுதிப்படுத்தலைப் பற்றிக் கூறுவது.

26. சந்திநிமித்தம் அது செய்யப்பட்டான்பால் உறுதிப்பொருட்டு வைக்கப்பட்ட தன் புதல்வன் முதலியோரை விடுவித்தற்குரியன கூறுவது. சந்தி—ஈண்டு உபசாரத்தால் அது குறித்து வைக்கப்பட்ட புதல்வன் முதலியோரை உணர்த்தும்.

27. நடுவனை "மத்தியமன்" என்று முதனூல் கூறும். இவன் தனக்கும் பகைவற்கும் அனுகூலப் பிரதிகூல நிலையில் நடுநிற்போன். இவன்பால் அரசன் ஒழுகுதலைக் கூறுவது.

28. நொதுமலனை "உதாசீனன்" என்று முதனூல் கூறும் இவன் தன்னிடத்தும் பகைவனிடத்தும் விருப்புவெறுப்பற்றிருப்போன். இவன் பால் அரசன் ஒழுகுதலைக் கூறுவது.

29. மண்டலம் — ஈண்டுப்பகைவரையும் நட்டோரையும் குறிப்ப தாகும். அவர்பால் அரசன் ஒழுகுவதைக் கூறுவது.

8-ஆம் அதிகரணம்

* விதனம்விளம்பல்

1. பகுதிகளின் விதனக்குழு. 2. அரசற்கும் அரசியற்குமுரிய விதனவாராய்ச்சி. 3. புருடவிதனக்குழு. 4. துன்பக்குழு. 5. தடைக்குழு. 6. பொருள்கொடாமைக்குரிய காரணக்குழு. 7. படைவிதனக்குழு. 8. நட்டோர்விதனக்குழு.

8-ஆம் அதி. குறிப்புரை.

* விதனம்—துன்பந்தருஞ்செயல்; அது பலவகைப்படும். அவ்வகைகளை அவ்வப் பிரகரண விளக்கங்களிற் காண்க.

1. பகுதிகள்—அமைச்சர் புரோஹிதர் முதலிய பிரகிருதிகள்.

2. அரசியல்—ஈண்டு அதற்குரிய அங்கங்களை உணர்த்தும். அங்கங்கள் அமைச்சு முதலியன. விதனங்களின் பெருமை சிறுமைகளும், களைய வேண்டும் உபாயமும் கூறுவது.

3. புருடற்குரிய விதனங்களாவன—"வேட்டம் கடுஞ்சொல் மிகு தண்டம் சூது பொருளீட்டங் கட்காமமோ டேழு" மாம். இவை விருப்பு வெறுப்புக்களால் உண்டாவன.

4. துன்பங்கள்—தெய்வத்தானும் மக்களானும் உண்டாவன. அவற்றின் எண், இயல், பெருமை, சிறுமை முதலியவற்றைக் கூறுவது.

5. தடையாவது—அமைச்சர் முதலிய அதிகாரிகளின் தீயசெயல்களால் அரசனுடைய காரியங்கட்கு இடையூறு விளைதல். அதற்குரிய காரணங்களைக் கூறுவது.

6. பொருள்—ஈண்டு அரசற்கு இறுக்கவேண்டிய இறைப்பொருள் முதலியன.

7. படை-யானை குதிரை தேர் காலாள் என்னும் நால்வகையுறுப்பினதாய மூலப்படை, துணைப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, பகைப்படை என அறுவகைத்தாம். அதற்கு நேரும் விதனங்கள் பெருமைப்படுத்தாமை முதல் முப்பத்துமூன்றுவகைப்படுமென்று கூறுவது.

8. நட்டோர்—அரசனுடைய நண்பர்கள்.

9-ஆம் அதிகரணம்

* போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்

1. ஆற்றல் இடம் காலங்களின் வன்மை மென்மை அறிதல். 2. மேற்சேறற்குரிய காலங்கள். 3. படைசெலுத்துதற்குரிய காலங்கள். 4. சந்நாக குணங்கள். 5. எதிர்ப்படையின் செயல். 6. பின்னர் நிகழும் கொடுஞ்செயல்களை ஆராய்தல். 7. அகப் புறப் பகுதிகளின் சினமடக்கல். 8. குறைவழிவூதியங்களின்

9-ஆம் அதி. குறிப்புரை.

* போர்குறித்துச் செல்லமுயலும் அரசன் அச்செலவிற்குமுன்னரே ஆராய்ந்து செயற்பாலன இன்னவென்பதைக் கூறுவதாம்.

1. ஆற்றல் — மந்திரசக்தி முதலியன. வன்மை மென்மையறிதல், பகைமேற் சேறற்பொருட்டு.

3. மூலப்படை முதலிய படைகளுள் இன்ன படையை இன்ன காலத்திற் செலுத்தல்வேண்டுமென்பதைக் கூறுவது.

4. சந்நாகம்—கவசமுதலிய போர்க்கருவிகளை மேற்கோடல்; ஈண்டுப் போர்ச்செயற்குரிய படைகளின் முயற்சியைக் குறிப்பதாகும். குணங்கள்—சிறப்புமுறைகள்.

5. எதிர்ப்படை — பகைப்படைகளோடுபொருது அழிக்கும் ஆற்றலுடைய படைகள்.

6. ஒருவன் போர்ச்செலவுடையனுக அவற்குப் பக்கத்துறையும் பகைவர் இழைக்கும் தீங்குகளைப்பற்றிய ஆராய்ச்சி, இதன்கட் கூறப்படும்.

7. அகப்பகுதிகள் புறப்பகுதிகள் என இவையும்; அகப்பகுதிகள்—அமைச்சர் புரோகிதர் முதலியோர். புறப்பகுதிகள்—நாட்டின் எல்லையைக் காப்போர் முதலிய அதிகாரிகள். அவர்களுடைய சினம் அடக்கற்கு வேண்டுவன செய்தலைக் கூறுவது.

8. போர்குறித்துச் செல்லும் அரசன் அதனுல், தன் ஊர்திகளுக்கும், போர்வீரர்களுக்கும் நேரும் குறையையும், தானியம், பொன் முதலிய பொருட்செலவையும் அப்போர்ச் செலவால் ஏற்படும் ஊதியத்தையும் சீர்தூக்கி ஆராய்தல்வேண்டுமென்பதைக் கூறுவது. அழிவு—பொருட்செலவு,

ஆராய்ச்சி. 9. அகப்புற இடர்கள். 10. வெறுக்கத்தக்கவரும், பகைவரும் விளைக்கும் இடர்கள். 11. பொருளழிவையங்களோடமைந்த இடர்கள். 12. அவற்றைக் களையும் உபாய விகற்பங்களால் உண்டாம் சித்திகள்.

10-ஆம் அதிகரணம்

* போர்நிகழ்ச்சி

1. பாசறையமைத்தல். 2. பாசறைநோக்கிச் சேறல். 3. படைவிதனம், கடுவழிச்செல்லுங்காலம் இவற்றினின்றும்

---

9. அகவிடர், புறவிடர் எனவியையும். இடர்—ஆபத்து. அகவிடர் அமைச்சர் புரோகிதர் முதலியோரால் விளைவது. புறவிடர் — எல்லை காவலர் முதலியோரால் விளைவது. அவற்றின் இயல்புகளையும், அவற்றைக் களைதலையும் கூறுவது.

10. வெறுக்கத்தக்கவர்—அரசர்க்கு இடர்விளைப்பவராய் நாட்டினும் நகரினும் உள்ளவர். பகைவர்—இயற்கைப் பகைவருஞ் செயற்கைப் பகைவருமாவர்.

11. பொருள்—ஈண்டுப் பொன் நிலம் நட்பு உடல் முதலியன. அழிவு—இவற்றின் கேடு. ஐயம்—இவற்றின் அழிவைப்பற்றி நிகழ்வது.

12. அவற்றை—முன் (9—10—11-ஆம்) பிரகரணங்களிற் கூறப்பட்ட இடர்களை. உபாயம்—சாமம்முதலியன. விகற்பம்—உபாயங்களைப் பிரயோகிக்கும் வேறுபாடு. சித்திகள்—எதிர்ச்செயல்கள்.

10-ஆம் அதி. குறிப்புரை.

* போரைப்பற்றிய செய்திகளைக் கூறுவது.

1. பாசறை—பகைமேற்சென்ற படை தங்குமிடம்.

2. சேறல்—நலந்தரும் காலம் இடம் முதலியன நோக்கிப் போர் குறித்துப் புறப்படல்.

3. படைவிதனம்—பெருமைப்படுத்தாமை முதலியவற்றால் உண்டாம் துன்பங்கள். கடுவழி—நீரற்ற பாலைவனம் முதலியன. பகைப்படையை நோக்கிச் செல்லுங்கால் தன் படைக்கு இவற்றால் நேரும் துன்பங்களைப் போக்கிக் காத்தலைக் கூறுவது,

படைகளைக் காத்தல். 4. வஞ்சகப் போர்வகைகள். 5. தன் படைகளை ஊக்கமுறுத்தல். 6. தன் படைக்குப் பகைப்படையினும் விழுமிய அமைப்பு. 7. போர்க்கள இயல்பு. 8. யானை குதிரை தேர் காலாட்களின் செயல்கள். 9. பக்க கக்க நடுவிடங்களிற் படையளவிற்குத்தக வகுப்புக்களைப் பிரித்தமைத்தல். 10. வன்படை மென்படைகளைப் பிரித்தமைத்தல். 11. யானை குதிரை தேர் காலாட்களின் போர்வகைகள். 12. தண்டம் போகம் மண்டலம் அசங்கதம் என்னும் படைவகுப்பமைத்தல். 13. அவற்றுள் எதிர்ப்படை வகுப்பமைத்தல்.

---

4. வஞ்சகப்போர் — பகைவன்படைகளுக்குப் படைவிதனம், கடுவழிச்செல்லுங்காலம் முதலியன நேர்ந்திருக்கும் அமயத்தையுணர்ந்து அவற்றோடுபொருது அழித்தல்.

5. ஊக்கமுறுத்தலாவது—வீரச்செயல் முதலியவற்றைப் பாராட்டிப் போரில் உற்சாகமுறச்செய்தல்.

6. விழுமிய அமைப்பாவது—பகைவர் படைவகுப்பினும் சிறப்பத் தன் படைகளை வகுத்தமைத்தல்.

7. போர்க்களம் வெளியிக்க ஒத்தநிலமாகவும், இறுகியதாகவும் இருத்தல்வேண்டுமென்பது.

9. பக்கம்—படைவகுப்பின் முன்புறத்து வெளிமருங்குகள். கக்கம்—அதன் பின்புறத்து உண்மருங்குகள். நடு—இவற்றின் நடு. வகுப்பு—படைவகுப்பு; வியூகம்.

10. வன்படை—தந்தை முதலிய குலவழிவந்த ஆற்றல் மிக்கது. மென்படை—அங்ஙனமல்லாதது ; அச்சமுடையதுமாம்.

12. இவை வியூகவகைகளாகும். இவற்றின் இலக்கணமும் பிறவும் இப்பிரகரணவிரிவிற் காண்க.

13. அவற்றுள்–தண்டம் முதலிய படைவகுப்புக்களுள். எதிர்ப்படை வகுப்பமைத்தலாவது—இன்ன வியூகத்திற்கு இன்ன வியூகம் எதிராகும் எனக் கண்டு அமைத்தல்.

11-ஆம் அதிகாணம்

* குழூஉச்செயல்

1. வேறுபடுத்தலை மேற்கோடல். 2. மறைவிற்கோறல்.

12-ஆம் அதிகாணம்

* ஆற்றலிலான்செயல்

1. தூதுவன்செயல் 2. அறிவுப்போர். 3. படைத்தலைவர் கொலை. 4. மண்டலத்தை ஊக்குதல். 5. படைக்கலம், நெருப்பு, நஞ்சு இவற்றை மறைவிற் பிரயோகித்தல். 6. கூலம் முதலிய சுமப்போர், நட்புப்படை, புல் விறகு கொணர்வோர் இவர்களைக்கோறல்.

11-ஆம் அதி. குறிப்புரை.

* குழூஉ—ஈண்டு அம்பு வாள் முதலிய படைகளையுடையராய்த் தம்மிற்கூடி அரசற்கு அடங்காமல் ஒழுகுவோர்கூட்டம். செயல்—அக்குழுவைக்குறித்து அரசன் மேற்கொள்ளும் காரியம்.

1. வேறுபடுத்தல்—பேதோபாயம் ; கூட்டத்தைப் பிரித்தற்குரியது.

12-ஆம் அதி. குறிப்புரை.

* பேராற்றலுடையான் சந்தியை விரும்பாதபொழுது சிறிதும் ஆற்றலிலாத அரசன் செயற்பாலன கூறுவது.

1. தூதராவார்—சந்தி விக்கிரகங்கட்கு வேற்றுவேந்தரிடைச் செல்வோர் ; தான் வகுத்துக்கூறுவானும், கூறியதுகூறுவானும், ஓலை கொடுத்துநிற்பானும் என மூவகைப்பட்டு, தலை இடை கடையாக எண்ணப்படுவர்.

2. அறிவினால் நிகழும் போராவது—"காமம் வெகுளி முதலிய குற்றங்களின் வயப்படும் பல அரசர்கள் அழிவெய்தினர்", என்பது முதலிய எடுத்துக்காட்டுக்களால் பகைவரை வஞ்சித்தல்.

4. மண்டலம்—நட்டோர் முதலிய குழு. ஊக்குதல்—தற்காப்பின் நிமித்தம் போர்ச்செயலிற் புகுவித்தல்.

5. படைக்கலம்—அம்பு வாள் முதலிய ஆயுதங்கள்.

6. இங்குக் கூறப்பட்டோர் பகைவரைச் சார்ந்தோர். போர் நிகழுங்காற் பகைவர்க்குத் துணைபுரியவரும் இவர்களை அறிந்து அழித்தல்வேண்டுமென்பது.

7. கபடோபாயத்தால் அழித்தல். 8. தண்டத்தால் அழித்தல். 9. தனியனுய் வேறல்.

13-ஆம் அதிகாரணம்

* பகையரண் எய்தும்வழி

1. வேறுபடுத்தல். 2. உபாயத்தால் வெளிப்படுத்தல். 3. ஒற்றர்களை இருத்தல். 4. சூழ இருக்கச்செய்தல். 5. இடுக்கட்படுத்தல். 6. எய்திய அரணை யினிதினடக்கல்.

---

7. கபடோபாயம்-பகைவன் தேவாலயப் பிரவேசம் முதலிய செய்யுங்கால் அவன்மேற் பொறிகளாற் கல்வீழ்த்தல், சுவர்வீழ்த்தல் முதலியன.

8. தண்டம்—துன்புறுத்தல், கோறல், பொருணனிகோடல் முதலியன.

9. ஓரரசன் துணையின்றித் தன்பகைவனை வெல்லுதல்.

13-ஆம் அதி. குறிப்புரை.

* பகைவருடைய அரணை அடையும் உபாயத்தைக் கூறுவது.

2. உபாயம்—ஈண்டுக் கபடோபாயம்; அதனுல் பகைவரை அவர்தம் அரணினின்றும் வெளிப்படுத்தலைக் கூறுவது.

3. இருத்தல்—ஈண்டுப் பகைவர்நாட்டில் இருக்கச்செய்தலாம்.

4. பகைவரரணைச் சூழ்ந்திருக்கும்படி தன் படைகளையமைத்தல்.

5. இடுக்கட்படுத்தலாவது — பகைவரரணைக் கைப்பற்றுமுகமாக அவர்க்கு இடுக்கண்விளைத்தல். எப்பொழுது எவ்வாற்ருல் அரண்கோடல் வேண்டுமென்பதைக் கூறுவது.

6. அரண்—பகைவரது; அஃது அதன்கண் உள்ளாரை யுணர்த்தும். அவரை இனிதினடக்கலாவது—"முன்னில்லாத அரசனிவன் எவ்வாறு ஆட்சிபுரிவானே?" என்று தன்னைப்பற்றி அவர் கொள்ளும் சங்கையை ஒழித்து நம்பிக்கையுறச்செய்தல்,

14-ஆம் அதிகரணம்

மறைவுச்செயல்

1. பகைக்கொலைப் பிரயோகம். 2. வஞ்சித்தல். 3. தன் படைக்கு உண்டாகும் இடர்களுக்கு மறுதலை.

15-ஆம் அதிகரணம்

* தந்திரவுத்தி

1. தந்திரவுத்திகள்.

இந்நூல் பதினைந்து அதிகரணங்களாகவும், நூற்றைம்பது அத்தியாயங்களாகவும், நூற்றெண்பது பிரகரணங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளது. ஆறாயிரம் கிரந்தங்களை உடைத்து. முப்பத்திரண்டு எழுத்துக்கள் கொண்டது ஒரு கிரந்தமாகும்.

14-ஆம் அதி. குறிப்புரை.

மறைவுச்செயல்' பகைவரை அழித்தற்குரிய மந்திரம், மருந்து இவைகளை மறைவாக உபயோகித்தலைப்பற்றிக் கூறுவது.

1. பகைக்கொலைப் பிரயோகமாவது—பகைவரைக் கொல்லுதற்கு மருந்து முதலியன உபயோகித்தல்.

2. வஞ்சித்தல்—மருந்து மந்திரப் பிரயோகங்களால் பகைவர்க்கு விகாரரூபம், பசியின்மை முதலியவற்றை உண்டாக்குதல். இப்பிரகரணத்தை ‘வியப்புண்டாக்கல்’ ‘மருந்து மந்திரப்பிரயோகம்’, என இரண்டாக வகுத்துக்கூறுவர்.

3. இடர்—பகைவனாற் பிரயோகிக்கப்படும் நச்சுநீர் முதலியவற்றால் விளையும் தீங்கு. மறுதலை—அத்தீங்கை ஒழித்தற்குரிய எதிர்ச்செயல்.

15-ஆம் அதி. குறிப்புரை.

* தந்திரம்—நூல்; ஈண்டு இந்நூலையுணர்த்தும். உத்தி—உரைசெய்தற்கு உதவியாம் யுக்திகள்.

1. தந்திரம் என்பது ஈண்டு இப் பொருணூலை உணர்த்தும். உத்திகள் அதிகரணம், விதானம் முதலாக முப்பத்திரண்டுவகைப்படும். இவற்றை இப்பிரகரணம் விளக்கிக்கூறும்,

சுலோகம்

* மெல்லிய அறிவுடையவர்களால் அறியத்தக்கதும், சொற் பொருளுண்மைகளால் துணியப்பட்டதும் ஆகிய இப் பொரு ணூல் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலாகிய அழகு பொருந்தக் கௌடலியனாற் செய்யப்பட்டது.

கௌடலீயம் என்னும் பொருணூலில்
"பயிற்சிபகர்தல்" (விநயாதிகாரிகம்) என்னும் முதலதிகரணத்தில்
"அரசியல்" என்னும் முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

* மென்மை — ஈண்டு ஆராய்ச்சியுழைப்பின் சுருக்கத்தைப் புலப் படுத்தும்.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

முதற் பிரகரணம்—[1]வித்தைவிளம்பல்—ஆன்வீட்சிகீயின் இயல்பு

இரண்டாம் அத்தியாயம்

[2] ஆன்வீட்சிகீ, [3] திரையீ, [4] வார்த்தை, [5] தண்டநீதி என்னும் இவை வித்தைகளாம்.

---

[1] இனி நிறுத்தமுறையானே அதிகரணப் பிரகரணங்கள் விரித்துக் கூறப்படும். அவற்றுள் முதலதிகரணத்தின் முதற்பிரகரணம் இரண்டு முதல் நான்குவரையுள்ள மூன்று அத்தியாயங்களால் விளக்கப்படும். கல்வி யறிவும் உலகியலறிவும் இல்லாத அரசன் தன் நாட்டைக் காத்தற்குத் தகுதி யற்றவனாவான்; ஆதலின், கல்விப்பயிற்சியின் இன்றியமையாமை நோக்கி முதலில் " வித்தைவிளம்பல் " என்னும் இப்பிரகரணம் கூறப்படுகின்றது. இங்ஙனமே அரசனுக்குக் கல்வியின் இன்றியமையாமை கருதித் திருக்குறட் பொருட்பாலில் இறைமாட்சி யென்னும் முதல் அத்தியாயத்தை அடுத்துக் கல்வியென்னும் அதிகாரம் வைக்கப்பட்டமை அறிக.

[2] பொருளுண்மையை, ஆராய்தற்குரிய ஏதுக்களை எடுத்துக்கூறும் தருக்கநூல் முதலியன ஆன்வீட்சிகீயாகும்.

[3] இருக்கு, எசுர், சாமவேதங்களாகிய மூன்றன்குழு திரையீ எனப் படும். நான்காவதாகிய அதர்வவேதம் உயிர்களுக்குக் கேடுசூழும் ஆபிசார வேள்விமுதலியவற்றை யுணர்த்தலால் மற்றை மூன்றுவேதங்களினின்றும் வேறுபட்டதாகும். இதுகருதியே, " இருக்கும் எசுரும் சாமமும் இவை தலையாய ஓத்து. இவை வேள்விமுதலியவற்றை விதித்தலின் இலக்கணமு மாய் வியாகரணத்தான் ஆராயப்படுதலின் இலக்கியமுமாயின. அதர்வமும் ஆறங்கமும் தருமநூலும் இடையாய ஓத்து. அதர்வம் வேள்வி முதலிய ஒழுக்கங் கூறுது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமே அன்றிக் கேடுஞ் சூழும் மந்திரங்களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று " என்பர் நச்சினார்க்கினியர் (தொல்காப்பியம் புறத்திணையியல் 20-ஆம் சூத்திரவுரை). இருக்கு முதலிய மூன்றும் ஒவ்வொரு—வேள்வியினைக்கும் ஒருங்குகூடியே சாதகமாதலின் அவற்றின் குழூஉ திரையீ என்னும் பெயருடையதாயிற்று.

[4] உழவு, பசுக்காவல், வாணிகம் இம்மூன்றும் வார்த்தை எனப் படும். " வாரிபெருக்கி " என்னும் திருக்குறளில் (—512 உரை) வாரியென்பதைப் பொருள்வருவாயில்கள் எனப் பொருள்கொண்டு " வாயில்களாவன மேல் இறைமாட்சியுள் 'இயற்றலும்' என்புழி உரைத் தனவும் உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தையுமாம் " என்று பரிமேலழகர் கூறியிருத்தல் அறிக.

[5] தண்டநீதி—அரசநீதி. தண்டமென்பது செங்கோலையுணர்த்தும். திருக்குறள் செங்கோன்மை என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில், " அஃதாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை, அம்முறை

[6] ஆன்வீட்சிகீ என்பது திரையீயின் ஒரு கூருக அடங்குமாத லின் அதனை ஒழித்துத் திரையீ, வார்த்தை, தண்டநீதி என்னும் மூன்றும் வித்தைகளென்பர் [7] மானவர்.

திரையீ யென்பது [8] பழியை மறைக்கும் அவ்வளவிற் பயனுடையதென [9] உலகியலுணர்ந்தோர் கூறுவராதலின் அதனை யும் ஒழித்து வார்த்தையும், தண்டநீதியுமே வித்தைகளாகுமென்ப [10] பார்கற்பத்தியர். தண்டநீதியுள் வித்தைகள் எல்லாவற்றின் [11] பயனும் அடங்கிக்கிடத்தலின் அஃதொன்றே வித்தையாகு

ஒருபாற்கோடாது செவ்விய கோல்போறலிற் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார்." என்பது பரிமேலழகர் உரை.

[6] ஆன்வீட்சிகீ யென்பது—திரையீயென்னும் வேதங்களைப் பின்பற்றி நிகழும் இயல்பானும், அவ்வேதப்பொருளாராய்ச்சிவடிவமாக இருத்த லானும் அத்திரையீயின்கூருக அடங்குமன்றித் தனியே ஒரு வித்தையாகா தென்பது மானவர் கொள்கை. வேதங்களைப் பின்பற்றிநிகழும் ஆன்வீட்சிகீ யின் கூறுகள்—சாங்கியம், யோகம், தருக்கம் என்னும் நூல்களாகும். மற் றவை(வேதப்பொருளாராய்ச்சிவடிவமாகவுள்ள ஆன்வீட்சிகீயின்கூறுகள்) பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சைகளாகும். இதுகருதியே காமந்தகரும் "நான்குவேதங்களும், ஆறு அங்கங்களும், மீமாஞ்சைகளும், தருக்கநூல் களும், தருமசாத்திரங்களும், புராணங்களுமாகிய இவையெல்லாம் திரையீ எனப்படும் என்று கூறுவர்.

[7] மானவர்—மனுவின்வழி வந்தோர்.

[8] வேதங்களை உடன்படாதவனை நாத்திகனென்று கூறுப. அங்ஙனம் கூறுதலான் உண்டாம் பழியை வரவொட்டாமல் மறைக்கும் அவ்வளவிற்கே திரையீ பயன்படுவதென்பதும், அதனால் விளையும் பயன் மிகச் சிறிதென் பதும், ஆதலின் திரையீ தனியாக வித்தைகளுள் ஒன்றென வைத்தெண்ணத் தக்கதன்றென்பதும், இவ்வேதுக்களால் திரையீ விலக்கப்படவே அதனுள் அடங்கிய ஆன்வீட்சிகீயும் விலக்கப்பட்டதாகும் என்பதும் பார்கற்பத் தியர் கொள்கைகளாம்.

[9] உலகியலுணர்ந்தோர்—வார்த்தை தண்டநீதி என்னும் இவற்றை மேற்கொண்டு உலகியற்கடமைகளை உணர்ந்தோர்.

[10] பார்கற்பத்தியர் — பிருகற்பதியின்வழி வந்தோர்; பிருகற்பதி— வியாழன்.

[11] இக்கருத்து, "ஆன்வீட்சிகீ, திரையீ, வார்த்தை என்னும் இவற்றின் நிலைபேற்றிற்கும் பயனுக்கும் கருவியாவது தண்டம்" என்னும் இவ்வாசிரியர்கூற்றானும் வலியுறுவதாகும். (அதி—1, பிர–1, அத் 4.)

மென்பர் [12] ஔசநசர்.

அவ்வித்தைகள் எல்லாவற்றானும் அறனும், பொருளும் அறியப்படும்; ஆதலின், அவற்றிற்கு [13] அத்தன்மையுளதெனக் கொண்டு வித்தைகள் [14] நான்கே என்பர் கௌடலியர்.

[15] சாங்கியம், யோகம், உலகாயதம் இம்மூன்றும் ஆன்வீட்சிகீ

---

[12] ஔசநசர் — சுக்கிராசாரியரின்வழி வந்தோர்; உசநஸ்—சுக்கிரன்.

[13] அத்தன்மை—வித்தையாந்தன்மை; அவ் வித்தைகளுக்குப் பொது வியல்பு, சிறப்பியல்பு என இருதன்மைகள் உள. அவற்றுள் பொதுவியல்பு அறம் பொருள்களை அறிதற்குக் கருவியாந்தன்மை; இஃதெல்லாவித்தை களுக்கும் ஒக்கும். சிறப்பியல்பாவது—ஒன்றற்கொன்று வேறுபாடாந் தன்மை; அஃது அவ்வித்தைகளைத் தனித்தனியே யெடுத்துக் கூறுமுகமாக விளக்கப்படும்.

[14] ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது; மூன்று முதலாகக் கொள் வோர் கொள்கைகள் பொருந்தாவென்பதாம்.

[15] சாங்கியம் — பிரகிருதி புருடன் முதலிய பொருள்களின் இயல்பு களை விரித்து விளக்குவது. இதன் ஆசிரியர் கபிலராவர். யோகம்—இயமம் நியமம் முதலியவற்றை விளக்குவது. இதன்ஆசிரியர் மகேச்சுரர் (பதஞ்சலி) ஆவர். உலகாயதம்—சார்வாகமதம் இதன்ஆசிரியர் பிருகற்பதியாவார். இவற் றுள் சாங்கியமதக் கொள்கைகளை "சுவை ஒளி யூறோசை நாற்றமென் றைந்தின்—வகைதெரிவான் கட்டே உலகு" (குறள் 28) என்னும் திருக் குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய விசேடவுரையானும், மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையானும் (அடி—206—240,) சிவஞானபோத அவையடக்கச்செய்யுளுக்குச் சிவஞானமுனிவர் எழுதிய மாபாடியத்தானும், யோகமதக் கொள்கைகளை சிவஞானபோதம் அவை யடக்கத்து மாபாடியத்தாலும், தொல்காப்பியம் பொருளதிகாரத்துப் புறத் திணையியல் 20ஆம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானும், எடுத்துக் காட்டிய உரைச்சூத்திரங்களானும், உலகாயதமதக்கொள்கைகளை சிவஞானபோதம் அவையடக்க மாபாடியத்தானும், மணிமேகலை சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதையானும், 'எள்ளாமை வேண்டுவான்' என்னும் (281) திருக்குறளுக்கு "வீட்டினை இகழ்தலாவது— காட்சியே அளவையாவதென்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டழியுமென்றும், இறந்த உயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப்படுவன என்றும் சொல்லும் உலோகாயதம் முதலிய மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றிற்கேற்ப ஒழுகுதல்" என்று பரிமேலழகர் எழுதிய விசேடவுரையானும் விளக்கமாக அறியலாம்.

எனப்படும். [16] திரையீயில் தருமமும் அதருமமும், வார்த்தையில் அர்த்தமும், அநர்த்தமும், தண்டநீதியில் நயமும் அபநயமும், விளக்கப்படும். திரையீ முதலியவற்றின் வன்மை மென்மைகளை ஏதுக்களால் துணியும் ஆன்வீட்சிகீ, உலகத்து மக்களுக்கு இன்பத் துன்பங்களிற் புத்தியைக் [17] கலங்காமல் நிலைப்படுத்தியும், [18] அறிவு சொல் செயல்களில் திறனளித்தும் உபகரிப்பதாம்.

சுலோகம்

ஆன்வீட்சிகீ, வித்தைகள் எல்லாவற்றிற்கும் [19]விளக்காகவும், கன்மங்கள் எல்லாவற்றிற்கும் உதவியாகவும், அறங்களெல்லா வற்றிற்கும் என்றும் பற்றுக்கோடாகவும் எண்ணப்படுவதாம்.

முதலதிகரணம் முதற் பிரகரணத்தில்
"ஆன்வீட்சிகீயின் இயல்பு" என்னும் இரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

16 இத்தொடக்கம் ஆன்வீட்சிகீயினுல் விளையும் பயனினின்றும் திரையீ முதலியவற்றின் பயன்கள் வேறுபட்டனவாம் என்பதை விளக்குதற்கு எழுந்தது. திரையீ முதலியவற்றில் தருமாதருமம் முதலிய பயன்கள் தலைமைபற்றிக் கூறப்பட்டனவாதலின் ஒன்றன்பயன் மற்றொன்றில் ஒரோவிடங்களிற் சிறிதுசிறிது கூறப்படினும் முரணின்று என்பதாம். தருமம்—ஈண்டு ஓதல் வேட்டல் முதலியன. அதருமம்—புலாலுண்ணல் முதலியன. அர்த்தம்—உரியகாலத்தில் இட்ட வித்தினுல் விளையும் பயன் முதலியன. அநர்த்தம்—அஃதல்லாதது. நயம்—தனக்கு நலம்விளைக்கும் வலியவனோடு செய்துகொள்ளும் சந்தி முதலியன. அபநயம்—தனக்குக் கேடுவிளைக்கும் வலியவனோடு பகைகோடல் முதலியன.

17 கலங்காமல் நிலைப் படுத்தலாவது—இன்பத்தில் இறுமாத்தலும் துன்பத்தில் ஈடழிதலுமின்றி ஒருநிலையாக்கல்.

"இன்பத்தி லிறுமாந்து தோனேக்கி ஈன்றமத
துன்பத்தி லழுந்துவார் தொல்லுலகி லறியாதார்".
"மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே".

என்பன ஈண்டுக் கருதத்தக்கன.

18 அறிவு முதலிய இம்மூன்றும் முறையே மனம் மொழி மெய்களைப் பற்றி நிகழ்வனவாம்.

19 ஆராய்தற்குக் கருவியாதல்பற்றி விளக்கெனவும், கன்மத் தொடக்கமுதற் பயனெய்துங்காறும் அதன் செயன்முறைகளின் பல்வகை வேறுபாடுகளை உணர்த்துவதால் உதவியாகுமெனவும், வைதிக இலௌகிகங்களாகிய அறங்கள் எல்லாவற்றையும் துணிதற்குக் கருவியாதல்பற்றிப் பற்றுக்கோடு எனவும் கூறப்பட்டது.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

முதற் பிரகாணம்—வித்தைவிளம்பல்—[1] திரையியின் இயல்பு

மூன்றும் அத்தியாயம்

இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களும் திரையீ என்று கூறப்படும். அதர்வவேதமும் [2] இதிகாசவேதமும் வேதங்களாம். [3] சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தசு, சோதிடம் என்னும் இவை வேதாங்கங்களாம்.

இத் திரையியாற் கூறப்படும் அறம், நால்வகைவருணங்களையும் ஆச்சிரமங்களையும் அவ்வவற்றிற்குரிய அறங்களில் நிலைப்படுத்தலால் அவற்றிற்கு உபகாரமாக உள்ளது.

வருணதருமங்களாவன :—அந்தணர்க்கு, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் இவ்வாறுமாம். அரசர்க்கு, ஓதல் வேட்டல் ஈதல் படைக்கலம்பயிறல் உயிர்களைக் காத்தல் என்னும் இவ்வைந்துமாம். வணிகர்க்கு, ஓதல் வேட்டல்

மூன்றும் அத்தியாயக் குறிப்புரை

[1] திரையீயின் இயல்பை இரண்டாம் அத்தியாயத்தின் 3-ஆம் குறிப்பிற் காண்க.

[2] இதிகாசவேதம்—மகாபாரதம் முதலியன. இவற்றை வேதங்கள் என்று கூறலாமாயினும், திரையீ என்னுஞ் சொல்லாற் குறிப்பிடலாகாது என்பது கருத்து.

[3] சிட்சை—எழுத்தை உச்சரிக்கும் முறையைக் கூறுவது. கற்பம்—வேள்வியியற்றும் முறையை உணர்த்தும் போதாயனீயம் முதலியனவாம். வியாகரணம் உலகியற்சொல்லையும் வைதிகச்சொல்லையும் உடன் ஆராயும் ஐந்திரம் பாணினீயம் முதலியன. நிருத்தம்—வைதிகச்சொல்லை ஆராய்வது ; யாற்கர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது. சந்தசு—செய்யுளிலக்கணம் ; பைங்கலம் முதலியன. சோதிடம்—சூரியன் முதலிய கோள்களின் சாரங்களை விளக்குவது. இவ்வாறும் வேதபுருடனுக்குச் சிறந்த உறுப்புக்களாம். கற்பம் கைகளும், சந்தசு கால்களும், நிருத்தம் காதுகளும், சிட்சை நாசியும், சோதிடம் கண்களும், வியாகரணம் முகமுமாம் என்ப. இதனை,

“ கற்பம் கை சந்தங் கா லெண்கண்
டெற்ற நிருத்தஞ் செவி சிக்கை மூக்
குற்ற வியாகரண முகம் பெற்றுச்
சார்பிற் றோன்ற வாரண வேதம் ”(மணிமேகலை 27-100-103)

என்பதனுனும் உணர்க.

ஈதல் உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் இவ்வாறுமாம். சூத்திரர்க்கு, இருபிறப்பாளர்மூவர்க்கும் பணிபுரிதல், உழவு, பசுக்காவல், வாணிகம், [4] காருகன்மம், [5] குசீலவகன்மம் என்னும் இவையாம்.

---

[4] காருகன்மம்—சிற்பத்தொழில் முதலியன.

[5] குசீலவகன்மம் — ஆடல் பாடல் முதலியன; குசீலவர்கள் — கூத்தாடுவோர். வருணதருமங்களாக ஈண்டுக் கூறப்பட்டவற்றுள் தொல்காப்பிய முதலிய தமிழ்நூல்களிற் சில வேறுபாடுகள் உள்ளன.

> " அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
> ஐவகை மரபின் அரசர் பக்கமும்
> இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் "

என்பது தொல்காப்பியம். (தொல்–பொருள்–புறத்திணையியல் சூத்திரம் 20)

ஈண்டு உரையாளர் எல்லோரும் அந்தணர்க்குக் கூறிய அறுதொழில்களில் வேறுபட்டிலர். பதிற்றுப்பத்து என்னும் நூலில் " ஓதல் வேட்டல் அவை பிறர்ச்செய்தல், ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்தொழுகும் அந்தணர் " என்று கூறப்பட்டிருத்தலும் காண்க. இனி, ' ஐவகைமரபின் அரசர்பக்கம் ' என்பதற்கு நச்சினார்க்கினியர் " ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் ஐவகை என்பர் ". இளம்பூரணர் " ஓதல் வேட்டல் ஈதல் படைவழங்கல் குடியோம்பல் என்னும் ஐவகை என்பர் ". இவற்றுள் இளம்பூரணர் கொள்கை இந்நூற்கருத்தோடு ஒத்திருத்தல் காண்க. " இருமூன்று மரபின் ஏனோர்பக்கம் " என்பது வணிகரும் வேளாளரும் ஒத்த அறுவகைத் தொழில்களையுடையவர் என்பதைக் குறிக்கும். அங்ஙனமாகவும், நச்சினார்க்கினியர் " ஓதல் வேட்டல் ஈதல் உழவு நிரையோம்பல் வாணிகம் என்னும் இவ்வறு தொழிலும் வாணிகர்க்கு உரியன என்றும், வேதம் ஒழிந்தன ஓதலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் வழிபாடுமாகிய அறுவகைத்தொழிலும் வேளாண் மாந்தர்க்குரியன என்றும் வேறுபடுத்துக் கூறுவாராயினர். தொல்காப்பிய மூலத்தில் வேறுபாடு தோன்றுவகை கூறப்பட்டிருக்க இங்ஙனம் இவர் கூறியது வடநூல் நான்காம் வருணத்தவராகிய சூத்திரர்க்கு வகுத்த அறுதொழில்களையே தமிழ்நிலத்து வேளாளர்க்கும் உரியனவாகக் கருதினமையாம். தமிழ்நிலத்து வேளாளர் வடநூலிற் கூறப்பட்ட சூத்திரர் ஆகார் என்பது தமிழ்நூல்களிற் கண்ட முடிபாம். இதனை நன்குணர்ந்த பேராசிரியர் ஓதல் வேட்டல் ஈதல் இம்மூன்றும் நால்வகைவருணத்தார்க்கும் ஒத்த சிறப்பின எனவும், வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் உழவும் நிரைகாத்தலும் வாணிகமும் ஒத்த சிறப்பின எனவும் கூறி இம் மூன்றனுள்

ஆச்சிரமதருமங்களாவன :—இல்லறத்தானுக்குரியவை; [6]**தன் வருணவொழுக்கத்தை மேற்கோடல், ஒத்தகுலத்தில் வேறுபட்ட கோத்திரத்தில் மணஞ்செய்துகோடல்,** [7]**இருதுகாலத்தில் மனைவியோடு கூடல், தென்புலத்தார் தெய்வம் விருந்து பணியாளர்**

வாணிகம் வணிகர்க்குப் பெருவரவிற்றெனவும், உழவு வேளாண்மாந்தர்க்குப் பெருவரவிற்றெனவும் கூறி வேறுபாடும் காட்டினர் (தொல்—பொருள்-மரபி-80ஆம் சூத்திரவுரை). இஃதே தமிழ்நிலத்தார்க்குப் பொருந்தியதாகும். இக்கௌடலீய நூலிற் கூறப்பட்ட சூத்திரர் ஏனைய மூவர்க்கும் பணிபுரிதல் குசீலவகன்மம் ஆகிய இவ்விழிதொழில்களையுடையோர் என்று கூறப்பட்டிருத்தலால் தமிழ்நிலத்து வேளாண்மாந்தரொடு இச்சூத்திரரை ஒத்தவராகக் கருதுதல் தவறுடைத்தென்பது விளக்கமாம்.

[6] *தன் வருணவொழுக்கமாவது—வருணதருமத்திற் கூறப்பட்ட அந்தணர் முதலியோர்க்குரிய ஒழுக்கம். இதன் பயனை "தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவம் தேயும், பாவம் தேய அறியாமை நீங்கும், என்பன முதலியவாகப் பரிமேலழகர் (திருக்குறள் 21 உரை) கூறியவாற்றான் அறிக. ஈண்டு நிலை—ஆச்சிரமம்.*

[7] *மகளிர் இருதுவாகி நீராடியபின் பன்னிரண்டு நாட்களும் இருதுகாலம் என்ப. இதனைப்பற்றிய கொள்கைவேறுபாடுகளைப் பின்வரும் தமிழ்நூல் உரைகளால் அறிக. தொல்காப்பியத்தில் (பொருளதிகாரம். கற்பியல் 46-ஆம் சூத்திரம்) "பூப்பின் புறப்பா டீராறு நாளும், நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்" எனவும், இறையனார்களவியலில் (43—ஆம் சூத்திரம்) "பூப்பின் புறப்பா டீராறுநாளும், நீத்தகன் றுறைதல் அறத்தாறன்றே" எனவும் கூறப்பட்டுள்ளன. ஈண்டு நச்சினார்க்கினியர், "பூப்புத் தோன்றி மூன்றுநாளும் கூட்டமின்றிப் பின்னர்ப் பன்னிரண்டுநாளும் கூடியுறைப" எனவும், "பூப்பின் முன்னாறுநாளும் பின்னாறுநாளும் என்றும், பூப்புத்தோன்றிய நாள்முதலாகப் பன்னிரண்டு நாளும் என்றும், உரைப்பாரும் உளர்" எனவும் கூறியுள்ளார். களவியல் உரையாசிரியர் "பூப்புப் புறப்பட்ட முந்நாளும் சொற்கேட்கும்வழி உறைவானாவது; உறைந்த பின்னை ஒன்பதுநாளும் கூடியுறைவானாவது" எனவும், "பூப்புப்புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிருநாளும் என்பது துணிபு" என்றார்க்கு, முந்நாளும் கூடி உறையப்படும் குற்றம் என்னோ? எனின், பூப்புப்புறப்பட்ட ஞான்று நின்ற கரு வயிற்றிலழியும்; இரண்டாநாள் நின்ற கரு வயிற்றிலே சாம்; மூன்றாநாள் நின்ற கரு குறுவாழ்க்கைத்தாம்; வாழினும் திருவின்றாம். அதனாற் கூறப்படாதென்பது" எனவும் கூறினர்.*

என்னும் இவர்பொருட்டு வேண்டுவன கொடுத்தல், [8] எஞ்சியது உண்டல் என்னும் இவையாம்.

[9] பிரமசாரிக்குரியன—வேதமோதல், [10] அங்கிவினை, [11] நீராடல், ஐயமேற்றல், **[12] விரதம், [13] உயி**ருள்ளவரை **ஆசிரியன்பக்கல் இருத்**

---

[8] ஈண்டு,

> " தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
> கைம்புலத்தா றோம்பல் தலை ". (43)

என்னும் திருக்குறள் நினைக்கத்தக்கது. இங்கே ஒக்கல் என்பது சுற்றத்தாரைக் குறிக்கும். இந்நூலில் அந்நிலையில் ' பணியாளர் ' என்று கூறப்பட்டுள்ளது. பணியாளர்க்குக் கொடுத்தல் பணிசெய்தற்பயன் கருதியதாகலின் ஒக்கலே இன்னிலையறத்திற்கு ஏற்புடைத்தாதல் அறிக. ' எஞ்சியதுண்டல் ' என்பதனுல் ' தான் ' என்பது பெறப்படும். அஃது அறமாதல் " எல்லா அறங்களும் தான் உளனுய் நின்று செய்யவேண்டு தலின் தன்னையோம்பலும் அறனுயிற்று" என்னும் பரிமேலழகர் உரையால் தெளிக. எஞ்சியது—தென்புலத்தார் முதலியோர்க்குக் கொடுக்கப்பட்டு எஞ்சியது.

> " வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
> மிச்சின் மிசைவான் புலம் ". (85)

என்னும் திருக்குறட் கருத்தோடு " எஞ்சியதுண்டல் " என்று ஈண்டுக் கூறியது ஒத்திருத்தல் காண்க.

[9] பிரமம் — வேதம் ; இலக்கணையால் அதனை ஓதுதற்பொருட்டு மேற்கொள்ளும் விரதத்தையும் உணர்த்தும். அவ்விரதவொழுக்கமுடையான் பிரமசாரியாவான்.

[10] அங்கிவினை—அக்கினிகாரியம்.

[11] நீராடலை விதந்துகூறியது — காலை, நண்பகல், மாலை யென்னும் முக்காலத்தினும் பிரமசாரி நீராடல்வேண்டுமென்பதுகருதி.

[12] விரதம் — மணம்புரிதற்குமுன் செய்யப்படும் மயிர்களைதல் இறுதியாகவுடைய வொழுக்கம். இஃது உபகுருவாணர்க்குரியது. பிரமசாரிகள், உபகுருவாணன் நைட்டிகன் என இருதிறப்படுவர். உபகுருவாணன் வேதமோதியபின் ஆசிரியன் அநுமதிபெற்றுப் பிரமசரியவிரதத்தை முடித்துக்கொண்டு மணம்புரிந்துகோடற்குரியவன். நைட்டிகன்—மணஞ்செய்துகோடலின்றி வாணுள்காறும் உரிய விரதமேற்கொண்டொழுகுவோன்.

[13] " உயிருள்ளவரை " முதலியன நைட்டிகற்கே உரியன.

தல், அவன் இல்லையானால் அவ்வாசிரியனுடைய புதல்வன்பக்கலிலாதல் ஒத்தசாகையினனாகிய ஒரு பெரியோன்பக்கலிலாதல் இருத்தல் என்னும் இவையாம்.

[14] வானப்பிரத்தனுக்குரியன— [15] பிரமசரியம், நிலத்திற்படுத்தல், சடைவளர்த்தல், [16] தோலுடுத்தல், [17] அங்கிவினை, [18] நீராடல், தென்புலத்தார் தெய்வம் விருந்துகளை உபசரித்தல், கனி கிழங்கு முதலியன உண்டல் என்னும் இவையாம்.

துறவிக்குரியன:—பொறியடக்கம், [19] வினையொழிவு, பொருள் சிறிதுமின்மை, [20] எவருடனும் கூடாமை [21] பலவிடங்களில் ஐய

---

[14] வானப்பிரத்தம்—காடுறைநிலை.

[15] பிரமசரியம் — ஈண்டுப் பெண்புணர்ச்சியின்றி ஊர்த்துவரேதசாக இருக்குந் தன்மையை யுணர்த்தும்.

[16] தோல்—மான்றோல், புலித்தோல், மரவுரி முதலியன.

[17] அங்கிவினை—காலை மாலைகளில் தீக்கடவுட்குச் செய்யும் வழிபாடு.

[18] நீராடல்—ஈண்டும் முக்காலத்தும் மூழ்கலை உணர்த்தும். ஈண்டுக் கூறிய வானப்பிரத்தனுக்குரிய ஒழுக்கங்களைப் பின்வரும் புறப்பொருள் வெண்பாமாலைச்செய்யுளானும் உணர்க.

> "நீர்பல கான்மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
> சோர்சடை தாழச் சுடரோம்பி—ஊரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
> வானகத் துய்க்கும் வழி" (வாகை-14)

இது தாபதவாகை என்னும் துறைக்கு எடுத்துக்காட்டாகவுள்ளது. இவ்வொழுக்கங்களுள் "சுடரோம்பல், விருந்தோம்பல்" என்னும் இவற்றால் இவை வானப்பிரத்தனுக்குரிய ஒழுக்கங்களாகக் கொள்ளப்படும்.

[19] வினையொழிவு — யாதொரு கருமமும் செய்யாதிருத்தல். "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்னும் தாயுமானர் அநுபவ உரை ஈண்டு நினைக்கத்தக்கது.

[20] மற்றொரு துறவியுடனும் கூடலாகாதென்பது.

[21] உயிர்வாழ்வதற்கு வேண்டிய அளவு உணவை ஓரிடத்துப்பெறுதலால் கொடுப்பார்க்கு அசௌகரியம் உண்டாகுமென்று கருதிப் "பல இடங்களில்" என்று கூறப்பட்டது.

மேற்றல், காடுறைதல், [22]அகந்தூய்மை, புறந்தூய்மை யென்னும் இவையாம்.

[23] எல்லோரும் மேற்கோடற்குரியன :—பிறரைத் துன்புறுத்தாமை, வாய்மை, தூய்மை, [24] அழுக்காறுமை, இரக்கமுடைமை, பொறுமை யென்பனவாம்.

கடமையை மேற்கோடலால் இம்மைநலமும், மறுமை யின்பமும், வீட்டின்பமும் உண்டாம். அதனைக் கைவிடில் வரையறையிகந்த [25] கலப்பால் உலகம் [26] அழிவெய்தும்.

சுலோகங்கள்

(1) ஆதலின் அரசன் மக்களை அவர்தம் கடமையினின்றும் பிறழவிடலாகாது. அவர்தம் கடமையை நன்கு மேற்கொள்ளச் செய்யின் இம்மையினும் மறுமையினும் இன்பமெய்துவான்.

---

22 "புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்" (298)

என்னும் திருக்குறளும் "மனந்தூய்தாதல் — மெய்யுணர்தல்; இதனுனே துறந்தார்க்கு இரண்டுதூய்மையும் வேண்டும் என்பதூஉம் பெற்றும்" என்னும் பரிமேலழகர் உரையும் நினைக்கத்தக்கன.

23 எல்லோரும் என்பதால் வருணச்சிரம வேறுபாடின்மை புலப்படும்.

24 அழுக்காறு — பிறராக்கம் பொருமை; பிறர்குணத்திற் குற்ற மேற்றலுமாம்.

25 கலப்பு—வருணச்சிரம வொழுக்கங்கள் பிறழ்தல்.

26 உலகத்துக்கு உறுதியான நலம்பயக்கும் ஏதுக்களாக இங்குக் கூறப்பட்ட வருணச்சிரமதருமங்கள், அவற்றை மேற்கொண்டொழுகும் இருமுதுகுரவர் மரபிற்றேன்றி அவ்வொழுக்கத் தொடர்பொடுங்கூடியவர் களாகிய அவ்வவ்வருணச்சிரம சீலர்களால் தங்குலதருமமெனக்கொண்டு பத்திசிரத்தையோடு அநுட்டிக்கப்படுவனவாய்த் தாம் சிறப்புறுதற்கும், உலகத்துக்கு உபகாரமாய்நின்று மிக்க சிறப்பையளித்தற்கும், தகுதியுடையனவாம். அங்ஙனமாகவும் அவை வரையறையின்றி உரியாரல்லாராற் பிறழ மேற்கொள்ளப்படுமாயின், விரைவில் அவை தாமும் இழிவெய்தி உலகோபகாரத்தினும் சிறப்பைத் தாராமல் ஒழுக்கத்துக்கும் புறனும் நிலையையெய்தும். ஆதலின் அறப்பிறழ்ச்சியால் உலகம் அழிவெய்தும் என்பதாம்.

(2) [27] வரையறுக்கப்பட்ட ஆன்றோர் ஆசாரநியமத்தை உடையதும், நன்கு தூய்மைசெய்யப்பட்ட வருணாச்சிரமநிலைகளை உடையதும், திரயீயாற் காக்கப்பட்டதுமாகிய இவ்வுலகம் அழிவின்றி இன்பமெய்தும்.

முதலதிகரணம் முதற் பிரகரணத்தில்
" திரயீயினியல்பு " என்னும் மூன்றாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[27] வருணாச்சிரம தருமங்களை விதிக்குமுகமாக, திரயீயால் விளையும் பெரும்பயன் இவ்வத்தியாயத்தின் இறுதியிற் கூறப்படுகின்றது.

முதல் அதிகரணம்—பயிற்சிபகர்தல்

முதற் பிரகரணம் — வித்தைவிளம்பல் — [1]வார்த்தை தண்டநீதிகளின் இயல்பு

நான்காம் அத்தியாயம்

[2]உழவு, [3]பசுக்காவல், [4]வாணிகம் என்னும் வார்த்தையானது தானியம், பசு, பொன், [5]குப்பியம், அடிமை என்னும் இவற்றைத்

நான்காம் அத்தியாயக் குறிப்புரை

[1] உழவு முதலியன வார்த்தையாகும். தண்டநீதி—அரசநீதி.

[2] உழவு முதலியன ஈண்டு அவ்வந்நூல்களை உணர்த்தும். அவற்றுள் உழவுநூல்—நிலந்திருத்தல், வித்திடல், உரமிடல், களைகட்டல் முதலிய வற்றைப்பற்றியது; பராசரராற் கூறப்பட்டது. வார்த்தையின் வகைகளாகவுள்ள மூன்றனுள் வாணிகத்தினும் உழவு சிறந்ததென்பது கருதி அது முற்கூறப்பட்டது. வணிகர் வேளாளர் இருதிறத்தார்க்கும் உழவு உரியதாயினும் சிறுபான்மை வணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தென்ப. பெரும்பாலும் வடநூல்களுள் நான்காம் வருணத்தவர்க்குரிய இழிதொழிலாக உழவு கூறப்பட்டுள்ளது. தமிழ்நூலார் எல்லாத் தொழில்களினும் தலையாயது உழவு என்று கூறுப; இதனை

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (1031)

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி", (1032)

என்னும் திருக்குறள்களானும், "வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடை என்பது போதர 'உழந்தும் உழவே தலை' என்றும் கூறினர்" என்பது முதலிய பரிமேலழகர் உரைக்குறிப்புக்களானும், "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடைவிளைப்போர்" (நாடுகா–149) என்னும் சிலப்பதிகாரத்தானும் தெளிய உணரவாம். இந்நூலில் கூறிய முறை வைப்புத் தமிழ்நூலார் கொள்கையைத் தழுவியிருத்தலான், கௌடலியர் தமிழர் வழக்கவொழுக்கங்களுள் சிறந்தனவற்றைத் தம் பொருள்நூலுக்கு உரியவாகக்கொள்ளும் கொள்கையுடையரென்பது போதரும்.

[3] இது பசு குதிரை முதலியவற்றைப் பாதுகாத்தலைப்பற்றிக் கூறும் நூல். கௌதமர் சாலிஹோத்திரர் முதலியோரால் கூறப்பட்டது.

[4] விற்றல், விலைகொடுத்துவாங்கல் முதலிய விவகாரங்களை உணர்த்தும் நூல்; விதேகவரசனால் கூறப்பட்டது.

[5] குப்பியம்—பொன் வெள்ளியல்லாத உலோகங்களும், மரம் செடி, கொடி முதலியவைகளுமாம்.

தருதலால் உலகிற்கு உபகாரமாவதாம். அவ்வார்த்தையால் உண்டாம் [6]பொருட்பெருக்கம், படைப்பெருக்கங்களால் [7]தன்பக்கத்தையும், பிறர்பக்கத்தையும் அரசன் தன்வயப்படுத்துவான்.

ஆன்வீட்சிகீ, திரையீ, வார்த்தை என்னும் இவற்றைப் பெறுதற்கும், காத்தற்கும் [8]தண்டம் [9]சாதனமாகவுள்ளது. அதனைப் பற்றி நிகழும் [10]நீதி தண்டநீதியாகும்; அதனால் விளையும் பயன்கள், [11]அடையப்பெறாத பொருளை அடைதலும், பெற்றன காத்

---

6. உழவு வாணிகம் முதலியவற்றாற் பொருட்பெருக்கமும் அதனாற் படைப்பெருக்கமும் உண்டாம் என்பது கருத்து. இதனை,

" பொன்னினாகும் பொருபடை அப்படை
தன்னினாகும் தரணி " (சீவகசி–செ–1923)

என்பதனானும் அறிக.

7 தன்பக்கத்துள்ளாரையும், பகைவர்பக்கத்துள்ளாரையும் தன்வயப் படுத்துவான் என்பது கருத்து.

8 தண்டம்–ஈண்டுச் சாமம் முதலிய உபாயம் நான்கனுள் ஒன்றாகிய ஒறுத்தலை உணர்த்தும்; காரிய காரண அபேதத்தால் அத்தண்டத்தைச் செய்யும் அரசனும் " தண்டம் " என்று கூறப்படுவான். இனி, தண்டம் என்பதைக் கோல் எனக் கொண்டு " அம்முறை ஒருபாற் கோடாது செவ்வியகோல் போறலின் செங்கோல் எனப்பட்டது, வடநூலாரும் தண்டம் என்றார் " என்பர் பரிமேலழகர். (55-ஆம் அதி–அவதாரிகை)

9 தண்டபயம் உள்வழி உலகம் ஆன்வீட்சிகீ முதலியவற்றில் தலைப் படும். அஃதின்றேல் அங்ஙனம் தலைப்படாது. ஆதலின், ஆன்வீட்சிகீ முதலியவற்றிற்குத் தண்டம் சாதனமாம் என்பது போதரும். இது கருதியே பெரியாரும்,

" மக்களெல்லோரும் தண்டத்தால்
அடக்கப்பட்டவராவர்; இன்றேல்
யாண்டேனுந் தூய்மையுடையானைக்
காண்டல் அரிதாகும். தண்டபயத் தாலேயே
உலகம் இன்பத்தில் தலைப்படுவதாம் "

என்று கூறுவர்.

10 நீதி–ஈண்டு நன்று தீது துணிதற்குக் கருவியாகிய நூலையுணர்த்தும்.

11 இக்கருத்துக்கள்,

" இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு " (557)

என்னும் திருக்குறட் கருத்தைத் தழுவியிருத்தல் காண்க.

தலும், காத்தவற்றை வளர்த்தலும், அவற்றை [12]நல்வழியிற் பயன் படுத்தலுமாம். அத்தண்டநீதியைப்பற்றியே உலகம் நிகழ்வது; ஆகலின் உலகநிகழ்ச்சியை விரும்பும் அரசன் எப்பொழுதும் [13]தண்டத்தைச் செலுத்துதலில் முயற்சியுடையவனுதல்வேண்டும்.

மக்களைத் தன்வயப்படுத்தற்குத் தண்டத்தை ஒத்த கருவி வேறொன்றில்லை என்ப ஒருசாராசிரியர்.

அதனை மறுத்துக் கௌடலியர் கூறுவன—[14]கொடுந்தண்டம் மக்களை நடுக்கமுறுத்தும். குறைந்த தண்டம் அவமதிக்கப்படும். [15]தகுதியான தண்டம் நன்குமதிக்கப்படும். [16]நூன்முறைவழாது நன்கு நுனித்துணர்ந்து செலுத்தப்படும் தண்டம் மக்களை அறம் பொருளின்பங்களில் தலைப்படுத்தும். காமம் வெகுளி மயக்கம் காரணமாக நூன்முறை வழீஇச் செலுத்தப்படும் தண்டம் வானப்பிரத்தம் துறவுநிலைகளில் உள்ளாரையும் சினமுறச்செய்யுமெனின்,

---

[12] நல்வழியிற் பயன்படுத்தல் — அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் செலவிடல்.

[13] "ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்" (673)

என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய விசேடவுரையில் "இயலும் இடம் பகையில் தான் வலியனுயகாலம்; அக்காலத்துத் தண்டமே நன்றென்றார்; அஞ்சுவது அதற்கேயாகலின்" என்று கூறியது இங்கே நினைக்கத்தக்கது.

[14] கொடுந்தண்டம் மக்களை நடுக்கமுறுத்துமுகமாக அரசற்கும் கேடு விளைப்பதாகும். இதனை,

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்" (567)

என்பதனுனும் உணர்க.

[15] தகுதியான தண்டம்—காலம், இடம், குற்றம் இவற்றிற்குத்தகப் பிரயோகிக்கப்படுவது.

[16] "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை" (541)

என்னும் திருக்குறளில் தேர்ந்து என்பதற்கு "அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து" என்று பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்பு ஈண்டு நோக்கத்தக்கது.

[17]இல்லறநிலையிலுள்ளாரைச் சினமுறுத்தும் என்பதைப்பற்றிக் கூறவேண்டுவதென்? தண்டம் செலுத்தப்படுவதின்றேல் அது [18]மச்சநியாயத்தை விளைவிப்பதாம். அரசன் தண்டத்தைச் செலுத்துவானல்லனேல் வலியவன் மெலியவனைத் துன்புறுத்துவான். அத்தண்டத்தால் காக்கப்படின், மெலியவனும் வலியவனுவான்.

சுலோகம்

நால்வகை வருணச்சிரமங்களையுமுடைய இவ்வுலகத்து மக்கள் அரசனது தண்டநீதியால் காக்கப்படுவாராயின் தத்தம் கடைமைகளை வழாமல் மேற்கொண்டு தமக்குரிய இல்லங்களிலிருந்து [19]இனிது வாழ்வார்.

முதலதிகரணம் முதற் பிரகரணத்தில்
"வார்த்தை தண்டநீதிகளின் இயல்பு" என்னும்
நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

[17] பொறியடக்கமுடையாரையும் சினமுறுத்துமாயின் அஃதில்லாரை யாது செய்யாதென்பது கருத்து.

[18] மச்சநியாயம்—பெரியமீன்கள் சிறியமீன்களை உண்டல்போல வலியவர் மெலியவரைத் துன்புறுத்தல்.

[19] அரசனது தண்டப்பாதுகாப்பின்றேல் தம் இல்லங்களிலிருந்தும் இன்புறல் அரிதென்பது கருத்து. இதனை,

"அரைச வேலி யல்லது யாவதும்
புரைதீர் வேலி இல்" (சிலப்-அழற்படு-23–45)

என்னும் சிலப்பதிகார அடிகளானும் அறிக.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

இரண்டாம் பிரகாரணம்—[1] பெரியோரிணக்கம்

ஐந்தாம் அத்தியாயம்

இவ்வுலகம் அரசனது தண்டத்தால் காக்கப்பட்டுத் [2]தன் கடமையை மேற்கொண்டொழுகலான் [3]வித்தைகள் மூன்றும் அத்தண்டத்தையே பற்றுக்கோடாக உடையன. நூற்பயிற்சியைப் பற்றுக்கோடாகவுடைய அத்தண்டம் உயிர்களுக்கு நற்பேறளித்துக் காப்பதாகும்.

பயிற்சி, [4]இயற்கையின் அமைவது [5]செயற்கையின் அமைவது என இரண்டாம். [6]தூய்மைச்செயல் [7]தகுதிப்பொருளைச் செம்மைப் படுத்தும். [8]தகுதியில்பொருளை அங்ஙனஞ்செய்யாது. [9]அது

ஐந்தாம் அத்தியாயக் குறிப்புரை

[1] வித்தைகள் பெரியோர் இணக்கமின்றிப் பெறப்படாவாதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. பெரியோர்—ஆன்வீட்சிகீ முதலிய வித்தைகளை நன்குணர்ந்தோர்.

[2] கடமை—வருணாச்சிரம தருமங்கள்.

[3] "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய், நின்றது மன்னவன் கோல்" என்பது ஈண்டு நினைவுகூர்தற்பாலது.

[4] முயற்சி முதலியன இன்றிப் பண்டைப் பிறப்புத்தொடர்பால் தானே எய்துவது இயற்கைப் பயிற்சியாகும்.

[5] முயற்சி முதலிய செயலால் எய்துவது செயற்கையாகும். "மதிநுட்பம் நூலோடுடையார்" (குறள் 693) என்புழி, மதிநுட்பம், இயற்கையையும் நூலறிவு, செயற்கையையும் புலப்படுத்தி நிற்றல் ஈண்டுக் கருதற்பாலது.

[6] தூய்மைச்செயல்—சாணைதீர்தல் முதலியன.

[7] தகுதிப்பொருள்—அச்செயலால் விளக்கமுறுதற்குத் தகுதியான வயிர மணிமுதலியன.

[8] தகுதியில்பொருள்—சாணைதீர்தற்குத் தகுதியற்ற பரற்கல் முதலியன.

[9] அதுபோல்—வித்தைகள்கேட்டல் முதலிய குணங்கள் இயற்கையின் அமைந்த புத்தியுடையானைச் செம்மைப்படுத்தும் எனவும், அல்லாதானை அங்ஙனம் செய்யா எனவும் கூட்டுக.

போலக் [10]கேள்விவிரும்பல், கேட்டல், கோடல், உள்ளத்தமைத்தல், பகுத்துணர்தல், [11]குறிப்பினுணர்தல், [12]விலக்கல், உண்மை தெளிதல் என்னும் குணங்களின் நிலையமாகிய புத்தியையுடையானை வித்தைகள் செம்மைப்படுத்தும். அல்லாதானை அங்ஙனம் செய்யா.

வித்தைகள் ஆசிரியனைப் பிரமாணமாக உடைமையால் அவ்வாசிரியன்கட்டளையைக் கடவாமைப்பொருட்டு மாணுக்கர்க்கு [13]விநயமும் [14]நியமமும் வேண்டும்.

மயிர்களைதலாகிய [15]சௌளகன்மம் நிறைவேறியபின் [16]எழுத்தையும், எண்ணையும் நியமமாகக் கற்றல்வேண்டும். உபநயநம் நிறைவேறியபின், திரையீயாகிய மும்மறைகளையும் ஆன்வீட்சிகீயாகிய அங்கம் முதலிய நூல்களையும் ஆன்றோர்முகமாக ஓதல் வேண்டும். வார்த்தையாகிய உழவுமுதலியவற்றை உழவுத்தொழிற்றலைவன் முதலியோர்பால் பயிலவேண்டும். தண்டநீதியைச் சொல்லானும் செயலானும் வல்லார்பால் பயிலவேண்டும்.

[17]பதினாறுயாண்டுவரை பிரமசரியம் காத்தல்வேண்டும்.

---

10 புத்தியின் குணங்கள் எட்டனையுங் கூறுவான் தொடங்குகின்றார். கேள்விவிரும்பல் முதலியன புத்தியின் குணங்கள்.

11 குறிப்பினுணர்தல்—கூறிய சொற்களானன்றிப் பிறகுறிப்புக்களால் பொருளையுணர்தல்; இதனை ஊகம் என்ப.

12 விலக்கல்—யுக்திக்குப் பொருந்தாதனவற்றை ஒழித்தல். இதனை "அபோகம்" என்ப.

13 விநயம்—பயிற்சியையும், ஆன்றோர் ஆசாரத்தையும் உணர்த்தும். ஆசாரமாவது—ஆசிரியன் வருங்காலும் இருக்குங்காலும், முறையே மாணுக்கன் இருக்கையெழலும், எழுந்துநிற்றலும் முதலியன.

14 நியமம்—ஆசிரியனுக்குப் பணிபுரிதல் முதலிய விரதங்கள்.

15 சௌளகன்மம் மூன்றும் ஆண்டிலாதல் ஐந்தாம் ஆண்டிலாதல் செய்யவேண்டும்.

16 எழுத்து — ஒலியெழுத்துக்களும் வரிவடிவமாகிய எழுத்துக்களும் இலக்கணமுமாம். எண்-கணிதநூல்; அளவைநூலுமாம்.

17 பதினாறும்யாண்டு மணஞ்செய்தற்குரிய பருவம் என்று ஈண்டுக் கூறியது பண்டைக்காலத்துத் தமிழர் கொள்கையைத் தழுவியிருத்தல் காண்க. அகப்பொருள்பற்றிய தமிழ்நூல்களில் கற்புமணத்திற்குரிய பருவம் பதினாறுயாண்டென்பது வெளிப்படை. "ஈராறுண்டகவையான்" எனச் சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடற்பகுதியில் கூறியிருத்தலும் காண்க.

அதன்பின் [18]மயிர்களை தல்வினை முடித்து மணஞ்செய்தல்வேண்டும். நூற்பொருட்டெளிவு வித்தைகளிற்சிறந்த பெரியாரிணக்கத்தால் உண்டாமாதலின் மணவினை முடித்தவனுக்கும் அத்தெளிவு மிகுதற்பொருட்டு அப்பெரியாரிணக்கம் எஞ்ஞான்றும் வேண்டற்பாலதாம்.

[19]நாடோறும் முற்பகலில், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்னும் இவற்றைப்பற்றிய கலைகளிலும், பிற்பகலில் இதிகாசங்களிலும், பயிற்சிபெறல்வேண்டும் [20]இதிகாசங்களாவன—[21]புராணம், [22]புராவிருத்தம், [23]ஆக்கியாயிகம், [24]உதாகரணம், அறநூல், பொருணூல் என்பனவாம். நண்பகலிலும், இரவில் [25]எஞ்சிய காலங்களிலும் புதியபொருள்களை அறிதலும், முன் உளங்கொண்ட பொருள்களைச் சிந்தித்தலும், சிறிது உணர்ந்தபொருள்களை நன்கு தெளிதற்பொருட்டு அடிக்கடி கேட்டு உணர்தலும் செய்தல் வேண்டும்.

---

18 மயிர்களை தல்வினை மணவினைக்கு முன்னர்ச் செய்யப்படுவது; இதனைக் 'கோதானம்' என்ப.

19 "கிள்ளி வளவற் படர்குவை யாயின்
நெடுங்கடை நிற்றலும் இலையே கடும்பகற்
றேர்வீ சிருக்கை" (புறநா—69)

என்னும் புறப்பாட்டுப்பகுதிக்கு எழுதிய விசேடவுரையில், "ஒருநாளுள் முதலனபத்து நாழிகையும் அறத்தின் வழியொழுகி பின்பத்து நாழிகையும் இறையின்முறைமை கேட்டுச்செய்த பொருளைப் பரிசிலர்க்குக்கொடுத்து மகிழ்ந்திருத்தலால் 'கடும்பகல் தேர்வீ சிருக்கை' என்றார்" என்று குறிப்பிட்டிருத்தல் ஈண்டு நினைக்கத்தக்கது.

20 புராணம் முதலிய எல்லாம் இதிகாசத்துள் அடங்குமென்பது இவ்வாசிரியர் கருத்து.

21 புராணம் சைவமுதலிய பதினெட்டு மகாபுராணங்களும், உபபுராணங்களுமாம்.

22 புராவிருத்தம்—சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் முதலியன.

23 ஆக்கியாயிகம் — தெய்வத்தன்மை வாய்ந்த பெரியோர் வரலாறு முதலியன.

24 உதாகரணம்—தருக்கம் மீமாஞ்சை முதலியன.

25 எஞ்சியகாலங்களாவன—இரவில், தெய்வவழிபாடு, உணவு, உரக்கம் முதலியனவற்றிற்கு வேண்டுவனபோக எஞ்சிய காலக்கூறுகள்,

நூற்கேள்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கத்திற் பற்றும், அவ்வொழுக்கப்பற்றால் தூய மனவுறுதியும் உண்டாம். இவை [26]வித்தைகளின் ஆற்றலான் எய்தும் பயன்களாம்.

வித்தைகளை நன்குபயின்ற அரசன் தன் குடிமக்களை ஆளும் திறனுடையனாய், எல்லா உயிர்கட்கும் நலம்புரிந்து, நிலத்தைப் பொதுவறப் புரந்து இன்புறுபவனாவான்.

முதலதிகரணம் இரண்டாம் பிரகரணத்தில்
" பெரியோரிணக்கம் " என்னும் ஐந்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[26] ஈண்டு அவற்றையுடைய பெரியாரையும் குறிக்கும்.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

மூன்றும் பிரகாரணம்—[1] பொறியடக்கம்—குற்றங்கடிதல்

ஆறும் அத்தியாயம்

வித்தைகளாலாம் செம்மைக்கு ஏதுவாகிய பொறியடக்கம், காமம், வெகுளி, [2]கடும்பற்றுள்ளம், [3]மானம், [4]மதம், [5]உவகை என்னும் [6]குற்றங்களைக் கடிதலான்ஆம். மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகள் தத்தம் புலன்களாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பவைகளில் [7]இயற்கையாகவே மாறு படாமல் நிகழ்தலும், [8]நூற்பொருள் உணர்ந்து ஒழுகலான் நிகழ் தலும் பொறியடக்கமாம். [9]இவ்வெல்லா நூற்பொருள்களும் பொறியடக்கத்துக்குக் காரணம் ஆகும்.

ஆறும் அத்தியாயக் குறிப்புரை

[1] பொறிகள்—மெய் வாய் கண் மூக்குச் செவிகள். அடக்கம்—அவை தத்தம் புலனுகர்ச்சியிற் பிறழ்ச்சியின்றிச் சேறல். அப்பொறியடக்கம் நூலுணர்ச்சி முதலியவற்றானன்றித் தானே அமைவது இயற்கையாகும். நூற்கேள்விகளான் அமைவது செயற்கையாகும். இதனைக் குற்றங்கடிதல், பொறியடக்கமுடைய அரசன் இயல்பு என இருகூறாக்கி இரண்டு அத்தி யாயங்களால் கூறுவான் தொடங்கி, முதற்கட் பகைவருக்கநீக்கமென்னும் குற்றம் கடிதலைக் கூறுகின்றார். பெரியாரிணக்கங்கூறிப் பின் அதற்கேது வாகிய பொறியடக்கம் கூறுதலின் பிரகரண இயைபுண்மை காண்க.

[2] கடும்பற்றுள்ளம்—பிறர்பொருட்கண் உண்டாம் அவா, உலோபம் என்ப.

[3] மானம்—கருதியது செய்யத்தகாதாயினும் அதனை முடித்தேவிடும் தீயகுணம்.

[4] மதம்—செல்வமுதலியவற்றானுண்டாம் செருக்கு.

[5] உவகை—ஈண்டு அளவிறந்த நிலையிலுள்ளது.

[6] இக்குற்றங்களை முறையே சிறுமை, சினம், இவறல், மாண்பிறந்த மானம், செருக்கு, மாணுவுவகை என்பர் திருவள்ளுவர். (திருக்-44 அதி-1,2 செ.)

[7] இயற்கைப் பொறியடக்கம்.

[8] செயற்கைப் பொறியடக்கம். “கற்றடங்க லாற்றுவான்” (குறள் 130) என்பதும் அது.

[9] மேற்கொள்ளத்தக்க நூற்பொருள்களெல்லாம் பொறியடக்கத்திற்குக் காரணம் என்பது கருத்து.

ஓரரசன் நாற்புறமும் கடல்சூழ்ந்த இந்நிலவுலகனைத்துக்கும் தலைவனாயினும், ஆன்றோர் நூற்கு மாறுபட்ட ஒழுக்கமும் பொறி யடக்கமின்மையும் உடையனாயின் விரைந்து கேடெய்துவான்.

போசகுலத்தில் தோன்றிய [10]தாண்டக்கியன் என்பானும் விதேகநாட்டரசனாகிய கராளன் என்பானும் காமத்தால் அந்தணர் குலத்துப்பெண்களை வலிந்துபற்றி உறவினரையும் நாட்டையும் இழந்து தாமும் அழிவெய்தினர். சன்மேசயன் அந்தணர்களோடும், தாலசங்கன் பிருகு மரபினரோடும் வெகுளியாற் கலகம்விளைத்துக் கேடெய்தினர். [11]அயிலனும், சௌவீரநாட்டரசனாகிய அசபிந்துவும் உலோபமாகிய கடும் பற்றுள்ளத்தால் நான்குவருணத்து மக்களிடத்துநின்றும் அளவின்மிக்க பொருளைக்கவர்ந்து அழிவெய்தினர். மானத்தால் இராவணன் பிறர்மனைவியைக் கொடாமலும், துரியோதனன் இராச்சியத்தின் கூறுகொடாமலும் கேடுற்றனர். [12]தம்போற்பவனும், ஏகயநாட்டரசனாகிய கார்த்தவீரியார்ச்சுனனும் மதத்தால் பிறரை அவமதித்துக் கேடெய்தினர். உவகையால் வாதாபி அகத்தியமுனிவரையும், யாதவக்குழுவினர் வியாத முனிவரையும் வஞ்சித்து அழிவெய்தினர்.

---

[10] தாண்டக்கியன் — போசமரபிற் பிறந்தவனென்று இவ்வாசிரியர் கூறுகின்றார்; அவனைப்பற்றிய வரலாறு தெரியவில்லை. ஆனால் தண்டகன் என்பான் ஒருவன் இட்சுவாகுவின் புதல்வனாய் விந்தியத்திற்கும் சைவலத்திற்கும் இடையே உள்ள நாட்டை ஆண்டானெனவும், அவன் சுக்கிரன் புதல்வியாகிய அரசையை வலிதிற் புணர்ந்த காரணத்தால் அச்சுக்கிரனால் சபிக்கப்பட்டுத் தன்னாட்டில் மண்மாரி பொழியத் தானும் அழிவெய்தினான் எனவும் பிறநூல்கள் கூறும். சுக்கிரநீதியிலும், காமந்தகநீதியிலும் காமக்கேட்டிற்கு இவனே எடுத்துக்காட்டப்பட்டுள்ளான்.

[11] அயிலன்—இளையின் புதல்வன்; இளை—வைவச்சுதமனுவின் புதல்வருள் ஒருவன். அம்பிகையின் தவவனத்தை அறியாமல் அடைந்தமையால் இளையெனும் பெயர் மடவரல் ஆயினன். அவ்விளையின்பால், சந்திரன் புதல்வனாகிய புதனுக்குப்பிறந்த புரூரவா என்பவனே அயிலனாவான். இவன் பொருளாசைமேற்கொண்டு சனற்குமாரர் முதலிய பெரியோர்களின் உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளாமல், அந்தணர்களுடைய இரத்தின முதலிய பொருள்களையெல்லாம் கவர்ந்துகொண்டு அதுகாரணமாக முனிவரால் சபிக்கப்பட்டு அழிவெய்தினான் என்ப.

[12] தம்போற்பவன்—இவன், செல்வம் முதலியவற்றால் களித்து நரநாராயணரால் பங்கமடைந்தவன்.

இங்குக் கூறப்பட்டாரும் பிறருமாகிய பல அரசர்கள் இவ் வறுவகைக் குற்றங்களையும் உடையராய்ப் பொறியடக்கமிலராய் உறவினரையும் நாட்டையும் இழந்து அழிவு எய்தினர்.

பகைவருக்கமாகிய இக்குற்றங்களை ஒழித்துப் பொறியடக்க மேற்கொண்ட சமதக்கினி புதல்வனாகிய [13]பரசுராமனும், நபாகன் புதல்வனாகிய [14]அம்பரீடனும் நெடுங்காலம் இந்நிலவுலகத்தை ஆண்டு இன்புற்றனர்.

முதலதிகரணம் மூன்றாம் பிரகரணத்தில்
"குற்றங்கடிதல்" என்னும் ஆறாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[13] பரசுராமர்—இவர் சமதக்கினியின் புதல்வர்; திருமாலின் அம்சாவதாரம்; சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து 'பரசு' பெற்றவர். வீரத்தாலும் தவத்தாலும் சிறந்தவர். இவர் ஒரு காரணத்தால் சூரியவமிசத்து அரசர்களை அழித்துப் பூமியை ஆண்டு பின் காசியபருக்குத் தானம் செய்தனர்.

[14] அம்பரீடன்—இவன் சூரியவமிசத்து நபாகனின் புதல்வன். திருமால் பத்தியிற் சிறந்தவன். திருமாலின் ஆழிப்படை உதவியால் துருவாசரும் தன்பால் அடைக்கலம் எய்தப்பெற்றவன்.

மூன்ரும் பிரகாணம்—பொறியடக்கம்—
[1]அதனையுடைய அரசன் இயல்பு

ஏழாம் அத்தியாயம்

நலத்திற்கு ஏதுவாதல்பற்றிக் குற்றங்கடிதலால் பொறியடக்கத்தையும், பெரியோரிணக்கத்தால் [2]அறிவையும், ஒற்றனுல் [3]கண்ணையும், முயற்சியால் நலத்தையும், [4]காரியக்கட்டளையால் மக்களுடைய கடமையையும், வித்தையைக் கற்பித்தலால் பயிற்சி

ஏழாம் அத்தியாயக் குறிப்புரை

[1] இப்பிரகரணத்தின் இரண்டாங்கூருகிய பொறியடக்கமுடைய அரசனியல்பைக் கூறத் தொடங்குகின்ருர். அதனையுடைய அரசன்—பொறியடக்கத்தையுடைய வேந்தன் ; இவனை " இராசவிருடி " என்று முதல்நூல் கூறும்.

[2] அறிவை விளக்கிக்கொள்ளவேண்டுமென்பது கருத்து.

[3] தன்னுட்டிலும், வேற்றுநாட்டிலும் நிகழும் செய்திகளை அறிந்துவந்து தெரிவித்தற்பொருட்டு ஒற்றர்களை அரசன் கண்ணுகக்கொண்டு போற்றல் வேண்டுமென்பது கருத்து. ஈண்டு ஒற்றினை அரசன் கண்ணுகக்கொள்ளல் வேண்டும் என்னும் இது,

" ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண் " (581)

என்னும் திருக்குறட்கருத்தைத் தழுவியிருத்தல் காண்க. ஒற்றினையும் நீதி நூலையும் அரசன் தன் கண்களாகக்கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி "ஒற்றுத் தன் கண் செல்லமாட்டாத பரப்பெல்லாம்சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன் உணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாம் சொல்லி உணர்த்தலானும் இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டொழுகுக என்பதாம்" என்று பரிமேலழகர் விளக்கியிருத்தல் காண்க.

[4] இக்காரியத்தை இங்ஙனம் செய்தல்வேண்டுமென்று கட்டளையிடுதலால் மக்களை அவரவர் கடமையில் ஈடுபடச்செய்தல்.

யையும், [5]நல்லாற்றிற் பொருள்படைத்தலால் மக்களுக்கு மகிழ்ச்சி விளைத்தலையும், [6]நற்செயலால் உலகவாழ்க்கையையும் கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் பொறியடக்கமுடையோன், பிறர்மனை நயத்தல், பிறர்பொருள் கவர்தல், பிறர்க்குத் துன்பம் விளைத்தல், தகாத தூக்கம், மனக்கலக்கம், பொய்மை, ஆடம்பரவேடமுடைமை, [7]தீயவழியில் பொருள்படைத்தல், மறச்செயல், கேடுபயக்கும் செயல் என்னும் இவற்றை ஒழித்தல்வேண்டும்.

அறத்திற்கும் பொருளுக்கும் மாறுபடாமல், இன்பத்தை அடைதல்வேண்டும். இன்ப நுகர்ச்சியின்றி இருத்தலாகாது. அறம், பொருள், இன்பங்களுள் ஒன்று மிகுதியாக அடையப்படுமாயின் அது மற்றைய இரண்டையும் தன்னையும் [8]கெடுக்கும்.

---

5 பொருளை நல்லாற்றில் ஈட்டி நன்னெறியிற் செலவிடலால் என்பது கருத்து.

> " அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள் " (754)

என்னும் திருக்குறளும், "செங்கோலனென்று புகழப்படுதலானும், கடவுட் பூசைதானங்களாற் பயன் எய்தலானும் 'அறனீனும்' என்றும், நெடுங் காலம் நின்று துய்க்கப்படுதலான் 'இன்பமும் ஈனும்' என்றும் கூறினார்" என்று பரிமேலழகர் விளக்கியிருத்தல் காண்க.

6 நற்செயல் — நிகழ்கால எதிர்காலங்களுக்கு நலம் விளைக்குஞ்செயல். இனி அறமும் புகழும் பயத்தலால் நல்லவாகிய செயல் எனினும் பொருந்தும். இதனை,

> " துணைநலம் ஆக்கந் தருஉம் வினைநலம்
> வேண்டிய வெல்லாந் தரும் " (651)

என்னும் திருக்குறளில் 'வினைநலம் வேண்டியவெல்லாம் தரும்' என்பதனானும், அதற்குப் பரிமேலழகர் " 'வேண்டியவெல்லாம்' என்றது, இம்மைக் கண் அறம் பொருள் இன்பம் முதலாயவற்றையும் மறுமைக்கண் தான் விரும்பிய பதங்களையும்" என்று கூறிய உரையானுந் தெளிக.

7 பொருளைத் தீயவழியிலீட்டித் தீயவழியிற் செலவிடல்.

8 அறமிகுதியால் பொருளும் இன்பமும், பொருள்மிகுதியால் அறமும் இன்பமும், இன்பமிகுதியால் அறமும் பொருளும் கேடுறும் என்பதும், அவை கேடுறலால் மிகுதியாக எஞ்சிநின்ற அவ்வுறுதிப்பயனும் கேடுறும் என்பதும் கருத்து.

ஆதலின் அம்மூன்றனையும் ஒன்றற்கொன்று தொடர்புடையன வாகக்கொண்டு, ஒத்த அளவில் அடையவேண்டும். அறமும், இன்பமும் பொருளால் அடையத்தக்கனவாதலின் [9]பொருளே சிறந்ததாகும் என்பது கௌடலியர் கொள்கை.

அரசன் [10]உவளகம்முதலியவற்றில் மிகவும் ஈடுபட்டிருக்கும் தன்னை [11]நிழல், நாழிகை முதலிய கால அளவைகளை அறிவுறுத்து [12]நெருக்கிக்கூறிக் கேடுவிளைக்கும் காரியங்களினின்றும் தடுத்து நிறுத்தவல்ல ஆசிரியரையாதல் அமைச்சரையாதல் தனக்கு [13]வரம்பாகக் கொள்ளல்வேண்டும்.

---

[9] " ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு " (760)

என்னும் திருக்குறளும், அதற்கு " பொருளை இறப்பமிகப் படைத்தார்க்கு மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளியபொருள்களாம் எனவும், ஏனை யிரண்டும் அதன் (பொருளின்) விளைவாகலிற் றமே ஒரு காலத்திலே உள வாம் என்பார் 'எண்பொருள்' என்றும் கூறினர் " எனவும் பரிமேலழகர் கூறிய உரையும் ஈண்டு நினைக்கற்பாலன.

" நடுவணதெய்த இருதலையும் எய்தும்" (நாலடி) என்பதும் இக் கருத்துப்பற்றியதே. இதனால் அறம் பொருள் இன்பம் மூன்றும் ஒத்த அளவில் அடைதல்வேண்டும் என்னும் கொள்கை கௌடலியருக்கு உடன் பாடன்று என்பது புலனும்.

[10] உவளகம்—அந்தப்புரம்.

[11] நிழல்—கதிரவன் ஒளியில் காலை, நண்பகல், மாலை நேரங்களில் அடி யளந்து நாழிகை அறிதற்குரியது.

[12] நெருக்கிக்கூறலாவது—அரசன் செய்யவேண்டிய காரியத்தைவிட்டுப் பிறசெயலிற் காலம்போக்குதலை அடிக்கடி அறிவித்து உரிய கடமையில் தலைப்படக் கழறிக்கூறல்.

" இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் " (447)

என்னுந் திருக்குறளில் 'இடிக்குந்துணையார்' என்பதற்குத் " தீயனகண்டால் நெருங்கிச்சொல்லும் துணையாம் தன்மையுடையார் " என்று எழுதிய உரை ஈண்டுக் கருதற்பாலது.

[13] வரம்பு — அரசன் தன் கடமையினின்றும் வழீஇ ஒழுகாமைப் பொருட்டு அமைத்துக்கொள்ளும் எல்லை.

சுலோகம்

வண்டியுருள்கள் இரண்டில் ஒன்றின்றி மற்றொன்று சுழலாது; அதுபோல் அரசியல் துணைவலியின்றி நடைபெறாது. ஆதலால் அரசன் [14] துணைவர்களை அமைத்துக்கொண்டு அன்னார் கருத்துக்களையும் கேட்டு ஒழுகல்வேண்டும்.

முதலதிகரணம் மூன்றாம் பிரகரணத்தில்
"அதனையுடைய அரசன் இயல்பு" என்னும்
ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

14 துணைவர்—ஆசிரியர் அமைச்சர் முதலியோர். "சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன், சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" என்னுந் திருக்குறள் (445) ஈண்டுக் கருதற்பாலது.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

நான்காம் பிரகரணம்—[1]அமைச்சரையமைத்தல்

எட்டாம் அத்தியாயம்

அரசன் தன் உடன்கற்றவர்களுடைய மனத்தூய்மையையும், திறமையையும் கண்கூடாகக் [2]கண்டிருத்தலின், தன் நம்பிக்கைக்குத் தகுதியுடையராகிய அன்னாரை அமைச்சராக அமைத்தல் வேண்டும் என்பது [3]பாரத்துவாசர் கொள்கை.

உடன்கற்றவர் உடன்விளையாட்டிலும் கலந்திருப்பர் அதனால் அன்னார் அரசனை அவமதித்தலும் கூடும் ஆகலின் அவரை அமைச்சராக அமைத்தல் கூடாது என்பதும், அரசனோடு [4]மறைவொழுக்கத்தில் தலைப்பட்டு ஒழுகினோர் ஒத்த ஒழுக்கக்கேடுடையராவர் ஆதலான் அன்னாரை அமைச்சராக அமைத்தல்வேண்டும் என்பதும் அவர் அமைச்சராயின் அரசன் நம் உளப்பாங்கை அறிந்தவன் என்னும் அச்சத்தால் [5]குற்றம் செய்யார் என்பதும் விசாலாக்கர் கொள்கைகளாம்.

அரசனுக்கும் [6]அவர்க்கும் ஒழுக்கக்கேட்டாலாகும் குற்றம் பொதுவாகும்; அதனால் அவர் தன் உளப்பாங்கை அறிந்தவர் என்னும் அச்சம் காரணமாக, அவரால் செய்யப்படும் செவ்வியவல்லாக்

எட்டாம் அத்தியாயக் குறிப்புரை

[1] அமைச்சர்—அரசனுக்குத் துணைவராகிய மந்திரிகள். அரசன் பெரியோரிணக்கமும் பொறியடக்கமும் உடையவனாயினும், துணைவரையின்றி அரசியற்காவலை நடாத்தும் ஆற்றலிலனாவான். ஆதலின் இது பொறியடக்கத்தின் பின்னர்க் கூறப்பட்டது. இது பிரகரணவியைபாம்.

[2] உடன்கற்றமையால் கண்கூடாகக் காண்டல் கூடுமென்பது.

[3] பாரத்துவாசர் — இவரை முதலாகக்கொண்டு ஆசிரியர் எழுவர் கொள்கைகள் இனிக்கூறப்படும்.

[4] மறைவொழுக்கம்—பிறர்மனை நயத்தல் முதலியன.

[5] தம் ஒழுக்கத்தைச் சீர்திருத்திக்கொண்டு தம் கடமைகளை நன்கு செய்வர் என்பது கருத்து.

[6] அவர்—ஒழுக்கக்கேடுடையவர்.

காரியங்களையும் அரசன் உடன்படநேரும். ஆதலின் அன்னாரை அமைச்சராக அமைத்தலாகாது என்பதும்,

[7] சுலோகம்

அரசன் தன் மறைவொழுக்கத்தைப் பிறர் அறியின், அதனால் தன்வயமிழந்து அறிந்த பிறர் வயப்பட்டவனாவன் என்பதும்,

தன் உயிர்க்கு இறுதிபயக்கும் கேடுகளில் உதவிபுரிந்தோர்பால் உண்மையன்பு காணப்படுவதால் அன்னாரை அரசன் அமைச்சராக அமைத்தல்வேண்டும் என்பதும் பராசரர் கொள்கைகளாகும்.

[8]இஃது [9]அன்பின்பாற்படும்; [10]அறிவின் திறனன்று. வரையறை செய்யப்பட்ட பொருட்பயனையுடைய செயல்களில் நியமனம் பெற்றோர், அவ்வரையறுக்கப்பட்ட பொருளையோ, அல்லது மிகுதியான பொருளையோ அச்செயல்களால் விளைவிப்பாராயின் [11]அக்குணம் கண்டு அன்னாரை அமைச்சராக அமைத்தல்வேண்டும் என்பது நாரதர் கொள்கை.

முற்கூறப்பட்டார்பால் [12]மற்றை அமைச்சியற் குணங்கள்

---

7 இச்சுலோகப்பொருள் முற்கூறியதை வலியுறுத்துவதாகும்.

8 இஃது — ஒருவன் தன் உடலையும் பொருட்படுத்தாமல் அரசனைக் காத்தல்.

9 அன்பு காரணமாகப் பணிபுரிதல் என்னும் அறமாம் என்பது கருத்து.

10 அறிவுவன்மை உடையாரை அமைச்சராக்கவேண்டும் என்பது கருத்து. அரசன் அன்புடைமை ஒன்றே காரணமாக அமைச்சரைத் தெளிதல் ஆகாதென்பதும், அறிவாற்றல் உடைமையையே சிறந்த காரணமாகக்கொண்டு தெளிதல்வேண்டும் என்பதும்

> ''காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
> பேதைமை யெல்லாந் தரும்'' (507)
> ''அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
> சிறந்தான்என் றேவற்பாற் றன்று'' (515)

என்னும் திருக்குறள்களானும், அவற்றிற்குப் பரிமேலழகர் எழுதிய உரைக் குறிப்புக்களானும் அறிக.

11 பொருளீட்டும் அறிவுவன்மை.

12 மற்றைக்குணங்கள் — பொருளாக்கல் அல்லாத நம்பிக்கை அன்பு முதலியன.

இன்மையால் அன்னாரை அமைச்சராக்கலாகாது. [13]முன்னை நிகழ்ச்சிகளைக் கண்டிருத்தலால் தந்தையுடன் பிறந்தோர் பாட்டன் வழிவந்தோர் என்னும் இவர்களை அமைச்சராக அமைத்தல் வேண்டும். அன்னார் தமக்குத் தீங்கிழைப்பினும் [14]உறவுத் தொடர்புண்மையால் அரசனைக் கைவிடமாட்டாராதலின், இது விலங்கு முதலியவற்றினும் காணப்படுவதொன்று. ஆனினங்கள் பழக்கமில்லாத நிரைகளை விட்டுப் பழக்கமுள்ள கூட்டங்களிலேயே தங்குகின்றன. இது [15]கௌணபதந்தர் கொள்கை.

முற்கூறிய குலமுதியோர் அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொண்டு தம் விருப்பப்படி ஒழுகுவார் ஆதலின் அன்னாரை அமைச்சராக்கலாகாது என்பதும், நீதியறிந்த [16]புதியவர்கள் தவறுதல் கண்டால் மறலியைப்போல அரசன் கடுந்தண்டம் செய்வான் என்னும் கருத்தால் பிழைசெய்யமாட்டார் ஆதலின், அப்புதியவரை அமைச்சராக அமைத்தல்வேண்டும் என்பதும் [17]உத்தவர் கொள்கைகளாம். நீதிநூல் அறிந்தும், அந்நூற்பொருளைச் செயல்முறையில் [18]காணுதார் அமைச்சியற் காரியங்களில் [19]இடர்ப்படுவாராதலின் அன்னாரை அமைச்சராக்கல் ஆகாது என்பதும், அமைச்சர்க்குச் சிறப்பாகவேண்டுவன குணங்களேயாதலின், நற்குடிப்பிறப்பு, பேரறிவு, [20]தூய்மை, ஊக்க

---

13 முன்னைநிகழ்ச்சிகள் — தந்தையுடன்பிறந்தோர், பாட்டன்வழிவந்தோர், மேற்கொண்டசெயல்கள்.

14 இக்கருத்து,

" பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள " (521)

" விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும் " (522)

என்னும் திருக்குறள்களில் விளக்கப்பட்டிருத்தலறிக.

15 கௌணபதந்தரை பீஷ்மர் என்பர் வாசஸ்பத்தியமுடையார்.

16 புதியவர்கள்—முற்றொடர்பில்லாதவர்.

17 உத்தவர்—கண்ணனுடைய அமைச்சர்.

18 காணுதார்—அநுபவமில்லாதார்.

19 இடர்ப்பாடு—அரசியற்காரியங்களை நடத்துவதில் ஆற்றலின்மை,

20 உபதைகளால் ஆராயப்பட்ட தூய்மை,

முடைமை, தலைவன்பால் அன்பு முதலியன உடையாரையே அமைச்சராக அமைத்தல்வேண்டும் என்பதும், [21]வாருதந்தி புத்திரன் கொள்கைகளாம்.

ஒருவனுடைய [22]காரியங்களின் திறமையாலும், அறிவு முதலியவற்றின் திறமையாலும் அவனுக்கு அவ்வப் பதவிக்குரிய தகுதி துணியப்படும். ஆதலின் இங்குக்கூறிய [23]எல்லாம் பொருத்த முடையன என்பது கௌடலியர் கொள்கையாகும்.

சுலோகம்

அமைச்சர்க்குரிய குணச்செல்வத்தையும் காலம், இடம், செயல் என்னும் இவற்றையும் பகுத்துணர்ந்து இவ்வெல்லோரை யும் அமைச்சராக அமைக்கலாம் அன்றி, அமைச்சர்க்குத் தலைவ ராக்கலாகாது.

முதலதிகரணம் நான்காம் பிரகரணத்தில்
“ அமைச்சரை அமைத்தல் ” என்னும் எட்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[21] வாருதந்திபுத்திரனை இந்திரன் என்று கூறுப.

[22] காரியங்கள்—உடன்கற்றல், உடன்விளையாடல் முதலியன.

[23] எல்லாம் பொருத்தமுடையன என்றமையால், குணங்களும், குற்றங் களும் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாம். அங்ஙனமாயின் ஆசிரியர் கருத்துப் பின்வருமாறு — உடன்கற்றவர் முதலியோர்பால் நம்பிக்கை முதலிய குணங்கள் உண்மையால் அவரை விலக்கலும் ஆகாது. அவமதிப்பு முதலிய குற்றங்கள் உண்மையால் அமைச்சர்தலைவராகச் செய்தலுமாகாது. எனவே, பாரிசேட அளவையால் அன்னார் குணங்களுக்கேற்பக் காலம் இடங்கட்கொத்தவாறு அவரைச் சிறிய தொழில் அமைச்சர்பதவியில் நியமனம் செய்யலாமென்பது போதரும்.

முதல் அதிகாணம்—பயிற்சிபகர்தல்

ஐந்தாம் பிரகரணம்—[1]மந்திரி புரோகிதரை அமைத்தல்

ஒன்பதாம் அத்தியாயம்

முதலமைச்சனுக்குரிய குணங்கள் வருமாறு—தன் அரசனது நாட்டிற் பிறத்தல், நற்குடிப்பிறப்பு, [2]நற்சுற்றமுடைமை, [3]கலைப் பயிற்சி, பொருணூல் உணர்ச்சி, மதிநுட்பம், மறவியின்மை, சோர்வின்மை, சொல்வன்மை, காலம் இடங்களுக்கு ஏற்ற அறிவுடைமை, [4]எதிர்ச்செயல் மாற்றம், [5]ஆண்மை, [6]பெருமை, துன்பம் பொறுத்தல், [7]தூய்மை, [8]அன்புடைமை, அரசனிடத்து உறுதி

ஒன்பதாம் அத்தியாயக் குறிப்புரை

[1] மந்திரி—அமைச்சர் தலைவன் ; ஏனைய அமைச்சர் எல்லாம் இவனுக்கு உட்பட்டவராவார். புரோகிதன் அரசனுக்குரிய காரியங்கள் எல்லாவற்றிற்கும் சான்றாக (பிராமாணிகனாக) முன்னிற்பவன். அமைச்சரை அமைத்தல் கூறியபின் அன்னார் தலைவரையும் புரோகிதரையும் அமைத்தல் கூறப்படுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதனால் பிரகரணவியைபு புலனாதல் அறிக.

[2] ஸுவக்³ரஹ:—என்று முதனூல் கூறும் ; இதற்கு நற்சுற்றமுடைமை என்பதும், எளிதில் திருந்தத்தக்கவன் என்பதும் பொருளாம். அமைச்சன் நல்ல சுற்றமுடையவனாக இருக்கவேண்டும் என்பதை,

> "அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
> பற்றிலர் நாணார் பழி" (500)

என்னும் திருக்குறளானும், "உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின் அவர் தெளியப்படார் என்பதாம்" என்னும் பரிமேலழகர் உரையானும் உணர்க.

[3] கலைப்பயிற்சி—யானை, குதிரை, தேர் இவற்றை நடாத்தல், போர் புரிதல், படைக்கலப்பயிற்சி, இசைப்பயிற்சி முதலியன.

[4] எதிர்ச்செயலும் எதிர்மாற்றமும் எனக்கொள்ளல் வேண்டும். மாற்றம்—எதிருரை. இதனை, பிரதிபத்தி என்று முதனூல் கூறும். இதற்கு எதிர்ச்செயல், எதிர் உரை என்பன பொருளாதலோடு, இன்னது செய்யத் தக்கது என்னும் துணிவுடைமையும் பொருளாம்.

[5] ஆண்மை—உற்சாகசக்தி.

[6] பெருமை—பிரபுசக்தி.

[7] தூய்மை—அறவுபதை முதலிய சோதனைகளால் ஆயது.

[8] இஃது எல்லோரிடத்தும் செல்வது.

யான அன்பு, ஒழுக்கம், உடல்வலி, பிணியின்மை, அஞ்சாமை, செருக்கின்மை, [9]அசைவின்மை, [10]காண்டற்கினிமை, [11]பகை செய்யாமை என்பனவாம். [12]இவற்றில் காற்கூறு குறைந்தவன் இடையாயவன் எனவும், அரைக்கூறு குறைந்தவன் கடையாயவன் எனவும் கூறப்படுவார். மேற்கண்ட குணங்களுள், தன் நாட்டிற் பிறத்தல் நற்குடிப்பிறத்தல் நற்சுற்றமுடைமை என்னும் இவற்றை நம்பிக்கையுடையார் முகமாகவும், கலைப்பயிற்சி பொருணூல் உணர்ச்சி என்னும் இவற்றை ஒத்த கல்விப்பயிற்சி உடையார் முகமாகவும், மதிநுட்பம் மறவியின்மை சோர்வின்மை என்னும் இவற்றைக் காரியம்செய்தல் முகமாகவும், சொல்வன்மை காலம் இடங்களுக்கேற்ற அறிவுடைமை எதிர்ச்செயல் மாற்றம் என்னும் இவற்றைக் காரியங்களைப்பற்றிய பேச்சுக்களினின்றும், ஆண்மை பெருமை துன்பம்பொறுத்தல் என்னும் இவைகளைக் கேட்டின் விளைவினின்றும், தூய்மை அன்புடைமை அரசனிடத்து உறுதி யான அன்பு என்னும் இவற்றை நடந்துகொள்ளும் முறையி னின்றும், ஒழுக்கம் உடல்வலி பிணியின்மை அஞ்சாமை செருக் கின்மை அசைவின்மை என்னும் இவற்றை உடன்பழகுவோர் முகமாகவும், காண்டற்கினிமை பகைசெய்யாமை என்னும் இவற்றைக் காட்சியளவையானும் ஆராய்ந்து அறிதல்வேண்டும்.

[13]அரசியற்காரியம், காட்சி அநுமானம் ஆகமம் மூன்று அளவைகளானும் நிகழ்வதாம். நேரில் காண்டல் காட்சியாகும். பெரியோர் உரை ஆகமமாகும். செய்யப்பட்ட காரியக்கூறு

---

[9] ஓர் உறுதிப்பாட்டினின்றும் சிதைவெய்தாமை.

[10] அழகிய தோற்றம்.

[11] மண், பெண் முதலியகாரணங்களால் பிறரோடு பகைகொள்ளாமை.

[12] ஈண்டு அமைச்சர் தலைவனுக்குக் கூறப்பட்ட குணம் செயல்களில் பல, திருக்குறளில் 'தூது' என்னும் அதிகாரத்தில் காணப்படுகின்றன. அத்தூதுவருள் தான் வகுத்துக்கூறுவானை அமைச்சனோடு ஒப்பான் எனவும், கூறியது கூறுவானை அவனிற் காற்கூறு குணங்குறைந்தோன் எனவும் பரிமேலழகர் கூறுவர். (தூது—அவதாரிகை.)

[13] அரசன் செய்யவேண்டிய காரியங்கள் காண்டல் கருதல் உரை என் னும் மூன்றையும்பற்றி நிகழ்வன ஆதலால் அம்மூன்று அளவைகளின் இயல்பும் இங்கே கூறப்படுகின்றன.

கொண்டு, செய்யப்படாத காரியக்கூற்றின் அளவை உய்த்துணர்ந்து அறிதல் அநுமானமாகும். அரசியல் காரியங்கள் ஒரே சமயத்தில் விரைந்து செய்யத்தக்கனவும், பலவிடங்களைப்பற்றி நிற்பனவும், பல்வேறு வகைப்பட்டனவும் ஆக இருத்தலால், காலம் இடங்களுக்கு மாறுபடாமல் இருக்கவேண்டும் என்பதுபற்றி அரசன் நேரிற்செய்ய இயலாத காரியங்களை அமைச்சர்களைக்கொண்டு செய்வித்தல்வேண்டும். இத்துணையும் மந்திரிகளை அமைத்தல் கூறப்பட்டது.

நூல்களில் கூறப்பட்ட குடிப்பிறப்பு, கல்வி முதலியவற்றால் நிறைந்தகுலத்திற் பிறத்தலும், ஒழுக்கமும், ஆறங்கங்களுடன்கூடிய வேதங்கள், கணிதநூல், [14]நிமித்தநூல், அரசநீதி என்னும் இவற்றில் சிறந்த பயிற்சியும், தெய்வத்தாலும், மனிதராலும் ஏற்படும் [15]கேடுகளை அதர்வ வேதத்தில் கூறப்பட்ட [16]மந்திரங்களாலும் உபாயங்களாலும் போக்கவல்ல திறமையும் உடையானைப் புரோகிதனை அமைத்தல்வேண்டும். ஆசிரியனிடத்து மாணவகனும், தந்தையின்பால் புதல்வனும், தலைவன்பால் பணியாளனும் நடந்துகொள்ளுதல்போலப் புரோகிதன்பால் அரசன் ஒழுகல்வேண்டும்.

சுலோகம்

புரோகிதனால் வளர்க்கப்பட்டதும், மந்திரியின் சூழ்ச்சியினால் காக்கப்பட்டதும், நீதிநூல் நெறியொழுகுவதும், ஆகிய அரசகுலம்

---

14 நிமித்தநூல்—சகுனங்களைப்பற்றிய நூல்.

15 தெய்வத்தால் நேரும் கேடு—மிகுபெயல், பெயலின்மை, இடிவீழ்ச்சி முதலியன. மனிதரால் உண்டாகும் கேடு—தீயவர்களால் உண்டாகும் துன்பங்கள்.

16 தெய்வத்தால் நேர்வனவற்றை உரிய மந்திரங்களாலும், மனிதர்களால் நேர்வனவற்றை சாமம்முதலிய உபாயங்களானும் போக்கவேண்டும் என நிரனிறையாற் பொருள் கொள்ளவேண்டும். இக்கருத்துக்களை,

> "உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
> பெற்றியார்ப் பேணிக் கொளல்" (442)

என்னும் திருக்குறளானும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய விளக்க உரைகளானும் தெளியலாம்.

[17]படைத்துணையின்றியே எய்தற்கரிய [18]வெற்றிகளை நன்றாக எய்துவதாகும்.

முதலதிகரணம் ஐந்தாம் பிரகரணத்தில்
"மந்திரி புரோகிதரை அமைத்தல்" என்னும்
ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

17 போர்ச்செயலில்லாமலே வெற்றியெய்தும் என்பது. ஈண்டு,

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை" (444)

என்னும் திருக்குறளும் "பொருள்படை அரண்களாகிய வலியினும் இத்துணைவலி சிறந்ததென்றது இவர் அவற்றான் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்" என்னும் பரிமேலழகர் உரையும் நினைக்கத்தக்கன.

18 வெற்றியாலாம் பேறுகளை என்பது கருத்து.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

[1] ஆரும் பிரகாரணம்—[2] உபதைகளால் அமைச்சர்களின் [3] மனவியல்பு ஆராய்தல்

பத்தாம் அத்தியாயம்

அரசன் மந்திரி புரோகிதர்களோடு கலந்துகொண்டு அமைச்சர்களைச் சிறிய பதவிகளில் இருத்தி உபதைகளால் ஆராய்தல் வேண்டும்.

தகுதியற்றவர்களுக்கு ஓதுவிக்கவும் வேட்பிக்கவும் அரசனால் ஏவப்பட்டு உடன்படாமல் வெறுத்த புரோகிதனை அப்பதவியினின்றும் [4]விலக்கிவிடல் வேண்டும். அப்புரோகிதன் [5]சத்திரி என்னும் ஒருவகை ஒற்றர்களால் "இவ்வரசன் அறவோன் அல்லன் ஆதலின் இவனைப்போக்கி இவன் குலத்துத் தோன்றியவன், [6]இவனால் சிறைப்படுத்தப்பட்டவன், அரசுரிமைக்கு உரிய நற்குடியிற்

பத்தாம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஒருவன் குடிப்பிறப்பு முதலிய குணம் செயல்களை உடையனாயினும் உபதைகளால் தெளியப்படும் தூய்மையுடையன் அல்லனாயின் அமைச்சனும் தன்மைக்கு உரியனாகான்; ஆதலின் உபதைகளால் ஆராய்தல் கூறப்படுகின்றது. இதனால் பிரகரண இயைபு அறிக.

[2] உபதை—மறைவிற்செய்யும் சோதனை. இப்பிரகரணத்தில் கூறப்படும் உபதைகளின் இயல்பெல்லாம் திருக்குறளில் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில்,

> " அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
> திறந் தெரிந்து தேறப்படும் " (501)

என்னும் குறளினும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய விசேட உரையினும் செவ்விதின் விளக்கிக் கூறப்பட்டன.

[3] மனவியல்பு—அரசன்பால் வைத்த எண்ணத்தின் நலம் தீங்குகள்.

[4] விலக்குதல், உபதைகளால் ஆராயப்படுவார் தம் உட்கருத்தைச் சொல்லுதற்கு நம்பிக்கைகொள்ளுதல் பொருட்டாம்.

[5] சத்திரி என்பார் ஒற்றருள் ஒருவகையினர் (இந்நூல் 12-ஆம் அத்தியாயம்) குறிசொல்லுதல் முதலியவற்றைத் தலைக்கீடாகக்கொண்டு பல விடத்தும் மறைந்து திரிவோர்.

[6] சிறையில்வைத்துக் காக்கப்படும் அவ்வரசன்புதல்வன் முதலியோருள் ஒருவன்.

பிறந்தவன், எல்லோரானும் ஒருங்கு போற்றப்படுவோன், குறுநில மன்னன், காட்டுத்தலைவன், [7]நம்மெல்லோரானும் துணியப்பட்டவன் என்னும் இவருள் அறவோனாகிய பிறன் ஒருவனை இப்பதவியில் அரசனாக்குவோம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்தென்னை?'' என்று அமைச்சரைத் தனித்தனியே [8]சூளுறவோடு சொல்லுவித்து வேறுபடுத்தல்வேண்டும். இதற்கு உடன்படானாயின் தூயோனாவான். இஃது [9]அறவுபதையாம்.

தகுதியற்றவனை வணங்கும்படி அரசனால் ஏவப்பட்டு உடன்படாமையால் [10]விலக்கப்பட்ட படைத்தலைவன் ஒற்றர்களைக் கொண்டு "இவ்வரசனைக் [11]கொன்றால் விரும்பிய பொருளைப் பெறலாம் இதுதான் எல்லோர்க்கும் இயைந்தது; நின் கருத்தென்னை?'' என்று அமைச்சரைத் தனித்தனியே சூளுறவோடு சொல்லுவித்து வேறுபடுத்தல்வேண்டும். இதற்கு உடன்படானாயின் தூயோன் ஆவான். [12]இது பொருளுபதையாம்.

உரிமை மகளிரின் [13]நம்பிக்கைக்கும், வழிபாட்டிற்கும் இடமான ஒரு தவமுதுமகள் "கோப்பெருந்தேவி நின்னைக் கூடுதற்கு விரும்பி அதற்குரிய உபாயத்தையும் ஆராய்ந்துகொண்டு இருக்கின்றாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப்

---

[7] ஔபபாதிகன் என்று முதல்நூல் கூறும். இதற்கு மலைச்சாரலில் வாழ்வோன் என்றும் துணியப்பட்டவன் என்றும் பொருள்கொள்ளலாம்.

[8] சூளுறவு, மறை வெளிப்படாமைப் பொருட்டு.

[9] அறத்தை நிலைநிறுத்துதற்பொருட்டுச் செய்யப்படும் கபடசோதனையாதலின் இஃது அறவுபதை என்று கூறப்பட்டது.

[10] ஈண்டும் விலக்கப்படுவதற்குக் காரணம் முன்னர்க் கூறியாங்குக் கொள்ளல்வேண்டும்.

[11] ஈண்டும் இவ்வரசன் கொடையாளியல்லன் ஆதலின் கொடையுடையான் பிறனொருவனை இப்பதவியில் அரசனாக்குவோம் என்னும் கருத்தை இயைத்துக்கொள்ளல் வேண்டும்.

[12] உலோப குணமுடையாரைப் பொருட்பேறு காட்டி ஆராய்தற்கு உரியதாகலின் இது பொருளுபதை என்று கூறப்பட்டது.

[13] நம்பிக்கைக்கு இடனாதல் அமைச்சர் நம்புதற்கு ஏதுவாம் என்பது கருத்து.

பெரும்பொருளும் கைகூடும்'' என்று அமைச்சரைத் தனித்தனியே சூளுறவோடு சொல்லி வேறுபடுத்தல்வேண்டும். இதற்கு உடன் படானாயின் தூயோனாவான். இஃது இன்பவுபதையாம்.

[14]உண்டாட்டு முதலிய நிமித்தத்தை மேலிட்டு ஓரமைச்சன் ஏனைய அமைச்சரை எல்லாம் அழைத்து ஓரிடத்துக் கூட்டல் வேண்டும். அது [15]பொருத அரசன் அவரைத்தடுத்து இடையூறு செய்தல்வேண்டும். இங்ஙனம் இடையூறு செய்யப்பட்டு பொருளும் மானமும் இழந்த அமைச்சரை அரசனால் முன்னமே [16]அவமதிக்கப்பட்ட மாணவகவேடந் தாங்கிய [17]காபடிகன் என்னும் ஒருவகை ஒற்றன் அடைந்து "இவ்வரசன் தீயநெறியில் ஒழுகுகின்றான். இவனைக்கொன்று ஒழித்து மற்றொருவனை அரசனாக்க வேண்டும். இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்தென்னை?'' என்று தனித்தனியே சூளுறவோடு சொல்லி வேறு படுத்தல்வேண்டும். இதற்கு உடன்படானாயின் தூயவனாவான். இஃது [18]அச்ச உபதையாம்.

உபதைகளால் ஆராயப்பட்டாருள், அறவுபதையால் தூயராயினாரை, நீதிமன்றத்திலும் சிறுபகை களைதலினும், பொருள் உபதையால் தூயராயினாரை, இறைப்பொருளீட்டல் பொருட் பண்டாரம் புரத்தல் என்னும் இவற்றிலும், இன்ப உபதையால் தூயராயினாரை, [19]உரிமைமகளிர் போகப்பெண்கள் இருக்கும் உவளக முதலியவற்றின் பாதுகாப்பினும், அச்சவுபதையால் தூயராயினாரை, அரசன் பக்கலிருந்து செய்யத்தக்க [20]காரியங்களிலும் வினையாளராக நியமித்தல்வேண்டும். எல்லா உபதைகளாலும்

---

14 இங்குக் கூறப்படும் நிகழ்ச்சிகள் எல்லாம் கபடசோதனையின் நிமித்தம் அரசனால் நிகழ்வனவாம்.

15 பொருதவன்போல் வெளிப்படுத்திக்கொண்ட அரசன் என்க.

16 இவ்வவமதிப்பு உண்மையன்று; படைத்துக்கொண்டது.

17 காபடிகன்—ஆசிரியனாக அல்லது மாணவகனாக நடித்து மறை பொருளை அறியும் ஒருவகை ஒற்றன்.

18 அச்சத்தைப்பற்றி நிகழ்தலின் அச்ச உபதையாயிற்று.

19 உரிமை மகளிர்—அரசனுடைய தேவிமார்.

20 உடற்பாதுகாப்பு முதலிய செயல்கள்,

தூயராயினுரை தலைமை அமைச்சர் பதவியில் இருத்தல்வேண்டும். எல்லா உபதைகளாலும் தூய்மையில்லாதாரை, [21]ஆகரம், [22]நன்மரக்காடு, யானைக்காடு என்னும் இவற்றின் [23]தொழிலாளராக நியமனம் செய்தல்வேண்டும்.

சுலோகங்கள்

(1) அறம் பொருள் இன்பம் உயிரச்சம் ஆகிய நான்கினுலும் ஆராயப்பட்ட தூயவர்களை அவரவர் தூய்மைக்கேற்ப அன்னுர் தகுதிக்குரிய செயல்களில் நியமனம் செய்தல்வேண்டும் என்று பண்டை ஆசிரியர்கள் வரையறைப்படுத்தினர்.

(2) [24]அரசன் அமைச்சரின் தூய்மையை ஆராய்தற் பொருட்டு [25]தன்னையாதல், தன் [26]தேவியையாதல் கருவியாகக் கொள்ளலாகாது என்பது கௌடலியர் கொள்கையாம்.

(3) [27]நன்னீர்க்கு நஞ்சினுற் கேடுவிளைப்பதுபோல் குற்றமற்ற அமைச்சனுக்கு உபதையால் கேடுவிளைக்கலாகாது; என்னை? ஒரோவழி உபதையால் கலக்கமுற்றவனைத் தேற்றுதற்குரிய மருந்து காண்டல் அரிதாகவும் கூடும்.

---

21 ஆகரம்—பொன், வெள்ளி முதலியன உண்டாகும் இடம்.

22 நன்மரம்—பலகை, தூண் முதலியவற்றிற்குத் தகுதியான மரங்கள்.

23 இதனுல் இவரை உடல்வருந்திச் செய்யத்தக்க காரியங்களில் இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

24 இச்சுலோகக் கருத்து—தூய்மையாராய்ச்சிக்குரிய கருவிகளில் ஒருசில கௌடலியருக்கு உடன்பாடில்லை என்பது.

25 தன்னைக் கருவியாகக்கொண்டது அச்ச உபதையில் "இவ்வரசனைக் கொன்றுவிடவேண்டும்" என்பது.

26 தேவியைக் கருவியாகக்கொண்டது இன்ப உபதையில் "கோப்பெருந் தேவி விரும்புகின்றுள்" என்பது.

27 இதுமுதல் மூன்று சுலோகங்களாலும் இயல்பாகவே குற்றமற்ற அமைச்சனை உபதைகளால் ஆராயுங்கால் தன்னையும் தன் தேவியையும் கருவியாகக்கொள்ளலாகாது என்பதும், கொண்டால் வரும் தீங்கும் தெரிவிக்கப்பட்டன.

(4) [28]நால்வகை உபதைகளாலும் கலக்கமுற்ற திறலுடையான் அறிவு உறுதியில் நிலைபெற்றுக் கருதியசெயலின் முடிவை அடையாமல் ஒழியாது.

(5) ஆதலால் அரசன் நால்வகை உபதைகளையும் மேற்கொள்ளுங்கால் தன்னையும் தன் தேவியையும் அல்லாத புறம்பான கருவிகளைக்கொண்டு அமைச்சரின் நலந்தீங்குகளை ஒற்றர்களால் ஆராய்தல்வேண்டும்.

முதலதிகரணம் ஆறும் பிரகரணத்தில்
"உபதைகளால் அமைச்சர்களின் மனவியல்பு ஆராய்தல்"
என்னும் பத்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[28] இயல்பாகவே தூய்மையுடையான் உபதைகளால் கலக்கமுற்று ஒரோவழித் தகாத செயல்களில் தலைப்பட நினைப்பானுயின் ஆற்றலுண்மையால் அச்செயலை முடித்தேவிடுவான் என்பது கருத்து.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

ஏழாம் பிரகரணம்—[1] ஒற்றரை அமைத்தல்

பதினோராம் அத்தியாயம்

உபதைகளால் அமைச்சரின் தூய்மையை ஆராய்ந்த அரசன் காபடிகன், உதாத்திதன், கிருகபதிகன், வைதேககன், தாபதன் என்னும் குறியுடையாரையும், சத்திரி, வன்கண்ணன், நஞ்சிடுவோன், தவமுதுமகள் என்னும் இவர் [2]முதலியோரையும் ஒற்றராக அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

பிறர் உள்ளத்தை அறிதல், புத்துணர்ச்சி, ஆசிரிய மாணவகத் தொழில் என்னும் இவற்றை உடையான் [3]காபடிகன் ஆவான். அவனைத் தலைமை அமைச்சன், பொருளானும் [4]பெருமைப்படுத்தலானும் ஊக்கமுறுத்தி "அரசனுடையதும் என்னுடையதும் ஆகிய கட்டளைகளை மேற்கொண்டு அமைச்சன் முதலியோருள் எவனிடத்து [5]எக்குற்றத்தை எப்பொழுது காண்கின்றாயோ அப்பொழுதே எம்மிடம் அறிவித்தல்வேண்டும்" என்று கூறல் வேண்டும்.

அறிவும் தூய்மையும் உடையனைத் [6]துறவறத்தினின்றும்

பதினோராம் அத்தியாயக் குறிப்புரை

[1] அமைச்சருடைய நலம் தீங்குகளை ஆராய்தல் ஒற்றரான் அன்றிக் கூடாதாகலான் இஃது அதன்பின் கூறப்பட்டது. இதனால் பிரகரண இயைபு புலனாதல் அறிக.

[2] முதலியோர் என்றதனால் கூனன், குறளன், ஊமன், செவிடன், அறிவிலி, குருடன், கூத்தன், இசைபாடுவோன் என்னும் இவரையும் கொள்ளல்வேண்டும்.

[3] கபடச்செயலையுடைமையால் 'காபடிகன்' என்னும் பெயரை உடையனயினன்.

[4] பெருமைப்படுத்தல்—சிறப்புப்பட்டம் முதலியன வழங்கல்.

[5] குற்றம்—களவு பிறர்மனை நயத்தல் முதலியன.

[6] பௌத்த சைவ ஆசாரங்களினின்றும் வழிஇழேரையும் ஈண்டுத் தழீஇக்கொள்ளல்வேண்டும்.

நழுவினவன் உதாத்திதனுவான். அவன் மிகுதியான [7]பொருளையும் மாணவரையும் உடையனுய், உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் செயல்களின்பொருட்டு ஏற்பட்டுள்ள நிலத்தில் அச்செயல்களைச் [8]செய்வித்தல்வேண்டும். அச்செயல்களால் விளையும் பயனைக் கொண்டு [9]எல்லாத் துறவிகட்கும் உண்டி, உடை, உறையுள் என்னும் இவற்றை அளித்தல்வேண்டும். அவற்றில் விருப்பமுடையோரை இவ்வுருவத்தோடு அரசனுக்குரிய [10]பயன் விளைக்கும் செயல்களில் தலைப்பட்டு உணவு, கூலி பெறுங்காலத்தில் இங்கு வரவேண்டும் என்று வேறுபடுத்துத் தன்வயமாக்கல் வேண்டும்.

இங்ஙனமே எல்லாத்துறவிகளும் [11]தத்தம் குழூஉக்களை வேறு படுத்தல்வேண்டும்.

[12]உழவுத்தொழிலால் மெலிந்தவனும், அறிவும் தூய்மையும் உடையானும் ஆகிய உழவன் கிருகபதிகனுவான். அவன் உழவுத் தொழிற்குரிய நிலத்தில் மிகுதியான பொருளையும், துணைவரையும் உடையவனுய் அச்செயல்களைச் செய்வித்தல்வேண்டும். அச்செயல்களால் விளையும் பயனைக்கொண்டு இல்லற நிலையிலுள்ள எல்லோர்க்கும் உணவு முதலியன அளித்தல்வேண்டும். அவற்றில் விருப்பமுடையோரை " இவ்வுருவத்தோடு அரசனுக்குப் பயன் விளைக்கும் செயலில் தலைப்பட்டு உணவு கூலி பெறுங்காலத்தில் இங்கு வரவேண்டும். என்று வேறுபடுத்துத் தன்வயமாக்க

---

[7] உழவு முதலிய தொழில்களுக்குப் பொருளும் வினையாளரும் வேண்டும் என்பதுபற்றி இவ்வாறு கூறப்பட்டது.

[8] தன்னுடைய மாணவரைக்கொண்டு செய்வித்தல் என்பது கருத்து.

[9] உணவு முதலியவற்றை விரும்பிவரும் புதிய புதிய பல மாணுக்கர்களைத் திரட்டுதற்குரிய புகழ்ப்பரப்பைக் குறித்து " எல்லாத்துறவிகட்கும் " என்று கூறப்பட்டது. எல்லாத்துறவிகட்கும் என்றது இங்கே தன்பால் பணிசெய்வாரை அன்றி ஏனைய துறவிகளையும் குறிக்கும்.

[10] செயல்—பிறர்நாட்டில் நிகழும் செய்திகளை அறிந்து கூறுதல்.

[11] தத்தம் குழூஉக்களை என்றது பௌத்த சைவ வைணவர் முதலியோர் அவரவர் சமயத்தவரை எனக்கொள்க.

[12] இப்பகுதிக்கு உதாத்திதனியல்பிற்கண்ட குறிப்புக்களை ஒட்டிக் கொள்க.

வேண்டும். இங்ஙனமே அக் கிருகபதிகளும் தம்மவரை வேறு படுத்தல்வேண்டும்.

[13]வாணிகத் தொழிலால் மெலிந்தவனும், அறிவும் தூய்மையும் உடையானும் ஆகிய வாணிகன் வைதேககன் ஆவான். அவன் வாணிகத் தொழிற்குரிய நிலத்தில் மிகுதியான பொருளையும், துணைவரையும் உடையனாய் அச்செயல்களைச் செய்வித்தல் வேண்டும். அவற்றால் விளையும் பயனைக்கொண்டு வாணிகத் தொழிலாளர் எல்லோர்க்கும் உணவு முதலியன அளித்தல் வேண்டும். அவற்றில் விருப்பமுடையோரை, இவ்வுருவத்தோடு அரசனுக்குப் பயன்விளைக்கும் செயலில் தலைப்பட்டு உணவு கூலி பெறுங்காலத்தில் இங்கு வரவேண்டும் என்று வேறுபடுத்துத் தன் வயமாக்கல்வேண்டும். இங்ஙனமே அவ் வைதேககர்களும் தம்மவரை வேறுபடுத்தல் வேண்டும்.

[14]மழித்தலும் நீட்டலும் உடையனாய்ப் பிழைப்பில் விருப்பம் உடையோன் தாபதனாவான். அவன் நகரத்தின் அணிமையில் மழித்தலும் நீட்டலுமுடைய பல மாணாக்கரை உடையனாய்க் [15]கீரை முதலியவற்றையாதல், ஒரு கைப்பிடி புல்லையாதல் திங்களுக்கு ஒருமுறை அல்லது இரண்டு திங்கள்களுக்கு ஒருமுறை [16]வெளிப்படையாக உண்ணவேண்டும். மறைவில் விருப்பமான உணவை உண்ணலாம். வாணிகத்தொழிலாளரும் மாணவரும் [17]விரும்பிய பொருட்பேறுமிகுதி குறித்து இவனை வழிபடல்

---

13 இப்பகுதிக்கும் மேற்கண்டவாறு குறிப்புக்கொள்க.

14 மழித்தல்—தலைமயிரை அறவே களைதல்; இது பௌத்த துறவி முதலியோர்க்கு உரியது. நீட்டல்—சடையாக்கல்; இது சைவத் துறவி முதலியோர்க்கு உரியது. இங்கே கூறிய தாபதரை "துறந்தார் படிவத்தர்" என்பர் திருவள்ளுவர். (586)

15 முதலியவை என்றதனால் கிழங்கு, குருத்து, தளிர், இலை, பூ, காய், கனி, ஆம்பி முதலியனவும் கொள்ளல்வேண்டும்.

16 வெளிப்படையாக—எல்லோரும் அறியும்படி. இவ்வெளிப்படையுணவு, உணவின்மையை வெளிப்படுத்தற் பொருட்டாம்.

17 இத்தாபதர் அருளால் யாங்கள் நிறைந்த பொருட்பேறுடையேம் ஆயினேம் என்று கபடமாகக்கூறிப் பொருள் முதலியவற்றைக் கையுறையாகக் கொடுத்து வணங்கவேண்டும் என்பது கருத்து.

வேண்டும். இவனுடைய மாணுக்கர்கள் "இவர் ஒரு சித்தர்; வருங்காலம் உணர்ந்தவர்" என்று வெளிப்படுத்தல்வேண்டும். எதிர்காலப்பயனை அறியவேண்டும் என்னும் விருப்பத்தால் வினுவ வந்தார்க்கு அவர்தம் உடலுறுப்புக்களின் செயல் வேறுபாடுகளைக் குறிக்கும் [18]சோதிட நூல் முறையாலும், [19]மாணுக்கர்களின் குறிப்புக்களாலும், அவர் குலத்தில் முன்னிகழ்ந்த காரியங்கள், [20]ஊதியச் சுருக்கம் [21]தீப்பற்றி எரிதல், கள்வர்பயம், வெறுக்கத்தக்க கொலை, [22]மகிழ்ச்சிக்கொடை, அயல்நாட்டு நிகழ்ச்சி அறிதல் "இஃது [23]இன்றோ நாளையோ வரும், இதனை இன்றோ நாளையோ அரசன் செய்வான்", என்பவை முதலியவற்றைக் கூறல்வேண்டும்.

இத் தாபதனது சொல்லை மறைவான, "சத்திரிகள்" என்னும் ஒற்றர் [24]உண்மைப்படுத்தல்வேண்டும். அஞ்சாமை, அறிவு, சொல்வன்மை, ஆண்மை என்னும் இவை [25]உடையார்க்கு அரசனால் கிடைக்கும் பொருட்பேற்றையும், மந்திரியின் நல்வரவையும் பற்றித் தெரிவித்தல்வேண்டும். இவர்களுடைய வாழ்க்கைக்கும், தொழில்களுக்கும் தலைமை அமைச்சன் [26]சிறப்பாக முயலவேண்

---

[18] சோதிட நூல்—ஈண்டு ஆருடம் கேட்கும் காலத்தில் கேட்போருடைய உடல் உறுப்புக்களின் செயல்களைக்கொண்டு நன்மை தீமைகளை அறிதற்கு உரியது.

[19] மாணுக்கர் குறிப்பு—வருவோர் இயல்பை வேறுவகையாக உணர்ந்து கண் புருவம் முதலியவற்றால் ஆசிரியன் உணரக் குறிப்பில் தெரிவித்தல்.

[20] கேட்போன் பொருள்நிலையால் நடுத்தரமுடையோனுயின் அவனுக்குக் கூறுவது.

[21] தீப்பற்றி எரிதல் முதலிய மூன்று நிகழ்ச்சிகளும் அரசனுக்குத் தீங்கு செய்வோர்க்குக் கூறுவன.

[22] அரசனுக்கு உதவிபுரிவோர்க்குக் கூறுவது.

[23] "இன்றோ நாளையோ" என்பன, துணிவின்மையால் ஏமாற்றுதற் பொருட்டுக் கூறப்படுவன.

[24] பொருட்பேறு, தீப்பற்றியெரிதல் முதலியவற்றை மறைவாகச் செய்தல்வேண்டும் என்பது கருத்து.

[25] இவர்கள்—தாபதன்பால் குறிகேட்க வந்தவர்கள்.

[26] தாபதன்சொன்ன குறிக்கேற்ப முதலமைச்சன் நடந்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

டும். தக்க காரணத்தால் அரசன்பால் சினமுடையாரைப் பொருட்கொடையாலும் சிறப்புக்களாலும் [27]தணித்தல்வேண்டும். காரணமின்றிச் சினப்போரையும், அரசனுக்குத் தீங்குபுரிவோரையும் வஞ்சித்து [28]ஒறுத்தல்வேண்டும்.

சுலோகம்

[29]பொருளாலும் சிறப்புக்களாலும் அரசனல் பெருமைப் படுத்தப்பட்ட ஒற்றர்கள், அமைச்சர் முதலியோரின் தூய்மையை அறிதல்வேண்டும். இங்ஙனம் (ஒற்றர்களின்) [30]இவ்வைந்து நிலைகளும் கூறப்பட்டன.

முதல் அதிகரணம் ஏழாம் பிரகரணம்
"ஒற்றரை அமைத்தல்" என்னும் பதினேராம் அத்தியாயம்
முற்றிற்று.

---

27 சினத்தைத் தணித்தல் என்பது கருத்து.

28 ஒறுத்தல்—கொலைபுரிதல்.

29 இதுகாறும் தலைமையமைச்சர் ஒற்றர்களுக்குச் செயற்பாலன கூறி இனி அரசன் செய்யவேண்டுவன கூறுகின்ருர்.

30 நிலைகள்—காபடிகன் முதலிய ஒற்றர்கள் ஐவரையும், அவர்கள் தனித்தனியிருக்கும் இடங்களையும் குறிப்பனவாம்.

முதல் அதிகரணம் — பயிற்சிபகர்தல்

எட்டாம் பிரகரணம்—[1] ஒற்றுடல்

பன்னிரண்டாம் அத்தியாயம்

அரசனோடு தொடர்புடையவரும், அவனால் இன்றியமையாது பாதுகாக்கப்படுவோரும், [2]ஆடவர் மகளிர் இலக்கணம், [3]அங்க வித்தை, வசீகரணம், மறைதல், இந்திரசாலம், [4]நால்வகை நிலைகளைப்பற்றிய அறநூல், [5]நிமித்தநூல், [6]சகுனநூல் [7]காமநூல் என்னும் இவற்றைக் கற்றவரும் சத்திரிகள் என்னும் ஒற்றராவார்.

பன்னிரண்டாம் அத்தியாயக் குறிப்புரை

[1] பகை, நொதுமல், நட்பு, என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை ஆளுதல்; முன் அத்தியாயத்தில் கூறிய ஒற்றர்களுள் காபடிகன் முதலிய ஐந்து ஒற்றர்களுடைய இலக்கணமும் கூறப்பட்டது. எஞ்சிய சத்திரி, வன்கண்ணன், நஞ்சிடுவோன், தவமுது மகள் என்னும் இவர்களது இயல்பு இவ்வத்தியாயத்தின் முதற்கட் கூறப்படும். இவ்விருதிறத்தாரும் ஒற்றர்களேயாயினும், ஏவுதற்கருத்தாக்களின் வேற்றுமையானும், இலக்கண வேறுபாட்டானும் அத்தியாயம் வேறாயிற்று. காபடிகன் முதலிய ஐவருக்கும், தலைமை அமைச்சனுடன் கூடிய அரசன் ஏவுதற்கருத்தா ஆவான். மந்திரி முதலியோர் தூய்மை அறிதற்கும் சத்திரி முதலியோர் ஏவப்படுதலால் அன்னார்க்கு அரசனே கருத்தா ஆவான். காபடிகன் முதலியோர் தத்தம் இருப்பிடங்களிலேயே இருந்து அரசனுடைய காரியங்களைச் செய்வோராதலின் அன்னார் "நிலையினர்" என்று வழங்கப்படுவர். சத்திரி முதலியோர் எல்லா இடங்களினும் திரிந்து அரசனுடைய காரியங்களைச் செய்வராதலின் அன்னார் "இயங்குவோர்" என்று வழங்கப்படுவர். பிரகரண இயைபு இதனால் புலப்படுதல் அறிக.

[2] சாமுத்திரிகா இலக்கணம்.

[3] அங்கவித்தை—வேதாங்கங்களாகிய வியாகரணம் முதலியன; உடல் உறுப்புக்களின் இயல்பைக்கொண்டு நன்மை தீமைகளை அறிந்து கோடற்குரிய நூலுமாம்.

[4] நால்வகை நிலை—ஓதுநிலை இன்னிலை காடுறைநிலை துறவுநிலை.

[5] நிமித்தநூல்—நிறைகுடம் முதலியவற்றால் வரும்பயன் அறிவிக்கும் நூல்.

[6] சகுனம்—பறவைகளைப்பற்றியது.

[7] காமநூல்—ஆடல், பாடல் முதலிய எல்லாம் இதன்பாற்படும்.

அரசனது நாட்டில் தம் உடலையும் பொருட்படுத்தாமல் பொருள் நிமித்தம் யானை புலி முதலியவற்றோடு அஞ்சாது போர் புரியும் வீரர் வன்கண்ணர் ஆவார்.

உறவினர்மாட்டும் பற்றற்றவராய்க் கொடுந்தன்மையும் மடிமையும் உடையோர் நஞ்சிடுவோர் ஆவார்,

இன்பநுகர்ச்சியில் விருப்பம், வறுமை, கைம்மை, காலம் இடங்களுக்கேற்ற அறிவுடைமை, உவளகத்துள்ளார் வழிபாடு என்னும் இவையுடைய பார்ப்பனப்பெண்கள் ' தவமுதுமகளிர் ' என்று கூறப்படுவர். இவர்கள் அடிக்கடி அமைச்சருடைய இல்லங்கட்குச் சென்றுவருதல் வேண்டும். இவர்களைப்போலவே [8]பிக்குணி, சூத்திரப்பெண் இவர்களும் தவமுதுமகளிர் ஆவார். இவர்கள் ' இயங்குவோர் ' என்னும் வகையினர்.

அரசன் தன் நாட்டிலுள்ள மந்திரி, புரோகிதன், படைத் தலைவன், இளவரசன், வாயில்காப்போன், உவளகவினைஞன், பாசறை அமைப்போன், இறைப்பொருள் தொகுப்போன், பொருட்பண்டாரம் புரப்போன், சிறுபகை களைவோன், [9]நாயகன், [10]நகரத்தலைவன், ஆகரத்தொழிலாளன், மந்திரியவைத்தலைவன், [11]தண்டபாலன், அரண்காவலன், எல்லைகாவலன், காட்டுத்தலைவன் என்னும் [12]இவர்கள்பால் இயங்குவோர் என்னும் ஒற்றரை

---

[8] பிக்குணி—துறவறநெறியில் ஒழுகும் பௌத்தப்பெண்.

[9] நாயகன்—ஆயிரம் இரண்டாயிரம் காலாட்படைக்குத் தலைவன்.

10 " பௌரவியாவகாரிகன் " என்று முதனூல் கூறும்; இதற்கு நகரத் தலைவன் என்பதும், நகரத்துள்ள நீதிமன்றத்தலைவன் என்பதும் பொருளாகும்.

11 தண்டபாலன்—படைக்குழு (சைனியம்) படைமுகம் (சேனுமுகம்) முதலியவற்றின் தலைவன் ; ஓர் அக்குரோணிக்கு அதிபனுகிய படைத் தலைவன் இவனின் வேருவான்.

12 அரசன் தன்வினை செய்வார் சுற்றத்தார் முதலிய எல்லோரையும் ஒற்றினுல் ஆராய்ந்து தெளியவேண்டும் என்பதை,

" வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வ தொற்று " (584)

என்னும் திருக்குறளானும் அறிக.

[13]நம்பத்தக்க நாடு, உருவம், கலைவன்மை, மொழி, குலம் என்னும் இவற்றிற்கு உரியவர்களாக்கிப் [14]பக்திக்கும் [15]திறமைக்கும் தக்க வாறு அமைத்து உய்த்தல்வேண்டும்.

வன்கண்ணர் என்னும் ஒற்றர், குடைபிடித்தல், கமண்டலம் ஏந்தல், விசிறுதல், பாதுகை தாங்கல், இருக்கை அமைத்தல், சிவிகை தாங்கல், ஊர்திகளை நடத்தல் என்னும் [16]இத்தொழில்களை மேற்கொண்டு மந்திரி முதலியோருடைய புறச்செய்திகளை அறிய வேண்டும். இங்ஙனம் வன்கண்ணர் அறிந்த செய்திகளைச் சத்திரிகள், [17]நிலையினர் என்னும் ஒற்றர்களுக்குத் தெரிவிக்கக்கடவர்.

அடிசில் அமைத்தல், சிற்றுண்டியமைத்தல், நீராட்டுதல், உடம்புபிடித்தல், படுக்கை விரித்தல், மயிர்வினை, [18]அணிசெய்தல், நீர் கொணர்தல் என்னும் இத்தொழிலை மேற்கொண்ட நஞ்சிடுவோரும் [19]மறைந்தொழுகும் கூனன், குறளன், உடல் மெலிந்த

---

[13] நம்பத்தக்க என்னும் சொல்லை உருவம் முதலியவற்றிற்கும் கொள்க; ஒற்றப்படுவோர் நம்பும்படி மொழி முதலியவற்றை மேற்கொள்ளச் செய்தல்வேண்டும் என்பது கருத்து.

" கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று " (585)

என்னும் திருக்குறளும்,

" ஐயுறுத வடிவாவன பார்ப்பார் வணிகர் முதலாயினர் வடிவு " என்னும் உரைக்குறிப்பும்,

" ஒற்றிமேல் வீழ்ந்துரைக்கும் உபாயமா வாணிக வுருவினவாகி மற்றவர் ஆணத்தானை அகம்புக்கு ஆராய்ந்து " (மகத-17-88)

என்னும் பெருங்கதைப் பகுதியும் ஈண்டு நினைக்கத்தக்கன.

[14] பக்தி — ஒற்றப்படுவோரது கடவுட்பத்தி. அதற்குத் தக்கவாறு ஒற்றனும் பத்தருருவங்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[15] திறமை ஒற்றர்க்குரியது; அவரவர் திறமைக்கேற்ப ஒற்றப் படுவோர்க்குப் பணிசெய்ய நியமித்தல்வேண்டும் என்பது கருத்து.

[16] உண்மை அறிதற்குத் தம்மை மறைத்துக்கொள்ளற்பொருட்டு இத் தொழில்களை மேற்கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[17] நிலையினர்—காபடிகன் முதலியோர்.

[18] அணிசெய்தல்—ஆடை அணிகலன்களால் ஒப்பனைசெய்தல்.

[19] " மறைந்தொழுகும் " என்னும் அடையைக் குறளன் முதலியோர்க்கும் கூட்டுக.

வன், ஊமன், செவிடன், அறிவிலான், குருடன் என்னும் இவர்களும் [20]கூத்தன், [21]ஆடுவோன், பாணன், இசைக்கருவியாளன், பௌராணிகன், கழைக்கூத்தன், [22]வஞ்சமகளிர் என்னும் இவர்களும் மந்திரி முதலியோருடைய இல்லங்களுள் நிகழும் அகச் செய்திகளை அறியக்கடவர். இங்ஙனம் இவர்கள் அறிந்த செய்திகளைத் தவமுதுமகளிர், நிலையினர் என்னும் ஒற்றர்களுக்குத் தெரிவித்தல்வேண்டும்.

நிலையினருடைய மாணவர்கள் [23]சங்கேத எழுத்துக்களால் [24]அச்செய்திகளை அரசனுக்குத் தெரிவிக்கக்கடவர். [25]நிலையினரும், இயங்குவோரும் ஆகிய இருதிறத்தினருள்ளும் ஒருவர் அறிந்ததை மற்றொருவர்க்கு அறிவித்தலாகாது.

தவ முதுமகள், [26]ஒற்றப்படுவோர் இல்லங்களில் புகுதற்குத் தடையேற்படுமாயின் [27]வாயில்காப்போர், [28]தாய்தந்தை முறை

---

20 கூத்தன்—மெய்ப்பாடு தோன்ற அவிநயிப்போன். "கூத்தராயினர் எண்வகைச்சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப்போந்து புலப்பட ஆடுவார்" (தொல்-பொரு-புறம்-சூ. 36) என்பர் நச்சினார்க்கினியர்.

21 ஆடுவோன்—தாளமுறைக்கேற்ப ஆடலை மேற்கொள்வோன்.

22 உபலக்கணத்தால் பேடியையும் கொள்ளல்வேண்டும்.

23 கருதிய பொருளைத் தெரிவித்தற்குத் தாமே குறியீடாக அமைத்துக் கொண்ட எழுத்துக்கள் சங்கேத எழுத்துக்களாகும்.

24 அச்செய்திகள்—அகச்செய்திகளும் புறச்செய்திகளுமாம்.

25 நிலையினருள் ஒருவர் அறிந்ததை மற்றையோர்க்கும், இயங்குவோருள் ஒருவர் அறிந்ததை மற்றையோர்க்கும் அறிவித்தல் ஆகாதென்பது கருத்து. அங்ஙனம் அறிவராயின் அவர், தம்முள் ஒற்றுமைப்பட்டு அரசனை வஞ்சிக்கவும் கூடும். மேலும், அச்செய்தி பலரானும் அறியப்பட்டு மறை வெளிப்படுதற்கு ஏதுவுமாகும். "ஒற்றொற் றுணராமை யாள்க" என்பர் திருவள்ளுவர் (குறள் 589).

26 ஒற்றப்படுவோர்—மந்திரி முதலியோர்.

27 வாயில்காப்போருள் ஒருவன் மற்றொருவனுக்கும் அவன் பிறனொருவனுக்குமாக அடிசிலாக்குவோன் முதலியோர்முகமாக அறிந்த அகச் செய்தியை முறையே வெளிப்படுத்தி இறுதியில் புறத்தேயுள்ள தவமுதுமகள் முதலிய இயங்குவோர்க்காதல், அரசனுக்காதல் அறிவிக்கவேண்டும் என்பது கருத்து. "அகத்தொற்றுளரி னகப்பட அறிந்து" என்பது பெருங்கதை (வத்தவ-8·51).

களை ஏறிட்டுக்கொண்டோர், ஒப்பனைசெய்யும் மகளிர், ஏவற் சிலதியர், பாடினிகள் என்னும் இவர்கள், [29]இசைப்பாடல், செய்யுள், [30]இசைக்கருவி இவற்றின் மூலமாகவும், குடம் முதலிய கலங்களில் சங்கேதமாக எழுதி மறைத்துவைத்த ஓலைகளாலும் அகச்செய்திகளைத் தெரிந்து உய்க்கக்கடவர். [31]தணியாநோய், [32]பைத்தியம், [33]நெருப்பிடல், [34]நஞ்சூட்டல் என்னும் இவற்றாலும் மறைவுச்செய்தியை வெளிப்படுத்தலாம்.

[35]ஒற்றர் மூவருடைய சொற்களும், பொருள் ஒற்றுமை

---

28 ஒற்றப்படுவோரில்லத்துள் பணிசெய்வோர்க்குத் தாய்தந்தை முறைகளைப் படைத்துக்கொண்ட மூப்புடைய ஆடவரும் மகளிரும் ஆவர்.

29 இசைப்பாடல்—ஈண்டுத் தெரிவிக்கவேண்டிய பொருளைக் குறிப்பில் புலப்படுத்தும் சொற்களால் இயற்றப்பட்ட பாடல்; பின்வரும் செய்யுளும் அன்னதே.

30 இசைக்கருவிகள்—ஈண்டுக் கருதியபொருள் குறிப்பாகப் புலப்படும்படி வாசிக்கப்படுவன.

31–32 அடிசிலாக்குவோர் முதலியோர் மேற்கூறிய உபாயங்களால் இல்லத்துள் நிகழும் செய்தியை வெளிப்படுத்த இயலாவிடின், வயிற்றுவலி முதலிய நோய்களை ஏறிட்டுக்கொண்டும், பைத்தியம் பிடித்தவர்கள்போன்றும் தாமே வெளிப்பட்டு அறிவிக்கக்கடவர்.

33–34 நோய்முதலியவற்றை ஏறிட்டுக்கொள்ளாத நிலையில் கொட்டகை முதலியவற்றில் நெருப்புவைத்தும், உணவில் நஞ்சிட்டும் அவற்றால் இல்லத்தில் நிகழும் ஆரவாரங்களுக்கிடையில் வெளிப்பட்டு அறிவிக்கக்கடவர்.

35 ஒருவனை ஒருவன் அறியாவாறு மூன்று ஒற்றர்களை ஒரு காரியத்தில் தனித்தனியே விட்டால் அம்மூவர் சொல்லும் பயனால் ஒத்தனவாயின் அது மெய்யென்று தெளியப்படும் என்பது கருத்து. இதனை,

"உடன்மூவர் சொற்றொக்க தேறப்படும்" (589)

என்னும் திருக்குறளானும் "ஒருவனை ஒருவன் அறியின் தம்முள் இயைந்து ஒப்பக் கூறுவராகலின் உணராமை ஆள்க என்றும், மூவர்க்கும் நெஞ்சொற்றுமைப்படுதலும் பட்டால் நீடுநிற்றலும் கூடாமையின், தேறப்படும் என்றும் கூறினர்", என்னும் பரிமேலழகர் உரையானும்,

"அறிந்த ஒற்றுளர் செறிந்தனர் உரைப்ப
ஒற்று மாக்களை ஒற்றின் ஆயா
முற்றனக் குரைத்த மூவர் வாயவுள்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி" (மகத-25·47)

என்னும் பெருங்கதைப் பகுதியானும் தெளிக.

உடையதாக இருக்குமாயின் உறுதியாக நம்பிக்கைகொள்ளலாம். ஒன்றுக்கொன்று முரண்படுமாயின் அவ்வொற்றர்களை [36]மறைவாக ஒறுத்தல்வேண்டும்; அல்லது அத்தொழிலினின்றும் விலக்குதல் வேண்டும்.

[37] "சிறுபகை களைதல்" என்னும் அதிகரணத்தில் கூறப்பட்ட [38]ஒற்றர்கள் பகையரசரிடத்து அறிந்த செய்திகளை எளிதில் [39]தெரிவித்தற்பொருட்டுக் [40]கூலிபெற்று ஏவலாளராகப் பணி செய்யவேண்டும். அன்னார் [41]ஈரிடத்தும் கூலிபெறுவோர் ஆவார்.

சுலோகங்கள்

(1) ஈரிடத்தும் கூலிபெறும் ஒற்றருடைய மனைவிமக்களை அரசன் [42]தன்வயப்படுத்திக் கொள்ளல்வேண்டும். அன்னார் தூய்மையையும் அங்ஙனமே, பகைவரால் அனுப்பப்பட்ட ஒற்றர்

---

36 ஒறுத்தலை மறைவாகச் செய்யவேண்டும் எனவே சிறந்த ஒற்றர்க்குச் சிறப்புச் செய்தலையும் பிறர் அறியாவாறு மறைவிற் செய்யவேண்டும் என்பதும் போதரும். இதனை,

" சிறப்பறிய ஒற்றின்கட் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை " (590)

என்னும் திருக்குறளானும் அறிக.

ஈண்டு மறைவாகச் செய்தற்குக் காரணம் ஒறுக்கப்பட்டான் அல்லது சிறப்புப்பெற்றான் யாவன் என்றும், இங்ஙனம் படுதற்கும் பெறுதற்கும் காரணம் யாவை என்றும் வினவுவாரும் விடை கூறுவாரும் அயலாராதலால் அவர்முகமாக மறை வெளிப்படும் என்பதாம்.

37 இதுகாறும் கூறப்பட்ட ஒற்றர்களேயன்றி வேறுசில ஒற்றர்களும் உளரென்பதை இதன்கட் கூறுகின்றார்.

38 ஒற்றர்கள்—ஈண்டுச் சித்தன், துறவி, சக்கரசரன் முதலியோர்.

39 தம்மரசற்கு.

40 தம் அரசரால் தரப்படும் கூலி.

41 ஈரிடத்தும்—தம் அரசனிடத்தும், பகையரசனிடத்தும் என்பதாம்.

42 தன்வயப்படுத்தல் — வேண்டுவ கொடுத்துத் தம் பாதுகாப்பில் வைத்துக்கோடல்.

களையும் [43]அத்தகைய பிற ஒற்றர்களால் அறியவேண்டும்.

(2) பகைவன், நண்பன், [44]நடுவன், [45]நொதுமலன் என்னும் அரசரிடத்தும் அவர்களுடைய [46]பதினெண் பகுதிகளிடத்தும் ஒற்றரைப் போக்கல்வேண்டும்.

(3) கூனன், குறளன், பேடி, ஒப்பனைசெய்யும் மகளிர், ஊமன், பல்வகை இழிகுலமாக்கள், இவர்களைப் பகைவர் [47]முதலியோரின் இல்லங்களில் இயங்குவோராகச் செய்தல்வேண்டும்.

(4) அரணுள் அமைந்த தலைநகரங்களில் வைதேககரையும், அந்நகர எல்லைகளில் தாபதர்களையும், நாட்டில் உழவரையும், உதாத்திதரையும், நாட்டின் எல்லையில் ஆயர்களையும் ஒற்றராக இருத்தல்வேண்டும்.

(5) பௌத்தத்துறவி, காட்டுத்தலைவன் முதலியோரைக் காட்டில் ஒற்றராக அமைத்தல்வேண்டும். பகையரசர் செய்திகளை அறிதற்பொருட்டு விரைவுள்ள ஒற்றர் பலரை வைத்துக் கொள்ளவேண்டும்.

(6) மறைவாகவும் வெளிப்படையாகவும் இங்கே கூறப்பட்ட இயங்குவோரும், நிலையினருமாகிய அத்தகைய பகை ஒற்றர்களை, அன்னோரைப்போன்ற தன் ஒற்றர்களால் அறிந்துகொள்ள வேண்டும்.

---

[43] அத்தகைய ஒற்றர்—ஈரிடத்தும் கூலிபெறும் ஒற்றர்.

" மறை புறப்படாமை மனத்தே யடக்கி
ஒற் றொற்றியவரை ஒற்றின் ஆய்ந்து " (பெருங்-மகத-23·52)

என்பதும்,

" ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும் " (சீவகசி-செ. 1921)

என்பதும் கருதத்தக்கன.

[44] நடுவன்—தனக்கும் பகைவனுக்கும் ஒத்தவாறு நடந்துகொள்பவன்.

[45] நொதுமலன்—ஓர் இயைபும் இல்லாதவன்.

[46] பதினெண்பகுதிகள்—இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்ட மந்திரி முதலியோர்.

[47] முதலியோர்—நண்பன், நடுவன், நொதுமலன் என்பாரும் அவர் தம் பகுதிகளும் ஆவர்.

(7) பகைவருக்கு வயப்படாதவரும், தன்னுட்டில் சிறந்தவருமாகிய மக்களைப் பகைவர்பக்கச் சார்பிற்கேற்ற காரணகாரியங்களை [48]ஏறிட்டுப் பகைவர்களுடைய ஒற்றர்களை அறிதற்பொருட்டுத் தன்னுட்டின் எல்லையில் இருத்தல்வேண்டும்.

முதலதிகரணம் எட்டாம் பிரகரணம்
"ஒற்றுடல்" என்னும் பன்னிரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[48] ஏறிடல்–உண்மையில் இல்லாதவைகளைப் பிறர் நம்புதற்பொருட்டுப் படைத்துக்கொண்டு வெளிப்படுத்தல்.

ஒன்பதாம் பிரகரணம்—[1] தன் நாட்டு நல்லவர் தீயவர் குழுஉக்களைக் காத்தல்

பதின்மூன்றும் அத்தியாயம்

மந்திரி [2]முதலியோரைக் குறித்து ஒற்றுடல் மேற்கொண்ட அரசன் தன்னுட்டிலும் நகரத்திலும் உள்ள மக்களையும் ஒற்றரால் [3]ஆராயக்கடவன்.

சத்திரிகள், நீர்த்துறை, அவைக்களம், அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தர், தொழிலாளர் குழு, பல்வகை மக்கட்கூட்டம் என்னும் இவ்விடங்களில் தம்முள் [4]கலாம் விளைத்துக்கொண்டு முரண்பட்ட செய்திகளைப் பின்வருமாறு பேசக்கடவர்—"இவ்வரசன் எல்லா நற்குணங்களும் நிரம்பப்பெற்றவன் என்று கேட்டோம். ஆனுல் நாடு நகரங்களிலுள்ள மக்களை ஒறுத்தலானும் இறைப்பொருள் கோடலானும் [5]துன்புறுத்துகின்றுன். இவன்பால் நற்குணம் ஒருசிறிதும் இன்று" என்று ஒருவன் கூறினுக, ஆண்டு அவனையும், அவன் கருத்துக்கு ஒத்துப்பேசும் [6]சிறியோரையும் மற்ருேர் ஒற்றன் மறுத்து உரைத்தல்வேண்டும். மறுப்புரை வருமாறு:—

[7] "மச்சநியாயமாக அல்லற்பட்ட குடிமக்கள் கதிரவன்

பதின்மூன்றும் அத்தியாயக் குறிப்புரை

[1] தன்னுட்டிலுள்ள மக்களுள் நல்லவர் தீயவர்களை அறிதற்கும் ஒற்றர் இன்றியமையாமையால் ஒற்றுடலின்பின் இது வைக்கப்பட்டது; இதனுல் பிரகரணவியைபு புலனும்.

[2] முதலியோர் என்றதனுல் பதினெண் பகுதிகளையும் கொள்ளல் வேண்டும்.

[3] ஆராய்தல்—ஈண்டுக் குடிமக்களுக்குத் தன்பாலுள்ள விருப்பு வெறுப்புக்களைத் தெளிதல்.

[4] கலாம் விளைத்தல்—பிறர் நம்புதற்பொருட்டு மேற்கொள்ளப்பட்டது.

[5] அளவின்மிக்க ஒறுத்தலும் இறைப்பொருள் கோடலும் துன்பத்திற்குக் காரணங்களாம்.

[6] சிறியோர்—அக்கூட்டத்திலுள்ள ஒற்றரல்லாதார்.

[7] மச்சநியாயம்—பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்குதல்போல வலியவர்கள் மெலியவர்களைத் துன்புறுத்தல்.

புதல்வனுன மநுவை அரசனுக்கிக்கொண்டார்கள். [8]கூலப்பொருள் வருவாயில் ஆறில் ஒருகூறும், வாணிகப்பொருள் வருவாயில் பத்தில் ஒருகூறும், [9]பொன்னும் அரசனுக்குரிய இறைப்பொருளாக ஏற்படுத்தினர். அவ்விறைப்பொருட் [10]கூலியைப் பெற்றுக் கொண்டு அரசர்கள் குடிமக்களைப் பாதுகாப்பாராயினர். அவ்வரசரால் செய்யப்படும் ஒறுத்தலும் பெறப்படும் இறைப்பொருளும் குடிமக்களுடைய [11]பாவத்தைப்போக்கி அன்னூர்க்கு ஆக்கநிலையாகிய நலத்தை விளைவிப்பனவாம். ஆதலின், அரசனுக்கு நம்மைக் காப்பாற்றுதல் குறித்து மேற்குறிப்பிட்ட கூறுகள் உரியனவாம் என்று கருதிக் [12]காட்டில் வாழ்வோரும், சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்ட கூலங்களில் ஆறில் ஒன்று கொடுக்கின்றனர். அரசர் கண்கூடாக [13]அளியும் தெறலும் உடையோராதலின்,

---

8 கூலப்பொருள்—நெல் முதலியன.

9 நிலத்தினின்றும் எடுக்கப்படும் பொன் முழுதும் அரசனுக்கு உரியது என்பது கருத்து.

" உறுபொருளும் உல்குபொருளும் தன்னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் " (756)

என்னும் குறளில் " உறுபொருள் " என்பது " வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறுததூஉமாம் " என்பர் பரிமேலழகர்.

10 அரசன் குடிமக்களைக் காத்தற்குக் கூலியாகவே இறைப்பொருள் கருதப்பட்டு வந்தது என்பதாம்.

11 மறுமையில் பாவப்பயனை நுகராமைக்கும், இம்மையில் மீண்டும் பாவம் செய்யாமைக்கும் ஒறுத்தல் ஏதுவாம் என்பதும் இறைப்பொருள் கொண்டு அரசன் அறம் செய்தலால் ஆக்கநிலையாகிய நலத்திற்கு அஃது ஏதுவாம் என்பதும் கருத்து.

12 காட்டில் வாழ்வோர்—ஈண்டு முனிவர் முதலியோர்.

13 அளி—அநுக்கிரகம் ; தெறல்—நிக்கிரகம்.

" வலியுந் தெறலும் அளியும் உடையோய் " (செ. 2-வரி 8)

என்னும் புறப்பாட்டுப் பகுதியும்,

" அருளுமேல் அரசாக்கும் மன்காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம் " (247)

என்னும் சிந்தாமணிப்பகுதியும் ஈண்டு நினைவு கூரத்தக்கன.

[14]இந்திரனையும் மறலியையும் ஒப்பாவர். அவ்வரசரை அவமதிப்போரைத் தெய்வமும் ஒறுப்பதாகும். ஆதலின், அரசர் அவமதிக்கத்தக்கவரல்லர் என்பனவாம். (சத்திரிகள் இந்நிகழ்ச்சி பற்றி) பொதுமக்களுடைய பேச்சுக்களையும் [15]அறிந்துகொள்ளக் கடவர்.

அரசனுடைய கூலம், பசு, பொன் என்னும் இவற்றால் பிழைப்போரும், இவற்றால் அவ்வரசனுக்கு நலந்தீங்குகளில் உதவி புரிவோரும், [16]வெறுப்புற்ற உறவினரையும் நாட்டினரையும் அவ்வெறுப்பினின்றும் மீட்போரும், பகைவரையும் (பகைமை உடைய) காட்டுத்தலைவரையும் அப்பகைமையினின்றும் நீக்குவோரும் ஆகிய இவர்களுடைய மகிழ்ச்சியையும் மகிழ்ச்சியின்மையையும் [17]மழித்தலும் நீட்டலுமுடையார் அறியக்கடவர்.

மகிழ்ச்சியுடையாரை [18]மிகுதியாகப் போற்றுதல்வேண்டும். மகிழ்ச்சியில்லாரை மகிழ்விக்கும்பொருட்டுப் [19]பொருட்கொடையாலும் இன்சொற்களாலும் சிறப்பிக்கவேண்டும். [20]இவர்களை ஒருவரோடு ஒருவர் கலவாமலும், குறுநிலமன்னர் காட்டுத்தலைவர் ஞாதிகள் சிறைப்பட்டார் என்னும் இவர்களோடு கலவாமலும்

---

14 அளித்தற்கு இந்திரனையும், தெறலுக்கு மறலியையும் ஒப்புக் கூறியவாறு.

15 இங்ஙனம் அறிந்துகோடலைக்குறித்து

“மறைந்தவை கேட்கவற்றாகி” (587)

என்னும் குறட்பகுதிக்கு “மறைந்தவை சொல்லுவாரை அறிந்து அவர் அயிராமற் சென்றெட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாக, செயலாக முன்னே விளைத்து அத்தொடர்பாற் கேட்குங்காலும் உறுஅதார் போன்று நின்று கேட்க வேண்டுதலின் ‘கேட்கவற்றாகி’ என்றார்” என்று பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்புத் தெளிவுறுத்தலை அறிக.

16 வெறுப்பு அரசனைப்பற்றியது ; அதனை நாட்டிற்கும் கூட்டுக.

17 மழித்தலும் நீட்டலும் உடையார்—ஒற்றருள் ஒரு வகையினர்.

18 மகிழ்ச்சி மேன்மேலும் பெருகுதற்பொருட்டு.

19 இக்கருத்து,

“கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்” (525)

என்னும் திருக்குறளிற் காண்க.

20 கொடை முதலியவற்றாலும் மகிழாதாரை.

[21]வேறுபடுத்தல்வேண்டும். [22]அங்ஙனம் செய்தும் மகிழ்ச்சியடையாதாரை ஒறுத்தலதிகாரத்தையாதல், இறைப்பொருளீட்டும் அதிகாரத்தையாதல் அளித்து நாட்டுமக்கள் வெறுப்பிற்கு உரியராக்கல்வேண்டும். அங்ஙனம் வெறுக்கப்பட்டாரை மறைவிற் கொலைபுரிந்தாதல், நாட்டுமக்கள் வெகுளியானுதல் அடக்கிவிடல் வேண்டும். பகைப்பக்கத்தார்க்கு இவர்கள் இடனுதல்கூடும் என்னும் அச்சத்தால் அவர்தம் மனைவிமக்களைத் தான் பாதுகாத்துக் கொண்டு அவரை ஆகரத்தொழிலிடங்களில் இருத்தல்வேண்டும்.

சினமுடையான், பொருணசையுடையான், அச்சமுற்றேன், [23]மானமுடையோன் இவர்கள் பகைவரால் [24]வேறுபடுக்கத்தக்கவராவார். அவர்கள் தம்முள் ஒருவரோடு ஒருவர் மேற்கொண்ட தொடர்பையும், பகைவரோடு கொண்ட தொடர்பையும், ஊழ்வினை உணர்ந்தோர், நிமித்திகர், முக்காலமும் உணர்ந்தோர் என்னும் உருக்கொண்ட ஒற்றர்கள் அறியக்கடவர்.

[25]தன்பால் மகிழ்ச்சியுடையாரைப் பொருட்கொடையானும் [26]பெருமைப்படுத்தலானும் அரசன் சிறப்பித்தல் வேண்டும். [27]மகிழ்ச்சியடையாதாரை இன்சொற் கூறல், கொடுத்தல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்னும் இவ்வுபாயங்களால் அடக்கல் வேண்டும்.

சுலோகம்

இங்ஙனம் நீதியுணர்ந்த அரசன் தன்னுட்டிலுள்ள நல்லவர் தீயவர் குழூஉக்களைப் பெரியராயினும், சிறியராயினும் பகைவரால் வேறுபடுக்கப்படாமல் காத்தல்வேண்டும்.

முதலதிகரணம் ஒன்பதாம் பிரகரணம்
" தன் நாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைக் காத்தல் " என்னும்
பதின்மூன்ரும் அத்தியாயம் முற்றிற்று.

---

21 கலப்பின் அரசனுக்குத் தீங்கு விளைக்கக்கூடும் என்பது கருத்து.

22 அங்ஙனம் செய்தும்—அவ்வாறு வேறுபடுத்தும்.

23 மானம்—ஈண்டு மாண்பிறந்த மானம்; அஃதாவது—முடிக்கப்படாதாயினும், கருதியது முடித்தேவிடுவல் என்னும் அகங்காரம்.

24 இதனல் இங்குக் கூறப்பட்டாரல்லாதார் பகைவரால் வேறுபடுக்கத் தகாதவர் என்பது புலனும்.

25 மகிழ்ச்சியுடையார்—பகைவரால் வேறுபடுக்கப்படாதார்.

26 பெருமைப்படுத்தல்—பெருமைக்குரிய பட்டம் பரிசுகள் வழங்கல்.

27 பகைவரால் வேறுபடுக்கப்பட்டார்.

பத்தாம் பிரகரணம் — பகை நாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைத் தன்வயப்படுத்தல்

பதினன்காம் அத்தியாயம்

[1]இதுகாறும் தன்னாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைக் காத்தல் கூறப்பட்டது. இனிப் பகைநாட்டு அக்குழூஉவைத் தன்வயப் படுத்தல் கூறப்படும்.

[2]பொருள் தருவதாக உறுதிகூறி அரசனுல் ஏமாற்றப்பட்டவன், சிறப்பத்திலாதல், வேருேர் உதவியினுதல் ஒத்த செயலையுடையார் இருவருள் [3]பாராட்டப்படாதவன், அரசனுக்கு நெருங்கிய பணியாளரால் [4]தடுக்கப்பட்டவன், [5]அழைக்கப்பட்டுத் தோல்வியுற்ருேன், [6]வேற்றிடத்திருத்தலால் துன்புற்ருேன், [7]பொருட்செலவிட்டும் காரியம் கைகூடாதவன், குலதருமத்தையாதல் தாயபாகத்தையாதல் அடையத் தடைப்படுத்தப்பட்டவன். [8]சிறப்பு,

---

பதினன்காம் அத்தியாயக் குறிப்புரை

[1] இதனுல் பிரகரண இயைபு புலனுதல் அறிக.

[2] தீயவர்கள், சினமுடையார் பொருணசையுடையார் அச்சமுடையார் மாண்பிறந்த மானமுடையார் என நான்குவகைப்படுவர். அவருள் சினமுடையார் இயல்பு ஈண்டுக் கூறப்படுகின்றது.

[3] இருவரும் ஒத்த தகுதியினராக ஒருவனைப் பெருமைப்படுத்தி மற்ருெருவனை அங்ஙனம் செய்யாதிருப்பின் அவன் சினமுடையோன் ஆவன் என்பது கருத்து.

[4] அரண்மனையில் புகாதவாறு தடுக்கப்பட்டவன்.

[5] சூதுவிளையாட்டின்பொருட்டு அழைக்கப்பட்டுப் பொருளிழந்தோன்.

[6] அரசனுடைய தடையால் தான் விரும்பிய இடத்தில் இருக்கவியலாமல் துன்புற்றவன் என்பது கருத்து.

[7] அரசனுக்கு நெருங்கியவர்கள்பால் பொருள்கொடுத்தும் காரியத்தின் பயனை அடையாதவன்.

[8] சிறப்பு—குடை பல்லக்கு முதலியன; அதிகாரம்—அரசியல்வினைகளில் பெறும் பதவி.

அதிகாரம் என்னும் இவற்றினின்றும் விலக்கப்பட்டவன், [9]குலத்தவரால் விளக்கம்பெறுதவன், வலிந்துபற்றுதலால் கெடுக்கப்பட்ட மனைவியை உடையான், சிறைப்படுத்தப்பட்டவன், [10]பிறர் சொற்கொண்டு ஒறுக்கப்பட்டவன், [11]பொய்யுரை நம்பி நன்னெறியில் தடைப்பட்டவன், பொருள் முழுதும் கவரப்பட்டோன், [12]காரியக் கட்டுப்பாட்டால் துன்புறுவோன், நாட்டினின்றும் விலக்கப்பட்ட [13]உறவினரையுடையோன் என்னும் இவர் சினமுடையார் ஆவார்.

[14]தன்னுல் கேடுற்றவன், [15]மாறுபட்ட செயல் புரிவோன், [16]தீவினையால் பழியெய்தினேன், [17]ஒத்த குற்றவாளிக்குச் செய்த தண்டத்தை அஞ்சினேன், [18]நிலத்தைக் கவர்ந்துகொண்டோன், [19]தண்டத்தால் மெலிந்தவன், அரசியல் வினைகள் பலவற்றிற்கும் தலைமையாயினேன், [20]எதிர்பாராத நிலையிற் பொருட்பெருக்கம் எய்தினேன், அரசனுக்கு உரிய தாயப்பொருளை விரும்பியடைந்

---

9 அரசனுடைய உறவினரால் குணநலம் மறைக்கப்பட்டுப் புகழ் பெறுதவன்.

10 அயலார் கூறும் சொற்களை நம்பி விசாரணையின்றித் தண்டிக்கப்பட்டவன்.

11 நன்னெறி தீங்கு பயக்குமென எடுத்துக்காட்டிய பொய்யுரையை நம்பி அந்நெறியில் செல்லத் தடைப்பட்டவன்.

12 தனக்குப் பொருத்தமில்லாத காரியத்தில் அரசனுல் தலைப்படுத்தப்பட்டுத் துன்புறுவோன்.

13 உறவினர்—ஈண்டுப் புதல்வன் முதலியோர்.

14 தன்னுற் கேடுறுதல்—பொருள் நிமித்தம் தானே கொலை முதலிய கொடுஞ்செயல்களைச் செய்து கேடுற்றவன் என்றும், அரசனுல் ஏவப்பட்டுப் பொருள் பெற்றுக் கொலை முதலியன செய்து கேடுற்றவன் என்றும் பொருள் கொள்ளல்வேண்டும்.

15 அரசனுக்கு மாறுபட்ட செயல்.

16 தீவினை—கொலை முதலியன.

17 தன்பாலும் அத்தகைய குற்றமுண்மையால் தனக்கும் அத்தண்டம் விதிக்கப்படுங்கொல் ! என்னும் எண்ணத்தால் அஞ்சினவன்.

18 நிலம்—பொதுநலத்திற்காக அரசனுல் விடப்பட்ட நிலம்.

19 முன்செய்த குற்றங்களுக்காகப் பன்முறை தண்டிக்கப்பட்டவன்.

20 "ஸாஹஸம்" என்று பாடங்கொண்டு கொடுஞ்செயலால் பொருட்பெருக்கம் எய்தினேன் எனலுமாம்.

தோன், அரசனுல் வெறுக்கப்பட்டோன், அரசன்பால் வெறுப் புற்றோன் என்னும் இவர்கள் அச்சமுடையோர் ஆவர்.

[21]பொருளெல்லாம் இழந்தவன், [22]அரசனுல் மிகுதியாகக் கொள்ளப்பட்டுப் பொருள் இழந்தோன், [23]கடும்பற்றுள்ள முடையோன், [24]விதனமுடையோன், மிகுதியான பொருள் [25]வழக் குடையோன் என்னும் இவர்கள் பொருணசை உடையோராவார்.

[26]தற்பெருமையுடையோன், [27]பெருமையை விரும்புவோன் பகைவனுக்கு நேரும் சிறப்புக்குறித்துப் பொருதவன், கயவரோடு கூடினவன், தன்னுடலைப் பொருட்படுத்தாதவன், ஆராயாது செயல்புரிவோன், இன்பநுகர்ச்சியில் மகிழாதவன் என்னும் இவர் கள் மாண்பிறந்த மானமுடையோர் ஆவர்.

[28]பகைநாட்டுத் தீயவர்களாகிய இவர்களுள், எவன் எதனை விரும்புகின்றனே அவற்கு அதனைக்கொடுத்து மழித்தலும் நீட் டலும் உடைய ஒற்றர்களால் வேறுபடுத்தல்வேண்டும்.

[29] "திறமையில்லாத பாகனுல் நடத்தப்பட்ட மதக்களிப்பு மிக்க யானை எதிர்ப்பட்ட எல்லாவற்றையும் அழித்தல்போலத் திறமையில்லாத அமைச்சனுல் நடத்தப்படும் நீதிநூலறிவில்லாத

---

21 இவ்விழப்பு வாணிகம் முதலிய தொழில்களால் நிகழ்ந்தது.

22 கொள்ளப்படுதல்—ஒண்டுத் தண்டமாகவும் இறையாகவும் வாங்கப் படுதல்.

23 கடும்பற்றுள்ளம்—உலோபம்.

24 விதனம்—கட்காமம் முதலியவற்றுல் விளையும் குற்றம்.

25 வழக்கு—நீதிமன்றத்தில் செய்யும் முறையீடு.

26 பெருங்கல்வி முதலியவற்றை உடைமையால் யான் பெரியவன் என்று செருக்குறுவோன்.

27 பொருளைப் பொருட்படுத்தாமல் பிறர் பாராட்டையே பெரிதும் விரும்புவோன்.

28 பகைநாட்டுத் தீயவர்கள் தனக்கு நல்லவர் ஆவர்.

29 அத்தீயவருள் சினமுடையாரை வேறுபடுத்துமாறு. கொடுத்தல் இன்சொற்கூறல் வேறுபடுத்தல் ஒறுத்தல் என்னும் இந்நால்வகை உபாயங் களுள் ஏற்றதுகொண்டு செய்யவேண்டும் என்பது கருத்து.

இவ்வரசன் தன் நாட்டினும் நகரத்தினும் உள்ள மக்களை அழிக்கத் தலைப்பட்டுள்ளான். [30]இவனுடைய பகைவனை ஊக்கமுறுத்து முகமாக இவனுக்குக் கேடுவிளைவித்தல் கூடும். ஆதலின், சினத்தை மேற்கோடல் தக்கதே" என்று சினமுடையாரை வேறுபடுத்தல் வேண்டும்.

[31] "புற்றிற் கரந்துறையும் பாம்பு எவனுக்கு அஞ்சுகின்றதோ அவன்பால் நஞ்சைக் காலுதல்போல, நின்பாற் குற்றமுளதென முன்னரே ஐயமுற்ற இவ்வரசன் வெகுளியாகிய நஞ்சை நின்பாற் செலுத்துவான். ஆதலின், வேற்றிடஞ் செல்லுக" என்று அச்சமுடையோரை வேறுபடுத்தல்வேண்டும்.

[32] "நாய்க்கூட்டங்களுக்குத் தலைவனது பசு அந்நாய்களுக்குப் பால் தருமன்றிப் பார்ப்பனர்க்குத் தாராது; அதுபோல இவ்வரசன் மனத்தூய்மை அறிவு வாய்மை முதலிய நற்குணமில்லாக் கயவர்களுக்குப் பொருள்கொடுப்பானேயன்றி [33]அந்நற்குணமுடைய சான்றோர்க்குக் கொடான். மக்களுடைய தகுதியறிந்த [34]அவ்வரசனை அடைதல் நன்று" என்று பொருணசையுடையாரை வேறுபடுத்தல்வேண்டும்.

[35]புலையர்க்குரிய கேணி அப்புலையர்களுக்கே அன்றிப் பிறர்க்குப் பயன்படாதவாறு போல, இழிந்த இவ்வரசன் இழிந்தவர்க்கே அன்றி நின்னைப்போன்ற உயர்ந்தோர்க்குப் [36]பயன்படான். [37]அவ்வரசன் மக்களது தகுதியறிந்தவன். அவன்பால் அடைதல் நன்று" என்று மாண்பிறந்த மானமுடையோரை வேறுபடுத்தல்வேண்டும்.

---

30 இவனுடைய பகைவனென்றது தன் அரசனைக்குறிக்கும்.

31 இஃது அச்சமுடையாரை வேறுபடுத்துமாறு.

32 இது பொருணசை யுடையாரை வேறுபடுத்துமாறு.

33 அந்நற்குணம்—மனத்தூய்மை முதலியன.

34 அவ்வரசன்—ஒற்றனாற் சுட்டப்படும் மற்றோர் அரசன்; அவ்வொற்றனை ஆளும் அரசன் என்பது கருத்து.

35 இது, மாண்பிறந்த மானமுடையாரை வேறுபடுத்துமாறு.

36 பயன்படல்—பட்டம் பரிசு வழங்கல்.

37 34-ஆம் எண்ணிற் கண்ட குறிப்புக்களே ஈண்டும் ஒக்கும்.

சுலோகங்கள்

(1) அங்ஙனமேயாக என உடன்பட்ட அன்னாரை [38]உறுதியான சூளுறவு கூறித் தன்வயப்படுத்து [39]ஒற்றர்களுடன் சேர்த்துத் தன் காரியங்களில் அவரவர் ஆற்றற்கேற்ப நியமனம் செய்தல் வேண்டும்.

(2) பகைநாட்டிலுள்ள [40]தீயவர்களை இன்சொற்கூறல் பொருள்கொடுத்தல் என்னும் உபாயங்களானும், அந்நாட்டு [41]நல்லோரை வேறுபடுத்தல் ஒறுத்தல் என்னும் உபாயங்களானும் தன்வயப்படுத்துக்கொள்க. பகைவனுடைய [42]குற்றங்களையும் அவர்க்கு எடுத்துக்காட்டல்வேண்டும்.

முதலதிகரணம் பத்தாம் பிரகரணம்
"பகைநாட்டு நல்லவர் தீயவர் குழூஉக்களைக் காத்தல்"
என்னும் பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

38 சூளுறவுகூறுதல், நம்புதற்பொருட்டு.

39 ஒற்றர்களுடன்சேர்த்தல், அவர்கள் மீண்டும் பிறழாமையை ஆராய்தற்பொருட்டு.

40 இத்தீயவர்கள் தனக்கு நல்லவர்கள் ஆதலானும் முன்னரே பகைவரிடத்தில் வெறுப்புற்றவர் ஆதலானும் அவரை வயப்படுத்தற்குச் சாம தான உபாயங்களே பொருந்துவன.

41 இந்நல்லோர் தனக்குத் தீயவர் ஆதலான் அன்னாரை வயப்படுத்தற்குப் பேத தண்ட உபாயங்களே பொருந்துவன. இக்கருத்துக்கள்,

"ஆற்றின் வருந்தா வருத்தம்" (468)

என்னும் குறட்பகுதிக்கு "முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி" எனப் பொருள்கொண்டு, "முடியும் உபாயத்தால் முயறலாவது—கொடுத்தலைப் பொருணசையாளன்கண்ணும், இன்சொல்லைச் செப்பமுடையான் மடியாளன் முன்னே பிறரொடு பொருது நொந்தவன் என இவர் கண்ணும், வேறுபடுத்தலைத் துணைப்படையாளன் தன் பகுதியொடு பொருந்தாதான் என இவர்கண்ணும், ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர்கண்ணும் தேறப்படாத கீழ்மக்கள்கண்ணும் செய்து வெல்லுமாற்றால் முயறல்" என்று பரிமேலழகர் உரையில் தெளிவுறுத்தப்பட்டிருத்தலை அறிக.

42 குற்றங்காட்டுதல், வேறுபடுத்தற்கு இன்றியமையாதது என்பது கருத்து.

முதல் அதிகரணம்—பயிற்சிபகர்தல்

பதினோராம் பிரகரணம்—[1] மந்திராதிகாரம்

பதினைந்தாம் அத்தியாயம்

தன்னைச் சார்ந்தோரையும், பகைவரைச் சார்ந்தோரையும் தன்வயப்படுத்திய அரசன் [2]காரியம் செய்தலைப்பற்றிச் சூழக் கடவன். எல்லாக் காரியங்களும் [3]சூழ்ந்து செயற்பாலன.

அச் சூழ்ச்சிக்குரிய இடம் நாற்புறமும் மறைவுள்ளதாகவும், உள்ளே நிகழும் பேச்சுக்கள் வெளிப்படாமலிருக்கக் கூடியதாகவும், பறவைகளாலும் பார்க்க இயலாததாகவும் இருத்தல்வேண்டும். [4]கிளி, நாகணவாய்ப்புள், நாய், மற்றைய புள்ளு விலங்குகள்

பதினைந்தாம் அத்தியாயக் குறிப்புரை

1 மந்திரம்—அரசன் தான் செய்யக்கருதும் காரியத் தொடக்கத்தில் அதனைப்பற்றிச் சூழ்தல். முன்னை அத்தியாயங்களில் மந்திரிகளின் இயல்பு கூறப்பட்டது. இது மந்திரத்தின் இயல்பு கூறுகின்றமையால் பிரகரண இயைபு புலனாதல் அறிக.

2 காரியம்—தன்னாட்டில் அரணமைத்தல் முதலியனவும், பகைநாட்டில் சந்திவிக்கிரக முதலியனவும் ஆம்.

3 முதலிற் சூழ்தலும் பின்னர்க் காரியம் தொடங்குதலும் முறை. அங்ஙனம் செய்யப்படும் காரியங்களே சிறந்த பயனை விளக்கும் என்பது கருத்து.

"எண்ணித் துணிக கருமம்" (476)

என்னும் குறட்பகுதியும்,

"அந்தணர் ஒழுக்கமும் அரசர் வாழ்க்கையும்
மந்திர மில்லையேல் மலரும் மாண்பில"

என்னும் சூளாமணிப் பகுதியும் ஈண்டு நினைக்கத்தக்கன.

4 பறவைகளாலும் பார்க்க இயலாததாக இருக்கவேண்டும் என்பதற்குக் காரணம் கூறுகின்றார். கிளி நாகணவாய்ப்புள் முதலியன சூழ்ச்சிக்குரிய இடத்தில் இருத்தல் ஆகாதென்பதை

"புள்ளும் இல்லா ஒள்ளொளி இருக்கையுள்
மறை புறப்படாச் செறிவினராகி" (பெருங்-மகத-24-216)

என்பதனானும்,

"பூவையும் கிளியும் மன்னர் ஒற்றெனப் புணர்க்கும் சாதி
யாவையும் இன்மை யாராய்ந்து" (சீவகசி-384)

என்பதனானும் அறிக.

என்னும் இவற்ருல் சூழ்ச்சி வெளிப்பட்ட செய்தியைக் கேட்டிருக் கின்றேம். ஆதலால் சூழ்தற்குரிய இடத்திற்கு அரசன் கட்டளை பெருதார் செல்லலாகாது. சூழ்ச்சியை வெளிப்படுத்துவோனை வேரறக் களைதல்வேண்டும்.

தூதுவன், அமைச்சன், அரசன் என்னும் இவர்களுடைய [5]இங்கித [6]ஆகாரங்களால் சூழ்ச்சி வெளிப்படக்கூடும். இங்கிதம் இயல்பின் நிகழும் செயற்கு வேருவது ; ஆகாரம் எண்ணங்களை அறிதற்குக் காரணமான உடலுறுப்புக்களின் வேறுபாடு.

அரசன் தான் மேற்கொண்ட காரியம் முடியுங்காறும் அவ் விங்கித ஆகாரங்களை மறைத்தலும் சூழ்ச்சித் துணைவராகக் கட்டளை யிடப்பட்ட மந்திரி முதலியோரை மந்திரம் வெளிப்படாவாறு காத்தலும் [7]செய்யவேண்டும். சூழ்ச்சிப்பொருள் வெளிப்படுதற்கு அச்சூழ்ச்சித் துணைவரின் [8]விழிப்பின்மை [9]களிப்பு [10]கனவிற் பிதற்றுதல் காமம் செருக்கு முதலியன வாயில்களாம். [11]மறைந்து கேட்போன், [12]மதிக்கப்படாதோன் என்னும் இவரும் வாயில்கள்

---

[5] இங்கிதம்—குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில்.

[6] ஆகாரம் — குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. "இங்கிதம் வடிவு தொழில் சொல் என்பன முதலாகப் பிறர்கருத்தளக்கும் அளவைகள் பல' என்பர் பரிமேலழகர். (திருக்குறள் செ-710 உரை)

[7] மேற்கண்ட செயலை முடிவின்கண் அன்றி முன்னெல்லாம் மறைத்துச் செய்யவேண்டும் என்னும் இதனை,

"கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்ரு விழுமந் தரும்" (663.

என்னும் திருக்குறளினும், "மறைத்துச் செய்தலாவது—அங்கம் ஐந்துட எண்ணியவாறு பிறரறியாமலும் தானறிந்ததும் தன் இங்கிதம் வடிவ செயல் சொற்களான் அவர் உய்த்துணராமலும் அடக்கிச்செய்தல்" என்னுட உரையினும் தெளியலாம்.

[8] விழிப்பின்மை—வேறு காரியத்தில் ஈடுபட்டிருத்தலால் நேர்வது.

[9] களிப்பு—கள்ளுண்டமையால் உண்டாம் சித்தவிகாரம்.

[10] தன்வயமிழந்து பேசுதல்.

[11] மறைதல்—சுவர் முதலியவற்றில் கரந்துறைதல்.

[12] இவன் அறிவிலான், இவனல் தீங்கு நேராதென்னும் எண்ணத்தா மதிக்கப்படாதவன்.

ஆவார். ஆதலால் அவ்வாயில்களினின்றும் மந்திரத்தைக் காக்கக் கடவன். சூழ்ச்சிவெளிப்படுதல் அரசனுக்கும், அவனுடைய சூழ்ச்சித் துணைவர்க்கும் கேடுவிளைப்பனவாம். ஆதலால் மறைவான பொருளை அரசன் [13]தனித்திருந்து சூழவேண்டும் என்பது பாரத்துவாசர் கொள்கை. மந்திரிகளுக்கும் துணைவர் உளர்; அத்துணைவருக்கும் வேறுசிலர் துணைவர் ஆவார் [14]இப்பரம்பரை மந்திரத்தை வெளிப்படுத்தக்கூடும்.

சுலோகம்

ஆதலின் அரசன் செய்யக்கருதிய காரியத்தைப் பிறர் சிறிதும் அறிதலாகாது. அக்காரியத்தைத் தொடங்கினவர்களும் தொடங்கியபின்னர் [15]அக்காரியத்தைமட்டில் அறியக்கடவர்.

ஒருவன் [16]துணையின்றிச் சூழ்ச்சிமுடிவை எய்த இயலாது. [17]அரசியற் காரியங்கள் காண்டல், கருதல், உரை என்னும் அளவை

---

13 தனித்திருத்தல் — சூழ்தற்குரிய அமைச்சரையும் உடன்வைத்துக் கொள்ளாமல் தனியனாக இருத்தல். "தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு" (குறள்-462) என்புழி "எண்ணி" என்பதற்கு "தாமேயும் எண்ணி" என்று பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்பு இக் கருத்தை ஒருவாறு தழுவியிருத்தல் காண்க.

14 துணைவர் பரம்பரையாக அறிவராயின் சூழ்ச்சிப்பொருள் எளிதில் வெளிப்படும் என்பது கருத்து.

15 அரசன் ஏவல்வழி நின்று காரியத்தைத் தொடங்கினவர்களும் தொடங்கியபின்னரே அதனைமட்டில் அறிந்துகொள்ளல்வேண்டும்; அதன் பயனையும், அஃதல்லாத பிறிதொன்றையும் அறிதற்கு இடந்தரலாகாது என்பது கருத்து; இவ்வளவும் பாரத்துவாசர் கொள்கைகளாம்.

16 துணையின் இன்றியமையாமையை,

> "சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்
> சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" (குறள்-445)

என்புழிப் பரிமேலழகர் "தானே சூழவல்லனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலமெய்தும் அரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிதுநடவாமைபற்றி அவரைக் கண்ணாகக் கூறினார்" என்று கூறிய உரைக்குறிப்பால் தெளிக.

17 இத்தொடக்கத்தன "மந்திரி புரோகிதரை அமைத்தல்" என்னும் பிரகரணத்தில் கூறப்பட்டன.

களால் துணிந்து செய்யத்தக்கன. அறியப்படாததை அறிதல், அறிந்ததை உறுதியாகத் துணிதல், பொருள் இரண்டுபடுங்கால் உண்டாம் ஐயத்தை ஒழித்தல், காணப்பட்ட ஒரு கூறுகொண்டு எஞ்சியவற்றை அறிதல் என்னும் இவ்வெல்லாம் மந்திரிகளால் இயல்வன. ஆதலின் [18]அறிவின் முதிர்ந்தவர்களுடன் கூடிச் சூழ்ச்சியை மேற்கொள்ளக்கடவன்.

சுலோகம்

ஒருவரையும் எள்ளலாகாது; எல்லோருடைய கொள்கைகளையும் கேட்டல்வேண்டும்; [19]ஒருவன் சிறுவனாயினும் அவன் சொல் பொருளுடையதாயின் அறிவுடையான் ஏற்றுக்கொள்ளக் கடவன் என்பன விசாலாக்கர் கொள்கைகளாம்.

[20]இது மந்திரத்தை அறிதற்கு உரியதன்றி அதனைக் காப்பாற்றுதற்கு உரியதாகாது. அரசன் எக்காரியத்தைப்பற்றிச் சூழ்தற்கு விரும்புகின்றானோ அதனையொத்த பிறிதொன்றைக் குறித்து இக்காரியம் இவ்வாறிருந்தது; அதனை இவ்வாறு முடிக்கவேண்டின் எவ்வாறு செய்யலாம்? என்று சூழ்ச்சித்துணைவரை வினவ வேண்டும். அன்னார் சூழ்ந்து கூறியபடி [21]செய்தல்வேண்டும். இங்ஙனம் செய்யின் [22]சூழ்ச்சியறிவும் சூழ்ச்சி வெளிப்படாமையும் உண்டாம். இவை [23]பாராசரர் கொள்கைகளாம்.

---

18 அறிவின் முதிர்ந்தோர்—சூழ்ச்சிக்குரிய அமைச்சர் முதலியோர்.

19 "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (423)

என்னும் திருக்குறளுக்கு, "குணங்கண் மூன்றும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்மையின் உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார்வாயினும் உறுதிப்பொருள் பகைவர்வாயினும் கெடு பொருள் நட்டார்வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார்" என்று பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்பில் இக்கருத்துத் தெளிவுறுத்தப்பட்டிருத்தல் அறிக.

20 இது விசாலாக்கர் கொள்கை.

21 அரசன் தான் கருதிய காரியத்தைச் செய்தல்வேண்டும் என்பது கருத்து.

22 சூழ்ச்சியறிவு—ஒரு காரியத்தை ஆராய்ந்து தெளியும் அறிவு.

23 பாராசரர்—பராசரர்வழிப்பட்டோர்.

பாராசரர் கொள்கை [24]பொருந்தாது. நிகழ்ந்ததாயினும் நிகழாததாயினும் மறைமுகமாக அரசன் வினவிய காரியத்தைக் குறித்து அமைச்சர் [25]பொருட்படுத்தாமல் விடைகூறக்கூடும். அல்லது அதனை வெளிப்படுத்தவும் கூடும். [26]அது குற்றமாம். ஆதலின் எக்காரியத்தில் யார் தகுதியுடையாராகத் தெளியப் பட்டனரோ அன்னாரோடு [27]சூழக்கடவன். அங்ஙனம் தெளியப் பட்டவரோடு சூழும் அரசன் சூழ்ச்சியறிவையும், சூழ்ச்சி வெளிப் படாமையையும் உடையனுவான் என்பன நாரதர் கொள்கை களாம்.

[28]இக்கொள்கையும் பொருந்தாது என்பது கௌடலியர் கருத்து. என்னை? இது [29]வரையறையின்மையை உடைத்தாகலின். மூன்று அல்லது நான்கு மந்திரிகளோடு கூடி ஆராய்தல்வேண்டும். ஒருவனோடு [30]சூழ்பவன் அரிதின் முயன்று துணியவேண்டிய காரி யங்களில் துணிவெய்த இயலாது. மந்திரி ஒருவனாயின் அவன்

---

24 பாராசரர் கொள்கைப்படி சூழ்ச்சியறிவும், சூழ்ச்சி வெளிப்படாமை யும் ஆகிய இருபயனும் விளையாவென்பது கருத்து.

25 அரசன் நம்மை நம்பாமல் நம்மால் செய்யத்தக்க காரியத்தை மறைத் துக் கூறுகின்றான் என்னும் வெறுப்பு, அமைச்சர் பொருட்படுத்தாமைக் கும் வெளிப்படுத்தற்கும் காரணமாகும் என்பது கருத்து. இனி அரசன் கூறிய மறைமுகமான காரியம் இன்றியமையாததன்று என்னும் அமைச் சரது எண்ணத்தைக் காரணமாகக் கோடலும் பொருந்தும்.

26 பொருட்படுத்தாமல் கூறும் விடையினுல் சூழ்ச்சியறிவும், வெளிப் படுத்துக் கூறுதலால் சூழ்ச்சி மறைவும் ஏற்படாமையால் குற்றமாம் என் பது கருத்து.

27 கருதிய காரியத்தை வெளிப்படையாகக் கூறிச் சூழக்கடவன் என்பது.

28 இக்கொள்கை—நாரதர் கொள்கை.

29 ஒவ்வொரு செயலுக்கும் தகுதியுடையாரை அறிந்து அவரோடு அரசன் தான் செய்யும் காரியம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தகுதியுடை யாரைச் சூழ்ந்து செய்யத்தொடங்கின், காரியங்கள் பலவாதலால் தகுதி யுடைய சூழ்ச்சித்துணைவரும் பலராதல்வேண்டும். இது கருதியே வரை யறையின்மை ஏதுவாயிற்று.

30 சூழ்பவன்—அரசன்.

விரும்பியவண்ணம் [31]தடையின்றி நடந்துகொள்பவனுவான். இருவராயின், அவ்விருவரும் ஒத்தகருத்துடையராங்கால் அரசனைத் தம்வயப்படுத்துக்கொள்வர். முரண்பட்ட கருத்துடையராங்கால் காரியத்திற்குக் [32]கேடுவிளைப்பர். சூழ்ச்சித்துணைவர் மூவர் அல்லது நால்வராயின், [33]மேற்கூறிய குற்றங்கள் அறவே நிகழா. ஒரோவழி நிகழுமாயின் அரிதின் நிகழ்தல் கூடும். பொருத்தமும் ஆம். நான்கு பெயர்களுக்கு மேற்படுமாணுல் காரியத்தைத் துணிதலும், சூழ்ச்சி வெளிப்படாமற் காத்தலும் அரியனவாம்.

காலம் இடம் காரியங்களுக்கேற்ப ஒரோவழி அமைச்சன் ஒருவனேடாதல், இருவரோடாதல், தனித்தாதல் [34]திறமைக்குத் தக்கவாறு சூழ்தலும் பொருந்தும்.

[35]காரியங்களைத் தொடங்குதற்குரிய உபாயம், [36]வினைசெய் வாரும் [37]பொருளும் நிரம்ப உடைமை, ஏற்ற காலம் இடங்களை

---

[31] தடையின்றி—அவ்வொருவனைத் தவிரத் தடுத்துரைப்பார் இல்லாமையால்.

[32] கருத்துவேற்றுமையால் ஒருமுடிவுக்கு வராமல் காரியத்தைக் கெடுத்துவிடுவர் என்பது கருத்து.

[33] மேற்கூறிய குற்றங்கள்—அமைச்சன் ஒருவனுங்கால் நிகழும் காரியத் துணிவின்மையும், விரும்பியவண்ணம் நடத்தலும், இருவராங்கால் நிகழும் அரசனைத் தம்வயப்படுத்தலும் காரியக்கேடு விளைத்தலுமாம்.

[34] திறமை—ஈண்டு அரசனதும், அமைச்சரதுமாகிய ஆற்றல்கள். சூழப்படும் காரியம் அவ்வாற்றல்களைக் கடந்ததாக இருத்தல் ஆகாதென்பது கருத்து.

"கருவியுங் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு" (குறள். 631)

என்புழிக் கூறப்பட்ட அமைச்சரது குணங்கள் ஈண்டு நினைக்கத்தக்கன.

[35] காரியங்கள்—ஓரரசற்குத் தன்னுட்டில் அகழி, மதிலமைத்தல் முதலியனவும், பகைநாட்டிற் சந்திவிக்கிரகம் முதலியன குறித்துத் தூதுவிடுத்தல் முதலியனவுமாம்.

[36] வினைசெய்வார் — தன்னுட்டில் அரணமைத்தல் முதலியவற்றில் திறமைவாய்ந்த தச்சர், கொல்லர் முதலியோரும், பகைநாட்டிற் சந்தி முதலியவற்றில் திறமைவாய்ந்த தூதுவர் படைத்தலைவர் முதலியோரும் ஆவர்.

[37] பொருள்—பொன், மணி முதலியன.

அறிதல், இடையூறு களைதல், காரியத்தின் [38]பயன் என்னும் ஐந்தும் சூழ்ச்சிக்கு உறுப்புக்களாம். சூழ்ச்சித் துணைவரைத் [39]தனித்தனியாகவும், ஒருங்கு கூட்டியும் வினவல்வேண்டும். அன்னோர் கருத்துவகைகளைக் [40]காரணங்களோடு ஆராய்தல்வேண்டும். [41]துணிந்தபொருளை முடிக்கக் காலங்கடத்தலாகாது. நெடுங்காலம் சூழ்தலுமாகாது. தன்னால் கேடுவிளைக்கப்படுவாரைச் சார்ந்தவர்களோடு சூழ்தல் கூடாது.

[42]அமைச்சரவையில் அமைச்சர் பன்னிருவர் இருக்கவேண்டும் என்று மானவரும், பதினறுவர் இருக்கவேண்டும் என்று பார்கற்பத்தியரும், இருபதின்மர் இருக்கவேண்டும் என்று ஔசனசரும் கூறுவர். [43]திறமைக்குத் தக்கவாறு இருக்கவேண்டும் என்று கௌடலியர் கூறுவர்.

---

38 தொடங்கிய காரியத்திற்குக் குறைந்ததும், ஒத்ததும், மிக்கதுமாகிய பயன்கள். ஈண்டுக் கூறப்பட்ட சூழ்ச்சிக்குரிய உறுப்புக்களைப்பற்றித் திருக்குறளாசிரியர்,

> " பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
> இருடீர எண்ணிச் செயல் " (675)

என்று கூறுவர். இவ்வைந்தனோடு இங்குக் கூறப்பட்ட ஐந்தும் பொருந்துமாற்றை உய்த்துணர்க.

39 முன்னர் ஒருவரை ஒருவர் அறியாவாறு தனித்தனியே வினவுதலோடு பின்னர் எல்லோரையும் ஒருங்குவைத்துச் சூழ்தலும்வேண்டும்.

40 காரணங்களோடு ஆராய்தல்—காரியத்தைத் துணிதற்பொருட்டு.

41 " சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
> தாழ்ச்சியுட் டங்குதல் தீது " (குறள். 671)

என்புழி இக்கருத்துத் தெளிவுறுத்தப்பட்டிருத்தல் அறிக.

42 சூழ்ந்து துணிந்த பொருளைச் செய்தல், சூழ்தற்குரிய புதிய பல காரியங்களை உய்த்துணர்தல் முதலிய அரசியற் காரியங்கள் எல்லாவற்றையும் நடாத்துதற்குச் சிறந்ததொரு அமைச்சரவை அரசனுக்கு இருக்கவேண்டும் என்பதும், அதன்கண் இத்துணை உறுப்பினர் இருக்கவேண்டும் என்பதில் கொள்கைவேற்றுமை இன்னவென்பதும் குறிக்கப்படுகின்றன.

43 திறமை—காரியத்திறமையும், செய்பவன் திறமையுமாம்.

அவ்வுறுப்பினர் தம் அரசன் [44]திறத்தையும், பகைவர்திறத்தையும் சீர்தூக்கி ஆராய்தல்வேண்டும். தம் செயல்களுள், புதிதாகக் தொடங்குதல், தொடங்கியதைச் செய்துமுடித்தல், முடிந்ததைச் [45]சிறப்புறுத்தல், அவ்வச் செயலாளர்களைத் தக்கவாறு அமைத்தல் என்னும் இவற்றை மேற்கொள்ளக்கடவர்.

அரசன் தன் அணிமையிலுள்ள உறுப்பினரோடு கலந்தும், சேய்மையிலுள்ளாரோடு முடங்கல் போக்கியும் சூழ்ந்துகொள்ளக் கடவன். இந்திரனுடைய அமைச்சரவையில் முனிவர் [46]ஆயிரவர் உறுப்பினர் ஆவர்; அவன் அவரைக் [47]கண்ணாகவுடையன் ஆவான். ஆதலின் இரண்டு கண்ணுடையனாயினும் அவனை "[48]ஆயிரங்கண்ணுடையன்" என்று கூறுவர்.

உயிர்க்கு இறுதிபயக்கும் காரியத்தில் முற்கூறிய சூழ்ச்சித் துணைவரையும், அமைச்சர் அவையையும் ஒன்றுகூட்டி வினவுதல் வேண்டும்.

---

44 திறமென்பன ஈண்டுக் காரியம் முதலியவற்றைக் குறிக்கும்.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" (471)

என்னும் குறளில் சீர்தூக்கி ஆராய்தற்குரிய வினை முதலியவற்றைப்பற்றி விளக்கப்பட்டிருத்தல் அறிக.

45 சிறப்புறுத்தலாவது—பிறிதொன்றாற் பெறப்படாத பயனுளதாகச் செய்தல்.

46 ஆயிரவர் என்பது ஈண்டுப் பலர் என்னும் பொருட்டு. தசரதன் அறுபதினாயிரம் அமைச்சரையும் வாசவதத்தையின் தந்தையாகிய பிரச்சோதனன் பதினாயிரம் அமைச்சரையும் உடையர் என்பதும் இப்பொருட்டு.

47 காரியத்தின் உண்மையைக் காண்டற்குக் கருவியாதலின் அவர் கண் ஆவர் என்பது கருத்து.

"சூழ்வார் கண்ணாக ஒழுகலான்" (குறள்-445)

எனவும், "கற்றமாந்தரைக் கண்ணெனக் கோடலும்" (சீவக-1921)

எனவும் கூறப்பட்டிருத்தல் இதனைத் தெளிவுறுத்தும்.

48 இந்திரனுக்கு இயல்பாக உள்ளன இரண்டு கண்களே. ஆயிரம் கண்கள் உடையன் என்பது உபசாரமாதல் அறிக.

அக்குழுவில் மிகுதியான உறுப்பினர் கூறுவதைச் செய்தல் வேண்டும். அல்லது காரியம் நிறைவேறுதற்கு உரியவாறு [49]கூறியதையும் செய்யலாம்.

சுலோகம்

(1) காரியம் புரியும் அரசனது [50]மந்தணத்தைப் பிறர் அறியலாகாது. பிறர் மந்தணத்தைத் தான் அறிதல்வேண்டும். [51]ஆமை தன் உறுப்புக்களை அடக்கிக்கொள்ளுதல்போல அரசன் வெளிப்பட்ட தன் காரியத்தை மறைத்துக்கொள்ளல் வேண்டும்.

(2) வேதம் அறியாதவர் பெரியோரது சிராத்த உணவை உண்ணுதற்குத் தகுதியற்றவராதல்போல, [52]அரசியல் நூற்பொருள் உணராதார் மந்திரத்தைக் கேட்டற்குத் தகுதியற்றவர் ஆவார்.

முதலதிகரணம் பதினொராம் பிரகரணம்
"மந்திராதிகாரம்" என்னும் பதினைந்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

49 கூறுவார் சிலராயினும் காரியம் நிறைவேற்றற்கு ஏற்றதாயின் அதனையும் செய்யலாம் என்பது கருத்து.

50 மந்தணம்—இரகசியகாரியம்.

51 ஆமை தன் உறுப்புக்களை மறைத்துக்கொள்ளுதலை "ஒருமையுள் ஆமைபோல்" (126) என்னும் திருக்குறளானும் அறிக.

52 "கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்" (குறள். 404)

என்பது நினைக்கத்தக்கது.

முதல் அதிகரணம்—பயிற்சிபகர்தல்

பன்னிரண்டாம் பிரகரணம்—[1] தூதுவிடுத்தல்

பதினாறும் அத்தியாயம்

தூதுவிடுத்தல் சூழ்ந்து துணியப்பட்டபொருளைப்பற்றி நிகழ்வதாகும். தூதுவர், தான் வகுத்துக்கூறுவான் கூறியது கூறுவான் ஓலைகொடுத்து நிற்பான் என மூவகைப்படுவர். [2]அமைச்சனுக்குக் கூறிய குணங்கள் முற்றும் உடையான் தான் வகுத்துக் கூறுவானாவான்; அவனிற் காற்கூறு குணங்குறைந்தவன் கூறியது கூறுவானாவான்; அரைக்கூறு குணங்குறைந்தவன் ஓலைகொடுத்து நிற்பவன் ஆவான்.

தூதுவன் நன்றாக அமைக்கப்பட்ட சிவிகை, [3]ஊர்தி, ஏவலாளர், படுக்கை என்னும் இவை உடையவனாய்ப் [4]புறப்படல் வேண்டும். "நம் அரசன் கட்டளையைப் பகைவன்பால் இங்ஙனம் தெரிவித்தல்வேண்டும்; அவன் இவ்வாறு கூறுவான். அதற்கு மாற்றம் இதுவாகும்; இவ்வாறு பகைவனை வஞ்சித்தல்வேண்டும்"

பதினாறும் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசன் ஒரு காரியத்தைப்பற்றி அமைச்சரோடு சூழ்ந்து துணிந்த பின்னர்ச் செயற்பாலது தூதுவிடுத்தல் ஆதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது; இதனால் பிரகரண வியைபு புலனாதல் அறிக.

[2] அமைச்சனுக்குக் கூறிய குணங்களை 5-ஆம் பிரகரணத்திற் காண்க. தான் வகுத்துக் கூறுவானைத் தலையாயவன் என்பர் திருவள்ளுவர்.

"கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் றலை" (687)

என்னும் திருக்குறளும் அதன் விசேட உரையில் "வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலைகொடுத்து நிற்பானையும் கூட்டித் தூதரைத் தலையிடை கடை என்று வகுத்துக் கூறினாராகலின் அவர் மதமும் தோன்றத் தலை என்றார்" என்னும் பரிமேலழகர் உரைக்குறிப்பும் ஈண்டுக் கருதத்தக்கன.

தூது என்னும் அதிகாரத்தில் பரிமேலழகர் எழுதிய அவதாரிகையாலும் உரைக்குறிப்புக்களாலும் தான் வகுத்துக்கூறுவான் முதலிய தூதுவரின் இயல்புகளை அறியலாம்.

[3] ஊர்தி—குதிரை முதலியன.

[4] பகைவர் நாட்டைக் குறித்துப் புறப்படவேண்டும் என்பது.

என்று அடிக்கடி நினைவுகூர்ந்து செல்லக்கடவன். காடுகாவலன், எல்லைகாவலன், நாடு நகரங்களிலுள்ள சிறந்த மக்கள் என்னும் இவர்களோடு [5]நட்புக்கொள்ளல்வேண்டும்; தன் அரசனுக்கும் பகைவனுக்கும் உள்ள படை தங்குமிடம், போர் தொடங்கும் இடம், பின்னடையும் இடம் என்னும் இவற்றை அறிந்து கொள்ளல்வேண்டும். [6]அரணின் அளவு, நாட்டின் அளவு சிறந்த பொருள், உயிர்வாழ்க்கை, பாதுகாப்பு, நுழைவழி என்னும் இவற்றையும் அறிதல்வேண்டும். பகைவனது இடத்தில் அவன் உடன்பாடுபெற்றுப் புகுதல்வேண்டும். தன்னுயிர்க்குக் கேடு விளையும் என்று தோன்றினும் தன் அரசன்கட்டளையை [7]அவன் கூறியவாறே கூறல்வேண்டும். தன் தூதுரையில் பகைவன் மகிழ்ச்சியுடையனாயின், அவன் சொல், முகம், கண்களில் [8]தெளிவும், தன் உரையில் மதிப்பும், [9]நலம் வினுதலும், [10]குணங்களைக் கூறுங்கால் விருப்பமும், [11]அருகில் இருக்கையளித்தலும், பெருமைப்படுத்தலும், [12]விரும்பிய பொருளை நுகருங்கால் நினைத்தலும், நம்பிக்கை மேற்கோடலும் ஆகிய இவற்றைக் காணலாம். மகிழ்ச்சியிலனாயின் இவ்வெல்லாம் [13]மாறுபடக் காணலாம். அப்பகை

---

5 நட்புக்கொள்ளுமுகமாகத் தான் தூதுபோதலை அவர்கட்கும் தெரிவிக்கலாம் என்பது.

6 அரண் முதலியன ஈண்டுப் பகைவனைச் சார்ந்தனவாகக் காமந்தகர் கூறுவர்.

7 தன்னுயிர்க்கு அஞ்சிப் பிறழக் கூறலாகாது.

> " இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு
> உறுதி பயப்பதாம் தூது " (குறள். 690)

என்புழி இக்கருத்து வலியுறுத்தப்படுதல் அறிக.

8 தெளிவு—ஈண்டு மகிழ்ச்சிக்கு அறிகுறியான தெளிவு.

9 தன் அரசனது நலத்தைப்பற்றிக் கேட்டல்.

10 குணங்கள்—தன் அரசனது பெருமை முதலியன.

11 அருகு—அவன்பக்கல்.

12 இனிய உணவு முதலியவற்றை உண்ணுங்கால் தன்னை நினைத்தல்.

13 தூதுவன், தன் உரையில் பகையரசனுக்கு உண்டாகும் விருப்பு வெறுப்புக்களை இக்குறிகளான் உணர்ந்து தன் முடிவான உட்கோளைத் தெரிவித்தல்வேண்டும் என்பது கருத்து.

யரசனை நோக்கி "நீயும், மற்றைய அரசரும் தூதுவரை [14]முகமாக உடையீராவிர். ஆதலின் அன்னாரைக் கொல்லுதற்கு வாளையுருவினும், அவர் தம் அரச்ன் கூறியபடியே கூறும் கடப்பாடுடையர் ஆவர்! தூதுவர் சண்டாளராயினும் அவரைக் கொலைபுரிதல் ஆகாது; எனின் அந்தணரைப்பற்றிக் [15]கூறவேண்டுவதென்? இந்நீதியுரை [16]பிறர் கூறியதாகும். இதுவே தூதுவர்க்குரிய அறமுமாகும்" என்று கூறல்வேண்டும்.

[17]அவன் விடைதருங்காறும் ஆங்கே இருத்தல்வேண்டும் அவன் செய்யும் சிறப்புக் குறித்துச் செருக்குறலாகாது; பகைவர் பால் தான் ஆற்றலுடையவன் என்னும் எண்ணத்தை வெளியிடலாகாது. தனக்கு வெறுப்பு விளைக்கும் சொற்களைப் பிறர் கூறினும் பொறுத்தல்வேண்டும். கட்காமங்களை ஒழித்தல்வேண்டும். தனித்து உறங்கல்வேண்டும். [18]களிப்பிலும், உறக்கத்தினும் உள்ளம் அறிந்தது [19]வெளிப்படுதல் கண்கூடாம். [20]தீயவரை வேறு

---

[14] அரசர் தத்தம் கருத்துக்களைப் பிறர்க்குத் தெரிவித்தற்கும், பிறர் கருத்துக்களைத் தாம் தெரிந்துகொள்ளுதற்கும் தூதுவரே வாயில்களாக உள்ளார் என்பது கருத்து.

[15] கொலைபுரிதல் ஆகாதென்பது கூறுமலே விளங்கும் என்றபடி.

"மாதரைக் கொலைசெய்தார்கள் உளரென வரினும் வந்த
தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்"
(சுந்தர-பிணிவீ-செ. 113)

என்பர் கம்பர்.

[16] பிறர்—பண்டை நீதிநூலோர்.

[17] அவன்—பகையரசன்.

[18] கட்காமங்களை ஒழித்தற்கும், தனித்து உறங்குதற்கும் ஏதுக் கூறப்படுகின்றது; களித்தல்—கள்ளுண்டு மயங்கல்.

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றும்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" (குறள். 688)

என்பது ஈண்டு நினைக்கத்தக்கது.

[19] வெளிப்படுதல்–பிதற்றுரையால் தன்னையறியாமல் உண்மை வெளிப்படுதல்.

[20] தீயவரும், நல்லோரும் ஈண்டுப் பகைவனைச் சார்ந்தோர்; அன்னாரை அவன் வேறுபடுத்தலையும், ஒற்றுமையையும் தூதுவன் அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

படுத்தலையும், நல்லோரைக் குறித்து ஒற்றுடலையும், அமைச்சர் முதலியோர்க்கு அரசன்பாலுள்ள விருப்பு வெறுப்புக்களையும், [21]புரைநெறியையும் தாபதர், வைதேககர் என்னும் ஒற்றரால் அறிதல்வேண்டும். [22]அன்னாருடைய மாணவர்களாதல் மருத்துவன், [23]பாசண்டன் என்னும் உருக்கொண்ட ஒற்றராதல் [24]ஈரிடத்தும் கூலிபெறுவோராதல் அவர்களோடு பேசுதற்கு வாய்ப்பு இல்லையானால், இரப்போன், களித்தவன், [25]மருளன், உறங்குவோன் இவர்களின் பிதற்றுரையாதல்,[26]அறக்கோட்டம், திருக்கோயில் என்னும் இவற்றில் வரையப்படும் ஓவியங்கள், சங்கேத எழுத்துக்களாதல் பகைவர் செய்தியை அறிந்து கொள்ளல்வேண்டும். அறிந்த செய்திக்கேற்ப வேறுபடுத்தலை மேற்கொள்ளவேண்டும். தன்னுடைய [27]பகுதிகளின் [28]அளவைப் பற்றிப் பிறர் கேட்பினும் கூறலாகாது. [29]"எல்லாவற்றையும் தாங்கள் அறிவீர்கள்" என்று கூறல்வேண்டும். அல்லது [30]காரியம் முடிவுறுதற்கு வேண்டிய அளவு கூறக்கடவன்.

---

21 புரைநெறி—குற்றங்காணும் வழி.

22 அன்னார்—தாபத வைதேககர்கள்.

23 பாசண்டர்—வேதத்துக்குப் புறம்பான சமயக்கொள்கையுடையார்.

24 ஈரிடத்தும்—பகையரசனிடத்தும், தன்னரசனிடத்தும்.

25 மருளன்—பைத்தியம் பிடித்தவன்.

26 அறக்கோட்டம் — நீர்த்துறை, செபமண்டபம், முனிவரிருக்கை முதலியன ; ஒற்றர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தற்குரிய அறக்கோட்டம் திருக்கோயில்கள் முதலியவற்றின் சுவர்களில் தாம் அறிந்த செய்திகளை ஓவியங்களாலும், அடையாள எழுத்துக்களாலும் புலப்படுத்தல்வேண்டும் என்பது கருத்து.

27 பகுதிகள்—அமைச்சர் முதலாயினோர்.

28 பகுதிகள் இத்துணையர் என்பதையும், அவர் தம் வன்மை மென்மைகளைப்பற்றியும் கூறலாகாது என்பது கருத்து.

29 ஒற்றுக்கண்ணால் தாங்கள் அறியாதது என்னை ? என்பது கருத்து.

30 பகுதிகளின் அளவை எவ்வளவு கூறினால் காரியம் நிறைவேறுமோ அத்துணை கூறவேண்டும் என்பது.

[31]காரியத்தை முடிப்பதில் காலந்தாழ்த்துத் தடைப்படுத்தப் பட்ட தூதுவன் [32] "என்னுடைய அரசனுக்கு அணிமையில் ஏற்படும் கேட்டை எதிர்பார்த்தோ? அன்றித் தனக்கேற்பட்ட கேட்டைப் போக்க விரும்பியோ? அன்றி நம் பகைவனுக்கு நண்பனையாதல், [33]அவனுடைய நண்பனையாதல், காட்டுத்தலைவனை யாதல் போர்செய்யும்படி தூண்ட விரும்பியோ? [34]பகுதிக்குள் வெறுப்பை உண்டுபண்ண விரும்பியோ? அன்றி நம்மரசனுடைய [35]முற்புறத்து நண்பனையாதல் பிற்புறத்து நண்பனையாதல் கொலை புரியக் கருதியோ? அன்றி தனக்குப் பிறரோடு ஏற்பட்ட போரை அடக்க விரும்பியோ? தன் பகுதிக்குள் ஏற்பட்ட வெறுப்பை நீக்க நினைந்தோ? தன் காட்டுத்தலைவனை அடக்கக் கருதியோ? அன்றி நம் தலைவனுக்கு அனுகூலமாக நேர்ந்திருக்கும் போர்ச் செலவைத் தடைப்படுத்த எண்ணியோ? கூலம், குப்பியம், ஏனை விலைப்பொருள் இவற்றைத் தொகுக்க எண்ணியோ? அரண்களைச் செப்பனிடக்கருதியோ? படைகளைத் திரட்ட எண்ணியோ? அன்றித் தன் படைகளின் உடற்பயிற்சிக்கு ஏற்பக் [36]காலம் இடங்களை எதிர்பார்த்தோ? [37]வெறுப்புக் காரணமாகவோ? [38]உவகை காரணமாகவோ? மணம் முதலிய தொடர்பை விரும்பியோ? எக்காரணத்தால் என்னைத் தடைப்படுத்துகின்றான்?" என்று ஆராயக்கடவன். அவ்வாராய்ச்சியால் காரணத்தைத் துணிந்து

---

31 தூதுவன், தான் குறித்துவந்த சந்திமுதலிய காரியங்களைப் பகையரசன் உரியகாலத்தில் நிறைவேற்றாமலும், மீண்டுபோதற்கு விடைதராமலும் காலம் தாழ்ப்பானேல் அப்பொழுது தான் ஆராயவேண்டுவன இன்னவெனக் கூறப்படுகின்றன.

32 "என்னுடைய" என்பது தொடங்கி "என்னைத் தடைப்படுத்துகின்றான்" என்பதுவரையுள்ள செய்திகள் தூதுவனுடைய ஐயத்திற்கிடமான ஆராய்ச்சிக் கருத்துக்களாம்.

33 அவன்—பகைவனுக்கு நண்பன்.

34 பகுதி—தன் அரசனைச்சார்ந்த அமைச்சர் முதலியோர்.

35 "முற்புறம், பிற்புறம்" என்பன தன் அரசனுடைய நாட்டை அடுத்து முன்னும் பின்னும் உள்ள நட்டோர் நாடுகள்.

36 போர்செய்தற்குத் தக்க காலம், இடங்களை என்பது கருத்து.

37 வெறுப்பு—தன் பகுதிகளுக்குள் இவன் கலகம் விளைத்தான் என்னும் எண்ணத்தால் உண்டாயது.

38 உவகை — தன்னோடு உடன்வைத்துக்கொள்ள எண்ணியதால் உண்டாயது.

[39]இருத்தல், அல்லது ஓடிப்போதல்வேண்டும். [40]தனக்கு விருப்பமான பயனை எதிர்பார்த்திருத்தல்வேண்டும்; அல்லது பகைவனுக்கு வெறுக்கத்தக்க தன்னரசன் கட்டளையைச் சொல்லிவிட்டுத் தன்னைச் சிறைப்படுத்தவும், கொலைபுரியவும் கூடும் என்னும் அச்சத்தால், அவன் உடன்பாடுபெறுமலே ஓடிவிடல்வேண்டும். இன்றேல் தளைப்படுத்தப்படுவன்.

சுலோகங்கள்

(1–2) [41]செய்தி உய்த்தல், [42]செய்த சந்தியைக் காத்தல், வீரமுடைமை, நட்பாக்கல், வேறுபடுத்தல், நட்டோரைப்பிரித்தல், படைகளையும், ஒற்றரையும் தன்வயப்படுத்தல், [43]உறவினரையும், மணிமுதலியவற்றையும் கவர்ந்துகோடல், [44]ஒற்றரியல்பறிதல், பராக்கிரமம் நம்பிக்கை நிமித்தம் வைத்த [45]பொருளை விடுவித்தல், [46]மறைவுச்செயலை மேற்கோடல் இவ்வெல்லாம் தூதுவன் செயல்களாம்.

(3) அரசன் இச்செயல்களைத் தன் தூதுவரைக்கொண்டு செய்வித்தல்வேண்டும். எதிராக விடுக்கும் தூதுவராலும், ஒற்றராலும், மறைவாகவும், வெளிப்படையாகவும் உள்ள காவலராலும் பகைப்பக்கத்துத் தூதுவரைக் [47]காத்தல்வேண்டும்.

முதலதிகரணம் பன்னிரண்டாம் பிரகரணம்
“ தூதுவிடுத்தல் ” என்னும் பதினாறும் அத்தியாயம்
முற்றிற்று.

---

39 தன்னைத் தடைப்படுத்தியதற்கு அன்பு காரணமாயின் ஆண்டு இருத்தல்வேண்டும்; வேறு காரணமாயின் அவ்விடத்தினின்றும் ஓடிப்போதல்வேண்டும் என்பது கருத்து.

40 பகைவனது ஊரிலேயே இருந்து தன் அரசனுக்கு ஒற்றர்முகமாகச் செய்திகளை உய்த்துப் பகைவன் செய்யும் கேடுகளுக்கு எதிர்ச்செயலைச் செய்விக்கவேண்டும் என்பது கருத்து.

41 செய்தி உய்த்தல்—பகைவன் நாட்டில் தான் அறிந்த செய்திகளைத் தன் அரசனுக்கு அனுப்புதல்.

42 சந்தியைக் காத்தல்—வெளிப்படாமல் மறைத்தலும், சிதைவுறுமல் போற்றலுமாம்.

43 உறவினர்—பகைவனைச் சேர்ந்தோர்.

44 தன் அரசனைச்சார்ந்த ஒற்றர்களின் தன்மையை ஆராய்தல்.

45 பொருள்—தான் செய்யும் சந்தியில் பகையரசனிடத்தில் நம்பிக்கைக்கு ஈடாக வைக்கப்பட்ட புதல்வர் முதலியோர்.

46 மறைவுச்செயல்—14-ஆம் அதிகரணத்தில் 1—2 பிரகரணங்களில் கூறப்படும் மருந்து மந்திரங்களால் மறைந்துசெய்யும் கொலை முதலியன.

47 காத்தல்—பகைவனுடைய தூதுவர் தன்னாட்டில் உள்ளாரை நட்பாக்கல் முதலியன செய்யாவாறு விழிப்புடன் இருத்தல்.

பதின்மூன்றும் பிரகாணம்—[1] காவலன்புதல்வர் காப்பு

பதினேழாம் அத்தியாயம்

தன் அருகிலுள்ளார், பகைவர் என்னும் இவர்களிடத்தி னின்றும் [2]தன்னைக் காத்துக்கொள்ளும் அரசன் தன்னாட்டைக் காப்பவனாவான். [3]முதலில் [4]மனைவி மக்களிடத்தினின்றும் தன்னைக் காத்துக்கொள்ளல்வேண்டும். மனைவியைக் காத்தல் "அரண்மனை அமைத்தல்" என்னும் பதினேழாம் பிரகரணத்திற் கூறப்படும்.

இனிப் புதல்வர் காப்புக் கூறப்படுகின்றது. பிறப்பு முதல் தன் புதல்வர்களை அரசன் காத்தல்வேண்டும்; என்னை? அரசன் புதல்வர் [5]நண்டோடு ஒத்த இயல்பினராய்ப் பெற்றோரை அழிப்

பதினேழாம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசன் தன் மக்களால் தனக்குக் கேடுவாராமல் காத்தல் என்பது பொருள். தூதுவிடுத்தல் முதலியவற்றால் அரசன் குடிகளைக் காக்கவேண் டும் என்பது முன்னர்க் கூறப்பட்டது. இதன்கண் அவ்வரசன் தனக்குக் கேடுவாராமலிருக்கும்படி தன் மக்களைக் காக்குமுகமாகத் தன்னைக் காத்துக் கோடல் கூறப்படுகின்றது; இதனால் பிரகரண இயைபு புலனாதல் அறிக.

[2] தன்னைக்காத்தல்—அருகிலுள்ளார் முதலியோரால் தனக்குத்தீங்கு நேராமல் காத்துக்கோடல்.

[3] மனைவி மக்களே அரசனுக்குக் கேடுவிளைப்போருள் முதல்வராவர் என்பது கருத்து.

[4] அருகிலுள்ளார் இன்னார் என்பதை வெளிப்படுத்துக் கூறுகின்றார்.

[5] "நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக் கொண்ட கருவழிக் கும் கொள்கைபோல்" என்றபடி நண்டு தான் பிறக்கும்போதே தாயை அழித்துப் பிறக்கும் என்ப. நண்டுக்குக் "குளீரம்" என்னும் பெயருண்மை யும் இதனை உறுதிப்படுத்துவதாம். "குளீரம்" என்பதற்குக் "குலத்தைக் கெடுப்பது" என்பது பொருள். "தாய்சாப் பிறக்கும் புள்ளிக்கள்வன்" (ஐங்குறுநூறு-செ. 24) என்பதும் ஈண்டு நினைக்கத்தக்கது.

பவர் ஆதலின், தந்தைக்கு மக்களிடத்து [6]அன்பு உண்டாதற்கு முன்னரே அவரை மறைவிற் கொன்றுவிடவேண்டும் என்பது பாரத்துவாசர் கொள்கை.

[7]மறைவிற் கோறல் மிகக்கொடிய செயலாகும்; அரசர் குலத்திற்கு அழிவும் உண்டாம். ஆதலின் [8]ஓரிடத்தில் அப்புதல்வரைப் பாதுகாப்பில் இருக்கச்செய்தல் சிறந்ததென்பது விசாலாக்கர் கொள்கை. இங்ஙனம் செய்வது [9]பாம்புடன் பழகுதல் போல்வதாம். "என் வீரத்திற்கு அஞ்சி என் தந்தை என்னைப் பாதுகாப்பில் வைத்திருக்கின்றான்" என்று அறிந்து புதல்வன் அவ்வீரச் செயலை [10]அணிமையிலே செய்தல்கூடும். ஆதலின், நாட்டின் [11]எல்லைகாவலனது அரணில் இருக்கச்செய்தல் நலமாகும் என்பது பராசரர் வழியினர் கொள்கை.

---

6 அன்பு உண்டாயின் கொலைப்படுத்த மனம் இடந்தராது என்பது கருத்து. ஈண்டு அரசியன் முறைபற்றி மக்களைக் கொன்றுவிடவேண்டும் என்று கூறினாராயினும் இது மிகக்கொடியது. தமிழர் கொள்கை,

"தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்" (குறள்-63)

எனவும் "பொன்போற் புதல்வர்" (புறம்-9) எனவும் "மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே" (புறம்-செ. 188) எனவும் கூறியவாற்றால் மக்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும் என்பதும், மகப்பேறின்மை தீவினைப்பயனாகும் என்பதுமாம்.

7 குற்றமற்ற சிறுவரைக் கொல்லுதல் பெரும் பாவமாகும் என்பது.

8 உவளகத்தில் ஓரிடத்தில் வைத்துக் காத்தல்வேண்டும் என்பது.

9 இக்கருத்து,

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று" (890)

என்னும் குறளில் தெளிவுறுத்தப்பட்டிருத்தல் அறிக.

10 அணிமையில்—சமீபத்தில் உள்ள தன் இல்லத்தில்.

11 தொலைவில் இருத்தினால் எளிதிற் புதல்வன் வீரச்செயலைக் காட்ட இயலாது என்பது கருத்து.

[12]இஃது ஆட்டுக்கடாவின் செயல்போல் அஞ்சுதற்கு இடனாகும். [13]இயற்கைக்குணம் மாறுதலடையாமையால் [14]அக்காரணத்தையே அறிந்து எல்லாவற்றையும் [15]நட்டோனாக உடையனாவான். ஆதலால், தன்னாட்டினின்றும் சேய்மையிலுள்ள வேற்று நாட்டு வேந்தனது அரணுள் இருக்கச்செய்தல் நலமாகும் என்பது நாரதர் கொள்கை. இஃது ஆவின் கன்றின் கட்டுத்துறை போல்வதாம். கன்றைக்காட்டி ஆவைப் பால் கறப்பதுபோலப் புதல்வனைக் காட்டித் தந்தையின் பொருளை அவ்வேற்றுநாட்டு வேந்தன் கவர்ந்துகொள்ளுவான். ஆதலின் [16]தாய்வழிப்பட்ட உறவினர் பக்கல் இருக்கச்செய்தல் சிறந்ததாகும் என்பது வீடுமர் கொள்கை.

[17]இஃது அறிகுறி போல்வதாம். அக்குறிகளைக்கொண்டு ஐயமேற்பவளும் பாம்பாட்டியும் ஐயமேற்றல்போல, இவ்வரசகுமாரனுடைய தாய்வழி உறவினர் பொருளை இரந்து பெறுவோராவார் ஆதலின், அவனைச் சிற்றின்பத்துறையில் விடல்வேண்டும்.

---

12 ஓர் ஆட்டுக்கடா தன்னெதிரிலுள்ள மற்றோர் ஆட்டுக்கடாவோடு போர் செய்தற்கு முயன்று பின்வாங்குதல் பொருதற்குரிய வலிமையை மிகுத்துக்கோடற் பொருட்டாம். அதுபோல, தந்தைக்குக் கேடுவிளைக்க விரும்பிய புதல்வன் சேய்மையிடத்திருத்தல் ஆற்றலை மிகுத்துக்கொள்ளுதற்கு ஏதுவாகலின், அஃது அஞ்சுதற்கு இடனாம் என்பது கருத்து.

"ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து" (486)

என்னும் குறட்கருத்து ஈண்டு நினைக்கத்தக்கது.

13 இயற்கைக்குணம்—தந்தைக்குத் தீங்குவிளைக்கும் எண்ணம்.

14 அக்காரணம்—தன் வீரத்திற்குத் தந்தை அஞ்சியதாகக்கொண்ட எண்ணம்.

15 இதனால் துணைவலி உண்டென்பது புலப்படுத்தவாறு.

16 தசரதன் தன் புதல்வன் பரதனைத் தாய்வழிப்பாட்டன் வீட்டிற்கு அனுப்பியதும் இது கருதிப்போலும்.

17 அறிகுறி—ஐயமேற்பவள், பாம்பாட்டி என்னும் இவர்கள் ஐயம் ஏற்றற்கு ஏதுவாக முறையே காட்டும் தெய்வப்படிவங்களும், பாம்புமாகிய அடையாளங்கள். இதுபோலத் தாய்வழி உறவினர் அரசனிடத்தி லிருந்து பொருளைக் கவருதற்கு அவன் புதல்வனை நிமித்தமாகக் கொள்ளுவர் என்பது கருத்து.

சிற்றின்பத்தில் ஈடுபட்ட புதல்வர் தம் தந்தைக்குக் [18]கேடு விளைக்கமாட்டார். இஃது உத்தவர் கொள்கை.

[19]இஃது உயிருடன்கூடிய நிலையிலுண்டாம். [20]இறப்புக்கு ஒப்பாகும். [21]உளுக்குடைந்த மரம்போல நூற்பயிற்சி முதலியன இல்லாத புதல்வரையுடைய அரசகுலம் எதிர்க்கப்பட்ட அளவிலேயே அழிந்துவிடும் ஆதலின், பெருந்தேவி [22]பூப்புடையளாக இருக்கும்பொழுதே [23]வேட்பிப்போர் [24]இந்திரனையும் வியாழனையும் தலைவராகக் குறித்துக் கொடுக்கப்படும் அவியையுடைய வேள்விகளைச் செய்தல்வேண்டும். அவள் கருவுற்றதும் குழந்தை மருத்துவன், கருவளர்தற்கும் மகப்பெறுதற்கும் பெரிதும் முயன்று உதவிபுரிதல் வேண்டும். புதல்வனைப் பெற்ற பின்னர்ப் புரோகிதன் அப்புதல்வனுக்குரிய சாதகன்மம் முதலிய கிரியைகளைச் செய்தல்வேண்டும். பற்பல கலைகளினும் தேர்ச்சிபெற்ற ஆசிரியர் தக்க பருவத்தில் அப்புதல்வனைக் கற்பித்தல்வேண்டும். இவ்வெல்லாம் கௌடலியர் கொள்கைகளாம்.

---

18 சிற்றின்பத்தில் ஈடுபட்டமையால் பிறிதொன்றையும் கருதார் என்பது. "தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்பர் பரஞ்சோதியார். (திருவிளையாடற்பு-படலம்-1-செய்-4)

19 இஃது—சிற்றின்பத்தில் ஈடுபடுதல்.

20 நூற்பயிற்சி முதலியன செய்விக்கப்படாமையாலும், விதனங்களாலும் உடல்வலி அறிவு முதலியன கேடுறுதலின் இறப்புக்கு ஒப்பாகும் என்பது கருத்து.

21 உளுத்தமரம் தொட்ட அளவிலேயே முறிந்துவிடுதல்போல நன்மக்களையில்லாத அரசர்குலம், பகைவர் பொரக்கருதிய அளவிலேயே அழிந்துவிடும் என்பதாம்.

22 பூத்தபின் பன்னிரண்டு நாட்களும் பூப்புநாட்களாகக் கருதப்படும். அந்நாட்களே கருக்கொள்ளுதற்கு ஏற்ற காலமாகும். இதனைப்பற்றிய விளக்கங்களை மூன்றும் அத்தியாயம் 6-ஆம் குறிப்பிற் காண்[illegible]

23 வேட்பிப்போர்—வேள்வி செய்விப்போர்.

24 செல்வம், வலிமை முதலியவற்றை அடைதற்கு இந்திரனையும், கல்வி, அறிவு முதலியவற்றை அடைதற்கு வியாழனையும் வேள்வியால் மகிழ்வித்தல்வேண்டும் என்பது கருத்து.

[25]ஒற்றருள் ஒருவன் இவ்வரசகுமாரனை வேட்டையாடல், சூது, கள் காமம், முதலியவற்றில் ஈடுபடுத்தி "தந்தையினிடத்தில் ஆண்மையைக்காட்டி நாட்டைக் கவர்ந்துகொள்க!" என்று கூறல்வேண்டும். மற்றோர் ஒற்றன் தடுத்து உரைத்தல்வேண்டும் என்பது [26]ஆம்பீயர் கொள்கை.

[27]நினையாத தீங்கொன்றை நினைப்பித்தல் பெருங்குற்றமாம் என்பது கௌடலியர் கொள்கை. புதிய மட்பாண்டம் முதலியன எவ்வெப் [28]பொருள்களோடு தோய்கின்றனவோ அவ்வப் பொருள் களைத் தம்முட்படுத்திக்கொள்ளும். அதுபோலப் [29]புத்தறிவு உடைய இவன் யார் எது கூறினும் அதனை நூல் அறிவுறுப்பது போல உட்கொள்வன். ஆதலின் அறத்தையும், [30]நலத்தையும் இவனுக்கு உபதேசித்தல்வேண்டும்; மறத்தையும், [31]கேட்டையும் கூறலாகாது.

ஒற்றர்கள் அவனை நோக்கி "யாங்கள் நின்னைச் [32]சேர்ந்தவர் கள் ஆவோம்" என்றுசொல்லிக் [33]காத்தல்வேண்டும். இளமைக் களிப்பால் வேற்று மகளிர்பால் உள்ளம் செலுத்துவானாயின் சிறந்த பெண்களின் உருக்கொண்ட தூய்மையில்லாத இழிந்த மகளிரைக்கொண்டு இரவில் பாழறையில் அவனுக்கு அருவருப்பு உண்டாக்குதல் வேண்டும். கள்ளுண்ண விரும்புவானாயின் [34]கலப்புக் கள்ளினால் வெறுப்புண்டாக்கல் வேண்டும். சூதாடலை

---

[25] தந்தைக்குத் தீங்கு இழையாவாறு ஒற்றருள் ஒருவன் அவ்வெண் ணத்தை உண்டாக்கவும் மற்றொருவன் விலக்கவும்வேண்டும். ஈண்டுக்கூறிய வேட்டையாடல் முதலியவற்றை அரசற்கு வேண்டாத விதனங்கள் என்பர்;

"வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டம் சூதுபொருள்
ஈட்டம் கட் காமமோ டேழு" (குறள்-566 உரை மேற்கோள்).

[26] ஆம்பீயர்—ஓர் இருடி; வீடுமன் வழிப்பட்டோர் என்றுங்கூறுப.

[27] நினையாத தீங்கு—தந்தைக்குக் கேடிழைத்தல்.

[28] பொருள்கள்—நீர், நெய் முதலியன.

[29] புத்தறிவு—நன்மை தீமைகளின் பாகுபாடு அறியாத அறிவு.

[30] நலம்—நன்மை பயக்கும் செயல்கள்.

[31] கேடு—தீமை பயக்கும் கட்காமம் முதலியன.

[32] சேர்ந்தவர்கள்—பணியாளர்கள்.

[33] காத்தல்—விதனங்களில் தலையிடாவாறு தடுத்தல்.

[34] கலப்புக் கள்—வெறுக்கத்தக்க சுவைப்பொருள் கலந்த மது.

விரும்புவானாயின், வஞ்சச் சூதர்களால் ஏமாற்றி வெறுப்புறச் செய்தல்வேண்டும். வேட்டையை விரும்புவானாயின் ஆறலைகள்வர் உருக்கொண்டவர்களைக்கொண்டு அச்சுறுத்தல்வேண்டும். தந்தையைக் கொலைபுரிய நினைப்பானாயின், அப்படியே ஆகவென [35]உடன்பட்டு "அரசன் வெறுக்கத்தக்கவன் அல்லன். [36]முயற்சி பயன் விளைக்கவில்லையாயின் நினக்கே கொலை நேரும். பயன் விளைக்குமாயின் நிரயத்துன்பம் நேரும். பழியும் உண்டாம். குடிமக்கள் எல்லோரும் ஒன்றுகூடி [37]தலைக்கொரு கல்லாலெறிந்து நின்னைக் கொன்றுவிடவும் கூடும்" என்று அவன் உள்ளத்தை வேறுபடுத்தல்வேண்டும்.

அரசன் தன்பால் அன்பில்லாதவனும், தன் அன்பிற்குரியவனும் ஆகிய மகன் ஒருவனேயாயின் அவனைச் சிறைப்படுத்தல் வேண்டும். மக்கள் பலராயின், அவருள் தனக்கு மாறுபட்டவனை [38]நல்ல உணவு உடை முதலியனவும் [39]அரசியற் கலகமும் இல்லாத [40]அநாகரிகர் வாழும் நாட்டிற்காவது வேறு நாட்டிற்காவது துரத்தல்வேண்டும். தன்னோடு மாறுபாடில்லாத நன்மகனைப் படைத்தலைமை, இளவரசு என்னும் பதவிகளில் இருத்தல் வேண்டும்.

அறிந்து செய்பவன், அறிபவன், அறிவிலான் எனப் புதல்வர் முத்திறப்படுவர். [41]நூல்களைக் கற்று அறம்பொருள்களை அறிந்து அந்நெறி ஒழுகுவோன் அறிந்து செய்பவனாவான். கற்றறிந்தும் அந்நெறி ஒழுகாதவன் அறிபவனாவான். என்றும் விழிப்பின்றி அறம்பொருள்களை வெறுப்பவன் அறிவிலானாவான்.

அவ்வறிவிலான் அரசனுக்கு ஓரே புதல்வனாக இருந்தால் அப்புதல்வனுக்குப் [42]புதல்வனை உண்டாக்குவதில் பெரிதும்

---

35 உடன்படுதல், சொல்லளவில்.

36 முயற்சி—தந்தையைக் கொலைபுரிதற் பொருட்டு மேற்கொண்டது.

37 தலைக்கொரு கல்லாலெறிந்து—ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல்லால் எறிந்து.

38 "நல்ல" என்பது ஈண்டு அரசகுமாரனுக்கேற்ற சிறப்புடைய என்னும் பொருளைக் குறிக்கும்.

39 அரசகுமாரன் நிமித்தம் குடிமக்கள் விளைக்கும் கலகம் என்பது.

40 அநாகரிகரை "மிலேச்சர்" என்று முதனூல் கூறும்.

41 கல்வி அறிவு ஒழுக்கம் இம்மூன்றும் உடையோன் தலையாயவன் என்பது.

42 அரசியலுக்குத் தகுதியான புதல்வனை என்பது.

முயலல்வேண்டும். அன்றிப் [43]புதல்விக்குப் புதல்வரை உண்டாக்க முயலல்வேண்டும். அரசன் [44]மூப்புடையனுக அல்லது நோயுடையனுக இருப்பின் தன் தாய்வழி உறவினர், தன் குலவழியினர், நற்குணமுடைய வேற்றுமன்னர் என்னும் இவருள் ஒருவனைக் கொண்டு தன் மனைவியினிடத்துப் புதல்வனை உண்டுபண்ணிக் கொள்ளலாம். ஒரே மகனுயினும் நூலறிவுடையன் அல்லனுயின் அவனை அரசியலில் இருத்தலாகாது.

சுலோகங்கள்

(1) புதல்வர் பலருள் ஒருவன் அறிவிலானுக இருப்பின் அவனை அயல்நாட்டுக்குத் துரத்திவிடலாம். தனக்குத் தீங்கு நேராதவழித் தந்தை மக்களுக்கு நலஞ்செய்பவனுகவே இருக்க வேண்டும். அரசுரிமை [45]முதல்மகனை அடைவதே பாராட்டத் தக்கது.

(2) அன்றித் தன் [46]குலத்திற்கே அரசியலை உரிமையாக்கலாம். குலக்குழுவைப் பகைவர் வெல்ல இயலாது. மேலும் அரசனுடைய விதனங்களால் குடிமக்களுக்கு உண்டாகும் [47]துன்பமும் நிலவுலகத்தில் என்றும் இராது.

முதலதிகரணம் பதின்மூன்றும் பிரகரணம்
"காவலன்புதல்வர் காப்பு" என்னும் பதினேழாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[43] புதல்வி— இவளுக்குப் பிறக்கும் புதல்வன் எனக்கு மகனுவான் என்று உறுதி கூறி மணம் செய்துகொடுக்கப்பட்ட மகள். பாண்டியன் மகள் சித்திராங்கதையை அருச்சுனனுக்கு மணஞ்செய்த வரலாறு இதற்குச் சான்றும்.

[44] பெண்மகவும் இல்லாதவனுய், மூப்பினுலும் நோயினுலும் புதல்வர்ப் பேற்றிற்குத் தகுதியில்லாதவனுகவும் இருப்பின் என்பது கருத்து. ஓர் அரசன் சந்ததியை உண்டுபண்ணுதற்குக் தகுதியில்லாதவனுக இருக்கும் பொழுது பிறன் ஒருவனைக்கொண்டு தன் மனைவியிடத்துச் சந்ததியை உண்டாக்கிக்கொள்ளலாம் என்னுமிது தமிழர் ஒழுக்கத்திற்கு மிகவும் மாறுபட்டதாகும். மகாபாரதத்தில் வியாசர், தாயின் கட்டளைப்படி தம்பியர் மனைவியரோடு கூடிச் சந்ததியை உண்டுபண்ணியதும் பாண்டு மன்னன் புதல்வர்ப்பேற்றை அடைந்ததும் காணப்படுதலால் இஃது ஆரியர் கொள்கை என்பது புலனும்.

[45] எல்லா மக்களும் தந்தைக்கு ஏற்ற தகுதியுடையராயின் அரசுரிமைக்கு உடையார் இன்னுர் என்பது.

[46] குலமென்றது ஈண்டு நன்மக்கள் எல்லோரையும் குறிக்கும்.

[47] மக்கள் பலருள் ஒருவன் கெட்டவனுக இருப்பினும் மற்றையோரால் அரசியல் நன்கு நடைபெறும் என்பது கருத்து.

பதினான்கு பதினைந்தாம் பிரகரணங்கள்—[1] விலக்கப்படும் மக்கள் வேந்தன்பாலொழுகல், விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல்

பதினெட்டாம் அத்தியாயம்

துன்பவாழ்க்கையுடைய அரசகுமாரன் தன் உயிர்க்குத் தீங்கு விளைத்தல், குடிமக்களுக்கு வெறுப்பு விளைத்தல், பாவம் உண்டாதல் என்னும் இவையொழிந்த செயல் தன் தகுதிக்குப் பொருந்தாது எனினும் தந்தை கட்டளையிடின் அதனைச் செய்யக்கடவன். நற்செயலைச் செய்யக் கட்டளையிடின் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு கன்மத்துணைவனை வேண்டி அடையவேண்டும். அக்கன்மத்துணைவனைப் பெற்றபின் தந்தையின் கட்டளையைச் சிறப்புறச் செய்தல்வேண்டும். இனிய அக்கன்மப் [2]பயனையும், [3]கையுறைப் பொருளாகிய ஊதியத்தையும் தந்தையின்பாற் [4]சேர்த்தல்வேண்டும்.

[5]அங்ஙனம் செய்தும் மகிழ்ச்சியடையாமல் [6]மற்றை மனைவி மக்கள்பால் அன்புபூண்டொழுகும் தந்தையினிடத்துத் தான்

18-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசனுடைய மக்கள் பலருள் ஒருவன் அரசுரிமைக்கு உரியனாக ஏனையோர் விலக்கப்பட்டவராவர். அன்னார் அரசன்பால் எவ்வாறு ஒழுகல் வேண்டும் என்பதைக் கூறுவது. முன்னைப் பிரகரணத்தில் "அரசகுமாரருள் தக்காரொருவன் இளவரசு முதலிய பதவிக்கு உரியவனாவான்" என்பது கூறப்பட்டது; மற்றைப் புதல்வரும் தகுதியுடையராயின் அன்னார் அரசனிடத்து எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது இதன்கட் கூறப்படுதலின் பிரகரண இயைபு புலனாம்.

[2] பயன்—கூலமுதலிய விளைபொருள்களும் பிறவுமாம்.

[3] கையுறை—உழவர் முதலியோர் இடத்தினின்றும் பெறுவது.

[4] தந்தைக்கு மகிழ்ச்சி உண்டாதற்பொருட்டுச் "சேர்த்தல்வேண்டும்" என்பது.

[5] அங்ஙனம் செய்தும்—கன்மப்பயன், கையுறைப்பொருள் இவற்றைக் கொடுத்தும்.

[6] மற்றை மனைவி—மாற்றாந்தாய்.

[7]காட்டிற்குச் செல்லுதற்பொருட்டு வேண்டிக்கொள்ளக் கடவன். [8]சிறைப்படுத்தல் அல்லது கொலைபுரிதல் கூடும் என்னும் அச்சந் தோன்றின், நன்னெறியில் ஒழுகுவோனும், அறவோனும், வாய்மையுடையோனும், பிறழ்ச்சியில்லாதவனும், அடைக்கலம் புகுந்தோரை ஏற்றுப் பெருமைப்படுத்துவோனும் ஆகிய வேற்றரசனை அடைதல்வேண்டும். வேற்றரசனிடத்திருந்து [9]பொருள், படை உடையவனுய்ச் சிறந்த வீரனுடைய மகளை மணத்தல், [10]காட்டுத் தலைவனை நட்புக்கோடல், தன் தந்தையின் தீயவர்குழுவைத் தன் வயப்படுத்தல் என்னும் இவற்றைச் [11]செய்தல்வேண்டும். [12]தனிப்பட்டவனுயின் இரசவாதம், மணி, [13]செஞ்சாந்து, பொன், வெள்ளி என்னும் விலைப்பண்டங்கள், ஆகரத்தொழில் என்னும் இவற்றைக் கொண்டு வாழ்தல்வேண்டும். இன்றேல் [14]பாசண்டக் குழுவின்

---

[7] காட்டிற்குச்சென்று தவம்புரிதற்பொருட்டுத் தந்தையின் உடன்பாடு பெற முயலல்வேண்டும் என்னும் இதனுல் தன் எளிமை குறித்துத் தந்தை இரங்கியருளுதல் கூடும் என்பது கருத்து.

[8] காட்டிற்குச்செல்ல அனுமதிவேண்டும் புதல்வன் வெறுப்பினுல் தனக்குக் கேடுவிளைக்கக் கூடுமென்று கருதி அரசன் அவனைச் சிறைப்படுத்த அல்லது கொலைபுரிய முற்படலாம். அதுகாரணமாக உண்டாகிய அச்சத்தால் தந்தைக்குத் தீங்குசெய்யும் நிமித்தம் புதல்வன் துணைவலிநாடி வேற்று அரசனை அடைதல்வேண்டும் என்பது கருத்து.

[9] இங்குக் கூறப்பட்ட பொருளும் படையும் தன்னுல் ஈட்டப்பட்டனவாம். சிறந்த வீரனுடைய மகளை மணத்தலும் காட்டுத்தலைவனுகிய குறுநில மன்னன் மகளை மணத்தலும் ஓரரசகுமாரனுக்குத் துணைவலியை உண்டாக்கும் என்னும் இதனை,

"நலிவில் குன்றொடு காடுறை நன்பொருட்
புலியனுர் மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொண் மன்னர் வழக்கென நேர்பவே"

(செய். 1919)

என்னும் சிந்தாமணிச் செய்யுளானும் உணர்க.

[10] காட்டுத்தலைவன்—தன் தந்தையைச் சார்ந்தவன்.

[11] துணைவலியைப் பெருக்குதற்கு இவற்றை மேற்கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[12] தனிப்பட்டவன்—பொருள் படை முதலியன இல்லாதவன்.

[13] செம்பஞ்சுக்குழம்பு முதலியனவுமாம்.

[14] பாசண்டர்களது சங்கத்திற்கு மூலமாகத் தொகுக்கப்பட்ட பொருள்.

பொருளையாதல், அந்தணர்க்குப் பயன்படாத [15]நாட்டுப் பொருளை யாதல் பொருள் மிகப்படைத்த கைம்பெண்ணின் பொருளை யாதல் [16]மறைவாக ஒழுகிக் கவர்ந்துகொள்ளலாம். அல்லது வாணிகக் கூட்டத்தாரை மயக்கத்தை விளைவிக்கும் கள் முதலிய வற்றால் வஞ்சித்து அவர்களுடைய மரக்கலங்களில் உள்ள பொருள் களைக் கவர்ந்துகொள்ளலாம். அல்லது பிறருடைய ஊர்களைத் தன்வயப்படுத்துதற்குரிய [17]உபாயத்தை மேற்கொள்ளலாம். அல் லது, தாயின் பணியாட்களின் உதவியினால் முயலலாம். அல்லது தச்சன், கொல்லன், சிற்பி, பாணன், மருத்துவன், பௌராணிகன், பாசண்டன் என்னும் இவர்கள் [18]உருவின் மறைந்து, அவ்வுருக் கொண்ட பிறரையும் துணைக்கொண்டு அரசனுக்குக் கேடுவிளைக் கும் வழியிற்புகுந்து படைகளாலும், நஞ்சாலும் அரசனைக் கொன்று அமைச்சர் முதலியோரை நோக்கி "யான் அரசகுமாரன்; [19]துணைவரோடு நுகரத்தக்க அரசியற்செல்வம் தனிமையாக நுகர இயலாததொன்று. அவ்வரசியலில் அமைச்சர் முதலிய பதவிகளை விரும்புவோர்க்கு யான் இருமடங்கு உணவும் கூலியும் தந்து நியமித்துப் பெருமைப்படுத்துவேன்" என்று கூறல்வேண்டும்.

முதலதிகரணத்தில் பதினான்காம் பிரகரணம் முற்றிற்று.

இனி "[20]விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல்" வருமாறு :—

விலக்கப்பட்ட மகனை அமைச்சர் முதலிய தலைவர்களின் புதல்வர்களாகிய ஒற்றராதல், அரசனால் பெருமைப்படுத்தப்பட்ட

---

15 நாட்டுமக்கள் பொதுநலத்திற்குத் தொகுக்கப்பட்ட பொருள்.

16 மறைவு—உதவிசெய்வார்போல் வஞ்சித்தல்.

17 உபாயங்கள் இன்னவென்பது "பகையரண் எய்தல்" என்னும் பதின்மூன்றும் அதிகரணத்தில் கூறப்படும்.

18 உருவின் மறைதல்—தன் இயற்கை உருவத்தை மறைத்துத் தச்சன் முதலியோர் உருவைக்கொள்ளுதல்.

19 அரசியற் செல்வநுகர்ச்சியில் அமைச்சர் முதலியோர்க்கு விருப் பத்தை உண்டாக்க இவ்வாறு கூறல்வேண்டும் என்பது கருத்து.

20 "விலக்கப்படும் மக்கள் வேந்தன்பால் ஒழுகல்" முன்னர்க் கூறப் பட்டது. இனி "விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல்" கூறப் படுகின்றமையின் பிரகரண இயைபு புலனும்.

அவன் தாயாதல் [21]அறிவுறுத்தி அழைத்துவரல் வேண்டும். [22]வெறுத்து ஒதுக்கப்பட்டவனை ஒற்றர்கள் படைகளானும் நஞ்சினாலும் கொன்றுவிடக்கடவர். [23]வெறுத்து ஒதுக்கப்படாதவனை ஒத்த ஒழுக்கமுடைய பெண்களிடத்தும், கள் முதலியவற்றிலும், வேட்டையாடலினும் ஈடுபடுத்தி இரவில் பிடித்துக்கொண்டுவரல் வேண்டும்.

சுலோகம்

அரசன் தன்பால் வந்த மகன் அறவோனாயின் அவனை நோக்கி "எனக்குப்பின் இவ்வரசு நின்பாலதாம்" என்று தேற்றி ஆறுதல் கூறல்வேண்டும். அம்மகன் அறவோனல்லனாயினும் ஒருவனாயின் அவனைச் சிறைப்படுத்தல்வேண்டும். மக்கள் பலராக, அவருள் ஒருவன் தீயோனாயின் அவனை நாட்டினின்றும் அகற்றல்வேண்டும்.

முதலதிகரணம் பதினான்கு பதினைந்தாம் பிரகரணங்கள்
"விலக்கப்படும் மக்கள் வேந்தன்பாலொழுகல்,
விலக்கப்படும் மக்கள்பால் வேந்தன் ஒழுகல்" என்பன
அடங்கிய பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[21] அறிவுறுத்தல்—"நீ நின் தந்தைக்கியைந்த ஒழுக்கமுடையனாயின் நின் தந்தை உனக்கு இளவரசு நல்கிப் பெருமைப்படுத்துவான்" என்று உடன்படச் செய்தல்.

[22] வெறுத்து ஒதுக்கப்பட்டவன் — எவ்வாற்றானும் உடன்படுத்த இயலாமைபற்றி அரசனால் வெறுத்துத் தள்ளப்பட்டவன்.

[23] வெறுத்து ஒதுக்கப்படாதவன் — எவ்வாற்றானும் உடன்படுத்த இயலாவிடினும் புதல்வன் ஒருவனென்னும் காரணத்தானும், மகன்மை அன்பானும் வெறுத்துத் தள்ளப்படாதவன்.

பதினொரும் பிரகாரணம்—[1] அரசனது செயன்முறை

பத்தொன்பதாம் அத்தியாயம்

அரசன் விழிப்புடையனாயின் வினைஞரும் விழிப்புடையராவர்; அவன் காரியத்திற் கருத்துடையன் அல்லனாயின் [2]அவரும் அங்ஙனமாவர் ; அரசனுடைய காரியங்களுக்கும் [3]கேடுவிளைப்பர். பகைவரும் அரசனை வஞ்சிப்பர். ஆதலின், அரசன் தனக்குரிய [4]செயல்களைச்செய்தல்வேண்டும். பகலையும், இரவையும் நாழிகையளவையால் [5]எட்டுக் கூறுபடுத்தல் வேண்டும். [6]நிழலளவையால் மூன்று ஆள் நீளம், ஓர் ஆள் நீளம், நான்கு அங்குல நீளம், நண்பகல் என்னும் இவை பகற்கூறு எட்டனுள் முற்பகுதியாகிய நான்கு கூறுகளுமாம் ; [7]அக்கூறுகளாலேயே பிற்பகுதிகளையும் கூறிக்கொள்க.

19-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசன் மக்கள்பால் ஒழுகுமுறை முன்னர்க் கூறப்பட்டது. இதன்கண் அவனுடைய நாட்செயல் முறைகள் கூறப்படுகின்றமையின் பிரகரண இயைபு புலனாம்.

[2] அவரும்—அமைச்சர் முதலிய வினைஞரும்.

[3] "கேடுவிளைப்பர்" என்னும் பயனிலைக்கு "வினைஞர்" என்பது எழுவாய்.

[4] செயல்கள்—நாடோறும் செய்யத்தக்க காரியங்கள்.

[5] மூன்றேமுக்கால் நாழிகைகொண்ட கூறு எட்டாகப் பகலையும், அவ்வாறே இரவையும் கூறுபடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[6] முற்பகலை நான்கு கூறுபடுத்து, மூன்றாள் நீளமுள்ள நிழலளவை முதற்கூற்றின் முடிவாகவும், ஓராள் நீளமுள்ள நிழலளவை இரண்டாங்கூற்றின் முடிவாகவும், நான்கங்குல நீளமுள்ள நிழலளவை மூன்றாங்கூற்றின் முடிவாகவும், நண்பகலை நான்காங்கூற்றின் முடிவாகிய பதினைந்து நாழிகையாகவும் கொள்ளல்வேண்டும் என்பதாம்.

[7] பிற்பகலையும் நான்கு கூறுபடுத்து, நான்கங்குல நீளமுள்ள நிழலளவை ஐந்தாங்கூற்றின் முடிவாகவும், ஓராள் நீளமுள்ள நிழலளவை ஆறாங்கூற்றின் முடிவாகவும், மூன்றாள் நீளமுள்ள நிழலளவை ஏழாங்கூற்றின் முடிவாகவும் பகற்பொழுதின் முடிவை எட்டாங்கூற்றின் முடிவாகிய முப்பது நாழிகையாகவும் கொள்ளல்வேண்டும்.

அப்பகற்கூறு எட்டனுள், [8]முதற்கூற்றில் [9]நகரப்பாதுகாப்பின் இயல்பையும், [10]வரவுசெலவுக் கணக்குகளையும் கேட்டல் வேண்டும். இரண்டாங்கூற்றில் நகரத்திலும் நாட்டினும் உள்ள மக்களுடைய காரியங்களை ஆராய்தல்வேண்டும். மூன்றும் கூற்றில் நீராடல், உண்டல், வேதம் ஓதல் என்னும் இவற்றைச் செய்தல்வேண்டும். நான்காங்கூற்றில் [11]பொருள் பெறுதலும், தலைமை வினைஞரை அவ்வத்தொழிலில் தலைப்படுத்தலும் செய்தல் வேண்டும். ஐந்தாங்கூற்றில் அமைச்சர் அவையோடு ஓலை முதலியன போக்கி எழுத்துமூலமாகக் காரியங்களைச் சூழ்தல்வேண்டும். ஒற்றர்களுக்கு மறைவில் கூறவேண்டிய செய்திகளையும் ஆராய்தல் வேண்டும். ஆறுங்கூற்றில் தன் விருப்பப்படி [12]விளையாடுதல் அல்லது காரியச் சூழ்ச்சியை மேற்கொள்ளலாம். ஏழாங்கூற்றில் [13]யானை, குதிரை, தேர், காலாட்படை என்னும் நால்வகைப் படைகளையும் பார்க்கவேண்டும். எட்டாங்கூற்றில் படைத் தலைவனுடன் கூடித் தன் வலிமையை ஆராய்ந்தறிதல்வேண்டும். பகற்பொழுது கழிந்ததும் சந்திவழிபாடு செய்தல்வேண்டும்.

இரவின் முதற்கூற்றில் ஒற்றர்களைப் பார்த்தல்வேண்டும். இரண்டாங்கூற்றில் நீராடல், உண்டல், வேதமோதல் என்னும் இவற்றைச் செய்தல்வேண்டும். மூன்றுங்கூற்றில் மங்கலவாச்சியங்களின் இன்பங்களை நுகர்ந்துகொண்டு படுத்து நான்காங்கூற்றிலும் ஐந்தாங்கூற்றிலும் [14]துயில்கொள்ளல்வேண்டும். ஆறுங்கூற்றில் மங்கலவாச்சியங்களின் ஒலியால் விழித்தெழுந்து பொருணூல்

---

[8] ஒரு கூற்றை ஒரு முகூர்த்தம் என்று கூறுப.

[9] முதல்நாள் இரவு நிகழ்ந்த நகரக்காவலின் தன்மை.

[10] வரவு செலவு—முதல்நாட் பகலிலும், இரவிலும் நிகழ்ந்தன.

[11] சென்ற நாட்களில் குடிமக்களிடமிருந்து இறையாகக் கொள்ளப் பட்ட பொருள்.

[12] இளைப்பாறுதற்பொருட்டு விளையாடலை மேற்கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[13] யானை, குதிரை, தேர்களையும், அவற்றின் வீரர்களையும், காலாட் படைகளையும் பார்க்கவேண்டும் என்பது கருத்து.

[14] அரசன் துயில்கொள்ளுதலை "கண்படைநிலை" எனவும் விழித் தெழுதலை "துயிலெடைநிலை" எனவும் தொல்காப்பியர் கூறுவர். (தொல்-பொருள்-சூ. 90-91).

களையும், இவ்வமயம் இன்னது செய்தல்வேண்டும் என்பதையும் பற்றி ஆராய்தல்வேண்டும். ஏழாங்கூற்றில் காரியங்களைச் சூழ்ந்து கொண்டு ஒற்றர்களை [15]உய்த்தல்வேண்டும். எட்டாங்கூற்றில் வேட்பிப்போன், [16]ஆசிரியன், புரோகிதன் இவர்களுடன் கூடி [17]மங்கலவாழ்த்துக்களைப் பெறுதல்வேண்டும். [18]மருத்துவன், அடிசிலாக்குவோன், ஒளிநூல் வல்லோன் என்னும் இவர்களைக் காணல்வேண்டும். கன்றுடன் கூடிய ஆவையும், காளையையும் வலம்வந்து அரசரிருக்கையை அடைதல்வேண்டும்.

[19]தன் காரியத் திறமைக்கு ஏற்பப் பகல் இரவுகளின் கூறுகளை வேறுவகையாகவும் வகுத்துக்கொண்டு காரியங்களைச் செய்யலாம்.

அரசிருக்கையை அடைந்த அரசன், காரியங் கருதிவரும் குடி மக்களுக்கு வாயிலில் [20]தடையில்லாமலிருக்கச் செய்தல்வேண்டும்.

அரசன் காட்சிக்கு அரியனாயின் தக்கனவும், தகாதனவுமாகிய காரியங்களை [21]மாறுபடச் செய்யும்படி அருகிலுள்ளார் அவனைத் தலைப்படுத்துவர். அதனால் அரசன் அமைச்சர் முதலிய பகுதிகளின் சினத்திற்கு ஆளாதலோடு, பகைவர் வயப்படவும் கூடும்.

---

15 உய்த்தல் — குறிப்பிட்ட காரியத்தை மறைவில் அறிந்துவரப் போக்கல்.

16 ஆசிரியன்—கல்விபயிற்றுவோன்.

17 மங்கலவாழ்த்து—மறைகளிற் கூறப்பட்ட வாழ்த்துப்பகுதிகள்.

18 உடல்நிலையை ஆராய்தற்பொருட்டு மருத்துவனையும், தனக்கு விருப்பமான உணவாக்குதலைத் தெரிவித்தற்பொருட்டு அடிசிலாக்குவோனையும், அந்நாளிற் கோள்களின் நன்மை தீமைகளை அறிந்துகொள்ளுதற் பொருட்டு ஒளிநூல் வல்லோனையும் காண்டல்வேண்டும் என்பது கருத்து. ஒளிநூல்—சோதிடநூல்.

19 முற்கூறப்பட்ட காலக்கூறுகள் பொதுவாகும்; இனிச் சிறப்பு வகையால் வேறுபடவும் வகுத்துக்கொள்ளலாம் என்பது கருத்து.

20 காட்சிக் கெளியனாக இருக்கவேண்டும்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்னன் நிலம்" (குறள்–386)

என்னும் இதனால் அதன் பயனும் கூறப்பட்டிருத்தல் அறிக.

21 செய்யத்தக்க காரியங்களைத் தகாதனவாகவும், தகாதகாரியங்களைத் தக்கனவாகவும் மாறுபடுத்துவர் என்பது கருத்து.

ஆதலின், தேவர், முனிவர், பாசண்டர், இருபிறப்பாளர், பாலர், முதியவர், பிணியாளர், துன்புறுவோர், தலைவனில்லாதோர், பெண்கள் என்னும் இவர்களுடையவும், பசு, அறநிலையம் என்னும் இவற்றினுடையவும் ஆகிய காரியங்களை முறையே பார்த்தல் வேண்டும். [22]அன்றிக் காரியங்களின் பெருமை நோக்கியாதல், காரியக்கேடு கருதியாதல் இம்முறை மாறியுஞ்செய்யலாம்.

சுலோகங்கள்

(1) [23]எல்லாக்காரியங்களையும் கேடெய்தும் நிலையில் [24]காலங் கடத்தலாகாது. காலங்கடத்தப்பட்ட காரியம் பின்னர் வருந்திச் செய்யத்தக்கதாகும். அல்லது செய்ய இயலாததாகவும் கூடும்.

(2) அரசன் அங்கிவினைச்சாலையில் புரோகிதன், ஆசிரியன் இவர்களுடனிருந்து [25]அறிஞரையும், முனிவரரையும் எழுந்து எதிர்கொண்டு வணங்கி அன்னார் காரியங்களைச் செய்தல்வேண்டும்,

(3) முனிவரர் காரியங்களை [26]வேதம் உணர்ந்தவர்களுடன்

---

22 ஒரு காரியம் பெரிதாயின் அதனையும், ஒன்றிற்குக் கேடுவிளையும் எனத்தோன்றின் கேடுநேராவாறு அதனையும், முற்படச் செய்யவேண்டுமாதலின் முன்கூறிய முறையினின்று மாறியும் செய்யலாம் என்பது கருத்து.

23 எல்லாமென்பது சிறியவாயினும், பெரியவாயினும் என்றபடி.

24 கேடு நேராவாறு விரைந்து முடிக்கவேண்டும் என்பது கருத்து.

" கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல் " (குறள்-668)

என்புழி, தூக்கம் கடிந்துசெயல் என்பதற்குக் காலம் நீட்டித்தலை ஒழிந்து செய்யவேண்டும் என்பது கருத்தாதலறிக. காலநீட்டிப்பால் மேற்கொண்ட காரியம் இடையறவுபடுமாயின் அது தீங்குபயக்கும் என்பதனை,

" வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் " (674)

என்னும் திருக்குறளாலறிக.

25 " வைத்தியர் " என்று முதனூல் கூறும்; ஈண்டு மருத்துவரைக் குறிப்பிடல் இயைபின்றாதலின் " அறிஞர் " என்று கூறப்பட்டது.

26 வேதம் உணர்ந்தவருடன் இருத்தல் காரியத்துணிவில் நம்பிக்கை உண்டாதற்பொருட்டு.

இருந்து செய்வித்தல்வேண்டும். [27]மாயையின் பிரயோகத்தை அறிந்தவர்களின் காரியங்களை அவர் வெகுளிகாரணமாக அரசன் தானே செய்தலாகாது.

(4) முயற்சி, வேள்வி, காரியத்திற் கட்டளையிடல், கொடை, ஒப்பநாடல், வேள்வியாளரை முடிவில் மஞ்சனஞ்செய்வித்தல் ஆகிய இவ்வெல்லாம் அரசனுடைய விரதங்களாம்.

(5) [28]குடிமக்களுக்கு இன்பம் உண்டாயின் அரசனுக்கும் இன்பம் உண்டாம். குடிமக்களுக்கு நலம் விளையின் அரசனுக்கும் நலம் விளையும். அரசனுக்குப் பிரியமான காரியம் அவனுக்கு நன்மை பயப்பதாகாது. குடிமக்களுக்குப் பிரியமான காரியம் அரசனுக்கு நலம் பயப்பதாகும்.

(6) [29]ஆதலின், அரசன் என்றும் முயற்சியுடையனாய் அரசியற் காரியங்களைச் செய்யவேண்டும். முயற்சியே திருவினை யாக்கும். முயற்சியின்மை கேடு விளைப்பதாகும்.

(7) முயற்சியின்மை அடைந்ததும் அடைவதுமாகிய காரியங்களுக்கு ஒருதலையாக அழிவு பயப்பதாகும். முயற்சியுடைமையால் உடனே நற்பயன் எய்தும். பொருட்பெருக்கமும் உண்டாம்.

முதலதிகரணம் பதினாறும் பிரகரணம்
“அரசனது செயன்முறை” என்னும் பத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

27 மாயையின் பிரயோகமாவது—பிறர்க்குக் கேடுவிளைக்க வஞ்சகமாகச் செய்யப்படும் பில்லி, சூனியம் முதலியன.

28 “எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு” (குறள்-426)

என்பது ஈண்டு நினைக்கத்தக்கது.

29 “முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்” (குறள்-616)

என்பதும்,

“மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்” (குறள்-617)

என்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கன.

முதல் அதிகாரணம்—பயிற்சிபகர்தல்

பதினேழாம் பிரகரணம்—[1] அரண்மனை அமைத்தல்

இருபதாம் அத்தியாயம்

மனை நூல் வல்லாரால் பாராட்டப்படும் நல் இடத்தில் மதில் அகழி வாயில் என்னும் இவற்றுடன் பற்பல கட்டுக்களை உடையதாக அரண்மனை அமைத்தல் வேண்டும். [2] நிதியறை அமைக்கும் முறைப்படி [3]அரண்மனை நடுவண், அரசன் தனக்கு இருப்பிடம் அமைத்தல் வேண்டும். அல்லது, சுவருள் மறைவான போக்கு வரவு வழிகளையுடைய [4]மயங்கியல் இல்லத்தை அமைத்து அதன் நடுவண் தன்னிருப்பிடத்தை அமைக்கலாம். அல்லது, அணிமையான இடத்தில் அமைந்த கோயிலில் உள்ள [5]தெய்வப்படிவம் அமைத்த கதவுகளையுடைய வாயிலையும், பல [6]சுருங்கைவழிகளையும் உடைய நிலவறையையாதல், [7]சுவருள் மறைவான படிக் கட்டுகளையுடைய மேல்வீட்டையாதல் [8]உட்டுளையுடைய தூண்

20-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசனது செயன்முறை முன்னர்க் கூறப்பட்டது. இனி அவன் வாழ்தற்குரிய அரண்மனை அமைத்தல் கூறப்படுகின்றமையின் பிரகரண வியைபுண்மையறிக.

[2] நிதியறை அமைக்கும் முறையை 2-ஆம் அதிகரணம் 5-ஆம் அத்தியாயத்திற் காண்க.

[3] "அந்தப்புரம்" என்று முதனூலிற் காணப்படும் சொற்கு "அரண்மனை" என்று மொழிபெயர்க்கப்பட்டது ; அரசன் இருப்பிடம் முதலிய பல இல்லங்களைப்பற்றிக் கூறுதலும், பிரகரணம் அரண்மனை அமைத்தல் என்றிருத்தலும் இதற்குக் காரணமாகும்.

[4] மயங்கியல் இல்லம்—இதனை "மோகன கிருகம்" என்று முதனூல் கூறும். வழி மயங்க அமைக்கப்பட்டமையின் இப் பெயர்த்தாயிற்று.

[5] தெய்வவுருவம் வகுத்த மரம், இரும்பு முதலியவற்றால் அடைக்கப்பட்ட வாயில் காண்பதற்கு அச்சம் விளைப்பதாகும். தெய்வவுருவம் ஈண்டுத் துர்க்கை முதலிய படிவங்கள்.

[6] சுருங்கைவழி—நிலத்தில் மறைவாக அமைக்கப்படும் நுழைவழி.

[7] மேல்வீடு ஒன்று அமைத்து அதற்கு வழி வெளிப்படையாக இல்லாமல் சுவருள்ளும் தூணுள்ளும் வகுத்தல் பிறரறியாமைப் பொருட்டு.

[8] உட்டுளை—மரத்தூணின் உள்ளே உள்ள துளை.

வழியாகப் போக்கு வரத்துச் செய்தற்குரிய மேல்வீட்டையாதல் அமைத்துக்கொள்ளலாம். அல்லது தனக்கு நேரும் கேட்டினை ஒழித்தற் பொருட்டுப் [9] பொறிகளால் [10] நிலத்தின் மேலும் கீழும் இயங்கும் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளலாம். இவ்விருப்பிடத்தை இடையூறு [11] நேருங் காலத்திலாவது அமைத்துக் கொள்ளல் வேண்டும். அல்லது, தன்னைப்போலப் பொருணூல் உணர்ந்த பகைவனுக்கு அஞ்சி முற்கூறியவற்றினின்றும் [12] வேறு வகையாகவும் இருப்பிடம் அமைத்துக் கொள்ளலாம்.

[13] மனித சம்பந்தமான நெருப்பினுல் மூன்று முறை (அவசவ்வியம்) இடப்புறமாகச் [14] சுற்றப்பட்ட அரண்மனையை வேறு நெருப்புச் சுட்டழியாது. [15] வேற்று நெருப்பும் அவ்விடத்தில் எரியாது. மின்னலால் உண்டான [16] நீற்றைப் புற்று மண்ணோடு கலந்து [17] ஆலிநீராற் குழைத்துப் பூசப்பட்ட அரண்மனையையும் வேறு நெருப்புச் சுட்டழியாது.

சீந்திற்கொடி, சங்கஞ்செடி, காட்டுப்பருத்தி, அலரிச்செடியின்

---

9 பொறி—யந்திரம்.

10 பொறி முருக்கத்தால் மேல் ஏறி நிற்பதும், பொறித் தளர்ச்சியால் கீழிறங்குவதுமாகிய இல்லம் என்பது கருத்து. கீழிறக்குதல் பகைவனைக் கொல்லுதற் பொருட்டுமாம்.

11 முன் அமைக்கப்படவில்லையாயினும். இடையூறு நேருங்காலத்தில் அமைத்துக்கொள்ளல் இன்றியமையாதது என்பது கருத்து.

12 இத்தகைய பொருணூல்களைப் பகைவனும் அறியக் கூடுமாகலின் ஈண்டுக் கூறப்படாத முறையில் வேறுவகையாகவும் அமைத்துக்கொள்ளலாம் என்பது.

13 மனித சம்பந்தமான நெருப்பு—பகைவனாற் கொல்லப்பட்ட, அல்லது கழுவேற்றப்பட்ட மனிதனுடைய எலும்பில் கன்மூங்கிலாற் கடைந்தெடுக்கப்படுவது.

14 அதர்வ வேதத்தில் கூறப்பட்ட மந்திரத்தைச் சொல்லிச் சுற்ற வேண்டுமென்பது மரபு.

15 "வேறு நெருப்பு" என்பது அடுக்களை விளக்கு முதலியன அல்ல; பகைவரால் இடப்படுவதாகும்.

16 நீறு—மின்னலோடு கூடிய இடிவீழ்ந் தெரித்த மரத்துச் சாம்பல். இடி வீழ்ச்சியால் சாம்பல் உண்டாம் என்பதை "மரந்தின்னூஉ வரையுதிர்க்கும் நரையுருமின் ஏறு" (மதுரைக் காஞ்சி 62–63) என்பதனுலும் அறிக.

17 ஆலிநீர்—ஆலங்கட்டி மழைநீர்.

மேலுண்டாகிய புல்லுருவி என்னும் [18] இவற்றாலும் [19] முருங்கையில் தோன்றிய அரசிலையால் தொடுக்கப்பட்ட மாலையாலும் புனைந்த இல்லத்தைப் பாம்புகளும் பிற [20] நச்சுப் பொருள்களும் துன்புறுத்தமாட்டா.

பூனை, மயில், கீரி, [21] வெண்புள்ளியுள்ள ஒருவகை விலங்கு என்னும் இவை பாம்புகளைக் கொல்லுவனவாம். கிளி, நாகணவாய்ப்புள், [22] பிருங்கராசன் என்னும் இவை பாம்பின் நஞ்சைக் கண்ட அளவில் கத்தும். அன்றில், நஞ்சின் அணிமையிற் கலக்கம் எய்தும். [23] சீவஞ்சீவகன் என்னும் பறவை வாட்டம் எய்தும். களிப்புமிக்க குயில் இறந்துவிடும். சகோரப்புள்ளின் கண்கள் நிறம் வேறுபடும். இவ்வாறு நெருப்பு, நஞ்சு, பாம்பு இவைகளினின்றும் [24] பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

---

[18] இவற்றாலும் என்பதற்கு சீந்திற்கொடி முதலியவற்றின் வேர்களாலும், இலைகளாலும் தொடுக்கப்பட்ட மாலைகளாலும் என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

[19] முருங்கை மரக்கிளைகளில் பறவைகள் உண்டுகழித்த வித்தில் தோன்றிய அரசின் இலைகளால் தொடுத்த மாலை என்பது.

[20] பிற நச்சுப் பொருள்கள்—நிலையியற் பொருள்களாகிய காகோலம் முதலிய நஞ்சுகள்.

[21] இதனைப் "பிருஷதோத் ஸர்க்கம்" என்று முதனூல் கூறும்; இவ் விலங்கு இன்னதென்று விளங்கவில்லை.

[22] பிருங்கராசன்—கரிய நிறமுள்ள ஒருவகைப் பறவை.

[23] சீவஞ்சீவகன்—பறவைகளுள் ஒன்று.

[24] உணவு உடை முதலியவற்றில் நச்சுப் பொருளின் கலப்பின்மையை அன்னம் சக்கரவாகம் முதலிய பிராணிகளைக்கொண்டு பரிசோதித்தறியலாம் என்பதை,

> "வண்ணப் பூமாலை சாந்தம் வாலணிகலன்கள் ஆடை
> கண்முகத் துறுத்தித் தூய்மை கண்டலாற் கொள்ளவேண்டா
> அண்ணலம் புள்ளோ டெல்லா ஆயிரம் பேடைச் சேவல்
> உண்ணுநீர் அமிழ்தம் காக்க யூகமோ டாய்க என்றான்"
>
> (செய். 1893)

என்னும் சிந்தாமணிச் செய்யுளானும்,

"பூமாலை முதலியவற்றை அன்னப்புள்ளின் கண்ணினும் சக்கரவாகச் சேவல் முகத்ினும் உறுத்தித் தூய்மை கண்டல்லது கைக்கொள்ள வேண்டா. தண்ணீரிலும் சோற்றிலும் தீங்கு வாராமற் காத்தற்கு கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்க என்றான் என்க. "அன்னம் கண்குருதி காலும் சக்கரவாகம் முகங்கருக்கும் கருங்குரங்கு உண்ணாது" என்னும் நச்சினார்க்கினியர் உரையானும் அறிக.

அரசனுடைய இருப்பிடத்திற்குப் பின்புறத்தில் தேவிக்குத் தனி இல்லமும், அதற்குப்பின் கருவுற்ற தேவியர்க்கும், [25] நோய் வாய்ப்பட்டார்க்கும், மருத்துவரால் தீர்க்கத்தகாத [26] நோயாளர்க்கும் தனித்தனி இல்லங்களும் அமைத்தல் வேண்டும். அவற்றின் பின் பூங்காவும், நீர் நிலைகளும் அமைத்தல் வேண்டும். இவற்றின் வெளிப்புறத்தில் [27] சிறுமியர்க்கும், சிறுர்க்கும் இருப்பிடம் அமைத்தல் வேண்டும். முற்புறத்தில் [28] அணியறையும், சூழ்ச்சி மண்டபமும் [29] அத்தாணி மண்டபமும், அரசிளங்குமரர் இருப்பிடமும் [30] தொழிற்றலைவர் இருப்பிடங்களும் இருத்தல் வேண்டும். இவ்வில்லங்களின் இடையிடையே உள்ளிடத்திருந்து காக்கும் காவலர்கள் இருத்தல் வேண்டும்.

அரசன் தன் [31] இருப்பிடத்திலிருந்தே [32] முதியவள் ஆராய்ந்த தூய்மையுடைய தேவியைக் காண்டல் வேண்டும். தேவிமாருள் யாரையும் குறித்து அவர்தம் இருப்பிடத்திற்குச் செல்லலாகாது. [33] பத்திரசேனன் என்னும் அரசன் தன் தேவியின் இல்லத்தில் மறைந்திருந்த உடன்பிறந்தவனுல் கொல்லப்பட்டான். கரூச நாட்டு அரசனை அவன் புதல்வன் தன் தாயின் படுக்கையறையில்

---

25 நோய்வாய்ப்பட்டார்—தீர்க்கத்தக்க பிணியுடைய தேவிமார்.

26 நோயாளர்—இவர்களுந் தேவியரே.

27 ஈண்டுக் கூறப்பட்ட சிறுமியரும் சிறுரும் அரசகுடும்பத்தைச் சார்ந்தவராவார்.

28 அணியறை—அலங்காரம் செய்துகொள்ளுதற்குரிய இல்லம்.

29 அத்தாணி மண்டபம்—அரசன் கொலுவீற்றிருக்கும் இடம்.

30 தொழிற்றலைவர்—கருவூலத்தலைவர் முதலியோர்.

31 அரசன் தன் தேவியைத் தன்னிருக்கைக்கே அழைத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

32 முதியவள்—நம்பிக்கைக்குரிய வயது முதிர்ந்த பணிப்பெண்.

33 தேவியின் இல்லத்தை அடைந்ததனுல் உண்டாம் குற்றத்திற்கு எடுத்துக்காட்டு ; பத்திரசேனன்—கலிங்கநாட்டு வேந்தன். அவன் மனைவியினிடத்து நட்புக்கொண்டிருந்த உடன்பிறந்தவனுகிய வீரசேனன் என்பான் அரசியற் றிருவை விழைந்து தேவியின் இல்லத்தில் ஒருபால் மறைந்திருந்து ஆங்குப் போந்த அம்மன்னனைக் கொன்றுன் என்பது புராண கதை. இதனுல் அரசன் தான் காதலித்த பொருள்களைப் பகைவர் அக்காதல் அறியாத நிலையில் அனுபவிக்கவேண்டும் என்பது போதரும். இதனை,

" காதல காதல் அறியாமை யுய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் " . (குறள்-440)

என்பதனுலறிக.

மறைந்திருந்து கொன்றான். [34] நஞ்சைத் தேனெனக்கூறிப் பொரி யொடு கலந்து உண்பித்துக் காசி அரசனை அவன் மனைவி [35] கொன் ருள். [36] வைரந்தியன் என்னும் அரசனை [37] நஞ்சு பூசிய சிலம்பி னுலும், [38] சௌவீரதேயத்து அரசனுகிய பரந்தபனை மேகலைமணி களாலும், [39] சாலூதன் என்பானைக் கண்ணுடியாலும், விடூரதன்

---

[34] முதியவள் ஆராய்ச்சி யின்மையால் ஏற்படும் குற்றங்கட்கு எடுத்துக் காட்டுக்கள் :—அரசர் தாங்கூடுதற்குரிய மகளிரை முதுமகளிரைக் கொண்டு ஆராய்ந்த பின்னர் கூடல் வேண்டும் என்பதை,

> "தோய்தகை மகளிர்த் தோயின் மெய்யணி நீக்கித் தூய்நீர்
> ஆய்முது மகளிர் தம்மால் அரில்தபத் திமிரியாட்டி
> வேய்நிறத் தோளினார்க்கு வேண்டுகின் மாலைசாந்தம்
> தானல கலன்கள் சேர்த்தித் தடமுலை தோய்க என்றான்".
> (1892)

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளானும் "கூடுதற்குரிய மகளிரைக் கூட வேண்டின் அவர் பூணை நீக்கி ஆராய்ந்து தெளிந்த மூப்பிமாரால் குற்றமறத் திமிர்ந்து தூயநீராட்டி அவர்க்குத் துகின் முதலியவற்றைச் சேர்த்திப் பின்புதான் அவர் முலையைத் தோய்வானாக என்றான் என்க" என்னும் நச்சினார்க்கினியர் உரையானுந் தெளிக.

[35] கொல்லுதற்குக் காரணம்:—காசி அரசன் தன் மனைவியின் சுற்றத் தாரைப் போரில் வென்று சிறைப்படுத்தியதாம்.

[36] மாற்றவள் பொய்மையாக ஏறிட்டுக்கூறிய பழியுரையை நம்பித் தன்னை வெறுத்தது காரணமாக வைரந்தியனை அவன் மனைவி கொன்றாள் என்பது புராண கதை.

[37] பரிசவேதி என்னும் விடம் தொட்டமாத்திரத்திற் கொல்வது. "நஞ்சு பூசிய" என்ற இவ்வடைமொழியை மேகலை மணிகளுக்கும், கண்ணுடிக்கும் கூட்டுக.

[38] பரந்தபனை அவன் மனைவி கொல்லுதற்குக் காரணம் அவன் கூறிய கடுஞ்சொல் பொறுக்கமாட்டாமையாம்.

[39] சாலூதன்—அயோத்தி நாட்டு வேந்தன்; அவன் மற்றொரு மனைவியி னிடத்து காதற் சிறப்பைப் பொறாமையால் அவன் மனைவி கொன்றாள் என்பது. சடைப்பின்னலில் மறைத்து வைத்த படையால் கணவனைக் கொன்றாள் என்னும் இச்செயலில்,

> "தொழுததங் கையினுள்ளும் துறுமுடி யகத்தும் சோர
> அழுதகண் ணீரினுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
> பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும்பற்று
> தொழிகயார் கண்ணும் தோற்றம் தெளிகுற்றார் விளிகுற்றாரே"
> (1891)

இச்சீவக சிந்தாமணிச் செய்யுட் கருத்து நினைக்கத்தக்கது. இதன்கண் "துறுமுடி யகத்தும்" என்றதில் ஈண்டுக் கூறிய சடைப்பின்னல் அடங்கு தல் அறிக.

என்பானைச் சடைப்பின்னலில் மறைத்து வைத்த படையாலும் அவரவர்களின் தேவிமார் கொலைபுரிந்தனர். ஆதலின் இங்ஙனம் கேட்டிற்குக் காரணமான [40] செயல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

மழித்தலும் நீட்டலும் உடைய துறவிகள், [41] மாயாவிகள் என்பாரோடும் வெளிப்புறத்துப் பணிப் பெண்களோடும் தேவிமார்கள் பழகாமல் தடுத்தல் வேண்டும். தேவிமாரைக் கருவுற்ற நிலையிலும், நோய்வாய்ப்பட்ட நிலையிலும், [42] உடனிறக்கும் நிலையிலும் அன்றி அவர் தம் உறவினர் பார்த்தல் ஆகாது. உருவச் சிறப்பால் வாழ்க்கை நடத்தும் கணிகையர், நீராடலால் அழுக்கு நீங்கிய தூய உடம்பினராய்ப் புதிய ஆடை அணிகலங்களால் அணி செய்து கொண்டு அரசனைக் [43]காணக்கடவர். தாய்தந்தையரை யொத்த எண்பதாண்டு நிறைந்த ஆடவரும், ஐம்பதாண்டு நிறைந்த பெண்டிரும், ஆண்டு முதிர்ந்தோரும், பேடிகளும், அரண்மனையி லிருந்து, அரசனுடைய குடும்ப நலம் கருதுவோரும் ஆகிய இவர்கள் உவளகத்து மகளிரின் தூய்மை தூய்மையின்மைகளை ஆராய்ந் தறிந்து தம் தலைவனுகிய அரசனது நலத்திற்கு அவர்களைத் தகுதி யுடையராக்க வேண்டும்.

சுலோகங்கள்

(1) உவளகத்து மகளிர் எல்லோரும் தமக்கென ஏற்படுத்தப் பட்ட இடங்களிலேயே இருத்தல் வேண்டும். வேற்றிடங்களிற் சேரலாகாது. உள்ளிடத்துள்ளார் யாரும் வெளிப்புறத்து மக்களோடு கலத்தலாகாது.

---

[40] செயல்கள் — முதியவளால் ஆராயப்படாமையும் தேவியர் இருக்கும் இல்லத்திற்குச் செல்லுதலுமாம்.

[41] மாயாவிகள்—மாயவித்தைக்காரர்கள்.

[42] உடனிறத்தல்—கணவனுடன் உயிர் நீத்தல்; உடன்கட்டையேறல். அரசன் தேவிமாரை ஈண்டுக் குறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களினன்றிப் பிறர் காண்டலாகாது என்பதை,

"பீடுகெழு சிறப்பின் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு" (நெடுநல் 106-7)

என்பதனாலும் அறிக.

[43] காண்டல் அரசனுக்குப் பணிவிடை செய்தற் பொருட்டு.

(2) [44] ஏட்டில் எழுதப்பட்டு வருவதும் வெளிப்படுவதும், [45] இலச்சினை இடப்பட்ட [46] பேழைப்புறமுடையதும் ஆகிய எல்லாப் பொருள்களும் அரசனால் நேரில் பார்க்கப்பட்டு வரல் வேண்டும். அல்லது வெளிப்படல் வேண்டும்.

முதலதிகரணம் பதினேழாம் பிரகரணம்
"அரண்மனை அமைத்தல்" என்னும் இருபதாம்
அத்தியாயம் முற்றிற்று

---

[44] இன்ன இடத்தினின்றும் வந்தது, இன்ன இடத்திற்குப் போவது என்பதைப்பற்றிக் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படும் என்பது கருத்து.

[45] இலச்சினை — ஈண்டு வந்த இடத்தையும், போகுமிடத்தையும் பற்றியது.

[46] பேழை—பொருள் வைத்தற்கு ஆதாரமாகவுள்ள பெட்டி முதலியன.

முதல் அதிகாரணம்—பயிற்சி பகர்தல்

பதினெட்டாம் பிரகாரணம்—[1]தற்காப்பு

இருபத்தோராம் அத்தியாயம்

படுக்கையினின்றும் எழுந்த அரசன்[2] ஆங்கு வில்லேந்திய கையினராகிய மகளிர் குழுவாற் சூழப்படவேண்டும். இரண்டாங் கட்டில் குப்பாயமும் தலைப்பாகும் உடைய அலிகளாலும், அரசனுடைய குடும்ப நலங் கருதுவோராலும், மூன்றுங்கட்டில் கூனன், குறளன், வேடன் என்னும் இவர்களாலும், நான்காங் கட்டில் அமைச்சராலும் உறவினராலும், ஈட்டியேந்திய வாயில் காப்பவராலும் சூழப்பட வேண்டும்.

[3]தந்தை பாட்டன் வழித் தோன்றல், உயர்குடிப் பிறந்தோரின் தொடர்புடைமை, கல்வியுடைமை, தன்னிடத்து அன்புடைமை, அன்புரிமையைப் புலப்படுத்தற்குரிய காரியங்களைச் செய்துவரல் என்னும் குணம் செயல் உடையாரை அரசன் தற்காப்பினிமித்தம் அருகில் வைத்துக் கொள்ளல் வேண்டும். பொருள் கொடுத்துப் பெருமைப் படுத்தாத அயல் நாட்டினரையும், தன்னாட்டினராயி

21-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரண்மனை அமைத்தல் என்னும் முன்னைப் பிரகரணத்தில் மனைவி மக்களிடத்தினின்றும் அரசன் தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும் என்று கூறப்பட்டது. இதன்கண் அவரல்லாத பிறரிடத்தினின்றும் தற்காப்புக் கூறப்படுதலின் பிரகரண வியைபு புலனாதலறிக.

[2] ஆங்கு—படுக்கை உள்ள முதற்கட்டில். அரசனது படுக்கையறையில் மிலேச்சர் பாதுகாப்பு உண்டென்பதை,

" ஏழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையராக " (முல்லை 64-66)

என்பதனாலுமறிக.

[3] அரசன் தன் கிளைஞரை அருகில் வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் இக்கருத்து,

" பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள " (குறள் 521)

என்னும் இதனால் வலியுறுதல் காண்க.

னும் [4]முன்னர்க் கேடிழைத்துப் பின்னர் ஏற்றுக் கொள்ளப் பட்டாரையும் அருகில் வைத்துக் கொள்ளலாகாது. உள்ளிடத் துக் காவலர்கள் அரசனையும், உவளகத்தையும் காத்தல்வேண்டும்.

அடிசிலாக்குவோன் மறைவான இடத்தில் பலவகையான அடிசிலையும் [5]மிக்க சுவை உடையனவாக ஆக்குதல் வேண்டும். அரசன் அவ்வுணவுகளைத் தான் உண்டற்கு முன்னர் அங்கிக்கும் [6]பறவைகளுக்கும் [7]பலியாக இட்டுப் பின்னர் [8]அப்படியே உண்ணக் கடவன்.

[9]நஞ்சு கலந்த நெருப்பின் சுடரிலும், புகையிலும் நீல நிறமும் [10]வெடிப்பொலியும் உண்டாம். பறவைகள் [11]இறக்கும் [12]சோற் றின் ஆவி மயிலின் கழுத்துப் போன்ற நிறமுடையதாகும். சோறு விரைவிற் குளிரும்; பிசையப்பட்டதுபோல நிறவேற்றுமை யெய்தும்; நீர் கசிந்து திரளும்; நன்றாக வெந்திராது; [13]கறியுணவு விரைவில் உலர்ந்து விடும்; மிகுதியாகக் கொதிக்கும்; கரிய நுரைப் பரப்புச் சிதறியிருக்கும். மணம் ஊறு சுவை என்னும் இவை கெட்டிருக்கும். கஞ்சி முதலிய நெகிழ்ச்சிப் பொருள்களில்

---

[4] முன்னர்க் கேடிழைத்துப் பிரிந்து, பின் வந்தாரை அருகில் வைத்துக் கொள்ளலாகாது என்னும் இது,

“ உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்” (குறள் 530)

என்பதனுள் ஒருவாறு புலனாதல் அறிக.

[5] “ நன்றாகச் சுவைத்துப் பார்த்து” என்றும் கூறலாம்.

[6] பறவை—ஈண்டுக் காகத்தை உணர்த்தும்.

[7] பலியிடல்—அறநூல் விதியை மேற்கோடற்கும், நஞ்சுடைமையை ஆராய்தற்குமாம்; இதனை “வைசுவ தேவம்” என்று கூறுவர். 20-ஆம் அத்தியாயம் 24-ஆம் குறிப்பைப் பார்க்க.

[8] அப்படியே உண்டல்—கால நீட்டிப்பால் மாறுபடாதபடி உண்ணல்.

[9] நஞ்சு கலத்தல்—நஞ்சு கலந்த அன்னத்தால் ஓமம் செய்யப்படுதல்.

[10] வெடிப்பொலி—சடசட என்னும் ஒலி.

[11] நஞ்சு கலந்த உணவை உண்டமையால் இறக்கும் என்பது.

[12] நஞ்சுக் கலப்பைச் சோறு, கறி முதலிய எல்லாவற்றிற்கும் கூட்டுக.

[13] கறியுணவு—பருப்பு காய் அடகு முதலியன.

[14]நிழல் [15]குறைந்தும், மிகுதியாகவும் காணப்படும். நுரைப் பரப்பும், [16]வேறுபட்டிருத்தலும், மேற்கோடுகளும் காணப் படும். நெய் [17]முதலியவற்றின் நடுவண் நீலவரியும், பால் நடுவண் செவ்வரியும், கள், நீர் இவற்றின் நடுவண் கருவரியும், தயிர் நடு வண் நீலவரியும், தேன் நடுவண் வெண்மை வரியும் தோன்றும். [18]ஈரமான பொருள்கள் விரைவில் வாடுதலையும், மிகுதியான குழைவையும், வேக்காட்டில் கருமையும், கருமை பொன்மை கலந்த நிறத்தையும் உடையனவாம். உலர்ந்த பொருள்கள் விரைவிற் றூளாகி நிறம் வேறுபடும். வன்மையான பொருள்கள் மென்மையையும், மென்மையான பொருள்கள் வன்மையையும் அடையும். நஞ்சு கலந்த பொருளின் அணிமையிற் செல்லும் [19]சிற்றுயிர்கள் இறந்துவிடும். நஞ்சு கலந்த [20]மேல்விரிப்பு, போர்வை இவைகளில் கரும் புள்ளிகளும், நூல் மயிர் இவற்றின் நுண்ணிய பகுதிகள் உதிர்தலும் உண்டாம். [21]உலோகம், மணி முதலியவற்றாலாகிய [22]பொருள்களில் நஞ்சு கலந்திருப்பின் [23]சேற்று அழுக்குப் பூச்சும் [24]நீரோட்டம், ஒளி, திண்மை, [25]ஆற்றல், நிறம், ஊறு இவற்றின் கேடும் உண்டாம். இவை நஞ்சு கலந்த பொருள்களின் அடையாளங்கள் ஆகும்.

நஞ்சு கலந்தவனுடைய முகம் உலர்ந்து [26]புற்கென்றிருக்கும்;

---

14 நிழல்—மனித உருவத்தின் நிழல்.

15 ஒருகால் குறைந்தும், ஒருகால் மிகுதியாகவும் காணப்படும் என்பது கருத்து.

16 வேறுபட்டிருத்தல்—கஞ்சியிற் கலவாதிருத்தல்.

17 முதலிய என்றதனால் எண்ணெய், கருப்பஞ்சாறு முதலியனவுங் கொள்ளல் வேண்டும்.

18 ஈரமான பொருள்கள்—மா, மாதுளை முதலிய பழங்கள்.

19 சிற்றுயிர்கள்—எறும்பு முதலியன.

20 மேல்விரிப்பு—படுக்கை, இருக்கைகளில் விரிக்கப்படும் ஆடை.

21 உலோகம்—பொன் வெள்ளி முதலியன.

22 பொருள்கள்—அணிகலன் முதலியன.

23 சேறு போன்ற அழுக்குப் படிந்திருத்தல்.

24 நீரோட்டம்—மணிகளிற் காணப்படுவது.

25 ஆற்றல்—சந்திரகாந்தக் கல் சந்திரனொளி தோய்ந்த அளவில் நீர் காலுதலைப் போன்ற திறமை.

26 புற்கென்றிருத்தல்—ஒளி மழுங்கி இருத்தல்.

சொல் தடைபடும்; வியர்வை, கொட்டாவி, மிக்க நடுக்கம், [27] தடுமாற்றம், [28] பிறர் கூற்றில் விழிப்புடைமை, தன்வயம் இழத்தல், தன் செயலிலும், தனக்குரிய இடத்திலும் [29] நிலைப்பட்டாமை என்னும் இவை உண்டாம்.

ஆதலின் அரசனருகில் நஞ்சு மருத்துவரும், வேறு மருத்துவரும் இருத்தல் வேண்டும்.

மருத்துவன் மருத்துச் சாலையினின்றும் தான் உண்டு குற்றமின்மை அறிந்த மருந்துகளைக் கொணர்ந்து, தானும், மருந்து செய்யும் [30] துணைவரும் [31] அரசன் முன்னிலையில் உண்டு காட்டி அரசனுக்குக் கொடுக்கவேண்டும். கள்ளும் நீரும் [32] அங்ஙனமே கொடுக்கத் தக்கன.

மயிர் வினைஞனும், [33] ஒப்பனை செய்வோனும் நீராடித் தூய ஆடையணிந்து கைகளைத் தூய்மை செய்துகொண்டு இலச்சினை இடப்பட்ட [34] உபகரணங்களை உள்ளிடத்திருக்கும் பணியாளரிடத்தினின்றும் பெற்றுக்கொண்டு அரசனுக்குப் பணி செய்யக்கடவர்.

---

[27] தடுமாற்றம் — மேடுபள்ளமின்றி ஒத்த நிலத்தில் நடக்குங்காலும் கால்இடறுதல்.

[28] எவனுவது ஒருவன் வேறு ஒன்றைப் பேசினும் அப்பேச்சில் உள்ளஞ் செலுத்தல்.

[29] செயலில் நிலைப்படாமை — தொடங்கிய காரியம் நிறைவேறுமல் இருக்க மற்றொரு செயலிற் புகுதல். இடத்தில் நிலைப்படாமை—தான் பணி செய்தற்குரிய இடத்தைவிட்டுப் பிறிதோர் இடத்தை அடைதல்.

[30] துணைவர்—மருந்துச் சரக்குக்களைப் பொடித்தல், அடுப்பிலேற்றிப் பக்குவஞ்செய்தல் முதலிய தொழில் புரிவோர். இவரை "உழைச் செல்வார்" என்பர். இதனை,

> " உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்
> றப்பானாற் கூற்றே மருந்து " (குறள் 950)

என்பதனாலறிக.

[31] மீண்டும் அரசன் முன்னிலையில் உண்ணல், நம்பிக்கைப் பொருட்டு.

[32] கள்ளும் நீரும் கொடுப்போர் முதலில் தாம் உண்டு பார்த்துக் கொடுக்கவேண்டும் என்பது.

[33] ஒப்பனை செய்வோன்—அலங்கரிப்போன்.

[34] உபகரணங்கள்—மயிர்களையும் கத்தி, ஆடை, அணிகலன் இவற்றையுடைய பேழை முதலியன. இவை அரசிலச்சினை இடப்பட்டிருக்க வேண்டும் என்பது.

நீராட்டல், உடம்பு பிடித்தல், படுக்கை விரித்தல், உடை வெளுத்தல், பூத்தொடுத்தல் என்னும் இச்செயல்களைப் [35]பணிப் பெண்கள் செய்தல் வேண்டும். அல்லது அவர்கள் தலைமையின் கீழ் அவ்வத் தொழிலாளரும் செய்யலாம். ஆடை, மாலை இவற்றைக் கொடுப்போர் தம் கண்களில் [36]ஒற்றிக் கொடுத்தல் வேண்டும். [37]தைலம், [38]பூச்சுப் பொருள், [39]உரைத்தற் பொருள், ஆடைக்கிடும் மணப்பொடி, நீராடுங்கால் தலையிலுரைக்கும் மணப் பொடி என்னும் இவற்றைக் கொடுப்போர் தம் மார்பினும் தோள் களினும் கண்களினும் ஒற்றிக் கொடுத்தல் வேண்டும். இதனால் பிறநாட்டினின்றும் வந்த பொருள்களையும் [40]இங்ஙனமே அரச னிடம் கொடுத்தல் வேண்டும் என்பது கூறப்பட்டபடியாம்.

[41]விளையாட்டு மக்கள் படைக்கலம், நெருப்பு, நஞ்சு என்னும் இவையில்லாமல் [42]விளையாடல் வேண்டும். இவர்களுக்குரிய வாச்சியங்கள் [43]அரண்மனைக்குள்ளேயே இருத்தல் வேண்டும். குதிரை, தேர், யானை என்னும் இவற்றின் அலங்காரப் பொருள் களும் அரண்மனையினுள்ளேயே இருத்தல் வேண்டும்.

---

35 இப்பணிப்பெண்கள் முன்னரே ஆராய்ந்துஅமைக்கப்பட்டவராவர்.

36 ஒற்றுதல், நஞ்சுத் தோய்வு முதலியவற்றை ஆராய்தற் பொருட்டு.

37 தைலம் — மணப்பொருளும் நெல்லிக்காய்ச் சாறு முதலியனவும் கலந்த எண்ணெய்.

38 பூச்சுப்பொருள்—சந்தனம் முதலியன.

39 உரைத்தற் பொருள்—“ பத்துத்துவரும், ஐந்து விரையும், முப்பத் திருவகை ஓமாலிகையுமாம்” (சிலப்பதிகாரம் பாட்டு. 6–77 உரை பார்க்க.)

40 வேற்று நாட்டினின்றும் வந்த புதிய ஆடை முதலியவற்றையும் கொடுப்போர் தம் கண், மார்பு தோள் இவற்றில் ஒற்றிக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

41 விளையாட்டு மக்கள்—தாண்டுதல், குதித்தல் முதலிய விளையாட்டுக் களால் அரசனை இன்புறுத்துவோர்.

42 விளையாடுதல், அரசன் முன்னிலையில்.

43 அரண்மனைக் குள்ளிருத்தல் நஞ்சு முதலியன கலவாமைப் பொருட்டு. விளையாடுங் காலத்தில் மாத்திரம் அவ்வாச்சியங்களை எடுத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

தொன்று தொட்டுச் சிறந்த அன்புத் தொடர்பு உடையவனால் நடத்தப்படும் சிவிகை ஊர்திகளில் இவர்ந்து செல்லலாம். சிறந்த நம்பிக்கையுடைய தோணி இயக்குவோனால் செலுத்தப்படும் தோணியில் ஏறல் வேண்டும். மற்றொரு தோணியுடன் பிணைக்கப் பட்ட தோணியிலும், காற்றினால் உந்தப்படும் தோணியிலும் ஏற லாகாது. நீர்நிலையின் இரு கரையினும் [44]படைவீரர் இருத்தல் வேண்டும். [45]செம்படவரால் ஆராய்ந்த நீரில் நீராடலாம். பாம்பு பிடிப்போரால் ஆராயப்பட்ட பூங்காவிற் புகுதலாம்.

கள்வர், பகைவர் என்னும் இவராலும் [46]பொல்லாத விலங்கு களாலும் ஏற்படும் அச்சத்தை, நாய்க் கூட்டங்களையுடைய வேடர் களால் நீக்கி விலங்குக் காட்டில் [47]அசையுங் குறியைத் தாக்கிப் பழகுதற் பொருட்டு அரசன் அடைதல் வேண்டும்.

புதியவராய்த் தன்னைக் காண விரும்பிவரும் முனிவரரை அன்புமிக்க [48]படைவீரர் சூழக் காணல் வேண்டும். அமைச்சர் சூழவிருந்து வேற்றரசனுடைய தூதுவரைப் பார்த்தல் வேண்டும். [49]போர்க்கோலங் கொண்டு யானை, குதிரை, தேர் என்னும் இவற் றுள் ஒன்றிலேறிச் சென்று போர்க்குச் சித்தமாக இருக்கும் படை வீரரைச் சார்தல் வேண்டும்.

அரசன் [50]வெளிச் செல்லுங்காலும், உட்புகுங்காலும் [51]கோப் பெருந் தெருவின் இருமருங்கினும் [52]கோலேந்திய வீரர்கள் நின்று பாதுகாப்ப, வாட்படை ஏந்திய கையினரும், துறவிகளும், உறுப்

---

44 படைவீரர் இருத்தல், பாதுகாப்பின் பொருட்டு.

45 செம்படவர் ஆராய்ச்சி, முதலை முதலியவற்றால் தீங்கு நேராமைப் பொருட்டு.

46 பொல்லாத விலங்குகள்—புலி முதலியன.

47 அசையுங்குறி—ஓடுகின்ற மான் முதலிய இலக்குக்கள்.

48 பகைவரால் உய்க்கப்பட்டிருத்தல் கூடும் என்னும் அச்சம் காரண மாகப் படைவீரர் சூழக் காணவேண்டும் என்பது.

49 கவசம் புனைதல், படை தாங்கல் முதலியன.

50 வெளிச் செல்லல்—வேற்றிடம் நோக்கிச் சேறல்.

51 கோப்பெருந் தெரு—அரசவீதி.

52 கோல்—மூங்கிற்கோல், பிரப்பங்கோல் முதலியன.

பறையரும் எதிர்ப்படாவாறு போதல் வேண்டும். மக்கள் நெருங்கியிருக்கும் இடத்திற் சேரலாகாது. [53]தெய்வ யாத்திரை, மக்கட் கூட்டம், திருவிழா தோட்ட விருந்து என்னும் இவற்றிற்குச் செல்லுங்கால் படைத்தலைவருடன் போதல் வேண்டும்.

சுலோகம்

அரசன் வஞ்சகர்களான ஒற்றரால் மற்றை அரசரைத் தான் துன்புறுத்தல் போல் [54]வேற்று வேந்தர்களின் துன்பத்தினின்றும் தன்னை முயன்று காத்துக்கொள்ளல் வேண்டும்.

முதலதிகரணம் பதினெட்டாம் பிரகரணம்
" தற்காப்பு " என்னும் இருபத்தோராம் அத்தியாயம்
முற்றிற்று.

" பயிற்சிபகர்தல் " என்னும் முதலதிகரணம்
முற்றிற்று.

---

53 தெய்வ யாத்திரை—தேவதைகள் உலாப்போதல்.

54 வேற்றரசர், வஞ்சகராகிய ஒற்றர் மூலமாக இழைக்கும் துன்பமெனக் கொள்க.

இரண்டாம் அதிகாரணம்—[1]தொழிற்றலைவர் செயன்முறை

முதற் பிரகரணம்—[2]நாடு அமைத்தல்

இருபத்திரண்டாம் அத்தியாயம்

வேற்று நாட்டிலிருந்து மக்களைக் [3]கொணர்ந்தும், தன்னாட்டில் மிகுதியான மக்களை [4]வேற்றிடம் உய்த்தும், முன்னுள்ள தனைத் திருத்தியாதல், புதிதாகவாதல் நாட்டினை [5]அமைத்தல் வேண்டும். பெரும்பாலும் [6]சூத்திரர் உழவர்களை உடையதாகவும், நூறு வீடுகட்குக் குறையாமலும் ஐந்நூறு வீடுகட்கு மேலில்லாமலும் ஒரு குரோசம் அல்லது இரண்டு குரோச அளவு எல்லையுடையதாகவும், ஒன்றற்கொன்று பாதுகாப்பாகவும் கிராமத்தை அமைத்தல் வேண்டும். கிராமத்தின் எல்லையிறுதிகளில் [7]ஆறு,

---

22-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இனி, இரண்டாம் அதிகரணத்தில் தொழிற்றலைவரும், அவர் செயன்முறைகளும் கூறப்படும். முதலதிகரணத்தில் கூறிய குணஞ்செயல்கள் நிரம்பப் பெற்ற அரசன் எல்லாக் காரியங்களையும் அவ்வத் தொழிற்றலைவரைக்கொண்டே நடத்தும் இயல்பினனாவான். ஆதலின் அதிகரண வியைபு புலனாம்.

[2] நாடு—தானியம், துரோணமுகம், கார்வடிகம், சங்கிரகணம், கிராமம் என்னும் பல்வகைப் பிரிவுகளை யுடையது. அரசு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்னும் அரசியலுறுப்புக்கள் ஏழனுள் அரசும், அமைச்சும் முதலதிகரணத்திற் கூறப்பட்டன. நாடு இதன்கட் கூறப்படுதலின் பிரகரண வியைபுண்மை அறிக.

[3] தன்னாட்டில் மக்கள் குறைவாக இருப்பரேல் வேற்று நாட்டிலிருந்து கொணர்தல் வேண்டும் என்பது.

[4] வேற்றிடம்—தன்னாட்டினுள் புதிதாக அமைக்கப்படும் ஒரு கூறு.

[5] வேற்று நாட்டிலிருந்து மக்களைக் கொணர்ந்து பழைய நாட்டைத் திருத்தியும், மிகுதியான மக்களுக்கு இடனமைத்தற் பொருட்டுப் புதிய நாட்டையும் அமைத்துக்கொள்ளலாம் என்று நிரனிறையாக இப்பகுதிக்குப் பொருள் கோடலும் பொருந்தும்.

[6] "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" (731)

என்பது திருக்குறள்.

[7] ஆறும், மலையும், காடும் எல்லையில் அமையும்படி கிராமத்தை அமைத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

மலை, காடு, [8]பள்ளம் [9]அணைக்கட்டு என்னும் இவைகளையும் [10] இலந்தை, இலவம், வன்னி, பால் மரங்கள் என்னும் இவைகளையும் அமைத்தல் வேண்டும்.

[11]எண்ணூறு கிராமங்கட்கு நடுவண் தானீயத்தையும், நானூறு கிராமங்கட்கு நடுவண் துரோண முகத்தையும், இருநூறு கிராமங்கட்கு நடுவண் கார்வடிகத்தையும், பத்து கிராமங்களைச் சேர்த்து ஒரு சங்கிரகத்தையும் அமைத்தல் வேண்டும்.

நாட்டின் எல்லைகளில் எல்லை காவலர்க்குரிய அரண்களையும், எல்லை காவலர் தலைமையிற் பாதுகாக்கப்படும் [12]நாட்டு வழிகளையும் அமைத்தல் வேண்டும். எல்லை காவலருடைய அரண்களின் [13]நடுவிடங்களை [14]வலைஞரும், [15]சவரரும், புளிஞரும், புலையரும், காட்டில் வாழ்நரும் பாதுகாக்கக் கடவர்.

---

[8] பள்ளம்—கிராமத்தில் நீர் தேங்காமல் வடிதற் பொருட்டு அமைக்கப் படுவது.

[9] ஆற்றைக் கடந்து செல்லுதற் பொருட்டு அணைக்கட்டு வேண்டும் என்பது.

[10] இலந்தை முதலியன பல்லாற்றானும் மக்களுக்குப் பயன்படும் என்பது கருத்து.

[11] எண்ணூறு, நானூறு, இருநூறு, பத்து என்னும் எண்களையுடைய கிராமங்கட்கு முறையே தானீயம், துரோணமுகம், கார்வடிகம், சங்கிரகம், என்னும் பெயர்களால் தலைநகரங்கள் அமைத்தல் வேண்டும் என்பதும், மேற்குறித்த கிராமங்களில் வாழுமக்கள் வாணிக முதலியன செய்தற்கும், அரசியல் வினைஞர்பால் வினைமுடித்தற்கும் அத்தலைநகரங்கள் இடனும் என்பதும் கருத்து.

[12] நாட்டு வழிகள்—நாட்டிற் புகுதற்கும், வெளிப்படுதற்கும் உரிய நெறிகள்.

[13] நடுவிடங்கள்—எல்லை காவலர் இருவர் அரண்களுக்கும் நடுவிலுள்ள பகுதிகள்.

[14] வலைஞர்—வலைகளால் விலங்கு படுப்போர்.

[15] சவரரும், புளிஞரும், காட்டில் வாழ்நரும் வேட்டுவ வகுப்பினைச் சார்ந்தவராவார்.

வேட்பிப்போர், ஓதுவிப்போர், புரோகிதர், வைதிகர் என்னும் இவர்களுக்குத் [16]தண்டம், [17]இறையில்லாமலும், [18]விருப்பப்படி விற்றல், வழங்குதற்கு உரிமை யுடையனவாகவும் பிரமதேயமாக நிலங்களைக் கொடுத்தல் வேண்டும். [19]தொழிற்றலைவர், கணக்கர், முதலியோர்க்கும் [20]கோவர், [21]தானிகர், யானையைப் பயிற்றுவோர், மருத்துவர், குதிரையைப் பயிற்றுவோர், [22]நடைவல்லார் என்னும் இவர்களுக்கும் விலைப்படுத்தற்கும், ஈடு வைத்தற்கும், ஒற்றி வைத்தற்கும் உரிமையின்றி நிலங்களைக் கொடுத்தல்வேண்டும். [23]இறை இறுப்போன் முன்னரே [24]பண்படுத்திய நிலத்தை அவன் ஒருவனுக்கே உரிமையாம்படி கொடுத்தல் வேண்டும். பண்படுத்த வேண்டிய நிலத்தைத் [25]தகுதியுடையானிடத்தினின்றும் எடுத்துக் கொள்ளலாகாது.

உழாதவரிடத்தினின்றும் நிலங்களைக் கைப்பற்றிப் [26]பிறரிடம் கொடுக்கவேண்டும். இன்றேல் அந்நிலங்களைக் கிராமாதிகாரிகளாவது, வாணிகர்களாவது உழவேண்டும். உடன்பட்டு உழா

---

16 இருபோகத்திற்குரிய நிலங்களை முப்போகமாக விளைவித்துக் கொள்ளுதற்கும், வாய்க்கால் வழி நீரை மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்ளுதற்கும் விதிக்கப்படுவது.

17 இறை—அரசனுக்கு இறுக்கவேண்டிய ஆறில் ஒரு கூறு.

18 அரசனால் கொடுக்கப்படும் நிலத்தை விரும்பியவாறு பிறர்க்கு விற்றற்கும், புதல்வர் முதலியோர்க்குக் கொடுத்தற்கும் உரிமையுடன் கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

19 தொழிற்றலைவர்—பொற்காசு இயற்றும் இடத்தலைவர் முதலியோர்.

20 கோவர்—பத்து அல்லது ஐந்து கிராமங்கட்குத் தலைவர்.

21 தானிகர்—நகரத்தின் நான்கிலொரு கூற்றுக்கு அதிகாரி.

22 நடைவல்லார்—சேய்மையிலுள்ள இடங்கட்குச் செய்திகொண்டு விரைந்து செல்லும் கால்வன்மையுடையார்.

23 இறை இறுப்போன்—இறுக்கவேண்டிய இறைப்பொருளை ஒழுங்காக இறுத்து வருபவன்.

24 பண்படுத்தல்—நெல் முதலியன மிகுதியாக விளைதற்குத் தகுதியாகச் சீர்படுத்தல்.

25 தகுதியுடையான் — பண்படுத்தற்கும், உரிய இறைப்பொருள் கொடுத்தற்கும் தகுதிவாய்ந்தவன்.

26 பிறர்—உழுது பயன் விளைப்போர்,

தவர் [27]இழப்பிற்கு ஈடு செய்யவேண்டும். கூலம், பசு, பொருள் இவற்றைக் கொடுத்து [28]அவர்களுக்கு அருள் புரிதல் வேண்டும். அவர்கள் பின்னர் அக்கூலம் முதலியவற்றைத் [29]துன்புறுமல் அரசனுக்குக் கொடுக்கக் கடவர்.

அவ்வுழவர்களுக்குக் கொடுக்கப்படும் [30]ஆக்கம், [31]குறை நீக்கம் என்னும் பொருள்களைக் கருவூலத்திற்கு [32]வளர்ச்சி உண்டாமாறு கொடுத்தல் வேண்டும். கேடுண்டாமாறு கொடுத்தலாகாது. என்னை ? கருவூலங் குறையின் அரசன் தன்னுட்டு—நகரத்து—மக்களைத் [33]துன்புறுத்துவனுதலின். புதுவதாகக் குடி வாழ்க்கை தொடங்குவோர்க்கு அக்காலத்திலும், வேற்று நாட்டிலிருந்து [34]குடியேறினுர்க்கும் குறை நீக்கம் கொடுத்தல் வேண்டும். குறை நீக்கப் பொருளைத் திருப்பித் தந்த பின்னர் அன்னுரைத் தந்தையைப் போல [35]அருள் புரிதல் வேண்டும்.

ஆகரத் தொழிற்சாலை, [36]பயன்மரக்காடு, யானைக்காடு, பசு

---

27 இழப்பு—அந்நிலத்தினின்றும் கிடைக்கும் வருவாயைப் பற்றியது.

28 அவர்களுக்கு—உழவிற்கு வேண்டிய கருவிகளும் மழையும் இல்லாமை பற்றி உழாதவர்களுக்கு.

29 துன்புறுமல்—தம் பிழைப்பிற்கு இடையூறு நேராதபடி.

30 ஆக்கம் — வளமுடையானுக்கு மேன்மேலும் நலனுண்டாதற் பொருட்டுக் கொடுக்கப்படும் பொருள்.

31 குறை நீக்கம் — கேடெய்தினுற்கு அதனை யொழித்து நலனுண்டாக்குதற் பொருட்டுக் கொடுக்கப்படும் பொருள்.

32 வளர்ச்சி—வட்டி முதலியவற்றுல் ஆவது.

33 துன்புறுத்துதல், கருவூல நிறைவு குறித்து.

34 குடியேறினுர்—புதியராக வந்தடைந்தார்.

35 அருள்புரிதல்—மேன்மேலும் நன்மை வளர்ச்சிப் பொருட்டு ஆக்கப் பொருள் கொடுத்துதவல் வேண்டும் என்றபடி.

36 பயன் மரம்—சந்தனம் அகில் முதலியனவும், இல்லங்கள் அமைத்தற் குரிய தேக்கு முதலியனவும் ஆம்.

மந்தை, வாணிகத் தொழிற்சாலை, [37]நீர்வழி, [38]நிலவழி, [39]பல பண்டங்களை விற்கும் இடம் என்னும் இவற்றை யேற்படுத்தல் வேண்டும். நீர் இடையருதொழுகும் யாறு முதலியவற்றிற்கும் வேண்டுங்கால் [40]நீர்கொணர்தற்குரிய வாய்க்கால் முதலியவற்றிற்கும் [41]அணை கட்டுவித்தல் வேண்டும். அணை கட்டும் மற்றையோர்க்கும் [42]இடம், [43]வழி, மரம் முதலிய உபகரணங்களைக் கொடுத்து உதவல் வேண்டும். அறக் கோட்டம் இளமரக்கா என்னும் இவற்றிற்கும் [44]உதவல் வேண்டும். பலர் கூடி அணை கட்டுங்கால் அக்குழுவினின்றும் [45]விலகினவனுடைய பணியாட்களும், எருதுகளும் அவ்வேலைகளைச் [46]செய்யவேண்டும். அங்ஙனம் விலகினவன் செலவு பொருளிற் [47]கூறுடையவனுவான்; வரவு பொருளிற் கூறு பெருன்.

---

37 நீர்வழி—மழை முதலியவற்ருல் மிகுதிப்படும் நீர் ஒழுகி வெளிப்படுதற்குரிய வாய்க்கால் முதலியன.

38 நிலவழி—நிலத்தின்கண் மக்களும், வண்டி முதலியனவும் செல்லுதற்குரிய சாலை முதலியன.

39 "பண்ய பத்தனம்" என்று முதனூல் கூறும். இதற்குக் "காவினும், கலத்தினும் வரும் பண்டங்களையுடைய "பட்டினம்" என்றும் கூறலாம்.

40 மேட்டு நிலங்களிலிருந்து கொண்டுவரப்படும் நீர் என்பது கருத்து.

41 அணை—பயிர்த்தொழிற்குச் சிறு வாய்க்கால் வழியாக நீர் செல்லுதற் பொருட்டுத் தேக்கி வைத்தற்குக் கட்டப்படுவது.

42 இடம்—மிகுதியான நீர் தேங்குதற்குத் தக்க நிலம்.

43 வழி—நீர் உட்புகுதற்கும், வெளிப்படுதற்கும் ஏற்ற நெறி.

44 இடமும், மரம் முதலிய உபகரணமும் கொடுத்து உதவவேண்டும் என்பது கருத்து.

45 விலகியவன் — விருப்பமின்மையால் தனக்குரிய காரியக் கூற்றைச் செய்யாமற் பிரிந்தவன்.

46 பணியாட்களும், எருதுகளும் அத்தொழில்களைச் செய்யும்படி அரசன் வற்புறுத்துச் செய்விக்கவேண்டும் என்பது கருத்து.

47 கூறு—அணை கட்டுதற்கு ஏற்படும் பொருட் செலவில் விலகினவனுக்குரிய பகுதி. அவன், செலவுபொருளுக்குக் கூறுகொடுக்கக் கடமையுடையவனேயன்றி, அணைக்கட்டு முடிந்த பின்னர் வரும் ஊதியத்திற் கூறுபெறுதற்கு உரிமையற்றவன் ஆவான் என்பது கருத்து.

அவ்வணைத் தேக்கத்திலுண்டாம் மீன், நீர்வாழ் பறவை, தாமரை அல்லி முதலியன என்னும் இவ்விலைப் பொருள்களின் உரிமை [48]அரசனைச் சார்ந்ததாகும். [49]அடிமையாளர், [50]பொருள் பெற்றுப் பணி செய்வோர், [51]உறவினர் என்னும் இவர்கள் தம்மைக் காப்பாற்றுவோர் சொற்படி நடக்கவில்லையாயின் அரசன் அன்னாரைப் பணிந்து நடக்கும்படி செய்யவேண்டும். [52]சார்பு அற்ற சிறுவர், முதியவர், நோயாளர், துன்புறுவோர் என்னும் இவர்களையும் மகப்பேறிலாத மகளிரையும் ஈன்றணிமைப்பட்ட குழந்தைகளையும் அரசன் காத்தல் வேண்டும்.

[53]ஒரு சிறுவனுக்குரிய பொருளை அவன் ஆட்சிபுரியும் பருவம் எய்தும் வரை கிராமத்திலுள்ள முதியோர்கள் தாம் [54]பயன்படுத்திக் கொள்ளலாகாது. கடவுளர்க்குரிய பொருளையும் [55]அடைதல் ஆகாது.

[56]ஒழுக்கக் கேடிலாத மனைவி மக்களையும், தாய் தந்தையரையும், பருவமடையாத சோதரரையும், கன்னிகையும், கைம்பெண்ணுமாகிய சோதரிமாரையும் ஆற்றலிருந்தும் எவன் காப்பாற்றவில்லையோ அவனுக்குப் பன்னிரண்டு [57]பணம் தண்டம் விதித்தல்

---

48 அணைக்கட்டைப் பலர்கூடிச் செய்யினும் அதன்கண் நிறைந்த நீரில் உண்டாம் பொருள் வருவாய் அரசனைச் சாருமன்றி அவர்களுக்கு இல்லை என்பது கருத்து.

49 அடிமையாளர்—வழியடிமை, விலையடிமை, ஊதிய அடிமை, தாயக் கூற்றடிமை எனப் பலதிறப்படுவர்.

50 ஓரளவு பொருள் பெற்று அதனைத் திருப்பிக் கொடுக்குங்காறும் தலைவனுக்குப் பணிசெய்வோர்.

51 உறவினர்—புதல்வர் முதலியோர்.

52 சார்பற்ற—ஆதரவு இல்லாத. இவ்வடைமொழியைச் சிறுவர் முதலியோர்க்கும், மகளிர்க்கும், குழந்தைகளுக்கும் கூட்டுக.

53 சிறுவன்—சார்பற்ற இளைஞன்.

54 சிதையாமற் பாதுகாப்பதோடு இயலுமாயின் வளர்க்கவும் செய்யலாம் என்பது.

55 என்றும் அடைதலாகாது என்பது கருத்து.

56 ஒழுக்கக் கேடிலாத என்னும் அடையை மனைவி முதலிய எல்லோர்க்கும் ஏற்றிக்கொள்க.

57 பணம்—பதினறு மாடங்கொண்டது.

வேண்டும். "[58]ஒழுக்கக் கேடிலாத" என்னும் அடை தாய்க்கு இன்று.

மனைவி மக்களுக்கு [59]வேண்டுவன செய்யாமல் துறவு கொள்ளுபவனுக்கும், மகளிரைத் துறவு பூணும்படி தூண்டுகிறவனுக்கும் [60]பிரதம சாகசம் என்னும் தண்டம் விதித்தல் வேண்டும். மகளிரோடு புணர்தற்குரிய ஆற்றலிலாதவன், [61]அறமுணர்ந்தார் உடன்பாடு பெற்றுத் துறவு கொள்ளலாம்; [62]இன்றேல் சிறைப் படுத்தப்படுவன்.

வானப்பிரத்தன் அல்லாத துறவியும், [63]நல்லோர் குழுவல்லாத கூட்டமும் [64]கூடித் தொழில் புரியும் குழுவல்லாத [65]சங்கேதக் குழுவும், அரசனது நாட்டில் [66]இருத்தலாகாது.

[67]அந்நாட்டில் விளையாடுதற்குரிய இளமரக்காவும், நாடக அரங்கும் இருத்தலாகாது. கிராமங்களில் [68]அவற்றிற்கு இடமில்லாமையால், நட்டம் ஆடுவோன், கூத்தன், பாணன், இசைக்கருவி

---

[58] தாய், ஒழுக்கக் கேடுடையளாயினும் காப்பாற்றவேண்டும் என்பது கருத்து.

[59] வேண்டுவன—வாழ்க்கைக்கு வேண்டிய உண்டி உறையுள் முதலியன.

[60] "பிரதம சாகசம்" என்பது இருநூற்றைம்பது பணம் இறுக்கும்படி விதிக்கப்படும் தண்டம்.

[61] அறம் உணர்ந்தார்-அறநூலுணர்ந்தாரும், நீதிமன்றத்தலைவருமாவர்.

[62] இங்ஙனம் உடன்பாடு பெறாமல் துறவுகொள்வானாயின், அவன் சிறைக்கோட்டத்தில் சேர்ப்பிக்கப்படுவன் என்பது கருத்து.

[63] நல்லோர்—அரசனுக்கும், நாட்டிற்கும் நலஞ்செய்வோர்.

[64] தொழில்—அரசனுக்கும், குடிமக்களுக்கும் பயன்தரும் அணைகட்டுதல் முதலிய செயல்கள்.

[65] சங்கேதக்குழு—அரசனுக்குத் தீங்கு விளைக்கும் குறிக்கோளுடைய கூட்டம்.

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" (735)

என்னும் திருக்குறளும், 'பல்குழுவும்' என்பதற்குச் 'சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம்' என்று பரிமேலழகர் எழுதிய உரைக் குறிப்பும் ஈண்டுக் கருதத்தக்கன.

[66] ஈண்டுக் கூறப்பட்டார்பால் ஐயுறத்தக்க ஒழுக்கமுண்மையே இருத்தல் கூடாதென்பதற்குக் காரணமாகும்.

[67] ஈண்டும் "நாட்டிலிருத்தலாகாது" என்பதற்குப் பின்வரும் கருத்து கட்கியைய அந்நாட்டிலுள்ள உழவுத் தொழிலுக்குரிய கிராமங்களில் இருத்தலாகாது என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

[68] அவை அமைக்கப்படாமையால்.

யியக்குவோன், பௌராணிகன், [69]விளையாடுவோன் என்னும் இவர்களால் [70]காரியக்கேடு ஏற்படாது. கிராமத்து மக்கள் [71]தொழிலிடங்களில் ஈடுபடுதலால் பொருள், [72]வலிய செயல், [73]மரப் பொருள், கூலம் [74]நெய் முதலியன என்னும் இவை பெருக்கம் எய்தும்.

சுலோகங்கள்

(1) அரசன் பகைப்படைகளாலும், காட்டுத் தலைவராலும், பிணி வறுமைகளாலும் துன்புறும் தன்னாட்டை அத்துன்பத்தை ஒழித்துப் பாதுகாத்தல் வேண்டும். பொருட் செலவுண்டாக்கும் விளையாட்டுக்களைத் தடைப்படுத்தல் வேண்டும்.

(2) [75]தண்டம், [76]கருமம், இறைப்பொருள் என்னும் இவற்றால் உழவுத் தொழிற்கு இடையூறு வராமலும், கள்வராலும், புலி, பாம்பு முதலிய கொடிய உயிர்களாலும், பிணிகளாலும், ஆவினங்களுக்குத் துன்பம் நேராமலும் பாதுகாத்தல் வேண்டும்.

(3) அரசன், தன்னைச் சார்ந்தவர், வினை செய்வோர், கள்வர், எல்லை காவலர் என்னும் இவராலும் [77]கொடிய விலங்குகளாலும்

---

69 விளையாடுதல்—கழைக்கூத்தாடல் முதலியன.

70 காரியக்கேடு—உழவு முதலிய தொழிற்கு இடையூறு.

71 தொழிலிடங்கள்—நன்செய், புன்செய் முதலிய உழவுத் தொழிற்குரிய இடங்கள்.

72 வலிய செயல்—பலர்—ஒன்றுகூடிச் செய்யுங்காரியம்.

73 மரப்பொருள் — பலகை முதலியவற்றால் ஆக்கப்படும் பேழை முதலியன.

74 நெய் முதலியன—எண்ணெய், கருப்பஞ்சாறு முதலியனவுமாம்.

75 தண்டம் முதலியவற்றை அளவின்மிக விதித்தலால் உழவுத் தொழிற்கு இடையூறு நேரும் என்பது கருத்து.

76 கருமம்—கூலிகொடாமற் செய்வித்துக்கொள்ளும் ஊழிய வேலை.

77 கொடிய விலங்குகள் நாட்டில் மிகுதியாக இருக்குமாயின் வாணிகத் தொழினிமித்தம் போக்கு வரவு செய்ய இயலாதாகலின் அவற்றால் நேரும் குறைகளையும் விலக்கவேண்டும் என்பது கருத்து.

வாணிகத் தொழிற்குக் குறை நேராமல் காத்தல் [78]வேண்டும்.

(4) இவ்வாறு முன்னரே அமைந்துள்ள மரக்காடு, யானைக் காடு, அணைக்கட்டு, ஆகரம் என்னும் இவற்றை அரசன் பாது காப்பதோடு, புதியனவாகவும் அமைத்தல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முதற்பிரகரணம்
“நாடமைத்தல்” என்னும் இருபத்திரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[78] இவ்விரண்டாம் மூன்றும் சுலோகங்களின் கருத்துக்களோடு,

“மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக்கு இடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகும் பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ”

(பெரியபுராணம்-திருநகரச்சிறப்பு 36-வது செய்யுள்)

என்னும் செய்யுட் கருத்துக்கள் ஒப்புநோக்கி இன்புறற்பாலன.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இரண்டாம் பிரகாரணம்—[1]உழவிலா நிலத்தைப் பயனுற அமைத்தல்

இருபத்துமூன்றும் அத்தியாயம்

அரசன் உழவுக்குத் [2]தகுதியில்லாத நிலத்தில் [3]பசுக்களின் நிமித்தம் [4]மேய்தனிலம் விடல் வேண்டும். [5]இயங்கியல் [6]நிலையியற் பொருள்களுக்கு அச்சம் விளையாதவாறு பாதுகாக்கப்படுவதும், இரண்டு குரோச அளவுட்பட்டதுமாகிய வனத்தை மறைபயில்தற் பொருட்டும் வேள்வி செய்தற் பொருட்டும் அந்தணர்க்கும், [7]தவ வனத்தைத் தவஞ்செய்வார்க்கும் கொடுத்தல் வேண்டும். ஒரு வாயிலையும், நாற்புறமும் அகழியின் பாதுகாப்பையும், இனிய பழம் செடி பூந்துணர்களையும், முள்ளில்லாத மரங்களையும், ஆழமில்லாத நீர் நிலைகளையும், [8]அடக்கமுள்ள மான் முதலிய விலங்கு களையும், பல், [9]உகிர் களையப்பட்ட புலி முதலியவைகளையும், வேட்டையாடுதற்குத் தக்க களிற்றி யானை பிடியானைக் கன்று களையும் உடைய அவ்விரண்டு குரோச அளவுள்ள விலங்குக் காட்டை அரசன் தன் விளையாட்டு நிமித்தம் அமைப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

23-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உழவிலா நிலம்—வேளாண்டொழிற்குத் தகுதியற்ற நிலம். முன்னைப் பிரகரணத்தில் மரக்காடு, யானைக்காடு முதலியன அமைத்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது. இதன்கண் அவற்றிற்குரிய இடம் வகுத்தலின் பிரகரணவியைபு புலனும்.

[2] தகுதியில்லாத நிலம்-மேடு, பள்ளம், மலை, பரல் நிலம் முதலியவை.

[3] பசு—ஈண்டு ஆ, எருமை, யாடு என்னும் இவற்றை உணர்த்தும்.

[4] மேய்தல் நிலம்—புல், நீர், நிழல், அமைந்த இடம் "விடுநில மருங்கிற் படுபுல்லார்ந்து" என்பது மணிமேகலை.

[5] இயங்கியற் பொருள்—மான் முதலியன.

[6] நிலையியற் பொருள்—மரம் செடி முதலியன.

[7] "இயங்கியல்" எனத் தொடங்கி "அளவுட்பட்டது" என்பது காறும் உள்ள அடையைத் தவவனத்திற்கும் கூட்டுக.

[8] அடக்கம்—மக்களோடு பழகுதலால் உண்டாம் சாந்தம்.

[9] உகிர்—நகம்.

[10]அணிமையிலாதல், [11]தகுதியான பிறிதோரிடத்திலாதல் [12]வேற்றிடத்திலிருந்து வந்த பலவகை விலங்குக் காட்டை அமைத்தல் வேண்டும்.

[13]குப்பியத் தலைவனைப் பற்றிய (அதிகரணம் 2. பிரகரணம் 17.) பிரகரணத்திற் சொல்லப்பட்ட [14]பொருள்களுக்குத் தனித்தனியே காடு அமைத்தல் வேண்டும். [15]மரத் தொழிற்குரிய காடுகளையும், அத்தொழில்களையும் அக்காட்டில் வாழ்வோர் அமைக்கக்கடவர்.

நாட்டின் எல்லைப் புறங்களில் காடு காவலரையுடைய யானைக் காட்டை அமைத்தல் வேண்டும். யானைக் காட்டுத் தலைவன் மலை, ஆற்றங்கரை, குளக்கரை, பிற நீர்வளமுள்ள நிலம் என்னும் இவ் விடங்களிலுள்ள யானைக் காடுகளை அவற்றின் வரம்பையும், உட் புகுதல் வெளிவருதற்குரிய வழிகளையும் அறிந்துகொண்டு யானைக் காட்டுக் காவலருடன் காத்தல் வேண்டும். [16]யானையைக் கொல் பவரைக் கொன்றுவிடல் வேண்டும். தானே இறந்த யானையின் இரண்டு தந்தங்களையும் கொண்டுவருபவனுக்கு நாலேகாற்பணம் பரிசிலாகக் கொடுக்கவேண்டும்.

யானைக்காட்டுத் தலைவர், யானைப் பாகன், யானைக் காலைக் கயிற்றால் பிணிப்போன், எல்லை காவலன், காட்டில் வாழ்வோன், யானைக்கு உணவுமுதலியன சமைப்போன் என்னும் இவர்களுடன் கூடி யானையினுடைய மூத்திர [17]புரீடங்களின் மணத்தால் மறைக்

---

10 அணிமையில்—முற்கூறிய விலங்குக் காட்டிற்குச் சமீபத்தில்.

11 தகுதியான பிறிதோரிடம் சேய்மையில் உள்ளதாயினும் என்பது கருத்து.

12 வேற்றிடத்திலிருந்து வருதல்—வேடரால் துரத்தப்பட்டு வருதல்.

13 குப்பியம்—இன்னதென்பதை இரண்டாம் அதிகரணம் பதினேழாம் பிரகரணத்திற் காண்க.

14 பொருள்கள்—தேக்கு முதலிய அகக்காழனவாகிய மரங்களும், மூங்கில் முதலிய புறக்காழனவாகிய புற்களும், மல்லிகை முல்லை முதலிய கொடி செடிகளுமாம்.

15 மரத்தொழில்—பலகை முதலியவற்றால் செய்யும்தொழில்.

16 யானையைக் கொல்பவர்—மலையில் வாழும் புளிஞரும், வேட்டுவருமாவர்.

17 புரீடம்—மலம்,

கப்பட்ட உடலுடையராய், சே மரக்கிளைகளால் தம் உடம்பை மறைத்துக்கொண்டு ஐந்து, அல்லது ஏழு களிறு படுக்கும் பிடிக ளோடு திரிந்து யானை படுத்தல், இருத்தல், அடிச்சுவடு, இலண் டம், கோடுகுத்தி விளையாடல் என்னும் குறிகளால் யானைக் கூட்டம் திரியும் இடங்கள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

கூட்டத்துடன் திரிவது, தனிமையாகத் திரிவது, கூட்டத்தி னின்றும் வெளிப்பட்டது, [18]யூதபதி, கொடுங்குணமுடையது, மதச் செருக்குடையது, [19]கன்று, தறியினின்றும் பெயர்ந்தது என் னும் பலவகைப்பட்ட யானைகளையும் [20]கணக்குப் புத்தகமூலம் அறிந்து கொள்ளல் வேண்டும். அரசரது வெற்றிக்கு யானை சிறந்த கருவியாதலின், யானைப்படைத்தலைவர் கண்காணிப்பில் சிறந்த இலக்கணமும் செயலுமுடைய யானைகளைப் பிடித்தல் வேண்டும். என்னை? மிகப் பெருத்த உடலும், மற்றை உயிர்களை அழிக்கவல்ல செயலும் உடைய யானைகள் பகைவருடைய படை வகுப்பு அரண் பாசறை என்னும் இவற்றை அழித்தொழிக்கும் ஆதலின்.

சுலோகங்கள்

(1—2) கலிங்கம், அங்கம், சேதி, கரூசம் என்னும் இந்நாடு களிலும், கீழ்த்திசையிலும் தோன்றிய யானைகள் தலையாகவும், தசார்ண நாட்டிலும், மேற்றிசையிலும் தோன்றிய யானைகள் இடையாகவும், சௌராட்டிரம், [21]பஞ்சநதம், என்னும் நாடுகளில் தோன்றிய யானைகள் கடையாகவும் கருதப்படுவன. எல்லா யானைகளுக்கும் தொழிற்பயிற்சியால் தறுகண், விரைவு, தோற் றப் பொலிவு என்னும் இவைகள் வளர்ச்சி யெய்துவனவாம்.

இரண்டாம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
"உழவிலா நிலத்தைப் பயனுற அமைத்தல்" என்னும்
இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

18 யூதபதி—யானைக் கூட்டத்திற்குத் தலைமையான யானை.

19 கன்று—பத்தாண்டுடையது.

20 கூட்டத்துடன் திரிவது முதலிய யானைவகைகளில் இவ்வளவு இவ்வளவு உள்ளன என்று கணக்குப் புத்தகத்தில் எழுதித் தெரிந்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

21 பஞ்சநதம் என்பது ஈண்டுப் "பஞ்சாப்" நாட்டைக் குறிப்பதாம்.

மூன்றும் பிரகரணம்—[1]அரண் அமைத்தல்

இருபத்துநான்காம் அத்தியாயம்

நாட்டின் இறுதியில் நாற்புறத்தும் போர்க்குத் தகுதியாக [2]இயற்கையின் அமைந்த அரண்களை அரண்களாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வரண்களாவன :– [3]நடுவே தீவுடையதும், சூழ்ந்திருக்கும் [4]பள்ளங்களும் ஆகிய நீரரணும், [5]மலைக் கற்களும் குகைகளும் ஆகிய மலையரணும், [6]நீரும் புல்லும் இல்லாத நிலமும் [7]களர்நிலமுமாகிய நிலவரணும், [8]வழங்குதற்கரிய சேற்று நீரையுடைய காடும் செடியடர்ந்த காடுமாகிய காட்டரணும் [9] என்பனவாம். இவற்றுள், நீரரணும் மலையரணும் நாட்டிற்குக் காவலாக அமைந்தனவாம். நிலவரணும் காட்டரணும் காட்டிற்குக் காவலாதலோடு இடையூறு நேர்ந்துழி அரசன் ஓடி ஒளிதற்கும் இடனாகும்.

நாட்டின் நடுவண் மனை நூல் வல்லவரால் நல்லதெனக் கண்டதும், [10]யாறுகளின் கலப்புடையதுமாகிய நிலப்பரப்பில், அவ்

24-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசியலுறுப்புக்கள் ஏழனுள் மூன்றுவதாகிய நாட்டின் இயல்பு 1—2ம் பிரகரணங்களிற் கூறப்பட்டது. நான்காவதாகிய அரணமைத்தல் ஈண்டுக் கூறப்படுதலின் பிரகரணவியைபு அறிக.

[2] அரண்கள்—இயற்கையரணும் செயற்கையரணும் என இருதிறப்படும். அவற்றுள் ஒரு நாட்டிற்கு இயற்கையின் அமைந்த அரண்கள் இன்னவெனக் கூறுகின்றூர்.

[3] நடுவே தீவுடையது என்றதனல் நாட்டைச் சூழ்ந்துள்ள பேராறுகள் ஒருவகை நீரரண் என்பது போதரும்.

[4] பள்ளங்கள்—இயற்கையின் அமைந்த நீர்நிலைகள்.

[5] மலைக்கற்கள்—சிறு குன்றுகள்.

[6] நீரும் புல்லும் இல்லாத நிலம்—பாலை நிலம்.

[7] களர் நிலம்—உவர் நிலம்.

[8] வழங்குதற்கரிய—மக்கள் நடத்தற்கு இயலாத.

[9] ஈண்டுக் கூறப்பட்ட நீரரண் முதலிய நான்கும் ஒவ்வொன்றும் இரண்டிரண்டாக எட்டு வகைப்படும் என்பது கருத்து.

[10] யாறுகளின் கலப்பு—பல யாறுகள் ஒன்றுகூடல்.

விடத்தின் அமைப்புக் கேற்றவாறு வட்டம் நீளம் சதுரம் என்னும் வடிவங்களில் ஒன்றாகவும், [11]வலஞ்சுற்றும் நீரையுடையதாகவும், [12]பண்டப் பேழைகளின் கட்டு அவிழ்த்தற்குரியதாகவும், [13]நிலவழி நீர்வழிகளையுடையதாகவும் நீர் வற்றாத மடு ஓடை ஊருணி என்னும் நீர் நிலைகள் சூழவிருக்கும்படி பொருட்பெருக்க விளைவிற்கு இடமாகிய [14]தானீயம் என்னும் நகரத்தை அமைத்தல் வேண்டும். அந்நகரத்தைச் சூழப் [15]பதினான்கு பன்னிரண்டு பத்துக் கோல் அளவு அகலமும், அவ்வகலத்திற் காற் கூறு அல்லது அரைக் கூறு குறைந்த [16]ஆழமும், அவ்வகலத்தின் மூன்றில் ஒரு கூறு அளவு அடியகலமும், கற்படுக்கப்பட்ட ஒத்த அடிப்பரப்பும், கற்களாலும் இட்டிகைகளாலும் அமைக்கப்பட்ட பக்கச் சுவர்கள் உடையனவாகவும், ஊற்றுநீர் அல்லது [17]வேற்றுநீரால் நிறைந்தனவாகவும், நீர் வெளிப்படும் வழிகளையும் தாமரை முதலை முதலிய வற்றையும் உடையனவாகவும், ஒன்றுக் கொன்று [18]ஒரு கோல் அளவு இடை நிலம் உடையனவாகவும் மூன்று அகழிகள் அமைத்தல் வேண்டும்.

---

11 நகரத்தின் புறத்தே ஓடும் யாறு வலஞ்சுற்றி ஓடுமாறு நகரம் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

12 பண்டப் பேழை—விலைச்சரக்குகள் பொதிந்த மூடை கூடை பெட்டி முதலியன. இலச்சினை இடப்பட்டு வரும் அப்பண்டங்களைப் பிரித்தெடுக்குமிடம் அந்நகரம் என்பது கருத்து.

13 நிலவழி—கற்படுத்தசாலை (Road) முதலியன. நீர்வழி—தோணித் துறை, பாலம் முதலியன. கழிவு நீர் வழிந்தோடுதற்குரிய கால்களுமாம்.

14 தானீயம்—இந்நகரத்தின் அமைப்பை இவ்வதிகரணம் முதற் பிரகரணத்தில் காண்க.

15 அமைக்கப்படும் மூன்றிற்கும் முறையே பதினான்கு பன்னிரண்டு பத்துக்கோல் அகலம் இருத்தல் வேண்டும் என்பது.

16 ஆழத்தையும் அடியகலத்தையும் அவ்வவ் வகழிக்குரிய அளவினின்றும் கணக்கிட்டுக் கொள்க.

17 வேற்றுநீர்—ஆறு முதலியவற்றினின்றும் கொணர்ந்த நீர்.

18 ஓரகழிக்கும் மற்றோரகழிக்கும் இடையே ஒரு கோல் அளவு நிலப் பகுதி விடல் வேண்டும் என்பது.

அகழியினின்றும் [19]நான்கு கோல் [20]இடையிட்டு ஆறு கோல் உயரமும், அதற்கிருமடங்கு அகலமும் உடையதாகவும், [21]தடைப் படுத்தப்பட்டும், அடி அகன்று நுனி சுருங்கியதாகவாதல், அடியும் நுனியும் ஒத்த அகலமுடையதாகவாதல், [22]அடியும் நுனியும் சுருங்கி இடைப்பகுதி அகன்றதாக வாதல், யானைகளாலும், எருது களாலும் துவைத்துத் [23]துகளாக்கப்பட்டு [24]முட்செடிகளும் நச்சுக் கொடிகளும் அடர்ந்திருக்கும்படி அகழியினின்றும் தோண்டிய மண்ணால் மதிற்சுவர்க்கு ஆதாரமாக அடிப்படை யமைத்தல் வேண்டும். எஞ்சிய மண்ணைக் கொண்டு மனைக்கட்டுக்குரிய பள்ளமான இடங்களைத் தூர்த்தல் வேண்டும். அவ்வடிப்படை யின் மேல் அகலத்தினும் இருமடங்கு உயரமுடையதாக [25]ஒற் றைப் படையாக அல்லது இரட்டைப்படையாக அமையப் [26]பன் னிரண்டு முழத்திற்குமேல், இருபத்து நான்கு முழம் வரைச் செங் கற்களால் மதிற்சுவர் எடுப்பித்தல் வேண்டும். தேர்ச் செலவிற் குத் தக்க மேற் பரப்புடையதாகவும், [27]பனையின் அடிப்பாகம் முரசு குரங்குத்தலை என்னும் இவை போன்ற வடிவங்களால் நுனிப் பகுதி அமைந்ததாகவும் பெரிய கற்களைக்கொண்டு [28]கல்

---

[19] நான்கு முழம் கொண்டது ஒரு கோலாகும்.

[20] இடையிட்டு—அகழியின் உட்புறத்தில், அதற்கும் மதிற்சுவரின் அடிப்படைக்கும் இடையே நான்கு கோல் அளவு நிலம் விடல்வேண்டும் என்பது.

[21] தடைப்படுத்தல்—உள்ளே பொதியப்பட்ட மண் சரிந்து விழாதபடி கல் முதலியவற்றால் சுவர் எடுத்துத் தடைசெய்தல்.

[22] இது முட்டை வடிவமானது.

[23] துகளாக்கல்—மண் கட்டிகள் நுறுங்கி இறுகுதற் பொருட்டாம்.

[24] பகைவர் அணுகாவாறு முட்செடிகளையும், நச்சுக்கொடிகளையும் மிகுதியாக உண்டாக்கல் வேண்டும் என்பது.

[25] ஒற்றைப்படை—பதின்மூன்று பதினைந்து முதலியன. இரட்டைப் படை—பன்னிரண்டு பதினான்கு முதலியன.

[26] பன்னிரண்டு முழத்திற்கு மேல் என்பது உயரத்தின் அளவைக் குறிப்பதாகும்.

[27] மதிற்சுவரின் நுனிப்பாகம் பனையின் அடி முதலியன போன்ற உறுப் புக்கள் அமையும்படி செங்கல் சுண்ணும்புகளால் இயற்றல் வேண்டும் என் பது கருத்து.

[28] முற்கூறியவாறு செங்கல்லாலன்றிக் கற்களாலும் சுவரெடுக்கலாம் என்பது.

லுருவத்தினும் மதிலே அமைக்கலாம். மரங்களைக் கொண்டு அறவே அமைத்தலாகாது. அவற்றில் நெருப்பு [29]மறைந்திருத்தலின்.

அகலத்திற்கு ஒத்ததாகவும் [30]உயரத்திற்கு ஏற்றவாறு [31]இறங்குதற்குரிய படிக்கட்டுக்களை யுடையதாகவும் ஒன்றுக்கொன்று முப்பது கோல் இடைவெளி விட்டு [32]அட்டாலம் அமைத்தல் வேண்டும். இரண்டு அட்டாலங்களின் நடுவண் [33]இரண்டடுக்குள்ள [34]அரமியத்தோடு கூடியதாகவும், அகலத்தினும் அரைக்கூறு மிகுதியான நீளமுள்ளதாகவும் [35]பிரதோளி அமைத்தல் வேண்டும்.

அட்டாலத்திற்கும் பிரதோளிக்கும் நடுவண் மூடித் திறத்தற்குரிய துளைகளை உடைய பலகைகளால் இணைக்கப்பட்டு மூன்று வில்லாளிகள் இருத்தற்குரியதாக [36]இந்திரகோசம் அமைக்கப் படல் வேண்டும்.

மதிற்சுவரில் உள்ள [37]இடை வெளிகளில் இரண்டு முழ அகலமும் அதற்கு [38]நான்கு மடங்கு நீளமும் உள்ளதாகப் [39]பக்கத்

---

29 எளிதில் நெருப்புப் பற்றும் என்பது கருதி இவ்வாறு கூறப்பட்டது.

30 அட்டாலக் கட்டிடத்தின் உயரத்திற்கு ஏற்றவாறு படிக்கட்டுகளின் உயரம் அகலங்களைக் கணக்கிட்டு அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

31 "அவக்ஷேப சோபானம்" என்பது முதனூல். இதற்கு இறங்குதற்குரிய படிக்கட்டு என்று உரையாசிரியர் கூறுகின்றார். "க்ஷேப" என்னுஞ் சொல் அசைதல் என்னும் பொருளுடையது. ஆதலால அசையும் ஏணிப்படி எனவும் பொருள் கொள்ளலாம்.

32 அட்டாலம்—படைவீடு.

33 இரண்டடுக்கு—கட்டிடத்தின் கீழ்த்தளமும் மேற்றளமும்.

34 அரமியம்—நிலா முற்றத்தோடு கூடிய தவள மாளிகை; 'சந்திரன் ஒளிதிகழ் தவள மாளிகை' என்பர் கம்பர். (நகரப்படலம்)

35 பிரதோளி—இடைகழி போன்ற வீதி; பிரதோளி என்பது ஒரு வகை இல்லம் என்று உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

36 இந்திரகோசம் — மதிலுக்கு வெளிப்புறத்து நிகழும் செய்தியை அறிந்துகொள்ளுதற்கும் வில்லாளிகள் தங்கிக் காவல் செய்தற்குமாக அமைக்கப்படும் ஒரு மதிலுறுப்பு.

37 இடைவெளி — அட்டாலகம் பிரதோளி இந்திரகோசம் என்னு மிவற்றிற்கு இடை இடையே உள்ள வெளியிடங்கள்.

38 நான்கு மடங்கு—எட்டு முழம்.

39 பக்கம்—மதிற்சுவரின் அருகு.

தில் [40]தேவபதத்தை அமைத்தல் வேண்டும். ஒரு கோல் அல்லது இரண்டு கோல் அகலமுள்ளனவாக ஏறியிறங்குதற்குரிய [41]இடங்களை அமைத்தல் வேண்டும். பிறர் அறிதற்கியலாத இடத்தில் [42]ஏவறையையும் [43]பொந்துத் துளையையும் அமைத்தல் வேண்டும். [44]வெளிப்புறத்தில் [45]முழங்கால்முறி [46]முத்தலைக்கழு, கேணி, இருப்புச் சலாகை, [47]படுகுழி, இருப்பு முட்கயிறு, [48]அராமுதுகென்பு, [49]பனையோலை [50]கோட்டுப்பொறி, [51]நாய்ப்பல், [52]தாழக்கோல், [53]கணையமரம், [54]காலீடு, [55]வறையோடு [56]நச்சு நீர்க்குட்டை என்னும் பொறிகள் மறைந்துள்ள [57]வழிகளை அமைத்தல் வேண்டும்.

---

40 தேவபதம்—தேவர்கள் போக்கு வரவு செய்தற்குரிய வழிபோல்வது; இது மறைவாகச் செல்லும் வழியாகும்.

41 மதிலின் உட்புறத்தில் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

42 ஏவறை—மறைந்து நின்று பகைவர் மேல் அம்பெய்தற்கும் அவர் எய்யுங்கால் மறைந்துகொள்ளுதற்கும் உரியது.

43 பொந்துத்துளை—மரப்பொந்து போன்ற துளை. அரணுக்கு வெளிப்புறத்தே உள்ள பகைவர் செய்தியை மறைந்து அறிந்துகொள்ளுதற்கு ஏவறைக்குப் பக்கத்தில் அமைக்கப்படுவது.

44 வெளிப்புறம் என்பது ஈண்டு அகழிக்கு வெளிப்புறத்தை உணர்த்தும்.

45 வன்மைமிக்க மரத்தறிகளாலாகிய பொறி.

46 வன்மைமிக்க மரத்தாலும் இரும்பினாலும் ஆக்கப்படும் சூலம்.

47 படுகுழி—சருகு புல் முதலியவற்றால் மூடப்பட்ட பள்ளங்கள்.

48 அராமுதுகென்பு—பாம்பின் முதுகெலும்பு போன்ற கூரிய இருப்பு முட்களாலாகிய பொறி.

49 பனையோலை — பனையோலை உருவமாகச் செய்யப்பட்ட இரும்புப் பொறி.

50 கோட்டுப் பொறி—மூன்று முனைகளையுடைய இரும்புப் பொறி.

51 நாய்ப்பல்—நாயின் பற்களைப்போன்ற பொறி.

52 தாழக்கோல் உருவினமைத்த பொறி.

53 கணையமரம்—தடைப்படுத்துதற் பொருட்டுக் குறுக்காகக் கிடத்தும் மரம்.

54 காலீடு-ஒற்றைக்கால் அளவில் பதிதற்குரிய சேறு நிறைந்த பள்ளம்.

55 வறையோடு—வறையோடு போல் நெருப்பிற் காய்ச்சப்பட்ட இரும்புச்சட்டி போன்ற பொறி.

56 நச்சுநீர்க் குட்டை—உண்பார்க்குத் தீங்கு விளைக்கும் நீர் நிறைந்த சிறு குளம்.

57 ஈண்டுக் கூறப்பட்ட இரும்பு மரப் பொறிகளையும் கேணி முதலியவற்றையும் அரணுக்கு வெளிப்புறங்களில் உள்ள வழிகளில் அமைத்து வைத்தல் வேண்டும் என்பது கருத்து.

மதிற்சுவரின் [58]இருபுறத்தும் [59]ஒன்றரைக்கோல் அளவு அகலமுள்ள மண்டபம் எடுத்துப் பிரதோளியின் [60]ஆறு தளங்களி னிடையில் [61]ஐந்து கோல் முதல் ஒவ்வொன்று கூடுதலாக எட்டுக் கோல் வரை [62]சதுர வடிவில் கோட்டை வாயில் அமைத்தல் வேண்டும். ஒரு சாரார் [63]இரண்டுகோல் அளவென்பர். மற்றொரு சாரார் [64]நீளத்தினின்றும் ஆறில் ஒரு கூறுதல் எட்டில் ஒரு கூறு தல் மிகுதியாக இருக்கலாம் என்பர்.

தூணின் உயரம் [65]பதினைந்து முழம் முதல் ஒவ்வொன்று கூடுதலாகப் பதினெட்டு முழம் வரை இருத்தல் வேண்டும்.

தூணின் சுற்றளவு [66]நீளத்தில் ஆறில் ஒரு கூறு இருத்தல் வேண்டும். சுற்றளவின் இரு மடங்கு நிலத்திற் புதைத்தல் வேண்

---

58 இருபுறம்—உட்புறமும் வெளிப்புறமுமாம்.

59 மதிற்சுவரின் இருபக்கங்களினின்றும் ஒன்றரைக்கோல் அகலமாகக் கொள்ளல் வேண்டும்.

60 ஈண்டுக் கூறப்பட்ட ஆறு தளங்கள் வாயிலுக்கு இருமருங்கும் உள்ளவை. ஒருமருங்கு மூன்றும் மற்றொரு மருங்கு மூன்றுமாகக் கொண்டு அவற்றின் இடையே வாயில் வழி அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

61 வாயிலின் அகலம் ஐந்து கோல் முதல் எட்டுக்கோல் வரை ஏற்ற வாறு அமைத்துக்கொள்ளலாம் என்பதும், ஐந்துக்கு மேற்பட்ட அளவு முழுக்கோலாக இருத்தல் வேண்டும் என்பதுமாம்.

62 சதுரம்—ஈண்டு நாற்கோணத்தைக் குறிப்பது.

63 ஈண்டுக் கூறிய இரண்டு கோல் அளவும் கோட்டை வாயிலுக்கென அறிக.

64 நீளம் ஈண்டு மதிற்சுவரின் அகலமாகும். அவ்வகலத்தின் ஆறிலொரு கூறு அல்லது எட்டில் ஒருகூறு மிகுதியாகச் சேர்த்துக் கோட்டை வாயிலின் அகலம் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து. இருபத்ினான்கு அங்குலம் கொண்டது ஒரு முழமாகவும், நான்கு முழங்கொண்டது ஒரு கோலாகவும் கணக்கிட்டுக்கொள்ளல் வேண்டும். ஈண்டுக் கூறிய அளவைகளை நோக்கக் கோட்டை வாயிலின் அகலம் இரண்டு கோல் அல்லது ஐந்து கோல் முதல் எட்டுக் கோல் வரை இருத்தல் வேண்டும் என்பது புலனும்.

65 பன்னிரண்டு முழ உயரமுள்ள மதிற்சுவர்க்குக் காற்கூறு முதல் அரைக்கூறு வரை மிகுத்துப் பதினைந்து முழம் முதல் பதினெட்டு முழம் வரை உயரமுள்ள தூண் நிறுத்தலாம் என்பது கருத்து.

66 பதினைந்து முழம் உயரமுள்ள தூணிற்குச் சுற்றளவு இரண்டரை முழமாகவும், நிலத்திற் புதையும் பகுதி ஐந்து முழமாகவும் தூணின் உச்சி அரையே அரைக்கால் முழமாகவும் இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

டும். தூணின் உச்சி சுற்றளவின் நான்கில் ஒரு கூறு இருத்தல் வேண்டும்.

கோட்டைவாயிலின் முதற்றளத்தின் அகலத்தை ஐந்து கூறுக்கிச் [67]சாலை கேணி அறை வீடு என்னும் இவற்றை அமைத்தல் வேண்டும். [68]பத்திலொரு கூறு அளவு அகலமுடையனவும், மத்தவாரணப் படிவங்களை உடையனவும் கட்டில் வடிவினவு மாகிய இரண்டு [69]தெற்றிகளையும் [70]இடைவெளியில் நுழை வெளிகளையும் அமைத்தல் வேண்டும். இரண்டாவது மேற்றளம் முதற்றளத்தின் உயரத்தில் அரைக்கூறு உயரமுடையதாகவும் சிறிய தூண்களை உடையதாகவும் அமைத்தல் வேண்டும். மூன்றுவது மேற்றளம் [71]அரை மனையளவு அகலமுடையதாகவாதல் [72]மூன்றில் ஒரு கூறு அகலமுடையதாகவாதல், இருத்தல் வேண்டும். [73]செங்கல்லாற் கட்டப்பட்ட பக்கங்களையும், இடப் புறத்தில் வலஞ்சுற்றும் படிகளையும் [74]மற்ருெரு புறத்தில் சுவரில் மறைவான படிகளையும் அமைத்தல் வேண்டும்.

வாயிலின் உச்சி இரண்டு முழ அளவினதாதல் வேண்டும்.

---

[67] ஐந்து கூருகச் செய்யப்பட்ட அகலத்தின் நடுக்கூற்றில் கேணியையும், அக்கேணியின் இருமருங்கிலும் சாலைகளையும், அச்சாலைகளின் பக்கத்தின் எஞ்சி நின்ற கடைக்கூறுகளில் அறைவீடுகளையும் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து. சாலை—நடைவழி.

[68] வாயிலின் அகலத்தில் பத்தில் ஒரு கூறெனக் கொள்க.

[69] தெற்றி—திண்ணை. வாயின் முகப்புகளின் இருமருங்கும் இரண்டு திண்ணைகள் கட்டில் வடிவினவாக எடுத்து அவற்றில் யானை உருவங்களை அமைத்தல் வேண்டும் என்பது.

[70] சாலைக்கும் அறைவீட்டுக்கும் இடையில் நுழைவழிகளை அமைத்தல் வேண்டும் என்பது.

[71] ஒரு மனையின் அளவு மூன்று கோல் என்பர் ஆதலின் அறை மனையின் அளவு ஒன்றரைக் கோலாகும்.

[72] முதற்றளத்தின் அகலத்தில் மூன்றிலொரு கூறென்பது கருத்து.

[73] "செங்கலாற் கட்டப்பட்ட" என்பது முதல் "அமைத்தல் வேண்டும்" என்பது வரையுள்ள தொடர்கள் மூன்று தளத்திற்கும் உரியனவாகக் கொள்ளல் வேண்டும்.

[74] மற்ருெருபுறம்—வலப்புறம்; ஈண்டுக் கூறப்பட்ட மூன்று தளங்களும் கோட்டை வாயிலின் கோபுர தளங்களாகக் கருதத்தக்கன.

[75]ஐந்தில் மூன்று கூறு அளவு அகலமுள்ள கதவுகள் இரண்டு இணைக்கப்படல் வேண்டும். கதவு ஒவ்வொன்றற்கும் இரண்டிரண்டு தாழக்கோல்கள் அமைத்தல் வேண்டும். கதவுக்[76]குடுமிகள் ஒரு முழ நீளம் இருத்தல் வேண்டும். [77]சிறுவழி ஐந்து முழ உயரம் இருத்தல் வேண்டும். [78]யானைத்தாழ் நான்கு அமைத்தல் வேண்டும். (கோட்டை வாயிலினின்றும் இறங்குதற் பொருட்டு) வாயிலகலத்தின் [79]அரைக்கூறு அளவு [80]யானை நகம் அமைத்தல் வேண்டும். [81]அது கோட்டை வாயிலுக்கு ஒத்த அகலமுடையதாகல் வேண்டும். போக்கு வரத்திற்குரிய [82]சாதனம் திட்பமுடையதாகவும் [83]நீர் இல்லாதவிடம் [84]வன்னிலம் ஆகவும் இருத்தல் வேண்டும்.

[85]மதிற்சுவர்க்கு ஒத்த அளவில் வாயிலமைத்து அதன்

---

75 கோட்டை வாயிலகலத்தின் அளவில் ஐந்தில் மூன்று கூறெனக் கொள்ளல் வேண்டும்.

76 குடுமி-கதவுகளுக்கு ஆதாரமாக மேலும் கீழும் நீண்டிருக்கும் பகுதி.

77 வாயிற்குரிய கதவு மிகப் பெரிதாகலான் அடிக்கடி மக்கள் போக்கு வரத்து செய்தற்கு அக்கதவின் நடுவண் சிறு வாயில் அமைத்தல் வேண்டும் என்பது.

78 யானைத்தாழ்—வாயிற் கதவுகளுக்கிடப்படும் பெரிய தாழக் கோல்.

79 கோட்டை வாயிலின் அகலம் ஐந்து கோல் அளவாயின் அதன் அரைக் கூறு இரண்டரைக் கோலாகும்; இவ்வளவு யானை நகத்தின் பரப்பிற்கென உணர்க.

80 யானை நகம்—கோட்டை வாயிலினின்றும் நிலத்தினிலிறங்குதற்குச் சரிவாக அமைக்கப்படும் மண்மேடு; இஃது யானையின் நகம்போலச் சரிந்த வடிவினதாகலின் "யானை நகம்" எனப்பட்டது. யானையால் குத்தித் தகர்க்கமுடியாத வன்மையுடையதாகலின் யானை நகம் எனப்பட்டதெனினும் அமையும்.

81 அது—அம்மண்மேடு.

82 சாதனம்—அகழியைக் கடத்தற்கு மரம் முதலியவற்றால் அமைக்கப் படுவது. இதனை இக்காலத்தில் "பாலம்" என்று கூறுப.

83 நீரில்லாத இடம்—அகழிகளுக்கும் மதிர் சுவர்க்கும் இடை இடையே உள்ள நிலப் பகுதிகள்.

84 வன்னிலம்—கல் இட்டிகை சுண்ணம்புகளால் அமைத்துக் குற்றி இறுக்கப்பட்ட நிலம்.

85 முன் கூறியபடியன்றி மதில் வாயில்களை வேறு வகையாகவும் அமைக்கலாம் என்று கூறத் தொடங்குகின்றார்.

அகலத்தில் மூன்றில் ஒரு கூறளவு [86]உடும்புமுக வடிவில் கோபுரம் அமைக்கலாம்.

அன்றி, மதிற்சுவர் நடுவண் கேணியையுடையதாகப் [87]புட்கரணி யென்னும் வாயிலே யமைக்கலாம். ஆல்லது, மிகவும் பயன் படத்தக்க இடைவெளியோடு கூடிய சிறு வழியமைந்த நான்கு அறைகளையுடைய குமாரீபுரம் என்னும் வாயிலை அமைக்கலாம். இரண்டு தளங்களில் சிகரம் இல்லாத [88]முண்டக வாயிலையும் அமைக்கலாம். அல்லது [89]நிலம் பொருள்களுக்கு ஏற்பவும் செய்யலாம். அகலத்தினும் மூன்றில் ஒரு கூறு அளவு மிகுதியான நீளத்தில் படைக்கல முதலிய கருவிகள் வைத்தற்குரியவாக [90]வாய்க்கால்களையமைத்தல் வேண்டும்.

[91]சுலோகங்கள்

(1—2) அவ்வாய்க்கால்களில் எறிகல் குந்தாலி [92]குடாரி அம்பு யானைக்குரிய அணிகலங்கள் கதாயுதம் [93]முற்கரம் எறிதடி ஆழி நூற்றுவரைக் கொல்லி யென்னும் பொறி தோமர முதலியன சூலம் ஈட்டி [94]ஒட்டகக் கழுத்தைப் போன்ற படை [95]தீப்பற்றி [96]குப்பியப் பொருள்கள் என்னும் இவற்லை வைத்தல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
"அரணமைத்தல்" என்னும் இருபத்து நான்காம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[86] உடும்பு முகம் போல அடியகன்று நுனி சுருங்கிய வடிவத்தில் சிறு கோபுரம் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[87] கேணியுடைமையால் அவ்வாயில் புட்கரணி யென்னும் பெயருடையதாயிற்று.

[88] சிகர மின்மையால் முண்டக வாயிலாயிற்று.

[89] மேற்கூறிய வாயில்களுள் இடம் பொருள்களின் நிலைமைக்கேற்ப வேண்டியவாறு அமைத்துக் கொள்ளலாம் என்பது கருத்து.

[90] வாம்க்கால்—படைக்கலம் முதலியன வைத்தற்குத் தகுதியாக நிலத்தில் வாய்க்கால் போல் அமைக்கப்படும் பள்ளங்கள்.

[91] மேற்குறித்த வாய்க்காற் பகுதிகளில் வைக்கப்படும் உபகரணங்கள் இன்னவென இச்சுலோகங்களில் கூறுகின்றார்.

[92] குடாரி—கோடரி—கோடாலி என்றும் வழங்குப.

[93] முற்கரம்—சம்மட்டி.

[94] வளைதடி.

[95] தீப்பற்றி—பகைவரைக் கொளுத்துதற்கு எறியப்படும் குங்கிலியம் தீமுறி பாஷாணம் முதலியன.

[96] குப்பியம் — 2ம் அதிகரணம் 17ம் பிரகரணத்திற் கூறப்பட்ட பொருள்கள். மரப் பொருள்களும் தோல் மருந்து முதலியனவுமாம்.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

நான்காம் பிரகரணம்—[1] அரணுள் அமைத்தல்

இருபத்தைந்தாம் அத்தியாயம்

கிழமேல் நீளத்தில் மூன்று இராச வீதிகளும், தென்வடல் நீளத்தில் மூன்று இராச வீதிகளும் ஆக மனையிடம் [2]வகுக்கப்படல் வேண்டும். [3]பன்னிரண்டு வாயில்களையுடைய அம் மனையிடம் [4]நீர் நிலைகளையும் நீர் கழியும் கால்களையும் மறைவான சுருங்கை வழிகளையும் உடையதாக இருத்தல் வேண்டும்.

சிறிய தெருக்கள் நான்குகோல் அளவு அகலமுடையனவாகவும், அரசவீதி [5]துரோணமுகவழி தானீயவழி [6]நாட்டுவழி மேய்தனிலவழி [7]வாணிகத் தொழிலிடவழி [8]படைசெல்வழி சுடலைவழி கிராமவழி என்னும் இவை எட்டுக்கோல் அகலமுடையனவாகவும், அணைக்கட்டு வழியும் காடுசெல் வழியும் நான்குகோல் அகலமுடையனவாகவும், யானைசெல் வழியும் வயல் வழியும்

25-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 அகழி மதில் அட்டாலகம் பிரதோளி இந்திர கோசம் தேவபதம் என்னும் இவை முதலிய எல்லாம் அரணாகும். அவ்வரணுள் அரசர் பெருந்தெரு முதலியனவும் அரண்மனையும் அமைச்சர் முதலியோர் இல்லங்களும் அமைத்தல் இதன் கட் கூறப்படும். ஆதலின் அரணமைத்தலின் பின் இது வைக்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு புலனாதலறிக. அரணுள்ளே அரண்மனை முதலியவமைத்தலைக் கூறுதலின் இப்பிரகரணம் "அரணுள் அமைத்தல்" என்னும் பெயர்த்தாயிற்று.

2 ஆறு பிரிவாக வகுக்கப்படல் வேண்டும் என்பது கருத்து.

3 திசை ஒன்றிற்கு மூன்று விகிதமாக நான்கு திசைகளுக்கும் தெருக் கோடிகள் பன்னிரண்டு ஆகும் என்பது. வாயில் ஈண்டுத் தெருக்களின் கடைப் பகுதியை உணர்த்தும்.

4 நீர் நிலை—கேணி ஊருணி முதலியன.

5 துரோணமுகம் தானீயம் என்னும் இவற்றின் இலக்கணங்களை இவ்வதிகரணம் முதற் பிரகரணத்திற் காண்க.

6 நாடு—ஈண்டு அயல் நாட்டைக் குறிப்பது.

7 பண்டங்களைக் கொள்ளல் விற்றல் மிகுதியாக நடைபெறும் வேற்றூர் முதலிய இடங்களுக்குச் செல்லும் வழி.

8 படை—நால்வகைப் படை.

இரண்டு கோல் அகலமுடையனவாகவும், [9]தேர் செல்வழி ஐந்து முழ அகலமுடையதாகவும், [10]ஆனதர் நான்கு முழ அகலமுடைய தாகவும், [11]சிறு விலங்கு செல்வழியும் மக்கள் நடைவழியும் இரண்டு முழ அகலமுடையனவாகவும் இருத்தல் வேண்டும்.

சிறந்த வன்மை மிக்கதும் நால்வகை வருணத்து மக்களும் வாழ்தற்குரியதுமாகிய மனையிடத்தில் அரண்மனை அமைத்தல் வேண்டும். மனையிடத்தின் [12]நடுக்கூற்றினின்றும் [13]வடபால் ஒன்பதில் ஒரு கூற்றில் [14]முன் கூறப்பட்ட முறைப்படி உள்ள அரண்மனையைக் கிழக்குமுகமாகவாதல் வடக்குமுகமாகவாதல் அமைத்தல் வேண்டும். அவ்வரண்மனைக்குக் [15]கீழ்பால் வடபகுதியில் ஆசிரியர் புரோகிதர் என்னும் இவர்களுடைய வேள்விச்சாலைகளும் [16]நீர் நிலைகளும் இருத்தல் வேண்டும். அமைச்சர்களும் ஆண்டிருத்தல் வேண்டும். கீழ்பால் தென்பகுதியில் அடுக்களையும் [17]யானை மாடமும் [18]கோட்டமும் அமைத்தல் வேண்டும். அவற்றின் புறத்தே கீழ்பால் [19]மணப்பொருளும் மலர்மாலையும் கூலமும்

---

[9] தேர்—மக்கள் ஊர்ந்து செல்லும் வண்டி முதலியன.

[10] ஆனதர்—பசு எருமை முதலியன செல்லும் வழி.

[11] சிறு விலங்கு—யாடு முதலியன.

[12] நடுக்கூறு—அரணுக்குட்பட்ட அரசனது தலை நகரத்திற்குரிய இடத்தைக் கிழமேலாக ஒன்பது கூறிட்டுக் கொள்ளப்படும் இடைக் கூறு. இதனை " வாஸ்து இருதயம் " என்று முதனூல் கூறும்.

[13] வடபால் ஒன்பதில் ஒரு கூறு நடுக்கூற்றை அடுத்துள்ள கூறாகும்.

[14] " முதலதிகரணம் பதினேழாம் பிரகரணத்திற் கூறப்பட்ட " என்பது.

[15] அரண்மனையைச் சூழ்ந்து அடுத்துள்ள நிலத்தை எண் கூறாகவும் அவற்றிற்குப் புறத்தேயுள்ள நாற்றிசை நிலத்தையும் நாற்பகுதியாகவும் வகுத்துக் கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் உள்ள குடியிருப்பு முதலியவற்றைக் கூறத் தொடங்குகின்றார்.

[16] நீர் நிலை—வேள்விக்குப் பயன் படுதற்கும், உண்ணுதற்கும் நீராடற்குமாம்.

[17] யானை மாடம்—யானை முதுகின் வடிவு அமைய எடுக்கப்படும் இல்லம். யானை கட்டும் கூடம் எனினுமாம்.

[18] கோட்டம்—ஈண்டுச் சரக்கறையை உணர்த்தும்.

[19] மணப் பொருள்—சந்தனம் முதலியன.

[20]நெய் முதலியனவும் ஆகிய விலைப்பண்டங்களும், சிறந்த சிற்பி களும் அரச குலத்தவரும் இருத்தல் வேண்டும். தென்பாற் கீழ் பகுதியில் கருவூலமும் வரவு செலவுக் கணக்கு எழுதும் இடமும் [21]பணிக்களரியும் இருத்தல் வேண்டும். தென்பால் மேற்குப் பகுதி யில் குப்பியக் கோட்டமும் படைக்கலக் கோட்டமும் இருத்தல் வேண்டும். அவற்றின் புறத்தே தென்பால் [22]நகராட்சியாளர் கூலவாணிகர் [23]தொழிலாளர் படைத்தலைவர் உண்டி விற்போர் கள்விற்போர் இறைச்சி விற்போர் வரைவின் மகளிர் கூத்தர் வாணிகர் என்னும் இவர்கள் இருத்தல் வேண்டும். மேல்பால் தெற்குப் பகுதியில் கழுதைக் கொட்டில் ஒட்டகக் கொட்டில் சிறைக்கோட்டம் [24]தொழிலிடம் என்னும் இவற்றை அமைத்தல் வேண்டும். மேல்பால் வடக்குப் பகுதியில் [25]ஊர்திச்சாலையும் தேர்ச்சாலையும் அமைத்தல் வேண்டும். அவற்றின் புறத்தே மேல் பால் மயிர்க்கம்பலம் நூலாடை நெய்வோரும் [26]மூங்கின் முடை வோர் தோல் பதனிடுவோர் கவசம் [27]படையுறை இயற்றுவோர் என்னும் இவர்களும் சூத்திரரும் இருத்தல் வேண்டும். வடபால் மேற்குப் பகுதியில் விலைப்பண்டம் வைக்குமிடமும் மருத்துவச் சாலையும் அமைத்தல் வேண்டும். வடபால் கிழக்குப் பகுதியில் கூலம் முதலியன தொகுத்து வைக்குமிடம் பசுக்கொட்டில் குதிரைச்சாலை என்னும் இவற்றை அமைத்தல் வேண்டும். அவற் றின் புறத்தே வடபால் [28]நகரத் தெய்வமும் அரசர்களுடைய குல

---

20 முதலியன என்றமையால் தேன் எண்ணெய் அனைய பிற நெகிழ்ச்சிப் பொருள்களையும் கொள்க.

21 பணிக்களரி—பொன் வெள்ளி முதலியவைகளைக் கொண்டு அணி கலன் பாத்திரம் முதலியன செய்யும் தொழிற்சாலை.

22 நகராட்சியாளர்—நகரபரிபாலகர்.

23 தொழிலாளர்—ஆகரத் தொழில் முதலியன செய்வோர்.

24 தொழிலிடம்—கழுதை ஒட்டகம் என்னும் இவைகளும், சிறைப் பட்டோரும் வேலை செய்யுமிடம்.

25 ஊர்தி—சிவிகை முதலியன.

26 மூங்கின் முடைவோர்—மூங்கில் பிரம்பு முதலியவற்றைக் கொண்டு கூடை முதலியன பின்னுவோர்.

27 படையுறை—ஆயுதங்களுக்குத் தோல் துணி முதலியவற்றால் செய் யும் உறை.

28 நகரத் தெய்வம்—நகரத்தைப் பாதுகாக்கும் அதிட்டான தெய்வம்.

தெய்வமும் கொல்லரும் [29]மணிப்பணியாளரும் பார்ப்பனரும் இருத்தல் வேண்டும். அம்மனையிடத்தில் எஞ்சிய பகுதிகளில் வண்ணான் [30]முதலியோரும் அயல்நாட்டு வாணிகக் குழுவினரும் இருத்தல் வேண்டும்.

நகரத்தின் நடுவண் [31]கொற்றவை திருமால் முருகன் இந்திரன் என்னும் இத்தெய்வங்குளுக்குரிய கோட்டங்களும், சிவன் குபேரன் தேவ மருத்துவர் திருமகள் [32]மதிரை என்னும் இத்தெய்வங்களுக்குரிய கோயில்களும் அமைத்தல் வேண்டும். அக்கோட்டங்களிலும் கோயில்களிலும் அவ்வவ்விடங்களில் நிலைப்படுத்த வேண்டிய [33]பரிவார தேவர்களை இருத்தல் வேண்டும். [34]நகர வாயில்கள் பிரமன் இந்திரன் இயமன் முருகன் என்னும் இவர்களைத் தெய்வங்களாக உடையன. அகழிக்குப் புறத்தே நூறு கோல்களுக்கு அப்பால் [35]கடவுண்மரம் [36]நீர்த்துறை [37]பொழில் அணைக்கட்டு என்னும் இவற்றை அமைத்தல் வேண்டும். [38]திசைக் கடவுளரை [39]அவ்வத் திசைகளில் அமைத்தல் வேண்டும்.

---

29 மணிப்பணியாளர்—இரத்தின வேலை செய்வோர்.

30 "முதலியோர்" என்றதனால் மயிர் வினைஞர் தையற்காரர் முதலிய தொழிலாளர் அனைவரையும் கொள்ளல் வேண்டும்.

31 கொற்றவை—துர்க்கை.

32 மதிரை—இத்தெய்வம் இன்னதென்று விளங்கவில்லை.

33 பரிவார தேவர்—சூரியன், சந்திரன் துவாரபாலகர் முதலியோர்.

34 வடக்கு வாயிலுக்குப் பிரமனும், கிழக்கு வாயிலுக்கு இந்திரனும் தெற்கு வாயிலுக்கு இயமனும் மேற்கு வாயிலுக்கு முருகனும் அதிட்டான தெய்வங்களாம் என்பது.

35 கடவுண் மரம்—தெய்வம் உறையும் மரம். கடவுட்டன்மை வாய்ந்த மரமுமாம்.

36 நீர்த்துறை—ஈண்டுப் புண்ணிய தீர்த்தத் துறை.

37 பொழில்—மக்கள் தங்கி இன்புறுதற்குத் தக்க நிழல் தரும் சோலை.

38 திசைக் கடவுளர்—திக்குப் பாலகர்.

39 கிழக்கில் இந்திரனையும், தென் கிழக்கில் தீக்கடவுளையும் தெற்கில் மறலியையும் தென் மேற்கில் நிருதியையும் மேற்கில் வருணனையும் வடமேற்கில் வாயுவையும் வடக்கில் குபேரனையும் வடகிழக்கில் ஈசானனையும் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[40]வடக்கிலாதல் கிழக்கிலாதல் சுடலை அமைத்தல் வேண்டும். [41]உயர்குலத்தவர்க்குத் தென்றிசையிற் சுடலை இருத்தல் வேண்டும். இம்முறையிற் பிறழ்வார்க்குப் [42]பூர்வசாகச தண்டம் விதித்தல் வேண்டும். பாசண்டரும் புலையரும் சுடலையின் அருகில் இருத்தல் வேண்டும்.

அரணுள் வாழும் இல்லறத்தார்க்கு [43]அவர்தம் தொழிலுக்கும் நிலத்திற்கும் ஏற்ப விளைநிலத்தை அளவிட்டு வரையறைப் படுத்தல் வேண்டும். [44]அந்நிலங்களில் மலர் பழம் உதவும் தோட்டங்களையும், தாமரை முதலிய [45]நீர்ப்பூக்களையும், விளை நிலங்களையும், கூலம் முதலிய விலைப்பொருள் தொகுத்து வைத்தலையும் அரசனுடைய கட்டளை பெற்று இயற்றல் வேண்டும். பத்துக்[46]குழி அளவுள்ள நிலம் ஒரு [47]கேணிப் பாய்ச்சலாகும். பலவகை எண்ணெய் பலவகைக் கூலம் [48]அக்காரம் உப்பு மருந்து உலர்ந்த [49]மரக்

---

[40] இச்சுடலை நான்காம் வருணத்தவர் முதலிய இழிகுலத்தார்க்கு என்பது.

[41] மூலத்தில் வருணோத்தமர் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு நான்காம் வருணத்தவர் என்று உரையாளர் ஒருவர் பொருள் கூறினர். அங்ஙனமாயின் மேலே "வடக்கிலாதல் கிழக்கிலாதல் சுடலையமைத்தல் வேண்டும்" என்பதற்கு இருபிறப்பாளர் மூவர்க்கும் எனக் கொள்ளல் வேண்டும். உயர் குலத்தோர்—அந்தணர் அரசர் வணிகர் என்போர்.

[42] பூர்வசாகச தண்டம்—இருநூற்றைம்பது பணம் ஆகும்.

[43] பொதுவாக வுள்ள நிலத்தைக் குடிமக்களின் தகுதியையும் அந்நிலப் பரப்பையும் சீர்தூக்கி அறுதியிட்டுப் பகுத்துக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[44] அந்நிலங்களில்—அரசன் குடிகளுக்கென வரையறை செய்த நிலங்களில்.

[45] நீர்ப்பூக்கள் என்பது அவற்றை உண்டாக்குதற்குரிய நீர் நிலைகளைக் குறிப்பதாம்.

[46] நடுத்தரமான கலப்பைகளையுடைய இரண்டேர் பூட்டி உழுதற்குரிய அளவுள்ள நிலம் ஒரு குழி ஆகும்.

[47] ஒரு கேணி நீரால் பத்துக் குழியளவு நிலத்திற் பயிர் செய்யலாம் என்பது கருத்து.

[48] அக்காரம்—வெல்லம் சருக்கரை முதலியன.

[49] மரக்கறிகளாவன :—கிழங்கு கீரை குருத்து தளிர் பழம் தண்டு புல்லுருவி பட்டை மலர் காளான் என்னும் இப்பத்துமாம்.

கறி வைக்கோல் உலர்ந்த இறைச்சி புல் விறகு [50]உலோகங்கள் தோல் கரி நரம்பு நஞ்சு விலங்குக் கொம்பு மூங்கில் மரவுரி வயிரம் ஏறிய மரம் படைக்கலம் கவசம் எறிகல் என்னும் இவற்றைப் பல ஆண்டுகளுக்கு வேண்டிய அளவு [51]தொகுத்து வைத்தல் வேண்டும். புதிய பொருள் வருங்கால் பழைய பொருளைச் செல விடல் வேண்டும்.

யானை குதிரை தேர் காலாள் என்னும் நால்வகைப் படைகளுக்கும் தலைவர் பலரை அமைத்தல் வேண்டும். [52]தலைவர் பலராயின் ஒருவர் ஒருவரை அஞ்சிப் பகைவரது வேறுபாட்டிற்கு ஆளாகார் என்பது.

[53]இதனால் நாட்டின் எல்லைக்குக் காவலாக உள்ள அரணமைப்பும் கூறப்பட்டபடியாம்.

சுலோகம்

நாடு நகரத்து மக்களுக்குக் கேடுவிளைவிக்கும் [54]புறம்பானவர்களை நகரத்தில் இருக்கச் செய்யலாகாது. நாட்டின் கடைப்பகுதியில் இருக்கச் செய்யலாம். [55]பிறரை யொப்ப அன்னாரையும் இறைப்பொருள் செலுத்தற்கு உரியராக்கல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் நான்காம் பிரகரணம்
"அரணுள் அமைத்தல்" என்னும் இருபத்தைந்தாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[50] உலோகங்கள்—இரும்பு முதலியன.

[51] முன் குறிப்பிட்ட இடத்தில் தொகுத்து வைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[52] தலைவன் ஒருவனாயின் தனக்கு ஒத்தார் யாரும் இன்மையால் அச்சமின்றிப் பொருணசை காரணமாகப் பகைவர்க்கிணங்கித் தான் வேறுபடுதலோடு தன்னுட்பட்ட படை வீரரையும் வேறுபடுத்தக் கூடும். பலராயின் அவ் வேறுபாடு கோடற்கு இடனின்றென்பது கருத்து.

[53] நகரத்திற்கு ஈண்டுக் கூறிய அரணைப் போல நாட்டின் எல்லைகளுக்கும் அரண் அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[54] புறம்பானவர்—சூதாடுவோர் வஞ்சகர் நடர் முதலியோர்.

[55] பிறர்—நாடு நகரத்துள்ள குடிமக்கள்,

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

ஐந்தாம் பிரகரணம்—[1] பொருட்பண்டாரம் புரப்போன் செய்தி

இருபத்தாறும் அத்தியாயம்

பண்டாரத்தலைவன் [2]நிதியறை விலைப்பண்டம் தொகுக்குமிடம் [3]உணவுப் பொருட்சாலை [4]குப்பியச்சாலை படைக்கலக் கொட்டில் சிறைக்கோட்டம் என்னும் இவற்றை அமைத்தல் வேண்டும்.

சதுரவடிவில் [5]நீர்க்கசிவில்லாதபடி வாவிபோலப் பள்ளம் தோண்டி [6]நாற்புறமும் அடிப்பரப்பும் பெரிய கற்களைப்படுத்து வயிரம் ஏறிய மரங்களாலாகிய [7]பஞ்சரத்தையும் [8]நிலமட்டத்தோடு ஒத்த மூன்று தளங்களையும் பலவகைக் [9]கோட்டங்களின் அமைப்பையும் நீறும் கல்லும் விரவி இறுக்கப்பட்ட மேல் நடு கீழாகிய

26-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரணுள் அமைத்தல் என்னும் முன்னைய பிரகரணத்தில் பல பொருள்களையும் தொகுத்து வைத்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது. இதன்கண் அப்பொருளைச் சேர்த்துக் காப்போன் செயல் கூறப்படுதலின் பிரகரணவியைபுண்மை அறியலாம். பண்டாரம்—கருவூலம் களஞ்சியம் முதலியன.

[2] நிதியறை—மணி பொன் முதலியன வைக்கும் அறை.

[3] உணவுப் பொருள்—நெல் முதலிய கூலங்களும் எண்ணெய் முதலியனவுமாம்.

[4] குப்பியம்—வயிரமுள்ள மரம் முதலிய பொருள்களும் பொன் வெள்ளியல்லாத ஏனைய உலோகங்களுமாம்.

[5] நிலவறை நிமித்தம் தோண்டப்படும் பள்ளத்தில் ஊற்று நீர் வெளிப்படாதபடி செங்கல் சுண்ணும்பு முதலியவற்றால் தடைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[6] நாற்புறமும்—நாற்புறத்துச் சுவர்களும்.

[7] பஞ்சரம்—பறவைகளை அடைத்து வைத்தற்குரிய கூடு; அக் கூடு போல வன்மை மிக்க மரங்களால் ஒவ்வொரு தளத்திற்கும் மேற்பரப்பு அமைத்தல் வேண்டும் என்பது.

[8] நிலமட்டம் ஒரு தளமாகவும் அதற்குக் கீழ் இரண்டு தளங்களாகவும் அமைத்தல் வேண்டும் என்பது.

[9] கோட்டங்கள்—உள்ளறைகள்.

அத்தளங்களையும் ஒரு வாயிலையும் [10]பொறிகளால் அமைக்கப்பட்ட ஏணிகளையும் தெய்வப் படிவம் அமைந்த கதவினையும் உடையதாக நிலவறை அமைத்தல் வேண்டும். [11]அதன்மேல் உள்ளும் புறமும் தாழக்கோல்களையும் பொருள் வைத்தற்குரிய பல அறைகளையும் உடையதாகவும், முகப்புடன் கூடியதாகவும் உள்ள நிதியறையை [12]நிலத்தின்மேற் கட்டப்படும் இல்லம்போல் அமைத்தல் வேண்டும். கேடுநேர்ந்துழிப் பயன்படுதற் பொருட்டு நிலையான நிதியறையை [13]நாட்டின் எல்லையில் [14]புறப்படுத்தப்பட்டவர்களைக் கொண்டு செய்வித்தல் வேண்டும்.

நன்கு சுடப்பட்ட செங்கற்களாலாகிய தூண்களையும் ஒன்றுக்கொன்று எதிர்முகமாக உள்ள [15]நான்கு கட்டுக்களையும் ஒருவாயிலையும் பல அறைகளையும் [16]பல தளங்களையும் வாயிலின் இரு பக்கமும் அகன்ற தூண்களையுடைய தெற்றிகளையும் உடையவாக விலைப்பண்டம் தொகுக்கும் இடத்தையும் உணவுப் பொருட்சாலையையும் அமைத்தல் வேண்டும். நீண்ட [17]பல கோட்டங்களையும்

---

10 வேண்டுங்கால் வைத்துக்கொள்ளவும், வேண்டாதபொழுது விலக்கி விடவும் தகுதியாகப் பொறிகளால் ஏணிகள் அமைத்தல் வேண்டும் என்பது.

11 அதன் மேல்—அந்நிலவறையின் மேல்.

12 நிலவறையின்மேல் எடுக்கப்படும் இல்லம் பிறர் பார்வைக்கு அந்நிலவறையின்மேல் கட்டப்பட்டதாகத் தோன்றாமல் நிலத்தின்மேற் கட்டப்பட்டது போல் தோன்றும்படி அமைத்தல் வேண்டும் என்பது.

13 பகைவரால் துன்பம் நேர்ந்து வெளிப்படுங்கால் நாட்டின் எல்லையில் மறைவாக வைக்கப்பட்ட பொருள் பயன்படலாமென்னும் கருத்துப் போலும்.

14 புறப்படுத்தப்பட்டவர்—கொலைத்தண்டம் விதிக்கப்பட்டவர். இவர்களைக் கொண்டு பிறர் அறியாவாறு நிதியறை அமைத்துக் கொண்டால், அச்செயல் முடிவில் இவர்கள் கொலைப்படுத்தப் படுவராதலின் முன்னும் பின்னும் யாரும் அறிந்துகொள்ள இயலாதென்பது கருத்து.

15 நான்குகட்டு—இதனை "சதுச்சாலை" என்று முதனூல் கூறும்.

16 தளம்—ஈண்டு மேற்றளத்தினை உணர்த்தும்.

17 நீண்ட பெரிய அறைகளையும் சிறிய பல அறைகளையும் நடுவில் முற்ற வெளியையும் உடையதாகக் குப்பியச் சாலை இருக்கவேண்டும் என்பது கருத்து.

சுவர்களால் வகுக்கப்பட்ட பல அறைகளையும், உள்ளிடத்தையும் உடையதாகக் குப்பியச்சாலையை அமைத்தல் வேண்டும். நிலவறையுடன் கூடிய அக்குப்பியச்சாலையையே படைக்கலக் கொட்டிலாக அமைத்தல் வேண்டும். [18]அறங்கூறவையத்தையும் [19]பொருள் வினைஞர் நிலையத்தையும் ஆடவர் மகளிர்க்கு வேறு வேறமைந்த இடங்களையுடையதும் வலிய காவலமைந்த போக்கு வரத்து வழிகளையுடையதும் ஆகிய சிறைக்கோட்டத்தையும் தனித் தனியே அமைத்தல் வேண்டும்.

[20]இவ் வெல்லாவற்றிற்கும் சாலை அகழி கிணறு என்னும் இவற்றையொப்ப நீராடும் அறை [21]தீக்காப்பு நஞ்சுக்காப்பு [22]பூனை கீரி [23]காவல் என்னும் இவற்றையும் [24]தத்தம் தெய்வ வழிபாட்டுடன் செய்வித்தல் வேண்டும்.

உணவுப் பொருட்சாலையில் மழையளவு கருவியாக ஒரு முழச் சதுர அளவு வாயகலமுடைய [25]ஒரு குண்டம் [26]அமைத்தல் வேண்டும்.

---

18 அறங்கூறவையம்—நீதிமன்றம்.

19 பொருள் வினைஞர்—பொருட் பண்டாரம் புரப்போர், இறைப் பொருள் தொகுப்போர் முதலிய பொருளதிகாரிகள்.

20 எல்லாவற்றிற்கும்—நிதியறை முதலிய ஆறு இடங்களுக்கும்.

21 தீக்காப்பு நஞ்சுக் காப்பு என்னும் இவற்றினியல்பை முதலதிகரணம் பதினேழாம் பிரகரணத்திற் காண்க.

22 பூனையும் கீரியும் நஞ்சு கலந்த பொருளை ஆராய்தற்கும் எலி பாம்பு முதலியன வராமல் ஒழிப்பதற்கும் வேண்டும் என்பது.

23 காவல்—மக்களாற் செய்யப்படும் பாதுகாப்பைக் குறிக்கும்.

24 தத்தம் தெய்வங்களாவன—நிதியறைக்குக் குபேரனும் விலைப் பண்டம் தொகுக்குமிடத்திற்கும் உணவுப் பொருட்சாலைக்கும் திருமகளும், குப்பியச் சாலைக்குத் தெய்வத் தச்சனும் படைக்கலக் கொட்டிற்கு இயமனும் சிறைக்கோட்டத்திற்கு வருணனும் ஆவர்.

25 குண்டம்—அளவு கருவியாகிய ஒரு வகைப் பாத்திரம்.

26 அமைத்தற்கு வினைமுதல் உணவுப் பொருட்சாலைத் தலைவன். இங்ஙனமே பின் வரும் எழுவாயில்லாத வினைமுடிவுகளுக்கும் அவ்வத் தொழிற்றலைவரையும் அரசனையும் எழுவாயாகக் கொள்ளல் வேண்டும்.

பழையனவும் புதியனவுமாகிய [27]மணிகளையும் [28]திண்மையும் [29]நொய்மையுமுடைய குப்பியப் பொருள்களையும் [30]அவ்வத் தொழிலாளர் மரபிற் பிறந்தவர்களோடும் கணக்கரோடும் கூடி ஆராய்ந்து தொகுத்தல் வேண்டும். அப்பொருள்களுள் [31]மணிகளை ஒருவன் வஞ்சிப்பானாயின் அவனுக்கும் அவனை ஏவியவனுக்கும் [32]உத்தமசாகச தண்டமும், திண்மைக் குப்பியப் பொருளை வஞ்சிப்பவனுக்கும் அவனை ஏவியவனுக்கும் [33]மத்தியமசாகச தண்டமும், நொய்மைக்குப்பியப் பொருளை வஞ்சித்தவனுக்கும் அவனை ஏவியவனுக்கும் அப் பொருளளவின் இருமடங்கு தண்டமும் விதித்தல் வேண்டும்.

[34]உருவ ஆராய்ச்சியால் மெய்மை எனக் கண்ட [35]பொற்காசு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். [36]பொய்மை யெனக் கண்டவற்றைச் [37]சிதைத்துவிடல் வேண்டும். அவற்றைக் கொணர்ந்தவனுக்குப் [38]பூர்வசாகச தண்டம் விதித்தல் வேண்டும்.

பதரில்லாத புதிய கூலங்களை அளவு குறையாதபடி வாங்குதல் வேண்டும். [39]மாறுபடின் அக்கூல அளவிற்கு இருமடங்கு தண்டம் விதித்தல் வேண்டும்.

---

27 மணி—வைரம் முத்து முதலியன.

28 திண்மைப் பொருள்—சந்தனம் அகில் முதலியன.

29 நொய்மைப் பொருள்—ஆடை முதலியன.

30 அவ்வத் தொழிலாளர்—இரத்தினம் முதலியவற்றைச் சாணை பிடிப்போரும் ஆடை நெய்வோர் முதலியோரும் ஆவர்.

31 மணிகளை வஞ்சித்தல்—குணமில்லாத இரத்தினங்களை மாற்றாக வைத்துக் குணமிக்க இரத்தினங்களைக் கவர்ந்து கொள்ளுதல்.

32 உத்தம சாகச தண்டம்—ஆயிரம் பண அளவினது.

33 மத்தியமசாகச தண்டம்—ஐந்நூறு பண அளவினது.

34 உருவம்— அவ்வக் காலத்து அரசிலச்சினை.

35 பொற்காசு—பொன் வெள்ளி செம்பு முதலியவற்றால் ஆகிய காசுகள்.

36 பொய்மை-கள்ள நாணயம்.

37 மீண்டும் பயன்படாதபடி அழித்துவிடல் வேண்டும் என்பது.

38 பூர்வசாகச தண்டம்—இருநூற்றைம்பது பண அளவினது.

39 மாறுபடுதல்—பதருடைமையும் பழைமையும் அளவிற் குறைதலுமாம்.

விலைப்பண்டம் குப்பியப் பொருள் படைக்கலம் என்னும் இவற்றிற்கும் [40]கூலத்திற்குக் கூறிய விதியையே கொள்ளல் வேண்டும்.

[41]மற்றைய தொழில் நிலையங்களினும் வஞ்சம் நிகழுமாயின் வஞ்சிக்கும் தலைவன், அவனுக்குத் துணையாயினன், அவர் தம் பணியாளர் என்னும் இவர்க்கு முறையே ஒரு பணம், இரண்டு பணம், நான்கு பணங்கள் தண்டமாம். அவர் மீண்டும் வஞ்சிப்பாராயின் முறையே பூர்வ சாகசம், மத்தியம சாகசம், உத்தமசாகசம் என்பனவும், [42]கொலைப்படுத்தலும் தண்டமாம்.

கருவூலத்தலைவன் கருவூலத்துப் பொருளைக் கவர்ந்து கொள்ளுவானாயின் அவனைக் கொலைப்படுத்தல் தண்டமாம். அத்தொழிற்கு உதவிசெய்வார்க்கு முன்னதில் [43]அரைக்கூறு தண்டமாகும். தலைவன் செய்த களவு அறியப்படாததாயின் அவனுடைய பணியாளரைக் [44]கடிந்து கூறல் வேண்டும். கன்னமிட்டுப் பொருள் கவரும் கள்வர்க்குச் சித்திரவதை தண்டமாகும். ஆதலின் பொருட்பண்டாரம் புரப்போன் தன் நம்பிக்கைக்குரியாரை முன்னிட்டுத் தன் காரியங்களைச் செய்யக்கடவன்.

சுலோகம்

பொருட் பண்டாரம் புரப்போன் [45]புறத்தும் அகத்தும் உண்டாம் வரவு பொருளை நன்றாக அறிந்து கொள்ளல் வேண்டும்.

---

[40] நல்லனவற்றை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும் என்பதும் மாறுபடின் மூலப்பொருளுக்கு இருமடங்கு தண்டம் விதித்தல் வேண்டும் என்பதுமாம்.

[41] மற்றைய—முன் கூறப்பட்டனவல்லாத.

[42] இரண்டு முறைக்கு மேற்பட்டுப் பன்முறை குற்றம் செய்வாராயின் கொலைத் தண்டமும் விதிக்கலாம் என்பது கருத்து.

[43] அரைக் கூறு என்பது கொலைத்தண்டத்திற்கு ஒத்த கால அளவுத் தண்டத்திற் பாதி அளவைக் குறிக்கும்.

[44] கடிந்து கூறுமுகமாக உண்மையறிந்து கொள்ள முயலல் வேண்டும் என்பது கருத்து.

[45] புறத்தும் அகத்தும்—நாட்டினும் நகரத்தினும்,

[46]நாருண்டாயினும் கேட்கப்படின் தடையின்றி விடையிறுத்தல் வேண்டும். செலவு போக எஞ்சிய பொருளைக் கண் கூடாகக் [47]காட்டல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் ஐந்தாம் பிரகரணம்
"பொருட்பண்டாரம் புரப்போன் செய்தி" என்னும்
இருபத்தாறும் அத்தியாயம்—முற்றிற்று.

---

[46] நாருண்டாயினும் என்பது வரவு செலவு கணக்கைப் பற்றியது.
[47] கருவூலத்திற் காட்டல் வேண்டும் என்பது கருத்து.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

ஆறும் பிரகாரணம்—[1] இறைப்பொருள் தொகுப்போன் ஏற்கும் பொருள்நெறி

இருபத்தேழாம் அத்தியாயம்

இறைப்பொருள் தொகுப்போன் [2]அரண் நாடு ஆகரம் அணை காடு கொட்டில் வாணிகநெறி என்னும் இவற்றைக் கண்காணித்தல் வேண்டும்.

[3]சுங்கம் [4]தண்டம் [5]அளவு வரையறை நகரத்தலைமை [6]எல்லைக் குறியீட்டுத் தலைமை, [7]இலச்சினைத் தலைமை கள் இறைச்சி நூல் எண்ணெய் நெய் அக்காரம் பொன் விலைப்பண்டம் தொகுக்குமிடம், வரைவின் மகளிர் தலைமை சூது [8]மனைத்தொழில் காருகக் குழு சிற்பக்குழு திருக்கோயிற்றலைமை வாயிற்காவலர் [9]புறம்பானவர் என்னும் இவர்பாற் பெறும் பொருளாகிய [10]இவ்வெல்லாம் அரண் என்று கூறப்படும்.

27-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பொருட் பண்டாரம் புரப்போன் போலவே இறைப்பொருள் தொகுப்போனும் பொருளுபதையால் ஆராய்ந்து தெளியப்படுவோன் ஆதலின், இஃது அதன் பின் வைக்கப்பட்டது. இதனுற் பிரகரண இயைபு புலனும்.

[2] அரண் முதலிய இவ்வேழும் அவ்வப் பகுதிகளினின்றும் கிடைக்கும் வருவாய்ப் பொருளை உணர்த்தும் குறியீடுகளாம்.

[3] அரண் என்பதன்பாற்படும் வகைகளைக் கூறத் தொடங்குகின்றூர். சுங்கம்—பண்டங்களுக்கு விதிக்கப்படும் இறைப் பொருள்.

[4] தண்டம்—உத்தம சாகசம் முதலியன.

[5] துலையளவை முகத்தலளவை முதலியன.

[6] எல்லைக் குறியீடு—வயல் தோட்டம் முதலிய நிலங்களின் எல்லைகளை வரையறுத்து அடையாளக்கல் நடுதல்.

[7] இலச்சினை—காசு முதலியவற்றில் பொறிக்கும் முத்திரை.

[8] மனைத் தொழில்—இல்லம் அமைக்கும் தச்சர் கொல்லர் முதலியோர் தொழில்.

[9] புறம்பானவர்—இவர் இயல்பை இருபத்தைந்தாம் அத்தியாயத்தின் இறுதிச் சுலோகத்தாலும் அதன் குறிப்பாலும் அறிக.

[10] இவ்வெல்லாம்—இவ்விருபத்திரண்டு வகைகளும்.

உழவு [11]கூறு [12]கையுறை [13]அரசிறை வாணிகம் நீர்த்துறைக் காவல் தோணி கப்பல் [14]பட்டினம் மேய்தல்நிலம் [15]வழியிடம் நாடுகாவல் [16]களவுகடிதல் என்னும் [17]இவ்வெல்லாம் நாடென்று கூறப்படும்.

பொன் வெள்ளி வயிரம் [18]மணி முத்து பவழம் சங்கு இரும்பு உப்பு [19]நிலத்தாது கற்றாது நீர்த்தாது [20]என்னுமிவை ஆகரம் என்று கூறப்படும்.

பூங்கா காய்கனித்தோட்டம் கருப்பந்தோட்டம் [21]வாழைத் தோட்டம் நன்செய் புன்செய்கள் மஞ்சள் இஞ்சித்தோட்டம் என்னும் [22]இவை அணை என்று கூறப்படும்.

[23]பசுவனம் [24]விலங்குக்காடு [25]நன்மரக்காடு [26]யானைக்காடு என்னும் [27]இவை காடு என்று கூறப்படும்.

---

[11] கூறு—நெல் முதலிய விளைபொருள்களினின்றும் அரசனுக்குக் கிடைக்கவேண்டிய ஆறில் ஒரு பாகம். "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலால் அரசனுக்கு இறைப் பொருள் ஆறிலொன்றாயிற்று" என்பர் பரிமேலழகர்.

[12] கையுறை—அரசனுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் பொருள்.

[13] அரசிறை—தோட்டம் முதலிய நிலங்களுக்காக அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறைப் பொருள்.

[14] பட்டினம் என்பது ஈண்டுச் சிறு நகரத்தைக் குறிக்கும்.

[15] வழியிடம்—மக்களும் வண்டி முதலியனவும் செல்லுதற்குரியது.

[16] களவு கடிதல் என்பது களவு செய்வோரைப் பிடித்து அடக்குதற் பொருட்டு நாட்டு மக்கள் அரசனுக்குச் செலுத்தும் பொருளைக் குறிப்பது.

[17] இவ்வெல்லாம்—இப்பதின்மூன்றும்.

[18] மணி—மரகதம் மாணிக்கம் நீலம் முதலியன.

[19] நிலத்தாது முதலிய மூன்றும் முறையே நிலம் மலை கடல் என்னும் இவற்றினின்றும் எடுக்கப்படும் இயற்கைப் பொருள்களாம்.

[20] இவை—இப்பன்னிரண்டும்.

[21] கமுகு முதலியவற்றையும் ஈண்டுக் கொள்ளல் வேண்டும்.

[22] இவை—இவ்வாறும்.

[23] பசு—காட்டுப்பசு முதலியன.

[24] விலங்கு—மான் முதலியன.

[25] நன்மரம்—தேக்கு திமிசு முதலியன.

[26] யானைக்காடு—கலிங்க நாட்டிற் றோன்றிய சிறந்த யானைகளைப் பரிபாலிக்குமிடம்.

[27] இவை—இந்நான்கும்.

ஆன் எருமை வெள்ளாடு செம்மறியாடு கழுதை ஒட்டகம் குதிரை கோவேறுகழுதை என்னும் [28]இவை கொட்டில் என்று கூறப்படும்.

[29]நிலவழி நீர்வழி என்னும் இரண்டும் வாணிக நெறி என்று கூறப்படும்.

[30]இவ்வெல்லாம் வருவாயின் [31]உடலாகும். [32]விற்றல் கூறு [33]வாசி [34]கடத்தல் [35]வரையறை உப்பளக்கூறு தண்டப்பொருள் என்னும் இவ்வேழும் வருவாயின் முகம் ஆகும்.

கடவுள்வழிபாடு தென்புலத்தார்கடன் [36]மங்கலவாழ்த்து [37]உவளகம் அடிசிற்சாலை [38]தூதுவிடல் உணவுப்பொருட்சாலை

---

28 இவை—இவை எட்டும்.

29 நிலவழி நீர்வழி யென்பன வாணிக நிமித்தம் அயல் நாட்டிற்குக் காலினும் கலத்தினும் செல்லும் நெறிகள்.

30 இவ்வெல்லாம்—இங்கே கூறப்பட்ட சுங்கம் முதலிய அறுபத்தேழு உட்பிரிவுகளையுடைய அரண் முதலிய ஏழும்.

31 உடல் என்றது பொருள் வருவாய்க்குரிய நிலைக் களத்தை.

32 வருவாயின் உடலில் விற்றல் முதலிய இவ்வேழும் சிறந்தனவாதலால் முகம் போல்வன என்பது கருத்து. விற்றல்—கூலம் முதலியவற்றின் விலையாற் கிடைக்கும் ஊதியம்.

33 வாசி—குடிமக்களுக்குக் கூலம் முதலியன கொடுத்துக் காலம் தாழ்த்து வாங்குங்கால் மூலப்பொருளுக்கு வட்டிபோல் மிகுதியாக வாங்கப் படுவது.

34 கடத்தல்—ஆறு முதலியவற்றைக் கடத்தற்கு அமைத்த தோணித் துறை முதலியவற்றினின்றும் கிடைக்கும் வருவாய்.

35 வரையறை—இக்கிராமத்திற்கு இவ்வளவு பொன் அல்லது இவ்வளவு தானியம் கொடுத்தல் வேண்டும் என்று அறுதியிடல்.

36 மங்கல வாழ்த்து—அரசனது நலங்கருதிச் செய்யப்படும் மங்கல வாழ்த்தினிமித்தம் பெரியோர்க்குக் கொடுக்கப்படும் பொருள்.

37 உவளகம்—கோப்பெருந்தேவி காமக்கிழத்தி முதலிய அரச குடும்பத்தினர் பொருட்டுச் செலவு செய்யப்படும் பொருள்.

38 தூதுவிடல்—வேற்று நாட்டிற்குத் தூது விடுதலால் நேரும் செலவுப் பொருள்.

[39]படைக்கலக்கொட்டில் விலைப்பண்டம்தொகுக்குமிடம் [40]குப்பியச் சாலை [41]தொழில் [42]வன்செய்கை யானை தேர் குதிரை காலாள் என்னும் படையமைப்பு ஆனினம் காட்டுப்பசு மான் [43]பறவை புலி என்னும் இவற்றைச் [44]சிறைப்படுத்தல் விறகு புல் உண்டாக்கும் நிலம் என்னும் இவை செலவிற்கு [45]உடலாகும்.

அரசன் முடிசூடிய யாண்டும் திங்களும் பக்கமும் நாளும் [46]திருநாளாகும். [47]மழை பனி வெயில் என்னும் இக்காலங்களின் [48]மூன்ருவது ஏழாவது பக்கங்கள் ஒவ்வொரு நாள் குறைந்தன

---

39 படைக்கலக் கொட்டில்—புதிய படைக்கலங்களை உண்டாக்குதற்கும் அவற்றைக் காப்பாற்றுதற்கும் நேரும் செலவுப் பொருள்.

40 குப்பியச்சாலை—தேக்கு முதலிய வன் மரங்கள் மூங்கில் பிரப்பங் கொடி மரவுரி இவற்றைச் செப்பனிட்டுக் கொணர்தற்கும் காத்தற்கும் நேரும் செலவுப் பொருள்.

41 தொழில்—உழவு முதலிய தொழில்களின் பொருட்டுச் செலவிடப் படும் பொருள்.

42 வன் செய்கை—நாட்டில் எதிர்பாராத நிலையில் ஏற்படும் அரசியற் கலகத்தை அடக்குதற் பொருட்டு மேற் கொள்ளப்படும் செயலால் உண் டாம் செலவுப் பொருள்.

43 பறவை—கிளி நாகணவாய்ப்புள் முதலியன.

44 சிறைப்படுத்தல் காட்சிப் பொருட்டு.

45 உடல் என்றது பொருட் செலவுக்குரிய நெறிகளை.

46 திருநாள் என்னும் பெயருடையதாகும். இஃது அரசியற் கணக்கு வரைதல் முதலியவற்றிற்கு எடுத்தாளப்படுதல் கருதி இவ்வாறு கூறப் பட்டது. " இன்ன ஆண்டு இத்திங்கள் இப்பக்கம் இந்நாளில் இன்னு னுக்கு இவ்வளவு கொடுக்கப்பட்டது " என்று கணக்கெழுத நேருங்கால் அவ்வாண்டு முதலியவற்றை அரசன் முடி சூடிய நாள் தொடக்கமாக எண்ணிக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

47 ஆவணி முதல் கார்த்திகை முடிய நான்கு திங்கள் மழைக்காலம் ஆகும். மார்கழி முதல் பங்குனி முடிய நான்கு திங்கள் பனிக்காலம்ஆகும். சித்திரை முதல் ஆடி முடிய நான்கு திங்கள் வெயிற்காலம் ஆகும்.

48 ஒரு பக்கம் பதினைந்து நாளாகும். மழை பனி வெயில் என்னும் மூவகைப்பட்ட காலங்களில் ஒவ்வொன்றினும் மூன்ருவது ஏழாவது பக்கங் கள் என்று கொள்ளல் வேண்டும். அவையாவன—புரட்டாசி, கார்த்திகை, தை, பங்குனி, வைகாசி, ஆடி இத்திங்களின் முதற் பக்கங்கள். இவை ஒவ்வொன்றிற்கும் பதினன்கு நாட்களாகும். ஏனைய பக்கங்கள் பதினெட் டும், தனித்தனிப் பதினைந்து நாட்கள் கொண்டனவாம்.

வாகும். ஏனைய நிறைவுடையனவாம். [49]சாந்திரமான மாதம் வேருகும். இங்ஙனம் கால அளவு கூறப்பட்டதாகும்.

[50]செயத்தகுபொருள் சித்தம் எச்சம் வரவு செலவு இருப்பு (இவ்வாறும் பொருள் நெறியாகும்.)

அவற்றுள் [51]செயத்தகுபொருள், [52]வரையறை [53]பிரசாரம் [54]உடல்நிலை [55]ஏற்றல் [56]பலவகைப் பொருட்டொகுதி [57]ஆக்கம் என்று அறுவகைப்படும்.

---

49 சௌரமானம் சாந்திரமானம் எனக் காலம் இருவகையாற் கணித்துக் கொள்ளப்படும். சௌரமானம் சூரியனைப் பற்றியும் சாந்திரமானம் சந்திரனைப்பற்றியும் கணிக்கப்படும். ஓர் இராசியிற் கதிரவன் புகுந்த நாள் தொடங்கி மற்றோர் இராசியிற் புகும் வரை உள்ள காலம் சௌரமான மாதமாகும். வளர்பிறைப் பிரதமை முதற்கொண்டு அமாவாசை முடிய உள்ள காலம் சாந்திரமான மாதம் ஆகும். சௌரமான அளவையினின்றும் சாந்திரமான அளவையில் மாதம் மிகு மாதலால் அம்மிகுதி நோக்கிச் சாந்திரமானத்தை அதிமாதம் என்று கூறுப.

50 பொருள் நெறி வகைகளின் பெயர்கள் கூறப்படுகின்றன.

51 செயத்தகுபொருள் — இன்றியமையாது செய்யத்தக்கது என்பது பற்றிச் செயத்தகுபொருள் எனப்பட்டது. இஃது அறுவகைத்து.

52 வரையறை—இன்ன கிராமத்தினின்றும் இவ்வளவு பெறவேண்டும் என்னும் வரையறை.

53 பிரசாரம்—இன்ன நாட்டினின்றும் இவ்வளவு பெறவேண்டும் என்னும் துணிவு.

54 உடல்நிலை—நாடு நகரங்களிலுள்ள வருவாயின் உடல் இத்துணைத்தென்னும் துணிவு.

55 ஏற்றல் — குடிகளிடத்தினின்றும் கூலம் பொன் முதலியவற்றைத் தக்க காலத்திற் பெறுதல்.

56 கிராமம் நகரங்கள் எல்லாவற்றினும் உண்டாம் பலவகைப் பொருட் கூட்டங்களைப் பற்றிய அறிவு. தொகுதி ஈண்டு அதனை அறியும் அறிவின் மேற்று.

57 ஆக்கம்—எல்லா வகையான பொருள் நெறிகளாலும் அடையப்பட்ட பொருள் இத்துணை என்னும் அறிவு. ஈண்டும் ஆக்கம் அதனை அறியும் அறிவின் மேற்று.

[58]கருவூலவைப்பு [59]அரசன் பெற்றது [60]நகரச்செலவு என்னும் [61]உட்புகுதியும், [62]கழிந்த ஆண்டுத்தொடர்பு [63]எழுத்துக்கட்டளைச் செலவு [64]சொற்கட்டளைச் செலவு என்னும் [65]வெளிப்பாடும் [66]சித்தமாகும்.

[67]இருப்புப்பொருளைத் தனக்கு [68]உரிமையாக்கிக் கோடல் [69]படையெச்சம் என்னும் [70]எளிதிற் பெறுதலும் [71]வலிமையாற் கொடாமை [72]விரும்பியவாறு ஒழுகுதலாற் கொடாமை என்னும்

---

58 இனி இரண்டாவது பொருள் நெறியாகிய சித்தத்தின் வகைகள் கூறப்படுகின்றன. கருவூலவைப்பு—பொருட் பண்டாரம் புரப்போன்பால் வைக்கப்பட்டது.

59 அரசன் பெற்றது — இறைப்பொருள் தொகுப்போனிடமிருந்து அரசன் தன் குடும்பச்செலவின் பொருட்டுப் பெற்றுக்கொண்டது.

60 நகரச்செலவு—மன்றம் அமைத்தல் முதலியவற்றின் பொருட்டுச் செலவிடப்படுவது.

61 உட்புகுதி—இங்கே கூறப்பட்ட மூன்றும் நகரத்துள் நிகழ்வனவாதலின் உட்புகுதி எனப்பட்டன.

62 கழிந்த ஆண்டுத் தொடர்பு—சென்ற ஆண்டுகளில் வரவேண்டிய பொருள் வாராமல் எஞ்சி நிற்பது.

63 எழுத்துக் கட்டளைச் செலவு—அரசனுடைய எழுத்து மூலமான கட்டளைபற்றிப் பிறர்க்குக் கொடுக்கப்படுவது.

64 சொற்கட்டளைச் செலவு — அரசனுடைய சொற்படி பிறர்க்குக் கொடுக்கப்பட்டது.

65 வெளிப்பாடு — இங்கே கூறப்பட்ட மூன்றும் நகரத்தினின்றும் வெளிப்படுவன ஆதலின் வெளிப்பாடு எனப்பட்டன.

66 சித்தம்—இங்ஙனம் உட்புகுதி மூன்றும் வெளிப்பாடு மூன்றும் ஆகிய இவ்வறுவகையும் நிறைவேறிய முடிபு ஆதலின் சித்தம் எனப்பட்டன.

6 இருப்புப் பொருள்—குடிகளிடம் கையிருப்பிலுள்ள கூலம் முதலியன.

68 உரிமையாக்கிக் கோடல் — குடிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய இறைப்பொருளுக்கு ஈடாகக் கைப்பற்றிக் கொள்ளுதல்.

69 படையெச்சம்—படைகளின் செலவுக்கெனத் திட்டம் செய்யப்பட்ட பொருளிற் செலவு போக எஞ்சிய பொருள்.

70 இருப்புப் பொருளும் படையெச்சமும் எளிதிற் கொள்ளத்தக்கனவாதலின் இவ்விரண்டும் "எளிதிற் பெறுதல்" என்பதன்பாற்படும்.

71 வலிமையாற் கொடாமை — அரசனுக்குக் கொடுக்கவேண்டிய பொருளை அரசியல் வினைஞரின் சார்பு வலிமையாற் கொடாதிருத்தல்.

72 விரும்பியவாறு ஒழுக்தல்—அரசியல் நீதியைப் புறக்கணித்து மனஞ்சென்றவாறு நடத்தல்.

[73]அரிதிற் பெறுதலும் [74]பயனின்மை [75]சிறுபயனுடைமை என்னும் இவையும் [76]எச்சமாகும்.

நிகழ்வது கடந்தது வேறுயது [77]என்பன வரவு ஆகும். [78]நாடோறும் வருவது நிகழ்வது ஆகும். [79]சென்ற ஆண்டினதும் [80]பிறரின் வந்ததும் [81]கடந்ததாகும். [82]இழந்ததன் நினைப்பு, [83]வினைஞர் தண்டம் [84]நெறியிலி [85]அழிவினீடு [86]கையுறை [87]பூசலாலெய்

---

73 அரசனுக்கு இறுக்கவேண்டிய பொருளை வலிமையாலும், நீதிநூலைப் புறக்கணித்து விரும்பியவாறு நடத்தலாலும் கொடாதாரிடத்தினின்றும் முயன்று பெறவேண்டுமாகலின் அங்ஙனம் பெறுதல் ''அரிதிற் பெறுதல்'' என்பதன்பாற்படும்.

74 பயனின்மை—வரவேண்டிய பொருள் நிமித்தம் செய்யப்படும் செலவு பயனின்றி ஒழிதல்.

75 சிறுபயனுடைமை—மிகுதியாகச் செலவிட்டுச் சிறுபயன் பெறுதல்.

76 அரசனுக்கு வரவேண்டிய இறைப்பொருளில் எஞ்சியதைப் பற்றியதாகலின் ''எச்சம்'' எனப்பட்டது. எளிதிற் பெறுதலிரண்டும், அரிதிற் பெறுதலிரண்டும் பயனின்மையும் சிறுபயனுடைமையும் ஆகிய இவ்வாறும் எச்சமாகும் என்பதாம்.

77 என்பன—என்னும் மூன்றும்.

78 நாள்தோறும் வரும் வருவாய் ''நிகழ்வது'' என்னும் பெயர்த்தாம்.

79 சென்ற ஆண்டினது—சென்ற ஆண்டுகளில் வாராமல் தடைப்பட்டிருந்து நிகழும் ஆண்டில் வந்தது.

80 பிறரின் வந்தது—பகைவர் நாட்டினின்றும் வந்தது. முன்னிருந்த அரசியல்வினைத் தலைவரால் வந்ததுமாம்.

81 சென்ற காலத்தைப் பற்றியதாகலின் கடந்தது என்னும் பெயர்த்தாயிற்று.

82 இழந்ததன் நினைப்பு—மறப்பினால் இழந்ததை நினைந்து பெறுதல்.

83 வினைஞர் தண்டம்—குற்றஞ்செய்த அரசியல் வினைஞரிடத்தினின்றும் பெற்ற தண்டப்பொருள்.

84 நெறியிலி—நீதிமுறை கடந்து மிகுதியாக இறைப்பொருள் பெறுதல்.

85 அழிவினீடு—எருது முதலிய விலங்குகளால் அழிக்கப்பட்ட நெற்பயிர் முதலியவற்றிற்கு ஈடாகக் கொள்ளும் பொருள்.

86 கையுறை—அரசனைக் காண வருவோர் காணிக்கையாகக் கொடுக்கும் பொருள்.

87 பூசலால் எய்தும் பொருள்—பகைவராற் கலகம் நேர்ந்துழிப் பகைப் படையினின்றும் கவர்ந்த பொருள்.

தும் பொருள் [88]எச்சமில் பொருள் [89]நிதி என்னும் [90]இவை [91]வேறுயது ஆகும். [92]இயங்குபடைச் செலவெச்சம் [93]மருத்துவச் செலவெச்சம் [94]உள்வினைச் செலவெச்சம் என்னும் [95]இவை செலவின் எஞ்சிய வரவாகும். [96]விலைப்பண்டங்களின் மிகைவிலை [97]அயற்றேற்றம், முகத்தல் நிறுத்தல் முதலிய [98]அளவைமாறுபாடு [99]வாசி கொள்பொருளின் [100]இகல்விலை என்னும் [101]இவைகளும் வரவுபொருள்களாகும்.

நித்தியம், நித்தியத் தோற்றம், ஊதியம், ஊதியத் தோற்றம் [102]என்பன செலவாகும். நாடோறும் ஆகும் செலவு நித்தியமாகும். பக்கம் திங்கள் ஆண்டுகளிற் பெறக்கடவ ஊதியங்களின் பொருட்

---

88 எச்சமில் பொருள்—சந்ததியில்லாதார் பொருள்.

89 நிதி—புதையற் பொருள்.

90 இவை—இவ்வெண் வகையும்; இவை வேறுயதன்பாற்படும்.

91 வேறுயது–நிகழ்வது, கடந்தது என்பவற்றினின்றும் வேறுபட்டமையின் வேறுயதென்னும் பெயர்த்தாயிற்று.

92 இயங்குபடைச் செலவெச்சம்—ஒரு காரிய நிமித்தம் ஏவப்பட்ட படைவீரர் செலவின் பொருட்டுத் திட்டம் செய்யப்பட்ட பொருளினின்றும் எஞ்சியது.

93 மருத்துவச் செலவெச்சம் — மருத்துவச் செலவின் பொருட்டுத் திட்டஞ் செய்யப்பட்ட பொருளினின்றும் எஞ்சியது.

94 உள்வினைச் செலவெச்சம்—அரண் அரண்மனை முதலியவற்றைச் செப்பனிடுதற்குத் திட்டம் செய்த பொருளினின்றும் செலவு போக எஞ்சியது.

95 இவை—இம்மூன்றும்.

96 விலைப்பண்டங்களின் மிகைவிலை — பண்டங்களுக்கு அறுதியிடப் பட்ட விலையினின்றும் விற்போர் மிகுதிப்படுத்தி விற்று வாங்கிய பொருள்.

97 அயற்றேற்றம் — விற்பனை செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்ட பண்டங்களை விற்றதனால் கிடைக்கும் பொருள்.

98 அளவை மாறுபாடு—அளவு கருவிகளை மாறுபடுத்தி மிகையாகக் கொள்ளும் பொருள்.

99 வாசி—மீண்டும் அளக்குங்கால் குறைவுபடுதல் குறித்து ஓரளவு மிகுத்து வாங்குதல்.

100 இகல்விலை-ஒரு பண்டத்திற்கு அறுதியிட்ட விலையினின்றும் கொள்வோர் தம்முள் மாறுபட்டு உயர்த்திய விலைப்பொருள்.

101 இவை—இவ்வைந்தும்.

102 என்பன—என்னும் இந்நான்கும்.

டுச் செய்யப்படும் செலவு [103]ஊதியமாகும். இவ்விரண்டினின்றும் தோன்றுவன முறையே [104]நித்தியத் தோற்றமும் [105]ஊதியத் தோற்றமும் ஆம்.

செலவு கணக்கால் கணிக்கப்பட்டு எல்லாச் செலவுங்கழிய எஞ்சி நின்றது இருப்புப் பொருளாகும். அஃது [106]அடைந்ததும் [107]அடையக்கடவதுமாம்.

சுலோகம்

இங்ஙனம் பொருள் நெறியை இயற்றல் வேண்டும். அறிஞனாகிய இறைப் பொருள் தொகுப்போன் [108]வருவாயின் பெருக்கத்தையும், செலவின் சுருக்கத்தையும் காட்டுதலோடு மாறுபாட்டையும் அறிந்து விலக்கல் வேண்டும்.

முதலதிகரணம் ஆறும் பிரகரணம்
" இறைப்பொருள் தொகுப்போன் ஏற்கும் பொருள் நெறி "
என்னும் இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

103 ஊதியம் — வருவாயின் பொருட்டுச் செய்யப்படுதல் பற்றி இச் செயல் ஊதியம் என்னும் பெயர்த்தாயிற்று.

104 நித்தியத் தோற்றம் — நாடோறும் வினை செய்வார்க்கு வரையறுக்கப்பட்ட வேதனத்தின் மிகுதியாகக் கொடுக்கப்படும் பொருள்.

105 ஊதியத் தோற்றம்—ஊதியத்தின் பொருட்டு வரையறுக்கப்பட்ட செலவின் மிகுதியாகச் செலவிடும் பொருள்.

106 அடைந்தது—கருவூலத்திற் சேர்ந்தது.

107 அடையக்கடவது—கருவூலத்திற் சேர்க்கவேண்டியதாகவுள்ளது.

108 " ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை " (478)

என்னும் திருக்குறட் கருத்து ஈண்டுப் பொருத்தமாதலறிக.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

ஏழாம் பிரகரணம்—[1]பொருட்கணக் கெழுதுவோர்ப் பொருந்ததிகாரம்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

கணக்கர்தலைவன் [2]கிழக்கு அல்லது வடக்கு நோக்கிய முக முடையதாகவும், [3]பல்வேறு கட்டுக்களை உடையதாகவும் கணக் கேடுகளை வைத்தற்குரியதாகவும் கணக்கெழுதும் சாலையைச் செய் வித்தல் வேண்டும்.

பொருள் உண்டாகும் இடங்களின் [4]எண் ஊர் [5]தொகுதி என்னும் இவற்றின் அளவையும், [6]தொழில் நிலையங்களின் [7]பொருள் விநியோகத்தில் ஏற்படும் [8]வளர்ச்சி [9]குறைவு [10]செலவு

28-ஆம் அத்தியாயக் குறிப்புரை.

[1] முன்னைப் பிரகரணத்தில் இறைப் பொருள் தொகுப்போன் மேற் கொள்ளும் பொருள் நெறிகளில் வரவு செலவுகளைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டன. இப்பிரகரணத்தினால் அவ் வரவு செலவுகளைப் பற்றிய கணக்கெழுதும் முறைகள் கூறப்படுகின்றமையின் இஃது அதன் பின் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரண வியைபு புலனாம்.

[2] கிழக்கும் வடக்கும் மங்கலகரமான திசையாதலின் அத்திசைகளை நோக்கிய முகமுடையதாக அமைத்தல் நன்றென்பது கருத்து.

[3] தலை இடைகடையாய தலைவர்கள் தனித்தனி இருத்தற்குத் தகுதி யுடையனவாக அக்கணக்குச் சாலையின் உள்ளே பல அறைகள் அமைத்தல் வேண்டும் என்பது.

[4] எண்—பெயர் குறிப்பிட்ட தொடர் எண்.

[5] தொகுதி—பொருளெல்லாவற்றின் கூடிய எண்.

[6] தொழில் நிலையங்கள்—ஆகரம் விளை நிலம் முதலியன.

[7] பொருள் விநியோகம்—அவ்வத் தொழிலாளர் பொருட்டுக் கொடுக் கப்படும் பொருட்கூறு.

[8] வளர்ச்சி—வட்டி.

[9] குறைவு—தொழிலாளர்க்குக் கொடுப்பதால் உண்டாவது.

[10] செலவு—கூலம் பொன் முதலியவற்றைப் பற்றியது.

[11]கூலவிருப்பம் [12]வாசி [13]கலப்பு [14]இடம் கூலி [15]வன்செய்கை என்னும் இவற்றின் அளவையும் மணி திண்மைப் பொருள் நொய்மைப் பொருள் குப்பியம் என்னும் இவற்றின் விலை [16]நிறப் பண்பு [17]சிற்றளவு [18]உருவ அளவு [19]பேரளவு மூலப் பொருள் என்னும் இவற்றையும் [20]நாடு கிராமம் [21]சாதி [22]குலம் குழு என்னும் இவற்றின் [23]கடமை தாயபாகம் [24]வழக்க இயல்பு என்னும் இவற்றையும் அமைச்சர் புரோகிதர் முதலியோர்க்குச் செய்யும் [25]சிறப்பு, வாழுமிடம் கையுறை [26]கறையின்மை உணவு கூலி ஊதியம் என்னும் இவற்றையும் அரசன் தேவி புதல்வர் என்னும் இவர்களுடைய மணி நிலம் இவற்றின் [27]பேறும் [28]மிகுதியின் துணிவும்

---

11 கூல விருப்பம்—பண்டங்களின் விலை மிகுதி பற்றிக் கூலம் முதலியவற்றைத் தொகுத்து வைத்தல் வேண்டும் என்னும் விருப்பம்.

12 வாசி—நிறுத்தலளவை முகத்தலளவைகளின் குறைவுபாடு நிமித்தம் ஏற்படும் மிகுதி.

13 கலப்பு—உயர்ந்த பொருளோடு தாழ்ந்த பொருளைக் கலத்தல்.

14 இடம்—கிராமம் முதலியன.

15 வன் செய்கை—வலிந்து முயன்று செய்யும் செயல்.

16 நிறப் பண்பு—மணி முதலியவற்றின் நிறவியல்பு.

17 சிற்றளவு—நிறுத்தலளவையில் குன்றி முதலிய சிறிய எடை.

18 உருவ அளவு—வட்டம் சதுரம் திரட்சி முதலிய வடிவங்கள்.

19 பேரளவு—எடை மிக்கது.

20 நாடு—நடு நாடு கீழ்நாடு மேனாடு முதலிய நாட்டின் உட்பிரிவுகள்.

21 சாதி—அந்தணர் முதலிய வகுப்பு.

22 குலம்—குடிப்பிறப்பு.

23 கடமை—வருண தருமம்.

24 வழக்கவியல்பு—நாடு சாதி குடிப்பிறப்பு முதலியவற்றால் மக்கள்பால் நிகழும் வழக்கங்கள்.

25 சிறப்பு—தகுதிக்கேற்பப் பெருமைப்படுத்தல்.

26 கறையின்மை—அமைச்சர் முதலியோர் நிலங்களுக்கு அரசிறை கொள்ளாமை.

27 பேறு—இரத்தினம் நிலம் முதலியவற்றால் உண்டாகும் ஊதியம்.

28 மிகுதியின் துணிவு—அரசன் தேவி புதல்வர் என்னுமிவர்க்கு நாடோறும் கொடுக்கப்படும் பொருளினின்றும் சிறப்பு முறையில் மிகுதியாகக் கொடுக்கவேண்டிய பொருளளவின் றுணிபு.

[29]விழா முதலியவற்றின் பொருட் பேறும் [30]பரிகாரப் பேறும் ஆகிய இவற்றையும் [31]நண்பர் பகைவர் என்னும் இவர்பால் நட்புக் கொண்டு கொடுப்பதையும் பொருது பெறுவதையும் கணக்கேடு களில் [32]எழுதிவைத்தல் வேண்டும்.

[33]எல்லாத் தொழில் நிலையங்களும் [34]செயத்தகு பொருள் சித்தம் எச்சம் வரவு செலவு இருப்பு [35]அரசிருக்கை எய்துங் காலம் நகரம் வழக்கமுறை முன்னை நிலை என்னும் இவ்[36]வெல்லாவற்றை யும் கணக்கேட்டில் எழுதிக் [37]கொடுத்தல் வேண்டும்.

[38]தலையிடை கடையாகிய காரியங்களில் அவற்றிற்குத் தகுதி யான தலைவரை அமைத்தல் வேண்டும். [39]தகுதியுடைய ஒரு குழுவில், [40]ஒறுக்கப்பட்ட வழி அரசன் இரங்குதற்கு ஏதுவாகாத

---

[29] திருவிழா முதலிய சிறப்பு நாட்களில் அரசன்பொருட்டுக் குடி மக்களால் கொடுக்கப்படும் பொருளூதியம் என்பது.

[30] பரிகாரப் பேறு—பிணிக்குக் கொடுக்கப்படும் மருந்து முதலியவற் றின் நிமித்தம் பெறும் பொருள்.

[31] நட்டோர்க்கு நட்பு கருதிக் கொடுக்கப்படும் பொருளும், பகைவ ரோடு பொருது பெறும் பொருளும் என்பது கருத்து.

[32] மேற் குறிப்பிட்ட எல்லாவற்றையும் விளக்கமாகக் கணக்கில் எழுதி வைத்தல் வேண்டு மென்பது.

[33] தொழில் நிலையங்கள் ஈண்டு அவ்வத் தொழிற்றலைவரை யுணர்த்தும்.

[34] செயத்தகு பொருள் முதல் இருப்பு ஈருகவுள்ள ஆறனையும் முன்னை அத்தியாயத்திற் காண்க.

[35] கணக்கெழுதுவோர் தத்தம் காரியங்களை அறிவித்தற் பொருட்டு அரசன் திருமுன் எய்துங்காலம் என்பது கருத்து.

[36] எல்லாவற்றையும்—இப்பத்துச் செய்திகளையும்.

[37] அரசன் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[38] இறைப் பொருள் தொகுத்தல் கருவூலத் தலைமை முதலியன தலை யாய காரியம் எனவும் உணவுப் பொருட்சாலை படைக்கலக் கொட்டில் முதலியவற்றைப் பற்றிய தொழில்கள் இடையாய காரியம் எனவும் கள் இறைச்சி முதலியவற்றைப்பற்றிய தொழில்கள் கடையாய காரியம் எனவும் கொள்க.

[39] தகுதியுடைய குழு—ஒரு காரியத்தில் திறமை வாய்ந்த பலரையுடைய கூட்டம்.

[40] ஒரு காலத்துக் குற்றம் செய்து தண்டிக்கப்பட நேர்ந்துழி அத்தண் டனைபற்றி அரசன் இரங்குதற்கு ஏதுவாகாதவனும் திறனுடையானுமாகிய ஒருவனைத் தலைமைப் பதவியிலிருத்தல் வேண்டும் என்பது கருத்து. இதனால் அரசன் இரங்குதற்கு ஏதுவாகிய அந்தணர், தன் உறவினர், அரசியின் உறவினர் முதலியோரைத் தலைமைப் பதவியில் அமைத்தல் ஆகாது என்பது போதரும்.

[41]பெருமையுடையான் ஒருவனைத் தலைவனாக அமைத்தல் நன்று.

ஒரு தொழிற்றலைவனால் காரியக்கேடு நேர்ந்துழி அதனால் உண்டாம் இழப்பை அக்கேட்டிற்கு உதவியாயினார் பிணையாளர் உதவித் தொழிலாளர் அவன்புதல்வர் உடன்பிறந்தோர் மனைவியர் புதல்வியர் பணியாளர் என்னுமிவர்கள் [42]ஈடுசெய்யக்கடவர்.

இரவும் பகலும் ஆகிய நாள் [43]முந்நூற்றைம்பத்து நான்கு கொண்டது ஒரு தொழிலாண்டாகும். அத் தொழிலாண்டு [44]ஆவணித் திங்கள் தொடங்கி ஆடியிறுதியாகக் கொள்ளப்படும். [45]நிறையினும் குறையினும் அவ்வாறே கொள்ளல் வேண்டும் [46]அதிமாதத்தைக் கணக்கன் வாயிலாகக் கணித்துக்கொள்ளல் வேண்டும். நாட்டை ஒற்றர்களின் கண்காணிப்புடையதாகச் செய்தல் வேண்டும். நாட்டின் இயல்பு வழக்க ஒழுக்கங்கள் அவற்றின் முன்னை நிலைமை இவற்றை [47]அறியாத தொழிற்றலைவன் அறிவின்மையாலும், முயற்சி வருத்தத்தைப் பொறுக்க இயலாமையால் உண்டாம் மடியினாலும் ஓசை முதலிய புலன்களில் உள்ள

---

41 பெருமை — அறிவு காரியத்திறமை நற்குணம் புகழ் முதலியன உடைமை. காரியத் திறமையுடையார் பலருள், நற்குணமுடையாரையும், நற்குணமுடையார் பலருட் கீர்த்தியுடையாரையும், ஆராய்ந்து அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

42 இங்குக் கூறப்பட்ட எண்மருள் முறையே முன்னவர் இல்வழிப் பின்னவர் ஈடுசெய்தல் வேண்டும் என்பது கருத்து.

43 ஓராண்டிற்குரிய முந்நூற்றறுபது நாட்களில் சாந்திரமான முறைப்படிக் கார் முதலிய பருவம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாள் விகிதம் குறைக்க ஆறு நாட்கள் கழிவு ஏற்படுமாதலால் 354 நாட்கள் ஓராண்டென்று கொள்ளப்பட்டது.

44 இதனாற் பண்டைக்காலத்தில் ஆண்டுத் தொடக்கம் ஆவணி என்பது புலனாம். தமிழியல் நூலோர் பெரும்பொழுதை வரையறைப் படுத்துங்கால் " கார் " முதலாகத் தொடங்கியதும் ஈண்டுப் பொருத்தமாதலுணர்க.

45 வினை செய்வார் ஆண்டின் தொடக்கத்தில் நியமனம் பெறினும், அன்றி இடைக்காலத்தில் நியமனம் பெறினும் அவ்வாண்டின் இறுதி ஆடித் திங்களாகவே கொள்ளல் வேண்டும் என்பதும், இங்ஙனம் கோடல் தொழில் கூலி கணக்குப் பரிசோதனை முதலியவற்றிற்கு என்பதும் கருத்து.

46 அதிமாதம் இன்னதென்பதை 27-ம் அத்தியாயக் குறிப்பிற் காண்க.

47 அறியாத—ஒற்றர்கள் முகமாக அறிந்துகொள்ளாத.

[48]மயக்கத்தாலும் பழி பாவம் கேடு விளையும் என்னும் அச்சத்தாலும் காரியங் கருதி வருவோரை முன்னிட்டெழும் [49]கழிகண்ணோட்டத்தாலும், பிறரைத் துன்புறுத்தற்பொருட்டெழும் வெகுளியாலும், கல்வியுடைமை பொருளுடைமை அரசனைச் சார்ந்திருத்தல் இவை காரணமாக உண்டாம் செருக்கினாலும், நிறுத்தலளவை முகத்தலளவை [50]மதித்தலளவை எண்ணலளவை இவற்றை மாறுபடுத்தி வஞ்சிக்க எழும் அவாவினாலும் பொருள் வருவாயைக் குறைக்கக் கூடும்.

முறையே [51]அக்குற்றங்களுக்கு, எத்துணைப் பொருட் குறைவு ஏற்பட்டுள்ளதோ [52]அதற்கு [53]இருமடங்கு முதலியன தண்டமாகும். [54]எல்லாக் குற்றங்களுக்கும் எண்மடங்கு தண்டமாகும் என்பர் பாராசரர்; பதின் மடங்கென்பர் [55]பாருகற்பத்தியர்; இருபது மடங்கென்பர் [56]ஔசனசர். [57]குற்றத்திற்குத்தக இருக்க வேண்டும் என்பர் கௌடலியர்.

---

48 மயக்கம்—ஐம்புலனுகர்ச்சியிலுள்ள ஈடுபாடு.

49 கண்ணோட்டம்—ஒருவன் தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இக்குணம் அளவின் மிகுமாயின் அது குற்றத்தின்பாற்படும். இதனைச் "சினனே காமம் கழிகண்ணோட்டம்" (பதிற்றுப்பத்து 22) என்பதனாலுமறிக.

50 மதித்தலளவை — வேறு கருவிகளாலன்றி மனத்தால் மதிப்பிட்டு அளத்தல்.

51 அக்குற்றங்கள்—மேலே கூறப்பட்ட அறிவின்மை முதல் அவா இறுதியாக உள்ள எண்வகைக் குற்றங்கள்.

52 அதற்கு—அக்குற்றத்தாற் குறைந்த பொருளளவிற்கு.

53 அறிவின்மையாற் குறைந்த பொருளுக்கு அப்பொருளின் இருமடங்கும், மடியினாற் குறைந்த பொருளுக்கு மும்மடங்கும் இங்ஙனமே மற்றைய குற்றங்கட்கும் முறையே ஒவ்வொரு மடங்கு கூட்டியும் அக்குற்றஞ் செய்தார்க்குத் தண்டம் விதித்தல் வேண்டும் என்பது கருத்து.

54 பராசரர்வழிப்பட்டோர் அக் குற்றங்களால் விளையும் குறைவில் வேற்றுமையின்மையால் எல்லாக் குற்றங்களுக்கும் தனித்தனியே எண் மடங்கு தண்டம் பொருத்தமாகும் என்று கூறுவர் என்பதாம்.

55 பாருகற்பத்தியர்—வியாழன்வழிப்பட்டோர்.

56 ஔசநசர்—சுக்கிரன்வழிப்பட்டோர்.

57 குற்றங்களின் பெருமை சிறுமைகட்கேற்பத் தண்டங்கள் விதித்தல் வேண்டும் என்பது கௌடலியர் கொள்கையாம்.

[58]கணக்குகள் ஆடித் திங்களில் [59]வரல்வேண்டும். இலச்சினை இடப்பட்ட கணக்குச் சுவடிப் பேழையையும், இருப்புப் பொருளை யும் கொண்டுவரும் கணக்கர்கள் ஓரிடத்திற் கூடித் தம்முட் கலந்து பேசாதபடி தடைப்படுத்திக் [60]காத்தல் வேண்டும்.

வரவு செலவு இருப்பு இவற்றின் கூடுதற்றொகையை வாய் மொழியாற் கேட்டு இருப்புப் பொருளைக் கொணர்வித்தல் வேண் டும். இருப்புப் பொருளைப் பற்றி விளக்கும் ஏட்டில் வரவின் கூடுதற் றொகையினின்றும் மிகுதியாக இருக்கும் என்று அறியப் படினும், செலவின் கூடுதற் றொகையினின்றும் குறைவாக இருக் கும் என்று அறியப்படினும் அப் பொருளளவின் [61]எண்மடங்கு மிகுதியான பொருளை அக்கணக்கனிடத்தினின்றும் வாங்குதல் வேண்டும். [62]மாறுபட்டிருப்பின் அவனுக்கே உரியதாகும்.

உரிய காலத்தில் வராதவர்களும், கணக்கு ஏடும் இருப்புப் பொருளும் இல்லாமல் வந்தவர்களும் ஆகிய கணக்கர்களுக்கு அவர் செலுத்தவேண்டிய பொருளின் பதின் மடங்கு தண்டமாம்.

கணக்கர் தலைவன் [63]சித்தமாக இருக்குங்கால் கணக்கன்

---

58 கணக்குகள்—ஆண்டு முடிவுக் கணக்குகள்.

59 ஆண்டு முடிவுக் கணக்குகளைத் தலைவர் பார்வைக்குக் கணக்கர்கள் கொண்டுவரல் வேண்டும் என்பதாம்.

60 கணக்கர் பலர் கலந்து பேச நேரின் தம்முள் ஒற்றுமைப்பட்டு இடையூறு விளைத்தல் கூடுமாதலால் அவ்வாறு நேராதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

61 கணக்கன் வாய்மொழியிற் கேட்டதினின்றும் கணக்கேட்டின் மூல மாக வரவு தொகை அதிகமாக இருக்குமென்றாதல் செலவு தொகை குறைந் திருக்கு மென்றாதல் ஆராய்ந்து அறியப்படின் அக்கூடுதல் குறைதலளவில் எண்மடங்கு மிகுதியான பொருளை அக்கணக்கனிடத்தினின்றும் பெறல் வேண்டும் என்பது கருத்து.

62 உண்மையான வரவினும் மிகுதியாக எழுதப்பட்டிருப்பதாகவாதல், உண்மையான செலவினும் குறைவாக எழுதப்பட்டிருப்பதாகவாதல், உண்மையான இருப்பினும் மிகுதியாக எழுதப்பட்டிருப்பதாகவாதல் ஆராய்ந்தறியப்படின் இவ்வாற்றான் மிகுந்த பொருளை அக்கணக்கனுக்கே கொடுத்துவிடல் வேண்டும் என்பதும், அவனது விழிப்பின்மைக்குத் தண்ட மாக அதனைக் கொள்ளலாகாதென்பதும் கருத்தாம்.

63 சித்தமாக இருக்குங்கால்—குறிப்பிட்ட காலத்தில் கணக்கேட்டை ஆராய்தற் பொருட்டு வந்திருக்கும் பொழுது.

வாராமலிருப்பானாயின் அக்கணக்கனுக்குப் பூர்வ சாகசம் தண்டமாகும். [64]மாறுபடின் கணக்கர் தலைவனுக்கு இருமடங்கு பூர்வ சாகசம் தண்டமாகும்.

சிறந்த தொழிலமைச்சர் எல்லோரும் நாட்டு மக்கள் முன்னிலையில் [65]முரண்படாதவாறு [66]செய்திகளை அறிவித்தல்வேண்டும். [67]இவருள், [68]முரண்பட்டவனுக்கும் பொய்யுரைப்போனுக்கும் உத்தம சாகசம் தண்டம் ஆகும்.

கொண்டுவரவேண்டிய பொருளைக் குறித்த நாளில் கொண்டுவராதவனை [69]ஒரு திங்கள் வரை எதிர்பார்க்கலாம். ஒரு திங்களுக்கு மேலும் கொண்டுவரவில்லையானால் [70]திங்கள் ஒன்றிற்கு [71]இருநூறு விகிதம் தண்டம் விதிக்கலாம். சிறிதளவு இருப்புப் பொருள் செலுத்தவேண்டியவனை [72]மேலும் ஐந்து நாள் [73]எதிர்பார்க்கலாம்.

செலுத்தவேண்டிய இருப்புப் பொருளையும், கணக்கு ஏட்டையும் குறிப்பிட்ட நாளில் கொண்டுவந்த கணக்கனை [74]அறம் [75]உரையாடல் [76]உலக வழக்கு [77]முன்னை நிலை [78]தொகுத்துக் காண்டல்

---

[64] மாறுபடின் — குறிப்பிட்ட காலத்தில் கணக்கன் வந்திருப்பக் கணக்கர் தலைவன் வராதிருப்பானாயின்.

[65] முரண்படாதவாறு—ஒருவர் கூற்றுக்கு மற்றொருவர் கூற்று மாறுபடாதபடி.

[66] செய்தி—வரவு செலவு இருப்புக்கள் இத்துணைய வென்பது.

[67] இவருள்—இவ்வமைச்சருள்.

[68] முரண்பட்டவன்—திரித்துக் கூறுவோன்.

[69] ஒரு திங்கள் நீட்டிக் கொடுக்கலாம் என்பது கருத்து.

[70] தாழ்க்குந் திங்கள் ஒவ்வொன்றிற்கும் என்க.

[71] இருநூறென்பது ஈண்டுப் பணத்தை யுணர்த்தும்.

[72] மேலும்—ஒரு திங்களுக்குப் பின்னும்.

[73] அதற்குமேலும் வராவிட்டால் தண்டிக்கலாமென்பது.

[74] அறம்—விதித்தன செய்தலும் விலக்கிய ஒழிதலுமாம்.

[75] உரையாடல்—வினவும் விடையுமாகச் சொல்லாடல்.

[76] உலக வழக்கு—உலகத்தோடு ஒட்ட ஒழுகல்.

[77] முன்னை நிலை—கணக்கனுடைய முற்கால நிலைமை.

[78] தொகுத்துக் காண்டல்—கணக்கன் கொண்டு வந்த பொருளை ஒன்று சேர்த்து எண்ணியறிதல்.

[79]காரியமுடிவு [80]அநுமானம் [81]ஒற்று என்னும் இவற்ருல் ஆராய்தல்வேண்டும்.

[82]ஒருநாள் ஐந்துநாள் பக்கம் திங்கள் நாற்றிங்கள் ஆண்டு என்னும் காலக் கூறுகளால் எண்ணிக் கணக்கு முடித்தல் வேண்டும். [83]திருநாள் இடம் [84]காலம் [85]வருவாய்முகம் [86]தோற்றம் [87]தொடர்ச்சி [88]அளவு என்னும் இவற்ருேடு, கொடுத்தோன் [89]கொடுப்பித்தோன் எழுத்தாளன் பெற்றுக்கொண்டவன் ஆகிய இவர்களையும் விளக்கி வரவு கணக்கை எழுதல் வேண்டும். திருநாள் இடம் காலம் செலவின் உடல் [90]ஊதியம் காரணம் கொடுக்கக்கடவ பொருள் [91]கலப்பு அளவு என்னும் இவற்ருேடு கட்டளையிட்டோன் கடன்கொள்வோன் பொருட்பண்டாரம் புரப்போன் [92]தானம் பெற்ருேன் ஆகிய இவர்களையும் விளக்கிச் செலவு கணக்கு எழுதல் வேண்டும். திருநாள் இடம் காலம்

---

79 காரியமுடிவு—குறிப்பிட்ட காரிய நிறைவேற்றம்.

80 அநுமானம்—நிகழ்ந்தது கொண்டு நிகழாததை உணர்தல்.

81 ஒற்று—ஒற்றர் செயல்.

82 ஆண்டின் முதற்றிங்களில் வளர்பிறை முதனாள் தொடங்கி ஐந்தாம் நாள்காறும் நாடோறும் நேரும் வரவு செலவு இருப்புக்களைத் தனித் தனியே கணக்கேட்டில் எழுதி அவ்வைந்துநாள் எண்களையும் கூட்டிக் குறிப்பிடல்வேண்டும். இங்ஙனம் ஐந்து ஐந்து நாட்களுக்குக் கூடிய தொகைகளைப் பக்கத்துக்கு ஒருமுறையாகவும் இரண்டுபக்கங்களுக்குக் கூடிய தொகைகளைத் திங்களுக்கு ஒரு முறையாகவும், திங்கள் நான்கிற் கூடிய தொகைகளை நான்கு திங்களுக்கு ஒருமுறையாகவும் நாற்றிங்கள் தொகை மூன்றனையும் ஆண்டிற்கொருமுறையாகவும் எண்ணிக் கணக்கு முடித்தல் வேண்டும் என்பது கருத்து.

83 அரசன் முடிசூடிய ஆண்டு திங்கள் பக்கம் நாள் என்னும் இவை திருநாள் ஆகும்.

84 மழை பனி வெயில் என்னும் மூவகைக் காலக் கூறுகள்.

85 "வருவாய்முகம்" என்னும் இதனுல் வருவாயின் உடலையும் கொள்ளல் வேண்டும். இவற்றின் இயல்பை 27ம் அத்தியாயத்திற் காண்க.

86 தோற்றம்—வரவின் உற்பத்தி ; சுங்கம் முதலியன.

87 தொடர்ச்சி—முன்னை வரவின் தொடர்ச்சி.

88 அளவு—பொருளின் அளவு.

89 கொடுப்பித்தோன்—கொடுக்கத் தூண்டிய அரசியல் வினைஞன்.

90 ஊதியம்—இதனை 27ம் அத்தியாயக் குறிப்பிற் காண்க.

91 இவ்வத்தியாயம் 13ம் குறிப்பிற்காண்க.

92 தானம் பெற்ருேன்—பார்ப்பான்.

இருப்பின்முகம் [93]தொடர்ச்சி [94]வடிவம் [95]இலக்கணம் அளவு பொருள்வைப்புப் பேழை என்னும் இவற்ருேடு பாதுகாப்போனை யும் விளக்கி இருப்புப் பொருட் கணக்கு எழுதல் வேண்டும்.

கணக்கன் அரசனுக்குரிய பொருளில் [96]கருத்தில்லாமலிருப் பினும், அரசன் கட்டளைப்படி நடவாமலிருப்பினும் வரையறுக்கப் பட்ட நியமத்தினின்றும் வரவு செலவுகளை வேறுவிதமாகச் செய் யினும் அவனுக்குப் பூர்வசாகசம் தண்டம் ஆகும்.

ஒரு பொருளைப்பற்றி [97]முறையின்றியாதல் [98]முறைகடந் தாதல் [99]அறியக்கூடாத நிலையிலாதல் [100]கூறியது கூறலாகவாதல் எழுதிய கணக்கனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாகும்.

இருப்புத் தொகையைக் குறைய எழுதியவனுக்கு [101]இரு மடங்கும், அதனைத் தனக்குப் பயன்படுத்திக்கொண்டவனுக்கு [102]எண்மடங்கும் [103]அழிவு செய்தவனுக்கு [104]ஐந்து மடங்குடன் அழிவளவு மீண்டு கொடுத்தலும் தண்டமாகும். பொய் கூறிய வனுக்குக் கள்வனுக்குரியது தண்டமாகும். [105]பின்னர் அறியப் படினும் மறந்து நினைக்கப்படினும் அவற்றிற்கும் [106]இருமடங்கு தண்டமாகும்.

---

[93] தொடர்ச்சி—முன்னிருப்புப் பொருளின் தொடர்ச்சி.
[94] வடிவம்—பொன் வெள்ளி கூலம் முதலியன.
[95] இலக்கணம்—அடையாளம்.
[96] கருத்தில்லாமலிருத்தல் — புறக்கணித்துக் கணக்கேட்டில் எழுதா திருத்தல்.
[97] முறையின்மை—எழுதவேண்டிய ஒழுங்கு தழுவாமை.
[98] முறைகடத்தல்—ஒழுங்கு பிறழ எழுதுதல்.
[99] அறியக்கூடாத நிலை—பிறர் தெளிவாக அறிந்துகொள்ளாவாறு.
[100] முன் எழுதிய தொன்றனையே மீட்டும் எழுதல்.
[101] இருமடங்கு—முன்னர்க் கூறிய பன்னிரண்டு பணத்தின் இருமடங் காகிய இருபத்திநான்கு பணமாகும்.
[102] எண்மடங்கு—இது தொண்ணூற்ரறு பணமாகும்.
[103] அழிவு செய்தவன்—வேறு வகையில் செலவிட்டுக் கெடுத்தவன்.
[104] ஐந்து மடங்கு—அறுபது பணம்; அவற்றுடன் அழிவு செய்த பொருள் எவ்வளவோ அவ்வளவுமாம்.
[105] பின்னர் அறியப்படுதல்—முன்னர் எழுதாமல் விடப்பட்டுக் கணக் குப் பரிசோதனைக் காலத்தில் அறியப்படுதல்.
[106] இருமடங்கு—கள்வனுக்குரிய தண்டத்தின் இருமடங்கு.

சுலோகம்

[107]சிறிய குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். [108]வருவாய் சிறிதாயினும் மகிழ்ச்சியடைதல் வேண்டும். பேருதவி செய்த கணக்கர்தலைவனைச் சிறப்புடன் [109]ஏற்றுப் பெருமைப் படுத்தல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் ஏழாம் பிரகரணம்
"பொருட்கணக்கெழுதுவோர்ப் பொருந்ததிகாரம்"
என்னும் இருபத்தெட்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

107 சிறிய குற்றம்—கணக்கர் தலைவனைப் பற்றியது.
108 வருவாய்—கணக்கர் தலைவனால் உண்டாக்கப்பட்டது.
109 ஏற்றல்—அவன் உயிருள்ளளவும் அப்பதவியில் இருக்கச் செய்தல்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

எட்டாம் பிரகாரணம்—[1]வினைவலார் கவர்பொருள் மீட்டுக்கொணர்வித்தல்

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

[2]எல்லாக் காரியங்களும் [3]பொருளைக் காரணமாகவுடையன ஆதலின் முதலிற் பொருளை [4]ஆராய்தல் வேண்டும்.

நாட்டுவளம் [5]வழக்க ஒழுக்கங்களைக் காத்தல் [6]கள்வரைக் களைதல் [7]வினைவலாரைத் தடைப்படுத்தல் [8]பயிர்த்தொழில்

29-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 பொருட் கணக்கெழுதுவோராகிய அரசியல் வினைஞர் கரவிற் கவர்ந்த பொருளை ஆராய்ந்தறிந்து மீட்டுக் கொணர்வித்தலைப்பற்றிய இது முன்னைப் பிரகரணத்தோடு இயைபுடைத்தாதலறிக.

2 தன் நாடு நலம் பெறுதற்குரிய செயலாகிய தந்திரமும் பகைநாடு கோடற்குரிய உபாயமாகிய ஆவாபமும் ஆகிய இவற்றைப்பற்றிய செயல்களெல்லாம் என்பது கருத்து.

3 "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்" என்பது திருக்கோவை.

4 பொருள் குறைவுபடாமல் வளர்ச்சி யெய்துதலை ஆராய்தல்வேண்டும் என்பது. "பொன்னினுகும் பொருபடை யப்படை, தன்னினுகுந் தரணி தரணியிற் பின்னையாகும் பெரும்பொரு ளப்பொருள், துன்னுங் காலைத் துன்னுதன வில்லையே" (செ. 1923) என்னுஞ் சிந்தாமணிச் செய்யுட் கருத்து இதனை வலியுறுத்தும்.

5 நாட்டு வழக்கம் குலவழக்கம் முதலியவைகளை முன்னை நிலையினின்றும் பிறழவிடாமற் காத்தலால் மக்கள் மகிழ்ச்சியுடையராய் அரசனது கருவூலத்தை வளர்விப்பர் என்பது கருத்து.

6 கள்வரைக் களைதல்—கள்வரை ஒறுத்தலால் நாட்டிற் களவு நிகழாவாறு செய்தல்.

7 வினைவலாரைத் தடைப்படுத்தல்—அரசியல் வினைஞர் பொருளைக் கவர்ந்துகொள்ளாமலும், கைக்கூலிபெற்றுக் குடிகளைத் துன்புறுத்தாமலும் பாதுகாத்தல். "தன்னால் தன் பரிசனத்தால்..............ஆனபயம் ஐந்தும் காத்து" என்னும் பெரியபுராணச் செய்யுள் ஈண்டுக் கருதற்பாலது.

8 பயிர்த் தொழில் வளர்ச்சி—பல்வகைக் கூலங்களைப் பெருக்குதல்.

வளர்ச்சி [9]விளைப்பண்டங்களின் மிகுதி [10]இடுக்கண் களைதல் [11]பரிகாரக் குறைவு கையுறைப் பொருள் என்னும் [12]இவை பொருள் வளர்ச்சிக்குரிய ஏதுக்களாம்.

[13]தடைப்படுத்தல் பயன்படுத்தல் தொழில்செய்தல் மறைவு செய்தல் வரையறைவிடுத்தல் நுகர்தல் மாற்றுதல் கவர்தல் என்னும் [14]இவை பொருள் குறைதற்குரிய ஏதுக்களாம்.

[15]அரசிறையை அறுதியிடாமை [16]கொள்ளாமை [17]கருவூலத்திற் புகுத்தாமை என்னும் இவை தடைப்படுத்தல் ஆகும். [18]அதற்குப் பதின்மடங்கு தண்டம் ஆகும்.

கருவூலத்திற்சேர்க்கவேண்டிய பொருளை [19]வட்டிப்பொருட்டு உபயோகப்படுத்தல் பயன்படுத்தலாகும். அப்பொருளைக்கொண்டு

---

9 விளைப்பண்டங்களின் மிகுதி—நீரினும் நிலத்தினும் உண்டாம் பொருள்களை மிகுவித்தல்.

10 இடுக்கண் களைதல்—நெருப்பு முதலியவற்றால் பொருள்களுக்கு அழிவு வராமற் காத்தல்.

11 பரிகாரக் குறைவு—அரசிறை கொள்ளாது விடுதலைக் குறைத்தல்; வற்கடம் முதலிய காரணம் பற்றி அரசிறை கொள்ளாமல் விடுதல் வேண்டுமாயினும் அங்ஙனம் விடுதலை இயன்றவரை குறைத்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

12 இவை—இவை ஒன்பதும்.

13 பொருள் குறைதற்குரிய ஏதுக்களைப் பெயரளவிற் குறிப்பிடத் தொடங்குகின்றார்.

14 இவை—இவ்வெட்டும்.

15 அரசிறையை அறுதியிடாமை—குடிமக்களுக்கு விதிக்க வேண்டிய அரசிறையை விதியாமலும், இத்துணை யென்று வரையறை செய்யாமலும் விடுதல்.

16 கொள்ளாமை—விதித்த இறைப் பொருளைக் கொள்ளாது விடுதல்.

17 கருவூலத்திற் புகுத்தாமை—கொண்ட இறைப் பொருளைக் கருவூலத்திற் சேர்க்காமல் விடுதல்.

18 தடைப்படுத்த பொருளளவினும் பதின் மடங்கு தடைப்படுத்தியவன் தண்டம் இறுக்கவேண்டும் என்பது கருத்து.

19 அப்பொருளாற் கிடைக்கும் வட்டி ஊதியத்தைத் தான் அநுபவித்துக் கொண்டு பின்னர்க் கருவூலத்திற் சேர்த்து விடலாமென்று துணிந்து பயன் படுத்திக் கொள்ளுதல் என்பது.

[20]வாணிகஞ்செய்தல் தொழில்செய்தலாகும். இவ்விரண்டிற்கும் தண்டம் [21]பயனுக்கு இருமடங்காகும்.

[22]வந்த காலத்தை [23]வாராததாகவும் [24]வாராத காலத்தை வந்ததாகவும் செய்தல் மறைவுசெய்தலாம். அதற்குத் தண்டம் [25]ஐந்து மடங்காகும்.

வரையறுக்கப்பட்ட வரவைக் குறைத்தலும், வரையறுக்கப் பட்ட செலவை மிகுத்தலும் வரையறைவிடுத்தல் ஆகும். அதற்குத் தண்டம் [26]குறைவின் நான்கு மடங்காகும்.

அரசனுடைய பொருள்களைத் தான் அநுபவித்தலும், பிறரை அநுபவிக்கச் செய்தலும் நுகர்தல் ஆகும். அப்பொருள்களுள் மணிகளை அநுபவிப்பவனுக்குக் கொலைத்தண்டமும் [27]திண்மைப் பொருளை அநுபவிப்பவனுக்கு மத்தியமசாகச தண்டமும், நொய் மைப் பொருளையும் குப்பியப் பொருளையும் அநுபவிப்பவனுக்கு அப்பொருளளவின் இருமடங்கு தண்டமுமாம்.

---

[20] வாணிகஞ் செய்தல்—வாணிகத்தாற் கிடைக்கும் ஊதியத்தைத் தான் அடைதற் பொருட்டுச் செய்தல் என்பது கருத்து.

[21] பயன்—வட்டியும் ஊதியமுமாம்.

[22] வந்த காலம்—இறைப் பொருள் கோடற்கு அறுதியிடப்பட்டு நெருங்கிய காலம்.

[23] வாராததாகச் செய்தல் கைக்கூலி பெறும் விருப்பத்தால் என்பது கருத்து.

[24] வாராத காலத்தை வந்ததாகச் செய்தற்குக் காரணம் இறைப் பொருள் இறுப்போர்பாலுள்ள வெறுப்பாகும்.

[25] ஐந்து மடங்கு—அக்காலங்களில் இறுக்கப்படும் இறைப் பொருளின் ஐந்து மடங்கு என்பது கருத்து.

[26] வரவிற் குறைந்த பொருளளவினும் செலவு மிகுதியால் வரவு பொருளிற் குறையும் பொருளளவினும் நான்கு மடங்கு தண்டம் என்பது கருத்து.

[27] திண்மை நொய்மை குப்பியம் என்னும் பொருள்களினியல்பை 26-ம் அத்தியாயத்திற் காண்க.

பிறிதொரு பொருளை மாற்றாக வைத்து அரசனது பொருளைக் கவர்ந்துகொள்ளுதல் மாற்றுதலாகும். நுகர்தற்கு விதித்த [28] தண்டம் இதற்குமாம்.

வரவாக வந்த பொருளைக் கணக்கிற் குறிக்காமல் விடுதலும், [29]குறித்த செலவு பொருளைக் கொடாமலிருத்தலும், அடையப்பட்ட இருப்புப் பொருளை அடையவில்லை என்று [30]மறுத்தலும் கவர்தல் ஆகும். அதற்குப் [31]பன்னிரண்டு மடங்கு தண்டமாகும்.

அரசியல் [32]வினைஞர் அரசன் பொருளைக் கவர்ந்துகொள்ளுதற்குரிய வழிகள் நாற்பதாகும்—[33]முன்னர் வந்ததைப் பின்னர்ப் புகுத்தல் [34]பின்னர் வரக்கடவதை முன்னர்ப் புகுத்தல் [35]கொள்ள

---

28 மணி திண்மை நொய்மை குப்பியம் என்னும் இப்பொருள்களை அநுபவிப்பவர்க்கு விதித்த தண்டங்களே மாற்றியவர்க்கும் முறையே கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

29 குறித்த—கணக்கிற் குறிப்பிட்ட.

30 மறுத்தல்—அப் பொருள் என் கைக்கு வரவில்லை யென்று மறுத்துரைத்தல்.

31 கவர்ந்த பொருளளவிற் பன்னிரண்டு மடங்கு என்பது கருத்து.

32 கவர்ந்து கொள்ளும் நெறிகளை அறிந்தாலன்றிக் கவர்ந்து கொள்ளுதலை விலக்குதற்கும் கவர்ந்த பொருளை மீண்டு பெறுதற்கும் இயலாதாகலின் அந்நெறிகள் இங்கே கூறப்படுகின்றன.

33 முன் விளைந்து வந்த நெல் முதலியவற்றின் இறைப் பொருளை அப்பொழுதே கணக்கிற் புகுத்தாமல் பின் விளைந்து வந்த கோதுமை முதலியவற்றின் இறைப் பொருளோடு கூடப் புகுத்தல் என்பது கருத்து. இதனால் இடைக்காலத்தில் அரசியல் வினைஞன் அநுபவித்தான் என்பது பெறப்படும்.

34 பின்னர் விளைந்து வரக்கூடிய கோதுமை முதலியவற்றின் அரசிறையை அரசியற் காரியத்திற்கு அநுகூலஞ்செய்வதாகக் காரணம் காட்டி முன்னரே வாங்கி அதன் ஒரு கூற்றைக் கருவூலத்திற் சேர்த்தல் என்பது கருத்து. இதனாற் சேர்க்கப்பட்ட கூற்றின் எஞ்சிய பகுதியைப் பின்னர் உரிய காலத்தில் கருவூலத்திற் சேர்க்குங்காறும் தான் கொண்டு அதன் வட்டி முதலிய வருவாயை அநுபவித்தான் என்பது பெறப்படும்.

35 கொள்ளாமல் விடுதற்குக் காரணம் இறுப்போன்பாற் பெறும் கைக்கூலி யென்பது கருத்து.

வேண்டிய இறைப்பொருளைக் கொள்ளாதுவிடல் [36]இறையிலிக்கு இறைகோடல் [37]கொண்டதைக் கொள்ளாததாகக் கூறல் [38]கொள்ளாததைக் கொண்டதாகக் கூறல் [39]சுருக்கமாக வந்ததைப் பெருக்கிக் காட்டல் [40]பெருக்கமாக வந்ததைச் சுருக்கிக் காட்டல் [41]ஒன்றைப் பெற்றுக்கொண்டு பிறிதொன்றைக் குறித்தல் [42]ஒருவன்பாற் பெற்ற இறைப்பொருளை மற்றொருவன்பாற் பெற்றதாகக் குறித்தல் [43]கொடுக்கத் தக்கதைக் கொடாமல் கொடுக்கத் தகாததைக் கொடுத்தல். [44]காலத்தாற் கொடாமற் காலந் தாழ்த்துக் கொடுத்தல். [45]சுருக்கமாகக் கொடுத்துப் பெருக்கமாகக்

---

36 இறையில்லாமல் திருக்கோயில் முதலியவற்றிற்கு அரசனால் விடப்பட்ட நிலங்களின் வருவாய்களுக்கு மறைவாக இறைகொண்டு கவர்ந்து கொள்ளுதல் என்பது கருத்து.

37 பெற்றுக்கொண்ட இறைப்பொருளைக் கொள்ளவில்லை என்று சொல்லிக் கவர்ந்துகொள்ளுதல் என்பது.

38 இறைப்பொருள் முழுதும் கொள்ளுதற்குரிய காலத்தில் முழுதும் பெற்றுக்கொண்டதாகக் கணக்கில் வரவு வைத்தல் என்பது கருத்து. இதனால் இங்ஙனம் செய்தற்குக் காரணம் இறுப்போன் கொடுக்கும் கைக்கூலியென்பது போதரும்.

39 சுருக்கமாக வந்த இறைப்பொருளைக் கைக்கூலி பெற்றுக்கொண்டு கணக்கிற் பெருக்கிக்காட்டல்.

40 மிகுதியாக வந்த இறைப் பொருளைச் சுருக்கமாகக் கணக்கிற் காட்டி எஞ்சியதைக் கவர்ந்துகோடல் என்பது.

41 மிகு விலைக் கூலத்தைப் பெற்றுக் கொண்டு குறைந்த விலைக் கூலமாகக் கணக்கிற் குறித்தல் என்பது. இது விலை மிகுதியால் வரும் ஊதியத்தைக் கவர்ந்து கொள்ளுதற்குரிய நெறி என்பது புலனும்.

42 இறைப் பொருள் கொடுத்தவனை விட்டுக் கொடாதவன் பெயரால் கணக்கெழுதல் அவன்பாற் கைக் கூலி பெறுதற் பொருட்டாம் என்பது.

43 ஒருவனுக்கு அரசன் கட்டளைப்படி பொன் வெள்ளி முதலியன கொடுக்கத் தக்கனவாக இருக்க அவற்றைக் கொடாமற் கொடுத்ததாகக் கணக்கில் எழுதி ஆடை முதலிய நொய்மைப் பொருளைக் காலங்கடத்திக் கொடுத்தல் என்பது கருத்து.

44 அரசன் கட்டளைப்படி, ஒரு காரியம் நிகழுங்கால் கொடுக்கவேண்டியதைக் காலங் கடத்திக் கைக்கூலி பெற்றுக் கொடுத்தல் என்பது கருத்து.

45 அரசன் கட்டளைப்படி கொடுக்கவேண்டிய பொருளளவில் ஒரு கூறு தான் எடுத்துக் கொண்டு முழுவதும் கொடுத்ததாகக் கணக் கெழுதல் என்பது.

குறித்தல் [46]பெருக்கமாகக் கொடுத்துச் சுருக்கமாகக் குறித்தல் [47]ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைக் குறித்தல் [48]ஒருவனுக்குக் கொடுக்கவேண்டியதை மற்றொருவனுக்குக் கொடுத்தல் [49]வந்ததை வாராததாகச் செய்தல் [50]வாராததை வந்ததாகச் செய்தல் [51]விலை கொடுக்கப்படாத குப்பியப்பொருளின் வரவு [52]விலை கொடுக்கப் பட்ட குப்பியப்பொருளின் வரவின்மை [53]தொகுதியைப் பகுதி யாக்கல் [54]பகுதியைத் தொகுதியாக்கல் [55]பெருவிலைப் பொருளைச்

---

46 அரசன் கட்டளைப்படி கொடுக்கவேண்டிய பொருள் சுருக்கமாக இருப்பத் தற்பயன் கருதிப் பெருக்கமாகக் கொடுத்தல் என்பது.

47 அரசன் கட்டளைப்படி கொடுக்கவேண்டிய பொருள் உயர்ந்ததாக இருப்ப அதனைக் கொடாமல் தாழ்ந்த பொருளைக் கொடுத்தல் என்பது.

48 அரசன் கட்டளைப்படி ஒருவனுக்குக் கொடுக்க வேண்டிய பொருளை அவனுக்குக் கொடாமல் மற்றொருவனுக்குத் தற்பயன் கருதிக் கொடுத்தல் என்பது.

49 கருவூலத்திலிருந்து குடிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட பொருளில் திரும்பி வந்ததை வாராததாகச் செய்தல்; கணக்கில் வரவு வையாமல் விடுதல் என்பதாம்.

50 கடன் கொடுக்கப்பட்ட பொருளில் வாராததைத் தற்பயன் குறித்து வந்ததாகக் கணக்கில் எழுதல். தற்பயன்—கைக்கூலி.

51 அரசன் கட்டளைப்படி விலைக்கு வாங்கப்பட்ட குப்பியப் பொருள்களுக்கு விலைகொடாமல் கொடுத்துவிட்டதாகக் கணக்கில் எழுதிக் கவர்ந்து கொள்ளுதல் என்பது.

52 விலை கொடுத்து வாங்கப்பட்ட குப்பியப்பொருளை அரசன் உடைமையாகச் சேர்க்காமல் தான் கவர்ந்து கொள்ளுதல் என்பது.

53 ஒரு கிராமத்தினின்றும் பொதுவாக வாங்கவேண்டிய இறைப் பொருளை அக்கிராமத்தில் வாழும் மக்களிடத்தில் தனித்தனியே பிரித்து வாங்குதல் என்பது. இது சிலர் கொடுக்கவில்லை என்று சொல்லிக் கவர்ந்து கொள்ளுதற்கும் சிலரிடத்தில் மிகுதியாகக் கொள்ளுதற்கும் ஏதுவாம் என்பது.

54 ஒரூரிலுள்ள சிலரிடமிருந்து தனித்தனியே கொள்ளவேண்டியதாக விதித்த பொருளை அவ்வூரிலுள்ளார் பலர்க்கும் விதித்ததாகக் கூறித் திரட்டி வாங்குதல்.

55 அரசனது விலையுயர்ந்த பொருளைக் கொடுத்து அதற்கு மாறாக விலை குறைந்த பொருளைக் கொள்ளுதல். இது விலைமிகுதியால் கிடைக்கும் ஊதியத்தைக் கவர்ந்துகொள்ளுதற்கு வழியாம் என்பது.

சிறுவிலைப்பொருளுக்கு மாற்றுதல் [56]சிறுவிலைப்பொருளைப் பெருவிலைப்பொருளுக்கு மாற்றுதல் [57]விலையை உயர்த்தல் [58]விலையைக் குறைத்தல் [59]நாட்களைக்கூட்டல் [60]நாட்களைக்கழித்தல் [61]ஆண்டைத் திங்களால் மாறுபடுத்தல் [62]திங்களை நாட்களால் மாறுபடுத்தல் [63]கூட்டத்தில் மாறுபடுத்தல் [64]வாயிலை மாறுபடுத்தல் [65]அறவோன்

---

[56] மாறாகக் கொடுக்கப்பட்ட சிறுவிலைப் பொருள் விரைவின் மிகுதியாக விற்கப்படும் ஆதலால் அதன் மூலம் சிறுவிலைப் பொருளைப் பெறுவோனுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் ஒருகூறு மறைவாகக் கொள்ளலாம் என்பதாம்.

[57] விலையை உயர்த்துதலால் விற்போரிடம் கைக்கூலி பெறலாம் என்பது.

[58] விலையைக் குறைத்தலால் விற்போர் தமக்கு ஊதியக்கேடு நேரும் என்று அஞ்சி முன்னை விலையை ஏற்படுத்த விரும்பி அதற்காகக் கைக்கூலி தரக்கூடும் என்பது கருத்து.

[59] ஐந்து நாட்களுக்குரிய கூலியைக் கொடுத்து ஏழு நாட்களுக்குக் கொடுத்ததாகக் கணக்கெழுதி இரண்டுநாட் கூலியைக் கவர்ந்துகொள்வது போல்வன. இங்ஙனம் கவர்ந்துகொள்வது தொழிலாளர் பொருளாம் என்பது.

[60] பத்து நாட்களுக்குரிய கூலியை அரசனிடம் பெற்றுக்கொண்டு ஏழு நாட்களுக்குப் பெற்றுக்கொண்டதாகக் கணக்கெழுதி எஞ்சியதைக் கவர்ந்துகொள்வது போல்வன. இங்ஙனம் கவர்ந்துகொள்வது அரசன் பொருளாம் என்பது.

[61] சாந்திரமானப்படி அதிமாதம் இல்லாத ஆண்டை அதிமாதம் உடையதாகக் கணக்கெழுதி அவ்வதிமாதம் பற்றி வரும் ஊதியத்தைக் கவர்ந்துகொள்ளுதல் என்பது.

[62] நிறைந்த நாட்களையுடைய திங்களைக் குறைந்த நாட்களையுடையதாகக் கணக்கெழுதி மிகுதியான நாளுக்குரிய ஊதியத்தைக் கவர்ந்து கொள்ளுதல் என்பது.

[63] பலர்க்கும் பொதுவாகக் கொடுக்கவேண்டிய கூலியைச் சிலர்க்குக் கொடாமல் மறைவிற் கவர்ந்து கொள்ளுதல்.

[64] ஒரு வாயிலில் வந்த வருவாயை மற்றொரு வாயிலில் வந்ததாக கைக்கூலி பெற்றுக்கொண்டு மாற்றுதல்.

[65] ஓரந்தணர்க்கு நூறு பண விகிதம் கொடுக்கவேண்டும் என்று அரசன் கட்டளையிட அதனிற் பாதியைப் புரோகிதனுதல் புரோகிதனைச் சார்ந்தோனுதல் கவர்ந்துகொள்ளுதல் என்பது.

மாறுபடுதல் [66]நிறைவேற்றத்தின் மாறுபடுதல் [67]குழுவின் மாறுபடுதல் [68]வருணத்தை மாறுபடுத்தல் [69]விலையை மாறுபடுத்தல் [70]அளவுகருவியை மாறுபடுத்தல் [71]அளப்போனை மாறுபடுத்தல் [72]கலங்களை மாறுபடுத்தல் என்னும் இவை கவர்ந்துகொள்ளுதற்குரிய நெறிகளாம்.

[73]இந்நிகழ்ச்சியில் [74]தலைமைவினைஞன் கருவூலத்தலைவன் எழுத்தாளன் [75]பெற்றுக்கொண்டவன் [76]கொடுத்தோன் [77]கொடுப்

---

66 இறைப்பொருள் தொகுக்கும் செயலில் முற்பட்டு இறுப்போரை இன்றே தரல் வேண்டும் என்று நெருக்கி அவரிற் சிலரைக் கைக்கூலி பெற்றுக்கொண்டு விடுதல்.

67 ஒரு கூட்டத்தாரிடத்தினின்றும் பொதுவாக வாங்கவேண்டிய பொருளைக் கைக்கூலிபெற்றுச் சிலரைவிடுத்து ஏனையோரிடத்து வாங்குதல்.

68 வருணத்தை மாறுபடுத்தல்—சாதியை மாறுபடுத்திக் கூறல். வருணம் என்பதற்கு நிறம் எனப் பொருள் கொண்டு மாற்றுயர்ந்த பொன்னை வாங்கிக்கொண்டு மாற்றுக் குறைந்த பொன்னுகக் கணக்கில் எழுதிக் கவர்ந்துகொள்ளுதல் எனினுமாம்.

69 படைகள் தங்குமிடம் முதலியவற்றில் பண்டங்களின் விலை வரையறையாக இராதாகலின் அவ்விலையைச் சிறிது கூட்டிச் சொல்லிக் கவர்ந்து கொள்ளுதல்.

70 முகத்தலளவை, நிறுத்தலளவை முதலியவற்றின் கருவிகளில் கொடுத்தற்குச் சிறியனவாகவும் வாங்குதற்குப் பெரியவையாகவும் மாறுபடுத்திக் கவர்தல்.

71 அளவு கருவிகளால் பொருளை அளக்கும் பணியாளனை மாறுபடுத்திக் கோடல்.

72 கலம்—பாத்திரம். "நெய்க்குடம் நூறு கொடுக்க" என்று அரசன் கட்டளையிடச் சிறிய குடங்களாக நூறு கொடுத்துப் பெரிய குடங்களைக் கொடுத்ததாகக் கணக்கெழுதிக் கவர்ந்து கொள்ளுதல்.

73 இந்நிகழ்ச்சியில்—இந்நெறிகளாற் பொருள் கவர்ந்துகொண்டதாக ஐயம் நேர்ந்துழி.

74 தலைமை வினைஞன்—பல தொழில்களினும் நியமிக்கப்பட்ட வினைஞர் பலர்க்கும் மேலதிகாரி.

75 பெற்றுக்கொண்டவன்—இறைப்பொருள் பெற்றுக்கொண்ட அரசியல் வினைஞன்.

76 கொடுத்தவன்—இறைப்பொருள் கொடுத்தோன்.

77 கொடுப்பித்தோன்—கொடுக்கும்படி தூண்டிய அரசியல் வினைஞன்.

பித்தோன் [78]அமைச்சன் அமைச்சனுடைய பணியாளன் என்னும் [79]இவர்களைத் தனித்தனியே [80]வினுதல் வேண்டும். இவர்கள் பொய் கூறுவராயின் தொழிற்றலைவர்க்குரிய தண்டமே இவர்களுக்குமாம். "அத்தொழிற்றலைவனால் [81]துன்புறுத்தப்பட்ட மக்கள் (தம் துன்பத்தை) அறிவிக்கவேண்டும்" என்று நாட்டிற் பறையறைவித்தல் வேண்டும். [82]அறிவித்தவனுக்குத் துன்பத்திற்குத் தகப்பொருள் கொடுப்பித்தல் வேண்டும். துன்பஞ்செய்ததாகப் பலவழக்குத் தொடரப்பட்டவன் [83]மறுத்துரைக்குங்கால் அவற்றுள் ஒன்று [84]மெய்ப்பிக்கப்படுமாயின் அவன் மறுப்புப் புறக்கணிக்கப்பட்டு எல்லாக் குற்றங்களுக்கும் அவனே [85]ஆளாவான். சிலவற்றை உடன்பட்டுச் சிலவற்றை மறுப்பானாயின் மறுக்கப்பட்ட எல்லாவற்றையும் கேள்வி மூலம் [86]ஆராய்தற்கு அவகாசம் அளித்தல் வேண்டும். மிகுதியான பொருள் கவர்ந்து கொள்ளப்பட்டதாக நேர்ந்த வழக்கில் சிறுபொருள் கவர்ந்தது மெய்ப்பிக்கப்படுமாயின் எல்லாப் பொருளுக்கும் அவனே [87]பொறுப்பாளி ஆவான்.

---

[78] அமைச்சன்—தொழிற்றலைவனுக்குச் சூழ்ச்சித் துணைவன்.

[79] இவர்களை—இவ்வெண்மரையும்.

[80] இஃது இத்தொழிற்றலைவனால் கவர்ந்துகொள்ளப்பட்டதா? இல்லையா? என்பதுபற்றி வினவுதல் வேண்டும் என்பது கருத்து.

[81] துன்புறுத்தப்படுதல்—கைக்கூலி முதலிய காரணங்களால் வருத்தப்படுதல்.

[82] கைக்கூலி முதலியன காரணமாகத் துன்புறுத்தப்பட்டு மெய்ப்பித்தவனுக்கு அவனடைந்த துன்பத்திற்குத் தகுதியான பொருளைத் துன்புறுத்திய தொழிற்றலைவன் கொடுக்கும்படி செய்தல்வேண்டும் என்பது கருத்து.

[83] மறுத்துரைத்தல்—எல்லா வழக்குக்களையும் மறுத்துரைத்தல்.

[84] மெய்ப்பிக்கப்படுமாயின் — சான்று முதலியவற்றால் உண்மைப்படுத்தப்படுமானால்.

[85] ஆளாதல் — துன்பமுற்றோர் எல்லோர்க்கும் துன்பத்திற்குத் தக்க அளவு பொருள் கொடுக்கக் கடமைப்படுதல்.

[86] ஆராய்தல், விருப்பு வெறுப்பு முதலிய காரணங்களால் வழக்கில் பொய் கலந்திருக்குங்கொலோ? என்னும் ஐயத்தை நீங்குதற்பொருட்டாம்.

[87] பொறுப்பாளியாவான்—எல்லாப் பொருளையும் இறுக்கக் கடமைப்பட்டவனாவான்.

[88]அறிவிப்போன் [89]எதிராகச் செய்யப்படும் துன்பம் பற்ரு மைக்குப் பிணைகொண்டு அறிவிக்கும் காரியத்தை மெய்ப்பிப்பா ஞயின் [90]ஆறிலொருகூறு பெறுதற்கு உரியனுவான். [91]பணி யாளன் அறிவிப்பின் பன்னிரண்டில் ஒருகூறு பெறுதற்கு உரிய னுவான். மிகுதியான பொருளைப்பற்றிய அறிவிப்பில் மெய்ப் பிக்கப்பட்டது சிறிதாயின் மெய்ப்பிக்கப்பட்ட பொருளளவிலேயே [92]கூறு பெறக்கடவன். எவ்வாற்ருனும் மெய்ப்பிக்கவில்லையாயின் [93]உடற்றண்டம் அல்லது பொருள் தண்டத்திற்கு உரியவனுவான்; [94]அளிக்கத்தக்கவனுகான்.

சுலோகம்

அறிவிப்போன் மெய்ப்பித்தபின் வழக்கை முடித்துத் தன்னை [95]விடுவித்துக்கொள்ளல்வேண்டும். வழக்கிடப்பட்டவனுல் [96]வேறு படுத்தப்படின் கொலைத்தண்டத்திற்கு ஆளாவான்.

இரண்டாம் அதிகரணம் எட்டாம் பிரகரணம்
"வினைவலார் கவர்பொருள்மீட்டுக் கொணர்வித்தல்" என்னும்
இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

88 அறிவிப்போன் — தொழிற்றலைவன் கவர்ந்த பொருளைப்பற்றி வழக்குக் கொணர்ந்தவன்.

89 எதிர்த்துன்பமாவது—தொழிற்றலைவன் தன்னைப்பற்றிய வழக்குக் காரணமாக அது கொணர்ந்தானுக்கு எதிராகச் செய்யப்படும் இடையூறு.

90 ஆறில் ஒரு கூறு—கவர்ந்ததாக மெய்ப்பிக்கப்படும் பொருளில் ஆறி லொரு கூறு என்பது கருத்து.

91 தொழிற்றலைவனுடைய பணியாளன்.

92 கூறு—முறையே ஆறிலொன்றும் பன்னிரண்டில் ஒன்றுமாம்.

93 உடற்றண்டம்—சிறைப்படுத்தல் கசையடி முதலியன.

94 வழக்குக்கொணரப்பட்டு மெய்ப்பிக்கப்படாமல் விடுதலையடைந்த தொழிற்றலைவனுல் நேரும் துன்பத்தினின்றும் காப்பாற்றத் தக்கவனல்லன் என்பது கருத்து.

95 விடுவித்துக் கொள்ளுதல் வழக்குத் தொடர்பினின்றும் விடுதலை எய்தல்; மேற்கொண்ட வழக்கை மெய்ப்பிக்க வில்லையானுல் வழக்கு முடி வும் விடுதலையும் அறிவிப்போன் அடையமாட்டான் என்பது கருத்து.

96 வேறுபடுத்தப்படுதல், கைக்கூலி பெறுதல் முதலியவற்ருல் ஆம் என்பது.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

ஒன்பதாம் பிரகரணம்—[1]தலைமை வினையாளர் தகைமையாராய்தல்

முப்பதாம் அத்தியாயம்

[2]அமைச்சர்க்குரிய குணங்கள் நிறைந்த தொழிற்றலைவர் [3]எல்லோரும் அவரவர் ஆற்றற்கேற்பக் காரியங்களில் நியமிக்கத்தக்கவராவர். இவர்களுடைய காரியங்களிலும் [4]ஆராய்ச்சி செய்தல் வேண்டும். என்னை? மக்களுடைய மனம் நிலையற்றதாதலின் காரியங்களில் நியமிக்கப்பட்ட மக்கள் [5]குதிரையை ஒத்தவர்களாய்க் குணவேற்றுமையை அடைவர்.

30-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வினைவலாரை ஆராய்தல் முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டது. அவருக்கு மேலாக நியமனம் பெற்ற தலைமை வினையாளர் இயல்பை ஆராய்தல் இதன்கட் கூறப்படுதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரண வியைபு புலனும்.

[2] அமைச்சர்க்குரிய குணங்கள் முதலதிகரணம் ஐந்தாம் பிரகரணத்திற் கூறப்பட்ட, நாட்டிற் பிறத்தல் நற்குடிப் பிறப்பு முதலியனவாம். இக்குணநிறைவு வேண்டும் என்றமையால் பொருளுபதையால் ஆராய்ந்த தூய்மை மாத்திரம் போதியதன்று என்பது புலப்படுக்கப்பட்டவாறும்.

[3] எல்லோரும் என்றமையால் தலைமை வினையாளரும் கொள்ளப்படுவர். அவரவர் ஆற்றற்கேற்ப நியமிக்க வேண்டும். இக்கருத்தை,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (517)

என்னும் திருக்குறளும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரைக் குறிப்பும் தெளிவிப்பனவாம்.

[4] ஆராய்ச்சி குற்ற நற்றங்களைப் பற்றியது.

"எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் பலர்." (குறள் 514)

என்பது வள்ளுவர் வாய்மொழியாகலின், ஆராய்ச்சி செய்தல் இன்றியமையாததொன்றே.

[5] குதிரை தேரிற் பூட்டுதற்கு முன்னர் நற்குணமுடையது போலக் காணப்பட்டுப் பூட்டிய பின்னர் குணவேற்றுமை எய்தல் போல மக்களும் காரியத்தில் தலைப்படுதற்கு முன்னர் நற்குண முடையராகக்கர்ணப்பட்டுத் தலைப்பட்ட பின்னர்க் குணவேற்றுமை அடைவர் என்பது கருத்து.

ஆதலின் அரசன் இத்தலைமை வினையாளரைக் குறித்துச் [6]செய்பவன் [7]கருவி இடம் [8]காலம் காரியம் [9]கூலி [10]ஊதியம் என்னும் [11]இவற்றை அறிந்துகொள்ளல் வேண்டும். அவ்வினையாளர் [12]சங்கேதக்கூட்டமும் தம்முள் முரண்பாடும் இல்லாமல் அரசன் கட்டளைப்படிக் காரியங்களைச் செய்யக்கடவர். சங்கேதக்கூட்டம் உடையராயின் காரியத்தின் பயனைக் கவர்ந்துகொள்வர். தம்முள் முரண்பாடுடையராயின் காரியத்திற்குக் கேடுவிளைப்பர். எதிர் பாராத நிலையில் உண்டாம் [13]கேட்டை ஒழிப்பதற்கன்றித் தலைவனுக்கு அறிவித்து உடன்பாடு பெறுமல் ஒருசிறு காரியத்தையும் செய்யலாகாது. இவ்வினையாளர்பால் [14]விதனங்கள் காணப்படுமாயின் அவருக்கு [15]நாட்கூலி அழிவு என்னும் இவற்றின் இருமடங்கு பணம் தண்டமாகும்.

இவ்வினையாளருள் எவன் ஓர் அரசியற் காரியத்தை அரசன் கட்டளையிட்டவாறுதல் அதனின்றும் சிறப்பாகவாதல் செய்து முடிக்கின்றுனே அவன் மேற்பதவியையும் [16]சிறப்பையும் பெறுவான்.

சுருங்கிய வருவாயுடையவன் [17]மிகுதியாகச் செலவிடுவா

---

[6] செய்பவன்—காரியத்திற்கு வினைமுதலாக உள்ளவன்.

[7] கருவி—காரியத்தை முடித்தற்கு வேண்டிய துணைக் கருவிகள்.

[8] காலம்—காரியத்தைத் தொடங்கி முடித்தற்கு ஏற்றது.

[9] கூலி—பணி செய்வோர்க்குக் கொடுக்கப்படும் வேதனம்.

[10] ஊதியம்—மேற்கொண்ட காரியத்தால் விளையும் பயன்.

[11] இவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து விளையும் பயன் மிகுதியாகக் காணப்படுமாயின் குறித்த காரியத்தைத் தொடங்கலாமென்று அறிய வேண்டும் என்பது கருத்து.

[12] சங்கேதக் கூட்டம்—ஒரு காரியத்தைத் தடைப் படுத்தற்குக் குறிக் கொண்டு பலர் ஒருங்கு கூடும் கூட்டம்.

[13] கேடு—நீர் நெருப்பு முதலியவற்றுல் உண்டாகும் தீங்கு.

[14] விதனங்கள்—கட்காமம் முதலியன.

[15] கட்காமம் நுகர்ந்த நாளின் கூலியையும் அந்நுகர்ச்சியால் காரியத்திற்கு நேர்ந்த அழிவின் அளவினையும் அறிந்து அவற்றின் இருமடங்கு பணம் தண்டம் விதிக்கவேண்டும் என்பது கருத்து.

[16] சிறப்பு—பட்டம் பரிசு முதலியன.

[17] மிகுதியாகச் செலவிடுதல்—பெருநுகர்ச்சிப் பொருட்டு.

ணுயின் [18]பொருளைக் கவர்ந்துகொள்ளுவான் என்பதும், இதற்கு [19]மாருக நடப்பவனும் வரவுக்குத்தக்க செலவுடையவனும் பொருளைக் கவர்ந்துகொள்ளமாட்டானென்பதும் சில ஆசிரியர் கொள்கையாகும். ஒற்றர் [20]முகமாகவே [21]அறிந்துகொள்ள வேண்டும் என்பது கௌடலியர் கொள்கையாம்.

பொருள் [22]வருவாயைக் குறைக்கின்றவன் அரசனது பொருளைக் கவர்பவனுவான். அவன் அறியாமை [23]முதலியவற்றுல் குறைப்பானுயின் அங்ஙனம் குறையும் பொருளுக்கு இரு மடங்கு [24]முதலியவாக அவனை இறுக்கும்படி செய்தல் வேண்டும்.

பொருள் வருவாயை [25]அளவின்மிகப் பெருக்குகின்றவன் குடிமக்களுக்குக் கேடுவிளைவிப்பவனுவான். [26]அப்பொருளை அவன் அரசனிடம் சேர்ப்பிப்பானுயின் [27]சிறு குற்றத்தில் வைத்துத்

---

[18] பொருள்—ஈண்டு அரசனுடையதும் குடிமக்களுடையதுமாம்.

[19] மாருக நடத்தல்—மிகுதியான வருவாயும் சுருங்கிய செலவும் உடையனுதல்.

[20] முகமாகவே என்புழி ஏகாரம் தேற்றப் பொருட்டு. சுருங்கிய வருவாயுடையவனும் பெருங்குடும்பமுடையனுயின் கடன் கொண்டு பெருஞ் செலவு செய்யக் காண்டலானும் அரசனதும் குடிகளுடையதுமாகிய பொருளைக் கவர்ந்து கொள்ளுதலால் மிகுந்த வருவாயுடையவனும், இயற்கையிலுள்ள உலோப குணத்தால் சுருக்கமாகச் செலவிடக் காண்டலானும் பெருஞ் செலவு சிறு செலவுகள் கரவிற் கவர்ந்து கொள்ளுதலை யறிதற்குக் காரணமாகா வென்பது கருத்து.

[21] அறிந்து கோடல்—ஒற்றர் மூவர் தனித்தனியே அறிந்து வந்து கூறும் சொற்கள் பொருள் ஒற்றுமையுடையனவாகக் காணப்படின் நம்பிக்கை கோடல்.

[22] பொருள் வருவாய்—பொருள் வரும் நெறி.

[23] முதலிய என்றதனுல் மடிமை அச்சம் மயக்கம் காமம் வெகுளி செருக்கு உலோபம் என்னும் இவற்றையும் கொள்ளல்வேண்டும்.

[24] மும்மடங்கு முதலியவாக 28-ம் அத்தியாயத்திற் கூறப்பட்டபடி தண்டமாம் என்பது கருத்து.

[25] அளவு—இத்துணை என்று செய்த வரையறை.

[26] அப்பொருளை—வரையறை கடந்து வாங்கிய பொருளை.

[27] சிறுகுற்றத்தில் வைத்து—அவன் சிறுகுற்றம் செய்தானுகக் கருதி.

[28]தடைப்படுத்தற் குரியனுவான். குற்றம் [29]பெரிதாயின் அதற்குத் தகத் தண்டிக்கத் தக்கவனுவான்.

செலவிற்கென வரையறுக்கப்பட்ட பொருளே வரவிற் சேர்ப்பவன் தொழிலாளர்க்கும் தொழில்களுக்கும் [30]கேடுவிளேவிப்பவனுவான். தொழில் தடைப்பட்ட நாள்களில் அத்தொழிலால் விளேயக்கடவ பயனேயும், அத்தொழில் நிமித்தம் பணியாளர் பெறக்கடவ கூலியையும் அழிவுசெய்ததாக வைத்துக் குற்றத்திற்குத்[31] தக அவன் தண்டிக்கத்தக்கவனுவான்.

[32]ஆதலின் ஒரு தொழிலில் நியமனம்பெற்ற தொழிற்றலேவன் அத்தொழிலின் இயல்பையும் அதனுல் நேரும் வரவு செலவுகளேயும் வகுத்தும் தொகுத்தும் அரசனுக்கு அறிவிக்கக் கடவன்.

முதலழிப்போன் அற்றைப் பிழைப்புடையோன் கடும்பற்றுள்ளமுடையோன் என்னும் இவர்களேத் [33]தடைப்படுத்தல் வேண்டும். தந்தை பாட்டன் முதலியோர் ஈட்டிவைத்த பொருளே முறைதவறிச் செலவிட்டு அழிப்பவன் முதலழிப்போன் ஆவான். நாடோறும் கிடைக்கும் பொருளே அவ்வப்பொழுதே செலவிட்டழிப்பவன் அற்றைப் பிழைப்புடையோன் ஆவான். தானுந் துன்புற்றுத் தன் பணியாளரையும் துன்புறுத்திப் பொருளே

---

28 இங்ஙனம் குடிமக்களிடத்தினின்றும் வரையறை கடந்து வாங்கலாகாதென்று தடைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

29 பெரிது—இருமடங்கு மும்மடங்கு மிகுதியாக இறைகோடலும் தான் கவர்ந்து கோடலுமாம். இங்ஙனம் கோடலால் குடிமக்களுக்குத் துன்பம் உண்டாம் என்பதும், அது காரணமாக அரசனது கருவூல வளர்ச்சிக்குக் கேடுவிளேயும் என்பதும் கருத்து.

30 குறிப்பிட்ட தொழில் நடைபெறச் செய்யாமையால் கேடுவிளேப்பவனுவான் என்பது கருத்து.

31 இழந்த தொழிலால் விளேயும் பயனளவையும் கூலியளவையும் கணக்கிட்டு அத்துணேத் தண்டம் விதித்தல் வேண்டும் என்பது கருத்து.

32 ஆதலின்—பொருள் வருவாய் பற்றிய குற்றத்திற்குத் தண்டம் விதிக்கப்பட்டமையால்.

33 தடைப்படுத்தல்—முறையே முதற்பொருளே அழித்துவிடாமலும், நாடோறும் ஈட்டிய பொருளே அவ்வப்பொழுதே செலவிட்டழியாமலும், தனக்கும் பணியாளர்க்கும் துன்பம் விளேயும்படி பொருளே வளர்க்க முயலாமலும் தடைப்படுத்திக் காத்தல்வேண்டும் என்பது கருத்து.

வளர்ப்பவன் [34]கடும்பற்றுள்ளமுடையோன் ஆவான். [35]இவர் சுற்றமுடையோராயிருப்பின் இவர் பொருள் அரசனாற் [36]கொள்ளற் பாலன அல்ல. சுற்றமில்வழி முழுதும் [37]கொள்ளற்பாலனவாம்.

பெரும் பொருளுடையவனும் கடும்பற்றுள்ளமுடையவனு மாகிய அரசியல் வினைஞன் தன் பொருளைத் தன்னில்லத்திற் சேமித்து வைத்திருப்பினும் தன்னாட்டு நகரத்து மக்கள்பால் கொடுத்துவைத்திருப்பினும் பகைவர் நாட்டிற் கொடுக்கல் வாங்கல் செய்துகொண்டிருப்பினும் அவனுடைய சூழ்ச்சித் துணைவர் நண்பர் பணியாளர் உறவினர் என்னும் இவர்களது இயல்பையும், பொருளின் வரவு செலவையும் சத்திரி என்னும் ஒற்றன் [38]அறிந்துகொள்ளல் வேண்டும்.

உலோபியாகிய அவ்வரசியல் வினைஞனுடைய பொருளை எவன் பகைவன் நாட்டிற் கொடுக்கல் வாங்கல் செய்கின்றானோ அவனை [39]நெருங்கிய தொடர்புடையனாகக்கொண்டு அவன் உட்கருத்தை ஒற்றன் அறிந்துகொள்ளல் வேண்டும். உட்கருத்தை நன்றாக [40]அறிந்துகொண்டபின்னர்ப் பகைவனது கட்டளை யோலையைப் [41]படைத்துக்கொண்டு அதனால் அவ்வரசியல் வினைஞ

[34] கடும்பற்றுள்ளம்—உலோபம்.

[35] இவர்—இம்மூவரும்

[36] சுற்றத்தார்க்கு வெறுப்பு விளையாவண்ணம் பொருளைக் கவர்ந்து கொள்ளாமல் அவரைப் பதவியினின்றும் விலக்கவேண்டும் என்பது கருத்து.

[37] பொருளைக் கொள்ளுதலோடு பதவியினின்றும் விலக்குதல் வேண்டும் என்பதாம்.

[38] ஓரரசியல் வினைஞன் உலோப குணமுடையனாய்ப் பொருளை மிகுதியாக ஈட்டுதலினும், அதனை வளர்ப்பதினும் முயற்சியுடையனாகக் காணப்படின் அவன் கைக்கூலி முதலியன பெறுதல், பகைவர் சூழ்ச்சிக்கு வயப்படுதல்கூடும் என்னும் ஐயம் காரணமாக ஒற்றர்களைக்கொண்டு அரசன் ஒற்றியறிதல் வேண்டும் என்பது கருத்து.

[39] நெருங்கிய தொடர்பு—நண்பனாதல் அல்லது பணியாளனாதல்.

[40] அறிந்துகொள்ளுதற்குக் கருத்தா அரசனாவான்.

[41] படைத்துக்கொள்ளலாவது — "நின்னால் வரவிடுத்த பொருளைப் பெற்றுக்கொண்டேன். எஞ்சியபொருளையும் விரைவில் அனுப்புக" என்று பகையரசன் இவ்வரசியல் வினைஞனுக்கு எழுதியதாகவும், அவ்வோலையைப் பகைவன் நாட்டிலிருந்து தூதுவன் ஒருவன் கொண்டுவந்ததாகவும் அஃது எல்லை காவலனாற் கைப்பற்றப்பட்டு அரசனிடம் சேர்ப்பிக்கப்பட்டதாகவும் கற்பித்துக்கொள்ளலாம்.

னுக்குக் கொலைத்தண்டம் விதித்தல்வேண்டும்.

[42]ஆதலின் அரசியற் றொழிற்றலைவர்கள் கணிதரையும் எழுத்தாளரையும் [43]வண்ணக்கரையும் இருப்புப் பொருட் பொறுப்பாளரையும் மேலதிகாரிகளையும் [44]துணைக்கொண்டு அரசனுடைய [45]காரியங்களைச் செய்யக்கடவர்.

[46]யானைவீரரும் குதிரைவீரரும் தேர்வீரரும் (ஈண்டு) மேலதிகாரிகள் ஆவர். அவர்களுடைய [47]தூய்மையும் [48]திறமையும் வாய்ந்த மாணவர்கள் கணிதர் [49]முதலியோர் இயல்பை அறிதற்குரிய ஒற்றராவர்.

[50]என்றும் நிலையுதலில்லாத பல தலைமையதிகாரிகளை உடையதாகத் தொழில் நிலையங்களை அமைத்தல்வேண்டும்.

சுலோகங்கள்

(1) நாவின்கண் உள்ளது தேனாயினும் நஞ்சாயினும் [51]உண்ணுமல் இருக்கவியலாது. அதுபோல அரசனது பொருள்

---

42 ஆதலின்—அரசனது பொருளைக் கவர்ந்துகொள்ளுதற்குக் கொடுந்தண்டம் விதிக்கப்பட்டிருத்தலால்.

43 வண்ணக்கர்—நாணய பரிசோதகர்.

44 துணைக்கொண்டு—சான்றாகக்கொண்டு.

45 காரியங்கள்—ஈண்டுப் பொருளைப்பற்றியன.

46 மூப்புடைமை காரணமாகப் போர்ச்செயல் ஒழிந்திருக்கும் வீரர்களே ஈண்டு மேலதிகாரிகளாவர் என்பது கருத்து.

47 தூய்மை—தம் கடமையிற்றவறாமை.

48 திறமை—தலைவர் பணித்த காரியத்தை முடிக்கும் ஆற்றல்.

49 முதலியோர் என்றதனுல் எழுத்தாளர் முதலியோரையும் கொள்ளல்வேண்டும்.

50 தலைமையதிகாரிகள் பலராக இருப்பின் ஒருவர் ஒருவரை ஐயுற்றுப் பொருள் கவரத்துணியார் என்பது கருதியும், ஒரு தொழில் நிலையத்தில் ஓரதிகாரி நெடுங்காலம் நிலைத்திருப்பின் ஆண்டுள்ளாரை எளிதின் நட்புக்கொண்டு தன் குற்றத்தை மறைத்துக்கொள்ளல் கூடும் என்பது குறித்தும், குடிமக்களும் பிற்காலத்தில் அவன் தமக்குத் தீங்கு விளைக்கக்கூடும் என்னும் அச்சத்தால் அவன் குற்றத்தை வெளிப்படுத்தத் துணியார் என்பது கருதியும் இவ்வாறு கூறப்பட்டது.

51 ஒருவன் தன் நாவிலுள்ள பொருளை உண்ணுதற்கு விரும்பாமலிருப்பினும் நாவிலிருப்பதால் முயற்சியின்றியே வயிற்றினுட் புகுந்துவிடும் என்பது கருத்து.

[52]சிறிதாயினும் பொருள்வினைஞனற் [53]கவர்ந்துகொள்ளாமலிருக்க வியலாது.

(2) நீரினுள்ளே வாழ்கின்ற மீன்கள் உண்ட நீரை அறிய இயலாதது போல, தொழினிலையங்களில் நியமிக்கப்பட்ட வினைஞர் கவர்ந்த பொருளை அறிய இயலாது.

(3) விண்ணிற் செல்லும் பறவைகளின் [54]செலவை அறியினும் கரவுள்ளமுடைய வினைஞரது [55]செலவை அறிய இயலாது.

(4) பொருள்கவர்ந்த வினைஞரை மேலும் கவர்ந்து கொள்ளாவாறும் கவர்ந்த பொருளைத் திரும்பத் தருமாறும் வற்புறுத்திப் பெற்றுத் தொழினிலையங்களில் [56]மாற்றி அமைத்தல் வேண்டும்.

(5) அரசனது பொருளைக் கவர்ந்துகொள்ளாமல் முறைப்படி வளர்ப்போரும், அரசனிடத்து அன்பும் அவன் நலத்திற் பற்றும் உடையோரும் ஆகிய தக்காரை என்றும் தொழிற் றலைவராக நியமனம் செய்தல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் ஒன்பதாம் பிரகரணம்
"தலைமை வினையாளர் தகைமை ஆராய்தல்" என்னும்
முப்பதாம் அத்தியாயம்—முற்றிற்று.

---

[52] கவர்ந்த பொருள் சிறிதாயின் கேடு விளைவியாமையால் தேனும், கவர்ந்த பொருள் பெரிதாயின் கேடு விளைவித்தலால் நஞ்சும் உவமமாயின.

[53] என்றும் பொருளோடு தொடர்புடைமையால் கவர்ந்துகொள்ளுதலில் நோக்கம் நிகழும் என்பது கருத்து.

[54] செலவு—ஈண்டுச் செல்லும் நெறியை உணர்த்தும். "தேன் சென்ற நெறியும் தெண்ணீர்ச் சிறு திரைப் போர்வை போர்த்து மீன் சென்ற நெறியும் போல விழித்திமைப்பவர்க்குத் தோன்று" என்ற சிந்தாமணி அடிகளை ஒப்பு நோக்குக. (பதுமையார்-225)

[55] செலவு—கரவொழுக்கம்.

[56] மாற்றியமைத்தல்—உயர்ந்த பதவியினின்றும் இறக்கித் தாழ்ந்த பதவியில் நியமித்தல்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பத்தாம் பிரகரணம்—[1]முடங்கல் விதிமுறை

முப்பத்தோராம் அத்தியாயம்

[2]முடங்கலில் எழுதப்படும் பொருளைக் கட்டளை யென்று [3]கூறுவர். [4]சந்தி விக்கிரகங்களுக்கு முடங்கல் காரணமாகலின் அரசர் அதனையே [5]சிறப்புடையதாகக் கொள்ளும் இயல்பின ராவர்.

ஆதலின் [6]எழுத்தாளன் அமைச்சர்க்குரிய [7]குணங்களையும், [8]பலவகைப்பட்ட உலகியலறிவையும் சொற்களை விரைவிலிணைக்

31-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முடங்கல்—அரசன் வேற்று நாட்டு மன்னர்க்கும் தன் வினைஞர்க்கும் அறிவிக்கவேண்டிய செய்திகள் எழுதப்படும் ஓலை முதலியன; தலைமை வினையாளர் தகைமை ஆராய்தற்குரிய கருவிகளுள் முடங்கலும் ஒன்றாத லின் அதன்பின் இது கூறப்பட்டது; இதனாற் பிரகரண வியைபு புலனாத லறிக.

[2] வாய்மொழியாகக் கூறிவிடுக்கும் செய்தியும் கட்டளையாகுமாயினும் சிறந்ததாக மதிக்கப்படாது என்பது கருத்து.

[3] ஆன்றோர் கூறுவர் என்க.

[4] சந்தி விக்கிரகம் என்பன ஈண்டு அறுவகைக் குணத்தையும் உணர்த் தும்.

[5] வாய்மொழி ஓலை என்னும் இரண்டனுள் வாய்மொழி, சொல் பவன் தடுமாற்றத்தாலும் சோர்வினாலும் ஒரோவழிப் பிறழ்ச்சி யெய்த வும் கூடும். ஓலை அங்ஙனமின்றித் தெரிவிக்கவேண்டிய பொருளைப் பிறழாது தெளிவிக்கும் இயல்பினதாகலின் வாய்மொழியினும் ஓலை சிறப்புடைய தாகக் கருதப்படும் என்பது.

[6] எழுத்தாளன்—ஓலை யெழுதுவோன்.

[7] குணங்கள்—9-ம் அத்தியாயத்திற் கூறப்பட்ட நற்குடிப்பிறப்பு முதலிய 25ம் ஆம்.

[8] வருணம் ஆச்சிரமம் மதம் முதலியவற்றின் பலதிறப்பட்ட வழக்க வொழுக்கங்கள்.

கும் ஆற்றலையும் [9]அழகாக எழுதுந் திறனையும் முடங்கலை [10]எளி தின் வாசித்தறியும் வன்மையையும் உடையனுதல் வேண்டும்.

அவ்வெழுத்தாளன் கலக்கமற்ற மனமுடையனாய் அரசன் சொல்லிய பொருளைக் கேட்டுத் [11]துணிந்து [12]அரசனுக்காயின், அவனுடைய [13]நாடு செல்வம் மரபு பெயர் என்னுமிவற்றைச் சிறப்பித்தும், [14]அமைச்சர் முதலியோர்க்காயின் அவர்தம் [15]நாட்டையும் பெயரையும் சிறப்பித்தும் முடங்கல் எழுதல் வேண்டும்.

சுலோகம்

சாதி [16]குலம் [17]பதவி [18]ஆண்டு கல்வி தொழில் செல்வம் ஒழுக்கம் [19]இடம் காலம் மணவியையபு என்னும் இப்பதினொன்றை

---

[9] அழகு—ஈண்டு எழுத்துக்களின் தனிநிலையினும் சேர்க்கைநிலையினும் காணப்படும் வனப்பு.

[10] எளிதின் வாசித்தல்—நல்ல குரலில் தெளிவாகவும் சொன்முடிபு முதலியவைகளைப் புலப்படுத்தியும் படித்தல். இனி மறைபொருளுடையனவும் குறிப்பாக வரையப்பட்டனவும் எழுத்துக்கள் விடப்பட்டனவும் சொல் தொடர்மொழி இவற்றைக் குறிக்கும் கோடுகளின் வேறுபாட்டையுடையனவும் ஆகிய முடங்கல்களை எளிதில் ஆராய்ந்தறிதலுமாம்.

[11] துணிதல்—முன் பின் முறைவைப்பையும் பிறரெழுதிய முடங்கலுக்கு இயைபு இயைபின்மைகளையும் ஆராய்ந்து துணிதல்.

[12] அரசனுக்காயின்—அரசனுக் கெழுதுங்கால்.

[13] நாட்டைச் சிறப்பித்தலாவது பாண்டி நாட்டை அணி செய்பவன் எனவும், செல்வத்தைச் சிறப்பித்தலாவது பாண்டி நாட்டுத் தலைமையும் பிறரால் வெல்லமுடியாத படைப் பெருக்கத்தால் பகைவெல்லும் திறலையுமுடையான் எனவும் மரபைச் சிறப்பித்தலாவது திங்கள் மரபிற்கு அணிகலம் எனவும் பெயரைச் சிறப்பித்தலாவது அரசர்க்கரசாம் உயர்திருநின்றசீர் நெடுமாறன் எனவும் எழுதவேண்டும் என்பது கருத்து.

[14] அமைச்சர்க்காயின்—அமைச்சர்க் கெழுதுங்கால்.

[15] நாட்டைச் சிறப்பித்தலாவது பாண்டி நாட்டை அணி செய் அமைச்சர் திலகம் எனவும், பெயரைச் சிறப்பித்தலாவது திருமிகு. குலச்சிறையார் எனவும் எழுதல் வேண்டும் என்பது கருத்து.

[16] குலம்—குடிப்பிறப்பு.

[17] பதவி—சந்தி விக்கிரகம் முதலிய செயல்களிற்றலைப்படும் அதிகாரம்.

[18] ஆண்டு—வயது.

[19] இடம்—வாழுமூர்.

யும் நன்கு தெரிந்துகொண்டு செயத்தகு காரியத்தில் மக்கள் [20]தகுதிக் கேற்றவாறு முடங்கல் வரைதல் வேண்டும்.

[21]பொருள்வைப்புமுறை இயைபு நிறைவு இனிமை உயர்ச்சி விளக்கம் என்னும் இவ்வாறும் முடங்கலுக்குரிய குணங்களாம். இவற்றுள் பொருள்வைப்புமுறையாவது—சிறப்புப் பொருளை முன் வைத்துப் பின்னர்த் தகுதி நோக்கி வரிசைப்படுத்தமைத்தல். இயைபாவது—[22]தொடங்கிய பொருளுக்கு முரணுகாமல் முடிவு வரை மேற்பொருளை அமைத்தல்.

நிறைவாவது—எழுத்துச் சொற் பொருள்களின் [23]குறைவு மிகையில்லாமல் [24]ஏதுவோடும் நூல் வழக்கினும் உலக வழக்கினும் உள்ள [25]எடுத்துக்காட்டுகளோடும் [26]சொற்சோர்வின்றிப் பொருளைத் தெளிவுறுத்து நிற்றல். இனிமையாவது—எளிதி னறிதற்குரிய பொருளையுடைய அழகிய சொற்களுடைமை. உயர்ச்சியாவது—[27]இழிசினர் வழக்கின்மை. விளக்கமாவது—[28]எல்லோரும் அறிந்த சொற்களுடைமை.

---

20 தகுதியாவது—தலை யிடை கடையென மக்களை முத்திறப்படுத்துக் கொண்டு அவர்க்கு முறையே விண்ணப்பம், அறிவிப்பு, கட்டளை என்னும் சொற்களால் முடங்கல் எழுதல் வேண்டும் என்பது கருத்து;

"செல்வம் உறவே ஆண்டே தொழிலொடு
கல்வியிவ் வைந்தும் முறை சிறந்தனவே"

என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

21 பொருள்வைப்புமுறை முதலிய ஆறும் பின் வருமாறுணர்க.

22 முடங்கலில் வரையப்படும் பொருள்கள் முன்னுக்குப்பின் மாறுபடாமல் கடைபோக எழுதல் வேண்டும் என்பது கருத்து.

23 நிலம் என்பதைக் 'கு' என்றெழுதுதல் எழுத்துக் குறைவு; அதனை 'நிலவலயம்' என்றெழுதுதல் எழுத்துமிகை. கலிங்கநாட்டு யானையை 'யானை' என்று கூறல் சொற்குறை; வேற்றியானையை, கலிங்க நாட்டி யானை என்று கூறல் சொன்மிகை. 'வந்தன' என்பதை 'வந்தது' என்றெழுதுதல் பொருட்குறை. 'வந்தது' என்பதை 'வந்தன' என்றெழுதுதல் பொருண்மிகை.

24 ஏது—பொருளை வலியுறுத்துதற்குரிய காரணம்.

25 எடுத்துக்காட்டு—மேற்கோள்.

26 சொற்சோர்வு—கருதிய பொருளை விளக்குதற்குரிய ஆற்றலின்மை.

27 இழிசினர்—கீழ்மக்கள்.

28 செஞ்சொற்கள் என்பது கருத்து.

அகரம் முதலிய எழுத்துக்கள் [29]அறுபத்து மூன்ருகும். எழுத்துத் தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாகும். அது, பெயர், ஆக்கியாதம், உபசருக்கம், நிபாதம் என நான்கு வகைப் படும். அவற்றுள் [30]பொருள் குணம் சாதி இவற்றைக் குறிப்பது பெயராகும். [31]ஆண் பெண் அலி என்னும் பால் வேறுபாடின்றித் தொழில் பற்றி நிகழ்வது ஆக்கியாதம் ஆகும். [32]வினையின் சிறப்பை விளக்கும் 'பிர' முதலியன உபசருக்கமாகும். 'ச' முதலிய அவ்வியங்கள் [33]நிபாதமாகும்.

[34]பொருண் முடிபுடைய சொற்கூட்டம் தொடர் மொழி ஆகும். [35]நிலைமொழியுடன் வருமொழி மூன்றுக்கு மேற்படா

---

[29] வடமொழியில் குறில் நெடில் அளபெடை என்னும் விகற்பத்தால் அ, இ, உ, ऋ என்னும் நான்கும் உறழப் பன்னிரண்டும், நெடிலின்மையால் ஌ இரண்டும், குறிலின்மையால் ஏ, ஓ, ஐ, ஔ என்னும் நான்கும் உறழ எட்டும் ககரமுதல் மகரமிறுதியாகவுள்ள வருக்க வெழுத்துக்கள் இருபத்தைந்தும், ய, ர, ல, வ நான்கும், ஶ, ஷ, ஸ, ஹ நான்கும், வருக்கத்தின் முதல் நான்கெழுத்துக்களோடு வருக்க ஐந்தாம் எழுத்துப் புணருங்கால் இடையிற்றோன்றும் யம எழுத்து நான்கும், அநுசுவாரம் ஒன்றும் விசர்க்கம் ஒன்றும், ᳵக, ᳶப (ஜிஹ்வாமூலியம், உபத்மானீயம்) இரண்டும் ஆக அறுபத்து மூன்றுதல் காண்க.

[30] பெயர்ச்சொற்களும் உரிச்சொற்களும் பெயரென்பதனுள் அடங்கும்.

[31] வடமொழியில் வினைமுற்று முதலியன பால்வேற்றுமையை உணர்த்தா. பவதி என்பது இருக்கின்றான், இருக்கின்றாள், இருக்கின்றது என முப்பாற்கும் பொதுவாகும். ஆகவே எழுவாயோடு இயைந்தே பொருள் தருவதாகும். ஆதலின் ஆக்கியாதம் என்பது வினைச்சொற்களை உணர்த்துவதாகும்.

[32] வினைச்சொல்லைப்பற்றி அதன் வேறுபாடுகளை விளக்கும் பிர அநு முதலியன உபசர்க்கங்களாகும். இவையும் பின்வரும் உம்மைப் பொருளுணர்த்தும் சகரம் முதலியனவும் இடைச்சொற்களின்பாற் படுமென்க.

[33] இடைச்சொற்களின் ஒரு பகுதி ஈண்டு நிபாதம் என்று கூறப்படும்.

[34] இரண்டும் பலவுமாகிய சொற்கள் பொருள் முடிபுடையனவாகப் புணர்ந்து வருவது தொடர்மொழியாகும் என்பது கருத்து.

[35] முடங்கலில் எழுதப்படும் தொகைநிலைத் தொடரில் வருமொழி மூன்றுக்கு மேற்படின் இனிமை தெளிவு முதலிய குணங்கள் கெடும் என்பது கருத்து.

மல், [36]வருமொழிப் பொருளுக்கியையத் [37]தொகை நிலைத் தொடர் இருத்தல் வேண்டும். முடங்கலின் முடிபை யுணர்த்தற்கு [38]இதி என்றுதல், [39]இவன்வாய்மொழி என்றுதல் குறிப்பிடல்வேண்டும்.

சுலோகங்கள்

(1—2) [40]பழித்தல் புகழ்தல் வினுதல் விடையிறுத்தல் வேண்டல் மறுத்தல் கழறுதல் தடுத்தல் ஏவுதல் நயத்தல் அருளுதல் உரப்புதல் உடன் படுத்தல் என்னும் இப்பதின் மூன்றும் முடங்கலில் வரைதற்குரிய பொருள்களாம். இவற்றுள், பழித்தலாவது—ஒருவனுடைய [41]குலம் உடல் தொழிலிவற்றைப் பற்றிக் குற்றங் கூறல். புகழ்தலாவது—[42]இவற்றைப் பாராட்டிப் பேசுதல். வினுதலாவது—[43]இஃதென்னை என்றல். விடையிறுத்தலாவது—[44]இஃதிங்ஙனம் என்றல். [45]வேண்டலாவது—கொடுவென இரத்தல். மறுத்தலாவது—கொடேனென்றல். கழறுதலாவது—நினக்

---

[36] வருமொழிப் பொருளுக்கியைதல்—நிலைமொழியும் வருமொழியும் பொருட் பிறழ்ச்சியின்றிப் புணர்ந்து நிற்றல்.

[37] தொகைநிலைத் தொடர் — வேற்றுமையுருபு முதலியன தொகப் புணரும் சொற்கூட்டம்.

[38] ' இதி ' என்பது வடமொழியில் முடிபை உணர்த்தும் சொல்லாகும்.

[39] முடங்கலில் எழுதப்படும் பொருள் முற்றுப்பெறின் " இதி " எனவும், அப்பொருள் முடங்கலினடங்காமல் எஞ்சியவழி அவ்வெஞ்சிய பொருளை முடங்கல் கொணரும் தூதுவன் வாய்மொழியாகக் கேட்டல் வேண்டும் என்னும் குறிப்புத்தோன்ற " இவன் வாய்மொழி " எனவும் முடங்கலினிறுதியில் எழுதல்வேண்டும் என்பது கருத்து.

[40] இனி முடங்கலில் வரைதற்குரிய பொருள்களைப் பெயரளவிற் குறிப்பிடுகின்றூர்.

[41] இயல்பாகவே இழிந்த குடியெனக் குலத்தையும், தொழுநோயுடையதென உடலையும், பசுக்கொலையெனத் தொழிலையும் இழித்துக் கூறல் என்பது கருத்து.

[42] இவற்றை—குலம் உடல் தொழிலாகிய இவற்றை.

[43] இஃதெவ்வாறு செய்யத்தக்கது என்று செயத்தகு பொருளைப்பற்றி அறியலுறவு வெளிப்படுப்பது என்பது.

[44] இஃதிவ்வாறு செயத்தக்கதென்று வினவப்பட்டவனுல் அறிவுறுக்கப் படுவது.

[45] நட்பாக்கும் நிமித்தம் சிறிது பொருள் படை முதலியன உதவல் வேண்டும் என்று இரத்தல் என்பது கருத்து.

கிது தகவன்றெனை இடித்துக் கூறல். தடுத்தலாவது—[46]இங்ஙனம் செய்யற்க என்றல். ஏவுதலாவது—இதனைச் செய்க என்றல். நயத்தலாவது—[47]யானே நீ ; என் பொருள் நின்னுடையது என்று அன்புகோடல். அருளுதலாவது—[48]உற்றுழி உதவல். உரப்புதலாவது—[49]எதிர் காலத்துக் கேடு விளையுமெனக் குற்றங் கூறி அச்சுறுத்தல். உடன்படுத்தலாவது—[50]காரிய நிறைவேற்றம் [51]வரம்பு மீறல் [52]தமர் முதலியோரைப்பற்றி நிகழும் துன்பம் என்னும் ஏதுக்களால் மூவகைப்படும்.

சுலோகங்கள்

(1) அறிவிப்பு (பிரஞ்ஞாபனம்) ஆணை பரிதானம் பரிகாரம் படைப்பு நிகழ்ச்சியறிவுறுத்தல் மாற்றம் யாண்டுப்செல்வது என [53]மீண்டும் முடங்கல் எண்வகைப்படும்.

(2) [54]இவனால் இங்ஙனம் அறிவிக்கப்பட்டது. அஃது

---

[46] நண்பனொருவன் தகாத காரியத்தில் தலைப்படுங்கால் நட்புரிமை பற்றி அவனைத் தடுத்துரைத்தல் என்பது.

[47] ஒருவன் தனக்கும் நண்பனுக்கும் உள்ள வேறுபாடின்மையை உடலினும் பொருளினும் வைத்துக் காட்டியபடி.

[48] உற்றுழி—பகைவரால் இடுக்கண் நேர்ந்தவிடத்து.

[49] தன்வழி நடவாதவனை விரைவிற் கொலை சிறை முதலிய துன்பங்களால் ஒறுப்பல் என எதிர்கால விளைவுகூறி அச்சுறுத்தல் என்பது.

[50] இன்றியமையாது முடிக்கத்தக்க காரியத்தில் தலையிடாமலிருப்பவனை நண்பனொருவன் வற்புறுத்தித் தலையிடச் செய்தல் என்பது.

[51] அறத்தின் எல்லையைக்கடந்து வெகுளி முதலியன மேற்கொள்ளுவோனைச் சினந்தணித்து நன்னிலைப்படுத்தல் என்பது.

[52] சுற்றத்தார் நண்பர் வினைவலார் முதலியோரிழப்பில் ஒருவனுக்கு நேரும் துன்பத்தை ஒழித்துச் சாந்தப்படுத்தல் என்பது.

[53] மீண்டும் மற்றொரு வகையாக முடங்கல் எண்வகைப்படும் என இச்சுலோகத்தாற் குறிப்பிடுகின்றார்.

[54] அரசனுடைய ஒற்றர்கள் அமைச்சர் முதலியோரைக் குறித்து அவர்தம் நண்பர் பகைவரியல்புகளை ஆராய்ந்து அரசற்குத் தெரிவித்தல் அறிவிப்பாகும். இதுபற்றி அரசன் எழுதுவிப்பது அறிவிப்பு என்னும் முடங்கலாகும். அது நட்பு பகை முதலியனபற்றிப் பலதிறப்படும் என்ப. "அமைச்சருள் இன்னான் எங்கோ ஓரிடத்தில் புதைபொருளை எடுத்துத் தனதாக்கிக்கொண்டான்" என்று ஒற்றராலறிந்த அரசன் கூற்றாகும் "இவனால் இங்ஙனம்" என்று தொடங்கும் தொடர்மொழி.

உண்மையானுல் அதனைக் கொடுத்தல் வேண்டும் என்று அரசன் கூறுகின்ருன் எனவும் [55]அரசன் பக்கலில் மங்கல காரியத்தைக் [56]கூறுகின்ருன் எனவும் இவ்விதம் பலதிறமாக எழுதுதல் அறிவிப்பென்னும் (பிரஞ்ஞாபனம் என்னும்) முடங்கலாகும்.

(3) [57]பெரும்பாலும் பணியாளரை முன்னிட்டு அளியும் தெறலும் குறித்து அரசன் செய்யும் கட்டளையை உடையது ஆணை என்னும் முடங்கலாகும்.

(4) தகுதிக்குத் தக்க ஏற்றத் தாழ்வுகளை யுடையது [58]பரிதானம் என்னும் முடங்கலாகும். அஃது [59]இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டையும் பற்றி எழுதப்படுவதால் இருவகைப்படும்.

(5) [60]குறிப்பிட்ட சாதியினர்க்கும் நாடு நகரம் கிராமங்களிலுள்ள மக்களுக்கும் அரசனது கட்டளைப்படி அவன் அருளைத் தெரிவிப்பது பரிகாரம் என்னும் முடங்கலாகும்.

---

55 அரசன் பக்கல் ஒருவன் வந்து அமைச்சருள் இன்னுன் தங்களுக்கு நலம் பயக்கும் செயல்களைச் செய்கின்ருன் என்று கூறக்கேட்ட அரசன் அவ்வமைச்சனுக்கு எழுதுவிப்பது " அரசன் பக்கல் " என்று தொடங்கும் தொடர்மொழி. இது நட்புப்பற்றியதாகும்.

56 அரசனது கட்டளைப்படி எழுத்தாளனுல் எழுதப்படுதலின் 'கூறுகின்ருன்' எனப் படர்க்கையில்வைத்துக்கூறினுர். இப்பகுதி பகைமை பற்றியதாகும்.

57 பெரும்பாலும் என்றமையால் பொதுமக்களைப்பற்றிய கட்டளையும் ஆணைமுடங்கலாகுமென்பது.

58 தகுதி–தலை இடை கடையினராகிய எழுதப்படுவோரைப் பற்றியது.

59 அரசன் தனக்கு நலம்புரிந்தானொருவனைக் குறித்து, " தாங்கள் என் கட்டளையைச் சிறப்புறச்செய்துமுடித்ததற்கு யான் தரும் பரிசில் சிறியதாக இருப்பினும் அதனை அன்புடன் ஏற்றுக்கொள்வீர்களாக " என்று எழுதுவித்தல் இன்பம்பற்றியதாகும். உறவினர் இழப்பால் வருத்தமுறும் வினைஞரைக் குறித்துச் சிறந்த குணங்களையுடைய அறவோராகிய தங்களுக்கு இத்துன்பம் நேர்தலாகாது. தெய்வத்தால் நேர்ந்ததற்கு யாம் என் செயலாம்! பொறுத்துக்கோடல் அறிஞராகிய நும் கடமையாகும் என்று எழுதுவித்தல் துன்பம்பற்றியதாகும்.

60 இத்துணைக்காலம் வரை இன்ன மரபினரிடமிருந்தும் இன்ன நாடு நகரம் கிராமங்களிலுள்ள மக்களிடமிருந்தும் இறைப்பொருள் கொள்ளலாகாதென்று இறைவிடுதல்செய்தலைக் குறித்து எழுதுவிப்பது பரிகார முடங்கலாம் என்பது கருத்து.

(6) சொல்லினும் செயலினும் பிரமாணம் ஆக்குதல் [61]படைப்புமுடங்கலாகும். அது [62]சொற்பற்றியது [63]செயல் பற்றியது என இருவகைப்படும்.

(7) உண்மையில் பலவிதமாகத் [64]தெய்வத்தாலும் மக்களாலும் உண்டாம் செய்திகளை அறிவிப்பது நிசழ்ச்சியறிவுறுத்தல் என்னும் முடங்கலாகும். அஃது [65]இருவகையாகும்.

(8) பிறர் முடங்கலை [66]உள்ளவாறு படித்துப் பின்னர் அரசனிடம் படித்துக்காட்டி அரசன் சொல்லிய வண்ணம் மறுமொழி எழுதுவது மாற்றம் என்னும் முடங்கலாகும்.

(9) அரசன் வழிச்செல்வார்பொருட்டு [67]உதவியையும் [68]பாதுகாப்பையும் அளிக்குமாறு [69]தலைவர்களுக்கும் [70]வினைஞர்களுக்கும் குறிப்பிட்டு எழுதுவிப்பது யாண்டும் செல்வதென்னும் முடங்கலாகும். அதனை அரசன் தன்னுட்டிலிருந்தும், வேற்று

---

[61] அரசன் தன் வினையாளருள் ஒருவனைக்குறித்து இவன்செயல் என் செயல் எனவும் இவன்சொல் என்சொல்லெனவும் தனக்குப் பிரதிநிதியாகப் படைத்து எழுதுவிப்பது படைப்புமுடங்கலாகும்.

[62] சொற்பற்றியது — சொல்லைப் பிரமாணமாகக் கொள்ளும்படி எழுதுவது.

[63] செயல்பற்றியது — செயலைப் பிரமாணமாகக் கொள்ளும்படி எழுதுவது.

[64] தெய்வத்தால் நிகழ்வன காலம் மழை முதலிய நலங்களும் பெருங்காற்று வெள்ளம் பூகம்பம் முதலிய தீங்குகளுமாம். மக்களால் நிகழ்வன நட்டோர் முதலியோரால் உண்டாம் நலங்களும் பகைவர் கள்வர் முதலியோரால் விளையும் தீங்குகளுமாம்.

[65] இருவகை—தெய்வத்தால் நிகழ்வது பற்றியும் மக்களால் நிகழ்வது பற்றியும் ஆம்.

[66] உள்ளவாறு—எழுதியவன் கருத்துக்கு ஒத்தவாறு.

[67] உண்டி உறையுள் முதலியன.

[68] பாதுகாத்தல்—கள்வர் முதலியோராலும் விலங்கு முதலியவற்றாலும் இடையூறு வாராமற் காத்தல்.

[69] தலைவராவார்—அரண் நாடு எல்லை முதலிய இடங்களிலிருந்து காவல் புரிபவர்.

[70] வினைஞராவார்—இறைப்பொருள் தொகுப்போர் முதலிய அதிகாரிகள்.

நாட்டுச் செலவினும் எக்காலத்திலும் [71]எழுதுவிக்கலாம்.

[72]இன்சொற் கூறல் கொடுத்தல் வேறுபடுத்தல் ஒறுத்தல் என உபாயம் நான்கு வகைப்படும்.

[73]அவற்றுள் இன்சொற்கூறல், குணநலம்பாராட்டல் தொடர் புரைத்தல் உதவியுரைத்தல் வருபயன்கூறல் தன்னை வழங்கல் என ஐந்து வகைப்படும்.

அவற்றுள், குடிப்பிறப்பு உடல் செயல் இயல்பு கல்வி பொருள் என்னும் இவை [74]முதலியவற்றின் [75]சிறப்புக்களைக் கூறல் [76]பாராட்டிக் கூறல் [77]துதி செய்தல் என்னுமிவ் வெல்லாம் குணநலம் பாராட்டலாகும்.

ஒத்த குடிப்பிறப்பு மணவியையு [78]மொழித் தொடர்பு [79]வேள்வித் தொடர்பு [80]முன்னையோர் தொடர்பு உள்ளமொத்தல் நட்புரிமை என்னும்இவற்றை எடுத்துரைத்தல் தொடர்புரைத்தல் ஆகும்.

[81]தானும் பிறனும் ஒருவர்க்கொருவர் செய்து கொள்ளும்

---

71 யாண்டும்செல்வது என்னும் பெயர்க்காரணமும் இதனால் அறியத் தக்கது.

72 சந்திவிக்கிரகங்களை மேற்கோடற்கு உபாயத்தைப்பற்றிய அறிவு எழுத்தாளர்க்கு இன்றியமையாததாகலின் அவ்வுபாயங்களினியல்பை உணர்த்தத் தொடங்குகின்றார்.

73 இன்சொற் கூறலின் வகைகளைக் கூறுகின்றார்.

74 முதலிய என்பதனால் ஆண்டு அழகு முதலியவற்றையும் கொள்ளல் வேண்டும்.

75 குடிப்பிறப்பு முதலியவற்றின் குறைகளைவிட்டுக் குணங்களை எடுத்து மொழிதல் என்பது கருத்து.

76 பாராட்டிக் கூறல்—புகழ்ந்துரைத்தல்.

77 துதிசெய்தல்—இல்லனவற்றையும் சேர்த்துப் புனைந்துரைத்தல்.

78 மொழித் தொடர்பு—ஆசிரியர் மாணவகரியையு.

79 வேள்வித் தொடர்பு—வேள்வி ஆசானும் வேள்வித்தலைவனும் ஆகிய சம்பந்தம்.

80 முன்னையோர்—குலமுதியோர்.

81 தான்-உபாயஞ் செய்வோன். பிறன்-உபாயஞ் செய்யப்படுவோன். இவ்விருதிறத்தாரும் ஒருவருக்கு ஒருவர் முன் செய்துகொண்ட உதவிகளை எடுத்துரைத்தல் உதவியுரைத்தலாகும்.

உதவியைக் கூறுதல் உதவியுரைத்தலாகும். [82]இதனை இங்ஙனம் செய்தால் இப்பயன் நம்மிருவர்க்கும் விளையும் என்று கூறி அவா விளைத்தல் வருபயன் கூறலாகும். யான் நின்னின் வேறல்லன் ஆதலின் என் [83]பொருளை நின்னுடையதாகக் கொண்டு நின் காரியத்திற் பயன்படுத்தலாமென்று கூறுதல் தன்னை வழங்கலாகும். இனிப் பொருள்கொடுத்தல் கொடுத்தல் என்னும் உபாயமாகும்.

[84]ஐயம் விளைத்தலும் [85]வெருட்டுதலும் வேறுபடுத்தலாகும்.

[86]துன்பஞ்செய்தல் பொருள்கோடல் கோறல் இம்மூன்றும் ஒறுத்தலாகும்.

[87]ஒளியின்மை முரண் கூறியதுகூறல் பிழைபடமொழிதல் பிறழ்ச்சி இவ்வைந்தும் முடங்கற் குற்றங்களாம். அவற்றுள் ஒளியின்மையாவது: [88]அழுக்கு முடங்கலும் அழகும் [89]வடிவொப்பும் [90]பதிவும் இல்லாத எழுத்துக்களுடைமையுமாம். முன்னொடு பின் [91]பொருத்தமின்றி யிருத்தல் முரணாகும்.

---

82 இதனை—இக்காரியத்தை.

83 பொருள்—நிலம் பொன் மணி முதலியன.

84 ஐயம் விளைத்தல்—நண்பர் பலருள் ஒருவனுக்கிழைத்த தீங்கைக் கண்டு மற்றொருவன், நம்மையும் இங்ஙனமே துன்புறுத்துவன் என்று வெறுத்தற்கும் பொறாமை கொள்ளுதற்கும் காரணமாகிய ஐயத்தை உண்டாக்குதல்.

85 வெருட்டுதல்—"பணிவில்லாத நின்னைக் கொன்றுவிடுவேன்" என்பதுபோன்ற சொற்களால் அச்சுறுத்தல்.

86 துன்பஞ்செய்தல்—சிறைப்படுத்தல் அடித்தல் முதலியவற்றால் துன்புறுத்தல்.

87 இதுகாறும் முடங்கலுக்குரிய குணங்களைக்கூறி இனி அதன் குற்றங்களைக்கூறத் தொடங்குகின்றார்.

88 அழுக்கு முடங்கலாவது இயற்கையில் அழுக்கேறிய ஓலை. அளவின் மிக்க மைத் தோய்வினால் கருமையேறிய ஓலையுமாம்.

89 வடிவொப்பு—பெரியனவும் சிறியனவுமின்றி உருவொத்தல்.

90 பதிவு—வரைவு நன்கு பதிதல்.

91 பொருத்தமின்றி யிருத்தல் பொருளைப்பற்றியதாகும். "வணங்கிக் கட்டளையிடுகின்றான்" என்றாற்போல. வணங்குதற்குரியவன் கட்டளையிடுதற்குரியன் ஆகாமையின் முரணுதல் அறிக.

முன் கூறியதொன்றைப் பயனின்றி மீண்டுங் கூறல் கூறியது கூறலாகும்.

ஆண்பால் பெண்பால் ஒருமை பன்மை காலம் [92]காரகம் முதலியவற்றை மாறுபடக் கூறல் பிழைபடக் கூறலாகும். பிரிக்க வேண்டாத இடத்திற் பிரித்தலும் வேண்டிய இடத்திற் பிரியாமையும் [93]குணமாறுபாடும் பிறழ்ச்சியாகும்.

சுலோகம்

[94]பொருணூல்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் கண்டு அரசர் பொருட்டுக் [95]கௌடலியரால் முடங்கல்விதி கூறப்பட்டது.

இரண்டாம் அதிகரணம் பத்தாம் பிரகரணம்
“ முடங்கல் விதிமுறை ” என்னும் முப்பத்தொன்றாம்
அத்தியாயம்—முற்றிற்று.

---

92 காரகம் இன்னதென்பதை “ விளிகுறை யிரண்டையும் விட்டவேற்றுமைகள், வினையான் முடியிற் காரக மெனப்பெறும் ” என்பதனால் அறிக.

93 குணங்கள்—பொருள் வைப்புமுறை இனிமை முதலியவாக முடங்கலுக்குக் கூறப்பட்ட நலங்கள்.

94 வியாழன் வெள்ளி முதலியோரால் அருளிச்செயப்பட்ட நூல்கள்.

95 பண்டை நூல்வழக்கிலும் உலகியலிலும் முடங்கல் விதிமுறை காணப்படுமாயினும் அதற்குரிய நலந்தீங்குகள் எல்லாவற்றையும் தொகுத்துக் கண்டுக் கூறினமையால் “ கௌடலியரால் கூறப்பட்டது ” என்றார்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை.

பதினொராம் பிரகரணம்—[1]கருவூலத்தியை திருமணி ஆய்தல்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

கருவூலத் தலைவன் கருவூலத்திற் சேர்க்கத்தக்க [2]மணி [3]திண்மைப் பொருள் [4]நொய்மைப் பொருள் [5]குப்பியப் பொருள் என்னும் இவற்றை, இவை சம்பந்தமான செய்திகளை நன்கறிந்த [6]கணக்கர்களுடனிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

[7]பொருநையாறு [8]பாண்டிய கபாடம் [9]பாசிகையாறு [10]குலையாறு [11]சூரணியாறு [12]மகேந்திரம் [13]கர்த்தமையாறு [14]சிரௌதசீ

32-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கருவூலத்திற் சேர்க்கத்தக்க அழகிய மணி முதலியவற்றின் நன்று தீதாராய்தல். மணி என்பது உபலக்கணத்தால் திண்மை நொய்மைக் குப்பியப் பொருள்களையும் உணர்த்தும். முடங்கல் விதிமுறை உணர்ந்த வேந்தற்குக் கருவூலம் இன்றியமையாத தொன்றாகலானும், பொருட்பண்டாரம் புரப்போன் இறைப்பொருள் தொகுப்போன் என்னும் இவர் தம் செயல்களால் கருவூலத்தின் ஆக்கமும் பாதுகாப்பும் முற்கூறப்பட்டமையானும் ஆண்டுப் பெறப்படாத அதனியல்பு இங்கே கூறப்படுகின்றது. இதனாற் பிரகரண இயைபு புலனாதல் அறிக.

[2] மணி—முத்து முதலிய இரத்தினங்கள்.

[3] திண்மைப் பொருள்—சந்தனம் அகில் முதலிய மரங்கள்.

[4] நொய்மைப் பொருள்—பட்டு, நூல் முதலியன.

[5] குப்பியம்—பொன் வெள்ளியல்லாத மற்றைய உலோகங்களும் காழ்த்த மரம் முதலியனவும், அம்பு வாள் முதலிய படைக்கலன்களுமாம்.

[6] உடனிருத்தல்—நன்று தீதாராய்ந்துகொள்ளுதற் பொருட்டு.

[7] பொருநை—தாமிரபரணி.

[8] பாண்டிய கபாடம்—பாண்டிய நாட்டிற்கு வாயிற் கதவுபோல் அமைந்த பொதியின்மலையின் ஒரு பகுதி.

[9] பாசிகை—பாடலீபுத்திரம் என்னும் நகரத்தின் அருகிலுள்ள ஓர் யாறு.

[10] குலை—சிங்கள நாட்டில் மயூரக் கிராமத்திலுள்ள ஓர் ஆறு.

[11] சூரணி—சேரநாட்டில் முரசீ என்னும் பட்டினத்திற் கருகிலுள்ள ஒரு யாறு.

[12] மகேந்திரம்—இது மகேந்திரமலையின் பக்கலிலுள்ள கடலையுணர்த்தும்.

[13] கர்த்தமை—பாரசீக நாட்டிலுள்ள ஓர் யாறு.

[14] சிரௌதசீ—பற்பர நாட்டிலுள்ள ஒரு நதி.

யாறு [15]சீகண்டமடு இமயமலை என்னும் [16]இப்பத்தும் முத்துத் தோன்றும் இடங்களாம்.

சங்கு சிப்பி [17]பல்வகைக் குழூ என்னும் இவை முத்தீனும் பொருள்களாம்.

[18]மசூரகவுரு திரிபுடகவுரு ஆமையுரு பிறையுரு [19]குப்பாய முடைமை இரட்டையுரு பிளவு [20]சருச்சரை தேன்மெழுகு போன்ற புள்ளி கமண்டலவுரு கறுப்புமஞ்சளுங் கலந்த நிறம் நீல நிறம் [21]வேற்றிடத்துளை என்னும் இக்[22]குற்றத்தையுடைய முத்துக்கள் சிறந்தனவாகா.

பருமை வட்டம் உண்டை ஒளியுடைமை வெண்மை திண்மை வழுவழுப்பு உரியவிடத்தில் துளையுடைமை இக் [23]குணமுடைய முத்துக்கள் சிறந்தனவாம்.

[24]தலைமணி உடையது [25]உதவித் தலைமணியுடையது [26]கணு

---

15 சீகண்டமடு—இது பப்பர நாட்டின் கடலில் ஒரு பகுதி.

16 இப்பத்திடங்களிலும் தோன்றும் முத்துக்களுக்கு முறையே தாமிர பருணிகம், பாண்டிய கபாடகம், பாசிக்கியம், கௌலேயம், சௌர்ணேயம், மாகேந்திரம், கார்த்தமிகம், சிரௌதசீயம், இராதீயம், ஐமவதம் என்பன பெயர்களாம்.

17 பல்வகைக் குழூ—யானைமருப்பு பன்றிக்கொம்பு மூங்கில் பாம்பின் தலை மேகம் மீன்தலை முதலியன.

18 மசூரகம் திரிபுடகம் என்பன தானிய வகைகளாம்.

19 குப்பாயமுடைமை—சட்டை போன்ற படலமுடைமை.

20 சருச்சரை—சொரசொரப்பு.

21 துளையிடுதற்குரியதல்லாத இடத்தில் துளையிடப்பட்டது.

22 மேற்கூறிய உருவங்களும் படலமுதலியவும் நிறங்களும் உடைய முத்துக்கள் குற்றமுடையன வென்பது கருத்து; குற்றங்கள் அறவே இருத்தலாகாதென்பது தோன்ற முற்கூறப்பட்டன.

23 இக்குணங்களுட் சில முன்கூறிய குற்றங்களின்மையாற் பெறப்படு மாயினும் பருமை முதலியனவே குணங்களாகும் என்பது வலியுறுதற்கு மீண்டும் கூறப்பட்டன.

24 நடுவிற் பருமணி ஒன்றும் இருமருங்கிலும் ஒத்த அளவினையுடைய சிறுமணிகளும் வைத்துக் கோக்கப்பட்ட வடம் தலைமணியுடையது என்னும் பெயருடையதாகும்.

25 நடுவில் ஒரு பருமணியும் இருமருங்கிலும் ஒத்த அளவினையுடைய ஒவ்வொரு சிறு மணியும் ஆக மாறிமாறி அமைத்துக் கோக்கப்பட்ட வடம் உதவித்தலைமணி யுடையது என்னும் பெயருடையதாகும்.

26 நடுவில் ஒரு பெருமணியும் இருமருங்கிலும் ஒத்த அளவின உடைய இரண்டிரண்டு சிறுமணிகளும் ஆக மாறிமாறி அமைத்துக் கோக்கப்பட்ட வடம் கணுநிலை என்னும் பெயருடையதாகும்.

நிலை [27]செறி நிலை [28]தரளக் கட்டு என்னுமிவ்வைந்தும் முத்து வடத்தின் வகைகளாம்.

[29]முத்துவடங்கள் ஆயிரத்தெட்டுக் கொண்டது [30]இந்திரச் சந்தம் என்னும் பெயருடையதாகும். அவ்வளவிற் பாதிகொண்டது விசயச் சந்தம் எனவும் நூறு கொண்டது தேவச் சந்தமெனவும் அறுபத்து நான்கு கொண்டது அருத்தகாரம் எனவும் ஐம்பத்து நான்கு கொண்டது கதிர்க்கலாபம் எனவும் முப்பத்திரண்டு கொண்டது குச்சமெனவும் இருபத்தேழு கொண்டது நாண்மீன் மாலை யெனவும் இருபத்து நான்கு கொண்டது அருத்தகுச்சமெனவும் இருபது கொண்டது மாணவகமெனவும் அவ்வளவிற் பாதி கொண்டது அருத்தமாணவகமெனவும் பெயர் பெறும். [31]ஈண்டுக் கூறப்பட்டவைகளே மாணிக்கம் முதலிய மணிகளில் ஒன்றை நடுவிலுடையனவாக இருப்பின் [32]முன்னைப் பெயரோடியைந்த மாணவகம் என்னும் பெயரை உடையனவாம். தலைமணியுடைய வடங்களை மாத்திரம் கொண்டது [33]தூய மாலை

---

[27] நடுவில் ஒரு பெருமணியும் இருமருங்கிலும் முறையே சிறுத்து வருமாறு ஏற்ற மணிகளையும் அமைத்துக் கோக்கப்பட்ட வடம் செறிநிலை என்னும் பெயருடையதாகும்.

[28] ஒத்த அளவினையுடைய மணிகளால் கோத்தமைக்கப்பட்ட வடம் தரளக்கட்டு என்னும் பெயருடையதாகும்.

[29] முத்துவடங்கள்—தலைமணியுடையது முதலிய ஐந்துமாம்.

[30] இந்திரச்சந்தம் என்னும் பெயரை தலைமணியுடையது முதலிய ஐந்து வகைகளோடும் இயைத்து தலைமணியுடைய இந்திரச்சந்தம் உதவித் தலைமணியுடைய இந்திரச்சந்தம் கணுநிலை இந்திரச்சந்தம் செறிநிலை இந்திரச்சந்தம் தரளக்கட்டு இந்திரச்சந்தம் எனக் கொள்ளல் வேண்டும். பின்வரும் விசயச்சந்தம் முதலியவற்றிற்கும் இவ்வாறே இயைத்துப் பெயர் கூறிக்கொள்ளல் வேண்டும்.

[31] கூறப்பட்டவை—இந்திரச்சந்தம் முதலாக அருத்த மாணவகம் ஈறுகவுள்ள பத்தும் ஆம்.

[32] இந்திரச்சந்தமாணவகம் விசயச்சந்தமாணவகம் முதலிய பெயர்களைப்பெறும் என்பது கருத்து.

[33] இத்தூயமாலை தலைமணியுடைய இந்திரச்சந்தம் முதலிய பெயர்களோடு இயைந்து தலைமணியுடைய இந்திரச்சந்தத் தூயமாலை, தலைமணியுடைய விசயச்சந்தத் தூயமாலை தலைமணியுடைய தேவச்சந்தத் தூயமாலை முதலிய பெயர்களைப் பெறும் என்பது கருத்து.

யாகும். [34]எஞ்சியவைகளும் [35]அங்ஙனமே. மாணிக்கம் முதலிய மணிகளுள் ஒன்றை நடுவிலுடைய அருத்தமாணவகம் மூன்று அல்லது ஐந்து [36]தகட்டுருக்களை உடையனவாயின் தகட்டுமாலை எனப் பெயர் பெறும். [37]கலப்பில்லாத ஒற்றைவடம் சூத்திரம் என்று கூறப்படும். அவ் வொற்றைவடமே மாணிக்கம் முதலிய மணிகளுள் ஒன்றனை நடுவிலுடையதாக இருப்பின் மாலை எனப் படும். பொன்னாலாகிய மணிகளை இடையிடையே யுடைய முத்து வடம் இரத்தினாவளி என்று கூறப்படும். பொன்னாலாகிய மணி களையும் மாணிக்கம் முதலிய மணிகளையும் இடையிடையே யுடைய முத்துவடம் அபவருத்தகம் எனப்படும். பொற் கம்பி இடையிடையே புலப்படக் கோத்தமைத்த முத்துவடம் சோபா னகம் என்று கூறப்படும். அது மாணிக்கம் முதலிய மணிகளுள் ஒன்றை நடுவிலுடையதாயின் மணிசோபானகம் எனப்படும்.

[38]இதனால் தலை கை கால் இடை என்னும் இவ்வுறுப்புக்களில் அணிதற்குரிய வடமும் வடத் தொகுதியும் ஆகிய வேறுபாடுகள் [39]கூறப்பட்டபடியாம்.

[40]கௌடம் [41]மாலேயகம் [42]பாரசமுத்திரகம் என மணி

---

34 எஞ்சியவை—உதவித் தலைமணியுடையது முதலிய நான்குமாம்.

35 உதவித்தலைமணியுடைய இந்திரச்சந்தத் தூயமாலை முதலியவாகவும் கணுநிலை இந்திரச்சந்தத் தூயமாலை முதலியவாகவும் செறிநிலை இந்திரச் சந்தத் தூயமாலை முதலியவாகவும் தளரக்கட்டு இந்திரச்சந்தத் தூயமாலை முதலியவாகவும் பெயர்பெறும் என்பது கருத்து.

36 தகட்டுரு—இலைவடிவமாகச் செய்யப்பட்ட பொற்றகடு.

37 கலப்பு—மாணிக்கம் முதலியவற்றின் சேர்க்கை.

38 தலைமணியுடையது முதலிய முத்துவடங்களெல்லாம் கழுத்தில் அணிதற் குரியனவாக இங்கே கூறப்பட்டமையால் தலை கை கால் இடை என்னும் இவ்வுறுப்புக்களில் அணிதற்குரிய வடங்களின் வேறுபாடும் இது போலவே அறியத்தக்கதென்பது கருத்து.

39 இதுவரை முத்துக்களைப்பற்றிய செய்திகள் கூறப்பட்டன.

40 இனி முத்து அல்லாத ஏனைய மணிகளின் இயல்பைக் கூறத் தொடங்குகின்றார். பொதியின் மலைக்கும் கடலுக்கும் நடுவிடம் கோடி எனப் பெயர்பெறும். அங்கே உண்டாம் இரத்தினம் கௌடமாகும்.

41 பொதியின் மலையின் ஒரு கூறு மாலை எனப்படும். அதன்கண் உண்டாம் இரத்தினம் மாலேயகம் ஆகும்.

42 சிங்களத்தீவிலுள்ளதொருமலை பாரசமுத்திரம் எனப்படும். அதில் தோன்றும் இரத்தினம் பாரசமுத்திரகம் ஆகும்.

[43]மூவகைப்படும்.

[44]சௌகந்திகம் பதுமராகம் [45]அநவத்தியராகம் பாரிசாதபுட்பகம் பாலசூரியகம் என மாணிக்கம் ஐந்து வகைப்படும்.

வைடூரியம் — உற்பலவண்ணம் வாகைப்பூவண்ணம் நீர் வண்ணம் [46]மூங்கில்வண்ணம் கிளிச்சிறைவண்ணம் மஞ்சள் வண்ணம் (புட்பராகம்) [47]கோமூத்திரவண்ணம் [48]கோமேத வண்ணம் என எண்வகைப்படும்.

நீலமணி—[49]நீலாவளியம் [50]இந்திரநீலம் [51]கலாயவண்ணம் [52]மகாநீலம் [53]நாவல் வண்ணம் முகில் வண்ணம் [54]நந்தகம் [55]நடு நீர்ப் பெருக்கு என எண் வகைப்படும்.

[56]தூயபடிகம் [57]மூலாட வண்ணம் [58]சந்திரகாந்தம் [59]சூரிய

---

43 தோன்றுமிடம்பற்றி மூவகைப்படும் என்று கூறியது பெரும்பான்மை குறித்து; மரகதம் வைடூரியம் படிகம் முதலியன விந்தியம் விதூரம் தருத்தரம் முதலிய மலைகளிலும் உண்டாதலின்.

44 சௌகந்திகம்—செங்கழுநீர்மலர்; அதுபோல சிறிது நீலநிறம் கலந்த செந்நிறமுடைமையால் இப்பெயராயிற்று.

45 அநவத்தியம்—குங்குமப்பூவை உணர்த்துமென்பர் உரையாசிரியர். அதனை ஒத்த நிறமுடைமையால் அநவத்தியராகமெனப் பெயராயிற்று.

46 மூங்கில்—அதன் இலையை உணர்த்தும். கிளிச்சிறை வண்ணம்—கிளியின் இறகுபோன்ற பசுமை நிறமுடையதென்பது.

47 கோமூத்திர வண்ணம்—பசுவின் மூத்திரம் போன்ற வெண்மை கலந்த மஞ்சள் நிறமுடையது.

48 கோமேதம்—கோரோசனை.

49 நீலாவளியம்—அலைகளைப்போன்ற நீலக்கோடுகளை யுடையது.

50 இந்திரநீலம்—மயிற்றோகைபோல் நீலநிறமுடையது.

51 கலாயவண்ணம்:— கலாயம்—ஒருவகைத் தானியம்; வண்ணம்—அதன் மலர்நிறம் போன்ற நிறமுடையது.

52 மகாநீலம்—வண்டின் நிறம் போன்ற நிறமுடையது.

53 நாவல் வண்ணம்—நாவற்பழம் போன்ற நிறமுடையது.

54 நந்தகம்—தவளை; அதுபோல உள்ளே வெண்மையும் புறத்தே நீலமும் உடையதென்பது.

55 நடுநீர்ப்பெருக்கு—நீர்ப்பெருக்குப் போல நடுவண் ஒளியுடையது என்பது.

56 தூயபடிகம்—மிக்க வெண்மை நிறம் வாய்ந்தது.

57 மூலாடவண்ணம் — ஆடையெடுக்கப்பட்ட தயிர் போன்ற நிறமுடையது.

58 சந்திரகாந்தம்—சந்திர கிரணம் பட்டவுடன் தண்ணீர் காலுவது.

59 சூரியகாந்தம்—சூரிய கிரணம் பட்டவுடன் நெருப்புக்காலுவது.

காந்தம் எனப் படிகமணி [60]நான்கு வகைப்படும்.

[61]அறுகோணம் நாற்கோணம் வட்டம் நன்னிறம் [62]உறுப்பமைப்பு தெளிவு வழுவழுப்பு திண்மை ஒளியுடைமை [63]உள்ளொளியுடைமை [64]ஒளிப்படுத்தல் இப்பதின்மூன்றும் இரத்தினங்களின் குணங்களாம்.

நிறக்குறை ஒளிக்குறை [65]பரலுடைமை உட்புள்ளி [66]பிளவு வேற்றிடத்துளை [67]கோடு என்னும் இவ்வேழும் இரத்தினங்களுக்குரிய குற்றங்கள்.

---

60 ஈண்டுக்கூறிய மாணிக்கம் முதலியவற்றின் வகைகளைப்பற்றி ஒருசாராசிரியர் கொள்கை வருமாறு :—சௌகந்திகம் என்பதை மாணிக்கமெனக் கொண்டு அதனைத் தலைப்பாகக் கருதி அது பதுமராகம்முதல் நான்குவகைப்படும் என்பதும், வைடூரியம் உற்பலவண்ணம் முதலாக நீலாவளியம் இறுதியாக ஒன்பது வகைப்படும் என்பதும், இந்திரநீலம் என்பதைத் தலைப்பாகக் கொண்டு அது கலாயவண்ணம் முதலாக நடுநீர்ப்பெருக் கிறுதியாக அறு வகைப்படும் என்பதும், தூயபடிகம் முதலாக சூரியகாந்தம் இறுதியாகப் படிகமணி நான்கு வகைப்படும் என்பதூஉமாம்; மேற்கூறிய மணிவகைகளைப்பற்றி வேறொருசா ராசிரியர் பின்வருமாறு கூறுவர்.:—" மாணிக்கங்கள்—முயற்குருதி செம்பருத்திப்பூ திலகமலர் பாரிசாதமலர் இளஞாயிறு இவற்றை ஒத்த நிறமுடையனவாகும். வைடூரிய மணிகள்—கிளியிறகு நீர் கடலுப்பு வாகைமலர் மஞ்சள் பூனைக்கண் மூங்கிலிலை இவற்றை ஒத்த நிறமுடையனவாகும். நீலமணிகள்—மயிற்றோகைக்கண் வண்டு நாவற்கனி இவற்றை ஒத்த நிறமுடையனவாகும்; அவை கதிரவன் ஒளிவெப்பம்படின் காண்டற்கரியனவாகும். மரகதமணிகள்—பாற்கடல் கடையுங்கால் மந்தரமலையாற் றுன்புற்ற வாசுகி என்னும் பாம்பின் நஞ்சினின்றும் தோன்றினவென்று சிலரும், பாம்பின் முட்டையினின்றும் தோன்றினவென்று சிலரும் கூறுப. அவை கருடனிறகு வாழையிலை மூங்கிலிலை பசியநெற்கதிர் இவற்றை ஒத்த நிறமுடையனவாகும்.

61 அறுகோணம் முதலிய மூன்றனுள் ஒன்றுடைமை என்பது கருத்து.

62 உறுப்பமைப்பு — அணிகலன்களிற் பதித்தற்குரிய உறுப்புக்கள் உடைமை.

63 உள்ளொளியுடைமை—மணியின் உட்பகுதியில் ஒளியுடைய நீரோட்டம் அமைந்திருத்தல்.

64 ஒளிப்படுத்தல்—தன்னொளியால் எதிர்ப்பட்ட பொருளையும் ஒளியுடையதாக்கல்.

65 பரலுடைமை—இடையிடையே பரற்கற்போன்று காணப்படல்.

66 பிளவு—வெடிப்புக் காணப்படுதல்.

67 கோடு—கீறல்.

விமலகம் (வெண்மையும் பசுமையும் கலந்த நிறமுடையது), சசியகம் (நீலநிறமுடையது), அஞ்சன மூலகம் (நீலமும் கருமையும் கலந்த நிறமுடையது), பித்தகம் (ஆவின் பித்துப்போன்ற நிறமுடையது), சுலபகம் (வெண்மைநிறமுடையது), செங்கண் (விளிம்பிற் செந்நிறமும் நடுவிற் கருநிறமும் உடையது), மிருகாசுமகம் (வெண்மையும் கருமையும் கலந்த நிறமுடையது), சோதிரசகம் (வெண்மையும் செம்மையும் கலந்த நிறமுடையது), மைலேயகம் (பெருங்காயம் போன்ற நிறமுடையது), ஆகிச்சத்திரகம் (குறைந்த நிறமுடையது), கூர்ப்பம் (பரற்கற்போன்றஅரும்புகளையுடையது), பிரதிகூர்ப்பம் (மெழுகுபோன்ற நிறமுடையது), சுகந்திகூர்ப்பம் (பாசிப்பயறுபோன்ற நிறமுடையது), கீரபகம் (பால்போன்ற நிறமுடையது), சுத்திசூரணகம் (பல்வகை நிறமுடையது), சிலாப்பிரவாளகம் (பவள நிறமுடையது), புளகம் (உள்ளே கருமையுடையது), சுக்கிரபுளகம் (உள்ளே வெண்மையுடையது) என்னும் இப்பதினெட்டும் மணிகளின் உட்பிரிவுகளாகும்.

எஞ்சியவை யெல்லாம் [68]காசமணிகளாம்.

வைரமணி தோன்றும் இடங்கள் [69]கலிங்கநாடு விதர்ப்பநாடு கோசலநாடு காத்தீரநாடு திருக்கடனமலை மணிமந்தமலை [70]என்பனவாம்.

[71]நிலவறை நீர்நிலை [72]பல்வகைக்குழு என்னும் இம்மூன்றும்

---

[68] காசமணிகள்—கடைத்தரமான மணிகள்; இங்குக் கூறியவாற்றால் மாணிக்கத்தின் வகைகள் ஐந்தும் வைடூரிய வகைகள் எட்டும் நீலத்தின் வகைகள் எட்டும் படிகத்தின் வகைகள் நான்கும் ஆக இருபத்தைந்து வகைப்படும் என்பதும், மணியின் குணங்கள் அறுகோணம் முதலிய பதினொரு வகைப்படும் என்பதும், குற்றங்கள் நிறக்குறை முதலிய ஏழு வகைப்படும் என்பதும் உட்பிரிவுகள் விமலகம் முதலிய பதினெட்டு வகைப்படும் என்பதும் போந்தவாறும்.

[69] விதர்ப்பநாட்டை சபாராஷ்டிரகம் என்றும் கோசலநாட்டை மத்தியமராஷ்டிரகம் என்றும் கலிங்கநாட்டை இந்திரவானகம் என்றும் முதனூல் கூறும்.

[70]வைரமணி மகதம் முதலிய பிற நாடுகளிலும் தோன்றுதலால் இங்கே கூறிய ஆறிடங்களும் உபலக்கணமாம்.

[71] நிலவறை—சுரங்கம்.

[72] யானைத்தந்தம் முதலிய வெல்லாம் பல்வகைக் குழுவின்பாற்படும்.

வைரமணி விளையும் [73]இடங்களாம்.

பூனைக்கண்வண்ணம் வாகைப்பூவண்ணம் கோமூத்திரவண்ணம் கோரோசனைவண்ணம் தூயபடிகவண்ணம் மாணிக்கம் முதலிய மணிவகைகளில் ஒன்றன்வண்ணம் ஆகிய இவ்வெல்லாம் வைரமணிக்குரிய நிறங்களாம்.

பருமை வழுவழுப்பு திண்மை [74]தகர்க்கப்படாமை [75]ஒத்த கோணமுடைமை [76]கலக்கீற்றுக்கல் [77]தருக்குச்சுழற்சி மிக்க ஒளியுடைமை என்னுமிக் குணங்களையுடைய வைரமணிகள் சிறந்தனவாம்.

[78]கோணமின்மை [79]விளிம்பின்மை [80]வட்டக்கேடு என்னும் குற்றமுடைய வைரமணிகள் சிறந்தன [81]ஆகா.

* பவழம் தோன்றுமிடங்கள் [82]அலகந்தமும் [83]விவருணமும்

---

73 முன்னர்க் கூறப்பட்ட தோன்றுமிடங்களாகிய விதர்ப்பம் முதலியன ஆகரங்களாகும். இங்கே கூறப்பட்ட விளையுமிடங்களாகிய நிலவறை முதலியன யோனிகளாகும்.

74 தகர்க்கப்படாமை—கற்றுண்டு முதலியவற்றால் நுறுக்கப்படாமை.

75 கோணம்—கோடி.

76 கலக்கீற்றுக்கல்—கலம்—வெண்கலப் பாத்திரம்; கீற்று—கோடு. நீர் நிரம்பிய வழுவழுப்பான வெண்கலப் பாத்திரத்தில் வைரமணியை இட்டு அசைத்தால் அப்பாத்திரத்தில் கோடுண்டாகும் என்பது கருத்து.

77 தருக்கு—சுழலும் ஒருவகைப் பொறி; அது போல் ஒளி நீர்ச் சுழற்சியை யுடையது என்பது கருத்து. ஒருசார் ஆசிரியர் இன்னும் சில குணங்களையும் கூறுவர்; வைரமணி நெருப்பிலிடப்படின் நிறவேற்றுமை அடைதலாகாதென்பதும் சாணையிலாதல் உரைகல்லிலாதல் தேய்க்கப்படின் ஒளி மிகுதல் என்பதும் பிறவுமாம்.

78 கோணம்—ஈண்டு மேற்பாகத்திலுள்ளது.

79 விளிம்பு—பக்கங்களிலுள்ளது.

80 வட்டக் கேடு—வட்டவடிவில் ஒருபால் சிதைந்திருத்தல்.

81 குற்றமுடைய மணிகளைப்பற்றி ஒரு சாராசிரியர் கூறுவது—அழகின்மை வண்ணமின்மை ஒளியின்மை கடுங்காட்சி குடுண்டல் வெடிப்பு என்னும் இக்குற்றமுடைய மணிகளை பகைவர்பால் வைத்தல் வேண்டும் என்பது.

82 அலகந்தம் பப்பரநாட்டின் அருகிலுள்ள கடலின் ஒரு பகுதி; அதன் கட்டோன்றிய பவழம் ஆலகந்தகம் எனப்படும்.

83 விவருணம்—யவனத் தீவிலுள்ள கடலின் ஒரு பகுதி அதன்கட் டோன்றிய பவழம் வைவருணிகம் எனப்படும்.

ஆம். அதன் நிறம் தூய செம்மையும் செந்தாமரைப்பூவண்ண மும் ஆம். புழுத்தின்றலும் நடுப்பெருத்தலும் அதற்குரிய குற்றங் களாம்.

[84]சந்தனம் சாதனநாட்டிலுண்டாவது செந்நிறமும் [85]மண் மணமும் உடையதாகும். கோச்சிரநாட்டிலுண்டாவது கருமை யும் செம்மையும் கலந்த நிறமும் [86]மீன்மணமும் உடையதாகும். அரி என்னும் நாட்டிலுண்டாகும் அரிசந்தனம் கிளியிறகு போன்ற நிறமும் மாம்பழம் போன்ற மணமும் உடையதாகும். [87]திருண சந்தியின் பக்கலுண்டாவதும் [88]அத்தகையதே. கிராமேருகம் என் னும் இடத்திலுண்டாவது செந்நிறமும் செம்மையுங் கருமையுங் கலந்த நிறமும் [89]ஆட்டு மூத்திர மணமும் உடையதாகும். தேவ சபையிலுண்டாவது செம்மை நிறமும் தாமரைமலர்மணமும் உடையதாகும். சாவகம் என்பதும் [90]அத்தகையதே. சோங்ககம் என்பது செம்மை நிறமும் செம்மையும் கருமையும் கலந்த நிறமும் வழுவழுப்பும் [91]உடையதாகும். தவ்வுருவமும் [92]அத்தகையதே.

---

[84] இதுகாறும் இரத்தினங்களைப்பற்றிய செய்திகள் கூறப்பட்டன; இனித் திண்மைப் பொருள்களைப் பற்றிய செய்திகளைக் கூறத் தொடங்கு கின்றார். திண்மைப் பொருள்களுள் சந்தனம் சிறந்ததாதலின் அது முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது தோன்றுமிடங்கள் பதினாறென்பதும் அதன் வண்ணம் ஒன்பது வகை என்பதும் மணம் ஆறு வகை என்பதும் குணங்கள் பதினொன்றென்பதும் பின்வரும் விளக்கங்களாலறியலாம்.

[85] மண்மணம் — புதிய மழை நீரால் நனைந்த மண்ணிற் றோன்றும் மணம் போல்வது.

[86] மீன்மணம் என்பதை மத்ஸ்யகந்தி என்று முதனூல் கூறும். அதற் குச் செவ்வலரிப்பூமணத்தை ஒத்தது என்பர் மற்றோர் உரையாசிரியர்.

[87] இதனைத் தாருணசம் என்பர்.

[88] கிளியிறகு போன்ற நிறமும் மாம்பழம் போன்ற மணமும் உடைய தென்பது கருத்து.

[89] முதனூலில்வந்த 'பஸ்தி' என்னும் சொல்லிற்கு ஆடு என்று பொருள் கொள்ளப்பட்டது. அதற்குக் கத்தூரி என்று பொருள் கொள்வர்.

[90] செம்மை நிறமும் தாமரை மலர் மணமும் உடையதென்பது கருத்து.

[91] இதற்கென மணம் கூறுமையால் முன்னதற்குக் கூறப்பட்ட தாமரைப்பூமணமே இதற்கும் கொள்ளல் வேண்டும்.

[92] செம்மை நிறமும் செம்மையும் கருமையும் கலந்த நிறமும் வழுவழுப் பும் தாமரைப்பூமணமும் உடையதென்பது கருத்து. சாவகம் முதலிய மூன்றும் காமரூப நாட்டில் உண்டாவன என்பது அறியத்தக்கது.

மாலேயகம் என்பது வெண்மையும் செம்மையும் கலந்த [93]நிற முடையது. குசந்தனம் என்பது கருமைநிறமும் [94]கோமூத்திர மணமும் உடையது. காலபர்வதகம் என்பது திண்மையும் அகிலை ஒத்த கருமைநிறமும் செம்மைநிறமும் செம்மையும் கருமையும் கலந்த நிறமும் [95]உடையதாகும். கோசகாரபர்வதகம் என்பது கருமைநிறமும் கருமையும் சாம்பல்நிறமும் கலந்த வண்ணமும் உடையதாகும். சீதோதகீயம் என்பது தாமரைவண்ணமும் கருமைநிறமும் வழுவழுப்பும் உடையதாகும். நாகபர்வதகம் திண்மையும் நீர்ப்பாசி வண்ணமும் உடையதாகும். சாகலம் என்பது [96]கபிலநிறமுடையதாகும்.

[97]நொய்மை வழுவழுப்பு விரைவிலுலராமை [98]நெய்ப்பு நறுமண இனிமை [99]மெய்ப்புகுதல் [100]உருவெளிப்படாமை [101]நிறப்

---

93 இதற்கும் தாமரைப்பூமணம் உடையதென்பதை இயைத்துக் கொள்ளல் வேண்டும்.

94 கோமூத்திரம் பரிணமைநிலையில் நன்மணம் உடையதாகும் என்ப. ஒருசிலர் கோமூத்திரம் என்பதற்கு நீலோற்பலம் என்று பொருள் கூறுவர்.

95 இதற்கும் வேறு மணம் கூறாமையால் கோமூத்திரமணமுடையதென்பதை இயைத்துக்கொள்ளல் வேண்டும். முதனூலின் வேறு சில படிகளில் குசந்தனம் திண்மையும் கருமை நிறமும் அகிலை ஒத்த கருமை நிறமும் செம்மைநிறமும் செம்மையும் கருமை கலந்த நிறமும் உடையதாகும் எனவும் காலபர்வதகம் குங்குமவண்ணமுடையதெனவும் காணப்படுகின்றனவாம்.

96 காலபர்வதகம் முதல் சாகலம் இறுதியாக உள்ள சந்தனக் கட்டைகள் கோமூத்திரமணம் உடையனவாம் என்பது கருத்து. சந்தன வகைகளாக ஈண்டுக் கூறப்பட்ட பதினாறு பெயர்களும் அஃது உண்டாகும் இடங்களைப் பற்றி வந்தனவாம். இவ்விடங்களில் பெரும்பாலன பொதியின் மலையைச் சார்ந்தனவென்று உரையாசிரியர் கூறுவர். இதுகாறும் சந்தன மரத்தின் பிறப்புவகைகளும் அவற்றின் நிறங்களும் கூறப்பட்டன. இனிச் சந்தனத்தின் குணங்கள் கூறப்படும்.

97 நொய்மை—கனமின்மை.

98 நெய்ப்பு—உடலிற் பூசுங்கால் நெய்போற் பசையுடையதாக இருத்தல்.

99 மெய்ப்புகுதல்—தோலின் வழியாக உடலினுட் புகுந்து இன்பஞ் செய்தல்.

100 உருவெளிப்படாமை—நன்றாக அரைக்கப்பட்டு நுண்ணிதாகக் கரைதலாம்.

101 நிறப் பிறழ்ச்சியின்மை—வேற்றுப் பொருட் கலவையாலும் பூசப்பட்ட உடலின் வியர்வையாலும் மாறுபடாத நிறமும் மணமும் உடைத்தாதல்.

பிறழ்ச்சியின்மை [102]சூடுதாங்கல் வெப்பந் தீர்த்தல் ஊற்றின்பம் என்னும் இப்பதினொன்றும் சந்தனத்திற்குரிய குணங்களாம்.

அகில், [103]சோங்ககம் தோங்ககம் [104]பாரசமுத்திரகம் என மூவகைப்படும். அவற்றுள் சோங்ககம் கருமைநிறத்தையும் கருமையும் வெண்மையும் கலந்த வரிகளையும் கருமையும் வெண்மையும் கலந்த புள்ளிகளையும் உடையதாகும். தோங்ககம் கருமை நிறமுடையது. பாரசமுத்திரகம் பல்வகை நிறங்களையுடையதாகும். அவை விலாமிச்சைவேர் இருவாட்சிமலர் இவற்றின் மணம் போன்ற மணமுடையனவாம்.

திண்மை வழுவழுப்பு நறுமணம் [105]சேட்படக்கமழ்தல் [106]தீத்தாங்கல் [107]கலக்கமில் புகையுடைமை [108]ஒத்த மணமுடைமை [109]துடைத்துழிக் குன்றுமை என்னும் இவை அகிலின் குணங்களாம்.

[110]தைலபருணிகம் என்னும் மரம் [111]அசோககிராமிகம் சோங்

---

102 சூடுதாங்கல்—உடலிற் பூசப்பட்டபின் வெளி வெப்பம் தாக்காவாறு தடைப்படுத்தல்; வெப்பந்தீர்த்தல்—பூசப்பட்ட உடலின் உள் வெப்பத்தைப் போக்குதல்.

103 சோங்ககமும் தோங்ககமும் காமரூபமென்னும் நாட்டிலுண்டாவன.

104 பாரசமுத்திரகம் — இது தென்கடற்கப்பாலுள்ள சிங்களத்தீவிலுண்டாவது.

105 சேட்படக் கமழ்தல்—நெடுந்தூரம் பரவி மணம் வீசுதல்.

106 தீத்தாங்கல்—நெருப்பினால் விரைந்தெரிக்கப்படாமை.

107 அகிற் புகையால் கண் முதலியவற்றிற்குக் கலக்கமுண்டாகாவென்பது கருத்து.

108 ஒத்த மணமுடைமை—புகைக்கத் தொடங்கியதுமுதல் முடிவுவரை ஒரேவித மணமுடைத்தாதல்.

109 துடைத்துழிக் குன்றுமை—புகையிடப்பட்ட பொருளை ஆடை முதலியவற்றால் துடைத்த விடத்தும் மணங் குறையாதிருத்தல்.

110 தைலபருணிக மரம்—நெய் பூசப்பட்டதுபோன்ற இலைகளையுடைய ஒருவகை மண மரம்; பொதியின் மலையின் ஒரு கூறாகிய தைலபருணம் என்னும் குன்றிற்றோன்றியதுபற்றி இம்மரத்தைத் தைலபருணிகம் என்று கூறுவாரும் இதனைச் சந்தன மரத்தின் வகைகளுள் ஒன்றென்பாருமுளர்.

111 அசோககிராமிகம் முதலிய ஐவகைப் பெயர்களும் காமரூபநாட்டில் இம்மரம் தோன்றிய இடங்களைப்பற்றி வந்தனவாம்.

ககம் கிராமேருகம் சௌவருணகுட்டியகம் பூரணதீவகம் என ஐந்து வகைப்படும். அவற்றுள் அசோககிராமிகம் [112]இறைச்சி நிறமும் தாமரைப்பூமணமும் உடையதாகும். சோங்ககம் செம்மையும் மஞ்சளும் கலந்த நிறமும் நீலோற்பலப்பூமணமும் கோமூத்திரமணமும் [113]உடையதாகும். கிராமேருகம் வழுவழுப்பும் கோமூத்திரமணமும் உடையதாகும். சௌவருணகுட்டியகம் செம்மையும் மஞ்சளும் கலந்த நிறமும் மாதுளங்கனிமணமும் உடையதாகும். பூரணதீவகம் தாமரைப்பூமணமும் வெண்ணெய்மணமும் [114]உடையதாகும்.

[115]பத்திரச்சியம் என்னும் மரம் [116]பாரலௌகித்தியம் [117]ஆந்தரவத்தியம் என இருவகைப்படும். அவ்விரண்டும் கீழ்க்காய் நெல்லிமணமும் முறையே சாதிமலர்நிறமும் விலாமிச்சைவேர் நிறமும் உடையனவாம்.

காலேயகம் என்னும் மரத்தின் வகை இரண்டனுள் ஒன்றாகிய [118]பொன்னிலத்தில் தோன்றியது வழுவழுப்பும் பொன்மைநிறமும் உடையது. இமயமலையிற் றோன்றியது செம்மையும் பொன்மையும் கலந்த நிறமுடையது.

[119]இவை அரைத்துப் பிசையினும் நெருப்பில் [120]வேகவைப்

---

112 இறைச்சியை மானிறைச்சி யென்று உரையாசிரியர் கூறுவர்.

113 இதனிறம் சோங்ககத்திற்குரிய செம்மையும் பொன்மையும் கலந்த வண்ணமாகும்.

114 இதனிறமும் செம்மையும் பொன்மையும் கலந்த நிறமாம்.

115 பத்திரச்சியம் என்பதைச் சந்தனமரத்தின் வகைகளுள் ஒன்றெனவும் கர்ப்பூரமரம் எனவும் தேவதாரு எனவும் செஞ்சந்தனமரம் எனவும் கூறுவர்.

116 காமரூபநாட்டில் இலௌகித்தியம் என்னும் பெயரையுடைய ஆற்றின் கரையில் உண்டாதல் பற்றி பாரலௌகித்தியம் என்னும் பெயர்த்தாயிற்று. இலௌகித்தியத்தை பிரம்மபுத்திரா என்னும் ஆறெனவும் கூறுவர்.

117 அந்நாட்டில் ஆந்தரவதீ என்னும் யாற்றின் கரையில் உண்டாதல் பற்றி ஆந்தரவத்தியம் என்னும் பெயர்த்தாயிற்று.

118 பொன்னிலம் என்பது பர்மா நாட்டை உணர்த்தும் என்ப.

119 இவை—தைலபருணிகம் முதலிய மூன்றும்.

120 வேகவைத்தல்—நீரொடு கலந்து கொதிக்கச்செய்தல்.

பினும் புகைப்பினும் மாறுபடாத மணமும் [121]மாறுபடாத நிறமும் [122]பிறிதுபொருளோடு கலத்தற்குத் தகுதியும் உடையன. [123]சந்தனம் அகில்களுக்குரிய குணங்களும் இவற்றிற்காம். திண்மைப் பொருளைப்பற்றிய செய்தி [124]முடிந்தது.

[125]காந்தநாவகம் பிரையகம் என்னும் இரண்டும் இமயமலையிற் றோன்றும் தோலாகும். அவற்றுள் காந்தநாவகம் மயிற்கழுத்துப் போன்ற நிறவொளி உடையது. பிரையகம் கருமையும் பொன்மையும் கலந்த நிறமும் வெண்மைநிறமும் [126]பலவகைக் கோடுகளும் புள்ளிகளும் உடையதாகும். இவ்விரண்டும் எட்டங்குல [127]நீளமுடையனவாம்.

[128]துவாதசக் கிராமத்தில் உண்டாகிய தோல், பிசி மகாபிசி என இருவகைப்படும். அவற்றுள் பிசி, [129]புலப்படாவண்ணமும் அடர்த்தியான மயிரும் [130]பலவகை நிறமும் உடையதாகும். மகாபிசி, சொரசொரப்பும் பெரும்பாலும் வெண்மைநிறமும் உடையது. இவ்விரண்டும் பன்னிரண்டு அங்குல நீளமுடையனவாம். [131]ஆரோகம் என்னும் இடத்தில் உண்டாகிய தோல், சியாமிகை

---

121 வேற்றுப்பொருட் கலவையாலும் காலமிகுதியாலும் நிறம் மாறுபடாவென்பது கருத்து.

122 பிறிதுபொருள்—வேறு மணப்பொருள்.

123 இங்குக்கூறிய குணங்களேயன்றிச் சந்தனம் அகில்களுக்குரிய குணங்களும் இவற்றிற்குளவாம்.

124 இனி நொய்மைப் பொருளைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றூர்; நொய்மைப் பொருள்களாவன—ஈண்டுத் தோல் மயிர்க்கம்பலம் பட்டு நூலாடை முதலியனவாம்.

125 காந்தநாவகம் பிரேயகம் இவ்விரண்டும் இமயமலையின் ஒரு பகுதியிலுள்ள இடங்களைக் குறிப்பனவாம்.

126 பலவகை என்பதைப் புள்ளிகளோடும் இயைத்துக் கொள்க.

127 ஈண்டு அகலம் கூறப்படாமையால் நீளத்திற்குரிய அளவையே அதற்கும் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து; பின்வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

128 துவாதசக்கிராமம்—இமயமலைப்பகுதியில் மிலேச்சர்கள் வாழுமிடம்.

129 புலப்படாவண்ணம்—ஓணன் நிறம்போலப் பலவகை வண்ணமுடைமையால் இன்னதெனத் துணியப்படா நிறம்.

130 பலவகை நிறம்—மற்றொரு வகைக்கு.

131 ஆரோகம்—இமயமலையினருகிலுள்ள இடம்.

காலிகை கதலி சந்திரோத்தரை சாகுலே என ஐந்து வகைப்படும். அவற்றுள் சியாமிகை [132]கபிலநிறமும் பலவகைப் புள்ளிகளும் உடையது. காலிகை கபிலநிறமும் புறுவண்ணமும் உடையது. இவ்விரண்டும் எட்டங்குல நீளமுடையனவாம். கதலி, சருச்சரை யும் ஒரு முழ நீளமும் உடையது. [133]அக்கதலியே சந்திரன்வடிவு போல வட்டவடிவாக இருப்பின் [134]சந்திரோத்தரை எனப்படும். கதலியின் அளவில் [135]மூன்றிலொரு கூறுடைய சாகுலே செந்நிற மான வட்டங்களையும் இயற்கையினமைந்த தாமரைக் கொட்டை போன்ற தோல்முடிச்சுக்களையும் உடையதாகும்.

[136]பாகுலவம் என்னுமிடத்திலுண்டாகும் தோல் சாமூரம் சீனசீ சாமூலி என மூன்று வகைப்படும். அவற்றுள் சாமூரம் [137]முப்பத்தாறங்குல நீளமும் அஞ்சனவண்ணமும் உடையது. சீனசீ செம்மை கருமை கலந்த நிறமும் வெண்மை கருமை கலந்த நிறமும் உடையதாகும். சாமூலி கோதுமை [138]நிறமுடையதாகும்.

நீர்ப்பூனையின் தோல், சாதினே நளதூலே விருத்தபுச்சம் என மூன்று வகைப்படும். அவற்றுள் சாதினே கருமை நிறமுடையது. நளதூலே, நளம் என்னும் புல்லின் இதழ் வண்ணம் உடையது. விருத்தபுச்சம் கபிலநிறமுடையது.

மென்மை வழுவழுப்பு அடர்ந்தமயிருடைமை ஆகிய இக் குணமுடைய தோல்கள் சிறந்தனவாம். தோல்களைப்பற்றிய செய்தி [139]முடிந்தது.

---

132 கபிலநிறம்—புகர்நிறம்.

133 இதற்கு நிறம் காலிகைக்குக் கூறியபடியாம்.

134 இதனளவு கதலிக்குக் கூறிய ஒரு முழ நீளமாகும்.

135 மூன்றில் ஒரு கூறு எட்டங்குலமாகும்; ஈண்டு மும்மடங்கெனப் பொருள்கொண்டு மூன்று முழமெனக் கோடலுமாம்.

136 பாகுலவம்—இஃது இமயமலையின் ஒரு பகுதியிலுள்ள இடம்.

137 இங்கே கூறிய முப்பத்தாறங்குல நீளத்தைச் சீனசீ சாமூலி என்னும் இரண்டிற்கும் கொள்ளல்வேண்டும்.

138 இங்கே கூறப்பட்டவை யெல்லாம் நிலத்தில் வாழும் எலி முதலிய வற்றின் தோல்களாகும். இனி நீர்வாழுயிர்களின் தோல்களைப் பற்றிக் கூறப்படும்.

139 இங்கே கூறப்படாத வேறு பல தோல்களும் உள. அவை இக்குண முடையனவாயிற் சிறந்தனவாமென்பது.

ஆட்டுமயிர்க் கம்பலம் வெண்மை நிறமுடையதும் தூய செம்மைநிறமுடையதும் ஒருபாற் செம்மைநிறமுடையதும் [140]ஆம். [141]கோத்தமைத்ததும் [142]நெய்தமைத்ததும் [143]பல துண்டுகளாலமைத்ததும் [144]நூல்விட்டமைத்ததும் [145]ஆம்.

ஆட்டுமயிர்க் கம்பலம் அமைப்பு முறையால் கம்பலம் [146]கேசலகம் [147]யானை விரிப்பு [148]சௌமிதிகை குதிரைவிரிப்பு வண்ணக் கம்பலம் [149]தலிச்சகம் [150]குப்பாயம் [151]அகன்றவிரிப்பு [152]சமந்த பத்திரகம் எனப் பத்துவகைப்படும்.

வழுவழுப்பு நனைந்ததுபோற் காணப்படுதல் நுண்மை மென்மை என்னும் குணங்களையுடைய கம்பலம் சிறந்தனவாம்.

நேபாளதேயத்திலுண்டாகும் கம்பலம் [153]பிங்கிசி [154]அபசாரகம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் பிங்கிசி மழைநீரைத் தடைப்படுத்தற்கு எட்டுத்துண்டுகள் இணைத்தமைக்கப்பட்டது; கருமை நிறமுடையது.

---

140 நிற வேறுபாட்டால் மூன்று வகைப்படும் என்பது.

141 கோத்தமைத்தது—ஊசியினல் பூத்தொழிலமையக் கோத்துச் செய்யப்பட்டது.

142 நெய்தற்றொழிலால் வனப்புறச் செய்யப்பட்டது.

143 கோத்தமைத்ததும் நெய்தமைத்ததுமாகிய பல துண்டுகளால் அழகுற அமைக்கப்பட்டது.

144 இடையிடையே நெய்யப்படாமல் இடைவெளிவிட்டமைக்கப் பட்டது.

145 தொழில் வேறுபாட்டால் நான்கு வகைப்படும் என்பது.

146 கேசலகம்—வேடர் முதலியோரின் தலைக்கட்டு.

147 யானை விரிப்பு—யானையின் முதுகில் விரிக்கப்படுவது.

148 சௌமிதிகை—யானைமேலுள்ள தவிசில் விரிக்கப்படுவது. இஃது எருதின்மேல் விரிக்கப்படுவதென்றும் கூறுவர்.

149 தலிச்சகம்—படுக்கையில் விரிக்கப்படுவது.

150 குப்பாயம்—மெய்ப்பையாக அமைக்கப்படுவது.

151 அகன்ற விரிப்பு—நிலத்தில் விரிப்பதற்குரிய பெரிய கம்பலம்.

152 சமந்தபத்திரகம்—கவசத்திற்குரியதாகச் செய்யப்படுவது.

153 பிங்கிசி—இதன் இலக்கணத்தை நோக்கக் குடையாகும் எனப் புலப்படுகின்றது.

154 அபசாரகம்—இதுவும் குடையைக் குறிப்பதாகும். முன்னது விரிந்த நிலையிலமைக்கப்படுவது; இது விரிக்கவும் சுருக்கவும் கூடியது.

விலங்குமயிராலுண்டாவன [155]சம்புடிகை [156]நாற்கோண முடையது கட்டில் விரிப்பு [157]நெய்தற்பாய் மேலாடை [158]சத் தளிகை என்பனவாம்.

[159]வாங்ககம் பௌண்டிரகம் சௌவருணகுட்டியகம் எனப் பட்டு மூன்று வகைப்படும். அவற்றுள் வாங்ககம் வெண்மையும் வழுவழுப்புமுடையது. பௌண்டிரகம் கருமையும் நீலமணி போன்ற ஒளியும் உடையது. சௌவருண குட்டியகம் கதிரவனைப் போன்ற செம்மைநிறவொளியுடையது. [160]மணிநீர்நெய்தல் ஒத்தபடிநெய்தல் கலந்துநெய்தல் எனப் பட்டுநெய்தல் மூன்று வகைப்படும். இப்பட்டுக்கள் [161]ஓரிழை ஈரிழை மூவிழை நான் கிழைகளாலும், அரையளவு கூடிய இழைகளாலும் நெய்யப்படும்.

ஈண்டுக் கூறியவாற்றால் காசியிலும் புண்டரநாட்டிலும் உண் டாகும் பட்டுக்கள் [162]கூறப்பட்டனவாம்.

---

155 சம்புடிகை—முழங்கால் வரை அணியப்படுவது.

156 நாற்கோணமுடையது-கூரிய நுனியின்றி ஒன்பதங்குலக் கோணங் களோடு அமைக்கப்படுவது.

157 நெய்தற்பாய்—பாய்போல நெய்யப்பட்டது.

158 சத்தளிகை—இது நிலத்தில் விரித்தற்குரியது.

159 வாங்ககம் முதலிய மூன்றும் முறையே வங்க நாட்டிலும் புண்டர நாட்டிலும் காமரூபநாட்டிலுள்ள சுவர்ணகுட்டியம் என்னுமிடத்திலும் உண்டாவன.

160 நெய்தல்வகை மூன்றனுள் மணிநீர்நெய்தல் என்பது கைம்மணிக் கட்டாலிழுத்து நீரால் நனைத்து நெய்தலாம். ஒத்தபடிநெய்தல் என்பது ஒத்த அளவினதாக வேற்றுநூலும் வேற்றுநிறமும் கலவாத பட்டுநூலால் நெய்தலாம். கலந்துநெய்தல் என்பது பருத்திநூலும் பட்டுநூலும் கலந்து வேற்று நிறத்துடன் நெய்தலாம்.

161 நீளத்திலும் குறுக்கிலும் ஒவ்வோரிழையாகவும், இரண்டிரண்டிழை யாகவும் மும்மூன்றிழையாகவும் நந்நான்கிழையாகவும் அமைத்தும் நீளத் தில் ஒன்றும் குறுக்கில் இரண்டுமாதல் மாறியாதல் இங்ஙனம் முறையே இரண்டு மூன்று நான்கிழைகளில் ஒவ்வொன்று குறைத்தமைத்தும் நெய்யலாமென்பது கருத்து. ஒருபால் ஒன்றும் மற்றொருபால் இரண்டும் ஆக மூன்றிழைகளாலாவதைப் பாதியாக்கினுல் ஒன்றரையாகுமாதலின் அஃது அரையளவு கூடியதாகும். இங்ஙனமே இரண்டு மூன்று நான்கிழை களுக்கும் கொள்க. ஓரிழையால் நெய்யப்படுவது மெல்லியதாகவிருத்தலின் சிறந்ததாகும். ஈரிழை முதலியவற்றுல் நெய்யப்படுவன முறையே ஒன்றற் கொன்று தாழ்ந்ததென்பது கருத்து.

162 ஓரிழையாலாம் பட்டைத் துகூலம் என்றும் அதற்கு மேற்பட்ட இழைகளாலாம் பட்டை க்ஷௌமம் என்றும் கூறுவர்.

மகதம் புண்டரம் என்னும் நாடுகளிலும் சுவர்ணகுட்டியம் என்னுமிடத்திலும் உள்ள [163]நாகலிங்கம் எலுமிச்சை மகிழ் ஆல் என்னும் இம்மரங்கள் [164]உலண்டுப் புழுவின் [165]எச்சில் நூல் உண்டாதற்குரிய இடங்களாம். நாகலிங்க [166]மரத்தில் உண்டாகும் பட்டுநூல் மஞ்சள் நிறமும் எலுமிச்சைமரத்திலுண்டாவது கோதுமை நிறமும் மகிழமரத்திலுண்டாவது வெண்மை நிறமும் ஆலமரத்திலுண்டாவது வெண்ணெய் நிறமும் உடையனவாம்.

அவற்றுள் சுவர்ணகுட்டியத்திலுண்டாம் பட்டுநூல் சிறந்ததாகும். இதனால் [167]கௌசேயம் என்னும் பட்டும் சீனதேசத்திலுண்டாம் சீனப்பட்டுக்களும் [168]கூறப்பட்டபடியாம்.

[169]மதுரை கோங்கணநாடு கலிங்கநாடு காசிநகர் வங்கநாடு வற்சநாடு [170]எருமைநாடு என்னும் இவ்விடங்களிலுண்டாகும் பருத்திநூலாடைகள் சிறந்தனவாம். இவ்வளவில் நொய்மைப் பொருளைப்பற்றிய செய்திகள் முடிந்தன.

சுலோகங்கள்

(1—2) இங்கே [171]கூறப்பட்டவைகளினும் வேறான இரத்தினம்முதலியவைகளையும் அவற்றின் [172]அளவு விலை [173]இலக்கணம்

---

163 நாகலிங்கம் — பாம்பினால் கவிக்கப்பெற்ற இலிங்கம்போன்ற உருவத்தைத் தன்னுட்கொண்ட பூவுள்ள மரம்.

164 உலண்டுப்புழு—பட்டுநூல் நூற்கும் ஒருவகைப்புழு.

165 வாயினின்றும் உண்டாவதால் எச்சில்நூல் எனப்பட்டது ; பட்டுநூல் நூற்றற்கு இது முதற்காரணமாகும்.

166 இங்கே மரம் என்றது அதனிலையை உணர்த்தும்.

167 கௌசேயம்—புழுக்கூட்டிலிருந்து எடுக்கப்படுவது; கோசம்—புழுக்கூடு. இதுவும் பட்டுநூல் நூற்றற்கு முதற்காரணமாகும்.

168 உலண்டுப்புழுவின் எச்சில்நூலுண்டாதற்குரிய இடங்களும் அதன் நிறங்களும் இவற்றிற்கும் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

169 மதுரை—பாண்டியநாட்டின் தலைநகர். இஃது அந்நாடு முழுவதையும் குறிக்கும்.

170 எருமைநாடு — மைசூரைத் தலைநகராகக் கொண்ட நாட்டைக் குறிக்கும்.

171 கூறப்பட்டவைகள்—முத்து முதல் பருத்திநூலாடை வரையுள்ள பதினேழுமாம்.

172 அளவு—குன்றி எடை அங்குலம் முதலியனவாக நாற்பது நாற்பத்தொன்றும் அத்தியாயங்களிற் கூறப்படும்.

173 இலக்கணமாவது—பாற்குடத்திலிட்ட நீலமணியால் அப்பால் முழுதும் நீலநிறமாதலும், எடுக்கப்பட்டதும் இயற்கை வெண்ணிறமாதலும் போல்வது ; இவ்விலக்கணமுடைய நீலமணி சிறந்ததாகும்.

[174]சாதி [175]உருவம் [176]காக்குமுறை [177]புதியவாகச் செயற்படுத்தல் [178]பழையன புதுப்பித்தல் [179]மறைவுச்செயல் [180]கருவிகள் [181]காலம் இடங்களுக்குத் தகப் பயன்படுத்தல் [182]கேட்டின் எதிர்ச்செயல் என்னுமிவற்றை அறிந்துகொள்ளல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் பதினொராம் பிரகரணம் "கருவூலத்தியை திருமணியாய்தல்" என்னும் முப்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

174 சாதி—பொருநைநதிக்கண் உண்டாதல் முதலிய பிறப்பு.

175 உருவம்—நிறமும் வடிவுமாம்.

176 முத்து முதலியவைகளைப் பாதுகாக்கும் முறை.

177 புதியவாகச் செயற்படுத்தல்—சுரங்கத்தினின்றும் எடுத்த இரத்தினத்தைச் சாணையிடல் துளைத்தல் முதலியன.

178 பழையன புதுப்பித்தல்—அறவே பயன்படுத்தாமையாலும் மிகுதியாகப் பயன்படுத்தினமையாலும் உண்டான சிதைவைத் திருத்தி அமைத்தல். உதாரணமாக முத்திற்கு உண்டாம் சிதைவைப் பின்வரும் சுலோகத்தால் உரையாசிரியர் எடுத்துக்காட்டுவர். இடையறுது அணிதலாலும் அறவே அணியாமையாலும் புகை நெருப்பு வியர்வை இவற்றின் இயைபாலும் நிலம் நீர் உப்பு இவற்ருலும் முத்து மணிகளின் நிறம் வேறுபடும்.

179 மறைவுச்செயல்—மணி முதலியவற்றின் நிறமாற்றம் வேற்று நிறமுண்டாக்கல் தேய்த்தல் முதலியன.

180 கருவிகள்—சாணை முதலியன.

181 காலம் இடங்களுக்குத் தக மணி முதலியவற்றைக் கொள்ளல் விற்றல் செய்யப்படவேண்டும் என்பதும் குளிர்ந்த காலமிடங்களில் கம்பலத்தையும் வெப்பமான காலமிடங்களில் நூலாடையையும் உபயோகப்படுத்த வேண்டும் என்பதும் கருத்து.

182 கேட்டின் எதிர்ச்செயல் — பட்டு முதலியவற்றைக் கடிக்கும் எலி முதலியவற்றைப் போக்குதற்குப் பூனையை விடுதல் முதலியனவும், புழு எலி முதலியவற்ருல் கடிக்கப்பட்ட ஆடைகளைத் தைத்துத் திருத்தல் முதலியனவுமாம். இவ்வத்தியாயத்திற் கண்ட பொருள்களைச் சுருக்கி ஓர் உரையாசிரியர் பின்வருமாறு கூறுவர். முத்து, மணிகள் (மாணிக்கம் வைடூரியம் நீலம் படிகம்), வயிரம், பவழம் என இரத்தினங்கள் நான்கு வகைப்படும். திண்மைப் பொருள்கள் ஐந்து வகைப்படும். அவற்றுட் சந்தனமும் அகிலும் தலையாயவை. தைலபருணிகமும் பத்திரச்சிரியமும் இடையாயன. காலேயம் கடையாயது. தோல் ஆட்டுமயிர் விலங்குமயிர் மென்பட்டு வன்பட்டு பருத்திநூலாடை உலண்டுவாய்நூல் புழுக்கூட்டு நூல் என்னும் இவையெட்டும் நொய்மைப் பொருள்களாம். குப்பியப் பொருள்கள் குப்பியத் தலைவன் படைக்கலத் தலைவன் என்னும் பிரகரணங்களிற் கூறப்படும் ஆதலின் இங்கே கூறப்பட்டில. முத்து முதலியவெல்லாம் பதினேழு வகைப்படும் என்பது.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பன்னிரண்டாம் பிரகாரணம்—[1] ஆகரத் தொழினிலை

முப்பத்துமூன்றும் அத்தியாயம்

[2]சுற்பநூல் [3]தாதுப்பொருணூல் [4]இரசவியல்பு [5]பாகமுறை [6]மணிநிறம் என்னும் இவற்றை அறிந்தவனும் இவ்வறிவுடையாரைத் துணையாகவுள்ளவனுமாகிய ஆகரத் தொழிற்றலைவன் அத்தொழிலையே பரம்பரையாக மேற்கொண்ட தொழிலாளரையும் உரிய [7]கருவிகளையும் உடையனாய் [8]கிட்டம் [9]குகை கரி சாம்பல் என்னும் இவற்றை அடையாளமாகவுடைய முன்னுள்ள ஆகரத்தையும் [10]மண் கல் [11]இரசம் முதலிய தாதுப்பொருள்களையுடையதும் சிறந்த நிறமும் எடைமிகுதியும் மிக்கமணமும் மிக்கசுவை

33-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஆகரம்—பொன் மணி முதலியன விளையுமிடம். அவ்விடத்தைக் காண்டற்குரிய நெறிகளும் பொன் முதலியவற்றை எடுத்தற்கு மேற்கொள்ளும் செயல் முதலியவைகளும் இதன்கட் கூறப்படும். கருவூலத்திற் சேர்க்கத்தக்க மணி முதலியவற்றின் இயல்புகள் முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டன. இதன்கண் அம் மணி பொன் முதலியன உண்டாதல் கூறப்படுதலின் பிரகரணவியைபு புலனாதலறிக.

[2] சுற்பநூல்—தாதுப்பொருள்களையுடைய நிலத்தைப்பற்றிக் கூறும் சாகலம் முதலிய நூல்கள்; அன்றிச் சுற்பம் செம்பு எனக்கொண்டு செம்பு வெள்ளி பொன் முதலியவற்றின் இயல்பைக்கூறும் நூல் சுற்பநூல் என்பதுமாம்.

[3] தாதுப்பொருள் — ஆகரங்களில் எடுக்கப்படும் பொன் கந்தகம் முதலியன.

[4] இரசவியல்பு—பாதரசத்தை மணியாக்குதல் முதலியன.

[5] பாகமுறை—பொன் முதலியவற்றைப் புடமிடும் முறை.

[6] மணி நிறம்—இரத்தினம் முதலியவைகளை நிறவேற்றுமை செய்தல்.

[7] கருவிகள்—மண்வெட்டி துருத்தி குறடு சாணை முதலியன.

[8] கிட்டம்—இரும்பு முதலிய உலோகங்களிலிருந்து விலக்கப்பட்ட துரு முதலிய அழுக்குகள்.

[9] குகை—உலோகம் முதலியவற்றை உருக்குதற்குரிய பாத்திரம்.

[10] ஈண்டு மண் கல் முதலியன தாதுப்பொருள்களோடு கலந்தனவாம்.

[11] இரசம்—ஈண்டுப் பாதரசமும் நீரும் ஆம்.

யும் உடையதுமாகிய புதிய ஆகரத்தையும் [2]ஆராய்ந்தறிதல் வேண்டும்.

ஆகரக் கலையால் [13]அறியப்பட்ட இடப்பகுதிகளையுடைய மலைகளின் [14]பிலம் [15]குகை [16]தாழ்வரை [17]செயற்கையறை [18]மறைவறை என்னும் இவற்றின் உள்ளே ஊறிப் பெருகுகின்றதும் நாவற்கனி மாங்கனி பனம்பழம் முதிர்ந்த மஞ்சள் துண்டு அரிதாரம் தேன் சாதிலிங்கம் வெண்டாமரை கிளியிறகு மயிற்றோகை என்னும் இவற்றை ஒத்த நிறமுள்ளதும் பக்கங்களில் தன்னிறத்தை ஒத்த நிறம் வாய்ந்த நீரும் [19]கொடி செடிகளும் அமையப்பெற்றதும் வழுவழுப்பும் தூய்மையும் எடைமிகுதியும் உடையதும் ஆகிய [20]நீர் பொன்னுடைமையைப் புலப்படுப்பதாகும்.

நீரிற்றெளித்தால் எண்ணெய்போற் பரவுவதும் அந்நீரின் சேற்றழுக்கைத் திரட்டி அடிப்படுத்துவதுமாகிய [22]பொன்னீர் [23]நூறுமடங்கு மிகுதியாகிய செம்பு வெள்ளிகளின் மேற்படின்

---

[12] புதிய ஆகரத்திலுள்ள தாதுப்பொருள்கள் தலை இடை கடையாம் தரங்களுள் இன்னவென்பதை அவற்றின் நிறங்களைக்கண்டும் எடைமிகுதியை நிறுத்தும் மணத்தை முகர்ந்தும் சுவையை நாவாற் சுவைத்தும் ஆராய்ந்தறியவேண்டும் என்பது கருத்து.

[13] முன்னையோரால் அறியப்பட்டது என்பதூஉமாம்.

[14] பிலம்—மலையினடிப்பாகத்தில் இயற்கையினமைந்த நிலவறை.

[15] குகை—மலைமேல் இயற்கையினமைந்த அறை.

[16] தாழ்வரை—மலையின் அடிப்பக்கத் திடங்கள்.

[17] செயற்கையறை—உளியாற் கல்லைத் துளைத்தமைக்கப்பட்ட அறை.

[18] மறைவறை—இதுவும் செயற்கை யறையே ; தகட்டுக்கல்லால் மூடப்பட்ட வழியுடையது.

[19] தன்னிறத்தையொத்த நிறமுடைய என்னும் அடைமொழியைக் கொடிசெடிகளுக்கும் கூட்டுக.

[20] இத்தகைய நீர்சுரக்கும் மலைப்பகுதிகளில் பொன் இருக்குமென்பது கருத்து ; மண் கல் நீர் ஆகிய மூன்றனுள் நீர் இறுதிகட் கூறப்பட்டிருப்பினும் ஏனையவற்றை நோக்க நீர், மாறுபடாத மிக்கபயனை எளிதில் தரற்பாலதாகலின் அதனியல்பு முதற்கட் கூறப்பட்டது.

[21] பொன்னீரின் இலக்கணம் வேறொருபடியாகக் கூறப்படுகின்றது.

[22] பொன்னீர் — பொன்னுடைமையைப் புலப்படுத்துவதாகிய மேற்காட்டிய நீர்.

[23] தெளிக்கப்படும் (நீரின்) தன் அளவின் நூறுமடங்கென்பது கருத்து.

அவற்றைப் பொன்னுக்கும் [24]வேதகப் பொருளாகும்.

அப்பொன்னீரையொத்த நிறமும் மிக்கமணமும் மிக்கசுவையும் உடையதும் ஆகிய இரசப்பொருளை [25]சிலாசத்து என்று [26]அறிதல் வேண்டும்.

பொன்னிறமுடையதும் செந்நிறமுடையதும் பொன்மையும் செம்மையுங்கலந்த நிறமுடையதுமாகிய மண்ணுங்கல்லு[27]மாகிய தாதுப்பொருள்கள் உடைக்கப்படின் [28]நீலக்கீற்றுக்களையுடையனவாகவும் பயறு உழுந்து எட்சோறு என்னும் இவற்றையொத்த நிறமுடையனவாகவும், தயிர்த்துளி தயிர்க்கட்டி போன்ற சிறிய பெரிய புள்ளிகளை யுடையனவாகவும் மஞ்சள் கடுக்காய் தாமரையிலை நீர்ப்பாசி [29]ஈரல் மண்ணீரல் குங்குமம் என்னும் இவற்றையொத்த நிறமுடையனவாகவும் மீண்டும் சிறியனவாக உடைக்கப்படின் நுண்ணிய மணல்களையும் கீற்றுக்களையும் புள்ளிகளையும் [30]சுவத்திக வடிவத்தையும் பரற்கற்களையும் ஒளியினையும் உடையனவாகவும் நெருப்பினுற் சுடப்படின் வெடித்தலின்றி மிக்க புகையையும் [31]நுரையையும் வெளிப்படுத்துவனவாகவும் காணப்படும். இவை செம்பினையும் வெள்ளியையும் [32]வேதித்தற்குப் பொடித்துப் பயன்படுத்துதற்குரிய [33]சுவர்ணத் தாதுப் பொருள்களாம்.

---

[24] வேதகம்— இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்குவது.

[25] சிலாசத்து—உபதாதுப் பொருள்களில் ஒன்று.

[26] சிலாசத்தென்னும் இப்பொருள் பொன்னீரையொத்த நிறம் மணம் சுவை இவற்றை யுடையதாயினும் எண்ணெய்போலப் பரவுதலும் சேற்றழுக்கைத் திரட்டியடிப்படுத்துதலும் இன்மையால் அப்பொன்னீரின் வேறாகுமென்பதை யுணர்த்துதற்கு ஈண்டுக் கூறப்பட்டது.

[27] ஆகிய இம்மூவகைத் தாதுப்பொருள்களென்பது கருத்து.

[28] நீலக்கோடு முதலியன உடைக்கப்பட்ட நடுப்பகுதியிற் காணப்படும் என்பது கருத்து.

[29] ஈரல்—கருமைநிறமுடைய இறைச்சித் துண்டம்.

[30] சுவத்திகம்—முக்கோணமமைந்த கோட்டு வடிவம்.

[31] நுரை—ஈரமுடைமையாற் சூடுதாக்கியவுடன் உண்டாவது.

[32] வேதித்தல்—தாழ்ந்த உலோகங்களை உயர்ந்தனவாக மாற்றுதல்.

[33] பொன்னுண்டாக்குதற்குக் காரணமாகிய தாதுப்பொருள்கள் என்பது.

[34]வெள்ளியாகிய தாதுப்பொருள்கள் சங்கு கருப்பூரம் படிகம் வெண்ணெய் காட்டுப்புரு மாடப்புரு [35]விமலகமணி மயிற்கழுத்து நீலமணி கோமேதகம் அக்காரம் சருக்கரைப்பாகு குராமலர் தாமரைமலர் பாதிரிப்பூ [36]கலாயமலர் காயாமலர் [37]அதசீபுட்பம் என்னும் இவற்றையொத்த நிறமுடையனவாகவும் வெள்ளீயம் காரீயம் இவற்றை உடையனவாகவும் நாற்றமுடையனவாகவும் உடைக்கப்படின் [38]வெண்மைநிறத்திற் கருமையும் கருமைநிறத்தில் வெண்மையும் வாய்ந்தனவாகவும் இவ்வெல்லாவற்றினும் கீற்றுகளும் புள்ளிகளும் வாய்க்கப்பெற்று மென்மையுடையனவாகவும் காணப்படும். இவை நெருப்பினாற் சுடப்படின் வெடித்தலின்றி மிக்க புகையையும் நுரையையும் வெளிப்படுத்துவனவாம்

தாதுப்பொருள்கள் [39]எல்லாம் எடை மிகுதியாகக் காணப்படின் [40]சாரமானபகுதி மிகுதியாகவிருக்கும். அவற்றுள் [41]தூய்மையில்லாதனவும் [42]மறைந்த சாரமுடையனவுமாகிய தாதுக்கள் [43]காரமான மூத்திரத்தாலும் [44]காரமான சாம்பலாலும் [45]தூய்மை

---

34 வெள்ளியுண்டாக்குதற்குக் காரணமாகிய தாதுப்பொருள்கள் என்பது.

35 விமலகமணி—உட்பிரிவுமணி பதினெட்டனுள் ஒன்று.

36 கலாயம்—ஒருவகைத் தானியம்.

37 அதசீ—இது காயாவின் ஒரு வகை.

38 உடைந்த பகுதி சிலவற்றில் சுற்றிலும் வெண்மைநிறமும் நடுவிற் கருமைநிறமும் வேறு சிலவற்றில் சுற்றிலும் கருமைநிறமும் நடுவில் வெண்மைநிறமும் காணப்படும் என்பது கருத்து.

39 எல்லாம் என்பது இதுகாறும் கூறப்பட்டனவும் இனிக் கூறப்படுவனவுமாகிய தாதுப்பொருளைக் குறிக்கும்.

40 சாரம்—உலோகப்பகுதி.

41 தூய்மையின்மை—தாழ்ந்த வேற்றுப்பொருட் கலப்பினால் உண்டாயது.

42 மறைந்தசாரம் இயற்கையிலாயது.

43 காரமான மூத்திரம்—மக்களுடைய சிறுநீர் எனவும் யானை குதிரை பசு கழுதை யாடு என்னும் இவற்றின் மூத்திரம் எனவும் கூறுவர்.

44 காரமான சாம்பல்—நாயுருவி முதலியவற்றை எரித்து உண்டாக்குவது.

45 தூய்மை செய்தல்—மேற்கூறிய மூத்திரமும் சாம்பலும் கலந்த கலவையால் அடிக்கடி நனைத்துச் சுத்திசெய்தல்.

செய்யப்பட்டுக் கொன்றை ஆல் உகாய் கோபித்தம் கோரோசனை என்பவற்றாலும் எருமை கழுதை ஒட்டகம் என்னும் இவற்றின் மூத்திர புரீடங்களாலும் [46]பிண்டமாகச் செய்தல் [47]பொடித்துக் கலத்தல் [48]பூசுதல் என்னும் இவற்றுள் ஒன்றால் [49]மிகவும் தூய்மை யுடையனவாய்ச் சாரப்பகுதியை வெளிப்படுத்துவனவாம்.

யவநெல் உழுந்து எள் புரசு உகாய் என்னுமிவற்றை எரித்து ஆக்கிய சாம்பலோடும் ஆவின்பால் யாட்டுப்பால் இவற்றோடும் கலந்த வாழைக்கிழங்கு [50]வச்சிரக்கிழங்குகளைப் பொடித்துச் சேர்த்தலால் (பொன் வெள்ளிகளுக்கு) மென்மைத்தன்மை உண்டாம்.[51]

சுலோகம்

எண்ணெய் நெய் அக்காரம் [52]மதுமூலம் [53]கந்தளீகம் என்னும் இவற்றோடு கூடிய தேன் [54]மதுகம் யாட்டுப்பால் இவற்றால் மும்முறை நனைக்கப்படின் பலவகையாகச் சிதறிக்கிடக்கும் கடினமான பொன் முதலிய தாதுக்கள் மென்மைத் தன்மை [55]எய்துவனவாம்.

---

46 கொன்றை ஆல் முதலியவற்றின் சாறுகளையும் கோரோசனை சிறுநீர் முதலியவற்றையும் கலந்து முன்னர் மூத்திரத்தாலும் சாம்பலாலும் தூய்மை செய்யப்பட்ட தாதுக்களைப் பொடித்துச் சேர்த்து உண்டையாகச் செய்ய வேண்டும் என்பது கருத்து.

47 பொடித்துக் கலத்தல்—கொன்றை ஆல் முதலியவற்றின் பட்டையைத் தூளாக்கி மூத்திர புரீடங்களோடும் சேர்த்துக் கலத்தல்.

48 பூசுதல்—அவற்றைத் தாதுப்பொருள்களின்மேல் தடவுதல்.

49 மிகவும் தூய்மையுடையவாதல்—வேற்றுப்பொருட் கலப்பினாலும் இயற்கையாகவும் நேர்ந்த குற்றம் அறவே நீங்குதல்.

50 முதனூலிலுள்ள வச்சிரகந்தம் என்பதற்கு வனசூரணக்கிழங்கு என்றும் விஷ்ணுகந்தம் என்றும் பொருள் கூறுவர்.

51 இத்தொடர்மொழியில் யவநெல் தொடங்கி யாட்டுப்பால் வரையுள்ள பகுதியை முன்வாக்கியத்தோடு சேர்த்துப் பொன் வெள்ளித் தாதுக்களைத் தூய்மையாக்குதற்கும் வாழைக்கிழங்கு தொடங்கி முடியும் வரையுள்ள பகுதியை மென்மையாக்குதற்கும் கொள்வாருமுளர்.

52 மதுமூலம்—பற்பல பொருள்களைக்கொண்டு ஆக்கப்படும் சாராயத்திற்குப் புளிப்பேற்றும் மூலப்பொருள்.

53 கந்தளீகம்—தாமரைக்கொட்டை வாழை ஒருவகைக்கொடி.

54 மதுகம்—இருப்பை ; ஒருவகைக் கொடியுமாம்.

55 இது பொன் முதலிய தாதுக்களை மென்மைப்படுத்தற்குக் கூறப்பட்ட மற்றோர் உபாயமாகும்.

[56]ஆவின் பல் கொம்பு இவற்றைச் சேர்த்தலால் மென்மைத் தன்மைக்குத் தடையுண்டாம்.

[57]செம்பு என்னும் தாதுப்பொருள் எடைமிகுதியும் வழுவழுப்பும் மென்மைத் தன்மையும் வாய்ந்த கல்லாகவும் மண்ணாகவும் காணப்படும். [58]பொன்மையும் பசுமையும் [59]பாதிரிப்பூநிறமும் செம்மையும் அதற்குரிய நிறங்களாம்.

காரீயம் என்னும் தாதுப்பொருள் காக்கைநிறம் போன்ற கருமையும் புருவண்ணமும் கோரோசனைநிறமும் வெள்ளிய கீற்றுக்களின் நிறைவும் தீநாற்றமும் உடையதாகும்.

வெள்ளீயம் என்னும் தாதுப்பொருள் [60]களர்நிலத்தையொத்த பலவகை வண்ணங்களையும் [61]சுடுமண் நிறத்தையும் உடையதாகும். [62]இரும்பு என்னும் தாதுப்பொருள் [63]சிறிய பரற்கற்கள் வடிவில் வெண்மையும் கருமையும் கலந்த நிறத்தினையும் நொச்சிமலர் போன்ற வண்ணத்தையும் உடையதாகும்.

[64]வைகிருந்தகம் என்னும் தாதுப்பொருள் காக்கைமுட்டை [65]பூர்ச்சத்தின் இலை என்னும் இவைபோன்ற நிறத்தையுடையதாகும்.

---

[56] பசுவின் பல்லையும் கொம்பையும் பொடித்து மென்மைத்தன்மையடைந்த பொன் முதலியவற்றிற் சேர்ப்பின் அம்மென்மை நீங்கி இறுகும் என்பது கருத்து.

[57] பொன் வெள்ளித் தாதுக்களின் இயல்பைக் கூறி முடித்துத் தாமிர தாதுவைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

[58] பிங்கலவண்ணம் என்பது முதநூல். இதற்குப் புகர்நிறம் என்றும் கூறுப.

[59] பாதிரிப்பூநிறம்—குறைந்த செந்நிறத்திற்குக் கூறப்பட்டது.

[60] களர்நிலம்—உவர்நிலம்.

[61] சுடுமண்நிறம்—ஒருவகைச் செம்மையுடையது.

[62] இரும்பு—இதனைத் தீக்ஷ்ண தாது என்று முதநூல் கூறும். ஏனைய தாதுக்களினும் இது கடினமுடையதாகலின் இவ்வாறு கூறப்பட்டது.

[63] முதநூலில் குரும்பம் என்னுஞ்சொல் இப்பொருளை உணர்த்துமென்பர் உரையாசிரியர்.

[64] வைகிருந்தகம்–உலோகவகைகளுள் ஒன்று; இக்காலத்தில் அஃதின்னதென்று புலப்படவில்லை.

[65] பூர்ச்சம்--மரவகைகளுள் ஒன்று.

மணிகளுண்டாகும் தாதுப்பொருள் தெளிவு வழுவழுப்பு ஒளி [66]ஒலி [67]மிக்ககுளிர்ச்சி குறைந்தநிறம் என்னும் இவற்றை யுடையதாகும்.

தாதுப்பொருள்களினின்றும் [68]கிடைத்த பொருளை [69]அத்தொழிற்பொருட்டுப் பயன்படுத்தல் வேண்டும்.

[70]பொற்கலம் முதலிய வாணிகத்தொழில்செய்யும் [71]இடத்தை [72]ஓரே வாயிலுடையதாக அமைத்தல்வேண்டும். அஃதல்லாத வேற்றிடத்திற் செய்வோர் வாங்குவோர் விற்போர் ஆகிய இவர்களுக்குத் [73]தண்டம் விதித்தல் வேண்டும்.

[74]இரத்தினங்களல்லாத ஆகரப்பொருள்களைக் களவு செய்வோர்க்கு அப்பொருளளவின் எண்மடங்கு தண்டம் இறுக்கச் செய்தல் வேண்டும்.

---

66 மணியுண்டாகும் தாதுப்பொருள் சுடப்படினும் உளியினால் உடைக்கப்படினும் பேரொலி உண்டாகும் என்பது கருத்து.

67 இயற்கையிற் குளிர்ந்திருத்தலும் நெருப்பிலிட்டு எடுத்தவுடன் விரைவிற் குளிர்தலும் உள வென்பது.

68 கிடைத்த பொருளாவது—சிறிய முயற்சியினாலும் சிறிது பொருட்செலவினாலும் முதலில் உண்டாகிய பொன் முதலிய பொருள்களாம்.

69 அத்தொழில்—பொன் வெள்ளி முதலிய எடுத்தற்குரிய ஆகரத்தொழில்; ஆகரத்தொழிலினின்றும் கிடைக்கும் ஊதியத்தை மீண்டும் அத்தொழிற்பொருட்டுச் செலவிடல்வேண்டும் என்றது முதலில் ஊதியம் கிடைத்தால் மேலும் அத்தொழிலிற் றலைப்படலாம் என்பதைப் புலப்படுத்தற்கு.

70 பொற்கலம்—பொன்னாலாக்கப்படும் பாண்டம் முதலியன.

71 இடம்—ஈண்டு அத்தொழிற்பொருட்டு அவ்விடத்தில் அமைக்கப்படும் இல்லத்தைக் குறிக்கும்.

72 களவு முதலியன நிகழாவாறு எளிதிற் பாதுகாத்தற்பொருட்டு ஓரே வாயிலிருக்கவேண்டும் என்பது கருத்து.

73 தண்டம் என ஈண்டுப் பொதுவாகக் கூறினும் இக்குற்றத்திற்கு இருபத்தைந்து பணம் விதித்தல்வேண்டும் என்று இவ்வத்தியாயத்திற் பின்னர்க் கூறுப; அறநிலையாட்சி (3-ஆம் அதிகரணம்) சிறுபகை களைதல் (4-ஆம் அதிகரணம்) என்னும் அதிகரணங்களில் வாணிகஞ் செய்யப்படும் பொருள்களின் அளவிற்கேற்பக் குற்றத்திற்குத்தகத் தண்டம் என்று கூறப்படுதலால் ஈண்டுப் பொதுவாகத் தண்டம் என்று கூறப்பட்டது.

74 இரத்தினங்களல்லாத என்றமையால் இரத்தினக்களவு செய்வோர்க்குக் கொலைத்தண்டம் விதிக்கப்படும் என்பது கருத்து.

[75]பொருட்டண்டத்தால் உபகரிக்கப்பட்டுப் பொருளிறுக்காதவனையும் கள்வனையும் [76]அநுமதிபெறுமல் தொழில்செய்வோனையும் விலங்கிட்டு வேலைசெய்வித்தல் வேண்டும்.

மிக்க பொருட்செலவும் பெருமுயற்சியும் மேற்கொண்டு பயன் பெறத்தக்க ஆகரத்தைக் [77]கூறுகொண்டாதல் விலைகொண்டாதல் பிறரிடம் கொடுத்தல் வேண்டும். [78]எளிதிற் பயன்பெறத்தக்க ஆகரத்தைத் தானே தொழிற்படுத்தவேண்டும்.

[79]உலோகத்தலைவன் செம்பு காரீயம் வெள்ளீயம் வைகிருந்தகம் பித்தளை [80]விருத்தம் வெண்கலம் [81]தாலம் இரும்பு என்னும் இவைபற்றிய தொழில்களையும் இவ்வுலோகங்களாலாகிய கலங்களின் வாணிகத் தொழிலையும் செய்வித்தல் வேண்டும்.

[82]இலச்சினைத்தலைவன் [83]நான்கிலொருகூறு செம்பும் இரும்பு

---

75 நீதிபதியால் உறுப்புக் குறைத்தலாகிய தண்டம் விதிக்கப்பட்ட பெருங்குற்றவாளிகள் வேண்டுகோட் கிரங்கி அவ்வுறுப்புக் குறைத்தற்கு மாருக அவர்கட்குப் பொருட்டண்டம் விதிக்கலாமென்பதும் அப்பொருளைச் செலுத்தவில்லையாகுல் அதற்குத்தக விலங்கிட்டு வேலைசெய்வித்தல் வேண்டுமென்பதும் கருத்து.

76 அரசன்கட்டளை பெருமல் ஆகரத்தொழில் செய்வோன் என்பது கருத்து.

77 கூறுகோடல்—செலவையும் ஊதியத்தையும் கணக்கிட்டு இவ்வளவு தரவேண்டுமென்று வரையறை செய்துகொள்ளுதல்.

78 எளிதிற் பயன்பெறுதலாவது—சிறிது பொருட்செலவும் சிறுமுயற்சியும் மேற்கொண்டு பயன்கோடல்.

79 ஆகரத் தொழிற்றலைவனுக் குட்பட்ட உலோகத்தலைவன் இலச்சினைத்தலைவன் உப்புத்தலைவன் முதலியோரின் செயன்முறைகளைக் கூறத் தொடங்குகின்ருர்.

80 விருத்தம்—உறுதியான ஒருவகை இரும்பு.

81 தாலம்—மிக்க ஓசையுடன் கூடிய வாச்சியக் கருவிக்குப் பயன்படும் ஒருவகை உலோகம்.

82 இலச்சினை—பணம் முதலிய நாணயங்களுக்கிடும் முத்திரை.

83 பதினுறு உழுந்தளவு எடை கொண்டது ஒரு பணமாகும். அதனில் நான்கில் ஒருகூறு நான்குழுந்தெடையாகும். வெள்ளி நாணயமாகிய ஒரு பணம் பதினேருழுந்தெடை வெள்ளியும் நான்குழுந்தெடை செம்பும் வெள்ளீயம் முதலியவற்றில் ஒருழுந்தெடையும் சேர்த்து ஆக்கப்படல் வேண்டும். அரைப்பணம் முதலியவற்றிற்கும் இங்ஙனமே கணக்கிட்டுச் சேர்த்து ஆக்க வேண்டும் என்பது. வெள்ளி மிகுதியாகக் கலந்திருத்தல் பற்றி இது வெள்ளிநாணயம் என்று வழங்கப்படும்.

வெள்ளீயம் காரீயம் அஞ்சனம் என்னுமிவற்றுள் ஒன்றில் ஒருழுந் தளவும் சேர்த்து வெள்ளி நாணயமாகிய பணத்தைச் செய்தல் வேண்டும். [84]இங்ஙனமே அரைப்பணம் காற்பணம் அரைக்காற் பணங்களையும் கணக்கிட்டுச் செய்தல்வேண்டும்.

[85]காற்கூறுமதிப்புடைய செம்புக்காசு மாடகம் என்னும் பெயரினதாகும். அதன் அரைக்கூறு காற்கூறு அரைக்காற்கூறு களையுடைய காசுகள் முறையே அரைமாடகம் காகணி அரைக் காகணி என்று கூறப்படும்.

[86]வண்ணக்கன், நாட்டில் வழங்குதற்பொருட்டும் கருவூலத்திற் றொகுத்தற் பொருட்டும் பணத்தின் [87]வழங்கன் முறையை ஏற் படுத்தல் வேண்டும். நூற்றுக்கு எட்டுவிகிதமுள்ள [88]உருவிகத் தையும் நூற்றுக்கு ஐந்துவிகிதமுள்ள [89]வாசியையும் நூற்றுக்கு அரைக்கால்விகிதமுள்ள [90]ஆராய்ச்சிக் கூலியையும் ஏற்படுத்தல் வேண்டும். [91]வேறாகச் செய்வோர் விற்போர் வாங்குவோர் ஆராய்

---

84 இங்ஙனமே என்றதால் முக்காற்பணம் முதலியவற்றிற்கும் கணக் கிட்டுச் செய்துகொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

85 காற்கூறு — முன்கூறிய வெள்ளிப்பணத்தின் நான்கிலொருகூறு. செம்பு பதினொரு உழுந்தளவெடையும் வெள்ளி நான்குழுந்தளவெடையும் வெள்ளீயம் முதலியவற்றில் ஒன்றில் ஒருழுந்தளவெடையும் சேர்த்துச் செய்யப்படுவது மாடகம் என்னும் செம்புக்காசாகும். அரைமாடகம் முதலியவற்றிற்கும் இவ்வாறே கணக்கிட்டுக்கொள்ளல் வேண்டும் என்பது.

86 வண்ணக்கன்—நாணய பரிசோதகன்.

87 வழங்கன்முறை—செலாவணிமுறை ; நாட்டில் வழங்குதற்கும் கரு வூலத்திற் றொகுத்துவைத்தற்கும் முறையே முத்திரையிட்ட காசுகளாகவும் கட்டிவடிவினவாகவும், பொன் வெள்ளி முதலியவற்றைக் கணக்கிட்டு வரையறை செய்தல்வேண்டும் என்பது கருத்து.

88 உருவிகம்—நூற்றுக்கு எட்டுவிகிதம் செலவாவது. வெண்பொற் காசு முதலியவற்றிற்கு இலச்சினையிடும் தொழிற்சாலையிலுள்ள பணியா ளர்க்கு நூற்றுக்கு எட்டுவிகிதம் கூலி கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

89 வாசி—நூற்றுக்கு ஐந்துவிகிதம் செலவாவது. இஃதரசனுக்குச் செலுத்தவேண்டிய கூறாகும்.

90 ஆராய்ச்சிக் கூலியாவது — நாணயபரிசோதகற்குக் கொடுக்கப் படுவது.

91 வேறாக—அரசியல் விதிக்கு மாறாக.

வோர் என்னும் இவர்களுக்கு [92]இருபத்தைந்துபணம் தண்டம் விதித்தல் வேண்டும்.

ஆகரத்தொழிலதிகாரி சங்கு வைரம் மாணிக்கம் முத்து பவழம் உப்பு என்னும் இவற்றைப்பற்றிய [93]தொழில்களையும் [94]வாணிகத்தையும் செய்வித்தல் வேண்டும்.

உப்பளத்தலைவன் [95]விளைந்து முற்றிய உப்பையும் [96]பகுதி யுப்பையும் [97]வரையறை யுப்பையும் உரியகாலத்திற் றொகுத்து வைத்தல் வேண்டும். அவற்றை விலைப்படுத்தலால் பண்டத்தின் விலைப்பொருள் ஆராய்ச்சிக்கூலி [98]வாசி என்னுமிவற்றையும் கணக்கிட்டுக்கொள்ளல் வேண்டும்.

அயல்நாட்டினின்றும் விற்றற்பொருட்டு வரும் உப்பில் ஆறி லொருகூறு (அரசற்கு) [99]கொடுத்தல் வேண்டும். அக்கூறும் அளவு வாசியும் கொடுத்த வணிகன் [100]அவற்றை விற்றற்பொருட்டு நூற்றுக்கு ஐந்துவிகிதமுள்ள [101]வாசியையும் [102]ஆராய்ச்சிக் கூலி

---

92 கள்ளநாணயங்கள் கண்டுபிடிக்கப்படின் அவற்றைப் பறிமுதல் செய்வதோடு இருபத்தைந்து பணம் தண்டமும் விதித்தல்வேண்டும் என்பது.

93 தொழில்களாவன—சங்கை அறுத்தலும் மெருகிடலும் வைரம் முதலியவற்றைத் தூய்மை செய்தலும் சாணைபிடித்தலும் உப்பினை விளைவித்தலும் ஆம்.

94 வாணிகம்—சங்கு முதலியவற்றை விற்றலும் வாங்குதலும் ஆம்.

95 விளைந்து முற்றிய உப்பு—அரசனுடைய் பணியாளரால் ஆக்கப் படுவது.

96 பகுதியுப்பு—பிறராலெடுக்கப்படும் உப்பில் அரசனுக்குரிய கூறு.

97 வரையறையுப்பு—இத்துணை அளவுள்ள நிலத்தில் எடுக்கப்படும் உப்பில் அரசற்கு இவ்வளவென்று வரையறை செய்யப்படுவது.

98 வாசி—மீண்டுமளக்குங்கால் குறையாமைப் பொருட்டு நூற்றுக்கு ஐந்துவிகிதம் மிகுத்து வாங்கப்படுவது.

99 அயல்நாட்டு வணிகன் கொடுத்தல்வேண்டும் என்பதாம்.

100 அவற்றை என்பது அரசற்குரிய கூற்றையும் அதற்குரிய வாசியையும் குறிக்கும்.

101 ஈண்டுக்கூறிய வாசி அரசிறையாகும்.

102 ஆராய்ச்சிக்கூலி நூற்றுக்கு அரைக்கால் விகிதமாகும்.

யையும் [103]உருவிகத்தையும் கொடுத்தல் வேண்டும். அப்பொருளை வாங்குவோர் சுங்கப்பொருளையும் அரசனது விலைப்பண்டத்தினின்றும் குறைதலை நிரப்புதற்குரிய பொருளையும் கொடுத்தல் வேண்டும். [104]வேற்றிடத்தில் வாங்குவோன் அறுநூறு பணம் தண்டம் இறுத்தல் வேண்டும்.

[105]கலவையுப்பு விற்பவனும் அரசனது அநுமதிபெறுமல் உப்புவிற்றுப் பிழைப்பவனும் உத்தமசாகச தண்டம் இறுக்கக் கடவர். வானப்பிரத்தனுக்கு [106]இது விலக்காகும். வேதம் ஓதுபவனும் எளியவனும் உடலுழைப்பாற் பணிசெய்வோனும் [107]உணவிற்கு வேண்டிய அளவு கொள்ளலாம்.

இங்குக் [108]கூறப்பட்டவர்களல்லாத [109]பிறர், உப்பு வெல்லம் [110]வகைகளைச் செய்வாராயின் அவர் [111]சுங்கம் மாத்திரம் கொடுத்தல் வேண்டும்.

சுலோகங்கள்

(1—2) இங்ஙனம் விலை [112]பகுதி [113]வாசி [114]ஊதியம்

---

103 உருவிகம்—பணியாளர் கூலிப்பொருட்டு நூற்றுக்கு எட்டுவிகிதம் கொடுக்கப்படுவது.

104 வேற்றிடத்தில் வாங்குவோன்—தன்னரசனது நாட்டில் உப்பிருக்குங்கால் வேற்றுநாட்டிற் பெறுவோன்.

105 கலவையுப்பு—மண்முதலியன கலந்த உப்பு.

106 இது—அரசனுடைய அநுமதி பெறவேண்டும் என்னும் விதி.

107 வாணிகத்தின்பொருட்டுக் கொள்ளலாகாதென்பது கருத்து.

108 கூறப்பட்டவர்கள்—வாணிகத்தொழில் புரிவோரும் வானப்பிரத்தன் முதலியோரும் ஆவர்.

109 பிறர்—அந்நாட்டுக் குடிமக்கள்.

110 உப்பு வெல்லங்களின் வகைகளை முப்பத்தாறும் அத்தியாயத்திற் காண்க.

111 சுங்கம்—கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது; வரி.

112 பகுதி—ஆறிலொருகூறு.

113 வாசி — நூற்றுக்கு ஐந்துவிகிதம் பெறப்படுவதும் அளவுவாசியுமாம்.

114 ஊதியம்—ஆகரத்திற்கொண்ட பொருளை மேலும் அத்தொழிலில் செலவிட்டு ஈட்டிய இலாபம்.

[115]தண்டவரையறை சுங்கம் [116]குறையிடு [117]ஒறுத்தல் ஆராய்ச்சிக் கூலி உருவிகம் தாதுப்பொருள் விலைப்பண்டம் என்னும் இப் பன்னிரண்டனையும் ஆகரங்களின் முகமாக [118]உண்டாக்கிக் கொள்ளல்வேண்டும். இங்ஙனமே எல்லா விலைப்பண்டங்களினும் சிறந்தன கோடற்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

(3) [119]ஆகரத்தாற் கருவூலப்பொருளும் கருவூலத்தால் அரச நீதியும் உண்டாவன. கருவூலம் அரசநீதி என்னுமிவற்றால் பொருள்மலிந்த நிலவுலகம் அடையப்படும்.

இரண்டாம் அதிகரணம் பன்னிரண்டாம் பிரகரணம்
"ஆகரத்தொழினிலை" என்னும் முப்பத்துமூன்றும்
அத்தியாயம் முற்றிற்று.

---

115 தண்ட வரையறை—நீதிநூல்கள் வரையறுத்த உத்தமசாகசம் முதலிய தண்டத்தினளவு.

116 குறையீடு—நஷ்ட ஈடு.

117 ஒறுத்தல்—குற்றத்திற்குத்தகத் தண்டித்தல்.

118 இங்கே கூறப்பட்ட விலை முதலிய பன்னிரண்டனையும் ஆகரத் தொழிலின் நிமித்தம் வரையறை செய்துகொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

119 இச்சுலோகத்தால் ஆகரவருவாயின் சிறப்புக் கூறப்பட்டபடியாம்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பதின்மூன்றும் பிரகாணம்—[1] அக்கசாலையிற் பொற்றெழிற்றலைவன்

முப்பத்துநான்காம் அத்தியாயம்

பொன்வினைத் தலைவன் பொன் வெள்ளி சம்பந்தமான தொழில் செய்தற்கு ஏற்றதாகவும் [2]நெருக்கமின்றி இருத்தற்குரிய தாகவும் [3]நாற்கட்டும் ஒரு வாயிலும் உடையதாகவும் அக்கசாலை யைச் செய்வித்தல் வேண்டும். அங்காடித்தெரு நடுவண் [4]சிற்ப வன்மையும் நற்குடிப்பிறப்பும் [5]நம்பிக்கையும் உடைய [6]பொன் வினைஞனை இருத்தல் வேண்டும்.

[7]சாம்பூநதம் [8]சாதகும்பம் [9]ஆடகம் [10]வைணவம் [11]சிருங்கி

34-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அக்கசாலை—பொன் முதலிய உலோகத்தொழில் செய்யுமிடம். தலை வன் என்பது ஈண்டு அவன் செயலையுணர்த்தும். ஆகரத்தொழினிலை என் னும் முன்னைப் பிரகரணத்தில் அரசனது கருவூலத்திற்குச் சிறந்தனாகிய பொன் வெள்ளி முதலியன உண்டாதல் கூறப்பட்டது. அவற்றின் இயல்பு சாதி நிறம் குணம் குற்றம் முதலியனவும் ஈட்டல் காத்தல்களும் இப்பிர கரணத்திற் கூறப்படுதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது; இதனுற் பிரகரணவியைபு புலனும்.

[2] தொழில்செய்வோர் நெருக்கமின்றி இருத்தற்குரியதாக அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[3] ஒன்றுக்கொன்று எதிர்முகமாக அமைக்கப்படும் நான்கு கட்டுக்களை யுடைய இல்லம்.

[4] சிற்பம்—அணிகலன்கள் அமைக்கும் முறையும் மணி முதலியன பதிக்கும் முறையுமாம்.

[5] நம்பிக்கை—அறவுபதை முதலியவற்றின் ஆராய்ச்சியாலுண்டாவது.

[6] பொன்வினைஞனுடைய தொழின்முறை அடுத்துவரும் முப்பத்தைந் தாம் அத்தியாயத்திற் காண்க.

[7] சாம்பூநதம்—மேருமலையிலிருந்து தோன்றும் சாம்பூநதியில் உண்டா வது; இது நாவற்கனியின் சாறுபோன்ற நிறமுடையது.

[8] சாதகும்பம்-இது சதகும்பம் என்னும் மலையிலுண்டாவது; தாமரை மலரின் அகவிதழ்போன்ற நிறமுடையது.

[9] ஆடகம் — ஆடகமென்னும் நாட்டிலுள்ள ஆகரத்திலுண்டாவது; பெருங் குறிஞ்சிமலர்போன்ற பொன்மை நிறமுடையது.

[10] வைணவம்—வேணு என்னும் மலையிலுண்டாவது; இது கோங்கு மலர்போன்ற நிறமுடையது.

[11] சிருங்கிசுத்திசம் — சுவர்ணபூமியாகிய பர்மாநாட்டிலுண்டாவது; இது மனேசிலை நிறமுடையதென்ப.

சுத்திசம் எனப் பொன் ஐந்து வகைப்படும். [12]இயற்கைப்பொன் [13]இரசவாதப்பொன் [14]ஆகரப்பொன் எனத் தோற்றமுறைபற்றி மூன்று வகைப்படும்.

தாமரைப்பூவின் அகவிதழ்போன்ற நிறமும் [15]மென்மைத் தன்மையும் வழுவழுப்பும் [16]ஓசையின்மையும் ஒளியும் உடைய பொன் மிகச் சிறந்ததாகும். செம்மையும் பொன்மையுங்கலந்த நிறமுடைய பொன் சிறந்தவற்றுள் நடுத்தரமாகும். செந்நிற முடைய பொன் சிறந்தவற்றுட் கடைத்தரமாகும்.

பசுமை வெண்மை கலந்த நிறமுடையதும் வெண்ணிற முடையதும் [17]இழிந்த பொன்னாகும். அஃது எப்பொருளின் கலப்பால் இழிந்ததாயிற்றோ அப்பொருளின் எடைக்கு நான்குமடங்கு ஈயத்தைச் சேர்த்துத் [18]தூயதாக்கல் வேண்டும். ஈயத்தின் கலப்பினாற் சிதறுபடுமாயின் காய்ந்த எருமுட்டைகளால் மூடி ஊதல் வேண்டும். திணிந்திருத்தலாற் சிதறுபடுமாயின் எண்ணெயிலும் சாணத்திலும் அடிக்கடி தோய்த்தல் வேண்டும்.

ஆகரத்தினின்றும் உண்டாகும் பொன் ஈயத்தின் கலப்பினாற் சிதறுபடுமாயின் [19]பாகபத்திரங்களையிட்டு மரப்பலகைகளில்

---

12 பிறப்புமுறைபற்றி மூவகைப்படுத்திக் கூறத் தொடங்குகின்றார்; அவற்றுள் இயற்கைப்பொன் என்பது இயற்கையாகவே மற்றொரு பொருளின் கலப்பின்றித் தங்கமாக விளைவது.

13 இரசவாதப்பொன்—செம்பு முதலிய உலோகங்களை வேதிப்பதால் உண்டாவது.

14 ஆகரப்பொன்—ஆகரங்களில் எடுக்கப்படும் கல் மண் முதலியவற்றி னின்றும் உண்டாவது.

15 தீயாற் காய்ச்சப்படாதபொழுதும் மென்மையுடையதென்பது.

16 மாற்றுயர்ந்த பொன்னைத் தட்டிப்பார்த்தால் ஓசை குறைந்திருக்கும் என்பது கருத்து.

17 இழிவு, வேற்று லோகக்கலப்பால் உண்டாவது.

18 தூயதாக்கல்—முன்கலந்த வேற்றுலோகமும் பின்கலந்த ஈயமும் அறவே நீங்கும்படி காய்ச்சியெடுத்தல்.

19 பாகபத்திரம்—ஒருவகைப் பச்சிலையாகும்.

வைத்தடித்தல் வேண்டும். அல்லது [20]கந்தலி [21]வச்சிரகந்தக் குழம்பினால் நனைத்தல் வேண்டும்.

[22]துத்தோற்கதம் [23]கௌடிகம் [24]காம்புகம் [25]சாக்கிரவாளிகம் என வெள்ளி நான்கு வகைப்படும். வெண்மையும் வழுவழுப்பும் மென்மைத்தன்மையு முடையது சிறந்ததாகும். இவற்றின் [26]மாறுபட்டுச் சிதறுபட்டிருப்பது தாழ்ந்ததாகும். [27]இதனை நான்கு மடங்கு ஈயத்தால் தூய்தாக்கல் வேண்டும். [28]மேற்குமிழிதோன்றல் தெளிவு ஒளியுடைமை தயிர்வண்ணம் என்னும் இக்குணங்கள் தூய்மையின் இலக்கணமாகும்.

மஞ்சள் துண்டு போன்ற நிறமுடைய தூயபொன் பதினாறுழுந்தளவு எடைகொண்டது [29]ஒரு வண்ணகமாகும். அதன்கட் காலுழுந்தளவெடை செம்புசேர்த்து அவ்வளவெடை பொன் எடுக்கப்படல் வேண்டும் (இஃது ஒரு கலப்பு வண்ணகமாகும்). இங்ஙனமே [30]நான்குழுந்தளவெடை வரை செம்பு சேர்த்து அவ்

---

[20] கந்தலி—வாழை; ஒருவகைக் கொடியுமாம்.

[21] வச்சிரகந்தம்—விஷ்ணுகந்தம்; வனசூரணமுமாம். வச்சிரம் என்பதற்குச் சீபேரம் எனவும், கந்தம் என்பதற்குத் தாமரைக்கிழங்கெனவும் பொருள்கொள்வர் இதன் உரையாளர்.

[22] துத்தோற்கதம்—துத்தம் என்னும் மலையிலுண்டாவது; சாதிமலர் போன்ற நிறமுடையது.

[23] கௌடிகம்—காமருபநாட்டிலுண்டாவது; தகரமலர் நிறமுடையது.

[24] காம்புகம்—கம்பு என்னும் மலையிலுண்டாவது.

[25] சாக்கிரவாளிகம் — சக்கிரவாளமென்னும் ஆகரத்திலுண்டாவது; இவ்விரண்டும் முல்லைமலர் போன்ற நிறமுடையன.

[26] மாறுபாடு—கருமையும் சொரசொரப்பும் வன்மைத்தன்மையும் ஆம்.

[27] இதனை—தாழ்ந்தவெள்ளியை. ஈயத்தோடு கலந்து அது கழியும் வரை நெருப்பிற் காய்ச்சுதலால் தூய்தாகும் என்பது.

[28] கலப்புவெள்ளியை உருக்குங்கால் மேற்குமிழி தோன்றுதல் முதலியன காணப்படுமாயின் தூய்தாயிற்று என்பது கருத்து.

[29] வண்ணகம் என்பது பொற்காசைக் குறிக்கும்.

[30] காலுழுந்தளவெடை தொடங்கி முறையே கால் கால் விகிதமாக நான்குழுந்தளவெடை வரை செம்பைப் பொற்காசிற் சேர்த்து அவ்வளவெடை பொன்னை முறையே எடுத்துவிடுவதால் பதினாறு கலப்புவண்ணகங்களாகும் என்பது கருத்து. கலப்புவண்ணகம் பதினாறும் சுத்தவண்ணகம் ஒன்றும் ஆகப் பதினேழாகுமென்பது.

வளவெடை வரையுள்ள பொன்னை எடுப்பதால் பதினாறு (கலப்பு) வண்ணகங்களாகும்.

[31]பொன்னை முதலில் உரைத்துப் பின்னர் [32]ஆணிப்பொன்னை உரைத்தல் வேண்டும். பள்ளமேடில்லாத உரைகல்லில் ஒத்த வண்ணமும் கோடுந்தோன்ற உரைத்தல் [33]வேண்டும். [34]அழுந்த உரைத்தல் [35]அழுந்தாது உரைத்தல் [36]உகிரிடையிலுள்ள அரிதாரப் பொடியைத் தூவுதல் என்னும் [37]இவை வஞ்சித்தலாம். [38]கோமூத்திரத்திற் கலந்த சாதிலிங்கத்தையாதல் அரிதாரத்தையாதல் விரல் நுனியிற் பூசிக்கொண்டு பொன்னுரையில் தடவினால் அது வெண்மை நிறமுடையதாகும்.

தாமரைமலரின் சிறிய [39]அகவிதழ் போன்ற நுண்வரிகளும் வழுவழுப்பும் மென்மைத்தன்மையும் ஒளியும் உடைய [40]உரைவரி நிறம் சிறந்ததாகும்.

பாசிப்பயறு போன்ற நிறமுடைய கலிங்கநாட்டில் (மகேந்திர மலையில்) உண்டாகிய கல்லும் (ஆரட்டநாட்டில்) தாபி என்னும்

---

31 உரைகல்லில் உரைத்தல் வெட்டிப்பார்த்தல் உருக்குதல் ஆகிய மூன்றும் பொன்னின் மாற்றை ஆராய்தற்குரிய உபாயங்களாகும்; உரைகல்லில் அப்பொன்னை முதலில் உரைத்து அதன்கீழ் மாற்றளவிடுதற்குரிய ஆணிப் பொன்னை உரைத்தல்வேண்டும் என்பது கருத்து.

32 ஆணிப்பொன்—மாற்றறுதிசெய்து அளவைப்பொருட்டு வைக்கப் பட்ட ஆணி வடிவமான பொன்.

33 இங்ஙனம் உரைத்தல் நேரிய முறையாகும்.

34 அழுந்த உரைத்தல் விற்பவன் மாற்றுயர்வு காட்டுதற்பொருட்டு.

35 அழுந்தாது உரைத்தல் வாங்குவோன் மாற்றுக்குறைவு காட்டுதற் பொருட்டு.

36 விற்பவன் பிறரறியாவாறு நகத்தினிடையில் மஞ்சணிறமான அரிதாரப்பொடியைக் கரந்துவைத்து மாற்றுக்குறைந்த பொன்னுரையில் தூவுதல் என்பது கருத்து.

37 இவை—இம்மூன்று செயலும்.

38 இச்செயல் வாங்குவோனது வஞ்சகச்செயலாகும்.

39 அகவிதழ்—பூ நடுவணுள்ள பொகுட்டைச் சூழ்ந்திருக்கும் மெல்லிய இதழ்கள்.

40 உரைவரிநிறம்—உரைகல்லில் உரைக்கப்பட்ட கோடுகளின் வண்ணம்.

யாற்றில் உண்டாகிய கல்லும் உரைகல்லுட் சிறந்தனவாம். ஒரே நிறமுடைய கல், விற்போன் வாங்குவோன் இருவர்க்கும் நலம் பயப்பதாகும். [41]யானைத்தோல் போன்ற நிறமுடையதும் பசுமை நிறமுடையதும் ஆகிய கல், நிறத்தை[42]யுயர்த்துக் காட்டுதலால் [43]விற்பனைக்கு நலமாவதாம். திண்மையும் சொரசொரப்பும் பல் வகை நிறமுடைய கல், நிறத்தைக் [44]குறைத்துக் காட்டுதலால் (விலை கொடுத்து) கொள்ளுதற்கு நலமுடையதாகும்.[45]

வெட்டுத்துண்டு, [46]நெய்த்திருத்தல் [47]ஒத்தவண்ணம் வழு வழுப்பு மென்மைத்தன்மை ஒளி இவற்றையுடையதாக இருப்பின் சிறந்ததாகும். உருக்கப்பட்ட பொன் உள்ளும் புறமும் ஒத்த வண்ணமுடையதாய் தாமரைமலரின் அகவிதழ்போன்ற நிறம் அல்லது பெருங்குறிஞ்சிப்பூப் போன்ற நிறமுடையதாகவிருப்பின் சிறந்ததாம். புகர்நிறம் அல்லது கருமைநிறம் உடையது இழிந்த தாகும்.

நிறுத்தலளவையை 'துலைமுதலளவையின் நிலையாராய்தல்' (அதி. 2. அத். 40) என்னும் பிரகரணத்திற் [48]கூறுவோம். ஆங்குக் கூறிய முறைப்படி வெள்ளியையும் பொன்னையும் கொடுத்தல் வாங்குதல் செய்தல்வேண்டும்.

அக்கசாலையில் வேலையில்லாதவன் செல்லலாகாது. [49]மீறிச் செல்வோன் தண்டிக்கப்படுவான். வேலை செய்வோனும் வெள்ளி

---

41 யானைத்தோல் போன்ற சொரசொரப்பும் உலர்ச்சியும் நிறமும் உடையதென்பது கருத்து.

42 உயர்த்துக்காட்டல்—மாற்றுக்குறைவுள்ள பொன்னை மாற்றுயர்ந்த தாகக் காட்டுதல்.

43 விற்பனை—என்டுப்பொன் விற்றலைக்குறிக்கும்; பின்வருங் கொள்ளு தலுமது.

44 குறைத்துக்காட்டுதல்—மாற்றுயர்ந்த பொன்னை மாற்றுக் குறைந்த தாகக் காட்டுதல்.

45 இத்துணையும் உரைகல்லில் உரைத்தாராய்தல் கூறப்பட்டது; இனி வெட்டிப்பார்த்தாராய்தல் கூறப்படும்.

46 நெய்த்திருத்தல்—நெய்ப்பசையுடையதாகவிருத்தல்.

47 ஒத்த வண்ணம்—உள்ளும் புறமும் ஒத்த நிறம்.

48 இது மொழிவாமென்னும் உத்தி.

49 மீறிச் சேறல்—தடையைப் பொருட்படுத்தாமல் புகுதல்.

பொன் என்னும் [50]இவற்ருேடு செல்வாஞயின் [51]அவற்ருேடு தண்டமும் இறுக்கக்கடவன். [52]பொன்செய்வோர் பொன்மணி செய்வோர் [53]மணியிழைப்போர் அணிகலன்சமைப்போர் என்னும் இவரும் உலையூதுவோர் சிறுபணியாளர் [54]பொற்றுகள் கழுவுவோர் என்னுமிவரும் ஆடை கை மறைவிடங்கள் பரிசோதிக்கப்பட்டு அக்கசாலையுள் போக்குவரவு செய்தல் வேண்டும். இவர்களுடைய எல்லா உபகரணங்களும் [55]தொழில் முடிவுருத சிறப்பப்பொருள் களும் அவ்வக்கசாலையிலேயே இருத்தல் வேண்டும். [56]பெற்றுக் கொண்ட பொன்னையும் தொழில் முடிவுற்ற சிறப்பப்பொருளையும் [57]கணக்கர் சான்ருக நிறுத்துக்கொடுத்தல் வேண்டும். நாடோறும் மாலைப்பொழுதில் [58]செய்பவன் செய்விப்போன் என்னுமிருவரும் இலச்சினையிட்டுவைத்துக் காலைப்பொழுதில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

[59]கேவணத்தொழில் [60]ஞாண்வினை சிற்றணிவினை என்பன (பொன் வெள்ளி முதலியவற்றைப்பற்றிய) தொழில்களாம். அவற்றுட் கேவணத்தொழில் மணியிழைத்தலாம். ஞாண், பொன் னிழையால் ஆக்கப்படும் அரைஞாண் முதலியன. சிற்றணி, [61] திட்ப

---

50 வேலை செய்வோனும் பொன் வெள்ளி முதலியவற்ருேடு புகுதலாகா தென்றது, வெளிப்படுங்கால் பரிசோதனையில் அவர்பால் எதுவுமிருத்த லாகாது என்பது கருதியாம்.

51 அவற்ருேடு—அப் பொன் வெள்ளிகள் பறிமுதல் செய்யப்படுவ தோடு.

52 பொன் செய்வோர்—தாதுப் பொருளைப் பொன்னுக்குவோர்.

53 மணியிழைப்போர்—இரத்தின வேலை செய்வோர்.

54 பொற்றுகள் கழுவுவோர்—கரி சாம்பல் முதலியவற்ருேடு கலந்த பொற்றுகளைக் கழுவி அரித்தெடுப்போர்.

55 தொழில் முற்றுப்பெருத அணிகலன் முதலியன.

56 கருவூலத்தினின்றும் தொழில் செய்தற் பொருட்டுப் பெற்றுக் கொண்ட பொன் என்பதாம்.

57 கணக்கர்—அரசியல் வினைஞர்.

58 செய்பவன்—பொற் கொல்லன்; செய்விப்போன்—அத்தொழிற் றலைவன்.

59 கேவணம்—மணியழுத்துங் குழி.

60 ஞாண்—சரடு.

61 திட்பமுடையன—வளை கணையாழி முதலியன.

முடையனவும் [62]உட்டுளையுடையனவும் [63]உண்டைவடிவினவும் [64]பிறவுமாம்.

கேவணத்தொழிற்கு [65]ஐந்திலொருகூறு காஞ்சனமும் பத்திலொருகூறு [66]அழுத்தகமும் அமைத்தல் வேண்டும். காற்கூறு செம்புகலந்த வெள்ளியும் காற்கூறு வெள்ளிகலந்த பொன்னும் நல்லனபோற் காணப்படும். அவ்வாறு கலவாமற் பாதுகாத்தல் [67]வேண்டும்.

பொன்மணியும் இரத்தினமும் கலந்திழைப்பதற்கு (உரிய பொன்னை ஐந்துகூறுபடுத்து) மூன்றுகூறு [68]சுற்றடுக்காகவும் இரண்டுகூறு அடிப்படையாகவும் அமைத்தல்வேண்டும். [69]அல்லது (உரியபொன்னை ஏழுகூறுபடுத்து) நான்குகூறு அடிப்படையாகவும் மூன்றுகூறு சுற்றடுக்காகவும் அமைக்கலாம்.

[70]தகட்டுத்தொழில் வருமாறு :—செப்புக்கலத்தை ஒத்த அளவுடையுள்ள [71]பொன்னேடு சேர்த்தல் வேண்டும். [72]திண்ணி

---

[62] உட்டுளை யுடையன—குண்டிகை கரகம் முதலியன.

[63] உண்டை வடிவின—சதங்கை மணி முதலியன.

[64] பிற என்றதனால் இலை மலர் போன்ற வடிவினவுங் கொள்க.

[65] மணியளவின் ஐந்திலொரு கூறு பதித்தற்குரிய தளமாகவும் பத்திலொரு கூறு மணியின் பக்கத்தில் அழுத்துதற்குரிய பாகமாகவும் அமைக்க வேண்டும் என்பது கருத்து; இஃது இரத்தின குண்டலத்திற்குப் பொருந்துவதாகும்.

[66] அழுத்தகம்—மணிகளை வைத்துச் சிதையாதவாறு பக்கத்தில் பொன் வைத்தழுத்துமிடம்.

[67] இது பிறிதொன்றும் கலவாமல் இரத்தினங்களை மாத்திரம் வைத்திழைக்கும் முறை; பொன் மணியும் இரத்தினங்களும் கலந்திழைக்கும் முறை பின் வருவது.

[68] சுற்றடுக்கு—மணியைச் சூழத் தாமரைமலர் சுவத்திகம் போன்ற உருவங்களாக அமைக்கப்படும் பகுதி.

[69] அழுத்தப்படும் மணி பருமையுடையதாக விருப்பின் அமைக்கும் முறை கூறுகின்றார்.

[70] செம்பு வெள்ளி இவற்றாற் செய்யப்படும் தகட்டுத்தொழில் என்பது கருத்து.

[71] பொன்னேடு—பொன்னாலாகிய திண்ணிய தகட்டோடு.

[72] கண்ணயாழி வளை முதலியன திண்ணியதன் பாற்படும்.

யதும் [73]திண்மையோடு உட்டுளேயுடையதுமாகிய வெண்பொற் கலத்தை அதனிற் பாதியளவு எடையுள்ள [74]பொன்ஞேடு இயைத்தல் வேண்டும். அல்லது [75]நான்கிலொருகூறு பொன்னே இரசம் சாதிலிங்கம் என்னும் இவற்ருலாகிய [76]குழம்பு அல்லது பொடியைக்கொண்டு பூசுதல்வேண்டும்.

தலேயாயதும் நல்லநிறமும் நல்லவொளியும் உடையதும் [77]தமனியமாகும். ஒத்த எடையளவுள்ள காரீயத்தால் தூய்மை செய்யப்பட்டதும் மெல்லிய தகடுசெய்து புடமிடப்பட்டதும் [78]சிந்துநாட்டு உப்பினுல் தேய்த்து ஒளியுண்டாக்கப்பட்டதும் ஆகிய பொன், நீலம் மஞ்சள் [79]வெண்மை பசுமை கிளிப்பிள்ளே நிறம் என்னும் இந்நிறங்களுக்குக் காரணமாகும். இப்பொன்னிற்கு மயிற்கழுத்துப்போன்ற நிறமும் வெண்மையான வெட்டுவாயும் மிக்க ஒளியுமுடைய இரும்பினது நீற்றப்பட்ட [80]மஞ்சள் நிறமான பொடியும் காரணமாகும். கால் உழுந்தளவெடையுள்ள இரும்புத் துகள் பதினறுழுந்தளவெடையுள்ள பொன்னிற்கு நிறம்பயப்பதாகும்.

எலும்புத்தூள் கலந்த குகையில் நான்கு முறையும் சமனெடையுள்ள காரீயத்தோடு கலந்து நான்கு முறையும் காய்ந்த பரற்கற் குகையில் நான்கு முறையும் களிமண்குகையில் மூன்று முறையும் சாணக்குகையில் இரண்டு முறையும் ஆக இங்ஙனம் பதினேழு முறை குகைகளில் உருக்கி எடுத்துச் சிந்துநாட்டு உப்புமண்ணுல் தேய்த்து ஒளியுண்டாக்கப்பட்ட மிக்க தூய்மையுடைய வெள்ளி

---

73 கரகம் குண்டிகை முதலியன திண்மையோடு உட்டுளேயுடையதன் பாற்படும்.

74 பொன்ஞேடு—பொன்னுலாகிய மெல்லிய தகட்டோடு.

75 பூசப்படும் வெண்பொற்கலத்தின் எடையளவின் நான்கிலொரு கூறு என்பது கருத்து.

76 குழம்பு—நீர்வடிவிலாகியது.

77 தமனியம்—ஈண்டு அணிகலன் செய்தற்குரிய பொன்னேக் குறிக்கும்.

78 இதனேச் சிந்துநாட்டுமண் என்பாரும் மலேயுப்பு என்பாரும் உளர்.

79 இங்கே கூறிய ஐவகை நிறவேற்றுமைகளேயும் அடைதற்கு இங்ஙனம் தூய்மை செய்யப்பட்ட பொன் உரியதாகும் என்பது கருத்து.

80 மஞ்சணிறந் தோன்றும்படி நீற்றப்பட்ட பொடி என்பது கருத்து.

யும் [81]காரணமாகும். இவ்வெள்ளியினின்றும் காலுழுந்தளவெடை முதல் இரண்டுழுந்தளவெடை வரை யெடுத்துப் [82]பொன்னிற் சேர்த்து முறையே அவ்வவ்வளவுடைய பொன்னை எடுத்துவிடல் வேண்டும். பின்னர் [83]நிறக்கலவை செய்யத்தக்கது. இங்ஙனம் கலக்கப்பட்ட பொன், வெள்ளியைப்போன்ற வெண்ணிறமுடைய தாகும்.

[84]தமனியத்தின் மூன்றுகூறு கலந்த பொன்னில் முப்பத்தி ரண்டில் ஒருகூறு தூய்மை செய்யப்பட்ட வெள்ளியைக் கலந்தால் அது வெண்மையும் செம்மையும் கலந்த நிறமாகும். அத்துணைச் செம்பைக் கலந்தால் மஞ்சள் நிறத்தை உண்டாக்கும்.

[85]தமனியத்தை (சிந்துநாட்டு உப்புமண்ணால்) தேய்த்து ஒளி

---

81 முன்னர்க் கூறிய தூய பொன், நிறவேற்றுமையடைதற்குக் காரண மாகும் என்பதாம்.

82 பொன்—பதினாறுழுந்தள வெடையுள்ள அத்தூய பொன்னென்பது கருத்து.

83 நிறக்கலவை—முற்கூறிய மஞ்சள் நிறமான இரும்புத் தூளில் காலு ழுந்துள்ளவெடை கலப்பதால் உண்டாவதாம்.

84 இங்குக் கூறியபடி தூய்மை செய்யப்படாத பொன்னை முப்பத்தி ரண்டு கூறுபடுத்து மூன்று கூறு எடுத்துவிட்டுத் தூய்மை செய்யப்பட்ட சிறந்த பொன்னில் அம் மூன்று கூற்றையும் சேர்க்கவேண்டும் என்பதும் அங்ஙனம் சேர்க்கப்பட்ட கலவைப் பொன்னில் முப்பத்திரண்டிலொரு கூறு தூய்மை செய்யப்பட்ட வெள்ளியைச் சேர்ப்பின் அது வெண்மையும் செம்மையும் கலந்த நிறமுடையதாகும் என்பதும் அவ் வொருகூறு வெள்ளி யைச் சேர்க்காமல் அத்துணைச் செம்பைச் சேர்ப்பின் அது மஞ்சள்நிறத்தை உண்டாக்கும் என்பதும் ஒருசாராசிரியர் கருத்து. பிறிதொரு சாரார் கருத்து :—முப்பத்திரண்டு கூற்றில் மூன்று கூறு தூய்மை செய்யப்பட்ட பொன்னும் இருபத்தொன்பது கூறு தூய்மை செய்யப்பட்ட வெள்ளியும் சேர்ப்பின் அது வெண்மையும் செம்மையும் கலந்த நிறமுடையதாகும் என்பதும், இங்ஙனமே இருபத்தொன்பது கூறு செம்பில் மூன்று கூறு தூய்மை செய்யப்பட்ட பொன்னைச் சேர்ப்பின் அது மஞ்சள் வண்ணம் உடையதாகும் என்பதுமாம்.

85 தமனியம் ஈண்டுத் தூய்மை செய்யப்படாத பொன்னை உணர்த்தும் என்பதும், மூன்றில் ஒரு கூறு தூய்மை செய்யப்பட்ட பொன்னென்பதும் ஒரு சாராசிரியர் கொள்கை. பிறிதொரு சாரார் தமனியம் தூய்மை செய் யப்பட்ட பொன்னெனவும் மூன்றிலொரு கூறு செம்பு சேர்க்கவேண்டும் எனவும் கூறுவர்.

யுண்டாக்கி மூன்றில் ஒருகூறு கலப்பின் அது பொன்மையும் செம்மையும் கலந்த நிறமுடையதாகும்.

தூயவெள்ளி இரண்டுகூறும் தூயபொன் ஒருகூறும் [86]கலப்பின் அது பயறுபோன்ற பசுமைநிறமுடையதாகும்.

[87]பாதியளவு இரும்புக்குழம்பினாற் [88]பூசப்பட்ட பொன் கருமைநிறமுடையதாகும். இரசங்கலந்த இரும்புக் குழம்பால் இரண்டுமுறை பூசப்பட்ட தூயபொன் கிளிச்சிறைவண்ணம் உடையதாகும். [89]அவற்றின் தொடக்கத்தில் நிறவேற்றுமைகளை அறிந்துகோடற் பொருட்டு [90]நிறவொப்புப் பகுதியை [91]எடுத்து வைத்தல் வேண்டும்.

இரும்பு செம்பு இவற்றைத் [92]தூய்மைசெய்யும் முறைகளையும் அறிந்துகொள்ளல் வேண்டும். அங்ஙனமே வயிரம் மாணிக்கம் முத்து பவளம் என்னும் இவற்றை [93]மாற்றிக்கவர்தலையும் வெள்ளி பொன் இவற்றாலாகிய கலன்கள் முதலியவற்றின் இணைப்புக்களையும் அளவுகளையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

---

[86] ஈண்டுக் கூறிய நிறவேற்றுமைக்குரிய கலவைகள் எல்லாவற்றிற்கும் மஞ்சள் நிறம் தோன்றும்படி நீற்றப்பட்ட இருப்புத்துகளை முன் கூறிய அளவுப்படி சேர்க்கவேண்டும் என்பதை இயைத்துக் கொள்க.

[87] பாதி என்பது நிறவேற்றுமை நிமித்தம் கூறப்பட்ட மூன்றிலொரு கூறு இரும்பிற் பாதி என்றபடியாம். அங்ஙனமாங்கால் குறிப்பிட்ட பொன்னெடையில் ஆறில் ஒரு கூறென்பது முடிந்த பொருளாம்.

[88] பூசப்பட்ட என்பதனால் கலத்தலாகாதென்பது போதரும்.

[89] அவற்றின் தொடக்கத்தில்—நீலம் முதலிய நிறவேற்றுமைகளை உண்டாக்கத் தொடங்குங்கால்.

[90] நிறவொப்புப் பகுதி—நீலம் முதலிய நிறமூட்டப்பட்ட உலோகப் பகுதி.

[91] அவ்வுலோகத்தின் ஏற்றத் தாழ்வுகளை அறிந்துகொள்ளுதற் பொருட்டுத் தனிப்படுத்தி வைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[92] தூய்மை செய்யும் முறை—தேய்த்துப் புடமிடல் முதலியன; ஆகரப் பொருளாராய்ச்சிநூலின் அறியத்தக்கன.

[93] மாறுகப் போலி மணிகளை வைத்து நல்லனவற்றைக் கவர்ந்து கோடல்; இதனை அறிதல் இழப்பு நேராமை குறித்தாம்.

சுலோகங்கள்

(1—2) [94]ஒத்த நிறமுடைமை [95]ஒத்த இணையாதல் [96]உராயாதமணியுடைமை உறுதிப்பாடு நன்ருகமெருகிடப்படுதல் [97]கலப்பின்மை [98]உறுப்புப்பிரிவு அணியுங்கால் இன்பஞ்செய்தல் அழகுசெய்தல் ஒளியுடைமை அழகியஅமைப்பு [99]ஏற்றத்தாழ்வின்மை உள்ளக்கவர்ச்சி கண்கவர்ச்சி என்னும் இப்பதினுன்கும் பொன்னணிகலன்களின் குணங்களாம்.

இரண்டாம் அதிகரணம் பதின்மூன்ரும் பிரகரணம்
" அக்கசாலையிற் பொற்ருெழிற்றலைவன் " என்னும்
முப்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

94 இச்சுலோகங்களிரண்டாலும் தூயபொன்ஞலாகிய அணிகலன்களுக்குரிய குணங்கள் பதினுன்கையும் கூறுகின்ருர். அவற்றுள் ஒத்த நிறமுடைமையாவது :—அணிகல உறுப்புக்களின் உள்ளும்புறமும் வண்ணம் வேறுபடாமை.

95 அணிகல உறுப்புக்களுள் இரட்டையாகச் செய்யப்படுவன எடையளவாலும் நிறத்தாலும் ஒத்திருத்தல்.

96 உண்டைவடிவமாகச் செய்யப்பட்ட உருக்கள் ஒன்றனேடு ஒன்று உராயாமல் அமைத்தல்.

97 நிற ஒளிகளின் உயர்வு கருதி வேற்றுலோகங்கள் கலக்கப்படாமை.

98 உறுப்புப்பிரிவு—அணிகல உறுப்புக்கள் விளங்கித் தோன்றுமாறு பிரிந்திருத்தல்.

99 இரட்டையமைப்பிலும் நிறவொளிகளிலும் ஏற்றத்தாழ்வில்லாமலிருத்தல்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பதினான்காம் பிரகாரணம்—[1]அங்காடித்தெருவிற் பொன்வினைஞன் செயல்

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

பொன் வினைஞன் நாட்டு நகரத்து மக்களுக்கு வெள்ளி பொன் இவற்றின் [2]தொழிலைச் சிற்பத் திறமை வாய்ந்த பொற்கொல்லரைக் கொண்டு செய்வித்தல் வேண்டும். காலத்தையும் காரியத்தையும் [3]உறுதி செய்துகொண்டு தொழிலைச் செய்யக் கடவர். காரியத்தின் [4]தகுதி நோக்கிக் காலவரையறை செய்து கொள்ளாமலும் தொழிலைச் செய்யலாம்.

[5]காலங்கடப்பின் காற்கூறு குறைந்த அளவு கூலி பெறுதலோடு [6]அக் கூலியளவின் இருமடங்கு தண்டமும் இறுக்கக் கடவன். காரியத்தை [7]வேறாகச் செய்வானாயின் கூலியை இழப்பதோடு [8]அதற் கிருமடங்கு தண்டமும் [9]இறுக்கக் கடவன்.

35-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அங்காடி—கடை ; பொன் வினைஞன்—பொற்பணி முதலியன செய்விப்போன். முன்னைப் பிரகரணத்தில் அங்காடித் தெரு நடுவண் சிற்ப வன்மையும் நற்குடிப் பிறப்பும் நம்பிக்கையுமுடைய பொன்வினைஞனை யிருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டது. அப் பொன்வினைஞனின் செயல் இங்கே கூறப்படுதலின் பிரகரணவியைபு புலனாதலறிக.

[2] தொழில்—அணிகலன் முதலியன செய்யுந் தொழில்.

[3] உறுதி செய்து கொள்ளல்—இன்ன காலத்தில் இன்ன பணியை இன்ன கூலிக்குச் செய்து முடிப்பதென்று வரையறை செய்துகோடல்.

[4] தகுதி—கால நீட்டிப்பில் செய்யத்தக்க பெருமை.

[5] காலம்—வரையறை செய்யப்பட்டது.

[6] பெற்றுக்கொண்ட கூலியளவில்.

[7] வேறாகச் செய்தல்—வளையல் செய்வதாகப் பேசிக்கொண்டு கணையாழி செய்தல்.

[8] அதற்கு—அக்கூலியளவிற்கு.

[9] "சிறுபகைகளைதல்" என்னும் 4-ஆம் அதிகரணத்துக் "காருகராற் றீங்கு நேராமற் காத்தல்" என்னும் பிரகரணத்தில் சிற்பத் தொழிலாளர்க்குரிய எல்லாவிதமான தண்டங்களும் கூறப்படும் ; அங்ஙனமாகவும் இங்கே பொற் கொல்லனுக்கு விசேடமாகத் தண்டம் விதித்தது, ஏனைய சிற்பத் தொழிலாளர்க்கு நீதிபதிமாத்திரம் ஆராய்ந்து தண்டம் விதித்தல் வேண்

தொழிற் பொருட்டுள்ள பொன் வெள்ளிகளை மாற்றுமளவும் பிறழ்ச்சியில்லாமல் கொள்ளலும் கொடுத்தலும் வேண்டும். [10]காலம் வேறுபட்ட விடத்தும் [11]தேய்தல் சிதைதலில்லாத நிலையில் (கொடுத்ததை) [12]அப்படியே பெற்றுக்கொள்ளல் வேண்டும்

பொன் வெள்ளிகளின் சிறந்த [13]நிறம் [14]உருவம் [15]இலச்சினை என்னும் இவற்றைக் கையாளுவதில் ஏற்படும் [16]கரவு கரவின்மைகளைச் சிற்பத் தொழிலாளர்களால் (பொன் வினைஞன்) அறிந்து கொள்ளல் வேண்டும்.

[17]உருக்கப்பட்ட பொன் வெள்ளிகளில் [18]வண்ணகம் ஒன்றுக்குக் கால் உழுந்தளவெடை [19]கழிவு கொடுக்க வேண்டும். நன்னிறமுண்டாதற் பொருட்டுக் காலுழுந்தளவெடை இரும்பும் அதன் [20]இருமடங்கு வெள்ளியும் கலக்கப்பட்டிருக்குமாயின் அதற்கு

டும் என்பதையும் பொற்கொல்லனுக்கு நீதிபதியும் பொன்வினைஞனுங் கலந்து தண்டம் விதித்தல் வேண்டுமென்பதையும் புலப்படுத்தற் பொருட்டாம்.

[10] காலம் வேறுபடுதலாவது :—சிற்பத் தொழிலாளன் நெடுந் தொலைவிலுள்ள வேற்றிடத்திற் றங்குதல் முதலியவற்றாலும் மரணமடைதலாலும் நேர்வது; தொழிலாளன் இறப்பின் அவன் புதல்வர் முதலியோரிடத்தினின்றும் கொடுத்ததைப் பெற்றுக் கொள்ளலும் அவர்க்குக் கூலி கொடுத்தலும் வேண்டும் என்பதும் கருத்து. காலம் மாறுபடல் நாட்டுக் குழப்பத்தாலும் நேர்வதாம்.

[11] தேய்தல் சிதைதல்கள் தொழின்முற்றிய அணிகலன் முதலியவற்றைப்பற்றியவை. அவை சிற்பத்தொழிலாளன் உபயோகத்தால் தேய்தல் சிதைதலுற்றிருப்பின் தண்டம் இறுக்கவேண்டும் என்பது கருத்து.

[12] அப்படியே—அளவும் மாற்றும் பிறழாதபடி; அணிகலன் முதலியனவாகவின்றிக் கொடுக்கப்பட்டபடி பொன் வெள்ளியாக வென்பது கருத்து.

[13] நிறம்—மாற்று.

[14] உருவம்—அணிகலன் பாண்டம் முதலியன.

[15] இலச்சினை—முத்திரைக் காசு.

[16] கரவு—வஞ்சகம்.

[17] உருக்கப்படுதல்—அணிகலன் பண்டம் ஆக்குதற்கு.

[18] வண்ணகம்—பதினாறு உழுந்தளவெடை கொண்டது.

[19] தேய்தல் சிதைதல் குறித்துக் கழித்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[20] இருமடங்கு—அரை உழுந்தளவெடை,

[21] அவ்வளவின் [22]ஆறில் ஒரு கூறு கழிவு கொடுக்கவேண்டும்.

உழுந்தளவெடை பொன்னில் மாற்றுக் குறைவு ஏற்பட்டால் பூர்வ சாகசம் தண்டமாகும். உழுந்தளவு பொன் எடைக் குறைவு ஏற்பட்டால் மத்தியம சாகசம் தண்டமாகும். நிறுத்தலளவை யிலும் தொழின் முற்றிய கலன்களிலும் [23]கரவு ஏற்படின் அதற்கு உத்தம சாகசம் தண்டமாகும்.

பொன்வினைஞனின் [24]அநுமதிபெருமலோ [25]வேறிடத்திலோ அணிகலன் செய்விப்பவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமும் செய்பவனுக்கு [26]இருமடங்கு தண்டமும் ஆம். [27]இது தூய வரவு நெறியுடையோர்க்கு. (செய்விப்போன்) தூய வரவு நெறியிலனு யின் கரவை ஆராய்ந்தறிதற் பொருட்டு அவனை (நீதிமன்றத்திற் கு)ப் போக்கல் வேண்டும். [28]செய்பவனுக்கும் இருநூறு பணம் தண்டமாகும். [29]அல்லது (அவனுடைய) விரல்கள் ஐந்தனையும் வெட்டிவிடவேண்டும்.

நிறுத்தலளவைக்குரிய [30]கருவிகளை அளவுக் கருவித் தலைவ

---

21 அவ்வளவு—கலக்கப்பட்ட முக்காலுழுந்தளவெடை.

22 ஆறிலொரு கூறு அரைக்கால் உழுந்தளவெடையாகும்.

23 கரவு—ஈண்டு எடைக் குறைவை நிரப்புதற்கு தராசிற் செய்யும் வஞ்சகமும், செய்து முடித்த அணிகலன் முதலியவற்றிற் கலப்புமாம்; இங்குக் கூறியவற்ருல் இரண்டுழுந்தளவு மூன்றுழுந்தளவு எடைக்குறை முதலியவற்றிற்கும் இரு மடங்கு மும்மடங்கு தண்டம் விதிக்கத்தக்கதென் பது உய்த்துணரத் தக்கது.

24 அநுமதி பெருமல் உரிய இடத்திலென்பது.

25 அநுமதி பெற்றும் உரியதல்லாத இடத்தில் என்பது.

26 இரு மடங்கு—இருபத்திநான்கு பணம்.

27 இங்கே கூறிய தண்டங்கள், பொன் வெள்ளிகள் தமக்குக் கிடைத்த வரலாற்றை வஞ்சியாமல் வெளிப்படுத்திக்கூறுஞ் செய்பவனுக்கும் செய் விப்போனுக்கும் ஆம் என்பது கருத்து.

28 தூய வரவுநெறியிலன் என்னும் அடையைச் செய்பவனுக்கும் ஏற்றிக் கொள்க.

29 இருநூறு பணம் தண்டம் இறுக்க இயலாதவனுயின் தொழில் செய் தற்குரிய அவன் விரல்களைக் களைந்துவிட வேண்டும் என்பது கருத்து.

30 உபலக்கணத்தால் முகத்தலளவைக்கருவி முதலியனவும் கொள்ளப் படும்; மூலபாடத்தைத் ‘துலாமான பாண்டம்’ என்றுகொள்ளின் துலா பாண்டம் மானபாண்டம் எனப் பொருள்பட்டு உபலக்கணத்தால் கொள் ளும் பொருளை நேரே உணர்த்தும்.

ளிடத்தினின்றும் விலைகொடுத்துப் பெற்று வழங்கல் வேண்டும். [31] இன்றேல் பன்னிரண்டு பணம் தண்டமாகும்.

சிற்பியின் தொழில்கள் [32] திண்ணிதாக்கல் [33] திண்ணிதிற் றுளையிடல் [34] வலிதாக விணைத்தல் [35] மெலிதாக விணைத்தல் [36] தொகுத்தாக்கல் [37] பூசுதல் என்பனவாம்.

[38] சிற்பத் தொழிலில் கவர்ந்துகோடற்குரிய வழிகள் துலைப் பிறழ்ச்சி கலவை மாற்றம் இணைப்பு மாசூட்டல் என்பனவாம்.

[39] வளைத்தற்கேற்றது [40] துளைக்கப்பட்டது [41] தலைபிளந்தது [42] கழுத்துநெருங்கியது இழிந்ததட்டுடையது [43] பக்கங்கோடியது அசைவுடையது காந்தத்தாலாயது என்னும் இவைகள் [44] பிறழ்ந்த துலைகளாம்.

---

[31] இன்றேல்—அக்கருவிகளை உரியதல்லாத இடத்தில் விலைகொடுத்து வாங்கியாதல் தானே ஆக்கிக்கொண்டாதல் வழங்கினுல்.

[32] திண்ணிது—உட்டுளையில்லாமல் திண்ணிதாகச் செய்யப்படும் கலை யாழி முதலியன.

[33] திண்ணிதிற் றுளையிடப்படுவது—உட்டுளையுடன் கூடிய கமண்டலம் முதலியவற்றைக் குறிக்கும்.

[34] வலிதாக இணைத்தல்—வன்மைமிக்க தகட்டுவடிவினவாகச் செய்து பொருத்தல்.

[35] மெலிதாக இணைத்தல்—மெல்லிய தகடுகளாகச்செய்து பொருத்தல்.

[36] தொகுத்தாக்கல்—சிறிய இதழ்களாகச்செய்து அவற்றையெல்லாம் ஒன்றுக வியைத்து மலர்முதலிய வடிவிலமைத்தல்; சிறிய கம்பிகளாகச் செய்து ஒருங்குசேர்த்து ஞாணுக்கலுமாம்.

[37] பூசுதல்—இரசம் முதலியவற்றுல் முலாம் பூசுதல்.

[38] இங்கே பெயரளவிற் குறிக்கப்படும் துலைப்பிறழ்ச்சி முதலியவற்றின் விளக்கங்களைப் பின்னர்க் காண்க.

[39] மெல்லிய உலோகத்தால் ஆக்கப்பட்டு விரும்பினபடி வளைத்தற் குரியது.

[40] இருப்புத்துகள் அல்லது இரசத்தால் நிரப்பப்பட்ட உட்டுளையுடைய துலை என்பது கருத்து.

[41] நுனிப்பகுதியிற் றுளையுடையது; இது காற்றிற்கு எதிர்முகமாகத் தூக்கப்படின் காற்றிறுல் வளைக்கப்படும் என்பது கருத்து; வளைத்தற் கேற்றது முதலிய இம்மூன்றும் துலைத்தண்டைப் பற்றினவாகும்.

[42] துலைக்கயிற்றில் முடிச்சு மிகுதியுடையது.

[43] துலைத்தட்டிற்கும் தண்டிற்கும் இடையிலுள்ள கயிறுகளின் ஏற்றத் தாழ்வால் பக்கங்கோடியதென்பது கருத்து.

[44] வஞ்சித்தற்பொருட்டு ஆக்கப்பட்ட துலைகள் என்பது கருத்து.

[45]இரண்டு கூறு வெள்ளியும் ஒரு கூறு செம்பும் கலந்தது திரிபுடகம் எனப்படும். ஆகரத்திலிருந்து எடுக்கப்படும் பொன்னோடு இது கலக்கப்படின் அது திரிபுடகக் கலவை எனப்படும். செம்பு கலக்கப்படின் செம்புக் கலவை எனப்படும். [46]வேலகம் கலக்கப்படின் வேலகக் கலவை எனப்படும். சமனெடை செம்பொடு கலந்த பொன் கலக்கப்படின் பொற்கலவை எனப்படும்[47].

[48]மூங்கைக்குகை கிட்டம் உலைக்குறடு உலையூதுங் குழல் இடுக்கி உலையாணி வெங்காரம் உப்பு இவை "தூய பொன்" எனக்கூறிக் கலப்பதற்குரிய [49]கருவிகளாம். அல்லது [50]முன்னரே வைக்கப்பட்டுக் குகையுடைந்ததனால் உலையிலிருந்து எடுக்கப்படும் மண்ணுண்டைகளும் கருவிகளாம்.

[51]பின்னர் இணைக்கும் பொழுதும் [52]தகட்டடுக்குகளை ஆராயும்

---

45 இனிக் கலவைகூறத் தொடங்கிக் கலத்தற்குரிய இழிந்த உலோகங்கள் நான்கு வகைப்படும் என்று கூறுகின்றார்.

46 இரும்பும் வெள்ளியும் சமனெடை கலக்கப்பட்டது வேலகம் எனப்படும்.

47 இங்கே கூறிய நான்கு வகைப் பொருள்களையும் கலப்பது அவ்வளவெடைத் தூய பொன்னைக் கவர்ந்து கொள்ளுதற் பொருட்டென்பது கருத்து.

48 மூங்கைக் குகை—இரு கூறாகச் செய்து வாயிலில்லாமல் புணர்க்கப்படும் குகை.

49 தூய பொன்னைக் குகையில் வைத்துருக்கும் பொழுது கிட்டத்தை எடுத்தல்; வெங்காரம் உப்புக்களைச் சேர்த்தல் என்பவற்றைத் தலைக்கீடாகக் கொண்டு திரிபுடகம் முதலியவற்றைக் கலந்து குறடு முதலிய கருவிகளால் அத்தூய பொன்னைக் கவர்ந்துகொண்டு ஆகரத்தில் நின்றும் எடுக்கப்பட்ட பொன் இத்தகையதே என்று கூறல் பொற்கொல்லர் இயல்பு என்பது கருத்து.

50 முன்னரே உலைத்தீயில் வைக்கப்பட்ட பொன்னிறமான மண்ணுண்டைகளின் அளவு தூய பொன்னைக் கவர்ந்துகொண்டு பின்னர்க் குகை உடைந்த காரணத்தை முன்னிட்டு அங்குள்ள மண்ணுண்டைகளைப் பொன்னுண்டைகளாக உரியவன் முன்னிலையிற் காட்டித் தீயினின்றும் எடுத்துக் கலப்பதென்பது கருத்து.

51 முன்னரே செய்யப்பட்டுப் பின்னர் இணைக்கும் காலத்தும் என்பது.

52 செய்யப்பட்ட தகடுகளை ஒன்றனோடொன்று இணைக்க ஆராயும் காலத்தும் என்பது கருத்து.

பொழுதும் [53]வெள்ளியால் மாற்றுதலும் பொன்தாதுப் பொருளுக்கு ஈடாக இரும்புத் தாதுப் பொருளை வைத்தலும் மாற்றமாகும்.

இறுகியது பெயர்க்கத்தக்கது என இணைப்பு இருவகைப்படும். அஃது வலிதாக விணைத்தல் மெலிதாக விணைத்தல் தொகுத்தாக்கல் என்பவற்றில் மேற்கொள்ளப்படும். உள்ளே ஈயத் தகட்டையும் புறத்தே பொற்றகட்டையும் வைத்து இடையே அரக்கு முதலியவற்றால் நெருக்கி இணைத்தல் இறுகிய இணைப்பாகும். (இடையில் அரக்கு முதலியன இன்றி) இவ்விரண்டு தகடுகளையும் பொருத்தும் அவ்விணைப்பே பெயர்க்கத்தக்கதாகும். [54]மெலிதாக இணைத்தலில் பொற்றகட்டை ஒரு பக்கத்திலாதல் இரண்டு பக்கத்திலுமாதல் [55]இயைத்து அப் பொற்றகட்டின் உட்பகுதியில் செம்பு அல்லது வெள்ளி சேர்க்கப்படும்.

தொகுத்தாக்கலில் செம்பினாலாகிய உறுப்புக்களை ஒருபால் பொற்றகடுகளால் மறைத்து மெருகிடல் வேண்டும். அச் செப்புறுப்புக்களையே இரு புறமும் பொற்றகடுகளால் மறைத்து மெருகிடலும் கூடும். [56]மறைத்தற்குரிய மேற்றகடுகள் செம்பு வெள்ளிகளாலும் அமையலாம்.

[57]அவ்விரண்டணையும் உருக்குதல் உரைத்தல் ஒலியுண்டாக்கல்

---

53 வெள்ளியால் மாற்றுதல்—வெள்ளித்தகட்டை உள்ளே செருகி அத்துணை எடையுள்ள பொற்றகட்டைக் கவர்ந்துகொள்ளுதல்.

54 மெலிதாக இணைத்தல் தொகுத்தாக்கல் என்னும் இவ்விரண்டிலும் மேற்கொள்ளப்படும் இணைப்புப் பின்னர்க் கூறப்படுகின்றமையால் இங்கே கூறிய இறுகியது பெயர்க்கத்தக்கது என்னும் இவ்விரண்டும் வலிதாக விணைத்தலின்பாற்படும் என்பது போதரும்.

55 வலிதாக இணைத்தலில் உயர்ந்த உலோகமும் இழிந்த உலோகமும் ஒத்த எடையுள்ளனவாகவும்; மெலிதாக இணைத்தலில் உயர்ந்த உலோகம் எடைக்குறைவாகவும் இழிந்த உலோகம் எடை மிகுதியாகவும் இருக்குமென்பது.

56 மறைத்தற்குரிய மேற்றகடுகள் செம்பு வெள்ளிகளாலும் அமையலாமென்னும் இதனால் மறைக்கப்படும் உறுப்பு அவற்றினுமிழிந்த இரும்பு முதலியவற்றால் அமைக்கப்படும் என்பது கருத்து.

57 அவ்விரண்டணையும்—இறுகியது பெயர்க்கத்தக்கதாகிய இருவகையிணைப்பினையும்.

வெட்டுதல் கீறுதல் என்னுமிச் செயல்களால் ஆராய்ந்து அறியலாம். பெயர்க்கத்தக்க இணைப்புடையதை இலந்தைப் பழச்சாற்றிலாவது உப்பு நீரிலாவது [58]இட்டு ஆராய்தல் வேண்டும். இத்துணையும் இணைப்பைப் பற்றியனவாம்.

துளையிட்ட திண்ணிய வடிவில் [59]பொன்மண் பொன்மாலுகை சாதிலிங்கம் என்னுமிவற்றின் கலவைக் கசட்டை [60]உருக்கிவிட்டுத் தங்கச் செய்யலாம். திண்ணிய [61]கற்குழியில் மணல் கலந்த அரக்கையும் சிந்தூரத்தையும் உருக்கி, அக்குழம்பை விட்டுத் தங்கச் செய்யலாம். [62]அவ்விரண்டனையும் உருக்குதலாலும் அடித்தலாலும் ஆராய்ந்தறியலாம். [63]சிறிய மணிக்கட்டமைப்பில் மெல்லிய பரற்கற்களுடன் உப்பைத் தழலால் உருக்கித் தங்கச் செய்யலாம்; அதனைக் கொதிக்கவைத்து ஆராயலாம். [64]இருமடங்கு ஆழ்ந்த கற்குழியில் [65]அப்பிரகத்தை அரக்கு முதலியவற்றால் பதித்து வைக்கலாம். அவ் வப்பிரகம் பொதிந்த பொற்கலன் நீரிவிடப்படின் அதன் [66]ஒரு பகுதி நீரிற்றாழும். [67]வேறு தகடுகள் வைக்கப்பட்டிருப்பின் ஊசியாற் குத்தி ஆராய்தல் வேண்டும். உட்டுளையுடைய திண்ணிய பொருள்களில் மணிகளும் பொன்னும்

---

58 இடுதலால் உண்டாகும் நிறவேற்றுமையைக்கொண்டு ஆராய்ந்து தெளிதல் வேண்டும் என்பது கருத்து.

59 பொன்மண் பொன்மாலுகை இவ்விரண்டும் ஆகரத்தினின்றும் எடுக்கப்படும் உலோகத்துடன் கலந்த தாதுப்பொருள்.

60 மாசுதங்கிய அளவேடை தூயபொன்னைக் கவர்ந்துகொள்ளலாம் என்பது கருத்து; இங்ஙனமே பின் வருவனவற்றிற்கும் கொள்க.

61 கற்குழி—இரத்தினங்கள் பதித்தற்கு அணிகலன்களில் அமைக்கப்படும் குழி.

62 அவ்விரண்டனையும் — மேற்கூறிய மாசுகலந்த இரண்டு பொருள்களையும்.

63 சிறிய மணிக்கட்டு — முத்துவடிவிற் பொன்னால் அமைக்கப்படும் மணிக்கோவை.

64 இருமடங்கு—பதிக்கப்படும் இரத்தினத்தின் அளவில் மூன்றில் இரு மடங்கு என்பது கருத்து.

65 அப்பிரகம்—நிலத்திலிருந்தெடுக்கப்படும் ஒருவகைத் தாதுப்பொருள்.

66 அப்பிரகம் இல்லாத கூறு திண்ணிதாக இருத்தலின் நீரிற்றாழும் என்பதும் அதனையுடைய கூறு நொய்மையாக இருத்தலின் நீரிற்றாழாதென்பதும் கருத்து.

67 வேறுதகடுகள்—செம்பு முதலியவற்றால் ஆயவை.

வெள்ளியும் [68]மாசாகும்; உருக்குதலாலும் அடித்தலாலும் ஆராய்ந் தறியலாம். இத்துணையும் மாசூட்டலாம்.

[69]ஆதலின் வயிரம் மாணிக்கம் முத்து பவழம் என்னுமிவற் றின் பிறப்பு உருவம் நிறம் அளவு அணிகலன் அடையாளம் இவற்றை நன்கறிந்து கொள்ளல் வேண்டும்.

[70]செய்யப்பட்ட கலன்களை ஆராயுங்காலும் பழைய கலன் களைச் செப்பனிடுங்காலும் [71]தட்டுதல் பிரித்தெடுத்தல் கீறுதல் தேய்த்தல் என்னும் இந்நான்கும் கவர்ந்துகோடற்குரிய உபாயங் களாம்.

இணைப்பைத் தலைக்கீடாகக் கொண்டு சிறிய மணிகளையாதல் சிறு கம்பிகளையாதல் பெரிய துண்டுகளையாதல் வீழ்த்துதல் [72]தட்டுதலாகும். [73]இருமடங்கு ஆழ்ந்த கற்குழிகளில் ஈயத்தை யிட்டு உள்ளிருக்கும் பொன்னைப் பிரித்துக் கவர்ந்துகொள்ளுதல் பிரித்தெடுத்தலாகும். திண்ணிய கலன்களிற் கூர்மையான கருவி களால் [74]கீறிக் கவர்தல் கீறுதலாகும். அரிதாரம் மனோசிலை சாதி லிங்கம் என்னும் இவற்றுள் ஒன்றன் பொடியை யாதல் [75]குருவிந் தத் துகளையாதல் ஆடையில் முடிந்து (பொற்கலனில்) நன்றாக [76]உரைத்தல் தேய்த்தலாகும். அதனால் பொன் வெள்ளிகளாலாகிய

---

[68] உயர்ந்த மணிகளைக் கவர்தற்கு இழிந்தமணிகளும் உயர்ந்த பொன் னைக் கவர்தற்கு இழிந்தபொன்னும் வெள்ளியும் மாசாகும் என்பது கருத்து.

[69] ஆதலின்—கவர்தற்குரிய வழிகள் இங்ஙனம் பல இருத்தலின்.

[70] பிறிதோரிடத்தில் செய்யப்பட்ட கலங்கள் என்பது.

[71] தட்டுதல் ஓசையைக்கொண்டு ஆராய்தற்பொருட்டு. இங்ஙனமே சமைக்கப்பட்ட கலன்களைப்பிரித்துப் பார்த்தலும் கீறிப்பார்த்தலும் தேய்த் தலும் ஆராய்ச்சிப் பொருட்டாம். இவற்றைத் தலைக்கீடாகக்கொண்டு சிறந்த பகுதியைக் கவர்ந்துகோடல் கூடும் என்பது கருத்து.

[72] தட்டுதலால் இங்ஙனம் வீழ்த்திக் கவர்ந்துகோடலுண்டென்பது கருத்து.

[73] இதன் விளக்கம் மேலே கூறப்பட்டது.

[74] கீறிக்கவர்தல்—கீறுதலால் வெளிப்படும் பொன்னைக் கவர்தல்.

[75] குருவிந்தம் — இது பதுமராகமணியையும் கண்ணாடியையும் ஒரு வகைக் கல்லையும் உணர்த்தும்.

[76] உரைத்தலால் கலங்கள் தேய்ந்து துகள்வடிவில் ஆடையிற் பற்றிக் கொள்ளும் என்பதும், அதன்மூலம் பொன்னைக் கவர்ந்துகொள்ளக்கூடும் என்பதும் கருத்து.

கலன்களின் எடை குறைவுபடும். அக்கலன்களுக்குச் சிறிதும் [77]உறுப்புக் குறையேற்படாது.

வலிதாக இணைத்த கலன்களுள் தட்டுதல் பிரித்தெடுத்தல் கீறுதல் தேய்த்தலாலுண்டாகும் கரவை [78]ஒத்த கலன்களைக் கொண்டு அநுமித்தறிதல் வேண்டும். மெலிதாக இணைத்த கலன்களில் எத்துணை பெயர்த்தெடுக்கப்பட்டதோ அத்துணை (பிறிதோரிடத்தில்) பெயர்த்தெடுத்து ஆராய்ந்து காண்டல் வேண்டும். [79]கலப்பினால் விகாரமடைந்த கலன்களையும் இங்ஙனமே ஆராய்தல் வேண்டும். பலமுறை புடமிடுதலும் அதனை நீரிற் றோய்த்தடித்தலும் தூய்தாக்குதற்குரிய உபாயமாகும்.[80]

[81]விரைவிற் சேர்த்தல் [82]நிறைகல்மாற்றம் [83]நெருப்பு [84]கண்டிகை [85]அச்சு இருப்புப்பாண்டம் மயிற்றோகை [86]நூல் ஆடை

---

77 கலங்களின் உறுப்புக்கள் ஒருசிறிதும் குறைவுபடாத நிலையில் கவர்ந்துகொள்ளுதற்கு வழி இது.

78 ஒத்த கலன்கள்—தட்டுதல் முதலியவற்றால் கவர்ந்துகொள்ளப்படாமல் எடையிலும் நிறத்திலும் ஒத்தனவாகிய கலன்கள்; அக்கலன்களைக் கொண்டு குறைந்த பகுதிகளை யாராய்ந்து காணல்வேண்டும் என்பது கருத்து.

79 இழிந்த உலோகக்கலப்பினால் நிறவேற்றுமை யடைந்திருக்கும் கலங்களில் ஓரளவெடை எடுத்துத் தூய்தாக்கிக் குறைவு இவ்வளவெனக் கண்டு அக்கலன் முழுதிற்கும் கணக்கிட்டு அறிந்துகொள்ளவேண்டும் என்பது கருத்து.

80 கவரப்பட்ட பகுதி இத்துணையென்று துணிவதால் போதரும் பயன் நிறவேற்றுமை எடைக்குறைவு கண்டு தக ஒறுத்தலாம். தண்டிக்கும் முறையை இவ்வத்தியாயத்தின் தொடக்கத்திற் காண்க.

81 கையின் விரைவினால் நற்பொருளைக் கவர்ந்துகொண்டு போலிப் பொருளைச் சேர்த்தல்.

82 நிறைகல்மாற்றம்—உண்மைப் படிக்கல்லை மாற்றிப் போலிக்கல்லை உபயோகித்தல்.

83 நெருப்பு—உருக்குதற்குரிய நெருப்பிற் கவர்ந்துகோடல்.

84 கண்டிகை—பதித்தற்குரிய இரத்தினங்களுக்கு ஆதாரமாகவுள்ள மரக்கட்டை.

85 அச்சு—உருக்கிய பொன் முதலியவற்றை வார்த்தற்குரிய இடம்.

86 நூல்—துலை நூல்.

[87]கலங்கச் செய்தல் [88]தலை [89]மடித்தலம் [90]ஈ [91]தன்னுடலை நோக்குதல் [92]துருத்தி [93]நீர்ச்சட்டி [94]தீயிலிருக்கும் பொருள் என்னும் இவ்வெல்லாம் கவர்ந்துகோடற்குரிய கருவிகளாம்.

[95]வெள்ளிக் கலன்களுக்குத் [96]தீநாற்றம் அழுக்குடைமை சொரசொரப்பு [97]திண்மை [98]நிறவேற்றுமை என்னுமிவை [99]குற்றங்களாம்.

---

87 கலங்கச்செய்தல் — பேச்சைத் தலைக்கீடாகக்கொண்டு காண்பார் மனத்தைக் கலக்கமுறச் செய்தல்.

88 தலை-தலையைச் சொறிந்துகொள்ளும்மூலம் பொருளைக்கொள்ளுதல்.

89 மடித்தலம்—இஃது உபலக்கணத்தால் மறைவான இடத்தையும் உணர்த்தும்.

90 ஈ—உடம்பிலுள்ள ஈயை ஓட்டுதல். இதனைத் தலைக்கீடாகக்கொண்டு பசைப்பொருள் பூசிய தன்னுடம்பில் பொன் முதலியவற்றை ஒட்டிக் கொள்ளுதல்.

91 தன்னுடலை நோக்குதல்—வேர்வை முதலியவற்றைத் துடைக்கும் முகமாகக் கவர்தல்.

92 துருத்தி—துருத்திமூக்காற் கவர்தல்.

93 நீர்ச்சட்டி—நெருப்பிற் காய்ச்சிய பொன்னைத் தோய்த்தற்குரிய நீர்ப்பாண்டம்.

94 கலத்தற்பொருட்டு முன்னரே நெருப்பில் வைக்கப்பட்ட இழிந்த உலோகப்பொருள்.

95 ஈண்டு வெள்ளிக்கலன் என்றமையால் இதற்குமுன் கூறப்பட்டவை எல்லாம் பொற்கலன்களைப்பற்றியன வென்பது புலனும்.

96 தீநாற்றம்—ஈயம் முதலியவற்றின் கலப்பிலுண்டாவது.

97 வெள்ளிக்குரிய எடையளவின் மிக்கது.

98 நிறவேற்றுமை, இழிந்த பொருட்கலவையால் உண்டாயது.

99 இக்குற்றங்களை ஆராய்தற்குரிய உபாயங்களை முன்னை அத்தியாயத்திற் காண்க.

சுலோகம்

புதியதும் பழையதும் [100]உருமாறியதுமாகிய கலன்களை இங்ஙனம் ஆராய்தல் வேண்டும். இக் குற்றங்களுக்கு [101]முற்கூறியபடி தண்டமும் அவசியம் விதித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் பதினான்காம் பிரகரணம் "அங்காடித்தெருவிற் பொன்வினைஞன்செயல்" என்னும் முப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

100 உருமாற்றம்—இழிந்த உலோகக் கலப்பாலாவது.

101 இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் ஈண்டு எடுத்துக்காட்டாக வுள்ள பாருகற்பத்திய சுலோகங்களின் பொருள்கள் நினைவுகூரத்தக்கன. அச்சுலோகப் பொருள்கள் வருமாறு:—

(1) வாணிகரும் சிற்பிகளும் திருடர்களல்லராயினும் திருட்டுத்தொழில் உடையவராவர் ஆதலின் செல்வத்தை விரும்பும் மக்கள் அன்னாரை நம்பலாகாது.

(2) பிறர்பொருளை வெளிப்படையிற் கவர்ந்துகொள்ளும் கள்வராகிய வணிகரையும் சிற்பிகளையும் அரசன் ஒறுத்தடக்கவேண்டும்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பதினைந்தாம் பிரகாரணம்—[1]உணவுப்பொருள்நிலையத் தலைவன்

முப்பத்தாறும் அத்தியாயம்

உணவுப்பொருள்நிலையத் தலைவன் [2]உழவு நாடு விலைப் பொருள் பண்டமாற்று விலையில்பொருள் கடன் தொழிலிறை வேறுயது செலவெச்சம் அணுக்கம் என்னுமிவற்றை அறிந்திருத் தல் வேண்டும்.

[3]உழவுத்தொழிற் றலைவனாற் கொண்டுவரப்பட்ட கூலவகை கள் உழவு எனப்படும்.

[4]இறைத்தொகுதி [5]ஆறிலொருகூறு [6]படையுணவு [7]வழி

36-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உணவுப்பொருள்—நெல் முதலிய தானியங்களும் எண்ணெய் உப்பு முதலியனவுமாம்; தலைவன் என்பது ஈண்டு அவன் தொழிலையுணர்த்தும். கருவூல வளர்ச்சிக்குரிய பொன் வெள்ளி முதலியவற்றை ஆகரங்களி னின்றும் எடுத்தல் பாதுகாத்தல் முதலிய காரியங்களை முன்னை அத்தியாயங் களிற் கூறினர்; இனி உயிர்வாழ்க்கைக்குரிய உணவுப்பொருள்களைத் தொகுத்தல் காத்தல் முதலிய செயல்களைக் கூறத்தொடங்கி முதலிற் கூலம் எண்ணெய் முதலியவற்றைப்பற்றி இவ்வத்தியாயத்திற் கூறுகின்றார்; ஆதலின் முன்னையத்தியாயத்தோடு இதற்குள்ள இயைபு புலனாதலறிக.

[2] இங்கே உணவுப்பொருள்நிலையத் தலைவன் அறிந்துகொள்ளவேண்டிய உழவு நாடு முதலிய பத்து வருவாய் நிலைகளும் பெயரளவில் குறிப்பிடப் படுகின்றன; இவற்றின் விளக்கங்களை முறையே பின்னர்க் காண்க.

[3] உழவுத்தொழிற் றலைவன் செயல்களைப் பின்வரும் நாற்பத்தைந்தாம் அத்தியாயத்திற் காண்க.

[4] இறைத்தொகுதி—இன்ன கிராமத்திற்கு இவ்வளவென்று தொகுதி யாக வரையறுக்கப்பட்ட இறைப் பொருள்.

[5] ஆறிலொரு கூறு—நெல் முதலிய விளைபொருள்களினின்றும் அரச னுக்குக் கிடைக்கவேண்டிய ஆறில் ஒரு பாகம்; தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலால் அரசனுக்கு இறைப் பொருள் ஆறிலொன்றாயிற்று என்பர் பரிமேலழகர்.

[6] படையுணவு—படை போர்குறித்துச் செல்லுங்கால் அப்படைகளின் உணவு நிமித்தம் அரசற்குக் குடிமக்களால் கொடுக்கப்படும் அரிசி எண் ணெய் முதலியன.

[7] வழிபாட்டுப் பொருள்—அரசற்குக் குடிமக்கள் விருந்து முதலியவற் றின் மூலம் கொடுக்கும் பொருள்.

பாட்டுப்பொருள் [8]அரசிறை [9]உவகைக்கொடை [10]நெறியிலி [11]அழிவினீடு [12]கையுறை [13]அறநிலைப்பொருள் என்னும் இவை நாடு எனப்படும்.

[14]தானியவிலை விலையிற்கொள்ளும் கூலம் [15]வட்டிக்கு ஈடாகக் கொள்ளும் பொருள் என்னுமிவை விலைப்பொருளாகும். பல் வகைக் கூலப்பொருள்களை [16]விலைக்கேற்ப மாற்றிக்கொள்வது பண்டமாற்றாகும்.

பிறரிடமிருந்து [17]இரந்துபெறுங் கூலம் விலையில்பொருளாகும்.

[18]திருப்பிக்கொடுப்பதாகப் பிறரிடமிருந்து பெறும் கூலம் முதலியன கடனாகும்.

[19]குற்றல் [20]உடைத்தல் மாவாக்கல் கள் முதலியன வடித்தல்

---

8 அரசிறை—பழமரம் முதலியவை சம்பந்தமாக அரசர்க்குக் கொடுக்கப்படும் இறைப் பொருள்.

9 உவகைக்கொடை—அரசற்குப் புதல்வர்ப்பேறு முதலியன குறித்துக் குடிமக்களால் மகிழ்ச்சி கூர்ந்தளிப்பது.

10 நெறியிலி—வரையறை கடந்து மிகுதியாகப் பெறும் இறைப் பொருள்.

11 அழிவினீடு—எருது முதலிய விலங்குகளால் அழிக்கப்பட்ட நெற் பயிர் முதலியவற்றிற்கு ஈடாகக் கொள்ளும் பொருள்.

12 கையுறை—காணிக்கைப் பொருள்.

13 அறநிலைப் பொருள்—அரசனுக்குரிய தடாகம் பூஞ்சோலை முதலிய வற்றினின்றும் உண்டாகும் பொருள்.

14 தானிய விலை—கூல விற்பனையிற் கிடைக்கும் பொருள்.

15 கடனைக் கொடுத்த பொருளின் வட்டிக்கீடாகக் கொள்ளும் கூலம் முதலியன.

16 ஒரு மரக்கால் நெல் கொடுத்து அதன் விலைக்கேற்ப நான்கு மரக்கால் வரகு பெறுதல் போல்வது என்பது கருத்து.

17 திருப்பிக் கொடாத நிலையில் பெறுவது என்பது கருத்து.

18 திருப்பிக் கொடுக்குங்கால் வட்டியுடன் கொடுத்தல் வேண்டுமென் பது கருத்து.

19 குற்றல்—நெல் முதலியன குற்றுதல்.

20 உடைத்தல்—உழுந்து பயறு முதலியவற்றை உடைத்தெடுத்தல்.

[21]பிசைதல் என்னும் இத் தொழிலாளரிடத்தினின்றும் எண்ணெ யாட்டல் [22]ஆட்டுமயிர்க் கம்பலம் நெய்தல் கருப்பஞ்சாற்றினின்றும் வெல்லங்காய்ச்சல் என்னும் இத்தொழிலாளரிடத்தினின்றும் இறையாகப் பெறும் பொருள் தொழிலிறையாகும். இழந்ததை நினைத்தல் [23]முதலியவை வேறுயதாகும்.

[24]இயங்குபடைச்செலவெச்சம் மருத்துவச்செலவெச்சம் உள்வினைச்செலவெச்சம் என்னும் இவை செலவெச்சமாகும். [25]நிறுத்தலளவை முகத்தலளவைகளின் வேற்றுமை [26]கை நிரப்பல் [27]தூற்றுதல் [28]வாசி [29]கடந்தது [30]திறலாக்கம் என்னும் இவைஅணுக்கமாகும்.

கூலம் [31]நேயம் அக்காரம் உப்பு என்னுமிவற்றுள் கூலத்தைப் பற்றி "உழவுத்தொழிற்றலைவன்" என்னும் (45) அத்தியாயத்திற் கூறப்படும். நெய் எண்ணெய் கொழுப்பு [32]மச்சை என்னும் இவை நேயப் பொருளாம்.

---

21 பிசைதல்—சிற்றுண்டியின் பொருட்டு நீர் முதலியன சேர்த்து மாவைப் பிசைதல்.

22 இதன் மூலத்திற்கு..."வேள்வியினிமித்தம் ஆட்டைக் கொலை செய்யுந் தொழிலெனவும் பொருள் கொள்வர்.

23 முதலிய என்றதனுல் இருபத்தேழாம் அத்தியாயத்தில் வேறுயதன் விரியாகக்கூறிய வினைஞர்தண்டம் முதலியவற்றையும் கொள்ளல்வேண்டும்.

24 இயங்குபடைச் செலவெச்சம் முதலியவற்றின் விளக்கங்களை இருபத்தேழாம் அத்தியாயக் குறிப்பிற் காண்க.

25 அளவுகருவிகளால் மிகையாகக்கொண்டு குறைவாகக்கொடுத்து எஞ்சியது.

26 நெல் முதலியவற்றைக் கருவிகளைக்கொண் டளக்குங்கால் விரலாற் கட்டி மிகையாக அளத்தல்.

27 தூற்றுதல்—சிதறுதல்; எண்ணலளவைப்பொருள் முகத்தலளவைப் பொருள் முதலியவற்றை அளக்குங்கால் சிதறவிட்டுப் பின் அவற்றைக் கொள்ளுதல்.

28–29 "வாசி, கடந்தது" இவற்றிற்கு 27ஆம் அத்தியாயக்குறிப்பைப் பார்க்க.

30 திறலாக்கம்—தன் திறமையால் ஈட்டிக்கொள்ளப்பட்டது.

31 நேயம்—நெய்ப்புப்பொருள்.

32 மச்சை—எழுவகைத் தாதுக்களுள் ஒன்று; எலும்பினுள் இருப்பது.

[33]இளம்பாகு இறுகியபாகு வெல்லக்கட்டி கண்ட சருக்கரை என்னுமிவை அக்காரமாகும்.

[34]சயிந்தவம் [35]சாமுத்திரம் வெடியுப்பு [36]யவக்காரம் [37]சௌவர்ச்சலம் [38]மண்ணுப்பு என்னுமிவை உப்பின் வகைகளாம்.

தேனும் முந்திரிப்பழச்சாறும் மதுவெனப்படும்.

ஆடுதின்னுப்பாளை திப்பிலி என்னும் இவற்றின் சாற்றைக் கொதிக்கவைத்து அதனோடு கருப்பஞ்சாறு வெல்லம் தேன் பாகு நாவற்பழச்சாறு பலாப்பழச்சாறு என்னும் இவற்றுள் ஒன்றைக் கலந்து ஒரு திங்கள் ஆறு திங்கள் அல்லது ஓர் யாண்டுவரை [39]வைத்துப் பின் அதனோடு [40]சிற்பிடம் வெள்ளரிப் பழம் கரும்பு மாம்பழம் நெல்லிக்கனி என்னுமிவற்றின் சாற்றிற் [41]கலந்தேனும் கலவாமலேனும் அமைக்கப்படுவன சாராய வகைகளாம்.

புளி பெருங்களா மா மாதுளை நெல்லி கொம்மட்டி மாதுளை சிற்றிலந்தை பேரிலந்தை [42]இனிப்பிலந்தை இனிப்புப்புளி [43]முதலிய இவற்றின் பழச் சாறுகள் [44]புளிப்புச் சுவைச் சாறுகளாகும்.

---

33 இளம்பாகு முதலியன காய்ச்சப்பெற்ற கருப்பஞ்சாற்றினலாவன.

34 சயிந்தவம்—சிந்துநாட்டில் விளைவது.

35 சாமுத்திரம்—கடலுப்பு.

36 யவக்காரம்—யவமென்னும் தானியத்திலிருந்துண்டாவது.

37 சௌவர்ச்சலம்—சுவர்ச்சலநாட்டிலுண்டாவது.

38 மண்ணுப்பு—களர்நிலத்திலிருந்து எடுக்கப்படுவது.

39 ஓர் ஆண்டுவரை வைக்கப்படுவது தலையாயது என்பதும் ஆறு திங்கள் வரை வைக்கப்படுவது இடையாயது என்பதும் ஒருதிங்கள் வரை வைக்கப்படுவது கடையாயது என்பதும் கருத்து.

40 சிற்பிடம்—ஒருவகைக் கொடிப்பழம்.

41 சிற்பிடம் முதலிய பழங்களுள் ஒவ்வொன்றின் சாற்றையாதல் எல்லாவற்றின் சாற்றையுமாதல் கலக்கலாம் என்பது கருத்து.

42 இனிப்பிலந்தையைச் சௌவீரகம் என்று கூறுவர்; சுவீரநாட்டிலுண்டாவதென்பது இதன் பொருள்.

43 முதலிய என்றதனல் நாவற்கனி முதலியவற்றின் சாறுகளையும் கொள்ளல்வேண்டும்.

44 தித்திப்பும் புளிப்பும் கலந்த சாறென்பது கருத்து.

தயிர் காடி [45]முதலியன புளிப்புநீர் வகைகளாகும்.

திப்பிலி மிளகு இஞ்சி சீரகம் நிலவேம்பு வெண்கடுகு மல்லி என்னும் இவையும் [46]சோரகம் தமனகம் மருக்காரை முருங்கை என்னும் இவற்றின் பட்டை [47]முதலியவைகளும் காரப் பொருள் வகைகளாம்.

[48]மீனுணங்கல் [49]உலர்ந்த இறைச்சி கிழங்கு வேர் பழம் கீரை முதலியன சாகவருக்கங்களாம்.

முற்கூறிய நேயப்பொருள் முதலிய வருவாயிற் பாதியை நாட்டுமக்களுக்கு [50]உற்றுழி உதவுதற்பொருட்டு இருப்பில் வைத்து எஞ்சிய பாதியைப் [51]பயன்படுத்திக்கொள்ளலாம். புதிய பொருள்களை இருப்பாக வைத்து அவற்றிற்கு ஈடாகப் பழைய பொருள்களைப் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

[52]உடைத்தல் அரைத்தல் இடித்தல் வறுத்தல் நனைத்தல் உலர்த்தல் [53]பண்படுத்தல் என்னுமித் தொழில்களால் கூலங்களுக்கு ஏற்படும் அளவின் ஏற்றத்தாழ்வுகள் இவ்வளவென்று உணவுப் பொருள்நிலையத் தலைவன் நேரிலாராய்ந்து [54]தெளிந்துகொள்ளல் வேண்டும்.

வரகு நெல் இவற்றிற்கு [55]உள்ளீடு தத்தமளவிற் பாதியாகும்

---

[45] முதலியன என்றதால் மோர் முதலியவற்றையும் கொள்ளல் வேண்டும்.

[46] சோரகம் தமனகம் என்னும் இவ்விரண்டும் மரவகைகள்.

[47] முதலிய என்றதனால் சுக்கு, கடுகு முதலியவற்றையும் கொள்ளல் வேண்டும்.

[48] மீனுணங்கல்—கருவாடு.

[49] உலர்ந்த இறைச்சி—உப்புக்கண்டம்.

[50] உற்றுழியுதவுதல்—வற்கடம் நேர்ந்தபோது உதவிசெய்தல்.

[51] பயன்படுத்தல்—அரண்மனை மடைப்பள்ளி முதலியவற்றிற்காம்.

[52] உடைத்தல்-உழுந்து பயறு முதலிய கூலங்களை ஒருமுறை குற்றுதல்.

[53] பண்படுத்தல்—புடைத்து ஆய்ந்தமைத்தல்.

[54] தெளிந்துகோடல் — அத்தொழில் செய்வோர், தன்னை ஏமாற்றா திருத்தற்பொருட்டு.

[55] உள்ளீடு—உமி அல்லது மேந்தோல் போக்கப்பட்ட அரிசி பருப்பு முதலியவை,

[56]சாலிநெல்லுக்கு உள்ளீடு [57]எட்டிலொருகூறு குறைந்த பாதியாகும். பாசிப்பயற்றுக்கு உள்ளீடு [58]தன்னளவில் மூன்றிலொரு கூறு குறைவாகும். [59]பிரியங்குவிற்கு உள்ளீடு தன்னளவில் ஒன்பதில் ஒருகூறு மிக்க பாதியாகும். சாமைக்கு உள்ளீடு [60]ஒத்த அளவாகும். உடைக்கப்பட்ட யவநெல்லுக்கும் கோதுமைக்கும் உள்ளீடு [61]ஒத்த அளவாகும்.

[62]அரைக்கப்பட்ட எள் யவநெல் பயறு உழுந்து இவை [63]ஒத்த அளவாகும். [64]கோதுமையும் வறுத்திடித்த [65]மாவுகளும் தம்மளவின் ஐந்திலொருகூறு மிகும். [66]கலாயத்தின் நுண்ணிய மா அதனளவிற் காற்கூறு குறைந்ததாகும். [67]பயறு உழுந்துகளுக்கு அரைக்காற்கூறு குறைவாகும். [68]மேந்தோலுடைய தானியங்களுக்கு உள்ளீடு தம்மளவிற் பாதியாகும். கடலைக்கு உள்ளீடு மூன்றிலொருகூறு குறைவாகும்.

[69]அவிக்காமலிடித்த மாவும் [70]காராமணிப்பயறும் தம்மள

---

56 சாலிநெல்—ஆறுதிங்கள் நீரினின்று விளையும் சம்பாநெல் வகைகள்.

57 நெல்லினளவில் எட்டிலொருகூறு குறைந்த பாதியாவது எட்டில் மூன்று கூறும்; உள்ளீட்டின் அளவில் எட்டிலொரு கூறென்று கொண்டு அரையளவாகிய எண்கூற்றில் ஒருகூறு குறைந்த ஏழுகூறு என்பதுமாம்.

58 மூன்று தூணி காட்டுப்பயற்றுக்கு இரண்டு தூணி உள்ளீடு உண்டென்பதாம்.

59 பிரியங்கு—ஒருவகைக்கூலம்.

60 ஒத்த அளவு—பிரியங்குவின் உள்ளீட்டை ஒத்த அளவு; குற்றப்படுதற்கு முன்னுள்ள கூலத்தின் அளவே உள்ளீட்டினளவு என்பதுமாம்.

61 ஒத்த அளவு—உடைப்பதற்கு முன்னுள்ள அளவை ஒத்த அளவு.

62 அரைத்தல்—திரிகையிற் பொடியாக்கல்.

63 ஒத்த அளவு—அரைக்கப்படுதற்கு முன்னிருந்த அளவோடு ஒத்த அளவு.

64 அரைக்கப்பட்ட கோதுமை என்பது கருத்து.

65 மா—யவதானியத்தின் மா.

66 கலாயம்—ஒருவகைக்கடலை.

67 பயறு உழுந்துகளின் நுண்ணிய மா என்பது கருத்து.

68 மேந்தோலுடையன—மேலே கூறப்படாத கொள்ளு முதலியன.

69 அவிக்காமலிடித்த மா—கோதுமைமா முதலியன.

70 காராமணிப்பயறு இடிக்கப்படின் என்பது கருத்து.

வில் அரைக்கூறு மிகும். [71]யவ அரிசி இருமடங்காகும். [72]புழுங்க லரிசியும் [73]பண்படுத்தப்பட்ட மாவும் இருமடங்காகும்.

வரகு காட்டுப் பயறு சாமை பிரியங்கு இவைகளின் [74]உள்ளீடு சமைக்கப்படின் மும்மடங்கும் நெல்லின் அரிசி நான்கு மடங்கும் சாலிநெல்லரிசி ஐந்துமடங்கும் அன்னம் ஆகும். [75]புது நெல் லரிசியும் நன்கு முற்றாத நெல்லரிசியும் இரு மடங்கு அன்னமாகும். முளைநெல்லரிசி [76]ஒன்றரை மடங்காகும்.

[77]வறுக்கப்பட்டவை ஐந்தில் ஒரு கூறு மிகும். கலாயமும் நெல்லும் யவநெல்லும் [78]இருமடங்காகும்.

காயாவிதையில் ஆறில் ஒரு கூறு நேயப் பொருள் இருக்கும். வேம்பு நாணல் மா விளா [79]முதலியவற்றில் ஐந்தில் ஒரு கூறு கிடைக்கும். எள் குசும்பை இருப்பை மணிப்புன்கு [80]முதலிய வற்றில் நான்கிலொரு கூறு கிடைக்கும்.

ஐந்து பல எடையுள்ள பருத்தியிலும் [81]மரப் பட்டையிலும் ஒரு பல எடையுள்ள நூல் கிடைக்கும்.

---

71 யவ அரிசி இடிக்கப்படின் என்பது கருத்து.

72 புழுங்கலரிசி நனைத்து இடிக்கப்படின் தன்னளவில் இருமடங்காகும் என்பது கருத்து.

73 பண்படுத்தப்பட்டமா என்பது ஈண்டுக் கோதுமை முதலியவற்றைக் குறிக்கும்; அதுவும் அரிசியளவின் இருமடங்காகும் என்பது கருத்து.

74 உள்ளீடு—அரிசி பருப்பு முதலியன.

75 "திமிதம்" என்னும் மூலத்திற்கு ஈரமாக்கப்பட்டது என்பது பொருள் ஆதலின் "திமிதம் அபராந்நம்" என்பதற்கு ஊறவைக்கப்பட்ட துவரை கடலை எனவும் பொருள் கொள்வர்.

76 ஈண்டு முன் வாக்கியத்தோடிணைத்து இரண்டரை மடங்கு எனப் பொருள் கோடலுமாம்.

77 வறுக்கப்பட்டவை—துவரை கடலை முதலிய தானியங்கள்.

78 வறுக்கப்படின் என்பது கருத்து.

79 முதலிய என்றதனால் கடுகு முதலியவற்றையும் கொள்ளல்வேண்டும்.

80 முதலிய என்றதனால் முத்துக்கொட்டை முதலியவற்றையும் கொள் ளல் வேண்டும்.

81 "க்ஷௌமம்" என்பது மூலம். இதற்குப் பூச்சிப்பட்டெனவும் பொருள் கொள்ளலாம்.

ஐந்து [82]தூணி சாலிநெல்லைப் [83]பன்னிரண்டு மரக்காலாகக் குற்றி எடுத்த அரிசி யானைக் கன்றுகளின் உணவுக்குத் தகுதியாகும். பதினொரு மரக்காலாகக் குற்றப்பட்ட அரிசி [84]கொடிய யானைகளுக்கும் பத்து மரக்காலாகக் குற்றப்பட்ட அரிசி பட்டத்து யானைக்கும் ஒன்பது மரக்காலாகக் குற்றப்பட்ட அரிசி [85]போர் யானைக்கும் எட்டுமரக்காலாக ஆக்கிய அரிசி காலாட் படையினர்க்கும் ஏழு மரக்காலாக ஆக்கியது [86]அரசியற் றலைவர்களுக்கும் ஆறு மரக்காலாக ஆக்கியது அரசியர்க்கும் அரச குமரர்களுக்கும் [87]ஐந்து மரக்காலாக ஆக்கியது அரசனுக்கும் தகுந்த உணவாம். அல்லது, முறிவில்லாதனவாகவும் தூயனவாகவும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஒரு படி அரிசி அரசனுக்கு உணவாகத்தகும்

[88]நான்கில் ஒரு கூறு பருப்பும் பருப்பின் பதினறில் ஒரு கூறு உப்பும் [89]நான்கில் ஒரு கூறு நெய் அல்லது எண்ணெயும் [90]சிறந்த மனிதன் ஒருவனுக்குத் தகுந்த உணவாகும்.

---

82 தூணி—நான்கு மரக்கால்; பல்வேறு வகைப்பட்ட உணவுகளின் பொருட்டு அரிசியாக்கும் வரையறையைக் கூறத் தொடங்குகின்றார்.

83 தவிடும் உமியும் அறவே கழியாவாறு குற்றியெடுக்கப்பட்ட அரிசியே யானைக்கன்றுகளுக்கு உணவாக்க அமையும் என்பது கருதி இருபது மரக்கால் நெல்லைப் பன்னிரண்டு மரக்காலாகக் குற்றி எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டது; பின் வருவனவற்றிற்கும் ஐந்து தூணி நெல்லிலிருந்தே கணக்கிட்டுக்கொள்ளல் வேண்டும். உள்ளீடு குறையக் குற்றியெடுப்பது அரிசியின் நயங்கருதியாம்.

84 கொடிய யானைகள்—புதிதாக அகப்படுத்து நன்கு பயிற்றப்படாத யானைகள்.

85 போர்யானை—போர்ப்படையிலுள்ள யானை.

86 அரசியற்றலைவர்—அமைச்சர் படைத்தலைவர் முதலிய அதிகாரிகள்.

87 ஐந்து தூணி நெல்லைக் குற்றியெடுத்த அரிசியில் முனைமுறிந்தவற்றையும் தூயனவல்லாதவற்றையும் ஒதுக்கி ஆராய்ந்து அரசன் உணவிற்கு எடுக்கவேண்டியது ஐந்து மரக்காலாகும் என்பது கருத்து; ஐந்து தூணி நெல்லிலிருந்து நன்றாகக் குற்றி எடுக்கப்பட்ட அரிசியில் ஒருபடி விகிதம் ஆராய்ந்தெடுக்கப்பட்ட நல்ல அரிசி அரசன் உணவுக்குப் பொருந்தும் என்பது. இஃது ஒரு சாரார் கொள்கை.

88 நான்கிலொருகூறு—அரிசியின் நான்கில் ஒருகூறு.

89 பருப்பின் அளவில் நான்கில் ஒருகூறு.

90 சிறந்த மனிதன்—மக்களுள் உயர்ந்தோன்.

[91]தாழ்ந்தோருக்கு ஒரு படியின் ஆறிலொருகூறு பருப்பும் [92]அரைக்கூறு நேயப்பொருளும் தகுந்த உணவாகும். [93]மகளிர்க்கு முக்காற்கூறும் சிறுவர்களுக்கு அரைக்கூறும் தகுந்த உணவாகும்.

இருபது பலம் இறைச்சிக்கு [94]அரை உழக்கு நேயப்பொருளும் ஒரு பலம் உப்பும் [95]ஒரு பலம் அக்காரமும் இரண்டு [96]தரணம் [97]கார்ப்புப் பொருளும் அரைப்படி தயிரும் ஆம்.

இதனால் [98]மிகுந்தவற்றிற்கும் அளவு கூறப்பட்ட படியாம். மரக்கறியுணவிற்கு [99]ஒன்றரைமடங்காகும். உலர்ந்தவைகளுக்கு மேற் கூறிய [100]கூட்டுப் பொருள்கள் [101]இருமடங்காகும்.

---

91 தாழ்ந்தோர்—தொழில் செய்வோர் பணியாளர் முதலியோர்.

92 அரைக்கூறு—சிறந்தோர்க்குரிய நேயப்பொருளளவிற் பாதி; தாழ்ந்தோருக்குரிய பருப்பினளவிற் பாதி என்பாருமுளர்; தாழ்ந்தோர்க்கு உப்புக் கூறப்படாமையால் சிறந்தோர்க்குரிய அளவே இவர்களுக்கும் கொள்க.

93 சிறந்தோருணவில் முக்காற்கூறு சிறந்தமகளிர்க்கும் தாழ்ந்தோருணவில் முக்காற்கூறு தாழ்ந்தமகளிர்க்கும் தகுந்த உணவாம் என்பது கருத்து; இங்ஙனமே சிறுவர்க்கும் கொள்க.

94 உழக்கு—காற்படி.

95 "க்ஷாரம்" என்ற மூலத்திற்கு யவக்காரம் என்று பொருள்கொண்டு உப்பில்லாவிடத்து அதைச்சேர்த்தல் வேண்டும் என்பர் உரையாசிரியர். யவக்காரம்—ஒருவகை உப்பு.

96 தரணம்—(எண்பத்தெட்டு வெண்சிறுகடுகு எடை கொண்டது ஒரு மாடமாகும்) மாடம் பதினாறு கொண்டது ஒரு தரணம். இதனை 40-ஆம் அத்தியாயத்திற் காண்க.

97 கார்ப்பு—மிளகு இஞ்சி முதலிய காரப்பொருள்கள். இவை இறைச்சியைப் பக்குவப்படுத்தற்குரிய கூட்டுப்பொருள்கள் என்பது கருத்து.

98 இங்கே கூறப்பட்ட இருபது பலத்தின் மிகுந்ததும் குறைந்ததுமான இறைச்சிக்கும் என்பது கருத்து.

99 ஒன்றரை மடங்கு-இறைச்சிக்குக் கூறிய அளவில் ஒன்றரை மடங்கு; உலர்ந்தவை—உலர்ந்த இறைச்சியும் வற்றலாகிய காய்கறிகளுமாம்.

100 கூட்டுப்பொருள்—காரம் உப்பு நேயம் முதலியன.

101 பச்சிறைச்சி பசிய காய் முதலியவற்றிற்குக் கூறிய அளவின் இருமடங்கு அவ்வவற்றின் வற்றல்களுக்குக் கூட்டுப்பொருளாம் என்பது கருத்து; இருபது பலம் உலர்ந்த இறைச்சிக்கு ஓர் உழக்கு எண்ணெயும் இருபது பலம் மரக்கறி வற்றலுக்கு ஒன்றரை உழக்கு எண்ணெயும் சேர்க்க வேண்டுமென்பது. இங்ஙனமே உப்பு காரம் முதலியவற்றையும் கணக்கிட்டுக்கொள்க.

யானை குதிரைகளுக்கு உணவின் அளவுமுறையை [102]அவ்வவற்றிற்குரிய பிரகரணத்திற் கூறுவாம். காளைகளுக்கு (உணவின் அளவு) உழுந்து அல்லது நன்கு குற்றப்படாத யவ அரிசி ஒரு தூணியாம். [103]மற்றவை குதிரைகளுக்குக் கூறியபடியாம். [104]ஒரு துலாம் உலர்ந்த பிண்ணுக்கும் பத்து மரக்கால் தவிடும் [105]சிறப்பாக உரிய உணவாம்.

எருமைகளுக்கும் ஒட்டகங்களுக்கும் [106]இரு மடங்காகும். கழுதை புள்ளிமான் செம்மான் இவைகளுக்கு [107]அரைத்தூணி உணவாகும். [108]ஏணமான் மான் இவைகளுக்கு உணவு ஒரு மரக்காலாகும். ஆடு [109]ஏழகம் பன்றி இவைகளுக்கு [110]அரைமரக்கால் அல்லது இருமடங்கு தவிடு உணவாகும். நாய்களுக்கு ஒருபடி சோறு உணவாகும். அன்னப்பறவை மயில் கிரவுஞ்சம் இவைகளுக்கு அரைப்படி சோறு உணவாகும். இவையல்லாத ஏனைய காட்டுவிலங்குகள் நாட்டுவிலங்குகள் பறவைகள் பாம்புகள் இவைகளுக்குரிய அளவை, ஒவ்வொன்றிற்கு உணவிட்டு ஊகித்து அறிந்துகொள்ளல்வேண்டும்.

[111]கரி உமி இவற்றை [112]கம்மத்தொழில் சுவர்பூசுந்தொழில் இவற்றின்பொருட்டுச் சேர்த்துவைத்தல்வேண்டும். நொய்யரிசியை

---

102 51—52—53-ஆம் அத்தியாயங்களிற் காண்க.

103 மற்றவை—உப்பு முதலியன; 51-ஆம் அத்தியாயத்தில் குதிரைகளுக்குக் கூறியவற்றைக் காண்க.

104 ஒரு துலாம்—நூறு பலம்.

105 சிறப்பு—குதிரைகளுக்கில்லாமல் காளைகளுக்கு மாத்திரம் உள்ளது.

106 காளைக்குக்கூறிய அளவின் இருமடங்கு.

107 அரைத்தூணி உழுந்து அல்லது நன்கு குற்றப்படாத யவ அரிசி என்பது கருத்து; பின்வருபனவற்றிற்கும் இவற்றையே கொள்க.

108 ஏணமான்—கரியநிறமுடைய ஒருவகை மான்.

109 ஏழகம்—ஒருவகை ஆடு.

110 உழுந்து அல்லது நன்கு குற்றப்படாத யவ அரிசி அரை மரக்கால் என்பது கருத்து.

111 உபலக்கணத்தால் சாம்பலையும் கொள்ளல்வேண்டும்; வயல் முதலியவற்றிற்கு உரமாமாதலின்.

112 கம்மத்தொழில்—இரும்பு முதலிய உலோகத்தொழில்.

அடிமைகள் பணியாளர் [113]பருப்புச் சமைப்போர் இவர்களுக்குக் [114]கொடுக்கவேண்டும். அதனின் எஞ்சியதைச் சோறு சமைப்போர் பண்ணிகாரஞ் செய்வோர் இவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

நிறுத்தலளவைக்கருவிகள் முகத்தலளவைக்கருவிகள் திரிகை அம்மி உலக்கை உரல் [115]குந்தாணி [116]அரைக்கும் இயந்திரம் குதிர் முறம் சல்லடை [117]தொம்பை கூடை விளக்குமாறு இவைகள் கருவிகளாம்.

[118]அலகிடுவோன் காவலன் நிறுப்பவன் அளப்பவன் அளப்பிப்போன் கொடுப்பவன் கொடுப்பிப்போன் சுமைகாவுவோன் அடிமை பணியாளர் என்னும் இவர்கள் தொழிற்றுணைவராவர்.

சுலோகங்கள்

கூலங்களை [119]உயரமான இடத்தில் வைத்தல்வேண்டும். நெருக்கமாக [120]முடையப்பட்டவை அக்காரத்திற்கு இடமாகும். மண்ணாலாதல் மரத்தாலாதல் செய்யப்பட்ட [121]மிடாக்கள் நேயப்பொருளுக்கு இடனாகும். உப்பு வைத்தற்கு [122]நிலம் [123]இடனாகும்.

இரண்டாம் அதிகரணம் பதினைந்தாம் பிரகரணம்
“உணவுப்பொருள் நிலையத் தலைவன்” என்னும்
முப்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

113 பருப்புச்சமைப்போர்—பருப்பு முதலியன கலந்து உயர்ந்த கறிவகைகளை ஆக்குவோர்.

114 உணவிற்காகக் கொடுக்கவேண்டும் என்பது.

115 குந்தாணி—பேருரல்.

116 இது மனிதராலும் காளையினாலும் நீர் ஓட்டத்தின் ஆற்றலினாலும் இயக்கப்படுவது.

117 தொம்பை—மூங்கிலால் அமைக்கப்படும் நெற்குதிர்.

118 அலகிடுவோன்—துடைப்பத்தால் தூசிகளை நீக்குவோன்.

119 நிலத்தில் பொருந்தாமல் வைத்தல்வேண்டும் என்பது கருத்து.

120 முடையப்பட்டவை—கூடை பாய் முதலியன.

121 மிடா—பெரிய பாண்டங்கள்.

122 நிலம்—இதன் உபலக்கணத்தால் மட்பாண்டமும் கொள்ளல் வேண்டும்.

123 இங்கே இடங்கூறப்படாத காய்கறி முதலியவற்றிற்கும் தகுதியான இடங்கள் அமைத்துக்கோடல் வேண்டுமென்பதும் புலப்படுக்கப்பட்டபடியாம்.

இரண்டாம் அதிகரணம் தொழிற்றலைவர் செயன்முறை

பதினோராம் பிரகரணம்—[1]விலைப்படுபண்டத் தலைவன்

முப்பத்தேழாம் அத்தியாயம்

விலைப்படுபண்டத்தலைவன் [2]நீரில்விளைந்தனவும் [3]நிலத்தில் விளைந்தனவும் காலினும் கலத்தினும் வந்தனவுமாகிய பலவகை விலைப்பண்டங்களின் [4]உயர்வு தாழ்வுகளையும் விலையின் மிகுதி குறைவுகளையும் [5]விருப்பு வெறுப்புகளையும் அறிதல்வேண்டும். அங்ஙனமே [6]விரித்தல் [7]தொகுத்தல் கொள்ளல் விற்றல் இவை களுக்கு [8]ஏற்ற காலங்களையும் அறிதல்வேண்டும்.

[9]மிகுதியாகவுள்ள விலைப்பண்டங்களை ஒருங்குசேர்த்து விலையை உயர்த்துதல்வேண்டும். தகுதியான விலை ஏற்பட்டவுடன் [10]வேறு விலையும் விதிக்கலாம்.

37-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] விலைப்படுபண்டத் தலைவன்—பண்டங்களை விற்றல் வாங்குதற்குரிய தொழிலதிகாரி. முன்னைப் பிரகரணத்தில் உணவுப் பொருள்தலைவன், பொருள்களை விற்றல் பண்டமாற்றல் முதலியவற்றை அறிந்துகொள்ளல் வேண்டும் என்று கூறப்பட்டது; அங்ஙனம் விற்றல் பண்டமாற்றல் முதலியன விலைப்படுபண்டத்தலைவன் வாயிலாக நடைபெறவேண்டுமாத லால் அதன்பின் இது வைக்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு புலனாத லறிக.

[2] நீரில் விளைவன—முத்து பவழம் மீன் முதலியன.

[3] நிலத்தில் விளைவன—நெல் முதலிய கூல வகைகளாம்.

[4] உயர்வு தாழ்வுகள் விலையினாலும் பொருளின் இயல்பாலும் ஏற்பட் டவை.

[5] விருப்பு வெறுப்புக்கள்—விலைப் பண்டங்களைப் பெறுதலில் மக்கள் பால் நிகழ்வன.

[6] விரித்தல்—தொகுத்து வைத்த பொருளை வாணிகத்தின் பொருட்டு வெளிப்படுத்திப் பரப்புதல்.

[7] தொகுத்தல்—பல இடங்களிலும் பரவிக்கிடக்கும் பண்டங்களை ஒருங்கு சேர்த்தல்.

[8] கொள்ளல் விற்றல்களுக்கு ஏற்றதும் ஏலாததும் ஆகிய காலம் என்பது கருத்து.

[9] மிகுதி, விளைவினாலும் வேற்று நாட்டு வரவினாலும் ஆகும்.

[10] வேறு விலை—மிகுதியினின்றும் குறைக்கப்பட்டது.

அரசன் தன்னாட்டிலுண்டான தன்னுடைய விலைப்பண்டங்களை [11]ஒரே வாயிலாகவும் பிறநாட்டிலுண்டானவைகளைப் பல வாயிலாகவும் விற்கும்படி செய்தல்வேண்டும். இருவகைப் பொருள்களையும் குடிமக்களுக்குத் தீங்குவிளையாவாறு விற்கும்படி செய்தல்வேண்டும். ஊதியம் பெரிதாயினும் குடிமக்களுக்குத் துன்பமுண்டாக்குமாயின் விலக்கிவிடுதல் வேண்டும். விரைவில் விற்றற்குரிய [12]பண்டங்களுக்குக் [13]காலத்தாழ்வையும் கலத்தற் குற்றத்தையும் செய்தலாகாது.

விலை வரையறுக்கப்பட்ட அரசனுடைய பண்டங்களை வணிகர்கள் பற்பல வாயிலாகவும் விற்கலாம். விலைக் குறைவிற்குத்தகக் [14]குறையீடு கொடுத்தல்வேண்டும்.

முகத்தலளவைப் பொருள்களுக்குப் பதினாறில் ஒரு கூறும் நிறுத்தலளவைப் பொருள்களுக்கு இருபதில் ஒரு கூறும் எண்ணலளவைப் பொருள்களுக்குப் பதினொன்றில் ஒரு கூறும் [15]வாசியாகும்.

பிறநாட்டிலுண்டான விலைப்பண்டங்களை [16]இடையூறகற்றிக் கொணர்வித்தல் வேண்டும். ஓடக்காரர்களுக்கும் வணிகர்களுக்கும் [17]எதிர்காலத்திற்கேற்பக் [18]குறைநீக்கம் கொடுத்தல்

---

[11] ஒரேவாயில்—ஒரே இடத்தில் அல்லது ஒருவன் முகமாக.

[12] பண்டங்கள்—ஈட்டுங் கறி காய்களையும் பால் முதலியவற்றையும் உணர்த்தும்.

[13] காலத்தாழ்வாலும் கலத்தற் குற்றத்தாலும் அப்பண்டங்கள் கெடுதலையும் என்பது கருத்து.

[14] வரையறுக்கப்பட்ட விலையளவில் குறைய விற்க நேரின் அக்குறைவிற்குத் தக, விற்பவர் அரசனுக்கு ஈடுசெய்தல்வேண்டும் என்பது கருத்து.

[15] வாசி—இங்கேகூறிய அளவுகளை மீண்டும் ஆராயுங்கால் குறையாமல் இருத்தற் பொருட்டு மிகுதியாகக் கொடுக்கப்படுவது; இவ்வாசி விலைப் பண்டம் பெறுவோனுக்குக் கொடுக்கப்படுவதாகும்; குடிமக்கள் அரசனுக்கு அரசிறையாகக் கொடுக்கவேண்டிய கூலம் முதலியவற்றிற்கும் இஃது ஒக்கும்.

[16] இடையூறு—எல்லைகாவலன் காட்டுத்தலைவன் அரசியல்வினைஞர் முதலியோரால் நேர்வது.

[17] எதிர்காலத்தில் தனக்கு இடையூறு நேராவண்ணம்.

[18] குறை நீக்கத்தின் இயல்பை இருபத்திரண்டாம் அத்தியாயத்திற் காண்க.

வேண்டும். வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களுக்குப் [19]பொருள் வழக்கின்மையை ஏற்படுத்தல்வேண்டும். இது [20]துணைவர் உதவியாளர்களுக்கு விலக்காகும்.

[21]பண்டங்களை விற்போர் அப்பண்டங்களை விற்றுப் பெற்ற பொருளை ஒரே துளையையுடைய மூடியமைந்த மரப் பேழையில் ஒருவன்முகமாக வைத்தல்வேண்டும். நாளினது [22]எட்டாங் கூற்றில் விலைப்படுபண்டத் தலைவனிடத்தில் இத்துணைவிற்றது, இத்துணை [23]எஞ்சியது எனக் கூறிக் கொடுத்தல்வேண்டும். நிறுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் அவனிடமே கொடுத்தல்வேண்டும். இங்ஙனம் தன்னாட்டு வாணிக முறை கூறப்பட்டது.

பிறநாட்டிலெனின் [24]விற்கும் பொருள் [25]கொள்ளும் பொருள் இவற்றின் [26]பெறுமானத்தையும் விலையையும் தெரிந்து கொண்டு சுங்கம் [27]வழி [28]துணை [29]காடு [30]ஆறு [31]உணவு [32]வாடகை

---

19 கடனைக் கொடுத்த பொருள்பற்றி வழக்குத் தொடுக்க நேரின் வழக்கில்லாமலே உதவி செய்யவேண்டும் என்பது கருத்து.

20 இத் துணைவரும் உதவியாளரும் வேற்று நாட்டிலிருந்து வந்தாரைச் சார்ந்தோர் ஆவர்.

21 பண்டங்கள்—அரசனுடையன.

22 எட்டாங்கூறு என்றது பண்டங்களை விற்றற்குரிய காலத்தின் இறுதியைக் குறிக்கும்.

23 எஞ்சியது—விற்கப்படாமல் எஞ்சிய பண்டம்.

24 விற்கும் பொருள்—தன்னாட்டில் விளைவது.

25 கொள்ளும் பொருள்—பிற நாட்டில் விளைவது.

26 பெறுமானம்—பண்டமாற்றில் ஆராய்தற்குரிய குறை ஒப்பு மிகுதி.

27 வழியென்பது பண்டங்களைக் கொண்டு செல்லுதற்கும் கொணர்தற்கும் வழியில் எல்லைகாவலனுக்குக் கொடுக்கப்படும் பொருட் செலவைக் குறிக்கும்.

28 துணையென்பது வழியைக் கடந்து செல்லுதற்கு உதவியாக வரும் படைவீரருக்குக் கொடுக்கும் பொருட் செலவைக் குறிக்கும்.

29 காடு—காடு காவலனுக்குக் கொடுக்கப்படுவது.

30 ஆறு—ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரர்க்குக் கொடுக்கும் கூலி.

31 உணவு—தனக்கும் உடன் வருவோர்க்கும் உணவின் பொருட்டுச் செலவாகும் பொருள்.

32 வாடகை—தங்குமிடத்திற்குக் கொடுக்கும் கூலி.

இவற்றிற்கு ஆகும் செலவு கழித்து எஞ்சிய ஊதியத்தையும் [33]அறிதல்வேண்டும். ஊதியமில்லாவழிப் பண்டங்களை [34]உய்த்த லாலாதல் பண்டமாற்றுதலாலாதல் அவ்வூதியத்தைக் காண்டல் வேண்டும். [35]பின்னர் [36]ஊதியத்தின் நான்கிலொருகூறு செல விட்டு [37]இடையூறில்லாத நிலவழியாகச்சென்று வாணிகஞ்செய்தல் வேண்டும். காடுகாவலன் எல்லைகாவலன் நாடு நகரத்துத் தலை மக்கள் இவர்களோடு [38]நலங்குறித்து நட்புக்கொள்ளல்வேண்டும்.

கேடுநேர்ந்துழித் தன்னையும் சிறந்த பொருளையும் (அக்கேட்டி னின்றும்) [39]காத்துக் கொள்ளுதல்வேண்டும். [40]தன்னாட்டை அடையாதவன் கொடுக்கவேண்டிய எல்லாவற்றினும் தூயனாக நடந்துகொள்ளல்வேண்டும்.

நீர்வழியில் ஓடக்கூலியும் ஆற்றுணவும் விற்கும் பொருள் கொள்ளும் பொருள்களின் விலையளவும் செல்லுதற்குரிய [41]கால மும் அச்சம்நேர்ந்துழிக் காப்பும் வாணிகஞ் செய்தற்குரிய நகரங்

---

[33] அறிதற்கு வினைமுதல் விலைப்படுபண்டத் தலைவன் ஆவான் என்பது; இங்ஙனம் அறிதலால் ஊதியம் கிடைக்கும் என்னும் துணிவு தோன்றில் தன்னாட்டு விலைப்பொருளை வேற்றுநாட்டிற்கு அனுப்பலாம் என்பது கருத்து.

[34] உய்த்தல்—ஊதியம் கிடைத்தற்குரிய காலத்தை எதிர்பார்த்து மற்றொரு நாட்டிற்கு அனுப்புதல்.

[35] ஊதியம் கிடைக்கும் என்ற துணிவு ஏற்பட்டபின் என்பது கருத்து.

[36] ஊதியம் ஈண்டு எதிர்பார்க்கப்படுவது.

[37] இடையூறு—ஆறலைப்போர் சூறைகொள்வோர் முதலியோரால் நேர்வது.

[38] நலம்—ஈண்டு வாணிகத் துறைக்குரிய நன்மைகளாம்.

[39] சிறந்த பொருளையும் தன்னையும் காத்துக் கோடற்கு இயலாவிடின் பொருளை இழந்தாவது தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும்; இதனைப் "பொருளினும் உடலினைப் போற்றல் வேண்டுமால்" என்பதனாலும் அறிக.

[40] ஒருவன் தன் பண்டங்களை விற்றற்குரிய வேற்று நாட்டினின்றும் தன்னாட்டிற்குத் திரும்பிவருமளவும் அந்நாட்டில் கொடுக்கவேண்டிய சுங்கம் முதலிய எல்லாவற்றிலும் குற்றம் நேராமல் நடந்துகொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[41] காலம் ஈண்டுச் செல்லுதற்குரிய காலத்தின் இயல்பும் அளவுமாம்.

களின் வழக்க ஒழுக்கங்களும் ஆகிய இவற்றை அறிதல்வேண்டும்.

சுலோகம்

யாற்றுவழியில் வாணிகத்துறையை [12]வழக்க ஒழுக்கத்தால் நன்கறிந்து எங்கு ஊதியம் உளதோ அங்குச் செல்லுதல்வேண்டும். [13]ஊதியமில்வழி ஒழிதல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் பதினாறும் பிரகரணம்
" விலைப்படுபண்டத்தலைவன் " என்னும்
முப்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

12 வழக்க ஒழுக்கம்—அவ்வந்நாட்டு வழக்க ஒழுக்கம்.

13 சுருங்கிய ஊதியம் முயற்சிக்குத்தக இல்லாத ஊதியம் என்னும் இவையும் யாற்றுவழிச் செலவை ஒழித்தற்கு ஏதுவாகும் என்பது.

இரண்டாம் அதிகாரம்—தொழிற்றலைவர் செயன்முறை

பதினேழாம் பிரகரணம்—[1] குப்பியத்தலைவன்

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

குப்பியத்தலைவன் [2]நன்மரக்காடுகாவலர்களால் குப்பியங்களைக் கொணர்வித்தல்வேண்டும். [3]மரத்தொழில்களையும் செய்வித்தல் வேண்டும். தொழிற்குரிய மரங்களை வெட்டுவோர்க்குக் [4]கொடுக்கவேண்டியவற்றையும் [5]தண்டனையையும் வரையறை செய்தல்வேண்டும். [6]கேடுநேர்ந்த காலத்து இது விலக்காகும்.

குப்பியங்களாவன :—

தேக்கு தினிசு தனிசு மருதம் இருப்பை மஞ்சாடி மராமரம் [7]சிஞ்சுபம் [8]அரிமேதம் பழமுண்ணிப்பாலை வாகை கருங்காலி சரளம் பனை ஆச்சா [9]அசுவகருணம் வெல்கருங்காலி கசம் மா

38-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] குப்பியம்—அகக்காழுள புறக்காழுளவாகிய மரம் புற்களும் செடி கொடிகளும் பொன் வெள்ளி யல்லாத செம்பு ஈயம் இரும்பு முதலிய உலோகங்களுமாம். முன்னைப் பிரகரணத்தில் விலைப்படுபண்டத்தலைவனின் செயல் கூறப்பட்டது. அவ்விலைப்படுபண்டங்களுள் குப்பியப் பொருள்களும் ஒரு கூறுடையனவாதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது; இதனாற் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] நன்மரம்— இல்லம் முதலிய அமைத்தற்குப் பயன்படும் மரம்.

[3] மரத்தொழில்—மரத்தால் வீடு வண்டி முதலியன அமைக்கும் தொழில்.

[4] கொடுக்கவேண்டியவை—குப்பியத்தலைவனின் கட்டளைபெற்று மரம் வெட்டுதல் முதலிய தொழில் செய்வோர்க்குக் கொடுக்கவேண்டிய கூலி.

[5] தண்டனை—அக்கட்டளைபெறாமல் செய்வோர்க்கு விதிக்கப்படுவது.

[6] எதிர்பாராத நிலையில் இடையூறு நேர்ந்த காலத்துக் கட்டளை பெறாமல் நேரேவழி மரம் வெட்டிப் பயன்படுத்திக்கொள்ளலாமென்பது கருத்து; அஃதாவது பண்டங்கள் ஏற்றிச் செல்லும் வண்டியின் நுகத்தடி முதலிய உறுப்புகளில் ஒன்று முறிந்துவிடுமாயின் அப்பொழுது தலைவனின் கட்டளை பெறாமல் மரம் வெட்டிப் பயன்படுத்திக்கொள்வது போல்வது.

[7] சிஞ்சுபம்—நூக்கமரம்.

[8] அரிமேதம்—தீநாற்றமுடைய ஒருவகைக் கருங்காலி.

[9] அசுவகருணம்—ஆச்சாவகைகளுள் ஒன்று.

வேங்கை [10]தவம் முதலிய சிறந்த மரவகைகளும் ;

[11]குழாய்மூங்கில் கன்மூங்கில் [12]வின்மூங்கில் [13]வேணு [14]குழல் மூங்கில் சாதீனமூங்கில் முள்மூங்கில் பெருமூங்கில் முதலிய மூங்கில் வகைகளும் ;

பிரம்பு [15]சீகவல்லி [16]வாசி கருங்கொடி வெற்றிலைக்கொடி முதலிய கொடிவகைகளும் ;

மாலதி மருள் எருக்கு சணல் பீர்க்கு காயா முதலிய மரவுரி வகைகளும் ;

முஞ்சி கோரை முதலிய கயிற்றுக்குரியவைகளும் கூந்தற்பனை பனை பூர்ச்சம் ஆகிய ஏடுகளும் முள்முருக்கு குசும்பை குங்குமம் இவைகளின் [17]மலர்களும் ;

கிழங்கு வேர் பழம் முதலிய மருந்துவகைகளும், [18]காளகூடம் [19]வச்சைநாபி [20]ஆலகாலம் [21]மேடசிருங்கம் [22]முத்தை [23]குட்டம்

---

[10] தவம்—பெருஞ்சுமை தாங்குமியல்பினது.

[11] குழாய் மூங்கில்—அகன்ற துளையினையும் சிறிய முட்களையும் உடைய மூங்கில்.

[12] வின்மூங்கில்—சிறு துளையும் திண்மையுமுடைய மூங்கில்.

[13] வேணு—வில்லுக்குப் பயன்படும் முள்ளிலா மூங்கில்.

[14] குழல்மூங்கில் — நெருக்கமில்லாக் கணுவும் துளையும் முள்ளும் உடையது.

[15] சீகவல்லி—இதனை அம்சவல்லி என்றும் கூறுப.

[16] வாசி—இது மருதமலர்போன்ற மலருடையது.

[17] இம்மலர்கள் ஆடை முதலியவற்றில் நிறமூட்டுவதற்குப் பயன்படுவனவாம்.

[18] காளகூடம்—அரசிலைபோன்ற இலையினையுடைய ஒருவகை மரத்தின் கணுக்களில் உண்டாகும் பயின்.

[19] வச்சைநாபி—இதிற் சேரும் துவரும் காற்று காய்ச்சலை உண்டு பண்ணும் என்ப.

[20] ஆலகாலம்—நீலநிறமான களிர்களையும் பசுவின் முலைக்காம்பு போன்ற பழங்களையுமுடைய ஒருவகை மரத்திலுண்டாவது ; இது இமய மலை கிட்கிந்தை கொங்கணம் முதலிய இடங்களில் உண்டாவது.

[21] மேடசிருங்கம்—கருங்குவளையி னரும்புபோன்ற வடிவினையுடையது.

[22] முத்தை—இது கோரைக்கிழங்கு போன்ற உருவமுடையதும், சுக்காங்கல்போன்ற வடிவினையுடையதும் என இருவகைப்படும்.

[23] குட்டம்—இது கீழ்க்காய்நெல்லியின் காய் போன்ற கிழங்கினையுடையது.

[24]பெருநஞ்சு [25]வேல்லிதகம் [26]கௌரார்த்திரம் [27]பாலகம்மார்க்கடம் [28]ஐமவதம் [29]காலிங்ககம் [30]தாரதகம் [31]அங்கோலசாரம் உட்டிரகம் [32]முதலிய [33]நஞ்சுகள் [34]பேழைகளில் வைக்கப்பட்டனவும் உயிரோடுள்ளனவும் ஆகிய [35]பாம்புகள் புழுக்கள் ஆகிய இத்துணை நஞ்சு வகைகளும்;

உடும்பு வெள்ளுடும்பு வரிவேங்கை முதலே சிங்கம் புலி யானை எருமை கவரிமான் சிம்புள் காண்டாமிருகம் பசு மான் கவையமா ஏனைய காட்டுவிலங்கு நாட்டுவிலங்கு பறவை பாம்பு ஆகிய இவைகளுடைய [36]தோல் எலும்பு பித்தம் நரம்பு பல் கொம்பு குளம்பு வால் இவைகளும்;

எஃகு செம்பு விருத்தம் வெண்கலம் காரீயம் வெள்ளீயம் வைகிருந்தகம் பித்தளை ஆகிய உலோக வகைகளும்;

மூங்கில் பிரம்புகளாலும் மண்ணாலும் ஆகிய பாண்டங்களும்;

---

[24] பெருநஞ்சு—இறைச்சி போன்ற நிறமும் மூலேக்கண்போன்ற வடிவும் உடையது.

[25] வேல்லிதகம்—கருமை செம்மை கலந்த நிறமுடையது.

[26] கௌரார்த்திரம்—கிழங்கிலுண்டாவது.

[27] பாலகம்—திப்பிலிபோன்ற வடிவமுடையது.

[28] ஐமவதம்—நீண்ட இலேகளை உடையதாய் இமயமலேயிலுண்டாவது.

[29] காலிங்ககம்—யவம்போன்ற வடிவமுடையதாய்க் கலிங்கதேசத்தில் உண்டாவது.

[30] தாரதகம்—தரத நாட்டிலுள்ள ஒரு மரத்திலுண்டாவது.

[31] அங்கோலசாரம்—அழிஞ்சின்மரத்திலுண்டாவது.

[32] முதலிய என்றதனுல் பிரதிபாம் முதலாகக் கூறப்பட்டவெல்லாங் கொள்க.

[33] இங்கே கூறப்பட்ட காலகூடம் முதலிய பதினறு வகை நஞ்சுகளும் நிலேயியற் பொருள்களினின்றும் உண்டாவன. இவற்றிற்குரிய பற்றுக் கோடுகள் பட்டை கிழங்கு இலே மலர் பழம் பயின் வேர் உள்ளீடு தாது வித்து எனப் பத்துவகைப்படும்.

[34] பேழைகளில் வைக்கப்பட்டன—மறைவுச்செயல் என்னும் அதிகரணத்திற் கூறப்பட்டபடி பாம்பு முதலியவற்றைப் பக்குவப்படுத்திக் குடம் முதலியவற்றில் இட்டு வைக்கப்படுவன.

[35] பாம்பு முதலியன இயங்கியற் பொருள்களினின்றும் உண்டாகும் நஞ்சைக் குறிப்பன.

[36] இங்கே கூறப்பட்ட தோல் முதலியவைகள் கவசம் அம்பு உறை முதலியவற்றிற்குப் பயன்படுவனவாம்.

கரி உமி சாம்பல்களும்; காட்டுவிலங்கு நாட்டுவிலங்கு பறவை பாம்பு ஆகிய இவ்வினங்களும்; விறகு புல் வகைகளும் ஆம்.[37]

சுலோகம்

குப்பியத்தால் பிழைப்பவர்களைக்கொண்டு [38]அகத்தினும் [39]புறத்தினும் எல்லா வகையான பாண்டத் தொழில்களையும் [40]வாழ்க்கைக்கு வேண்டியவற்றையும் [41]நகரக்காவலுக்கு வேண்டியவற்றையும் தனித்தனியாகச் [42]செய்வித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் பதினேழாம் பிரகரணம்
" குப்பியத்தலைவன் " என்னும் முப்பத்தெட்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

37 மரவகைகளும் மூங்கில்வகைகளும் கொடிவகைகளும் மரவுரி வகைகளும் கயிற்றுக்குரியவைகளும் ஏடுகளும் மலர்களும் மருந்துவகைகளும் நஞ்சுவகைகளும் தோல் முதலியவைகளும் உலோகவகைகளும் பாண்டங்களும் விலங்கு முதலிய இனங்களும் விறகுவகைகளும் குப்பிய வகைகளாம் எனக்கொள்க.

38 அகம்—அரணின் உட்பகுதி.

39 புறம்—அரணிற்கு வெளிப்பட்ட பகுதிகள்.

40 வாழ்க்கைக்கு வேண்டியவை—கலப்பை உலக்கை வண்டி முதலியன.

41 நகரக் காவலுக்கு வேண்டியவை—பொறி படை முதலியன.

42 செய்வித்தற்கு ஏவுதற் கருத்தா குப்பியத்தலைவன்.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பதினெட்டாம் பிரகரணம் — [1] படைக்கலநிலையத் தலைவன்

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

படைக்கலநிலையத்தலைவன் போர்செய்தற்குரியனவும் [2] அரணுக்குரியனவும் பகைவர்நாட்டை அழித்தற்குரியனவும் ஆகிய பொறி படைக்கலம் [3] தடை என்னும் இவற்றையும் பிற கருவிகளையும் அவ்வத்தொழிலில் வல்ல (குடியிற் பிறந்த) காருகர் சிற்பிகள் இவர்களைக்கொண்டு [4] தொழில் அளவு காலம் கூலி பயன் இவற்றை வரையறை செய்துகொண்டு செய்வித்தல்வேண்டும்; அவற்றைத் தன்னிலத்தில் வைத்துக் காத்தல்வேண்டும். [5] அடிக்கடி இடமாற்றத்தையும் வெயில் காற்றுப்படுதலையும் செய்தல் வேண்டும். [6] வெப்பம் தட்பம் புழு இவைகளாற் கேடுறாதபடி வைத்தல்வேண்டும். [7] இயல்பு [8] உருவம் [9] இலக்கணம் [10] அளவு [11] வரவு [12] பெறுமானம் [13] கொள்கலம் இவற்றை ஆராய்ந்தறிதல் வேண்டும்.

39-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] குப்பிய வகைகளினுட்பட்ட படைக்கலம் முதலியனபற்றி இதன்கட் கூறப்படுதலின் முன்னைப் பிரகரணத்தோடு இதற்குள்ள இயைபு புலனாதலறிக.

[2] அரணுக்குரியன—தன் அரணைக் காத்தற்குரியன.

[3] தடை—இருப்புக்கவசம் முதலின.

[4] தொழிலளவு—செய்யத்தக்க பொறி படை முதலியவற்றின் எண் அமைப்பு முதலியவற்றின் அளவு.

[5] அடிக்கடி—இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை.

[6] வெயில் மழை புழுக்குடைதல் முதலியவற்றால் கேடுறாதபடி எண்ணெய் முதலியன பூசிப் பாதுகாத்தல் வேண்டும் என்பது கருத்து.

[7] இயல்பு—வெட்டுதல் குத்துதல் முதலிய தொழிற்றன்மை.

[8] உருவம்—நேர்மை வளைவு முதலியன.

[9] இலக்கணம்—நூலிற் கூறிய அமைப்பு.

[10] அளவு—நீளம் எடை முதலியன.

[11] வரவு—யாண்டிருந்து அடையப்பட்டதென்பது.

[12] பெறுமானம்—விலையினளவு.

[13] கொள்கலம்—உறை முதலியன.

[14]சருவதோபத்திரம் [15]சாமதக்கினியம் [16]பன்முகம் [17]விசுவாச காதி [18]சங்காடி [19]யாநகம் [20]கொண்டல் [21]வாகு [22]ஊர்த்துவவாகு [23]அருத்தவாகு இவை [24]நிலையியற் பொறிகளாம்.

[25] பாஞ்சாலிகம் [26]தேவதண்டம் [27]சூகரிகை [28]உலக்கைத்தடி

---

14 சருவதோபத்திரம்—வண்டிக்கால்போன்ற வடிவத்தையும் கூரிய வட்டகையையும் உடையது; மதிலிலுள்ள கந்தருவப் பதுமையின் கையி லிருப்பதாய் நாற்புறமும் சுழன்று கற்களை வீசுவது.

15 சாமதக்கினியம்—நடுத்துளையில் வைக்கப்பட்ட பெரிய அம்புகளை எய்வது.

16 பன்முகம்—மதிற் சுவரின் மேல் வட்டமாக அமைந்ததும் தோலால் மூடப்பட்டதும் இரண்டு மூன்று அடுக்குகளை உடையதும் வில்லாளிகள் இருத்தற்குரியதும் ஆகிய அட்டாலகத்தில் அமைக்கப்படும் ஒருவகைப் பொறி.

17 நகரத்தின் வெளிப்புறத்தில் அமைக்கப்படும் தாழக்கோலாக நின்று பொறியாற் பிரிக்கப்பட்டுப் பகைவரைக் கொல்வது.

18 பகைவரின் அட்டாலகம் முதலியவற்றைக் கொளுத்துதற் பொருட்டு நீண்ட மரக்கட்டையால் அமைக்கப்படும் தீப்பொறி.

19 யாநகம்—ஆழிவடிவின்மேல் வைக்கப்பட்டு பலகைகளை இடையி லுடைய கோல்போல் நீண்ட ஒருவகைப் பொறி.

20 கொண்டல்—தீயணைத்தற்குரிய நீர்ப்பொறி.

21 வாகு—ஒன்றுக்கொன்று எதிர்முகமாக வைக்கப்பட்டுப் பொறி யியக்கத்தால் பகைவரைக் கொல்லுதற்கு இரண்டு தூண் வடிவில் அமைக் கப்படுவது.

22 ஊர்த்துவ வாகு—அணிமையில் வரும் பகைவரைக் கொல்லுதற்கு மதிலின் உச்சியில் பெரிய தூண் வடிவில் அமைக்கப்படும் பொறி.

23 அருத்தவாகு—இஃது ஊர்த்துவவாகுவில் பாதி அளவுடையது.

24 இப்பத்தும் பிரிந்து செல்லாது, அமைக்கப்பட்ட இடத்திலேயே இருந்து தொழில் புரிவன.

25 பஞ்சாலிகம்—இடைவெளியின்றி வைரமேறிய மரங்களாற் கூரிய முகத்துடன் அமைக்கப்படுவது; அகழிவழியாகப் பகைவர் வாராமற் றடைப்படுத்துவது.

26 தேவதண்டம்—மதிலின் உச்சியில் அடிமுளையின்றித் தூண்வடிவி லமைக்கப்படுவது.

27 சூகரிகை—நாலினாலும் தோலினாலும் ஆக்கப்பட்டு உள்ளே பஞ்சு மயிர் இவைகளைப் பொதிந்து பெருந்துருத்தி போன்ற வடிவினதாக அமைக் கப்படுவது; கோபுரம் அட்டாலகம் தேவபதம் என்னும் இவற்றைப் பகை வர் எறியும் கல் முதலியன தாக்காவண்ணம் அமைக்கப்படுவது; மதிலைப் பகைவர் பற்றாவண்ணம் மூங்கிலாலும் தோலாலும் பன்றி வடிவிலமைக்கப் படுவ தெனினுமாம்.

28 உலக்கைத்தடி—கருங்காலிமரத்தாலாயது.

[29]யானைத்தடை [30]ஓலைவிசிறி முற்கரம் [31]துருகணம் கதை முட்கதை குந்தாலி [32]பெருமுழக்கு [33]உற்காடிமம் [34]உற்பாடிமம் நூற்றுவரைக்கொல்லி முத்தலைவேல் ஆழி [35]இவை இயங்கியற் [36]பொறிகளாம்.

[37]வேல் [38]ஈட்டி [39]குந்தம் [40]ஆடகம் [41]பிண்டிபாலம் சூலம் [42]தோமரம் [43]பன்றிச்செவி [44]கணையம் [45]கற்பணம் [46]அச்சுறுத்தி

---

29 யானைத்தடை—பகைவர்யானையைத் தடுத்தற்குத் தாழக்கோல்வடிவமாகச் செய்யப்படுவது.

30 ஓலை விசிறி—விசிறிபோற் சுழல்வது.

31 துருகணம்—முற்கரவடிவினது.

32 பெருமுழக்கு—தோலாற் போர்க்கப்பட்ட நான்கு தூண்களையுடையது; பேரொலியுடன் மண்ணையும் கல்லையும் வாரியிறைக்கும் பொறி.

33 உற்காடிமம்—முற்கரவடிவினமைந்த மற்றொரு பொறி.

34 உற்பாடிமம்—தூண் முதலியவற்றைப் பிளத்தற்குப் பருந்து வடிவிலமைக்கப்படுவது.

35 இவை—இப்பதினேழும்.

36 பொறியாவது :—திட்பத்தாலும் சுழற்சியாலும் அமுத்துதலாலும் இயங்குவதாம்.

37 வேல்—இஃது அலரியின் இலைபோன்ற முகமும் ஆவின் முலைக்காம்பு போன்ற அடிப்பாகமும் உடையதாய் நான்குமுழநீளத்தில் முற்றும் இரும்பால் ஆக்கப்படுவது.

38 ஈட்டி — இஃது இருபத்துநான்கங்குலநீளமுடையதாக உள்ளே மரக்கோலை வைத்து இரும்பாலாக்கப்படுவது.

39 குந்தம்—இஃது ஏழு ஆறு ஐந்து முழ நீளங்களில் அமைக்கப்பட்டு முறையே தலை இடை கடையாக எண்ணப்படும்.

40 ஆடகம்—குந்தத்தை ஒத்து மூன்று முட்களையுடையது.

41 பிண்டிபாலம்—குந்தம் போன்ற வடிவமும் பருத்த தலைப் பகுதியும் உடையது.

42 தோமரம் — இஃது அம்புபோன்ற நுனியை உடையது; ஐந்து நாலரை நான்கு முழங்களில் ஆக்கப்பட்டு முறையே தலை இடை கடையாகக் கொள்ளப்படும்.

43 பன்றிச்செவி—பன்றியின் காதுபோன்ற நுனியையுடைய ஈட்டி.

44 கணையம்—இருமருங்கும் மும்மூன்று முட்களும் இடையிற் பிடியுமுடையது; இருபத்துநான்கு இருபத்திரண்டு இருபது அங்குலமுடையனவாகச் செய்யப்பட்டு முறையே தலை இடை கடையெனக் கொள்ளப்படும்.

45 கற்பணம்—தோமரத்தை ஒத்த அளவுடையதாய்க் கையினால் எறியத்தக்க சிறகுகளையுடைய அம்பு; இரண்டேகால் இரண்டு ஒன்றேமுக்காற் பல எடையுள்ளனவாய் முறையே தலை இடை கடையாகக் கொள்ளப்படும். இதனை "இரும்பால் ஆனைநெருஞ்சிமுள்ளாகப் பண்ணியது" என்பர் நச்சினார்க்கினியர். (சீவகசிந்-நாமக-256ம் செய்-உரை)

46 அச்சுறுத்தி—ஈட்டியையொத்த அளவினதாய்க் கூரிய நுனியை உடையது.

முதலியன [47]அலமுகப்படைகள்.

பனை மூங்கில் மரம் [48]கொம்பு இவற்றாலாகிய கார்முகம் கோதண்டம் துரூணம் இவை [49]விற்களாம்.

மஞ்சிக்கற்றாழை எருக்கு சணல் பீர்க்கு மூங்கில் நரம்பு இவை [50]வில் ஞாண்களாம்.

[51]மூங்கில் நாணற்றண்டு வன்மரம் [52]தண்டாசனம் [53]நாராசம் இவை அம்புகளாம். இவற்றின் நுனிகள் துணித்தற்கும் பிளத்தற்கும் புடைத்தற்கும் ஏற்றனவாய் இரும்பு எலும்பு வன்மரம் ஆகிய இவற்றால் அமைக்கப்படும்.

கொடுவாள் வட்டவாள் நெடுவாள் என்னும் இவை வாள் வகைகளாம். காண்டாமிருகம் எருமை யானை இவைகளின் கோடுகளும் வன்மரங்களும் அடிமூங்கிலும் இவற்றின் [54]பிடிகளாம்.

[55]பரசு கோடாலி [56]பட்டசம் மண்வெட்டி குந்தாலி [57]அரிவாள் கோடரி இவை வாள்போன்ற கருவிகளாம். [58]பொறிக்கல் கவண்

---

47 அலமுகப்படை—கலப்பை நுனி போன்ற கூர்மையான நுனியையுடைய படைக்கலங்கள்.

48 கொம்பு—விலங்கின் கொம்பு.

49 வைரமேறிய பனை மூங்கில் மரம் என்னும் இவைகளும் விலங்கின் கொம்புகளும் வில் ஆக்குதற்கு மூலப்பொருள்களாம்; தொழிலுருவ வேற்றுமைகளால் கார்முகம் முதலிய பெயர்களைப் பெற்றனவென்பது கருத்து.

50 இவற்றுள் மூங்கில் நாண் கோதண்டத்திற்குரியது.

51 மூங்கில் நாணற்றண்டு வன்மரம் இம்மூன்றும் அம்பு செய்தற்கு மூலப்பொருள்களாம்.

52 தண்டாசனம்—இஃது இரும்பினாற் செய்து மரக்கோலிற் செருகப்படுவது.

53 நாராசம்—முற்றும் இரும்பினாலாக்கப்படுவது.

54 காண்டாமிருகம் முதலியவற்றின் கொம்புகளால் வாட்படைகளுக்குப் பிடி அமைக்கப்படும் என்பது.

55 பரசு—மழு.

56 பட்டசம்—இருமருங்கும் மும்மூன்று கூரிய முகங்களையுடையது.

57 அரிவாள்—மரம் முதலியவற்றை அறுத்தற்குப் பயன்படும் பல பற்களையுடைய வாள்.

58 பொறிக்கல்—இயந்திரத்தால் எறியப்படும் கல்.

கல் [59]எறிகல் [60]உடைகல் [61]உலக்கல் என்னும் இவைகளும் படைகளாம்.

[62]உலோகவலை [63]உலோகச்சிறுவலை [64]உலோகத்தகடு [65]உலோககவசம் [66]நூற்கவசம் என்னுமிவைகளும் [67]முதலை காண்டாமிருகம் கவயமா யானை எருது இவைகளின் தோல் குளம்பு கொம்புகள் என்னும் இவைகளும் கவசங்களாம். [68]தலைக்காப்பு கழுத்துக்காப்பு அரைக்கை [69]கஞ்சுகம் [70]முழுக்கவசம் [71]பட்டை [72]அராவயிறு இவைகளும் கவசங்களாம். [73]பேடி [74]தோல் [75]யானைச் செவி [76]அடிப்பனை [77]தமனிகை [78]கவாடம் [79]கிடுகு கைத்தடை [80]வலாக

---

[59] எறிகல்—கையாலெறியப்படும் கல்.

[60] உடைகல்—பிற பொருள்களை உடைத்து நுறுக்கும் கல்லாலாகிய யந்திரம்.

[61] உலக்கல்—திரண்ட பெரிய கல்.

[62] உலோகவலை—தலைமறைப்புடன் கூடிய கவசம்.

[63] உலோகச் சிறுவலை—தலையல்லாத உறுப்புக்களுக்குரிய கவசம்.

[64] உலோகத்தகடு—கையில்லாத கவசம்.

[65] உலோககவசம்—கையின்றி மார்பையும் முதுகையும் மறைக்கும் கவசம்.

[66] நூற்கவசம்—பருத்தி நூலாற் செய்யப்பட்ட கவசம்.

[67] முதலை முதலியவற்றின் தோல் முதலியவைகளைக் கொண்டு திறமை வாய்ந்த சிற்பிகளால் கவசங்கள் ஆக்கப்படும் என்பது கருத்து.

[68] தலைக்காப்பு—தலைக்கு மாத்திரம் உரியது.

[69] கஞ்சுகம்—முழங்கால் வரையுள்ளது.

[70] முழுக்கவசம்—கணுக்கால் வரையுள்ளது.

[71] பட்டை—கைப்பகுதியின்றி உலோகமல்லாதவைகளால் செய்யப்படுவது.

[72] அராவயிறு—பாம்பின் வயிறுபோலாக்கப்படும் விரலுறை.

[73] பேடி—மரத்தாலும் கொடியாலும் அமைக்கப்படும் கிடுகு.

[74] தோல்—தோற்கிடுகு.

[75] யானைச்செவி—யானையின் செவிபோல் அகன்ற மரமுடி.

[76] அடிப்பனை—பனையாலமைக்கப்படுவது.

[77] தமனிகை—நூலாலாயது.

[78] கவாடம்—மரப் பலகையால் கதவுபோல் செய்யப்படுவது.

[79] கிடுகு—தோல் மூங்கில்களால் செய்யப்படுவது.

[80] வலாககாந்தம்—இது விளிம்பில் இருப்புப்பட்டம் கட்டப்பட்ட கைத்தடியாம்.

காந்தம் இவைகள் [81]தடைக்கருவிகளாம்.

யானை தேர் குதிரை இவற்றை நடாத்துதற்கு ஏற்ற [82]கருவிகளும் அணிகலன்களும் மேற்சேறலுக்குரிய [83]பொருள்களும் உபகரணங்களாம். [84]மாயச்செயல்களும் [85]கரவுச்செயல்களுமாம்.

சுலோகம்

குப்பியம் அவற்றின் தொழில் ஆகிய [86]இவற்றின்கண் நிகழும் [87]விழைவு தொடக்கம் முடிவு நடாத்தும்முறை குற்றம் ஊதியம் குறைவு செலவு ஆகிய இவற்றைப் [88]படைக்கலத்தலைவன் அறிதல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் பதினெட்டாம் பிரகரணம்
"படைக்கலத் தலைவன்" என்னும்
முப்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

81 தடைக்கருவிகள்—பகைவர் எய்யும் அம்புகளைத் தடுத்தற்குரிய கேடக வகைகளாம்.

82 கருவி—சாட்டை தோட்டி முதலியன.

83 பொருள்கள்—ஈண்டு கவசம் தோமரம் யானைகுதிரைகளுக்குரிய மெய்க்காப்பு இவைகளை உணர்த்தும்.

84 மாயச்செயல்கள் — சிறுபடையைப் பெரும்படையாகவும் நெருப்பு இல்லாத இடத்தில் நெருப்பு இருப்பதாகவும் காட்டுதல் முதலியன.

85 கரவுச்செயல்—14-ஆம் அதிகரணத்திற் கூறப்படும் நச்சுப்புகை முதலியவற்றை ஆக்குதலும் அதற்குப் பரிகாரமாகச் செய்யப்படும் எதிர்ச் செயல்களுமாம்.

86 இவற்றின்கண்—சென்ற அத்தியாயத்தினும் இவ்வத்தியாயத்தினும் கூறப்பட்ட செய்திகளில்.

87 விழைவு—அரசனது விருப்பம்.

88 குப்பியத்தலைவனும் அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

பத்தொன்பதாம் பிரகரணம்—[1]துலைமுதலளவையின் நிலையாராய்தல்

நாற்பதாம் அத்தியாயம்

அளவுகருவித் தலைவன் அளவுகருவிக்குரிய தொழில்களைச் செய்வித்தல் வேண்டும்.

பத்துக் [2]கூலமாடம் எடையாதல் ஐந்துகுன்றி எடையாதல் ஒரு [3]பொன்மாடகம் ஆகும். பதினாறு பொன்மாடகம் ஒரு [4]பொன் அல்லது கருடம் ஆகும். நான்கு கருடம்கொண்டது ஒரு பலமாம்.

எண்பத்தெட்டு வெண்கடுகெடை ஒரு [5]வெள்ளிமாடகம் ஆகும். அது பதினாறு கொண்டஎடை ஒருதரணம் ஆகும். இருபது சிம்பிப்பழம் எடைகொண்டதும் [6]அது.

இருபது [7]அரிசி எடைகொண்டது ஒரு [8]வைரதரணம். [9]மாடக அளவையை அரை ஒன்று இரண்டு நான்கு எட்டு மாடகங்கள்

40-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] துலைமுதலளவை—நிறுத்தலளவை முகத்தலளவை முதலிய அளவு கருவிகள். நிலை—ஏற்றத்தாழ்வின்மை. ஆராய்தல்—புதியனவும் பழையனவுமாகிய கருவிகளைச் சோதித்தல். உணவுப்பொருள் விலைப்படுபண்டம் குப்பியம் படைக்கலம் என்னும் இவற்றிற்கு அளவுகருவிகள் இன்றியமையாது வேண்டப்படுவனவாதலால் அவற்றின்பின் இது வைக்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு புலனாதலறிக.

[2] கூலமாடம்—உழுந்து.

[3] பொன்மாடகம்—பொன்னை நிறுத்தற்குரிய அளவு.

[4] பொன் என்பது ஈண்டு ஒருவகை நிறுத்தலளவையைக் குறிக்கும்.

[5] வெள்ளிமாடகம்—வெள்ளியை நிறுத்தற்குரிய அளவு.

[6] அது—தரணம்.

[7] அரிசி—முனைமுறியாத நடுத்தரமான நெல்லரிசி.

[8] வைரதரணம்—வைரத்தை நிறுத்தற்குரிய அளவு.

[9] நிறுத்தலளவைக் கருவிகளின் அமைப்பைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

எனவும், பொன் அளவையை ஒன்று இரண்டு நான்கு எட்டு பத்து இருபது முப்பது நாற்பது நூறு பொன்கள் எனவும் [10]இங்ஙனம் கொள்க.

இதனால் தரணங்களும் [11]கூறப்பட்டபடியாம். நிறைக் கற்கள் இரும்பினாலாதல் மகதநாட்டு மலைக்கல்லாலாதல் மேகல நாட்டு மலைக்கல்லாலாதல் அமைக்கப்படுதல் வேண்டும்.

நனைத்தலாலும் அழுக்கேறுதலாலும் எடைமிகாதனவும் [12]வெப்பத்தால் எடைகுன்றாதனவும் ஆகிய [13]பொருள்களாலும் [14]அமைக்கப்படலாம்.

துலைக்கோல் ஆறங்குல நீளமும் ஒருபல எடையும் உடைய கோல் தொடங்கி முறையே [15]எவ்வெட்டங்குல நீளமும் ஒவ்வொரு பல எடையும் மிகுத்துப் பத்துவகைத் துலைக்கோல்கள் அமைத்தல் வேண்டும். கோலின் [16]இருபுறத்தும் உறியமைக்கலாம்.

முப்பத்தைந்து பலம் எடையுள்ள இரும்பைக்கொண்டு எழுபத்திரண்டங்குல நீளமுள்ளதாகத் [17]திரள்கோலைச் செய்தல்

---

10 இங்ஙனம் பதினான்கு வகையாகக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

11 வெள்ளி நிறுத்தற்குரிய தரண அளவை முதலியவைகளையும் ஒன்று இரண்டு நான்கு எட்டு முதலாகப் பொன்னிற்குக் கூறியபடி கொள்க.

12 வெப்பத்தாலுண்டாம் உலர்ச்சியினால் எடை குறையும் என்பது கருத்து.

13 பொருள்கள்—சிப்பி சங்கு முதலியன.

14 நிறைக்கற்கள் அமைக்கப்படலாம் என்பது கருத்து; நிறைக்கல்—படிக்கல்.

15 இரண்டாவது துலைக்கோல் பதினான்கங்குல நீளமும் இரண்டு பல எடையும் உடையதாகவும், மூன்றாவது இருபத்திரண்டங்குல நீளமும் மூன்று பல எடையும் உடையதாகவும் இங்ஙனமே எவ்வெட்டு அங்குல நீளமும் ஒவ்வொரு பல எடையும் மிகுத்துப் பத்தாவது துலைக்கோல் எழுபத்தெட்டங்குல நீளமும் பத்துப் பல எடையும் உடையதாகவும் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

16 இருபுறத்தும் என்ற உம்மையால் ஒருபுறத்தும் அமைக்கலாம் என்பதாம்; இத்துலைக்கோல்களே வெள்ளி பொன் நிறுத்தற்கும் உரியனவாம்.

17 திரள்கோல்—துலைத்தட்டுக்கு மேல் திரண்ட வடிவிலமைக்கப்படும் இருப்புக்கோல்; இதுபற்றி இத்துலை திரள்கோல் என்னும் பெயரினதாகும்.

வேண்டும். அக்கோலில் ஐந்துபல எடையுள்ள துலைத் தட்டை அமைத்துச் [18]சமன்செய்தல் வேண்டும். கோலில் கருடம் முதலாகப் பலம் வரையில் ஒவ்வொரு கருடத்திற்கும் ஒரு பலம் முதல் பத்துப் பலம்வரை ஒவ்வொரு பலத்திற்கும் பன்னிரண்டு பதினைந்து இருபது பலங்களுக்கும் [19]வரை கீறுதல் வேண்டும். பின்னர் நூறு வரை ஒவ்வொரு பத்திற்கும் ஒவ்வொரு வரை [20]கீறுதல் வேண்டும். [21]அச்சு எண்களில் குறுக்குவரை கீறுதல் வேண்டும்.

[22]இதனெடையின் [23]இருமடங்கு கொண்ட இரும்பைக் கொண்டு தொண்ணூற்றாறங்குல நீளமுள்ள [24]அளவுகோல் என்னும் துலைக்கோலைச் செய்தல்வேண்டும். அதனுடைய [25]நூறு பல வரையின்பின் இருபது ஐம்பது [26]நூறு என்னும் வரைகளைக் கீறுதல்வேண்டும்.

இருபது [27]துலை ஒரு பாரம்.[28]

பத்துத் தரணம் ஒரு பலம். அப்பலம் நூறு கொண்டது

---

[18] சமன்செய்தல்—துலைக்கோல் ஒருபால் உயர்ந்தும் ஒருபால் தாழ்ந்தும் இராமல் சமனாக இருக்கும்படி அடையாளமிடுதல்.

[19] வரை—கோடு.

[20] காற்பலம் முதல் நூறுபலம் வரை அளவு அறிந்துகோடற்கு இருபத்துநான்குகோடு துலாக்கோலிற் கீறவேண்டும் என்பது கருத்து.

[21] அச்சு எண்—ஐந்து பத்து பதினைந்து முதலிய ஐந்தாந்தானத்தெண்கள்; அவ்வெண்களைக்குறிக்கும் வரைகளை விளக்கமாக அறிந்துகொள்ளுதற் பொருட்டுக் குறுக்குவரை கீறல்வேண்டும் என்பது கருத்து. இக்குறுக்கு வரையை சுவத்திக அடையாளமாகக் கீறல்வேண்டும் என்பது ஒருசாரார் கொள்கை.

[22] இதனெடை—திரள்கோலினெடை.

[23] இருமடங்கு—எழுபது பலம்.

[24] அளவுகோல் என்பது ஒரு பெருந்துலையின் பெயா.

[25] இதன் கோலில் நூறு நூற்றிருபது நூற்றைம்பது இருநூறு முதலிய பலங்களுக்குரிய கோடுகளைக் கீறல்வேண்டும் என்பது.

[26] ஈண்டு நூறென்பது நூற்றுக்கு மேற்பட்ட நூறாதலின் இருநூறாகும்.

[27] துலை—நூறுபலம் கொண்டது.

[28] இத்துணையும் பொன் வெள்ளிகளுக்குரிய அளவையாகும்; இனி அவையல்லாத பிறபொருள்களுக்குப் பயன்படும் அளவைக் கூறுகின்றார்.

[29]ஊதிய அளவை. [30]ஊதிய அளவையினின்றும் முறையே ஒவ்வொன்றின் ஐந்தைந்து பலம் குறைந்த அளவு [31]வாணிக அளவு [32]கூலி அளவு [33]உவளக அளவு (எனப்படும்).

[34]இவற்றிற்குப் பலம் முறையே [35]அரையரைத்தரணம் குறைந்ததாம். [36]இவைகளின் கோல்களுக்குரிய இரும்பும் முறையே இரண்டிரண்டு பலம் குறைவாம். நீளமும் முறையே அவ்வாறங்குலம் குறைவாம்.

இறைச்சி உலோகம் உப்பு மணி இவைகள் தவிர ஏனைய பொருள்கள் மேற்கூறிய [37]இரண்டு கோல்களாலும் நிறுக்கப்படுங்

---

29 ஊதிய அளவை—அரசன் தனக்கு வருவாயாகவுள்ள பொருளை நிறுத்தற்குரிய அளவு.

30 ஒரு துலைக்கு நூறு பலமாகவும் தொண்ணூற்றைந்து பலமாகவும் தொண்ணூறு பலமாகவும் எண்பத்தைந்து பலமாகவும்கொண்டு முறையே அவற்றை ஊதிய அளவு வாணிக அளவு கூலியளவு உவளக அளவு எனக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

31 வாணிக அளவு—கொள்ளல் விற்றற்குரியது.

32 கூலியளவு—பணிசெய்வார்க்குக் கூலிகொடுத்தற்குரியது.

33 உவளக அளவு—உவளகத்து மக்கள் மகளிர் முதலியோர்க்குரியது.

34 இவற்றிற்கு—வாணிக அளவு முதலியவற்றிற்கு.

35 ஊதிய அளவிற்குப் பத்துத்தரணம் கொண்டது ஒரு பலமாகவும் அப்பலம் நூறுகொண்டது ஒரு துலையாகவும் கொள்ளல்வேண்டும் என்பதூஉம், வாணிக அளவிற்கு ஒன்பதரைத் தரணங்கொண்டது ஒரு பலமாகவும் அப்பலம் நூறுகொண்டது ஒரு துலையாகவும் கொள்ளல்வேண்டும் என்பதூஉம், கூலியளவிற்கு ஒன்பது தரணம் கொண்டது ஒரு பலமாகவும் அப்பலம் நூறு கொண்டது ஒரு துலையாகவும் கொள்ளல்வேண்டும் என்பதூஉம், உவளக அளவிற்கு எட்டுத் தரணம் கொண்டது ஒரு பலமாகவும் அப்பலம் நூறு கொண்டது ஒரு துலையாகவும் கொள்ளல்வேண்டும் என்பதும் கருத்து.

36 ஊதியக்கோல் முப்பத்தைந்து பலம் எடையும் எழுபத்திரண்டு அங்குல நீளமும் உடையதாம் எனவும், வாணிகக்கோல் முப்பத்துமூன்று பல எடையும் அறுபத்தாறு அங்குல நீளமும் உடையதாம் எனவும், கூலிக்கோல் முப்பத்தொரு பல எடையும் அறுபதங்குல நீளமும் உடையதாம் எனவும், உவளகக்கோல் இருபத்தொன்பது பல எடையும் ஐம்பத்தினன்கங்குல நீளமும் உடையதாம் எனவும் கொள்க.

37 இரண்டு கோல்கள்—அளவுகோலும் ஊதிய அளவுமாம்.

கால் ஐந்துபலம் [38]பிரயாமமாகும்.

மரத்துலேக்கோலே எட்டுமுழ நீளமும் வரைகளும் நிறைக் கற்களும் உடையதாகவும் [39]மயிற்காலேப்பற்றி நிற்பதாகவும் அமைத்தல் வேண்டும்.

ஒருபடி அரிசியைச் சமைத்தற்கு இருபத்தைந்துபலம் விறகு வேண்டும். [40]இதுவே மிகுதி குறைவுகளுக்கும் வழியாம்.

இவ்வாறு [41]துலேக்கோலும் [42]அளவுங் கூறப்பட்டன.

[43]இருநூறுபல உழுந்துகொண்டது ஓர் ஊதிய அளவைத் [44]தூணியாம். நூற்றெண்பத்தேழரைப் பலங்கொண்டது ஒரு வாணிகத்தூணியாம். நூற்றெழுபத்தைந்துபலங்கொண்டது ஓர் [45]உவளகத்தூணியாகும்.

[46]இத்தூணிகளின் மரக்கால் படி உழக்குகள் தத்தம் தூணியி னின்றும் முறையே ஒன்றற்கொன்று [47]நான்கில் ஒரு கூறுடைய தாகும்.

பதினறு தூணி ஒரு காரியாம். இருபது தூணி ஒரு குடமாம். பத்துக்குடம் ஒரு சுமையாம்.

---

[38] பிரயாமம்—நூற்றுக்கு ஐந்து விகிதம் அதிகமாகக் கொடுக்கப்படுவது.

[39] மயிற்கால்—மயிற்கால் போன்ற வடிவமுடைய தூண்கள்.

[40] இவ்வளவையே அரிசியின் மிகுதி குறைவுகளுக்கு ஏற்பக்கொள்ளத் தக்கது. இஃது உணவுப்பொருணிலேயத் தலைவன் என்னும் பிரகரணத்திற் கூறத்தக்கதாயினும், சிறுபொருளாயினும் மிகுதியாகச் செலவிடலாகாது என்பதைப் புலப்படுத்தற்கு அளவைபற்றிய இப்பிரகரணத்திற் கூறப் பட்டது.

[41] துலேக்கோல் பதினறு வகைப்படும்.

[42] அளவு—நிறுத்தலளவைக் கருவி; இது பதினன்கு வகைப்படும்.

[43] இனி முகத்தலளவையைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

[44] தூணி—நான்கு மரக்கால் அல்லது பதினறு படி கொண்டது.

[45] இங்கே கூறிய ஊதியம் வாணிகம் கூலி உவளகம் ஆகிய நான்கையும் பற்றி நிறுத்தலளவையிற் கூறிய குறிப்பிற் காண்க.

[46] இத்தூணிகள்—ஊதியஅளவுத்தூணி முதலியன.

[47] நான்கு உழக்குக்கொண்டது ஒரு படியாகவும் நான்கு படிகொண் டது ஒரு மரக்காலாகவும் நான்கு மரக்கால்கொண்டது ஒரு தூணியாகவும் கொள்ளல்வேண்டும் என்பது.

அளவுகருவி [48]சமவடிவமுடையதாகவும் [49]காற்கூறு தங்குதற்கேற்ற மேற்பரப்புடையதாகவும் உலர்ந்த வன்மரத்தாற் செய்வித்தல் வேண்டும். [50]முழுதும் அகத்துள் அடங்குமாறும் செய்விக்கலாம். [51]நெகிழ்ச்சிப் பொருளுக்கு அகத்துள் அடங்குமாறே செய்வித்தல் வேண்டும்.

கள் மலர் பழம் உமி கரி சுண்ணும்பு நீறு இவைகளுக்கு மேற்பரப்பு [52]இருமடங்காக அமைத்தல்வேண்டும்.

தூணி என்னுங் கருவியின் விலை ஒன்றேகாற்பணம். மரக்காலின் விலை முக்காற்பணம். படியின் விலை ஆறு [53]மாடகமாம். உழக்கின் விலை ஒரு மாடகம் ஆகும்.

நெகிழ்ச்சிப் பொருளிற்குரிய அளவுகருவிகளின் விலை [54]இருமடங்காகும். [55]நிறைக் கற்களின் விலை இருபது பணம் ஆகும். துலைக்கோலின் விலை [56]மூன்றில் ஒரு கூறுகும்.

---

48 சமவடிவம்—அடியும் நுனியும் ஒத்த அளவு.

49 இம்முகத்தலளவைக் கருவிகளில் முக்காற்கூறு கருவியின் உள்ளே தங்கும்படியாகவும் காற்கூறு மேற்பகுதியிற்றங்கும்படியாகவும் அமைக்க வேண்டும் என்றபடி.

50 உழக்கு முதலியவற்றின் மேற்பரப்பிற் கொள்ளத்தக்க பொருளை உள்ளேயே அடங்குமாறு அவற்றைப் பெரிதாகவும் அமைக்கலாம் என்பது கருத்து.

51 நெகிழ்ச்சிப்பொருள்—நெய் எண்ணெய் முதலியன.

52 உழக்கு முதலியவற்றின் மேற்பரப்பில் தங்கவேண்டிய நான்கில் ஒரு கூறு இருமடங்கு ஆகவேண்டும் என்னும் இதனால் ஒருபடி ஐந்துழக்குக் கொள்ளத்தக்கதாக அமைக்கவேண்டும் என்பது போதரும்; மேற்பரப்பில் இருமடங்கு தங்கமாட்டாவாதலால் முழுதும் உள்ளே தங்கும்படி அமைக்க வேண்டும் என்பது கருத்து.

53 பத்துமாடகம் கொண்டது ஒரு கருடம் அல்லது ஒரு பணம் என்ப.

54 மேல்பரப்பில் கொள்ளத்தக்க பொருளும் உள்ளடங்கும்படி பெரிதாக இருப்பதாலும் வழுவழுப்பான உயர்ந்த வன்மரத்தால் செய்யப்படுவதாலும் விலை இருமடங்காகும் என்பது கருத்து.

55 பதினன்கு வகையான நிறுத்தலளவைக் கருவிகள் எல்லாவற்றிற்கும் விலை இருபதுபணம் என்பதாம்.

56 இருபதில் மூன்றில் ஒரு கூறு என்பது.

நான்கு திங்களுக்கு ஒரு முறை ஆராய்ந்து [57] இலச்சினையிடுதல் வேண்டும். [58] இலச்சினையிடாவிடில் இருபத்தேழேகாற் பணம் தண்டமாகும். இலச்சினையிடும்பொருட்டு நாளொன்றிற்குக் [59] கால் மாடம் விகிதம் அளவுகருவித் தலைவனுக்குக் கொடுத்தல்வேண்டும்.

நெய்க்கு முப்பத்திரண்டில் ஒரு கூறும் எண்ணெய்க்கு அறுபத்துநான்கில் ஒரு கூறும் [60] உருக்குவாசியாகும். நெகிழ்ச்சிப் பொருள்களுக்கு [61] ஐம்பதில் ஒரு கூறு அளவுக்குறையீடாம்.

உழக்கிற் குறைந்த அரை கால் அரைக்கால் உழக்கு அளவு கருவிகளையும் செய்வித்தல்வேண்டும்.

சுலோகம்

எண்பத்துநான்கு உழக்கு நெய்கொண்டது ஒரு நெய்வாரகம் எனவும், அறுபத்துநான்கு உழக்கு எண்ணெய் கொண்டது ஓர் எண்ணெய் வாரகம் எனவும் ஆம். இவ்விரண்டின் காற்கூறுகள் [62] சிறுகுடம் எனப்படும்.

இரண்டாம் அதிகரணம் பத்தொன்பதாம் பிரகரணம்
" துலைமுதலளவையின் நிலையாராய்தல் " என்னும்
நாற்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[57] நிறுத்தலளவை முகத்தலளவைக் கருவிகளுக்கு அரசியல் இலச்சினை இடல்வேண்டும் என்பது.

[58] இலச்சினை இடாமல் வழங்கப்படின் என்பது.

[59] நான்கு மாதங்களுக்கு மூன்று பணம் ஆகும் என்பதாம்.

[60] மீண்டும் உருக்கி அளப்பதால் குறைவுபடுதல் குறித்து மிகுதியாக வாங்குதல் வேண்டும் என்பது.

[61] எல்லா நெகிழ்ச்சிப்பொருள்களுக்கும் ஐம்பதில் ஒரு கூறு குறையீடாம் என்பது கருத்து.

[62] நெய்ச்சிறுகுடம் எண்ணெய்ச்சிறுகுடம் எனப் பெயர் பெறும்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபதாம் பிரகாரணம்—[1]நிலம் பொழுதளவை

நாற்பத்தொராம் அத்தியாயம்

அளவைத்தலைவன் நிலம் பொழுது ஆகிய இவற்றின் அளவை களை அறிதல்வேண்டும். எட்டுச் [2]சிற்றணுக்கொண்டது ஒரு [3]தேராழித்துகளாம். அஃது எட்டுக்கொண்டது ஓர் [4]ஈராகும். அஃது எட்டுக்கொண்டது ஒரு [5]பேனிடை. அஃது எட்டுக் கொண்டது ஓர் [6]யவவிடை. எட்டு யவவிடை கொண்டது ஓர் அங்குலம்.

நடுத்தரமான மனிதனுடைய கையின் நடுவிரலின் நடுப்பகுதி யினது அகலமும் ஓர் அங்குலமாம்.

நான்கங்குலம் கொண்டது ஒருவிற்கோளாம். எட்டங்குலங் கொண்டது ஒரு விற்பிடியாகும். பன்னிரண்டங்குலம் கொண்டது ஒரு சாண் அல்லது ஒரு [7]நிழலாளளவாகும். பதினன்கங்குலங் கொண்டது சமம் சலம் பரியம் அடி என்னும் பெயர்களால் வழங்கப்படும். இரண்டுசாண், ஒரு முழம் அல்லது [8]பிராசாபத் திய முழம் எனப்படும். [9]மரஅளவுகருவியையும் புன்னிலத்தை

41-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முன்னைப் பிரகரணத்தில் துலைமுதலியவற்றின் அளவு கூறப்பட்டது; இதன்கண் அளவையினம்பற்றி நில அளவை கால அளவைகள் கூறப்படு தலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதனுற் பிரகரண இயைபுண்மை யறிக.

[2] சிற்றணுக்கள், கட்புலனுக்குப் புலப்படாதவை.

[3] தேராழித்துகள்—தேர் உருளினின்றும் உண்டாவது; கட்புலனுக்குப் புலப்படும் இயல்பினது.

[4] ஈர்—பேன்முட்டை.

[5] பேனிடை—பேனின் நடுப்பகுதி.

[6] யவவிடை—யவம் என்னும் தானியத்தின் நடுக்கூறு.

[7] நிழலாள் அளவு—இதனைச் சாயாபுருஷப்பிரமாணம் என்பர்.

[8] பிராசாபத்தியம்; பிரசாபதி—பிரமன்.

[9] மரஅளவுகருவி—மரத்துலைக்கோல் முதலியன.

யும் அளத்தற்குரிய முழம் ஒரு விற்கோள் மிக்கதாகும். ஒரு விற்பிடி மிக்கமுழம் [10]கிட்கு அல்லது கஞ்சம் எனப்படும். நாற்பத்திரண்டங்குலம் கொண்டது தச்சனுடைய [11]வாட்டொழிற்குரிய முழமாகும். இஃது அரசனுடைய பாசறை அரண் இவைகளுக்கும் அளவுகருவியாம். ஐம்பத்துநான்கங்குலம் கொண்டது குப்பியப்பொருள் காடு இவைகளுக்குரிய ஒரு முழமாகும். எண்பத்துநான்கங்குலம் கொண்டது [12]ஒருபாகம் ஒருகயிற்றளவு [13]ஓராளாழம் என்னும் பெயர்களால் வழங்கப்படும். நான்கு முழம் கொண்டது ஒருகோல் ஒருவிற்கிடை ஒருநாளி ஓர் ஆளளவை (என்னும் பெயர்களைப் பெறும்). நூற்றெட்டங்குலம் கொண்டது ஒரு [14]கொற்றுவிற்கிடையாம். இது வழி மதில் இவற்றை அளத்தற்குரியதாம். [15]அங்கிவழிபாட்டில் ஆளளவை என்பதும் இது.

[16]அந்தணர் [17]விருந்தினர் இவர்களுக்குக்கொடுக்கும் நிலத்தை அளத்தற்குரிய ஒரு கோல் [18]ஆறு கஞ்ச அளவு கொண்டதாகும். பத்துக்கோல் கொண்டது ஒரு கயிறு ஆகும். இரண்டு கயிறு கொண்டது ஒரு பரிதேசம் ஆகும். மூன்று கயிறு கொண்டது ஒரு [19]நிவர்த்தனம் ஆகும். [20]ஒரு பகுதியில் இரண்டு கோல் மிக்கது

---

10 கிட்கு—முப்பத்திரண்டங்குலம்கொண்ட பெருமுழம்.

11 வாட்டொழில் — வாளால் அறுக்கப்பட்ட மரம் முதலியவற்றை அளத்தல்.

12 பாகம்—இரண்டு கைகளையும் இருமருங்கும் நீட்டிக் கண்ட அளவு.

13 ஓர் ஆள் ஆழம்—கிணறு முதலியவற்றின் ஆழத்தை அளத்தற்குரிய புருடப்பிரமாணம்.

14 கொற்று—மதில்வழி முதலியன அமைக்கும் கொற்றன் தொழில்.

15 வேள்வியில் தீக்கடவுளை வழிபடுதற்கு அமைக்கப்படும் குண்டம் மண்டலம் முதலியவற்றை அளத்தற்குரியது என்பது கருத்து.

16 அந்தணர்—வேள்வி செய்விப்போர் முதலியோர்.

17 விருந்தினர்—புதியராக வந்தவர்கள்.

18 ஆறுகஞ்சம்—எட்டுமுழ நீளம்.

19 நிவர்த்தனம் என்பது நீளத்தினும் அகலத்தினும் முப்பது முப்பது கோல் கொண்ட ஒரு சமசதுர அளவின் பெயராகும்.

20 முப்பத்திரண்டு கோல் நீளமும் முப்பது கோல் அகலமுமுடைய ஒரு நெடுஞ்சதுரம் ஒரு கையாகும் என்பது.

ஒரு கையாகும். இரண்டாயிரம் விற்கிடை கொண்டது ஓர் [21]ஆனெளியாகும். நான்கு ஆனெளி கொண்டது ஒரு [22]யோசனை தூரமாகும். நில அளவை இங்ஙனமாம்.

இனிப் பொழுதளவை (வருமாறு) :—

துடி இலவம் நிமேடம் காட்டை கலை நாழிகை முழுத்தம் முன்பின் பொழுதுகள் பகல் இரவு பக்கம் திங்கள் பருவம் அயனம் யாண்டு யுகம் [23]இவை காலங்களாம்.

[24]நிமேடத்தில் நான்கில் ஒரு கூறு ஒரு துடி.
இரண்டு துடி ஓர் இலவம்.
இரண்டு இலவம் ஒரு நிமேடம்.
ஐந்து நிமேடம் ஒரு காட்டை.
முப்பது காட்டை ஒரு கலை.
நாற்பது கலை ஒரு [25]நாழிகை.

[26]நான்கு பொன்மாட எடையினால் நான்கங்குல நீளமுடையதாகத் திரட்டப்பட்ட கம்பி நுழைதற்கேற்ற குடத்தின் தொளை வழியாக ஒரு மரக்கால் நீர் ஒழுகும் காலமும் நாழிகையாம்.

---

21 ஆனெளி—பசுவொலி கேட்கும் தொலைவு; என்று அத்துணை நீளத்தைக்குறிக்கும் ஓர் அளவாகும்; இதனைக் குரோசம் என்றும் கூறுப.

22 இரண்டாயிரம் விற்கிடை எண்ணாயிரம் முழமாகும்; அஃது ஆனெளி எனவும் குரோசம் எனவும் பெயர்பெறும் என்பதும், அக்குரோசம் நான்கு அல்லது முப்பத்திரண்டாயிரம் முழம் கொண்டது ஒருயோசனை தூரமாகும் என்பதும் கருத்து.

23 துடிமுதல் யுகம் வரையிலுள்ள பதினேழும் கால அளவையின் கூறுகளாம்.

24 நிமேடம் — மனிதருக்கு இயல்பாக உண்டாகும் கண்ணிமைப் பொழுது; இதனை ஒரு மாத்திரை என்றும் கூறுவர்.

25 கண்ணிமைப்பொழுது அல்லது மாத்திரைப்பொழுது ஆறாயிரம் கொண்டது ஒரு நாழிகையாம் என்பது.

26 நாழிகையின் அளவை மற்றொரு வகையாகக் கூறுகின்றார். இங்கே கூறிய அளவில் தொளையமைக்கப்பட்ட ஒரு குடத்தில் ஒருமரக்கால் நீர் பெய்து ஒழுகவிடின் அந்நீர் முற்றும் ஒழுகும் காலம் ஒரு நாழிகையாம் என்பது; இதனை நாழிகைவட்டில் என்று தமிழ்நூல் கூறும்.

இரண்டு நாழிகை ஒரு [27]முழுத்தம் ஆகும். [28]சித்திரைத் திங்களிலும், ஐப்பசித் திங்களிலும் நிகழும் பகலிரவுகள் தனித் தனிப் பதினைந்து முழுத்தம் உடையனவாம்.

[29]அவற்றின் பின்னர் [30]ஆறு திங்களிற் பகலிரவுகள் மூன்று முழுத்தகாலஅளவு கூடியும் குறைந்தும் வரும்.

[31]நிழல் [32]எட்டாள் நீளமிருந்தால் (முற்பகலில்) [33]பதினெட்டில் ஒரு கூறும், ஆருள் நீளமிருந்தால் பதினன்கில் ஒரு கூறும், நான்காள் நீளமிருந்தால் எட்டில் ஒரு கூறும், இரண்டாள் நீளமிருந்தால் ஆறில் ஒரு கூறும், ஓராள் நீளமிருந்தால் நான்கில் ஒரு கூறும், எட்டங்குல நீளமிருந்தால் பத்தில் மூன்று கூறும், நான்கங்

---

27 முழுத்தத்தின்பின் முன்பின் பொழுதுகள் என்றுகூறியது, முற்பகல் பிற்கல் முன்னிரவு பின்னிரவு என்பவற்றைக் குறிக்கும்.

28 சித்திரைத்திங்கள் முதனாளிலும் ஐப்பசித்திங்கள் முதனாளிலும் பகலிரவுகள் தனித்தனியே முப்பது நாழிகை உடையனவாகும் என்பது.

29 அவற்றின் பின்னர்—சித்திரைத்திங்களின் முதல்நாளும் ஐப்பசித் திங்களின் முதல்நாளும் ஆகிய அவற்றின்பின்.

30 சித்திரைத்திங்கள் முதல் ஆறுதிங்கள் பகல்நாழிகை கூடியும், இரவு நாழிகை குறைந்தும் வரும் என்பதும், ஐப்பசித்திங்கள் முதல் ஆறுதிங்கள் பகல்நாழிகை குறைந்தும் இரவுநாழிகை கூடியும் வரும் என்பதும், கூடுதல் முப்பத்துமூன்று நாழிகை வரையும் குறைதல் இருபத்தேழுநாழிகை வரையுமாம் என்பதும், அங்ஙனம் ஏற்படுங்கால் மூன்று முழுத்தகால அளவாகிய ஆறுநாழிகை கூடியும் குறைந்தும் வரும் என்பதும் கருத்து. பகல் முப்பத்துமூன்று நாழிகையாகுங்கால் இரவு இருபத்தேழு நாழிகை ஆகுமாதலால், ஆறுநாழிகை குறைவாதலறிக.

31 நிழலளவையைக்கொண்டு காலந்துணியுமாறு கூறுகின்றார்.

32 எட்டாள் நீளமென்பது ஈண்டுப் பன்னிரண்டங்குல நீளமுள்ள எட்டுநிழலாள் நீளமெனக் கொள்ளல்வேண்டும். பன்னிரண்டங்குலம் வெளிப்பட்டிருக்கும்படி ஒருமுளையை நிலத்திலடித்துக் கணக்கிடலாம். பின்வரும் ஆறு நான்கு இரண்டு ஒன்றுஎன்னும் ஆள்நீளங்களையும் நிழலாள் அளவாகவே கொள்ளல்வேண்டும்.

33 பதினெட்டில் ஒருகூறென்பது :—அத் திங்களுக்குரிய பகல்நாழிகையைப் பதினெண்கூறுபடுத்து அவற்றில் ஒரு கூறு எனக் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கொள்ளுங்கால் சிறிதுகூடிய ஒன்றரை நாழிகையாம். இங்ஙனமே பிறவற்றிற்குங் கொள்க.

குல நீளமிருந்தால் எட்டில் மூன்று கூறும் [34]கழிந்தனவாம். நிழலில்லாதது நண்பகலாம். பிற்பகலில் இங்ஙனம் [35]எஞ்சியதாகக் கொள்ளல்வேண்டும்.

ஆடித்திங்களில் [36]நண்பகல் நிழலற்றதாக இருக்கும். பின்னர் ஆவணி தொடங்கி ஆறுதிங்கள்வரை நிழல் [37]இரண்டங்குலம் மிகுந்தும் மாசி தொடங்கி இரண்டங்குலம் குறைந்தும் இருக்கும்.

பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்கம் ஆகும். திங்கள் வளரும் பக்கம் வளர்பிறைப் பக்கமும் தேயும் பக்கம் தேய்பிறைப் பக்கமும் ஆம்.

இரண்டு பக்கம் கொண்டது ஒரு திங்கள்.
முப்பது நாட்கள் கொண்டது ஒரு [38]கூலித் திங்கள்.
[39]அரைநாள் மிக்கது ஒரு சௌரமாதம்.
[40]அரைநாள் குறைந்தது ஒரு சாந்திரமாதம்.
இருபத்தேழு (நாட்கள் கொண்டது) மீன்மாதம்.
முப்பத்திரண்டு (நாட்கள் கொண்டது) [41]மலமாதம்.
முப்பத்தைந்து (நாட்கள் கொண்டது) [42]குதிரைக்காரருக்
குரிய ஒரு மாதம் ஆம்.

---

34 முற்பகலுக்கு மேற்கூறிய நாழிகையைக் கழித்து எஞ்சிய நாழிகையை இருப்பதாகக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

35 முன்குறிப்பிட்ட நாழிகையைப் பிற்பகலில் எஞ்சியிருப்பதாகக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

36 நண்பகல் என்பது அவ்வத்திங்களுக்குரிய பகல்நாழிகையின் பாதி அளவைக் குறிக்கும்.

37 ஆவணிதொடங்கித் தைத்திங்கள்வரை நண்பகலில் நிழல் சிறிது சிறிதாகக்கூடி இரண்டங்குலம்வரை மிகுந்துகாணப்படும் எனவும், மாசி தொடங்கி அங்ஙனம் மிக்க நிழல் சிறிது சிறிதாகக் குறைந்துஆடித்திங்களில் முற்றும் ஒழிந்துவிடும் எனவும் கொள்க.

38 கூலித்திங்கள்—பணியாளர்க்குக் கூலிகொடுக்கும் நிமித்தம் கணக்கிட்டுக்கொள்ளப்படுவது.

39 அரைநாள் மிக்கது—முப்பதரைநாள்; இது சூரியகதியைக்கொண்டு கணக்கிடப்படுவது.

40 அரைநாள் குறைந்தது—இருபத்தொன்பதரைநாள் ; இது சந்திர கதியைக்கொண்டு கணக்கிடப்படுவது.

41 மலமாதம்—நற்காரியங்களுக்கு விலக்கப்பட்ட மாதம்.

42 குதிரைப்பணியாளர்க்குக் கூலிகொடுத்தற்குரியதென்பது கருத்து.

நாற்பது (நாட்கள் கொண்டது) [43]யானைப் பாகருக்குரிய
ஒரு மாதம் ஆம்.
[44]இரண்டு திங்கள் ஒரு பருவம்.
ஆவணியும் புரட்டாசியும் கார்ப்பருவம்.
ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப்பருவம்.
மார்கழியும் தையும் முன்பனிப் பருவம்.
மாசியும் பங்குனியும் பின்பனிப் பருவம்.
சித்திரையும் வைகாசியும் இளவேனிற் பருவம்.
ஆனியும் ஆடியும் முதுவேனிற் பருவம்.
[45]பின்பனிப்பருவந் தொடங்கி உத்தராயணமாம்.
[46]கார்ப்பருவம் தொடங்கித் தக்கணுயனமாம்.
இரண்டு அயனங்கள் ஓரியாண்டாகும்.
ஐந்தியாண்டு ஒரு யுகமாம்.

சுலோகங்கள்

(*1*) ஞாயிறு, நாடோறும் [47]நாளின் அறுபதில் ஒரு கூற்றைக் [48]கவர்ந்தெடுத்தலால் [49]ஒரு பருவத்திற்கு ஒருநாள் மிகும்படி செய்கிறுன். திங்களும் அங்ஙனமே ஒரு நாளை மிகும்படி செய்கிறுன்.

---

[43] இது யானைப்பாகருக்குரியது.

[44] ஈண்டுத் திங்கள் என்பது இரண்டு பக்கங்களையுடையது.

[45] பின்பனிப்பருவத்தின் தொடக்கம் மாசித்திங்களாகும்; பருவமுறை பற்றி இவ்வாறு கூறினும் முன்பனிப்பருவத்தின் பிற்பகுதியாகிய தைத் திங்கள் தொடங்கி உத்தராயணமாம் என்று கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[46] கார்ப்பருவத்தொடக்கம் ஆவணித்திங்கள் ஆகும்; பருவமுறைபற்றி இவ்வாறு கூறினும், முதுவேனிற் பருவத்தின் பிற்பகுதியாகிய ஆடித் திங்கள் தொடங்கி தக்ஷிணயனமாம் என்று கொள்ளல்வேண்டும்.

[47] ஞாயிற்றுக்கேற்ப நாளைப் பகலெனவும் திங்களுக்கேற்ப இரவென வும் கொள்ளல்வேண்டும்.

[48] கவர்ந்தெடுத்தல்—நாளொன்றுக்கு ஒரு நாழிகைவிகிதம் குறைத்துக் கோடல்.

[49] பருவம்ஒன்றுக்கு நாள் அறுபதாகலின் சூரியனுல் மிகுக்கப்பட்ட பகல்நாழிகை அறுபதாகும். இவ்விரண்டுங்கூட்டப் பருவத்திற்கு இரண்டு நாள் விகிதம் ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு நாள் மிகும்.

(2) இங்ஙனம் செய்தலால் [50]இரண்டரையாண்டில் [51]முதுவேனிலின் முற்பகுதியில் ஓர் அதிமாதத்தையும் [52]ஐந்தாமியாண்டின் இறுதிப் பருவத்தின் பிற்பகுதியில் ஓர் அதிமாதத்தையும் உண்டாக்குகின்றனர்.

இரண்டாம் அதிகரணம் இருபதாம் பிரகரணம்
"நிலம் பொழுதளவை" என்னும் நாற்பத்தொராம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[50] ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு நாட்களாக இரண்டரை ஆண்டிற்கு முப்பதுநாள் மிகும் ஆதலின் அஃதோர் அதிமாதம் ஆகும் என்பது கருத்து.

[51] இங்கே கூறிய மாதம் சாந்திரமாதத்தாற் கொள்ளப்படுதலின் மாசிதொடங்கி அதற்கு முப்பதாம் திங்களாகிய ஆடிக்கு முன்னும், ஆனிக்குப் பின்னும் ஆகிய இடைக்காலத்தில் அதிமாதம் உண்டாகும்; ஆதலின் முதுவேனிலின் முற்பகுதி என்று கூறப்பட்டது.

[52] ஐந்தாமாண்டின் இறுதிப்பருவமாவது; முன்பனிப்பருவமாகும். அதன் பிற்பகுதி தைத்திங்களாதலால் அதற்கும் மாசிக்கும் இடையில் ஓர் அதிமாதம் உண்டாம்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தோராம் பிரகாரணம்—[1] உல்குபொருள் தலைவன்

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

உல்குபொருட்டலைவன் [2]உல்குபொருட்சாலையையும் [3]கொடியையும் கிழக்கு நோக்கியாதல் வடக்கு நோக்கியாதல் [4]பெரிய வாயிலுக்கருகில் அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

[5]உல்குபொருள்பெறுவோர் [6]நால்வராதல் ஐவராதல் இருந்து பண்டங்களுடன் வந்த வணிகர்கள் [7]யார் யார் என்றும் எங்கிருந்து வந்தனர் என்றும் எத்துணைப் [8]பண்டம் கொண்டு வந்தனர் என்றும் அவை [9]எங்கு இலச்சினை இடப்பட்டனவென்றும் **வினவி** வரைந்துகொள்ளல் வேண்டும்.

[10]இலச்சினை இடப்படாதவைகளுக்குக் கொடுக்கவேண்டிய

42-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உல்குபொருள்—கலத்திலும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது; இப்பொருள் வேற்றிடங்களின் தொடர்புடைமையாலும் பல்வகை அளவைகளால் வரையறுக்கப்படும் பல்வகைப் பொருள்களைப்பற்றிய தாதலாலும் இது "துலைமுதலளவையின் நிலையாராய்தல், நிலம்பொழுதளவை" என்னும் பிரகரணங்களின்பின் வைக்கப்பட்டது. இது பிரகரண இயைபு.

[2] உல்குபொருட்சாலை—சுங்கம்கொள்ளும் இடம்.

[3] சுங்கம்கொள்ளும் இடம் இதுவெனச் செய்மையிலிருந்து அறிந்துகொள்ளுவதற்கு நாட்டப்படுவது.

[4] பெரியவாயில்—கோபுரவாயில்.

[5] இவர்கள், உல்குபொருள்தலைவனால் நியமிக்கப்பட்டோர் ஆவர்.

[6] உண்மை மாறுபடாமைகுறித்துத் தனித்தனி **வினவி** அறிதற்பொருட்டு உல்குபொருள்பெறுவோர் பலராக இருக்கவேண்டும் என்பது கருத்து.

[7] இது குலம் பெயர்களைப்பற்றிய வினவாகும்.

[8] பண்டம்—விற்றற்குரியது.

[9] எல்லைகாவலர் யாரால் முத்திரையிடப்பட்டன என்று ஆராய்தல் வேண்டும் என்பது.

[10] முத்திரையிடாமல் பண்டம்கொணர்வோருக்கு அவற்றின்பொருட்டு எல்லைகாவலர்க்கு இறுக்கவேண்டிய உல்குபொருளளவின் இருமடங்கு தண்டம் **விதித்தல்**வேண்டும் என்பது. எல்லைகாவலருக்கு இறுக்கவேண்டிய உல்குபொருளின் அளவு பின் கூறப்படும்.

வையின் இருமடங்கு தண்டம் ஆகும்.

பொய்யிலச்சினை பொறிக்கப்பட்டவைகளுக்கு உல்குபொருளின் எண்மடங்கு தண்டம் ஆகும்.

[11]இலச்சினைசிதைந்த பண்டங்களையுடையவர்களைச் சில நாழிகை ஓரிடத்தில் இருத்துதல் தண்டமாம்.

அரசியல்இலச்சினை [12]மாறுபட்டவைகளையும் [13]பெயர் மாற்றம் உடையவைகளையும் கொண்டுவருவாரை ஒன்றேகாற் பணம் தண்டம் இறுக்கும்படி செய்தல் வேண்டும்.

[14]கொடிமரத்தின் அருகில் வந்த பண்டத்தின் அளவையும் விலையையும் வணிகர்கள் [15]தெரிவித்து "இத்துணை அளவுள்ள இப்பொருளை இத்துணை விலை கொடுத்து வாங்குவார் யார்?" என்று கூறல் வேண்டும். மும்முறை கூறப்பட்டவைகளை விரும்பினவர்களுக்குக் கொடுத்தல்வேண்டும். கொள்வோரின் [16]இகலால் விலைமிகலாம். விலைமிக்க பொருளும் உல்குபொருளும் [17]கருவூலத்தைச் சேரும்.

உல்கு பொருளிறுத்தற்கஞ்சிப் பொருளின் அளவு விலைகளைக்

---

11 பண்டங்களில் இடப்பட்டிருந்த முத்திரை சிதைந்திருந்தால் அப்பண்டம் உடையாரைச் சுங்கச்சாலையின் ஒருபகுதியில் எல்லோரும் காணும்படி சிலநாழிகைவரை இருக்கச்செய்தல் தண்டமாம் என்பது கருத்து; நாழிகையிடம் எனக்கொண்டு சிலநாழிகையளவு குற்றவாளிகளைத் தங்க வைக்குஞ் சிறைச்சாலை என்பாருமுளர்.

12 மாறுபடுதல்—முத்திரை இடவேண்டிய இடத்தில் இடாமல் வேற்றிடத்திடுதல் முதலியன.

13 பெயர்மாற்றம்—ஒரு பண்டத்தின் பெயரை மற்றொருபண்டப் பெயராக மாற்றிக்குறித்தல்.

14 கொடிமரம்—இது சுங்கம்கொள்ளும் இடத்தைக் குறிக்கும்.

15 தெரிவிப்பது, உல்குபொருட்டலைவனுக்குப் பண்டத்தின் அளவும் விலையும் மாற்றமடையாமற்பொருட்டு; விற்பதற்குமுன்னர்த் [illegible] வேண்டும் என்பது.

16 இகல்—போட்டி.

17 பண்டத்திற்கு இயல்பாகஏற்பட்ட விலைமாத்திரம் உடையானைச் சாரும் என்பது.

குறைத்துக்கூறின் [18]அவற்றின் மிகுந்த பொருளை அரசன் எடுத்துக்கொள்ளல்வேண்டும். அல்லது உல்குபொருளின் எண்மடங்கு [19]இறுத்தல்வேண்டும்.

[20]பாண்டங்களுள் பொதியப்பட்ட உயர்ந்த பொருளின் தரத்தை இழிவாகக் காட்டி விலையைக் குறைப்பினும், [21]உயர்ந்த பொருளைத் தாழ்ந்த பொருளிற் கரந்து வைப்பினும் [22]அதுவே தண்டனையாம்.

கொள்வோரின் எதிர்ப்பு நேரும் என்னும் அச்சத்தால் பண்டத்தின் விலையை [23]உயர்த்துவோனிடமிருந்து பெறுமானத்தினின்றும் மிகையாக உயர்த்தப்பட்ட விலைப்பொருளை அரசன் எடுத்துக்கொள்ளல் வேண்டும். அல்லது இருமடங்கு உல்கு பொருள் பெறுதல் வேண்டும்.

[24]மறைக்கின்ற தலைவனுக்கு அத்தண்டம் எண்மடங்காகும். ஆதலாற் பண்டங்களை அளந்தாதல் நிறுத்தாதல் எண்ணியாதல் விற்றல் வேண்டும்.

[25]தாழ்ந்த பொருள் [26]விலையின்றிக் கொள்ளும் பொருள்

---

18 குறைத்துக்கூறிய அளவும் குறைத்துக்கூறிய விலையும் ஆம்.

19 வணிகன் செலுத்தவேண்டும் என்பது.

20 பொதிந்துவைக்கப்பட்ட பொருள் உயர்ந்த தரமுடையதாக இருப்பவும், சுங்கநிமித்தம் இழிந்த தரமுடையதெனக்காட்டி விலையைக் குறைப்பினும் என்பது.

21 மணிமுதலியவற்றைப் பஞ்சுமுதலியவற்றால் மறைத்துவைப்பினும் என்பது.

22 அது—வணிகன்கூறிய விலையளவின் மிக்கதை அரசன் கவர்ந்து கோடல் அல்லது உல்குபொருளின் எண்மடங்கு இறுத்தல்.

23 உயர்த்துவோன்—கொள்வோன்.

24 வணிகனுடைய குற்றத்தை நட்பு கைக்கூலிபெறுதல் முதலிய காரணங்களால் உல்குபொருட்டலைவன் மறைப்பின் அவனுக்கு அவ்வணிகன் அக்குற்றத்திற்கு இறுக்கவேண்டிய தண்டத்தினும் எண்மடங்கு தண்டம் விதிக்கவேண்டும் என்பது.

25 தாழ்ந்தபொருள்—கரி உமி முதலியன.

26 விலையின்றிக் கொள்ளும்பொருள்—தொழிலாளர் முதலியோர் உணவிற்குவேண்டிய அளவில் விலையின்றிக்கொள்ளும் உப்பு முதலியன.

இவற்றை [27]ஊகத்தாலும் செய்யலாம்.

உல்குபொருள் கொடாமல் கொடிமரத்தடியைக் கடந்து சென்றார்க்கு உல்குபொருளின் அளவின் எண்மடங்கு தண்டமாம். [28]வழிச்செல்வோரும் [29]குறுக்கு வழியிற் செல்வோரும் [30]அதனை அறிதல்வேண்டும்.

திருமணம் [31]வரிசை [32]கையுறை வேள்வி [33]கருவுயிர்த்தல் [34]கடவுள்வழிபாடு குடுமிகளைதல் புரிநூற்பூணல் கோதானம் [35]நோன்பியற்றல் இன்னோரன்ன செயல்களுக்குரிய பண்டம் உல்கு பொருள் கொடாமற் செல்லலாம்.

[36]மாறுபட்டுக் கூறுகிறவர்களுக்குக் களவுக்குரிய தண்டம் விதிக்கப்படும்.

உல்குபொருள் செலுத்தப்பட்ட பண்டங்களோடு செலுத்தப் படாத பண்டங்களைக் [37]கொண்டுபோகின்றவனும், [38]ஒரே இலச்

---

27 ஊகம்—அளத்தல் முதலியன இன்றி இஃது இத்துணை இருக்கலாம் என்று மதிப்பிடுதல்.

28 வழிச்செல்வோர்—வாணிகவேடம்பூண்டு மறைந்துதிரியும் ஒற்றர்.

29 குறுக்குவழியிற் செல்வோர்—அரசன் கட்டளைபெற்று புல் விறகு சுமப்போராகவும் ஆயர்களாகவும் குறுக்குவழியில் மறைந்துதிரியும் ஒற்றர்.

30 அதனை—உல்குபொருள் கொடாமற் செல்வதை.

31 வரிசை—மணப்பெண்ணுக்குத் தந்தைவீட்டிலிருந்து கொடுக்கப் படும் சீர்வரிசை.

32 கையுறை—காணிக்கை.

33 கருவுயிர்த்தல்—மகப்பெறுதல்; அதற்குரிய பொருள் மருந்து முதலியன.

34 நித்திய நைமித்திகபூசை திருவிழா முதலியன.

35 நோன்பியற்றுங்கால் தானம் முதலியனவாகக் கொடுக்கும் பொருளை உணர்த்தும்.

36 திருமணம் முதலியவற்றிற்கு இன்றி, வேறாகக்கொண்டுவரும் பொருளை அத்திருமணம் முதலியவற்றிற்குரிய பொருளாகப் பிறழக் கூறு கின்றவர்களுக்குக் கள்வருக்கு விதிக்கத்தக்க தண்டத்தை விதிக்கவேண்டும் என்பது கருத்து.

37 கூட்டத்தில் அறியப்படா என்று எண்ணிக்கொண்டு போகின்றவன் என்பது.

38 ஒன்றுக்கு இலச்சினை இடுவித்து அதனோடு ஒத்த மற்றொன்றைக் கொண்டு போகின்றவன் என்பது.

சினையால் பிறிதொன்றைக் கொண்டுபோகின்றவனும், [39]பொதியைப் பிரித்துக் கவர்ந்துகொள்கின்றவனும், ஆகிய இவ்வணிகர்களுக்கு அப்பண்டமும் அவ்வளவு பொருளுந் தண்டமாம்.

உல்குபொருட்சாலையினின்றும் சாணி, வைக்கோல் எனக் காட்டிக் [40]கவர்கின்றவர்களுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[41]கொண்டுபோகக்கூடாத படைக்கலம் [42]தடை கவசம் உலோகம் தேர் மணி கூலம் விலங்கு இவைகளுள் ஒன்றைக் கொண்டுபோகின்றவனுக்குப் [43]பறைசாற்றியபடி பொருட் பறிமுதலும் தண்டமும் செய்தல் வேண்டும்.

இவைகளுள் ஒன்றைக் கொண்டுவந்தால் உல்குபொருள் இன்றி [44]வெளியிலேயே விற்றல்வேண்டும்.

எல்லைகாவலன், [45]பண்டச் சுமைக்கு ஒன்றேகாற் பணமும் [46]ஒற்றைக் குளம்புடையவைகளுக்கு ஒரு பணமும், பசுக்களுக்கு அரைப்பணமும் [47]சிறிய விலங்குகளுக்குக் காற்பணமும் தோட்

---

39 இலச்சினை இடப்பட்ட பொதியைப் பிரித்து அதனுள் இருக்கும் பொருளை எடுத்துக்கொண்டு உல்குபொருள் கொடுக்கப்படாத வேறு சில பொருளை அதனுட் பொதிந்து பழைய இலச்சினையையே காட்டி வஞ்சிக்கிறவன் என்பது.

40 சாணி வைக்கோல்களுக்குள் உயர்ந்த பொருள்களை மறைத்துக் கவர்கின்றவர் என்பது கருத்து.

41 ஏதாவது ஒரு காரணத்தால் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குக் கொண்டுபோகக் கூடாதென்று அரசனாற் கட்டளையிடப்பட்ட படைக்கலம் முதலியன என்பது.

42 தடை—கவசத்தைப்போல உடற்பாதுகாப்பு நிமித்தம் அணிந்து கொள்ளப்படும் பிறிதொன்று.

43 அரசன் கட்டளைப்படி 'மீறிக்கொண்டு போகின்றவர்களுக்கு இன்னது தண்டம்' என்று குறிப்பிட்டபடி என்பது.

44 வெளி—அரணுக்குப்புறம்; வேற்று நகரத்திலிருந்து தடைப்படுத்தப்பட்ட பொருளை ஒருவன் கொண்டுவருவானாயின் அரணுக்கு வெளியிடத்திலேயே அதனை விற்கச்செய்யவேண்டும் என்பது கருத்து.

45 பண்டச்சுமை—பண்டங்களைச் சுமந்துவரும் வண்டி முதலியன.

46 ஒற்றைக்குளம்புடையவை—கழுதை குதிரை முதலியன.

47 சிறிய விலங்கு—ஆடு முதலியன.

சுமைக்கு [48]ஒரு மாடகமும் [49]வழியிறையாகப்பெறுதல் வேண்டும்.

[50]களவுசெய்யப்பட்டவை இழக்கப்பட்டவைஆகிய இவற்றை ஈடுசெய்தல்வேண்டும்.

எல்லைகாவலன் அயல்நாட்டு வாணிகக்குழுக்களை (அவர்கள்) கொண்டுவரும் பண்டங்களின் உயர்வு தாழ்வுகளை ஆராய்ந்து [51]குறிப்புடன் இலச்சினையிட்டுத் தலைவன்பால் [52]உய்த்தல்வேண்டும்.

[53]வைதேககன் என்னும் ஒற்றன் வணிகரின் தொகையை அரசனுக்கு அறிவித்தல்வேண்டும். அச்செய்தியினால் அரசன் உல்குபொருட்டலைவனுக்கு, [54]தான் முழுதும் அறிந்தவன் என்பதை அறிவுறுத்தற்பொருட்டு [55]வணிகரின் தொகையைக் கூறல் வேண்டும். பின்னர் உல்குபொருட்டலைவன் வணிகரை அடைந்து "இவை உயர்ந்தவை; இவை தாழ்ந்தவை; இன்னின்னாருடையவை; [56]மறைத்தல் இயலாது; இஃது [57]அரசனுடைய பெருமையாகும்" என்று கூறக்கடவன்.

---

48 மாடகம், ஈண்டுச் செப்பு மாடகம் ஆகும்.

49 வழியிறை—வழி காவற்பொருட்டுக் கொள்வது.

50 ஒரு வணிகன் கொண்டுவரும் பண்டங்கள் இடைவழியிற் களவு செய்யப்பட்டாலும் அல்லது கொடிய விலங்கு முதலியவற்றால் துன்புற்று இழக்கப்படினும் அதற்கு எல்லைகாவலன் ஈடுசெய்தல் வேண்டும் என்பது.

51 குறிப்பு—கையெழுத் தடையாளம்.

52 விலைப்பண்டங்களையும் அவற்றைக் கொண்டுவந்த வணிகர்களையும் அனுப்புதல்வேண்டும் என்பது; இங்ஙனம் செய்தல் உல்குபொருள்தலைவன் அப்பண்டங்களைக் கவர்ந்துகொள்ளாமைப் பொருட்டாம்.

53 வைதேககன் — வாணிக உருக்கொண்டவன்; வணிகரின் தொகை என்பது ஈண்டு அவர் கொணர்ந்த விலைப்பண்டங்களின் அளவையும் குறிக்கும்.

54 அரசன் நேரிற்காணாத பொருளையும் ஞானக்கண்ணாற் காணும் தெய்விக ஆற்றலுடையவன் என்று உல்குபொருட்டலைவன் அறிந்து கொள்ளுதற் பொருட்டென்பது கருத்து.

55 ஒற்றனால் மறைவி லறிந்துகொண்டபடி என்பது.

56 அரசன் தன் கண்ணாற்காணாத உங்களுடைய பண்டங்களில் உயர்ந்தன இத்துணை தாழ்ந்தன இத்துணை என்று ஞானக்கண்ணாற் கண்டு எங்களுக்கு முன்னரே அறிவித்துளானாதலின் மறைத்தல் இயலாதென்பது கருத்து.

57 இந்நிகழ்ச்சி அரசனது தெய்விக ஆற்றலைப் புலப்படுத்தும் என்பது.

தாழ்ந்தபொருளை [58]மறைப்பவனுக்கு உல்குபொருளின் எண் மடங்கு தண்டமாம். உயர்ந்த பொருளாயின் [59]முழுதும் கவர்ந்து கொள்ளல்வேண்டும்.

சுலோகம்

நாட்டுக்குக் [60]கேடுவிளைப்பனவும், [61]பயனிலாதனவுமாகிய பண்டங்களைத் [62]தடுத்தல்வேண்டும். பயன்மிக்க பண்டங்களையும் [63]பெறுதற்கரிய பண்டங்களையும் [64]வித்துக்களையும் உல்குபொருளில்லாதனவாகச் செய்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தொராம் பிரகரணம்
" உல்குபொருட்டலைவன் " என்னும்
நாற்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

58 அரசனது தெய்விக ஆற்றலைக் கூறக்கேட்டு மறைப்பவன் என்பது.

59 முழுதும்—மறைக்கப்பட்ட பண்டம் முழுதும்.

60 கேடுவிளைப்பன—நச்சுப்பொருள்கள் முதலியன.

61 பயனிலாதன — மிகச்சிறுபயன் விளைப்பன ; கத்தரிக்காய் வெள்ளரிக்காய் முதலியன.

62 உல்குபொருளை மிகுதிப்படுத்தல் முறைமாக வேற்றிடத்திலிருந்து வாராமற் றடுத்தல்வேண்டும் என்பது.

63 தன்னாட்டிற் பெற இயலாத பண்டங்கள் என்பது.

64 வித்துக்கள் கூலம் முதலியவற்றில் உயர்ந்த தரமுள்ள விதைகள்.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தொராம் பிரகரணம்—[1]உல்குவரையறை

நாற்பத்துமூன்றும் அத்தியாயம்

[2]புறத்தது [3]அகத்தது [4]விருந்து என்னும் உல்குபொருள் [5]வெளிப்பாடும் [6]நுழைவும்ஆம்.

[7]நுழைவனவற்றிற்கு விலையின் ஐந்திலொரு கூறுகும்.

மலர் பழம் கீரை வேர் கிழங்கு [8]கொடியிலுண்டானவை [9]வித்து [10]உலர்ந்தமீன் இறைச்சி இவைகளுக்கு [11]ஆறிலொரு கூறு பெறல்வேண்டும்.

43-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 உல்குபொருட்டலைவன் என்னும் முன்னைப் பிரகரணத்தோடு உல்கு வரையறை என்னும் இப்பிரகரணத்திற்குள்ள இயைபு பெயரளவிற் புலனும்.

2 புறத்தது—தன்னாட்டிலுண்டாம் பண்டங்களைப்பற்றியது.

3 அகத்தது—அரணுள் அமைந்த உள்ளிடங்களிலுண்டாம் பண்டங்களைப்பற்றியது.

4 விருந்து—வேற்றுநாட்டிலிருந்து வரும் பண்டங்களைப்பற்றியது.

5 வெளிப்பாடு—உள்ளிருந்து வெளிப்படவேண்டிய பண்டங்களுக்கு வெளிப்படும் பொருட்டு இறுக்கப்படும் உல்கு.

6 நுழைவு—புறத்தேயிருந்து அகத்தே வரவேண்டிய பண்டங்களுக்கு உள்ளே நுழைதற்பொருட்டு இறுக்கப்படும் உல்கு; பண்டங்களைப்பற்றிப் புறத்தது முதலாக மூவகைப்பட்ட உல்கு மீண்டும் இறுக்கும் வகைபற்றித் தனித்தனி இருவகைப்படும் என்பது.

7 வேற்று நாட்டிலிருந்து தன்னாட்டிற்கும், தன்னாட்டினும் புறத்தே இருந்து அரணகத்திற்கும் புகும் பண்டங்களுக்கு அவற்றின் விலையில் ஐந்தில் ஒருகூறு சுங்கப்பொருளாகும் என்பது கருத்து; இது பொது விதி. பின்வருவன சிறப்பு விதி.

8 கொடியிலுண்டாகும் காய்கனிகள்.

9 வித்து—கூலவிதைகள்.

10 உலர்ந்த என்னும் அடையை இறைச்சிக்கும் ஏற்றுக.

11 ஆறிலொருகூறு—பண்டங்களின் பெறுமானத்தில் ஆறிலொருகூறு சுங்க இறையாம் என்பது.

சங்கு வயிரம் மாணிக்கம் முத்து பவழம் [12]மாலை இவைகளுக்கு இவற்றின் தொழில் அளவு காலம் கூலி பயன் இவற்றை அறியும் திறனுடையாரைக்கொண்டு [13]துணிதல்வேண்டும்.

[14]உரிப்பட்டு [15]நார்ப்பட்டு [16]புழுப்பட்டு [17]கவசம் அரிதாரம் மனோசிலை [18]இங்குலிகம் உலோகசாதி தாதுப்பொருள் என்னும் இவற்றிற்கும் சந்தனம் அகில் [19]கார்ப்புப்பொருள் [20]மதுக்குழம்பு என்னும் இவற்றிற்கும் கள் தந்தம் தோல் [21]மரவுரி நார் [22]விரிப்பு போர்வை பட்டு என்னும் இவற்றிற்கும் ஏழகமயிர் ஆட்டுமயிர் என்னும் இவற்றாலாகிய கம்பளங்களுக்கும் [23]பத்து அல்லது பதினைந்தில் ஒருகூறாகும்.

ஆடை [24]நாற்காலுயிர் [25]இருகாலுயிர் நூல் பஞ்சு மணப்பொருள் மருந்து விறகு மூங்கில் [26]மரவுரி தோல் மட்பாண்டம் என்னும் இவற்றிற்கும், கூலம் [27]நேயம் அக்காரம் உப்பு [28]வெறிப்

---

[12] மாலை—ஈண்டு இனம்பற்றி முத்துமாலை முதலியவற்றைக் குறிக்கும்.

[13] சுங்கவிறை இவ்வளவெனத் துணிதல்வேண்டும் என்பது.

[14] உரி—மரப்பட்டை ; இதிலிருந்து எடுக்கப்படும் பருத்த இழைகளால் ஆக்கப்படுவது.

[15] நார்ப்பட்டு—நுண்ணிய நூல்களால் ஆக்கப்படுவது.

[16] புழுப்பட்டு—பட்டுப்பூச்சியினின்றும் உண்டாம் பட்டுநூலால் ஆக்கப்படுவது.

[17] கவசம் என்றது ஈண்டு நூலாலாக்கப்படும் கவசத்தை.

[18] இங்குலிகம்—சாதிலிங்கம்.

[19] கார்ப்புப்பொருள்—சுக்கு திப்பிலி முதலியன.

[20] மதுக்குழம்பு—மதுவுண்டாக்குதற்குரிய பல்வகைப் பொருள்களின் கலவை.

[21] இங்கே கூறப்பட்ட மரவுரி நார் என்பன அவற்றின் இழைகளைக் குறிக்கும்.

[22] விரிப்பு—பாய் முதலியன.

[23] இப்பொருள்களின் விலைமதிப்பில் பத்து அல்லது பதினைந்தில் ஒரு கூறு சுங்கப்பொருளாகும் என்பது.

[24] நாற்காலுயிர்—முன் கூறப்படாத முயல் உடும்பு முதலியன.

[25] இருகாலுயிர்—கோழி முதலியன.

[26] இங்கே கூறிய மரவுரி, மரப்பட்டையை உணர்த்தும்.

[27] நேயம்—எண்ணெய் நெய் முதலியன.

[28] வெறிப்பொருள்—இங்கே விலைக்குறைவையுடைய கள்ளைக் குறிக்கும் ; முன் கூறியது உயர்விலை மதுவாகும்.

பொருள் சோறுமுதலியன என்னும் இவற்றிற்கும் இருபது அல்லது இருபத்தைந்தில் ஒருகூறுமாம்.

[29]உல்குபொருளின் ஐந்தில் ஒருகூற்றையும் [30]நாட்டின் நலத்திற்கேற்ப அளியுடையதாக அமைக்கப்படும் உல்குபொருளையும் [31]வாயிலிற் பெறுதல்வேண்டும்.

[32]பண்டங்களை உண்டாக்குமிடத்தில் விற்றல்கூடாது.

ஆகரங்களினின்றும் [33]மூலப்பொருளையாதல் பண்டங்களையாதல் கொண்டால் அறுநூறு பணம் தண்டம் [34]ஆகும்.

[35]மலர் கனி இவற்றை இவற்றிற்குரிய தோட்டங்களினின்றும் கொண்டால் ஐம்பத்திநான்குபணம் தண்டமாம்.

தோன்றுமிடத்தினின்றும் கீரை வேர் கிழங்கு இவைகளைக் கொண்டால் ஐம்பத்தொன்றேமுக்காற்பணம் தண்டமாம்.

---

[29] இவற்றின் விலைமதிப்பின் இருபதில் ஒருகூறு அல்லது இருபத்தைந்தில் ஒருகூறு சுங்கமாம் என்பது ; இதுவும் முன்னர்க் கூறப்பட்ட விகற்பமும் காலம் இடம் நோக்கி அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

[30] சில விலைப்பண்டங்களுக்கு நாட்டின் நலங்கருதி உல்குபொருள் மிகக் குறைவாக அமைக்கப்படும் என்பதும் அங்ஙனம் குறைக்கப்பட்ட சுங்கப்பொருளை வாயிலிலேயே பெறல்வேண்டும் என்பதும் கருத்து.

[31] வாயில்காவலன் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது.

[32] பண்டங்களை அரசியலார் குறித்த இடங்களிலன்றி உண்டாக்குமிடத்தில் வைத்து விற்றலாகாதென்பது கருத்து ; பின்வருவனவற்றிற்கும் ஈதொக்கும்.

[33] மூலப்பொருள் என்பதும் பண்டம் என்பதும் ஈண்டு முறையே காரணவடிவமாகவும் காரியவடிவமாகவும் உள்ளன.

[34] இத்தண்டம் கொள்வோரும் விற்போரும் இறுக்கத்தக்கது ; பின்வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

[35] மலர் கனி முதலியவற்றை விற்றற்கென அரசியலாரால் குறிக்கப்பட்ட இடத்திலன்றித் தோட்டத்திலேயே வைத்து விற்றால் ஐம்பத்துநான்கு பணம் தண்டம் விதிக்கவேண்டும் என்பது ; ஆகரப்பொருள்கள் உயர்ந்தனவாதலால் அவற்றிற்கு மிகுதியான தண்டமும் மலர்கனிகளுக்குக் குறைவான தண்டமும் விதிக்கப்பட்டன என்பது அறியத்தக்கது.

நன்செய் புன்செய்களினின்றும் எவ்வகைக் கூலங்களைக் கொண்டாலும் ஐம்பத்துமூன்றுபணம் தண்டமாம். ஒருபணமும் ஒன்றரைப்பணமும் [36]உழவுத்தண்டமாம்.

சுலோகம்

[37]இடத்திற்கும் [38]தரத்திற்கும் ஏற்பப் புதியனவும் பழையனவுமாகிய பண்டங்களுக்கு உல்குபொருளை வரையறுத்தல்வேண்டும். [39]கேட்டிற்குத்தக்கவாறு தண்டம் விதித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தொராம் பிரகரணம்
"உல்குவரையறை" என்னும் நாற்பத்துமூன்றும்
அத்தியாயம் முற்றிற்று.

---

[36] உழவுத்தண்டம் கூலவடிவமாக இறுக்கத்தக்கது; இத்தண்டபணத்தை முன்னர்க்கூறிய ஐம்பத்துமூன்று பணத்தோடு சேர்த்துக் கொள்ளல்வேண்டும் என்பதும், கொள்வோர் ஒருபணமும், விற்போர் ஒன்றரைப்பணமும் கொடுக்கவேண்டும் என்பதும் கருத்து.

[37] இடம்—விற்றற்குரிய இடம்.

[38] தரம்—பண்டங்களின் இயல்பு.

[39] கேடு—மறைவிற் கவர்ந்துகொள்ளுதலால் உண்டாகும் அழிவு.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்திரண்டாம் பிரகாரணம்—[1]இழைநெய்தற்றொழிற்றலைவன்

நாற்பத்துநான்காம் அத்தியாயம்.

இழைநெய்தற்றொழிற்றலைவன் நூல் குப்பாயம் ஆடை கயிறு இவற்றின்தொழிலை [2]அக்குடியிற் பிறந்த திறனுடையாரைக் கொண்டு செய்தல்வேண்டும்.

[3]மயிர் நார் பருத்தி [4]பஞ்சு சணல் மரவுரி இவற்றைக் கைம்பெண் உறுப்பறைமகளிர் கன்னிகை துறவுமகளிர் [5]தண்டஈடு செய்பவர் என்னும் இவர்களையும் விலைவின்மகளிரின் கைத்தாயர் அரசனுடைய வயதுமுதிர்ந்த பணிப்பெண் [6]வழிபாடொழிந்த கோயிற் பணிப்பெண்கள் ஆகிய இவர்களையும்கொண்டு நூற்பித்தல்வேண்டும்.

நூலின் நுண்மை பருமை நடுத்தரம் ஆகிய இவற்றையும் [7]மிகுதி குறைவுகளையும் அறிந்து கூலிவரையறை செய்தல்வேண்டும். நூலின் அளவை அறிந்து எண்ணெய் நெல்லிக்கனி [8]தேய்பொடி இவைகளை இவர்களுக்கு [9]அளித்தல்வேண்டும்.

44-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உல்குபொருட்குரிய பண்டங்களுள் நூல் ஆடை முதலிய சிறந்தனவாதலால் அதன்பின் இது கூறப்பட்டது. இதனாற் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] அக்குடி—அச் சிறப்புத்தொழில் செய்தற்குரிய குலம்.

[3] மயிர்—ஆட்டுமயிர்.

[4] பஞ்சு—இலவம்பஞ்சு.

[5] தண்ட ஈடு செய்பவர்—குற்றநிமித்தம் விதிக்கப்பட்ட தண்டத்திற்கு ஈடாகப் பணிபுரிபவர்.

[6] வழிபாடு—ஆடல் பாடல் முதலியவற்றால் செய்யப்படும் தெய்வ வழிபாடு.

[7] ஒத்த காலத்தில் நூற்கப்படும் மிகுதி குறைவுகளையும் கருதிக் கூலி வரையறை செய்யவேண்டும் என்பது கருத்து.

[8] தேய்பொடி—அழுக்கு ஒழிய உடம்பில் தேய்க்கப்படும் தூள்.

[9] பணிசெய்வோர்க்கு வேலை மிகுதியாவுண்டாகும் குடு தணிதற்பொருட்டும் உள்ளம் மகிழ்தற்பொருட்டும் ஏனையோரை ஊக்கமுறுத்தற்பொருட்டும் கொடுத்தல்வேண்டும் என்பது.

[10]நாட்களில் [11]கொடை [12]மானம் இவைகளால் [13]தொழிலைச் செய்வித்தல்வேண்டும். [14]நூல் குறையின் பொருளின் மதிப்பிற் கேற்பக் கூலிக்குறைவை ஏற்படுத்தல்வேண்டும்.

தொழில் அளவு காலம் கூலி பயன் என்னும் இவற்றைத் தெரிந்துணர்ந்த காருகர்களால் தொழிலைச் செய்வித்தல்வேண்டும்; [15]நட்புக்கொள்ளல்வேண்டும்

உரிப்பட்டு நார்ப்பட்டு புழுப்பட்டு [16]இராங்கவம் பருத்தி இவற்றை நாற்று நெய்யும்தொழில்களைச் [17]செய்விப்போன் மணப் பொருள் மாலை பிற நன்கொடைப்பொருள் இவற்றைக் [18]கொடுத்துச் சிறப்பித்தல்வேண்டும். [19]பல்வேறுவகையான ஆடை விரிப்பு போர்வை என்னும் இவற்றை [20]ஆக்குவித்தல்வேண்டும்.

நூற்கவசத்தொழிலையும் அத்தொழிலிற் றிறமைவாய்ந்த சிற்பிகளாற் செய்வித்தல்வேண்டும்.

கணவனைப் [21]பிரிந்தமையால் வீட்டைவிட்டு வெளிச்செல்லா

---

10 நாட்கள் — வேலைநாட்களும் உவாநாட்களும் ஆம் (அமாவாசை பௌர்ணமி).

11 கொடை—கூலி கொடுத்தலும் உணவு கொடுத்தலுமாம்.

12 மானம்—அளவும் பெருமையுமாம்.

13 தொழிலாளர் வேலைசெய்யும் நாட்களில் இத்துணைத் தொழிற்கு இத்துணைக்கூலி என்று வரையறை செய்துகொண்டு செய்வித்தல்வேண்டும் என்றுதல், உவா முதலிய சிறப்புநாட்களில் உணவு முதலியவற்றால் மகிழ் வித்துச் செய்வித்தல்வேண்டும் என்றுதல் கொள்க.

14 வரையறுக்கப்பட்ட அளவிற்குக் குறையுமாயின் அப்பொருளின் விலைமதிப்பிற்கு ஏற்பக் கூலியைக் குறைக்கவேண்டும் என்பது.

15 அத்தொழிலில் நேரும் வஞ்சகச்சூழ்ச்சியை அறிந்துகொள்ளும் பொருட்டு அக் காருகர்களோடு நட்புக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

16 இராங்கவம்—மான்மயிரால் ஆக்கப்படுவது; இரங்கு—மான்.

17 செய்விப்போன்—நெய்தற் றொழிற்றலைவன்.

18 கொடுத்தல்—ஈண்டுத் தொழிலாளர்க்கென்க.

19 மணப்பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சிறப்பித்தலால் உண்டாகும் பயனைக் கூறுகின்றார்.

20 ஆக்குவித்தல்—ஆராய்ந்து புதிய புதிய முறையிற் செய்வித்தல்.

21 பிரிவு—ஈண்டுக் கணவன் அயலூருக்குச் சென்றமையால் ஆயது.

தவர்களும் உறுப்பறைமகளிரும் கன்னியரும் ஆகிய [22]தம்மைத் தாமே புரந்துகொள்ளும் மகளிரைத் தன் பணிப்பெண்களைக் கொண்டு கட்டளையிட்டு ஆதரித்துத் தொழிலைச் செய்வித்தல் வேண்டும்.

நூற்சாலைக்குத் தாமேவந்த [23]மகளிர்களுக்கும் விடியற்காலையில் பண்டத்தைப் பெற்றுக்கொண்டு கூலியைக் கொடுப்பித்தல் வேண்டும். [24]நூலை ஆராய்தற்கு மாத்திரம் விளக்குப் பயன்பட வேண்டும்.

மகளிரின் முகத்தைக் கூர்ந்துநோக்கினாலும் [25]வேறுகாரியம் பற்றிப் பேசினாலும் பூர்வசாகசம் தண்டமாம். கூலிகொடுக்கக் காலந்தாழ்ப்பினும் [26]தொழில்செய்யாத நிலையிற் கூலிகொடுப்பினும் மத்தியமசாகசம் தண்டமாம்.

கூலியைப் பெற்றுக்கொண்டபின்னர்த் தொழில்செய்யாத மகளிர், [27]உண்டும் கவர்ந்தும் ஓடியமகளிர் ஆகிய இவர்களுடைய [28]பெருவிரலைத் துணித்துவிடல்வேண்டும். [29]தொழிலாளருடைய

---

22 தம்மைத்தாமே புரந்துகொள்ளுதல்—தம் உழைப்பாற் கிடைத்த உணவு முதலியவற்றைக்கொண்டு உயிர்வாழ்தல்.

23 உம்மையால் தம் பணிப்பெண்கள் அழைத்துவந்த மகளிரையும் கொள்க.

24 நூல் நூற்றுக்கொண்டுவரும் மகளிரைத் தாழ்க்காது அதிகாலையிலேயே அவர் கொண்டுவந்த பண்டத்தைப் பெற்றுக்கொண்டு கூலியைக் கொடுத்தனுப்பிவிடவேண்டும் ஆதலால் இருள்புலராத அக்காலத்தில் நூலை ஆராய்தற்கு மாத்திரம் சிறிதளவு பயன்படும்படி விளக்கை அமைத்துக் கொள்ளல்வேண்டும் என்பதும், அவ்விளக்கொளி வேறு வகையில் பயன்படுத்தற்கு இயலாத நிலையில் இருக்கவேண்டும் என்பதும் கருத்து.

25 வேறுகாரியம்—பண்டத்தைப் பெற்றுக்கொண்டு கூலிகொடுத்தல் அல்லாத வேறுகாரியம்.

26 கைக்கூலி பெற்றுக்கொண்டு தொழில் செய்யாத நிலையில் கூலி கொடுத்தல் என்பது கருத்து.

27 தொழில் செய்தற்பொருட்டுக் கொடுத்த உணவையுண்டு தொழில் செய்யாமல் வெளிப்பட்டோரும் உள்ள பொருளைக் கவர்ந்துகொண்டு வெளிப்பட்டோரும் ஆகிய மகளிர் என்பது கருத்து.

28 வலக்கைப் பெருவிரல் நடுவிரல்களின் நுனியைத் துண்டித்தல் எனவும் ஒருசாராசிரியர் கொள்வர்.

29 தொழிலாளர் என்பது ஈண்டுத் திறமையுடையாரைக் குறிக்கும்.

குற்றத்திற்குத்தக [30]கூலியிலும் தண்டம் விதிக்கலாம்.

கயிறுதிரிப்போர் தோற்றொழிலாளர் என்னும் இவரோடு தான் நட்புக்கொள்ளல்வேண்டும். வார் முதலிய பண்டங்களையும் செய்வித்தல்வேண்டும்.

சுலோகம்

கவசம் முதலியன அமைத்தற்கும் [31]ஊர்திகளைக் கட்டுதற்கும் வேண்டிய நூல் உரிகளாலாகிய கயிறுகளையும் பிரம்பு மூங்கில்களாலாகிய அகணிகளையும் செய்வித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்திரண்டாம் பிரகரணம்
" இழைசெய்தற் றொழிற்றலைவன் " என்னும்
நாற்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

[30] உறுப்பை ஊறுபடுத்தலாகிற தண்டமின்றிக் கொடுக்கவேண்டிய கூலியில் ஓரளவு தண்டம் விதிக்கலாமென்பது கருத்து.

[31] ஊர்தி—தேர் குதிரைகள் முதலியன.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்துமூன்றாம் பிரகரணம்—[1]உழவுத்தொழிற்றலைவன்

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

உழவுத்தொழிற்றலைவன் [2]உழவு, நிலம், [3]மரம் என்னும் இவற்றைப்பற்றிய நூல்களை அறிந்தவனாகவாதல் அறிந்தோரைத் துணைக்கொண்டவனாகவாதல் இருந்து [4]எல்லாவகையான கூலம் மலர் பழம் கீரை கிழங்கு வேர் [5]கொடியிலுண்டாவன மரவுரி பருத்தி இவைகளின் விதைகளை ஏற்றபருவத்தில் தொகுத்துச் சேர்த்தல்வேண்டும்.

[6]தகுந்த நிலத்தில் [7]அடிமை [8]பணியாளர் தண்டஈடுசெய் வோர் இவர்களைக்கொண்டு பலசால் நன்குஉழுது விதைத்தல் வேண்டும்.

உழுதற்குரிய [9]கருவிகள் [10]உபகரணங்கள் எருதுகள் ஆகிய

45-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சுங்கத்திற்குரிய பொருள்களுள் உடையும் ஊணும் மிக முக்கிய மானவை. அவற்றுள் உடைக்குரிய நூல் வகைகள் முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டன. உணவிற் கேதுவாகிய உழவுதொழில் இதன்கட் கூறப் படுகின்றது. ஆதலின் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] உழவுநூல் செய்தோர் விருத்தபராசரன் முதலியோராவர்.

[3] மரத்தைப்பற்றிய நூல் செய்தோர் அக்கினிவேசியன் முதலியோ ராவர்.

[4] எல்லாவகையான என்னும் அடையை மலர் முதலியவற்றிற்கும் கொள்க.

[5] கொடியிலுண்டாவன—அவரை முதலியன.

[6] தகுதி—இன்னநிலத்தில் இன்னபயிர் செழித்து வளர்ந்து பயன்தரும் என்று ஆராய்ந்து கண்டது.

[7] அடிமையாவார் — வயிற்றுச்சோற்று நிமித்தம் கொள்ளப்பட்டோ ரும், விலைகொடுத்துக் கொள்ளப்பட்டோரும் என இருதிறப்படுவர்.

[8] பணியாளர்—கூலிபெற்றுத் தொழில்புரிவோர்.

[9] கருவிகளாவன—கலப்பை ஏர்க்கால் நுகத்தடி முதலியன.

[10] உபகரணங்கள்—கயிறு அரிவாள் முதலியன.

இவற்றால் [11]இவர்களுக்குத் [12]தடையின்மையைச் செய்வித்தல் வேண்டும். கொல்லன் தச்சன் [13]அகழ்வோன் கயிறுதிரிப்போன் [14]பாம்புப்பிடாரன் முதலிய காருகர்களாலுந் தடையின்மையைச் செய்வித்தல்வேண்டும்.

[15]அவர்களுக்குத் தொழிற்பயன் அழியுமாயின், அழிந்த பயனளவு தண்டமாகும்.

[16]வன்புலங்களுக்குப் பதினாறு தூணியும் [17]மென்புலங்களுக்கு [18]அரைமடங்கு மிகுதியும் [19]மழையின் அளவாம். பலவகைய நாட்டுப்பயிர்த்தொழில்நிலங்களுக்கு ஏற்ப, மழையின் அளவும் பலவகைப்படும். அசுமாகதேயத்திற்குப் பதின்மூன்றரைத்தூணியும், அவந்திநாட்டிற்கு இருபத்துமூன்று தூணியும், மேற்றிசை நாடுகளுக்கு அளவிறந்தும், பனிநாடுகளுக்கும் மருதநிலங்களுக்கும் காலத்திற்கேற்பவும் மழைவேண்டும்.

மழையின் [20]மூன்றிலொருகூறு ([21]மழைக்காலத்தின்) [22]முன்

---

11 இவர்கள்—அடிமை முதலியோர்.

12 உழவுத்தொழில் தடைப்படாமல் நிகழ்தற்கு உழுதற்குரிய கருவி முதலியவற்றை உதவிசெய்தல் வேண்டுமென்பது கருத்து.

13 அகழ்வோன்—மண்வெட்டுவோன்.

14 விளைநிலத்திற் பாம்பு முதலியவற்றாலுண்டாகும் இடையூறுகளைப் போக்குதற்குப் பாம்புப்பிடாரன் உதவவேண்டுமென்பது கருத்து.

15 அவர்களுக்கு—காருகர்களுக்கு.

16 வன்புலம்—நீர்வளமற்ற நிலம்.

17 மென்புலம்—நீர்வளமுடைய நிலம்.

18 அரைமடங்கு மிகுதியென்பது எட்டுத்தூணியளவு கூட்ட இருபத்து நான்கு தூணியளவாகும்.

19 ஒருமுழச் சதுரவளவு அகன்ற வாயினையுடையதும் பதினாறு தூணியளவு கொண்டதுமாகிய பாண்டத்தைக்கொண்டு மழைநீரை அளந்து கொள்ளல் வேண்டுமென்பது கருத்து. ஏனைய அளவுகளுக்கும் இத்தகைய பாண்டத்தில் கீற்று வரையறை செய்து அளந்துகொள்ளல் வேண்டுமென்பது. இந்த அளவு அவ்வந்நிலத்திலுண்டாம் பயிர்கள் விளைந்து முடியுங் காறும் வேண்டுமென்பது.

20 மூன்றிலொருகூறென்பது அவ்வந்நிலத்திற்குக் கூறப்பட்ட அளவினின்றுங் கொள்ளத்தக்கது.

21 மழைக்காலமென்பது பயிர்த்தொழிற்குரிய ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை ஆகிய நான்கு திங்களுமாம்.

22 அவற்றுள் முன்னும் பின்னுமுள்ளவை, ஆவணியும் கார்த்திகையுமாம்.

னும் பின்னுமுள்ள இரண்டு திங்களினும், எஞ்சிய இருகூறுகள் [23]இடையிலுள்ள இரண்டு திங்களினும், பெய்யப்பெற்ற யாண்டு [24]நல்லியாண்டாகும்.

வியாழனது [25]இடம் [26]செலவு [27]கருவமைதி இவைகளாலும் வெள்ளியின் தோற்றம் மறைவு [28]வழக்கம் இவைகளாலும் ஞாயிற்றின் [29]இயல்புமாறுபாட்டாலும் [30]அஃது உய்த்துணரப் படும்.

[31]ஞாயிற்றால் கூலங்களின் விளைவும் வியாழனால் பயிர்களின் செழிப்பும் வெள்ளியால் மழையும் (அறியப்படும்).

சுலோகம்

(1) [32]ஏழுநாட் பெய்கின்ற மூன்று மேகங்கள், துளிக்கின்ற எண்பது மேகங்கள், வெயிலுடன் கூடிப்பெய்யும் அறுபது மேகங்

---

23 இடையிலுள்ளன—புரட்டாசியும் ஐப்பசியுமாம்.

24 நல்லியாண்டு — மக்களுக்கு விளைபொருளால் நன்மைவிளைக்கும் யாண்டு.

25 இடம்—தங்கியிருக்கும் மேடம் முதலிய இராசிகள்.

26 செலவு—ஓர் இராசியினின்றும் பிறிதோர் இராசிக்குச் செல்லுதல்

27 கருவமைதி—மார்கழி முதல் ஆறு திங்களினும் ஏற்படும் குளிர் முதலியவற்றின் தோற்றம் முதலியன. மார்கழியிற் குளிரும் தையிற் பனியும், மாசியிற் காற்றும், பங்குனியில் மேகத்தோற்றமும், சித்திரையிற் காற்றும் மழையும், வைகாசியிற் காற்றும் இடிமின்னலுடன் கூடிய மழை யும் தோன்றுமாயின் கருவமைதி யுண்டெனக் கொள்ளப்படும்.

28 வழக்கம்—ஆடித்திங்களின் பஞ்சமிதிதி முதலிய ஒன்பது திதிகளிற் சஞ்சரித்தல்.

29 இயல்பு மாறுபாடு—பரிவேடத்துடன் கூடுதல் முதலியன.

30 அஃது—பின்வரும் நல்லியாண்டு.

31 ஞாயிறு வியாழன் வெள்ளி யென்னும் இம்மூன்று கோள்களின் இயற்கைநிலையாலும் மாறுபாட்டுநிலையாலும் முறையே நலந்தீங்குகள் அறியப்படுமென்பது கருத்து.

32 பயிர்த்தொழில் தொடங்கி விளைவு முடியுங்காறும் வேண்டிய மழையினளவு கூறப்படுகின்றது. ஏழு நாள் தொடர்ந்து பெய்கின்ற மூன்று மழைகளும், தூற்றலாகப் பெய்யும் எண்பது மழைகளும், வெயி லொடு கலந்து பெய்யும் அறுபது மழைகளும் பயிர்நலத்திற்கு வேண்டு மென்பது கருத்து.

கள் இவற்ருலுண்டாகும் மழை [33]சமனுகவும் நலமாகவும் அமையும்.

(2) மேகம், காற்று வெயில் இல்லாதநிலையில் [34]மும்முறை விளைவுண்டாமாறு பொழிகின்ற நாட்டிற் பயிர்கள் பயன்தருதல் உறுதியாம்.

ஆதலால், [35]நீர் நிறைவாகவேண்டிய பயிர், நீர் குறைவாக வேண்டிய பயிர் இவைகளை உண்டாக்கல்வேண்டும்.

சாலிநெல் சம்பாநெல் கேழ்வரகு எள் [36]பிரியங்கு சாமை வரகு இவை முன்னர் விதைக்கற்பாலன. பயறு உழுந்து [37]சைம்பியம் இவை நடுக்கூற்றில் விதைக்கற்பாலன. குசும்பை வெண் கடலை கொள்ளு யவம் கோதுமை கடலை காயா கடுகு இவை [38]பின்னர் விதைக்கற்பாலன.

[39]விதைகள் பருவத்திற்கேற்ப விதைக்கற்பாலன.

விதைக்கப்படா [40]தெஞ்சிய நிலத்தைப் பாதிவாரங் [41]கொள்வோர் பயிர்செய்தல்வேண்டும். [42]தம்வலியால் மாத்திரம் உழைப்

---

33 சமன்—பெயலின்மை மிகுபெயல் இன்றி ஒத்ததாதல்.

34 மும்முறை விளைவுண்டாதல்—முப்போகம் விளைதல்.

35 மழையின் மிகுதி குறைவுகளையறிந்து முறையே நீர் மிகுதியாக வேண்டிய பயிர்களையும் நீர் குறைவாகவேண்டிய பயிர்களையும் உண்டாக்கல் வேண்டுமென்பது கருத்து.

36–37 பிரியங்கு சைம்பியம் என்பன தானிய வகைகள்.

38 ஈண்டு, முன் நடுக்கூறு பின் என்பன பயிர்த்தொழில் செய்தற்குரிய காலப்பகுதிகளை உணர்த்தும்.

39 இங்குக் கூறப்பட்டனவும் கூறப்படாதனவுமாகிய கூலவித்துக்கள் உரியபருவத்தில் விதைக்கப்படுமாயின் நன்கு விளையும் என்பது கருத்து.

40 எஞ்சியநிலம்—உழவுத்தொழிற் றலைவனுல் பயிர்செய்யப்படாமல் விட்ட நிலம்.

41 கொள்வோர், ஏர் வித்து முதலிய உபகரணங்களை யுடையராக இருத்தல்வேண்டுமென்பது.

42 ஏர் வித்து முதலிய உபகரணங்களைத் தலைவன்பாற் பெற்று உடலுழைப்பளவில் பயிர்த்தொழில் செய்வோர் நான்கிலொரு கூறுதல் ஐந்திலொரு கூறுதல் விளைபொருளில் வாரங்கொண்டு எஞ்சியவற்றைத் தலைவற்குக் கொடுத்துவிடல வேண்டுமென்பது கருத்து.

பவர்கள் நான்கில் ஒருகூறுதல் ஐந்தில் ஒருகூறுதல் வாரங்கொள்ளக்கடவர். [43]கேடுநேர்ந்த காலத்தன்றி ஏனைய காலத்தில் உழப்படாத நிலத்திற்குரிய வாரத்தைக் [44]கொடுத்துவிடல்வேண்டும்.

[45]தன் அணையினின்றும் தன் [46]கைச்செயலால் நீர்பாய்ச்சினுல் ஐந்திலொரு கூறும், [47]எருத்திஞல் நீர்பாய்ச்சின் நான்கிலொரு கூறும், வாய்க்கால் வழியாக நீர்பாய்ச்சின் மூன்றிலொரு கூறும் [48]இறை செலுத்தல்வேண்டும்.

[49]யாறு ஏரி குளம் கேணி இவைற்றினின்றும் பாய்ச்சினுல் நான்கிலொரு கூறும்.

தொழிலுக்குவேண்டிய நீரின் அளவைக்கொண்டு வயல் [50]பனி வெயில் இவைகளுக்கேற்றவாறு பயிர்செய்வித்தல் வேண்டும்.

சாலிநெல் முதலியவை [51]உயர்ந்தவைகளாம். [52]தோட்டப்

---

43 கேடு—மிகுபெயல் பெயலின்மை முதலியவற்றால் உழவுத்தொழிற்கு நேரும் தடை.

44 எத்தகைய தடையுமில்லாத நிலையில் வாரத்துக்கு ஏற்றுக்கொண்டவன் நிலத்தை உழுது பயிர்செய்யாவிடின் அந்நிலத்துக்குரிய வாரத்தைத் தலைவனுக்குக் கொடுத்துவிடல் வேண்டுமென்பது கருத்து.

45 தன் அணை—தன் உடலுழைப்பாலும் தன் பொருட்செலவாலும் உண்டாக்கப்பட்ட ஏரி முதலியன.

46 கைச்செயல்—கையாற் குடம்முதலியவற்றில் நீர் முகந்து பாய்ச்சுதல்.

47 எருத்து — எருதின்பிடர் ; எருதுகளைக்கொண்டு இறைக்கப்படும் ஏற்றநீரைக் குறிக்கும்.

48 நிலத்திற்கும் நீர்க்கும் தலைவன் அரசனாதலால் இது நிலத்திற்குரிய இறைபோன்ற நீர் இறையாகும்.

49 உழவன் முயற்சியாலன்றி இயற்கையிலமைந்த நீர்நிலைகள் ஈண்டுக் குறிக்கப்படுகின்றன.

50 பனி வெயில் இரண்டும் காலத்தைக் குறிப்பன.

51 சுருங்கிய பொருட்செலவாலும் முயற்சியாலும் மிகுதியான பயனை விளைவித்துச் சிறந்தவுணவாக இருத்தலால் உயர்ந்தவையாயின வென்பது.

52 தோட்டப்பயிர்—வாழை முதலியன ; சுருங்கிய செலவு முயற்சிகளாற் சுருங்கியபயன் விளைப்பதுபற்றி நடுத்தரமென்பது கருத்து.

பயிர்வகை நடுத்தரமாம். [53]இடையூறும் [54]பொருட்செலவும் மிகுதலாற் கரும்பு தாழ்ந்ததாம்.

[55]பழக்கொடிகளுக்கு நீர்நுரை படியுமிடமும், திப்பிலி கொடிமுந்திரி கரும்பு இவைகளுக்குப் படுகர்நிலமும், கீரை கிழங்குகளுக்குக் கேணிமருங்கும், இளம்புற்களுக்குச் சிறுவாய்க்கால்விளிம்பும், [56]மணப்பயிர் மருந்துப்பயிர் [57]வேரி [58]குறுவேர் சேப்பங்கிழங்கு முதலிய கிள்ளக்கூடிய பயிர்களுக்கு வரப்புகளும் இடமாம். நிலத்திற் பயிராவனவும் நீர்மருங்கிற் பயிராவனவும் ஆகிய மூலிகைகளை அவ்வவற்றிற்கேற்ற இடங்களிற் பயிர்செய்தல்வேண்டும்.

[59]நெல்விதைகளை ஏழுநாள் பனியால் நனைத்து வெயிலால் உலர்த்தல்வேண்டும். [60]மேந்தோலுடைய கூலங்களுக்கு மூன்று நாள் அல்லது ஐந்து நாட்களாம்.[61]

துளிர்ப்பதற்காக நடப்படுகின்ற [62]போத்தின் வெட்டுவாயில் தேன் நெய் பன்றிக்கொழுப்பு இவைகளைச் சாணத்தோடு கலந்து பூசுதல்வேண்டும். கிழங்குகளுக்குத் தேனும் நெய்யும் கலந்து பூசுதல்வேண்டும். கொட்டைவிதைகளுக்குச் சாணத்தைப்பூசுதல் வேண்டும். மரங்களுக்குத்தோண்டிய குழிகளைச்சுட்டு மாட்டெலும்பு சாணம் இவைகளை ஏற்றகாலத்தில் எருவாக இடுதல் வேண்டும்.

[63]முளைத்த பயிர்களுக்குக் கள்ளிப்பாலும் சிறிய பச்சைமீனுங் கலந்த எருவிடுதல்வேண்டும்.

---

53 இடையூறு—மக்களாலும் எலி முதலியவற்றாலும் நேர்வன.

54 பொருட்செலவுமிகுதி, வெட்டுதல் ஆலையிற்பிழிதல் காய்ச்சுதல் முதலிய தொழில்களால் நேர்வது.

55 பலவகைப் பயிர்களுக்குமுரிய நிலவேறுபாடு கூறுகின்றார்.

56 மணப்பயிர்—மரு, மருக்கொழுந்து முதலியன.

57 வேரி—இலாமிச்சை.

58 குறுவேர்—ஒருவகை மணவேர்.

59 வித்துக்களைத் தூய்மை செய்யும் முறையைக் கூறுகின்றார்.

60 மேந்தோலுடைய கூலங்கள்—பயறு உழுந்து முதலியன.

61 பனியால் நனைத்து வெயிலால் உலர்த்தல்வேண்டுமென்பது.

62 போத்து—மரக்கொம்பு.

63 பயிர்களுக்குப் பூச்சி புழு முதலியவற்றால் ஏற்படுங் கெடுதலையொழிக்கும் உபாயங் கூறுகின்றார்.

சுலோகம்

[64]பருத்தி விதையையும் பாம்பின் உரியையுஞ் சேர்த்துப் புகைத்தவிடத்திற் பாம்புகள் இருக்கமாட்டா.

எல்லாவிதைகளையும் விதைக்கும்போது முதற்பிடியைப் [65]பொன்னீரில் நனைத்து விதைத்தல்வேண்டும். பின்வரும் மந்திரத்தையும் ஓதல்வேண்டும்.

(மந்திரம்)

மக்களுக்குத் தலைவனும் கசியப மரபிற் பிறந்தவனும் ஆகிய தேவனுக்கு எப்போதும் வணக்கஞ்செலுத்துகின்றோம். தொடங்கிய இவ்வுழவுத்தெய்வம் கூலங்களாலும் பொருளாலும் எனக்கு நலம்விளைவிப்பதாக.

தோட்டக்காவலர் [66]ஆயர் அடிமை பணியாளர் இவர்களுக்கு உடலின் உழைப்பிற்கேற்ப உணவு ஏற்படுத்தல்வேண்டும். திங்களுக்கு ஒன்றேகாற்பணம் [67]கூலியும் கொடுத்தல்வேண்டும்.

காருகர்களுக்குத் தொழிலிற்கேற்ப உணவும் கூலியும் கொடுத்தல்வேண்டும்.

தவஞ்செய்வோரும் வேதம் ஓதுகின்றவர்களும் கடவுள்வழிபாட்டினிமித்தம் [68]உதிர்ந்த மலர் கனிகளையும் புத்தூண் வேள்வியினிமித்தம் [69]நெல் யவங்களையும் எடுத்துச் செல்லலாம்.

பொறுக்கிப்பிழைப்போர் கூலக்குவியலின் அடியிற் சிந்தியவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

---

64 பாம்புகளால் கேடு விளையாமைக்கு உபாயங்கூறுகின்றார்.

65 பொன்னீர்—பொன்னிட்ட நீர்.

66 ஆயர்—இடையர்.

67 கூலியும் என்றதனால் உணவுங்கொடுத்தல் வேண்டுமென்பது.

68 மரஞ்செடிகளிலிருந்து மலர் கனிகளைப் பறித்தலால் அவ்வோரறிவுயிர்க்கு ஊறுசெய்வதாக முடியும் என்று உதிர்ந்த மலர் கனிகளை எடுக்க வேண்டுமென்றார்.

69 உதிர்ந்த என்னும் அடைமொழியை நெல் யவங்களுக்குங் கொள்க.

சுலோகங்கள்

(1) விளைந்த எல்லாப் பயிர்விளைவுகளையும் தகுதியான காலத்தில் (இல்லத்தின் அகத்தே) சேர்த்தல்வேண்டும். அறிஞர்கள் சிறிது வைக்கோலைத்தானும் விளைநிலத்தில் வைத்தலாகாது.

(2) [70]கூலங்குவிக்குமிடம் உயரமாக இருத்தல்வேண்டும். உயர்ந்த களஞ்சியங்களிலும் வைக்கலாம். குவியல்களை ஒன்றோடொன்று தலைநெருங்கினவாகச் செய்தல்கூடாது. அவற்றின் குடுமிகள் [71]நொய்யனவாக இருத்தலாகாது.

(3) அக்களத்தின் [72]மண்டல விளிம்பில் கூலங்களைக் குவித்தல்வேண்டும். களத்தில் வேலைசெய்வோர் தம்பால் [73]தீ இல்லாதவராகவும் [74]நீர் உடையவராகவும் இருத்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்துமூன்றும் பிரகரணம்
"உழவுத்தொழிற்றலைவன்" என்னும் நாற்பத்தைந்தாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[70] கூலங்களைக் குவித்துவைக்குமிடம் நீர் முதலியவற்றால் கேடுறாவண்ணம் உயரமாக இருத்தல்வேண்டுமென்பது.

[71] சூறாவளி முதலியவற்றாற் கேடுநேராவண்ணம் இருப்புத்துண்டு கல் முதலியவற்றை உள்ளிட்டு வைக்கவேண்டுமென்பது கருத்து.

[72] மண்டலம்—வைக்கோலிற் பற்றியிருக்கும் நெல்லையுதிர்ப்பதற்குக் கடாவிடும் இடம்.

[73] நெல் முதலியவற்றிற்குக் கேடுநேராவண்ணம் நெருப்பில்லாமலிருத்தல்வேண்டுமென்பது கருத்து.

[74] எதிர்பாராதநிலையில் நெருப்புப்பற்றுமாயின் அதனை அணைத்தற்கு நீருடையராக விருத்தல்வேண்டுமென்பது கருத்து.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்துநான்காம் பிரகரணம்—[1]கள்வினைத்தலைவன்

நாற்பத்தாரும் அத்தியாயம்

கள்வினைத்தலைவன் கள் அதற்குரிய [2]மூலப்பொருள்களின் இயல்பை அறிந்த குடியிற்பிறந்தவரைக்கொண்டு அரண் நாடு பாசறை ஆகிய இவ்விடங்களில் அவற்றிற்குரிய [3]தொழில்களை விற்றல் கொள்ளல்களுக்கு ஏற்ப [4]ஒருமுகமாகவாதல் [5]பலமுகமாக வாதல் செய்வித்தல்வேண்டும். [6]வேறிடத்திற் [7]செய்வோர் விற் போர் வாங்குவோர் ஆகிய இவர்களுக்கு அறுநூறுபணம் தண்டமாம். தொழில் செய்வோர்களுக்கு [8]விழிப்பின்மையும் சான்ருேர் களுக்கு நெறிப்பிறழ்ச்சியும் வீரர்களுக்கு [9]ஊக்கமும் செய்விக்கும் என்னும் [10]அச்சத்தால் [11]கள்ளைக் கிராமத்தினின்றும் வெளிப்படுத் தலையும் [12]புறத்தே கொணர்தலையும் (தடுத்தல்வேண்டும்).

46-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசியலுக்கு இன்றியமையாத உழவுதொழில் முன்னர்க் கூறப் பட்டது. உழவுதொழில் புரிவோர்க்கு உணவாகவும், அரசியல் வினைஞ ரால் கண்காணிக்கப்படுவதாகவும் இருத்தல்பற்றிக் கள்வினைத்தலைவன் என் னும் இது அதன்பின்னர்க் கூறப்பட்டது. இதனுல் பிரகரண இயைபு புலஞ்தலறிக.

[2] மூலப்பொருள்—கள் உண்டாக்குதற்குரிய மதுக்குழம்பு.

[3] தொழில்கள்—கள் வடித்தல் முதலியன.

[4] ஒருமுகமாகவாதல்—ஓரிடத்திலாவது.

[5] பலமுகமாகவாதல்—பலவிடங்களிலாவது.

[6] வேறிடம் — அரண் முதலியவற்றில் அரசியலாரால் அனுமதிக்கப் படாத இடம்.

[7] செய்வோர்—கள் உண்டாக்குவோர்.

[8] விழிப்பின்மை—கவனமின்மை.

[9] ஊக்கம்—உரியதல்லாத இடத்தில் அம்பு முதலியவற்றை எய்தல்.

[10] அச்சம் — கள் ஆக்கப்படுமிடத்தினின்றும் வெளிச்செல்லுமாயின் தொழில் செய்வோர் அதனையுண்டு சோர்வடைதலும், சான்ருேர் உண்டு ஒழுக்கத்திற் பிறழ்தலும், வீரர் உண்டு தகாத இடத்தில் வீரச்செயலைக் காட்டுதலும் நேரக்கூடும் என்னும் பயம்.

[11] ஒரு கிராமத்தினின்றும் மற்றொரு கிராமத்திற்குக் கொண்டுசெல்லல்.

[12] புறத்தேகொணர்தல்—ஒரு வீட்டினின்றும் மற்றொரு வீட்டிற்காதல் மக்கள் கூட்டத்திலாதல் கொண்டுசெல்லல்.

[13]தூயவர் என்று அறியப்பட்டோர் [14]சிறிதளவு—கால் உழக்கு அரையுழக்கு ஒருழக்கு அரைப்படி [15]ஒருபடியளவு—கொண்டு செல்லலாம்.

[16]குடிக்குமிடத்திலேயே [17]இயக்கமில்லாதிருந்து குடிக்கக் கடவர்.

பண்டஞ்செய்யக் கொடுக்கப்பட்டபொருள் அடைக்கலப் பொருள் ஈட்டுப்பொருள் களவுசெய்தபொருள் வஞ்சித்துக்கவர்ந்த பொருள் [18]முதலிய பொருள்களை யறிதற்பொருட்டுக் குப்பியம் பொன் இவற்றைக்கொணர்வோர் அவற்றிற்கு உரியவரல்லர் என்று தோன்றுங்கால் [19]வேறுகாரணத்தைத் தலைக்கீடாகக் கொண்டு [20]வேறிடத்தில் அவரைப் பிடிப்பித்தல்வேண்டும். [21]மிகையாகச் செலவுசெய்பவனையும் வருவாயின்றிச் செலவுசெய்வோனையும் [22]பிடிப்பித்தல்வேண்டும்.

கெட்டகள்ளைத் தவிர மற்றைக் கள்ளை விலைகுறையவாதல் கடனாகவாதல் கொடுத்தலாகாது.

---

[13] கள்ளை வெளியே கொண்டுபோதற்குச் சிறப்புவிதி கூறுகின்றார்.

[14] சிறிதளவென்பதைப் பின்வரும் அளவையாலறிக.

[15] ஒரு படிக்குமேல் கொண்டுபோதலாகாதென்பது கருத்து.

[16] குடிக்குமிடம்—கள்ளுக்கடை.

[17] களிப்புவெறி தணியுங்காறும் இயங்குதலாகாதென்பது கருத்து.

[18] முதலிய என்றது இரந்துபெற்ற பொருள் முதலியவற்றைக் குறிக்கும்.

[19] வேறு காரணங்காட்டாமல் கள்ளுக்கடையிலேயே வைத்துப் பிடிப்பித்தால், குடிக்கவரும் மற்றைய கள்வர்கள் மேற்குறித்த குப்பியம் முதலிய பொருள்களை நம்பிக்கையில்லாமையால் வேற்றிடத்திற்குக் கொண்டுசெல்வர் என்னுங்கருத்தால் வேறுகாரணத்தைக் காட்டி வேறிடத்திற் பிடிப்பித்தல் வேண்டுமென்று கூறப்பட்டது.

[20] வேறிடம்—கள்ளுக்கடைக்கு அயலதாகிய இடம்.

[21] மிகையாகச் செலவுசெய்தல்—வருவாயளவிற்கு மிகுதியாகச் செலவிடல்.

[22] வருவாயின் மிகுதியாகவும், வருவாயின்றியும் செலவு செய்பவன், களவுப்பொருள் முதலியவற்றைக் கொண்டு குடிக்கத் தலைப்படுவன் எனக் கருதி அவனையும் பிடிப்பித்தல் வேண்டுமென்பது கருத்து. பிடிப்பிப்போன் கள்வினைத் தலைவனுவான்.

அக் கெட்டகள்ளை [23]வேறிடத்தில் விற்கச்செய்தல்வேண்டும். அல்லது அடிமைகளுக்கும் பணியாளருக்கும் கூலியாகக் கொடுக்கலாம். [24]ஊர்திகளைக் காத்தற்கும் பன்றி வளர்த்தற்கும் கொடுக்கலாம்.

குடிக்குமில்லத்தைக் [25]குடித்தற்குரிய இடங்களையுடையதாகவும் பல கட்டுகளையுடையதாகவும் தனித்தனிப் படுக்கை இருக்கைகளையுடையதாகவும் மணப்பொருள் மாலை நீர் இவைகளையுடையதாகவும் [26]பருவங்களுக்கேற்ற இன்பமளிப்பதாகவுஞ் செய்வித்தல்வேண்டும்.

அங்குள்ள [27]ஒற்றர்கள் இயல்பாகவும் [28]சிறப்பாகவும் உள்ள [29]செலவுகளையும், [30]அயல்நாட்டினின்றும் வந்தவர்களையும் அறிதல் வேண்டும்.

களிமயக்குற்றவர்களும் உறங்கியவர்களுமாகிய கள்வாங்கியவரிடத்துள்ள அணிகலன் ஆடை பொன் இவைகளை [31]அறிந்து கொள்ளுதல்வேண்டும். அவைகள் [32]கேடுறின், கள்வாணிகர்

---

23 நல்ல கள் விற்குமிடத்தினின்றும் வேறிடமென்பது கருத்து ; கலப்பு உளதுகொல் என்னும் ஐயம் தோன்றாமைப்பொருட்டு.

24 மேற்கூறிய கூலி சிறியதொழில் செய்வோர் பொருட்டு என்பதைக் கூறுகின்றார். ஊர்தி—ஒட்டகம் எருது முதலியன. அவற்றைக் காப்பாற்றுவோர்க்கும், பன்றி வளர்ப்போர்க்கும் கூலியாகக் கொடுக்கலாம் என்பது கருத்து.

25 குடிக்குமில்லத்தில் அமைதியாக இருந்து குடிப்பதற்குரிய சிறந்த இடங்கள் என்பது கருத்து.

26 இளவேனில் முதலிய பருவங்களுக்கு ஏற்ற இன்பமளிக்கும் பொருள்களை உடையதாகவும் என்பது கருத்து.

27 ஒற்றர்கள்—கள்ளுக்கடைத் தொழில் செய்வோரின் உருக்கொண்டுள்ளவர்.

28 சிறப்பாகவுள்ள செலவு, முன்னிகழாதது.

29 செலவு, குடிப்போரைப் பற்றியது.

30 வேற்றுநாட்டினின்றுங் குடிக்கவந்தவர் என்பது கருத்து.

31 ஒற்றர்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்பது.

32 கேடுறுதல்-களிமயக்கத்தாலும் உறக்கத்தாலும் அணிகலன் முதலியவற்றிற்கு இழப்பு நேர்தல்.

கேடுற்ற அப்பொருளும் அவற்றிற்கு ஒத்த பொருளும் [33]தண்டமாக இறுத்தல்வேண்டும்.

வணிகர், தனித்தனியாகவுள்ள அறைகளில் மேன்மக்கள் போல் தோற்றமுடையவராய்க் குடித்து மயங்கியும் உறங்கியும் கிடக்கும் தம்நாட்டினர் அயல்நாட்டினர் ஆகிய இவர்களுடைய எண்ணங்களை அழகிய உருவமுடைய தம் பணிப்பெண்களைக் கொண்டு [34]அறிந்துகொள்ளல்வேண்டும்.

தோப்பி தேறல் பிழி அரிட்டம் மைரேயம் மது [35]இவைகளைப்பற்றி இனிக் கூறுவாம்:—

ஒருதுாணி நீர் அரைமரக்கால் அரிசி மூன்றுபடி மதுக்குழம்பு இவற்றின் கலவை [36]தோப்பி எனப்படும்.

பன்னிரண்டுமரக்கால் மா ஐந்துபடி மதுக்குழம்பு [37]புத்திரக மரத்தின் பட்டை கனிகள் [38]மணக்கூட்டு இவைகளின் கலவை [39]தேறல் எனப்படும்.

ஒருதுலை [40]விளம்பழம் ஐந்துதுலை பாகு ஒருபடி தேன் இவை

---

33 கட்கடையில் குடிப்போருடைய பொருளைப் பாதுகாக்கவேண்டியது கள்வாணிகர் கடமையாதலின் அவற்றை இழக்க நேர்ந்தால் தண்டஞ் செலுத்தல் வேண்டுமென்பது கருத்து.

34 மேன்மக்களைப்போன்ற தோற்றமுடையவர், கள்வராகவும் பகைவரால் அனுப்பப்பட்டவராகவும் இருத்தல் கூடும் என்னும் ஐயத்தால் அன்னாரெண்ணங்களைப் பெண்களைக்கொண்டு அறிந்துகொள்ளவேண்டுமென்றார். அப்பெண்கள் அழகிய உருவமுடையராக இருப்பின் அவர்பால் ஈடுபட்டு உள்ளக்கருத்தை வெளிப்படுத்துவர் என்பது.

35 அறுவகைக் கள்ளையும் உண்டாக்கும் முறையைக் கூறத் தொடங்குகின்றார்.

36 தோப்பி என்பது நெல்லாற் சமைத்த கள் என்பர் அகநானூற்றுக் குறிப்புரையாசிரியர். (அகம். 35).

37 புத்திரகமரம்—காமரூபம் என்னும் நாட்டிற்றோன்றிச் சிறந்து விளங்குவது.

38 மணக்கூட்டு—இதன் விளக்கம் பின்வருவது.

39 இத் தேறல் என்னுங் கள்ளை உண்டாக்குவதற்கு நீரின் அளவு முன் கூறியபடி மாவின் அளவின் எண்மடங்கு மிகுதியாகும் என அறிக.

40 விளம்பழம் ஈண்டு அதன் சாற்றை யுணர்த்தும்.

களுடைய கலவை பிழி எனப்படும். [41]காற்கூறு மிக்கது தலையாயது. காற்கூறு குறைந்தது கடையாயது.

[42]வேற்றுமைகளுக்கு ஏற்ப [43]மருத்துவரால் தனித்தனி கூறப்பட்ட அளவினையுடைய கலப்பு [44]அரிட்டம் எனப்படும்.

கொதிக்கவைத்த[45]மேடசிருங்கிப்பட்டையின் சாறு வெல்லப்பொடி திப்பிலி மிளகு அல்லது [46]திரிபலை இவற்றின் கலவை [47]மைரேயம் எனப்படும். வெல்லஞ்சேர்ந்த [48]எல்லாவகைக்கும் திரிபலைக்கூட்டு உண்டு.

கொடிமுந்திரிச்சாறு மது எனப்படும். அம்மது [49]காபிசாயனம் [50]ஆரகூரகம் என நாடுபற்றி இருவகைப்படும்.

காய்ச்சியதாதல் காய்ச்சப்பெருததுஆதல் ஒருதுாணி உழுந்துக்கழுநீர், [51]மூன்றிலொருகூறு மிக்க [52]அரிசி, பெருங்குரும்பை [53]முதலியன ஒவ்வொரு கருடம் இவற்றின் கலவை மதுக்குழம்பு எனப்படும்.

---

41 மேற்கூறிய அளவையும் நான்கிலொருகூறு மிகுதியாகச் சேர்க்கப்படுவது தலையாயது எனவும், நான்கிலொருகூறு குறைவாகச் சேர்க்கப்படுவது கடையாயது எனவும் கொள்ளல்வேண்டும். எனவே முன்னர்க் குறிப்பிட்டது இடையாயது என்பது புலப்படும்.

42 வேற்றுமைகள்—நோயின் வேறுபாடுகள்.

43 நோய்களின் வன்மை மென்மைக்கேற்ப மருத்துவராற் கூறப்பட்ட பொருள்களின் கலவை அரிட்டம் எனப்படுமென்பது.

44 அரிட்டம்—மருத்துவநூலிற் கூறப்படும் சாறுவடிவினதாகிய ஒரு வகை மருந்து.

45 மேடசிருங்கி—ஆடுதின்னுப்பாளையென்று கூறுவர்.

46 திரிபலை—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

47 மைரேயம்—மிரா என்னும் நாட்டில் உண்டாக்கப்படும் கள்.

48 எல்லாவகைக்கும்—எல்லாவகைக் கள்வகைக்கும்.

49 கபிசம் என்னும் நதிக்கரையிலுள்ள நாட்டிலுண்டாவதுபற்றிக் காபிசாயனம் எனப்படும்.

50 அரகூரம் என்னும் நகரத்திலுண்டாவது பற்றி ஆரகூரகம் எனப்படும்.

51 மூன்றிலொருகூறு மிகுதி—உழுந்துக்கழுநீரின் அளவும் அதனின் மூன்றிலொருகூறு மிகுதியுமாம்.

52 அரிசி—ஈண்டு அதன் மாவை யுணர்த்தும்.

53 முதலியன வென்பதனாற் கொள்ளத்தக்கவற்றைப் பின்னர்க் காண்க.

தோப்பி தேறல் என்னுமிவற்றிற்குப் பங்கம்பாளை வெள்ளி லோத்திரம் யானைத்திப்பிலி ஏலக்காய் வால்மிளகு அதிமதுரம் கொடிமுந்திரிப்பழம் ஞாழற்பூ மரமஞ்சள் மிளகு திப்பிலி என்னும் இவை தனித்தனி ஐந்துகருட அளவு [54]கூட்டுப்பொருள்களாம். அதிமதுரக் கொதிசாற்றோடு கலந்த [55]கடசருக்கரை [56]நிறம்பயப்ப தாகும்.

இலவங்கப்பட்டை கஞ்சாங்கோரை வாயுவிளங்கம் யானைத் திப்பிலி இவை தனித்தனியே ஒவ்வொரு கருடமும் பாக்கு அதி மதுரம் [57]கோரைக்கிழங்கு வெள்ளிலோத்திரம் இவை தனித் தனியே இரண்டிரண்டு கருடங்களும் [58]பிழியின் கூட்டுப் பொருள் களாம். இவற்றின் பத்திலொரு கூற்றை மூலப்பொருளிலே சேர்த் தல்வேண்டும்.

தேறலுக்குக்கூறிய கலவையே [59]வெண்கள்ளுக்குமாம்.

[60]மாங்கள் [61]தீந்தேறல் மதுக்குழம்பு மிகுதியாகச் சேர்க்கப் பட்ட [62]பெருங்கள் [63]மிகைக்கூட்டு இவை கள்ளின் வகைகளாம்.

---

54 கூட்டுப்பொருள்—மணமுஞ்சுவையும் பயத்தற்குச் சேர்க்கப்படும் பொருள்.

55 கடசருக்கரை—ஒருவகைக் கொடிப்பழம்; ஈண்டு அதன் சாற்றை யுணர்த்தும். கண்டசருக்கரை எனப் பாடங்கொண்டு கற்கண்டு எனினும் அமையும்.

56 நிறம் பயப்பது, தோப்பி தேறல் என்னும் கள்வகைகளுக்கு என உணர்க.

57 முஸ்தா என்னும் மூலத்திற்குக் கோரைக்கிழங்கு எனப் பொருள் கொள்ளப்பட்டது.

58 பிழி என்னும் கள்வகைக்கு மணமுஞ்சுவையும் உண்டாக்கும் பொருள்களாமென்பது.

59 வெண்கள் என்பது தேறலின் வேறன்று; கூட்டுப்பொருள் கலவாத நிலையில் அது வெண்கள் எனப்படும்.

60 மாங்கள்—மாவடுவினின்றும் வடித்தெடுக்கப்படும் சாற்றினாலாவது; (அகநானூறு 37-ஆம் பாடல் பார்க்க).

61 தீந்தேறல்—வெல்லப்பாகு கலக்கப்பெற்றது. இதனைக் கருப்பஞ் சாற்றினாலுண்டாக்கப்படும் சீது என்றுங் கூறுவர்.

62 மற்றைக் கள்வகைகளிற் சேர்க்கப்படும் மதுக்குழம்பளவின் மிகுதி யாகச் சேர்க்கப்படுவது பெருங்கள் என்பதாம்.

63 மணமுஞ் சுவையும் உண்டாக்குதற்பொருட்டுக் கலக்கப்படும் பொருள்கள் மற்றைக் கள்வகைகளினின்றும் மிகுதியாகச்சேர்க்கப்படுவது மிகைக்கூட்டு என்பதாம்,

கடசருக்கரையை வறுத்துப்பொடித்துப் பெருங்குரும்பை புரசு பத்தூரம் ஆடுதின்னுப்பாளை புன்கு [64]பால்மரம் இவற்றின் கோதிசாற்றில் நனைத்து வெள்ளிலோத்திரம் கஞ்சாங்கோரை வாயுவிளங்கம் பங்கம்பாளை கோரைக்கிழங்கு கலிங்காட்டு யவம் மரமஞ்சள் கருநெய்தல் பெருஞ்சதகுப்பை நாயுருவி ஏழிலைப்பாலை வேம்பு மலையத்தி இவைகளின் பொடியைப் [65]பாதியளவு சேர்த்து ஓர் [66]இறுக்கிய பிடியளவு பொடியை ஒரு [67]காரியளவுள்ள எவ் வகையான கள்ளிற் போட்டாலும் அது அரசன் பருகுதற்கு ஏற்ற தாகத் தெளிவடையும். ஐந்துபலம் வெல்லப்பாகு சுவைமிகுதி யின்பொருட்டு இதிற் கலத்தல்வேண்டும்.

குடிமக்கள் [68]சிறந்த காரியங்களின்பொருட்டு வெண்கள்ளை யும், மருந்துக்காக அரிட்டத்தையும் [69]பிறவற்றையும் செய்து கொள்ளலாம்.

[70]திருவிழா [71]கூட்டம் விரும்பிய [72]தெய்வவழிபாடு இவை களில் நான்கு நாட்கள் கள் குடிக்கவிடலாம். [73]அந்நாட்களில் [74]அநுமதிபெருதவர்களுக்கு இவற்றின் [75]முடிவுகாறும் ஒவ்வொரு நாட்கும் உரியதண்டனை விதித்தல்வேண்டும்.

---

64 பால்மரம்—ஆல் முதலியன.

65 பாதியளவு—வறுத்துப்பொடித்த கடசருக்கரையின் அரைக்கூறு.

66 இறுக்கிய பிடியளவு, மிகுதியாகாமைப்பொருட்டு.

67 காரி—பதினாறு தூணியளவுகொண்டது.

68 சிறந்த காரியங்கள்—திருமணம் முதலியன.

69 பிறவற்றையும் என்றதனால் தோப்பிக்கள் முதலியவற்றையுங் கொள்க.

70 திருவிழா—வசந்தோற்சவம் முதலியன.

71 கூட்டம்—உறவினர் முதலியோர் ஒன்றுகூடல்.

72 தெய்வவழிபாடு—குலதெய்வம் முதலியவற்றிற்குச் செய்யப்படும் பூசை.

73 அந்நாட்கள்—திருவிழாநாட்கள் முதலியன.

74 கட்குடித்தற்கு அநுமதிபெருதவர் என்பது.

75 முடிவு—திருவிழா முதலியவற்றின் முடிவுநாள்.

சிறுவர்களும் பெண்டிர்களும் கள் மதுக்குழம்பு இவற்றின் [76]தொழிலைச்செய்தல்வேண்டும்.

அரசன்பொருளாலன்றி (த் தம்பொருளாற்) கள்செய்வோர், கள் தோப்பி அரிட்டம் மது [77]பழச்சாறு கருப்பங்கள் இவைகளுக்கு நூற்றுக்கு ஐந்துவிகிதம் [78]உல்கு கொடுத்தல்வேண்டும்.

சுலோகம்

நாடோறும் நிகழும் விற்பனையையும் [79]அளவுக்குறைவையும் அறிந்துகொண்டு அளவு[80]வாசியும் பொருள்வாசியும் ஏற்படுத்தல் வேண்டும். [81]வழக்கத்தையும் ஒட்டி நடத்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்துநான்காம் பிரகரணம்
" கள்வினைத்தலைவன் " என்னும் நாற்பத்தாரும்
அத்தியாயம் முற்றிற்று.

---

[76] தொழில்—கள்ளைப் பக்குவஞ் செய்தலும் மதுக்குழம்பை யுலர்த்தலும் முதலியன. இத்தொழில்களைப் பெண்களும் சிறுவர்களும் மேற்கொள்ளவேண்டுமென்றது, அச்சுவையிலீடுபடாதவர்கள் என்பது கருதி.

[77] பனை தெங்கு இவற்றின் சாறு எனினும் அமையும்.

[78] உல்கு—இறைப்பொருள்.

[79] அளவுக்குறைவு—கள்ளை மீண்டும் மீண்டும் அளத்தலாலுண்டாகுங் குறைவு.

[80] வாசி—அளவுக்குறைவு முதலியவற்றிற்கு ஈடாகச் சேர்ப்பது. அளவுவாசி பதினாறிலொருகூறும் பொருள்வாசி இருபதிலொரு கூறுமாம்.

[81] மேற்குறிப்பிட்ட வாசி முதலிய திட்டங்களைக் கள்வினைத்தலைவன் தன்விருப்பப்படி செய்யாமல் முன்னைய வழக்கத்தையொட்டிச் செய்ய வேண்டுமென்பது கருத்து.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தைந்தாம் பிரகரணம்—[1] இறைச்சித் தொழிற்றலைவன்

நாற்பத்தேழாம் அத்தியாயம்

இறைச்சித் தொழிற்றலைவன் [2]துன்புறுத்ாதன என்றறியப் பட்டனவும் [3]அச்சமில்காட்டில் வாழ்வனவும் ஆகிய [4]மிருகம் [5]பசு முதலிய விலங்கு [6]பறவை மீன் என்னும் இவற்றைக் [7]கட்டுதல் கொலைப்படுத்தல் துன்புறுத்தல் செய்யின் உத்தமசாகச தண்டம் விதித்தல்வேண்டும். [8]குடிமக்கள் அச்சமில்காட்டில் வாழ்வன வற்றிற்கு அக்குற்றத்தைச் செய்யின் மத்தியமசாகசம் தண்டமாம்.

[9]கொல்லும் வழக்கமில்லாத மீன்களையும் பறவைகளையும் கட்டுதல் கொலைப்படுத்தல் துன்புறுத்தல் செய்யின் இருபத்தாறே முக்காற்பணம் தண்டம் விதித்தல்வேண்டும். [10]மிருகம் [11]பசுக் களுக்காயின் [12]இருமடங்கு தண்டமாம்.

47-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கள்ளும் ஊனும் ஓரினமாதலின் கள்வினைத்தலைவன் என்பதன்பின் இது கூறப்படுகின்றது. இதனால் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] துன்புறுத்ாதன—குத்தல் கடித்தல் கீறல் முதலிய செயல்களால் பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாதன.

[3] அச்சமில்காடு—அரசனாற் பாதுகாக்கப்பட்ட காவற்காடு.

[4] மிருகம்—மான் முதலியன.

[5] பசு—ஆன் எருமை முதலியன.

[6] பறவை—மயில் முதலியன.

[7] கட்டுதல்—வலைகட்டிப் பிடித்தல்.

[8] குடிமக்கள் என்று இங்குக் கூறியதனால் முன்குறிப்பிடப்பட்டோர் இறைச்சித்தொழில்புரிவோர் என்பது புலப்படும்.

[9] கொல்லும் வழக்கம் நீண்டகாலமாக இல்லாத என்பது கருத்து.

[10] கொல்லும் வழக்கம்இல்லாத என்னும் அடைமொழியை ஈண்டும் கூட்டுக.

[11] கட்டுதல் கொல்லுதல் துன்புறுத்தல் செய்யின் என்பது கருத்து.

[12] இருமடங்கு—ஐம்பத்துமூன்றரைப்பணம்.

[13]ஒருவர்க்கு உரிமையில்லாதனவும் துன்புறுத்தும் வழக்க முள்ளவைகளும் ஆகியவற்றிற்கு ஆறிலொன்று பெற்றுக் கொள்ளல்வேண்டும். மீன் பறவை இவற்றிற்குப் [14]பத்தில் ஒரு கூறுதல் சற்று மிகுதியாகவாதல் கொள்ளல்வேண்டும். மிருகம் பசுக்களுக்கு [15]உல்குபொருளாதல் [16]சற்று மிகுதியாகவாதல் கொள்ளலாம்.

[17]பறவை விலங்குகளில் [18]ஆறில் ஒருகூற்றை அச்சமில்காட்டில் உயிருடன் விட்டுவிடல்வேண்டும்.

கடல் ஏரி யாறு குளம் வாய்க்கால் இவைகளிற்றோன்றிய யானை குதிரை மனிதன் எருது கழுதை போன்ற உருவமுடைய மீன்கள் கிரௌஞ்சம் அன்றில் நச்சுக்குருவி அன்னம் சக்கரவாகம் [19]ஜீவஞ்ஜீவகம் [20]பிருங்கராசன் சகோரம் குயில் மயில் கிளி மதனம் நாகணவாய்ப்புள் [21]விளையாட்டுப் பறவைகள் ஏனைய மங்கலப் பிராணிகளாகிய [22]பறவைகள் [23]விலங்குகள் என்பன துன்பத்தினின்றும் கொலையினின்றும் காப்பாற்றற்பாலன. பாதுகாப்பை மீறினல் பூர்வசாகசம் தண்டமாம்.

---

13 உரிமையாளரை இல்லாதனவும் பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்வனவுமாகிய மிருகம் முதலியவற்றைக்கொலைசெய்யின் அது கொலைக்குற்றமாகாமையின் தண்டம்விதியாமல் அக்கொலைசெய்யப்பட்ட பிராணியின் பெறுமதியில் அரசற்குரிய ஆறிலொருகூறு இறைப்பொருளாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

14 பத்திலொருகூறு, அப்பிராணியின் பெறுமதியில் என்பது.

15 உல்குபொருள், கொலையுண்டமிருகம் பசு இவற்றின் விலையில் பத்தில் ஒருகூறும்.

16 சற்றுமிகுதி—அப்பத்தில் ஒருகூற்றினும் சிறிது மிகுதி.

17 ஈண்டுக்குறிக்கப்பட்ட பறவை விலங்குகள் காவற்காடல்லாத பிற காடுகளிலிருந்து கொள்ளப்பட்டவைகள்.

18 ஈண்டும் ஆறிலொருகூறு அரசபாகமாகும்.

19 ஜீவஞ்ஜீவகம்—இது சகோரவகைகளில் ஒன்று.

20 சிறந்த சாதி வண்டு.

21 விளையாட்டுப்பறவைகள்—கோழிச் சேவல் முதலியன.

22 பறவைகள்—கருடன் செம்போத்து முதலியன.

23 விலங்கு—பசு முதலியன.

மிருகம் பசு இவற்றின் இறைச்சியைக் [24]கொன்றவுடனேயே விற்றல்வேண்டும். [25]எலும்புடையதற்கு ஈடுகொடுத்தல்வேண்டும். [26]எடைக்குறைவு ஏற்படின் அக்குறைவின் எண்மடங்கு கொடுத்தல் வேண்டும்

[27]இவற்றுள் கன்று [28]ஆனேறு [29]பசு இவைகள் கொல்லத் தகாதன. இவற்றைக் கொல்பவனுக்கும் (கொல்லும் வழக்கமுடையவைகளைத்) [30]துன்புறுத்திக் கொல்பவனுக்கும் ஐம்பது பணம் தண்டமாம்.

[31]இறைச்சிக் கடையிற் கொல்லப்படாதன, [32]தலை கால் எலும்பு இல்லாதன, தீநாற்றமுடையன, [33]தாமே இறந்த பிராணிகளுடையன ஆகிய இவ்விறைச்சிகளை விற்றல் கூடாது ; விற்பின் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

---

24 இறைச்சி புதியதாக இருக்கும்பொழுதே விற்றுவிடல்வேண்டும். பழையதாகின் நோய்விளைவிக்கும் என்பது கருத்து.

25 எலும்புகலந்த இறைச்சியை விற்குங்கால் அதன்கட் கலந்திருக்கும் எலும்பின் அளவிற்குத்தக இறைச்சியை ஈடாக மிகுத்துக்கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

26 துலாக்கோல் நிறையில் வஞ்சித்துக் குறையக் கொடுக்கப்படின் அக்குறைவின் எண்மடங்கு மிகுதியாகக் கொடுத்தல்வேண்டும் என்பது ; அவ்வெண்மடங்கு மிகுதியில் ஒருகூறு கொள்வோனுக்கும் எஞ்சிய ஏழுகூறு இறைச்சித்தொழிற்றலைவனுக்கும் உரியனவாகும் என்பது ஒருசாராசிரியர் கொள்கை.

27 இவற்றுள்—கொல்லுதற்கு அநுமதிக்கப்பட்ட மிருகம் பசு என்பவற்றுள்.

28 ஆனேறு—பொலிஎருது.

29 பசு—கன்றீனும் பருவமுடையது.

30 துன்புறுத்திக்கொல்லுதல்—சித்திரவதை செய்தல்.

31 அரசினர் கட்டளை பெறப்படாத இடத்தில் பிராணிகளைக் கொன்றெடுத்த இறைச்சி என்பது.

32 தலை கால் எலும்பு இல்லாதன — காட்டில் பிராணிகள் கொன்று உண்டெஞ்சிய இறைச்சிகள் ; அவை இன்ன இறைச்சி என்றறியப்படாமையால் விலக்கப்பட்டன.

33 நோய் முதலியவற்றால் தாமே இறந்த பிராணிகளின் இறைச்சி என்பது.

சுலோகம்

[34]அச்சமில்காட்டில் வாழும் கொடிய பசு மிருகம் [35]பாம்பு மீன் இவை பாதுகாவலுக்குரிய இடமல்லாத ஏனைய இடங்களில் கட்டுப்படவும் கொலைப்படவும் உரியன.

இரண்டாம் அதிகரணம் இருபத்தைந்தாம் பிரகரணம்
" இறைச்சித் தொழிற்றலைவன் " என்னும் நாற்பத்தேழாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[34] இச்சுலோகத்தால் விலக்குவிதி கூறப்படுகின்றது.

[35] ஈண்டு வ்யாளம் என்பது மூலம்; அதற்குப் புலி முதலிய கொடிய விலங்குகள் எனினும் பொருந்தும்.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தாரும் பிரகரணம்—[1] வரைவின்மகளிரை நடத்துந்தலைவன்

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

வரைவின்மகளிரை நடத்துந்தலைவன் கணிகையர்குடியிற் பிறந்தவளையாதல் [2]அக்குடியிற் பிறவாத வேறொருத்தியையாதல் அழகு இளமை [3]கலை இவற்றையுடையவளாக ஆராய்ந்து [4]ஆயிரம் பணங்கொடுத்துக் கணிகையாக ஏற்படுத்தல்வேண்டும். ஒரு [5]குடிக்குரிய அளவிற் பாதியால் மற்றொருத்தியையும் ஏற்படுத்தலாம்.

அயலூர் சென்றவள் இறந்தவள் இவர்களுடைய குடிக் கடமையை அன்னூர் மகளாதல் சகோதரியாதல் [6]ஏற்று நடத்தல் வேண்டும். [7]அல்லது அவ்வவர் தாயர் மற்றொருத்தியையும் ஏற்

48-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உணவிலும் இன்பத்திலும் விலக்குவிதியாக ஓரளவு மேற்கொள்ளத் தக்கன கள்ளும் ஊனும் வரைவின்மகளிர்ச் சேர்தலும் ஆம். அம்முறையில் ஓரினமாகச் சேர்த்தெண்ணப்படுதலின் இறைச்சித்தொழிற்றலைவன் என்னும் அதிகாரத்தின்பின் இதுவைக்கப்பட்டது. இதனாற் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] அக்குடியிற் பிறவாத என்னும் அடைமொழியால் அக்குடிப்பிறப்பு கணிகையர்தொழிற்கு இன்றியமையாததொன்றன்று என்பது போதரும்.

[3] கலை—ஈண்டு ஆடல் பாடல் முதலியன.

[4] புதிதாக அக்குடியை நிலைப்படுத்தற்பொருட்டு ஆயிரம் பணம் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து. இஃது ஒரு குடிக்கென்பது.

[5] ஈண்டுக் குடி என்பது அக்குடித்தொழிலையும் அக்குடியை நிலைநிறுத்தற்பொருட்டுக் கொடுக்கப்படும் பொருளையும் உணர்த்தும்; தொழிலை உணர்த்துங்கால் கணிகையரிருவரை நியமனஞ்செய்து அரசனுக்குரிய பணிகளை இருகூறாகக்கொண்டு இருவருஞ்செய்யும்படி ஏற்படுத்தல்வேண்டும் என்பதும் பொருளையுணர்த்துங்கால் ஆயிரம் பணத்தைப் பகிர்ந்து இருவர்க்கும் கொடுத்தல்வேண்டும் என்பதும் போதரும்.

[6] ஏற்று நடத்தல்வேண்டும் என்னுமிதனால் அவர்தம் பொருளையடைதற்கும் உரிமையுண்டென்பது புலப்படும்.

[7] அல்லது—மகளாதல் சகோதரியாதல் இல்லையாயின் என்பது.

படுத்தலாம். [8]அவர்களும் இல்லையாயின் அரசன் எடுத்துக் கொள்ளல்வேண்டும்.

குடை குண்டிகை சிவிறி சிவிகை தவிசு தேர் இவற்றின் [9]தகுதி குறித்து [10]அழகு இளமை அணி இவற்றிற்கேற்ப [11]ஆயிரம் பணம் முதலளித்துக் [12]கடை இடை தலையாய [13]ஏவற்சிலதியராக அக்கணிகையரை நியமித்தல்வேண்டும்.

[14]அழகும் இளமையும் குறைந்துழித் தாயாகச் செய்தல் வேண்டும்.

கணிகையர்க்கு [15]விடுதலைப்பொருள் இருபத்துநாலாயிரம் பணமாம். [16]கணிகைமகனுக்குப் பன்னீராயிரமாம். [17]கணிகை மகன் எட்டாம் யாண்டு தொடங்கி அரசனுக்கு இசைபாடுவோனாக இருத்தல்வேண்டும்.

---

8 அவர்களும்—தாய் மகள் சகோதரி என்னுமிவர்களும் தாயால் நியமிக்கப்படும் மற்றொருத்தியும்.

9 தகுதி—குடைபிடித்தல் முதலிய பணிசெய்தலைப்பற்றியது.

10 அழகும் இளமையும் அணியும் பணிப்பெண்களுடையன.

11 ஆயிரம்தொடங்கித் தகுதிக்கேற்ப மேன்மேலும் கொடுத்து என்பது கருத்து.

12 குடைபிடித்தல் முதலியவாக இங்குக்கூறப்பட்ட தொழில் ஆறனுள் குடைபிடித்தலும் குண்டிகை ஏந்தலும் கடையாயதொழில் எனவும் சிவிறி வீசுதலும் சிவிகைதாங்கலும் இடையாயதொழில் எனவும் தவிசமைத்தலும் தேரணி செய்தலும் தலையாயதொழில் எனவுங் கொள்ளல்வேண்டும்.

13 ஏவற்சிலதியரின் அழகு இளமை அணி இவற்றின் மிகுதி குறைவு குறித்து அன்னாரைத் தலை இடை கடையாய தொழில்களில் நியமித்தல் வேண்டும் என்பது கருத்து.

14 ஏவற்சிலதிக்கு அழகும் இளமையும் நீங்கி மூப்புவந்தவிடத்து அவளை இன்பநுகர்ச்சிக்குரிய மகளிர்க்கு அன்னையாக்குதல்வேண்டும் என்பது கருத்து.

15 விடுதலைப்பொருள்—அரசனுக்குரிய பணிசெய்யும் ஒரு கணிகை இடைக்காலத்தின் தன் பணியை நிறுத்திக்கொள்ளநேரின் அதுகுறித்து அரசனுக்குக் கொடுக்கவேண்டியபொருள்.

16 கணிகைமகன்—அரசனுக்குரிய பணிசெய்வாளின் புதல்வன். அவன் விடுதலையடைய வேண்டுமாயின் பன்னிராயிரம் பணம் அரசனுக்குக் கொடுத்தல்வேண்டும் என்பது.

17 அக்கணிகையின் புதல்வன் குறிப்பிட்ட பணம் கொடுக்கவில்லையானால் அவன் செய்யவேண்டிய கடமையைக் குறிப்பிடுகிறார்.

கணிகையின் பணிப்பெண்கள் [18]போகமிழந்தபின்னர் உணவுப் பொருட்சாலையிலாதல் அடுக்களையிலாதல்.[19]தொழில் செய்யக் கடவர். [20]தடைப்படுத்தப்பட்டு அங்ஙனம் தொழில் செய்யாதவள் ஒன்றேகாற்பணம் [21]இறுத்தல்வேண்டும்.

கணிகையினுடைய [22]நுகர்ச்சி [23]தாயப்பொருள் [24]ஊதியம் செலவு [25]வரவு இவற்றை [26]எழுதிவைத்தல் வேண்டும். மிகையான செலவுக்கு இடமுய தொழிலைத் தடுத்தல்வேண்டும்.

தாயினிடத்தல்லால் [27]பிறரிடத்து அணிகலன்களைக் [28]கொடுத்துவைத்தால் நாலேகாற்பணம் தண்டமாம்.

தன்னுடைய [29]பொருளை விற்றாலும் ஈடுவைத்தாலும் ஐம்பதேகாற்பணம் தண்டமாம்.

[30]கடுஞ்சொற்கு இருபத்துநான்கு பணமும் [31]கடுந் தண்டத்திற்கு [32]இருமடங்கும் காதறுத்தற்கு ஐம்பதேகாற் பணத்தோடு [33]ஒன்றரைப் பணமும் தண்டமாம்.

---

18 போகமிழத்தல்—இன்பநுகர்ச்சிக்குரிய பருவம் நீங்குதல்.

19 தொழில்—நெற்குத்தல் சமையற் பாண்டங்களைத் தூய்மைசெய்தல் முதலியன.

20 தடைப்படுத்தப்படல்—மற்றோர் ஆடவனால் தன் இன்பநுகர்ச்சிப் பொருட்டுப் பணியினின்றும் விலக்கப்படுதல்.

21 இறுத்தல்—கணிகைக்குக் கொடுத்தல்.

22 நுகர்ச்சி—இன்பநுகரும் ஆடவர் கொடுத்தபொருள்.

23 தாயப்பொருள்—தாய்வழி வந்த பொருள்.

24 ஊதியம்—இன்பநுகர்ச்சியல்லாத வேறுவழியிற்கிடைத்த இலாபம்.

25 வரவு—எதிர்காலத்திற் கிடைக்கக்கூடிய பொருள்.

26 அதிகாரியாகிய தலைவன் எழுதிவைத்தல்வேண்டும் என்பது.

27 பிறர்—விடன் நடன் முதலியோர்.

28 பாதுகாப்பின்பொருட்டுக் கொடுத்துவைத்தால் என்பது.

29 பொருள்—ஈண்டு ஆடை பாண்டம் முதலியன..

30 கடுஞ்சொல்—பிறரைப் பழித்துரைத்தல்.

31 கடுந்தண்டம்—பிறரைக் கை கால் முதலிய உறுப்புக்களாலும் தடியினாலும் அடித்தல்.

32 இருமடங்கு—நாற்பத்தெட்டுப் பணம்.

33 ஐம்பதேகாற்பணம் அரசனுக்கும் ஒன்றரைப்பணம் தலைவனுக்கும் கணிகை கொடுத்தல்வேண்டும் என்பது.

காமஞ்சாலா இளமைப்பருவத்தாளை வலிந்துநுகர்ந்தால் உத்தமசாகசமும் மங்கைப்பருவம் எய்தாதாள் விழைவுடையளாயினும் அவளை நுகர்ந்தால் பூர்வசாகசமும் [34]தண்டமாம்.

விருப்பமில்லாத கணிகையை [35]அகப்படுத்தமுயல்பவனுக்கும் [36]விடுதலை செய்விப்பவனுக்கும் [37]புண்படுத்தி அழகினைக் கெடுப்பவனுக்கும் ஆயிரம் பணம் தண்டமாம். [38]உறுப்புக்களின் சிறப்பிற்குத்தக [39]விடுதலைக்கு விதித்த பணத்தின் இருமடங்குவரை மிகையாகவும் தண்டம் விதிக்கலாம். [40]ஆயிரம் பணமாதல் தண்டமாம்.

அரசனுக்குப் [41]பணிசெய்யும் பதவியெய்திய கணிகையைக் [42]கொல்லுபவனுக்கு விடுதலைக்குரிய பணத்தின் [43]மும்மடங்கு தண்டமாம். கணிகையின்தாய் மகள் ஒப்பனைமகளிர் இவர்களைக் [44]கொன்றால் உத்தம சாகசம் தண்டமாம்.

[45]எல்லாக் குற்றங்களுக்கும் முதன்முறையாயின் மேல்விதித்த

---

[34] இத்தண்டம் காமுகனாகிய ஆடவன் இறுக்கவேண்டியது.

[35] அகப்படுத்தல்—தன் வீட்டிற்கழைத்து வெளிச்செல்லாமல் தடைப்படுத்தல்.

[36] விடுதலை செய்வித்தல்—அரசன்பணியை விட்டுவிடத் தூண்டுதல்.

[37] புண்படுத்தல்—பல் நகம் முதலியவற்றால் புண்ணுண்டாகச்செய்தல்.

[38] புண்பட்ட உறுப்புக்களின் தகுதிக்கேற்ப என்பது; புண்பட்ட கணிகையின் தகுதிக்கேற்ப எனினுமாம்.

[39] விடுதலைக்கு விதித்தபணம் இருபத்துநாலாயிரமாதலின் இருமடங்கு நாற்பத்தெண்ணாயிரமாம்; இதற்குமேல் புண்படுத்தியதற்குத் தண்டம் இல்லையென்பது கருத்து.

[40] ஆயிரம் பணம் தண்டம் என்பது முன்பின் வைத்து நோக்க முரணாகத் தோன்றுதலால் பொருத்தமில்லை என்பது ஒரு சாராசிரியர் கொள்கை.

[41] பணி—குடைபிடித்தல் முதலியன.

[42] இதன் மூலத்தை நோக்கத் துன்புறுத்துகின்றவனுக்கு என்றும் பொருள் கொள்ளலாம்.

[43] மும்மடங்கு—எழுபத்தீராயிரம் பணம்.

[44] ஈண்டும் துன்புறுத்தல் என்று பொருள்கொள்ளலாம்.

[45] எல்லாக் குற்றங்களுக்கும்—மேற்கூறப்பட்ட குற்றங்கள் எல்லாவற்றிற்கும்.

அளவும் [46]இரண்டாமுறைக்கு [47]இருமடங்கும் மூன்றும் முறைக்கு மும்மடங்கும் நான்காமுறையாயின் [48]விரும்பியவாறும் தண்டம் விதித்தல்வேண்டும்.

அரசனின் கட்டளையுடன்வந்த ஆடவனைச்சேராத கணிகை ஆயிரம் கசையடிக்கு ஆளாதல் அல்லது ஐயாயிரம்பணம் தண்டம் இறுத்தல்வேண்டும்.

[49]பரியம் பெற்றுக்கொண்டபின்னர் வெறுப்பவளுக்குப் பரியப்பொருளின் இருமடங்கு தண்டமாம்.

[50]நோய் [51]ஆண்மைக்குற்றம் இவை காரணமாக அன்றி வேறு வகையில் இரவுக்குரிய இன்பநுகர்ச்சியைத் [52]தவிரச்செய்யின் பரியத்தின் எண்மடங்கு கொடுத்தல்வேண்டும்.

ஆடவனைக் கொன்றவளை அவனோடு [53]சிதையிலிட்டுக் கொளுத்துதல் அல்லது [54]நீரிற்றள்ளுதல் (தண்டமாம்).

கணிகையின் அணிகலன் பொருள் பரியம் இவற்றைக் கவர்பவனுக்கு [55]எண்மடங்கு தண்டமாம். கணிகை [56]அவ்வாடவனையும்

---

46 இரண்டாமுறை—முன்செய்த குற்றமே இரண்டாமுறையும் செய்யப்படின்.

47 இருமடங்கு—அவ்வக் குற்றங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டத்தின் இருமடங்கென்பது.

48 விரும்பியவாறென்பது, நான்குமடங்கு தண்டம் விதித்தல் குற்றவாளிகளின் உடைமை முழுதும் கவர்ந்துகோடல் நாட்டினின்றும் அவனை வெளிப்படுத்தல் முதலியவற்றைக் குறிக்கும்.

49 பரியம்—பரத்தையர் காமநுகர்ச்சிக்கு ஆடவர்பாற் பெறுங்கூலி.

50 நோயும் ஆண்மைக்குற்றமும் ஆடவன்பால் உள்ளன.

51 ஆண்மைக்குற்றம்—இன்பநுகர்ச்சியில் அவாவின்மை முதலியன.

52 தவிரச்செய்யின்—கதைசொல்லல் முதலிய காரணங்களால் தடைப்படுத்தின்.

53 சிதை—சுடலையிற் பிணம்சுடுதற்கு அடுக்கப்படும் விறகு.

54 நீரிற்றள்ளுதல்—கழுத்திற் பெருங்கல்லைக் கட்டி நீரில் மூழ்குவித்தல்.

55 எண்மடங்கு—கவர்ந்துகொண்டபொருளளவின் எண்மடங்கு.

56 ஆடவன் இன்னுன் என்பதையும் இன்பநுகர்ச்சிக்குப் பெறுங் கூலியின் அளவையும் அதன்மூலம் வரவுபொருளையும் தலைமையதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும் என்பது கருத்து.

பரியத்தையும் வரவையும் தெரிவித்தல்வேண்டும்.

ஈண்டுக் கூறியவாற்றால் [57]நடன் கூத்தன் பாணன் இசைக் கருவியாளன் [58]கதைசொல்பவன் ஆடலாசிரியன் [59]கயிற்றுக்கூத்தன் [60]மாயவித்தை செய்வோன் [61]சாரணர் மகளிரைக்கொண்டு பிழைப்போர் ஆகிய இவர்களுடைய மகளிரைப்பற்றியும் [62]கரவில் வியபிசரித்துப் பிழைக்கும் பெண்களைப்பற்றியும் [63]கூறியபடியாம்.

வேற்றுநாட்டிலிருந்து [64]வந்தவர்களுடைய [65]குழு [66]காட்சிக் கூலியாக ஐந்துபணம் [67]கொடுத்தல்வேண்டும்.

வரைவின் மகளிர் ஒரு திங்களுக்கு இரண்டுநாட் பரியத்தைக் [68]கொடுத்தல்வேண்டும்.

---

57 நடன்—அபிநயித்து நடிப்பவன்.

58 கதைசொல்பவன்—அரசன் முதலியோரை மகிழ்விக்க நகைச்சுவை முதலியன தோன்றக் கதைசொல்லிப் பிழைப்பவன்.

59 கயிற்றுக்கூத்தன்—கயிற்றில் ஏறியாடுவோன்; கழைக்கூத்தனுமாம்.

60 மாயவித்தை—இந்திரசாலம், நிழலைப்பற்றி அந்நிழலுக்குடையாரைத் தடைப்படுத்தல் முதலியன. இவ்வித்தையுண்மையைக் கம்பராமாயணம் கடறாவுபடலத்தில் 'காதக்கடுங்குறி கணக்கிறுதிகண்ணாள்' (செய். 77) 'சாயாவரந்தழுவிஞய்' (செய். 81) என்பவற்றாலும் மணிமேகலையில் உதயகுமரனை வாளால் எறிந்த காதையில்:—

அந்தரஞ் செல்வோர் அந்தரியிருந்த
விந்த மால்வரை மீமிசைப் போகார்
போவாருளரெனிற் பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன்வயற்றிடூஉம்
விந்தங்காக்கும் விந்தா கடிகை.

என்பதனாலும் அறிக.

61 சாரணர்—விடன் மல்லன் முதலியோர்.

62 கரவில் வியபிசரித்தல்—சோரநாயகனோடு புணர்தல்.

63 முன்னர்க்கணிகைக்குக் கூறிய விதிகளெல்லாம் ஈண்டுக் கூறிய நடன் முதலியோரின் பெண்டிர்க்கும் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

64 வந்தவர்கள்—நடன் கூத்தன் முதலியோர்.

65 குழு—இசைக்கருவி முதலியவற்றோடு கூடிய கூட்டம்.

66 காட்சிக் கூலி—தங்கள் கலைத்தொழிலை அங்குள்ளார் காண்டற்குக் கொடுக்கப்படும் கூலி.

67 அரசனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

68 ஈண்டும் அரசனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது.

இசைப்பாட்டு இசைக்கருவி கட்டுரைவகை [69]நட்டம் [70]நாட்டியம் எழுத்து ஓவியம் யாழ் குழல் முழவு [71]கண்ணியதுணர்தல் [72]மணக்கலவை மலராய்ந்து தொடுத்தல் உடம்புபிடித்தல் [73]வேசைத்தொழில் [74]கலைகள் என்னும் இவற்றின் அறிவைக் கணிகை [75]பணிப்பெண் [76]விறலி இவர்கட்குப் பயிற்றும் ஆசிரியர்க்கு அரசன் [77]வரவுபொருளிலிருந்து கூலிகொடுத்தல்வேண்டும்.

அரங்கத்தாற் பிழைக்கும் கணிகைமைந்தரை அவ்வரங்கத்தாற் பிழைக்கும் ஏனையோர்க்குத் தலைவராக்குதல்வேண்டும்.

சுலோகம்

[78]சங்கேத மொழிகளையும் வேற்று மொழிகளையும் உணர்ந்த [79]அன்னார் மகளிரை அவர்தம் உறவினரைக்கொண்டு [80]திட்டஞ் செய்து அரசன் [81]பொறியடக்கமில்லாத தன் பகைவர்பால் அப்பகைவருடைய ஒற்றரைக் [82]கோறற்பொருட்டும் அன்னாரைச் [83]சோர்வுடையராக்கற் பொருட்டும் ஏவல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தாறும் பிரகரணம்
" வரைவின்மகளிரை நடத்தும்தலைவன் " என்னும்
நாற்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

69 நட்டம்—சொற்பொருள் அவிநயம்.

70 நாட்டியம்—கருத்துப்பொருள் அவிநயம்.

71 கண்ணியதுணர்தல்—பிறர் எண்ணத்தை இங்கிதம் குறிப்புக்களால் உணர்தல்.

72 மணக்கலவை—சந்தனம் முதலிய மணப்பொருள்களைக் கலத்தல்.

73 வேசைத்தொழில்—பிறரை வயப்படுத்தல் முதலியன.

74 கலைகள்—அறுபத்துநான்கு கலைகளுள் ஈண்டுக் கூறப்படாதெஞ்சியவை.

75 பணிப்பெண்—இதற்கு மூலம் "தாஸி" என்பது; இதற்குக் கணிகையல்லாத வேசிப்பெண் என்றுங் கூறுப.

76 விறலி—அரங்கேறி நடிப்பவள்.

77 வரவுப்பொருள் — அரசனுடைய நகரங் கிராமங்களிலிருந்து கிடைத்த ஊதியம்.

78 சங்கேத மொழி—குறிப்பிற் பொருளுணர்த்துஞ் சொல்.

79 அன்னார் மகளிர்—நடன் முதலியோருடைய பெண்கள்.

80 திட்டஞ் செய்தல்—பொருள் முதலியன கொடுத்து உடம்படச் செய்தல்.

81 பொறியடக்கமுடையராயின் அவரை வெல்ல இயலாதென்பது.

82 கோறல்—வஞ்சித்து நம்பிக்கையுண்டுபண்ணி மறைவிற் கொலைப்படுத்தல்.

83 சோர்வு—தம் காரியத்தில் விழிப்பின்மை.

இருபத்தேழாம் பிரகரணம்—[1] மரக்கலத்தலைவன்

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

[2]மரக்கலத்தலைவன் [3]தானியம் முதலியவற்றிலுள்ள கடலின் அணிமையிற் செல்லும் வழிகளையும் [4]யாற்றுச் சங்கமுக வழிகளையும் ஏரி குளம் யாறு இவற்றைக் கடக்கும் வழிகளையும் அறிந்து கொள்ளல்வேண்டும்.

[5]அவற்றின் கரைமருங்குள்ள கிராமத்தினர் [6]வரையறை செய்யப்பட்ட கூலியைக் கொடுத்தல்வேண்டும்.

மீன் பிடிப்பவர்கள் [7]ஆறிலொருகூற்றை ஓடக்கூலியாகக் கொடுத்தல் வேண்டும். பட்டினங்களில் விலைப்பண்டங்களுக்கு ஏற்பட்ட [8]உல்குபொருளை வணிகர்கள் கொடுத்தல்வேண்டும்.

49-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மரக்கலத்தலைவன்—மரக்கலம் நடத்துவோரிடத்தினின்றும் அரசனுக்குரிய உல்குபொருள் கொள்ளும் அதிகாரி. கள்வடித்தல் இறைச்சிவிற்றல் வரைவின் மகளிரை நடத்தல் ஆகிய இத்தொழில்களினின்றும் கொள்ளப்படும் இறைப்பொருள்களோடொப்ப மரக்கலம் நடத்துவோர்பானின்றும் கொள்ளப்படும் இறைப்பொருளும் இறைப்பொருள் தொகுப்போன் செயலாதலின் முன்னவற்றோடு ஓரினமாக எண்ணப்பட்டு இப்பிரகரணம் ஈண்டு வைக்கப்பட்டது. இதனைப் பிரகரணவியைபு புலனுதலறிக.

[2] மரக்கலத்தலைவன்—மரக்கல சம்பந்தமான அரசியலதிகாரி.

[3] தானீயம்—கிராம வகைகளில் ஒன்று; இதன் இலக்கணத்தை இருபத்திரண்டாம் அத்தியாயத்திற் காண்க.

[4] யாற்றுச்சங்கமுகம்—யாற்றுநீர் கடலொடு கலக்குமிடம்.

[5] அவற்றின்—கடல் ஏரி முதலியவற்றின்.

[6] அக்கிராமத்து மக்கள் அடிக்கடி தோணியிற் போக்குவரவு செய்கின்றமையால் வரையறுக்கப்பட்ட கூலியை அரசனுக்குக் கொடுத்து வரவேண்டும் என்பது; இதனால் வேற்றுநாட்டு மக்கள் அடிக்கடி போக்குவரவு செய்யாமையால் அங்ஙனம் கூலிகொடுக்க வேண்டாமென்பதும் போதரும்.

[7] ஆறிலொருகூறு—கிடைக்கும் மீனின் அளவில் ஆறிலொருகூறு.

[8] உல்குபொருள்—ஈண்டுப் பண்டங்களின் விலையளவில் ஐந்தில் ஒரு கூறு அல்லது ஆறிலொரு கூறும்.

அரசனுடைய ஓடங்களிற் போக்குவரவு [9]செய்வோர் அதற்குரிய கூலியைக் கொடுத்தல்வேண்டும். சங்கு முத்து இவற்றை எடுப்போர் [10]ஓடக்கூலி கொடுத்தல்வேண்டும். [11]தம்முடைய ஓடங்களையும் பயன்படுத்தலாம். [12]இந்நிகழ்ச்சியில் [13]ஆகரத்தலைவனுக்குக் கூறியன மரக்கலத் தலைவனுக்குமாம்.

[14]நகரத்தலைவன் விலைப்பண்டங்களுக்கு நகரத்தில் வரையறுத்த விதிகளை மரக்கலத்தலைவன் [15]மேற்கொள்ளல்வேண்டும்.

திசைமயங்கியாதல் [16]காற்றால் அலைப்புண்டாதல் வந்த வங்கத்தைத் தந்தையைப்போல் [17]பாதுகாத்தல்வேண்டும். நீராற் கேடெய்திய பண்டங்களுக்கு [18]உல்குபொருளில்லாமல் அல்லது அரைக்கூறு விதித்தல் செய்யலாம்.

இங்கே [19]கூறப்பட்ட ஓடங்களை வாணிக நகரங்களுக்கு உரிய காலத்திற் செலுத்தல்வேண்டும்.

---

9 இவ்வுல்குபொருளை உல்குபொருட்டலைவன் பெற்றுக்கொள்ளல் வேண்டும்; இதனின் வேறாக மரக்கலத்தலைவன் கேட்கலாகாது என்பது.

10 ஓடக்கூலி இவ்வளவு என்று கூறப்படாமையால் மீன் பிடிப்போருக்குக் கூறியபடி ஆறில் ஒருகூறு கொள்ளல்வேண்டும் என்பது.

11 சங்கு முத்துக்களை எடுப்போர் தமக்குரிய ஓடங்களையும் பயன்படுத்தலாம் என்னுமிதனால் மீன்பிடிப்பவர் தமக்குரிய ஓடங்களைப் பயன்படுத்தலாகாதென்பது போதரும்.

12 இந்நிகழ்ச்சியில்—சங்கு முத்து எடுத்தல் மீன்பிடித்தல் முதலிய செய்திகளில்.

13 ஆகரத்தொழிற் றலைவனைப்பற்றிய செய்திகளை முப்பத்துமூன்றும் அத்தியாயத்திற் காண்க.

14 நகரத்தலைவன் செயன்முறைகளைப் பின்வரும் ஐம்பத்தேழாம் அத்தியாயத்திற் காண்க.

15 மேற்கொள்ளல்வேண்டும் என்றதனால் இவ்விதிகளை மீறலாகாதென்பது போதரும்.

16 காற்று—ஈண்டு மாறுபட்டது.

17 பாதுகாத்தல்—கேடுவராமற் காத்துச் செல்லவேண்டிய இடத்திற்கு உய்த்தல்.

18 பண்டங்களின் கேட்டிற்குத்தக்கவாறு விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

19 உல்குபொருளில்லாதனவும் அரைக்கூறு விதிக்கப்பட்டனவுமாம்,

இயங்கும் ஓடங்கள் உல்குபொருள்கோடற்குரிய இடத்தைச் சார்ந்ததும் அவற்றிற்கு [20]உல்கு கேட்டல்வேண்டும். [21]கொள்ளைக் கப்பல்களையும் பகைநாட்டை நோக்கிச் செல்லும் கப்பல்களையும் வாணிக நகரவழக்கங்களைக் [22]குலைக்கும் கப்பல்களையும் அழித்தல் வேண்டும்.

[23]கட்டளையிடுவோன் ஓடஞ்செலுத்துவோன் [24]வாட்படையுடையான் கயிறுவலிப்போன் [25]நீர் எற்றுவோன் இவர்களோடு கூடிய பெரிய மரக்கலன்களைப் பனிக்காலம் வெயிற்காலங்களிற் [26]கடப்பதற்குரிய பேரியாறுகளில் செலுத்தல்வேண்டும். கார் காலத்திற் பெருகுஞ் சிறிய யாறுகளில் சிறிய மரக்கலன்களைச் செலுத்தல்வேண்டும்.

அரசனுக்குத் [27]தீங்கிழைப்போர் யாற்றைக்கடப்பர் என்னும் அச்சம் உண்மையால் மரக்கலன்களைத் துறைகளில் கட்டுவித்தல் வேண்டும்.

[28]உரிமையல்லாத காலத்தினும் துறையல்லாத இடத்தினும் யாற்றைக் கடப்போனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். உரிய காலத்தினும் துறைவழியினும் கட்டளைபெறாது கடப்பார்க்கு இருபத்தாறேழுக்காற்பணம் [29]கடத்தற் றண்டமாம்.

வலைஞர், விறகு புல் சுமப்போர், மலர்வனம் பழத்தோட்டம்

---

[20] உரிய அளவின் மிகுதியாகக் கோடலாகாதென்பது கருத்து.

[21] கொள்ளைக்கப்பல்—கொள்ளைக்காரர்களையுடைய கப்பல்.

[22] குலைத்தல்—விதியை மீறுதல்.

[23] கட்டளையிடுவோன்—ஓடம் செல்லுமிடம் முதலியவற்றைக் குறிப்பிட்டுச் செலுத்துவிக்கும் அதிகாரி.

[24] ஓடக்கோல் முதலியவற்றிற்கு வாட்படைவேண்டும் ஆதலால் அஃதுடையானும் ஓடத்திலிருத்தல்வேண்டும் என்பது.

[25] நீர் எற்றுவோன்—ஓடத்தில் நிறைந்த நீரை வெளிப்படுத்துவோன்.

[26] கடப்பதற்குரிய என்றதனால் நீர்வருவாயில்லாத காலத்திலும் நீர்ப் பெருக்குடையன என்பது போதரும்.

[27] தீங்கிழைப்போர்—மறைந்து வஞ்சித்துக் கேடுசெய்வோர்.

[28] உரியதல்லாத காலம்—நள்ளிரவு முதலியன.

[29] கடத்தல்—விதியை மீறிக்கடத்தல்.

தோப்பு என்னும் இவற்றின் காவலர், ஆயர், [30]ஐயுறப்பட்டோரையும் [31]தூதுவரையும் பின்தொடர்வோர், படைக்குரிய[32]உபகரணங் கொண்டுசெல்வோர், ஒற்றர் ஆகிய இவர்களுக்குத் தண்டமில்லை.

தம்முடைய [33]கருவிகளாற் கடப்போர்க்கும் [34]வித்து [35]சோறு [36]உபகரணப்பொருள் என்னும் இவற்றை நீர்சூழ்ந்த கிராமத்து மக்களுக்குக் கொண்டு செல்வோர்க்கும் தண்டம் இல்லையாம்.

அந்தணர் துறவோர் சிறுவர் முதியோர் பிணியாளர் [37]கட்டளைகொண்டுசெல்வோர் கருவுற்ற மகளிர் ஆகிய இவர்கள் மரக்கலத் தலைவனின் [38]இலச்சினைமுறியோடு கடந்துசெல்லலாம். உட்புகுதற்குக் கட்டளைபெற்றோரும் [39]வணிகக்குழுவுடன் வரும் அயல் நாட்டினரும் கடந்துவரற்பாலார்.

[40]பிறர் மனைவியையாதல் கன்னியையாதல் பொருளையாதல் கவர்ந்துசெல்வோனையும் ஐயுறப்பட்டோனையும் நடுக்கமுடையோனையும் [41]மிகுதியான பண்டங்களைச் சுமந்து செல்வோனையும் தலையிலுள்ள மிகுதியான பண்டச்சுமையினால் [42]மறைத்துக்கொள்

---

30 ஐயுறப்பட்டோர்—கள்வர் முதலியோராகச் சந்தேகிக்கப்பட்டோர்.

31 தூதுவரைப் பின்தொடர்வோர் — தூதுசெல்வோரிடத்து எஞ்சிய சில செய்திகளைக் கூறுதற்பொருட்டுப் பின்தொடர்ந்து செல்வோர்.

32 உபகரணம்—படைக்கலம் முதலியன.

33 கருவிகளாற் கடத்தல்—கைகளாலும் தெப்பத்தாலும் தோற்பையாலும் இன்னோரன்ன பிற கருவிகளாலும் யாற்றைக் கடத்தல்.

34 வித்து — நிலங்களில் விதைத்தற்பொருட்டுக் கொண்டுபோகப் படுவது.

35 சோறு—தொழில்செய்வோர்க் குரியது.

36 உபகரணப்பொருள்—தொழிலாளர் குடும்பத்திற்குரியன.

37 கட்டளை—அரசன் ஆணை.

38 கூலிகொடாமற் செல்லலாம் என்பது கருத்து.

39 உட்புகுதற்கு அநுமதிபெற்றுவரும் வாணிகக் கூட்டத்துடன் அநுமதிபெறாமல் சார்ந்துவரும் வேற்றுநாட்டினரும் உட்புகுதலாம் என்பது கருத்து.

40 பிறர் என்னும் இச்சொல்லைப் பின்வரும் கன்னி பொருள் இவற்றிற்கும் ஏற்றுக.

41 மிகுதி—ஓராள் சுமக்கும் அளவின் மேம்பட்டது.

42 மறைத்துக்கொள்ளுதல்—ஈண்டு முகத்தை எனக்கொள்க.

வோனையும், அணிமையிற்கொண்ட [43]துறவுக்குறியுடையோனை யும் [44]அக்குறியில்லாத துறவியையும் [45]புலப்படாத பிணியுடை யோனையும் [46]அச்சமெய்ப்பாடுடையோனையும் [47]விலையுயர்ந்த பொருள் [48]ஓலை [49]படை [50]நெருப்புண்டாக்கும் பொருள் என்னும் இவற்றைக் கொணர்வோரையும் நஞ்சு வைத்திருப்போனையும் [51]தொலைவிலிருந்து வந்தோனையும் [52]இலச்சினைமுறியில்லாது வந்தோனையும் [53]பிடித்துவைத்தல் வேண்டும்.

[54]சிறு விலங்கிற்கும் [55]சுமையுடைய மனிதனுக்கும் ஒரு மாடக மும் தலைச்சுமை தோட்சுமை பசு குதிரை இவற்றிற்கு இரண்டு மாடகமும் ஒட்டகத்திற்கும் எருமைக்கும் நான்கு மாடகமும் [56]சிறிய ஊர்திகளுக்கு ஐந்து மாடகமும் [57]எருதூர்திகளுக்கு ஆறு மாடகமும் [58]வண்டிக்கு ஏழுமாடகமும் [59]ஒருபார எடைச்சுமைக் குக் காற்பணமும் (ஓடக்கூலியாகக்) கொடுத்தல்வேண்டும்.

---

43 துறவுக்குறி—துறவறத்திற்குரிய வேடம்.

44 அணிமையில் துறவறத்திற்குரிய வேடத்தைத் துறந்தோனை என் பது கருத்து.

45 பிணியில்லாத நிலையில் அஃதுடையோன் எனக் காட்டிக்கொள்வோ னையும் என்பது கருத்து.

46 அச்சமெய்ப்பாடு—முகம் வெளுத்திருத்தல் முதலிய பயக்குறி.

47 விலையுயர்ந்தபொருள்—மணி பொன் முதலியன.

48 ஓலை—கட்டளைச்செய்தி முதலியன எழுதப்பட்ட திருமுகம்.

49 படை—ஆயுதம்.

50 நெருப்புண்டாக்கும் பொருள்—இதனைப்பற்றி ஔபநிடதம் என் னும் இந்நூலின் பதினான்காம் அதிகரணத்திற் காண்க.

51 நெடுந்தூரம் நடந்ததனால் இளைப்புற்றோன் என்பது.

52 இலச்சினைமுறி—அந்நாட்டு எல்லைகாவலனால் கொடுக்கப்படுவது.

53 பிடித்துவைத்தல்—சிறைக்காப்பில் வைத்தல்; இச்செயலை மரக்கலத் தலைவன் செய்யவேண்டும் என்பது.

54 சிறுவிலங்கு—ஆடு முதலியன.

55 சுமை—ஈண்டுக் கைச்சுமையாகும்.

56 சிறிய ஊர்தி—சிறுவண்டி.

57 எருதூர்தி—காளைமாடு பூட்டிய வண்டி.

58 வண்டி—ஈண்டுப் பெரியவண்டியைக் குறிக்கும்.

59 ஒரு பாரம்—இருபது துலாம்.

[60]இதனால் [61]பிறபண்டச் சுமைகளுக்கும் [62]கூறியவாறும். பேரியாறுகளுக்கு இருமடங்கு ஓடக்கூலியாம்.

அருகிலிருக்கும் கிராமத்தில் வாழ்வோர் ஓரளவு உணவையும் கூலியையும் [63]கொடுத்தல்வேண்டும்.

நாட்டின் எல்லைகளைக் [64]கடப்பிப்போர், [65]உல்குபொருள் ஓடக்கூலி எல்லைகாவலனுக்கு இறுக்கக்கடவபொருள் இவற்றைப் [66]பெற்றுக்கொள்ளல் வேண்டும். இலச்சினை பெறாது கொண்டுசெல்பவனது பண்டத்தையும்[67] உரிமையில்லாக்காலத்துத் துறையல்லாத வழியில் [68]மிக்க சுமையுடன் செல்லுபவனது பண்டத்தையும் கவர்ந்துகொள்ளல்வேண்டும்.

[69]பணியாளரின் குறைவினாலாதல் [70]கருவிகளின் குறைவினாலாதல் செப்பனிடப்படாமையினாலாதல் மரக்கலம் கேடுற்றுழி மரக்கலத்தலைவன் [71]அழிந்தவற்றிற்கும் [72]கேடுற்றவற்றிற்கும் ஈடு செய்தல்வேண்டும்.

---

60 இதனால்—ஒரு பார எடைப்பண்டத்திற்குக் கூறப்பட்ட இவ்வளவினால்.

61 பிறபண்டங்கள்—எருமை ஒட்டகம் முதலியவற்றில் ஏற்றப்பட்டு வரும் பண்டங்கள்.

62 பாரம் ஒன்றிற்குக் காற்பண விகிதமாகக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

63 அணிமையிலுள்ள கிராமத்தார் அரசனுக்குக் கொடுக்கவேண்டிய கூலியின் வேறாகச் சிறிதளவு உணவும் கூலியும் ஓடக்காரனுக்குக் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

64 கடப்பிப்போர்—ஓடக்காரர்.

65 உல்குபொருள்—பண்டங்களுக்குரிய இறைப்பொருள்.

66 வணிகர்களிடத்தினின்றும் பெற்றுக்கொள்ளல்வேண்டும் என்பது.

67 ஈண்டு அகாலத்திற் செல்பவன் துறையல்லாத வழியிற் செல்பவன் மிக்க சுமையுடன் செல்பவன் என்று தனித்தனியாகவும் கொள்ளலாம் என்பது ஒரு சாராசிரியர் கொள்கை.

68 மிக்கசுமை—இரண்டாட்பாரம்.

69 பணியாளர்—ஓடஞ் செலுத்துவோர் முதலியோர்.

70 கருவிகள்—ஓடத்திற்குரிய உபகரணங்கள்.

71 அழிந்தவை—அறவே கேடுற்று மூழ்கிப்போன பொருள்.

72 கேடுற்றவை—நீரால் நனைந்து கேடெய்திய பொருள்.

சுலோகம்

ஆடித்திங்கட் பௌர்ணமியினின்றும் ஏழாம் நாளுக்கும் கார்த்திகைத்திங்கட் பௌர்ணமியினின்றும் ஏழாம் நாளுக்கும் [73] இடைப்பட்ட காலம் ஓடக்கூலி பெறத்தக்கதாம். [74] தொழில்செய்த நாட்களை அறிவித்தல்வேண்டும். நாடோறும் நாள்வருவாயைக் கொடுத்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தேழாம் பிரகரணம்
"மரக்கலத்தலைவன்" என்னும் நாற்பத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[73] இடைப்பட்ட காலம்—இடைப்பட்ட நான்கு திங்களும்; இக்காலத்தில் மழைபெய்து நீர்ப்பெருக்குண்டாமாதலின் ஆற்றுத்துறைகளுக்கு இவ்விதி எனக்கொள்க.

[74] ஓடக்காரர், தாம் தொழில்செய்த நாட்களை மரக்கலத்தலைவனுக்கு அறிவித்து ஓடக்கூலியையும் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தெட்டாம் பிரகரணம்—[1]ஆனினத் தலைவன்

ஐம்பதாம் அத்தியாயம்

ஆனினத்தலைவன் [2]கூலிபெறுதல் இறைக்குக்கொள்ளுதல் சிதைவிற்குவிடுதல் பகுதிக்குவிடுதல் நிரையளவுகுறித்தல் இழப்பு கேடு பால்நெய்யாலுண்டாம் பயன் என்னுமிவற்றை அறிதல் வேண்டும்.

பசுக்காவலர் எருமைக்காவலர் கறவையாளர் கடைவோர் [3]வேடர் என்னும் இவர்கள் [4]பொன்னைக் கூலியாகப்பெற்று நூறு நூறு ஆன்களைக் காக்கக்கடவர்.

[5]பால் நெய்களைக் கூலியாகப்பெறின் கன்றுகளைக் கொன்று விடுவர். இது கூலிபெறுதல் எனப்படும்.

கிழப்பசு கறவைப்பசு சூற்பசு [6]கிடேரி பால்மறந்த கன்று இவற்றை [7]ஒத்த அளவினவாக நூறுசேர்த்து ஒருவன் காத்தல்

50-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஆனினம் என்பது உபலக்கணத்தால் எருமை முதலியவற்றையும் அவற்றைக்கொண்டு வாழ்க்கை நடத்துவோரையும் உணர்த்தும்; உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தை மூன்றனுள் உழவும் வாணிகமும் முன்னர்க் கூறப்பட்டன; எஞ்சிய பசுக்காவல் இதன்கட் கூறப்படுகின்றது; வாணிகத்திற்குரிய மரக்கலத்தின் பின் பசுக்காவலைப்பற்றிய இது வைக்கப் பட்டதனுல் பிரகரணவியைபு புலனுதலறிக.

[2] கூலிபெறுதல் முதலிய எண்வகைச் செயல்களையும் அவற்றைப்பற்றிய பின்வரும் விளக்கங்களால் அறிந்துகொள்ளலாம்.

[3] வேடர்—பாம்பு புலி முதலிய கொடிய உயிர்களால் நேரும் அச்சத்தைப் பரிகரிப்போர்.

[4] பொன்—உபலக்கணத்தால் கூலம் முதலியவற்றையும் உணர்த்தும்.

[5] பெறுங்கூலி, பால் நெய் முதலியனவாயின் கன்றுகளுக்கு ஊட்டாமற் கொன்றுவிடுவர் என்பது பொன்னைக் கூலியாகப் பெறுதற்கு ஏதுவாம்.

[6] கிடேரி—ஈனுத இளம் பசு.

[7] ஒத்த அளவு—சமமான அளவு; இவ்வைந்து வகையினும் தனித்தனி இருபது இருபதாகக் கொள்ளல்வேண்டும் என்பது.

வேண்டும். எட்டு [8]வாரகம் நெய் [9]வாற்பணம் [10]இலச்சினையிடப் பட்ட தோல் இவற்றை ஆண்டுஇறையாகக் கொடுத்தல்வேண்டும். இஃது இறைக்குக்கொள்ளுதல் எனப்படும்.

பிணியுடையன [11]உறுப்பறை [12]பிறரால் கறக்கப்படாதன [13]வலிந்து கறக்கப்படுவன [14]கன்றிழப்பன இவற்றை ஒத்த அளவி னவாக நூறு சேர்த்துக் காப்பாற்றுகிறவர்கள் அவ்வினத்திற்குரிய [15]ஓரளவு பொருள்கொடுத்தல்வேண்டும். இது சிதைவிற்குவிடு தல் எனப்படும்.

பகை [16]காடு இவற்றிற்கு [17]அஞ்சிச் [18]சேர்ப்பிக்கப்பட்ட ஆன் களைக் [19]காத்தல்முறைக்குப் [20]பத்தில் ஒரு கூறு [21]கொடுத்தல் வேண்டும். இது பகுதிக்குவிடுதல் எனப்படும்.

பாலுண்கன்று பால்மறந்த கன்று [22]பயிற்றத்தக்கன [23]சுமப்

---

[8] வாரகம் என்பது முகத்தலளவையிற் பத்தரை உழக்குக்கொண்ட தாகும்; ஆதலின் எட்டுவாரகம் என்பது நான்குமுக்காம் என்க.

[9] வாற்பணம்—பசு கன்று என்ற வேறுபாடின்றி வால்களை எண்ணிக் கொண்டு ஒரு வாலுக்கு ஒருபணம் விகிதம் கணக்கிட்டுக்கொள்வது.

[10] இலச்சினை—அரசியல் முத்திரை.

[11] உறுப்பறை—உறுப்புக் குறைந்தன.

[12] வழக்கமாகப் பால்கறக்கும் ஒருவனேயன்றிப் பிறர் கறப்பதற்கிடந் தராதவை.

[13] காலைக்கட்டுதல் முதலியவற்றால் துன்புறுத்திக் கறக்கத்தக்கன.

[14] கன்றிழப்பன—அகாலத்திற் கன்றீனுவன; சாக்கன்றீனுவனவுமாம்.

[15] ஓரளவு பொருள்—ஈண்டுக் கூறப்பட்ட பிணியுடையவை முதலிய வற்றின் விலையளவின் மூன்றில் ஒரு கூறு அல்லது அவ்வளவிற்கு ஒத்த நெய் முதலியன.

[16] காடு—காட்டில் வாழும் வேடர்.

[17] அச்சம்—பகைவரால் நேரும் கலகத்தாலும் காட்டில்வாழும் வேடர் கள் கவர்ந்துகொள்வர் என்பதனாலும் நேர்வது.

[18] சேர்ப்பித்தல், அரசனுடைய ஆனிரையோடெனக்கொள்க.

[19] காத்தல்முறை—மேய்ப்போனுக்குக் கொடுக்கும் கூலிநியமம்.

[20] பத்திலொருகூறு—பசுவின் பெறுமதியில் என்க.

[21] கொடுத்தல்—பசுக்களையுடையவன் அரசனுக்குக்கொடுத்தல்.

[22] பயிற்றத்தக்கன—தொழிலிற் பயிற்றப்படும் காளைகள்.

[23] சுமப்பன—பொதிவண்டி முதலியவற்றைச் சுமந்திழுக்கும் காளைகள்.

பன பொலிவன முதிர்ந்தன [24]என்பன காளைகளாம். [25]நுகம் சுமை சகடம் இவற்றைச் சுமப்பன பொலிவன [26]இறைச்சிக்குரியன முதுகினாலும் எருத்தினாலும் [27]சுமப்பன என்னும் [28]இவை எருமைக் கடாக்களாம். பாலுண்கன்று பால்மறந்த கன்று கிடேரி சூல்கொண்டன கறப்பன முதிர்ந்தன மலடு என்னும் [29]இவை ஆன்களும் எருமைகளுமாம். [30]இவற்றின் ஆண் பெண் கன்றுகள் ஒருதிங்கள் இரண்டுதிங்கள் [31]அகவையுள்ளன [32]நாகிளங்கன்று எனப்படும்.

[33]ஒருதிங்கள் இரண்டுதிங்கள் நிரம்பப்பெற்றவைகளுக்குக் குறியிடுதல்வேண்டும். ஒருதிங்கள் இரண்டுதிங்களாகத்[34] தங்கியவற்றிற்கும் குறியிடுதல்வேண்டும். [35]குறி [36]அடையாளம் நிறம் கொம்பு இவற்றின் இலக்கணங்களையும் நாகிளங்கன்றுகளையும் கணக்கு ஏட்டில் வரைந்துகோடல்வேண்டும். இது நிரையளவு குறித்தல் எனப்படும்.

கள்ளர்கோட்பட்டது அயல்நிரைபுக்கது [37]காணுதொழிந்தது

---

24 என்பன—என்னுமிவ்வறுவகைகளும்.

25 நுகம்—கலப்பை நுகம் முதலியன.

26 வேறுதொழில் செய்தற்குப் பயன்படாமல் இறைச்சியளவிற்குப் பயன்படும் கடாக்கள் என்பது.

27 பொதி சுமப்பன என்பது.

28 இவை—இந்நான்கு வகைகளும்.

29 இவை—இவ்வேழும் ஆன் எருமைகளின் வகைகளாம்.

30 இவற்றின்—இவ்வான் எருமைகளின்.

31 அகவை—வயது.

32 மூலத்தில் "உபஜா" என்றது நாகிளங்கன்று என்று மொழிபெயர்க்கப்பட்டது.

33 அந்நாகிளங்கன்றுகளுள் ஒருதிங்கள் நிரம்பியது இரண்டுதிங்கள் நிரம்பியது என்பதை அறிந்துகொள்வதற்குச் சூட்டுக்கோலால் இலச்சினையிடல்வேண்டும் என்பது.

34 இன்னாருடையன என்று அறியப்பட்டனவும் அறியப்படாதனவுமாகிய ஆன் முதலியன அரசனது நிரையிற் புகுந்து ஒருதிங்கள் இரண்டு திங்கள் தங்கியிருப்பின் அவற்றிற்கும் குறியிடல்வேண்டும் என்பது கருத்து.

35 குறி—சூட்டுக்கோலாலிடப்படுவது.

36 அடையாளம்—நெற்றிச்சுட்டி வால்வெள்ளை முதலியவாக இயற்கையினமைந்தன.

37 காணுதொழிந்தது — காட்டில் தன் நிரையினின்றும் தவறிப் போனது.

என்னும் [38]இவை இழப்பு எனப்படும்.

[39]சேறு சமனில்நிலம் பிணி மூப்பு நீர் உணவு இவற்றாலும் [40]மரம் மலைச்சாரல் கட்டை கல் இவற்றாலும் [41]தெய்வம் கொடிய உயிர் பாம்பு முதலை காட்டுத்தீ இவற்றாலும் இறத்தல் கேடு எனப் படும். [42]சோர்வினால் அழிந்தவற்றிற்கு ஈடுசெய்தல்வேண்டும்.

இவ்வாறு [43]உருப்படிகளின் அளவைக் கணக்கிட்டுக்கொள் ளல்வேண்டும்.

தானே கொன்றவன் கொல்வித்தவன் கவர்ந்தவன் கவர்வித் தவன் ஆகிய [44]இவர் கொலைக்குரியராவர்.

[45]பிறருடைய ஆன்களை அரசிலச்சினையால் உருவமாறுபாடு செய்பவன் பூர்வசாகச தண்டம் இறுத்தல்வேண்டும்.

கள்வராற் கவரப்பட்ட தன்னாட்டு மக்களுடைய ஆன்களை மீட்டுக்கொணர்ந்து [46]கொடுத்து ஆனொன்றுக்கு ஒருபண விழுக் காடு வாங்குதல்வேண்டும். [47]பிறநாட்டு ஆன்களை விடுவிப்பின்

---

38 இவை—இம்மூன்றும்.

39 சேற்றில் அமிழ்ந்தும் பள்ளமான நிலத்தில் வீழ்ந்தும் நோய்ப்பட் டும் மூப்புற்றும் விரைவாக ஓடுகின்ற நீரால் இழுப்புண்டும் உணவின்றியும் இறத்தல் என்பது கருத்து.

40 மரத்தின் வீழ்ச்சியாலும் தாழ்வரைகளினின்றும் நழுவுதலாலும் மரத்தின் பெருங்கிளை வீழ்ச்சியாலும் பெரிய கல்லின் வீழ்ச்சியாலும் இறத் தல் என்பது கருத்து.

41 இடி முதலியவற்றின் வீழ்ச்சியாலும் கொடிய உயிர்களாற் கவரப் பட்டும் பாம்பு கடித்தும் முதலையாற் கவரப்பட்டும் காட்டுத் தீயினால் எரிக் கப்பட்டும் இறத்தல் என்பது கருத்து.

42 பாதுகாப்போருடைய விழிப்பின்மையால் இக்கேடு நேரின் ஈடு செய்தல்வேண்டும் என்பது கருத்து.

43 உருப்படிகள்—ஆன் முதலியன.

44 இவர் என்பது ஈண்டு ஆயரைக் குறிக்கும்.

45 பிறர்—அரசன் அல்லாதார்; அரசனுக்கு உரிமையில்லாத பிற ருடைய ஆன்களை அரசிலச்சினையிட்டு உருவம் மாற்றுதல் அவ் ஆனுடையா னுக்குத் தீங்குசெய்யக் கருதியதாகலின் தண்டம் விதிக்கப்பட்டதென்பது.

46 கொடுத்தல்—ஆனுக்குரியவனிடம் சேர்ப்பித்தல்.

47 வேற்றுநாட்டிலிருந்து கள்வராற் கவரப்பட்டுத் தன்னாட்டிற்கு வந்த ஆன்களை மீட்டுக்கொடுக்கநேரின் ஆனுக்கு உரியவனிடமிருந்து அவ் ஆனின் விலையளவில் பாதி வாங்கல்வேண்டும் என்பது கருத்து.

பாதி [48]வாங்குதல்வேண்டும்.

கன்று முதிர்ந்தது பிணியுடையது என்னும் இவற்றை ஆயர்கள் [49]ஓம்புதல்வேண்டும்.

வேடர்களாலும் நாயுடையவர்களாலும் கள்வரச்சம் கொடியவுயிரச்சம் பகைவரச்சம் போக்கப்பட்டதும் [50]பருவங்களுக்கேற்பப் பிரிக்கப்பட்டதும் ஆகிய காட்டில் மேய்த்தல்வேண்டும்.

பாம்புகளையும் கொடிய விலங்கு முதலியவற்றையும் [51]அச்சுறுத்தற்பொருட்டும் [52]ஆனினத் தொடர்ச்சியை அறிந்துகோடற்கும் [53]மருளுமியல்பினவாகிய ஆன்களுக்கு ஒலிக்கும் மணிகளைக் கட்டுதல்வேண்டும்.

சமனாகவும் அகன்றதாகவும் உள்ள துறையுடையதும் சேறும் முதலையும் இல்லாததும் ஆகிய நீர்நிலையில் [54]இறக்கிப் [55]பாதுகாத்தல்வேண்டும்.

கள்வர் கொடுவிலங்கு பாம்பு முதலை இவற்றாற் பிடிபட்டவற்றையும் பிணி மூப்பால் இறந்தவற்றையும் [56]அறிவித்தல்வேண்டும். [57]இன்றேல் அவற்றின் விலைப்பொருளைக் கொடுத்தல்வேண்டும்.

---

48 ஈரிடத்தும் வாங்குதல் ஆனினத்தலைவன் செயலாம்.

49 ஓம்புதல்—கன்றுக்குப் பால் குறையாதூட்டியும் முதிர்ந்த ஆவிற்குத் தளர்வுநீங்க உணவருத்தியும் பிணியுடையதற்கு மருந்துகொடுத்தும் பாதுகாத்தல்.

50 பருவங்கள்—கார் கூதிர் முதலியன ; பிரிக்கப்படுதல் இன்ன இன்ன பருவத்தில் இன்ன இன்ன காடு புல்லாலும் நீராலும் ஆனினங்களுக்கு நலஞ்செய்யும் என வகுக்கப்படுதல்.

51 அச்சுறுத்தல்—மணியோசையால் அச்சம் நிகழச்செய்தல்.

52 ஆனினந் தொடர்ந்து செல்லுதலை மணியோசையால் ஆயர் அநுமானித்து அறிந்துகொள்ளற்கும் என்பது கருத்து.

53 மருளும் இயல்பினவாகிய ஆன்களின் கழுத்தில் மிக்கொலித்தற்கும் மருட்சிநீங்கப் பயில்தற்கும் மணிகளைக் கட்டுதல்வேண்டும் என்பது.

54 இறக்குதல் நீராட்டுதற்கும் நீரூட்டுதற்குமாம்.

55 பாதுகாத்தல்—நீர்நிலையால் உண்டாகும் இடையூறு நேராமல் விழிப்புடன் காத்தல்.

56 தலைவனுக்கு அறிவித்தல்வேண்டும் என்பது.

57 இன்றேல்—அங்ஙனம் அறிவியாவிடின்.

[58]காரணத்தாலிறந்த ஆன் எருமை இவற்றின் [59]அடையாளமுடைய தோலையும் வெள்ளாடு செம்மறியாடு இவற்றின் [60]இலச்சினையுடைய செவிகளையும் குதிரை கழுதை ஒட்டகம் இவற்றின் வாலையும் இலச்சினையிடப்பட்ட தோலையும் [61]கொணர்தல்வேண்டும். வால் தோல் மூத்திரப்பை பித்தப்பை நரம்பு பல் குளம்பு கொம்பு எலும்பு என்னும் இவற்றையும் [62]கொணர்தல்வேண்டும்.

[63]சமைக்கப்படாத பச்சிறைச்சியாகவாதல் உலர்ந்த இறைச்சியாகவாதல் விற்றல்வேண்டும்.

மோரை [64]நாய் பன்றிகளுக்குக் கொடுக்கலாம்.

பாலாடையைப் படைவீரரின் உணவிற்கு அளித்தல் வேண்டும்.

திரிந்தபால், [65]ஈரப்பிண்ணுக்கு [66]நனைத்தற்குப் பயன்படும்.

ஆன் விற்பவன் ஓரானுக்குக் காற்பணம் [67]கொடுத்தல் வேண்டும்.

கார் கூதிர் முன்பனி இக்காலங்களில் [68]இரண்டுவேளையும் பின்பனி இளவேனில் முதுவேனில் இப்பருவங்களில் [69]ஒருவேளையும் கறத்தல்வேண்டும்.

---

[58] காரணம்—பிணி மூப்பு முதலியன.

[59] அடையாளம்—உயிருள்ளபொழுது சூடு முதலியவற்றாற் செய்யப்பட்ட இலச்சினை.

[60] வெள்ளாடு செம்மறியாடுகளுக்குச் செவியில் சூட்டிலச்சினையிடுதல் வழக்கம் என்பது புலப்படும்.

[61] தலைவனிடம் நம்பிக்கை உண்டாதற்பொருட்டுக் கொண்டுவந்து காட்டல்வேண்டும் என்பது கருத்து.

[62] குப்பியப்பொருளாகத் தொகுத்துவைத்தற்பொருட்டுத் தலைவனிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்பது கருத்து.

[63] சமைக்கப்படாத என்னும் அடைமொழியை உலர்ந்த இறைச்சிக்கும் கொள்க.

[64] நாய் பன்றிகளுக்கு மோர்உணவு நலமளிக்கும் என்பது.

[65] ஈரப்பிண்ணுக்கு—சிறிது நெய்ப்புடையது.

[66] பசு எருமை முதலியவற்றின் உணவின்பொருட்டு நனைத்தல் என்பது.

[67] தலைவனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது.

[68] இரண்டுவேளை—காலை மாலை.

[69] ஒருவேளை—இரவு.

[70]இரண்டாம்வேளை கறப்பவனுக்குப் பெருவிரலைத் துணித்தல் தண்டமாம். கறக்குங்காலத்தைத் தாழ்த்துவோனுக்கு [71]அப்பயனழிவு தண்டமாம்.

இதனால் மூக்குக் குத்தல் அடக்கிப் பழக்குதல் [72]நுகம்பூட்டல் கடாவடித்தல் இவற்றிற்குரிய [73]காலங்களும் கூறியவாறும்.

ஒரு தூணி ஆன்பாலில் ஒருபடி நெய்யிருக்கும். எருமைக்கு [74]ஐந்தில் ஒருகூறு மிகும். [75]ஆட்டிற்கு [76]இருகூறு மிகும். [77]எல்லாவற்றிற்கும் கடைந்து காண்டலே துணிவாகும். என்னை? நிலம் நீர் புல் இவற்றின் சிறப்பால் பால் நெய் இவற்றின் மிகுதி உண்டாமன்றோ. ஒரு பொலிஎருதோடு மற்றோர் எருதைப் போர் புணர்ப்போர்க்குப் பூர்வசாகசம் தண்டமாம். [78]கொல்விப்பவர்க்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[79]நிறத்தைப்பற்றிப் பத்துப்பத்தாகக் கொண்டு ஓம்புதல் வேண்டும்.

---

70 ஒருவேளை கறக்கவேண்டிய காலத்தில் இரண்டாம் வேளையும் கறப்பவனுக்கென்பது. "இந்த நியமம் சிற்சிலவிடங்களில் மாறுபடவும் கூடும். சிலவிடத்தில் முதுவேனிற் காலத்தில் மூன்று முறை கறத்தலும் காணப்படுகின்றது" என்று ஒருசில ஆசிரியர் கூறுவர்.

71 அப்பயனழிவு—அந்நாளுக்குப் பெறுங் கூலியின் அழிவு.

72 நுகம் பூட்டல் — அடங்காததொன்றை அடங்கிய ஒன்றனோடு பிணைத்து நுகத்திற்பூட்டல்.

73 ஈண்டும் அக்காலங்கடப்பின் அப்பயனழிவு தண்டமாம் என்பது கருத்து.

74 ஐந்தில் ஒருகூறு—ஒரு தூணியளவு பாலில் நெய் ஒருபடியும் அதன் ஐந்தில் ஒருகூறு மிகுதியும் உண்டாம் என்பது கருத்து.

75 ஆடு—ஈண்டு வெள்ளாடு செம்மறியாடு இரண்டையும் குறிக்கும்.

76 ஒரு தூணி பாலில் நெய் ஒருபடியும் அதன் ஐந்தில் இரண்டுகூறு மிகுதியும் உண்டாமென்பது.

77 எல்லாவற்றிற்கும் என்னுமிதனால் மேலே கூறிய நெய்யளவு பெரும்பாலும் என்பது புலப்படும்; சிறுபான்மை மிகுதி குறைவு உண்டாமென்பதும் கொள்ளத்தக்கது.

78 கொல்வித்தல்—ஒரெருதைக் கொன்டெனக் கொள்ளுதல்வேண்டும்.

79 ஆனினங்களை நிற ஒற்றுமைபற்றி வெள்ளைப்பத்து சிவப்புப்பத்து எனப் பத்துப்பத்தாக வகுத்துக்கொண்டு காத்தல்வேண்டும் என்பது.

[80]மேய்தல்நிலத்திற்கும் நிரையின் [81]தகுதிக்கும் [82]காவற்றிறமைக்குமேற்ப நிரைகள் தங்கும் [83]திசைவரையறை செய்து கொள்ளல் வேண்டும்.

ஆடு முதலியவற்றின் உரோமத்தை [84]ஆறுதிங்கட்கு ஒருமுறை எடுத்துச் சேர்த்தல்வேண்டும்.

[85]இதனால் குதிரை கழுதை ஒட்டகம் பன்றி இவைகளின் கூட்டங்களுக்கும் கூறியவாறும்.

[86]சிறந்த குதிரையைப்போன்ற நடையுடையனவும் மூக்குக் குத்தப்பட்டனவுமாகிய காளைகளுக்குப் புல் [87]அரைப்பாரம் வைக்கோல் இருமடங்கு ஈரப்பிண்ணாக்கு ஒரு துலாம் தவிடு [88]பத்து மரக்கால் உண்ணும் உப்பு ஐந்து பலம் [89]மூக்கிற்கெண்ணெ ஒருமுழக்கு பருகுவதற்கு [90]ஒரு படி. இறைச்சி ஒரு துலாம் தயிர் ஒரு மரக்கால் யவம் அல்லது புழுக்கிய உழுந்து ஒருதூணி. பால் ஒருதூணி [91]அல்லது கள் அரைமரக்கால் [92]நேயப்பொருள் ஒரு படி அக்காரம் பத்துப்பலம் இஞ்சி ஒருபலம் [93]இவை சிரணிக்கும்

---

80 மேய்தனிலத்திற்கேற்ப என்பது அணிமையிடத்தைக் குறிக்கும்.

81 தகுதி—ஆனினங்களின் ஆற்றலைப் பற்றியதாகும்.

82 காவற்றிறமைக்கேற்ப—கள்வர் முதலியோரால் இடையூறு நேரா வாறு காத்தற்கேற்ப.

83 திசை வரையறை—ஒரு கிராமத்தின் திசைகளில் ஆனினங்கள் தங்குதற்கு இன்னதிசை தகுதிவாய்ந்ததென்னும் வரையறை.

84 ஆறுதிங்கட் கொருமுறை எடுக்கவேண்டும் என்பது, அவ்வுரோமங்கள் தொழிற்குப் பயன்படுதல் கருதி.

85 இதனால் — ஆன்முதலியவற்றிற்குக் கூறியனகொண்டு; கூறியன—கூலிபெறுதல் முதலிய எண்வகைச் செயல்கள்.

86 சிறந்த குதிரை—வீரிய பலமுடையது.

87 அரைப்பாரம்—பத்துத்துலாம்.

88 பத்து மரக்கால்—நாற்பது படி.

89 ஒருமுக்கெண்ணெயை மூக்கில் நசியமிடவேண்டும் என்பது.

90 ஒருபடி என்பது அவ்வளவுள்ள எண்ணெய் அல்லது நெய்யைக் குறிக்கும்.

91 பால் அகப்படாவிட்டால் கள் வேண்டும் என்பது.

92 நேயப்பொருள் — எண்ணெய் அல்லது நெய்; மேற்கூறிய எண்ணெய் நசியமருந்து; ஈண்டுக் கூறியது ஊட்டும் மருந்து என்க.

93 இவை என்பது பால் முதலிய நான்கனையும் குறிக்கும்.

மருந்துப் [94]பொருளாம்.

கோவேறுகழுதை [95]ஆனேறு கழுதை என்னும் இவற்றிற்குக் [96]காற்கூறு குறைவாம். எருமை ஒட்டகம் [97]தொழில்செய்யும் எருது என்னும் இவற்றிற்கும் கறவைப்பசுக்களுண்பதற்கும் [98]இருமடங்காம். [99]தொழில்செய்யும் காலத்திற்கும் பயனிற்கும் [100]தக்க முறையிலும் ஏற்பாடு செய்யலாம். எல்லாவற்றிற்கும் புல்லும் நீரும் விரும்பியபடியாம். இங்ஙனம் [101]ஆனினம் கூறப் பட்டது.

சுலோகம்

[102]நூறுகொண்ட கழுதை குதிரை இவற்றின் கூட்டத்திற்கு [103]ஐந்தும் வெள்ளாடு செம்மறியாடு இவற்றிற்குப் பத்தும் ஆன் எருமை ஒட்டகங்களுக்கு நான்குமாகப் பொலியேறுகளை ஏற் படுத்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தெட்டாம் பிரகரணம்
"ஆனினத்தலைவன்" என்னும் ஐம்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

94 புல் முதலாக இங்கே கூறப்பட்ட பொருள்களின் அளவு இத்துணை நாளுக்கு என்பது கூறப்படவில்லை ஆயினும் இவ்வுணவுப் பொருள்களையும் அவற்றின் அளவுகளையும் நோக்கும்போது ஒருதிங்களுக்கெனக் கொள்ளு தல் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

95 ஆனேறு—ஈண்டு மேலே கூறப்பட்ட அத்துணைச் சிறப்பில்லாதது.

96 காற்கூறு என்பது மேலே கூறப்பட்ட புல் முதலிய எல்லா வற்றிற்குமாம்.

97 தொழில்செய்தல்—வண்டி முதலியன இழுத்தல்.

98 இருமடங்கு—மேலே கூறிய புல் முதலியவற்றின் அளவில் இரு மடங்கு.

99 ஈண்டுத் தொழில்செய்யும் எருதிற்கும் கறவைப்பசுவிற்கும் கூறிய இருமடங்கென்னும் அளவு முடிவானதன்று என்னும் கருத்துடையராய் ஆசிரியர் மீண்டுங் கூறுகின்றார். தொழில்செய்யும் காலத்தை எருதிற்கும் பயனைப் பசுவிற்குமாகக் கொள்ளல்வேண்டும். தொழில்—வண்டியிழுத்தல் முதலியன. பயன்—பால் மிகுதியாகக் கறத்தல்.

100 தொழில்மிகுதி பயன்மிகுதி நோக்கி உண்ணுதற்கும் பருகுதற்கும் மேற்கூறிய பொருள்களை இருமடங்கின் மிகுதியாகவும் ஏற்பாடு செய்ய லாம் என்பது கருத்து.

101 ஆனினம்—ஆனினங்களின் சம்பந்தமான விதிகள்.

102 நூறுகொண்ட என்னும் அடையைக் குதிரை வெள்ளாடு செம்மறி யாடு பசு எருமை ஒட்டகம் இவற்றிற்கும் கொள்க.

103 இங்கே கூறப்பட்ட ஐந்து பத்து நான்கு என்னும் எண்கள் அவ்வச் சாதியிலுள்ள பொலியேறுகளை உணர்த்தும்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

இருபத்தொன்பதாம் பிரகரணம்—[1] குதிரைத்தலைவன்

ஐம்பத்தொராம் அத்தியாயம்

குதிரைத்தலைவன் [2]விற்குமிடத்துள்ளனவும் விலைக்குக் கொள்ளப்பட்டனவும் [3]போரிற் கொள்ளப்பட்டனவும் [4]பிறந்தனவும் துணைக்குவந்தனவும் [5]ஈடுகொள்ளப்பட்டனவும் [6]காலவரையறையிற் கொள்ளப்பட்டனவும் ஆகிய குதிரைகளின் அளவினைக் [7]குலம் வயது [8]நிறம் [9]குறி [10]தொழில் [11]இனம் [12]வரலாறு என்னும் இவற்றைக்கொண்டு எழுதுவித்தல்வேண்டும்.

[13]தாழ்ந்தன உறுப்பறை நோய்கொண்டன இவற்றை [14]அறிவித்தல்வேண்டும்.

51-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இதுகாறும் அரசியலங்கங்களுள் அரசுமுதலியவற்றின் வகைவிரிகள் கூறப்பட்டன. இனி அவற்றுள் எஞ்சிய படையியல்பு கூறத்தொடங்கி முதற்கட் சிறப்புநோக்கிக் குதிரையின் இயல்பு கூறத்தொடங்குகின்றார். ஆனினத்தோடு குதிரையும் ஒருபுடை ஒத்ததாதலின் ஆனினத் தலைவன் என்பதன்பின் இப்பிரகரணம் வைக்கப்பட்டது.

[2] விற்குமிடத்துள்ளன—கையுறை முதலியனவாக வந்து விலைப்படுமிடத்திற் சேர்க்கப்பட்ட குதிரைகள்.

[3] போரிற் பகைவரிடமிருந்து கொள்ளப்பட்டன என்பது.

[4] பிறந்தன—அரசனுக்குரிய மூலப்படையாகவுள்ள குதிரைகளினின்றும் தோன்றின.

[5] மற்றொரு பொருட்கீடாகக் கொள்ளப்பட்டன.

[6] காலவரையறை—இத்துணைக் காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளுதல் என்று வரையறுத்துக்கொள்ளல்.

[7] குலம்—ஈண்டுத் தோன்றியநாடு பற்றியது; நாடு-பாரசீகம் காம்போஜம் முதலியன.

[8] நிறம்—வெண்மை கருமை முதலியன.

[9] குறி—நெற்றிச்சுட்டி வால்வெள்ளை முதலியன.

[10] தொழில்—இழுத்தல் சுமத்தல் முதலியன.

[11] இனம்—தோன்றுமிடம்பற்றிய வகை.

[12] வரலாறு—அரசனிடத்து வந்துசேர்ந்த முறை.

[13] தாழ்ந்தன -- தலையின்மேற்கழலை ஒற்றைக்காலில் வேற்றுநிறம் முதலிய குற்றங்களுடைய குதிரைகள்.

[14] ஓரளவு காலம்வரை மாற்றுதற்கும் மருத்துவஞ் செய்தற்கும் அறிவித்தல்வேண்டும் என்பது.

குதிரைக்காரன், கருவூலம் சரக்கறைகளினின்றும் [15] திங்களுக்குரிய வருவாயைப் பெற்றுக்கொண்டு [16] சூழக்கடவன்.

குதிரைகளின் (எண்) அளவிற்கு ஏற்ப நீளமுடையதாகவும் குதிரையின் அளவில் இருமடங்கு அகலமுடையதாகவும் [17] நான்கு வாயில்களையும் நடுவிற் புரளுமிடத்தையும் உடையதாகவும் முன் மண்டபத்தை உடையதாகவும் வாயிலின் இருமருங்கினும் பலகையிருக்கைகளையுடையதாகவும் [18] குரங்கு மயில் புள்ளிமான் கீரி சகோரப்புள் கிளி நாகணவாய்ப்புள் என்னும் இவைகளாற் சூழப்பட்டதாகவும் குதிரைக்கொட்டிலை அமைத்தல்வேண்டும்.

குதிரையின் நீளத்திற்குத்தகச் சதுரவடிவமும் வழுவழுப்பும் உடைய பலகைகளால் தளமிடப்பட்டதாகவும் [19] இரைக்கொட்டிலையுடையதாகவும் மலம் மூத்திரம் [20] வெளியேறத்தக்கதாகவும் கிழக்குநோக்கியதாகவாதல் வடக்குநோக்கியதாகவாதல் தனித்தனியே இடம் அமைத்தல்வேண்டும். கொட்டிலுக்குத்தகத் [21] திசைகளை மாற்றியும் அமைக்கலாம். பெட்டைக்குதிரை பொலி குதிரை கன்று இவற்றிற்குத் [22] தனியிடம் (அமைத்தல்வேண்டும்).

---

[15] திங்களுக்குரிய வருவாய்—ஒரு திங்களுக்குரிய கூலியும் குதிரைக்குரிய உணவுப் பொருளுமாம்.

[16] சூழ்தல் — குதிரையைப் பாதுகாக்கும் முறையையும் பெற்றுக்கொண்ட பொருளைச் செலவிடுதலையும் ஆலோசித்தல்.

[17] எளிதிற் போக்குவரவு செய்தற்கும் நெருப்பு முதலியவற்றால் அச்சம் நேர்ந்தவிடத்து விரைந்து வெளிச்செல்லுதற்கும் ஏற்ப நான்கு வாயில்கள் வேண்டும் என்பது.

[18] குரங்கு முதலியன சூழ இருத்தல் நஞ்சால் ஏற்படும் தீங்குகளை விலக்குதற்கு என்பது கருத்து.

[19] இரைக்கொட்டில்—புல் முதலியன வைக்குமிடம்.

[20] வெளியேறுதற்குக் குதிரையின் முன்புறம் சற்றுஉயரமாக இருக்க வேண்டும் என்பதாம்.

[21] அரண்மனைக்கு வடகிழக்குத் திசையில் குதிரைக்குக் கொட்டில் அமைத்தல்வேண்டும் என்று முன்னர்(25ஆம் அத்)கூறப்பட்டது; ஆண்டுக் குறிப்பிட்ட இடம் கொட்டிலுக்குப் போதியதாக இல்லையாயின் வேறு திசைகளிலும் அமைக்கலாம் என்பது கருத்து.

[22] ஒன்றை ஒன்று பாராவண்ணம் தனித்தனி இடம் அமைத்தல்வேண்டும் என்பதாம்.

ஈன்றணிமைத்தான பெட்டைக்குதிரைக்கு மூன்று நாள் ஒருபடி நெய்யும் அதன்மேற் பத்துநாள் ஒருபடி சத்துமாவும் [23]நெய்க்கலப்புள்ள குடிநீர்மருந்தும் பின்னர்ப் [24]புழுக்கலும் புல்லும் [25]பருவத்திற் கேற்றனவும் உணவாம்.

கன்றுக்குப் பத்து நாட்களுக்குமேல் ஆறுதிங்கள் வரை [26]நான்கில் ஒருகூறு நெய்கலந்த ஒருழக்குச் சத்துமாவும் ஒருபடி பாலும் உணவாம். [27]அதன் பின்னர் மூன்றியாண்டுகள் வரை திங்கடோறும் (முறையே) [28]அரையரைப்படி மிகுந்த ஒருபடி யவமும் [29]நான்கியாண்டுவரை [30]ஒருதூணியும் அதற்குமேல் நான்கு அல்லது ஐந்தியாண்டுகள் [31]தொழிலுக்கேற்றபடி [32]முழு அளவும் (உணவாம்).

தலையாய குதிரைமுகம் முப்பத்திரண்டங்குலமும் அம்முக அளவின் [33]ஐந்துமடங்கு நீளமும் கணைக்கால் இருபதங்குலமும் அதன் [34]நான்குமடங்கு உயரமும் உடையதாம். [35]மும்மூன்றங் குலம் குறைந்தன முறையே இடையாயதும் கடையாயதும் ஆம்.

---

23 நெய்கலந்த மூலிகைக் கொதிசாறு சீரணித்தற்குக் கொடுத்தல் வேண்டும் என்பது.

24 புழுக்கல்—அவித்த கொள் முதலிய கூலங்கள்.

25 பருவத்திற்கேற்றன—தட்ப வெப்பகாலங்களுக்கேற்ற புல்வகைகள்.

26 நான்கில் ஒரு கூறு—கால் உழக்கு.

27 அதன்பின்னர்—ஆறு திங்களுக்குமேல்.

28 பிறந்த ஏழாந் திங்களில் ஒருபடியும் அதன்மேல் ஒவ்வொரு திங்களுக்கும் அரையரைப்படி மிகுத்தும் கொடுக்கவேண்டும் என்பதாம்.

29 மூன்றியாண்டு முடிந்து நான்காமாண்டு தொடங்கி முடியும்வரை என்பது.

30 ஒரு தூணி என்பது யவத்தைக் குறிக்கும்.

31 தொழில்—தேரிழுத்தல் போரிற் பயன்படுதல் முதலியன.

32 முழுஅளவு பின்னர்க் கூறப்படும்.

33 ஐந்துமடங்கு நூற்றறுபதங்குலம்.

34 நான்குமடங்கு—எண்பதங்குலம்.

35 தலையாய குதிரைக்குக் கூறிய முகம் முதலியவற்றின் அளவின் மூன்றங்குலம் குறைந்தது இடையாய குதிரை என்றும் அதனின் மூன்றங் குலம் குறைந்தது கடையாய குதிரை என்றும் கொள்க,

[36]சுற்றளவு நூறங்குலமாம். [37]முறையே ஐந்தில் ஒருகூறு குறைதல் இடையாயதற்கும் கடையாயதற்குமாம்.

தலையாய குதிரைக்குச் சாலிநெல் விரீகி யவம் பிரியங்கு (இவற்றுள் யாதானும் ஒன்று) [38]பாதி உலர்ந்ததாதல் பாதி புழுக்கியதாதல் பயறு உழுந்து இவற்றின் புழுக்கலாதல் இருதூணியளவு (உணவுப்பொருளாம்). ஒருபடி [39]நேயப்பொருள். ஐந்துபல உப்பும் ஐம்பது பலம் [40]இறைச்சியுமாம். ஒரு மரக்கால் [41]சாறுதல் [42]இருமடங்குதயிராதல் உணவு சிரணித்தற்குக்கொடுக்கவேண்டும். ஐந்து பலம் [43]அக்காரமாதல் ஒருபடி கள்ளாதல் இருமடங்கு பாலாதல் [44]குடித்தற் குரியனவாம். நீண்டவழி நடத்தலாலுதல் சுமந்ததனுலாதல் [45]சோர்வுற்றவைகளுக்கு ஒருபடி நேயப்பொருள் [46]அநுவாசனமாம். [47]ஒருழக்கு [48]மூக்குமருந்தாம். அரைப்பாரம் இளம் புல்லாதல் இருமடங்கு [49]புல்லாதல் ஆறுமுழச் சுற்றளவுள்ள [50]தாட் [51]கட்டாதல் (உணவாம்).

---

[36] தலையாய குதிரையின் சுற்றளவு நூறங்குலம் என்பதாம்.

[37] இடையாய குதிரைக்கு எண்பதங்குலமும் கடையாய குதிரைக்கு அறுபத்துநான்கங்குலமும் சுற்றளவாம்.

[38] பாதி உலர்தலாவது நனைக்கப்பட்டு அரையளவு ஈரமுடையதாகக் காய்தல்.

[39] நேயப்பொருள், குடித்தற்பொருட்டாம்.

[40] இறைச்சியும் உணவாம் என்பது.

[41] சாறு—ஈண்டு இறைச்சியினின்றும் எடுக்கப்படுவது.

[42] இருமடங்கு—இரண்டு மரக்கால்.

[43] அக்காரம்—வெல்லப்பாகு.

[44] பசியுண்டாதற்பொருட்டுக் குடித்தற்குரிய பொருள்களாம் என்பது கருத்து.

[45] சோர்வுற்ற குதிரைகளுக்கென்பது.

[46] அநுவாசனம்—பசியை உண்டாக்கி உணவை ஏற்றுங்கொள்ளச் செய்யும் மருந்து ; இது வயிற்றைச் சீர்செய்தற்குக் கொடுக்கப்படுவது.

[47] ஒருழக்கு நேயப்பொருள் என்பது.

[48] மூக்கை நனைத்துத் தூய்மை படுத்துதற்குரிய மருந்தாம் என்பது கருத்து.

[49] புல் ஈண்டு உலர்ந்தது ; இளம்புல் கிடைக்கவில்லையானால் உலர்ந்த புல்லைப் பயன்படுத்தலாம் என்பது கருத்து.

[50] புல் முதலியவற்றின் அடிப்பாகம்.

[51] கட்டு—ஈண்டு இரண்டு கைகளாலும் எடுத்துச் சேர்க்குமளவு.

[52]இவ்வளவிற் காற்காற்கூறு குறைந்தது முறையே இடையாயவற்றிற்கும் கடையாயவற்றிற்கும் உணவாம். இடையாய தேர்க்குதிரையும் பொலிகுதிரையும் தலையாய குதிரைக்குச் [53]சமமாம். [54]கடையாயவை இடையாயவற்றிற்குச் [55]சமமாம். [56]பெட்டைக் குதிரைகளுக்கும் கலப்பு(சாதி)க் குதிரைகளுக்கும் காற்கூறு குறைவாம். [57]இதிற்பாதி கன்றுகளுக்காம். இங்ஙனம் (உணவுக் கூறு) வகுக்கப்பட்டது.

[58](உணவு) வகைகளைப் பாகஞ்செய்வோன் [59]கயிறுபிடிப்பவன் [60]மருத்துவன் இவர்களும் (உணவிற்) [61]கூறுபெறக் கடவர்.

போர் நோய் மூப்பு தொழில் என்னும் இவற்றால் ஆற்றல் குன்றியவைகள் (உயிர்வாழ்தற்குரிய) [62]உணவுமாத்திரையில் அமையற்பாலன. போருக்குத் தகுதியற்றவைகளை நாடுநகரங்களில் வாழும் மக்களுக்குப் பயன்படும்பொருட்டுப் பொலிகுதிரைகளாக்கிப் பெட்டைக் குதிரைகளுடன் சேர்த்தல்வேண்டும்.

---

52 தலையாய குதிரைக்குக் கூறிய எல்லா வுணவுப்பொருள்களின் அளவிலும் நான்கில் ஒருகூறு குறைந்த அளவு இடையாய குதிரைகளுக்கும் அவ்வளவின் நான்கில் ஒரு கூறு குறைந்த அளவு கடையாய குதிரைகளுக்கும் உணவாம் என்பது கருத்து.

53 சமம் என்றதனால் தலையாய குதிரைக்குரிய உணவின் அளவே இடையாய தேர்க் குதிரைக்கும் பொலிகுதிரைக்குமாம் என்பது கருத்து.

54 கடையாயவை—கடையாய தேர்க் குதிரையும் பொலிகுதிரையும்.

55 ஈண்டும் சமம் என்றது உணவின் ஒப்புமை கருதியாம்.

56 தலை இடை கடையாய முத்திறத்துப் பெட்டைக் குதிரைகளுக்கும் அவ்வவற்றின் ஆண்குதிரைகளுக்குக் கூறிய உணவுப் பொருள்களின் காற்கூறு குறைவாம் என்பது கருத்து.

57 தலை இடை கடையாய பெட்டைக் குதிரைகளுக்குக் கூறப்பட்ட உணவுப்பொருளிற் பாதியளவு அவ்வவற்றின் கன்றுகளுக்காம் என்பது கருத்து.

58 உணவு—ஈண்டுக் குதிரைக்குரியது.

59 கயிறு பிடிப்பவன்—குதிரைக்குரிய பணிகள் எல்லாம் செய்பவன்.

60 மருத்துவன்—குதிரைக்கு மருத்துவஞ் செய்வோன்.

61 குதிரைக்குரிய உணவுக் கூறுகளைக் கொள்ளுங்கால் அவற்றோடு தமக்குரிய கூறுகளையும் கொள்ளக்கடவர் என்பது.

62 உணவு—ஈண்டுச் சிறந்ததல்லாதது.

[63]போர்த்தொழிலிற் றகுதிவாய்ந்தவற்றுள் காம்போசம் சிந்து ஆரட்டம் வனுயு ஆகிய இந்நாட்டிற்றேன்றிய குதிரைகள் தலையாயனவாம். வாகிலிகம் பாபேயம் சவ்வீரம் திதலம் ஆகிய இந்நாட்டிற்றேன்றியவை இடையாயனவாம். ஏனைய கடையாயனவாம்.

அவற்றை மிக்க சுறுசுறுப்புள்ளனவும் ஓரளவு சுறுசுறுப்புள்ளனவும் சுறுசுறுப்பில்லாதனவும் என்னும் இவ்விகற்பத்திற்குத் தகப் [64]போர்த்தொழிலிலாதல் சுமத்தற்றெழிலிலாதல் உய்த்தல்வேண்டும்.

குதிரைகளுக்குப் [65]போர்த்தொழிலே சிறப்புடையதாம்.

[66]சுமக்கும் குதிரைகளின் செலவு, [67]வட்டமாகச்செல்லல் மெல்லெனச்செல்லல் தாவிச்செல்லல் [68]தோரணகதியிற்செல்லல் குறிப்பிற்செல்லல் என்னுமிவையாம்.

அவற்றுள் வட்டமாகச்செல்லல்—[69]ஔபவேணுகம் [70]வர்த்த

---

63 போர்த்தொழிலிற் றகுதிவாய்ந்த என்னும் அடையை, இடையாய கடையாய குதிரைகளுக்கும் கொள்ளல்வேண்டும்.

64 மிக்க சுறுசுறுப்புடையவற்றைப் போர்த் தொழிலிலும் அல்லாதவற்றை வண்டிஇழுத்தல் சுமைதாங்கல் முதலிய செயலிலும் பயன்படுத்தல் வேண்டும் என்பது.

65 போர்த்தொழிலின் விரிவுகளைச் சாலிகோத்திரம் முதலிய நூல்களிற் காண்க.

66 சுமத்தல்—என்டுப் போர்த்தொழிலல்லாத எல்லாத் தொழிலையும் குறிப்பதாம்.

67 வட்டமாகச்செல்லல்—இதனை "வற்கநம்" என்று முதனூல் கூறும். இது சுக்கிர நீதியில் 'வற்கிதம்' என்று காணப்படுகிறது (சுக்—அத் 4. பிர 7. சுலோ 149)

68 தோரணகதியின் இயல்பினை,

"முன்னர் ஊன்றிய காற்குறி தன்னில்
பின்னர்ப்பத மிடுவது தோரணம் என்ப"

(பன்னிருபாட்—276) என்பதனுலறிக.

69 ஔபவேணுகம்—வட்டமிடுதல்.

70 வர்த்தமானகம்—வட்டமாகச் சுழன்று செல்லுதல்.

மானகம் [71]யமகம் [72]ஆலீடபுலுதம் [73]பூர்வகம் [74]திரிகசாலி என்னும் வகைகளை உடையதாம்.

வட்டமாகச்செல்லல் என்னும் செலவே தலையும் செவியும் விகாரமின்றியிருக்குமாறு நிகழின் மெல்லெனச்செல்லல் எனப்படும். அது பதினாறு வகைப்படும்.

அவையாவன :—

[75]பிரகீர்ணகம் [76]பிரகீர்ணோத்தரம் [77]நிடண்ணம் [78]பார்சுவாநுவிருத்தம் [79]ஊர்மிமார்க்கம் [80]சரபக்கிரீடிதம் [81]சரபப்புலுதம் [82]திரிதாளம் [83]பாகியாநுவிருத்தம் [84]பஞ்சபாணி [85]சிங்காயதம் [86]சுவாதூதம் [87]கிலிட்டம் [88]சிலிங்கிதம் [89]பிரும்மிதம் [90]புட்பாபிகீர்ணம் என்பனவாம்.

தாவிச் செல்லலின் வகையாவன :—

குரங்குபோற்றாவுதல் தவளைபோற்றாவுதல் மான்போற்றாவு

---

[71] யமகம்—ஒரேகாலத்தில் மீண்டும் மீண்டும் மண்டலித்துச் செல்லல்.

[72] ஆலீடபுலுதம்—ஒரு காலைச் சுருக்கி மற்றொருகாலை நீட்டித் துள்ளிச் செல்லல்.

[73] பூர்வகம்—உடலின் முற்பகுதியால் வட்டமிடுதல்.

[74] திரிகசாலி—உடலின் பிற்பகுதியால் வட்டமிடுதல்.

[75] பலவகைச் செலவும் கலந்த நடை.

[76] பலவகைச் செலவும் கலந்திருத்தலோடு அவற்றுள் ஒன்று சிறத்தல்.

[77] பின்புறம் அசைவின்றி நடத்தல்; அசைவின்றிப் பின்செல்லலுமாம்.

[78] குறுக்காகச் செல்லுதல்.

[79] உயர்ந்தும் தாழ்ந்தும் நீரின் அலைபோலச் செல்லல்.

[80] சரபப்புள்ளைப்போலச் செல்லல்.

[81] சரபப்புள்ளைப்போலத் துள்ளிச் செல்லல்.

[82] மூன்றுகால்களால் நடத்தல்.

[83] இடசாரி வலசாரியாகத் துள்ளிச்செல்லல்.

[84] மூன்று கால்களை ஒருமுறை யிட்டும் ஒருகாலை இருமுறையிட்டும் செல்லல்.

[85] சிங்கம்போல் நடத்தல்.

[86] நெடுநடையாகச் செல்லல்.

[87] தளர்ந்து நடத்தல்.

[88] உடலின் முன்புறம் தாழநடத்தல்.

[89] உடலின் முன்புறம் உயர நடத்தல்.

[90] நெளிந்து நடத்தல்.

தல் [91]ஒற்றைக்காலிற்றுவுதல் குயிற்செலவு [92]மார்பாற்றுவுதல் [93]கொக்குச்செலவு என்பனவாம்.

தோரணகதியின் வகையாவன :—

பருந்துச்செலவு [94]நீர்ப்புட்செலவு மயிற்செலவு [95]அரையயிற் செலவு கிரிச்செலவு அரைக்கிரிச்செலவு பன்றிச்செலவு அரைப் பன்றிச்செலவு என்பனவாம்.

குறிப்பிற் செல்லலாவது—[96]சங்கேதத்திற்குத்தகச் செல்லுத லாம்.

தேர்க்குதிரைகள், [97]ஆறு ஒன்பது பன்னிரண்டு யோசனை தூரம் செல்லற்பாலன. சுமக்கும் குதிரைகள், [98]ஐந்து ஏழரை பத்து யோசனை தூரம் செல்லற்பாலன.

[99]விக்கிரமம் [100]பத்திராசுவாசம் [101]பாரவாகியம் என்னும் இவை குதிரைநடைகளின் வகைகளாம்.

விக்கிரமம் [102]வற்கிதம் [103]உபகண்டம் [104]உபயவம் [105]சவம்

---

[91] மூன்றுகால்களையும் சுருக்கிக்கொண்டு ஒற்றைக்காலால் தாவிச் செல்லல்.

[92] கால்கள் நான்கையும் சுருக்கிக்கொண்டு மார்பினால் தாவிச் செல்லல்.

[93] கொக்கைப்போற் செல்லும் செலவு.

[94] நீர்ப்புள்—அன்னம் முதலியன.

[95] பாதிநடை மயில்போல் நடத்தல் ; பின்வருவனவற்றிற்கும் ஈதொக்கும்.

[96] நடத்துவோனுடைய சமிஞ்ஞையறிந்து அதற்கொப்பச் செல்லுதல்.

[97] ஆறு ஒன்பது பன்னிரண்டு யோசனை என்பது முறையே தலை இடை கடையாய குதிரைகளுக்கு எனக்கொள்க.

[98] ஐந்து ஏழரை பத்தென்பனவும் தலை இடை கடையாய குதிரை களுக்கு எனக்கொள்க.

[99] மெல்ல நடத்தல்.

[100] நடுத்தரமான நடை.

[101] விரைவான நடை.

[102] வற்கிதம்—மேன்மேலும் விரைந்து செல்லல்.

[103] தாவித் தாவிச்செல்லல்.

[104] தொடக்கத்தில் விரைந்து செல்லல்.

[105] இறுதியில் விரைந்துசெல்லல்.

இவை [106]தாரைகதி எனப்படும்.

குதிரைகளின் கட்டுமுறை [107]கருவி இவற்றைத் [108]தகுந்த ஆசிரியர்களும், போர்க்குரிய தேர்க்குதிரைகளுக்கு அணிசெய்தலைப் [109]பாகனும், குதிரைகளின் உடல் [110]மெலிவு [111]பருமைகளுக்கு வேண்டிய பரிகாரத்தையும் பருவத்திற்கேற்ப வகுக்கப்பட்ட உணவுகளையும் மருத்துவனும் [112]அறிவித்தல்வேண்டும்.

கயிறுபிடிப்போன் குதிரைகட்டுவோன் புல்லிடுவோன் பாகஞ் செய்வோன் கொட்டில்காவலன் மயிர்வினைஞன் நச்சுமருத்துவன் இவர்கள் [113]தந்தம் தொழில்களாற் குதிரைகளைப் பேணல் வேண்டும்.

இவர்கள் தொழிலிற் [114]றவறு செய்யின் ஒருநாட் கூலியை இழப்பித்தல்வேண்டும்.

[115]நீராசனம் எடுத்தற்பொருட்டாதல் மருத்துவஞ் செய்தற்

---

106 நேராகத் தொடர்ந்துசெல்லல்.

107 கருவி—வாய் கழுத்து முதுகு கால் முதலியவற்றில் இடத்தக்க கடிவாளம் வார் சேணம் முதலியன.

108 தகுதி—குதிரையைப் பயிற்றும் திறமை.

109 பாகன்—தேர்வலவன்.

110 மெலிவு—இளைப்பு.

111 பருமை—கொழுப்புமிகுதியாலுண்டான தடிப்பு.

112 குதிரைப்பணியாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும் என்பது.

113 தந்தம் தொழில்களாவன—கயிறுபிடிப்போனுக்குக் குதிரைகளை நிலத்திற் புரளவிடுதல் நீராட்டல் நீரூட்டல் உடம்புதேய்த்தல் முதலியனவும், குதிரைகட்டுவோனுக்குக் கடிவாளமிடுதல் சேணமமைத்தல் முதலியனவும் புல்லிடுவோனுக்குக் காலத்திற்குத்தகப் புல்லாராய்ந்துகொடுத்தல் முதலியனவும் பாகஞ்செய்வோனுக்கு நெல் பயறு கொள் உழுந்து முதலியவற்றைப் புழுக்கலும் கொட்டில்காவலனுக்குக் குதிரைக் கொட்டிலைத் தூய்மைசெய்தல் முதலியனவும் மயிர்வினைஞனுக்குப் பிடர்மயிர் முதலியவற்றைக் காலத்திற்கேற்பக் கொய்தல் முதலியனவும் நச்சுமருத்துவனுக்கு நஞ்சு முதலியவற்றால் ஏற்படும் தீமைகளைப் பரிகரித்தல் முதலியனவுமாம்.

114 தவறு—செய்யவேண்டியவற்றைச் செய்யாமையும் வேண்டாதனவற்றைச் செய்தலுமாம்.

115 நீராசனம்—தெய்வத்தாலும் கண்ணேறு முதலியவற்றாலும் நேருந் தீங்கு நீங்குதற்கும் ஆற்றல் மிகுதற்கும் மந்திரநீர் மலர் விளக்கு முதலியவற்றைக்கொண்டு செய்யப்படும் சாந்திக் கிரியை.

பொருட்டாதல் கட்டிவைக்கப்பட்டுள்ள குதிரையைச் சுமையேற்றிச் செலுத்துபவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

மருத்துவம் மருந்து இவற்றைக் காலந்தவறிச் செய்தமையால் நோய்மிகின் அதனைப் பரிகாரஞ்செய்ய ஏற்படும் செலவின் இருமடங்கு தண்டமாம். [116]அக்குற்றத்தால் [117]மாறுபாடு நிகழின் அவ்வூர்தியின் விலைப்பொருள் தண்டமாம்.

[118]இதனால் ஆனினம் கழுதை ஒட்டகம் வெள்ளாடு செம்மறியென்னும் இவற்றிற்கும் [119]கூறப்பட்டபடியாம்.

சுலோகம்

(1) குதிரைகளை நாளொன்றிற்கு இருமுறை [120]குளிப்பாட்டுதலும் [121]மணப்பொருள் மாலை இவற்முற் புனைதலும் அமாவாசைதோறும் [122]பூதபலியும் பௌர்ணமிதோறும் [123]வாழ்த்தும் செய்வித்தல்வேண்டும்.

(2) சாந்திசெய்தலிற் பற்றுள்ளவன் ஐப்பசித்திங்கள் நவமி நாளிலும் யாத்திரையின் தொடக்கத்திலும் இறுதியிலும் நோய்வாய்ப்பட்ட அமயத்திலும் ஆரத்தி சுற்றுவித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் இருபத்தொன்பதாம் பிரகரணம் "குதிரைத்தலைவன்" என்னும் ஐம்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

116 அக்குற்றத்தால்---மருத்துவத்தாலும் மருந்தாலும் நேரும் குற்றத்தால்.

117 மாறுபாடு—குதிரைக்குநேரும் கேடு.

118 இதனால்—இவ்வத்தியாயத்திற் குதிரைக்குக்கூறப்பட்ட விதியினால்.

119 குதிரையைப்போலவே ஆனினம் முதலியவற்றையும் பேணல் வேண்டும் என்பதும் அங்ஙனம் பேணப்படவில்லையாயின் ஆனினத்தலைவன் முதலியோர்க்குத் தண்டம் விதித்தல்வேண்டும் என்பதும் கருத்து.

120 குளிப்பாட்டுதல், கூதிர் முதுவேனிற்பருவங்களிற் செய்யவேண்டும் என்ப ஒரு சாராசிரியர்.

121 சந்தனம் மாலை முதலியவற்றை நாடோறும் புனையவேண்டும் என்பதாம்.

122 பூதபலி—பூதங்களுக்குச் சாந்தியாகச் செய்யப்படும் வழிபாடு.

123 வாழ்த்து--அந்தணரைக்கொண்டு செய்விப்பது.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

முப்பதாம் பிரகரணம்—[1]யானைத்தலைவன்

ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

யானைத்தலைவன், யானைக்காட்டின் [2]காவலையும் அடக்குந் தொழிலால் அடக்கம் எய்திய களிறு பிடி கன்று இவைகளின் கொட்டில் கட்டுத்தறி படுக்குமிடம் [3]தொழில் உணவு [4]புல் இவற்றின் அளவையும் [5]தொழிலின்கட் பற்றுடைமையையும் [6]கட்டுமுறையையும் [7]கருவிகளையும் [8]போர்க்குரிய அணிகலன்களையும் மருத்துவன் [9]படைவீரன் யானைப்பணியாளன் என்னும் இவர்களின் கூட்டத்தையும் கண்காணித்தல்வேண்டும்.

யானையினுடைய [10]நீளத்தின் [11]இருமடங்கு உயர அகல நீளங்கள் உடையதாகவும் [12]பிடியின் இடத்தால் மிக்கதாகவும் முன் மண்டபத்தையுடையதாகவும் [13]தறித்தடையை உடையதாகவும்

52-ம் அத்தியாயக் குறிப்புரை

[1] நால்வகைப் படைகளுள் யானையும் ஒன்றாதலால் அவ்வியைபுபற்றிக் குதிரைத்தலைவன் என்னும் பிரகரணத்தின் பின் இது வைக்கப்பட்டது.

[2] காவல்--பிறர் உட்புகாவண்ணம் பாதுகாத்தல்.

[3] தொழில்—போர்ச்செயல் முதலியன.

[4] புல் என்றதனால் இலை காய் கனிகளையும் கொள்ளல்வேண்டும்.

[5] தொழில்—யானைகளை யடங்கப் பயிற்றும் கருமம்.

[6] கட்டுமுறை—தறியிற்கட்டுதல் கழுத்தில் மணிமாலை முதலியன இடுதல் முதலிய தொழில்விதம்.

[7] கருவிகள்—தோட்டி மூங்கிற்கோல் பிரப்பங்கோல் முதலியன.

[8] போர்க்குரிய அணிகலன்கள்—கவசம் தோமரம் முதலியன.

[9] படைவீரன்—யானையை அடக்கி நடத்துவதில் திறமையுடையவன்.

[10] யானையின் நீளம் ஒன்பது முழம் என்று பின்னர்க் கூறப்படும்.

[11] இருமடங்கு—பதினெட்டு முழம்.

[12] பிடியின் இடம் ஆறு முழமாகும்; அதனோடு மிக்க அளவு இருபத்து நான்குமுழ நீளமாகும்.

[13] தறித்தடை—யானைகளை எளிதாகக் கட்டுதற்கும் அக்கட்டு நழுவாமைப்பொருட்டும் தறியின் மேற்பாகத்தில் துலாக்கோல்போல் குறுக்காகச் சேர்க்கப்படும் கட்டை.

கிழக்குநோக்கியாதல் வடக்குநோக்கியாதல் யானைக்கொட்டிலை அமைத்தல்வேண்டும்.

யானையின் நீளத்திற்குத்தகச் சதுரவடிவமும் வழுவழுப்புமுடைய பலகைகளால் தளமிடப்பட்டதாகவும் கட்டுந்தறியை உடையதாகவும் மூத்திரம் [14]இலண்டம் இவைகள் [15]வெளியேறத் தக்கதாகவும் உள்ள இடத்தை அமைத்தல்வேண்டும். [16]அவ்விடத்திற்கு ஒத்ததாகவும் [17]ஒருபாலுயர்ந்ததுமாகிய படுக்கையைப் போர்யானைகளுக்கும் ஊர்தியானைகளுக்கும் அரணின் உள்ளும் அடக்கத்தக்க கொடிய யானைகளுக்கு அரணின் வெளியேயும் (அமைத்தல் வேண்டும்).

பகலின் [18]எட்டுக் கூறுகளில் முதற்கூறும் ஏழாம் கூறும் நீராட்டுதற்குரிய காலமாம். [19]அவற்றின் பின்னர் உணவுக்குரிய காலமாம். முற்பகல் உடற்பயிற்சிக்குரிய காலமாம். பிற்பகல் குடிநீர்மருந்து ஊட்டுதற்குரிய காலமாம். இரவின் முக்கூற்றில் [20]இரு கூறுகள் துயிலுதற்குரியன. [21]ஒரு கூறு கிடந்தும் நின்றும் அமைதி எய்துதற்குரித்தாம்.

யானைபிடித்தற்குரிய காலம் [22]முதுவேனிற் பருவமாம். [23]இருபதியாண்டியானை பிடிக்கற்பாலதாம்.

---

14 இலண்டம்—யானையின் மலம்.

15 வெளியேறுதற்கு முற்பாகம் சிறிது உயர்ந்ததாக அமைக்கவேண்டும் என்பது.

16 அவ்விடம்—அக் கட்டுமிடம்.

17 ஒருபால்—முன்புறப்பாதி.

18 ஒரு பகலை எண்கூறாக்கக் கூறு ஒன்றுக்கு மூன்றேமுக்கால் நாழிகை அளவாகும்.

19 அவற்றின் பின்னர் என்பது இரண்டாம் கூறும் எட்டாங்கூறுமாம்.

20 இருகூறு—இரவின் இருபது நாழிகை.

21 ஒருகூறு பத்து நாழிகையாதலின் ஐந்து நாழிகை துயில் ஒழிந்து விழித்திருத்தற்கும் மற்றோர் ஐந்து நாழிகை எழுந்து நிற்றற்கும் உரியனவாம் என்பது.

22 முதுவேனிற் பருவத்தில் வெப்ப மிகுதியால் யானைகளின் ஆற்றல் குறைந்திருக்குமாதலின் அக்காலம் யானைகளை எளிதாகப் பிடிக்கலாம் என்பது கருத்து.

23 இருபது யாண்டென்பது அவ்வியாண்டிற்குச் சிறிது கூடிய கால அளவையும் உபலக்கணத்தாற் குறிக்கும்.

[24]இளங்கன்று [25]பிடியானைக்குச் சமனான கோடுடையது கோடில்லாதது நோயுடையது கருக்கொண்டது பாலூட்டுவது இவை பிடிக்கத்தகாதன.

ஏழுமுழ உயரமும் ஒன்பதுமுழ நீளமும் பத்துமுழச் [26]சுற்றளவும் நாற்பதியாண்டகவையும் உடையது தலையாயனவாம். முப்பதுயாண்டுடையது [27]இடையாயதும் இருபத்தைந்துயாண்டுடையது கடையாயதுமாம்.

அவற்றிற்கு (இடைகடைகளுக்கு) உணவு [28]காற்கூறு குறைவாம்.

(ஏழு) [29]முழத்திற்கு ஒரு தூணியரிசியும் அரைமரக்கால் எண்ணெயும் மூன்றுபடி நெய்யும் பத்துப்பலம் உப்பும் ஐம்பது பலம் இறைச்சியும் உணவு அறுதற்பொருட்டு ஒரு மரக்கால் [30]சாறு அல்லது இருமடங்கு தயிரும் பத்துப்பலம் அக்காரமும் கள் ஒரு மரக்கால் அல்லது இருமடங்கு பால் ஆகிய குடிநீர் மருந்தும் உடலிற் பூசுதற்பொருட்டு ஒருபடி எண்ணெயும் தலைக்கும் விளக்கிற்கும் தனித்தனி [31]எட்டில் ஒரு கூறும் பசும்புல் இரண்டு பாரமும் இளம்புல் இரண்டேகாற் பாரமும் உலர்ந்தபுல் இரண்டரைப்பாரமும் வேண்டுமளவு தழையும் (உணவாம்).

---

[24] இளங்கன்று—பால்குடி மறவாத கன்று.

[25] கோடுவளராத பருவமுடையதென்பது கருத்து.

[26] சுற்றளவென்பது பருமனைக் குறிக்கும்.

[27] இடையாயதும் கடையாயதும் ஆகிய யானைகளின் அளவுகளைப் பின்னர்க் காண்க.

[28] தலையாய யானைக்குக் கூறப்படும் உணவின் அளவில் நான்கில் ஒரு கூறு குறைவாக இடையாய யானைக்கும் அதனில் நான்கில் ஒருகூறு குறைவாகக் கடையாய யானைக்குமாம் என்பது கருத்து.

[29] இங்கே கூறப்படும் உணவுப்பொருள்களின் அளவு ஏழுமுழ உயரமுள்ள தலையாய யானைக்கு என்று கொள்ளல்வேண்டும்; அங்ஙனமின்றி ஒருமுழ உயரத்திற்குப் பின்வரும் உணவுகளின் அளவைக் கணக்கிட்டுக் கொள்ளல் வேண்டுமென்று உரையாளர் கூறியுள்ளார். அங்ஙனம் கணக்கிடின் உணவுப்பொருள் வேண்டிய அளவிற்கு மிகவும் அதிகமாகக் காணப்படுதலில் அது பொருந்தாதென்பது கருதத்தக்கது.

[30] சாறு — இறைச்சியினின்றும் எடுக்கப்படுவது; சாறும் தயிரும் யானைக்குரிய உணவிற் கலத்தற்கு வேண்டும் என்பது.

[31] எட்டில் ஒருகூறு என்பது அரைக்காற்படி.

ஏழுமுழ உயரமுள்ள யானைக்குக் கூறிய உணவின் அளவே எட்டுமுழ உயரமுள்ள [32]அத்தியராளம் என்னும் யானைக்குமாம்.

எஞ்சிய ஆறுமுழ, ஐந்துமுழ உயரமுள்ள யானைகளுக்கு [33]முழத்திற்கேற்பக் (கணக்கிட்டுக்கொள்க).

இளங்கன்று, [34]விளையாட்டின் நிமித்தம் பிடிக்கப்படலாம். அவ்விளங்கன்றுக்குப் பாலும் பசும்புல்லும் உணவாம்.

[35]குருதியூற்றுடைமை [36]மறைக்கப்படுநிலை [37]மழமழப்புடைய பக்கங்களுடைமை [38]சமமான பகுதிகள் உடைமை [39]மிகையும் குறைவுமாகவுள்ள தசையுடைமை [40]முதுகென்பும் பக்கங்களும் ஒத்திருத்தல் [41]தோணிபோன்ற முதுகுடைமை என்பன யானையின் [42]தோற்ற இயல்புவகைகளாம்.

---

32 அத்தியராளம் என்பது எட்டுமுழ உயரமுள்ள யானையின் பெயராகும்.

33 முழத்திற்கேற்ப என்றதனால் ஆறுமுழ யானைக்கு முற்கூறிய உணவளவில் ஏழில் ஒருகூறு குறைவாகவும் ஐந்துமுழ உயரமுள்ள யானைக்கு இரண்டு கூறு குறைவாகவும் இருக்கவேண்டும் என்பது கருத்து ; ஏழுமுழ உயரமுள்ள யானை தலையாயது என்று கூறியமையால் ஆறுமுழ உயரமும் ஐந்துமுழ உயரமும் உள்ள யானைகள் முறையே இடையாயதும் கடையாயதுமாம் என்பது புலப்படும். உயரங்களின் குறைவுக்கேற்ப நீளத்திலும் சுற்றளவிலும் குறைவு கணக்கிட்டுக் கொள்ளல்வேண்டும்.

34 விளையாட்டின் நிமித்தம் என்றதனால் தொழினிமித்தம் பிடித்தலாகாது என்பது போதரும்.

35 குருதியூற்றுடைமை—என்புதோலளவிலுள்ள பருவத்தில் இரத்தமூறும் முதனிலை.

36 மறைக்கப்படுநிலை — சிறிது தசைவளர்ச்சியால் என்பு மறையும் நிலை.

37 தசை வளர்ந்து உடலின் பக்கங்கள் ஒளிபொருந்திய நிலை.

38 உறுப்புகளும் தசையும் ஒத்திருக்கும் நிலை.

39 உறுப்புகளும் தசையும் பருத்திருக்கவேண்டிய இடத்தில் பருத்தும் குறைந்திருக்கவேண்டிய இடத்தில் குறைந்தும் இருக்கும் நிலை.

40 முதுகெலும்புக்குச் சமமாக அதனிருமருங்கும் ஒத்திருக்கும் நிலை.

41 முதுகின் இருமருங்கும் உயர முதுகென்பு தாழ்ந்திருக்கும் நிலை.

42 இங்கே கூறப்பட்ட எழுவகை நிலைகளும் இளங்கன்று முதல் கிழப்பருவம் வரை உள்ளனவாய் அழகுசெய்வனவாம்.

சுலோகம்

தலை இடை கடையாய யானைகளுக்கும் [43]கலப்பு யானைகளுக்கும் [11]தோற்றநிலைகளுக்கும் பருவத்திற்கும் (பெரும்பொழுது) ஏற்பத் [45]தொழிற்பயிற்சி செய்வித்தல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பதாம் பிரகரணம்
"யானைத்தலைவன்" என்னும் ஐம்பத்திரண்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[43] கலப்புயானைகள்—தலை இடை கடையாய யானைகளுள் ஒன்று, ஏனைய இருவகை யானைகளோடு கலந்ததனாலுண்டான யானைகள். அவை ஒன்பது வகைப்படும்.

[44] தோற்றநிலைகள்—முற்கூறப்பட்ட எழுவகைகளுமாம்.

[45] தொழில்—போர்செய்தலும் இரதமிழுத்தலும் சுமந்து செல்லலுமாம்.

முப்பதாம் பிரகரணம்—யானைத்தலைவன் :—[1]யானைப்பயிற்சி

ஐம்பத்துமூன்றும் அத்தியாயம்

[2]அடக்கத்தக்கது போர்க்குரியது ஊர்தற்குரியது கொடியது ஆகிய இவற்றைப்பற்றிய தொழிலின் தொகை நான்காம்.

[3]எருத்தேற்றமுடையது [4]தறிக்கட்டுடையது [5]பிடிக்குமிடம் உற்றது [6]பயம்பில் வீழ்ந்தது [7]யானைக்குழுவுட்புக்கது என அடக்கத்தக்கயானை ஐந்து வகைப்படும். அதற்குரிய பணிகள் [8]இளங்கன்றிற்குள்ளபடியாம்.

[9]நிலவெளியிற்றுருவுதல் [10]நிலத்திற்றுருவுதல் [11]செல்லுதல்

53-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] யானைத்தலைவன் என்னும் பிரகரணத்தின் ஒரு கூறு யானைப்பயிற்சி என்பதாகும். யானையைப்பற்றிய செய்தியையே இரண்டு பிரிவாகக் கூறு, தலின் பிரகரணம் ஒன்றாகவும் அத்தியாயம் இரண்டாகவும் வகுக்கப் பட்டன.

[2] அடக்கத்தக்கது முதலியவாக யானைகள் நான்கு வகைப்படும் என்பதும் அவை செய்யும் தொழிலின் முறைகளும் அவற்றிற்குச் செய்யும் பணி முறைகளும் நந்நான்கு வகைப்படும் என்பதும் கருத்து.

[3] அடக்குமுறை ஐந்தனுள் இறுதி தொடங்கித் தொடக்கம்வரை முறையே கூறுகின்றார்; பிடரின்கண் ஏறுதற்குரிய நிலையை அடைந்த தென்பது கருத்து.

[4] தறியிற் கட்டப்படும் நிலையுடையது.

[5] பிடித்தற்கேற்ற இடத்தை எய்தியது.

[6] பயம்பு—யானை படுக்குங் குழி; யானை வீழ்தற்குரியதாகத் தோண்டப்பட்டு புல் முதலியவற்றால் மறைக்கப்பட்ட குழி.

[7] பழக்கப்பட்ட பெண்யானைகளுடன் சேர்ந்து விளையாடும் நிலையில் அக்குழுவுட் புக்கது.

[8] இளங்கன்றிற்குரியன—பால் பசும்புல் கருப்பங்கழி முதலியன.

[9] நிலவெளியிற்றுருவுதல்—பின்னுமுன்னுமுள்ள உறுப்புகளை வளைத்தலும் நிமிர்த்தலும் கொடி கொள்ளி மூங்கில் கயிறு முதலியவற்றை அமைத்துத் தாண்டுதலும் ஆம்.

[10] நிலத்திற்றுருவுதல் — படுத்தலும் இருத்தலும் வரையறைக்கோடு பள்ளம் ஒத்ததல்லாத நிலம் என்னுமிவற்றைக் கடத்தலுமாம்.

[11] செல்லுதல்—நேராகவும் வளைந்தும் குறுக்காகவும் வட்டமாகவும் நிமிர்ந்தும் நடத்தல்.

[12]கொலைகோள் [13]யானைப்போர் [14]நகர்சிதைத்தல் [15]போர் இவ் வேழும் போர்க்குரிய யானையின் செயலாம். [16]பட்டைத்தோலிடு தல் [17]கழுத்தணிகட்டுதல் [18]குழூஉத்தொழிற்பயிற்றல் இவை அதற்குரிய பணிச்செயலாம்.

[19]வழியொழுகுவது[20]வேற்றியானையுடன் சுமப்பது [21]தோரண நிலையுடையது [22]செலவிற்றேர்ந்தது [23]கோலாற் செலுத்தப்படுவது குத்துக்கோலாற் செலுத்தப்படுவது [24]கருவியின்றிச் செலுத்தப் படுவது. [25]தேடற்றொழில் வல்லது என ஊர்தியானை எண்வகைப்

---

[12] கொலைகோள் — துதிக்கை கோடு உடல் என்னுமிவற்றால் தேர் குதிரை காலாள் என்னும் இப்படைகளைக் கொல்லுதலும் பிடித்தலுமாம்.

[13] யானைப்போர்—உணவிடப்பட்ட இடைவேதிகையின் இருமருங்கி னும் நின்று தம்மிற் குறைந்ததும் ஒத்ததுமாகிய யானைகளோடு செய்யும் போர்.

[14] நகர் சிதைத்தல்—கோட்டைவாயில் மதில் அகழி முதலியவற்றை அழித்தல்.

[15] போர்—இரவிலும் பகலிலும் மக்களோடு செய்யும் போர்.

[16] பட்டைத் தோல்—யானையின் முதுகில் விரிக்கப்படும் தோல்.

[17] கழுத்தணி—கழுத்துச் சங்கிலி முதலியன.

[18] குழுவென்பது கிரிசரம் முதலிய கூட்டத்தை உணர்த்தும்; யானை நூலிற் கூறப்பட்டபடி உடலின் முற்கூறு உயர்ந்திருத்தல் பிற்கூறு உயர்ந் திருத்தல் இருகூறும் ஒத்திருத்தல் முதலிய அமைப்புக்களைக்கொண்டு கிரி சரம் வனசரம் நதிசரம் என்னும் மூவகையுள் இஃது இன்ன குழுவைச் சார்ந்ததென அறிந்து அக்குழுவிற்குரிய தொழிலிற் பழக்குதல்.

[19] வழியொழுகுவது—உடலின் முற்கூறு உயர்ந்தும் தாழ்ந்தும் பிற் கூறு உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லுதல் முதலிய யானைச்செலவெல்லாவற் றையும் ஒத்து மேற்கொள்வது.

[20] தனித்தன்றி வேற்றுயானையுடன் கூடிச் சுமப்பதென்பது.

[21] ஓரேபக்கத்தில் எல்லாத் தொழிலையும் செய்வது.

[22] பலவகையான நடையிலும் திறமை வாய்ந்ததென்பது.

[23] கோலால் தட்டிய அளவில் தொழில் செய்வது.

[24] கோல் குத்துக்கோல் முதலியவின்றிக் காலால் தட்டிச் சங்கேதம் செய்த அளவிற் றொழில் செய்வது.

[25] பழக்கப்பட்ட பொருள்களில் ஏவினால் குறிப்பிட்ட பொருளைச் சங்கேதத்தாலறிந்து கொண்டுவர வல்லதென்பது.

படும். [26] எளிதிற்செய்தல் [27]குறைவினை [28]சங்கேதத்தின் நடத்தல் இவை அதற்குச் செய்யவேண்டிய பணிச்செயல்களாம்.

கொடிய யானையின் தொழில் [29]ஒன்றே. அதற்குரிய பணிச் செயல் [30]ஒறுத்தடக்குதலாம். [31]பயிற்சியில் மாறுபாடுடையது [32]சிறையிடப்பட்டது [33]குறும்புசெய்வது மதங்கொண்டது [34]மதத்தால் மயங்கியது [35]மதத்தின் காரணம்அறியப்படாதது (இவை [36]அதன் வகைகளாம்).

கொடிய யானை, [37]செயலால் வெறுக்கத்தக்கதாம். [38]கொலைத் தொழில் வல்லது [39]அலைக்குமியல்பினது [40]குறும்புடையது [41]எல்

---

[26] எளிதிற் செய்தல்—விசேட ஆராய்ச்சியின்றிச் செய்தல். அஃது உடல் பருத்திருப்பின் மெலிவித்தலும் மெலிந்திருப்பின் பருக்கச் செய்தலும் சீரணஆற்றல் குறைந்திருப்பின் மிகுவித்தலும் இயற்கைநிலையிலிருப்பின் அதனைப் பாதுகாத்தலும் என நான்குவகைப்படும் என்பர்.

[27] குறை வினை—உடற்பயிற்சியில்லாத குறையைப் பரிகரித்து அப் பயிற்சியில் ஈடுபடுத்தல்.

[28] குறிப்பிற் பயிற்றல் என்பது.

[29] ஒன்றே என்பது ஈண்டுக் கொடியதொழிலைக் குறிக்கும்.

[30] ஒறுத்தடக்குதல் ஒன்றே அதற்குச்செய்யவேண்டிய செயலாகும் என்பது.

[31] தொழின்முறையிற் பழங்குங்கால் விபரீதமாக நடந்துகொள்வது.

[32] தொழின்முறைக்குப் பயன்படாமை குறித்துச் சிறையிடப்பட்ட தென்பது கருத்து.

[33] தன் விருப்பப்படி நடப்பது.

[34] மதக்களிப்பாலும் உணவின்குற்றத்தாலும் கலக்கமுடையதென்பது.

[35] எப்பொழுதும் மதக்களிப்புடையதாக இருத்தலால் அதற்குரிய காரணம் இன்னதென அறியப்படாததென்பது.

[36] அதன்—கொடிய யானையின்.

[37] செயல்—ஈண்டுக் கொடியதாம்.

[38] கொலைத்தொழில் ஒன்றேவல்லது; இதற்குரியகுற்றங்கள் பதினெண் வகைப்படும் என்ப.

[39] அலைத்தல் ஏனைய பிராணிகளை அச்சுறுத்தி ஓட்டுதல்; இவ்வி யானையைப் பற்றிய குற்றங்கள் பதினைந்துவகைப்படும் என்ப.

[40] குறும்பு—கொலை அலைத்தல் முதலியன. இவ்வியானையைப்பற்றிய குற்றங்கள் முற்கூறிய இரண்டிற்குமுரிய பதினெட்டும் பதினைந்தும் என்ப.

[41] இவ்வியானை மேற்கூறிய குற்றம் முப்பத்துமூன்றனோடு சிறப்பாகப் பத்தொன்பது குற்றங்களும் உடையதென்பது; கொலைத்தொழில் வல்லது முதலிய யானைகளைப்பற்றிய குற்றங்களின் இலக்கணம் இன்னவென யானை நூலில் அறியத்தக்கனவாம்,

லாக் குற்றமுமுடைய கொடியது (இவை அதன் வகைகளாம்).

அவற்றின் கட்டுமுறையும் கருவிகளும் [42]யானைப்பாகன் கூறிய வாறேயாம். கட்டுதற்குரிய பொருள்களாவன—தறி [43]கழுத்தணி பட்டைத்தோல் [44]காலீடு [45]தளை [46]மீக்கயிறு என்பனவாம். கருவிக ளாவன—தோட்டி மூங்கிற்கோல் [47]பொறி முதலியனவாம். அணி கலன்களாவன—[48]கொடி [49]உடுமாலை விரிப்பு [50]கம்பலம் [51]முதலி யன. போரணிகலன்களாவன—கவசம் தோமரம் அம்பறுத்தூணி [52]பொறி முதலியனவாம்.

[53]மருத்துவன் யானைப்பாகன் [54]ஏறுபவன் [55]நூல்வல்லான் யானைகாவலன் [56]பணியாளன் பாகஞ்செய்வோன் புல்லிடுவோன் கால்தளைப்பவன் [57]கொட்டில்காவலன் படுக்கையமைப்போன் முதலியோர் பணிசெய்யும் குழுவினர் ஆவர்.

மருத்துவன் கொட்டில்காவலன் பாகஞ்செய்வோன் என்னு மிவர்கள் ஒருபடி சோறு ஒருகை நேயப்பொருள் இரண்டு பலம்

---

[42] யானையைப் பயிற்றுவதிற் றிறமைவாய்ந்த பாகன் கூறியபடியே செய்யவேண்டும் என்பது.

[43] கழுத்திற் கட்டப்படும் சங்கிலி முதலியன.

[44] காலீடு—கால் மிதித்தேறுதற்குத் தூங்கவிடும் கயிறு.

[45] தளை—காற்சங்கிலி.

[46] மீக்கயிறு—மேலே கட்டுதற்குரிய கயிறு; வயிற்றைச்சுற்றிக் கட்டு தற்குரியதுமாம்.

[47] பொறி—படைக்கல நிலையத் தலைவன் என்னும் 39-ஆம் அத்தியாயத் திற் கூறப்பட்ட பாஞ்சாலிகம் முதலியன.

[48] கொடி—துகிற்பதாகை.

[49] உடுமாலை—நக்ஷத்திரவடிவான மாலை.

[50] பலவகை வண்ணங்களமைந்தது.

[51] முதலியன என்றதனால் சங்கு மணி முதலியனவும் கொள்க.

[52] பொறி—போர்க்குரிய பலவகை யந்திரங்கள்.

[53] மருத்துவன்—யானை வயித்தியன்.

[54] ஏறுபவன்—நூல்பயின்று யானைஏற்றமறிந்தவன்.

[55] நூல்—யானை நூல்.

[56] பணியாளன்—ஈண்டு உடம்புபிடித்தல் எண்ணெய்தேய்த்தல் நீராட் டல் முதலிய செய்பவன்.

[57] கொட்டிலைக்கழுவுதல் பாதுகாத்தல் முதலிய தொழில்புரிவோன்,

அக்காரம் உப்பு இவற்றைக் [58]கொள்ளக்கடவர். மருத்துவன் அல்லாத ஏனையோர் பத்துப்பலம் இறைச்சியும் (கொள்ளக்கடவர்).

நடைநோய் தொழில் மதம் மூப்பு என்னும் இவற்ருல் வாட்டமுற்ற யானைகளுக்கு மருத்துவர் மருத்துவஞ் செய்தல்வேண்டும்.

இடந் தூய்மைசெய்யாமை புல்லிடாமை தரையிற் படுப்பித்தல் [59]தகாத இடத்திற் புடைத்தல் [60]பிறரை ஏற்றுதல் [61]தகாத காலத்திற் செலுத்துதல் [62]தகுதியில்லாத நிலத்துய்த்தல் [63]துறையில்லாவிடத் திறக்குதல் மரஞ்செறிந்த காட்டிலுய்த்தல் என்னுமிவ்வெல்லாம் [64]ஒறுத்தற்குக் காரணங்களாம். [65]இவர்களுடைய உணவு கூலிகளினின்றும் தண்டம் இறுப்பித்தல் வேண்டும்.

சுலோகம்

(1) நான்கு திங்களுக்கு ஒருமுறை [66]பருவச்சந்திகளில் (ஒவ்வொன்ருக) மூன்று [67]ஆலத்தி எடுத்தலும் அமாவாசைதோறும் பூதபலியும் பௌர்ணமிதோறும் [68]முருகன் வழிபாடும் செய்தல் வேண்டும்.

---

[58] ஈண்டுக்கூறிய சோறு முதலியவற்றை யானைக்குக் கொடுக்கப்படும் உணவினின்றும் எடுத்துக்கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[59] தகாத இடம்—யானையின் உறுப்புகளுள் அடிக்கத்தகாத பகுதி.

[60] பிறர்—ஏறத்தகாதவர்.

[61] தகாத காலம்—வரையறுக்கப்படாத காலம்.

[62] தகுதியில்லாத நிலம்—மேடு பள்ளம் சேற்றுநிலம் முதலியன.

[63] துறை—நீர்த்துறை.

[64] ஒறுத்தல், யானைப்பணியாளரையும் யானைத் தலைவனையும் என்பது.

[65] இவர்கள் என்பது பணியாளரையும் யானைத்தலைவனையும் குறிக்கும்.

[66] பருவச்சந்திகளாவன—கார்த்திகை பங்குனி ஆடித் திங்கள்களில் நிகழும் பௌர்ணமிகள்.

[67] யானைகளுக்கு ஆற்றல் மிகவும் தீங்கு நீங்கவும் ஆலத்தி எடுத்தல் வேண்டும் என்பது.

[68] முருகன் படைத்தலைவனுதலின் அவனைப்பற்றிய வழிபாடுவேண்டும் என்பது.

(2) [69]ஆற்றுச்சார்பிற்றோன்றிய யானைகளுக்கு இரண்டரை யாண்டினும் [70]மலைச்சார்பிற்றோன்றிய யானைகளுக்கு ஐந்தாண்டினும் கோட்டின் அடிச்சுற்றளவின் இருமடங்கு விட்டு எஞ்சிய பகுதியைத் துணித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பதாம் பிரகரணம்
"யானைத்தலைவன்—யானைப்பயிற்சி" என்னும் ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[69] ஆற்றுச்சாற்பிற் றோன்றியது—நதிசரம்.

[70] மலைச்சார்பிற் றோன்றியது—கிரிசரம்; இனம்பற்றி வனசரத்தையும் ஈண்டுக் கொள்ளல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

முப்பத்தொன்று, முப்பத்திரண்டு, முப்பத்துமூன்றும் பிரகரணங்கள்—[1]தேர்த்தலைவன்-காலாட்படைத்தலைவன் படைத்தலைவன்தொழின்முறை

ஐம்பத்துநான்காம் அத்தியாயம்

[2]குதிரைத்தலைவனுக்குக் கூறியவாற்றால் தேர்த்தலைவனுக்கும் கூறப்பட்டபடியாம்.

[3]இவன் [4]தேர்த்தொழில்களைச் செய்வித்தல்வேண்டும்.

தேர் [5]பத்தாள் உயரமும் பன்னிரண்டு ஆள் அகலமும் உடையதாம். [6]அதனினின்றும் முறையே [7]ஆறு ஆள் அகலம் வரை

54-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நால்வகைப் படைகளுள் குதிரைப்படை யானைப்படைகளோடு தேர்ப்படை காலாட்படை என்னும் இவையும் ஒத்த இனமாதலின், "யானைத்தலைவன்" என்னும் பிரகரணத்தின் பின் "தேர்த்தலைவன்" "காலாட்படைத்தலைவன்" என்னும் பிரகரணங்களும் இவற்றோடு இயைபுடைமையின் இவற்றின்பின் "படைத்தலைவன் தொழின்முறை" என்னும் பிரகரணமும் வைக்கப்பட்டன ; இவ்வத்தியாயம் மூன்று பிரகரணங்களைத் தன்னுட்கொண்டதாம்.

[2] 'குதிரைத்தலைவன்' என்னும் பிரகரணத்தில் தேர்க்குதிரைகளுக்குக் கூறிய கொட்டிலமைத்தல் உணவுகொடுத்தல் தொழிலியற்றல் நடத்தற்குரிய வழியை ஏற்படுத்தல் கட்டுமுறை கருவிகளைத்தொகுத்துவைத்தல் பணியாளரையமைத்தல் ஆலத்திளெடுத்தல் என்னும் இன்னோரன்ன எல்லாச் செயல்களையும் தேர்த்தலைவனும் மேற்கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[3] இவன் — தேர்த்தலைவன் ; குதிரைத்தலைவனின் செயல்களின்றும் இவனுக்குச் சிறப்பாகவுள்ள தொழிலைக் கூறுகின்றார்.

[4] தேர்த் தொழில்கள்—தேர் அமைத்தல் தேர்அலங்கரித்தல் முதலியன.

[5] ஒரு நிழலாள் உயரம் பன்னிரண்டங்குலம்கொண்ட ஒரு சாணுகும் என்பது முன்னர் (41-ஆம் அத்.) கூறப்பட்டது. பத்து நிழலாள் உயரம் ஐந்துமுழமாகும். ஆகவே ஐந்துமுழ உயரமும் ஆறுமுழ அகலமும் ஆம் என்பது.

[6] அது—பத்தாள் உயரமும் பன்னிரண்டு ஆள் அகலமும் உள்ள தேர்.

[7] ஆறுள் அகலம் வரை குறைதலாவது—முறையே பன்னிரண்டினின்றும் பதினொன்று—பத்து—ஒன்பது—எட்டு—ஏழு—ஆறு ஆள் அகலம் வரை அமைதல்.

ஒவ்வோர் ஆள் அளவு அகலத்திற் குறையுமாற்றால் [8]தேர் எழு வகைப்படும்.

[9]தெய்வத்தேர் [10]மங்கலத்தேர் போர்த்தேர் [11]யாத்திரைத்தேர் [12]பகையரணை முற்றுகையிடுந்தேர் பயிற்றற்குரியதேர் ஆகிய [13]இவற்றைச் செய்வித்தல்வேண்டும்.

அம்பு வில் [14]படைக்கலம் கவசம் [15]கருவி இவற்றின் அமைப்புக் களையும் [16]வலவன் தேரூர்வோன் இவர்களுடையதும் பரியினது மாகிய தொழிலூக்கத்தையும் [17]தொழில் முற்றும்வரை பணி யாளர்களுக்கும் கூலியாட்களுக்கும் உரிய உணவு கூலி இவற்றை யும் [18]தக்கோரைப் [19]புரத்தலையும் செய்கையையும் [20]பொருள் கொடுத்தல் பெருமைப்படுத்தல்களையும் [21]அறிதல்வேண்டும்.

---

[8] இங்ஙனம் குறைந்தஅளவுகளைக் கொண்டுந் தேர் எழுவகைப்படுதல் அறிக; ஈண்டுக்கூறிய அகலக்குறைவுகளுக்கேற்ப உயரத்தையும் அமைத் துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து; இவ்வெழுவகையுள் முன்ன தைத் தலையாயது என்று கூறுவர்.

[9] பயன்படுத்தும் வகையால் தேர்களின் பெயர்வேறுபாடு கூறப்படு கின்றது; தெய்வத்தேர்—திருவிழா முதலிய காலங்களில் தெய்வ உருவத்தை எழுந்தருளப்பண்ணித் திருவீதிகளில் உலாப்போதற்குரியது.

[10] திருமணம் முதலிய நிகழ்ச்சிகளில் மணமக்கள் ஏறி ஊர்வலம் செய்தற்குரியதென்பது.

[11] யாத்திரைத் தேர்—வழிச்செல்லற்குரியது.

[12] பகைவருடைய அரண்களைச் சிதைத்தழிக்குங்கால் பயன்படுத்துந் தேர் என்பது.

[13] இவற்றை—இப்பெயர் உடையவைகளை.

[14] படைக்கலம்—தோமரம் முதலியன.

[15] கருவி—குதிரைக் கடிவாளம் முதலியன.

[16] வலவன்—சாரதி.

[17] தொழில்—தேரமைத்தல் அலங்கரித்தல் முதலியன.

[18] தக்கோர்—தமக்குரிய தொழிலிற்றிறமை படைத்தவர். குதிரையின் உள்ளமறிதல் தேர்நடத்துதல் முதலிய பயிற்சிகளை உபதேசிக்கும் ஆசிரி யருமாவர்.

[19] புரத்தல்—பகைவரால் தீங்குநேராமற் காத்தல்.

[20] பொருள்கொடுத்தலும் பெருமைப்படுத்தலும் தேர்த்தொழிலாளர்க் கென்பது.

[21] அறிதல்—தேர்த்தலைவன் அறிந்து செய்யவேண்டும் என்பது; இவ் வளவில் தேர்த்தலைவனைப்பற்றிய செய்தி முற்றிற்று. இனிக் காலாட் படைத்தலைவன்செயல் கூறப்படும்.

[22]இதனுல் காலாட்படைத் தலைவனுக்கும் கூறியபடியாம். [23]இவன் [24]மூலப்படை கூலிப்படை [25]நாட்டுப்படை துணைப்படை பகைப்படை [26]காட்டுப்படை [27]இவற்றின் மறமிகுதி குறைவுகளை [28]அறிதல்வேண்டும். [29]தாழ்நிலப்போர் [30]நிலப்போர் [31]தெரிநிலைப் போர் [32]மறைவுப்போர் [33]சுரங்கப்போர் [34]மிசைநிலைப்போர் பகற் போர் இராப்போர் என்னும் இவற்றின் [35]பயிற்சிநிலையையும் தொழிலின்கண் விழிப்பு விழிப்பின்மைகளையும் அறிதல்வேண்டும்.

படைத்தலைவன் [36]எல்லாவகைப் போர் முறையினும் படைக்

---

[22] மேதர்த் தலைவனுக்குக் கூறிய அம்பு வில் படைக்கலம் முதலியன அமைத்தலும் தொழிலாக்கமும் உணவுக் கூலிகளும் தக்கோரைப் புரத்தல் பொருள்கொடுத்துப் பெருமைபடுத்தல் முதலியனவும் காலாட்படைத் தலைவனுக்கும் பொருந்தும் என்பது.

[23] இவன்—காலாட்படைத் தலைவன்.

[24] எப்பொழுதும் மூலமாக அமைக்கப்பட்ட படை.

[25] நாட்டுப்படை—நாட்டிலுள்ள படை.

[26] காட்டுப்படை—காடுகாவலனுல் அமைக்கப்பட்ட படை.

[27] இவற்றின்—இவ்வறுவகைப் படையின்.

[28] இன்ன இன்ன இடங்களுக்கு இன்ன இன்ன படைகளைப் பயன் படுத்தலாம் என்பது குறித்துக் காலாட்படைத்தலைவன் அறிந்துகொள்ள வேண்டும் என்பது.

[29] தாழ் நிலம்—புல்லும் நீரும் உள்ள இடம்.

[30] நிலம், ஈண்டு நீரற்ற நிலத்தைக் குறிக்கும்.

[31] தெரிநிலை—எல்லோரும் காணத்தக்க நிலை.

[32] மறைவுப் போர் — வஞ்சகப் போர். இதன் விரிவுகளைப் போரைப் பற்றிய பத்தாம் அதிகரணத்திற் காண்க.

[33] சுரங்கப்போர்—நிலத்தைத்தோண்டி அங்கிருந்து செய்யும் போர்.

[34] மிசைநிலைப் போர் — மதில் முதலியவற்றில் ஏறிநின்று செய்யும் போர்.

[35] காலாட்படைகளுக்குத் தாழ்நிலப்போர் முதலியவற்றிலுள்ள பயிற்சிநிலை முதலியவற்றை அப்படைத்தலைவன் அறிந்துகொள்ளல்வேண் டும் என்பது கருத்து. இவ்வளவில் காலாட்படைத்தலைவன் என்னும் பிரகரணம் முற்றிற்று.

இனிப் படைத்தலைவன்தொழின்முறை என்னும் பிரகரணம் கூறப் படும். இதுகாறும் நால்வகைப் படைகளுக்கும் தனித்தனியாகவுள்ள தலைவரைப்பற்றிக் கூறினர். இனி அந்நான்கிற்கும் பொதுவாகவுள்ள படைத்தலைவன்செயன்முறை கூறப்படுகின்றது.

[36] எல்லாம் என்பது தாழ்நிலப்போர் முதலியவற்றைக் குறிக்கும்; இவ்வடையைப் பின்வரும் படைக்கலம் கல்வி என்பவற்றிற்கும் கொள்ளல் வேண்டும்.

கலன்களினும் [37]கல்வியினும் வல்லவனாகவும் யானை குதிரை தேர் என்னும் இவற்றை [38]நடத்துவதிற் புகழ்பெற்றவனாகவும் நால்வகைப் படைகளின் செயல்களைப் பற்றுக்கோடாகவுள்ள [39]அத்தொழின்முறைகளை அறிந்தவனாகவும் இருத்தல்வேண்டும்.

(தன்) [40]நிலம் [41]போர்க்காலம் பகைப்படை [42]கூடியதுபிரித்தல் [43]பிரிந்ததுபொருத்தல் [44]சேர்ந்ததுபிரித்தல் [45]பிரிந்ததுகோறல் அரணழித்தல் [46]மேற்சேறற்குரிய காலம் என்னும் இவற்றைத் தெரிந்துகோடல் வேண்டும்.

சுலோகம்

படைகளைப் பயிற்றுதலில் வல்ல தலைவன் [47]இருத்தல் செல்லல் [48]தாக்குதல் என்னும் இவற்றின் பொருட்டு இசைக்கருவி [49]குறியீடு கொடி என்னும் இவற்றால் அணிவகுப்பிற்குரிய சங்கேதத்தைக் [50]கற்பித்துக்கொண்டு உணர்த்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பத்தொன்று, முப்பத்திரண்டு, முப்பத்துமூன்றும் பிரகரணங்கள் "தேர்த்தலைவன்-காலாட்படைத் தலைவன்-படைத்தலைவன் தொழின்முறை" என்னும் ஐம்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

37 கல்வி—ஈண்டு ஆன்வீட்சிகீ முதலியன.

38 நடத்துதல்—யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவற்றைப் பயின்று அவற்றைப் போர்முறையிற் பயன்படுத்தல்.

39 அத்தொழின்முறைகளாவன — குதிரைத் தலைவன் முதலிய நால்வகைப் படைத்தலைவர்களின் தொழின்முறை.

40 நிலம்—படைப் பயிற்சிக்குத் தகுதியான இடம்.

41 போர்க்காலம்—தெரிசிலைப்போர் முதலியனசெய்தற்குஏற்ற பருவம்.

42 கூடியது—ஒன்றுசேர்ந்த பகைப்படையின் அணிவகுப்பு.

43 பிரிந்தது பொருத்தல்—பகைவரால் வேறுபடுத்தப்பட்ட தன் படைகளை ஒன்றுசேர்த்தல்.

44 சேர்ந்தது பிரித்தல்—ஒருவருக்கொருவர் துணையாகக் கூடிய பகைப் படையை வேறுபடுத்தல்.

45 அங்ஙனம் வேறுபட்ட படைகளை அழித்தல் என்பது.

46 மேற்சேறல்—போர்குறித்துப் பகைவனை நோக்கிச் செல்லுதல்.

47 இருத்தல்—பகைப் படைகளை நோக்கிச் செல்லாதிருத்தல்.

48 தாக்குதல்—பகைப்படையொடு பொருதல்.

49 குறியீடு—சங்கு சக்கரம் முதலிய அடையாளங்கள்.

50 கற்பித்துணர்த்தல்—வாச்சிய ஒலிகளின் சிறப்பு இயல்புகளைக் கேட்டும் கொடி முதலியவற்றின் சிறப்பியல்புகளைக் கண்டும் இருத்தல் செல்லல் முதலிய செயல்களைத் தன் படைகள் மேற்கொள்ளுதற் பொருட்டுக் கற்பித்துக்கொண்டு குறித்துத் தெரிவித்தல்.

இரண்டாம் அதிகாரணம்—தொழிற்றலைவர் செயன்முறை

முப்பத்துநான்கு, முப்பத்தைந்தாம் பிரகரணங்கள்—
[1]இலச்சினைத்தலைவன்-புன்னிலத்தலைவன்

ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்

[2]இலச்சினைத்தலைவன் [3]ஒரு மாடகத்திற்கு இலச்சினையைக் கொடுக்கக்கடவன்.

இலச்சினையைப் பெற்றவன் [4]நாட்டினுட்புகவும் [5]வெளியேறவும் உரியவனாவான்.

[6]இலச்சினையில்லாத தன்னாட்டினன் பன்னிரண்டு பணம் [7] இறுத்தல்வேண்டும். [8]பொய்யிலச்சினையுடையவன் பூர்வசாகச தண்டம் இறுக்கவேண்டும். [9]அயல்நாட்டினனாயின் உத்தமசாகச தண்டமாம்.

55-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இலச்சினை—விலைப்பண்டம் பத்திரம் முதலியவற்றில் இடுதற்குரிய முத்திரை. இதனியல்பு உல்குபொருட்டலைவன் என்னும் பிரகரணத்திற் கூறப்பட்டது, அதற்குரிய தலைவன்செயல் ஈண்டுக் கூறப்படுகின்றது. நால்வகைப்படைகளுமுடைய அரசியலுச்கு இன்றியமையாதாகலின் அவற்றின் பின் இலச்சினைத்தலைவன் என்னும் இப்பிரகரணம் வைக்கப்பட்டது.

[2] நகரத்தின் உட்புகுவோர் வெளிச்செல்வோர் என்னும் இவர்கள் கள்வரல்லர் பகைவருடைய ஒற்றரல்லர் என்னும் நம்பிக்கையுண்டாதற்பொருட்டுச் சிறுபொருள் பெற்றுக்கொண்டு இலச்சினையை அத்தலைவன் கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

[3] ஒரு மாடகம் என்பது சிறு நாணயமாகும். இதனியல்பை 40ஆம் அத்தியாயத்திற் காண்க.

[4] நாடு—தன் அரசனது.

[5] வெளியேறல்—அந்நாட்டினின்றும் வெளிப்படுதல்.

[6] இலச்சினை பெறுமல் உட்புகுதல் வெளியேறுதல் செய்யின் என்பது.

[7] அயல்நாட்டினன் இலச்சினைபெறுமல் உட்புகுதல் வெளியேறுதல் செய்வானாயின் இத்தண்டத்தினும் சிறிது மிகுதியாக இறுக்கவேண்டும் என்பது கருத்து.

[8] இக்குற்றம் புரியும் அயல்நாட்டினனுக்கு வேறுகத் தண்டம் விதித்திருப்பதால் இது தன்னாட்டினனுக்கென்பது போதரும்.

[9] அயல்நாட்டினன் பொய்யிலச்சினை யுடையானாயின் என்பது. இவ்வளவில் ' இலச்சினைத்தலைவன் ' என்னும் பிரகரணம் முற்றிற்று.

[10]புன்னிலத்தலைவன் [11]இலச்சினையைப் பார்வையிடல் வேண்டும்.

[12]அஞ்சுதற்குரிய இடங்களிற் புன்னிலத்தை ஏற்படுத்தல் வேண்டும். கள்வராலும் கொடிய உயிர்களாலும் ஏற்படும் அச்சங் காரணமாகப் பள்ளநிலம் காடு இவற்றை [13]ஆராய்ந்துகொள்ளல் வேண்டும்.

நீரற்ற நிலத்தில் கேணி [14]அணைக்கட்டு [15]சிற்றூற்று என்னும் இவற்றையும் மலர்ப்பொழில் பழத்தோட்டம் [16]இவற்றையும் ஏற்படுத்தல்வேண்டும்.

வேட்டுவரும் நாய்க்கூட்டமுடையோரும் காடுகளில் [17]சுற்றித் திரிதல்வேண்டும். கள்வரும் பகைவரும் வரக்கண்டால் மலையிலும் மரத்திலும் ஏறிக்கொண்டவராகவாதல் விரைந்துசெல்லும்

---

10 இனிப் புன்னிலத்தலைவன் என்னும் பிரகரணம் கூறப்படும். புன்னிலமாவது ஆனினம் முதலியன மேய்தற்குரிய நிலமாம். இலச்சினைத் தலைவனால் தண்டிக்கத்தக்க இலச்சினைபெறுதாரும் பொய்யிலச்சினையுடையாரும் பெரும்பாலும் நேர்வழியில் செல்லாமல் புன்னிலங்களிலுள்ள குறுக்குவழியாகச் செல்லக்கூடுமாதலால் அன்னாரைப் புன்னிலத் தலைவன் தானேயாதல் தன் பணியாளரைக் கொண்டாதல் பிடித்து இலச்சினைத் தலைவன்பாற் சேர்ப்பிக்கவேண்டும். ஆதலால் இலச்சினைத்தலைவன்என்னும் பிரகரணத்தின் பின் இது வைக்கப்பட்டது: இதனாற் பிரகரண இயைபு புலனாதலறிக. இவ்வியைபால் இவ்விரண்டு பிரகரணங்களையும் தன்னுட் கொண்டது இவ்வத்தியாயம் ஆகும்.

11 புன்னிலம் வழியாகச் செல்வோர் முத்திரையுடையரா? இல்லையா? என்பதை ஆராய்ந்து அறியவேண்டும் என்பது கருத்து.

12 அஞ்சுதற்குரிய இடங்கள்—கள்வர், பகைவர், ஒற்றர் என்னும் இவர்களுடைய போக்குவரவு நேர்தற்குரிய நிலங்கள்; இத்தகைய நிலம் உழவுக்குரியதாயினும் அஃதில்லாததாயினும் அவ்விடத்தில் புன்னிலம் அமைத்தல்வேண்டும் என்பது கருத்து.

13 ஆராய்தல்—கள்வரும் கொடிய விலங்குகளும் அவ்விடத்தில் இருக்கக்கூடும் என்னும் ஐயுறவால் அடிக்கடி பரிசோதிக்கவேண்டும் என்பது.

14 அணைக்கட்டு—நீர்தேங்குதற்குரிய கம்மாய் ஏரி முதலியன.

15 சிற்றூற்று—அவ்வப்போது தோண்டி உபயோகப்படுத்துஞ் சிறு கிணறுகள்.

16 உம்மையால் தண்ணீர்ப்பந்தரும் நிறுவவேண்டும் என்பது.

17 கள்வர் பகைவர் முதலியோர் உட்புகாமலும் புகுந்திருப்பின் அறிந்து கொள்ளுதற்கும் நாற்புறமும் சுற்றிப்பார்க்கவேண்டும் என்பது கருத்து.

ஊர்தியையுடையவராகவாதல் அவர் காணுவாறு மறைந்திருந்து [18]சங்கு பறை என்னும் இவற்றை முழக்குதல்வேண்டும்.

காடுகளில் பகைவர் [19]வழங்குதலை [20]இலச்சினையுடைய வீட்டுப் புறுக்களாலாதல் [21]புகை நெருப்புக்களின் [22]வரிசையினுலாதல் [23]அரசனுக்கு அறிவித்தல்வேண்டும்.

சுலோகம்

பயன்மரக்காடு யானைக்காடு இவற்றிற் கிடைக்கும் [24]பயன்படுபொருள் [25]வழிக்கூலி [26]கள்வரிற்காத்தல் [27]வாணிகக்குழு உய்த்தற்கூலி ஆனிரை காத்தற்கூலி [28]கொள்ளல் விற்றல் என்னும் இவற்றையும் கண்காணித்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பத்துநான்கு, முப்பத்தைந்தாம் பிரகரணங்கள்

“ இலச்சினைத்தலைவன்-புன்னிலத்தலைவன் ” என்னும் ஐம்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

18 கள்வர் முதலியோரின் வரவை எல்லைகாவலர் முதலியோர்க்கு அறிவித்தற்பொருட்டுச் சங்கு முதலியவற்றை ஒலிக்கவேண்டும் என்பது.

19 வழங்குதல், வேட்டை முதலியன குறித்து.

20 இலச்சினை, ஈண்டு அதனையுடைய ஓலையைக் குறிக்கும்.

21 பகலில் புகையினுலும் இரவில் நெருப்பினுலும் அறிவித்தல்வேண்டும் என்பது.

22 வரிசையினுல் அறிவித்தலாவது காட்டினின்றும் தானீயம் என்னும் தலைநகரம் வரை ஒவ்வொரு குரோசத்திற்கும் பணியாளர் ஒவ்வொருவராக நின்று புகை நெருப்புக்களைக் கண்டவுடன் முதலில் நிற்பவன் இரண்டாமவனுக்கும் அவன் மூன்றுமவனுக்குமாக இங்ஙனம் பரம்பரையாகப் புகை நெருப்புக்களையுண்டாக்கி அறிவித்தல்.

23 அரசன்—தானீயம் என்னும் தலைநகரத்திலிருக்கும் அரசியல் வினைஞன்.

24 பயன்படுபொருள் — குப்பியத்தலைவன் யானைத்தலைவன் என்னும் இவர்களால் கொள்ளப்பட்டனபோக எஞ்சிய புல் விறகு கரி முதலியன.

25 வழிக் கூலி—காட்டுவழியைக் கடத்தற்கு வழிப்போக்கர்களிடத்தினின்றும் பெறுங் கூலி.

26 கள்வராற்றுன்பம் நேராமல் காத்தற்குப்பெறுங் கூலி.

27 வாணிகக் கூட்டத்தார்க்குப் பொருட்கேடு அச்சம் நேராமல் துணையாகச் செல்லுதற்குப் பெறுங் கூலி.

28 புல் விறகு கரி முதலியவற்றைக்கொண்டு விற்றல் என்பது.

முப்பத்தாறு, முப்பத்தேழாம் பிரகரணங்கள்— [1]நாட்டுவருவாய்த் தலைவன்செயல்-இன்னிலை-வாணிகத் தவக்குறியினராக ஒற்றரை அமைத்தல்

ஐம்பத்தாரும் அத்தியாயம்

நாட்டுவருவாய்த்தலைவன் நாட்டை நான்குகூறுகப் பிரித்துத் [2]தலை இடை கடையென வகுத்து [3]இறையிலியினதும் [4]படைக்கல விறை [5]கூலவிறை [6]ஆனிறை [7]பணவிறை [8]குப்பியப்பொருளிறை [9]ஊழியவிறை என்னும் இவ்வாற்றால் இறை இறுக்கும் கிராமங்க

56-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நாட்டுவருவாய் என்பது உபலக்கணத்தால் அரண் சுரங்கம் அணை காடு என்னும் இவற்றினுலும் வாணிகத் தொழிலாலும் கிடைக்கும் ஊதியப்பொருளையும் குறிக்கும்; செயல்—எல்லாநாடுகளிலுமுள்ள வருவாய் நிலையங்களைப்பற்றி ஆராய்தல். இதுகாறும் ஒவ்வொரு பொருட்குமுரிய தலைவனைப்பற்றிக் கூறினார்; இனி எல்லாவகைப் பொருட்குமுரிய தலைவனைப் பற்றிக் கூறத்தொடங்குகின்றார் ; இதனாற் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] குடிகளின் மிகுதி குறைவு குறித்தும் வளத்தின் மிகுதி குறைவு குறித்தும் தலை இடை கடையென வகுக்கப்படும் என்பது கருத்து.

[3] இறையிலி—இறைப்பொருளின்றித் தானமாகக் கொடுக்கப்பட்டது.

[4] படைக்கலவிறை — இறைப்பொருளாகப் படைக்கலங்களை ஆக்கிக் கொடுக்கும் கிராமம்.

[5] கூல விறை — இறைப்பொருளாகத் தானியங்களைக் கொடுக்கும் கிராமம்.

[6] இறைப்பொருளாகப் பசுக்களைக் கொடுக்குங் கிராமம்.

[7] பணவிறை—இறைப்பொருளாகப் பொன் வெள்ளி நாணயங்களைக் கொடுக்குங் கிராமம்.

[8] இறைப்பொருளாகக் குப்பியப் பொருள்களைக் கொடுக்குங் கிராமம்.

[9] இறைப்பொருளுக்குப் பணிசெய்யும் கிராமம்.

ளினதும் ஆகிய [10]அளவைகளை [11] இஃது [12]இத்தகையது என்று எழுதுதல்வேண்டும்.

[13]அவனது ஆணைபெற்ற [14]கோபன் என்பவன் [15]ஐந்து கிராமங்களையாதல் பத்துக்கிராமங்களையாதல் கண்காணிக்கக்கடவன்.

[16]எல்லையை அறுதியிடுதலால் கிராமத்தின் அளவையும் [17]உழுநிலம் [18]உழா (துபயன்றரு) நிலம் [19]வறுநிலம் [20]கழனி [21]உபவனம் [22]தோட்டம் [23]சிறுமரக்கா [24]காடு [25]மனையிடம் [26]கடவுண்மரப்

---

10 அளவை—இன்ன இன்ன கிராமம் இன்ன இன்ன இறை இறுப்பது எனத் தனித் தனியாகவும் ஒரேவகையான இறை இறுப்பன பலவாயின் அவற்றைத் தொகுதியாகவும் எல்லாவற்றையும் கூட்டியும் கணக்கிட்டுக் கொள்ளல்.

11 ஒன்றாயின் இஃது இத்தகையதென்றும் பலவாயின் இவை இத்தகையன என்றும் எழுதுதல்வேண்டும் என்பது.

12 இத்தகையது அல்லது இத்தகையன என்பது படைக்கலம் முதலியவற்றால் கிராமம் நாட்டிற்கு இத்துணை வருவாய் தரத்தக்கது அல்லது தரத்தக்கன என்பதைக் குறிக்கும்.

13 அவன்—நாட்டுவருவாய்த்தலைவன்; நான்கு கூறாக வகுக்கப்பட்ட நாட்டின் ஒவ்வொரு கூற்றிலுமுள்ள கிராமங்களைப் பிரித்துக் கண்காணிக்கும் முறையைக் கூறுகின்றார்.

14 கோபன் என்பது கண்காணிக்கும் பதவிபற்றி வந்தபெயர்.

15 தலையாய கிராமங்களாயின் ஐந்தும் கடையாய கிராமங்களாயின் பத்தும் எனக் கொள்ளல்வேண்டும்; இங்ஙனம் கொள்ளவே இடையாய கிராமங்களாயின் ஆறுமுதலாகக் கொள்ளல்வேண்டும் என்பது போதரும்.

16 எல்லையை அறுதியிடுதலாவது — ஒரு கிராமத்தின் நான்கெல்லை இணையவென்று மலை ஆறு முதலியனகொண்டு வரையறுத்தல்.

17 உழுது நெல் முதலியன விளைவிக்கும் வயல்.

18 உழாமற் குளநெல் விளைவிக்கும் வயல்.

19 பயிரிடப்படாத நிலம்.

20 கழனி என்பது பொதுவாக வயல் நிலத்தைக் குறிக்கும்.

21 உபவனம்—இல்லத்தை அடுத்து உண்டாக்கப்படும் மலர்வனம்.

22 வாழைத்தோட்டம் முதலியனவாம்.

23 சிறிய மரங்களையுடைய சோலை.

24 கிராமத்தில் வாழும் மக்களுக்குப் பயன்படும் பெருமரங்கள் செறிந்த காடு.

25 குடியிருத்தற்குரிய இடம்.

26 கிராம தேவதைகள் அதிட்டித்து நிற்கும் மரம்.

திருக்கோயில் அணைக்கட்டு சுடலை [27]அறக்கோட்டம் தண்ணீர்ப் பந்தர் புண்ணியதலம் புன்னிலம் [28]வழியிடம் என்னும் இவற்றைக் கணக்கிடுதல்முகமாக நிலத்தின் அளவையும் [29]அதனால் [30]எல்லைக்குள் நிலத்திற்கும் உள்ள தொலைவு [31]காடு [32]வழி [33]அளவு [34]தானம் [35]விலைக்குக்கொண்டது [36]உதவியது இறையிலி ஆகிய இவற்றையும் [37]இறையிலா வீடு இறையுடைய வீடு இவற்றையும் கணித்து எழுதல்வேண்டும்.

[38]அவற்றுள், நாற்பாற் குலத்தினர் இத்துணையர் உழவர் ஆயர் வணிகர் காருகர் தொழிலாளர் அடிமை இவர்கள் [39]இத்துணையர் எனவும், [40]இருகாலுயிர் நாற்காலுயிர் [41]இத்துணைய எனவும் பணம் ஊழியம் உல்கு [42]தண்டம் ஆகிய வருவாய் [43]இத்துணைய எனவும் கணக்கிடுதல்வேண்டும்.

குடும்பங்களிலுள்ள மகளிர் ஆடவர் என்னும் இவர்களுடைய

---

27 அறக்கோட்டம்—சோறு வழங்குமிடம்.

28 வழியிடம்—வண்டி செல்லுதற்கும் மக்கள் நடந்து செல்லுதற்கும் உரிய நடைவழி.

29 அதனால்—உழுநிலம் முதலியவற்றின் எண்களைக் கணக்கிடுதலால்.

30 எல்லை—மலை ஆறு முதலியன.

31 காடு—ஈண்டுப் பயன்படாத வனம்.

32 ஈண்டு வழி என்பது, உழுநிலம் தோட்டம் முதலியவற்றிற்குச் செல்லும் நடைவழியைக் குறிக்கும்.

33 அளவென்பது, ஈண்டு உழுநிலம் முதலியவற்றின் அளவைக் குறிக்கும்.

34 தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்.

35 விலைகொடுத்துக் கொள்ளப்பட்ட நிலம்.

36 உதவியது—பயிர்த்தொழில் செய்வார்க்கு உதவியாக விடப்பட்டது.

37 இறையிலாவீடு—வீட்டிற்குரிய அரசிறை கொடாமல் மக்கள் குடியிருக்கும் வீடு.

38 அவற்றுள்—அவ்வில்லங்களில்.

39 இத்துணையர் வாழ்கின்றனர் என்பது.

40 இருகாலுயிர்—கோழி புறா முதலியன.

41 இத்துணைய வாழ்கின்றன என்பது.

42 தண்டம்—தண்டமாக வாங்கப்பட்ட பொருள்.

43 இத்துணைய எனவும்—ஓராண்டிற்கு இவ்வளவு வருகின்றன எனவும்.

[44]இளமை மூப்பு தொழில் [45]வரலாறு [46]வரவு செலவு இவற்றின் அளவைத் [17]தெரிந்துகொள்ளல்வேண்டும்.

[18]இங்ஙனம் நாட்டின் நான்கில் ஒரு கூற்றைத் [19]தானிகன் என்பான் கண்காணித்தல்வேண்டும்.

கோபன் தானிகன் என்னும் [50]இவர்களிடங்களிலுள்ள கீழ் அதிகாரிகள் [51]தொழில்புரிதலையும் [52]பலிகொள்ளுதலையும் செய்தல் வேண்டும்.

---

44 இளமை மூப்பென்பன அவ்வப் பருவமுடையாரைக் குறிக்கும்.

45 வரலாறு—தேசாசாரம் சாதியாசாரம் முதலியன.

46 வரவு செலவு என்பன ஒவ்வொரு குடும்பத்திற்கு முரியவை.

17 கோபன் தெரிந்துகொள்ளல் வேண்டும் என்பது.

18 இங்ஙனம்—மேற்கண்டவாறே.

19 தானிகன் என்பான் நாட்டின் நான்கில் ஒருகூற்றைக் கண்காணிப் போன்.

50 இவர்கள் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் என்பது.

51 தொழில்—பகைகளைதல் முதலியன.

52 பலி கொள்ளுதல்—அரசிறை கோடல்; கோடல் என்னும் சொல் லாற்றலால் தாமே கொடாதவரிடத்தினின்றும் வலிந்து வாங்குதல் என்பது போதரும். "பலி" என்னும் மூலத்திற்கு ஆற்றலுடையார் எனப் பொருள்கொண்டு அரசிறை கொள்ளுதற்குத் தடைசெய்பவர் எனவும் அவர்களைத் தானிகன் கோபன் என்னுமிருவர்க்கும் அடங்கி நடக்கும்படி செய்யவேண்டும் எனவும் ஒருசாரார் கூறுப.

இவ்வளவில் நாட்டுவருவாய்த் தலைவன்செயல் என்னும் பிரகரணம் முற்றிற்று. இனி இன்னிலை வாணிகத் தவக்குறியினராக ஒற்றரையமைத் தல் என்னும் பிரகரணம் கூறப்படும். முதல் அதிகரணம் பதினேராம் அத்தியாயத்தில் ஒற்றரையமைத்தல் என்பதுபற்றி விளக்கமாகக் கூறப் பட்டுளது. ஆண்டுக் காபடிகன் உதாத்திதன் கிருகபதிகன் வைதேககன் தாபதன் என ஒற்றரை ஐந்து வகைப்படுத்துக் கூறியுள்ளார். அவ்வைவகை ஒற்றருள் சிறப்புப்பற்றிக் கிருகபதிகன் முதலிய மூவரும் இங்கே கூறப் பட்டனர் எனினும் அரசியல்வினைக்கு அவரோடு ஒத்தவராதலின் ஏனையிரு வரும் உபலக்கணத்தால் கொள்ளப்படுவர். கிராமத்திலும் நாட்டிலும் நிகழும் செய்திகளை மறைவாக அறிந்துகோடற்கும் நாட்டுத்தலைவன் விரும் பியபடி கோபன் தானிகன் என்னும் இவர்களுடைய செயல்முறைகளை ஆராய்ந்தறிதற் பொருட்டும் நாட்டுத்தலைவன் செயலுக்கு ஒற்றரையமைத் தல் அங்கமாகும். ஆதலின் நாட்டு வருவாய்த்தலைவன் என்பதன்பின் இப் பிரகரணம் வைக்கப்பட்டது. இதனால் பிரகரணவியைபு புலனுதலறிக.

நாட்டு வருவாய்த்தலைவனால் நியமனஞ்செய்யப்பட்ட இன்னிலையினரின் [53]உருக்கொண்டவர்கள் தாம் ஏவப்பட்டிருக்கின்ற கிராமங்களிலுள்ள [54]நிலம் வீடு குடி இவற்றின் [55]அளவினை அறிந்துகொள்ளுதல் வேண்டும். [56]அளவினாலும் விளைவினாலும் நிலத்தையும் [57]இறை இறையின்மைகளால் வீடுகளையும் [58]சாதி தொழில் இவற்றால் குடிகளையும் அக்குடிகளினுடைய [59]இயங்கு பொருளின் அளவையும் வருவாய் செலவுகளையும் அறிதல் வேண்டும். [60]வெளியேறினவர்கள் [61]உள் நுழைந்தவர்கள் இழிந்தவர்களாகிய [62]ஆடவர் [63]பெண்டிர் என்னும் இவர்களுடைய போக்குவரவின் காரணங்களையும் [64]ஒற்றர்களுடைய செயல்களையும் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

---

[53] உருக்கொண்ட ஒற்றர்கள் என்பது.

[54] நிலம்—விளைநிலம்.

[55] அளவு—நிலம் வீடு குடி என்னும் இவை தனித்தனி இவ்வளவு என்னும் அளவு.

[56] நீள அகலங்களின் அளவு இத்துணை எனவும் விளைபொருளின் அளவு இத்துணை எனவும் கணக்கிட்டு அதனால் நிலவளவை அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது.

[57] இறையுள்ளன இத்துணைய இறையில்லாதன இத்துணைய என்று கணக்கிட்டு அதனால் வீடுகளின் அளவை அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது.

[58] அந்தணர் அரசர் முதலிய சாதியினர் இத்துணையர் அவர்தம் தொழில்கள் இன்ன எனக் கணக்கிட்டு அதனாற் குடிகளின் அளவை அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது.

[59] ஒவ்வொரு குடும்பத்தினும் மக்கள் இத்துணையர் ஆடுமாடுகள் இத்துணைய என்னும் அளவினையும் அக் குடும்பத்தினரின் வரவு செலவுகளையும் அறிந்துகொள்ளல் வேண்டும் என்பது.

[60] தம் பார்வையிலுள்ள கிராமத்தினின்றும் வேற்றிடத்தில் தங்குவதற்குச் சென்றவர்களும் இங்கு ஓரிடத்தில் தங்குதற்கு வந்து மீண்டும் வேற்றிடத்திற் றங்குதற்குச் சென்றவர்களும் வெளியேறினவர் ஆவார்கள்.

[61] வேற்றிடத்தினின்றும் இங்கே தங்குதற்கு வந்தவர்களும் வேற்றிடத்தில் தங்குதற்குச் சென்று மீண்டும் இங்கே திரும்பினவர்களும் உள் நுழைந்தவர் ஆவார்கள்.

[62] ஆடவர்—நடன் விடன் முதலியோர்.

[63] பெண்டிர்—ஆடல்மகள் வியபிசாரமுடையவள் முதலியோர்.

[64] ஒற்றர்—கண்டுப் பகைவரா துய்க்கப்பட்டோர்.

இங்ஙனமே [65]வணிக உருவினர் தம் நாட்டிலுள்ள [66]ஆகரம் [67]அணை [68]காடு [69]தொழில் [70]நிலம் என்னும் இவற்றிலுண்டான அரசனுக்குரிய விலைப்பொருள்களின் அளவையும் பெறுமானத்தையும் அறிந்துகொள்ளல் வேண்டும். வேற்றுநாட்டிற் றோன்றினவும் [71]நீர்வழியாகவும் நிலவழியாகவும் வந்தனவும் [72]உயர்ந்தனவும் [73]தாழ்ந்தனவும் ஆகிய விலைப்பண்டங்களைக் கொள்ளல் விற்றல்களிலும் (அவற்றின் அளவு பெறுமானங்களை அறிதல் வேண்டும்). [74]உல்குபொருள் [75]வழியிறை [76]உய்த்தற்கூலி [77]குழூஉக்கூலி மரக்கலக்கூலி [78]கூறு [79]உணவுச்செலவு [80]அங்காடிக்கூலி இவற்றின் அளவையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

இங்ஙனமே நாட்டு வருவாய்த்தலைவனால் நியமிக்கப்பட்ட [81]தவவுருவினர் உழவர் ஆயர் வணிகர் [82]தலைவர் என்னும் இவர்களுடைய தூய்மை தூய்மையின்மைகளை அறிதல்வேண்டும். [83]பழைய கள்வர் உருவினராகிய [84]மாணுக்கர்கள் கோயில் [85]சதுக்

---

65 வணிக உருவினராகிய ஒற்றர் என்பது.

66 ஆகரத்திலுண்டாகும் பொருள்—வயிரம் மணி முதலியன.

67 அணைக்கட்டிலுண்டாகும் பொருள்—மீன் முதலியன.

68 காட்டிலுண்டாகும் பொருள்—மரம் முதலியன.

69 தொழில்—ஈண்டுப் பலவகைத் தொழில்களையும் குறிக்கும்.

70 நிலத்திலுண்டாகும் பொருள்கள்—நெல் முதலிய கூலங்கள்.

71 கலத்தினும் காலினும் தந்நாட்டிற்குவந்த பொருள்கள் என்பது.

72 உயர்ந்தன—மணி பொன் முதலியன.

73 தாழ்ந்தன—காய் கனி முதலியன.

74 உல்குபொருள்—பண்டங்களுக்கு இறையாய பொருள்.

75 வழியிறை—இஃது எல்லைகாவலனுக்குக் கொடுக்கவேண்டியது.

76 உய்த்தற் கூலி — வாணிகத் தொழிலாளர்களை அவ்வவர் செல்லவேண்டிய இடத்திற்குத் துணைபுரிந்து செலுத்தியதாற் பெறுங்கூலி.

77 குழூஉக்கூலி—காவற் கூட்டத்திற்குக் கொடுக்குங் கூலி.

78 கூறு—கூட்டுத் தொழில்புரிந்தோர் பகிர்ந்துகொள்ளும் பொருள்.

79 உணவுச் செலவு—தொழிலாளர் முதலியோர்க்கும் எருது முதலியவற்றிற்கும் உணவின் நிமித்தம் உண்டாகிய செலவுப்பொருள்.

80 அங்காடிக் கூலி — கடைத்தெருவிலுள்ள வீடுகளினின்றும் கிடைக்கும் கூலி.

81 தவவுருவினராகிய ஒற்றர் என்க.

82 தலைவர்—கோபன் தானிகன் முதலியோர்.

83 பழைய கள்வர்—நெடுநாள் களவுத்தொழிலிற் பழகியவர்கள்.

84 மாணுக்கர்—தவவுருவினராகிய ஒற்றர்களின் மாணவர்.

85 சதுக்கம்—நான்கு தெருக்களும் ஒன்றுகூடும் இடம்.

கம் [86]பாழிடம் கேணி யாறு [87]நீர்த்தொட்டி புண்ணிய நீர்த்துறை முனிவரிருக்கை [88]காடு மலைக்காடு பெருங்காடு இவ்விடங்களி லிருந்து கள்வர் [89]பகைவரைச் சார்ந்தார் தறுகண்மறவர் என்னும் இவர்களின் [90]வருகை இருப்பு செல்கைகளின் [91]பயனை அறிதல் வேண்டும்.

சுலோகம்

இங்ஙனம் நாட்டு வருவாய்த்தலைவன் நாட்டை விழிப்புடன் [92]கண்காணிக்கக் கடவன். [93]ஒற்றர்களும் நன்கு [94]ஆராய்ந்தறிதல் வேண்டும். அவ்வொற்றர்களையும் [95]அவ்வவ்வுருக்கொண்ட பிற ஒற்றர் ஒற்றியறிதல் வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பத்தாறு, முப்பத்தேழாம் பிரகரணங்கள் "நாட்டுவருவாய்த் தலைவன்செயல்-இன்னிலை-வாணிகத் தவக்குறியினராக ஒற்றரை அமைத்தல்" என்னும் ஐம்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

86 பாழிடம்—மாந்தர் வழங்காத இடம்.

87 நீர்த்தொட்டி, கேணிக்கு அருகிலுள்ளது.

88 காடு என்பது ஈண்டுத் தவம்புரிதற்குரிய வனத்தையுணர்த்தும்.

89 பகைவரைச் சார்ந்தோர்—நஞ்சிடுதல் முதலிய கொடுந்தொழில் புரிவோர்.

90 இன்னகாலத்தில் இன்ன இடத்தில் வந்தனர் இருந்தனர் சென்றனர் என்பது.

91 பயன்—வருதல் இருத்தல் செல்லுதலால் விளைவது.

92 கோபன் தானிகன் என்னுமிவர்களைத் துணையாகக்கொண்டு கண்காணிக்கவேண்டும் என்பது.

93 ஒற்றர்கள்—நாட்டுவருவாய்த்தலைவனால் நியமிக்கப்பட்ட இன்னிலை உருவினர் முதலியோர்; உம்மையால் கோபன் தானிகன் என்பாரும் ஆராய்ந்தறியவேண்டும் என்பது.

94 நாட்டை ஆராய்ந்தறிதல்வேண்டும் என்பது.

95 இன்னிலை உருவினனாகிய ஓர் ஒற்றன் அவ்வுருக்கொண்ட மற்றோர் ஒற்றனையும் வாணிக உருவினன் அவ்வுருக்கொண்ட மற்றோர் ஒற்றரையும் அவ்வண்ணமே ஏனைய உருவினரும் அவ்வவ் வுருக்கொண்ட ஒற்றரையும் ஒற்றியறிதல்வேண்டும் என்பது கருத்து; அரசியல் வினைஞர் பெரும்பாலும் பொருளாசையால் அரசனுடைய பொருட்குக் கேடும் குடிகளுக்குத் துன்பமும் விளைக்கக்கூடும் என்னும் எண்ணத்தால் அவர்தம் செயல்களை நாட்டு வருவாய்த்தலைவன் நாடோறும் விழிப்புடனிருந்து மேற்கூறியவாறு ஒற்றர்களைக்கொண்டு ஒற்றியறிந்துகொள்ளல்வேண்டும் என்பதாம்,

இரண்டாம் அதிகாரணம்--தொழிற்றலைவர் செயன்முறை

முப்பத்தெட்டாம் பிரகரணம்—[1]நகரத்தலைவன்செயல்

ஐம்பத்தேழாம் அத்தியாயம்

[2]நாட்டுவருவாய்த் தலைவனைப்போல் நகரத்தலைவன் நகரத்தைக் கண்காணித்தல்வேண்டும். கோபன் [3]பத்துக்குடியையாதல் இருபது குடியையாதல் நாற்பது குடியையாதல் கண்காணித்தல் வேண்டும். [4]அவன் [5]அக்குடிகளிலுள்ள மகளிர் ஆடவர்களுடைய சாதி குலம் பெயர் தொழில் இவற்றால் மக்களின் தொகையையும் வரவு செலவுகளையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

[6]இங்ஙனமே தானிகன் என்பான் அரணகத்து நான்கிலொரு கூற்றைக் கண்காணித்தல் வேண்டும்.

அறக்கோட்டத் தலைவர்கள் [7]பாசண்டிகளையும் வழிப்போக்கர்

57-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசியற்கு முற்கூறப்பட்டபடி பலவகை நெறிகளாலும் வரும் பொருள்களைப் பாதுகாத்தல் அவ்வருவாய்க்குரிய இடத்தைப் பற்றியதாகலானும் அவ்விடங்களுட் சிறந்தது தானீயமென்னும் தலைநகரம் ஆதலானும் அந்நகரப் பாதுகாப்பு இதன்கட் கூறப்படுதலானும் இஃது இவ்வதிகரணத் திறுதியில் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரண வியைபு புலனாதலறிக.

[2] நாட்டுவருவாய்த்தலைவன் நாட்டை நான்கு கூறாக்கிக் கோபன் தானிகன் என்னுமிவர்களைத் துணைக்கொண்டு கண்காணித்தல் போல நகரத்தலைவனும் தானீயம் என்னும் நகரத்தை நான்குகூறாக்கித் தனக்குள் கோபன் தானிகன் என்னும் இவர்களைத் துணைக்கொண்டு கண்காணித்தல் வேண்டும் என்பது.

[3] தலையாய குடிகளாயின் பத்துக்குடிகளையும் இடையாயதாயின் இருபது குடிகளையும் கடையாயதாயின் நாற்பது குடிகளையும் என்பது கருத்து.

[4] அவன்—கோபன்.

[5] அக்குடிகள்—கண்காணிப்பிற்கு உட்பட்ட குடிகள்.

[6] இங்ஙனம் பத்துக்குடிகள் முதலியவற்றிலுள்ள ஆடவர் மகளிரின் தொகை வரவு செலவுகளைக் கோபன் கண்காணித்தல் போல அரணுக் குட்பட்ட தானீயம் என்னும் நகரத்தின் நான்கில் ஒரு கூற்றிலுள்ள ஆடவர் மகளிரின் தொகைகளையும் அவர்தம் வரவுசெலவுகளையும் தானிகன் கண்காணிக்கவேண்டும் என்பது; தானீயமென்னும் நகரத்தின் நான்கில் ஒரு கூற்றைக் கண்காணிப்பவன் தானிகன் என்று கூறப்படுவான்.

[7] பாசண்டர்—வேதத்திற்குப் புறம்பான சமயக்கொள்கையாளர்.

களையும் [8]அறிவித்துத் தங்கும்படி செய்தல்வேண்டும். [9]தந்நம்பிக்கைக்குரிய துறவிகளையும் வேதியர்களையும் (தாமே) தங்கும்படி செய்தல்வேண்டும்.

காருகர்களும் சிற்பிகளும் தம்முடைய தொழிலிடங்களில் [10]தம்மைச் சார்ந்தவர்களை இருப்பித்தல் வேண்டும். வணிகர்கள் தம்முள் [11]ஒருவரையொருவர் தந்தொழிலிடங்களில் (இருப்பித்தல் வேண்டும்). [12]காலம் இடம் இவற்றைக்கடந்து பண்டங்களை [13]விற்பவனையும் [14]தனக்குரியதல்லாததை விற்பவனையும் [15]அறிவித்தல்வேண்டும்.

கள்விற்போர் பக்குவஞ் செய்யப்பட்ட இறைச்சியை விற்போர் சோறுவிற்போர் வரைவின்மகளிர் ஆகிய இவர்கள் [16]தமக்கு அறிமுகமானவர்களை [17]இருக்கச்செய்யவேண்டும். [18]மிகையாகச் செலவுசெய்வோரையும் [19]தகாதசெயல்செய்வோரையும் [20]அறிவித்தல்வேண்டும்.

---

[8] அறிவித்தல்—கோபனுக்கென்பது.

[9] அறக்கோட்டத் தலைவர் தாமே ஆராய்ந்து அறியப்பட்ட துறவிகளையும் வேதியர்களையும் என்பது; இங்ஙனம் கூறியது அன்னார் தங்குதலாற் குற்றம் நேரின் அதற்கு அறக்கோட்டத் தலைவர்களே பொறுப்பாளிகளாவார்கள் என்பதைப் புலப்படுத்தும்.

[10] தம் நம்பிக்கைக்குரியவர்களை என்பது கருத்து.

[11] வாணிகத் தொழில்களுள் எத்தொழிலை எவன் மேற்கொண்டுள்ளானோ அத்தொழிலையுடையவனையே தன்தொழில் நிலையத்தில் இருப்பித்தல் வேண்டும் என்பது கருத்து.

[12] காலம் இடம் என்பன அரசியலாரால் விற்பதற்கு அறுதியிடப்பட்டன.

[13] விற்பவன் என்பது புதிதாக வந்தவனைக் குறிக்கும்.

[14] தான் விற்றற்குரியதல்லாத பொருளை என்பது.

[15] நகரத்தலைவனுக்கு அறிவித்தல்வேண்டும் என்பது.

[16] தமக்கு அறிமுகமாதல்—தம்மோடொத்த தொழின்முறையால் அறியப்படுதல்.

[17] தம்மிடத்தில் இருப்பித்தல்வேண்டும் என்பது.

[18] வரவிற்கு மேற்பட்டும் வரவை அறிந்துகொள்ளாமலும் செலவு செய்வோர் என்பது.

[19] தகாத செயல்—அளவின் மிகக் கட்குடித்தல் முதலியன.

[20] கோபனுக்கும் தானிகனுக்கும் அறிவிக்கவேண்டும் என்பது.

மருத்துவன், [21]மறைவாகப் புண்ணிற்கு மருத்துவஞ் செய்து கொள்பவனையும் வீட்டுத்தலைவன், [22]கேடுவிளைக்கும் உணவுப் பொருளை [23]ஆக்குவோனையும் கோபன் தானிகன் என்னும் இவர் களுக்கு அறிவித்து [24]விடுதலைபெறக்கடவர்; [25]இன்றேல் [26]ஒத்த குற்றமுடையோராவர்[27].

[28]போனவர்களையும் [29]வந்தவர்களையும் [30]அறிவித்தல் வேண் டும். இன்றேல் [31]இரவுக்குற்றத்தை அடைவான். [32]குற்றமற்ற இரவுகளில் மூன்று பணம் தண்டம் இறுத்தல்வேண்டும்.

---

21 மறைவாக மருத்துவஞ் செய்துகொள்ளலாவது—ஒருவன் தகாத செயலை மேற்கொண்டதனால் தனக்கு நேர்ந்த வாட்புண் முதலியவற்றைப் பிறர் கண்டால் தன் குற்றம் வெளிப்படும் என்று அஞ்சி மருத்துவனிடம் மறைவில் வைத்தியம் செய்துகொள்ளல்.

22 கேடுவிளைக்கும் பொருள்களாவன-நோய் மரணம் முதலியவற்றைச் செய்வன.

23 ஆக்குதல் என்பது ஈண்டு திரட்டுதல் தேடுதல்களைக் குறிக்கும்.

24 விடுதலை பெறுதலாவது — இங்கே குறிப்பிட்ட குற்றவாளிகளை அரசியலதிகாரிகளுக்குத் தெரிவிக்குமுகமாகத் தூய்மையடைதல்.

25 இன்றேல்—அதிகாரிகளுக்குத் தெரியாவிட்டால்.

26 ஒத்த குற்றம்—மேற்குறிப்பிட்ட குற்றவாளிகளின் குற்றங்களோடு சமானமான குற்றம்.

27 இப்பகுதிக்கு மறைவாக மருத்துவஞ் செய்துகொள்வோரையும் கேடுவிளைக்கும் உணவுப்பொருளை ஆக்குவோரையும் அவர் குடியிருக்கும் வீட்டுத்தலைவனும் மருத்துவனும் கோபன் தானிகன் என்னுமிருவருக்கும் அறிவிக்கவேண்டும் என்றும் பொருள் கொள்வர்.

28 போனவர்கள்—தம்மில்லத்திலிருந்து ஒரு காரியநிமித்தம் வேற்றிடம் சென்றவர்கள்.

29 வந்தவர்கள்—வேற்றிடத்தினின்றும் ஒரு காரியநிமித்தம் வந்து தம் இல்லத்துட் புகுந்தவர்கள்.

30 இல்லத்தலைவன், கோபன் தானிகன் என்னும் இவர்களுக்கு அறி விக்கவேண்டும் என்பது.

31 இரவுக்குற்றம் — இரவில் வெளிச்சென்றவராலும் உட்புகுந்தவ ராலும் செய்யப்படும் களவு முதலிய குற்றம்; அக்குற்றம் நேரின் அதற்கு இல்லத்தலைவனும் பொறுப்பாளியாவான் என்பது கருத்து.

32 இரவிற் களவு முதலிய குற்றங்கள் நேர்ந்தில எனினும் சென்றவர் களையும் வந்தவர்களையும் அறிவியாத குற்றத்திற்குத் தண்டம் இறுக்க வேண்டும் என்பது. குற்றம் நிகழாதபொழுதும் தண்டம் விதித்தற்குக் காரணம் நிகழ்ச்சியை அறிவிப்பதில் எப்பொழுதும் தவறலாகாதென்பது பற்றி.

[33]பெருவழிகளிலும் சிறுவழிகளிலும் செல்வோர் நகரத்தின் [34]அகத்திலும் புறத்திலும் உள்ள கோயில் புண்ணியதலம் காடு சுடுகாடு என்னும் இவற்றில் [35]புண்ணுடையவன் [36]வெறுக்கத்தக்க கருவிகளையுடையவன் மிகையான பண்டங்களையுடையவன் அச்ச முற்றவன் [37]மிகையாகத் துயில்பவன் [38]வழிச்செலவாற் களைப்புற்றவன் [39]புதியவன் ஆகிய இவர்களைப் [40]பிடித்தல்வேண்டும்.

இங்ஙனமே [41]உள்ளிடத்திலுள்ள பாழ்வீடு தொழிற்சாலை கள்விற்குமிடம் சோறுவிற்குமிடம் பக்குவஞ் செய்யப்பட்ட இறைச்சிவிற்குமிடம் சூதாடுமிடம் பாசண்டர்களிருப்பிடம் என்னும் இவ்விடங்களில் [42]ஆராய்ந்து தேடவேண்டும்.

முதுவேனிற் பருவத்தில் பகலின் நான்கு கூறுகளுள் [43]இடையிருகூறுகளில் [44]நெருப்புத் தடையைச் செய்தல்வேண்டும்.

---

33 பெரிய தெருவழிகளில் செல்லும் வாணிக வுருவினர் முதலிய ஒற்றர் களும் சிறிய புன்னில வழிகளிற் செல்லும் புல் விறகு முதலியவற்றை யுடைய இடையர் உருவினர் முதலிய ஒற்றர்களும் என்பது.

34 அகநகரத்திலுள்ள கோயில் புண்ணிய தலங்களிலும் நகர்ப்புறத்தே யுள்ள காடு சுடுகாடுகளிலும் என்பது.

35 வாட்படை முதலியவற்றாலுண்டாகிய புண்ணுடையவன் என்பது.

36 வெறுக்கத்தக்க கருவிகள்—களவு முதலியவற்றிற்குப் பயன்படும் கருவிகள்.

37 இரவில் மிகுதியான அலைச்சலால் நேர்ந்த விழிப்பின் காரணமாக ஏற்பட்ட மிகுதுயில் என்பது.

38 நீண்ட வழிநடத்தல் என்பது.

39 புதியவன்—அறிமுகமில்லாதவன்.

40 மேற்குறிப்பிடப்பட்டவர்கள் குற்றவாளிகளாக இருக்கக்கூடும் என்னும் ஐயத்தினால் அவர்களைப் பிடித்து நகர்த்தலைவனிடம் சேர்க்க வேண்டும் என்பது கருத்து.

41 உள்ளிடம்—தலைநகரத்தின் அகநகரம்.

42 புண்ணுடையவன் முதலியோரை முற்கூறப்பட்ட ஒற்றர்கள் தேடிப்பிடிக்கவேண்டும் என்பது கருத்து.

43 இடையிருகூறுகள்—இரண்டாம் மூன்றும் கூறுகள்.

44 மிகுதியான தீப்பொறிகளை வெளிப்படுத்தி எரிதற்கேதுவான பெரிய அக்கினிகாரியங்களைத் தடைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து. இத் தடை புல் இலை முதலியவற்றால் வேய்ந்த மேன்முடலையுடைய இல்லம் முதலியவற்றிற்குக் கேடுவிளைக்கும் என்பதுபற்றிச் செய்யப்படுவதாம்.

[45]நெருப்பின் நிமித்தம் அரைக்காற்பணம் தண்டமாம். (இன்றியமையாதாயின்) [46]வெளியிடத்திற் பக்குவஞ்செய்யலாம்.

[17]ஐந்து நாழிகைக்குக் காற்பணம் (நெருப்புத் தண்டமாம்).

[48]குடம் [49]தொட்டி [50]ஏணி [51]கோடாலி [52]முறம் [53]தோட்டி [54]கோத்திழுக்கும் கருவி [55]தோற்பை என்னும் இக்கருவிகளை [56]வைத்திராவிடினும் (காற்பணம் தண்டமாம்).

வைக்கோல் கடப்புல் இவற்றால் வேயப்பட்ட கூரைகளை [57]அகற்றுதல் வேண்டும். [58]நெருப்பினால் தொழில் செய்வோரை

---

45 மேலே குறிப்பிட்டபடி விலக்கப்பட்ட காலங்களில் அக்கினிகாரியம் செய்யப்படின் அரைக்காற்பணம் தண்டம் என்பது.

46 விலக்கப்பட்ட காலங்களில் உணவு பக்குவஞ்செய்யவேண்டியது அவசியமாக நேர்ந்தால் இல்லத்தை அடுத்துள்ள மேன்மூடலில்லாத இடத்திற் செய்யலாம் என்பது கருத்து.

47 ஐந்து நாழிகை என்பது ஒரு பகலின் நான்கு கூறுகளுள் இரண்டாங் கூற்றினிறுதியும் மூன்றாங்கூற்றின் தொடக்கமுமாகிய பன்னிரண்டரை நாழிகைக்குமேல் பதினேழரை நாழிகை வரையிலுள்ள காலத்தைக் குறிக்கும். இஃது உச்சிப்பொழுதாதலின் காற்பணம் தண்டமும் மற்றை நேரங்களாயின் அரைக்காற்பணம் தண்டமும் என அறிந்துகொள்ளல் வேண்டும்.

48–49 நீர் நிறைந்தகுடம். நீர் நிறைந்த மரத்தொட்டி; இவ்விரண்டும் நெருப்புப்பற்றினால் அணைத்தற்கு வேண்டும் என்பது.

50 ஏணி, உயரமான இடத்தில் நெருப்புப்பற்றினால் ஏறி அணைத்தற்கு வேண்டும் என்பது.

51 கோடாலி, நெருப்புப்பிடித்த மரக்கட்டை முதலியவற்றைப் பிளத்தற்கு வேண்டும் என்பது.

52 முறம், நெருப்புப்பற்றின இடத்தில் அதைக் தணிக்க முயல்வார்க்கு எதிர்ப்படும் புகை பரவாமற் றடுத்தற்கு வேண்டும் என்பது.

53 தோட்டி—நெருப்பினாற் பற்றப்பட்ட பொருள்களை இழுத்தற் பொருட்டு மேற்கொள்ளப்படும் கருவி.

54 நெருப்புப்பற்றிய வீட்டின் மேன்மூடலிலுள்ள புற்கற்றை முதலியவற்றைக் கோத்திழுத்தற்கு உரிய கருவி.

55 தோற்பை என்பது நீர்நிறைத்தற்குரியது.

56 இங்கே கூறப்பட்ட நீர் நிறைந்த குடம் முதலியவற்றை எப்பொழுதும் சித்தமாக வைத்திருக்கவேண்டும்; அப்படிச் செய்யாவிடின் காற்பணம் தண்டமாம் என்பது.

57 முதுவேனிற் காலத்தில் எடுத்துவிடவேண்டும் என்பது.

58 நெருப்பினால் தொழில் செய்வோர்—கொல்லன் குயவன் முதலியோர்.

யெல்லாம் [59]ஓரிடத்திலேயே இருப்பித்தல் வேண்டும். வீடுகளுக்குரியவர்கள் இரவில் வெளியிடங்களுக்குச் செல்லாமல் தம் வீட்டு முகப்புவாயிலிலேயே இருத்தல்வேண்டும். தேரோடும் வீதிகளிலும் [60]சதுக்கங்களிலும் [61]வாயில்களிலும் [62]அரசனுடைய கட்டிடங்களிலும் [63]ஆயிரம் [64]குடம் [65]இருத்தல்வேண்டும்.

[66]தீப்பற்றிய வீட்டை விரைந்து அணைக்க முயலாத வீட்டுத் தலைவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [67]வாடகை கொடுத்திருப்பவனுக்கு ஆறு பணம் தண்டமாம். [68]விழிப்பின்மையால் தீப்பற்றுமாயின் ஐம்பத்துநான்கு பணம் தண்டமாம்.

[69]தீயிட்டவன் தீயாற் கொல்லப்படுதல் வேண்டும்.

தேர்வீதிகளில் குப்பையிடின் அரைக்காற்பணம் தண்டமாம். [70]சேற்றுநீரைத் தேங்கச்செய்யின் காற்பணம் தண்டமாம். [71]அரசவீதியாயின் இருமடங்காம்.

---

59 தீயினாற் றீங்கு நேராதபடி அமைக்கப்பட்ட அகன்ற கட்டிடத்திலிருந்து தொழில் புரியும்படி செய்யவேண்டும் என்பது.

60 சதுக்கம்—நான்கு தெருக்கள் கூடுமிடம்.

61 வாயில் ஈண்டு மதில்வாயில்களை உணர்த்தும்.

62 அரசனுடைய கட்டிடங்களாவன—நிதியறை குப்பியப் பொருட்சாலை பண்டசாலை விலைப்பண்டம்வைக்குமிடம் யானைக்கூடம் குதிரைச்சாலை முதலியன.

63 ஆயிரம் என்பது ஈண்டுப் பன்மையைக் குறிக்கும்.

64 குடம்—நீர் நிறைந்த குடம்.

65 பல நீர்க்குடங்களை வைக்கவேண்டும் என்பது நெருப்பினாற் றீங்கு நேராமைப் பொருட்டு.

66 தீப்பற்றிய வீடு யாருடையதாயினும் என்பது.

67 வாடகை கொடுத்துக் குடியிருப்பவன் நெருப்பணைக்க முயலவில்லையானல் பாதியளவு தண்டம் என்பது கருத்து.

68 வீடு யாருடையதாயினும் ஒருவனது சோர்வினால் நெருப்புப்பற்றுமாயின் என்பது.

69 ஒரு வீட்டில் தீவைத்தவன் அப்பொழுதே பிடிக்கப்படுவானாயின் அவனை அத்தீயில் வீழ்த்திக் கொல்லவேண்டும் என்பது கருத்து; காலங்கடந்து பிடிக்கப்படுவானாயின் அவனுக்கும் அதுவே தண்டம் என்பது பின்னர் (4-ஆம் அதிகரணத்திற்) கூறப்படும்.

70 தேர் வீதியில் என்பதை ஈண்டும் கூட்டுக.

71 அரசவீதியிற் குப்பையிடினும் சேற்றுநீரைத் தேங்கச்செய்யினும் முற்கூறிய தண்டங்களின் இருமடங்கு தண்டமாம் என்பது கருத்து.

[72]புண்ணியதலம் [73]நீர்நிலை கோயில் அரசன்கட்டிடங்கள் இவற்றில் மலங்கழிப்பின் முறையே [74]ஒன்றற்கொன்று ஒவ்வொரு பணம் மிகுதியாகத் தண்டமிறுத்தல் வேண்டும். மூத்திரம்விடிற் [75]பாதியாம்.

[76]மருந்து [77]நோய் அச்சம் [78]இவை காரணமாயின் தண்டமில்லையாம்.

பூனை நாய் கீரி பாம்பு இவற்றின் பிணங்களை நகரத்தினுட் போகட்டால் மூன்று பணம் தண்டமாம். கழுதை ஒட்டகம் கோவேறுகழுதை குதிரை பசு என்னும் இவற்றின் [79]பிணங்களுக்கு ஆறு பணம் தண்டமாம். மனிதப் பிணங்களுக்கு ஐம்பது பணம் தண்டமாம்.

பிணத்தை [80]மாறுபட்ட வழியினாலாதல் [81]பிணவாயில் அல்லாத வேறு வாயிலாலாதல் வெளியேற்றின் பூர்வசாகசம் தண்டமாம். [82]வாயில்காவலனுக்கு இருநூறு பணம். சுடலையல்லாத

---

[72] அரசவீதி என்பதை ஈண்டுங்கூட்டுக.

[73] நீர்நிலை—ஊருணி முதலியன.

[74] மலங்கழித்தல் அரசவீதியிலாயின் ஒருபணமும் புண்ணியதலமாயின் இரண்டு பணமும் என இங்ஙனம் முறையே ஒவ்வொரு பணம் கூட்டித் தண்டம் இறுக்கவேண்டும் என்பது.

[75] பாதி என்பது, அரசவீதியாயின் அரைப்பணமும் புண்ணிய தலமாயின் ஒருபணமும் என இங்ஙனம் முறையே அரையரைப்பணங் கூட்டித் தண்டம் இறுக்கவேண்டும் என்பதை யுணர்த்தும்.

[76] மருந்து—ஈண்டு மலக்கழிவின் பொருட்டு.

[77] நோய்—வயிற்றுப்போக்கு மூத்திரநோய் முதலியன.

[78] இவை காரணமாக அரசவீதி முதலியவற்றில் மலமூத்திரம் கழிக்க நேரின் தண்டமில்லை என்பது கருத்து.

[79] பிணங்களை நகரத்தில் போகட்டால் என்பது.

[80] மாறுபட்ட வழி—பிணத்தைக்கொண்டு போதற்கெனக் குறிக்கப்பட்ட வழியின் வேறான வழி.

[81] பிணவாயில்—பிணத்தை வெளிப்படுத்தற்கென வரையறை செய்யப்பட்ட வாயில்.

[82] வரையறை செய்யப்படாத வாயில்வழியாகப் பிணம் வெளிப்படுங்கால் தடைப்படுத்தாத வாயில்காவலனுக்கு இருநூறுபணம் தண்டம் விதிக்கவேண்டும் என்பதாம்.

பிற இடங்களில் [83]இட்டாலும் சுட்டாலும் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

இரவின் முற்பகுதி பிற்பகுதிகளில் [84]ஆறுநாழிகை விட்டு [85]யாமவாச்சியம் முழக்குதல்வேண்டும். வாச்சியவொலி கேட்கப் பட்டபின்னர் இரவின் [86]முன்பின் யாமங்களில் அரசமாளிகைக்கு அணிமையில் (வழங்குவோர்க்கு) ஒன்றேகாற்பணம் [87]அகாலதண்டமாம். [88]நள்ளியாமமாயின் [89]இருமடங்காம். [90]வெளிப்புறமாயின் நான்குமடங்காம்.

[91]இடத்தினாலும் [92]அடையாளத்தாலும் [93]பழையசெயலாலும்

---

83 இடுதல்—புதைத்தல்; குழந்தையுடல் அறுதைப்பிணம் முதலிய வற்றிற்கு இது.

84 இரவின் முதல் யாமத்தின் முதல் ஆறு நாழிகைக்குப் பின்னரும் இறுதி யாமத்தின் பின் ஆறுநாழிகைக்கு முன்னரும் யாமவாச்சியம் முழக்குதல் வேண்டும் என்பது கருத்து.

85 இரவில் மக்கள் வழங்குதலைத் தடைப்படுத்தற்கு ஒலிக்கப்படும் வாச்சியம் 'யாமவாச்சியம்' எனப்படும்.

86 முதல் யாமத்தில் ஆறு நாழிகைக்குப்பின் ஏழரை நாழிகை வரையிலும் இறுதி யாமத்தின் தொடக்கத்தில் ஒன்றரை நாழிகையளவிலும் என்பது.

87 அகாலதண்டம்—உரியதல்லாத காலத்திற் போக்குவரவு செய்ததற்கு உரியதண்டம் என்பது.

88 இரண்டாவதும் மூன்றாவதுமாகிய யாமங்களில் அரசமாளிகைக்கு அணிமையில் வழங்குவோர்க்கு இரண்டரைப்பணம் தண்டமாம் என்பது கருத்து.

89 இங்கே கூறியது அகநகர்க்கு என்க.

90 நகர்க்கு வெளியே அணிமையிலுள்ள நாற்புறங்களிலும் மேற்குறிப்பிட்ட வாச்சியவொலி கேட்கப்பட்ட பின்னர் மக்கள் வழங்குவராயின் அவர்க்கு அகால தண்டமாக ஐந்து பணம் விதித்தல்வேண்டும் என்பது.

91 இடத்தினால் ஐயுறுதல்—மற்றொருவன் வீட்டுத்தோட்டத்தில் ஒருவன் திரிதலைக்கண்டு இவன் களவு முதலிய தகாத செயலில் தலைப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகித்தல்.

92 அடையாளத்தால் ஐயுறல்—ஒருவன் தன் தலைமறைய முக்காடிட்டும் சுவர்நிழல் முதலியவற்றில் மறைந்திருக்கவும் கண்டால் இவனும் அத்தகையனே என்று சந்தேகித்தல்.

93 பழைய செயலால் ஐயுறுதல்—முன்னர்க் களவுத்தொழில் முதலிய வற்றில் தலைப்பட்டிருந்த ஒருவனை அச்செயல்பற்றிச் சந்தேகித்தல்.

ஐயுற்றுப் பிடிக்கப்பட்டவனை [94]வினவுதல் வேண்டும்.

அரசனின் இல்லங்களிற் [95]புகுந்தாலும் நகர [96]அரண்களில் ஏறினாலும் மத்தியமசாகசம் தண்டமாம்.

[97]கருவுயிர்த்தல் மருத்துவம் [98]பிணம் [99]விளக்குடன் செல்லல் [100]நகரவாச்சியம் [101]காட்சி [102]நெருப்பு இக்காரணம் உடையாரும் [103]இலச்சினையுடையாரும் [104]பிடிக்கத்தகாதவர்கள் ஆவார்கள்.

[105]வழங்குதற்குரிய இரவுகளிலும் [106]மறைந்துதிரிவோர் [107]மாறுபட்ட வேடமுடையோர் துறவிகள் தடி எறிபடை இவற்றைக் கையில் வைத்திருப்போர் இவர்கள் [108]குற்றம் நாடித் தண்டிக்கத்தக்கவர் ஆவர்.

[109]தடுக்கத்தகாதவர்களைத் தடுப்பவர்களும் தடுக்கத்தக்கவர்

---

94 வினவுதல்—நீ யார்? எங்கிருந்து வந்தாய்? யாரைச் சார்ந்தவன்? எதன்பொருட்டு இங்கே வந்தனை? என்று கேட்டல்.

95 அனுமதியின்றிப் புகுதல் என்பது.

96 அரண்—மதில் முதலியன.

97 கருவுயிர்த்தல் என்பது அங்கிலையுடையார்க்குப் பணிசெய்தலைக் குறிக்கும்.

98 பிணத்தை வெளியேற்றல் காரணம் என்பது.

99 விளக்கொளியில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு செல்லுதல் காரணம் என்பது.

100 நகரத்து மக்கள் அறிந்துகொள்ளுதற்கு யாமங்களில் முழக்கப்படும் வாச்சியவொலி காரணம் என்பது.

101 அரசன் கட்டளைப்படி நடக்கும் நாடகம் முதலியவற்றைக் காண்டல் காரணம் என்பது.

102 யார்வீட்டில் நெருப்புப் பற்றினாலும் அதனை அணைக்கச்செல்லுதல் காரணம் என்பது.

103 அமைச்சன் நகரத்தலைவன் முதலியோருடைய முத்திரைகொண்டு செல்வோரும் என்பது.

104 இரவில் அகாலத்திலும் பிடிக்கத்தகாதவர் என்பது கருத்து.

105 வழங்குதற்குரிய இரவுகள்—எல்லா மக்களும் சஞ்சரித்தற்குரிய திருவிழாநாட்களின் இராக்காலங்கள்.

106 மறைதல்—முக்காடு முதலியவற்றாலாவது.

107 மாறுபட்ட வேடம் — ஆண் பெண்ணுருக்கோடலும் பெண் ஆணுருக்கோடலுமாம்.

108 ஆராய்ந்து குற்றங் காணப்படின் என்பது.

109 தடுக்கத்தகாதவர்கள்—கட்டளைபெற்று அகாலத்தில் போக்குவரவு செய்வோர்.

களைத் தடாதவர்களுமாகிய [110]காவலர்களுக்கு அகாலதண்டத்தின் [111]இருமடங்கு தண்டமாம்.

பணிப்பெண்ணை வலிந்து புணர்பவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். [112]பணிப்பெண்ணல்லாத பெண்டிரையாயின் மத்தியமசாகசம் தண்டமாம். [113]உரிமைகொண்ட மகளிரையாயின் உத்தமசாகசம் தண்டமாம். குலமகளிரையாயின் [114]கொலைத் தண்டமாம்.

அறிவுடைப்பொருள் அறிவில்பொருள்களால் ஏற்பட்ட [115]இரவுக்கேட்டை [116]அறிவியாதவனும் [117]விழிப்பில்லாதவனும் ஆகிய நகரக்காவலனுக்குக் கேட்டிற்குத்தகத் தண்டமாம்.

நீர்நிலை வழி நிலம் சுருங்கைவழி [118]துணைமதில் மதில் (ஏனைய) [119]அரண்கள் இவற்றைக் கண்காணித்தலும் [120]இழக்கப்பட்டன [121]மறக்கப்பட்டன [122]அகன்றன இவற்றை [123]ஓம்புதலும் இன்றியமையாக் கடமைகளாம்.

[124]பிறந்தநாளினும் [125]நிறையுவாக்களினும் சிறூர் மூப்பினர்

---

110 காவலர்—நகரப் பாதுகாப்பாளர்.

111 இரண்டரைப்பணம் தண்டம் என்பது.

112 பணிப்பெண் அல்லாதவர்—விலைமாதர்.

113 பணிப்பெண்ணாயினும் கணிகையாயினும் ஒருவனால் தனக்குரிய மனைவியாகக் கொள்ளப்பட்டவள்.

114 ஈண்டுக்கூறிய பணிப்பெண் முதலியோரை வலிந்துபுணரும் நகரக் காவலர்க்கு இத்தண்டங்கள் விதிக்கப்பட்டன என்பது.

115 இராப்பொழுதில் மக்கள் விலங்கு முதலிய அறிவுடைப் பொருள் களாலும் காற்று மழை முதலியவற்றாலும் நேருந் தீங்கென்பது.

116 அறிவித்தல், மேலதிகாரிகளுக்கென்பது.

117 விழிப்பின்மை, கட்குடி முதலியவற்றால் நேருவது.

118 துணைமதில்—மதிலுக்கு ஆதாரமாகவுள்ளது.

119 அகழி முதலியன.

120 ஒருவன் இழந்த அணிகலன் முதலியன என்பது.

121 ஒருவன் மறந்துவிட்ட பொருள்கள்.

122 அகன்றன — ஒருவனுக் குரியனவாயிருந்து தாமே நீங்கின பசு முதலியன.

123 நீர்நிலை முதலியவற்றைப் பழுதுபடாமற் பாதுகாத்தலும் இழக்கப் பட்டன முதலியவற்றை உரியவர்களிடம் சேர்ப்பித்தலும் வேண்டும் என்பது.

124 பிறந்தநாள் என்பது ஆண்டுதோறும் அரசன் பிறந்த நாளில் நிகழும் விழாவைக் குறிக்கும்.

125 நிறையுவா—பௌர்ணமி.

நோயாளர் ஆதரவற்றோர் ஆகிய இவர்களுக்குச் சிறைவீடு செய்ய லாம். [126]அறவோர் [127]உடன்படிக்கைக்குட்பட்டுக் குற்றத்திற் கீடாக விடுதலைப்பொருள் [128]கொடுக்கலாம்.

சுலோகங்கள்

(1) சிறைப்பட்டவர்களை நாடோறுமாதல் ஐந்துநாட்கு ஒரு முறையாதல் [129]தொழிலாலும் [130]உடற்றண்டத்தாலும் [131]பொருட் பேற்றருளாலும் [132]குற்றஈடு [133]செய்தல்வேண்டும்.

(2) [134]புதியநாட்டைக் கைக்கொள்ளும் காலத்தினும் இள வரசன் முடிசூட்டுவிழாக் காலத்தினும் [135]மகப்பேறெய்திய காலத் தினும் சிறைவீடு செய்தல்வேண்டும்.

இரண்டாம் அதிகரணம் முப்பத்தெட்டாம் பிரகரணம் "நகரத்தலைவன் செயல்" என்னும் ஐம்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

"தொழிற்றலைவர்செயன்முறை" என்னும் இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

---

126 அறவோர் என்பது ஈண்டு எதிர்பாராத நிலையில் நேர்ந்த மாறு பட்ட செயலால் சிறைப்பட்ட நல்லோரைக் குறிக்கும்.

127 உடன்படிக்கை—நேர்ந்த குற்றத்திற்குத் தக்க பொருளைத் தண்ட மாகக் கொடுத்தால் சிறைவீடு பெறலாம் என்னும் நிபந்தனை.

128 கொடுத்துச் சிறைவீடு பெறலாம் என்பது கருத்து.

129 தொழில்—சுமையெடுத்தல் வண்டி இழுத்தல் முதலியன.

130 உடற்றண்டம்—கசையடி முதலியன.

131 பொருளைப் பெற்றுக்கொண்டு தயைசெய்தல் என்பது. இது சிறைப்பட்ட நல்லோர்க்கு.

132 சிறைப்பட்டவர்களின் குற்றங்களுக்குத் தக மேற்குறிப்பிட்டபடி நாடோறுமாதல் ஐந்துநாட் கொருமுறையாதல் தொழில்செய்தல் முதலிய வற்றால் குற்றநீக்கத்திற்கு ஈடுசெய்துகொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

133 இச்சுலோகத்தின் முற்பாதிக்குச் சிறைப்பட்டவர்கள் உடல்நல முடையரா? அல்லது நோய்வாய்ப்பட்டவரா? என்று நாடோறுமாதல் ஐந்துநாட் கொருமுறையாதல் பரிசோதித்தல் வேண்டுமென்று பொருள் கூறுவாருமுளர்.

134 பகை வென்றமையால் கிடைத்த புதிய நாடென்பது.

135 அரசன் மகப்பேறெய்திய காலத்தில் என்பது.

மூன்றும் அதிகரணம்—[1]அறநிலையாட்சி

முதற்பிரகாணம்—[2]வழக்கியல்நிறுத்தல்

இரண்டாம் பிரகரணம்—வழக்குரைவரைதல்

ஐம்பத்தெட்டாம் அத்தியாயம்

58-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முன்னைய இரண்டு அதிகரணங்களுள் முறையே 'பயிற்சிபகர்தல்' என்பதில் அரசனும் வினைசெய்வாரும் கற்கவேண்டிய நூல்களைப்பற்றியும், கற்கும் முறைமையும், 'தொழிற்றலைவர் செயன்முறை' என்பதில் அங்ஙனம் கற்ற அரசியல்வினைஞர் தாம் மேற்கொள்ளும் காரியங்களை எப்படிச் செய்வேண்டும் என்பதும் கூறப்பட்டன. இங்ஙனங் கூறுமுகமாக அரசியலுறுப்புக்களின் அமைப்புக்களும் புலப்படுத்தப்பட்டன. இனி கல்வி நிருவாகம் முதலியவற்றையும் அரசியலுறுப்புக்களையும் உடைய அரசன் வருணச்சிரமதருமம் முதலியவற்றைப் பாதுகாக்குமுகமாக மேற்கொள்ள வேண்டிய அரசியலறத்தைக் கூறத் தொடங்குகின்றார். இதனால் அதிகரண இயைபுண்மை புலனாதலறிக. அறம்—வருணச்சிரமதருமம் முதலியன. அறநிலை என்பது ஈண்டு அறத்தின் வழிநிற்றல்; அதனை அறிந்துகோடலும் அதனைப் பின்பற்றி யொழுகுதலுமாம். ஆட்சியாவது—மக்களை அறத்தினின்றும் வழுவாதொழுகச் செய்தலும் அங்ஙனம் வழுவாதொழுகுவார்க்குத் தீங்குகள் நேராமற் பாதுகாத்தலுமாம். முதலதிகரணம் பத்தாம் அத்தியாயத்தில் 'அறவுபதையால் தூய்மையுடையோரை அறச்செயல்களிலும், சிறுபகைகளை தல் முதலியவற்றிலும் நியமித்தல்வேண்டும்' என்றும், பத்தொன்பதாம் அத்தியாயத்தில் 'ஒருபகலை எண்கூறுபடுத்து இரண்டாங் கூற்றில் நாடுநகரங்களிலுள்ள குடிமக்களின் செயல்களைக் கண்காணித்தல் வேண்டும்' என்றும் கூறப்பட்டன. அவ்வதிகாரியாவார் யாவர்? எத்துணையர்? எவ்வெவ்விடங்களில் அவர்கள் இருந்து செயலாற்றல் வேண்டும்? என்பனபற்றி இவ்வதிகரணத்திற் கூறத் தொடங்குகின்றார்.

[2] வழக்கு—மணம், தாயபாகம், முதலியவற்றைப்பற்றிப் பன்னிரண்டு வகைகளாகப் பின்னர்க் கூறப்படுவது; அவ்வழக்கியலை நிறுத்தலாவது :—அவ்வழக்குக்களில் எத்தகைய வழக்குக்கள் ஏற்று நடத்தற்பாலன? எத்தகைய வழக்குக்கள் ஏலாது விலக்கற்பாலன? என்பதை வரையறுத்தல். நாட்டின்கண் மக்கள்பால் நிகழும் வழக்குக்களைத் தீர்த்து முறைசெய்தல் அரசன்கடமைகளுள் முதன்மையானதாகலானும், அவ்வழக்குக்களின் இயலறிந்தாலன்றி அதனையறிந்து தீர்த்தல் இயலாதாகலானும் 'அறநிலையாட்சி' என்னும் இவ்வதிகரணத்தின் தொடக்கத்தில் 'வழக்கியல் நிறுத்தல்' என்னும் இப்பிரகரணமும் இதனுடன் பெரிதும் தொடர்புடைமையின் இதனையடுத்து 'வழக்குரை வரைதல்' என்னும் என்னும் பிரகரணமும் வைக்கப்பட்டன. இவ்வாற்றால் இவ்வத்தியாயம்

[3]அறங்கூறவையத்தார் [4]நாட்டின் எல்லை [5]சங்கிரகணம் [6]துரோணமுகம் [7]தானியம் என்னும் இவ்விடங்களில் [8]மூவர் மூவராகக் கூடியிருந்து வழக்கைப்பற்றிய காரியங்களை நடத்துதல் வேண்டும்.

[9]மறைவுபட்டது வீட்டினுள் நிகழ்ந்தது இரவில் நிகழ்ந்தது

இரண்டு பிரகரணங்களைக் கொண்டதாயிற்று. இனி வழக்குக்கள் நடத்துவதற்குத் தானியம் முதலிய நகரங்களே இடமாதலின் நகரத்தலைவன் செயன் முறையின்பின் அந்நகரத்தில் நிகழ்தற்பாலவாகிய வழக்குக்களைப்பற்றிக் கூறுதல் முறையாதலின், மேலைப்பிரகரணத்தோடு இப்பிரகரணங்களுக்குள்ள இயைபு புலனாதலறிக.

[3] அறங்கூறவையத்தார் — அறவுபதையால் ஆராயப்பட்டு வழக்கு ஆராயும் தொழிலில் அரசனால் நியமிக்கப்பட்டவர்.

[4] நாட்டின் எல்லை—இரண்டு நாடுகள் ஒன்றுகூடும் சந்தி.

[5] சங்கிரகணம்—பத்து ஊர்களைத் தன்னுட்கொண்டு நடுவண் அமைந்த பேரூர்.

[6] துரோணமுகம்—நானூறு ஊர்களைத் தன்னுட்கொண்டு நடுவண் அமைந்த பேரூர்.

[7] தானியம் — எண்ணூறு ஊர்களைத் தன்னுட்கொண்டு நடுவண் அமைந்த தலைநகரம். நாட்டின் எல்லை முதலிய இவற்றின் இயல்பை இரண்டாம் அதிகரணம் 'நாடமைத்தல்' (அத். 22) என்னும் பிரகரணத்திற் காண்க.

[8] மூவர் மூவராக—நாட்டின் எல்லை முதலிய நான்கிடங்களினும் தனித்தனி மூன்று மூன்று பேராக.

[9] இனி ஏற்றுக்கொள்ளாமல் விலக்கற்பாலனவாகிய வழக்குக்களைக் கூறுகின்றார். மறைவுபட்டது என்பது மறைவாகக் கொடுக்கப்பட்டதும் கொள்ளப்பட்டதுமாகிய பொருள்களைப்பற்றி நிகழும் வழக்குக்களைக் குறிக்கும். அவை தலைவன் மறைவு, இடம் மறைவு, காலமறைவு, தொழில் மறைவு, பொருள் மறைவு முதலியவாகப் பலவகைப்படும். இவற்றுள் தலைவன்மறைவு என்பது ஒரு தலைவனுடைய பொருளை அவன் அநுமதியின்றிப் பிறனொருவன் மறைவிற் பயன்படுத்திக்கொள்ளுதலைப் பற்றிய வழக்காகும். இடமறைவு என்பது காணாத ஒருவனைச் சான்றாகக்கொண்டு நிகழும் வழக்கென்பதாம். காலமறைவு என்பது காலவரையறையைக் கடந்தனவாகிய கடன்கோடல் முதலியவற்றைப்பற்றிய வழக்காம். தொழில்மறைவு என்பது ஒருவன் வேற்றுநாட்டிலிருக்குங்கால் அவனைப் பிரமாண பத்திரத்தில் குறிக்கப்பட்டவனாகக் கொண்டு கடன் கேட்டலைப் பற்றிய வழக்கென்பதாம். பொருள்மறைவு என்பது நேரிற் காணப்படாத நிலையில் இயங்கியற் பொருள்களை விற்றல் கோடல்களைப்பற்றிய வழக்கென்பதாம்.

காட்டில் நிகழ்ந்தது [10]வஞ்சத்தால் நிகழ்ந்தது [11]மறைவில் நிகழ்ந்தது ஆகிய இவ்வழக்குக்களை [12]விலக்கிவிடுதல் வேண்டும். [13]தொடுப்போர் தொடுப்பிப்போர்களுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். [14]கேட்போருக்குத் தனித்தனிப் [15]பாதி தண்டமாம். [16]வஞ்சகரல்லராயின் [17]பொருளிழத்தல் [18]அளவில் அமையும்.

[19]மறைவாக ஈடுவைத்துக் கடன்கொண்டது [20]தடைகூறத்

---

10 வஞ்சத்தால் நிகழ்ந்தது—ஒருவனை ஏமாற்றிக் கடன்பத்திரத்தில் கையெழுத்திடச் செய்தல் முதலியனபற்றி நிகழும் வழக்காகும்.

11 மறைவில் நிகழ்ந்தது—கொடுத்தவனும் வாங்கினவனும் தவிர ஏனையோரால் அறியப்படாமல் நிகழ்ந்ததுபற்றிய வழக்கு.

12 ஈண்டுக் கூறப்பட்ட வழக்குக்களைக் கொணரும்பொழுதே ஏற்றுக்கொள்ளாமல் விலக்கிவிடவேண்டும் என்பது கருத்து. ஏற்றுக்கொண்டபின்னர் இவ்வழக்கு விலக்கற்பாலது என்று அறிந்தால் அப்பொழுதே விலக்கிவிடல் வேண்டும் என்பதுங் கொள்க.

13 தொடுப்போர் தொடுப்பிப்போர் என்பன ஈண்டு முறையே விலக்கற்பால வழக்குக்களைத் தொடுக்கும் வழக்காளிகளையும் அங்ஙனம் தொடுக்கும்படி தூண்டினோரையும் குறிக்கும்.

14 கேட்போர் என்றது அறங்கூறுவோரை என்க.

15 பாதி—பூர்வசாகச தண்டத்தின் அளவிற்பாதி. விலக்கற்பாலனவாகிய வழக்குக்களை ஏற்று நடத்தும் அறங்கூறுவோரும் தண்டம் இறுக்க வேண்டும் என்பது கருத்து.

16 விலக்கற்பாலதாகிய வழக்கினை அறியாது மேற்கொண்டு நடத்தினவர் வஞ்சகமற்ற நல்லோராயின் என்பது.

17 பொருள்—ஈண்டு அவ்வழக்கு வென்றக்காற் கிடைக்கக்கூடியது.

18 அப்பொருளிழவே அவர்களுக்குத் தண்டமாக அமையும்; வேறு தண்டம் விதித்தல் வேண்டா என்பது.

19 இனி மேற்கூறியவற்றிற்குச் சில புறனடைவிதிகள் கூறுகின்றார். மறைவாக ஈடுவைத்துக் கடன் கொள்ளலாவது—ஈடாகக் குறித்த வீடு, தோட்டம் முதலியவற்றைக் கண்கூடாகக் காட்டாமல் ஈடாகவைத்துக் கடன் கொள்ளுதலாம்.

20 இன்னானுடைய பொருளை இன்னான் கொடுக்கல்வாங்கல்செய்தல் குற்றமாகாது என்று உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கு என்பது கருத்து. ஒரு பொருளாளனுக்கு உலகத்தவரால் அறியப்பட்டு அமைந்த செயலாளனை ஈண்டுக் குறிக்கும்.

தகாதது ஆகிய இவை [21]மறைவுபட்டனவாயினும் ஏற்று நடத்தற் பாலன.

[22]தாயம் [23]ஒப்புவித்தல் [24]அடைக்கலம் [25]திருமணம் இவற்றைப் பற்றினவும் [26]வெளிச்செல்லும் இயல்பினரல்லாத மகளிர் [27]மயக்கமில்லாத அறிவுடைய பிணியாளர் இவர்களுடையனவுமாகிய வழக்குக்கள் வீட்டினுள் நிகழ்ந்தனவாயினும் நடத்தற் பாலனவாம்.

[28]கொள்ளை [29]உட்புகுத்தல் [30]பூசல் திருமணம் [31]அரசன் ஆணை இவற்றால் நேர்ந்தனவும் [32]முன்னிரவில் தொழில்செய்வோருடையனவும் ஆகிய வழக்குக்கள் இரவில் நிகழ்ந்தனவாயினும் நடத்தற் பாலன.

---

21 முன்னது பொருள்மறைவினும் பின்னது நிலவன்மறைவினும் அடங்குமென்பது கருத்து.

22 ஞாதியர் தம்முள் தாயப்பொருளைப் பிரித்துக்கோடல் பற்றிய வழக்கென்பது கருத்து.

23 ஒப்புவித்தல்—அணிகலன் முதலியன செய்தற்பொருட்டுப் பொன் முதலியவற்றைக் கொடுத்தல்; ஒரு பேழையுள் அடங்கிய பொருள்களின் வடிவம், அளவு முதலியவற்றைக் கண்கூடாகக் காட்டி அப்பேழையை ஒப்புவித்தலுமாம்.

24 பேழையுள் இருக்கும் பொருள்களை இன்னவென்று கூறுமல் பேழையை இலச்சினையிட்டு ஒப்புவித்தலைப்பற்றிய வழக்கு என்பது.

25 திருமணம் என்பது சீதனம் முதலியவற்றைப் பற்றிய வழக்குக்களைக் குறிக்கும்.

26 வீட்டைவிட்டு வெளியிற் செல்லாத வழக்கத்தை இயல்பாகவுடைய குலமகளிர் என்பது.

27 இதனால் அறிவுமயங்கிய பிணியாளர் வழக்குக்கள் நடத்தற்பாலன அல்ல என்பது போதரும். இவை வீட்டினுள் நிகழ்ந்ததன்பாற்படும்.

28 கொள்ளை—பிறர்பொருளை வலிந்து கவர்தல்.

29 உட்புகுத்தல்—பிறர்பொருளை மறைவாகக் கவர்ந்து தன் வீட்டினுட் சேர்த்தல்.

30 பூசல்—கடுஞ்சொல் முதலியவற்றால் ஏற்படும் கலகம்.

31 அரசன் ஆணை என்பது ஈண்டு அரசனுடைய கட்டளைபெற்று நகரத்தைக் காவல் செய்வோரின் தொழிலைக் குறிக்கும்.

32 முன்னிரவில் தொழில் செய்வோர்—கணிகையர், கள்விற்போர் முதலியோர்.

வணிகர் ஆயர் [33]துறவோர் வேட்டுவர் [34]ஒற்றர் ஆகிய இவர்களுள் காட்டில் வழங்குவோருடைய வழக்குக்கள் காட்டில் நிகழ்ந்தனவாயினும் நடத்தற்பாலன.

வஞ்சத்தால் நிகழ்ந்துழியும் [35]கரந்தொழுகுவோர்களைப் பற்றியதாயின் நடத்தற்பாலதாம்.

மறைவில் நிகழ்ந்ததாயினும் [36]களவுமணம் பற்றியதாயின் நடத்தற்பாலதாம்.

[37]இவற்றின் வேறுயவற்றை நடத்துதல் ஆகாது.

[38]சுதந்தரமின்றித் [39]தந்தையின் வயப்பட்டமகன் [40]மகன்வயப்பட்ட தந்தை [41]குலத்தின் விலக்கப்பட்ட சகோதரன் [42]தாயபாகம்

---

33 துறவோர்—துறவற நெறியில் ஒழுகுவோர்; காட்டில் மனைவியோடிருந்து நோன்பியற்றும் வானப்பிரத்தர்களைக் குறிக்கும்.

34 ஒற்றர்—மறைந்து திரிவோர்.

35 கரந்தொழுகுதல்—தாழ்ந்த பொருள்களை உயர்ந்த பொருள் எனக் காட்டி ஏமாற்றுதல். தாழ்ந்த செம்பு முதலியவற்றைப் பொன் முதலியனவாகக் காட்டி ஏமாற்றுதல் என்பது கருத்து.

36 களவுமணம்—கந்தருவமணம். தலைவனும் தலைவியும் பிறரறியாவாறு தம்முள் மணந்துகோடலே கந்தருவமணம். அத்திருமணம் செய்துகொண்டோர் அதுபற்றிக் கொண்டுவரும் வழக்கு ஏற்று நடத்தற்பாலது என்பது கருத்து.

37 இவற்றின் வேறுயவை—ஈண்டுக் கூறப்பட்ட சிறப்புவிதியில் அடங்காத மறைவுபட்டன முதலிய வழக்குக்கள். இத்தகைய வழக்குக்களை நடத்தலாகாது என்பதை வலியுறுத்தற் பொருட்டு அநுவதித்தார்.

38 சுதந்தரமின்மையைப் பின் குறிக்கப்பட்டோர்க்கும் ஏற்றபெற்றி கொள்க.

39 வழக்கு நடத்தும் தகுதியுடைய தந்தையின் அடங்கிய மைந்தன் என்பதாம்.

40 வழக்கு நடத்தும் தகுதி மகனிடத்து உளதாக வழக்கியற்பருவம் கடந்த தந்தை என்பதாம்.

41 இழிசெயல்களால் குலத்தினின்றும் விலக்கப்பட்ட சகோதரன் என்பது.

42 தாயப்பொருளைப் பாகஞ் செய்துகொள்ளாத நிலையில் தமையன் தலைமையின் கீழடங்கிய இளைய சகோதரன் என்பது கருத்து.

பெருத தம்பி [43]கணவனேயாதல் மகனேயாதலுடைய பெண் [44]அடிமையாளன் [45]ஈடுபடுத்தப்பட்டோன் [46]வழக்கியல்பருவம் அடையாதவன் [47]வழக்கியல்பருவம் கடந்தவன் [48]பதிதன் துறவி [49]உறுப்பறை [50]விதனமுடையோன் ஆகிய இவர்கள் தொடுக்கும் வழக்குக்கள் [51]அதிகாரவுரிமைபெற்ற வழக்குக்கள் அல்லாத விடத்து நடத்தற்பாலன அல்லவாம்.

[52]அதிகாரவுரிமை பெற்றவற்றுள்ளும் [53]பெருஞ்சினமுடை

---

43 குடும்பத்தைப் போற்றும் திறமையுடைய கணவனேயாதல் மகனே யாதல் உடையவள் என்பது கருத்து.

44 அடிமையாளன்—பரம்பரையாக அடிமைத்தொழில் புரிவோன்.

45 ஈடுபடுத்தப்பட்டோன் — பொருளுக்கு ஈடாக அடிமைப்பட்டுத் தொழில்புரிவோன். இவர்கள் அனைவரும் சார்புடையோர் என்பது கருத்து.

46 வழக்கியல்பருவம் அடையாதவன் — வழக்குத் தொடுத்தற்கேற்ற பதினாறுட்டைப் பருவத்தை அடையாத இளைஞன்.

47 வழக்கியல்பருவங் கடந்தவன்—எழுபதாண்டு கடந்தவன். எனவே பதினாறுண்டிற்கும் எழுபதியாண்டிற்கும் இடைப்பட்ட வயதுடையோர் அனைவரும் வழக்கு நடத்தும் தகுதி வாய்ந்தவர் என்பது பெற்றும்.

48 பதிதன்--மாபாதகங்களைச் செய்வோன்.

49 உறுப்பறை—ஈண்டு ஊமை செவிடர் குருடர் முதலியோரைக் குறிக்கும். கால் கை குறைந்தோர் வழக்குநடத்துதல் கூடாதென்பது பொருந்தாமையின் என்க.

50 விதனமுடையோன்—எழுவகைப்பட்ட விதனங்களுள் ஒன்றேனும் பலவேனுமுடைய கீழ்மகன். எழுவகைப்பட்ட விதனங்களாவன :—

" வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காமமோ டேழு "

என்பதாம்.

51 ஒருவன் நடத்தவேண்டிய வழக்கை மற்றொருவன் அவனது உரிமையை ஏற்று அவன்பொருட்டு நடத்தும் வழக்கு அதிகாரவுரிமைபெற்ற தாகும். ஈண்டுக் கூறப்பட்டோர் அவ்வதிகாரவுரிமைபெற்ற வழக்குக் களைக் கொண்டுவந்தால் அவற்றை ஏற்று நடத்தலாம் என்பது கருத்து. இங்ஙனம் கூறினாராயினும் இளைஞர், உறுப்பறை முதலிய சிலர் வழக்கு நடத்தல் பொருந்தாமையின் ஏற்றபெற்றி கொள்ளல்வேண்டும்.

52 இனி அதிகாரவுரிமைபெற்று வழக்குக்களைக் கொணரவும் தகுதி யற்றவரைக் கூறுகின்றார்.

53 பெருஞ்சினமுடையோன்—சினமிகுதியால் கொலை முதலிய பெருந் தீங்குகளையும் செய்யும் இயல்புடையவன்.

யோன் [54]துயருடையவன் [55]கழிகண்ணோட்டமுடையோன் [56]பித்தன் தண்டனையடைந்தோன் இவர்களாற் கொணரப்படும் வழக்கை நடத்துதல் கூடாது. [57]தொடுப்போர் [58]தொடுப்பிப்போர் [59]கேட்போர் ஆகிய இவர்களுக்குத் தனித்தனியே [60]முன்னர்க் கூறப்பட்ட தண்டமாம்.

[61]தத்தம் [62]மரபு [63]இடம் [64]காலம் என்னும் இவற்றைப் பற்றித் தம் செயன்முறைகளால் ஆக்கப்பட்டனவும் [65]வழக்க

---

[54] துயரமுடையவன் அதிகாரவுரிமைபெற்று வழக்குநடத்துதற்கு மனவெழுச்சி யின்மையால் இயலாதவனுவான் என்பது கருத்துப்போலும்.

[55] கழிகண்ணோட்டம்—அளவிறந்த உவகை. இதனை,

" இவறலு மாண்பிறந்த மானமு மாணு
உவகையும் ஏதம் இறைக்கு " (432)

என்னும் திருக்குறளானும், " பிறரும் சினனே காமங் கழிகண் ணோட்டம் (பதிற்றுப் பத்து பாட்டு 22) என்றிவற்றை அறந்தருதிகிரிக்கு வழியடையாகுந் தீது என்றார் " என்னும் உரைக்குறிப்பானும் உணர்க.

[56] பித்தன்—பயித்தியம் பிடித்தவன்.

[57] தொடுப்போர்—பெருஞ்சினமுடையோன் முதலாயினோர்.

[58] தொடுப்பிப்போர் — பெருஞ்சினத்தன் முதலாயினரிடத்துத் தம் வழக்குரிமையை ஒப்புவித்துத் தொடுக்கும்படித் தூண்டினோர்.

[59] கேட்போர்—அறங்கூறுவோர் ; கேட்கப்படுவோர் எனக்கொண்டு சான்று கூறுவோரையுங் குறிக்கும் என்ப.

[60] தொடுப்போர் தொடுப்பிப்போர்களுக்குத் தனித்தனி பூர்வசாகச தண்டமும், கேட்போருக்கு அதிற் பாதி தண்டமும் ஆம் என்பது கருத்து.

[61] இதுகாறும் நடத்தக்கூடாத வழக்குக்களைக் கூறி அவற்றுள்ளும் நடத்தற்பாலன இவையெனச் சில புறனடைவிதியும் கூறினர். இனி ஈண்டுக் கூறப்படாதனவாகிய நடத்தவேண்டிய வழக்குக்களின் இயல்புகளைக் கூறத் தொடங்குகின்றார்.

[62] மரபு—சாதி.

[63] இடம்—காடு முதலியன.

[64] காலம்—இரவு பகல் முதலியன ; ஏற்று நடத்தும் வழக்குக்களைச் சாதிக்கும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப வுள்ளனவா என்று ஆராய்ந்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. பொதுவாகவுள்ள நீதிநூல்விதி சாதியின் வழக்கத்தாலும் இடங்களின் வேற்றுமையாலும் இராப்பகல் நிகழ்ச்சிகளாலும் ஒரோவழி வேறுபடுமாதலின் அவ்வேறுபாடு அறிந்து அவ்வவ்வழக்குக்களை நடாத்தல் வேண்டும் என்பது கருத்து.

[65] வழக்க ஒழுக்கம்—தத்தம் சாதி சமயத்திற்குரிய வழக்கங்களும் ஒழுக்கங்களும்.

ஒழுக்கங்களுக்கு ஒத்த [66]வழக்கியல் நிரம்பினவும் [67]தூயசான்றுகளை யுடையனவும் [68]உருவம் [69]இலக்கணம் [70]அளவு [71]பண்பு ஆகிய [72]இவை [73]தெளியப்பட்டனவும் ஆகிய வழக்குக்கள் அனைத்தும் நடத்தற்பாலனவாம்.

[74]கொள்ளல் [75]ஈடு இவற்றைத்தவிர ஏனைய நிகழ்ச்சிகளைப் பற்றிய பத்திரங்களுள் (காலத்தாற்) [76]பிற்பட்டதே நம்பத்தக்கதாம்.

---

66 வழக்கியல் நிரம்பலாவது — பகலில் நிகழ்ந்தது, பெருந்தெருவில் நிகழ்ந்தது என்பனபோலக் கூறப்படும் காலம் இடங்களின் இயைபும் வழக்காளி எதிர்வழக்காளி சான்றுகூறுவோர் ஆகிய இவர்களது ஒருங்கியைபும் முதலாய வழக்கு ஆராய்ந்து கோடற்குரிய இவ்வெல்லாம் நன்கு நிரம்பியதாக அமைதல்.

67 சான்று—ஒரு நிகழ்ச்சியில் கண்டறிந்தவற்றை அறங்கூறுவோர் முன்னிலையில் கூறுதல்; அச்சான்று கூறுவார்க்குரிய தூய்மையாவது, நேரில் காணுதவொன்றைக் கூறுதல் முதலிய குற்றமிலராயிருத்தல்.

68 உருவம்—வடிவம்; அது வழக்குத் தொடர்புள்ள பொருளின் வடிவத்தைக் குறிக்கும்.

69 இலக்கணம்—வேறுபாடறிந்துகோடற்கு ஏதுவான அடையாளங்கள்.

70 அளவு—மாடம் குன்றி முதலிய நிறுத்தலளவைகளும் மரக்கால் தூணி முதலிய முகத்தலளவைகளும் அங்குலம் சாண் முதலிய நீட்டலளவைகளும் ஒன்று பத்து முதலிய எண்ணலளவைகளுமாம்.

71 பண்பு—வெண்மை கருமை ஒளியுடைமை முதலியன.

72 இவை—உருவம் முதலிய இந்நான்கும்.

73 தெளியப்பட்டன—கண்கூடாகக் காணப்பட்டன.

74 மேலே கூறிய வழக்குக்கள் எல்லாம் பத்திரங்களை ஆதாரமாக வுடையன ஆதலால் ஒரு பொருளையே குறிப்பனவாகிய, காலத்தால் முற்பட்டதும் பிற்பட்டதுமாகிய இரண்டு பத்திரங்களுள் முரண்பாடு தோன்றுமாயின் செய்யற்பாலது யாது? என்பதை விளக்குகின்றார்; கொள்ளல் — விலை கொடுத்தாதல், தானமாகவாதல் நிலம் முதலிய பொருள்களை ஒருவன் தனக்குரியவாகக் கோடல். விற்றலும் தானமாகக் கொடுத்தலும் இதனாற் பெறப்படும்.

75 ஈடு—ஒரு பொருளை ஒரு பொருளுக்கு ஈடாக வைத்தல்.

76 முற்பட்டது பிற்பட்டது என மேற்கூறிய இரண்டு பத்திரங்களுள் காலத்தால் முற்பட்ட பத்திரத்தில் நிகழ்ந்துள்ள குற்றங்களைப் போக்குதற் பொருட்டே பிற்பட்ட பத்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டுமாகலான் அப் பிற்பட்ட பத்திரமே மேற்கொள்ளுதற் குரியது என்பதாம். இனி

[77]ஆண்டு [78]பருவம் திங்கள் [79]பக்கம் நாள் [80]கரணம் [81]இடம் [82]கடன் இவற்றையும் கடன்கொடுத்தல் கடன்கோடற் றொடர்புடைய [83]வழக்காளி எதிர்வழக்காளிகளின் நாடு ஊர் சாதி குலம் பெயர் தொழில் ஆகிய இவற்றையும் வரைந்துகொண்டு வழக்காளி எதிர்வழக்காளி ஆகிய இவர்களை வினவிய வினுக்களைப் [84]பொருளிற்கேற்ப [85]நிரலாக வரைதல் வேண்டும். வரைந்தவற்றை [86]ஆராய்தல் வேண்டும்.

கொள்ளல் ஈடு என்னும் இவற்றைப்பற்றிய பத்திரங்களாவெனில் இவ்விரு நிகழ்ச்சிகளுக்குமுரிய பத்திரங்கள் தோன்றியபோதே அப்பத்திரங்களால் சுட்டப்பட்ட பொருள்கள் வேறொருவன் வயமாகிவிடுகின்றன. ஆதலால் அவற்றைப்பற்றிப் பின்னர் எழுதப்படும் பத்திரங்களினும் காலத்தால் முற்பட்ட பத்திரங்களே இவ்விரு வழக்குக்களினும் வலியுடைய என்பதாம். "எல்லா வழக்குக்களிலும் பிற்பட்ட பத்திரமே வலியுடையதாகும். கொள்ளல் தானம் ஈடு இந்நிகழ்ச்சிகளில் முற்பட்டதே வலியுடையதாகும்" என்பர் யாஞ்ஞவல்கியர். இவ்வளவின் 'வழக்கியல் நிறுத்தல்' என்னும் பிரகரணம் முற்றிற்று.

77 இனி எஞ்சிநின்ற 'வழக்குரைவரைதல்' என்னும் பிரகரணம் கூறப்படும். வழக்குரை வரைதலாவது—வழக்காளி எதிர்வழக்காளி என்னும் இவர்களுடைய மொழிகளைக் காலம் இடம் சாதி முதலிய வரிசையின் அமைத்து ஏட்டில் வரைந்து கோடலாம். ஆண்டு என்பது ஈண்டு அரசன் திருமுடி சூட்டிக்கொண்ட காலம்தொடங்கிக் கணக்கிடப்படும் அரசயாண்டெனக் கொள்க. இது சகவாண்டு போல்வது. கலியுகாதி முதலியனவுமாம்.

78 பருவம்—கார் கூதிர் முதலியன.

79 பக்கம்—வளர்பிறை தேய்பிறை.

80 கரணம்—பவகரணம் முதலியன ; திதியளவிற் பாதியாகும்.

81 இடம்—தானீயம் துரோணமுகம் முதலியன.

82 கடன்—வட்டியின் நிமித்தம் கொடுக்கப்பட்ட பொருள்.

83 இவனை முதனூல் 'வேதகன்' என்று கூறும்; வேதகன் என்பது அறிவிப்போன் என்னும் பொருட்டு. பிறரால் தனக்கு நேர்ந்த துன்பத்தை அறங்கூறுவோர்க்கு அறிவிப்போன் என்பது கருத்து.

84 வினவப்பட்ட பொருள்களின் வன்மைமென்மைக்கு ஏற்ப என்பது.

85 நிரலாக—சிறப்புள்ளனவும் இல்லனவுமாகிய மொழிகளை முறையே முன்னும் பின்னுமாக.

86 ஆராய்தல், குறைவையும் மிகுதியையும் ஒழுங்குசெய்தற்கு என்க.

[87]எழுதிய பகுதியை விடுத்துப் பிறிதொன்றைத் தொடர்தல், [88]முன்னர்க் கூறியவற்றிற்குப் பின்னர்க் கூறுவன இயையாமை, எதிர்வழக்காளியினுடைய குற்றமற்ற மாற்றத்தைக் குற்றங்கூறி [89]வாளாவிருத்தல், [90]சான்றுகூறுவோரைக் (இத்துணையர் எனக்) கூறிப் பின்னர்க் 'காட்டுக' என்றபொழுது காட்டமாட்டாமை, [91]சான்றுகூறுவோர்குறைதல் அல்லது தகுதியில்லாதாரைச் சான்றுகாட்டுதல், [92]சான்றென ஒருவனைக்கூறி வேறொருவனைக் காட்டுதல், [93]அருகில் இருந்து சான்றுகூறுவோன் உண்மை கூறுமிடத்து அதனை மறுத்து வெளியேறுதல், சான்றுகூறுவோருடைய சொற்களால் ஏற்பட்ட முடிவை ஏலாமை, [94]பேசத்தகாத இடத்தில் சான்றுகூறுவாரோடு மறைவிற் பேசுதல் ஆகிய இவை தோல்விக்குக் காரணங்களாம்.

---

87 இனி வழக்குக்களின் தோல்விக்குரிய காரணங்களைக் கூறுகின்றார். எழுதிக்கொடுத்த செய்தியின் ஒருபகுதியை விடுத்துப் பின்னர் வேறொரு பகுதியைத் தொடர்ந்து கூறுதல்; அவையாவன :—'என்னை இன்னான் கடுஞ்சொல்லால் வைதான்' என முன்னர் எழுதிக்கொடுத்துப் பின்னர் வாய்மொழியால் கூறும்பொழுது 'தடியாற் புடைத்தான்' என முரணுகக் கூறுதல் போல்வன எனக்கொள்க.

88 'எனக்கு இவன் பசு பொன் கலம் ஆகிய இவற்றைக் கொடுக்க வேண்டும்' என்று முன்னர்க்கூறிப் பின்னர் அவற்றை முழுதுங் கூறுமல் பொன் மட்டுமே கொடுக்கவேண்டும் என்று கூறுதல் போல்வன.

89 வாளாவிருத்தல்—'இது தவறு' என்பது மாத்திரங்கூறி அதற்குக் காரணங் கூருதிருத்தல்.

90 சான்றுகூறுவோர் இத்துணையர் என முன் உறுதிகூறிப் பெயர்களைக் குறிப்பிடச் சொல்லியபொழுது இயலாமலிருத்தல் என்பது.

91 நால்வர் சான்றுகூறுவோர் உளர் என்று கூறி இருவரைமட்டும் காட்டுதல்; அல்லது தன் மாமன் மைத்துனன் உடன்பிறந்தான் முதலிய சான்று கூறத் தகாதவர்களைச் சான்று கூறுவோராகக் காட்டல்.

92 பெயரளவில் சான்ருக ஒருவனைக்கூறி மற்றொருவனைக் கொணர்தல் என்பது.

93 தன் வழக்கிற்குச் சான்று கூறுவோன் தான் கண்டவற்றைக் கண்டாங்குக்கூற, அவனுரை தவறென்று கூறி மறுத்துவிட்டு வெளியே போய் விடுதல்.

94 பேசத்தகாத இடம்—அறங்கூறவையம் முதலியன

[95]தோல்வித்தண்டம் [96]ஐந்து மடங்காகும். [97]தானே வழக்கு மொழிந்து தோல்வியெய்தின் பத்து மடங்கு தண்டமாம். [98]ஆட் கூலி [99]எட்டில் ஒருகூறும். [100]ஆற்றுணவிற்கு விலைக்கேற்பக் கொடுத்தல்வேண்டும். [101]இவ்விரண்டும் தோற்றவன் கொடுக்கக் கடவன்.

பூசல் வன்செய்கை வாணிகக்குழு ஆகிய [102]இவற்றைத் தவிர வேறுவழக்குத் தொடுக்கப்பட்டவன் [103]மாற்றுவழக்குத் தொடுத்தல் கூடாது. [104]தொடுக்கப்பட்டவனிடத்திலும் வேறுவழக்குத் தொடுத்தல் கூடாது.

தொடுத்தவன் [105]எண்ணித்துணிந்தவன் ஆகலானும் தொடுக்

---

[95] தோல்வித்தண்டம் — மேலே கூறப்பட்டபடி சான்றுகூறுவோர் காரணமாக வழக்கில் தோல்வியடைந்தவனுக்கு விதிக்கப்படும் தண்டம்.

[96] வழக்கில் வென்றால் தனக்குக் கிடைக்கும் பொருளளவின் ஐந்து மடங்கென்பது கருத்து; பின்வரும் பத்துமடங்கென்பதற்கும் இவ்வாறே கூறிக்கொள்க. வழக்கை நிகழ்ந்தபடி நடத்தாமல் கற்பித்துக்கொண்டு நடத்த முயல்வோர்க்கு இத்தண்டம் என்பது கருத்து. நிகழ்ந்தபடி நடத்திச் சான்று முதலியன வலியிழந்த காரணத்தால் தோல்வி யெய்தினார்க்கு இத்தண்டம் ஏற்படாதெனக் கொள்ளல்வேண்டும்.

[97] சான்று கூறுவோரில்லாமல் ஒருவன் தானே கற்பிதமாக வழக்கு மொழிந்து தோற்றால் என்பது கருத்து.

[98] ஆட்கூலி—வழக்கு ஆராய்வோர்பால் தொழில் செய்வோர்களுக்குக் கொடுக்கக்கடவ கூலி.

[99] எட்டில் ஒருகூறு— ஈண்டுத் தகுதிபற்றி ஒரு காருடத்தில் எட்டில் ஒரு கூறெனக் கொள்க.

[100] ஆற்றுணா—சான்று கூறுவோர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு வருங்காலும் போகும்போதும் வழியிடை உண்ணும்பொருட்டுக் கொண்டு செல்லும் கட்டுச்சோறு முதலிய உணவு; இவ்வுணவுக்காகும் அரிசி முதலிய பொருள்களின் விலைக்கேற்பக் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[101] இவ்விரண்டும்—ஆட்கூலி, ஆற்றுணாச்செலவு என்னும் இரண்டும்.

[102] இந்நிகழ்ச்சிகளில் மாற்றுவழக்குத் தொடுக்கலாம் என்பது கருத்து.

[103] மாற்றுவழக்கென்பது வழக்காளியின்பேரில் எதிர்வழக்காளி தொடுக்கும் வழக்கு.

[104] ஒருவனால் வழக்குத் தொடுக்கப்பட்டவன்பேரில் வேறொருவன் அதே அமயத்தில் வழக்குத் தொடுத்தல் கூடாது என்பது கருத்து.

[105] எண்ணித்துணிதல் — இஃது இத்தகையது, இதனை இவ்வாறு செய்துமுடித்தல் வேண்டும் என்று முன்னரே ஆராய்ந்து துணிதல்.

கப்பட்டவன் [106]அங்ஙனம் இலன் ஆகலானும் [107]தொடுக்கப்பட்டவன் விடையைக் குறித்துத் தொடுத்தவன் அன்றே மறுத்துக் கூறல்வேண்டும். இன்றேல் தோல்வியடைந்தவன் ஆவான்.

அப்பொழுதே விடைகூற முடியாத எதிர்வழக்காளிக்கு (விடைகூற) மூன்றுநாள் முதல் ஏழுநாள் வரை அவகாசம் கொடுத்தல்வேண்டும். [108]இக்காலஎல்லைக்கு [109]மேற்படின் [110]மூன்று பணமுதல் பன்னிரண்டு பணம்வரை தண்டமாம். [111]மூன்று பக்கங்களுக்குப் பின்னரும் மாற்றங்கூறாதவனுக்குத் [112]தோல்வித் தண்டம் விதித்து அவனுடைய [113]உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத கருவிகளைத்தவிர [114]ஏனைய பொருள்களிலிருந்து, வழக்கு மூலம் தொடுத்தவன்வேண்டிய பொருளை ஈடுசெய்தல் வேண்டும். [115]ஒளிந்துமறையும் எதிர்வழக்காளிக்கும் [116]இத்தண்டமேயாம்.

---

106 அங்ஙனம் இலன்—அவ்வாறு எண்ணித் துணிந்திலன்.

107 எதிர்வழக்காளி கூறிய விடையைத் தக்க ஏதுக்களால் மறுத்துத் தன்பக்கத்தை வலியுறுத்தற்குரிய மறுப்புரையை நாட்கடவாமல் அப்பொழுதே வழக்காளி கூறல்வேண்டும் என்பதும் அங்ஙனம் உடனே மறுத்துக் கூறவில்லையாயின் அவன் தோல்வியடைந்தவனகக் கருதப்படுவான் என்பதும் கருத்து.

108 இக்கால எல்லை—இவ்வெழுநாள் எல்லை.

109 மேற்படுதலாவது—ஏழு நாட்களுக்குமேல் நாற்பத்தைந்து நாட்கள் வரையாகும்.

110 மூன்று பணத்திற்குக் குறையாமலும், பன்னிரண்டு பணத்திற்கு மேற்படாமலும் தண்டம் ஆம் என்றது எதிர்வழக்காளி காலந்தாழ்ந்தமைக்குக் கூறும் காரணத்தின் தகுதி குறித்தாம்.

111 மூன்று பக்கம்—நாற்பத்தைந்து நாட்கள்.

112 தோல்வித்தண்டம்-வழக்கிடப்பட்ட பொருளளவின் ஐந்துமடங்கு விதிக்கப்படும் தண்டம்.

113 உயிர்வாழ்தற்குரிய உழவு முதலிய தொழில்களுக்கு வேண்டிய கலப்பை மண்வெட்டி குந்தாலி முதலிய கருவிகள் என்பது கருத்து.

114 ஏனைய பொருள்கள்—கூலமும் பொன்னும் இரும்பினலும் மரத்தாலும் ஆக்கப்பட்ட பாண்டங்களும் அவற்றில் உள்ளனவுமாம்.

115 வழக்காளியைக் கண்ட அளவில் ஓடி மறையும் எதிர்வழக்காளி என்பது.

116 இத்தண்டம் — மேற்கூறப்பட்டபடி மாற்றங் கூறாதவனுக்குரிய தண்டமென்பது; வழக்காளியைக் கண்ட அளவில் ஓடி மறையும் எதிர்வழக்காளியும் மாற்றங் கூறாதவனதலின் இத்தண்டத்திற் குரியவனுவான்;

தொடுத்தவனுக்கு [117]ஒளியும் அளவே தோல்வியாம்.

[118]இறந்தவன் அல்லது இடையூறுக்கு ஆளானவன் என்னும் இவர்கள்பொருளுக்குச் சான்றுகூறுவோரால் [119]துணியப்பட்டவர் [120]உரியர் ஆவர்.

[121]தொடுத்தவன் தண்டம் இறுத்துப் (தொடுக்கப்பட்டவனைப்) பணியாளனுக்கிக்கொள்ளலாம். அல்லது [122]அவன் விரும்பியவண்ணம் [123]ஈடுகொள்ளலும் ஆம். [124]அந்தணன் அல்லா

அஃதாவது ஓடி மறைந்தவன் ஏழு நாட்களுக்குமேல் நாற்பத்தைந்து நாட்களுக்குள் வெளிப்பட்டு மாற்றங் கூறுவிடில் மூன்றுபணமுதல் பன்னிரண்டு பணம் வரை தண்டமும் நாற்பத்தைந்து நாட்களுக்கு மேலும் வெளிப்பட்டு மாற்றங்கூறவில்லையானுல் தோல்வித்தண்டத்துடன் தன் உடைமையிலிருந்து வழக்கின்மூலம் வாதி வேண்டிய பொருளையும் இறுத்தல்வேண்டும் என்பது கருத்து.

117 ஒளிதல்—தொடுத்தவன் மறைந்துகொள்ளுதல்; தொடுக்கப்பட்டவனைக் காண்டலும் தொடுத்தவன் ஒளிவானுயின் அதுவே அவன் தோல்வியுற்றவன் என்பதை அறிவுறுத்தும் என்பது கருத்து.

118 இறந்தவன் அல்லது இடையூறுடையோன் என்பன வழக்காளி எதிர்வழக்காளி ஆகிய இருவரையுங் குறிக்கும்.

119 துணியப்பட்டவர்—இப்பொருளுக்கு உரிமையுடையோர் அல்லது இறுக்கும் கடமையுடையோர் இவர் எனச் சான்றுகூறுவோரால் குறிக்கப்பட்ட வழக்காளி எதிர்வழக்காளிகளின் மக்கள் முதலிய உறவினர்.

120 உரியராதல்—வென்ற பொருளைப் பெறுதற்கும், தோற்றபொருளை இறுத்தற்கும் உரிமையுடையராதல்.

121 எதிர்வழக்காளி வழக்கில் தோற்றுத் தண்டம் இறுக்க இயலாதவனுயின் அவனுக்கு விதித்த தண்டத்தை வழக்காளியே அரசியலார்க்குக் கொடுத்துவிட்டு அப்பொருளுக்கீடாகத் தோல்வியுற்றவனைத் தனக்குப் பணியாளனுக ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பது கருத்து.

122 அவன்—தோல்வியுற்ற எதிர்வழக்காளி.

123 ஈடுகொள்ளல் — வழக்காளிவிருப்பத்திற்கேற்ப எதிர்வழக்காளி தன் உறவினருள் ஒருவனைத் தனக்கு ஈடாகப்பணிசெய்ய ஏற்பாடுசெய்யின் ஏற்றுக்கொள்ளல்; வழக்காளி விரும்பினுல் எதிர்வழக்காளி தனக்கு ஈடாக மற்றொருவனைப் பணிபுரியச் செய்யலாம் என்பது கருத்து.

124 அந்தணன் என்றதனுல் அரசர் முதலியோருள் தவமுடையோரையுங் கொள்ளல்வேண்டும்;

> "அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள் 30)

என்னும் பொய்யில்புலவர் பொருளுரைப்படி அறவோரைக் கொள்ளுதல் பொருத்தமாகும். அந்தணனுயின் பணிபுரிவித்துக்கொள்ளல் ஆகாதென்பது கருத்து.

தாணைக் [125]காப்பிட்டுக்கொண்டு [126]பணிசெய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

[127]சுலோகங்கள்

(1) இவ் [128]வரசதருமம் நால்வகைப்பட்ட [129]வருணாச்சிரமங்களையுடைய உலகியலாசாரத்தை ஓம்புமாற்றால் [130]அழியும் நிலையிலுள்ள எல்லா தருமங்களையும் செழித்தோங்கச் செய்கிறது.

(2) வழக்குப்பொருள், அறம் வியவகாரம் உலகியல் அரசன்ஆணை என்னும் இந்நான்கு கால்களையுடையதாம். [131]முன்னைய மூன்றினும் [132]பின்னையது [133]வலியுடைத்தாம்.

---

125 காப்பு—தீமையைப் பரிகரித்தற்பொருட்டுத் தலையில் ஐயவி அப்புதல் ; ஐயவி—வெண்சிறுகடுகு.

126 பணிசெய்வித்துக்கொள்ளல் — ஈண்டுத் தோல்வியுற்றவனையாதல் அவனுக்கு ஈடாகக் கொள்ளப்பட்டவனையாதல் பணியாளனாக்கல் ; இதனாற் கூறியது பணிபுரிபவன் வேதனமின்றித் தொழில்செய்யும் கடமை பொருதவனாகி ஏவுவோனை ஓரோவழிப் பில்லிசூனியங்களால் துன்புறுத்த முயலவுங்கூடும் ஆதலின் ஏவுவோன் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதில் விழிப்புடையவனாக இருக்கவேண்டும் என்பது புலப்படுத்தவாறாம் ; வெண்சிறு கடுகு பேய்பிசாசங்களால் நேரும் துன்பத்தைத் தடுத்துவிடும் என்பதை 'நெய்யோடையவியப்பி' (திருமுருகாற்றுப்படை அடி 228) என்பதனாலும் அறிக.

127 வழக்குக்களை நன்கு ஆராய்ந்தறிதல் உலகநன்மைக்கு ஏற்றது என்பதைப் பின்வரும் சுலோகங்களாற் கூறுகின்றார்.

128 அரசதருமம்—ஈண்டு அரசன் வழக்கியலை நன்கு ஆராய்ந்து நடத்துதலைக் குறிக்கும்.

129 வருணம்—அந்தணர் முதலிய நான்கு வருணங்கள் ; ஆச்சிரமம்—பிரமசரியம் முதலிய நான்குமாம்.

130 அறம் ஓம்பாத விடத்துத் தானே அழியும் என்பதாம்.

131 முன்னைய மூன்று—அறம் வியவகாரம் உலகியல் ஆகிய மூன்று.

132 பின்னையது—அரசன் ஆணை.

133 வலியுடைத்து—முன்னைய மூன்றையும் நோக்க இதுவே மேற்பட்டு நிற்கும் ; அறம் முதலியவற்றின் இயல்பைப் பின்வரும் சுலோகத்தால் அறிக.

(3) இவற்றுள் [134]அறம் உண்மையின்கண்ணும் [135]வியவகாரம் சான்றுகூறுவோர்கண்ணும் [136]உலகநடை மக்கட்கூட்டத்தின்கண்ணும் நிலைபேறுடையனவாம். ஆணை அரசன் கட்டளையாம்.

(4) அறநெறியால் குடியோம்பும் மன்னனுடைய [137]அறக்கடமை துறக்கத்திற்கு ஏதுவாம். அங்ஙனம் காவாதவனுக்கும் பொய்த்தண்டம் விதிப்பவனுக்கும் [138]நிரயமாம்.

(5) தன் மகனேயாயினும் தன் பகைவனேயாயினும் இருபாலாரிடத்தும் ஒத்தமுறையில் குற்றத்திற்குத் தக அரசனால் விதிக்கப்பட்ட தண்டமே மண்ணுலகையும் விண்ணுலகையும் [139]புரக்கவல்லதாம்.

(6) [140]அறம் வியவகாரம் உலகநடை நான்காவதாகிய நீதி

---

134 அறம் உண்மையில் நிலைப்பது என்றதனால் வழக்குப்பொருளின் உண்மைதெளிதலே அறம் என்பது பெறப்படும்.

135 வழக்குப்பொருளின் துணிவு சான்றுகூறுவோர்பால் நிலைப்பது என்றதனால் சான்று ஆட்சி ஆவணம் இவ்வெல்லாவற்றாலும் துணிய வேண்டும் என்பது போதரும்.

136 உலகநடை—நூல்களானன்றி மக்களுடைய வழக்க ஒழுக்கங்களால் அறியப்படுவது; ஆதலால் அதற்கு நிலையிடம் மக்கட்கூட்டம் என்பது.

137 அறக்கடமை—படைக்கலம் பயின்று உயிரோம்பல்; தன்னால் நிகழ்வன முதலிய ஐவகைப்பயங்களும் வாராமற் காத்துக் குடியோம்பலுமாம் இதனை,

> " மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
> தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
> ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
> ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ "
>
> (பெரியபுராணம்-திருநகரச்சிறப்பு—செய். 36)

என்பதனாலும் அறியலாம்.

138 நிரயம்—நரகம்; இங்ஙனம் வழக்கை ஆராய்ந்தறிதல் மறுமைப் பயனுக்குக் காரணமாதல் கூறப்பட்டது.

139 புரக்கவல்லது—இரண்டுலகத்திலும் இன்பத்தைத் தந்து தண்டம் விதிப்பவனைக் காப்பாற்றவல்லது என்பது கருத்து.

140 இச்சுலோகத்தில் நன்கு ஆராய்ந்து நடத்தப்பட்ட வழக்கினால் ஏற்படும் சிறந்த இம்மைப்பயனைக் கூறுகின்றார். ஈண்டுக்கூறிய அறமுதலியன முன்னர்க்கூறிய வழக்குப்பொருளின் நான்கு பாதங்களுமாம்.

என்னும் இவற்ருல் ஆட்சிபுரிபவன் நாற்புறமும் கடலாற் சூழப் பட்ட நிலத்தை வென்றடிப்படுத்துவன்.

(7) [141]ஒரு பொருளில் அறநூலிற்கும் உலகநடைக்கும் அரசன்ஆணையும் வியவகாரமும் முரண்பட்டவிடத்து [142]அறநூலைக் கொண்டே அப்பொருளைத் துணிதல்வேண்டும்.

(8) உலகநடையோடு [143]அறநூல் முரணுமிடத்து உலக நடையே ஏற்கத்தக்கதாகும். [144]ஆண்டு அறநூற்றுணிபு [145]வலியிழந்திருத்தலின்.

(9) [146]குற்றக்காட்சி, [147]தன்மொழி, வழக்காளி எதிர்வழக்

---

141 இதன்கண் 'முன்னைய மூன்றினும் பின்னையது வலியுடைத்தாம்' என்று முன்னர்க் கூறியதற்கு ஒரு புறனடை கூறுகின்ருர். ஒரு பொருளில்—ஒரு வழக்குப்பற்றிய பொருளில்.

142 இத்தகையவிடங்களில் அறநூலே பிரமாணமாகும்; அரசன் கட்டளையாதல் சான்று முதலியனவாதல் ஏற்கற்பாலன அல்ல என்பது கருத்து.

143 அறநூல்—மநுதருமம் முதலியன.

144 ஆண்டு—அறநூலும் உலகநடையும் மாறுபட்ட இடத்து.

145 வலியிழத்தலாவது—' தகர்ந்துகிடக்கும் அணையின் பக்கத்தில் குந்தாலியுடன் நிற்பவனைக் கண்டால் இவனே இவ்வணையைத் தகர்த்தவன் ஆதல்வேண்டும் என்று கொள்க' என அறநூல் விதித்திருந்தாலும் குந்தாலியுடன் நின்றவன் சிறுவனுக இருக்குமிடத்து 'இச்சிறுவன் இவ்வணையைத் தகர்த்திருக்க வியலாது' என்று அறியும் உலகியலறிவே அவ்விதியொடு முரணுமாயினும் கொள்ளத்தக்கதாகலின் ஈண்டு அறநூல்விதி ஆற்றல் குன்றியிருத்தல்.

146 சான்று முதலியவற்றை யல்லாமல் வழக்கைத் துணிதற்குரிய வேறு ஐந்து கருவிகள் கூறுகின்ருர்; குற்றக்காட்சியாவது—வீடு தீப்பற்றி எரியும் போது அதன் அருகில் கையில் கொள்ளியுடன் நிற்பவனைத் 'தீயிட்டவன்' என்று காணுதலும் உடம்பில் வெட்டப்பட்டுப் புதுக்குருதி நிலத்திற் சோரச் சாய்ந்துகிடப்பவனுடைய பக்கத்தில் புலராத குருதி தோய்ந்த வாளுடன் ஒருவன் நிற்பானுயின் 'இவனே வெட்டியவன்' எனக் காணுதலும் போல்வன.

147 தன்மொழி—குற்றஞ் செய்தவன், தானே செய்ததாகக் கூறி ஒப்புக் கொள்ளுதல்.

காளிகளின் [148]வினவிடை ஒப்பு, [149]காரணம், [150]சூளுறவு இவை பொருளைத் துணிதற்குக் கருவிகளாம்.

(10) [151]முன்கூறியதற்குப் பின்கூறியது முரணுதல் சான்று கூறுவோரை [152]நம்பாமைக்குக் காரணம் உண்டாதல் [153]சிறைக் காவலன் கையினின்றும் தப்புதல் என்னும் இவற்றால் தோல்வி துணியப்படும்.

மூன்றும் அதிகரணம் 1—2-ஆம் பிரகரணங்கள்
'வழக்கியல் நிறுத்தல்' 'வழக்குரை வரைதல்' என்பன அடங்கிய
ஐம்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

148 'வழியில் வண்டி யோட்டுவோன் வண்டியுருளையை யேற்றியமையால் என்கால் முறிந்துவிட்டது' என்று ஒருவன் வழக்குக் கொணர்ந்தானாக, எதிர்வழக்காளியை அறங்கூறுவோர் 'நீ ஏன் அங்ஙனம் செய்தாய்'? என்று வினவ அவன் அச்சத்தினால் வாய்வாளாவிருந்தான். அப்போது அறங்கூறுவோர் வழக்காளியை நோக்கி 'இவன் ஊமைகொல்' என வினவ அதற்கு மாற்றமாக வழக்காளி 'இல்லை இல்லை' இவன் வண்டி ஓட்டி வரும்போது 'ஒதுங்கிப்போ ஒதுங்கிப்போ' என வண்டியிலுள்ளார் பலர் செவியினும்பட உரத்துக் கூவினான். இப்போதுதான் ஊமைபோலக் காணப்படுகிறான், இவன் ஊமையில்லை என்றான். இம்மாற்றத்திலிருந்து எதிர்வழக்காளி தன் வண்டியின் பக்கம் வந்த வழக்காளியை ஒதுங்கிச் செல்லும்படிக் கூறினான் என்றும், இங்ஙனம் நிகழ்ந்ததற்கு வழக்காளியின் விழிப்பின்மையே காரணமாதலின், எதிர்வழக்காளி குற்றமுடையவன் அல்லன் என்றும் முடிவுசெய்தல்போல்வன ; இம்முடிவிற்கு அறங்கூறுவோரின் வினாவிற்கு வழக்காளியின் விடை ஒப்பாதல் காண்க.

149 காரணம் என்பது தகுதியான காரணங்காட்டுதல் என்பதைக் குறிக்கும். அஃதாவது :—'இவன் பிறன்மனை நயந்தான்' என ஒருவன் வழக்குத்தொடர எதிர்வழக்காளி தான் பேடியாதலை அறங்கூறுவோர் அறியக்காட்டுதல்.

150 சூளுறவு—தெய்வம் மகவு முதலியவற்றின்பேரில் ஆணையிடுதல் ; உபலக்கணத்தால் தெய்வமுன்னிலையில் நின்று உறுதிகூறலுமாம்.

151 இதன்கண் தோல்விக்குரிய காரணங்களைக் கூறுகின்றார் ; எங்கே உண்டாய் ? எங்கே படுத்திருந்தாய் ? என்பனபோன்ற கேள்விகளை நிகழ்த்தி அவற்றிற்கு விடையிறுக்கச் செய்யுங்கால், முன்பின் முரணுகக் கூறுதல்.

152 நம்பாமைக்குக் காரணம் — வழக்காளிக்குச் சுற்றத்தானாகவாதல் அவன்பால் உதவிபெறும் நிலையினனாகவாதல் போல்வன.

153 விலங்கிடுவோர் சிறைகாப்போர் முதலியோரிடத்திருந்து மறைவாகத் தப்பியோடுதல் என்பது கருத்து.

மூன்றும் அதிகரணம்—அறநிலையாட்சி

மூன்றும் பிரகரணம்—[1]மணவியல்—[2]மணஅறம், சீதனவிதி, பின்மணப்பொருள்

ஐம்பத்தொன்பதாம் அத்தியாயம்

மணத்தை முதலாகக்கொண்டது [3]வழக்காம்.

59-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பிரமம் முதலிய எண்வகைமணங்களின் இயல்பும், அவற்றைச் சார்ந்த சீதனவிதி முறைகளும், ஒருத்தியை மணஞ்செய்துகொண்ட கணவன் அவளைவிட்டு வேறு ஒருத்தியை மணஞ்செய்துகொள்ள நேர்ந்தபொழுது முதல் மனைவிக்குக் கொடுக்கவேண்டிய பொருளளவும் ஆகிய இச்செய்திகள் இப்பிரகரணத்திற் கூறப்படும். ஆதலின் இது 'மணவியல்' என்னும் பெயர்த்தாயிற்று. முன்னைய பிரகரணங்களில் வழக்குக்களைப் பற்றி மேற்கொள்ளும் முறைமை கூறப்பட்டது. இனி வழக்குக்களைக் கூறத் தொடங்குகின்றார். வழக்குநடத்தும் உரிமை இல்லறத்தார்க்கே ஆதலானும், அவ்வில்லறத்திற்கு மணம் இன்றியமையாச் சிறப்பினதாகலானும், அம் மணத்தைப்பற்றிய வழக்கே ஏனையவற்றினும் முக்கியமாதலானும், மணஇயல்புகளை இப்பிரகரணத்தில் மூன்று அத்தியாயங்களாற் கூறுவான் முற்பட்டு, முதல் அத்தியாயத்தில் மண அறம், சீதனவிதி, பின் மணப்பொருள் என்னும் இவற்றின் இயல்புகளைக் கூறத்தொடங்குகின்றார். இதனால் முன்னைப் பிரகரணத்தோடு இதற்கு இயைபுண்மை புலனுதலறிக. ஈண்டுக் கடன்கோடல் முதலியவைபற்றி நிகழும் வழக்குக்களுள் யாது முன்னர்க் கூறத்தக்கது? என்று ஆராயுங்கால் 'கடன்கோடல் பற்றியதே முக்கியமாகும்' என்று மநுவும், 'நிலம், மனைபற்றியது' என்று வெள்ளியும், 'அடைக்கலப்பொருள் பற்றியது' என்று வியாழனும் கூறுவர். இல்லறத்தார்க்கே வழக்கு நடத்தும் உரிமை யுண்மையாலும், அவ்வில்லறத்திற்கு மணமே காரணமாதலானும், மணஇயல்புபற்றிய வழக்கே ஏனையவற்றினும் முக்கியமாகும் எனக்கொண்டு, மணஇயல்புபற்றிய பிரகரணமே முதற்கட் கூறப்பட்டதென்னுங் கருத்துடையர் கௌடலியர் என்க.

[2] மணஅறம் என்றது மணத்தின் வகைகளையும், அவற்றின் இயல்புகளையும் குறிக்கும். இவ்வத்தியாயத்தின் முதலில் இதனைத் தொடங்குகின்றார்.

[3] வழக்கு—சாதியொருமை ; எல்லா வழக்குக்களும் மணத்தை மூலமாகவுடையன என்பது முன்னர்க் கூறப்பட்டது.

பெண்ணை அலங்கரித்துத் தானம்செய்தல் [4]பிரமமணம் எனப்படும்.

[5]உடனிருந்து அறமியற்றல் பிராசாபத்தியம் எனப்படும்.

ஆவும் ஆனேறும் [6]கோடல் ஆரிடம் எனப்படும்.

---

[4] இதன் இயல்பை "………பிரமமாவது—ஒத்த கோத்திரத்தானை நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் 'காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்தும் பூப்பு எய்தாமை அணி கலன் அணிந்து தானமாகக் கொடுப்பது ;

"கயலேர மருண்கண் கன்னிப் பூப்பெய்தி
யயல்பே ரணிகலன்கள் சேர்த்தி—யியலி
னிரலொத்த வந்தணர்க்கு நீரிற் கொடுத்தல்
பிரமமணம் என்னும் பெயர்த்து"

(தொல்-பொரு-92-ஆம் சூத்திர உரை)

என்னும் தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் முதல் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய விரிவுரையானும், எடுத்துக்காட்டானும் நன் குணரலாம். ஏனைய எழு மணங்களும் இங்ஙனமே எடுத்துக்காட்டப்படும். அவற்றுட் பெரும்பாலன இந்நூற் கருத்தோடொத்தும் சிறுபான்மை மாறு பட்டும் வருவனவற்றை ஆராய்ந்துகொள்க.

[5] 'உடனிருந்து அறமியற்றுக' என்று கூறி மந்திரத்துடன் கன்னியைக் கொடுத்தல் என்பது கருத்து.

"பிராசாபத்தியமாவது–மகட்கோடற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம் மகட்கீந்து கொடுப்பது"

"அரிமதர் உண்கண் ஆயிழை யெய்துதற்
குரியவன் கொடுத்த ஒண்பொரு ளிரட்டி
திருவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி
அரியதன் கிளையோ டமைவரக் கொடுத்தல்
பிரித லில்லாப் பிராசா பத்தியம்"

(தொல்-பொரு-சூ-92-நச்சினார்க்கினியர் உரை)

'பெற்றுக்கொண்ட பரிசத்து இரட்டி தம் மகட்கீந்து கொடுப்பது' என்னும் கருத்து இளம்பூரணர் உரையிலும் இறையனார் களவியல் உரையிலும் குறிக்கப்படவில்லை.

[6] மணமகனிடத்திருந்து ஆவும் ஆனேறும் பெற்றுக்கொண்டு பெண் ணைத் தானஞ்செய்வது ஆரிடமணம் எனப்படும் என்பது கருத்து. இனி 'ஆரிடமாவது தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச்செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும்

வேள்வியினிடையே [7]வேட்பிப்போனுக்கீதல் தெய்வம் எனப்படும்.

தலைவனும் தலைவியும் [8]தம்முள் இயைவது கந்தருவம் எனப்படும்.

இவைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற் கொடுப்பது ;

> " தனக்கொத்த வொண்பொருள் தன்மகளைச் சேர்த்தி
> மனைக்கொத்த மாண்புடையாற் பேணி—யினக்கொத்த
> வீரிடத்தாவை நிறீஇ யிடை யீவதே
> ஆரிடத்தார் கண்ட மணம் "

என்பது நச்சினார்க்கினியம்.

நச்சினார்க்கினியர் ஆவும் ஆனேறுமாகிய இரண்டன் இடை நிறீஇக் கொடுப்பதென்ற அளவிற் கூறினர். பின் அவ்விரண்டனையும் பெண்ணின் தந்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று குறிக்கவில்லை. கௌதம தரும சூத்திரம், மநு முதலிய அறநூல்களில் ஆவும் ஆனேறும் ஆகிய இரண்டனையும் மணமகனிடத்தினின்று பெற்றுக்கொண்டு பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இக்கொள்கையைத் தழுவி, தொல்காப்பியப் பொருளதிகாரத்து ' இன்பமும் பொருளும் ' என்னும் சூத்திரத்திற்கு முதலில் உரைகண்ட இளம்பூரணர் ' ஆரிடமாவது ஒன்றுனும், இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொடுப்பது ' என்று கூறியுள்ளார். வடமொழியில் ஒருசார் அறநூலாசிரியர் மணமகனிடத்தினின்றும் ஆவும் ஆனேறும் பெற்றுக்கொண்டு, பின்னர்க் கன்னியைத் தானம் செய்யும்போது அவற்றையும் மணமகனுக்குக் கொடுத்துவிடல் வேண்டும் என்றும் கூறியுள்ளார். இக்கருத்தும் ' ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது ' என்னும் இளம்பூரணர் உரைத்தொடரில் அமைந்துகிடத்தல் உய்த்துணர்ந்துகொள்க. இக்கருத்துக்கேற்ப இறையனார் களவியலுரைப் பாடபேதத்தில் 'அவற்றோடு நீரிற்கொடுப்பது' என்று காணப்படுகின்றது. இவ்வுரைப்பாடம் பொருத்தமாகவுள்ளது.

[7] வேட்பிப்போன் — வேள்வித்தலைவன்பால் தக்கிணை பெற்று வேள்வியை நடத்துவிப்போன். இம்மணத்தின் இயல்பினை ' தெய்வமாவது :— பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

> " நீளி நெடுநகர் நெய் பெய்து பாரித்த
> வேள்வி விளங்கழன் முன்னி நீஇக்—கேள்வியாற்
> கை வைத்தாம் பூணுளைக் காமுற்றுற்கீவதே
> தெய்வ மணத்தார் திறம் "

(தொல்-பொரு-சூ-92-உரை)

என்னும் இவற்றானும் உணர்க.

[8] தம்முள் இயைவதாவது :—கொடுப்பாரும், அடுப்பாரும் இன்றித் தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டுத் தம்முள் மனம் ஒத்துப் புணர்வது. ' கந்தருவமாவது :—கந்தருவகுமாரரும், கன்னியரும் தம்முள்

[9]பரியம் பெறுதல் ஆசுரம் எனப்படும்.

[10]வலிதிற் கொள்வது இராக்கதம் எனப்படும்.

எதிர்ப்பட்டுக்கண்டு இயைந்தது போலத் தலைவனும் தலைவியும் எதிர்ப் பட்டுப் புணர்வது.

> " அதிர்ப்பில் பைம்பூணாரும் ஆடவரும் தம்முள்
> எதிர்ப்பட்டுக் கண்டியைதல் என்ப--கதிர்ப்பொனியாழ்
> முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
> கந்தருவர் கண்ட கலப்பு "
>
> (தொல்-பொரு-சூ-92-உரை)

என்பவற்றானும் மணத்தின் இயல்பை அறிக.

[9] ஈவோன், தனக்கும் பெண்ணிற்கும் பரியப்பொருள் பெற்றுக் கொண்டு பெண்ணை ஈதல். இதன் இயல்பை நச்சினார்க்கினியர் 'கொல் லேறுகோடல் திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்;

> " முகையவிழ் கோதையை முள்ளெயிற்றரி வையைத்
> தகைநலம் கருதும் தருக்கினர் உளரெனின்
> இவையிவை செய்தாற் கெளியன் மற்றிவளெனத்
> தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித்
> தன்னவை யாற்றிய வளவையிற் றயங்கல்
> தொன்னிலை அசுரந் துணிந்தவாறே "
>
> (தொல்-பொரு-சூ-92-உரை)

என்று கூறுவர்.

கொல்லேறுகோடல் முதலிய வினைசெய்தாற்கே யன்றித் தக்க பொருள் கொடுப்பவனுக்கும் பெண்ணைக்கொடுத்தல் ஆசுரமாகும் என்பது 'இன்னதொரு பொருள் தந்தான் இவளை யெய்தும்' என்னும் களவிய லுரைப் பகுதியால் அறியலாம். பெறுதற்கரிய பொருள் தருதல், கொல் லேறுகோடல் முதலிய அரிய வினைசெய்தல் என்னும் இவ்விரண்டினையும் கருதியே இம்மணத்திற்குப் பெயர் 'அரும்பொருள் வினைநிலை' என்று பண்டைத் தமிழ்ச் சூத்திரம் ஒன்றிற் காணப்படுகின்றது.

[10] வலிதிற் பெண்ணைக் கவர்தல் இராக்கதமணம் எனப்படும் என்ற வாறு. இதனை 'தலைமகடன்னினும் தமரினும் பெறாது வலிதிற்கொள்வது';

> " மலிபொற் பைம் பூணானை மாலுற்ற மைந்தர்
> வலிதிற் கொண்டாள்வதே என்ப—வலிதிற்
> பராக்கதம் செய்துழலும் பாழிநிமிர் தோள்
> இராக் கதத்தார் மன்றலியல்பு "
>
> (தொல்-பொரு-சூ-92-உரை)

என்பவற்றானும் உணர்க.

[11] துயில்வாளை வெளவுதல் பைசாசம் எனப்படும்.

(இவற்றுள்) [12] முன்னைய நான்கும் [13] தந்தையைத் தலைமையாக வுடைமையின் [14] அறத்தின்பாற்பட்டனவாம். [15] எஞ்சியவை தாய் தந்தையர் இருவரையும் [16] தலைமையாக உடையன. என்னை?

---

[11] பெண் துயிலுங்கால் சேர்வது. இதனை 'மூத்தோர், களித்தோர், துயின்றோர் புணர்ச்சியும், இழிந்தோளை மணஞ்செய்தலும், ஆடைமாறுதலும் பிறவுமாம்.

> " எச்சாக் கௌியரியைந்த காவலர்
> பொச்சாப் பெய்திய பொழுது கொளமையத்து
> மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பின்
> உச்சாவார்க்குதவாக் கேண்மை
> பிசாசர் பேணிய பெருமைசால் இயல்பே ".
> " இடைமயக்கஞ் செய்யாவியல்பின னீங்கி
> யுடைமயக்கி யுட்கறுத்தல் என்ப—உடைய
> துசாவார்க்குதவாத வூனிலா யாக்கைப்
> பசாசத்தார் கண்ட மணப்பேறு "

(தொல்-பொரு-சூ-92-உரை)

என்பவற்றானும் உணர்க. ஈண்டுக் கூறிய பிரமம் முதலிய எண்வகைமணங்களும் வடநூல்வழக்கு. தமிழ்நூலார் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூத்திறப்படுத்து, முறையே ஒருதலைக்காமம், ஒத்தகாமம், ஒவ்வாக்காமம் என்பர். ஒத்தகாமம் அன்பின் ஐந்திணை என்னும் கந்தருவமணம் ஒன்றே. ஏனையவற்றுள் ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் மூன்றும் கைக்கிளையின்பாலும், பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் நான்கும் பெருந்திணையின்பாலும் அடங்கும். இதனை,

> " முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
> பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே ".

(தொல்-பொரு-சூ-105)

என்னும் சூத்திரத்தானுணர்க.

[12] முன்னைய நான்கும் — முன்னர்க் கூறப்பட்ட பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் இந்நான்கும்.

[13] தந்தையைத் தலைமையாக வுடைமையாவது, பெண்ணின் தந்தையினது உடன்பாடுபெற்று நிகழ்தல்.

[14] முன்னைய நான்கும் அறத்தின்பாற்பட்டன எனவே, பின்னைய நான்கும் அறத்தின்பாற்படாதன என்பது பாரிசேடத்தாற் கொள்க.

[15] எஞ்சியவை—கந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் இந்நான்கும்.

[16] ஈண்டுத் தலைவர் ஆதல் கந்தருவ முதலிய நால்வகை மணத்தினும், மகளிருடைய சீதனத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு அவ்வவர் தந்தை தாயார் உரியராதல் பற்றியாம். இதனைப் பின்னுள்ள ஏதுவாக்கியத்தால் அறிக.

பெண்ணிற்குக்கொடுக்கும் [17]பரியப்பொருளைப் பெறுதற்கு அவ் விருவரும் உரியராதலின் என்க. அவ்விருவருள் ஒருவரில்லை யானால் [18]மற்றொருவர் உரியர் ஆவர்.

[19]இரண்டாவது பரியம் பெண்ணுக்கே உரியதாம். [20]எல்லோ ரும் அன்புடைமை பற்றி (ப்பெண்ணிற்கு) அணிபவை [21]தடுத்தற் குரியனவல்ல.

[22]வாழ்விற்குரியனவும், பூணற்குரியனவும் சீதனம் ஆகும்.

---

17 பரியப்பொருள்—கந்தருவ முதலிய நால்வகை மணங்களுள் ஆசுர மணத்தில் மணம் நிகழ்தற்கு முன்னரும், ஏனைய மூன்றிலும் மணம்நிகழ்ந்த பின்னரும் மணமகனிடத்தினின்றும் பெறும் பொருள். பிரம முதலிய நான்கு மணங்களும் கன்னியாதானமாதலின் பரியப்பொருள் பெறுதல் இல்லையென்பது.

18 மற்றொருவர் உரியராதல்—சீதனத்தைப் பெறுதற்குத் தந்தையிறந்த பின்னர்த் தாய் உரியவள் ஆவாள், அல்லது தாய் இறந்தபின்னர்த் தந்தை உரியவன் ஆவான் என்பது கருத்து. இதுகாறும் மணஅறத்தின் இயல்பு கூறப்பட்டது. இனிச் சீதனவிதிபற்றிக் கூறத்தொடங்குகின்றார். சீதன விதியாவது, சீதனப்பொருளுக்கு உரியாரின்னாரென்பதும், அதனைச் செலவிடுமுறை முதலியனவுமாம்.

19 மணமகளைப் பெறும்பொருட்டு அவள் தாய்தந்தையர்க்கு மண மகனாற் கொடுக்கப்படும் பரியப்பொருள் முதற்பரியமாகும் என்பதும், அங்ஙனமல்லாமல் மணமகன் தன்விருப்பத்தால் மணமகளுக்குக் கொடுக் கும் பொருள் இரண்டாவது பரியமாகும் என்பதும், அப்பொருள் அப் பெண்ணுக்கேயன்றி அவள் தாய்தந்தையர்க்கு உரியதாகாது என்பதும் கருத்து.

20 எல்லோரும் என்றது மணமகனேயன்றி மற்றை உறவினர் முதலி யோரையும் குறிக்கும்.

21 அணியப்பட்ட அணிகலன் முதலியவற்றை அப்பெண் தனக்கே உரிமையாக்கிக்கொள்ளலாம் என்பதும், அவள் உரிமை பாராட்டுங்கால் அவள்கணவன் முதலியோர் தடைசெய்தல் கூடாதென்பதும் கருத்தாம்.

22 மணப்பெண்ணிற்குரியனவாக மேற்குறிப்பிட்ட பொருள் சீதனம் என்னும் பெயரோடு இருவகைப்படும் என்று கூறுகின்றார். சீதனம் உயிர் வாழ்தற்கு உரியனவும், அழகிற்கு அணிந்துகோடற்குரியனவும் என இரு வகைப்படும் என்பதாம். அவற்றுள் உயிர்வாழ்தற்குரியன, நிலம் பொன் முதலியன ; அணிதற்குரியன, அணிகலன் ஆடை முதலியன எனக்கொள்க.

வாழ்விற்கு ஏற்படுத்தப்படும் சீதனத்தின் [23]பேரெல்லை [24]இரண்டாயிரமாகும். [25]பூணற்குரிய சீதனத்திற்கு எல்லையின்றாம்.

மனைவி தன்வாழ்வின் பொருட்டும், மகன், மருகி இவர்களைப் பேணும்பொருட்டும் [26]வேற்றிடத்திருக்குங்கால் [27]உயிர்வாழ்தற்கு வழியில்லாத நெருக்கடியிலும் [28]அதனைச் செலவிடுதல் குற்றமாகாது.

[29]தடைசெய்துகொள்ளல், நோய், வற்கடம், அச்சம் இவற்றைப் பரிகரித்தற்பொருட்டும், அறஞ்செய்தற்கும் கணவன் ([30]செலவிடுதல் குற்றமாகாது). [31]அறத்திருமணம் புரிந்துகொண்ட கணவன் மனைவியர் இருவரும் [32]இரண்டு மகவுகளைப் பெற்றவர்களாய் மூன்றாண்டுகள்வரை தாம் ஒருங்கியைந்து [33]செலவிடப்பட்டது [34]கேட்டற்குரியதன்று. கந்தருவமணமாதல் ஆசுரமண

---

23 பேரெல்லை—உயர்ந்த அளவின் முடிவு.

24 இரண்டாயிரம் காருடம் எனக்கொள்க; இவ்வளவின் மேற்படக் கூடாதென்பதாம். நிலமாயின் இரண்டாயிரம் காருடம் மதிப்புள்ளது பேரெல்லையாம் என்க.

25 அணிகலன் முதலியவற்றிற்கு அளவின்றென்பது.

26 கணவன் அயல்நாட்டிலிருக்கும்பொழுது என்பது கருத்து.

27 உயிர்வாழச் சீதனத்தையல்லாமல் வேறு நிலம், பொருள்கள் இல்லாத இடுக்கட்பொழுதில் என்பது.

28 அதனை—சீதனத்தை.

29 தடைசெய்துகொள்ளல் — 'இப்பொழுது கொடாமல் அப்புறம் செல்லலாகாது' என்றுகூறித் தடைசெய்து பொருளை வலிதிற்கொள்ளல். இது கடன்கொடுத்தோர் முதலியோரால் நேர்வது.

30 சீதனத்தைச் செலவிடுதல் குற்றமாகாதென்க.

31 அறத்திருமணம்—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய இந்நான்குமாம். எனவே இவற்றுள் யாதானும் ஒரு மணத்தை மேற்கொண்ட கணவன்மனைவியர் என்பது கருத்து.

32 இரண்டு மகவுகள் என்பதற்கு மூலம் 'மிதுனம்' என்றிருத்தலால் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் எனக்கொள்ளல் வேண்டும்; இரண்டு ஆண், அல்லது இரண்டு பெண் என்பாரும் உளர்.

33 செலவிடப்பட்டது—சீதனம்.

34 அச்சீதனத்தைக் கணவன் அவ்வாறு செலவிட்டால் அதனை மனைவி 'கொடு' என்று கேட்டல் கூடாதென்பதாம்.

மாதல் புரிந்துகொண்டு (மேற் கூறப்பட்ட) [35]இருவகையானும் செலவிடப்பட்டதை வட்டியுடன் [36]கொடுப்பித்தல் வேண்டும். இராக்கதமணமாதல் பைசாசமணமாதல் புரிந்துகொண்டு அநுபவ நிமித்தம் செலவிடப்பட்டதை [37]களவுகொள்ளப்பட்ட பொருளாகக் (கருதிக்) கொடுத்தல்வேண்டும்.

[38]மணஅறம் இங்ஙனமாம்.

கணவன் இறந்தபின்னர் [39]அறத்தை விரும்பும் இயல்புடையவள் அப்பொழுதே கழிக்கப்பட்ட தன் அணிகலன்களையும் [40]எஞ்சிய சீதனத்தையும் அடையக் கடவள். (அங்ஙனம்) அடைந்த பின்னர் வேறுகணவனை மணந்தாளாயின் அவ்விருவகைப் பொருளையும் வட்டியுடன் [41]கொடுக்கச் செய்யவேண்டும். [42]குடும்பத்தை விரும்புகின்றவள் [43]மறுமணக் காலத்தில் மாமன், கணவன் ஆகிய

---

35 இருவகை—தடைசெய்துகொள்ளல் முதலியனவாகக் கூறப்பட்ட வகையும், இருவரும் ஒருங்கியைந்து மூன்றுண்டுகள் செலவிட்ட வகையுமாம்.

36 கொடுப்பித்தலுக்கு அறங்கூறுவோர் ஏவுதற் கருத்தாவாவர்.

37 இராக்கதமணம், பைசாசமணம் ஆகிய இரண்டனுள் ஒன்றாற் சேர்ந்த கணவன்மனைவியருள் மனைவிக்குரிய சீதனத்தை எவ்வாற்றானும் கணவன் செலவிடல் கூடாதென்பதும், செலவு செய்வானாயின், அப்பொருளளவு பொருளைக் களவுசெய்தவனுக்கு விதிக்கப்படும் தண்டமும் விதித்து, அப்பொருளை மனைவிக்குக் கொடுப்பித்தல் வேண்டும் என்பதும் கருத்தாகக் கொள்க.

38 மணஅறத்தின் இயல்பு ஈண்டுக் கூறப்பட்டபடியாம் என்பது; இதற்குரிய மூலம் சீதனவிதிபற்றிய தொடக்கத்திற்கு முன் இருத்தல் வேண்டும். 18-ஆம் குறிப்பு முடிவில் காண்க.

39 ஈண்டு அறம் என்றது கணவனுக்கும், தனக்கும் மறுமையில் நன்மையைத்தரும் கைம்மைநோன்பு முதலியவற்றையாம்.

40 எஞ்சியது—கணவனும், தானும் ஒருங்கியைந்து அதுகாறும் செலவிட்டு எஞ்சியது.

41 கொடுக்கச்செய்தல்—முதற் கணவனுடைய ஞாதிகளுக்குக் கொடுக்கும்படி செய்தல்; கொடுப்பித்தற்கு அறங்கூறுவோர் ஏவுதற்கருத்தா ஆவர்.

42 குடும்பத்தை விரும்புகின்றவள் என்பதற்குக் குடும்ப விருத்தியின் பொருட்டு மகப்பேற்றைக்கருதித் தன் கொழுந்தனோடு சேர்ந்து வாழ்பவள் என்பது கருத்து.

43 மறுமணக்காலம்—கைம்மையடைந்தவள் இவ்வளவுகாலம் சென்று மறுமணம் செய்துகொள்ளலாம் என்று வரையறை செய்யப்பட்ட காலம்.

இருவராலும் கொடுக்கப்பட்ட பொருளைப் [44]பெறுதற்கு உரிய ளாவள். மறுமணத்திற்குரிய காலம் [45]நெடும்பிரிவிற் கூறுவாம்.

[46]மாமனுடைய உடன்பாடின்றி மறுமணம் செய்துகொள்ப வள், மாமன் கணவன் ஆகிய இருவராலும் கொடுக்கப்பட்ட பொருளுக்கு உரிமையற்றவள் ஆவாள். [47]பிறனொருவனாற் கவர்ந்துகொள்ளப்பட்டவளுடைய [48]உறவினர் [49]முன்னையுறவின ரிடத்தினின்றும் பெற்ற பொருளைக் கொடுத்துவிடல்வேண்டும்.

[50]முறைப்படியே வந்தடைந்த ஒருத்தியை ஏற்றுக்கொண்ட வன் அவளுடைய சீதனத்தை [51]ஓம்புதல்வேண்டும்.

வேறுகணவனை மணந்தவள் முதற்கணவனுடைய [52]தாயப்

---

44 இது முன்னதற்குச் சிறப்புவிதி.

45 நெடும்பிரிவு—இதன் இயல்பை அறுபத்தொன்றும் அத்தியாயத்திற் காண்க.

46 மாமன் — கணவனுடைய தந்தை; அவன்சம்மதம்பெற்று மறு மணம் செய்துகொண்டால், மாமன் கணவன் இருவராலும் கொடுக்கப் பட்ட பொருளுக்கு உரிமையுடையவள் ஆவாள் என்றும், அவன்சம்மதம் இல்லாமல் மறுமணம் செய்துகொண்டால் அப்பொருளுக்கு உரிமையற்ற வள் ஆவாள் என்றும் கொள்க. இதனால் அக்காலத்தில் கைம்மையுற்ற மருகியை மாமன் உடன்பட்டு மறுமணம் புரிவித்த வழக்கமுண்மை புலனு தல் அறிக.

47 மணஞ்செய்துகொண்ட முதற்கணவன் உயிருடன் இருக்கும் பொழுது மற்றொருவனாற் கவர்ந்துகொள்ளப்பட்டவள் என்பது கருத்து.

48 உறவினர்—கவர்ந்துகொண்ட கணவனும், அவனைச் சார்ந்தோரும் ஆவர்.

49 முன்னையுறவினர்—முதலில் மணம் செய்துகொண்ட கணவன், மாமன் முதலியோர். அவர்கள் முதலில் சீதனமாகக்கொடுத்திருந்த பொரு ளைக் கவர்ந்துகொண்டவன் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது.

50 அறநூலிற் கூறிய முறைப்படி கொழுந்தன் முதலியோருள் ஒருவனை மறுமணம் செய்துகொண்டவள் என்பது கருத்து.

51 ஓம்புதல்—சீதனத்தைப் பாதுகாத்தல்; இதனால் அவன் சீதனத் தைச் செலவிடல் கூடாது என்பது போதரும்.

52 தாயப்பொருள்—முதற் கணவனுடைய பாட்டன், தந்தை முதலி யோர் வழிவந்த பொருள்.

பொருளுக்கு உரிமையற்றவள் ஆவாள். [53]அறநிலையுடையளாயிற் செலவிடலாம்.

மகப்பேறுடையவள் வேறுகணவனை மணந்தால் சீதனத்திற்கு உரிமையற்றவள் ஆவாள். அச் சீதனத்தை மக்கள் அடைதல் வேண்டும்.

[54]மக்களைப் பாதுகாக்கும்பொருட்டு வேறுகணவனை மணந்தவள் அம்மக்களின் நிமித்தம் (சீதனத்தைப்) [55]பெருக்குதல் வேண்டும்.

[56]பல கணவன்மார்களை மணந்து பல மக்களையும் உடையவளின் சீதனம் அம்மக்களுக்கு [57]அவ்வவர் தந்தையாற் கொடுக்கப்பட்ட முறையில் உரிமையுடையதாம்.

வேறுகணவனை மணந்தவள் தன் விருப்பப்படியே செலவு செய்தற்குரிய [58]சீதனத்தையும் மக்களுக்கு உரியதாக்குதல் வேண்டும்.

[59]மகப்பேறில்லாதவளாய்க் [60]கணவனுடைய பாயலை ஓம்பு

---

53 அறநிலையுடைமை—கற்பொடு பொருந்தி மறுமைக்காம் கைம்மை நோன்பு முதலிய அறங்களை மேற்கோடல்.

54 கணவனை யிழந்தமையால் வறுமையில் வருந்தும் மக்களைப் பாது காக்கும் நிமித்தம் மறுமணம் செய்துகொண்டவள் என்பது கருத்து.

55 பெருக்குதல்—வட்டிக்குக் கொடுத்தல் முதலியவற்றால் என்க; எனவே செலவுசெய்தல் கூடாது என்பதாம்.

56 ஈண்டுப் பல கணவன்மார்களை ஒருவன் இறந்தபின் ஒருவனை மணந்துகொண்டவள் என்பது கருத்து.

57 ஒரு கணவனோடு இருந்தபொழுது பிறந்த பிள்ளைக்கு அக்கணவனாற் கொடுக்கப்பட்ட சீதனம் உரியது என்பது கருத்து.

58 இச்சீதனம் முதற்கணவனின் தந்தையாகிய மாமன் உடன்பட்டுத் தந்ததும், மறுமணக்கணவன், மாமன் முதலியோர் தந்தவையும், தன் தந்தை முதலியோர் தந்தனவுமாம். அவற்றைத் தன் விருப்பப்படியே செலவு செய்யலாமாயினும் தனக்கு மக்கள் இருப்பின் அம்மக்களுக்கே உரிமைப்படுத்தவேண்டும் என்பது கருத்து.

59 மகப்பேறும் இன்றிக் கணவனை யிழந்தவள் என்பது கருத்து.

60 கணவனுடைய பாயலை ஓம்புகின்றவள் என்பது கற்புடையவள் என்பதைக் குறிப்பால் உணர்த்தும்.

கின்றவள் [61]சான்றோர் அணிமையிலிருந்து தன் [62]ஆயுள்காறும் சீதனத்தை நுகரக்கடவள். என்னை? [63]சீதனம் இடுக்கண் நேர்ந்துழி உதவுதற்பொருட்டாகலான். [64]பின்னர் ஞாதியர்க்கு உரிய தாம்.

கணவன் உயிருடனிருக்க இறந்தவளது சீதனத்தை அவளுடைய ஆண்மக்களும், பெண்மக்களும் [65]பகுத்துக்கொள்ளல் வேண்டும். ஆண்மகன் இல்லையாயின் பெண்மகளுக்காம். பெண்ணும் இல்லையாயின் கணவனுக்காம்.

[66]பரியப்பொருள், பிறந்தவீட்டிலிருந்து கொணர்ந்த பொருள், சுற்றத்தார் வழங்கிய பிறபொருள் ஆகிய இவற்றைச் சுற்றத்தார் கொள்ளக்கடவர்.

[67]சீதனவிதி இங்ஙனமாம்.

[68]மகப்பேறில்லாதவள், புதல்வர்ப்பேறில்லாதவள், மலடி,

---

[61] சான்றோரணிமையிலிருத்தல், கற்புநிலையைக் காத்தற்பொருட்டும் அவர்களின் அறவுரைகளால் மனம் செம்மையுறுதற்பொருட்டும் பிறர் அயிராமைப் பொருட்டும் ஆம்.

[62] ஆயுள்காறும் நுகர்தலாவது, சீதனத்தை முதலாக வைத்து அதன் ஊதியத்தை மாத்திரம் நுகர்தல்.

[63] இந்த ஏதுவினுள் முன்னைச் சொற்றொடரிலுள்ள சீதனம் என்பது அதன் ஊதியத்தைக் குறிக்கும். ஈண்டுச் சீதனம் மூலப்பொருளாகும்.

[64] பின்னர்—அவள் இறந்ததன் பின்பு. ஞாதியர்—கணவனுடைய தாயத்தார்கள்.

[65] பகுத்தல்—சமமாகப் பிரித்துக்கோடல்.

[66] அறத்தின்பாற்படாத ஆசுரம் முதலிய மணங்களில் இங்குக் கூறப்படுகின்ற பரியம் முதலியவற்றிற்கு உரியவள் இறந்தபின்னர் அவை அவள் கணவன் முதலியோர்க்கு உரியனவாகாவென்பதும், அவளுடைய தந்தை, உடன்பிறந்தார் முதலிய சுற்றத்தார்களுக்கே உரிய என்பதும் கூறுகின்றார்.

[67] சீதனவிதி மேலே கூறியபடியாம் என்பது கருத்து.

[68] இனி பின்மணப்பொருள் பற்றிக் கூறுகின்றார். பின்மணமாவது முதன் மனைவி உயிருடனிருக்கும்பொழுதே இரண்டாந்தாரமாக வேறொருத்தியை மணத்தல்; அங்ஙனம் இரண்டாவதாகச் செய்துகொள்ளப்படும் மணத்தின் நிமித்தம் செலவிடப்படும் பொருள் பின்மணப்பொருளாகும். ஈண்டு மகப்பேறில்லாதவள் என்பதற்கு ஒரு மகவீன்று, மீண்டும் கருத்

என்னும் இவர்களுக்கு எட்டியாண்டும், [69]சாமகப்பெறுவா ளுக்குப் பத்தியாண்டும், [70]பெண்மகவே பெறுவாளுக்குப் பன்னி ரண்டியாண்டும் [71]எதிர்பார்த்தல் வேண்டும்.

[72] அதன்பின்னர் மகப்பேற்றை விரும்புவோன் இரண்டாவ தாக ஒருத்தியை மணந்துகொள்ளலாம். [73]இதனைக்கடப்பின் [74]பரியம், சீதனம், பின்மணப்பொருளிற் பாதி இவற்றைக் கொடுத்தல் வேண்டும். [75]இருபத்துநான்கு பணம் வரை தண்டமு மாம்.

[76]பரியத்தையும், சீதனத்தையும், அவையில்லையாயின் அவற்

தரிக்கப்பெருதவள் என்றும், புதல்வர்ப் பேறில்லாதவள் என்பதற்கு பெண் மகவு ஒன்றீன்று, பின் பிணி முதலியவை காரணமாக, ஆண்மகவில்லா தவள் என்றும், மலடி என்பதற்குக் கருத்தரிக்கும் இயல்பில்லாதவள் என்றும் பொருள் கொள்க.

69 பிறந்தவுடன் இறக்கும் குழவிகளையாதல், வயிற்றிலேயே இறந்து பிறக்கும் குழவிகளையாதல் பெறுபவள் எனக்கொள்க.

70 அடிக்கடி கருத்தரித்தும் பெண்மகவே பெறுபவள் என்பது.

71 எதிர்பார்த்தல் வேண்டும் — மகப்பேறில்லாதவள் முதலிய மூவர்க் கும், இனி மகவு பிறக்குமா என்றும், சாமகப் பெறுவாளுக்கு இனி மகவு பிறந்து இறவாது உயிர்வாழுமா என்றும், பெண்மகவே பெறுபவள், இனி ஆண்மகவைப் பெறுவாளா என்றும், இங்ஙனம் மகப்பேற்றை எதிர் பார்த்தல் வேண்டும் என்பது கருத்து.

72 அதன்பின்னர் — மேற்கூறிய எட்டியாண்டு முதலிய எல்லையின் பின்னர்.

73 இதனைக் கடப்பின் —இக் காலவரையறையைப் பொருது முன்னரே இரண்டாம் மணம் செய்துகொள்ளின்.

74 பரியமும், சீதனமும் முதல் மனைவிக்கு முன்னர்க் கொடுக்கப் பட்டன ; அவற்றோடு இரண்டாம் மணத்தின் பொருட்டுச் செலவான தொகையிற் பாதியும் சேர்த்து முதல் மனைவிக்குக் கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

75 காலவரையறையைக் கடந்ததற்குரிய தண்டம் இருபத்துநான்கு பணம் வரை விதிக்கலாம் என்பது.

76 பரியமும், சீதனமும் முதன் மனைவிக்குரியவைகளே. அவையில்லாத வளாக இருப்பின், அவற்றிற்குத்தக ஓரளவு பொருளும், பின்மணப் பொருளும், உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய அளவு பொருளும் கொடுத்து விட்டு மேன்மேலும் பல மகளிரை மணக்கலாம் என்பது கருத்து.

றின் அளவு பொருளேயும், பின்மணப்பொருளேயும் உயிர்வாழ் தற்குப்போதிய ஓரளவு பொருளேயும் கொடுத்தபின் பல மகளிரை யும் மணந்துகொள்ளலாம். என்னே? [77]மகப்பேற்றின் நிமித்தமே மகளிராதலின் என்க.

இவர்களுக்குப் [78]பூப்பு ஒரே சமயத்தில் நிகழின் [79]மணந்து கொண்ட முறைப்படியாதல், [80]முதலில் மணஞ்செய்துகொள்ளப் பட்டவளேயாதல், [81]உயிருடன்வாழும் மகவினையுடையவளேயாதல் முதலிற் கூடுதல்வேண்டும்.

பூப்புக் காலத்தை [82]மறைத்தாலும் கூடாதிருந்தாலும் தொண்ணூற்ருறு பணம் தண்டமாம். மகப்பேறுடையவளேயும், [83]நோன்பு மேற்கொண்டிருக்கும் மலடியையும், சாமகப் பெறுவா

---

77 முதலில் மணஞ்செய்து கொள்ளப்பட்ட மனேவி மகப்பேறில்லாதவளாயின், அவள் பிறப்புப் பயனற்றதாகும். ஆதலின் அவளே விலக்கிவிடுதல் நியாயமே ஆகும் என்பது இதனுற் போதரும்; இது முன்னதனே வலியுறுத் தற்குரிய ஏதுவாகும்.

78 பூப்பு நிகழ்தல்—இருதுமதியாதல்.

79 மணந்துகொண்ட முறைப்படி—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் இம் முறைப்படி; இவை முறையே முதன் மணம், இரண்டாமணம் என்பன வாதிய எண்ணுப் பெயரானும் குறிக்கப்படும். எனவே பல மனேவிகள் ஒரே காலத்தில் பூப்புடையவராயின் மணந்துகொண்ட வரிசையால் அவரோடு கூடல்வேண்டும் என்றது பிரம முறைப்படி மணந்தவளே, முதல் மனேவி என்றும், பிராசாபத்திய முறையில் மணந்தவளே இரண்டாம் மனேவி என்றும் இங்ஙனம் வரிசைப்படுத்தி, அம்முறைப்படியே கூட வேண்டும் என்று கூறியபடியாம்.

80 ஒரே மணமுறையில் பல மகளிரை மணந்தவன் காலத்தால் முதலில் மணக்கப்பட்டவளே முதலில் கூடவேண்டும் என்பதாம்.

81 உயிருடன் வாழும் நன்மகவைப் பெறும் இயல்புடையவள் மணத்தா லாதல், காலத்தாலாதல் பிற்பட்டவளாயினும் முதலில் கூடத்தகுந்தவள் என்பது கருத்து.

82 மறைத்தலேயும், சேராதிருத்தலேயும் மகளிர்க்கேற்றுக; மறைத்தலே மகளிர்க்கும், சேராதிருத்தலே ஆடவர்க்கும் கோடலும் பொருந்தும்.

83 நோன்புமேற்கோடல் மகப்பேற்றின் பொருட்டாம். அங்ஙனம் நோற்பாளே அந்நோன்புவிதிக்கு மாருகப் புணர்தல் கூடாது என்பது கருத்து.

ளையும், பூப்பொழிந்தவளையும் [84]விருப்பமில்லாதபொழுது [85]புணர்தல் கூடாது. [86]விருப்பமற்ற கணவனும் [87]சேர்தல் கூடாது. தொழுநோயுடையவளையும், பித்துடையவளையும் புணர்தல் கூடாது, மகளிராயின் [88]இத்தகையவரை மகப்பேறு பொருட்டுச் சேரலாம்.

சுலோகம்

[89]இழிந்தநிலையடைந்தவன், [90]அயல்நாடுசென்றவன், [91]அரசத் துரோகி, [92]உயிர்க் கொலைஞன், [93]பதிதன், பேடி என்னும் இக் கணவன்மார்கள் விலக்கத் தக்கவர் ஆவர்.

மூன்றும் அதிகரணம் மூன்றும் பிரகரணத்தில்
'மணஅறம், சீதனவிதி, பின்மணப்பொருள்' என்பன அடங்கிய
ஐம்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

84 விருப்பமில்லாதபொழுது என்னும் அடையை, மகப்பேறுடையவள் முதலிய நால்வர்க்கும் கூட்டுக.

85 கணவன் விருப்பமுடையனுயினும் புணர்தல் கூடாது என்பது.

86 விருப்பமற்ற கணவன் என்றது மேலே கூறப்பட்ட நால்வகை மனைவியரிடத்தும் விருப்பமற்ற கணவன் என்றபடியாம்.

87 மனைவி விருப்பமுடையவளாயினும் சேர்தல் கூடாது என்பது கருத்து.

88 இத்தகையவர்—தொழுநோய் உடையவரும், பித்தரும் ஆகிய ஆடவர்.

89 குடிப் பிறப்பிற்குப் பொருந்தாத தீய ஒழுக்கங்களால் இழிந்தவன் என்பது.

90 வேற்றுநாடு சென்று பல ஆண்டுகளாகச் செய்தி அறிவியாதவன் என்பது.

91 அரசத் துரோகி—அரசனுக்குத் தீங்கு விளைக்கும் வினைஞன்; அரசனிடத்திலிருந்து தகாத முறையில் பொருள் கொள்வோன் எனினு மாம்.

92 உயிர்—ஈண்டு மக்களுயிர்.

93 பதிதன்—மாபாதகம் செய்து விலக்கப்பட்டவன்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

மூன்றும் பிரகாரணம்—[1]மணவியல்—[2]பணிசெயல், [3]குடியோம்பப் பணித்தல், [4]கொடுமை, வெறுப்பு, விலக்கியனமேற்கோடல், [5]உதவியைத்தடுத்தல்.

அறுபதாம் அத்தியாயம்

பன்னிரண்டு ஆண்டு கடந்த பெண்களும், பதினாறு ஆண்டு கடந்த ஆடவரும் பணிபுரியும் தகுதியை அடைகிறார்கள். [6]அதன் பின்னர்ப் பணிபுரியாவிடின் மகளிர்க்குப் பன்னிரண்டு பணமும் ஆடவர்க்கு [7]அதனிரட்டியும் தண்டமாம்.

குடும்பப் பணியில் ஈடுபட்டவளுக்குக் [8]காலங் குறிக்கப் படாதபொழுது [9]மக்களுக்கும், [10]உபகரணங்களுக்கும் ஏற்ப ஊண்

60-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இப்பிரகரணத்தின் முதலத்தியாயத்தில் மணவறம், சீதனவிதி, பின் மணப்பொருள் என்னும் இவை விளக்கப்பட்டன. இனி இவ்வத்தியாயத்தில் மணம் புரிந்துகொண்ட மகளிர்ஆடவர்களைப்பற்றிய பணிசெயல் முதலிய செய்திகள் விளக்கப்படுதலின் முன் அத்தியாயத்தோடு இதற்கு இயைபுண்மை புலனாதலறிக.

[2] பணிசெயல்—மணம் புரிந்துகொண்டவர்கள் தத்தம் கடமையைச் செய்தல்.

[3] குடியோம்பப் பணித்தல்—குடும்ப நலத்தைப் பாதுகாக்கச் செய்தல்; இஃது ஒரு குடும்பத்தைப் பொறுத்து நடத்தும் உரிமையைக் கணவன், மாமன் முதலியோரிடத்தினின்றும் பெற்றுக்கொண்டவளைப் பற்றியது.

[4] கொடுமை—கடுஞ்சொல், கடுந்தண்டம்.

[5] உதவியைத் தடுத்தல்—இன்னார் இன்னார் தமக்குள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்துகொள்ளுதல் கூடாது எனத் தடைசெய்தல்.

[6] மகளிர்க்குக் கூறிய பன்னிரண்டாண்டிற்குப் பின்னரும், ஆடவர்க்குக் கூறிய பதினாறாண்டிற்குப் பின்னரும் என்பது கருத்து.

[7] அதனிரட்டி—இருபத்துநான்குபணம். இத்துணையும் பணிபுரிதலைப் பற்றிய செய்தி கூறப்பட்டது.

[8] காலங் குறிக்கப்படாதபொழுது — இன்று இத்துணை வாங்கப் பட்டது, இன்று இத்துணை செலவு செய்யப்பட்டது என வரவு செலவுக் காலங் குறிப்பிடாதபொழுது.

[9] மக்களுக்கும்—போற்றப்படவேண்டிய குடும்பத்து மக்களுக்கும்.

[10] உபகரணங்கள்—பாண்டம் முதலியன.

உடைகளுக்கு வேண்டிய அளவினதல் சிறிது மிகுதியாகவாதல் [11]சிறப்பக் கொடுத்தல்வேண்டும். காலங் குறிக்கப்பட்டபொழுது [12]அவற்றையே [13]கணக்கிட்டுக் கொடுத்தல்வேண்டும். பரியம், சீதனம், [14]பின்மணப்பொருள் இவற்றைப் [15]பெருதபொழுது [16]பகுதியைக் கொடுத்தல்வேண்டும்.

மாமன்வீட்டிலிருப்பவளாதல், [17]பாகம்பெற்றவளாதல் கணவனை [18]வழக்குத் தொடர உரிமையற்றவளாவாள். குடியோம்பப் பணித்தல் [19]இவ்வாறும்.

[20]அம்மணமே, முழு அம்மணமே, [21]உறுப்பறையே, [22]இழிந்

---

11 சிறப்பக்கொடுத்தல்—பெறுவோரை மதித்துக் கொடுத்தல்.

12 அவற்றை — மேலே கூறப்பட்ட ஊண் உடைக்கு வேண்டிய அளவாகக் கொடுக்கப்படுவனவற்றை.

13 கணக்கிடுதல் — நாள் ஒன்றுக்கு இவ்வளவென்று கணித்துத் துணிதல். காலங் குறிக்கப்பட்ட பொழுது கணக்கிட்டுக் கொடுத்தல் வேண்டும் என்பதும், காலங் குறிக்கப்படாதபொழுது கணக்கிடாமற் கொடுக்கவேண்டும் என்பதும் கருத்து.

14 பின்மணப்பொருள் — முதன் மனைவியை விட்டு மேலும் மணம் செய்துகொள்ளுவதன் நிமித்தம் முதன் மனைவிக்குக் கணவனால் கொடுக்கப்படும் பொருள்.

15 பரிய முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளுதற்கு உரிமையுடையவள் பெருமல் இருப்பாளாயின் என்பது.

16 பகுதி—கூறு; ஊண் உடைகளுக்கு வேண்டிய அளவில் ஐந்தில் ஒரு கூறு எனவுங் கூறுவர். இங்ஙனம் கொடுப்பது தலைவனுடன் பகை கொண்டு விலகியிருப்பவளுக்கென்க. இங்கே கூறப்படுகின்றவள் கணவன், தந்தை, மாமன் முதலியோருள் ஒருவரது ஆட்சியுட்பட்டிருப்பவள். கொடுப்பவர், கணவன் தந்தை முதலியோருள் ஒருவராவர்.

17 பாகம்—கணவனாற் பிரித்துக் கொடுக்கப்பட்ட பாகம்.

18 வழக்குத் தொடர்தல்—ஊண் உடைகளின் நிமித்தம் தன்கணவன் பொருள் தரவேண்டுமென்று அறங்கூறுவோர் அவையத்து முறையிடுதல்.

19 இவ்வாறும்—ஈண்டுக் கூறப்பட்டபடியாம்.

20 நற்குணமில்லாத மனைவியைத் திருத்தும் பொருட்டுக் கணவன் இழைக்கும் கொடுமையைப் பற்றிக் கூறுகின்றார். அம்மணமே முதலிய இவ்வைந்தும் வசைமொழிகள். அம்மணமே என்றது அறிவுத் திருத்தம் இல்லாமையால் ஆடையில்லாதவளையொப்ப உள்ளவளே என்னும் பொருளது.

21 உறுப்பறையே—அங்கவீனம் உடையவளே.

22 இதுவும் பின்னதும் அவளுடைய தந்தைதாயரை இழித்துக் கூறிய படியாம்.

தவன் மகளே, இழிந்தவள் மகளே, என்னும் இன்னோரன்ன வசைச் சொற்களால் வைது [23]நல்வழிப்படுத்தல்வேண்டும். [24]மூங்கிற்கோல், கயிறு, கையாகிய இவற்றுள் ஒன்றால் முதுகில் மும்முறை புடைக்கலாம். [25]இவ்வரையறையைக் கடந்தால் [26]கடுஞ்சொற்கும், கடுந்தண்டத்திற்கும் உரியதண்டத்திற் பாதிதண்டமாம்.

[27]கணவனுடைய பரத்தமையைப் பொருத குற்றமற்றவள் கொடுமையை மேற்கொள்ளுங்காலும் [28]மேற்கூறியவாறேயாம்.

---

23 நல்வழிப்படுத்தல்—ஒழுக்கமுறைகளை உபதேசித்துத் திருத்துதல். இங்ஙனம் வைது கடுஞ்சொற் கூறல் நல்வழிப்படுத்தற்பொருட்டென்பது கருத்து.

24 இனி கடுஞ்சொற் கூறி நல்வழிப்படுத்தவியலாதவிடத்துச் செய்ய வேண்டிய கடுந்தண்டத்தைக் கூறுகின்றார்.

25 இவ் வரையறை — மேற்கூறியவைபோன்ற கடுஞ்சொற்களால் வைதல், மூங்கிற்கோல் முதலியவற்றால் மும்முறை முதுகிற் புடைத்தல் என்னும் இவ்விதி. இதனைக் கடத்தலாவது—மேலே கூறப்பட்டனபோன்ற கடுஞ்சொற்களானன்றி மிக இழிவான வசைமொழிகளால் வைதலும், மூங்கிற்கோல் முதலியவற்றானன்றிப் பெருந்தடி முதலியவற்றால் புடைத்தலும், மூங்கிற்கோன் முதலியவற்றால் புடைக்குங்காலும் முதுகின் அன்றி வேறிடத்துப் புடைத்தலும், முதுகினும் மூன்றுமுறை புடைத்தலன்றி மிகையாகப் புடைத்தலுமாம்.

26 ஒரு சாத்தனை ஒரு கொற்றன் கடுஞ்சொற்களால் வைததற்கும் அல்லது அடித்து ஒறுத்ததற்கும் விதிக்கப்படும் தண்டத்தின் அளவிற் பாதி தண்டம் என்க; அத்தண்டங்கள் மேலே எழுபத்தைந்து, எழுபத்தாறும் அத்தியாயங்களிற் கூறப்படும். அவற்றை ஆண்டுக் காண்க. இது காறும் கணவன்கொடுமை கூறியபடி.

27 இனி கற்புடையவள் தன்கணவன் பரத்தையரிடத்துத் தொடர்புடையவனை, அதுகண்டு பொறாது, அத்தொடர்பை அகற்ற அவன்பாற் செய்யத்தகுந்த கொடுமைக்கு வரையறை கூறுகின்றார்.

28 மேற்கூறியவாறேயாம் என்பது மனைவிக்குக் கணவன் இழைக்கத் தகுந்தனவாகக் கூறப்பட்ட கடுஞ்சொல், கடுந்தண்டம் முதலியவெல்லாம் கணவனைத் திருத்தும்பொருட்டு மனைவியும் மேற்கொள்ளலாம் என்றபடியாம்.

[29]தண்டம் கூறியவாறேயாம். [30]கொடுமை இங்ஙனமாம்.

[31]கணவனை வெறுத்து ஏழு பூப்புவரை இன்பமின்றி குறித்து அவனை நெருங்காமலிருக்கும் மனைவி [32]அதன்பின் அப்பொழுதே தன் அணிகலன்களைக் கழற்றி வைத்துவிட்டு மற்றொரு பெண்ணோடு கூடியிருக்கும் அவனை அடையக்கடவள்.

மனைவியை வெறுத்த கணவன் [33]தவப்பெண், [34]சீதனத்தைப் பேணுதற்குரியவன், ஞாதியர் என்னும் இவர்தம் இல்லங்களுள் ஒன்றில் [35]தமியளாயிருக்கும் அவளை [36]இரங்கிச் [37]சார்தல் வேண்டும்.

---

[29] தண்டம்—வரையறை கடந்தக்கால் விதிக்கப்படும் தண்டம். கணவனுக்காயின் 'பாதி' என்று மேற்கூறியவர், மகளிர்க்கு 'தண்டம் கூறியவாறேயாம்' என ஈண்டு விதந்து கூறியதனால் மகளிர்க்குத் தண்டம் பாதியன்று; மேல் 75-76-ஆம் அத்தியாயங்களில் அக்குற்றங்களுக்குக் கூறிய தண்டம் முழுதுமேயாம் என்று கொள்ளல்வேண்டும் என்பது கருத்து

[30] கொடுமை இழைப்பதற்கு விதி ஈண்டுக் கூறியபடியாம் என்பது.

[31] கணவன், தன்னை வெறுக்கும் மனைவியை ஏழு பூப்புவரை எதிர்பார்த்தல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் எதிர்பார்த்தல் மகளிர் மனம் மாறுபடும் இயல்புடையதாகலானும், காம உணர்ச்சி மகளிர்க்கு மென்மெல மலரும் இயல்புண்மையாலும், நாளடைவில் மனம் கனிந்து அவள் தன்னை விரும்பக்கூடும் என்பது பற்றியாம்.

[32] அதன்பின் அவள் அறிவுதிருந்திக் கணவனை நெருங்குவாளாயின், மீண்டும் அவனை வெறுமலிருத்தலை நம்புதற்கு ஏதுவாகத் தன் அணிகலன்களைக் கழற்றிக் கணவனிடத்து வைத்துவிட்டு, அவன் மற்றொரு பெண்ணோடு கூடியிருக்கும் நிலையில் பரிதபித்து அவனை அடையவேண்டும் என்பது. மனைவி கணவனை வெறுத்ததற்கு இது தண்டமாம்

[33] தவப்பெண்—தூய்மையும் அமைதியுமுடையளாய் நோன்பியற்றுபவள்.

[34] சீதனத்தைப் பேணுதற்குரியவன் என்றது அவ்வுரிமையை உடைய நெருங்கிய அவள் உறவினனைக் குறிப்பதாம். இவரில்லங்கள் ஒன்றனுள் இருத்தல் கற்பொழுக்கத்தைப் போற்றும்பொருட்டும், கணவன் ஐயுறுமைப் பொருட்டுமாம்; வேறுபிறரில்லத்திருத்தல் கூடாது என்பதாம்.

[35] வேறு ஆடவன் தொடர்பின்றித் தனித்திருத்தல்வேண்டும் என்பது கருத்து.

[36] இங்ஙனம் தமியளாயிருத்தல் கணவன் இரக்கத்திற்கு ஏதுவாகும் என்பதும், இங்ஙனம் அன்றிப் பிறர்மனையிலுறைதல், பிறருடன் கூடியாதல் இருந்தால் கணவனால் விடத்தகுந்த குற்றமுடையவள் ஆவாள் என்பதும் கருத்து.

[37] சார்தல்—அவள் தூயநிலையும், தனிநிலையும் கண்டு கணவன் பச்சாத்தாபத்தோடு அவளையடைதல்.

புணர்ச்சியுண்மைக்குரிய [38]அடையாளம் தன்பாற் காணப் படும்பொழுதும் புணர்ந்திலேன் எனமறைப்பவனும், [39]ஒற்றுதற்கு வந்த தோழியின்பால் பொய் கூறுபவனும், பன்னிரண்டு பணம் தண்டம் இறுத்தல்வேண்டும்.

[40]விருப்பமில்லாத கணவனுடைய வெறுக்கின்ற மனைவியும், [41]மனைவியினுடைய கணவனும் விடுதலைபெறத் தகாதவர்கள் ஆவர்.

மனைவியின் குற்றங்காரணமாக விடுதலையை விரும்பும் கணவன் [42]வாங்கியவற்றை அவளுக்குக் கொடுத்துவிடல் வேண்டும்.

கணவனின் குற்றங்காரணமாக மனைவி விடுதலையை விரும்பி ஞல் வாங்கினவற்றை அவளுக்குக் [43]கொடுத்தல்வேண்டா. [44]அறத் திருமணம் புரிந்துகொண்டவர்களுக்குள் விடுதலை இல்லையாம். வெறுப்பு [45]இவ்வாறும்.

---

[38] பற்குறி, நகக்குறி முதலியன.

[39] கணவனியல்பை அறிதற்கு ஒற்றுக விடுக்கப்பட்ட தோழி என்க.

[40] கணவன் தன்னைப் பிரிய விரும்பாத நிலையில் தான் அவனை வெறுக் கின்ற மனைவி என்க.

[41] மனைவி கணவனை விட்டுப்பிரிய விருப்பமில்லாத நிலையில் அவளை வெறுக்கின்ற கணவனும் என்க; எனவே கணவன்மனைவியருள் ஒருவருக்கு விடுதலைபெற விருப்பமில்லாதபொழுது மற்றவர் வெறுப்புடையாராயினும் விடுதலைபெற உரியராகார் என்பதும், இருவரும் ஒருவரையொருவர் வெறுப்பின் விடுதலைபெறலாம் என்பதும் கருத்தாதலறிக.

[42] வாங்கியவை — மனைவியினிடத்தினின்றும் பெற்ற சீதன முதலிய எல்லாப் பொருளுமாம்.

[43] சீதன முதலியவற்றைக் கொடாமலே விடுதலைபெறலாம் என்பது.

[44] அறத் திருமணம்—பிரமம் முதலிய நான்குமாம்; அறத் திருமணம் புரிந்துகொண்டோர்க்கு விடுதலையில்லை எனவே, அறத்தின்பாற்படாத ஆசுரம், கந்தருவம், இராக்கதம், பைசாசம் என்னும் நான்கு மணமுறை களில் ஒன்றனைற் சேர்ந்தோர்க்கே மேற்கூறப்பட்ட விடுதலைவிதியென அறிக.

[45] ஈண்டுக் கூறப்பட்டபடியாம்.

[46]செருக்குடைய ஆடலினும், [47]களியாட்டினும் ஒரு பெண் [48]தடுக்கப்பட்டபின்னரும் தலைப்படின் மூன்றுபணம் தண்டம் இறுத்தல்வேண்டும். பகலில் [49]பெண்காட்சி, [50]விளையாட்டு என்னும் இவற்றிற்றலைப்படின் ஆறுபணம் [51]தண்டமாம். [52]ஆண் காட்சி, [53]விளையாட்டு என்னும் இவற்றிற்றலைப்படின் பன்னிரண்டு பணமாம். இரவில் [54]இருமடங்காம்.

[55]துயிலுங்காலும், மயங்கியிருக்குங்காலும், [56]வெளிச்சென்றாலும், கணவனுக்கு வழிகொடாதிருந்தாலும் பன்னிரண்டு பணமாம். [57]இரவில் வெளியேற்றின் [58]இருமடங்காம்.

மகளிரும், ஆடவரும் புணர்ச்சிநிமித்தம் [59]காமக்குறும்புகள்

---

46 இனி விலக்கிபனமேற்கோடலைப்பற்றிக் கூறுகின்றார் — செருக்குடைய ஆடல்—செருக்குடைமையாற் கூத்தாடல் முதலியன; எனவே இத்தகைய ஆடல்கள் குலமகளிர்க்குத் தகுந்தனவல்ல என்பது போதரும்.

47 களியாட்டம்—கள்ளுண்டாடுதல்.

48 கணவனால் தடுக்கப்பட்ட பின்னரும் என்பது; இதனைப் பின்னரும் ஏற்புழி இயைத்துக் கொள்ளல்வேண்டும்.

49 பெண்காட்சி—பெண்டிரால் நிகழ்த்தப்படும் கூத்து முதலிய காட்சி.

50 விளையாட்டு—உய்யானமுதலியவற்றில் நிகழும் மகளிர் விளையாட்டு.

51 இத்தண்டம், கணவனாற் றடுக்கப்பட்ட பின்னரும், இவற்றிற்றலைப்படும் மகளிர்க்காம்.

52 ஆண்காட்சி—ஆடவர்களால் நிகழ்த்தப்படும் கூத்து முதலியன.

53 விளையாட்டு — ஈண்டு ஆடவர்விளையாட்டு; அவ்விளையாட்டிற் பெண்டிர் கலந்துகோடல் குற்றம் என்பது.

54 தடுக்கப்பட்ட பெண் இரவில் பெண்காட்சி விளையாட்டுக்களில் தலைப்படின் பன்னிரண்டு பணமும், ஆண்காட்சி விளையாட்டுக்களில் தலைப்படின் இருபத்துநான்கு பணமும் தண்டம் என்பது கருத்து.

55 கணவன் துயிலும்பொழுதினுதல், கள்ளுண்டு மயங்கியிருக்கும் பொழுதினுதல் என்க.

56 வெளிச்செல்லலும், வழிகொடாதிருத்தலும் மனைவியின் செயலாம்; வழிகொடாதிருத்தலாவது—கதவைத் தாழிட்டுக்கொண்டு திறவாமலிருத்தல் முதலியன.

57 எக்காரணத்தை முன்னிட்டேனும் கணவனை வீட்டினின்றும் வெளியேற்றுதல்.

58 இருமடங்கு—இருபத்துநான்கு பணம்.

59 காமக்குறும்புகள்—கண் முதலிய உறுப்புக்களால் காமக்குறிப்பைப் புலப்படுக்குஞ் செயல்கள்.

செய்துகொண்டாலும், மறைவில் [60]அருவருப்பான பேச்சுகள் பேசிக்கொண்டாலும் மகளிர்க்கு இருபத்துநான்கு பணமும், ஆடவர்க்கு [61]இருமடங்கும் தண்டமாம்.

தலைமயிரைப் பிடித்தாலும், ஆடைமுடிச்சினை அவிழ்த்தாலும், பல்லாலும், நகங்களாலும் ஊறுசெய்தாலும் [62]பூர்வசாகசம் தண்டமாம். ஆடவர்க்கு [63]இருமடங்காம்.

[64]ஐயுறத்தக்க இடத்தில் [65]பேசிக்கொண்டிருந்தாலும் [66]பணத்திற்கு ஈடாகக் கசையடி தண்டமாம். அப்பெண்களைக் [67]கிராமத்

---

60 அருவருப்பான பேச்சு—இடக்கரான மொழிகளாற் பேசும் பேச்சு.

61 இருமடங்கு—நாற்பத்தெட்டுப் பணம்.

62 பூர்வசாகச தண்டம் — இருநூற்றைம்பது பணம். ஆடவர்க்கு இருமடங்கு என்றமையால் இது மகளிர்க்கென்பது.

63 இருமடங்கு — ஐந்நூறு பணம்; இத்தண்டம் மத்தியம சாகச தண்டம் எனப்படும்.

64 ஐயுறத்தக்க இடம்—மக்கள் வழங்காத மறைவிடம்.

65 வெறும் பேச்சுமாத்திரம் நிகழ்ந்தாலும் என்பது.

66 எத்துணைப்பணம் தண்டமாக விதிக்கப்பட்டனவோ அத்துணைக் கசையடி என்பது கருத்து.

67 மகளிரைக் கிராமத்தின் நடுவண் நிறுத்திக் கிராமத்து மக்கள் காணும்படி புலையனால் ஐந்து கசையடி அடிப்பித்தல் வேண்டும் என்றது, இக்குற்றத்தைச் செய்ய ஏனைய மகளிர் அஞ்சுதற் பொருட்டும், குற்றம் செய்தவள் நாணுதற்பொருட்டுமாம். ஒழுக்கத்தினிழுக்கிய மகளிர்க்கு இத்தகைய கடுந்தண்டம் விதிக்கப்பட்ட செய்தியை,

" என்னிகந் தொரீஇயின ளிளமையிற் கணவன்
தன்னிகந் தொரீஇயான் றகேள ளுகக்
கொண்டோற் பிழைத்த தண்டம் தூக்கி
வடிக்க ணிட்டிகைப் பொடித்துக ளட்டிக்
குற்றம் கொல்லும் எங்கோப் பிழைப்பிலனென
முற்றந் தோறும் மூதா ரறிய
நெய்தற் புலையன் நெறியிற் சாற்றிப்
பைதற் பம்பை இடங்கண் எருக்கி
மணக்குடம் பூட்டி மாநீர் யமுனை
இடைக்கயத் தழுந்த விடீஇய செல்வுழி "

(உஞ்சை-சாங்கியத்தாய், வரி-152–161)

என்னும் பெருங்கதையானும் அறிக.

தின் நடுவண் நிறுத்தி அவர்தம் இருமருங்கினும் புலையன் ஐந்து கசையடி கொடுத்தல்வேண்டும். [68]பணத்தை ஈடாகக்கொடுத்துக் கசையடியினின்றும் விடுதலைபெறலாம்.

[69]விலக்கியனமேற்கோடல் இங்ஙனமாம்.

[70]தடுக்கப்பட்டுள்ள மகளிரும் ஆடவரும் ஒருவருக்கொருவர் உபகரித்துக்கொள்ளும் நிகழ்ச்சியில் [71]சிறிய பொருள்களுக்குப் பன்னிரண்டு பணமும், [72]பெரிய பொருள்களுக்கு இருபத்துநான்கு பணமும், [73]பொன்னுக்கு ஐம்பத்துநான்கு பணமும் மகளிர்க்குத் தண்டமாம். [74]ஆடவர்க்கு அவற்றினிரட்டியாம். [75]சேரத்தகாத வர்களுக்கு [76]அதிற் பாதியாம்.

[77]இங்ஙனமே தடுக்கப்பட்ட ஆடவர்களுக்குள் உதவிசெய்து

---

[68] ஓர் அடிக்கு ஒரு பணம் வீதம் கொடுத்துக் கசையடியினின்றும் விடுதலை பெறலாம் என்பது கருத்து.

[69] விலக்கியனமேற்கோடல் இங்குக் கூறப்பட்டபடியாம் என்பது கருத்து.

[70] இனித் தடையைப்பற்றிக் கூறுகின்றார். ஒருவருக்கொருவர் உதவி செய்துகோடல் கூடாதென அறங்கூறுவோர் அல்லது குடும்பத்தலைவரால் தடுக்கப்பட்டுள்ள ஆடவர்மகளிர்கள் என்பது கருத்து.

[71] மாலை, சாந்தம் முதலியன.

[72] ஆடை, அணிகலன் முதலியன.

[73] உதவியபொருள் பொன்னுயின் என்பது.

[74] சிறிய பொருளை உதவினுல் இருபத்துநான்கு பணமும், பெரிய பொருளை உதவினுல் நாற்பத்தெட்டுப் பணமும் பொன் முதலியவற்றை உதவினுல் நூற்றெட்டுப் பணமும் ஆடவர்க்குத் தண்டமாம் என்பது.

[75] சேரத்தகாதவர்—உடன்பிறந்தாராகிய ஆடவர்மகளிர்கள்.

[76] சிறியபொருள் முதலியவற்றிற்கு முறையே மகளிர்க்கும், ஆடவர்க்கும் தனித்தனி மேலே விதித்த தண்டத்தில் அரைமடங்கு தண்டமாம் என்பது. உடன் பிறந்தோர்கள் இயல்பாகவே ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளற்கு அன்புடைமை காரணமாயினும், இச்செயல் மேன் மேலும் தொடர்ந்து நிகழுமாயின் பிறழ்ச்சியான எண்ணங்களையுண்டு பண்ணக்கூடும் என்பது பற்றித் தடுக்கப்பட்டு இத்தண்டம் விதிக்கப்பட்ட தெனக் கொள்க.

[77] தடுக்கப்பட்ட ஆடவர்மகளிர்க்கு விதித்த தண்டமே தடுக்கப்பட்ட இரண்டு ஆடவர்கள் தம்முள் உதவிசெய்துகொண்டதற்கும் ஆம் என்பது கருத்து.

கோடற்கும் ஆம். [78]உதவியைத் தடுத்தல் இவ்வாறும்.

சுலோகம்

இராசத்துரோகம், [79]விலக்கியனமேற்கோடல், [80]தாமே வெளிப்படல் ஆகிய இச்செயல்களால் மகளிர் சீதனம், [81]கொண்டு வந்தபொருள், பரியம் ஆகிய இவற்றின் உரிமையை இழந்தவர் ஆவர்.

மூன்றும் அதிகரணம் மூன்றும் பிரகரணத்தில் ' பணிசெயல், குடியோம்பப்பணித்தல், கொடுமை, வெறுப்பு, விலக்கியன மேற்கோடல், உதவியைத்தடுத்தல் ' என்பன அடங்கிய அறுபதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

78 உதவியைத் தடுத்தல் ஈண்டுக் கூறியபடியாம் என்பது.

79 விலக்கியனமேற்கோடல் — செருக்குடைய கூத்து, களியாட்டம் முதலியவற்றிற் றலைப்படல்.

80 கணவனிடமிருந்து தாமே விலகி வெளியேறுதல்.

81 கொண்டுவந்த பொருள்—மகளிர், தம்தந்தையின் இல்லத்திருந்து கொண்டுவந்த பொருள்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

மூன்றும் பிரகாரணம்—மணவியல்–[1]வெளியேறுதல், [2]பின்தொடர்தல், [3]சிலநாட்பிரிவு, [4]பலநாட்பிரிவு

அறுபத்தொன்றும் அத்தியாயம்

கணவன்வீட்டினின்றும் வெளியேறின [5]மனைவிக்குக் ([6]கணவனுடைய) குற்றமில்லாதவிடத்து ஆறு பணம் தண்டமாம். [7]தடுக்கப்பட்டவளாயின் பன்னிரண்டு பணமாம். [8]அயல்வீடு சென்றவளுக்கு ஆறு பணமாம்.

அயல்வீட்டானுக்கு [9]இடங்கொடுத்தல், [10]துறவிகளுக்கு ஐயம்

61-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இவ் வத்தியாயத்தில் முன்னைய இரண்டத்தியாயங்களினும் கூறப்பட்ட மணவியலில் எஞ்சிய 'வெளியேறுதல்' முதலியசெய்திகள் கூறப்படுதலின் அத்தியாய இயைபுண்மை யறிக. வெளியேறுதல்—மனைவி கணவன்பால் ஏற்பட்ட வெறுப்பால் வீட்டைவிட்டு வெளிப்பட்டுச் செல்லுதல்.

[2] பின்தொடர்தல் — கணவனைவிட்டு அயலானோடு பின்தொடர்ந்து செல்லுதல்.

[3] சிலநாட் பிரிவு—விரைவில் திரும்புவதாகச் சொல்லி வேற்றிடம் சென்று தங்குதல்.

[4] பலநாட் பிரிவு—நெடுநாட்சென்று வருவதாகச் சொல்லி வேற்றிடம் சென்று தங்குதல்.

[5] மனைவி — ஈண்டுப் பணிபுரியும் பருவமடைந்தவள். பணிபுரியும் பருவம் மகளிர்க்குப் பன்னீராண்டகவையின்மேல் என 60-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

[6] கணவன்குற்றத்தால் மனைவி வெளிப்படின் தண்டம் இன்று என்பதும் இதனாற் போதரும்.

[7] தடுக்கப்படுதல் — வெளியேறுதல் கூடாதெனக் கணவனாற்றடை செய்யப்படுதல்.

[8] அயல்வீடு சென்றவளுக்கு ஆறுபணம் தண்டமாம் என்க. இவ் வரி சில பிரதிகளிற் காணப்படவில்லை.

[9] இடங் கொடுத்தலாவது—தன்னோடு பேசுதல் முதலியவற்றிற்கு உடன்பட்டு வசதியளித்தல்.

[10] துறவி—தண்டம் விதிக்கப்பட்டமையால் ஈண்டு ஒழுக்கத்தினிழுக்கிய பாசண்டன் முதலியோராவர்.

இடுதல், [11]வணிகனிடமிருந்து விலைப்பொருள் கொள்ளல் ஆகிய இவற்றிற்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [12]தடுக்கப்பட்டவர்களுக்குப் [13]பூர்வசாகசம் தண்டமாம். [14]வேறு இல்லங்களுக்குச் சென்றவளுக்கு இருபத்துநான்கு பணம் தண்டமாம்.

[15]இடுக்கண்நேர்ந்துழியல்லது பிறன்மனைவிக்கு இடம் கொடுத்தால் நூறுபணம் தண்டமாம். [16]தடுத்தபின்னுதல், [17]அறியப்படாமலாதல் நேரிற் குற்றமில்லையாம்.

[18]கணவனுடைய குற்றங்காரணமாக அவனுடைய ஞாதியர், [19]நன்னிலையிலிருப்போன், கிராமத்தலைவன், [20]சீதனம்பேணு

---

11 வணிகன்—கண்டு தீயொழுக்கமுடைய வணிகனைக் குறிக்கும்.

12 தடுக்கப்பட்டவர்—அயல் வீட்டானுக்கு இடம்கொடுத்தல் முதலியன செய்தல் கூடாது எனக் கணவன் முதலியோரால் தடைசெய்யப்பட்ட மகளிர்.

13 பூர்வசாகச தண்டம் இருநூற்றைம்பது பணமாம்.

14 வேறு இல்லம்—கணவன் வீட்டிற்கு அடுத்த வீடல்லாத வேறு வீடுகள் ; அடுத்த வீடு அயல்வீடு என்பதனாற் பெறப்பட்டுள்ளது. (குறிப்பு-8-ல் காண்க)

15 இடுக்கண்—ஆபத்து ; இதன்கண் ஆடவனுக்குத் தண்டம் கூறுகின்றார். தடுக்கமுடியாத துன்பம் நேர்ந்தவிடத்து ஒரு பெண் அயலான் வீட்டிற்குச் செல்வாளாயின் அப்பொழுது அவளுக்கு இடம்கொடுத்த அவ்வயலான் குற்றமுடையவன் ஆகான் என்பதும், அவளுக்குத் துன்பம் நேராதவிடத்து இடம் கொடுத்தால் அது குற்றமாம் என்பதும் கருத்து.

16 ஒருவன் அயலான்மனைவியைத் தன் வீட்டிற்கு வரக்கூடாது எனத் தடைசெய்த பின்னரும் அவள் வருவாளாயின் அவன் குற்றமுடையவன் ஆகான் என்பது கருத்து.

17 ஒருத்தி தன் வீட்டினுள் நுழைந்ததை அவ்வீட்டுக்குரியவன் அறியாமலிருந்தால் அவன் குற்றமற்றவன் ஆவான் என்பது.

18 கணவன்வெறுப்புக் காரணமாக வெளிச்செல்ல வேண்டியது அவசியமாக நேர்ந்தவிடத்து கற்புடைய பெண் யார் யாரைப் பற்றுக்கோடாகக் கொள்ளலாம் என்பதைக் கூறுகின்றார்.

19 நன்னிலையிலிருப்போன்—ஒழுக்கமுடைமை காரணமாக நன்கு மதிக்கப்பட்டவன் ; மணவினை நடத்திவைத்தவன் என்றுங் கூறுப.

20 வெளியேறியவளுடைய சீதனத்தைப் பாதுகாக்கும் பொறுப்புடையவன்.

வோன், [21]தவமகள், [22]ஞாதியர் என்னும் இவர்களுடைய இல்லங்களுள் ஆடவரில்லாத யாதானும் ஒன்றன்கண் போந்திருத்தல் குற்றமாகாது என்பர் [23]ஆசிரியர்.

[24]ஞாதியரின் இல்லத்தில் ஆடவர் இருப்பினும் குற்றமின்று. கற்புடைய பெண்ணிற்கு [25]எங்ஙனம் குற்றமுண்டாம்? [26]அதனையறிதல் எளிது என்பர் கௌடலியர்.

[27]இறத்தல், நோய், துன்பம், [28]கருவுயிர்த்தல் என்னும் இவை காரணமாக ஞாதியரின் இல்லத்துக்குச் செல்லுதலைத் [29]தடுத்தல் கூடாது.

[30]இக் காரணங்களில் தடுப்பவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [31]அவ்விடத்தும் [32]மறைந்திருப்பவள் சீதனத்தை

---

21 தவமகள்—ஐயமேற்றுண்டு தவம் புரிபவள்.

22 ஞாதியர்—ஈண்டுத் தன் தந்தைவழி ஞாதியரைக் குறிக்கும்.

23 ஆசிரியர்—இந்நூலாசிரியரின் ஆசிரியர்.

24 ஈண்டுத் தன் ஆசிரியர் கொள்கைகளைத் தழுவிக்கொண்டு அவற்றுள் ஒன்றனுக்குப் புறனடை கூறுகின்றார். ஞாதியர்—ஈண்டுக் கணவன்வழி ஞாதியரும், தந்தைவழி ஞாதியரும் ஆவார்.

25 கற்புடைய மகளிர்க்கு அழுக்கற்ற உள்ளமுடைமையால் எக்காரணத்தாலும் குற்றம் நேராது என்பது கருத்து.

26 கணவன் முதலியோரால் எளிதில் அறியக்கூடும் என்னும் அச்சங் காரணமாக அக்குற்றம் நேராமல் தற்காத்துக்கொள்ளவும் கூடும்; ஆதலால் ஞாதியர் இல்லம் ஆடவர் இருப்பினும் அமையும் என்பது கருத்து.

27 மேலே கணவன்வீட்டைவிட்டு வேறில்லங்களுக்கு மகளிர் செல்லுதல் கூடாது என வகுத்த விதிக்கு ஒரு புறனடை கூறுகின்றார்—மகளிர் தம் சுற்றத்தாருள் யாரேனும் இறந்துவிடின் அது குறித்தும், தமக்கு நோய்நீக்கங் குறித்தும், துன்பம் நேர்ந்துழி அதனை யொழித்தற்கும், பிள்ளைப்பேறுகுறித்தும் ஞாதியரில்லத்திற்குப் போதலைத் தடைப்படுத்தலாகாது என்பது கருத்து.

28 கருவுயிர்த்தல்—மகப்பெறுதல்.

29 கணவன் முதலியோர் தடுத்தல் கூடாது என்பது.

30 இறப்பு முதலிய காரணங் கருதி ஞாதியரின் இல்லம் செல்லுதலைத் தடுப்பவனுக்கு என்பது.

31 அவ்விடத்தும்—அஞ் ஞாதியரில்லத்தின் கண்ணும்.

32 ஞாதியரில்லத்துக்குச் சென்று மீண்டுவாராமல் யாதானும் ஒரு காரணத்தால் ஆண்டே மறைந்து தங்குபவள் என்பது கருத்து.

[33]இழக்கக்கடவள். ஞாதிகள் அவளை [34]மறைத்துக்கொண்டால் [35]எஞ்சிய பரியத்தை இறுக்கக்கடவர். [36]வெளியேறுதல் இங்ஙனமாம்.

[37]கணவன்வீட்டிலிருந்து வெளியேறி வேற்றூருக்குச் சென்ருல் பன்னிரண்டு பணம் தண்டமிறுத்தலோடு [38]ஒப்புவிக்கப்பட்ட அணிகலன்களையும் இழந்துவிடக்கடவர். குடும்பத்தைப் புரத்தல் நிமித்தமாதல், [39]பூப்புக்காலத்திலாதல் செல்லுதலன்றி ஏனைய காலங்களில் [40]உடன்செல்லத்தகுந்த ஆடவருடன் சென்ருலும் இருபத்துநான்கு பணம் தண்டம் இறுத்தலோடு [41]அறச்செயலை

---

33 கணவன் தானே கைப்பற்றிக்கொள்ளலாம் என்பது கருத்து.

34 மறைத்துக்கோடல் — வஞ்சித்து மறைவாகத் தம் இல்லத்தில் இருக்கச் செய்தல்.

35 எஞ்சிய பரியம்—கணவனிடத்திருந்து மகளிர் பெற்ற பரியத்தில் அதுகாறும் கணவனுற் பற்றப்பட்டு எஞ்சித் தம்மிடத்திருக்கும் பொருள். அவற்றைக் கணவனுக்கே கொடுத்துவிடவேண்டும் என்பது கருத்து. இறுக்கக் கடவர் என்றதனுல் மகளிரிடத்தினின்றும் வாங்கி ஞாதிகள் கொடுத்துவிடவேண்டும் என்பது. எனவே ஞாதியரின் இல்லத்துக்குச் சென்று மீண்டுவாராது ஒழிந்த மனைவியின் சீதனத்தையும் அவள் பொருட்டுக் கொடுத்த பரியத்தையும் கணவன் பெறக்கடவன் என்பதாம்.

36 வீட்டைவிட்டு மகளிர் வெளியேறுதல் மேற்கூறியபடியாம் என்பது.

37 இனிப் பின்தொடர்தலைக் கூறுகின்ருர். கணவனது உடன்பாடு பெருமலேயே மனைவி அயலூார் சென்ருல் என்க.

38 இனித் தான் வெளியேறுவதில்லை என்பதனைக் கணவன் நம்பும் பொருட்டு மனைவியால் முன்னரே அவன்பால் ஒப்புவிக்கப்பட்ட அணிகலன்கள் என்க.

39 பூப்புக் காலம் என்றது ஈண்டுப் பூப்புப்புறப்பாடு நிகழ்ந்து நீராடிய பின்னர் நிகழும் பன்னிரண்டு நாட்களையும் குறிப்பதாம். அக் காலம் கருவாய்க்குங் காலமாதலின் அதனை யடைந்த ஒருத்தி அக்காலத்தே தன் கணவன் அயலூரில் இருப்பானுக அவனைப் புணர்தல்நிமித்தம் உடன் செல்லத்தக்கானெருவனைத் துணைக்கொண்டு தன் கணவன்பாற் செல்லல் குற்றமன்று என்பது கருத்து.

40 உடன் செல்லத் தகுந்தோர்—உடன் பிறந்தான் முதலிய நெருங்கிய சுற்றத்தார்.

41 அறச் செயலாவன—கணவனுல் செய்யப்படும் வேள்வி முதலிய நற்செயல்கள் எல்லாவற்றினும் உடன் இருந்து செய்தல் முதலியன. (மணிமேகலை-பெருங்கதை பார்க்க)

இழந்தவளும் ஆவாள். [42]ஒத்த உயர்வுடைய ஆடவனுக்குப் பூர்வ சாகசமும், [43]இழிந்தவனுக்கு [44]மத்தியமும் தண்டமாம். உறவினனுக்குத் தண்டமில்லையாம். [45]தடுக்கப்பட்டிருப்பின் பாதி தண்டமாம்.

[46]வழி, [47]வழிக்குச் சேய்மையிலுள்ள இடம், மறைவிடம் இவற்றிற் [48]செல்லுதல் புணர்ச்சியினிமித்தமாம் என அறிதல் வேண்டும்.

[49]ஐயுறப்பட்டோனுடனும், [50]தடுக்கப்பட்டோனுடனும் கூடி வழிச்செல்லுதல் [51]உடன் இயைதல் என அறிக.

---

[42] ஒத்த உயர்வுடையவன்—உருவானும், திருவானும், பருவத்தானும், பிறவாற்றானும் ஒத்த உயர்வுடையவன். இவன் உடன்சென்றால் பூர்வ சாகசதண்டம் இறுக்கக் கடவன் என்பதாம். பூர்வசாகசம் இறுநூற்றைம்பது பணமாம்.

[43] இழிந்தவன்—உருவம் முதலியவற்றால் தாழ்ந்தவன். இவன் உடன் செல்லின், மத்தியமசாகச தண்டம் இறுத்தல் வேண்டும் என்க.

[44] மத்தியம சாகச தண்டம் ஐந்நூறு பணமாம்.

[45] தடுக்கப்பட்டவன்—கணவன் முதலியோரால் உடன் செல்லவாகாது என்று முன்னரே தடைசெய்யப்பட்டவன்; தடுக்கப்பட்டவன் உறவினனாயின் பாதி தண்டம் என்க. எனவே உருவம் முதலியவற்றால் ஒத்த உறவினனாயின் பூர்வசாகசதண்டத்திற் பாதியாகிய நூற்றிருபத்தைந்து பணமும், இழிந்தவனாயின் பூர்வசாகச தண்டமும் இறுத்தல்வேண்டும் என்றபடியாம்.

[46] மறைவு என்னும் அடையை வழிக்குங் கூட்டுக.

[47] வழிக்கு நெடுந்தொலைவிலுள்ள மக்கள் வழக்கற்ற இடம் என்க.

[48] செல்லுதல்—ஈண்டு ஒருவன் மனைவி பிறனொடு செல்லுதலைக் குறிக்கும்.

[49] ஐயுறப்பட்டவன்—இவன் பிறன்மனையாளுடன் புணர்ச்சிவிருப்பமுடையவனாகலாம் எனக் கணவன் முதலியோரால் ஐயுறப்பட்டவன்.

[50] கணவனால் தடைசெய்யப்பட்டவன்.

[51] உடன் இயைதல்—ஈண்டு ஒருவன்மனைவி அயலானுடன் இயைந்து போதலைக்குறிக்கும். இதனைச் 'சங்கிரகணம்' என்று முதனூல் கூறும். உடனியைதலுக்கு நான்காம் அதிகரணம் எண்பத்தொன்பதாம் அத்தியாயத்தில் கூறப்பட்டபடி ஆடவர், மகளிர் ஆகிய இருபாலார்க்கும் விதிக்கப்பட்ட தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

[52]கூத்தன், பாணன், பரதவன், வேடன், ஆயன், கள்விற்போன் என்னும் இவர்தம் பெண்டிரும் [53]வெளிச் சேறற்கு உடன்பட்டோரின் மகளிரும் பின்றொடர்தல் குற்றமின்றாம். [54]தடுக்கப்பட்டிருந்தும் அழைத்துச்செல்லும் [55]ஆடவனுக்கும், உடன்போகும் பெண்ணிற்கும் [56]அத்தண்டத்திற் பாதியாம். [57]பின்தொடர்தல் இங்ஙனமாம்.

[58]சிலநாட் பிரிந்திருக்கும் சூத்திரர், வணிகர், அரசர், பார்ப்பனர் என்னும் இவ்வகுப்பினருடைய மனைவிமார் மகப்பேறில்லாதவராயின் (முறையே) [59]ஒவ்வோராண்டு மிக்க காலமும், மகப்பேறுடையராயின் [60]மேலும் ஒவ்வோரியாண்டு மிகுதியாகவும் [61]வாழ்க்கைப்பொருள் பெற்றுள்ளவராயின் இருமடங்கு காலமும்

---

52 கூத்தன்முதலியோரின் மனைவிமார்கள் அயலானோடு பின்றொடர்ந்து வழிநடத்தல் குற்றமாகாது என்பது.

53 வெளிச்சேறற்கு உடன்பட்டோர்—தம் மகளிரை வெற்றிலை, மாலை முதலியன விற்பது குறித்து அவர் வெளிச்செல்லுதற்கு உடன்பட்ட பாகடை விற்போர், மாலைதொடுப்போர் முதலியோராவர்.

54 தடுக்கப்பட்டிருந்தும் — தம் பெண்டிரை உடன் செல்லவாகாது என்றும், அயலானை அழைத்துச் செல்லலாகாது என்றும் மேற்கூறப்பட்ட கூத்தன் முதலிய கணவன்மாரால் தடுக்கப்பட்ட பின்னரும் அழைத்தேகின் என்க.

55 ஆடவன்—அழைத்துச்செல்லும் அயலான்.

56 அத்தண்டம்—உடன் இயைதலுக்கு விதிக்கப்பட்ட தண்டம்.

57 பின்தொடர்தல் இங்குக் கூறப்பட்டபடியாம் என்பது.

58 இனிச் சிலநாட்பிரிவுபற்றிக் கூறுகின்றார் :—விரைவில் திரும்பி விடுவேன் என்று கூறி அயல்நாடு சென்ற சூத்திரர் முதலியோர் என்பது.

59 சூத்திரன் மனைவி ஓரியாண்டும், வணிகன் மனைவி இரண்டியாண்டும், அரசன் மனைவி மூன்றியாண்டும், பார்ப்பனன் மனைவி நான்கியாண்டும் திரும்பிவருதலை எதிர்பார்த்திருத்தல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் எதிர்பார்த்தல் கணவனாற் குறிப்பிடப்பட்ட காலஎல்லை கடந்தபின் எனக் கொள்ளல்வேண்டும்.

60 மேலும் ஒவ்வோர் யாண்டு என்பது மகப்பேறில்லாத மனைவியர்க்குக் குறிக்கப்பட்ட யாண்டினும் மிகுதியாக எனக்கொள்ளல்வேண்டும்.

61 கணவனால் உயிர்வாழ்தற்கு இன்றியமையாப்பொருள் கொடுக்கப்பட்ட மகளிராயின், மகப்பேறில்லாச் சூத்திரன்மனைவி முதலியோர் இரண்டியாண்டு முதலியனவாகவும், மகப்பேறுடைய சூத்திரன்மனைவி முதலியோர் நான்கியாண்டு முதலியனவாகவும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும் என்பதாம்.

எதிர்பார்த்திருத்தல் வேண்டும். வாழ்க்கைப்பொருள் பெறாத மகளிரை [62]நன்னிலைக்கண் உள்ளாரும், [63]மேலும் நான்கு அல்லது எட்டியாண்டுகள் ஞாதியரும் புரக்கக்கடவர். [64]அதன்பின் கொடுக்கப்பட்டவற்றைப் பெற்றுக்கொண்டு விட்டுவிடல் வேண்டும்.

கல்வியிற் பிரிந்த பார்ப்பனனை மகப்பேறில்லாதாள் பத்தி யாண்டும், மகப்பேறுடையவள் பன்னீரியாண்டும், அரசியல்வினை ஞனை ஆயுள்காறும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். [65]ஒத்த குலத் தவனோடு கூடி மகப்பேறு அடைந்தவள் பழிக்கப்படாதவள் ஆவாள். உறவினர்குடும்பம் பொருணிலை யிழந்திருக்குங்கால் [66]நன்னிலையிலுள்ளவர்களால் விடப்பட்டு இடுக்கட்பட்டிருக்கும் பெண் தன் உயிர்வாழ்க்கையின்பொருட்டுத் தன் விருப்பப்படி மறுமணம் செய்துகொள்ளலாம்.

[67]அறத்திருமணங்களுள் ஒன்றனால் மணக்கப்பட்ட [68]கன்னி சொல்லாமற் பிரிந்து அயல்நாடு சென்ற கணவனின் செய்தி அறியப்படாதவிடத்து ஏழு பூப்புக்காறும், அறியப்பட்டவிடத்து ஓரியாண்டும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். சொல்லித் தெரி

---

[62] நன்னிலைக்கண் உள்ளார் இன்னார் என்பதை 19-ஆம் குறிப்பிற் காண்க. அவர்கள் புரக்கவேண்டிய காலம், கணவன் வருகையைக் குறித்து எதிர்பார்க்கப்படவேண்டியனவாக முன் குறிக்கப்பட்ட காலம்.

[63] எதிர்பார்க்கப்படவேண்டிய காலம் வரை கணவன் வரவில்லையானால் அவன்பக்கத்து ஞாதியர் பாதுகாக்கவேண்டும் என்பது கருத்து.

[64] ஞாதியர் பாதுகாக்கவேண்டும் என்று குறிக்கப்பட்ட காலத்தின் பின்னரும் கணவன் வரவில்லையானால் கணவன் முதலியோரால் கொடுக்கப் பட்டுள்ள சீதன முதலியவற்றை ஞாதியர் வாங்கிக்கொண்டு அவள் விரும்பி னால் அவள் பிறந்தகத்து உறவினர்பக்கல் அவளை விட்டுவிடலாம் என்பது கருத்து.

[65] மேலே கூறப்பட்ட கால எல்லையின் பின்னர்க் குலம் முதலியவற்றால் ஒத்த மற்றொருவனோடு கூடி மகப்பேறடைதல் குற்றமும், பழியும் ஆகாது என்பது கருத்து.

[66] நன்னிலையிலுள்ளவர்கள் காக்கவேண்டிய காலம் வரை பாதுகாத்து விட்டபின் என்பது கருத்து.

[67] அறத்திருமணம்—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என் னும் இந்நான்குமாம்.

[68] கன்னி என்பது ஈண்டு மணம்புரியப்பட்டும் புணர்ச்சிபெறாதவளைக் குறிக்கும்.

வித்துச் சென்றவனுடைய செய்தி அறியப்படாவிடத்து ஐந்து பூப்புக்காறும், அறியப்பட்டவிடத்து பத்துப் பூப்புக்காறும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். [69]ஒருபகுதி பரியம் கொடுத்தவனுடைய செய்தி அறியப்படாவிடத்து மூன்று பூப்புக்காறும் அறியப்பட்டவிடத்து ஏழு பூப்புக்காறும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். பரியம் (முழுதும்) கொடுத்தவனுடைய செய்தி அறியப்படாதவிடத்து ஐந்து பூப்புக்காறும், அறியப்பட்டவிடத்து பத்துப் [70]பூப்புக்காறும் ஆம். [71]அதன் பின்னர் அறங்கூறுவோரின் [72]உடன்பாடுபெற்று விரும்பியபடி மறுமணம் செய்துகொள்ளலாம். என்னை? பூப்புக்காலம் [73]பயன்படாதொழிதல் [74]அறக்கொலையாம் எனக் கௌடலியர் கருதுகின்றார் ஆகலின்.

[75]தொலைவிற் பிரிந்தவன், [76]துறந்தவன், இறந்தவன் என்னும் இவர்மனைவிமார் ஏழு பூப்புக்காறும், [77]மகப்பேறுடையராயின் ஓரியாண்டும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். பின்னர்க் கணவனுடன் பிறந்தானை [78]அடையலாம். அவர் பலராயவழி [79]அடுத்த

---

69 பரியத்தின் ஒரு கூற்றைப் பெண்ணின் இல்லத்தாரிடம் கொடுத்து, எஞ்சிய பகுதியைப் பின்னர்க் கொடுப்பதாக உறுதிகூறிச் சென்றவன் என்க.

70 பூப்புக்காறுமாம் — எதிர்பார்க்கவேண்டும் காலஎல்லையாம் என முடிக்க.

71 கூறப்பட்ட காலம் கடந்தபின்னர்.

72 உடன்பாடுபெறுதல், வேறுகணவனை மணத்தற்கு என்க.

73 பயன்படாமை—கருக்கொள்ளுங்காலத்தை ஆடவன் கூட்டமின்மையால் வறிதாக்கல்.

74 புதல்வர்ப் பேற்றினுல் அடையத்தக்க அறத்திற்குக் கேடுண்டாதலின் 'அறக்கொலை' என்றார். இதுகாறும் 'சிலநாட்பிரிவு' கூறியபடியாம்.

75 இனிப் 'பலநாட் பிரிவு' பற்றிக் கூறுவர்.

76 துறந்தவன், இறந்தவன் என்னும் இவரின் மனைவிமார் ஏழு பூப்புக்காறும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும் என்றது அவர் கருவுற்றிருக்கின்றனரோ, இலரோ என்னும் ஐயம் தீர்தற் பொருட்டுப் போலும்.

77 ஈண்டு மகப்பேறுடையராயின் என்றமையால், மேலே கூறிய விதி அஃதிலாதார்க்கு என்பது பெற்றும்.

78 மகப்பேறு குறித்து அடையலாம் என்பது.

79 அடுத்தவன்—காலத்தால் கணவனுக்கு அடுத்துப் பிறந்தவன்.

வனையாதல், [80]அறவோனையாதல், [81]புரக்கும் ஆற்றலுடையவனை யாதல், [82]இளைஞனையாதல், மனைவியில்லாதவனையாதல் (அடையலாம்). உடன்பிறந்தார் இல்லாதவழி [83]உடன்பிறவாதவனையாதல், [84]ஞாதியையாதல், குலத்திற் றோன்றியவனையாதல், [85]குலத்துட் டோன்றியவருள்ளும் நெருங்கியவனையாதல் அடையலாம். [86]இதுவே முறையாகும்.

சுலோகம்

[87]இஞ் ஞாதியர்களையன்றிப் பிறனை மணந்தாலும், கள்ளக் கணவனுடன் கூடியிருந்தாலும், அக் கள்ளக்கணவன், மணந்து கொண்டவள், [88]கொடுத்தவன், மணந்தவன் ஆகிய இவர்கள் உடன் இயைதலுக்குரிய தண்டம் இறுக்கக்கடவர்.

மூன்றும் அதிகரணம் மூன்றும் பிரகரணத்தில்
'வெளியேறுதல், பின்தொடர்தல், சிலநாட்பிரிவு, பலநாட்பிரிவு'
என்பன அடங்கிய அறுபத்தொன்றும் அத்தியாயம்
முற்றிற்று.

---

80 அடுத்தவன் அறவோனுக இல்லாமலிருந்தால் என்பது.

81 எல்லோரும் அறவோராக இருப்பின், அவருள் பாதுகாக்கும் ஆற்றலுடையவனை அடையலாம் என்பது.

82 எல்லோரும் பாதுகாக்கும் ஆற்றலுடையவராயின், அவருள் இளைஞனையாதல், மனைவியில்லாதவனையாதல் அடையலாம் என்பது.

83 உடன் பிறவாதவனை என்றது ஒரு வயிற்று உடன் பிறவாதவனுயினும், முறைமையால் சகோதரன் ஆவானை என்க. கணவனுடைய சிற்றன்னை முதலியோர் வயிற்றில் பிறந்தவன் எனக் கொள்க.

84 ஞாதியர், கணவனை நெருங்கியோர் எனவும், குலத்திற் பிறந்தவன், கணவன்குலத்திற் பிறந்தவன் எனவும் கொள்க.

85 குலத்திற் பிறந்தோர் பலராய வழி, அவருள் நெருங்கியவனை மணத்தல் வேண்டும் என்பது.

86 இங்குக் கூறியவாறு மணஞ்செய்துகோடலே முறையாகும் என்றபடி.

87 இஞ் ஞாதியர்—மேலே கணவனுடன் பிறந்தோர் முதலியோராகக் கூறப்பட்ட தாயத்தார்கள்.

88 கொடுத்தவன்—பெண்ணைப் புரக்கும் உரிமைபூண்ட தந்தை, உடன் பிறந்தான் முதலியவர்களுள் ஒருவன்.

மூன்ரும் அதிகாரணம்—அறநிலையாட்சி

நான்காம் பிரகாரணம்—[1]தாயபாகம்–[2]தாயமுறை

அறுபத்திரண்டாம் அத்தியாயம்

தாய்தந்தையர் [3]சிறப்புடையராய் உயிருடனிருக்கப் புதல்வர் [4]தலைவராகார். [5]தந்தைக்குப் பின்னர்ப் புதல்வர்கள் [6]தந்தையின் பொருளைப் பகுத்துக்கொள்ளக்கடவர். தந்தையின் பொருளை முதலாகக்கொண் டீட்டப்படாமல் [7]தன்னுலீட்டப்பட்ட பொருள் பகுத்துக்கொள்ளத்தக்கதன்று.

[8]தந்தைவழிப் பொருளைப் பாகஞ் செய்துகொள்ளாதவரின்

62-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தாய பாகம் — குடும்பப் பொதுப் பொருளைப் பகுத்துக்கோடல். தாயம்—குடும்பப் பொதுப்பொருள். மணஞ்செய்துகொண்டோர் தாய பாகஞ் செய்துகொள்ளுதற்குரிய தகுதியை அடைவதானும், மணத்தின் பின் நிகழவேண்டிய இல்லறத்திற்கு இன்றியமையாப் பொருளைப் பொது உரிமையானன்றிச் சிறப்புரிமையாகக் கோடல்வேண்டுமாகலானும் மணம் பற்றிய வழக்கையடுத்துச் சிறப்புடையது பொருள்பற்றிய வழக்காதலானும், 'மணவியல்' என்னும் பிரகரணத்தின் பின் இது வைக்கப்பட்டது. இதன் சிறப்பு நோக்கி இதனை 'தாயமுறை', 'பகுதிக் கூறு', 'புதல்வர் வகை' என்னும் மூன்றுவகைப்படுத்து மூன்று அத்தியாயங்களிற் கூறுவான் தொடங்கி முதற்கண் 'தாயமுறை' கூறுகின்ருர். இதனுற் பிரகரண வியைபு புலனுதலறிக.

[2] தாயமுறை—தாயப்பொருளைப் பகுக்கும் விதம்.

[3] சிறப்பு—பொருளைப் பேணும் தகுதி.

[4] தலைவராகார்—குடும்பப் பொருளுக்குரிமையுடையராகார்.

[5] தந்தை இறந்த பின்னரென்பது.

[6] தந்தையின் பொருள்—தந்தையாலீட்டப்பட்ட பொருள்.

[7] தன்னுலீட்டப்பட்ட பொருள்—சகோதரர்களுள் ஒருவன் குடும்பப் பொதுப் பொருளை முதலாகக் கொள்ளாமல் தன் முயற்சியினுல் தனித் தேட்டிய பொருள். அங்ஙனம் ஈட்டப்பட்ட பொருளில் மற்றைச் சகோதரர்க்குப் பாகம் இன்று என்பதாம். எனவே ஒருவன் தந்தையின் பொருளை முதலாகக் கொண்டு தேடிய பொருளில் அவன்சகோதரர் தந்தையீட்டிய பொருளிற் போலப் பாகம்பெறும் உரிமையுடையராவர் என்பதும் பெற்ரும்.

[8] தந்தையின் பொருளைத் தம்முட் பகுத்துக்கொள்ளாமற் பொதுவின் வைத்து இறந்துபோன மக்களுடைய மக்கள் முதலாயிஞேர் என்பது கருத்து.

புதல்வர், பெயரர் முதலியோர் நான்கு தலைமுறைவரை [9]பகுதிக்கூறு பெறக்கடவர். [10]அதுகாறும் பிண்டத்தொடர்புண்டாம். [11]அத் தொடர்பு அற்றோர் எல்லோரும் [12]தம்முட் சமமாகப் பாகம் செய்துகொள்ளக்கடவர்.

[13]தாயப்பொருள் இல்லாதவரும், தாயப்பொருளைப் பகுத்துக் கொண்டவரும் ஒருங்குகூடி வாழ்வாராயின் (தம்பால் உள்ள பொருளை) மீண்டும் பகுத்துக்கொள்ளக்கடவர். [14]பொருளைப் பெருக்கியவன் இரண்டுகூறு கொள்ளல்வேண்டும்.

---

[9] பகுதிக் கூறு பெறக்கடவர் என்றது அங்ஙனம் இறந்தவர் பலருள் ஒரு சிலர்க்கு மக்கள் பலராகவும், மற்றொரு சிலர்க்கு மக்கள் சிலராகவும் இருப்பாராயின், அவரெல்லோரும் தந்தைவழிப் பொருளைச் சமமாகப் பாகஞ் செய்துகொள்ளாமல் தத்தம் தந்தையர்க்குரிய பாகத்தை முதலிற் பகுத்துக்கொண்டு அவற்றைப் பின்னர்த் தம்முட் சமமாகப் பகுத்துக் கொள்ளல் வேண்டும் என்னும் பொருட்டாம். அஃதாமாறு — இரண்டு தந்தையருக்குரிய மக்கள் அறுவராக அவருள் நால்வர் ஒரு தந்தையின் மக்களும், இருவர் ஒரு தந்தையின் மக்களுமாயவழி முறையே தத்தம் தந்தைக்குரிய இரண்டு கூற்றினுள் ஒரு கூற்றை நால்வரும், பிறிதொன்றை இருவருமாகப் பாகஞ் செய்துகொள்ளுதல். இங்ஙனமே நான்கு தலைமுறை காறும் பகுத்துக்கோடல் வேண்டும் என்பது கருத்து.

[10] மேற் கூறியவாறு பாகஞ் செய்துகொள்ளற்குக் காரணம் கூறுகின்றார்—காரணமாவது :—இறந்தவனுக்கு நான்கு தலைமுறைகாறும் பிண்டத் தொடர்பு உண்டு என்பது.

[11] அத்தொடர்பு—பிண்டத் தொடர்பு ; பிண்டத்தொடர்பு அற்றோர்—நான்கு தலைமுறைக்குப் பின் வந்தோர்.

[12] பிண்டத் தொடர்பு அற்றவராகிய நான்குதலைமுறைக்குப் பிற்பட்டோர் நான்குதலைமுறைகாறும் பகுத்துக்கொள்ளப்படாத தாயப் பொருளைப் பகுத்துக்கொள்ளநேர்ந்தால் பிண்டத் தொடர்புடையோர் போலன்றி அக்காலத்து உயிர்வாழும் அச்சந்ததிமக்கள் அனைவரும் சமமாகப் பாகம் செய்துகோடல் வேண்டும் என்பது கருத்து.

[13] தாயப்பொருள் இல்லாதவர்களாகிய சகோதரர்கள் கூடிவாழ்ந்தால் அவர்கள் ஈட்டிய பொருளைச் சமமாகப் பாகஞ்செய்து கோடல் வேண்டும் என்றும், முன்னர்த் தாயப்பொருளைப் பாகஞ்செய்துகொண்ட சகோதரர்கள் பின்னரும் கூடி வாழ்வாராயின், அவர் கூடி வாழும்பொழுது ஈட்டப்பட்டு வந்த பொருளை மீண்டும் தம்முட் பாகம் செய்துகோடல் வேண்டும் என்றும் கொள்க.

[14] பொருளைப் பெருக்கியவன்—தாயப்பொருள் இல்லாத சகோதரருள் ஆதல், பாகஞ் செய்தபின்னரும் ஒன்று சேர்ந்து வாழும் சகோதரருளாதல், தன் முயற்சியால் பொருளைப் பெருக்கியவன் ; இவன் தானீட்டிய பொருளைச்

[15]மகப்பேறில்லாதவனுடைய பொருளைக் கூடிவாழும் உடன் பிறந்த ஆடவர் கொள்ளுதல்வேண்டும். [16]கன்னியர்க்குமாம்.

[17]மகப்பேறுடையவனின் பொருளை அவனுடைய ஆண்மக்களும், [18]அறத்திருமணம் புரிந்துபெற்ற பெண்களும், [19]அவருமில ரேல் [20]உயிருடன் வாழும் தந்தையும், அவனுமிலனேல் உடன் பிறந்தாரும், [21]அவர்தம் மக்களும் அடையக்கடவர்.

[22]தந்தையற்ற பல [23]உடன்பிறந்தோரும், அவருடைய மக்க

சகோதரருடன் பாகம் செய்துகொள்ளுங்கால், தன் கூறேயன்றியும் சிறப்பாக ஒரு கூறும் பெறக்கடவன் என்பது கருத்து. இனி உடன் பிறந்தார் பலராயின் பெருக்கிய அப்பொருளை இருகூறு செய்து, ஒரு கூற்றைப் பெருக்கியவனும், மற்றொரு கூற்றைப் பகுத்து, எஞ்சிய சகோதரர் அனைவரும் கொள்ளல்வேண்டும் என்பது கருத்தாகக்கொள்வாரு முளர். இங்ஙனம் கூறுவோர்கொள்கைக்கு ‘ துவியம்சம் ’ என்னும் மூலத் திற்கு ‘ இரண்டில் ஒருகூறு ’ எனப் பொருள்கொள்ளல் வேண்டும். இது பொருந்துமாவென்பது ஆராயத்தக்கது.

15 மகப்பேறில்லாது இறந்தவனுடைய பொருள் அவனுடன் பிறந்து கூடிவாழும் ஆடவர்க்குரியதென்பதாம்.

16 உடன் பிறந்த கன்னியர் இருப்பின், அவரது திருமண முதலியவற் றிற்கு அப்பொருளைப் பயன்படுத்தலாம் என்பது கருத்து.

17 மகப்பேறுடையவன் இறந்தபின்னர் அவன்பொருளை அவனுடைய ஆண்மக்கள் அடைதல்வேண்டும் என்பது கருத்து.

18 ஆண்மக்களிலரேல் அறத் திருமணம் புரிந்துபெற்ற பெண்மக்கள் அடையலாம் என்பது. இதனால் ஆண்மக்கள் அறத்திருமணம் அல்லாத மணமுறையில் தோன்றினவராயினும் தந்தையின் பொருளுக்கு உரியராவர் என்பது போதரும்.

19 அவருமிலரேல்—அப் பெண்மக்களும் இலராயின்.

20 உயிருடன் வாழும் தந்தை — அம்மக்களின் தந்தைக்குத் தந்தை; பாட்டன் என்க. என்றதனால் ஈண்டுச் சுட்டிய பொருள் தந்தை தானே ஈட்டிய பொருள் என்பது பெற்றும்.

21 உடன் பிறந்தார் இல்லையாயின் அவர்தம் மக்களும் எனக் கொள்க.

22 தந்தையற்ற என்னும் அடையை மக்களுக்கும் கூட்டுக.

23 உடன் பிறந்தோர்—ஒரு தந்தைக்கு ஒரு தாய் வயிற்றிற் றோன்றிய வரும், பல தாயர் வயிற்றிற்றோன்றியவரும் ஆவார்.

ளும் தந்தையின் [24]ஒருகூற்றை அடையக்கடவர்.

[25]பல தந்தையர்க்கு ஒருதாயின் வயிற்றுதித்தவர்கள் (தந்தம்) தந்தைக்குரிய தாயப்பொருளுக் குரியராவர்.

[26]கடன்கொண்டவனுடைய தந்தை, உடன்பிறந்தோர், மக்கள் என்னும் இவர்களுள் முதல்வன் இருக்க ஏனையோரையும், [27]அண்ணன் இருக்கத் தம்பியையும் ([28]கடன் கொடுத்தவர்கள்) தொடர்தலாகாது.

---

[24] தந்தையற்ற உடன்பிறந்தோர் தந்தையின் பொருளைச் சமமாகக் கூறு செய்துகொள்ளல் வேண்டும் என்பதும், அவர்தம் மக்கள் அவரவர் தந்தையின் கூற்றைப் பகுத்துக்கொள்ளல் வேண்டும் என்பதும் கருத்து. இனித் தந்தையற்ற சகோதரருட் சிலர் இறந்தாராக எஞ்சிய சகோதரரும், இறந்தவர்தம் மக்களும் தம்முட் பாகம் செய்துகொள்ள நேர்ந்தவிடத்தும் அம்முறையே கொள்ளல்வேண்டும் என்பதுமாம். இறந்த தந்தைக்கு மக்கள் இருவராக, அவருள்ளும் ஒருவன் இறந்தனனாக, அவன்மக்களிருவரிருப்பாராயின், பொதுப்பொருளை இருகூறுபடுத்து, ஒரு கூற்றை உயிருடனிருப்பவனும், மற்றொரு கூற்றைச் சமமாகப் பகுத்து இறந்தவன் மக்கள் இருவரும் கொள்ளல்வேண்டும் என்பது.

[25] ஒருத்தி ஒருவர்பின்னொருவராகப் பலகணவன்மாரை மணந்தாளாக, அவரனைவர்க்கும் தனித்தனி அவளது வயிற்றிற்றோன்றிய சகோதரர்கள் தத்தம் தந்தையர்க்குரிய தாயப்பொருளை அடைதல்வேண்டும் என்பது கருத்து.

[26] தந்தையும், அவன் மக்களும் கூடிவாழுங்கால் அம்மக்களுள் ஒருவன் பல புதல்வர்களையுடையவனாக இருந்து குடும்ப நிமித்தம் கடன்வாங்கி இறந்துவிட்டானாகக் கடன் கொடுத்தவர்கள் செய்யத்தக்கது யாது என்பதைக் கூறுகின்றார்.

[27] இறந்தவனுடைய மக்களுள் மூத்தவன் இருக்க இளையவனைத் தொடர்தல் ஆகாது என்பது.

[28] கடன் வாங்கினவன் இறந்துவிட்டானாக, அவனுடைய தந்தை, உடன்பிறந்தார், மக்கள் என்னும் இவர்களுள் தந்தை உயிருடன் இருக்கும் போது உடன்பிறந்தார் முதலியோரையும், தந்தையில்லாமல் உடன்பிறந்தார் இருக்கும்போது அவன்மக்களையும், மக்களுள்ளும் மூத்தவன் இருக்கும்போது இளையோரையும் கடன்கொடுத்தவர்கள் வழக்குத் தொடர்தல் ஆகாது என்பதும், முற்பட்டோரையே தொடர்தல்வேண்டும் என்பதும் கருத்து.

[29]தந்தை உயிருடன் இருந்து பாகம் பிரிக்குங்கால் ஒருவனுக்கு [30]ஏற்றத்தாழ்வு செய்தலாகாது. [31]காரணம் இன்றி ஒருவனைக் கூறு பெறாதவனாகச் செய்தல் கூடாது. தந்தையின் பொருள் இல்லாதபொழுதும் மூத்தோன் [32]தீயொழுக்கமில்லாத இளை ஞரைப் புரக்கக்கடவன்.

[33]வழக்கியற்பருவம் அடைந்தவர்கள் பகுத்துக்கோடற்குத் தகுதியுடையவர் ஆவர். வழக்கியற்பருவம் அடையாதவருடைய பாகப்பொருளில் [34]கடன் கழித்து எஞ்சிய பொருளை [35]அப்பருவம் அடையுங்காறும் [36]தாயின் உறவினரிடத்தாதல், [37]கிராமப் பெரி யோரிடத்தாதல் வைத்திருத்தல் வேண்டும். [38]அயலூர் சென்றவ னுடைய பொருளிற்குமாம்.

---

29 தந்தை யிறந்த பின்னரே மக்கள் அவன்பொருளுக்கு உரியராவார் என்று முன்னர் விதிக்கப்பட்டது. தந்தை உயிருடன் இருக்கும்போது பாகஞ்செய்துகொள்ளுவதைப்பற்றிக் கூறுகின்றார்.

30 தந்தை தன்மக்களுக்குத் தன்பொருளைத் தானே கூறுசெய்து கொடுக்கலாம் என்பதும், அங்ஙனம் கூறுசெய்யுங்கால் தன்மக்கள் அனை வர்க்கும் சமனாகக் கூறுசெய்து கொடுத்தல் வேண்டுமேயன்றி அவருள் ஒருவனுக்குக் கூடுதலாகவோ, குறைவாகவோ கூறுகொடுத்தல் கூடாது என்பதும் கருத்தாகக் கொள்க.

31 காரணம் இன்றி என்றதனால் காரணம் இருப்பின் தந்தை தன் மக்களுள் ஒருவற்குக் கூறு கொடாமையும் பொருந்தும் என்பது பெற்றாம்; கூறுகொடாமைக்குரிய காரணம் பதிதன், பேடிமுதலியோராகப் பின்னர்க் கூறப்படுவோருள் ஒருவனாதல்.

32 'தீயொழுக்கமில்லாத' என்றமையால் இளைஞர் தீயொழுக்கமுடைய ராயபொழுது அவரை மூத்தவன் புரக்கும் கடப்பாடுடையவன் அல்லன் என்பது பெற்றாம்.

33 வழக்கியற் பருவம் அடைந்தவர்கள் பதினாறாண்டு அகவையின் மேற் பட்ட ஆடவரும், பன்னிராண்டு அகவையின் மேற்பட்ட மகளிரும் என்க. அப் பருவம் எய்தியவர் தாயப்பொருளைப் பகுத்துக்கோடற்குத் தகுதி வாய்ந்தவர் ஆவார் என்பதாம்.

34 கடன்—குடும்பப் பொதுவில் கடன் ஏற்பட்டிருக்குமாயின் அதில் பாகம்பெறுவோனுக்குரிய கூறு.

35 அப்பருவம்—வழக்கியற் பருவம்.

36 தாயின் உறவினர்—மாமன் முதலியோர்.

37 தாயின் உறவினர் இல்லையாயின் அல்லது இருந்தும் நம்பத்தகாத வராயின் கிராமப் பெரியோரிடத்து ஒப்புவிக்கவேண்டும் என்பதாம்.

38 அயலூர் சென்றவனுடைய பொருளிற்கும் இவ்விதியாம் என்க.

மணம்புரிந்து கொண்டவர்களுக்குச் [39]சமனாக மணம்புரிந்து கொள்ளாதவர்களுக்கு மணச்செலவிற்கும், [40]கன்னியர்க்கு மணம் செய்துகொடுப்பதற்கும் உரியபொருளைக் கொடுத்தல்வேண்டும்.

[41]கடனாக வாங்கிய பொருளிலும் கடனாகக்கொடுத்த பொருளிலும் பாகம் சமனும்.

பொருளற்றவர்கள் நீர்ப்பாண்டங்களையும் பகுத்துக்கொள்ளல் வேண்டும் என்பர் ஆசிரியர். [42]உள்ள பொருள்களே பகுக்கற்பாலன, இல்லதற்கில்லை ஆகலின் இது தவறு என்பர் கௌடலியர்.

[43]பொதுப்பொருள் இத்துணை [44]இதிற்கூறு இத்துணை எனச்

---

[39] மணம் புரிந்துகொண்ட சகோதரனுக்கு மணத்தின் பொருட்டுச் செலவான பொருளுக்குச் சமனான பொருளை மணமாகாத சகோதரனுக்குத் தனியே கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[40] கன்னியர்—மணம் பெறாத மகளிர்; இவர்க்கும் பின்னர் மணம் செய்துகொடுத்தற்கு வேண்டிய பொருளைக் கொடுத்தல்வேண்டும் என்பது.

[41] ஒரு குடும்பத்தில் தந்தை கடனாகவாங்கிய பொருளிலும், கடனாகக் கொடுத்த பொருளிலும் மக்களுக்குச் சமமான கூறு உண்டு என்பது.

[42] நீர்ப் பாண்டமும் பொருளே யாகலானும், அஃதுடையாரைப் பொருளற்றவர் எனக்கூறல் 'மாறுகொளக் கூறல்' என்னும் குற்றமாம் என்பது. மேலும், வேறுபொருள் இல்லாத ஏழையர்களே நீர்ப்பாண்டம் முதலிய எளிய பொருள்களையும் பகுத்துக் கொள்ளற்பாலார், ஏனைய செல்வர்கள் அத்தகைய எளிய பொருள்களைப் பகுத்துக்கொள்ளற்பாலார் அல்லர் எனப் பெறப்படுவதால், அங்ஙனம் செல்வர் பகுத்துக்கொள்ள வேண்டாமைக்குக் காரணம் காண்டல் அரிதாகலின் குற்றமாம் என்பதும், பொருள் அனைத்தும் பகுக்கற்பாலன என்பதன்கண்ணே நீர்ப்பாண்டமும் பகுக்கற்பாலன என்னும் விதி பெறப்படுதலின், அதனை விதந்தோதல் கூறியதுகூறலாய் முடியும் என்பதும் கௌடலியர் கொள்கை. ஆதலின் 'இது தவறு' என்றார் என்க.

[43] இதன்கண் சந்ததி இல்லாதவராய் இறந்தொழிந்தவரது பொருளைத் தாயத்தார்கள் பகுத்துக்கொள்ளுமாற்றைக் கூறுகின்றார்; சந்ததியின்மையால் தாயத்தார்க்குக் கிடைத்த பொருளின் முழு அளவு இத்துணை எனக் காட்டல்வேண்டும் என்பது கருத்து.

[44] அப் பொதுப்பொருளைப் பகுக்கவேண்டிய கூறுகள் எத்தனை என்பதும், அக் கூறுகளின் தனித்தனி யளவு எத்துணை என்பதும் நன்றாக விளக்கிக் கூறுதல் வேண்டும் என்பது.

[45]சான்றுவாரிடத்தில் விளக்கிக்கூறிப் பகுத்துக்கோடல்வேண்டும். [46]ஏற்றத்தாழ்வாகப் பகுக்கப்பட்டது, [47]ஒருவர்பால் ஒருவர் கவர்ந்தது, [48]மறைந்தது, [49]அறியப்படாமல் உண்டானது என்னும் இவற்றை [50]மீண்டும் பகுத்துக்கோடல் வேண்டும். [51]தாயத்தார் இல்லையாயின் [52]மகளிர் வாழ்விற்கும், [53]இறுதிக்கடன் செய்தற்கும் வேண்டிய அளவை விடுத்து எஞ்சிய பொருளை வேந்தன் அடையலாம். வேதியன்பொருளாயின் அங்ஙனம் அடைதலாகாது. [54]அதனை [55]மும்மறை ஓதியவனுக்கு அளித்தல்வேண்டும்.

---

45 சான்றுவார்—கிராமப் பெரியோர்.

46 ஏற்றத் தாழ்வு—கூறுகள் ஒன்றற்கொன்று சமமின்மை.

47 பொதுவாக இருக்குங்கால் தாயத்தார் தம்முள் ஒருவர்க்கொருவர் மறைவாகக் கவர்ந்த பொருள் என்பது.

48 மறைந்தது—காலமிடங்களால் மறைவுபட்டது.

49 அறியப்படாமல் உண்டானது — இறந்தவனுக்கு உரியதென்று முன்னர் அறியப்படாமலிருந்து பின்னர் வெளிப்பட்ட பொருள்.

50 ஏற்றத்தாழ்வாகப் பகுக்கப்பட்டது முதலியவற்றை அறிந்த பின்னர் அவற்றை மீண்டும் பகுத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

51 இனித் தாயத்தாரும் இல்லாதவழி அப்பொருளிற்குரியார் யார் என்பது பற்றிக் கூறுகின்றார்.

52 மகளிர்—இறந்தவனுடைய மனைவி.

53 இறந்தவனைக் குறித்துச் செய்யவேண்டிய கன்மங்கள் என்பது.

54 அதனை—வேதியன்பொருளை.

55 தாயத்தாரும் இல்லாத நிலையில் வேதம் ஓதும் ஓர் அந்தணனுடைய பொருளை அவன் இறந்தபின்னர் மற்றோர் அந்தணனுக்குக் கொடுத்துவிடல் வேண்டும் என்பதும், மற்றையோர்பொருளாயின், அப்பொருளுக்குரியவனுடைய ஈமக்கடன் முதலியவற்றிற்கு வேண்டிய பொருளையும், கைம்மை மகளிர் இருப்பின், அவர் ஆயுள்காறும் உண்ணவும், உடுக்கவும் வேண்டிய பொருளையும் விடுத்து எஞ்சிய பொருளை அரசன் எடுத்துக்கொள்ளல் வேண்டும் என்பதும் கருத்து. இதனை,

" உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன்பொருள் " (756)

என்னும் திருக்குறளில் பரிமேலழகர் 'உறுபொருள்' என்பதற்கு 'உடையானின்மையின்றானே வந்துற்ற பொருள்' எனப் பொருள்கூறி 'உறுபொருள்—வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்திற்கிடந்து பின் கண்டெடுக்கப்பட்டதூஉம், தாயத்தார் பெறுததூஉம்' என விரித்துரைக்குமாற்றானறிக.

[56]பதிதன், பதிதன்பாற் றோன்றியவன், பேடி [57]ஆகிய இவர்கள் கூறுபெறத் தகாதவர் ஆவர். மூடன், பித்தன், குருடன், தொழுநோயுடையவன் ஆகிய இவர்களும் [58]என்க. இவர்களுக்கு [59]மணம் நிகழ்ந்திருப்பின் [60]இவர்கள்போலல்லாத மக்கள் கூறு பெறக் கடவர். பதிதனல்லாத [61]ஏனையோர் ஊண் உடை பெறற்பாலார்.

சுலோகம்

[62]இவர்கள் மணம்புரிந்துகொண்டு [63]மகப்பேறு இல்லாதவராக இருப்பின் [64]உறவினர் [65]மகவுகளைத் தோற்றுவித்தல் வேண்டும். அவர்களுக்குக் கூறும் கொடுத்தல்வேண்டும்.

மூன்றும் அதிகரணம் நான்காம் பிரகரணத்தில்
"தாயமுறை" என்னும் அறுபத்திரண்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[56] இதன்கண் கூறுபெறத் தகாதவர் இன்னார் இன்னார் எனக் கூறுகின்றார். பதிதன்—மாபாதகன்.

[57] ஆகிய இவர்கள்—ஆகிய இம்மூவரும்.

[58] இவர்களும் கூறுபெறத் தகாதவர் என்க எனக் கூட்டுக.

[59] ஈண்டு 'பார்யார்த்தே சதி' என்பது மூலம். இதற்கு 'மனைவியின் பொருள் இருப்பின்' எனவும் கூறலாம்.

[60] இவர்கள் போலல்லாத மக்கள்—இங்குக் கூறப்பட்ட மூடன் முதலியோருக்குப் பிறந்தும் தம் தந்தையரைப்போல் மூடன் முதலியோராக இல்லாத நன்மக்கள்.

[61] ஏனையோர் — பதிதன்மகனும், பேடியும், மூடன் முதலியோரும், மூடன் முதலியோர்பால் தோன்றி மூடன் முதலியோராக இருக்கும் மக்களும் ஆகிய இவர்கள்.

[62] இவர்கள்—மூடன் முதலியோர்.

[63] மகப்பேறின்மைக்குக் காரணம் வீரிய ஆற்றல் இல்லாமை.

[64] உறவினர்—மூடன் முதலியோரின் உறவினர்.

[65] மகவுகளைத் தோற்றுவித்தல் மூடன் முதலியோரின் மனைவியரிடத்தென்க. இதனை மகாபாரதத்தில் பாண்டுமன்னன் முதலியோரின் வரலாற்றானுமுணர்க.

மூன்றும் அதிகாணம்—அறநிலையாட்சி

நான்காம் பிரகரணம்—தாயபாகம்–[1]பகுதிக்கூறு

அறுபத்துமூன்றும் அத்தியாயம்

[2]ஒரு மனைவியின் புதல்வருள் [3]மூத்தோன்கூறு பார்ப்பனர்க்கு ஆடுகளும், அரசர்க்குக் குதிரைகளும், வணிகர்க்கு ஆன்களும், சூத்திரர்க்குச் செம்மறிகளும் ஆகும்.

[5]அவர்களுள் [6]நடுவன்கூறு [7]குருடுபோன்றவையும், இளையோன்கூறு [8]பல வண்ணமுடையவையுமாம்.

63-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பகுதிக்கூறு—தாயப்பொருளை உடன்பிறந்தவர்கள் மூத்தோன் கூறு முதலியனவாகப் பகுத்துக் கோடல்; மூத்தோன் கூறு—சேட்டபாகம்.

[2] இதனால் பல மனைவியரின் மக்களுக்கு இந்நியமம் இல்லை என்பது கருத்து.

[3] மூத்தோன் கூறு – உடன் பிறந்தாருள் முன்பிறந்தவனுக்கு மட்டும் கொடுத்தற்குரிய சிறப்புப் பொருள்கள். அவை நான்குவகுப்பினருக்கும் முறையே ஆடு முதலியனவாம்.

[4] ஆடுகள்—பார்ப்பனக் குடும்பத்துள்ள ஆடுகள் முழுதுமாம். வேள்விக்குப் பயன்படுதல் கருதிப் பார்ப்பனர்க்கு ஆடுகளும், போர்க்குச் சிறந்தனவாதல்பற்றி அரசர்க்குக் குதிரைகளும், வாணிகத்திற்குரியவாதல்பற்றி வணிகர்க்குப் பசுக்களும், உழவுத் தொழிற்குரியவாதல்பற்றிச் சூத்திரர்க்குச் செம்மறிகளும் மூத்தோன் கூறாயினவென்பது கருத்து. சூத்திரனுக்குச் செம்மறி சிறப்புடையன என்றது உழவுத் தொழிலுக்கு எருவிடுதல் முதன்மையானது என்பதும், அவ்வெருவை இடுதற்குச் செம்மறியாடு தலை சிறந்தது என்பதும் கருதிப் போலும். எரு முதன்மையானது என்பதை ' ஏரினும் நன்றால் எருவிடுதல் ' (குறள்-1038) என்பதனானும் அறிக.

[5] அவர்களுள்—பார்ப்பனன் முதலிய நால்வருடைய மக்களுள்.

[6] நடுவன் என்றது தலையாயவனும், கடையாயவனும் என்னும் இருவர்க்கும் இடைப்பிறந்த உடன்பிறந்தோர் அனைவரையும் குறிக்கும்.

[7] குருடும், அதுபோன்ற முடம் முதலிய உறுப்பறைகளும் எனக் கொள்க.

[8] ஆடு, குதிரை, பசு, செம்மறி என்னும் இவற்றுள் ஒவ்வொன்றும் கருமை முதலிய பலநிறக் கலப்புடையனவாக இருப்பின், அவற்றை இளையோன் கூறாகக் கொடுத்தல்வேண்டும் என்பதாம். மேற் கூறப்பட்ட விலங்குகளுள் ஒரே வண்ணமுடையது உயர்ந்தது என்பதும், வண்ணக் கலப்புடையது உறுப்பறையினும் தாழ்ந்தது என்பதும் கருத்து.

[9]நாற்காலுயிர் இல்லையாயின் மணியொழிந்த ஏனைய பொருள்களிற் பத்தில் ஒன்று மூத்தோன்கூறும். [10]என்னை ? (அவன்) பிதிர்க்கடன் என்னும் [11]கயிற்றால் கட்டுண்டிருப்பவனாதலான் என்க என்பது [12]வெள்ளியாசிரியரின் பகுக்கும்முறையாம்.

[13]தந்தையின் உபகரணப் பொருள்களுள் ஊர்தியும், அணிகலனும் மூத்தோன்கூறும். படுக்கையும், இருக்கையும் [14]வெண்கல உண்கலமும் நடுவன்கூறும். [15]கருங்கூலமும் இருப்புப்பாண்டமும், [16]வீட்டிற்குரிய உபகரணங்களும் [17]மாட்டுவண்டியும் இளைஞன்கூறும். எஞ்சியபொருள் ஒன்றேனும், பலவேனும் சமனாகக் கூறுசெய்து கோடல்வேண்டும்.

தாயபாகம் மகளிர்க்கு இல்லை. (ஆனால்) [18]தாயின் உபகரணப் பொருள்களில் மகளிர் வெண்கலவுண்கலமும் அணிகலமும் பெறக்கடவர்.

---

9 நாற்காலுயிர்—ஆடு முதலியன.

10 உடன்பிறந்தோருள் மூத்தோன் மிகுதியாகக் கூறுபெறுதற்குக் காரணம் கூறுகின்றார்.

11 கழுத்திற் கயிற்றால் கட்டப்பட்டவன் அக்கட்டினின்றும் தப்புதற்கு இயலாதவாறு போல, பிதிர்க்கடனாற்றும் செயலிலிருந்து மூத்தோன் தப்புதற்கு இயலாது என்னும் கருத்தால் பிதிர்க் கடனைக் கயிறாக உருவகித்தார். எனவே அக்கடன் செய்தல்நிமித்தமே மூத்தோன் மிகுதியாகக் கூறு பெறுதற்கு உரியவனாகின்றான் என்றபடியாம்.

12 வெள்ளியாசிரியர் — சுக்கிராச்சாரி. இவர் பொருணூலாசிரியர்களுள் ஒருவர். இவரது நூல் கௌடலியர்பொருணூலுக்கு முதனூலாகியவற்றுள் ஒன்று. இது வெள்ளியாசிரியரின் பகுக்கும்முறை என்று கூறி, அதனை விலக்காமையால், இம்முறை கௌடலியருக்கும் உடன்பாடு என்பது விளங்கும்.

13 இனி மற்றொரு வகையால் மூத்தோன்கூறு முதலியன பகுக்கும் வகை கூறுகின்றார்.

14 வெண்கல உண்கலம்—வெண்கலம் என்னும் உலோகத்தாற் செய்யப்பட்ட உண்ணுதற்குரிய பாண்டம்.

15 கருங்கூலம்—எள்ளு, வரகு முதலியன.

16 வீட்டுக்குரிய உபகரணம் — உரல், உலக்கை, அடுக்களைக்குரிய பாண்டம் முதலியன.

17 மாட்டுவண்டி—மாடு பூட்டிய வண்டி.

18 தாயின் உபகரணம்—ஆடை, அணிகலன், பெட்டி, உண்கலம் முதலியன. இவற்றுள் மகளிர்க்கு உண்கலமும், அணிகலமும் உரியன எனவே எஞ்சியன ஆடவர்க்காம் என்பது பெற்றாம்.

மூத்தோன் [19]மக்கட்டன்மை யற்றவனுயின், [20]மூத்தோன் கூற்றில் மூன்றில் ஒன்றையும், தகாதசெயலுடையவனுகவாதல், [21]அறச்செயலைவிட்டவனுகவாதல் இருப்பின் நான்கில் ஒன்றையும் அடையக்கடவன். [22]தன் விருப்பப்படி நடப்பவனுயின் [23]எல்லா வற்றையும் இழத்தல்வேண்டும்.

[24]இதனுல் நடுவனுக்கும் இளையவனுக்கும் கூறப்பட்டபடி யாம் [25]இவர்களுள் [26]மக்கட்டன்மையுடையவன் மூத்தோன் கூற்றிற் பாதி பெறக்கடவன்.

---

19 மக்கட்டன்மை—பெருமை, சான்ருண்மை முதலிய குணங்களுடைமை.

20 மக்கட்டன்மையற்றவன் மூத்தவனுயின், அவனுக்குரிய மூத்தோன் கூறு முழுவதும் பெறும் உரிமையற்றவனுவான்; அக்கூற்றில் மூன்றில் ஒன்றே பெறக்கடவன் என்பது கருத்து.

21 அறச்செயல்—தத்தம் வருணத்திற்கு அறநூல்களால் விதிக்கப்பட்ட ஒழுக்கம்.

22 தன் விருப்பப்படி நடப்பவன்—நன்மை, தீமை நாடாது, தன் மனஞ்சென்ற வழியெல்லாம் செல்லும் கயவன்.

23 எல்லாவற்றையும் என்றது ஈண்டு மூத்தோன்கூறு அனைத்தையும் என்றவாறு. மூத்தோன் பொதுக்கூறு பெறுதற்கு இது தடையாகாது என்பது.

24 மூத்தோன் மக்கட்டன்மையற்றவனுயின் தனக்குரிய மூத்தோன் கூற்றில் மூன்றில் ஒன்றையும், அவன் தகாத செயலில் தலைப்பட்டவனுக வாதல், அறச்செயலை விட்டவனுகவாதல் இருப்பவனுயின் நான்கில் ஒன்றையும் அடையவேண்டும் எனவும், விரும்பியவாறே நடப்பவனுயின் எல்லா வற்றையும் இழக்கவேண்டும் எனவும் கூறியவாறே, நடுவனும் இளைஞனும் மக்கட்டன்மையற்றவராயின் அவர்க்குரிய நடுவன்கூறு இளைஞன்கூறு களில் மூன்றில் ஒன்றையும், அன்னுர் தகாத செயலில் தலைப்பட்டவராக வாதல், அறச் செயலை விட்டவராகவாதல் இருப்பின் நான்கில் ஒன்றையும் அடையவேண்டும் எனவும், அவர் விரும்பியவாறே நடப்பவராயின், எல்லா வற்றையும் இழந்துவிடவேண்டும் எனவும் கொள்ளல் வேண்டும் என்பது.

25 இவர்களுள்—நடுவன், இளைஞன் என்னும் இவர்களுள்.

26 மூத்தோன் மக்கட்டன்மையற்றவனுயவழி, நடுவனுதல், இளைஞனுதல் அத்தன்மையுடையோனுக விருப்பின், அவ்வவர்க்குரிய கூற்றிேைடு மூத்தோனுக்குரிய கூற்றிற் பாதியும் பெறக்கடவர் என்பதாம்; இது காறும் கூறியவை பார்ப்பனன் முதலிய நால்வேறு வகுப்பினருள் ஒருவனுக்கு ஒரே மனைவியின்பால் தோன்றிய மக்களுக்குரிய விதியென்க.

[27]சடங்கு செய்யப்பட்டவள், [28]சடங்கு செய்யப்படாதவள் என்னும் வேறுபாடும், [29]கன்னிநிலையினள், [30]அஃதல்லாத நிலையினள் என்னும் [31]வேறுபாடும் இல்லாதவிடத்துப் பல மகளிர்பால் தோன்றியவருள்ளும், ஒருத்திபால் இரட்டையாகப் பிறந்த இருவருள்ளும் முன்னர்த் தோன்றியவனே மூத்தோன் ஆவான்.

[32]சூதன், [33]மாகதன், [34]விராத்தியன், [35]இரதகாரன் ஆகிய

---

27 இனி, அந் நால்வேறு வகுப்பினருள் ஒருவனுக்குப் பல மனைவியர்பாலும் தோன்றிய மக்களுள் மூத்தவனுந்தன்மை, யார்க்குரியதென்பதைக் கூறுகின்றார். சடங்கு செய்யப்பட்டவள்—பிரமம் முதலிய அறத்திருமணம் நான்கனுள் ஒன்றனால் முறையின் மணக்கப்பட்டவள்.

28 சடங்கு செய்யப்படாதவள் — அறத்திருமணம் அல்லாத கந்தருவ முதலிய நான்கனுள் ஒன்றனால் மணந்துகொள்ளப்பட்டவள்.

29 கன்னி நிலையினள்—மணம் செய்தற்கு முன்னர் வேற்றுடவனோடு புணர்ப்பில்லாதவள்.

30 அஃதல்லாத நிலையினள்—மணம் செய்தற்கு முன்னர் வேற்றுடவனோடு கூட்டமுடையவள்; மறுமணம் செய்துகொண்டவளாகலாம்.

31 இவ்வேறுபாடுடைய தாயர்வயிற்றில் தோன்றியவருள் மூத்தோன் இவன் எனக்கூறுதலின், அவ்வேறுபாடுடைய தாயர்பால் தோன்றியவருள் மூத்தோன், இளையோன் என்பது பிறப்பானன்றிச் சிறப்பாற் கொள்ளப்படும் என்பது பெற்றும். அஃதாமாறு :—ஒருவனுக்குச் சடங்கு செய்யப்பட்டவளும், சடங்கு செய்யப்படாதவளுமாகிய இரண்டு மனைவியருளராக, அவருள் சடங்குசெய்யப்பட்டவளின் மகன் சடங்குசெய்யப்படாதவளின் மகனுக்குப் பிறப்பால் இளையவன் ஆயினும் சிறப்பால் மூத்தோன் எனக்கொண்டு, அவனை மூத்தோன் கூற்றிற்குரியனாக்குதலும், இங்ஙனமே ஒருவனுக்குக் கன்னிநிலையினளாக மணக்கப்பட்டவள், அஃதல்லாத நிலையினளாக மணக்கப்பட்டவள் என்னும் இரு மனைவியர்பாலும் தோன்றிய மக்களுள், கன்னிநிலையினளாக மணக்கப்பட்டவளின் மகன் மற்றையவளின் மகனுக்குப் பிறப்பால் இளைஞனாயினும், சிறப்பால் மூத்தோன் எனக்கொண்டு சிறப்புக் கூற்றிற்குரியனாக்குதலுமாம்.

32 சூதன்—அரச குலத்தானுக்குப் பார்ப்பனப் பெண்பால் பிறந்தவன்.

33 மாகதன்—வணிகனுக்கு அரசகுலப் பெண்பாற் பிறந்தவன்.

34 விராத்தியன்—உபநயனம் செய்துகொள்ளாமல் மணந்துகொண்ட பார்ப்பனனுக்கு ஒத்த குலப் பெண்பால் பிறந்தவன்.

35 இரதகாரன்—இல்லமியற்றும் தொழில் செய்யும் ஒரு வகைக் கலப்புச் சாதியினன்; இவன் வைணியருள் ஒரு வகையினன்; இவனைப்பற்றிய விளக்கம் அடுத்த அத்தியாயத்திற் காண்க. இனி, இரதகாரன் வணிகப் பெண்ணிற்கும் அரசகுலத்தவனுக்கும் பிறந்தவனாகிய ‘மாகிட்டியன்’ என்பானுக்கும், சூத்திரப் பெண்ணிற்கும் வணிகனுக்கும் பிறந்த ‘கரணி’ என்பவளுக்கும் பிறந்தவன் என்பர் நிகண்டுகாரர்.

இவர்களுக்கு [36]ஆண்மைக்கேற்பக் கூறும். ஏனையோர் அவனைப் பின்பற்றி வாழக்கடவர். [37]ஆண்மை யில்லையெனின் சமன்கூறு செய்துகொள்ளக் கடவர். [38]இவ்வாறேயாம்.

[39]நான்கு வருணத்து மக்களுள்ளும் [40]பார்ப்பனியின் மகன் நான்குகூற்றையும், அரசகுலப் பெண்ணின் மகன் மூன்றுகூற்றையும், வணிகப்பெண்ணின் மகன் இரண்டுகூற்றையும், சூத்திரப் பெண்ணின் மகன் ஒருகூற்றையும் பெறக்கடவர்.

[41]இதனால் அரசனுக்கும் வணிகனுக்கும் முறையே மூன்று வருணத்து மக்கட்கூறும், இரண்டு வருணத்து மக்கட்கூறும் கூறப்பட்டபடியாம்.

---

36 ஆண்மை — தலைவனாக இருந்து ஆட்சிபுரியும் தன்மை; சூதன் முதலியோருள் ஆண்மைமிக்கோன் தந்தையின் பொருள் முழுதும் எடுத்துக்கொண்டு, உடன் பிறந்தாரைப் போற்றிவரக் கடவன் என்பதாம். பின்பற்றுதல்—சார்ந்து ஒழுகுதல்.

37 சூதன் முதலியோருள் ஒருவனுக்கும் ஆண்மை இன்றேல், எல்லோரும் சமனாகக் கூறு கொள்ளல்வேண்டும் என்பதாம்.

38 இவ்வாறேயாம்—ஈண்டுக் கூறியவாறே கூறுது ஒழிந்த பல மனைவிமார்பால் தோன்றிய கலப்புச்சாதிமக்களுக்கும் உய்த்துணர்ந்துகொள்க என்றபடியாம்.

39 ஒரு பார்ப்பனனுக்குப் பார்ப்பனி முதலிய நான்கு வகுப்பு மகளிரும் மனைவியராக அவர்கள்பால் தோன்றிய மக்களுள் என்க.

40 தாயப்பொருளில் மூத்தோனுக்கு மூத்தோன்கூறு கழித்து, எஞ்சியவற்றைப் பத்துக்கூறுபடுத்து பார்ப்பனியின் மகன் முதலியோர் முறையே நான்கு, மூன்று, இரண்டு, ஒன்றாகக் கூறுசெய்து கொள்ளவேண்டும் என்பதாம்.

41 இதனால்—ஈண்டு மேலே கூறியவாற்றால். அஃதாவது—அரசனுக்கு அரசகுலப் பெண் முதலிய மூவரிடத்தும் தோன்றிய மக்களுள் மூத்தோன் கூறு நிற்க, எஞ்சிய பொருளை ஆறுகூறுபடுத்து, அரசகுலப் பெண்ணின் புதல்வன் மூன்று கூறும், வணிககுலப் பெண்ணின் புதல்வன் இரண்டு கூறும், சூத்திரகுலப் பெண்ணின் புதல்வன் ஒரு கூறுமாகப்பகுத்துக் கொள்ளலும், வணிகனுக்கு வணிகப்பெண் முதலிய இருவர்பால் தோன்றிய மக்களுள், மூத்தோன்கூறு நிற்க, எஞ்சிய பொருளை மூன்றுகூறு படுத்து, வணிககுலப் பெண்ணின் புதல்வன் இரண்டு கூறும், சூத்திரப் பெண்ணின் மகன் ஒரு கூறுமாகப் பகுத்துக்கொள்ளலும்' வேண்டும் என்பது கருத்து.

பார்ப்பனனுக்கு [42]அடுத்தவள்பால் தோன்றியவன் சமன்கூறு பெறக்கடவன். [43]அரசனுக்கும், வணிகனுக்கும் அரைக்கூறும். [44]மக்கட்டன்மையுடையோராயின் சமன்கூறு பெறக்கடவர்.

[45]ஒத்தவள், ஒவ்வாதவள் என்னும் இவர்களுடைய ஓரே மகன் அனைத்திற்கும் உரியவனாவான். அவன் உறவினரையும் புரத்தல்வேண்டும்.

[46]பார்ப்பனனுடைய பொருளாயின் [47]பாரசவன் மூன்றில்

---

[42] அடுத்தவள்—பார்ப்பனனுக்கு அடுத்த வகுப்பினளாகிய அரசகுலப் பெண். பார்ப்பனனுக்குப் பார்ப்பனமனைவியினிடத்தும், அரசகுல மனைவியினிடத்தும் ஒவ்வொரு புதல்வர் உளராக, ஏனைய வணிககுல மனைவி சூத்திரகுல மனைவியாகிய இருவரிடத்தும், மக்கள் இலராயின் மேற் கூறப் பட்டவர்கள் மூத்தோன்கூறு நிற்க எஞ்சியவற்றைத் தம்முள் சமனாகக் கூறுசெய்துகொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[43] அரசனுக்குத் தன் குலத்தவளிடத்தும், வணிகப் பெண்ணிடத்தும் ஒவ்வொரு புதல்வர் உளராக, சூத்திர மனைவியின்பால் மக்கள் இலராயின், மேற் கூறப்பட்ட புதல்வர்கள் மூத்தோன்கூறொழித்து, முறையே இரண்டுகூறும், ஒருகூறும் கொள்ளக்கடவர். இங்ஙனமே வணிகனுக்கு வணிகப்பெண்ணிடத்தும் சூத்திரப்பெண்ணிடத்தும் தோன்றிய இரண்டு புதல்வர்களும் மூத்தோன்கூறொழிய முறையே இரண்டுகூறும் ஒருகூறு மாகப் பகுத்துக்கொள்ளவேண்டும் என்பதாம்.

[44] அரசனுக்கு வணிகப் பெண்ணின்பால் தோன்றிய புதல்வனும், வணிகனுக்குச் சூத்திரப் பெண்ணின்பால் தோன்றிய புதல்வனும் மக்கட் டன்மை சிறந்தவராயின், முறையே அரசகுலப் பெண்ணின் மகனோடும், வணிககுலப் பெண்ணின் மகனோடும் சமனான கூற்றையும் பெறக்கடவர் என்பதாம்.

[45] குலத்தால் ஒத்தவளும் ஒவ்வாதவளும் என்க. ஒருவனுக்கு ஒத்த வளும் ஒவ்வாதவளும் ஆகிய இரண்டு மனைவியர் இருக்க, அவருள் யாரிடத் துத் தோன்றியவனாயினும் ஓரே மகனாயின் அவன் இருவருக்கும் மகனாதலோடு, தாயப்பொருள் அனைத்திற்கும் உரியவனுமாவான். அவன் தன் தந்தையால் பாதுகாக்கப்படவேண்டிய உறவினரை யெல்லாம் புரத்தல் வேண்டும் என்பதுமாம்.

[46] ஓரே மகனைக் குறித்து மேலே கூறிய விதிக்கு ஒரு புறனடை கூறு கின்றார். தந்தை பார்ப்பனனாயின், அவனுக்குச் சூத்திரப் பெண்பால் தோன்றிய ஓரே மகன் தந்தையின் பொருள் அனைத்தையும் பெறுதற்கு உரியனாகான் என்பதும், அம்மகன் தன் பார்ப்பனத் தந்தையின் பொருளில் மூன்றில் ஒரு கூற்றையே கொள்ளல்வேண்டும் என்பதும், எஞ்சிய இரு கூற்றையும் இன்னின்னார் கொள்ளல் வேண்டும் என்பதுமாம்.

[47] பாரசவன் — பார்ப்பனனுக்கும், சூத்திரப் பெண்ணிற்கும் பிறந் தவன்.

ஒருகூறு பெறுதல்வேண்டும். இரண்டுகூற்றை ஞாதியராதல், நெருங்கிய குலத்தவனுதல் [48]பிதிர்க்கடன் இறுக்கும்பொருட்டு அடைதல்வேண்டும். [49]அவர் இலராயின் தந்தையின் ஆசிரியனுதல், மாணுக்கனுதல் அடையக்கடவர்.

சுலோகம்

[50]இவனுடைய [51]மனைவியினிடத்தில் [52]ஏவப்பட்ட தாயின் உறவினனுதல், ஒத்த கோத்திரத்தானுதல் [53]'க்ஷேத்திரஜன்' என்ற மகனைத் தோற்றுவித்தல் வேண்டும். [54]அப்பொருளை அவனுக்குக் கொடுத்தல்வேண்டும்.

மூன்றும் அதிகரணம் நான்காம் பிரகரணத்தில்
" பகுதிக்கூறு " என்னும் அறுபத்துமூன்றும்
அத்தியாயம் முற்றிற்று.

---

48 பாரசவன் தன்தந்தைக்குரிய இறுதிக்கடன் இறுக்கும் உரிமையற்றவனுவான் என்பதும், பாரசவன்தந்தைக்கு ஞாதி முதலியோரே இறுதிக்கடன் இறுத்தல் வேண்டும் என்பதும், அக்கடன் இறுக்கும் பொருட்டே இங்ஙனம் தாயப்பொருள் கூறு செய்யப்படும் என்பதும் இதனுற் பெற்றும்.

49 அவர்—ஞாதியர் முதலியோர்.

50 ஞாதியர் முதலிய நால்வரும் இலராயின் செயற்பாலதனைக் கூறுகின்றுர் ; ஈண்டு இவன் என்றது பாரசவனுடைய தந்தையாகிய பார்ப்பனனைக் குறிக்கும்.

51 ஈண்டுப் பார்ப்பனனுடைய மனைவியருள் பார்ப்பன மனைவியினிடத்தில் எனக் கொள்க.

52 ஏவப்பட்ட—பெரியோர்களால் ' இங்ஙனம் செய்க ' எனக் கட்டளையிடப்பட்ட.

53 க்ஷேத்திரஜன் — ஒருவன் மனைவியினிடத்து ஏவப்பட்ட பிறனெருவன் கூடிப்பெற்ற மகன்.

54 அப்பொருள்—பாரசவனுக்கு உரியது ஒன்று நீங்க, எஞ்சிய அவ்விரு கூற்றின் பொருள்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

நான்காம் பிரகரணம்—தாயபாகம்–[1]புதல்வர்வகை

அறுபத்துநான்காம் அத்தியாயம்

பிறன்மனைவியினிடத்து [2]வித்தியவிதை [3]நிலத்தையுடையவனுக்கு உரியதாகும் என்பர் ஆசிரியர்.

[4]தாய் தோற்பை (மாத்திரையே ஆகலான்) வித்தியவனுக்கே மகவு உரியதாம் என்பர் ஒரு சாரார்.

[5]இரண்டும் உண்மையேயாம் என்பர் கௌடலியர்.

64-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முன்னைய அத்தியாயத்தில் தாயப்பொருளைக் கூறுசெய்யும் விதம் கூறப்பட்டது. அக் கூறுகளைக்கொள்ளுதற்குரியராகிய தாயத்தாரின் வகைகளையறிந்துகொள்ளுதற் பொருட்டுப் புதல்வரின் வகைகள் இவ்வத்தியாயத்திற் கூறப்படும். அத்தியாய இயைபு இதனாற் புலனுதல் அறிக. இனி, முன்னைய அத்தியாயத்தின் இறுதியிற் கூறப்பட்ட 'க்ஷேத்திரஜன்' என்பானொடு இனம்பற்றி ஏனையோரையும், அவர்களுள் ஏற்றத்தாழ்வுடையார் இன்னார் இன்னார் என்பதையும் இவ்வத்தியாயத்தில் கூறுவான் தொடங்குகின்றார் எனினுமாம்.

[2] வித்தியவிதை—இடக்கரடக்கல்—மகவைக் குறிக்கும்.

[3] நிலம்—வித்து முளைத்தற்கு இடமாதலின், ஈண்டு ஆகுபெயரால் மனைவியைக் குறிக்கும். எனவே நிலத்தையுடையவன் என்றது அவள் கணவனை என்க. ஒருவன்மனைவியைப் பிறனொருவன் புணர்ந்து மகப்பெற்றால், அம்மகவு புணர்ந்தவனுக்கே உரியதாகாது; அவள் கணவனுக்கே உரியதாம் என்பது கருத்து.

[4] தாய் மகப்பேற்றிற்குக் கருத்தரிக்கும் அவ்வளவே துணையாவாள். தந்தையே அதற்குச் சிறந்தவன் ஆதலின் வித்தியவனாகிய தந்தைக்கே மகவு உரித்தாதல் வேண்டும் என்பது ஒரு சாரார் கொள்கை என்க.

[5] இரண்டும் உண்மையேயாம்—நிலமும், வித்தும் சேர்ந்தே விளைவுண்டாதலின் நிலம் சிறந்ததென்பார் கொள்கையும் வித்துச் சிறந்ததென்பார் கொள்கையும் ஆகிய இரண்டும் உண்மையாகும் என்றபடியாம். எனவே அவ்விரண்டும் தம்முட் சமமுடைய என்பது போதரும். ஆகலின் நிலமுடையவனுக்கும் வித்தியவனுக்கும் விளைவு (மகவு) சமனான உரிமையுடையது என்பது கௌடலியர் கொள்கையாம் என்க.

[6]மணக்கப்பட்டவளிடத்துத் தனக்குத் தோன்றியவன் 'ஔரசன்' எனப்படுவான். [7]புத்திரிகையின் புதல்வன் அவனுக்குச் சமனும். ஏவப்பட்ட ஒத்த கோத்திரத்தானுலாதல் [8]பிற கோத்திரத்தானுலாதல் [9]நிலத்திற்றோன்றிய புதல்வன் 'க்ஷேத்திரஜன்' எனப்படுவான். [10]பிறப்பித்தவனுக்கு வேறு மகவில்லையாயின் க்ஷேத்திரஜனே [11]இரண்டு தந்தையர்க்கும், [12]இருகோத்திரத்திற்கும், இருவர்க்குமியற்றக்கடவ [13]கடனுக்கும், இருவர் பொருளுக்கும் உரியவனுவான். உறவினருடைய இல்லத்தில் [14]மறைவிற்றோன்றியவன் 'கூடசன்' எனப்படுவான். அவன் க்ஷேத்திரஜ

---

[6] இனி, மக்களைப் பிறப்புப்பற்றி வகைப்படுத்தத் தொடங்குகின்றார்; ஒருவன் விதிப்படி மணந்த தன் மனைவியோடு கூடிப்பெற்ற மகன் 'ஔரசன்' என்று கூறப்படுவான் என்பது.

[7] ஒருவன் தன் மகளை மணம்செய்து கொடுக்குங்கால் 'இவளிடத்துத் தோன்றும் புதல்வன் எனக்குப் புதல்வனுக வேண்டும்' என்று உறுதி செய்துகொண்டு மணமகனுக்குக் கொடுக்கப்பட்ட அம்மகள் 'புத்திரிகை' எனப்படுவாள் என்பதும், அவள்பாற் றோன்றியவன் ஔரசனுக்குச் சமனுவான் என்பதும் கருத்து. பாண்டியமன்னனின் மகள் சித்திராங்கதை என்பாளைத் தீர்த்தயாத்திரையின் பொருட்டு மதுரைக்கு வந்த அருச்சுனனுக்கு மணம்செய்து கொடுத்தபோது, பாண்டியனுக்கு வேறு மகவின்மையால் சித்திராங்கதையைப் புத்திரிகையாகக்கொண்டு அவள் வயிற்றிற்றோன்றியவனுக்கே தன் அரசியலை ஈந்தான் என்னும் மாபாரதக் கதையை ஈண்டு நினைக்க.

[8] ஒத்த கோத்திரத்தான் தகுதியில்லாதவனுக இருப்பின் பிற கோத்திரத்தானைக் கொள்ளலாம் என்பது கருத்து.

[9] நிலம்—ஈண்டு ஏவினவன்மனைவியைக் குறிக்கும்.

[10] பிறப்பித்தவன் — மற்றொருவன்மனைவியிடத்து ஏவப்பெற்று 'க்ஷேத்திரஜன்' என்பானைப் பிறப்பித்தவன்.

[11] இரண்டு தந்தையர் — தாயின் கணவனும், தன்னைப் பிறப்பித்தவனும் என்க.

[12] தன் தாயின் கணவன்கோத்திரமும், தன்னைப் பிறப்பித்தவன் கோத்திரமுமாம்.

[13] கடன்—இறுதிக் கடனும், பிதிர்க்கடனும் ஆம்.

[14] ஒருவன்மனைவி தன் உறவினரின் இல்லத்தில் இருக்குங்கால், அவள் தன்கணவன் உடன்பாடின்றிப் பிறன் ஒருவனை மறைவிற் புணர்ந்து ஈன்ற மகனைக் 'கூடசன்' என்பர் என்க. கூடம்—மறைவு.

னுக்குச் சமனுவான். [15]உறவினராற் கைவிடப்பட்டவன் ‘ அபவித்தன் ’ ஆவான். அவன் [16]சடங்கியற்றியவனுக்கு மகனுவான். [17]கன்னியின்புதல்வன் ‘ கானீனன் ’ எனப்படுவான். [18]கருவோடு மணக்கப்பட்டவளின்மகன் ‘ சகோடன் ’ எனப்படுவான். [19]மறுமணம் புரிந்துகொண்டவளின் மகன் [20]‘ பௌனர்ப்பவன் ’ எனப்படுவான்.

[21]ஔரசன் என்னும் புதல்வன் [22]தந்தை, உறவினர் என்னும் இவர்தம் தாயப்பொருளுக் குரியவனுவான். [23]பிறர்க்குப் பிறந்தவர் [24]சடங்கியற்றியவனுடையவற்றிற்கன்றி [25]உறவினருடையவற்றிற்கு உரியராகார். தாய்தந்தையரால் [26]நீரொடு கொடுக்கப்

---

15 உறவினர்—தாய் தந்தையர் முதலியோர் ; அவராற் கைவிடப்பட்டவனுக்கு ‘ அபவித்தன் ’ என்பது பெயர் என்க.

16 சடங்கு—சாதகன்மம், பெயரீடு, மயிர்களைதல், நூலீடு முதலியன.

17 கன்னி—மணமாகாதவள்.

18 கருவோடு மணக்கப்பட்டவள்—மணமாகுமுன் ஒருவனுடன் சேர்ந்து கருக்கொண்டு, அதன் பின்னர் மற்ஞெருவனுல் மணக்கப்பட்டவள்.

19 மறுமணம் புரிந்துகொள்ளும் மகளிர், புணர்ச்சியில்லாத நிலையிற் கணவன் இறக்க, வேறு கணவனை விதிப்படி மணந்தவளும், முதற் கணவனை வெறுத்து விலக்கி மற்ஞெருவனை யடைந்தவளும், கணவன் இறந்தபின்னர் ஒத்த கோத்திரத்தான் அல்லது ஒத்த குலத்தவனை மறுமணம் செய்துகொண்டவளும் என மூவகையினராவர்.

20 மறுமணம் செய்துகொண்டவள் ‘ புனர்ப்பூ ’ எனப்படுவாள் ஆதலின் அவள்புதல்வன் ‘ பௌனர்ப்பவன் ’ ஆவான்.

21 ஔரசன்—மணம் செய்துகொண்ட தந்தைக்குப் பிறந்தவன்.

22 தந்தையும் தந்தையினுடைய உறவினரும் ஆகிய இவர்களுடைய பொருளுக்கு ஔரசன் உரியவன் ஆவான் என்க.

23 பிறர்க்குப் பிறந்தவர் — ஔரசனல்லாத க்ஷேத்திரஜன் முதலியோர்.

24 பிறப்புச் சடங்கு முதலியன இயற்றிய சொந்தத் தந்தையினுடைய பொருளுக்கு மாத்திரம் உரிமையுடையராதலே யன்றி, ஔரசனைப்போலத் தந்தையின் உறவினருடைய பொருளுக்கும் உரியராகார் என்பது கருத்து.

25 உறவினருடையவற்றிற்கு—உறவினருடைய தாயப் பொருளிற்கு.

26 நீரொடு கொடுத்தல்—மறைமொழியோடு நீர் பெய்து கொடுத்தல். இதனுல் அவன் பெயர்க்காரணம் புலனுதல் அறிக.

பட்டவன் 'தத்தன்' என்று கூறப்படுவான். அவன் [27] அவனுக்குச் சமனுவான்.

[28] தானேயாதல், உறவினர்வாயிலாஞதல் மகனுக வந்தடைந்தவன் 'உபகதன்' எனப்படுவான். [29] புதல்வனுகக் கற்பித்துக் கொள்ளப்பட்டவன் 'கிருதகன்' எனப்படுவான். விலைக்குக் கொள்ளப்பட்டவன் 'கிரீதன்' எனப்படுவான் [30] என்க.

[31] ஔரசன் தோன்றியபின்னர் சவர்ணர் மூன்றில் ஒருகூற்றிற்குரியவர் ஆவார். அசவர்ணர் ஊண் உடை மாத்திரையே பெறற்பாலார்.

[32] பார்ப்பனனுக்கும் அரசனுக்கும் அடுத்தவள்பால் தோன்றியவர் சவர்ணரும் [33] ஒன்றிடையிட்டவள்பால் தோன்றியவர் அசவர்ணரும் ஆவர்.

---

[27] அவனுக்கு—ஔரசன் என்பானுக்கு. எனவே தந்தை, உறவினர் என்னும் இருபாலார்பொருளுக்கும் தத்தன் உரியவன் ஆவான் என்பது கருத்தாதலறிக.

[28] ஓரிளைஞன் ஒருவனிடத்துத் தானே சென்று 'நான் உனக்கு மகனுவேன்' எனக் கூறி வந்தடைந்தவனும், தன் உறவினரால் ஒருவனிடத்து 'இவன் உன் மகனுகுக' எனக்கூறி, உறவினரால் ஒப்புவிக்கப்பட்டு வந்தவனும் ''உபகதன்' என்னும் பெயர்க்குரியர் என்க.

[29] யாரேனும் ஓரிளைஞனை ஒருவன் தன் குடும்பத்திற் சேர்த்துத் தன் புதல்வன் இவனே எனக்கொண்டு வளர்க்கப்பட்டவன்.

[30] இவ்வளவில் புதல்வர்வகை என்னும் செய்தி முடிவுற்றது என்பது கருத்து.

[31] ஒருவன் க்ஷேத்திரஜன் முதலிய மக்களை முன்னர் உடையவனுயிருந்து, பின்னர் ஔரசனைப் பெறுவானுயின், அந்த க்ஷேத்திரஜன் முதலியோருள் சவர்ணர் என்பார் மூன்றில் ஒருகூறு பெறல்வேண்டும் என்பதும், எஞ்சிய இரு கூறும் ஔரசன் கொள்ளல்வேண்டும் என்பதும், க்ஷேத்திரஜன் முதலியோர் அசவர்ணராயின் ஆயுள்காறும் உண்டியும் உடையும் பெற்றமையக்கடவர் என்பதும் கருத்து.

[32] இனி சவர்ணர் அசவர்ணர் எனக் கூறப்பட்டவர் இன்னின்னர் எனக் கூறுகின்ருர். அவருள் பார்ப்பனனுக்கு அரசகுலப் பெண்பால் தோன்றியவனும், அரசனுக்கு வணிகப் பெண்ணிடத்தே தோன்றியவனும் சவர்ணர் ஆவர் என்பதாம்.

[33] ஒன்றிடையிட்டவள்—ஒரு வகுப்பிடையிட்டு, அடுத்த வகுப்பில் தோன்றியவள். எனவே, பார்ப்பனனுக்கு வணிகப் பெண்ணிடத்துத் தோன்றியவனும், அரசனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்திற் ருேன்றியவனும் அசவர்ணர் ஆவர் என்றபடியாம்.

[34]பார்ப்பனனுக்கு வணிகப்பெண்ணிடத்துத் தோன்றியவன் 'அம்பட்டன்' எனப்படுவான். [35]சூத்திரப் பெண்ணின்பால் தோன்றியவன் 'நிடாதன்' அல்லது 'பாரசவன்' எனப்படுவான். அரசனுக்குச் சூத்திரப்பெண்ணிடத்துத் தோன்றியவனை 'உக்கிரன்' என்ப.

[36]வணிகனுக்காயின் சூத்திரனேயாம். [37]இவர்களுள் [38]விரத முறை தவறியவனுக்கு [39]ஒத்த குலத்தவளிடத்துத் தோன்றியவன் 'விராத்தியன்' எனப்படுவான். [40]அநுலோமர் இங்ஙனமாவர். [41]சூத்திரனுக்குத் தோன்றியவர் [42]ஆயோகவன், க்ஷத்தன், சண்டாளன் எனப்படுவார்.

வணிகனுக்குத் தோன்றியவர் [43]மாகதன், வைதேககன் எனப்படுவார். அரசனுக்குத் [44]தோன்றியவன் சூதன் எனப்படுவான்.

---

[34] இனி அநுலோமரைப்பற்றிக் கூறுகின்றார்.

[35] பார்ப்பனனுக்குச் சூத்திரப் பெண்ணின்பால் தோன்றியவன் என்க.

[36] வணிகனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்தில் தோன்றியவனாயின் சூத்திரன் என்றே கொள்ளல்வேண்டும் என்பதாம்.

[37] இவர்களுள்—பார்ப்பனன் முதலிய மூவருள்.

[38] விரதமுறை தவறுதலாவது :— இரு பிறப்பாளர்க்குக் கூறிய நூலீடு முதலிய சடங்குகளின்றி மணஞ்செய்துகோடல் முதலியன.

[39] ஒத்த குலத்தவள்—பார்ப்பனன் முதலியோருக்கு அவ்வம் மரபுப் பெண்.

[40] உயர்ந்த வகுப்புஆடவர்க்கும், தாழ்ந்த வகுப்புப் பெண்டிர்க்கும் தோன்றும் அநுலோமர்கள் இங்குக் கூறியபடி ஆவார் என்பதாம்.

[41] இனிப் பிரதிலோமரைப் பற்றிக் கூறுகின்றார்.

[42] சூத்திரனுக்கு வணிகப் பெண்ணிடத்துத் தோன்றியவன் 'ஆயோகவன்' எனவும், அரசகுலப் பெண்ணிடத்துத் தோன்றியவன் 'க்ஷத்தன்' எனவும், பார்ப்பனப் பெண்ணிடத்துத் தோன்றியவன் 'சண்டாளன்' எனவும் படுவர் என்பதாம்.

[43] வணிகனுக்கு அரசகுலப் பெண்ணிடத்துத் தோன்றியவன் 'மாகதன்' எனவும், பார்ப்பனப் பெண்ணிடத்துத் தோன்றியவன் வைதேககன் எனவுங் கொள்க.

[44] அரசனுக்குப் பார்ப்பனியிடத்துத் தோன்றியவன் என்க.

[45]பௌராணிகனுகிய சூதனும், மாகதனும் வேருவர். அந்தணர் அரசர்களினும் [46]முறையே சிறந்தோரும் ஆவர்.

மேலே கூறப்பட்ட [47]பிரதிலோமர்கள் அரசன் தனக்குரிய [48]அறத்தின் வழுவுதலாற் றேன்றியவராவர்.

[49]உக்கிரனுக்கு நிடாதப்பெண்ணிடத்துப் பிறந்தவன் 'குக்குடகன்' ஆம். [50]மாறுபடிற் 'புற்கசன்' ஆம். அம்பட்டனுக்கு வைதேகிகை என்பாளிடத்துப் பிறந்தவன் 'வைணன்' எனப்படுவான். [51]மாறுபடிற் 'குசீலவன்' என்ப.

க்ஷத்தை என்பாளிடத்து உக்கிரனுக்குப் பிறந்தவன் 'சுவபாகன்' எனப்படுவான். ஈண்டுக் கூறப்பட்டவரும், [52]பிறரும்

---

45 பிருதுச் சக்கரவர்த்தியின் வேள்விநிலத்தில்தோன்றிய பௌராணிகனுகிய சூதனும், மாகதனும் பிரதிலோமசூதன் மாகதன் ஆகிய இவர் தாமோ என்னும் ஐயத்தைப் பரிகரிக்கத் தொடங்குகின்ருர்; புராணப்பிரசங்கஞ் செய்யும் 'உரோமகருடன்' என்னும் வேருரு பெயரையுடைய சூதன் பிரதிலோம சூதனினும் வேருவான் என்பதும், அவனுடன் வைத்துப் பேசப்படும் மாகதனும் அங்ஙனமே பிரதிலோம மாகதனினும் வேருவான் என்பதும், பெயர் ஒற்றுமையால் மயங்கலாகாது என்பதும் கருத்து. இவ் வேறுபாட்டை விஷ்ணுபுராணம் முதல் அமிசம் மூன்றும் அத்தியாயத்திலும், அக்கினிபுராணம் முதல் அத்தியாயத்திலும் கூர்மபுராணம் முதல் அத்தியாயத்திலும் விளக்கமாகக் காணலாம்.

46 சூதன் அந்தணரினும், மாகதன் அரசரினும் சிறந்தவர் என்பது கருத்து.

47 பிரதிலோமர்கள்—மேலே ஆயோகவன் முதலாகக் கூறப்பட்டவர்.

48 அறம்—ஈண்டு வருணுச்சிரம தருமத்தைக் காப்பாற்றுதல்.

49 இனி, அந்தராள வகுப்பினரைப்பற்றிக் கூறத் தொடங்குகின்ருர். உக்கிரன்—அரசனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்துப் பிறந்தவன். நிடாதப்பெண்—பார்ப்பனனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்துப் பிறந்தவள்.

50 நிடாதனுக்கு உக்கிரப் பெண்ணிடத்துப் பிறந்தவன் புற்கசன் எனப்படுவான் என்பதாம்.

51 வைதேககனுக்கு அம்பட்டப்பெண்ணிடத்துப் பிறந்தவன் குசீலவன் எனப்படுவான் என்பதாம்.

52 பிறர்—ஈண்டுக் கூருதொழிந்த அநுலோம பிரதிலோம ஆடவர் மகளிர்க்குத் தோன்றியவர்கள். இவர்கள் அநுலோமருமாகாது, பிரதிலோமருமாகாது இடைநிகராய ஓர் வகுப்பிற் படுதலின் 'அந்தராளர்' எனப்பட்டார். அந்தராளர்—இடைப்பட்டோர்.

'அந்தராளர்' எனப்படுவார். வைணனே [53]தொழில்பற்றி 'இரதகாரன்' எனப்படுவான்.

[54]இவர்கள் [55]தம்வகுப்பில் மணத்தல்வேண்டும்.

[56]உயர்ந்தவன் தாழ்ந்தவளை மணத்தலும் முன்னோர் ஒழுகியவாற்றான் ஒழுகுதலும் தனக்குரிய அறத்தை நிறுவுதலாம். [57]சண்டாளனல்லாதார் [58]சூத்திரனை ஒப்பார் எனக் கோடலுமாம்.

[59]இவ்வாறு அமைக்கும் அரசன் துறக்கத்தையும் [60]மாறுபட்டவன் நரகத்தையும் அடைவர்.

[61]அந்தராளர் அனைவர்க்கும் கூறு [62]சமனும்.

சுலோகம்

நாடு, சாதி, குழூஉ, ஊர் என்னும் [63]இவற்றின் வழக்க ஒழுக்கங்களுக்குத் தக தாயபாகம் பகுக்கப்படல்வேண்டும்.

மூன்றும் அதிகரணம் நான்காம் பிரகரணத்தில்
"புதல்வர்வகை" என்னும் அறுபத்துநான்காம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[53] வைணசாதியிற் பிறந்தவன் இரதமியற்றுதல் முதலிய தச்சுத்தொழில் செய்தல்காரணமாக இரதகாரன் எனப்பட்டான் என்பது கருத்து.

[54] இவர்கள்—அந்தராளர்கள்.

[55] அம்பட்டன் அம்பட்டப் பெண்ணையும், நிடாதன் நிடாதப் பெண்ணையும் மணத்தல்போல்வன தம் வகுப்பில் மணத்தல் என்க. அன்றி அம்பட்டன் நிடாதையை மணத்தல் போல்வன தாழ்ந்தவளை மணத்தலாம். இவ்விரண்டு மணமும் இவர்களுக்கு அறத்திற்கியைந்தனவாம்.

[56] அம்பட்டன் நிடாதையை மணத்தல் போல்வன.

[57] சண்டாளன் அல்லாத அந்தராளர்.

[58] சூத்திரனை ஒப்பார் எனவே சூத்திரர்க்கு வகுத்த அறம் இவர்களுக்குமாம் என்றபடியாம்.

[59] இவ்வாறு—மேலே விதித்தபடி.

[60] மாறுபட்டவன்—மேற்கூறிய விதிபிறழ அரசு நடத்திய வேந்தன்.

[61] அந்தராள வகுப்பினராகிய ஆடவர் மகளிர் ஆகிய அனைவருக்கும் என்பதாம்.

[62] சமன்கூறு எனவே இவர்களுள் மூத்தோன்கூறு முதலிய கூறுகள் இல்லை என்றவாறும்.

[63] இவற்றின் வழக்க ஒழுக்கம்—நாடு முதலியவற்றில் தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்கநெறி.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

ஐந்தாம் பிரகாரணம்—[1]நிலவழக்கு—[2]மனைநிலம்

அறுபத்தைந்தாம் அத்தியாயம்

நிலத்தைப்பற்றிய வழக்குக்கள் [3]அடுத்துள்ள நிலங்களைப் பிரமாணமாகக்கொண்டு துணியத்தக்கன.

இல்லம், [4]வயல், [5]உபவனம், [6]எல்லைக்கட்டு, ஊருணி, [7]நீர்நிலை என்னும் இவ்வெல்லாம் [8]நிலமாம்.

ஒவ்வோரில்லத்திற்கும் [9]எல்லைக்கோடிகளில் கம்பத்தை நட்டு, இருப்புக்கம்பியை இணைத்துக்கட்டுதல் [10]எல்லைக்கட்டாகும்.

65-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] *நிலம் என்பது ஈண்டு இல்லம், உபவனம், வயல் முதலியவற்றைக் குறிக்கும். இவற்றைப்பற்றிய வியவகாரம் நிலவழக்காகும். மனையிடம், உபவனம், வயல் முதலியன தாயபாகமாகக் கொண்டு கூறு செய்யப்பட்டாலும், எப்பொழுதும் அவை சேர்ந்திருக்கும் நிலையிலேயே உள்ளமையால் அடிக்கடி அவற்றைப்பற்றிய வழக்கு நேர்தல் இயல்பு. அவ்வழக்குக்களை ஆராய்ந்து துணிந்து ஒழுங்கு செய்தல் இப்பிரகரணத்திற் கூறப்படுவதாகும். இது தாயபாகத்தை ஒட்டி நிகழ்வதால் அதன்பின் வைக்கப்பட்டது. இதனைற் பிரகரண இயைபு புலனுதலறிக.*

[2] *இப் பிரகரணம் மனைநிலம், நிலவிலை, புன்னிலவயல்வழித்தடை என்னும் மூன்று அத்தியாயங்களைத் தன்னுட்கொண்டது. இம்மூன்றனுள் முதலாவதாகிய மனைநிலத்தைப் பற்றிய செய்திகள் இதன்கட் கூறப்படும்.*

[3] *பக்கத்து நிலங்களின் எல்லைகளைக்கொண்டு இன்னதெனத் துணிய வேண்டும் என்பது கருத்து.*

[4] *வயல்—நன்செய்; இது இனமாகிய புன்செய்க்குமாம்.*

[5] *உபவனம்—இன்பவிளையாட்டுநிமித்தம் அமைக்கப்படும் இளமரச் சோலை.*

[6] *இஃது இன்னது என்பதைப் பின்னர்க் காண்க.*

[7] *நீர் நிலை—ஏரி, குளம் முதலியன.*

[8] *நிலம் என்று இங்கே குறிக்கப்பட்டதை முதனூல் ' வாஸ்து ' என்று கூறும்.*

[9] *எல்லைக்கோடி—அவ்வவ்வில்லங்களுக்கென அளவிட்டமைத்த வரம்பு.*

10 *இவ் வெல்லைக்கட்டு நிலையியற் பொருளுக்குத் தலைவனுகிய எல்லை காவலனுல் அமைக்கப்படுவது.*

[11]எல்லைக்கட்டுவெளியைக் கடவாமல் இல்லம் அமைத்தல் வேண்டும்.

[12]முன் இல்லாதவிடத்துப் பிறனுடைய [13]சுவரில் நின்றும் [14]இரண்டுமுழம் அல்லது மூன்று அடி விட்டு [15]அடிப்படையமைக்கலாம்.

[16]பத்துநாள் வரை மகப்பெற்றவளுக்காக அமைக்கப்படும் பள்ளத்தையன்றி, நீர் மலங்கழிக்குமிடம், [17]தூம்பு, கிணறு என்னும் இவற்றை இல்லத்திற்குப் பொருத்தமான இடத்தில் அன்றி [18]வேற்றிடத்தில் அமைத்தலாகாது. [19]இதனை மீறி நடந்தால் பூர்வசாகசம் தண்டமாம்.

[20] இதனால் [21]மங்கலகாரியங்களில் விறகுவெட்டுமிடம், [22]கழுவுநீர்ஒழுகும்வழி இவற்றிற்கும் [23]கூறப்பட்டபடியாம்.

---

11 எல்லைக்கு உட்பட்ட நிலத்திலேயே வீடு கட்டவேண்டும் என்பது.

12 எல்லைகாவலனால் எல்லைக்கட்டு முன் அமைக்கப்படாத இடத்தில் என்பது.

13 சுவர்—வீட்டுச் சுவர்.

14 இரண்டு முழம் அல்லது மூன்றடியளவுள்ள இடைவெளியை விட்டென்பது.

15 அடிப்படை—தன் வீட்டுச் சுவர்க்குரியது.

16 கருவுயிர்த்தவளைத் தூய்மை செய்தலால் உண்டாம் கழிவுநீர் தங்குதற்கு ஒரு பள்ளம் தோண்டிப் பத்துநாள்வரை பயன்படுத்திப் பின்னர் நல்ல மண்ணையிட்டு அக்குழியைத் தூர்த்துவிடல்வேண்டும் என்பதும், அக்குழியை இன்ன இடத்தில் என்பதின்றி, வாய்ப்பான ஓரிடத்தில் அமைத்துக்கொள்ளலாம் என்பதும் கருத்து.

17 தூம்பு—வீட்டில் கழிவுநீர் செல்லும் மதகு.

18 வேற்றிடம்—அயல் வீட்டிற்குத் தீங்கு விளைத்தற்குக் காரணமான இடம்.

19 இதனை—இங்கே கூறப்பட்ட விதியை.

20 இதனால்—கருவுயிர்த்தவளுக்குக் கூறிய விதியினால்.

21 மங்கல காரியம்—திருமணம் முதலிய விசேடங்கள்.

22 கழுவுநீர்—கைகால் கழுவுதலாலும், அடுக்களையில் அரிசி முதலியன களைதலாலும் வெளிப்படும் நீர்.

23 திருமணம் முதலிய விசேட காரியங்களில் அக்காரியங்கள் முடியும் வரை விறகு வெட்டுமிடம், கழுவுநீர் ஒழுகும் வழி இவற்றை விருப்பப்படி அமைத்துக்கொள்ளலாம் என்பது கருத்து.

மூன்றடி அல்லது ஒன்றரை முழம் [24]விட்டு [25]நிலத்தினுள்ளே தடையின்றி [26]நீர் வடியுமாறு தூம்பினையும், [27]அங்ஙனமே அந்நீர் வீழுமிடத்தையும் அமைத்தல்வேண்டும். இதனைக்கடந்து செய்யின் ஐம்பத்துநான்குபணம் தண்டமாம்.

ஓரடி அல்லது ஒருமுழம் [28]விட்டு வண்டி, [29]நாற்கால்விலங்கு, அடுப்பு, நீர்த்தொட்டி, திரிகை, உரல் என்னும் இவற்றிற்கு இடம் அமைத்தல்வேண்டும். [30]இதனைக் கடந்து செய்யின் இருபத்து நான்குபணம் தண்டமாம்.

எல்லாவகையான மனைக்கட்டுகளிலும் [31]சாலைகள் [32]ஒன்றனோ டொன்று நெருக்கமாக அமைக்க நேரின், ஒருமுழம் எட்டங்குல மாதல் மூன்றடியாதல் [33]இடைவெளி விடல்வேண்டும். [34]அவற் றின் [35]கூரைமுனைகளுக்கு இடையே நான்கு அங்குலம் வெளி விட்டாவது, ஒன்றன்மேலொன்று அமையும்படியாவது செய்தல் வேண்டும். [36]சிதைவு திருத்தற்பொருட்டு இடைவெளியில் ஒரு முழம் எட்டங்குல அளவில் [37]அரிய சிறு வாயில்வழி யமைத்தல்

---

24 விடுதல்—அயல் வீட்டுச் சுவரினின்றும் இடைவெளி விடுதல்.

25 நிலம்—தனக்குரியது.

26 நீர்—கழிவுநீர்.

27 தூம்புக்குக் கூறியபடி அயல்வீட்டுச் சுவரினின்றும் மூன்றடி அல்லது ஒன்றரை முழம் இடைவெளி விட்டு நீர்விழுமிடத்தை அமைத்தல் வேண்டும் என்பது.

28 விடுதல்—ஈண்டும் அயல்வீட்டுச் சுவரினின்றும் இடைவெளி விடுதல்.

29 நாற்கால் விலங்கு—ஆடு, மாடு, குதிரை, யானை முதலியன.

30 இதனை—இவ்விதியை.

31 சாலை—இல்லத்தின் ஒரு பகுதி.

32 ஒன்றனோடொன்று—தன்வீட்டுப் பகுதியும், அயல்வீட்டுப் பகுதி யும்.

33 தன் வீட்டுச் சுவர்க்கும், அடுத்த வீட்டுச் சுவர்க்கும் இடையில் வெளிவிடல் வேண்டும் என்பது.

34 அவற்றின்—சாலைகளின்.

35 கூரை—மேன்மூடல்.

36 சிதைவு திருத்தல்—நெருங்கியிருக்கும் இரண்டு இல்லங்களிலும் பழுது ஏற்படின் திருத்தம் செய்தல்.

37 அருமை—ஈண்டு மக்கள் எளிதிற் போக்குவரத்து செய்தற்கு இயலாமை.

வேண்டும். வெளிச்சத்தின்நிமித்தம் மேற்பாகத்தில் சிறு [38]பலகணி அமைத்தல்வேண்டும். இல்லத்திற்குரியவர் ஒற்றுமைப்பட்டு தம் விருப்பப்படியும் [39]செய்துகொள்ளலாம். விருப்பமின்றேல் தவிர்த்துவிடல் வேண்டும்.

[40]வீட்டுத் தாழ்வாரங்களில் மூடத்தகுந்த மேற்பாகத்தையும், [41]சிறு சுவர்களையும் [42]கடம் என்னும் புல்லால் மழையாற் கேடு நேராமைப்பொருட்டு வேய்தல்வேண்டும். இதனைக்கடப்பின் பூர்வ சாகசம் தண்டமாம்.

அரசவீதி, பெருந்தெரு என்னும் இவை[43]யல்லாத இடங்களில் [44]இடையூறாக வாயில்வழி, பலகணி இவற்றால் தடையுண்டாக்கினும் [45]ஆம்.

[46]பள்ளம், படிக்கட்டு தூம்பு, [47]மேற்றளப்படி, [48]ஒதுக்கிடம் என்னும் இவற்றால் பொதுமக்களுக்கு இடையூறுசெய்யினும் [49]அநுபவத்திற்குத் தடைசெய்யினும் பூர்வசாகசம் தண்டமாம்.

பிறருடைய சுவர்க்கு நீரினால் கேடுவிளைப்பின் பன்னிரண்டு

---

38 பலகணி—சாளரம்.

39 மேலே கூறிய இடைவெளிமுதல் பலகணிவரை உள்ளவற்றைக் கூறப்பட்டபடியும், வேறாகவும் செய்துகொள்ளலாம் என்பது.

40 வீட்டினுட்புறமும், வெளிப்புறமுமுள்ள தாழ்வாரம் என்பது.

41 சிறுசுவர்—வீட்டுத் தோட்டம் முதலியவற்றில் அமைக்கப்படுவது.

42 கடப்புல்—வீட்டுமேற்கூரைகளில் பரப்புதற்குரிய ஒருவகைப் புல்; மழை, வெய்யில் முதலியவற்றால் விரைந்து கெடாதது.

43 அல்லாத இடங்களில் என்றதனால் அரசவீதி, பெருந்தெரு என்னும் இவற்றிற்கு எதிராக வாயில்வழி, பலகணிகளின் அமைப்புப் பிறர்க்குத் தடையாக ஏற்படினும் குற்றம் இன்றாம் என்பது பெற்றாம்.

44 பிறவீட்டுமக்களுக்கு இடையூறாக என்பது.

45 பூர்வசாகசம் தண்டமாம் என்பது.

46 பள்ளம்—கழிவுநீர் தங்குதற்கு அமைப்பது.

47 மேற்றளப்படி — மேன்மாடிக்கு ஏறுதற்பொருட்டு அமைக்கப்படுவது.

48 ஒதுக்கிடம்—நீர் மலங்கழிக்குமிடம்.

49 அநுபவம்—மற்றையோர் தமக்குரிய நிலங்களை அநுபவித்தல்.

பணம் தண்டமாம். மலமூத்திரங்களால் [50]கேடுவிளைப்பின் [51]இரு மடங்காம்.

மழைபெய்யும்பொழுது [52]சலதாரையைத் திறந்துவிடல் வேண்டும். [53]இன்றேல் பன்னிரண்டுபணம் தண்டமாம்.

[54]தடுக்கப்பட்டும் விலகாமலிருக்கின்றவனுக்கும் ஆம். கடுஞ் சொல், களவு, [55]வன்செயல், [56]கவர்ந்துகொள்ளல், [57]உடல் தூய்மையின்மை என்னும் இவை [58]யல்லாதவிடத்து அடிமை யாளை [59]விலக்கினவனுக்கும் [60]ஆம். [61]தானே விலகி வெளிப்படு பவன் எஞ்சிய ஆண்டுக்குள்ள விலைத்தொகையைக் கொடுத்து விடல் வேண்டும்.

---

50 கேடு—பிறர்சுவர்க்கென்பது.

51 இரு மடங்கு—இருபத்துநான்கு பணம் தண்டமாம் என்பது.

52 சலதாரை—கழிவுநீர் வழியும் சாக்கடை.

53 மழை பெய்யும்பொழுது சாக்கடையைத் திறவாமலும் பெய்யாத பொழுது திறந்தும் விடின் தண்டமாம் என்பது.

54 இனி விலைகொடுத்து அடிமையாகக் கொள்ளப்பட்டவனைப் பற்றிக் கூறுகின்றார்; 'இத்துணைநாள் நீ என்னிடத்திருந்து பணிசெய்தல் வேண்டும்' என்று தலைவனால் அறுதியிடப்பட்ட காலம் முடிவடைந்ததும், 'இனி நீ இங்கிருத்தல் வேண்டாம்' என்று விலக்கப்பட்டும் விலகாமலிருக் கும் அடிமையாளுக்கும் மேற்குறிப்பிட்ட பன்னிரண்டு பணம் தண்டமாம் என்பது.

55 ஒன்றையும் எதிர்பாராது செய்யும் பலாத்காரச் செயல்.

56 கவர்ந்துகொள்ளல்—மகளிரைப் பற்றிக்கோடல்.

57 உடல்தூய்மையின்மை — அடிமையாளின் உடம்பு நீராடுதல் முதலியவற்றால் கழுவப்படாதிருத்தல்.

58 அல்லாதவிடத்து என்றதனால் அடிமையாள் இவற்றையுடையவனாக இருப்பானாயின், அறுதியிட்ட காலத்திற்கு இடையே விலக்கிவிடலாம் என்பது போதரும்.

59 விலக்கினவன்—விலைகொடுத்து அடிமைகொண்டவன்.

60 பன்னிரண்டு பணம் தண்டமாம் என்பது.

61 தலைவனால் விலக்கப்படாமல் அறுதியிட்ட காலத்திற்கு இடையே தானே விலகிக்கொள்ளும் அடிமையாளன், வேலைசெய்யவேண்டிய எஞ்சிய காலத்திற்குரிய விலைத்தொகையைத் தலைவனுக்குத் திருப்பிக்கொடுத்து விடல் வேண்டும் என்பது.

[62]பொதுவாகவுள்ள இல்லத்தில் உதவிசெய்யாதவனுக்கும், வீட்டின் [63]பொதுஅநுபவத்தைத் தடைசெய்பவனுக்கும் பன்னிரண்டுபணம் தண்டமாம். [64]கேடுவிளைவிப்பவனுக்கு இருமடங்காம்.

சுலோகம்

[65]வீட்டுவாயில், முற்றம், [66]ஒதுக்கிடம், அடுக்களை, [67]குற்றுமிடம் என்னும் இவையும், எல்லா [68]வெளிநிலங்களும் [69]பொதுவான அநுபவத்திற்குரியவைகளாம்.

மூன்றும் அதிகரணம் ஐந்தாம் பிரகரணத்தில்
"மனைநிலம்" என்னும் அறுபத்தைந்தாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

62 இருவர்க்குப் பொதுவாகவுள்ள ஒரு வீட்டில் ஒருவனது அநுபவத்திற்கு உதவிசெய்யாத மற்றொருவனுக்கென்பது கருத்து.

63 இருவர் பொதுவாக அநுபவிக்கவேண்டிய பகுதியில் ஒருவனை அநுபவிக்கவொட்டாமல் தடைசெய்யும் மற்றொருவனுக்கென்பது.

64 கேடுவிளைத்தல்—பொதுவாகவுள்ள இல்லப் பகுதிக்கென்பது.

65 பொதுவாகவுள்ள ஒரு வீட்டில் இருவர் குடியிருந்தால், பொதுவாக அநுபவிக்கவேண்டிய பகுதிகளை இச்சுலோகத்திற் குறிப்பிடுகிறார்.

66 ஒதுக்கிடம்—நீர் மலங்கழிக்குமிடம்.

67 உரல், உலக்கை வைத்து நெல் முதலியன குற்றுமிடம்.

68 வெளி நிலங்கள்—வீட்டிற்கு அடுத்துள்ளவை.

69 இங்கே கூறப்பட்ட பகுதிகள் பொதுஅநுபவத்திற்குரியவை என்றதனால், மற்றைய பகுதிகள் பிரிக்கப்பட்டுச் சிறப்பான அநுபவத்திற்குரியவையாம் என்பது போதரும்.

மூன்றும் அதிகரணம்—அறநிலையாட்சி

ஐந்தாம் பிரகரணம்—நிலவழக்கு–[1]நிலவிலை

அறுபத்தாறும் அத்தியாயம்

ஞாதியர், அயல்வீட்டுக்காரர், [2]பொருளாளர் என்னும் இவர்கள் [3]முறையே மனைநிலம் முதலியவற்றை விலைக்குக்கொள்ளுதற்குத் [4]தகுதியுள்ளவர் ஆவர். [5]அதன்பின்னர் வெளியிடத்துள்ள [6]பிறர் ஆவர்.

[7]அணிமையிலுள்ள நாற்பது வீட்டிற்குரியவர்கள் வீட்டின் முன்னிலையில் [8]நின்று வீட்டை விற்பதாகக் [9]கூறல்வேண்டும்.

66-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மனைநிலம் என்னும் முன் அத்தியாயத்தில் இல்லம் அமைக்கும் முறை முதலியன கூறப்பட்டன. இவ் வத்தியாயத்தில் அவ் வில்லம் முதலியவற்றை விலைகொடுத்துக் கொள்ளல் விற்றல் முதலிய செய்திகள் கூறப்படுதலின் அத்தியாய இயைபுண்மையறிக.

[2] பொருளாளர்—கடன் கொடுப்போர்.

[3] முறையே என்றதனால் முன்னவர் இல்லையாயின், பின்னவர் கொள்ளுதற்குரியர் என்பது பெறப்படும்.

[4] ஒருவனுடைய வீடு அல்லது மனைநிலத்தை விற்கநேர்ந்தால், ஞாதியர் முதலியோர்க்குக் கூறிய முறைப்படியே விற்கவேண்டுமேயன்றி, அவரிருக்கப் பிறர்க்கு விற்றால், அவருக்குத் தீங்கு செய்ததாக முடியும் ஆதலின் இவ்வாறு கூறப்பட்டது.

[5] ஞாதியர் முதலியோர் இல்லையாயினும், இருந்தும் விலைகொடுத்துப் பெறுதலில் அவர்க்கு விருப்பமில்லையாயினும் என்பது.

[6] பிறர் விலைகொடுத்துப்பெறுதற்குத் தகுதியுடையவர் ஆவர் என்பது.

[7] அணிமை—விற்கப்படும் வீட்டிற்குப் பக்கம்.

[8] நின்று—பக்கத்துள்ள நாற்பது வீட்டுக்காரர்களோடு கூடி நின்றென்பது.

[9] ஒரு வீட்டை விற்க முயலும்போது அவ்வீட்டிற்குரியவன் பக்கத்துள்ள நாற்பது வீட்டுக்காரர்களுக்கும் அறிவித்து அவர்கள் அறியும்படி தன் வீட்டின் முன்னிலையில் நின்று விற்பதாக வெளிப்படுத்துக் கூறவேண்டும் என்பது கருத்து.

[10]பக்கத்துள்ள ஊர்ப்பெரியோர்களிடத்தில் [11]நன்செய், புன்செய், உபவனம், எல்லைக்கட்டு, ஊருணி, நீர்நிலை என்னும் இவற்றின் எல்லைகளைக்காட்டி, அவ்வெல்லைக்குட்பட்ட அநுபவப்பகுதிகளை யும் [12]தெரிவித்தல்வேண்டும். 'இன்னவிலைக்குக் கொள்ளுவோன் யாவன்?' என்று உரத்த குரலில் [13]மூன்றுமுறை கூறப்பட்ட வற்றைத் தடையில்வழிக் கொள்ளுவோன் விலைகொடுத்துக் கொள்ளல்வேண்டும்.

[14]எதிரிடையால் விலை [15]உயர்த்தப்படுமாணல் உயர்த்தப்பட்ட விலையை [16]உல்குபொருளோடு [17]கருவூலத்திற் சேர்ப்பித்தல்வேண் டும். [18]அவ்வுல்குபொருளை விலையுயர்த்தியவன் கொடுத்தல் வேண்டும்.

[19]உரியவனல்லாதவன் விலைகூறின் இருபத்துநான்குபணம் தண்டமாம். [20]ஏழுநாள் வரை வரவில்லையாஞல் விலைகூறினவன்

---

[10] வீடு விற்பதைப்பற்றிச் சொல்லிவிட்டுப் பின் பிற நிலம் முதலியவற் றைப்பற்றிக் கூறுகின்றார்; பக்கத்துள்ள ஊர்ப்பெரியோர்கள் — தன் வீட்டிற்குப் பக்கத்துள்ள அவ்வூர்ப் பெரியோர்கள்.

[11] நன்செய் முதலியன விற்றற்குரியவை.

[12] விற்கப்படும் நிலப்பகுதிகளின் எல்லைகள் இவை, அவ் வெல்லைக்குட் பட்ட அநுபவப் பகுதிகள் இவை என்று விளக்கமாகத் தெரிவித்தல் வேண்டும் என்பது.

[13] மூன்று முறை தெரிவிக்குங்காறும் ஞாதியர் முதலியோரால் தடை ஏற்படாதவிடத்துக் குறிப்பிட்ட விலைக்குக் கொள்ளுவோன் விலைகொடுத் துக் கொள்ளக்கடவன் என்பது கருத்து.

[14] எதிரிடை—விலைக்குக் கொள்ளுவோர் ஒருவரையொருவர் எதிர்க்கு முகமாக.

[15] விற்பவன் குறித்த விலையினும் அதிகப்படுமாணல் என்பது.

[16] உல்குபொருள்—விலைப்பண்டங்கட்கு இறையாய சுங்கப் பொருள்.

[17] கருவூலம்—ஈண்டு அரசனுடையது.

[18] அவ்வுல்கு பொருள்—உயர்த்தப்பட்ட விலைக்குரியது.

[19] நிலத்திற்குரியவனல்லாதவன் என்பது.

[20] இன்ன விலைக்குப் பெறுவேன் என்று உடன்பட்டுச் சென்றவன் ஏழுநாள் வரை பத்திரப்பதிவிடத்திற்கு வரவில்லையாஞல், விலை கூறி னவன் அந்நிலத்தை மற்றொருவனுக்கு விற்றுவிடலாம் என்பது கருத்து.

விற்றுவிடலாம். விலைகூறினவன் [21]மீறின் [22]மனைநிலமாயின் இருநூறுபணம் தண்டமாம். [23]பிறபொருளாயின் இருபத்துநான்கு பணம் தண்டமாம். [24]நிலவிலை இங்ஙனம் கூறியபடியாம்.

[25]இரண்டு சிற்றூர்களின் [26]எல்லைவழக்கை அடுத்துள்ள ஐந்துசிற்றூர்களாதல், பத்துச்சிற்றூர்களாதல் [27]ஒன்றுகூடி [28]இயற்கையும் [29]செயற்கையுமாகிய எல்லைகளால் துணிதல் வேண்டும்.

[30]உழவன், ஆண்டுமுதிர்ந்த ஆயன், முன் அநுபவமுடையவன், எல்லைகளை [31]நன்கறிந்த உள்ளூரான் என்னும் இவருள் பலராதல், ஒருவனாதல் எல்லைவரையறையை நன்றாக அறிந்துகொண்டு [32]உருமாற்றமுடையராய் எல்லையைக்காட்டல்வேண்டும். குறிப்பிடப்பட்ட எல்லையைக் காட்டவில்லையாயின் ஆயிரம்பணம்

---

21 மீறுதலாவது — உடன்பட்டவனை ஏழுநாள் வரை எதிர்பாராது பிறனொருவனுக்கு விற்றுவிடல்.

22 விலைகூறப்பட்ட பொருள் என்பது.

23 பிறபொருள்—நாற்கால் விலங்கு முதலியன.

24 மனைநிலங்களை விற்கும் முறை இவ்வாறாம் என்பது.

25 இனி, எல்லைவழக்கைப்பற்றிக் கூறுகின்றார்.

26 எல்லைவழக்கு—எல்லைமாற்றத்தால் ஏற்படும் வழக்கு.

27 ஐந்து சிற்றூர்கள் அல்லது பத்துச் சிற்றூர்களிலுள்ள வழக்கியலறிந்த பெரியவர்கள் ஒன்றுகூடி என்பது கருத்து.

28 இயற்கை—மலை, ஆறு, காடு முதலிய நிலையியற் பொருள்கள்.

29 செயற்கை—கரி சாம்பல் முதலியன.

30 எல்லையைத் துணிதற்கு அடுத்தவூர்ப்பெரியோர் இல்லையானால் செயற்பாலது இன்னது எனக் குறிப்பிடுகிறார். உழவன், இடையன் முதலியோர் அடிக்கடி நிலஎல்லைகளைக் காண்பவராதலின், அவர் அறிந்து தெரிவிக்கவேண்டும் என்று குறிப்பிட்டது பொருத்தமே.

31 நன்கறிதல்—அழிந்துபோன எல்லையிடத்தைப் பிறழாமல் அறிதல்.

32 எல்லையைக் காட்டுங்கால் பெண்களுக்குரிய செந்நிறமான ஆடை, மாலை, அணிகலன் முதலியவற்றை மேற்கோடல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் உருமாற்றிக்கொள்ளுதல் எல்லைகாட்டினவன் இன்னான் என்பது வெளிப்படாமைப்பொருட்டு.

தண்டமாம். [33]துணியப்பட்டபின் எல்லையைக் [34]கவர்ந்துகொள்வோருக்கும், எல்லை [35]வரம்பைச் சிதைப்பவர்களுக்கும் [36]அதுவே தண்டமாம்.

எல்லையும் [37]ஆட்சியும் [38]அறியப்படாதநிலையில், அவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தை அரசன் [39]உதவியாமாறு பகுத்தல்வேண்டும்.

நிலவழக்கைப் பக்கத்துள்ள ஊர்ப்பெரியோர்கள் துணிதல் வேண்டும். அவர்களுக்குக் கருத்து [40]இரண்டுபடின், [41]பலர், தூய்மையுடையோர், மதிக்கப்பட்டோர் என்னும் இவர்களின் கருத்துக்கேற்பத் துணியலாம். [42]நடுவாகவும் கொள்ளலாம். [43]அவ் விரண்டும் ஏற்றுக்கொள்ளப்படவில்லையாஞல் அந்நிலத்தையும், உரியவனில்லாத நிலத்தையும் அரசன் எடுத்துக்கொள்ளலாம். [44]உதவியாமாறும் பகுக்கலாம்.

---

[33] துணியப்பட்டபின் — எல்லை இன்னதென்று நிச்சயித்து அறியப்பட்டபின்.

[34] கவர்ந்துகோடல் — எல்லையின் அடையாளத்தை மாற்றி உட்பட்ட நிலத்தை அபகரித்துக்கொள்ளுதல்.

[35] வரம்பைச் சிதைத்தலாவது, வரம்பிலுள்ள மரம் முதலியவற்றை அழித்தலாம்.

[36] அது—ஆயிரம்பணம்.

[37] ஆட்சி—அநுபவம்.

[38] எல்லையும் சிதைந்து அநுபவமும் இன்னாருடையது என்று அறியப்படாத நிலையில் என்பது கருத்து.

[39] அந்நிலத்தை எப்பகுதியோடு சேர்த்தால் மக்களுக்கு உதவியாக இருக்குமோ அப்பகுதியில் சேர்த்தல்வேண்டும் என்பது.

[40] தீர்மானிப்பதில் கருத்துவேறுபாடு ஏற்படுமாயின் என்பது.

[41] கருத்துவேறுபாடுடைய அக்குழுவில் பலர் ஒன்றுபடுதல், தூய்மையுடையோர் நன்கு மதிப்புடையோர் ஒன்றுபடுதல் எவ்வாருே, அவ்வாறே அவ்வழக்கைத் துணிதல்வேண்டும் என்பது கருத்து.

[42] கருத்துவேறுபாடு ஒத்த அளவில் இருக்குமாஞல், வழக்குப்பொருளைச் சமனுகப்பிரித்துக் கொடுத்துவிடலாம் என்பது கருத்து.

[43] அவ்விரண்டும்—பலர் ஒன்றுகூடித் துணிதல், ஒத்த அளவாகத் துணிதல் என்னும் இருவகையும்.

[44] உரியவனில்லாத நிலத்தை அன்னுன் தாயபாகத்திற்குரியவர் பொருட்டும் பிரித்துக் கொடுத்துவிடலாம் என்பது கருத்து.

நிலத்தை வலிந்து கவர்ந்தவனுக்கு [45]திருட்டுக்குரிய தண்டமாம். [46]காரணத்தை முன்னிட்டுக்கொள்ளப்படின் [47]உழைப்பையும், [48]பயனையும் [49]அளந்து கணக்கிட்டு மிகுதிப்படுவதைக் கொடுத்துவிடல் வேண்டும். எல்லையை [50]அழித்துவிடின் பூர்வ சாகசம் தண்டமாம். எல்லையை [51]வேறுபடுத்தின் இருபத்து நான்குபணம் தண்டமாம்.

இதனால் தவவனம், புன்னிலம், பெருவழி, சுடலை, திருக்கோயில், வேள்விச்சாலை, அறச்சாலை என்னும் இவற்றைப்பற்றிய வழக்குக்களுக்கும் [52]கூறப்பட்டபடியாம். எல்லைநிலை இங்ஙனமாம்.

[53]எல்லா வழக்குக்களும் பக்கத்து நிலங்களின் நிமித்தமாக

---

45 அதனைத் திருடினவனுக்கு விதிக்கப்படும் தண்டம் இவனுக்குமாம் என்பது.

46 காரணம்—கடன்கொடுத்தல் முதலியவற்றிற்கு ஈடாதல்.

47 உழைப்பு—நிலத்தைக்கொண்டவன் அதனைப் பண்படுத்தல் முதலியவற்றால் ஏற்படுவது.

48 பயன்—அந்நிலத்தினின்றும் கிடைப்பது.

49 அந்நிலத்தினின்றும் உண்டாகிய பயனில் உழைப்பிற்குரிய பகுதியைக் கழித்து எஞ்சியது வரவேண்டிய கடனளவிற்கு மேற்பட்டுக் காணப்படுமானால், அம்மிகுதியை நிலமுடையானுக்குக் கொடுத்துவிடல் வேண்டும் என்பது. அஃதாமாறு—ஒருவன் மற்றொருவனுக்குக் கடனைக்கொடுத்த நூறு ரூபாய்க்கு ஈடாகக் கடன் வாங்கினவனது நிலத்தைக் கொள்ளுவானானால், அந்நிலத்தைப் பண்படுத்தி விளைபொருள் உண்டாக்கவேண்டும் என்பதும், அவ்விளைபொருள் நூற்றைம்பது ரூபாய் விலைமதிக்கத்தக்கதாயிருப்பின், கடனுக்காக ரூபாய் நூறும், உழைப்பிற்காக ரூபாய் இருபத்தைந்தும் போக எஞ்சிய ரூபாய் இருபத்தைந்தை நிலமுடையானுக்கு நிலத்துடன் கொடுத்துவிடல் வேண்டும் என்பதும் போல்வனவாம்.

50 எல்லைவரம்பைக் கெடுத்து அவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தையும் கவர்ந்துகொள்ள ஒருவன் முயன்றால் என்பது.

51 வேறுபடுத்தல் என்பது எல்லையைப் பிறிதோரிடத்தில் மாற்றியமைத்து, பிறநிலத்தின் ஒருபகுதியைக் கவர்ந்துகொள்ள முயல்வதைக் குறிக்கும்.

52 இல்லம் முதலியவற்றின் எல்லைவழக்குக்களுக்கு மேலே கூறப்பட்ட விதிகளையே தவவனம் முதலியவற்றிற்கும் கொள்ளல்வேண்டும் என்பது.

53 அடுத்துள்ள நிலங்களுள் ஒன்றனால் ஒன்றுக்கு இடையூறு நேருங்கால் அவ்விடையூற்றைப் பரிகரித்துக்கொள்ளும் பொருட்டு வழக்குக்கள் நிகழும் என்பது கருத்து.

நிகழ்வனவாம். [54]புன்னிலம் [55]செப்பனிட்டநிலம், வயல், தோட்டம், [56]களம், இல்லம் [57]ஊர்திநிலையம் என்னும் இவற்றுள் [58]முன்னதற்குப் பின்னதனால் ஏற்படும் இடையூறு ஏற்றுக்கொள்ளத் தக்கதாம்.

[59]மறைக்காடு, [60]சோமவனம், தெய்வநிலையம், வேள்விச்சாலை, அறச்சாலை என்னும் இவை [61]யல்லாதவைகள் செப்பனிட்ட நிலங்களாகும்.

பள்ளம்தோண்டுதல், வாய்க்கால்வெட்டுதல், [62]வயலாக்கல் என்னும் இவற்றால் பிறன்வயல்நிலத்தில் வித்திய வித்துக்களுக்குக் கேடுவிளைப்பின் [63]கேட்டிற்குரிய விலையைக் கொடுத்துவிடல் வேண்டும். வயல், தோட்டம், எல்லைக்கட்டு என்னும் இவற்றுள்

---

54 வழக்குக்குரிய நிலங்களுள் ஒன்றனால் பிறிதொன்றுக்கு இடையூறு ஏற்படுமாயின், அப்பொழுது செய்யவேண்டியது இன்னதென்பதைக் கூறுகின்றார்.

55 செப்பனிட்ட நிலம்-செடிகொடிகளில்லாமல் வெட்டிப் பண்படுத்தப் பட்ட நிலம்.

56 களம்—தானியங்களைப் புடைத்து எடுக்குமிடம்.

57 ஊர்திநிலையம்—குதிரை எருதுகளுக்குரிய கொட்டில்.

58 இங்கே கூறப்பட்ட புன்னில முதலியவற்றுள் முறையே முன்னர்க் கூறியதற்குப் பின்னர்க்கூறியது சிறந்ததாகும் ஆதலின் பின்னது திருத்தம் அடையுங்கால் அதனால் முன்னதற்கு இடையூறு விளையுமாயின் அது விலக்கத்தக்கதன்று என்பது கருத்து. எடுத்துக்காட்டாக செப்பனிட்ட நிலத்தைக்குறித்துப் புன்னிலத்திற்கு இடையூறு உண்டாகுமாயின், அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைக் கொள்ளலாம். இங்ஙனமே ஏனையவற்றிற்கும் கொள்க.

59 மறைக்காடு—வேதமோதும் காடு.

60 சோமவனம்—சோமப்பூண்டுகளை உண்டாக்கி வளர்த்தற்குரிய காடு.

61 மேலே செப்பனிட்ட நிலங்கள் என்று கூறப்பட்டவற்றுள் இங்கே கூறிய மறைக்காடு முதலியனவும் அடங்குமாயினும் இவையல்லாத செப்பனிட்ட நிலங்களையே வயல்களுக்குத் தகுதியாகச் செய்யலாம் எனவும், மறைக்காடு முதலியவற்றை அழித்து வயல்நிலங்களாக்கலாகாது எனவும் கொள்ளல்வேண்டும்.

62 செப்பனிட்ட நிலத்தை வயலாகச்செய்தல் என்பது.

63 கேட்டிற்குரிய விலை—கேடெய்திய தானியத்திற்குரிய விலை.

[64]ஒன்றற்கொன்று கேடுவிளையச் செய்யின் [65]கேட்டின் அளவிற்கு இருமடங்கு தண்டமாம்.

பின்னர் உண்டாகிய [66]கீழ்க்குளத்து நீரை [67]மேற்குளத்துப் பாய்ச்சல்நிலத்திற்குப் பாய்ச்சலாகாது. [68]மூன்று யாண்டுகள் உழவுத்தொழிலுக்குப் பயன்படாமை யில்லாதவிடத்து, மேற்குளத்து நீரினால் கீழ்க்குளத்தை நிரப்புவதில் தடையேற்படலாகாது. இவ்விதியைக் கடப்பின் [69]பூர்வசாகச தண்டமும் குளத்தை [70]வறிதாக்கலுமாம்.

ஐந்தாண்டுகள் அநுபவியாமல்விட்ட ஏரியினது உரிமை [71]இடையூறில்வழி இழக்கப்பட்டதாகும்.

புதியனவாக [72]உண்டாக்கப்பட்ட ஏரி குளங்களுக்கு ஐந்து

---

[64] ஒன்றற்கொன்று—ஒன்றை உண்டாக்கும் நிமித்தம் மற்றொன்றிற்கு.

[65] கேட்டின் அளவு—கேடடைந்த பயனளவு.

[66] ஈண்டுக் கீழ்க்குளம் மேற்குளம் என்பன முறையே பள்ளமான இடத்திலும் மேட்டுநிலத்திலும் உண்டாக்கப்பட்டவை.

[67] மேற்குளத்துப் பாய்ச்சல்நிலமாவது, மேட்டு நிலத்திலுள்ள குளத்து நீரைக்கொண்டு விளைவிக்கும் நிலமாகும். பின்னர் என்று கீழ்க்குளத்திற்குக் கொடுக்கப்பட்ட அடையினால் இதற்கு ‘முன்னர்’ என்னும் அடையை இயைத்து, முன்னர் உண்டாகிய மேற்குளம் எனக்கொள்ளல் வேண்டும். முன்னர் ஏற்பட்ட மேற்குளத்துநீர்ப்பாய்ச்சலுக்குரிய நிலங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட கீழ்க்குளத்து நீரைப் பாய்ச்சினால், கீழ்க்குளத்துநீர்ப்பாய்ச்சலுக்கென அமைக்கப்பட்ட நிலங்களுக்கு நீர் போதாமல் விளைவு குன்றும் எனக்கருதி இவ்வாறு கூறப்பட்டதுபோலும்.

[68] மூன்று யாண்டுகள் பயன்படாமை யில்லாதவிடத்து என்றதனால், பயன்படாமையுள்ளவிடத்து மேற்குளத்து நீரைக்கொண்டு கீழ்க்குளத்தை நிரப்புதலாகாது என்பது கருத்து.

[69] மேற்குளம் ஒருவனுக்கும், கீழ்க்குளம் மற்றொருவனுக்கும் உரியனவாக, மேற்குளத்து நீரைக்கொண்டு கீழ்க்குளத்தை நிரப்புவதில் தடையேற்படுமாயின், மேற்குளத்துக்குரியவனுக்குத் தண்டம் என்பது கருத்து.

[70] வறிதாக்கல்—மேற்குளத்திலுள்ள நீர் முழுதையும் வெளிப்படுத்திவிடுதல்

[71] இடையூறில்வழி என்றதனால், அநுபவிப்பதற்கு இடையூறு நேர்ந்தவிடத்து உரிமை இழக்கப்பட்டதாகாது என்பது போதரும்.

[72] குடிமக்களால் உண்டாக்கப்பட்ட என்பது.

ஆண்டு அரசிறையும், [73]சிதைவுகுறித்து விடப்பட்டவற்றிற்கு நான்குயாண்டு அரசிறையும், [74]நன்கு திருத்தியமைக்கப்பட்டவற்றிற்கு மூன்றியாண்டு அரசிறையும், [75]செப்பனிட்ட நிலத்திற்கு இரண்டு யாண்டு அரசிறையும், [76]ஒழிக்கத்தக்கனவாம். [77]ஈடுபடுத்தற்கும், விற்றற்கும் உரியனுவான்.

[78]கிணற்றுப்பாய்ச்சல், ஆற்றுப்பாய்ச்சல், ஏரிப்பாய்ச்சல், குளத்துப்பாய்ச்சல் என்னும் இவற்ருல் விளையும் வயல், உய்யானம், [79]தோட்டம் என்னும் இவற்றை [80]உயர்ந்தசாதிப் பயிரிடுதற்கும், மிகுதியான கூறுகொள்ளுதற்கும் ஏற்ற முறையில் ஒப்படைக்கலாம். [81]உதவிக்குத்தகப் பிறர்க்கும் கொடுக்கலாம்.

---

73 வெள்ளம் முதலியவற்ருல் கேடெய்திய நிலங்கள் அநுபவியாமல் விடப்பட்டு, மீண்டும் புதிதாக உழவுத்தொழிற்குப் பயன்படுத்தப்படுமாயின் என்பது கருத்து.

74 நன்கு திருத்தியமைக்கப்பட்டவை—செடிகொடி நிறைந்த காடுகளை அழித்துப் புதியனவாக அமைக்கப்பட்ட வயல்நிலங்கள்.

75 செப்பனிட்டவை—இயற்கையாகவே புல் முதலியன இல்லாமையால் எளிதாகப் பண்படுத்தப்பட்ட நிலங்கள்.

76 மேலே குறிப்பிட்ட நான்கு பகுதிகளுக்கும் முறையே ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு ஆண்டுகளுக்குரிய உல்குபொருளைக் குடிகளிடத்தினின்றும் அரசன் வாங்கலாகாது என்பதாம்.

77 மேலேகுறிப்பிட்ட ஏரி, குளம், நிலம் முதலியவற்றை உண்டாக்கினவனே ஈடுசெய்தற்கும், விற்றற்கும் உரியனுவான் என்பது கருத்து.

78 கிணற்றுப்பாய்ச்சல் — கிணற்றுநீரைப் பாய்ச்சி விளைவிப்பது. ஏனையவற்றிற்கும் இஃதொக்கும்.

79 தோட்டம்—வாழைத்தோட்டம் முதலியன.

80 உயர்ந்தசாதிப் பயிரிடுதற்கும், நிலமுடையவர்க்கு விளைபொருளில் மிகுதியானகூறு கொடுத்தற்கும் எவன் உடன்படுகின்ருனே, அவனிடம் பயிர்த்தொழிற்கு மேற்குறிப்பிட்ட நிலங்களை ஒப்படைக்கலாம் என்பது கருத்து.

81 உயர்ந்தசாதிப் பயிரிடுதல் மிகுதியாகக் கூறுபெறுதலில்லாமல் உழவுத்தொழிலில் ஊக்கமாத்திர முள்ளவரிடத்தும் விளைபொருளில் இத்துணைக்கூறு தரவேண்டும் என்று வரையறை செய்துகொண்டு நிலத்தை விடலாம் என்பது கருத்து.

[82]விலைக்குக்கொண்டும், [83]குத்தகையாகப்பெற்றும், [84]ஈடாக வாங்கியும், [85]வாரத்திற்குப்பெற்றும், [86]ஒப்பந்தம் செய்துகொண்டும் அநுபவிப்பவர்கள் [87]இவற்றிற்கு [88]உதவிபுரிதல் வேண்டும். உதவிசெய்யவில்லையானால் [89]குறைவுபாட்டிற்கு இருமடங்கு தண்டமாம்.

சுலோகம்

[90]முறைதவறி ஏரி குளங்களினின்றும் நீரைப் பாய்ச்சுகின்றவனுக்கும், பிறருடைய முறையில் அறியாமையால் நீர்ப்பாய்ச்சலைத் [91]தடைப்படுத்துகின்றவனுக்கும் ஆறுபணம் தண்டமாம்.

மூன்றும் அதிகரணம் ஐந்தாம் பிரகரணத்தில்
"நிலவிலை" என்னும் அறுபத்தாறும்
அத்தியாயம் முற்றிற்று.

---

82 விலைக்குக்கொள்ளல் முதலியவற்றால் அநுபவிக்கப்படுவன வயல் தோட்டம் முதலியன.

83 குத்தகையாகப்பெறுதல்—ஒரு நிலம் விளைந்தாலும், விளையாவிட்டாலும், ஆண்டொன்றிற்கு இவ்வளவு நிலமுடையானுக்குக் கொடுத்துவிடுவேன் என்று உறுதிசெய்துகொண்டு பெறுதல்.

84 ஈடாக வாங்குதல்—ஓரளவு பொருள்கொடுத்து அதற்கீடாக அநுபவித்துக்கொள்ளுதல் என்று பெறுதல்.

85 வாரத்திற்குப்பெறுதல் — விளைந்துவரும் பயனில் இத்துணைக்கூறு பெற்றுக்கொள்ளுதல் என்று பேசிக்கொண்டு வாங்குதல்.

86 ஒப்பந்தம்—முன்னை வழக்கப்படி கொடுப்பதென்று பேசிக்கொண்டு பெறுதல்.

87 இவற்றிற்கு—ஏரி, குளம் முதலியவற்றிற்கு.

88 உதவிபுரிதலாவது—சிதைந்தபகுதிகளைச் செப்பனிடுதற்கு உதவுதல்.

89 குறைவுபாடு—செப்பனிடாமையால் குறைவுபடும் விளைபொருள்.

90 முறை தவறுதல்—ஒருவன் தனக்குரிய முறையில் வேறுபடுதல்.

91 தடைப்படுத்துதல்—பிறர்நிலங்களுக்கு முறைப்படி பாயும் நீரைத் தடைப்படுத்தல்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

ஐந்தாம் பிரகரணம்—நிலவழக்கு-[1]புன்னிலவயல்வழித்தடை

ஆறும் பிரகரணம்—[2]கட்டுப்பாடு கடவாமை

அறுபத்தேழாம் அத்தியாயம்

உழவுத் தொழிற்குரிய நீர்செல்லும் [3]வழக்கமான வழியைத் தடைப்படுத்துவோனுக்கும் [4]வழக்கமில்லாததைச் செய்தவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம்.

ஏரி, கிணறு, அறச்சாலை, கடவுண்மரம், திருக்கோயில் என்னும் இவற்றை [5]வேற்றுநிலத்தில் அமைப்பவனுக்கும் [6]தொன்றுதொட்டுள்ளதும் அறத்தின்பொருட்டு ஏற்பட்டதுமாகிய ஏரியைச் [7]சிதைவுற்று விடப்படாத நிலையில் ஈடாக வைத்தல் விற்றல் செய்

67-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] புன்னில வயல்வழித்தடை—புன்னிலங்களுக்கும் வயல்களுக்கும் உரிய வழிகளையும், பிறவழிகளையும் தடைப்படுத்தல். முன்னை அத்தியாயத்தில் நிலவிற்பனை, நிலங்களின் எல்லைவரையறை முதலியன கூறப்பட்டன. இவ்வத்தியாயத்தில் அந்நிலங்களுக்குச் செல்லும் நீர்நெறியாகிய வாய்க்கால் வழிகளையும், மக்களும் விலங்குகளும் செல்லுதற்குரிய வழிகளையும் தடைப்படுத்திக் கேடுவிளைவித்தற்கு உரிய தண்டவிதிகள் கூறப்படுகின்றன. இதனால் அத்தியாய இயைபுண்மை யறிக.

[2] இவ்வத்தியாயத்தில் ஐந்தும் ஆறுமாகிய பிரகரணங்கள் இரண்டு அடங்கியுள்ளன. ஆறும் பிரகரணத் தொடக்கத்தில் பிரகரண இயைபைப் பற்றிய குறிப்பு வெளிப்படுத்தப்படும்.

[3] வழக்கம்—தொன்றுதொட்டுள்ளது.

[4] வழக்கமில்லாதது—முன்னர் இல்லாமல் புதிதாக ஏற்படுத்தல்.

[5] வேற்றுநிலம்—ஏரி கிணறு முதலியன அமைத்தற்கு உரியவல்லாத நிலம். பிறர்க்குரிய நிலமென்று கொள்வாருமுளர். ஒருவன் தனக்குக் கிணறு ஒன்று வெட்டக்கருதினால் அதற்குத் தகுதியான இடத்திலன்றி, மற்றொருவன் இல்லத்திற்கு இடையூறு விளைக்கத்தக்க இடத்தில் அமைத்தலாகாது என்பது கருத்து. ஏரி முதலியவற்றிற்கும் இஃதொக்கும்.

[6] தொன்றுதொட்டுத் தன் முன்னோர்களால் அறத்தின்பொருட்டு ஏற்படுத்தப்பட்டதென்பது.

[7] சிதைவுற்று விடப்படாத நிலையில் என்றதனால் அந்த ஏரி சிதைந்து பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் ஒருவன் அதனை விற்றல் முதலியன செய்யலாம் என்பது போதரும்.

யவனுக்கும் செய்விப்பவனுக்கும் மத்தியமசாகசம தண்டமாம். [8]சான்றுவார்க்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[9]உரியவனில்லாத நிலையில் ஊரிலுள்ளவராதல் [10]அறவோராதல் [11]செப்பனிடல் வேண்டும்.

வழியின் அளவு [12]அரணுள் அமைத்தலிற் கூறப்பட்டது. [13]சிறுவிலங்குவழி மக்கள்வழங்கும் வழிகளைத் தடைப்படுத்துபவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [14]பெருவிலங்கு [15]வழியாயின் இருபத்துநான்கு பணமும், யானைவழி வயல்வழியாயின் ஐம்பத்துநான்கு பணமும், ஏரிவழி காட்டுவழியாயின் அறுநூறு பணமும், சுடலைவழி கிராமவழியாயின் இருநூறு பணமும், [16]துரோணமுக வழியாயின் ஐந்நூறு பணமும், [17]தானீயவழி நாட்டுவழி புன்னிலவழிகளாயின் ஆயிரம் பணமும், இவ்வழிகளைக் [18]குறைவுபடுத்தின் கூறப்பட்ட தண்டத்தின் நான்கில் ஒருகூறும் [19]உழவுசெய்யின் முற்கூறப்பட்ட அளவும் தண்டமாம்.

உழவுத்தொழிற்குரிய காலத்தில் [20]நிலத்தைக் கொடாத நில

---

8 சான்றுதல்—ஈடுசெய்தல், விற்றல் முதலியவற்றிற்கு என்க.

9 உரியவன்—உண்டாக்கினவன் அல்லது அவன்வழித் தோன்றல்.

10 அறவோர்—அறவொழுக்கமுடையோர்; இவர் வேற்றூரில் உள்ளவராவர்.

11 செப்பனிடல்—ஏரி, கிணறு முதலியவற்றை என்க.

12 அரணுள் அமைத்தல் என்பது இரண்டாம் அதிகரணம் நான்காம் பிரகரணமாகும்.

13 சிறுவிலங்கு—ஆடு முதலியன.

14 பெருவிலங்கு—பசு குதிரை முதலியன.

15 தடைப்படுத்தப்பட்டது பெருவிலங்குவழியாயின் தடைப்படுத்தினவனுக்கு இருபத்துநான்குபணம் தண்டமாம் என்பது. பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்ளல்வேண்டும்.

16 துரோணமுகம் என்பது நானூறு கிராமங்களுக்குத் தலைநகரமாகும்.

17 தானீயம் என்பது எண்ணூறு கிராமங்களுக்குத் தலைநகரமாகும்.

18 குறைவுபடுத்தல்—வழியின் ஒருகூற்றைக் கவர்ந்துகொண்டு சுருங்கச் செய்தல்.

19 வழியிடங்களில் உழுதால் அவற்றைத் தடைப்படுத்தினவனுக்குரிய தண்டமாம் என்பது.

20 நிலத்தைப் பயிர்த்தொழில் செய்தற்பொருட்டு உழவனிடம் கொடுப்பதாக உறுதிசெய்துகொண்டபடி உரியகாலத்திற் கொடாத நிலமுடையானுக்கென்க.

முடையானுக்கும் [21]குற்றம் [22]இடையூறு [23]பொறுக்கலாற்ருத நோய் என்னும் இவை [24]யில்வழிப் [25]பயிரிடாமல் விடும் உழவனுக்கும் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

[26]இறையிறுப்போர் இறையிறுப்போரிடத்தும் [27]பிரமதாயத்தார் பிரமதாயத்தாரிடத்தும் ஈடுசெய்தல் விற்றல்செய்தல் வேண்டும். இன்றேல் பூர்வசாகசம் தண்டமாம். [28]இறையிலியாகிய கிராமத்தை வாங்கும் இறையிறுப்போனுக்குமாம்.

இறை இறுக்கப்படும் கிராமத்தை வாங்குவோனுக்கு [29]இல்லம் தவிர [30]எல்லாப் பொருள்களிலும் உரிமையுண்டு. [31]அதனையும் அவனுக்குக் கொடுக்கலாம்.

---

[21] குற்றம்—நிலத்தின்பாலுள்ளது.

[22] இடையூறு—கள்வர் முதலியோரால் நேர்வது

[23] அருவருக்கத்தக்க தொழுநோய் முதலியன. இஃது உழவனைக் குறித்துக் கூறியது.

[24] இல்வழி என்றதனுல் குற்றம் முதலியன உள்வழி பயிரிடாமல் விடலாம் என்பது போதரும்.

[25] உறுதி செய்துகொண்டபடி பயிரிடாமல் விடும் உழவன் என்க.

[26] ஒரு நிலத்திற்கு அரசிறை செலுத்துவோர் அந்நிலத்தை விற்றல் முதலியன செய்ய நேர்ந்தால், அங்ஙனம் அரசிறை செலுத்துவோர்க்கே விற்றல்வேண்டுமல்லது அரசிறை செலுத்தாத பிரமதாயத்தார்க்கு விற்றலாகாது என்பது.

[27] பிரமதாயம்—அந்தணர் முதலியோருக்கு அரசனுல் விடப்பட்ட இறையிலிநிலம். அந்நிலத்தை ஈடுசெய்தல் விற்றல் முதலியன செய்ய நேருங்கால், அத்தகைய தகுதியுடையாருக்கே விற்றல்வேண்டும் என்பது.

[28] பிரமதாயமாகவுள்ள கிராமத்தை இறையிறுக்கும் தகுதியுடையோன் விலைகொடுத்தாதல், ஈடாகவாதல் வாங்குவானுயின் அவனுக்கும் பூர்வசாகசம் தண்டம் என்பது.

[29] இல்லம்—விற்பவனுடையது.

[30] விற்கும்பொழுது விளைந்திருக்கும் கூலம் முதலியவற்றிற்கும், உழவுத் தொழிற்குரிய ஆடுமாடு முதலியவற்றிற்கும் விலைகொடுத்துப் பெறும் உரிமையுண்டென்பது. ஒரு கிராமத்தை விற்குங்கால், அப்பொழுது விளைந்திருக்கும் கூலம் முதலிய பொருள்களையும், உழவுத்தொழிற்குரிய அக்கிராமத்து ஆடுமாடு முதலியவைகளையும் கிராமத்தை விலைக்குக் கொள்வோனிடமே விற்றல்வேண்டுமென்றிப் பிறர்க்கு விற்றலாகாது என்பது கருத்து.

[31] அவ்வில்லத்தையும் உரியவன் விற்க விரும்பினுல், கிராமத்தை வாங்கினவனுக்கே விற்கவேண்டும் என்பது.

[32]கொள்ளத்தகாத நிலத்தை உழவுசெய்யாத உரியவனிடத்தினின்றும் மற்றொருவன் பெற்றால் ஐந்து ஆண்டுகள் அநுபவித்துப் பின் [33]உழைப்பளவிற்குரியதைப் பெற்றுக்கொண்டு திருப்பிக் கொடுத்துவிடல் வேண்டும்.

[34]வேற்றூரிலிருக்கும் பிரமதாயத்தார் [35]அநுபவிப்பதற்கு உரிமையுள்ளவர் ஆவர்.

[36]கிராம காரியநிமித்தம் செல்லுகின்ற கிராமத்தலைவனை உழவர் முறைப்படி பின்தொடர்தல் வேண்டும். பின்தொடர்ந்து செல்லாதவர் ஒன்றரைப்பணம் [37]யோசனமாகக் கொடுத்தல் வேண்டும்.

திருடல் பிறர்மனைநயத்தலில்லாத ஒருவனை ஒரு கிராமத்தினின்றும் வெளிப்படுத்தும் கிராமத்தலைவனுக்கு இருபத்துநான்கு பணமும், [38]அக்கிராமத்தவர்க்கு உத்தமசாகசமும் தண்டமாம். [39]வெளிப்படுத்தப்பட்டவன் [40]உட்புகுந்தால் [41]உட்புகுதற்குக் கூறியபடியாம்.

---

32 கொள்ளத்தகாத நிலம் — செப்பனிடப்படாமையால் வறிதாகக் கிடப்பது.

33 செப்பனிடுதலாலும், கிணறு குளம் அமைத்தலாலும் ஏற்பட்ட செலவுபொருளைப் பெற்றுக்கொண்டு திருப்பிக்கொடுத்துவிடல் வேண்டும் என்பது.

34 வேற்றூர்—இறையிலிநிலமுள்ள ஊருக்கு வேறாக உள்ளது.

35 நிலவருவாயை அநுபவிக்கலாமே ஒழிய நிலத்தை விற்பதற்கு உரிமையுடையர் ஆகார் என்பது கருத்து.

36 ஒரு கிராமத்தின் பொதுநலங்குறித்து அக்கிராமத்தலைவன் வேற்றூர்க்குச் செல்ல நேர்ந்தால், அக்கிராமத்தில் வாழும் குடிமக்கள் தனித்தனியே முறையாக அத்தலைவனுக்கு உதவிசெய்தற்பொருட்டு உடன் போதல் வேண்டும் என்பது கருத்து.

37 யோசனம்—ஒருயோசனை தூரத்திற்குக் கொடுக்கப்படுவது. உடன் போகாதவர் ஒருயோசனை தூரத்திற்கு ஒன்றரைப்பணம் விகிதம் கிராமத்தலைவனுக்குக் கொடுத்தல்வேண்டும் என்பது.

38 அக்கிராமத்தவர் அக்குற்றமில்லாத ஒருவனை அங்ஙனம் வெளிப்படுத்தின் இத்தண்டமென்பது.

39 வெளிப்படுத்தப்படுதல் களவு முதலிய குற்றத்தால் என்க.

40 மீண்டும் தடையை மீறி ஊருட்புகுந்தால்.

41 வரலாகாது என்று தடுக்கப்பட்ட ஒருவன் மற்றொருவன் வீட்டுள் புகுந்தால் அதற்கு அவனுக்கு விதிக்கப்படுந்தண்டம் இவனுக்குமாம்.

ஒரு கிராமத்தின் நாற்புறத்தும் [42]நூறுவிற்கிடை இடை வெளியுள்ளதாகக் [43]கம்பங்களால் உதவியரண் அமைத்தல் வேண்டும்.

பசுமேய்ச்சற்பொருட்டுப் [44]புன்னிலம் மேட்டுநிலம் வனம் என்னும் இவற்றை விட்டு [45]உதவிபுரிதல் வேண்டும்.

புன்னிலத்தில் மேய்ந்துவிட்டு ஓடும் [46]ஒட்டகம் எருமை என்னும் இவற்றிற்குக் காற்பண விகிதமும் எருது குதிரை கழுதை என்னும் இவற்றிற்கு அரைக்கால்பண விகிதமும் ஆடு முதலிய சிறுவிலங்குகளுக்கு வீசம்பண விகிதமும் [47]வாங்குதல்வேண்டும்.

மேய்ந்துவிட்டு ஓடாமலிருப்பவற்றிற்கு [48]இருமடங்கும் [49]தங்கியிருப்பவற்றிற்கு நான்கு மடங்கும் தண்டமாம். [50]ஊர் எருது கோயில்எருது ஈன்று பத்துநாட்களுக்கு மேற்படாத பசு கிழஎருது பொலிஎருது என்னும் இவற்றிற்குத் தண்டம் இன்றும்.

பயிரை மேய்ந்தால் கேடடைந்த பயிரினால் விளையக்கூடிய பயனைக் [51]கணக்கிட்டு இருமடங்கு கொடுக்கச்செய்தல் வேண்டும்.

---

[42] ஒரு கம்பத்திற்கும் மற்றொரு கம்பத்திற்கும் இடையே நூறு விற்கிடை தூரம் இடைவெளி இருக்கவேண்டும் என்பது.

[43] கம்பங்கள்—கல்லினாலும் மரத்தினாலும் ஆக்கப்பட்டவை.

[44] புன்னிலம்—புல்லும் நீரும் நிறைந்த இடம்.

[45] கிராமத்து மக்களுக்கு அரசன் உதவிபுரிதல் வேண்டும் என்பது.

[46] ஈண்டு ஒட்டகம் முதலாகக் கூறப்பட்டவை குறிப்பிட்ட புன்னிலத்தில் மேய்தற்கு உரிமையில்லாத வேற்றூரிலுள்ளனவாம் என்று கொள்ளல் வேண்டும்.

[47] புன்னிலத்தலைவன் ஒட்டகம் முதலியவற்றிற் குரியவரிடமிருந்து வாங்குதல்வேண்டும் என்பது.

[48] மேய்ந்துவிட்டு ஓடிய ஒட்டகம் முதலியவற்றிற்குக் கூறப்பட்ட தண்டத்தின் இருமடங்கென்பது.

[49] தங்கியிருத்தல்—இரவிலும் அவ்விடத்திலே யிருத்தல்.

[50] ஊர் எருது முதலியன வேற்றூரில் உள்ளனவாயினும், அவைகள் மேய்ந்தால் தண்டம் விதித்தலாகாது என்பது.

[51] கணக்கிடுதல்—அப்பயிருள்ள நிலமுழுவதிலும் விளைந்துவரும் வருவாயளவினின்றும் கேடடைந்த பயிரளவிற்கு உள்ள ஈவை ஆராய்ந்தெடுத்தல்

[52]அறிவியாமல் மேயவிட்ட உரியவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [53]அவிழ்த்துவிட்டவனுக்கு இருபத்துநான்கு பணம் தண்டமாம். [54]காப்பாளனுக்கு அரைமடங்கு தண்டமாம். தோட்டத்தில் மேயவிட்டாலும் [55]அத்தண்டத்தையே விதித்தல் வேண்டும். வேலியைப் பிரித்துவிடினும் வீடு களம் [56]குவியல் இவற்றிலுள்ள கூலங்களை மேயவிட்டாலும் [57]இருமடங்கு தண்டமாம். [58]கேட்டிற்கு ஈடுசெய்யவும் வேண்டும்.

[59]அச்சமில் காட்டு விலங்குகளும் [60]பிடித்து வளர்க்கப்படும் விலங்குகளும் [61]மேயுமாகுல் உரியவனுக்குத் தெரிவித்துக் கொலை நிகழாவாறு ஓட்டிவிடல் வேண்டும்.

[62]அவ்விலங்குகளைக் கயிற்றினுலும் சாட்டையினுலும் விலக்குதல் வேண்டும். [63]வேறுவகையினுல் அவற்றைத் துன்புறுத்தினுல்

---

52 புன்னிலத்தலைவனுக்கு அறிவியாமல் பசு முதலியவற்றைப் பயிர் நிலங்களில் மேயவிடின், அப்பசுக்களை உடையவனுக்குத் தண்டமாம் என்பது. இனி பசுக்களை உடையவனுக்கு அறிவியாமல் நிலத்திற்கருகில் கட்டி மேய்ப்பவனுக்கு இத்தண்டம் விதிக்கப்படும் எனினுமாம். பயிரழிவினுல் ஏற்படும் விலைபொருளைக் கணக்கிட்டு அதற்கு இருமடங்கு இறுக்கப்படும் தண்டத்தினும் இது வேருகும் என்பது கருத்து.

53 கட்டிவைத்து மேயவிடாமல், அவிழ்த்துவிட்டு மேய்ப்பவனுக்கு இத்தண்டம் என்பது.

54 காப்பாளன்—நிலத்தைப் பாதுகாப்பவன்.

55 அத்தண்டம்—பயிரை மேயவிட்டதற்குக் கூறிய தண்டம்.

56 குவியல்—தானியக்குவியல்.

57 இருமடங்கு—பயிரை மேயவிட்டதற்குக் கூறிய தண்டத்தின் இருமடங்கு.

58 மேயவிட்டதால் ஏற்படும் கூலம் முதலியவற்றின் அழிவிற்குத்தக விலையும் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து. இவ்விதி எல்லாவற்றிற்குமாம்.

59 அச்சமில்காடு—முனிவர் தவம்புரியும் வனம். அதனுல் அங்கு வாழும் விலங்குகளுக்கு அச்சம் நேராது என்பது கருத்து.

60 இவை வீட்டில் வைத்து வளர்க்கப்படும் விலங்குகளாகும்.

61 மேய்தல்—பயிரை மேய்தல்.

62 அவ்விலங்குகள்—அச்சமில் காட்டு விலங்குகளும், வீட்டு விலங்குகளும்.

63 வேறுவகையாகத் துன்புறுத்தல்—கயிறு சாட்டைகளல்லாத கருவிகளால் துன்பஞ்செய்தல்.

[64]கடுந்தண்டத்திற்குரிய தண்டமாம்.

[65]எதிர்ப்பனவும் [66]குற்றஞ்செய்தனவுமாகியவற்றை [67]எல்லா வகையான உபாயங்களாலும் அடக்கலாம். [68]வயல்வழித்தடை கூறியபடியாம்.

[69]கிராம காரியத்தை உடன்பட்டுச் செய்யாத உழவனிறுக்கும் தண்டத்தைக் [70]கிராமத்தவரே கொள்ளல்வேண்டும். அக்காரியத்தைச் செய்யவில்லையானால் [71]அதற்குரிய கூலியின் இருமடங்கு தண்டமாம். [72]ஈவுப்பொருள் கொடுக்கவில்லையானால் அந்த ஈவின் இருமடங்கும் உண்டாட்டு முதலிய நிகழ்ச்சிகளில் [73]உண்ணத் தக்கதும் [74]பருகத்தக்கதும் கொடுக்கவில்லையானால் அக்கூற்றின் இருமடங்கும் தண்டமாம்.

---

64 கடுந்தண்டத்திற்குரிய தண்டத்தை மூன்றும் அதிகரணம் எழுபத் தாறும் அத்தியாயத்திற் காண்க.

65 எதிர்ப்பன—மேயுங்கால் தடுப்பவனை எதிர்த்துப்பாயும் விலங்குகள்.

66 குற்றம் செய்தன—முன்னர் மனிதரைத் துன்புறுத்திய விலங்குகள்.

67 கட்டிவைத்தல் ஓரிடத்து அடைத்துவைத்தல் முதலிய உபாயங் களாலென்பது.

68 'புன்னிலை வயல்வழித்தடை' என்னும் பகுதி இவ்வளவில் முடிவுற்ற தென்பது. 'நிலவழக்கு' என்னும் பிரகரணமும் முடிவுபெற்றது.

69 இனி, 'கட்டுப்பாடு கடவாமை' என்னும் ஆறும் பிரகரணம் தொடங்கப்படுகின்றது. நிலவழக்கு முதலியவற்றில் பொதுமக்கள் வரையறுத்துக்கொண்ட கட்டுப்பாடு கடவாமலிருத்தல் இன்றியமையாதது ஆகலின் 'நிலவழக்கு' என்னும் பிரகரணத்தின்பின் 'கட்டுப்பாடு கடவாமை' என்னும் பிரகரணம் வைக்கப்பட்டது. இதனால் பிரகரண இயைபு புலனாதலறிக. கிராமகாரியம்—கிராமத்து மக்களுடைய பொதுக்காரியம்.

70 கிராமத்தவரே என்றதனால், அத்தண்டப்பொருள் அரசனைச்சாராது என்பது போதரும்.

71 அதற்குரிய கூலி— அக்காரியத்தைச் செய்தலால் தனக்குக் கிடைக்கும் கூலி.

72 பொதுக்காரிய நிமித்தம் மற்றெல்லோரும் கொடுக்கின்றபடி ஒருவன் கொடுக்கவில்லையானால், அவன் கொடுக்கவேண்டிய ஈவுத்தொகைக்கு இருமடங்கு தண்டம் என்பது.

73 உண்ணத்தக்கது—சிற்றுண்டி முதலியன.

74 பால், மோர் முதலியன.

[75]காட்சிகளுக்குரிய [76]கூறு கொடாதவன் தமருடன் [77]காண்டலாகாது. மறைந்துநின்று [78]கேட்டலும் [79]காண்டலும் செய்தாலும் எல்லோருக்கும் நலம்பயக்கும் காரியத்தில் தடைசெய்தாலும் [80]கூற்றில் இருமடங்கு கொடுத்தல்வேண்டும்.

எல்லோருக்கும் நலம்பயக்கும் செய்தியைச் சொல்லுகின்ற [81]ஒருவனுடைய கட்டளையைச் செய்தல்வேண்டும். செய்யவில்லையானுல் பன்னிரண்டு பணம் தண்டமாம். [82]ஒன்றுகூடி அவனைக் கொன்றுவிடுவார்களானுல் அவர்க்குத் தனித்தனியே [83]முன்னைக் குற்றத்தின் இருமடங்கு தண்டமாம். நேரே கொலைசெய்தோருக்குச் [84]சிறப்புத்தண்டமாம்.

[85]இவருள் தலைமை [86]அந்தணன் முதலாக வரையறுக்கத் தக்கது. உண்டாட்டுக்களில் இவருள் [87]பார்ப்பனன்பொருட்டுக் கருத்தறியாமல் விதித்தலாகாது. கூறு தரின் அடையலாம்.

---

75 காட்சி—கூத்து, பாட்டு முதலியன.

76 கூறு—பொதுமக்களால் வகுக்கப்பட்ட பொருட்கூறு.

77 அக்காட்சிகளைப் பார்க்கக்கூடாதென்பதாம்.

78 கேட்டல்—இசை முதலியவற்றை.

79 காண்டல்—கூத்து முதலியவற்றை.

80 தான் கொடுக்கவேண்டிய கூற்றின் இருமடங்கு தண்டமாகக் கொடுத்தல்வேண்டும் என்பது.

81 சொல்பவன் ஒருவனுனுலும் அவன் சொல்வது மற்றெல்லோருக்கும் நலம்பயக்கும் செய்தியாயின் அதனை மற்றையோர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது.

82 மற்றெல்லோரும் பொருமை காரணமாக ஒன்றுகூடி அந்நல்லோனைக் கொன்றுவிடுவாராயின் என்பது.

83 எல்லோருக்கும் நலம்பயக்கும் செய்தியைச் செய்யாமைக்குரிய தண்டத்தின் இருமடங்காகிய இருபத்துநான்கு பணம் தண்டம் என்பது.

84 சிறப்புத்தண்டம்—மேற்குறிப்பிட்ட தண்டத்தின் விசேட தண்டம்.

85 இவருள்—பொதுமக்களுள்.

86 அந்தணன் முதலாக என்றதனுல், அந்தணருள் தகுதியுடையோன் இல்லையாயின் அரசகுலத்தவருள்ளும், அங்ஙனமே மற்றைக் குலத்தோருள்ளும் தகுதியுடையானைத் தலைவனுகத் தெரிந்தெடுக்கலாம் என்பது கருத்து.

87 உண்டாட்டு முதலிய விசேடங்களில் கூறுபொருள் விதிக்குங்கால், பார்ப்பனனுக்கு அவன் உடன்பாடு அறியாமல் விதிக்கலாகாது என்பதும், அவனுக அக்கூறுபொருள் கொடுத்தால் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் கருத்து.

[88]இதனால் தேசம் சாதி குலம் என்னும் இவற்றின் குழுக்களுக்கும் கட்டுப்பாடுகடவாமை [89]கூறியபடியாம்.

சுலோகம்

நாட்டுநலங்குறித்து எல்லைக்கட்டுக்களையும் வழியிடங்களில் [90]சீர்திருத்தங்களையும் கிராமங்களுக்கு அழகையும் பாதுகாவலையும் செய்கின்ற [91]அன்னார்க்கு அரசன் விருப்பத்தக்க நலன்களைச் செய்தல்வேண்டும்.

மூன்றாம் அதிகரணம் ஐந்தாம் பிரகரணத்தில்
புன்னிலவயல்வழித்தடை, ஆறும் பிரகரணம்
கட்டுப்பாடுகடவாமை என்பன அடங்கிய
அறுபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[88] இதனால் — ஈண்டுக் கிராமத்திற்குக் கூறிய கட்டுப்பாடுகடவாமை பற்றிய விதியினால்.

[89] இங்கே கூறப்பட்ட விதியைக்கொண்டு தேசக்குழு முதலியவற்றிற்கும் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

[90] சீர்திருத்தம்—மக்கள் எளிமையில் போக்குவரத்துச் செய்தற்கு உரியவாறு செப்பனிடுதல்.

[91] அன்னார்—கிராமப்பொதுநலன்களை மேற்கொண்ட கூட்டத்தார்.

மூன்ரும் அதிகாரணம்—அறநிலையாட்சி

ஏழாம் பிரகாரணம்—[1]கடன்கோடல்

அறுபத்தெட்டாம் அத்தியாயம்

நூறுபணத்திற்கு நியாயமான [2]திங்கள்வட்டி ஒன்றேகால் பணமாகும். [3]வாணிகத்திற்காயின் ஐந்து பணமும் [4]காட்டில் வழங்குவோர்க்காயின் பத்துப்பணமும் [5]கடலில் வழங்குவோர்க் காயின் இருபது பணமுமாம்.

[6]அதற்குமேல் [7]செய்பவனுக்கும் [8]செய்விப்பவனுக்கும் பூர்வ சாகசம் தண்டமாம். சான்ருவாருள் தனித்தனியே [9]அரையளவு தண்டமாம்.

68-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கடன்கோடல் என்பது கடனைக்கொடுத்த பொருளை வட்டியுடன் வாங்குதல் எனவும், வட்டியுடன் கொடுப்பதாகப் பேசிக் கடன் வாங்குதல் எனவும் பொருள்படும். தாயபாகம் என்னும் நான்காம் பிரகரணத்தில் கடனைக் கொடுக்கப்பட்டதும் வாங்கப்பட்டதும் சமனைக் கூறுசெய்து கொள்ளத்தக்கன என்று கூறப்பட்டுள்ளது. பின்னர் அத் தாயபாகத்தைச் சார்ந்த நிலவழக்கையும் அதற்கு இன்றியமையாத கட்டுப்பாடுகடவாமை யையும் ஐந்து ஆரும் பிரகரணங்களில் கூறி இப்பிரகரணத்தில் கடன் கோடல் கூறப்படுகின்றது. இதனல் பிரகரண இயைபு வெளியாதலறிக.

[2] மாதம் ஒன்றிற்கு நூற்றிற்கு ஒன்றேகால் விகிதம் வட்டி என்பது ஈடாகவும் ஒற்றியாகவும் வைக்கப்படும் பொருண்மேலது.

[3] பண்டங்களை விற்றல் கொள்ளல் முதலியன செய்யும் வாணிகரிடம் கொடுக்கும் கடனுக்கு மாதம் ஒன்றுக்கு நூற்றிற்கு ஐந்து விகிதம் வட்டி என்பது.

[4] செல்லுதற்கரிய காட்டுப்பிரதேசங்களில் விலைப்பண்டங்களைக் கொண்டு விற்பவருக்குக் கடன் கொடுத்தால் பத்துப்பணம் வட்டி என்பது.

[5] கடல்வழிச்சென்று வாணிகம் புரிவோர்க்குக் கடன் கொடுப்பின் இரு பது பணம் வட்டியாம் என்பது.

[6] அதற்குமேல்—மாதம் ஒன்றுக்கு நூற்றிற்கு இருபது வட்டிக்குமேல்.

[7] செய்பவன்—வட்டி வாங்குவோன்.

[8] செய்விப்பவன்—வட்டி வாங்கும்படி தூண்டுபவன்.

[9] அரையளவு—பூர்வசாகச தண்டத்தின் பாதியளவு.

அரசன் [10]தம் நலங்களில் [11]நாட்டம் செலுத்தவில்லையானல் கடன்கொடுப்போரும் வாங்குவோரும் [12]ஒழுகலாற்றைப் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

[13]தானியத்திற்கு வட்டி பயிர்விளையுமளவும் அரைக்கூறுகும். [14]அதன்பின் விலையாகச் செய்யப்பட்டு வளர்ச்சியடையும். [15]சேர்க்கப்பட்ட வட்டி தொடக்கத்தினின்றும் பாதியாம். [16]நெருங்குதலில்லையாயின் ஓராண்டிற்குரியது கொடுக்கத்தக்கது.

[17]அயலூர் சென்று நெடுநாள் இருந்தவனும், ஊக்கமற்றவனும் கூலப்பொருளின் விலையளவின் இருமடங்கு கொடுத்தல் வேண்டும்.

---

[10] தம் என்பது கடன்கொடுப்போரையும் வாங்குவோரையும் குறிக்கும்.

[11] விதனங்களாலும் பகைவராலும் நலியப்பட்டுக் குடிமக்களின் நலங்களைப் பாதுகாவாவிடின் என்பது.

[12] ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளும் முறையைக் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[13] தானிய ரூபமான வட்டி வாங்குதற்பொருட்டுக் கொடுக்கப்பட்ட தானியத்திற்குப் பயிர்விளைந்துவரும் காலம் வரை கொடுக்கப்பட்ட அளவிற் பாதியளவு வட்டியாம் என்பது கருத்து.

[14] தானிய விளைவுகாலத்தின் பின் அரையளவு தானிய வட்டியுடன் கூடிய மூலதானியத்திற்கு விலையாவை யறுதியிட்டு அதற்கு இத்துணை வட்டி என்று வரையறுத்துக்கொண்டு பெருக்கிக்கொள்ளலாமேயன்றி மேலும் தானிய ரூபமான வட்டி வாங்கலாகாது என்பது கருத்து.

[15] தானிய ரூபமான வட்டியுடன் கூடிய மூலதானியத்திற்கு அறுதியிடப்படும் விலையே தொடக்கமாகும். அதற்கு வரையறை செய்து கொள்ளப்படும் வட்டியானது அத்தொடக்கப் பொருளில் பாதியளவிற்கு மேல் வளர்ச்சியடையாது என்பது கருத்து.

[16] தானிய ரூபமான வட்டியை வாங்குதற்குரிய காலத்தில் நெருங்கிச் சென்று வாங்காமல் மிகுதியான காலங்கடந்து வாங்க முயன்றால் ஓராண்டிற்குரிய தானியவட்டி மாத்திரம் கிடைக்குமேயன்றி மேலும் கடந்த காலத்திற்குக் கிடைக்கமாட்டாது என்பது கருத்து.

[17] கடன்வாங்கினவன் அயலூருக்குப்போய் நெடுநாள் இருந்துவிட்டாலும் அல்லது வாங்கினதைக் கொடுக்கவேண்டுமென்று நினையாமல் சோர்வடையவிட்டாலும் வாங்கின தானியத்தின் விலையளவில் இருமடங்கு செலுத்தல்வேண்டும் என்பதும், பல ஆண்டுகள் கடந்தாலும் இருமடங்குக்குமேல் கொடுக்கவேண்டியதில்லை என்பதும் கருத்து.

வட்டியைப் பேசிக்கொள்ளாமல் [18]வற்புறுத்துகின்றவனுக்கும் [19]மிகுதியாகச் சொல்கின்றவனுக்கும் [20]விலையை வட்டியுடன் சேர்த்துச் சொல்விப்பவனுக்கும் [21]மூலப்பொருளின் நான்கு மடங்கு தண்டமாம். [22]குறைவை (மிகுதியாகச்) சொல்விப்பவனுக்குப் [23]பொய்யாகக் கூறப்பட்டதின் நான்குமடங்கு தண்டமாம். [[24]அதனில் மூன்றிலொருகூற்றை வாங்கினவனும் எஞ்சியதைக் கொடுத்தவனும் செலுத்தல் வேண்டும்.]

[25]பெருவேள்வி நோய் [26]குருகுலம் இவற்றுள் ஒன்றால் [27]தடைப்பட்டவனும் [28]இளைஞனும் [29]தகுதியற்றவனுமாகிய இவர்க்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு [30]வளர்ச்சியின்று. [31]விடு

---

18 வற்புறுத்துதல்—வட்டி தரவேண்டும் என்று நெருக்கிக்கூறல்.

19 மிகுதியாகச் சொல்லுதல்—வட்டியைக் குறையப்பேசிக்கொண்டு மிகுதியாகக் கூறுதல்.

20 கொடுக்கப்பட்ட கூலத்தின் விலையை வட்டியுடன் சேர்த்து மூலப்பொருள் என்று சான்றுகூறுவாரைச் சொல்லும்படி செய்கின்றவனுக்கும் என்பது.

21 மூலப்பொருள்—முதலில் கடனாகக் கொடுக்கப்பட்ட தானியத்தின் விலைப்பொருள்.

22 குறைவாகக்கொடுத்து மிகுதியாகச் சொல்லும்படி சான்றுகூறுவாரைத் தூண்டியவனுக்கென்பது.

23 பொய்யாகக் கூறப்பட்டது எவ்வளவோ அவ்வளவின் நான்கு மடங்கு என்பது.

24 இப்பகுதிக்கேற்ப மூலம் உள்ளதாயினும் இக்கருத்துப் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'அத்தண்டத்தில் மூன்றில் ஒருகூற்றைக் கடன் வாங்கினவனுக்குக் கொடுக்கவேண்டும்' என்றிருப்பது பொருத்தமாகத் தோன்றுகிறது. காரணம் :—கொடுத்தவன் பொய்கூறி வாங்கினவனைத் துன்புறுத்தியதாம் என்க.

25 பெருவேள்வி—பன்னிரண்டு யாண்டு முதலாகச் செய்யப்படும் 'தீர்க்க சத்திரம்' என்னும் யாகம்.

26 குருகுலம்—கல்விநிமித்தம் ஆசிரியனிடத்தில் தங்குதல்.

27 தடைப்படுதல்—கடன்கொண்டபின் பெருவேள்வி முதலியவற்றில் தலைப்படுதல்.

28 இளைஞன்—வழக்கியற் பருவமடையாதவன்.

29 தகுதியற்றவன்-பருவமடைந்தும் உலகியலறியும் தகுதியில்லாதவன்.

30 வளர்ச்சி—வட்டி.

31 கடன்வாங்கிய பொருளை உரியகாலத்தில் திருப்பிக் கொடுக்குங்கால் ஏற்றுக்கொள்ளாதவனுக்கு இத்தண்டம் என்பது.

தலை செய்யும் கடனை ஏற்றுக்கொள்ளாதவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [32]காரணங்கூறின் வட்டியின்றிப் [33]பிறனொருவனிடத்தில் வைத்துவிடல் வேண்டும்.

[34]இளமை முதுமை நோய் விதனம் அயல்நாட்டுவாழ்க்கை நாட்டுப்பிறழ்ச்சி அரசியற்கலக்கம் என்னும் இவையல்லாதவிடத்துப் பத்து ஆண்டுவரை பொருட்படுத்தப்படாத கடன் திருப்பிப் பெறத்தகாததாகும்.

இறந்தவன்புதல்வர் [35]பொருளுக்குரிய ஞாதியர் [36]கூட்டுக் கடனாளி [37]பிணையாளன் என்னும் இவர்கள் [38]கடனைக் கொடுத்தல் வேண்டும். [39]வேறான பிணை பயனின்று. [40]இளைஞன்பிணையும் பயனற்றதாம். தாயப்பொருளுக்குரிய புதல்வரும் பேரரும் ஞாதியரும் [41]காலமிடங்களின் வரையறையின்றிக் கொடுத்தல்வேண்டும்.

[42]வாழ்க்கை [43]திருமணம் [44]நிலம் இவற்றைப்பற்றிய பிணை

---

[32] காரணம்—அங்ஙனம் ஏற்றுக்கொள்ளாமைக்குப் பொருத்தமான காரணம்.

[33] பிறனொருவன்—அப்பொருளைப் பாதுகாத்தற்குத் தகுதியான மற்றொருவன்.

[34] இளமை முதலிய ஏழு காரணங்களாலும் பத்து ஆண்டுகள் வரை பொருட்படுத்தாமல் விட்டகடனைப் பின்னர்த் திருப்பிப்பெறலாம் என்பதும் இக்காரணங்களல்லாதவிடத்துப் பத்து ஆண்டுகளுக்கு மேல் கடன் திருப்பிப்பெற இயலாது என்பதும் கருத்து.

[35] பொருள்—இறந்தவனுடையது.

[36] கூட்டுக்கடனாளி—சேர்ந்து கடன் வாங்கினவன்.

[37] பிணையாளன்—ஜாமீன்காரன்.

[38] கடன்—இறந்தவன் கொடுக்கவேண்டிய கடன்.

[39] பொருட்பற்றிய பிணையன்றிக் காட்சி முதலிய பிணைகள் கடன் கொடுத்தற்கு உரியனவாகா என்பது.

[40] இளைஞன்—வழக்கியற் பருவம் அடையாதவன்.

[41] இன்ன காலத்தில் இன்ன இடத்தில் என்னும் வரையறையில்லாமல் எக்காலத்தும் எவ்விடத்தும் கடனைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் என்பது.

[42] வாழ்க்கைப்பிணை—ஒருவர் உயிர்வாழ்தற்குத் திங்கள்தோறும் அல்லது ஆண்டுதோறும் இத்துணைப் பொருள் கொடுத்துவருதல் என்பதற்குரிய பிணை.

[43] திருமணப்பிணை—சீதனம் முதலியவற்றைப் பற்றியது.

[44] நிலப்பிணை—நிலத்தை வாங்கல் விற்றல் முதலியவற்றைப் பற்றியது.

களுக்குப் புதல்வரும் பேரரும் காலமிடங்களின் வரையறை யின்றிப் [45]பொறுப்பாளராவர்.

[46]பல கடன்களும் ஒன்றுகூடுங்கால் [47]வெளிச்செல்லாத நிலையில் ஒருவனை இருவர் ஒரே காலத்தில் வழக்குத் தொடர்தல் ஆகாது.

[48]அப்பொழுதும் வாங்கிய வரிசைப்படியாதல் [49]அரசர் அந்தணர் பொருளையாதல் முதலில் கொடுத்தல்வேண்டும்.

கணவன்மனைவி தந்தைமக்கள் பிரிவுசெய்துகொள்ளப்படாத உடன்பிறந்தார் என்னும் இவருள் ஒருவர்பால் ஒருவர் கடன் வாங்கியிருந்தால் வழக்குத்தொடர இயலாது.

[50]உழவரும் அரசியல்வினைஞரும் [51]தொழில்புரியுங்காலத்தில் பிடிக்கத்தக்கவர் அல்லர். [52]இடையன் வாரத்திற்கு உழுபவன் என்னும் இவர்தம் மகளிரல்லாதவிடத்துக் கணவன்பட்ட கடனை [53]ஏற்றுக்கொள்ளாத பெண்ணும் [54]ஆம்.

---

45 தந்தை இறந்தபின் மக்களும் பேரரும் பொறுப்பாளர் ஆவர் என்பது.

46 பலரிடத்தும் வாங்கிய கடன்களும் ஒரே காலத்தில் கொடுக்க நேர்ந்தால் என்பது.

47 கடன்வாங்கினவன் தன் நாட்டைவிட்டு அயல்நாட்டுக்குப் புறப்படாமலிருக்கும் நிலையில் என்பது.

48 அப்பொழுதும்—பல கடன்களையும் ஒரே சமயத்தில் கொடுக்க நேருங்காலும்.

49 அரசன்பொருளும் அந்தணன்பொருளும் பின்னர் வாங்கப்பட்டன வாயினும் அவற்றை முன்னர்க் கொடுத்தல்வேண்டும் என்பது.

50 கடன் கொடுத்தவரால் வழக்குத் தொடரப்பட்ட கடனாளிகளைப் பிடிக்கும் முறைபற்றிக் கூறுகின்றார்.

51 தத்தம் தொழிலைச் செய்துகொண்டிருக்குங் காலத்தில் கடன்நிமித்தம் பிடிக்கத்தக்கவர் அல்லர் என்பது.

52 இடையன் வாரத்திற்கு உழுபவன் என்னும் இவருடைய பெண்கள் சிறப்புரிமையுடையராதலின் அவர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும் அவர்தம் கணவன்மார்பட்ட கடனுக்காக அப்பெண்களையும் வழக்குத் தொடர்ந்து பிடிக்கலாம் என்பது கருத்து.

53 ஏற்றுக்கொள்ளாத பெண்—யான் கொடுப்பேன் என்று உடன்படாத பெண்.

54 கடன்நிமித்தம் வழக்குத்தொடர்ந்து பிடிக்கத்தகாதவளாம்என்பது.

மனைவிபட்ட கடனிமித்தம் [55]வாழ்க்கைக்கு வேண்டியதைச் செய்யாமல் அயலிடம் சென்ற காரணத்தால் அவள்கணவன் [56]பிடிக்கத்தக்கவனாவான்.

[57]உடன்படுதல் சிறந்தது. [58]உடன்பாடின்றேல் நம்பிக்கையுடையவர் [59]தூய்மையுடையவர் [60]ஏற்றுக்கொள்ளப்பட்டவர் எனக் குறைந்த அளவு [61]சான்றுவார் மூவரைக்கொண்டு துணிதல் வேண்டும். கடனைக்குறித்து [62]இருதிறத்தாராலும் உடன்படப்பட்ட [63]இருவர் சான்றுதலுமாம். ஒருவனே சான்றுதல் கூடாது.

[64]மைத்துனன் உதவியாளன் [65]அண்டிப்பிழைப்பவன் கடன்கொடுத்தவன் கடன்கொண்டவன் பகைவன் உறுப்பறையன் தண்டிக்கப்பட்டோன் என்னும் இவர்கள் [66]விலக்கத்தக்கவர் ஆவர்.

[67]தத்தம் இனத்தவரல்லாதவிடத்து வழக்கிடுதற்கு இயலா

---

55 மனைவி உயிர்வாழ்தற்கு வேண்டிய பொருட் சௌகரியங்களைச் செய்யாமல் கணவன் அயலிடம் சென்றுவிட்டானாயின் என்பது,

56 மனைவிபட்ட கடனை ஏற்றுக்கொள்ளாமலிருந்தாலும் அக்கடனிமித்தம் பிடிக்கத்தக்கவன் ஆவான் என்பது.

57 வழக்குத் துணிதற்குரிய கருவிமுறையைக் கூறுகின்றார். கடன் கொடுத்தவன் அறிவித்தபடி கடன்கொண்டவன் உடன்படுதல் வழக்குத் துணிதற்குச் சிறந்த கருவியாகும் என்பது.

58 உடன்பாடின்றேல்—வழக்காளி சொல்லுகிறபடி எதிர்வழக்காளி உடன்படவில்லையானால்.

59 தூய்மையுடையவர்—உள்ளும்புறமும் பரிசுத்தமுடையோர்.

60 ஏற்றுக்கொள்ளப்பட்டவர் — வாதிப்பிரதிவாதிகளால் உடன்படப்பட்டோர்.

61 சான்று என்பதனால் ஓலையாகிய ஆவணம் முதலியவற்றையுங் கொள்ளல்வேண்டும்.

62 இருதிறத்தார்—வழக்காளியும் எதிர்வழக்காளியுமாவர்.

63 இவ்விருவர் கூறும் சான்றும் வழக்குத் துணிதற்குக் கருவியாம் என்பது.

64 சான்றுதற்குத் தகுதியில்லாதவர் இன்னார் எனக் கூறுகின்றார்.

65 அண்டிப்பிழைப்பவன்—வழக்காளிகளுள் ஒருவனைப் பொருள்நிமித்தம் அடுத்து உயிர்வாழ்பவன்.

66 சான்றுகூறுதற்குத் தகுதியற்றவர் ஆவர் என்பது.

67 பின் விலக்கப்படுவோர் தத்தம் இனத்தவராயின் சான்றுகூறுதற்குத் தகுதியுடையவர் ஆவர் என்பது கருத்து.

தவர் என [68]முன்னர்க் கூறப்பட்டவரும் அரசன் பார்ப்பனன் கிராமப்பணியாளன் குட்டநோயன் உடற்புண்ணுடையோன் [69]பதிதன் சண்டாளன் இழிதொழிலுடையோன் குருடன் செவிடன் ஊமன் [70]வலியவந்து சொல்லுவோன் என்னும் இவரும் மகளிரும் அரசியல்வினைஞரும் அங்ஙனமே விலக்கத்தக்கவர் ஆவர்.

[71]கொடுமை களவு [72]வலிந்துபற்றல் ஆகிய இந்நிகழ்ச்சிகளில் பகைவன் மைத்துனன் உதவியாளன் என்னும் இவரல்லாதாரும் [73]மறைவான நிகழ்ச்சிகளில் [74]அரசரும் துறவொழுக்கமுடையோரும் அல்லாத தனிமையானபெண் தனிமையான ஆடவன் அருகிலிருந்து கேட்டவன் அருகிலிருந்து கண்டோன் ஆகிய இவர்களும் சான்றாகலாம்.

பணியாளர்க்குத் தலைவரும் மாணுக்கர்களுக்கு வேட்பிப்போரும் ஆசிரியரும் புதல்வர்களுக்குத் தாய்தந்தையரும் [75]வற்புறுத்தப்படாத நிலையில் சான்றாகலாம். [76]அவர்களுக்கு மற்றையோரும் ஆம். [77]இவர்களுள் ஒருவரையொருவர் வழக்குத்

---

68 முன்னர்க் கூறப்பட்டவர்—கணவன் மனைவி, தந்தை மகன், பிரிவு செய்துகொள்ளப்படாத உடன்பிறந்தோர் என்பவராவர்.

69 பதிதன்—கன்மசண்டாளன்.

70 வலியவந்து சொல்லுவோன்—'யான் சான்றாவேன்' என்று தானே கூற முன்வருவோன்.

71 இனி சான்று கூறுதற்குரியார் இன்னார் எனக் கூறுகின்றார். கொடுமை—கொடுஞ்செயல்.

72 வலிந்துபற்றல்—இணக்கமில்லாத மகளிரைக் கவர்தல்.

73 மறைவான நிகழ்ச்சி — பிறர்க்கு வெளிப்படாவாறு தனிமையில் நிகழும் காரியங்கள்.

74 பின்னர்க் கூறப்பட்டோர் அரசரும் துறவொழுக்கமுடையோரும் ஆயின் சான்றுதல் ஆகாது என்பது கருத்து.

75 வற்புறுத்தப்படாதநிலை — பிறரால் வற்புறுத்தப்படாமல் தாமே விரும்பி முன்வருதல்.

76 தலைவர்க்குப் பணியாளரும், வேட்பிப்போருக்கும் ஆசிரியருக்கும் மாணுக்கரும் தாய்தந்தையர்க்குப் புதல்வரும் வற்புறுத்தப்படாத நிலையில் சான்றாகலாம் என்பது கருத்து.

77 இவர்களுள்—தலைவர் பணியாளர் முதலியோருள்.

தொடர நேர்ந்தவிடத்துத் [78]தலையாயார் தோல்வியடையின் [79]பத்து மடங்கும் [80]கடையாயார் தோல்வியடையின் [81]ஐந்து மடங்கும் கொடுத்தல்வேண்டும். சான்றுதலைப்பற்றிய செய்தி இவ்வாறும்.

[82]பார்ப்பனரை [83]நீர்க்குடம் நெருப்பு இவற்றின் முன்னிலையில் வைத்துச் சான்றாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். [84]ஆண்டுப் பார்ப்பனனை நோக்கி 'உண்மையைச் சொல்லுக' என்றும் அரசகுலத்தவனையும் வணிககுலத்தவனையும் தனித்தனி நோக்கி 'மாறுபடக்கூறுவாயானால் உனக்கு வேள்விப்பயனும் [85]ஒப்புரவறத்தின் பயனும் உண்டாகா. ஓடு கையிலேந்தி ஐயமேற்பதன் நிமித்தம் பகைவர் இல்லத்தை அடைவாய்' என்றும் சூத்திரனை நோக்கி 'மாறுபடக்கூறுவாயானால் பிறந்தது முதல் இறக்கும் வரை நீ செய்த புண்ணியத்தின் பயன் அரசனையும் [86]அரசனது பாவத்தின் பயன் உன்னையும் சாரும். [87]தண்டமும் பற்றும். நீ [88]கண்டதும் கேட்டதும் பின்னர் உள்ளவாறு அறியப்படும். [89]ஒன்றுகூடிச் சூழ்ந்து உண்மையை வெளிப்படுத்துக' என்றும் கூறல்வேண்டும்.

---

[78] தலையாயார்—தலைவர் ஆசிரியர் தாய்தந்தையர்.

[79] வழக்குப்பொருளளவின் பத்து மடங்கு வென்றவர்க்குத் தோல்வியடைந்தவர் கொடுக்கவேண்டும் என்பது.

[80] கடையாயார்—பணியாளர் மாணவர் புதல்வர்.

[81] வழக்குப்பொருளளவின் ஐந்து மடங்கு வென்றவர்க்குத் தோல்வியடைந்தவர் கொடுக்கவேண்டும் என்பது.

[82] சான்றுவாரைக் குறித்து வினவும் முறையைக் கூறுகின்றார்.

[83] நீர் நெருப்புக்களின் முன்னிலையில் பார்ப்பனர் பிறழக் கூறமாட்டார் என்பதுபற்றி இவ்வாறு கூறப்பட்டது.

[84] ஆண்டு—நீர் நெருப்புக்களின் முன்னிலையில்.

[85] ஒப்புரவறம் — மக்களெல்லோருக்கும் பொதுவாகப் பயன்படும் கிணறு குளம் முதலியன அமைத்தல்.

[86] அரசன் பிறந்தது முதல் இறக்கும் வரை செய்த பாவத்தின் பயன் என்பது.

[87] தண்டம்—பொய் கூறியதன் நிமித்தம் அது வெளிப்பட்டதும் அரசனுல் ஏற்படுவது.

[88] நீ நேரில் கண்டதும் கேட்டதும் எங்கள் முயற்சியால் பின்னர் அறிந்துகொள்ளப்படும் என்பது.

[89] சான்றாக வினவப்படுவோர் மூவர் ஆதலின் ஒன்றுகூடி எனப்பட்டது. 'ஆண்டுப் பார்ப்பனனை நோக்கி' என்பது தொடங்கி 'உண்மையை வெளிப்படுத்துக' என்பதுகாறும் உள்ள பகுதிகளின் மூலம் ஈண்டு

[90]வெளிப்படுத்தவில்லையானால் [91]ஏழு நாட்களுக்குமேல் [92]பன்னிரண்டுபணம் தண்டமும் [93]மூன்று பக்கங்களுக்குமேல் [94]வழக்குப் பொருளையும் கொடுத்தல்வேண்டும்.

சான்றுகூறுவோர் வேறுபடுவாராயின் பலரும் தூய்மையுடையோரும் ஏற்றுக்கொள்ளப்பட்டாரும் [95]எவ்வாறு எண்ணுகின்றனரோ அவ்வாறு துணிதல்வேண்டும். [96]நடுவாகவும் கொள்ளலாம். [97]அப்பொருளை அரசனும் கொள்ளலாம். சான்

மொழிபெயர்க்கப்பட்டபடி இருந்தாலும் மூலவாக்கியங்கள் ஒரோவிடங்களில் சிதைந்திருப்பதாகக்கொண்டு திருத்தி இயைத்துப் பின்வருமாறு கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். வருமாறு:—'ஆண்டுப் பார்ப்பனனை நோக்கி உண்மையைக் கூறுக பிறழக் கூறுவாயானால் உனக்கு வேள்விப்பயன் உண்டாகாது எனவும், அரசகுலத்தவனை நோக்கி உண்மையைக் கூறுக பிறழக்கூறுவாயானால் ஒப்புரவறத்தின் பயன் உனக்கு உண்டாகாது எனவும், வணிககுலத்தவனை நோக்கி உண்மையைக் கூறுக பிறழக்கூறுவாயானால் ஓடு கையிலேந்தி ஐயமேற்பதன் நிமித்தம் பகைவர் இல்லத்தை அடைவாய் எனவும், சூத்திரனை நோக்கி உண்மையைக் கூறுக பிறழக்கூறுவாயானால் பிறப்புமுதல் இறப்புவரையுள்ள உன் புண்ணியப் பயன் அரசனையும் அரசனது தீவினைப்பயன் உன்னையும் அடையும் எனவும் கூறல்வேண்டும். பிறழக்கூறுவீராயின் நீவிர் கண்டதும் கேட்டதும் பின்னர் உள்ளவாறு அறியப்படும். ஆதலின் பொய் கூறியதற்குரிய தண்டமும் உம்மைப் பற்றும். நீவிர் ஒன்றுகூடிச் சூழ்ந்து உண்மையை வெளிப்படுத்துங்கள் என்றும் கூறல்வேண்டும் என்பதாம்.

90 சான்றுகூறுவோர் உண்மையை வெளிப்படுத்தவில்லையானால் என்பது.

91 ஏழுநாள் என்றதனால் உண்மையைக் கூறுதற்கு ஏழுநாள் அவகாசம் கொடுக்கவேண்டும் என்பது போதரும்.

92 தாழ்க்குநாள் ஒவ்வொன்றிற்கும் பன்னிரண்டு பணவீதம் என்பது கருத்து.

93 மூன்றுபக்கம்—நாற்பத்தைந்து நாட்கள்.

94 குறிப்பிட்ட தண்டத்துடன் வழக்குப்பொருளைக் கொடுத்தல் வேண்டும் என்பது.

95 எல்லோரும் ஒருங்கியைந்து எப்படிக் கருதுகின்றனரோ அவ்வழியே துணிதல்வேண்டும் என்பது.

96 மேற்கூறிய முத்திறத்தார் எண்ணங்களும் வாதிப்பிரதிவாதியாகிய இருவர்பக்கத்தும் சமனாக இருக்குமாயின் ஏதாவது ஒருபக்கத்தை அறங்கூறவையத்தார் துணியலாம் என்பது கருத்து.

97 மேற்கூறிய இருவகையான தீர்ப்புக்களுக்கும் இடனில்லாதபொழுது வழக்குப்பொருளை அரசன் அடையலாம் என்பது.

றுவார் வழக்குப்பொருளைக் [98]குறையக் கூறுவாராயின் வழக்காளி [99]மிகுதியின் ஐந்து மடங்கு [100]செலுத்தல் வேண்டும். [101]மிகுதியாகக் கூறுவாராயின் அம்மிகுதியை அரசன் கொள்ளலாம். வழக்காளியின் சோர்வினுல் [102]மாறுபடக் கேட்கப்பட்டு மாறுபட எழுதப்பட்டதையும் [103]இறப்பினுல் ஏற்பட்ட கலக்கத்தையும் நன்குக ஆராய்ந்து [104]சான்றுகூறுவாரது நம்பிக்கையைப் பொறுத்தே துணிதல்வேண்டும்.

தனித்தனியாக வினவுங்கால் [105]சான்று கூறுவாருடைய பிறழ்ச்சிகளில் இடம் காலம் காரியம் என்னும் இவற்றிற்கு முறையே பூர்வ மத்தியம உத்தமசாகசம் தண்டங்களாம் என்பர் [106]ஒளசனசர்.

[107]பொய்ச்சான்றுகூறுவோர் பொய்யாக எவ்வளவு கூறினரோ உண்மையை எவ்வளவு மறைத்தனரோ அவ்வளவின்

---

[98] குறையக்கூறுதல் — வாதியினுல் விரும்பப்பட்ட பொருளளவிற் குறையக் கூறுதல்.

[99] மிகுதி—வழக்காளியால் விரும்பப்பட்ட அளவில் சான்றுவார்கூறிய அளவுகழித்து எஞ்சியபகுதி.

[100] அரசனுக்குத் தண்டமாகச் செலுத்தவேண்டும் என்பது.

[101] வழக்காளியால் விரும்பப்பட்ட அளவின் அதிகமாகச் சான்றுவார் கூறுவாராயின் அம்மிகுதியை அரசன் கொள்ளலாம் என்பது.

[102] வழக்காளிகூறியதை எழுத்தாளன் மாறுபடக்கேட்டு மாறுபட எழுதியதையும் என்பது.

[103] எழுத்தாளனது உறவினர்மரணம் முதலியவற்றுல் அவன்மனம் கலக்கமுற்றிருப்பதையும் என்பது.

[104] மேற்கண்ட பிறழ்ச்சியான நிகழ்ச்சிகளில் சான்றுகூறுவாருடைய நம்பிக்கையைப்பொறுத்து வழக்கைத் துணிதல்வேண்டும் என்பது.

[105] சான்றுகூறுவார் பிறழக்கூறுவாராயின் அப்பிறழ்ச்சி இடத்தைப் பற்றியதாயின் பூர்வசாகச தண்டமும் காலத்தைப்பற்றியதாயின் மத்தியம சாகசதண்டமும் காரியத்தைப்பற்றியதாயின் உத்தமசாகச தண்டமும் ஆம் என்பது.

[106] ஒளசனசர் — சுக்கிராச்சாரியரின் பரம்பரையினர்; உசனஸ்—சுக்கிரன்.

[107] எவ்வளவு பொருள் பொய்ம்மையாகக் கூறப்பட்டதோ உண்மையாகவுள்ள பொருளில் எவ்வளவு மறைத்துக் கூறப்பட்டதோ அப்பொருளவின் பத்து மடங்கு தண்டமாகச் செலுத்தல்வேண்டும் என்பது மநுவின் வழிப்பட்டோர் கொள்கையாம்.

பத்து மடங்கு தண்டமாகக் கொடுத்தல்வேண்டும் என்று கூறுவர் மானவர்.

[108]பிடிவாதமாகப் பொய்ம்மை கூறுவார்க்குச் சித்திரவதை தண்டமாம் என்பர் [109]வியாழன்வழிப்பட்டோர்.

[110]துருவமாகச் சான்ருவாரே விஞவத்தக்கவர் ஆவர். அல்லாதார் அங்ஙனமாகார் என்பர் கௌடலியர். [111]விஞவுதற்கில்லார் இருபத்துநான்கு பணமும் [112]துருவமல்லாதார் அதனில் பாதியும் தண்டம் இறுத்தல்வேண்டும்.

சுலோகம்

[113]காலத்தாலும் இடத்தாலும் அணிமையிலுள்ளவர்களைச் சான்ருகச் [114]செய்தல்வேண்டும். சேய்மையிலுள்ளவர்களையும் [115]வாராதவர்களையும் நீதிமன்றத்தலைவன் கட்டளைப்படி அழைப்பித்தல்வேண்டும்.

மூன்ரும் அதிகரணம் ஏழாம் பிரகரணம் "கடன்கோடல்" என்னும் அறுபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

108 கூறுவது பொய்ம்மை என்று அறிந்தும் கூறுவார்க்கு இத்தண்டம் என்பது கருத்து.

109 வியாழன் வழிப்பட்டோர்—பிருகஸ்பதியின் வழியினர்.

110 துருவம்—உண்மையை உறுதியாகத் தெளிந்து கூறுதல். அணிமையிலுள்ள நாற்பது இல்லங்களுக்குத் தலைவராதலுமாம்.

111 விஞவுதற்கில்லார் — விஞவுதற்கு அழைக்கப்பட்டும் வாராத துருவச் சான்ருவார்.

112 துருவச் சான்ருகாதவர் அழைக்கப்பட்டும் வரவில்லையாஞல் பன்னிரண்டு பணம் தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது.

113 சான்ருவார் ஒரு நிகழ்ச்சியை அணிமையான இடத்திலிருந்து அணிமையான காலத்தில் கண்டவராக இருத்தல்வேண்டும் என்பது கருத்து.

114 வழக்காளி தானே அழைத்துவந்து சொல்லுவித்தல் வேண்டும் என்பது.

115 வாராதவர்கள்—அணிமையிலிருந்தும் அழைக்கப்பட்டும் வாராதவர்கள்.

மூன்றும் அதிகரணம்—அறநிலையாட்சி

எட்டாம் பிரகரணம்—[1]அடைக்கலப்பொருளியல்

அறுபத்தொன்பதாம் அத்தியாயம்

[2]கடனைப்பற்றிய விதியால் [3]அடைக்கலப் பொருளிற்கும் கூறப்பட்டபடியாம். [4]பகைப்படையாலும் [5]காட்டில் வாழ்வோராலும் அரணிற்கும் நாட்டிற்கும் கேடுண்டாய காலத்தும் கள்வரால் கிராமத்திற்கும் வாணிகக்குழுவிற்கும் ஆனிரைக்கும் கேடுநேர்ந்தவிடத்தும் [6]வஞ்சகத்தால் அழிவுநேர்ந்தவிடத்தும் ஊர்நடுவண் நெருப்பாலும் [7]நீராலும் கேடுநேர்ந்தவிடத்தும் சிறிதளவு எடுக்கப்பட்டும் சிறிதளவு எடுக்கப்படாமலுமுள்ள [8]வெளிப்படுத்தத்தக்க

69-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அடைக்கலப்பொருள் விவாதத்திற்கு இடமாகுங்கால் கடனுகவுள்ள பொருளைப்போலக் கருதப்பட்டு வழக்கிடத்தக்கதாகலின் கடன்கோடலின் பின் இது வைக்கப்பட்டது. இதனுல் பிரகரண இயைபுண்மை யறிக.

[2] கடன்கொண்டவன் தானும் தன் புதல்வர் முதலியோரும் அதனைத் திருப்பிக்கொடுத்தற்கு உரியராவர் என்பதும் அதுபற்றி வழக்கு ஏற்படுமாயின் சான்று முதலியவற்றைக்கொண்டு துணிதல்வேண்டும் என்பதும் கடனைப்பற்றிய விதியாகும். அவ்விதியே அடைக்கலப்பொருளிற்குமாம் என்பது கருத்து.

[3] அடைக்கலப்பொருள் என்பது உபலக்கணத்தால் ஈட்டுப்பொருள் கட்டளைப்பொருள் ஒப்படைப்பொருள் என்னும் இவற்றையும் குறிக்கும். கட்டளைப்பொருள் ஒப்படைப்பொருள் இவற்றின் இயல்பை இவ்வத்தியாயத்தின் 51, 52-ஆம் குறிப்புக்களிற் காண்க.

[4] இனி அடைக்கலப்பொருள் இன்ன இன்ன நிகழ்ச்சிகளில் திருப்பிக்கொடுக்கத்தக்கதன்று என்பதைப்பற்றிக் கூறுகின்றார்.

[5] காட்டில் வாழ்வோர்—வேடர் முதலியோர்.

[6] பிறருடைய வஞ்சகச் செயலால் அடைக்கலப்பொருளுக்கு அழிவு நேர்ந்தவிடத்தும் என்பது.

[7] நீரால் கேடு நேர்தல்—வெள்ளப்பெருக்கினுல் அழிவுண்டாதல்.

[8] வெளிப்படுத்தத்தக்க குப்பியப்பொருளாவது :—38-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்ட பெயர்க்கத்தக்கதும் பெயர்க்கத்தகாததுமாகிய குப்பியப்பொருள்களுள் பெயர்க்கத்தக்கது. அப்பொருள் நெருப்பினுலும் நீரினுலும் கேடடைந்தவிடத்து அஃதடைக்கலப் பொருளாயினும் திருப்பிக்கொடுக்கத்தக்கதன்று என்பது கருத்து. ஈண்டு வெளிப்படுத்தத்தக்க

குப்பியப்பொருளையும் [9]நெருப்புச்சுடரால் தடைநேர்ந்தவிடத்தும் [10]தோணி இயக்குவோன் உயிர்பிழைத்திருப்ப அத்தோணி மூழ்கிய விடத்தும் திருடப்பட்டவிடத்தும் அடைக்கலப்பொருள் திருப்பிக் கொடுக்கத்தக்கதன்று.

அடைக்கலப்பொருளை [11]அநுபவிப்பவன் காலஇடங்களுக் கேற்ப [12]அநுபவக்கூலியும் பன்னிரண்டு பணம் தண்டமும் செலுத்தல்வேண்டும். அநுபவநிமித்தம் வைக்கப்பட்ட பொருள் பிறரால் கவரப்பட்டாலும் அழிந்துபோனாலும் [13]திருப்பிக்கொடுத் தல் வேண்டும். இருபத்துநான்கு பணம் [14]தண்டமுமாம். [15]வேறு வகையாக வெளிப்பட்டாலுமாம். [16]இறந்தவன் துன்பத்தில் மூழ்கினவன் என்னும் இவரிடத்தில்நின்றும் அடைக்கலப் பொருள் திருப்பிப்பெறத்தக்கதன்று.

குப்பியப்பொருள் என்றமையால் வெளிப்படுத்தத்தகாத குப்பியப் பொருட்கு நீர்நெருப்புக்களால் அழிவுநேர்ந்தால் அதுபற்றிக் குற்றம் நேராது என்பது பெறப்படும்.

9 நெருப்புச்சுடரால் அடைக்கலப்பொருள் வைக்கப்பட்ட இடத்தை அடைதற்குத் தடை உண்டாயபொழுதும் என்பது.

10 நீரில் செலுத்தப்படும் தோணி கவிழ்ந்துவிட்டாலும் பிறரால் கவரப் பட்டாலும் அதன்கண் உள்ள அடைக்கலப்பொருள் அத்தோணி இயக்கு வோன் உயிர்பிழைத்திருப்பினும் அவனால் திருப்பிக்கொடுக்கத்தக்கதன்று என்பது.

11 அப்பொருட்குரியவனது உடன்பாடில்லாமல் அநுபவிப்பவன் என்பது.

12 அநுபவக்கூலியைப் பொருட்குடையானுக்கும் அவன் அநுமதியின்றி அநுபவித்த குற்றத்திற்குரிய தண்டத்தை அரசனுக்கும் கொடுத்தல் வேண்டும் என்பது.

13 திருப்பிக்கொடுத்தல் அப்பொருளின் பெறுமதியை என்க.

14 இத்தண்டம் அப்பொருட்குக் கேடுவிளைத்தவனுக்கென்பது.

15 அப்பொருளை அநுபவியாமலே வெளிப்படுத்திவிடினும் இருபத்து நான்கு பணம் தண்டமாம் என்பது.

16 அடைக்கலப்பொருளை ஏற்றுக்கொண்டவன் அப்பொருளைக்கெடுத்து இறந்துவிடுவானாயினும் துன்பத்தில் மூழ்கினானாயினும் முறையே அவன் மக்களிடத்தினின்றும் அவனிடத்தினின்றும் அடைக்கலப்பொருள் திருப்பிப் பெறத்தக்கதன்று என்பது கருத்து.

[17]ஈடுவைத்தல் விற்றல் மறைத்துவிடல் என்னும் இவற்றைச் செய்தவனுக்கு [18]நான்குமடங்கும் ஐந்தில் ஒருகூறும் தண்டமாம். [19]மாற்றிவிடினும் வெளிப்படுத்திவிடினும் விலையளவு தண்டமாம்.

[20]இதனால் ஈட்டுப்பொருளை அழித்தல் அநுபவித்தல் விற்றல் ஈடுவைத்தல் கவர்தல் என்னும் இவற்றிற்கும் [21]விதி கூறப்பட்ட படியாம்.

[22]அநுபவிக்கப்படும் ஈடு [23]அழிவிலதாகும். இதன் மூலப் பொருளுக்கு [24]வட்டியின்று. [25]அநுபவமில்லாத ஈடு அழிவுடைய தாம். [26]உடன்பாடில்வழி இதன் மூலப்பொருள் வட்டியுடைய தாம்.

---

[17] அடைக்கலப்பொருளை ஈடுவைத்தல் முதலியன செய்தவனுக் கென்பது.

[18] அடைக்கலப் பொருளளவின் நான்கு மடங்கு அப்பொருட்குரிய வனுக்கு இழப்பீடாகவும் அந் நான்குமடங்கில் ஐந்தில் ஒருகூறு அரச னுக்குத் தண்டமாகவும் செலுத்தல்வேண்டும் என்பது.

[19] அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருளை மாற்றிவிட்டாலும் பிறி தோரிடத்தில் விலக்கிவைப்பினும் அப்பொருளின் விலையளவு தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது.

[20] இதனால்—அடைக்கலப் பொருளுக்குக் கூறிய விதியினால்.

[21] அடைக்கலப்பொருளை அழித்தல் முதலியன செய்தவனுக்கு விதிக்கப் பட்ட தண்டங்களே ஈட்டுப்பொருளை அழித்தல் முதலியன செய்தவனுக் கும் ஆம் என்பது கருத்து.

[22] அநுபவித்தல் — ஈட்டுப் பொருளினின்றும் வருவாயை நுகர்தல். ஒரு பசுவை ஈடாகப்பெற்றால் அதன் பாலைக்கறந்து அநுபவித்தல் போல்வது.

[23] அழிவிலதாதல் — குறிப்பிட்ட கால எல்லை கடந்தும் நாசமடை யாமை. காலவரையறையின்றி எப்பொழுதாயினும் பொருளைப் பெற்றுக் கொண்டு உடைமையைத் திருப்பிக் கொடுத்துவிடுதல்.

[24] பயன் அநுபவிக்கப்படுவதால் வேறாக வட்டி இல்லை என்பது. வட்டி யில்லாமல் பயன் அநுபவிக்கப்படும் ஈடு, இக்காலத்தில் 'ஒற்றி' என்று வழங்கப்படும்.

[25] பயன் அநுபவிக்கப்படாத ஈடு, குறிப்பிட்ட கால எல்லை கடந்தால் திருப்பிப்பெறத் தகாததாகும் என்பது.

[26] ஈட்டுடைமைக்குரியவன் பயனை அநுபவிக்கும்படி ஈடுபெற்ற வனுக்கு அநுமதி கொடுக்கவில்லையானால் அந்த ஈட்டின்பேரில் கொடுக்கப் பட்ட பொருளுக்கு வட்டியுண்டென்பது கருத்து. பயனை அநுபவிக்கும் படி உடன்பாடுபெற்றும் அநுபவிக்கவில்லையானால் அது கடன் கொடுத்தவ னுடைய குற்றமாதலின் அப்பொருளுக்கு வட்டி இல்லை என்று கொள்ளல் வேண்டும்.

[27]தன்பால் வந்தவனுக்கு ஈட்டுடைமையைத் [28]திருப்பிக் கொடாவிட்டால் பன்னிரண்டுபணம் தண்டமாம். ஈடுபெற்ற வன் [29]அணிமையில் இல்லையானால் ஈட்டுக்குரிய பொருளை அவ்வூர்ப் பெரியோர்களிடத்தில் கொடுத்துவிட்டு ஈட்டுடைமை யைத் திருப்பிப் பெறக்கடவன். உரியகாலத்தில் பொருள் கொடுக்கப்பட்டு விடுதலைபெற்ற ஈட்டுடைமை [30]வட்டியில்லாமல் [31]அவனிடத்திலேயே [32]கவரப்படாமலும் [33]அழிவில்லாமலுமிருத் தற்குரிய [34]கருவிகளுடன் வைக்கப்படலாம். உடைமைக்கு [35]அழி வுண்டாம் என்னும் அச்சம் காரணமாக நீதிபதிகளின் அநுமதி பெற்று [36]உரியவன் முன்னிலையில் [37]உயர்ந்த விலைக்கு அவ்வுடை மையை விற்றுவிடலாம். ஈட்டுடைமையைப் பாதுகாப்பவன் [38]கருத்துக்கேற்பவும் செய்யலாம்.

---

27 தன் என்பது ஈடுபெற்றவனைக் குறிக்கும். ஈட்டுடைமையைத் திருப்பிப்பெறுதற்குரிய காலத்தில் உரியபொருளுடன் வந்து அப்பொருளைச் செலுத்தினவனுக்கென்பது.

28 உரியபொருளைப் பெற்றுக்கொண்டு உடைமையைத் திருப்பிக் கொடுக்க மறுத்தால் என்பது.

29 அணிமையிலில்லாமை — அயல்நாடு முதலியவற்றிற்குச் சென் றிருத்தல்.

30 திருப்பிப்பெறவேண்டிய ஈட்டுடைமை மீண்டும் முன் ஈடு பெற்றவ னிடத்தே வைக்கப்படுதலால் அதற்கெனக் குறிப்பிட்ட பொருள் பெறப் பட்டதாயினும் உடைமையை வைத்திருத்தல்பற்றி அப்பொருட்கு வட்டி யின்றென்பது கருத்து.

31 அவனிடத்தில்—முன் ஈடு பெற்றவனிடத்தில்.

32 கவரப்படுதல் — உடைமைக்குரியவன் அணிமையிலில்லாமையால் பிறரால் அபகரிக்கப்படுதல்.

33 அழிவு—பாதுகாக்கப்படாமையால் ஏற்படும் கேடு.

34 கருவி—காவலாளை நியமித்தல் முதலியன.

35 அழிவு—பசு முதலியவற்றிற்குப் பருவமுதிர்ச்சி முதலியவற்றால் நேரும் கேடுபோல்வது.

36 உரியவன்—ஈட்டுடைமைக்கு உரியவன்.

37 உயர்ந்தவிலை என்றதனால் உடைமையின் மதிப்பிற்குச் சற்று மேற் பட்ட விலை கிடைக்குமானால் விற்றுவிடலாம் என்பது கருத்து.

38 கருத்துக்கேற்றல்—விற்றுவிடுதல் அல்லது வைத்துப் பாதுகாத்தல் என்னும் இரண்டனுள் ஒன்று.

[39]நிலையியற்பொருள் [40]முயற்சியால் நுகரத்தக்கதும் [41]பயனாக நுகரத்தக்கதும் ஆம். [42]ஊதியக்கூற்றால் [43]கொடுத்த பொருளைக் குறையாமல் [44]நேர்செய்து ஈட்டுடைமையைத் திருப்பிக் கொடுத்து விடல் வேண்டும்.

[45]உடன்பாடில்லாமல் ஈட்டுடைமையை அநுபவிப்பவன் [46]ஈட்டுப்பொருளிலிருந்து அநுபவக் கூலியையும் ([47]அரசனுக்குரிய) கூற்றையும் [48]கொடுத்தல்வேண்டும். [49]எஞ்சியவெல்லாம் அடைக்கலப் பொருட்குக் கூறியபடியாம்.

[50]இதனால் [51]கட்டளைப்பொருள் [52]ஒப்படைப்பொருள் இவ்விரண்டிற்கும் விதி கூறப்பட்டபடியாம். ஒப்படைப் பொருளைக்

---

[39] நிலையியற்பொருள்—நிலம் மரம் முதலியன.

[40] முயற்சியால் நுகரத்தக்கது — ஈடுவாங்கினவன் முயன்று பயன் பெறத்தக்கது.

[41] ஈட்டுடைமைக்காரன் முயற்சியால் பயனுண்டாக்க அதனை ஈடு பெற்றவன் அநுபவிப்பது.

[42] ஊதியக்கூறு—ஈடாகப் பெற்ற பொருளைக்கொண்டு வாணிகம் செய்து அதனாற் கிடைக்கும் ஊதியத்தில் இவ்வளவு கூறு உடைமைக்காரனுக்குக் கொடுப்பதென்று வரையறுத்துக்கொள்வது.

[43] கொடுத்தபொருள்—ஈட்டுடைமைக்காரக் கொடுக்கப்பட்டபொருள்.

[44] நேர்செய்தல்—தீர்த்துவிடுதல்.

[45] ஈட்டுடைமைக் குரியவனுடைய அநுமதியில்லாமல் என்பது.

[46] ஈட்டுப்பொருள்—ஈட்டுடைமைக்காரக் கொடுக்கப்பட்ட பொருள்.

[47] அரசனுக்குரியகூறு—உடன்பாடுபெறாமல் அநுபவித்ததன் நிமித்தம் அரசனுக்கு இறுக்கவேண்டிய தண்டம்.

[48] ஈட்டுடைமைக்காரத் திருப்பிப் பெறவேண்டிய பொருளில் அநுபவக் கூலியையும் அரசனுக்குரிய தண்டத்தையும் கழித்து எஞ்சியதைப்பெற்றுக் கொள்ளவேண்டுமேயன்றி முழுவதையும் பெற இயலாது என்பது கருத்து.

[49] இதற்குச் சொல்லப்படாத ஏனைய விதிகளெல்லாம் அடைக்கலப் பொருளுக்குக் கூறியபடி கொள்ளல்வேண்டும் என்பது.

[50] ஈட்டுக்குக்கூறிய விதியினால் என்பது.

[51] கட்டளைப்பொருள்—ஒருவனிடத்தில் கொடுக்கும்படி சொல்லி மற்றொருவன் கையில் கொடுக்கப்படுவது.

[52] ஒப்படைப்பொருள் — இத்துணைத்தூரம் வரை வழியிற் பாதுகாத்துத் திருப்பித்தரல் வேண்டும் என்று ஒருவனிடத்தில் ஒப்படைக்கப்படுவது.

கைவசப்படுத்திக்கொண்டு வாணிகக்குழுவோடு சென்றவன் குறிப்பிட்ட இடத்தை அடைதற்கு இடையில் கள்வரால் பொருள் கவரப்பட்டு [53]விடுதி பெறுவானாயின் அந்த ஒப்படைப்பொருள் திருப்பிக்கொடுக்கத்தக்கதன்றாம். இடைவழியில் [54]இறந்துவிடுவானாயின் அவனுடைய ஞாதிகள் அப்பொருளைத் திருப்பிக் கொடுக்கவேண்டியதில்லை. மற்றைய விதிகள் அடைக்கலப் பொருட்குக் கூறியபடியாம்.

[55]இரவலாகவும் [56]வாடகைக்காகவும் கொண்ட பொருளை [57]வாங்கியபடியே திருப்பிக் கொடுத்தல்வேண்டும் விலங்கு முதலியவற்றின் அச்சத்தாலும் கள்வர்பயத்தாலும் [58]காலம் இடங்களால் தடைப்பட்டவிடத்தும் கொண்டபொருள் கவரப்பட்டு அல்லது அழிந்துவிடுமானால் அது திருப்பிக் கொடுக்கத்தக்கதன்று. எஞ்சியவிதி அடைக்கலப் பொருளுக்குக் கூறியபடியாம்.

இனி [59]பணியாளர் விற்பனைசெய்யுமாறு கூறப்படுகின்றது. பணியாளர் [60]காலம் இடங்களுக்கேற்ப விலைப்பண்டத்தை விற்று விற்பனையிலிருந்து கிடைக்கும் விலைப்பொருளையும் ஊதியத்தையும் [61]கொடுத்துவிடல் வேண்டும். எஞ்சியவிதி அடைக்கலப் பொருளுக்குக் கூறியபடியாம்.

---

53 பொருளைக் கள்வரிடத்தில் பறிகொடுத்துத் தான்மாத்திரம் விடுதலை பெறுவானாயின் என்பது.

54 ஒப்படைப் பொருளைக்கொண்டு செல்பவன் இறந்துவிடின் என்பது.

55 இரவற்பொருள்—மீண்டு தருவதாகக்கூறி அநுபவசிமித்தம் ஒருவனிடத்தினின்றும் பெற்றுக்கொண்ட பொருள்.

56 வாடகை—அநுபவிப்பதற்காகக் கொடுக்கப்படும் கூலி.

57 வாங்குங்கால் அப்பொருள் எப்படியுள்ளதோ அப்படியே திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பது.

58 காலம் இடங்களால் உண்டாம் தடை—இத்துணைக் காலம் வரை அல்லது இவ்விடத்தினின்றும் வேற்றிடம் பெயர்தலாகாது என்று அரசியல் முதலிய காரணங்களால் ஏற்படுவது.

59 ஒருவனுடைய பொருளை அவனுடைய பணியாளர் விற்பனைசெய்யும் முறையைக் கூறத்தொடங்குகின்றார் என்பது.

60 காலம் இடங்களுக்கேற்ப என்பது, காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்திய விலைப்படி எனவும் தலைவனால் வரையறுக்கப்பட்ட காலம் இடங்களைக் கடவாமல் எனவும் பொருள்தரும்.

61 தலைவனுக்குக் கொடுத்துவிடல்வேண்டும் என்பது.

[62]காலம் இடங்களைக் கடத்தலால் குறைவு ஏற்படின் குறிப்பிட்ட காலத்திலுள்ள விலைப்படி விலைப்பொருளையும் ஊதியத்தையும் [63]கொடுத்தல்வேண்டும்.

[64]தம்முட் பேசிக்கொண்டபடி விற்கப்படின் [65]இரண்டையும் அடையமாட்டார். விலைத்தொகையை மாத்திரம் [66]கொடுத்தல் வேண்டும். விலையின் வீழ்ச்சியால் குறைவு ஏற்படின் [67]குறைவுக்குத்தக நிரப்பிக் கொடுத்தல்வேண்டும்.

[68]கொண்டு விற்றல் செய்பவர் நம்பிக்கைக்கு உரியராய் அரசனால் [69]தடைப்படுத்தப்படாதவராய் இருப்பின் விலங்கு முதலியவற்றின் அச்சத்தாலும் கள்வர்பயத்தாலும் விலைப்பண்டம் கவரப்பட்டு அல்லது அழிந்துவிடுமானால் [70]விலைத்தொகையையும் கொடுத்தல்வேண்டும் என்பதில்லை. [71]காலம் இடங்களால் வேறுபட்ட விலைப்பண்டங்களுக்குக் குறைவையும் செலவையும் கழித்துக்கொண்டு விலையளவையும் ஊதியத்தையும் கொடுத்தல்

---

62 விலைப்பண்டங்களைத் தலைவன்குறிப்பிட்ட காலம் இடங்களைக் கடந்து விற்றமையால் ஊதியக்குறைவு ஏற்படின் என்பது.

63 தலைவனுக்குப் பணியாளர் கொடுத்தல்வேண்டும் என்பது.

64 தம்முட் பேசிக்கொள்ளல்—இன்ன விலைக்கு விற்கவேண்டும் என்று தலைவரும் பணியாளரும் பேசிக்கொள்ளுதல்.

65 விலைத்தொகையும் கிடைக்கும் ஊதியமுமாகிய இரண்டையும் தலைவர் அடைதற்கு உரியரல்லர் என்பது.

66 தலைவர்க்குப் பணியாளர் கொடுத்தல்வேண்டும் என்பதும் ஊதியத்தைப் பணியாளரே எடுத்துக்கொள்ளலாம் என்பதும் கருத்து.

67 அக்குறைந்த அளவை நிறைத்துத் தலைவர்க்குக் கொடுத்தல் வேண்டும் என்பது.

68 கொண்டுவிற்றல்—பிறருடைய விலைப்பண்டத்தை ஏற்றுக்கொண்டு விற்பனை செய்தல்.

69 தடைப்படுத்தப்படாமை—எக்காரணத்தை முன்னிட்டும் அரசியலாரால் தடைசெய்யப்படாமை.

70 ஊதியமேயன்றி விலைப்பண்டத்தின் விலையும் கொடுக்கவேண்டும் என்பதில்லை என்பது.

71 கால நீட்சியாலும் தொலைவிடத்தாலும் விலைப்பண்டங்களுக்கு ஏற்படும் குறைவையும் கூலி முதலிய செலவையும் விலைத்தொகையிலிருந்து கழித்துக்கொண்டு எஞ்சிய தொகையையும் ஊதியத்தையும் தலைவர்க்குக் கொண்டுவிற்பவர் கொடுத்தல்வேண்டும் என்பது.

வேண்டும். [72]பண்டமாற்றுத் தொகுதியில் தனித்தனி கூறுண்டு. எஞ்சியவிதி அடைக்கலப் பொருளுக்குக் கூறியபடியாம். இதனால் பணியாளர்செய்யும் விற்பனைக்கும் விதி கூறியபடியாம்.

அடைக்கலப் பொருளுக்குக் கூறிய விதியே [73]பணிப்பொருளுக்குமாம். [74]ஒருவனால் தரப்பட்ட பணிப்பொருள் மற்றொருவனிடம் கொடுக்கப்படின் அஃது இழக்கப்பட்டதாகும். பணிப்பொருள் [75]கவரப்படுமாயின் [76]பண்டை ஒழுக்கமும் பணிப்பொருளாளன் தகுதியும் [77]பிரமாணமாகும். பொற்கொல்லர் [78]தூய்மையற்றவராக அவர்பால் [79]சான்று முதலியன இல்லாமற் கொடுக்கப்பட்ட பணிப்பொருளை [80]மறைப்பாராயின் பணிப்பொருளாளன் சுவர்மறைவிலிருக்கும் சான்றுகூறுவார் அறிந்துகொள்ளுமாறு [81]மறைவில் அவரை வணங்கித் தெரிவிக்குமாறு செய்தல்வேண்டும். அல்லது காட்டில் வைத்து [82]உண்டாட்டினால் மகிழ்வித்தும் தெரிவிக்கச் செய்யலாம்.

---

[72] ஒரு பண்டத்தை வேற்றுநாட்டில் விற்று அங்கிருந்து பிறிதொரு பண்டம் விலைக்கு வாங்கிக்கொண்டு வரப்படுமாயின் அவ்விரண்டானும் ஏற்படும் ஊதியத்தில் கொண்டுவிற்பவருக்குக் கூறு உண்டென்பது கருத்து.

[73] பணிப்பொருள்—அணிகலன் முதலியன செய்தற்பொருட்டுப் பொற்கொல்லனிடத்துக் கொடுக்கப்பட்ட பொன் முதலியன.

[74] அணிகலன் செய்வதற்காக ஒருவன் தந்த தங்கம் முதலியவற்றை அறியாமையால் பிறனொருவனிடம் திருப்பிக் கொடுப்பின் கொடுத்த பொற்கொல்லன் அதனை இழந்ததாகக்கொண்டு முன் தந்தவனுக்கு ஈடுசெய்தல் வேண்டும் என்பது கருத்து.

[75] கள்வர் முதலியோரால் கவரப்பட்டுவிட்டதாகப் பொற்கொல்லன் தெரிவிப்பானாயின் என்பது.

[76] பொற்கொல்லனது பண்டை ஒழுக்கம் என்பது.

[77] இருவர் நிலைமையும் அறிந்து உண்மை துணியத்தக்கது என்பது கருத்து.

[78] தூய்மையற்றவர்—பொய்கூறுவோர்.

[79] சான்று எழுத்து முதலியன இல்லாமல் நம்பிக்கையாகக் கொடுக்கப்பட்டதென்க.

[80] மறைப்பாராயின்—தரவில்லை என்று கூறுவாராயின்.

[81] மறைவில்—தனித்த இடத்தில்.

[82] உண்டாட்டு—கள் முதலியவற்றால் செய்யும் விருந்து.

[83]ஆண்டுமுதிர்ந்தவனாகவோ நோயுடையவனாகவோ உள்ள ஒரு வணிகன் மறைவில் பொற்கொல்லன்கையில் அடையாளமிடப்பட்ட பணிப்பொருளைக் கொடுத்துவிட்டுச் [84]சென்றுவிடுவானாயின் பின்னர் அவன்புதல்வனாதல் உடன்பிறந்தவனாதல் அவ் வணிகன்கட்டளைப்படி பொற்கொல்லனை அடைந்து அப்பணிப் பொருளைத் தரும்படி கேட்டல்வேண்டும். கொடுப்பின் தூய்மையுண்டு. [85]இன்றேல் அப் [86]பணிப்பொருளையும் திருட்டுக்குரிய தண்டத்தையும் இறுக்கக்கடவன்.

துறவறத்தில் விருப்பமுடையவனாக நம்பத்தக்க ஒருவன் அடையாளமிடப்பட்ட பணிப்பொருளைப் பொற்கொல்லன் கையில் கொடுத்துவிட்டுப்போய்ப் பின் காலங்கடந்து வந்து தரும்படிக் கேட்டல்வேண்டும். கொடுப்பின் தூய்மையுண்டு. இன்றேல் அப்பணிப்பொருளையும் திருட்டுக்குரிய தண்டத்தையும் இறுக்கக்கடவன். அல்லது [87]அடையாளத்தையறிந்து அப் பொருளைத் திருப்பியடைதல் வேண்டும். சிற்றினத்தைச் சேர்ந்த அறிவிலான் ஒருவன் [88]அரசனிடத்துச் சேர்ப்பிக்கும் விருப்பமுடையவனுக்கஞ்சி இரவில் [89]சிறந்த பணிப்பொருளைப் பொற் கொல்லன் கையில் கொடுத்துப் போதல்வேண்டும். பின்னர் அவன் [90]சிறைக்கூடத்திருந்து [91]இவனைத்தரும்படிக் [92]கேட்டல்வேண்டும்.

---

83 பொற்கொல்லனது பண்டை ஒழுக்கத்தை அறிந்துகொள்ளுதற்கு உபாயம் கூறுகின்றார்.

84 சென்றுவிடுதல் என்பதற்கு இறத்தல் என்று உரையாசிரியர் கூறுவர்.

85 இன்றேல்—கொடுக்கவில்லை என்று மறுத்தால்.

86 பணிப்பொருளை உரியவனுக்கும் தண்டத்தை அரசனுக்கும் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து. பின் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

87 தன்னாலிடப்பட்ட அடையாளத்தை யறிந்தென்பது.

88 அவ்வறிவிலானிடத்துள்ள சிறந்த பணிப்பொருளை அரசனிடத்துச் சேர்ப்பிக்கவேண்டும் என்று கேட்கும் அமைச்சன் முதலியோர்க்கு அஞ்சி என்பது கருத்து.

89 சிறந்த பணிப்பொருள்—இரத்தினங்கள் அழுத்தப்பட்ட உயர்ந்த பணிகள்.

90 அரசனிடத்துச் சேர்ப்பிக்கக்கேட்டதை மறுத்த குற்றத்திற்காகச் சிறைப்பட்டவன் என்க.

91 இவனை—பொற்கொல்லனை

92 தான் சிறைவிடுதி பெறும்பொருட்டுத் திருப்பித்தரவேண்டும் என்று கேட்டல்வேண்டும் என்பது.

கொடுப்பின் தூய்மையுண்டு. இன்றேல் அப்பணிப்பொருளையும் திருட்டுக்குரிய தண்டத்தையும் செலுத்தல்வேண்டும்.

[93]அடையாளத்தினால் பொற்கொல்லனுடைய இல்லத்தினுள்ள [94]மக்களிடத்தில் [95]இரண்டையும் தரும்படிக் கேட்டல் வேண்டும். ஒன்று கொடாவிட்டாலும் [96]முன்னர்க் கூறிய படியாம்.

[97]அவனுடைய [98]அநுபவப் பொருள்களைப்பற்றி [99]வினவுதல் வேண்டும். அதற்கு [100]அவன் கூறுகின்ற செய்தியையும் வழக்காளியின் பொருட்குரிய [101]தகுதியையும் ஏதுக்களால் [102]உய்த்துணர்தல் வேண்டும்.

[103]இதனால் [104]தனித்த கூட்டத்திற்கும் கூறப்பட்டபடியாம்.

---

93 பெற்றுக்கொண்ட பணிப்பொருள் முதலியவற்றைத் திருப்பிக் கொடாமல் பொற்கொல்லன் இறந்துவிடுவானாயின் செய்யத்தக்கது இன்னதென்பதைக் கூறுகின்றார்.

94 மக்கள்—மனைவி மக்கள் முதலியோர்.

95 இரண்டு—பணிப்பொருள்களுள் சிறந்தனவும் அல்லாதனவும்.

96 பணிப்பொருளையும் அதன் திருட்டுக்குரிய தண்டத்தையும் செலுத்தல்வேண்டும் என்பது கருத்து.

97 உண்மை பொய் என்பவற்றைத் துணிதற்பொருட்டு அறங்கூறவையத்தார் செய்யவேண்டியதைக் கூறுகின்றார். அவனுடைய—பணிப்பொருளை மறைப்பவனுடைய.

98 அநுபவப்பொருள்—அவன் இல்லத்திலுள்ள பொருள்.

99 வினவுதல்—இன்ன இன்ன பொருள்கள் எவ்வாறு உனக்குக் கிடைத்தன என்று கேட்டல்.

100 அவன்—பொற்கொல்லன்.

101 தகுதி—இப்பொருளை யானே தந்தேன் என்று சொல்லுகின்றவனுடைய நிலை.

102 அறங்கூறவையத்தார் ஊகித்தறியவேண்டும் என்பது.

103 இதனால் பணிப்பொருளை மறைத்ததற்குக் கூறப்பட்ட விதியினால்.

104 கந்தருவ முறைமையால் ஒருவனும் ஒருத்தியும் தனிமையில் மணந்துகொண்ட செய்தி மறைக்கப்பட்டவிடத்து அதன் உண்மை பொய்களைத் துணிதற்கும் விதி கூறப்பட்டதாகக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

சுலோகம்

[105]ஆதலால் சான்றுடன் கூடியதாகவும் வெளிப்படையாகவும் தன்னைச் சார்ந்தவரிடத்தாதல் பிறரிடத்தாதல் [106]காலம் இடம் அளவு வண்ணம் இவற்றை நன்கு [107]தெளிவுறுத்திக் காரியத்தைச் செய்தல்வேண்டும்.

மூன்றும் அதிகரணம் எட்டாம் பிரகரணம்
அடைக்கலப்பொருளியல் என்னும் அறுபத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[105] ஆதலால்—பொருளை மறைக்க நேர்வதாலும் அதன் உண்மை பொய் துணிதற்கு இயலாமையாலும்.

[106] பொருள்கொடுக்கப்பட்ட காலமும் இடனும் அப்பொருளின் அளவும் அதன் நிறமும் என்பது.

[107] பொருண்மறைத்தலைப் பரிகரித்தற்பொருட்டும் மறைவை அறிந்து கொள்ளுதற் பொருட்டும் தெளிவுறுத்தல்வேண்டும் என்பது.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

ஒன்பதாம் பிரகாரணம்—[1]அடிமைப்பணியாளர் இயல்பு

எழுபதாம் அத்தியாயம்

சிறந்த வாழ்க்கையும் வழக்கியற்பருவம் எய்தாமையும் உடைய [2]உதர தாசனல்லாத சூத்திரனை விற்றல் அல்லது ஈடு வைத்தல் செய்யும் [3]உறவினனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [4]வணிகனாயின் [5]இருமடங்கும் அரசனாயின் மும்மடங்கும் பார்ப்பனனாயின் நான்குமடங்கும் ஆம். [6]உறவினனல்லாதவனுக்கு ([7]முறையே) பூர்வ மத்தியம உத்தம சாகச தண்டங்களும் கொலைத்தண்டமும் ஆம். [8]கொள்வோனுக்கும் சான்றோர்க்கும் அங்ஙனமே.

70-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அடிமையாளர்—ஒரு தலைவனுக்குக் குடிவழியாக அடிமைப்பட்டுப் பணிபுரிபவர். பணியாளர் — கூலிபெற்று உழவு பசுக்காவல் முதலிய தொழில்புரிவோர். இயங்கியற்பொருள் நிலையியற்பொருளாகிய இரண்டனுள் ஒருவனுக்குரிய நிலையியற்பொருள் பிறனொருவனிடத்தில் அடைக்கலமாக வைக்கப்படின் அதனை விற்றல் முதலிய செய்திகள் முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டன. இப் பிரகரணத்தில் ஒருவனுக்குரிய இயங்கியற்பொருளாகிய அடிமைப் பணியாளர்களை உரியவன் விற்றல் முதலிய செய்திகள் கூறப்படுதலின் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] உதரதாசன் — வயிற்றுப் பிழைப்பிற்கு வழியற்றிருக்கும்போது ஊணும் உடையும் கொடுத்து ஒருவனால் காப்பாற்றப்படுபவன்.

[3] உறவினன் — விற்கப்படுபவனுக்கு உறவினனாகிய அம்மரபினன் என்பது.

[4] விற்கப்படுபவன் வணிகனாயின் என்பது.

[5] இருமடங்கு—இருபத்துநான்கு பணம். பின் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

[6] உறவினனல்லாதவன் — விற்கப்படுபவனுக்கு உறவினனல்லாத வேற்று மரபினன் என்பது.

[7] வேற்று மரபினனால் விற்கப்படுபவன் சூத்திரனாயின் விற்றவனுக்குப் பூர்வசாகச தண்டமும், வணிகனாயின் மத்தியமசாகச தண்டமும், அரசனாயின் உத்தமசாகச தண்டமும், பார்ப்பனனாயின் கொலைத்தண்டமும் ஆம் என்பது.

[8] விலைக்குக் கொள்வோனுக்கும் அதற்குச்சான்றாக உள்ளார்க்கும் இம் முறைப்படியே தண்டம் என்பது கருத்து.

[9]மிலேச்சர்கள் தம்மைச்சார்ந்த மக்களை விற்றல் ஈடுவைத்தல் குற்றமாகாது. [10]உயர்ந்தோருக்கு அடிமைத்தன்மை அறவே இன்று.

[11]ஆயினும் [12]குடிக்கு இடுக்கண் நேர்ந்தவிடத்தும் உயர்ந்தோர் பலர்க்கும் துன்பம் நேர்ந்தவிடத்தும் உயர்ந்தோன் ஒருவனை [13]ஈடாகவைத்து விடுவித்தற்குரிய பொருள் கைக்கு வந்ததும் முதலில் சிறுவனையாதல் [14]உதவிபுரிந்தவனையாதல் விடுவித்துக் கொள்ளல் வேண்டும்.

[15]தானே ஈடானவன் ஒருமுறை வெளிப்பட்டுவிடுவானாயின் ஈட்டழிவுடையனாவன். பிறனால் ஈடுவைக்கப்பட்டவன் [16]இருமுறையும் வேற்றுநாட்டுக்குச் செல்ல விரும்பும் [17]இருதிறத்தாரும் [18]ஒருமுறையும் (வெளிப்படுவாராயின் ஈட்டழிவுடையராவர்).

[19]பொருளைக்கவர்ந்த [20]அடிமையாளனுக்கு உயர்ந்தோன்

---

[9] மிலேச்சர்—ஈட்டி வாள் முதலிய கருவிகளுடன் காட்டில் வாழும் இழிந்த மாக்கள்.

[10] உயர்ந்தோர்—குடிப்பிறப்பு முதலியவற்றால் சிறந்த மேன்மக்கள்.

[11] ஆயினும்—உயர்ந்தவன் அடிமையாதல் இல்லையாயினும்.

[12] குடி—அவ்வுயர்ந்தோன் பிறந்தகுடி.

[13] நேர்ந்த இடுக்கணை ஒழித்தற்குவேண்டிய பொருணிமித்தம் ஈடாக வைத்தென்பது. ஈடாக வைத்து என்றதனால் விற்றல் கூடாது என்பது போதரும்.

[14] உதவி—தான் பிறந்தகுடிக்கும் உயர்ந்தோர் பலர்க்கும் நலம்செய்தல் கருதித் தானே ஈடாதற்கு ஒருப்படுதல்.

[15] பொருளைப் பெற்றுக்கொண்டு தன்னையே ஈடுபடுத்திக்கொண்டவன் பொருளாளனுக்குத் தெரியாமல் ஒருமுறை வெளிப்பட்டுப் போய்விடுவானால் அவ்வளவில் ஈட்டுரிமையைக் கெடுத்தவனாவான் என்பதும் அப்பொழுதே அந்த ஈட்டுக்கடன்பொருளை உரியவனுக்குச் செலுத்திவிடவேண்டும் என்பதும் கருத்து.

[16] இரண்டுமுறை வெளிப்பட்டுப் போய்விடுவானானால் ஈட்டழிவுடையனாவான் என்பது.

[17] இருதிறத்தார் — தானே ஈடானவனும் பிறனால் ஈடுவைக்கப்பட்டவனும்.

[18] ஒருமுறை வெளிப்பட்டாலும் ஈட்டழிவுடையராவர் என்பது.

[19] பொருள்—தலைவனுடையது.

[20] அடிமையாளன்—உதரதாசன்.

பொருளைக் கவர்ந்தவனுக்கு விதிக்கப்படும் தண்டத்திற் பாதி தண்டமாம். [21]வெளியேறினவன் இறந்தவன் [22]விதனமுடையோன் என்னும் [23]இவர்களைப்பற்றிய ஈட்டுப்பொருளை ஈடுவைத்தவன் அடையக்கடவன்.

ஈடாக வைக்கப்பட்டவனைப் பிணம் மலம் மூத்திரம் எச்சில் என்னும் இவற்றை எடுக்கச்செய்யினும் [24]மகளிரை ஆடையில்லாதவனைக் குளிப்பாட்டச்செய்யினும் தடியாற் புடைப்பினும் வலிந்துபுணரினும் [25]ஈட்டுப்பொருள் அழிவெய்தியதாகும். செவிலித்தாய் பணிப்பெண் [26]உழத்தி [27]குற்றேவன்மகள் என்னும் இவர்களுக்கும் [28]விடுதலைசெய்விப்பதாகும். உயர்ந்தகுடியிற் பிறந்தவன் [29]ஏவலாளனாயின் [30]அவன் வெளியேறுதலில் தடையின்று.

---

[21] தன்னை ஈடாகப் பெற்றவனுடைய குற்றங்காரணமாக வேற்று நாட்டுக்குச் சென்றவன் என்பது.

[22] விதனம்—கட்காமம் சூது முதலியன.

[23] இவர்களை ஈடாகவைத்து வாங்கியபொருளை ஈடுபெற்றவனுக்குக் கொடாமல் ஈடு வைத்தவனே எடுத்துக்கொள்ளலாம் என்பது கருத்து.

[24] மகளிர்—ஈண்டு ஈடாக வைக்கப்பட்டவர்.

[25] ஈட்டு நிமித்தம் கொடுக்கப்பட்ட பொருளைத் திரும்பிப்பெறுமலே ஈடு வைக்கப்பட்டோரையும் இழந்துவிடநேரும் என்பது.

[26] உழத்தி—உழவுத்தொழில் செய்யும் பெண்.

[27] குற்றேவல்—படுக்கைவிரித்தல் விசிறிவீசுதல் முதலியன.

[28] ஈண்டுக்கூறிய செவிலித்தாய் முதலியோரைப் பிணம் எடுத்தல் முதலியவற்றிலும், ஆடையில்லாதவனைக் குளிப்பாட்டுதல் முதலியவற்றிலும் ஈடுபடுத்தின் அச்செயல்கள் காரணமாக ஈட்டுப்பொருளைத் திருப்பிக் கொடாமலே விடுதலைபெறலாம் என்பது கருத்து.

[29] ஏதாவது ஒரு நெருக்கடியான காரணம்பற்றித் தானே ஏவலாளாயின் என்பது.

[30] அவன் ஏவற்றொழில் செய்ய விருப்பமில்லாமல் வெளிச்செல்ல நினைப்பானாயின் தடைப்படுத்த இயலாது என்பது; இதன் மூலத்தை 'ஸஹிவ் ஜாத' எனக்கொண்டு வேறுவகையாகவும் உரைப்பர். அக்கருத்து வருமாறு:—அடிமைப்பெண் ஒருத்தியின் கணவன் அவளுக்குக் கிடைக்கும் வேதனத்தைக்கொண்டே தானும் அத்தலைவனுக்கு அடிமைத்தொழில் செய்துவருங்கால் இடையே அவளோடு கூடி மகவை உண்டாக்கின் அடிமைக்குரிய கால எல்லை முடிவடைவதற்கு முன்னரே அன்னார் வெளிப்பட்டுவிடலாம் என்பது. இக்கருத்துப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

ஈடாக வைக்கப்பட்ட செவிலித்தாய் [31]விருப்பமில்லாத நிலையில் [32]தன்வயப்பட்டவளாயின் அவளைச் சேர்ந்தவனுக்குப் பூர்வ சாகசம் தண்டமாம். கணவன்வயப்பட்டவளாயின் [33]மத்தியம சாகசம் தண்டமாம். ஈடுபடுத்தப்பட்ட கன்னிகையைத் தானேயாதல் மற்றொருவனைக் கொண்டாதல் [34]கெடுத்தவன் ஈட்டுப் பொருளை இழத்தலோடு [35]பரியமும் அதற்கு இருமடங்கு [36]தண்டமும் செலுத்தல்வேண்டும்.

[37]தன்னை விற்றவனுடைய புதல்வனை உயர்ந்தவனாக அறிதல் வேண்டும். தலைவனுடைய காரியங்களுக்குத் தடையில்லாத நிலையில் தன்னுலீட்டப்பட்ட பொருளையும் தந்தைவழித் தாயத்தையும் [38]ஒருவன் அடையலாம். ஈட்டுப்பொருளைத் திருப்பிக்கொடுத்தலால் உயர்ந்த நிலையை அடையலாம். [39]இதனால் [40]உதரதாசனுக்கும் ஈடாக வைக்கப்பட்டவனுக்கும் விதி கூறியபடியாம்.

[41]இவனுக்கு [42]விடுதலைப்பொருள் [43]பேசிக்கொண்ட வரையறைப்படியாம்.

---

[31] விருப்பம்—தலைவனோடு கூடுதற்கென்பது.

[32] தன்வயப்படுதல்—கணவன்வயப்படாமை.

[33] இத்தண்டம் அவள் விருப்பமில்லாதநிலையில் சேர்ந்தவனுக்கென்பது.

[34] கெடுத்தல்—கற்பழித்தல்.

[35] பரியம்—அக்கன்னிகையை மணஞ்செய்துகொடுக்குங்கால் கொடுக்கப்படும் கன்னியாசுல்கம்.

[36] பரியத்தைப் பெண்ணுக்கும் அதனிருமடங்கு தண்டத்தை அரசனுக்கும் செலுத்தல்வேண்டும் என்பது.

[37] ஒருவன் தன்னை அடிமையாக விற்றுக்கொண்டால், அவன் அடிமைப்படுதற்கு முன் அவனுக்குப்பிறந்த மகனும் அடிமையாதல் இல்லை என்பது.

[38] ஒருவன்—அடிமையானவன்.

[39] இதனால்—அடிமையாகத் தன்னை விற்றவனுக்குக் கூறிய விதியினால்.

[40] உதரதாசன்—இவ்வத்தியாயத்தின் 2-ஆம் குறிப்பைப் பார்க்க.

[41] இவனுக்கு—தன்னை விற்றுக்கொண்டவனுக்கு.

[42] விடுதலைப்பொருள்—விடுதலை அடையவேண்டுமாயின், அதற்காகக் கொடுக்கவேண்டிய பொருள்.

[43] தன்னை விற்குங்காலத்தில் இத்துணைப்பொருள் தந்து விடுதலைபெறுதல் என்று தம்முட் பேசிக்கொண்டபடியாம் என்பது.

[44]தண்டம் விதிக்கப்பட்டவன் [45]பணிசெய்தலால் தண்டத்தை நேர்செய்யலாம்

[46]போரிற் பிடிக்கப்பட்ட உயர்ந்தவனொருவன் தொழிலிற்கும் காலத்திற்கும் ஏற்பக் குறிப்பிடும் தொகையில் பாதிகொடுத்து விடுதலை பெறலாம்.

[47]தன்வீட்டிற் பிறந்தவன், [48]தாயபாகத்தில் வந்தவன், தானே அடைந்தவன், விலைக்கு வாங்கப்பட்டவன் என்னும் அடிமையாட்களுள் ஒருவன் எட்டு யாண்டுகளுக்குக் குறைந்தவனாகவும் உறவினரை இல்லாதவனாகவும் இருப்பின் அவனை [49]விருப்பமில்லாத நிலையில் இழிந்த தொழிலில் ஏவுதல் அயலிடத்தில் விற்றல் ஈடுபடுத்தல் செய்தவனுக்கும் கருப்பவதியாகிய அடிமைப்பெண்ணைக் கருவுயிர்த்தற்குரிய நலங்களைச் செய்யாமல் விற்றல் ஈடுவைத்தல் செய்தவனுக்கும் [50]அன்னாரை விலைக்குக் கொண்டவர்க்கும் அதற்குச் சான்றுவார்க்கும் பூர்வசாகசம் தண்டமாம்.

உரியபொருளைப் பெற்றுக்கொண்டு அடிமையாளனை [51]விடுவியாதவனுக்குப் பன்னிரண்டுபணம் தண்டமாம். [52]காரணமின்றி

---

44 ஈண்டுத் தண்டம் விதிக்கப்பட்டவன் பணியாளன் என்க.

45 தண்டப்பணம் இறுக்க வழியில்லையாயின் வேலைசெய்து நேர்செய்யலாம் என்பது கருத்து.

46 போரிற் பகைவனிடத்தினின்றும் பிடிக்கப்பட்ட ஒருவன் உயர்ந்தவனாயின் இத்துணைநாள் இன்ன இன்ன வேலைகள் செய்யவேண்டும் என்று வரையறுத்துக்கொண்டபடி வேலைசெய்யாமல் விடுதலைபெற எண்ணினால் அவ் வேலைக்கும் காலத்திற்கும் தக அறுதியிடப்பட்ட பொருளில் பாதியளவு கொடுத்துவிட்டு விடுதலைபெறலாம் என்பது கருத்து.

47 பரம்பரையடிமையாக இருந்து தலைவன்வீட்டிற் பிறந்தவன் என்பது.

48 தாயப்பிரிவிலிருந்து வந்தவன் என்பது.

49 விருப்பமில்லாமை — இழிதொழில்செய்தற்கும் விற்கப்படுதல் ஈடுபடுத்தப்படுதற்கும் விருப்பமின்மை.

50 அன்னார்-சிறுவனாகிய அடிமையாளனும் கருப்பவதியாகிய அடிமைப் பெண்ணும்.

51 விடுவியாதவன்—விடுதலைசெய்யாத தலைவன்.

52 காரணமின்றி ஓரடிமையாளனைத் துன்புறுத்தினும் பன்னிரண்டு பணம் தண்டமாம் என்பது.

ஒருவனைத் தகையினுமாம். அடிமையாளனுடைய பொருளுக்கு அவன்ஞாதிகளும் அவரில்லையாயின் [53]தலைவனும் உரியராவர்.

ஆண்டானுக்கு அடிமைப் பெண்ணிடத்து மகன் பிறந்தானாயின் அவன் தாயுடன் அடிமையினின்றும் விடுதலையடைந்தவனாவான். [54]அப்பெண் [55]இல்லத்திருந்து குடும்பத்தையும் பொருளையும் கண்காணிப்பவளாயின் அவளுடைய தாய் உடன்பிறந்தவன் உடன்பிறந்தவள் என்னும் இவர்களும் அடிமையிலிருந்து [56]விடுதலைபெற்றவராவர்

விடுவிக்கப்பட்ட அடிமையாளனை அல்லது அடிமைப் பெண்ணைத் [57]தாமே உடன்பட்டுச் சொல்லாதவிடத்து மீண்டும் விற்றல் ஈடுவைத்தல் செய்பவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். இதுகாறும் அடிமையாளனைப்பற்றிய விதி கூறப்பட்டது.

[58]பணியாளர் செய்யும் தொழிலை அருகில் இருந்து [59]அறிந்து கொள்ளல் வேண்டும். பேசிக்கொண்டபடி வேதனம் [60]அடையக் கடவர். பேசிக்கொள்ளப்படாதகூலி [61]தொழிலுக்கும் காலத்திற்கும் ஏற்பப் பெறத்தக்கது. [62]கூலி பேசிக்கொள்ளப்படாதநிலையில் உழவன் தன் உழைப்பால் செய்யப்பட்ட பயிர்த்தொழில்

---

53 தலைவன் —அடிமைகொண்டவன்.

54 அப்பெண்—அந்த அடிமைப்பெண்.

55 இல்லத்திருந்து—ஆண்டான் இல்லத்திருந்து.

56 இதனால் ஒரு தலைவனுக்குக் குடிமுழுதும் அடிமையாயினாரைப் பற்றியது இவ்விதி என்பது பெறப்படும்.

57 அந்த அடிமையாளன் அல்லது அடிமைப்பெண் என்னும் இவர்கள் தம்மை விற்பதற்கும் ஈடுவைப்பதற்கும் உடன்பட்டுச் சொல்லின் அவ்வாறு செய்தலில் குற்றமின்றென்பது பெறப்படும்.

58 இனி பணியாளரின் இயல்பைக் கூறத்தொடங்குகின்றார்.

59 தலைவன் அறிந்துகொள்ளவேண்டும் என்பது.

60 பணியாளர் அடையக்கடவர் என்பது.

61 இன்னதொழிலைச் செய்துமுடித்தால் இவ்வளவு கூலி எனவும் இத்துணைக்காலம் வேலைசெய்தால் இவ்வளவு கூலி எனவும் கொண்டு அவற்றிற்கேற்பப் பெறலாம் என்பது.

62 செய்யும் பணிக்குக் கூலி பேசிக்கொள்ளப்படவில்லையானால் பணியாளர் செய்யும்தொழிலின் வருவாயினின்றும் ஓரளவு கூறாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைக் கூறுகின்றார்.

விளைவிலும் இடையன் பசுக்காத்தலால் உண்டாம் நெய் முதலிய வருவாயிலும் வணிகன் பண்டமாற்றுத் தொழிலால் கிடைக்கும் ஊதியத்திலும் தனித்தனியே பத்தில் ஒருகூறு வேதனமாக அடையக்கடவர். பேசிக்கொள்ளப்பட்ட கூலி [63]அவ்வாறே அடையத்தக்கது.

[64]காருகன் [65]சிற்பி பாடுவோன் மருத்துவன் [66]கதைசொல்லு வோன் பணிசெய்வோன் முதலிய விரும்பியவாறு தொழில்செய் யும் குழுவினர் அத்தொழில்புரியும் அவ்வினத்து மற்றையோ ரைப் போலச் செய்தல்வேண்டும். அத்தொழிலில் திறமையுடை யோர் வரையறுத்தபடி வேதனம் பெறக்கடவர். [67]சான்று கூறு வோர் பிரமாணமாதலுமாம். சான்றுவார் இல்லையாயின் எவ் விடத்தில் தொழில்நிகழ்ந்ததோ [68]அவ்விடத்திலேயே கேட்டறிதல் வேண்டும்.

[69]கூலியைக் கொடுக்கவில்லையானால் பத்தில் ஒருகூறுதல் ஆறு பணமாதல் தண்டமாம். [70]மறைத்துக் கூறுவானாயின் பன்னி ரண்டு பணமாதல் ஐந்தில் ஒருகூறுதல் தண்டமாம்.

---

63 மேற்கூறிய பத்தில் ஒருகூற்றில் மிகவும் மிகுதியாக அல்லது குறை வாகப் பேசிக்கொண்டபடி அடையத்தக்கது என்பது.

64 காருகர்—பொற்கொல்லர் முதலியோர்.

65 சிற்பிகள்—தச்சர் முதலியோர்.

66 தலைவன் அருகிலிருந்து காலப்போக்கு நிமித்தம் கதைசொல்லி மனக் கிளர்ச்சி முதலியவற்றை உண்டுபண்ணுவோன் என்பது.

67 தலைவர்க்கும் பணியாளர்க்கும் முரண் ஏற்படுமாயின் சான்றுவார் சொல்லுகிறபடி வேதனத்தைத் துணிதல்வேண்டும் என்பது கருத்து.

68 தொழில் நிகழ்ந்தவிடத்திலுள்ள பிறரிடம் அத்தொழிலைப்பற்றிய செய்திகளை விளக்கமாகக்கேட்டுக் கூலியைத் துணிந்துகொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

69 தலைவன் கூலிகொடுக்கவில்லையானால் அக்கூலியையும் கொடுக்கச் செய்து மேலும் அக்கூலியளவில் பத்தில் ஒருகூறுதல் ஆறுபணமாதல் தண்டமும் இறுக்கச் செய்தல்வேண்டும் என்பது.

70 கூலியைப் பெற்றுக்கொண்டு பெறவில்லை என்று மாறுபடக்கூறும் பணியாளனுக்குப் பன்னிரண்டுபணமாதல் அக்கூலியளவில் ஐந்தில் ஒரு கூறுதல் தண்டமாம் என்பது. முன்னது தலைவனைப்பற்றியது எனவும் பின்னது பணியாளனைப்பற்றியது எனவும் அறிக.

ஆற்றுப்பெருக்கு நெருப்புச்சுடர் களவு கொடியவிலங்கு என்னும் இவைற்றால் தகையப்பட்டுத் துன்புறுவோர் தம்மைக் காப்பாற்றினோர்க்குத் தம்மையும் தம் உடைமைகளையும் மக்களையும் மனைவியரையும் கொடுப்பதாகக் கூறி [71]விடுதிபெறுவாராயின் [72]திறமையுடையோரால் துணியப்பட்ட வேதனத்தைக் கொடுக்கக் கடவர். இதனால் துன்பம் எய்திக் [73]கழிவிரக்கமுடைய பிறர் எல்லோர்க்கும் விதி கூறியபடியாம்.

சுலோகம்

விலைமகளிர் [74]கூட்டத்திற்குரிய ஏதுக்களால் போகக்கூலி பெறக்கடவர். [75]மிகுதியாகக் கூலிகேட்பினும் கெட்ட எண்ணத்தால் [76]மாறுபட நடப்பினும் தண்டிக்கப்படுவர்.

மூன்றும் அதிகரணம் ஒன்பதாம் பிரகரணம்
"அடிமைப்பணியாளர் இயல்பு" என்னும் எழுபதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[71] இவர் பேசிய துன்பவுரைகளைக்கேட்டு உதவிபுரிவோரால் அந்த இடரினின்றும் விடுவிக்கப்படுவாராயின் என்பது.

[72] விடுவிக்கப்பட்டபின் தாம் கூறியபடி செய்யமுடியாமைக்கு இரங்குவாராயின் இடுக்கட்பொழுதுகூறியபடி தம் மனைவிமக்கள் முதலிய பொருள்களைக் கொடுக்கவேண்டியதில்லை என்பதும் உதவிசெய்தவர்க்கு இத்துணை வேதனம் கொடுக்கலாம் என்று திறமையுடையோர் துணிந்தபடி கொடுக்கவேண்டும் என்பதும் கருத்து.

[73] கழிவிரக்கம்—கழிந்ததற்கு இரங்குதல்; இடுக்கட்பொழுது அத்துன்பம் பொறுதற்கியலில் கூறியபடி விடுதலையடைந்தபின் செய்யமுடியாமைச்கு வருந்துதல் என்பது.

[74] கூட்டத்திற்குரிய ஏது—புணர்ச்சிக்குரிய அடையாளம்.

[75] வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேலாக என்பது.

[76] மாறுபடநடத்தல் — ஆடவன் விருப்பத்திற்கு ஒவ்வாத முறையை மேற்கொள்ளுதல்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

பத்தாம் பிரகரணம்—[1]கூடித்தொழில்புரிதல்

எழுபத்தோராம் அத்தியாயம்

கூலியைப் பெற்றுக்கொண்டு வேலைசெய்யாத பணியாளனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [2]அழைத்துத் தடைசெய்தலாலுமாம்.

[3]ஆற்றலின்மை இழிசெயல் நோயுடைமை துன்பம் என்னும் இந்நிகழ்ச்சிகளில் இரங்குதல் அல்லது பிறனொருவனைக்கொண்டு செய்வித்தல் வேண்டும். அன்றி [4]அவன் செலவில் தலைவன் பிறன் ஒருவனைக்கொண்டும் செய்வித்துக்கொள்ளலாம்.

71-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கூடித்தொழில்புரிதல் — பலர் ஒன்றுகூடித் தொழில்செய்தல் அங்ஙனம் செய்பவர் பிறர்க்குரிய தொழிலைச் செய்பவர் எனவும் தமக்குரிய தொழிலைச் செய்பவர் எனவும் இருதிறப்படுவர். இவருள் முன்னையோர் இயல்பு 'பணியாளர் இயல்பு' என்னும் முன்னைப்பிரகரணத்திற் கூறப்பட்டது. தமக்குரிய தொழிலைச் செய்பவராகிய பின்னையோரின் இயல்பு இப்பிரகரணத்திற் கூறப்படும். இதனால் பிரகரண இயைபு விளக்கமாதல் அறிக. முன்னைப்பிரகரணத்திற் கூறப்பட்ட பணியாளர் இயல்பில் எஞ்சிய பகுதியும் தொடர்ச்சிபற்றி இதன்கட் கூறப்படும். அப்பணியாளருள் நாடோறும் கூலிபெற்றுக்கொள்வது என்னும் நியமமின்றிப் பணிசெய்வோரைப்பற்றிய விதிகள் முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டன. இப் பிரகரணத் தொடக்கத்தில் நாடோறும் கூலிபெற்றுக்கொண்டு பணிசெய்பவரைப்பற்றிய விதிகள் கூறப்படுகின்றன.

[2] கூலியைப் பெற்றுக்கொண்டு வேலைசெய்யாதவனை வலிந்து கூப்பிட்டாதல் வேறொரு காரியத்தில் புகாமல் தடைப்படுத்தியாதல் பணி செய்வித்துக்கொள்ளலாம் என்பது கருத்து.

[3] பணியாளன் தொழில் செய்தற்பொருட்டு வேதனத்தைப் பெற்றுக் கொண்டபின் அத்தொழில் செய்தற்குரிய வலியிழந்திருக்கும் நிலையிலும் அத்தொழில் தன் தகுதிக்கு இழிந்ததாக இருப்பினும் நோயினாலும் எதிர் பாராத நிலையில் நேரும் துன்பத்தாலும் பீடிக்கப்பட்டிருப்பினும் அத் தொழில் செய்ய இயலாமை குறித்து இரக்கங்கொள்ளக் கடவன் என்பது கருத்து. இரங்குதல் என்றதனால் தொழில் செய்யாமையால் குற்றமுடையன் ஆகான் என்பது போதரும்.

[4] அவன் செலவில்—அப்பணியாளனுடைய பொருட்செலவில்.

'[5]நீ என்னையன்றிப் பிறனொருவனைப் பணிசெய்ய நியமித்தல் ஆகாது'. 'யான் உன்னிடத்தன்றிப் பிறர் எவர்க்கும் பணிசெய்வதில்லை' என்று உறுதிசெய்துகொண்டபடி பணிபுரியச் செய்யாத தலைவனுக்கும் [6]பணிபுரியாத பணியாளனுக்கும் பன்னிரண்டு பணம் தண்டமாம். கூலியைப் பெற்றுக்கொண்டு தலைவனுக்குச் செய்யவேண்டிய [7]பணி நிறைவேறாத நிலையில் [8]உடன்பாடின்றி மற்றோரிடத்தில் பணிசெய்தலாகாது.

[9]வந்தடைந்தவனைப் பணிபுரியச் செய்யாவிடின் செய்யப்பட்டதாகவே கொள்ளல்வேண்டும் என்பர் ஆசிரியர்.

[10]செய்யப்பட்டதற்கே கூலியுண்டு; செய்யப்படாததற்கின்று. [11]தலைவன் சிறிதளவாவது செய்வித்துக்கொண்டு மேலும் செய்வித்துக்கொள்ளவில்லையானால் அவன்பணி செய்யப்பட்டதாகவே கொள்ளலாம். ஆதலின் [12]அது பொருந்தாது என்பர் கௌடலியர். [13]காலம் இடங்களைக் கடந்துசெய்யினும் செய்யவேண்டிய காரியத்தை மாறுபடச்செய்யினும் தலைவனுக்கு [14]உடன்பாடில்லாத

---

[5] இது தலைவனும் பணியாளனும் செய்துகொள்ளும் ஒப்பந்த முறையில் பணியாளன் கூற்றாகக்கொண்டு கூறியது.

[6] உறுதி செய்துகொண்டபடி என்பதை ஈண்டுங் கூட்டுக.

[7] பெற்ற கூலிக்குரிய பணி என்பது.

[8] உடன்பாடு—தலைவன் சம்மதம்.

[9] தலைவனும் பணியாளனும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பணி செய்ய வந்தவனைத் தலைவன் பணிசெய்யும்படி செய்யவில்லையானால் அது செய்யப்பட்டதாகவே கொள்ளல்வேண்டும் என்பதும், அப்பணிநிமித்தம் முன்னர்க் கொடுக்கப்பட்ட வேதனம் தீர்ந்துவிட்டதென்பதும் கருத்து.

[10] முன்னர்க்கூறிய ஆசிரியர்கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறத் தொடங்குகின்றார்.

[11] ஒரு வேலையைச் சிறிதளவு செய்யச்செய்து எஞ்சியதைச் செய்யும்படி ஏவவில்லையானாலும் முழுதும் செய்யப்பட்டதாகவே கொள்ளலாமன்றிப் பணிசெய்ய வந்தடைந்தானாயினும் சிறிதேனும் செய்யாத நிலையில் கூலி கொடுப்பது பொருந்தாதென்பது கௌடலியர் கொள்கை என்க.

[12] அது—முன்னர்க்கூறிய ஆசிரியர் கொள்கை.

[13] உறுதி செய்துகொண்டபடி குறிப்பிட்ட காலத்தைக் கடந்தாதல் இடத்தை மாற்றியாதல் செய்யினும் என்பது.

[14] பிறழச்செய்ததைத் தலைவன் உடன்படவில்லையானால் என்பது.

நிலையில் அச்செயல் செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று. உறுதிசெய்துகொண்ட அளவிற்கு மிகுதியாகப் பணி செய்யப்படின் [15]அவ்வுழைப்பை [16]வறிதாக்கலாகாது.

இதனால் [17]கூலிக்குழுவிற்கும் விதி கூறப்பட்டபடியாம். அக் கூலிக்குழுவினரது [18]ஒப்பந்தம் ஏழுநாள்வரை இருக்கலாம். அதன் பின் மற்றொரு கூலிக்குழுவை அமைத்துத் [19]தொழில்முடிவையும் [20]அறிந்துகொள்ளல் வேண்டும். தலைவனுக்கு அறிவியாமல் அக் குழு [21]ஒருவனை விலக்கவோ சேர்க்கவோ கூடாது. இவ்விதியைக் கடப்பின் இருபத்துநான்கு பணம் தண்டமாம். அக்குழுவினின் றும் [22]விலகினவனுக்குப் பாதி தண்டமாம். பணியாளரைப்பற்றிய செய்தி இவ்வாறும்.

[23]கூலிக்குழுவினரும் கூடித் தொழில்புரிபவரும் தம்முட் பேசிக்கொண்டபடியாதல் [24]ஒத்த அளவாகவாதல் வேதனத்தைப் பங்கிட்டுக்கொள்ளக் கடவர்.

---

15 அவ்வுழைப்பு—அங்ஙனம் மிகுதியாகச் செய்ததனால் உண்டாவது.

16 வறிதாக்கலாகாது என்றதனால் அவ்வுழைப்பிற்குத்தக ஓரளவு வேதனம் கொடுத்தல்வேண்டும் என்பது போதரும்.

17 கூலிக்குழு—ஒன்றுசேர்ந்து கூலி பெற்றுக்கொண்டு பிறர்க்குப் பணி செய்யும் பணியாளர்குழு.

18 ஒரு தலைவனுக்கு வேலைசெய்வதாகப் பேசிக்கொள்ளும் ஒப்பந்தம் ஏழு நாட்களுக்கு மேற்படலாகாது என்பது கருத்து.

19 தொழில் முடிவு—முன்னுள்ள கூலிக்குழுவால் செய்யப்பட்டதும் பின்னுள்ள கூலிக்குழுவால் செய்யப்படவேண்டியதுமாகிய செயலின் அளவு.

20 தலைவன் அறிந்துகொள்ளல்வேண்டும் என்பது.

21 ஒருவனை—அக்குழுவிலுள்ள ஒருவனை.

22 தலைவனின் உடன்பாடின்றி விலகினவன் என்பது.

23 இதுமுதல் கூடித்தொழில்புரிபவருடைய இயல்பு கூறப்படுகின்றது. வேதனத்தைப் பிரித்துக்கொள்வதில் கூடித்தொழில்புரிவோர்க்கு உள்ள படியே கூலிக்குழுவினர்க்கும் பொருந்தும் என்பதுபற்றி முன்னர் முடிக்கப் பட்ட கூலிக்குழுவினரைப்பற்றி மீண்டும் கூறப்பட்டது.

24 பேசிக்கொள்ளப்படவில்லையானால் சமனாகப் பிரித்துக்கொள்ள வேண்டும் என்பது.

உழவுத்தொழிலாளரும் வாணிகஞ்செய்வோரும் முறையே பயிர்த்தொழில் வாணிகத்தொழில் என்னும் இவற்றைத்தொடங்கி முடிப்பதற்கு இடையில் [25]நோய்வாய்ப்பட்டவனுக்கு அவன்செய்த தொழிலளவிற்குள்ள கூற்றைக் கொடுத்துவிடல் வேண்டும். [26]மற்றொருவனை நியமிப்பின் முழுக்கூறும் கொடுத்தல்வேண்டும். [27]கொள்ளப்பட்ட விலைப்பண்டங்கள் [28]வெளியேற்றுதற்குரிய நிலையில் நோய்வாய்ப்பட்டவனுக்குரிய கூற்றை அப்பொழுதே கொடுத்துவிடல் வேண்டும். என்னை? வழியில் [29]பாதுகாப்பும் அழிவும் நேர்தல் இயல்பு ஆதலின்.

[30]தொழில் தொடங்கியபின் [31]நலமுடையனுயிருந்து விலகுவானுயின் பன்னிரண்டு பணம் தண்டமாம். [32]விலகுவதிலும் விருப்பப்படி உரிமையின்று.

[33]கள்வனை அபயமளித்துத் தொழிலில் கூறுகொடுப்பதாகச் சொல்லிப் பிடித்தல்வேண்டும். [34]அவனுக்குரிய கூற்றையும்

---

25 நோய்வாய்ப்பட்டு அத்தொழில் செய்ய இயலாமலிருக்கும் நிலையில் அதுவரை அவன் செய்த தொழிலுக்குரிய வருவாயின் கூற்றைக் கொடுத்துவிடல் வேண்டும் என்பது.

26 நோய்வாய்ப்பட்டவன் தனக்காக அத்தொழிலில் மற்றொருவனை நியமிப்பின் என்பது.

27 இது வாணிகத்தொழிலாளர்க்கு மாத்திரம் கூறியது.

28 வேற்றிடத்துச்சென்று வாணிகம் செய்வதற்காக வெளியேற்றுதல். வண்டி முதலியவற்றில் ஏற்றி வெளிப்படச்செய்தல் என்க.

29 விலைப்பண்டங்களுக்குப் பாதுகாப்பும் அழிவும் நேர்தல் இயல்பாதலின் என்பது முன்னதற்கு ஏதுவாகும்.

30 கூடித்தொழில்புரிவோர் ஒரு தொழிலைத் தொடங்கியபின் என்பது.

31 நலமுடையனுய்—நோய் முதலியன இல்லாமல்.

32 அங்ஙனம் தண்டத்தைச் செலுத்தி விலகுவதிலும் அக்கூட்டத்தார் உடன்பாடின்றி அவன் விருப்பப்படி உரிமையில்லை என்பது கருத்து.

33 கூடித்தொழில்புரிபவர் திருடராயின் அவரை வெளிப்படுத்தித் தண்டிக்கும் உபாயத்தைக் கூறுகின்றூர். திருடர் பலரும் கூடி அத்தொழில் செய்தனராக அவருள் ஒருவனையறிந்து அவனுக்குரிய கூற்றைக் கொடுப்பதாகவும் தண்டனையில்லாமல் செய்வதாக அபயமளித்தும் அவனைக்கொண்டு மற்றைய திருடர்களைப் பிடித்தல்வேண்டும் என்பது கருத்து.

34 மற்றைய திருடர்களைப் பிடித்தற்கு உதவிசெய்த திருடனுக்குப் பேசிக்கொண்டபடி அபயத்தையும் அளித்துக் கூறும் கொடுத்தல்வேண்டும் என்பது.

அபயத்தையும் அளித்தல்வேண்டும். [35]மீண்டும் திருட்டுத்தொழில் செய்வானாயினும் [36]வேற்றிடம்செல்வானாயினும் அவனை நாட்டை விட்டு விலக்கல்வேண்டும். [37]பெருங்குற்றம் செய்யின் [38]பழிக்கத் தக்கவனுக் [39]குரியதைச் செய்தல்வேண்டும்.

[40]வேட்பிப்போர் தனித்தமுறையில் தமக்குக் கிடைக்கும் பொருளல்லாத பேசிக்கொண்ட பொதுக்கூலியைச் சமனாகப் பிரித்துக்கொள்ளல் வேண்டும்.

[41]அக்கினிட்டோமம் முதலிய வேள்விகளில் [42]தீக்கையின்பின் வேட்பிப்போன் நோய்வாய்ப்படின் ஐந்தில் ஒருகூறும் [43]சோமப் பூண்டை விலைக்குக் கொண்ட பின்னராயின் நான்கில் ஒருகூறும் [44]நடுவண் உள்ள உபசத்தில் [45]பிரவர்க்கிய உத்துவாசனத்தின் [46]பின்னாயின் மூன்றில் ஒருகூறும் நடுவண் உள்ள உபசத்து முடிந்த

35 உதவிசெய்த கள்வன் மீண்டும் திருட்டுத்தொழிற் புகுவானாயினும் என்பது.

36 வேற்றிடம் சென்று திருடுவானாயினும் என்பது.

37 பெருங்குற்றம்—கொலை முதலியன.

38 பழிக்கத்தக்கவன்—தகாதகொடுஞ்செயலைச் செய்தமையால் எல்லோராலும் நிந்திக்கத்தக்கவன்.

39 உரியது—மறைவிற் கொல்லுதல்.

40 வேட்பிப்போர்—வேள்வி செய்விப்போர்.

41 இனி அக்கினிட்டோமம் முதலிய வேள்விகளைத் தொடங்கி முடித்தற்கு இடையில் வேட்பிப்போன் நோய்வாய்ப்படின் அவ்வேள்வியின் அகக்கிரியைகளுள் அவன் செய்துமுடித்த அளவிற்கேற்பத் தக்கிணைக்கூறு கொடுத்தலைப்பற்றிக் கூறுகின்றார்.

42 வேள்வித்தலைவன் தீக்கை செய்துகொண்ட பின் வேட்பிப்போன் நோய்வாய்ப்படின் அவ்வேள்வியில் பெறும் தக்கிணைப்பொருளில் ஐந்தில் ஒருகூறு பெறக்கடவன் என்பது.

43 சோமப்பூண்டை விலைக்குக்கொண்டபின் நோய்வாய்ப்படின் என்பது.

44 வேள்வியில் ‘உபசத்து’ என்பது ஒரு கிரியாவிசேடம். அது வேள்வியின் தொடக்கம், நடு, இறுதியாகிய மூன்று இடங்களிலும் செய்யப்படுவது. அவற்றுள் நடுவண் உள்ள உபசத்தில் என்பது.

45 பிரவர்க்கிய உத்துவாசனம் என்பதும் ஒரு கிரியாவிசேடம்.

46 பின்னர் வேட்பிப்போன் நோய்வாய்ப்படின் என்பது. பின்வரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க.

பின்னுயின் அரைக்கூறும் [47]சுத்தியத்தில் [48]பிராதசவனத்தின் பின்னுயின் முக்காற்கூறும் அடையக்கடவன். [49]மாத்தியந்தின சவனத்தின்பின்னுயின் முழுவதும் அடையக்கடவன். என்னை? [50]தக்கிணை முழுவதும் அடையப்பட்டதாகலின். பிருகற்பதிசவனம் அல்லாத ஏனைய சவனங்களிலெல்லாம் தக்கிணை [51]கொடுக்கப்பட்டனவாம். இதனுல் [52]பலநாட்களுக்குரிய தக்கிணைகளுக்கும் விதி கூறப்பட்டபடியாம்.

நோய்வாய்ப்பட்டவர்கள் செய்யவேண்டிய கன்மங்களைப் பத்துநாட்கள் வரை [53]எஞ்சிய பணியாளராவது [54]தனக்கு வேண்டிய பிறராவது செய்யலாம்.

[55]கன்மம் முடிவடையாத நிலையில் வேள்வித்தலைவன் நோய்வாய்ப்படின் வேட்பிப்போர் அக்கன்மத்தை முடித்துவிட்டுத் தக்கிணையைப் பெற்றுக்கொள்ளக் கடவர்.

கன்மம் முடிவடையாத நிலையில் வேள்வித்தலைவனை விட்டுச் சென்ற வேட்பிப்போனுக்கும் வேட்பிப்போனை விட்டொழித்த வேள்வித்தலைவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம்.

சுலோகங்கள்

1—2. [56]நூறு பசுக்களையுடையவனுயிருந்தும் அக்கினிகாரியம் செய்யாதவனும் ஆயிரம் பசுக்களை உடையவனுயிருந்தும்

---

47 அக்கினிட்டோமவேள்வி செய்யப்படும் நாட்கள் பலவற்றுள் சோமப் பூண்டைப் பிழிந்து சாறு எடுக்கும் நாள் 'சுத்தியம்' எனப்படும்.

48 பிராதசவனம் என்பது காலையில் செய்யப்படும் வேள்விக்கிரியை.

49 மாத்தியந்தினசவனம்—பகலில் செய்யப்படும் சவனக்கிரியை.

50 மேலதற்கு ஏதுக்கூறியவாறு.

51 அவ்வப்போது தக்கிணை கொடுக்கப்பட்டனவாம் என்பது.

52 பலநாட்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தக்கிணையை நடந்த நாட்களுக்குக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும் என்பது.

53 அக்குழுவில் நோய்வாய்ப்பட்டவனல்லாத மற்றைய பணியாளர் என்பது.

54 தனக்கு— தலைவனுக்கு.

55 கன்மம்—ஈண்டு வேள்வி.

56 வேள்வித்தொழில் முடிவடையாத நிலையில் வேள்வித்தலைவனும் வேட்பிப்போனும் ஒருவரையொருவர் விலக்கலாகாது என்பதற்கு இது

வேள்விசெய்யாதவனும் கட்குடிப்பவனும் சூத்திரப்பெண்ணை மணஞ்செய்து கொண்டவனும் பிரமகத்தியுடையானும் குருவின் மனைவியைச் சேர்ந்தவனும் [57]இழிந்ததானம் பெறுவோனும் களவுத்தொழிலையுடையவனும் இழிந்தவனை வேட்பிப்போனும் ஆகிய இவர்கள் [58]கன்மத்திற்குக் குற்றம் நேரும் என்னும் துணிவினால் தம்முள் ஒருவரையொருவர் விலக்குதல் குற்றமாகாது.

மூன்றும் அதிகரணம் பத்தாம் பிரகரணம்
"கூடித்தொழில்புரிதல்" என்னும் எழுபத்தோராம்
அத்தியாயம் முற்றிற்று.

புறனடை விதியாகும். இவ்விதி வேள்விக்குரியாரைப் பற்றியதாகும். அக்கினிகாரியம் செய்தற்குரிய பால் நெய் முதலியவற்றிற்குக் குறைவில்லாத நிலையிலும் அது செய்யாதவன் என்பது.

57 இழிந்த தானம் என்பது இழிந்த பொருளைத் தானமாகப் பெறுதல். இழிந்தவனிடத்துத் தானம் பெறுதல் என்னும் பொருளுடையதாகும்.

58 தலைவன் அல்லது வேட்பிப்போன் என்னும் இருதிறத்தாருள் ஒருவன் இக்குற்றமுடையனாயினும் அவ்வேள்விக்கன்மம் பிழைபடும் என்பது கருத்து.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

பதினேராம் பிரகாரணம்—[1]விற்றுக்கொண்டு மாறுபடல்

எழுபத்திரண்டாம் அத்தியாயம்

[2]குற்றமுடையதாதல் இடையூறுவிளைதல் பொறுத்தற்கியலாமை என்னும் இவை யில்வழி [3]விற்ற பண்டத்தைக் கொடாதவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

[4]விலைப்பண்டத்தின் குற்றமே குற்றமாம். அரசனாலும் கள்வராலும் நெருப்பினாலும் நீரினாலும் ஏற்படும் [5]தீங்கு இடையூருகும். [6]பல நற்குணங்களின் குறைவும் துன்பமுற்றவனால் செய்யப்படுதலும் பொறுத்தற்கியலாமையாகும்.

72-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] விற்றுக்கொண்டு மாறுபடல்—பொருள் வாங்கிக்கொண்டு பண்டத்தை விற்றலும் பொருள் கொடுத்துக்கொள்ளலுமாகிய இந்நிகழ்ச்சிகளில் மாறுபாடு செய்தல். 'கூடித் தொழில்புரிதல்' என்னும் முன்னைப் பிரகரணத்தில் வாணிகத் தொழிலைப்பற்றிய செய்தி முக்கியமாகக் கூறப்பட்டது. அத்தொழிலில் விலைக்குக்கொள்ளல் விற்றல் நிகழுங்கால் மாறுபாடு செய்யப்படின் அதற்குரிய தண்டவிதி முதலியன இப்பிரகரணத்திற் கூறப்படுதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதனால் பிரகரண இயைபுண்மையறிக.

[2] குற்றமுடையதாதல் முதலியன இன்னவென்பதைப் பின்னர்க் காண்க.

[3] விற்பதாக விலைபேசி முடிக்கப்பட்ட பண்டத்தை என்பது.

[4] குற்றம் முதலிய மூன்றனையும் விளக்கமாகக் கூறுகின்ருர். விற்பதாக உறுதிசெய்துகொள்ளப்பட்ட விலைப்பண்டத்தில் காணப்படும் குற்றமே குற்றமாம் என்பது.

[5] விற்பதாக உறுதிசெய்யப்பட்ட பண்டத்திற்கு ஏற்படும் தீங்கு என்பது.

[6] விலைப்பண்டம் மிகுதியான குணக்குறைவு உள்ளதாயினும் துன்பம் காரணமாகக் கலங்கின மனத்தையுடையவனால் செய்யப்பட்டதாயினும் அது பொறுத்தற் கியலாமையாகும் என்பது.

[7]வணிகர்க்கு ஒருநாளும் உழவர்க்கு மூன்றுநாளும் பசுக்காவலர்க்கு ஐந்துநாளும் உயர்ந்த வருணத்தார்க்கும் கலப்புச்சாதியினர்க்கும் [8]வாழ்க்கைக்குரிய பொருள்விற்பனையில் ஏழுநாளும் மாறுபடுதல் கூடும்.

காலந்தாழ்க்காது விற்கக்கூடிய [9]பண்டங்கள் [10]பிறிதோரிடத்தில் விற்க முடியாமையை அறிந்து அதற்கு முரணுகாமல் மாறுபடலாம். இவ்விதியைக் கடப்பின் இருபத்துநான்கு பணமாதல் விலைப்பண்டத்தளவில் பதின்மடங்காதல் தண்டமாம்.

[11]குற்றமுடையதாதல் இடையூறுவிளைதல் பொறுத்தற்கியலாமை என்னும் இவையில்வழி [12]கொண்ட பண்டத்தை ஏற்றுக்கொள்ளாதவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [13]விற்றவனுக்குக்கூறிய மாறுபடல் கொண்டவனுக்கும் ஒத்ததாம்.

முதல் மூன்று வருணத்தாருக்கும் திருமணத்தில் [14]கைப்பிடித்

---

7 விலைப்பண்டத்தைக் கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் உறுதி செய்து கொண்டு அப் பண்டக்குற்றம் முதலியவற்றால் பேசியதற்கு மாறுபட நேருமாயின் அதற்குரிய கால அளவை அறுதியிட்டுக் கூறத்தொடங்குகின்றார். வணிகராயின் மாறுபடுதற்கு அவகாசம் ஒருநாள் என்பது. பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

8 வாழ்க்கைக்குரிய பொருள்—விளைநிலம் முதலியன.

9 பண்டங்கள்—மலர் பால் முதலியன. இவற்றை விற்பதற்குக் காலம் தாழ்ப்பின் அப்பண்டம் கெட்டுவிடும் என்பதை நோக்கி இவ்வாறு கூறினர்.

10 காலம் தாழ்ப்பின் பிறிதோரிடத்தில் கொண்டுசென்று விற்க இயலாது என்பதை அறிந்து அதற்கேற்பச் சிறிதுகாலம் வரை மாறுபடலாம் என்பது கருத்து.

11 குற்றமுடையதாதல் முதலியவற்றை நான்கு முதலிய குறிப்புக்களிற் காண்க.

12 விலைக்குப் பெற்றுக்கொள்வதாக உறுதிபேசிக் கொள்ளப்பட்ட பண்டத்தை நியாயமாக மாறுபடுதற்கு உட்பட்டு ஏற்றுக்கொள்ளாதவனுக்குத் தண்டம் என்பது.

13 விற்றவன் மாறுபடுதற்குரிய கால அளவு முதலியவற்றை மேலே காண்க.

14 கைப்பிடித்தல்—திருமணத்தில் மணமகன் மணமகளின் கையைப் பற்றுதல். இது ‘பாணிக்கிரகணம்’ என்னும் சடங்காகும்.

தல் [15]நிறைவேறும்வரை விட்டுநீக்கல் பொருந்தும். சூத்திரர்க்குப் [16]புணர்ச்சி நிகழும் வரையாம். கைப்பிடித்தல் நிறைவேறிய பின்னும் [17]உடனியைதற்குக் குற்றம் காணப்படுமாயின் மணமக்கள் ஒருவரையொருவர் விட்டுநீங்கலாம். [18]மகப்பேறுடையார்க்கு அறவே இல்லை.

கன்னியிடத்துள்ள உடனியைதற்குரிய குற்றத்தைத் தெரிவியாமல் [19]கொடுத்தவனுக்குத் தொண்ணூற்ருறு பணம் தண்டமாம். பரிசம் சீதனம் இவற்றையும் [20]திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

மணமகன்குற்றத்தைத் தெரிவியாமல் மணம் செய்துகொள்பவனுக்கும் [21]செய்விப்போர்க்கும் [22]இருமடங்கு தண்டமும் பரிசம் சீதனங்களின் இழப்பும் ஆம்.

குட்டம் [23]நோய் தூய்மையின்மை என்னும் இவற்றையுடைய இருகால் நாற்கால் பிராணிகளை முறையே ஊக்கம் உடல்நலம் தூய்மை என்னும் இவற்றையுடையனவாகக் கூறின் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

[24]நாற்காற் பிராணிகளுக்கு மூன்று பக்கங்கள் வரையும் மக்களுக்கு ஓராண்டு வரையும் விட்டுநீக்கல் பொருந்தும். தூய்மை

---

15 கைப்பிடித்தற்கு முற்பட்ட நிலையில் எக்காரணத்தை முன்னிட்டும் மணமக்கள் இருவரும் மணத்தை நிறுத்திவிட்டுப் பிரிந்துவிடலாம் என்பது கருத்து.

16 புணர்ச்சி நிகழ்வதற்கு முற்பட்டநிலையில் விட்டுநீங்கலாம் என்பது.

17 உடனியைதல்–புணர்தல்; குற்றம்–பேடு, அலித்தன்மை முதலியன.

18 குழந்தைபெற்ற மணமக்களுக்கு விட்டுநீங்கல் இல்லை என்பது.

19 கொடுத்தவன்—கன்னியைக்கொடுத்த அவள் தந்தை.

20 மணமகனுக்குத் திருப்பிக் கொடுத்தல்வேண்டும் என்பது.

21 செய்விப்போர்—மணமகன் தந்தை முதலியோர்.

22 இருமடங்கு—நூற்றுத் தொண்ணூற்றிரண்டு பணம்.

23 நோய்—குட்டமல்லாத பிறநோய்.

24 விலைக்குக் கொள்ளப்பட்டாலும் நாற்காற் பிராணிகளின் நலம் தீங்குகளை அறிந்துகொள்ளுதற்கு நாற்பத்தைந்து நாளும் மக்களியல்பை அறிந்துகொள்ளுதற்கு ஓராண்டும் அவகாசம் வேண்டுமாதலின் அக்கால எல்லைகளுக்குள் விடுதலை செய்யலாம் என்பது கருத்து.

தூய்மையின்மைகளை அறிந்துகொள்ளுதற்கு அத்துணைக்காலம் வேண்டும்.

சுலோகம்

[25]கொடுக்கல் வாங்கல்களில் கொடுப்போர் வாங்குவோர்க்குக் கேடு நேரா வண்ணம் அறங்கூறவையத்தார் [26]மாறுபடுத்தலைச் செய்யலாம்.

மூன்றும் அதிகரணம் பதினோராம் பிரகரணம்
" விற்றுக்கொண்டு மாறுபடல் " என்னும் எழுபத்திரண்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[25] விலைபெற்றுக்கொண்டு கொடுத்தலும் விலைகொடுத்து வாங்குதலும் என்பது.

[26] மாறுபடுத்தல்—விற்கப்பட்ட பொருளைத் திருப்பிப்பெறச் செய்தல்.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

12, 13, 14-ஆம் [1]பிரகரணங்கள்—[2]நல்கியதை நல்காமை, உரிமையில்லாதவன் விற்றல், உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு.

எழுபத்துமூன்றும் அத்தியாயம்

[3]கடன்கொண்டதைக் கொடாமைக்குரிய விதியே நல்கியதை நல்காமைக்கும் [4]கூறப்பட்டபடியாம்.

73-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] *12, 13, 14* ஆகிய இம்மூன்று பிரகரணங்களையும் தன்னுட்கொண்டது இவ்வத்தியாயம்.

[2] மூன்று பிரகரணங்களுள்ளும் முதலாவது 'நல்கியதை நல்காமை' என்பது. 'உனக்கு யான் இன்னதைத்தருவேன்' என்று வாக்குறுதி செய்யப்பட்டதைச் சொல்லியபடி கொடாமை என்பது இதன் பொருள். 'விற்றுக்கொண்டு மாறுபடல்' என்னும் முன்னைப் பிரகரணம் வாணிகத் தொழிலில் கொடுக்கல் வாங்கலைப்பற்றிய மாறுபாட்டைக் குறிப்பதாகும். இது அறம் முதலிய கொடைகளில் நிகழும் மாறுபாட்டைக் கூறுதலின் இப்பிரகரணம் அதன்பின் வைக்கப்பட்டது. இரண்டாவது 'உரிமையில்லாதவன் விற்றல்' என்பது. ஒரு பொருளை விற்றல் முதலியன செய்தற்கு உரிமையில்லாதவன் விற்றல் என்பது பொருள். சொல்லளவிற் கூறி மாறுபடுதலைப்பற்றியது முன்னைப் பிரகரணம். இது செயலளவில் மாறுபடுதலைப் பற்றியதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது. மூன்றுவது 'உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு' என்பது. ஓர் உடைமை நியாயப்படி இன்னுனுக்கு உரியதாகும் என்று துணிதல் என்பது இதன்பொருள். ஒரு பொருளுக்கு உரிமையில்லாதவன் அதனை விற்பானுயின், அதற்குரிய தண்டம் முதலியன முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டன. இஃது அங்ஙனம் மாறுபட விற்கப்பட்ட உடைமைக்கு நியாயமாக இன்னுன் உரியவன் என்று துணிதலைப்பற்றிக் கூறுதலின் அதன்பின் வைக்கப்பட்டது. இங்குக் கூறியவாற்ருல் இப்பிரகரணங்களின் இயைபுண்மை விளக்கமாதல் அறிக.

[3] கடன்கோடலைப் பற்றிய விதியை 68-ஆம் அத்தியாயத்திற் காண்க.

[4] கடன்கொண்டதைத் திருப்பிக் கொடுக்கவில்லையாகுல், சான்று முதலியனகொண்டு துணிதல்போல நல்கியதை நல்காமைக்கும் கொள்ள வேண்டும் என்பது.

[5]வழக்கிடுதற்கு இயலாத நிலையில் [6]கொடுக்கப்பட்டது [7]மாறுபடுதலின்கண்ணே நிலைபெறுவதாகும். [8]எல்லாப் பொருள்களையும் மக்களையும் மனைவியையும் தன்னையும் கொடுத்து மாறுபடுபவனுக்குத் திருப்பிக்கொடுத்துவிடல் வேண்டும். [9]தகுதியற்றவர்க்கும் [10]நற்செயல்நிமித்தம் [11]தீயவர்க்கும் செய்த [12]அறக்கொடையும் நன்மை செய்யாதவர்க்கும் தீமை செய்பவர்க்கும் கொடுக்கும் [13]பொருட்கொடையும் [14]தகுதியில்லாதவர்க்குக் கொடுக்கும் [15]இன்பக்கொடையும் [16]அங்ஙனமே. [17]கொடுப்போர்க்கும் வாங்குவோர்க்கும் கேடு நேராவண்ணம் திறமையுடையோர் மாறுபடுத்தலைச் செய்யலாம்.

[18]அடித்தொறுத்தல் பழித்துரைத்தல் கேடுவிளைத்தல் என்னும் இவை காரணமாக உண்டாம் அச்சத்தால் நிகழும் அச்சக்

---

5 வழக்கிடுதற்கு இயலாத நிலையாவது சான்று முதலியன இல்லாமை.

6 கொடுக்கப்பட்டது — கொடுப்பதாக வாக்குறுதி செய்யப்பட்டது. இப்பகுதியில் 'கொடுக்கப்பட்டது' என்று பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

7 வாக்குறுதிசெய்தபடி கொடாமல் மறுத்துவிடலாம் என்பதுகருத்து.

8 இங்கே கூறப்பட்ட பொருள்கள் ஒருவனுக்கு எதிர்பாராத நிலையில் கேடு நேர்ந்தவிடத்து அக்கேட்டினின்றும் உய்வதுகுறித்துக் கொடுப்பதாகக் கூறப்பட்டனவாகலின் பின்னர் மறுத்துவிடலாம் என்பது கருத்து.

9 தகுதி—அறக்கொடை பெறுதற்குரியது.

10 நற்செயல்—பசுக்காவல் முதலிய புண்ணியச்செயல்.

11 தீயவர்—கள்வர், பிறர்மனைநயப்போர் முதலியோர்.

12 அறக்கொடை—அறம்பொருள் இன்பங்களுள் அறத்தின்பொருட்டுச் செய்யப்படும் தானம்.

13 பொருட்கொடை — பொருள்வளர்ச்சியின் நிமித்தம் கொடுக்கட்படுவது.

14 தகுதி—ஈண்டு இன்பநுகர்தற்குரியது.

15 இன்பக்கொடை—காமநிமித்தம் கொடுக்கப்படுவது.

16 அங்ஙனமே—மேற்கூறியபடி கொடாமல் மறுத்துவிடலாம் என்பது.

17 மேற்கண்ட நிகழ்ச்சிகளில் இருதிறத்தார்க்கும் கேடுநேராவண்ணம் நிபுணர்களாகிய பெரியோர் மாறுபடுதலை ஆராய்ந்து முடிவுசெய்யலாம் என்பது கருத்து.

18 ஒருவன் தன்னை மற்றொருவன் அடித்தொறுத்தல் முதலியன செய்யக்கூடும் என்று அஞ்சிக் கொடுக்கும் கொடை அச்சக்கொடையாகும்.

கொடையையும் பிறரைத் துன்புறுத்தற்பொருட்டுச் செய்யும் [19]வெகுளிக்கொடையையும் கொடுத்தவனுக்கும் ஏற்றுக்கொண்டவனுக்கும் திருட்டுக்குரிய தண்டமாம். அரசனுடைய கொடைக்கு மிகுதியாகச் செய்யப்படும் [20]மகிழ்ச்சிக்கொடைக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[21]பிணைக்கடன் தண்டம் பரிசங்களின் [22]எச்சம் சூதுக்கடன் கள்ளுக்கடன் [23]காமக்கொடை என்னும் இவற்றைப் [24]புதல்வன் ஞாதியர் பொருள்பெற்றோன் என்னும் இவர்கள் விருப்பமில்லாத நிலையில் கொடுக்கக்கடவரல்லர்.

[25]இனி உரிமையில்லாதவன் விற்றல் கூறப்படும். இழந்த பொருளைக் கவர்ந்தவனையறிந்து அப்பொருட்குரியவன் அறங்கூறவையத்தாரைக்கொண்டு அவனைப் பிடித்தல்வேண்டும். [26]காலம் இடங்கள் மாறுபடின் தானே பிடித்துக்கொணர்தல் வேண்டும்

---

19 ஒருவனைத் துன்புறுத்தற்பொருட்டுக் கோபம் காரணமாகக் கொடுக்கப்படும் கொடை வெகுளிக்கொடையாகும்.

20 மகிழ்ச்சிக்கொடை—ஆடல் பாடல் முதலிய கலைவல்லார்க்கு மனமுவந்து கொடுக்கப்படுவது. இதனை அரசன் கொடுப்பதைவிட மிகுதியாக ஒருவன் கொடுப்பானாயின் அங்ஙனம் கொடுப்பவனுக்கு உத்தமசாகச தண்டம் விதிக்கப்படும் என்பது கருத்து.

21 பிணைக்கடன் — ஒருவனுக்குப் பிணையாக மற்றொருவன் கொடுக்க உடன்பட்ட கடன்.

22 எச்சம்—செலுத்திய அளவு நீங்க எஞ்சியபகுதி.

23 காமக்கொடை — கூத்தன் விறலி முதலியோர்க்குக் கொடுக்கப்படுவது.

24 மேற்குறிப்பிட்ட பிணைக்கடன் முதலியவற்றைக் கொடுக்கவேண்டியவன் இறந்துவிடுவானாயின் அவனுடைய மக்கள் ஞாதியர் அவன்பொருளை அடைந்தவர் என்னும் இவர்கள் விருப்பமில்லையானால் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆகார் என்பது கருத்து.

25 இஃது இவ்வத்தியாயத்து இரண்டாம் பிரகரணத்தொடக்கம்.

26 பொருளைக் கவர்ந்தவனைப் பிடிப்பதற்குக் குறிப்பிட்ட காலமும் இடமும் மாறுதலடைந்திருக்குமாயின் மீண்டும் அறங்கூறவையத்தார்க்குத் தெரிவியாமல் அப்பொருட்குரியவனே அறிந்து பிடித்துக்கொண்டு வரலாம் என்பது.

அறங்கூறவையத்தார் [27]உரியவனை நோக்கி 'எங்கிருந்து உனக்குக் [28]கிடைத்தது' என்று வினுதல் வேண்டும். அவன் [29]வந்த வரலாற்றைக் கூறி விற்றவனைக் கூருவிடின் அப்பொருளை [30]வாங்கிக் கொடுத்து விடுதலை செய்தல்வேண்டும். விற்றவனைக் காட்டிக் கொடுப்பானுயின் அப்பொருள் விலையையும் திருட்டுக்குரிய தண்டத்தையும் [31]செலுத்தல்வேண்டும். [32]அவனும் தனக்கு விற்றவனை அறிவிப்பானுயின் விற்றவனுக வேருெருவனைக் [33]காட்டாதவரை விடுதலைபெறக்கடவன். [34]இறுதியாகக் காட்டப்பட்டவன் பொருளின் விலையையும் திருட்டுக்குற்றத்திற்குரிய தண்டத்தையும் இறுக்கக்கடவன்.

இழக்கப்பட்ட பொருள் தன்னுடையது என்பதற்குச் சான்று முதலியன காட்டி அதனைத் திருப்பிப்பெறவேண்டும். தன்னுடையது என்பதற்குச் [35]சான்று முதலியன இல்லையாயின் ஐந்தில் ஒரு கூறு தண்டமாம். அப்பொருள் முறைப்படி அரசனைச் சார்ந்ததாகும்.

---

27 உரியவன்—பொருளைக் கவர்ந்து வைத்திருப்பவன்.

28 'கிடைத்தது' என்பதற்கு முன் 'இப்பொருள்' என்பதைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

29 தான் விலைக்கு வாங்கியதாய்ச்சொல்லித் தன்னிடம் விற்றவன் இன்னுன் என்று கூறவில்லையாயின் என்பது.

30 அறங்கூறவையத்தார் அப்பொருளை வாங்கி உரியவனிடம் கொடுத்து என்பது.

31 விற்றவன் பொருளின் விலையைப் பொருட்குரியவனுக்கும், தண்டத்தை அரசனுக்கும் செலுத்தல்வேண்டும் என்பது.

32 அவனும்—விற்றவனுக முன்குறிக்கப்பட்டவனும்.

33 தனக்கு விற்றவனுக மற்ருெருவனைக்காட்ட அவன் பிறனெருவனைக் காட்ட இங்ஙனம் காட்டிக்கொண்டுவரும் நிலையில் இறுதியில் வேருெருவனை விற்றவனுகக் காட்டாதவனைக் குற்றவாளி எனக்கொண்டு மற்றையோரை விடுதலை செய்துவிடல் வேண்டும் என்பது கருத்து.

34 இறுதியாகக் காட்டப்பட்டவன் — பிறனெருவனை விற்றவனுகக் காட்ட இயலாதவன்.

35 தன்னுடையது என்று கூறி சான்று முதலியன காட்டவில்லையாயின் பொய் கூறியதாகக்கொண்டு அப்பொருளின் விலையளவில் ஐந்தில் ஒருகூறு தண்டம் விதிக்கலாம் என்பது.

[36]இழந்து கவரப்பட்ட பொருளை அறிவியாமல் தானே எடுத்துக்கொள்ளும் உரியவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம்.

இழந்து கவரப்பட்ட பொருள் உல்குபொருள்நிலையத்தில் [37]வைக்கப்படல்வேண்டும். [38]மூன்று பக்கங்கள் வரை தேடிவருவார் இல்லையாயின் அரசன் எடுத்துக்கொள்ளலாம். [39]சான்று முதலியனகாட்டி உரியவனும் எடுத்துக்கொள்ளலாம்.

[40]இரண்டுகால் பிராணிகளுக்கு ஐந்துபணமும் [41]ஒற்றைக் குளம்புள்ளவற்றிற்கு நான்குபணமும் பசு எருமைகளுக்கு இரண்டு பணமும் [42]சிறுவிலங்குகளுக்குக் காற்பணமும் ஆக விடுதலைப் பொருள் கொடுத்தல்வேண்டும். இரத்தினம் [43]திண்மைப்பொருள் நொய்மைப்பொருள் குப்பியப்பொருள் என்னும் இவற்றிற்கு நூற்றிற்கு இருபது விகிதம் விடுதலைப்பொருள் ஆகும்.

பகைப்படையாலும் காட்டில் வாழ்வோராலும் கவரப்பட்ட [44]பொருளை அரசன் திருப்பிக்கொணர்ந்து உரியவர்களிடம் சேர்ப்பித்தல்வேண்டும். கள்வரால் கவரப்பட்ட பொருள் [45]அறியப்

---

[36] ஒருவன் இழந்து பிறனொருவனாற் கவரப்பட்ட பொருளைக் கவர்ந்தவனிடத்தினின்றும் அவனுக்கு அறிவியாமல் தானே எடுத்துக்கொண்ட உரியவனுக்கு இத்தண்டம் என்பது.

[37] கவர்ந்தவன் சுங்கங்கொள்ளுமிடத்தில் சேர்த்துவிடல் வேண்டும் என்பது.

[38] மூன்று பக்கங்கள்—நாற்பத்தைந்து நாள்.

[39] மூன்று பக்கங்களுக்குள்ளாணல் உரியவன் சான்றுமுதலியன காட்டி எடுத்துக்கொள்ளலாம் என்பது.

[40] இரண்டுகால் பிராணிகள் — அடிமை ஆண் பெண் முதலியோர். அடிமையாட்களை ஒருவன் தவறவிட்டானாயின் அந்த ஆட்களை அறிந்தவர் அவரைச் சுங்கநிலையத்தில் சேர்ப்பித்தல்வேண்டும் என்பதும், அடிமை கொண்டவன் அறிந்து அவரைத் திருப்பிப்பெறுங்கால் ஐந்துபணம் சுங்கத்திற்குச் செலுத்தவேண்டும் என்பதும் கருத்து. பின்வரும் விடுதலைப் பொருள்களையும் இவ்வாறே கொள்க.

[41] ஒற்றைக்குளம்புள்ளவை—குதிரை கழுதை ஒட்டகம் முதலியன.

[42] சிறுவிலங்கு—ஆடு முதலியன.

[43] திண்மை முதலியவற்றை 32-ஆம் அத்தியாயத்திற் காண்க.

[44] பொருள்—நாற்கால் விலங்கு முதலியன.

[45] அறியப்படாமலிருத்தல்—கண்டுபிடிக்கப்படாததாதல்,

படாமல் இருந்தாலும் திருப்பிக்கொண்டு வருவதற்கு [46]இயலாம லிருந்தாலும் [47]தன் [48]பொருளிலிருந்து கொடுத்தல்வேண்டும். [49]பிடித்தற்குத் தன்னால் நியமிக்கப்பட்டவனால் கைப்பற்றப்பட்ட பொருளைத் திருப்பிக்கொணர்ந்து அதற்குரிய [50]விலையையேனும் கொடுத்துவிடல் வேண்டும்.

பகைவரது நாட்டிலிருந்து படைவீரரால் கவரப்பட்டு வந்த பொருள் நன்னெறியில் வாழ்வோர் தெய்வம் அந்தணர் தவமுடையோர் என்னும் [51]இவர்களுடைய பொருளல்லாதவிடத்து அரசன் கட்டளைப்படி நுகரத்தக்கது. உரிமையில்லாதவன் விற்றல் இவ்வாறும்.

இனி உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு கூறப்படும். [52]சான்று முதலியன இல்லாத பொருள்கள் தொடர்ந்து அநுபவிப்பவர்களுக்கு உரியனவாம்.

ஒருவனுக்கு உரியபொருள் பிறரால் அநுபவிக்கப்பட்டுப் பத்தியாண்டுகள் வரை [53]புறக்கணிக்கப்பட்டிருந்தால் அப்பொருளை அவன் இழந்தவனாவான். [54]சிறுவன் யாண்டு முதிர்ந்தவன்

---

46 திருடனை அறிந்து பிடிக்க ஆற்றலில்லாமலிருந்தாலும் என்பது.

47 தன் என்பது அரசனைக்குறிக்கும்.

48 பொருள்—ஈண்டுக் கள்வரால் கவரப்பட்ட பொருளின் இனத்தைச் சார்ந்ததாகும்.

49 பிடித்தற்கு நியமிக்கப்பட்டவன் — கள்வனைக் கண்டுபிடித்தற்கு நியமிக்கப்பட்ட அதிகாரி.

50 அப்பொருளையாவது அல்லது அதற்குரிய விலையையாவது உரியவனுக்குக் கொடுத்துவிடல் வேண்டும் என்பது.

51 பொருள் நன்னெறியில் வாழ்வோர் முதலியவர்களுடையதாயின் திருப்பி அவர்களிடம் சேர்ப்பித்துவிடல் வேண்டும் என்பது கருத்து.

52 ஒரு பொருளை ஒருவன் தொடர்ந்து அநுபவித்து வருவானாகில் அப்பொருள் தனக்குரியது என்று பிறன் ஒருவன் சான்றுமுதலியன இல்லாமல் வழக்குத்தொடருவானாயின் அநுபவித்து வருபவனுக்கே உரியதாம் என்பது கருத்து.

53 புறக்கணித்தல்—தன்னுடையது என்று வழக்குத் தொடராமலிருத்தல்.

54 அப்பொருள் சிறுவன் முதலியோராக இங்குக் கூறப்பட்டோர்க்கு உரியதாக இருப்பினும் அப்பொருட்குரியவன் நாடுகடக்கப்பட்டிருப்பினும் அரசியற்கலக்கம் நேர்ந்தவிடத்தும் பத்துயாண்டுகள் வரை புறக்கணிக்கப்பட்டாலும் இழக்கப்பட்டதாகாது என்பது கருத்து.

நோயாளி விதனமுடையோன் அயல்நாடு சென்றவன் என்னும் இவர்களுடையதாயிருப்பினும் நாடுகடத்தல் அரசியற்கலக்கம் என்னும் இந்நிகழ்ச்சிகளிலும் இவ்விதி பொருந்தாது.

[55]தொடர்ந்து அநுபவிக்கப்பட்ட வீடு இருபது ஆண்டுகள் வரை புறக்கணிக்கப்படுமாயின் திருப்பிப் பெறுதற்குரியதன்று.

பிறர் இல்லத்திற் குடியிருக்கும் [56]ஞாதியர் வேதமோதுவோர் பாசண்டிகள் என்னும் இவர்கள் [57]அரசன் முன்னிலையிலன்றி அநுபவத்தைக்கொண்டு அவ்வில்லத்தைக் கவர்ந்துகொள்ள இயலாது. அடைக்கலப்பொருள் ஈட்டுப்பொருள் புதையற்பொருள் பணிப்பொருள் பெண் எல்லை அரசனுடையதும் வேதமோதுபவனுடையதுமாகிய பொருள்கள் என்னும் இவற்றையும் [58]கவர்ந்து கொள்ளலாகாது.

துறவிகளும் பாசண்டிகளும் அகன்ற இடத்தில் ஒருவர்க்கொருவர் இடையூறு விளைவியாமல் வாழ்தல்வேண்டும். [59]சிறிய இடையூறுகளைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். [60]முன்னர் வந்தவன் வரிசையாகத் தங்குதற்கு இடங்கொடுத்தல் வேண்டும். கொடாதவன் வெளிப்படுத்தப்படுவான். [61]காடுறைநிலை துறவு நிலை [62]ஓதுநிலை என்னும் மூன்று நிலைகளினுமுள்ளவருடைய பொருளை [63]முறையே ஆசிரியன் மாணவன் அறம்புரிநண்பன்

---

[55] ஒருவனுக்குரிய வீட்டை மற்றொருவன் இருபது யாண்டுகள் வரை அநுபவிக்க, அதுகாறும் உரியவன் புறக்கணித்துவிடுவானாயின் அதன்பின் அவ்வீட்டைப் பெறுதற்கு வழக்கிட இயலாதென்பது கருத்து.

[56] ஞாதியர்—குடியிருக்கும் இல்லமுடையாரின் உறவினர்.

[57] அரசன் முன்னிலையில் தெரிவித்து அநுமதிபெறாமல் என்பதாம்.

[58] இங்குக் குறிப்பிட்ட பொருள்களையும் அரசன் அநுமதியின்றி அநுபவித்ததை ஏதுவாகக்கொண்டு கவர்தலாகாது என்பது கருத்து.

[59] சிறிய இடையூறுகள்—தங்குமிடம் சுருக்கமாக இருப்பது முதலிய வற்றால் உண்டாவது.

[60] தங்குமிடத்தில் முதலில் வந்தமர்ந்தவன் பின்னர் வருபவர்களுக்கு முறைப்படி இடங்கொடுத்து இருக்கச்செய்தல் வேண்டும் என்பது.

[61] காடுறைநிலை—வானப்பிரத்தாச்சிரமம்.

[62] ஓதுநிலை—பிரமசரியாச்சிரமம்.

[63] முறையே என்றதனால் முன்னையோன் இல்லையாயின் பின்னையோன் அடையலாம் என்பது போதரும்.

உடன்பயின்றவன் என்னும் இவர்கள் அடையக்கடவர்.

[64]அவர்களுக்கு வழக்கு ஏற்படுமாயின் எத்துணைப்பணம் [65]தண்டமாமோ அத்துணை இரவு அரசனுக்கு நலம் பயக்குமாறு [66]நோன்பியற்றல் நீராட்டல் தீயோம்பல் அரும்பெருங் கன்மஞ் செய்தல் என்னும் இவற்றை அவர்கள் செய்தல்வேண்டும். பொன் பணம் இல்லாத பாசண்டர்கள் நல்லோராவர். [67]அன்னார் தம் தகுதிக்கேற்ப நோன்பியற்றி வழிபடல்வேண்டும். [68]கொடுமை களவு வன்செயல் வலிந்துபற்றல் என்னும் இந்நிகழ்ச்சிகளில் விதிக்கப்பட்ட தண்டமே செய்யத்தக்கதாகும்

சுலோகம்

துறவுநிலையிலுள்ள ஒழுக்கக்கேடுடையாரை அரசன் தண்டத்தால் ஒறுத்தல்வேண்டும். என்னை? மறத்தால் கெடுக்கப்பட்ட அறம் [69]புறக்கணிக்கப்படுமாயின் அரசனைக் [70]கொன்றுவிடுமாதலின்.

மூன்றும் அதிகரணம் 12, 13, 14-ஆம் பிரகரணங்கள்
'நல்கியதைநல்காமை, உரிமையில்லாதவன்விற்றல், உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபு' என்பன அடங்கிய
எழுபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

64 அவர்கள்—ஆசிரியர் முதலிய நால்வரும்.

65 தண்டம்—வழக்கில் தோல்வியடைந்தவர்களுக்கு விதிக்கப்படுவது.

66 நோன்பியற்றல் முதலிய புண்ணிய கன்மங்களை அரசனது நலங் குறித்துச் செய்துகொண்டிருக்கவேண்டும் என்பது.

67 மேற்குறிப்பிட்ட நல்லோராகிய பாசண்டர் வழக்கிட்டுத் தோல்வியடைவராயின் தகுதிக்கேற்பக் குறிப்பிட்ட காரியங்களைச் செய்யவேண்டும் என்பது.

68 நல்லோராகிய பாசண்டர் கொடுமை முதலாக இங்குக் கூறப்பட்ட தீச்செயல்களில் தலைப்பட்டிருப்பாராயின் அச்செயல்களுக்கு விதிக்கப்பட்ட தண்டமே அவர்களுக்குமாம் என்பது.

69 அரசனால் புறக்கணிக்கப்படுமாயின் என்பது.

70 "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்" என்னும் சிலப்பதிகார அடி ஈண்டு நினைக்கத்தக்கது.

மூன்ரும் அதிகாரணம்—அறநிலையாட்சி

பதினைந்தாம் பிரகாரணம்—[1]வன்செய்கை

எழுபத்துநான்காம் அத்தியாயம்

[2]பொது உடைமையை [3]வலிந்துபற்றுதல் வன்செய்கையாகும். [4]சிறப்பாக உள்ள உடைமையை [5]வலிந்துபற்றுதலும் [6]பிறழக் கூறுதலும் களவாகும்.

மணி திண்மைப்பொருள் நொய்மைப்பொருள் குப்பியப் பொருள் என்னும் இவற்றை வலிந்துபற்றின் அப்பொருளின் விலையளவு தண்டம் என்பர் மநுவின் வழிப்பட்டோர். விலையள வின் [7]இருமடங்கு என்பர் வெள்ளியின் வழிப்பட்டோர். குற்றத் திற்குத்தக தண்டம் என்பர் கௌடலியர்.

சிறிய பொருள்களாகிய மலர் பழம் காய் கிழங்கு தண்டு சோறு என்னும் இவற்றிற்கும் தோல் மூங்கில் மண் என்னும் இவற்ருல் செய்யப்பட்ட பாண்டம் முதலியவற்றிற்கும் பன் னிரண்டு பணத்திற்குக் கீழ்ப்படாமலும் இருபத்துநான்கு பணத் திற்கு மேற்படாமலும் [8]தண்டமாம்.

74-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உடைமைக்கும் உடையானுக்கும் உரிய இயைபை அறிந்து அம்முறை யில் நடந்துகொள்ளாமல் ஒருவனுக்குரிய உடைமையை மற்ருெருவன் வலிந்து கைப்பற்ற முயலுதல் தவறு என்பதும் அதற்குரிய தண்டவிதி களும் இப்பிரகரணத்திற் கூறப்படுதலின் இஃது அதன்பின் வைக்கப்பட் டது. இதனுல் பிரகரண இயைபு தெளிவாம்.

[2] பொது உடைமை—பலர்க்கும் பொதுவாக உள்ள பொருள்.

[3] வலிந்துபற்றுதல்—அப்பலருள் ஒருவன் தனக்குரியது என்று அப கரித்தல்.

[4] சிறப்பு—ஒருவனுக்குரியது.

[5] உரியவன் அல்லாதவன் கவர்ந்துகோடல் என்பது.

[6] பிறழக்கூறுதல் — ஒருவனுடைய பொருளைப் பெற்றுக்கொண்டு பெறவில்லை என்று மாறுபடக்கூறுதல்.

[7] இருமடங்கு தண்டம் என்பது.

[8] இங்கே குறிப்பிட்ட பொருள்களை வலிந்துபற்றின் இத்துணைத்தண் டம் என்பது கருத்து.

பருப்பொருள்களாகிய எஃகு மரம் கயிறு என்னும் இவற்றால் ஆக்கப்பட்ட பொருள்களுக்கும் சிறுவிலங்கு ஆடை என்னும் இவற்றிற்கும் இருபத்துநான்கு பணத்திற்குக் குறையாமலும் நாற்பத்தெட்டுப்பணத்திற்கு மேற்படாமலும் [9]தண்டமாம். பருப்பொருள்களாகிய செம்பு வெண்கலம் பீங்கான் யானைத்தந்தம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட உண்டைவடிவமான பாத்திரங்களுக்கு நாற்பத்தெட்டுப் பணத்திற்குக் குறையாமலும் தொண்ணூற்றாறு பணத்திற்கு மேற்படாமலும் [10]தண்டமாம். பூர்வசாகச தண்டமுமாம். பருப்பொருள்களாகிய [11]பெருவிலங்கு மனிதன் நிலம் இல்லம் தங்கம் பொன் நுண்ணிய இழைகளையுடைய ஆடை என்னும் இவைமுதலியவற்றிற்கு இருநூறு பணத்திற்குக் குறையாமலும் ஐந்நூறு பணத்திற்கு மேற்படாமலுமுள்ள மத்தியமசாகசம் [12]தண்டமாம்.

மகளிரையாதல் ஆடவரையாதல் வலிந்துபற்றிக் கட்டினவனுக்கும் கட்டுவித்தவனுக்கும் கட்டை அவிழ்த்துவிட்டவனுக்கும் ஐந்நூறு பணத்திற்குக் குறையாமலும் ஆயிரம் பணத்திற்கு மேற்படாமலுமுள்ள உத்தமசாகசம் தண்டம் என்பர் ஆசிரியர்.

வன்செய்கையை ஏற்றுக்கொள்ளுவேன் என்று [13]செய்விப்பவனுக்கு இருமடங்கும் [14]செலவாகும் பொருளைக் கொடுத்துவிடுவேன் என்பவனுக்கு நான்குமடங்கும் தண்டமாம். [15]இத்

---

[9] இத்தண்டம் எஃகுப்பொருள் முதலியவற்றை வலிந்து கவர்ந்ததற்கு எனக்கொள்க.

[10] இத்தண்டம் இங்கே கூறப்பட்ட செம்புப்பாத்திரம் முதலியவற்றை வலிந்து கவர்ந்ததற்கு எனக்கொள்க.

[11] பெருவிலங்கு—யானை குதிரை முதலியன.

[12] இத்தண்டம் இங்கே கூறப்பட்ட பெருவிலங்கு முதலியவற்றை வலிந்து கவர்ந்ததற்கு எனக்கொள்க.

[13] ஒருவன் வன்செய்கைக்குரிய பொறுப்பை யான் ஏற்றுக்கொள்வேன் என்று கூறி மற்றொருவனைக்கொண்டு செய்வித்தானானால் அவனுக்குக் குறிப்பிட்ட தண்டத்தின் இருமடங்கு தண்டம் என்பது கருத்து.

[14] ஒரு வன்செய்கையைச் செய்தற்பொருட்டுச் செலவாகும் பொருளை என்பது.

[15] இத்துணை—வன்செய்கை நிமித்தம் விதிக்கப்படும் தண்டத்தில் இவ்வளவுகூறு.

துணைப்பொன் கொடுப்பேன் என்று அளவை அறுதியிட்டுச் செய்விப்பவன் அறுதியிட்ட பொருளையும் தண்டத்தையும் செலுத்தல் வேண்டும் என்பர் வியாழன் வழிப்பட்டோர்.

[16]அவன் வெகுளி மதம் மோகம் என்னும் இவற்றுள் ஒன்றைக் [17]காரணமாகக் கூறுவானாயின் [18]முற்கூறியபடி அவனுக்குத் தண்டம் விதித்தல்வேண்டும் என்பர் கௌடலியர்.

சுலோகங்கள்

(1) எல்லாவகையான தண்டவிதிகளிலும் நூற்றுக்கு எட்டுப்பணம் [19]'உருவம்' ஆகும். நூற்றுக்குக் கீழ்ப்படுமாயின் நூற்றுக்கு ஐந்து பணம் [20]'வியாசீ' ஆகும்.

(2) குடிமக்களின் குற்றமிகுதியாலும் அரசரின் [21]எண்ணக்கேட்டினாலும் [22]அறத்தின்பாற்படாமல் உருவம் வியாசீ என்னும் இவ்விரண்டும் உண்டாம். [23]இயற்கையே அறத்தின்பாற்பட்டதாக நினைக்கப்படும்.

மூன்றும் அதிகரணம் பதினைந்தாம் பிரகரணம்
'வன்செய்கை' என்னும் எழுபத்துநான்காம் அத்தியாயம்
முற்றிற்று.

---

16 அவன்—வன்செய்கையைச் செய்வித்தவன்.

17 காரணம்—செய்வித்ததற்கு ஏது.

18 முற்கூறியபடி—வன்செய்கையைச் செய்தவனுக்குச் சொல்லியபடி.

19 விதிக்கப்படும் தண்டப்பணம் நூறும் அதற்கு மேற்பட்டுமிருக்குமாயின் நூற்றுக்கு எட்டுவிகிதம் மிகுதியாக வாங்கப்படுவது 'உருவம்' என்னும் பெயருடையதாகும்.

20 நூற்றுக்கு உட்பட்டதாக விதிக்கப்படும் தண்டப்பணத்திற்கு நூற்றுக்கு ஐந்து விகிதம் கணக்கிட்டுக் கூட்டி வாங்குவது 'வியாசீ' என்னும் பெயருடையதாகும்.

21 எண்ணக்கேடு — குடிகளிடத்தினின்றும் முறைதவறிப் பொருளை மிகுதியாகப் பெறவேண்டும் என்னும் சித்தவிருத்தி.

22 மேற்கண்ட காரணங்களால் அறத்திற்கு மாறுபட உருவமும் வியாசீயும் ஏற்படும் என்பது கருத்து. இதனால் அங்ஙனம் ஏற்படாவாறு அரசனும் குடிகளும் முறைதவறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பது பெறப்படும்.

23 இயற்கை—உருவம் வியாசீ இல்லாதது.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

பதினொரும் பிரகரணம்—[1]வன்சொல்

எழுபத்தைந்தாம் அத்தியாயம்

[2]உறுப்புக்குறைபற்றிப் பழித்தல் [3]இழித்துரைத்தல் [4]அச்சுறுத்துரைத்தல் என வன்சொல் மூவகைப்படும்.

உடல் [5]இயல்பு கல்வி தொழில் நாடு என்னும் [6]இவற்றுள் உடற்குறைபற்றிக் குருடன் முடவன் [7]முதலியவாக [8]உண்மை கூறிப் பழித்துரைப்பின் மூன்றுபணம் தண்டமாம். [9]பொய்ம்மை கூறிப் பழித்துரைப்பின் ஆறுபணம் தண்டமாம்.

குருடன் முதலியோரைக் குறித்து அழகிய கண்ணுடையோன் முதலியோராகக்கூறிப் புகழ்வதுபோலப் பழித்துரைப்பின் பன்னிரண்டுபணம் தண்டமாம்.

[10]குட்டநோய் பைத்தியம் அலித்தன்மை முதலியவற்றால்

75-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முன்னைப் பிரகரணத்தில் வன்செயலைப்பற்றிக் கூறப்பட்டது. அதற்கினமாகிய வன்சொல் இப்பிரகரணத்திற் கூறப்படுதலின் அதனை அடுத்து இது வைக்கப்பட்டது. இதனாற் பிரகரண இயைபு விளக்கமாதலறிக.

[2] உறுப்புக்குறை—குருடு செவிடு முதலியன.

[3] இழித்துரைத்தல்—குட்டம் முதலிய நோய் பற்றி இழித்துக்கூறல்.

[4] கொலை முதலியன செய்வதாகக்கூறல் என்பது.

[5] இயல்பு—ஆண்மை பெண்மை முதலியன.

[6] இவற்றுள்—உடல் முதலாக இங்குக் கூறப்பட்ட ஐந்தனையும் பற்றி நிகழும் வன்சொற்களுள்.

[7] முதலிய என்றதனால் செவிடு முதலியவற்றையும் கொள்ளல் வேண்டும்.

[8] உண்மைகூறி— பழிக்கப்பட்டவன் உண்மையாகக் குருடனாகவும் முடவனாகவும் இருப்பதை அறிந்துசொல்லி.

[9] குருடு முடம் முதலியன இல்லாதவனை அவை உள்ளனவாகக்கூறிப் பழித்துரைப்பின் என்பது.

[10] இனி இழித்துரைத்தலைப்பற்றிக் கூறத்தொடங்குகின்றார்.

பழித்துரைப்பினு[11]மாம். [12]ஒத்தவரைக்குறித்து உண்மையாகவும் பொய்யாகவும் புகழ்வதுபோலப் பழித்தும் பழித்துரைப்பின் முறையே பன்னிரண்டு பணம் விழுக்காடு மிகுதியாகத் [13]தண்டமாம். [14]உயர்ந்தோரைக் குறித்துக்கூறின் இருமடங்காம். [15]இழிந்தோரைக் குறித்துக்கூறின் அரையளவு தண்டமாம். பிறர்மனைவியரைக் குறித்துக்கூறின் இருமடங்காம்.

[16]மறவி செருக்கு அறியாமை முதலியவை [17]காரணமாயின் அரையளவு தண்டமாம்.

[18]குட்டநோய் பைத்தியம் என்னும் இவற்றிற்கு மருத்துவரும் அணிமையிலுள்ள மக்களும் சான்றாவார். [19]அலித்தன்மைக்கு மகளிரும் மூத்திர நுரையும் நீரில் மலம் அழுந்தலுமாம்.

[20]அந்தணர் அரசர் வணிகர் சூத்திரர் சண்டாளர் என்னும்

---

11 பன்னிரண்டுபணம் தண்டமாம் என்பது.

12 ஒத்தவர்—பழித்துரைப்பவனோடு ஒத்த தகுதியுடையோர்.

13 குட்டநோய் முதலியன உண்மையாக இருப்பது குறித்துப் பழிப்பின் பன்னிரண்டுபணமும் பொய்யாகக் கற்பித்துக்கூறின் இருபத்துநான்கு பணமும் புகழ்வதுபோலப் பழித்துக்கூறின் முப்பத்தாறு பணமும் தண்டம் என்பது கருத்து.

14 பழித்துரைப்போன் தன்னின் உயர்ந்தோரை மேற்கூறியவாறு உண்மை முதலியனபற்றிப் பழித்துரைப்பின் முறையே குறிப்பிட்ட தண்டத்தின் இருமடங்கு தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது.

15 தன்னிற் றாழ்ந்தோரைக்குறித்து உண்மை முதலியவைபற்றிப் பழித்துரைப்பின் முறையே குறிப்பிட்ட தண்டத்தின் அரையளவு தண்டமாம் என்பது.

16 மறவி—விழிப்பின்மை.

17 காரணமாயின்—பழித்துரைத்தற்கு ஏதுவாயின்.

18 குட்டநோய் பைத்தியம் என்னும் இவற்றின் உண்மையின்மைகளுக்குச் சான்றாவார் இன்னார் என்பதைக் கூறுகின்றார்.

19 ஒருவன்பால் அலித்தன்மையுண்மைக்குப் பெண்பாலரும் மூத்திரத்தில் நுரைதோன்றாமையும் நீரில் மலம் மிதவாமல் உள்ளழுந்தலும் சான்றாம் என்பது கருத்து.

20 இயல்புகுறித்துப் பழித்தற்குரிய தண்டவிதி கூறுகின்றார்.

இவருள் [21]பின்னவர் முன்னவரை இயல்புகுறித்துப் பழித்துரைப்பின் முறையே மூன்றுபணம் விழுக்காடு மிகுதியாகத் தண்டமாம். [22]முன்னவர் பின்னவரைப் பழித்துரைப்பின் முறையே இரண்டு பண விழுக்காடு குறைவான தண்டமாம். இழிந்த பார்ப்பனன் முதலியோர் பழித்துரைப்பினு[23]மாம்.

[24]இதனால் [25]பேச்சினால் பிழைப்பவர்களின் [26]கல்விபற்றிய பழிப்புரைக்கும் [27]காருகன் பாணன் முதலியோரின் [28]தொழில் பற்றிய பழிப்புரைக்கும் [29]கீழை ஊணதேயத்தார் காந்தாரதேயத் தார் முதலியோரின் [30]நாட்டைப்பற்றிய பழிப்புரைக்கும் விதி கூறப்பட்டபடியாம்.

---

21 சண்டாளன் ஒருவன் சூத்திரனை இயல்புகுறித்துப் பழித்துரைப்பின் மூன்று பணமும் வணிகனைப் பழித்துரைப்பின் ஆறு பணமும் அரசனைப் பழித்துரைப்பின் ஒன்பது பணமும் அந்தணனைப் பழித்துரைப்பின் பன்னிரண்டு பணமும் தண்டமாம் என்பதும் இவ்வாறே சூத்திரன் முதலிய பின்னவர் தமக்கு முன்னவரைப் பழித்துரைப்பினும் மூன்று பணம் விழுக்காடு மிகுதியாகத் தண்டமாம் என்பது கருத்து.

22 அந்தணன் ஒருவன் இயல்புகுறித்து அரசனைப் பழித்துரைப்பின் எட்டுப்பணமும் வணிகனைப் பழித்துரைப்பின் ஆறு பணமும் சூத்திரனைப் பழித்துரைப்பின் நான்கு பணமும் சண்டாளனைப் பழித்துரைப்பின் இரண்டு பணமும் தண்டமாம் என்பது கருத்து.

23 இரண்டு பண விழுக்காடு குறைவான தண்டமாம் என்பது. ஈண்டும் முன்னவன் பின்னவனைப் பழித்துரைத்தற்கே தண்டங் கூறப்பட்டிருப்பினும் முற்கூறியது உயர்ந்த பார்ப்பனன் முதலியோர்க்கும் இஃது இழிந்த பார்ப்பனன் முதலியோர்க்கும் எனக்கொள்ளல் வேண்டும். இழிந்த பார்ப்பனன் முதலியோர்க்குத் தண்டவேறுபாடு உண்டோ என்னும் ஐயத்தை நீக்குதற்குக் கூறப்பட்டபடியாம்.

24 இதனால் — மேற்கூறிய விதியினால்.

25 கதை கூறுதல் முதலியவற்றால் வாழ்க்கைநடத்துவோர் என்பது.

26 கல்வி இழிந்தது எனக்கூறும் பழிப்புரை என்பது.

27 காருகர் — தச்சன் கொல்லன் முதலியோர்.

28 தொழில் இழிந்தது எனக்கூறும் பழிப்புரை என்பது.

29 ஊணதேயம் என்பது காமகிரிக்கு வடபால் உள்ளது. அதன் கீழைப்பகுதி கீழை ஊணதேயமாகும்.

30 நாட்டின் இழிவைப்பற்றிய பழிப்புரை என்பது.

[31]ஒருவன் மற்றொருவனை நோக்கி "உன்னை [32]இவ்வாறு செய்வேன்" என்று உடலுறுப்புக்களால் அச்சுறுத்திச் செய்யாமலிருப்பானாயின் அங்ஙனம் [33]செய்தற்குரிய தண்டத்தில் அரையளவு தண்டம் இறுத்தல்வேண்டும்.

[34]ஆற்றலில்லாதவன் வெகுளி செருக்கு அறிவின்மை என்னும் இவற்றைக் [35]காரணமாகக் கூறின் பன்னிரண்டுபணம் தண்டம் இறுத்தல்வேண்டும்.

பகை எண்ணமுடையவன் கேடுசெய்தற்கு ஆற்றலுடையவனாகவும் இருப்பானாயின் அவன் உயிருள்ளளவும் [36]பிணைகொடுத்தல் வேண்டும்.

சுலோகம்

தன் நாட்டையும் ஊரையும் பழித்துரைப்பவன் பூர்வசாகச தண்டமும் தன் சாதியையும் குழுவையும் பழித்துரைப்பவன் மத்தியமசாகச தண்டமும் தெய்வத்தையும் தெய்வநிலையங்களையும் பழித்துரைப்பவன் உத்தமசாகச தண்டமும் இறுத்தல்வேண்டும்

மூன்றும் அதிகரணம் பதினாறும் பிரகரணம்
'வன்சொல்' என்னும் எழுபத்தைந்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[31] அச்சுறுத்துரைத்தற்குரிய தண்டவிதிகூறத் தொடங்குகின்றார்.

[32] காலை ஒடித்துவிடுவேன் கையைத் துணித்துவிடுவேன் என்று சொல்லிக் கை முதலியவற்றால் காட்டி அச்சுறுத்தின் என்பது.

[33] சொல்லியபடி செய்தற்குரிய தண்டவிதியை அடுத்துவரும் 'தண்டக்கொடுமை' என்னும் பிரகரணத்தில் 'கைகால்களை ஒடித்தல் பல்லைத்தகர்த்தல்' முதலியவாகக் கூறப்படும் குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டவிளக்கத்தில் காண்க.

[34] ஆற்றலில்லாதவன்—கூறியபடி மற்றொருவனுடைய கைகால்களை ஒடித்தற்கு வன்மையில்லாதவன்.

[35] பழித்துரைத்தற்குக் காரணமாகக் கூறின் என்பது.

[36] அறங்கூறவையத்தார்க்குப் பிறர்க்குக் கேடு செய்யாமலிருத்தற்குப் பிணைகொடுத்தல் வேண்டும் என்பது.

மூன்றும் அதிகரணம்—அறநிலையாட்சி

பதினேழாம் பிரகரணம்—[1]தண்டக்கொடுமை

எழுபத்தாறும் அத்தியாயம்

[2]ஊறுபடுத்தல் [3]ஓங்குதல் [4]அடித்தல் என்பன தண்டக் கொடுமைகளாம்.

[5]கை சேறு சாம்பல் புழுதி என்னும் இவற்றால் கொப்பூழ்க்குக் கீழ்ப்பட்ட உடற்பகுதியை ஊறுபடச் செய்வோனுக்கு மூன்று பணம் தண்டமாம்.

தூய்மையற்ற [6]அவற்றாலும் காலாலும் எச்சிலாலும் ஊறு படச் செய்வோனுக்கு ஆறு பணமும் [7]வாந்திநீர் மலமூத்திரம் முதலியவற்றாலாயின் பன்னிரண்டு பணமும் கொப்பூழ்க்கு மேற் பட்ட உடற்பகுதியி[8]லாயின் இருமடங்கும் தலையிலாயின் நான்கு மடங்கும் தண்டமாம். இஃது [9]ஒத்தவர்க்கென்க.

76-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தண்டம்—தடி. உபலக்கணத்தால் கை முதலியவற்றையும் உணர்த் தும். தண்டக்கொடுமை—தடி முதலிய கருவிகளாலும் கை கால் முதலிய வற்றாலும் ஊறுபடப் புடைத்தல். கடுஞ்சொல்லைப்பற்றி முன்னைப்பிரகர ணத்திற் கூறப்பட்டது. தடி முதலியவற்றால் ஊறுபடப்புடைத்தல் அதற் கினமாதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதனால் பிரகரண இயைபு விளக்கமாதல் அறிக.

[2] ஊறுபடுத்தல்—உடலில் பரிசிக்கச்செய்தல்.

[3] ஓங்குதல்—கை தடி முதலியவற்றை உயர எடுத்தல்.

[4] அடித்தல்—தடி கை முதலியவற்றால் புடைத்தல்.

[5] ஒருவன் மற்றொருவனுடைய நாபிக்குக்கீழ்ப்பட்ட உடற்பகுதியில் சாம்பல் சேறு முதலியவற்றை இறைப்பானாயின் அவனுக்கு இத்தண்டம் என்பது.

[6] கை சேறு முதலியவற்றால் என்பது; முற்கூறியது தூயசாம்பல் புழுதி முதலியவற்றைப் பற்றியது எனவும் இங்கே கூறியது தூய்மையில்லாத சாம்பல் புழுதி முதலியவற்றைப் பற்றியது எனவுங்கொள்க.

[7] வாந்திநீர் முதலியவற்றை வாரி இறைப்பின் என்பது.

[8] ஊறுபடச்செய்யின் என்பது.

[9] ஒருவன் தனக்கு ஒத்தவனை மேற்குறிப்பிட்ட பொருள்களால் ஊறு படுத்தின் இத்தண்டமாம் என்பது.

[10]உயர்ந்தோர்பாற் செய்யின் இருமடங்கும் இழிந்தோர்பாற் செய்யின் அரையளவும் பிறர் மனைவியர்பாற் செய்யின் இருமடங்கும் மறவி செருக்கு அறிவின்மை முதலியவற்றாற் செய்யின் அரைமடங்கும் தண்டமாம்.

[11]கால் ஆடை கை தலைமயிர் என்னும் இவற்றைப்பற்றின் ஆறுபண விழுக்காடு மேன்மேலும் தண்டமாம்.

[12]பிசைதல் கட்டுதல் [13]அழுக்குமைபூசுதல் [14]இழுத்தல் [15]உடல் மேலிருத்தல் என்னும் இவற்றிற்குப் பூர்வசாகச தண்டமும் [16]கீழ் வீழ்த்திச் செல்பவனுக்கு அதனில் அரையளவும் தண்டமாம்.

சூத்திரன் எவ்வுறுப்பினால் பார்ப்பனனைப் புடைப்பானோ அவனுடைய அவ்வுறுப்பைக் களைந்துவிடல் வேண்டும். [17]உயர எடுப்பின் [18]விடுதலைப்பொருளும் தொடின் [19]அரையளவும் தண்டமாம். இதனால் தூய்மையற்ற சண்டாளர் முதலியோர்க்கும் விதி கூறப்பட்டபடியாம்.

---

[10] மேற்குறிப்பிட்ட சாம்பல் முதலியவற்றை ஒருவன் தன்னின் உயர்ந்தோர்பால் எறிவானாயின் முற்கூறப்பட்ட தண்டத்தின் இருமடங்கு தண்டமாம் என்பது. பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[11] ஒருவன் மற்றொருவனுடைய காலைப்பிடித்திழுப்பின் ஆறு பணமும் ஆடையைப்பற்றின் பன்னிரண்டு பணமும் கையைப்பற்றின் பதினெட்டுப் பணமும் தலைமயிரைப்பற்றின் இருபத்துநான்கு பணமும் தண்டமாம் என்பது.

[12] பிசைதல்—ஒருவன் மற்றொருவன் உடலுறுப்புக்களை நெருக்கிப் பிசைதல்.

[13] கசட்டுமைக் குழம்பைக்கொண்டு பூசுதல் என்பது.

[14] இழுத்தல்—நிலத்தில் ஊறுபட ஈர்த்தல்.

[15] பிறன் உடலைக் கீழேவீழ்த்தி அவ்வுடல்மேலிருத்தல் என்பது.

[16] ஒருவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடினவனுக்கென்பது.

[17] உயர எடுத்தல்—கை முதலியவற்றை ஓங்குதல்.

[18] விடுதலைப்பொருள்—குற்றநிமித்தம் ஒருறுப்பைக்களைதற்கு ஈடாக விதிக்கப்படும் தண்டப்பொருள். இதனைச் 'சிறுபகை களைதல்' என்னும் அதிகரணத்திற் காண்க.

[19] அரையளவு—அவ்விடுதலைப்பொருளின் பாதி அளவு. இதுகாறும் கூறப்பட்டன ஊறுபடுத்தலைப்பற்றிய செய்திகளாம்.

கையை [20]ஓங்கின் மூன்று பணம் முதல் பன்னிரண்டு பணம் வரை தண்டமாம். [21]காலைத்தூக்கின் [22]இருமடங்காம். துன்பத்தையுண்டுபண்ணும் [23]கருவியை எடுப்பின் பூர்வசாகசம் தண்டமாம். உயிர்க்குக் [24]கேடுவிளைக்கும் பொருளைக்காட்டின் மத்தியமசாகசம் தண்டமாம்.

விறகுக்கட்டை ஓடு கல் இருப்புக்கோல் தடி கயிறு என்னும் இவற்றுள் ஒன்றினால் [25]புண்ணீர் வெளிப்படாமல் துன்பத்தை உண்டுபண்ணுகின்றவனுக்கு இருபத்துநான்கு பணம் தண்டமாம். [26]கெடு புண்ணீரல்லாத புண்ணீர் [27]வெளிப்படுமாயின் [28]இருமடங்காம்.

புண்ணீர் தோன்றாமல் [29]இறந்தவனைப்போற் கிடக்குமாறு அடிப்பவனுக்கும் கைகால்களின் அமைப்பை [30]வேறுபடுத்துபவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம். கை கால் பல் என்னும் இவற்றை முறித்தவனுக்கும் செவி மூக்குக்களை அறுத்தவனுக்கும் கெட்டபுண் அல்லாத [31]புண்களில் ஊறுபாடு செய்பவனுக்கும் [32]ஆம்.

---

20 ஓங்குதல்—அடிப்பேன் என்று கூறி உயர எடுத்தல்.

21 காலினால் உதைப்பேன் என்று சொல்லித் தூக்கினால் என்பது.

22 இருமடங்கு—ஆறு பணம் முதல் இருபத்துநான்கு பணம் வரை தண்டமாம் என்பது.

23 கருவி — உடலில் ஊறுபாட்டை விளைவிக்கும் தாற்றுக்கோல் முதலியன.

24 கேடுவிளைக்கும் பொருள்—பாம்பு முதலியன.

25 புண்ணீர்—இரத்தம்.

26 கெடு புண்ணீர் — குட்டம் முதலிய புண்களிலிருந்து உண்டாம் இரத்தம்.

27 மேற்கூறிய விறகுக்கட்டை முதலியவற்றால் இரத்தம் ஒழுகும்படி ஊறுசெய்யின் என்பது.

28 இருமடங்கு—நாற்பத்தெட்டுப் பணம். குட்டநோய் முதலிய புண்களிலிருந்து இரத்தம் ஒழுகப் புடைப்பின் இருமடங்கு தண்டம் இன்று என்பதும் குற்றத்தின் இயல்புக்குத் தக்கவாறு அரையளவு முதலாகத் தண்டம் விதிக்கலாம் என்பதும் கருத்து.

29 செத்தவனைப்போல் மூர்ச்சித்துக் கிடக்குமாறு என்பது.

30 வேறுபடுத்தல்—உறுப்புக்களின் பூட்டுக்களை நழுவச்செய்தல்.

31 புண்களில் ஊறுபாடு செய்தல்—முன்னுள்ள சிறு புண்களை ஊறுபடுத்தி மிகுதிப்படுத்தல்.

32 பூர்வசாகசம் தண்டமாம் என்பது.

துடை கழுத்துக்களை முறித்தல் கண்ணைக்குடைதல் பேசுதல் இயங்குதல் உண்ணுதல் என்னும் இவற்றிற்குத் [33]தடை செய்தலாகிய இக்குற்றங்களுக்கு மத்தியமசாகச தண்டமும் [34]செம்மைப்படுத்தும் செலவும் செலுத்தல்வேண்டும். இறப்புநேரின் [35]சிறுபகை களைதல் என்னும் அதிகரணத்திற்கூறிய விதிக்கு உட்படுத்தல் வேண்டும்.

[36]ஒரு குழுவினர் ஒருவனையடிப்பின் தனித்தனியே [37]இருமடங்கு தண்டமாம்.

கலகமும் [38]கவர்ந்து கைப்பற்றியதும் நெடுங்கால நிகழ்ச்சியாயின் வழக்குத்தொடர்தல் இயலாது என்பர் ஆசிரியர். [39]குற்றவாளிக்கு விடுதலையின்றென்பர் கௌடலியர்.

[40]பொருதவனே [41]விரைந்து செல்லுபவனாதலின் கலக நிகழ்ச்சியில் [42]முதலில் வந்தவன் வெற்றியடைகின்றான் என்பர் ஆசிரியர்.

---

[33] தடைசெய்தலாவது முறையே நாவையும் கால்களையும் தொண்டையையும் ஊறுபடுத்தல்.

[34] செம்மைப்படுத்தலாவது மேற்கூறிய நா முதலிய உறுப்புக்களின் ஊறுபாட்டை மருந்து முதலியவற்றால் தீர்த்து நலப்படுத்தல்.

[35] சிறுபகை களைதல் என்னும் அதிகரணம் அடுத்து வருவது.

[36] பலர் ஒன்றுகூடி ஒருவனைத் துன்புறுத்தின் அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இருமடங்கு தண்டமாம் என்பது.

[37] இருமடங்காவது ஒருவன் ஒருவனைத் துன்புறுத்தினால் என்ன தண்டமோ அதனிருமடங்கு என்பது.

[38] மற்றொருவனுடைய பொருளைக் கவர்ந்து தனக்கு உரிமையாக்கிக் கொண்டது என்பது.

[39] குற்றவாளி—முற்கூறப்பட்ட கலகத்தையும் கவர்ந்து கைப்பற்றலையும் செய்தவன். அவன் பலநாட்களுக்குமுன் அக்குற்றங்களைச் செய்தவனாயினும் அவனுக்கு விடுதலையின்றென்பது கௌடலியர் கொள்கையாம்.

[40] பொருதவன்—பிறரால் செய்யப்பட்ட துன்பத்தைத் தாங்காதவன்.

[41] விரைந்து செல்லுதல் அறங்கூறவையத்தார்க்கு அறிவித்தற்பொருட்டு.

[42] முதலில் வந்து நீதிமன்றத்தில் தெரிவித்தவன் என்பது.

[43]முதலிலோ பின்னரோ வந்தவனுக்குச் சான்றுகளே பிரமாணமாகும். சான்று இல்லையாயின் [44]அடிபட்டது அல்லது கலகத்தை யறிதற்குரிய ஏது என்னும் இவை பிரமாணமாம். ஆதலின் [45]அங்ஙனம் அன்றென்பர் கௌடலியர்.

அடித்துத் துன்புறுத்தியதுபற்றிய வழக்கில் [46]மாற்றங்கூறுத வனுக்கு அன்றே தோல்வியாகும்.

[47]கலக நிகழ்ச்சியில் பொருளைக் கவர்கின்றவனுக்குப் பத்துப் பணம் தண்டமாம்.

[48]சிறுபொருள்களுக்குக் [49]கேடு விளைவிப்பின் அவற்றையும் திருப்பிக்கொடுத்து [50]அத்துணைத்தண்டமும் இறுத்தல்வேண்டும்.

[51]பெரும்பொருள்களுக்குக் கேடு விளைவிப்பின் அப்பொருள் களும் [52]இருமடங்கு தண்டமும் இறுத்தல்வேண்டும்.

ஆடை அணிகலன் தங்கம் பொன் பாண்டம் என்னும் இவற் றிற்குக் கேடு விளைவிப்பின் அப்பொருள்களும் பூர்வசாகசமும் தண்டமாம்.

---

43 அறங்கூறவையத்தார்க்குத் தெரிவித்தற்பொருட்டு ஒருவன் முதலில் வந்தாலும் பின்னர் வந்தாலும் வருதலைப்பற்றித் துணியாமல் சான்றுகளைக் கொண்டே துணிதல்வேண்டும் என்பது கருத்து.

44 அடிபட்ட இடத்தைப் பார்த்தல் என்பது.

45 முதலில் வந்தவன் வெற்றியடைகின்றான் என்று துணிதல் பொருந் தாது என்பர் கௌடலியர்.

46 மாற்றம்—கேட்ட கேள்விக்கு விடை.

47 இருவர் கலகம்செய்துகொண்டிருக்கும்போது அவர்தம் பொருளைக் கவர்ந்தவனுக்கு இத்தண்டம் என்பது. ஈண்டுக் கவர்ந்த பொருளைத் திருப்பிக் கொடுத்துவிடுதலோடு இத்தண்டமும் இறுத்தல்வேண்டும் என் பது கருத்து. “ த்³விஶதவணோ த³ண்ட³꞉ ” என்று மூலபாடத்தைக்கொண்டு இருநூறு பணம் தண்டம் என்றுங் கொள்வர்.

48 சிறுபொருள்களாவன—மலர் பழம் முதலியன.

49 கேடு—கலகம் செய்வோரால் நேரும் அழிவு.

50 அத்துணை—அப்பொருள் பெறுமதியளவு.

51 பெரும்பொருள்கள்—இரும்பு உருக்கு முதலியன.

52 இருமடங்கு—கவர்ந்தபொருளின் விலையளவின் இருமடங்கு.

[53]உராய்தலால் பிறனுடைய சுவர்க்குக் கேடு விளைவிப்பவனுக்கு மூன்று பணம் தண்டமாம். இடித்தல் தகர்த்தல் செய்யின் ஆறு பணமாம். இடித்து வீழ்த்தின் பன்னிரண்டு பணம் தண்டமும் [54]செம்மைப்படுத்தும் செலவும் செலுத்தல்வேண்டும்.

[55]துன்பம் விளைக்கும் பொருளைப் பிறனொருவன் வீட்டில் வீழ்த்துபவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [56]உயிர்க்குக் கேடு விளைக்கும் பொருளாயின் பூர்வசாகசம் தண்டமாம்.

[57]சிறுவிலங்குகளுக்கு மரக்கட்டை முதலியவற்றால் துன்பமுண்டாக்கின் ஒரு பணம் அல்லது இரண்டு பணம் தண்டமாம். புண்ணீர் வெளிப்படின் இருமடங்காம்.

[58]பெருவிலங்குகளுக்காயின் [59]மேற்கூறிய நிகழ்ச்சிகளில் இருமடங்கு தண்டமும் [60]செம்மைப்படுத்தும் செலவும் இறுத்தல் வேண்டும்.

[61]முற்புறத்துத் தோட்டத்திலுள்ளனவும் மலர் பழம் நிழல் தருவனவுமாகிய மரங்களின் இளந்தளிர்களைக் களையின் ஆறு பணமும் சிறு கிளைகளை வெட்டின் பன்னிரண்டு பணமும் பெருங்கிளைகளை வெட்டின் இருபத்துநான்கு பணமும் மேற்பகுதி முழுதும் வெட்டின் பூர்வசாகசமும் வேரறக்களையின் மத்தியமசாகசமும் தண்டமாம்.

---

53 உராய்தல்—அதிர்ச்சி உண்டாகத் தேய்த்தல்.

54 வீழ்ந்த சுவரை மீண்டும் எடுத்து அமைத்தற்குரிய செலவுபொருளும் கொடுத்தல்வேண்டும் என்பது.

55 துன்பம் விளைக்கும் பொருள்—முள் முதலியன.

56 பாம்பு முதலியன என்பது.

57 ஆடு முதலியன என்பது. பின்னர் இருமடங்கு என்றதனால் இங்கே கூறியதண்டம் புண்ணீர் வெளிப்படாவாறு துன்புறுத்தியதற்கென்க.

58 பசு முதலியன என்பது.

59 மரக்கட்டை முதலியவற்றால் புண்ணீர் வெளிப்படாவாறு துன்பமுண்டாக்கின் இரண்டு பணம் அல்லது நான்கு பணமும் புண்ணீர் வெளிப்படச்செய்யின் அவற்றின் இருமடங்கும் தண்டமாம் என்பது.

60 செம்மைப்படுத்தல்—ஊறுபாட்டைப்போக்கி நலப்படுத்தல்.

61 முற்புறம்—வீட்டின் முன்பக்கம்,

மலர் பழம் நிழல் என்னுமிவற்றைத்தரும் [62]செடிகொடிகளாயினும் [63]அறநிலையம் தவவனம் சுடலை என்னும் இவற்றிலுள்ள மரங்களாயினும் [64]அரையளவு தண்டமாம்.

சுலோகம்

நாற்புறத்திலிருந்தும் [65]பார்க்கத்தக்க [66]எல்லைமரங்கள் கடவுண்மரங்கள் என்னும் இவற்றிற்காயினும் அரசனது உய்யானவனங்களிலுள்ளவற்றிற்காயினும் [67]மேற்கூறிய தண்டங்களின் இருமடங்கு தண்டம் விதிக்கத்தக்கனவாம்.

மூன்றும் அதிகரணம் பதினேழாம் பிரகரணம்
"தண்டக்கொடுமை" என்னும் எழுபத்தாறும்
அத்தியாயம் முற்றிற்று

---

[62] இச் செடிகொடிகள் வீட்டு முன்புறத்திலுள்ள தோட்டத்திலுள்ளவை எனக் கொள்ளல்வேண்டும்.

[63] அறநிலையம்—திருக்கோயில் முதலியன.

[64] இங்கே கூறிய செடி கொடி மரங்களிலுள்ள தளிர் முதலியவற்றைக் களையின் முறையே முற்கூறிய தண்டத்தின் பாதியளவு தண்டமாம் என்பது கருத்து.

[65] பார்க்கத்தக்க என்றதனால் உயர்ந்த மரங்கள் என்பது போதரும்.

[66] எல்லைமரம்—நில எல்லையைக் குறிக்கும் அடையாளமரம்.

[67] தளிர்க்கு ஆறு பணம் முதலியவாக மேற்கூறப்பட்ட தண்டங்களின் இருமடங்கு தண்டங்கள் முறையே விதிக்கத்தக்கன என்பது கருத்து.

மூன்றும் அதிகாரணம்—அறநிலையாட்சி

பதினெட்டு, பத்தொன்பதாம் பிரகரணங்கள்—

[1]சூது புள்விலங்குவிளையாட்டு, ஒழிபு

எழுபத்தேழாம் அத்தியாயம்

சூதுத்தலைவன் [2]கரங்தொழுகுவோரை [3]அறிவித்தற்பொருட்டுக் [4]குறிப்பிட்ட ஓரிடத்தில் சூதுவிளையாடச் செய்யலாம். வேற்

77-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சூது—கவறுடல். இஃது உயிர்ப்பிராணிகளல்லாத கருவிகளைக் கொண்டு விளையாடுதல். புள்விலங்கு விளையாட்டு—கோழி ஆட்டுக்கடா முதலியவைகளைக்கொண்டு விளையாடுதல். இவ்விருதிறத்து விளையாட்டுக் களையும் பற்றி நிகழும் வழக்குக்களையும் தண்டங்களையும் கூறுவது இவற் றுள் முதற்பிரகரணமாகும். இவ்வதிகரணத்துக் கூறப்படாத எஞ்சிய சில செய்திகளைத் திரட்டிக்கூறுவது 'ஒழிபு' என்னும் இரண்டாம் பிரகரண மாகும். இவ்விரண்டு பிரகரணங்களையும் தன்னுட்கொண்டது இவ்வத்தி யாயம். முன்னைப் பிரகரணங்களிற் கூறப்பட்ட கொடுமைகள் எல்லா வற்றிற்கும் ஏதுவாய், சிறுமை பல செய்து சீரழிப்பது சூதாகலானும் அச் சூதுவிளையாட்டிற்குப் புள்விலங்குவிளையாட்டுக்கள் இனமாகலானும் தண்டக்கொடுமை என்னும் பிரகரணத்தின்பின் இது வைக்கப்பட்டது. இவ்வதிகரணத்திற்கு ஒழிபாகவுள்ளது மற்றொரு பிரகரணம். இதனாற் பிரகரண இயைபுண்மை புலனாதலறிக.

[2] கரங்தொழுகுவோர்—களவு கொடுஞ்செயல் முதலியவற்றைச்செய்து மறைங்தொழுகி உயிர்வாழ்வோர்.

[3] அறிவித்தற்பொருட்டென்பது விலக்கத்தக்க சூது முதலியவற்றை விதித்தற்குப் பயன் கூறியபடியாம்.

[4] குறிப்பிட்ட ஓரிடம்—சூதுவிளையாடுதற்கென அரசியலாரால் ஏற் படுத்தப்பட்ட தனியிடம்.

> "வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொருள்
> ஈட்டங்கட் காமமோ டேழு"

என்பதனால் சூதாடல் விதனங்கள் ஏழனுள் ஒன்றாகும். அறநூலில் வெளிப் படையாகவும் மறைவாகவும் மேற்கொள்ளலாகாது என்று விலக்கப்பட்ட சூதாடலை ஈண்டு அரசியலில் செய்யலாம் என்று விதிகூறியது ஒரு பயன் கருதியென்க. அப்பயனாவது:—உலகத்திற்குத் தீங்குவிளைக்கும் வஞ்சகரை யறிந்து அரசியலார்க்குச் சூதுத்தலைவன் அறிவிப்பதாகும். இது குறித்தே குறிப்பிட்ட ஒரு தனியிடம் சூதுவிளையாடற்கு அமைத்தல்வேண்டும் என்று கூறப்பட்டது. கள்ளுக்கடைக்கு இடம் அமைத்தலும் இக்கருத்துப் பற்றியே என்க.

றிடத்து விளையாடுபவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

சூதுபற்றிய வழக்கில் [5]வென்றவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். [6]தோற்றவனுக்கு மத்தியமசாகசமாம். சிற்றினத்தவனாகிய [7]இவன் வெற்றி விருப்புடையனாய்த் தோல்வியைப் [8]பொறான் என்பர் ஆசிரியர். [9]தோல்வியுற்றவன் இருமடங்கு தண்டிக்கப் படுவானாயின் ஒருவனும் அரசனை [10]அணுகமாட்டான். [11]பெரும் பாலும் வஞ்சகரே சூதுவிளையாடுவோராவர். ஆதலின் அது பொருந்தாது என்பர் கௌடலியர்.

[12]அவர்தம் தலைவர் [13]தூய்மையுடையராய்ச் சூதாடுகருவிகளை அமைத்தல்வேண்டும்.

சூதாடுகருவிகளை [14]வேறாக மாற்றிவைப்பின் பன்னிரண்டு

---

5 வென்றவன்—சூதாடலில் வெற்றியடைந்தவன். அவன் வழக்குக் கொணர்ந்து குற்றவாளியானால் பூர்வசாகச தண்டம் செலுத்தல்வேண்டும் என்பது.

6 தோற்றவன்—சூதாடலில் தோல்வியடைந்தவன். அவன் வழக்குக் கொணர்ந்து குற்றவாளியானால் இருமடங்கு தண்டமாம் என்பது.

7 இவன்—தோற்றவன்.

8 பொறாமையால் அறநெறி பிறழ்ந்து வெற்றியில் விருப்பத்தைச் செலுத்துவான் என்பது கருத்து. இஃது இருமடங்கு தண்டம் விதித்தற்கு ஏதுவாம் என்பர்.

9 மேற்காட்டிய ஆசிரியர்கொள்கை பொருந்தாமைக்குக் காரணம் கூறுகின்றார்.

10 அணுகுதல், வெற்றியடைந்தவனால் தனக்கு நேர்ந்த துன்பத்தை அரசனுக்கு அறிவித்து ஆறுதல் பெறுதற்கென்க.

11 அணுகாமையால் வரும் குறை என்னையெனின் சூதுவிளையாடுவோர் பெரும்பாலும் வஞ்சகராதலின் அவர்தம் வஞ்சகச்செயலை அரசன் அறிந்து அவ்வஞ்சகத்தால் துன்பம் எய்தினோர்க்கு விடுதலைசெய்ய இயலாமை நேரும் என்பதாம்.

12 அவர்தம் தலைவர்—சூதாடுவோர்க்கு அத்தொழில் முறைகளைக் கண்காணிக்கும் தலைவர்.

13 தூயர்—வஞ்சகமற்றவர்.

14 இயல்பாக அமைக்கப்பட்ட கருவிகளையன்றி அவற்றைப்போல வேறாக ஒருவன் மாற்றி வைப்பானாயின் இத்தண்டம் என்பது.

பணம் தண்டமாம். [15]வஞ்சிப்பின் பூர்வசாகச தண்டமும் [16]வென்ற பொருளைத் திருப்பிக் கொடுத்துவிடுதலும் வேண்டும். [17]மருளச் செய்யின் திருட்டுக்குரிய [18]தண்டமுமாம்.

வென்ற பொருளினின்றும் நூற்றுக்கு [19]ஐந்தில் ஒருகூறும் [20]பலகறை [21]காய் தோல் துணி முதலிய [22]விரிப்பு [23]கவறு நீர் இடம் தொழில் என்னும் இவற்றிற்குரிய வாடகைகளையும் தலைவன் [24]வாங்கிக்கொள்ளலாம். [25]பொருள்களை ஈடாகவும் விலை கொடுத்தும் கொள்ளலாம். [26]கருவி இடம் கை என்னும் இவற்றால் நிகழும் குற்றங்களைத் தடைசெய்யவில்லையானால் இருமடங்கு தண்டமாம்.

[27]இதனால் வித்தை சிற்பம் முதலியனபற்றி நிகழும் விளையாடல்கள் அல்லாத புள்விலங்கு விளையாட்டுக்களுக்கும் விதி கூறியபடியாம்.

---

15 வஞ்சித்தல்—சூதாடுகருவிகளைக் கபடமாகப் படைத்துக்கொள்ளல்.

16 வஞ்சகமாகப் படைத்துக்கொண்ட கருவிகளால் வென்ற பொருளை என்பது.

17 மருளச்செய்தல்—கவறுகளிலுள்ள கோடு புள்ளிகளை மணி மந்திரம் முதலியவற்றால் வேறுபடக் காணும்படி மயக்குதல்.

18 தண்டமுமாம் என்ற உம்மையால் இயல்பாக முன்னர் விதிக்கப் பட்ட தண்டத்தோடு திருட்டுக் குற்றத்திற்குரிய தண்டமும் செலுத்தல் வேண்டும் என்பது போதரும்.

19 ஐந்தில் ஒருகூறு—இருபது விகிதம். இது தலைவன் தன் வாழ்க்கைப் பொருட்டுக் கொள்ளலாம் என்பது.

20 பலகறை—ஒருவகைச் சிறு நாணயம்.

21 காய்—வகுத்த தானத்தில் வைக்கப்படும் கருவி.

22 விரிப்பு—தானம் வரையறுக்கப்பட்டது.

23 கவறு—யானைத்தந்தம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட கருவி.

24 வென்றவனிடத்தினின்றும் வாங்கிக்கொள்ளலாம் என்பது.

25 சூதாடுவோர் ஈடாகவும் விலைக்காகவும் தரும் பொருளைத் தலைவன் கொள்ளலாம் என்பது கருத்து.

26 சூதாடுவோர் கருவிகளாலும் கையாலும் இடத்தாலும் வஞ்சித்துப் பிழைபடச் செய்வாராயின் அக்குற்றங்களைத் தலைவன் அறிந்து ஒழிக்க வில்லையானால் தனக்குக் கிடைக்கக்கூடிய வருவாயின் இருமடங்கு தண்டம் செலுத்தல்வேண்டும் என்பது கருத்து.

27 இதனால்—சூதுவிளையாட்டிற்குக் கூறிய விதியினால்.

இனி [28]ஒழிபு கூறப்படும். இரவற்பொருள் வாடகைப் பொருள் ஈட்டுப்பொருள் [29]பணிப்பொருள் என்னும் இவற்றைக் குறிப்பிட்ட காலம் இடங்களில் கொடுக்கவில்லையானுலும் [30]இன்ன யாமத்தில் இத்துணையடிநிழல் உள்ளபொழுது எல்லோரும் ஒன்று கூடவேண்டும் என்னும் வரையறையுடையார் அக்காலம் இடங்களைக் கடப்பினும் காடு யாறுகளைக் கடத்தற்குரிய கூலியை அந்தணனிடம் [31]வலிந்துபற்றினும் [32]எதிர்வீடு அடுத்தவீடுகளில் உள்ளாரைவிட்டு மற்ருெருவரை [33]நிமந்திரணம் குறித்து அழைப்பினும் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

[34]உறுதி செய்துகொண்டபடி பொருள் கொடாதவனுக்கும் உடன்பிறந்தான் மனைவியைக் கையினுல் வலிந்து பற்றுபவனுக்கும் மற்ருெருவன் வயப்பட்ட கணிகையைச் [35]சேர்பவனுக்கும் பிறரால் [36]இழிக்கத்தக்க விலைப்பண்டத்தை வாங்குபவனுக்கும் இலச்சினையிடப்பட்ட வீட்டைச் சிதைத்துத் திறப்பவனுக்கும்

---

28 ஒழிபாவது கூறப்பட்ட பகுதிகளில் குறையாக விடப்பட்டனவும் கூறப்படாதனவுமாம். அவற்றுட் சிற்சில மணவியலைப்பற்றினவும் வேறு சிற்சில தலைவன் செயன்முறை சிறுபகைகளைதல் இவற்றைப்பற்றினவுமாம். அச்செய்திகள் இங்கே கூறப்படும் என்பது.

29 பணிப்பொருள்—அணிகலன் முதலியன செய்தற்பொருட்டுப் பொற்கொல்லரிடத்துக் கொடுக்கப்பட்ட தங்கம் முதலியன.

30 இன்னயாமம் என்பது இராக்காலத்தையும் இத்துணையடி நிழல் என்பது பகற்காலத்தையும் பற்றினவாம். இவை கட்டுப்பாடு கடவாமையின் ஒழிபாகும்.

31 வலிந்துபற்றினும் என்பதனுல் தானே கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம் என்பது போதரும்.

32 எதிர்வீட்டிலும் அடுத்தவீட்டிலும் தகுதியுள்ளார் இருக்கும் பொழுது அவரையழையாமல் என்பது.

33 நிமந்திரணம்—தென்புலத்தாரது கடனிறுக்குங்கால் உண்டற்கழைத்தல்.

34 உறுதி—இன்னகாலத்தில் இத்துணைப்பொருள் தருவேன் என்று துணிந்து கூறுதல்.

35 இத்துணையும் வன்செயலின் ஒழிபாகும்.

36 இழிக்கத்தக்க விலைப்பண்டமாவது விற்பவனுக்கு உரிமையில்லாமல் திருட்டு முதலியவற்றுல் கிடைத்ததாகும். இஃது 'உரிமையில்லாதவன் விற்றல்' என்பதன் ஒழிபாகும்.

பக்கத்துள்ள நாற்பது குடும்பங்களுக்குக் [37]கேடு விளைவிப்பவனுக்கும் நாற்பத்தெட்டுப்பணம் தண்டமாம்.

ஒரு குடும்பத்திற்குப் பொதுவாகவுள்ள பொருளைக் கவர்ந்து மறைப்பவனுக்கும் சுதந்திரமாக வாழும் கைம்பெண்ணை வலிந்து பற்றுபவனுக்கும் உயர்குலத்துப் பெண்ணைத் தீண்டும் சண்டாளனுக்கும் நெருங்கினவனுக்குக் கேடு நேர்ந்தவிடத்து விரைந்து சென்று காவாதவனுக்கும் [38]காரணமில்லாமல் விரைந்து ஓடுகின்றவனுக்கும் பௌத்தன் சமணன் முதலியோரையும் சூத்திரன் துறவி என்னும் இவரையும் தெய்வவழிபாடு தென்புலத்தார் கடன் என்னும் இந்நிகழ்ச்சிகளில் [39]உண்ணச்செய்பவனுக்கும் நூறு பணம் தண்டமாம்.

[40]சூளுறவோடு வினைதலைக் கட்டளைபெருமல் செய்பவனுக்கும் [41]உரிமையாளன் செயலைப் புரியும் உரிமையில்லாதவனுக்கும் சிறுவிலங்கு பொலிஎருது இவற்றின் [42]ஆண்மைக்குக் கேடு விளைவிப்பவனுக்கும் பணிப்பெண்ணின் கருவை மருந்தினுல் வெளிப்படுத்துபவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம்.

தந்தையும் மகனும் கணவனும் மனைவியும் உடன்பிறந்தானும் உடன்பிறந்தாளும் மாமனும் மருமகனும் ஆசிரியனும் மாணவனும் ஆகிய இவருள் ஒருவரையொருவர் [43]இழிந்தநிலை

---

37 இவை மனைநிலத்தின் ஒழிபாகும்.

38 விரைந்தோடுதற்குரிய காரணம் ஏதும் இல்லாதிருக்க ஆரவாரித்து ஓடுகின்றவனுக்கும் என்பது.

39 இங்கே குறிப்பிடப்பட்டவர்கள் இந்நிகழ்ச்சிகளில் உண்ணத்தகாதவர் என்பது அறநூற்றுணிபு.

40 அறங்கூறவையத்தாரின் கட்டளைபெருமல் சான்றுகூறுவோர் முதலியோரைத் தெய்வத்தின்மேல் ஆணையிட்டுக் கூறும்படிச் செய்வோனுக்கென்பது.

41 ஒரு செயலைச்செய்தற்கு உரிமைபெற்றவனிருக்க உரிமையில்லாத வேறொருவன் செய்வானாயின் அவனுக்கென்பது.

42 ஆண்மைக்குக் கேடுவிளைத்தல் — கருவிகளால் ஆண்தன்மையைக் குறைத்தல். இதனை இக்காலத்தில் காயடித்தல் என்ப.

43 இழிந்தநிலை யெய்தின் விலக்கலாம் என்பது போதரும்.

யெய்தாதவழி விலக்குவோர்க்கும் [44]வாணிகக்குழுவுடன் சென்ற வனை [45]ஊர்நடுவண் [46]விட்டுச்செல்பவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம். [47]காட்டிலாயின் மத்தியமசாகசமாம். [48]அதன்நிமித்தம் உயிர்க்குக் கேடு விளைவிப்பவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம். [49]உடன்சென்ற பிறர்க்கு [50]அரைக்கூறு தண்டமாம்

கட்டிவைத்தற்குத் தகாத ஒருவனைக் கட்டுதல் கட்டுவித்தல் செய்பவனுக்கும் கட்டை அவிழ்த்து விடுபவனுக்கும் வழக்கியற் பருவம் அடையாத சிறுவனைக் கட்டுதல் கட்டுவித்தல் செய்பவனுக்கும் ஆயிரம் பணம் தண்டமாம். ஒருவன் குற்றத்தின் இயல்புக்கேற்பச் சிறப்பான தண்டம் விதிக்கத்தக்கதாம்.

[51]கையில் நீர்க்குண்டிகையை உடையவன் தாபதன் நோய்வாய்ப்பட்டோன் பசி நீர்வேட்கை வழிநடத்தல் என்னும் இவற்றால் சோர்ந்தவன் வேற்றுநாட்டவன் [52]தண்டத்துன்பமுடையோன் வறுமைமிக்கோன் ஆகிய இவர்கள் [53]அருள்செய்யத் தக்கவர் ஆவர்.

பாதுகாக்கும் தலைவரையில்லாத தெய்வம் அந்தணன் தாபதன் பெண் இளைஞன் முதியவன் நோய்வாய்ப்பட்டோன் என்னும் இவர்கள் [54]தம்மை அடைந்திலர் எனினும் அவர்தம் காரியங்

---

44 வாணிகக் குழுவுடன் சென்றவன்—வாணிகக்கூட்டத்தாரை வழித்துணையாகக்கொண்டு சென்றவன்.

45 ஊர்—ஈண்டு அயல்கிராமம்.

46 விட்டுச்செல்லுதல் நோய் முதலிய காரணம்பற்றி என்க.

47 காட்டில் விட்டுச்செல்லின் அத்தண்டம் என்பது.

48 அங்ஙனம் காட்டில் விட்டுச்சென்றது காரணமாக விட்டவனது உயிர்க்குக் கேடு விளைப்பவனுக்கு இத்தண்டம் என்பது.

49 அக்குழுவுடன் சென்ற மற்றையோர்க்கென்பது.

50 முறையே முற்கூறப்பட்ட தண்டங்களிற் பாதியளவு என்பது.

51 கையில் நீர்க்குண்டிகையுடையோன்—தானம் செய்தற்கு எப்பொழுதும் கையில் நீர்க்கரகத்தை வைத்திருப்பவன்.

52 தண்டத்துன்பமுடையோன்—பலமுறை தண்டிக்கப்பட்டுத் துன்பமடைந்தவன்.

53 இவர்களுக்குத் தயை காட்டவேண்டும் என்பது கருத்து.

54 தம்மை என்பது அறங்கூறவையத்தாரைக் குறிக்கும்.

களைச் [55]செய்தல்வேண்டும். காலம் இடம் அநுபவம் என்னும் இவற்றைத் [56]தலைக்கீடாகக்கொண்டு [57]மிகுதியாகக் கொள்ளலாகாது.

கல்வி அறிவு ஆண்மை நற்குடிப்பிறப்பு தொழில் என்னும் இவற்றின் சிறப்புநோக்கி [58]மக்களைப் [59]பெருமைப்படுத்தல் வேண்டும்.

சுலோகம்

அறங்கூறவையத்தார் உண்மையை அறிந்து இங்ஙனம் எல்லாக் காரியங்களையும் செய்தல்வேண்டும். எல்லாவிதமான தன்மைகளிலும் ஒத்தவர்களாய் உலகத்தவரால் விரும்பத்தக்க பெரியோர் நம்பிக்கைக்குரியராவர்.

மூன்றும் அதிகரணம் 18, 19-ஆம் பிரகரணங்கள்
" சூது புள்விலங்கு விளையாட்டு, ஒழிபு " என்பன அடங்கிய
எழுபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

---

[55] அறங்கூறவையத்தார் தாமே ஆராய்ந்து செய்தல்வேண்டும் என்பது கருத்து.

[56] தலைக்கீடு—வியாஜம்.

[57] பாதுகாக்கும் தலைவரையில்லாத மேற்குறிப்பிட்டவரிடத்தினின்றும் அளவின் மிகப்பொருளை அறங்கூறவையத்தார் வாங்கலாகாது என்பது கருத்து.

[58] சான்றுகூறுதல் முதலியவை காரணமாகத் தம்பால் வந்தடைந்த மக்களை என்பது.

[59] அறங்கூறவையத்தார் முதலிய அரசியல் வினைஞர் சிறப்புச்செய்தல் வேண்டும் என்பது கருத்து.

நான்காம் அதிகரணம்—[1]சிறுபகை களைதல்

முதற் பிரகரணம்—[2]காருகரால் தீங்குநேராமல் காத்தல்

எழுபத்தெட்டாம் அத்தியாயம்

[3]அமைச்சரான [4]சிறுபகை களைவோர் [5]மூவர் மூவராக (க்கூடி) சிறுபகை களைதல்வேண்டும்.

78-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இனிச் 'சிறுபகை களைதல்' என்னும் நான்காம் அதிகரணம் கூறப்படும். சிறுபகை களைதல் என்பது அரசன் தன் நாட்டினுள்ளும் அரணுள்ளும் காருகர் வணிகர் முதலிய உட்பகையால் குடிமக்களுக்கு நேரும் தீங்குகளைப் பரிகரித்தல் என்னும் பொருளது. 'அறநிலையாட்சி' என்னும் முன்னைய அதிகரணத்தில் வருணச்சிரமதருமம் முதலியவற்றைப் பாதுகாக்குமுகமாக மேற்கொள்ளவேண்டிய அரசியலறத்தைக் கூறினார். நாட்டில் காருகர் முதலியோரால் குடிமக்களுக்கு நேரும் தீங்குகளை விலக்காவிடின் வருணச்சிரமதருமம் சிதைந்தழியுமாதலின் சிறுபகை களைதல் என்னுமிவ்வதிகரணம் அறநிலையாட்சியின்பின் வைக்கப்பட்டது. இதனால் அதிகரண இயைபுண்மை யறிக.

[2] 'சூது புள்விலங்கு விளையாட்டு' என்னும் முன் பிரகரணத்தில் அரசியலார் ஓரளவு வரையறுத்துச் சூது முதலியவற்றைச் சிற்சில இடங்களில் அநுமதிக்கலாம் என்றும் வரையறை மீறின் உரியதண்டங்கள் உண்டு என்றுங்கூறி வரம்பிறந்த செயல்களை விலக்குதற்குரிய முறைகளைக் கூறினார். சூது முதலியனபோன்று காருகர் முதலியவர்களாலும் குடிகளுக்குத் தீங்குநேருவது என்னும் இனம்பற்றி அதன்பின் இப்பிரகரணம் வைக்கப்பட்டது. ஆகலின் பிரகரண இயைபு புலனாதலறிக. காருகர்—தச்சர் கொல்லர் தட்டார் முதலிய சிற்பத்தொழிலாளர். இவர்களால் தம் நாட்டினர்க்குத் தீங்கு வாராதபடிக் காத்தல் என்பது கருத்து.

[3] அமைச்சர்—ஈண்டு அவர்க்குரிய குணங்கள் வாய்ந்தவர். அக்குணங்களாவன :—அரசனது நாட்டில் பிறத்தல் முதலியன. (9-ஆம் அத். பார்க்க.)

[4] சிறுபகை களைதல் என்னும் தொழிலில் நியமிக்கப்பட்டோர் என்பது.

[5] சிறுபகை களைதற்குரிய ஒவ்வொரு இடங்களிலும் அத்தொழிலில் நியமிக்கப்பட்டோர் மும்மூன்று பேர்கள் இருக்கவேண்டும் என்பது தோன்ற மூவர் மூவராக என்று கூறப்பட்டது.

[6]விரும்பத்தக்க இயல்பினர், [7]காருகத்தலைவர், [8]சான்றுமூலம் பணிப்பொருள் பெறுபவர், [9]தம்பொருளால் தொழில்புரியும் காருகர், [10]குழுவினர்பால் தொழில்புரிபவர் என்னும் இவர்கள் பணிப்பொருளை ஏற்றுக்கொள்ளக்கடவர். [11]தீங்குநேரின் குழு, பணிப்பொருளுக்கு ஈடுசெய்தல் வேண்டும். [12]இடம் காலம் தொழில் இவற்றை வரையறுத்துச் செய்தல்வேண்டும். [13]இடம் காலம் தொழில்களின் வரையறையின்றியும் செய்யலாம்.

---

[6] பணிப்பொருளை ஏற்றுக்கொள்ளுதற்கு இன்னார் இன்னார் தகுதியுள்ளவர் என்பதைக் கூறுகின்றார். விரும்பத்தக்க இயல்பினர்—பொன் முதலிய பொருள்களை நம்பிக்கொடுத்தற்குரிய தூய குணங்கள் நிரம்பப் பெற்றோர்.

[7] தமக்குக்கீழ் தொழில்புரியும் பல காருகர்களுக்குத் தலைவராகி அவர்களைத் தொழிலில் நியமிப்போர் என்பது.

[8] எதிர்வீட்டிலுள்ளோர் அயல்வீட்டிலுள்ளோர் முதலியவர்களைச் சான்றாக வைத்துப் பணிப்பொருளைக் கொடுத்தல் வாங்கல் செய்பவர். பணிப்பொருள்—அணிகலன் முதலியன செய்தற்பொருட்டுத் தொழிலாளர் பால் கொடுக்கப்படும் பொன் வெள்ளி முதலியன.

[9] தமக்குரிய பொருளைக்கொண்டும் அணிகலன் முதலியன செய்து தொழில்புரிபவர் என்பது. பணிப்பொருளுக்கு அழிவு முதலியன நேர்ந்தால் ஈடுசெய்வதற்குத் தகுதியுள்ளோர் என்பது கருத்து.

[10] குழுவினர்பலரின் தலைமையின்கீழ் வேலைசெய்பவர் என்பது கருத்து.

[11] பணிப்பொருளை வாங்கிக்கொண்டவன் இறந்துவிடுதல் அயல்நாடு சென்றுவிடுதல் முதலிய காரணங்களால் திருப்பிக்கொடுக்காத காலத்து அவனுக்குத் தலைவரான குழுவினர் ஒன்றுகூடி ஈடுசெய்து பணிப்பொருளை உரியவர்க்குக் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[12] இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்ன மாதிரியான அணிகலன் முதலியன செய்துதரல் வேண்டும் என வரையறை செய்துகொண்டு அக்காருகர் தொழில்புரிதல் வேண்டும் என்பது கருத்து.

[13] பல இடங்களில் சென்று காலந்தாழ்த்திப் பலவிதமான சிறந்த புதியதான வேலைப்பாடமைந்ததாகச் செய்யப்படவேண்டிய அணிகலன் முதலியவற்றில் 'இன்ன இடம் இம்மாதிரி' என்பதுபோன்ற வரையறை செய்துகொள்ள முடியாதாகலின் அவற்றை இவ்வரையறையின்றியே செய்துகொடுக்கலாம் என்பது கருத்து.

[14]காலந்தாழ்ப்பின் [15]கால்மடங்கு குறைந்தகூலியும் [16]அதனிரு மடங்கு தண்டமுமாம்.

[17]விலங்கு முதலியவற்றின் அச்சம்[18]இடையூறுகள் [19]இல்வழி, பிறராற் கவரப்பட்டது [20]அழிந்துபோனது என்னும் இவற்றிற்கு ஈடுசெய்தல் வேண்டும். [21]தொழில் மாறுபடின் கூலியிழத்தலும் அதனிருமடங்கு தண்டமுமாம்.

சேணியர் நூலைப் [22]பத்துக்குப் பதினொன்றாக மிகைபடுத்தல் வேண்டும். [23]மிகுதி குறைபடின் குறைவின் இருமடங்கு தண்டமாம்.

---

14 பணிப்பொருளை ஏற்குங்கால் அணிகலன் முதலியவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்குக் குறிப்பிட்ட காலத்தைக் கடந்து பின்னர் கொடுப்பின் என்பது.

15 காலந்தவறிக் கொடுப்பவன் குறிப்பிட்ட காலத்திற் கொடுத்தால் பெறவேண்டிய கூலியளவில் நான்கிலொருகூறுகூலியை இழத்தல்வேண்டும் என்பது.

16 இழக்கப்பட்ட கூலியளவின் இருமடங்கென்பது. காலந்தாழ்த்ததற் காக இத்தண்டத்தை அரசனுக்கு இறுத்தல்வேண்டும் என்பது கருத்து.

17 யானை முதலிய கொடிய காட்டு விலங்குகளால் ஏற்படும் அச்சம் என்பது.

18 இடையூறு—நீர் நெருப்பு முதலியவற்றால் நிகழ்வது.

19 இல்வழி என்றதனல் மேற்குறிப்பிட்ட விலங்கு முதலியவற்றின் அச்சம் முதலியன உள்வழி அவற்றிற்கு ஈடுசெய்தல் வேண்டா என்பது போதரும்.

20 அழிந்துபோனது என்பது ஒருபகுதியிற் கேடெய்தியது என்னும் பொருளது.

21 அணிகலன் முதலியவற்றை வரையறுத்துக்கொண்டபடி செய்யாமல் வேறுவிதமாகச்செய்தால் கூலியிழத்தலும் கூலியளவின் இருமடங்கு தண்டமும் அமையும் என்பது கருத்து.

22 பத்துப்பலம் நூலைப் பெற்றுக்கொண்டு கஞ்சி முதலியவற்றால் அந் நூலைத் தூய்மைசெய்து பதினொரு பலம் நூலைத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

23 கஞ்சிபோடாத பத்துப்பல நூலைப்பெற்றுக்கொண்டு கஞ்சி முதலிய வற்றால் தூய்மை செய்யப்பட்ட நூலைப் பதினொரு பலமாகக் கொடுக்கா விடின் என்பது.

[24]நெய்தற்கூலி நூல் விலையாகும். உரிப்பட்டு (புழுப்) பட்டுக்களுக்கு [25]அரைமடங்கு அதிகமாம். வெண்பட்டு கம்பளி நார்ப் பட்டுக்களுக்கு [26]இருமடங்காம்.

[27]அளவு குறைவுபடின் குறைவிற்குரிய கூலியிழப்பும் அதனிருமடங்கு தண்டமுமாம். [28]நிறை குறையின் குறைவின் நான்கு மடங்கு தண்டமாம். [29]நூலை மாற்றின் விலையினிருமடங்காம். இதனால் [30]ஈரிழையாக நெய்தற்கும் விதி கூறியபடியாம்.

உரோமத்தைத் [31] தூய்மைசெய்தற்கும் [32]நெய்வதற்கும் ஐந்து பலம் அழிவு ஏற்கத்தக்கது.

---

[24] உடையாக நெய்யப்படுவதற்கு உபயோகப்படும் நூலின் விலையளவு நெய்தற்குரிய கூலியாகும் என்பது.

[25] நெய்யப்படும் உரிப்பட்டு முதலியவற்றின் விலையைவிட அரைமடங்கு அதிகமாகக் கூலிகொடுத்தல் வேண்டும் என்பது.

[26] ஈண்டும் நெய்யப்படும் வெண்பட்டு முதலியவற்றின் விலையின் இருமடங்கு கூலி கொடுத்தல்வேண்டும் என்பது.

[27] ஓரளவு கூலிபேசி எட்டுமுழம் நீளமுள்ள உடை நெய்துதரவேண்டும் என்று வரையறுத்திருக்கும்போது ஏழுமுழம் நீளமுள்ள உடை நெய்து தரப்படின் பேசிக்கொண்ட கூலியில் எட்டிலொருகூறு கழித்து எஞ்சிய ஏழுமடங்கு கூலி கொடுத்தல்வேண்டும் என்பதும் குறித்தபடி நெய்து தராததற்காக இழந்தகூலியின் இருமடங்கு தண்டமும் விதித்தல்வேண்டும் என்பதும் கருத்தாகக் கொள்க.

[28] குறிப்பிட்டபடி நீள அகலமுள்ளதாக நெய்து கொடுக்கப்படினும் கொடுக்கப்பட்ட நூலின் ஒருபகுதியைக் கவர்ந்துகொண்டு செறிவில்லாத ஆடையை நெய்துகொடுப்பின் நிறைக் குறைவு ஏற்படுதலால் குறைந்த நூலளவின் நான்குமடங்கு தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

[29] ஒருவன் கொடுத்த நூலை மாற்றி வேறு நூலைக்கொண்டு உடை நெய்து அவனுக்குக் கொடுப்பின் முதலில் கொடுத்த நூலின் விலையில் இருமடங்கு தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது.

[30] ஈரிழை—இரண்டிரண்டு இழைசேர்த்து நெய்யப்படும் ஆடை.

[31] தூய்மைசெய்தல்—நெய்யப்படுதற்கு ஏற்ற நிலையில் பண்படுத்தல். நெய்தற்கு ஏற்ற நிலையில் தூய்மை செய்வதற்கு நூறு பலத்திற்கு ஐந்து பல விகிதம் குறைவு ஏற்கத்தக்கது என்பது கருத்து.

[32] தூய்மைசெய்த நூறு பலம் உரோமத்தை நெய்தால் ஐந்து பலம் குறைவேற்படலாம் என்பது கருத்து.

உடை வெளுப்போர் உடைகளை மரப்பலகை, [33]வழுவழுப் பான பாறை என்னும் இவைகளில் துவைத்தல்வேண்டும். [34]பிற விடத்தில் துவைப்பின் உடையின் [35]சிதைவிற்குரியதையும் ஆறு பணம் தண்டத்தையும் இறுத்தல்வேண்டும்.

[36]செம்மட்டிக் குறியீடில்லாத உடையை உடுத்திக்கொள்பவர் மூன்று பணம் தண்டம் இறுக்கக்கடவர். பிறருடைய உடைகளை விற்றல் வாடகைக்குக் கொடுத்தல் ஈடுவைத்தல் செய்தால் பன்னிரண்டு பணம் தண்டமாம். மாற்றிவிடின் விலையின் இருமடங்கு தண்டமும் உடையைத் திருப்பிக் கொடுத்தலுமாம்.

[37]மொட்டுப்போன்ற வெண்மையுடையது, பாறைபோன்ற நிறமுடையது, கழுவப்பட்ட நூல்வண்ணமுடையது, திருத்தமான வெண்மையுடையது என்னும் இவற்றை முறையே [38]முன்னையதைவிடப் பின்னையதை ஒவ்வொருநாள் தாழ்த்துக் கொடுத்தல் வேண்டும்.

---

33 'வழுவழுப்பான' என்பது, மிக்க வழுவழுப்பான பாறையில் உடை வெளுக்காதாதலின் ஈண்டு உடைக்குச் சிதைவேற்படுத்தக்கூடிய 'மிக்க சொரசொரப்பில்லாத' என்னும் பொருளது.

34 பிறவிடம்—சொரசொரப்பான பாறை முதலியன.

35 சிதைவு ஏற்பட்டதாலுண்டான நஷ்டத்தையும் அக்குற்றத்திற்காக ஆறு பணம் தண்டத்தையும் இறுத்தல்வேண்டும் என்பது.

36 வெளுத்துக் கொடுத்தற்பொருட்டுப் பிறரிடமிருந்து வாங்கிய துணிகளை வண்ணுர்களை உடுத்துக்கொள்ளாதபடி விலக்குங் கருத்துடன் செம்மட்டிக் குறியுள்ள அவர்தம் சொந்த உடைகளையே உடுத்துக்கொள்ள வேண்டும் என வரையறை செய்தமை யறிக.

37 தூய்மைசெய்வதற்காகக் கொடுக்கப்படும் உடையின் வெண்மையை நான்குவிதமாகப் பிரித்து அவற்றை முறையே தூய்மைசெய்து திருப்பிக் கொடுக்கவேண்டிய காலத்தை யறுதியிடுகிருர்.

38 மொட்டுப்போன்ற வெண்மையான உடையை ஒருநாளில் தூய்மை செய்து திருப்பிக்கொடுத்தல் வேண்டும் என்றும் பாறைபோன்றதை இரண்டு நாளில் வெளுத்துத் தரவேண்டும் என்றும் கழுவப்பட்ட நூலின் நிறம்போன்றதை மூன்று நாளில் திருப்பித்தரவேண்டும் என்றும் மிகத் தூய்மையான வெண்மையை உடையதை நான்கு நாளில் வெளுத்துக் கொடுத்தல்வேண்டும் என்றும் கொள்ளல்வேண்டும்.

[39]குறைந்த நிறமுள்ளவற்றை ஐந்து நாட்களிலும் [40]நீல வண்ணமுடையவை, [41]பூ அரக்கு [42]மஞ்சிட்டை இவற்றால் சாயம் போடப்பட்டவை இவற்றை ஆறு நாட்களிலும் சிறந்த வேலைப் பாடுடையவை, முயன்று தூய்மை செய்யத்தக்கவை, சிறந்தவை, [43]உடை என்னும் இவ்வுடைகளை ஏழு நாட்களிலும் (திருப்பிக்) கொடுத்தல்வேண்டும். காலந்தாழ்ப்பின் கூலியை யிழக்கக்கடவர்.

வண்ணத்திற்குரிய கூலியைப்பற்றிய விவாதங்களில் திறமை வாய்ந்த நம்பிக்கைக்குரியவர் (கூலியைத்) துணியக்கடவர்.

[44]தலையாயவற்றிற்கு ஒரு பணமும் இடையாயவற்றிற்கு அரைப்பணமும் கடையாயவற்றிற்குக் கால் பணமும் கூலி ஆகும்.

[45]உரப்பானவைகட்கு [46]ஒரு மாடகமும் இரண்டு மாடகமும் சிவப்புவண்ணமுடையவற்றிற்கு அவற்றின் இருமடங்கும் ஆம். [47]முதன்முறை வெளுக்கப்படுங்கால் காற்பங்கும் இரண்டாம் முறையில் [48]ஐந்தில் ஒருகூறும் குறைவுண்டு. [49]இதனால் பிற்பட்டவற்றிற்கும் விதி கூறியபடியாம்.

---

39 இனி நிறந்தோய்த்தற்குக் கொடுத்த உடைகளைத் திருப்பித்தர வேண்டிய காலத்தை வரையறுத்துக் கூறுகின்றார். குறைந்த நிறமாவது—சோணசிலை மரப்பட்டை முதலியவற்றால் உண்டாக்கப்படும் வண்ணம்.

40 தும்பைச்சாறு முதலியவற்றால் வண்ணமிடுவதற்கென்பது.

41 பூ—குசும்பாப்பூ முதலியன.

42 மஞ்சிட்டி என்னும் ஒருவகைச் சாயவேர்.

43 உடை—ஈண்டு 'நேத்திரம்' என்று கூறப்படும் பட்டாடை.

44 நிறந்தோய்த்தற்குரிய கூலியைக் கூறுகின்றார்.

45 உடைவெளுக்கும் வண்ணானுக்குரிய கூலியைக் கூறுகின்றார்.

46 தலையாயவை இடையாயவை கடையாயவை என்பதற்கேற்ப இரண்டுமாடகம் ஒருமாடகம் என்பதை வரையறுத்துக்கொள்க.

47 முதன்முறை இரண்டாமுறை முதலியனவாக வெளுக்கப்படும் போது உடைகளின் விலைமதிப்பு குறைதலைக் கூறுகின்றார். உடைகட்குச் சிதைவு நேரும்போது விலையை மதிப்பிட்டுத் தண்டம் விதித்தற்பொருட்டு இவ்விதி கூறப்படுகிறது. முதன்முறை வெளுக்கப்பட்ட உடையின் மதிப்பு புதிய உடையின் விலையில் நான்கிலொருகூறு குறைந்ததென்க.

48 முதன்முறை வெளுக்கப்பட்ட உடையின் விலைமதிப்பில் ஐந்தில் ஒரு கூறு குறையும் என்பது.

49 மேற்கூறிய விதியினால் மூன்றாம்முறை வெளுக்கப்பட்ட உடையின் விலைமதிப்பு இரண்டாம்முறை வெளுக்கப்பட்டதின் விலைமதிப்பில் ஆறில் ஒருகூறு குறைந்தது என்ற இம்முறையே கொள்ளத்தக்கது என்பது கருத்து.

[50]வண்ணானுக்குக் கூறிய விதியால் தையற்காரர்களுக்கும் விதி கூறியபடியாம்.

[51]பொற்கொல்லருக்குரியவை :—[52]தூய்மையற்றவரிடமிருந்து [53]உருவமுள்ள வெள்ளி பொன் இவற்றை [54]அறிவியாது வாங்குவோருக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [55]உருவமில்லாதவற்றிற்காயின் இருபத்துநான்கு பணமும் கள்வரிடமிருந்தாயின் நாற்பத்தெட்டுப் பணமும் [56]ஆம். [57]மறைவாக உருவழிக்கப்பட்டதைக் குறைந்த விலைக்குக் கொண்டாலும் பண்டத்தைச் செய்து [58]வஞ்சித்தாலும் திருட்டுக்குரிய தண்டமாம்.

[59]பொன்னிலிருந்து [60]மாடகத்தைக் கவர்ந்தவனுக்கு இருநூறு பணம் தண்டமாம். ஒரு [61]தரண வெள்ளியிலிருந்து மாடகத்தைக்

---

50 தைத்தற்குக் கொடுத்த துணிகளைத் திருப்பிக்கொடுத்தற்குரிய காலவிதி முதலியவற்றையும் அவ்வுடை முதலியன அழிந்துபோனவிடத்துக் கொடுத்தற்குரிய தண்டவிதிகளையும் வண்ணானுக்குச் சொன்னதுபோல் தையற்காரர்களுக்கும் அமைத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

51 பொற்கொல்லருக்குரிய விதிமுறைகள் இனிக் கூறப்படும் என்பது. அவர்கள் பிறரை வஞ்சிக்காமலிருத்தற்குரிய உபாயங் கூறப்படும் என்க.

52 தூய்மையற்றவர்—அடிமை பணியாளர் முதலியோர்.

53 உருவம்—அணிகலன் முதலியன.

54 அரசியலாருக்குத் தெரிவியாமல் என்பது.

55 உருக்குதல் முதலியவற்றால் உருவமழிந்தவற்றைத் தூய்மையற்றவரிடமிருந்து அரசியலாருக்குத் தெரிவியாமல் வாங்கினால் வாங்கினவருக்கு இத்தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

56 தண்டமாம் என்பது.

57 பண்டங்களின் பெறுமானத்திற்குக் குறைந்த விலைகொடுத்து உருவழிந்தவற்றைப் பிறரறியாவாறு வாங்கினவன் அப்பண்டங்களைத் திருடினவனாகக் கருதப்பட்டுத் திருட்டுக்குரிய தண்டமிறுக்கக்கடவன் என்பது கருத்து.

58 ஒருவன் கொடுத்த பணிப்பொருள்களால் அணிகலன் முதலியவற்றைச் செய்து அவற்றை மாற்றி வேறொன்றைக் கொடுத்தவனுக்கும் இத்தண்டம் (திருட்டுக்குரியது) என்பது.

59-60-61 பொன் மாடகம் தரணம் இவற்றின் விளக்கத்தை 'துலை முதலளவையின் நிலையாராய்தல்' என்னும் நாற்பதாம் அத்தியாயத்திற் காண்க.

கவர்ந்தவனுக்குப் பன்னிரண்டு பணமாம். [62]இதனால் இவ்வளவின் [63]மேம்பட்டவற்றிற்கும் [64]விதி கூறியவாறும்.

[65]தாழ்ந்தவற்றிற்கு உயர்ந்த வண்ணத்தையும் கலப்பினையுஞ் செய்பவனுக்கு ஐந்நூறு பணம் தண்டமாம். [66]அவற்றை மாற்றி வண்ணப்பிறழ்ச்சியை அறிதல்வேண்டும்.

[67]தரணவெள்ளிக்கு ஒரு மாடம் கூலியாகும். [68]பொன்னுக்காயின் எட்டில் ஒருகூறும். [69]வேலைப்பாட்டின் சிறப்புநோக்கி இருமடங்கு கூலியாம். [70]இவற்றால் இவ்வளவின் மேம்பட்டவற்றிற்கும் விதி கூறியபடியாம்.

செம்பு, [71]விருத்தம், வெண்கலம், [72]வைகிருந்தகம், பித்தளை

---

[62] இதனால்—ஒரு பொன் முதலியவற்றிலிருந்து ஒரு மாடகம் முதலியவற்றைக் கவர்ந்துகொள்வோர்க்குக் கூறிய விதியினால்.

[63] மேம்பட்டது—இரண்டு மாடகம் முதலியவற்றைக் கவர்தல்.

[64] விதி—ஒரு மாடகத்திற்குக் கூறிய தண்டவிதியின் இருமடங்கு தண்டம் விதித்தல் முதலியன.

[65] பொருளாசையால் தாழ்ந்தவற்றைச் சிறந்தனவாகத் தோன்றும்படி வண்ணத்தை உண்டுபண்ணுபவனுக்கும் சிறந்த பொன் முதலியவற்றுடன் தாழ்ந்த பொன் முதலியவற்றைக் கலப்பவனுக்கும் ஐந்நூறு பணம் தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

[66] முறைப்படி தீயிலிட்டுத் தூய்மை செய்தலால் செயற்கையாலுண்டான உயர்ந்த வண்ணத்தையும் கலப்பினையும் உள்ளபடி அறியலாம் என்பது.

[67] ஒரு தரண எடையுள்ள வெள்ளியினால் செய்யப்பட்ட அணிகலன் முதலியவற்றிற்கு ஒரு மாடம் வெள்ளி கூலி என்பது.

[68] ஒரு பொன் எடையுள்ள தங்கத்தினால் செய்யப்பட்ட அணிகலன் முதலியவற்றிற்கு ஒரு மாடம் பொன்னில் எட்டில் ஒருகூறு கூலிகொடுத்தல் வேண்டும் என்பது. மாடம் என்பது பொன்னின் பதினாறில் ஒருகூறென்ப.

[69] சிறந்த பயிற்சியின் காரணமாகச் சிறந்த வேலைப்பாடுள்ளதான அழகிய அணிகலன் முதலியன செய்துதருவோர்க்கு இருமடங்கு கூலி கொடுக்கலாம் என்பது.

[70] ஒரு தரண வெள்ளி முதலியவற்றிற்குக் கூறப்பட்ட கூலிவிதியைக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட தரண வெள்ளியால் தொழில் செய்பவர்கட்குக் கூலிவிதியை ஆராய்ந்து கொள்ளவேண்டும் என்பது கருத்து.

[71] விருத்தம்—உறுதியான ஒருவகை யிரும்பு.

[72] வைகிருந்தகம்—33-ஆம் அத்தியாயத்தில் 64-ஆம் குறிப்பைப் பார்க்க.

என்னும் இவற்றிற்கு [73]நூற்றுக்கு ஐந்து விகிதம் கூலியாகும். [74]செம்புத்தொழிலில் பத்தில் ஒருகூறு அழிவுண்டாம். [75]ஒரு பலம் குறைவுபடின் குறைவின் இருமடங்கு தண்டமாம். [76]இவற்றால் [77]மேலுள்ள அளவுக்கும் விதி கூறியவாறும்.

காரீயம் வெள்ளீயங்களின் தொழிலில் இருபதில் ஒருகூறு அழிவுண்டாம். இவற்றின் ஒரு பலத்திற்குக் கால் மாடம் கூலியாம். எஃகுத்தொழிலில் ஐந்தில் ஒருகூறு அழிவு உண்டாகும். பலத்திற்கு அரைமாட விகிதம் இதற்குக் கூலியாம். [78]இவற்றால் இவ்வளவின் மேம்பட்டவற்றிற்கும் விதி கூறியபடியாம்.

[79]வண்ணக்கன் இகழத்தகா நாணயத்தை இகழினும் இகழத்தக்கதை இகழாதிருப்பினும் பன்னிரண்டு பணம் தண்டம் இறுத்தல் வேண்டும்.

[80]வாசியைக் கழித்து நாணயத்தொழில் புரியவேண்டும். [81]ஒரு பணத்தில் ஒரு மாடத்தைக் கவர்பவனுக்குப் பன்னிரண்டு பணம்

---

73 ஒரு துலையளவுள்ள செம்பு முதலியவற்றைக்கொண்டு செய்யப்பட்ட பண்டத்திற்கு ஐந்துபணம் கூலி என்பது.

74 பத்துப்பலம் செம்பைக்கொண்டு தொழில்புரியுங்கால் ஒருபலம் அழிவுண்டாம் என்பது.

75 அழிவு கழித்து எஞ்சிய பகுதியிலும் ஒருபலம் குறைவுபடக் கொடுப்பானாயின் ஒரு பலத்திற்குரிய விலையின் இருமடங்கு தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது.

76 இவற்றால்—ஒரு பலம் குறைந்தவிடத்துக் கூறிய தண்டவிதியினால்.

77 இரண்டு பலம் முதலியன குறைந்தவிடத்தும் தண்டவிதியை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பது கருத்து.

78 ஒரு பலத்துக்குக் கூறிய கூலிவிதியினால் இரண்டு பல முதலியவற்றிற்கும் கூலிவிதி கூறியவாறும் என்பது.

79 பொன் வெள்ளி முதலியவற்றின் வண்ணம் முதலியவற்றால் அவற்றின் ஏற்றத்தாழ்வை யறிவிப்பவன் சிறந்த நாணயத்தைத் தாழ்ந்தது என்றும் தாழ்ந்தவற்றைச் சிறந்தது என்றுங்கூறின் பன்னிரண்டு பணம் தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது கருத்து.

80 நாணயத்தொழில் புரிபவன் நூற்றுக்கு ஐந்து விகிதம் அரசிறை செலுத்தவேண்டும் என்பது.

81 தூயதான ஒரு பணத்திலிருந்து ஒரு மாடத்தைக் கவர்ந்துகொண்டு வேறு உலோகத்தால் ஈடுசெய்யும் இலச்சினைத் தலைவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டம் விதித்தல்வேண்டும் என்பது.

தண்டமாம். [82]இவற்றால் இவ்வளவின் மேம்பட்டவற்றிற்கும் விதி கூறியபடியாம்.

போலிநாணயத்தைச் செய்விப்பவனுக்கும் ஏற்றுக்கொள்பவனுக்கும் வெளியேற்றுபவனுக்கும் ஆயிரம் தண்டமாம். [83]கருவூலத்திற் சேர்ப்பவனுக்குக் கொலைத்தண்டமாம்.

[84]இரத்தினத் துகள் கழுவுவோன் பயனில் மூன்றில் ஒருகூறு பெறக்கடவன். இருமடங்கையும் இரத்தினத்தையும் அரசன் பெறக்கடவன். இரத்தினத்தைக் [85]கவர்ந்தவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[86]ஆகரம், மணி, புதையல் இவற்றை யறிவிப்பவன் ஆறில் ஒருகூறு பெறக்கடவன். [87]கூலி பெறுபவனாயின் பன்னிரண்டில் ஒருகூறாம்.

[88]நூறாயிரத்துக்கு மேம்பட்ட புதையல் அரசனுக்குரியதாம். [89]குறைவுபடின் ஆறில் ஒருகூற்றைக் கொடுத்தல்வேண்டும்.

---

[82] ஒரு மாடத்தைக் கவர்ந்ததற்குக் கூறிய தண்டவிதியினால் இரண்டு மாடம் முதலியவற்றைக் கவர்ந்ததற்குரிய தண்டவிதியும் கூறியபடியாம் என்பது.

[83] கருவூலத்திலுள்ள உண்மையான நாணயங்களுடன் போலிநாணயங்களைக் கலந்துவிடுபவனுக்குக் கொலைத்தண்டம் என்பது கருத்து.

[84] ஆகரங்களில் மண் முதலியவற்றோடு கலந்துள்ள இரத்தினங்களைக் கழுவி எடுக்கும்போது ஆண்டு இரத்தினங்கள் தவிர ஏனைய பயனுள்ளதான ஏதேனும் பொருள் கிடைக்கப்பெறின் அப்பொருளின் மூன்றில் ஒரு கூற்றைக் கழுவுவோன் பெறக்கடவன் என்பதும் எஞ்சிய இருமடங்கு அப்பொருளையும் இரத்தினங்களையும் அரசன் பெறுதல்வேண்டும் என்பதும் கருத்து.

[85] கவர்ந்தவன்—ஈண்டு இரத்தினத் துகள் கழுவுவோன்.

[86] ஆகரம் முதலியவை உரியவனல்லாதவனால் எடுத்துக்கொள்ளப்படுமாயின் அதை அரசனுக்குத் தெரிவிப்பவன் ஆகரம் முதலியவற்றின் ஆறில் ஒருகூற்றைப் பெறலாம் என்பது.

[87] ஆகரம் முதலியவற்றை யறிவித்தற்பொருட்டு அரசியலாரால் கூலி கொடுத்து நியமிக்கப்பட்டவன்.

[88] நூறாயிரம் பணத்தைவிட அதிகமான மதிப்புள்ள புதையல் அரசனுக்குரியது என்பது.

[89] குறைவு—நூறாயிரம் பணமதிப்பிற்குக் குறைதல். இதனால் நூறாயிரம் பணம்வரை பெறுமானமுள்ள புதையலையறிந்து எடுப்பவன் (உறுபொருளாளன்) அரசனுக்கு உல்குபொருளாக ஆறில் ஒருகூற்றைச் செலுத்திவிட்டு எஞ்சியவற்றைத் தானே எடுத்துக்கொள்ளலாம் என்பது போதரும்.

நாட்டில் வாழும் தூயவனுயின் (தன்) [90]முன்னோர்களுடைய புதையல் முழுவதையுஞ் சான்று முதலியவற்ருல் பெறக்கடவன். சான்று முதலியன இல்லையாயின் [91]ஐந்நூறு தண்டமாம். மறைவாக எடுத்துக்கொள்ளின் [92]ஆயிரம் (தண்டமாம்).

[93]மருத்துவன் உயிர்க்குத் தீங்கு விளைக்கக்கூடியதைக் கூருது மருத்துவஞ் செய்யத்தொடங்கி இடுக்கண் நேர்ந்துழிப் பூர்வசாகச தண்டம் இறுத்தல்வேண்டும். [94]செயற் குற்றங் காரணமாகத் தீங்கு நேர்ந்தால் மத்தியமசாகசம் தண்டமாம். [95]உயிர்நிலை யங்கங்களின் மருத்துவம் மாறுபடின் கடுந்தண்டம் என்றறிக.

[96]விளையாட்டுமக்கள் மழைகாலத்தில் ஓரே இடத்தில் இருத்

---

90 புதையல் தன் முன்னேர்களால் வைக்கப்பட்டது என்பதைச்சான்று, பத்திரம் முதலியவற்ருல் அரசியலார்க்கு அறிவிப்பவன், அப்புதையல் நூருயிரத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ளதாயிருப்பினும் முழுவதையும் உரியதாக்கிக்கொள்ளலாம் என்பது கருத்து.

91 சான்று முதலியன இல்லாமல் புதையல் முழுவதையும் தானே எடுத்துக்கொள்பவன் ஐந்நூறு பணம் தண்டம் இறுத்தல் வேண்டும் என்பது.

92 ஆயிரம்—ஆயிரம் பணம்.

93 இனி மருத்துவனைப்பற்றிய விதிமுறைகளைக் கூறுகின்ருர். உயிர்க்குத் தீங்கு விளைக்கக்கூடிய நோயின் இயல்பை அரசனுக்குத் தெரிவியாது நோயாளிக்கு மருத்துவஞ்செய்ய அம்மருத்துவத்தாற் பயன்பெருது நோயாளி இறந்துவிடுவாளுயின் அம்மருத்துவனுக்குப் பூர்வசாகசம் தண்டம் என்பது.

94 மருத்துவக்குற்றங் காரணமாக இறந்துவிடின் மத்தியமசாகசம் தண்டமாம் என்பது.

95 கத்திமருத்துவஞ் செய்யும்போது உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத அங்கங்களுக்குக் கேடுவரின் மருத்துவனுக்கு அவ்வுறுப்புக்கேட்டை விளைத்தலாகிய கடுந்தண்டம் விதித்தல்வேண்டும் என்பது.

96 விளையாட்டுமக்கள்—தாண்டுதல் குதித்தல் பாடுதல் முதலியவற்ருல் மக்களை இன்புறுத்தும் தொழிலினர். இவர்கள் மழைகாலத்தில் தம் தொழிலை மேற்கொண்டு வெளியிடங்களுக்குப் போனுல் உழவு முதலிய இன்றியமையாத தொழிலிலீடுபட்ட மக்கள் இவர்கள் விளையாட்டில் கருத்தைச்செலுத்தித் தாம் மழைகாலத்தில் செய்யவேண்டிய உழவு முதலிய தொழில்களில் ஊக்கமற்றிருக்கக் கூடுமாதலால் அவர்தம் தொழிலுக்குத் தீங்கு நேரும் என்பதுபற்றி ஓரே இடத்தில் இருக்கவேண்டும் என்று கூறினர்.

தல்வேண்டும். [97]ஒருவனுடைய மிகுதியான அன்புக்கொடையை யும், வரம்புமீறிய புகழ்ச்சியையும் விலக்கல்வேண்டும். இதை மீறின், பன்னிரண்டு பணம் தண்டமாம். நாடு, சாதி, கோத்திரம், மறையோதுபவன், புணர்ச்சி என்னும் [98]இவை இல்வழி விருப்பப் படி மகிழ்விக்கலாம்.

விளையாட்டு மக்களுக்குக் கூறிய விதியால் [99]கூத்தர்களுக்கும் ஐயமேற்பவர்களுக்கும் விதிகூறியவாறும். [100]அவர்கள் [101]இருப்புச் சூலத்தை மேற்கொள்ளின் [102]இறுக்கக்கடவ பணத்திற்குத்தக கசையடித்தண்டம் பெறக்கடவர்.

[103]எஞ்சிய தொழில்களுக்கும் காருகர்களின் தொழிற்பயன் உணர்ந்து கூலியை நிச்சயித்தல்வேண்டும்.

சுலோகம்

[104]வஞ்சகமாகத் திருட்டுத்தொழில்புரிபவர், வணிகர், காருகர், விளையாட்டுமக்கள், ஐயமேற்பவர், ஏனைய [105]வஞ்சகர் என்னுமிவர் களால் நாட்டுக்குத் தீங்கு நேராவண்ணம் காத்தல்வேண்டும்.

நான்காம் அதிகரணம் முதற்பிரகரணம்
"காருகரால் தீங்குநேராமற் காத்தல்" என்னும்
எழுபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[97] அன்புமிகுதியால் வரைகடந்து கொடுக்கப்படும் அன்புக்கொடையை அவர்கள் ஏற்கலாகாது என்பதும் பலருள் ஒருவனை அளவுகடந்து புகழ்தல் கூடாது என்பதும் கருத்து.

[98] நாட்டின் அரசியல்முறையினையும் தனிப்பட்டவர்களின் குலம் கோத்திரம் கூட்டுறவு முதலியவற்றையும் குறித்து இகழும் நிலையில் தம் விளையாட்டுக்களை அமைத்துக்கொள்ளலாகாது என்பது கருத்து.

[99] கூத்தர்—உறுப்புக்களால் அபிநயஞ்செய்து மகிழ்விப்போர். இவர் களைச் சாரணர் என்று முதனூல் கூறும்.

[100] அவர்கள்—சாரணரும் ஐயமேற்பவரும்.

[101] இருப்புச்சூலம் — சூலப்படைபோல் உள்ளத்தைப் புண்படுத்தும் சொல் முதலியன.

[102] பிறருக்குத் துன்பம் விளைத்ததற்காக விதிக்கப்பட்ட பொருட்டண் டத்தை இறுக்க அவர்களுக்குப் பொருளில்லையாயின் ஒரு பணத்திற்கு ஒரு கசையடி விகிதம் கசைத்தண்டம் பெறக்கடவர் என்பது கருத்து.

[103] மேற்குறித்த தொழில்கள் தவிர ஏனைய காருகத்தொழில்களுக்குரிய கூலியை மேற்கண்டவாறு சூழ்ந்து துணிதல்வேண்டும் என்பது கருத்து.

[104] தூயவர்போல் நடந்துகொண்டு திருட்டுத்தொழில் புரிபவர் என்பது.

[105] வஞ்சகர்—ஈண்டு இந்திரசாலம் செய்பவர்.

நான்காம் அதிகாரணம்—சிறுபகை களைதல்

இரண்டாம் பிரகரணம்—[1]வணிகர்களால் தீங்குநேராமற் காத்தல்

எழுபத்தொன்பதாம் அத்தியாயம்

[2]அங்காடியைக் கண்காணிப்பவன் அங்காடியில் [3]உரிமை துணியப்பட்ட [4]பழைய பண்டங்களை உட்புகச்செய்தல் விற்றல்களைச்செய்வித்தல் வேண்டும். அளவுகருவிகளிற் [5]குற்றம் நேரா வண்ணம் நிறுத்தலளவை முகத்தலளவைக் கருவிகளைக் கண்காணித்தல் வேண்டும். [6]அளவுகோல் [7]தூணிகள் [8]அரைப்பலம் ஏற்றத்தாழ்வுள்ளனவாயிருத்தல் குற்றமின்று. ஒருபலம் ஏற்றத் தாழ்வுள்ளனவாயிருப்பின் பன்னிரண்டு பணம் தண்டமாம். [9]இதனுல் பலமிகுதிக்கேற்பத் தண்டமிகுதி கூறியபடியாம்.

79-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வணிகர்களால் நேரும் தீங்கு, நிறுத்தலளவை முதலியவற்றுல் கொள்வது மிகைபடலும் கொடுப்பது குறைபடலுமாம். மக்களுக்குத் தீங்கு விளைவிப்பதில் காருகர்போல் வணிகரும் ஓரினமாதலின் 'காருகரால் தீங்கு நேராமற் காத்தல்' என்னும் முன்னைப்பிரகரணத்தின் பின் இது வைக்கப்பட்டது. இதனுற் பிரகரண இயைபு புலனுதலறிக.

[2] அங்காடி—கடைத்தெரு.

[3] உரிமை துணியப்படுதலாவது—கொண்டுவருபவர்கள் 'அப்பண்டத்திற்குரியவர் தாமே' என்பதைச் சான்று முதலியவற்றுல் தெரியப்படுத்தல். இது களவு முதலியவற்றுல் கவரப்பட்டிருக்குமோ என்ற ஐயத்தைப் பரிகரித்தற் பொருட்டாம்.

[4] கூலம் முதலியன பழையனவாயிருப்பின் சிறந்தனவாகும் என்பது தோன்றப் 'பழைய பண்டங்களை' என்றுர்.

[5] குற்றம்—கொடுக்கல் வாங்கல்களில் அளவுகருவிகள் சிறியனவாகவும் பெரியனவாகவும் வைத்திருத்தலால் நிகழ்வது.

[6-7] அளவுகோல் தூணி இவற்றைப்பற்றிய விளக்கத்தை 40-ஆம் அத்தியாயத்திற் காண்க.

[8] அரைப்பலம் பெரியதாகவாதல் சிறியதாகவாதலிருத்தல் குற்றமாகாதென்பது. பின்னுள்ளவற்றிற்கும் இஃதொக்கும்.

[9] ஒருபலம் பெரியதாகவாதல் சிறியதாகவாதலிருப்பின் பன்னிரண்டு பணம் தண்டம் என்ற விதியால் இரண்டுபலம் முதலியனவாக ஏற்றத்தாழ்வுள்ளவிடத்து இருபத்துநான்கு பணம் முதலியனவாகத் தண்டம் விதித்தல் கூறியபடியாம் என்பது கருத்து.

[10]துலை ஒரு [11]கருடம் ஏற்றத்தாழ்வுடையதாயிருத்தல் குற்றமின்று. இரண்டு கருடம் ஏற்றத்தாழ்வுள்ளதாயிருப்பின் பன்னிரண்டு பணம் தண்டமாம். [12]இதனால் கருடமிகுதிக்கேற்பத் தண்டமிகுதி கூறியபடியாம்.

மரக்கால் அரைக்கருடம் ஏற்றத்தாழ்வுள்ளதாயிருத்தல் குற்றமின்று. ஒரு கருடம் ஏற்றத்தாழ்வுள்ளதாயிருப்பின் மூன்று பணம் தண்டமாம். இதனால் கருடமிகுதிக்கேற்பத் தண்டமிகுதி கூறியவாறும்.

[13]இங்குக் கூறப்படாத ஏனைய நிறுத்தலளவை முகத்தலளவைகளையும் சூழ்ந்தறிதல் வேண்டும்.

பெரிய நிறுத்தலளவை முகத்தலளவைகளால் வாங்கி, சிறியவைகளால் விற்பவனுக்கு [14]அத்தண்டத்தின் [15]இருமடங்கு தண்டமாம்.

[16]எண்ணுதற்குரிய பண்டங்களின் விலையில் எட்டிலொரு கூற்றைக் கவர்பவனுக்குத் தொண்ணூற்றாறு பணம் தண்டமாம்.

[17]மரம் இரும்பு இரத்தினம் இவற்றாலும், கயிறு தோல் மண்

10–11 துலை கருடம் என்பன அளவுகள். இவற்றின் விளக்கத்தை 40-ஆம் அத்தியாயத்திற் காண்க.

12 இரண்டு கருடம் முதலியனவாக ஏற்றத்தாழ்விருப்பின் இருபத்து நான்கு பணம் முதலியனவாக இறுத்தல்வேண்டும் எனத் தண்டவிதி கூறியபடியாம் என்பது கருத்து. பின்னுள்ளவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

13 அளவுகோல் முதலாக மரக்கால் இறுதியாக இங்குக் கூறப்பட்ட அளவுகருவிகளைத் தவிர கூறப்படாத மாடம் படி முதலிய அளவுகருவிகள் ஏற்றத்தாழ்வுள்ளதாயிருப்பின் அவற்றைப் பயன்படுத்தினவர்களுக்குரிய தண்டவிதி முதலியன உய்த்துணரத்தக்கன என்பது கருத்து.

14 அத்தண்டம்—பன்னிரண்டு பணம் முதலியனவாகக் கூறப்பட்ட தண்டம்.

15 இருமடங்கு—இருபத்துநான்கு பணம்.

16 ஒன்று இரண்டு முதலியனவாக எண்ணி விற்றற்குரிய பண்டங்கள் என்பது.

17 மரம் முதலியவற்றாலாக்கப்பட்ட பொருள் உண்மையில் இழிந்தனவாயிருக்க அவை சிறந்தன என்றுகூறிப் பிறரை ஏமாற்றி, விற்றல் ஈடு செய்தல் செய்பவனுக்கு அப்பண்டங்களின் விலையின் எண்மடங்கு தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

இவற்ருலும், நூல் பட்டை உரோமம் இவற்ருலும் ஆக்கப்பட்ட தாழ்ந்த பண்டங்களை உயர்ந்தனவாகக்கூறி விற்றல் ஈடுசெய்தல் செய்பவனுக்கு விலையின் எண்மடங்கு தண்டமாம்.

[18]சிறந்தன என்று [19]இழிந்த பண்டத்தையும் [20]ஒருநாட்டிற் ரேன்றியது என்று வேறுநாட்டிற்ரேன்றியதையும், [21]எழிலுள்ள வற்ரேடு கூடியதையும் [22]வஞ்சத்தாலுண்டான பண்டங்களுடன் கூடியதையும் [23]வேறு பேழையிலுள்ளதையும் விற்றல், ஈடுசெய்தல் செய்பவனுக்கு (அவை) [24]குறைந்த விலையுள்ளனவாயின் ஐம்பத்துநான்கு பணம் தண்டமாம். [25]ஒரு பண விலையுள்ளதாயின் இருமடங்கும், இரண்டுபண விலையுள்ளதாயின் இருநூறுமாம். இதனுல் [26]விலைமிகுதிக்கேற்பத் தண்டமிகுதி கூறியவாருூம்.

---

18 இயற்கையாகவுள்ள சிறந்த கற்பூரம் முதலியன.

19 செயற்கையாகவுள்ள தாழ்ந்த கற்பூரம் முதலியன.

20 உண்மையில் இழிந்ததொரு நாட்டிற்ரேன்றிய இழிந்தபொருளை உயர்ந்ததொரு நாட்டிற்ரேன்றிய உயர்ந்தபொருள் என்று கூறி வஞ்சித்தெனபது.

21 நீரோட்டம் முதலிய சிறப்புள்ள மணி முதலியவற்ரேடு தாழ்ந்த மணி முதலியவற்றைக் கலந்து வஞ்சித்து என்பது.

22 இயற்கையாயமைந்த சிறந்த பண்டங்களுடன் வஞ்சத்தாலுண்டாக்கப்பட்ட செயற்கையான பண்டங்களைக் கலந்து வஞ்சித்தல் என்பது.

23 சிறந்ததொரு மணி முதலியவற்றை ஒரு பேழையிலிருந்து எடுத்துக் காட்டி விலை முதலியவற்றை வரையறை செய்துகொண்டபின் வேருெரு பேழையிலிருந்து தாழ்ந்த மணி முதலியவற்றைக் கொடுத்து வஞ்சித்தல் என்பது.

24 ஈண்டுக்கூறிய தண்டம் ஒரு பணத்திற்குக் குறைந்த விலையுள்ள பண்டங்களைப்பற்றியதென்க.

25 வஞ்சிக்கப்பட்ட பொருள் ஒருபண விலையுள்ளதாயின் நூற்றெட்டுப் பணம் தண்டம் என்பதும் இரண்டு பணம் விலையுள்ளதாயின் இருநூறு பணம் தண்டம் என்பதும் கருத்து.

26 மூன்று பணம் முதலியனவாக விலையுள்ள பண்டம் வஞ்சிக்கப்படின் முந்நூறு பணம் முதலியனவாகத் தண்டம் விதித்தல் உய்த்துணரத்தக்கது என்பது கருத்து.

[27]தொழிற்குணத்தின் குறைவையும் [28]ஊதியத்தையும் [29]விற்றல் வாங்கல்களின் இடையூற்றையும் ஒன்றுகூடி உண்டுபண்ணும் காருகர் சிற்பிகளுக்கு ஆயிரம் தண்டமாம்.

[30]விலைப்பண்டத்தின் தடை, தகாதவிலைக்குக் கொள்ளல், விற்றல் என்னும் இவற்றை ஒன்றுகூடிச் செய்யும் வணிகர்களுக்கும் [31]ஆயிரம் தண்டமாம்.

[32]நிறுத்தலளவை முகத்தலளவைகளினால் உண்டாகும் ஊதியமும், விலையின் மாறுபாட்டினாலுண்டாம் ஊதியமும் குறிக்கத்தக்கன. ஒரு பணம் விலையுள்ள பண்டத்தின் எட்டில் ஒருகூற்றைக் [33]கைக்குற்றத்தினால் குறைக்கும் நிறுப்பவன் அளப்பவன்

---

27 தொழிற்குணத்தின் குறைவு—தொழிற் சிறப்புப்பற்றி உண்டாம் பண்டங்களின் சிறப்புக்குறைவு. இன்ன இன்ன தொழிலால் இன்ன இன்ன சிறப்புடைய அணிகலன் முதலியவற்றைச் செய்து கொடு என்று ஒரு காருகனிடம் சொல்லிக்கொடுத்தவிடத்துப் பலகாருகர் ஒன்றுகூடி 'அம்மாதிரி நீ செய்தல் கூடாது' என்று தடைசெய்தமை காரணமாகத் தொழிற் சிறப்பு குறைவுபடின் தடுத்த அக்காருகருள் ஒவ்வொருவனுக்கும் ஆயிரம் பணம் தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து. பின்னுள்ள ஊதியம் முதலியவற்றைப்பற்றியவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

28 ஒரு பணம் கூலிபெறவேண்டிய தொழிலுக்கு இரண்டு பணம் கூலி கொடுத்தல்வேண்டும் என்று ஒன்றுகூடி கூலி முதலிய ஊதியத்தை அதிகப்படுத்தின் என்பது.

29 தம்மிடமுள்ள பண்டங்களின் விலையை மிக உயர்த்திவிடுதலால் விற்றற்றொழிலுக்கும் பிறரிடமுள்ள பண்டங்களின் விலையை மிகத்தாழ்த்துதலால் வாங்கற்றொழிலுக்கும் தடைசெய்யின் என்பது.

30 தம்மிடமுள்ள பண்டங்களைப் பிறவிடங்களுக்கு அனுப்பாமை காரணமாகப் பண்டங்களைப் பிறவிடங்களில் விற்பதற்குத் தடைசெய்தல் என்பது.

31 ஈண்டும் விலைப்பண்டத்தின் தடை முதலியவற்றை ஒன்றுகூடிச் செய்யும் வணிகருள் ஒவ்வொருவரும் ஆயிரம் பணம் தண்டம் இறுத்தல் வேண்டும் என்பது அறியத்தக்கது.

32 நாற்பதாம் அத்தியாயத்தில் கூறப்பட்ட ஊதியஅளவை முதலியவற்றால் ஏற்படும் ஊதியத்தையும் அங்காடியில் பண்டங்களின் விலைமாறுபாட்டால் ஏற்படும் ஊதியத்தையும் புத்தகத்தில் குறிக்கவேண்டும் என்பது கருத்து.

33 கைக்குற்றம்—வஞ்சித்து நிறுத்தல் அளத்தல்களால் பண்டத்தைக் குறைவுபடச்செய்யுங் குற்றம்.

என்னும் இவர்களுக்கு இருநூறு பணம் தண்டமாம். [34]இதனால் இருநூறுக்கு மேற்பட்ட தண்டமிகுதி கூறியபடியாம்.

கூலம் [35]எண்ணெய் அக்காரம் உப்பு [36]மணப்பொருள் மருந்து என்னும் இவற்றுடன் ஒத்த வண்ணமுள்ளவற்றைச் சேர்ப்பவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

[37]வணிகன், விற்பனைக்கு அநுமதிக்கப்பட்ட பண்டங்களின் (ஒவ்வொரு) நாள் ஊதியத்தைக் கணக்கிட்டு வரைதல்வேண்டும்.

[38]கொள்பவன் விற்பவனுக்கிடையில் ஏற்பட்ட ஊதியம் பகுக்கற்பாலதன்று. [39]அவனால் அநுமதிக்கப்பட்டுக் கூலம் விலைப்பண்டங்களைத் தொகுத்து வைக்கலாம். அநுமதிபெறாது தொகுக்கப்பட்டவற்றை [40]விலைப்படுபண்டத் தலைவன் எடுத்துக் கொள்ளக்கடவன். கூலம் விலைப்பண்டங்களை விற்பதில் மக்கட்குதவியாமாறு அப்பண்டத்தைப் பயன்படுத்தல் வேண்டும்.

வாங்கிய விலைக்குமேல் நூற்றுக்கு ஐந்து விகிதம் [41]தம்நாட்டு விலைப்பண்டங்கட்கு ஊதியத்தை வரையறுக்கவேண்டும். [42]பிற நாட்டுப் பண்டங்களுக்காயின் பதின்மடங்காம். அதைவிட அதிகமாக விலையை உயர்த்தினவரும் கொள்ளல் விற்றல்களில் நூற்

---

34 கைக்குற்றத்தினால் பண்டங்களின் நான்கிலொருகூறு முதலியவற்றைக் குறைவுபடச்செய்யின் நானூறு பணம் முதலிய தண்டம் விதித்தல் வேண்டும் என்பது.

35 ஈண்டு உபலக்கணத்தால் நெய் முதலிய திரவப்பொருளைக் கொள்க.

36 மணப்பொருள்—சாந்தம் முதலியன.

37 வணிகன்—ஈண்டு அங்காடியைக் கண்காணிப்பவன்.

38 கொள்பவன் விற்பவன் என்பன ஈண்டுக் கொள்ளல் விற்றல் என்ற அவர்தம் தொழிலைக் குறிக்கும். அங்காடியைக் கண்காணிப்பவன் தானே கொள்ளல் விற்றல் செய்தாலுக, அவனுக்குக் கிடைக்கும் ஊதியம் முழுவதும் அரசனைச் சார்ந்ததாகும் என்பது கருத்து.

39 அவனால்—அங்காடியைக் கண்காணிப்பவனால்.

40 இவனைப்பற்றிய விவரத்தை 37-ஆம் அத்தியாயத்திற் காண்க.

41 தம் நாட்டினுட் டோன்றிய விலைப்பண்டமென்பது.

42 பிறநாட்டிற்றோன்றிய பண்டம் தம் நாட்டிற்குக் கொண்டுவரப்படுமாயின் வாங்கின விலையைவிட நூற்றுக்குப் பத்து விகிதம் ஊதியத்தை அநுமதிக்கலாம் என்பது.

றுக்கு ஐந்துக்குமேல் ஊதியத்தை உயர்த்துபவர்களும் இருநூறு பணம் தண்டம் இறுத்தல்வேண்டும். [43]இதனால் விலைமிகுதிக் கேற்பத் தண்டமிகுதி கூறியவாறும்.

[44]இவர்கள் ஒன்றுகூடி வாங்கிய பண்டங்கள் விற்கப்படாத போது வேறு வணிகக்குழுவிற்குப் பண்டத்தைக் கொடுத்தல் கூடாது. [45]பண்டம் மிகுதியாகவிருப்பின் அவற்றிற்குக் கேடு விளைந்தவிடத்து அருளுதல்வேண்டும்.

விலைப்படுபண்டத் தலைவன், பண்டங்கள் யாவற்றையும் [46]ஒரு முகமாக விற்கச்செய்தல் வேண்டும். [47]அவர்கள் விற்காதிருக்கும் நிலையில் பிறர் விற்றல் கூடாது. [48]அப்பண்டங்களை நாட்கூலி கொடுத்து மக்கட்குதவியாமாறு விற்கவேண்டும்.

சுலோகம்

பெறுமதி [49]தோற்றம் [50]உல்கு [51]மிகுதி [52]வாடகை பிறசெலவு

---

[43] நூற்றுக்குப் பத்து முதலியனவாக விலையை உயர்த்தின் நானூறு பணம் முதலியனவாகத் தண்டம் விதித்தல்வேண்டும் என்பது.

[44] கூடித்தொழில்புரியும் ஒரு வணிகக் குழுவிற்குக் கொடுக்கப்பட்ட விலைப்பண்டம் விற்கப்படாதிருக்கும்போது மற்றொரு வணிகக்குழுவிற்குப் பண்டத்தைக் கொடுத்தல் கூடாதென்பது.

[45] கூடித் தொழில்புரியும் வணிகர்களின் பண்டம் நீர் நெருப்பு முதலிய வற்றால் கேடெய்தின் அப்பொருளிழப்புக்கு உதவிசெய்தல் வேண்டும் என்பது.

[46] ஒரு வணிகன்மூலமாகப் பண்டங்களை விற்கச் செய்யவேண்டும் என்பது.

[47] விற்பதற்கு முதலில் அநுமதிபெற்றவர்கள் பண்டத்தை விற்காத நிலையில் வேறொருவருக்குப் பண்டத்தை விற்க அநுமதிகொடுத்தல் கூடாது என்பது.

[48] விற்கப்படாத பண்டங்களை மக்கள் எளிதில் வாங்கும் வண்ணம் கூலியாட்கள்மூலம் விற்கவேண்டும் என்பது.

[49] தோற்றம்—இது இத்துணை நாட்களில் தோன்றினது என்பது போல்வன.

[50] உல்கு-அப்பண்டங்களை விற்றல் முதலியன செய்தற்குரிய அரசிறை.

[51] மிகுதி—ஊதிய அளவை முதலியவற்றால் ஏற்படுவது.

[52] அப்பண்டங்களை அங்காடிக்குக் கொண்டுவருதற்குரிய வண்டி வாடகை முதலிய செலவு என்பது.

என்னும் இவற்றைக் கணக்கிட்டு விலையை(த்துணிதற்கு) அறிந்தவன், [53]நாடு காலம் இவற்றால் மறைவுபட்ட பண்டங்களின் விலையைத் [54]துணிதல்வேண்டும்.

நான்கர்ம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
"வணிகர்களால் தீங்குநேராமற் காத்தல்" என்னும்
எழுபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[53] வேறுநாட்டிலும் வேறுகாலத்திலும் உண்டான பண்டங்கள் என்பது.

[54] மேற்கண்ட செலவுகளையும் பண்டங்கள் வாங்கின விலையையும் ஊதியம் முதலியவைகளையும் கணக்கிட்டு அப்பண்டங்களின் விலையைத் துணிதல்வேண்டும் என்பது கருத்து.

நான்காம் அதிகாரணம்—சிறுபகை களைதல்

மூன்றும் பிரகரணம்—[1]தெய்விகப்பேரச்சம்

எண்பதாம் அத்தியாயம்

[2]நெருப்பு நீர் நோய் வறுமை எலி கொடியவிலங்குகள் பாம்பு அரக்கர் எனத் தெய்விகப்பேரச்சம் எண்வகைப்படும். அவற்றினின்றும் நாட்டைப் பாதுகாத்தல் வேண்டும்.

[3]கிராமத்து மக்கள் முதுவேனிற் பருவத்தில் [4]வெளியிடத்திற் சமையல்செய்தல் வேண்டும். [5]பத்துக்குடியைக் கண்காணிப்பவனுல் [6]அநுமதிக்கப்பட்டவிடத்தும் செய்யலாம். [7]நகரத்தலைவன் செயலிலும் அரண்மனையமைத்தலிலும் நெருப்புத்தடை விளக்கப்பட்டது.

80-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தெய்விகப்பேரச்சம்—நீர் நெருப்பு வறுமை முதலியவற்றால் உண்டாம் பயம். மாற்றம்—அதனை நீக்குதற்குரிய எதிர்ச்செயல். தீங்குகள், மக்களாலுண்டாவன தெய்வத்தாலுண்டாவன என இருவகைப்படும். மக்களாலுண்டாந் தீங்குகளை முன்னைப்பிரகரணங்களாற் கூறினர். ஈண்டு தெய்வத்தாலுண்டாந் தீங்குகளைப்பற்றிக் கூறத்தொடங்குகின்றார். இதனுற் பிரகரண இயைபு விளக்கமாதலறிக.

[2] நெருப்பு முதலாக ஈண்டு எண்ணப்பட்டன அவற்றால் நேரும் அச்சம் என்னும் பொருளுடையன என்று கொள்க.

[3] நெருப்பினுல் உண்டாம் அச்சத்திற்கு மாற்றங்கூறத் தொடங்குகின்றார்.

[4] வெளியிடத்தில்—வீட்டிற்கு வெளியிடத்தில்.

[5] பத்துக்குடியைக் கண்காணிப்பவன்—இவன் 'கோபன்' எனப்படுவான். 56-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

[6] 'இன்ன இடத்தில் சமையல் செய்க' என்று அவனுல் அநுமதிக்கப்பட்ட இடம் என்பது.

[7] 'நகரத்தலைவன்செயல்' என்னும் பிரகரணத்தை விளக்கும் 57–ஆம் அத்தியாயத்திலும் 'அரண்மனையமைத்தல்' என்னும் பிரகரணத்தை விளக்கும் 20-ஆம் அத்தியாயத்திலும் நெருப்புத் தடையைப்பற்றிய செய்தி விளக்கிக்கூறப்பட்டது என்பது கருத்து. 20-ஆம் அத். 13-ஆம் குறிப்பையும் 57-ஆம் அத். 44-ஆம் குறிப்பையும் பார்க்க.

[8]வழிபாட்டுப்பொருள் [9]ஓமம் (வளர்த்தல்) [10]மங்கலவாழ்த்து என்னும் இவற்றால் [11]உவாநாட்களில் அங்கிவழிபாட்டைச் செய்வித்தல் வேண்டும்.

நீர்மருங்கிலுள்ள [12]கிராமங்கள் மாரிக்காலங்களில் [13]நீரருவிகளின் கரையைவிட்டு (வேறிடத்தில்) வாழ்தல்வேண்டும். [14]மரம் மூங்கில் ஓடம் என்னும் இவற்றையுஞ் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

[15]இழுத்துச் செல்லப்படுபவனைச் சொரைக்காய்க் குடுவை தோற்பை தெப்பம் மரக்கட்டை [16]வேணிகை என்னுமிவற்றைக் கொண்டு கரைக்குக் கொணர்தல்வேண்டும். [17]சாதனப்பொருளைப் பெற்றிருந்தும் [18]செல்லாதவர்க்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

உவாநாட்களில் [19]ஆற்றுவழிபாட்டைச் செய்வித்தல் வேண்டும்.

---

8 வழிபாட்டுப்பொருள்—முதல்நூலார் இதனைப் 'பூதபலி' என்பர்.

9 ஓமம்—தெய்விகமாக ஏற்படும் தீங்கைப் பரிகரித்தற்பொருட்டுச் செய்யப்படுகிற 'ரக்ஷாஹோமம்' எனப்படும் சாந்தி கன்மங்கள்.

10 தோத்திரம் முதலியன என்பது.

11 உவா—பௌர்ணமி, அமாவாசை.

12 கிராமங்கள் என்பது இடவாகுபெயர். கிராமத்துமக்கள் என்னும் பொருளது.

13 வெள்ளப்பெருக்கிற்கு அருகிலுள்ள இடத்தினின்றும் வேறிடத்திற்குச் சென்று வாழ்தல்வேண்டும் என்பது.

14 வெள்ளத்தைக் கடத்தற்காக மரம் முதலியவற்றைத் தேடி வைத்துக் கொள்ளவேண்டும் என்பது கருத்து.

15 தன் கையினால் கடக்கச் சக்தியற்று வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்படுபவனைக் கொணர்தல்வேண்டும் என்பது கருத்து.

16 வெள்ளத்தைக் கடத்தற்குரிய தோணி போல்வதொரு கருவி.

17 சாதனம் — சொரைக்காய்க்குடுவை முதலியனவாக மேற்கூறப்பட்டன. தன்னிடம் ஏதேனும் அச்சாதனங்களுள் ஒன்றிருந்தும், நீரில் மிதந்து தவிப்பவனுக்கு உதவிபுரியாவிடின் குற்றமுண்டென்பது போதரும்.

18 செல்லாதவர்க்கு—நீரில் வருந்தும் மக்களுக்கு மேற்கூறிய சாதனங்களைக்கொண்டு உதவிபுரியச் செல்லாதவர்க்கு.

19 இவ்வழிபாடு, நீரினால் தீங்கு நேராமலிருத்தற்பொருட்டுச் செய்யப்படுவது.

[20]மாயா யோகத்தையும் அதர்வண மறையையும் அறிந்தவர் [21]மழையை [22]நிறுத்தவேண்டும்.

[23]மழைத்தடை ஏற்படின் இந்திரன் கங்கை மலை கடல் என்னும் இவற்றின் வழிபாட்டைச் செய்வித்தல் வேண்டும்.

[24]ஔபநிடதத்திற் கூறிய முறைகளால் பிணியச்சத்தை ஒழித்தல் வேண்டும். மருத்துவர், மருந்தினாலும் சித்தர் தவவுருவினர்கள், சாந்தி [25]கழுவாய் என்பவற்றாலும் ஒழித்தல்வேண்டும்.

இதனால் [26]மரகத்திற்கும் விதி [27]கூறியபடியாம். [28]நீராடுதல், கடல்வழிபாடு, [29]சுடலையில் பசுக்களைக் கறத்தல், [31]கவந்தத்தை எரித்தல், [31]தெய்வஇரவு என்னும் இவற்றைச் செய்வித்தல் வேண்டும்.

---

20 மாயாயோகத்தை யறிந்தவர்—சைவர் முதலியோர் என்ப.
21 மழை—ஈண்டு மிகுபெயல். 'அதிவிருஷ்டி' என்பர் வடநூலார்.
22 மந்திரம் ஓமம் முதலியவற்றால் நிறுத்தல்வேண்டும் என்பது.
23 மழைத்தடை—பெயலின்மை. 'அநாவிருஷ்டி' என்பர் வடநூலார்.
24 நோயினாலுண்டாம் அச்சத்திற்கு மாற்றங் கூறுகின்றார். நோய், செயற்கையினாலுண்டாவது இயற்கையினாலுண்டாவது என இருவகைப்படும். 'ஔபநிடதம்' என்ற நூலிற்கூறிய நச்சுப்புகை நச்சுநீர் முதலிய குற்றத்தாலுண்டாம் நோய் செயற்கையினாலுண்டாவது என்றும், வாதம் பித்தம் சிலேட்டுமம் என்னும் இவற்றின் ஏற்றத்தாழ்வினாலுளதாகும் நோய் இயற்கையினால் உண்டாவது என்றும் கூறுப. அவற்றுள் செயற்கையினாலுண்டாம் நோய்களை ஔபநிடதத்திற் கூறிய முறைகளாலும் வாதம் முதலியவற்றின் மிகுதிகுறைவாலுண்டாம் நோய்களை மருத்துவனுடைய மருந்துகளாலும் சித்தர் முதலியோரின் சாந்திகன்மம் முதலியவற்றாலும் பரிகரித்தல்வேண்டும் என்பது கருத்து.
25 கழுவாய்—பிரயாச்சித்தம் என்ப.
26 மரகம்—விடபேதி கொள்ளைநோய் இவை காரணமாக உண்டாம் அகாலமரணம் என்பர் சிலர்.
27 மேற்கூறிய முறைகளைக்கொண்டே இதற்கும் மாற்றம் புரியவேண்டும் என்பது கருத்து.
28 சிறப்பானதொரு மாற்றமுங் கூறுகின்றார். நீராடுதல் — கங்கை முதலிய புண்ணிய தீர்த்தத்தில் நீராடுதல்.
29 பசுக்களைச் சுடலையில் கட்டிப் பால் கறத்தல் என்பது.
30 அரிசிமாவினால் செய்யப்பட்ட தலையற்ற முண்டத்தைச் சுடலையில் வைத்துத் தீயிடல் என்பது.
31 தெய்வ இரவு—கடவுளை அர்ச்சனை முதலியவற்றால் வழிபட்டு இரவில் உறங்காதிருத்தல்.

[32]விலங்குகள் நோயையும் [33]இறத்தலையும் அடையுமாயின், [34]வேற்றிடம், ஆரத்திசுற்றுதல், [35]தம் கடவுள்வழிபாடு என்னும் இவற்றைச் செய்வித்தல் வேண்டும்.

வறுமைநேரின் அரசன், விதை உணவுகளைக்கொடுத்து அருளுதல் வேண்டும். உணவைக்கொடுத்து [36]அரண் அணைக்கட்டுகளில் தொழில்புரியச் செய்யலாம். [37]உணவைமட்டும் கொடுத்தல், [38]வேறுநாட்டில் அடைக்கலமாக வைத்தல், [39]நண்பரை அணுகுதல், [40]குறைத்தல், [41]வெளியேற்றுதல் என்னும் இவற்றையும் செய்யலாம்.

குடிமக்களுடன் பயிர்ச்செழிப்புள்ள வேறுநாட்டையாதல், [42]கடல், ஏரி, குளம் இவற்றையாதல் அடையலாம். செய்களில்

---

32 யானை குதிரை முதலியன.

33 இறத்தல்—ஈண்டு அகாலமரணம்.

34 வேற்றிடம்—முன்னிருந்த இடத்தைவிட்டு வேற்றிடத்திற்கு அவற்றைக் கொண்டுசேர்ப்பித்தல்.

35 தம் கடவுள் என்பது அவ்வவ்விலங்குகளுக்குரிய கடவுள் என்னும் பொருளது. அஃதாமாறு:—யானைக்கு ஆறுமுகனும், குதிரைக்கு அச்சுவினிதேவரும், ஆனினத்திற்குச் சிவபிரானும், (பசுபதி) எருமைக்கு வருணனும், கோவேறுகழுதைக்கு வாயுவும், ஆட்டிற்கு அக்கினிதேவனும் கடவுள் என்பதாம்.

36 அரண்களிலும் அணைகட்டுதல் முதலியவற்றிலும் வறுமையாளரைத் தொழில்புரியச் செய்து உணவுகொடுத்தல் வேண்டும் என்பது.

37 அரண் முதலியவற்றில் தொழில் இல்லாதபோது உணவை மட்டும் அவர்கட்குக் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பது.

38 'என்னுடைய குடிமக்களைச் சிலகாலம் பாதுகாத்துத் திருப்பிக் கொடுக்கக்கடவாய்' என்று சொல்லி அடுத்த நாட்டரசன்பால் தன் குடிமக்களை யடைக்கலமாக வைத்தல் என்பது.

39 தன் குடிமக்களின் நலங்குறித்துப் பொருள் முதலியவற்றைக் கொடுக்கவல்ல தன் நண்பரையடைதல் என்பது.

40 பயனற்ற மக்களை வறுமைக்காலத்தில் வேறு நாட்டிற்கு அனுப்புதலால் நாட்டுமக்களின் தொகையைக் குறைத்தல் என்பது.

41 எல்லா மக்களையும் செழிப்புள்ள வேறு நாட்டிற்கு அனுப்பிவிடுதல் என்பது.

42 மீன், பறவை, ஆமை முதலிய நீர்வாழ்வனவற்றைப் பிடித்து உண்டு உயிர்வாழ்தற்பொருட்டுக் கடல் முதலிய இடத்தையடையலாம் என்பது கருத்து.

கூலம், காய்வகை, கிழங்கு, கனி என்னும் இவற்றை விளை விக்கலாம். [43]விலங்கு, [44]பசு, பறவை, [45]கொடியவை, மீன் என்னும் [46]இவற்றின் (கொலைச்) செயலையும் நிகழ்த்தலாம்.

எலியினால் அச்சம் நேர்ந்துழி பூனை கீரிகளை [47]விடுத்தல் வேண்டும். [48]அவற்றைப் [49]பிடித்துத் துன்புறுத்தின் பன்னிரண்டு பணம் தண்டமாம். [50]காட்டில் இயங்குவனவல்லாத மற்றை [51]ஞமலியைத் தடைசெய்யாதிருப்பினும் (தண்டம்) ஆம்.

கள்ளிப்பாலில் நனைத்த கூலங்களையாதல் உபநிடதத்திற் கூறப்பட்ட மருந்துகலந்த கூலங்களையாதல் [52]தூவுதல்வேண்டும். [53]எலிகளை இறைப்பொருளாகவும் கொடுக்கச் செய்யலாம். சித்த உருவினர் தவ உருவினர்கள் [54]மாற்றுச்செயல் புரியலாம். உவா நாட்களில் எலிவழிபாட்டைச் செய்தல்வேண்டும்.

இதனால் [55]சலபம், பறவை, புழு என்னுமிவற்றால் உண்டாம் அச்சத்தின் மாற்றமுங் கூறியவாறும்.

---

43 விலங்கு—ஈண்டு காட்டில் வாழும் புலி முதலியன.

44 பசு—ஆடு முதலியன.

45 கொடியவை—தீங்குவிளைவிக்கும் முள்ளம்பன்றி முதலியன.

46 வறுமைக்காலத்தில் மேற்கூறப்பட்ட விலங்கு முதலியவற்றைக் கொன்று அவற்றை உண்டு உயிர்வாழலாம் என்பது கருத்து.

47 வீடு முதலிய இடங்களில் தடையின்றிச் சஞ்சரிக்கச்செய்தல்.

48 அவற்றை—பூனை கீரி முதலியவற்றை.

49 பிடித்தாலும் துன்புறுத்தினாலும் தண்டம் என்பது.

50 காட்டில் இயங்குவன—காட்டில் சஞ்சரிக்கக்கூடியனவும் காட்டில் வாழும் வேடர் முதலியவர்களுக்குரியவும் ஆகிய நாய்கள்.

51 நாட்டில் வாழும் மக்களுக்குத் துன்பத்தை விளைவிக்கக்கூடிய நாய்களைத் தடைசெய்யாதிருப்பின் பன்னிரண்டு பணம் தண்டம் என்பது.

52 இக்கூலங்களையுண்டால் எலிகள் இறந்துவிடும் என்பது கருத்து.

53 ஒவ்வொரு குடியிலுள்ளாரும் நாள்தோறும் இத்துணை எலிகளைப் பிடித்துக் கொணர்ந்து தரவேண்டும் என்ற முறையாக அரசன் திட்டஞ் செய்யலாம் என்பது கருத்து.

54 எலிகள் இறந்தொழிவதற்காக மந்திரம் ஓமம் முதலியன செய்தல் வேண்டும் என்பது கருத்து.

55 சலபம்—விட்டில்.

[56]கொடிய விலங்குகளால் அச்சம் நேர்ந்துழி [57]மதனச்சாறு பூசப்பெற்ற இறந்த விலங்குகளையாதல் காட்டுவரகு, வரகு என்பவற்றால் நிரப்பப்பெற்ற [58]இரைப்பையையாதல் போட்டுவைக்கச் செய்தல்வேண்டும்.

வேடர், [59]நாய்வளர்ப்போர் என்னுமிவர்கள் [60]வஞ்சக்கூடு, [61]வீழ்த்துங்குழி என்பவற்றால் தொழில்புரிதல் வேண்டும். கைவாளுடன் மறைந்தும் கொடிய விலங்குகளைக் கொல்லலாம். [62]நெருங்கிச் செல்லாதவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். கொடிய விலங்குகளைக் கொன்றவனுக்கும் [63]அதுவே பரிசுப் பொருளாம்.

உவாநாட்களில் மலைவழிபாடுகளையும் செய்தல்வேண்டும். இதனால் [64]விலங்கு, பறவைக்கூட்டம், முதலை என்னும் இவற்றின் (அச்ச) மாற்றம் [65]கூறியவாறாம்.

பாம்புகளினால் அச்சம்நேரின் நச்சுமருத்துவர் [66]மந்திரங்களினாலும் பச்சிலைகளினாலும் [67]செயல்புரிதல் வேண்டும். [68]புலப்

---

56 கொடியவிலங்கு—மக்களைத் துன்புறுத்துமியல்புள்ள புலி முதலியன.

57 ஔபநிடதத்திற் கூறியபடி மதனச்(மருக்காரை) சாறு பூசப்பெற்ற பசு எருமை முதலியவற்றின் பிணத்தைப் புலி முதலியன இயங்குமிடத்தில் போட்டுவைத்தால் அப்பிணத்தைத்தின்று அவை இறந்துவிடும் என்பது.

58 இதனை 'ஔதரியம்' என்று முதனூலாரும் 'கோஷ்டம்' என்று உரையாசிரியரும் கூறுவர்.

59 நாய்களை உதவியாகக்கொண்டு காட்டில் விலங்குகளைப் பிடிப்பவர் என்பது.

60 வஞ்சக்கூடு—விலங்கு முதலியவற்றிற்கு விருப்பமான தின்பண்டம் முதலியன அமைத்து அவற்றைப் பிடித்தற்குதவும் கூடு.

61 புல் பூண்டு முதலியவற்றால் மறைக்கப்பட்ட படுகுழி என்பது.

62 கொடிய விலங்குகளால் துன்புறுத்தப்பட்டவனை விடுவிப்பதற்கு ஆற்றலிருந்தும் நெருங்கிச் செல்லாதவனுக்கென்பது.

63 அது—பன்னிரண்டு பணம்.

64 விலங்கு—ஈண்டு துன்புறுத்துமியல்புள்ள முள்ளம்பன்றி முதலியன.

65 அவற்றையும் மேற்கூறியவாறே பரிகரித்தல்வேண்டும் என்பது.

66 மந்திரம்—கருடமந்திரம் முதலியன.

67 செயல்—பாம்புகளால் நேரும் அச்சத்தைப் போக்குதற்குரியது.

68 நகரத்துள்ள குடிமக்கள் ஒன்றுகூடித் தங்களுக்குப் புலப்பட்ட பாம்புகளை அவ்வப்போது கொல்லுதல்வேண்டும் என்பது.

பட்ட பாம்புகளை ஒன்றுகூடியும் கொல்லலாம். அதர்வமறை வல்லார் [69]அபிசாரத்தொழிலையும் உவாநாட்களில் சர்ப்பவழிபாட்டையும் புரியச்செய்யலாம். இதனால் நீர்வாழ் உயிர்களினாலுண்டாம் அச்சத்திற்கு மாற்றம் கூறியபடியாம்.

அரக்கர்களால் அச்சம் நேர்ந்துழி அதர்வமறைவல்லாரும் மாயாயோகமறிந்தவரும் அரக்கருக்குத்தீங்குவிளைக்கும் தொழிலைப் புரியவேண்டும். உவாநாட்களில் சிறுமேடை, குடை, [70]உல்லோபிகை, சிறுகொடி, [71]ஆடு என்னும் இவற்றால் கடவுண்மர வழிபாட்டைச் செய்தல்வேண்டும். எவ்வித அச்சத்திலும் 'யாம் உங்களுக்குச் [72]சருவைப் பாகஞ்செய்வோம்' என்று கூறிக்கொண்டு அல்லும் பகலும் திரிதல்வேண்டும்.

எல்லா அச்சங்களினும் துன்புற்றவர்க்குத் தந்தைபோல் [73]அருளுதல்வேண்டும்.

சுலோகம்

[74]ஆகலின் தெய்விகப் பேரச்சமாற்றம் புரியும் மாயாயோகமறிந்த சித்த உருவினரும் தவ உருவினரும் அரசனால் நன்கு மதிக்கப்பெற்று நாட்டில் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

நான்காம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
"தெய்விகப்பேரச்சம்" என்னும் எண்பதாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

69 அபிசாரம்—பிறர்க்குத் தீங்கை நாடி மந்திரப்பிரயோகம் முதலியன செய்கை.

70 உல்லோபிகை—ஒருவகை உணவு.

71 ஆட்டைப் பலியிட்டு வழிபடல்வேண்டும் என்பது கருத்து.

72 சரு—வேள்வியிற் கொடுக்கும் அவி.

73 அருளுதற் கருத்தா அரசனுவன்.

74 ஆகலின்—மக்களுக்கு நேரும் துன்பத்தை அரசன் எவ்வகையானும் ஒழித்து அருளவேண்டுமாகலின்,

நான்காம் அதிகரணம்—சிறுபகைகளைதல்

நான்காம் பிரகரணம்—[1]ஏமாற்றிப்பிழைப்பவரால் தீங்குநேராமற் காத்தல்

எண்பத்தோராம் அத்தியாயம்

[2]நாட்டுவருவாய்த் தலைவன்செயலில் நாடுகாவல் கூறப்பட்டது. அதற்கு ஏற்படும் சிறுபகைகளைக் களைதல்பற்றிக் கூறுவாம்.

[3]நாட்டுவருவாய்த் தலைவன் சித்தர், தவமக்கள், துறவிகள்,

81-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஏமாற்றிப் பிழைப்பவர் — கரவில் கைக்கூலி முதலியன பெற்றுப் பொய்ச்சான்று முதலியன கூறுமுகமாகப் பிறரை வஞ்சித்து உயிர்வாழ்வோர். அவர்களுக்கு நாடுகடத்தல் முதலிய தண்டம் விதித்தலால் நாட்டினரைக் காத்தல் என்பது கருத்து. முன்னைப்பிரகரணங்களில் வெளிப்படையாக நாட்டினருக்குத் தீங்குபுரியும் காருகர் முதலியவர்களிடமிருந்து தீங்குநேராமற் காத்தற்குரிய உபாயங்களைக் கூறினர். ஈண்டு மறைவாகப் பிறர்க்குத் தீங்கிழைப்பவர்களால் தீங்குநேராமற் காத்தலைப்பற்றிக் கூறுகின்றார். இதனாற் பிரகரணங்களின் இயைபு விளக்கமாதல் அறிக.

[2] 'நாட்டுவருவாய்த் தலைவன்செயல்' என்ற பிரகரணத்தின் விளக்கமான 56-ஆம் அத்தியாயத்தில் நாட்டைப் பாதுகாக்குமுறை கூறப்பட்டிருப்பினும் மறைவிற் கரந்தொழுகுவோரிடமிருந்து காக்கும் முறை அதன்கட் கூறப்படவில்லையாதலின் அஃது இதன்கட் கூறப்படும் என்பது கருத்து.

[3] மறைவாகத் தீங்குபுரிபவரை அறிதற்பொருட்டு ஒற்றரையமைக்கும் விதி கூறுகின்றார். அரசனுக்குத் தன்னாடு செலுத்துங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் இன்றியமையாதவர் ஒற்றராவர். ஒற்றன் அரசனது பார்வைக்கு அகப்படாத பரப்பெல்லாஞ்சென்று கண்டு அங்கு நிகழ்ந்தன எல்லாமுணர்த்தலால் ஒற்றனை அரசன் தன் கண்ணெனத் தெளியக்கடவன் எனவும் எல்லார்கண்ணும் நிகழும் செயல்களை எல்லாம் ஒற்றரான் விரைந்தறிதல் அரசனுக்குரிய தொழில் எனவும் அங்ஙனம் நாட்டில் நிகழும் செய்திகளை ஒற்றரால் அறிந்து அவற்றானெய்தும் பயனை ஆராயாத அரசன் வெற்றியடைதற்கு வேறுவழி இல்லை எனவும் அரசனது காரியஞ்செய்வோர் அவன் சுற்றத்தார் பகைவர் எனச்சொல்லப்பட்ட அனைவரையும் அவர் தம் சொற்செயல்களால் ஆராய்தலும் தம்மாலாராயப்படுபவர் கண்டால் ஐயுறுத வடிவொடு பொருந்தி அவர் செய்யும் தீங்குகளுக்கு அஞ்சாது நின்று தன் மனத்துக்கொண்ட செய்திகளை வெளியிடாத உள்ளத்துறுதியும் முற்றத்துறந்தாராயும் விரத ஒழுக்கினராயும் உள்புகுதற்கரிய இடங்களில்

அற்றைக்கூலியாளர், [4]சாரணர், மாயாவித்தைக்காரர், விருப்பப் படித்திரிபவர், சோதிடர், நிமித்திகன், முக்காலமுணர்ந்தோர், மருத்துவர், பித்தர், ஊமையர், செவிடர், மூடர், குருடர், வணிகர், காருகர், சிற்பிகள், பாணர், [5]பரத்தர், கள்விற்போர், பணிகாரஞ் செய்வோர், பக்குவமான இறைச்சி விற்போர், சோறுவிற்போர் என்னும் இவர்களின் உருவினரான ஒற்றரை நாட்டில் அமைத்தல் வேண்டும் [6]அவர்கள் கிராமத்தலைவர், [7]தலைவர் என்னும் இவர்களின் தூய்மையினையும் தூய்மையின்மையினையும் அறிதல்வேண்டும். [8]இவர்களுள் யாரேனும் ஒருவரைப்பற்றிக் [9]கரந்தொழுகுபவன் என்று ஐயுற்றால், அவனை ஒத்த ஒற்றரைக் கொண்டு ஒற்றச் செய்தல் வேண்டும். 'என்னுடைய இவ்வுறவினன் வழக்குத்

எல்லாம் புகுந்து ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்து அங்குள்ளார் தன்னை ஐயுற்றுப் பிடித்துத் துன்புறுத்தினுல் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாத இயல்பும் தம்மாலாராயப்பட்டார் மறைவாகச்செய்த செயல்களை அவர்களுக்குட்பட்டவர்களால் கேட்டறிய வல்ல திறனும் அங்ஙனம் அறிந்த செயல்களில் பின் ஐயப்படாது துணியும் தெளிவும் உடையவர்களே ஒற்றர்கள் எனவும் ஓரொற்றன் தெரிந்துவந்து சொல்லிய காரியத்தினை மற்றோர் ஒற்றனை அனுப்பி அறிந்து ஒத்துநோக்கல் அரசனது கடமை எனவும் அங்ஙனம் ஒற்றர் பலரை அனுப்புங்கால் ஒருவரையொருவர் அறியாதபடி பணிகொள்ளுதலும் ஒற்றர் மூவரை ஒரு பொருள்மேல் வேறுவேறு ஆராய விடுத்து அம்மூவரும் தனித்தனியே கண்டறிந்து கூறுவன பயனால் ஒத்தனவாயின் அவற்றை மெய்யென்று தெளிதல்வேண்டுமெனவும் மறைவில் நிகழும் நிகழ்ச்சிகளை அறிந்து கூறும் ஆற்றல்மிக்க ஒற்றர்களுக்கு அரசன் சிறப்புச்செய்யுங்கால் உலகத்தார் அறியாவண்ணம் செய்தல்வேண்டும் எனவும் அரசன் ஒற்றர்க்குச் செய்யும்சிறப்பு பிறர்க்குப்புலனாயின் தன் உள்ளத்தடங்கவேண்டிய மறையைத் தானே பிறர்க்கு வெளிப்படுத்தினவனாவன் எனவும் ஆசிரியர் திருவள்ளுவனார் 'ஒற்றாடல்' என்னும் அதிகாரத்தில் இனிது புலப்படுத்தியுள்ளார்.

[4] சாரணர்—78-ஆம் அத்தியாயத்து 99-ஆம் குறிப்பைப் பார்க்க.

[5] பரத்தர்—பரத்தையருடன் பழகும் காமுகர்.

[6] அவர்கள்—சித்தர் முதலியோரின் வடிவினராக அமைக்கப்பட்ட ஒற்றர்.

[7] தலைவர் என்பது கோபன் தானிகன் முதலிய தலைவரைக் குறிக்கும்.

[8] இவர்களுள்—கிராமத்தலைவர் பிற தலைவர் என்னும் இவர்களுள்.

[9] கைக்கூலி முதலியன பெற்றுப் பிறரை வஞ்சிக்கக்கூடியவன் என்று ஐயுற்றால் என்பது.

தொடரப்பட்டிருக்கிறன், இப் பொருளை ஏற்றுக்கொண்டு அவனுடைய இத் தீங்கை விலக்குக' என்று ஒரு ஒற்றன் [10]நம்பிக்கையையடைந்த அறங்கூறவையத்தானிடமாதல் சிறுபகை களைவோனிடமாதல் சொல்லுதல் வேண்டும். அவன் அவ்வாறு செய்யின் கைக்கூலி பெற்றவன் என நாட்டைவிட்டு (அவனை) விலக்குதல் வேண்டும்.

[11]இதனால் சிறுபகை களைவோருக்கும் விதி கூறியபடியாம்.

'மிக்க பொருளுடைய இவன் ஆராயாது செயல் புரிபவன். இவனுக்குத் தீங்கு வந்திருக்கிறது. [12]இதனால் இவனிடமிருந்து (பொருளைக்) கவர்ந்து கொள்க' என்று ஒரு ஒற்றன் கிராமத் தலைவனிடமாதல் வேறுதலைவனிடமாதல் கூறுதல் வேண்டும். அவன் அவ்வாறு செய்வானாயின் 'கைக்கூலி பெற்றவன்' என்று நாட்டைவிட்டு விலக்கத்தக்கவன். [13]பொய்யாக 'வழக்குத் தொடரப்பட்டவன் [14]ஐயுறப்பட்ட பொய்ச்சான்று கூறுவோரை [15]மிக்க பொருளால் ஏமாற்றவேண்டும். அவர் அவ்வாறு உடன்படின் 'பொய்ச்சான்று கூறுவோர்' என்று நாட்டைவிட்டு விலக்கல் வேண்டும்.

இதனால் [16]பொய்ச் சான்று கூறுவிப்போருக்கும் விதி கூறியவாறும்.

---

10 அறங்கூறவையத்தான் சிறுபகைகளைவோன் முதலியவருடன் ஒற்றுத் தொழில்புரிபவன், முதலில் அவர்களுடன் அடிக்கடி பழக்கத்தினால் அவர்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணுதல் வேண்டும் என்பது.

11 அறங்கூறவையத்தானுக்குரிய விதிமுறைகளே சிறுபகைகளை களைவோருக்கும் உரியனவாம் என்பது.

12 இதனால்—இத்தீங்கைத் தலைக்கீடாகக் கொண்டு இத்தீங்கிலிருந்தும் விடுவிப்பதாய்க் கூறி அவனிடமுள்ள பொருளனைத்தையும் கவர்ந்து கொள்ளலாம் என்று கூறவேண்டும் என்பது கருத்து.

13 ஒற்றரிருவருள் ஒருவனால் ஒற்றுத் தொழில்நிமித்தம் பொய்யாக வழக்குத் தொடரப்பட்டவன் என்பது.

14 'பொய்ச்சான்று கூறுமியல்பினரோ' என ஐயுறப்பட்டோரை.

15 மிகுதியாகப் பொருளைக்கொடுத்துப் பொய்ச்சான்றுகூற உடன்படச் செய்தல்வேண்டும் என்பது.

16 தான் ஒருவனுக்குக் கடன்கொடாமலே 'இன்னான் என்னிடமிருந்து இத்துணைப்பொருள் கடனாக வாங்கினான்' என்பதுபோன்று அவன்மேல் பொய்வழக்குத் தொடருவதற்கு அடுத்த வீட்டுக்காரன் முதலியோரைச் சான்றுகூறும்படித் தூண்டுவோர் என்பது கருத்து.

மந்திரப் பிரயோகம், மருந்து, [17]சுடலைச் செயல் என்னும் இவற்றால் வசியஞ்செய்பவன் என்று யாரேனும் ஒருவனை ஒரு ஒற்றன் ஐயுற்றால் ‘இன்னானுடைய மனைவியையாதல், மருமகளை யாதல், மகளையாதல் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்க வேண்டும். இப்பொருளைப் பெற்றுக்கொள்’ என்று சொல்ல வேண்டும். அவன் அவ்வாறு செய்வானாயின் ‘வசியஞ் செய்பவன்’ என்று நாட்டை விட்டு விலக்கல்வேண்டும்.

இதனால் [18]தீய இயல்பினர், [19]அபிசாரத் தொழில் புரிபவர், ஆகியோர்க்கும் விதி கூறியயபடியாம்.

[20]நஞ்சைச் சொல்லுதல், விற்றல், வாங்குதல், [21]மருந்து உணவுகளிற் கலத்தல் என்னும் இவற்றைச் செய்பவன் என்று யாரேனுமொருவனை ஓர் ஒற்றன் ஐயுற்றால் ‘இவன் எனக்குப் பகைவன், இவனைக் கொன்றுவிடு, இப் பொருளை ஏற்றுக்கொள்’ என்று அவனிடத்தில் சொல்லவேண்டும். அவன் அவ்வாறு செய்யின் ‘நஞ்சிடுவோன்’ என்று நாட்டைவிட்டு விலக்கல்வேண்டும்.

இதனால் [22]மயக்குந் தொழில் புரிபவனுக்கும் விதி கூறிய படியாம்.

பல்வேறு வகைப்பட்ட உலோகம், உப்பு, கரி, தோற்பை

---

[17] சுடலைச்செயல்—பிறமகளிர் முதலியோரைத் தன்வழிப்படுத்தற்குச் சுடலையில் செய்யக்கூடிய சில தொழில்.

[18] தீய இயல்பினர்—பகைமை முதலியன காரணமாகப் பிறர்பால் பேய் முதலியவற்றைப் பற்றும்படிச்செய்து துன்புறுத்தும் இயல்பினர்.

[19] அபிசாரத்தொழில்—மந்திரப்பிரயோகம் முதலியவற்றால் பிறரைக் கொல்லுதற்குரிய செயல்.

[20] இன்ன இன்ன நஞ்சு தீங்கை விளைக்கும் என்று பிறருக்கு அறிவிப்பவன்.

[21] மருந்துகளிலும் உணவுகளிலும் நஞ்சை எவ்வகையில் கலந்து உபயோகிக்கலாம் என்பதில் தேர்ச்சிபெற்றவன் என்க.

[22] அறிவுத் தடுமாற்றத்தை உண்டுபண்ணும் மருந்தைச் செய்தல் பிறர்க்கு அதைக் கொடுத்தல் முதலிய தொழில்புரிபவன்.

(துருத்தி), குறடு, உலை, [23]இடம், [24]பிம்பம், சுத்தி, [25]குகை என்னும் இவற்றை அடிக்கடி விலைக்கு வாங்குதல், மை, சாம்பல், புகை என்னுமிவற்றால் அழுக்கடைந்த கை உடைகளையுடையனாயிருத்தல், கொல்லருக்குரிய கருவிகளையுடைமை என்னுமிக் காரணங்களால் யாரேனுமொருவனைப் பொய்நாணயஞ் செய்பவன் என்று ஐயமுற்ற ஒற்றன் ஒருவன் அவனிடம் மாணவனாயிருத்தல், கொடுத்து வாங்கி அளவளாவுதல் முதலியவற்றால் நெருங்கியிருந்து [26]அறிவிக்கவேண்டும். 'பொய் நாணயஞ் செய்பவன்' என்று அறிவிக்கப்பட்டவன் நாட்டை விட்டு விலக்கப்படல் வேண்டும்.

இதனால் [27]வண்ணத்தைக் கவருபவன், [28]பொய்த் தங்கத்தினால் தொழில் புரிபவன் என்னும் இவர்கட்கும் விதி கூறியபடியாம்.

சுலோகம்

தீங்குவிளைத்து ஏமாற்றிப் பிழைக்கும் [29]பதின்மூவர் நாட்டை விட்டு விலக்கப்படுதலும் [30]குற்றத்திற்கேற்பத் தண்டமிறுத்தலும் வேண்டும்.

நான்காம் அதிகரணம் நான்காம் பிரகரணம்
'ஏமாற்றிப் பிழைப்பவரால் தீங்குநேராமற் காத்தல்' என்னும்
எண்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

23 இடம் என்பது ஈண்டு பொன் வெள்ளி முதலியவற்றை வைத்துச் சுத்தியால் அடித்தற்குரிய பட்டடை (அடிமணை) என்னும் பொருளது.

24 பொய்நாணயம் முதலியவற்றைச் செய்தற்குரிய அச்சு முதலியன.

25 குகை—பொன் வெள்ளி முதலியவற்றை உருக்குதற்குரிய கருவி.

26 இன்னான் இத்தொழிலையுடையவன் என்று அரசனிடம் அறிவித்தல் வேண்டும் என்பது.

27 தங்கம் முதலியவற்றின் உண்மையான வண்ணத்தைக் குறைத்து மதிப்பிடுபவன் என்பது.

28 செம்பு முதலிய உலோகங்களைத் தங்கம் முதலியனபோல் தோன்றுமாறு செய்து வஞ்சிப்பவன்.

29 அறங்கூறவையத்தார், சிறுபகைகளைவோர், கிராமத்தலைவர், (ஏனைய) தலைவர், பொய்ச்சான்று கூறுவோர், பொய்ச்சான்று கூறுவிப்போர், வசியஞ்செய்வோர், தீய இயல்பினர், அபிசாரத்தொழில் புரிபவர், நஞ்சிடுவோர், மயக்குந்தொழில் புரிவோர், பொய்நாணயஞ் செய்வோர், பொய்த்தங்கஞ் செய்வோர் என மேற்கூறிய பதின்மூவர் என்பது.

30 குற்றம் அதிகமாயின் நாட்டைவிட்டு விலக்குதலோடு தண்டம் இறுக்கச்செய்தலும் அமையும் என்பது கருத்து.

ஐந்தாம் பிரகரணம்—[1]சித்தவுருவினரால் வஞ்சகரை வெளிப்படுத்தல்

எண்பத்திரண்டாம் அத்தியாயம்

ஒற்றுத் தொழிற்குப் பின்னர் [2]வஞ்சத் தொழிலினரான சித்த வுருவினர் [3]வஞ்சனைக் கல்வியால் [4]ஏமாற்றுதல் வேண்டும்.

[5]உறங்கச்செய்தல், மறைதல், தாழைத்திறத்தல் என்னுமிவற்றிற்குரிய மந்திரத்தால் கள்வரையும், வசிய மந்திரத்தால் பிறர் மனை நயப்போரையும் ஏமாற்றுதல் வேண்டும்.

[6]ஊக்கமுள்ள அவர்களுடைய பெரியகுழுவை அழைத்துக்

82-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மழித்தல் நீட்டல் முதலிய தவவேடமுடையோர் துயில்வித்தல் மறைதல் முதலியவற்றைச் செய்யும் மந்திரங்களாற் கள்வர் முதலியோரை வெளிப்படுத்தல். ஒற்றுத் தொழில்புரியு முகமாக நாட்டுக்குத் தீங்கு இழைப்போரைக்கண்டு வெளிப்படுத்தும் முறையைக்கூறி ஈண்டுச்சித்தவுரு முதலியவற்றால் அவர்களைக்கண்டு வெளிப்படுத்தும் முறையைக் கூறத் தொடங்குகின்றார். ஆகலின் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] வஞ்சத்தொழிலினர்—கள்வர் முதலியோரைக் கண்டுபிடிப்பதற்காக வஞ்சத்தொழில்பூண்ட அரசன் பணியாளர்.

[3] வஞ்சனைக்கல்வி—பிறரை உறங்கச்செய்தல் முதலிய செயல்களுக்குக் கருவியாக உதவும் இழிந்த மந்திரங்கள் முதலியன.

[4] நாட்டுக்குத் தீங்கு விளைவிப்போரை ஏமாற்றுதல் வேண்டும் என்பது.

[5] ஏமாற்றும் முறையை விரித்துக்கூறுகின்றார். களவுபுரியுங்கால் பிறரை உறங்கச்செய்தல், தான் மறைதல், தாழைத்திறத்தல் முதலியன கள்வர்க்குச் சிறந்தனவாகலின் அவற்றைச் செய்யும் மந்திரங்களால் கள்வரையும் பிறர்மனைநயப்போருக்குத் தன்வயப்படாத மகளிரை வயப் படுத்துதற்குரிய மந்திரம் முதலியன இன்றியமையாதனவாகலின் அவற்றைக்கொண்டு அவர்களையும் ஏமாற்றுதல் வேண்டும் என்பது கருத்து.

[6] எவ்விதத் தடையும் அச்சமுமின்றித் தம் செயல்புரிதற்குரிய மந்திரம் முதலியவற்றை யடைந்ததுபற்றி ஊக்கமடைந்த கள்வர் முதலியோர் களுடைய என்பது.

கொண்டு [7]ஓர் ஊரை அடைவதற்குப் புறப்பட்டு, வஞ்சத் தொழிலினரான ஆடவர்மகளிரை யுடைய வேறோர் ஊரை யடைந்து 'இங்கேயே கல்வித் திறனைக் காண்க, வேறு கிராமத்துக்குச் செல்ல இயலவில்லை' என்று சொல்லவேண்டும். [8]பின்பு தாழைத் திறக்கும் மந்திரத்தால் கதவைத் திறந்து 'புகுக' என்று கூற வேண்டும். [9]விழித்துக் கொண்டிருக்கும் காவலரின் நடுவே மறைவுமந்திரத்தால் வஞ்சத் தொழிலினரைக் கடக்கச் செய்தல் வேண்டும். [10]உறங்கச் செய்யும் மந்திரத்தால் உறங்கச் செய்து வஞ்சத் தொழிலினரைக் காவலரின் படுக்கை வழியாக இயங்கச் செய்தல் வேண்டும். [11]பிற மகளிருருவினரை வசிய மந்திரத்தால் வஞ்சத் தொழிலினர் நுகரும்படிச் செய்தல் வேண்டும்.

---

[7] அவர்குறிப்பிட்ட ஒரு ஊருக்குச் செல்வோம் என்று கூறித் தங்களுடைய மந்திரச்செயல் முதலியவற்றிற்குத் துணைபுரிவதற்காக வேறு வேடம் கொண்ட ஆடவர் மகளிர் ஆகியோர் தங்கியிருக்கும் வேறொரு ஊரையடைந்து, நாங்கள் மிக்க சோர்வடைந்தோம். குறிப்பிட்ட ஊருக்குச் செல்ல வியலவில்லை. இவ்வூரிலேயே எங்கள் கல்வித் திறனைக்கண்டறிவீர் எனக் கூறுதல் வேண்டும் என்பது.

[8] தம் சங்கேதப்படித் தாழ் இடப்படாதிருக்கும் போதே அஃதிடப்பட்டிருப்பதாயும், தம் மந்திரத்தால் அத் தாழ் விலக்கப்பட்டதாயுங் கூறி அவர்களை வஞ்சித்துப் பின் 'உட்புகுக' என்று கூறித் தம் மந்திர சக்தியை விளக்கிக் காட்டவேண்டும் என்பது கருத்து.

[9] தம் சங்கேதத்தால் உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் காவலர் போன்று நடிப்பவர்களின் நடுவே கள்வர்வேடம் பூண்ட தம் மினத்தாரைப் புகச்சொல்லி 'மந்திர சக்தியால் மறைந்து செல்கின்றனர்' என்பதை விளக்கிக் காட்டவேண்டும் என்பது.

[10] தம் சங்கேதத்தால் காவற்றொழில் புரிபவர்களின் படுக்கைக்கு அருகாமையிலேயே தம்மவரைச் செல்லும்படிக் கூறி, தங்களுடைய உறங்கச் செய்யும் மந்திரத்தின் சக்தியை வெளிப்படுத்திக் காட்டவேண்டும் என்பது கருத்து.

[11] கள்வருக்கு நம்பிக்கை யுண்டாக்கும் முறையைக் கூறி, பிறர்மனை நயப்போருக்கு அஃதுண்டாக்கும் வசிய முறையைக் கூறுகின்றார்; தம் கூட்டத்தாருள் சிலரை மகளிர் வேடம் பூணச் செய்து தம் மந்திர சக்தியால் தம்முள் விடலைகை வேடம் பூண்டார் சிலர் அம் மகளிரை நுகரும்படிச் செய்து தம் வசிய மந்திரத்தின் பெருமையை எடுத்துக் காட்டவேண்டும் என்பது கருத்து.

[12]மந்திரத் திறனைக் கண்டவருக்குத் [13]தேர்ச்சியின் பொருட்டுப் [14]புரச்சரணம் முதலியவற்றைக் கற்பிக்கவேண்டும்.

[15]இலச்சினை யிடப்பெற்ற பொருளையுடைய இல்லங்களில் [16]தொழில் புரியச் செய்து உட்புகுந்தவரை ஒரு விடத்தில் பிடித்தல் வேண்டும்.

[17]இலச்சினை யிடப்பெற்ற பொருளின் விற்றல், வாங்கல், ஈடு வைத்தல் நிகழுங்கால் மருந்து கலந்த கள்ளால் மயங்கினோரைப் பிடித்தல் வேண்டும். பிடிக்கப்பட்டவரிடம் முன்னைய செயல்களையும் துணைவரையும் வினுதல் வேண்டும்.

பழைய திருடர் போன்ற உருவினர், திருடருடன் சேர்ந்து [18]அங்ஙனமே தொழில் புரியச் செய்து பிடிக்கவேண்டும்.

'அரசன் கள்வரைப் பிடித்தற்குரிய கல்வியை யறிந்தவன், [19]அவனிடம் கற்ற பயிற்சியால் இக்கள்வர் (என்னுல்) பிடிக்கப்பட்டார். பின்னரும் பிடிப்பேன். தீவழிச் செல்லும் நும்மவரைத் தடை செய்யுங்கள்' என்று நாடு நகரங்களிலுள்ள மக்களிடம் நாட்டு வருவாய்த் தலைவன் [20]பிடிக்கப்பட்டவரைக் காண்பித்தல் வேண்டும்.

---

12 மேற்கூறிய செயல்களால் தம் மந்திர சக்தியை கண்கூடாகக் கண்டு நம்பிக்கை யடைந்தவர்களுக்கு என்பது.

13 தாம் உபதேசிக்கப்போகும் மந்திரத்தில் தேர்ச்சி.

14 புரச்சரணம்—மந்திர சித்தி ஏற்படுவதற்கு உறுப்பாகச் செய்யப்படும் ஒரு சடங்கு.

15 இலச்சினை—அரசனுடைய முத்திரை.

16 மந்திரோபதேசம் செய்யப்பட்ட தீயோரை அவ்வில்லங்களில் களவுபுரியச்செய்து, ஏதேனுமொரு வீட்டில் களவு செய்துகொண்டிருக்கும் பொழுது அவர்களைப் பிடிக்கவேண்டும் என்பது கருத்து.

17 இலச்சினை யிடப்பட்ட பொருள்களை விற்றல் முதலியன செய்யுங்கால், அவர்களுக்கு மருந்து கலந்த கள்ளைக் கொடுக்கச் செய்து பிடித்து, இதற்கு முன் எந்தெந்த விடங்களில் களவு செய்தீர்கள், யார் யார் துணைவராயிருந்தனர் என்று கேழ்க்கவேண்டும் என்பது.

18 அங்ஙனமே—முன்கூறிய முறைப்படியே.

19 அரசனிடமிருந்து அக் கல்வியை யான் கற்று இக் கள்வரைப் பிடித்தேன் என்பது.

20 களவு செய்யுங்கால் பிடிக்கப்பட்டவரை எல்லோருக்கும் காட்டவேண்டும் என்பது.

[21]நுகவாணி சாட்டைகளைக் கவர்ந்தானொருவனை ஒற்றரது அறிவிப்பால் அறிந்து அவனை இவர்களிடம் காட்டி ' இது அரசனது ஆற்றல் ' என்று கூறுதல் வேண்டும்.

பழைய திருடர், ஆயர், வேடர், நாய் வளர்ப்போர் என்னும் [22]இவர்கள், காட்டில் வழங்கும் கள்வர் வேடர்களுடன் கூடி மிகுந்த போலித் தங்கம், குப்பியப் பொருள், வணிகர் குழு, கொட்டில், கிராமங்கள் என்னும் இவற்றில் அவர்களை [23]ஏவுதல் வேண்டும். [24]உடன்படின் மறைந்த வீரர்களாலாதல் [25]மயக்க மருந்து கலந்த ஆற்றுணவினாலாதல் அவர்களைக் கொல்லுதல் வேண்டும். பண்டங்களைக் களவு செய்து நெடுவழிச் செலவால் சோர்வுற்று உறங்கும் பொழுதாதல் தோட்ட விருந்துகளில் [26]மருந்து கலந்த கள்ளைக் குடித்து மயங்கியிருக்கும் பொழுதாதல் பிடிக்கச் செய்யவேண்டும்.

சுலோகம்

நாட்டு வருவாய்த் தலைவன் [27]முன் கூறப்பட்டவர் போல

---

21 நுகவாணி—நுகத்தின் இரு பக்கங்களிலும் செருகிய கடை முளை. இதுபோன்ற மிகச் சிறிய பண்டத்தைக் களவு செய்யினும் அரசன் கற்றுக் கொடுத்த கல்வியின் பெருமையால் புலனாகி விடும் என்று நாட்டிலுள்ளோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பது.

22 இவர்கள்—பழைய திருடர் முதலியவர்களின் வேடம் பூண்ட அரச பணியாளர்.

23 போலித் தங்கம் முதலியவற்றைக் களவு செய்து கொண்டு வரும்படி அவர்களை ஏவுதல் வேண்டும் என்பது கருத்து.

24 மேற்கூறிய விடங்களில் களவு செய்ய உடன்பட்டுச் சென்று களவு புரியுங்கால், முன்னரே அங்கு மறைந்துள்ள வீரர்களால் அவர்களைக் கொன்று விடவேண்டும் என்பது கருத்து.

25 களவு செய்யப் புறப்படும்போது மருந்து கலந்த ஆற்றுணவை அவர்க்குக் கொடுத்தும் கொன்றுவிடலாம் என்பது கருத்து.

26 மருந்து கலந்த கள்ளைக் கொடுக்கச் செய்து அதனால் மயங்கியிருக்கும் நிலையில் அவர்களைப் பிடித்தல் வேண்டும் என்பது.

27 முன் கூறப்பட்டவர்—நாடு நகரங்களிலுள்ள கள்வர்.

[28]இவர்களையும் பிடித்து நாட்டு மக்களிடம் காட்டி [29] ' அரசன் எல்லாம் அறிந்தவன் ' என்பதை யறிவித்தல் வேண்டும்.

நான்காம் அதிகரணம் ஐந்தாம் பிரகரணம்
' சித்த வுருவினரால் வஞ்சகரை வெளிப்படுத்தல் ' என்னும்
எண்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[28] இவர்கள்—காட்டில் வழங்கும் கள்வர் முதலியோர்.

[29] ' அரசன் கள்வரைப் பிடித்தற்குரிய கல்வி முதலியவற்றில் தேர்ந்தவன் ஆதலின் எல்லாக் கள்வரையும் அறிந்து விடுவான். அவன் பெருமையாலேயே இத் திருடர்கள் பிடிக்கப்பட்டனர் ' என்று நாட்டு மக்களிடம் நாட்டு வருவாய்த் தலைவன் கூறியறிவிக்க வேண்டும். இங்ஙனம் கூறுதல் முதலாயின, ஏனைய மக்கள் தீய தொழிலைச் செய்யாது நல்வழி நிற்றற் பொருட்டு நிகழ்வனவாம்.

ஆறும் பிரகரணம்–[1]ஐயுறலுருச் செயல்களாற் கள்வரைப் பிடித்தல்

எண்பத்து மூன்றும் அத்தியாயம்

சித்த வுருவினர்செயலுக்குப் பின் ஐயுறலுருச் செயல்களாற் கள்வரைப் பிடித்தல் கூறப்படும்.

[2]தாயப் பொருள், குடும்பம் என்னுமிவை குறைந்துள்ளவன், [3]மிகக் குறைந்த வருவாயுள்ளவன், நாடு சாதி கோத்திரம் பெயர் தொழில் என்னுமிவற்றிற்கு மாறுன செயலுள்ளவன், வாழ்க்கைக்குரிய தொழிலை மறைந்து செய்பவன், இறைச்சி கள் சிற்றுண்டி உணவு சாந்தம் ஆரம் உடை அணிகலன் என்னுமிவற்றின் நுகர்ச்சியில் ஈடுபட்டவன், மிகுந்த செலவு செய்பவன், வரைவின் மகளிர் சூது கள்விற்போன் இவர்களிடம் ஈடுபட்டவன், அடிக்கடி அயலூர் செல்பவன், [4]அறியப்படாத இடம் செலவுகளை யுடையவன்,

---

83-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஐயுறல்—தன்னைக் குறித்துப் பிறர்பால் நிகழ்வதும் பிறரைக் குறித்துத் தன்பால் நிகழ்வதுமென இரு திறப்படும். உரு—களவு செய்யப்பட்ட பொருளோடு காணப்படுவது. செயல்—கன்னமிடல் முதலியன. இவற்றைக் கொண்டு கள்வரைப் பிடித்தல். முன்னைப் பிரகரணத்தில் சித்தவுருவினரால் கண்டுபிடித்தற்குரிய கள்வர் முதலிய ஏமாற்றிப் பிழைப்பவரைக் கண்டுபிடித்து அவர்களால் நாட்டுக்குத் தீங்கு நேராமற் காக்கும் முறை கூறினர்; அவ்வாறு சித்த வுருவினராற் கண்டு பிடிக்க இயலாதவாறு ஏமாற்றிப் பிழைப்பவரை ஐயுறல் முதலியவற்றுற் கண்டு பிடிக்கும் முறை ஈண்டுக் கூறப்படுதலின் பிரகரண இயைபு புலனுதலறிக.

[2] ஐயுறலாற் கள்வரைப் பிடித்தலைக் கூறுகின்றுர்; தாயப் பொருள் — பாட்டன் தந்தை வழிவந்த குடும்பப் பொதுப் பொருள். குடும்பம்—உழவுத் தொழில் முதலியன. எனவே உயிர்வாழ்க்கைக்குப் போதாத தாயப் பொருள் உழவுத் தொழிலால் வரும் வருவாய் முதலியவற்றை யுடையவன் என்பது கருத்து.

[3] உணவு மற்ற செலவு இவைகளுக்குப் போதாத கூலி வருவாயை உடையவன் என்பது. தொழிற்குத் தகுதியற்ற மிகக் குறைந்த கூலியை யுடையவன் என்பாருமுளர்.

[4] எங்கு இருக்கிருன், எங்கு செல்கிருன் என்று பிறர் தன்னைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாத இடம் செலவுகளை யுடையவன் என்பது.

மக்கள் வழக்கற்ற காடு தோட்டங்களில் காலமல்லாத காலத்தில் இயங்குபவன், மறைவிடம் பொருளிடம் என்பவற்றுக்குப் பன் முறை படர்பவன், [5]புதிய வெட்டுக் காயங்களுக்கு மறைவில் மருத்துவஞ் செய்து கொள்பவன், எப்பொழுதும் வீட்டின் உள்ளேயே இருப்பவன், [6]எதிர்சென்று திரும்புகிறவன், மகளிர் வேட்கையுள்ளவன், [7]பிறருடைய பணியாளர் மகளிர் பொருள் இல்லங்களைப்பற்றி அடிக்கடி கேட்பவன், [8]இழிதொழிற்குரிய படைக்கலம் கருவி என்பவற்றில் பழக்கமுள்ளவன், நள்ளிரவில் மறைந்து சுவர் நிழலியங்குபவன், [9]உருவழிந்த பொருளைத் தகாத கால இடங்களில் விற்பவன், பகைக் கருத்துள்ளவன், இழிவான சாதி தொழில்களையுடையவன், உருமாறித்திரியுமியல்புடையவன், [10]இலிங்கிக்குரிய குறியின்றிச் செயல் புரிபவன், [11]இலிங்கிக்குறி பெற்றும் அதற் கேற்ற செயலில்லாதவன், [12]முன்னைச் செயலால் அறியப்பட்டவன், [13]நன்கறியப்பட்ட செயல்களையுடையவன், நகரத் தலைவன் அமைச்சர் என்போரைக் கண்டபோது மறைந்தும் விலகியும் செல்லுமியல்புடையவன், வெளியிடங்களில் பிறரோடு பழகாமல் வாளாவிருப்பவன், பயந்தவன், வறண்ட குரலும்

---

[5] காயமுண்டானதற்குக் காரணமாகிய களவு வெளிப்படுமென்ற அச்சத்தினுல் பிறர் அறியாவாறு அக் காயங்களை மறைவில் ஆற்றிக் கொள்பவன் என்பது.

[6] எதிர் நோக்கி வருபவனை நோக்கி விரைவிற் சென்று திரும்புபவன் என்பது.

[7] பிறருடைய பணியாளர் முதலியவர்களைப் பற்றிய வரலாற்றை அடிக்கடிப் பிறரிடம் கேட்பவன்.

[8] இழிதொழில்—கொலை களவு முதலியன.

[9] உருக்குதல் முதலிய செயலால் அணிகலன் முதலியவற்றின் உருவை மாற்றித் தகாத இடம் காலங்களில் அவற்றை விற்பவன் என்பது.

[10] இலிங்கிக்குரிய அடையாளங்களின்றி அவர்க்குரிய ஒழுகலாறுகளைக் கைக்கொண்டொழுகுபவன்; இலிங்கி—சைவ முதலிய சமயங்களைச் சார்ந்தவன் என்பதற்குரிய அடையாளங்களை யுடையவன்.

[11] இலிங்கி வேடம் பூண்டு அவர்க்குரிய நியமங்களை மேற்கொள்ளாதவன் என்பது.

[12] களவு முதலிய தொழிலை இதற்கு முன் செய்து குற்ற ஏட்டில் பதிவு செய்து கொள்ளப்பட்டவன்.

[13] பிறர் மனை நயத்தல் முதலிய செயலையுடையவன் என்று பலராலும் அறியப்பட்டவன் என்பது கருத்து.

வாடிய முகமும் உடையவன், கையில் படைகொண்ட காவலாளர் நெருங்குங்கால் நடுங்குபவன் என்னும் இவர்களைத் தீங்கிழைப் பவன் கள்வன் புதையல் பணிப் பொருள்களைக் கவர்பவன், வெகுண்டு தொழில் புரிபவன், கரந் தொழுகுவோன் என்னுமிவ ருள் ஒருவராக ஐயுறல் வேண்டும். ஐயுறலாற் கள்வரைப் பிடித் தல் இவ்வாறும்.

[14]உருவாற் கள்வரைப் பிடித்தல் கூறுவாம். [15]காணுமற் போதல் கவரப்படுதல் என்பவற்றால் இழந்த பொருளை அவ்வினைப் பொருட் டொழில் புரிவோரிடம் அறிவித்தல் வேண்டும். [16]அறி விக்கப்பட்ட பொருளை அடைந்து மறைப்பின் துணையாயிருந்ததற் குரிய குற்ற முள்ளவனாவான். [17]அறியாதவர் அப் பொருளைக் கொடுத்தலால் குற்றமற்றவராவர். அங்காடியைக் கண்காணிப்ப வனுக்கு அறிவியாமல் பழைய பண்டங்களை ஈடு வைத்தல் விற்றல் செய்தலாகாது.

[18]அறிவிக்கப்பட்டது கிடைக்கப் பெறின் 'உனக்கு இது எப்படிக் கிடைத்தது' என்று பொருள் கொண்டு வந்தவனிடம்

---

14 இனிக் களவு செய்யப்பட்ட பொருள் முதலியவற்றால் கள்வரைப் பிடித்தல் பற்றிக் கூறுகிறார்.

15 விழிப்பின்மையால் இழக்கப்பட்டதும், கள்வர் முதலியோரால் கவரப்பட்டுக் காணுமற் போனதும் ஆகிய அணிகலன் முதலியவற்றைப் பற்றி அணிகலன் முதலிய செய்து தொழில் புரியும் தொழிலாளிகளிடம் அறிவித்தல் வேண்டும். இங்ஙனம் அறிவித்தல் கள்வர் அப் பொருளை விற்றல் முதலியன செய்தற் பொருட்டு அத் தொழிலாளரிடம் கொண்டு வருவராதலின், அந் நிலையிற் கவர்ந்தவனைக் கண்டு பிடித்தல் கருதியென்க.

16 பொருளாளனால் இழக்கப்பட்டுக் காணுமற் போனதும் அவ்வினைப் பொருட் டொழிற் றலைவனிடம் அறிவிக்கப்பட்டதுமான அப் பொருளை அத் தொழிற் றலைவன் அடைந்தும் உரியவனுக்கு அறிவியாது மறைப்பின் அப் பொருளைக் களவு செய்தவனுக்கு உதவியாயிருந்தவன் எனக் கொண்டு அக் குற்றத்திற்குரியவனாவன் என்பது கருத்து.

17 விழிப்பின்மை முதலிய காரணத்தால் பிறரால் இழக்கப்பட்ட பொருளை அடைந்த வேறொருவன் அப் பொருளுக்குரியவன் இன்னான் என அறியாதவனாயின், அப் பொருளை அரசியலாரிடம் கொடுத்தலால் குற்ற மற்றவனாகிறான் என்பது கருத்து.

18 இழக்கப்பட்டு அவ் வினைப் பொருட் டொழிற் றலைவனிடம் அறிவிக் கப்பட்ட பொருள் கிடைக்கப் பெறின் அப் பொருளைக் கொணர்ந்தவ னிடம் கீழ்க் கண்டவாறு வினுதல் வேண்டும் என்பது.

வரலாற்றை வினுதல் வேண்டும். 'தாய வழியில் கிடைத்தது, இன்னுனிடமிருந்து கிடைத்தது, [19]வாங்கப்பட்டது, [20]செய்விக்கப் பட்டது, [21]ஈடாக இருந்ததால் மறைந்திருந்தது, இன்ன இடத்தில் இன்ன காலத்தில் கிடைக்கப்பெற்றது, [22]இதன் மதிப்பு இத்துணை யது, [23]அளவு இத்துணை, இன்ன அடையாளம், இத்துணை விலை என்று அவன் கூற வரலாற்றைத் துணிந்தானுயின் [24]விடுவிக்கத் தக்கவனுவான்.

[25]இழந்தவனும் அவ்வாறே கூறுவானுயின், முன்னையதும் நீண்டதுமான அநுபவமும் தூய சான்றும் எவன்பாலுளதோ, அவனே பொருளுக்குரியவனெனத் துணிதல் வேண்டும். [26]விலங்கு களும் (ஒன்றேடொன்று) ஒத்த உருவம் அடையாளங்களை யுடையன. (இவ்வாருயின்) ஒரு மூலப் பொருளைக் கொண்டு

---

19 வாங்கப்பட்டது—விலை கொடுத்துக் கொள்ளப்பட்டது.

20 புதிதாகச் செய்விக்கப்பட்டது.

21 இப் பொருளைப் பிறரிடம் ஈடாக வைத்திருந்தமையால் இது காறும் என்னிடமில்லாமல் மறைவுபட்டிருந்தது என்பது.

22 அணிகலம் முதலிய வடிவத்திலுள்ள இப் பண்டத்தின் மதிப்பு இத் துணை என்பது. பின்னர் வரும் 'இத்துணை விலை' என்றதற்கு 'அணி கலன் முதலிய பண்டத்திற்கு மூலப் பொருளாகவுள்ள தங்கம் பொன் முதலியவற்றின் விலை இத்துணை' என்பதைக் கருத்தாகக் கொள்ளல் வேண்டும்.

23 அளவு—பொன் கருடம் முதலியன.

24 மேற் கூறியபடி வரலாற்றைத் துணியாவிடின், அப் பொருளைக் களவு செய்தற்குரிய தண்டத்தை இறுக்கக் கடவன் என்பது பெற்ரும்.

25 பொருளைக் கொணர்ந்தவன் அப் பொருள் தன்னுடையது என்பதற் குரிய சான்று முதலியன காட்டி உறுதிப்படுத்தியதுபோல் பொருளை இழந்தவனும் அவ்வாறே அப் பொருள் தனக்குரியது என்பதற்குரிய சான்று முதலியவற்றைக் கொண்டு உறுதிப் படுத்தினுயின் தூய சான்று முதலியன எவன்பக்கத்திலுள்ளனவோ அவனே பொருளுக்குரியவன் என்று துணிதல் வேண்டும் என்பது கருத்து.

26 உருவ அமைப்பு முதலியவற்ருல் ஒற்றுமை பல்வேறு யோனிகளிற் ரேன்றிய நாற்கால்விலங்கு முதலியவற்றிலும் காணப்படுதலின் ஒரு பொருளாலும் ஒரு கருத்தாவாலும் ஆக்கப்படும் அணிகலன் முதலியவற்றில் ஒன்றுக்கொன்று உருவ அமைப்பு முதலியன ஒத்தனவாகக் காணப்படுவது இயற்கையாதலின் மேற் கூறியவாறு துணிதல் குற்றமின்று என்று கூறுகிருர்.

ஒருவராலாக்கப்பட்ட பொன்னணி பண்டங்கள் ஏனவ்வாறிரா? என்ப.

இரந்து அடையப்பட்டது, வாடகை நிமித்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது, [27]பணிப் பொருளாகக் கிடைத்தது, [28]அடைக்கலமாக வைக்கப்பட்டது, இன்னுனிடமிருந்து தொழிற் கூலியாகக் கிடைத்தது என்று பொருளைக் கொணர்ந்தவன் கூறுவானுயின் (அவன்) அப் பொருளை [29]இழந்தவனுடைய உடன்பாட்டினுல் விடுவிக்கத் தக்கவனுவன்.

[30]'இங்ஙனமின்று' என்று இழந்தவன் கூறுமிடத்துப் பொருளைக்கொணர்ந்தவன், பிறன் (தனக்குக்)கொடுத்த காரணம், (தான்) ஏற்றதற்குரிய காரணம், அடையாளம் என்னுமிவற்றை, கொடுத்தவன், கொடுக்கச் செய்தவன், [31]எழுத்தாளன், ஏற்கச் செய்தவன், [32]கூறினவன், அணிமையிலிருந்து கேட்டவன் என்னுமிவர்களைக் கொண்டு [33]உறுதிப்படுத்தல் வேண்டும்.

---

27 பணிப்பொருள்—அணிகலன் முதலிய பண்டங்களைச் செய்துதருதற் பொருட்டுக் கொடுக்கப்பட்ட பொன் வெள்ளி முதலியன.

28 பாதுகாத்தற் பொருட்டு நம்பிக்கை காரணமாகப் பிறனெருவனிடம் வைக்கப்பட்டதென்பது.

29 பொருளைக் கொணர்ந்தவன் கூறியவாறே அப் பொருளுக்குரியவனும் இரத்தல் முதலியன காரணமாக இவன் அப் பொருளை அடையப் பெற்றுன் என்று கூறுதலால் கருத்து ஒற்றுமை யிருப்பின் பொருளைக் கொணர்ந்தவன் குற்றமற்றவனுகக் கருதப்பட்டு விடுவிக்கத் தக்கவனுவான் என்பது கருத்து.

30 இரத்தல் முதலியன காரணமாக அடையப்பட்டது என்று பொருளைக் கொணர்ந்தவன் சொல்வதை மறுத்துப் பொருளை இழந்தவன் கூறுமிடத்து என்பது கருத்து.

31 எழுத்தாளன்—பத்திரம் முதலியன எழுதுபவன்.

32 கூறினவன்—பத்திரத்தில் எழுதுதற்குரிய வாசகத்தை எழுத்தாளனுக்குக் கூறினவன்.

33 தான் கூறியது உண்மை என்பதை உறுதிப்படுத்திக் காண்பித்தல் வேண்டும் என்பது.

[34]மறந்தது [35]பிரிந்தது [36]வெளியேறினது என்னும் இவை அறியப்பட்டவிடத்து இடம் காலம் வரலாறு அடையாளம் என்னும் இவற்ருல் [37]தூய்மையடையக்கடவன். [38]தூய்மையற்றவன் அவற்றையும் அத்துணைப் பொருளையும் தண்டமாக இறுத்தல் வேண்டும். [39]இல்லையேல் திருட்டுக்குரிய [40]தண்டத்தைப் பெறக் கடவன். உருவத்தாற் கள்வரைப் பிடித்தல் இவ்வாரும்.

செயலாற் கள்வரைப் பிடித்தல் கூறப்படும். [41]களவு நிகழ்ந்த இல்லத்தில் [42]தவருன வழியால் புகுதல், வெளிவருதல், [43]சந்தியினுலாதல் [44]கருவியாலாதல் தகர்த்து வழியை உண்டாக்குதல்,

---

34 மறந்தது—மறதி காரணமாக இழக்கப்பட்ட ஆடை அணிகலன் முதலியன.

35 பிரிந்தது—தன்னினக் கூட்டத்திலிருந்து பிரிந்த பசு எருமை முதலியன.

36 தலைவன் அறியாவாறு மறைவாக வெளியேறின, பணிப்பெண் பணியாளன் முதலியோர் என்பது.

37 இன்னுனிடமிருக்கும் இன்ன பொருள் எனக்குரியது; மறதி முதலியவற்ருல் என்னிடமிருந்து பிரிந்து போயிற்று என்று வழக்குத் தொடர்பவன் இடம் முதலியவற்ருல் மறந்தது முதலியவற்றை உண்மைப் படுத்தித் தூய்மை யடையக் கடவன் என்பது.

38 அங்ஙனம் தனக்குரியது என்பதை மேற்கூறியவாறு உண்மைப் படுத்தாவிடின் தூய்மையற்றவன் எனக் கொண்டு, தனக்குரியது என்று வழக்கிடப்பட்ட பொருளுக்குச் சமமான பொருளையும், அதற்குச் சமமான தண்டத்தையும் இறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

39 இல்லையேல்—இடம் முதலியவற்ருல் பொருள் தனக்குரியது என்பதை யறிவிக்காவிடின்.

40 இத் தண்டம் அப் பொருளை வைத்துக் கொண்டிருப்பவனுல் இறுக்கக் கடவதாகும்.

41 அரணுள் உள்ள மக்களால் நிகழ்வது, வெளியிலுள்ள மக்களால் நிகழ்வது, இருவிதமான மக்களால் நிகழ்வது எனக் களவு முத்திறப்படும். அவற்றுள் முன்னையதைப்பற்றிக் கூறுகின்ருர். களவு நிகழ்ந்த இல்லத்தில் பின்னர்க் கூறப்படும் தவருன வழியிற் புகுதல் முதலிய அடையாளங்களைக் கொண்டு களவு உள்மக்களால் நிகழ்ந்ததென அறியலாம் என இயைத்துப் பொருள் கொள்க.

42 தவருன வழி—கொல்லைப்புறம் முதலியன.

43 சந்தி—உட் புகுவதற்கேற்ப சுவர் முதலிய இடங்களில் தோண்டப் படும் சுரங்கம் முதலியன.

44 கருவி—கன்னக்கோல் முதலியன.

மேலுள்ள [45]வலே பலகணி கூரை இவற்றைத் தகர்த்தல், [46]ஏறு தல் இறங்குதற்குத் தகச் சுவரைத் துளைத்தல், மறைந்த நிதிப் பொருளைப் பற்றுதற்கு உபாயமாகவும் [47]பிறரறிவித்தே தெரிந்து கொள்ளத் தக்கதாகவுமுள்ள குழியைச் சுவருக்கு அருகில் தோண்டுதல், உள்ளே இடித்தலால் ஏற்படும் துகளைத் தணித்தற்குரிய கருவியை அமைத்தல் என்னும் இவற்றுல் [48]உள்ளே நிகழ்ந்த களவை அறியலாம். [49]மாறுபடின் [50]வெளிக் களவாகவும் [51]இரு வகையாயிருப்பின் இருவகைக் களவாகவும் அறிதல் வேண்டும்.

[52]உள் நிகழ்ந்த கள்வென்று ஐயுறின் [53]விதனமுடையோன், தீயவர்களை உதவியாகக் கொண்டவன், [54]களவுக் கருவியுடையவன், வறுமை நிலையினள், பிறனிடம் ஈடுபட்ட கூடாவொழுக்கினள், [55]மேற்சொன்ன இயல்புடைய பணியாளர், [56]மிகுந்த உறக்கமுள்ளவன், கண் விழித்தலால் துன்புற்றவன், மனத் துன்பத்தாற் சோர்வுற்றவன், நடுங்கினவன், வறண்ட குரலும் பொலிவிழந்த முகமுமுடையவன், ஒரு நிலையிலில்லாதவன், குழறிப் பேசுபவன், உயர்ந்த இடத்திற்கு ஏறினதால் தன்னிலையழிந்து தடுமாறுபவன், வெட்டப்பட்டும் உராயப்பட்டும் பிளக்கப்பட்டும்

---

45 வலே—காற்றோட்டத்தின் நிமித்தம் பலகணி முதலியவற்றின் மேற்பாகத்தில் அமைக்கப்படுவது.

46 சுவரில் காலே வைத்து ஏறி இறங்குதற்கேற்பக் கற்களைப் பெயர்த்தல் என்பது.

47 எளிதில் அறிய முடியாதபடி நுட்பமாகத் தெரிந்துகொள்ளக் கூடியது என்பது.

48 உள்ளே நிகழ்ந்த களவு—அரணுள்ளிருக்கும் மக்களால் நிகழ்ந்த களவு.

49 மாறுபாடு—உள் நிகழ்ந்த களவுக்குக் கூறிய அடையாளங்களின் வேறுபாடு.

50 வெளிக் களவு—வெளி மக்களால் நிகழ்ந்த களவு.

51 இருவகை—அகக் களவுக்குக் கூறியனவும் புறக் களவுக்குக் கூறியனவுமான இருவித அடையாளங்கள்.

52 அகக் களவுக்குரிய அடையாளங்களால் அகக் களவு என்று ஐயுறின் கள்வரைக் கண்டு பிடித்தற்குரிய உபாயங் கூறுகின்ருர்.

53 விதனம்—கட் காமம் சூது முதலியன.

54 களவுக் கருவி—கன்னக்கோல் முதலியன.

55 மேற்சொன்ன இயல்புடைய பணியாளர்—பிற மகளிரிடம் ஈடுபட்ட பணியாளர்.

56 களவு நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாளில் அளவு கடந்து உறங்குபவன் என்பது.

ஒடியப்பட்டும் தோன்றும் உடம்பையும் உடைகளையும் உடையவன், புண்பட்டு நடுங்கும் கை கால்களை யுடையவன், புழுதி யடைந்தும் வெட்டப்பட்டும் சிதைந்துமுள்ள நகங்களையும் முடியையும் உடையவன், நன்கு குளித்துச் சாந்தம் முதலிய பூசுதலை யுடையவன், எண்ணெய் பூசப்பெற்ற உடலுடையவன், அணிமையில் கழுவப்பட்ட கை கால்களை யுடையவன், [57]உட்புகுந்து வெளி வருவதால் புழுதியிலும் சேற்றிலும் பதிந்த காலடிச் சுவடோடு ஒத்த அடியுடையவன், [58]மாலை, கள் இவற்றின் மணத்தோடு ஒத்த மணமுள்ளவன், [59]ஒத்த உடைத் துணுக்கு பூச்சு வேர்வை இவற்றையுடையவன் என்னும் [60]இவர்களைச் சோதனை செய்து [61]கள்வன் என்றோ பிறர்மனைநயப்பவன் என்றோ உய்த்துணர்தல் வேண்டும்.

சுலோகம்

சிறுபகை களைவோன், [62]கோபன் தானிகனுடன் [63]புறக் கள்வரைத் தேடுதல் வேண்டும். நகரத் தலைவன் அரணுள் மேற் குறிப்பிட்ட காரணங்களால் [64]அகக் கள்வரை உய்த்துணர்தல் வேண்டும்.

நான்காம் அதிகரணம் ஆறும் பிரகரணம்
'ஐயுறவுருச் செயல்களாற் கள்வரைப்பிடித்தல்' என்னும்
எண்பத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[57] களவு நிகழ்ந்த இல்லத்தின் அணிமையிலுள்ள புழுதி முதலியன நிறைந்த இடங்களில் படிந்த அடிச் சுவட்டுடன் ஒத்த அடிச் சுவட்டை யுடையவன் என்பது.

[58] களவு நிகழ்ந்த இல்லத்தில் கமழும் மாலை, கள் இவற்றின் மணத் தோடொத்த மணத்தையுடையவன்.

[59] களவு நிகழ்ந்த வீட்டிலுள்ள உடைத் துணுக்கு முதலியவற்றோ டொத்த உடை முதலியவற்றையுடையவன் என்பது.

[60] இவர்களை—விதனமுடையோன் முதலாகக் கூறப்பட்டவர்களை.

[61] மேற் கூறியவர்களைப் பலவிதமாகச் சோதித்துக் கள்வன் என்றுதல் பிறர்மனைநயப்பவன் என்றுதல் உய்த்துணர்தல் வேண்டும் என்பது கருத்து.

[62] கோபன் தானிகன் இவர்களின் இலக்கணத்தை 57-ஆவது அத்தியாயத்திற் காண்க.

[63] புறக் கள்வர்—அரண் நகரம் முதலியவற்றின் வெளிப் பாகத்தி லிருந்து வரும் கள்வர்.

[64] அகக் கள்வர்—அரண் நகரம் இவற்றில் இருந்துகொண்டு களவுத் தொழில் புரிபவர்.

நான்காம் அதிகரணம்—சிறுபகை களைதல்

ஏழாம் பிரகரணம்—[1]விரைவிலிறந்தானை யாராய்தல்

எண்பத்துநான்காம் அத்தியாயம்

[2]விரைவிலிறந்தானை எண்ணெயிட்டுச் சோதித்தல் வேண்டும்.

சிறுநீர் மலம் வெளிச் சிதறி யிருத்தல், வயிறு தோல் இவைகளில் காற்று நிரம்பியிருத்தல், கால் கை வீங்கியிருத்தல், கண்கள் திறந்திருத்தல், கழுத்தில் [3]அடையாளமுண்மை என்னும் இவற்றையுடையவன் மூச்சைத் தடைசெய்து துன்புறுத்திக் கொல்லப் பட்டவன் என அறிதல் வேண்டும்.

[4]அவனே கை தொடை என்பவற்றில் சுருக்கம் பெற்றிருப்பின் [5]தூக்கிடுதலால் இறந்தவன் எனத் துணிதல் வேண்டும்.

கை கால் வயிறு வீங்கியிருத்தல், கண் குழிந்திருத்தல், கொப்பூழ் மேலெழுந்திருத்தல் என்னும் இவற்றை யுடையவனைக் கழுவேற்றப்பட்டவனென அறிதல் வேண்டும்.

84-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நோய் காயம் முதலியன வின்றிக் காலமல்லாக் காலத்தில் விரைவில் உயிர் நீங்கினனைப் பற்றி இவன் தற்கொலையால் மாண்டானோ அல்லது பிறராற் கொல்லப்பட்டானோ எனச் சோதித்தல். பொருள் முதலியவற்றைக் கவர்தல் மூலம் பிறருக்குத் தீங்கிழைப்போரை ஆராய்ந்தறிந்து, அவர்களாற் றீங்கு நேராவண்ணம் நாட்டைப் புரத்தல் முன்னர்க் கூறப் பட்டது. உயிரைக் கவர்தலால் தீங்கிழைப்போரைக் கண்டறிந்து அவர்களாற் றீங்கு நேரா வண்ணம் நாட்டைக் காக்குமுறை ஈண்டுக் கூறப்படுதலின் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] விரைவிலிறந்தவனுடைய உடற்பகுதிகளில் எண்ணெய் தடவிப் பார்த்தால் மறைவுபட்ட அடித்தழும்பு முதலியன விளக்கமாக அறியப் படும் என்ப.

[3] அடையாளம்—கழுத்தில் கையை வைத்து அழுத்தினதால் ஏற்பட்ட சுவடு முதலியன.

[4] அவன்—சிறுநீர் மலம் சிதறியிருத்தல் முதலியனவாக மேற்கூறப் பட்ட அடையாளமுள்ளவன்.

[5] தூக்கிடப்பட்டு உயிர் நீத்தவன் என்பது.

மலத்துவாரம் கண் இவைகள் பிதுங்கியிருத்தல், நாக்கு கடிபட்டிருத்தல், வயிறு வீங்கியிருத்தல் என்னுமிவற்றை யுடையவன் நீரினால் இறந்தவனென அறிக.

குருதியால் நனைந்திருத்தல், உறுப்பு ஒடிந்து சிதறியிருத்தல் என்னுமிவற்றை யுடையவனைத் தடி கயிறு என்னுமிவற்றால் கொல்லப்பட்டவனாயறிதல் வேண்டும்.

எலும்பொடிந்து சிதறுண்ட உடலையுடையவனை [6]வீழ்த்தப் பட்டவனென்று அறிதல் வேண்டும்.

கை கால் பல் நகம் என்னும் இவை புகர் நிறமுள்ளனவாயிருத்தல், தசை மயிர் தோல் இவை சிதைவுற்றிருத்தல், வாயில் நுரை நிறைந்திருத்தல் என்னும் இவற்றை யுடையவன் [7]நஞ்சினால் உயிர் நீத்தவன் என அறிதல் வேண்டும்.

[8]அவனே குருதியுற்ற [9]கடிவாயை உடையவனாயின் பாம்பு (நச்சுப்) புழு முதலியவற்றால் இறந்தவனென அறிதல் வேண்டும்.

உடை உடல் இவை சிதைவுற்றிருத்தல், வாந்தி மிகுதியால் இளைத்திருத்தல் என்னுமிவற்றை யுடையவனை [10]மதனச் சேர்க்கையால் உயிர் நீத்தவனென்று அறிதல் வேண்டும்.

கொல்லப்பட்டவனையும் [11]கொன்று தண்ட அச்சத்தினால் தூக்கிடப்பட்டவனையும் சிதைந்த கழுத்தை யுடையவனையும்

---

[6] வீழ்த்தப்பட்டவன்—மாடி முதலிய உயர்ந்த இடத்திலிருந்து கீழே தள்ளப்பட்டு இறந்தவன்.

[7] பச்சைநாவி போன்ற நஞ்சினைக் கொடுத்துக் கொலை செய்யப்பட்டவன் என்பது.

[8] அவனே—'கை கால் பல்' முதலியனவாக முற்கூறிய அடையாளமுள்ளவனே.

[9] ஒருறுப்பில் கடிக்கப்பட்டு இரத்தம் பெருகினதாகக் காணப்படின் என்பது.

[10] பெரு மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய சாறு முதலியவற்றைக் கொடுத்துக் கொல்லப்பட்டவன் என்பது கருத்து.

[11] பிறனொருவனைக்கொன்று, பின் அக்கொலைக் குற்றத்தால் தனக்கு அரசியலாரால் நேரும் துன்பத்திற்கஞ்சிய அக்கொன்றவனால் தூக்கிடப்படுதல் முதலியவற்றை அடைந்தவனையும் என்பது.

[12]மேற் கூறியவற்றுள் ஏதேனும் ஒரு காரணத்தைக்கொண்டு உய்த்துணர்தல் வேண்டும்.

நஞ்சினுல் கொல்லப்பட்டவனது உணவின் எஞ்சிய பகுதியை [13]நீரினுற் சோதனை செய்யவேண்டும். [14]இரைப் பையினின்றும் ஒரு பகுதியை எடுத்துத் தீயிலிட்டால் சட சட என்ற வெடியொலி யுண்டாதல் அல்லது (அப்பகுதி) வானவில் வண்ணமுடையதாயிருத்தல் நிகழின் நஞ்சுடன் கூடியது என அறியலாம். [15]தீயிடப்பட்டவனது இரைப்பை வேவாதிருத்தலாலும் அறியக் கூடும்.

[16]கடுஞ் சொல் கடுந் தண்டங்களினுல் துன்புறுத்தப்பட்ட அவன் பணியாளரையும் [17]துன்புற்றும் பிறர்பால் ஈடுபட்டுமுள்ள

---

12 மேற்கூறியவை—சிறுநீர் மலம் முதலியன வெளிச் சிதறியிருத்தல் முதலாகக் கூறப்பட்ட அடையாளங்கள்.

13 'நீரினுல்' என்பதற்குரிய 'வயொஹிঃ' என்ற சொல் 'பாலால்' என்ற பொருளையும் உணர்த்தும். 'வயொஹிঃ' என்ற பாடத்தைக் கொண்டு 'பறவைகளால்' என்பாருமுளர். பறவைகளைப் புசிக்கச்செய்து ஆராய்ந்தறிதல் வேண்டும் என்பது கருத்து.

14 இறந்தவனுடைய இரைப் பையின் ஒரு பகுதியை எடுத்துத் தீயிலிட்டால் 'சட சட' என்ற ஒலியுண்டாதல், வானவில் போன்ற பல வண்ணமுடையதாயிருத்தல் முதலிய அடையாளங்களால் அவன் விடத்தாற் கொல்லப்பட்டான் என்று அறியலாம்.

15 இறந்தவனது உடல் தீயிடப்பட்டவிடத்தும் அவன் இரைப்பை மட்டும் தீயினுல் வேவாதிருப்பின் அவன் நஞ்சினுற் கொலையுண்டவன் என்பதை அறியலாம் என்பது கருத்து.

16 பிறரைக் கொல்லுதற்கு நஞ்சு முதலியவற்றைக் கொடுத்தவனை யாராய்ந்தறிதற்குரிய உபாயங் கூறுகின்ருர் ; கடுஞ்சொல் முதலியவற்ருல் துன்புறுத்தப்பட்ட பணியாளர் அத்துன்பத்திற்குப் பொருது நஞ்சினுல் தலைவனைக் கொல்லுதல் கூடும் என்பது பற்றி அப்பணியாளரைத் தேடியறியவேண்டும் என்ருர்.

17 தலைவன் செய்த துன்பத்தினுலும் பிற ஆடவரிடம் தாம் கொண்ட கூட்டுறவாலும் மகளிர், கணவன் முதலியோருக்கு நஞ்சிட்டுக் கொன்றிருக்கக்கூடும் என்பதுபற்றி அம் மகளிரையும் கண்டறிதல் வேண்டும் என்ருர்.

மகளிரையும் [18]தாய முறையையும் மகளிரையும் அடைய விரும்பிய உறவினரையும் கண்டுபிடித்தல் வேண்டும். [19]கொன்று தூக்கிடப்பட்டவனையும் மேற் கூறியவாறு ஆராய்ந்தறிதல் வேண்டும்.

தானே தூக்கிட்டுக் கொண்டவனுக்கு (நேர்ந்த) [20]தகாத துன்பத்தை ஆராய்தல் வேண்டும்.

[21]பெண்டிர் தாயப்பொருள்களால் உண்டாம் குற்றம், [22]தொழிற்குற்றம், பகை எண்ணம், [23]வாணிகம், குழூஉ, [24]வழக்கியலுள் ஒன்று என்பன யாவர்க்கும் வெகுளிக்குரிய காரணமாகும். [25]செற்றத்தினால் கொலை நிகழ்வதாம்.

---

[18] இவனால் நுகரப்படும் பெண்டிர் தாயப்பொருள் முதலியன இவனிறந்த பின்னர் தமக்குரியனவாகும் என்ற எண்ணமுடையோர் அந்நுகர் பொருள்களை அடையக் கருதி அவனுக்கு நஞ்சு முதலியவற்றைக் கொடுத்துக் கொன்றிருத்தல் கூடும் என்பது தோன்ற இவ்வாறு கூறினார்.

[19] ஒருவனைக் கொலைசெய்து அதை மறைக்கக் கருதி 'இறந்தவன் தானே தூக்கிட்டுக்கொண்டு இறந்தான்' என்பது தோன்ற அவன் கொலையுண்ட பின்னர் உடலைத் தூக்கிட்டு வைப்பின், அவ்வுடம்பில் தூக்கிடப்பட்டு இறந்தவனுக்குரிய அடையாளங்களின் இன்மையுண்மைகளைக் கொண்டு அதனை ஆராய்ந்தறிதல் வேண்டும் என்பது கருத்து.

[20] இவன் தற்கொலை செய்துகொள்ளுமளவுக்கு இவனுக்குத் தீங்கிழைத்தவர் யாவர் என ஆராய்ந்தறிதல் வேண்டும் என்க.

[21] பிறரைக் கொலை செய்வதற்குரியனவாகிய மக்களிடத்துப் பொதுவாகக் காணப்படும் காரணங்கள் சிலவற்றைக் கூறுகின்றார்; பெண்டிர் காரணமாகவும் தாயப்பொருள் காரணமாகவும் ஏற்படுங் குற்றம் என்பது.

[22] தொழிற் குற்றம்—அரசியலாரின் கட்டளையை மேற்கொண்டு செய்யும் தொழிலால் ஏற்படுவது.

[23] மிக்க ஊதியம் பெறுதற்குரிய செயல் முதலியவற்றால் வாணிகமும், தலைமை முதலியவற்றைச் சிதைத்தலால் குழுவும் கோபத்தை உண்டு பண்ணுதற்குக் காரணமாம் என்பது கருத்து.

[24] மணம் தாயபாகம் முதலியனவாக முன்னர்க் கூறப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்றென்பது.

[25] மேற்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றினால் செற்றம் நிகழக்கூடும் என்பதும், அச் செற்றத்தின் பயனாகக் கொலை நிகழக்கூடும் என்பதும் கருத்து.

[26]நேரிடையாகவோ [27]ஏவுதலாலோ [28]பொருணிமித்தம் கள்வராலோ [29]ஒற்றுமை பற்றிப் பிறர் பகைவராலோ கொல்லப் பட்டவனுடைய கொலையை [30]நெருங்கியவர் மூலம் ஆராய்ந் தறிதல் வேண்டும். கொலையுண்டவன் எவனொருவனால் அழைக் கப்பட்டானோ, எவனுடன் கூட இருந்தானோ, வெளிச் சென் றானோ, கொலையிடத்திற்கு அழைத்து வரப்பட்டானோ (அவற்றுக் கேதுவாய) அவனை வினுதல் வேண்டும். கொலையிடத்தில் அவனுக்கு அணிமையிலுள்ளோரைத் தனித்தனியே 'இவனை அழைத்து வந்தவன் யாவன்? கொன்றவன் யார்? வாள் முதலிய படையை வைத்திருந்தவன் யாவன்? ஒளிந்திருந்தவனாகவோ பயந்தவனாகவோ உங்களால் காணப்பட்டவன் யாவன்? என இவ்வாறு வினுதல் வேண்டும். அவர் விடைக் கேற்ப (மீண்டும்) வினுதல் வேண்டும்.

சுலோகங்கள்

(1—2) [31]ஆதரவற்றவனுடைய உடலிலுள்ள அநுபவப் பொருள், [32]உபகரணம், உடை, [33]வேடம், அணிகலன் என்னு மிவற்றைக் கண்டு [34]அவ் வினப்பொருட் டொழிலாளரிடம்

---

26 நேரிடை—ஒருவன் தன் பகைவனைத் தானே எதிர்த்துச் சென்று கொல்லுதல் என்பது.

27 தன் பகைவனைத் தானே நேராகச் சென்று கொல்லாமல் பிறரை ஏவி அவர் மூலம் கொல்லுதல் என்பது.

28 பகைமை யில்லையாயினும் ஒருவனிடமுள்ள பொருளைக் கவர்ந்து கொள்வதன் நிமித்தம் கள்வரால் கொல்லப்படுபவன் என்பது.

29 வேறொருவனிடம் பகை கொண்டவர் தம் பகைவனைப் போன்று தோன்றும் வடிவ ஒற்றுமை காரணமாக 'இவனே நம் பகைவன்' எனத் தவறாகக் கருதிக் கொல்லப்பட்டவன் என்பது.

30 கொல்லப்பட்டவனுடைய நெருங்கிய உறவினர் என்பது; கொலை நிகழ்ந்த இடத்திற்கு அணிமையிலுள்ளோர் என்பாருமுளர்.

31 பாதுகாப்பவனின்றிக் கொல்லப்பட்டவனுடைய உடலிலுள்ள மாலை முதலிய பொருள் என்பது.

32 குடை செருப்பு முதலியன.

33 மழித்தல், நீட்டல் முதலியன.

34 மாலை முதலிய பொருளைக் கொண்டு தொழில் புரிவோர் என்பது.

[35]நட்பு, இருத்தல், இருத்தற்காரணம், தொழில், [36]வழக்கு என்னு மிவற்றை வினவி அதன் பின்னர்த் [37]தேடுதல் வேண்டும்.

(3—4) காமம் வெகுளிகளுக்கு வயப்பட்ட ஆடவனோ, தீச் செயலால் அறிவிழந்த பெண்ணோ கயிறு படை நஞ்சு என்னு மிவற்றால் தன்னைத் தானே கொலைசெய்து கொள்ளின் [38]அவர்களை அரச வீதியில் கயிற்றினால் கட்டிப் புலையனால் இழுக்கச் செய்தல் வேண்டும். அவர்களுக்கு [39]ஈமக் கடன்களும் [40]ஞாதியர் செயல் களும் இல்லையாம்.

(5) [41]அவர்களுக்குத் தென்புலத்தார்கடன் முதலிய செயல் புரியும் உறவினர், அவர்களுக் குரிய இழிவைத் தாம் பின்னர் அடைவதுடன் தம் சுற்றத்தாரால் விலக்கப்படுதலையும் அடைவர்.

(6) வேட்பித்தல், ஓதுவித்தல், திருமணம் என்னுமிவற்றால் பதிதனுடன் தொடர்புள்ளவன் ஓராண்டில் பதிதனுவான். [42]அவனுடன் தொடர்புள்ள பிறரும் அந் நிலையர்.

நான்காம் அதிகரணம் ஏழாம் பிரகரணம்
'விரைவிலிறந்தானை யாராய்தல்' என்னும்
எண்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

35 கொலையுண்டவன் யாருடன் நட்புக்கொண்டிருந்தான் என்பது முதலிய செய்தியைக் கேட்டறிதல் வேண்டும் என்பது.

36 வழக்கு—கொடுக்கல் வாங்கல் முதலிய செயல்.

37 தேடுதல்—கொலை செய்தவனை ஆராய்ந்தறிதல்.

38 உயிர்நீங்கிய உடலை அரச வீதியில் புலையனிழுத்தல், ஏனையோர் அங்ஙனம் தற்கொலை புரிதலில் அருவருப்படைந்து நல்வழிப்படுதற் பொருட்டென்க.

39 ஈமக்கடன்—சுடலையில் மந்திர பூர்வமாகத் தீயிடல், பால் தெளித் தல் முதலியன.

40 ஞாதியர்செயல்-தர்ப்பணம்செய்தல், பிண்டம்போடுதல் முதலியன.

41 அவர்கள்—தற்கொலை செய்துகொண்டவர்; அவர்களுக்குத் தர்ப் பணம் முதலிய இறுதிக் கடன் செய்யும் ஞாதியரும் தம் உடல் நீத்தபின் தற்கொலை புரிந்துகொண்டவர் அடையும் இழிநிலையை மறுமையில் அடைவர் என்பதும், இம்மையில் தம் உற்றார் உறவினரால் விலக்கப்படுவர் என்பதும் கருத்து. இங்ஙனம் விலக்கப்படுதற்கு, அவர் தற்கொலை செய்து கொண்டவருக்குக் கிரியை செய்தலால் பதிதராதல் காரணமாம்.

42 அவன்—பதிதனுடன் தொடர்பையடைந்தது காரணமாகப் பதித னாந் தன்மையை எய்தியவன்; அவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிறரும் பதிதராவர் என்பது கருத்து.

நான்காம் அதிகாரணம்—சிறு பகை களைதல்

எட்டாம் பிரகரணம்—[1]சொற் செயல்களால் வினுதல்

எண்பத்தைந்தாம் அத்தியாயம்

[2]அகத்தோர், புறத்தோர், [3]பொருளை யிழந்தோன் என்னும் இவர்களின் அணிமையில் சான்று கூறுவோனிடம் ஐயுற்றுப் பிடிக்கப்பட்டோரின் [4]நாடு சாதி கோத்திரம் பெயர் தொழில் பொருள் துணைவர் இருப்பிடம் என்னும் இவற்றை வினுதல் வேண்டும். அவற்றை ஏதுக்களால் [5]ஆராய்தல் வேண்டும். பின்பு [6]பிடிபடும் வரை நிகழ்ந்த அவனுடைய முதல்நாள் இயக்கத்தையும் இரவில் படுக்கையையும் வினுதல் வேண்டும். [7]விடுதலைக்

85-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சொற்களான் வினுதல் செயல்களான் வினுதல் என வியையும். கள்வனொருவனை இன்சொற் கூறியாதல் அடித்தொறுத்தாதல் உண்மையினை வெளிப்படுத்துதல் என்பது கருத்து. ஐயுறல் முதலியவற்ருல் கள்வர் முதலியோரைக் கண்டு பிடித்தலில் பிறழ்ச்சி யேற்படக் கூடுமாதலாலும், உண்மையாகக் கள்வரல்லாதாரும் தண்ட அச்சம் முதலியன காரணமாகப் பொய் கூறினமை காணப்படுதலாலும், கள்வர் எனத் துணிபு குறித்து இப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. 'விரைவிலிறந்தானை யாராய்தல்' என்னும் முன்னைப் பிரகரணத்திற் கூறியவற்றிற்கும் சொற் செயல்களால் வினுதலின்றித் துணிதலின்மையால் அதன்பின் இது வைக்கப்பட்டது. இதனுற் பிரகரண இயைபு விளக்கமாதல் அறிக.

[2] அகத்தோர் புறத்தோர் என்பன முறையே அரண் நகரம் முதலியவற்றிற்கு உட்புறத்தில் வாழ்வோரையும் அவற்றின் வெளிப்புறத்தில் வாழ்வோரையும் குறிப்பனவாம்.

[3] பொருளை யிழந்தோன்—களவால் பொருளிழந்தோன்.

[4] நாடு முதலியன ஈண்டு ஐயுற்றுப் பிடிக்கப்பட்டோர்க்குரியன.

[5] அவனுல் கூறப்பட்ட விடை மெய்யோ பொய்யோ என ஏதுக்களால் ஆராய்தல் வேண்டும் என்பது.

[6] அரசியலாரால் ஐயுறப்பட்டுப் பிடிக்கப்படும்வரை, முன்னைய பகலில் எங்கெங்கு சென்ருய் என்றும், இரவில் எங்கு படுத்திருந்தாய் என்றும் பிடிக்கப்பட்டவனிடம் அவன் கூறும் விடைகளுக்கேற்ப மேன்மேலும் வினுதல் வேண்டும் என்பது கருத்து.

[7] வினுக்களுக்குப் பிடிபட்டவனுற் கூறப்படும் விடைகளையாராய்ந்த போது அவன்பால் குற்றமில்லை என்பதற்குரிய காரணம் புலப்படுமாயின், அவன் விடுவிக்கத் தக்கவனுவான் என்பது கருத்து.

குரிய ஏது புலப்படுமாயின் அவன் தூயவனுவான். [8]இல்லையேல் [9]குற்றமுள்ளவனும்.

[10]வினுவியறிதல் கூடாமையாலும், கருவிகள் வேற்றிடத்தில் காணக்கூடுமாதலானும் மூன்று நாட்களுக்குப் பின்னர் ஐயுற்றுப் பிடித்தல் கூடாது.

கள்வனல்லாதானைக் கள்வன் என்று [11]சொல்பவனுக்கும், கள்வனை [12]மறைப்பவனுக்கும் கள்வனுக்குச் சமமான தண்டமாம்.

[13]கள்வனுல் குற்றம் சார்த்தப்பட்டவன் பகை பொருமை காரணமாகக் கூறப்பட்டான் என்றவிடத்துத் தூயவனுவான். [14]தூயவனை விடுவியாதவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம்.

ஐயுற்றுப் பிடிக்கப்பட்டவனிடம் [15]கருவி [16]அமைச்சர் துணைவர் [17]உருவம் கூலியாளர் என்னும் இவர்களைப்பற்றி வினவித் துணிதல் வேண்டும்.

---

8 இல்லையேல்—அவ்வாறு விடுதலைக்குரிய காரணம் புலப்படாதாயின்.

9 குற்றம்—ஈண்டுக் களவுக் குற்றம் முதலியன.

10 களவு நிகழ்ந்து மூன்று நாட்கள் கடந்த பின்னர் களவு நிகழ்ந்த நாளுக்கு முன்னைய நாளில் நிகழ்ந்த செலவு முதலியவற்றை மறந்திருக்கக் கூடுமாதலின் அவற்றைப் பற்றி அவனை வினுதல் முறையன்று என்பதும், களவுக்குரிய கருவிகள் கள்வரல்லாதவருடைய இல்லம் முதலியவற்றிலும் போடப்பட்டுக் காணக்கூடுமாதலால் அவற்றைக் கொண்டு ஐயுறல் கூடாது என்பதும் கருத்து.

11 சிறுபகை கொளவோர் முதலியவர்க்கென்பது.

12 மறைத்தல்—கள்வனைக் கள்வனல்லன் எனக் கூறுதல்; கள்வனை இல்லம் முதலியவற்றினுள் மறைத்துவைத்தல் எனினுமாம்.

13 கள்வனெருவன் களவுக் குற்றமற்ற பிறனெருவனிடம் பகை முதலியவற்ருல் ‘ இவன் களவு செய்தான் ’ எனக் குற்றம் சார்த்தினும், பின்னர் ஆராய்ந்தவிடத்து உண்மை புலப்பட்டவுடன் தூயவனுகிய அவனை விடுவித்தல் வேண்டும் என்பது கருத்து.

14 தூயவன் என்று துணியப்பட்ட பின்னர் அவனுக்கு விடுதலை செய்யாத சிறுபகை கொளவோன் முதலியோர்க்கு இத் தண்டம் என்பது.

15 கருவி—களவுத் தொழிற்குரியது.

16 அமைச்சர்—களவுத்தொழில் புரிவதற்குரிய உபாயம் முதலியவற்றைக் கூறினவர்.

17 உருவம்—களவிடப்பட்ட பண்டம்.

[18]களவுகாரணமாகப் புகுதல், பொருளைக்கைப்பற்றல், பங்கிடு என்னுமிவற்றால் ஆராய்ந்தறிதல் வேண்டும்.

[19]இக்காரணங்களால் துணியப்படாதவிடத்து முரண்படக் கூறுபவனைக் கள்வனல்லன் என்றறிதல் வேண்டும். [20]கள்வரின் வழியில் தற்செயலாய்ச் சென்றபொழுது கள்வனல்லாதானும் கள்வனுக்குரிய பொதுவான வேடம் படை பண்டம் என்பவை காரணமாகப் பிடிக்கப்பட்டிருத்தலும் [21]கள்வரின் பண்டம் அணிமையிலிருத்தல் பற்றிப் பிடிக்கப்பட்ட மாண்டவியர், கள்வனாகவில்லாதிருந்தும் செயற்றுன்ப அச்சத்தினால் யான் கள்வன் எனப் புகன்றமையும் அறிந்தனவன்றோ!

[22]ஆகலின் [23]செயலைத் துணிந்த பின்னர்த் தண்டித்தல் வேண்டும்.

---

18 இல்லம் முதலியவற்றில் நன்கு காக்கப்பட்ட பொருள் முதலியவற்றைக் களவு செய்வதற்கு அவ்வில்லம் முதலியவற்றில் புகுந்தவன் எவனெவன் என்றும், எவனெவனால் பொருள் கவரப்பட்டது என்றும் எவனெவனுக்கு எத்துணைக்கூறு பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றும் வினவி உண்மையைக் காண்டல் வேண்டும் என்பது கருத்து.

19 மேற்கூறிய காரணங்களைக் கொண்டு 'இவன் கள்வன்' எனத் துணியாதபோது, வினவுங்கால் அச்சம் முதலியன காரணமாக முரண்பட்ட விடையைக் கூறினும் அவன் கள்வனல்லன் என்றறிதல் வேண்டும் என்பது கருத்து.

20 அப்படியாயின் மிக முயன்று சோதித்தல் யாதுகாரணம் பற்றி விதிக்கப்படுகின்றது என்பதற்கு மாற்றங் கூறுகின்றார்.

21 களவு போன பொருளை 'ஆணி மாண்டவியர்' என்ற முனிவரது பக்கத்தில் கண்ட அரசியலார், அம்முனிவரே களவு செய்தவர் என்று பிழைபட உணர்ந்து அவரை அரசன்பால் அப்பொருளுடன் கொண்டுவர அவன் முனிவரை நோக்கி 'நீ களவு செய்தாயா?' என வினவும்போது இல்லை என்று சொன்னால் அரசியலார் தடியாற் புடைத்தல் முதலியவற்றால் தம்மைத் துன்புறுத்துவர் என்று அஞ்சிய முனிவர் 'ஆம்' என்று உடன்பட்டார் என்றும், உடனே ஆராயாமல் அரசனால் சூலத்தில் ஏற்றப்பட்டார் என்றும் மாபாரதத்தில் கூறியிருத்தல் காண்க.

22 ஆகலின்—தண்டிக்கத் தகாதவனுக்குத் தண்ட விதியைத் தவிர்த்தல் வேண்டுமாதலின்.

23 செயல்—களவு முதலியன.

[24]சிறு குற்றமுள்ளவன், சிறுவன், ஆண்டு முதிர்ந்தவன், பிணியாளன், மத்தன், பித்தன், பசி தாகம் வழிநடை இவற்றால் துன்புற்றவன், மிகையாக உண்டவன், உணவு சீரணியாதவன் என்னும் இவர்களைத் தொழில் செய்வித்தலாகாது.

[25]ஒத்த இயல்பினர், கூடாவொழுக்கினள், [26]நன்கு பேசுபவர், [27]கதை சொல்வோர், இடம் உணவு இவற்றை அளிப்போர் ஆகிய இவர்களால் ஒற்றியறிதல் வேண்டும். [28]இங்ஙனம் ஏமாற்றுதல் வேண்டும். [29]பணிப்பொருள் கவர்தலில் கூறியவற்றானுமாம்.

[30]குற்றம் துணியப்பட்டவனைத் தொழில் புரியச் செய்யலாம்.

[31]கருக்கொண்டவள், கருவுயிர்த்து ஒரு திங்கள் நிரம்பப் பெறாதவள் ஆகிய இவர்களுக்கு அறவே இன்று. மகளிருக்குப் பாதித் தொழிலாவது [32]சொல்லால் நிந்தித்தலாவது அமையும்.

அந்தணன், புலவன், துறவி ஆகிய இவர்களை ஒற்றன்

---

[24] தொழிற் றண்டம் விதிக்கத் தகாதவரைக் கூறுகின்றார்.

[25] கள்வர் முதலியோரைக் கண்டுபிடித்தற்குரிய உபாயங் கூறுகின்றார். களவுத் தொழில் முதலியவற்றோடு ஒத்த இயல்பினர் என்பது.

[26] பேச்சு வன்மையால் உண்மையைக் கண்டுபிடித்தற்குரிய ஆற்றல் வாய்ந்தவர்.

[27] கள்வர் முதலியவர்களிடம் கதை முதலியன சொல்லி இன்புறுத்தி ஒற்றுத் தொழில் புரிபவர்களால் அறிதல்வேண்டும் என்பது கருத்து.

[28] ஒத்த இயல்பினர் முதலியனவாகக் கூறப்பட்ட ஒற்றர்களால் கள்வரை ஏமாற்றுதல் வேண்டும் என்பது கருத்து.

[29] பணிப்பொருள் முதலியவற்றின் களவு குறித்து ஐயுற்றுப் பிடிக்கத் தக்கவர் இன்னார் இன்னார் ஆவர் என்பதை 'தாயப்பொருள் குடும்பம் என்னுமிவை குறைந்துள்ளவன்' என்பது முதலாக 83-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டவாற்றானும் ஆராய்ந்து அறிதல்வேண்டும் என்பதுகருத்து. (83-ஆம் அத்தியாயத்தில் 2-ஆம் குறிப்பைக் காண்க)

[30] ஆராய்ந்து துணியப்பட்ட குற்றமுடையானுக்குத் தண்டவிதி கூறுகின்றார்.

[31] மகளிருள் தொழிற்றண்டம் விதிக்கத் தகாதவரைக் கூறுகின்றார்.

[32] மகளிர்க்கு முன்கூறிய பாதித் தொழிற்றண்டத்தையும் விதிக்க வியலாதவிடத்துப் பழித்துரைத்தலாகிய இத் தண்டம் மேற்கொள்ளப்படுமென்க.

[33]அழைத்துச் செல்லல்வேண்டும். இதை மீறிச் செய்பவன், செய்விப்பவன், [34]செயலில் தூண்டுபவன், தீங்கு நினைப்பவன் ஆகிய இவர்களுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[35]ஆறு தடியடி, ஏழு கசையடி, [36]இரண்டுவகைக் கட்டுதல், [37]மூக்கில் தண்ணீர் விடுதல் [38]என நான்கு வகைத் தொழில் உலகியலிற் கண்டதாம்.

[39]மேலும் ஒன்பது முழமுள்ள கொடிப் பிரம்பினுற் பன்னிரண்டடி, [40]இருவகையாகக் கால்களைக் கட்டுதல், புன்கம் வளாரால் இருபது முறை புடைத்தல். கையால் முப்பத்திரண்டு முறை அறைதல், [41]இருவகை விருச்சிக பந்தம், [42]இருவித உல்லம்பநம்,

---

33 குற்றம் புரிந்த அந்தணன் முதலியோரை ஒற்றர் இங்குமங்கும் அழைத்துக்கொண்டு திரியும்படிச் செய்தலே அவர்களுக்குரிய தண்டமாம் என்பதும், அன்றி ஏனையோருக்கு விதிக்கப்பட்ட தண்டத்தை அவர்களுக்கு விதித்தலாகாது என்பதும் கருத்து.

34 செயல்—தொழிற்றண்டம்.

35 தண்ட வகைகளைக் கூறுகின்ருர் ; ஆறுமுறை தடியாற் புடைத்தல் ஒருவகைத் தண்டமாம்.

36 இரு கைகளையுஞ் சேர்த்துப் பின்புறமாகக் கட்டுதலும், தலையுடன் கைகளைச் சேர்த்துக் கட்டுதலும் எனக் கட்டுதல் இருவகைப்படும் என்பர்.

37 மூக்கில் உப்பு நீரை ஊற்றுதல் என்பது.

38 மேற்கூறிய நான்கு விதமான தொழிற்றண்டம் தொன்று தொட்டு உலகத்தாராற் செய்யப்படுவன என்பது கருத்து.

39 மேற்கூறிய நான்குவகைத் தண்டமேயன்றி, வேறு பதினன்கு வகைத் தண்டவிதி கூறுகின்ருர்.

40 இரு கயிறுகளால் கால்களிரண்டையுஞ் சுற்றிக் கட்டுதல் ஒரு வகை. அவற்றுடன் தலையையும் சேர்த்துக் கட்டுதல் பிறிதொரு வகை.

41 இடது கையையும் இடது காலையும் பின்புறத்திற் சேர்த்துக் கட்டுதல் ஒன்றும் வலது கையையும் காலையும் அவ்வாறு பிணைத்தல் மற்ருென்றுமென விருச்சிகபந்தம் இருவகையாம் ; விருச்சிகம்—தேள். பந்தம்—கட்டு.

42 இரு கையையும் ஒன்று சேர்த்துக் கட்டி மேலே நேராகத் தொங்க விடுதல் ஒன்றும், இரு காலையும் சேர்த்துக் கட்டித் தலைகீழாகத் தொங்க விடுதல் மற்ருென்றுமாக உல்லம்பநம் இருவகையாம். இவற்றைக் கோதண்டமென வழங்குப.

[43]கையில் ஊசியேற்றுதல், [44]இயவாகுவைக் குடிப்பித்தல், விரலின் ஒரு கணுவைக் கொளுத்துதல், நெய்யைக் குடிப்பித்து ஒரு நாள் [45]வெதும்பச் செய்தல், குளிர்கால இரவில் [46]புல்லின்மேற் படுக்கச் செய்தல் என்னுமிவை [47]பதினெட்டும் [48]தீச்செயற் குரியன வாகும்.

[49]அதன் கருவி, [50]அளவு, [51]படை, [52]வைப்புமுறை [53]துணிபு என்னுமிவற்றைக் [54]'கரபட்டம்' என்னும் நூலிலிருந்து அறிக.

ஒரு நாள் இடைவிட்டு ஒவ்வொரு [55]தொழிலையும் புரியச் செய்தல் வேண்டும்.

---

43 கை நகக் கண்களில் ஊசியால் குத்துதல் என்பது.

44 ஆறு மடங்கு நீரில் பக்குவஞ் செய்யப்பட்ட ஒருவித திரவப் பொருளை 'இயவாகு' என்ப; இதனைக் குடித்தோர் நீர்க்கடுப்பால் துன்புறுவர். இதைக் குடிக்கச் செய்தலால் சிறுநீர் வெளிப்படாவாறு தடைசெய்து துன்புறுத்தல் ஒருவகைத் தண்டமாம்.

45 வெயிலிலாதல் நெருப்பாலாதல் ஒருநாள் முடியத் துன்புறுத்தல் என்பது.

46 நீரினல் நனைக்கப்பெற்ற புல்லின்மேற் படுத்திருக்கச் செய்தல் என்பது.

47 முன்னர்க் கூறப்பட்ட நான்கு வகையோடு ஈண்டுக் கூறப்பட்ட பதினன்கும் சேரப் பதினெட்டு வகையாயின என்று உய்த்துணர்தல் வேண்டும்.

48 தீச்செயற்குரிய தண்டவிதிகளாம் என்பது கருத்து.

49 அதன் கருவி—மேற்கூறப்பட்ட தொழிற் றண்டத்திற்குரிய கருவிகளாகிய கயிறு முதலியன.

50 அளவு—தடி கசை முதலியவற்றின் நீளம் முதலியன.

51 படை—பிரம்பு புன்கம் வளார் முதலியன.

52 தண்டிக்கத்தக்கவனை எந்நிலையில் வைத்தல் வேண்டும் என்பதற்குரிய முறை என்பது.

53 துணிபு—அவரவருடைய உடல் நிலைக்குத் தக்க தண்டவிதியைத் துணிதல்.

54 இந்நூல் களவைப் பற்றிய விவரங்களையும், அதற்குரிய தண்டவிதி முதலியவற்றையும் கூறுவது. சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் இதனைக் 'கரவட நூல்' என வழங்குவர்.

55 தொழில்—ஈண்டுக் கடுந்தொழில்.

[56]முன்னைய [57]செயலுடையவன், [58]உறுதி கூறிக் கவர்பவன், [59]பொருட் பகுதியுடன் காணப்பட்டவன், [60]செயலாலாதல் உருவத்தாலாதல் பிடிக்கப்பட்டவன் அரசப் பொருளை மறைப்பவன், [61]செயலால் கொல்லத் தக்கவன் என்னுமிவர்களுக்கு அரசன் கட்டளையால் [62]ஒருசேரவோ தனித் தனியாகவோ மீண்டும் மீண்டுமோ [63]தொழில்புரிவித்தல் வேண்டும்.

[64]அந்தணன் எவ்வகைக் குற்றத்திற்காகவும் [65]துன்புறுத்தத் தக்கவனல்லன்.

[66]விலக்குதற் குறியீடாக அவனது நெற்றியில் [67]குற்றப் புள்ளியிடப்படும்.

---

56 இதுவரை பொது விதி கூறப்பட்டது; இனிச் சிறப்புவிதி கூறத் தொடங்குகின்றார்.

57 செயல்—களவு முதலிய தீச்செயல்,

58 இன்னானுடைய இன்ன பொருளைக் கவர்வேன் என்று சூளுறவு செய்து கவர்பவன் என்பது.

59 இழக்கப்பட்ட பொருளின் ஒரு பகுதியோடு காணப்பட்டவன் என்பது.

60 மாறான வழியாற் புகுதல் வெளிவருதல் கன்னமிடுதல் முதலிய செயல் புரியுங்கால் பிடிக்கப்பட்டவன் என்றும், களவு செய்த பொருளை வைத்திருக்குங்கால் பிடிக்கப்பட்டவன் என்றுங் கொள்க.

61 பெருங்குற்றஞ் செய்தவன் என்பது.

62 எல்லாத் தண்டங்களையும் ஒருவனுக்கே ஒன்றுசேர்த்து விதித்தல் என்பது.

63 உயிர் நீங்கும் வரையில், விதித்த தண்டத்தையே திரும்பத் திரும்ப விதிக்கும் ஆயுள் தண்டனை என்பது; இத்தண்ட விதிகள் அந்தணரொழிந்த அரசர் முதலிய ஏனையோர்க்கென்ப.

64 பார்ப்பனர்க்குரிய விதி முறையைக் கூறுகின்றார்.

65 கொலை, தடியாற் புடைத்தல் முதலிய தண்ட முறையைக் கைக்கொள்வதால் துன்புறுத்தத் தக்கவனல்லன் என்பது கருத்து.

66 எவ்விதத் தண்டத்தை அவர்க்கு விதித்தல் வேண்டும் என்று வினவியபோது விடை கூறுகின்றார்; சுற்றத்தார் அவனியல்பறியாது திருமணம் முதலிய தொடர்பை அவனுடன் வைத்துக்கொள்ளாமல் அவனை விலக்கி வைக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக என்பது.

67 குற்றப் புள்ளி—இவன் தீச்செயல் புரிந்தமை காரணமாகத் தண்டனை யடைந்தவன் என்பதற்குரிய அடையாளம்,

[68]களவிற்கு நாயும், மக்கள் கொலைக்குக் கபந்தமும், ஆசிரியன் இல்லிற் றவறு செய்தானுக்குப் பெண்குறியும், கள் குடித்தலுக்குக் கட்கொடியும் [69]ஆம்.

சுலோகம்

அரசன், தீச்செயல் புரிந்த பார்ப்பனனுக்குக் குறியிடுதலால் காயத்தைச் செய்து [70]பறைசாற்றி நாட்டை விட்டு வெளியேற்றுதல் அல்லது ஆகரத்தில் வசிக்கச்செய்தல் என்னுமிவற்றைச் செய்தல்வேண்டும்.

நான்காம் அதிகரணம் எட்டாம் பிரகரணம்
'சொற் செயல்களால் வினுதல்' என்னும்
எண்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[68] பல்வேறு குற்றத்திற்குத் தக, தண்டவேறுபாடு கூறுகின்றார்.

[69] களவு முதலிய குற்றம் புரிந்தவனுடைய நெற்றியில் நாய் முதலியவற்றின் உருவங்களை அடையாளமாக உண்டுபண்ணுதல் தண்டமாம் என்பது கருத்து.

[70] 'இன்னன் இவ்விதத் தீச்செயல் புரிந்தான்' என்று நகரம் கிராமம் முதலிய இடங்களிலுள்ளோர்க்குப் பறைசாற்றி யறிவித்தல் என்பது.

நான்காம் அதிகரணம்—சிறுபகை களைதல்

ஒன்பதாம் பிரகரணம்—[1]அதிகாரிகளால் தீங்குநேராமற் காத்தல்

எண்பத்தாரும் அத்தியாயம்

நாட்டு வருவாய்த் தலைவன், சிறுபகை களைவோன் என்னும் இவர்கள் [2]முன்னர்த் [3]தலைமை வினையாளரையும் அவர்க்குட் பட்ட வினையாளரையும் நியமித்தல் வேண்டும்.

[4]ஆகரம் [5]திண்மைப்பொருள் என்னும் இவற்றின் தொழிற் சாலையிலிருந்து திண்மைப்பொருள் மணி இவற்றைக் கவர்பவ னுக்குக் [6]கலப்பற்ற கொலை தண்டமாம்.

[7]நொய்மைப் பொருட் டொழிற்சாலையிலிருந்து [8]நொய்மைப் பொருள் உபகரணப் பொருள் என்னும் [9]இவற்றையாயின் பூர்வ சாகசம் தண்டமாம்.

86-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 அதிகாரிகள்—தலைமை வினையாளரும் அவர்க்குட்பட்ட வினையாளரும் ஆவர். தீங்கு—குடிகளைத் துன்புறுத்தல், பொருள் கவர்தல் முதலியன. பொருட்டோற்றத்திற்குரிய இடங்களில் பொருளைப் பிறர் கவர்ந்து கொள்ளாதபடி புரத்தல் என்றும், அவ்விடங்களிலுள்ள வருவாய்த்தலைவன் முதலிய அரசியல் வினைஞரால் பொருள் முதலியவை கவரப்படாவாறு பாதுகாத்தல் என்றும் பொருள்கொள்க. நாடு நகரங்களிலுள்ள மக்கட்குக் கள்வர் முதலியோரால் பொருள் கவர்தல் ஏற்படாவாறு விதிமுறை கூறப் பட்டது. இப்பிரகரணத்தால் அரசனது பொருளைக் கவர்பவருக்குத் தண்ட விதி முதலியவை கூறப்படுகின்றன. இதனாற் பிரகரண இயைபுண்மை யறிக.

2 தம் தொழில்களை ஏற்றுச் செயல்புரிதற்கு முன்னர் என்பது.

3 கோபன் தானிகன் முதலிய தலைமை வினையாளரையும், அவர்க்குட் பட்டுத் தொழில் புரியும் வினையாளரையும் நியமித்தல்வேண்டும் என்க.

4 ஆகரத் தொழிற்சாலை—மணி பொன் வெள்ளி முதலியவற்றின் தொழிற்சாலை.

5 திண்மைப் பொருள்—சந்தனம் அகில் முதலியன.

6 கலப்பற்ற—பிற தண்டஞ் சேராத.

7 சீரகம் ஓமம் முதலியவை தோன்றும் இடங்களிலிருந்து என்பது.

8 பஞ்சு முதலிய பொருட் டொழிற்சாலையிலிருந்தென்பது.

9 இவற்றையாயின்—இவற்றைக் கவரின்.

[10]விலைப்பண்ட நிலங்களினின்றும் [11]ஒரு மாடம் முதல் [12]காற்பணம் வரை விலையுள்ள அரசவிலைப் பண்டத்தைக் கவர்பவனுக்குப் பன்னிரண்டு பணம் தண்டமாம். [13]அரைப்பணம் வரை விலையுள்ளதாயின் இருபத்துநான்கு பணமும் முக்காற்பணம் வரை விலையுள்ளதாயின் முப்பத்தாறு பணமும் ஒருபணம் வரை விலையுள்ளதாயின் நாற்பத்தெட்டுப் பணமும் இரண்டுபணம் வரை விலையுள்ளதாயின் [14]பூர்வசாகசமும் நான்குபணம் வரை விலையுள்ளதாயின் [15]மத்தியமும் எட்டுப்பணம் வரை விலையுள்ள தாயின் [16]உத்தமமும் பத்துப்பணம்வரை விலையுள்ளதாயின் [17]கொலையும் ஆம்.

உணவுப்பொருள் விலைப்பண்டம் குப்பியம் படைக்கலம் என்னும் இவற்றின் நிலையத்திலிருந்து [18]அரைமடங்கு விலையுள்ள குப்பியம் பண்டம் உபகரணம் என்னும் இவற்றைக் கவர்ந்தவனுக்கு முற்கூறியவையே தண்டமாம்.

கருவூலம், பண்டசாலை, அக்கசாலை என்னும் இவற்றிலிருந்து (கவரப்படும் பொருள் முற்கூறியவற்றின்) [19]நான்கிலொரு கூறு

---

[10] சிரகம் ஓமம் முதலிய விலைப்பண்டங்கள் தோன்றும் இடங்களினின்றும் என்பது.

[11] ஒரு மாடத்திலிருந்து காற்பணம் வரை விலையுள்ள பண்டத்தைக் கவர்பவனுக்கு இத்தண்டம் என்பது. பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கருத்தாதலறிக.

[12] காற்பணம்—நான்கு மாடம்.

[13] காற்பணத்திற்கு மேல் அரைப்பணம் வரை விலையுள்ள பண்டத்தைக் கவரின் இருபத்துநான்கு பணம் தண்டம் என்பது கருத்து. பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[14] பூர்வசாகச தண்டமும் என்பது.

[15] மத்தியமம்—மத்தியமசாகச தண்டம்.

[16] உத்தமமும்—உத்தமசாகச தண்டமும்.

[17] கொலையும் தண்டமாம் என்பது கருத்து.

[18] அரை மடங்கு—ஒரு மாடம் முதலியனவாக மேற் கூறப்பட்ட விலையின் அரைமடங்கு ; அத்துணை விலையுள்ள பொருளைக் கவர்ந்தவனுக்குப் பன்னிரண்டு பணம் முதலாக மேற்கூறப்பட்டவை தண்டங்களாம் என்பது கருத்து.

[19] ஒரு மாடம் முதலியனவாக மேற்கூறப்பட்ட விலையளவின் நான்கிலொரு கூறுன கால்மாடம் விலையுள்ள பண்டங்களைக் கவர்ந்தவனுக்குப் பன்னிரண்டு பணம் முதலியனவாக மேற்கூறப்பட்ட தண்டத்தின் இருமடங்கான இருபத்துநான்கு பணம் முதலியன தண்டமாம் என்பது கருத்து.

விலையுள்ளதாயின் முற்கூறப்பட்ட தண்டத்தின் இருமடங்கு தண்டமாம்.

[20]திருட்டைக் கற்பித்த விடத்துச் சித்திர வதமாம். [21]அரசற்குரிய ஏனையவிடங்களிலும் இவ்வாறேயாம்.

[22]வெளியிடங்களுள் வயல் களம் இல்லம் அங்காடி என்னும் இவற்றிலிருந்து ஒரு மாடத்திற்குமேல் காற்பணம்வரை விலையுள்ள குப்பியம் விலைப்பண்டம் உபகரணப் பொருள் என்னும் இவற்றைப் பகலில் மறைவாகக் கவர்ந்தவனுக்கு மூன்றுபணம் தண்டமாதல் [23]பசுவின் சாணத்தால் உடல் முழுதும் பூசிப் பறை சாற்றுவித்தலாதல் அமையும். அரைப்பணம்வரை விலையுள்ளவற்றிற்கு ஆறு பணமாதல் பசுவின் சாணத்தாலாகிய சாம்பல் பூசிப் பறைசாற்றுதலாதல் (தண்டம்) ஆம். முக்காற் பணம் வரை விலையுள்ளவற்றிற்கு ஒன்பது பணமாதல், பசுவின் சாணச் சாம்பலைப் பூசிப் பறைசாற்றுதலாதல் [24]சட்டி மாலையிடுதலாதல் (தண்டம்) ஆம். ஒருபணம் வரை விலையுள்ளவற்றிற்குப் பன்னிரண்டு பணமாதல் மொட்டையடித்து வெளியேற்றுதலாதல் ஆம். இரண்டு பணம்வரை விலையுள்ளவற்றிற்கு இருபத்துநான்கு பணமாதல் [25]மழித்துச் சிறு செங்கலாற் புடைத்து வெளியேற்றுத

---

20 அரசியற்றொழில் புரிபவர், தாமே களவு செய்துவிட்டுக் கள்வர் செய்ததாகக் கூறின், அவர்களைச் சித்திரவதை செய்தல்வேண்டும் என்பது கருத்து.

21 ஆகரம் முதலியனவாக மேற் கூறியவை போன்ற, அரசனுக்குரிய இடங்களிலிருந்து பொருளைக் கவர்ந்தவனுக்கும் மேற் கூறிய தண்ட விதியால் விதி கூறியபடியாம் என்பது கருத்து.

22 வெளியிடங்கள்—அரசனுக்குரியவல்லாத இடங்கள்; நாடு நகரங்களிலுள்ள மக்களைச் சார்ந்தவிடங்கள்.

23 பொருட்டண்டத்தை யிறுக்க வியலாதவனுக்கு இத்தண்டம் என்க.

24 பசுவின் சாணச் சாம்பல் இல்லாதவிடத்துத் தண்டவிதி கூறுகின்றார்; உடைத்த சட்டிமாலையைக் கழுத்திலிட்டுத் தெருக்களில் திரியச் செய்தல் என்பது.

25 ஈண்டும் பொருட்டண்டம் இறுக்காதவிடத்து மொட்டையடித்துச் செங்கலாற் புடைத்து நாட்டைவிட்டு வெளியேற்றுதல் என்க. முப்பத்தாறு பணம் முதற்கொண்டு ஆயிரம் பணம் வரை தண்டமாகக் கூறும் பின்னுள்ள பொருட்டண்டத்தை இறுக்கவியலாதவிடத்தும் மழித்துப் புடைத்து வெளியேற்றுதல் (தண்டாபூப நெறியால்) கூறுமலே பெறப்படும் என்ப.

லாதல் ஆம். நான்குபணம்வரை விலையுள்ளவற்றிற்கு முப்பத் தாறு பணமும் ஐந்துபணம்வரை விலையுள்ளவற்றிற்கு நாற்பத் தெட்டுப் பணமும் பத்துப்பணம்வரை விலையுள்ளவற்றிற்குப் பூர்வசாகச தண்டமும் இருபதுபணம்வரை விலையுள்ளவற்றிற்கு இருநூறும் முப்பது பணம்வரை விலையுள்ளவற்றிற்கு ஐந்நூறும் நாற்பது பணம்வரை விலையுள்ளவற்றிற்கு ஆயிரமும் ஐம்பது பணம்வரை விலையுள்ளவற்றிற்குக் கொலையும் (தண்டம்) ஆம்.

பகலிலாதல் இரவிலாதல் [26]இடையாமக் காவலரிடமிருந்து [27]அரைமடங்கு விலையுள்ளவற்றை வலிந்து கவரின் முற்கூறிய தண்டங்களின் இருமடங்காம். பகலிலாதல் இரவிலாதல் படைக் கலங்களை வைத்துக்கொண்டு [28]நான்கிலொரு கூறு விலையுள்ள வற்றை வலிந்து கவர்பவனுக்கு [29]முற்கூறியவையே தண்டமாம்.

குடும்பி [30]அத்தியக்ஷன் [31]தலைவன் வருவாய்த் தலைவன் என்னு மிவர்கள் வஞ்சகமான கட்டளை இலச்சினை என்னும் இவற்றைச் செய்யின் [32]பூர்வம் மத்தியமம் உத்தமம் கொலை என்னுமிவை யாதல் குற்றத்திற்கேற்பவாதல் தண்டமாம்.

[33]அறங்கூறவையத்தான் வழக்காளியை [34]உறுப்புக்களாலும் சொற்களாலும் அச்சுறுத்துதல், வெளியேற்றுதல், வாளாவிருக்கச்

---

26 இடையாமத்தில் காவற்றொழில் புரியும் பணியாளரிடமிருந்தென் பது.

27 'ஒரு மாடத்திற்குமேல் காற்பணம் வரை' என்பது முதலாகக் கூறப்பட்ட விலையின் அரைமடங்கு விலையுள்ள பண்டத்தைக் கவரின், மூன்று பணம் முதலாக முற்கூறப்பட்ட தண்டத்தின் இருமடங்கு தண்ட மாம் என்பது கருத்து.

28 நான்கிலொரு கூறு—ஒரு மாடத்தின் நான்கில் ஒரு பகுதி; கால் மாடம்.

29 முற்கூறியவை—மூன்று பணம் முதலியனவாகக் கூறப்பட்டவை.

30 அத்தியக்ஷன்—பொற்றொழிற்றலைவன் முதலியோர்.

31 தலைவன்—கிராமத் தலைவன்.

32 குடும்பி முதலிய நால்வருக்கும் முறையே பூர்வசாகசம் முதலிய நான்கும் தண்டமாம் என்பது கருத்து.

33 அறங்கூறவையத்தார், நெறி தவறுமிடத்து அவர்க்குத் தண்டவிதி கூறுகின்றார்.

34 தலையசைத்தல், விரலைக் காட்டுதல் முதலியன கொண்டு அச்சுறுத்து தல் உறுப்புக்களால் அச்சுறுத்தலாம்.

செய்தல் என்னுமிவற்றைச் செய்யின் அவனுக்குப் பூர்வசாகச தண்டம் விதித்தல்வேண்டும். [35]கடுஞ்சொல்லாயின் இருமடங்காம்.

[36]வினவத் தக்கவனை வினவாமை, [37]வினவத் தகாதவனை வினவுதல், [38]வினவி விடுத்தல், [39]சொல்லிக்கொடுத்தல், [40]ஞாபகப் படுத்துதல், [41]முற்பகுதியைச் சொல்லுதல் என்னுமிவற்றைச் செய்யின் [42]அவனுக்கு மத்தியம சாகசம் தண்டமாம். [43]இன்றி யமையாத சான்றுவானை வினவாமை, அவ்வாறில்லாத சான்று வானை வினவுதல், சான்றின்றியே பொருளைத் துணிதல், [44]வஞ்சகத் தால் குற்றப்படுத்தல், [45]காலந் தாழ்த்தலால் சோர்வுற்றவனை வெளியேற்றுதல், முறையாகவுள்ள சொற்களை முறையற்றன எனச்சொல்லுதல், சான்றுவார்க்கு அறிவுத்துணைபுரிதல், துணிந்து முடிவுற்ற பொருளை [46]மீண்டும் ஏற்றல் என்னுமிவற்றைச் செய்யு மவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம். [47]மீண்டும் குற்றம் செய் யின் இருமடங்காதல் பதவியினீக்குதலாதல் ஆம்.

---

35 வழக்காளிகளைக் கடுஞ்சொற்கூறி யச்சுறுத்தின் முற்கூறிய தண்டத்தின் இருமடங்கு தண்டமாம் என்பது கருத்து.

36 வினவத்தக்க சான்று கூறுவோனை என்பது.

37 வினவத் தகாதவன்—வழக்காளியின் உறவினன் முதலியோர்.

38 வினவிற்கு மாற்றங் கூறுத நிலையில் பொருட்படுத்தாது விடுத்தல் என்பது.

39 கூறவேண்டியவற்றைக் கற்பித்தல் என்பது.

40 கூறவேண்டியவற்றை மறந்த நிலையில் ஞாபகப்படுத்துதல் என்பது.

41 எஞ்சிய பகுதியைப் பூர்த்தி செய்துகொள்ளுதற்குத் தக ஒரு வாக்கியத்தின் முற்பகுதியைக் கூறுதல் என்பது.

42 அவன்—அறங்கூறவையத்தான்.

43 துணியப்படவேண்டிய பொருளின் துணிவுபற்றி, வினவப்பட வேண்டியவனை வினவாமை என்பது.

44 சான்று கூறுபவன் உண்மை கூறியவிடத்தும் பொய்மையாகக் (வஞ்சக முறையில்) குற்றஞ்சாட்டுதல் என்பது.

45 காரணமின்றி அறங்கூறவையத்தானே காலந்தாழ்த்தி, அதன் காரணமாகச் சோர்வுற்றவனை வெளியேற்றிவிடுதல் என்பது.

46 துணியப்பட்ட பொருளையே துணிதற் பொருட்டு மீண்டும் ஏற்று ஆராய்தல் என்பது.

47 மேற்கூறிய குற்றத்தை ஒரு முறை செய்து தண்டனையடைந்த பின்னர் மறுமுறையுங் குற்றஞ் செய்யும் அறங்கூறவையத்தானுக்கு முற் கூறிய தண்டத்தினிருமடங்கு தண்டமாதல், பதவியினின்றும் விலக்கப் படுதலாதல் அமையும் என்க.

[48]கூறியவற்றை வரையாமை, கூருதவற்றை வரைதல், முரணுகவுள்ளதை நேர்மையுள்ளதாக வரைதல், நன்கு கூறிய வற்றை [49]மாற்றி வரைதல், பயன்விளைவை [50]மாறுபடச் செய்தல் என்னுமிவற்றைச் செய்யும் எழுத்தாளனுக்குப் பூர்வசாகசமாதல் குற்றத்திற்கேற்பவாதல் தண்டமாம்.

அறங்கூறவையத்தானுதல் சிறுபகை களைவோனுதல் தண்டிக்கத் தகாதவனுக்குப் பொன்னைத் தண்டமாக விதித்தால் (அவர்களுக்கு) அத்தண்டத்தின் [51]இரு மடங்கு தண்டமாம். [52]குறைவாகவாதல் மிகையாகவாதல் விதித்தால் முறையே குறைந்தவற்றினும் மிகுந்தவற்றினும் எண்மடங்கு தண்டமாம். [53]உடற்றண்டத்தை விதிப்பின் 'உடற்றண்டமாதல் [54]ஈட்டுப் பொருளின் இருமடங்காதல் தண்டமாம். [55]உண்மைப் பொருளை மறைத்தல், பொய்ப் பொருளைக் கற்பித்தல் என்னுமிவற்றைச் செய்யின் அதன் எண்மடங்கு தண்டம் இறுத்தல் வேண்டும்.

அறங்கூறவையத்தாரால் துணியப்பட்டவனைக் [56]காவற்

---

[48] எழுத்தாளனுக்குத் தண்டவிதி கூறுகின்றூர்.

[49] மாற்றி—முரண்பட்டதாக.

[50] மாறுபட வரைந்தமை காரணமாகப் பயனை முரண்படச் செய்தல் என்பது.

[51] பொன்னைத் தண்டமாக விதிக்கக் கூடாதவனுக்கு அத் தண்டத்தை விதித்த அவர் விதிக்கப்பட்ட தண்டத்தினிருமடங்கு தண்டம் இறுக்கக் கடவர் என்பது கருத்து.

[52] முறையாக விதிக்கப்படவேண்டிய தண்டத்தைக் குறைவாகவாதல் மிகையாகவாதல் விதித்தால், அத்தண்டத்தை விதித்தவன் குறைந்த வளவி னும் மிகுந்த வளவினும் எண்மடங்கு தண்டம் இறுக்கக்கடவன். என்பது கருத்து.

[53] கையைத் துணித்தல் முதலிய தண்டத்தைத் தண்டிக்கத் தகாதவன் பால் விதித்தவன் 'கையைத் துணித்தல்' முதலிய அத்தண்டத்தை யடை யக் கடவன் என்பது கருத்து.

[54] உறுப்புத் தண்டத்திற்கு ஈடாக இறுக்கக் கடவ பொருட்டண்டத்தி னிருமடங்கு தண்டமாவது விதிக்கப்படலாம் என்பது கருத்து.

[55] உண்மையான எத்துணைப் பொருள் மறைக்கப்பட்டதோ, பொய் யான எத்துணைப் பொருள் கற்பிக்கப்பட்டதோ அப்பொருளின் எண் மடங்கு தண்டம் என்பது.

[56] காவற்கூடம்—குற்றம் செய்தோரை விசாரித்துத் துணியும்வரை வெளிச்செல்லவொட்டாது காவலில் வைக்கும் தனியிடம்,

கூடத்திலிருந்து [57]வெளியே இயங்கச் செய்தல், காவற்கூடத்தி லிருந்து விடுவித்தல், காவற்கூடம் சிறைச்சாலைகளில் படுக்கை இருக்கை உணவு நீர் மலங்கழிக்குமிடம் என்பவற்றையளித்தல், என்னுமிவற்றைச் செய்பவனுக்கும் செய்விப்பவனுக்கும் [58]மும் மூன்று பணம் மிகையாகத் தண்டம் விதித்தல்வேண்டும்.

காவற்கூடத்திலிருந்து எதிர் வழக்காளியை வெளியேற்றுபவ னுக்கும் [59]வெளியேறச் செய்விப்பவனுக்கும் மத்தியமசாகசமாதல், [60]எதிர் வழக்காளி பொருளாதல் தண்டமாம். [61]சிறைச்சாலையி லிருந்தாயின் பொருளனைத்துமாவது கொலையாவது தண்டமாம்.

காவற்கூடத் தலைவனுக்கு அறிவியாது காவற்பட்டவனை [62]இயங்கச் செய்பவனுக்கு இருபத்துநான்கு பணம் தண்டமாம். [63]தொழில் புரியச் செய்பவனுக்கு [64]இருமடங்காம். வேற்றிடத்தை யடைவிப்பவனுக்கும் உணவு பருகுதல் இவற்றைத் தடை செய்பவ னுக்கும் தொண்ணூற்றாறு பணம் தண்டமாம். [65]துன்புறுத்துதல் கைக்கூலி கொடுக்கச் செய்தல் என்னுமிவற்றைச் செய்பவனுக்கு மத்தியமசாகசமும் கொல்பவனுக்கு [66]ஆயிரமும் தண்டமாம்.

---

57 காவற்பட்டவனைக் கைக்கூலிபெற்றுக் காவற்கூடத்திலிருந்து வெளியே செல்ல அநுமதித்தல்.

58 முதற் குற்றத்திற்கு மூன்று பணம், அடுத்த குற்றத்திற்கு ஆறு பணம் என்ற முறையில் முன்னதைவிடப் பின்னதற்கு மும்மூன்று பணம் மிகையாகத் தண்டம் விதித்தல் வேண்டுமென்பது கருத்து.

59 வெளிப்படுங்கால் தடைசெய்யாது இருந்தமை பற்றி வெளியேறச் செய்தவன் என்று கொண்டு, வெளியேற்றுபவனுக்குரிய மத்தியமசாகச தண்டம் இறுக்கக்கடவன் என்பது கருத்து.

60 வழக்கில் தோல்வியுறின் எதிர்வழக்காளி கொடுக்கக் கடவ பொருள்.

61 சிறையிலிருந்து எதிர்வழக்காளியை வெளியேற்றினனாயின், அவ னது பொருளனைத்தையும் கவர்தலோ, அவனைக் கொலை செய்தலோ அவ னுக்குத்தண்டம் என்பது கருத்து.

62 இயங்குதல்—ஈண்டுச் சிறைக்கு வெளியிற் சென்று சஞ்சரித்தல்.

63 ஈண்டும் ‘தலைவனுக்கு அறிவியாது’ என்பதைக் கூட்டுக.

64 நாற்பத்தெட்டுப்பணம் என்பது.

65 துன்புறுத்துதல்—அடித்தல் முதலியன.

66 ஆயிரம் பணம் என்பது.

விலக்குக் கொள்ளப்பட்டவள், அடிமைப் பெண், ஈட்டுப் பெண் என்னும் இவர்களைக் காவற்கூடத்தில் கூடுபவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். கள்வன், [67]கலகம் விளைவிப்பவன் ஆகிய இவர்களுடைய மனைவியரையாயின் மத்தியமசாகசம் தண்டமாம். காவற்கூடத்திலுள்ள குலமகளிரையாயின் உத்தம சாகசம் தண்டமாம். [68]ஆண்டே காவற்பட்டவனுக்காயின் கொலையாம். குலமகளிரைக் கூடின தலைவனுக்கும் [69]அதே தண்டம் என்றறிக. [70]அடிமைப் பெண்ணுயின் பூர்வசாகசம் தண்டமாம்.

காவற்கூடத்தைத் தகர்த்தலின்றி வெளியேற்றுபவனுக்கு மத்தியமமும், [71]தகர்த்தால் கொலையும், [72]சிறைச்சாலையிலிருந்தாயின் பொருளனைத்தையும் கவர்தலும் கொலையும் (தண்டம்) ஆம்.

சுலோகம்

அரசன் முதலில் அரசியல் வினையாளரை இங்ஙனம் தண்டத்தால் தூயராக்கவேண்டும். தூயவரான அவர்கள், நாடு நகரங்களிலுள்ளாரைத் தண்டத்தால் தூய்மைப்படுத்தல் வேண்டும்.

நான்காம் அதிகரணம் ஒன்பதாம் பிரகரணம்
'அதிகாரிகளால் தீங்கு நேராமற் காத்தல்' என்னும்
எண்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

[67] தன்னுடன் சண்டை செய்பவன் என்பது.

[68] காவற்பட்டிருப்பவனே அங்குள்ள மேற்கூறிய மகளிரைக் கூடுமிடத்து, அவனுக்குக் கொலைத் தண்டமாம் என்பது கருத்து.

[69] அதே தண்டம்—கொலைத்தண்டம்.

[70] தலைவன் அடிமைப் பெண்ணுடன் கூடுமிடத்துப் பூர்வசாகசதண்டம் விதித்தல் வேண்டும் என்பது.

[71] காவற்கூடத்தைத் தகர்த்து உள்ளிருக்கும் காவற்பட்டவனை வெளியேற்றின் என்பது.

[72] சிறையிலிருந்து வெளியேற்றின் என்பது.

நான்காம் அதிகரணம்—சிறுபகை களைதல்

பத்தாம் பிரகரணம்—[1]உறுப்பொன்று களைதற்கொத்த பொருட்டண்டம்

எண்பத்தேழாம் அத்தியாயம்

புண்ணியத் தலங்களில் [2]கவர்தல் [3]முடிச்சவிழ்த்தல் [4]மேற்கூரையைத் துளைத்தல் என்னுமிவற்றை முதன் முறை செய்பவனுக்கு [5]விரலைத் துணித்தலாதல், ஐம்பத்து நான்கு பணமாதல் தண்டமாம். இரண்டாம் முறையாயின் [6]வழக்கைத் துணித்தலாதல் நூறுபணமாதல் தண்டமாம். மூன்றாம் முறையாயின் வலக்கையைத் துணித்தலாதல், [7]நானூறுதல் தண்டமாம். நான்காம் முறையாயின் [8]விரும்பியவாறு கொலையாம்.

87-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உறுப்பொன்று—கை கால் விரல் காது முதலிய உறுப்பினுள் ஒன்று. குற்றஞ்செய்தல் காரணமாக இவற்றுள் ஒன்றைத் துணித்தலைத் தண்டமாக விதிப்பின், அத்தண்டத்திற்கு ஈடாக இறுக்கப்படும் பொருட்டண்டத்தைப் பற்றி இப்பிரகரணத்தில் கூறுவாம் என்பது கருத்து; முன்னைய பிரகரணத்தில் 'உடற்றண்டத்தை விதிப்பின் உடற்றண்டமாதல் ஈட்டுப் பொருளின் இருமடங்காதல் தண்டமாம்' எனக் கூறப்பட்டது. எந்தக் குற்றங் காரணமாக உடற்றண்டம் விதிக்கப்படும், எங்கெந்த உறுப்புக்கு விதிக்கப்படும்? அதற்கு ஈட்டுப்பொருள் எத்துணை முதலியன கூறுவதற்காக இப் பிரகரணம் தொடங்கப்படும். இதனுற் பிரகரண இயைபு புலனாதலறிக.

[2] ஆடை முதலியவற்றைக் கவர்ந்துகோடல் என்பது.

[3] பிறருக்குரிய மூட்டை முடிச்சுக்களில் உள்ள பொருளைக் கவர்தல்; கை முதலிய உறுப்புக்களின் இணைப்பைத் தகர்த்தல் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

[4] வீட்டின் மேற்கூரை வழியாக உட்புகுதற்குரிய ஒரு வழியை மேற்கூரையில் உண்டுபண்ணுதல் என்பது.

[5] விரல்—ஈண்டுப் பெரு விரலும் சிறு (சுண்டு)விரலும் என்ப.

[6] வழக்கு என்பது ஈண்டு இலக்கணையால் வழக்குத் தொழிற்கு இன்றியமையாத விரல்களைக் குறித்து நிற்றலின் எல்லா விரல்களையும் துணித்துவிடல் எனக் கருத்துரைப்பர்.

[7] நானூறு—நானூறு பணம்; பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[8] துன்பமின்றிக் கொல்லுதல், சித்திரவதை என்பவற்றுள் ஏதேனும் ஒன்று கொலைத் தண்டமாம் என்பது.

இருபத்தைந்து பணத்திற் குறைந்த விலையுள்ள கோழி கீரி பூனை ஞமலி பன்றி என்னுமிவற்றைக் களவுசெய்தல் அல்லது துன்புறுத்தல் செய்யின் ஐம்பத்துநான்கு பணம் தண்டமாதல் மூக்கின் முனையைத் துணித்தலாதல் அமையும். [9]சண்டாளர், காட்டில் வழங்குவோர் என்னுமிவர்கட்கு அரை மடங்கு தண்டமாம்.

கயிறு வலை படுகுழி என்னுமிவற்றால் தடைப்பட்ட மிருகம் பசு பறவை கொடிய விலங்கு மீன் என்னுமிவற்றைக் கவரின் [10]அவற்றையும் அத்துணைப் பொருட்டண்டத்தையும் கொடுக்கக் கடவர்.

[11]மிருகவனம் [12]மரக்காடு என்னுமிவற்றிலிருந்து விலங்குகளையும் பண்டங்களையும் கவரின் நூறு (பணம்) தண்டமாம். பச்சோந்தி, [13]விளையாட்டு விலங்கு, [14]பறவை என்னுமிவற்றைக் களவு செய்தல் துன்புறுத்தல் செய்யின் இருமடங்கு தண்டமாம்.

[15]காருகர் [16]சிற்பி இசைபாடுவோர் துறவி என்னுமிவர்களின் சிறு பண்டங்களைக் கவரின் நூறு (பணம்) தண்டமாம். பெரும் பண்டங்களையாதல், [17]பயிர்த் தொழிற்குரிய பண்டங்களையாதல் கவரின் இருமடங்காம்.

---

[9] முற்கூறிய குற்றத்தை அறநூலுணர்ச்சியில்லாத சண்டாளர் முதலியவர் செய்யின் அறியாமற் செய்த அவர்கட்கு முன்னைய தண்டத்திற் பாதி குறைக்கப்படும் என்பது கருத்து. சண்டாளர் முதலியோர்க்குரிய கோழி முதலியவற்றைக் கவர்தல் முதலியன செய்யின் இத்தண்டம் விதிக்கப்படும் என்பாருமுளர்.

[10] கவரப்பட்ட அவற்றையும் அவற்றின் மதிப்புள்ள பொருளையும் தண்டமாக இறுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[11] மிருகவனம்—அரசனுக்குரிய விலங்குகள் வாழும் காடு.

[12] சந்தனம் முதலிய விலைப்பண்டங்களையுடைய காடு என்பது.

[13] விளையாட்டு விலங்கு—புள்ளிமான் முதலியன.

[14] பறவை—கிளி முதலியன.

[15] காருகர்—பருப்பொருட்டாகிய சிற்பத்தொழில் புரிபவர்.

[16] சிற்பி—நுண்பொருட்டாகிய சிற்பத்தொழில் புரிபவர்.

[17] கலப்பை முதலியவற்றையாதல் என்பது.

அரணுள் உடன்பாடுபெருது புகுதல், [18]மதிலில் தொளை வழியாகப் பொருளை எடுத்து வெளியேறுதல் என்னுமிவற்றைச் செய்பவனுக்குக் [19]கழுத்தைத் துணித்தலாதல் [20]இருநூருதல் தண்டமாம்.

[21]பொருளுடன் கூடிய ஓடத்தையோ, சிறு விலங்குகளையோ கவர்பவனுக்கு ஒரு காலைத் துணித்தலாதல் முந்நூருதல் தண்டமாம்.

வஞ்சனையால் [22]பலகறை, காய், தோல், துணி, விரிப்பு, கவறு என்னுமிவற்றையும் [23]கைச்செயல் மாறுபாட்டையும் செய்பவனுக்கு ஒரு கையைத் துணித்தலாதல் நானூருதல் தண்டமாம்.

கள்வர், பிறர்மனை நயப்போர் என்னுமிவர்களுக்கு உதவி புரிபவனுக்கும் [24]பற்றப்பட்ட மகளிருக்கும் காது மூக்குகளைத் துணித்தலாதல் ஐந்நூருதல் தண்டமாம். [25]ஆடவர்க்கு இரு மடங்காம்.

ஒரு [26]பெருவிலங்கு, அடிமையாளன், அடிமைப் பெண் ஆகிய

---

18 மதிற்சுவரில் கன்னமிடுதல் முதலியவற்ருல் போக்குவரத்துக்குரிய வழியைச்செய்து, அதன் மூலம் அரசரது பொருளைக் கவர்ந்துகொண்டவன் என்பது கருத்து.

19 இப்பொருள்பட முதனூலில் வந்த சொல் 'காலாவயஃ' என்பது, இதற்குக் 'கால்களின் பின்புறத்துள்ள இரு நரம்பைத் துணித்துவிடல்' என்று பொருள் கூறுவர் உரையாசிரியர். அவர் கூறுமாறு 'குதிகால் நரம்பை வாங்கிவிடுதல்' என்று இக்காலத்துப் பேச்சு வழக்கில் பேசப் படுகிறது.

20 இருநூறு—இருநூறுபணம். பின்னுள்ளவற்றிற்கும் இஃதொக்கும்.

21 படைக்கலங்களுடன் கூடிய ஓடத்தை என்று கூறுவாருமுளர்.

22 பலகறை முதலியவற்றின் விளக்கத்தை 77-வது அத்தியாயக் குறிப் புக்களிற் காண்க.

23 கைத் தேர்ச்சியால் காய்வைத்தல் முதலிய செயலில் வஞ்சிப்பவன் என்பது.

24 பற்றப்பட்ட மகளிர்—வேற்ருடவனுடன் கூடுதற்கு மனமுவந்து சென்ற மகளிர்.

25 பிற மகளிரைக் கவர்ந்து அவருடன் கூடும் ஆடவர்க்கு ஆயிரம் பணம் தண்டமாம் என்பது கருத்து.

26 பெரு விலங்கு—பசு குதிரை எருமை முதலியன.

இவர்களைக் கவர்பவனுக்கும் [27]சவப்பொருளை விற்பவனுக்கும் இரு காலையும் துணித்தலாதல் அறுநூறுதல் தண்டமாம்.

உயர்ந்த வருணத்தவர், பெரியோர் ஆகிய இவர்களைக் கையாலறைதல், காலால் உதைத்தல் என்னுமிவற்றைச் செய்யினும், அரசற்குரிய ஊர்தி வாகனங்களில் ஏறினும் ஒரு கை, ஒரு கால் இவற்றைத் துணித்தலாதல் எழுநூறுதல் தண்டமாம்.

பார்ப்பனனைக் கூறிக்கொள்ளும் சூத்திரன், தெய்வப் பொருளை மறைத்துக் கவர்பவன், [28]அரசன் வெறுக்கத் தக்கதைக் கூறுபவன், [29]இரு கண்களை ஊறுபடுத்தியவன் என்னும் இவர்களுக்குக் [30]கலப்பு மையினால் குருட்டுத் தன்மையை யுண்டு பண்ணுதலாதல் எண்ணூறுதல் தண்டமாம்.

கள்வர், பிறர்மனை நயப்போர் என்பவர்களை [31]விடுவிப்பவர், அரசன் கட்டளையைக் குறைத்தும் மிகைபடவும் வரைவோர், கன்னி அடிமைப் பெண்களைப் [32]பொருள்களுடன் கவர்பவர், [33]வஞ்சகத்தொழில் புரிபவர், [34]தகாத இறைச்சியை விற்போர் என்னும் இவர்களுக்கு இடது கையினையும் இரு கால்களையும்

---

27 சவத்தின் மேல் மூடப்பட்ட ஆடை முதலியவற்றை என்பது.

28 இறத்தல், பகைப்படைத் தாக்குதல் முதலிய, பின்னர் நிகழப் போகும் தீமைகளை அரசனுக்கு முன் அறிவிக்கும் சோதிடர் முதலியவர்கட் கென்பது.

29 பிறனொருவனுடைய இரு கண்களையும் ஊறுபடச் செய்தவனுக் கென்பது.

30 கலப்பு மை—குருட்டுத்தன்மையை உண்டுபண்ணும் மருந்து கலக்கப்பெற்ற மை; அதைக் கண்ணில் தீட்டிக் குருட்டுத்தன்மையை யுண்டு பண்ணுதல் தண்டமாம் என்க.

31 காவலாளரை வஞ்சித்துச் சிறை முதலிய விடங்களிலிருந்து குற்றவாளிகளை விடுவிப்பவர் என்பது.

32 பொருள்—ஈண்டு அவர்களுடைய அணிகலன் முதலியன.

33 புகையிடுதல் பச்சிலைச் சாற்றினால் வண்ணப் பிறழ்ச்சியைச் செய்தல் முதலிய செயல்களால் கள்ளநாணயம் போலித்தங்கம் முதலியவற்றைச் செய்பவர் என்பது கருத்து.

34 தூய்மையின்மையால் உண்டார்க்கு நோயினைத் தரும் இறைச்சியை என்பது; நரி முதலியவற்றின் இறைச்சியை எனினுமாம்.

துணித்தலாதல், தொள்ளாயிரமாதல் தண்டமாம். மக்களின் இறைச்சியை விற்பின் கொலையாம்.

கடவுட்குரிய பசு, திருவுருவம், மனிதர், வயல், இல்லம், தங்கம், பொன், மணி, பயிர் இவற்றைக் கவரின் உத்தமசாகச மாதல் [35]கலப்பற்ற கொலையாதல் தண்டமாம்.

சுலோகங்கள்

1—2. சிறுபகை களைவோன், அரசனுக்கும் [36]மக்களுக்கும் [37]நடு நிலையினனாக இருந்துகொண்டு மனிதன் குற்றம் காரணம் [38]உயர்வு தாழ்வு [39]வருங்காலம் [40]நிகழ்காலம் இடம் காலம் என்னும் இவற்றை ஆராய்ந்து [41]தண்டங்களுள் தலை இடை கடையாயவற்றை விதித்தல்வேண்டும்.

நான்காம் அதிகரணம் பத்தாம் பிரகரணம்
'உறுப்பொன்று களைதற்கொத்த பொருட்டண்டம்' என்னும்
எண்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

35 கலப்பற்ற கொலை—துன்புறுத்தலின்றிக் கொல்லுதல்.

36 அமைச்சர் முதலானவர்க்குமென்பது.

37 ஒரு பக்கத்தில் சாராமல் நடுநிலையிலிருந்து என்பது.

38 உயர்வு தாழ்வு என்பன ஈண்டுக் குற்றம் செய்தவர்பாலுள்ளன என்க.

39 செய்யப்பட்ட குற்றத்தாலும் அதற்குரிய தண்டத்தாலும் பின்பு ஏற்படும் விளைவு.

40 அக்காலத்தில் விளையும் பயன்.

41 முற்கூறியவற்றை ஆராய்ந்து மூவகைத் தண்டங்களுள் ஏதேனுமொன்றை விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

நான்காம் அதிகரணம்—சிறுபகை களைதல்

பதின்மூன்றாம் பிரகரணம்—[1]சுத்த சித்திர தண்டவிதி

எண்பத்தெட்டாம் அத்தியாயம்

[2]பூசலால் ஆடவனைக் கொலை செய்யின் சித்திரவதையாம். [3]ஏழு நாட்களுக்குப்பின் இறப்பின் சுத்த வதமும், ஒரு பக்கத்துக் குள்ளாயின் உத்தமசாகசமும், ஒரு திங்களுக்குள்ளாயின் ஐந்நூறும் [4]செம்மைப்படுத்தற்குரிய செலவுமாம்.

படைக்கலத்தால் அடிப்பவனுக்கு உத்தமசாகசமும், [5]செருக்கி னலாயின் கையறையும், கோபத்தினலாயின் இருநூறும், [6]கொலை யாயின் கொலையும் தண்டமாம்.

88-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சுத்தம் சித்திரம் எனத் தண்டவிதி இருவகைப்படும். சுத்தம்—துன்பம் நிகழாவாறு கொல்லுதல். சித்திரம் — சித்திரவதை; ஊறுபடுத்திக் கொல்லுதல். முன் பிரகரணத்தில் கொலைத் தண்டத்தைப் பற்றிய விதி சிறிது கூறப்பட்டது. இன்னின்ன குற்றத்திற்கு இன்னின்ன கொலைத் தண்டம் விதித்தல் வேண்டும் என விளக்கிக் கூறும்பொருட்டு இப் பிரகரணம் தொடங்கப்படுதலின் பிரகரண இயைபுண்மையறிக.

[2] பகைமை காரணமாகக் கலகம் விளைத்துக்கொண்டு ஒருவனைக் கொலை செய்யின், கொன்றவனுக்குச் சித்திரவதை தண்டம் என்பது கருத்து.

[3] சண்டையில் படைக்கலம் முதலியவற்றுல் தாக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் இறந்துவிடின் தாக்கினவனுக்குச் சுத்தவதம் தண்டம் என்பது; பின்னையவற்றிற்கும் இவ்வாறே கருத்தாதல் அறிக.

[4] படைக்கலம் முதலியவற்றுல் உண்டான ஊறுபாடு முதலியவற்றைப் பரிகரித்தற்குரிய மருத்துவச் செலவு முதலியவற்றை அவன் தண்டமாக இறுத்தல் வேண்டும் என்பது. 'ஏழு நாட்களுக்குப்பின் இறப்பின்' என்பது முதலிய எல்லாவற்றிற்கும் இஃதொக்கும்.

[5] செருக்கு—ஈண்டு உடல்வன்மைகாரணமாயுண்டானது. அச்செருக்கி னல் அடிப்பின் அடித்தவனைக் கையால் அறைதல் தண்டமென்றுயிற்று.

[6] படைக்கலம் முதலியவற்றுல் புடைத்துக் கொலை செய்துவிடின், கொன்றவனுக்குக் கொலைத் தண்டமாம் என்பது கருத்து.

[7]அடித்தலால் கருவை வீழ்த்துபவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம். மருந்தினாலாயின் மத்தியமமாம். துன்புறுத்தலாலாயின் பூர்வசாகசம் தண்டமாம்.

ஆடவர் மகளிர் என்னுமிவர்களை வலிந்து கொலைசெய்பவன், [8]மகளிரை இணங்கிவரச் செய்பவன், [9]துன்புறுத்துபவன், [10]சூளுறவு செய்பவன், [11]கவர்பவன், [12]தகர்ப்பவன், வழியிலுள்ள [13]இல்லங்களில் களவு செய்பவன், அரசனுடைய யானை குதிரை தேர் என்னுமிவற்றிற்குத் தீங்கு விளைவிப்பவன் அல்லது இவற்றைக் கவர்பவன் ஆகிய இவர்களைக் கழுவில் ஏற்றுதல்வேண்டும்.

[14]இவர்களுக்கு [15]ஈமக்கடன் செய்பவன், (இவர்களை) வெளியேற்றுபவன் ஆகிய இவர்களும் [16]அதே தண்டத்தையாதல், உத்தமசாகச தண்டத்தையாதல் அடையக்கடவர்.

துன்புறுத்துவோர், கள்வர் ஆகிய இவர்க்கு உணவு இடம் கருவி நெருப்பு [17]மந்திரம் என்னுமிவற்றை யளித்தல், பணிசெய்

---

[7] கர்ப்பிணியைப் புடைத்தலால் கரு வீழ்ந்துவிடின், உத்தமசாகசமும், மருந்தைக்கொண்டு கருவை வீழ்த்தின், மத்தியமசாகசமும், செய்தற்கியலாத கடுஞ்செயலைப் புரிவித்தலால் கருவை வீழ்த்தின் பூர்வசாகசமும் தண்டமாம் என்பது கருத்து.

[8] தன்னுடன் கூடுதற்கு விருப்பமற்ற பிற மகளிரை அச்சுறுத்தல் முதலியவற்றால் இணங்கச்செய்து, சங்கேதமான ஒரு இடத்திற்கு வரும்படிச் செய்பவன்.

[9] துன்புறுத்துபவன்—நாட்டு மக்களின் காது மூக்கு முதலிய உறுப்புக்களைத் துணித்தல் முதலிய கடுந் துன்பங்களைச் செய்பவன்.

[10] சூளுறவு செய்பவன்—'இன்ன பொருளைக் கவர்ந்து விடுவேன், இன்னானைக் கொலைசெய்வேன்' என்பன போன்று சொல்லித் திரிபவன்.

[11] நகரம் கிராமம் முதலியவற்றிலிருந்து பொருளை வலிந்து கவர்ந்து பற்றுபவன்.

[12] தகர்ப்பவன்—களவு செய்தல் காரணமாக சுவர் முதலியவற்றில் கன்னமிடுதல் முதலிய செய்பவன்.

[13] வழிப்போக்கர் தங்குதற்குரிய இல்லம் சத்திரம் தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றில் என்பது.

[14] இவர்கள்—கழுவிலேற்றப்பட்டுக் கொலையுண்டவர்கள்.

[15] ஈமக்கடன்—தீயிடுதல் முதலிய மந்திர பூர்வகமான சுடலைக் கிரியை.

[16] அதே தண்டம்—கழுவில் ஏற்றுதல்.

[17] மந்திரம் என்பது சித்தியைத் தருவது என்றாதல், ஆலோசனை என்றாதல் பொருள்படும்.

தல் என்பவற்றைச் செய்யின் உத்தமசாகசமாம். [18]அறிவின்மையி னுலாயின் வைதுரைத்தலாம். [19]துன்புறுத்துவோர், கள்வர் என்பவர்களின் மனைவிமக்களை, கூடிக்கலந்து பேசுதலில்வழி விடுவித்தல்வேண்டும். [20]கலந்துபேசின் பிணித்தல்வேண்டும்.

[21]அரசைக் கவர்ந்துகொள்ள விரும்புபவன், [22]உவளகத்தைத் தகர்ப்பவன், [23]காட்டிலியங்குவோர்க்கும் பகைவர்க்கும் ஊக்கமளிப்பவன், அரண் நாடு இவற்றிலுள்ள மக்களுக்கும் சேனைக்கும் கோபத்தை உண்டுபண்ணுபவன் ஆகிய இவர்களைத் தலையிலும் கைகளிலும் தீயிட்டுக் கொலைசெய்தல் வேண்டும்.

[24]பார்ப்பனனை இருட்டிற் புகச்செய்தல் வேண்டும்.

தாய், தந்தை, மகன், உடன்பிறந்தோன், ஆசிரியன், துறவி என்னுமிவர்களைக் கொல்பவனைத் [25]தோலில்லாத தலையில் தீயிட்டுக் கொலைசெய்தல் வேண்டும். [26]அவர்களைப் பழித்துப்

---

18 துன்புறுத்துவோர், கள்வர் என்னும் இவர்களை யறியாது இவர்க்கு மேற்கூறியவாறு உதவி செய்பவனுக்கு வைது பேசுதலளவில் தண்டவிதி என்க.

19 கவர்தல் முதலிய தீச்செயல் புரிபவரோடு சேர்ந்து ஆலோசனை முதலியன செய்யாதிருக்கும் அவர்தம் மனைவி மக்களைத் தண்டத்திற்குள்ளாக்காமல் விடுவித்தல் வேண்டும் என்பது கருத்து.

20 அத் தீயோரின் மனைவி மக்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டு மந்திராலோசனை செய்வார்களாயின், அவர்களையும் குற்றமுள்ளவர் எனக் கொண்டு அரசியலார் தண்டித்தல் வேண்டும் என்பது கருத்து.

21 அரசாட்சியைக் கைப்பற்றும் விருப்பமுள்ளவன் ஏதேனுமொரு வழியால் அரசனுக்குத் தீங்குபுரிய முயலுவான் ஆதலால் அவனுக்கு இத் தண்டம் விதிக்கப்பட்டது.

22 அந்தப்புரத்து இல்லங்களில் கன்னமிடுதல் முதலியவற்றால் உட்புகுவதற்கு முயலுபவன்.

23 வேடர் முதலியவர்க்கென்பது.

24 அரசைக் கவர்ந்துகொள்ள விரும்புதல் முதலியனவாகக் கூறப்பட்ட குற்றத்தையுடையவன் அந்தணனாயின், அவனைத் திரும்பி வாராமலிருக்கும்படி இருட்டறையில் தள்ளிவிடுதல் வேண்டும் என்பது கருத்து.

25 மேற்கூறிய குற்றம் செய்தவரின் தலையிலுள்ள தோலை முதலில் உரித்தெடுத்துப் பின்னர் தலையில் தீயிட்டுக் கொலைசெய்தல் வேண்டும் என்பது கருத்து.

26 அவர்களை—தாய் முதலியோரை.

பேசின் நாக்கைத் துணித்தல்வேண்டும். [27]உறுப்பை ஊறுபடச் செய்யின் அவ்வுறுப்பைக் களைதல்வேண்டும்.

கருத்தின்றி ஆடவனைக் கொலைசெய்யினும், பசுமந்தையைக் கவரினும் சுத்த வதமாம். [28]பத்துக்கு மேற்படாதது மந்தை என அறிக.

நீர்த்தேக்கமுள்ள அணையைத் தகர்ப்பவன் [29]ஆண்டே நீரில் வீழ்த்தப்படல் வேண்டும். நீர்த்தேக்கமில்லையேல் உத்தமசாகசம் தண்டமாம். [30]சிதைந்துவிடப்பட்ட விடத்து மத்தியமசாகசமாம்.

நஞ்சூட்டும் ஆடவனையும், ஆடவனைக்கொன்ற கர்ப்பிணி யல்லாதவளையும் நீரில் வீழ்த்தல்வேண்டும். [31]கர்ப்பிணியாயின் கருவுயிர்த்து ஒரு திங்களுக்குப் பின்னராம்.

கணவன் ஆசிரியன் மக்கள் ஆகிய இவர்களைக் கொல்பவள், தீயிடுபவள், நஞ்சூட்டுபவள், [32]இணைப்பைத் தகர்ப்பவள் என்னும் இவர்களைப் [33]பசுவின் கால்களில் வீழ்த்தவேண்டும்.

புன்னிலம், செய், களம், இல்லம், மரக்காடு, யானைக்காடு, என்னுமிவற்றில் தீயிடுபவனைத் தீயினால் கொளுத்தல்வேண்டும்.

---

27 தாய் முதலியோரின் அங்கங்களைச் சிதைத்தவனுக்கு அவனுடைய அவ்வங்கங்களைச் சிதைத்தலே தண்டமாம் என்பது கருத்து.

28 மந்தையின் அளவு கூறுகின்றார்.

29 ஆண்டே—அவ்வணைக்கட்டிலேயே.

30 அணை தானாகவே சிதைந்து, செம்மைப்படுத்தாமல் விடப்பட்டிருப் பின், அவ்வணையைத் தகர்த்துச் சிதைப்பவனுக்கு மத்தியமசாகசம் தண்ட மாம் என்பது கருத்து.

31 கர்ப்பிணியான ஒருத்தி நஞ்சினால் ஒருவனைக் கொன்றுவிடின், கருவுயிர்த்து ஒரு மாதம் ஆன பின்னர் அவளுக்கு இத்தண்டத்தை விதித் தல் வேண்டும் என்பது கருத்து. கர்ப்பிணிக்குத் தண்டம் விதிப்பின், அவள் வயிற்றிலுள்ள குற்றமற்ற குழந்தைக்கும் கொலைத்தண்டம் விதித்ததாக முடியும்.

32 சுவர்களின் இணைப்பு, கூரை முதலியவற்றைத் தகர்த்துக் களவு செய்பவள் என்பது.

33 பசுவின் கால்களில் இட்டுக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

அரசனைப் பழித்துரைத்தல், மறை வெளிப்படுத்தல், [34]தீமையைப் பரப்புதல், [35]பார்ப்பனனின் அடுக்களையிலுள்ளவற்றைப் புசித்தல் என்னுமிவற்றைச் செய்பவனுடைய நாக்கைத் துணித்தல் வேண்டும்.

படைக்கலம், கவசம் இவற்றைக் களவுசெய்பவன் [36]படைக்கலமற்றவனாயின் அவனை அம்புகளினால் கொல்லவேண்டும். [37]படைக்கலமுள்ளவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

ஆண்குறி விதைகளின் [38]பயனைத் தகர்ப்பவனுக்கு அவற்றைத் துணித்தலேயாம்.

நாக்கு மூக்கு என்பவற்றுக்குச் [39]சிதைவை உண்டுபண்ணின் [40]விரலைத் துணித்தலாம்.

சுலோகம்

[41]பெரியோரின் நூல்களில் மேற்கூறிய துன்பத் தண்டங்கள் கூறப்பட்டன. [42]மிகக் கொடுமையற்ற பாவங்களுக்காயின் சுத்த வதம் அறத்தின்பாற்பட்டதாகக் கருதப்படும்.

நான்காம் அதிகரணம் பதினோராம் பிரகரணம்
'சுத்த சித்திர தண்டவிதி' என்னும் எண்பத்தெட்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

34 அரசனது மரணம் முதலிய அமங்கல வார்த்தையைப் பரப்புபவன் என்பது.

35 அடுக்களையிலிருந்து உணவைக் கவர்ந்து புசிப்பவன் என்பது.

36 படைக்கலமல்லாத மற்றவைகளைக்கொண்டு உயிர்வாழ்பவன் என்பது.

37 படைக்கலங்களைக்கொண்டு உயிர் வாழ்பவன் என்பது,

38 இன்ப நுகர்ச்சிக்குரிய தகுதியைக் கெடுத்தவனுக்கு, அத்தகுதி கெடுமாறு அவன் அங்கத்தினைத் துணித்துவிடல் தண்டமாம் என்பது கருத்து.

39 சுவையறிவு முதலியன ஏற்படாவாறு தகர்த்துவிடுதல் என்பது.

40 பெருவிரலையும், சிறு (சுண்டு) விரலையும் துணித்தல்வேண்டும் என்பது கருத்து.

41 மநு முதலியோரின் 'மநுதர்மம்' (மநுஸ்மிருதி) முதலிய நூல்களில் என்க.

42 அற்பமான பாவங்களைப் புரிந்தவராயின், அவர்க்குத் துன்பம் மிகுமாவாறு கொலைத்தண்டம் விதித்தல் மநு முதலியோரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பது கருத்து.

நான்காம் அதிகரணம்—சிறுபகை களைதல்

பன்னிரண்டாம் பிரகரணம்—[1]கன்னியைத் துன்புறுத்தல்

எண்பத்தொன்பதாம் அத்தியாயம்

[2]பருவமடையப்பெறாத ஒத்த கன்னியைத் துன்புறுத்துபவனுக்குக் கையைத் துணித்தலாதல், நானூறாதல் தண்டமாம். [3]இறப்பு நேரின் கொலையாம்.

பருவம் எய்தியவளைத் துன்புறுத்துபவனுக்கு நடுவிரலையும் ஆள்காட்டிவிரலையும் துணித்தலாதல், இருநூறாதல் தண்டமாம். [4]தந்தைக்குரிய இழப்பிற்கும் பொருட்டண்டம் இறுத்தல் வேண்டும்.

[5]விரும்பாதவள்பால் விருப்பத்தை நிறைவேற்றுதல் கூடாது. [6]விருப்பமுள்ளவளாயின் ஐம்பத்துநான்கு பணம் தண்டமாம். மகளிர்க்காயின் அரைமடங்கு தண்டமாம்.

89-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கன்னி—பூப்பெய்தப்பெறாதவள். துன்புறுத்தல்—வலிந்து புணர்தல் முதலியன. அவற்றாலேற்படும் உறுப்பூறுபாட்டையும் ஈண்டுக் கொள்வாருமுளர். இதற்குரிய தண்டவிதி இதன்கட் கூறப்படும். தண்டவிதிகளைப்பற்றிய செய்தி முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டமையான் அதோடு தொடர்புபற்றி இப்பிரகரணம் அதன்பின் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு விளக்கமாதல் அறிக.

[2] பருவம்—ஈண்டுப் பூப்பெய்திய நிலை.

[3] துன்புறுத்தல் காரணமாகக் கன்னி இறந்துவிடின் துன்புறுத்தியவனுக்குக் கொலைத்தண்டம் விதித்தல்வேண்டும் என்பது கருத்து.

[4] தன் மகளைத் துன்புறுத்தியதால் ஏற்பட்ட பெருமைக் குறைவிற்கு ஈடாகத் தந்தை விரும்பும் பொருளைத் துன்புறுத்தியவன் அத் தந்தைக்குத் தண்டமாகக் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[5] இதனால் தன்னிடம் விருப்பமில்லாதவளைத் தனக்கு மனைவியாக ஆக்க முயலுதல் கூடாது என்றும், அவளைத் துன்புறுத்தல், துன்புறுத்துபவனுக்குத் தண்டமொன்றையே பயனாக விளைவிக்கும் என்றுங் கூறியபடியாம்.

[6] தன்பால் விருப்பமுள்ள கன்னிப் பருவத்தினளைப் பெற்றோரது உடன்பாடின்றி வலிந்து கூடுவோனுக்கு ஐம்பத்துநான்கு பணமும், அக் கன்னிக்கு இருபத்தேழு பணமும் தண்டம் என்பது கருத்து.

[7]பிறனது பரியத்தால் தடைப்பட்டவளாயின் கையைத் துணித்தலாதல் நானூறுதல் தண்டமும் பரியப்பொருளைக் கொடுத்தலுமாம்.

[8]மகட்பேசி முடிந்த பின்னர் ஏழு பூப்பு முடியப்பெற்றவள் வந்தடையாவிடின் விருப்பப்படி வலிந்து நுகரலாம். [9]தந்தைக்கு எஞ்சிய பகுதியைக் கொடுத்தல் வேண்டா. என்னை? [10]பூப்பாகிய கள்வனால் உரிமை கவரப்படுதலின் என்க.

பூப்பெய்தி மூன்றாண்டு நிரம்பப் பெற்றவளை ஒத்தவனடைதல் குற்றமின்று. [11]அதன் பின்னர் அணிகலனற்றவளாயின் ஒவ்வாதவனுமாம். [12]தந்தையின் பொருளை யடைந்தால் திருட்டுக் குற்றத்தை யடையக்கடவன்.

தன்னைப் [13]பிறனொருவனாகச் சொல்லி (ப்பிறனுக்குரியவளை)

---

[7] கன்னியை மணத்தற்காக ஒருவன் பரியம் கொடுத்திருக்க அக்கன்னியைப் பிறனொருவன் துன்புறுத்தின் அவன், கையைத் துணித்தலையாதல் நானூறு பணம் தண்டத்தையாதல் அடைவதோடு பரியம் கொடுத்த முன்னவனுக்கு அத்துணைப் பொருளைக் கொடுத்தலும் வேண்டும் என்பது கருத்து.

[8] ஏழு பூப்பு நிரம்பப்பெற்றும் தன்னை மகட்பேசி முடித்தவன்பால் அடையப்பெறாத பெண்ணை அவன் வலிந்து விருப்பப்படி நுகர்தல் குற்றமின்றென்பது.

[9] பரியத்தில் ஒருபகுதி கொடுக்கப்படாதிருப்பினும் அப்பகுதியைத் தந்தைக்குக் கொடுத்தல் வேண்டா என்பதாம்.

[10] தன் மகளை ஏழு பூப்பு நிரம்பும் வரையும் உரியவனிடம் மணஞ்செய்து கொடுக்காமல் அவளுடைய பூப்புக்காலத்தை வீண்செய்தமை காரணமாக அத்தந்தையின் உரிமையை மகளின் பூப்பு களவு செய்ததாக உருவகத்தாற் கூறினர்.

[11] குலம் சாதி முதலியவற்றால் ஒவ்வாதவனும் மூன்றாண்டு கடந்த பின்னர்த் தந்தையின் பொருள் அணிகலன் முதலியன இன்றி அப்பெண்ணை மட்டும் அடைதல் குற்றமின்று என்பது கருத்து.

[12] தந்தையின் பொருள் அணிகலன் முதலியவற்றோடு அப்பெண்ணைக் கவர்ந்துகொள்பவன் அப்பொருளைக் களவு செய்தவனுக்குரிய தண்டத்தைப் பெறுவான் என்பது கருத்து.

[13] கன்னியாலும் அவள் தந்தை முதலியோராலும் விரும்பப்பட்ட ஒருவனாகத் தன்னைக் கூறிக்கொண்டு அக்கன்னியை மணந்த பிறனுக்கு இத்தண்டம் என்பது.

மணஞ்செய்து கொண்டவனுக்கு இருநூறு தண்டமாம். [14]விரும் பாதவள்பால் விருப்பத்தை நிறைவேற்றுதல் கூடாது.

ஒரு கன்னியைக் காண்பித்து [15]ஒத்த மற்றொருத்தியைக் கொடுப்பவனுக்கு நூறு (பணம்) தண்டமாம். [16]இழிந்தவளைக் கொடுப்பின் இருமடங்காம்.

[17]மணமான மகளிரைத் துன்புறுத்தினவன் ஐம்பத்துநான்கு பணம் தண்டத்தையும் பிணையாளனுக்குப் பரியம் மணவினைச் செலவுகளையும் கொடுத்தல்வேண்டும். [18]பின்னரும் ஏற்றுக் கொள்ளப்படின் அவற்றை [19]இருமடங்கு கொடுத்தல் வேண்டும்.

[20]பிறரது குருதியையடையின் இருநூறு பணம் தண்டமாம். [21]பொய் கூறும் ஆடவனுக்குமாம். பரியம் மணவினைச் செலவு களைக் கொடுக்கச்செய்தல் வேண்டும். விரும்பாதவள்பால் விருப் பத்தை நிறைவேற்றுதல் கூடாது.

[22]ஒத்த மகளிர் விருப்பமுள்ளவராகத் துன்பமுறின் பன்னி

---

14 அப்படி மணந்தானாயினும் அப்பெண்ணுக்கு விருப்பமில்லாவிடின் அவளிடம் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளுதல் கூடாது என்பது கருத்து.

15 ஒப்புமை—ஈண்டுச் சாதி பருவம் முதலியவற்றாலாயது.

16 இழிவு—ஈண்டும் சாதி முதலியவற்றால் என்க.

17 பிறனொருவனுக்கு மணஞ்செய்து கொடுக்கப்பட்டவளும் பூப் பெய்தப் பெறாதவளுமான ஒரு பெண்ணைத் துன்புறுத்தினவன் முன்னர் மணஞ்செய்து கொண்டவனால் கொடுக்கப்பட்ட பரியப்பொருளளவு பொரு ளையும் மணத்திற்குச் செலவிடப்பட்ட பொருளளவு பொருளையும் கொடுத் தல் வேண்டும் என்பது கருத்து.

18 இரண்டாவதாக ஒருவனை அடைந்தபின்னரும், மூன்றாம் முறையாக வேறொருவனால் ஏற்றுக்கொள்ளப்படின் என்பது.

19 இருமடங்கு—நூற்றெட்டுப் பணம்.

20 ஒரு பெண் ஓராடவனால் தான் துன்புறுத்தப்பட்டமையை அறி விக்கப் பிறமகளிரின் இரத்தத்தைத் தன் ஆடையிலிட்டுக்கொள்ளின் இத் தண்டம் என்க.

21 துன்புறுத்தப்படாத மகளிரைத் துன்புறுத்தப்பட்டாள் என்று பொய் கூறும் ஆடவனுக்கும் இருநூறு பணம் தண்டம் என்பது கருத்து.

22 பருவமின்றியும் விருப்பமுடைமையால் கூட்டத்திற்கு இசைந்தமை யின் இத்தண்டம் மகளிர்க்கும் விதிக்கப்பட்டது.

ரண்டு பணமும் துன்புறுத்தியவன் இருமடங்கும் கொடுத்தல் வேண்டும். [23]விருப்பமற்றவளைத் தன் விருப்பத்திற்காகத் துன்புறுத்தின் நூறு பணம் தண்டமும் பரியத்தைக் கொடுத்தலுமாம். தானே துன்புறுத்திக்கொண்டவள் அரசனுக்கு அடிமையாதல் வேண்டும்.

[24]கிராமத்திற்கு வெளியில் துன்புறுத்தப்படினும் பொய் கூறினும் இருமடங்கு தண்டமாம்.

வலிந்து கன்னியைக் கவர்பவனுக்கு இருநூறு பணம் தண்டமாம். [25]அணிகலனுடையவளைக் கவர்ந்தால் உத்தமசாகசமாம். கன்னியர் பலரைக் கவர்ந்தவனுக்குத் தனித்தனி முற்கூறியனவே தண்டமாம்.

விலைமகளிரின் பெண்ணைத் துன்புறுத்தினவன் ஐம்பத்து நான்கு பணம் தண்டமும் [26]தாய்க்குப் பரியமாகப் பதினறுமடங்கும் கொடுத்தல்வேண்டும்.

அடிமையாளன் அடிமைப்பெண் ஆகியவர்களின் [27]அடிமையல்லாத மகளைத் துன்புறுத்தின் இருபத்துநான்கு பணம் [28]தண்டம், பரியம், அணிகலன் என்னுமிவற்றைக் கொடுத்தல் வேண்

---

[23] அவள் விரும்பாத நிலையில் தன் விருப்பம் நிறைவேறுதற்பொருட்டுத் துன்புறுத்தியதற்காகத் தண்டத்தையும் அவளுக்குப் பரியப்பொருளையும் கொடுத்தல் வேண்டும்.

[24] மக்கள் இயக்கமற்ற வெளியிடங்களில் துன்புறுத்தப்பட்ட மகளிர்க்கும் துன்புறுத்திவிட்டுத் துன்புறுத்தவில்லை என்று மறைக்கும் ஆடவனுக்கும் இருபத்துநான்கு பணம் தண்டம் என்பது கருத்து.

[25] அணிகலன்களுடன் கன்னியை வலிந்து கவரின் உத்தமசாகசம் தண்டம் என்பது கருத்து.

[26] துன்புறுத்தப்பட்ட பெண்ணின் தாய்க்கு எண்ணூற்றறுபத்து நான்கு பணத்தைப் பரியப்பொருளாகக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[27] அடிமைத்தொழில் புரியாத மகளை என்க.

[28] தண்டத்தை அரசனுக்கும் பரியம் அணிகலன் இவற்றைப் பெண்ணுக்கும் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

டும். [29]விடுதலை பெறுதற்குரிய அடிமைப் பெண்ணைத் துன்புறுத்துபவன் பன்னிரண்டு பணம் தண்டம், ஆடை, அணிகலன் என்னுமிவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

[30]உதவி, இடம் என்னுமிவற்றை யளிப்பின் செய்பவனுக் கொத்த தண்டமாம்.

கணவன் அயல்நாடு சென்றானாகத் [31]தீச்செயல் புரிபவளைக் கணவனின் உறவினராதல் [32]பணியாளனாதல் வரம்பில் நிறுத்தல் வேண்டும். அவ்வாறு நிறுத்தப்பட்டவள் கணவனை எதிர்பார்த்திருத்தல் வேண்டும். கணவன் பொறுப்பானாயின் [33]இருவரையும் [34]விடுத்தல் வேண்டும். [35]பொறானாயின் அவள், காது மூக்குத் துணிக்கப்பெறுதலையும் சோரநாயகன், கொலையையும் அடையக் கடவர்.

சோரநாயகனைக் [36]கள்வன் என்பவனுக்கு ஐந்நூறு தண்டமாம். [37]பொற்காசுகளால் விடுவிப்பவனுக்கு அதனிருமடங்காம்.

---

[29] அடிமை யொப்பந்த காலங் கடந்த பின்னும் அடிமையினின்றும் விடுதலை செய்தற்குரிய அடிமைப்பெண்ணை அழகுடைமை முதலியவை காரணமாகத் துன்புறுத்துபவன், அரசனுக்குத் தண்டத்தையும் அவ்வடிமைப் பெண்ணுக்கு ஆடை அணிகலன்களையும் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[30] கன்னியைத் துன்புறுத்துதற்குத் தக்க உதவியையும் இடத்தையும் கொடுப்பவன், துன்புறுத்தினவன் இறுக்கக்கடவ தண்டத்தை இறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[31] தீச்செயல்—பரத்தமைத்தொழில்.

[32] பணியாளன்—கணவனுடைய பணியாளன்.

[33] இருவர்—கூடாவொழுக்கத்தினராகிய அவ்விருவர்.

[34] தண்டித்தல் கூடாது என்பது கருத்து.

[35] அத் தீயொழுக்கத்தைக் கணவன் பொறானாயின் தண்டம் விதித்தல் வேண்டும் என்பது.

[36] இங்ஙனம் கூறுதல் அத் தீயொழுக்கத்தை மறைப்பதற்கென்க.

[37] பொற்காசைக் கைக்கூலியாகப்பெற்றுத் தீயொழுக்கமுள்ளவரை விடுவிக்கும் காவலாளன் கைக்கூலிப் பொருளளவின் எண்மடங்கு தண்டம் இறுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[38]ஒருவர்க்கொருவர் கூந்தலைப் பற்றுதன் முதலாக நிகழப்படுமவற்றாலும், [39]உடலிலுள்ள நுகர்ச்சிப் பொருளின் காட்சியாலும், [40]அச்செயல்வல்லாராலும், மகளிர் சொல்லாலும் உடனியைதலை அறிதல் கூடும்.

[41]பகைப்படையிலிருந்தும் காட்டில் வழங்குவோரிடமிருந்தும் கவரப்பட்டவள், நீர்ப்பெருக்கினின்றும் எடுத்துப் புரக்கப்பட்டவள், காட்டில் விடப்பட்டவள், வறுமையால் விடப்பட்டவள், [42]இறந்தவளென விடப்பட்டவள் என்னும் இப்பிற மகளிரைத் துன்பத்தினின்றும் பாதுகாத்துச் [43]சங்கேதத்திற்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளலாம். உயர்குடிப் பிறப்பு, [44]விருப்பமின்மை, மக்களுடைமை என்னுமிவற்றை யுடையவளை [45]ஈட்டுப்பொருள் பெற்றுக் கொடுத்துவிடல் வேண்டும்.

சுலோகங்கள்

(1—1½) கள்வர்கை, ஆற்றுவேகம், வறுமை என்னுமிவற்றிலிருந்து மீட்டுப் புரக்கப்பட்டவள், [46]நாட்டுப்பிறழ்ச்சி காடு என்னு

---

38 'சங்கிரகணம்' எனப்படும் உடனியைதலை அறிதற்குரிய உபாயங் கூறுகின்றார். ஆடவரும் மகளிரும் ஒருவர்க்கொருவர் கூந்தலைப் பற்றுதன் முதலாகத் தொடங்கப்பட்ட காமவிளையாட்டினைக் கண்கூடாகக் காண்டல் உடனியைதலைத் தெரிவிக்குமென்ப.

39 சாந்தம் கத்தூரி முதலிய பொருளைக்கொண்டு நுகர்ச்சி நடைபெற்றது என்பதற்குரிய ஏதுக்களைக் கண்டாலும் உடனியைதல் அறியப்படும் என்பது கருத்து.

40 உடனியைதலின் இங்கிதத்தையறியும் திறன்வாய்ந்தவராலும் நுகர்ச்சியையடைந்த மகளிர் சொல்லானும் அதையறியலாம் என்பது.

41 பிற மகளிரைப் பற்றுதல் சிலவிடத்துக் குற்றமாகாதென்பதைக் கூறுகின்றார்.

42 பிணி முதலியன காரணமாக மூர்ச்சித்திருக்கும் நிலையில் 'இறந்தாள்' எனக்கருதி விடப்பட்டவள் என்பது.

43 ஒருவர்க்கொருவர் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கேற்ப மனைவியாகவோ பணிப்பெண்ணாகவோ செய்துகொள்ளலாம் என்பது கருத்து.

44 சாதி யொற்றுமையிருப்பினும் விருப்பமில்லாதவள் என்பது.

45 அவர்களைத் துன்பத்தினின்றும் விடுவித்ததற்காக ஏற்பட்ட செலவு முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு உரியவரிடம் அவர்களைத் திருப்பிக் கொடுத்தல்வேண்டும் என்க.

46 நாட்டுப் பிறழ்ச்சி காரணமாகவும் காட்டு மார்க்கத்தில் செல்லுதல் முதலியவை காரணமாகவும் தம் உறவினரால் இழக்கப்பட்டவள் என்பது.

மிவற்றால் இழக்கப்பட்டவள், இறந்தவள் என்று விடப்பட்டவள் ஆகிய இப்பிற மகளிரைத் துன்பத்தின் நீக்கிய ஆடவன் சங்கேதப் படி அநுபவிக்கலாம்.

(1½—3) [47]அரசனுடைய கோபத்தாலும் தம்மவராலும் விடப்பட்டவள், உயர்குலத்தவள், விருப்பமற்றவள், முன்னர் மக்களையுடையவள் என்னுமிவர்களையாயின் கூடாதாம். [48]இவர்களைத் தகுந்த ஈட்டுப்பொருளினால் விடுத்தல்வேண்டும்.

நான்காம் அதிகரணம் பன்னிரண்டாம் பிரகரணம்
'கன்னியரைத் துன்புறுத்தல்' என்னும் எண்பத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[47] தகாச்செயல் புரிந்தமை முதலிய காரணம் பற்றி வெகுளப்பெற்று அரசனால் நாடுகடத்தல் முதலிய தண்டம் விதிக்கப்பட்டவள் என்பது.

[48] இவர்கள்—உயர்குலத்தவள், விருப்பமற்றவள், முன்னர் மக்களையுடையவள் என்னும் இம்மூவர். அரசனுடைய கோபத்தாலும் தம்மவராலும் விடப்பட்டவர்களுக்காக ஈட்டுப்பொருள் பெறுவதியலாதாகலின் அவர்களை அநுபவித்தல் கூடாதென்பதை மட்டும் கருத்தாகக்கொள்க.

நான்காம் அதிகாரணம்—சிறுபகை களைதல்

பதின்மூன்றும் பிரகாணம்—[1]நெறிகடத்தற்றண்டம்

தொண்ணூறும் அத்தியாயம்

[2]பருகத்தகாதது, [3]உண்ணத்தகாதது என்னுமிவற்றைப் பார்ப்பனனை உட்கொள்ளும்படிச் செய்பவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம். அரசனையாயின் மத்தியமசாகசமும் வணிகனையாயின் பூர்வசாகச தண்டமும் சூத்திரனையாயின் ஐம்பத்துநான்கு பணமும் தண்டமாம்.

[4]தாமே உட்கொள்பவர் நாட்டினின்றும் வெளியேற்றத் தக்கவராவர்.

[5]பகலில் பிறருடைய இல்லங்களையடையின் பூர்வசாகசமும் [6]இரவில் மத்தியமசாகசமும் தண்டமாம். [7]பகலிலாதல் இரவிலாதல் படைக்கலத்துடன் புகுபவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

90-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நெறிகடத்தல்—உண்ணத் தகாதவற்றை உண்டல், சேரத்தகாதவரோடு சேர்தல் முதலியன. இதற்குரிய தண்டம் இதன்கட் கூறப்படும். முன்னர்க் கள்வர் முதலிய பகை களைதலைப்பற்றிக் கூறினர். இனி தம் தம் ஒழுக்கத்தினின்றும் தவறுதலாலுளவாம் தீமைகளைக் களைதலைப்பற்றி ஈண்டுக் கூறத் தொடங்குகிறார். இதனாற் பிரகரணவியைபு விளக்கமாதல் காண்க.

[2] பருகத்தகாதன—கள் முதலியன.

[3] உண்ணத்தகாதன — இறைச்சி முதலியன. ஆகவே வலிந்து அவற்றை உட்கொள்ளச் செய்பவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம் என்பது கருத்து.

[4] பிறர் தூண்டுதலின்றிப் பருகத்தகாதவற்றையும் உண்ணத்தகாதவற்றையும் உட்கொள்ளும் பார்ப்பனன் முதலானோர் நாட்டினின்றும் வெளியேற்றக்கடவர் என்பது கருத்து.

[5] இதனால் இல்லத்திற்குரியவனிடமிருந்து அநுமதிபெறாது பிறன் அவ்வில்லத்துட் புகுதல் கூடாது என்பது பெறப்படும்.

[6] இரவு வேளையில் உரியவனது உடன்பாடு பெறாது இல்லத்துட் புகுபவனுக்கு மத்தியமசாகசம் தண்டமாம் என்பது.

[7] பிறரது இல்லத்தில் படைக்கலத்துடன் எந்தச் சமயத்திலும் புகுவது கூடாது என்பது கருத்து.

ஐயமேற்பவன், வணிகன், [8]மத்தன், பித்தன், இடுக்கட்பட்டோன், [9]நெருங்கியவர், [10]உரிமையுள்ளவர் என்னுமிவர்கள் [11]தடையில்வழி தண்டிக்கத் தகாதவராவர்.

[12]இரவின் யாமத்திற்குப் பின்னர்த் தன் வீட்டில் [13]அரணுகவுள்ளதன்மேல் ஏறுபவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். [14]பிறர் வீடாயின் மத்தியமசாகசமாம். [15]கிராமம், தோட்டம் என்னுமிவற்றின் வேலியைத் தகர்த்தவனுக்கும் அதுவேயாம்.

[16]வணிகர் உயர்ந்த பொருள்களை அறிவித்துக் கிராமத்தின் நடுவண் வசித்தல்வேண்டும். களவிடப்பட்டதும் [17]வேற்றிடத்திற்குக் கடத்தப்பட்டதும் (கிராமத்தினின்றும்) வெளியேற்றப் படாததுமான [18]இவரது பொருளைக் கிராமத்தலைவன் கொடுத்தல் வேண்டும். கிராமத்தின் எல்லைகளில் திருடப்பட்டு வேற்றிடத்திற்குக் கடத்தப்பட்டதாயின் புன்னிலத்தலைவன் கொடுத்தல்

---

8 மத்தன்—குடித்தல் முதலியன காரணமாக மாறுபட்ட மனநிலையுடையவன்.

9 இல்லத்தானுக்கு நெருங்கிய உறவினர் என்பது.

10 உரிமை—நட்பு முதலியவை காரணமாக உண்டாவது.

11 தடையில்வழி என்றதனுல் மேற்கூறப்பட்டோரும் இல்லத்தானுல் 'புகுதல் கூடாது' என்று தடுக்கப்படின் புகுதல் கூடாது என்பதும் புகுந்தால் தண்டம் உண்டென்பதும் பெற்றும்.

12 இரவின் முதல்யாமம் கடந்த பின்னர் என்பது.

13 அரண்—மதில் சுவர் முதலியன.

14 பிறனுடைய வீட்டுச் சுவர்களில் ஏறுபவனுக்கு மத்தியமசாகசம் தண்டமாம் என்பது கருத்து.

15 கிராமத்தின் வேலியைத் தகர்த்துக் கிராமத்துட் புகுபவனுக்கும் தோட்டத்தின் வேலியைச் சிதைத்துத் தோட்டத்துட் புகுபவனுக்கும் மத்தியமசாகசம் தண்டம் என்பது கருத்து.

16 வணிகர் பிறகிராமத்துள் தங்கியிருக்க நேரின் தம்மிடமுள்ள உயர்ந்த பொருள்களை அக் கிராமத்தலைவனுக்கு அறிவித்துவிட்டுத் தங்கி வசித்தல்வேண்டும் என்பது.

17 ஊருக்குள்ளேயே இருந்தவிடத்தினின்றும் எடுத்து வேற்றிடத்தில் கொண்டுபோய் மறைக்கப்பட்டது என்பது.

18 இவர்—வணிகர். தம்மிடமிருக்கும் பொருளைக் கிராமத்தலைவனுக்கு அறிவித்தமையால் அப்பொருளைக் கள்வரிடமிருந்து கிராமத்தலைவன் மீட்டுக்கொடுத்தல் வேண்டுமெனக.

வேண்டும். [19]புன்னிலத் தலைவனில்வழி கள்வரைப் பிடிப்பவன் கொடுத்தல்வேண்டும். [20]அவ்வளவினும் புரக்கப்படாதவற்றை எல்லைகாவலன் கண்டுபிடித்தற்கு (வாய்ப்பு) அளித்தல்வேண்டும். [21]எல்லைகாவலனில்வழி ஐந்து கிராமங்களாதல் பத்து கிராமங்களாதல் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

[22]திண்மையல்லாத இல்லம், குத்துக்கழியற்ற வண்டி, பொருத்தப்படாத படைக்கலம், தூர்க்கப்படாத பள்ளம், மறைவான பள்ளத்தையுடைய கிணறு என்னுமிவற்றால் துன்புறுத்தின் [23]கடுந்தண்டம் என அறிக.

மரத்தை வெட்டுதல், [24]அடங்காதவற்றிற்குக் கயிறுகட்டுதல், [25]பழக்கப்படாத நாற்கால் ஊர்திகளைச் செலுத்துங்காலம், [26]கட்டை, ஓடு, கல், தடி, அம்பு என்னுமிவற்றை எறிதல்,

---

[19] புன்னிலத்தலைவன் இல்லாத இடங்களில் களவிடப்படுமாயின் கள்வரைப் பிடித்தற்றொழிலில் நியமிக்கப்பட்டோர் அக்கள்வரைக் கண்டு பிடித்துப் பொருளை மீட்டுக்கொடுத்தல் வேண்டும் என்பது.

[20] கிராமத்தலைவன் முதலிய அதிகாரிகளால் கண்டுபிடிக்க இயலாத களவிடப்பட்ட பொருளைக் கண்டுபிடிப்பதன் நிமித்தம் எல்லைகாவலனுக்கு வசதியளித்தல் வேண்டும் என்பது. எல்லைகாவலன் என்பது ஈண்டு களவு நிகழப்பெற்ற எல்லையைக் கண்காணிப்பவனைக் குறிக்கும்.

[21] எல்லைகாவலனுமில்லாதவிடத்தில் களவு நிகழின் களவு நிகழ்ந்த இடத்தை அடுத்துள்ள ஐந்து கிராமத்து மக்களாதல் பத்து கிராமத்து மக்களாதல் களவிடப்பட்டதை மீட்டுக்கொணர்ந்து தரவேண்டும் என்பது கருத்து.

[22] இடிந்துவிழும் நிலையிலுள்ள தன் வீட்டுச்சுவரைப் பழுதுபார்க்காமையாலும், பாரந்தாங்குதற்குரிய வண்டிகளில் முளைக்கழிகளை அமைக்காமையாலும், அரிவாள் மண்வெட்டி முதலியன காம்புடன் பொருத்தப்படாதிருக்கும் நிலையில் அவற்றைப் பயன்படுத்துதலாலும், பாரிடிந்த கிணற்றினைப் பழுதுபார்க்காமையாலும், அயலார்க்குத் தீங்கினையுண்டுபண்ணின் என்பது.

[23] மேற்கூறியவாறு துன்பத்தைச் செய்பவனுக்கு 'கடுந்தண்டம்' என்ற 67-ஆம் அத்தியாயத்திற் கூறியவாறு தண்டம் விதித்தல்வேண்டும் என்க.

[24] நன்கு பழக்கப்படாமையால் முரட்டுத்தன்மையுள்ள காளைக்கு மூக்குக்கயிறு கட்டும் சமயத்தில் என்பது.

[25] பழகாத நாற்கால் விலங்குகளைப் பழக்கும் சமயத்தில் என்பது.

[26] இருவர் சண்டையிடும்போது ஒருவரையொருவர் தாக்குதற்காகக் கட்டை முதலியவற்றை வீசி எறியுங்காலத்தில் என்பது.

கையோங்குதல், யானையின் மேலேறிச் செல்லுதல் என்னுமிச் சமயங்களில் [27]உராய்தல் நிகழினும் 'விலகிச்செல்' என்று உரக்கக் கூறினவன் தண்டிக்கத் தக்கவனல்லன்.

யானைக்குக் [28]கோபமூட்டுதலால் கொல்லப்பட்டவன் ஒரு தூணி சோறு, [29]குடம், மாலை, பூச்சு, [30]தந்தத் தூய்மைக்குரிய துணி என்னுமிவற்றைக் கொடுத்தல்வேண்டும். [31]யானையால் கொல்லப்படுதல் அசுவமேதத்தின் அவபிரத நீராட்டத்திற்குச் சமம் என்பதுபற்றிப் [32]பாதப்பிரட்சாளனமாம். [33]நொதுமலன் கொல்லப்படின் செலுத்துபவனுக்கு உத்தமசாகசம் தண்டமாம்.

[34]கொம்புள்ளது, [35]பல்லுள்ளது என்னுமிவற்றால் துன்புற்றவனை விடுவியாத தலைவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம். கூக்குரலிடப்பட்டவனுக்காயின் இருமடங்காம்.

---

[27] முன்னறிவிப்பாக 'விலகிச்செல் விலகிச்செல்' என்று உரக்கக் கூச்சலிட்டு மரத்தை வெட்டுதல் முதலிய செய்தோன் வெட்டுண்ட மரம் முதலியவை உடலில் தாக்கினதால் பிறர் உறுப்புக்களுக்குச் சிதைவு ஏற்படினும் தண்டிக்கத்தக்கவனல்லன் என்பது கருத்து.

[28] கோபம்—இயல்பிற்செல்லும் யானைக்கு வழியில் தடைவிளைத்தல் முதலியவற்றால் ஆயது.

[29] குடம்—கட்குடம்.

[30] யானையின் தந்தத்தில் படிந்துள்ள குருதியைத் துடைத்தற்குரிய துணி என்பது. யானையால் தான் கொல்லப்படவேண்டும் என்ற விருப்பமுள்ள ஒருவனால் முன்னரே ஏற்பாடுசெய்து வைக்கப்பட்ட 'ஒரு தூணி சோறு' முதலியவற்றைக் கொல்லப்பட்டவனின் உறவினர் முதலியோர் யானைக்குக் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[31] கொலைசெய்த யானையை ஏன் இவ்வாறு சிறப்பித்தல்வேண்டும் என்பதற்கு மாற்றங்கூறுகின்றார்.

[32] பாதப்பிரட்சாளனம்-யானைக்குச் செய்யப்படும் ஒருவகை வழிபாடு.

[33] யானைக்குக் கோபத்தை உண்டுபண்ணாத ஒருவன் கொல்லப்படின் யானைப்பாகனுக்கு உத்தமசாகசம் தண்டம் என்பது கருத்து.

[34] பசு எருமை முதலியன.

[35] நாய் முதலியன. தன்னுடைய பசு முதலியவற்றால் துன்புறுத்தப் படுபவனை அத்துன்பத்தினின்றும் விடுவியாத பசு முதலியவற்றை உடையானுக்கு இத்தண்டம் என்பது. பின்னர் 'கூக்குரலிடப்பட்டவனுக்கு' என்று கூறுவதால் ஈண்டு 'துன்புறுத்தும் இதை விலக்குக' எனக் கூச்சலிட்டுக் கூவப்படாதவனுக்கு இத்தண்டம் என்பது போதரும்.

[36]கொம்புள்ளது, பல்லுள்ளது என்பவற்றுள் ஒன்றால் மற்றொன்றைக் கொல்லச் செய்பவனுக்கு அவையும் அத்துணையும் தண்டமாம்.

தெய்வத்தின் பசு, காளை, பொலி எருது, கிடேரிக்கன்று என்னுமிவற்றைச் [37]சுமக்கச்செய்பவனுக்கு ஐந்நூறு தண்டமாம். கொல்பவனுக்கு உத்தமசாகசமாம்.

மயிர், கறவை, ஏறிச்செல்லுதல், கருத்தரிப்பித்தல் என்னுமிவற்றிற்குரிய [38]சிறுவிலங்குகளைக் கவரின் அவையும் அத்துணையும் தண்டமாம். [39]தெய்வம், தென்புலத்தார் கன்மங்கள் இல்வழிக் கொல்பவனுக்குமாம்.

[40]மூக்குக்கயிறு அறுந்துபோதல், நுகம் ஒடிந்துவிடுதல், குறுக்காகவும் எதிராகவும் செல்லல், பின்புறமாகச் செல்லல் என்னும் இந்நிகழ்ச்சிகளில் வண்டியினால் ஊர்தி விலங்கு மனிதர்களுக்குத் [41]தடை யேற்படுதலாதல் [42]துன்பமாதல் நேரினும் [43]தண்டனை

---

[36] கொம்புள்ளவற்றோடு பல்லுள்ளவற்றையும், பல்லுள்ளவற்றோடு கொம்புள்ளவற்றையும் சண்டையிடச்செய்து ஒன்றைக்கொண்டு மற்றொன்றைக் கொல்(விப்)பவனுக்குக் கொல்லப்பட்டவற்றின் விலையும், அவ் விலைப்பொருளுக்குச் சமமான பொருளும் தண்டம் என்பது. பொருளின் விலையைக் கொல்லப்பட்டவற்றிற்குரியவனுக்கும், அதனளவு பொருளைத் தண்டமாக அரசனுக்கும் கொடுத்தல்வேண்டும் என்பது கருத்து.

[37] தெய்வத்தின் பசு முதலியனவாக மேற்கூறப்பட்டவற்றின் மேல் மூட்டை முதலியவற்றை ஏற்றுதல் முதலிய காரணங்களால் அவற்றைச் சுமக்கச் செய்பவனுக்கென்பது.

[38] சிறுவிலங்கு—ஆடு முதலியன.

[39] இதனால் யாகம் முதலிய தெய்வ வழிபாட்டிற்காகவும் பிதிர்க்கடனிறுத்தற் பொருட்டும் கொலைசெய்ய நேரின் குற்றமின்றென்பது போதரும்.

[40] வண்டியிற் பூட்டப்பட்ட எருதுகளின் மூக்குக்கயிறு அறுந்துவிட்டதன் காரணமாக அவ்வண்டியினால் மனிதர் முதலியவர்களின் போக்குவரத்துக்குத் தடை ஏற்படினும் குற்றமின்றென்பது கருத்து.

[41] அப்புறமும் இப்புறமும் செல்லும் ஊர்தி முதலியவற்றின் இயக்கத்துக்குத் தடை ஏற்படுதல் என்பது.

[42] துன்பம்—விலங்கு, மனிதர் முதலியவர்களுக்கு ஊறுபாடு இறப்பு முதலியன.

[43] வண்டியோட்டுபவனுக்குத் தண்டனை யின்றென்பது கருத்து.

யின்றும். [44]அவையில்வழி [45]மனிதர்க்கும் ஏனையுயிர்கட்குந் துன்பம் நிகழின் தண்டமிறுத்தல் வேண்டும். [46]மனிதரல்லாத உயிர்கட்குக் கொலை நிகழின் அவற்றைக் கொடுத்தலுமாம்.

[47]செலுத்துவோன் சிறுவனாயின் வண்டியிலிருக்கும் தலைவன் தண்டிக்கத்தக்கவனாவன். [48]தலைவனில்லையாயின் வண்டியிலுள்ளவனாதல் வழக்கியற்பருவம் எய்திய செலுத்துபவனாதல் அத்தண்டமிறுத்தல் வேண்டும். [49]சிறுவனாற் செலுத்தப்பட்டதும் செலுத்துபவனற்றதுமான வண்டிகளை அரசன் எடுத்துக்கொள்ளலாம்.

[50]பில்லி சூனியங்களாற் பிறனுக்குத் தீங்கு விளைத்தோனுக்கு அத்தீங்கினையே அடைவித்தல் வேண்டும்.

[51]விருப்பமற்ற மனைவியையும், மணஞ்செய்துகொள்ள விரும்புவோர் கன்னியையும், மனைவி கணவனையும் வசீகரணம் செய்யலாம். [52]இப்படியன்றித் துன்புறுத்தின் மத்தியமசாகசம் தண்டமாம்.

---

44 அவை—மூக்குக்கயிறு அறுந்துபோதல் முதலிய நிகழ்ச்சிகள்.

45 மக்கள் இறக்க நேரின் அதற்குரிய தண்டமிறுத்தல் வேண்டும் என்பது.

46 ஆடு கோழி முதலியன இறக்க நேரின் என்பது.

47 வண்டியின் காரணமாக உயிர்க்குத் துன்பம் முதலியன நிகழின் வண்டியோட்டுபவன் வழக்கியற்பருவம் எய்தப்பெறாதபோது வண்டியிலிருக்கும் உரியவன் தண்டிக்கத்தக்கவன் என்பது கருத்து.

48 வண்டிக்குரியவன் வண்டியிலில்லையாயின் வண்டியிலுள்ள பிறனாதல் வழக்கியற்பருவம் எய்தப்பெற்ற வண்டியோட்டுபவனாதல் தண்டிக்கத் தக்கவராவர் என்பது.

49 செலுத்துவதற்காகச் சிறுவனாலடையப்பெற்றதும், செலுத்துபவனற்றதுமானவை அரசன் எடுத்துக்கொள்ளத்தக்கனவாம்.

50 சூனியம் வைத்தல் முதலிய அபிசாரக் கிரியையினால் பிறனுக்குக் கொலை முதலியவற்றை உண்டுபண்ணினவனுக்குக் கொலை முதலிய அவையே தண்டமாம் என்பது.

51 கணவன் தன்னிடம் விருப்பமற்ற மனைவியை மந்திரம் முதலிய வசீகரணக் கிரியையால் வசியஞ்செய்தலும், தன்னிடம் விருப்பமில்லாத ஒரு கன்னியை மணக்க விரும்புவோன் அக்கன்னியை வசீகரணஞ்செய்தலும், தன்னிடம் விருப்பமற்ற கணவனை மனைவி வசீகரணஞ்செய்தலும் அறத்தின்பாற்பட்டவையாகலின் குற்றமின்றென்பது கருத்து.

52 முற்கூறப்பட்டோரின்றி ஏனையோர் வசீகரணம் முதலியவற்றால் துன்புறுத்தின் அவர்க்கு மத்தியமசாகசம் தண்டமாம் என்பது கருத்து.

தாய்தந்தையரின் உடன்பிறந்தாள், மாமன் மனைவி, ஆசிரியன் மனைவி, மருமகள், மகள், உடன்பிறந்தவள் என்னுமிவர்களை வலிந்து புணர்பவனுக்குத் [53]திரிலிங்கத்தைத் துணித்தலும் கொலையுமாம். [54]விருப்பமுள்ளவளும் அத்தண்டத்தையே பெறக் கடவள். [55]அடிமையாளன், பணிசெய்பவன், ஈடாகவுள்ளவன் என்னுமிவர்களால் புணரப்பட்டவளும் (இத்தண்டத்திற்குரிய வள்) ஆம்.

[56]புரக்கப்படாத பார்ப்பனப்பெண்ணைப் புணரும் அரசனுக்கு உத்தமசாகசமும், வணிகனுக்குப் [57]பொருளனைத்தும் (தண்டம்) ஆம். [58]சூத்திரனைக் கடப்புல் தீயினால் எரித்தல்வேண்டும். அரச னுடைய மனைவியைப் புணரின் எல்லோருக்கும் [59]கும்பீபாகம் தண்டமாம்.

[60]சுவபாகியைப் புணர்ந்தவன் [61]கவந்தக்குறியிடப்பட்டு வேற்றுநாட்டை யடைதல்வேண்டும். சூத்திரன் சுவபாகனுந் தன்மையை யடையக்கடவன். உயர்குலத்து மகளிரைப் புணரும் சுவபாகனுக்குக் கொலையும், மகளிருக்குக் காது மூக்குக்களைத் துணித்தலும் தண்டமாம்.

---

53 திரிலிங்கம்—உயிர்நிலை. திரிலிங்கத்தைத் துணித்துப் பின்னர்க் கொலை செய்துவிடல் வேண்டும் என்க.

54 தாய்தகப்பன்மார்களின் உடன்பிறந்தாள் முதலியோர் விருப்ப முள்ளவராயின் அவர்களையும் அங்ஙனமே ஒறுத்துக் கொலைசெய்து விடுதல் வேண்டும் என்பது கருத்து.

55 அடிமையாளன் முதலியோரால் புணரப்பட்டவளும் புணர்ந்த அடிமையாளன் முதலியவரும் ' திரிலிங்கத்தைத் துணித்தல் ' என்ற தண் டத்தை அடையக்கடவர் என்பது கருத்தாகக் கொள்ளத்தக்கது.

56 புரக்கப்படாதவள்—சுதந்திரமாக உள்ளவள்.

57 எல்லாப்பொருளையுங் கவர்ந்துவிடுதல் தண்டமாம் என்பது கருத்து.

58 தீயிட்டு நகரம் முழுவதும் சுற்றச்செய்து கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

59 கும்பீபாகம்—தீயினால் பழுத்த இருப்புச்சட்டி முதலியவற்றிற் போட்டு வறுத்தல்.

60 நாயைச் சமைத்துப் பக்குவஞ்செய்து உண்பவள்.

61 கவந்தம்—கபந்தம்; தலையில்லாத உடல்.

துறவுபூண்டவளைப் புணரின் இருபத்துநான்கு பணம் தண்டமாம். விருப்பமுள்ளவள் [62]அதையே பெறக்கடவள்.

விலைமகளிரை வலிந்து புணரின் பன்னிரண்டு பணம் தண்டமாம்.

ஒருத்தியைப் புணரும் பலருள் ஒவ்வொருவருக்கும் இருபத்து நான்கு பணம் தண்டமாம்.

மகளிரைக் குறிதவறிப் புணர்பவனுக்கும் ஆடவனை வலிந்து சேருபவனுக்கும் பூர்வசாகசம் தண்டமாம்.

சுலோகங்கள்

(1) தீயவன் இழிந்த [63]விலங்குகளைப் புணரின் பன்னிரண்டு பணமும், தெய்வப் படிமைகளைப் புணரின் இருமடங்கும் [64]விதிக்கப்பட்டன.

(2) அரசன் தண்டிக்கத் தகாதவனைத் தண்டிப்பின் [65]முப்பது மடங்கு தண்டத்தை வருணனுக்கு நீரிலும், [66]அதன்பின்னர்ப் பார்ப்பனருக்கும் கொடுத்தல் வேண்டும்.

(3) அரசன் முரணுன தண்டத்தை விதித்தலால் உண்டாம் பாவம் [67]அதனால் விலகும். என்னை? மக்கள்பால் மெய்ந்நெறியில் ஒழுகாத அரசனைத் தண்டிப்பவன் வருணன் ஆகலின் என்க.

நான்காம் அதிகரணம் பதின்மூன்றும் பிரகரணம்
'நெறிகடத்தற் றண்டம்' என்னும் தொண்ணூறும்
அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அதிகரணம் முற்றிற்று.

---

62 அது—இருபத்துநான்கு பணம் தண்டம்.

63 விலங்குகள்—பசு முதலியன.

64 'விதிக்கப்பட்டன' என்பதுடன் 'தண்டமாக' என்பதை முன்னர்க்கூட்டிப் பொருள் உரைத்துக்கொள்க.

65 தண்டிக்கத் தகாதவனுக்கு அரசனால் எத்துணைத் தண்டம் விதிக்கப்பட்டதோ அத்தண்டத்தின் முப்பது மடங்கு தண்டம் அரசனுக்கு விதிக்கத்தக்கது என்பதும் அத்தண்டப்பொருள் வருணனுக்குரியதாகலின் அதை நீரில் போட்டுவிடவேண்டும் என்பதும் கருத்து.

66 வருணனைக் குறித்துத் தண்டமிறுத்த பின்னர்ப் பிராமணருக்கும் தானம் செய்தல்வேண்டும் என்பது கருத்து.

67 அதனால்—வருணனுக்குத் தண்டமிறுத்தலால்.

ஐந்தாம் அதிகரணம்—[1]வஞ்சித்தொறுத்தல்

முதற்பிரகரணம்—[2]மறைவினெறுத்தல்

தொண்ணூற்றோராம் அத்தியாயம்

[3]அரண் [4]நாடு என்னுமிவற்றின் சிறுபகை களைதல் [5]கூறப்

91-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வஞ்சித்தொறுத்தல்—சிற்றரசர்கள் அதிகாரிகள் குடிமக்கள் என்னும் இவர்களுள் அரசற்கும் நாட்டுக்கும் இடர்விளைக்கும் உட்பகைவராக உள்ளவர்களை ஒற்றரால் உணர்ந்து அரசன் அவர்களை மறைவாக ஒறுத்தடக்குதல். தொடக்கத்தில் மறைவினெறுத்தல் பற்றிக் கூறப்படினும் பெரும்பான்மையும் இதன்கண் வஞ்சித்தொறுத்தல் பற்றியே கூறப்படுதலான் மிகுதிபற்றி இவ்வதிகரணம் இப்பெயர்த்தாயிற்று. தண்டச் செயலைக் கூறும் முறையில் முன்னையதிகரணத்துடன் இவ்வதிகரணத்திற்கு ஒற்றுமையிருப்பினும், தண்டிக்கும் தலைவன், தண்டிக்கப்படுவோர், உபாயம், திருத்தியமைக்கப்படுவது என்னுமிவற்றின் வேறுபாடுண்மை கருதி இவ்வதிகரணம் முன்னையதிகரணத்திற் பிரித்துரைக்கப்பட்டதென்ப. அஃதாமாறு:—சிறுபகை களைதலில் சிறுபகை களைவோர் முதலியோர் தண்டிக்கும் தலைவர். காருகர் வணிகர் முதலியோர் தண்டிக்கப்படும் சிறுபகையாவர். ஐயுறவுருச் செயல்களாற் பிடித்தல் சுத்த சித்திர தண்டம் முதலியன உபாயங்கள். அரண் நாடு முதலியன திருத்தியமைக்கப்படுபவை. ஈண்டு ஒற்றரைத் துணையாகக்கொண்ட அரசன் தண்டிக்குந்தலைவன். அரசனைத் தாழ்மைப்படுத்தி வாழும் அரசியற்றலைவன் முதலியோர் தண்டிக்கப்படும் சிறுபகையாவர். மறைவினெறுத்தல் உபாயம். திருந்தப் பெற்றவர் அரசன் அமைச்சர் முதலியோர் என்பதாம். மேற்கூறப்பட்ட ஒற்றுமைபற்றியே இவ்வதிகரணம் ‘சிறுபகை களைதல்’ என்னும் முன்னையதிகரணத்தின்பின் வைக்கப்பட்டதாகலின் அதிகரண இயைபு புலனுதல் அறிக.

[2] பிறர் அறியாவாறு ஒறுத்தல் என்பதாம். முன் பிரகரணத்தில் சுத்த தண்டவிதி, சித்திர தண்டவிதி முதலிய வெளிப்படையான தண்டங்கள் பகுத்து விதிக்கப்பட்டன. அத்தகைய தண்டங்களுக்கு இடனில்லாத நிலையில் களைதல் இன்றியமையாதவிடத்து மறைவினெறுத்தலைக் கைக்கொள்ள வேண்டும். அஃது இதன்கட் கூறப்படுதலின் பிரகரணவியைபு புலனும்.

[3] அதிகரணங்களின் இயைபைக் குறிப்பிட்டுப் பிரகரணப் பொருளைக் கூறத் தொடங்குகின்றூர். அரண்—தானியம் முதலியன.

[4] நாடு என்பது நகரம் கிராமம் முதலியவற்றையும் உணர்த்தும்.

[5] முன்னையதிகரணத்திற் கூறப்பட்டதென்க.

பட்டது. அரசன் [6]அரசு ஆகியவற்றிற்குக் கூறுவாம்.

[7]அரசனைத் தாழ்த்தி (வாழும்) அண்டிப்பிழைப்போர் [8]பகைவருக்குப் பொதுவானவர் என்னுமித் [9]தலைவர்களிடத்து [10]முற்கூறியவாறு ஒற்றரையமைத்தலாதல், [11]தீயவரைத் தன்வயப் படுத்தலாதல், [12]பின்னர்ப் பகைவரின் சிற்றூர் நகரங்களை யடைதற்குரிய விதிகளிற் கூறப்படுமாறு [13]வேறுபடுத்தலாதல், அபசர்ப்பமாதல் களைதலாகும்.

அரசுக்குத் தீங்குபுரியும் [14]அத்தியக்ஷரையாதல் [15]ஒன்றுகூடின தலைவரையாதல் [16]வெளிப்படையாகத் தடுத்தற்கு இயலாதவிடத்து வெறுக்கத்தக்க அவர்களை அறவோன் மறைவினொறுத்தல் வேண்டும்.

---

[6] அரசு என்பது ஈண்டு அமைச்சர் முதலியவர்களை யுணர்த்தும். ஆகவே அரசன் அமைச்சர் முதலியோரின் சிறுபகை களைதலைப்பற்றி இவ்வதிகரணத்திற் கூறப்படும் என்பது கருத்து.

[7] அவைகளுள் அரசற்கு இடர் விளைக்கும் சிறுபகைகளைக் களைதலைப் பற்றிக் கூறுகின்றார்.

[8] அரசனிடத்தும் அவன் பகைவரிடத்தும் கூலிபெறுபவர் என்பது.

[9] தலைவர்—அமைச்சன், புரோகிதன், படைத்தலைவன், இளவரசன் முதலிய சிறப்புடையோர்.

[10] 'ஒற்றாடல்' என்னும் பிரகரணத்திற் கூறப்பட்டவாற்றான் என்பது. (12-ஆம் அத்தியாயத்திற் காண்க).

[11] வெகுளியாற் பகைவரைச் சார்ந்தோர், பேராசையுள்ளவர், அஞ்சினவர் என்பவரை ஏற்றுக்கொள்ளுதல் என்பது. இங்ஙனம் செய்தலால் பகைவரைக் களைதல் எளிதில் நிகழும் என்ப.

[12] 141—143 அத்தியாயங்களில் கூறப்படும் என்க.

[13] வேறுபடுத்தல், அபசர்ப்பம் முதலியவற்றை முற்குறித்த அத்தியாயங்களிற் கண்டுகொள்க.

[14] அத்தியக்ஷர்—நகரத்தலைவன் முதலியோர்.

[15] ஒன்றுகூடின தலைவர்—ஆலோசனை சங்கேதம் முதலியவற்றைச் செய்துகொண்டு அரசியலுக்குத் தீங்குபுரியும் மந்திரி முதலியோர்.

[16] அவர்களுக்குரிய வன்மை முதலியன காரணமாக அவர்கள் புரியும் இடையூறுகளை எதிர்நின்று தடுக்கமுடியாதவிடத்தும், அவர்களை நீக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டவிடத்தும் தீங்கு புரிபவரைக் களைதல் முகமாக அரசியற் காவலைச்செய்ய விருப்பமுள்ள அறவோர் அவர்களை மறைவினொறுத்தல் வேண்டும் என்பது.

[17]வெறுக்கத்தக்க [18]அமைச்சரின் [19]உடன்பிறந்தானைச் சத்திரி (என்பவன்) [20]உபசரித்தும் ஊக்கமளித்தும் அரசனிடம் கொண்டு வரவேண்டும். [21]அரசன் வெறுக்கத்தக்கவனுக்குரிய பண்டம் கருவிகளை அவனுக்குக் கொடுத்து வெறுக்கத்தக்கவன்பால் எதிர்க்கச்செய்தல் வேண்டும். [22]படையாலாதல், நஞ்சினாலாதல் எதிர்த்தவனை 'இவன் உடன்பிறந்தானைக் கொன்றவன்' என்று (கூறி) ஆண்டே கொன்றுவிடுதல் வேண்டும்.

[23]இதனால் பாரசவன் பணிமகளின் மகன் என்னுமிவர்கட்கும் விதி கூறியவாறும்.

[24]வெறுக்கத்தக்க அமைச்சரின் உடன்பிறந்தான் சத்திரியினால்

---

17 மறைவினொறுத்தலை நிகழ்த்தும் முறையைப்பற்றிக் கூறுகின்றார். வெறுக்கத்தக்க—அவர்கள் புரியும் செயற்குற்றம் காரணமாக வெறுக்கத் தக்க. பின்வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாதலறிக.

18 அமைச்சர்—ஈண்டு யானைப்படைத்தலைவன் முதலியவர்.

19 தனக்குரிய தாயபாகத்தை யடையப்பெறாத உடன்பிறந்தானை என்பது.

20 அவன் சகோதரனிடம் அவனுக்கு வெறுப்பையுண்டாக்கி 'அரசன் உனக்குச் சிறுபகைகளைவோனது பதவியை யளிக்கப்போகிறான்' என்று சொல்லி ஊக்கத்தையளித்து அரசனிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்பது கருத்து.

21 எதிர்ப்பதற்குரிய படைக்கலம் படைவீரர் முதலிய இன்றியமையாதனவற்றைத் தீச்செயல் புரிபவனிடம் கொடுத்துக் கொல்வித்தல் வேண்டும் என்பது கருத்து.

22 அரசன் விருப்பத்திற்கேற்பத் தன் சகோதரனைப் படைக்கலம் முதலியவற்றால் கொன்றவனை 'இவன் தன் சகோதரனைக் கொன்றவன்' என்ற குற்றத்தைக் காட்டிக் கொன்றுவிடவேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் கோறல் அவன் மறை புலப்படுத்துவான் என்னுங் கருத்தினாற் போலும்.

23 தீச்செயல் புரியும் யானைப்படைத் தலைவன் முதலியவர்களுக்கு ஒவ்வாதவள்பால் தோன்றியவனையாதல், பணிமகளின் புதல்வனையாதல் அழைத்து ஊக்கமளித்துப் படைக்கலம் முதலியவற்றைத்தந்து அவர்களைத் தம் தந்தை முதலியவர்களுடன் எதிர்க்கச்செய்து கொல்வித்துப் பின்னர் 'இவன் தந்தையைக் கொன்றவன்', 'இவன் தலைவனைக் கொன்றவன்' என்ற குற்றத்தைச் சார்த்தி அவர்களையும் கொன்றுவிடல் வேண்டும் என்பது கருத்து.

24 மற்றோர் உபாயங் கூறுகின்றார்.

ஊக்கமளிக்கப்பட்டுத் தாயப்பொருளைக் [25]கேட்டல்வேண்டும். வெறுக்கத்தக்கவனது வீட்டின் எதிர்வீட்டு வாசலில் இரவில் படுத்திருக்கும்பொழுதாதல் வேறிடத்தில் தங்கியிருக்கும்பொழுதாதல் அவனைத் [26]தீக்ஷ்ணன் (என்பவன்) கொன்று 'தாயத்தை விரும்பின இவன் [27]கொல்லப்பட்டான்' என்று சொல்லவேண்டும். பின்னர்க் [28]கொல்லப்பட்டவனின் பக்கத்தை ஏற்றுக்கொண்டு [29]பிறனைத் தண்டித்தல்வேண்டும்.

[30]வெறுக்கத்தக்கவனின் அணிமையிலுள்ள சத்திரிகள் தாயத்தைக் கேட்கும் உடன்பிறந்தானைக் கொல்வதாக அச்சுறுத்தல் வேண்டும். [31]'இரவில் அவனை......' என்பது (முதலியன) சமமாம்.

வெறுக்கத்தக்க அமைச்சர்களுடைய தகப்பனுதல், மகனுதல், மகனின் அல்லது தந்தையின் மனைவியை வலிந்து புணர்தல் உடன்பிறந்தான் மனைவியை (வலிந்து புணர்தல்) செய்யின் [32]அவர்

---

25 தன் சகோதரனிடம் தனக்குரிய தாயப்பொருளைக் கேட்கும்படிச் செய்தல்வேண்டும் என்பது.

26 தீக்ஷ்ணன்—தனக்குவருந் துன்பத்தைப் பொருட்படுத்தாது துன் புறுத்தற்றொழில் புரியும் ஒருவகை ஒற்றன். (12-ஆம் அத்தியாயத்திற் காண்க)

27 தன் சகோதரனால் கொல்லப்பட்டான் என்று பலர் அறியச் செய்தல் வேண்டும் என்பது.

28 கொல்லப்பட்டவனுடைய மகன் மாமன் முதலியவர்களை அழைத்து வரச்செய்து என்பது.

29 தீச்செயல் புரியும் அமைச்சன் முதலியோரைக் கொன்றுவிடல் வேண்டும் என்பது கருத்து.

30 வேறுவகை கூறுகின்றார். தீச்செயல் புரிபவனுடைய பணியாளரின் உருக்கொண்ட சத்திரி என்னும் ஒற்றர்கள் 'நீ எங்கள் தலைவனை உன் சகோதரனிடம் தாயத்தைக் கேட்டலாகாது. இன்றேல் உன்னைக் கொன்று விடுவோம்' என்று கூறி அச்சுறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

31 'வெறுக்கத்தக்கவனது வீட்டின் எதிர்வீட்டு வாசலிலாதல்' என்பது முதலாகப் 'பிறனைத் தண்டித்தல் வேண்டும்' என்பது ஈறுக முற்கூறப்பட்டவை ஈண்டும் கொள்ளத்தக்கன என்பது கருத்து.

32 தந்தை மகன் என்னுமிருவர்க்கும், உடன்பிறந்தாருள் ஒருவர்க் கொருவர்க்கும் காபடிகன் என்ற ஒற்றன் கலகத்தை உண்டுபண்ணி ஒருவனால் மற்றவனைக் கொல்வித்த பின்னர் அக்குற்றங் காரணமாகக் கொன்றவரையும் கொன்றுவிடுதல் வேண்டும் என்பது கருத்து.

களுக்குக் காபடிகன் மூலம் பூசல் முன்கூறியவாற்ருன் விளக்கிய வாருகும்.

[33]வெறுக்கத்தக்க அமைச்சரின் [34]தற்பெருமையுடைய மகனைச் சத்திரி 'நீ அரசன் மகன், பகைவர் அச்சத்தால் [35]இங்கு வைக்கப்பட்டிருக்கிருய்' என்று உபசரித்தல் வேண்டும். [36]ஒப்புக் கொண்ட அவனை அரசன் 'இளவரசுக்குரிய காலத்தையெய்தின உனக்கு [37]அமைச்சரின் அச்சத்தால் முடிசூட்டவில்லை' என்று கூறித் தனிமையிற் சிறப்பித்தல் வேண்டும். சத்திரி அமைச்சரைக் கொல்லும்படி [38]அவனை ஏவுதல்வேண்டும். எதிர்த்தவனை 'இவன் தந்தையைக் கொன்றவன்' என்று (கூறி) அவ்விடத்திலேயே [39]கொல்லுதல் வேண்டும்.

[40]ஐயமேற்பவள் [41]வெறுக்கத்தக்கவனின் மனைவியை வசீ

---

33 வேருேர் உபாயங் கூறுகின்ருர்.

34 வன்மை கொடை முதலிய ஆண்மகுணங்கள் நிரம்பப்பெற்றவனுகத் தன்னைக் கருதுபவனை என்பது.

35 இங்கு—அமைச்சர் வீட்டில்.

36 சத்திரி சொல்லை நம்பி அரசனிடம் வந்த அவனை அரசனும் மறைவில் உபசரித்தல்வேண்டும் என்பது.

37 நீ உன் தந்தையாகக் கருதிவரும் அமைச்சர் அரசாட்சியில் விருப்பமுடையராதலின் முடிசூட்டப்பெற்ற உன்னை உடனே கொன்றுவிடுவர் என்ற அச்சத்தால் நின் தந்தையாகிய அரசன் உனக்கு முடிசூட்டவில்லை என்று கூறி என்பது.

38 அவனை—அமைச்சன் மகனை.

39 வெறுக்கத்தக்கவன் கொல்லப்பட்ட பின்னரும் கொன்றவனைக் கொல்லவேண்டும் என்ற விதி எக்காரணம் பற்றியது? எனின் கபடமாக வஞ்சிக்கப்பட்டு 'நாம் தந்தையைக் கொன்றுவிட்டோம்' என்ற உண்மையை யறிந்து பின்னர் அவர்கள் பகைவராகக்கூடும் என்னும் காரணத்தால் கொன்றவரையும் கொன்றுவிடல் வெண்டும் என்று கூறினுர் என்க.

40 அவ்வுருக்கொண்டு ஒற்றுத் தொழில்புரிபவள் என்பது.

41 தீச்செயல் புரிபவர்களின் அழகு நிரம்பப்பெருத மனைவியரை யடைந்து தன்னிடம் வசியமருந்துகளிருப்பதாகவும் அவற்றைப் பயன்படுத்துதலில் தனக்குச் சிறந்த தேர்ச்சி யிருப்பதாகவும் கூறி அவர்களைத் தன்னுடன் பழகச்செய்து பின்னர் வசியமருந்து என்று கூறி நஞ்சைக் கொடுத்து அவர்கள் மூலமாக அமைச்சரை உண்ணச்செய்து கொன்றுவிடல் வேண்டும் என்பது கருத்து.

கரண ஓடதிகளால் பழகச்செய்து நஞ்சினுல் ஏமாற்றுதல் வேண்டும். [42]இதனை ஆப்பியப்பிரயோகம் என்ப.

வெறுக்கத்தக்க அமைச்சர், காடுகாவலன், வேற்றூரான் என்னும் இவர்களைக் கொல்லுதற்கும் நகர்காவலன் எல்லைகாவலன் என்னும் இவர்களைச் செல்லுதற்கியலாத காட்டிற்கப்புறத்தில் இருக்கச்செய்தற்கும் வெகுண்ட நகரத்தாரை அடக்குதற்கும் [43]வணிகருக்கு வெளியேற்றுதற்குரியதும் [44]எல்லையிலுள்ளதும் [45]திரும்பப்பெறுதற்குரிய பொருளுடன் கூடியதுமான இடத்தைப் பெறுதற்கும் தீக்ஷ்ணர்களுடன் கூடிய [46]நொய்மையான படையை அனுப்புதல் வேண்டும். இரவிலாதல் பகலிலாதல் போர் தொடங்கப்பட்டதும் [47]தீக்ஷ்ணர்கள் கள்வருருவினராக இருந்து மறைந்து கொன்று 'சண்டையில் கொல்லப்பட்டனர்' என்று [48]கூறுதல் வேண்டும்.

[49]வெளியிடங்களுக்கு உலாப்போகின்றவன் வெறுக்கத்தக்க அமைச்சரைக் காணுதற்பொருட்டு அழைத்தல் வேண்டும்.

---

42 இதனை—பகைவரை வஞ்சகமாகக் கொல்லுதற்குரிய இவ்வுபாயத்தை.

43 விலைப்பண்டங்களை உள்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு வெளியேற்றுதற்கும் வெளிநாட்டிலிருந்து உள்நாட்டிற்குக் கொணர்தற்கும் பயன்படும் இடங்கள் என்பது கருத்து.

44 எல்லை—பிறநாடும் தம்நாடும் கூடும் எல்லை.

45 பகைவனுல் முன்னர்க் கைப்பற்றப்பட்டதும் மீண்டும் அவனிடமிருந்து திருப்பிப் பற்றப்படவேண்டியதுமான பிரதேசத்துடன் கூடிய இடம் என்பது.

46 பகைவரை எதிர்த்துப் போர்செய்தற்குத் தக்க படையுடன் அனுப்பினுல் இவர்கள் வெற்றியடைந்து மீண்டும் வந்துவிடுவர் ஆகலின் இவர்களை ஒழித்தல் இயலாது என்பது பற்றி இங்ஙனம் கூறினுர் என்க.

47 இவர்களுடன் அனுப்பப்பட்ட தீக்ஷணர்களே இரவில் கள்வர் வேடம் பூண்டு இவர்களைக் கொன்றுவிட்டு சண்டையில் பகைவராற் கொல்லப்பட்டனர் என்ற செய்தியை எல்லோரும் அறியுமாறு பரப்பிவிடல் வேண்டும் என்பது கருத்து.

48 கொல்லப்படத்தக்கவராக முற்கூறப்பட்டவரைக் கொல்லுதல் வேண்டும் என்பது.

49 'அரசனது அரண்மனையினுள் படைக்கலத்துடன் செல்லலாகாது' என்று விதிக்கப்பட்டிருக்கும்போது, ஒருசமயம் அரசன் யாத்திரை புறப்படப்போவதாகக் கூறித் தீய அமைச்சரைக் காணுதற்காக அழைத்தானுக,

மறைந்த படைக்கலங்களுடன் கூடிய தீக்ஷ்ணர்களுடன் கூடப் புகுந்த அவர்கள் உட்புகுதற்பொருட்டுத் தம்மைப் பரிசோதித்தற்கு இடையே நிறுத்தப்பெறுவர். பின்னர் வாயில் காவலனால் பிடிக்கப்பட்ட தீக்ஷ்ணர்கள் 'வெறுக்கத்தக்கவனால் ஏவப்பட்டோம்' என்று கூறுதல்வேண்டும். அவர்கள் அதை வெளிப்படுத்தி வெறுக்கத்தக்கவரைக் கொல்லுதல்வேண்டும். தீக்ஷ்ணர் நிலையிற் பிறர் கொல்லத்தக்கவராவர்.

[50]வெளியில் உலாவச் சென்றவன் அணிமையில் வசித்துவரும் வெறுக்கத்தக்கவரைச் சிறப்பித்தல் வேண்டும். [51]கோப்பெருந்

முன்னரே அரசனுடன் சங்கேதம் செய்துகொண்ட தீக்ஷ்ணர் சிலர் படைக்கலங்களை மறைவாக வைத்துக்கொண்டு அவ்வமைச்சருடன் செல்லுதல் வேண்டும் என்பதும், அங்ஙனம் முதல் வாயிலைக்கடந்து இரண்டாம் வாயிலையடைந்தபோது படைக்கலமுள்ளார் யாரேனும் உளரோ என்று பரிசோதித்தற் றொழில்புரிபவரால் பரிசோதிக்கப்படும்போது 'நீர் ஏன் படைக்கலங்களுடன் வந்தீர்' என்று வினவப்படுங்கால் 'அரசனைக்கொல்லும் பொருட்டு இவ்வமைச்சரால் தூண்டப்பட்டு இங்ஙனம் வந்தோம்' என்று கூறுதல் வேண்டும் என்பதும், உடனே இக்குற்றத்தைக் காரணமாகக் கொண்டு அவ்வமைச்சரைக் கொன்றுவிடுதல் வேண்டும் என்பதும், தீக்ஷ்ணர்களாக வந்த அவர்க்குரிய நிலையிற் கபடமாக வேறுசிலரைக் கொல்ல வேண்டும் என்பதும் கருத்து.

50 அரணுக்கு வெளியிலுள்ள ஊர்களைக் காண்டற்பொருட்டுப் புறப்பட்ட அரசன், தான் தங்கியிருக்குமிடத்திற்கு அணிமையிலுள்ள தீய செயலையுடையவரை அடிக்கடி கண்டு பேசுதல், உணவளித்தல் முதலிய வகைகளாற் சிறப்பித்தல்வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் நடித்தல் தனக்கு அவரிடம் சிறந்த அன்புளது என்பதை விளம்பரம் செய்தற்பொருட்டென்க. பின்னர்க் கொலைத்தண்டம் விதிக்கப்படுங்கால், 'அரசன் உண்மையிலேயே நெறியுள்ளவன், பெருங்குற்றங் காரணமாகக் கொலைத்தண்டம் விதித்தானேயன்றிப் பகைமை காரணமாக விதிக்கவில்லை' என்று உலகத்தார் அறியும்பொருட்டு அங்ஙனம் வெளிப்படுத்தல் வேண்டும் என்றார்.

51 விலைமகளிருள் ஒருத்தியைப் பட்டத்தரசியின் உருவினளாகச்செய்து தீய செயல்களையுடையவர் இல்லத்தில் இரவிலிருக்கும்படிச்செய்து, பின்னர் அரசன் தன் இருப்பிடத்தில் பட்டத்தரசியைக் காணவில்லை' என்ற பரபரப்பை யுண்டுபண்ணிப் பணியாளரிடம் அவளைத் தேடும்படி ஏவுதல் வேண்டும் என்பதும், உடன் அணிமையிலுள்ள வீடுகளில் தேடப்படுங்கால் தீயவர் இல்லத்திலிருந்து அவளைக் கொணர்ந்துவரச் செய்தல்வேண்டும்

தேவியின் உருவுடைய தீயமகளிர் அவர் இல்லங்களில் இரவில் கண்டுபிடிக்கத்தக்கவர் என்பதுபோன்றவை முற்கூறியவையுடன் சமமாம்.

வெறுக்கத்தக்க அமைச்சரிடம் 'உன்னுடைய அடிசிலமைப் பவனும் பணியாரஞ் செய்பவனும் தேர்ச்சிபெற்றவர்' என்று புகழ்ந்து கூறிப் பணியாரம் உணவு முதலியவற்றைக் [52]கேட்டல் வேண்டும். அல்லது ஏதேனும் ஒரு [53]வெளியிடத்தில் வழிநடுவண் குடிநீரைக் கேட்டல்வேண்டும். [54]அவையிரண்டையும் நஞ்சுடன் கலந்து [55]முதலில் [56]அவர்களையே உட்கொள்ளச்செய்தல் வேண்டும். 'நஞ்சிட்டவர்' என்று [57]வெளிப்படுத்திக் கொல்லுதல் வேண்டும்.

[58]சூனியம் வைக்கும் இயல்பினனைச் சித்தவுருவினர், இலக்கணங்களுடன் கூடிய உடும்பு, ஆமை, நண்டு, [59]கூடம் என்னும் இவற்றுள் [60]ஒன்றைப் புசித்தலால் எண்ணியவற்றை யடைவாய் என்று அறிவுறுத்தல் வேண்டும். ஏற்றுக்கொண்டு [61]தொழில்

என்பதும் பட்டத்தரசியிடம் காதல்கொண்டு இங்ஙனம் அவளைக் கவர்ந்து விட்டான் என்ற குற்றத்தைச் சுமத்தி அவனைக் கொன்றுவிடுதல் வேண்டும் என்பதும் கருத்து.

52 அரசன் அமைச்சரிடம் கேட்டல்வேண்டும் என்பது கருத்து.

53 வேட்டையாடுமிடங்கள் போன்ற விடங்களில் என்பது.

54 அவையிரண்டையும்—அமைச்சரால் கொணர்ந்து கொடுக்கப்பட்ட உணவையும் நீரையும்.

55 அரசன் உண்ணத்தக்கதா என்று சோதிப்பதற்காக முன்னர்ச் செய் யப்படும் சோதனையில் என்பது.

56 அவர்கள்—உணவு முதலியவற்றைக் கொணர்ந்து கொடுத்தவர்.

57 நஞ்சுகலந்த உணவு என்பதைப் புலப்படுத்தி, அவர்களைக் கொன்று விடுதல் வேண்டும் என்பது.

58 அபிசாரத்தொழில் முதலியன புரியும் தீயவர்களைக் களைதற்குரிய உபாயங் கூறுகின்றார்.

59 கூடம்—கொம்பு ஒடிந்த மான்.

60 ஒன்றைக்கொண்டு சுடலைத்தீயில் ஓமம்செய்து எஞ்சியவற்றைப் புசிப்பின் எண்ணியவை எல்லாம் கைகூடும் என்று போதித்தல்வேண்டும் என்பது கருத்து.

61 தொழில்—சுடலையில் ஓமம் செய்தல்.

புரியுங்கால் நஞ்சு, இருப்புலக்கை என்னுமிவற்றால் கொன்று, [62]செயற்குற்றத்தால் இறந்தான் என்று (வெளிப்படுத்தல் வேண்டும்).

[63]மருத்துவ வுருவினர் வெறுக்கத்தக்கவனிடம் தீயசெயல் காரணமாயுண்டான நீக்குதற்கியலாத நோயை [64]விளம்பரப் படுத்தி [65]மருந்து உணவுகளை உட்கொள்ளுங்கால் நஞ்சினால் கொன்றுவிடுதல் வேண்டும்.

[66]சூதன் [67]ஆராளிகன் என்னுமிவர்களின் உருவினர் [68]ஏவப் பட்டு வெறுக்கத்தக்கவரை நஞ்சினால் கொல்லுதல் வேண்டும். [69]உபநிடதத்திற் கூறிய களைதல் இவ்வாறாம்.

[70]வெறுக்கத்தக்க இருவரைக் களைதலைப்பற்றிக் கூறுவாம்.

'செல்க; இந்த அரண் அல்லது நகரத்தில் [71]படைகளையாதல் பொன்னையாதல் திரட்டு; தலைவனிடமிருந்து பொன்னைக் கவர்ந்து வா; அரண், அணைக்கட்டு, வணிகர்வழி, [72]புதிய இல்லம், ஆகரம்,

---

62 கன்மத்தில் குறையுண்டானதுபற்றி பிசாசம் முதலியவற்றால் கொல்லப்பட்டான் என்ற செய்தியைப் பரப்புதல்வேண்டும் என்பது கருத்து.

63 மற்றுமோர் உபாயங் கூறுகின்றார்.

64 விளம்பரப்படுத்தி—கொடிய நோய் ஒன்று ஏற்பட்டுளது என்ற செய்தியை எல்லோரும் நம்பும்படிப் பலரிடமும் சொல்லச்செய்து.

65 நோய்க்கு மருந்து கொடுப்பதாய்ச் சொல்லி, அம்மருந்துடனும் உணவு கொடுக்கும்போது அவ்வுணவுடனும் நஞ்சைக் கலந்து கொடுத்துக் கொன்றுவிடவேண்டும் என்பது கருத்து.

66 சூதன்—இறைச்சியைப் பாகஞ்செய்பவன்.

67 ஆராளிகன்—அரிசி முதலியவற்றைப் பக்குவஞ்செய்பவன்.

68 அரசனால் வெறுக்கத்தக்கவர்பால் ஏவப்பட்டுக் கொன்றுவிடுதல் வேண்டும் என்க.

69 உபநிடதம் என்ற நூலில் தீயவரைக் களைதற்குரிய உபாயங்கள் இவ்வாறு கூறப்பட்டனவாம் என்பது கருத்து.

70 தீச்செயல் புரியும் இரு கட்சியினரை ஒரே முயற்சியாற் களைதற்குரிய ஒருபாயங் கூறுகின்றார்.

71 சேனை மிகுதியாமாறு மக்களைத் திரட்டிக்கொள் என்பது.

72 மக்கள் வழக்கற்ற சிலவிடங்களில் புதிய இல்லத்தையமைக்க என்று கட்டளையிடல் வேண்டும் என்பது.

மரக்காடு, [73]யானைக்காடு என்னுமிவற்றைப் பற்றிய தொழிலுள் ஒன்றைச்செய்; அல்லது நாடுகாவலையாதல் எல்லைகாவலையாதல் செய்; உன்னைத் தடுப்பவனையும், உனக்குத் துணைபுரியாதவனையும் கட்டிக்கொணர்க' என்று கூறி வெறுக்கத்தக்க ஒருவனை நொய்மையான படையுடன் கனைதற்குரிய வெறுக்கத்தக்கவனிருக்கும் இடத்திற்கு அனுப்புதல் வேண்டும். [74]இவனுடைய தகாச் செய்கைகள் தடுக்கற்பாலன என்று கூறி அங்ஙனமே வேறு சிலரையும் அனுப்புதல் வேண்டும். [75]இக்கலகக் காரணம் செயலிடையூறு என்னுமிவற்றில் வேறுபடுபவனைத் தீக்ஷ்ணர்கள் படைக்கலங்களால் மறைவாகக் கொல்லுதல் வேண்டும். அக்குற்றத்தினால் ஏனையோரையும் கொன்றுவிடல் வேண்டும்.

வெறுக்கத்தக்கவருடைய [76]நாடு கிராமம் குலம் என்னுமிவைகளுடைய சந்தி, செய், களம், இல்லம் இவைகளின் எல்லை என்னும் இவற்றைப்பற்றியும், பொருள், கருவி, பயிர், ஊர்தி இவற்றின் துன்புறுத்தல் பற்றியும், கண்காட்சி விழாக்களைப்பற்றியும் பூசல் உண்டானவிடத்தும் தீக்ஷ்ணர்களால் உண்டுபண்ணப்பட்ட பூசலிலும் தீக்ஷ்ணர்கள் 'இவனுடன் பூசல் செய்பவர் இவ்வாறு

---

73 யானைக்காட்டுத் தலைவனது தொழிலைச் செய் என்று கட்டளையிடல் என்பது.

74 முற்கூறப்பட்டவன் அனுப்பப்பட்டவிடத்திலுள்ளவரிடம் இம்மாதிரி சொல்லி ஊக்கமளிக்கும்படி வேறுசிலரையும் அனுப்புதல்வேண்டும் என்பது கருத்து.

75 சேனை பொன் முதலியவற்றைத் திரட்டுதல் முதலிய பூசற்காரணச் செயல்களை, ஏவப்பட்ட தீயவர் தொடங்கிச் செய்தபோது, இடையூறு செய்யும் ஏனைய தீயவரைத் தீக்ஷ்ணர்கள் மறைவிற்கொன்று, அரசனுடைய ஏவலாளரைக் கொன்ற குற்றத்தை ஏவப்பட்ட தீயவர்பால் ஏற்றி அவரையும் கொன்றுவிடல் வேண்டும் என்பது கருத்து.

76 நாடு முதலியவற்றின் எல்லையைப்பற்றியும், செய் முதலியவற்றின் எல்லையைப்பற்றியும், பொருள் முதலியவற்றிற்குத் தீங்கு நிகழ்த்தப்படுதல் பற்றியும், கூத்துக்காட்சி முதலிய நிகழ்ச்சிகளைப்பற்றியும் தீக்ஷ்ணர்களால் கலாம் ஏற்பட்டபோது, தீக்ஷ்ணர்கள் மறைவாகச் சில தீயவரைப் படைக்கலத்தினாற் கொன்று, ஏனைய தீயவரிடம் அக்கொலைக்குற்றத்தைச் சார்த்தி, இன்னாரின்னார் செய்த பூசலால் இங்ஙனம் ஏற்பட்டது என்று கூறுதல் வேண்டும் என்பதும், அக்குற்றத்தை ஏதுவாகக்கொண்டு அரசன் அத்தீயவரைத் தண்டித்தல்வேண்டும் என்பதும் கருத்து.

செய்யப்படுவர்' எனக்கூறிப் படைக்கலங்களால் தாக்குதல் வேண்டும். அக்குற்றத்தினால் ஏனையோரையும் கொன்றுவிடல் வேண்டும்.

[77]வெறுக்கத்தக்கவர் கலகத்திற்குக் காரணமாயிருப்பின், அவர்களுடைய செய், களம், இல்லம் இவற்றில் தீக்ஷ்ணர்கள் தீயிட்டும், உறவினர் ஊர்திகள் இவைகளில் படையால் தாக்கியும் 'இன்னாரால் தூண்டப்பட்டோம்' என்று அவ்வாறே கூறல் வேண்டும். அக்குற்றத்தினால் ஏனையோரையும் கொன்றுவிடல் வேண்டும்.

[78]சத்திரிகள் செல்லுதற்கியலாத நாட்டில் வாழும் தீய அரசியற்றலைவருள் ஒருவருக்கொருவரை விருந்தினராகச் செய்தல் வேண்டும். அங்கு நஞ்சிடுவோர் நஞ்சினைக் கொடுத்தல்வேண்டும். அக்குற்றத்தினால் ஏனையோரும் தண்டிக்கத்தக்கவராவர்.

ஐயமேற்பவள் வெறுக்கத்தக்க ஒரு அரசியற்றலைவனிடம் வேறொரு வெறுக்கத்தக்க அரசியற்றலைவனுடைய மனைவி, மருகி, மகள் இவர்கள் உன்னைக் காதலிக்கின்றனர் என்று [79]வேறுபடுத்தல் வேண்டும். [80]ஏற்றுக்கொண்ட அவனுடைய அணிகலனை

---

[77] கலகத்துக்குக் காரணமாயுள்ள தீயவரின் செய் முதலியவற்றில் தீக்ஷ்ணர்கள் தீயிட்டும், அவர் உறவினர் முதலியவர்களைப் படைக்கலத்தினால் கொன்றும், முற்கூறியபடி அக்குற்றத்தை வேறுசில தீயவரிடம் ஏற்றி (இன்னின்னாருடன் சண்டை புரிந்தவர்களின் விளைவு இவ்விதமாம். இன்னான் இன்னானால் நாங்கள் ஏவப்பட்டு இங்ஙனம் செய்தோம் என்பது போன்று) அக்குற்றங் காரணமாக அவர்களை அரசன் தண்டிக்குமாறு செய்தல்வேண்டும் என்பது கருத்து. தீக்ஷ்ணர்களுக்குப் பதிலாக வேறு சிலரைக் கபடமாகக் கற்பித்துத் தண்டித்தல் வேண்டும் என்று முன்னர்க் கூறியவிதி ஈண்டும் ஏற்கப்பாலது என்க.

[78] செல்லுதற்கரிய வேற்றுநாட்டில் வாழும் தீயசெயலுடையவரும் ஒருவரையொருவர் பகைக்கின்றவருமான இருவருக்கு ஒருவர்க்கொருவர் நட்பையடையும்படி சத்திரி என்பவர் சமாதானம் செய்து, ஒருவர் இல்லத்திற்கு விருந்தினராக மற்றவரை அழைக்கச்செய்து உணவில் நஞ்சிடச்செய்தல் வேண்டும் என்பதும், நஞ்சிட்ட குற்றத்தை இல்லத்தானான தீயவனிடம் ஏற்றி அவனையும் கொலைத்தண்டத்தால் களைதல்வேண்டும் என்பதும் கருத்து.

[79] வேறுபடுத்தல்—மனத்தை மாற்றுதல்.

[80] ஏற்றுக்கொண்ட—பொய்யாகக் கூறியவற்றை நம்பிய.

எடுத்துவந்து, [81]இத்தலைவன் இளமைச் செருக்குற்று உன் மனைவி, மருகி, மகள் என்னுமிவர்களைக் காதலிக்கிறன் என்று கூறித் தலைவனிடம் காண்பித்தல் வேண்டும். இரவில் அவர்களுக்குப் பூசல் என்பது முதலியன சமமாம்.

[82]படைவலியாற் ருழ்த்தப்பட்ட வெறுக்கத்தக்கவர்பால் இளவரசனுதல் சேனைத்தலைவனுதல் [83]சிறிது துன்புறுத்தியபின், விலகியிருந்து எதிர்த்தல்வேண்டும். பின்னர் அரசன் நொய்மையானபடை, தீக்ஷ்ணர்களுடன் கூடிய படைவலியால் தாழ்த்தப்பட்ட (வேறுசில) வெறுக்கத்தக்கவரையே அனுப்புதல் வேண்டும் என்பதுபோன்ற [84]ஏனைய செயல்கள் சமமாம்.

இகழ்ந்துரைக்கும் [85]அவர் பிள்ளைகளுள் மனவேற்றுமையில்லாதவன் தந்தையின் தாயப்பொருளை அடையக்கடவன். [86]இங்ஙனம் அவர்களுடைய பிள்ளை பேரன்மார்களுக்கும் மக்கட்

---

81 இவ்வணிகலனுக்குரியவன் உன் மனைவி முதலியவர்களைக் காதலித்து, அவர்களின் அன்பு குறித்து இதை அவர்களுக்குக் கொடுக்கும்படி என்னிடம் கொடுத்தனுப்பினுன் என்று மனைவி முதலியவர்களுக்குரியவனிடம் காண்பித்தல்வேண்டும் என்பதும், பின்னர் இரவில் அவ்வையமேற்பவளால் மகளிருக்கும் இல்லத்துக்கு அக்காதலன் அழைத்துவரப்படவேண்டும் என்பதும், மகளிர்க்குரியவருக்கும் அவனுக்கும் சண்டை யேற்பட்டுக் காதலன் கொல்லப்படவேண்டும் என்பதும், அவனைக்கொன்ற குற்றத்திற்காகக் கொன்றவனும் கொல்லப்படவேண்டும் என்பதும் கருத்தாதலறிக.

82 இவர்களைப்பற்றிய விளக்கத்தைப் 'படைவலியாற் ருழ்த்தப்பட்டோன் செயல்' என்னும் பிரகரணத்தை விளக்கும் 114-ஆம் அத்தியாயத்திற் காண்க.

83 அவர்களுடைய நாட்டிற்குச் சிறிது தீங்கை யுண்டுபண்ணி என்பது.

84 அவ்விருபாலார்க்கும் கலகத்தை உண்டுபண்ணுதல், அரசனுல் ஏவப்பட்ட தீயவரைத் தீக்ஷ்ணர்கள் மறைவிற்கொன்று அங்குள்ள தீயவர்பால் அக்குற்றத்தைச் சார்த்துதல், அவர்களை அரசன் தண்டித்தல் முதலியனவாக முற்கூறப்பட்ட செயல்கள் என்பது.

85 அங்ஙனம் கொல்லப்பட்ட தீயவரின் மக்களுள் எவனெருவன் பகைமையின்றிப் பணிவுள்ளவனுயிருப்பவனே அவனுக்கே அரசன் அந்நாட்டைக் கொடுத்தருளல் வேண்டும் என்பது கருத்து.

86 பிள்ளைமட்டுமேயன்றிப் பேரன் முதலியவரும் தீய நினைவின்றியிருத்தல்வேண்டும் என்றும் இல்லையேல் அவர்கள் தம் நாட்டைப் பெறுதற்குத் தகுதியற்றவராவர் என்கிறர்.

[87]குற்ற[88]மில்வழி அரசுரிமை தொடரும் என்க.

சுலோகம்

[89]தன் பக்கத்திலாதல் பிற பக்கத்திலாதல் மறைவினெறுத்தலைச் செய்யவேண்டும். [90]அக்காலத்தும் [91]பிற்காலத்தும் [92]பொறுமையுள்ளவன் ஐயுறத்தக்கவனல்லன்.

ஐந்தாம் அதிகரணம் முதற்பிரகரணம் ‘ மறைவினெறுத்தல் ’ என்னும் தொண்ணூற்றோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

87 குற்றம்—மன வேறுபாடு.

88 இல்வழி என்றதனல் மனவேற்றுமையிருப்பின், அந்நாட்டின் உரிமை அவனல் இழக்கப்பட்டு, அவ்வரசனை யடையத்தக்கது என்பது போதரும்.

89 தீயவர் தன்னைச் சார்ந்தோராயினும், பகைவரைச் சார்ந்தோராயினும் வெளிப்படக் களைதற்கியலாதவிடத்து மறைவினெறுத்தலை அவ்விருவரிடத்தும் கையாளுதல் வேண்டும் என்பது கருத்து.

90 அக்காலம்—மறைவினெறுத்தல் நிகழ்ந்தகாலம்.

91 ‘ பிற்காலம் ’ என்பது மறைவினெறுத்தல் நிகழ்ந்தகாலத்திற்குப் பிந்தியகாலம் என்னும் பொருட்டு.

92 தன் முன்னேரை மறைவினெறுத்த அரசனிடம் மன வேறுபாடின்றி, பொறுமையுடனிருக்கும் அவருடைய (தீயவரான முன்னேருடைய) மக்கள் முதலியோர் ஐயுறப்படாது நாட்டின் உரிமையைப் பெறுதற்குத் தகுதியுள்ளவர் என்பது கருத்து.

ஐந்தாம் அதிகரணம்—வஞ்சித்தொறுத்தல்

இரண்டாம் பிரகரணம்—பொன் முதலியவற்றை [1]மிகுதியாகக்கோடல்

தொண்ணூற்றிரண்டாம் அத்தியாயம்

[2]திடீரென உண்டான பொருட்டுன்பத்தை யுடையவனும் குறைந்த பொன் முதலியவற்றை யுடையவனும் பொன் முதலியவற்றை ஈட்டுதல் வேண்டும்.

[3]வானம் பார்த்து விளையக்கூடியதும், [4]கூலங்களை மிகுதியாக வுடையதுமான நாடு பெரிதாயினும் அன்றிச் சிறிதாயினும் அந் [5]நாட்டிலுள்ள கூலத்தின் மூன்றிலொரு பகுதியையோ நான்கி

92-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மிகுதி—முன் ஏற்பட்ட அளவின் அதிகம். அரசனுக்குப் பொருள் கொண்டு நீக்குதற்குரிய துன்பம் நேர்ந்தவிடத்துப் பொருணிலை குறையுங் கால், அளவில் மிகக் கொள்ளுதலை யுணர்த்துவது இப்பிரகரணம். 'சிறு பகை களைதல்' என்னும் முன் அதிகரணத்தில் அரண் நாடு முதலியவற்றின் சிறுபகை களைதல் கூறப்பட்டது. 'மறைவினொறுத்தல்' என்ற முற் பிர கரணத்தில் அரசன் முதலியவர்களின் பகைகளைக் களையும் விதிகள் கூறப் பட்டன. ஈண்டு அரசன்பாலுள்ள சிறுபகையாம் தன்மையை நீக்குதற் குரிய விதிமுறைகள் கூறப்படுதலின் பிரகரண வியைபுண்மை யறிக.

[2] எதிர்பாராத நிலையில் பொருளால் மட்டும் நீக்குதற்குரிய துன்பநிலை அரசனுக்கு நேர்ந்துழி, அதற்குவேண்டிய பொருள் கருவூலத்தில் இல்லா திருப்பின் பொருளை யீட்டித் தொகுத்து வைக்கவேண்டும் என்பது கருத்து.

[3] மழையை எதிர்பார்த்தே விளைதற்குரிய செய்களை யுடையது என்பது. இதனைத் 'தேவமாதிருகம்' என்று முதனூல் கூறும். புணர்ச்சி விதியில் 'அதேவமாதிருகம்' எனவும் பிரிக்கலாமாகலின், எப்பொழுதும் நீர்ப்பெருக்குள்ள ஆறு முதலியவற்றின் நீர்ப்பாய்ச்சலினால் பயிரிடக்கூடிய செய்களையுடையது எனவும் பொருள் கொள்ளலாம். வானம் பார்த்த நாட்டினின்றும் இறைப்பொருளை மிகுதியாகக் கோடல் முறையன்மையின் இங்ஙனங் கூறுவதே பொருத்தமானதாம்.

[4] நன்கு செழித்து விளைந்ததுமான என்பது.

[5] நாடு—நாட்டிலுள்ளார். நாட்டாரிடம், கூலத்தில் மூன்றிலொரு கூற்றையாதல், நான்கிலொரு கூற்றையாதல் கேட்டுப் பெறுதல்வேண்டும் என்பது கருத்து. 'கேட்டுப்பெறுதல்' என்றதனால் வலிந்துபெறுதல் கூடாதென்பது போதரும்,

லொரு பகுதியையோ கேட்டுப் பெறுதல் வேண்டும்.' [6]பயனுக்கேற்ப, [7]இடையாயவற்றிலும் கடையாயவற்றிலும் ஆம்.

[8]அரண், அணைக்கட்டு, வணிகர்வழி, வழக்கற்ற இடம், ஆகரம், மரக்காடு, யானைக்காடு என்னும் இவற்றின் தொழிலால் உதவுவது, [9]எல்லையிலுள்ளது, [10]சிறியது என்னுமிவற்றினிடம் கேட்டல் கூடாது.

[11]கூலம், எருது, பொன் [12]முதலியவற்றைக் குடியேறியவனுக்குக் கொடுத்தல் வேண்டும். [13]விதை உணவு என்னுமிவற்றால் கழித்து எஞ்சிய கூலத்தின் நான்கிலொருகூற்றை விலைக்கு வாங்கிக் கொள்ளல் வேண்டும்.

[14]காட்டிற் றோன்றியது, [15]வேதமோதுபவர்க்குரியது என்னு

---

6 கூலத்தின் அளவுக்கேற்ப என்பது.

7 இடையாய நாட்டிலுள்ளாரிடமும், கடையாயநாட்டிலுள்ளாரிடமும் அந்நாட்டின் விளைவு நிலைக்கேற்பக் கேட்டுப் பெறலாம் என்பது.

8 கேட்கத் தகாதவற்றைக் கூறுகின்றார். அரண் முதலியவற்றில் தொழில் புரிதலால் உதவிவரும் நாட்டினரிடமும் கூறுகேட்பின் தொழிலுக்கு இடையூறு நேரும் எனக்கொண்டு, அவரிடம் கேட்டலாகாது என்றார்.

9 தன் நாட்டின் எல்லையிலுள்ளவரிடம் மிகுதியாகக் கூறுகேட்டுப் பெறின், வேற்று நாட்டினின்றும் பகைப்படை உட்புகுதல் கூடும் என்ற அச்சத்தினால் இங்ஙனங் கூறினார்.

10 சிறியது—பொருள் வருவாயினால் குறைவுபட்டது.

11 பொருள் குறைந்த நிலையிலும் அரசன் புதிதாகக் குடித்தனம் தொடங்கப்பட்டுப் பயிர்த்தொழில் புரிவோர்க்குச் செய்யவேண்டிய உதவியைக் கூறுகின்றார்.

12 பயிர்த்தொழிற்கு வேண்டிய (இன்றியமையாத) ஏனையவற்றை என்பது.

13 பயிர்த்தொழில் செய்து விளைந்த கூலத்தினின்றும் விதை உணவு இவற்றிற்குரியதைக் கழித்து எஞ்சிய கூலத்தினளவில் நான்கிலொருகூற்றை விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாம் என்பதும், ஏனைய உழவரிடம்போல் புதிய குடித்தனம் செய்பவனிடமிருந்து உல்குபொருளைப் பெறுதல் கூடாது என்பதும் கருத்து.

14 வரகு முதலியன என்பது.

15 அந்தணரின் உணவு முதலியவற்றிற்காகவுள்ளது என்க.

மிவற்றை [16]விலக்கிவிடல் வேண்டும். [17]அருளால் அவற்றையும் விலைக்குக் கொள்ளலாம்.

[18]அதனை மேற்கொள்ளாவிடின் நகரத்தலைவர் கோடைக் காலத்தில் உழவர்களைப் பயிரிடச்செய்தல் வேண்டும். [19]விதைக் கும் காலத்தில் விழிப்பின்மை காரணமாக உண்டாம் அழிவினிரு மடங்கு தண்டத்தை விதைப்பத்திரத்தில் குறிப்பிடல் வேண்டும். தெய்வ வழிபாடு, தென்புலத்தார் கடன், பசு என்னுமிவை காரண மாக எடுக்கப்படும் புல், [20]கடபங்கமுஷ்டி என்னுமிவை இல்வழிப் பச்சையாயும், பக்குவமாயுமுள்ளவற்றை விளைவிலிருந்து எடுத் தலைத் [21]தடுத்தல் வேண்டும். ஐயமேற்பவர், கிராமக்கூலி என்னு மிவற்றிற்காக [22]குவியலின் அடிப்புறத்தை விடுத்தல் வேண்டும்.

[23]தன் பயிரைக் கவர்ந்தவனுக்கு எண் மடங்கு தண்டமாம். [24]பிறன் பயிரைக் கவரும் தன்னினத்தவனுக்குப் பயிர்த்தண்டம் ஐம்பது மடங்காம். [25]வெளியிலுள்ளவனாயின் கொலையாம்.

---

[16] அவற்றில் கூறுபெறுதல் கூடாது என்பது.

[17] விதை, உணவு என்னுமிவற்றிற்குரியதைக் கழித்து எஞ்சியவற்றை விலைகொடுத்துப் பெறலாம் என்பது கருத்து.

[18] அந்தணர் முதலியவர் தம் செய்களில் பயிர்த்தொழில் செய்யாவிடின் என்பது.

[19] விதை விதைக்குங் காலத்தில் எழுதிக்கொடுக்கும் ஒப்பந்தப்பத்திரத் தில் உழவர் தம் விழிப்பின்மையால் உண்டாம் நட்டத்தின் இருமடங்கு இறுப்பதாய் எழுதிக்கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[20] கையால் உருவி எடுக்கப்படும் கூலத்தின் 'கைப்பிடியளவு' கடபங்க முஷ்டி எனப்படும்.

[21] பயிர் விளைந்தபின், வாரம் பிரிக்காத நிலையில் பச்சையானவற்றை யும் பழுத்தவற்றையும் உழவன் எடுத்தலைத் தடுத்தல் வேண்டும் என்பது.

[22] கூலக்குவியலின் கீழ்ப்பகுதியில் சிதர்ந்து கிடக்கும் கூலத்தை ஐய மேற்பவர் முதலியோர்க்காக விடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[23] தான் உழவுசெய்து பயிர்த்தொழில் புரியும் செய்யிலிருந்து விளை பொருளைக் கவர்பவனுக்குக் கவரப்பட்ட பொருளுக்குரிய விலையின் எண் மடங்கு தண்டமாம் என்பது.

[24] தன் செய்யை அடுத்துள்ள பிறன் செய்யிலிருந்து விளைபயிரைக் கவர்ந்த உள்ளூரானுக்குச் செய்யிலிருந்து பயிரைக் கவர்ந்ததற்குரிய தண் டம் ஐம்பது மடங்கு என்பது கருத்து.

[25] செய்யிலிருந்து விளைபொருளைக் கவர்ந்தவன் அயலூரானாயின் அவ னுக்குக் கொலைத்தண்டம் என்க.

[26]கூலத்திற்கு நான்கில் ஒருகூற்றையும், [27]காட்டிலுண்டானவை, பருத்தி, அரக்கு, உரிப்பட்டு, மரவுரி, ஆடை, கம்பளி, வெண்பட்டு, மருந்து, மணப்பொருள், மலர், கனி, கீரை என்னுமிவ் விலைப்பண்டம், மரம், மூங்கில், பசூன், உலர்ந்த இறைச்சி ஆகிய இவற்றிற்கு ஆறில் ஒருகூற்றையும் [28]வாங்கிக்கொள்ள வேண்டும். [29]தந்தம், [30]தோல் இவற்றிற்குப் பாதியாம். [31]அனுமதிக்கப்படாதவற்றை விற்பவனுக்குப் பூர்வசாகசம் தண்டமாம்.

[32]உழவரிடம் கேட்டல் இவ்வாறும்.

பொன், வெள்ளி, வயிரம், அரதனம், முத்து, பவழம், குதிரை, யானை என்னுமிவ் விலைப்பண்டங்களுக்கு இறைப்பொருள் [33]ஐம்பதாம். நூல், ஆடை, செம்பு, பித்தளை, வெண்கலம், மணப்பொருள், மருந்து, கள் என்னுமிவ் விலைப்பண்டங்களுக்கு இறைப்பொருள் நாற்பதாம். [34]கூலம், எண்ணெய், இரும்பு என்னுமிப் பண்டம் வண்டி மூலம் விற்கப்படின் இறைப்பொருள் முப்பதாம் பீங்கான் விற்பவர் [35]பெரியகாருகர் என்னுமிவர்கட்கு இறைப்பொருள் இருபதாம். [36]சிறுகாருகர், [37]தீய

---

26 குறைவின்றி விளைந்த கூலத்தின் நான்கிலொருகூற்றை என்பது.

27 காட்டிற்றோன்றிய கூலம் என்பது.

28 கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்பது.

29 தந்தம்—யானைத்தந்தம்.

30 பசு முதலியவற்றின் தோல் என்பது.

31 தன் விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்தக் கூடாததும், அரசன் உடன்பாடுபெற்று பயன்படுத்தப்பட வேண்டியதுமானவற்றை என்பது. அரசன் மட்டும் நுகர்தற்குரிய பொருள் முதலியவற்றை என்பாருமுளர்.

32 பொன் முதலியவை குறைந்த நிலையில் உழவரிடமிருந்து கேட்டுப் பெறுதலைப்பற்றிய விதி கூறப்பட்டது என்பதாம். பின்வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

33 ஐம்பது—ஐம்பதில் ஒருகூறு. பின்னுள்ளவற்றிற்கும் இஃதொக்கும்.

34 கூலம் முதலிய விலைப்பண்டம் வண்டியிலேற்றி வெளிநாட்டுக்கு வெளியேற்றப்பட்டு விற்கப்படினும், அங்ஙனம் வெளிநாட்டினின்றும் கொணர்ந்து விற்கப்படினும், அவற்றிற்கு முப்பதில் ஒருகூறு இறைப்பொருள் என்பது.

35 பொற்கொல்லன், பெரிய ஓடம், கப்பல் முதலியன செய்யும் வினையாளன் முதலியோர் என்பது.

36 தச்சர், கொல்லர், வண்ணான் முதலியோர்.

37 விலைமகளிருக்குச் சமமான மகளிரைப் போற்றி வருபவர்.

மகளிரைப் போற்றுபவர் என்னுமிவர்களுக்கு இறைப்பொருள் [38]பத்தும், கட்டை, மூங்கில், பாறை, மண்கலம், பக்குவஞ்செய்த உணவு, இளந்தளிர் என்னும் இவற்றை விற்போர்க்கு இறைப் பொருள் ஐந்தாம். [39]பாடகர்கள், விலைமகளிர் என்னுமிவர்கள் [40]பெறுபொருளிற் பாதியைக் கொடுத்தல் வேண்டும். [41]தொழிலி லீடுபடாதவர் [42]இரணிய கரத்தைக் கொடுத்தல் வேண்டும். [43]இவர், தம் பொருளையே பிறரிடமிருந்து கொள்ளப்பட்டது என்று சொல்லி விற்பவர் ஆகலின் [44]இவர்களின் [45]குற்றம் ஒன்றையும் பொறுத்தல் கூடாது.

கொண்டு விற்றல் செய்பவரிடம் கேட்டல் இவ்வாறும்.

[46]கோழி பன்றி இவற்றிற்குப் பாதி கொடுத்தல் வேண்டும். [47]சிறுவிலங்காயின் ஆறில் ஒருகூறும் பசு, எருமை, கோவேறு, கழுதை, ஒட்டகம் இவற்றிற்குப் பத்தில் ஒருகூறும். [48]தீயவரைப்

---

38 தன்னுலீட்டப்பெற்ற பொருளிற் பத்தில் ஒருகூற்றை இறுத்தல் வேண்டும் என்பது.

39 பாடகர்—நடன் கூத்தன் முதலியோர்.

40 தமக்குக் கிடைக்கும் பொருளிற் பாதியைக் கொடுத்தல் வேண்டும் என்பது.

41 வணிககுலத்தில் பிறந்தும் வணிகத்தொழிலிலீடுபடாத வணிகர் முதலியோர் என்பது.

42 ஒரு தலைக்கு ஒரு வராடகம் என்ற முறையில் விதிக்கப்படும் தலைவரி. வராடகம் என்பது ஒருவகை நாணயம் என்ப.

43 இவர்கள் தமக்குரிய விலைப்பண்டத்தையே பிறர்க்குரியது என்று கூறி விற்பனைசெய்யு மியல்பினர் ஆகலின், இவர்கள் தம் தொழிலில் ஈடு படாதிருத்தல் நம்பத்தக்கதன்று என்று கூறுகின்றார்.

44 இவர்—வணிகர், தச்சர் முதலியோர்.

45 தம் தம் தொழிலிலீடுபடாதிருப்பது போன்று காட்டி மறைவிற் பொருளீட்டும் குற்றம் ஒன்றையும் என்பது. தம் தொழிலில் ஈடுபடாமை யையே குற்றமெனக்கொண்டு, அவர்களுக்குத் தலைவரி விதித்தல் வேண்டும் எனினும் ஆம்.

46 சிறு உயிர்களை வளர்த்துப் பிழைக்கும் மக்களைப்பற்றிக் கூறுகின்றார். கோழி, பன்றி முதலியவற்றைப் போற்றி வாழும் மக்கள் தம்மால் போற்றப்பட்டவற்றின் பாதியை இறையாகக் கொடுத்தல் வேண்டும் என்க.

47 செம்மறி முதலியவற்றிற்காயின் என்பது.

48 தீயவர்—வியபிசாரத்தொழில் புரியும் மகளிர்.

போற்றுபவர் அரசனின் பணிப்பெண்களாலும் உயர்ந்த அழகு இளமை இவற்றை யுடையவர்களாலும் பொன் முதலியவற்றை யீட்டுதல் வேண்டும்.

சிற்றுயிர்களை வளர்ப்பவரிடம் கேட்டல் இவ்வாறும்.

[49]ஒருமுறையே யன்றி இருமுறை கேட்டல் கூடாது. [50]அங்ஙனம் செய்யாவிடின் வருவாய்த் தலைவன் [51]ஒரு காரியத்தைக் குறிப்பிட்டு நாடு நகரங்களிலுள்ளவரிடம் கேட்டுப் பெறுதல் வேண்டும். [52]மறைந்தொழுகுவோர் [53]இதற்கென முதலில் மிகுதியாகக் கொடுத்தல் வேண்டும். இம்முறையாக அரசன் நாடு நகரங்களிலுள்ளவரிடம் கேட்டுப் பெறுதல் வேண்டும். [54]காபடிகர் சிறிது கொடுப்பவர்களைப் பழித்தல் வேண்டும். பொருளாளரிடம் (அவர்) தகுதிக்கேற்பப் பொருளைக் கேட்டல் வேண்டும். உதவிக் கேற்பத் தாமே கொடுக்கும் பொருளையும் (ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.) [55]இவர்களுடைய பொருளைக் குறித்துப் [56]பதவி, குடை, தலைப்பாகை, அணிகலன் என்னுமிவற்றை (இவர்களுக்குக்) கொடுத்தல் வேண்டும். [57]அந்தணர் நுகர்தற்குரியதல்லாத

---

49 மேற்கூறியபடி இறைப்பொருளை ஒருமுறையே கேட்டுப்பெறுதல் வேண்டும் என்றும், மீண்டும் கேட்டல் நாட்டுமக்களின் கோபத்திற்குக் காரணமாகும் என்றும் கூறுகின்றார்.

50 அவ்விதம் கேட்டுப்பெற வியலாதவிடத் தென்பது.

51 இக்காரியத்தைச் செய்துமுடிக்க வேண்டியது இன்றியமையாததாகும் என்று ஏதேனும் ஒன்றைத் தலைக்கீடாகக்கொண்டு நாடு நகரங்களிலுள்ள மக்களிடம் பொருள்பெற வேண்டும் என்பது கருத்து.

52 அரசியலாரிடம் சங்கேதம் செய்துகொண்டவர்கள் என்பது.

53 இதற்கு—வருவாய்த் தலைவனுற் குறிப்பிட்ட காரியத்திற்கு.

54 காபடிகர் என்னும் ஒற்றர், மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்காக மிகக் கொஞ்சமான பொருளைக் கொடுத்து உதவும் மக்களைப் பரிகசித்துப் பழித்துரைத்தல் வேண்டும் என்பது கருத்து.

55 இவர்கள்—பொருளாளர் முதலியோர்.

56 அரசனது பாராட்டிற்கு அடையாளமாகத் தலைவர் பதவி, வெண் குடை முதலியவற்றைக் கொடுத்துப் பொருளைப் பெறுதல்வேண்டும் என்பது.

57 எவனிடம் போற்றுவதற்காகக் கொடுக்கப்பட்டதோ, அவன் இறந்தனன் அல்லது அவன் இல்லம் தீக்கிரையாயிற்று என்று கூறிப் பணியாளர் மேற்கூறப்பட்ட பொருளை அரசனிடம் கொணர்ந்து கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

பொருள், பாசண்டிட் பொருள், குழுப்பொருள், தெய்வப்பொருள் என்னும் இவற்றை இறந்தவன் அல்லது தீயிடப்பட்ட இல்லத்தோன் என்பவரிடம் வைக்கப்பட்டது எனக்கூறிப் பணியாளர் கொண்டுவருதல் வேண்டும்.

[58]தெய்வநிலையத் தலைவன் அரண் நாடுகளிலுள்ள தெய்வத் திற்குரிய அவ்வப்பொருளை ஒருங்குசேர்த்தல் வேண்டும். [59]அங்ஙனமே கொணர்தல் வேண்டும். [60]கடவுண்மரம், பண்படுத்தப் பட்டவிடம், புண்ணியதலம் என்னுமிவற்றில் நிலத்தைப் பிளந்து தோன்றியது என்ற செய்தியைப் பரப்பி, இரவில் இலிங்கம் முதலியவற்றைச் செய்துவைத்துத் திருவிழா கூட்டம் என்னுமிவற்றால் ஈட்டுதல் வேண்டும். [61]கடவுண்மரம், தோட்டத்திலுள்ள மரம் என்பவைகளில் பருவமல்லாத காலத்துத் தோன்றிய மலர் கனிகளால் கடவுள் இருப்பைப் பரவச்செய்தல் வேண்டும். [62]மரங்களில் இராக்கதப் பேரச்சம் உளதென மக்களை நம்பச்செய்து சித்த

---

58 அரண் முதலியவற்றிலுள்ள தெய்வத்தின் பொருள்களைப் பகைவர் அச்சம் முதலியவற்றைக் காரணமாக விளக்கிக்காட்டி ஓரிடத்தில் கொண்டு வந்து சேர்த்தல் வேண்டும் என்பது கருத்து.

59 பின்னர் அரசனிடம் அப்பொருள்களைக் கொடுத்தல் வேண்டும் எனக்கொள்க.

60 மரம் முதலியவற்றில் இரவில் இலிங்கங்களைச் செய்துவைத்து 'இது பூமியைப் பிளந்துகொண்டு வெளித்தோன்றிய சுயம்புலிங்கம்' என்று எல்லோருக்கும் அறிவித்து, அதற்குத் திருவிழா முதலியவற்றைச் செய்யுமுகமாக மக்களிடமிருந்து பொருளை ஈட்டல் வேண்டும் என்பது கருத்து.

61 கடவுண்மரம் முதலியவற்றில் தெய்வம் வீற்றிருக்கிறது என மக்கள் நம்புதற்குரிய உபாயங் கூறுகின்றார். மிகுந்த முயற்சியின் காரணமாக, மேற்கூறிய மரங்களில் பருவமல்லாத காலத்தில் மலர், கனி என்னுமிவற்றைத் தோற்றுவித்து, தெய்வத்தின் அருளால் ஏற்பட்டதாகக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

62 இரவில் சித்தவுருவினர் சுடலை முதலியவற்றிலுள்ள மரம் முதலியவற்றில் அரக்கர் வேடம்பூண்டு தங்கியிருந்து 'நாடோறும் ஒவ்வொரு மனிதனை எனக்கு உணவாக அளித்தல் வேண்டும், இன்றேல் அனைவரையும் ஒரேநாளில் தின்றுவிடுவேன்' என்று எல்லோரும் அறியுமாறு கூறி, அங்ஙனம் அரக்கன் கூறினதாகவும் விளம்பரப்படுத்தல் வேண்டும் என்பதும், அவ்வாறு அரக்கனாலேற்பட்ட பேரச்சத்திற்கு மாற்றுச்செயல் புரிதற் பொருட்டு நாடு நகரங்களிலுள்ள மக்களிடமிருந்து பொருளைத் திரட்டி அரசனுக்குக் கொண்டுவந்து கொடுத்தல் வேண்டும் என்பதும் கருத்து.

வுருவினர் நாடு நகரங்களிலுள்ள மக்களின் பொற்காசுகளால் மாற்றுச்செயல் செய்தல் வேண்டும். [63]சுரங்கத்தையுடைய கிணறுகளிலோ உள்ளே துளையுடைய பாம்புச் சிலையிலோ பாம்புகளையுட்புகுத்திப் பொருள் இறுத்துப் பார்க்கச்செய்தல் வேண்டும். [64]கடவுண்மரப் பொந்து, புற்று இவைகளில் பாம்பு காணப்படின் (அதை) வசிய மந்திரத்தால் மயக்கி நம்பிக்கையுள்ளவர்களுக்குக் காண்பித்தல் வேண்டும். [65]நம்பிக்கையற்றவர்களாயின், ஆசமனம் நீராட்டம் என்னுமிவற்றால் நஞ்சினைக் கலந்தும், [66]விடத்தக்கவனை இரவில் கடிக்கச்செய்தும் 'தெய்வக்குற்றம்' என்று கூறல் வேண்டும். [67]யோகநூல் மாற்றுச் செய்கையினாலும் பொருளீட்டுதலைச் செய்யலாம்.

வணிகவுருவினர் மிகுந்த விலைப்பண்டங்களுடனும், அணிமையிற் பழகும் மக்களுடனும் [68]வாணிகத் தொழில்புரிதல் வேண்டும்.

---

[63] உண்மையான பாம்பு தங்குதற்குரிய உள் துளையுடைய பாம்பின் வடிவம் முதலியவற்றைக் கிணற்றுப் பொந்துகளில் ஏற்படுத்தி அவற்றில் மூன்று ஐந்து முதலிய தலைகளையுடைய பொய்யான பாம்புகளைக் கற்பித்து வைத்து, அவ்வாச்சரியத்தைக் காணுதற்கு வரியேற்படுத்தி, அவ்வரிப் பொருளை அரசனுக்குக் கொணர்ந்து கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[64] தெய்வ நிலையங்களின் சுவரிலுள்ள பொந்து முதலியவற்றில் தன்னியல்பிற் காணப்பட்ட பாம்பை மந்திரம், மருந்து முதலியவற்றால் அறிவற்றுத் தடைப்பட்டிருக்கச் செய்து 'தெய்வ சந்நிதானத்தின் பெருமையால் இதுகாறும் இப்பாம்பு செல்லாதிருக்கிறது' என்று கூறி நம்பிக்கையுள்ள மக்களை வஞ்சித்தல் வேண்டும் என்க.

[65] சிலர் நம்பிக்கையற்றிருப்பார்களாயின், அவர்களுடைய ஆசமனம் நீராட்டம் முதலியவற்றிற்குரிய நீரில் மயக்கத்தை யுண்டாக்கக்கூடிய நஞ்சினைக் கலந்து, அந்நீரின் உதவியால் அவர்களுக்கு மயக்கத்தை யுண்டு பண்ணி 'நாகதேவதையின் கோபத்தால் இவர்களுக்கு இவ்வாறு நிகழ்ந்தது' என்ற செய்தியை எல்லோர்க்கும் அறிவித்தல் வேண்டும் என்பது கருத்து.

[66] நம்பிக்கையற்றவரும் தீயவரும் கொல்லுதற் குரியவருமானவர்களை இரவிற் பாம்பினால் கடிக்கச்செய்து, தெய்வத்தினிடம் அவநம்பிக்கை காரணமாக இத்துன்பம் நேர்ந்தது என்று விளம்பரப்படுத்தல் வேண்டும் என்க.

[67] ஔபநிடதம் என்ற நூலிற் கூறியவாற்றான் விடந்தீர்த்தலைச் செய்வதாகக்கூறி விடந்தீண்டப்பெற்றவனுடைய சுற்றத்தாரிடமிருந்து பொருளைப் பெறுதல் வேண்டும் என்பது கருத்து.

[68] வாணிகத்தொழில்—கொள்ளல் விற்றல்களைப் புரிதல்.

[69]பண்டங்களின் விலைப்பொருளானும் ஈட்டுப்பொருள் வட்டிப் பொருள்களானும் அவர் நன்னிலையிலிருக்குங்கால் இரவில் அவ ரிடமிருந்து பொருளைக் கவரச்செய்தல் வேண்டும்.

[70]இவற்றால் வண்ணக்கன், பொன்வினைஞன் என்னுமிவர் களுக்கும் விதி கூறியவாறும்.

[71]கொண்டு விற்றலில் தேர்ந்த வணிகவுருவினர் உண்டாட்டு நிமித்தம் வெள்ளி பொன்களாலான சிறந்த கலங்களை இரவலாக வும் வாடகைக்காகவும் வாங்கவேண்டும். [72]குழுவினரிடம் எல்லா விலைப்பண்டங்களின் தொகுதியால் மிகுந்த தங்கம் பொன்களைக் கடனாகவோ, விலைப்பண்டத்தின் விலையாகவோ வாங்குதல் வேண் டும். [73]அவையிரண்டையும் [74]இரவில் கவரச்செய்தல் வேண்டும்.

கற்புடைமகளிருருவினரான மகளிர் [75]தீயவரை மயக்கி,

---

[69] பண்டங்களை விலைக்குவிற்றுக் கிடைத்த பொருளானும், பெருஞ் செல்வர் என்ற நம்பிக்கை காரணமாகவும் வட்டிக்காகவும் அவரிடம் மற்ற செல்வர் கொடுத்து வைத்திருக்கும் பொருளானும், அவ்வணிக வுருவினர் மிகையான பொருளை யடைந்திருக்கும் சமயத்தில் 'களவிடப்பட்டது' என்று பொய்யான வார்த்தையை யுண்டாக்கி, அப்பொருளனைத்தையும் அரசன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

[70] வண்ண ஆராய்ச்சி செய்யுங்கால் வண்ணக்கனும், பொற்றொழில் புரியுங்கால் பொன் வினைஞனும் வஞ்சித்துப் பொருளைக் கவர்தல்வேண்டும் என்பது கருத்து.

[71] வணிகத் தொழிலில் தேர்ந்த வணிகவுருவினர், தோட்டவிருந்து முதலிய நிகழ்ச்சி காரணமாகப் பொருளாளரிடமிருந்து பொற்பாண்டங் களையும் வெள்ளிப்பாத்திரங்களையும் இரவலாகவும் வாடகைக்காகவும் வாங்கிவருதல் வேண்டும் என்பது.

[72] மக்கள் பலர் குழுமியிருக்கும்போது தம்மிடமுள்ள விலைப்பண்டங் களை அவர்களுக்குக் காண்பித்து, அவற்றை விற்றுப் பொருளைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி, இன்னும் பல விலைப்பண்டங்களைக் கொள்ளுதற்காக அவர்களிடமிருந்து கடனாகப் பொருளைப் பெறுதல் வேண்டும் என்பதும், மறுநாள் பண்டங்களைக் கொடுப்பதாய்க் கூறி, அவற்றிற்குரிய விலைப் பொருளைப் பலரிடமிருந்து பெறுதல் வேண்டும் என்பதும் கருத்து.

[73] அவையிரண்டு—கடனாகவும் விலையாகவும் பெறப்பட்ட பொருள்.

[74] களவு நிகழ்ந்துவிட்டதாய் வஞ்சித்துக் கூறி, அரசன் அப்பொருள் களைக் கைப்பற்றிக்கொள்ளல் வேண்டும் என்க.

[75] தீயவர் என்பது, ஈண்டு அரசனிடம் பகைமை கொண்டமையால் வெறுக்கத்தக்கவரை யுணர்த்தும்.

இல்லங்களில் (அவர்களை) இருக்கச் செய்து [76]பொருளனைத்தையும் கவர்தல் வேண்டும்.

[77]தீயவரின் குடும்பங்களில் பூசலேற்படின் நஞ்சிடுவோர் நஞ்சினைக் கொடுத்தல் வேண்டும். [78]அக்குற்றத்தினால் ஏனையோரின் பொருளனைத்தையும் கொள்ளுதல் வேண்டும்.

[79]கொல்லத் தக்கவன் [80]நம்பிக்கைக்குரிய பெயரையுடைய தீயவரிடம் விலைப்பண்டம், ஈட்டுப் பொருள், கடன், தாயம் என்னுமிவற்றைக் கேட்டல் வேண்டும். [81]தீயவனை அடிமையாளன் என்ற சொல்லாலும், அவன் மனைவி, மருகி, மகள் என்னுமிவர்களை அடிமைப்பெண் அல்லது மனைவி என்ற சொல்லாலும் கூறுதல் வேண்டும். தீயவனுடைய வீட்டின் எதிர் வீட்டு வாசலில் இரவில் படுத்திருக்கும் பொழுதாதல், வேறிடத்தில் தங்கியிருக்கும் பொழுதாதல் [82]அவனைத் தீக்ஷ்ணர் கொன்றுவிட்டு "இங்ஙனம் காமுகனான இவன் கொல்லப்பட்டான்' என்று [83]கூறுதல் வேண்டும். [84]அக் குற்றத்தால் தீயவரின் பொருளனைத்தையும் கொள்ளல் வேண்டும்.

---

[76] அத்தீயவரின் பொருளனைத்தையும் கவர்தல் வேண்டும் என்பது.

[77] தீயவருள் தாயபாகம் முதலியன காரணமாக ஒருவர்க்கொருவர் கலாமேற்படின், அரசியலாரால் தூண்டப்பட்டவர் சமையற்காரன் முதலியவருடைய உருவினராக, அவருள் ஒருவனுடைய உணவு முதலியவற்றில் நஞ்சைக் கலந்து கொடுத்துக் கொன்றுவிடல் வேண்டும் என்பது.

[78] நஞ்சிட்டுக் கொன்ற குற்றத்தைக் கொல்லப்பட்டவன் தவிர மற்றையோரிடம் சார்த்தி, அவர்களின் பொருளனைத்தையும் கவர்ந்துவிடல் வேண்டும் என்பது கருத்து.

[79] அரசனுடன் பகை கொண்டமை காரணமாகக் கொல்லுதற்குரியவன் என்பது.

[80] மக்களின் நம்பிக்கைக்குரிய என்க.

[81] 'இவன் என் அடிமையாளன்' என்று தீயவனைக் குறித்துக் கூறல் வேண்டும் என்பது.

[82] அவனை—'கொல்லத்தக்கவன்' என்று முற்கூறப்பட்டவனை.

[83] என்று எல்லோரும் அறியுமாறு செய்துவிட்டு, அவ்விடத்தினின்றும் நீங்கிப்போதல் வேண்டும் என்பது கருத்து.

[84] கொல்லத்தக்கவனொருவனைத் தீக்ஷ்ணன் கொன்றுவிட்டு, அக்கொலைக் குற்றத்தை வேறுசில தீயவரிடம் சார்த்தி, அவர்களின் பொருளனைத்தையும் கவர்தல் வேண்டும் என்பது கருத்து.

'[85]குறைவற்ற நிதி, அரசன் மகளிர் இவர்களின் வசியம், பகைவருக்கு நோயையுண்டு பண்ணுதல், ஆயுள், மகப் பேறு என்னுமிவற்றிற்குரிய செயல்களை யறிவேன்' என்று சித்தவுருவினர் தீயவரை மாயையினால் மயக்கிக் கூறுதல் வேண்டும். [86]ஏற்றுக்கொண்டவனை சுடலை முதலியவற்றில் இரவில் மிக்க கள், இறைச்சி, சாந்தம் முதலிய காணிக்கையைக் கொடுக்கச் செய்தல் வேண்டும். முன்னரே ஒரு பொற்காசைப் புதைத்து வைத்திருத்தல் வேண்டும். இறந்தவனது உடலோ, இறந்த குழவியோ புதைக்கப்பட்ட இடத்தினின்றும் பொற்காசை எடுத்துக் காண்பித்து '[87]மிகவும் குறைந்தது' என்று கூறுதல் வேண்டும். மிகுதியான பொற்காசைக் குறித்து மீண்டும் காணிக்கை கொண்டு வரத்தக்கது, நீயே இத்துணைப் பொற்காசுகளால் நாளை மிகுந்த காணிக்கைப் பொருளை வாங்கி வா' என்றும் கூறுதல் வேண்டும். அத்துணைப் பொற்காசுகளால் காணிக்கைப் பொருள் வாங்கும் பொழுது [88]பிடித்தல் வேண்டும்.

'என் மகன் உன்னால் கொல்லப்பட்டான்' என்று தாயின் உருவினளாற் பொய்யாக [89]உறுதிப்படுத்தற்குரியன். இவனால் இரவு வேள்வி, வனவேள்வி, வன விளையாட்டு முதலியன தொடங்கப்பட்டதும் கொல்லத் தக்கவனொருவனைத் தீக்ஷ்ணர்

---

85 குறைவற்ற நிதியைப் பெறுதல், அரசனைத் தன்வயப்படுத்தல் முதலியவற்றிற்குரிய ஓமம் வளர்த்தல் முதலிய அரிய செயல்களை யறிவேன் என்று கூறி ஏமாற்றுதல் வேண்டும் என்பது கருத்து.

86 அவ்வஞ்சக வார்த்தையை நம்பிய தீயவனை என்க.

87 மிகவும் குறைந்த காணிக்கைப் பொருளை நீ கொண்டுவந்த காரணத்தால், மிகக்குறைந்த இந்த நிதி (பொற்காசு) கிடைத்தது. எனவே அதிகமான காணிக்கைப் பொருளைக் கொடுத்தால் மிகச் சிறந்ததும், அதிகமாகவுமுள்ள நிதியைப் பெறுவாய் எனக்கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

88 அரசியலார் அத்தீயவரைப் பிடித்தல் வேண்டும் என்பதும், அக்குற்றம் காரணமாக அத்தீயவரின் பொருளனைத்தையும் கவர்ந்துவிடல் வேண்டும் என்பதும் கருத்து.

89 பொய்க்குற்றஞ் சார்த்தி, அக்குற்றத்தைத் தக்க சான்று முதலியவற்றால் உறுதிப்படுத்தற்குரியவன் என்பது.

கள் கொன்று (அங்கு அவனைக்) [90]கொண்டுவந்து போடுதல் வேண்டும்.

தீயவனின் பணியாளருருவினர் [91]கூலிக் காசுகளில் போலி நாணயத்தைக் கலந்து உறுதிப் படுத்தல் வேண்டும்.

[92]தொழிலாளருருவினர், இல்லத்தில் தொழில் புரியுங்கால் [93]களவு, போலி நாணயம் இவற்றிற்குரிய கருவிகளை மறைவாக வைத்தல் வேண்டும். மருத்துவ உருவினன் 'மருந்து' என்று கூறி [94]விடத்தைக் கொடுத்தல் வேண்டும்.

தீயவனுடைய உறவினனுதல் [95]சத்திரியாதல் மறைவாக

---

90 தீயவனுல் தொடங்கப்பெற்ற இரவுயாகம் முதலியன நடக்குமிடங்களில் கொண்டுவந்து போடுதல் வேண்டும் என்பதும், அக்கொலைக் குற்றத்தைத் தீயவன்பால் ஏற்றி, அவனைக் கொன்றுவிடுதல் முதலியன செய்தல் வேண்டும் என்பதும் கருத்து.

91 தீயவனுல் கொடுக்கப்பட்ட வேதனப்பொருளில் தாமே போலி நாணயத்தைக் கலந்து 'இப்போலி நாணயத்தைச் சேர்த்துக்கொடுத்து வஞ்சித்தான்' என அத்தீயவனைக் குறித்துக் குற்றஞ் சார்த்துதல் வேண்டும் என்க.

92 தொழிலாளர்—தச்சர் கொல்லர் முதலியோர்.

93 களவு செய்தற்குரிய கன்னக்கோல் முதலிய கருவியையும், போலி நாணயம் செய்தற்குரிய கருவியையும் அத் தீயவனது வீட்டில் ஒருபக்கத்தில் அவனறியாவாறு மறைத்து வைத்துவிட்டுப் பின்னர் 'இவன் இம்மாதிரியான வஞ்சகத்தொழில் செய்வதற்காக இக்கருவிகளை வைத்திருக்கிறுன்' என்று அறிவித்தல் வேண்டும் என்பது.

94 நஞ்சைக் கொடுத்துவிட்டு, 'பிறரைக் கொல்லுதற்காக இவன் நஞ்சை வைத்துக்கொண்டிருக்கிறுன்' எனக்கூறி, அவன்பொருளனைத்தையும் கவர்தல் முதலியன செய்தல் வேண்டும் என்பது கருத்து.

95 'உறவினன்' என்று தன்னைப் பொய்யாகக்கூறி, 'சத்திரி' என்ற ஒற்றன், பகையரசனுக்கு முடிசூட்டுதற்குரிய பொருள், பகையரசனின் ஓலை முதலியவற்றைத் தீயவரின் வீட்டில் மறைவாக ஓரிடத்தில் வைத்துவிடல் வேண்டும் என்பதும், அதன் பின்பு 'காபடிகன்' என்ற ஒற்றன் மூலம் அவற்றை வெளிப்படுத்தி 'அரசனைக்கொன்று பகையரசனை இந்நாட்டில் முடிசூட்டுதற்கு இத்தீயவன் முயற்சிக்கிறுன்' என்று உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதும் கருத்து.

வைக்கப்பட்ட நீராடு கலசத்தையும், பகைவரின் ஓலையையும் காபடிகன் மூலம் காரணத்துடன் எடுத்துக் கூறல் வேண்டும்.

[96]வெறுக்கத் தக்கவரிடமும், தீவினையாளரிடமும் இங்ஙனம் ஒழுகுதல் வேண்டும். ஏனையோரிடம் கூடாதாம்.

சுலோகம்

தோட்டத்தினின்றும் பக்குவமான கனியைப்போல் நாட்டினின்றும் [97]பக்குவமானதை அடைதல் வேண்டும். [98]தனக்குத் தீங்கு (வரும் என்ற) அச்சத்தினல் [99]கோபத்தை விளைவிக்கும் [100]பக்குவமற்றதை விலக்குதல் வேண்டும்.

ஐந்தாம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
'பொன் முதலியவற்றை மிகுதியாகக் கோடல்' என்னும்
தொண்ணூற்றிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

96 கருவூலத்தில் பொருளைப் பெருக்கும் பொருட்டு இதுகாறும் கூறப்பட்ட உபாயங்களை வெறுக்கத்தக்கவர்பாலும், தீவினையாளரிடமும் கையாளுதல் வேண்டுமேயன்றி, அறவோரிடம் அவற்றைப் பயன்படுத்தல் கூடாது என்று கூறுகின்றார்.

97 'பக்குவமானது' என்பது ஈண்டு 'தீயவர்க்குரியது' என்னும் பொருளது.

98 அறவோரை வஞ்சித்துப் பொருளீட்டல் அரசனுக்குத் தீங்கை விளைக்கும் என்பது தோன்ற இங்ஙனங் கூறினர்.

99 நீதி தவறிப் பொருளைப்பெறும் அரசன் நாட்டுமக்களின் கோபத்துக்கு இலக்காவான் என்னுங் கருத்துக்கொண்டு இவ்வாறு கூறினர் என்க.

100 தீயவரின் பொருளைப் 'பக்குவமானது' என்று முன்னர்க் கூறியதால், 'பக்குவமற்றது' என்று ஈண்டுக் கூறியது அறவோரின் பொருளைக் குறிப்பதாகும்.

ஐந்தாம் அதிகாணம்—வஞ்சித்தொறுத்தல்

மூன்றும் பிரகரணம்—[1]துணைவரைப்புரத்தல்

தொண்ணூற்றுமூன்றும் அத்தியாயம்.

அரண் நாடு என்னும் இவற்றின் வன்மைக் கேற்ப [2]ஊதியத்தின் காற் பங்கினுலாதல், [3]தொழில்களை நிறைவேற்றும் துணைவரை யடைதற்குரிய பகுதியினுலாதல் துணைவரைப் புரத்தல் வேண்டும். [4]உடலைக் கண்காணித்தல் வேண்டும். [5]அறம் [6]பயன்களைச் சிதைத்தல் கூடாவாம்.

[7]வேட்பிப்போர், ஆசிரியர், அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவன், இளவரசன், அரசனின் தாய், பட்டத்தரசி என்னுமிவர்

93-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தம் அறிவு, நூல், தொழில் என்பவற்றைக்கொண்டு துணைபுரிதல் பற்றித் துணைவர் மூவகைப்படுவர். அவர்களைப் புரக்கும் விதிமுறையினை இப்பிரகரணம் கூறும். முன்னைப் பிரகரணத்தில் தீய குணஞ் செயல்களையுடைய அமைச்சர் முதலிய துணைவரைக் களைதல் கூறப்பட்டது. ஈண்டு நற்குண நற்செயல்களையுடைய அமைச்சர் முதலிய துணைவரைப் போற்றுதற்குரிய விதி கூறப்படுதலான் அதன்பின் இது வைக்கப்பட்டது. இதனுற் பிரகரண வியைபுண்மை யறிக.

[2] ஊதியம்—அரண் நாடுகளில் வாழும் எல்லா மக்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற பொருட்டொகுதி.

[3] சிறந்ததொரு தொழிலை நிறைவேற்றுதற்குரிய துணைவரை யடைவதற்காக மேற்கூறிய காற்பங்கைவிட மிகுதியான பொருளையும் செலவிடலாம் என்பது கருத்து.

[4] 'உடல்' என்பது ஈண்டு வருவாய்த்தொகுதி என்னும் பொருட்டு. செலவை வருவாய்க்கேற்ப வரையறுத்துக்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

[5] அறம்—தெய்வகாரியம், தென்புலத்தார் கடன், வறியோர்க்கு அளித்தல் முதலியன.

[6] பயன்—அரண், அணைக்கட்டு, வணிகர்வழி முதலியவற்றின் தொழில் முதலியன என்பது. எனவே இவற்றிற்கு வேண்டிய பொருளைக் கழித்து எஞ்சிய பொருளைக்கொண்டே துணைவரைப் புரத்தல் வேண்டும் என்பது கருத்து.

[7] வேட்பிப்போர் முதலிய எண்வகையினரைப் போற்றற் பொருட்டு ஓராண்டிற்கு 48,000 பணம் செலவு செய்தல் வேண்டும் என்க.

களுக்கு நாற்பத்தெண்ணுயிரமாம். இத்துணைப் பொருளால் இவர்களைப் புரத்தல், [8]பல் வகையாக நுகர்தற்கும் வெருளாமைக்கும் காரணமாம்.

வாயில் காப்போன், உவளக வினைஞன், படைக்கலத் தலைவன், வருவாய்த் தலைவன், பண்டாரத் தலைவன் என்னுமிவர்களுக்கு இருபத்து நான்காயிரமாம். இத்துணைப் பொருளால் [9]தொழிற்குத் தக்கவராவர்.

[10]குமரன், [11]குமரனின் தாய், காலாட் படைத் தலைவன், [12]நகரத்தாரைப் பேணுபவன், [13]தொழிலிலீடுபட்டவன், [14]அமைச்சர் குழு, நாடு காவலன், எல்லை காவலன் என்னுமிவர்களுக்குப் பன்னிரண்டாயிரமாம். [15]இத்துணைப் பொருளால் தலைவனின் துணைவர், படை என்னுமிவற்றிற்குத் துணைவராவர்.

[16]குழுத் தலைவர், [17]யானை குதிரை தேர் என்னுமிவற்றின் தலைவர், சிறு பகை களைவோர் என்னுமிவர்களுக்கு எண்ணுயிரமாம். இத்துணைப் பொருளால் [18]தன்னினத்திற்குத் துணைவராவர்.

---

[8] வேட்பிப்போர் முதலியவர் பலவகை நலங்களைப் பெறுதற்கும், நன்கு மகிழ்ச்சியடைதற்கும் மேற்கூறியபடி 48,000 பணம் செலவுசெய்தல் வேண்டுமென்பது.

[9] குறைவறத் தம் தொழிலைச் செய்தற்குரியராவர் என்க.

[10] குமரன்—குதிரைக்குப்பின் செல்பவன். இளவரசன் என்பாருமுளர்.

[11] இளவரசனின் செவிலியென்ப.

[12] நகரத்தில் நிகழும் வாணிகம் முதலியவற்றைக் கண்காணிப்பவன்.

[13] உழவு, மரக்காடு முதலியவற்றைப் பற்றிய தொழிலில் ஏவப்பட்டவன் என்பது.

[14] பன்னிரண்டு வகையினராக முற்கூறப்பட்டவர்.

[15] இத்துணைப் பொருளை அவர்கள் பெறுதலால், அரசனின் சுற்றத்தார் முதலியவர்க்கும், படை முதலியவற்றிற்கும் துணைவராயிருப்பர் என்பது கருத்து.

[16] ஒத்த சிற்பிகளின் கூட்டத்தலைவர்.

[17] யானை முதலிய ஒவ்வொரு இனத்திற்கும் தலைவர் என்ப.

[18] தன்னினத்தாருடன் ஒத்துழைத்து அரசியற்றொழிலை நன்கு செய்ய வல்லவராவர் என்பது.

காலாட்படை குதிரை தேர் யானை என்னுமிவற்றின் தலைவர், மரக்காடு யானைக் காடுகளின் காவலர் ஆகிய இவர்களுக்கு நான்காயிரமாம்.

[19]தேர் யானை இவைகளிற் பயிற்சி கொடுப்பவன், மருத்துவன், குதிரையைப் பழக்குபவன், பெருந்தச்சன், [20]சிறு உயிரைப் போற்றுபவர் என்னுமிவர்களுக்கு இரண்டாயிரமாம்.

[21]ஊழ்வினை யுணர்ந்தவன், [22]நிமித்திகன், [23]முக்கால முணர்ந்தவன், பௌராணிகன், தேரோட்டுபவன், தோத்திரம் பாடுபவன், புரோகிதனைச் சார்ந்தவன், [24]ஏனைய தலைவர் என்னும் இவர்களுக்கு ஆயிரமாம்.

[25]சிற்பி, [26]காலாட் படைத் தொழிலாளர், கணக்கர், [27]எழுதுவோர் [28]முதலியோரின் இனத்தோர் என்னும் இவர்களுக்கு ஐந்நூறும்.

பாடகர்க்கு இருநூற்றைம்பதாம். இவருள் [29]தூரியத்தையுடையவர் இருமடங்கு வேதனமுடையராவர்.

---

[19] தேரோட்டுதலைப் பயிற்றுபவன், யானையைப் பழக்குபவன் முதலியோர் என்க.

[20] கோழி, பன்றி முதலிய பிராணிகளைப் போற்றிவாழும் மக்களின் தலைவர் என்ப.

[21] ஊழ்வினை யுணர்ந்தவன்—ஆடவர் மகளிரின் இலக்கணங்களைக்கண்டு சென்ற கால நிகழ்ச்சிகளையும், வருங்கால நிகழ்ச்சி முதலியவற்றையும் கூறுபவன்.

[22] நிமித்திகன்—சகுன நூல் வல்லவன்.

[23] முக்கால முணர்ந்தவன்—சோதிடங் கூறுபவன்.

[24] கள் தலைவன் முதலியோர் என்பது.

[25] ஓவியம் முதலியன வரைவோர் என்பது.

[26] காலாட் படையினருக்குரிய தொழில் புரிபவர்.

[27] எழுதுவோர் என்பது ஈண்டு ஆவணம் முதலியன எழுதுவோரைக் குறிப்பதாம்.

[28] முதலியோர் என்றதனால் முகத்தலளவை முதலான தொழிலைப்புரியவர் முதலியவரைக் கொள்க.

[29] பாடகருள் முதன்மையான வாச்சியத்தை வாசிப்பவர் பிறரைவிட இருமடங்கு வேதனத்திற்குரியராவர் என்பது கருத்து. அதாவது துணையிசைக் கருவியாளரைவிட முதலிசைக் கருவியாளர்க்கு இருமடங்கு வேதனம் என்க.

காருகர், சிற்பி இவர்களுக்கு நூற்றிருபதாம்.

நாற்காலுயிர் இருகாலுயிர்களுக்குப் [30]பணி செய்வோர், [31]தலைவர், [32]உடற்பணி புரிபவர், காவலர், ஊழியர், கட்டுபவர் என்னுமிவர்களுக்கு அறுபதாம்.

[33]நற்குடிப் பிறப்புள்ளவர், [34]பழக்கப்படாத ஊர்தியிற் செல்பவர், [35]மாணவகன், [36]கற்றொழிலாளர், ஏனைய பணியாளர், [37]ஆசிரியர், [38]கற்றவர் ஆகிய இவர்கள் தகுதிக் கேற்ப ஐந்நூறு முதல் ஆயிரம் வரை [39]மதிப்பமை யூதியம் பெறக் கடவர்.

[40]இடையாய தூதன் [41]யோசனைக்குப் பத்துப்பணம் பெறக் கடவன். [42]பத்துக்கு மேல் நூறுயோசனை வரையில் இருமடங்கு வேதனமாம்.

---

30 பணி செய்தலாவது :- அவற்றைப் பின்தொடர்ந்து சென்று மேய்த்தல் முதலிய தொழிலைச் செய்தல்.

31 அத் தொழிலாளரின் தலைவர்.

32 ஈண்டு உடற்பணி முதலியவை கோழி மயில் முதலிய இரு காலுயிர்களின் உடற்பணி முதலியவற்றைக் குறிப்பதாம் என்ப.

33 இலக்கணையால் நற்குண நற்செயல்களையுடையவர்களையும் கொள்ளல் வேண்டும்.

34 அடங்காது முரட்டுத் தன்மையுடைய குதிரை முதலியவற்றை ஏறி நடத்தும் ஆற்றலுடையவர் என்பது.

35 மாணவகன்—ஈண்டு முதியவர், கள்வர் முதலியோர்.

36 கற்றச்சன் முதலியோர்.

37 ஆசிரியர்—இசை நூல் முதலியவற்றின் ஆசிரியர்.

38 அறநூல், பொருணூல் முதலியவற்றில் தேர்ந்தவர் என்பது.

39 மதிப்புடன் வேதனத்தைக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

40 மிக மெதுவாகவும், மிக விரைவாகவும் செல்லும் இயல்பற்றவன் என்பது.

41 ஒரு யோசனை தூரத்திற்குப் பத்துப் பணம் விகிதம் வேதனம் என்பது; இவ்வேதனம் பத்து யோசனை வரையில் செல்பவருக்குரியதாம்.

42 பத்துயோசனை தூரத்திற்கு மேல் நூறுயோசனைவரை செல்பவனுக்காயின், யோசனைக்கு இருபதுபணம் விகிதம் வேதனம் கொடுக்கலாம் என்பது.

[43]இராச சூயம் முதலிய வேள்விகளில் அரசனுக்குத் தன்னை யொத்த கல்வியாளரைவிட மூன்று மடங்கு வேதனமாம். [44]அரசனின் தேர்ப்பாகனுக்கு ஆயிரம் பணமாம்.

[45]காபடிகன், உதாத்திதன், இல்லற உருவினர், வணிகவுருவினர், தாபத வுருவினர் என்னுமிவர்களுக்கு ஆயிரமாம்.

[46]கிராமப் பணியாளர், சத்திரி, தீக்ஷ்ணர், நஞ்சிடுவோர், ஐயமேற்பவள் என்னுமிவர்களுக்கு ஐந்நூறும்.

ஒற்றர், யாத்திரிகர் என்னுமிவர்களுக்கு இருநூற்றைம்பதாம். [47]உழப்பிற்கேற்ப மிக்க வேதனமும் அமையும்.

[48]நூற்றுவர்க்கும் ஆயிரவர்க்கும் தலைவர், உணவு வேதனங்களைக் கொடுத்தல், கட்டளையிடுதல், ஈடுபடச் செய்தல் என்னுமிவற்றைச் செய்யக்கடவர். [49]தொழிலின்றாயின், அரசனின் உப

---

[43] இராச சூயம் முதலிய வேள்விகுறித்து அழைக்கப்பட்ட அரசன், மந்திரி புரோகிதர் முதலிய தன்னையொத்த கல்வியாளரைவிட மும்மடங்கு வேதனம் பெறக்கடவன் என்பது கருத்து.

[44] ஈண்டும் ''இராசசூயம் முதலிய வேள்விகளில்'' என்பதனைக் கூட்டிப் பொருள் கொள்க.

[45] காபடிகன் முதலியோரைப் பற்றிய விளக்கத்தை 11–ஆம் அத்தியாயத்திற் காண்க.

[46] கிராமப்பணியாளர்—வண்ணான், தச்சன் முதலிய தொழிலாளர்.

[47] இதுகாறும் வேதனங்கள் வரையறுத்துக் கூறப்பட்டிருப்பினும், வேதனம் பெறுபவர் மிகவும் முயன்று சிறந்தமுறையில் தொழிலை நடத்தியிருப்பராயின், அவர்க்கு மிகையாகவும் வேதனத்தைக் கொடுக்கலாம் என்பது கருத்து.

[48] மேற்கூறியவாறு வரையறுக்கப்பட்ட வேதனத்தைப் பெறுபவர்களுள் நூற்றுவர்க்கு ஒரு தலைவரும், அங்ஙனம் கூடிய ஆயிரவர்க்கு ஒரு பெருந்தலைவரும் ஆக இம்முறைப்படி இனங்களைச் செய்து கொண்டு ஒவ்வோரினத்திற்கும் ஒவ்வொரு தலைவனையேற்படுத்தி, அவன் மூலம் அவ்வினத்தாரைக் கூவி உணவு முதலியவற்றைப் பெறச்செய்தல், அரசன் கட்டளையில் ஈடுபடச் செய்தல், தக்க செயலில் ஏவுதல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[49] வேதனம் பெறுபவர்க்குரிய தொழிலில்லையாயின், அவ்வினத்தின் தலைவன், அவர்களை அரசனின் உபகரணப் பொருள் முதலியவற்றைக் கண்காணித்தல் முதலியவற்றிலீடுபடச் செய்யலாம் என்பது கருத்து.

கரணப்பொருள், அரண், நாடு இவற்றைக் காத்தல், கண்காணித் தல் என்னுமிவற்றில் ஈடுபடச் செய்தல் வேண்டும். [50]யாண்டும் தலைவரையுடையராயும், பல தலைவரையுடையராயும் இருத்தல் வேண்டும்.

[51]தொழிலில் இறந்தவரின் மக்கள் மனைவியர் உணவையும் வேதனத்தையும் பெறக்கடவர். [52]இவர்களைச் சார்ந்த சிறுவர், முதியவர், நோய்வாய்ப்பட்டோர் என்னுமிவர்கள் [53]உதவிபெறக் கடவர். இவர்களுக்காக ஈமக்கடன், நோய்வாய்ப் பட்டவர் கருவுயிர்த் தவள் என்னுமிவர்களுக்குரிய செயல் என்பவைகளில் பொருளி ஞலும் [54]மதிப்பினுலும் உதவுதல் வேண்டும்.

கருவூலத்தால் குறைந்தவன், குப்பியப் பொருள், நாற் காலுயிர், செய் ஆகியவற்றையும் சிறிது பொருளையும் [55]கொடுத் தல் வேண்டும்.

[56]வெற்றிடத்தை வசித்தற்குத் தக்கதாய்ச் செய்வதற்கு முயன்றவன் [57]பொருளையே கொடுத்தல் வேண்டும். அன்றிக்

---

50 அவ்வவ் வினத்தவர் தந்தம் தலைவர் அல்லது அவருடன் சேர்ந்த ஏனைய சில தலைவர் என்னுமிவர்களின் கருத்துக்கேற்பத் தொழில் புரிதல் வேண்டுமேயன்றி, சுதந்திரமாய் இருத்தல் கூடாது என்பது கருத்து.

51 அரசியற்றொழிலைப் புரிந்து வருங்கால் பணியாளர் முதலியோர் இறந்து விடின், அவர்களின் மக்கள் முதலியோர் அப்பணியாளர் முதலிய வர்களுக்குரிய உணவு, சம்பளம் முதலியவற்றை யடைதல் வேண்டும் என் பது கருத்து.

52 இவர்களை—இறந்த பணியாளர்களை.

53 ஈண்டு உதவிபுரிதற் கருத்தா அரசன் என்க.

54 அவர்களை எவ்வாற்ருனும் இகழாமல், பெருமைப்படுத்திப் பொருளு தவி செய்தல் வேண்டும் என்பது கருத்து.

55 பொருளுதவி பெறுதற்குரியவருக்குக் கொடுத்தல் வேண்டும் என் பது.

56 விளைவின்றி வறிதேயுள்ள நிலங்களைக் கிராமமாகச் செய்ய முயலும் அரசன் என்க.

57 அங்கே புதிதாகக் குடி புக்கவரை யருளுவதன் நிமித்தம், அவர் களுக்குப் பொருளையே கொடுத்தல் வேண்டும் என்பது.

[58]கிராமத்தைக் கொடுத்தல் கூடாது. என்னை ? [59]கிராம வருவாயின் இறைப்பொருள் முதலியவற்றைத் துணிய வேண்டுதலின், என்க.

[60]பணியாளர், [61]ஊழியர் ஆகிய இவர்களின் [62]கல்வி தொழில்களுக்கேற்ப உணவு வேதனங்களை இம்முறையில் வரையறுத்தல் வேண்டும், [63]வேதனம் அறுபதாயின் ஒரு மரக்கால் எனக் கொண்டு பொருளளவிற் கேற்ப உணவைக் கொடுத்தல் வேண்டும்.

காலாட் படை, தேர், யானை என்னுமிவைகளை [64]சந்திநாட்கள் தவிர (ஏனைய நாட்களில்) கதிரவன் தோன்றிய அளவில் வெளியில் [65]சிற்பத் தொழிற்குரியவைகளாகச் செய்தல் வேண்டும். [66]அவற்றில் அரசன் நாடோறும் ஈடுபடுதல் வேண்டும். இவற்றின் சிற்பத் தொழிலை அடிக்கடிக் காண்டல் வேண்டும். படைக்கலம், உறை இவற்றை அரசனின் இலச்சினையிட்டுப் படைக்கலக்

---

58 குப்பியப் பொருள் முதலியனவாகக் கூறப்பட்டபடி கொடுத்தல் கூடாது என்பது கருத்து.

59 இக்கிராமத்தின் விலைமதிப்பு இவ்வளவு, இக்கிராமத்தினின்றும் உண்டாய பொருளில் இத்துணைப் பொருள் இறைப்பொருளாக இறுக்கக் கடவன என்றவை போன்ற வரையறையை நிலைப்படுத்துவதற்கென்பது.

60 பணியாளர்—நிலையாய வேதனத்தைப் பெறுவர்.

61 நாடோறும் கூலிபெற்றுத் தொழில் புரியுமியல்பினர்.

62 அவரவர் கல்வி முதலிய சிறப்புக்கேற்ப ஏற்றத்தாழ்வுள்ள உணவு வேதனம் முதலியவற்றைப் பெறக்கடவர் என்க.

63 இத்துணை வேதனம் பெறுபவர் இத்துணை உணவைப் பெறுதற்குரியவர் எனக்கூறுகின்றார்; அறுபது பணம் சம்பளம் பெறுபவனுக்கு ஒரு மரக்கால் அரிசி என்ற வரையறையைக் கொண்டு, அவரவர் சம்பளத்தின் மிகுதிக் கேற்ப, உணவின் மிகுதியைக் கூட்டி இம்முறையே கொடுத்தல் வேண்டும் என்பது.

64 சந்திநாட்கள்—சிற்பப்பயிற்சி செய்தற்கு விலக்கப்பட்டிருக்கும் அமாவாசை முதலிய நாட்கள்; இவற்றை 'அநத்யயன நாட்கள்' என்ப வடநூலார்.

65 காலாட் படைக்குப் படைக்கலப் பயிற்சியையும், தேர், யானை முதலியவற்றைச் செலுத்துதற்குரிய பயிற்சியையும் செய்வித்தல் வேண்டும் என்பது கருத்து.

66 காலாட்படை முதலியவற்றில் என்க.

கொட்டிலில் வைக்கச் செய்தல் வேண்டும். [67] இலச்சினையாற் குறிக்கப்பட்டவர் தவிர (ஏனையோர்) படைக்கல மின்றியே செல்லுதல் வேண்டும். களவிடப்பட்டது, அழிந்தது, என்னும் [68] இவற்றிற்கு இருமடங்கு கொடுத்தல் வேண்டும். [69] அழிந்தவற்றின் எண்ணிக்கையைக் குறித்தல் வேண்டும்.

[70] படைக்கலம் உறைகளையுடைய குழுவினரை எல்லைகாவலர் பிடித்தல் வேண்டும். இலச்சினை பெற்றவராயின் விடுத்தல் வேண்டும். [71] யாத்திரை குறித்து ஊக்கமுள்ளவன் படையைத் திரட்டல் வேண்டும். [72] வணிகவுருவினர், [73] இருமடங்காகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும் என்று வரையறுத்து, யாத்திரை காலங்களில் எல்லா விலைப்பண்டத்தையும் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். [74] இங்ஙனம் [75] அரசவிலைப் பண்டத்தின் விற்பனையும், வேதனத்தைத் திரும்பப் பெறுதலும் உண்டாகின்றன.

[76] இங்ஙனம் வருவாய் செலவுகளைக் கண்காணிப்பவன் கருவூ

---

67 இன்னான் அரசனின் பணியாளன் என்பதைப் புலப்படுத்துதற்காக இலச்சினையாகச் சில படைக்கலங்களோடு இருப்பதற்கு அநுமதிக்கப் பட்ட பணியாளர் தவிர, ஏனையோர் படைக்கலத்துடன் உட்புகுதல் கூடாது என்பது கருத்து.

68 படைக்கலம் முதலியவற்றிற் கென்பது.

69 ஆயுதசாலையில் இத்துணைப் படைக்கலம் அழிந்து போயின என்பதைக் கணக்கிட்டறிதல் வேண்டும் என்பது.

70 வேற்று நாட்டினின்றும் வந்தவரும் இலச்சினை பெறாது படைக்கலம், உறை என்னுமிவைகளையுடையவரும் ஆகிய இவர்களைப் பிடித்தல்வேண்டும்.

71 யாத்திரை—போர் குறித்துப் புறப்படுதல்.

72 அரசனால் ஏவப்பட்ட வணிக வுருவினர் என்க.

73 போர்க்குரிய உபகரணப் பொருளற்ற படைவீரர் முதலியோரிடம் 'போர் முடிந்தபின்னர் இப்பொழுது கொடுக்கப்படும் பொருள்களை இருமடங்காகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்' என்ற வரையறை செய்து கொண்டு, உபகரணப் பொருளைக் கொடுத்தல் வேண்டும் என்பது.

74 இங்ஙனம் கொடுத்தலாலுண்டாம் பயனைக் கூறுகின்றார்.

75 அரசனிடமுள்ள பண்டத்தின் விற்பனையும், அவருக்குக் கொடுத்த வேதனத்தைத் திருப்பிப் பெறுதலையும் பயனாகக் கூறினார் என்றறிக.

76 மேற்கூறிய விதிமுறைகளுக் கேற்றபடி ஒழுகுபவனுக்குக் கருவூலத்திலும், படையிலும் வறுமை ஏற்படாது; அதாவது கருவூலமும் படைவீரரும் செழித்தோங்குவர் என்பது கருத்து.

லம் படை என்னும் இவை காரணமாக வெறுமையை அடைய மாட்டான்.

உணவு வேதனங்களின் விகற்பம் இவ்வாறும்.

சுலோகம்

[77]படைக்கலத்தாருடைய தூய்மையையும், தூய்மையின்மையையும் சத்திரி, விலைமகளிர், காருகர், பாடகர், முதிய வீரர்கள் என்னுமிவர்கள் விழிப்பின்மையற்றவராய் [78]அறிதல் வேண்டும்.

ஐந்தாம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
'துணைவரைப் புரத்தல்' என்னும்
தொண்ணூற்றுமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[77] படைக்கலத்தார்—படைக்கலத்தைக் கொண்டு போர்புரிபவர்.
[78] விழிப்புடன் இருந்து அறிதல் வேண்டும் என்க.

ஐந்தாம் அதிகாரணம்—வஞ்சித்தொறுத்தல்

நான்காம் பிரகரணம்—[1]அமைச்சர் முதலியோர் இயல்பு

தொண்ணூற்றுநான்காம் அத்தியாயம்.

[2]ஆன்ம குணங்களாலும் [3]அமைச்சர் முதலியோராலும் நிறைவுள்ள அரசனை [4]உலகியலறிவுள்ளவன் [5]இன்சொல்லன், [6]அறிவுரை பகர்வோன் என்பவர் வாயிலாக அடைதல் வேண்டும். [7]நான் புகலிடத்தை விரும்புவது போலவே [8]இவனும் [9]துணைவனை

94-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அமைச்சர் முதலியோர் அரசனிடம் எவ்வாறொழுகல் வேண்டும் என்பதை உணர்த்துவது. முன்னைப் பிரகரணத்தில் வேதனத்தைப் பற்றிய விதி கூறுமிடத்து அமைச்சர் முதலியவர்கள் குறிப்பிடப்பட்டார்கள் ஆகலின், அவர்களின் இயல்பைப் பற்றிக் கூறும் இப்பிரகரணம் அதன் பின் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு புலனும்.

[2] அமைச்சர் முதலியோருள் இன்னின்ன குணஞ் செயல்களையுடையார் இன்னின்ன குணஞ் செயல்களையுடைய அரசனைச் சார்ந்தொழுகுதல் வேண்டும் என்று கூறுகின்றார்; ஆன்மகுணங்கள்—உயர்குடிப்பிறப்பு முதலியனவாகப் பின்னர்க் (97-ஆம் அத்தியாயத்தில்) கூறப்படுவன.

[3] ஒன்பதாவது அத்தியாயத்திற் கூறப்பட்டவாறு 'அரசனது நாட்டிற் பிறத்தல்' முதலிய குணங்களையுடைய அமைச்சர் முதலியவர்களாலும் நிரம்பப் பெற்ற அரசனை என்க.

[4] 'உலகியலறிவு' என்பது ஈண்டு 'பொருணூற்றேர்ச்சி' என்னும் பொருளது.

[5] இன்சொல்லன்—சொல்லளவில் இனிமையாகத் தோன்றக் கூடியதைச் சொல்பவன்; இவனைப் 'பிரியன்' என்ப வடநூலார்; இவனது வார்த்தையை மேற்கொள்ளின், பிற்காலத்துத் துன்பம் நிகழினும், சொல்லுங் காலத்துப் பிரியமாயிருத்தல் பற்றி இவன் 'இன்சொல்லன்' எனப்பட்டான்.

[6] அறிவுரை பகர்வோன்—எதிர்காலத்தில் நன்மையைப் பயக்கும் மொழியைக் கூறுபவன்; அரசனுக்கு இனியவைகளையும், அறிவுரைகளையும் கூறுமியல்புடையரை வாயிலாகக் கொண்டு அரசனை யடைதல் வேண்டும் என்பது கருத்து.

[7] முற்கூறிய குணங்களையுடைய அரசன் கிடைக்கப் பெறுவிடின் செயற்பாலதைக் கூறுகின்றார்.

[8] இவன்—அரசன்.

[9] துணைவன்—அறிவினால் முதிர்ந்தவன்.

விரும்புகிறவனாகவும், [10]நெருங்குதற்குரிய தன்மையை உடையவனாகவும் இருக்கிறான் என்று எவன் (தன்னால்) நினைக்கப்படுகிறானோ, அவன் அமைச்சர் முதலியவராற் குறைவுற்றிருப்பினும் (அவனை) அடையலாம். ஆன்ம குணங்களற்றவனை (ஒருபொழுதும்) அடைதல் கூடாது. என்னை? ஆன்ம குணங்களற்றவன் [11]மிகப் பெரிய பதவியை யடைந்தும் நீதி நூலை [12]வெறுத்தலாலும், [13]தீய சேர்க்கையினாலும் அழிகிறான் ஆகலின் என்க.

ஆன்ம குணமுள்ளவனிடம் செவ்வி நோக்கி [14]நூற்பொருளைக் கேட்டுணர்தல் வேண்டும். என்னை? [15]முரண்பாடின்மை காரணமாகப் பதவியினை நிலைபெறச் செய்கின்றான் ஆகலின் என்க. [16]அறிவுச் செயல்களைப் பற்றி வினாவப்பட்டவன் அக்காலத்திற்கும், பிற்காலத்திற்கும் ஏற்ப அறம் பொருள்களுடன் கூடியதனை

---

10 சிறந்த குடிப்பிறத்தல் முதலிய நெருங்கிப் பழகுதற்குரிய குணங்களையுடையவன் என்பது.

11 மிகப் பெரிய நாட்டிற்கு அரசனாயிருக்கும் பதவியை யுடையனாயினும் என்பது.

12 தீயவரின் சேர்க்கையாலும், நல்லோரின் சேர்க்கையின்மையாலும் உண்டானது இவ்வெறுப்பு என்று கொள்க.

13 வன்சொல், கடுந்தண்டம் முதலிய கேட்டை விளைக்கும் வேட்டை, சூது, கட்குடி முதலியவற்றோடும், வரைவின் மகளிர், நடன், விடன் முதலியவர்களோடும் நட்புக்கொண்டமையாலும் என்க.

14 பொருணூல் முதலியவற்றைப் பற்றிய வினாவிடைகளைச் செய்தல் வேண்டும்.

15 பொருணூலைப் பற்றிய ஆராய்ச்சியின் இன்றியமையாமையை விளக்குகின்றார்; தம்மாற் கூறப்படுவன பொருணூல் முதலியவற்றுடன் முரண்படாதவை என்பது தெளியப்படுமாகலின், பொருணூல் முதலியவற்றில் தேர்ந்த அமைச்சர் முதலியோர் தம் பதவியில் அரசனால் நிலைநிறுத்தப்படுவர் என்பது கருத்து.

16 இலக்கணத் தேர்ச்சிக்குப் பின்னர் இலக்கியத் தேர்ச்சியைப் பற்றிக் கூறுகின்றார்; அறிவுத் துணையால் முடிக்கத்தக்க செயல்களைக் குறித்து, இவை எங்ஙனம் செய்யத்தக்கன என்று அரசனால் வினவப்பட்டவன் என்பது.

[17]வல்லவன் போல் [18]அவையஞ்சாது கூறுதல் வேண்டும். [19] "ஒத்தவரிடம் [20]அறம் பொருட் கேள்வியும், வலியாரைத் துணைகொண்டவர் பால் ஒறுத்தலும், [21]என் துணைவர் பால் உடன் ஒறுத்தலும் ஆகிய இவற்றை நீ செய்தல் கூடாது. என்னுடைய இனம், தொழில், [22]மறைக்கத் தக்கன என்னுமிவற்றை யழித்தல் கூடாது. காமம் வெகுளி காரணமாக உண்டாம் [23]ஒறுத்தல்களில் உன்னை [24]இங்கிதத்தால் தடுப்பேன்" என்று விரும்பப்பட்டவன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

[25]அதிகாரிகளால் அநுமதிக்கப்பட்ட இடங்களில் செல்லல் வேண்டும். அணுகிய சேய்மையிடத்தில் [26]அருகே அமர்தல் வேண்டும். சிறந்த இருக்கை, மறுத்துக் கூறல், அவைக்கு ஒவ்வாதன, கண்கூடாக இல்லாதவற்றைப் பற்றியன, நம்பத்தகாதன, பொய்

---

17 வல்லவன்— அறிவுச் செயலில் வல்லவன்.

18 அவையஞ்சி மெய்விதிர்த்தலைச் 'சபாகம்பம்' என்ப வடநூலார்.

19 இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சியைக் கண்டு அமைச்சராயிருக்கும்படி அரசனால் கேட்கப்பட்டவன் அரசனுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளல் வேண்டும் என்று கூறுகின்றார். அவ்வொப்பந்தத்தையே 'ஒத்தவரிடம்......' என்பது முதலாக விளக்குகின்றார். ஒத்தவர்—தன்னையொத்த குணஞ் செயல்களை உடையவர்.

20 அறம் பொருள்களைப்பற்றி வினுதல் என்பது.

21 என்னைச் சார்ந்தவர் பால் குற்றம் நிகழின், உடன் தண்டித்தலை மேற்கொள்ளலாகாது என்பது கருத்து.

22 இரகசியமான செய்திகள்.

23 ஒறுத்தல்—தகாத் தண்டம்; தண்டிக்கத் தகாதவர் பால் விதிக்கப்படும் தண்டம். இத்தண்டத்தை விதிக்க முயலும்போது உன்னை இங்கிதத்தால் தடுப்பேன் என்பது கருத்து.

24 இங்கிதம்—கண், புருவம் முதலியவற்றின் அசைவினால் அறிவுறுத்தல்.

25 அதிகாரியின் பதவியில் நியமிக்கப்பட்டோர்.

26 மூச்சுக் காற்று அரசன்மேல் படக்கூடும் என்று அச்சங்கொண்டு, அரசனின் எதிரே அமர்தல் கூடாது என்பார் அருகே அமர்தல் வேண்டும் என்றார். ஈண்டு அணுகிய சேய்மை என்பது மிக நெருக்கமாகவும், மிகத் தூரமாகவும் இல்லாது இடைப்பட்ட நிலையில் உள்ள இடம் என்னும் பொருட்டு; 'அருகே அமர்தல் வேண்டும்' என்பதற்கு 'எதிரிலன்றிப் பக்கத்தில் அமர்தல் வேண்டும்' என்பது பொருள்.

ஆகிய இச்சொற்களையும், [27]இனிய நிகழ்ச்சியில்லாதபோது உரக்கச் சிரித்தல், [28]மூச்சு விடுதல், [29]உமிழ்தல் என்னுமிவற்றையும் விலக்கல் வேண்டும். [30]பிறருடன் மறைவாகப் பேசுதல், [31]மக்கள் பேச்சில் இரட்டித்துக் கூறல், அரசன், செருக்குடையோன் [32]வஞ்சகன் ஆகிய இவர்களின் உருவை ஏற்றல், [33]இரத்தினங்களின் சிறப்பை வெளிப்படுத்தும்படிக் கேட்டல், ஒற்றைக் கண், உதடு என்பவற்றைக் கோணலாகச் செய்தல், புருவ நெறித்தல், [34]பேசுங்கால் பேச்சை நிறுத்தச் செய்தல், (என்னுமிவற்றை விலக்குதல் வேண்டும்.) [35]வலியாரைத் துணைக்கொண்டவருடன் பகைத்தல், மகளிர், [36]மகளிரைக் கண்காணிப்பவர், சிற்றரசரின் தூதர், [37]வெறுக்கத்தக்கவர், [38]துணைவராயில்லாதவர், [39]தாழ்த்தப் பட்டோர், [40]தீயவர் என்னுமிவர்களோடு நட்பு, [41]ஒரு பயனைச் செய்தல், [42]குழு என்னுமிவற்றை [43]விலக்குதல் வேண்டும்.

---

[27] இனிய நிகழ்ச்சியில்லாத போது என்றதனால் விளையாட்டு முதலிய நிகழ்ச்சிகளில் பெருகச் சிரித்தலும் குற்றமன்று என்பது பெற்றும்.

[28] மூச்சுவிடுதல்—பெருமூச்சுவிடுதல்.

[29] உமிழ்தல்—காரியுமிழ்தல்.

[30] அரசன் அருகாமையிற் பிறருடன் மறைவாகப் பேசுதல் என்க.

[31] மக்கட் குழுவினர் கூறுங்கால் 'இஃது இவ்வாறன்று, ஆனால் இவ்வாறு' என்று மறுத்தலும் ஏற்றுக் கோடலும் கூடாது என்பது கருத்து.

[32] வஞ்சகன்—பாசண்டி முதலியோர்.

[33] அரசன் அணிந்து கொண்டிருக்கும் இரத்தினங்களின் சிறப்பைப் பற்றித் தன்னிடம் கூறும்படி அரசனைக் கேட்டல்.

[34] அரசன் பேசிக் கொண்டிருக்கும் போது நடுவே தான் பேசுதல்.

[35] வலிமிக்கவரைத் துணைவராகக் கொண்டவருடன் பகைமையை ஏற்படுத்திக் கொள்ளுதல் கூடாது என்பது கருத்து.

[36] உவளக வினைஞர்.

[37] அரசனால் வெறுக்கப்பட்டவர் என்க.

[38] அரசனுக்குத் துணைபுரியாதவர்.

[39] பொருள், பதவி முதலியவற்றை அரசன் கவர்ந்ததனால் தாழ்நிலையை யடைந்தவர்.

[40] தீயவர்—நடன் விடன் முதலிய சிற்றினத்தார்.

[41] பயனை விரும்பும் பலருள் ஒருவருக்கு மட்டும் பயனளித்தல் என்பது.

[42] தன் கருத்துக்கொத்த மக்களை ஒன்றுபடச் சேர்த்தல்.

[43] தலையாய அமைச்சர் முதலியோர் மேற்கூறிய குற்றங்களைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்பது கருத்து.

சுலோகம்

(1) [44]அரசற்கு நலம் பயப்பனவற்றைக் காலந் தாழ்த்தலின் றியும், [45]தன் நன்மையை இன்சொல்லன் அறிவுரை பகர்வோன் ஆகியவர்களுடனும், [46]பிறர் நன்மையைக் கால இடங்களுக்கேற் பவும், [47]அறம் பொருள்களுடன் ஒத்திருக்கும்படிக் கூறுதல் வேண்டும்.

(2) [48]வினவப்பட்டவன் இனியனவும், உறுதிபயப்பனவும் ஆகியவற்றைக் கூறல் வேண்டும். [49]இனியவை உறுதிபயவாவிடின் கூறுதல் கூடாது. [50]வன்சொல்லாயினும் விரும்பிக் கேட்பவனிடம் அறிவுறுத்தும் முறையில் மறைவிற் கூறலாம்.

(3) [51]மாற்றங் கூறவேண்டிய நிலையில் வாளாவிருத்தலுங்

---

44 எஞ்சிய விதிகளைப் பின்வரும் சுலோகங்களாற் கூறுகின்றார்; அரசனுக்குப் பயனுள்ளவற்றை உடன் தெரிவித்தல் வேண்டும் என்பது கருத்து.

45 தன்னலம் பற்றித் தானே அரசனிடம் தெரிவித்துக் கொள்ளக் கூடாது என்பதும், அரசனுக்கு இனியராகவும், அறிவுரை பகர்வோரா கவும் உள்ளவர்வாயிலாகவே தெரிவித்துக் கொள்ளுதல் வேண்டும் என் பதும் கருத்து.

46 சொல்லுதற்குரிய காலமும் இடமும் தேர்ந்தறிந்து பிறர்நலன் களைப்பற்றி அரசனிடம் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

47 தன்னாற் கூறப்படுவன அனைத்தும் அறத்திற்கும் பொருளுக்கும் முரண்படாதனவாயிருத்தல் வேண்டும் என்பது கருத்து; இது முற்கூறிய எல்லாவற்றிற்கும் ஒக்கும்,

48 ஒரு பொருளைப் பற்றி அரசனால் வினவப்பட்டவன் அரசனுக்கு அக் காலத்தில் இனிமையாகவும், பிற்காலத்து நன்மை பயக்கக் கூடியவகை யிலும் அப்பொருளை யெடுத்துரைத்தல் வேண்டும்.

49 கூறுங்கால் இனியவாய்த் தோன்றினும், பின்னர்க் கேட்டை விளைக் கக் கூடியவற்றைக் கூறுதல் கூடாது என்க.

50 இதற்கு ஒரு புறனடை கூறுகின்றார்; கூறும்போது இனியதாயில்லா திருப்பினும், பிற்காலத்து நன்மை பயக்கக்கூடியதாயின், அரசன் ஊக்கத் துடன் செவிசாய்க்கும் போது அவன் அநுமதிபெற்று இரகசியமாகக் கூறுதல் குற்றமின்றென்பது.

51 வருங்காலத்து உறுதிபயப்பதனைக் கூறுங்கால், செவிக்கு இன்னாத தாகத் தோன்றின், அரசன் அதற்குச் செவிசாயான் என்று தெரிந்தவன் செய்யத் தகுவது இது வெனக் கூறுகின்றார்; அரசனது செவிகைப்ப உறு திப்பொருளை யெடுத்துரைக்கும் ஆற்றல் பெறாது அஞ்சுபவன் வாய் பேசா திருத்தலே நன்மை பயக்கும் என்க.

கூடும். [52]வெறுக்கத்தக்கவரைச் [53]சிறப்பித்தல் கூடாது. அவன் கருத்துக்கு வேறுபட்டவர் வல்லவராயினும் அன்புக்குரியராகார்.

(4) கருத்துக்கொத்தவர் [54]தீயராயினும் அன்புக்குரியராவர். [55]நேரில் சிரிப்பதற்குரிய காலங்களில் நேரில் சிரித்தல் வேண்டும். [56]வெறுக்கும்படிச் சிரித்தல் கூடாது.

(5) [57]வெறுக்கத் தக்கனவற்றைப் பிறர் மூலம் அறிவித்தல் வேண்டுமேயன்றி அவற்றைத் தானே கூறுதல் கூடாது. [58]தனக்கு நேர்ந்தவற்றை நிலம்போலப் பொறுமையுள்ளவர் பொறுத்தல் வேண்டும்.

(6) [59]பகுத்தறிவுள்ளவன் எப்பொழுதும் முன்னர் தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும். அரசனைச் சார்ந்தவருடைய வாழ்க்கை, அழலைச் சேர்ந்தொழுகுதல் போன்றதெனக் கூறுப.

---

52 அரசற்குப் பகையாயினர் முதலியோர்.

53 புகழ்தல் முதலியவாற்றான் சிறப்பித்தல் என்பது.

54 தீயர்—நடர் முதலியோர்.

55 மகிழ்ச்சிகாரணமாக அரசன் சிரிக்குங்கால், அவனுக்கு எதிரில் சிரிப்பதற்குரிய காலங்களில், எதிரில் சிரித்தல் வேண்டுமேயன்றி, மரம் முதலியன போன்று உணர்ச்சி யற்றிருத்தல் கூடாது என்பதாம்.

56 அருவருப்புத் தோன்றுமாறு விகாரமாகச் சிரித்தல் கூடாதென்பது.

57 அரசன் உள்ளத்திற்கு வருத்தம் முதலியவற்றைக் கொடுக்கும் செய்திகளைத் தான் நேரில் தெரிவித்தல் கூடாதென்க.

58 தனக்குத் துன்பம் முதலிய விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நேரினும் பொறுமையுடன் இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

" தம்முயிர்க்குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும்வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையு முணரவல்லா ரொருமையே மொழியு நீரார்."

(கம்பரா. அயோ. மந்-9)

என்று கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரும் அமைச்சரது இயல்பினை உணர்த்தியது அறிக.

59 தீயினிடம் நெருங்கிப் பழகுவதுபோல் அரசனைச்சார்ந்து வாழ்தலில் தீங்கு நேர்தல் இயல்பாதல் பற்றி அரசனைச் சார்ந்தவர் தற்காப்பை மிக விழிப்புடன் செய்து கொள்ளவேண்டும் என்று கூறுகின்றார்.

" அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்" (குறள்-691)

என்பர் தெய்வப் புலவர்.

(7) [60]தீ ஒரு பகுதியையாதல், ஓங்கின் உடல் முழுமையு மாதல் கொளுத்தும். அரசனோவெனின் மக்கள் மனைவியருடன் ஒருவனைச் சேர்த்து அழிக்கவோ ஆக்கவோ வல்லவனுவான்.

ஐந்தாம் அதிகரணம் நான்காம் பிரகரணம்
'அமைச்சர் முதலியோரியல்பு' என்னும் தொண்ணூற்றுநான்காம்
அத்தியாயம் முற்றிற்று.

---

60 தீயைவிட அரசனுக்குள்ளதோர் விசேடத்தையுங் கூறுகின்றார். அரசன் வெகுண்டானுயின், மக்கள்மனைவியருடன் ஒருவனை யழித்துவிடுவான் என்றும், மகிழ்ந்து அருளுவானுயின், அவர்கள் எல்லோருடனும், அண்டினவனைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவந்து விடுவான் என்பதும் கருத்து.

"தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
யீண்டுதங் கிளையோடும் எரித்திடும்"

(சீவக. நாமகளிலம்பகம்)

என்றார் திருத்தக்கதேவரும்.

ஐந்தாம் அதிகரணம்—வஞ்சித்தொறுத்தல்

ஐந்தாம் பிரகரணம்—[1]ஒழுக்க வரையறை

தொண்ணூற்றைந்தாம் அத்தியாயம்

தொழில்களில் [2]நியமிக்கப்பட்டவர் செலவுபோக (எஞ்சிய) ஊதியத்தைக் காண்பித்தல் வேண்டும்.

[3]உள் நிகழ்ந்தது [4]வெளியே நிகழ்ந்தது என்பவற்றையும், [5]மறைத்தற்குரியன, [6]தெரியப்படுத்துதற்குரியன, [7]அழியக்கூடியன [8]பொருட்படுத்தற்குரியவல்லாதன என்பவற்றையும் [9]'இஃது இங்ஙனம்' என்று சிறப்பித்து எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

வேட்டை, சூது, கள், மகளிர் என்னுமிவைகளில் ஈடுபட்டவனைப் [10]புகழ்ச்சியால் சார்ந்தொழுகுதல் வேண்டும். சார்ந்தொழுகுபவன் [11]இவனுக்கு இடுக்கண் காரணமாகத் தீங்கு நேரின் முயலு

95-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அமைச்சர் முதலியோர் அரசனிடம் எங்ஙனம் ஒழுகுதல் வேண்டும் என்ற வரையறையைச் செய்து கொண்டு ஒழுகுதல் என்பது. முன்னைப் பிரகரணத்தில் அமைச்சர் முதலியோரின் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறினர். நாட்டிற்கு இன்றியமையாத கருவூலம் அமைச்சர் முதலியவர்களை மூல மாகக் கொண்டதாகலின், பொருளைப் பற்றிய அதிகாரிகளின் செயல் முதலியவற்றை இப்பிரகரணத்திற் கூறுகின்றார்.

[2] வருவாய்த் தலைவன் பண்டாரத்தலைவன் முதலியோர்.

[3] அரணுள் நிகழ்ந்தது என்பது.

[4] நாட்டில் நிகழ்ந்தது என்க.

[5] அரசனுக்குத் தொடர்புள்ள செய்திகள் என்பது.

[6] அரசன் எல்லாவற்றிலும் அறிவுடையவன் என்பதை யறிவித்தல் முதலியன.

[7] உடனே செய்யப்படாவிடின் அழிந்து போகக்கூடியவை என்பது.

[8] பின்னர்க் காலந்தாழ்த்திச் செய்யப்படினும் தீங்கு எய்தாமலிருக்கக் கூடியவை என்பது.

[9] இன்ன இன்ன செயல்கள் இன்ன இன்ன இயல்புடையன என்று அரசனுக்கு ஓலை மூலம் விளக்கிக் கூறவேண்டும் என்பது கருத்து.

[10] புகழுரை கூறிக்கொண்டு அவனுடன் நட்புடையனாயிருத்தல் வேண்டும். என்பது கருத்து.

[11] அங்ஙனம் இருத்தலாலுண்டாம் பயன் இன்னவெனக் கூறுகின்றார்.

தல் வேண்டும். பிறரால் உண்டாம் [12]வேறுபாடு, ஏமாற்றம், [13]வஞ்சனை என்னுமிவற்றினின்றும் [14]புரத்தல் வேண்டும்.

[15]இவனுடைய [16]இங்கிதம் [17]ஆகாரம் என்னும் இவற்றால் [18]உய்த்துணர்தல் வேண்டும். இங்கிதம் ஆகாரங்களால் இரகசியத்தை மறைத்தற் பொருட்டுக் [19]காமம், வெறுப்பு, உவகை, தாழ்வு, முயற்சி, அச்சம், இருமைவகை என்னும் இவற்றின் மாறுபாட்டை அறிஞர் மேற்கொள்கின்றனர்.

[20]கண்டதும் முகமலர்தல், மொழியினை யேற்றுக் கோடல், இருக்கையளித்தல், [21]தனிமையிற் காட்சியளித்தல், [22]ஐயுறத்தக்க விடத்தும் ஐயுறாமை, அளவளாவுதலில் இன்புறல், [23]பிறர் கூறுஞ் செய்திகளில் எதிர்பார்த்திருத்தல், [24]அறிவுரை கூறப்படின்

---

12 வேறுபாடு—பேதம் என்ற உபாயம்; அரசனுடைய அமைச்சர் முதலியோரை வேறுபடுத்தல் முதலியன.

13 வஞ்சனை—நஞ்சிடுவோர் முதலியோரால் நிகழ்வது.

14 மேற்கூறியவற்றால் அரசனுக்குத் தீங்கு நேராமற் காத்தல்வேண்டும் என்பது கருத்து.

15 இவன்—அரசன்.

16 இங்கிதம்—உட்கருத்தைப் புலப்படுத்துவதற்கு உறுப்புக்களினாற் செய்யப்படும் சேட்டை.

17 ஆகாரம்—வடிவ வேறுபாடு; முகம் சிவத்தல் முதலியன.

18 அரசனுடைய உட்கருத்தை நுட்பமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்க.

19 காமம் முதலியவற்றைப் பிறர் அறியாதிருக்கும் பொருட்டு, அறிஞர் தம்முடைய கருத்துக்கு மாறுபட்ட இங்கிதம் முதலியவற்றை ஏற்பர் ஆகலானும், சிறந்த அறிவுள்ளவருக்கும் இங்கிதம் முதலியவற்றால் எளிதாகக் கருத்தையறிதல் கூடாமையானும், அதைக் கண்டறிதற்குச் சிறந்த முறையில் ஊக்கம் ஏற்கத் தக்கது என்பதைக் கருத்தாகக் கொள்க.

20 அன்புடைமைக்குரிய குறிகளைக் கூறுகின்றார்.

21 ஏனைய மக்கள் உட்புகுதற்குத் தகாத உவளகம் முதலியவற்றிலும் கண்டு பேசுவதற்கு அநுமதித்தல் என்பது.

22 ஐயுறாமைக்குச் சிறந்த நம்பிக்கை காரணமாம் என்க.

23 பிறரால் அறிவிக்கப்பட வேண்டிய காரியங்களிலும், தன் நண்பனின் துணையை எதிர்பார்த்தல் என்பது.

24 கூறுங்காலத்தில் வெறுக்கத்தக்கதாயினும், பின்னர் நன்மையை விளைக்கக்கூடியதென நம்பிப் பொறுமையுடன் செவிசாய்த்தல் என்பது.

பொறுத்தல், [25]புன்முறுவலுடன் ஏவுதல், [26]கையாற்றொடுதல், [27]புகழத்தக்கன செய்தவழி நகுதல், [28]காணாதவழிப் புகழ்தல், [29]உணவுகளில் நினைவு, [30]உடனியங்குதல், [31]இடுக்கண் நேர்ந்துழி அருளுதல், அவனைச் சார்ந்தவரைச் சிறப்பித்தல், இரகசியத்தைக் கூறல், [32]பெருமையை வளர்த்தல், [33]விருப்பத்தைச் செய்தல், வேண்டாதவற்றை விலக்கல் என்பன [34]மகிழ்ச்சியை அறிவிப்பதாம்.

[35]இவைகளுக்கு மாறுபட்டன மகிழ்ச்சியின்மையை அறிவிப்பனவாம். [36]மீண்டும் கூறுவாம்:—கண்டதும் கோபித்தல், [37]வார்த்தையைக் கேளாமை தடுத்தல்கள், [38]இருக்கை காட்சிகளை யளியாமை, வண்ணம் குரல்களின் மாறுபாடு, [39]ஒற்றைக்கண் பார்வை, புருவநெறித்தல், உதட்டைக் கோணலாகச் செய்தல்

---

25 'இவ்வினையைச் செய்து முடித்தற்கு நீதான் உரியவன்' என்று புன்முறுவலுடன் அதைச் செய்யும்படி ஏவுதல் என்பது.

26 கையால் தழுவிக் கொண்டு பேசுதல் என்பது.

27 புகழ்தற்குரிய சிறந்த முறையில் ஒரு தொழிலைச் செய்து முடித்ததும் விளையாட்டாகப் பரிகசித்து இன்புறுதல் என்பது.

28 அவரில்லாத சமயங்களில் அவர் குணங்களைப் பற்றிப் பாராட்டிக் கூறல் என்பது.

29 சிறந்த உணவு முதலியவற்றை அருந்துங்கால் கூறு கொடுத்தற் பொருட்டும், உடனுண்டு மகிழ்வதற்கும் அவரை நினைத்தல் என்பது.

30 உலாவுதல் முதலிய நிகழ்ச்சிகளில், கூட அழைத்துச் செல்லல் என்பது.

31 நோய் முதலியவற்றால் துன்பம் நேரின், அதைப் பரிகரித்தற்குத் துணைபுரிதல்.

32 மேன்மேலும் உயரிய பதவியைக் கொடுத்தலால் வளரச் செய்தல் என்பது.

33 அறம் பொருள் இன்பம் என்பவற்றை நன்கு நுகரச்செய்தல் என்க.

34 மேற்கூறிய செய்கை முதலியவற்றால் அரசன் முதலிய தலைவனுக்கு அமைச்சர் முதலியவரிடம் அன்புண்மையை யறியலாம் என்பது கருத்து.

35 'கண்டதும் முகம் மலர்தல்' முதலாக மேற்கூறியவற்றின் மாறுபட்டன, 'கண்டதும் வெறுத்தல்' முதலியனவாம். அவற்றால் தலைவனுக்குத் தம்மிடம் அன்பின்மையை யுணர்தல்வேண்டும்.

36 மேலும் சிலவற்றை விதந்து கூறுவாம் என்க.

37 கூறுங்கால் செவிசாய்க்காமையும், அவ்வார்த்தை முழுவதும் கூறப்படாத நிலையில் தடுத்தலுமாம்.

38 இருக்கை யளித்தும் முகமலர்ந்து பார்த்தும் போற்றுதிருத்தல்.

39 காக்கையைப் போல் ஒற்றைக்கண்ணால் பார்த்தல் என்பது.

வேர்வை, காரணமில்லாத நிலையில் பெருமூச்சு முறுவல்களின் தோற்றம், பிறருடன் பேசுதல், காரணமின்றிச் செல்லல், [40]பிற ரைப் போற்றுதல், நிலத்தைக் கீறுதல், உடம்பைச் சொரிந்து கொள்ளுதல், பிறரைப்புடைத்தல், [41]கல்வி நிறம் நாடு இவற்றை யிகழ்தல், [42]ஒத்தவரைப் பழித்தல், [43]ஒத்த குற்றத்தைப் பழித்தல், [44]மாறுபட்டவனைப் புகழ்தல், [45]நல்ல செயல்களைக் காணுமை, [46]மாறுபட்ட செயல்களைக் கூறுதல், [47]பின்புறமாய்க் காண்டல், [48]மிகையாக விடுத்தல், [49]பயனில கூறுதல், [50]அரசனைச் சார்ந்தோ ருக்குத் தன்னிடமுளதாகிய செயல் வேறுபாடு (என்பன).

[51]மக்களல்லாத உயிர்களின் செயல்மாறுபாட்டையும் உய்த் துணர்தல் வேண்டும்.

[52] 'இவன் மேற்பாகத்திலிருந்து நீரை ஊற்றுகிறுன்' என்று

---

40 இவனைவிட்டு வேருெருவனை யாதரித்தல் என்பது.

41 இவனுடைய கல்வி நிறம் முதலியவற்றை யிழித்துக் கூறல்.

42 இவனையொத்த தொழிலாளரைப் பழித்தல்.

43 இவனுடைய குற்றத்திற்குச் சமமான குற்றத்தை நிந்தித்துப் பேசு தல் என்பது.

44 இவனது தொழிலுக்கு மாறுபட்ட தொழிலுடையவனைப் புகழ்தல்.

45 சிறந்தமுறையிற் செய்து முடித்த செயல்களை எண்ணுமை.

46 சரியான முறையிற்செய்யப்படாத செயல்களின் பிழையை அடிக் கடி எடுத்துக்கூறல்.

47 திரும்பிப் போகும் போது பின்புறமாக வெறுத்து நோக்குதல்.

48 ஒரு காரியத்தைச் செய்யச் சென்று திரும்பிவந்த நிலையில், வேருெரு காரியத்தைத் தலைக்கீடாகக் கொண்டு மீண்டும் மீண்டும் விடுத்தல்.

49 கருத்தில்லாமல் பேசுதல்.

50 அரசனுடைய பணியாளர் முதலியவர்களின் மனவேறுபாட்டுடன் கூடிய செயல் என்பது.

51 விலங்கு, பறவை முதலியவற்றின் செயல்மாறுபாட்டையும், உம் மையால் மக்களின் செயல்வேறுபாட்டையும் கண்டு, அரசன் முதலி யோரின் கருத்தை உய்த்துணர்தல் வேண்டும் என்பது கருத்து.

52 அவற்றுள் மக்களின் செயல் வேறுபாட்டைப் பற்றிக் கூறுகின்றுர். செடி முதலியவற்றிற்கு நீர் ஊற்றுபவன் அணிமையிலுள்ளவர் நனையும்படி நீரை ஊற்றுகிறுன் என்ற காரணம் பற்றிக் 'காத்தியாயனர்' என்ற மந்திரி அரசனைவிட்டுப் போனுன் என்பது கருத்து. ஈண்டுக்குறிக்கப்படும் வரலாறு வருமாறு :—பௌண்டிரம் என்ற நாட்டின் அரசனுன சோமதத்தன் ஏதோ

காத்தியாயனரும், [53] 'குருகு என்ற பறவை மாறுபட்டது' எனப் பரத்துவாச கணிங்கரும், [54] 'புல்' என்று சாராயண தீர்க்கரும்,

---

ஒருகுற்றம் பற்றித் தன் மகனைச் சிறையிடுவதற்கு மந்திரியான காத்தியா யனருடன் ஆலோசித்தான். இச் செய்தியை இங்கிதம் முதலியவற்றால் சிலர் அறிந்து, அரசனின் மகனை வேற்றிடத்துக்கு அனுப்பிவிட்டனர். இரகசி யத்தை மந்திரிதான் வெளியிட்டான் எனக் கருதிய அரசன், தன் பணி யாளரிடம் மந்திரியைக் கொன்றுவிடும்படிக் கட்டளையிட்டான். தோட்டத் தில் நீர்பாய்ச்சுந்தொழில் புரிபவன் ஒருவன் அரசனது கட்டளையை இரகசிய மாக அறிந்து, காத்தியாயனன் வந்து கொண்டிருக்கும் போது, மேற் பாகத்திலிருந்து நாற்புறமும் நீர் சிதறும்படி ஊற்றினன். அது கண்ட அம் மந்திரி 'என் உடலில் நீர்த்துளி சிதறும் என்று எண்ணி நேற்றுவரை மெதுவாக நீர் ஊற்றின இவன், இன்று மேற்பக்கத்திலிருந்து நீரை ஊற்று வது, அரசன் என்னிடம் ஏதோ ஒரு விஷயம் பற்றிக் கோபமுள்ளவன் என்பதைக்குறிக்கும் செயல்மாறுபாடாகும் என்றறிந்து அரசனைவிட்டுச் சென்றுவிட்டான் என்பது.

[53] இனிப்பறவை முதலியவற்றின் செய்கை மாறுபடுதலைப் பற்றிக் கூறுகின்றார். கிரௌஞ்சம் என்ற பறவை விபரீதமாகப் பறந்து சென்றது என்பது காரணமாகப் பரத்துவாச கோத்திரத்தவரான 'கணிங்கர்' என்ப வர் அரசனை விட்டுச் சென்றார் என்பது கருத்து. இதைப்பற்றிய கதைச் சுருக்கம் வருமாறு:—பொருணூலில் வல்லவரான 'கணிங்கர்' என்பவர் கோசலநாட்டின் அரசனான 'பரந்தபன்' என்பவனைச் சார்ந்து வாழ்ந்து வந்தார். அவர் அரசனிருக்குமிடத்திற்கு நாடோறும் போகுங்கால் அங் குள்ள கிரௌஞ்சம் அவரைப் பிரதக்ஷிணம் செய்து போகும். ஒருநாள் அர சன் தான் அந்தப்புரத்திலிருக்கும் போது தன்னைவந்து பார்த்தார் என்பது பற்றி அவரைக் கோபித்துப் பழித்துப் பேசினன். அவன் கூறிய பழிச் சொல்லைக் கேட்ட அப்பறவை, கணிங்கர் வரும் சமயத்தில், வழக்கத்திற்கு மாறாக அவரை அப்பிரதக்ஷிணமாகச் சென்றது. அதுகண்ட அவர், அரசன் தன்னிடம் வெகுண்டிருக்கிறான் என்று ஊஹித்து, அரசனைவிட்டுச் சென்று விட்டார் என்பதாம்.

[54] 'புல்' என்றறிந்த சாராயணகோத்திரத்தினரான 'தீர்க்கர்' என்ப வர் அரசனைவிட்டுச் சென்றார் என்பது கருத்து. இது பற்றிய வரலாறு வது:— முன்னொருகாலத்தில் மகதநாட்டிற்குச் சிறுவனொருவன் அரசனாக இருந்தான். அவன் தந்தைக்கு நண்பரான 'தீர்க்கர்' என்பவர் அவனுக்கு ஆசிரியராக இருந்தார் அவர் வரும்போது அரசனின்தாய் தன் கணவனிட முள்ள பக்தியினால் நாடோறும் எழுந்து உபசரித்து வந்தாள். பின்னர் மகன் காளைப் பருவத்தை யடைந்த நிலையில், தன் தாயால் தீர்க்கருக்குச் செய்யப்படும் உபசாரத்தைப் பொருது 'இப்பார்ப்பனனை நீ ஏன் உபசரிக் கிறாய்' என்று ஒரு நாள் தாயைக் கேட்டான். ''இவர் அறிஞர்; நம் ஆசிரி

[55]உடை ஈரமானது என்று கோடமுகரும், [56]யானை நனைத்தது என்று கிஞ்சற்கரும், [57]தேர்க்குதிரையைப் புகழ்ந்தான்' என்று

யர்; உன் தந்தைக்கு மிக்க நண்பர்; உன்னால் கௌரவிக்கத் தக்கவர்; அப்படிப்பட்ட இவரை நீ உணவு உடைமுதலியவற்றைக் கொடுத்துப் போற்றுவாயாக" என்று அரசனின் தாய் கூறினாள். அதைக்கேட்ட அவன் உணவுப் பொருளைப் புல்வால் மூடி அவருக்குக் கொடுத்தான். அதனால் 'தன்னை யிகழ்கிறான்' என்றறிந்த தீர்க்கர் அவனைவிட்டுச் சென்றார் என்பது.

55 உடை நனைந்திருந்தது என்ற குறிப்பால் 'கோடமுகர்' என்ற ஆசிரியர் அரசனைவிட்டுச் சென்றார் என்பது கருத்து. இதன் வரலாறு:— அவந்தி நாட்டின் அரசனை 'அம்சுமான்' என்பவனுடைய மகனுக்குக் 'கோடமுகர்' நீதிநூலைக் கற்பித்து வந்தார். அவரிடம் அரசன் ஏதோ ஒரு காரணம் பற்றிச் சினங்கொள்வானாயினன். அச்செய்தியை அறிந்த அரசன்மகன் தன் ஆசிரியனுக்கு ஓர் இங்கிதத்தைத் தெரியப்படுத்தினன். அஃதாமாறு:— அவன் நாடோறும் நீராடிச் செல்லுங்கால் உடையைப் பிழிந்து கழுத்தில் போட்டுக் கொள்வது வழக்கம். ஒருநாள் நீராடியபின் 'உடை ஈரமாயுள்ளது' என்று கூறி கழுத்தில் உடையின்றிச் சென்றான் என்பதாம். இவ்விங்கிதத்தால், அரசனுக்குத் தன்னிடம் கருத்து வேறுபாடுளது என்றறிந்த கோடமுகர் அவ்வரசனை விட்டுச் சென்றார் என்பது.

56 யானை நீரால் தன்னை நனைத்தது என்பது காரணமாகக் 'கிஞ்சல்கர்' என்பவர் அரசனைவிட்டுச் சென்றார் என்பது கருத்து. இதுபற்றிய வரலாறாவது:—வங்கநாட்டின் அரசனை சதானந்தன் என்பவனைக் கிஞ்சல்கர் என்ற ஆசிரியர் சார்ந்திருந்தார். அவர் நாடோறும் அரசன் ஏறிச் செல்லும் யானையிடம் சிறிது நேரம் விளையாடிய பின்னர் அரசனைப் பார்க்கப் போவது வழக்கம். ஒருநாள் அரசன் அந்த யானையின் மேலேறிச் செல்லுங்கால் ஆசிரியருக்குத் துரோகத்தைச் செய்ய ஆலோசித்தான். அவ்விடயத்தைக் கேட்ட அந்த யானை தன் துதிக்கை நீரினால் ஆசிரியனை நனைத்தது. முன்னர் நிகழாத இந்நிகழ்ச்சியைக் கண்டு, 'அரசன் தன்னிடம் கருத்து வேறுபாடு கொண்டுளான்' என்பதை யூகித்துணர்ந்த கிஞ்சல்கர் அரசனை விட்டுச் சென்றார் என்பதாம்.

57 'பிசுனன்' என்ற ஆசிரியன் உச்சயினி நகரத்தரசன் மகனை 'பாலகன்' என்பவனுக்கு நீதி நூலைக் கற்பித்து வந்தான். கல்வி முடிவடைந்ததும் அரசன் பிசுனனுடைய பொருளைக் கவர்ந்து கொள்வதன் நிமித்தம் ஆலோசனை செய்தான். அருகில் மறைந்திருந்து அதனையறிந்த மகன், ஆசிரியத் துரோகத்தை நீக்க எண்ணி, தேரில் குதிரையைப் பூட்டி ஆசிரியனது முன்னிலையில் நின்று கொண்டு 'இக்குதிரை ஒரேநாளில் முந்நூறு யோசனை தூரம் செல்லும்' என்று தேர்க்குதிரையைப் புகழ்ந்து கூறினன். அதனால் அவன் தன்னை வெளியேறும்படிக் குறிப்பால் தூண்டினதாக அறிந்த பிசுனர் அங்கிருந்து உடனே வெளியேறினர்' என்ற வரலாறு ஈண்டுக் கருதப்பட்டதாம் என்ப.

பிசுனரும், [58]ஏமலி குறைத்தது என்று பிசுனன்மகனும் விட்டு விலகிச்சென்றனர் [59]என்க.

[60]பொருள், மதிப்பு என்பவற்றிற் குறைவு ஏற்படின் விட்டு விடுதல் வேண்டும். அல்லது தலைவனின் இயல்பு, தன் குற்றம் ஆகியவற்றை [61]அறிந்து [62]மாற்றமும் செய்யலாம். இவனுக்கு [63]நெருங்கிய நண்பனையாதல் அடையலாம்.

சுலோகம்

[64]அங்கிருந்துகொண்டு நண்பரால் [65]தலைவன், தன் குற்றத்தை மறக்கும்படிச் செய்தல் வேண்டும். [66]பின்னர்த் தலைவனை அடையலாம். (தலைவன்) இறந்த பின்னரும் மீண்டு வரலாம்.

ஐந்தாம் அதிகரணம் ஐந்தாம் பிரகரணம்
‘ஒழுக்கவரையறை’ என்னும் தொண்ணூற்றைந்தாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

[58] நாய் குரைத்தலைக் கேட்டதும் பிசுனரின் மகன் அரசனை விட்டுச் சென்றான் என்பது கருத்து. விளக்கம் வருமாறு:— ஆசிரியனான பிசுனரின் புதல்வன் இளமையிலேயே நீதிநூலின் உண்மையைக் கண்டும், அரசனைச் சார்ந்தும் இருந்தான். அரசனும் இவனைச் ‘சிறந்த புலவன்’ எனப்பாராட்டி வந்தான். பிசுனருடைய இப்புதல்வன் இளமையாயிருத்தலால் மந்திரி பதவிக் குரியவனல்லன். ஆகவே உரிய வயது வரும்வரை இவனைக் காவலில் வைத்துப் பாதுகாத்தல் வேண்டும். இன்றேல் வேற்றுநாட்டுக்குச் சென்று விடக்கூடும்’ என்று ஒருநாள் ஆலோசனை செய்தான். இந்த ஆலோசனையைக் கேட்டு ஒருநாய் பிசுனரின் புதல்வனுடைய முன்னிலையில் நின்று குரைத்தது. இவ்விங்கிதத்தால் அரசனின் மனவேறுபாட்டை ஊகித்த பிசுனரின் புதல்வன் உடனே அங்கிருந்து வெளியேறினான் என்பது.

[59] இங்ஙனம் செயல் முதலியவற்றின் வேறுபாட்டைக் கொண்டு கருத்து வேறுபாட்டை உய்த்துணர்ந்து அரசனை விட்டுவிடல் வேண்டும் என்பது கருத்து.

[60] பொருள், கௌரவம் என்னுமிவற்றிற்குக் குறையை உண்டு பண்ணும் அரசனை விட்டுவிடுதல் வேண்டும் என்பது கருத்து.

[61] நன்கு ஆராய்ந்தறிந்து எனபது.

[62] அரசனை விட்டு விலகாமலே அரசனின் கோபத்தைத் தணிக்க முயலலாம் என்க.

[63] அரசனுக்கு நெருக்கமாயுள்ள நண்பன் மூலம் அரசன் மனத்தை மகிழச் செய்வதற்கு அந்நண்பனை யடையலாம் என்பது கருத்து.

[64] அரசனின் அரண்களில் இருந்துகொண்டென்பது.

[65] தன் நண்பர் மூலம் தன்பாலுள்ள குற்றத்தை மறக்கும்படிச் செய்தல் வேண்டும் என்க.

[66] குற்றத்தை மறக்கச் செய்தபின் என்க.

ஐந்தாம் அதிகாரணம்—வஞ்சித்தொறுத்தல்

6, 7-ஆம் பிரகரணங்கள்—[1]அரசியற் புத்தமைப்பு, [2]தனித்தலைமையரசு

தொண்ணூற்ருரும் அத்தியாயம்

அரசனுடைய [3]நிலைவேறுபாட்டிற்கு அமைச்சர் [4]இங்ஙனம் மாற்றஞ்செய்தல் வேண்டும். [5]இறப்பினுல் துன்பம் நேரும் என்ற அச்சத்திற்கு முன்னரே அரசனுடைய இனியன், அறிவுரை பகர்வோன் இவர்களின் வார்த்தையால், நாட்டின் தீங்கைப்போக்குதல், பகைவரைக் களைதல், வாழ்நாள் வளர்ச்சி, மக்கட்பேறு என்னுமிவற்றிற்குரிய செயலில் அரசன் ஈடுபட்டிருக்கிறுன் என்பதைத் தலைக்கீடாகக்கொண்டு ஒரு திங்களோ, இரண்டு திங்களோ இடைப்பட்ட காட்சியை நிலைநிறுத்தல் வேண்டும் [6]உரிய காலத்

96-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] எக்காரணத்தினுலாவது ஓர் அரசன் அரசியற்குதவாஞைக, அவன் புதல்வனுக்கு முடி சூட்டி, முன்னைய அரசியலைப் புதிப்பித்தமைத்தல்.

[2] பொதுவறப் புரக்கும் உரிமை என்பது. 'அமைச்சர் முதலியோரியல்பு' என்பதாகத் தொடங்கி, அரசன் நன்னிலையிலிருக்குங்கால் அமைச்சரும் ஏனைய அதிகாரிகளும் நடந்து கொள்ளவேண்டிய விதிமுறைகளை இரண்டு அத்தியாயங்களிற் கூறினுர். ஈண்டு, அரசனது நிலை மாறுபட்டவிடத்து மந்திரி முதலியோர் செயற்பாலதைப் பற்றிக் கூறுகின்ருர். இதனுற் பிரகரண இயைபு புலனும்.

[3] கடுநோய் முதலியவற்ருல் உண்டாம் சிரமநிலை.

[4] இங்ஙனம்—பின்னர்க் கூறப்படுமாற்ருல்.

[5] அரசன் இறந்துவிடக் கூடும் என்ற அச்சம் தோன்று முன்னரே, அரசனைக்காண விரும்பும் மக்களுக்கு ஒரு திங்கள் அல்லது இரண்டு திங்களுக்கு ஒருமுறை மட்டுமே வாய்ப்பு அளித்தல் வேண்டும். இவ்வரையறையை அரசனுடைய இனியவனும், அறிவுரை பகர்வோனும் மக்களுக்குச் சொல்லியறிவித்தல் வேண்டும் என்பது கருத்து. இடைக்காலத்தில் அரசனைக்காண இயலாமைக்குரிய காரணத்தை மக்களுக்கு விளக்குதல் இன்றியமையாததாம் என்பது பற்றி 'நாட்டின் தீங்கைப் போக்குதல்' முதலியனவற்றைத் தலைக் கீடாகக் கொள்ளுமாறு கூறினுர்,

[6] உரியகாலம்—அரசனை மக்கள் முதலியோர் காணுதற்குரிய காலம். மந்திரி முதலியோர், தமக்கு அன்புமிக்க நண்பனெருவனுக்கு அரசவேடம் தரிப்பித்து 'இவன் அரசனே' என்று மக்கள் முதலியோர் நம்பும்படிக் காண்பித்தல் வேண்டும் என்க.

தில் அரசவுருவினனை மக்களுக்கும், நண்பர், பகைவர், தூதர் என்னுமிவர்களுக்கும் காண்பித்தல் வேண்டும். [7]அவர்களுடன் தகுதிக்கேற்ப அமைச்சர் மூலம் பேசுதல் வேண்டும். [8]வாயில் காப்போன், உவளக வினைஞன் என்பவர்களின் மூலம் முற்கூறப் பட்ட அரசன் கடமையைச் செய்வித்தல் வேண்டும். தீமை புரிந் தவரிடம் மக்கள் விருப்பத்திற் [9]கேற்ப முனிவையும் அருளையும் புலப்படுத்தல் வேண்டும். [10]நன்மை புரிந்தவராயின் அருளேயாம்.

[11]மெய்யன்பர்களாற் போற்றப்பட்டனவும், அரண், நாட்டின் எல்லை இவற்றிலுள்ளனவுமான கருவூலம், படைக்கலம் ஆகிய இவைகளையும், நற்குடிப்பிறந்த புதல்வரையும் தலைவர்களையும் ஏதேனும் ஒன்றைத் தலைக்கீடாகக்கொண்டு ஓரிடத்தில் ஒருங்கு சேர்த்தல் வேண்டும்.

நண்பரை யுடையவனும், அரண், காடு இவற்றிலிருப்பவனும் ஆகிய யாரேனும் ஒரு தலைவன் [12]குணக்கேட்டை யடைவனாயின்,

---

[7] மக்கள் முதலியோருடன் பேசவேண்டிய நிலை அரசவுருவினனுக்கு ஏற்படின், 'மௌனவிரதம்' என்பதைத் தலைக்கீடாகக் கொண்டு மந்திரி முதலியவர் மூலம் கூறவேண்டியவற்றைக் கூறவேண்டும் என்கிறார்.

[8] ஒருநாளை எண்கூறுபடுத்து, ஒவ்வொரு கூற்றிலும் அரசன் செய்ய வேண்டிய கடமைகளை வாயில்காப்போன் முதலியவர் மூலம் மேற் கொள்ளச் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[9] 'ஏற்ப' என்றதனால் நாட்டுமக்கள் கருத்துக்கு மாறுபாடு ஏற்படா வாறு கோபம் முதலியவற்றை மேற்கொள்ளல் வேண்டும் என்பது பெறப் படும்.

[10] நன்மை புரிந்தார்மாட்டு அருளையேற்றல் வேண்டுமேயன்றி, எவ்வாற்றானும், கோபத்தை மேற்கொள்ளலாகாது என்பது கருத்து.

[11] அரண் முதலிய வெவ்வேறிடங்களிலிருக்கும் கருவூலம் முதலிய வற்றை மந்திரி, தம் நண்பர்கள் மூலம் நன்கு பாதுகாக்கச் செய்து, அவற்றை ஏதேனுமொரு தக்க காரணத்தைக் கற்பித்து மக்களுக்குக் காட்டி ஒருங்கே சேர்த்துவைத்தல் வேண்டும் என்பதும், அரசனுடைய உயர்குலத்துத் தோன்றிய புதல்வரையும், முக்கியமான அரசியலதிகாரி களையும் ஓரிடத்திற் சேர்ந்திருக்குமாறு செய்தல் வேண்டும் என்பதும் கருத்து.

[12] குணக்கேடு—அரசியலுக்கு ஏலாத செயல்கள்.

அவனை [13]வழிப்படுத்தல் வேண்டும். [14]பல கேடுகளையுடைய யாத்திரையைக் குறித்தாதல் நண்பரின் இல்லத்திற்காதல் [15]அனுப்புதல் வேண்டும்.

[16]தீமைக்குக் காரணமாயுள்ள சிற்றரசரைத் திருவிழா, திருமணம், யானையைப் பிடித்தல், குதிரை விலைப்பண்டம் நிலம் இவற்றைக் கொடுத்தல் என்பவற்றைத் தலைக்கீடாகக் கொண்டாதல், தன் நண்பன் மூலமாகவாதல் வழிப்படுத்தல் வேண்டும். அவர் மூலம் பழிக்கப்படாத நட்பைச் செய்வித்தல் வேண்டும்.

[17]காட்டில் வாழ்வோர், பகைவர் என்னுமிவர்கள் பகைக்கும் படியும் செய்யலாம். [18]அவன் குடியிற் பிறந்து விலக்கப்பட்டானொருவனை நிலப்பகுதியைக் கொடுத்தலால் அருளுதல் வேண்டும்.

[19]குடிப்பிறப்புள்ள புதல்வர், தலைவர் ஆகிய இவர்களுக்கு

---

13 ஏதேனும் ஓர் உபாயத்தை மேற்கொண்டு அவனைத் தன்வழிப் படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

14 அவர்களைத் தம்வழிப்படுத்த வியலாதவிடத்து, பல தீங்குகளை விளைவிக்கும் இடங்களைக் கடந்து முடிக்கத்தக்கதொரு யாத்திரையைக் குறித்து அவர்களை யனுப்பிவிடல் வேண்டும் என்க.

15 இங்ஙனம் அனுப்புதல் நண்பரின் உதவிகுறித்தென்ப.

16 தம் நாட்டிற் செயற்பாலனவற்றைக் கூறிப் பிறநாட்டிற் செய்ய வேண்டுவனவற்றைப் பற்றிக் கூறுகின்றார். எந்தச் சிற்றரசரால் தமக்குத் தீங்கு நேரக்கூடும் என்று கருதுகின்றனரோ, அச் சிற்றரசரைத் திருவிழா முதலியவற்றைத் தலைக்கீடாகக் கொண்டு, தம் நாட்டுக்கு அழைப்பித்துத் தம்வழிப்படுத்தலும், அன்றித் தம் நண்பரை அவரிடம் விடுத்துச் சந்தி முதலியவற்றால் தம் வழிப்படுத்தலும் வேண்டும் என்பது கருத்து.

17 முன் கூறப்பட்ட சிற்றரசருடன் காட்டில் வாழ்வோர் முதலியவர்கள் பகைமை கொள்ளுதற்குரிய உபாயங்களைச் செய்யலாம் என்பது.

18 சிற்றரசரால் தீச்செயல் முதலியன காரணமாக விலக்கப்பட்ட அவரது குடியிற் பிறந்தவனொருவனுக்குச் சிறிது நிலத்தை நன்கொடையாகக்கொடுத்து அவன் மூலம் அவர்களை (சிற்றரசர்களை) யடக்கித் தம் வழிப்படுத்தலும் செய்யலாம் என்பது கருத்து.

19 அரசன் இருக்குங் காலத்திற் செய்யவேண்டியவை இது காறும் கூறப்பட்டன. அவன் இறந்து விடின் செயற்பாலனவற்றை இனிக் கூறத் தொடங்குகின்றார்; * குடிப்பிறப்புள்ள அரசனுடைய புதல்வர் என்க; எனவே அவர்களுக்குக் கோபம் வாராவாறு உரிய வழிகளைக் கண்டு செய்து, பின்னர் அரசகுமரனுக்கு முடிசூட்டப் பெற்றதாகக் குடிமக்களிடம் தெரிவித்தல் வேண்டும் என்பது கருத்து.

அருள்புரிந்து குமரனை முடிசூட்டப்பட்டவனுகவே புலப்படுத்தல் வேண்டும். [20]'மறைவினொறுத்தலிற்' கூறியவாறுபோல் நாட்டின் சிறுபகைகளைக் களைந்து ஆட்சிபுரியச் செய்தல் வேண்டும்.

[21]சிற்றரசருள் தலைவனுன யாரேனும் ஒருவன் வெகுண்டானுயின், 'வருக, உன்னை அரசனுகச் செய்வேன்' என்று அவனை [22]அழைப்பித்துக் கொன்றுவிடல் வேண்டும். [23]தீங்கை விலக்குதலாலும் பயனை யடையலாம்.

[24]அரசியற் பொறையை இளவரசனிடம் நாளடைவில் ஏற்றி, அரசனது கேட்டினை யறிவித்தல் வேண்டும்.

[25]பிறவிடத்தில் அரசனுக்குத் தீங்கு நேரின் பகைவனுருவினனை நண்பனுடன் பகைவனுக்கு [26]நட்பை யுண்டுபண்ணி விலகுதல் வேண்டும்.

---

20 'மறைவினொறுத்தல்' என்ற (91–ஆம் அத்தியாயத்தைப் பார்க்க) பிரகரணத்திற் கூறப்பட்ட முறையைக் கையாண்டு சிறுபகைகளை விலக்கி, அவ்வரசகுமரனை ஆட்சிபுரியச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

21 தன்னுட்டிற் செயற்பாலன இதுகாறும் கூறப்பட்டன. இனி, பிற நாட்டிற் செய்யப்படவேண்டியவற்றைக் கூறுகின்றுர்.

22 இக் குமரன் மிகச் சிறுவனுகலின், அரசு புரிதற்குரியனல்லன். ஆயினும் நாட்டு மக்களுள் கலகம் ஏற்படாதிருக்க இவனுக்கு முடிசூட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் 'நீவா, உனக்கே முடிசூட்டுகின்றேம்' என்று கூறியழைப்பித்துப் பின்னர் அவனைக் கொன்றுவிடல் வேண்டும் என்பது கருத்து.

23 தீங்கை எவ்வாறு விலக்குதல் வேண்டும் என்பதைப் பற்றிய விளக்கம் 127,128 ஆம் அத்தியாயங்களிற் புலப்படும்.

24 இளவரசன் இல்லாத நிலையில் செய்யவேண்டிய விதிமுறைகள் இதுகாறும் கூறப்பட்டன. அவன் இருப்பின், அரசன் பிழைத்திருக்கும்போதே, அரசாட்சியை அவனிடம் கொடுத்துப் பின்னர் அரசன் இறந்த செய்தியை நாட்டுக்கு அறிவித்தல் வேண்டும் என்கிறுர்.

25 தன்னுட்டில் அரசன் இறந்தவிடத்து, அரசியற் புத்தமைப்பைக் கூறி, பிற நாட்டின்கண் அவனிறந்தால் செயற்பாலதைக் கூறுகின்றுர்.

26 இவ்வாருகப் பகைவர் நாட்டின் கருவூலம், படைக்கலம் முதலியவற்றைக் கண்காணித்தற்குரிய ஏற்பாட்டைச் செய்துவிட்டு, தான் திரும்பி வந்துவிடல் வேண்டும்.

சிற்றரசருள் ஒருவனை [27]இவனுடைய அரணில் [28]நிலைப் படுத்தியும் விலகலாம். [29]குமரனுக்குப் பட்டம் சூட்டி [30]எதிர்த் தலுமாம். பகைவர் எதிர்த்தவிடத்துப் [31]பின்னர்க் கூறுமாறு தீங்கை விலக்குதலைச் செய்தல் வேண்டும்.

அமைச்சன் இங்ஙனம் தனித் தலைமையரசைச் [32]செய்வித்தல் வேண்டும் என்பர் கௌடலியர்.

இவ்வாறன்று என்பர் பரத்துவாசர். [33]அரசன் இறக்கும் நிலையில் அமைச்சன், குடிப்பிறப்புள்ள புதல்வனும் தலைவரும் ஒருவர்க்கொருவராதல் தலைவர்தம்முள் ஒருவர்க்கொருவராதல் எதிர்க்கச்செய்தல் வேண்டும். எதிர்த்தவனை மக்களின் கோபத் தால் கொன்றுவிடல் வேண்டும். குடிப்பிறப்புள்ள புதல்வரையும் தலைவரையும் மறைவினொறுத்தலாற் கொன்று தானே நாட்டைப்

---

27 இவனுடைய—பகைவனுடைய.

28 கருவூலம் முதலியவற்றைக் காத்தற் பொருட்டு, அங்கு அவனை நிலைப்படுத்துப் பின்னர் அவனைக் கோபித்துக் கொண்டு வருவதுபோல், அவ்விடமிருந்து திரும்பிவிடல் வேண்டும் என்பது கருத்து.

29 குமரன்—ஈண்டு இளவரசன்.

30 பகைவனை எதிர்த்துப் போர்புரியவேண்டும் என்க.

31 பின்னர்—126 முதல் மூன்று அத்தியாயங்களில். 'அரசியற்புத்த மைப்பு' என்னும் பிரகரணம் விளக்கப்பட்டு முடிவுற்றது. இனி, 'தனித் தலைமையரசு' என்ற பிரகரணம் விளக்கிக் கூறப்படும். அரசனின் புதல் வனொருவனுக்கே அரசுரிமை உரித்து என்பது அதன் பொருளாகும். மந்திரி முதலியோருக்கு அரசுரிமை வந்தெய்தின், அதை அரசனின் மகனுக்கே கொடுத்தல் வேண்டும் என்பது பற்றி இப்பிரகரணத்திற் கூறுகின்றார்.

32 அரசனின் புதல்வனுக்குச் செய்வித்தல் வேண்டும் என்று கொள்க.

33 அரசனின் புதல்வனுக்குத் தனித்தலைமையரசை மந்திரி ஏற்படுத்தல் கூடாது என்பது பரத்துவாசர் கொள்கை. அக்கொள்கையுடையான் செயற் பாலது இதுவெனக் கூறுகின்றார். அரசன் இறக்கும் நிலையிலிருக்கும்போது அரசியற்றலைவர், அரசன் புதல்வர் இவர்களை ஒருவரை ஒருவர் எதிர்க்கச் செய்து, எதிர்த்து வென்றவனொருவனை நாட்டுமக்கள் கோபம் காரண மாகக் கொன்றுவிடும்படிச் செய்தும், அன்றி அரசனுடைய புதல்வருள் முக்கியமானவரை 'மறைவினொறுத்தல்' என்ற பிரகரணத்திற் கூறிய முறையை மேற்கொண்டு கொன்றும், எதிரியற்ற நாட்டை, தானே (மந் திரியே) கவர்ந்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

பற்றல் வேண்டும். [34]அரசுகாரணமாகவன்றோ தந்தை, புதல் வரையும் புதல்வர், தந்தையையும் வெறுக்கின்றனர். (இங்ஙன மாயின்) அமைச்சர்குழு நாட்டிற்குத் தனித் தலைமையரசை எங் ஙனம் செய்யும்? [35]தானே வந்தெய்திய அதைப் புறக்கணித்தல் கூடாது. தானே வந்தெய்திய பெண் விடப்படுவாளாயின் சபித்துக் கூறுவாள் என்பது உலக வழக்கு.

சுலோகம்

[36]காலங் கருதியிருப்பவனைக் காலம் ஒருமுறை வந்தடைகிறது. [37]தொழில்புரிய விரும்பும் அவன் மீண்டும் அக்காலத்தை அடைதல் அரிது.

[38]இது மக்களின் கோபத்தைப் பயப்பதும் அறத்தின்பாற் படாததும் [39]உறுதியற்றதுமாம் என்பர் கௌடலியர். [40]ஆன்ம குணம் நிரம்பப்பெற்ற அரசகுமரனை அரசில் நிலைநிறுத்த வேண்டும். [41]நிறைவில்லையேல் [42]விதனமுள்ள அரச குமரனையாதல், அரச

---

[34] இவ்வாறு செய்தற்குக் காரணங் கூறுகின்றார்; எனவே ஏதேனும் ஒரு வகையில் தனக்கு அரசுரிமை கிடைக்கப் பெறுமாயின், அதை ஏலாது தனித்தலைமையரசைச் செய்ய யாரும் உடன்படார் என்பது பெற்றாம்.

[35] ஆடவனொருவனைக் காமுற்று வந்தடைந்த பெண், அந்த ஆடவனால் மறுக்கப்படின், அவனை யவள் சபித்துச் செல்வாள் என்ற உலகியலை எடுத்துக்காட்டாகக் கூறி, தானே வந்தடைந்த அரசுரிமை மந்திரிமாரால் விடத்தக்கதன்று என்பதை வற்புறுத்திக் கூறுகின்றார்.

[36] இக் கருத்துப்பட முன்னோர் கூறிய சுலோகத்தை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்; காலம்—ஒரு செயலை மேற்கொள்ளுதற்குரிய காலம்.

[37] தொழில்புரிய விரும்பும் அவன்—அக்காலத்துச் செய்யப்பட வேண்டிய தொழிலையன்றி வேறு தொழிலை மேற்கொள்ள விரும்பும் அவன்.

[38] மேற்கூறிய பரத்துவாசரது கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறுகின்றார்; இது—அரசனின் புதல்வர், தலைவர் என்பவர்களை ஒருவரை யொருவர் எதிர்த்துப் போரில் தலைப்படச்செய்வது என்பது முதலாகக் கூறப்பட்ட உபாயம்.

[39] மாறுபாடின்றி நிச்சயமாய்ப் பயனை விளைவிக்கும் என்று கூறுதற் கியலாதது என்பது.

[40] அப்படியாயின் மந்திரி செய்யவேண்டியது யாது என்பதைக் கூறுகின்றார்.

[41] நிறைவு—அரசனின் புதல்வனுக்கு ஆன்மகுணங்களின் நிறைவு.

[42] விதனம்—கள் காமம் சூது முதலியன; இத்தீய குணங்களையுடையனாயிருப்பினும் அரசனின் மகனையே அரசனாக்குதற்கு முயலவேண்டும் என்பது.

கன்னியையாதல், கருவுற்ற பட்டத்தரசியையாதல் முன்னிலைப் படுத்து ‘ இவன் உங்கள் அடைக்கலம், இவன் தந்தையையும் நும் வன்மையையும் குலத்தையும் நினையுங்கள், இவன் [43]கொடி மாத்திரையே யாவன், எவ்வாறு செயற்பாலது என்பவற்றில் நீங்களே தலைவர் ’ என்று அமைச்சரை ஒன்றுசேர்த்துக் கூறுதல் வேண்டும்.

அவ்வாறு [44]கூறுபவனிடம் [45]ஒன்றுசேர்க்கப்பட்டோர் ‘ உன்னைத் துணையாகக் கொண்ட இவனை யல்லாது வேறுய எவன் நான்கு வருணத்தைப் புரத்தற்குத் தகுதியுடையவன்? ’ என்று [46]கூறுவர். மந்திரி [47]‘ அப்படியே யாகுக ’ என்று (கூறி) அரசன் குமரனையாதல் கன்னியையாதல் கருவுற்ற பட்டத்தரசியையாதல் முடிசூட்டி, சுற்றத்தார், [48]தொடர்புள்ளோர், நண்பர், பகைவர், தூதர் என்னுமிவர்களுக்குக் காண்பித்தல் வேண்டும்.

அமைச்சருக்கும் படைவீரர்களுக்கும் [49]சிறந்த உணவு, வேதனம் இவற்றைக் கொடுத்தல் வேண்டும். [50]இவன் பருவமெய்தின் மீண்டும் கொடுப்பான் என்று கூறுதல் வேண்டும். அரண் நாடு இவற்றின் தலைவரிடமும் தகுதிக்கேற்ப நண்பர் பகைவர் பக்கத்தாரிடமும் இங்ஙனமே கூறுதல் வேண்டும். குமரனின் [51]பயிற்சித்

---

43 கொடிபோல் இவனைப் பெயர்க்கு மட்டும் ‘அரசன்’ என்று வைத்து; நீங்களே அரசாட்சியைச் செய்வீர்களாக என்று அமைச்சர் முதலியவர்களிடம் மந்திரி கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

44 கூறிய மந்திரியிடம் என்பது.

45 ஒன்று சேர்க்கப்பட்டோர்—மந்திரியால் இங்ஙனம் கூறப்பட்ட அமைச்சர் முதலியோர்.

46 ‘கூறுவர்’ என்பது ஈண்டு ‘கூறக்கூடும்’ என்னும் பொருளது என்ப.

47 ‘அமைச்சராகிய நீங்கள் கூறியபடியே யாகுக’ என்று அவர்களுடைய உடன்பாட்டைப் பெற்று என்க.

48 மாமனுர் மைத்துனன் முதலியோர்.

49 சிறந்த—முன்னர்க் கொடுக்கப்பட்டதைவிட அதிகமான.

50 இவன் பருவத்தை யடைந்த பின்னர் இதைவிட இன்னும் அதிகமாகக் கொடுப்பான் என்று அவர்களுக்கு ஊக்கமளித்தற்காகக் கூறுதல் வேண்டும் என்பது.

51 கல்வி படைக்கலம் முதலியவற்றில் பயிற்சியூட்ட முயலவேண்டும் என்பது.

தொழில்பற்றியும் முயலுதல் வேண்டும். கன்னியிடத்து ஒத்த குலத்தான் மூலம் [52]மக்களைத் தோற்றுவித்தும் முடிசூட்டலாம். தாய்க்கு மனக்கலக்கமுண்டாம் என்ற அச்சங்கொண்டு நற்குடிப் பிறப்புள்ளவன், சிறிதே வன்மையுள்ளவன், [53]இலக்கணம் நிரம்பப் பெற்றவன் என்னும் மாணவனை [54]அருகில் இருக்கச்செய்தல் வேண்டும். பூப்புக்காலத்து இவளைப் பாதுகாத்தல் வேண்டும். தன்னைக்குறித்து யாதொரு விதமான [55]சிறந்த அநுபவப்பொருளையும் செய்வித்துக் கொள்ளுதல் கூடாது. அரசனைக் குறித்தாயின் தேர், ஊர்தி, அணிகலன், உடை, மகளிர், இல்லம், உபகரணப் பொருள் என்னுமிவற்றைச் செய்விக்கலாம்.

சுலோகங்கள்

(1) மனம் காரணமாக (உட்கருத்தை.யறிவதன் நிமித்தம்) [56]இளமை யெய்தியவனிடம் [57]இளைப்பாறுதலைக் கேட்டல் வேண்டும். [58]மகிழ்ச்சியடையாதவனை விட்டுவிடல் வேண்டும். [59]மகிழ்ந்தானாயின் [60]போற்றுதல் வேண்டும்.

(2) புதல்வனைக் காத்தற் பொருட்டு [61]ஒற்றர், [62]நிதிப்பேறு என்னுமிவற்றை யறிவித்து [63]வெறுப்பை யடைந்தவனுக்க்

---

[52] ஆண் மக்களைத் தோற்றுவித்து அவர்களுள் ஒருவனுக்கு முடிசூட்டல் வேண்டும் என்பது கருத்து.

[53] இலக்கணம்—நல்லிலக்கணம்.

[54] தெய்வ வழிபாடு, புராணம் கேட்டல் முதலிய செயலில் ஈடுபடுத்தற் பொருட்டு அரசனின் தாயின் அருகிலிருத்தல் வேண்டும் என்க.

[55] சிறந்த—மந்திரிபதவிக் குரியதைவிட அதிகமான.

[56] இளமையெய்திய அரசகுமரனிடம் என்க.

[57] இளைப்பாறுதல் என்பது 'மந்திரிபதவியை விட்டு விலகிக்கொள்ளுதல்' என்னும் பொருட்டு.

[58] விலகிக் கொள்ளலாம் என்று கூறுபவனை.

[59] 'விலகுதல் வேண்டா' என்று கூறுவானாயின் என்பது.

[60] சார்ந்து நின்று அவனைப் பாதுகாத்தல் வேண்டும் என்பது கருத்து.

[61] ஒற்றர்—ஈண்டு மூலபலம்.

[62] அரிய சந்தர்ப்பத்தைக் குறித்துப் பாட்டன் முதலிய முன்னோரால் வைக்கப்பட்ட நிதியை யடைதல் என்பது.

[63] வெறுப்பு—தன் பதவியிலோ, அன்றி அரசனிடத்தோ நிகழ்வது.

[64]காட்டை நோக்கியோ [65]பெருவேள்வி செய்தற் பொருட்டோ சேறல் வேண்டும்.

(3) பொருணூலறிவுள்ளவன் [66]தலைவரைச் சார்ந்த அரசனுக்கு, [67]அவன் நண்பரைச் சார்ந்திருந்து, இதிகாசம், புராணம் என்பவற்றைக் கற்பித்தல் வேண்டும்.

(4) [68]சித்த வுருவினர் [69]கரந்தொழுகுதலை மேற்கொண்டு அரசனை [70]யடைதல் வேண்டும். [71]பின்னர் [72]வெறுக்கத் தக்கவர்பால் [73]மறைவினொறுத்தலைச் செய்தல் வேண்டும்.

ஐந்தாம் அதிகரணம் 6, 7-ஆம் பிரகரணங்கள்
'அரசியற் புத்தமைப்பு', 'தனித்தலைமையரசு' என்னும்
தொண்ணூற்றாறும் அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாம் அதிகரணம் முற்றிற்று.

---

64 காட்டையடைதல் தவத்தின் பொருட்டென்ப.

65 காட்டுக்குச் செல்லாமலும் இருத்தற்குரிய உபாயங் கூறுகின்றார்; பெருவேள்வி—பல நாட்களால் முடிவடையப் பெறும் 'தீர்க்கசத்திரம்' என்னும் வேள்விவிசேடம்.

66 அரசனுடைய மாமன் முதலியோரால் வசப்படுத்தப்பட்ட அரசனுக்கு என்பது.

67 அரசனுக்கு இனியராக வுள்ளவர் மூலம் அரசனை நெருங்கி, அறம் பொருள்களின் உண்மையைத் தெரிவித்தல் வேண்டும் என்பது.

68 முற் கூறியவாறு அரசனுக்கு அறிவிக்க வியலாதவிடத்துச் செயற்பாலதனைக் கூறுகின்றார்.

69 வண்ணம், தலைமுடி முதலியவற்றை மாற்றிக் கொள்ளுதல் முதலிய வஞ்சகத்தை மேற்கொண்டென்பது.

70 அரசனைத் தன்வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

71 பின்னர்—அரசனைத் தன்வயப்படுத்திக் கொண்டபின்னர்.

72 அரசனுடைய மாமன் முதலியவர்பால் என்க.

73 'மறைவினொறுத்தல்' என்னும் பிரகரணத்தை விளக்கும் 91–ஆம் அத்தியாயத்திற் கூறியபடி ஒறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

ஆறும் அதிகாணம்—[1]மண்டலயோனி

முதற் பிரகாணம்—[2]அங்கங்களின் நிறைவு

தொண்ணூற்றேழாம் அத்தியாயம்

[3]அரசு [4]அமைச்சு [5]நாடு [6]அரண் [7]பொருள் [8]படை [9]நட்பு என்னுமிவை அங்கங்களாம்.

97-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] 'பயிற்சி பகர்தல்' என்ற முதலதிகரணம் தொடங்கி "வஞ்சித் தொறுத்தல்" என்ற ஐந்தாம் அதிகரணம் ஈறுகத் தன் நாடு நலம் பெறு தற்குரிய செயன்முறைகள் கூறப்பட்டன. இவற்றைத் 'தந்திரம்' என்ப வடநூலார். இனி 'மண்டல யோனி' என்ற ஆறும் அதிகரணம் தொடங்கிப் 'பகையரண் எய்தும் வழி' என்னும் பதின்மூன்றும் அதிகரணம் ஈறுக எட்டு அதிகரணங்களாற் பகைவர்நாடு கோடற்குரிய உபாயங்கள் கூறப் படும். இவை 'ஆவாபம்' எனப்படும். இதனுல் அதிகரண வியைபுண்மை புலனுதலறிக. மண்டலயோனி:—மண்டலமாவது—வெற்றிவிரும்புவோன், பகைவர், நட்பினர், நொதுமலர் என்னும் நால்வகை உறுப்புக்களின் தொகுதி. யோனி—பொருள். பின்வரும் 'அறுவகைக் குணம்' என்னும் அதிகரணத்திற்கு இது பொருளாகும். வெற்றியை விரும்புவோன் முதலி யவருருவமான மண்டலமானது, அவருள் ஒருவர்க்கொருவரால் ஏற்கத்தக்க சந்தி, விக்கிரகம் முதலிய அறுவகைக் குணங்களுக்கு மூலகாரணமாயிருத் தலின், 'மண்டலயோனி' என்று கூறப்பட்டது.

[2] அங்கங்கள், அரசு முதலிய எழுவகைகளாம். அவைகளின் நிறைவு—அவைகட்கு இன்றியமையாத குணங்கள் நிறைந்திருத்தல். "ஆன்மகுணம், பொருளங்கங்கள் என்னுமிவற்றுல் நிறைந்த அரசனை அடைதல்வேண் டும்" என்று முன்னர்க் கூறப்பட்டது. ஆன்மகுணநிறைவு இத்தன்மைத்து அங்கங்களின் நிறைவு இத்தன்மைத்து என்று பாகுபாடு செய்வது இப் பிரகரணமாகலின், பிரகரணவியைபு விளக்கமாதலறிக.

[3] அரசு—ஈண்டு அரசனையும் இளவரசனையுங் குறிக்கும்.

[4] அமைச்சர்—அறிவாற்றலால் அரசர்க்குத் துணைபுரிபவர். இவர்கள் மூவர் நால்வர் பன்னிருவர் பதினறுவர் இருபதின்மர் என்ற முறையில் அமைப்பதற்குரியர் என்று 'மந்திராதிகாரம்' என்ற பிரகரணத்தை விளக் கும் 15-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டது.

[5] நாடு—கிராமம் முதலியனவாக எண்வகைப்படும்.

[6] அரண்—நடுவே தீவுடையது முதலியனவாக 24-ஆம் அத்தியாயத் தில் பகுத்துக் கூறப்பட்டது.

[7] பொருள்—இரத்தினம், திண்மையானது, நொய்மையானது, குப் பியம் என்று நால்வகைப்படும்.

[8] படை—தேர் யானை குதிரை காலாள் என நால்வகைப்படும்.

[9] நட்பு—இயற்கை செயற்கை பிராகிருதம் என்று மூவகைப்படும் என்ப. மேற்கூறப்பட்ட ஏழு அங்கங்களும் கயிற்றின் புரிபோல் தம்மில் இயைந்து ஒன்றுக்கொன்று துணையாகி, அரசாகிய முதலுக்கு உறுதுணை யாதல் பற்றி அங்கங்கள் எனப்படும்.

அவற்றுள் [10]அரசனது மாட்சி (கூறப்படும்). [11]உயர்குடிப் பிறப்பு, [12]நற்செயல், [13]அறிவு, [14]அஞ்சாமை என்னுமிவற்றை யுடைமை, [15]முதியவரைக் காண்டல் [16]அறத்தின் வழுவாமை உண்மை பேசுதல் [17]சொல் திறம்பாமை நன்றியறிதல் உயரிய நோக்கம் முயற்சி இவற்றையுடைமை, விரைவிற்செய்தல், [18]குறுநிலமன்னரை ஆளுந்திறன், [19]திண்மையான கருத்து, [20]சிறந்த அவையத்தாரையுடையனாதல், [21]விநய விருப்பம் என்னுமிவை அடையத்தக்க (வந்தெய்தும்) குணங்களாம்.

கேள்வி விரும்பல், [22]கேள்வி, [23]அறிதல், [24]பதியவைத்தல்,

---

10 ஏனைய அங்கங்களினும் இன்றியமையாச் சிறப்புடைமை குறித்து அரசின் நிறைவை முதற்கண் கூறுகின்றார்; நிறைவுக்குரிய குணங்கள் இருவகைப்படும்:—அவை வந்தெய்தும் குணங்கள், ஆன்மகுணங்கள் என்பன.

11 வந்தெய்தும் குணங்களைப்பற்றிக் கூறுகின்றார், உயர்குடிப்பிறப்பு—சூரியகுலம் சந்திரகுலம் முதலிய உயர்ந்த குடியிற் பிறத்தல். கல்வி ஒழுக்கம் பொருள் முதலியவற்றோடு கூடியிருத்தல் என்பாருமுளர்.

12 நற்செயல்—ஈண்டு முற்பிறப்பில் செய்த நற்செயல்களைக் குறிக்கும். மிகச்சிறிய முயற்சியால் பெரும்பயன் விளைதலைக்கண்டு அதற்குக்காரணமான நற்செயல்கள் கருதலளவையால் உய்த்துணரத்தக்கன என்ப.

13 அறிவு—ஈண்டு கேள்வி விருப்பம் கேள்விமுதலிய அறிவுக்குணங்களைக் குறிக்கும்.

14 அஞ்சாமை—மனத்திட்பம்; மெய்த்திருவந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரனுடைமை.

15 முதியவர்—ஈண்டு அறிவால் முதிர்ந்தவர். அவர்களைக்காணும் இயல்புடையராயிருத்தல் என்பது.

16 அறச்செயலிலீடுபடுதல் என்பது.

17 சொல்லிய வண்ணம் செய்யும் இயல்புடைமை

18 பகைவரைத் துன்புறுத்தற்கும் அடக்குதற்கும் களைதற்கும் வன்மை வாய்ந்தவராயிருத்தல் என்பது.

19 கொண்ட கொள்கையை நெகிழவிடாமை.

20 அறமேவோர் நிறைந்த அவைக்களத்தையுடையனாதல்.

21 நீதிநூல் முதலியவற்றைக் கற்று அதனால் பெருமையை அடைய விரும்புதல் என்பது.

22 ஈண்டுச் சொற்களைக் கேட்டல் என்பது.

23 அறிதல்—பொருளை அறிதல்.

24 அறிந்த பொருளை மறவாதிருத்தல்,

[25]விசேட அறிவு, [26]உய்த்துணர்தல், [27]விலக்கல், [28]உண்மையிற் பற்று என்னுமிவை அறிவின் குணமாம்.

[29]வீரத்தன்மை, பொறையிகத்தல், விரைவு, தேர்ச்சி என்பன ஊக்கத்தின் குணங்களாம்.

[30]சொல்வன்மை, [31]அவையஞ்சாமை, [32]மறவாமை, [33]அறிவு, [34]வன்மை, உயர்ந்த நோக்கம், [35]எளிதில் திருந்துதல், [36]சிற்பத் தேர்ச்சி, [37]விதனங்களில் படையை யனுப்புதல், நலந்தீங்குகளுக்குரிய [38]எதிர்ச்செயல், புரிதல் [39]நாணம், [40]இடுக்கண், [41]இயற்கை

---

25 பகுத்தறிவு என்க.

26 அறிந்த பொருள்களின் காரியகாரணங்களைக் கண்டு ஆராய்தல்.

27 குற்றமுள்ள பக்கத்தை விலக்கிவிடல்.

28 குணமுள்ள (குற்றமற்ற) பக்கத்தை ஏற்றுச் செயல்புரிதல்.

29 பயமின்மை என்பது.

30 தான் கருதிய வினை முடியுமாற்றால் உலகியல் நடத்தற்கேதுவாகிய சொற்களைச் சொல்ல வல்லனாதல்.

31 சொல்லுதற்குரிய அவையினை யறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை.

32 மறவாமை—நிகழ்ந்தது நினைத்தல்.

33 எதிரதாக் காக்கும் அறிவு.

34 வன்மை—ஈண்டு உடல் பொறிகளின் வன்மையைக் குறிக்கும்.

35 பெரியோர் நன்று தீதென அறிவுறுத்தவற்றை நன்குணர்ந்து தீயனவற்றை எளிதில் விலக்கியொழுகுந் திறன்.

36 யானை குதிரை படைக்கலம் என்னுமித் தொழில்களிற் பெறுந் தேர்ச்சி.

37 பகைவருக்குத் தெய்வத்தாலாதல் மக்களாலாதல் இடுக்கண் நேர்ந்த காலத்து, அவர்களை எளிதில் வெல்லும் பொருட்டுத் தன் படையை யனுப்புதல் என்பது. தனக்கு இடுக்கண் நேர்ந்துழித் தன் படையைப் பாதுகாத்தல் எனினுமாம்.

38 ஈண்டு எதிர்ச் செயல் என்பது நூல்களால் துணியப்பட்ட எதிர்ச் செயலைக் குறிக்கும்.

39 நாணம்—பழிபாவங்களுக்கு அஞ்சுதல்.

40 இடுக்கண்—வறுமை.

41 இயற்கை—மழைவளம் முதலியன. பயன்படுத்தலாவது செழிப்புக் காலத்தில் கூலம் முதலியவற்றைச் சேமித்து வறுமைக் காலத்தில் மக்களுக்குக்கொடுத்து உதவுதல். இடுக்கண் ஏற்பட்ட காலத்தில் மக்களுக்குக் கூலம் முதலியவற்றைக் கொடுத்துதவுதல் என்பாருமுளர்.

களிற் பயன்படுத்தல், [42]இடம் காலங்களால் மறைந்ததைக் காண்டல், [43]இடம் காலம் [44]துணை செயல் என்னுமிவற்றைவிரும்புதல், [45]சந்தி, [46]வன்மை, [47]கொடை, மக்களுக்குத் தீங்கின்றி மறைபொருளீட்டல், [48]பகைவர்தம் அற்றமறிதல், [49]அரண்காவல், [50]இழிந்தோரை இகழாமை [51]நேர்மையானகாட்சி காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் செருக்கு [52]ஆராயாத செயல் அலைபுரிதல் குறளை என்னுமிவையின்மை, இனியவை கூறல், புன்முறுவலுடன் மேதக்கன பேசுதல், [53]பெரியோர் ஆணைவழி யொழுகல் என்னுமிவை ஆன்மகுணங்களின் நிறைவாம்.

அமைச்சரின் நிறைவு [54]முன்னர்க் கூறப்பட்டது.

---

[42] காலத்தாற் சேய்மையானவற்றை அறிவினாலும், இடத்தாற் சேய்மையானவற்றை ஒற்றராலும் அறிந்தொழுகுந் திறன்.

[43] இடம் காலம்—தன்படை போர்புரிதற்குரிய இடமறிதல் காலமறிதல் என்றவாறு.

[44] துணை—அறிவு ஆண்மை ஊக்கம் ஆகிய மூவகை யாற்றலால் உளதாவது.

[45] பின்வரும் 'அறிதல்' என்பதைச் சந்தி முதலியவற்றோடு கூட்டுக. சந்தி முதலியவற்றை எவ்வாறு எப்பொழுது ஏற்கவேண்டும் என்று ஆராய்ந்து மேற்கொள்ளல் என்பது.

[46] மறைந்து போர்புரிதல், எதிர்நின்று போர்புரிதல் முதலியவற்றைப் பயன்படுத்தற்குத் தேர்ச்சி பெற்றிருத்தல் என்பது கருத்து.

[47] இடம் காலம் மக்கள் என்பவற்றின் நிலைக்கேற்பப் பொருள் முதலியவற்றைக் கொடுத்தல் என்பது.

[48] பகைவன் கள் காமம் வேட்டை முதலியவற்றில் ஈடுபட்டிருக்குங்கால் தீக்ஷ்ணர் முதலியவர் மூலம் அவனுக்கு நஞ்சிடுதல் முதலிய செயலில் திறம் பெற்றிருத்தல் என்க.

[49] அரணாகிய இடங்களைப் பாதுகாத்தல் என்பதும், மந்திராலோசனையைப் பிறரறியாவாறு புரத்தல் என்பதுமாம்.

[50] இழிந்தவர்களைப் பழியாமை என்பது; பெருமிதமகை என்ப உரையாசிரியர்.

[51] புருவவளைவு முதலியனவின்றி நேரே பார்த்தல்.

[52] பின் விளைவது இன்னதென்று அறியாது செய்தல்.

[53] பெரியோர்—தீநெறி விலக்கி நன்னெறியிற் செலுத்தும் பேரறிவுடையார்.

[54] 'பயிற்சி பகர்தல்' என்னும் அதிகரணத்திற் கூறப்பட்டதென்க.

[55]இடையிலும் கடையிலும் இடமுண்மை, [56]தமர் பிறர் என் போரைப் பேணுதல், [57]இடுக்கண் நேரின் நன்குபுரத்தல், [58]நல்ல ஊதியம் [59]பகைவரை வெறுத்தல் [60]பகைவரை யடக்கல் என் பவற்றையுடைமை, சேறு பாறை களர்நிலம் மேடு பள்ளம் [61]சிறு பகை [62]குழு கொடியவிலங்கு காடு என்னுமிவையின்மை, [63]கவர்ச்சி வயல் ஆகரம் மரக்காடு யானைக்காடு என்னுமிவற்றை யுடைமை, பசுவுக்கும் மக்களுக்கும் இன்பம்[64]புரக்கப்பட்ட இடம் பசு என்பவற்றைப் பெற்றிருத்தல், ஆற்றுப்பாய்ச்சல் நீர்வழி நில வழி என்பவற்றை யடைந்திருத்தல், [65]திண்மையானதும் பல வகைப்பட்டதுமான விலைப்பண்டமுடைமை, [66]தண்டம் [67]உல்கு

---

55 நாட்டின் நிறைவு பற்றிக் கூறத் தொடங்குகின்றார்; நாட்டின் நடுவிலும் எல்லையிலும் அரண்களை ஏற்படுத்தல் என்பது.

56 தமர்—தன் நாட்டிற் பிறந்து வாழும் குடிகள். பிறர்—பிற நாட்டிலிருந்து வந்து தன்னாட்டிற் குடியேறிய மக்கள். இவ்விரு திறத்தாரும் நலம் பெற்று வாழ்தற்குரிய சூலம் முதலியவற்றை விளைவித்துப் புரத்தல் என்பது கருத்து.

57 இடுக்கண் நேர்ந்த காலத்தும் மலை காடு ஆறு அரண் என்னுமிவற்றின் சார்பால் வருத்தமின்றிப் பாதுகாத்தல்.

58 சிறுமுயற்சியைக் கொண்டு பெருக விளையும் சூலம் முதலியவை.

59 அரசனுடைய பகைவரை வெறுக்கும் இயல்பினரான மக்களை யுடைமை.

60 பகைவரை அடக்கும் துணைவரைப் பெற்றிருத்தல்.

61 சிறு பகை—ஆறலைப்பார், கள்வர், பிறர்மனை நயப்போர், குறளை கூறுவார் முதலியோர்.

62 குழு என்பது ஈண்டு அரசனுக்கு முரண்பட்ட செயலைச் செய்து அரசியலைச் சிதைக்கும் குறும்பர்குழு என்னும் பொருட்டு.

> "பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
> கொல்குறும்பு மில்லது நாடு."

(குறள் 735)

என்றார் திருவள்ளுவர்.

63 கவர்ச்சி—மரம் ஓடை ஆறு ஏரி குளம் தோட்டம் முதலியவற்றால் உண்டான அழகு.

64 வேடர் முதலியவர்களால் நன்கு பாதுகாக்கப்பட்ட இடம் என்க.

65 விலையுயர்ந்தனவும் பல்வேறுவகைப்பட்டனவும் மிகுந்த அளவினை யுடையனவுமான விலைப்பண்டங்களை யுடையது என்க.

66 தண்டம்—குற்றஞ் செய்தமை குறித்து இறுக்கப்படும் பொருள்.

67 உல்கு—இறைப்பொருள்.

களைப் [68]பொறுத்தல், [69]செயல்புரியும் உழவர்கள் [70]முதிய தலைவன் [71]பெருந் தொகையினரான தாழ்ந்த வருணத்தார் அன்புந் தூய்மையுமுடைய மக்கள் என்பவர்களைப் பெற்றிருத்தல் என்னுமிவை நாட்டின் நிறைவாம்.

அரண்களின் நிறைவு [72]கூறப்பட்டது.

[73]முன்னோராலாதல் தன்னாலாதல் அறத்தின்வழி ஈட்டப்பட்டது, பொன் வெள்ளிகளால் நிறைந்தது, பல்வகைப்பட்ட திண்மையான இரத்தினம் தங்கங்களை உடையது என்னுமிவை [74]நெடுங்காலத்திய இடுக்கண்களையும் வருவாயின்மையையும் பொறுக்கும் பொருணிறைவு என்றவாறு.

[75]தந்தை பாட்டன் வழியில் வருகை, [76]நிலையுடைமை, வயப்பட்டிருத்தல், [77]மகிழுமாறு போற்றப்பட்ட மக்கள் மனைவியரையுடைமை, அயலூரிலிருக்குங்காலும் [78]போற்றப்படுதல், [79]எல்லா

---

68 இவை மிகினும் இவ் வரிச்சுமைகளைத் தாங்குதற்குரிய ஆற்றலைப் பெற்றிருத்தல் என்பது கருத்து.

69 சோர்வின்றி உழவுத் தொழில் புரியும் உழவினர்; இவ்வுழவர்களைத் 'தள்ளாவிளையுள்' எனச் சிறப்பிப்பர் திருவள்ளுவர்.

70 முதிர்வு என்பது அறிவின் முதிர்ச்சியைக் குறிப்பதாம்.

71 உடலுழைப்பினரான இழிகுலத்தோரை மிகுதியாகப் பெற்றிருத்தல் என்பது.

72 'அரணமைத்தல்' என்னும் பிரகரணத்தை விளக்கிக் கூறும் 24-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டது என்பது கருத்து.

73 முன்னோர்—முன்னுள்ள அரசர்கள்.

74 பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வரும் வறுமையையும் ஊதியமின்மையையும் பொறுத்து மக்களைக் காக்கவல்லது பொருணிறைவாம் என்க.

75 தந்தை பாட்டன் முதலாக அக்குடியிலுள்ள முன்னோர் போர்த் தொழிலைப் புரிந்தமை என்பது.

76 இடையே விலகாமல் தொடர்ந்து வருகை என்க.

77 அவர்கள் மகிழுமாறு அரசனால் நன்கு பாராட்டப் பெற்றுவரும் வீரக்குடியின் தொன்மை.

78 தகுந்த நுகர்ச்சிக்குரிய பொருள் முதலியவற்றைக் கொடுத்துப் புரத்தல் என்பது.

79 எக்காலத்தும் தோல்வியடையாமை.

விடத்தும் தடையின்மை, [80] துன்பத்தைப் பொறுத்தல், பல போர் புரிந்திருத்தல், [81] பல்வேறு வகையான போரிலும் படைக்கலக் கல்வியிலும் தேர்ச்சியுடைமை, [82] ஒத்த உயர்வு இழிவு என்பவற்ருல் பிரித்தற்கியலாமை, [83] அரசகுலத்தார் பெருக்கம் என்னுமிவை படையின் நிறைவாம்.

தந்தை பாட்டன் வழியில் வருகை, [84] நிலை, வயப்படுதல், [85] உயர்வு, [86] விரைவிற்ருேன்றல் என்னுமிவை நட்பின் நிறைவாம்.

[87] அரசகுலத்தில் தோன்ருமை கடும்பற்றுள்ளமுடைமை [88] தீய அவை அன்பற்ற குடிகள் [89] தீய செயல் என்னுமிவற்றை யுடைமை, [90] பற்றின்மை, விதனமடைதல், ஊக்கமின்மை, [91] துணைவரின்மை, [92] ஏதேனுமொன்றைச்செய்தல், [93] அடைக்கல மின்மை, [94] உதவியின்மை, [95] பேடித்தன்மை, [96] எப்பொழுதும் தீங்குசெய்தல் என்பன பகைநிறைவாம். [97] பகைவன் இத்தன்மை யுடையனுயின் எளிதிற் களைதற்குரியனுவான்.

---

[80] துன்பம்—நெடுந்தொலைவு செல்லும் பயணம் முதலியவற்ருலாயது.
[81] பல்வகையான போர்களிலும் படைக்கல்வியிலும் தேர்ச்சிபெற்றிருத்தல்.
[82] அரசனுடைய நலந்தீங்குகளிற் பிரிப்பின்றிப் பழகும் பெருமை.
[83] வேந்தர்குடியிற் பிறந்தோரை மிகுதியாகப் பெற்றிருத்தல் என்பது.
[84] நிலை—இயல்பாக அமைந்த நட்பின் தொடர்பால் உளது.
[85] பிரபுசக்தி (ஆண்மை) மந்திரசக்தி (அறிவு) உற்சாகசக்தி (ஊக்கம்) என்னும் மூவகை ஆற்றல்களுடன் கூடியிருத்தல் என்பது.
[86] உரிய காலத்தில் உதவி புரிதற்கு விரைவாக முன்வருதல்.
[87] நட்பைப்பற்றிக் கூறிய ஆசிரியர் எதிர்மறை முகத்தாற் பகையைப் பற்றிக் கூறத் தொடங்குகின்ருர்.
[88] தீய அவை—குற்றமுள்ள பரிவாரங்களையுடைய சிற்றினத்தார் குழு.
[89] தீய செயல்—அறநூல் முதலியவற்றிற்கு முரண்பட்ட செயல்கள்.
[90] எச்செயலிலும் முயற்சியோடு ஈடுபடாதிருத்தல்.
[91] துணைவர்—'புருடகாரம்' என்று உரையாசிரியர் கூறுப.
[92] பகுத்துணர்வின்றிச் செயல்புரிதல்.
[93] தடை யேற்பட்ட விடத்துப் பாதுகாப்போரின்மை.
[94] 'சுஸஹாய:' என்று முதனூல் கூறும்.
[95] துணிந்து செயல்புரியும் ஆண்மையின்மை.
[96] தமர்களுக்கும் பிறருக்கும் எப்பொழுதும் தீமைகளைச் செய்தல்.
[97] பகைவர் மேற்கூறப்பட்ட பதினன்கு குணங்களையுடையராயின் எளிதிற் களைதற்குரியராவர் என்பது கருத்து.

சுலோகங்கள்

(1) பகைவர் நீங்கலாக [98]மேற்கூறப்பட்ட ஏழு அங்கங்களுக்குத் தத்தம் குணங்களின் நிறைவு கூறப்பட்டது. [99]ஒருவரையொருவர் அடுத்துத் தம்தம் தொழிலிலீடுபடுதல் அரசரது நிறைவு (எனப்படும்).

(2) ஆன்மகுணமுள்ள அரசன் [100]நிறைவற்ற அங்கங்களுக்கு அந்நிறைவை உண்டுபண்ணுவான். ஆன்மகுணமற்ற அரசன் [101]செழிப்புற்றவரும் அன்புள்ளவருமான அங்கங்களை யழிப்பவனுவன்.

(3) [102]ஆகலின் குற்றமுள்ள அங்கங்களையுடைய ஆன்மகுணமற்றவன் நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட நிலத்தையுடையனுயினும் அங்கங்களாற் கொல்லப்படுவன் அல்லது பகைவர்க்குவயப்படுவன்.

(4) அங்கங்களின் நிறைவு, நீதிநூலறிவு, ஆன்மகுணம் என்னுமிவற்றையுடையவன் நிலத்தின் சிறுபகுதியை யுடையனுயினும் [103]நிலமனைத்தையும் தன்வயப்படுத்தி, மேம்படுவதன்றிக் [104]குறைவெய்துதலிலன்.

ஆறும் அதிகரணம் முதற்பிரகரணம்
‘அங்கங்களின் நிறைவு’ என்னும் தொண்ணூற்றேழாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

98 ‘பகை நிறைவு’ என்றவிடத்துக் கூறப்பட்டவர் என்பது.

99 ஒருவருக்கொருவர் உதவிபுரிதலால் துணைவராகவுள்ள அவர்கள் தம்தம் தொழிலில் ஈடுபடுவராயின் அரசின் நிறைவு உண்டாம் என்பது கருத்து.

100 தத்தமக்குரிய குணங்களால் நிறைவில்லாத அங்கங்களுக்கென்பது.

101 செழிப்பு—ஈண்டு குணங்களால் உண்டாம் நிறைவு.

102 ஆகலின்—அரசனுடைய குற்றத்தினுல்.

103 நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட நிலமனைத்தையும் என்பது.

104 எவ்விதத்திலும் அவ்வரசனுக்குக் குறை யேற்படாது என்பது கருத்து.

ஆறும் அதிகாரணம்—மண்டலயோனி

இரண்டாம் பிரகாரணம்—[1]வினைசெயல் பயனுகர் கருவி

தொண்ணூற்றெட்டாம் அத்தியாயம்

அமைதி உழைப்பு என்னுமிவை [2]புதுநலத்திற்கும் [3]ஏமத்திற்கும் இன்றியமையாக் காரணமாம்.

[4]உழைப்பு செயற்றொடக்கத்தின் தொடர்புக்குரியதாம்.

98-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வினைசெயல் பயனுகர் கருவி—வினைசெயற்கருவி பயனுகர்கருவி என வியையும். தனக்குரியவும் பிறர்க்குரியவும் என வினை இருவகைப்படும். அரணமைத்தல் முதலியன தனக்குரியன. சந்தி விக்கிரகம் முதலியன பிறர்க்குரியன. தொழிலாலுண்டாம் பயன்களை இடையூறின்றி வகுத்தளித்தற்குச் சாதகமாயுள்ள 'அமைதி' என்பதும், தொடங்கப்படும் தொழில்களுக்கு வினையாளருடனும் அவர்க்குரிய கருவிகளுடனும் சம்பந்தமுண்டாவதற்குச் சாதகமாயுள்ள 'உழைப்பு' என்பதும் இப்பிரகரணத்தாற் கூறப்படும். அங்கங்களின் நிறைவு, சக்தி, சித்தி என்னுமிவற்றையுடைய வெற்றிவிருப்பமுள்ளவனால் மண்டலங்களில் சந்தி விக்கிரகம் முதலியவற்றைப் பயன்படுத்தற் பொருட்டுப் புதுநலம் (யோகம்) ஏமம் (க்ஷேமம்) என்பவற்றை யறிதல் இன்றியமையாததாம். அவற்றிற்கு அமைதியும் உழைப்பும் காரணங்களாயிருப்பதுபற்றி அவை ஈண்டுக் கூறப்படுகின்றன. இதனால் முன்னைப்பிரகரணத்தோடு இயைபுண்மை புலனாம்.

[2] புதுநலம்—இதனை யோகம் எனக்கூறுவர் முதல் நூலார். யோகம்—முன்னர் அடையாததொரு பயனை அடைதல். அதற்கு உழைப்பு இன்றியமையாக் காரணமாகும் என்பது.

[3] ஏமம்—இதனை முதனூல் க்ஷேமம் எனக்கூறும். க்ஷேமம்—அடைந்தவற்றை இடையூறின்றி அநுபவித்தல். அதற்கு அமைதி காரணமாம் என்பது. புதுநலத்திற்கு உழைப்பும் ஏமத்திற்கு அமைதியும் காரணமாதல் பற்றி ஈண்டு எதிர்நிரனிறையெனக் கொள்க.

[4] உழைப்பு என்பது தன் நாட்டில் அரணமைத்தல் முதலிய தொழில்களும், பிறநாட்டில் சந்தி விக்கிரகம் முதலியவற்றை வகுத்தளித்தல் முதலிய தொழில்களுமாகி வினையாளர் கருவிகளுடன் தொடர்பைப் பெறுதற்குச் சாதகமாயுள்ளது என்பது கருத்து.

[5]அமைதி தொழிற்பயன்களை நுகர்தல் பற்றி ஏமம் செய்வதாம்.

அமைதி உழைப்பு என்பவற்றுக்கு [6]அறுவகைக் குணங்களும் இன்றியமையாக் காரணங்களாம்.

[7]குறைதல் [8]ஒத்துநிற்றல் [9]உயர்தல் என்பன [10]அவற்றின் பயன்களாம்.

[11]நயம் அபநயம் என்பன மானிடமாம். [12]அயம் அநயம் என்பன தெய்வமாம்.

தெய்வம் மானிடம் என்னுந் தொழில்களே [13]உலகியலை நிகழ்த்துவன. தெய்வம் [14]அதிட்டத்தால் உண்டாக்கப்படுவதாம். [15]ஆண்டு [16]விரும்பிய பயனுடன் தொடர்பு அயம் எனப்படும்.

---

5 முற்கூறிய தொழில்களின் பயனுன இரத்தினம் திண்மைப்பொருள் நொய்மைப்பொருள் குப்பியம் கூலம் பொன் முதலிய பிறநாட்டுப் பொருள்களையும் இம்மை மறுமைப் பயன் கருதி வகுத்தளித்தற்குண்டாம் இடையூற்றைப் போக்குதற்குச் சாதகமாயுள்ளது அமைதி எனப்படும் என்பது கருத்து.

6 அறுவகைக் குணங்கள்—நட்பாக்கல் பகையாக்கல் மேற்சேறல் இருத்தல் கூட்டல் பிரித்தல் என்பன. (குறள்-425. பரிமேலழகர் உரை)

7 குறைதல்—முன் நிலையைவிடக் குறைவுபட்ட நிலை.

8 ஒத்து நிற்றல்—குறைவும் உயர்வுமில்லாத ஒரே நிலை.

9 உயர்தல்—முன்னைய நிலையைவிடச் சிறப்புற்ற நிலை.

10 அவற்றின்—மேற்கூறிய அறுவகைக் குணங்களின்.

11 பயன்களை யடைதற்குச் சாதனமாயுள்ள தொழில்கள் இருவகைப்படும். அவையாவன :—மானிடம் தெய்வம் என்பனவாம். அவற்றின் வகைகளைக் கூறத் தொடங்குகின்றார். மானிடமான தொழில் நயம் அபநயம் என இருவகைப்படும். இவற்றின் இலக்கணத்தை ஆசிரியர் பின்னர் விளக்குவர்.

12 தெய்வம் என்ற தொழில் அயம் அநயம் என்று இருவகைப்படும். இவற்றின் இலக்கணமும் பின்னர்க் கூறப்படும்.

13 உலகியற்குக் காரணங்களாயிருக்கின்றன என்பதாம்.

14 அறமாகவுள்ளதும் மறமாகவுள்ளதுமான அதிட்டத்தால் என்க.

15 ஆண்டு—அறமாகவுள்ள அதிட்டத்தால் தெய்வத்தொழில் உண்டாயின்.

16 விரும்பிய பயன்—பொருட்பேறு, அன்பர்கூட்டுறவு முதலியன.

[17]விரும்பப்படாதவற்றுடன் தொடர்பாயின் அநயமாம். [18]திட்டத்தினுலாக்கப்பட்டது மானிடமாம். [19]ஆண்டு [20]புதுநலம் ஏமம் என்பவற்றின் தோற்றம் நயம் எனப்படும். [21]இடுக்கண் அபநயமாம். [22]அது உய்த்துணரத்தக்கதாம். [23]தெய்வம் உய்த்துணரத் தக்கதன்று [24]என்க.

[25]ஆன்மகுணம் [26]பொருளங்கங்கள் என்னுமிவற்றின் நிறைவுள்ளவனும் [27]நீதிக்கு இருப்பிடமானவனுமான அரசன்

---

[17] மறமாகவுள்ள அதிட்டத்தாலுண்டாம் தெய்வமிருப்பின் பொருட்கேடு, உறவினர் முதலியோரின் பிரிவு முதலிய வெறுக்கத்தக்க பயனை விளைவிக்கும் என்பது. இவ்விளைவு அநயம் எனப்படும் என்க.

[18] பிரபுசக்தி மந்திரசக்தி உற்சாகசக்தி என்பவற்றால் தோன்றிய அறுவகைக் குணங்களையும் பயன்படுத்தலாலுண்டாவது மானிடத் தொழில் எனப்படும்.

[19] ஆண்டு—அம் மானிடமிருக்குமாயின்.

[20] புதுநலம் ஏமம் என்பவற்றின் தோற்றம்—புதியதொரு பயன், தொழிற்பயனை அநுபவித்தல் என்னுமிவற்றின் விளைவு. இது நயம் எனப்படும். எனவே நயம் என்பது சந்தி முதலியவற்றை நன்கு உபயோகித்தல் என்பது பெறப்படும்.

[21] இடுக்கண்—புதுநலம் ஏமம் என்பன விளையாமை. எனவே சந்தி முதலியவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தாமை அபநயம் என்பது பெறப்படும்.

[22] மானிடமான தொழில் கண்கூடாகக் காணப்படுதலின், யோக க்ஷேமங்களை அடைதற் பொருட்டும் இடுக்கண்களைப் பரிகரித்தற் பொருட்டும் ஆராய்ந்து செய்தற்குரியது என்பது கருத்து.

[23] தெய்வம் காண்டற்கரிதாகலின் ஆராய்ந்து தெளிதற்குரிய தன்றென்பது கருத்து.

[24] அமைதி உழைப்பு என்பனபற்றிய செய்தி முடிவுற்றது என்பார் 'என்க' என்றார்.

[25] இனி மண்டலத்தை விளக்குதற் பொருட்டு அதன் எல்லையாய் நிற்கும் வெற்றிவிருப்பமுள்ளவனைப் பற்றிக் கூறுகின்றார். உயர்குடிப்பிறப்பு முதலாக முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்ட ஆன்ம குணங்களின் நிறைவுள்ளவன் என்பது.

[26] பொருளங்கங்கள்—அமைச்சு நாடு அரண் பொருள் படை என்னும் ஐந்து அங்கங்கள்.

[27] நீதி—ஈண்டு சந்தி விக்கிரகம் முதலியவற்றை நன்கு பயன்படுத்தல்.

[28]வெற்றிவிரும்புவோன் ஆவன். [29]அவனுக்கு நாற்புறமும் மண்டலமாகவுள்ளதும் [30]மறைவுபடாததுமான நிலம் பகையாம். அங்ஙனமே [31]ஒன்றால் மறைவுபட்ட நிலமாயின் நட்பாம்.

[32]குறுநில மன்னன் பகைநிறைவுள்ளவனாயின் பகைவனும். [33]விதனமுள்ளவன் எதிர்க்கத் தக்கவனாவான். [34]ஆதரவில்லாதவனாயினும் [35]வன்மையற்ற ஆதரவுகளையுடையவனாயினும் களையத்தக்கவனாவன். [36]மாறுபடின் துன்புறுத்தல் அல்லது வலியிழக்கச்செய்தல் என்னுமிவற்றிற்குரியவனாவன். [37]பகைமைக் கூறுபாடு இவ்வாறாம்.

[38]நண்பன், பகைவற்கு நண்பன், நண்பற்கு நண்பன், பகைவ

---

28 இன்சொல் கொடை முதலிய உபாயங்களாற் பகைவனை வெல்லுதற்கு விருப்பமுள்ளவன்.

29 அவனுக்கு—வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு.

30 தன் நிலத்திற்கும் பிறனொருவனது நிலத்திற்குமிடையே வேறொரு நிலத்தால் மறைவுபடாத நிலம். அந்நிலத்திற்குரியவன் பகைவனாவான். அதாவது அவனைப் பகைவனாய்ப் பாவித்தல் வேண்டும் என்பது கருத்து.

31 தன்னிலத்தை யடுத்துள்ள நாட்டிற்கு அடுத்த நாட்டின் தலைவன் நண்பனாவான் என்பது. ஈண்டும் நண்பனாக அவனைப் பாவித்தல் வேண்டும் என்று கொள்க.

32 பகைவர் நால்வகைப்படுவர் எனக் கூறுகின்றார். குறுநிலத்தவன், அரசகுலத்துத் தோன்றுமை முதலியனவாக முன்னர்க் கூறப்பட்ட (97-ஆம் அத். 89-ஆம் குறிப்பில்) குணங்களை உடையவனாயின் பகைநிறைவுள்ளவனாகக் கருதத்தக்கவன் என்பது.

33 வேட்டை வறுமை முதலியவற்றையுடையனாயின் எதிர்க்கத்தக்கவன் என்க.

34 ஆதரவு—அரண் நண்பர் முதலியவை.

35 வலியற்ற அரணையும் நண்பனையும் உடையவன் என்பது.

36 பகைவன் ஒத்த வன்மையையுடைய அரண் நண்பர்களையுடையனாயின் அவனைத் துன்புறுத்தல் வேண்டும் என்பதும், வலிமிக்க துணையையுடையனாயின் அவனுடைய பொருள் படைகளுக்குக் குறைவை உண்டு பண்ணுதல் வேண்டும் என்பதும் கருத்து.

37 இங்ஙனம் நால்வகைப்பட்ட பகைவர் கூறப்பட்டமை காண்க.

38 பகையரசனை எதிர்க்கத் தொடங்கும் வெற்றிவிருப்பமுள்ள அரசன், தனக்கு முன்னுள்ள அரசர்களை இன்னார் இன்னாராகக் கருதுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார். வெற்றி விருப்பமுள்ள அரசன்,

னுடைய நண்பற்கு நண்பன் என்னும் இவர்கள் அடுத்தடுத்து அவனது முன்னிலையிலிருப்பர். [39]பகைவற்கு நண்பன், வெற்றி விருப்பமுள்ளவற்கு நண்பன், பகைவனுடைய நண்பற்கு நண்பன், வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நண்பற்கு நண்பன் என்பவர் பின்னுள்ளார் என்க.

[40]தன்னிலத்துக்கு அடுத்துள்ளவன், [41]ஒத்த குலத்தவன் என்னுமிவர் [42]உடன்தோன்றிய இயற்கைப் பகைவர் ஆவர். [43]மாறுபட்டவனும் [44]பகைமை யுண்டுபண்ணுபவனும் செயற்கைப் பகைவராவர்.

[45]ஒரு நிலத்தால் மறைவுபட்டவன், தாய் தந்தை சம்பந்தமுள்ளவன் என்னுமிவர் உடன்தோன்றிய இயற்கை நண்பராவர். பொருள், வாழ்க்கை என்பனபற்றி யடைந்தவன் செயற்கை நண்பன் என்க.

முன்னிலையில் தனக்கடுத்துள்ள நாட்டுத்தலைவனைப் பகைவனாகவும் அதற்கு அடுத்துள்ள நாட்டினனை நண்பனாகவும் அதற்கடுத்துள்ளவனைப் பகைவற்கு நண்பனாகவும் அதற்கடுத்தவனைத் தன் நண்பற்கு நண்பனாகவும் அதற்கு அடுத்தவனைப் பகைவனுடைய நண்பற்கு நண்பனாகவும் எண்ணி ஒழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

39 பின்னுள்ள அரசர்களை இன்னார் இன்னார் என்று விளக்கிக் கூறுகின்றார். எனவே முன்னுள்ள அரசர் ஐவகையினர், பின்னுள்ளவர் நால் வகையினர், நடுவண் வெற்றிவிருப்பமுள்ளவன் என அரசர்களின் மண்டலம் பத்து உறுப்புக்களை யுடையதாம் என்பது.

40 பகைவரை மற்றொரு வகையால் வகுத்துக் கூறுவான் தொடங்கி, இயற்கைப்பகைவர் காரணப்பகைவர் எனப் பகைவர் இருவகைப்படுவர் எனக்கொண்டு, அவருள் முன்னையவர் இருவகைப்படுவர் என்பதையும், அவர்களின் இலக்கணங்கள் இன்ன இன்ன என்பதையும் விளக்கிக் கூறுகின்றார்.

41 தன் குலத்தவனும் தாயப்பொருளுக் குரியவனும் என்பது.

42 எக்காரணமுமின்றிப் பிறப்பு முதற்கொண்டே பகைமை கொண்டவர் என்பார் 'உடன்தோன்றிய இயற்கைப் பகைவர்' என்றார்.

43 கருத்து செயல் முதலியவற்றால் தனக்கு முரணானவனும் தன்பால் குற்றத்தைச் செய்தவனும் என்பது.

44 பிற அரசர்களையும் முரண்படச் செய்பவனும், குற்றத்தைச் செய்யச் சொல்பவனும் என்பது.

45 நண்பரது கூறுபாட்டினை விளக்குகின்றார். தன் நாட்டிற்கு அயலாகிய நாட்டினை அடுத்துள்ள நாட்டவனும் மாமன் அத்தைமகன் முதலியவரும் உடன்தோன்றிய இயற்கை நண்பர் ஆவர்.

[46]பகைவனும் வெற்றியை விரும்புபவனும் ஆகிய இவர்களுக்கு [47]நிலத்தால் மறைவுபடாதவன், [48]சேர்ந்தவர் சேராதவர்களை அருளுதற்குரியவன், பகைமையுடையவர்களை அடக்குதற்குரியவன் என்னுமிவர்களை மத்தியமர் என்ப.

[49]பகைவன் வெற்றி விருப்பமுள்ளவன் மத்தியமன் என்னும் இவர்களினினத்துக்கு வேருயவன், [50]மிகச்சிறந்த வன்மையுடையவன், தம்முள் ஒன்றுபட்டோ அன்றி வேருகவோ உள்ள வெற்றி விருப்பமுள்ளவன் மத்தியமன் என்னுமிவர்களுக்கு அருளுதலில் திறமையுடையவன், [51]பகைமையுடையவர்களை அடக்குதற்குரியவன் என்னுமிவர் நொதுமலர் எனப்படுவர். [52]அங்கங்கள் இவ்வாரும்.

வெற்றியை விரும்புபவன், நண்பன், நண்பற்கு நண்பன் என இவனுக்கு மூன்று அங்கங்களாம். அமைச்சு, நாடு, அரண், பொருள், தண்டம் என்ற ஐந்து அங்கங்களுடன் இவை தனித்தனியே சேர்ந்தவிடத்துப் பதினெட்டாகி மண்டலமாம். இதனால் பகைவன், மத்தியமன், நொதுமலன் என்பவர்க்கும் தனிப்பட்ட [53]மண்டலம் கூறியவாரும்.

---

46 மத்தியமன் என்று கூறப்படும் நடுநிலையுள்ளவனை விளக்குகின்ருர்.

47 கோணத்திசையில் அடுத்துள்ளவன் என்பது.

48 பகைவன் வெற்றியை விரும்புகிறவன் என்னுமிவர்கள் சந்தியை அடைந்த நிலையிலும் சண்டையை ஏற்ற நிலையிலும் அவர்களுக்கு அருளுதலில் சக்தியுடையவனும், சண்டையை அடைந்த நிலையில் அவர்களையடக்குதற்குமுரிய வன்மையுடையவனும் மத்தியமன் எனப்படுவான் என்பது கருத்து. அவன் அடுத்துள்ள நிலத்திலுள்ளமை பற்றிப் 'பகைவன்' என முன்னர்க் கூறப்பட்டிருப்பினும் இலக்கண வேறுபாடுபற்றி மத்தியமன் என்ற பெயருடையனுவன் என்பது அறியத்தக்கது.

49 உதாசீனன் என்னும் நொதுமலனைப் பற்றிக் கூறுகின்ருர். பகைவன் முதலியோரின் மக்களைவிட வேருயவன் என்பது.

50 படை பொருள் முதலியவற்ருல் மிகச் சிறந்தவன் என்பது.

51 பகைமையுடையவர்—ஈண்டு பகைமையையுடைய மேற்கூறப்பட்ட பகைவன் முதலிய மூவராவர்.

52 அரசனுடைய அங்கங்கள் இங்ஙனம் பன்னிரண்டாம் என்பது கருத்து.

53 இனி நால்வகை மண்டலங்களைச் சுருக்கிக் கூறுகின்ருர். அவற்றுள் வெற்றியை விரும்புபவனைச் சார்ந்த மண்டலங்கள் முதற்கண் கூறப்படுகின்றன. இவனுக்கு—வெற்றியை விரும்புபவனுக்கு. மூன்று என்பது தன்னை

[54]நான்கு மண்டலங்களின் சுருக்கம் இவ்வாறும். [55]அரசங்கங்கள் பன்னிரண்டாம். பொருளங்கங்கள் அறுபதாம். [56]சேர்ந்து எழுபத்திரண்டாம்.

அங்கங்களின் நிறைவு தனித்தனியே [57]கூறப்பட்டது.

சக்தியும் சித்தியும் (கூறுவாம்). சக்தி (என்பது) வன்மையாம். சித்தி (என்பது) சுகமாம்.

[58]சக்தி மூவகைப்படும்: அறிவுவன்மை மந்திரசக்தி, பொருள் படைகளின் வன்மை பிரபுசக்தி, விக்கிரமத்தின் வன்மை உற்சாக சக்தி என்றவாறு.

[59]மந்திரசக்தியால் விளைவது மந்திரசித்தி, பிரபுசக்தியால் விளைவது பிரபுசித்தி, உற்சாக சக்தியால் விளைவது உற்சாகசித்தி என்று இங்ஙனம் சித்தி மூவகையேயாம்.

யும் சேர்த்து எனக்கொள்க. இம்மூன்று அங்கங்கள் அமைச்சு முதலிய ஐந்தனுடன் தனித்தனியே சேர்ந்தவிடத்து வெற்றிவிரும்புபவனைச் சார்ந்து பதினெட்டு உறுப்புக்களாய் ஒரு மண்டலமாம் என்பது கருத்து. அதே போன்று, பகைவன், அவன் நண்பன், நண்பற்கு நண்பன் என்ற மூன்று அங்கங்களும் தனித்தனியே மேற்கூறிய அமைச்சு முதலிய ஐந்து அங்கங்களுடன் சேர்ந்தவிடத்துப் பகைவனைச் சார்ந்ததாகப் பதினெட்டு உறுப்புக்களையுடைய இரண்டாவது மண்டலமாம். இவ்வாறே மத்தியமனையும் நொதுமலனையும் சார்ந்த மண்டலங்கள் இரண்டினையும் உய்த்துணர்தல் வேண்டும்.

54 இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுகின்றார்.

55 இவ்வத்தியாயம் 53-ஆம் குறிப்பைக் காண்க.

56 அப்பன்னிரண்டு அங்கங்களும், அமைச்சு முதலியவற்றுடன் சேர்ந்தவிடத்து அறுபதும் ஆக எழுபத்திரண்டாம் என்பது.

57 முன் அத்தியாயத்திற் கூறப்பட்டதென்க.

58 மந்திரசக்தி பிரபுசக்தி உற்சாகசத்தி என்று சக்தி மூவகைப்படும் என்று கொண்டு முறையே மந்திரசக்தி முதலியவற்றின் இலக்கணங்களைக் கூறுகின்றார். அறிவின் புதுநலம் ஏமம் என்பவற்றுக்குச் சாதனமான சக்தி மந்திரசக்தி எனப்படும். பின்னுள்ளவற்றிற்கும் இவ்வாறே கொள்ளல் வேண்டும்.

59 மந்திரசக்தி முதலிய மூன்று சக்தியால் விளையும் பயனை முறையே மந்திரசித்தி முதலிய மூவகைச் சித்திகளாய்க் கொள்ளல் வேண்டும் என்று கூறுகிறார்.

[60]இவற்ருல் நிரம்பப்பெற்றவன் தலையாயவனும் குறைந்தவன் கடையாயவனும் ஒத்த சக்தியை யுடையவன் இடையாயவனும் ஆவர். [61]ஆகலின் தன்பால் சக்தியையும் சித்தியையும் மிகுவித்தல் வேண்டும். [62]சாதாரணனுயின் [63]பொருளங்கங்களை [64]முறைப்படியாதல் [65]தூய்மை காரணமாகவாதல் (மிகைப்படுத்தல் வேண்டும்.) [66]தூஷ்யர் பகைவர்களால் (மாற்ருனின் அங்கங்களைக்) குறைபடச் செய்யவும் முயற்சிக்கலாம்.

[67]என் பகைவன் சக்தியையுடையவனுயின் கடுஞ்சொல், கடுந்தண்டம், பொருட்குற்றம் என்னும் இவற்ருல் அங்கங்களுக்குக் கேட்டை விளைவிப்பான். சித்தியை யுடையனுயின் வேட்டை,

---

60 இவற்ருல்—இம்மூன்று சக்திகளால்.

61 ஆகலின்—சக்திசித்திகள் இன்றியமையாதனவாதலால்.

62 சாதாரணனுயின் என்பது 'அவற்றைத் தன்பால் மிகைபடச் செய்தற்குரிய வன்மையற்றவனுயின்' என்னும் பொருட்டு.

63 பொருளங்கங்கள்—அமைச்சு முதலிய அங்கங்கள்.

64 முதலில் அமைச்சையும், பின்னர் நாட்டையும், அதன் பின்னர் அரணையும் வைத்துரைத்த முறையைப்பற்றி என்பது.

65 முறையை யனுசரித்தற்கு இயலவில்லையாயின் தூய்மையுள்ள அங்கங்களை மிக வளர்த்தல் வேண்டும் என்பது கருத்து.

66 பொருளங்கங்களை மிகுதிப்படுத்தற்கு இயலாதவிடத்துச் செயற்பாலதிதுவெனக் கூறுகின்ருர். தூஷ்யர்—வெறுக்கத்தக்கவர்.

67 குறைபடச் செய்தல் வேண்டும் என்பதற்கொரு புறனடை கூறுகின்ருர். இதன் கருத்து வருமாறு :—"என் பகைவன் சக்தியை யுடையனுயின், ஆண்டு செருக்குக் காரணமாகக் கடுஞ்சொல் முதலியவற்ருல் அமைச்சு முதலியவற்றிற்குக் கேட்டை விளைவிப்பான். அவ்வாறே சுகமுள்ளவனுயின் வேட்டை முதலியவற்றில் ஈடுபடுதலால் விழிப்பின்மையை அடைவான். அவ்வாறு இருக்குமிடத்து அவன், தன் மக்களின் வெறுப்பையும் துணையின்மையையும் பெறுவான். ஆகலின் என்னுல் வெல்லுதற்குரியனுவான். படைகளைத் திரட்டிக்கொண்டு நான் போரில் அவனை எதிர்க்கும்போது, சக்தியிருப்பது காரணமாகவுள்ள செருக்கினுல் தனித்தவனுகவோ அரணை யடைந்தவனுகவோ இருப்பான். அப்பொழுது அவன் வெல்லத்தக்கவனுவான். அல்லது என்னைவிட மிக வலியவனுன அவன் வேறுநாட்டிலுள்ள பகைவனொருவனைக் களைதற்கு விரும்பி அவனைக் களைந்து எனக்குத் தீங்கு புரியாமல் வாளாவிருக்கக்கூடும். வலியவனொருவனோடு எதிர்த்துப் போர்புரியும் எனக்கு இடுக்கண் நேர்ந்துழி உதவிபுரிதற்கு வருவான் என்றிவ்வாறு ஒரு பகைவனைக் குறித்து எண்ணுவானுயின், அவனுடைய சக்தி சித்திகளைக் குறைத்தற்கு ஈடுபடலாகாது என்பதும், அவற்றை மிகுதிப்படுத்த வேண்டும் என்பதும் ஆம்.

சூது, கள், மகளிர் என்னுமிவற்றால் விழிப்பின்மையை எய்துவான். அங்கங்களின் வெறுப்பு, துணையின்மை, விழிப்பின்மை என்னு மிவற்றையுடைய அவன் என்னால் வெல்லத்தக்கவனுவான். படைகளுடன் போரில் எதிர்க்கப்பட்டுத் தனிமையிலாதல் அரணுளாதல் இருப்பான்; அல்லது நண்பர்களால் அரண்களிலிருந்து விலக்கப் பட்டுப் படைகளுடன் சேர்ந்த அவன் என்னால் வெல்லுதற்குத் தக்கவனுவான்; அல்லது "வன்மையையுடைய (பகை) அரசன் வேறு பகைவனைக் களைதற்கு விரும்பி அவனைக் களைந்து (பின்னர்) என்னைக் களையமாட்டான்'' என்றும் "வன்மையுள்ளவனால் எதிர்க்கப்படுதல், இடுக்கணை விளைக்கும் தொழிற்றொடக்கம், மத்தியமனை விரும்புதல் என்ற என்னுடைய இந்நிகழ்ச்சிகளில் துணைபுரிவான்'' என்றும் உய்த்துணர்வானாயின் இவை முதலிய காரணங்கள் பற்றிப் பகைவனுக்குச் சக்தியையும் சித்தியையும் விரும்புதல் வேண்டும்.

சுலோகங்கள்

(1) [68] தலைவன் [69] ஒன்றால் இடைப்பட்ட அரசர்களை [70] அங் கங்களாஞ் சக்கரத்தில் வட்டையாகவும் அடுத்தவர்களை ஆரக்கால் களாகவும் தன்னைக் குடமாகவும் கற்பித்துக்கொள்ளல் வேண்டும்.

(2) பகைவன் வலியவனாயினும் [71] தலைவன், நண்பன் என்னு மிவ் விருவர்களின் நடுவண் வைக்கப்படுதலால் களைதற்கும் துன் புறுத்தற்கும் உரியவனுவான்.

ஆறும் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
'வினைசெயல்பயனுகர் கருவி' என்னும் தொண்ணூற்றெட்டாம்
அத்தியாயம் முற்றிற்று.

ஆறும் அதிகரணம் முற்றிற்று.

---

[68] தலைவன் —பன்னிரண்டு அரசர்களின் மண்டலங்களுக்குத் தலைவனை வெற்றிவிருப்பமுள்ளவன்.

[69] தன் நாட்டிற்கு அயலதாகிய நாட்டை அடுத்துள்ள நிலத்தின் அரசர் களை என்பது.

[70] அரசர்களின் மண்டலமாகிற சக்கரத்தில் என்பது.

[71] தலைவன் —வெற்றிவிருப்பமுள்ளவன்.

ஏழாம் அதிகரணம்—[1] அறுவகைக்குணங்கள்

1, 2 பிரகரணங்கள்—[2] அறுகுணவரையறை, [3] குறைவொப்பு மிகுதிகளின் துணிபு

தொண்ணூற்றொன்பதாம் அத்தியாயம்

[4] அறுகுணங்களுக்கு [5] அங்கங்களும் [6] மண்டலமும் காரணங்களாம்.

சந்தி விக்கிரகம் யானம் ஆதனம் சமாசிரயம் துவைதீபாவம் என்னுமிவை அறுகுணங்கள் என்பர் ஆசிரியர்.

[7] சந்தி விக்கிரகம் என்னுமிவையன்றோ அறுகுணங்களாகின்

99-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] 'அமைதி உழைப்புக்களுக்கு அறுவகைக் குணங்கள் இன்றியமையாக் காரணங்களாம்' என்பது முன்னதிகரணத்திற் கூறப்பட்டது. அதனை விளக்குவது 'அறுவகைக் குணங்கள்' என்ற இவ்வதிகரணம் ஆகும். இதனால் அதிகரண வியைபுண்மை யறிக. அறுவகைக்குணங்கள்—சந்தி விக்கிரகம் யானம் ஆதனம் சமாசிரயம் துவைதீபாவம் என்பன. இவற்றை முறையே நட்பாக்கல் பகையாக்கல் மேற்சேறல் இருத்தல் கூட்டல் பிரித்தல் என்று கூறுவர் பரிமேலழகர் (குறள் 425. உரை).

[2] அறுகுணங்களின் தன்மையைச் சுருக்கிக்கூறல் என்பது பொருள்; அல்லது அவற்றைச் சார்ந்த பூர்வபக்கத்தை மறுத்துத் தன் பக்கத்தை நிறுத்தல் என்பதாம். என்னை? 'குணங்கள் இரண்டே என்பர் உத்தவர்' என்ற பூர்வ பக்கத்தை மறுத்து, 'இவற்றின் நிலை வேறுபடுதலால் குணங்களாவன ஆறே என்பர் கௌடலியர்' என்று தன் பக்கம் நிலைநிறுத்தப் படுகின்றதாகலின். 'தெய்வம் மானிடம் என்பவற்றுள் மானிடம் உய்த்துணர்தற்குரியது' என்று முன் பிரகரணத்திற் கூறப்பட்டது. ஈண்டு உய்த்துணரும் நெறி கூறப்படும். இதனாற் பிரகரணங்களுக்கு இயைபு புலனும்.

[3] குறைவு முதலியன பொருள் படைகளைப் பற்றியவை.

[4] அறுகுணங்கள்—சந்தி முதலியன.

[5] அரசு முதலியனவாகக் கூறப்பட்ட ஏழு அங்கங்கள்.

[6] பன்னிரண்டு வகையாகக் கூறப்பட்ட அரசமண்டலம் என்பது.

[7] சந்தி விக்கிரகம் என்னுமிவை யிரண்டே அறுகுணங்களாகின்றன என்பது. ஆதனம் முதலிய நான்கும் சந்தி விக்கிரகங்களுளடங்கும் என்பது கருத்து. அவற்றுள் ஆதனம் சமாசிரயம் என்பன சந்தியிலும், யானம் விக்கிரகத்திலும், துவைதீபாவமானது சந்தி விக்கிரகம் என்ற இரண்டிலும் அடங்கும். எனவே இன்றியமையாச் சிறப்புப்பற்றிச் சந்தி விக்கிரகம் என்ற இரண்டே குணங்களாம் என்றார்.

றன. ஆகலின் [8]குணங்கள் இரண்டே என்பர் உத்தவர்.

[9]இவற்றின் நிலை வேறுபடுதலால் குணங்களாவன ஆறே என்பர் கௌடலியர்.

[10]அவற்றுள் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளுதல் சந்தியாம். [11]தீங்குபுரிதல் விக்கிரகமாம். [12]நொதுமலனாயிருத்தல் ஆதனமாம். [13]மேம்படுதல் யானமாம். [14]பிறனிடம் கொடுத்தல் சமாசிரயமாம். [15]சந்தி விக்கிரகங்களை ஏற்றல் துவைதீபாவமாம். [16]அறுகுணங்கள் இவ்வாறும்.

---

[8] சந்தி விக்கிரகம் எனக் குணங்கள் இரண்டேயாம் என்பது.

[9] தன்பக்கத்தைக் கூறுகின்றார். சந்தி விக்கிரகங்களின் நிலை வேறுபாடு பற்றித் தன்மை மாறுபடுதலால் 'குணங்கள் ஆறு' என்றே துணிதல் வேண்டும் என்பது கௌடலியரின் கொள்கை என்பது கருத்து.

[10] அவற்றை விளக்குகின்றார்; இச்செயலை இன்னவிதமாகச் செய்து உதவினால் நிலம் படை பொருள்களுள் ஒன்றைத்தருவேன் என்று கூறி, வாய்மொழிச் சூளுறவு முதலியவற்றால் நிலைப்படுத்தல் சந்தி எனப்படும் என்பது கருத்து.

[11] பகைவனைக் குறித்துத் தீங்கு புரிதல் விக்கிரகம் எனப்படும்.

[12] சந்தி முதலியவற்றை மேற்கொள்ளாமை என்பது.

[13] மேம்படுதல்—வன்மை இடம் காலம் என்னுமிவற்றின் சிறப்புடன் கூடியிருத்தல். இது மேற்சேறற்குக் காரணமாதல் பற்றி 'மேற்சேறல்' என்றே கூறப்பட்டது. (காரணத்தைக் காரியமாக உபசரித்துக் கூறுதல் என்க.)

[14] வன்மை வாய்ந்தவனாகிய வேறோர் அரசனிடம் தன்னையும் தன் மக்களையும் பொருள்களையும் கொடுத்தல் 'சமாசிரயம்' எனப்படும் என்பது கருத்து.

[15] பகைவரிருவரிடம் சொல்லளவில் தன்னையும் மக்கள் முதலியவரையும் கொடுத்துக் கருத்தை வெளிக்காட்டாதிருத்தல் 'துவைதீபாவம்' எனப்படும். ஒரு பகைவனிடம் வெளிப்படையாகச் சந்தியை மேற்கொண்டு, மறைவாகத் தீங்கு புரிதல் என்ற முறையில் சந்தி விக்கிரக மிரண்டையும் மேற்கொள்ளல் துவைதீபாவம் ஆம் என்பாருமுளர். பிற்கூறியதே ஈண்டுக் கூறப்பட்டது. இரண்டகம் செய்தல் என்பது இதுவேயாம். 'துணைவனால் முடிவு பெறுதற்குரிய செயல்களில் துவைதீபாவத்தை மேற்கொள்ளல் வேண்டும்' என அடுத்துவரும் பகுதியால் முன்னையது குறிப்பாலுணர்த்தப்படும் என்க.

[16] அறுகுணங்களைப் பற்றிய விளக்கம் இங்ஙனம் கூறி முடிக்கப்பட்டது என்பது கருத்து.

[17]பகைவனைவிடக் குறைந்தவன் [18]சந்தியை ஏற்றல் வேண்டும். [19]சிறப்புற்றவன் விக்கிரகத்தைச் செய்தல்வேண்டும். [20]என்னைப் பகைவனோ பகைவனை யானோ துன்புறுத்தற் கியலாது என்பது பற்றி ஆதனத்தை மேற்கொள்ளல் வேண்டும். [21]குணங்களாற் சிறந்தவன் யானத்தை மேற்கொள்ளல் வேண்டும். சக்தியற்றவன் [22]சமாசிரயத்தை ஏற்கவேண்டும். துணைவனால் முடிவு பெறுதற்குரிய செயல்களில் துவைதீபாவத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

[23]குணங்களை நிலைப்படுத்துதல் இவ்வாறும்.

[24]அரண் அணைக்கட்டு என்னுமிவற்றின் தொழில், வணிகர் வழி பாழிடம் ஆகரம் மரக்காடு யானைக்காடு என்னுமிவற்றைச்

---

17 இனிக் குணங்களை மேற்கொள்ளுதற்குரிய காலம் முதலியவற்றைப் பற்றிக் கூறுகின்றார். குறைந்தவன்—பொருள் படைக்கலம் முதலியவற்றால் பகைவனைவிடக் குறைவுள்ளவன்.

18 அப்பகைவனுடன் சந்தி செய்துகொள்ளல் வேண்டும் என்பது.

19 படைக்கலம் முதலியவற்றால் பகைவனைவிடச் சிறந்தவன் அப்பகைவனுக்குத் தீங்குபுரிதல் வேண்டும் என்பது.

20 பகைவன் எனக்குத் தீங்குபுரிதற்கு வன்மையற்றவன் என்றும், நான் பகைவனுக்குத் தீங்குபுரிய வலியனல்லேன் என்றும் கருதியவன், பகைவனைப் பொருட்படுத்தாதிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

21 குணங்களால் உண்டாம் சிறப்பு—'போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்' என்ற ஒன்பதாவது அதிகரணத்திற் கூறப்படும் வன்மை இடம் காலம் முதலியவற்றாலுண்டாவது. எனவே அச்சிறப்பையுடையவன் மேற்சேறலை ஏற்கவேண்டும் என்பதாம்.

22 வலியவனொருவனைச் சார்ந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

23 இடம் காலங்களுக்கேற்பக் குணங்களின் வரையறை இங்ஙனம் கூறி முடிக்கப்பெற்றதென்பது கருத்து. 'அறுகுணங்களின் வரையறை' என்ற இப்பிரகரணமும் முடிவுற்றது.

24 இனிக் 'குறைவொப்பு மிகுதிகளின் துணிபு' என்ற பிரகரணம் கூறப்படும். குறைவு—பொருள் படைக்கலங்களைப் பற்றியது. ஒப்பு—அவை ஒத்தனவாயிருத்தல். மிகுதி—அதிகமாயிருத்தல். முன் பிரகரணத்தில் அறுகுணங்கள் விளக்கிக் கூறப்பட்டன. அவற்றின் பயன்களான குறைவொப்பு மிகுதிகளைப்பற்றிக் கூறுவதற்கு இப்பிரகரணம் தொடங்கப்பட்டது. இதனாற் பிரகரணவியைபு புலனும். இவற்றுள் மிகுதி இறுதியிற் கூறப்பட்டிருப்பினும் சிறப்பு நோக்கி அதனை முன்னர்க் கூறுகின்றார்.

சார்ந்த தொழில்கள் எனக்குரியனவாயின் இவற்றைச் செய்வித்தற்கும், [25]பிறனுக்குரியனவாயின் [26]இத் தொழில்களுக்குக் கேட்டை விளைவிப்பதற்கும் [27]ஈண்டு நிலையுள்ள யான் வல்லவனுவேன் என்று, அவற்றுள் எந்தக்குணத்தை அடைந்தவன் கருதுவானே, (அவன்) அதை மேற்கொள்ளல் வேண்டும். [28]அதுவே [29]மிகுதியாம்.

[30]எனக்குரிய மிகுதி விரைவுள்ளது; [31]நிறைவுபட்டது. [32]மேன்மேலும் ஓங்கக்கூடியது; பகைவனுக்காயின் முரண்பட்டதாம் என்றறிந்தவன் பகைவனது மிகுதியைப் பொருட்படுத்தாமலிருக்கலாம். [33]காலம் பயன் விளைவு என்னுமிவற்றால் மிகுதி சமமாயின் சந்தியை யடைதல் வேண்டும்.

[34]குணங்களில் எதனை மேற்கொண்டவிடத்துத் தன் செயல்

---

25 பிறன்—பகைவன்.

26 இத்தொழில்—அரண் முதலியவற்றைப் பற்றிய தொழில்.

27 ஈண்டு—இந்தக் குணத்தில்.

28 அதுவே—அந்தக் குணத்தை மேற்கொள்ளலே.

29 மிகுதி—மிகுதிக்குக் காரணமாம். உபசார வழக்கு.

30 பிறனுக்குண்டாம் மிகுதியைப் பொருட்படுத்தாமைக்குரிய இடங்களைக் கூறுகின்றார். எனக்கு மிகுதி விரைவிலுண்டாவது, பகைவனுக்குச் சில காலஞ்சென்ற பின்னரே உண்டாகக்கூடியது என்றவிடத்துப் பகைவனது மிகுதியைப் பொருட்படுத்தாதிருக்கலாம் என்பது.

31 இருவருக்கும் மிகுதி ஒரே காலத்திலேற்படினும் பகைவனுக்குண்டாவது சிறிதாகவும் தனக்குண்டாவது மிகுதியாகவும் இருப்பின் ஆண்டும் பகைவனுக்குண்டாம் மிகுதியைப் பொருட்படுத்தா திருக்கலாம் என்பது.

32 இருவருக்கும் ஒத்தவளவிலேற்படக் கூடியதாயினும், தனக்குண்டாவது மேன்மேலும் ஓங்கிச் சிறப்புற்று விளங்கக்கூடியது என்றும், பகைவனுக் குண்டாவது அவ்வாறன்று என்றும் கருதியவிடத்துப் பகைவனின் மிகுதியைப் பொருட்படுத்தாதிருக்கலாம் என்க.

33 பகைவனுக்கும் தனக்கு முண்டாம் மிகுதி காலத்தாலும் பயன் விளைவாலும் ஒத்ததாயிருக்கும் என்று கருதுமிடத்து அப்பகைவனுடன் சந்தியை மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

34 சந்தி முதலியவற்றுள் எதை ஏற்குங்கால் தன் செயல்களுக்குத் தீங்கு நேரிடும் என்றும், பகைவன் செயல்களுக்கு எவ்வித இடையூறும் நேராது என்றும் கருதுவானே அதை மேற்கொள்ளல் கூடாது என்பது கருத்து.

களுக்கு இடையூற்றைக் காண்டலும், பிறனுக்கு அஃதின்மையும் ஏற்படுமோ அக்குணத்தில் நிற்றல் கூடாதாம். [35]இது [36]குறைவாம்.

[37]பலநாட் சென்ற பின்னரும் குறைவாகவும் ஓங்குதற்றொடர்புடையதாகவும் உள்ள குறைவை எய்துவேன்; பகைவனுக்காயின் முரண்பாடாம் என்றறிந்தவன் குறைவைப் பொருட்படுத்தாமலிருக்கலாம்.

[38]காலம் பயன்விளைவுகளால் குறைவு ஒத்ததாயிருப்பின் சந்தியை யடைதல் வேண்டும்.

எந்தக் குணத்தை யேற்றவிடத்துத் தன் செயல்களுக்கு மிகுதியோ குறைவோ காணப்படவில்லையோ அது [39]ஒப்பாம்.

[40]சிறிதாகவும் ஓங்குதற் றொடர்புடையதாகவும் உள்ள ஒத்த நிலையிலிருப்பேன் ; பகைவனுக்காயின் முரணும் என்றறிந்தவன் ஒப்பைப் பொருட்படுத்தாமலிருத்தல் வேண்டும்.

---

35 இது—குணத்தை மேற்கொள்ளல்.

36 குறைவிற்குக் காரணமாயிருத்தல் பற்றிக் குறைவு என்ருர்.

37 பலகாலம் சென்ற பின்னர் எனக்குக் குறைவுண்டாகும், பகைவனுக்காயின் விரைவில் உண்டாகும் என்றவிடத்தும், எனக்குச் சிறிதாகவே குறைவு உண்டாகும் பகைவனுக்கு அதிகமாக உண்டாகும் என்று கருதுமிடத்தும் எனக்குண்டாகும் குறைவு மிகுதியின் தோற்றத்துக்குக் காரணமானது பகைவனுக்காயின் குறைவின் விளைவுக்கே காரணமாயுள்ளது என்று எண்ணுமிடத்தும் (என்ற இம்மூன்று சந்தர்ப்பங்களிலும்) தனக்குண்டாகும் குறைவைப் பொருட்படுத்தாது இருக்கவேண்டுமேயன்றி அதனைத் தடுக்க முயற்சித்தல் வேண்டுவதில்லை என்று கூறுகின்ருர்.

38 பகைவனுக்கும் தனக்கும் உண்டாம் குறைவு காலத்தாலும் பயன் விளைவாலும் ஒத்திருக்குமென்று கருதுமிடத்து அப்பகைவனுடன் சந்தியை மேற்கொள்ளல் வேண்டும் என்று கூறுகின்ருர்.

39 முன்னைய நிலைக்கு மாறுபாடில்லாதிருத்தற்குக் காரணமாதல்பற்றி 'ஒப்பு' எனக் கூறினர்.

40 என்னுடைய ஒப்பானது குறுகியகாலத்தை யுடையது, பகைவனுக்காயின் நீண்டகாலத் தொடர்புடையது. என் ஒப்பு மிகுதியின் தொடர்பை யுடையது பகைவனுடையதாயின் குறைவின் தொடர்பை யுடையதாம் என்று கருதியவன் ஒப்பைப் பொருட்படுத்தாதிருக்கலாம் என்பது கருத்து.

[41]காலம் பயன்விளைவுகளால் ஒப்பு ஒத்த நிலையிலிருப்பின் சந்தியை யடைதல் வேண்டும் என்பர் ஆசிரியர்.

[42]இது [43]சிறப்பாகக் கூறப்படவில்லை என்பர் கௌடலியர்.

[44]சந்தியை மேற்கொண்டு [45]பெரும் பயனையுடைய என் செயல்களால் பகைவன் செயல்களுக்கு இடையூற்றைச் செய்வேன் எனவும் பெரும் பயனையுடைய என் செயல்களையோ [46]பகைவன் செயல்களையோ நுகர்வேன் எனவும் [47]சந்திநம்பிக்கை யுண்டு பண்ணி மறைவுச் செயற்கல்வியின் துணை கொண்டு ஒற்றர்களால் பகைவன் செயல்களைக் கெடுத்து விடுவேன், அன்றி [48]அருளுதல்,

---

41 பகைவனுக்கும் தனக்கும் ஒப்பானது காலம் பயன் என்னுமிவற்றால் ஒத்ததாயிருப்பின் அப்பகைவனுடன் சந்தியை ஏற்றல் வேண்டும் என்பது கௌடலியர்க்கு முன்னுள்ளோர் கருத்தாம்.

42 இது—முன்னர் ஆசிரியர் சொன்ன பொருள்.

43 சிறந்த முறையில் விரிவாகக் கூறப்படவில்லை என்பதாம்.

44 சிறப்பான முறையில் கௌடலியர் தன் கருத்தைக் கூறுகின்றார். சந்தியை மேற்கொள்ளுமிடத்துப் பெரிய பயன்களை விளைவிக்கும் என் செயல்களானும் அரண் முதலியவற்றாலும் பகைவன் செயல்களுக்கு இடையூற்றை விளைவிப்பேன். அதாவது என் செயல்களாலாக்கப்பட்ட மிகுந்த திண்மைப் பொருள்களைப் பிறநாட்டுக்கு அனுப்புதல் காரணமாகப் பிற நாட்டுத் தொழில்களாலாக்கப்பட்ட பொருள்களின் விலைக்குக் குறைவை உண்டுபண்ணுவேன் என்பது. இவ்வினைச்சொல் (உண்டுபண்ணுவேன்) முதலிய பின்னைய வினைச்சொற்களுடன், 'என்று கருதுமிடத்துச் சந்தியால் மிகுதியை யடைதல் வேண்டும்' என்று பின்வரும் பகுதியைக் கூட்டிக் கருத்தையுணர்க.

45 பெரும்பயனை விளைவிக்கக்கூடிய செயல்களால் இன்புற்றிருப்பேன் என்பது.

46 பகைவனின் செயல்களாலுண்டாம் பயனைப் பெற்று இன்பமெய்துவேன் என்பது.

47 பகைவனுடன் சந்தியை மேற்கொண்டு அவனுக்கு என்னிடம் நம்பிக்கையை உண்டுபண்ணி ஒற்றரை விடுத்தல் முதலியவற்றாலும், நச்சுப் புகை, நீரைக் கெடுத்தல் முதலிய மறைவுச் செயல்களாலும் (14-ம் அதிகரணத்திற் காண்க) பெரும்பயனை விளைவிக்கக்கூடிய பிறன் செயல்களுக்குத் தடையை உண்டுபண்ணுவேன் என்பது.

48 சந்தியால் நம்பிக்கையை உண்டுபண்ணிப் பகைவனின் தொழிலில் ஈடுபட்ட மக்களை விதைகொடுத்துதவுதல், அரசிறையைப் பரிகரித்தல், உழவுத் தொழிற்குரிய உதவிகளைத் தருதல், அதிகமான பயனை யடைதல் என்னுங் காரணங்களைக் கொண்டு என் செயல்களில் எளிதில் ஈடுபடச் செய்வேன் என்பது கருத்து.

இறையிலி, உதவி, மிகுந்தபயன், விளைவு என்னுமிவற்றைக்கொண்டு பகைவன் செயலில் ஈடுபட்ட மக்களை என் செயல்களுக்காக எளிதில் கைப்பற்றிவிடுவேன் எனவும், [49]வன்மை மிகுதிகளையுடைய பகைவனுடன் சந்தி செய்துகொண்ட பகைவன் தன் செயல்களுக்கு இடையூற்றை அடைவான் எனவும், இவன் [50]எவனுடன் விக்கிரகத்தை மேற்கொள்ளுதற்கு என்னுடன் சந்தியை ஏற்கிருனே, அவனுடன் இவனுக்கு நீண்ட விக்கிரகத்தை உண்டு பண்ணுவேன் எனவும், இவன் [51]என்னுடன் சந்தியை அடைந்த என் பகைவனது நாட்டைத் துன்புறுத்துவான், [52]அவனுல் துன்புறுத்தப்பட்ட இவனது நாடு என்னைச்சாரும். பின்னர் செயல்களில் மிகுதியை எய்துவேன் எனவும், செயலைத் தொடங்கி [53]இடுக்கண் எய்தியவனும் பிறன் உதவிகொண்டு செயலைத் தொடங்கியவனும் ஆகிய என் பகைவர் நெருக்கடியாகவுள்ள நிலையிலிருக்கின்றனர். அதனுல் அவர்கள் என் செயல்களில் வன்மையை மேற்கொள்ளார். அவர்களுடன் சந்தியைப் பெற்றுச் செயல்களில் மிகுதியை அடைவேன் எனவும், [54]பகைவனுடன்

---

49 வலியவனும் பொருணிறைவுள்ளவனுமான என் பகைவனுடன் சந்தியை மேற்கொண்ட இப்பகைவன் அவனுக்கு அளவுகடந்த பொருளைக் கொடுத்தலால் கருவூலம் அழியப்பெற்றுத் தன் செயல்களின் இடையூற்றை எய்துவான் என்பது.

50 இவன் எந்தப் பகைவனுடன் விக்கிரகத்தை யேற்பதற்காக என்னுடன் சந்தியை மேற்கொள்ளுகிருனே அவனுடன் இவனுக்கு நீண்ட பகைமையை உண்டுபண்ணுவேன் என்பது.

51 என்னுடன் சந்தியை மேற்கொண்ட என் பகைவனின் நாட்டை இவன் துன்புறுத்துவான் என்பது.

52 இவனுடன் யான் சந்தியைச் செய்துகொண்டால் பகைவனுல் துன்பமெய்திய இவனது நாடு எனக்குரியதாகும். அதனுல் என் செயல்கள் ஓங்கும் என்பது.

53 அரண் முதலியவற்றைப் பற்றித் தான் தொடங்கிய செயல் இடுக்கண் எய்தியதன் காரணமாக இவன் சங்கடமான நிலையிலுள்ளான். பிறனுடைய உதவியைநாடிச் செயல் தொடங்கிய மற்றொருவனும் சங்கடமான நிலையிலுள்ளான். இவருடன் சந்தியை ஏற்பின் என் செயல்களுக்கு இடையூறு உண்டாகாமையே அன்றி மிகுதியும் உண்டாம் என்ற இரண்டு நிலையிலும் என்பது கருத்து.

54 யான் என் பகைவனுடன் சந்தியை மேற்கொண்டு அவனுடன் சேர்ந்திருக்கும் மண்டலத்தை வேறுபடுத்துவேன் என்பது.

சந்தியைச் செய்து அவனுடன் வேறுபாட்டை அடையாத மண்டலத்தை வேறுபடுத்துவேன்; [55]வேறுபடுத்தப்பட்டவனை எய்துவேன்; [56]படையை அருளுதலால் பகைவனை வயப்படுத்தி மண்டலத்தை விரும்புங்கால் பகையை உண்டுபண்ணுவேன் எனவும் பகையை அடைந்தவிடத்து [57]அதனாலேயே கொல்லச்செய்வேன் எனவும் கருதியவிடத்துச் சந்தியால் மிகுதியை யடைதல் வேண்டும்.

[58]படைக்கல முள்ளவர் [59]குழுவினர் என்னும் இவர்களால் நிறைந்ததும், மலை காடு ஆறுகளாகிய அரண்களையுடையதும், [60]ஒரு வாயிலால் எளிதில் புரத்தற்குரியதுமான என் நாடு, பகைவர் தாக்குதலைத் தடுக்க வல்லது என்றும் [61]நாட்டெல்லையில் பொறுத்தற்கியலாத அரணையடைந்து பகைவன் செயலைத் தடுக்க இயலும் என்றும் [62]விதனத்தாலுண்டாம் துன்பங் காரணமாகப் பகைவன் ஊக்கம் குன்றிச் செயற்றீங்குக்குரிய காலத்தை யெய்தியுள்ளான்

---

55 வேறுபாட்டை எய்திய பகைவனை வயப்படுத்துவேன் என்பது.

56 பகைவனுடைய உதவி குறித்துப் படையைக் கொடுத்து அவனை வயப்படுத்திய பின்னர் மண்டலத்தை யடைதற்பொருட்டு அவன் முயலுங்கால் அவனுடன் மண்டலத்துக்குப் பகையை உண்டுபண்ணுவேன் என்பது.

57 அதனாலேயே—அம்மண்டலத்தினாலேயே. இதுகாறும் கூறப்பட்ட பதினைந்து நிகழ்ச்சிகளிலும் இன்னோரன்ன நிகழ்ச்சிகளிலும் சந்தியை மேற்கொள்ளுதலால் தனக்கு மிகுதியைச் சம்பாதித்துக்கொள்ளல் வேண்டும் என்றாராயிற்று.

58 இதுகாறும் சந்தியை மேற்கொள்ளுதலால் உண்டாம் மிகுதி கூறப்பட்டது. இனி விக்கிரகத்தை மேற்கொள்ளுமிடத்துண்டாம் மிகுதியைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். படைக்கலமுள்ளவர்—படைக்கலங்களைக்கொண்டு உயிர்வாழும் அரசகுலத்தினர்.

59 உழவுத்தொழிலைச் செய்பவரும் செய்விப்பவரும் குழுவினராவர்.

60 உட்புகுதல் வெளியேறல் என்பவை ஒரே வாயிலால் நிகழ்வதுபற்றி எளிதில் பாதுகாக்கப்படுவது என்பது கருத்து.

61 நாட்டின் எல்லையில் அழித்தற்கியலாத அரணையடைந்த யான் பகைவனின் செயல்களுக்கு இடையூற்றை விளைவிப்பேன் என்பது.

62 விதனத்தினாலேற்பட்ட துன்பங் காரணமாகப் பகைவன் உற்சாகமிழந்திருத்தலால் அவன் செயல்களுக்கு இடையூற்றை விளைவித்தற்குரிய சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருக்கிறது என்பது கருத்து.

என்றும் [63]விக்கிரகத்தை யடைந்தவனுடைய நாட்டை வேறுவழியில் துன்புறுத்த இயலும் என்றும் கருதியவிடத்து விக்கிரகத்தை மேற்கொண்டு மிகுதியை அடைதல் வேண்டும்.

[64]என் செயல்களுக்குத் தீங்கை விளைவிக்கப் பகைவனுக்கு முடியாது, யானும் அவன் செயல்களுக்கு இடையூற்றை விளைவிக்க முடியாது. [65]ஏமலியும் பன்றியும்போல் பூசலேற்படின் துன்பமுண்டாம். ஆகவே என் செயலிலீடுபட்டு மிகுதியை எய்துவேன் என்று எண்ணுமிடத்து ஆதனத்தினுல் மிகுதியை யடைதல் வேண்டும்.

பகைவனுடைய செயல்களுக்கு [66]யானத்தினுல் தீங்கு விளையும்; என் செயற்குரிய பாதுகாப்பு நன்கு உண்டாக்கப்பட்டது என்று எண்ணுமிடத்து யானத்தினுல் மிகுதியை யடைதல் வேண்டும்.

பகைவன் செயல்களுக்குத் தீங்கு விளைவிக்கவும் என் செயல்களுக்குண்டாம் தீங்கைப் பரிகரிக்கவும் இயலாது என்று எண்ணுமிடத்து [67]வன்மையுடையவனை அடைந்து, தன் செயல்களிலீடுபட்டுக் குறைவினின்று ஒப்பையும், ஒப்பிலிருந்து மிகுதியையும் விரும்பி நிற்றல் வேண்டும்.

---

[63] யான் பகைவனுடன் விக்கிரகத்தை மேற்கொள்ளினும், அவன் நாட்டை வேறுவிதமாகக் கைப்பற்ற எனக்கு வல்லமையுண்டென்பது. இங்ஙனம் நான்கு நிகழ்ச்சிகளிலும் இம்மாதிரியான நிகழ்ச்சிகளிலும் விக்கிரகத்தை மேற்கொள்ளுதலால் மிகுதியை அடைதல் வேண்டும் என்பது கருத்து.

[64] ஆதனத்தை மேற்கொள்ளுமிடத்துண்டாம் மிகுதியைக் கூறுகின்றூர்.

[65] நாய் பன்றிகள் ஒத்த வன்மையுடையனவாகவின், அவைகளை உவமையாக எடுத்துக் கூறினர்.

[66] யானத்தினுலல்லது வேறு வகையில் தீங்கை விளைவிக்க வியலாது என்பது கொள்ளத்தக்கது.

[67] தன்னைப் பாதுகாத்தற்கு வல்லானெருவனை யடைதல் வேண்டும் என்பதும், அதன் பின்னர்த் தன் செயல்களில் ஈடுபடுதலால் குறைவை நீக்கி ஒப்பை யடைதல் வேண்டும் என்பதும், பின்பு அதனினின்றும் மிகுதியை அடைய விரும்புதல் வேண்டும் என்பதும் கருத்து.

[68]ஓரிடத்தில் சந்தியை மேற்கொண்டு என் செயல்களைச் செய்வேன் ; பிறிதோரிடத்தில் விக்கிரகத்தை யேற்றுப் பகைவன் செயல்களுக்கு இடையூற்றை விளைவிப்பேன் என்று கருதுமிடத்துத் துவைதீபாவத்தினுல் மிகுதியை யடைதல் வேண்டும்.

சுலோகம்

[69]அங்கங்களின் மண்டலத்திலிருப்பவன் இங்ஙனம் இந்த [70]ஆறு குணங்களைக்கொண்டு, செயல்களின் [71]குறைவிலிருந்து ஒப்பையும் ஒப்பிலிருந்து மிகுதியையும் அடைய விரும்புதல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் 1, 2 பிரகரணங்கள் 'அறுகுண வரையறை' 'குறைவொப்பு மிகுதிகளின் துணிபு' என்னும் தொண்ணூற்றென்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

68 ஒரு பகைவனுடன் சந்தியை மேற்கொண்டு என் செயல்களை நடாத்தவும் பிறனொருவனிடம் விக்கிரகத்தை மேற்கொண்டு அவன் செயல்களைத் தடுக்கவும் வல்லவனுவேன் என்று எண்ணுமிடத்துத் துவைதீபாவத்தினுல் மிகுதியை யடைதல் வேண்டும் என்பது கருத்து.

69 அரசு முதலியனவாக முன்னர்க் கூறப்பட்ட ஏழு அங்கங்களின் என்பது.

70 சந்தி முதலியவற்றை மேற்கொள்ளுதலால் என்பது.

71 குறைவான நிலையைக் கடந்து ஒப்புநிலையையும், அதைக் கடந்து மிகுதிநிலையையும் அடைய விரும்பி ஒழுகவேண்டும் என்பது கருத்து.

ஏழாம் அதிகாரணம்—அறுவகைக் குணங்கள்

மூன்றும் பிரகரணம்—[1]வலியதைப்பற்றியொழுகல்

நூறும் அத்தியாயம்

சந்தி விக்கிரகங்களாலுண்டாம் மிகுதி சமமாயின் சந்தியையே ஏற்றல் வேண்டும். என்னை? [2]விக்கிரகத்தால் கேடு, செலவு, அயல்நாட்டுச் செலவு, இடையூறு என்னுமிவை உண்டாகின்றன ஆகலின் என்க.

[3]இதனுல் [4]ஆதனம் யானங்களுள் ஆதனத்திற்கு விதி கூறியவாறும்

[5]துவைதீபாவம் சமாசிரயங்களுள் துவைதீபாவத்தை யேற்றல் வேண்டும். [6]துவைதீபாவத்தை எய்தியவன் தன் செயல்களி

100-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] 'குறைவொப்பு மிகுதிகளின் துணிபு' என்ற முன்னைப் பிரகரணத்தின் எஞ்சியவையும் 'வலியதைப்பற்றி யொழுகல்' என்றதைச் சார்ந்தவையும் ஆகிய சில செய்திகள் இப்பிரகரணத்திற் கூறப்படுவன. ஒரு குணத்தால் மிகுதியை விரும்பும் விதம் முன்னர்க் கூறப்பட்டது. இரு குணங்களாலுண்டாம் மிகுதி சமமாயிருப்பின் அவ்விரண்டனுள் எதைப் பற்றல் வேண்டும் என்பது பற்றி ஈண்டுக் கூறுகின்றார்.

[2] சந்தியை (நட்பாக்கலை) விட்டு விக்கிரகத்தை (பகையாக்கலை) மேற்கொள்ளின் உயிர்க்கேடு, பொருள் கூலங்களின் அழிவு, அயல்நாட்டுச் செலவு, பகைவர்களாலுண்டாக்கப்பட்ட நஞ்சுத்துன்பம், நீர்நிலைச் சிதைவு முதலியவற்றால் தீமைகள் உண்டாகின்றன என்பதும் சந்தியை ஏற்பின் இக்குற்றங்கள் உளவாகா என்பதும் கருத்து.

[3] இதனுல்—இவ்விதியால்.

[4] இருத்தல், மேற்சேறல் என்பவற்றாலுண்டாம் மிகுதி சமமாயிருப்பின் இருத்தலையே மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[5] பிரித்தல், கூட்டல் என்பவற்றாலுண்டாம் மிகுதி சமமாயின் பிரித்தலையே மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[6] பிரித்தலை யேற்றற்குக் காரணங் கூறுகின்றார்,

லீடுபட்டுத் தன் பயனையே கருதுவான். [7]சமாசிரயத்தை யெய்திய வனுயின் பிறனுக்கே யன்றித் தனக்குப் பயனைக் கருதான்.

[8]பகைவனுக்கு எத்துணை வன்மையுளதோ அதைவிடச் சிறந்த வலியுள்ளவனைச் சார்ந்தொழுகுதல் வேண்டும். [9]சிறந்தவனில்லை யாயின் அவனையே (அப்பகைவனையே) சார்ந்து பொருள், படை, நிலம் என்னுமிவற்றுள் ஒன்றைக் கொடுத்துதவுதற்கு [10]மறைவில் முயலுதல் வேண்டும். [11]பகைவரால் எதிர்க்கப்படாத நிலையில் வலியவனை (நேரில்) அடைவது அரசர்க்குப் பெருங் குற்றமாம்.

[12]இயலாதவிடத்துப் படைவலியால் தாழ்த்தப்பட்டவனைப் போன்று ஒழுகுதல் வேண்டும்.

---

[7] கூட்டலை மேற்கொள்பவன் பிறனது ஆணைவழி ஒழுகுதற்குரியவ னுகலின் அவனது நலத்தையே யன்றித் தன் நலத்தைக் கருதுதற்கு இடம் பெறுன் என்பது கருத்து. 'குறைவொப்பு மிகுதிகளின் துணிபு' என்ற பிரகரணம் இத்துடன் முற்றும்.

[8] இனி 'வலியதைப் பற்றி யொழுகல்' என்னும் பிரகரணம் கூறப் படும். வன்மைமிக்கா ெருவனை யடைந்து தன் ஆற்றலை நிறைவு செய்து கொள்ளல் என்பது அதன் பொருள், 'முற்கூறிய அறுவகைக் குணங்களை யும் இவ்விரண்டாகக் கொண்டு ஒத்த வலியுடைய இரண்டனுள் தனக்கு நலந்தரும் ஆற்றலுடையதை மேற்கோடல்' என்பாருமுளர். எதிர்க்கும் சிற்றரசனுக்கு எத்துணை வன்மையுளதோ அதைவிடச் சிறந்த வன்மை யுடையானை யடைதல் வேண்டும் என்பது கருத்து.

[9] எதிர்த்தவனைவிட வன்மையாற் சிறந்தவன் தனக்குச் சார்பாகக் கிடைக்கவில்லையாயின் என்பது.

[10] எதிர்த்தவனை அணுகாமல் அவனுக்குப் பொருள் முதலியன கொடுத்து அவனது அன்பைப் பெறுதல் வேண்டும் என்பது. தன்னைவிட வலியவனைத் தான் அடைந்தவிடத்துக் கொலை, சிறைப்படுதல் முதலிய கேடு கள் விளையக்கூடும் ஆதலின் 'மறைவில் முயலுதல் வேண்டும்' என்ருர்.

[11] அவன் பிற பகைவரால் எதிர்க்கப்பட்டிருப்பின் அவனுடன் தொடர்பு கொள்ளுதல் மேற்கூறிய தீமைகளைப் பயவா என்பார் 'பகைவ ரால் எதிர்க்கப்படாத நிலையில்' என்ருர்.

[12] வலியவனை நெருங்காமல் அவனை வயப்படுத்தற்கு இயலாதவிடத்துப் படைவலியால் தாழ்த்தப்பட்டுச் சந்தியை மேற்கொண்டவன்போல் அவ் வலியவனிடம் தாழ்மையுடன் ஒழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

[13]இவனுக்கு உயிர்க்கேட்டை விளைவிக்கும் நோய்,[14]உட்பகை, பகைவன் ஓங்குதல், நண்பரது துக்கம் என்னுமிவை வந்தெய்தின என்பதையும், [15]அவை காரணமாகத் தனக்கு மிகுதியையும் காண்பானுயின் [16]நம்பத்தக்கதொரு நோயையும் அறச்செயலையும் தலைக்கீடாகக்கொண்டு விலகிச்செல்லல் வேண்டும். அல்லது [17]தன் நாட்டிலிருந்துகொண்டு நெருங்காமலும் இருக்கலாம். அன்றி நெருங்கி [18]இடைவெளியில் இவனைத் தாக்கலாம்.

[19]வலியுள்ளோ ரிருவர்க்கு [20]நடு நின்று [21]புரத்தற்குரிய வனையாதல் [22]மறைவை எய்தாதவனையாதல் [23]குடத்தின் பொருத்துவாய் போன்று இருவரையுமாதல் அடைதல் வேண்டும்.

---

13 இவனுக்கு—சார்ந்தொழுகப்பட்ட வலியவனுக்கு.

14 உட்பகை—அமைச்சர் புரோகிதர் முதலியவருடன் கலகம்.

15 அவை—அவனுடைய நோய் முதலியவை.

16 பிறர் நம்புமாறு ஏதேனுமொரு நோயையோ அறச்செயலையோ காரணமாகச் சொல்லிக்கொண்டு, அவ்வலியவனிடமிருந்து விலகிச்செல்லல் வேண்டும் என்பது கருத்து.

17 தன்னுட்டிலிருக்குங்கால் அவ்வலியவனுல் மேற்கூறிய நிகழ்ச்சிகளில் அழைக்கப்பட்டானுயின், முற்கூறிய நோய் முதலியவற்றைக் காரணமாகக் காட்டித் தன்னுட்டிலேயே இருந்துவிடல் வேண்டுமே யன்றி அவனை யணுகிச் செல்லல் கூடாது என்பது கருத்து.

18 உரிய சமயத்தில் அவ்வலியவனைத் தாக்கலாம் என்க. இதுகாறும் வலியவனெருவனுல் எதிர்க்கப்பட்டவனுக்குரிய விதி கூறப்பட்டது.

19 இனி வலியவர் இருவரால் எதிர்க்கப்பட்டவனுக்குரிய விதியைக் கூறத் தொடங்குகின்றுர்.

20 நடுநிலையில் இருந்துகொண்டென்பது.

21 புரத்தற்குரியவன் — தன்னைப் பாதுகாத்தற்குரிய வன்மையை யுடையவன்.

22 இருவருக்கும் வன்மை சமமாயிருப்பின், நாடு முதலியவற்றுல் தனக்கு அணிமையில் உள்ளவனை யடைதல் வேண்டும் என்பது.

23 இருவரும் நெருங்கியவராயிருப்பின் 'நீயே என்னைக் காத்தல் வேண்டும், உன்னுல் காக்கப்படாவிடின் என்னைப் பகைவன் களைய விரும்புவான்' என்று தனித்தனியே இருவரிடமும் கூறி, அடியிலும் கழுத்திலும் பொருத்துவாயமைந்த குடத்தின் நடுப்பகுதி போன்று இருவரையும் சார்ந்தொழுகல் வேண்டும் என்பது. இருவரிடமும் இங்ஙனங் கூறி யொழுகுதலைக் 'கபால ஸம்சிரயம்' என்பர் ஆசிரியர்.

அன்றி [24]ஒருவனுக்கு மற்றவன் கேடு விளைவிப்பவன் என்று ஒருவர்க்கொருவரைத் தலைக்கீடாகக் கொண்டு இருவரையும் வேறுபடுத்தல் வேண்டும். வேறுபட்டவிடத்து மறைவினொறுத்தலாம்.

[25]வன்மை வாய்ந்தவருள் அச்சத்துக்குக் காரணமானவரின் அருகிலிருந்து மாற்றம் புரிதல் வேண்டும். அல்லது [26]துவைதீபாவத்துடன் அரணை யடைந்திருக்கலாம். [27]சந்தி விக்கிரகங்களின் முறையான காரணங்களைப் பற்றியும் செயல் புரியலாம். [28]இருவரைச் சார்ந்த தூஷ்யர், பகைவர், காட்டில் வாழ்வோர் என்னும் இவர்களை [29]அருளுதல் வேண்டும். இவருள் ஒருவரைச் சார்ந்து மற்றவனுக்கு விதனமேற்பட்ட விடத்து [30]அவர்களைக்

---

[24] ஒருவனுக்கு மற்றவன் பொருட்கேட்டையும் அபகாரத்தையும் செய்வதாக இருவரிடமும் தனித்தனியே சென்று சொல்லி, ஒற்றர் மூலமாகத் தானே அவ்விருவருக்கும் பொருட்கேடு முதலியவற்றை யுண்டு பண்ணுதல் வேண்டும் என்பதும் ஒருவர்க்கொருவர் கேட்டை விளைவித்தல் காரணமாக அவருள் வேறுபாட்டை யுண்டாக்கல் வேண்டும் என்பதும் அங்ஙனம் வேறுபாட்டை யெய்தியபின் அவர்களை மறைவில் ஒறுத்தல் (கொலை செய்தல்) வேண்டும் என்பதும் கருத்து.

[25] இருவர் வலியவராயிருக்க அவருள் எவனிடமிருந்து தனக்குத் தீங்கு விரைவில் ஏற்படும் என்று தோன்றுகிறதோ அவனிடமிருந்து தனக்குத் தீங்கு நேராமலிருத்தற்குரிய மாற்றத்தை அவனது அருகாமையிலிருந்து கொண்டே செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[26] நட்பாக்கல் பகையாக்கல் என்னுமிரண்டிலும் ஈடுபட்டு அரணை யடைந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[27] 'பெரும் பயனையுடைய என்செயல்களால் பகைவனின் செயல்களுக்கு இடையூற்றைச் செய்வேன்' என்பது முதலாகக் கூறப்பட்ட சந்திக்குரிய காரணங்களையும், 'படைக்கலமுள்ளவர் குழுவினர் என்னுமிவர்களால் மிகுந்ததும்' என்பது முதலாகக் கூறப்பட்ட (99-ஆம் அத்தியாயம் 44, 58-ஆம் குறிப்புக்களில்) விக்கிரகத்தின் காரணங்களையும் கைப்பற்றியொழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

[28] இருவர்—தன்னை எதிர்த்த இருவர்.

[29] கொடை மேம்பாடு முதலியவற்றால் தன்வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[30] அவர்களை—தன்வயப்படுத்தப்பட்ட முற்கூறிய தூஷ்யர் முதலியவர்களை.

கொண்டு ஒறுத்தல் வேண்டும். [31]இருவராலும் துன்புறுத்தப் பெறின் மண்டலத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும். மத்தியமனை யாதல் நொதுமலனையாதல் அடையலாம். [32]அவனுடன் ஒருவனை [33]அருளி மற்றவனைக் களைதல் வேண்டும். [34]இருவரையுமாம்.

[35]இருவராலும் அழிவை யெய்தியவன் மத்தியமன், நொதுமலன் என்போருள் ஒருவனையாதல் [36]அவர்பக்கத்து அரசருள் அறவோனையாதல் சார்தல் வேண்டும். [37]ஒத்தவராயின் [38]தனக்கு உதவும் மக்களை யுடையவனையாதல் [39]எவனைச் சார்ந்தால் தனக்கு மீட்சியுண்டாமோ அவனையாதல் [40]முன்னவரால் சார்ந்திருக்கப் பட்டவனையாதல் [41]நெருங்கிய தொடர்பு, வன்மையுடைய பல நண்பர்களை யுடையவனையாதல் சார்ந்திருத்தல் வேண்டும்.

---

31 இருசாராராலும் தனக்குத் துன்பமேற்படின் அவரைச் சார்ந்த மண்டலத்தினரிடம் சென்று, எல்லா வகையானும் தாழ்மையுடனிருக்கும் என்னை இவ்விருவரும் துன்புறுத்துகின்றனர் என்று கூறி அவரைப் பற்றி யிருத்தல் வேண்டும் என்பது.

32 அவனுடன்—மத்தியமனுடன் அல்லது நொதுமலனுடன்.

33 கொடை முதலியவற்ருல் வயப்படுத்தி என்பது.

34 இருவரையும் களையலாம் என்பது. இங்ஙனம் இருவரை வேறு படுத்துபவனின் செயல் கூறப்பட்டது.

35 இருவராலும் துன்புறுத்தப்பட்டுக் கேட்டை யெய்தியவனைப்பற்றிக் கூறுகின்ருர்.

36 மத்தியமன், நொதுமலன் என்போரது பக்கத்தைச்சார்ந்த அரசருள் என்பது.

37 ஒத்தவராயின்—எல்லோரும் அறவோராயிருப்பின்.

38 எந்த அரசனுடைய குடிகள் தன்னிடம் அன்புபூண்டவராயிருக்கின் றனரோ அவ்வரசனை யடையலாம் என்பது.

39 எல்லா அரசருடைய குடிகளும் தன்பால் அன்புபூண்டிருப்பின், தனக்கு எளிதில் எவ்வரசனுல் நலம் உண்டாமோ அவனை அடைதல் வேண்டும் என்பது.

40 அரசரெல்லோராலும் தனக்கு எளிதில் நன்மை ஏற்படக்கூடும் என்றவிடத்து அவ்வேந்தருள் எவனது குடியில் தன் முன்னோர் தொடர்பை யடைந்தனரோ அவனை யடைதல் வேண்டும்.

41 திருமணம் முதலிய தொடர்பு என்பது.

சுலோகம்

எவன் எவனிடம் அன்புள்ளவனோ [42]அவருள் [43]எவன் மற்றவனிடம் அன்பற்றவனுவான்? எவனிடம் எவன் அன்பு பூண்டவனோ அவன் அவனை [44]யடைதல் வேண்டும் என்னுமிது சிறந்த சார்பவன் செயலாம்.

ஏழாம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
'வலியதைப் பற்றி யொழுகல்' என்னும் நூரும்
அத்தியாயம் முற்றிற்று.

---

[42] அவருள்—அன்பைச் செலுத்தியவன், பெற்றவன் என்பவருள். இவர்கள் முறையே அன்பர் ஆர்வலர் எனப்படுவர்.

[43] இருவரும் ஒருவர்க்கொருவர் அன்புள்ளவர்களேயாவர் என்பது கருத்து.

[44] அடைந்தவனும் அடையப்பெற்றவனும் ஒருவர்க்கொருவர் அன்பு ததும்பப் பழகி யொழுகுதல் சிறந்த முறையாம் என்பது கருத்து.

4, 5-ஆம் பிரகரணங்கள்—[1]குறைவொப்பு மிகுதியாம் வலிநிலைகளுட் குணநலம்பற்றல், இழிந்தோன் சந்திகளை ஏற்றல்

நூற்றொன்றும் அத்தியாயம்

வெற்றிவிருப்பமுள்ளவன், [2]வன்மைக்கேற்ப அறுவகைக் குணங்களை ஏற்றல் வேண்டும். [3]ஒத்தவருடனும் சிறந்தவருடனும் சந்தியை மேற்கொள்ளல் வேண்டும். தாழ்ந்தவனாயின் விக்கிர கத்தை மேற்கொள்ளல் வேண்டும். [4]சிறந்தவனுடன் விக்கிர கத்தையேற்பது யானையுடன் காலாள் போர்புரிவதை யொக்கும். [5]ஒத்தவனுடனாயின் பசுமட் கலத்துடன் மோதப்பெற்ற பசுமட் கலம் போல் இருபக்கமும் கேட்டை விளைவிப்பதாம். [6]தாழ்ந்தவ

101-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பகைவனது வலியினும் தன்வலி, குறைதல் ஒத்தல் மிகுதல் என்னு மிவற்றுள் எத்தகையது எனச் சீர்தூக்கிப் பார்த்து மிக்கதைப் பற்றி யொழுகுதல் என்பது. காரணங்களைப் பற்றி அறுவகைக் குணங்களை யேற்றுப் பயன்படுத்தும் முறை முன்னைப் பிரகரணத்திற் கூறப்பட்டது. ஈண்டு வன்மை (சக்தி) யைப்பற்றி அவற்றை மேற்கொள்ளும் முறை கூறப் படுதலான் பிரகரண வியைபுண்மை புலனும்.

[2] தன் வன்மைக்கேற்ப வென்பது.

[3] பொருள் படை முதலியவற்றால் தனக்கு ஒத்தவருடனும், அவற்றால் தன்னைவிடச் சிறந்தவருடனும் சந்தியைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[4] மேற்கூறியவற்றை ஏற்பதற்குரிய காரணத்தை விளக்குகின்றார். காலாள் ஒரு யானையுடன் எதிர்த்தால் தீமையையே எய்துவதுபோல் தாழ்ந் தவன் சிறந்தவனை எதிர்த்துப் போர்புரியின் உயிர்க்கேட்டை யடைவான் என்பது.

[5] சூளையில் வைக்கப்பெறாத பசுமட் கலங்கள் இரண்டு ஒன்றனோ டொன்று தாக்கப்படின் இரண்டும் உடைந்துவிடுவது போன்று ஒத்தவ ரிருவருக்கும் போர் நிகழின் அவ்விருவருக்கும் கேடுவிளையும் என்பது கருத்து.

[6] பானையுடன் பாறை தாக்கப்படின் எக்காலத்தும் பானைக்கே அழிவு என்பது மாறுபாடில்லாது உறுதியாதல் போன்று தாழ்ந்தவனுடன் விக்கிர கத்தை ஏற்றலால் வெற்றி தவறாது எய்தும் என்பது கருத்து.

னுடனுயின் பாணேயுடன் பாறைபோன்று பயனுண்டாதல் ஒரு தலே.

சிறந்தவன் சந்தியை விரும்பானுயின் [7]படைவலியால் தாழ்த்தப்பட்டோன்செயலேயும் [8]ஆற்றலிலான் செயலுள் கபடோபாயத்தையும் மேற்கொள்ளல் வேண்டும்.

[9]ஒத்தவன் சந்தியை விரும்பானுயின் எத்துணேத் தீங்கு புரிவானே அத்துணேயே அவனுக்கு எதிர்த்தீங்கு புரிதல் வேண்டும். [10]என்னே? சேர்த்தற்குக் காரணமான நெருப்பு காய்ச்சப்பெருத இரும்பை இரும்புடன் இணேக்காதாகலின் என்க.

[11]தாழ்ந்தவன் எங்கும் பணிவுடையனுயின் [12]சந்தியை ஏற்கலாம். [13]என்னே? துக்கம் வெகுளி என்பவற்ருல் உண்டாம் ஆற்றல் காட்டுத்தீபோல் எதிர்த்தற்குக் காரணமாம் ஆகலின் என்க. [14]மண்டலத்தால் அருளேப்பெறுதற்கு முரிமை யுண்டாம்.

---

[7] இதன் விளக்கம் 119-ஆம் அத்தியாயத்திற் காணப்படும்.

[8] 'ஆற்றலிலான் செயல்' என்னும் பன்னிரண்டாம் அதிகரணத்தின் 'கபடோபாயத்தால் அழித்தல்' என்ற பிரகரணத்திற் கூறப்படும் முறையை ஏற்றல் வேண்டும் என்பது கருத்து. (140-ஆம் அத்தியாயத்தைக் காண்க).

[9] பொருள் படை முதலியவற்ருல் ஒத்தவன், தன்னுடன் சந்தியை ஏற்க விரும்பானுயின், அவன் தனக்கு எத்துணேத் தீங்கு புரிவானே, சந்தி விருப்பமுள்ளவன் அத்துணேத் தீங்கை எதிர்ச்செயலாக அவனுக்குப் புரிதல் வேண்டும்.

[10] அப்படிச் செய்வது சந்திவிருப்பத்தை யுண்டாக்குவதன் மூலம் சந்திக்குக் காரணமாம் என்பதை, காய்ச்சப்பட்ட இரும்பிணே எடுத்துக்காட்டாகக் காட்டி விளக்குகின்ருர்.

[11] தாழ்ந்தவனுடன் சந்தியின்மை முன்னர்க் கூறப்பட்டது. அதற்கொரு புறனடை கூறுகின்ருர்.

[12] சிறந்தவன் அவனுடன் சந்தியை ஏற்கலாம் என்பது.

[13] வணங்கினவனுடன் சந்தியை ஏற்காவிடத்துக் குற்றமுண்டாம் எனக் கூறுகின்ருர். தாழ்ந்தவனுள்ளத்தில் துக்கத்திலும் கோபத்திலும் உண்டாம் வீரத்தன்மையானது காட்டித்தீப் போன்று பற்றிச் சிறந்தவனேயும் எதிர்க்கத் தூண்டுகிறது என்பது கருத்து.

[14] தன்னே வணங்கித் தாழ்ந்தவனே அருளுதற்குச் சந்தியை விரும்பாயினுன் அவனது மண்டலம் இவனே அருளுதற்கு முற்படும் என்பது கருத்து.

[15]பகைவனுடைய குடிகள் பேராசை கேடு ஆராமை என்னு மிவற்ருலோ களைதலச்சத்தாலோ நெருங்கவில்லை என்று கருது மிடத்துத் தாழ்ந்தவனும் சந்தியை ஏற்றுப் பின்னர் விக்கிரகத்தை மேற்கொள்ளலாம்.

[16]பேராசை கேடு துன்புறுத்தப்படுதல் என்னுமிவற்றை யுடைய மக்கள் விக்கிரகத்தால் அச்சமுற்று என்னை நெருங்கவில்லை என்று விக்கிரகத்தை மேற்கொண்டவன் கருதுவானுயின் (அவன்) சிறந்தவனுயினும் சந்தியை மேற்கொள்ளல் வேண்டும். அல்லது விக்கிரகத்தால் உண்டாம் வெறுப்பைத் தணித்தல் வேண்டும். [17]விதனம் ஒத்த காலத்ததாயவிடத்தும், 'நான் மிக்க விதனமுடையவன், சிறிய விதனத்தையுடைய பகைவன் தன் விதனத்திற்கு எளிதில் மாற்றத்தைச் செய்து எதிர்த்தல் கூடும்' என்று கருதுவானுயின் சிறந்தவனுயினும் சந்தியை ஏற்றல் வேண்டும்.

---

15 வெற்றி விருப்பமுள்ளவன் தாழ்ந்த நிலையில் சந்தியையாதல் சமாசிரயத்தையாதல் மேற்கொள்ளல் வேண்டும் என்று முற்கூறியதற்கொரு புறனடை கூறுகின்ருர். வெற்றிவிருப்பமுள்ள தாழ்ந்த நிலையிலுள்ளவன் 'பகைவனுடைய குடிமக்கள் பேராசை முதலியவற்ருலாதல் தீங்குண்டாம் என்ற அச்சத்தாலாதல் என்னை நெருங்கவில்லை' என்று கருதுமிடத்துத் தன்னைவிடச் சிறந்த பகைவனுடன் சந்திசெய்த பின்னரும் அவனுடன் விக்கிரகத்தை மேற்கொள்ளலாம் என்பது கருத்து.

16 சிறந்தவன் தாழ்ந்தவனுடன் விக்கிரகத்தை மேற்கொள்ளல் வேண்டும் என்ற முன்னைய விதிக்கு ஒரு புறனடை கூறுகின்ருர். தன்னிற்ருழ்ந்த பகைவனுடன் விக்கிரகத்தை மேற்கொண்ட சிறந்தவன் 'குடிமக்கள் பேராசை முதலியவற்ருலும் விக்கிரகத்தின்பால் அச்சத்தாலும் என்னை வெறுக்கின்றனர்' என்று கருதுமிடத்துப் பகைவன் தன்னிற் ருழ்ந்தவனுயினும் அவனுடன் சந்தியை ஏற்றல் வேண்டும் என்பதும் விக்கிரகம் காரணமாக மக்களுக்குண்டான வெறுப்பைத் தணித்தலும் வேண்டும் என்பதும் கருத்து.

17 சிறந்தவன் தாழ்ந்தவனுடன் சந்தியைமேற்கொள்ளுதற்கு வேருெரு காரணமும் கூறுகின்ருர். தனக்கும் பகைவனுக்கும் துன்பம் ஒருங்கே உண்டாயினும் 'எனக்குண்டான துன்பம் வலியது. பகைவனுக்குண்டாய துன்பம் நொய்மையானது. அதற்குப் பகைவன் எளிதில் மாற்றத்தைச் செய்துவிட்டு என்னை எதிர்ப்பான்' என்று வெற்றி விருப்பமுள்ளவன் கருதுவானுயின், தான் சிறந்தவனுயினும் தன்னிற் ருழ்ந்தவனுடன் சந்தியை மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[18]சந்தி விக்கிரகங்களை யேற்றவிடத்துப் பகைவற்குக் கேட்டினையோ, தனக்கு மேன்மையையோ காணானாயின் சிறந்தவனும் ஆதனத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

[19]பிறனது துன்பம் களைதற்குரியதன்று என்று கருதுவானாயின் தாழ்ந்தவனும் யானத்தை மேற்கொள்ளற்பாலன்.

[20]நெருங்கிய துன்பம் நீக்குதற்குரியதன்றாயின் சிறந்தவனும் சமாசிரயத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

ஓரிடத்துச் சந்தியாலும் பிறிதோரிடத்து விக்கிரகத்தாலும் பயன்விளைவு காணப்படுமாயின் சிறந்தவனும் துவைதீபாவத்தை மேற்கொள்ளற்பாலன் [21]என்க.

அறுவகைக் குணங்களினால் [22]எல்லோர்க்கும் உண்டாம் பயன் [23]இவ்வாறாம். [24]அதற்குரிய சிறப்புவிதி(யும் பின்னர்க் கூறப்படும்).

---

[18] சந்தியையாதல் விக்கிரகத்தையாதல் ஏற்றவிடத்துப் பகைவனுக்குத் தீங்கின்மையும், தனக்குச் சிறப்பின்மையும் எதிர்பார்க்கப்படுமாயின், சிறந்தவனாயினும் இருத்தலையே மேற்கொள்ளல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[19] பகைவனுக்குண்டான உட்பகை முதலிய துன்பம் நீக்குதற்குரியதன்று என்று கருதுவானாயின் தாழ்ந்தவனும் சிறந்தவனுடன் மேற்சேறல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[20] தனக்குத் துன்பம் நெருங்கிவிட்டது என்றும் அது நீக்குதற்குரியதன்று என்றும் எண்ணுவானாயின் சிறந்தவனும் தாழ்ந்தவன்பால் சமாசிரயத்தை மேற்கொள்ளல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[21] 'குறைவொப்பு மிகுதியாம் வலிநிலைகளுட் குணநலம் பற்றல்' என்ற நான்காம் பிரகரணம் முற்றுப்பெற்றது என்பார் 'என்க' என்றார். அடுத்த பிரகரணம் 'இழிந்தோன் சந்தியை ஏற்றல்' என்பதாம். வலிகுறைந்தானொருவன் வலிமிக்க அரசற்குப் பொருள் படை நிலங்களைக் கொடுத்துச் சந்தி செய்வித்துக் கோடல் நன்றென்பது அதன் பொருள். முன்னைப் பிரகரணத்தில் ஒத்தவன் தாழ்ந்தோன் சிறந்தோன் என்னுமிவர்கள் அறுவகைக் குணங்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும் என்பது பற்றிக் கூறப்பட்டது. ஈண்டுத் தாழ்ந்தோனைப்பற்றிச் சிறப்பு விதிமுறை கூறப்படுகின்றது. இதனாற் பிரகரணவியைபு புலனாம்.

[22] எல்லோர்க்கும்—ஒத்தவர், தாழ்ந்தவர், சிறந்தவர் என்ற முத்திறத்தோர்க்கும்.

[23] மேற்கூறியவாறு விளக்கப்பட்டதாம் என்பது.

[24] இனி அவர்களுள் தாழ்ந்தவனைக் குறித்துச் சிறப்பு கூறப்படும் என்பது கருத்து.

சுலோகங்கள்

(1) வன்மையில்லாதவன் வன்மைமிக்க அரசனால் படைகளைக்கொண்டு [25]எதிர்க்கப்பட்டவிடத்துப் பொருள், படை, உடல், நிலம் என்னுமிவற்றைக்கொண்டு விரைவில் சந்தியை ஏற்றுப் [26]பணிதல் வேண்டும்.

(2) [27]வரையறுத்த படையினாலாவது பொருளினாலாவது தானே நெருங்கிப் போற்றுதல் என்னுமிச் சந்தி 'ஆத்மாமிஷம்' எனப்படும்.

(3) [28]படைத்தலைவன் மகன் என்னுமிவர்களைக் கொண்டு நெருங்கிப் போற்றுதல் வேண்டும் என்ற இது 'வேறு மக்கள் சந்தி' எனப்படும். தற்கொடையால் உண்டாயதில்லை என்பதுபற்றித் 'தன்னைப் போற்றுதல்' எனவும் படும்.

(4) [29]தானொருவனேயாவது (தன்) படையாவது வேறொருவன்பால் மேற்சேறல் வேண்டும் என்னுமிது 'அதிட்ட புருட சந்தி' எனப்படும். படைத்தலைவரையும் அவனையும் போற்றுதலுமாம்.

---

[25] எதிர்க்கப்பட்டுத் தோல்வி யடைந்த வன்மையற்ற அரசன்......பணிதல் வேண்டும் எனப்பொருள் கொள்க.

[26] வன்மைமிக்கானை வணங்கி அவனை யடுத்திருத்தல் வேண்டும் என்பது.

[27] வலியவனிடம் சந்தியை ஏற்குங்கால் அவனால் குறிப்பிடப்பட்ட படைகளையும் தன் தகுதிக்கேற்ற பொருள்களையும் எடுத்துக்கொண்டு தானே பகைவனின் அணிமையிற்சென்று அவனைச் 'சார்ந்தொழுகுதல் என்னுமிச்சந்தி 'தன்னைப் பிறனுக்கு உரிமைப்படுத்துதல் என்பது பற்றி 'ஆத்மாமிஷம்' என்ற பெயர்த்தாயிற்று. (ஆத்மா — ஆமிஷம் = தன்னை நுகரப்படும் பொருளாக்குதல்).

[28] ஓரளவு பரிவாரங்களுடன் சேனைத்தலைவன், அரசகுமாரன் என்னுமிவர்களைக் கொண்டு பகைவனை மேம்படுத்தல் என்னும் இச்சந்தி பிறரைக் கொண்டு செய்யப்படுதலான் 'வேறுமக்கள் சந்தி' என்றும், தன்னைக் கொண்டு செய்யப்படாதிருத்தலான் 'தன்னைக் காத்தல்' என்றுங் குறிக்கப்படுவதாயிற்று என்பது கருத்து.

[29] பகைவனது படையைத் துணையாகக் கொள்ளாது தானொருவனே தனித்துச்சென்றோ தன் படைகளைத் துணையாக அனுப்பியோ பகைவனது காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்துடன் ஏற்கும் சந்தி 'அதிட்ட புருட சந்தி' எனப்படும். பகைவனுக்கும் அவன் படைத்தலைவர்க்கும் இச்சந்தியால் புரத்தல் ஏற்படுதலான் படைத்தலைவரையும் அவனையும் போற்றுதல் எனவுங் கூறப்படும் என்பது கருத்து.

(5) [30]முன்னைய இரண்டிலும் தலைவனுடைய மகளை மணத்தல் வேண்டும். [31]பின்னையதிலாயின் பகைவனை [32]மறைவினுறுத்தல் வேண்டும். [33]இவை படைவலியாற் சூழ்த்தப்பட்டவன் சந்திகளாம்.

(6—8) [34]பொருளைக் கொடுத்து எஞ்சிய மக்களை விடுவித்தல் பரிக்கிரய சந்தியாம். [35]பன்முறையில் எளிதில் பகுதியாகக் கொடுக்கப்பெறின் அதுவே 'உபக்கிரகசந்தி' எனப்படும். [36]இடம் காலங்களால் தடைப்பட்ட உபக்கிரகமே 'அத்தியயம்' ஆம். [37]எளிதான முறையில் கொடுத்தல் என்பது மகளை மணத்தலைவிடப் பிற்காலத்திற் சிறந்த பயன் விளைப்பதாம். நம்பிக்கை காரணமாக ஒன்றும் தன்மையை எய்தும் இயல்பிற்றாகலின் 'சுவர்ணசந்தி' எனப்படும்.

---

30 முற்கூறிய மூன்று சந்திகளுள் முன்னையவையான 'ஆத்மாமிஷம்' 'தன்னைப் போற்றுதல்' என்ற இரண்டிலும் சிறந்தவனைச் சார்ந்த தலைவர்களுடைய மகளிரை மணத்தல் வேண்டும் என்பதும், இவ்வாறு செய்வது தன்பால் நம்பிக்கை யுண்டாவதற்கு என்பதும் அறியத்தக்கன.

31 பின்னையதில்—அதிட்ட புருட சந்தியில்.

32 மறைவாக நஞ்சிடுதல் முதலியவற்றால் ஒறுத்தல் வேண்டும் என்பது.

33 மேற்கூறிய இவை மூன்றும் படையைக்கொடுத்து வணங்கினவரால் ஏற்கப்படும் சந்திகள் என்க.

34 பொருளைக்கொண்டு வணங்கினவர் ஏற்கும் சந்திகளைக் கூறுகின்றார். வன்மைமிகுந்த பகைவனாற் கொல்லப்பட்டு எஞ்சிய மக்களை விடுவித்தற்குப் பொருளைக் கொடுத்தல் 'பரிக்கிரயசந்தி' எனப்படும்.

35 தனக்குத் துன்பம் நேராத முறையில் ஓரளவு கணக்கிடப்பட்ட பொருளைத் தன் வசதிப்படிப் பல தவணைகளாகக் கொடுப்பது என்ற ஒப்பந்தத்துடன் ஏற்கப்படும் பரிக்கிரய சந்தியே 'உபக்கிரகம்' எனப்படும்.

36 இன்னவிடத்தில் இன்ன காலத்தில் இத்துணைப் பொருள் கொடுப்பது என்று இடம் காலங்கள் வரையறுக்கப்படின், அவ்வுபக்கிரக சந்தியே 'அத்தியயம்' என வழங்கப்படும்.

37 தன் வசதிக்கேற்பப் பொருளைக் கொடுத்தல் என்ற வரையறையுள்ள இச்சந்தி கன்னியை மணத்தல் முதலியவற்றையுடைய ஏனைய சந்திகளை விடச் சிறந்தது என்பதும், வெற்றிவிருப்பமுள்ளவனும் பகைவனும் தம்முள் நம்பிக்கை காரணமாகக் காய்ச்சப்பட்ட பொன்னின் இணைப்புப்போல் இருவரும் ஒருவராம் தன்மையை யுண்டாக்கும் என்பதும் கருத்து. ஆகவே, இது 'சுவர்ண சந்தி' என்று கூறப்படும் என்க.

(9) [38]மாறுபட்டது 'கபாலம்' எனப்படும். (அது) [39]மிகக் கொடையினால் நிகழ்வது பற்றிக் கூறப்படவில்லை. [40]முன்னைய இரண்டிலும் குப்பியப் பொருளையாதல் நஞ்சிடப்பெற்ற குதிரை யானைகளையாதல் கொடுத்தல் வேண்டும்.

(10) [41]மூன்றாவது சந்தியில் தொழிற்கேட்டைக் கூறி அரை மடங்கு கொடுத்தல் வேண்டும். [42]நான்காவதில் இருத்தல் வேண் டும் என்னும் [43]இவை பொருளைக்கொண்டு பணிந்தொழுகுவார் ஏற்கும் சந்தியாம்.

(11) [44]நிலத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தலால் நாடு, மக்

---

[38] உடனேயே எல்லாப் பொருளையும் கொடுத்தல் என்ற ஒப்பந்தத் திறற் செய்யப்படும் சந்தி 'கபாலசந்தி' ஆம்.

[39] ஓரே சமயத்தில் மிகுந்த பொருளைக் கொடுத்தல் என்ற குற்ற முடைமை காரணமாக இச்சந்தி ஏற்கத்தக்கதாக நூல்களில் கூறப்பட வில்லை என்பது கருத்து.

[40] பரிக்கிரயம் முதலாக முற்கூறப்பட்ட நான்கு சந்திகளுள் 'பரிக் கிரயம்' 'உபக்கிரகம்' என்ற முன்னிரண்டை ஏற்கும்போது, ஆடை கவ சம் முதலிய நொய்மையான சில குப்பியப் பொருளைக் கொடுத்தோ அன்றிப் பகைவனால் விரும்பப்படும் யானை குதிரை முதலியவற்றிற்கு இரண்டு மூன்று திங்களுக்குப் பின்னர்ச் சாக்காட்டை விளைவிக்கும் நஞ்சினையருத்தி மிகச்சிறிய அளவில் அவற்றைக் கொடுத்தோ சந்திசெய்து கொள்ளுதல் வேண்டும் என்க.

[41] சுவர்ணசந்தியை ஏற்பவன் 'என் தொழில்கள் கேட்டை எய்தின' என்று கூறித் தான் கொடுக்கவேண்டிய பொருளில் ஒருபகுதியை மட்டும் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[42] 'கபாலசந்தி' என்ற நான்காவது சந்தியை மேற்கொண்டவன், மத்தியமனையோ நொதுமலனையோ அடைந்து 'சிறிது காலஞ்சென்று கொடுப்பேன்' என்று கூறிக்கொண்டே காலத்தைக் கடத்தல் வேண்டும் என்பது கருத்து.

[43] மேற்கூறிய இந்நான்கு சந்திகளும் பொருட்கொடையினால் வணங் கினவர் ஏற்கும் சந்திகளாம் என்பது.

[44] நிலத்தைக் கொடுத்து வணங்கினவர் ஏற்கும் சந்திகளைக் கூறுகின் றார். தன் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்தற் பொருட்டு நாட் டின் சிறுபகுதியைக் கொடுத்து ஏற்கும் சந்தி 'ஆதிட்ட சந்தி' எனப்படும்.

கள் என்னுமிவர்களைப் பாதுகாத்தல் ஆதிட்ட சந்தியாம். [45]அங்கு ஒற்றர் கள்வர் என்போரால் கேட்டை விளைவிப்பவனுக்கு (அது) விரும்பத்தக்கதாம்.

(12) [46]பயனைப் பற்றியபின் தலையாயவை நீக்கி நிலத்தைக் கொடுத்தல் உச்சின்ன சந்தியாம். [47]ஆண்டு பகைவனது துன்பத்தை விரும்புகிறவனுக்கு அது விரும்பத் தக்கதாம்.

(13) [48]பயனைக் கொடுத்தலால் நிலத்தை விடுவித்தல் அவக்கிரயமாம். [49]நிலத்தின் பயனைவிட அதிகமாகக் கொடுக்கப்படின் அது பரதூஷனமாம்.

(14) [50]முன்னைய இரண்டில் எதிர்பார்த்தலையும் பின்னைய இரண்டில் பயனைப் பற்றியபின் ஆற்றலிலான்செயலையும் மேற்

---

45 நிலப்பகுதி கொடுக்கப்பட்ட பின்னர் ஒற்றர் முதலியவர்களால் அப்பகுதியைத் தனக்குரியதாக்கிக் கொள்ளும் வன்மையுடையவனுக்கு அச்சந்தி விரும்பத்தக்கதாம் என்பது கருத்து.

46 தன்னிலத்தினின்று உண்டாம் பயனனைத்தையும் கைப்பற்றிய பின்னர்த் தலைநகரம், அரண்கள் என்பவற்றைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் பகைவனுக்குக் கொடுத்தலால் ஏற்கப்படும் சந்தி 'உச்சின்ன சந்தி' எனப்படும்.

47 பகைவனுக்குத் துன்பம் நேருங்காலத்தில் நிலத்தைத் திரும்பக் கவர்வேன் என்ற கருத்துடன் அந்நிலையை எதிர்பார்த்திருப்பவனால் இச்சந்தி ஏற்கத்தக்கது எனக் கொள்ளல் வேண்டும்.

48 நிலத்தில் உண்டாம் பயனை மட்டும் கொடுத்து நிலத்தைத் தன் வயமாக்கிக் கொள்ளல் 'அவக்கிரய சந்தி' எனப்படும். நிலத்தைக் கொடுத்தலால் தனக்கு உரிமை நீங்கிவிடும் என்பது பற்றி இச்சந்தி ஏற்கப்படும்.

49 எல்லா நிலங்களினின்றும் உண்டாம் பயனைவிட அதிகமான பயனைப் பகைவனுக்குக் கொடுப்பதாகக் கூறி ஏற்கும் சந்தி 'பரதூஷணம்' எனப்படும். 'வருவாயைவிட அதிகம் கொடுத்தல்' என்ற ஒப்பந்தத்தினால் பகைவனுக்கு விருப்பத்தைத் தோற்றுவித்துப் பின்னர்த் துன்பத்தை விளைவித்தல் பற்றி இப்பெயர்த்தாயிற்று.

50 ஆதிட்டசந்தி முதலான சந்திகள் நான்கனுள் முன்னைய இரண்டையேற்பவன் அவை காரணமாக வுண்டாம் தீங்கைப் பரிகரித்தற்பொருட்டுப் பகைவனது துன்பக் காலத்தை எதிர்பார்த்திருத்தல் வேண்டும் என்பதும், பின்னைய இரண்டை யேற்பவன் நிலத்தின் பயனைக் கொடுத்த பின்னர் 'ஆற்றலிலான் செயல்' என்னும் அதிகரணத்திற் கூறப்படுமாறு பகைவனுக்குத் தீங்கு புரிதல் வேண்டும் என்பதும் கருத்து.

கொள்ளுதல் வேண்டும். மேற்கூறிய [51]இவை நிலத்தால் வந்தெய்தியவன் (ஏற்கும்) சந்திகளாம்.

(15) [52]ஆற்றலிலான் ஏற்கும் மேற்கூறிய சந்திகள் தம் தொழில், இடம், காலம் என்னுமிவற்றிற் கேற்ப வரையறுக்கப் படுதலான் (மீண்டும்) மூவகையாம்.

ஏழாம் அதிகரணம் 4, 5 ஆம் பிரகரணங்கள்
'குறைவொப்பு மிகுதியாம் வலிநிலைகளுட் குணநலம் பற்றல்',
'இழிந்தோன் சந்திகளை ஏற்றல்' என்னும்
நூற்றொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[51] இவை—ஆதிட்டசந்தி முதலியனவாக மேற்கூறப்பட்ட நான்கு சந்திகள்.

[52] இழிந்தவன் ஏற்றற்குரியனவாக மேற்கூறிய நான்கும், தொழிலை யநுசரித்து வரையறுக்கப்பட்டு ஏற்கப்பட்டது, இடத்தை யநுசரித்து வரையறுக்கப்பட்டு ஏற்கப்பட்டது, காலத்தை யநுசரித்து வரையறுக்கப் பட்டு ஏற்கப்பட்டது என்ற முறையால் மீண்டும் மூவகைப்படும் என்று அறியத்தக்கன என்பது கருத்து.

ஏழாம் அதிகரணம்—அறுவகைக் குணங்கள்

6—10 ஆம் பிரகாணங்கள்—[1]பொருதிருத்தல், நட்புக்கொண் டிருத்தல், பொருது மேற்சேறல், நட்புக்கொடு மேற்சேறல், கூடி மேற்சேறல்

நூற்றிரண்டாம் அத்தியாயம்

[2]சந்தி விக்கிரகங்களால் ஆதனமும் யானமும் கூறியவாறும். தானம் ஆதனம் உபேக்ஷணம் என்பன [3]ஒரு பொருட்கிளவிகளாம்.

. [4]சிறப்பும் (கூறப்படும்). [5]குணத்தின் ஒருபகுதி தானமாம். [6]தன் மிகுதிக்குக் காரணமாயுள்ளது ஆதனமாம். [7]உபாயங்களை ஏற்காமை உபேக்ஷணமாம் என்க.

102-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இருத்தல் — அறுவகைக் குணங்களுள் ஒன்று. பொருதிருத்தலாவது பகைவனோடு போர் செய்து தன்னாட்டின்கண் இருத்தல். கூலத்தைப் பெறுதல் முதலியவற்றிற்கு இடையூற்றை உண்டுபண்ணுவதாகிய பகைமையைச் செய்து இருத்தல் என்பதாம். தனிப்பட்டதான 'இருத்தல்' முற் கூறப்பட்டது. ஈண்டு வேறு பண்புடன் கூடிய இருத்தல் கூறப்படுமாதலின் இயைபு விளக்கமாம்.

[2] நட்பாக்கலை யேற்குமிடத்து இருத்தலும் பகையாக்கலை யேற்குமிடத்து மேற்செலவும் முன்னையாசிரியர்களால் விளக்கப்பட்டன என்பது.

[3] எனவே 'ஆதனம்' என்ற சொல்லின் பொருளே ஏனைய இரண்டின் பொருளாம் என்க.

[4] பொதுவாகப் பொருள் ஒத்ததாயினும் ஒன்றுக்கொன்று சிறிது விசேட முடைமை கூறப்படும் என்பது கருத்து.

[5] குணம்—ஈண்டு ஒத்த வன்மையாகிய ஆதனம். அதன் ஒரு பகுதி யாவது, குறைந்த வன்மை. பகைவன் புரிந்த தீங்குக்கு எதிராகத் தீங்கை விளைவித்தற்குரிய வன்மையின்மை என்க. எனவே ஆதனத்தைவிட இழிந்த அந்நிலைமையைத் 'தானம்' என்ற சொல் உணர்த்தும் என்பது கருத்து. வெற்றி விருப்பமுள்ளவன் 'நட்புக்கொண்டிருத்தல்' என்பதை ஏற்றற்கு இத் தானம் காரணமாம் என்றுணர்க.

[6] தனக்குச் சிறப்புண்டாம் நிலைக்குக் காரணமாயுள்ள இருத்தல் 'ஆதனம்' என்ற சொல்லாற் குறிக்கப்படும். பிறன் செய்த தீங்குக்கு மாற்றம் செய்வதோடு நின்று தான் தீங்கை விளைக்காமலிருப்பனது நிலை தானத்துக்கு மாறுபட்டது. மிகுதிக்குக் காரணமாயுள்ள இந்த ஆதனமோ வெனின், ஒத்த வன்மையாகிய தானத்தைவிட மிகுதியான வன்மையுடைமையால் 'பொருதிருத்தல்' என்பதற்குக் காரணமாம்.

[7] சந்தி முதலிய உபாயங்களை ஏலாமை, அன்றிச் சிறிதே ஏற்றல் என்பதை 'உபேக்ஷணம்' என்ற சொல் உணர்த்தும். எனவே பொதுவாக ஒரு

[8]சந்திவிருப்பமுள்ள பகைவனும் வெற்றிவிருப்பமுள்ளவனும் தீங்கிழைக்க வியலாதவிடத்துப் பொருதிருத்தலேயாதல் நட்புக்கொண் டிருத்தலேயாதல் (மேற்கொள்ளல் வேண்டும்).

[9]தன்படை நண்பன்படை [10]காட்டுப்படை என்னுமிவற்றைக் கொண்டு ஒத்தவனையும் சிறந்தவனையும் துன்புறுத்தற்கு (யான்) வல்லவனுவேன் என்று காணுமிடத்து [11]அகத்திலும் [12]புறத்திலும் உள்ள தீயவரைப் [13]பண்படுத்திப் பொருதிருத்தல் வேண்டும்.

என் குடிமக்கள் ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் மிகுதியுடனும் கூடி என் செயல்களை இடையூறின்றிச் செய்வர். பகைவன் செயல்களைத் தடைப்படுத்துவர் என்று எண்ணுமிடத்துப் பொருதிருத்தல் வேண்டும்.

பொருளை உணர்த்தும் இச்சொற்களுக்குச் சிறிய சிறிய வேற்றுமை காரணமாக வெவ்வேறு பெயர்கள் வழங்கப்பெற்றமை காண்க. கபாலசந்தி முதலியவற்றில் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாதிருத்தல் தானம் என்றும், உச்சின்ன சந்தியை ஏற்றுப் பகைவனது துன்பத்தை எதிர்பார்த்திருத்தல் ஆதனம் என்றும், இன்சொல் முதலிய உபாயங்களை ஏலாமை உபேக்ஷணம் என்றும் வேறுபாடு கூறுவாருமுளர்.

[8] வெற்றிவிருப்பமுள்ள அரசனும் அவன் பகைவனும் ஒருவரோடொருவர் சந்தியை விரும்பிய நிலையிலும், ஒருவர்க்கொருவர் தீங்கிழைக்க வியலாத நிலையிலும் பொருதிருத்தலேயாதல் நட்புக்கொண்டிருத்தலேயாதல் மேற்கொள்ளல் வேண்டும். அஃதாவது வன்மை மிகுந்திருப்பின் முன்னையதையும், வன்மை குறைவாயிருப்பின், பின்னையதையும் ஏற்றல் வேண்டும். பகைவன் செயல்களுக்கு இடையூற்றைச் செய்தலும், தன் செயலை ஏற்றலும் முன்னையதன் பயன்களாம். தன் செயல்களைப் புரத்தல் மட்டும் பின்னையதன் பயன் என்றுணர்க.

[9] இனிப் பொருதிருத்தற்குச் சிறப்புக் காரணம் கூறுகின்றார்.

[10] காட்டில் வாழும் படை என்பது.

[11] அகம்—அரண் முதலியன. அங்குள்ள தீயவர் :—வெகுளி பேராசை அச்சம் என்னுமிவற்றை யுடையராய் நாட்டினுள்ளிருக்கும் தீயவர்.

[12] புறம்—தன் நாட்டின் அரண் முதலியவற்றுக்கு வெளியே யமைந்த இடம்.

[13] பண்படுத்தலாவது — பகைநாட்டில் அவர்களை மிகைப்படுத்தலும் தன்னுட்டில் குறைப்படுத்தலும் நாளடைவில் அறவே இல்லாதிருக்கச் செய்தலுமாம்.

[14]ஆதரவின்மை வறுமை பேராசை என்னுமிவற்றையும் தன் படையினாலும் கள்வர் காட்டில் வாழ்வோர் என்பவர் களாலும் துன்புறுத்தப்படுதலையுமுடைய பகைவனுடைய குடி மக்கள் தாமேயாதல் [15]வேறுபடுத்தலாலாதல் என்னை வந்தெய்து வர் என்றும், என்னுடைய உழவு பசுக்காவல் வாணிகம் என்பவை [16]நிறைவுள்ளன, பகைவனுக்காயின் தீங்குடையன, வறுமையால் கேடெய்திய அவன்மக்கள் என்னை வந்தெய்துவர் என்றும், என் னுடைய உழவு பசுக்காவல் வாணிகம் என்பன தீங்குடையன, பகைவனுக்காயின் நிறைவுள்ளன, [17]என் மக்கள் அவனையடைய மாட்டார், அவனுடன் விக்கிரகத்தை மேற்கொண்டு கூலம் பசு பொன் என்னுமிவற்றைக் கவர்வேன் என்றும், [18]என் விலைப் பண்டத்துக்கு இடையூற்றை விளைவிப்பன என்பதுபற்றிப் பிறர் விலைப்பண்டங்களைத் திருப்பிவிடுவேன் என்றும், விக்கிரகத்தை ஏற்பின் [19]பிறனுடைய அங்காடிவழியிலிருந்து திண்மையானவை என்னை வந்தடையுமே யன்றிப் பிறனை யடையா என்றும், விக்கிர கத்தை யடைந்தவன், [20]தூஷ்யன் பகைவன் காட்டில் வழங்கு வோர் என்னுமிவர்களைக் களையமாட்டான் என்றும், அன்றி

---

14 ஆதரவின்மை—கொடை பாராட்டுதல் முதலியவற்றால் மதிக்கப் படாமை.

15 வேறுபடுத்தல்—என்னால் வேறுபடுத்தப்படுதல்.

16 சிறந்த நிலையிலுள்ளன என்பது.

17 என் மக்கள் என்னிடம் அன்புபூண்டவராதலின் வறுமைக்காலத்தும் என்னைவிட்டு அகலமாட்டார்கள் என்பது கருத்து.

18 என் நாட்டில் தோன்றியனவும் விற்பதற்குரியனவுமான விலைப் பண்டங்களின் விற்பனைக்குப் பிறநாட்டினின்றும் வந்த விலைப்பண்டங்கள் இடையூறாயிருப்பின், அவற்றை என் நாட்டினின்றும் அகற்றிவிடுவேன் என்பது.

19 பகைவனுடன் விக்கிரகத்தையேற்பின், அதன் காரணமாக அவனைச் சார்ந்த அங்காடிவழியிலிருந்து யானை குதிரை யானைத்தந்தம் முதலிய திண்மைப் பொருள்கள் என்னைச் சார்ந்துவிடும் என்பது.

20 நான் பகைவனுடன் விக்கிரகத்தை மேற்கொள்ளுங்கால் அவன் தன் மண்டலத்தின் தூய்மை குறித்துத் தூஷ்யர் முதலியவர்களைக் களைதற் கியலாது என்பது கருத்து.

[21]அவர்களுடன் விக்கிரகத்தை அடைவான் என்றும், [22]நட்பிலக் கணமுள்ள என் நண்பனை [23]எதிர்த்துச் சிறிய காலத்தில் [24]சிறி தான கேட்டினாலும் [25]செலவினாலும் மிகுந்த பொருளை [26]யடை வான் என்றும் குணங்களை யுடையதும் [27]எளிதில் கைப்பற்றுதற் குரியதுமான நிலத்தைக் கவர்வதற்கு எல்லாப் படைகளுடன் என்னைப் புறக்கணித்து மேற்சேற விருப்பமுள்ள பகைவன் மேற் சேருவாறு செய்வேன் என்றும் கருதுமிடத்துப் [28]பகைவனது மிகுதியைத் தடை செய்தற்பொருட்டும் [29]வன்மையின் பொருட் டும் பொருதிருத்தல் வேண்டும்.

[30]தடைப்படுத்தப்பட்டவன் அவனையே களைவான் என்பர் ஆசிரியர்.

[31]பிறன் மிகுதியால் மிகுதியை எய்தினனாயின் களைதலைச்

---

21 அவர்கள்—தூஷ்யர் முதலியோர்.

22 இதுகாறும் ஒத்தவனுடன் பொருதிருத்தலைப் பற்றிக் கூறினார். இனிச் சிறந்தவன் பொருதிருத்தற்குரிய காரணங்களைக் கூறுகின்றார். நட்பிலக்கணம் 107-ஆம் அத்தியாயத்திற் கூறப்படும்.

23 என் பகைவன் எதிர்த்தென்பது.

24 மிகச்சில படைகளுக்குண்டாம் அழிவு என்பது.

25 செலவு—பொருட்செலவு.

26 அவ்வாறு மேற்சேறலால் பகைவனுக்கு மிகுந்த பொருள் உண்டாம் ஆகலின், அவ்வாறு அவனுடைய மேற்சேறலை யான் தடுத்துவிடுவேன் என்பது.

27 'பகைவனால்' என்பதை முன்னர்க் கூட்டிப் பொருள் கொள்க.

28 மேற்கூறிய காரணங்களால் பொருதிருத்தலைக் கொள்ளின் உண் டாம் பயனைக் கூறுகின்றார்.

29 தன் வன்மையை வெளிப்படுத்தற் பொருட்டும் என்க.

30 மேற்சேறற் குரியானுடன் மேற்சேறற் பொருட்டு எல்லாப் படை களோடு முயலும் பகைவனுடைய மிகுதியைத் தடுத்தற் பொருட்டு வெற்றி விருப்பமுள்ள எவ்வரசன் பொருதிருத்தலை மேற்கொள்வானோ அவ்வேந் தனைக் கருதி இவன் எனது மேற்சேறலைத் தடுத்தான் என வெகுண்ட அப் பகைவன் மேற்சேறற் குரியானிடமிருந்து திரும்பி, அவ்வேந்தனை வேரறக் களைந்துவிடுந் தீங்குண்டாதல் பற்றி அப்பகைவனைக் குறித்துப் பொரு திருத்தலை மேற்கொள்ளல் கூடாது என்பது ஆசிரியர் கொள்கையாம்.

31 மேற்கூறப்பட்ட ஆசிரியரின் கொள்கையைக் கௌடலியர் மறுக் கிறார்.

செய்யும் ஆற்றல் பெறுதற்குரிய அவன் துன்பமற்ற [32] இவனுக்குத் [33] துன்பம் தருவதன்றிக் களையுமாற்றல் பெறான். ஆகலின் அது பொருந்தாதென்பர் கௌடலியர்.

[34] இம்முறையில் பகைவனை நோக்கி மேற்சேறற்குரியான் [35] தீங்கெய்தப்பெறாது [36] இவனுக்குத் துணைபுரிவான். [37] ஆதலால் எல்லாப் படைகளுடன் [38] தொடக்கமுள்ளவனைப் பொருதிருத்தல் வேண்டும்.

[39] பொருதிருத்தற்குரிய காரணங்களில்வழி நட்புக்கொண் டிருத்தல் வேண்டும்.

---

[32] இவன் — பொருதிருத்தலை மேற்கொண்டவனும் விதனமற்றவனு மான வெற்றிவிருப்பமுள்ள அரசன்.

[33] மேற்சேறலிலிருந்து திருப்பப்பெற்றவன் தன்னைத் தடைப்படுத்திய வனுக்குத் துன்பத்தை விளைவிப்பானே அன்றிக் களைதலைச் செய்யமாட் டான். மேலும் பொருதிருத்தலை மேற்கொள்ளாத நிலையில் தான் அப் பகைவன் எவ்விதமான இடையூறுமின்றி மேற்சேறற்குரியானை வென்று அதனாலுண்டான படை முதலியவற்றால் மிகுதி நிரம்பப்பெற்று வெற்றி விருப்பமுள்ள இவ்வரசனைக் களைவான். ஆதலின் பொருதிருத்தலை மேற் கோடல் நன்றென்பது கருத்து.

[34] பொருதிருத்தலால் உண்டாம் இன்றியமையாப் பயனொன்றைக் கூறு கின்றார். இம்முறையில்—மேற்சேறற் குரியானுடன் மேற்சேறலை ஏற்ற பகைவனுடன் பொருதிருத்தல் என்ற இம்முறையில்.

[35] எவ்விதத் தீங்கும் அடையப்பெறாது புரக்கப்பட்டவன் என்பது.

[36] தனக்கு உதவிபுரிந்த வெற்றிவிருப்பமுள்ள இந்த அரசனுக்கு.

[37] மேற்சேறற் குரியானுடன் பொருதிருத்தல் வேண்டும் என்பதற்கு மேற்கூறிய காரணங்களுண்மையால் என்பது.

[38] எல்லாப் படைகளுடன் கூடி மேற்சேறற்கு முயல்பவனைக் குறித்துப் பொருதிருத்தல் வேண்டும் என்பது. 'பொருதிருத்தல்' என்ற பிரகரணம் இத்துடன் முற்றும். இனி 'நட்புக்கொண்டிருத்தல்' என்னும் பிரகரணம் விளக்கப்படும். நட்புக்கொண்டிருத்தலாவது — போர்ச்செலவு வலியற் றிருக்குங்கால் பகைவனோடு சந்தி செய்துகொண்டிருத்தல். சந்தி—நட்பாக் கல். பொருதிருத்தற்குரிய காரணங்கள் முரண்படின் இது ஏற்கப்படு மாதலின் பிரகரண இயைபு புலனாம்.

[39] அக்காரணங்கள் தன்னிடம் முரண்படின், அதாவது பொருதிருத் தற்குக் கூறிய அக்காரணங்கள் தன் பகைவன்பால் காணப்படின், நட்புக் கொண்டிருத்தலை மேற்கொள்ளல் வேண்டும் 'நட்புக்கொண்டிருத்தல்' என்ற பிரகரணம் முடிவுற்றது.

[40]பொருதிருத்தற்குரிய காரணங்களால் [41]மேன்மை எய்திய வன் [42]எல்லாப் படைகளுடன் கூடியவனைத் தவிர ஏனையோன் பால் மேற்சேறல் வேண்டும்.

பகைவன் துன்பமுடையான் என்றும் இவன் [43]குடிகளுக் குண்டான துன்பத்தை எஞ்சிய மக்கள் நீக்குதல் இயலாதென்றும் இவன்குடிகள் தன் படைகளால் துன்புறுத்தப்பட்டும் அன்பற் றும் கேட்டையடைந்தும் ஊக்கமற்றும் ஒன்றுக்கொன்று வேறு பட்டும் இருத்தலால் வஞ்சித்தற்குரியன என்றும் தீ நீர் நோய் [44]மரகம் வறுமை என்னும் இவைகாரணமாக எருது பணியாளர் கருவூலம் என்னுமிவற்றைப் போற்றுதற்குரிய கருவிகளின் கேட் டைப் பகைவன் அடைந்திருக்கிறான் என்றும் கருதுமிடத்துப் பொருது மேற்சேறல் வேண்டும்.

என் [45]நண்பனும் பின்னுள்ள நண்பனும் வன்மை வயது முதிர்ச்சி அன்பு என்னுமிவற்றையுடைய [46]மக்களையுடையர். பகைவனும் பகைவற்கு நண்பனும் பகைவனுடைய நண்பற்கு நண்பனும் [47]மாறுபட்ட மக்களையுடையர். [48]நண்பனால் பகைவ

---

40 இனிப் 'பொருதுமேற்சேறல்' என்னும் பிரகரணம் கூறப்படும். பொருதுமேற்சேறல்—பின்றொடர்ந்த பகைவரோடு பொருது தன்னோ டெதிர்த்த பகைவனை நோக்கிச் செல்லுதல். மேற்சேறலை 'யானம்' என்ப.

41 மேன்மை யெய்தியவன் என்பது ஈண்டு சக்தி மிகுந்தவன் என்னும் பொருட்டு.

42 எல்லாப் படைகளையும் திரட்டிக்கொண்டு மேற்சேறற் குரியா னொருவனைக் குறித்து மேற்சேறலை யேற்ற பகைவனைத் தவிர ஏனைய பகை வனுடன் என்க. அவ்வாறுள்ள பகைவனுடனாயின் 'பொருதிருத்தல் வேண்டும்' என்பது முன்னர்க் கூறப்பட்டது.

43 குடிகள்—அமைச்சர் முதலியோர்.

44 மரகம்—உயிர்க்கேட்டுக்குக் காரணமானதொரு நோய்.

45 நண்பன்—முன்னுள்ள நண்பனை அரசன்.

46 மக்கள்—அமைச்சர் முதலியோரும் ஏனைய குடிமக்களும்.

47 மாறுபாடு—வன்மையின்மை இளவயது அன்பின்மை.

48 என் நண்பன், என் பகைவனுடைய நண்பற்கு நண்பனுடன் விக்கிர கத்தை ஏற்குமாறும் எனக்குப் பின்னுள்ள நண்பன் என் பகைவனுடைய நண்பனுடன் விக்கிரகத்தை ஏற்குமாறும் செய்து நான் மேற்சேறற்குரியா னொருவனுடன் மேற்சேறலை ஏற்றற்கு வல்லவனாவேன் எனக் கருது மிடத்துப் பொருதுமேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

னுடைய நண்பற்கு நண்பனுடனும் பின்னுள்ள நண்பனுல் பகைவற்கு நண்பனுடனும் பகையாக்கலைச் செய்து பொருதுமேற் சேறற்கு வல்லவனுவேன் என்று கருதுமிடத்துப் பொருதுமேற் சேறல் வேண்டும்

[49]ஒருவனுல் மட்டும் குறுகிய காலத்தில் பயன் எய்தத் தக்கதாகக் கருதப்படின் பகைவற்கு நண்பனுடனும் பகைவனுடைய நண்பற்கு நண்பனுடனும் பொருது மேற்சேறல் வேண்டும்.

[50]மாறுபடின் நட்புக்கொடுமேற்சேறல் வேண்டும்

[51] 'ஒருவனுல் மேற்சேறற்கு இயலாது, மேற்சேறல் இன்றி

---

[49] ஏதேனும் ஒரு பயன் ஒருவனுல் மட்டும் குறுகிய காலத்தில் எய்தற்குரியது என்று காணப்படின் பகைவற்கு நண்பனுடனும் அவன் நண்பனுடனும் விக்கிரகத்தை மேற்கொண்டு பின்னர் மேற்சேறற்குரியானுடன் மேற்சேறல் வேண்டும். பயன் பிறனுலடைதற் குரியதாயினும் நீண்ட காலத்தால் எய்தற்குரியதாயினும் அவர்களுடன் சந்தியை மேற்கொண்டு மேற்சேறற் குரியானுடன் மேற்சேறலை ஏற்றல் வேண்டும். பகைவனுடைய நண்பன் முதலியவர் வெகுண்டு எதிர்ப்பதற்கு முன்னரே பயன் கைப்பற்றப்படுமாதலின் மேற்சேறற் குரியானைக் களைந்த பின்னர் அவர்களைக் களைதற்கு முயலலாம் எனக்கொண்டு பகைவனுடைய நண்பற்கு நண்பனுடனும் பகைவற்கு நண்பனுடனும் விக்கிரகத்தைச் செய்து பொருது மேற்சேறல் வேண்டும் எனக் கூறினுர். 'பொருது மேற்சேறல்' என்ற பிரகரணம் இத்துடன் முடிவுபெற்றது.

[50] இனி, அடுத்துள்ள 'நட்புக்கொடு மேற்சேறல்' என்ற பிரகரணம் தொடங்கப்படும். 'ஒரு பகைவனைக் குறித்துச் செல்லுங்கால் தன்னைப் பின்ருெடரும் மற்ருெரு பகைவனெடு சந்தி செய்துகொண்டு மேற்சேறல்' என்பது அதன் பொருள். முன்னைப் பிரகரணத்திற்கு மாறுபட்டதாகலின் அதன் பின் இது வைக்கப்பட்டது. பொருது மேற்சேறற்குக் கூறிய காரணங்கள் தன்பால் காணப்படாமலும் தன் பகைவன்பால் காணப்பட்டுமிருப்பின் வெற்றிவிருப்பமுள்ளவன் நட்புக்கொடு மேற்சேறலை ஏற்றல் வேண்டும் என்பது கருத்து. இத்துடன் 'நட்புக்கொடு மேற்சேறல்' என்ற பிரகரணமும் முற்றும்.

[51] இனிக் 'கூடி மேற்சேறல்' என்ற பிரகரணம் விளக்கப்படும். 'தன்னிற் குறைவு ஒப்பு மிகுதியான வன்மை வாய்ந்த துணைவர் பலருங் கூடிப் பகைமேற் செல்லுதல்' என்பது அதன் பொருள். முன்னர்த் தனியே பகைவருடன் மேற்சேறல் கூறப்பட்டது. ஈண்டுக் கூடி மேற்சேறல் கூறப்படுதலின் பிரகரண வியைபுண்மை யறிக. ஒருவனுல் — துணையின்றித் தனித்து என்றவாறு.

யமையாததாம்' என்று கருதுமிடத்து ஒருங்கு சேர்ந்த ஒத்தவர் தாழ்ந்தவர் சிறந்தவர்களுடன் [52]சிலவிடத்துப் பகுதியைக் குறிப்பிட்டும் பலவிடத்துப் பகுதியைக் குறிப்பிடாமலும் கூடிமேற் சேறல் வேண்டும். [53]அவர்களுள் ஒருவர் சேராவிடின் பகுதியைக் குறித்துப் படையைக் கேட்டல் வேண்டும். [54]கூடிமேற்சேறலைப் பயனுகவும் செய்யலாம்.

[55]ஊதியப் பேற்றில் ஐயமின்றேல் பகுதிக் குறிப்பானும் [56]ஐயஃமுறின் ஊதியப் பகுதியானும் குறிப்பிடல் வேண்டும்.

சுலோகம்

[57]படையை ஒத்த பகுதி பூர்வம். [58]உழைப்பை ஒத்தது

---

52 கூடித் துணைபுரிபவர்களுக்குச் சிலவிடங்களில் இத்துணைக் கூறு கொடுப்பேன் என்று வரையறை செய்துகொண்டும் பலவிடங்களில் அவ்வாறு வரையறையைச் செய்துகொள்ளாமலும் கூடி மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

53 ஒத்தவர் முதலியவருள் ஒருவர் சேராவிடின் அவராற் கொடுக்கப்பட வேண்டியதாக வரையறுக்கப்பட்ட பகுதியின் அளவுக்கேற்பப் படையைக் கொடுக்கும்படிக் கேட்டல் வேண்டும் என்பது கருத்து.

54 என்னுடைய செயல்களில் நீ கூடித் துணைபுரிந்தால், நானும் உன்னுடைய காரியங்களில் கூடித் துணைபுரிவேன் என்று குறிப்பிடுதலும் நன்றென்பது கருத்து.

55 நிலம் முதலியவை நிச்சயமாகக் கிடைக்கப்பெறும் என்ற செயல்களில் அந்நிலம் முதலியவற்றின் ஒரு பகுதியைப் பயனுகக் குறிப்பிடலாம் என்பது கருத்து.

56 ஊதியப் பேற்றில் ஐயமிருப்பின் கிடைப்பதில் இத்துணைக் கூறு கொடுப்பேன் என்ற வரையறை செய்துகொள்ளலாம் என்பது கருத்து.

57 மேற்சேறற் சூரியனுடன் கூடிமேற்சென்று வெற்றியடைந்தவர்கள் பெற்ற பொருளை எவ்வாறு பகுத்துக்கொள்ளல் வேண்டும் என்பது பற்றிக் கூறத் தொடங்குகின்றூர். கொடுக்கப்பட்ட படையின் குறை மிகுதிக்கேற்ப அப்படையைக் கொடுத்தவர்களுக்குக் கூறு கொடுத்தல் என்பது ஒரு சாரார் கொள்கை என்பது.

58 அவரவர் உழைப்பின் குறைவு மிகுதிக் கேற்றவாறு கூறு பெறுதல் வேண்டும் என்பது சிறந்ததொரு கொள்கை என்பது.

உத்தமம். [59]ஊதியத்திற் கேற்பவாதல் [60]மூலப்பொருளை யொத்த தாகவாதல் பிரித்துக்கொள்ளுதலுமாம்.

ஏழாம் அதிகரணம் 6—10 ஆம் பிரகரணங்கள் 'பொருதிருத்தல்', 'நட்புக்கொண்டிருத்தல்', 'பொருது மேற்சேறல்', 'நட்புக்கொடுமேற்சேறல்', 'கூடிமேற்சேறல்' என்னும் நூற்றிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[59] அவரவர் கைப்பற்றிய பொருள்களை அவரவர் அடைதல் என்ற தொரு பக்கமும் உண்டென்பது கருத்து.

[60] பொருட் செலவினால் முடிவுறத்தக்க செயல்கள் கூடித் தொழில் புரிபவர்களால் முடிக்கப்பெறின், அங்ஙனம் செலவு செய்தற்காக முன்னர்க் கொடுக்கப்பட்ட பொருளின் குறைவு மிகுதிக்கேற்ற பகுதியைப் பொருட் செலவு செய்தவர்கள் கூறுகப் பெறுதற்குரியர் என்பதும் ஒரு கொள்கை.

11—13 ஆம் பிரகரணங்கள்—[1]கலக்கமுடையானும் தீங்கு புரிபவனுமாகிய பகைவரிருவருள் மேற்சேறற்குரியானைத் துணிதல், பிரகிருதிகளின் குறை பொருணசை வெறுப்புக்காரணம், கூடித்தொடர்ந்து செல்வோரை ஆராய்தல்

நூற்றுமூன்றும் அத்தியாயம்

[2]*சிற்றரசர் ஒத்த துன்பத்தை யடைந்த நிலையில் கலக்கமுடையான் தீங்கு புரிபவன் என்பவருள் எவனுடன் மேற்சேறல் வேண்டும் எனின், தீங்கு புரிபவனுடன் என்க. [3]அது முடிவுற்ற பின் [4]கலக்கமுடையானுடன் ஆம். [5]என்னை ? [6]தீங்கு புரிபவனுடன் மேற்செல்லும் நிலையில் கலக்கமுடையான் துணை செய்வான். [7]கலக்கமுடையானுடன் மேற்செல்லும் நிலையில் தீங்கு புரிபவன் துணை செய்யான் ஆகலின் என்க.*

103-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கலக்கமுடையான்—பல பகைவரையும் விதனங்களையுமுடையான். தீங்கு புரிபவன் — நாடோறும் தனக்கு இடர்விளைப்பவன். இவ்விரு திறத்துப் பகைவருள் யாரை நோக்கிப் போர்செய்யப் புறப்படவேண்டுமென்பதை ஆராய்ந்து துணிதலைக்கூறுவது இப்பிரகரணம். மேற்சேறலின் வகைகள் முன்னர்க் கூறப்பட்டன. மேற்சேறற் குரியானைப்பற்றி ஈண்டுக் கூறுதலின் பிரகரண வியைபு விளக்கமாதலறிக.

[2] சிற்றரசர் என்பது ஈண்டுக் கலக்கமுடையானையும் தீங்கு புரிபவனையும் குறிக்கும். ஆகவே அவ்விருவரும் ஒத்த துன்பத்தை யடைந்த நிலையில் முதலில் யாருடன் மேற்சேறல் வேண்டும் என்ற ஐயமேற்படின், தீங்கு புரிபவனுடன் முதலில் மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

[3] தீங்கு புரிபவனுடன் மேற்சேறல் முடிவுற்ற பின்னர் என்பது.

[4] கலக்கமுடையவனுடன் மேற்சேறல் வேண்டும் என்பது.

[5] இம்முறையை யேற்பதற்குக் காரணங் கூறுகின்றார்.

[6] தீங்கு புரிபவனுடன் வெற்றிவிருப்பமுள்ளவன் மேற்செல்லும் நிலையில், கலக்கமுடையவன் காரணங்களை ஆராய்ந்து, நட்பு பணிபுரிதல்களுள் ஒன்றை யேற்றுக்கொண்டு அவ் வெற்றிவிருப்பமுள்ளவனுக்குத் துணைபுரிவான் என்பது கருத்து.

[7] அவ்வாறன்றி, முதலில் கலக்கமுடையானுடன் மேற்செல்லத் தொடங்கின் வெற்றிவிருப்பமுள்ள அவ்வரசனுக்கு எவ்விடத்தும் துன்பம் விளைக்குமியல்புடையன் ஆதலின் பின்னையவன் துணைபுரியமாட்டான் என்பது கருத்து.

[8]துன்பம் நிறைந்த கலக்கமுடையவன், சிறிய துன்பமுள்ள தீங்கு புரிபவன் என்னும் இருவருள் மேற்சேறற்குரியவன் யாவன் எனின், [9]எளிமை பற்றித் துன்பம் நிறைந்த கலக்கமுடையவன் என்பர் ஆசிரியர். [10]'அது பொருந்தாது. சிறு துன்பமுடைய தீங்கு புரிபவனுடன் மேற்சேறல் வேண்டும். என்னை? [11]துன்பம் சிறிதாயினும் எதிர்க்கப்படுமளவில் பொறுத்தற்கியலாதாம். [12]பெரியதும் மிகப்பெரியதாம் என்பது உண்மையே. (ஆயினும்) [13]சிறு துன்பமுடைய பகைவன் எதிர்க்கப்படாத நிலையில் [14]துன்பத்திற்கு எளிதில் மாற்றஞ்செய்து [15]மேற்சேறற்குரியவனுக்குத் துணைபுரிவான். [16]அன்றிப் பின் புறத்தைப் பற்றுவான் ஆகலின்' என்பர் கௌடலியர்.

[17]ஒரே காலத்தில் (பலர்பால்) மேற்சேறல் வேண்டின், அறச் செயலையுடைய துன்பம் மிகுந்தவன், தகாச்செயலையுடைய சிறு துன்பமுடையவன், அன்பிலா மக்களையுடையவன் என்னும் [18]இவருள் மக்களன்பற்றவன்பால் [19]மேற்சேறல் வேண்டும். [20]அறச்

---

[8] கலக்கத்தால் ஒத்தவருள் முதலில் மேற்சேறற்குரியான் இவனெனக் கூறி, கலக்கம் ஏற்றத்தாழ்வுடையதாயிருப்பின் அவருள் மேற்சேறற்குரியான் இவனெனக் கூறத் தொடங்குகின்றார்.

[9] துன்பம் நிறைந்தவனுடன் மேற்செல்வது எளிதில் வெற்றி பெறுதற்குக் காரணமாம்.

[10] ஆசிரியரின் கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறுகின்றார்.

[11] சிறு துன்பமாயினும் பகைவனின் எதிர்ப்புநிலையில் பொறுத்தற்கியலாததாமாகலின், அத்துன்பமுற்ற பகைவன் எளிதில் வெல்லுதற்குரியவன் என்பது கருத்து.

[12] இம் முறைப்படி, துன்பம் மிகுந்தவன் எதிர்க்கப்படுமளவில் மிகவும் எளிதில் வெல்லுதற்குரியனாகானோ? என்கிறார்.

[13] அதற்கு விடை கூறுகின்றார்.

[14] தன்னுடைய அச் சிறுதுன்பத்திற்கு என்பது.

[15] எதிர்க்கப்பட்டவனுக்கென்பது.

[16] எதிர்த்த வெற்றிவிருப்பமுள்ளவனது பகைவனுடைய நண்பனையாதல் அடைவான் என்பது கருத்து.

[17] மேற்சேறற்குரியார் இருவராயவிடத்து ஏற்கும் விதியைக் கூறி, அவர் மூவராயின் ஏற்கவேண்டிய முறையைக் கூறுகின்றார்.

[18] மேற்கூறிய மூவருள் என்பது.

[19] முதலில் மேற்சேறல் வேண்டும் என்பது.

[20] அதற்குக் காரணங் கூறுகின்றார். அறவோனை இவனுடைய குடிமக்கள் இவன்பால் அருள்கொண்டு துணைபுரிவர் என்பது.

செயலையுடைய துன்பம் நிறைந்தவன் எதிர்க்கப்படின் குடிமக்களால் காக்கப்படுவான். [21]சிறு துன்பத்தையுடைய தகாச்செயலையுடையவனை (குடிமக்கள்) விலகி யொழுகுவர். அன்பற்றவர் வலியவனையும் களைகின்றனர். ஆதலால் [22]மக்களன்பற்றவனே மேற்சேறற் குரியான்.

[23]மெலிவு பேராசை மிக்க குடிமக்களுடையவன், [24]குடிமக்களை மதியாது ஒழுகுபவன் என்னுமிவருள் மெலிவு பேராசை மிக்க குடிகளையுடையவனுடன் [25]மேற்சேறல் வேண்டும். [26]மெலிவு பேராசைகளையுடைய மக்களையே எளிதில் வேறுபடுத்தற்கும் துன்புறுத்தற்கும் இயலும். [27]மதிக்கப்படாதவரையாயின் இயலாதாம். [28](அவர்) தலைவனைக் கைப்பற்றுவதால் வயப்படுத்தத் தக்கவர் என்பர் ஆசிரியர். அது பொருந்ாது. என்னை ? [29]மெலிவு பேராசை மிக்க குடிமக்கள் தலைவனிடம் அன்புபூண்டு தலைவனது நன்மையை நாடுவர். அன்பிருப்பின் எல்லாக் குணங்களுமாம் எனக்கொண்டு வேறுபடுத்தலையும் ஏற்கமாட்டார். ஆதலால் மதிக்கப்படாத குடிமக்களை யுடையவனுடனேயே மேற்சேறல்

---

[21] சிறு கலக்கமுள்ளவனும் அறத்தின்பாற்படாத செயல்களையுடையவனுமான அரசன், வெற்றிவிருப்பமுள்ள அரசனால் மேற்சென்று தாக்கப்படின் அவன் குடிகள் அவ்வரசனிடம் விருப்பு வெறுப்பின்றி நொதுமலராக ஒழுகுவராகலின், வெற்றிவிருப்பமுள்ளவன் வேறு துணையின்றித் தன் படைகளைக்கொண்டே அவனை எதிர்க்கவேண்டி வரும் என்பது கருத்து.

[22] மக்களது அன்பைப் பெறாதவன் வலியவனாயினும் தன் குடிகளால் களையப்படுவான் என்பது பற்றி மிக எளிதில் அவனை வென்றுவிடலாம் என்பது கருத்து.

[23] மெலிவு—வறுமை துன்பம் முதலியவற்றால் உளதாயது.

[24] மதியாதொழுகுதல்—கொடை தலையளி முதலியவற்றால் தலைவன் போற்றாமை.

[25] முதலில் மேற்சேறல் வேண்டும் என்பது.

[26] காரணத்தை விளக்குகின்றார்.

[27] கௌரவிக்கப்படாத மக்களை எளிதில் வேறுபடுத்தற்கும் துன்புறுத்தற்கும் இயலாதென்பது.

[28] தம் தலைவன் வயப்படுத்தப்பட்ட பின்னரே அம்மக்கள் வயப்படுத்தப்படுதற்குரியராவர் என்பது.

[29] முற்கூறிய ஆசிரியரின் கொள்கையைக் கௌடலியர் மறுக்கின்றார். அம்மக்கள் தம் தலைவனிடம் அன்புபூண்டவராயின் அவனுக்கு நன்மையையே செய்வர். வேறுபடுத்தப்பட்டவிடத்தும் வேறுபடார். தலைவனிடம் அன்புடனிருத்தலே எல்லா நன்மைக்கும் காரணமாம் என்னும் கொள்கையுடன் இருப்பர் என்பது கருத்து.

வேண்டும் என்பர் கௌடலியர்.

[30]அறத்தின்பாற்படாத செயலுடைய வலியவன், அறச் செயலுள்ள வலியிழந்தவன் என்பவருள் அறத்தின்பாற்படாத வலியவனுடன் மேற்சேறல் வேண்டும். அறமில்லாத வலியவன் [31]எதிர்க்கப்பட்டவிடத்து மக்கள் அருளுவதில்லை. வெளியேற்று தலையோ அவனுடைய பகைவனை யடைதலையோ மேற்கொள்கின் றனர். அறச்செயலையுடைய வலியிழந்தவன் [32]எதிர்க்கப்படின் மக்கள், அருளுதல் தொடர்ந்து வெளியேறுதல் என்பவற்றை மேற் கொள்கின்றனர்.

சுலோகங்கள்

(1—8) [33]சான்றோரை அவமதித்தல், [34]தீயவரை மதித்தல்,

---

[30] அறத்தின்பாற்படாத செயல்களை யேற்று நடாத்தும் வலியானொரு வனும், அறச்செயல் புரியும் வலியிழந்தானொருவனுமிருக்க இவருள் எவ னுடன் முன்னர் மேற்சேறல் வேண்டும் என்பது பற்றிக் கூறுகின்றார்.

[31] தன் பகைவனால் எதிர்க்கப்பட்டபோது அவன்மக்கள் அவனுக்கு உதவிபுரியார். அன்றியும் அரண் முதலிய இடங்களிலிருந்து அவனை வெளி யேற்றல் அல்லது அவன்பகைவனை அடைதல் என்னுமிவற்றை ஏற்பர் என்பது கருத்து.

[32] தன் பகைவனால் அவன் எதிர்க்கப்படின் அவனுக்கு உதவிபுரிதலையும் அவன் அரண் முதலிய இடங்களிலிருந்து வெளியேற நேரிடின் தாமும் தொடர்ந்து அவனுடன் வெளியேறுதலையும் மேற்கொள்வர் என்பது கருத்து. இத்துடன் இவ்வத்தியாயத்தின் முதற்பிரகரணமாகிய பதினொன் றும் பிரகரணம் முற்றும்.

[33] இனி 'பிரகிருதிகளின் குறை பொருணசை வெறுப்புக்காரணம்' என்ற அடுத்த பிரகரணம் விளக்கப்படும். பிரகிருதிகள்—புரோகிதன் அமைச்சன் முதலியோர். அவர்கள்பாற் குறை முதலியன உண்டாதற் குரிய காரணங்கள் என்பது அதன் பொருள். அதாவது யானை குதிரை தலைவர் என்னுமிவர்களின் குறைவும் பொருட் குறைவும் மிகப் பேராசை யும் வெறுப்பும் எக்காரணங்களினால் உண்டாகின்றன என்பது பற்றி இப் பிரகரணம் கூறும். வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு மேற்கூறிய குறை முதலியன மேற்சேறற்குரிய காரணங்களாம். ஆதலின் வெற்றிவிருப்ப முள்ளவன் மேற்கூறியவற்றின் காரணங்கள் தன் நாட்டின்கண் நிகழா திருத்தற் பொருட்டு இவற்றை நன்குணர்தல் வேண்டுமாதலின் இங்கு இப் பிரகரணம் வைக்கப்பட்டது. இதனாற் பிரகரண வியைபு புலனாம். இக் காரணங்களை மேல்வரும் எட்டு சுலோகங்களினால் கூறுகின்றார். சான் றோர்—கல்வி ஒழுக்கம் நற்குடிப்பிறப்பு வன்மை முதலியவற்றாற் சிறந்தவர்.

[34] தீயவர்—நடன் விடன் கூத்தன் முதலியோர்.

முறையல்லாதவழியில் மக்களைத் துன்புறுத்தல், [35]அறத்தின்பாற் பட்ட தக்க கன்மங்களை விலக்கல், [36]தீவினையில் ஈடுபடுதல், [37]அறத்திற்குத் தடைசெய்தல், [38]தகாச்செயலைச் செய்தல், [39]நற்செயலை யழித்தல், [40]கொடுத்தற்குரியதைக் கொடாமை, [41]கொடுக்கத் தகாததைக் கொடுப்பித்தல், தண்டிக்கத்தக்காரைத் தண்டியாமை, தண்டிக்கத் தக்காருக்குக் கடுந்தண்டம் (விதித்தல்), [42]ஏற்கத் தகாதவரை யேற்றல், [43]ஏற்கத் தக்கவரை ஏலாமை, [44]தீங்கு விளைப்பதைச் செய்தல், [45]நன்மை பயப்பனவற்றை யழித்தல், [46]கள்வரிடமிருந்து போற்றாமை, தான் களவு செய்தல், நற்சான்றாளனை (சிபாரிசு செய்பவனை) விடுதல், [47]தொழிற் குணங்களைப் பழித்தல், [48]தலைவரைத் தாழ்த்தல், [49]போற்றத்தக்காரைப் பழித்

---

35 தொன்றுதொட்டு வந்துள்ள நற்செயல்களை விலக்கல்.

36 தீவினை—பிறர்மனை நயத்தல், களவு முதலியன.

37 கிணறு குளம் முதலியன வெட்டுதல் முதலிய அறச்செயல்களைத் தடுத்தல்.

38 கேட்டினை விளைக்கும் செயல்களை ஏற்று நடத்துதல் என்பது.

39 அரண் அணைக்கட்டு முதலியவற்றின் தொழில்களைத் தடைசெய்தல்.

40 கொடுத்தற்குரியன—பணியாளர்க்குரிய கூலி முதலியன.

41 புதிதாக விதிக்கப்பட்ட காணிக்கை முதலியவற்றைக் கொடுக்கச் செய்தல் என்பது.

42 ஏற்கத்தகாதவர்—கள்வர் முதலியோர்.

43 ஏற்கத்தக்கவர்—தன்னுட்டில் தோன்றல் முதலிய குணங்களுடையவரும் தந்தை பாட்டன் வழி வந்தவர்களும் ஆவர்.

44 தீங்கை விளைவிக்கும் சந்தி முதலிய உபாயங்களை மேற்கொள்ளுதல்.

45 நன்மை பயக்கும் சந்தி முதலிய உபாயங்களை அழித்தல் என்பது.

46 மக்களுக்குக் கேட்டை விளைக்கும் கள்வர் முதலிய தீயவரிடமிருந்து மக்களைப் போற்றாமை என்பது.

47 தொழில்கள் நன்கு செய்யப்பட்டிருந்தும் அவற்றின் சிறப்பை இழித்துரைத்தல்.

48 அரண் அணைக்கட்டு முதலியவற்றின் தொழிற்றலைவர்பால் குற்றஞ் சாட்டி அவர்களை இழிந்த தொழில்களில் ஏவுதல்.

49 வேட்பிப்போன் ஆசிரியன் புரோகிதன் முதலியவர்களை அவமதித்தல்.

தல், [50]முதியவருடன் பகைத்தல், [51]முரண்பாடு, பொய், [52]செயல் மாற்றமின்மை, [53]நிலையாயவற்றைச் செய்யாமை, அரசனது [54]விழிப்பின்மை, சோம்பல், புதுநலம் ஏமங்களை யழித்தல் என்னு மிவற்றால் மக்களுக்குத் துன்பம், பேராசை, [55]வெறுப்பு என்பன உண்டாகின்றன.

(9) [56]துன்புற்ற மக்கள் பேராசையையும் பேராசையுடைய வர் அன்பின்மையையும் அன்பற்றவர் பகைவனையும் அடைவர், அல்லது தாமே தலைவனைக் கொல்வர்.

[57]ஆதலால் மக்களுடைய துன்பம் பேராசை வெறுப்புக்களுக் குரிய காரணங்களை யுண்டுபண்ணுதல் கூடாது. உண்டான வற்றிற்கு உடனே மாற்றம் புரிதல் வேண்டும்.

[58]துன்புற்றவர் பேராசையுடையவர் வெறுப்புற்றவர் என்னு

---

50 முதியோர்—கல்வி முதலியவற்றால் சிறந்தோர்.

51 ஒத்த நிலையிலுள்ள பணியாளரிடம் ஏற்றத்தாழ்வுடன் நடந்து கொள்ளுதல்.

52 செய்த உபகாரத்திற்குக் கைம்மாறு செய்யாமை.

53 இந்திரவிழா முதலியன செய்யாமை.

54 விழிப்பின்மை—சூது வேட்டை முதலிய தீச்செயலில் ஈடுபடுதலால் உண்டாவது.

55 வெறுப்பு—ஈண்டு அரசனை வெறுத்தல்.

56 குறைவை எய்திய மக்கள் அது காரணமாகப் பொருணசையையும், அரசனிடமிருந்து விருப்பத்தை எய்தாது அப்பொருணசை காரணமாக அரசனிடம் வெறுப்பையும், அதுகாரணமாக அரசனை விட்டுவிடுதல் அல் லது தாமே அரசனைக் கொன்றுவிடுதல் என்பவற்றையும் மேற்கொள்வர் என்பது கருத்து.

57 ஆதலால் பிரகிருதிகளுக்குக் குறை பொருணசை வெறுப்பு என்ப வற்றுக்குரிய காரணங்கள் உண்டாகாவாறு அரசன் முயலுதல் வேண்டும் என்பதும், அவை உண்டாயின் மாற்றச்செயலால் அவற்றை விரைந்து தடுத்தல் வேண்டும் என்பதும் கருத்து.

58 குறைவு முதலிய மூன்றனுள் முன்னையதைவிடப் பின்னையது சிறப் புற்றது எனக் கூறுகின்றார்.

மிக் குடிகளின் [59]நிலை கூறப்படும் என்க. [60]துன்புற்றவர் துன்புறுத்தற்கும் களைதற்கும் அஞ்சி உடனே சந்தியையாதல் [61]போரையாதல் [62]வெளியேறுதலையாதல் விரும்புகின்றனர். பேராசையுடையோர் ஆசை காரணமாகத் திருப்தியடையாமல் பகைவனுடைய [63]வேறுபடுத்தலை விரும்புகின்றனர். [64]வெறுப்புற்றவர் பகை எதிர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

[65]அவர்களுடைய பொன் கூலங்களுக்குண்டாம் அழிவு எல்லா அழிவிற்கும் காரணமாம். மிக்க முயற்சியால் மாற்றம் புரிதற்குரியதாம். [66]ஊர்தி ஊழியர்களின் அழிவிற்குப் பொன் கூலங்களால் ஈடு செய்யலாம்.

[67]ஒரு பகுதியின்கண் உள்ளதும் தலைவனுக்கு வயப்பட்டது

---

[59] முன்னவரைவிடச் சிறப்புற்ற நிலை கூறப்படும் என்பது.

[60] சிறப்பின் ஏற்றத்தாழ்வு காரணமாக அவர்மூவரிடமிருந்து உண்டாம் தீமைகளைக் கூறுகின்றார். பகைவனது முயற்சியைத் தடை செய்த பின்னர் அவனுடன் சந்தியை ஏற்கலாம் என்று வெற்றிவிருப்பமுள்ளவன் கருதியிருக்கும் நிலையில் அவன் விரும்பாத சமயத்திலேயே அவனுடன் சந்தியைச் செய்கிறார்கள் என்பது கருத்து.

[61] பகைவனது சோர்வையறிந்து அதன் பின்னர்ப் போர் தொடங்கலாமென வெற்றிவிருப்பமுள்ளவன் கருதியிருக்கும் நிலையில் உடனே பகைவனுடன் போரை ஆரம்பித்துவிடுவர் என்பது கருத்து.

[62] எல்லா உபாயங்களையும் ஏற்றும் பயனற்ற நிலையில் இறுதியாக அரண் முதலியவற்றைத் தீயிட்டு வெளியேறுதல் வேண்டும் என்று அரசன் கருதிய நிலையில், உடனே அரணிலிருந்து வெளியேறுதலைச் செய்வர் என்பது.

[63] வேறுபடுத்தலை யேற்று அதன்படி யொழுகுகின்றனர் என்பது.

[64] தம் அரசனைக் குறித்து எதிர்த்துவரும் பகைவனுடன் கலந்துகொண்டு தாமும் அவனை எதிர்க்கின்றனர் என்பது கருத்து.

[65] பிரகிருதிகளுக்குண்டான பொன் முதலியவற்றின் அழிவால் யானை குதிரை காலாட்படை முதலிய எல்லாம் அழிந்துவிடும். ஆகவே அவ்வழிவு நேராதபடி மிக முயன்று தடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[66] குதிரை பணியாளர் முதலியோர் அழிவுறின் அவ்வழிவைப் பொன் கூலம் முதலியவற்றால் ஈடு செய்துவிடலாம் என்பது கருத்து.

[67] பிரகிருதிகளின் ஒரு பகுதியிலுள்ள பொருணசையானது தலைவனொருவனால் தூண்டுதற்கும் தடுத்தற்கும் உரியது என்பதும் கலக்கமுடையவன் தீங்கு புரிபவன் என்னுமிவர்களுடைய பொருளைக்கொண்டே தணித்தற்குரியது என்பதும் தலைவர் தாமே ஏற்றுக்கொள்ளுதற்கு முரியதென்பதும் கருத்து

மான பேராசையானது பிறர்பொருள்களால் தடுத்தற்கும் ஏற்றற்கும் உரியதாம்.

[68]வெறுப்பானது தலைவனை யடக்குதலால் தடுத்தற்குரியது. [69]தலைவனற்ற மக்கள் வயப்படுத்தற்கும் பிறரால் வேறுபடுத்தப் படாமைக்கும் உரியராவர். [70](ஆனால்) இடுக்கணைப் பொறுத்தற் இயல்பற்றவராவர். [71]தலைவனுடைய பல்வகைப்பட்ட போற்றுதல்மொழிகளால் வேறுபடுத்தப்படாமையையும் போற்றப்படுதலையும் அடைவர். இடுக்கணைப் பொறுத்தற்கும் இயல்புள்ளவராவர்.

[72]கூடித் தொடர்ந்து செல்வோருள்ளும் சந்தி விக்கிரகங்களின் காரணங்களைக் [73]கண்டு வன்மை தூய்மைகளை யுடையானுடன்

---

[68] அரசனிடம் மக்கள் வெறுப்புக்கொள்வதற்குக் காரணமாகவுள்ள தலைவனை ஒறுத்து அடக்குதலால் தணிக்கத்தக்கது என்பது கருத்து.

[69] தலைவனொருவன் இன்றியே மக்களுக்கு வெறுப்பு நேரின், அவ் வெறுப்புள்ளார்களை வெற்றிவிருப்பமுள்ளவன் வயப்படுத்தலாம் என்பதும் பகைவரால் வேறுபடுத்தப்படின் அவர் தம்முள் ஒற்றுமை யின்மையால் அதனை ஏற்கமாட்டார் என்பதும் கருத்து.

[70] தமக்கெனத் தலைவன் இல்லாதவரிடம் இங்ஙனம் சில குணங்களிருப் பினும் குற்றமுமுளது என்று கூறுகின்றார். ஏதேனும் இடுக்கண் உண் டாயின் வெற்றிவிருப்பமுள்ளவனை விட்டுப் போய்விடுதல் அவர்பால் நிக ழும் குற்றமாகும் என்பது.

[71] தலைவன் ஒருவன் உளனாயின் அவனால் நன்கு மதிக்கப்பெற்றும் ஊக்க மளிக்கப்பட்டும் போற்றப்பட்டுமுள்ள அக்குடிகள் பிறரால் வேறுபடுத்தப் படாதவராகவும் பகைவனது எதிர்ப்பு முதலிய இடுக்கண்களைப் பொறுப்பவ ராகவும் இருப்பர் என்பது கருத்து. குறை பொருணசை வெறுப்புக் காரணம் என்ற பிரகரணம் இத்துடன் முடிந்தது.

[72] இனிக் 'கூடித் தொடர்ந்துசெல்வோரை யாராய்தல்' என்னும் பிரகரணம் விளக்கப்படும். கூடித் தொடர்ந்து செல்வோர்—வெற்றி குறித்துச் செல்லும் பேரரசனைப் பிரியாது பின்தொடர்ந்து கூடிச்செல்லும் சிற்றரசர்கள். 'கூடி மேற்சேறல்' என்னும் பிரகரணத்தை விளக்கின முன்னை யத்தியாயத்தில் கூடித் தொடர்ந்து செல்வோருக்குரிய கூறுகள் விளக்கிக் கூறப்பட்டன. அவர்களுள் ஏற்றத்தாழ்வு கூறுவதற்கு இப் பிரகரணம் ஈண்டு வைக்கப்பட்டதாகலின் இயைபு புலனும்.

[73] கண்டு—ஏற்றத் தாழ்வுகளை ஆராய்ந்து கண்டு,

கூடி மேற்சேறல் வேண்டும். [74]என்னை? [75]வன்மையுடையான் [76]பகைவற்கு நண்பனை எதிர்த்தற்கும் மேற்சேறற்கு [77]உதவி புரிதற்கும் உரியனுவான். [78]தூயவன், பயன் பயனின்மைகளில் அறத்தின்பாற் பட்டவற்றையே ஏற்பான் ஆகலின் என்க.

[79]அவர்களுள் சிறந்தவனொருவனுடன் சேர்ந்து மேற்சேறலாமா? அல்லது ஒத்தவரிருவருடன் சேர்ந்து மேற்சேறலாமா எனின், ஒத்தவரிருவருடன் சேர்ந்து மேற்சேறல் நன்று. [80]என்னை? சிறந்தவனுல் தாழ்த்தப்பட்டு ஒழுகுகிறுன். ஒத்தவரிருவர்க்கு வஞ்சித்தல் காரணமாகச் சிறப்பு ஏற்படின் அவர் எளிதில் வேறு படுத்தற்குரியராவர். [81]தீயவனொருவன் இருவரால் அடக்கப் படுதற்கும் வேறுபடுத்தலால் களைதலை அடைதற்கும் உரியனுவான்.

[82]ஒத்தவனொருவனுடனு? அல்லது தாழ்ந்தவரிருவருடனு

---

74 வன்மை தூய்மைகளால் உண்டாம் பயனைக் கூறுகின்றுர்.

75 வன்மை—ஈண்டு ஊக்கம் முதலிய மூவகை யாற்றல்கள்.

76 பகைவன்—வெற்றிவிருப்பமுள்ள அரசனுக்குப் பின்புறத்துள்ளவனும் பகைவற்கு நண்பனுமான பகைவன்.

77 உதவிபுரிதல்—மேற்சேறற்கு உதவிபுரியும் படைகளைக் கொடுத்தல்.

78 விரும்பிய பயனைப் பெறினும் பெருதிருப்பினும் அறத்திற்கு மாருக ஒன்றையும் செய்யான் என்பது கருத்து.

79 கூடித் தொடர்ந்து செல்வோர் விரும்பத்தக்கவராயின் சிறந்தானொருவனும் ஒத்தவரிருவரும் ஆகிய இவருள் எவரை ஏற்றுக்கொள்ளலாம் எனின் ஒத்தவரை ஏற்பது நன்றென்பது கருத்து.

80 அதற்குக் காரணங் கூறுகின்றுர்; தன்னிற் சிறந்தவனுடன் சேர்ந்துகொண்டு மேற்சென்றுல் அவனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் வேண்டும். ஒத்தவருடன் சேர்ந்து சென்றுல் அங்ஙனம் கீழ்ப்படிய வேண்டாமை ஒரு நன்மை. அவரிருவரும் தன்னை வஞ்சித்துச் சிறப்புப் பெறுவராயின், அவருள் ஒருவர்க் கொருவரை வேறுபடுத்தல் மிக எளிதாம் என்பது.

81 அவரிருவருள் ஒருவன் தீயவனுயவிடத்து, மற்றவனைத் துணையாகக் கொண்ட அவ் வெற்றிவிருப்பமுள்ள அரசன் அவனை யடக்குதற்கும், தூஷ்யர் முதலியவர் மூலம் வேறுபடுத்தலைக் கைக்கொண்டு களைதற்கும் வல்லவனுவான் என்பது கருத்து.

82 ஒத்தவனொருவனுடன் கூடி மேற்சேறல் நன்று அல்லது தாழ்ந்தவர் இருவருடன் கூடி மேற்சேறல் நன்று எனின், பின்னையதே நன்றென்பது.

எனின், தாழ்ந்தவரிருவருடன் (என்பது) நன்று. [83]அவர் இரு பயனை விளைவிப்பவராகவும் வயப்பட்டவராகவும் இருத்தலின் என்க. [84]பயன் விளைந்த பின்னர் ஆயின்—

சுலோகங்கள்

(1) [85]பயனை எய்திய தூய்மையற்ற சிறந்தவனிடமிருந்து மறைவில் (ஏதேனுமொன்றைத்) தலைக்கீடாகக் கொண்டு விலகி விடல் வேண்டும். [86]தூய செயல்களை யுடையனுயின் விடுதலையை எதிர்பார்த்தல் வேண்டும்.

(2) [87]மனையை வெளியேற்றி [88]நெருக்கடியிலிருந்து முயற்சி யுடன் வெளியேறல் வேண்டும். [89]பயனை யெய்திய ஒத்தவனிட மிருந்தும் நம்பிக்கை யடைந்தவனுக்கு [90]அச்சமுண்டாம்.

(3) [91]பயனை யெய்தியவன் சிறந்திருப்பினும் ஒத்திருப்

---

83 காரணங் கூறுகின்றார்; தனக்கு முன்னும் பின்னும் இருந்து பாது காப்பாளராகி இரு பயனை விளைவித்து வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு வயப் பட்டவராகவும் இருப்பர் என்க.

84 அரசருடன் கூடி மேற்சேறற் பொருட்டுத் தலைவனுய ஒரு அரசனால் விரும்பப்படும் அரசர்களைப்பற்றிய விதிகள் இதுகாறும் கூறப்பட்டன. இனி ஒரு அரசன் கூடி மேற்சேறற் பொருட்டு வேறொரு அரசனால் விரும்பப் பட்டவிடத்து ஏற்கவேண்டிய விதிமுறையைக் கூறுகின்றார்.

85 தன் துணையைக்கொண்டு வெற்றி யடைந்தவனும் தன்னிற் சிறந்த வனுமான அரசன் பயனை அடைந்த பின்னர்த் தூய்மையற்றவனுகக் காணப்படின், ஏதேனுமொன்றைத் தலைக்கீடாகக் காட்டிப் பிறர் அறியா வாறு அவனிடமிருந்து விலகிவிடல் வேண்டும் என்பது கருத்து.

86 அவ்வரசன் தூயநடத்தை யுடையனுகக் காணப்படின், அவனுகத் தனக்கு விடுதலையளிக்கும் சமயத்தை எதிர்பார்த்திருத்தல் வேண்டும் என்பது.

87 வெளியேறுதல் இன்றியமையாததாயின் செயற்பாலதைக் கூறு கின்றார். மனை—ஈண்டு மனைவிபோன்ற நெருங்கிய உரிமைப் பொருள்கள்.

88 அரண் முதலிய இடத்திலிருந்து என்பது.

89 ஒத்தவனிடமிருந்து வெளியேறுதற்குக் காரணங் கூறுகின்றார்.

90 அவன் தூய்மையற்றவனுதலின் அவனிடமிருந்து தீங்குகள் உண் டாம் என்பது கருத்து.

91 சிறந்தவனுகவோ ஒத்தவனுகவோ இருக்கட்டும். பயனை யடைந்த பின்னர் எல்லோரும் விபரீதச்செயலை ஏற்பர். மேன்மையை எய்தியவனிடம் நம்பிக்கை வைத்தல் கூடாது. செல்வம் வந்துற்றகாலை மனம் மாறுபடு மாகலின் என்க.

பினும் மாறுபாட்டை யடைவன். மிகுதி மனமாற்றத்தை யுண்டாக்குமாகலின் மேன்மையை யெய்தியவன் நம்புதற்குரியனல்லன்.

(4) [92]சிறந்தவனிடமிருந்து சிறுகூற்றைப் பெறினும் அதனைப் பெருதொழியினும் மகிழ்ந்த முகத்துடன் செல்லல் வேண்டும். பின்னர் இடைவெளியில் இவனை ஒறுத்து இருமடங்கைக் கவர்தல் வேண்டும்.

(5) [93]பயன் எய்தியவன், தான் தலைவனுயவிடத்துக் கூடித் தொடர்ந்தவரை [94]விடுத்தல் வேண்டும். [95](தான்) இழந்தவனுகவும் இருக்கலாம். [96]இழக்கச்செய்தல் கூடாதாம். [97]அவ்வாருயின் மண்டலத்தின் அன்புண்டாம்.

ஏழாம் அதிகரணம் 11—13 ஆம் பிரகரணங்கள்
'கலக்கமுடையானும் தீங்கு புரிபவனுமாகிய பகைவர் இருவருள் மேற்சேறற்குரியானைத் துணிதல்', 'பிரகிருதிகளின் குறை பொருணசை வெறுப்புக்காரணம்', 'கூடித்தொடர்ந்து செல்வோரை ஆராய்தல்' என்னும் நூற்றுமூன்ரும் அத்தியாயம் முற்றிற்று.

---

[92] தன்னிற் சிறந்தவனிடமிருந்து மிகச்சிறிய பகுதியைப் பெறினும் அல்லது எப்பகுதியும் பெருதிருப்பினும் அவனைவிட்டு விலகும்போது மலர்ந்த முகக்குறியுடனேயே செல்லுதல் வேண்டும் என்பதும், அதன் பின்னர் அச்சிறந்தவனை ஒறுத்தற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்றுத் தனக்குரிய கூற்றின் இருமடங்கைக் கைப்பற்றிவிடல் வேண்டும் என்பதும் கருத்து.

[93] வெற்றிவிருப்பமுள்ளவன் பிறனைச் சார்ந்தவிடத்து ஏற்கத்தக்க முறையைக் கூறி, அவன் சுதந்தரனுயவிடத்து ஏற்றற்குரிய விதிமுறையைக் கூறுகின்ருர்.

[94] நன்கு கௌரவித்து அனுப்புதல் வேண்டும் என்பது.

[95] தன் கூறு துணைவருடைய கூற்றினும் குறைவுபட்டிருப்பினும் நன்று என்பது.

[96] எக்காரணம் பற்றியும் கூடித்துணைபுரிந்தவர் தன்னிற் குறைந்த கூற்றைப் பெறுதல் கூடாதென்பது கருத்து.

[97] மேற்கூறிய விதிமுறைகளை யேற்பின் அரசமண்டலத்தின் அன்பைப் பெறுபவனுவான் என்பது கருத்து.

14, 15-ஆம் பிரகரணங்கள்—[1]சந்திசெய்துகொண்டோர் பிரிந்துசேறல், வரையறையுடையது வரையறையில்லது பிரிந்தவனைப்பற்றியது என்னும் சந்திகள்

நூற்றுநான்காம் அத்தியாயம்

வெற்றிவிருப்பமுள்ளவன் [2]இரண்டாவது பிரகிருதியை இவ்வாறு வஞ்சித்தல் வேண்டும். சந்தி செய்துகொண்டோர் பிரிந்து சேறலில் சிற்றரசனை [3]'நீ இங்கிருந்து செல், நான் இங்கிருந்து செல்வேன், ஊதியம் சமமாம்' என்று (கூறி) ஏவுதல் வேண்டும்.

[4]ஊதியம் சமமாயின் சந்தியும், முரண்படின் வன்மையுமாம்.

104-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பகைவரிருவர் ஒருவரை யொருவர் சந்தி செய்துகொண்ட பின் இருவரும் மற்றொரு பகைவனை வேறல் கருதித் தனித்தனியே வெவ்வேறு திக்குக்களை நோக்கிப் போதல். மேற்சேறல் என்பதனை விளக்கக் கருதிய ஆசிரியர் அதன் பிரிவான, தனிப்பட்ட மேற்சேறல் வேறு குணங்களுடன் கலந்த மேற்சேறல் என்பவற்றுள் தனிப்பட்ட மேற்சேறலை முன்னர்க் கூறினார். பின்னையது பொருதுமேற்சேறல், நட்புக்கொடு மேற்சேறல், கூடி மேற்சேறல், சந்தி செய்துகொண்டோர் பிரிந்துசேறல் என்று நால்வகைப் படும். அவற்றுள் முன்னைய மூன்று பிரிவுகளும் இதுகாறும் விளக்கப் பட்டன. நான்காவதை இப்பிரகரணம் விளக்குமாகலின் பிரகரணவியைபு புலனும்.

[2] பகைவனுடைய குடிமக்களை என்பது.

[3] நின்னால் மேற்சேறற்குரியானிருக்குமிடத்திற்கு நீ இவ்வழியாகச் செல், என்னால் மேற்சேறற்குரியானிருக்குமிடத்திற்கு யான் இவ்வழியாய்ச் செல்லுகிறேன். ஈரிடத்திலும் கிடைக்கப்பெறும் ஊதியம் நம்மிருவர்க்கும் சம உரிமையுள்ளதாம் என்று கூறி ஏவுதல் வேண்டும் என்பது கருத்து.

[4] கிடைக்கப்பெறும் ஊதியம் இருவர்க்கும் சமமாயிருப்பின் ஒத்த சக்தியை யுடையவராகலின் சந்தியை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதும் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு ஊதியம் மிகுதியாயிருப்பின் சிறப்புப் பற்றி அவன் வன்மையை மேற்கொள்ளலாம் என்பதும் கருத்து. இத்துடன் 'சந்தி செய்துகொண்டோர் பிரிந்து சேறல்' என்னும் பிரகரணம் முடிவுற்றது.

[5]சந்தியானது வரையறை யுடையதும் வரையறை யில்லது மாம்.

[6]நீ இந்த நாட்டிற்குச் செல், நான் இந்த நாட்டிற்குச் செல் வேன் [7]என்பது இடவரையறையாம்.

[8]நீ இத்துணைக் காலம் இயங்குவாய், நான் இத்துணைக் காலம் இயங்குவேன் என்பது கால வரையறையாம்.

[9]நீ இன்ன செயலைச் செய், நான் இன்ன செயலைச் செய்வேன் என்பது செயல்வரையறையாம்.

[10]'மலை காடு ஆறு என்னும் அரண்களை யுடையதும், காட்டி னுல் மறைந்ததும், [11]தடைப்பட்ட கூலம் பணியாளர் திரவப் பொருள் நட்புப்படை என்னுமிவற்றை யுடையதும், புல் கட்டை

---

5 'வரையறை யுடையது வரையறை யில்லது பிரிந்தவனைப் பற்றியது என்னும் சந்திகள்' என்பது அடுத்த பிரகரணமாகும். காலம் இடம் காரியம் என்னுமிவற்ருல் வரையறை செய்யப்பட்டு நிகழ்வது வரையறை யுடையதெனவும், அதற்கு மறுதலையாயது வரையறை யில்லதெனவும் எக் காரணத்தாலேனும் தன்னினீங்கிஞேடு சந்தி செய்துகொள்வது பிரிந் தவனைப் பற்றியது எனவுங் கொள்க. முன்னர் இழிந்தோன்சந்திகள் மூன்றும் விளக்கப்பட்டன. இவையல்லாது வேறு சந்திகளும் உள என் பதை விளக்குவதற்கு இப்பிரகரணம் தொடங்கப்பெற்றதாகலின் பிரகரண வியைபுண்மை யறிக. 'இருவகையான சந்திகளைப்பற்றிக் கூறப்படும்' என்பது கருத்து.

6 வரையறை யுடையது எழுவகைப்படும், எனக்கொண்டு அவற்றை முறையே கூறத் தொடங்குகின்ருர்.

7 என்று இங்ஙனம் இடத்தை வரையறுத்துக்கொண்டு ஏற்கும் சந்தி 'இடவரையறை' எனப்படும் என்பது.

8 நீ இத்துணை நாட்கள் வரை உன் விருப்பப்படி செயல்புரிக, யான் இத்துணைக்காலம் என் விருப்பப்படி நடந்துகொள்வேன் என்று கால வரை யறையுடன் ஏற்கப்படும் சந்தி 'காலவரையறை' எனப்படும் என்க.

9 அரண் முதலியவைகளில் நீ இத்துணைக் காரியங்களைச் செய்து முடி, யான் இத்துணை செய்வேன் என்ற வரையறையுடன் ஏற்கப்படும் சந்தி 'செயல் வரையறை' எனப்படும் என்பது கருத்து.

10 மேற்கூறிய மூன்றனையும் பயன்படுத்தற்குரிய காரணங்களைக் கூறு கின்ருர்.

11 வேற்று நாட்டிலிருந்து கூலம் முதலியவற்றைக் கொண்டுவருதற்குத் தடையுள்ளதென்பது.

நீர் என்பவை இல்லாததும், [12]அறியப்படாததும், சேய்மையில் உள்ளதும், (தலைவன்பால்) அன்பற்ற நாட்டு மக்களை யுடையதும், [13]படை யியக்கத்திற்குரிய இடமற்றதுமான [14]நாட்டைப் பகைவன் அடைவான். [15]முரணானதை நான் அடைவேன்' என்று [16]கருதுமிடத்து இந்நிகழ்ச்சியில் இட வரையறையுள்ள சந்தியை யடைதல் வேண்டும்.

[17]'பெயல் வெப்பம் குளிர் என்பன மிகுந்தும், மிகுந்த நோயுள்ளதும், உணவு நுகர்ச்சிகளுக்குரிய பொருள்கள் குறைந்ததும், [18]படை பயிற்சி என்பவற்றிற்குத் தடையானதும், [19]செயற்கருவிகளுக்குக் குறைவானதும், மிகுந்ததுமான [20]காலத்தில் [21]பகைவன் செயல் புரிவான். நான் முரண்பட்டதில் செயல் புரிவேன்' என்று கருதுமிடத்து இந்நிலையில் கால வரையறையுள்ள சந்தியை ஏற்றல் வேண்டும்.

[22]'திரும்பப்பெறுதற்குரியதும், மக்களது கோபத்தை விளைப்பதும் நீண்ட நாட்களால் முடிக்கத்தக்கதும், [23]கேடு [24]செலவுகள் மிகுந்ததும், சிறியதும், [25]கேட்டுத் தொடர்புள்ளதும், [26]துன்பத்தைத் தருவதும் மறத்தின்பாற்பட்டதும் மத்தியமர் நொது

---

12 பழக்கப்படாததென்பது.

13 படைகளின் இயக்கத்திற்குரிய நிலமில்லாததென்பது.

14 மேற்கூறிய அடைகளால் கைப்பற்றுதற்கு முடியாமலிருக்கும் நாடு என்பது பெறப்படும்.

15 எளிதிற் கைப்பற்றுதற்குரிய நாட்டை என்பது.

16 வெற்றிவிருப்பமுள்ளவன் இவ்வாறு கருதுமிடத் தென்க.

17 அதிகமான மழை முதலியவற்றையுடைய காலத்தில் என்பது.

18 படைகளின் பயிற்சிக்குத் தடையாய காலத்தில் என்பது.

19 செயற்கருவிகளுக்குப் போதியதாக இல்லாத காலத்தில் என்பது.

20 தான் இயங்கும் காலத்தைவிட அதிகமான காலத்தில் என்க.

21 பகைவன் இயங்குதற்குக் கூறப்பட்ட காலத்திற்கு மறுதலையாய காலத்தில் என்பது.

22 எளிதிற் போற்றுதற்கு இயலாமையால் பகைவனால் திரும்பப் பெறுதற் குரியதென்பது.

23 அதிகமான மக்களுக்குக் கேடு விளைப்பது.

24 மிகுந்த பொருட்செலவு.

25 பின்னர்த் தீமையை விளைக்கக்கூடிய தென்பது.

26 ஏற்றுநடத்தும் காலத்தும் துன்பத்தை விளைப்பதென்பது.

மலர் என்பவர்களுக்கு முரண்பட்டதும், [27]நட்புக்கேட்டை விளைப்பதுமான செயலைப் பகைவன் செய்வான். நான் மாறுபட்டதைச் செய்வேன்' எனக் [28]கருதுவானாயின் இந்நிகழ்ச்சியில் செயல்வரையறையை உடைய சந்தியை ஏற்றல் வேண்டும்.

[29]இங்ஙனம் இடங் காலங்களுக்கும் காலம் செயல்களுக்கும் இடம் செயல்களுக்கும் இடம் காலஞ் செயல்களுக்கும் சேர்க்கை காரணமாக வரையறை யுடையது எழுவகையாம். [30]ஆண்டு முன்னரே தன் செயல்களைத் தொடங்கி [31]நிலைநிறுத்திய பின் [32]பிற செயல்களில் வன்மையைச் செலுத்தல் வேண்டும்.

[33]விதனம் விரைவு அவமானம் சோம்பல் என்னும் இவற்றை யுடைய அறிவீனனான பகைவனை [34]வஞ்சிக்க விரும்புபவன் இடம் காலம் செயல்களின் [35]வரையறை யின்றி [36]'நாம் சேர்ந்திருப்போம்' என்று சந்தியின் நம்பிக்கையால் பகைவனது அற்றம் பார்த்து ஒறுத்தல் வேண்டும். வரையறை யில்லது இங்ஙனமாம்.

[37]ஆண்டு இஃது ஏற்கற்பாலது.

---

[27] நண்பருக்கும் துன்பத்தை விளைக்கக்கூடியதென்பது.

[28] ஈண்டுங் கருதுதற்கருத்தா வெற்றிவிருப்பமுள்ளவன் எனக்கொள்க.

[29] வரையறையுடைய சந்தியின் மூன்று பிரிவுகள் இவ்வாறு கூறி முடிக்கப்பட்டன. இவற்றுள்ளும் இடம் காலம் முதலியவை ஒன்றனோடொன்று கலத்தல் பற்றி நால்வேறு பிரிவுகளும் உண்டென்பது பற்றி வரையறையுடைய சந்தி எழுவகைப்படும் எனக் கூறுகின்றார்.

[30] ஆண்டு—முற்கூறப்பட்ட வரையறையுடைய சந்தி ஏற்கப்பட்டவிடத்து.

[31] பயன் விளைவுவரை செய்து முடித்த பின்னர் என்பது.

[32] பகைவன் செயல்களுக்குத் தீங்கை விளைத்தற்பொருட்டு வன்மையை ஏற்றல் வேண்டும் என்பது.

[33] வரையறையற்ற சந்தியைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். விதனம்—குடி சூது முதலியவற்றில் ஈடுபாடு.

[34] வஞ்சிக்க விரும்பும் வெற்றிவிருப்பமுள்ளவன் என்க.

[35] வரையறையைச் செய்துகொள்ளாமல் என்பது.

[36] சந்தியை மேற்கொள்ளுவோம் என்று சொல்லளவிற் கூறி சந்தியில் நம்பிக்கை யூட்டிப் பகைவனது சோர்வு கண்டு அவனை ஒறுத்தல் வேண்டும் என்பது கருத்து. வரையறையற்ற சந்தி இத்துடன் முற்றும்.

[37] மேற்கூறிய சந்தி செய்த பின்னர்ச் செய்யவேண்டியது இதுவெனக் கூறுகின்றார்.

சுலோகம்

[38]அறிவுள்ளவன் [39]சிற்றரசனுடன் சிற்றரசனை விக்கிரகத்தை யேற்கச் செய்தபின் நாற்புறமும் பக்கத்தைக் களைந்து பிறனுடைய நிலத்தைக் கவர்தல் வேண்டும்.

[40]செய்யப்படாததைச் செய்தற்கு விரும்புதல், செய்யப்பட்டதைச் சேர்த்தல், செய்யப்பட்டதைக் கெடுத்தல், சிதறுண்டதைச் சேர்த்தல் என்பன சந்தியின் தன்மைகளாம். வெளிப்படைப் போர் வஞ்சகப்போர் மறைவுப்போர் என்பன வன்மையின் தன்மைகளாம். [41]சந்தி வன்மைகள் இவ்வாறும்.

[42]தொடர்புள்ள இன்சொல் முதலியவற்றால் புதிய சந்தி விருப்பமும் ஒத்தவர் இழிந்தவர் சிறந்தவர்களை வன்மைக்கேற்ப நிலைநிறுத்தலும் செய்யப்படாததைச் செய்ய விரும்புதலாம்.

[43]பிரியம் [44]ஹிதம் என்ற இரண்டாலும் [45]செய்யப்பட்ட

---

[38] வெற்றிவிருப்பமுள்ளவன் என்பது.

[39] பகைவனுடைய நண்பர்களுள் ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் விக்கிரகத்தை உண்டுபண்ணி (அதாவது தனக்குப் பின்னுள்ள நண்பனைப் போரில் ஈடுபடச் செய்து) பின்னர் நாலாபக்கத்திலும் மேற்சேறற்குரியானுடைய நண்பர்களைக் களைந்து மேற்சேறற்குரிய வேறொருவனுடைய நாட்டைக் கவர்தல் வேண்டும் என்பது கருத்து.

[40] சந்தியின் தன்மைகள் நான்கென்றும் விக்கிரகத்தின் தன்மை மூன்றென்றும் கூறுகின்றார்.

[41] சந்தியும் விக்கிரகமும் இங்ஙனம் பிரிக்கப்பட்டு விளக்கப்பட்டன என்பது.

[42] சந்தியின் தன்மைகளுள் முதலாவதைக் கூறுகின்றார். ஓர் அரசனுடன் இதற்கு முன்னர்ச் செய்யப்படாததொரு சந்தியைக் கொடையுடன் கூடிய இன்சொற்களாலாதல் இன்சொற்களுடன் சேர்ந்த கொடையாலாதல் ஏற்பதற்கு விரும்புதலும், ஒத்த வன்மை யுடையானொடு பொருள் படை முதலியவற்றைக் கொடுக்கல் வாங்கற்றொடர்பின்மை இழிந்தவனிடமிருந்து பொருள் படை முதலியவற்றை ஏற்றல் சிறந்தவனுக்குப் பொருள் படை முதலியவற்றைக் கொடுத்தல் என்பனவும் செய்யப்படாததைச் செய்தற்கு விரும்புதல் என்ற சந்தியின் தன்மையாம் என்பது கருத்து.

[43] பிரியம்—பழகுங்காலத்தில் இனிமையாகவுள்ளது.

[44] ஹிதம்—வருங்காலத்தில் நன்மை பயப்பது.

[45] செய்யப்பட்ட சந்தியைக் காத்தல் என்பது.

தைப் புரத்தல் [46]ஒப்பந்தப்படி வரையறையைத் தழுவுதல் [47]பகைவரால் வேறுபடுத்தப்படாவாறு போற்றுதல் என்பன செய்யப்பட்டதைச் சேர்த்தலாம்.

[48]தூஷ்யனுடைய வஞ்சனையால் பகைவனுக்குச் சந்திக்குரிய தகுதியின்மையை நிலைப்படுத்தி மாறுபடுதல், செய்யப்பட்டதைக் கெடுத்தலாம்.

[49]குற்றங் காரணமாக விலகிய பணியாளனுடனுதல் நண்பனுடனுதல் மீண்டும் சேர்த்தல், சிதறுண்டதைச் சேர்த்தலாம்.

[50]அதன்கண் [51]சென்று வந்தவன் நால்வகைப்படுவான்—[52]காரணம் பற்றிச் சென்று வந்தவன், [53]மாறுபட்டவன், காரணத்துடன் சென்று காரணமின்றி வந்தவன், [54]மாறுபட்டவன் என.

தலைவனது [55]குற்றம் பற்றிச் சென்று [56]குணம் பற்றி வந்த

---

46 சந்தி செய்துகொள்ளும்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தையநுசரித்தல் என்பது.

47 பகைவரால் வேறுபடுத்தற்கு முடியாதபடி அச்சந்தியைக் காத்தல் என்பது கருத்து.

48 தூஷ்யன் மூலமாகவுள்ள வஞ்சனையைக்கொண்டு 'பகைவன் சந்திக்குத் தகுந்தவனல்லன்' என்பதை உறுதிப்படுத்தி வெற்றிவிருப்பமுள்ளவன் முன்னர்ச் செய்த சந்தியை விலக்குதல் என்பது கருத்து.

49 சிதறுண்டதைச் சேர்த்தல் என்பது பற்றிக் கூறுகின்றார். ஏதேனும் ஒரு குற்றங் காரணமாகத் தலைவனை விட்டு விலகிய பணியாளனுடனுதல் நண்பனுடனுதல் மீண்டும் சேர்ந்து சமாதானம் செய்துகொள்ளுதல் என்பது கருத்து. இது பிரிந்தவனைப்பற்றியது என்பதில் அடங்கும் என்க.

50 அதன்கண்—சிதறுண்டதைச் சேர்த்தலில்.

51 தன்னை விட்டுச்சென்று மீண்டும் திரும்பி வந்தவன் என்பது.

52 செலவுக்கும் வருகைக்கும் காரணமுண்டென்பது.

53 செலவுக்கும் வருகைக்கும் காரணமின்றென்பது.

54 காரணமின்றிச் சென்று காரணத்துடன் திரும்பியவன் என்பது கருத்து.

55 குற்றம்—ஈண்டு அருளாமை முதலியன.

56 குணம்—அருளுதல் முதலியன.

வனும், [57]பகைவனது குணம் பற்றிச் சென்று குற்றம் பற்றி வந்தவனுமான [58]காரணம் பற்றிச் சென்று வந்தவன் சந்திக்குரியனும்.

[59]இருவருடைய குணத்தைவிட்டுத் தன் குற்றத்தாற் சென்று வந்தவன் நிலையற்ற அறிவுடையன் (ஆதலின்) சந்திக்குரியனல்லன்.

[60]தலைவனது குற்றத்தாற் சென்று, பகைவனிடமிருந்து தன் குற்றத்தால் வந்தவனுன காரணம் பற்றிச் சென்று காரணமின்றி வந்தவனைக் குறித்து [61]பிறனுல் தூண்டப்பட்டாதல் தன் குற்றத்தாலாதல் தீங்குபுரிய விருப்பத்துடன் வந்தவனு? என் பகைவன் பகைவரைக் களைபவனுக அறிந்து, தீங்கு அச்சம் காரணமாக வந்தவனு? என்னைக் களைய விருப்பமுள்ள பகைவனை விட்டு அன்பு காரணமாக வந்தவனு? என்று ஐயுறுதல் வேண்டும். [62]அறிந்த

---

[57] பகைவனிடத்துள்ள குணங்காரணமாக அவனை யடைந்து பின்னர் அவனிடம் குற்றத்தைக் கண்டு அவனை விட்டு மீண்டும் தலைவனை அடைந்தவன் என்பது.

[58] செலவு வருகைகளுக்குக் காரணமுண்மை பற்றி, அவனுடன் சந்தி செய்துகொள்ளுதல் நியாயமாகும் என்பது கருத்து.

[59] தலைவன்பாற் குற்றமில்லாத நிலையில் தன் குற்றத்தால் தலைவனை விட்டுப் பிறனை அடைந்த பின்னர் அதே காரணத்தால் அவனையும் விட்டு மீண்டும் தலைவனை வந்தெய்தியவன், தலைவன் பிறன் என்ற இருவர் மாட்டும் குணத்தை ஏலாமை பற்றி அமைதியற்ற மனமுடையவன் ஆகலின் சந்திக்குரியனல்லன் என்பது கருத்து.

[60] தலைவன்குற்றங் காரணமாகத் தலைவனை விட்டு அவன் பகைவனை யடைந்து, பின்னர் அவனிடமிருந்து தன் குற்றங் காரணமாகத் திரும்பி வந்தவன் ஐயுறத்தக்கவன் என்பது கருத்து.

[61] ஐயுறுதற் பொருளை விளக்கிக் கூறுகின்ருர். இவன் என் பகைவனுல் தூண்டப்பட்டு எனக்குத் தீங்கு புரிவதற்காக வந்திருக்கக் கூடுமா? அல்லது என்னுல் முன்னர்ச் செய்யப்பட்ட தீமையை எண்ணித் தன் குற்றங் காரணமாகவே எனக்குத் தீங்கு புரிதற்கு வந்திருத்தல் கூடுமா? அல்லது என் பகைவன் தன் பகைவனிடமிருந்து வந்த மக்களைக் கொல்லுதற்கு முயலுவதை அறிந்து தானும் பகைவனிடமிருந்து வந்தமை காரணமாகத் தனக்கும் கொலை நிகழக்கூடும் என்ற அச்சத்தால் வந்திருக்கக்கூடுமா அல்லது என்னைக் களைதற்கு விருப்பங்கொண்ட என் பகைவனை விட்டு என்னிடம் முன்னர் ஏற்பட்ட பழமை காரணமாக என்னிடம் வந்திருக்கக் கூடுமா என்றிவ்வாறு ஐயுறுதல் வேண்டும் என்பது கருத்து.

[62] திரும்பி வருவதற்குக் காரணமாக மேற்கூறப்பட்ட நான்கனுள் ஒன்றைக் கண்டபின்னர், 'அவன் நற்கருத்துள்ளவன்' என்று அறியப்படின் அவனை அணிமையிலிருக்கச்செய்து நன்கு கௌரவித்தல் வேண்டும். கருத்து மாறுபட்டவனுயின், மிகச் சேய்மையில் வாழ்ந்திருக்கச் செய்தல் வேண்டும்.

பின் நற்கருத்தை யுடையவனைப் போற்றி மாறுபட்ட கருத்தை யுடைய இழிந்தவனை வெளியேற்றல் வேண்டும்.

[63]தன் குற்றத்தாற் சென்று, பிறன்குற்றத்தால் வந்தவனுன காரணமின்றிச் சென்று காரணத்துடன் வந்தவன் [64]எனக்கு அற்றத்தில் உதவுவானு? இவன் இருத்தற்கு இது உரியதா? வேற்றிடத்தை இவன் மக்கள் விரும்பவில்லையா? என் நண்பருடன் சந்தியை ஏற்றவனு? பகைவருடன் விக்கிரகத்தை ஏற்றவனு? தீயவனுடன் சேர்ந்தவனிடமிருந்து அஞ்சினவனு? பகைவனுடன் சந்தி யேற்ற பகைவனிடமிருந்து அஞ்சினவனு? என்று ஐயுறல் வேண்டும். [65]அறிந்த பின் அறிவிற்கேற்ப நடாத்தற் குரியவன்.

[66]செயற்கேடு, [67]வன்மை யழிவு, [68]கல்வியை விலைப்பண்டமாகக் கொள்ளுதல், [69]விருப்ப அழிவு, [70]நாட்டின் தீமை, [71]அவ

---

63 தலைவன்குற்றமின்றித் தன் குற்றங் காரணமாகச் சென்று, பகைவன்குற்றம் பற்றித் திரும்பி வந்தடைந்தவனும் ஐயுறத்தக்கவன் எனக் கூறுகின்ருர்.

64 ஐயுறற் பொருளைக் கூறுகின்ருர்; என் சோர்வுநிலையில் பகைவன் எனக்குத் தீமை புரியுங்கால் அவனுக்கு இவன் துணைபுரியக் கூடுமா? அல்லது இந்நாட்டில் வாழ்வதே இவனது உடல்நிலை முதலியவற்றிற்குத் தக்கதாயிருத்தல் பற்றி இவன் வந்திருத்தல் கூடுமா? அல்லது இவன் மனைவி மக்கள் பிறநாட்டு வாழ்வை வெறுக்கின்றனரா? அல்லது இவன் என் நண்பர்களுடன் சந்தியை ஏற்படுத்திக் கொண்டவனுயிருக்கக் கூடுமா? அல்லது பகைவனுல் தீங்கை எய்தியிருத்தல் கூடுமா? அல்லது தீயவனுடன் நட்புப் பெற்ற பகைவனிடமிருந்து அஞ்சி என்னை அணுகினனு. அல்லது பகைவனுடன் சந்தியை ஏற்ற பகைவனிடமிருந்து அஞ்சி வந்தானு என்று ஐயுறுதல் வேண்டும் என்பது கருத்து.

65 மேற்கூறியவாறு ஐயுற்று, வருதற்காரணத்தைத் தெளிந்து, வந்தவனுடைய மனதின் நன்மைதீமைக்கேற்ப ஒழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

66 இனித் தலைவனை விட்டு விலகுதற்குரிய காரணங்களைத் தொகுத்துக் கூறுகின்ருர். செயற்கேடு—செய்த நன்றியை மறத்தல்.

67 வன்மை—ஆண்மை முதலிய மூவகை ஆற்றல்கள்.

68 விலைகொடுத்து வாங்குதற்குரிய ஏனைய விலைப்பண்டங்களுக்குச் சமமாகக் கல்வியை நினைத்தல், கல்வியை அவமதித்தலாம் என்றவாறு.

69 'கொடுக்கிறேன்' என்று கூறி விருப்பத்தை யுண்டுபண்ணி, கொடாமையால் வெறுப்பை யுண்டுபண்ணுதல் என்பது.

70 நாட்டில் கொசு, பிணி முதலியவற்ருலுண்டாம் இடர் என்பது.

71 'பணியாளரிடம்' என்பதைக் கூட்டிப் பொருள் கொள்க.

நம்பிக்கை,[72] வல்லவனுடன் விக்கிரகத்தை ஏற்றல்[73] என்பன விடுத்தற் காரணங்களாம் என்பர் ஆசிரியர்.[74] அச்சம்,[75] இயக்க மின்மை, வெகுளி என்பர் கௌடலியர்.

[76] ஈண்டுத் தீங்கு புரிந்தவன் விடத்தக்கவன்.[77] பகைவனுக்குத் தீங்கு புரிந்தவன் சந்திக்குரியன்.[78] இருவருக்கும் தீங்கு புரிந்தவன் ஐயுறத்தக்கவன் என்பது சமமாம்.

[79] சந்திக்குத் தகுதியில்லாதவனுடன் சந்தி இன்றியமையாதாயின் சிறப்புக் காரணத்தை விலக்கல் வேண்டும்.

சுலோகங்கள்

(1) [80] சிதறுண்டவனுடைய செயலில், பகைவனைச் சார்ந்த

---

72 வன்மைமிக்காஞெரு பகைவனுடன் பொருதிருத்தல் என்பது.

73 தலைவனிடத்துள்ள மேற்கூறிய குணங்கள் தலைவனை விட்டுப் பணியாளர் விலகுதற்குக் காரணங்களாம் என்பது கருத்து.

74 அச்சம் முதலிய மூன்று குணங்களே தலைவனைவிட்டுச் செல்லுதற்குக் காரணங்களாம் என்பதனைக் கௌடலியர் தன் கொள்கையாக வற்புறுத்துகின்றார்.

75 இயக்கம்—ஊக்கத்துடன் காரியங்களைத் தொடங்குதல்.

76 சென்று திரும்பினவனைப் பற்றி மீண்டும் சில விசேடங்களைக் கூறுகின்றார். தனக்குத் தீங்கு விளைத்துச்சென்று, பகைவனுக்குத் தீங்கு ஒன்றும் செய்யாது திரும்பி வந்தவன் விடத்தக்கவனே யன்றி ஏற்கத்தக்கவன் அல்லன் என்பது கருத்து.

77 தனக்குத் தீங்கு புரியாமலே தன்னை விட்டுச் சென்று, பின்னர் பகைவனை அடைந்து அவனுக்குத் தீங்கு புரிந்து திரும்பி வந்தவன் சந்திக்குரியவன் என்பது கருத்து.

78 தனக்குத் தீங்கு புரிந்துவிட்டுப் பகைவனை யடைந்து, அவனுக்கும் தீங்கை விளைத்துத் திரும்பித் தன்னை வந்தடைந்தவன் எவ்விதமான கருத்துக் கொண்டவன் என்று ஆராய்ந்தறிந்து அதற்கேற்ப அவனை ஏற்றுக் கோடலும் விலக்குதலும் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

79 சந்தி செய்துகொள்ளுதற்குத் தகாதவனொருவனுடன் சந்தியை ஏற்க வேண்டிய இன்றியமையாமை யேற்படின் பகைவனுடைய மேன்மைக்குக் காரணமாயுள்ளவற்றை விலக்குதல் வேண்டும் என்பது கருத்து.

80 இனிப் பகைவனைச் சார்ந்தவனொருவன் தன்னை அடைந்திருந்து, ஏதோ ஒரு குற்றங் காரணமாகப் பகைவனை அடைந்து, மீண்டும் திரும்பி வந்தான். சிதறுண்டவருள் ஒருவனாகிய அவனுடன் எங்ஙனம் சந்தியை ஏற்றல் வேண்டும் என்பதனைக் கூறுகின்றார்.

[81]நன்மை புரிந்தவனை [82]மறைவாகவும் [83]ஆயுள்காறும் பாதுகாப் புடையனாகவும் செய்தல் என்ற முறையில் வாழ்ந்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) [84]தலைவனிடம் சார்ந்தொழுகச் செய்தல், [85]தேர்ந் தவனைப் படையில் இயங்கச்செய்தல், பகைவன்பாலும் காடு நாட் டின் எல்லை வேற்றிடம் என்னுமிவற்றிலும் [86]ஏவுதல் என்ப வற்றைச் செய்யலாம்.

(3) [87]தேர்ச்சியற்றவனை விலைப்பண்டத்தை யுடையனாய்ச் செய்தல் வேண்டும். அல்லது [88]அவனுடன் மறைந்தவனைப் பகைவனுடன் சந்தியேற்றல் காரணமாக நாற்புறமும் நிந்திக்கச் செய்து அவனுடைய குற்றத்தை வெளிப்படுத்திக் கொன்றும் விடலாம்.

(4) [89]அல்லது இவனை வருங்கால [90]நலங்குறித்து மறைவி

---

81 தலைவனுக்கு உதவி புரிந்தவனை என்பது.

82 மறைவாக—தலைவனுடைய நெருக்கமின்றி வேறு பணியாளனை அடுத்துத் தொழில் புரியுமாறு.

83 அவன் ஆயுள்வரை பணியாளர் மூலம் பிறர் அறியாவாறு பாது காக்கப்பட்டவனாகச் செய்தல் என்பது.

84 அதாவது மறைவாக இருந்து பரிசோதனை செய்யப்பட்டவிடத்துத் தூய்மையுள்ளவனாக அறியப்பட்டானாயின் அவனைத் தலைவனுக்கு அருகில் வேலைபுரியும்படிச் செய்யலாம் என்பது.

85 திறமை யுள்ளவனாக அங்கு அறியப்படுவானாயின் படைத்தொழிலில் ஏவலாம் என்பது கருத்து.

86 தொழில்புரியச் செய்தல் என்பது.

87 ஏவப்பட்ட தொழிலைச் செய்து முடிக்கும் ஆற்றலற்றவன் என் பதனைக் கண்ட பின்னர் 'இத்துணைவிலைப் பண்டங்கட்கு இத்துணைப் பொருள்' என்ற வரையறையுடன் பகைவனது நாட்டில் விலைப்பண்டங் களை விற்றற்கு அனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

88 யாரேனும் ஒரு பகைவனுடன் மறைவிற் சங்கேதம் செய்துகொண்டு 'பகைவனை யான் வயப்படுத்தினேன்' என்று பொய் கூறுமுகமாகத் தன் நேர்மையின்மையை விளக்கியவனொருவனை, சந்திக்குரிய பகைவன் அறிதற் பொருட்டு நாற்புறமும் சாற்றுமுகமாக நிந்தித்துப் 'பொய் கூறுதல்' என்ற அவன்குற்றத்தையே காரணமாகக் கொண்டு கொலை செய்தல் வேண்டும் என்பது கருத்து.

89 அல்லது—பறைசாற்று முகமாக நிந்தித்துக் கொலைசெய்தல் இன்றி.

90 நலம்—ஏமமும் புதுநலமும் ஆம்.

றுறுத்தலாற் களைதல் வேண்டும். [91]சென்று வந்தவன் பிற்காலத்தில் கொலையை விரும்புகிறவனாக அறிந்தாற் கொல்லுதல் வேண்டும்.

(5) பகைவனிடமிருந்து வந்தவன், பகைவனுடன் கூடிப் பழகியதால் உண்டான குற்றமுடையனாகலின் பாம்புடன் கூடி வாழ்தல்போல் [92]யாண்டும் அச்சத்தால் நிந்திக்கப்பட்டவனும்.

(6) [93](அவன்,) பேயத்தியின் [94]விதையைப் புசிக்கும் மாடப் புறாவுக்கு [95]இலவமரம் போல் [96]எப்பொழுதும் வெறுப்பை யுண்டுபண்ணுபவனும் பின்னரும் அச்சத்தை விளைப்பவனுமாம்.

(7—8) [97]இடம் காலங்களால் குறிக்கப்பட்ட, வன்மை வெளிப்படைப் போராம். [98]அச்சுறுத்தல், இடுக்கண் விளைத்தல், விழிப்பின்மை விதனங்களில் துன்புறுத்தல், ஓரிடத்தில் விடுதலை, மற்றோரிடத்துத் தகர்த்தல் என்பன வஞ்சகப்போரின் இலக்கண

---

[91] சென்று திரும்பியவரைப்பற்றிப் பொதுவான விதியைக் கூறுகின்றார்.

[92] எப்பொழுதும் அஞ்சுவதற்குக் காரணமாயிருத்தல் பற்றி வெறுக்கத் தக்கவனேயாம் என்பது.

[93] அவன்—சென்று மீண்டவன்.

[94] விதை என்பது, ஈண்டுப் பழம் என்னும் பொருட்டு.

[95] இலவு, என்றும் பழுப்பதில்லையாகலின் அது விரும்பத்தகாதது என்பது; 'இலவுகாத்த கிளிபோல' என்பது பழமொழி.

[96] வெற்றிவிருப்பமுள்ள அரசனுக்கு எப்பொழுதும் அச்சத்தை விளைப்பவனாவான் என்பது.

[97] இனி இரு சுலோகங்களால் போரின் தன்மைபற்றிக் கூறுகின்றார்; இன்னவிடத்தில் இன்ன காலத்தில் நம்மிருவர்க்கும் போர் உண்டாம் என்று கூறி வன்மையை யேற்றல் வெளிப்போர் எனப்படும்.

[98] படை சிறியதாயினும் மிகையாகவுள்ளதென்ற மலைப்பை யுண்டு பண்ணி அச்சுறுத்தல், அரண் முதலியவற்றைத் தீயிடல், களவு செய்தல், விழிப்பின்மை விதனம் முதலிய நிகழ்ச்சியில் இடர் விளைத்தல், ஓரிடத்தில் போர் நிகழுங்கால் அதை நிறுத்தி வேறொருவனைத் தகர்க்க முயலுதல் முதலியன் வஞ்சகப் போரின் இலக்கணங்களாம் என்பது கருத்து.

மாம். [99]வஞ்சித்தல், வேறுபடுத்தல் என்பவற்றைப் பயனுகக் கொண்டது மறைவுப்போரின் இலக்கணமாம்.

ஏழாம் அதிகரணம் 14, 15-ஆம் பிரகரணங்கள் 'சந்திசெய்துகொண்டோர் பிரிந்துசேறல்', 'வரையறையுடையது வரையறையில்லது, பிரிந்தவனைப்பற்றியது என்னும் சந்திகள்' என்னும் நூற்றுநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

[99] 168, 171-ஆம் அத்தியாயங்களிற் கூறப்படுமாறு வஞ்சித்தல் முதலியவற்றின் மூலம் பகைவனுக்குத் துன்புறுத்தலைப் பயனுகக்கொண்ட செயல்கள் மறைவுப்போரின் இலக்கணங்களாம் என்க.

பதினாறும் பிரகாணம்—[1]பிரித்தலைக் காரணமாகவுடைய சந்திவிக்கிரகங்கள்

நூற்றைந்தாம் அத்தியாயம்

வெற்றிவிருப்பமுள்ளவன் [2]இரண்டாவது பிரகிருதியை [3]இங்ஙனம் [4]ஏற்றல் வேண்டும் ;—[5]பின்னுள்ள என் நண்பனைக் களையமாட்டான், [6]பின்னுள்ள நண்பனுக்குத் தீங்கு புரிபவனைத் தடுப்பான். [7]மேற்சேறற்குரியவனை அணுகமாட்டான், [8]என் படை இருமடங்காகும். [9]எனக்குக் கூலம் நட்புப்படைகள் உண்

105-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பிரித்தலை (துவைதீபாவத்தை)க் காரணமாகக் கொண்டு நிகழும் சந்தி விக்கிரகங்களின் இயல்பைக் கூறுவது இப்பிரகரணம். சந்தி விக்கிர கங்களை ஒருசேர ஏற்றல் துவைதீபாவம் எனப்படும். அதனால் ஏற்கத்தக்க சந்தி விக்கிரகங்கள் இவண் கூறப்படும் என்பது கருத்து. முன் அத்தியா யத்தில் வரையறையுடைய சந்தி முதலியன கூறப்பட்டன. துவைதீ பாவத்தை ஏற்றவிடத்து அவற்றை மேற்கொள்ளுதற்குரிய காரணங்களைக் கூறுவது இப்பிரகரணம். ஆகலின் பிரகரண வியைபு புலனும்.

[2] தன் நாட்டை அடுத்திருக்கும் நாட்டிலுள்ள பகைவனை என்பது.

[3] இங்ஙனம்—பின்னர்க் கூறும் முறைப்படி.

[4] உதவி குறித்து ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

[5] கூடி மேற்சேறலால் உண்டாம் பயன்களைக் கூறுகின்றார். வெற்றி விருப்பமுள்ளவனுடைய பின்னுள்ள நண்பனைக் களைதல் என்ற தீங்கைச் செய்தற்கு அவ் வெற்றிவிருப்பமுள்ளவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிற் றரசன் முன்வரமாட்டான் என்பது ஒரு பயனும் என்க.

[6] வெற்றிவிருப்பமுள்ளவனால் ஏற்கப்பட்ட சிற்றரசன் அவ் வெற்றி விருப்பமுள்ளவனுடைய பின்னுள்ள நண்பனைக் களையும் வேறொரு பகை வனைத் தடுக்கக்கூடும் என்பது இரண்டாவது பயனும்.

[7] அவன்பக்கத்தில் சேர்ந்துகொள்ளமாட்டான் என்பது.

[8] ஏற்கப்பட்ட சிற்றரசனது படைகளுடன் கூடிய என் படை முன்னை யதை விட இருமடங்காகப் பெருகும் என்பது.

[9] வெற்றிவிருப்பமுள்ளவனால் ஏற்கப்பட்டவன் தன் நாட்டினின்றும் கூலம் முதலியவற்றைக் கொண்டுவருதற்கும், நட்புப்படையின் வருகைக் கும் தடைசெய்யமாட்டான் என்பது கருத்து.

டாகும். [10]பகைவனுக்காயின் தடைப்படும். [11]வழியில் எனக்குப் பலரால் நெருக்கடியிருப்பின் சிறுபகைகளைத் தாக்குவான். [12]அரண் காடுகளில் பின்னடைந்தவிடத்துப் படைகளோடு இயங்குவான். பொறுத்தற் கியலாத [13]தீங்குண்டாயின் [14]மேற் சேறற்குரியானைச் சந்தியில் நிலைப்படுத்துவான். [15]ஊதியப் பகுதியைப் பெற்று என்னுடைய மற்ற பகைவருக்கு நம்பிக்கையை உண்டுபண்ணுவான் [16]என்று கருதுமிடத்து (ஒரு) சிற்றரசனுடன் சேர்ந்து (வேறு) [17]சிற்றரசனுடன் மேற்சேறல் வேண்டும்.

[18]துவைதீபாவத்தை யடைந்தவன் [19]சிற்றரசருள் ஒருவனிட மிருந்து [20]பொருளாற் படையையும் படையாற் பொருளையும் விரும்புதல் வேண்டும்.

---

10 சூலம் முதலியவை பகைவனது நாட்டுக்குச் செல்லாவாறு தடை செய்யப்படும் என்பது கருத்து.

11 வெற்றிவிருப்பமுள்ளவன் செல்லுங்கால் நடுவழியில் செலவைத் தடுக்கும் கள்வரை அச்சிற்றரசன் களைவான் என்பது.

12 அரண்களிலும் காடுகளிலும் வெற்றிவிருப்பமுள்ளவனுடைய படைகள் பின்னடைதற்குரிய நிலையில் பகைவரால் தீங்கு நேராவாறு அவற்றை அச் சிற்றரசன் பாதுகாப்பான் என்பது.

13 தீங்கு—ஈண்டு வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு உண்டாயது.

14 வெற்றிவிருப்பமுள்ளவனுடன் மேற்சேறற்குரியான் சந்தி செய்து கொள்ளும்படி அச் சிற்றரசன் செய்வான் என்பது.

15 வரையறை செய்துகொண்டபடி வெற்றிவிருப்பமுள்ளவனிட மிருந்து அச் சிற்றரசன் ஊதியப் பகுதியைப் பெற்று, அவ் வெற்றிவிருப்ப முள்ளவன் வரையறை மீறுதவன் என்பதைப் பலரும் அறியும்படிச் செய்து ஏனைய பகைவர்களுக்கும் அவனிடம் நம்பிக்கையை உண்டுபண்ணுவான் என்பது கருத்து.

16 இங்ஙனம் பத்து வகையான பயன்கள், கூடி மேற்சேறலால் உண் டாவன என்பது.

17 பின்பக்கத்திலும் இருமருங்கிலுமுள்ள நாட்டில் உள்ளவராற் பெறற்குரிய பயனைப் பெறவிருக்கும் அயல்நாட்டவனை யடைந்து அவ னுடன் கூடி மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

18 ஒன்றுகூடிய பின் வெற்றிவிருப்பமுள்ளவன் அவநம்பிக்கை யுடைய னுயின் அவன் செயற்பாலதைக் கூறுகின்றார். துவைதீபாவத்தை யடைந் தவன்—சந்தி விக்கிரகங்களை மேற்கொண்டவன்.

19 பின்னும் பக்கத்திலுமுள்ள அரசருள் ஒருவரிடமிருந்தென்பது.

20 படை குறைவாயிருப்பின் பொருளாற் படையையும், பொருள் குறைவாயிருப்பின் படையாற் பொருளையும் அடைய விரும்புதல் வேண்டும் என்பது கருத்து.

[21]அவர்களுள் [22]சிறந்தவனிடமிருந்து மிகுதியான பகுதியாலும், [23]ஒத்தவனிடமிருந்து ஒத்ததாலும், [24]இழிந்தவனிடமிருந்து குறைந்ததாலும் (ஏற்பது) சமசந்தியாம். [25]மாறுபடின் விடமசந்தியாம். [26]அவற்றில் ஊதியம் சிறப்புறின் அதிசந்தியாம்.

[27]விதனமுள்ளவனும் [28]தீங்குக்குரியவற்றில் ஈடுபட்டவனும் [29]இடுக்கணை யுடையவனுமான சிறந்தவனுடன் தாழ்ந்தவன்

---

[21] கூடி மேற்சேறற்கும், அவரால் விரும்பப்படும் ஊதியக் கூற்றைப் பெறுதற்கும் சந்தி இன்றியமையாதாகலின், அச் சந்தியின் பிரிவுகளைக் கூறுகின்றார் ; அவர்களுள்—சிற்றரசர்களுள்.

[22] வன்மைமிக்கானிடமிருந்து படை பொருள்களைப்பெற விரும்பின் 'மிகுதியான கூற்றைக் கொடுத்தல்' என்ற வரையறையுடன் ஏற்கப்படுவது முதல்வகைச் சமசந்தியாம்.

[23] தனக்குச் சமமானவனிடம் 'சமமான கூற்றைக் கொடுப்பது' என்ற ஒப்பந்தத்துடன் ஏற்கப்படும் சந்தி இரண்டாவது சமசந்தியாம்.

[24] தன்னிற்றாழ்ந்தவனிடம் தன்னிற் குறைந்த கூற்றைக் கொடுப்பதாய் வரையறை செய்துகொண்டு ஏற்கப்படும் சந்தி மூன்றாவது சமசந்தியாம். எனவே மேற்கூறியவாறு சமசந்தி மூவகைப்படும் என்க.

[25] வன்மை மிக்கானிடம் சமமான கூற்றினைலாதல் குறைந்த கூற்றினைலாதல் ஏற்றல் என்பதாக முதற்பிரிவு மாறுபடின் இருவகையும், ஒத்தவனிடம் அதிகமான கூற்றினைலாதல் குறைந்த கூற்றினைலாதல் ஏற்றல் என்பதாக இரண்டாவது பிரிவு மாறுபடின் இருவகையும், தாழ்ந்தவனிடம் ஒத்த கூற்றினைலாதல் அதிகமான கூற்றினைலாதல் ஏற்றல் என்பதாக மூன்றாவது பிரிவு மாறுபடின் இருவகையும் ஆக விடமசந்தி அறுவகைப்படும் என்பது கருத்து.

[26] மேற்கூறிய சமசந்தி மூன்றும் விடமசந்தி ஆறும் ஆகிய ஒன்பது சந்திகளுள் ஒவ்வொன்றும் வரையறைக்கு மேல் அதிகமாகப் பெறுங்கால் அதிசந்தி என மற்றும் ஒன்பதாம். ஆகச் சந்தி பதினெட்டு வகைப்படும் என்க.

[27] படையை ஒத்தது எனவும், அதைவிட மிகுந்தது எனவும், தாழ்ந்தது எனவும் ஊதியம் மூவகைப்படும். தாழ்ந்தவன் சிறந்தவனுடன் சந்தியை ஏற்குங்கால் அவ்வூதியம் காரணமாக உண்டாம் பிரிவுகளைக் கூறுகின்றார். விதனமுள்ளவன்—மூரண்பட்ட குணத்தை யுடையவன்.

[28] தீங்கு—உடற்கேடு.

[29] ஒரு வழியாலும் பல வழியாலும் உண்டாய இடுக்கணை யுடையவன் என்பது.

[30]படையையொத்த ஊதியத்தால் சந்தி செய்துகொள்ளல் வேண்டும். [31]சந்தியை ஏற்றவன் அவனுக்குத் தீங்கிழைக்க வல்லவனுயின் வன்மையை மேற்கொள்ளல் வேண்டும். [32]இன்றேல் சந்தியை ஏற்றல் வேண்டும்.

[33]குறைந்த [34]ஆற்றல் [35]வன்மைகளை ஈடுசெய்தற்கும் அரண் நட்புப்படைகளைப் பாதுகாத்தற்கும் [36]எதிர்பார்க்கப்படும் பொருளைக் குறித்துச் செல்லும் [37]நிலையிலுள்ள தாழ்ந்தவன் [38]சிறந்தவனுடன் ஒத்த படையைவிடச் சிறந்த ஊதியத்தால் சந்தி செய்யலாம். சந்தியை ஏற்றவன் [39]நற்கருத்துடையானை யருளுதல் வேண்டும். [40]இன்றேல் வன்மையை ஏற்கலாம்.

---

30 சிறந்தவன் விதனம் முதலியவற்றால் தாக்கப்பட்டமை காரணமாக அவனிடம், வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு மதிப்பின்மை பற்றி அதிகக் கூற்றினுல் சமசந்தி செய்துகொள்ளவேண்டி யிருப்பினும் இவ்வாறு விடம சந்தி செய்யப்படுகிறது என்க.

31 அவமதிக்கப்பட்டவன் செயற்பாலதைக் கூறுகின்றார். மேற்கூறியவாறு சந்தியை ஏற்ற சிறந்தவன் தன்னை யவமதித்த வெற்றிவிருப்பமுள்ளவனுக்குத் தீங்கிழைக்க வல்லவனுயின், தன் விதனம் முதலியவற்றைப் பரிகரித்து, அதன்பின் விக்கிரகத்தை மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

32 இன்றேல்—அங்ஙனம் செய்ய வன்மையின்றேல்; இது படையை ஒத்த ஊதியத்தாற் செய்யப்படும் சந்தி என்க.

33 தாழ்ந்தவனுக்குச் சிறந்தவனுடன் விடம சந்தியைக் கூறி இனிச் சம சந்தியைக் கூறுகின்றார்.

34 ஆற்றல்—ஆண்மை முதலியன.

35 வன்மை—படை பொருள் முதலியவை காரணமாகவுள்ளது.

36 நிச்சயம் கைகூடும் என்று தீர்மானிக்கப்பட்ட நிலையிலுள்ள செயலைச் செய்தற் பொருட்டுச் செல்லும் என்பது.

37 நிலை—மேற்கூறியவாறு, ஈடுசெய்தல் முதலியவற்றால் ஆக்கப்பட்டது.

38 சிறந்தவனுடன் அதிகக் கூற்றினுல் சந்திசெய்தல் என்று முற்கூறிய சம சந்தியைச் செய்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

39 சந்தி செய்துகொண்ட இழிந்தவன் சிறந்தவனுக்குத் தீங்கிழைக்க விருப்பமற்றிருப்பவனுகக் கருதப்படின், அவனை யருளுதல் வேண்டும் என்பது.

40 இன்றேல்—கருத்து வேறுபட்டிருப்பின். இது ஒத்த படையைவிட அதிக ஊதியத்தாற் செய்யப்படும் சந்தி என்க.

[41]**விதனம்,** [42]மக்கட்கலாம் இவை உண்டாகப் பெற்றவனும் நெருக்கமுள்ள தீங்கை யுடையவனுமான சிறந்தவனுடன் குறை வுள்ள வழியில் பகைவன்பால் [43]மேற்சேற விருப்பமுள்ளவனும், போரின்றியே [44]மாறுபடாத பயன்விளைவுள்ள ஊதியத்தை ஏற்க விருப்பமுள்ளவனும், [45]அரண் நட்புக்களால் செருக்குற்ற வனுமான தாழ்ந்தவன் ஒத்த படையைவிடக் குறைந்த ஊதியத் தால் சந்தி செய்யலாம். [46]சந்தியை ஏற்றவன் [47]அவனுக்குத் தீங்கு புரிய வன்மையுடையனுயின் வன்மையை மேற்கொள்ளல் வேண்டும். இன்றேல் சந்தியை ஏற்றல் வேண்டும்.

[48]**உட்கலாம்** [49]**விதனங்களற்ற** சிறந்தவன், [50]**முரண்படச்** செயற்றொடக்கமுள்ளவனுக்கு [51]மீண்டும் கேடு செலவுகளை உண்டாக்குதற்கும் [52]**தூஷ்யர்** படைகளை வெளியேற்றுதற்கும்

---

41 சிறந்தவனுடன் தாழ்ந்தவன் ஒத்த படையைவிடக் குறைந்த ஊதி யத்தாலேற்கும் சந்தியைக் கூறுகின்றூர். விதனம்—வேட்டை முதலியவற்றி லீடுபடுதல்.

42 வெகுளி, பேராசையுள்ளவர், அச்சமுள்ளவர் என்போரின் மிகுதி யான கோபம் என்பது.

43 குறுகிய இடத்தில் (அற்றம் பார்த்துப்) பகைவனுடன் மேற் சேற விரும்புகிறவன் என்பது.

44 பயன் விளைவில் மாற்ற மற்ற ஊதியத்தை என்க.

45 சிறப்புள்ள அரண் நண்பர்களை அடைந்திருத்தல் பற்றிச் செருக் குள்ளவன்.

46 தாழ்ந்தவனுடைய மேற் கூறிய விடம சந்தியை ஏற்ற சிறந்தவன்.

47 குறைந்த ஊதியத்தாற் சந்தி செய்து தன்னை அவமதித்த தாழ்ந்த வனுக்குத் தீங்கைச் செய்ய வன்மை யிருப்பின் சிறந்தவன் விக்கிரகத்தை ஏற்கலாம்.

48 தாழ்ந்தவனிடமிருந்து சிற்சில காரியங்கள் காரணமாகச் சிறந்த வனும் குறைந்த ஊதியத்தைப் பெற்றுச் சந்தியை ஏற்றல் வேண்டும் எனக் கூறுகின்றூர்; உட்கலாம்—நாட்டு மக்களிடையே உண்டாம் பூசல். (கலக்கம்)

49 வேட்டை முதலியவற்றில் ஈடுபாடற்ற.

50 உரியனவல்லாத இடம் காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட செயலை யுடைய பகைவனுக்கென்பது.

51 இடம் காலங்களுக்கு மாறுபடச் செயலைத் தொடங்கியதால் உண் டான கேடு செலவுகளைத் தவிர, மீண்டும் ஊர்தி பணியாளர்களுக்கு அழிவு, பொருட் செலவு என்னும் இவற்றை யுண்டாக்குதற்கும் விரும்பினுல்.

52 தன் நாட்டிலுள்ள தூஷ்யப்படைகளை யழிக்க விரும்பினுல்.

[53]தூஷ்யர் படைகளைக் கொள்ளுதற்கும் [54]துன்புறுத்தற்கும் களைதற்குமுரியவரைத் தாழ்ந்தவனுடன் துன்புறுத்தற்கும் விரும்புவானாயின் [55]சந்திநோக்கம் நற்கருத்துக்களை யுடையனாய்க் குறைந்த ஊதியத்தை ஏற்றல் வேண்டும். [56]நற்கருத்துடையவனுடன் சேர்ந்து பொருளை விரும்பல் வேண்டும். [57]இன்றேல் வன்மையை ஏற்றல் வேண்டும்.

[58]இங்ஙனம் ஒத்தவன் ஒத்தவனை வஞ்சித்தலையோ அருளுதலையோ செய்தல் வேண்டும்.

[59]பகைப்படை, நண்பர், காட்டில் வாழ்வோர் இவர்களை எதிர்ப்பவனும் பகைவனுடைய வேறுநிலத்தை யறிவிப்பவனு

---

53 பகைவன் நாட்டிலுள்ள தூஷ்யப்படைகளைத் தன் நாட்டிற்குக் கொண்டு சேர்க்க விரும்பினால்.

54 இரு புறத்தும் துன்புறுத்தற்கும் களைதற்குமுரிய பகைவனைத் துன்புறுத்தல் முதலியன செய்தற் பொருட்டுத் தாழ்ந்தவனை உதவியாகக் கொள்ளுதல் என்பது.

55 பல தீங்குகளை யுடைய விக்கிரகத்தை விடச் சந்தியே மேம்பட்டது என்று கருத்து.

56 கருத்துவேறுபாடற்ற தாழ்ந்தவனுடன் கூடியிருந்து உதவியைச் செய்தல் வேண்டும்.

57 தாழ்ந்தவன் கருத்துமாறுபட்டவனாயின் விக்கிரகத்தை ஏற்றல் வேண்டும். இது ஒத்தபடையைவிடக் குறைந்த ஊதியத்தால் ஏற்கும் சந்தி என்க.

58 தாழ்ந்தவன் சிறந்தவனுடன் செய்யும் சந்திகட்கு மேற்கூறிய பிரிவுகளையே ஒத்தவனுடன் ஒத்தவன் செய்துகொள்ளும் சந்தியிலும் கொள்க என்று மாட்டேற்றிக் கூறுகின்றார். தாழ்ந்தவனுக்கும் சிறந்தவனுக்கும் உண்டாய சந்திகளில் கருத்தொற்றுமை, அதன் வேறுபாடு இவற்றைக் காரணமாகக் கொண்டு அருளுதல் வஞ்சித்தல்களை ஏற்றல் வேண்டும் என்று முன்னர்க் கூறியவாறே ஒத்தவர்களுக்குண்டாம் சந்தியிலும் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

59 இனி ஒத்தவர்களுக்குப் படையை யொத்த ஊதியத்தாற் சந்தியைக் கூறுகின்றார். பகைவனைச் சார்ந்த நண்பர், காட்டில் வாழ்வோர் இவர்களை எதிர்த்துப் போர் புரிய வல்லவனும் பகைவனுடைய நாட்டின்கண் மலைக் குகை முதலியவைகளில் இயங்குவதற்குரிய வழிகளைத் தெரிவிப்பவனுமான ஒத்த அரசனுடன் தன் நாட்டினரையும் பிற்புறத்துள்ளவரையும் பாதுகாத்தற் பொருட்டுப் படையை யொத்த ஊதியத்தாற் சந்தி செய்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

மாகிய ஒருவனுடன் தானியத்தையும் பின்னுள்ள நண்பரையும் காத்தற்பொருட்டுப் படையை யொத்த ஊதியத்தால் சமமானவன் சந்தி யேற்கலாம். சந்தி யேற்றவன் நற்கருத்துடையவனுக்கு அருளுதல் வேண்டும். இன்றேல் வன்மையை ஏற்றல் வேண்டும்.

[60]விதனங்கள் மக்கட்கலாம் இவை உண்டாகப் பெற்றவன், பலரொடு பகைத்தவன் [61]என்பவருடன் [62]வேறுமுகமாக எய்தப் பெறும் சமமானவன் ஒத்த படையைவிடக் குறைந்த ஊதியத் தால் சந்தி செய்துகொள்ளல் வேண்டும். சந்தி யேற்றவன் அவ னுக்குத் தீங்குபுரிய வல்லவனாயின் வன்மையை ஏற்றல் வேண்டும். இன்றேல் சந்தியை ஏற்றல் வேண்டும்.

[63]இவ்வாறுள்ளவனும் [64]சிற்றரசனுக்கு வயப்பட்ட செயலை யுடையவனும் [65]உண்டாக்குதற்குரிய படையை யுடையவனு மான ஒத்தவன் ஒத்த படையைவிட அதிகமான ஊதியத்தால் சந்தி செய்தல் வேண்டும். சந்தியை ஏற்றவன் நற்கருத்தை யுடையவனை யருளுதல் வேண்டும். இன்றேல் வன்மையை ஏற்றல் வேண்டும்.

---

60 ஒத்த படையைவிடக் குறைந்த ஊதியத்தாற் சந்தியைக் கூறுகின்றார்.

61 என்ற சமமானவருடன் என்க.

62 ஒத்தவன் துணையின்றியே விரும்பிய தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவன். குறைந்த ஊதியத்தால் சந்தி செய்தற்குரிய வேறொரு சிற்றரசனை எளிதாக அடைய இயலுங்கால் ஒத்த படையைவிடக் குறைந்த ஊதியத்தாற் சந்தியை ஏற்றல் வேண்டும் என்று உரை கூறுவாருமுளர்,

63 ஒத்த படையைவிட அதிகமான ஊதியத்தாற் சந்தியைக் கூறுகின்றார்; இவ்வாறுள்ளவன்—விதனம், மக்கட்கலாம், பலரைப் பகைத்தல் முதலியவற்றையுடையவன்.

64 சிற்றரசன் உதவியைக்கொண்டே காரியசித்தியை அடைதற்குரியவன் என்பது.

65 போதிய அளவு படையின்மையால், இனி அதிகமான படையை உண்டாக்க வேண்டிய (சேகரிக்க வேண்டிய) நிலையிலுள்ளவன் என்பது.

[66]விதனம் மிக்கட்கலாம் உண்டாகப் பெற்ற ஒருவனைத் தகர்த்தற்கு விருப்பமுள்ளவனும், [67]நன்கு தொடங்கப்பெற்றதும் [68]பயன்விளைவுள்ளதுமான [69]அவன்செயலுக்குத் தீங்கிழைக்க விருப்பமுள்ளவனும், பகைவரின் [70]மேற்சேறலைத் தொடக்கத்திலேயே தாக்க விருப்பமுள்ளவனும், [71]மேற்சேறற்குரியானிடமிருந்து மிகையாகப் பெறுபவனுமான [72]இவர்கள், சிறந்தவன் தாழ்ந்தவன் ஒத்தவன் என்பவரிடம் [73]மிகையாகக் கேட்டல் வேண்டும். [74]மிகையாகக் கேட்கப்பட்டவனும், முயன்று தகர்த்தற்குரிய பகைவனையும் [75]நட்புப்படை காட்டுப்படைகளையும் [76]பகைப்படையால் அழிக்க விருப்பமுள்ளவனும், [77]தொலைவி

---

[66] தன்னுடன் சந்தியைச் செய்துகொள்ள விருப்பமுள்ள வெற்றி விருப்பமுள்ளவனிடமிருந்து தன்பாலுள்ள தாழ்மை, ஒற்றுமை, சிறப்பு முதலியவைகளைக் கருதாது மிகுந்த ஊதியத்தைக் கேட்கும் ஒரு சிற்றரசனுடன் ஊதியச் சிறப்பு காரணமாயுண்டாம் அதிசந்தியைக் கூறுகின்றார்; 'விதனம்...... உண்டாகப்பெற்ற' என்பதைப் பின் வரும் 'சிறந்தவன் தாழ்ந்தவன் ஒத்தவன்' என்பவற்றுடனும் கூட்டிப் பொருள் கொள்க.

[67] நன்கு—உரிய இடம் காலங்களில்.

[68] நன்கு தொடங்கப்பட்டமை காரணமாகவே பயன்விளைவில் ஐயமற்றதுமான.

[69] அவன்—வெற்றிவிருப்பமுள்ளவன்.

[70] மேற்சேறலை ஏற்றக்கால் அவனுடைய அரண் முதலியவற்றைத் தகர்க்க விருப்பமுள்ளவனும் என்பது.

[71] வெற்றிவிருப்பமுள்ளவன் தனக்குக் கொடுக்க விரும்பும் பொருள் முதலியவற்றைவிட மிகையாயதை அவனால் மேற்சேறற்குரியவனிடமிருந்து அடைதற்குரியவனும்.

[72] இவர்கள்—வெற்றிவிருப்பமுள்ளவனுக்குத் தாழ்ந்தவர், சிறந்தவர், ஒத்தவர் என்போர்.

[73] தம்பாலுள்ள தாழ்மை முதலியவற்றைக் கருதாது, விரும்பியவாறு கேட்கலாம் என்பது; இது சந்தியை ஏற்பவருக்குரிய விதியாம்.

[74] சந்திவிருப்பமுள்ளவனும் கேட்கப்பட்டவனுமான வெற்றிவிருப்பமுள்ளவனுக்குரிய விதியைக் கூறுகின்றார்.

[75] பகைவனுடைய நட்புப் படை முதலியவற்றை என்க.

[76] தன்னுடன் சந்தியை ஏற்ற சிற்றரசனுடைய படையால்.

[77] தன்னுடன் சந்தியை ஏற்பவனுடைய படைக்கு நெடுந்தூரம் நிகழும் போக்கு வரவுகளாலும் நீண்ட நாள் செயல் புரிதலாலும் உண்டாம் அழிவு முதலியவற்றை விரும்புகிறவன் என்பது கருத்து.

லுள்ள இடம் காலங்களில் பகைப்படைக்கு அழிவு செலவுகளைச் செய்ய விருப்பமுள்ளவனும், [78]பகைப்படையால் மிகுதியை யடைந்து பகைவனையே களைய விருப்பமுள்ளவனும், [79]பகைப் படையை ஏற்க விருப்பமுள்ளவனும் தம் படையைப் போற்றற் பொருட்டு [80]மிகையாகக் கொடுத்தல் வேண்டும்.

[81]மேற்சேறற் குரியானைத் தலைக்கீடாகக் கொண்டு தாழ்ந்த வனைக் கைக்கொள்ள விருப்பமுள்ளவனும், [82]பகைவனைக் களைந்த பின் [83]அவனையே களைய விருப்பமுள்ளவனும், [84]கொடுத்த பின் னர்த் திரும்பப்பெறும் விருப்பமுள்ளவனுமான சிறந்தவன் ஒத்த படையைவிடச் சிறந்த ஊதியத்தால் சந்தியேற்றல் வேண்டும். [85]சந்தி செய்தவனுக்குத் தீங்குபுரிய வல்லமை யுடையவன் வன் மையை ஏற்றல் வேண்டும். இன்றேல் சந்தியை ஏற்றல் வேண் டும். [86]மேற்சேறற்குரியானுடன் சந்தியை ஏற்றுமிருக்கலாம்.

---

78 மேற்சேறற்குரியவனை வென்றபின் அடையத்தக்க அவனுடைய நால்வகைப் படைகளால் மிகுதியை யடையப்பெற்றுச் சந்திகுறித்துத் தன்னால் மிகையாகக் கொடுக்கப்பட்டதை அச் சிற்றரசனிடமிருந்து மீண்டும் கவர விருப்பமுள்ளவன் என்பது.

79 சந்தி ஏற்பவனது உதவியைக்கொண்டு மேற் சேறற்குரியானுடைய படையை ஏற்க விருப்பமுள்ளவன்.

80 அதிகப் பொருள் கேட்கப்பட்டவன் கேட்கப்பட்ட அனைத்தையும் மேற் கூறிய பயன் கருதி,கேட்பவனுக்குக் கொடுத்தல் வேண்டும் என்பது.

81 இங்ஙனம் மிகையாகக் கேட்டல் கொடுத்தல்கள் காரணமாயுண்டாம் அதிசந்தியைக் கூறி, இனி சிறந்தவன் தாழ்ந்தவனுடன் செய்து கொள்ளும் மூவகைச் சந்தியைக் கூறுகின்றார். மேற்சேறற்குரியானைக் களைதற் பொருட்டு எல்லாப் படைகளையும் தொகுத்தல் என்பதைத் தலைக்கீடாகக் கொண்டு தாழ்ந்தவனைத் தன்வயப்படுத்திக் கொள்ள விருப்பமுள்ளவன்.

82 பகைவன்—மேற்சேறற்குரியான்.

83 அவன்—தாழ்ந்தவன்.

84 அதிகத்தைக் கொடுத்துப் பின்னர் அதைக் கவர விருப்பமுள்ளவன்.

85 தாழ்ந்தவன் சந்தியை ஏற்ற பின்னர்ச் செய்தற்குரிய விதியைக் கூறுகின்றார்.

86 சந்தியை ஏற்றவன் மேற்சேறற்குரியானுடன் சந்தி செய்து கொண்டு 'இருத்தலை' (ஆதனத்தை) ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

[87] தூஷ்யன், பகைவன், காட்டில் வாழ்வோர் என்பவர்களுடைய படையை இவனுக்குக் கொடுக்கலாம்.

[88] விதனம் மக்கட்கலாம் உண்டாகப்பெற்ற சிறந்தவன் தாழ்ந்தவனுடன் படையை யொத்த ஊதியத்தாற் சந்தியேற்றல் வேண்டும். சந்தி யேற்றவன் அவனுக்குத் தீங்கிழைக்க வல்லவனுயின் வன்மையை ஏற்றல் வேண்டும். இன்றேல் சந்தியை யேற்றல் வேண்டும்.

[89] இவ்வாறுள்ள இழிந்தவனுடன் சிறந்தவன், ஒத்த படையை விடக் குறைவான ஊதியத்தாற் சந்தியை ஏற்றல் வேண்டும். சந்தியை ஏற்றவன் அவனுக்குத் தீங்கிழைக்க வல்லவனுயின் வன்மையை ஏற்றல் வேண்டும். இன்றேல் சந்தியை ஏற்றல் வேண்டும்.

சுலோகம்

[90] ஆகலின் சந்திசெய்பவனும் சந்தி யேற்பவனும் காரணத்தை அறிதல் வேண்டும். [91] பின்னர் [92] இரு புறமும் சூழ்ந்தறிந்து [93] எதனுல் மேன்மையாமோ அதை யடைதல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் பதினுறும் பிரகரணம்
'பிரித்தலைக் காரணமாகவுடைய சந்தி விக்கிரகங்கள்
என்னும் நூற்றைந்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[87] தன்னுல் கொல்லத்தக்க தூஷ்யன் முதலியவர்களைச் சந்தியின் நிமித்தம் சந்தியை விரும்பும் சிறந்தவனுக்குக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[88] படையைவிடச் சிறந்த ஊதியத்தாற் செய்யும் சந்தியைக் கூறிப் படையை யொத்த ஊதியத்தாற் செய்யும் சந்தியைக் கூறுகின்ருர்.

[89] ஒத்த படையை விடக் குறைந்த ஊதியத்தாற் செய்யும் சந்தியைக் கூறுகின்ருர்; இவ்வாறுள்ள—விதனம் முதலியன உண்டாகப் பெற்ற.

[90] ஊதிய ஒப்பந்தத்திற்கும் அதை ஏற்றற்குமுரிய காரணம் பல விதமாயிருத்தலால் என்பது.

[91] காரணத்தை அறிந்த பின்னர் என்பது.

[92] சந்தியை ஏற்றல் சிறந்ததா அல்லது விக்கிரகத்தை மேற்கொள்ளல் சிறந்ததா என்று இரு நிலைமையையும் ஆராய்ந்தறிந்து.

[93] எவ்வுபாயம் மேற்கொள்ளப்பட்ட விடத்துத் தனக்குச் சிறப்புண்டாமோ, அவ்வுபாயத்தை மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

ஏழாம் அதிகாரணம்—அறுவகைக் குணங்கள்

17, 18-ஆம் பிரகரணங்கள்—[1]மேற் சேறற்குரியான் செயல், அருளுதற்குரிய நண்பர்கள்

நூற்றாறும் அத்தியாயம்

[2]மேற்சேறற்குரியவன் [3]மேற்சேறப்படும் முன் [4]சந்தியின் காரணத்தை யேற்றலேயோ [5]அழித்தலேயோ விரும்பினுனையின் கூடிச்செயல்புரிவோருள் ஒருவனுடன் [6]ஊதியத்தின் இரு மடங் காற் சந்தியைச் செய்துகொள்ளல் வேண்டும். [7]சந்தி செய்பவன் [8]அவனுக்குண்டாம் [9]கேடு, [10]செலவு, [11]அயலூர்ச் செலவு, இடுக்

106-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மேற்சேறற்குரியவன்—தன்னைக் குறித்துவரும் பகைவனை எதிர்த்து மேற் செல்பவன். அவன், தன்னைப் பின்தொடர்ந்து கூடிவரும் துணைவர் பால் நடந்து கொள்ளவேண்டியதும், அத்துணைவர்கள் அவன்பால் நடந்து கொள்ள வேண்டியதுமாகிய ஒழுங்குகள். மேற் சேறற் குரியவர், மேற் சேறலில் கூடித்துணைபுரிபவர் என்னுமிவர்கள் ஒருவரோடொரு வர் சந்தி முதலியவற்றை ஏற்பதற்குரிய விதிமுறைகள் கூறப்பட்டன. மேற் சேறற்குரியவர் கூடித் துணை புரிபவர்பாலும் அவர்கள் மேற் சேறற்குரியவரிடமும் ஏற்க வேண்டிய செயன்முறை ஈண்டு விளக்கப்படு கிறது. இதனுற் பிரகரணவியைபுண்மை புலனும்.

[2] மேற்சேறற்குரியவனது நிலையிலுள்ள வெற்றிவிருப்பமுள்ளவன்.

[3] மேற்சேறலை ஏற்ற வெற்றிவிருப்பமுள்ளவனைக் குறித்து மேற் செல்லுமுன்.

[4] சந்தியின் காரணத்தை யேற்றலேயோ—சந்தியைச் செய்தலேயோ.

[5] பிறனுல் செய்வதற்கு விரும்பப்பட்ட சந்தியைத் தடுத்தலேயோ என்பது

[6] பகைவனுடன் கூடித் துணை புரியாதிருக்கும் வண்ணம் வரையறுக் கப்பட்ட ஊதியத்தின் இரு மடங்கு ஊதியத்தைக் கொண்டு சந்தி செய்து கொள்ளல் வேண்டும்.

[7] பகைவனுடன் சந்தியை ஏற்றலாலுண்டாம் தீமைகளை, வெறுப் புண்டாமாறு சந்திசெய்பவன் எடுத்து விளக்கல் வேண்டும் எனக் கூறு கின்ருர்.

[8] அவன்—பகைவன் சந்தியை ஏற்பவன்.

[9] கேடு—ஊர்தி பணியாளர்களின் அழிவு.

[10] செலவு—பொருட் செலவு.

[11] நெடுந்தூரப் போக்கு வரவு என்பது,

கண், [12]பகைவனுக்குதவி, உடற் றீங்கு [13]என்பவற்றை விளக்கிக் கூறல் வேண்டும். [14]ஒப்புக் கொண்டவனைப் [15]பொருளுடன் சேர்த்தல் வேண்டும். [16]அல்லது [17]பிறரைக் கொண்டு பகைமையை ஏற்கச் செய்து மாறுபடச் செய்தல் வேண்டும்.

[18]முரண்பட்ட செயற்றொடக்கத்தை யுடையவனுக்கு [19]அதிகமான கேடு செலவுகளை உண்டாக்கவும், [20]நன்கு தொடங்கப் பெற்ற யாத்திரையின் பயனைக் கெடுக்கவும், மேற் சேறற்றொடக்கத்தில் தாக்கவும், மேற் சேறற் குரியானுடன் சந்தியை ஏற்று [21]மீண்டும் கேட்கவும் விரும்பியவனும் [22]பொருள் முட்டுப்

---

12 பகைவனுடன் கலந்து கொண்டு உதவி புரிதல்.

13 கூடித் துணைபுரிதற் றன்மையால் உண்டாகும் இந்த ஆறு குற்றங்களை என்பது.

14 தன்னுடன் சந்தியை ஏற்க ஒப்புக்கொண்டவனை.

15 சங்கேதப்படிப் பொருளைக் கொடுத்துத் தன்னுடன் கூடி உதவி புரிபவனாகச் செய்தல் வேண்டும் என்பது.

16 அழிக்க விரும்பின் செயற் பாலதைக் கூறுகின்றார்.

17 கூடித் துணை புரிபவர் வேறொருவருடன் பகைமையை உண்டாக்கு முகமாகச் சந்தியைக் காத்தல் வேண்டும் என்பது. மேற்சேறற்குரியவன் கூடித் துணை புரிபவருடன் சந்தி செய்து கொள்ளும் முறை இவ்வாறாம்.

18 கூடித் துணைபுரியும் இயல்பினர், தாம் பிறருடன் சந்தி செய்யும் முறையைக் கூறுவான் தொடங்குகின்றார். மேற்சேறற்குரியவனுடன் சந்தி செய்தலைத் தலைக்கீடாகக் கொண்டு அவனுக்குத் தீங்கு புரிய விருப்ப முள்ளவன், மிகுந்த பொருளை ஏற்றலும் பொருளைக் கொடுத்தவனுக்குப் பின்னர்த் தீங்கு விளைத்தலும் தகாது என்று கருதுமிடத்துப் பிற்காலத்து அதிகப்பொருளை விரும்புவதாகக் கூறி அக் காலத்தில் சிறிது பொருளை ஏற்றுச் சந்தியை ஏற்றல் வேண்டும் என்பது. முரண்பாடாவது இடமுங் காலமும் ஆராயாது போர்ச் செலவைத் தொடங்குதல் என்க.

19 அதுகாரணமாகவே பணியாளர் முதலியவர்களின் கேடும் துணைவரைப் போற்றுதற்குரிய பொருட் செலவுகளும் உண்டாயிருக்க, மீண்டும் மிக அதிகமாக அவற்றை உண்டாக்குதற் பொருட்டென்பது.

20 உரிய இடம் காலங்களில் தொடங்கப்பெற்றதால் எதிர்பார்த்தற் குரிய பயனைத் தடை செய்தற்கென்பது.

21 அப்பொழுது சிறிது பொருளைப் பெற்றுச் சந்தியைச் செய்த பின்னர் அதிகமாகப் பெற விரும்பியவன்.

22 எதிர்பாராத நிலையில் பொருட் செலவை யுடையவன்.

பாடடைந்தவனும் [23]அவன்பால் நம்பிக்கை யற்றவனும் அப்பொழுது சிறு ஊதியத்தையும் பின்னர் மிகுதியையும் விரும்புதல் வேண்டும்.

[24]பயனுடன் தொடர்புள்ள நண்பனின் நன்மையையும் பகைவனுடைய தீமையையும் கண்டவனும், [25]முன்னர் நன்மை செய்தவனை மீண்டும் செய்விக்க விரும்பியவனும், அக் காலத்து மிகுதியான ஊதியத்தை விட்டுப் பின்னர்ச் சிறியதை விரும்புதல் வேண்டும்,

[26]தூஷ்யன், பகைவன், [27]வேரறக் களையவல்ல சிறந்தவன் என்னுமிவர்களுடன் [28]விக்கிரகத்தை ஏற்றவனைப் [29]பாதுகாக்க விருப்பமுள்ளவனும் [30]மேற் கூறிய நன்மையைச் செய்விக்க விருப்பமுடையவனும், [31]தொடர்பை விரும்புபவனும், அக் காலத்

---

[23] அதிகப்பொருள் கொடுப்பதாகக் கூறிச் சந்திசெய்பவன் உறுதி செய்யினும், அவன், பின்னர்க் கொடுக்க மாட்டான் என அவனை ஐயுறுபவன் என்பது. இங்ஙனம் ஐந்து காரணங்கள் பற்றிச் சிறிது ஊதியத்தால் அக்காலத்துச் சந்தியை ஏற்றல் என்ற ஒரு முறை கூறப்பட்டது.

[24] 'பிற்காலத்துச் சிறிது ஊதியம் பெறுதல்' என்ற முறையைக் கூறுகின்றார். தன் நண்பனுடைய உதவியும் தன் பகைவனுடைய தீமையும் வேறுபயனுடன் தொடர்புள்ளனவாகக் காணப்படின், அக் காலத்து நெருங்கிய மிகுதியான ஊதியத்தையும் விட்டுப் பின்னர் குறைந்த ஊதியத்தை விரும்புதல் வேண்டும் என்பது கருத்து.

[25] சந்தி செய்பவன் முன்னர் உதவி புரிந்தானாகி, அது போன்று மீண்டும் உதவி புரியும்படிச் செய்பவன்.

[26] 'கூடித் தொழில் புரிபவர் பிற்காலத்தும் அக் காலத்தும் ஊதியத்தை யேற்பதில்லை' என்ற வேறொரு முறையைக் கூறுகின்றார் தூஷ்யன்—அரசனுக்குரிய பயன்களுக்குத் தடை செய்யுமியல்புள்ள நகரத் தலைவன் முதலியவர்.

[27] சிறிதும் பயன்படாவாறு செயல் முதலியவற்றிற்குத் தீங்கு புரிபவன்.

[28] விக்கிரகத்தை மேற்கொண்ட உறவினர் முதலியவரை என்க.

[29] பாதுகாக்க—தானே பாதுகாத்தற்கு.

[30] தன்னைச் சார்ந்த வேறொருவனைக் கொண்டு பாதுகாக்க விரும்பியவனும் என்பது.

[31] மேற்சேறற்குரியனுடன் திருமணத்தொடர்பை விரும்பியவனும் என்பது.

தும் பின்னரும் ஊதியத்தை [32]ஏற்றல் கூடாது.

[33]சந்தியை ஏற்று மாறுபட விரும்பியவனும், [34]பகைவனுடைய குடிகளைத் [35]துன்புறுத்த எண்ணியவனும், [36]நண்பன் பகைவன் இவர்தம் சந்தியைப் பிரிக்க விரும்பியவனும், பிறன் தன்னை [37]எதிர்ப்பான் என ஐயுற்றவனும், அடையப் பெறாத ஊதியத்தையும் மிகுதியையும் கேட்டல் வேண்டும். [38]மற்றவன் அக்காலத்தும் பின்னரும் அம் முறையைச் [39]சூழ்தல் வேண்டும். [40]இதனால் முன்னையவற்றிற்கும் விதி கூறியவாறும்.

---

32 சிறிதும் ஏற்றல் கூடாது என்க.

33 கிடைக்கப் பெறாததும், அன்றி மிகுதியாகவுள்ளதுமாகிய பொருளை உடனே கொடுக்கும்படிக் கேட்டல் என்ற நான்காம் பிரிவினைக் கூறுகின்றார். முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தியைப் பின்பு மீறுவதற்கு விருப்பமுள்ளவனும் என்பது.

34 சந்தியைச் செய்து கொள்ள விரும்பும் பகைவனுடைய என்பது.

35 துன்புறுத்த—உயிர் வாழ்தற்குச் சிரமப்படும் நிலையை எய்துவிக்க

36 சிறிது ஊதியத்தைக் கொண்டு அவர்கள் முன்னர்ச் செய்த சந்தியைக் கெடுக்க விரும்பியவன். தான் கேட்ட பொருளைக் கொடாமையை எடுத்துக் காட்டி, அவரிருவர்களாலும் கேட்கப்பட்ட பொருளையும் அவ்வாறு கொடுக்கமாட்டான் எனக் கூறுதலால் அச் சந்தியும் அழிக்கப்பட்டு விடும் என்பது கருத்து.

37 தன்னை எதிர்க்கக் கூடும் என்ற ஐயத்தால் அவ்வாறு கேட்டல் வேண்டும் என்பது. தன்னால் கேட்கப்பட்டதைப் பிறன் கொடுப்பின் அவன் தன்னை எதிர்க்கமுடியாது என்ற பொருளும் கூறுப.

38 கேட்கப்பட்டவன் செயற்பாலதைக் கூறுகின்றார். மற்றவன்—ஈண்டுக் கேட்கப்பட்டவன்.

39 கேட்பவன் கூறும் முறை ஏற்கற் பாலதா அன்றா என்பதை ஆராய்ந்து துணிதல் வேண்டும் என்பது கருத்து.

40 இம் முறையைச் சூழ்ந்து துணிதல் வேண்டும் என்ற விதியால் முற் கூறிய மூன்று முறைகளினும் அது கூறப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. இது காறும் மேற்சேறற் குரியான் செயல் என்ற பிரகரணம் கூறப்பட்டது. இனி, அருளுதற்குரிய நண்பர்கள் என்னும் பிரகரணம் கூறப்படும். ஓரரசன் தன் நாட்டை யடுத்த நாட்டிற்கு அடுத்துள்ள நாட்டு நண்பருள் யார்க்கு உதவி புரிந்து அருள வேண்டும் என்பது இப்பிரகரணத்தின்கட் கூறப்படும். தன் நாட்டை யடுத்துள்ள நாட்டினர் பகைவர் என்பது பற்றி அவர்களுடன் சந்தி முதலியவை கூறப்பட்டன. ஒரு நிலத்தால் மறைவுபட்டவர் நண்பராதலின் அவரை யருளுதல் இன்றியமையாதது என்பது பற்றி ஈண்டு அதைக் கூறுகின்றார். இதனாற் பிரகரணவியைபு புலனும்.

[41]பகைவனும் வெற்றி விருப்பமுள்ளவனும் [42]தம் தம் நண்பரை [43]யருளுங்கால், இயன்றது, நன்மையானது உயரியது என்னு மிவற்றைத் தொடங்குதல், நிலைத்தொழில் மக்களன்புடைமை என்னும் [44]இவற்றாற் சிறப்புளதாம். [45]இயன்றதைத் தொடங்கு பவன் [46]முடித்தற்குரியதையும், [47]நல்லதைத் தொடங்குபவன் குற்றமற்றதையும், உயரியதைத் தொடங்குபவன் நற்பயனையுடை யதையும் மேற்கொள்வர். நிலைத் தொழிலை யுடையவன் தொழிலை முடிக்காது நிறுத்த மாட்டான். [48]மக்களன்பையுடை யவன் உதவியின் எளிமையை யுடையனாதலின் சிறு உதவியாலும் காரியத்தைச் செய்து முடிக்கிறான். [49]பயனெய்தப் பெற்ற இவர் கள் எளிதில் மிகுதியாக உதவுகின்றனர். [50]இவர்களுக்கு மாறான வர் அருளுதற்குரியரல்லர்.

[51]ஒருவனை யருள நேரின் [52]நண்பனையாதல் [53]சிறந்த நண்

---

[41] அருளுதற்குரியராகக் கூறப்பட்டவர் யாவர்? அவரிடமிருந்து விரும்பத் தக்கன யாவை என்பதைக் கூறுகின்றார்.

[42] அவரவர் நாட்டை யடுத்துள்ள நாட்டிற்கு அடுத்தநாட்டினரை என்பது.

[43] துணை புரிதலால் உபகாரஞ் செய்யுங்கால்.

[44] நண்பர் பலருள், இயன்றது முதலாகக் கூறப்பட்டவற்றையுடைய நண்பராலேயே சிறந்த நன்மை உண்டு. எனவே, அவர்களே அருளுதற் குரியராவர் என்பது கருத்து.

[45] இயன்றது முதலியவற்றை விளக்குகின்றார்.

[46] தான் செய்து முடித்தற்குரியதையே செய்யத் தொடங்குவான் என் பது கருத்து.

[47] குற்றமற்ற தொழிலையே செய்யத் தொடங்குவான் என்பது.

[48] மக்களது அன்பைப் பெற்றவன் எளிதில் உதவியைப் பெறுவா னாதலின், சிறிது உபகரிக்கப்படினும் காரியத்தைச் செய்து முடிப்பான் என்பது கருத்து.

[49] உதவி கொண்டு காரியத்தை முடித்துக் கொண்ட மேற்கூறியவர் எளிதாகவும் பன்மடங்காகவும் உதவுகின்றனர் என்பது கருத்து.

[50] இயன்றதைத் தொடங்குபவன் முதலாகக் கூறப்பட்டவர்களுக்கு மாறான இயல்புடையவர்களுக்கு அருளுதல் வேண்டா என்பது கருத்து.

[51] நண்பன் பகைவன் என்ற இருவருள் ஒருவனையாதல் இரு நண்பருள் ஒருவனையாதல் அருள நேரின் என்பது.

[52] பகைவனை நீக்கி நண்பனையாதல் என்பது.

[53] சாமானிய நண்பனை விட்டுச் சிறந்த நண்பனையாதல் என்பது.

பகையாதல் அருளுபவன், [54]அவர்களுள் [55]சிறப்பை எய்துவான் [56]நண்பனால் தற்சிறப்பை யடைகிறான் ஆகலின். [57]மற்றவனு யின் [58]கேடு [59]செலவு [60]வேற்றிடச் செலவுகளால் [61]பிறன் உத வியை அடைவான். [62]பயனை யெய்திய விடத்துப் பகைவன் மாறுபாட்டை அடைகிறான்.

[63]மத்தியமனை யருளுபவருள் மத்தியமன், நண்பன், சிறந்த நண்பன் என்னும் இவர்களை யருளுபவன் சிறப்பை எய்துகிறான். நண்பனால் தற்சிறப்பை எய்துகிறான் ஆகலின். மற்றவனுயின் கேடு, செலவு, வேற்றிடச் செலவு, பிறர் உதவி என்னுமிவற்றை (அடை வான்). [63A]அருளப்பட்ட மத்தியமன் குணக்கேட்டை யடைவா

---

[54] அவர்கள்—பகைவனும் வெற்றிவிருப்பமுள்ளவனும்.

[55] சிறந்த ஊதியத்தை யடைவான் என்க.

[56] நண்பனிடமிருந்து சிறந்த ஊதியமாவது, தற்சிறப்பாம் என்கிறார். நண்பன், இயற்கையிலேயே தன் நண்பனுக்குச் சிறப்புக் குறித்து உதவி புரிவான். தன்னால் அருளப்பட்ட நண்பனுயின் தனக்குப் பேருதவி புரி வான் என்பது சொல்லாமலே விளங்கும்.

[57] பகைவனையுஞ் சாமானிய நண்பரையும் அருளுபவனுக்கு இவ்வாறு பயனுண்டாக மாட்டா எனக் கூறுகின்றார்.

[58] கேடு—ஊர்தி பணியாளர்களின் அழிவு.

[59] செலவு—பொருட் செலவு.

[60] நெடுவழிச் செலவென்பது.

[61] பகைவனுக்கு உதவியாக மேற் கூறியவற்றைச் செய்பவன் உதவி பெற்ற அப் பகைவனிடமிருந்து, தான் மாற்றுதவியைப் பெறுமையோடு, அப்பகைவனால் தனக்கு வேறுபட்டவன் உதவியை எய்துவிக்கிறான் (பெறுவான்) என்பது கருத்து.

[62] உதவி பெற்ற பகைவன் உதவி புரிந்தவனுக்கு உதவாமல் பிறனுக்கு உதவுதல் எங்ஙனம் என்பதற்கு மாற்றங் கூறுகின்றார். அதாவது பகை வன் தன் காரியத்தை முடித்தற் பொருட்டுத் தன்னை நல்லவனாகக் காண்பித் துக் கொள்கிறான் என்பதும் காரியம் நிறைவேறிய பின்னர்ப் பகைமை காரணமாக மாறுபடுகிறான் என்பதும் கருத்து.

[63] மத்தியமனை யருளுதல்பற்றிக் கூறுகின்றார்.

[63A] பகைவன் வெற்றி விருப்பமுள்ளவன் என்பவரால் அருளப் பெற்ற மத்தியமன் செயல் மாற்றத்தை யடைவானுயின், அவனுடைய பகைவன் சிறந்த ஊதியத்தை யடைவான் எனக் கூறுகின்றார்.

னுயின் பகைவன் சிறப்பை யடைகிறான். [64]என்னே? முயன்ற வனும் விட்டுச்சென்றவனும் ஒரே பயனை யுடையவனுமான மத்நியமனுகிய பகைவனை அடைகிறுன் ஆகலின் என்க.

[65]இதனுல் நொதுமலனை யருளுதற்கும் விதி கூறியவாறும்.

[66]மத்தியமன் நொதுமலன் என்பவர்களுக்குப் படைக் கூறு கொடுக்க நேரின் வன்மை, படைக்கலத் தேர்ச்சி, இடுக்கணைப் பொறுக்குமியல்பு, அன்பு என்பவற்றை யுடைய படையைக் கொடுப்பவன் வஞ்சிக்கப் படுகிறுன். மாறுபட்டவன் சிறப்பை யெய்துகிறுன்.

[67]எவ்விடத்துப் படையைத் தடை செய்தலும், அதையும் பிறவற்றையும் செய்தலும் வேண்டுமோ, அவ்விடத்து மூலப் படை, கூலிப் படை, குழுப் படை, நட்புப் படை, காட்டுப் படை

---

64 ஊதியத்தின் இயல்பைக் கூறுகின்றுர். மத்தியமனுடன் முயற்சி களைச் செய்தல் பற்றி முன்னர் அவனுக்கு நண்பனுயிருந்து பின்னர் மாறு பட்டு அவனிடமிருந்து விலகி அவன்பகைவனை யடைந்து அவன்பயனையே தன் பயனுகக் கருதுகிற சிறந்த ஒரு நண்பனை மத்தியமனுடைய பகைவ னன்றே அடைகின்றுன் என்க.

65 நொதுமலனை யருளுதலிலும் நண்பனுக்கு உதவுகிறவன் நண்பனிட மிருந்து சிறந்த ஊதியத்தை யடைவான் என்பதும், நொதுமலன் மாறு படின் பகைவனுக்கு ஒரு நண்பன் கிடைப்பதாக முடியும் என்பதும் மேற் கூறிய மத்தியமனுக்கு அருளுதல்விதியால் கூறப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

66 மத்தியமனுக்கும் நொதுமலனுக்கும் படையின் ஒரு பகுதியைக் கொடுத்து உதவுதல் அவசியமாக நேரின், வன்மை முதலிய சிறப்புற்ற படையைக் கொடுத்து உதவுபவன் தகாத செயலைச் செய்தல் பற்றி வஞ்சிக் கப் படுவான் என்றும் அவ்வாறின்றி தூஷ்யப் படை முதலியவற்றைக் கொடுப்பவன் உரியதைச் செய்தவன் ஆவான் என்றுங் கூறுகிறுர்.

67 சில விடத்தில் மூலப் படையையும் கொடுத்து உதவுதல் வேண்டும் என்கிறுர்; மூலப் படையைத் தவிர மற்றைப் படை பயனற்றதாகிய வழி மேற் சேறற் குரியானைக் குறித்துச் செல்லுகிறவனுக்கும், நாட்டுக்குத் தீங்கு புரிபவர், வழியில் தடை செய்பவர் இவர்களைக் களைய விரும்புகிற வனுக்கும் உதவி குறித்து மூலப் படை முதலிய ஐந்தில் ஒன்றை யனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

களுள் ஒன்றை [68]இடம் காலம் அறியப்பட்ட விடத்துக் கொடுத்தல் வேண்டும். [69]இடம் காலங்கள் மறைவுபடுமாயின் பகைப் படை காட்டுப் படைகளைக் கொடுத்தல் வேண்டும்.

[70]'பயனை யடைந்து என் படையைப் பற்றுவான்', [71]'பகைவன் காடு, தகா இடம், தகாப் பருவம் என்னுமிவற்றில் இயங்கச் செய்வான்', 'அல்லது [72]பயனற்றதாகச் செய்வான்' என்று [73]கருதப்பட்டவனுக்குப் [74]படையின் உழைப்பைத் தலைக் கீடாகக் கொண்டு [75]அருளுதல் கூடாது. [76]இவ்வாறு அருளுதல் இன்றியமையாதாயின், அக் காலத்தைப் பொறுக்கும் படையை அவனுக்குக் கொடுத்தல் வேண்டும். [77]முடிவு வரை [78]அதனை இருக்கச் செய்தலும் போர் புரியச் செய்தலும் வேண்டும். [79]படைவிதனங்களிலிருந்து போற்றுதலும் வேண்டும். [80]பயனை எய்தியவனிட

---

68 இடமும் காலமும் ஏற்றனவா என்பதை யறிந்து என்பது.

69 இடம் காலங்கள் அறியப்படவில்லையாயின் காட்டுப்படை முதலியவற்றைக் கொடுத்தலே யன்றி மூலப்படை முதலியவற்றைக் கொடுத்தல் கூடாது என்பது கருத்து.

70 இவன் என்படையால் உதவியை யடைந்து, பின்னர் அப்படையைத் தனக்குரியதாக்கிக் கொள்வான் என்பது.

71 பகைவருக்கும் காட்டில் வாழ்வோருக்கும் அருகிலும், வாழ்தற்குத் தகாத இடங்களிலும், போர்க்குத் தகாத பருவத்திலும் என் படையைப் பயன் படுத்திக் கொள்வான் என்பது.

72 பகைவனை வென்றதால் உண்டாம் பயனுக்கு உரியனைச் செய்ய மாட்டான் என்க.

73 மத்தியமன் அல்லது நொதுமலனுக்கு என்பது.

74 'என் படை வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றது' என்று ஒன்றைக் கற்பித்துக் கொண்டென்பது.

75 கருதப்பட்டவனுக்கு என்பதை ஈண்டுக் கூட்டிப் பொருள் கொள்க.

76 அவ்வாறு கருதப்பட்டவனுக்கு உதவுதல் அவசியமாக நேரின் என்பது.

77 போர் முதலிய குறிப்பிட்ட செயல் முடியும் வரை என்பது.

78 அதனை—படையை.

79 படைக்கலங்களுக்கு அழிவு நேரா வண்ணம் போற்றுதலும் வேண்டும் என்பது.

80 படைகளால் பயனை எய்திய மேற் கூறியவரிடமிருந்து ஏதேனும் ஒன்றைத் தலைக்கீடாகக் கற்பித்துக் கொண்டு தன்னிடம் திரும்பிவரச் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்வது தன் படையை அவர் கவராமலிருத்தற் பொருட்டென்க.

மிருந்து (எதையேனும்) தலைக்கீடாகக் கொண்டு வெளி யேற்று தல் வேண்டும். அல்லது [81] தூஷ்யர் பகைவர் காட்டில் வாழ் வோர்களின் படையை இவனுக்குக் கொடுத்தல் வேண்டும். [82] மேற் சேறற்குரியானுடன் சந்தியை ஏற்று இவனை வஞ்சிக்க லாம்.

சுலோகம்

[83] ஊதியம் சமமாயின் சந்தியும், முரண்படின் வன்மையும் விரும்பத் தக்கதாம். ஒத்தவர் தாழ்ந்தவர் சிறந்தவர்களுக்குச் சந்தி வன்மைகள் இவ்வாறு கூறப்பட்டன.

ஏழாம் அதிகரணம் 17, 18-ஆம் பிரகரணங்கள்
'மேற் சேறற்குரியான் செயல்', 'அருளுதற்குரிய நண்பர்கள்'
என்னும் நூற்றுமும் அத்தியாயம் முற்றிற்று.

---

[81] படையைப் போற்றுதலால் உண்டாம் துன்பத்திற்கு அஞ்சினவனு யின் செயற்பாலதைக் கூறுகின்றார். தன்னாலேயே அழிக்கத் தக்கது பிற னால் அழிவெய்துவதாகுக என்ற கருத்துக்கொண்டு கொடுத்தல் வேண்டும் என்பது.

[82] அருளுதற்குரியவன் கெட்ட எண்ணமுடையனாயின் ஏற்கத்தக்க வேறு முறையைக் கூறுகின்றார். அருளுதற்குரியவனால் மேற்சேறற்குரிய வனுடன் சந்தியை யேற்று இவனிடமிருந்து பெறத் தக்க ஊதியத்தைவிட மிகச் சிறந்த ஊதியத்தை அவனிடமிருந்து பெறுதல் வேண்டும் என்பது கருத்து.

[83] சந்தி விக்கிரகங்களைப் பற்றிய ஊதிய வரையறை முதலிய சிறப்புக் களை இவ்வாறு கூறி முடித்துப் பொதுவாகச் சந்தி விக்கிரகங்களுக்குரிய காரணத்தைப் பின் வரும் சுலோகத்தாற் கூறி அத்தியாயத்தை முடிக் கின்றார்.

19-ஆம் பிரகரணம்—[1]' நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள் ':—நட்புச்சந்தி, பொருட்சந்தி

நூற்றேழாம் அத்தியாயம்

கூடி மேற் சேறலில் [2]நட்பு பொருள் நிலம் என்னுமிவற்றின் பேறுகளுள் முறையே ஒன்று ஒன்றனிற் சிறந்து வருதலுடைய. [3]என்னை ? நிலப் பேற்றினால் நட்பு பொருள் என்பனவும் பொருட் பேற்றினால் நட்பும் உண்டாகின்றன ஆகலின் என்க. [4]எய்தப் பெற்ற எப்பேறு ஏனையவற்றுள் ஒன்றை எய்துவிக்குமோ (அது சிறந்ததாம்.)

[5]' நீயும் நானும் நண்பனை யடைவோம் ' என்ற இதுமுதலா

107-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நட்பு, நித்தியம் வசியம் முதலியனவாக அறுவகைப்படும் என்பது பின்னர்க் கூறப்படும். பொருள்—பொன் வெள்ளி முதலியன. நிலம்—'பூமிசந்தி' என்ற பின்வரும் அத்தியாயத்திற் கூறப்படும் நித்தியை அமித்திரை முதலியனவாம். செயல்—அரண் முதலியனவாம். நட்பு முதலிய நான்கைப் பெறுதல் காரணமாகச் செய்தற்குரிய சந்திகள் இனிக் கூறப் படும் என்பது. சிறந்த ஊதியம் முதலியவற்றால் ஏற்கப்படும் சந்திகள் முன்னர்க் கூறப்பட்டன. சிறப்பு தாழ்வு என்பவற்றுக்குரிய காரணங்கள் ஈண்டுக் கூறப்படும். இதனாற் பிரகரண வியைபு புலனும். இப்பிரகரணம், இவ்வத்தியாயம் முதல் நான்கு அத்தியாயங்களால் விளக்கப்படும். நட்புச் சந்தியும் பொருட் சந்தியும் இவ்வத்தியாயத்திற் கூறப்படுகின்றன.

[2] நட்பைப் பெறுவதைவிட பொருளைப் பெறுவதும், பொருளைப் பெறுவதைவிட நிலத்தைப் பெறுவதும் சிறந்தன என்ற முறையில் என்க.

[3] சிறந்தது என்பதற்குரிய காரணங் கூறுகின்றார். நிலத்தைப்பெறின் அதைக்கொண்டு உழவு முதலியவற்றால் உண்டாம் பயன்விளைவால் நட்பை யும் பொருளையும் எய்துதல் எளிது என்பதும் பொருட் பேற்றினால் நட்புப் பேறு கிடைத்தற்குரியது என்பதும் கருதி நிலப்பேறும் பொருட்பேறும் ஏனையவற்றிற்குச் சாதகமாயிருத்தல் பற்றி இங்ஙனம் கூறப்பட்டதெனக் கொள்க.

[4] ஒன்றுக்குண்டாம் சிறப்பாவது மற்றவற்றுள் ஒன்றையேனும் உண் டாக்குதற்குரியதென்பது.

[5] நட்புப்பேறு காரணமாயுண்டாம் சமசந்தியினையும் விடமசந்தியினை யும் கூறுகின்றார். 'நீயும் நானும் நண்பனை அடைவோம்', 'நீயும் நானும் பொருளையடைவோம்', 'நீயும் நானும் நிலத்தையடைவோம்', என்ற இம் முறையில் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கப்படும் சந்தி சமசந்தி எனப் படும்.

னது சம சந்தியாம். [6]'நீ நண்பனை' என்ற இதுமுதலியது விடம சந்தியாம். [7]இவற்றில் ஊதியச் சிறப்பு அதிசந்தியாம்.

[8]சம சந்தியில் [9]சிறப்புற்ற நண்பனையாதல் [10]நண்பன் இடுக்கண் எய்திய போது அந் நண்பனை யாதல் அடைபவன் [11]சிறப்புறுகிறான். என்னை? [12]இடுக்கண், நட்பை நிலைப்படுத்துகின்றதாகலின் என்க.

[13]நண்பனது இடுக்கட் காலத்தும், வசிய மில்லாத நிலையான நட்பு ஏற்றற் பாலதா அல்லது வசியமுடைய நிலையற்ற நட்பு ஏற்றற் பாலதா என்பது (ஆராயப்படும்). [14]வசிய மில்லாத நிலையான நட்பு சிறந்தது. என்னை? உதவி செய்யாவிடினும் அது தீமை செய்கிறதில்லையாகலின், என்பர் ஆசிரியர்.

[15]வசியமுடைய நிலையற்றது சிறந்தது. [16]உதவியை இலக்

---

[6] நீ நண்பனையடைவாய் நான் நிலத்தையடைவேன், நீ பொருளை நான் நிலத்தை, நீ பொருளை நான் நண்பனை என இன்னோரன்ன முறையில் ஏற்கப்படுவன விடமசந்திகளாம்.

[7] சமசந்தி விடமசந்திகளில் சிறப்புற்ற ஊதியம் பெறப்படின் அதிசந்தி என்பது.

[8] சமசந்தியில் ஊதியச் சிறப்பைக் கூறுகின்றார்.

[9] நித்தியமாதல் வசியமாதல் முதலியனவாக மேற்கூறப்படும் குணங்களையுடைய நண்பனை என்பது.

[10] நண்பனுக்குரிய இலக்கணங்களை யுடையவனுக்கு இடுக்கண் ஏற்பட்ட நிலையில் என்பது.

[11] அதிசந்திகாரணமாக ஊதியச் சிறப்பை அடைகிறான் என்பது.

[12] இடுக்கணை எதிர்பார்த்தலால் உண்டாம் பயனைக் கூறுகின்றார். நண்பனுக்குத் துன்பம் ஏற்படின் அவன் நட்பு நிலையாயிருக்கும் என்பது கருத்து.

[13] நண்பனுக்குத் துன்பநிலையிலும் விசேடமொன்றைத் துணிதற் பொருட்டு ஒரு வினாவை எழுப்பி விடை கூறுகின்றார். பின்னர்க் கூறப்படும் இலக்கணத்தையுடைய வசியமில்லாத நிலையான நட்புச் சிறந்ததா? அல்லது நிலையற்ற வசியமான நட்புச் சிறந்ததா என்பது ஆராயப்படுகின்றது என்பது கருத்து.

[14] ஈண்டு ஆசிரியரது துணிபைக் கூறுகின்றார்.

[15] ஆசிரியரது கொள்கையை மறுத்துத் தன் கொள்கையை நிறுவுகின்றார்.

[16] அதற்குக் காரணங் கூறுகின்றார். நட்பு என்பது உதவிபுரிதலால் அறியற்பாலது. ஆகலின் உதவிபுரியும் நிலையிலேயே நண்பன் என்ற பெயர்

கணமாகக் கொண்டது நட்பாம். எது காறும் உதவியாமோ அது காறும் நட்பாம் ஆகலின், அஃதன்று என்பர் கௌடலியர்.

[17]வசியங்களுள் நிலையற்ற மகாபோகம் சிறந்ததா அன்றி நிலையான அற்ப போகம் சிறந்ததா எனின், நிலையற்ற மகாபோகம் சிறந்தது. நிலையற்ற மகாபோகம் சிறிய காலத்தில் மிகுதியாக உதவி, பெருஞ் செலவுக்குரிய காரணங்களுக்கு மாற்றம் செய்கிறது என்பர் ஆசிரியர்.

[18]அன்றென்பர் கௌடலியர். நிலையான அற்பபோகம் சிறந்தது. நிலையற்ற மகாபோகம் உதவியச்சத்தால் நீங்குகிறது. அன்றி உதவிய பின் திரும்பப் பெற விரும்பும். நிலையான அற்ப போகம் எக்காலத்துமிருத்தலால் சிறிது சிறிதாக உதவி செய்து கொண்டு நெடுநாட்களில் அதிகமாக உதவுகிறது.

அன்றி, உதவிபுரியாத நிலையில் அப்பெயரில்லை. மேற்கூறப்படும் இலக்கணத்துக்கேற்ப வசியமான நட்பு உதவிபுரிவதாகவே இருத்தல் வேண்டும். ஆதலின் நிலையானது, வசியம் என்பவற்றுள் 'மகா போகமாயிருத்தல்' என்ற இலக்கணமுள்ள வசியமான நிலையற்றது சிறப்புள்ளது என்பது கௌடலியரின் கொள்கை எனக் கூறப்பட்டதாம்.

17 வசியமான இரண்டிற்கு நிலையாய தன்மை, நிலையின்மைகளுடன் தொடர்புண்டாயின் யாண்டு சிறப்பு என்பதை ஆராய்கின்ருர். மகா போகமான வசியம், அற்ப போகமான வசியம் என்பவற்றுள் நிலையற்ற முன்னையது சிறந்ததா அல்லது நிலையான பின்னையது சிறந்ததா என்ருராயப்படின், குறுகிய கால அளவிலே மிகப் பெரிய உதவியைச் செய்தல் பற்றி செலவுக்குக் காரணமான பலவற்றிற்கு மாற்றம் செய்யப்படும் ஆகலின், நிலையற்ற முன்னையதே சிறந்தது என்பது ஆசிரியரது கொள்கையாம் என்க.

18 ஆசிரியரது கொள்கையை மறுத்துக் கௌடலியர் தன் கொள்கையை நிறுவுகின்ருர். நிலையற்ற மகா போகத்தினின்றும் எய்தப் பெறும் குற்றங்களுக்குப் பாத்திரமற்றதும் அதனின்றும் எய்தப் பெறும் குணங்களுக்கு நிலைக்களமாயிருப்பதும் பற்றி நிலையான அற்ப போகவசியம் சிறந்தது. நிலையற்ற மகாபோகவசியமானது உட்கருத்துடன் கூடாமையால் உதவியச்சம் காரணமாக நட்பினின்றும் நழுவுதலையாதல், உதவிபுரிந்த பின்னர்த் தீங்குபுரிதற்கு முயலுதலையாதல் ஏற்கும். நிலையான அற்பபோகமோவெனின் மாறுபாடின்றி நட்புடன் கூடியிருத்தல் பற்றி எக்காலத்தும் நழுவாது. அந் நட்பால் தொடர்ந்து செய்யப்படும் சிறிய உதவி நாளடைவில் மிகப் பெரிதாக ஆகும் என்க.

முயன்றுண்டாய பெரிய நட்பு பயனுடையதா அன்றி எளிதிலுண்டாய சிறிய நட்பு பயனுடையதா எனின், முயன்றுண்டான பெரிய [19]நட்பு, வன்மையைச் செய்வதா யிருக்கிறது. உண்டான பொழுதே காரியத்தை முடிக்கிறது என்பர் ஆசிரியர்.

[20]இல்லை யென்பர் கௌடலியர். எளிதிலுண்டாய சிறியது சிறந்தது. எளிதிலுண்டாய சிறிய நட்பு, செயற்காலத்தைக் கடப்பதில்லை. வன்மைக் குறைவு பற்றி விருப்பத்திற் கேற்பப் பயன்படுத்திக் கொள்ளுதற்குரியது. [21]தொலைவிடத்துள்ள மற்றையது (இவ்வாறு) இன்றாம்.

[22]சிதறுண்ட படை ஏற்புடையதா? அல்லது வசியமில்லாத படை ஏற்புடையதா எனின் சிதறுண்ட படை, வசியமானதுபற்றி ஒன்று சேர்த்தற்குரியது என்பர் ஆசிரியர்.

அஃதின்றென்பர் கௌடலியர். வசியமில்லாத படையை யுடையது சிறந்ததாம். என்னை? வசியமில்லாதது [23]இன்சொல் முதலியவற்றால் வசியமாகச் செய்தற்குரியது. செயலிலீடுபட்ட மற்றையது ஒன்றுசேர்த்தற்குரியதன்று.

---

19 நாட்டின் தொலைவு முதலிய காரணமாக முயன்று சேர்க்கத் தக்க படைகளையுடைய சிறந்த நட்பு, எளிதில் சேர்க்கத் தக்க படையையுடைய சிறிய நட்பு என்னுமிவற்றுள் சிறந்தது யாது என்ற ஆராய்ச்சியில், மிக முயன்று சேர்க்கப்படினும் ஐயமின்றிச் செயலைச் செய்து முடித்தல், பகைவர்பால் சிறந்த முறையில் வன்மையை மேற்கொள்ளல் என்பன பற்றி முன்னையதே சிறந்ததாம் என்பது ஆசிரியரது கொள்கையாகும்.

20 செயற்குரிய காலத்தைக் கடவாமை முதலிய சிறப்பு நோக்கிப் பின்னையதே சிறந்ததாம் என்பது கௌடலியர் கொள்கை.

21 முன்னையது இவ்வாறின்றென்பது.

22 வெவ்வேறு செயல்களை நிறைவேற்றுதற் பொருட்டுப் பலவிடத்தும் அனுப்புப்பட்ட படைகளையுடையவனது நட்பு சிறந்ததா? வசியமில்லாத படையை உடையவனது நட்பு சிறந்ததா என்று ஆராயுமிடத்து, சிதறிய படையைச் சேர்த்தற்கு இயலும் ஆகவின், முன்னையதே சிறந்தது என்பது ஆசிரியர் கொள்கையாம் என்க.

23 இன்சொல் கொடை முதலிய நான்கு உபாயத்தால் என்பது.

[24]மக்களால் துணை புரியும் நட்பு, பொருளால் துணை புரியும் நட்பு என்னுமிவற்றுள் ஏற்புடையது யாதெனின், மக்களால் துணை புரியும் நட்பு சிறந்தது. மக்களால் துணை புரியும் நட்பு வன்மையேற்பதாக இருக்கிறது. தோன்றிய காலத்தே காரியத்தை நிறைவேற்றுகிறது என்பர் ஆசிரியர்.

[25]இல்லை யென்பர் கௌடலியர். பொருளால் துணை புரியும் நட்பு சிறந்ததாம். பொருட்டொடர்பு நிலையானது. படையுடனுயின் ஒரு காலத்ததாம். பொருளாற் படையும் ஏனைய விருப்பங்களும் அடையப் பெறுகின்றன என்க.

[26]பொருளால் துணை புரியும் நட்பு ஏற்புடையதா நிலத்தால் துணை புரிவது ஏற்புடையதா எனின், [27]பொருளால் துணை புரிவது, இயங்குதலுடையதுபற்றி, எல்லாச் செலவுகளுக்கும் ஈடு செய்யக் கூடியது என்பர் ஆசிரியர்.

---

24 தன்னிடத்துள்ள மக்களைக்கொண்டு உதவிபுரிபவனது நட்புச் சிறந்ததா? அல்லது பொருளைக் கொடுத்து உதவிபுரிபவனின் நட்புச் சிறந்ததா என்று ஆராயுங்கால், பகைவரை எதிர்ப்பதற்கு மக்கள் இன்றியமையாச் சிறப்புடையர் என்பது பற்றியும் செய்யவேண்டிய செயல்களைச் செய்து முடித்தற்கு அவர் உதவியாயிருப்பர் என்பதுபற்றியும் முன்னையதே சிறப்புற்றது என்பர் ஆசிரியர்.

25 எங்கும் கொண்டுபோதல் கொண்டுவருதல் என்பவற்றுக்கும், கையில் எப்போதும் வைத்து யாண்டும் பயன் படுத்தற்கும் பொருள் உரியதாயிருக்கும். படையோ வெனின், ஏதேனும் ஒரு காலத்தில் பயன் படுத்தற்குரியதாகலின், சில காலத்திலேயே பயன்படத் தக்கது. மேலும் பொருளைக்கொண்டு படைகளையும் ஏனைய விருப்பங்களையும் அடைதற் கியலும். படையாலோ எனின் பொருளையோ, மற்ற விருப்பத்தையோ அடைதல் இயலாது. ஆகலின், ஆசிரியரின் கொள்கை தவறு என்பது கௌடலியரின் கருத்தாகக் கொள்க.

26 பொருளால் துணைபுரியும் நண்பன், நிலத்தால் துணைபுரியும் நண்பன் என்பவருள் சிறந்தவன் யாவன் என்பதை ஆராய்கின்றார்.

27 பொருள் இயங்குதலையுடையதுபற்றிக் கொண்டுவருதல் கொண்டு போதல்களுக்குரியதும் எவ்விதச் செலவுக்கும் மாற்றஞ் செய்தற்குரியது மாகும். நிலமாயின், தாவரமாயிருத்தல் பற்றி அவ்வாறின்றாம். ஆகலின் பொருளே சிறந்த தென்பது ஆசிரியரது கொள்கை,

[28]அன்றென்பர் கௌடலியர். என்னை? 'நட்பு, பொருள் என்பன நிலப் பேற்றினால் உண்டாவன' என்பது முன்னர்க் கூறப்பட்டது. எனவே நிலத்தால் துணை புரியும் நட்பே சிறந்தது. ஆகலின் என்க.

[29]மக்களால் துணை புரிதல் சமமாயினும், வன்மை, துன்பத்தைப் பொறுத்தல், அன்பு, [30]படையனைத்தையும் பெற்றிருத்தல் இவற்றையுடைமை (ஏனைய) [31]நட்புக் குழுவினின்றும் சிறப்பாம்.

[32]பொருட்டுணை சமமாயினும் [33]விரும்பப்பட்ட பயனுடைமை, [34]மிகுதி, [35]எளிய முயற்சி, [36]எக்காலத்துமுண்மை [37](என்பவை காரணமாகச்) சிறப்பாம்.

---

28 நட்பு, பொருள் என்ற இரண்டிற்கும் காரணமாதல் என்ற முற் கூறிய சிறப்பை அறிவுறுத்தி, அக்காரணம் பற்றி நிலத்தாலுதவும் நட்பே சிறந்தது எனக் கௌடலியர் தன் கொள்கையைக் கூறுகின்றார். இது காறும் மக்கள், பொருள், நிலம் என்னும் இவற்றால் துணை புரிபவரது ஏற்றத் தாழ்வு ஆராய்ந்து துணியப் பட்டது.

29 இனி மக்களால் துணைபுரியும் நண்பருள் சிலர் சிறந்தவர் எனக் கூறுகின்றார்.

30 மூலப்படை முதலிய எல்லா வகையான படைகளையும் கொடுத்துதவுதல்.

31 மேற்கூறிய தன்மைகளையுடைய மக்களால் துணைபுரியும் நண்பர் அத் தன்மையற்ற ஏனையவரை விடச் சிறந்தவர் என்பது.

32 பொருளால் துணைபுரிபவருள்ளும் சிலருக்குச் சிறப்புக் கூறுகின்றார்.

33 விரும்பப்படும் பயன் எவனிடமிருந்து கிடைக்கப் பெறுமோ அவன் சிறந்தவன் என்க.

34 மிகுதி—பொருணிறைவு.

35 சிறிது முயற்சி கொண்டு செயலாற்றுந் தன்மை.

36 எல்லாக் காரியங்களிலும் உதவிபுரியும் தன்மை.

37 மேற் கூறிய குணங்களையுடைய பொருட்டுணைபுரிபவன் அக் குணங்களற்றவரைவிடச் சிறந்தவனும் என்க. நிலத்தால் உதவிபுரிபவர் பொருளால் துணைபுரிபவர் என்பவர்தம்முட் சிறப்பு இவ்வாறு கூறி முடிக்கப்பட்டது. நிலத்தால் துணைபுரிபவரைப் பற்றிப் பின்னர்க் கூறப்படும்.

[38]ஆண்டு இஃது (அறிதற்கு) உரியதாம் :—

சுலோகங்கள்

(1) [39]நித்தியம், வசியம், எளிதிலுண்டாயது, தந்தை பாட்டன் வழித் தோன்றியது, பெரியது, வேறு படுத்தற்கியலாதது என்னும் அறுவகையால் நட்பு சிறப்புடையதாம்.

(2) [40]பொருளின்றி அன்பினால் புரக்கப்படுவதும், புரப்பதும், முன்னோரால் நிலைத்த தொடர்பை யுடையதுமான நட்பு 'நிலையாயது' எனப்படும்.

(3) [41]சருவபோகம் [42]சித்திரபோகம் [43]மகாபோகம் என்று வசியம் மூவகையாகக் கூறப்படும். [44]ஒரு வழியால் உதவுவது [45]இரு முகமாக (உதவுவது) [46]எல்லா வழியாலும் உதவுவது என வேறொருவாற்றால் வகைப் படுத்தலுமாம்.

---

38 குணங்களின் வேறுபாடுகாரணமாக நண்பர்களின் பிரிவுகளைக் கூறுகின்றார். நட்புப்பேறு காரணமாக உண்டாம் சந்திகுறித்து நட்பைப் பற்றிய விளக்கம் பின்வரும் சுலோகங்களால் அறிதற்குரியது என்பது கருத்து.

39 நண்பருடைய குணங்களைக் கூறுகின்றார். நிலையாயிருத்தல் முதலிய அறு குணங்களை யுடையவர் சிறந்த நண்பராவர் என்பது.

40 குணங்களை முறையே இலக்கணத்துடன் விளக்குகின்றார். பொருட்டொடர்பின்றி, திருமணம் முதலியவற்றால் முன்னரே நிலைத்த தொடர்பு காரணமாகப் புரக்கப்படும் நட்பும், புரக்கும் நட்பும் ஒன்றுக்கொன்று 'நிலையாய நட்பு' எனப்படும் என்பது கருத்து.

41 சருவபோகம்—படை பொருள் நிலம் என்னுமிவற்றால் உதவிபுரிவது

42 இரத்தினங்கள் திண்மைப் பொருள் நொய்மைப் பொருள் குப்பியப் பொருள் மரக்காடு முதலியவற்றால் உதவிபுரிவது சித்திரபோகம் எனப்படும்.

43 பொருள் படை என்பவற்றால் அதிகமாக உதவுவது மகாபோகம் எனப்படும். பயனை விளைவித்தலாகிய உதவி பற்றி இங்ஙனம் முப்பிரிவுகள் கூறப்பட்டன வெனக் கொள்ளல் வேண்டும்.

44 இனித் தீங்கைப் பரிகரித்தலாகிய உதவிபுரிதலைக் காரணமாகக் கொண்டு முப்பிரிவு கூறப்படும். ஒரு வழியால் உதவுவது என்பது பகைவரை ஒரு புறமாகப் பரிகரிப்பது என்னும் பொருட்டு.

45 பகைவரையும் அவர்நண்பரையும் பரிகரிப்பது என்பது.

46 பகைவர், அவர் நண்பர், கள்வர், காட்டில் வாழ்வோர் என்னுமிவர் களைப் பரிகரிக்குமுகமாக உதவுவது என்பது.

(4) [47]பகைவரைத் துன்புறுத்தலால் கொள்ளல் கொடுத்தல்களையுடையதும், அரண் காடுகளில் இயங்குமியல்புடையதுமாக வாழ்வது வசியமில்லாத நிலையாய நட்பாம்.

(5) [48]வேறொருவருடன் விக்கிரகத்தை யடைந்ததும், சிறிய துன்பத்தை யடைந்ததும், உதவி குறித்துச் சந்தியை ஏற்பதுமான (நட்பு) நிலையற்ற வசிய நட்பாம்.

(6)[49] தீமை நன்மைகளுடன் ஒத்த தொடர்பை யுடையதும், உதவி புரிவதும், மாறுபடாததும், நட்புத் தன்மை யுடையதுமான இந்த நட்பு இடுக்கண் நேர்ந்துழி வேறுபடுத்தற்கியலாதது (எனப்படும்.)

(7) [50]நட்புத் தன்மைகெடாதது நிலையாம். பகைவனுக்

---

[47] வசியத்தன்மையற்ற நிலையாயது, நிலையற்ற வசியம் என்னுமிவ்விரண்டனுள் முதலாவதை விளக்குகின்றார்; வெற்றி விருப்பமுள்ளவனுக்கு உதவி புரியாவிடினும், திருடுதல் முதலிய தீமைகளால் பகைவரிடமிருந்து கவர்தலையும், அரண் முதலியவற்றில் இயங்கும் இயற்கையால் தன்னைக் காத்துக்கொண்டு பகைவராற் கவரப்படாதிருத்தலையும் உடைய நட்பு வசியமற்ற நிலையாய நட்பாம் என்பது கருத்து.

[48] இரண்டாவதைக் கூறுகின்றார். வேறு புறத்தில் பகைவனுடன் விக்கிரகத்தை மேற்கொண்டதும் சிறிய துன்பத்தை யுடையதும் வெற்றி விருப்பமுள்ளவனுடன் உதவி குறித்துச் சந்தியை மேற்கொள்வதுமான நட்பு உதவி காரணமாக வசியமாகவும், தன் உதவிகாலம் வரையில் மட்டும் நிலைத்திருத்தல் பற்றி நிலையற்றதாகவும் ஆம் என்க.

[49] முயற்சியின்றி எளிதிலேயே படைகளைப் போர் குறித்து இயங்கச் செய்தல் என்ற இலக்கணமுள்ளது எளிதிலுண்டாயது என்றும், தந்தை பாட்டன் வழியில் தொடர்ந்து மாறுபடாது வந்த நட்பு ' தந்தை பாட்டன் வழித்தோன்றியது ' என்றும் அளவு வன்மைகளாற் சிறப்புற்றது 'பெரியது' என்றும் எளிதாக அறிதற்குரியன வாதல் பற்றி அவற்றை விளக்காது, ' வேறுபடுத்தற்கியலாதது ' என்பதை இலக்கணத்தால் விளக்குகின்றார்; இன்ப துன்பங்களால் ஒத்தனவும், உதவுவனவும், மாறுபடாதனவுமான நட்பு இடுக்கண் நேர்ந்துழி வேறுபடுத்தற்கியலாதது ஆதலின் இப்பெயர்த்தாயிற்று. இந் நட்பு நட்புத்தன்மையுடன் அழியாதிருத்தல் பற்றி ' மித்திர பாவி ' என்றுங் கூறப்படும் என்ப.

[50] ' மித்திரபாவி ' என்பதற்கு மாறுபட்டதான 'உபயபாவி' என்பதும் ஒன்று உண்டு. பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவருக்கும் உதவி செய்யாமை, அவ்விருவருக்கும் உதவிபுரிதல், ஆற்றலின்மையால் இருவரையும் அண்டியிருத்தல் என்று அது மூவகைப்படும். நட்பு—பகைவன்

குச் சமமானது நிலையற்றதாம். [51]ஒருவருக்கும் நெருக்கமில்லாதது நொதுமலாம். இருவருக்கும் தொடர்புடையது **உபயபாவி** (ஆம் என்க).

(8) [52]வெற்றிவிருப்பமுள்ளவனுக்குப் [53]பகைமை யுடையதும், [54]மறைவை யடைந்ததும், உதவியில் ஊக்கமுள்ளதும், வன்மையற்றதுமான [55]உதவியற்ற அந் நட்பு உபயபாவியாம்.

(9) [56]பகைவற்கு அன்பன், [57]போற்றத் தக்கவன், [58]பெரியோர்க்குத் தொடர்புள்ளவன் என்ற இவர்களுக்கு அருளும் நட்பு [59]பகைவனுக்குப் பொதுவானதாம்.

(10) [60]தொலைநிலத்திலுள்ளதும், [61]மனநிறைவுடைய

வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவரைவிட்டுப் பிறரைப் பற்றுமையால் சிறப்பு நோக்கி நிலையானதும், பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவருக்கும் பொதுவாயிருத்தல்பற்றி நிலையற்றதாயுமிருத்தலால் நித்தியம் அநித்தியம் என்ற இரண்டின் உருவமாயிருக்கும் என்பர் உரையாசிரியர். பகைவன் நண்பன் என்பவர்களைத் தவிர மற்றவரைப்பற்றாத சிறப்பெய்திய நட்புத்தன்மை என்பது பெறப்படும் என்ப.

51 ஒருவருக்கும் உதவிபுரியாமலிருப்பது நொதுமலாம் என்க. இஃது ஆற்றலிருந்தும் ஈடுபாடின்மையால் இருவருக்கும் உதவிபுரியாதிருத்தல் என்பதன்பாற் படும்.

52 உதவியில் ஈடுபாடிருந்தும் ஆற்றலின்மை காரணமாக இருவருக்கும் உதவிபுரியாத 'உபயபாவி' என்பதைக் கூறுகின்றார்.

53 வெற்றிவிருப்பமுள்ளவனது நாட்டை அடுத்துள்ள நாட்டிலிருத்தலால் பகைமையுடையது என்பது.

54 பகைவன் வெற்றி விருப்பமுள்ளவன் என்ற இவர்களுக்கு மத்தியில் ஆற்றலற்றிருத்தல் 'மறைவு' எனப்படும் என்ப.

55 உதவி புரியாத என்பது.

56 இருவருக்கும் உதவி புரிவதான 'உபய பாவி' என்பதைக் கூறுகின்றார்.

57 பகைவனைப் போற்றுதற்குரியவன் என்பது.

58 தன்னால் கௌரவிக்கத் தக்க ஆசிரியர் முதலியவர்களுடன் தொடர்புள்ளவன் என்பது.

59 பகைவன் நண்பன் என்ற இருவருக்கும் சமமான 'உபய பாவி' என்று கொள்க என்பது கருத்து.

60 உதவிபுரியவேண்டிய நிலையில் எந்த விதமான நட்பு உதாசீனமாயிருக்கும் என்பதைக் கூறுகின்றார்.

61 புதியதான ஒரு ஊதியத்திலும் நோக்கமற்றதும், கிடைக்கப்பெற்றதாலேயே திருப்தி அடைந்ததும் என்பது.

தும், [62]வன்மையுள்ளதும், சோம்பலுள்ளதும், [63]விதனம்பற்றி அவமதிக்கப் பெற்றதுமான [64]இது நொதுமலாம்.

(11) [65]பகைவனுக்கும் தலைவனுக்குமுரிய மேன்மையை வன்மையின்மை காரணமாகத் [66]தொடர்ந்து நிற்பதும், இருவராலும் வெறுக்கப்படாததுமான அது உபயபாவி என்றறிக.

(12) [67]காரணமின்றி அழிந்ததும், [68]காரணமின்றி வந்ததுமான நட்பை ஏற்பவன் இறத்தலைத் தழுவுகிறான்.

[69]விரைவில் உண்டாம் சிறிய ஊதியம் சிறந்ததா? அன்றிக் காலந் தாழ்த்து வரும் மிகுதியான ஊதியம் சிறந்ததா எனின் [70]செயல் இடம் காலம் என்னும் இவற்றிற் கேற்ற விரைந்த சிறிய ஊதியம் சிறந்தது என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். காலந் தாழ்ந்ததும் [71]இடுக்கணற்றதும் [72]விதையுடன் ஒத்த தன்மையுடையதுமான பெரிய

---

[62] வன்மைச் செருக்கினால் பகைமையை அடையாததும் என்பது.

[63] சூது முதலிய விதனக்குற்றம் பற்றி என்பது.

[64] இது—இந்நட்பு.

[65] ஆற்றலின்மையால் இருவரை யண்டியிருத்தலை ஏற்ற 'உபயபாவி' யைக் கூறுகின்றார்.

[66] அவர்களுக்குண்டான மேன்மையைப் புகழ்ந்துகொண்டு அவர்களைச் சார்ந்திருப்பதும் என்பது. இதுகாறும் நட்பைப்பற்றிய விசேடங்கள் கூறப்பட்டன.

[67] இனி நட்புக்குப் பொதுவாகவுள்ள சில விதிமுறைகளைக் கூறுகின்றார். காரணம் உண்டாகாமலிருக்கும்போது நீங்கியதும் என்பது.

[68] காரணம் உண்டாகாமலிருக்கும்போது மீண்டும் வந்ததும் என்பது.

[69] நட்புப் பேற்றுடன் தொடர்பு பற்றி நட்பைப்பற்றிய விசேடங்களைக் கூறிமுடித்த பின்னர், கால இயற்கை காரணமாயுண்டானதும் பொதுவாக ஊதியத்தைப் பற்றியதுமான சில விசேடத்தைக் கூறுகின்றார். உடன் நிகழக்கூடிய சிறிய ஊதியம் சிறந்ததா அல்லது காலம் தாழ்த்து வரும் பெரிய ஊதியம் சிறந்ததா என்பது ஐயமாம்.

[70] மேற்கூறியவாறு ஐயமுண்டாயவிடத்து ஆசிரியர்கொள்கையைக் கூறுகின்றார். இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்ன செயலால் ஊதியமுண்டாகும் என்று ஆராய்ந்து துணியப்பெற்ற ஊதியம் என்க.

[71] எவ்வித இடுக்கணுமின்றி நிறைவேறும் என்று துணியப்பட்டதும் என்பது.

[72] விதைக்கப்பட்ட நல்ல வித்து நெடுங்காலத்துக்குப் பின்னர் சிறந்த ஊதியத்தைக் கொடுப்பது போன்ற தன்மையை யுடையதுமான என்பது.

ஊதியமே சிறந்தது. [73]மாறுபடின் முன்னையதாம்.

சுலோகம்

[74]நிலையான ஊதியத்திலும் ஊதியப் பகுதியிலும் [75]குணத் தோற்றத்தை இவ்வாறு கண்டு தனது பயன்விளைவில் ஈடுபட்டவன், கூடித் தொழில் புரிபவருடன் சேர்ந்து மேற்சேறல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் 19-ஆம் பிரகரணத்தில்
நட்புச் சந்தி, பொருட்சந்தி என்னும் நூற்றேழாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

73 மாறுபடின்—பெரிய ஊதியம் இடுக்கண் முதலியவற்றால் தீங்கையடையக்கூடும் என்று கருதப்படின், ஆசிரியர் கூறிய முன்னையதே ஏற்றற்பாலதாம் என்பது கருத்து.

74 நட்பு பொருள் நிலம் என்னுமிவற்றின் நிலையான ஊதியத்திலும் என்பது.

75 சிறந்த குணங்களின் விளைவை என்பது.

ஏழாம் அதிகாரணம்—அறுவகைக் குணங்கள்

19-ஆம் பிரகாரணம்—நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள்—[1] நிலச்சந்தி

நூற்றெட்டாம் அத்தியாயம்

'நீயும் நானும் நிலத்தை யடைவோம்' என்பது [2]நிலச் சந்தியாம்

[3]அவருள் எவன் [4]நெருங்கிய செயலையுடையனுய்ச் [5]செழித்த நிலத்தை யடைகிருனே அவன் சிறந்த ஊதியத்தை யடைகிருன்.

[6]செழித்தநிலத்தின் பேறு சமமாயின், வலியவனை எதிர்த்து நிலத்தை யடைந்தவன், சிறந்த ஊதியத்தை அடைகிருன். [7]நிலப் பேறு, பகைவனைத் துன்புறுத்தல், வன்மை என்பவற்றை அடைகிருன். [8]ஆற்றலற்றவனிடமிருந்து நிலம் எய்தப் பெறின் உண்

108-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சென்ற அத்தியாயத்தில் நட்பு, பொருள் என்பவற்ருலாம் சந்திகள் விளக்கப்பட்டன. அடுத்துள்ள நிலச் சந்தியை விளக்க வேண்டியது முறையாதலின் இவ்வத்தியாயத்தால் அதை விளக்கத் தொடங்குகின்ருர்.

[2] இருவரும் நிலத்தைப் பெறுதலால் இச் சந்தி சமசந்தியாமென்க.

[3] அதிசந்தியைக் கூறுகின்ருர்; அவருள்—பகைவன் வெற்றி விருப்பமுள்ளவன் என்பவருள்.

[4] அணைக் கட்டுத் தொழில் சம்பந்தமான செலவு, சிறப்புள்ள பணியாளர் முதலியவரைக் கெளரவித்தல் முதலியவற்றை விரைவில் ஏற்றுச் செய்வதற்குரியவனுய் என்பது.

[5] நிலையற்ற பகைவரையுடைமை முதலாக மேற் கூறப்படும் நிலத் தன்மையை யுடைய நிலத்தை யென்பது.

[6] செழிப்புற்ற நிலத்தைப் பெறுதலினும் விசேடத்தைக் கூறுகின்ருர்; இருவரும் ஒத்த நிலையில் செழித்த நிலத்தை அடைவராயின் என்பது.

[7] ஊதியச் சிறப்பின் இயல்பினைக் கூறுகின்ருர்; வலியவனிடமிருந்து நிலத்தைப் பெறுபவன், நிலத்தைப் பெறுவதுடன் பகைவனைத் துன்புறுத்தல் வன்மையைப் பெறுதல் என்பவற்றையும் முயலாது எய்துகின்ருன் என்பது கருத்து.

[8] ஆற்றலற்றவனிடமிருந்து நிலத்தைப் பெறின் முற்கூறியவற்றிற்கு முரண்பாடுண்டாம் என்பதைக் கூறுகின்ருர். ஆற்றலற்றவனிடமிருந்து நிலத்தை யடைவது எளிதே. ஆயினும் ஆற்றலற்றவனைத் துன்புறுத்தி

மையில் எளிமை யுண்டாம். நிலப் பேறும் வன்மையற்றது. நண்பனான அவனுடைய சிற்றரசனும் பகைமையை அடைவான்.

[9]வன்மை சமமாயின் [10]நிலையுள்ள பகைவனைக் களைந்து நிலத்தை எய்தியவன் ஊதியச் சிறப்பை யடைகிறான். [11]என்னை? தன் நிலத்தைப் புரத்தல், பகைவர் காட்டில் வாழ்வோர்களைத் தடுத்தல் என்பன அரணை யடைதலாலுண்டாகின்றன ஆகலின்.

[12]நிலையற்ற பகைவனிடமிருந்து [13]நிலம் பெறப்படின் [14]எளிய சிற்றரசனை யுடையதாயின் சிறப்பாம். [15]வன்மையற்ற சிற்றரசனை யுடையதே விரைவில் மிகைப் படுத்தற்குரிய புது நலம், ஏமம் என்பவற்றை யுடையதாம். வன்மையுள்ளவனை

யடையப்பட்டது பற்றி அப்பேறு இழிந்ததாம். மேலும் அவ்வாற்றலிலா னுடைய பகைவனும், தன் நாட்டுக்கு அடுத்துள்ள நாட்டை அடுத்த நாட்டினனாதலின் தன் நண்பனுமான அரசன், ஆற்றலற்றவனும் நல்லவனு மான அவனைத் துன்புறுத்தியது பற்றி அவநம்பிக்கை கொண்டு ஆற்றலற்ற வனைக்களைதல் மூலமாகத் தன்னையும் களைந்து விடக்கூடும் என்று ஐயுற்றுப் பகைமையை யடைவதுடன் அவ் வாற்றலற்றவனுக்கு உதவியைச் செய்யக் கூடும் என்ற தீமையையும் அந் நிலப்பேறு விளைக்கும் என்பது கருத்து.

9 வலியவனிடமிருந்து நிலத்தைப் பெறின் உண்டாம் சிறப்பைக் கூறுகின்றார். இரு பகைவர், வன்மையால் ஒத்தவராயிருப்பின் என்பது.

10 அரண் முதலியவற்றைப் பெற்றிருத்தல் காரணமாக நன்கு நிலை பெற்ற என்பது.

11 சிறப்புக் காரணத்தைக் கூறுகின்றார். பகைவனைச் சார்ந்த அரண் அடையப் பெறின், அதுகாரணமாகத் தன் நிலத்தைக் காத்தலும், பகை வரைத் தடுத்தல், காட்டில் வாழ்வோரைத் தடுத்தல் முதலியனவும் பெறப் படும் என்பது கருத்து.

12 நிலையற்ற பகைவனிடமிருந்து நிலத்தைப் பெறுதலின் சிறப்பைக் கூறுகின்றார். ‘நிலையற்ற’ என்பது ‘அரண் முதலியவையற்ற’ என்னும் பொருட்டு.

13 நிலப் பேறு சமமாயின் என்பது.

14 வலிய சிற்றரசனை யுடைய நிலத்தைப் பெறுபவனைவிட ஆற்றலற்ற சிற்றரசனை யுடைய நிலத்தைப் பெறுபவன் சிறப்புறுவான் என்பது கருத்து.

15 அஃது எங்ஙனம் எனின் கூறுகின்றார். சிற்றரசனை யுடையதே— சிற்றரசனையுடைய நிலமே.

யுடைய நிலம் [16]மாறுபட்டதாயும், [17]பொருள் படைகளை யழிப்பதாயுமிருக்கிறது.

[18]நிலையான பகையை யுடைய செழித்த நிலம் சிறந்ததா? அன்றி நிலையற்ற பகையையுடைய அற்பகுணமுடையது சிறந்ததா எனின், நிலைப் பகையையுடைய செழித்த நிலம் சிறந்தது. செழித்தது, பொருள் படைகளை யுண்டு பண்ணும். அவை பகைவரைத் தடைப்படுத்துகின்றன என்பர் ஆசிரியர்.

[19]நிலையாய பகையுடையதைப் பெறின் பகைப்பேறு அதிகமாம். நிலையான பகைவன், உதவி தீங்குகள் புரியப்படின் பகைவனேயாம். [20]பகைவன் நிலையற்றவனாயின் உதவியாலும் தீங்கின்மையாலும் [21]பொறுப்பவனும். [22]மிகுந்த அரண்களையுடையதும், கள்வர், குழு, மிலேச்சர், காட்டில் வாழ்வோர் என்னுமிவர்களுடன் எப்பொழுதும் தொடர்புள்ளதுமான எல்லைகளையுடைய நிலம் நிலையாய பகையை யுடையதாம். மாறுபடின் நிலையற்ற பகையை யுடையதென்க.

---

16 மாறுபட்டது—நெடுங்காலத்தால் மிகைப்படுத்தற்குரிய புதுநலம் ஏமங்களையுடையது.

17 சிற்றரசனால் உண்டாம் இடையூற்றைப் பரிகரித்தற் பொருட்டுப் பொருள் படைகள் அழிவை எய்துகின்றன என்பது கருத்து.

18 நிலையாயுள்ள பகைவரை யுடையதும், சிறந்த செழிப்பையுடையதுமான நிலத்தைப் பெறுதல் சிறந்ததா? அல்லது சில காலம் பகைவரை யுடையதும், அற்ப் குணங்களையுடையதுமான நிலத்தைப் பெறுதல் சிறந்ததா எனின், செழித்த நிலம் எய்தப்பெறின் அதுகாரணமாயுண்டாம் பொருள் படை என்பவற்றைக் கொண்டு பகைவரைக் களைதல் எளிது என்பது பற்றி முன்னைய நிலத்தைப் பெறுதலே சிறந்தது என்பது ஆசிரியர் கொள்கையாம். நிலைப்பகை முதலியவற்றை அடுத்துவரும் இலக்கணத்தானுணர்க.

19 மேற்கூறிய கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறுகின்றார். இயற்கையில் பகைமையை யுடையவன் உதவிபுரியப்பெறினும் தீங்குபுரியப் பெறினும் பகைவனேயன்றித் தன் இயற்கைப் பகைமையை ஒருபொழுதும் விடமாட்டான் என்பதுபற்றிப் பகைவனையுடைய நிலத்தைப் பெறுதல் கூடாதென்பது கருத்து.

20 நிலையற்ற பகைவனுடைய நிலத்தைப் பெறவேண்டியதற்குக் காரணங் கூறுகின்றார்.

21 பொறுப்பவன் என்பது தீங்குபுரியமாட்டான் என்னும் பொருளது.

22 நிலைப்பகை முதலியவற்றை விளக்குகின்றார். அரண்கள்—ஈண்டு கொல்லுதற்குரியவர் வெளியேறுதற்குரிய இடங்கள்,

[23]நெருங்கிய சிறிய நிலம் சிறந்ததா? அன்றி, [24]மறைந்த பெரியது சிறந்ததா எனின், நெருங்கிய சிறியதே சிறந்தது. [25]செல்லுதல், புரத்தல், [26]விலகிச் செல்லல் என்னுமிவற்றிற்கு எளிதாகலின். மறைந்ததாயின் [27]முரண்பட்டதாம்.

[28]மறைந்தது [29]மறைவற்றது என்பவற்றுள் படையாற் புரக்கப்பட்ட நிலம் சிறந்ததா? அன்றித் தன்னாற் புரக்கப்பட்டது சிறந்ததா எனின், [30]தன்னாற் புரக்கப்பட்டது சிறந்தது. என்னை? தன்னிடமிருந்து தோன்றிய பொருள்படைகளால் அது புரக்கப் படுகிறது. [31]படையாற் புரக்கப்பட்டது, படைக்கு நிலைக்களம் என்பது பற்றி மாறுபட்டதாம்.

[32]சிறுவனிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறந்ததா?

---

23 பெறுதற்குரிய நிலம் சிறியதாயினும் தன் நிலத்திற்கு அணிமையி லிருத்தல் சிறந்ததா அல்லது சேய்மையிலிருப்பினும் பெரியது சிறந்ததா என்பதுபற்றிக் கூறுகின்றார்.

24 பிற நிலங்களால் மறைந்த; அஃதாவது சேய்மையிலுள்ள என்பது.

25 நெருங்கிய நிலம் சிறியதாயினும் சிறந்ததென்பதற்குக் காரணங் கூறுகின்றார்.

26 இடுக்கண் உண்டாயபோது தன் நாட்டைவிட்டு வேற்றிடம் செல்ல வேண்டிய நிலையில் அந்நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ளல் என்பது.

27 செல்லுதல் முதலியவற்றிற்கு எளிமை யின்றென்பது.

28 தன் நாட்டுக்குத் தொலைவிலுள்ளது.

29 தன் நாட்டை அடுத்துள்ளது.

30 தன்னாற் புரக்கப்பட்டது—தன்பாலுள்ள பொருள் படைகளைக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வல்லது.

31 படையாற் புரக்கப்பட்டது—பிற நாட்டில் தோன்றிய பொருள் படைகளால் புரக்கப்படுவது. தன்பாற் றோன்றிய பொருள் படைகளாற் போற்றப்படுவதன்றிப் பிறநாட்டுப் பொருள் படைகளாற் போற்றப் படுதலால், அது தன்னைப் புரத்தற் பொருட்டுப் பிறநாட்டிற் றோன்றிய படைகளுக்கு இருப்பிடமாக மட்டுமிருத்தல் கருதி அதனை நிலைக்களம் என்றார்.

32 அறிவிற் சிறியவனான பகைவனிடமிருந்து நிலப்பேறு சிறந்ததா? அறிஞனிடமிருந்து பெறுதல் சிறந்ததா எனின், அறிவிற் சிறியவனிடமிருந் தாயின் பெறுதல் புரத்தல் எளியன. திரும்பக் கவரப்படும் என்ற ஐயமும் உண்டாகா. அறிஞனிடமிருந்தாயின், மக்களன்பு காரணமாகப் பெறுதலில் எளிமையிராது. பெறப்படினும் எளிதிற் புரத்தற்குரியதாக மாட்டாது. புரக்கப்படினும், எப்பொழுதும் திரும்பக் கவரப்படுதல் பற்றிய ஐயமுண் டாம் என்று கூறுகின்றார். சிறுவன்—ஈண்டு அறிவிலான்.

அன்றி அறிஞனிடமிருந்து பெறுதல் சிறந்ததா எனின், சிறுவனிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறந்தது. என்னை ? எளிதிற் பெறுதல், புரத்தல், திரும்பக் கவர்தற்குரியதா யில்லாதிருத்தல் என்னுமிவற்றை யுடையதாகலின். அறிஞனிடமிருந்தாயின், அன்புடைமை பற்றி (முன்னதற்கு) மாறுபட்டதாம் என்க.

[33] துன்புறுத்தற்குரியவன், களைதற்குரியவன் என்பவருள் களைதற்குரியவனிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறந்தது. ஆதரவின்மை, வன்மையற்ற ஆதரவு, எதிர்க்கப்படுதல் என்பவற்றை யுடைய களைதற்குரியவன் பொருள் படை என்பவற்றை எடுத்துக் கொண்டு வெளிச் செல்ல விரும்பியவனாக மக்களால் விடப்படுகிறான். துன்புறுத்தற்குரியன், அரணாலும் நண்பர்களாலும் புரக்கப்பட்டவன் என்பது காரணமாக [34] விடப்படுவதில்லை.

[35] நிலவரண், ஆற்றரண் என்னும் அரணாற் காக்கப்பட்டவர் இருவருள் நிலவரணையுடையவனிடமிருந்து நிலப்பேறு சிறந்தது. நிலவரணையுடையது தடைப் படுதல், துன்புறுத்தல், களைதல்

---

[33] பகைவன் மூலமாகத் துன்புறுத்தற்குரிய பகைவனொருவன், தானீயத்தினின்றும் களைதற்குரியானொருவன் என்ற இவ்விரு பகைவருள் யாரிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறந்தது எனின், பின்னையவனுக்கு அரண், நட்பு ஆதரவுகளின்மையாலாதல், அல்லது அவை வலியிழந்திருத்தலாலாதல் அவன் பொருள் படைகளை எடுத்துக்கொண்டு தானீயத்தினின்றும் வெளியேறுதற்கே முயலுவானாகலின், அவனைக் குடிமக்கள் விட்டு விடுகின்றனர் என்பது பற்றி அவனிடமிருந்தே நிலத்தைப் பெறுதல் சிறந்தது. முன்னையவன் வெளியேற விரும்பினும் அரண் நண்பர்களால் தடைப்படுத்திநிறுத்தப்பட்டவனுவானாகலின், அவனைக் குடிகள் விடமாட்டார் எனக் கூறுகின்றார்.

[34] மக்களால் விடப்படுதலின்றென்பது கருத்து.

[35] அரணாற் புரக்கப்பட்ட இருவருள் ஒருவன் நிலவரணாலும், மற்றவன் ஆற்றரணாலும் புரக்கப்பட்டவன். அவருள் யாரிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறப்புற்றது எனின், முன்னையவனிடமிருந்து பெறுதல் சிறந்தது. காரணம்:— நிலவரண் தகைதற்கும் அழிப்பதற்கும் எளியது. எளிதிற் பகைவன் வெளியேறுதற்குரிய வசதியற்றது. ஆதலால் அதிலிருந்து நிலத்தைப் பெறுதல் எளிது. ஆற்றரணைப் பெறுதற்கு இரு மடங்கு முயற்சி வேண்டும். குடித்தற்குரிய நீரையுடையது பற்றியும், நீராற் காக்கப்படும் கூலம், கனிமரம் முதலிய சிறப்புடைமையாலும் பகைவனுக்கு எளிதில் வாழ்தற் குரியதாயிருத்தல் பற்றியும் அதனின்று நிலத்தை எளிதிற் பெற முடியாது என்பதாம்.

என்னுமிவற்றிற்கு எளிமையும், வெளியேறுதற்கியலாத பகை வரையுடைமையும் உடையது. ஆற்றரணையுடையது இரு மடங்கு துன்பத்தையுண்டு பண்ணுவது. குடித்தற்குரிய நீர், பகைவனது வாழ்க்கைக்கும் காரணமாம்.

[36] ஆறு மலை யரண்களை யுடையவருள் ஆற்றரணை யுடையவனிடமிருந்து நிலத்தைப் பெறுதல் சிறந்தது. யானை, மரப் பாலம், அணைக் கட்டு, ஓடம் இவற்றால் ஆற்றரண் கடத்தற்குரியதும் நிலையற்ற ஆழத்தையுடையதும் வெளியேற்றுதற்குரிய நீரையுடையதுமாம். மலையரண் நன்கு புரக்கப்பட்டிருத்தலையும், தகைதற்கருமையையும், ஏறுதற்கருமையையும் உடையது. ஒருவன் தாக்கப்படின் ஏனையோர்க்குக் கொலையின்று. பெருந் தீங்கு புரிபவர்பால் பாறை மரங்களை விடுத்தலுமாம்.

[37] தாழ்ந்த நிலத்தும் ஒத்த நிலத்தும் போர்புரிபவருள் தாழ்ந்த நிலத்திலிருந்து போர்புரிபவரிடமிருந்து நிலப்பேறு சிறந்தது. தாழ்ந்த நிலத்திருந்து போர்புரிபவர் [38] இடங்காலங்களால் தடைப்பட்டவர். ஒத்த நிலத்திருந்து போர்புரிபவராயின், [39] எல்லாவிடங் காலங்களிலும் போர் புரிவர்.

---

36 ஆற்றரணையுடையவன் மலையரணையுடையவன் என்ற இரு பகைவருள் முன்னையவனிடமிருந்து நிலப் பேறு சிறப்புற்றது. காரணம் வருமாறு:—யானை மரத்தூண் என்பவற்றைக் கொண்டாக்கப்பட்ட பாலம் அணைக்கட்டு, படகு முதலியவற்றால் ஆற்றரண் எளிதிற் கடத்தற்குரியது. கரையைத் தகர்த்தல் முதலியவற்றால் நீரின் ஆழம் நிலையற்றதாம்.

மலையரணேவெனின் பாறைகளைக் கொண்டு நன்கு ஆக்கப்பட்டிருத்தல் புரக்கப்பட்டிருத்தல் என்பவற்றை உடையதாகலின் எளிதிற் றகைத்தற்கும் ஏறுதற்கும் உரியதன்று. மேலும் இங்கு ஒரு படையால் ஒருவனையன்றிப் பலரைத் தாக்குதலியலாது. தீங்குபுரிபவர்மேல் தாழ்வரையினின்றும் பாறை மரம் முதலியவற்றைத் தள்ளுதலால் எளிதில் மாற்றம் புரிதற்கு இயலும். மிக முயன்று கைப் பற்றுதற்குரியது என்பதாம்.

37 ஓடம் முதலியவற்றிலிருந்து போர்புரிபவர், நிலத்திலிருந்து கொண்டு போர்புரிபவர் என்பவருள் என்பது.

38 இடைவிட்டே போர்புரிதற்குரியவராகலின் எளிதில் வெல்ல இயலும் என்பது.

39 இடைவிடாது எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் போர் புரிபவர் என்பது.

[40]சுரங்கம், வெளி இவற்றில் போர்புரிபவருள் சுரங்கத்தவரிடமிருந்து நிலப் பேறு சிறந்தது. சுரங்கத்தவர் [41]தோண்டுதல் படைக்கலம் என்பவற்றால் எதிர்க்கப்படுகின்றனர். வெளியில் போர் புரிபவராயின் படைக்கலங்களே யமையும் என்க.

சுலோகம்

[42]இவ்வாறுள்ளவரிடமிருந்து நிலத்தைப் பெற்ற பொருணூலறிவுள்ளவன் [43]சந்தியை யடைந்தவரிடமிருந்தும் பகைவரிடமிருந்தும் சிறப்பை [44]எய்துகிறான்.

ஏழாம் அதிகரணம் பத்தொன்பதாம் பிரகரணத்தில்
'நிலச் சந்தி' என்னும் நூற்றெட்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

40 நிலத்தைத் தோண்டி அங்கிருந்து போர்புரிபவர் என்க.

41 தோண்டுதற் றொழிலையும் படைக்கலத்தையும் ஏற்று அவர்கள் போர் புரிதல் வேண்டும். தோண்டப்பட்ட விடம் பெறப்படவில்லையாயின் எளிதில் வெல்லத்தக்கவராவர். மற்றவராயின் இடங் காலங்களால் தடையின்மையால் வெற்றிகொள்ளுதற்கு அரியவராவர் என்பது.

42 'வன்மையுள்ளவனை எதிர்த்து' என்பது முதலாகவும் 'தோண்டிப் போர் புரிபவர்' என்பது ஈறாகவும் முற் கூறியவரிடமிருந்து என்பது.

43 சந்தியை அடைந்த கூடித் தொழில் புரிபவரிடமிருந்தென்பது.

44 வெற்றி விருப்பமுள்ளவன் எய்துகிறான் என்க.

19-ஆம் பிரகரணம்—'நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள்—[1]'முடிவுறாத சந்தி'

நூற்றொன்பதாம் அத்தியாயம்

'நீயும் நானும் [2]பாழிடத்தை அமைப்போம்' என்பது முடிவுறாத சந்தியாம்.

[3]அவருள் யாவன் [4]நெருங்கிய பொருளை உடையனாய் [5]முற்கூறப்பட்ட குணத்தையுடைய நிலத்தை யமைப்பானோ அவன் [6]ஊதியச் சிறப்பை அடைகிறான்.

109-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சந்திக்குரிய நிலத்தைப் பற்றிய விசேடங்களைக் கூறி, இனி இவ்வத்தியாயத்தில் பாழிடத்தில் நாடமைத்தல் முதலிய செயலில் முடிவு பெறாத சந்திகளைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். பாழிடத்தில் நாடு முதலியவற்றை யமைத்தல் என்பது உண்மையில் நாடு ஆகரம் மரக்காடு யானைக் காடு முதலியவற்றை யமைத்துமுடித்தல் எனப் பொருள்படுமாயினும் ஈண்டு அவ் விசேட வுருவத்தால் துணியப்படாது, அமைக்கத் தொடங்குதல் எனப் பொதுஉருவமாகவே துணியப் படுதலான் செயல் முடிவுறாத நிலையைக் குறித்தமை பற்றி அதைச் சார்ந்த சந்திகள் முடிவுறாத சந்திகள் எனக் கூறப்படுகின்றன. எனவே முடிந்ததைப் பற்றியதும் பின்னர்க் கூறப்படுவதுமான 'செயல்களாலாம் சந்தி'யிலிருந்து இது வேறுபட்டதென்பது பெறப்படும்.

[2] பாழிடத்தில் நாடு முதலியவற்றை அமைத்தலால் பாழாக இல்லாமற் செய்வோம் என்பது. இச் சந்தி இருவருக்கும் சமமாயிருத்தல் பற்றிச் சமசந்தியாம்.

[3] சந்தியைச் செய்பவருள் என்பது.

[4] நாடமைத்தல் முதலியவற்றிற்குரிய கருவிகள் நெருங்கப் பெற்றவன் என்பது.

[5] 'நாடமைத்தல்' என்னும் முற்கூறிய பிரகரணத்திற் கூறப்பட்ட என்க.

[6] அக்குணங்களற்ற நிலத்தை யமைப்பவனைவிடச் சிறந்த ஊதியத்தை யடைகிறான் என்பது கருத்து.

[7]ஆண்டும் [8]வானம் பார்த்த நிலம், [9]நீர்வளமுள்ள நிலம் இவற்றுள் சிறந்தது யாதெனின் [10]பயன் எக் காலத்துமுள்ளதாக வும் நிலைப்பட்டதாயுமிருத்தலின் வானம் பார்த்த பெரிய நிலத்தை விட நீர்வளமுள்ள சிறிய நிலமே சிறந்தது.

[11]வானம்பார்த்தவற்றுள்ளும் முன்னையதும் பின்னையது மான பயிர் நிரம்பியதும் சிறுமழையாற் பண்படுத்தற்குரியதும் செயல்நிகழ்ச்சிக்குத் தடையற்றதும் சிறந்ததாம்.

நீர்வளமுடையவற்றுள்ளும், [12]கூலமில்லாதவை விளைதற் குரியதை விடக் [13]கூலம் விளைதற்குரியது சிறந்தது. [14]அவற்றின் சிறுமை பெருமைகளில் [15]கூலத்தால் அழகுற்ற சிறியதை விடக் கூலமல்லாதவற்றால் அழகுற்ற பெரியது சிறந்தது. என்னை? [16]பரப்பு பெரியதாயின், நிலத்திலுண்டாவனவும் நீர்மருங்கி லுண்டாவனவுமான ஓடதிகள் உண்டாகின்றனவாகலின் என்க.

---

[7] குணங்களையுடையதிலும் விசேடத்தைக் கூறுகின்றார்.

[8] வானம்பார்த்த நிலம்—மழையினால் மட்டும் அடைதற்குரிய நீரை யுடையது. இதனை முதனூல் 'தலம்' எனக் கூறும்.

[9] எப்பொழுதும் நீரையுடைய ஏரி முதலியவற்றை யுடையதும் ஆற்றையுடையதுமான நிலம் என்பது.

[10] எல்லாக் காலத்திலும் பயன் விளைதற்குரியதாயிருத்தல் பற்றியும், பயன்விளைவு ஐயமறத் துணியப்பட்டிருத்தல் பற்றியும், நீர்வளமுள்ளது சிறியதாயினும் வானம் பார்த்த பெரிய நிலத்தைவிடச் சிறந்ததெனக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[11] வானம் பார்த்த இரண்டு நிலங்களுள்ளும், சரத் காலத்திலுண்டா வன, கிரீஷ்ம காலத்திலுண்டாவன என்ற முன்னையதும் பின்னையதுமான பயிர்களை யுண்டாக்குவதும், மழை சிறிது பெய்யினும் பயிர்த் தொழில் புரிதற்குரியதும் மணல், மேடு பள்ளங்கள் அற்றிருப்பதால் தடையின்றி உழவுத் தொழில் புரிதற்குரியதுமானதே சிறந்ததாம் என்க.

[12] கூலமில்லாதவை—எள் உழுந்து முதலியன.

[13] நெல் முதலிய தானியங்கள் விளைதற்குரிய நிலம் என்பது.

[14] கூலம் விளைதற்குரியது, கூலமல்லாதன விளைதற்குரியது என்ற நிலங் களுக்குச் சிறுமை பெருமைகள் ஆராயப்படுமளவில் என்பது.

[15] கூலம் விளைதற்குரிய சிறு நிலத்தை விட எனக் கொள்க. பின்னைய திற்கும் இவ்வாறே கொள்ளல் வேண்டும்.

[16] நிலவெளி பரந்ததாயிருப்பின் நீர்மருங்கிலுண்டாவனவாகிய, அறு பது நாட்களில் பயனை விளைக்கும் பயிர்கள் உண்டாகின்றன என்பது கருத்து.

[17]அரண் முதலிய செயல்களும் மிகுதியாகச் செய்யப்படுகின்றன. [18]நிலத்தின் குணங்கள் செயற்கையானவையன்றோ !

ஆகரப் பொருளால் உதவுவது, கூலத்தாலுதவுவது என்னுமிவற்றுள் ஆகரப்பொருளால் உதவுவது [19]கருவூலத்தைச் செய்வதாம். கூலத்தால் உதவுவது, கருவூலம் உணவுப் பொருணிலையம் என்னும்[20] இவற்றைச் செய்வதாம். [21]அரண் முதலியவற்றின் செயற்றொடக்கங்கள் கூலத்தை யடியாகக் கொண்டன வன்றோ ! [22]விற்பனையாற் பெரியதாயின் ஆகரப் பொருளால் உதவுவது சிறந்ததாம்.

மரக்காடு யானைக் காடுகளாலுதவுவனவற்றுள் மரக்காட்டினுலுதவுவது, எல்லாத் தொழில்களுக்குங் காரணமும் [23]மிகுந்த நிதிக்குரியதுமாம். யானைக் காட்டினுலுதவுவது [24]மாறுபட்டதாம் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [25]பல நிலங்களில் பலவற்றை விதைப்பதற்கு மரக்காடு உரியது. யானைக் காடு அவ்வாறன்று.

---

17 பெரியதாயிருத்தலால் உண்டாம் பிறிதொரு நன்மையைக் கூறுகின்றார்.

18 செயல்களால் நிலத்தின் குணங்கள் உண்டாக்கப்படுதல் பற்றிக் கூலம் முதலியன விளைதற்குரியதாகவும், அந்நிலத்தைத் திருத்திப் பண்படுத்தல் கூடும் எனக் கருத்துக்கொண்டு இங்ஙனங் கூறுகின்றார்.

19 கருவூலத்தை மட்டும் வளர்ப்பதாம் என்பது.

20 ஆகவே இரண்டிற்கும் வளர்ச்சியை யுண்டுபண்ணுதல் பற்றிப் பின்னையதே சிறந்தது எனக் கொள்க என்பது கருத்து.

21 அரண், அணைக்கட்டு, வணிகர்வழி முதலியவற்றைப் பற்றிய பிற தொழில்களுக்கும் கூலத்தாலுதவுவது பயன்படுவதாம் என்பது கருத்து.

22 கூலத்தாலுதவும் நிலத்திற்கு ஆகரத்தாலுதவும் ஒருவகை நிலத்துடன் விகற்பங் கூறுகின்றார். விலைக்கு வாங்குகிறவர்களின் மிகுதிகாரணமாக உப்பினத்தைச் சேர்ந்த நுகர்ச்சிப் பொருளின் விற்பனை மிகுதியாகவுள்ள ஆகரத்தாலுதவும் நிலமும் சிறந்ததாகக் கொள்ளலாம் என்பது கருத்து.

23 மிகுதியான ஈட்டத்திற்குரியதுமாம் என்பது.

24 மரக்காட்டினுலுதவும் நிலத்திற்கு மாறுபட்டதாம். ஆகலின் முன்னையதே சிறந்ததென்பது கருத்து.

25 பல நிலங்களில் பலவகையாக மரக்காட்டை யுண்டுபண்ணுதல் கூடும். யானைகள் சிற்சிலவிடங்களிலேயே உண்டாதல் பற்றி யானைக்காடு அவ்வாறு சிறந்ததன்றென்பது கருத்து.

[26]பகைப் படையைக் கொல்லுதற்கு யானை முக்கியமாயிருத்தலின் என்க.

[27]நீர்வழி நிலவழிகளாலுதவுவனவற்றுள் நிலையற்ற நீர்வழியாலுதவுவதும், [28]நிலையான நிலவழியாலுதவுவதும் சிறந்தன என்க.

[29]பிரிந்த மக்களையுடைய நிலம், சேர்ந்த மக்களையுடைய நிலம் இவற்றுள் சிறந்தது யாதெனின் பிரிந்த மக்களையுடையது சிறந்தது. [30]பிரிந்த மக்களையுடையது, [31]நுகர்தற்குரியதாயும் [32]பிறரால் வேறுபடுத்தற்குத் தகாததாயுமிருக்கிறது. [33]ஆனால் இடுக்கணைத் தாங்கும் ஆற்றலுடையதன்றாம். [34]சேர்ந்த மக்களை உடையதாயின் [35]மாறு பட்டதும், [36]வெகுண்ட நிலையில் பெருங் குற்றத்தை யுடையதுமாம்.

[37]ஆண்டு நான்கு வருணங்களைப் பற்றிய நிலையில் [38]தாழ்ந்த

---

[26] பகைப்படையை அழித்தல் என்ற உதவி, முக்கியமாகக் கருதப்பட்டவிடத்து, யானை முதற்கருவியாதல் பற்றி யானைக் காட்டினுல் உதவுவதையே சிறந்ததாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[27] நீர்வழியாலுதவுவதும் நிலவழியாலுதவுவதுமான நிலையற்ற நிலங்களுள் முன்னையது சிறந்தது என்பது.

[28] அவை நிலையுள்ளனவாயின், அவற்றுள் நிலவழியாலுதவுவது சிறந்தது என்பது கருத்து.

[29] பிரிவுபட்ட மக்களையுடைய நிலம் ஒன்றுபட்ட மக்களையுடைய நிலம் என்பவற்றுள் முன்னையது சிறந்தது எனக் கூறுகின்றார்.

[30] சிறப்புக்குரிய காரணத்தைக் கூறுகின்றார்.

[31] தனக்கு வயப்பட்டதா யிருக்குமென்பது.

[32] எல்லா மக்களும் பிரிந்த நிலையில் எவன் எவனை வேறுபடுத்துவான் என்க.

[33] ஏதேனும் இடுக்கண் நேர்ந்துழித் தேற்றுபவனின்மையால் துன்பத்தினுல் வருந்தும் என்பது கருத்து.

[34] ஒருவர்க்கொருவர் நட்புக்கொண்டு சேர்ந்திருக்கும் மக்களையுடைய நிலமாயின் என்பது.

[35] மாறுபட்டது—வயமாக இல்லாததும், வேறுபடுத்தற்குரியதும், இடுக்கணைப் பொறுத்தற்குரியதும் ஆம்.

[36] சேர்ந்த மக்களை யுடையது, அவர்கள் வெகுண்ட நிலையில் அரசனையும் களைந்து விடும் என்பது கருத்து.

[37] அந் நிலத்தில் நான்கு வருணத்தவருள் சிறப்பு ஆராயப்படுமளவில் என்பது.

[38] தாழ்ந்த வருணம் என்பது உபலக்கணமாகலின், சூத்திரர், ஆயர் முதலியவரால் நிரம்பிய நிலம் சிறந்தது எனப் பொருள் கொள்க.

வருணத்தால் நிரம்பியது [39]எல்லாத் தொழிலேயும் பொறுத்தல் பற்றிச் சிறந்ததாம். [40]உழவுத் தொழில் [41]அதிகமாகவும் [42]நிலே யுள்ளதாகவும் இருத்தலின் உழவுத் தொழிலே உடையதும், உழவுத் தொழிலுக்கும் [43]ஏனைய தொழில்களுக்கும் காரணமாதல் பற்றி ஆயர்களேயுடையதும், [44]விலேப்பண்டத் தொகுதி [45]கடன்களால் அருளுதல் பற்றிப் [46]பொருளாளர் வணிகர்களே யுடையதும் சிறந்தனவாம்.

[47]நிலத்தின் குணங்களுள் காத்தல் சிறந்தது.

[48]அரசுறற் காத்தலேயுடைய நிலம், மக்களாற் காத்தலே யுடைய நிலம் இவற்றுட் சிறந்தது யாதெனின் [49]மக்களாற் காத் தலேயுடையது சிறந்தது. [50]அரசு, மக்களேயுடையதன்ருே? [51]மக்க ளாற் புரக்கப்படாத பசு மலடிபோல்வதல்லது எங்ஙனங் கறக்கும்?

---

39 உழவு, சுமை சுமத்தல் முதலிய தொழில்களில் ஏவுதற்குரியராயிருத் தல் பற்றி என்பது.

40 அந்நிலம், உழவுத் தொழில் ஆயர் வணிகர் என்னுமிவர்களே யுடைய தாயிருப்பின் முறையே சிறப்புடையதாம் என்பதைக் காரணத்துடன் விளக்கிக் கூறுகின்ருர்.

41 எல்லா விடத்துமிருத்தல் பற்றி அதிகமாக விருப்பதும் என்பது.

42 நிச்சயிக்கப்பட்ட பயன்விளைவை யுடையதாயிருத்தலின் என்க.

43 சுமை சுமத்தல் முதலிய பிற தொழில்களுக்கும், எருதுகளும் ஆயர்களும் காரணமாதல் பற்றி ஆயர்களேயுடைய நிலமும் என்பது.

44 விலேக்குரிய கூலம் முதலியவற்றின் தொகுதி.

45 வட்டியின் நிமித்தம் பொருளேக் கொடுத்தலால் அருளுதல்.

46 பொருளாளரையுடைய நிலமும் வணிகரையுடைய நிலமும் சிறந்த தென்பது கருத்து.

47 நிலேயற்ற பகையுடைமை, நிறைவு முதலிய நிலத்தின் குணங்களுள் சிறந்தது எது என்பது பற்றிக் கூறுகின்ருர்.

48 காத்தற் கருவிகளின் விசேடத்தை ஆராய்கின்ருர்.

49 மக்களாற் காத்தலேயுடையது சிறந்தது என்பதற்குக் காரணங் கூறுகின்ருர்.

50 மக்கள் பலரைக் கொண்டதே அரசு எனப்படும் என்க.

51 காத்தற்குரிய மக்களின்மையால் எவ்விதப் பயனேயும் உண்டாக்கா என்பது கருத்து. 'கௌ:' என்னுஞ் சொற்கு ஈண்டுப் 'பசு' வெனப் பொருள் கூறப்பட்டது. அச் சொல் நிலத்தைக் குறித்ததென்றலும் பொருந்தும்.

[52]பெருங்கேடு, செலவு என்பவற்றால் அமைத்தற்குரிய நிலத்தை யடைய விருப்பமுள்ளவன் முன்னரே, ஆற்றலற்றவன், அரசகுலத்துத் தோன்றாதவன், ஊக்கமற்றவன், சாராதவன், தகாச் செயலையுடையவன், விதனமுடையோன், தெய்வமே எனச் சோம்பியிருப்பவன், ஏதேனுமொன்றைச் செய்பவன் என்ற இவருள் (ஒரு) விற்பவனுடன் சந்தியைச் செய்தல் வேண்டும்.

[53]பெருங் கேடு செலவுகளாலமைந்த நிலத்தில் வாழும் ஆற்றலற்றவனும் அரசகுலத்தவனும் ஒத்த மக்களுடன் சேர்ந்து கேடு செலவுகளால் அழிவர்.

[54]ஆற்றலுள்ள அரசகுலத்தில் தோன்றாதவன் ஒவ்வாத மக்கள்களால் கேடு செலவுகளின் அச்சங்காரணமாக விடப் படுகிறான்.

---

[52] பகைவன், வெற்றிவிருப்பமுள்ளவன் என்பவர்க்கு நிலத்தை யமைக்குங்காலுண்டாம் அதிசந்தியைக் கூறுகின்றார். ஊர்தி மக்கள் இவர்களின் பெருங்கேடு பொருட் செலவுகளால் நிறைவேற்றுதற்குரிய நாடமைத்தல் முதலியவற்றையுடைய நிலத்தைப் பெற விருப்பமுள்ளவன் பெறுதற்கு முன்னரே, விற்பவனுடன் சந்தியை யேற்றல் வேண்டும் என்பதும் அவ்விற்பவன் ஆற்றலற்றவன் முதலியவருள் ஒருவனாயிருப்பதும் சந்திக்குக் காரணமாம் என்பதும் கருத்து. ஆற்றலற்றவன் முதலியோர் பெரிதும் முயன்று, கேடு செலவு முதலியவற்றால் நிலத்தை யமைத்து, பின்னர்க் கேடு முதலியவற்றால் துன்புற்றுத் தன்னிடம் அந்நிலத்தையடைவிப்பர் என்பது பற்றி அவருடன் சந்தியைச் செய்துகொள்க என்றார் என்க. ஆற்றலிலான் முதலியோருடைய முயற்சியால் நாடமைத்தல் முதலியவற்றையுடைய நிலத்தை வெற்றிவிருப்பமுள்ளவன் நுகரும் இந் நுகர்ச்சி, பெருங் கேடு செலவு முதலியவற்றால் தானே முயன்று நாடமைத்தல் முதலியவற்றையுடைய நிலத்தையுடைய பகைவனது நுகர்ச்சியை விடச் சிறந்ததாகலின் அதிசந்தி யெனக் கொள்க.

[53] சந்தியை யடைந்த ஆற்றலிலான் முதலியவர் எங்ஙனங் கேடெய்துகின்றனர் என்பதைக் கூறுகின்றார். பெருங் கேடு முதலியவற்றால் நாடு முதலியவை யமைக்கப் பெற்ற நிலத்திற் குடியேறின ஆற்றலிலா அரசகுலத்தவன் தன்னினத்தவரான துணைபுரிந்த மக்களுடன் அழிவை யெய்துவன் என்பது.

[54] அரச குலத்திற் றோன்றாதவன் ஆற்றலுள்ளவனாயினும் ஒப்பின்மை காரணமாக மக்கள் அவனுக்கு உதவி புரிந்து அருளமாட்டார். கேடு செலவுகள் காரணமாக அச்சத்தால் விட்டுச் செல்வர் எனக் கூறுகின்றார்.

[55]படையை யுடையவனுயினும் ஊக்கமற்றவன், [56]படையைச் செலுத்தாதவிடத்துப் படையுடன் கூடக் கேடு செலவுகளால் [57]அழிவெய்துகிறுன்.

[58]சார்பற்றவன், பொருளையுடையனுயினும் கேடு, செலவு, அருளுதல் என்பன இன்மைபற்றி எங்கிருந்தும் (பயனை) அடையமாட்டான்.

[59]தகாச் செயலையுடையவன் உட் புகுந்தவனையும் வெளியேறச் செய்வான். அவன் புகாதவனைப் புகச் செய்வது எங்ஙனம்?

[60]இதனுல் விதனமுள்ளவனுக்கும் விதி கூறியவாறும்.

[61]தெய்வமே யெனச் சோம்பியிருப்பவன், மக்கட் பண்பற்றவன், [62]தொடக்கமற்றவன், இடுக்கணெய்திய செயற்றொடக்கத்தையுடையவன் என்னுமிவர்கள் அழிகின்றனர்.

[63]ஏதோ ஒன்றைச் செய்பவன், ஒன்றையும் அடையப் பெறுன். [64]இவருள் [65]இவன் மிகுந்த பாவியாகிறுன்.

---

55 ஊக்கமற்றவனைப் பற்றிக் கூறுகின்றுர்.

56 இடத்திற்கேற்ப, படையைப் பயன்படுத்தாதவிடத்து.

57 கேடெய்திய செயல்களையுடையவனுவான் என்பது கருத்து.

58 நண்பனற்றவன், பொருளாளனுயினும் கேடு செலவுகளுக்கு உதவியை அடையாமைகாரணமாக எவ்வாற்றுனும் பயனை எய்த மாட்டான் என்று கூறுகின்றுர்.

59 தகாச் செயலை யுடையவன் முன்னரே உட்புகுந்தவனையும் தகாச் செயல்காரணமாகவே வெளியேற்றிவிடுவான். ஆகவே உட்புகாதவன் புதிதாகப் புகுதற்குக் கருதுவது எங்ஙனம் என்றுர்.

60 விதனமுள்ள குடியேறுதவன் குடியேறுதலில்லை என்பதற்கு விதனமுண்மையே சான்றும் என்பது கருத்து.

61 காரிய சித்திக்குத் தெய்வத்தை முக்கிய காரணமாக நினைத்திருப்பவன். இவனை 'யதூவிஷ்ஃ:' என்ப

62 எச் செயலையும் தொடங்காதவன் என்பது.

63 'இதை இவ்வாறு செய்தல் வேண்டும். இங்ஙனஞ் செய்யின் இன்ன விளைவுண்டாம்' என்ற முறையில் ஆராய்தலின்றித் தோன்றியவாறு ஏதேனுமொன்றைச் செய்பவன் என்பது.

64 இவர்—ஆற்றலிலான் முதலியவர்.

65 இவன்—ஈண்டுக் கூறப்பட்டவனுன, ஏதோ ஒன்றைச் செய்பவன்.

[66]ஏதேனுமொன்றைத் தொடங்குபவன், வெற்றி விருப்பமுள்ளவனது அற்றத்தை யடைவான் என்பர் ஆசிரியர்.

[67]அற்றம் போன்று அழிவையும் எய்துவன் என்பர் கௌடலியர்.

[68]அவர்களை யடையாதபோது 'பக்கத்துறையும் பகைவன் செயலி'ற் கூறப்படுமாறு நிலத்தை நிலைப்படுத்தல் வேண்டும். [69]கட்டுண்ட சந்தி இவ்வாறும்.

[70]குணங்களையுடையதும் [71]ஏற்பதற்குரியதுமான நிலத்தை [72]ஆற்றலுள்ளவன் விலைக்குக் கேட்பின் சந்தியை வரையறுத்துக் கொடுத்தல் வேண்டும். [73]நம்பிக்கையிலான் சந்தி இவ்வாறும்.

---

[66] ஏதோ ஒன்றைச் செய்பவனிடமும் ஒரு நற்குணம் உண்டென்று ஆசிரியர் கூறுகின்றார். ஏதேனுமொன்றைச் செய்யும் பகைவனை வெற்றி விருப்பமுள்ளவன் 'இவன் மூடன்' என்று பொருட்படுத்தாதிருத்தல் கூடும். மேலும் அப்பகைவனைக் குறித்து விழிப்பற்றவனாயிருத்தலுங் கூடும். ஆண்டு ஒருக்கால் அவ் வெற்றிவிருப்பமுள்ளவனைத் தகர்த்தற்குரிய சந்தர்ப்பத்தை யடைதல் கூடும் என்பது கருத்து.

[67] வெற்றிவிருப்பமுள்ளவன் அப்பகைவனுடைய அற்றத்தையே மிகுதியாகப் பெறுதல் கூடும் என்பது கருத்து.

[68] ஆற்றலிலான் முதலாக முற்கூறப்பட்டவர் கிடைக்கப் பெறாவிடின் 'பக்கத்துறையும் பகைவன் செயல்' என்ற பின்வரும் பிரகரணத்திற் கூறப்படுவதுபோல் அதிசந்தி விரும்பத்தக்கது எனக் கூறுகின்றார். ஐயுறப்பட்ட கேட்டைப் பரிகரித்தல் முதலிய வுருவமான அதிசந்தியை அப்பகைவர் ஒருவர்க்கொருவர் ஏற்றல் என்பது ஆண்டுக் கூறப்படும். (111-ஆம் அத்தியாயம் பார்க்க) அவ்வாறு பிறனைவிட ஏதேனுமொரு ஊதியச் சிறப்பை முன்னிட்டு நிலத்தில் நாடமைத்தல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[69] நிலத்தைக் கொடுத்தல் ஏற்றல்களாலாயது பற்றி மாற்றுதற்கியலாதது என்பது கருத்து.

[70] அவ்வாறில்லாத சந்தியைக் கூறுகின்றார். குணங்கள் — நிறைவு, நிலையற்ற பகைவரை யுடைமை முதலியன.

[71] பிறரால் நுகர்தற்கு முடியாத நிலையிற் செயற்பாலதைக் கூறுகின்றார். வாங்கினவன் உபேக்ஷை செய்தல் பற்றிப் பிற்காலத்து மீண்டும் பெறுதற்குரியது என்பது.

[72] ஆற்றலுள்ள ஒரு பகைவன் 'எனக்கு விலைக்குக்கொடு' என்று கேட்பின் 'உரிய காலத்தில் எனக்கு உதவுவாய்' எனச் சங்கேதித்துக் கொண்டு விலைக்குக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[73] ஆற்றலிலாதவனிடம் ஆற்றலுள்ளவன் ஒப்பந்தத்தை மீறக்கூடும் ஆகலின் இதை நம்பிக்கையிலான் சந்தி என்றார். இதை 'வாய்மொழியான சந்தி' எனவுங் கூறுப.

[74]ஒத்தவனாற் கேட்கப்பட்டவன், நிலம் திரும்பப் பெறுதற்குரியது; [75]வயமாகவுள்ளது; [76]இதனாற்றடைப்பட்ட பிறன் எனக்கு வயமாகி விடுவான்; [77]நிலத்தை விற்றலால் தொழிற்றேர்ச்சிக்குக் காரணமான நட்பு பொருள்களின் ஊதியம் உண்டாம்' என்று [78]காரணத்தைச் சூழ்ந்து கொடுத்தல் வேண்டும்.

[79]விலைக்கு வாங்கும் இழிந்தோருக்கும் இதனால் விதி கூறியவாறாம்.

சுலோகம்

இங்ஙனம் [80]நட்பு, [81]பொருள், [82]மக்களையுடையதும் மக்களற்றதுமான நிலம் என்னுமிவற்றையடையும் [83]நூலறிஞன் [84]கூடித் தொழில் புரிபவரை விடச் சிறந்த ஊதியத்தைப் பெறுகிறான்.

ஏழாம் அதிகரணம் 19-ஆம் பிரகரணத்தில்
'முடிவுறாத சந்தி' என்னும்
நூற்றொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

74 ஒத்தவன் முற்கூறியவாறு நிலத்தைக் கேட்பின் விதி கூறுகின்றார்.

75 தன் அநுபவத்திற்கு உரியது என்பது.

76 அந்நிலத்தைத் தான் அடைந்தபடியால் பிறன் தனக்கு வயமாக இருப்பான் என்பது.

77 நிலத்தை விற்றல் காரணமாக நட்புப்பேறு பொருட்பேறுகளும் அவற்றால் தனக்குக் காரியங்கள்நிறைவும் உண்டாம் என்பது.

78 முற்கூறியவாறு காரணங்களை ஆராய்ந்தறிந்து துணிந்தபின் விற்றல் வேண்டும் என்பது கருத்து.

79 ஒத்தவனுக்குக் கூறிய விதியைத் தாழ்ந்தவன்பாலும் ஏற்க என்கிறார்.

80 நட்பு—நிலைமை, வயமாயிருத்தல் முதலிய விசேடங்களை யுடையது.

81 விரும்பிக் கேட்கப்பட்ட பயனையுடைமை முதலிய வகைகளாற் பிரிவுபட்டது என்பது.

82 உபலக்கணத்தால் மக்களின் நிறைவு நிறைவின்மைகளைக் கொள்ளுதல் வேண்டும்.

83 நூல்—ஈண்டுப் பொருணூல்.

84 தனக்கு உதவிபுரிந்து தன்னுடன் கூடித் தொழில்புரியும் சிற்றரசரைவிட என்பது.

ஏழாம் அதிகரணம் - அறுவகைக் குணங்கள்

19-ஆம் பிரகரணம்—நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள்—செயற் சந்தி

நூற்றுப் பத்தாம் அத்தியாயம்

[1]'நீயும் நானும் [2]அரணைச் செய்விப்போம்' என்பது செயற் சந்தியாம்.

[3]அவருள் [4]தெய்வத்தாலுண்டானதும், [5]பொறுத்தற்கியலாததும், சிறு செலவினால் முடித்தற்குரியதுமான அரணைச் செய்விப்பவன் [6]ஊதியச் சிறப்பை எய்துகிறான்.

[7]அவற்றுள்ளும் நிலம் ஆறு மலை என்னுமிவ்வரண்களுள் முறையே ஒன்றினொன்று சிறந்ததாம்.

[8]அணைக் கட்டுள்ளும் [9]தடைப் படுத்தற்குரிய நீரை யுடையதை விட இயற்கைநீரை யுடையது சிறந்ததாம். இயற்கை நீரை யுடையவற்றுள்ளும் [10]விதைத்தற்குரிய இடத்தை மிகுதியாகக் கொண்டது சிறந்தது.

110-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] செயற்சந்தியை இதுவென விளக்குவார் முதலில் அதற்கு இலக்கணங் கூறுகின்றார்.

[2] அரண் என்பது உபலக்கணத்தால் அணைக்கட்டு முதலியவற்றையும் குறிக்கும்.

[3] அவர்—சந்தியை அடைந்தவர்.

[4] இயற்கையிலேயே கரடு முரடானதும் என்பது.

[5] அதுகாரணமாகவே பகைவராற் பொறுத்தற்கியலாததும் என்பது.

[6] மேற் கூறிய அரணுக்கு மாறுபட்ட அரணைச் செய்விக்கும் பிறனை விட ஊதியச் சிறப்பை யடைகிறான் என்பது கருத்து.

[7] தெய்வத்தாலுண்டாய அரண்களுள்ளும் ஏற்றத் தாழ்வை ஆராய்கின்றார்.

[8] அணைக்கட்டுக்களின் வன்மை மென்மையினைக் கூறுகின்றார்.

[9] மாரி காலத்தில் முயன்று தேக்கி வைக்கப்பட்ட நீரை உடையதென்பது.

[10] விதைத்துப் பயிர்த் தொழில் செய்தற்குரிய மிகுதியான நிலங்களை யுடையதென்பது.

[11]மரக்காடுகளுள்ளும் [12]பெரியதும் [13]திண்மைப் பொருட்டோற்ற முடையதும் [14]நாட்டின் எல்லையில் ஆற்றுநீர்ப் பாய்ச்சலை யுடையதுமான [15]மரக்காட்டைத் துணிபவன் [16]ஊதியச் சிறப்பை எய்துகிறான். என்னை? ஆற்றுநீர்ப் பாய்ச்சலை யுடையது எளிதில் அண்டியிருத்தற்கும், [17]இடுக்கணில் புரத்தற்கும் (உரியதாக) இருத்தலின் என்க.

[18]யானைக் காடுகளுள்ளும் ஆற்றலுள்ள பல விலங்குகளை யுடையதும், [19]வாழ் நலங் குறைந்ததும், [20]துன்ப மிகுந்ததுமான யானைக் காட்டை நாட்டின் எல்லையில் அமைப்பவன் [21]ஊதியச் சிறப்பை எய்துகிறான்.

[22]அதிலும் [23]தளர்ந்த பலவற்றை யுடையது, ஆற்றலுள்ள சிலவற்றை யுடையது என்பவற்றுள் ஆற்றலுள்ள சிலவற்றை யுடையது சிறந்தது. [24]போர்வலி ஆற்றலுடையவர்க்கன்றே

---

[11] மரக்காட்டைப் பற்றிய அதிசந்தியைக் கூறுகின்றார்.

[12] பெரியது—பரந்துள்ளது.

[13] மிகுந்த பயனைத் தரும் பண்டங்களின் விளைவை உண்டு பண்ணுவதும் என்க.

[14] நாட்டின்—தனது நாட்டின்.

[15] பயனற்ற பொருள்களைக் களையுமுகமாக மரக்காட்டை யுண்டு பண்ணுபவன் என்பது.

[16] ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத மரக்காட்டை அமைப்பவனைவிடச் சிறந்த ஊதியத்தை அடைகிறான் என்பது கருத்து

[17] இடுக்கண்—வறுமை நிலை.

[18] யானைக் காட்டைப் பற்றிய அதிசந்தியைக் கூறுகின்றார்.

[19] நிலையான வாழுமிடத்தை விடக் குறைந்த வசதியை யுடைய காட்டுப் பகுதியை உடையதும் என்பது.

[20] புகுதல், வெளிச் செல்லுதல் என்பவற்றால் பலவிதமான துன்பங்களை உடையதுமான என்பது.

[21] அதாவது—மேற் கூறப்பட்டதற்கு மாறுபட்ட யானைக் காட்டை அமைப்பவனை விடச் சிறந்து ஊதியத்தால் விளங்குகிறான் என்பது கருத்து.

[22] முற் கூறப்பட்ட குணங்களை யுடைய யானைக் காட்டிலும் ஆசிரியரின் கொள்கைப்படி ஒரு விசேடத்தைத் துணிந்து கூறுகிறார்; அதிலும்—யானைக் காட்டிலும்.

[23] வலியிழந்த பல யானைகளை யுடையதென்பது.

[24] வன்மை வாய்ந்த யானைகளே போர்க்கு இன்றியமையாதனவாகலின், போர்ச் செயலுக்கு உதவாத வலியிழந்த பல யானைகளை யுடையதை விடப் போர்க்குரிய வலிமிக்க சில யானைகளை யுடைய யானைக்காடே சிறப்புற்றதெனக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

யுரியது? [25]ஆற்றலுடைய சிலர் வலி யிழந்த பலரைத் தாக்குகின் றனர். [26]தாக்குண்ட அவர், தம் படையை அழிப்பவராவர் என் பர் ஆசிரியர்.

இன்றென்பர் கௌடலியர். [27]பாசறையில் ஏவப்பட்டுப் [28]பல செயல்களைப் புரிந்து தம்மவர்களுக்குப் போரில் துணை புரிதலால், தளர்ந்த பலர் சிறந்தவர். [29]பகைவரால் தகர்க்கப் படாதவரும் அச்சுறுத்துபவருமாவர். [30]தளர்ந்தவர் பலர்பால் பயிற்சி முறையால் ஆற்றலை உண்டாக்குதல் இயலும். ஆற்ற லுற்றவர் குறைந்த விடத்துப் பலராந் தன்மை அறவே யின்று [31]என்க

[32]ஆகரத்துள்ளும் திண்மைப் பொருள் நிறைந்ததும், எளி திற் செல்லுதற்குரிய வழியை யுடையதும், குறைந்த செலவினுல் தொடங்குதற்குரியதுமான ஆகரத்தைத் தோண்டுபவன் ஊதியச் சிறப்பை எய்துவான்.

---

25 வலியவர்களாலும் தளர்ந்தவர்களாலும் உண்டாம் நன்மை தீமை களைக் கூறுகின்றூர்.

26 பகைப்படையால் தாக்கப்பட்டுச் சிதைந்து நாற்புறமும் ஓடும் நிலையில் தம் படையையும் சிதைவுறச் செய்பவராவர் என்பது கருத்து.

27 படைகளின் கூட்டத்தில் செலுத்தப்பட்டு என்பது.

28 செயல்—உபகரணப் பொருள்களைக் கொணர்தல், கொண்டு போதல் முதலியன.

29 பலராயிருத்தல் கருதியே, பகைவர் அவர்களைத் தாக்க முன்வரார் என்பதும் அஞ்சுவர் என்பதும் கருத்து.

30 சிலராயினும் வன்மை மிக்காராதல் சிறந்தது என்று முற்கூறப் பட்ட அவ் வன்மைதானும் வலியிழந்த பலர் பாலும் பயிற்சித் தொழிலால் உண்டாக்குதற்குரியது என்றும், இயற்கையில் வன்மை வாய்ந்தவராயினும் சிலராய் இருந்து விடத்து எக் காரணத்தானும் அவர் பலராதல் இயலா தென்றுங் கூறுகின்றூர்,

31 'என்க' என்பதால் 'தளர்ந்த பலர் சிறந்தவர்' என்பதனை முடித் தற்கு 'பாசறையில் ஏவப்படுதல்' என்பது முதலாகக் கூறப்பட்டவை காரணம் என்பது விளக்கப்பட்டது.

32 ஆகரங்களுள் விலையுயர்ந்த பல பண்டங்களை யுடையதும் எளிதிற் செல்லுதற்குரிய வழியை யுடையதும் அதிகச் செலவின்றி நிறைவேற்று தற்குரியதுமான ஆகரத்தைத் தோண்டி அமைப்பவன் அதற்கு மாறுன ஆகரத்தைத் தோண்டி யமைப்பவனைவிடச் சிறந்த ஊதியத்தைப் பெறு கிறுன் எனக் கூறுகின்றூர்.

[33] அதனுள்ளும் சிறிதாகிய உயர்ந்த ஊதியமா? பேரளவின தாகிய தாழ்ந்த ஊதியமா (இவற்றுட் சிறந்தது யாது) எனின், [34] சிறிதாகிய உயர்ந்தது சிறந்தது. வச்சிரம், இரத்தினம், முத்து, பவழம், பொன், வெள்ளி, தாதுப் பொருள் என்னுமிவை, மிகுந்த விலை காரணமாக மிகையானதும் சிறப்புக் குன்றியதுமானவற்றை விழுங்குகின்றன என்பர் ஆசிரியர்.

[35] இன்றென்பர் கௌடலியர். சிறப்புமிக்கதை நெடு நாளைக் குப் பின் சிலரே வாங்குபவராவர். யாண்டுமுண்மையால் சிறப் புக் குன்றியவற்றை வாங்குபவர் பலராவர்.

[36] இதனால் வணிகர்வழிக்கும் விதி கூறியவாறும்.

[37] அவ்விடத்தும் நீர் நில வழிகளுள் நீர்வழி, சிறந்ததும் செலவு உழைப்புக்கள் குறைந்ததும் மிகுந்த விலைப் பண்டத் தோற்றத்தை யுடையதும் ஆம் என்பர் ஆசிரியர்.

---

[33] அதனுள்ளும்—அந்த ஆகரத்திலும்; விலைமிக்கதான வச்சிரம் இரத்தினம் முதலிய பண்டங்களைக் குறைந்த அளவில் உடையதான ஆகரம் சிறந்ததா அல்லது குறைந்த விலையுள்ளவையாயினும் மிகுந்த பண்டங்களை யுடைய ஆகரம் சிறந்ததா என்று ஆராயுமிடத்து என்க.

[34] எண்ணில் குறைந்தனவாயினும் விலைமிக்கனவாகிய வச்சிரம் முதலியன, குறைந்த விலையுள்ளனவும் எண்ணிக்கையால் மிகுந்தனவுமான பண்டங்களை விடச் சிறந்தமையின் அவற்றுள் முன்னையதே சிறந்தது என்னும் தம்மாசிரியர் கொள்கையைக் கூறுகின்றார்.

[35] முற் கூறப்பட்ட ஆசிரியரது கொள்கை தவறு. விலையுயர்ந்தன வாயினும் இரத்தினம் முதலியவற்றை வாங்குபவர் மிகச் சிலராகவும், ஏதோ ஒரு காலத்தில் வாங்குபவராகவும் இருக்கின்றனர். உப்பு முதலியவை விலையாற் குறைவுபட்டனவாயினும் எக்காலத்தும் தடுத்தற்கியலாத உதவியை யுடையதாயிருத்தல்பற்றி வாங்குபவர் பலராகவும் எப் பொழுதும் வாங்குபவராகவும் இருத்தலால் குறைந்த விலையுள்ளனவா யினும் மிகுந்த பண்டங்களை யுடைய ஆகரமே சிறப்புற்றது என்பது கௌடலியர்கொள்கையாம் என்க.

[36] மேற் கூறிய முறையில் ஊதியச் சிறப்புக் கேற்றவாறு வணிகர் வழியை அமைத்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

[37] நீர்வழி நிலவழி என்று வணிகர்வழி இருவகையாம். அவற்றுள் குறைந்த செலவினால் மக்கள் முயன்று உண்டாக்குதற்கு உரியதாதல்பற்றி நீர்வழி சிறந்தது என்றும் நிலவழியைவிட எளிதில் அவ்வழியாக விலைப்பண்டங்களைக் கொணர்தல் வெளியேற்றுதல் செய்தற்கு அநுகூல மாயிருக்கிறது என்றும், மிக அதிகமான ஊதியத்திற்குக் காரணமாயிருக் கிறது என்றும் தம் ஆசிரியர் கருதுகிறார் என்று கூறுகின்றார்.

[38]அன்றென்பர் கௌடலியர். நீர்வழியானது செலவுத் தடை, எல்லாக் காலத்துமின்மை, மிகுந்த அச்சத்துக்குக் காரண மாதல், மாற்றமற்றிருத்தல் என்பவற்றை யுடையதாம். நிலவழி மாறுபட்டதாம்.

[39]நீர்வழியிலும் கரை படகு வழிகளுள் விலைப் பண்ட நகரங்களின் மிகுதி காரணமாகக் கரைவழி சிறந்தது. [40]பொறுத் தற்குரிய தீங்கையுடைமை, யாண்டுமுண்மை, என்பனபற்றி ஆற்றுவழியுமாம்.

[41]நிலவழியிலும் தெற்கிலுள்ள வழியை விடப் [42]பனி மலையைச் சார்ந்தது சிறந்ததாம். யானை, குதிரை [43]மணப்பொருள், தந்தம், தோல், வெள்ளி, பொன் என்ற விலைப் பண்டங்கள் [44]மிகச்சிறந்தன என்பர் ஆசிரியர்.

[45]அன்றென்பர் கௌடலியர். கம்பளி, தோல், குதிரை என்ற விலைப்பண்டங்கள் தவிர(மற்ற)சங்கு, வச்சிரம், இரத்தினம்,

---

38 இடுக்கண் நேர்ந்துழி நாற்புறமும் செலவு தடைப்படுதல், மழை முதலிய தீய காலங்களில் செல்லுதற்குத் தகாமை, நிலவழியை விட மிகுந்த தான தீங்குகளுக்குக் காரணமாதல், மாற்றச்செயல் புரிதற்குத் தகாமை என்பவை காரணமாக நீர்வழி சிறந்ததன்று; மேற்கூறியவற்றிற்கு மாறு பட்ட தன்மையை யுடையதாயிருத்தல் பற்றி நிலவழியே சிறந்ததாம் என்ற தன் கொள்கையைக் கௌடலியர் வற்புறுத்துகின்றார்.

39 கரைக்கு அருகாமையில் செலவையுடையது என்றும், நீர்நடுவிற் செலவை யுடையது என்றும் நீர்வழி இருவகைப்படும். விலைப் பண்டங்களை இறக்குமதி செய்தல் மிகுதியாக இருத்தல் பற்றி அவ்விரு.வழிகளுள் முன்னை யது சிறந்தது என்பது கருத்து.

40 விகற்பித்து ஒரு புறனடை கூறுகின்றார். ஆற்றுவழி எப்பொழு தும் செல்லுதற்குரியது என்பதும் மிகப் பெரிய தீங்குண்டாகாதபடியால் பொறுத்தற்குரிய தீங்கை யுடையது என்பதும் கருத்து. ஆகலின் ஆற்று நீர்வழி சிறந்ததென்பது கூறப்பட்டதாகக் கொள்க.

41 நிலவழியிலும் ஆசிரியரின் கொள்கையைப்பற்றி ஒரு விசேடத்தைக் கூறுகின்றார்.

42 பனிமலையைச் சார்ந்தது—வடக்கு வழி.

43 மணப்பொருள்—கஸ்தூரி சாந்தம் முதலியன.

44 மிகுந்த விலையுள்ளன என்பது; ஆகவே மேற்கூறியவை அங்கு மிகுதி யானவை பற்றி அவ்வழி சிறந்தது என்பது கருத்து.

45 அக்கொள்கையைக் கௌடலியர் மறுக்கின்றார்.

முத்து, பொன் என்ற விலைப் பண்டங்கள் தெற்குவழியில் [46]மிக அதிகமானவை.

[47]தெற்குவழியிலும் ஆகர மிகுதி, [48]சிறந்த விலைப் பண்டம், [49]விளக்கமான செலவு, சிறிய உழைப்பு என்னுமிவற்றையுடைய வணிகவழி சிறந்ததாம். [50]விற்பனைமிகுந்த நொய்மையான விலைப் பண்டமுடையதுமாம்.

[51]கிழக்கிலும் மேற்கிலுமுள்ள வணிகவழிக்கும் இதனுல் விதி கூறியவாறும்.

[52]அதிலும் [53]சக்கரவழி [54]கால்வழிகளுள் சக்கரவழி [55]பரந்த பயனையுடையதாயிருத்தல் பற்றிச் சிறந்ததாம். [56]இடம் காலங்களுக்கு ஏற்பக் கழுதைவழி ஒட்டகவழிகளும் உரியவாகும்.

இவற்ருல் [57]கழுத்துவழிக்கும் விதி கூறியவாறும்

---

46 ஆகவே விலைப் பண்டங்களின் வேறுபாடு காரணமாக ஒன்றைவிட மற்ருென்றுக்குச் சிறப்பு என்பது இரண்டிற்கும் சமமாதலால் ஏற்றத் தாழ்வு இன்றென்பது கௌடலியர் கருத்து.

47 தெற்கு வழியிலும் சிறப்பைக் கூறுகின்ருர்.

48 சிறந்த—விலைமிகுந்த.

49 தீங்கற்ற போக்கு வரத்துக்களை உடையதென்பது.

50 குறைந்த விலையை யுடையனவாயினும் மிகுதியாக விற்பனையாகக் கூடிய பண்டங்களையுடைய வழியும் சிறந்ததாம் என்பது கருத்து.

51 மேற்கூறிய விதியைக்கொண்டே கிழக்கு மேற்குத் திசைகளிலுள்ள வணிகவழிக்கும் விதியை உய்த்துணர்ந்துகொள்க எனக் கூறுகின்ருர்.

52 வணிகவழியில் உள்ள பிற விசேடங்களைக் கூறுகின்ருர். அதிலும்—வணிகவழியிலும்.

53 சக்கரவழி—சக்கரங்களை உடையதும் மனிதரால் செலுத்தப்படுவது மான சிறு வண்டிகள் செலுத்தற்குரிய வழி.

54 கால்வழி—மக்கள் நடந்துசெல்லுதற்குரிய வழி.

55 அதிகமான விலைப்பண்டத்தைக் கொண்டுபோதற்கும் கொண்டு வருவதற்கும் உரியதாயிருத்தல் பற்றிச் சிறந்ததாம் என்பது கருத்து.

56 மிகுதியான விலைப்பண்டத்தை விரும்பும் தொலைவிலுள்ள இடத்தை யும், விலைப்பண்டத்தில் பற்றுள்ள காலத்தையும் அநுசரித்துக் கழுதை ஒட்டகம் செல்லும் வழியையும் சிறந்தனவாகக் கொள்ளலாம் என்பது கருத்து.

57 கழுத்துவழி — எருது முதலியன தம் கழுத்தின் வன்மையால் இழுத்துச் செல்லும் பெரிய வண்டிகள் செல்லுதற்குரிய பெருவழி.

சுலோகங்கள்

(1) [58]பகைவனுக்குண்டாம் [59]செயலூதியம் [60]தலைவனுக்குக் குறைவாம். [61]மாறுபடின் மிகுதியாம். [62]செயல்வழி சமமாயின் வெற்றிவிருப்பமுள்ளவன் இயற்கைநிலையென அறிதல் வேண்டும்.

(2) [63]தன் செயல்களில் அற்ப ஊதியம் மிகுந்த செலவுகள் குறைவாம். [64]மாறுபடின் மிகுதியாம். [65]ஒத்த வரவுசெலவுகள் நிலையாம்.

(3) [66]ஆதலால் அரண் [67]முதலியவற்றில் குறைந்த செலவினால் தொடங்குதற்குரியதும் மிகுந்த பயனையுடையதுமான செயலை யடைந்து [68]சிறந்தவனாதல் வேண்டும். செயற்சந்திகள் இங்ஙனம் கூறியபடியாம்.

ஏழாம் அதிகரணம் 19-ஆம் பிரகரணம் 'நட்பு பொருள் நிலம் செயல்களாலாம் சந்திகள்' ;— 'செயற் சந்தி' என்னும் 110-ஆம் அத்தியாயம் முற்றிற்று.

---

[58] செயற்பயன்களான குறைவு ஒப்பு மிகுதிகளின் இலக்கணங்களைக் கூறுகின்றார்.

[59] செயலாலுண்டாம் ஊதியம் என்பது.

[60] தலைவன்—வெற்றிவிருப்பமுள்ளவன்.

[61] தன் செயலால் ஊதியம் தனக்கு உண்டாயின்.

[62] பகைவனுக் குண்டாம் செயற்பயன் தன் செயற்பயனுடன் ஒத்த அளவிலிருப்பின் குறைவு மிகுதியின்றி இயற்கைநிலையிலிருப்பதாய் வெற்றிவிருப்பமுள்ளவன் அறிதல் வேண்டும் என்பது கருத்து.

[63] வேறு இலக்கணங் கூறுகின்றார்: வருவாயை விட மிகுதியான செலவுடன் தன் செயல்கள் அமைவது குறைவெனப்படும்.

[64] வருவாய் மிகுந்தும், செலவு குறைந்தும் இருப்பின் மிகுதி எனப்படும்.

[65] வருவாய், செலவுடன் ஒத்ததாயிருப்பின் இயற்கைநிலை யெனப்படும்.

[66] குறைவொப்பு மிகுதிகளை இங்ஙனம் அறிதலால் என்பது.

[67] 'முதலிய' என்பதால் அணைக்கட்டு முதலியவற்றைக் கொள்க.

[68] வெற்றிவிருப்பமுள்ளவன் தன் பகைவனை விடச் சிறந்து விளங்குதல் வேண்டும் என்பது கருத்து.

ஏழாம் அதிகாரணம்—அறுவகைக்குணங்கள்

20-ஆம் பிரகாரணம்—[1]‘ பக்கத்துறையும் பகைவன்செயல் ’

நூற்றுப் பதிஞேராம் அத்தியாயம்

தன் [2]பகைவரும் பிறரைக் குறித்து [3]மேற்செல்பவருமான பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவரின் [4]பின்னணியை ஒன்று சேர்ந்து பற்றுபவருள் [5]ஆற்றலால் நிறைவுள்ளவனுடைய பின்னணியைப் பற்றுபவன் [6]அதிசந்தியை அடைகிருன். [7]என்னை? [8]ஆற்றலால் நிறைவுள்ளவன் பகைவனைக் களைந்து பின்னணியைப் பற்றுபவனைக் களைவான். குறைந்த வன்மையுள்ளவன் ஊதியத்தைப் பெருதுகலின் அங்ஙனமாகான்.

111-ஆம் அத்தியாயக் குறிப்புரை.

[1] ஓர் அரசன் போர் குறித்துச் சென்றிருக்குங்கால் அடுத்திருக்கும் பகைவன் அவ்வரசனுடைய நிலப்பகுதியைக் கவர்தல் இதன்கட் கூறப்படும். வெற்றிவிருப்பமுள்ளவனுக்குப் பின்புறமுள்ள பகைவனுந் தன்மையை எய்திய அரசனொருவன் செயற்பாலதை ஆராய்தல் என்பர் உரையாசிரியர். சிற்றரசர் முதலியோர்களின் அதிசந்தி முன்னர்க் கூறப்பட்டது. ஈண்டு பின்னுள்ள பகைவனைப் பற்றிய இது கூறப்படுகின்றதாகலின் பிரகரண இயைபு புலனும்.

[2] பின்னணியை ஒன்றுசேர்ந்து பற்றுபவருடைய பகைவரும் என்பது.

[3] மேற் சேறற் ருெழிலில் ஈடுபட்டிருப்பவருமான என்க.

[4] பின்னணியைப் பற்றுதல்—ஈண்டுக் கூழைப் படையைப் பிடித்தல்.

[5] ஆற்றலால் நிறைவு—பிரபுசக்தி முதலியவற்ருல் நிரம்பி யிருத்தல்.

[6] குறைந்த சக்தியுள்ளவனது பின்னணியைப் பற்றுபவனை விட ஊதியச் சிறப்பை யடைகிருன் என்பது.

[7] காரணத்தை விளக்கிக் கூறுகின்ருர்.

[8] சக்திநிறைவுள்ளவன் தன் பகைவரைக் களைந்த பின்னர் மிகுதியை அடைந்து, பின்னணியைப் பற்றுபவனையும் களையக் கூடும் என்பது பற்றி அப்பகைவரைக் களைதற்கு இடையூறு விளைக்கும் பின்னணியைப் பற்றுபவன் தற்காப்பை யடைந்தவனுவான். சக்திக் குறைவுள்ளவனுயின் தன் பகைவரைக் களைதற்கு வலியற்றவனுயிருத்தல் பற்றி ஊதியப் பேறற்றவன் எனத் தெளிதற்குரியன். எனவே அவனது பின்புறத்தைப் பற்றுபவனுக்கு எவ்விதச் சிறப்பான ஊதியமும் இன்றென்க.

[9]ஆற்றல் ஒத்ததாயின் [10]பரந்த தொடக்கமுள்ளவனது பின்னணியைப் பற்றுபவன் [11]அதிசந்தியை யடைகிறான். [12]பரந்த தொடக்கமுள்ளவன் பகைவனைக் [13]களைந்து பின்னணியைப் பற்றுபவனைக் களைவான். சிறிய தொடக்கத்தை யுடையவனாயின் சிதறுண்ட படையை யுடையவனாதல் பற்றி அவ்வாறாகான்.

தொடக்கம் சமமாயின் [14]எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு மேற்சென்றவனுடைய பின்னணியைப் பற்றுபவன் [15]ஊதியச் சிறப்பை எய்துகிறான். [16]அடிப்படை யில்லாதவன் [17]இவனுக்கு எளியவனாகிறான். படையின் ஒரு பகுதியுடன் சென்றவன் பின்னணியைப் பற்றுபவனுக்கு [18]மாற்றம் புரிந்தவனாகலின் [19]அவ்வாறாகான் என்க.

---

[9] பற்றுதற்குரிய பின்னணியை உடையவரிருவருக்கும் சக்தி ஒத்ததாயின் என்பது.

[10] மேற் சேறற்குச் சாதனங்களான உணவு கருவி முதலியவற்றால் நிறைவுள்ளவனுடைய என்பது.

[11] அற்பமான தொடக்கத்தை யுடையவனது பின்னணியைப் பற்றுபவனை விட, தற்காப்புருவமான ஊதியச் சிறப்பை யடைகிறான் என்பது.

[12] காரணத்தை விளக்குகின்றார்.

[13] களைந்து, அதன் காரணமாக மிகுதியை எய்தி, பின்னணியைப் பற்றுபவனைக் களைதல் கூடும். மிகச் சிறிய படைகளின் முயற்சியை யுடைய சிறுதொடக்க முள்ளவனாயின் பின்னணியைப் பற்றுபவனைக் களைய மாட்டான். ஏனெனில் அவன் சிதறுண்ட படையை யுடைமையால் அவற்றை ஒன்று சேர்த்து இயங்கச் செய்தலியலாதாதலின்.

[14] தன் மூலப் படை முதலிய எல்லாப் படைகளுடன் சேர்ந்து மேற் சேறற் குரியானை எதிர்ப்பவனுடைய என்பது.

[15] சில படைகளுடன் சேர்ந்து மேற் சேறலை ஏற்றவனுடைய பின்னணியைப் பற்றுபவனை விடச் சிறந்த ஊதியத்தைப் பெறுகிறான் என்பது.

[16] காரணங் கூறுகின்றார். தலைநகரம் முதலிய மூலஸ்தானத்துக்குக் காப்பளிக்காதவன் என்க.

[17] இவன்—பின்னணியைப் பற்றுபவன்.

[18] படையின் ஒரு பகுதியை மூலஸ்தானத்தில் வைத்திருந்தவனாகலின் பின்னணியைப் பற்றுபவனுக்கு மாற்றம் புரிந்தவனாதலறிக.

[19] எளியவனாகான் என்பது.

[20]படையை ஏற்றல் சமமாயின், [21]நிலையற்ற பகைவன்மேற் சென்றவனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியச் சிறப்பை எய்துகிறான். நிலையற்ற பகைவன்மேற் சென்றவன் [22]எளிதில் பயனை யெய்தி (பின்னர்) பின்னணியைப் பற்றுபவனைக் [23]களை வான். [24]நிலையான பகைவன்மேற் சென்றவன் (அவ்வாறு) இல்லை. [25]அவன் [26]அரணால் தடைப்பட்டவன். [27]பின்னணி யைப் பற்றின் திரும்பி யிருக்கும் பகைவனால் எதிர்க்கப்படுகிறான்.

[28]இதனால் [29]முன்னுள்ளவர்க்கும்[30]விதி கூறியவாறும்.

---

[20] ஒத்த படையுடன் மேற்சென்றவரிருவரின் பின்னணியைப் பற்று தலில் விசேடத்தைக் கூறுகின்றார்.

[21] நிலையற்ற என்பது ஈண்டு அரண் முதலியவற்றை யமைக்காத என் னும் பொருளது.

[22] எளிதில் பகைவனை வென்று என்க.

[23] ஆகவே அவன் பின்னணியைப் பற்றின் தற்காப்புண்டாமாதலின் ஊதியச் சிறப்பு எய்தப்படும் என்பது கருத்து.

[24] அரண் முதலியவற்றால் நன்குநிலைபெற்றவன்மேற் சென்றவன் எளிதில் காரிய சித்தியை யடையான். பின்னணியைப் பற்றுபவனையுங் களையான். எனவே அவன் பின்னணியைப் பற்றுபவனுக்குச் சிறந்த ஊதியம் ஒன்றுமில்லை யெனக் கூறுகின்றார்.

[25] அவன்—நிலையான பகைவன்மேற்சென்றவன்.

[26] பகைவனுடைய அரணால் தடைப்பட்ட வலியை யுடையவன் என்பது கருத்து.

[27] ஊதியச் சிறப்பை எய்தாமை மட்டுமின்று, சொலப்புகின், நிலையான பகைவன்மேற் சென்றவனுடைய பின்னணியைப் பற்றுபவன் இடுக் கணையும் எய்தக் கூடும் எனக் கூறுகின்றார்; மேற் கூறிய நிலையான பகைவன்மேற் சென்றவனது பின்னணியைப் பற்றின், அப்பகைவனுடைய அரண் முதலியவற்றால் தடைப்பட்டுத் திரும்பின அவனால் பற்றப்படுவான் என்பது.

[28] இதனால்—நிலையான பகைவன்மேற் சென்றவனுடைய பின்னணி யைப் பற்றுபவனுக்குக் கூறிய இவ் விதியினால்.

[29] குறைந்த சக்தியுள்ளவன், சிறு தொடக்க முள்ளவன், படையின் ஒரு பகுதியுடன் சென்றவன் என்ற இவர்களின் பின்னணியைப் பற்றின வர்க்கும் என்பது.

[30] குறைந்த சக்தி யுள்ளவன் முதலியோர், தம் பகைவனால் தடைப் பட்டுத் திரும்பி இவர்களைப் பற்றுவர் என்பது கருத்து.

அறவோனை எதிர்ப்பவனுடைய பின்னணியைப் பற்றுபவன், [31]பகைவர் சமமாயின் ஊதியச் சிறப்பை எய்துகிறான். அற வோனை எதிர்ப்பவன் [32]தமராலும் வெறுக்கப் படுதலின், மற வோனை எதிர்ப்பவன் [33]நல்ல அன்பனாவான்.

இதனால் [34]முதலழிப்பவன், [35]அற்றைப் பிழைப்புள்ளவன், [36]கடும்பற்றுள்ளமுடையோன் என்பவர்மேற் செல்பவரது பின் னணியைப் பற்றுதற்கும் விதி [37]கூறியவாறும்.

[38]நண்பர்மேற் செல்பவரது பின்னணியைப் பற்றுதற் காரணங்கள் அவையேயாம்.

---

[31] பகைவர் இருவரும் சக்தி முதலியவற்றால் ஒத்த நிலையிலுள்ளவராய் இருப்பின் என்பது.

[32] உம்மையால் பிறரைச் (பகைவரைச்) சார்ந்தவராலும் வெறுக்கப் படுவான் என்பது பெறப்படும். ஆகவே அவன் காரிய சித்தியை எய்தாது பின்னணியைப் பற்றுபவனுக்கு எளிதில் வெல்லுதற்குரியனாவான் என்பதே இவனுக்குண்டாம் ஊதியச் சிறப்பென்க.

[33] தமர்க்கும் பிறர்க்கும் அன்பனாவான் ஆகலின் வெற்றிநிச்சயமுள்ள வனாவான். எனவே பின்னணியைப் பற்றுபவனுக்கு வெற்றி கிட்டாது என்பது கருத்து.

[34] தந்தைபாட்டன்வழிப் பொருளை முறையற்ற வழியில் செலவிட்டு அழிப்பவன்.

[35] அவ்வப்போது உண்டாம் பொருளை யநுபவித்துவருபவன்.

[36] பணியாளர், தன் உடல் என்னுமிவற்றைத் துன்புறுத்திப் பொரு ளீட்டுதலில் ஈடுபட்டவன்.

[37] ஏறக்குறைய அவற்றைப் பற்றிய விதிகள் கூறப்பட்டனவாகக் கொள்ளலாம் என்பது கருத்து. அவையாவன:— முதலழிப்பவன் அற் றைப் பிழைப்புள்ளவன் என்போரை எதிர்ப்பவர்களின் பின்னணியைப் பற்றுபவருள் முதலழிப்பவனை எதிர்ப்பவனுடைய பின்னணியைப் பற்று பவன் ஊதியச் சிறப்பை யடைவான். ஏனெனில் பொருளாதார நிலையில் நெருக்கடியுள்ள முதலழிப்பவனை எளிதில் களைந்து, உடன் பின்னணியைப் பற்றுபவனை எதிர்த்தல் கூடும். அற்றைப் பிழைப்புள்ளவன், கடும்பற்றுள்ள முடையோன் என்பவரை எதிர்ப்பவருள் கடும்பற்றுள்ளமுடையவனை எதிர்ப்பவனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியச் சிறப்பை அடை வான். ஏனெனில் கடும்பற்றுள்ளவனை எதிர்ப்பவன் பணியாளருக்கு உத வாத அக் கடும்பற்றுள்ளமுடையவனை எளிதில் களைந்து பின்னணியைப் பற்றுபவனைக் களைவான் என்க.

[38] அதிசந்திக்குக் காரணமாக மேற் கூறப்பட்டவற்றையே நண்பரை எதிர்ப்பவரின் பின்னணியைப் பற்றுபவர்க்கும் கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[39]நண்பனையும் பகைவனையும் எதிர்ப்பவருள் நண்பனை எதிர்ப்பவனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியச் சிறப்பை எய்துகிறான். நண்பனை எதிர்ப்பவன் எளிதில் பயனை யடைந்து பின்னணியைப் பற்றுபவனைக் களைவான். என்னை? நண்பனுடன் சந்தி எளிதாம். பகைவனுடனாயின் (அவ்வாறு) இன்றென்க.

[40]நண்பனையும் பகைவனையும் களைபவருள் பகைவனைக் களைபவனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியச் சிறப்பை எய்துகிறான். என்னை? பகைவனைக் களைபவன் [41]மிகுதியுடைய நண்பனை யுடையவன் (ஆகலின்) பிற்புறத்தைப் பற்றுபவனைக் களைவான். [42]தன் பக்கத்திற்குத் தீங்கு புரியும் மற்றவனாயின் (அவ்வாறு) இலன்.

[43]அவர்கள் [44]ஊதியத்தைப் பெறாது மீண்ட போது (அவர்களுள்) [45]எவனுடைய பகைவன் பெரிய ஊதியத்தினால் விடப்பட்டும் மிகுந்த கேடு செலவுகளை யுடையவனாகவும் பின்னணி

---

39 நண்பனை எதிர்ப்பவன், பகைவனை எதிர்ப்பவன் என்பவருள் முன்னவனுடைய பின்னணியைப் பற்றுபவன், நண்பனை எதிர்த்தற்குத் தடையை யுண்டுபண்ணுதல் மூலமாகத் தன்னைக் காத்துக்கொள்ளல் என்ற சிறந்த ஊதியத்தை யடைவான். பின்னணியைப் பற்றுபவனால் அம் முன்னவன் புறக்கணிக்கப்படின் எளிதில் நண்பனுடன் சந்தியை ஏற்று மிகுதியை அடைந்து உடன் பின்னணியைப் பற்றுபவனைக் களைவான். பகைவனை எதிர்த்தவனாயின், புறக்கணிக்கப்படினும் எளிதில் பகைவனுடன் சந்தி செய்தல் இயலாதாகலின் மிகுதியை அடையாதவனாவான். எனவே பின்னணியைப் பற்றுபவனை அவன் களைதற்கு முடியாது என்பது கருத்து.

40 நண்பனைக் களைபவன், பகைவனைக் களைபவன் என்பவரது பின்னணியைப் பற்றுதலின் சிறப்புவிதியைக் கூறுகின்றார்.

41 தன் பக்கத்தவர்க்குச் சிதைவின்றி நன்னிலையிலிருப்பானாகலின் பின்னணியைப் பற்றுபவனைக் களையக்கூடும் என்பது.

42 தன் நண்பனின் அழிவுகாரணமாகக் குறைவை எய்தினவனாகலின், அவன், தன் பின்னணியைத் தாக்குபவனைக் களைதற்குச் சக்தியற்றவன் என்பது கருத்து.

43 வேறொரு விசேடத்தைக் கூறுகின்றார். அவர்கள்—நண்பனைக் களைபவன், பகைவனைக் களைபவன் என்பவர்.

44 எதிர்பார்த்த ஏதேனுமொரு ஊதியத்தைப் பெறாது திரும்பியபோது என்பது.

45 எவனுடைய—பின்னணியைப் பற்றுபவனுடைய.

யைப் பற்றுகின்றானோ அவன் ஊதியச் சிறப்பை யடைவான். ஊதியம் பெற்று மீளின் எவனுடைய பகைவன் ஊதியத்தாலும் ஆற்றலாலும் [46]தாழ்ந்து பின்னணியைப் பற்றுவானோ அவன் ஊதியச் சிறப்பை யடைகிறான். [47]பின்னணியைத் தாக்குபவனது பகைவனுக்குப் போர்த் தீங்குகளைப்புரிய வன்மையுள்ள மேற் சேறற்குரியான் யாவனோ அவனும் (ஊதியச் சிறப்பை யடைபவன்) ஆம்.

[48]பின்னணியைப் பற்றுபவருள்ளும் எளிதில் செயல் புரியும் படைகளை யேற்பதால் [49]சிறந்தவனும் [50]நிலையான பகைவனும் [51]பக்கத்திருப்பவனும் ஊதியச் சிறப்பை யடைகிறான். [52]பக்கத் திருப்பவனாயின் மேற் சேறற்குரியானுடன் கூடி [53]மூலத்திற்குத்

---

46 எவன் பிறனைவிடக் குறைந்த ஊதியத்தையும் சக்தியையு முடையவனோ, அவனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியச் சிறப்பை யடைகிறான் என்பது.

47 வேறோர் முறை கூறுகின்றார்; மேற் சேறற்குரியானான பகைவன், வெற்றிவிருப்பமுள்ளவனுக்குப் போரில் தீங்கு புரிதற்கு வன்மையுடையனாயின், அவனைப் பகைவனாகக் கொண்டவனும் அவன் பின்னணியைப் பற்றுவனுமாகிய ஒருவன் ஆண்டு ஊதியச் சிறப்பை எய்துகிறான் என்பது கருத்து.

48 வேறோர் அதிசந்தியைக் கூறுகின்றார்; மற்ற குணங்களால் ஒத்தவரும் பின்னணியைப் பற்றுபவருமான இருவருள் என்பது.

49 பிறனைவிட அவ்வழியில் சிறப்புற்றவனும் பிறனது படைகளைவிட அதிகமான அளவையுடைய படைகளை யுடையவனும் என்பது.

50 தன் பகைவனது பின்னணியைப் பற்றுங்கால் அப் பகைவன் நிலையற்றவனாக, அரண் முதலியவற்றால் நிலைப்பட்ட பகைவன் யாவனோ அவனும் என்பது.

51 மேற் சேறற் குரியவனுடைய பக்கத்திலிருக்கும் இயல்புள்ளவனான பின்னணியைப் பற்றுபவனும்.

52 மேற் கூறப்பட்ட மூவருள் முன்னைய இருவரும் பிறரைக் களைவர். எனவே ஊதியச் சிறப்பு தெள்ளிதிற் புலனாம். மூன்றாமவனுக்கு ஊதியச் சிறப்பை விளக்கின்றார்.

53 மூலம் — வெற்றிவிருப்பமுள்ளவனின் தானியம்; எனவே மேற் சேறற்குரியவனுடைய நட்புகாரணமாக வெற்றிவிருப்பமுள்ளவனின் தானியத்திற்குக் கேடு விளைத்தற்குரிய வசதியே அவனுக்குண்டாம் ஊதியச் சிறப்பென்க,

தீங்கு செய்பவனுவான். [54]பின்னிருப்பவன் மூலத்திற்குத் தீங்கு புரியாதவனேயாம்.

சுலோகங்கள்

(1) [55]பகைவனது செயலைத் தடைசெய்யும் பின்னணியைப் பற்றுபவர்களைச் [56]சிற்றரசர், பின்புறத்துள்ள இனம், இரு பக்கங்களிலுள்ளவர் (என்று) மூவகையினராக அறிதல் வேண்டும்.

(2) [57]பகைவனுக்கும் தலைவனுக்கும் இடையிலுள்ள [58]ஆற்றலிலான் 'மறைந்தவன்' எனப்படுவான். [59]வலியவனுக்குத் தீங்கு நேர்ந்துழி [60]அரண் காடுகளை யடைபவனுவான்,

[61]பகைவனும் வெற்றிவிருப்பமுள்ளவனும் மத்தியமனை யடைய விரும்பியபோது [62]மத்தியமனுடைய பின்னணியைப் பற்றுபவன் ஊதியத்தையடைந்து மீளின் மத்தியமனை நண்பனிடமிருந்து பிரித்தல், [63]பகைவனை நண்பனுக்கல் என்னுமிவற்றைச்

---

54 பின்னுள்ளவனுயின் அவ்வாருகான் எனக் கூறுகின்ருர்.

55 பகைவனுடைய செயல்களுக்குத் தடை புரியும் இயல்பினராக மேற்கூறப்பட்ட பின்னணியைப் பற்றுபவர் மூவகையினர் எனக்கூறுகின்ருர்.

56 சிற்றரசர்—மேற்செல்பவனுக்கு அடுத்துள்ள நாட்டினர்.

57 மறைந்தவன் (௬௮௯யி-௨௧) என ஒருவகை மத்தியமனுளன். அவன் ஒன்றையும் செய்யாமைகாரணமாக, பின்னணியைப் பற்றுபவனது நிலைக்குரியனுகான் என்ற கருத்தை அவனுக்கு இலக்கணங் கூறுமுகமாக விளக்குகின்ருர்.

58 அவர்களுக்கு உதவியையோ தீங்கையோ புரிதற்குச் சக்தியற்றவன் என்பது.

59 அவனது இயல்பைக் கூறுகின்ருர்.

60 மறைதற்குரிய இடங்கணிறைந்த அரண், காடு முதலியவற்றை யுடையவன் என்பது. எனவே மறைவுடன் தொடர்புண்டாங் காரணம் பற்றி இப்பெயர் அவனுக்குரியதாயிற்றெனக் கொள்க.

61 மத்தியமனின் பின்னணியைப் பற்றுபவனுக்கு அதிசந்தியைக் கூறுகின்ருர்.

62 அதாவது தன்னை விரும்பியவனுக்குத் துணைபுரிவதில் ஈடுபட்ட மத்தியமனுடைய என்பது.

63 பகைவனுடன் சந்தியைச் செய்து, அவனை நண்பனுக்கல் என்க.

செய்பவன் ஊதியச் சிறப்பை யெய்துகிறான். [64]உதவி புரியும் பகைவன் சந்திக்குரியன். நட்புத் தன்மையினின்றும் [65]நீங்கப் பெற்ற நண்பனாயின் இன்றாம்.

[66]நொதுமலனை யடைய விரும்புதற்கும் இதனால் விதி கூறிய வாறாம்.

[67]பின்னணியைப் பற்றுதல், மேற்சேறல் [68]என்பவற்றில் [69]மந்திரப் போரால் மிகுதியாம். [70]உழைப்புப் போராயின் இரு வருக்கும் கேடு செலவுகளால் மிகுதியின்றாம். பொருள் படைகளை யிழந்தவன் வென்றும் தோற்றவனே யாகிறான் என்பர் ஆசிரியர்.

[71]கேடு செலவுகள் மிகப் பெரியவாயினும் பகைவனது

---

[64] பகைவன் எங்ஙனம் சந்திக்குரியனாவான் என்ற ஐயத்தைப் பரிகரித் தற்குக் கூறுகின்றார். பகைவனாயினும் உதவிபுரிந்து வருபவனாயின் சந்திக் குரியனாம் என்பது கருத்து.

[65] நீங்குதலாவது, உதவிபுரியாமையும் தீங்கு புரிதலுமாம்.

[66] மத்தியமனை அடைய விரும்பியபோது கூறிய முறையையே நொது மலனை யடைய விரும்பிய விடத்தும் கொள்க என மாட்டேற்றாற் கூறுகின் றார்.

[67] பின்னணியைப் பற்றுபவனும் மேற்செல்பவனும் போரை ஏற்றற் குரிய நிலையில் ஏற்கற்பால விசேடத்தைக் குறித்து ஆசிரியர் கொள்கை யினைக் கூறுகின்றார்.

[68] இவற்றை ஏற்றற்கு விரும்பிய நிலையில் என்பது.

[69] பொதுவாகப் போர் இருவகைப்படும்:— போர்க்களத்திற் புகுந்து வாள் முதலியவற்றாற் பகைவனைத் துன்புறுத்தல் ஒன்று; இதனை வியாயா மப் போர் என்ப. போர்க்களத்திற் புகாமலே சத்திரி, நச்சிடுவோர், வன்கண்ணர், ஒற்றர் முதலியவர்களை ஏவிப் பகைவரைத் துன்புறுத்தல் இரண்டாவதாம்; இதனை 'மந்திரப் போர்' என்பர். இவ் விருவகைப் போரில் பின்னையதால் மிகுதியுண்டாம் என்க.

[70] உழைப்புப்போர்—வியாயாமப்போர்; இப்போரை ஏற்பின், எதிர்ப் பவன் எதிர்க்கப்படுபவன் என்ற இருதிறத்தார்க்கும் ஊர்தி மக்கள் என்ப வற்றின் அழிவு, பொருட் செலவு முதலியவற்றால் மிகுதியின்றாம். வெற் றியை யடைந்தவனும் கருவூலம் முதலியன குறைந்தமை பற்றித் தோல்வி யுற்றவனை யொத்தவனாவன் என்பது.

[71] பொருட் செலவு முதலியவை அதிகமாயினும் பகைவனது அழிவு என்ற உயர்ந்ததொரு பயனுக்குக் காரணமாதல்பற்றிப் பின்னையதும் ஏற்கற்பாலதாகலின் ஒன்றைவிட ஒன்றுக்குச் சிறப்புக் கூறுதல் தவ றென்பது கௌடலியர் கொள்கையாம்.

அழிவு ஏற்கத்தக்கது. (ஆதலின் அஃது) இன்றென்பர் கௌடலியர்.

[72]கேடு செலவுகள் [73]சமமாயின் [74]தூஷ்யப் படையை முதலில் கொல்லச்செய்து தீங்கற்றுப் பின்னர் வயப்பட்ட படையுடன் போர் புரிபவன் ஊதியச் சிறப்பை எய்துகின்முன்.

[75]முதலில் தூஷ்யப் படையைக் கொல்லச் செய்யும் இருவருள் மிகப் பெரியதும் சிறந்த வன்மையுள்ளதும் மிக்க தூஷ்யர்கள் நிரம்பியதுமானதைக் கொல்லச் செய்பவன் ஊதியச் சிறப்பை எய்துகிறுன்.

[76]பகைவர், காட்டில் வாழ்பவர் என்பவர்களின் படையைக் கொல்லுதற்கும் இதனுல் விதி கூறியவாறும்

சுலோகங்கள்.

(1) [77]வெற்றி விருப்பமுள்ளவன் [78]பின்னணியைப் பற்று

---

72 உழைப்புப் போரிலும் இரு சிறப்பைக் கூறுகின்முர்.

73 போர் புரிபவன், எதிர்த்துப் போர் புரிவன் என்னுமிவர்களுக்குக் கேடு செலவுகள் சமமாயிருப்பின் என்பது.

74 தூஷ்யர்—அரசுக்குத் தீங்கு புரிவர்; அதாவது அப்படையைத் தன் படையின் முன்னணியில் வைத்தலால், எதிர்ப்பவனுற் கொலை யெய்தற் குரியராகச் செய்து அது காரணமாக உட்பகை யற்றுப் பின்னர் வயப்பட்ட மூவகைப் படையுடன் போர் புரிபவன் ஊதியச் சிறப்பை யடைகிருன்; அதாவது தன் படையின் அழிவு மறுத்தற்குரியதன்று என்ற நிலையில், அரசாங்கத்திற்குத் தீங்கு புரிபவருக்கு அழிவை மிகுதியாக்கி வயப்பட்ட படையின் அழிவை குறைந்ததாக்குதலே ஈண்டு ஊதியச் சிறப்பெனக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

75 முதலில் தூஷ்யப் படையை யழியச் செய்தல் என்பதுபற்றி இருவர் ஒத்திருப்பின், அவருள் மற்றவனுடைய தூஷ்யப் படையின் எண்ணிக்கை, வன்மை, தீங்கு புரியுந்தன்மை இவற்றைவிடச் சிறப்புற்ற தூஷ்யப்படையை அழியச் செய்யும் ஒருவன் ஊதியச் சிறப்பை யடைகிருன் என்பது கருத்து.

76 தூஷ்யப்படையைக் கொலையுறச் செய்தல் போன்று பகைப் படை காட்டுப் படைகளையும் முன்னர்க் கொலையுறச் செய்து பின்னர் வயப்பட்ட படையுடன் போர் புரிபவனும் ஊதியச் சிறப்பை யடைகிருன் என்னுமிச் செய்தியை மாட்டேற்றிக் கூறுகின்முர்.

77 எஞ்சிய விதிமுறைகளைப் பின்வரும் சுலோகங்களாற் கூறுகின்முர்.

78 பின்னணியைப் பற்றுதல் முதலிய நிலையை யடைய நேர்ந்துழி பின்னர்க் கூறப்படும் செயலை யேற்றல் வேண்டும் என்பது கருத்து.

பவனுகவாதல் மேற் செல்பவனுகவாதல் மேற்சேறற்குரியவனுக வாதல் இருப்பின் ஆண்டு தலைவனுக்குரிய இதை யேற்றல் வேண்டும்.

(2) [79]தலைவன், பகைவனின் பின்னுள்ள நண்பனைப் பின்னணியைப் பற்றுபவனுடைய [80]நண்பனுடன் விக்கிரகத்தை முதலில் ஏற்கச் செய்து [81]நண்பன்மேற் சேறும் பகைவனுடைய பின்னணியைப் பற்றுபவனுதல் வேண்டும்.

(3) [82]எதிர்ப்பவன், [83]பின்னணியைப் பற்றியவனைப் பின்னுள்ள நண்பனுல் தடுத்தல் வேண்டும். அங்ஙனமே பின்னணியைப் பற்றியவனது நட்புப் படையைப் பின்னுள்ள நண்பனது நட்புப் படையால் தடுத்தல் வேண்டும்.

(4) [84]முன்னுள்ள [85]நண்பனைப் பகைவனின் நண்பனுடன் எதிர்க்கச் செய்தல் வேண்டும். பகைவனுடைய நண்பற்கு நண்பனை [86]நண்பற்கு நண்பனுல் தடுத்தல் வேண்டும்.

(5) [87]எதிர்க்கப் பட்டவன் எதிர்த்தவனுடைய பின்

---

79 அவற்றுள் பின்னணியைப் பற்றும் நிலையில் ஏற்றற் குரிய செயலைக் கூறுகின்ருர்; தலைவன்—பின்னணியைப் பற்றும் நிலையை யடைந்த வெற்றி விருப்பமுள்ளவன்.

80 நண்பன் என்பது தன் நண்பன் என்னும் பொருளது.

81 தன் நண்பனைக் குறித்து மேற்செல்லும் தன் பகைவனுடைய என்பது.

82 மேற் செல்லும் நிலையை எய்தினவன் செயற்பாலதைக் கூறுகின்ருர்; எதிர்ப்பவன்—மேற் சேறற் ருெழிலை ஏற்கும் நிலையினன்.

83 தன் பின்னுள்ள பகைவனை என்பது.

84 இவ்வாறு பின்னணியிற்செயற் பாலதைக் கூறி, இனி முன்னணியிற் செய்ய வேண்டியதைப் பற்றிக் கூறுகின்ருர்; 'எதிர்ப்பவன்' என்னும் சொல்லை முன்னர்க் கூட்டிப் பொருள் கொள்க.

85 தன் நண்பனை என்பது.

86 ஈண்டும் 'தன்னுடைய நண்பற்கு நண்பனுல்' என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

87 எதிர்க்கப்படும் நிலையிலுள்ளவன் செயற்பாலதைக் கூறுகின்ருர்.

னணியை [88]நண்பனுல் பற்றச் செய்தல் வேண்டும். [89]பின்னுள்ள நண்பனை [90]நண்பற்கு நண்பனுல் [91]பின்னணியைப் பற்றுபவனிடமிருந்து தடுத்தல் வேண்டும்.

(6) வெற்றிவிருப்பமுள்ளவன் [92]நட்பு (என்ற) அங்கத்தின் நிறைவால் மண்டலத்தைத் [93]தன்பொருட்டுப் பின்னரும் முன்னரும் [94]இங்ஙனம் அமைத்தல் வேண்டும்.

(7) [95]மண்டலம் எல்லாவற்றிலும், எப்பொழுதும் மறைவான பணியாளரை இருக்கச் செய்தல் வேண்டும். பகைவருக்கு [96]நண்பனுகி மீண்டும் மீண்டும் கொன்று மறைந்தவனுதல் வேண்டும்.

(8) [97]மறைவற்றவனுடைய [98]செயல்கள் சிறப்புடன் எய்தப் பெறினும் கடலிற் சிதறுண்ட படகையுடையவன் போல் அழிவடைதல் திண்ணம்.

ஏழாம் அதிகரணம் 20-ஆம் பிரகரணம்
'பக்கத்துறையும் பகைவன்செயல்' என்னும்
நூற்றுப்பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

[88] ஏவப்படும் கருத்தாவான தன் நண்பனுல் என்பது.

[89] தன்னை எதிர்த்தவனுடைய பின்னணியைப் பற்றும் தன் நண்பரைத் தடுத்தற்கு முயற்சித்தவனும், தன்னை எதிர்த்தவனுக்குப் பின்னுள்ள நண்பனுமாயிருப்பவனை என்பது.

[90] அதாவது மேற் கூறியவாறு பின்னணியைப் பற்றுபவனுடைய நண்பனுல் என்பது.

[91] தன்னை எதிர்த்தவனுடைய பின்னணியைப் பற்றும் தன் நண்பனுக்குத் தீங்கு ஏற்படாவாறு அவனை, தன்னை எதிர்த்தவனுடைய பின்னுள்ள நண்பனிடமிருந்து போற்றுதல் வேண்டும் என்பது கருத்து.

[92] எழுவகை அங்கங்களுள் (97-ஆம் அத்தியாயம் பார்க்க) நட்பு என்ற அங்கத்தின் குண நிறைவாற் சிறப்புற்ற அரச மண்டலத்தை என்பது,

[93] தன் பொருட்டு—தன் உதவி குறித்து.

[94] இங்ஙனம்—முற்கூறியபடி.

[95] அம்மண்டலங்களில் வஞ்சகச் செயல்களை யறிதற்பொருட்டு வெற்றிவிருப்பமுள்ளவன் ஒற்றரை யமைத்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[96] நண்பனுக நடித்து அப் பகைவரை அவ்வப்போது கொன்று, உடல் வேறுபாடு, இங்கிதம் என்பவற்றை மறைத்துக்கொண்டிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[97] மறைவற்றிருப்பின் உண்டாம் குற்றத்தைக் கூறுகின்றுர்.

[98] செயற் பயன்கள் சிறப்புடன் கிட்டினும் வெற்றிவிருப்பமுள்ளவன் மறைவை ஏற்காதிருப்பின் கேட்டை யெய்துதல் உறுதி என்பது கருத்து.

ஏழாம் அதிகாரணம்—அறுவகைக்குணங்கள்

இருபத்தோராம் பிரகாரணம்—'குறைந்த [1]ஆற்றல்களினிறைவு'

நூற்றுப்பன்னிரண்டாம் அத்தியாயம்.

[2]சிற்றரசரால் எதிர்க்கப்பட்ட வெற்றிவிருப்பமுள்ளவன், அவர் தலைவனிடம் 'உன்னுடன் எனக்குச் சந்தி, [3]இத்துணைப் பொன், யான் நண்பன், உனக்கு இருமடங்கு மிகுதி, [4]நட்புமுக முள்ள பகைவரைத் தன்னழிவால் சிறப்புறச் செய்தல் வேண்டா,

---

112-ஆம் அத்தியாயக் குறிப்புரை.

[1] ஆற்றல்களாவன:— அறிவு ஆண்மை பெருமை என்பன. இவற்றை முறையே மந்திரசக்தி, உற்சாகசக்தி, பிரபுசக்தி என்ப. இவற்றை மிகுதிப் படுத்தற்குரிய முறைகள் ஈண்டுக் கூறப்படும். மேற் சேறற் குரியனுந் தன்மையை யெய்தியவன் மேற் செல்லும் நிலையில் செய்தற்குரிய செயன் முறைகளைப் பற்றி முன் அத்தியாயத்திற் கூறினர். அவன் பலரால் மேற் சென்று எதிர்க்கப்படும் நிலையில் ஏற்றற் குரிய செயன்முறைகள் இதன்கட் கூறப்படுதலின் பிரகரண வியைபு புலனாதலறிக.

[2] ஒருவனால் எதிர்க்கப்படுதல் போன்று, ஒன்றுகூடிய பலராலும் மேற்சேறப்பட்ட வெற்றி விருப்பமுள்ளவன் அம்மேற்சேறற்கு மாற்றம் புரிதற்கு ஆற்றலற்றவனாயின், தன் சக்தியை மிகுதிப் படுத்தற்குக் கருத்துக் கொண்டு தன்னை எதிர்நோக்கி வருபவரின் தலைவனிடம், 'உன்னுடன் எனக்குச் சந்தி' என்பது முதலியனவாகக் கூறுதல் வேண்டும் என்பது. இவ்வாறு கூறுதல் அத்தலைவன் அறவோனாயிருப்பின் செயற்பாலதெனக் கொள்க.

[3] அவன் பொருணசையுள்ளவனாயின் அவனிடம் கூறுமுறையைக் கூறுகின்றார்: 'உனக்கு இத்துணைப் பொன் தருவேன். இடுக்கண் நேர்ந்துழி உன்னாற்காக்கப்படுகிற யான் உனக்குச் சிறந்த நண்பனாகிறேன். எதிர்த்து வரும் இவர்கள் கொடுக்கும் பொன்னைவிட இரு மடங்கு பொன்னும் சிறந்த நண்பனுமாகியவற்றை நீ அடைதல் காரணமாக உனக்கு இரு மடங்கு மிகுதி யுண்டாம்' என்பது.

[4] மேற்கூறிய சொற்களை ஏற்ற விடத்து அவனிடம் மீண்டும் சொல்ல வேண்டியவற்றைக் கூறுகின்றார்; உன்னிடமுள்ள நன்மக்களுக்குக் குறை வையும் பொருட் செலவுகளையும் உண்டாக்கிச் சொல்லளவில் நட்பைப் புலப்படுத்துமிவர்களுக்கு மிகுதியை உண்டு பண்ணுதல் கூடாது. இவர்கள் உன் துணையால் என்னைக் களைந்து மிகுதியை எய்தியவராயின், பின்னர் உன்னை அவமதிப்பார்கள் என்று கூறல் வேண்டும்.

மிகுதியை எய்திய இவர் உன்னையே அவமதிப்பர் ' என்றிவ்வாறு கூறுதல் வேண்டும்.

[5]தீங்கு புரியாத யான் இவர்களால் கூடி எதிர்க்கப்பட்டது போன்று, படையைச் சேர்த்து நன்னிலையை அடைந்த இவர்களால் நீயும் விதனத்தில் எதிர்க்கப்படுவாய். வன்மை மனத்தை மாற்றுமன்றோ! இவர்களுக்குரிய அதனை யழிப்பாய் என்று வேறுபடுத்தலை ஏற்றல் வேண்டும்.

[6]தலைவனை வயப்படுத்தி வேறுபட்ட தாழ்ந்தவர்பாலாதல், [7]தாழ்ந்தவரை அருளித் தலைவன்பாலாதல், [8]எவ்வாற்றான் மேன்மை கருதப்படுமோ அவ்வாற்றானுதல் வன்மையை ஏற்றல் வேண்டும். [9]பிறருடன் பகைமையை ஏற்கச் செய்தும் வேறுபடுத்தலாம்.

[10]பயன்மிகுதியால் தலைவனை வேறுபடுத்துப் பிறர்சந்தியை

---

[5] இன்சொல்முறையாகிய இதை அவன் ஏற்காதவிடத்து, வேறுபடுத்தன்முறையை ஏற்றல் வேண்டும் எனக் கூறுகின்றார்: எவ்விதக் குற்றமுமற்ற யான், உன்னுடன் கூடிய இவர்களால் எதிர்க்கப் படுதல் போன்று, நன்னிலையை யடைந்து ஒன்றுசேர்ந்து படைகளைத் திரட்டிய இவர்களால் நீயும் விதனம் நேர்ந்துழி எதிர்க்கப்படுவாய். வன்மை மிகுந்தவிடத்து மனமாற்றம் உண்டாகுமன்றோ! எனவே, இவர்களின் வன்மைக்குச் சிதைவைச் செய்வாயாக என்று வேறுபடுத்தல் வேண்டும் என்பது.

[6] மேற் கூறியவாறு வேறுபடுத்தன் மொழியை ஏற்றலால் தலைவனிடமிருந்து, தாழ்ந்தவர் வேறுபாட்டை எய்தியவிடத்து, அத் தலைவனைத் தன் வயப்படுத்திக் கொண்டு அத் தாழ்ந்தவர்பால் வன்மையை ஏற்றல் வேண்டும் என்பது.

[7] முற்கூறியபடி இன்சொல் முதலியவற்றால், தாழ்ந்த அத் துணைவரைத் தன்வயப்படுத்தித் தலைவனிடம் வன்மையை மேற்கொள்ளலாம் என்க.

[8] ஈண்டுக் கூறப்பட்டவற்றுள் சிறந்த பயனைத் தருவது எதுவோ அதனை மேற்கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[9] வன்மையை ஏற்கச் செய்தல் முறையன்று என்று கருதியவிடத்துச் செயற்பாலதைக் கூறுகின்றார்; ஒவ்வொருவனுக்கும் பிறருடன் பகைமையை யுண்டுபண்ணிச் சிதைவுபடச் செய்யலாம் என்பது கருத்து.

[10] மிகுதியான பொருட்கொடைகாரணமாகத் தலைவனுடன் ஒப்பந்த மேற்படுத்திக்கொண்டு, தாழ்ந்தவரினின்றும் அவனை வேறுபடுத்திப் பின்னர் அவன்மூலமாகப் பிறருடன் சந்தியைச் செய்தல் வேண்டும்.

ஏற்கும்படியும் செய்யலாம். [11]பின்னர் இருவேதனமுள்ளவர்கள் பானின் மிகுதியைக் காட்டி 'வஞ்சிக்கப்பட்டீர்' எனச் சிற்றரசர்களைக் குற்றம்படச் செய்தல் வேண்டும். குற்றமடைந்த பின்னர் சந்தியைக் கெடுத்தல் வேண்டும். [12]பின்னர் இருவேதனமுள்ளவர் '[13]நாங்கள் விளக்கிய அது இவ்வாறும்' என்று மீண்டும் இவர்களை வேறுபடுத்தல் வேண்டும். [14]வேறுபட்டவருள் ஒருவனை ஏற்றுக்கொண்டும் செயல் புரியலாம்.

[15]தலைவனில்வழி சிற்றரசர்களில் ஊக்கமளிப்பவன், [16]நிலையான செயலுள்ளவன், மக்களன்புள்ளவன், பேராசையாலாதல் [17]அச்சத்தாலாதல் குழுவை யடைந்தவன், வெற்றிவிருப்பமுள்ளவனிடமிருந்து அஞ்சினவன், அரசியலில் தொடர்புள்ளவன், [18]நண்பன், நிலையற்ற பகைவனை யுடையவன் (என்பவருள்)

---

[11] சந்தி செய்த பின்னர், வெற்றிவிருப்பமுள்ளவனைச் சார்ந்தவரும், கூடித் தொடர்ந்துசெல்வோருக்கு நண்பராக நடிப்பவருமாகியவர்கள், 'தலைவன் மிகுந்த ஊதியங் காரணமாகச் சந்தியை யேற்கச் செய்தான்' என்பதை விளக்கிக் கூறி அவர்களைத் தலைவன்செய்த சந்தியினின்றும் பிரித்துவிடல் வேண்டும். இங்ஙனம் பிரிவுண்டாய பின்னர், அவர்கள் வேற்றுமைகாரணமாகச் சந்தி குற்றமுள்ளது எனக்கூறித் தலைவனுக்கு வெற்றிவிருப்பமுள்ளவன் சிறிதும் பொருளைக் கொடுத்தல் கூடாது என்பது கருத்து.

[12] சந்தியைக் கெடுபடச் செய்த பின்னர் என்பது.

[13] தான் விரும்பியபடி மிகுந்த ஊதியம் கிடைக்கப் பெறுமையின் உங்கள் தலைவன் மீண்டும் உங்கள் நட்பை அடைந்து செயல்புரிதற்கு விருப்பத்தால் என்னுடன் செய்துகொண்ட சந்தியைக் குற்றம்படச் செய்தான் என்று கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

[14] கீழ்க் கூறிய உபாயத்தின் காரணமாக வேறுபாட்டை யடைந்த அக் கூடித்தொழில்புரிபவருள் ஒருசாராரைத் தனக்கு அநுகூலராகச் செய்து மற்றவர்களை எதிர்த்தலும் ஆம்.

[15] இதுகாறும் கூடித்தொழில்புரிபவர்களுக்குத் தலைவனொருவனிருப்பின் ஏற்கற்பால செயலைக் கூறினர். தலைவனொருவனில்லாதவிடத்துச் செயற்பாலதைக் கூறுகின்றார்.

[16] நிலையான செயலுள்ளவன்—பகைவரைக் களையும்வரை தொடர்ந்துள்ள முயற்சியுள்ளவன்.

[17] கூடித்தொழில்புரிபவர்களின் கோபத்துக்கு அஞ்சி அவருடன் சேர்ந்தவன் என்பது.

[18] நண்பன்—அக் குழுவில் சேர்ந்தவனும், தனக்கு நண்பனுமாயிருப்பவன்,

[19]பின்னவர் இல்லையாயின் முன்னவரை வயப்படுத்தல் வேண்டும்.

[20]ஊக்கமளிப்பவனைத் தற்கொடையாலும், நிலைச் செயலுள்ளவனை [21]இன்சொல்வணக்கத்தாலும், மக்களன்புள்ளவனைக் [22]கன்னியை யேற்றல் அனுப்புதல்களாலும், பேராசையுள்ளவனைக்[23]கூற்றினிருமடங்காலும்,[24]இவரிடமிருந்து அஞ்சினவனைப் பொருள் படைகளைக்கொடுத்தலாலும், [25]தன்னிடமிருந்து

---

19 இதுகாறும் கூறப்பட்டவரை வயப்படுத்தலில் முறையைக் கூறுகின்றார். இந்த ஒன்பது பெயருள் பின்னவர் கிடைக்கப்பெறுவிடில் முன்னவரை வயப்படுத்தல் வேண்டும் என்பது. அஃதாமாறு:— ஊக்கமளிப்பவன், நிலையான செயலுள்ளவன் என்பவருள் பின்னவன் இல்லையேல் முன்னவனை ஏற்றல் வேண்டும் என்பதும், பின்னவன் இருப்பின் அவனை வயப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதும் கருத்து. ஏனெனில் பின்னவன், மேற்சேறற்குரியானைக் களையாது முயற்சியை விடான். முன்னவனாயின், அவனை வென்றுவிடினும் வாளாதிருந்துவிடுவான். எனவே ஊக்கமளிப்பவனை ஏற்பதைக் காட்டிலும் நிலையான செயலுள்ளவனை ஏற்றல் பயன்மிக்கது என்க. இவ்வாறே ஏனையவிடத்திலும் உய்த்துணர்க.

20 அவர்களை வயப்படுத்தற்குரிய முறையைக் கூறுகின்றார். 'அமைச்சர், புதல்வர், பொருள்களுடன் கூடிய யான் உனக்கு வயப்பட்டவன், விரும்பியவாறு என்னைச் செயற்பாலவற்றில் நீ ஏவலாம், என்னைக் களையாதே' என்பதாகத் தன்னை வழங்குதலால் ஊக்கமளிப்பவனை வயப்படுத்தவேண்டும் என்பது கருத்து.ஊக்கமளிப்பவன் வன்மையை முக்கியமாகக் கொண்டவனாகலின், இவ்வாறு கூறப்பட்டவிடத்து எளிதில் வயப்படுவான் என்க.

21 'எல்லாக் குணங்களாலுமுயர்ந்த உன்னால் வெல்லப்பட்டேன், என்னைக் காத்தருள்க' என்று இன்சொல்லுடன் வணங்குதலால் என்பது. அவன் தற்பெருமைமிக்கவனாகலின், இவ்வாறு கூறப்பட்டபோது வயமாவான் என்க.

22 கன்னியை மணத்தல், கொடுத்தல் என்ற திருமணத் தொடர்பால் என்பது. எனவே உன்னுடன் தொடர்பை விரும்பும் என்னை நீ எதிர்த்தல் கூடா என்ற முறையில் சொல்லப்பட்டபோது மக்களின் வெறுப்புக்கு அஞ்சினவனாகி வயப்பட்டுவிடுவான்.

23 சந்திக்காகப் பிறரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருளின் இருமடங்கு பொருளைக்கொடுத்தலால் என்பது.

24 இவர்—அக் குழுவினர். 'பிறரிடமிருந்து அஞ்சவேண்டா, நான் பொருள் படைகளால் உனக்கு உதவுவேன்' எனக் கூறினால், குழுவினரிடமிருந்து பயந்தவன் வயமாவான் என்க.

25 தன்னிடமிருந்து பயந்தவனாயின், அவனிடம் 'யான் இனி உனக்கு எவ்விதத் தீங்கையும் புரியமாட்டேன். இவ் விடயத்திற்கு இவன் பிணையாளன்' எனக் கூறி வயப்படுத்தல் வேண்டும்.

அஞ்சினவனைப் பிணியாளனைக் கொடுத்தலால் நம்பச் செய்தும், அரசியற்றொடர்புள்ளவனை [26]ஒன்றுந் தன்மையை ஏற்றலாலும், நண்பனை [27]இருவருடைய பிரிய ஹிதங்கள் உதவிக்கொடை இவற்றாலும், நிலையற்ற பகைவனையுடையவனைத் [28]தீங்கு புரியாமை உதவிபுரிதல்கள் காரணமான நம்பிக்கை யூட்டலாலும் வயப்படுத்தல் வேண்டும்.

[29]எவன் எதனாற் பிரிவை அடைவானோ அவனை அதனால் வயபபடுத்தல் வேண்டும்.[30]இடர்களிற் கூறப்படுமாறு இன்சொல் கொடை வேறுபடுத்தல் தண்டங்களாலுமாம்.

அல்லது [31]விதனத்தினழிவில் விரைந்தவன், இடம் காலம் செயல் என்னும் இவற்றில், பொருள் படைகளாற்றுணியப்பட்ட சந்தியை அடைதல் வேண்டும். [32]சந்தி யேற்றவன் தாழ்ந்த தனக்கு மாற்றத்தைச் செய்தல் வேண்டும்.

---

26 'நீயும் யானும் இனி வேறல்லர், எனக்குண்டாம் அவமானம் உனக்குண்டாவதேயாம், பிறருடன் கூடி என்னை எதிர்த்தல் வேண்டா' எனக் கூறி வயமாக்கல் வேண்டும் என்பது.

27 உனக்கும் எனக்குமுண்டாம் இன்பதுன்பங்கள் இருவருக்கும் சமமாம் என்று கூறுதலாலும், எனக்கு இறையாக நீ கொடுக்கவேண்டிய வரையறுக்கப்பட்ட பொருளை இனி நீ கொடுக்கவேண்டாம் என்று கூறி இறையை அருளுதலாலும் நண்பனை வயப்படுத்தல் வேண்டும் என்பது.

28 'உனக்கு இனி தீங்கு புரியமாட்டேன், உதவியே புரிவேன்' என்று தீங்கு புரியாமை, உதவி புரிதல்களை ஒப்பந்தஞ் செய்துகொள்வதால் நம்பிக்கையை யுண்டுபண்ணி வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

29 கூடிச்செயல்புரியுங் குழுவினரிடமிருந்து எவன் எவ்வுபாயத்தால் பிரிவையடைவானோ அவ் வுபாயத்தால் அவனைப் பிரித்து வயப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பது.

30 'போர்ச் செலவு மேற்கொள்வோன் செயல்' என்ற 9-ஆம் அதிகரணத்து 9-ஆம் பிரகரணத்தைப் பார்க்க.

31 தனக்குண்டான துன்பத்தை விரைவில் விலக்க எண்ணுபவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னசெயலில் பொருள்படைகளால் உதவுதல் வேண்டும் என்ற வரையறையுடன் துணியப்பட்ட சந்தியைக் கூடித் தொழில் புரிபவருடன் ஏற்றல் வேண்டும்.

32 பின்னர், குறைந்த தனது சக்தியை மிகைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[33]உதவியிற்ருழ்வுள்ளவன், உறவினர் நண்பர்களைத் துணைவராகச் செய்தல் வேண்டும். அல்லது [34]பொறுத்தற்கியலாத அரணைச் செய்தல்வேண்டும். [35]அரண் நண்பர்களாற் [36]புரக்கப் பட்டவன் தமராலும் பிறராலும் போற்றுதற்குரியனன்ருே!

[37]மந்திரசக்தியற்றவன் [38]அறிவுள்ள மக்களின் மிகுதி, [39]அறிவு முதிர்ந்தோர் தொடர்பு என்னுமிவற்றைச் செய்தல் வேண்டும். [40]அம்முறையில் விரைவிற் புகழை எய்துகிருன்.

[41]பிரபுசக்தியற்றவன் [42]அங்கங்களின் ஏமநலங்களை நிறைவேற்றுதலில் முயலல் வேண்டும். [43]எல்லாத் தொழில்களுக்கும் நாடு மூலகாரணமாம். [44]அதனுற் பிரபுசக்தியாம்.

[45]தன்னிடுக்கண் காலத்தில் [46]அதற்கும் அரண் இடமாம்.

---

33 சக்தியின் மிகுதி, துணையைக் காரணமாகக் கொண்டதாகலின், துணைவரைப் பற்றிக் கூறுகின்ருர்.

34 பகைவராற் கடத்தற்கு இயலாத என்பது.

35 அதற்குக் காரணங் கூறுகின்ருர்.

36 புரக்கப்படுதல்—பகைவரால் அணுகுதற்கு இயலாத நிலையில் இருத்தப் பெறுதல்.

37 மந்திரசக்தி முதலியவற்றுள் மந்திரசக்தியின் நிறைவைப் பற்றிக் கூறுகின்ருர்.

38 அந்தந்த அதிகாரநிலையங்களில் அறிஞரை மிகுதியாக ஏவுதல் வேண்டும் என்பது.

39 அரசநீதிவல்லாரிடமிருந்து நீதிநூலைக் கேட்டறிதல் வேண்டும் என்பது.

40 மேற் கூறிய முறையை ஏற்பின் நன்மை யுண்டாம் என்பது.

41 பொருள் படைகளின் ஊதியத்தாற் குறைவுள்ளவன்.

42 அங்கங்கள்—நாடு அமைச்சு முதலியனவாக முன்னர்க் கூறப்பட்டன.

43 அவற்றுள் நாட்டைப் பற்றிய ஏமநலங்களை முக்கியமாக ஆராய்தல் வேண்டும் என்கிருர். எல்லாத் தொழில்களுக்கும்—அரண் முதலிய எல்லாத் தொழிற்கும். ஆதலின் நாடே முக்கியம் என்பது.

44 அதனுல்—எல்லாத் தொழில்களினின்றும். எனவே பிரபுசக்தியை விரும்புபவன் அரண் முதலிய தொழில்களின் ஏமநலங்களை வளர்த்தல் பற்றி முயலுதல் வேண்டும் என்பது கருத்து.

45 அவற்றுள் அரணுல் உண்டாம் பயனைக் கூறுகின்ருர். தனக்கு ஆபத்துக் காலத்தில் அரண் பாதுகாத்தற்குரிய இடனும் என்பது.

46 அதற்கும்—அப் பிரபுசக்திக்கும்.

அணைக்கட்டு, பயிர்களுக்கு மூலகாரணமாம். என்னை? விளைதற்குரியவற்றிற்கு மழையாலுண்டாம் பயனின் பேருனது [47]அணைக்கட்டுடன் எப்பொழுதும் தொடர்புடையதாகலின் என்க.

பகைவரை வஞ்சித்தற்கு வணிகர்வழி காரணமாம். என்னை? வணிகர்வழியால் படை [48]ஒற்றர்களை அனுப்புதலும், படைக்கலம் [49]கவசம் செலுத்தற்குரியன ஊர்தி என்னுமிவைகளின் விற்பனையும், [50]உட்புகுத்தல் வெளியேற்றுதல்களும் செய்யப்படுகின்றன ஆகலின்.

[51]போர்க்கருவிகளுக்கு ஆகரம் நிலக்களமாம்.

அரண் தொழில்களுக்கும், செலுத்தற்குரியது தேர் இவற்றிக்கும் [52]மரக்காடு காரணமாம்.

யானைகளுக்கு யானைக்காடு காரணமாம்.

யானை குதிரை கழுதை ஒட்டகம் இவற்றிற்குக் கொட்டில் காரணமாம்.

[53]இவை அடையப் பெறுவிடின் உறவினர் நண்பர்களுடைய குடியினின்றும் பெறுதல் வேண்டும்.

---

47 அணைக்கட்டிலிருந்து பாயும் நீரைக்கொண்டு விளையும் செய்களில் மழையினுல் விளையும் பயிர்களிலிருந்துண்டாம் பயன் யாண்டும் தொடர்ந்திருப்பதாம் என்க.

48 சத்திரி, வன்கண்ணர் முதலிய ஒற்றர்களைப் பகைவரது நாட்டுக்கு அனுப்புதலும் என்பது.

49 இதை ‘ ஆவரணம் ’ என்று முதனூல் கூறும்.

50 பிற நாட்டுப் பொருளைத் தன் நாட்டுக்குக்கொணர்தலும், தன்னுட்டு விலைப் பண்டங்களைப் பிற நாட்டிற்கு அனுப்புதலும் என்பது.

51 வாள் முதலியவற்றிற்கு என்க; அவற்றை உண்டாக்குதற்கு இன்றியமையாத இரும்பு முதலியவற்றை யுண்டுபண்ணுதல் மூலமாக ஆகரம் நிலக்களமாதல் அறிக.

52 கோபுரம் முதலியவற்றிற்கும், தேர் முதலியவற்றிற்கும் மரக்காடு காரணமாம் என்பது.

53 மேற் கூறப்பட்டன தனக்குச் சொந்தமாகக் கிடைக்கப் பெறுவிடின் என்பது.

[54]உற்சாகமற்றவன், குழுவினர், வீரர்கள், கள்வர் குழு, காட்டில் வாழ்வோர், மிலேச்ச சாதியினர், பகைவருக்குத் தீங்கு புரியும் [55]ஒற்றர் என்னுமிவர்களை அடைதற்கேற்ப [56]மிகுதியைச் செய்தல் வேண்டும்.

[57]பகைவருடன் [58]கலந்து பகைவர்பால் [59]ஆற்றலிலான் செயலிற் கூறுமாறு மாற்றத்தைச் செய்தல் வேண்டும்.

சுலோகம்

இங்ஙனம் [60]பக்கம், [61]மந்திரம், [62]பொருள், [63]வன்மை என்னும் இவற்ருல் நிறைந்தவன் தனக்குப் பகைவனுல் உண்டாம் எதிர்ப்பைத் தடுத்தல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் இருபத்தோராம் பிரகரணம்
'குறைந்த ஆற்றல்களினிறைவு' என்னும்
நூற்றுப்பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

54 உற்சாகசக்தியை நிரப்பும் முறையைக் கூறுகின்ருர்.

55 ஒற்றர்—சத்திரி முதலியவர்.

56 உற்சாக சக்தியை நிரப்புதல் வேண்டும் என்பது.

57 சக்தியை மிகுதிப்படுத்த இயலாவிடின் செயற்பாலதைக் கூறுகின்ருர்.

58 சந்தியை ஏற்றலால் ஒன்றுசேர்ந்து என்பது.

59 'ஆற்றலிலான் செயல்' என்னும் அதிகரணத்தில் கூறப்படும் முறையை ஏற்றல் வேண்டும் என்பது.

60 பக்சம்—உறவு, நட்பு முதலியன.

61 மந்திரம் என்பது கல்விமுதிர்ச்சி என்னும் பொருளது.

62 அரண், அணைக்கட்டு, வணிகர்வழி முதலியவற்ருலுண்டான பொருள் என்பது.

63 வன்மை—குழுவினர், வீரர், கள்வர், முதலியவ்ர்களாலுண்டானது

22, 23-ஆம் பிரகாரணங்கள்—[1]வலியவனோடு பொருது மறைந்து கோடற்குரிய காரணங்கள், படைவலியாற் சூழ்த்தப்பட்டோன்செயல்

நூற்றுப்பதின்மூன்றும் அத்தியாயம்

வலியவனால் எதிர்க்கப்பட்ட ஆற்றலற்ற அரசன் [2]பிறனால் மந்திரசக்தியால் வஞ்சித்தற்கியலாத [3]அவனைவிடச் சிறந்த வன்மையுள்ளவனை அடைதல் வேண்டும்.

வன்மை [4]மந்திரசக்தி என்னுமிவற்றால் ஒத்தவருள், [5]வயப்பட்டவரின் நிறைவு, முதியவர்தொடர்பு என்பனகாரண மாகச் [6]சிறப்பாம்.

[7]சிறந்த வன்மையுள்ளாரிலரேல் [8]வலியவனோடு ஒத்த

113-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வலியவன்—ஆற்றல்மிக்க பகைவன். மறைந்து கோடல்—தன் அரண் புகுதல். வலியில்லாதவன் தன்னின் வலிய பகைவனுடன் சந்தியை ஏற்றுத் தன் சக்தியை நிறைவுபடுத்தலைப்பற்றி முன்னை அத்தியாயத்திற் கூறினார். அவ்வலியவன் சந்தியை ஏற்கானாயின், வலியிழந்தவன் செயற்பாலனவற்றைப் பற்றி ஈண்டுக் கூறத் தொடங்குகின்றார். இதனாற் பிரகரண வியைபு புலனாதலறிக.

[2] பிறன்—எதிர்த்தவன்.

[3] அவன் என்றது ஈண்டு எதிர்த்தவனையே குறிக்கும்.

[4] மந்திர சக்தியின் நிறைவால் ஒத்தவர் பலர் இருப்பின், மந்திரசக்தியுடன்கூடிய அமைச்சர் முதலியவர்களையுடைய அரசனைச்சார்ந்தொழுகுதல் வேண்டும் எனவும், அவ்வாறான அமைச்சர்களையுடையவர் பலர் இருப்பின், அவருள் அறிவுடைமையும் முதியோரின் தொடர்பும் பெற்ற அரசனையே சார்ந்திருத்தல் வேண்டும் எனவும் கூறுகின்றார்.

[5] வயப்பட்டவர்—ஈண்டு மந்திரசக்தியால் நிறைவுள்ள அமைச்சர் முதலியோர்.

[6] இன்னானை யடைதல் வேண்டுமெனத் துணிதல் என்பது.

[7] எதிர்த்தவனைவிடச் சிறந்த வலியுடையவன் கிடைக்கப்பெறாவிடின் என்பது.

[8] வலியன்—எதிர்த்தவன்.

வன்மையுடையவர் [9]ஒத்த எண்ணிக்கையுள்ள படைகளையுடைய வர் என்னுமிவர்களுடன் [10]மந்திரசக்தி பிரபுசக்திகளால் வஞ்சிக் கப்படாதிருக்கும் வரை சேர்ந்திருத்தல் வேண்டும்.

மந்திரசக்தி பிரபுசக்திகளால் ஒத்தவர்களுள் [11]பரந்த தொடக்கம் காரணமாகச் சிறப்பாம்.

[12]ஒத்த வன்மையுடையவரில்லையாயின் [13]வலியவனிற்றாழ்ந்த வன்மையுள்ளவர், தூயவர், ஊக்கமுள்ளவர், [14]பகைவராயிருப் பவர் என்னுமிவர்களுடன் மந்திரபிரபுஉற்சாகசக்திகளால் [15]வஞ்சிக்காதிருக்கும்வரை சேர்ந்திருத்தல் வேண்டும். [16] உற்சாக சக்தியால் ஒத்தவருள் தன் போருக்குரிய இடப்பேறு காரணமாகச் சிறப்புள்ளதாம். [17]இடத்தால் ஒத்தவருள் தன் போருக்குரிய

---

[9] அவ்வலியவனுடைய படைகளின் எண்ணிக்கைக்கு ஒத்த எண்ணிக் கையைக் கொண்ட படைகளையுடைய துணையான அரசர் பலருடன் சேர்ந்து பகைவனை எதிர்த்துப் போர்புரிதல் வேண்டும் என்பது.

[10] மந்திரசக்தி பிரபுசக்திகளால் தன் துணைவரைப் பகைவன் வேறு படுத்தற்கியலாத காலம் வரையிலும் அவருடன் சேர்ந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[11] பரந்த தொடக்கம்—உணவு கருவிகள் முதலான மேற் சேறற்குரிய பலவகைச் சாதனங்களால் நிறைந்திருத்தல்.

[12] தன்னை எதிர்த்த பகைவனுடன் ஒத்த வன்மையுடையாரில்லையா யின் என்க.

[13] தன்னை எதிர்த்தவனைவிடத் தாழ்ந்த வன்மையுடையராயினும் தூய்மை முதலியவற்றை யுடையார் பலருடன் கூடிப் பகைவனைத் துன் புறுத்தல் வேண்டும் என்பது.

[14] தன் பகைவனுடன் பகைமை கொண்டிருப்பவர் என்பது.

[15] மேற் கூறிய துணைவரைத் தன் பகைவன் மந்திரசக்தி முதலியவற் றால் வஞ்சித்தற்கியலாதிருக்கும் நிலைவரையில் என்க.

[16] உற்சாகசக்தியின் நிறைவால் ஒத்தவர்பலருள் எவனை யடைந்தக் கால் போர்க்குரிய இடத்தைப் பெறுதல் கூடுமோ அவனை யடைதல் வேண்டும் என்பது.

[17] அத்தகைய இடத்தினைப் பெறுதற்குக் காரணமாய பலருள் எவனை யடைந்தால் போர்க்குரிய காலத்தை யடைதல் கூடுமோ அவனை யடைதல் வேண்டும் என்பது.

காலப்பேறு காரணமாகச் சிறப்பாம். [18]இடம் காலங்களால் ஒத்திருப்பின் ஊர்தி படைக்கலம் கவசம் என்பவை காரணமாகச் சிறப்பாம்.

[19]துணைவரில்வழி [20]பகைவன் மிகுந்த படைகளை யுடையனாயினும் (அவனால்) உணவு புல் விறகு நீர் இவற்றைத் தடுத்தற் கியலாததும் [21]அவன், கேடு செலவுகளை யடைதற்குரியதுமான அரணையடைதல் வேண்டும்.

[22]ஒத்த அரண்களுள் தொகுதி வெளியேற்றம் என்பன காரணமாகச் சிறப்புளதாம். தொகுதி வெளியேற்றம் என்பவற்றின் நிறைவுடன் கூடிய [23]மக்களரணை யன்றோ விரும்புதல் வேண்டும்! [24]என்பர் கௌடலியர்.

[25]அதை இக்காரணங்களால் அடைதல் வேண்டும் (அவையாவன;—)

---

[18] முற்கூறியபடி இடம் காலங்களின் பேற்றுக்குக் காரணமாயுள்ள பலருள் எவனுக்கு எருது குதிரை ஒட்டகம் படைக்கலம் கவசம் முதலி கருவிகள் நிறைந்துள்ளனவோ அவனை யடைதல் வேண்டும் என்பது கருத்து.

[19] அடைவதற்குரியவன் ஒருவனும் கிடைக்கப் பெறுவிடின் என்பது.

[20] அவ்வரண் எத்தன்மையதாயிருத்தல் வேண்டும் என்பது பற்றிக் கூறுகின்றார். தன்னை எதிர்த்த பகைவன், தனக்கின்றியமையாத உணவு முதலியவை தன்பால் வருதற்குத் தடை செய்ய இயலாததும் என்பது.

[21] பணியாளர் முதலிய மக்களின் அழிவு பொருட்செலவு முதலியவற்றை அப்பகைவன் அடைதற்குரியதுமான என்பது.

[22] மேற்கூறிய குணங்களையுடைய அரண்கள் பல இருக்குமாயின், அவற்றுள், எந்நாளும் பயன்படுதற்குரிய எண்ணெய் உப்பு முதலிய பண்டங்களின் நிறைவு, அரணிலிருந்து வெளியேறுதற்குரிய வழி என்னுமிவற்றையுடைய அரணையே யடைதல் வேண்டும் என்பது.

[23] மக்களரண்—மக்கள் அடைந்திருத்தற்குரிய அரண்.

[24] 'என்பர் கௌடலியர்' என்பதால் ஏனைய ஆசிரியர்களின் கொள்கை இவ்வாறன்றென்பது குறிப்பாற் புலப்படுத்தினராயிற்று.

[25] மேற்கூறிய அரணைப் பின்னர்க் கூறப்படும் பயன்களுள் ஒன்றைக் கருதியடைதல் வேண்டும் எனக் கூறுகின்றார்; மேற் கூறப்படும் பதினாறு வகையினுள் ஏதேனும் ஒரு பயனைக் கருதியவன் முற் கூறப்பட்டபடி அரணை யடைதல் வேண்டும் என்பது கருத்து.

'பின்னணியைப் பற்றுபவன் நட்புப் படை மத்தியமன் நொதுமலன் இவர்களை [26]ஏவுவேன்' என்பதும், 'சிற்றரசர் காட்டில் வாழ்வோர் [27]அவன்குடிப் பிறந்தவன்' [28]தண்டிக்கப்பட்டவன் இவருள் ஒருவனால் அவன் நாட்டைக் கவர்வேன், அல்லது [29]தீங்கடையச் செய்வேன், என்பதும், 'தீயவர்குழுவை வயப்படுத்தலால் அவனுடைய அரண், நாடு, படைகள் தங்குமிடம் என்னுமிவற்றில் [30]கலாம் உண்டாகச் செய்வேன்' என்பதும், '[31]நெருங்கிய போது படைக்கலம், தீ, நஞ்சு, [32]வஞ்சகச் செயல்கள் என்பவற்றாலும் [33]மறைவுச் செயல்களாலும் [34]விருப்பத்திற்கேற்பக்கொல்வேன்' என்பதும், '[35]தானேமறைவுச் செயலையேற்றலால் கேடு செலவுகளை அடைவிப்பேன்' என்பதும், 'கேடு, செலவு, வேற்றுநாட்டில் வசித்தல் இவற்றால் துன்புற்ற [36]இவனுடைய நண்பர் குழுவிலும் படையிலும் நாளடைவில் [37]வேறுபாட்டை அடைவிப்பேன்' என்பதும், '[38]கூலம் நட்புப் படை புல் இவற்றைத் தடைப்படுத்தலால் இவனது படை நிலையங்களுக்குத் தீங்கை உண்டாக்குவேன்' என்பதும்,

---

[26] எதிர்த்தவனைக் குறித்துப் போர்புரிதற்கு அனுப்புவேன் என்பது.

[27] எதிர்த்த அரசனது குடியிற் பிறந்தவன் என்பது.

[28] எதிர்த்த அரசனால் தண்டிக்கப்பட்டவன் என்பது.

[29] தீயிடுதல் முதலியவற்றால் தீங்கடையச் செய்வேன் என்க.

[30] கலாம்—உட்கலாம் புறக்கலாம் என்பன.

[31] பகைவன் தன்னிடம் நெருங்கிவந்த நிலையில்.

[32] 'ஆற்றலிலான் செயல்' என்னும் பின்வரும் பன்னிரண்டாம் அதிகரணத்திற் கூறப்படும் செயல்கள்.

[33] பதினான்காம் அதிகரணத்திற் கூறப்படும் செயல்கள்.

[34] நான் விரும்பியவாறு என்பது.

[35] பகைவர்பால் நானே ஒற்றர் முதலியவர்களை யனுப்பி, அவர்களின் நம்பிக்கையைப் பெறுமாறு செய்து, பின்னர் அவர்களைக் கொல்லுமாறு செய்தலாலும் பொருட்செலவு முதலியவற்றை உண்டுபண்ணுமாறு செய்தலாலும் எதிர்த்தவனுக்குத் தீங்கைச் செய்வேன் என்பது.

[36] இவன்—எதிர்த்தவன்.

[37] 'வேறுபடுத்தல்' என்ற உபாயத்தால், சிதைந்து பிரியச் செய்தல்.

[38] எதிர்த்தவன் தன்நாட்டிலிருந்து வரும் உணவு முதலியவற்றை யடையாவாறு செய்தலால் அவன் படைநிலையங்களுக்கு இடர் விளைவிப்பேன் என்பது கருத்து.

'[39]படையை அனுப்புதலால் அவனுக்கு அற்றத்தையுண்டு பண்ணி எல்லாக் குழூவுடன் கூடித் தகர்ப்பேன்' என்பதும், '[40]ஊக்கத்தடை யுள்ளவனுடன் விரும்பியவாறு சந்தியை யடைவேன்' என்பதும் '[41]என்னை எதிர்த்தவளவில் நாற்புறமும் கலாம் உண்டாம்' என்பதும், '[42]நட்புப் படைக்குத் தடைசெய்து இவன் தானியத்தை நண்பர் காட்டில்வாழ்வோர்களின் படைகளால் தகர்ப்பேன்' என்பதும், 'பெரிய நாட்டின் ஏமம் புதுநலம் என்பவற்றை இங்கிருந்தே காப்பேன்' என்பதும், '[43]எனக்காகவும் நண்பனுக்காகவும் சிதைவுற்ற என் படை இங்குள்ள என்னுடன் சேர்ந்து பகைவராற் பொறுத்தற் கியலாததாகும்' என்பதும் '[44]தாழ்ந்தவிடம் சுரங்கம் இரவு இவற்றின் போரில் தேர்ச்சியுள்ள என் படை வழித்துன்பத்தால் விடுபட்டுத் தொழிலணுக்கத்தில் இயங்கும்' என்பதும், '[45]கால இடங்களுக்கு முரணுகை இங்கு வந்தவன் கேடு செலவுகளால் தானே அழிவெய்துவான்' என்பதும்,

---

[39] எதிர்த்தவனது கூடாரத்தில் என் படை சிலவற்றை மறைவாக அனுப்பி, அங்கு சோர்வினை யுண்டாக்கிப் பின்னர் என்னுடைய படைகள் எல்லாவற்றோடும் சென்று தகர்ப்பேன் என்பது.

[40] எதிர்த்தவன் ஊக்கத்தை முயன்று தடைப்படுத்திப் பின்னர்ச் சந்தியை என் விருப்பப்படிச் செய்துகொள்வேன் என்பது.

[41] என்னுடன் மேற்சேறற்கு முயன்று என்னை எதிர்த்தவன் சிற்றரசர்களுடைய கோபத்துக்குப் பாத்திரமாவான் என்பது.

[42] எதிர்த்த பகைவனுடைய நட்புப் படையைத் தடை செய்து அவன் தலைநகரத்திற்கு என் நட்புப்படை முதலியவற்றால் தீங்கிழைப்பேன் என்பது கருத்து.

[43] என் காரியத்திற்காகவும், என் நண்பன் காரியத்திற்காகவும் வெளியிடங்களுக்கு அனுப்பப்பெற்ற என் படைகள் இங்கு என்னுடன் சேர்ந்த அளவில் பகைவன் இவ்வரணைக் கடத்தல் இயலாது என்பது கருத்து.

[44] 108-ஆம் அத்தியாயத்திற் கூறியபடி பல்வகைப் போர்களிலும் தேர்ச்சியுற்ற என்படை, வழிச்செலவால் உண்டாய இளைப்பினை இந்த அரணில் தணித்துக்கொண்டு செயலை ஏற்றற்குரிய காலம் அணுகினதும் இயங்கும் என்பது கருத்து.

[45] எதிர்த்த இவன் தன்படைகளுக்குத் தகாத இடம் காலங்களில் இங்கு வந்திருக்கின்றானதலின், இவன் என் முயற்சியில்லாமலே தானே கேடு செலவுகளை யநுபவித்து அழிவான் என்பது கருத்து.

'[46]அரண் காடு வெளியேற்றம் என்பன நிறைந்திருத்தல்பற்றி பெருங்கேடு செலவுகளால் அடைதற்குரிய இந்நாடு பிறர்க்குப் பிணியை யுண்டுபண்ணுவதும் படைகளியக்கத்துக்குரிய இட மற்றதுமாம். இடுக்கணை யெய்தியே இதில் புகுவான். புகினும் வெளியேற மாட்டான்' என்பதும் ஆகும்.

([47]முன்னர்க் கூறிய) காரணமில்லாத நிலையிலும் பகைவன் படை ஓங்கியிருக்கும் நிலையிலும் அரணைவிட்டு வெளியேறுதல் வேண்டும். அல்லது [48]விளக்கினது தீயிற் பாயும் விட்டிலைப் போன்று பகைவன்பால் விரைந்து தாக்குதல் வேண்டும். [49]தன்னுயிரைப் பொருட்படுத்தாதவன் [50]இரண்டனுள் ஒரு பயனை எய்துவான் என்பர் ஆசிரியர்.

---

46 பல்வகை அரண்களாலும் பல்வகைக் காடுகளினுலும் மிகுதியாக வெளியேறுதற்குரிய வழிகளினுலும் நிரம்பிய இந்நாட்டிற் புகுவோன் மிகுதியான கேடு செலவுகளை யநுபவித்தற்குரியனுவன். மேலும், இந்நாடு வேற்றுநாட்டினின்றும் வந்தவர்களுக்கு நோயை உண்டுபண்ணுவது. படைப்பயிர்ச்சிக்குரிய இடமற்றது. இந்நாட்டிற் பகைவன் புகும்பொழுதே அளவிறந்த துன்பத்தை யடைதற்குரியனுவான். ஒருக்கால் உள்ளே புகுந்தானுயினும் இதனின்றும் துன்பமின்றி வெளியேறுதல் இயலாது என்பது. இங்ஙனம், அரணை யடைதற்குரிய காரணங்கள் பதினுறு கூறப்பட்டன என்க.

47 இங்குக் கூறப்பட்ட காரணங்களின்றேல் செயற்பாலது இது எனத் தம் ஆசிரியர் கூறியதனைக் குறிப்பிடுகின்ருர்.

48 தீயில் விட்டில் விழுவதுபோன்று உயிர்ப்பற்றற்றுப் பகைப்படையிற் புகுந்து இயன்ற அளவு போர்புரிதல் வேண்டும். வலியவனுடன் எதிர்த்தல், எதிர்ப்பவனுக்குத் தோல்வியையே தரும் என்பது ஒருதலையன்று ஆனல் ஒருக்கால் எதிர்பாராத வகையில் பகைவனை வெல்லுதல் என்ற பயனையும் பயக்கக் கூடும். தீயில் விழுகின்ற விட்டில் தீயினை யணைத்து ஒரோவழியுய்தலுங் காண்கின்ருேம். அந் நிகழ்ச்சியை ஆசிரியர் இங்கு உவமையாக எடுத்தாண்டுள்ளார்.

49 தன்னுயிரைப் பொருட்படுத்தாது வினைபுரிபவன்.

50 பகைவனை வெல்லுதல், தான் இறத்தல் என்ற இரண்டனுள் ஒன்றை என்க.

[51]அன்றென்பர் கௌடலியர். [52]தன்னிடத்தும் பிறனிடத்தும் சந்திக்குரியனுந் தன்மையைக் கண்டு சந்தியைச் செய்தல் வேண்டும். [53]மாறுபடின் [54]வன்மையாற் பயனையாதல் வெளியேறுதலையாதல் ஏற்க விரும்புதல் வேண்டும்.

[55]அல்லது [56]சந்திக்குரியவன்பால் தூதனை யனுப்புதல் வேண்டும். [57]அவனால் அனுப்பப்பட்டவனைப் [58]பொருள் நன்மதிப்பு என்பவற்றால் உபசரித்து 'இவ் விலைப்பண்ட நிலையம்

---

51 தற்காப்புக்குரிய உபாயம் எளிதிற் பெறப்படின், ஐயுறவுக்கிடனாகிய (தனக்கு விகற்பமாயுண்டாகக் கூடிய) தீங்கை ஏற்றுச் செயல்புரிதல் முறையன்று. ஆதலின் ஆசிரியரின் இக் கொள்கையை முதற் கடமையாக ஏற்றல் கூடாது எனக் கூறுகின்றார்.

52 ஆயின், முற் கூறப்பட்ட காரணமில்வழி ஏற்கற்பாலதெது என்னுமிடத்துக் கூறுகின்றார். தன்பால் சந்திக்குரியனுந் தன்மையாவது, குற்றமற்றிருத்தல். பகைவன்பால் சந்திக்குரியனுந் தன்மையாவது, அறத்தால் வெல்லுதல் என்பர். இருவரும் சந்திப்பற்றுடையராயிருத்தல் என்பாருமுளர்.

53 மாறுபடின்—சந்திக்குரிமையின்றேல்.

54 தீயில் விட்டில் போல் பகைவர்பால் புகுதலால் 'இரண்டனுள் ஒரு பயன்' என்பதையடைய விரும்பல்வேண்டும். 'வலியவனோடு பொருது மறைந்துகோடற்குரிய காரணங்கள்' என்னும் பிரகரணம் இத்துடன் முற்றுப்பெற்றது. இனி 'படைவலியாற்றாழ்த்தப்பட்டோன் செயல்' என்பது கூறப்படும். பகைவனது படைவன்மையால் தாழ்த்தப்பட்ட அரசன், வெற்றி விருப்பத்தால் அப் பகைவனைக் குறித்துச் செய்ய வேண்டிய முறைகள் என்பது இதன் பொருள். சந்திசெய்தல் முன்னர்க் கூறப்பட்டது. அதன் பிரிவுகளில் ஒன்றையேனும் தன்னிற் சிறந்தவனோடு ஏற்றற்கு முடியாதிருப்பின், கடைசியாக அவனிடம் தற்கொடையாற் சந்தியைச் செய்தல் வேண்டும் என்பது ஈண்டுக் கூறப்படும். இதனால் இரு பிரகரணங்களும் இயைபுடையனவாம்.

55 'அல்லது' என்பது மற்றச் சந்திகளின் வாய்ப்பின்மையைக் குறிக்கும்.

56 தன்னிற் சிறந்தவனும் அறத்தால் வெற்றியுள்ளவனுமான அவன் பால் என்பது.

57 அவனால்—சந்திக்குரிய சிறந்தவனால்.

58 பொருள் என்பது 'பொருளைக் கொடுத்தல்' என்று தொழின்மேல் நின்றது.

[59]அரசனுடையது. [60]இது கோப்பெருந்தேவி இளவரசன் இவர்களின் சொல்லால் கோப்பெருந்தேவி இளவரசர்களுடையது. இந்நாடும் யானும் [61]உன்பாற் கொடுக்கப்பட்டவர்கள்' என்று [62]கூறுதல் வேண்டும்.

[63]சார்பை யடைந்த பின்னர் [64]தலைவனிடம் [65]ஒழுக்க வரையறையுள்ளவன்போல் ஒழுகுதல் வேண்டும். [66]அரண் முதலியவற்றின் தொழில்களையும் [67]கன்னியை மணத்தல், [68]திருமணம், [69]புதல்வனது முடிசூட்டு விழா, குதிரை வாங்குதல், யானை பிடித்தல், வேள்வி, [70]மேற்சேறல், [71]விளையாட்டிற்குச் செல்லல் இவற்றையும் தலைவனது உடன்பாடுபெற்றுச் செய்தல் வேண்டும். [72]தன்னிலத்துள்ள மக்களுடன் சந்தி, [73]விலகியவர்பாற் றீங்கு (என்னும்) எல்லாவற்றையும் உடன்பாடுபெற்றுச் செய்தல் வேண்டும். [74]குற்றமுடையோராகிய நகரத்து மக்களையும், நாட்டு

---

59 சந்திக்குரிய அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தற்குரியது.

60 சந்திக்குரியவனுடைய கோப்பெருந்தேவிக்குக் காணிக்கையாக என் கோப்பெருந்தேவியால் கொடுத்தற்குரியது. இஃது அவனுடைய இளவரசனுக்குக் காணிக்கையாக என் இளவரசன் சொல்லாற் கொடுத்தற்குரியது.

61 சந்திக்குரிய அரசனிடம் என்பது.

62 அத்தூதனிடம் இவ்வாறு கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

63 தூதனையனுப்புதல் முதலியவற்றால் ஒருவனை யடைந்த பின்னர் என்பது.

64 தலைவன் — ஈண்டுத் தனக்குச் சார்பானவன்.

65 ஒழுக்கம்—ஏற்க வேண்டிய செயன்முறை. அதையுடையவர் பணியாளர் என்க. எனவே ஒரு பணியாளன் தன் தலைவனிடம் ஒழுகுதல் போல் பணிவுடன் ஒழுகி வாழ்தல் வேண்டும் என்பது கருத்து.

66 அம்முறையையே விளக்கிக் கூறுகின்றார்.

67 தலைவன், அவன் உறவினர் முதலியோர்களின் கன்னியை மணந்து கொள்ளுதல் என்பது.

68 தன் கன்னியைத் தலைவன் முதலியோர்க்குக் கொடுத்தல் என்பது.

69 இளவரசுப் பட்டத்தைச் சூட்டுதல் என்பது.

70 பிற பகைவனைக் குறித்து மேற்சேறல் என்பது.

71 விளையாட்டு—உவவனம் முதலியவற்றில் நிகழ்வது.

72 தன் நாட்டிலிருந்து வரும் தன் அமைச்சர் முதலியவர்களுடன் செய்யும் சந்தி என்பது.

73 தன்னிடமிருந்து விலகிப் பகைவனிடம் சென்று, பின்னர்த் திரும்பி வந்தவர்களுக்குச் செய்யும் தீங்கு.

74 குற்றம் என்பது ஈண்டு, மறச்செயல் புரிதலால் நிகழ்வதென்க.

மக்களையுமுடைய அறச்செயலுள்ளவன் [75]வேறுநிலத்தைக் கேட்டல் வேண்டும். [76]வெறுக்கத்தக்காரைப்போல் மறைவினைறுத்தலாலும் மாற்றம் புரியலாம். [77]தகுதியுள்ளதாயினும் நண்பனிடமிருந்து கொடுக்கப்படும் நிலத்தை ஏற்றல் கூடாது. [78]அமைச்சன், புரோகிதன், சேனைத்தலைவன், இளவரசன் என்பவருள் ஒருவரைத் தலைவனில்லாத நிலையில் காண்டல் வேண்டும். [79]வன்மைக்கேற்ப உதவுதலும் வேண்டும். தெய்வவழிபாடு, மங்கலவாழ்த்து இவைகளில் [80]அவனைப்பற்றி ஆசிகளைக் கூறல் வேண்டும். [81]யாண்டும் தற்கொடையையும் குணத்தையும் கூறுதல் வேண்டும்.

சுலோகம்

படைவலியால் தாழ்த்தப்பட்டுத் தலைவனிடம் [82]இங்ஙனம் ஒழுகுபவன் [83]சார்ந்திருக்கும் வலியவரைச் சார்ந்தவனாகவும் [84]ஐயுறப்பட்டவன் [85]முதலியவருக்கு மாறுபட்டவனாகவும் இருத்தல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் 22, 23-ஆம் பிரகரணங்கள்
'வலியவனோடு பொருது மறைந்துகோடற்குரிய காரணங்கள்',
'படைவலியாற் றாழ்த்தப்பட்டோன் செயல்' என்னும்
நூற்றுப் பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[75] பாட்டன் அவற்கு முன்னோன்வழி வந்திருப்பினும் தன் நாட்டை விட்டுவிட்டு வேறுநாட்டைக் கேட்டல் வேண்டும் என்பது.

[76] கேட்டலின்றியே தூஷ்யர்க்குரிய மறைவினைறுத்தலை யேற்றலால் தன் நாட்டிலுள்ள தீயவரை வெளியேற்றுதலும் நன்றெனகிறார்.

[77] குற்றமற்ற மக்களையுடைய நாடாயினும் தன் நண்பனிடமிருந்து கவர்ந்து கொடுக்கப்படின் ஏற்றல் கூடாதெனக் கூறுகின்றார்.

[78] தன் தலைவனெதிரில் தன் அமைச்சன் முதலியவரைப் பார்த்தல் கூடாதென்றது, தலைவன்பால் தான் பணித்தொழில் புரிதலைத் தன் பணியாளர் காண்டல் கூடாது என்னும் பொருட்டு.

[79] தலைவனைக் காணுங்கால், தன் தகுதிக்கேற்ப ஏதேனும் காணிக்கைப் பொருள் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[80] அவன்—தலைவன்.

[81] தலைவனிடந்தன்னைவழங்கியதை எல்லா மக்களிடமும் கூறுதல் வேண்டும் என்பது.

[82] இங்ஙனம்—மேற்கூறிய விதிமுறைப்படி.

[83] தலைவனைச் சார்ந்தும் வலியவராயுமுள்ள அமைச்சர் முதலியோருக்கு உதவியாயுள்ள செயல்களையுடையவனாகவும் என்பது.

[84] தலைவனைச் சாராதிருத்தல் காரணமாக ஐயுறப்பட்டவன் என்பது.

[85] முதலிய என்பதனால் வெறுக்கப்பட்டோரும் அடங்குவர்.

ஏழாம் அதிகாணம்—அறுவகைக்குணங்கள்

24-ஆம் பிரகாணம்—[1] படைவலியாற் பகைவனைத் தன்பாற் படுத்துவோன்செயல்

நூற்றுப்பதினன்காம் அத்தியாயம்

[2] ஒப்பந்தமுள்ளவனும் [3] அப்பொருள்பற்றி வெறுக்கச் செய்பவனை வெல்ல விருப்பமுள்ளவனுமான வலியவன் [4] தன் னிலம் தன் படைகளுக்குக் காலத்திற்கும் வாழ்க்கைக்கும் ஏற்றதா தலும், [5] பகைவனுக்கு அரண் வெளியேற்றங்கள் அற்றதாதலும், [6] பின்னணியைப் பற்றுபவன் இல்லையாதலும் நட்புப்படை யில்லையாதலும் [7] எவ்வாற்றால் உண்டாகுமோ அவ்வாற்றான்

114-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தன் படைவன்மையாற் பகைவனை வென்று தன்பாற் கொணர்வித் தோன் செயற்பாலன கூறுவது. படைவலியாற் றாழ்த்தப்பட்டவன் ஏற்க வேண்டியவற்றைப்பற்றி முன்னர்க் கூறினர். ஈண்டு, தாழ்த்தியவன் ஏற்க வேண்டியனபற்றிக் கூறுகின்றார். இதனாற் பிரகரண இயைபுணர்க.

[2] தாழ்த்தப்படுதற்குக் காரணமாயுள்ள மேற்சேறலைப் பற்றி முதலிற் கூறுகின்றார். ஒப்பந்தம்—சந்தியின் காரணமாக உன்னால் வரையறுக்கப் படும் பொருளைக் கொடுப்பேன் என்ற வாக்குறுதி. ஒப்பந்தமுள்ளவன் என்பது ஈண்டு அவ் வாக்குறுதியைப் பெற்றவன் என்னும் பொருளது.

[3] ஒப்பந்தப்படி பொருளைக் கொடாமைகாரணமாக வெறுப்பை யுண்டுபண்ணிய மேற்சேறற்குரியவனை என்பது.

[4] தன் படைகள் செல்லுதற்குரிய வழி தன் நிலத்திலிருக்கக் கூடியதா யும், தனக்கு அநுகூலமான காலத்துடனும் தனக்குரிய உணவு கருவி முதலியவற்றின் நிறைவுடன் கூடியதாயுமிருத்தல் வேண்டும்.

[5] மலையரண் வெளியேறுதற்குரிய வழிகள் என்னுமிவையிரண்டும் பகைவனுக்கு இல்லாமலிருத்தல் வேண்டும்.

[6] பின்னணியைப் பற்றுபவன் இல்லாமையை வெற்றிவிருப்பமுள்ள வனுக்கும் நட்புப்படை யில்லாமையைப் பகைவனுக்கும் இயைத்துரைக்க. 'பின்னணியைப் பற்றுபவன்' என்பதற்கு இலக்கணையால் பின்னணியைப் பற்றுபவருக்கு மாற்றம் புரிபவன் எனப் பொருள்கொண்டு பகைவனுக்கே அதையும் அடைமொழியாகக் கொள்வாருமுளர்.

[7] எவ்வாற்றால்—எவ்வழியாகச் செல்லுதலால்.

மேற்சேறல் வேண்டும். [8]முரணையின் மாற்றஞ்செய்து மேற்சேறல் வேண்டும்.

[9]ஆற்றலற்றவரை இன்சொல் கொடை என்பவற்றாலும், வலியவரை வேறுபடுத்தல், தண்டம் என்பவற்றாலும் தன்பாற் படுத்தல் வேண்டும்.

[10]உபாயங்களின் [11]துணிபு [12]விகற்பம் [13]சேர்க்கை என்னு மிவற்றால் அடுத்ததும் ஒன்றால் மறைவுபட்டதுமான பகுதிகளைத் தன்பாற் படுத்தல் வேண்டும்.

[14]கிராமம் காடு இவற்றில் வாழ்பவர், கொட்டில் வணிகர் வழி என்னுமிவற்றைப் பாதுகாத்தல், விடப்பட்டது, விலகியது

---

[8] படைகளுக்குத் 'தன்னிலம்' முதலியனவாகக் கூறப்பட்டவற்றி னின்மையும், பகைவனுக்கு அரண் வெளியேற்றங்களின் உண்மையு மிருப்பின், அவற்றிற்குரிய மாற்றத்தைச் செய்து கொண்டு பின்னர் மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

[9] மேற் சேறற் குரியவனைத் தன்பாற் படுத்துதற்குரிய உபாயங்களுக் குரிய பொருள்வரையறையைக் கூறுகின்றார். இப் பிரகரணப் பெயரில் 'படை' என்பதற்கு உபலக்கணத்தால் 'நால்வகை உபாயங்கள்' எனப் பொருள் கொள்ளல் வேண்டும் என்பதும், ஒறுத்தல் மிகுதியாயிருத்தல் பற்றி அப் பெயர் கொடுக்கப்பட்டதென்பதும் உய்த்துணரத்தக்கன.

[10] நால்வகை உபாயங்களை ஏற்றற்குரிய வரையறையைக் கூறுகின்றார்.

[11] இன்னுனிடம் இவ்வுபாயமே மேற்கொள்ளத்தக்கது; வேறு உபாயம் ஏற்பதற்குரியதன்று என்ற துணிபு என்பது.

[12] இவ்வுபாயமோ அல்லது மற்றையதோ என்பது விகற்பம் ஆம்.

[13] இவ்வுபாயமும் பிறவும் என்பது சேர்க்கையாம். இதனை 'சமுச்சயம்' என்ப. இங்ஙனம் உபாயங்களின் துணிபு முதலியவற்றை ஏற்றலால் பகைவனுடைய அங்கங்களையும் நண்பனுடைய அங்கங்களையும் தன்பாற் படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[14] வன்மையற்றவனிடம் இன்சொல் கொடை இவற்றை ஏற்றல் வேண்டும் எனக் கூறுகின்றார். கிராமம் காடு இவைகளை அண்டிவாழும் பசு எருமைகள், மேற்சேறற்குரியானுடைய நீர்வழி நிலவழி முதலிய வற்றைக் கள்வர் முதலியவர்களிடமிருந்து பாதுகாத்தலும், பகைப்படை முதலியவற்றின் அச்சங் காரணமாக விடப்பட்டவரும் தானே நீங்கிப் போனவருமான பணியாளர் முதலியவர்களையும், தீங்குபுரிந்து விட்டுச் சென்ற தூஷ்யர் முதலியவர்களையும் தேடி யறிந்துகொண்டு கொடுத் தலும் என்ற இன்னோரன்ன உருவமான இன்சொல்லை ஆற்றலற்றவன்பால் ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

தீங்கு புரிபவர் என்னுமிவற்றைக் (கொணர்ந்து) கொடுத்தல் என்ற இன்சொல்லை ஏற்றுச்செய்தல் வேண்டும். நிலம், பொருள், கன்னி, [15]அபயம் என்னுமிவற்றைக் கொடுத்தல் என்ற கொடையைச் செய்தல் வேண்டும்.

[16]சிற்றரசர் காட்டில் வாழ்வோர் [17]அக்குடிப்பிறப்புள்ளவர் [18]அடக்கப்பட்டவர் என்பவருள் ஒருவரை வயப்படுத்தலால் பொருள் படை நிலம் தாயப் பொருள் என்னுமிவற்றைக் கேட்கச் செய்தல் என்ற வேறுபடுத்தலைச் செய்தல் வேண்டும். [19]வெளிப்போர் வஞ்சகப்போர் மறைவுப்போர் [20]பகையரண் எய்தும்வழி என்னுமிவற்றால் பகைவரை யடக்குதல் என்ற [21]தண்டத்தைச் செய்தல் வேண்டும்.

[22]இங்ஙனம் உற்சாகமுள்ளவரைப் [23]படையின் உதவி குறித்தும் [24]தற்பெருமை யுள்ளவரைப் [25]பொருளுதவிகுறித்தும் [26]அறிஞர்களை [27]நிலத்தின் உதவி குறித்தும் ஏவுதல் வேண்டும்.

---

15 பகைவனுக்கு அச்சம் நேர்ந்துழி 'அஞ்சற்க' என்று அபயமளித்தல் என்பது.

16 ஆற்றலுள்ளவன்பால் வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்றை யேற்றல் வேண்டுமெனக் கூறுகின்றார்.

17 அக் குடிப் பிறப்புள்ளவர்—மேற் சேறற்குரியானுக்கு உறவினர்.

18 சிறை முதலியவற்றால் அடக்கப்பட்டவர்; மேற்சேறற்குரியவனுடைய புதல்வன் முதலியோர் என்க.

19 வெளிப்போர் முதலிய மூவகைப் போரைப் பற்றிய விளக்கத்தை 104-ஆம் அத்தியாயத்திற் காண்க.

20 'பகையரண் எய்தும் வழி' என்ற பெயருள்ள 13-ஆம் அதிகரணத்திற் கூறப்படும் 'நச்சிடுதல்' முதலிய செயல்களால் என்பது.

21 தண்டம்—ஒறுத்தல்; நால்வகை யுபாயத்தில் இறுதியுள்ள தண்டோபாயம்.

22 இன்சொல் முதலிய உபாயங்களால் தன்வயப்பட்டவரை ஏவுதலில் முறையைக் கூறுகின்றார். 'இங்ஙனம்' என்பது மேற் கூறியவாறு தன்வயப் படுத்தப்பட்டவர்களுள் என்னும் பொருளது.

23 தன் படைகளுக்கு உதவிபுரியுமாறு என்பது.

24 தற்பெருமை என்பது ஈண்டுப்பொருணிறைவு என்னும் பொருட்டு.

25 தனக்குப் பொருளைக் கொடுத்து உதவுமாறும் என்பது.

26 அறிஞர்—மந்திர சக்தியுள்ளவர்கள்.

27 நிலத்தைப் பற்றிய செயல்களில் அதன் திண்மை நொய்மைகளைப் பற்றித் துணிதலால் உதவிபுரியும்படியும் என்பது.

[28]அவருள்[29]விலைப்பண்ட நகரம், சிற்றூர்,[30]ஆகரம் இவற்றி னின்றும் உண்டான [31]இரத்தினம், [32]திண்மை, [33]நொய்மை [34]குப்பியப்பொருள் என்பவற்றாலும் மரக்காடு யானைக்காடு கொட்டில் இவற்றில் தோன்றிய [35]யானம் [36]வாகனம் என்பவற்றாலும் மிகையாக உதவி புரிபவன் [37]சித்திர போகன் எனவும், படையாலாதல் பொருளாலாதல் அதிகமாக உதவுபவன் 'மகாபோகன்' எனவும், படை பொருள் நிலங்களை உதவுகிறவன் 'சருவபோகன்' எனவும் கூறப்படுவர்.

[38]பகைவன் ஒருவனைத் தடை செய்பவன் 'ஏகதோபோகி' எனவும், [39]பகைவனுக்கும் நட்புப் படைக்கும் தீங்கு புரிபவன் "உபயதோபோகி' எனவும், [40]பகைவன், நட்புப்படை, மருங்குள்ளவர், காட்டில் வாழ்வோர் என்பவரை நாற்புறமும் தடைப்படுத்துபவன் 'சருவதோபோகி' எனவும் கூறப்படுவர்.

---

28 இன்சொல் முதலிய உபாயங்களால் மேற் கூறியவாறு நண்பராகச் செய்யப்பட்டவராலுளவாம் சிறந்த பயன்களையும், அவைகாரணமாக அவர்க்குண்டாம் பெயர்வேறுபாட்டினையும் கூறத் தொடங்குகின்றார். அவருள்—படைவலியால் தன்பாற்படுத்தப்பட்டோருள்.

29 விலைப்பண்டங்களைக் கொள்ளல் விற்றல் செய்தற்குரிய இடம்.

30 ஆகரம்—பொன் முதலியன உண்டாம் இடம்.

31 இரத்தினம்—முத்து முதலியன.

32 திண்மை—சாந்தம் முதலியன் என்பது.

33 சங்கு முதலியன என்பது.

34 குப்பியம்—ஆடை முதலியன.

35 யானம்—தேர் முதலியன.

36 வாகனம்—யானை முதலியன.

37 பலவகைப்பட்ட பயனை யுண்டுபண்ணுதல் காரணமாக இப்பெயர் பெற்றனன்.

38 பயனை எய்துதற்கு உதவிபுரியும் நண்பர்வகையை இதுகாறும் கூறி முடித்து, இனித் தீங்கை யகற்றுதல்மூலம் உதவிபுரியுமவர்களைக் கூறத் தொடங்குகின்றார். ஒரு பகைவனை மட்டும் தடுத்து உதவுபவன் என்பது.

39 பகைவனையும் பகைவனுடைய நட்புப் படையையும் தடுத்தலால் உதவுபவன் என்க.

40 பகைவன், அவனுடைய நட்புப்படை, இருபக்கங்களிலுமுள்ள பகைவர், காட்டுத்தலைவன் என்ற எல்லோராலுமுண்டாம் தீங்கைப் பரிகரித்து உதவிபுரியுமவன் என்பது.

[41]பின்னணியைப்பற்றுபவன், காட்டில் வாழ்பவன், [42]பகைவற்குச் சிறந்தான், பகைவன் [43]என்பவருள் நிலக்கொடையால் வயப்படுத்தற்குரிய ஒருவன் அடையப்பெறின் குணமற்ற நிலத்தால் அவனை வயப்படுத்தல் வேண்டும். [44]தொடர்பற்றதால் அரணில் இருப்பவனையும், [45]வாழ்க்கைக்குரிமையற்றதால் காட்டில் வாழ்பவனையும் [46]மீண்டு பெறுதற்குரியதால் அக் குடிப்பிறந்தவனையும், [47]பகைவனிடமிருந்து கவரப்பட்டதால் [48]பகைவனுற்றடைப்பட்டவனையும் [49]எப்பொழுதும் பகைவருடன் கூடியதால் [50]குழுப்படையையும் [51]வலிய சிற்றரசனுடன் கூடியதால் [52]திரண்ட படையுள்ளவனையும் [53]இரண்டால் [54]போரில் மாறுபட்டவனையும், [55]உழைப்பிடமற்றதால் உற்சாகமுள்ளவனையும்,

---

41 இனி, 'கொடை' என்ற உபாயத்தை ஏற்கும் நிலையில் இன்ன நிலத்தை இன்னானுக்குக் கொடுத்தல் வேண்டும் என்ற வரையறை கூறுகின்றார்.

42 பகைவனுடைய அமைச்சன் முதலியவர்.

43 மேற்கூறப்பட்ட நால்வருள் யாரேனுமொருவரை . நிலத்தைக் கொடுத்துத் தன்வயப்படுத்தவேண்டிய நிலையில் நொய்மையான நிலத்தைக் கொடுத்து வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

44 இன்னின்ன நிலத்தால் இன்னின்னாரை வயப்படுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார். தொடர்பற்றது—அரண்சம்பந்தமற்றது ; அதாவது அரணுக்கு வெளியில் வேறுநாட்டால் மறைவுபட்ட நிலம்.

45 உயிர்வாழ்தற்கின்றியமையாத பயிர்த்தொழில் முதலியவையில்லாத நிலத்தால் என்க.

46 காரியம் முடிவுற்றதும் மீண்டும் பெறுதற்குரியதால் என்பது.

47 பகைவனிடமிருந்து வலிந்து கவரப்பட்ட நிலத்தால்.

48 பகைவனால் சிறைப்படுத்தப்பட்ட அவன்புதல்வன் முதலியவரையும்.

49 எக்காலத்தும் கள்வர், காட்டில் வாழ்வோர் முதலியவர்களாலுண்டாம் தீங்கையுடைய நிலத்தால் என்பது.

50 குழுப்படை — மக்கள்திரள்உருவமாயுள்ளதும் தலைவனற்றதுமான ஒருவகைப்படை.

51 ஆற்றல்மிகுந்த பகைவனுடன் கூடிய நிலத்தால் என்க.

52 மக்கள்திரள்உருவினதும் தலைவனைக் கொண்டதுமான ஒருவகைப் படை.

53 எப்பொழுதும் பகைவரையுடைய நிலத்தாலும் வலிய சிற்றரசனையுடைய நிலத்தாலும் என்பது.

54 போரில் வஞ்சகம் செய்பவனை.

55 உழைப்பிடம்—படைகளின் பயிற்சிக்குரிய இடம்.

[56]சூனியமானதால் பகைவன்பக்கத்தவனையும், [57]துன்புறுத்தப் பட்டதால் [58]போர்த்தீங்குற்றவனையும், பெருங்கேடுசெலவுகளா லமைத்தற்குரியதால் [59]சென்று மீண்டவனையும், அரணற்றதால் [60]விலகியவனையும் [61]பிறன் அடைதற்கு இயலாததால் தானே போற்றுபவனையும் வயப்படுத்தல் வேண்டும்.

[62]அவருள் பேருதவிபுரிந்தவனையும் மாறுபாடற்றவனையும் [63]அநுசரித்தல் வேண்டும். [64]மாறுபட்டவனை [65]மறைவினுறுத் தலால் வயப்படுத்தல் வேண்டும். [66]வன்மைக்கேற்ப உதவிபுரி பவனை மகிழ்வித்தல் வேண்டும். [67]முயற்சிக்கேற்பப் பொருள் நன்மதிப்பு என்னுமிவற்றையும் [68]விதனங்களில் அருளையும் செய்

---

[56] சூனியமானது—பயனெய்துதற்கு முடியாதது.

[57] பகைப்படை காட்டில் வாழ்வோர் முதலியவர்களால் தீங்கு இழைக் கப்பட்ட நிலத்தால் என்பது.

[58] போர்புரிந்து கேடு எய்தியவன் என்பது. செய்துகொண்ட சந்தியி னின்று மாறுபட்டவன் என்பாருமுளர்.

[59] தன்னைவிட்டு விலகிச்சென்று மீண்டும் தன்னை வந்தடைந்தவனை என்க.

[60] பகைவனிடமிருந்து அஞ்சித் தன்னுட்டினின்றும் வெளியேறியவனை என்பது.

[61] அந்நிலத்துக்கு, முன்னர்த் தலைவனுயிருந்தவன் தவிர வேறொருவன் அதை யடைந்து வாழ்தற்கு இயலாத நிலத்தால், முன்னர் அந்நிலத்துக்குத் தலைவனுயிருந்தவனை வயப்படுத்தல் வேண்டுமென்க.

[62] படைவலியால் தன்பாற்படுத்தப்பட்டவர்தம் செயன்முறைக்கேற்ப அவரவரிடம் தன்பாற்படுத்துபவன் ஏற்றற்குரிய செயன்முறைகளைக் கூறு கின்றூர்.

[63] உதவிபுரிந்துவரும் செயல்களுக்கும், மாறுபாடின்றி நடந்துவரும் நிலைக்கும் தடை ஏற்படாவாறு அவனிடம் ஒழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

[64] தனக்கு மாருகச் செயல்புரிபவனை என்பது.

[65] வெளிப்படையாகக் கொலை செய்தால் படைவலியாற் றன்பாற்பட்ட ஏனையவர் வெகுளுவர் என்பது பற்றி இங்ஙனம் கூறினுர் என்க.

[66] தன் இயல்புக்குத் தக்கபடி உதவிபுரிந்துவருபவனை ஊக்கமளித்து மகிழச்செய்தல் வேண்டும் என்பது.

[67] அவரவர்களின் உழைப்பிற்கேற்ப அவர்களுக்குப் பொருளைக் கொடுப்பதுடன் அவர்களை நன்கு மதித்தல் வேண்டும்.

[68] உறவினர் முதலியோர்க்கு இறத்தல் முதலிய நேர்ந்தகாலத்து ஆறுதலளித்தலையும் என்பது.

தல் வேண்டும். [69]தானே வந்தவரை விரும்பியபடிக் காண்டலை யும் [70]மாற்றத்தையும் செய்தல் வேண்டும். அவமதிப்பு, குற்றங் கூறல், பழித்தல், [71]மிகைமொழி என்னுமிவற்றை [72]இவர்கள் பாற் பயன்படுத்தல் கூடாது. [73]அஞ்சல் என்று தந்தையைப் போல் அருளுதல் வேண்டும். [74]தனக்குத் தீங்குபுரியின், அக் குற்றத்தை விளக்கி அவனை வெளிப்படையாகக் கொலைசெய்தல் வேண்டும். [75]அல்லது பிறரது அருவருப்பு காரணமாக மறைவி னொருத்தலிற் கூறுமாறு செயல் புரியலாம். கொலைப்பட்டவனது நிலம், பொருள், புதல்வர், மனைவி என்பவற்றை [76]விரும்புதல் கூடாது. [77] இவன் குடிப்பிறந்தாரையும் [78]தம் தகுதிகளில் நிறுத் தல் வேண்டும். [79]தொழிலில் இறந்தவனுடைய புதல்வனை அரசியற் ஷொழிலில் நிறுத்தல் வேண்டும்.

---

69 தன்னால் அழைக்கப்படாது வந்தவர், தன்னை விரும்பியபடிக் காண் டற்கு அநுமதித்தல் வேண்டும், என்றவிது, தன்னிடத்து அவர்கட்கு அன் புண்டாதற் பொருட்டென்க.

70 அவர்களிடமிருந்து தீங்கு உண்டாகக்கூடும் என்று ஐயுற்றால், அத் தீங்கினின்றும் தன்னைக் காத்தற்குவேண்டிய முன்னேற்பாட்டைச் செய்து கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

71 மிகைமொழி—அதிகமாகப் புகழ்ந்து பேசுதல்.

72 இவர்கள் படைவலியால் தன்பாற்படுத்தப்பட்டோர்.

73 அபயமளித்த பின்னர் அச்சத்திற்குரிய நிகழ்ச்சி யேற்படின், அவர் களைத் தந்தைபோல் பாதுகாத்தல் வேண்டும் என்பது.

74 படைவலியாற் றாழ்த்தப்பட்டவன் வெற்றிவிருப்பமுள்ளவனுக்குத் தீங்கு புரியின், அக்குற்றத்தைப் பலரும் அறியுமாறு விளம்பரப்படுத்தி அவனைக் கொலைசெய்தல் வேண்டும் என்க.

75 மேற்கூறியவாறு வெளிப்படையாகக் கொலை செய்யின், அவனைப் போன்ற ஏனையவருடைய வெறுப்புண்டாம் எனக் கருதினால், பின்னர்க் கூறப்படுமாறு மறைவினொறுத்தலைச் செய்யலாம் என்பது கருத்து.

76 தனக்குரியன என்று எண்ணுதல் கூடாது. அதாவது அவற்றைக் கவர்ந்துகொள்ளுதல் கூடாது என்பது கருத்து.

77 உம்மையால் புதல்வர் முதலியவர்களையுங் கொள்க.

78 அரசன் முதலியோரின் பதவிகளில் நிலைப்படுத்தல் வேண்டும் என்பது.

79 தன்பாற்படுத்தியவனுக்காகப் போர் முதலியவற்றிற் சென்று இறந்தவனுடைய புதல்வனை, அவன் தந்தையினுடைய நாட்டின் ஆட்சிக் குரியனாகச் செய்தல் வேண்டும் என்பது.

[80]இங்ஙனம் படைவலியாற்றாழ்த்தப்பட்டோர், இவனுடைய புதல்வர் பேரர் என்பவரையும் அநுசரிக்கின்றனர்.

[81]வந்தடைந்தவரைக் கொன்றும் கட்டியும் நிலம் பொருள் புதல்வர் மனைவி என்னுமிவற்றை [82]விரும்புபவனுடைய [83]மண்டலம் வெறுப்புற்று இன்மைகுறித்து எழும். தன்னிலங்களில் ஈடுபட்ட இவன் அமைச்சரும் [84]இவன்பால் வெறுப்புற்று மண்டலத்தை யடைகின்றனர். அல்லது தாமே [85]இவனுடைய அரசையாதல் உயிரையாதல் விரும்புகின்றனர்.

சுலோகம்

[86]ஆகலின் அரசர் [87]தன்னிலத்தும் இன்சொலாற் [88]போற்றப் பட்டவராகவும் அரசனுக் கேற்றவராகவும் [89]புதல்வர் பேரர் என்பவர்களை யநுசரித்தவராகவு மிருக்கின்றனர்.

ஏழாம் அதிகரணம் 24-ஆம் பிரகரணம்
'படைவலியாற் பகைவனைத் தன்பாற் படுத்துவோன் செயல்'
என்னும் நூற்றுப் பதினான்காம் அத்தியாயம்
முற்றிற்று.

---

[80] மேற்கூறிய முறைகளைக் கைக்கொள்ளின் படைவலியாற் றாழ்த்தப் பட்டோர் வெற்றிவிருப்பமுள்ளவனிடம் மட்டுமின்றி அவன் புதல்வர் முதலிய பரம்பரையினரிடமும் அநுசரித்து வாழ்வர் என்பது கருத்து.

[81] மேற்கூறியவற்றிற்கு மாறாக ஒழுகும் வெற்றிவிருப்பமுள்ளவன் தீங்கை யடைவான் எனக் கூறுகின்றார்.

[82] விரும்புபவனுடைய—கவர்ந்துகொள்பவனுடைய.

[83] பன்னிரண்டு விதமாக முற்கூறப்பட்ட அரசமண்டலம் அவனிடம் வெகுண்டு அவனைக் கொன்றுவிடுதற்கும் முயலும் என்பது.

[84] வெற்றிவிருப்பமுள்ளவனிடம் வெகுண்டு அவனுக்குத் தீங்கு புரிய விருப்பங்கொண்டு அம்மண்டலத்தை யடைகின்றனர் என்பது கருத்து.

[85] வெற்றிவிருப்பமுள்ளவனைச் சிறைப்படுத்துதல் முதலியவற்றால் அரசினின்றும் விலக்கித் தாமே அரசராகின்றனர். அல்லது அந்த அரசனைக் கொன்றுவிடுகின்றனர் என்பது கருத்து.

[86] ஆகலின்—மேற்கூறிய காரணத்தால்.

[87] பிறராற் கொடுக்கப்படாது தனக்கே உரியதாய நாட்டிலும் என்பது. உம்மையால், வெற்றி விருப்பமுள்ள அரசனாற் கொடுக்கப்பட்ட நாட்டிற்கு அரசராயுள்ளவரையுங் கொள்க.

[88] வெற்றிவிருப்பமுள்ளவனாற் போற்றப்பட்டவராகவும் என்பது.

[89] வெற்றிவிருப்பமுள்ளவனிடம் மட்டுமேயன்றி அவன் பரம்பரையினரிடமும் அன்புடன் நடந்து வருகின்றனர் என்பது கருத்து.

ஏழாம் அதிகரணம்—அறுவகைக்குணங்கள்

25, 26-ஆம் பிரகரணங்கள்—[1]சந்திகன்மம், சந்தியின்விடுதலை

நூற்றுப்பதினைந்தாம் அத்தியாயம்

சமம் சந்தி சமாதி [2]என்பன ஒரு பொருட்கிளவியாம். [3]அரசரது நம்பிக்கைக்குரிய ஒப்பந்தப் பொருள் சமம் சந்தி சமாதி எனப்படும்.

[4]உண்மையும் [5]சூளுறவும் [6]நிலையற்ற [7]சந்தியாம். [8]பிணையாளன் அல்லது [9]ஏற்கப்படுவது [10]நிலையாம் என்பர் ஆசிரியர்.

115-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சந்திகன்மம்—சூளுறவு முதலியவற்றால் உறுதிப்படுத்தலைப் பற்றிக் கூறுவது. பொருள்முதலியவை காரணமாக உண்டாம் சந்தி முன்னர்க் கூறப்பட்டது. உறுதிப்படுத்தப்படவில்லையேல் அச்சந்தி செய்யப்பட்டும் செய்யப்பட்டதாகாதெனக் கொண்டு, அதை உறுதிப்படுத்தல்பற்றிக் கூறுகின்றார். இதனாற் பிரகரணவியைபு விளக்கமாம்.

[2] இம்மூன்று சொற்களும் ஒரே பொருளை யுணர்த்துவன (பரியாயங்கள்) என்பது கருத்து.

[3] அப்பொருள் யாது என்பதைக் கூறுகின்றார். ஒப்பந்தப் பொருளின் துணிபுக்குக் காரணமாயுள்ள உண்மை, சூளுறவு, பிணையாளன், ஈடு என்றவற்றுள் ஒன்று, சமம், சந்தி, சமாதி, என்னும் சொற்களாற் குறிக்கப்படுகின்றது என்பது கருத்து.

[4] மேற் கூறிய நான்கனுள் நிலையானது நிலையற்றது என்ற பிரிவை ஆசிரியரின் கொள்கைக் கேற்பக் கூறுகின்றார். உண்மை—'இது இவ்வாறும்; வேறுதலின்று' என்ற சொல்மட்டும். இது கிருதயுகத்துமக்களால் மிகையாகப் போற்றப்பட்டது.

[5] சூளுறவு—தகப்பன் திருவடிகள், பொன் முதலியவற்றைத் தொட்டுக் கொண்டு கூறுதல்.

[6] 'நிலையற்ற' என்பது 'மிகுந்த நம்பிக்கைக்குரியதல்லாத' என்னும் பொருளது.

[7] சந்தி என்ற சொல் சந்தியாலுளதாம் தொடர்பையும் சந்திக்குரிய காரணத்தையும் குறிக்குமென்ப.

[8] பிணையாளன்—மாறுபாடின்மைக்குப் பிணையாகவுள்ளவன். அவன் காரணமாயுண்டாம் சந்தியைப் பிணையாளன் என்ற சொல் ஈண்டுக் குறிப்பதாம்.

[9] சொல்லை நம்புதற் பொருட்டுக் கொடுக்கப்பட்ட புதல்வர் முதலியோர் என்பது. ஈண்டும் அவர்காரணமாயுண்டாம் சந்தியைக் கொள்க.

[10] மிகவும் நம்புதற்குரியன வென்பது.

[11]அன்றென்பர் கௌடலியர். [12]உண்மை அல்லது சூளுறவு மறுமையினும் இம்மையினும் நிலையான சந்தியாம். [13]பிணையாளனும் ஏற்கப்படுபவனும் இம்மைப்பயனை யுடையவரும் வன்மையைப் பற்றியவரும் (ஆவர்).

[14]'சந்தியுடையராய் இருப்போம்' என்று உண்மையான கடைப்பிடியையுடைய முன்னைய [15]அரசர் உண்மையால் சந்தியைச் செய்தனர்.

[16]அதை மீறின், [17]'சூளுறவை மீறினவனை இவை கொன்றுவிடும்' என்று நெருப்பு, நீர், [18]உழவு, மதில், சல்லி, யானையினது கழுத்து, குதிரையின் முதுகு, தேரின் நடுப்பகுதி, படைக்கலம்,

---

11 ஆசிரியர்கொள்கைக்கு நேர் முரணான தம் கொள்கையைக் கூறுகின்றார்.

12 நிலையற்றனவாகக் கூறப்பட்ட உண்மை சூளுறவுகள் ஆராய்ந்துணருங்கால் நிலையானவையே. ஏனெனில், அவற்றினின்றும் நழுவியவன் மறுமையில் நிரயத்தையும்,இம்மையில் சான்றோர்களால் இகழப்படுதலையும் அடைகிறான் ஆகலின்.

13 நிலையானவையாகக் கூறப்பட்டவிவை ஆராயுங்கால், பிறழ்பவனுக்கு இம்மையில் சான்றோரால் இழிவுமட்டும் உண்டாதலன்றி மறுமையில் ஒரு தீங்குமில்லை யாகலின் நிலையற்றனவாம். மேலும் பிணையாளன் வலியனாயவிடத்தும் நம்புதற்குரியனாவான். ஏற்கப்படுபவன் வைப்பவனின் அன்புக்குரியனாயவிடத்தும் நம்புதல் கூடும். இன்றேல் நம்புதற்குரியதன்றாகலின், வன்மையைப் பற்றிய இவை நிலையற்றவை என்பது கருத்து.

14 உண்மை முதலியவற்றில் நன்மை தீமை பற்றி முன்னையதை மீறுதலால் பின்னையது விரும்பப் படுவதாம் எனக் கூறுவான் தொடங்கி அவற்றின் இலக்கணங்களைக் கூறுகின்றார்.

15 அரசர்—நளன் முதலியோர்.

16 'பொய்மையில்லாத பொருளையுடைய சொல்லைக் கூறுதல்' என்ற உண்மையை மீறின், நெருப்பு முதலிய பதினொன்றினைத்தொட்டுக் கூறினர் என்பது கருத்து.

17 அங்ஙனம் அவற்றைத் தொட்டுக் கூறுதற்குக் காரணங் கூறுகின்றார். நெருப்பு முதலியவற்றைத் தொட்டுக்கொண்டு சபதஞ் செய்தவன், அச் சபதத்தை மீறுமிடத்து அவனை அவை அருளமாட்டா என்ற நம்பிக்கையால் அங்ஙனம் கூறினர் என்பது கருத்து.

18 உழவு—கலப்பையால் உழுதபோது உண்டாம் வாய்க்கால் வழி; ஈண்டு இலக்கணையால் நிலத்தைக் கொள்ளல் வேண்டும்.

இரத்தினம், விதை, வாசனைப்பொருள், திரவப்பொருள், தங்கம், [19]பொன் என்னுமிவற்றைச் சூளுறவுடன் தொட்டனர்.

[20]சூளுறவை மீறின், பெரிய தாபதர், [21]தலைவர் என்னுமிவர்களைப் பிணையாளராக்கல் பிணையாளனும். [22]அதில் [23]பிறனை யடக்கும் திறனுள்ள பிணையாளரை வைப்பவன் வஞ்சிக்கிறான். [24]மாறுபட்டவன் வஞ்சிக்கப்படுகிறான்.

[25]சிறந்த உறவினரை ஏற்றல் ஏற்கப்படுவதாம். [26]அதில், [27]தூஷ்ய அமைச்சனையாதல், தூஷ்யப் புதல்வனையாதல் [28]கொடுப்பவன் [29]வஞ்சிக்கிறான். [30]ஏற்பவன் வஞ்சிக்கப்படுகிறான். [31]ஏற்கப்படுமதை ஏற்றல்பற்றி நம்பிக்கையடைந்தவனது அற்றத்தில் பகைவன் விரும்புதலின்றித் தகர்க்கிறானன்றோ!

---

19 பொன் என்பது, ஈண்டு நாணயத்தைக் குறிப்பதாம்.

20 நெருப்பு முதலியவற்றைத் தொட்டுக்கொண்டு கூறப்பட்டதைக் காலம் மக்கள் என்பவற்றின் குற்றங் காரணமாக மீறிவிடின் என்பது.

21 தலைவர்—கிராமம் முதலியவற்றின் தலைவர்.

22 பிணையாளரைக் கொண்ட சந்தியில் என்பது.

23 உறுதி செய்யப்பட்ட பொருளை ஏற்காதவனைத் தடை செய்வதில் ஆற்றலுள்ளவனைப் பிணையாளனாக வைத்தவன் பிறனை வஞ்சிக்கவியலும் என்பது கருத்து.

24 பிறனைத் தடைப்படுத்தற்கு இயலாதவனைப் பிணையாளனாகப் பெற்றவன் என்பது.

25 பிறனுடைய வார்த்தையில் நம்பிக்கை யுண்டாதற்பொருட்டு அவனுடைய முக்கிய உறவினரை ஈடாகப் பெறுதல் 'ஏற்கப்படுவது' என்ற சந்தியாம் என்பது.

26 அதில்—அச்சந்தியில்.

27 தூஷ்யன்—நாட்டுக்குக் கேட்டை விளைப்பவன்.

28 ஈடாகக் கொடுப்பவன் என்பது.

29 ஈட்டைப் பெறுபவனை வஞ்சிக்கிறான் என்பது.

30 மேற் கூறிய ஈட்டை ஏற்பவன் என்பது.

31 வஞ்சித்தன்முறையைக் கூறுகின்றார். பிறனிடமிருந்து ஈட்டைப் பெற்றிருக்கிறேன் என்று நம்பிக்கை யடைந்திருக்கும் வெற்றிவிருப்பமுள்ளவனுடைய அற்றத்தைப் பார்த்துத் தன்னால் கொடுக்கப்பட்ட ஈட்டுப்பொருளில் விருப்பமற்றவனான அப் பகைவன் அவனைத் தாக்குகிறான் என்பது கருத்து.

[32]புதல்வர்சமாதியிலாயின் (கூறுவாம்). [33]கன்னி, புதல்வன் இவர்களின் கொடையில் கன்னியைக்கொடுப்பவன் வஞ்சிக்கிறான். என்னை? [34]கன்னி, தாயப்பொருளற்றவளும் பிறர்க்குரியவளும் துன்பத்திற்குக் காரணமானவளும் ஆகலின். புதல்வன் [35]மாறுபட்டவனும்.

[36]புதல்வருள்ளும் [37]குடிப்பிறப்புள்ளவன், அறிஞன், வீரன், படைக்கலப் பயிற்சியுள்ளவன், [38]ஒருவனை புதல்வன் என்னுமிவர்களைக் கொடுப்பவன் வஞ்சிக்கப்படுகிறான். [39]மாறுபட்டவன் வஞ்சிக்கிறான். [40]தாயப்பொருட் சந்ததி யிழந்தமைபற்றிக் குடிப்பிறப்பற்றவன் குடிப்பிறப்புள்ளவனைவிட ஈடு வைத்தற்குச் சிறந்தவனும். மந்திரசக்தியின்மைபற்றி அறிஞனைவிட அறிவீனனும், உற்சாகசக்தியின்மைபற்றி வீரனல்லாதவனைவிட வீரனும் [41]தகர்த்தற்குரிய சிறப்பின்மை பற்றி படைக்கலப் பயிற்சியுள்ள

---

[32] புதல்வரை ஈடாகக்கொடுத்து ஏற்கப்படும் சந்தியில் விசேடத்தைக் கூறத் தொடங்குகின்றார்.

[33] கன்னியையாவது புதல்வனையாவது கொடுக்க நேரின் என்பது.

[34] காரணத்தைக் கூறுகின்றார். தாயப்பொருளுக்குப் புதல்வரைப் போல் கன்னி உரியவளல்லள் ஆகலானும், அவள் பிறனுடைய நுகர்ச்சிப் பொருளாகவே இருத்தலானும், பொருட் செலவு முதலியவற்றால் அவள் தந்தைக்குத் துன்பத்தைக் கொடுப்பவள் ஆகலானும், அவளை ஈடாகக் கொடுப்பவன் பிறனை வஞ்சிக்கிறான் என்பது கருத்து.

[35] தாயப் பொருளுக்குரியவனும், தந்தைக்குப் பயன்படுபவனும், துன்பத்தை யகற்றுபவனுமாம் என்க.

[36] சந்திகுறித்து ஒருவர்க்கொருவர் புதல்வரை ஈடுவைத்தலின் விசேடத்தைக் கூறுகிறார்.

[37] ஒத்த குடியிற் பிறந்தவன் என்பது.

[38] உடன்பிறந்தவனற்ற புதல்வன் என்க.

[39] குடிப்பிறப்பு முதலியன இல்லாத புதல்வரை ஈடாகக் கொடுப்பவன் என்பது.

[40] குடிப்பிறப்பு முதலியனவில்லாத புதல்வனை ஈடுவைத்தல் சிறந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார். குடிப் பிறப்பற்றவனுடைய சந்ததிக்கு அரசுரிமையில்லையாகலின் அவனை ஈடாக வைப்பவனுக்குச் சிறப்புண்டாம் என்பது கருத்து.

[41] தாக்குதற்குச் சாதகமாய் உள்ள படைக்கலம் முதலியவற்றின் குணநிறைவின்மையால் என்பது.

வனைவிட படைக்கலப் பயிற்சி யற்றவனும், [42]விருப்பமின்மை பற்றி [43]ஒரு புதல்வனுடன் கூடியவனைவிடப் பல புதல்வருடன் கூடியவனும் (சிறந்தவன்) ஆம்.

[44]குடிப்பிறப்புள்ளவன், அறிஞன் என்றவருள் அறிஞனல்லாத குடிப்பிறப்புள்ளவனை [45]தலைமையங்கமும், குடிப்பிறப்பற்ற அறிஞனை [46]மந்திர உரிமையும் தொடருகின்றன. [47]மந்திர உரிமை யிருப்பினும் அறிஞனைவிடக் [48]குடிப்பிறப்புள்ளவன் முதியவரின் தொடர்புகாரணமாகச் சிறப்புறுகிறான்.

[49]அறிஞன் வீரன் என்பவருள் வீரனல்லாத அறிஞனை [50]அறிவுச் செயல்களின் தொடர்பும், அறிஞனல்லாத வீரனை

---

[42] வேறு புதல்வர்களை யுடைமையால் ஈடாக வைக்கப்பட்டவனிடம் விருப்பமின்மை காரணமாக என்பது.

[43] ஒரே புதல்வனை யுடையவனும், அவனை ஈடாக வைப்பவனுமான ஒருவன், பல புதல்வரை யுடையவனும் அவருள் ஒருவனை ஈடாக வைப்பவனுமான பிறனால் வஞ்சிக்கப்படுகிறான் என்பது கருத்து. உடன் பிறந்தாரின்றி ஒரே புதல்வனாயிருப்பவனை விடப் பலருடன் பிறந்தவன் ஈடுவைத்தற்குச் சிறந்தவன். வேறு புதல்வர் இருப்பதால் அவன் தந்தையால் அயலாகக் கருதப்படுகிறானாகலின் என்றுரைப்பாருமுளர்.

[44] குடிப்பிறப்பு முதலியவற்றுள் பின்னையதை விட முன்னையதன் சிறப்பைக் கூறுகின்றார்.

[45] தலைமையங்கம் — அரசு என்ற அங்கத்தின் உரிமை; அரசுரிமை என்பது. ஆகலின் அரசினுருவமான தாயப்பொருளுக்குரியனாயிருத்தல் அவனுக்குச் சிறப்பென்பது கருத்து.

[46] மந்திர சக்தியுடன் கூடியிருத்தல் அவனுக்குச் சிறப்பென்பது.

[47] மேற்கூறியவாறு அவரிருவர்க்கும் தனித்தனிச் சிறப்பிருப்பினும் விசேடத்தைக் கூறுகின்றார்.

[48] பிறப்பு காரணமாகவே அரசுத்தொடர்புரிமை யுள்ளவன் அறிவு முதிர்ந்தோரின் தொடர்பை அடைந்து அறிஞனை விடச் சிறப்புறுகிறான். அதாவது, குடிப் பிறப்புள்ளவன் முதியவரின் தொடர்பை யடைந்து அறிஞனுடைய சிறப்புக் குணமான மந்திரசக்தியைப் பெறுதற்கு முடியும். அறிஞனாயின் குடிப்பிறப்புள்ளவனின் அரசுரிமை என்ற குணத்தைப் பெற முடியாதென்பது கருத்து.

[49] அறிஞன் வீரன் என்பவருள் குணத்தைக் கூறுமுகமாக விசேடத்தைக் கூறுகின்றார்.

[50] அறிஞருடைய தொழிற்றொடர்பு என்பது.

[51]வன்மை யுரிமையும் அநுசரிக்கின்றன. வன்மையுரிமை யிருப்பினும் [52]யானையை வேடன்போல் அறிஞன் வீரனை வஞ்சிக்கிறான்.

[53]வீரன் படைக்கலப் பயிற்சியுள்ளவன் என்னுமிவர்களுள் படைக்கலப் பயிற்சியற்ற வீரனை [54]வன்மைச் சிறப்பும், வீரனாகவில்லாத படைக்கலப் பயிற்சியுள்ளவனை [55]இலக்கு நோக்கி யெய்தும் சிறப்பும் தொடர்கின்றது. இலக்கு நோக்கி யெய்தும் சிறப்பிருப்பினும் [56]நிலை, [57]அறிவு, [58]விழிப்பு என்னுமிவற்றால் வீரன் படைக்கலப் பயிற்சியுள்ளவனைவிடச் சிறப்புறுகிறான்.

பல புதல்வரையுடையவன், ஒரு புதல்வனையுடையவன் என்பவருள் பல புதல்வரையுடையவன் [59]ஒருவனைக் [60]கொடுத்து எஞ்சியவருண்மையால் செருக்குற்றுச் சந்தியைக் கடக்கிறான். [61]பிறனாயின் அவ்வாறிலன்.

---

[51] வன்மைகாரணமான முயற்சி யென்பது.

[52] அறிவின் சிறப்புகுறித்து எடுத்துக்காட்டாக இது கூறப்பட்டதென்க.

[53] வீரன் படைக்கலப்பயிற்சியுள்ளவன் என்றவிவருள் சிறப்புக் கூறுகின்றார்.

[54] வன்மைச் சிறப்பு—வன்மை காரணமான முயற்சிச் சிறப்பு.

[55] குறிதவறாது இலக்கு நோக்கி அம்பு முதலியவற்றை யெய்துவதால் உண்டாம் சிறப்பென்பது.

[56] நிலை—இன்பதுன்பங்களில் மாறுபாடின்மை.

[57] நெருக்கடியில் காலந் தாழ்த்தலின்றிச் செயலை யேற்றல்.

[58] விழிப்பு—தற்காப்பில் ஊக்கம்.

[59] ஒருவனை—ஒருபுதல்வனை.

[60] கொடுக்கப்பட்ட புதல்வனைத் தவிர வேறு புதல்வர் இருத்தலால் செருக்குற்றுச் சந்தியொப்பந்தத்தைக் கடக்கிறான் என்பது.

[61] ஒரே புதல்வனை யுடையனாயின், அப்புதல்வனை ஈடாக வைத்த போது அச் சந்தியை மீறான் என்பது. எனவே ஒரு புதல்வனையுடையவனைவிடப் பல புதல்வரையுடையவன் சிறப்புறுகிறான் என்க; "ஒரு புதல்வனுடன் கூடியவனை......" என்பதாக ஈடாக வைக்கப்பட்டவருள் ஒருவருக்குரிய சிறப்பு கூறப்பட்டது. ஈண்டு ஈடாக வைக்கப்பட்டவருக்குண்டாம் சிறப்பு மூலமாக ஈடுவைத்த ஒருவனுக்கு ஈடுவைத்த பிறனை விடச் சிறப்புக் கூறப்படுகிறது. இவ்வாறு கூறுதல் அறிவுநுணுக்கமற்றவரைக் குறித்து என்ப.

[62]எல்லாப் பொருளுமாகிய புதல்வனைக் கொடுத்தலாற் சந்தியாயின் [63]புதல்வர்ப்பயன்காரணமாகச் சிறப்பாம். [64]ஒத்த பயனை யுடையவருள் உண்டாக்கும் ஆற்றல்பற்றிச் சிறப்பாம். [65]உண்டாக்கும் ஆற்றல் உள்ளவருள் அணுகிய தோற்றங்காரணமாகச் சிறப்பாம்.

[66]ஆற்றலுற்ற ஓரே புதல்வனிருப்பின் மக்கட் டோற்றமழிந்தவன், தன்னை ஈடுவைத்தல்வேண்டுமன்றி ஓரே புதல்வனைக் கூடாதாம் [67]என்க.

---

62 இருவருக்கும் ஓவ்வொரு புதல்வனிருப்பின், அவர்தம்முள் விசேடத்தைக் கூறுகின்றார். எல்லாப் பொருளுமாகிய புதல்வனை—உடன் பிறந்தானற்ற ஓரே புதல்வனை.

63 புதல்வர்ப்பயன்—புதல்வனுடைய பயன்; புதல்வன் புதல்வனை யுடையவனாயிருத்தல். அதுகாரணமாக ஒருவருக்குச் சிறப்பென்பது. ஈடாக வைக்கப்படும் புதல்வனுக்குப் புதல்வனிருப்பின், சந்தியைக் கடக்க நேர்ந்தபோது அந்த ஈட்டுப் புதல்வனுக்குத் தீங்கு நேரினும் அவனுடைய புதல்வன் அரசுரிமை யுடையனாதல் பற்றி ஈடு வைப்பவனுக்குத் தீங்கொன்றுமில்லை. புதல்வனற்ற ஒரு புதல்வனை ஈடு வைப்பவனுக்காயின் முரணும் என்பது கருத்து.

64 புதல்வனையுடைய ஓரே புதல்வனாயிருத்தல் இருவருக்குச்சமமாயின், புதல்வனை உண்டுபண்ணும் ஆற்றலுள்ள புதல்வனுக்கு அந்த ஆற்றலற்ற புதல்வனைவிடச் சிறப்பாம் எனக் கூறுகின்றார்.

65 ஓரே புதல்வனையுள்ள இருவருக்கும் புதல்வரை யுண்டுபண்ணும் ஆற்றலுடைமைபற்றி ஒற்றுமையிருப்பின், அணுக்கமான புதல்வர்த்தோற்றத்தை யுடையவனுக்குச் சிறப்பு. அதாவது அவனைக்கொடுத்தல் கூடாதென்பது கருத்து.

66 புதல்வனை உண்டுபண்ணுதற்கும் அரசாட்சி செய்தற்கும் ஆற்றலுள்ள ஓரே புதல்வன் இருந்தபோது புதல்வனை யுண்டுபண்ணும் ஆற்றலற்ற தந்தை, தன்னை ஈடுவைத்தல் முறையே யன்றி அப்புதல்வனை ஈடுவைத்தல் கூடாது என்பது கருத்து.

67 'என்க' என்றதனால் 'சந்தி கன்மம்' என்ற இப்பிரகரணம் முடிவடைந்தது என்பது விளங்கும்.

[68]மிகுதியை எய்தியவன் [69]சமாதியின் விடுதலையைச் செய் வித்தல் வேண்டும்.

[70]குமரனது அணுக்கத்திலுள்ள [71]சத்திரி காருகர் சிற்பிக ளுடைய உருவினராகச் [72]செயல் புரிந்துகொண்டு இரவில் [73]சமீபமாகத் தோண்டிச் [74]சுரங்கத்தால் குமரனைக் கவர்தல் வேண்டும். [75]நடர், [76]கூத்தர், பாடுபவர், [77]வாச்சியம் வாசிப்பவர், [78]கதை சொல்பவர், [79]விளையாட்டு மக்கள், கழைக்கூத்தர், [80]மாயவித்தை செய்பவர் என்னுமிவர்கள் [81]முன்னரே அனுப்பப்

---

68 இனி 'சந்தியின் விடுதலை' என்னும் பிரகரணம் விளக்கப்படும். சந்தி நிமித்தம் அது செய்யப்பட்டான்பால் உறுதி காரணமாக வைக்கப் பட்ட தன்புதல்வன் முதலியோரை விடுவித்தற்குரியன கூறுவது. சந்தி—ஈண்டு உபசாரத்தால் அதுகுறித்து வைக்கப்பட்ட புதல்வன் முதலி யோரை உணர்த்தும். சந்தியை உறுதிப்படுத்தல் முன்னர்க் கூறப்பட்டது. சந்திப்பொருளின் விடுதலை ஈண்டுக் கூறப்படுதலின் பிரகரண இயைபு புலனுதலறிக. மிகுதியை எய்தியவன்—சந்திகாரணமாக விருத்தியடைந்த சக்தி சித்திகளையுடையவன்.

69 வெற்றி விருப்பமுள்ளவன் பகைவன் என்ற இருவரின் ஒப்பந்தத் தினுல் நம்பிக்கைகுறித்து ஈடாக வைக்கப்பட்டவன் 'சமாதி' எனப்படு கிறுன். அவனை விடுவித்தல் வேண்டும் என்பது கருத்து.

70 விடுவித்தற்குரிய உபாயத்தைக் கூறுகின்றுர்.

71 சத்திரி—ஒரு வகை ஒற்றர்.

72 செயல்—வண்டி அணிகலன் முதலிய தொழில்கள்.

73 சுரங்கத்துட் புகுதற்குரிய வழியைக் குமரனது இருப்பிடத்திற்குச் சமீபத்தில் அமைத்து என்பது.

74 சுரங்கம்—நிலத்துள் குறுக்காகத் தோண்டப்பட்ட வழி.

75 நடர்—அபிநயம் செய்வதில் தேர்ந்தவர்.

76 கூத்தாடுதலில் தேர்ந்தவர்.

77 வாச்சியம்—வீணை முதலிய இசைக் கருவிகள்.

78 அரசர் முதலிய தலைவரின் பொழுதுபோக்கு நிமித்தமாகக் கதை சொல்பவர். சுலோகங்களைப் பாடுபவர் என்பாருமுளர்.

79 கத்திமுனை முதலியவற்றில் கூத்தாடுபவர்.

80 ஆகாயயானத்திற் செல்லுதல் முதலிய கண்கட்டுவித்தை செய்பவர்.

81 வெற்றிவிருப்பமுள்ளவனுல் முன்னரே ஏவப்பட்டுப் பகைவனைச் சார்ந்திருத்தல் வேண்டும் என்பது.

பட்டு பகைவனை யண்டி வாழ்தல் வேண்டும். [82]அவர்கள் வரிசை முறையே குமரனை யணுகியிருத்தல் வேண்டும். [83]அவர்களுக்குக் காலவரையறை யின்றி உட்புகுதல் இருத்தல் வெளியேறுதல் என்னுமிவற்றை நிலைநாட்டுதல் வேண்டும். [84]பின்னர் அவருடைய உருவினனாக இரவில் புறப்படல் வேண்டும்.

[85]கணிகையர் மனைவியர்களின் உருவினருக்கும் இதனால் விதி கூறியவாறாம்.

[86]அவர்களுடைய வாச்சியம் அணிகலன்கள் வைத்தற்குரிய பெட்டியை எடுத்துக்கொண்டும் வெளியேறலாம்.

[87]அடிசிலமைப்பவன், பண்ணியஞ்செய்பவன், நீராட்டுபவன், உடம்புபிடிப்பவன், படுக்கைவிரிப்பவன், மயிர்வினைஞன், ஒப்பனைசெய்வோன், நீர்ப்பணியாளன் என்னுமிவர்கள் [88]பொருள், ஆடை, அணிகலப்பெட்டி, படுக்கை, இருக்கை

---

[82] பகைவனை அண்டிவாழும் அவர்கள் தம் கல்வித்திறனால் அரசன் அமைச்சர் முதலியவர்களுடைய அன்பைப் பெற்று நாளடைவில், ஈடாக வைக்கப்பட்ட குமரனை யணுகுதற்குரிய வாய்ப்பைப் பெறுதல் வேண்டும் என்க.

[83] நடர் முதலிய அவர்கள் இன்ன இடம் காலம் என்ற வரையறை யின்றித் தன்னிருப்பிடத்திற்கு வருதல், தங்குதல், அங்கிருந்து வெளியேறு தல் முதலியவற்றைச் செய்ய அரசனிடமிருந்து அநுமதியை அக்குமரன் பெறுதல் வேண்டும் என்பது கருத்து.

[84] நடர் முதலியவரின் உருக்கொண்டு அவர்களுடன் இரவில் தன் னூட்டைக் குறித்துப் புறப்பட்டுப் போதல் வேண்டும் என்பது கருத்து.

[85] நடர் முதலியவரின் உருவினனாகி வெளியேறுதலைக் கூறியதால், கணிகையர் முதலியோரின் உருக்கொண்டு வெளியேறுதற்கும் விதி கூறிய படியாம் என்பது கருத்து.

[86] வேறோர் உபாயத்தைக் கூறுகின்றார். நடர் முதலியோர், தம் கலைத்திறனைக் காண்பித்து முடித்த பின்னர், அவர்களுடைய வாச்சியப் பெட்டி, ஆபரணப்பெட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு அவர்க ளுடன் வெளியேறிவிடலாம் என்பது கருத்து.

[87] மற்றோர் உபாயங் கூறுகின்றார்.

[88] பொருள்—கொல்லப்பட்ட ஆடு முதலியன.

[89]என்னுமிவற்றின் நுகர்ச்சிப் பொருளுடன் வெளியேற்றுதல் வேண்டும்.

[90]உருவ அறிவற்ற காலத்தில் ஏதேனும் [91]ஒன்றை எடுத்துக் கொண்டு பணியாளர் உருவுடனும், சுரங்கவாயிலாகவும் [92]பலிப் பொருளைக் கொண்டுபோதலாலும் வெளியேறலாம். [93]நீர்நிலை யில் வாருணயோகத்தையும் ஏற்கலாம்.

[94]வணிக உருவினர், பக்குவமான சோறு கனிகளின் விற்பனை யால் காவலாளர்பால் நச்சிடுதலை யேற்கலாம்.

தெய்வக்காணிக்கை, சடங்கு, உண்டாட்டு [95]என்னுமிவற் றைக் காரணமாகக் கொண்டதும் மதனச்சேர்க்கை யுள்ளதுமான உணவு, பருகுதற்குரியது, சாறு என்னுமிவற்றைக் காவலாளர்பாற் பிரயோகித்தும் காவலாளருக்கு [96]உற்சாகத்தை யளித்தலாலும் வெளியேறலாம்.

---

89 இவற்றை யநுபவித்த பின்னர் வெளியில் இவற்றைக் கொண்டு போகும்போது அவற்றுடன் குமரனும் வெளியேற்றப்படல் வேண்டும் என்பது கருத்து.

90 பிறிதோர் உபாயங் கூறுகின்றார். உருவத்தை விளக்கமாக அறிதற் கியலாத காலத்தில் என்பது. அதாவது இருளடர்ந்த காலத்தில் என்க.

91 பணியாளர் எடுத்துக்கொண்டு போதற்குரிய பொருளுள் ஒன்றை என்பது.

92 நள்ளிரவில் 'பூதபலி' கொடுத்தலைத் தலைக்கீடாகக்கொண்டு தன்னைப் பார்க்கும் மக்களின் அணுக்கத்தை விலக்கிச் சுரங்கம் முதலியவற்றின் மூலம் வெளியேறலாம் என்பது கருத்து.

93 ஆறு, குளம் முதலிய பெரிய நீர்நிலையில் 'பகையரண் எய்தும்வழி' என்னுமதிகரணத்திற் கூறுமாறு நீருள் இயங்குதல் என்னும் உபாயத்தை ஏற்றும் வெளியேறலாம். விளக்கத்தை ஆண்டுக் காண்க.

94 மேற்கூறிய குமரன் வணிக உருக்கொண்டு காவலாளரிடம் சோறு, கனி முதலியவற்றை விற்றுக்கொண்டு நஞ்சு கலந்த சோறு முதலியவற்றை அக்காவலாளர் உட்கொள்ளும்படிச் செய்து, அவர்கள் மூர்ச்சையிழந்த நிலையில் வெளியேறி விடுதல் வேண்டும் என்பது கருத்து.

95 தெய்வக் காணிக்கை முதலியவற்றிற் பயன்பட்டு எஞ்சியதும், மதி மயக்கம் முதலியவற்றை யுண்டுபண்ணும் 'மதனம்' என்ற ஓடதி கலக்கப் பெற்றதுமான சோறு முதலியவற்றைக் காவலர் உட்கொள்ளுமாறுசெய்து, குமரன் வெளியேறல் வேண்டும் என்பது கருத்து.

96 'மிகுந்த பொருளைக் கொடுப்பேன்' என்ற பிரதிக்ஞையால் அவர் களை மகிழ்வித்தலாலும் வெளியேறலாம் என்க.

[97]நகரத்தலைவன், விளையாட்டுமக்கள், மருத்துவன், பண்ணிகாரஞ்செய்பவன் என்னுமிவர்களின் உருவினர் இரவில் நிரம்பியவர் இல்லங்களில் தீயிடலாம். வணிக உருவினரும் அங்காடித் தெருவில் தீயிடலாம்.

[98]தொடர்பவனது அச்சங்குறித்து [99]வேறு உடலை வைத்துத் தன்னில்லத்திலும் தீயிடலாம். [100]பின்னர், [101]கன்னமிடுதலாலும், [102]தோண்டப்பட்ட சுரங்கங்களாலும் வெளியேறல் வேண்டும்.

[103]வைக்கோல் [104]குடம் [105]உபகரணப்பொருள் என்னுமிவற்றைச் சுமப்பவனின் உருவினனாக இரவில் புறப்படலாம். [106]மழித்தல் நீட்டல்களையுடையவரின் இருப்பிடத்தை யடைந்து இரவில் அவர்களின் உருவினனாகவும் வெளியேறலாம். [107]உருவ

---

97 இரவில் இயங்குதற்கு அரசன் அநுமதிபெற்ற நகரத்தலைவன் முதலியோரின் உருக்கொண்டு, இரவில் செல்வர் முதலியோர் இல்லங்களில் தீயிடுதல் வேண்டும் என்பது. இங்ஙனம் தீயிடுதலை யேற்பின் அதுகாரணமாக மக்கள் கலங்கியுள்ள நிலையில் குமரன் வெளியேறிவிடலாம் என்பது கருத்து.

98 வேறு உபாயங் கூறுகின்றார். தொடர்பவன்—குமரனைத் தேடித் தொடர்பவன்.

99 இறந்த வேறொருவனது உடலைத் தன் இல்லத்தில் போட்டுத் தன் இல்லத்தில் தீயை இடலாம் என்பது. இறந்த உடலைக் காவலாளர் காணின் 'குமரன் இறந்தான்' என்ற கருத்தால் அவனைத் தேட முயலமாட்டார் என்க.

100 இங்ஙனம் தீயிடப்பட்ட தன் இல்லத்திலிருந்து குமரன் எங்ஙனம் வெளியேறல் வேண்டும் எனக் கூறுகின்றார். பின்னர்—தீயிட்டபின்னர்.

101 சுவரில் துவாரத்தைச் செய்தலாலும் என்பது.

102 பொய்கை முதலியவற்றிற்கு நீர்பாயும் கால்வாய் முதலியவற்றாலும்.

103 வைக்கோல்—புல் முதலியவற்றையுங் கொள்க.

104 நீர்க்குடம்.

105 குதிரை முதலியவற்றிற்குரிய உபகரணப் பொருள்.

106 வெற்றிவிருப்பமுள்ளவனால் ஏவப்பட்டு மழித்தனீட்டலை வேடமாகக்கொண்ட ஒற்றர்களுடன் சேர்ந்து, அவ்வுருக்கொண்டு அவருடன் வெளியேறுதல் வேண்டும் என்பது கருத்து.

107 'மறைவுச்செயல்' என்னுமதிகரணத்திற் கூறப்படுமாறு இயற்கை வடிவத்திற்கு மாறான உருவத்தை யடைதல்.

மாற்றம், [108]நோயாளியாகச்செய்தல், [109]காட்டிலியங்குவோருரு என்னுமிவற்றுள் ஒன்றுலுமாம். [110]இறந்தவனுருவினனுக்வும் ஒற்றர்களால் வெளியேறலாம். [111]இறந்தவனை மகளிருருவுடன் தொடர்ந்து செல்லலாம்.

[112]ஒருவழியாகச் செல்லுமிவனைக் [113]காட்டிலியங்குவோரின் உருவினர், வேறுவழியாகச் செல்பவனுகக் கூறல் வேண்டும். [114]அதனின்றும் வேறுவழியாகச் செல்லல் வேண்டும். [115]வண்டியோட்டுவோருடைய வண்டிகளின் தொகுதியுடனும் வெளியேறலாம்.

[116]தொடர்பவன் அணுகினனுயின் காட்டில் மறைதல் வேண்டும். காடில்லையேல் பொன்னையாதல் நச்சிடப்பெற்ற உணவுத் தொகுதியையாதல் வழியின் இருபுறத்தும் இறைத்தல் வேண்டும். [117]அதனின்றும் வேறுவழியாகச் செல்லல் வேண்டும்.

---

108 நோயாளியின் உருக்கொள்ளல் என்பது.

109 காட்டிலியங்குவோர்—வேடர் முதலியவர்.

110 ஒற்றர்கள் இவனை யிறந்தவன் எனக் கூறி வெளியேற்றிவிடலாம் என்பது.

111 ஏதேனும் ஒரு பிணத்தினைச் சுடலைக்கு எடுத்துச் செல்லுங்கால் பெண்ணுருக்கொண்டு அதைத் தொடர்ந்து வெளியேறலாம் என்பது கருத்து.

112 தேடி வருபவர் தொடர்தலாலுண்டாம் அச்சத்தைப் பரிகரிக்கும் முறையைக் கூறுகின்றார்.

113 வேடர் முதலியவர்களின் உருக்கொண்ட ஒற்றரைப் பார்த்து குமரனைத் தேடி வருபவர் அவனைப்பற்றி வினவுங்கால், அவன் செல்லும் வழியைக் குறிக்காது வேறுவழியைக் காட்டி ‘இவ்வழியே செல்கிறான்’ எனக் கூறல் வேண்டும் என்பது கருத்து.

114 அந்த ஒற்றர் குறித்தவழிக்கு மாறுன வழியாகச் செல்லல்வேண்டும் என்பது. இங்ஙனம் செல்பவன் தேடித் தொடர்பவரால் பிடித்தற்குரியனுகான் என்க.

115 வண்டி ஓட்டி வாழுபவர்களின் வண்டிகளுடன் வெளிச்செல்லலாம்.

116 தன்னைத்தேடி வருபவர் சமீபித்தாராக, காட்டில் நெருக்கமான இடத்தில் மறைதல் வேண்டும் என்பது கருத்து.

117 அவ்வாறு உணவு பொன் முதலியவற்றை இறைத்தலாலுண்டாம் பயனைக் கூறுகின்றார். தன்னைத் தொடர்ந்தவர் அங்குச் சிதறிக்கிடக்கும் பொன் முதலியவற்றைப் பொறுக்குவதில் ஈடுபட்டிருக்குங்கால், அவ்வழியினின்றும் மாறி வேறுவழியாகச் செல்லல்வேண்டும் என்பது கருத்து.

[118]பிடிக்கப்படின் தொடர்ந்தவனை இன்சொல் முதலியவற்ருலாதல் நச்சிடப்பெற்ற ஆற்றுணவாலாதல் [119]வஞ்சித்தல் வேண்டும்.

[120]வாருணயோகம் தீயிடுதல்களில் [121]வேறு உடலைப் போட்டு 'என் புதல்வன் உன்னால் கொல்லப்பட்டான்' என்று பகைவனுடன் வழக்கிடுதல் வேண்டும்.

சுலோகம்

[122]மறைவிற் படைக்கலத்தை எடுத்து, இரவில் காவலாளரிடம் வன்மையை ஏற்று, மறைந்து, ஒற்றர்களுடன் கூட, விரைந்து செல்பவைகளால் வெளியேறுதல் வேண்டும்.

ஏழாம் அதிகரணம் 25, 26-ஆம் பிரகரணங்கள் 'சந்திகன்மம்', 'சந்தியின் விடுதலை' என்னும் நூற்றுப்பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

118 தன்னைத்தேடி வருபவரால் தான் பிடிபட்டுவிடின் செயற்பாலதைக் கூறுகின்ருர்.

119 மூர்ச்சையடையச் செய்தாதல், கொலைசெய்தாதல் விலகிவிடல் வேண்டும் என்பது கருத்து.

120 பிடிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சங் காரணமாக, மறைந்தவன் விலகிப் போதற்குரிய உபாயங் கூறுகின்ருர்.

121 முற்கூறப்பட்ட வாருணயோகம் தீயிடுதல் முதலிய செயல்களில் வேருேர் உடம்பினைப்போட்டு வெற்றிவிருப்பமுள்ளவன் 'என் புதல்வன் உன்னால் கொல்லப்பட்டான்' என்று சொல்லிப் பகைவனுடன் வழக்குத் தொடருதல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் வழக்குத் தொடருதலால், குமரன் இறந்துவிட்டான் என்று எண்ணிப் பகைவன் அவனைத் தேடுவதில் பற்றின்மையை யடைவனுகலின், குமரன் எளிதாக வெளியேறுதல் கூடும் என்ப.

122 மேற்கூறிய உபாயங்களனைத்தும் ஏற்றற்கியலாதிருப்பின், குமரன் செயற்பாலதைக் கூறுகின்ருர். மறைவாக வைத்துக்கொள்ளப்பட்ட படைக்கலத்தை எடுத்துக்கொண்டு இரவில் காவலாளர்களைக் கொன்று விரைவிற் செல்லக்கூடிய குதிரை முதலியவற்றின் உதவியால், முன்னர்ச் சங்கேதம் செய்துகொள்ளப்பட்ட ஒற்றர்களையும் அழைத்துக்கொண்டு வெளியேறிவிடுதல் வேண்டும் என்பது கருத்து.

27—29-ஆம் பிரகரணங்கள்—[1] நடுவன்பாலொழுகல், [2] நொதுமலன்பாலொழுகல், [3] மண்டலசரிதம்

நூற்றுப்பதினாறும் அத்தியாயம்

[4] தான், [5] மூன்றாவதும் [6] ஐந்தாவதுமான பகுதிகள் என்பன நடுவனுடைய [7] பகுதிகளாம். [8] இரண்டாவதும் நான்காவதும் ஆறாவதுமானவை விகுதிகளாம். [9] அவ்விரண்டிற்கும் மத்தியமன் உதவுவானாயின் வெற்றிவிருப்பமுள்ளவன் மத்தியமனை யநுசரித்தவனாதல் வேண்டும். [10] உதவவில்லையாயின் பகுதியை யநுசரித்தவனாதல் வேண்டும்.

116-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நடுவனை ' மத்தியமன் ' என்று முதனூல் கூறும். இவன், தனக்கும் பகைவற்கும் உதவுதலும் தீங்குபுரிதலுமின்றி நடுநிலையில் நிற்போன். வெற்றிவிருப்பமுள்ள அரசன் இவன்பால் ஒழுகுதலைக் கூறுவது இப் பிரகரணமாகும். பகைவன் நண்பன் இவர்களைப்பற்றிய செயன்முறை கூறப்பட்டபின் நடுவனைப்பற்றிய இது கூறப்படுதலான் பிரகரண வியைபுண்மை யறிக.

[2—3] இவற்றைப்பற்றி விளக்கும்போது இவற்றின் பொருள்களும் இயைபுங் கூறப்படும்.

[4] நடுவனுடைய பகுதி விகுதிகள் யாவை என்பதைக் கூறுகின்றார். பகுதி—பிரகிருதி ; சிறப்புக்குக் காரணமானவை. விகுதி—விகிருதி ; இழிவுக்குக் காரணமானவை.

[5] மூன்றாவது பகுதி—நட்பு.

[6] நண்பற்கு நண்பன் என்பது.

[7] இது 4-வது குறிப்பால் விளக்கப்பட்டது.

[8] பகைவனும், பகைவற்கு நண்பனும், பகைவனது நண்பற்கு நண்பனும் விகுதிகளாம் என்பது.

[9] மூவகையான பகுதிகளுக்கும் விகுதிகளுக்கும் ஒத்த அளவில் நன்மை செய்தலில் ஈடுபட்ட நடுவனுக்கு நன்மைதரும் செயலை வெற்றிவிருப்பமுள்ளவன் ஏற்றல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[10] மூவகைப்பட்ட அவ் விரண்டிற்கும் மத்தியமன் உதவவில்லையாயின் வெற்றிவிருப்பமுள்ளவன் தன்னுடைய மூவகைப் பகுதிகளுக்கு மட்டும் உதவிசெய்பவனாயிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[11]வெற்றிவிருப்பமுள்ளவனுடைய [12]**மித்திரபாவி** (என்ற) நண்பனை மத்தியமன் அடைய விரும்பின், நண்பனுக்கும் தனக்கும் நண்பரை எழுதற்குத் தூண்டியும், மத்தியமனிடமிருந்து நண்பனை வேறுபடுத்தியும், நண்பனைக் காத்தல் வேண்டும். [13] 'அளவற்ற மிகுதியை யடைந்த இம் மத்தியமன் நம் எல்லோரையும் அழித்தற் பொருட்டுக் கிளம்புகிறான். ஒன்றுகூடி இவனுடைய மேற்சேறலைத் தடுப்போம்' என்று [14]மண்டலத்திற்கு ஊக்கமளித்தல் வேண்டும். [15]அம் மண்டலம் உதவிபுரியின், மத்தியமனுக்குத் தீங்குபுரிதலால் தன்னை மிகுதிபடச் செய்தல் வேண்டும். [16]உதவி புரியாவிடின் பொருள் படைகளால் [17]நண்பனுக்கு உதவி, (பின்பு) [18]மத்தியமனை வெறுத்தவரும் ஒருவர்க்கொருவர் உதவுபவருமான அரசர் பலருள் எவருளரோ, அன்றி [19]ஒருவனால் வயப்பட்ட பலருள் வயப்படுவார் எவரோ, அன்றி [20]ஒருவர்பால் ஒருவர் ஐயுற்ற

---

[11] வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நண்பனைத் தகர்க்க மத்தியமன் விரும்பின், வெற்றிவிருப்பமுள்ளவன் தன் நண்பரையும் தன் நண்பர்க்கு நண்பரையும் ஓங்கச்செய்தும் மத்தியமனிடமிருந்து அவன் நண்பரை வேறுபடச் செய்தும் தன் நண்பனைக் காத்தல் வேண்டும் என்பது கருத்து.

[12] இதன் இலக்கணம் 107-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டது.

[13] அவ்வாறான மத்தியமனுக்குத் தீங்குபுரிதற்கு வேறோர் உபாயங் கூறுகின்றார்.

[14] மத்தியமனுக்குத் தீங்குபுரிதலால் அரச மண்டலத்திற்கு ஊக்கத்தையுண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

[15] மேற்கூறியபடி ஊக்கமளிக்கப்பட்ட அம் மண்டலம் தனக்கு உதவி புரியின் என்பது.

[16] அம் மண்டலம் தனக்குச் சார்பாக இல்லாவிட்டால் என்பது.

[17] மத்தியமனால் தாக்கப்படும் தன் நண்பனுக்கு உதவிபுரிந்து என்பது.

[18] ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடையவரும், மத்தியமனிடம் வெறுப்புக் கொண்டவரும், மத்தியமனுக்குத் தீங்குபுரிதற்குத் தயாராக இருப்பவருமான அரசர்பலருள் ஒருவனை இன்சொற் கொடைகளால் வயப்படுத்திக்கொள்ளல் வேண்டும் எனப் பொருள் கொள்க.

[19] மத்தியமனை வெறுத்த பலருள் ஒருவன் வயமாக்கப்படின், அவனால் ஏனையோர் வயப்படுதல் கூடுமாயின், அந்த ஒருவனை இன்சொற் கொடைகளால் வயப்படுத்தல் வேண்டும் என்று கொள்க.

[20] மத்தியமனை வெறுத்த பலரும் ஒன்றுகூடி அவனைத் தகர்த்தற்கு விருப்பமுள்ளவராயிருந்தும், ஒருவர்க்கொருவர் வேறுபடுதல் கூடும் என்ற அச்சங்காரணமாக அவ்வாறு தகர்க்க முற்படாதிருப்பராயின் அவருள் தன் நாட்டிற்கு அணிமையிலுள்ள ஒருவனை இன்சொல் கொடைகளால் வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

மையால் இயங்காதவர் எவரோ அவருள் தலைவனையாதல், ஒருவனையாதல், அணுக்கமுள்ளவனையாதல் இன்சொற் கொடைகளால் அடைதல் வேண்டும். [21]இரண்டாமவனையாயின் இருமடங்குள்ளவனும் மூன்றுமவனையாயின் மும்மடங்குள்ளவனும் (அடைதற்குரியன்) ஆம். [22]இங்ஙனம் மிகுதியை யடைந்து மத்தியமனைத் துன்புறுத்தல் வேண்டும்.

[23]இடங் காலங்கள் கடப்பின் மத்தியமனுடன் சந்தியை ஏற்று நண்பனுக்கு உதவியைச் செய்தல் வேண்டும். [24]அல்லது தூஷ்யர்கள்பால் கன்மசந்தியைச் செய்தல் வேண்டும்.

[25]இவனுடைய [26]துன்புறுத்தற்குரிய [27]நண்பனை மத்தி

---

[21] முற்கூறப்பட்டவனைத் துணைவனாக அடைபவன், இரண்டாவதாகக் கூறப்பட்டவனை யடையின் இருமடங்கு வன்மையுள்ளவனாகவும், மூன்றுவதாகக் கூறப்பட்டவனைத் துணைவனாக அடையின் மும்மடங்கு வன்மையுடையனாகவும் ஆவான் என்பது கருத்து.

[22] மேற்கூறிய முறையாக மிகுதியை யடைந்து மூவகைச் சக்தியை அடைந்தவனே மத்தியமனைத் துன்புறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[23] மத்தியமனுடன் வெறுப்புக் கொண்டவரைத் துணையாக அடைதற்கு முன்னரே தன் நண்பனை மத்தியமன் களைவான் என்று ஐயுறின், மத்தியமனுடன் தான் சந்தியை ஏற்று, தன் நண்பனும் அவனுடன் சந்தியை அடைதற்குரிய உதவியைத் தன் நண்பனுக்குப் புரிதல் வேண்டும் என்பது கருத்து.

[24] மத்தியமன் தன்னுடன் சந்தியை ஏற்க விரும்பாத நிலையில் செயற்பாலதைக் கூறுகின்றார். மத்தியமனுடைய தூஷ்யராகவும் அவன் நாட்டுத் தலைவராகவுமுள்ளவரை யடைந்து ‘நீங்கள் நாட்டில் கலகத்தையும் தீயிடுதல் முதலியவற்றையும் செய்யத் தொடங்குங்கள். பின்னர் யான் போர் புரிவேன்’ என்ற இந்த கன்மசந்தியைச் செய்தல்வேண்டும் என்பது கருத்து.

[25] வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நண்பனை மத்தியமன் தகர்க்க விரும்பியபோது தன் நண்பனைக் காத்தற்குரிய முறை இதுகாறும் கூறப்பட்டது. துன்புறுத்தற்குரிய நண்பனை மத்தியமன் தகர்க்க விரும்பியபோது ஏற்றற்குரிய விதிமுறையைக் கூறுகின்றார். இவனுடைய—வெற்றிவிருப்பமுள்ளவனுடைய.

[26] அவன் தனக்கு விரோதச் செயலுள்ளவனாயிருத்தல் பற்றி அவனுடைய பொருள் படைகளை யழிக்குமுகமாகத் துன்புறுத்தற்குரிய என்பது.

[27] நண்பன்—ஒரு நாட்டால் மறைவுபட்டவன்.

யமன் [28]அடைய விரும்பின் [29]'நான் உன்னைக் காப்பேன்' என்று [30]துன்புறுத்தல் நிகழும்வரை அவனைச் சமாதானப்படுத்தல் வேண்டும். [31]துன்புறுத்தப்பட்ட அவனைக் காத்தல் வேண்டும்.

[32]இவனுடைய களைதற்குரிய நண்பனை மத்தியமன் அடைய விரும்பின், [33]துன்புறுத்தப்பட்ட அவனை மத்தியமனின் மிகுதியினின்று அஞ்சிக் காத்தல் வேண்டும்.

[34]களையப்படின் [35]வேற்றிடச் செலவச்சத்தால் [36]நிலத்தைக் கொடுத்துக் [37]கைக்கொள்ளல் வேண்டும்.

துன்புறுத்தத்தக்கவன், களையத்தக்கவன் [38]என்பவருடைய நண்பர்கள் மத்தியமனுக்கு உதவிபுரிபவராயின் [39]வேறொருவனைக்

---

[28] அடைய—தாக்க.

[29] மத்தியமனிடமிருந்து நான் உன்னைக் காப்பேன் என்று கூறி அவனை அச்சமற்றவனாகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[30] இம்மாதிரியாக அஞ்சலளிக்கும் சொல்லினைக் கூறுங் காலவெல்லையைக் கூறுகின்றார். மத்தியமனிடமிருந்து அவனுக்குத் துன்பம் நிகழும் வரை, மேற்கூறியபடி அபய வார்த்தையைக் கூறிவருதல் வேண்டும் என்றவாறும்.

[31] 'இவன் நன்கு துன்புறுத்தப்பட்டான்' என்று ஐயமறத் துணிந்த பின்னர் அவனைக் காத்தல் வேண்டும் என்பது கருத்து.

[32] வெற்றிவிருப்பமுள்ளவனுடைய களைதற்குரிய நண்பனை மத்தியமன் தாக்க விரும்பும்போது ஏற்கற்பால முறையைக் கூறுகின்றார்.

[33] நன்கு துன்புறுத்தப்படும் வரை வாளாவிருந்து பின்னர் மத்தியமனிடமிருந்து அவனைக் காத்தல் வேண்டும் என்பது. அன்றி, களையும்வரை வாளாவிருப்பின் மத்தியமன் மிகுதியை யடைந்துவிடுவான் என்று அஞ்சுதல் வேண்டும் என்பது கருத்து.

[34] வெற்றிவிருப்பமுள்ளவன் களைதற்குரிய தன் நண்பனை மத்தியமனிடமிருந்து காக்க முயன்றும், ஆற்றல்மிகுந்த மத்தியமனால் அவன் களையப்பட்டுவிடின், வெற்றிவிருப்பமுள்ளவன் செயற்பாலது இதுவெனக் கூறுகின்றார்.

[35] தன் பகைவனுடைய பக்கத்தைச் சார்ந்துவிடுதல் கூடும் என்ற அச்சத்தால் என்பது.

[36] நிலம்—தனக்குரிய நிலம்.

[37] தன்வயமாக்கல் வேண்டும்.

[38] தன் நண்பரான இவ்விருவருடைய என்பது.

[39] வெற்றிவிருப்பமுள்ளவன், தன் சேனைத்தலைவன், இளவரசன் என்பவருள் ஒருவரைக் கொடுத்தல் என்ற சந்தியை மத்தியமனுடன் செய்து தானும் அவனுக்கு உதவிபுரிதல் வேண்டும் என்பது கருத்து. (101-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.)

கொண்டு சந்தி செய்தற்குரியனுவான். [40]அவர்களுடைய நண்பர் வெற்றிவிருப்பமுள்ளவனைத் [41]தடைப்படுத்தற்குரிய ஆற்றலுடையராயின் [42]சந்தியை அடைதல் வேண்டும்.

[43]இவனுடைய பகைவனை மத்தியமன் அடைய விரும்பின் [44]சந்தியை யடைதல் வேண்டும். [45]இங்ஙனம் [46]தற்பயனும் மத்தியமனுக்கு [47]இன்பமும் செய்யப்பட்டனவாம்.

[48]மத்தியமன் [49]மித்திரபாவியான தன் நண்பனை யடைய விரும்பின் [50]வேறொருவனுல் சந்திசெய்தல் வேண்டும். [51]விருப்பமுடையனுயின் நண்பனைக் களைதல் உனக்குரியதன்று என்று [52]தடுத்தல் வேண்டும். [53]இவனுடைய [54]மண்டலம் தன் பக்கத்

---

[40] அவர்களுடைய—துன்புறுத்தத் தக்கவன் களையத்தக்கவன் என்னும் இருவருடைய.

[41] தடைப்படுத்தல்—எதிர்த்துத் தாக்குதல்.

[42] வெற்றிவிருப்பமுள்ளவன் மத்தியமனுடன் சந்தியை யடைதல் வேண்டும் என்பது கருத்து. தன் நண்பரை எதிர்த்த மத்தியமன்பால் வெற்றிவிருப்பமுள்ளவன் ஏற்றற்குரிய விதிமுறைகள் இதுகாறும் கூறப்பட்டன.

[43] வெற்றிவிருப்பமுள்ளவனுடைய பகைவனை எதிர்க்கும் மத்தியமன்பால் ஒழுகும் முறையைக் கூறத் தொடங்குகின்றூர்.

[44] மத்தியமனுடன் சந்தியை யடைதல் வேண்டுமென்பது.

[45] சந்தியை ஏற்றற்குக் காரணங் கூறுகின்றூர்.

[46] தற்பயன்—தன் பகைவனைக் களைதல் என்ற பயன்.

[47] இன்பம்—போரில் உதவிபுரிதலாலுண்டாவது.

[48] இனி மத்தியமன் தன் நண்பனைத் தாக்குங்கால் வெற்றிவிருப்பமுள்ளவன் செயற்பாலதைக் கூறத் தொடங்குகின்றூர்.

[49] இவ்வத்தியாயத்தின் இறுதியில் இவனியல்பு கூறப்படும்.

[50] சேனைத்தலைவன் முதலியவரை யனுப்புதல் மூலமாக வெற்றிவிருப்பமுள்ளவன் மத்தியமனுக்கு உதவுதல் வேண்டும் என்பது கருத்து.

[51] நண்பனிடமிருந்து சில நன்மைகளை யடைய விரும்பினவனுயின் அல்லது தன்னுடன் அநுசரித்தலை யேற்றவனுயின் என்பது.

[52] இங்ஙனம் தடுத்தல் மத்தியமனிடம் தன்னன்பைத் தெளிவுறுத்தற்கென்ப.

[53] மத்தியமன் முற்கூறியபடி விருப்பமுடையனுக இல்லாதிருப்பின், வெற்றிவிருப்பமுள்ளவன் செயற்பாலதைக் கூறுகின்றூர். இவனுடைய—மத்தியமனுடைய.

[54] மத்தியமன் தன் நண்பனைக் கொலைசெய்தல் என்ற தகாச்செயலை ஏற்றபோது அவனுடைய அரசமண்டலமே அவனிடம் வெகுளும் என்ற கருத்தால் மத்தியமன்பால் நொதுமலனுயிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

தவரின் கொலையால் வெகுள்வதாக என்று பொருட்படுத்தாமலு மிருக்கலாம்.

மத்தியமன் தன் பகைவனை யடைய விரும்பின் மறைவாக [55]இவனுக்குப் பொருள் படை என்பவற்றால் [56]உதவிசெய்தல் வேண்டும்.

நொதுமலனை மத்தியமன் அடைய விரும்பின், 'நொதுமல னுடன் [57]வேறுபடுக' என்று மத்தியமன் நொதுமலன் என்பவ ருள் மண்டலத்தின் அன்புக்குரிய ஒருவனை [58]அடைதல்வேண்டும்.

[59]மத்தியமனுடைய செய்தியால் நொதுமலனுடைய செய் திக்கும் விதி கூறியவாறும். [60]நொதுமலன் மத்தியமனை யடைய

---

55 இவனுக்கு—மத்தியமனுடைய பகைவனுக்கு.

56 உதவிசெய்தற் கருத்தா வெற்றிவிருப்பமுள்ளவன் எனக்கொள்ளல் வேண்டும்.

57 மத்தியமன் நொதுமலனுடன் வேறுபடுதலால் அழிவுறுக என்று கருதி என்பது.

58 வெற்றிவிருப்பமுள்ளவன் அடைதல் வேண்டும் என்பதும், அடைந்த பின் உதவிபுரிதல் வேண்டும் என்பதும் கருத்து. நடுவன்பாலொழுகல் என்னும் பிரகரணம் இத்துடன் முற்றும்.

59 இனி அடுத்துள்ள 'நொதுமலன்பாலொழுகல்' என்பது விளக்கப் படும். நொதுமலனை 'உதாசினன்' என்று முதனூல் கூறும். இவன் தன் னிடத்தும் பகைவனிடத்தும் விருப்பு வெறுப்பற்றிருப்போன். இவன்பால் வெற்றிவிருப்பமுள்ள அரசன் ஒழுகுதலைக் கூறுவது இப்பிரகரணமாகும். மத்தியமனுக்குப் பகுதிகளாகக் கூறப்பட்டனவாகிய, மூன்றாவதும் ஐந்தா வதும் தானும் ஆகிய பகுதிகளே உதாசினனுக்கும் பகுதிகள் என்பதும், விகுதிகளாகக் கூறப்பட்ட இரண்டாவது, நான்காவது, ஆறாவது ஆகிய விகுதிகளே நொதுமலனுக்கும் விகுதிகள் என்பதும் ஒத்தன என்பது. அவ் வாறே வெற்றிவிருப்பமுள்ளவன் மத்தியமன்பால் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும் எனக் கூறப்பட்டதோ, அம்முறையே நொதுமலன்பாலும் என் பதும் ஒத்ததாம் என்க.

60 சிறப்பொன்றைக் கூறுகின்றார். நொதுமலன் மத்தியமனை யெதிர்க் கும்போது, அவரிருவருள் எவனை யடைந்தால், தன் பகைவனை வஞ்சித் தற்கும் தன் நண்பனுக்கு உதவுதற்கும் இயலுமோ அவனை யடைதலும், அவரிருவருள் எவன், படையைக் கொடுத்துத் தனக்கு உதவிபுரிவானோ அவன் பக்கத்தை யடைதலும் வேண்டும் என்பது கருத்து. 'நொதுமலன்பா லொழுகல்' என்னும் பிரகரணம் இத்துடன் முடிந்தது.

விரும்பின் பகைவனை வஞ்சித்தல், நண்பருக்கு உதவுதல், மத்தியமன் நொதுமலன் என்பவருள் படைகளால் உதவும் ஒருவனையடைதல் என்பன எப் பக்கத்திலுண்டாமோ அப் பக்கமாக மாறுதல் வேண்டும்.

[61]இங்ஙனம் தன்னை மிகுதிப்படுத்திப் பகைவரைத் துன்புறுத்தல் வேண்டும். [62]நட்புப்பகுதிக்கு அருளுதலும் வேண்டும்.

[63]பொறியடக்கமற்றவன், எப்பொழுதும் தீமை செய்பவன், [64]பகைவன், பகைவனுடன் கூடியவன், [65]பின்னணியைப் பற்றுபவன், [66]விதனமுள்ளவன், மேற்சேறற்குரியவன், [67]தலைவனுடைய விதனத்தில் எதிர்ப்பவன் என்னுமிவர்கள் [68]அவனைக் குறித்துப் பகைவனாகிய தன்மையுடையராயினும் அரிபாவிகளாவர்.

---

[61] இனி 'மண்டலசரிதம்' என்ற அடுத்த பிரகரணம் விளக்கப்படும். மண்டலம்—ஈண்டுப் பகைவரையும் நட்டோரையும் குறிப்பதாகும். அவர்பால் வெற்றிவிருப்பமுள்ள அரசன் ஒழுகுவதைக் கூறுவது இப்பிரகரணமாகும். மேற்கூறியவாறு நடுவன் நொதுமலன் என்போர்பால் ஒழுகுதல் மூலமாக மந்திரசக்தி முதலியவற்றால் தனக்கு மிகுதியை யுண்டுபண்ணிச் சிற்றரசர்களுடைய சக்திகளைக் குறைத்தல் வேண்டும் என்பது.

[62] ஒரு நாட்டால் மறைவுபட்டவரான தன் நண்பருக்கு இன்சொல் கொடைகளால் அருளி அவர்களைத் தன்வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[63] பகைவர் எனப்படும் சிற்றரசர் 'அரிபாவிகள்', 'மித்திரபாவிகள்', 'பிருத்தியபாவிகள்' என மூவகைப்படுவர். அம்மூவரையும் முறையே விளக்குவான் தொடங்கி, முதலில் அரிபாவிகளைக் கூறுகின்றார். 'பொறியடக்கமின்மை' முதலிய எண்வகைக்குணங் காரணமாக அரிபாவிகள் எண்வகைப்படுவர் என்பது கருத்து. பொறியடக்கமற்றவன்—தன்வயப்படாத பொறிகளையுடையவன்.

[64] பகைவன் — காரணமின்றி வெறுப்பவன் அல்லது வெறுக்கப்படுபவன்.

[65] பின்னணியிற் கலாம் முதலியவற்றை யுண்டுபண்ணுபவன்.

[66] உறவினரது மரணம் முதலியவற்றால் துன்புற்றவன்.

[67] வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு விதனமேற்படுவதைப் பார்த்து அந்நிலையில் எதிர்த்தலை மேற்கொள்பவன் என்பது.

[68] அடுத்த நாட்டவராயிருத்தல் பற்றி வெற்றிவிருப்பமுள்ளவனைக் குறித்துப் பகைவராயிருத்தல் என்பது சமமாயினும் மேற்கூறிய குணவேறுபாடு பற்றி, எண்வகைப்படுவர் அரிபாவிகள் என்பது.

[69]ஒரேபொருளைக்குறித்துச் சென்றவன், [70]தனிப்பொருளைக் குறித்துச் சென்றவன், [71]சேர்ந்து செல்பவன், [72]சந்திசெய்து மேற்செல்பவன், [73]தற்பயன்குறித்துச் சென்றவன், [74]கூடித் தொழில்புரிபவன், [75]பொருள் படைகளுள் ஒன்றைக் கொள்ளல் விற்றல் செய்பவன், [76]துவைதீபாவத்திற்குரியவன் [77]என்பவர் மித்திரபாவிகளாவர்.

[78]வலியவனைத் தடைப்படுத்துபவன் [79]மறைந்தவன் [80]பக்கத்தவன் (என்ற) [81]சிற்றரசன், [82]வலியவனுடைய பின்னணியைப் பற்றுபவன், தானே வந்தடைந்தவன் [83]வன்மையால்

---

69 மித்திரபாவிகளை விளக்குகின்றார். எதைக்குறித்து வெற்றிவிருப்பமுள்ளவன் சென்றிருக்கிறானோ, அதைக் குறித்தே வேறு திசையை யடைந்தவன் என்பது.

70 வெற்றிவிருப்பமுள்ளவன் நிலத்தைக் கருதிச் சென்றானாக, அந்நிலையிற் பொருளைக் குறித்துச் சென்றவன்.

71 வெற்றிவிருப்பமுள்ளவனுடன் கூடிச்செல்பவன்.

72 வெற்றிவிருப்பமுள்ளவனுடன் சந்தி செய்துகொண்டு, 'நீ இப்பக்கமாகச் செல்', 'யான் வேறுபக்கமாகச் செல்வேன்' என்ற வரையறையுடன் சென்றவன்.

73 'தற்பயன்' என்பது ஈண்டு, வெற்றிவிருப்பமுள்ளவனுடைய காரியங்களை நிறைவேற்றுதல் என்னும் பொருட்டு.

74 ஒன்றுபட்டுப் பாழிடத்தில் நாடமைத்தல் முதலிய தொழிலைச் செய்தல் என்ற ஒப்பந்தத்தால் செயல்புரிபவன் என்பது.

75 பொருளாற் படையையாதல், படையாற் பொருளையாதல் கொள்ளல் விற்றல் செய்பவன் என்பது.

76 'துவைதீபாவம்' என்ற குணத்திற்கு உபயோகமானவன். சந்தியை ஏற்றவனைப் பின்னணியைப் பற்றுபவன் எனினுமாம்.

77 என்பதாக எண்வகைப்பட்டவர் என்க.

78 பிருத்தியபாவிகளைப்பற்றிக் கூறுகின்றார்.

79 வெற்றிவிருப்பமுள்ளவனுக்கும் பகைவனுக்கும் இடையாகவுள்ளவனும், ஆற்றலற்றவனும், அடுத்துள்ள நாட்டினனும் ஆவன்.

80 மருங்கில் அடுத்துள்ள நாட்டினன்.

81 அடுத்த நாட்டினனும் ஆற்றலற்றவனும் ஆகிய சிற்றரசன் என்க.

82 வலியவனுடைய பின்னணியைப் பற்றுபவனை ஆற்றலற்றவன், மேற்சேறற்குரியானுக்குத் துணைபுரிபவன் என்றும் தானீயத்துக்குத் தீங்கிழைப்பவன் என்றும் இருவகையினன் என்ப.

83 வன்மை காரணமாக வணங்கி வந்தவன்.

வந்தடைந்தவன் (என்ற) [84]படைவலியாற் ருழ்த்தப்பட்டவன் என்பவர் [85]பிருத்தியபாவியான சிற்றரசராம்.

[86]அவர்களால் [87]ஒரு நிலத்தால் மறைவுற்றவருக்கும் விதி [88]கூறியவாறும்.

சுலோகங்கள்

(1) [89]அவர்களுக்குப் [90]பகைவருடன் பகைமை நேரின் [91]ஒரே பயனை யுடையனுந் தன்மையை யடையும் நண்பன் பகைவனை [92]எந்த சக்தியினுல் [93]பொறுத்தற்கியலுமோ அந்த சக்தியினுல் அவனுக்கு உதவுதல் வேண்டும்.

(2) [94]பகைவனை வயப்படுத்தி மிகுதியையடைந்து, வயப்படாத நண்பனுடன் பக்கத்துள்ளனவும் ஒன்ருல் மறைவுள்ளனவுமான அங்கங்களுக்குப் பகைமையை உண்டுபண்ணுதல் வேண்டும்.

(3) [95]அவனுடைய [96]குடியிற் பிறந்தவன், [97]அடக்கப்

---

[84] படைவலியாற் ருழ்த்தப்பட்டவன், 'தானே வந்தடைந்தவன்' என்றும், 'வன்மையால் வந்தடைந்தவன்' என்றும் இருவகையினன் என்பது.

[85] 'பிருத்தியபாவிகள்' என வழங்கப்படுவர் என்பது கருத்து.

[86] 'அரிபாவிகள்' முதலியனவாக மூவகைப்பட்ட பகைவர்களால் என்பது.

[87] நண்பருக்கும் என்பது.

[88] பகைவரைப்போன்று நண்பரும் அரிபாவிகள், மித்திரபாவிகள், பிருத்தியபாவிகள் என்று மூவகைப் பிரிவினராவர் என்பது கருத்து,

[89] நண்பர்களது நிலைமைகாரணமாக அவர்பால் ஒழுகுமுறையைக் கூறுகின்ருர். அவர்களுக்கு—ஒரு நாட்டால் மறைவுபட்ட நண்பர்களுக்கு.

[90] பகைவரால் எதிர்ப்பு நேரின் என்பது.

[91] பகைவனுடைய பயனைத் தன்பயனுகப் பெற்றிருத்தல். பகைவனுடன் சந்தியை ஏற்றல் என்ப.

[92] பொருள் படை முதலியவற்றுள் எந்த சக்தியினுல் என்பது.

[93] பொறுத்தல் என்பது ஈண்டுத் தோற்கடித்தல் என்னும் பொருளது.

[94] எந்த நண்பன் பகைவனை வென்று அதனுல் மிகுதியை எய்தித் தனக்கு வயப்படாதவனுவனே, அவனுடன் பகைவருக்கும் நண்பருக்கும் விரோதத்தை உண்டுபண்ணுதல் வேண்டும் என்பது கருத்து.

[95] அவன்—வயப்படாத நண்பன்.

[96] இவனை 'ஞாதி' என்ப.

[97] சிறைச்சாலை முதலியவற்ருல் தண்டிக்கப்பட்ட புதல்வர் முதலியோர்.

பட்டவன் என்பவர்களால் அவன் நிலத்தையும் கவரச்செய்யலாம். [98]உதவியை நாடி வயமாக இருக்குமாறும் செய்யலாம்.

(4) [99]மிகவும் துன்புறுத்தப் பெற்றவருள் எவன், உதவி புரியாமையையும் பகைவனை யடைதலையும் ஏற்பானோ அந் நண்பனைப் பொருளறிவுள்ளவன் குறைவுபடாமலும் மிகுதியடையாமலுமிருக்கச் செய்தல் வேண்டும்.

(5) [100]பயனின் தொடர்ச்சிகாரணமாக நிலையற்ற எவன் சந்தியை அடைவானோ, அவன் விலகுதற்குரிய காரணத்தைத் தகர்த்து விலகாதிருக்கச் செய்தல் வேண்டும்.

(6) [101]பகைவனுக்குப் பொதுவானவனும் மறைவில் தீங்கு புரிபவனுமான நண்பனைப் பகைவனிடமிருந்து வேறுபடுத்தல் வேண்டும். [102]பின்னர் வேறுபட்டவனையும், அதன் பின்னர்ப் பகைவனையுங் களைதல் வேண்டும்.

(7) [103]நொதுமலனுயிருப்பவனுக்குச் சிற்றரசருடன் பகை

---

98 தன் உதவியை நாடுவதற்கும் தனக்கு வயமாயிருத்தற்குமுரிய நிலையில் இருக்கச்செய்யலாம் என்பது.

99 எந்த நண்பன் மிகவும் துன்புறுத்தப்பட்டுத் தனக்கு உதவியைச் செய்யாமலும், பகைவனுடன் தொடர்பையடைந்தும் இருப்பானோ, அவனை வெற்றிவிருப்பமுள்ளவன் குறைவு மிகுதியின்றி நிலைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

100 நிலையற்ற நண்பனைப்பற்றிக் கூறுகின்றார். நிலையற்ற எந்த நண்பன் ஏதோ ஒரு பயனைக் கருதித் தன்னுடன் சந்தியை அடைகின்றானோ, அவன் பின்னர்த் தன்னைவிட்டு விலகுதற்குக் காரணமான பொருளாசையை யுடையனாயின், அவனுக்குப் பொருள்கொடுத்தல்மூலமாக அவ்வாசையை யகற்றி அவனை நிலைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

101 வெற்றிவிருப்பமுள்ளவனுக்கும் பகைவனுக்கும் ஒத்தவனும் என்க.

102 வேறுபாட்டை யடைந்த பின்னர் அந் நண்பனைக் களைதல் வேண்டும் என்பதும், அதன்பின் பகைவனைக் களைதல் வேண்டும் என்பதும் கருத்து.

103 எந்த நண்பன் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கும் பகைவனுக்கும் நொதுமலனாயிருப்பானோ, அவனுக்குச் சிற்றரசர்களால் தொடங்கப்பட்ட போர்மூலம் துன்பத்தை யுண்டுபண்ணி, அவன் தன் உதவியை எதிர்பார்த்தற்குரிய நிலையை யடையுமாறு செய்தல் வேண்டும் என்பது கருத்து.

மையை உண்டுபண்ணுதல் வேண்டும். பின்னர்ப் போரால் துன்புற்றவனை அருளுதலில் வைத்தல் வேண்டும்.

(8) [104]பகைவனையும் வெற்றிவிருப்பமுள்ளவனையும் அடையும் வன்மையற்றவனை அயன்மைசெய்தொழுகாவண்ணம் படையாலருளுதல் வேண்டும்.

(9) [105]அல்லது அங்கிருந்து விலக்கிப் படையுதவிகாரணமாக அங்கு வேறொருவனை முன்னரே நிலைப்படுத்தி வேறு நிலத்தில் வைத்தல் வேண்டும்.

(10) [106]தீமை செய்பவனும், ஆற்றலிருந்தும் இடுக்கட்காலத்து உதவாதவனுமான நண்பனுக்கு [107]நம்பிக்கையை யுண்டுபண்ணி, மடியை அடைந்த அவனைக் களைதலொன்றே செயற்பாலதாம்.

(11) [108]நண்பனது துன்பங் காரணமாகத் தடையின்றி

---

[104] ஆற்றலற்ற எந்த நண்பன் ஆற்றலை மிகைப்படுத்தற்காகப் பகைவன், வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவரையும் அடைவானோ, அவனுக்குத் தன் படையைக் கொடுத்தலால், அவன் பகைவனுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாவண்ணம் அருளுதல் வேண்டும் என்பது கருத்து.

[105] மேற்கூறப்பட்டவாறு இருவர்பால் தொடர்புள்ள ஆற்றலற்றவனுக்கு வேறுவிதமாக அருளும் முறையைக் கூறுகின்றார். மேற்கூறப்பட்ட அந்நண்பனை அவன் நாட்டினின்றும் விலக்கிப் பகைவனுடைய உதவியை எதிர்பார்த்தற்கு அவசியமில்லாத தன்னுடை ஒன்றில் நிலைப்படுத்தல் வேண்டும் என்பதும், அங்ஙனம் நிலைநிறுத்துமுன்னரே அவனுடைய நாட்டில் ஆற்றலுள்ள ஒருவனைப் படையால் தனக்கு உதவும்பொருட்டு நிறுவுதல் வேண்டும் என்பதும் கருத்து.

[106] வெற்றிவிருப்பமுள்ளவனுக்கென்பதைக் கூட்டுக.

[107] உபாயங்களால் தன்னிடம் நம்பிக்கையை உண்டுபண்ணி, அவன் தன்னை நெருங்கியதும் அவனைக் களைதல்வேண்டுமேயன்றிப் பொருட்படுத்தாதிருத்தல் கூடாதென்பது கருத்து.

[108] எந்தப் பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நண்பனது விதனங் காரணமாக எவ்விதத் தடையுமின்றி மிகுதியை யடைவானோ அவனை வெற்றிவிருப்பமுள்ளவன் தன் முயற்சியால் நண்பனது துன்பத்தை நீக்கியோ வெளிப்படாதிருக்கவோ செய்து அந் நண்பனைக்கொண்டே வயப்படுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

மிகுதியையடைந்த பகைவன் மறைக்கப்பட்ட துன்பத்தையுடைய நண்பனுலேயே வயப்படுதற்குரியனுவான்.

(12) பகைவனது துன்பங்காரணமாக மிகுதியை அடைந்து [109]வெறுப்புற்ற நண்பனைப் பகைவனது துன்பத்தை நீக்குமுக மாகப் [110]பகைவனுலேயே வயப்படுத்தல் வேண்டும்.

(13) மிகுதி, குறைவு, ஒப்பு, துன்புறுத்தல், களைதல் என் பவற்றையும், எல்லா [111]உபாயங்களையும் பொருணூலறிவுள்ள வன் [112]நன்கு ஏற்றல் வேண்டும்.

(14) [113]இங்ஙனம் ஒன்றோடொன்று இணங்கிய அறுவகைக் குணங்களைக் கையாளுபவன் [114]அறிவுச்சங்கிலியாற் [115]கட்டுண்ட [116]அரசர்களுடன் விருப்பப்படி விளையாடுகிறுன்.

ஏழாம் அதிகரணம் 27—29-ஆம் பிரகரணங்கள்
'நடுவன்பாலொழுகல்', 'நொதுமலன்பாலொழுகல்',
'மண்டலசரிதம்' என்னும் நூற்றுப்பதினுரும்
அத்தியாயம் முற்றிற்று.

ஏழாம் அதிகரணம் முற்றிற்று.

---

109 வெற்றிவிருப்பமுள்ளவனிடம் வெறுப்படைந்த என்பது.

110 ஊக்கமளிக்கப்பட்ட என்பதைக் கூட்டுக.

111 உபாயங்கள்—இன்சொல் முதலிய நான்கு

112 அவ்வப்பொருளைத் துணிந்து பயன்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

113 இதுகாறும். விளக்கிக் கூறப்பட்ட பொருள்களை நன்கு மேற் கொள்ளுதலே பயனும் என்று கூறுமுகமாக இந்த அதிகரணத்தை முடிக் கின்றுர்.

114 தன் அறிவாகிய சங்கிலியால் என்பது.

115 கட்டுண்ட—தன்வயப்படுத்தப்பட்ட.

116 அரசர்களாகிற விளையாட்டுக் கருவிகளுடன் தன் விருப்பத்திற் கேற்ப விளையாடுகிறுன். சுகமாக அரசுபுரிகிறுன் என்பது கருத்து.

எட்டாம் அதிகாரணம்—[1]விதனம் விளம்பல்

முதற் பிரகாணம்—[2]பகுதிகளின் விதனக்குழு

நூற்றுப்பதினேழாம் அத்தியாயம்

[3]*விதனம் ஒரே காலத்தில் நிகழின் எளிமைபற்றி மேற்சேறல் ஏற்கத்தக்கதா காத்தல் ஏற்கத்தக்கதா என்ற விதனம்பற்றிய ஆராய்ச்சி.*

[4]*பகுதிக்குத் [5]தெய்வத்தால் நிகழ்வதும் [6]மக்களால் நிகழ்வது*

117-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] *விதனம்—துன்பந்தருஞ் செயல். அது பலவகைப்படும். அவ்வகைகளை அவ்வப் பிரகரண விளக்கங்களிற் காண்க. 'அறுவகைக் குணங்கள்' என்ற முன்னை யதிகரணத்தில் 'பகையங்க நிறைவுள்ளவன் .... விதனமுள்ளவன்.. ......' என்பது முதலியவற்றால் விதனமுள்ளவன் மேற்சேறற்குரியவன் என்பதும், 'மிகுதியை எய்தியவன் விக்கிரகத்தை யேற்றல்வேண்டும்' என்பதாக வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு விதனமின்மை அங்கம் என்பதும் கூறப்பட்டன. அவ்விதனத்தின் காரணம், இயல்பு, இருப்பிடம் முதலியவற்றை இவ்வதிகரணம் கூறத்தொடங்குகிறது. எனவே அதிகரண வியைபு புலனுதலறிக.*

[2] *பகுதிகள்—அமைச்சர் புரோகிதர் முதலிய பிரகிருதிகள்.*

[3] *அதிகரணத்தின் இயைபைக் குறிக்கின்றார். பகைவன் விதனமுள்ளவனும், தான் விதனமற்றவனுமிருப்பின், பகைவனை எளிதிற் களைதல் கூடுமாகலின், அதுபோது பகைவனைக் குறித்து மேற்சேறல் வேண்டும் எனக் கூறப்பட்டது. அவ்விதனம் பகைவனுக்கும் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கும் ஒரே காலத்தில் ஏற்படின் பகைவரைக் குறித்து மேற்சேறல் ஏற்றற்கு எளியதா அல்லது தன்னுட்டைக் காத்திருத்தல் எளியதா என்ற ஐயமேற்படுதலின், அவ்விருவருடைய விதனங்களின் ஏற்றத்தாழ்வைத் துணிதற்கும் ஐயுறப்பட்ட செயலுள் ஒன்றைத் துணிதற்கும் இவ்வதிகரணம் தொடங்கப்படுகிறது என்பது கருத்து.*

[4] *பொதுவாக விதனங்களைப் பாகுபடுத்தி அவற்றின் காரணத்தைக் கூறுகின்றார்.*

[5] *தெய்வம்—ஈண்டு முன்னைப்பிறப்பில் செய்த கன்மங்களுக்கேற்ப உருவாகும் ஊழ்வினை.*

[6] *மக்களறிவு காரணமாக உண்டாயது.*

மான விதனம் [7]முன்னைய செயலாலும் [8]முறையற்ற செயலாலும் உண்டாவதாம்.

[9]குணங்களின் மாறுபாடு, [10]இன்மை, [11]கடுங்குற்றம், [12]ஈடுபாடு, [13]துன்பம் என்பன விதனங்களாம். [14]மேன்மையினின்றும் விலக்குதல் பற்றி விதனம் (வ்யஸனம்) என்றாயிற்று.

[15]அரசு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு

---

[7] முன்னைய செயல்—முற்பிறப்பிற் செய்த தீவினை.

[8] சந்தி முதலியவற்றை ஏற்ற முறையில் கையாளாமையாலும் என்க. அவ்விதனங்களுள் தீ, நீர் முதலியவற்றாலுண்டாம் அச்சம் முன்னைய செயலைக் காரணமாகக் கொண்டது என்றும், பகைப்படை முதலியவற்றாலுண்டாம் துன்பம் முறையற்ற செயலாலுண்டாம் துன்பம் என்றும் கூறுப.

[9] விதனங்களைச் சிறப்பாகப் பாகுபடுத்துக் கூறுகின்றார். குணங்கள்—குடிப்பிறப்பு முதலியன. ஈண்டுக் 'குணங்களின் மாறுபாடு' என்பது, அவை அவற்றிற்குரிய செயல்களைத் தொடங்குதற்குக் காரணமாகாமையை; சந்தி முதலிய குணங்களை நன்கு ஏற்காமையை யெனினுமாம்.

[10] இன்மை என்பது குடிப்பிறப்பு முதலிய குணங்களின்மையையும், சந்தி முதலியவற்றைச் செய்யாமையையுங் குறிக்கும்.

[11] கடுங்குற்றம்—நற்குணங்களைக் கீழ்ப்படுத்தி ஓங்கிநிற்கும் கோபம் முதலியன.

[12] ஈடுபாடு—மகளிர்பாலும் வேட்டை முதலியவற்றிலும் அளவுகடந்த வேட்கை.

[13] துன்பம்—பகைப்படை முதலியவற்றால் உண்டாவது.

[14] 'வ்யஸனம்' என்ற பெயர்ச்சொல்லில் 'வ்யஸ' என்ற பகுதி, 'விலக்குவது' என்னும் பொருளது. மேன்மையிலிருந்து விலக்குதல் என்ற பொருளைக் காரணமாகக் கொண்டதால் 'வ்யஸனம்' என்பது காரணப் பெயர். (வ்யஸ்யதி = விக்ஷிபதி; வ்யஸ்யத்யேநம் ஶ்ரேயஸ இதி, வ்யஸநம்) குணங்களின் மாறுபாடு முதலிய ஐந்தனுள் முதலிரண்டு பிரிவுகளை 'அரசற்கும் அரசியற்குமுரிய விதனவாராய்ச்சி' என்ற பிரகரணத்திலும், 3, 4-ஆம் பிரிவுகளைப் 'புருடவிதனக்குழு' என்ற பிரகரணத்திலும், இறுதியிலுள்ளதைப் 'படைநட்டோர்களின் விதனக்குழு'விலும் அடங்கியதாக அறிக. அரசு முதலிய எழுவகை நிலைக்களங்களைக்கொண்டு, பகுதிகளின் இவ்விதனம் எழுவகையாம் என்க.

[15] மேற்சேறல் முதலிய செயல்களுக்குப் பயனுதல் பற்றி அரசு முதலியவற்றின் விதனங்களுக்கு ஏற்றத்தாழ்வைக் கூறத் தொடங்குகின்றார்.

[16]என்பவற்றின் விதனங்களுள் [17]பின்னையவற்றின் முன்னையது முறையே சிறந்தது என்பர் [18]ஆசிரியர்.

[19]அன்றென்பர் பரத்துவாசர். [20]அரசு அமைச்சு என்பவற்றின் விதனங்களுள் அமைச்சின் விதனம் சிறந்ததென்க. [21]சூழ்தல், [22]சூழ்ச்சிமுடிவின் பேறு, [23]செயலையாளுதல், [24]வருவாய்ச்செலவுத் தொழில் [25]படையாக்கம், [26]பகைவர், காட்டில் வாழ்வோர் என்

---

[16] அரசுவிதனம் தொடங்கி நட்புவிதனம் ஈறாகவுள்ள ஏழு விதனங்களுள் என்பது.

[17] நட்புவிதனத்தைவிடப் படைவிதனமும், படைவிதனத்தைவிடப் பொருள்விதனமும், அதைவிட அரண்விதனமும், அதைவிட நாட்டுவிதனமும். அதைவிட அமைச்சுவிதனமும், அதைவிட அரசுவிதனமும் என்ற இம்முறையிற் சிறந்தன என்பது கருத்து.

[18] ஈண்டு ஆசிரியர் என்பதால், மேல், பெயர்சுட்டிக்கூறப்படும் பரத்துவாசர் விசாலாக்கர் முதலியவர்களைத் தவிர ஏனையோர்களைக் கொள்ளல் வேண்டும். பரத்துவாசர் முதலியவர்களால் மறுத்துக் கூறப்பட்டவை, கௌடலியரால் உடன் மறுக்கப்படுவதானும், ஆசிரியரது இக்கொள்கை மறுக்கப்படவில்லையாகலானும் இக்கொள்கையே கௌடலியர்க்கும் உடன்பாடென்றறிக.

[19] பரத்துவாசர் கூறும் தடையினைக் கூறுகின்றார்.

[20] சிறப்புநோக்கி, ஆசிரியர் கூறிய, அரசு அமைச்சு என்ற முறையைத் திருத்தி, அமைச்சு அரசு என்று முறைப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பது. இவ்வைப்பு முறையளவில் மறுத்தமையால், ஏனையவற்றின்முறை அவருக்கு உடன்பாடென்றுணர்க. பின்வரும் விசாலாக்கர் முதலியவர்களிலும் இவ்வாறே கொள்க.

[21] அமைச்சுவிதனம் சிறந்தது என்பதற்குப் பரத்துவாசர் கூறிய காரணத்தைக் கூறுகின்றார். சூழ்தல்—செயற்பாலன இவை, விலக்கற்பாலவைகளின் தடை இவை என்று ஆராய்ந்தறிதல்.

[22] காரியத்துணிவென்பது.

[23] துணியப்பட்ட காரியத்தை நிகழ்த்துதல்.

[24] பொன் முதலியவற்றை யுண்டாக்கலும், உண்டாக்கப்பட்ட அவற்றைப் பயன்படுத்தலும் ஆம்.

[25] படைகளைத் திரட்டுதலும், உரியவிடத்தில் நிலைப்படுத்தலுமாம்.

[26] தன்னாட்டிற்குத் துன்பம் செய்யாவாறு பகைவர்களையும், காட்டில் வாழ்வோரையும் தடுத்தல் என்பது.

படவர்களைத்தடுத்தல், [27]நாடுகாவல், [28]விதனமாற்றம், [29]புதல்வர்க் காப்பு, [30]புதல்வர்க்கு முடிசூட்டல் என்னுமிவை [31]அமைச்சர் களுக்கு வயப்பட்டனவாம். [32]அவர்களிலரேல் அவையொன்று மில்லையாம். [33]சிறகு ஒடிந்ததுபோல் அரசனுக்கு இயங்குத லில்லை. [34]விதனகாலங்களில் பகைவரது வேறுபாடு, மிக அணுக் கத்ததாம். [35]மாறுபடின் உயிர்த்துணையாய் இயங்குதல்பற்றி அரசனுக்கு உயிர்க்கேடாம் [36]என்க

[37]அன்றென்பர் கௌடலியர். [38]மந்திரி, புரோகிதர் முதலிய பணியாளர்குழுவினையும் [39]தலைவன்செயலையும் [40]மக்கள்

---

27 தன் குடிமக்களின் ஏமநலங்களைக் கண்காணித்தல்.

28 தெய்வத்தாலும் மக்களாலுமுண்டாம் இடுக்கண்களுக்கு மாற்றம் புரிதல்.

29 அரசனுடைய புதல்வர்களால் தீங்கு நேராவண்ணம் அரசரைக் காத்தல் என்பது.

30 இளவரசனுகவோ அன்றிப் புதிதாகக் கைப்பற்றப்பட்ட நாட்டிற்கு அரசனுகவோ புதல்வருக்கு முடிசூட்டல் என்பது.

31 அமைச்சரால் மட்டும் செய்து முடித்தற்குரியன வென்பது.

32 அமைச்சரில்லையெனின் ஆலோசனை முதலியனவும் இல்லை என்பது.

33 எனவே சிறகொடிந்த பறவை இயக்கமற்றிருத்தல் போல் அரச னுக்குச் செயல்களில் ஈடுபாடின்றும் என்பது கருத்து.

34 அமைச்சர்களுக்கு விதனம் நேரின், வேறுபடுத்தல் முதலிய தீங்கு கள் பகைவரால் விரைவில் நேரும் என்பது கருத்து.

35 பூசிக்கத்தக்காரைப் பூசியாமை, தூஷ்யர்களை யாதரித்தல் போன்ற மாறுபட்டசெயலை அமைச்சர் மேற்கொள்ளின், அவர்கள் அரசனது உயிர்க் கருகில் இயங்குதல் காரணமாக, அரசனது உயிர்க்குக் கேடு விளையும் என் பது கருத்து. எனவே அவ்வாறு மாறுபாடு நேராவண்ணம், நெருங்கி யுள்ளவர் கண்காணித்தல் வேண்டும் என்பதாம்.

36 'என்க' என்பது ஈண்டுக் காரணச்சுட்டு. அரசனுடைய எல்லாச் செயல்களுக்கும் உயிர்க்கும் அமைச்சர் காரணராதலால் அரசனைவிட அமைச்சரே சிறந்தவர் என்றும், அவர்களின் விதனமே சிறந்தது என்றும் கொள்ளல் வேண்டும் என்க.

37 மேற்கூறிய பரத்துவாசர் கொள்கையை மறுக்கின்றார்.

38 மறுத்தற்குரிய காரணத்தை விளக்குகின்றார். மந்திரி, புரோகிதர், சேனைத்தலைவன் முதலிய பணியாளர்குழு என்பது.

39 பொற்றொழிற்றலைவன் முதலிய எல்லாத் தலைவரையும் நிலைப்படுத் தல் என்பது.

40 மந்திரி முதலிய மக்கட்பகுதிகள், நாடு, அரண், பொருள் என்ற பொருட்பகுதிகள் என்னும் இவற்றினுடைய விதனங்களைப் பரிகரித்தலை யும் என்பது.

பொருள் பகுதிகளின் விதனங்களுக்கு மாற்றத்தையும் [41]மிகைப் படுத்தலையும் அரசனே செய்கிறான். அமைச்சர் விதனமுறின் [42]விதனமற்றவரை நிலைப்படுத்துகிறான். பூசித்தற்குரியவரைப் பூசித்தல், [43]தூஷ்யர்களைத் தடைப்படுத்தல் என்பவற்றில் எப்பொழுதும் ஈடுபட்டவனாகிறான். [44]நிறைவுள்ள தலைவன் தன் நிறைவால் மக்களை வயப்படுத்திக் கொள்கின்றான். [45]இயக்கம் விழிப்பின்மை என்பன [46]அவனைச் சார்ந்தனவாகலின், அவன் எவ்வியல்புள்ளவனோ மக்களும் அவ்வியல்புள்ளவராவர். [47]தலைவன் அவர்களின் மூலகாரணமாந் தன்மையனன்றோ என்க.

அமைச்சு நாடு என்பவற்றின் விதனங்களுள் நாட்டின் விதனம் சிறந்ததென்பர் விசாலாக்கர். [48]பொருள், [49]படை, [50]குப்பி

---

[41] மக்கட்பகுதியினையும் பொருட்பகுதியினையும் அதிகப்படுத்தல் என்பது. இவ்வாற்றால் 'அவர்களிலரேல் அவையொன்று மில்லையாம்' என்ற பகுதி மறுக்கப்பட்டதாகக் கொள்க.

[42] விதனமற்ற பிறரை அமைச்சுப் பதவியில் நிலைப்படுத்துகிறான் என்பது. இதனால், 'விதனகாலங்களில்........அணுக்கத்ததாம்' என்ற பகுதி மறுக்கப்பட்டதாம்.

[43] நாட்டிற்குத் தீங்குபுரிபவரைத் தடைப்படுத்தலில் எப்போதும் அரசனே விழிப்புடனிருப்பான் என்பது. இதனால், 'மாறுபடின்.........உயிர்க்கேடாம்' என்ற கூற்றுக்கு மறுப்புக் கூறியபடியாம்.

[44] தலைவன், குணங்களையுடையவனாயிருத்தலே பிரகிருதிகள் அவற்றையுடையனவாயிருத்தற்குக் காரணமாம் என்கிறார். தலைவன் குணங்களால் நிறைந்தவனாயின், குணங்களால் நிறைந்த பிரகிருதிகளையும் சம்பாதித்துக் கொள்கிறான் என்பது கருத்து.

[45] தலைவன் நிறைவுள்ளவனாயின், அவன் முயற்சியின்றியே பிரகிருதிகள் தாமே நிறைவை எய்தினராவர் எனக் கூறுகின்றார்.

[46] தலைவன் செயலில் ஈடுபடின் பிரகிருதிகளும் தொடர்ந்து ஈடுபடுவர் என்பதும், அவன் விழிப்பின்மை யுடையனாயின் அவையும் அவ்வாறே யாகின்றன என்பதும் கருத்து.

[47] பிரகிருதிகள் அரசனுடைய குணங்களைப் பெறுதற்குரிய காரணங் கூறுகின்றார். பிரகிருதிகளுக்கு அரசன் மூலப்பிரகிருதியின் நிலையிலுள்ளவன். எனவே பிரகிருதிகள் அரசனுடைய விகாரப் பொருள்களின் நிலையிலுள்ளன என்பது கருத்து.

[48] அமைச்சுவிதனத்தைவிட நாட்டுவிதனம் சிறந்ததென்பதற்கு விசாலாக்கர் கூறிய காரணத்தைக் கூறுகின்றார். பொருள்—பொன் முதலிவற்றின் தோற்றம்.

[49] மூலப்படை, கூலிப்படை முதலியன.

[50] ஆடை, விரிப்பு முதலியன.

யம், [51]அடிமை, [52]ஊர்தி, [53]தொகுதி என்பன நாட்டிலுண்டாவன. நாடின்றேல் [54]அவையில்லையாம். [55]அரசு அமைச்சு என்பவற்றுக்கு மறைவுபடாததாம் என்க.

அன்றென்பர் கௌடலியர். [56]செயற்பயன்கள், [57]தமராலும் பிறராலும் ஏமநலங்களைச் செய்தல், [58]விதனமாற்றம், [59]பாழிடத்தமைப்பு மிகுதிகள், [60]தண்டம், [61]உல்கு என்பவற்றில் [62]அருளுதல் என்ற நாட்டினுடைய எல்லாச் செயல்களும் அமைச்சரைக் காரணமாகக் கொண்டனவாதலின் என்க.

நாடு அரண்களின் விதனங்களுள் அரண்விதனம் ([63]மிக்கது) என்பர் பராசரரைச் சார்ந்தோர். [64]பொருள் தண்டங்களின் தோற்றம் [65]அரணிலன்றோ. [66]இடுக்கண் நேர்ந்துழி நாட்டின் தானமுமாம். நாட்டிலுள்ளவரைவிட நகரத்துள்ளவர் மிகுந்த

---

51 அடிமை—பணியாளர்குழு.

52 யானை, குதிரை முதலியன.

53 தொகுதி—கூலம், எண்ணெய் முதலியவற்றின் உற்பத்தி.

54 பொருள் முதலியன இல்லாமற்போம் என்பது.

55 மேற்கூறிய காரணம்பற்றி நாட்டை அரசிற்கும் அமைச்சுக்கும் இடையில் 'அரசு, நாடு, அமைச்சு.........' என்பதாக வரிசைமுறையில் வைத்து நோக்குதல் வேண்டும்.

56 அணைக்கட்டு, உழவு பசுக்காவல் வாணிகம் முதலிய செயல்களுடைய பயன்கள் என்பது.

57 தன் மக்களாலும், பகைவர்மக்களாலும் ஏமநலங்களை யுண்டாக்கல் என்பது.

58 மக்களது விதனத்துக்குப் பரிகாரம்.

59 பாழாக உள்ள நிலத்தைத் திருத்தி அங்கு சிற்றூர் முதலியவற்றை யமைத்தலும், அமைக்கப்பட்டதை மிகுதிப்படுத்தலுமாம்.

60 தண்டம்—உத்தமசாகசம் முதலியன.

61 உல்கு—அரசிறை.

62 மக்களை யநுசரித்து நயமான முறையில் ஏற்றல் என்பது.

63 சிறந்தது என்பார் பராசரரின் மாணுக்கர் என்க. எனவே அரசு, அமைச்சு, நாடு, அரண், பொருள் என்ற முறையை, அரசு, அமைச்சு, அரண், நாடு, பொருள் என்று திருத்தி யமைத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

64 பொருட்டொகுதி படை இவற்றின் உற்பத்தி என்பது.

65 அரண்—ஈண்டு 'தானீயம்' எனப்படும் தலைநகரம்.

66 நாட்டுமக்களுக்குப் பகைப்படையால் அச்சம் நேர்ந்த காலத்துக் காத்தற்குரிய நிலமாம் என்பது.

ஆற்றலுற்றவரும், [67]நிலையானவரும் இடுக்கண் நேர்ந்துழி அரசனுக்குத் துணைவருமாவர். [68]நாட்டிலுள்ளவராயின் [69]பகைவர்க்குப் பொதுவானவராம் என்க.

அன்றென்பர் கௌடலியர். அரண், பொருள், படை, [70]அணைக்கட்டு, உழவு, பசுக்காவல், வாணிகம் இவற்றின் செயல்கள் நாட்டைக் காரணமாகக் கொண்டனவாம். [71]வீரத்தன்மை, [72]நிலையாயிருத்தல், [73]ஆற்றல், [74]மிகுதி என்பன [75]நாட்டினர்பாலுள்ளன. [76]மலை, கடலிடை நுழைந்த பூமிமுனை, தீவு என்ற அரண்கள் மக்களுக்குரிய இடமன்மையால் அடையப்படுவதில்லை. [77]உழவர்மிகுந்த நாட்டில் அரண்விதனமுளதாம். [78]படைக்கலமுள்ளவரால் நிறைந்ததாயின் நாட்டுவிதனமாம் என்க.

---

[67] எக்காலத்தும் அநுசரித்து வருபவரும் இடுக்கட்காலத்து அரசனால் எளிதில் அடைதற்குரியவரும் ஆவர் என்பது கருத்து.

[68] நாட்டினர் இங்ஙனமாகார் எனக் கூறுகின்றார்.

[69] ஆற்றலை யேற்று உட்புகுந்த பகைவனைக்கூட அநுசரித்துப்போவர் என்பது கருத்து.

[70] அணைக்கட்டு—ஈண்டு, பூந்தோட்டம் பழத்தோட்டம் முதலியன. அரண்போல் பொருள் படை என்பவற்றுக்கு மட்டும் நாடு காரணமன்று. பொருள் படை என்னுமிவற்றுக்குக் காரணமாக்கூறப்பட்ட அரணுக்கும் நாடு காரணமாதலின் அதுவே சிறந்ததென்பது கருத்து.

[71] நகரத்தவர்க்கு ஆற்றல் மிகுதியானது என்ற கூற்றினை மறுத்துரைக்கின்றார்.

[72] வேறுபடுத்தற்கியலாத கருத்துடைமை என்பது.

[73] ஈண்டு விரைவிற் செயல்புரிதல்.

[74] மிகுதி—பலராயிருத்தல்.

[75] எனவே நகரத்தவர்பால் வீரத்தன்மை முதலியன இருப்பினும் பலராயிருத்தல் என்பதின்றென்பது கருத்து.

[76] வேறொரு விசேடத்தைக் கூறுகின்றார். மலை முதலிய அரண்கள் மக்கள் வாழ்தற்குரிய இடமற்றிருத்தலால், அங்கே மக்கள் மிகுதியாகத் தங்கி வாழ்வதில்லை. எனவே, நாடாயின் அரணற்றிருந்தும் அடையப்படும் என்பது தானே பெறப்படும். அரண்களுக்கு நாட்டை எதிர்பாராது வசித்தற்குரியதாந் தன்மையின்றாம். நாட்டிற்காயின் அரணை எதிர்பாராது வசித்தற்குரியதாந் தன்மையுண்டு என்பதுபற்றி அரணைவிட நாடே சிறந்தது என்பது கருத்து.

[77] மற்றோர் விசேடத்தைக் கூறுகின்றார். படைக்கலமுள்ளவர் குறைந்தும், உழவர் மிகுந்துமுள்ள நாட்டில் அரணின்மைகாரணமாக உண்டாம் துன்பம் விளையும். படைக்கலமுள்ளவர் மிகுந்த நாட்டில் அத்துன்பம் அவர்களாலேயே எளிதில் பரிகரித்தற்கியலும்.

[78] நாட்டின் விதனமாயின் அவர்களாலும் பரிகரித்தற்கியலாது என்பது பற்றி அதுவே சிறந்தது எனக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

அரண் பொருள் என்பவற்றின் விதனங்களுள் பொருள் விதனம் ([79]மிக்கது) என்பர் நாரதர். [80]அரணைப் பண்படுத்தல், அரணைக்காத்தல் என்பன பொருளைக் காரணமாகக் கொண்டன வன்றே! [81]பிறரது அரண், பொருளால் வேறுபடுத்தற்குரியது. நாட்டிலுள்ள நண்பர் பகைவர்களைத் [82]தடைசெய்தல், [83]நாட்டிலுள் மறைவுபட்டவருக்கு [84]ஊக்கமளித்தல், [85]படைவன்மையின் தொழில்கள் என்பனவும்[86]ஆம். [87]விதனம் நேர்ந்துழிப்பொருளை எடுத்துச் செல்லுதல் இயலும். அரண் அவ்வாறன்றென்க.

அன்றென்பர் கௌடலியர். பொருள், படை, [88]மறைவுப் போர், [89]தன் பக்கத்தவரைத் தடைப்படுத்தல், [90]படை வன்மையின் தொழில்கள், நட்புப்படையை ஏற்றல், [91]பகைப்படையினை

---

79 மிக்கது—சிறந்தது. அரசு அமைச்சு நாடு அரண் பொருள் படை என்பதை அரசு அமைச்சு நாடு பொருள் அரண் படை என்று மாற்றியமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

80 தானியத்தைத் திருத்திப் பண்படுத்தற்கும் அதைக் காத்தற்கும் பொருட்டொகுதி இன்றியமையாததென்பது கருத்து.

81 பிறருடைய தானியத்துள்ள வெகுண்டவரும் பொருணசையுடையவரும் அச்சமுற்றவருமாகிய இவர்களைப் பொருட் கொடையால் பிறரிடமிருந்து வேறுபடுத்தற்கியலும் என்பது கருத்து.

82 தடைசெய்தல்—ஈண்டு தன் வயப்படுத்தல்.

83 தன் நாட்டிற்கும் அவர்நாட்டிற்கும் இடையிலுள்ள நாட்டால் மறைவுபட்டவர் என்பது.

84 தனக்கு உதவிபுரிதற்குத் தூண்டுதல் என்பது.

85 சேனையைக் கொடுத்தல் ஏற்றல் என்ற தொழில்கள்.

86 ஆம்—பொருளால் உண்டாகக்கூடியனவாம்.

87 பகைவர் முதலியவரால் தாக்குண்டபோது அரணிலிருந்து வெளியேறுபவன் பொருளை எடுத்துச்செல்லுதல் கூடும். அரண் அவ்வாறன்றும் என்பது கருத்து.

88 தீக்ஷ்ணர் முதலியவரால் மறைவாகக் கொல்லுதல் என்பது.

89 தன் பக்கத்துள்ள தூஷ்யர் பகைவர் முதலியவர்களை வயப்படுத்தல் என்பது.

90 சேனைகளை உதவிகுறித்துக் கொடுத்தல் ஏற்றல் என்ற செயல்கள்.

91 பகைப்படை, காட்டிலியங்கும் படை என்பன தன்னை எதிர்க்காவண்ணம் தடுத்தல் என்பது.

யும் காட்டில் வாழ்வோரையும் தடுத்தல் என்பன [92]அரணைப் பற்றியனவாம். [93]அரணின்றேல் பொருள் பிறருடையதாம். [94]அரணுடன் கூடியவரைக் களைதலியலாமை கண்கூடன்றோ!

பொருள் படைகளின் விதனங்களுள் படைவிதனம் (மிக்கது) [95]என்பர் வீடுமர். நண்பர் பகைவர் என்பவர்களை [96]அடக்குதல், [97]பிற படைகளுக்கு ஊக்கமளித்தல், [98]தன் படையை யேற்றல் என்பன [99]படையைக் காரணமாகக் கொண்டனவன்றோ! படையின்றேல் பொருளழிதல் உறுதி. [100]பொருள் இலதெனினும் [101]குப்பியம், நிலம், [102]பிற நிலத்தைத் தானே கைப்பற்றுதல் என்பவற்றால் படையையும் [103]படையுடையவன் பொருளையும் தொகுத்தற்கியலும். [104]தலைவனுக்கு அணுகித் தொழில்புரிதல் பற்றிப் படை, அமைச்சரையொத்த தன்மையதாம் என்க.

---

[92] அரணுக்கு அகப்பட்டனவாம் என்க. இதனால், பொருளுக்கில்லாத ஒரு சிறப்புக்குணம் அரணுக்குக் கூறப்பட்டதாயிற் றென்ப.

[93] பொருளைக் காத்தலும் அரணைக்கொண்டு நிகழ்த்தற்குரியதெனக் கூறுகின்றார். அரணைக் காத்தலின்றேல் பொருள் பகைவராற் கவரப்படும் என்பது கருத்து.

[94] அரணுடன் கூடியவர் பகைவரால் ஒருபோதும் களைதற்குரியராகார் எனக் கூறுகின்றார்.

[95] எனவே.........அரண், படை, பொருள்.........என்ற முறையைத் தழுவுதல் வேண்டும் என்பது பெற்றாம்.

[96] அடக்குதல்—தனக்குட்பட்டதாகச் செய்தல்.

[97] தனக்கு உதவுதற்காக வந்த பிறபடைக்கு ஊக்கமளித்தல் என்பது.

[98] பகைப்படையை எதிர்க்குமாறு தன் படையை ஏற்றல் என்பது.

[99] படையால் உண்டாம் அச்சத்தைக் காரணமாகக் கொண்டது என்பது கருத்து.

[100] பொருளில்லையாயினும் படையழிவதில்லை எனக் கூறுகின்றார். பொன் முதலியவற்றைக் கொடுக்காதிருப்பினும் என்பது.

[101] குப்பியம்—ஆடை முதலியன.

[102] எதிர்க்கப்பட்ட பகைவனுடைய நாட்டில் 'எவன் தன் முயற்சியால் எதைக் கைப்பற்றுகின்றானோ, அஃது அவனுக்குரியது' என்ற ஒப்பந்தம் காரணமாகப் பற்றுதல் என்பது கருத்து.

[103] படை திரட்டப்படின் அது காரணமாகவே பொருளையும் எளிதில் ஈட்டுதல் கூடும் எனக் கூறுகின்றார்.

[104] படை தலைவனுக்கு அருகிலிருந்து எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுதல் காரணமாக அது அரசனுக்குரியதாய் அமைச்சரையொத்து இன்றியமையாததாம் எனக்கொள்ளல் வேண்டும்.

அன்றென்பர் கௌடலியர். [105]பொருளைக் காரணமாகக் கொண்டதன்றோ படை! பொருளின்றேல் [106]படை பிறனை யடைகிறது; அல்லது [107]தலைவனைக் கொல்கிறது. [108]பொருள் எல்லோரையும் எதிர்க்கச்செய்வதும் அறம் இன்பங்களின் காரண மாவதுமாம். [109]இடம், காலம் தொழில்களுக்கேற்பப் பொருள் படை என்பவற்றுள் ஒன்று பிரமாணமாம். [110]அடையப்பட்ட [111]பொருளைக் காப்பதன்றோ படை! பொருள் பொருளுக்கும் படைக்கும் [112]ஆம். [113]எல்லாப்பொருளுக்கும் மூலமாதல்பற்றிப் பொருள்விதனம் சிறந்ததென்க.

[114]படை நட்பு என்பவற்றின் விதனங்களுள் நட்புவிதனம் (மிக்கது) [115]என்பர் உத்தவர். வேதனமின்றியும் [116]மறைவிலும்

---

105 பொருளன்றி வேறு உபாயத்தாற் படையைத் திரட்டுதல் முடியாது என்பது கருத்து.

106 திரட்டப்பட்டிருப்பினும் அப்படையைப் பிறனொருவன் பொருளைக் கொடுத்துத் தனக்கு வயமாக்கிக்கொள்கிறான் என்பது கருத்து.

107 பொருட் பேறின்மை காரணமான கோபத்தால் எனக் கூட்டுக.

108 எல்லாச் சிற்றரசர்களையும் எதிர்த்தல் என்ற காரியத்திற்குச் சாதக மாயுள்ளதும் என்க.

109 படைக்கு முற்கூறப்பட்ட சிறப்புடைமை, இடங்காலங்களை யநு சரித்துப் பொருளுக்கும் பொதுவானது என்பதைக் கூறுகின்றார். இடம் முதலியவை காரணமாகச் சிலபோது பொருளும், சிலபோது படையும் காரியத்திற்குச் சாதகமாகும் என்பது கருத்து.

110 இவ்வாறிருப்பினும் படையைக்காட்டிலும் பொருளுக்குச் சிறப்புக் கூறுகின்றார்.

111 வேறொரு உபாயத்தாலடைந்த பொருளைக் காத்தற்குப் படை துணையாக நிற்பது என்பது.

112 காரணமுமாம், காப்பதுமாம் என்க.

113 இதுகாறும் கூறியவாற்றாற் கிடைத்த கருத்தைக் கூறுகின்றார். பொருட் பிரகிருதிகளெல்லாவற்றிற்கும் உரியசெயலை நிறைவேற்றுதற்குப் பொருள் காரணமாதலால், பொருள்விதனமே சிறந்தது என்பதாம்.

114 ஏழாவதும் உத்தவருடையதுமான ஒரு கொள்கையைக் கூறுகின்றார்.

115 எனவே........பொருள், நட்பு, படை........என்ற முறையை மேற்கொள்ளல் வேண்டும் என்பது.

116 தலைவனால் கவனிக்கப்படாத நிலையிலும் என்பது. எனவே, வேதனத்தினாலும், நேரிலிருந்து இயங்கச்செய்தலாலுமே படை, செயல் புரியும் என்பது பெற்றாம்.

நண்பர் தொழில் புரிகின்றனர். [117]பின்னணியைப் பற்றுபவன், [118]நட்புப்படை, பகைவன், காட்டில் வாழ்பவர் என்பவருக்கு மாற்றத்தையும் செய்வர். [119]விதன நிலையிற் சேர்ந்து பொருள் படை [120]நிலங்களால் உதவியும் புரிகின்றனர் என்க.

அன்றென்பர் கௌடலியர். [121]படையுள்ளவனுக்கு நண்பன் நட்புத்தன்மையிலும் பகைவன் பகைமையிலுமிருக்கின்றனர். [122]படை நட்பு என்பவற்றின் செயல்கள் வன்மைபற்றிப் பொதுவாயினும் தன் போர்க்குரிய இடம் காலங்களை யடைவதால் சிறப்பாம். [123]விரைவின் மேற்சேறல், பகைவர் காட்டில் வாழ்வோர் உள்ளிருப்போர் என்னுமிவர்களின் கலாம் இவற்றில் நண்பர் உதவுதலிலர். [124]விதனம் ஒரே காலத்தில் நிகழினும் [125]பிறனுடைய மிகுதியிலும் [126]நண்பன் பொருணசையில் இருக்கிறான்.

---

117 பின்னணியிலுள்ள பகைவன் என்ப.

118 அப்பகைவனுடைய நட்புப்படை.

119 தலைவனுக்குத் துன்பம் நேர்ந்துழி அவனை யடைந்து.

120 நிலங்களைக் கொடுத்தலால் என்பது.

121 படையுள்ள அரசனுக்கே நண்பரும் பகைவரும் இருத்தல் கூடும். படையின்றேல் நண்பர் பகைவர் என்ற வழக்கே யின்றென்பது கருத்து.

122 காரியத்தை நிறைவேற்றுதலில், வன்மையால், படை நண்பர் என்ற இருவர் ஒத்திருப்பினும், தனக்கு அநுகூலமான போர்க்குரிய நிலம் காலங்களின் பேற்றை யநுசரித்து அவற்றுள் ஒன்றைப் பிரமாணமாகக் கொள்ளுதல் என்ற சிறப்பை ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

123 இந்நிலையில் படைக்கு நண்பரைவிடச் சிறப்பொன்று கூறுகின்றார். ஒரு பகைவனைக் குறித்து விரைவின்மேற்சேறலை ஏற்கவேண்டிய நிலையிலும், பகைவர், காட்டில் வாழ்வோர், தூஷ்யர் முதலிய நாட்டு மக்கள் என்னுமிவர்கள் வெகுண்டபோது, அம்மாறுபாட்டை உடனே பரிகரிக்க வேண்டிய நிலையிலும் நண்பர் சேய்மையிலிருத்தலால் உதவிபுரிதற்கியலாதவராவர். படையாயின் அணிமையிலிருத்தல்பற்றி உதவிபுரிதற்கு வல்லதாகும் என்பது.

124 பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவர்க்கும் ஒரே காலத்தில் துன்பம் நிகழினும் என்க.

125 வெற்றிவிருப்பமுள்ளவனைக் காட்டிலும் பகைவன் மிகுதியை எய்திய நிலையிலும் என்பது.

126 நண்பர், தமக்குப் பொருட்பேற்றையே முக்கியமாகக் கருதுகின்றனர் ஆகலின், பகைவனிடமிருந்து மிகுதியான பொருளை வாங்கிக்கொண்டு அவன் பக்கத்தைச் சார்வர் என்பது கருத்து. எனவே, படை எக்காலத்தும் உதவிபுரிதல் பற்றி நண்பரைவிடச் சிறப்புற்றிருப்பதாம் எனக்கொள்ளல் வேண்டும் என்பதும், நண்பரது விதனத்தைவிடப் படையின் விதனமே சிறந்ததாம் என்பதும் பெற்றும்.

[127]பகுதிகளுடைய விதனங்களின் துணிபு கூறப்பட்ட தென்க

சுலோகங்கள்

(1) [128]பகுதிகளின் அங்கங்களுடைய விதனம் வலிதாயினும் மிகுதியாயிருத்தல், அன்பு, திண்மை என்பன செயல்களை நிறை வேற்றுவனவாம்.

(2) [129]இருவர்க்கும் விதனம் சமமாயின் [130]எஞ்சிய பகுதி

---

127 பகுதிகளின் விதனங்களுக்கு ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு துணிந்து இங்ஙனம் கூறப்பட்டதென்பது கருத்து.

128 அரசு முதலிய எழுவகைப் பகுதிகளின் விதனங்களுக்கு மேற்கூறப் பட்டதும், மேற்சேறல் முதலிய செயல்களுக்குப் பயன்படுவதுமான ஏற்றத் தாழ்வு சிலவிடத்துப் பயனற்றதாம் எனக் கூறுகின்றார். அரசின் அங்க மான அரசர் இளவரசர் முதலியோர், அமைச்சங்கமான மந்திரி ஆலோ சனைக்குழு முதலியவர், நாட்டினங்கமான உழவர் படைக்கலமுள்ளவர் முதலியோர், அரணின் அங்கமான நிலவரண் காடு முதலியன, பொருளின் அங்கமான இரத்தினம் திண்மை நொய்மைப் பொருள்கள், படையினங்க மான மூலப்படை வேதனப்படை முதலியன, நட்பினங்கமான இயற்கை யானவர், செயற்கையானவர் முதலியோர் என்ற இவர்களின் விதனங் களுக்கு ஏனையவற்றைவிடச் சிறப்பிருப்பினும், மக்கள் முதலியவர்களின் மிகுதி, தலைவனிடம் அன்பு, உயர்ந்த குணங்களுடைமை என்பன, மேற் சேறல் முதலிய காரியங்களின் சித்திக்குக் காரணங்களாம் என்பது. அஃதாமாறு :—பகைவன் அரண்விதனத்தை யடைந்தானாக, அரண்வித னத்தைவிடச் சிறந்த நாட்டுவிதனத்தை வெற்றிவிருப்பமுள்ளவன் அடை யப்பெறினும் நாட்டின் அங்கங்களுக்கு மிகுதி, அவற்றின் அன்பு முதலியன இருந்தவிடத்தும், அரணின் அங்கங்களுக்கு அவையில்லாதவிடத்தும் மேற் சேறல் முதலியவற்றை யேற்கலாம் என்பதும் அவை காரியசித்திக்கு ஏது வாம் என்பதுமாம் என்க.

129 பகைவனுக்கும் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கும் விதனம் சமமா யிருப்பின், மிகுதி, அன்பு முதலிய குணங்கள் ஒருவன்பக்கத்திலிருத்தலா லும், மற்றவன்பக்கத்திலின்மையாலும் மேற்சேறலை யேற்றல் என்ற சிறப்பைத் துணிதல் வேண்டும் என்பது கருத்து. அதாவது :—பகைவன் வெற்றிவிருப்பமுள்ளவன் என்ற இருவருக்கும் நாட்டுவிதனமுண்டான போது வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு நாட்டின் அவயவங்களின் மிகுதி, அவற்றின் அன்பு முதலியவை யிருந்தனவாகப் பகைவனுக்கு அவையில்லா தனவாயின் வெற்றிவிருப்பமுள்ளவன் மேற்சேறலை யேற்றல் வேண்டும் என்பதும், அது செயற்பயனை விளைவிப்பதாம் என்பதும் ஆம்.

130 மிகுதி, அன்பு முதலிய குணங்களின் உண்மையின்மை காரணமாக மேற்கூறப்பட்ட சிறப்பு எல்லாவிடத்தும் ஏற்கற்பாலதன்றெனக் கூறு கின்றார். ‘எஞ்சிய’ என்பது ‘எந்தப்பகுதியின் விதனமானது இருவர்க்கும்

களுக்கு முற்கூறப்பட்ட குணநிறைவில்வழி குணத்தினாலும் குறைவாலும் சிறப்பாம்.

(3) [131]ஒன்றின் விதனத்தால் எஞ்சிய பகுதியினழிவு நேரின், அவ்விதனம் தலையாயதைச்சார்ந்ததாயினும் மற்றையதைச் சார்ந்ததாயினும் சிறந்ததாம்.

எட்டாம் அதிகரணம் முதற் பிரகரணம் ‘பகுதிகளின் விதனக்குழு’ என்னும் 117-ஆம் அத்தியாயம் முற்றிற்று.

சமமானதோ, அப்பகுதியைவிட்டு மற்றைய’ என்னும் பொருட்டு. நாட்டு விதனம் சமமாயபோது பகைவனுடைய அரசு அமைச்சு முதலிய பிரகிருதி களுக்கு முற்கூறப்பட்ட குணநிறைவு இல்லாதபோதே அச்சிறப்பாம் என்பது. பகைவனுடைய மற்ற பிரகிருதிகளுக்குக் குணநிறைவிருப்பின் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு மிகுதி அன்பு முதலியவை பயனற்றனவாம் என்பது கருத்து.

[131] எந்தவிடத்தில் ஒரு பிரகிருதியைச் சார்ந்த விதனமானது எஞ்சிய பிரகிருதிகளின் அழிவுக்குக் காரணமாமோ, அவ்விதனம் முக்கியமான பிரகிருதியினுடையதாயிருந்தாலும் அல்லது முக்கியமல்லாத பிரகிருதியி னுடையதாயினும் வன்மைபற்றி அவ்விதனத்தைச் சிறந்ததெனக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

எட்டாம் அதிகரணம்—விதனம் விளம்பல்

இரண்டாம் பிரகரணம்—[1] அரசற்கும் அரசியற்குமுரிய விதனவாராய்ச்சி

நூற்றுப்பதினெட்டாம் அத்தியாயம்

[2] அரசன் அரசியல் எனப் பகுதிகள் இருவகைய.

[3] அரசனைக்குறித்து உள்நிகழும் கோபம், வெளியில் நிகழும் கோபம் (இவற்றுள் மிக்கது யாது) எனின், [4] பாம்பின் அச்சம் போன்று உள்நிகழும் கோபம் வெளியில் நிகழும் கோபத்தைவிடக்

118-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அரசன்—பட்டமளிக்கப்பட்ட தலைவன்; வெற்றிவிருப்பமுள்ளவன் நண்பன் முதலியவரின் நிலையினன். அரசியல்—ஈண்டு அதற்குரிய அமைச்சு முதலிய அங்கங்களை யுணர்த்தும். விதனங்களின் பெருமை சிறுமைகளும் களையவேண்டும் உபாயமும் கூறுவது இப்பிரகரணமாகும். அரசு முதலிய பகுதிகளை இரண்டிரண்டாக எடுத்து அவற்றின் விதனங்களுக்குச் சிறுமை பெருமைகளை முற்பிரகரணத்திற் கூறினர். ஈண்டு அரசை ஒன்றாகவும் மற்றப் பிரகிருதிகளின் குழுவினை ஒன்றாகவும் கொண்டு அவ்விதனங்களின் உட்பிரிவுகளுக்குள்ள சிறுமை பெருமைகளைக் கூறுகின்றார். இதனால் முன்னைப் பிரகரணத்தோடு இப்பிரகரணத்திற்குள்ள இயைபு புலனாதலறிக.

[2] அரசு முதலிய ஏழு பகுதிகளின் குழு அரசன் என்றும் அரசியல் என்றும் இருகூறாகப் பிரிக்கப்படும் என்பது கருத்து. அரசன்—தலைவன்; வெற்றிவிருப்பமுள்ளவன் நண்பன் என்ற இருவுருவினன். அரசியல்—அமைச்சு முதலிய ஐவகைப் பொருட்பகுதிகள்.

[3] அரசனது விதனத்துக்குக் காரணமானவையும் அரசியல்விதனங்களின் பிரிவுகளுமான இரண்டிற்குமுள்ள சிறுமை பெருமைகளை ஆராயத் தொடங்குகின்றார். அரசனைக் குறித்து அரசியலுக்கு உட்கோபம் என்றும் வெளிக்கோபம் என்றும் கோபம் இருவகையாம். அவற்றுள் முதலாவது அமைச்சர் முதலியோரது கோபம் என்றும் இரண்டாவது பகைவனது கோபம் என்றுங் கூறுப. அவ்விருவகை வெகுளிகளுள் எது வலியது என்பது ஈண்டு ஆராயப்படும் என்பது கருத்து.

[4] துணிபைக் கூறுகின்றார். நெருங்கியதொரு பாம்பினின்றும் உண்டாய அச்சத்துடன் ஒத்த தன்மையுடையதுபற்றி உள்நிகழும் கோபமானது மற்றையதைவிட மிகுந்த கெடுதியை விளைவிக்கக்கூடியது என்பது கருத்து.

குற்றமுடையதாம். [5]உள்கோபத்தைவிட உள் அமைச்சர் கோபமு மாம். [6]ஆகலின் [7]பொருள் படை என்பவற்றின் வன்மையைத் தன்னிடத்து நிலையுறச்செய்தல் வேண்டும்.

[8]இரு அரசுடைமை, அரசின்மை என்பவற்றது (ஆராயப் படும்). இரு அரசுடைமை பக்கங்களிடையே ஒன்றுக்கொன்று வெறுப்பு அன்பு என்பவற்றாலாதல், ஒன்றுக்கொன்று பொருமை யாலாதல் அழியும். [9]அரசின்மையாயின் மக்களின் உள்ளக் கருத்தைப் பின்பற்றி இருந்தவண்ணம் பிறரால் நுகரப்படுகிறது என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [10]தந்தை புதல்வர் என்போரை யாதல் உடன்பிறந்தாரையாதல் சார்ந்த இரு அரசுடைமையானது ஒத்த ஏமநலங்களை யுடையதாயும் அமைச்சரால் தடைப்பட்ட

---

[5] உட்கோபத்திலும் ஒரு விசேடத்தைக் கூறுகின்ருர். உள் அமைச் சரின் கோபம் என்றும் வெளியமைச்சரின் கோபம் என்றும் உள்நிகழும் கோபம் இருவகைப்படும். அவற்றுள் முதலாவது பின்னையதைவிடத் தீங்கை விளைவிப்பதாம் என்பது கருத்து.

[6] ஆகலின்—மேற்கூறப்பட்ட இரு கோபங்களும் மிகுதியாகத் தீங்கை விளைவிப்பதாகலின்.

[7] அக் கோபங்களைத் தணித்தற்குச் சாதனங்களான பொருள் படை என்னுமிவற்றை நன்கு பயன்படுத்தற்குரிய ஆற்றலைத் தனக்கு வயப்பட்ட தாகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[8] இதுகாறும் அரசியலின் கோபத்தால் உண்டாய அரசவிதனத்தை யும், அதன் மாற்றத்திற்குரிய கருவியையுங் கூறிஞர். இனி அரசன்காரண மாக அரசியற்குண்டாம் விதனத்தைக் கூறுகின்ருர். இருதலைவரையுடைய தாயிருத்தல், தலைவனற்றிருத்தல் என்னுமிவற்றிற்குச் சிறுமை பெருமைகள் ஆராயப்படும் என்பது கருத்து.

[9] தலைவனற்றிருத்தலிற் குணத்தைக் கூறுகின்ருர். குடிமக்களின் கருத்துக்கேற்பச் செயல்புரிதல் நிகழ்வதால் ஒருவராலும் கலக்குண்ணுத வாறு அக்குடி மக்களால் அநுபவிக்கப்படுகிறது. எனவே தலைவனற்றிருத் தலைவிட, இரு தலைவரையுடைமை குற்றமுடைத்தென்பது கருத்து.

[10] தாயப்பொருளுக் குரியரான தந்தை புதல்வர் என்னுமிருவர்க்கும், உடன்பிறந்தோர் இருவர்க்குமிடையே ஒருவரோடொருவர் பகைமை கொண்டது காரணமாக இரு தலைவரையுடைமை என்பது ஏற்படுகிறது. ஆண்டு ஏமநலங்கள் ஒன்ருயிருத்தல் பற்றி நாட்டின் ஏமநலத்தைக் கண் காணிப்பதில் துணைவராயுள்ள அமைச்சர் முதலியோரால் இரு தலைவரை யுடைமை தடுக்கப்படும் ஆதலின், அதில் மிகுதியான குற்றம் உண்டெனக் கருதுதற்கில்லை என்பது.

தாயும் நடைபெறும் என்க. [11] அரசின்மையிலாயின் உயிர்வாழும் பிறனிடமிருந்து கவர்ந்து 'இது எனக்குரியதன்று' என்று கருதித் துன்புறுத்துகிறான், வெளியேற்றுகிறான், விலைப்பண்டமாகவாதல் செய்கிறான், அல்லது வெறுப்புற்ற அதனைவிட்டு விலகிவிடுகிறான் என்க.

[12] குருடனான அரசனா? [13] நூன்முறையைப் பிறழ்ந்து நடப்பவனா? (சிறந்தவன் யாவன்) எனின், [14] நூற்கண்ணற்ற குருடன் [15] ஏதேனுமொன்றைச் செய்பவனாகவாதல், [16] மாற்றவியலாத ஈடுபாட்டை யுடையனாகவாதல் [17] பிறரால் செலுத்தற்குரியனாக வாதல் அரசை அறத்திற்கு மாறாக அழிக்கிறான். [18] நூன்முறையைப் பிறழ்ந்து நடப்பவனாயின் எங்கு நூலினின்றும் பிறழ்ச்சியுள்ள அறிவையுடையனோ (அங்கு) எளிதில் வயப்படுத்தற்குரியனாகிறான் என்பர் ஆசிரியர்.

---

11 அரசின்மையிலோவெனின் பெருங்குற்றமுண்டாகும் எனக் கூறுகின்றார். வெற்றிவிருப்பமுள்ள அரசன், உயிர்வாழ்ந்திருக்கும் பகைவனை மதியாது அவனது நாட்டை வலிந்து கவர்ந்து, பின்னர் அந்நாட்டில் தன்னுரிமையைக் கருதாதிருப்பின், அதுபோது அதைத் தண்டம் உல்குகளால் துன்புறுத்துதல், வேற்றிடத்திற்கு அனுப்புதல், விலைப்பொருளைப் பெற்று யாரேனுமொருவனுக்கு விற்றல் முதலியவற்றைச் செய்கிறான். தன்பால் அந்நாடு வெறுப்புற்றிருப்பின், அங்குள்ள திண்மைப்பொருளனைத்தையும் கவர்ந்துகொண்டு அதைவிட்டு விலகுகிறான் என்பது காரணமாகப் பெருந்துன்பமுளதாம் என்க.

12 அரசியல்விதனத்தின் உட்பிரிவைப்பற்றி ஆராய்கின்றார். குருடன்—ஈண்டு நூலைக் கல்லாதவன்.

13 நூலைக் கற்றிருப்பினும், அந்நூலை யநுசரித்தொழுகாத அரசன். இவ்விரு அரசர்களுள் சிறந்தவன் யாவன் என்பது ஆராய்ந்து துணியப்படும் என்பது கருத்து.

14 இவ்விஷயத்தில் துணிபை ஆசிரியர்கொள்கைக்கேற்பக் கூறுகின்றார். நூற்கண்—நூலாகிற கண்; உருவகம்.

15 பகுத்தறியாது செய்பவன்.

16 தீயசெயலில் ஈடுபட்டபோது எவராலும் அதனினின்றும் விலக்க இயலாதவன் என்பது.

17 பிறர் கருத்திற்கேற்பச் செயல்புரிபவன்.

18 எந்தச்செயல் அறத்திற்கு முரண்பட்டதோ, அச்செயலை அவன் புரியாவாறு இன்சொல் முதலியவற்றால் அச்செயலினின்றும் தடுத்தற்குரியனவான் என்பது கருத்து.

[19]அன்றென்பர் கௌடலியர். குருடனான அரசன், [20]துணைவரின் நிறைவால் [21]ஏதேனுமோரிடத்து நிலைப்படுத்தற்குரியனாகின்றான் என்க. [22]நூன்முறையைப் பிறழ்ந்தொழுகுபவனாயின் நூலுக்கு முரணாக ஈடுபட்ட அறிவுடையனாய் மறத்தால் அரசையும் தன்னையும் கெடுக்கின்றான் என்க.

நோய்வாய்ப்பட்ட அரசனா? புதிய அரசனா? (மிக்கவன்யாவன்) [23]எனின், நோய்வாய்ப்பட்ட அரசன், அமைச்சர்காரணமான அரசுத் தீங்கையாதல் அரசுகாரணமான [24]உயிர்க்கேட்டையாதல் எய்துகின்றான். புதிய அரசனாயின் [25]மக்களை இன்புறுத்தற்குரிய உபாயங்களான [26]தன்னறம், [27]அருளுதல், [28]இறையிலி, [29]கொடை, கௌரவித்தல், [30]செயல்கள் என்னும் இவற்றால் [31]இயங்குகின்றான் என்பர் ஆசிரியர்.

---

[19] ஆசிரியரின் கொள்கையை மறுக்குமுகமாகக் கௌடலியர், தன் கொள்கையைக் கூறுகின்றார்.

[20] அமைச்சர் முதலிய துணைவரைச் சார்ந்த நுண்ணறிவு முதலிய குணங்களின் நிறைவால் என்பது.

[21] எந்த நற்செயலில் நிலைப்படச் செய்தல் வேண்டுமோ அச் செயலில் நிலைபெறச் செய்தற்கியலும் என்பது கருத்து.

[22] நூலுக்கு முரண்பட்ட செயலில் ஈடுபடுதலாலுண்டாம் குற்றத்தினால் தடுத்தற்கியலாதவனாகத் தன்னையும் அரசையும் அழியச் செய்கின்றான் என்பது கருத்து.

[23] இருவருள் எவன் மிக்கவன் என்பது ஆராயப்படின் என்பது.

[24] இவன், தன்பால் அச்சமின்மை காரணமாகத் தடையின்றி எச் செயலிலும் ஈடுபடுதற்குத் துணிந்த அமைச்சரால் உண்டாம் நாட்டுத் தீங்கையாதல், அமைச்சர் முதலிய அறுவகைப் பிரகிருதிகளால் உளதாகும் தன் உயிர்க் கேட்டையாதல் அடைகின்றான் என்பது கருத்து.

[25] தன்னாட்டு மக்கள் தன்பால் அன்புடன் கூடியிருத்தற்குச் சாதனங்களான என்க.

[26] தன்னறம்—நூலிற் கூறிய அரசர்க்குரிய அறவொழுக்கம்.

[27] அருளுதல்—தன் பொருளால் உதவுதல்.

[28] உல்கு பொருளை வாங்காது விடுத்தல்.

[29] செயல் புரிந்தோர்க்கு நிலம் முதலியவற்றைக் கொடுத்தல் என்பது.

[30] செயல்கள்—குளம், ஏரி முதலியன வெட்டுதல்.

[31] இயக்கம்—அரசாட்சி புரிதல்,

அன்றென்பர் கௌடலியர். நோய்வாய்ப்பட்ட அரசன், முன்னிகழ்ந்த அரசரது செயலைத் தொடர்கிறான். புதிய அரசனாயின் 'என் வன்மையினால் இவ்வரசு ஈட்டப்பட்டது' என்று விருப்பத்திற்கேற்பத் தடையின்றி இயங்குகின்றான் அல்லது [32]கூடித் தொழில் புரிபவரால் [33]கைப்பற்றப்பட்டு [34]அரசின் தீங்கைப் பொறுக்கிறான். [35]மக்கள்பால் நிலைபெறாதவன் [36]களைதற்கு எளியவனாகிறான். [37]குற்றமுள்ள நோய்வாய்ப்பட்டவன், குற்றமற்ற நோய்வாய்ப்பட்டவன் என நோய்வாய்ப்பட்டவர் இருதிறப்படுவர்.

[38]புதியவருள்ளும், குடிப்பிறப்புள்ளவன் குடிப்பிறப்பற்றவன் [39]என்க. [40]ஆற்றலற்ற குடிப்பிறப்புள்ளவனும் ஆற்றலுள்ள குடிப்பிறப்பற்றவனுமான அரசன் என்க. குடிப்பிறப்புள்ள ஆற்றலற்றவனுடைய வேறுபடுத்தலை [41]ஆற்றலின்மைபற்றி மக்கள் வருந்தி [42]ஏற்கின்றனர். குடிப்பிறப்பற்ற வலியவனுடைய வேறு

---

32 துணைவராயுள்ள சிற்றரசரால் என்பது.

33 கைப்பற்றப்படுதல் என்பது வயமாக்கப்படுதல் என்னும் பொருட்டு.

34 அச் சிற்றரசரால் ஆக்கப்பட்டதும் தன்னுட்டைச் சார்ந்ததுமான தீங்குகளுக்குப் பரிகாரஞ் செய்ய இயலாமைகாரணமாகப் பொறுத்துக் கொள்கிறான் என்பது கருத்து.

35 புதியவனானபடியால் மக்களது அன்பைப் பெறாதவன் என்பது.

36 பிறரால் எளிதில் களையப் படுதற்குரியனாவான் என்பது கருத்து. இதனால் புதியவனைவிட நோய்வாய்ப் பட்டவன் சிறப்புற்றவன் என்பது பெற்றாம்.

37 நோய்வாய்ப் பட்டவருள்ளும் குட்டம் முதலிய பெருநோயல்லாத பிற பிணியாளர் சிலரையே கொள்ளல் வேண்டுமே யன்றி அப் பெருநோயாளர்களைக் கொள்ளல் கூடாது என்பது தன் கொள்கை என வலியுறுத்துகின்றார்.

38 புதியவருள்ளும் ஏற்றத் தாழ்வினைக் கூறுதல் கருதிச் சில உட்பிரிவுகளைக் கூறுகின்றார்.

39 என்னும் இவ்விருவகையாக விசேடமுண்டென்க.

40 ஆற்றலின்றிக் குடிப்பிறப்புள்ள அரசன் சிறந்தவனா? அல்லது குடிப்பிறப்பின்றி வன்மைமிக்க அரசன் சிறந்தவனா என்று ஆராயப்படும் என்பது.

41 ஆற்றலின்மைகாரணமாகவுள்ள இகழ்ச்சியால் மக்கள் எளிதாக ஏற்பதில்லை என்பது கருத்து.

42 எனவே குடிப் பிறப்பற்றவனாயினும் வலியவனே சிறந்தவன் என்பது ஆசிரியர் கருத்து.

படுத்தலை வன்மைகாரணமாக எளிதில் ஏற்கின்றனர் என்பர் ஆசிரியர்.

[43]அன்றென்பர் கௌடலியர். குடிப்பிறப்புள்ளவனை [44]அரசுரிமை தொடர்கின்றது. ஆகலின் ஆற்றலற்ற குடிப்பிறப்புள்ளவனிடம் மக்கள் [45]தாமே [46]பணிவுடையராவர். [47]அன்புகாரணமாக எல்லாக் குணங்களுமாம். எனவே குடிப்பிறப்பற்ற வலியவனுடைய வேறுபடுத்தலை மறுக்கின்றனர்.

[48]பிடியளவை அழித்தலைவிடப் [49]பயிரையழித்தல் [50]முயற்சியினழிவுபற்றிக் குற்றமுடையதாம்.

[51]உயிர்வாழ்க்கையின்மைகாரணமாக மிகுபெயலைவிடப் பெயலின்மை [52]என்க.

---

[43] ஆசிரியர்கொள்கையைக் கௌடலியர் மறுத்துத் தன் கொள்கையைக் கூறுகின்றார்.

[44] அரசுரிமை—தலைவனுயிருத்தற்குரிய தகுதி.

[45] தாமே—பிறரால் வேண்டப்படுதலின்றி.

[46] குடிப்பிறப்பில் அன்பு கொண்டு அதுகாரணமாக வந்தடைகின்றனர் என்பது.

[47] எந்த விடத்தில் அன்புளதோ, ஆண்டு எல்லாக் குணங்களும் புலப்படும் என்பது கருத்து. எனவே குடிமக்கள் நற்குடிப் பிறப்பில் அன்பு கொண்டு அக் குடிப்பிறப்புள்ளவனிடம் எல்லா நற்குணங்களையும் காண்பாராதலின் அவனை யநுசரித்தொழுகுவர் என்பதும் குடிப்பிறப்பற்றவனிடம் அன்பின்மையால் அவனைச் சார்ந்தொழுக விரும்பார் என்பதும் கருத்து. இதுகாறும் அரசனைக் காரணமாகக் கொண்ட அரசியல்விதனம் விளக்கிக் கூறப்பட்டதென்க.

[48] இனிப் பகைப் படையைக் காரணமாகக் கொண்ட விதனத்தைக் கூறுகின்றார். பிடியளவு—ஈண்டு பிடியளவாக எடுத்து விதை விதைக்குந் தொழிலைக் குறிக்கும்.

[49] பயிரை—விளைந்த பயிரை.

[50] மேற்கூறிய இரு வகையிலும் கூலத்தைப் பெருமை என்பது சமமாயினும், நீர்பாய்ச்சுதல், கண்காணித்தல் முதலிய செயல்களாலுண்டான உடலுழைப்பு வீணாகிப் போதற்குக் காரணமாதல்பற்றிப் பின்னையதை மிகக் குற்றமுடைத்தென்றார் என்க.

[51] தெய்வத்தால் நிகழ்ந்த விதனத்தைக் கூறுகின்றார். நீர்காரணமாக உண்டாம் உயிர்வாழ்க்கையின் அழிவுக்குக் காரணமாதல் பற்றிப் பெயலின்மை, பின்னையதைவிட மிகக் குற்றமுடைத்தென்பது கருத்து.

[52] என்க என்பது ஆராய்ச்சியின் முடிவைக் குறிப்பது.

சுலோகம்

[53]பகுதிகளுள் இரண்டிரண்டினுடைய **விதனங்களுக்கு** வன்மை மென்மை காரணமாக [54]மேற்சேறலுக்கும் இருத்தலுக்கு முரிய காரணம் நிரலே கூறப்பட்டது.

எட்டாம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம் ' அரசற்கும் அரசியற்குமுரிய விதனவாராய்ச்சி ' என்னும் நூற்றுப்பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

53 இரண்டிரண்டு பகுதிகளுள் ஒன்றுக்கொன்று சிறுமை பெருமைகள் ஆராய்ந்து துணியப்பட்டன. இத்துணிபு எங்கு பயன்படும் என்பதைக் கூறுகின்றார்.

54 பகைவனது விதனத்தைவிடத் தன் விதனம் சிறியதாயின் அச் சிறுமை, வெற்றிவிருப்பமுள்ளவன் மேற்சேறற்குக் காரணமாம் என்பதும், பெரியதாயின் அப்பெருமை, அவன் இருத்தலை ஏற்றற்குக்காரணமாம் என்பதும் கருத்து. இங்ஙனம் மேற்சேறற்கும் இருத்தற்கும் ஒரு வரையறை உண்டுபண்ணுதலால் இதுகாறும் ஆராய்ந்து துணியப்பட்ட சிறுமை பெருமைகள் நன்கு பயன்படுகின்றன என்பது கருத்து.

எட்டாம் அதிகாரணம்—விதனம் விளம்பல்

மூன்றும் பிரகரணம்—[1]புருடவிதனக்குழு

நூற்றுப்பத்தொன்பதாம் அத்தியாயம்

[2]கல்விப்பயிற்சியின்மை புருடவிதனக் காரணமாம். [3]என்னை? பயிற்சியற்றவன் விதனக்குற்றங்களைக் காண்பதில்லை ஆகலின்.

[4]அவற்றைக் கூறுவாம். மூன்றின் குழு கோபத்தால் உண்டானதாம். நான்கின் குழு காமத்தால் உண்டானதாம்.

[5]அவற்றுள் கோபம் மிக்கதாம் [6]என்னை? எங்கும் கோபம்

119-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பொதுவாக எல்லாப் புருடர்களுக்கும் நிகழும் விதனங்கள், விதனங் களால் உண்டாம் குற்றங்கள் அவற்றின் குழு ஆகிய இவற்றைப் பற்றியன இவ்வத்தியாயத்திற் கூறப்படும். புருடற்குரிய விதனங்களாவன:-வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டம் சூது பொருளீட்டங் கட்காமமோடேழு' மாம். இவை விருப்பு வெறுப்புக்களா லுண்டாவன.

[2] புருடர்க்குரிய விதனத்துக்குக் காரணங் கூறுகின்றார்; கல்வி—தருக்க நூல் (ஆன்வீக்ஷிகீ) முதலியன.

[3] காரணமாந் தன்மையை விளக்குகின்றார். விதனங்களால் உண்டாம் குற்றங்களை யறியாமையால் புருடனுக்கு விதனங்களில் ஈடுபாடுண்டா கின்றது. அவ் வறியாமைக்குக் கல்விப் பயிற்சியின்மை காரணமாம் என்க.

[4] கூறத் தொடங்கிய அவ் விதனக்குற்றங்களைக் கூறுகின்றார். அவற் றுள் கடுஞ்சொல், பொருட் கேடு, கடுந்தண்டம் என்பன மூன்றின் குழு வாம். வேட்டை, சூது, மகளிர், குடி என்பன நான்கின் குழுவாம். இரு குழுக்களுஞ் சேர விதனக்குற்றங்கள் ஏழாகும் என்றறிதல் வேண்டும்.

[5] இரு குழுக்களுக்குக் காரணங்களான காமம் கோபம் என்ற இரண்டனுள் என்பது.

[6] மிக்கதாதற்குரிய காரணத்தைக் கூறுகின்றார். கோபம் எல்லாப் பொருளையும் பற்றி வரக்கூடியது. மகளிர் முதலிய வரையறுக்கப்பட்ட சில பொருளையே பற்றி நிகழக் கூடியதாகலின் காமம் அவ்வாறின்று. எனவே சில பொருளையே பற்றி வரும் காமத்தைவிட எல்லாப்பொருளையும் பற்றி யுண்டாம் கோபம் மிக்கது. ஆகலின் அதுகாரணமாயுண்டாம் முக் குழுவும் மிக்கதென்பது கருத்து.

இயங்குகிறது. [7]கோபத்துக்கு வயப்பட்ட அரசர், மக்களது கோபத்தாலும் காமத்துக்கு வயப்பட்டவர், கேடு செலவுகள் காரணமாகப் பகைவர், நோய் என்பவற்ருலும் அழிக்கப்பட்டவ ராகப் பேசப்படுகின்றனர் ஆகலின் என்க.

[8]அன்றென்பர் துரோணர். [9]கோபம் நன்மக்களின் இயல் பாம். [10]பகைமையைத் தீர்த்தல், [11]இழிவின் அழிவு, [12]அச் சுறுத்தப்பட்ட மக்கட்டன்மை என்பனவும் (அவர்தம் இயல்பு) [13]ஆம். [14]தீயவரைத் தடுத்தற்பொருட்டுக் கோபத்தின் தொடர்பு நிலைத்தற்குரியதாம். [15]காமம் பயனது பேருகும். [16]உண்மை, [17]கொடையியல்பு, இனியவனுயிருத்தல் என்பனவும் [18]ஆம்.

---

[7] வேருெரு காரணங் கூறுகின்ருர். பொருள்படைகளின் குறைவு காரணமாகவும் உடல்மெலிவுகாரணமாகவும் பகைவராலும் நோய்களா லும் அழிவெய்தியவராகக் கூறப்படுகின்றனர். எனவே, பகைவர் நோய் என்பவற்ருல் உண்டாம் அழிவைவிடக் கடுமையான மக்களது கோபத்தா லுண்டாம் அழிவுக்குக் கோபம் காரணமாகிறது என்ற காரணத்தாலும் கோபம் மிக்கதென்பது கருத்து.

[8] 'கோபமும் காமமும் குற்றங்களாகா' என்று துரோணர் கருதுகிருர் என்பது கருத்து.

[9] அதற்குக் காரணத்தை விளக்கிக் கூறுகின்ருர்.

[10] கோபத்தாலுண்டாம் பயன்களுள் ஏற்பதற்குரியதனைக் கூறுகின் ருர். பகைமையைத் தீர்த்தல்—தனக்கும் பிறனுக்குமிடையே உண்டான பகைமையைக் கோபத்தால் போர் முதலியன செய்தோ, பிறன் சந்தியை யேற்றவழி சந்தி செய்தோ தீர்த்துவிடல்.

[11] பிறரால் தனக்குண்டான இழிவைத் தடுத்தல் என்பது.

[12] எவன்பால் தீமையை விளைக்க மக்கள் அஞ்சுகின்றனரோ அவ னுடைய தன்மை என்பது.

[13] என்ற விவை கோபத்தினுல் விளைகின்றன என்பது கருத்து.

[14] தீயவரை விலக்குதற் பொருட்டுச் சான்ருேர் கோபத்தை யேற்றல் மறுத்தற்குரியதன்றென்பது கருத்து.

[15] காமத்தைப் பற்றிக் கூறுகின்ருர். காமம் இன்பப் பேற்றுக்குக் காரணமாம் என்பது.

[16] அதைச் சார்ந்துள்ள மக்கட் குணங்களைக் கூறுகின்ருர். உபலக் கணத்தால் 'உண்மை' என்பதால் இன்சொல்லையும் கொள்க.

[17] சிறந்த கொடையைச் செய்யுமியல்பு.

[18] உண்டாகின்றனவாம் என்பது.

[19]செய்யப்பட்ட தொழில்களின் பயனை நுகர்தற் பொருட்டுக் காமத்தின் தொடர்பு நிலைத்தற்குரியதாம்.

[20]அன்றென்பர் கௌடலியர். [21]வெறுக்கப்படுதல், [22]பகைவர்ப்பேறு, துன்பத்தின் தொடர்பு என்பன [23]கோபமாம். [24]அவமானம், [25]பொருளழிவு என்பனவும், கள்வர், சூதாடுவோர், [26]வேடர், [27]இசைபாடுவோர், [28]வாச்சியம் வாசிப்பவர் என்ற தீங்கிழைப்பவர்களது தொடர்பும் [29]காமமாம்.

[30]அவமதிக்கப்பட்டவன் தமராலும் பிறராலும் [31]கைப்

---

[19] ஒரு முயற்சியை ஏற்ற மனிதன் அதன் பயனை யநுபவித்தற்காகக் காமத்தை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததொன்றும் எனக் கூறுகின்றார்.

[20] மேற்கூறிய துரோணருடைய கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறுகின்றார். மேற்கூறியவாறு காமம் கோபம் என்பன குணங்களாகா; அவை குற்றங்களேயாம் என்பது.

[21] கோபத்தாலுண்டாம் பெருந் தீமைகளைக் கூறுகின்றார். எல்லோராலும் வெறுக்கப்படுதற்குரியராந் தன்மை என்பது.

[22] மக்கள் பலரைப் பகைவராகப் பெறுதல் என்பது.

[23] 'நெய்யே உயிர்' என்ற வழக்குப் போல, காரிய காரணங்களுக்கு வேறுபாட்டைக் கருதாது உபசரித்துக் கூறும் வழக்காம். எனவே வெறுக்கப்படுதல் முதலியவற்றிற்குக் கோபம் காரணமாம் என்பது கருத்து.

[24] கோபத்தால் உண்டாம் முக் குழுவைப்பற்றி இதுகாறும் கூறி, இனிக் காமத்தால் உண்டாம் முக் குழுவைப் பற்றிக் கூறுகின்றார். அவமானம்—தகா வழியிற் செல்லுதலால் பெருமை குறைதல்.

[25] பொருளழிவு—தகாத வழிகளில் மிக அதிகமாகச் செலவிடுதலால் ஆவது.

[26] வேட்டையில் துணை புரிபவர்.

[27] இசை—வாய்ப் பாட்டு.

[28] வீணை முதலியவற்றை வாசிப்பவர்.

[29] அவமானம் முதலியவற்றின் உருவமாகக் காமம் உளதென்பது. எனவே தீமைக்குக் காரணமாதல் பற்றிக் காமம் கோபம் என்பவற்றுக்குக் குற்றமாந் தன்மை வலியுறுத்தப் பட்டதென்க.

[30] முற் கூறியபடி கோபத்தாலுண்டாம் முக் குழுவுக்கும் காமத்தாலுண்டாம் முக்குழுவுக்கும் ஒன்றுக்கொன்று சிறுமை பெருமைகளை ஆராயு முகமாகக் கோபத்திற்குக் காமத்தைவிட முற்கூறப்பட்ட மிகுதியை நிலைப் படுத்துகின்றார்.

[31] கைப்பற்றப்படுதல்—தன்வயமாக்கப்படுதல்.

பற்றப்படுகிறுன். வெறுக்கப்பட்டவன் [32]களையப்படுகிறுன் என்பதுபற்றி [33]அவற்றுள் [34]அவமானத்தைவிட வெறுக்கப்படுதல் மிக்கதாம். [35]பொருளழிவு கருவூலத்தின் கேட்டிற்குக் காரணமாம். பகைவர்ப்பேறு உயிர்க்கேட்டுக்குக் காரணமாம் என்பது பற்றிப் பொருளழிவைவிடப் பகைவர்ப்பேறு மிக்கதாம். [36]தீங்கிழைப்பவற்றுடன் தொடர்பு சிறிதுகாலம் இன்பத்தைப் பயப்பது. துன்பங்களுடன் தொடர்பு நீண்டகாலம் வருத்தத்தைக் கொடுப்பது ஆகலின் தீங்கிழைப்பவற்றின் தொடர்பைவிடத் துன்பத்துடன் தொடர்பு மிக்கதாம். [37]ஆதலால் கோபம் மிக்கது.

[38]கடுஞ்சொல், பொருட்கேடு, கடுந்தண்டம் [39]என்பன (கூறுவாம்). [40]கடுஞ்சொல் பொருட்கேடு என்பவற்றுள் கடுஞ்சொல்

---

[32] நாட்டினின்றும் துரத்தப்படுகிறுன்.

[33] அவற்றுள்—அவ் விருகுழுவினுள்.

[34] காமத்தாலுண்டாய முக்குழுவில் முதலாவதான அவமானத்தைவிடக் கோபத்தாலுண்டாய குழுவில் முதலாவதான வெறுக்கப்படுதல் என்பது மிக்கதென்பது.

[35] காமத்தாலுண்டாம் முக்குழுவில் இரண்டாவதாக உள்ள பொருளழிவு என்பதைவிட, கோபத்தாலுண்டாம் முக்குழுவில் இரண்டாவதாக உள்ள பகைவர்ப் பேறு என்பது மிக்கதாம். அதாவது:— பொருளழிவானது கருவூலத்திற்கு மட்டும் தீங்கை விளைப்பது. பகைவர்ப் பேருயின் உயிர்க்கே கேட்டை விளைவிப்பதாம். எனவே முன்னையதைவிடப் பின்னையது மிக்கதென்பது.

[36] காமத்தாலுண்டாம் குழுவில் மூன்ருவதான தீங்கிழைப்பவற்றுடன் தொடர்பு என்பதைவிடத் துன்பங்களுடன் தொடர்பு என்பது மிக்கதென்பது. முன்னையது இறுதியில் துன்பத்தைப் பயப்பதாயினும் சிறிது நேரமாவது இன்பத்தை விளைவிப்பதாம். பின்னையதாயின் சிறிதேனும் இன்பமின்றி நெடுங்காலம் வருந்துதற்குக் காரணமாம் என்க.

[37] காமத்தாலுண்டாய முக்குழுவை விடக் கோபத்தாலுண்டாய முக்குழு மிக்கதெனவே காமத்தைவிடக் கோபம் மிக்கதென்பது கருத்து.

[38] 'மூன்றின் குழு கோபத்தாலுண்டானதாம்' என்று முற்கூறப்பட்ட மூன்றின் குழுவில் ஒன்றுக் கொன்று சிறுமைபெருமைகளை ஆராய்கின்ருர்.

[39] என்னுமிவை கோபத்தாலுண்டாய முக்குழுவென்க.

[40] அக் குழுவில் முதலிரண்டினைப் பற்றிய துணிபை விசாலாக்கர் கொள்கைப்படி கூறுகின்ருர்.

மிக்கதென்பர் விசாலாக்கர். [41]கடுஞ்சொற் சொல்லப்பட்ட தோற்றப் பொலிவுள்ளவன் தோற்றப் பொலிவால் எதிர்க்கின்ருன். [42]கடுஞ்சொல்லாகிய முள் மனதில் தைத்து வன்மைக் கிளர்ச்சிக்குக் காரணமாய்ப் பொறித்துன்பத்தைச் செய்வதாம்.

[43]அன்றென்பர் கௌடலியர். [44]பொருளாற் சிறப்பித்தல் சொல்முள்ளைக் களைந்துவிடுகிறது. [45]பொருட்கேடு, வாழ்க்கை யழிவாம். பொருளைச்சார்ந்த [46]கொடாமை, [47]ஏற்றல், [48]அழிவு [49]விடுதலை என்னும் [50]இவை பொருட்கேடாம்.

[51]பொருட்கேடு, கடுந்தண்டம் என்னுமிவற்றுள் பொருட்

---

41 கடுஞ் சொற்களால் இழிவுசெய்யப்பட்டவனும் தனக்குண்டாம் இழிவைப் பொருத இயல்புள்ளவனுமான தோற்றப் பொலிவுள்ளவன், அவ்வாறு தன்னை இழிவு செய்தவனைக் குறித்து எதிர்க்கிருன் என்பது கருத்து.

42 கடுஞ் சொல்லாகிற முள் மனதில் தைத்தபோது ஒளியைத் தூண்டுவதுடன் இந்திரியங்களுக்குக் கொதிப்பைக் கொடுக்கக் கூடியதாம் என்பது.

43 மேற் கூறிய விசாலாக்கரின் கொள்கையைக் கௌடலியர் மறுத்துக் கூறுகின்ருர்.

44 பொருளால் கௌரவித்தல், இழிசொற் காரணமாகவுள்ள மனத் துன்பத்தை நீக்கிவிடுகிறது.

45 சொல்லால் கௌரவித்தல், பொருட் கேட்டை நீக்கவல்லதன்று. பொருட் கேடானது, வாழ்க்கையைச் குலைப்பதற்குக் காரணமாமெனக் கூறுகின்ருர்.

46 கொடாமை முதலிய பொருட் கேட்டின் பிரிவுகளைக் கூறுதல், அந் நான்கு பிரிவுகளிலும், வாழ்க்கை யழிவுக்குக் காரணமாந் தன்மையுளது என்பதை விளக்கமாக அறிவுறுத்தற் பொருட்டென்க. கொடாமை-செயல் புரிந்தவர்க்கு வேதனத்தைக் கொடாதிருத்தல்.

47 ஏற்றல்—தண்டம் முதலியவை மூலமாகப் பொருளைப் பற்றுதல்.

48 நாட்டைத் துன்புறுத்தல் என்பது.

49 பாதுகாக்க வேண்டியதைக் காவாமை என்பது.

50 நால்வகைப்பட்ட இவை என்க. எனவே பொருட்கேடே மிக்கதென்பது கருத்து.

51 பொருட்கேடு, கடுந்தண்டம் என்னுமிவற்றுள் முன்னையது மிக்கது என்ற கொள்கையைக் கூறுகின்ருர்.

கேடு மிக்கதென்பர் பராசரரைச் சார்ந்தோர். [52]அறம் காமம் என்பன பொருளைக் காரணமாகக் கொண்டன. உலகம் பொருட் டொடர்பால் இயங்குகின்றது. அதைத் தடைசெய்தல் மிக்க தென்க.

அன்றென்பர் கௌடலியர். [53]மிகப்பெரிதாயினும் பொருள் காரணமாக எவனும் உடலழிவை விரும்பமாட்டான். அதே கெடுதலைக் கடுந்தண்டத்தால் பிறரிடமிருந்து அடைகிறான். [54]கோபத்தாலுண்டான மூன்றின்குழு இவ்வாறும்.

காமத்தாலுண்டானதோவெனின் (இனிக் கூறப்படும்). [55]வேட்டை, சூது, மகளிர், குடி என்பன நான்கின் குழுவாம். [56]அதன்கண் வேட்டை சூது என்பவற்றுள் வேட்டை மிக்க தென்பர் நாரதர். [57]அதில் [58]உயிர்க்கேடான கள்வர், பகைவர், கொடியவிலங்கு, காட்டுத்தீ, [59]பிறழ்ச்சி இவற்றினின்றும் [60]அச்

---

52 அறமும் காமமும் பொருளாலுண்டாவனவாகலானும் பொருளின் உண்மை யின்மைகளைச் சார்ந்து உலகியல் நடைபெறுவதாலும் பொருள் இன்றியமையாதது என்பதால் அப் பொருளின் தடை (அழிவு) கடுந்தண் டத்தைவிட மிக்கதென்பது கருத்து.

53 மிகப் பெரிய பொருட்பேறு காரணமாயும் ஒருவராலும் விரும்பப் படாததும், ஆராயுமிடத்து அத்துணைப் பொருளின் அழிவாலும் எல்லோ ராலும் பரிகரித்தற்குரியதும் ஆகிய உடலழிவைக் கடுந் தண்டம் விளைக் கின்றது ஆகலின் கடுந் தண்டமே பொருட்கேட்டை விட மிக்கதென்பது கருத்து.

54 கோபத்தால் உண்டான முக்குழுவில் ஒன்றுக்கொன்று சிறுமை பெருமைகள் இங்ஙனம் துணியப்பட்டன என்பதாம்.

55 காமத்தால் உண்டான நான்கின் குழுவில் மூவகை இரட்டைகளைக் கூறுபடுத்தி ஒவ்வொன்றின் அவயவங்களுக்கும் ஒன்றுக் கொன்று ஏற்றத் தாழ்வைத் துணியப் போவதற்காக, முன்னர் அந் நான்கினைக் கூறுகின்றார்.

56 முதலிரட்டையின் மிக்கதனை நாரதர்கொள்கைக் கேற்பக் கூறு கின்றார்.

57 அதில்—வேட்டையில்.

58 உயிர்க் கேடு என்றது ஈண்டு உயிர்க் கேட்டுக்குக் காரணங்களை யுணர்த்தி நின்றது.

59 செல்லுதல் முதலியவற்றைக் கவனியாமை.

60 தீங்குண்டாம் என்ற அச்சம்.

சம், திசைமயக்கம் என்பனவும் பசி தாகங்களும் [61]உளவாம். [62]சயச்சேனன் துரியோதனன் போன்ற காயறிவுள்ளவரால் சூதில் வெற்றி பெறப்பட்டதென்க.

அன்றென்பர் கௌடலியர். [63]அவர்களுள் ஒருசார்புக்குத் தோல்வியுண்டென்பது நளன் தருமன் என்னுமிவரால் விளக்கப் பட்டது. [64]அவ் வெற்றிப்பொருளே நுகர்ச்சிப் பொருளாம். பகைமைக்காரணம், நல்லபொருளுக்கு மாற்றம், தீயதை ஈட்டல், நுகரப்படாதழிதல், சிறுநீர்மலங்களைத் தடுத்தல், பசி முதலியவை களால் நோயின்பேறு என்னுமிவை சூதாட்டத்தால் உண்டாம் குற்றங்களாம். [65]வேட்டையிலாயின் உடற்பயிற்சி, [66]ஐ, பித்து, [67]மேதை, [68]வேர்வை என்னுமிவற்றின் அழிவு, [69]இயக்கம்,

---

61 வேட்டையால் மேற் கூறியவை உண்டாகின்றனவாமென்பது.

62 சூதாட்டத்தில் தேர்ச்சி பெற்றவராயின் வெற்றியை யடைதல் நிச்சயம் என்பது. அதற்கு உதாரணமாக ஜய்த்ஸேனன் துரியோதனன் முதலியோரை எடுத்துக் காட்டினார்.

63 வேட்டை போன்று சூதாட்டத்திலும் குற்றமுண்டெனக் கூறுகின்றார். ஒருவருக்கு வெற்றியுண்டாவது போன்று மற்றவருக்குத் தோல்வியும் ஏற்படுவது இயல்பாம் என்பது கருத்து.

64 வெற்றிப் பொருள் எல்லாராலும் நுகர்தற்குரியதாவது, தோல்வியுற்றவன் வென்றவனுடன் வெறுப்புக் கொள்ளுதல், நல்வழிவந்ததும் முன்னர் ஈட்டப்பட்டதுமான பொருளைத் தகாவழியிற் செலவிடுதல், தூய்மையற்ற வழியில் வந்த தீய பொருளைச் சூதைக் கொண்டு பெறுதல், சூதால் பெறப்படினும் நுகரப்படாமலே மீண்டும் சூதாட்டத்தால் அப் பொருளைக் கவர்தல், மூத்திரத்தை யடக்குதல், மலத்தையடக்குதல், பசி, தாகம் என்னுமிவற்றால் நோயை யடைதல் என்னுமிவை சூதாட்டத்தாலுண்டாம் குற்றங்களாம் என்பது கருத்து.

65 இதுகாறும் சூதில் உண்டாங் குற்றங்களைக் கூறி, இனி வேட்டையால் உண்டாம் நன்மைகளைக் கூறுகின்றார்.

66 ஐ—சிலேஷ்மம். சிலேஷ்மம் பித்தம் என்பவைகளுடைய குற்றத்தின் அழிவு என்பது.

67 மேதை—மாமிசத்தின் வளர்ச்சிக்குக் காரணமான பொருள்.

68 வேர்வையினழிவு — மிகுந்த சிரமமுண்டானபோதும் வேர்வை யடையாத உடற்றன்மை.

69 இயங்குவதும் நிலையானதுமான உடலைக் குறிபார்த்து அடிப்பதற்குரிய பயிற்சி என்பது.

நிலைகளையுடைய உடல்களில் இலக்குப்பயிற்சி, [70]கோபம் அச்சங்களுக்குக் காரணமான தொழில்களில் விலங்குகளின் கருத்தை யறிதல், [71]நித்தியமல்லாத செலவு என்பவையுமாம்

[72]சூது, மகளிர் என்னும் விதனங்களுள் சூதுவிதனம் (மிக்கது) என்பர் வீடுமர். [73]எப்பொழுதுமுண்மைபற்றி கயவன் இரவில் விளக்கிலும், தாய் இறந்தவிடத்தும் விளையாடுதலைத் தவிரான். துன்பநிலையில் வினவப்பட்டு வெகுள்வான். [74]மகளிர் விதனத்திலாயின் நீராடுதல், அணிதல், உணவு என்பவற்றிற்குரிய இடங்களில் அறம் பொருள்களைப்பற்றிய கேள்வி நிகழ்தல்

---

70 கோபத்தைக் காரணமாகக் கொண்ட செயல்களிலும் அச்சத்தைக் காரணமாகக் கொண்ட செயல்களிலும் விலங்குகளின் கருத்தை யுணர்தல் என்பது.

71 வேட்டைபற்றிச் செல்லுதலை மாரிகாலம் முதலியவற்றில் ஏற்றல் கூடாதாகலின் சில காலத்தில்தான் வேட்டை கைக்கொள்ளுதற் குரியது. சூதாட்டமாயின் காலவரையறை யின்றி எப்போதும் ஏற்றற்குரியதாம் என்றவாறு, சூதாட்டத்தில் இல்லாத சில நன்மைகள் வேட்டையில் உள்ளன வென்பது கருத்து. எனவே சூதாட்டமே குற்றமுடைத் தென்க.

72 சூதுவிதனம், மகளிர்விதனம் என்பவற்றிற்குச் சிறுமை பெருமைகளை ஆராயுங்கால் சூதுவிதனமே மிக்கதாம் என்ற வீடுமர் கொள்கையைக் கூறுகின்றார்.

73 அதற்குக் காரணமாக அவர் கூறியதைக் கூறுகின்றார் ; சூதாடுபவன் சூரிய வெளிச்சமில்லாவிடினும் இரவில் விளக்கொளியின் துணையால் ஓய்வின்றி விளையாடுகிறான். தன் தாய் இறந்துவிடினும் தான் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைக் கூடச் செய்யமுயலாது விளையாடுகிறான். நெருக்கடி நேர்ந்துழி, அதைப் பரிகரித்தற்குரிய உபாயத்தை அவனிடம் வினவியபோது கோபத்தை யடைகிறான் என்ற இவை சூதாட்டத்தாலுண்டாம் குற்றங்களாம் என்பது கருத்து.

74 மகளிர்விதனத்தில் குற்றம் இருப்பினும் சிறப்பொன்றைக் கூறுகின்றார். மகளிர்விதனமுள்ளவனை நீராடுமிடம், அலங்காரம் செய்துகொள்ளுமிடம், உண்ணுமிடம் என்பவற்றில் கண்டு, அறம் பொருள்களைப் பற்றி வினுதற்கும் அறிவிப்பதற்கும் இயலும். எந்த மகளிர்பால் விதனமுள்ளவனோ, அம் மகளிரை அரசனுக்கு நலம் தருஞ் செயலில் நிலைப்பட்டிருக்கும்படி அமைச்சர் முதலியோர் செய்தல் கூடும். அவ்வாறு செய்ய வியலாவிடின் அம் மகளிரை மறைவிலொறுத்தலால் அழித்தல் கூடும். அவ்வாறு அழிக்கவுமியலாதவிடத்து நஞ்சிடுதல் முதலியவைகாரணமாக நோயை உண்டுபண்ணி வேற்றிடத்திற்கு அனுப்புதல் கூடும். எனவே இவ்வாறாகக் குற்றங்களைப் பரிகரித்தற்குரிய வழிகள் உள்ளன என்பது கருத்து.

ஒருதலை. அரசனுடைய நலத்தில் மகளிரை ஏவுதற்கும், மறைவி னுறுத்தல் நோய் என்பவற்றால் மாற்றுதற்கும் விலக்குதற்கும் இயலும் என்க.

அன்றென்பர் கௌடலியர். [75]சூது திரும்பப் பெறுதலை யுடையது. மகளிர் விதனம் திரும்பிப் பெறுதலற்றது. காட்சி யின்மை, செயல்வெறுப்பு, காலந்தாழ்த்தல்பற்றித் தீங்கு, அறக் கேடு, அரசியலில் ஆற்றலின்மை, குடித்தொடர்பு என்பவையு முளவாம்.

[76]மகளிர் குடி என்னும் விதனங்களுள் மகளிர்விதனம் (மிக் கது) என்பர் உத்தவர். [77]மகளிர்பால் பல்வகைப்பட்ட பிடிவாதம் 'அரண்மனை யமைத்தலி'ற் கூறப்பட்டது. குடியிலாயின் சத்தம் முதலிய பொறிப்புலன்களின் நுகர்ச்சி, அன்புக்கொடை, பணி யாளரைக் கௌரவித்தல், தொழில் மெலிவுக்கேடு என்பனவாம் என்க.

---

[75] சூதாட்டத்தால் கவரப்பட்டனவற்றை மீண்டும் சூதாட்டத்தால் பெறுதல் இயலும். மகளிர்விதனத்திலாயின் அவ்வாறு இயலா. மேலும் மகளிர்விதனமுள்ள அரசனை அமைச்சர் முதலியோர் காண்டலே அரிது. அரசனைக் காணுமை காரணமாக அமைச்சருக்குச் செயல் புரிதலிலும் ஊக்க மின்மை, உரிய காலங் கடந்து போதல் காரணமாகத் தீமை விளைவுடன் கூடிய அறவழிவு, தன்னாட்டின் ஏம நலங்களைப்பற்றி ஆராய்தல் என்ற அரசியல் வலியற்றிருத்தல், மகளிர் நுகர்ச்சிக்குத் துணையாகவுள்ள கட்குடி முதலியவற்றின் தொடர்பு என்ற இக் குற்றங்கள் காரணமாக மகளிர்வித னமே மிக்கது என்பது கருத்து.

[76] மகளிர்விதனம் கட்குடிவிதனம் என்பவற்றுள் சிறுமை பெருமை களை யாராயுமிடத்து மகளிர்விதனம் மிக்கது என்ற உத்தவர் கொள்கை யைக் கூறுகின்றார்.

[77] அவர் கூறிய காரணத்தைக் கூறுகின்றார்; முதலதிகரணத்தில் 'அரண்மனை யமைத்தல்' என்ற பிரகரணத்திற் கூறியபடி கணவனைக் கொல்லுதற்காக நஞ்சு கலந்த பொரி முதலியவற்றை அவனுக்குக் கொடுத் தல் முதலிய பலவகையான முரட்டுத் தன்மை, மகளிர்பால் காணப்படுவது. குடியிலாயின் அவ்வாறின்று. மேலும் குடியால் மனம் ஒருவழிப்படுதலை அடைதலின் சத்தம் முதலிய புலன்களில் ஓரே உணர்ச்சியைப் பெறுதலால் இன்புறுதல், அன்புக் கொடை, பணியாளரைக் கௌரவித்தல், தொழிலால் உண்டாம் சிரமத்தால் அவயவங்கள் தளர்ந்தபோது அத் தளர்ச்சியைப் பரிகரித்தல் முதலியன உண்டாகின்றன என்பது கருத்து.

அன்றென்பர் கௌடலியர். மகளிர்விதனம் நேர்ந்துழி [78]உரிமைமனைவியர்பால் புதல்வர்த்தோற்றம், தற்காப்பு என்பவை களும், [79]அல்லது [80]வெளிப்பட்டவர்பால் [81]மாறுபாடும், [82]செல்லத் தகாதவர்பால் எல்லாவற்றினழிவும் உண்டாம். [83]குடி விதனத்தில் அவை யிரண்டுமாம். [84]குடியின் நிறைவு :—[85]அறி வழிவு [86]பித்தனல்லாதானுக்குப் பித்தனுந் தன்மை, [87]இறவாத வனுக்கு இறந்தவனுந் தன்மை, [88]மறைவிடக்காட்சி, [89]கேள்வி, [90]அறிவு, [91]உயிர், பொருள், நண்பர் என்பவற்றின் கேடு, சான் றோர் பிரிவு, [92]தீங்கிழைப்பவருடன் சேர்க்கை, [93]பொருட்கேட்டை விளைக்கும் தந்தி, பாட்டுக்களின் தேர்ச்சியில் ஈடுபாடு என்பன [94]உளவாம்.

---

78 முறைப்படி மணம் புரியப்பட்ட கற்புடை மகளிர்பால் புதல்வர்ப் பேறும் தற்காப்பும் உண்டாகின்றன என்பது கருத்து.

79 உரிமைமகளிர் இல்லாதபோது என்பது.

80 வேசையர் முதலியவர்பால் ஈடுபட்டவனுக் கென்க.

81 புதல்வர்ப் பேறு தற்காப்புக்களின் இன்மை என்பது.

82 குலமகளிர்பால் ஈடுபடின் உயிரிறுதியான எல்லாப் பொருளின் அழிவும் உண்டாம் என்பது. இதனால் வேசையர், குலமகளிர் என்பவர் களுடன் தொடர்பு என்ற இரு குற்றங்கள் மகளிர்விதனத்தால் உண்டா வன என்பது குறிப்பிடப்பட்டது.

83 இக் குற்றங்களும் இவையன்றிப் பல்வேறு குற்றங்களும் குடி விதனத்தால் உண்டாவன எனக் கூறுகின்றார்.

84 குடியால் உண்டாம் காரியங்களின் நிறைவு பின்னர்க் கூறப்படு கின்றதென்பது கருத்து.

85 அந் நிறைவையே விரித்துக் கூறுகின்றார்.

86 மனவேறுபாடற்றவனுக்கு மாற்றமடைந்த மனமுடைமை என்பது.

87 உயிர் உள்ளவனுக்கே இறந்தவனுக்குள்ள தன்மை (செயலின்மை).

88 மறைக்கத் தக்க உறுப்பை மறைத்துக் கொள்ளாமை என்பது.

89 கேள்வி—நூல்களைக் கேட்டுணர்தல்.

90 அக் கேள்வியால் உண்டாய அறிவு என்பது.

91 உயிர் என்பது ஈண்டு ஆற்றல் என்னும் பொருளது.

92 பாடுபவர், வீணை முதலியன வாசிப்பவர் முதலியவர்களுடன் தொடர்பென்பது.

93 பொருட் கேட்டை விளைக்கக் கூடிய வீணைப் பயிற்சி, பாட்டுப் பயிற்சி முதலியவற்றில் மிகுந்த ஈடுபாடு.

94 எனவே மகளிர்விதனத்தைவிடக் குடிவிதனம் மிக்கதென்பது நிலைப்படுத்தப் பட்டதெனக் கொள்க,

[95]சூது கள் என்பவற்றுள் [96]சூது (மிக்கது) என்பர் சிலர். [97]பணயப்பொருள் பற்றியனவும் உயிருள்ளவை உயிரற்றவை என்னுமிவற்றைச் சார்ந்தனவுமான வெற்றியாதல் தோல்வியாதல் இருவகைப் பக்கங் காரணமாக மக்களது கோபத்தை யுண்டு பண்ணும். குழுவிற்கும் [98]குழுத்தன்மையுடைய அரசர் குடிக்கும் சூது காரணமான [99]வேறுபாடும் [100]அதுகாரணமான அழிவும் [101]மிகுதியாம். [102]அரசியலின் ஆற்றலின்மைபற்றி, விதனங்களுள் [103]தீயவரை ஏற்றல் [104]மிகக் குற்றமுடைத்தாம்[105]என்க.

சுலோகங்கள்

(1) [106]தீயவரைப் போற்றுதல் காமமாம். [107]சான்றோரை

---

[95] சூதுவிதனம், குடிவிதனம் என்பவற்றுள் சூதுவிதனம் மிக்கது என்பதாக ஆசிரியர் சிலர் கருதுகின்றனர். அவர்தம் கொள்கையைச் சான்றுடன் விளக்குகின்றார்.

[96] சூதுவிதனம் மிக்கது என்று கூறுப என்பது கருத்து.

[97] 'சூது மிகுந்த குற்றமுள்ளது' என்பதற்குக் காரணங் கூறுகின்றார். சூதுப்பொருளடைதலைப் பயனாகக்கொண்ட வெற்றியும், அப்பொருளிழத்தலைப் பயனாகக்கொண்ட தோல்வியும் புள், விலங்கு முதலிய உயிர்ப்பிராணியைச் சார்ந்ததெனவும், புள்விலங்குகளல்லாத அசேதனப்பொருளைச் சார்ந்ததெனவும் இருவகையாக வுள்ளன. அந்த வெற்றியும் தோல்வியும் வெற்றி பெற்றவன் பக்கம், தோல்வியுற்றவன் பக்கம் என்ற இரு பக்கத்தை உண்டாக்குவதால் மக்கட் கோபத்தை (கலக்கத்தை) உண்டுபண்ணுவதென்றார்.

[98] குழுத்தன்மை—ஒத்த கருத்து.

[99] ஒற்றுமைப்பட்ட கருத்தின் அழிவு; கருத்து வேறுபாடு.

[100] அது—அவ் வேறுபாடு.

[101] மேற்கூறியவை சிறப்பாக உண்டாவனவாம் என்பது கருத்து.

[102] வேறுசில ஆசிரியரின் கொள்கையைக் கூறுகின்றார். தன்னாட்டைப் பற்றிய ஏமநலங்களில் ஊக்கங்குறைதல்காரணமாக என்பது.

[103] எச்செயலை மேற்கொள்ளுமிடத்துத் தீயவரை ஏற்றல் நிகழுமோ அச்செயல்; கட்குடியில் ஈடுபடுதல் என்பது.

[104] ஏனைய விதனங்களைவிட மிகக் குற்றமுடைய விதனமாம் என்பது.

[105] என்க—வேறுசில ஆசிரியரின் கொள்கையாம் என்க. மேற்கூறிய இரு கொள்கைகளையும் கௌடலியர் மறுக்காததால் அவை கௌடலியராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை என்பது பெற்றாம்.

[106] இசைபாடுவோர் முதலியவரைப் போற்றுதற்குக் காரணமாவது காமமாம் என்பது கருத்து.

[107] சான்றோரை யிழித்துப்பேசுதல் முதலிய குற்றத்திற்குக் காரணமாவது கோபமாம் என்க,

யிழித்தல் கோபமாம். [108]குற்றமிகுதி காரணமாக இரண்டும் எவ்வாற்ருனும் விதனங்களாம்.

(2) [109]ஆகலின் [110]நிலை, முதியவர்தொடர்பு, [111]பொறி யடக்கம் என்னுமிவற்றை யுடையவன் [112]விதனத்தைச் செய் வதும் மூலத்தை யழிப்பதுமான கோபத்தையும் காமத்தையும் விடுத்தல் வேண்டும்.

எட்டாம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
'புருடவிதனக்குழு' என்னும் நூற்றுப்பத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

108 மேற்கூறிய பல்வகைக் குற்றங்கள் காரணமாகக் கோபம் காமம் என்ற இரண்டையும் எல்லாவிதத்தாலும் விதனங்களாகவே கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

109 எல்லாவிதத்திலும் விதனங்களாதல் பற்றி என்பது.

110 நிலை—உறுதியுடையவனுயிருத்தல்.

111 முதியவர் தொடர்பு மூலமாக மனதை யடக்கியவன் என்பது.

112 துன்பங்களை யுண்டுபண்ணுவதும், எல்லாப் பொருளையும் அழிப் பதுமான என்பது. இந்த அடைகளைக் காமத்துக்கும் கொள்ளல் வேண்டும்.

எட்டாம் அதிகரணம்—விதனம் விளம்பல்

4—6-ஆம் பிரகரணங்கள்—[1]துன்பக்குழு, தடைக்குழு, பொருள்கோடாமைக்குரிய காரணக்குழு

நூற்றிருபதாம் அத்தியாயம்

[2]தீ, நீர், நோய், வறுமை, மரகம் என்பன தெய்வத்தால் நிகழும் துன்பங்களாம்.

[3]தீ, நீர் என்னுமிவற்றுள் தீத்துன்பம் [4]மாற்றச் செயலற்றதும் எல்லாவற்றையும் கொளுத்துவதுமாம். [5]நீர்த்துன்பம் அணுகிச் செல்லுதற்குரியதாய்த் தீங்கைக் கடத்தற்குரியதாம் என்பர் ஆசிரியர்.

[6]அன்றென்பர் கௌடலியர். [7]ஒரு கிராமத்தையாதல், பாதி

120-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] துன்பங்கள்—தெய்வத்தானும் மக்களானும் உண்டாவன. அவற்றின் எண், இயல், பெருமை, சிறுமை முதலியவற்றைக் கூறுவது இப்பிரகரணமாகும். குணங்களின் மாறுபாடு முதலிய ஐவகை விதனங்களுள் ஈடுபாடு என்பதீறான விதனங்கள் முன்னர் (117-ஆம் அத்தியாயத்தில்) விளக்கிக் கூறப்பட்டன. ஈண்டுத் துன்பம் என்ற விதனத்தைக் கூறுவதாற் பிரகரண வியைபுண்மை யறிக.

[2] தெய்வத்தால் நிகழும் துன்பத்தை ஐவகைப்படுத்துக் கூறுகின்றார்.

[3] ஐவகைத் துன்பங்களுள் இரண்டிரண்டிற்குள்ள சிறுமை பெருமைகளைத் துணிபவராக, ஈண்டு முதலிலுள்ள தீயால் உண்டாம் துன்பம், நீரால் உண்டாம் துன்பம் என்னுமிவற்றிற்குத் தன் ஆசிரியரின் கொள்கைக்கேற்பச் சிறுமை பெருமைகளைக் கூறுகின்றார்.

[4] தீயை அணுகுதற்குக் கூட முடியாமையால், பரிகாரச்செயல் புரிதற்கு இயலாது என்பதும், எனவே அது, அனைத்தையும் கொளுத்தும் இயல்பினது என்பதும் கருத்து.

[5] நீர்த்துன்பமாயின், அணுகுதற்கியலும் என்பதும், ஓடம் முதலியவற்றால் தீங்குகளைக் கடத்தற்கு முடியும் என்பதும் கருத்து. எனவே நீர்த்துன்பத்தைவிட, தீத்துன்பம் மிக்கது என்பது ஆசிரியர்கொள்கையாகும்.

[6] அக்கொள்கையைக் கௌடலியர் மறுக்கின்றார்.

[7] நீர்த்துன்பம் மிக்கது என்ற தன் கொள்கைக்குச் சாதகமாயுள்ள கருத்தைக் கூறுகின்றார்.

கிராமத்தையாதல் தீ கொளுத்துகிறது. நீரின் வேகமாயின் [8] நூறு கிராமத்துக்குப் பெருகும் என்க.

[9]நோய் வறுமை என்னுமிவற்றுள் நோயானது இறந்தவர், நோய்வாய்ப்பட்டவர், [10]தொடர்புள்ள பணியாளர், [11]உடலுழைப்பினர் என்னுமிவர்களுக்குத் தடை செய்தலால் தொழில்களை யழிக்கிறது. வறுமையோவெனின் தொழிற்றடை செய்யாததும், [12]பொன் விலங்கு என்ற உல்குபொருளைக் கொடுப்பதும் ஆம் என்பர் ஆசிரியர்.

[13]அன்றென்பர் கௌடலியர். நோய் [14]ஒருபகுதியைத் துன்புறுத்துவதும் [15]மாற்றத்திற்குரியதுமாம். [16]வறுமை எல்லாப் பகுதியையும் துன்புறுத்துவதும் பிராணிகளின் [17]வாழ்வைக் குலைத்தற்குக் காரணமாவதும் ஆம் என்க.

[18]இதனால் [19]மரகத்திற்கும் விதி கூறியவாறும்.

---

[8] நூற்றுக்கணக்கான சிற்றூர்களைப்பற்றி யழித்தற்கும் வல்லது என்பது கருத்து.

[9] நோய் வறுமை என்னும் இவற்றுள் நோய் மிக்கது என்ற ஆசிரியர் கொள்கையைக் கூறுகின்றார்.

[10] நோயாளிகளுக்குப் பணிபுரிபவர் என்பது.

[11] உழவுத்தொழில் முதலிய உழைப்புடையோர்.

[12] கூல உருவமான உல்குபொருள் கிடைக்கப் பெறாவிடினும் பொன் முதலிய உருவமான உல்குபொருளைக் கொடுக்கின்றது என்பது.

[13] ஆசிரியர் கூறிய காரணத்தை மறுக்குமுகமாக 'வறுமை மிக்கது' என்பதற்குரியதும், தன் விருப்பத்திற்கியைந்ததுமான கருத்தைத் துணிந்து கூறுகின்றார்.

[14] நாட்டின் ஒருபகுதியில் மட்டும் இருத்தல்பற்றி என்க.

[15] மருந்து முதலியவற்றால் அகற்றுதற்குரியதுமாம் என்பது

[16] நாடு முழுவதிலும் பரந்திருத்தல்பற்றி என்க.

[17] பலவுயிர்களையும் அழிக்கின்றது என்பது கருத்து.

[18] இதனால்—'உயிரின் கேட்டுக்குக் காரணமானது' என வறுமைக்குக் கூறிய விதியினால்.

[19] மரகம்—ஒரு கொடிய நோய் (மாரி என்ப). இதுவும் பல பிராணிகளின் இறப்புக்குக் காரணமாதல்பற்றி வறுமையைவிட மிக்கதென்பது கருத்து.

[20]பணியாளர் [21]தலைவர் என்னுமிவர்களின் அழிவினுள் பணியாளரின் அழிவு தொழில்களின் [22]ஏம நலங்களைச் செய்யாது. [23]தலைவரின் அழிவு தொழிலைச் செய்தற்குத் தடை செய்யுந் தன்மையது என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [24]பணியாளர் பலராயிருத்தலின், பணியாளரின் அழிவு ஈடுசெய்தற்குரியது. தலைவரின் அழிவு (அவ்வாறு) இன்று. என்னை? மனத் தூய்மை, அறிவு என்னுமிவற்றின் சிறப்புகாரணமாகப் பணியாளரின் தலைமையைப் பெறுதற்குரியவன் ஆயிரத்தவருள் ஒருவனாக இருக்கலாம் இல்லாமலுமிருக்கலாம் என்க.

[25]தன் படை, பகைப் படை என்னுமிவற்றுள் தன் படை மிக வதிகமான தண்டம், இறை என்பவற்றால் துன்புறுத்தும். [26]தடுத்தற்கும் இயலாது. [27]பகைப் படையாயின் எதிர்த்துப்

---

20 இனிப் பொருள்வேறுபாடுகாரணமாக மிக்க துன்பம் எதுவெனும் ஆராய்ச்சியில் ஆசிரியர் கொள்கையைக் கூறுகின்றார்.

21 தலைவர்—தொழில்களைச் செய்விப்பவர்.

22 ஏமநலங்களை—தொடங்கப்படாததைத் தொடங்குதல், தொடங்கப்பட்டதைக் காத்தல் என்பவற்றை.

23 காரியங்களின் நடைமுறைக்குத் தடையை மட்டும் செய்யுமேயன்றி, செய்விப்பவனை எதிர்பாராது தொழிலாளர் சுதந்திரமாகச் செயல்புரிதலைத் தடைப்படுத்தாது என்பது. ஆகவே செய்விப்பவனழிவைவிடச் செய்பவரின் அழிவு மிக்கது என்பது பெற்றும்.

24 தொழிலாளர் பலர் கிடைக்கப்பெறுதல் கூடுமாகலின் தொழிலாளர் அழிந்தவிடத்து வேறு தொழிலாளரை ஏற்படுத்திக்கொள்ள வியலும். ஆயிரக்கணக்கான மக்களுள் தலைவனாந் தன்மையைப் பெறுதற்குரியவனும் மனத்தூய்மை, பகுத்தறிவு முதலியவை நிரம்பப் பெற்றவனுமான ஒருவன் கிடைக்கப்பெறினும் பெறலாம். கிடைக்காது போகவும் கூடும். எனவே, தலைவனின் அழிவு ஈடுசெய்தற்கரிது என்பது கருத்து.

25 தெய்வத்தால் நிகழும் துன்பத்தை இதுகாறும் விளக்கிக் கூறினர். இனி மக்களால் நிகழுந் துன்பத்தைக் கூறத் தொடங்குகின்றார்.

26 அரசு என்ற பகுதியால் உண்டாம் துன்பத்தைத் தடுக்க ஒருவராலும் இயலாது என்பது கருத்து. தன் படை என்பதால் 'தன்னாட்டு அரசு' என்ற பகுதியைக் கொள்ளல் வேண்டும் என்ப.

27 பகைப்படையால் எதிர்ப்பு நேர்ந்துழி அதை எதிர்த்தலால், அதனால் உண்டாம் துன்பத்தை விலக்குதல் கூடும். அல்லது வேற்றிடத்துக்குச் செல்லுதல், இத்துணைப் பொருளைக் கொடுத்தல் என்ற ஒப்பந்தத்தால்

போர் புரிதற்கும், விலகுதல், சந்தி என்னுமிவற்றால் விடுவித்தற்கும் இயலும் என்பர் ஆசிரியர்.

[28]அன்றென்பர் கௌடலியர். குடிமக்கள்தலைவரை வயப்படுத்தல், தடைப் படுத்தல் என்னுமிவற்றால் தன் படைத் துன்பம் தடுத்தற்குரியது அல்லது ஒரு பகுதியைத் துன்புறுத்துகிறது. பகைப் படையாயின் நாடனைத்தையும் துன்புறுத்தல்காரணமாகக் கவர்தல், கொலை, கொளுத்தல், அழித்தல், வெளியேற்றுதல் என்னுமிவற்றால் துன்புறுத்துகின்றது என்க.

[29]மக்கட் கலாம், [30]அரசர் கலாம் என்பவற்றுள் மக்கட் கலாம் [31]மக்களை வேறுபடுத்திப் பகைவரது எதிர்ப்பை உண்டு

தமக்குத் துரோகம் செய்யாது அப்படையைத் திருப்புதற்கும் இயலும். எனவே பிற படையால் நிகழும் துன்பத்தைவிடத் தன் படையால் நிகழும் துன்பம் மிக்கது என்பது கருத்து.

28 மக்கட் பகுதியில் சிறந்தவர்களான அமைச்சர் முதலியோரை வயப்படுத்தலானும், தடையை உண்டுபண்ணுதலானும் தன் படையால் நிகழும் துன்பத்தைத் தடுத்தல் இயலும். மேலும் அத் துன்பமானது கூலம் பொருள் முதலியவற்றால் பொருளாளனையுடைய பகுதியையே துன்புறுத்தும்; அன்றி நாட்டின் எல்லாப் பகுதியையும் துன்புறுத்தாது. பகைப் படையாயின், பொருளைக் கவர்தல், மக்களைக் கொல்லுதல், வீடு முதலியவற்றில் தீயிடல், அவற்றைச் சிதைவுபடுத்தல் என்பவற்றாலும் மக்களை நாட்டினின்றும் விரட்டுதலாலும் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் துன்புறுத்துவதாம். எனவே தன்படைத் துன்பத்தைவிடப் பகைப்படைத் துன்பமே மிக்கது என்பதனை, ஆசிரியர்கொள்கையை மறுக்குமுகத்தான் விளக்குகின்றார்.

29 இனிக் குடிமக்களின் கலகம், அரசர்கலகம் என்னும் இரண்டின் வன்மை மென்மைகளை ஆராயுமிடத்து ஆசிரியரது கொள்கையைக் கூறுகின்றார். மக்கட் கலாம்—குடிமக்களுள் ஒருவர்க்கொருவர் நிகழும் கருத்து வேறுபாடு.

30 அரசர் கலாம்—அரசர் இருவருள் ஒருவர்க்கொருவர் நிகழும் கருத்து வேறுபாடு.

31 மக்களை வேறுபடுத்தலால் பகைவரது எதிர்ப்புக்கு இடங் கொடுக்கிறது என்பது கருத்து.

பண்ணுகின்றது. [32]அரசர் கலாமாயின் மக்களுக்கு இருமடங்கு உணவு, வேதனம், அரசிறை ஒழிவு என்னுமிவற்றைச் செய்வதாம் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [33]மக்கட் டலைவரை வயப்படுத்தல் அல்லது கலகக் காரணத்தை யகற்றல் என்பதால் மக்கட் கலகத்தைத் தடை செய்ய முடியும் கலகத்தைச் செய்யும் மக்கள் ஒருவரை யொருவர் பொருது உதவுகின்றனர். அரசர்கலாமாயின் துன்புறுத்தல், களைதல் என்பவற்றைக் கொண்டதும், மக்களின் இருமடங்கு உழைப்பால் தணித்தற்குரியதும் ஆம் என்க.

[34]நாட்டின் விளையாட்டு, அரசன் விளையாட்டு என்பவற்றுள் நாட்டின் விளையாட்டு [35]முக்காலமு முண்மையால் தொழிற் பய

---

32 குடிமக்களுக்கு இருமடங்கு உணவையும், இருமடங்கு சம்பளத்தையும் அரசிறை கொடாமலிருத்தற்கு அநுமதியையும் அரசர்கலாம் உண்டு பண்ணுகிறது. எனவே குடிமக்களுக்கு அநுகூலமான அரசர்கலகத்தினின்றும் அதற்கு எதிரிடையான மக்கட்கலகம் சிறந்தது என்பது ஆசிரியரது கொள்கை என்பதாம்.

33 மக்களுள் தலைவராயிருப்பவரை வயப்படுத்தலாலாதல் ஒருவர்க்கொருவர் பூசல் செய்தற்குரிய காரணத்தைத் தடுத்தலாலாதல் மக்கட் கலகத்தைத் தடுத்தல் கூடும். மேலும் பூசலிடும் மக்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டு அரசனுக்குச் சிறந்த முறையில் உதவிபுரிவர். அரசர் கலகமாயின் மக்களின் ஆற்றல், வினை முடிவு என்பவற்றுக்குத் தடைபுரிதலாகிற துன்புறுத்தலுக்கும், அவர்களை யழித்தற்கும் காரணமாம். மக்கட் கலகத்தைத் தணித்தற்காக ஏற்கவேண்டிய முயற்சியின் இருமடங்கு முயற்சியால் அரசர்கலகம் தணித்தற்குரியது. எனவே அரசர்கலகமே மிக்கது என்பது கருத்து.

34 நாட்டுமக்களின் விளையாட்டு, அரசனுடைய விளையாட்டு என்பவற்றுலாம் கேடுகளுக்கு ஏற்றத்தாழ்வினைத் துணிபவராக ஆசிரியர்கொள்கையைக் கூறுகின்றார்.

35 முன்னர்விதைத்த பயிரைக் கண்காணியாமையானும், அக்காலத்துச் செயற்பால விதைத்தல் முதலியவற்றைச் செய்யாமையானும், பின்னர் விதைத்தற்குச் செய்களில் செய்யப்படவேண்டிய பண்படுத்தலைச் செய்யாமையானும் நாட்டுமக்களின் விளையாட்டு முக்காலத்தும் உழவுத்தொழிற் பயனை யழிக்கின்றது என்பது கருத்து.

னழிவைச் செய்வதாம். அரசர்விளையாட்டாயின் [36]காருகர், [37]சிற்பி, இசை பாடுவோர், [38]கதை சொல்பவர், விலை மகளிர், [39]வணிகர் என்னுமிவர்களுக்கு உதவியைச் செய்வதாம் [40]என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [41]நாட்டின் விளையாட்டு, தொழிலால் உண்டாம் தளர்ச்சியைப் போக்கச் சிறியதை உட்கொள்ளுகிறது. உட்கொண்டபின் மீண்டும் தொழில்களுடன் தொடர்பையடைகிறது. அரசன் விளையாட்டாயின் [42]தன்னாலும் [43]அன்பராலும் [44]தானே கொள்ளல், [45]விருப்பமுள்ள அங்காடித் தெரு, [46]தொழில் பற்றி ஏற்றல் என்னும் இவைகாரணமாகத் [47]துன்புறுத்துகின்றது என்க.

[48]பட்டத்தரசி, இளவரசன் என்னுமிவருள் இளவரசன் தன்னாலும் அன்பராலும் [49]தானே கொள்ளல், [50]விருப்பமுள்ள

---

[36] காருகர்—தச்சர் கொல்லர் முதலியோர்.

[37] சிற்பி—நுண்ணிய சிற்பத் தொழில்புரியும் பொற்கொல்லர் முதலியோர்.

[38] உபலக்கணத்தால் துதிபாடகரையுங் கொள்க.

[39] சாந்தம், பூமாலை முதலியவற்றை விற்றலால் உயிர்வாழ்வோர்.

[40] எனவே நாட்டுமக்களின் விளையாட்டால் உளதாம் கேடே மிக்கது என்பது ஆசிரியர் கொள்கை என்க.

[41] நாட்டுமக்களின் விளையாட்டானது உழவுத்தொழில் முதலிய செயலை ஏற்றலால் உண்டாய சிரமத்தைப் போக்குதற்குரிய சிறிய காலத்தையே கவர்ந்துகொள்ளுகிறது. கவர்ந்தபின் விளையாட்டில் ஈடுபட்ட அம்மக்களை மீண்டும் உழவுத்தொழில் முதலியவற்றில் ஈடுபடச்செய்கின்றது என்பது கருத்து.

[42] தன்னாலும் என்பது ஈண்டு அரசனாலும் என்னும் பொருளது.

[43] அன்பர்—அரசனுக்குப் பிரியமானவர்.

[44] தானே கொள்ளல் — நாட்டுமக்களால் ஒப்புக்கொள்ளப்படாத பொருளை ஏற்றல்.

[45] தன் விருப்பத்திற்கேற்ப உண்டாக்கப்பட்ட கடைத்தெரு என்பது.

[46] ஒரு காரியத்தை முடித்துக்கொடுத்தற்பொருட்டுக் கைக்கூலி பெறுதல் என்பது.

[47] எனவே அரசன் விளையாட்டே கொடியது என்பது கருத்து.

[48] பட்டத்தரசியின் விளையாட்டு இளவரசனது விளையாட்டு என்பவற்றின் கேடுகளுள் ஏற்றத்தாழ்வு பற்றி ஆசிரியரின் துணிவைக் கூறுகின்றார்.

[49–50] ஈண்டும் 45, 46-ஆம் குறிப்புக்களிற்கொண்ட கருத்தைக் கொள்க.

அங்காடித் தெரு, தொழில் பற்றி ஏற்றல் என்னுமிவற்றாலும் பட்டத்தரசி, [51]விளையாட்டு நுகர்ச்சியாலும் [52]துன்புறுத்துகின்றனர் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். அமைச்சர், புரோகிதர் என்பவர்களால் இளவரசன் [53]தடுத்தற்குரியவன். [54]பிடிவாதம், [55]தீங்கிழைக்கும் மக்கட் டொடர்பு என்னுமிவை காரணமாகப் பட்டத்தரசி ([56]அவ்வாறு) இலளென்க.

[57]குழு, [58]தலைவன் என்னுமிவருள் குழு, [59]மிகுதியால் தடையின்றி [60]களவு, வன்செய்கை என்பவற்றாலும், தலைவன் [61]தொழிலளி, தடை என்பவற்றாலும் துன்புறுத்துகின்றனர் என்பர் ஆசிரியர்.

---

[51] விளையாட்டிற்குரிய சாந்தம் பூமாலை முதலிய நுகர்ச்சிப் பொருளாலும் என்பது.

[52] 'குடிமக்களை' என்பதைக் கூட்டுக. எனவே இளவரசன்காரணமாக உண்டாம் துன்பம் மிக்கது என்ப.

[53] தானே கொள்ளல் முதலிய தீமைகளினின்றும் தடுத்தற்குரியவன் என்பது.

[54] பெண்மையின் காரணமாகவே பட்டத்தரசியைத் தடுத்தற்கியலாது என்ற காரணமிருக்க, வேறொரு காரணத்தையுங் கூறுகின்றார்.

[55] பாடுபவர், துதிபாடகர் முதலியவரின் தொடர்பென்பது.

[56] தடுத்தற்குரியவளல்லள் என்பது.

[57] ஒரு குழுவின் காரணமாக உண்டாம் துன்பம், ஒரு தலைவன் காரணமாக உண்டாம் துன்பம் என்னுமிவற்றுள் ஏற்றத்தாழ்வினை ஆசிரியரின் கொள்கைக்கேற்பக் கூறுகின்றார். குழு—படைக்கலமுள்ளவர், உழவர் என்னுமிவர்கள் ஒருவர்க்கொருவர் சேர்ந்த கூட்டம்.

[58] தலைவன்—நகரத்தலைவன் முதலியோர்.

[59] மிகுதிகாரணமாகத் தடுத்தற்கியலாது ஆகலின் தடையற்றது என்ப.

[60] பிறர்பொருளை மறைவிற் கவர்தல், வலிந்து கவர்தல் என்னுமிவற்றாலும் என்பது.

[61] கைக்கூலி கொடுக்கப்படின் அருளுதலாலும், அது கொடுக்கப்படாவிடின் காரியத்திற்குத் தடையைச் செய்தலாலும் என்பது.

அன்றென்பர் கௌடலியர். [62]இயல்பு விதனங்கள் ஒத்தன வாதல் பற்றிக் குழு எளிதில் மாற்றுதற்குரியது. [63]குழுத் தலைவனுக்குரிய ஒரு பகுதியை வயப்படுத்தலாலுமாம். செருக்குற்ற தலைவன் [64]பிறவுயிர், பொருள் என்னுமிவற்றின் அழிவால் துன்புறுத்துகிறான் [65]என்க.

[66]பண்டாரத் தலைவன் வருவாய்த் தலைவன் என்னுமிவருள் பண்டாரத் தலைவன் [67]செய்யப்பட்டதை இழித்தல், கடத்தல் என்பவற்றால் துன்புறுத்துகிறான். [68]வருவாய்த் தலைவன், கணக்கரால் பார்வை யிடப்பட்டு வரையறுக்கப்பட்ட பயனை நுகர்பவனாகிறான் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [69]பிறரால் நிலை துணியப்பட்டுக் கருவூலத்திற் புகுத்தற்குரியதை ஏற்கிறான். [70]வருவாய்த் தலைவ

---

[62] குழுவின் பகுதியினருக்குரிய உழவுத்தொழில், விதனம் என்னுமிவற்றால் அவருடன் ஒத்தவர், களவு முதலிய தீச்செயலினின்றும் அக்குழுவினரைத் தடுத்தல் முடியும் என்பது கருத்து.

[63] குழுத்தலைவனைச் சார்ந்த மக்களை வயப்படுத்தலாலும் தடுத்தல் முடியும் என்க.

[64] பிறருடைய உயிரையும் பிறர்பொருளையும் அழித்தலால் என்பது.

[65] எனவே தலைவனால் நிகழும் துன்பமே மிக்கது என்பது கருத்து.

[66] பண்டாரத்தலைவன் முதலியவர்களால் நிகழும் துன்பங்களுள் ஏற்றத்தாழ்வினைக் கூறுகின்றார்.

[67] தட்டார் முதலியவரால் அணிகலன் முதலியன செய்யப்பட்ட போது அவற்றில் குற்றத்தைக் கற்பித்தல், காலந்தாழ்த்திச் செய்யப்பட்டது என்று கூறுதல் என்பவற்றால் என்பது.

[68] வருவாய் முதலியவற்றைக் கணக்கர் பார்வையிடுதலால் அவனுக்குரிய வேதனத்தை மட்டும் அவன் அடைவானேயன்றி பிறருக்குத் துன்பம் இழைக்கிறதில்லை என்பது கருத்து.

[69] பண்டங்களின் உயர்வுதாழ்வுகளைச் சோதனையாளர் பலரும் ஆராய்ந்து, ஏற்றற்குரியன இவை என்று துணிந்த பின்னர், கருவூலத்தில் புகுத்தற்குரிய பொருளை ஏற்றலேயன்றிச் சுதந்திரமாக அவனுக்குப் பண்டங்களை ஏற்றல் விலக்கல் என்பவற்றைச் செய்ய உரிமையில்லையாதலின், பண்டாரத் தலைவனால் வருங்கேடு பெரிதன்று என்பது கருத்து.

[70] வருவாய்த் தலைவனால் வருங்கேடு பெரிது என்னுங் கருத்துடன் கூறுகின்றார்.

ணுயின் [71]முன்னர்த் தனக்குப் பயனைச் செய்து, பின்னர் அரசனுக்குப் பயன்படுவனவற்றைச் செய்கிறான்; அன்றி அழிக்கிறான். [72]பிறன்பொருளை யேற்பதில் தன் கருத்துக் கேற்பச் செய்கிறான் [73]என்க.

எல்லை காவலன், வணிகன் என்னுமிவருள் [74]எல்லை காவலன் கள்வர் தூண்டுதல், மிகுதியாகக் கொள்ளல் என்பவற்றால் வணிகவழியைத் துன்புறுத்துகிறான். [75]வணிகராயின் விலைப் பண்டம், எதிர்விலைப்பண்டம் என்பவற்றில் அருளுதலால் போற்றுகின்றனர் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [76]எல்லைகாவலன் விலைப்பண்டத் தொகுதியை யருளுதலால் இயங்கச் செய்கிறான். [77]வணிகராயின்

---

[71] துன்பஞ் செய்யாதிருத்தற் பொருட்டு முதலில் கைக்கூலியைப் பெற்றுப் பின்னர் அரசனுக்குரிய பொருளைத் தோற்றுவித்தலையோ அன்றித் தானே கவர்ந்துகொள்ளுதலையோ மேற்கொள்கிறான் என்பது கருத்து.

[72] அரசிறையாகப் பிறர் கொடுக்கும் பொருளைத் தன் விருப்பத்திற் கேற்பச் செலவிடுகிறான் என்பது கருத்து.

[73] எனவே வருவாய்த் தலைவனே துன்புறுத்துபவன் என்பது கருத்தாதல் காண்க.

[74] எல்லைகாவலன் தன்னால் ஏவப்பட்ட கள்வர்மூலமாகப் பொருளைக் கவர்தலாலும் அரசாங்கத்திற்கு வழிப்போக்கர் கொடுக்கவேண்டிய வழிப் பொருளை மிக அதிகமாகக் கொள்ளுதலாலும் வணிகர்வழியைத் துன்புறுத்துகிறான் என்பது கருத்து,

[75] விலைக்கு விற்பதற்குரிய பண்டத்திற்கும், விலைப்பண்டத்தின் மதிப்புக்கேற்ப ஈடாகவுள்ள பொருளுக்கும் ஊதியத்தைக் கற்பித்தல் மூலமாக வணிகர் வணிகவழியைப் போற்றி மிகுதிப்படுத்துகின்றனர் என்பது ஆசிரியர்கொள்கை என்க.

[76] எல்லைகாவலன் விலைப்பண்டங்கள் ஒன்றுசேர்ந்து வருதல் காரணமாகவுள்ள வழிப்பொருளில் இலாபத்தைக் கற்பித்தலால், வணிகவழியை முன்னேறச் செய்கிறான் என்பது கருத்து.

[77] வணிகர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தம் விலைப்பண்டங்களை விற்பதில் விலையுயர்வையும், பிறரின் விலைப்பண்டங்களை வாங்குவதில் விலைக் குறைவையும் கற்பிக்கிறவர்களாக, ஒரு பணத்திற்கு நூறு பணமும் எண்ணெய்க்குடம் முதலியவற்றில் ஒன்றுக்கு நூறு மடங்கும் ஆகக் கொள்ளை லாபத்தை யடைகின்றனர். எனவே வணிகரே துன்புறுத்துபவராவர் என்பது கருத்து,

ஒன்றுசேர்ந்து விலைப்பண்டத்திற்கு உயர்வுதாழ்வுகளைச் செய்பவராகப் பணத்திற்கு நூறுபணம் குடத்திற்கு நூறுகுடம் என்ற முறையில் வாழ்கின்றனர்.

[78]குடிப்பிறப்புள்ளவரால் அடையப்பட்ட நிலம், ஆனினத்தால் அடையப்பட்டது இவற்றுள் விடுத்தற்குரியது யாது [79]எனின், [80]பெரும்பயனை யுடையதாயினும் [81]படைக்கலமுள்ளவரால் உதவுவதும் குடிப்பிறப்புள்ளவரால் அடையப்பட்டதுமான நிலம் [82]விதனத்துன்பவச்சங் காரணமாக விடுத்தற்குரியதன்று. [83]உழவுத் தொழிலுக்குரியதும் ஆனினத்தால் அடையப்பட்டதுமான நிலமாயின், [84]செய்ந்நிலத்தால் புன்னிலம் அழிக்கப்படுவதுபற்றி 'விடுவித்தற் குரியதாம்' என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். [85]மிகப்பெரிய உதவிபுரிவதாயினும் குடிப்பிறப்புள்ளவரால் அடையப்பட்ட நிலம் விதனத்துன்ப

---

78 துன்பத்திற்குக் காரணமான நிலத்தை விடுத்தல் விடாதிருத்தல் என்பனபற்றி ஆராயத் தொடங்குகின்றார்.

79 எனின்—என்று ஆராயப்படின்.

80 மிகுதியான கூலவுருவமான பயனைக் கொடுப்பதாயினும் என்பது.

81 படைக்கலமுள்ளவரைக் கொடுத்து உதவுவதும் என்பது. விடாதிருப்பதற்குக் காரணம் இதுவேயாம்.

82 பகைவரது எதிர்ப்பு நேர்ந்துழி படைக்கலமுள்ளவரின்மைகாரணமாக உண்டாம் துன்பத்தினின்றும் அஞ்சி விடுத்தற்குரியதன்று என்பது கருத்து.

83 கூலமுதலியவற்றின் விளைவுக்குக் காரணமானதும் என்பது. எனவே விடுத்தற்குரியதன்றென்பது பெற்றும்.

84 பசுக்களுக்கு இன்பம் பயக்கும் புன்னிலத்திற்குரிய நிலத்தை அத்தன்மையழியச் செய்ந்நிலமாக்குதற்குரிய காரணம் கூறுகின்றார். புல் முதலியவற்றின் தோற்றத்திற்குரிய நிலத்தைப் பெரும் பயன் கருதி, அழித்துச் செய்யாக்கல் தடையற்றது என்பது கருத்து.

85 குடிப்பிறப்புள்ளவரால் அடையப்பட்ட நிலம் பயிர்விளைவால் மிக அதிகமாக உதவுவதாயினும் விடுத்தற்குரியதாம். இன்றேல் அற்றத்தை எதிர்பார்த்து அவர்களே விதனம் நேர்ந்துழித் தீங்குபுரிய முன்வருவர் என்று அஞ்சுதல் வேண்டும் என்பது கருத்து.

வச்சங் காரணமாக விடுவித்தற்குரியது. [86]விதை விதைத்தற்குத் தடை யில்வழி பொருள் ஊர்தி என்பவற்றால் உதவுவதும் ஆனினத்தால் அடையப்பட்டதுமான நிலமாயின் விடுவித்தற்குரிய தன்று.

[87]கள்வர், காட்டில் வாழ்வோர் என்பவருள் கள்வர் [88]இரவிலும் அடர்ந்த விடங்களிலும் இயங்குபவராகவும் [89]உடலைப் பற்றுபவராகவும் [90]நித்தியராகவும் [91]நூறாயிரத்தைக் கவர்பவ ராகவும் [92]தலைவரை வெகுளச் செய்பவராகவும் இருக்கின்றனர். மறைவாக [93]நாட்டின் எல்லைக்காடுகளில் இயங்குபவரான காட்டில் வாழ்வோர் [94]ஒருபகுதியை யழிப்பவரும் [95]காணத்தக்கவரு மாக இயங்குகின்றனர் என்பர் ஆசிரியர்.

---

[86] அணிமையிலுள்ளதும் விதைவிதைத்தற்குரியதுமான செய்ந்நிலத் திற்குத் தீங்கு நேராதாயின், ஆனினத்தாலடையப்பட்டதும், கருவூலத்திற் சேர்த்தற்குரிய நெய் முதலியவற்றைக் கொடுத்தும் காளை முதலிய ஊர்தி களைக் கொடுத்தும் உதவிபுரிவதுமான நிலம் விடுத்தற்குரியதன்றென்பது கருத்து.

[87] கள்வர், காட்டில் வாழ்வோர் என்பவரால் உண்டாம் தீங்கைப் பற்றிக் கூறுவான்தொடங்கி ஆசிரியர்கொள்கையைக் கூறுகின்றார்.

[88] இரவிலும், காடு அடர்ந்த இடம் முதலியவற்றிலும் சஞ்சரிப்பவர் என்பது.

[89] பிறர் உடலைத் துன்புறுத்துபவர். அதாவது துணையற்ற எங்கெந்த மக்களைக் காண்கின்றனரோ, அவ்வவர்களின் உடலைத் துன்புறுத்தும் இயல்புள்ளவர்.

[90] எப்பொழுதும் அணுக்கமாக உள்ளவராகவும் என்பது.

[91] லக்ஷக்கணக்கான பொன் முதலியவற்றைக் கவர்பவராகவும் என்பது.

[92] அரசியற்றலைவர் பெரும்பொருளாளர் என்னும் இவர்களுக்குத் தீங்கு புரிபவராகவும் இருக்கின்றனர் என்க.

[93] மறைவையே விளக்குகின்றார். நாட்டின் எல்லைகளில் உள்ள காடு களில் சஞ்சரிப்பவர் என்பது.

[94] சிலரை அழிப்பரேயன்றி எல்லோரையும் அழிக்கமாட்டார் என்பது கருத்து.

[95] எல்லா மக்களும் காண்டற்குரியவர் என்பது. எனவே அவர்களால் துன்புறுத்தற்குரியவர் எளிதில் விலகிச்செல்லுதல் கூடும் என்பது பெற் றாம். இதனால் கள்வர், பெருங்கேட்டை விளைவிப்பவர் என்பதும் காட்டில் வாழ்வோர், சிறுகேட்டை விளைவிப்பவர் என்பதும் கூறியவாறாம்.

அன்றென்பர் கௌடலியர். கள்வர், [96]விழிப்பற்றவனுடையதைக் கவர்கின்றனர். குறைவாகவும் தடையுள்ளவராகவும் அறிதல் பிடித்தல் என்பவற்றுக்கு எளியவராகவும் ஆவர். [97]காட்டில் வாழ்வோர், [98]தன் நாட்டில் இருப்பவராய் பேரளவினராய் [99]வலியுள்ளவராய் இருக்கின்றனர். [100]காட்சிப் போர்புரிபவரும், நாட்டிற்கு அழிவு கவர்தல் என்பவற்றைச் செய்பவரும், அரசனை யொத்த தன்மையரும் ஆவர்.

[101]விலங்கு காடு, யானைக்காடு என்பவற்றுள் விலங்குகள் [102]பேரளவினவும், மிகுதியான இறைச்சி தோல்களால் உதவி புரிவனவும் [103]குறைந்த உணவு துன்பம் இவற்றையுடையனவும் [104]எளிதில் அடக்குதற்குரியனவும் ஆம். யானைகள் [105]மாறு

---

96 பொருள் முதலியவற்றைக் காப்பதில் விழிப்பற்றவனுடைய பொருள் முதலியவற்றைக் கவர்கின்றனர். மேலும் அவர்கள் துணைவரின்றி மிகச்சிலராகவும் அதுபற்றியே இயக்கத் தடையுள்ளவராகவும் அறிந்து பிடித்தற்கும் கட்டுதற்கும் எளியவராகவும் இருக்கின்றனர்.

97 காட்டில் வாழ்வோர்க்குளதாம் விசேடத்தைக் கூறுகின்றார்.

98 தங்களுடைய இருப்பிடத்திலேயே இருப்பர் அன்றிக் கள்வர்போல் வேற்றிடத்திற்குச் செல்வாரல்லர் என்பது கருத்து.

99 வன்மையுள்ளவராதலின் பிடித்தல் முதலியவற்றிற்குரியராகார் என்பது.

100 மேலும் அவர்கள் அரசர்போன்று எவ்விதத் தடையுமின்றிப் பிரகாசமாகப் போர்புரிந்து நாட்டுமக்களின் பொருள்களையும் உயிர்களையும் கவர்கின்றனர் எனக் கூறுகின்றார். எனவே காட்டில் வாழ்வோரால் நிகழும் துன்பமே மிக்கது என்பது கருத்து.

101 துன்புறுத்தலில் விலங்குவாழ் காட்டைவிட யானைவாழ் காடே மிக்கது என்ற கருத்துக்கொண்டு கூறுகின்றார்.

102 யானைகளைவிட மிகுந்ததாகவும் என்பது.

103 யானை ஏற்கும் உணவைவிட மிகக்குறைந்த உணவைக் கொள்வனவும் அதுபற்றியே ஓடுங்கால் எளிதில் துன்புறுவனவும் பின்தொடர்ந்து ஓடி வருபவரால் எளிதிற் பிடித்தற்குரியனவும் ஆம் என்பது கருத்து.

104 பிடிபட்ட பின்னர் வயப்படுத்தற்குரியனவுமாம் என்க.

105 விலங்குகளுக்குக்கூறிய குணங்களின் மாறுபட்டனவாம் என்பது; குறைந்த எண்ணிக்கை யுடையனவும், மிகக்குறைவான இறைச்சி தோல் முதலியவற்றை உதவுவனவும் மிகுதியான உணவை ஏற்பதால் துன்பமற்றனவும் அடக்குதற்கியலாதனவும் ஆம் என்க.

பட்டனவாம். பிடிபட்டவை தீயவையாயின் [106]நாட்டின் அழி விற்குக் காரணங்களாம் என்க.

[107]தன்தானீயம், பிறதானீயம் என்னுமிவற்றின் உதவிகளுள் தன்தானீய உதவியானது, கூலம் விலங்கு பொன் குப்பியம் என் னும் இவற்றால் உதவுவதும் இடுக்கண் நேர்ந்துழி நாட்டினரின் உயிரை நிலைப்படுத்துவதுமாம். [108]பிறதானீயத்தின் உதவி மாறு பட்டதாம். [109]துன்பங்கள் இவ்வாறும்.

[110]தலைவர் தடை, உள் நிகழ்வதும் நண்பர் காடுகள் என் பவற்றின் தடை, வெளி நிகழ்வதுமாம். தடைக்குழு இவ்வாறும்.

---

[106] நாட்டுமக்கள் அனைவரையுங்கூடக் கொன்றுவிடக்கூடும் என்பது கருத்து.

[107] தன் நகரத்துக்கு உதவிபுரிதல் பிறநகரத்துக்கு உதவிபுரிதல் என் பவற்றுள் முதலாவது, உதவிபுரிபவனுக்குச் சிறப்பைக் கொடுப்பதாம் என் றும், பின்னையது, உதவிபுரிபவனுக்குத் துன்பத்தைத் தருவதாம் என்றுங் கூறுகின்றார். தன் நகரத்துக்கு உதவுதல், கூலம் பசு பொன் குப்பியம் என் னும் இவற்றின் கொள்ளல் விற்றல் முதலிய தொழில்களின் உருவமாகவும் நாட்டினருக்கு வறுமை முதலிய இடுக்கண் நேர்ந்துழி உயிர்வாழ்க்கைக்குக் காரணமாகவும் ஆம் என்பது கருத்து.

[108] தான் பிறநகரத்துக்கு உதவுவானாயின் அந்நாட்டில் கூலம் முதலிய வற்றைக் கொள்ளல் விற்றல் செய்வதுபற்றி அந்நாட்டின் மிகுதியேற்படுவ தால் தனக்குத் துன்பத்தை விளைவித்துக்கொள்பவனாவான் என்பது கருத்து.

[109] நாட்டுத் துன்பங்களின் குழு இவ்வாறு விளக்கிக் கூறப்பட்ட தென்பது கருத்து.

[110] இனித் 'தடைக்குழு' என்ற பிரகரணம் கூறப்படும். தடை யாவது—அமைச்சர்முதலிய அதிகாரிகளின் தீயசெயல்களால் அரசனுடைய காரியங்களுக்கு இடையூறு விளைதல். அதற்குரிய காரணங்களைக் கூறுவது இப்பிரகரணமாகும். நாடு அரண் களைப்பற்றிய விதனத்தைக் கூறிய பின் னர், பொருளைப்பற்றிய விதனம் கூறப்படவேண்டியதாகலின், அது, இந்த சூத்திரத்தானும் அடுத்த சூத்திரத்தானும் கூறப்படுதலின் பிரகரணவியைபு புலனாம். உள்நிகழும் தடை எனவும் வெளிநிகழும் தடை எனவும் தடை இருவகைப்படும் என்பதும் அரசியற்றலைவன் முதலியோரால் நிகழும் தடை உள்நிகழ்வது என்றும், நண்பர், காட்டில் வாழ்வோர் முதலியோரால் நிகழ் வது வெளிநிகழ்வது என்றும் கூறப்படும் என்பதும் கருத்து.

[111]அவற்ருலும் [112]முற்கூறப்பட்ட துன்பங்களாலும் [113]துன்புறுத்தப்பட்டது [114]தலைவரிடம் சேர்ந்தது [115]அரசிறை ஒழிவால் அழிந்தது [116]சிதைந்தது [117]பொய்யாகக் கவரப்பட்டது [118]சிற்றரசர் காடு என்பவற்றுல் கவரப்பட்டது [119]என்பன பொருள் கொடாமையாம்.

சுலோகம்

[120]நாட்டின் மிகுதி குறித்துத் துன்பங்கள் தோன்ருமைக்கும் தோன்றியவற்றைத் தடுத்தற்கும் தடை கொடாமை என்பவற்றை யழித்தற்கும் முயலுதல் வேண்டும்.

எட்டாம் அதிகரணம் 4—6-ஆம் பிரகரணங்கள்
‘துன்பக்குழு’, ‘தடைக்குழு’, ‘பொருள்கொடாமைக்குரிய காரணக்குழு’ என்னும் நூற்றிருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

111 இனிப் பொருள்கொடாமைக்குரிய காரணக்குழு என்னும் பிரகரணம் கூறப்படும். பொருள்—ஈண்டு அரசற்கு வேண்டிய இறைப்பொருள் முதலியன. அவற்றைக் கருவூலத்திற் சேர்க்காமையைக் ‘கோசஸங்கம்’ என்று முதனூல் கூறும். அதனுடைய குழு இதன்கட் கூறப்படும். அவற்ருலும்—உள்நிகழும் தடை, வெளிநிகழும் தடை என்பவற்ருலும்.

112 தெய்வத்தால் நிகழ்வன, மக்களால் நிகழ்வன முற்கூறப்பட்டன.

113 துன்புறுத்தப்பட்டது—குறைவை எய்தியது.

114 இறுப்பவரிடமிருந்து ஏற்கப்பட்டும் தலைவரால் நுகரப்பட்டதால் அவரிடம் தங்கியது என்பது.

115 அரசன் சட்டளை காரணமாக இறைப்பொருள் அற்று அழிந்தது என்பது.

116 இங்குமங்கும் சிறிது சிறிதாகச் சிதைந்துள்ளது என்பது.

117 முறையாகவுள்ள அளவைவிடக், குறைவாகவோ மிகையாகவோ ஏற்கப்பட்டது என்பது.

118 சிற்றரசர்களாலும் காட்டில் வாழ்வோராலும் கவர்ந்துகொள்ளப் பட்டது என்பது.

119 ‘என்பன’ என்பதால் இன்னேரன்ன வகைகளாக உள்ளன என்ற பொருளைக் கொள்ளல் வேண்டும்.

120 நாட்டின் முன்னேற்றங் குறித்து அரசன், மேற்கூறிய துன்பங்கள் உண்டாகாவாறு அவற்றைத் தடை செய்வதற்கும் உண்டான துன்பங்களை விலக்குதற்கும் கருவூலத்தின் முன்னேற்றங் குறித்துக் தடையையும் கொடாமையையும் அழித்தற்கும் முயற்சியைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

எட்டாம் அதிகாரணம்—விதனம் விளம்பல்

7, 8-ஆம் பிரகரணங்கள்—[1]படைவிதனக்குழு, நட்டோர் விதனக்குழு

நூற்றிருபத்தோராம் அத்தியாயம்

படை [2]விதனங்களாவன :— [3]பெருமைப்படுத்தப்படாதது, வெறுக்கப்பட்டது, கூலிகொடுக்கப்படாதது, நோய்வாய்ப்பட்டது, புதிதாக வந்தது, சேய்மையிலிருந்து வந்தது, இளைப்புற்றது, குறைவுற்றது, தடைப்பட்டது, முதலெடுப்பில் விரைவு தடைப்பட்டது, உரிய பருவத்தில் அடையாதது, உரியவிடத்தில் அடையாதது, விருப்பத்தால் வெறுப்புற்றது, தலைவனற்றது, மனையாளைப் பழித்துரைப்பது, அகத்திற் புண்பட்டது, வெகுண்ட தலைவனையுடையது, வேறுபட்ட உட்புறத்தையுடையது, விலகியது, வெல்லப்பட்டது, அணிமையிற் சேர்ந்தது, ஒத்தவியக்கமுள்ளது, ஒருபுறத்துத் தகர்க்கப்பட்டது, நாற்புறத்தும் தகர்க்கப்பட்டது, கூலம் மக்களுக்குரிய உணவுச்சுமை என்னுமிவற்றின் தடையையுடையது, தன்னால் சிதைந்தது, நண்பரால் சிதைந்தது, தூஷ்யருடன் சேர்ந்தது, குற்றமுள்ள பின்னணியைப் பற்றுவோரையுடையது, மூலப்படையற்றது, தலைவனுடன் சேராதது, தகர்ந்த கொடுமுடியுடையது, குருடானது என்பனவாம்.

121-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] படை—யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகை யுறுப்பினதாய மூலப்படை, துணைப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, பகைப்படை என அறுவகைத்தாம். அதற்கு நேரும் விதனங்கள் பெருமைப்படுத்தப்படாமை முதல் முப்பத்துநான்கு வகைப்படும் என்று கூறுவர். பொருள்விதனத்தைக் கூறியபின்னர் முறைப்படிப் படைவிதனங் கூறவேண்டியதாகலின் இப்பிரகரணம் ஈண்டு வைக்கப்பட்டது. எனவே பிரகரணவியைபு புலனாதலறிக.

[2] விதனங்களின் தன்மைகள் கூறப்படும் என்க. எனவே, பின்வரும் 'பெருமைப்படுத்தப்படாதது' என்பது முதலியன விதனங்களின் தன்மையைப் போதிப்பனவாகக் கொண்டு 'பெருமைப்படுத்தாமை' என்பது முதலியவாக முறையே பொருள் கொள்க.

[3] இது முதலிய வகைகளின் விளக்கத்தை அடுத்துவரும் பகுதிகளால் அறியலாம்.

[4]அவற்றுள் [5]பெருமைப்படுத்தப்படாதது வெறுக்கப்பட்டது என்னுமிவற்றுள் பெருமைப்படுத்தப்படாதது பொருளாற் போற்றப்பட்டுப் போர்புரியும். உட்கோபத்தை யுடையதான வெறுக்கப்பட்டது (அவ்வாறு) அன்று.

கூலி கொடுக்கப்படாதது, நோய்வாய்ப்பட்டது என்பவற்றுள் கூலி கொடுக்கப்படாதது [6]அக்காலத்தில் வேதனத்தைப் பெற்றுப் போர்புரியும். [7]செயற்குத் தகுதியற்றதான நோய்வாய்ப்பட்டது (அவ்வாறு) அன்ரும்.

[8]புதிதாக வந்தது சேய்மையிலிருந்து வந்தது என்பவற்றுள் புதிதாக வந்தது [9]வேருெருவர் மூலமாக நாட்டை யறிந்து பழையவருடன் சேர்ந்து போர்புரியும். [10]நெடுவழிச் செலவால் துன்புற்றதான சேய்மையிலிருந்து வந்தது (அவ்வாறு) அன்ரும்.

[11]இளைப்புற்றது [12]குறைவுற்றது என்னுமிவற்றுள் இளைப்புற்றதானது நீராடுதல், உணவு, தூக்கம் என்னுமிவற்ருல் இளைப்

---

[4] பெருமைப்படுத்தாமை முதலியவற்றுள் முறையே இரண்டிரண்டு வகைகளுக்குப் பெருமை சிறுமைகளை ஆராய்பவராக முன்னைய இரண்டனுள் சிறுமை பெருமை கூறுகின்ருர். அவற்றுள்—பெருமைப்படுத்தப் படாதது முதலிய முப்பத்துநான்கு பிரிவுகளையுடைய படைகளுள்.

[5] பொருள் முதலியவற்ருல் பெருமைப்படுத்தப்படாதது, அவமதிக்கப் பட்டது என்ற இரண்டனுள் முன்னையது, பொருட்கொடையால் பெருமைப்படுத்திய காலத்துப் போர்த்தொழிலில் ஈடுபடும். பின்னையதோ வெனின், தன்னை அவமதித்ததாலுண்டாய கோபத்தை மனத்திலே கொண்டு அவ்வாறு போர்த்தொழிலில் ஈடுபடாதாம் என்பது கருத்து.

[6] அக்காலம்—போர்புரியவேண்டிய காலம்.

[7] போர்ச்செயல் புரிய ஆற்றலற்றதான என்பது.

[8] சமீபகாலத்தில் வந்தது.

[9] தனக்கு இடம் முதலியவற்றின் அறிவு இல்லாவிடினும் அவ்விடம் முதலியவற்றிற் பழகிய மக்களிடமிருந்து இடம் முதலியவற்றின் அறிவைப் பெற்று அவற்றிற் பழக்கமுள்ள பழைய படையுடன் சேர்ந்து போர்புரியும் என்பது கருத்து.

[10] நீண்டதூரம் வழிநடத்தலால் உண்டாய களைப்பை யடைந்ததாகலின் போர்புரியும் ஆற்றலற்றது என்பது.

[11] இளைப்புற்றது — இன்பமான உணவின்மை, மிகத்தொலைவிற் போக்குவரத்து என்பவற்ருல் வாடியது.

[12] குறைவுற்றது—வேறுபோரில் ஈடுபட்டு, அதுகாரணமாக ஊர்தி, வீரர் முதலியவர்களின் அழிவை எய்தியது.

பாறுதலடைந்து போர்புரியும். வேற்றுப்போரில் ஊர்தி மக்கள் என்பவற்றின் அழிவையடைந்த குறைவுற்றதானது (அவ்வாறு) அன்றும்.

[13]தடைப்பட்டது, [14]முதலெடுப்பில் விரைவு தடைப்பட்டது என்னுமிவற்றுள், [15]போர்த் தொடக்கத்தில் முறிபட்ட, தடைப்பட்டதானது வலியுள்ள மக்களுடன் சேர்ந்து போர்புரியும். கொலையுண்ட வலியவனையுடைய, முதலெடுப்பில் வேகம் தடைப்பட்டதானது (அவ்வாறு) அன்றும்.

[16]உரிய பருவத்தில் அடையாதது, உரிய இடத்தில் அடையாதது என்பவற்றுள் உரிய பருவத்தில் அடையாதது, [17]அடைந்த பருவத்துக்கேற்ற ஊர்தி, படைக்கலம், கவசம் என்னுமிவற்றை யுடையதாகப் போர்புரியும். [18]தடைப்பட்ட செலவு தொழில்களை யுடையதான, தகாவிடத்தடைந்தது (அவ்வாறு) அன்றும்.

[19]விருப்பத்தால் வெறுப்புற்றது, தலைவனற்றது என்பவற்றுள் விருப்பத்தால் வெறுப்புற்றது, [20]கருதியதைப்பெற்றுப் போர்

---

13 தடைப்பட்டது — போர்த் தொடக்கத்திலேயே தோல்வியை எய்தியது.

14 முதலெடுப்பில் விரைவு தடைப்பட்டது — மிகுந்த ஆற்றலுள்ள வீரரின் கொலையால் போர்ச்செயலூக்கம் மழுங்கியது.

15 போர் தொடங்கிய அளவிலேயே தோல்வியுற்றது என்பது. இது 'தடைப்பட்டது' என்பதின் விளக்கமாம். பின்னுள்ளவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

16 போர்க்குரிய பருவத்தை யடையாதது, படையின் உடற்பயிற்சி முதலிய இயக்கத்துக்குத் தகாத இடத்தை யடைந்தது என்பவற்றுள் என்க.

17 அப்போதுள்ள பருவத்திற்குரிய ஊர்தி, படைவீரர், கவசம் முதலியவற்றுடன் கூடியதாகப் போர்புரிதல் கூடும் என்பது கருத்து.

18 இயக்கத்திற்கு நாற்புறமும் தடையை யுடையதாயும் போர்த்தொழிற்றடையை யுடையதாயும் இருத்தல் பற்றிப் போர்புரிய முன்வராது என்பது கருத்து.

19 விரும்பியதொரு பொருளை யடையாமை காரணமாக வெறுப்புக் கொண்டது என்பது.

20 முன் விரும்பிய பொருளைப் பெற்றதும் போர்புரியும் என்பது கருத்து.

புரியும். [21]**விலகிய** தலைவனை யுடையதான, தலைவனற்றது (அவ்வாறு) அன்றாம்.

[22]மனையாளைப் பழித்துரைப்பது, [23]அகத்திற் புண்பட்டது என்பவற்றுள் மனையாளைப் பழித்துரைப்பது [24]மனையாளை நிலைப்படுத்திய பின் போர்புரியும். உட்பகை யுடையதான அகத்திற் புண்பட்டது (அவ்வாறு) அன்றாம்.

வெகுண்ட தலைவனை யுடையது, [25]வேறுபட்ட உட்புறத்தை யுடையது என்பவற்றுள் வெகுண்ட தலைவனை யுடையதானது இன்சொல் முதலியவற்றாற் கோபம் தணிக்கப்பட்ட நிலையிற் போர்புரியும். ஒருவரிடமிருந்து வேறுபட்ட மற்றவரை யுடையதான, வேறுபட்ட உட்புறத்தையுடையது (அவ்வாறு) அன்றாம்.

[26]**விலகியது**, [27]வெல்லப்பட்டது என்பவற்றுள் ஒரு நாட்டில் முறிபட்டதான விலகியது, [28]மந்திராலோசனை பயிற்சி என்னு மிவற்றால் காட்டினையும் நண்பர்களையும் அண்டிப் போர்புரியும். பல நாடுகளில் முறிபட்டதான வெல்லப்பட்டதானது [29]பல துன்பங்களை யுடையதாகலின் (அவ்வாறு) அன்றாம்.

---

21 முற்கூறியது போல் இது 'தலைவனற்றது' என்பதன் விளக்கமாம்.

22 மனையாள் என்பது ஈண்டு உபலக்கணத்தால் போற்றப்படக் கடவ மக்கட்குழுவை யுணர்த்தும். அதைப் பழித்துரைப்பதாவது—அதைப் புரக்கவேண்டிய கடமை போர்ச்செயலில் ஈடுபடுதற்கு இடையூறாயுள்ளது என்று வெறுத்துக் கூறல்.

23 உட்பகையை யுடையது என்பது.

24 மனையாளைப் பிரித்து உரிய பாதுகாப்புள்ள விடத்தில் நிறுத்தியபின் போர்புரியும் என்பது கருத்து.

25 ஒருவரோடு ஒருவர் மனவேறுபாட்டை யடைந்ததால் உட்கலாம் உள்ளது என்ப.

26 ஒரு நாட்டைக் கைப்பற்றச் சென்று அந்நாட்டுப் படைகளால் முறியடிக்கப்பட்டு விலகியது.

27 பலநாடுகளிலும் சென்று அங்குள்ள படைகளால் போரில் வெல்லப்பட்டது.

28 நூல்களிற்கண்ட உபாயத்தை யாராய்தல் என்ற மந்திராலோசனையினாலும், சிறந்த பயிற்சியாகிற உடற்பயிற்சியாலும் காட்டினையும் நண்பர்களையும் அண்டிப் போர்புரியும் என்பது கருத்து.

29 பல நாடுகளிற் புக்கு பலவகைத் துன்பங்களையும் அநுபவித்தலின் போர்புரியாது என்பது கருத்து.

[30]அணிமையிற் சேர்ந்தது, [31]ஒத்த வியக்கமுள்ளது என்ப வற்றுள் [32]தனிப்பட்ட மேற்சேறல், இருத்தல் என்பவற்றை யுடையதான அணிமையிற் சேர்ந்தது வஞ்சிப்பவனைக் குறித்துப் போர்புரியும். [33]பகைவனுடன் ஒத்த மேற்சேறல் இருத்தல் என் பவற்றை யுடையதான ஒத்த வியக்கமுள்ளது (அவ்வாறு) அன்றாம்.

ஒருபுறத்துத் தகர்க்கப்பட்டது, நாற்புறத்தும் தகர்க்கப்பட் டது என்பவற்றுள் ஒருபுறத்துத் தகர்க்கப்பட்டதானது [34]வேறு புறமாக வெளிவந்து தகர்ப்பவனை எதிர்த்துப் போர்புரியும். நாற் புறமும் தகர்த்தலையுடையதான நாற்புறத்தும் தகர்க்கப்பட்டது (அவ்வாறு) அன்றாம்.

[35]தடைப்பட்ட கூலத்தை யுடையது, [36]தடைப்பட்ட மக்க ளுணவுச் சுமையை யுடையது என்னுமிவற்றுள் தடைப்பட்ட கூலத்தை யுடையது [37]வேறு வழியாகக் கூலத்தைக் கொணர்ந் தாதல், இயக்கமுள்ளனவும் இயக்கமற்றனவுமான உண்வை

---

[30] பகைவனுடைய சமீபத்தை யடைந்துள்ளதும் ஆனால் பகைவனுடன் தொடர்பற்ற தன்னுடைய மேற்சேறல் இருத்தல் என்பவற்றையுடையது மான படை.

[31] பகைவனுடன் ஒத்த மேற்சேறல் இருத்தல் என்பவற்றை யுடையது என்பது.

[32] தன்னை வஞ்சிக்கும் பகைவன் தனிப்பட்ட மேற்சேறல் இருத்தல் என்பவற்றையுடைய தன்னுடைய அற்றத்தை அறியான் எனக்கொண்டு அவனை எதிர்த்துப் போர்புரியும் என்பது கருத்து.

[33] தனக்கும் பகைவனுக்கும் மேற்சேறல் இருத்தல் என்பன ஒத்தன வாதல் பற்றித் தன் அற்றத்தைப் பகைவன் அறிவானாகலின், தன்னை வஞ் சிக்கும் அப்பகைவனை எதிர்த்துப் போர்புரியாது என்பது கருத்து.

[34] தகர்க்கப்பட்டவிடத்தைத் தவிர வேறொரு புறமாக வெளிப்பட்டுத் தகர்ப்பவனைக் குறித்துப் போர்புரியும் என்பது.

[35] தன்னாட்டினின்றும் கூலம் வருவது தடைப்பட்டதென்பது.

[36] தன்னாட்டு வீரர்களுக்குரிய உணவு வகைகளைச் சுமந்துகொண்டு வரு தல் தடைப்பட்டதென்பது.

[37] வேற்று நாட்டினின்றும் நெல் முதலிய தானிய வகைகளைக்கொண்டு வந்தாதல், விலங்கு முதலியவற்றின் இறைச்சியுணவு, தாவர உணவு என்பவற்றைப் புசித்தாதல் போர்புரியும் என்பது கருத்து.

யுடையதாகவாதல் போர்புரியும். உதவியற்றதான தடைப்பட்ட மக்களுணவுச் சுமையை யுடையது (அவ்வாறு) அன்றும்.

[38] தன்னால் சிதைந்தது, [39] நண்பராற் சிதைந்தது என்பவற்றுள் தன்னாட்டில் சிதைந்துள்ளதான தன்னால் சிதைந்த படை, [40] இடுக்கண் நேர்ந்துழி ஒன்றுசேர்த்தற்குரியது. [41] மறைவுபட்ட இடம் காலங்களை யுடையது பற்றி நண்பராற் சிதைந்தது (அவ்வாறு) அன்றும்.

[42] தூஷ்யருடன் சேர்ந்தது, [43] குற்றமுள்ள பின்னணியைப் பற்றுவோரையுடையது என்னுமிவற்றுள் தூஷ்யருடன்சேர்ந்தது, [44] அன்புள்ள மக்களைச் சார்ந்தும் சேராமலிருந்தும் போர்புரியும். [45] பின்னணியின் சிதைவால் அஞ்சியதான, பின்னணியைப் பற்றுவோரையுடைய குற்றமுள்ளது (அவ்வாறு) அன்றும்.

[46] மூலப்படையற்றது, [47] தலைவனுடன் சேராதது என்னுமிவற்றுள் மூலப்படை யற்றதானது [48] நகரத்து மக்கள் நாட்டு மக்கள் என்பவராற் காக்கப்பட்டு ஒன்றுசேர்ந்து போர்புரியும்.

---

38 அலுவல் குறித்துத் தன்னாட்டில் அங்குமிங்கும் பிரிந்து சென்றது என்பது.

39 நண்பன் நாட்டில் அவன் காரியங்குறித்து அனுப்பப்பட்டதென்பது.

40 பகைவனால் எதிர்க்கப்பட்டபோது ஒன்றுசேர்த்தற்கியலும் என்க.

41 சேய்மையான இடத்தில் இருத்தலால் நெருங்கி வருதற்குக் காலந் தாழ்க்குமென்பது கருத்து.

42 அரசுக்குத் தீங்குபுரியும் தலைவர், தூஷ்யர் எனப்படுவர்.

43 பின்னணியைத் தாக்குதற்கு அற்றத்தை எதிர்பார்த்திருக்கும் பின்னணியைப் பற்றுபவரை யுடையது.

44 மேற்கூறிய தூஷ்யர்களுக்குச் சார்பாகவும் தனக்கு நம்பிக்கைக் குரியவராகவுமுள்ள மக்களை யுடையதாய்ப் பிற தூஷ்யர்களுடன் சேராமலும் இருந்து போர்புரியும் என்பது கருத்து.

45 பின்னணியில் தகர்த்தல் நிகழும் என்ற அச்சமுண்மைபற்றிப் போர்புரிய இயலாதென்பது கருத்து.

46 மிகுதியின்றி எல்லாப் படைகளையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டதென்பது.

47 அரசனுலாதல் சேனைத்தலைவனுலாதல் அடையப்படாதது.

48 நகரத்துமக்கள் நாட்டுமக்கள் என்பவர்களால் செய்யப்பட்ட நாற்புறத்துக் காப்பை யுடையதாக, எல்லோரும் கூடிப் போர்புரியும் என்பது.

அரசன் சேனைத்தலைவன் என்னும் இவர்கள் அற்றதான தலைவனுடன் சேராதது (அவ்வாறு) [49]அன்றாம்.

[50]தகர்ந்த கொடுமுடி யுடையது, [51]குருடானது என்னுமிவற்றுள் தகர்ந்த கொடுமுடி யுடையதானது வேறொருவனைச் சார்ந்து போர்புரியும். [52]ஆசிரியனற்றதான குருடானது (அவ்வாறு) அன்றாம் என்க.

சுலோகங்கள்

(1) [53]குற்றங்களைதல், [54]படையை நிலைப்படுத்தல், காட்டிலிருத்தல், [55]வஞ்சித்தல், [56]சிறந்த பக்கத்துடன் சந்தி என்னுமிவை [57]படை விதனக்கருவிகளாம்.

(2) விதனம் நேர்ந்துழி தன் படையைப் பகைவரிடமிருந்து [58]எப்பொழுதும் முயன்று காத்தல் வேண்டும். பகைவரது படைகளின் அற்றத்தில் எப்பொழுதும் முயன்று தாக்கல் வேண்டும்.

---

49 தலைவன் இல்லாமையால் போர்புரிய இயலாதென்பது கருத்து.

50 கொடுமுடி என்பது எல்லாச் சேனைக்கும் தலைவன் என்னும் பொருட்டு. கொடுமுடிபோல் சிறப்புண்மை காரணமாக இங்ஙனங் கூறினார். அவனற்றதென்பது.

51 பகைவனது செயல் முதலியவற்றை அறியாதது என்பது.

52 செயற்பாலன முதலியவற்றைக் கற்பிக்கும் நாயகனற்றது என்பது.

53 மேற்கூறிய படைவிதனங்களைப் பரிகரித்தற்குரிய உபாயங்களைக் கூறுகின்றார். பெருமைப்படுத்தாமை, அவமதித்தல் முதலிய குற்றங்களுக்கு மாற்றச் செயல்புரிதல் என்பது.

54 குற்றமற்ற படைகளை வேறு படைகளுடன் சேர்த்து வைத்தல்.

55 கபடமான உபாயங்களால் பகைப்படைகளை வஞ்சித்தல் என்பது.

56 வன்மைமிக்க பகைவருடன் சந்திசெய்தல்.

57 படைவிதனங்களைப் பரிகரித்தற்குரிய உபாயங்களாம் என்பது கருத்து.

58 தன் படையைப் பாதுகாப்பதற்குரிய முயற்சி எஞ்ஞான்றுமிருத்தல் வேண்டும் என்பது. இத்துடன் 'படைவிதனக்குழு' என்னும் பிரகரணம் கூறி முடிக்கப்பட்டது.

(3) [59]தானேயாதல் [60]ஒன்றுகூடியாதல், [61]பிறர்க்கு வயப்பட்டாதல் [62]மேற்சேர்ந்தவனும், ஆற்றலின்மை, [63]பொருணசை அல்லது [64]அன்பு என்பன காரணமாக [65]விடப்பட்டவனுமான நண்பன் (நண்பனும்).

(4) [66]போரில் மேற்செல்லுங்கால் விலகியவனால் விற்கப்பட்டவனும் [67]துவைதீபாவங் காரணமாக (விற்கப்பட்டவனும்) [68]வேறொருவனுடன் மேற்சேறலை யேற்றவனால் (விற்கப்பட்டவனுமான) நண்பனும்.

---

[59] இனி 'நட்டோர் விதனக்குழு' என்னும் பிரகரணம் விளக்கப்படும். நட்டோர்—அரசனுடைய நண்பர்கள். அவர்களைச்சார்ந்த விதனங்களின் தொகுதி கூறப்படும் என்க. தானேயாதல்—தன் காரியங்குறித்தாதல்.

[60] ஒரு குழுவின் காரியங்குறித்து அக்குழுவுடன் சேர்ந்தாதல் என்பது.

[61] தன் உறவினர் முதலியவரது காரியங்குறித்தாதல் என்பது.

[62] பகைவனுடன் எதிர்த்துச் சென்றவனும் என்பது.

[63] பொருணசை—ஈண்டுப் பகைவனிடமிருந்து பொருளைப் பெறுதல்.

[64] அன்பு என்பது ஈண்டுப் பகைவர்பால் வைத்த அன்பினைக் குறிக்கும்.

[65] விடப்பட்டவன்—உதவிபுரியப்படாதவன். இந்நிலைகளில் ஆற்றலுக்கேற்ப உதவிபுரியவேண்டியது அவசியமாயிருக்க, வெற்றிவிருப்பமுள்ளவனால் தன்பாலுள்ள குற்றங்காரணமாகப் பொருட்படுத்தாது விடப்பட்ட நண்பன் என்பது. ஈண்டும் பின் சுலோகங்களிலும் உள்ள 'நண்பனும்' என்ற சொல்லுக்கு 'முயற்சியால் வயமாக்கப்படுவர்' என்ற எட்டாம் சுலோகப் பகுதியுடன் அன்வயம் வைத்துப் பொருள் கொள்க. இது நட்டோர் விதனத்துக்குக் காரணமான ஒரு வகையாகும். இதுபோல் பலவகைகள் அடுத்துக் கூறப்படுவனவாம்.

[66] போரில் தன் நண்பன் மேற்சேறலை ஏற்றுச் செயல்புரிந்துகொண்டிருக்கும் காலத்திலேயே (மேற்சேறல் முடிவுறாத நிலையிலேயே) தான் செய்யப்புகுந்த உதவி முடிவுறாதநிலையில் பிறனிடமிருந்து பொருளை ஏற்றுக்கொண்டு திரும்பிய வெற்றிவிருப்பமுள்ளவனது செயலால் நட்புரிமையிலிருந்து விலக்கப்பட்டவனும் என்பது.

[67] வேறொரு வகை கூறுகின்றார். துவைதீபாவம்—தன் நண்பனின் பகைவனுடன் சந்தி செய்துகொண்டு தனக்கு மேற்சேறற்குரியானைக் குறித்து மேற்சேறல்.

[68] மற்றொரு வகையைக் கூறுகின்றார். நீ இவ்வழியாகச் செல், யான் அவ்வழியாகச் செல்கிறேன் என்று கூறித் தன் நண்பற்குப் பகைவனாகிய மற்றொருவனுடன் சந்திசெய்து தன்னுடைய வேறொரு பகைவனைக்குறித்து மேற்செல்லும் வெற்றிவிருப்பமுள்ளவனால் விற்கப்பட்டவன் என்பது.

(5) [69]தனியாகவாதல் ஒன்றுசேர்ந்தாதல் மேற்சேறலில் நம்பிக்கை காரணமாக வஞ்சிக்கப்பட்டவனும்,[70] அச்சம் [71]விருப்பமின்மை சோம்பல் என்னுமிவை காரணமாக [72]விதனத்தினின்றும் விடுவிக்கப்படாதவனுமான (நண்பனும்).

(6) [73]தன்னாட்டில் தடையுடையவனும் [74]அச்சங்காரணமாக அணிமையினின்றும் சென்றவனும், [75]வலிந்து கவர்தல், [76]கொடாமை என்பவற்றாலாதல், [77]கொடுத்தபின்னராதல் அவமதிக்கப்பட்டவனுமான (நண்பனும்).

(7) தானேயாதல், வேறொருவன்மூலமாகவாதல் [78]மிகுதியாகப் பொருள் கவரப்பட்டவனும், [79]பகைவனைக் களைந்து (வந்து) இருக்கும் நிலையில் மிகப்பெரிய செயலில் ஏவப்பட்டவனுமான (நண்பனும்).

---

69 நீ இந்தப்புறமாக உன் பகைவனைக் குறித்து மேற்செல்வாயாக. யான் வேறுபுறமாகச் செல்கிறேன் என்று வெவ்வேறு திசையில் செல்லுதலைக் காரணமாகக் கொண்ட சந்தியில் நம்பிக்கையாலாதல், நாமிருவரும் கூடிப் பகைவனுடன் மேற்செல்வோம் என்ற கூடிமேற்சேறல் காரணமாக உண்டான சந்தியில் நம்பிக்கையாலாதல் தன்னிடம் நட்புக்கொண்டவனுடைய பகைவனுக்கு மறைவாக உதவிபுரிதலால் வஞ்சிக்கப்பட்டவனும் என்பது.

70 அச்சம்—நண்பனின் பகைவனிடமிருந்து உண்டாயது.

71 விருப்பம்—தன் நண்பனிடம் ஆதரவு.

72 பகைவர் எதிர்ப்பினின்று விடுவித்துப் புரக்கப்படாதவனும் என்க.

73 வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நாட்டில் வருதற்குத் தடை யெய்தியவனும் என்பது.

74 கொலை கட்டுதல் முதலிய தீங்கைத் தனக்குச் செய்தல் கூடும் என்று ஐயுற்றுத் தானகவே வெற்றிவிருப்பமுள்ளவனிடமிருந்து விலகிப்போனவனும் என்பது கருத்து.

75 படை முதலியவற்றைக்கொண்டு பொருளைக் கவர்தல்.

76 கொடுக்கக்கடவ பொருள் முதலியவற்றைக் கொடாமை.

77 அவனுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்து, அதன் பின்னர் அவமதிக்கப்பட்டவன் என்பது.

78 வெற்றிவிருப்பமுள்ளவனற் பொருள் கவரப்பட்டவனும் என்பது.

79 வெற்றிவிருப்பமுள்ளவனுடைய பகைவனைப் போரில் வென்று மீண்டு வந்தவுடனேயே, மீண்டும் மிகுந்த முயற்சியுடன் நிறைவேற்றுதற்குரிய காரியத்தில் ஏவப்பட்டவனும் என்பது.

(8) ஆற்றலின்மைகாரணமாக அயன்மையாகக் கருதப்பட்டவனும் [80]இரந்தபின்னர் பகைமை கொண்டவனுமான நண்பனும் [81]முயற்சியால் வயமாக்கப்படுவான். [82]வயமானபின்னர் விரைவில் வெறுப்புறுகிறுன்.

(9—10) [83]உழைத்தவனும் [84]மதித்தற்குரியவனும் [85]அறிவின்மையால் மதிக்கப்படாதவனும் [86]ஒவ்வாத முறையில் மதிக்கப்பட்டவனும் [87]அன்பினுல் தடுக்கப்பட்டவனும் [88]நண்பரது தீங்கினுல் அச்சமுற்றவனும் [89]பகைவனுடன் சந்தியை ஏற்றவனிடமிருந்து ஐயுற்றவனும் [90]தூஷ்யர்களால் வேறுபடுத்தப்பட்ட

---

[80] மீண்டும் நண்பராயிருப்போம் எனக் கேட்டுக்கொண்டு வந்து, பின்னர்ப் பகைமையை உண்டுபண்ணியவனும் என்பது.

[81] இதுகாறும் விளக்கப்பட்ட பல்வகையான மாறுபாட்டை யெய்திய நண்பர்களை வயப்படுத்தற்கு விரும்பிய நிலையில் ஏற்கற்பாலதைக் கூறுகின்ருர். மிகுந்த முயற்சியைக்கொண்டு தனக்கு அநுகூலனுக்கலாம் என்பது கருத்து.

[82] அவ்விதம் மிகவும் முயன்று வயமாக்கப்பட்டவன் மிக விரைவில் நட்பற்றவனுவான் என்பது கருத்து.

[83] மனவேறுபாட்டை யடைந்த நண்பருள், வயமாக்குதற்கியலாதவர் குழுவை இதுகாறும் கூறினுர். இனி அவருள் வயப்படுத்தற்குரியவரது குழுவைக் கூறுகின்ருர். உழைத்தவன்—வெற்றிவிருப்பமுள்ளவனுக்காகப் போர் முதலியவற்றில் முயன்று சிரமத்தை மேற்கொண்டவன்.

[84] அவ்வுழைப்பு காரணமாகப் பெருமைப்படுத்தற்குரியவனும் என்பது.

[85] அறிவின்மை—ஈண்டு விழிப்பின்மை; கவனக்குறைவு.

[86] பெருமைப்படுத்தப்பட்டிருந்தும், அவனுழைப்புக்குத் தக்கவாறு பெருமைப்படுத்தப்படாதவனும் என்பது.

[87] வெற்றிவிருப்பமுள்ளவனிடமுள்ள அன்பு காரணமாகப் பகைவரால் தடுக்கப்பட்டவனும் என்பது.

[88] வெற்றிவிருப்பமுள்ளவன் அவனுடைய வேெருரு நண்பனுக்குச் செய்த தீங்கைக்கண்டு தனக்கும் அவ்வாறு தீங்குபுரியக் கூடும் என்று அஞ்சியவனும் என்பது.

[89] தன் பகைவனுடன் சந்தியை ஏற்ற வெற்றிவிருப்பமுள்ளவனிடமிருந்து தனக்குத் தீங்குண்டாம் என்று ஐயுற்றவனும் என்பது.

[90] அரசுத் தீங்குபுரிதலில் ஈடுபட்ட தலைவர்களால் வேறுபடுத்தப்பட்டவனும் என்பது,

121

வனுமான நண்பன் [91]வயப்படுத்தற்குரியன். [92]வயப்பட்ட பின்னர் நிலைப்படுவான்.

(11) [93]ஆதலால் நண்பருக்குத் தீங்கிழைக்கும் இக்குற்றங்களை யிழைத்தல் கூடாது. [94]உண்டான குற்றங்களை யழித்தற்குரிய குணங்களால் களைதல் வேண்டும்.

(12) [95]மக்களின் விதனம் [96]எந்தக் காரணத்தை யடைதல் கூடுமோ, [97]அந்தக் காரணத்தை [98]முன்னரே சோம்பல் இன்றிப் பரிகரித்தல் வேண்டும்.

எட்டாம் அதிகரணம் 7, 8-ஆம் பிரகரணங்கள்
'படைவிதனக்குழு', 'நட்டோர்விதனக்குழு' என்னும்
நூற்றிருபத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.
எட்டாம் அதிகரணம் முற்றிற்று.

---

91 அவனுக்குண்டாய கருத்து வேறுபாட்டை யகற்றி இயற்கைநிலையை அடையச்செய்தல் கூடும் என்பது கருத்து.

92 இயற்கையை யடைந்த பின்னர் மீண்டும் கருத்துவேறுபாட்டை யடைவித்தற்குரியராகார் என்பது கருத்து.

93 எல்லா வகையானும் பரிகரித்தற்குரியதாகலின் நட்புக்கேட்டிற்குக் காரணங்களாகவும், முற்கூறப்பட்ட பொருட்படுத்தாமை முதலியனவாகவுமுள்ள குற்றங்களை நண்பரிடம் உண்டாக்கலாகாது என்பது கருத்து.

94 எதிர்பாராத நிலையில் உண்டாயினும் அவற்றைப் பரிகரித்தற்குரிய இன்சொல் முதலிய உபாயங்களால் அவற்றை நீக்குதல் வேண்டும் என்பது கருத்து.

95 அரசு முதலிய முற்கூறிய எல்லா அங்கங்களின் விதனங்கட்கும் பொதுவான விதியைக் கூறுபவராக இவ்வதிகரணத்தை முடிக்கின்றார்.

96 தன்னை உண்டாக்க வல்ல எந்தக்காரணத்தை என்க.

97 அங்கங்களின் விதனத்தை உண்டாக்கக்கூடிய அந்தக் காரணத்தை என்பது.

98 அக்காரணம் உண்டாவதற்கு முன்னரே, அது உண்டாகாவண்ணம் முயன்று விலக்குதல் வேண்டும் என்பது. ஈண்டுப் பொருள்பற்றி, வெற்றி விருப்பமுள்ளவனை விலக்குதற்கு வினைமுதலாகக் கொள்ளல் வேண்டும் என்ப.

ஒன்பதாம் அதிகரணம்—[1]போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்

1, 2-ஆம் பிரகரணங்கள்—[2]ஆற்றல் இடம் காலங்களின் வன்மை மென்மை யறிதல், மேற்சேறற்குரிய காலங்கள்

நூற்றிருபத்திரண்டாம் அத்தியாயம்

[3]வெற்றிவிருப்பமுள்ளவன் தன்னையும் பிறனையும் சார்ந்த ஆற்றல், இடம், காலம், செலவுக்குரியகாலம், படையைச்சேர்த்தற்

122-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] போர் குறித்துச் செல்ல முயலும் அரசன் அச்செலவிற்கு முன்னரே ஆராய்ந்து செயற்பாலன இன்னவென்பதைக் கூறுவது இப்பிரகரணமாகும். அங்கங்களுடைய விதனங்களுக்கு வன்மை மென்மைகளை யறிதல் இன்றியமையாதது போலவே, ஆற்றல்களுக்கும் அவற்றை யறிதல் இன்றியமையாதாகலின் இவ்வதிகரணம் தொடங்கப்படுகிறது.

[2] ஆற்றல்—அறிவு, ஆண்மை, ஊக்கம் என்பன. இவற்றை முறையே மந்திரசக்தி, பிரபுசக்தி, உற்சாகசக்தி என்பர் வடநூலார். வன்மை மென்மை யறிதல், பகைமேற்சேறற் பொருட்டு. மந்திரசக்தி முதலிய ஆற்றலுக்கும், ஒத்தது மேடுபள்ளமுடையது முதலிய இடத்துக்கும், குளிர்ந்தது வெப்பமுள்ளது முதலிய காலத்திற்கும் வன்மையாவது—தன் படைகள் போர்செய்தற்குத் தக்கதாயிருத்தல். மென்மையாவது—பகைப் படைகளுக்குப் போர்செய்யத் தடையாயிருத்தல் என்பதாம். அவ்வன்மை மென்மைகளை ஆராய்ந்தறிதலைப்பற்றி இப்பிரகரணம் கூறும்.

[3] ஆற்றல் முதலியவற்றின் அறிவு, மேற்சேறலைக் குறித்துக் காரணமாயிருத்தலை அவ்வறிவின் உண்மை யின்மைகளைக் கொண்டு விளக்குகின்றார். தன்பாலும் பகைவர்பாலும் ஆற்றல் முதலியவை மேற்சேறலை ஏற்றற்குக் காரணமாக அதற்குத் தகுதியாயிருத்தல் என்ற வன்மையையும் அதற்குத் தடையாயிருத்தல் என்ற மென்மையையும் பின்னிகழும் வெகுளி முதலியவை மேற்சேறலுக்குத் தடையாயிருத்தல் (மேற்சேறலை ஏற்காமைக்குக் காரணமாயிருத்தல்) என்ற அவற்றின் வன்மையையும், ஒன்றனோடொன்றைக் குறித்தும், வேறொன்றைக்குறித்தும் ஆராய்ந்து துணிந்து பகைவனைவிடத் தனக்கு மேற்சேறற்குத் தகுதியான ஆற்றல் முதலிய சிறப்பிருப்பின் வெற்றிவிருப்பமுள்ளவன் மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து. ஆற்றல், இடம், காலம் என்றவிடத்துக் காலம் என்பது காரியங்களுக்குத் தக்க படைகளை ஏற்றற்குரிய காலம் என்னும் பொருட்டு. பின்னிகழும் வெகுளி — வெற்றிவிருப்பமுள்ளவன் சென்றதும் பின்னர் அவனுடைய தானியம் முதலியவற்றில் தீயிடல், அவற்றைச் சிதைத்தல் முதலியவற்றைச் செய்யத் தொடங்குதல். கேடு—ஊர்தி பணியாளர் முதலியவர்களின் அழிவு. செலவு — பொன் முதலியவற்றின் குறைவு. ஊதியம்—பயன் விளைவு. இடுக்கண்—126-ஆம் அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்படும்.

சூரியகாலம், பின்னிகழும் வெகுளி, கேடு, செலவு, ஊதியம், இடுக்கண் என்னுமிவற்றின் வன்மை மென்மைகளை யறிந்து சிறந்த வன்மை யுடையவனாக மேற்சேறல் வேண்டும். [4]இன்றேல் இருத்தல் வேண்டும்.

[5]ஊக்கம் [6]ஆண்மை என்னும் இவற்றுள் ஊக்கம் சிறந்ததாம். [7]தானே [8]சூரனும், படை பிணியின்மை [9]படைக்கலப் பயிற்சி என்னுமிவற்றை யுடையவனுமான அரசன் [10]படையை (மட்டும்) துணையாகக்கொண்டு ஆண்மையுடன் கூடிய அரசனை வெல்லுதற்கு வல்லவனாவான். படை குறைவுடையதாயினும் இவனுடைய பொலிவால் செயலைப் புரிவதாகும். ஆண்மையும் வன்மையும் உள்ள அரசன் [11]ஊக்கமற்றவனாயின் அழிகின்றான் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். ஆண்மையுள்ளவன் ஊக்கமுள்ள அரசனை, [12]அவனிற் சிறந்த வேறு அரசனைத் [13]துணைக்

---

[4] ஆற்றல் முதலியவற்றால் சிறப்பில்லையேல் மேற்சேறலை யேற்றல் கூடாதென்பதாம்.

[5] மூவகை ஆற்றலுள் சிறப்பை ஆராயத்தொடங்கி ஆசிரியர் கொள்கையைக் கூறுகின்றார். ஊக்கம்—மனவெழுச்சி, வன்மை, பிணியின்மை முதலியவற்றுடன் கூடியிருத்தல்.

[6] பொருள் படைகளுடன் கூடியிருத்தல் என்பது.

[7] காரணத்தை விளக்குகின்றார்.

[8] சூரன்—உடல் வன்மையுள்ளவன்.

[9] படைக்கலப்பயிற்சி என்பது ஈண்டு மந்திரத்தைத் துணையாகக் கொண்டு எய்யப்பெறும் அத்திரப்பயிற்சியைக் குறிப்பதாம்.

[10] நட்புப்படையைத் துணையாகக்கொள்ளாமல் தன் படையை மட்டும் துணையாகக்கொண்டு பிரபுசக்தியால் நிறைந்த அரசனைப் போரில் வென்றுவிடுகிறான் என்பதும், அவனுடைய தோற்றப் பொலிவினாலேயே மிகக் குறைந்த படையும் காரியத்தை நிறைவேற்றும் வல்லமை யுடையதாகின்றது என்பதும் காரணங்களாம் என்க.

[11] பிரபுசக்தி யுடையனாயினும் உற்சாகசக்தி யின்றேல் வெற்றியில்லை யெனக் கூறுகின்றார்.

[12] அவன் — உற்சாகசக்தி யுள்ளவனும் மேற்சேறற்குரியவனுமான அரசன்.

[13] துணைக்கொள்ளுதல்—தனக்கு உதவிபுரியும்படிக் கேட்டுக்கொள்ளுதல்.

கொண்டும், மிக வலிய மக்களைக் [14]கவர்ந்தும் [15]விலைக்கு வாங்கியும் ஆண்மையால் சிறப்பெய்துகின்றான். இவனுடைய படை, மிகுந்த ஆண்மை, குதிரை, யானை, தேர், கருவி என்னுமிவற்றால் மிகுதியடைந்து எங்கும் தடையின்றிச் செல்லுகின்றது மகளிர், சிறுவர், முடவர், குருடர் என்ற இவர்களும் [16]ஆண்மையால், ஊக்கமுடையவர்களை வென்றும் விலைக்கு வாங்கியும் நிலத்தை வென்றனர் [17]என்ப.

ஆண்மை அறிவு என்பவற்றுள் ஆண்மை சிறந்தது. அறிவால் நிறைந்தவன் ஆண்மையற்றவனாயின் [18]அறிவுப் பயனற்றவனாவான். இவனுடைய [19]துணியப்பட்ட அறிவுச்செயலை, கருக்கொள்கதிரைப் பெயலின்மை யழித்தல்போன்று ஆண்மையின்மை அழித்துவிடும் என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். அறிவாற்றல் சிறந்தது. [20]அறிவு, நூல் என்பவற்றைக் கண்ணாகவுடைய அரசன் சிறிய முயற்சியானும் [21]அறிவுச்செயலை யேற்றற்கும் ஊக்கம் ஆண்மைகளை

---

[14] கவர்தல்—உணவு வேதனங்களைக் கொடுத்தலால் ஏற்றல்.

[15] விலைக்கு வாங்குதல்—மிக அதிகமான பொருளைக் கொடுத்துத் தன் வயமாக்குதல்.

[16] வலியற்ற மகளிர் முதலியோரும் பொருள்நிறைவின் சிறப்பால், உற்சாக சக்தியுள்ள வலிய மக்களை வயப்படுத்திக்கொண்டு நிலத்தை வென்றனர் என்ற பழைய வரலாறு உளது எனக் கூறுகின்றார்.

[17] 'என்ப' என்பதன்முன் 'என்ற பழைய வரலாறு உளது' என்பதைக் கூட்டிப் பொருளுரைக்க.

[18] மந்திரசக்தியாற் பயனற்றவனாவான் என்பது கருத்து.

[19] ஆராய்ந்து துணியப்பட்ட. மந்திரப் பொருளின் செயலை ஏற்கும் முறையானது பொருள் படைகளாலேயே நிறைவேற்றுதற்குரியதாகலின், பயிரின் உட்புறத்திலுள்ள தானியம் மழையை எதிர்பார்த்து வெளிவருமியல்பிற்றாகலின், மழையில்வழி அழிந்துவிடுவதுபோல், பிரபுசக்தியில்வழி அறிவுச்செயல் அழிந்துவிடும் என்பது கருத்து.

[20] அறிவையும் நூலையும் இரு கண்ணாகக் கொண்டவன் என்க.

[21] அறிவுச்செயல்—மந்திரத்தால் துணியப்பட்டது.

யுடைய பிறரை [22]இன்சொல் முதலியன, [23]வஞ்சித்தல் [24]மறைவுச்செயல் என்பவற்றால் வஞ்சித்தற்கும் [25]வல்லவனாகிறான். [26]இங்ஙனம் ஊக்கம், ஆண்மை, அறிவு ஆகிய ஆற்றல்களுள் [27]முறையே பின்னையதாற் சிறந்தவன் சிறப்புறுகிறான்.

[28]இடம் நிலமாம். [29]அதில் இமயம், கடல் என்பவற்றின் இடைப்பட்டதாய் வடக்கிலுள்ளதும், ஆயிரம் யோசனை அளவுள்ளதாய் குறுக்கே உள்ளதும் ஆகிய பகுதி சக்கரவர்த்தியின் நிலமாம். [30]காட்டுப்பகுதி, [31]கிராமப்பகுதி, [32]மலைப்பகுதி, [33]நீர்ப்பகுதி, நிலப்பகுதி, [34]ஒத்தது, மேடுபள்ளமுள்ளது என்பன [35]அதன் பிரிவுகளாம். [36]அவற்றில் [37]தன் படைக்கு மிகுதியைச்

---

[22] இன்சொல் முதலிய நால்வகை உபாயங்களாலும் என்பது.

[23] வஞ்சித்தல்—தீக்ஷ்ணர் முதலிய ஒற்றர்களை யனுப்புதல்.

[24] பதினான்காம் அதிகரணத்திற் கூறப்படும் நச்சிடுதல், தீயிடல் முதலியன.

[25] உற்சாகசக்தி, பிரபுசக்தி என்பவற்றால் தான் குறைவுற்றவனாயினும் வல்லவனாவான் என்பது தானே பெறப்படும்.

[26] இங்ஙனம்—உற்சாகசக்தி முதலிய மூன்றனுள் முன்னையதைவிடப் பின்னையது சிறந்தது என்பது துணியப்பட்டதால்.

[27] அறிவுடையானைவிட ஏனை யிருவரும், ஆண்மையுடையவனைவிட ஊக்கமுடையவனும் முறையே சிறப்புற்று விளங்குவர் என்பது கருத்து.

[28] இதுகாறும் ஆற்றலினியல்பு விளக்கப்பட்டது. இனி 'இடம்' என்பதை விளக்கத் தொடங்குகின்றார்.

[29] அதில்—நிலத்தில். இமயமலை தென்கடல் என்பவற்றை வடக்குத் தெற்கு எல்லைகளாகவும், கீழ்கடல் மேல்கடல் என்பவற்றைக் கிழக்கு மேற்கு எல்லையாகவும் கொண்டதும், ஆயிரம் யோசனை யளவு பரப்புடையதுமான நிலம் முழுவதையும் ஆட்சிபுரிதலால், சக்கரவர்த்தி என்ற பெயரை அரசன் அடைதற்குக் காரணமாக விளங்குவது நிலமாகும் என்பது கருத்து.

[30] காட்டுப்பகுதி—பயிர்த்தொழிற்குத் தகாத இடங்களால் நிறைந்தது.

[31] பயிர்த்தொழிற்குரிய இடங்களால் நிரம்பப்பெற்றது.

[32] உயர்ந்தும் பாறை மயமாகவும் உள்ளது.

[33] நீர்ப்பெருக்குள்ளது.

[34] மேடுபள்ளமற்றது.

[35] அது—சக்கரவர்த்தியின் நிலம்.

[36] முற்கூறிய நிலப்பிரிவுகளில் என்பது.

[37] தன் படைகள் வெற்றிபெறுதற்கேற்ற முறையிலும், பகைவன் படை தோல்வியடைதற்கேற்ற முறையிலும் போர்புரிதல் வேண்டும் என்பது கருத்து.

செய்யும் செயலைப் புரிதல் வேண்டும். தன்னுடைய படைகளது உடற்பயிற்சிக்குரிய இடமாகவும் [38]பிறனுக்கு இடமல்லாததாகவும் உள்ளது எதுவோ அதுவே தலையாய இடமாம். [39]முரணானது கடையாயதாம். [40]பொதுவானது இடையாயதாம்.

[41]காலமானது குளிர்ந்தது, வெப்பமுடையது, பெயலையுடையது என்னும் இயல்பினதாகும். [42]இரவு, பகல், பக்கம், திங்கள், பருவம், அயனம், ஆண்டு, யுகம் என்பன அதன் வகைகளாம். [43]அவற்றுள் தன் படைக்கு மிகுதியைப் புரிதல் வேண்டும். தன் படைகளின் உடற்பயிற்சிக்குரியதும் பிறனுக்குரிய பருவமல்லாததும் ஆகியது எதுவோ அதுவே தலையாய காலமாகும். முரண்பட்டது கடையாயதாம். பொதுவானது இடையாயதாம்.

[44]ஆற்றலுள்ளவன் தாழ்ந்த இடத்தையுடைய நாட்டிற்கும், குளிர், வெப்பம், மழை என்னுமிவற்றையுடைய காலத்திற்கும் [45]மாற்றச்செயல் புரிவதில் வல்லவனாகிறான் ஆகலின் ஆற்றல், இடம், காலம் என்பவற்றுள் ஆற்றல் சிறந்தது என்பர் ஆசிரியர்.

---

[38] பகைவனுடைய படைகளின் உடற்பயிற்சிக்குரிய இடந்தராத இடம் தலையாயதாம்.

[39] பகைவன் படைகள் தங்குதற்குத் தகவான இடத்தை யுடையதும், தன் படைகளுக்குத் தகுதியில்லாத இடத்தை யுடையதுமான நாடு (நிலம்) கடையாயது என்பது.

[40] தனக்கும் பகைவனுக்கும் சிறப்பில்லாத இடத்தையுடையது.

[41] இனிக் காலத்தைப்பற்றிக் கூறுகின்றார். குளிரையும், வெப்பத்தையும், மழையையும் இயற்கையாகக் கொண்ட ஹேமந்தம், கிரீஷ்மம், வர்ஷம் என்பன காலத்தின் இயல்புகளாம்.

[42] அக்காலத்தின் பிரிவுகளைக் கூறுகின்றார்.

[43] முற்கூறப்பட்ட காலத்தின் பிரிவுகளில் செயலை ஏற்றற்குரிய முறையையும், அக்காலங்களுக்கிடையே அமைந்த தலையாயது முதலிய சிறப்பையும் கூறுகின்றார்.

[44] இதுகாறும் சக்தி, இடம், காலம் என்பவற்றின் உட்பிரிவுகளுக்குள் ஒன்றுக்கொன்று வன்மை மென்மை ஆராயப்பட்டது. இனிச் சக்தி முதலிய மூன்றனுள்ளே வன்மை மென்மை ஆராயத்தொடங்கி முதலில் ஆசிரியர் கொள்கையைக் கூறுகின்றார்.

[45] தாழ்ந்த இடம் முதலியவற்றுக்கு மாற்றச்செயல், தாழ்ந்தவிடங்களில் மணலைக்கொட்டிச் சமமாக்கல் முதலியன என்பதும், காலத்துக்கு மாற்றச்செயல் குளிர் முதலியவற்றைக் குப்பாயம் முதலியவற்றால் தடுப்பது என்பதுமாம்,

[46]நிலத்திலுள்ள நாய் முதலையையும் தாழ்ந்தவிடத்துள்ள முதலை நாயையும் இழுக்கின்றன ஆகலின் இடம் சிறந்ததென்பர் சிலர்.

பகலில் காகம் கோட்டானையும், இரவில் கோட்டான் காகத்தையும் கொல்கின்றன ஆதலின் [47]காலம் சிறந்தது என்பர் சிலர்.

[48]அன்றென்பர் கௌடலியர். ஆற்றல், இடம், காலம் என்பவை ஒன்றுக்கொன்று துணையானவை யன்றோ!

[49]அவற்றால் [50]மிகுதியை யடைந்து [51]படையின் மூன்றில்

---

[46] முற்கூறிய வன்மை மென்மை பற்றிய ஆராய்ச்சியில் ஒருசாரார் கொள்கையைக் கூறுகின்றார். தரையிலிருக்கும் நாய் வலியற்றதாயினும் தான் வாழும் நிலத்தில் முதலையைப்பற்றி யிழுத்தற்குரிய வன்மையுடையதாயிருப்பதும், தனக்குரிய இடமாகிய தரையை விட்டு நீங்கியபோது அவ்வன்மையை யிழத்தலும், நீரில் இருக்கும் வலிய முதலை தனக்குரிய இடமாகிய நீரை விட்டு நீங்கியபோது நாயை எதிர்த்தற்கும் வலியற்றிருத்தலும் உலகியலிற் கண்டதாகலின், இடங்களுக்கேற்ப வன்மை மென்மைகளிருப்பது பற்றி இடம் சிறந்ததாம் என்பது கருத்து. 'நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின், நீங்கி னதனைப்பிற' என வரும் குறள் ஈண்டு நோக்கத் தகுவதாகும்.

[47] காக்கைகளுக்குப் பகலில் வன்மை யுண்மையானும், கோட்டானுக்கு இரவில் வன்மை யுண்மையானும், அவற்றை எடுத்துக்காட்டாகக்கொண்டு, காலத்தின் உண்மை யின்மைகளைப்பற்றி வன்மை மென்மைகள் ஏற்படுவன என்பது பெறப்படுதலின் காலமே சிறந்தது என்பது சிலர்கொள்கையாகும். இக்கொள்கை 'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும், வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்னுங்கருத்தை யடிப்படையாகக் கொண்டதாம்.

[48] மேற்கூறிய மூவகைக் கொள்கைகளையும் மறுத்துக் கௌடலியர் தங்கொள்கையைக் கூறுகின்றார். சக்தியிருப்பினும் இடம் காலங்களில்லாதபோதும், அவையிருப்பினும் சக்தியில்லாதபோதும் காரியம் நிறைவேறாமையின் அவை மூன்றும் ஒன்றுக்கொன்று துணையாகவிருந்தே காரியசித்தியமைவதாகலின் அவை மூன்றும் ஒத்தனவேயாம் என்பது கருத்து. சக்தி, இடம், காலங்களுக்கு வன்மை மென்மைகள் இவ்வாறு கூறியபடியாம்.

[49] வெற்றிவிருப்பமுள்ளவன் தன் பகைவனைக் குறித்து மேற்சேறற்குத் தகுதியான காலங்களைக் கூறும் அடுத்த பிரகரணத்தை இனிக் கூறுகின்றார். அவற்றால்—சக்தி இடம் காலம் என்னும் மூன்றினால்.

[50] மிகுதி—பகைவனைவிடச் சிறப்பு.

[51] தகுதிக்கேற்பப் படையின் மூன்றில் ஒன்றையாதல் நான்கில் ஒன்றையாதல் தானீயத்திலும் பின்னணியிலும் நாட்டின் எல்லையிலுள்ள காடு

அல்லது நான்கில் ஒருகூற்றைத் தானீயம், பின்னணி, எல்லைக்காடு என்பவற்றில் காவலாகச் செய்து காரியங்களை நிறைவேற்ற வல்ல பொருள் படைகளை ஏற்று, [52]அழிந்த பழைய உணவை யுடையவனும், ஏற்காத புதிய உணவை யுடையவனும், பண்படுத்தப் படாத அரணை யுடையவனுமான பகைவனைக் குறித்து [53]மழைக் காலத்தில் அவனுடைய பயிரையும், பனிக்காலத்தில் விதைத்தலையும் அழித்தற்கு, மார்கழித் திங்களில் மேற்சேறலை ஏற்றல் வேண்டும். அவனுடைய பனிக்காலத்துப் பயிரையும் இளவேனிற் காலத்து விதைத்தலையும் அழித்தற்குச் சித்திரைத் திங்களில் மேற் சேறலை ஏற்றல் வேண்டும். புல், விறகு, நீர் என்னும் இவற்றுற் குறைவுற்றவனும், பண்படுத்தப்படாத அரணை உடையவனுமான

களிலும் பாதுகாப்புக்காக வைத்துக் காரியங்களை நிறைவேற்ற வல்ல பொருளையும் படையையும் எடுத்துக்கொண்டு பகைவனைக் குறித்து மேற் சேறல் வேண்டும் என்பது.

[52] பகைவனை எளிதில் வெல்லுதற்குரிய நிலையைப் பகைவனுக்குக் கூறப்படும் மூன்று அடையால் விளக்குகின்றார். முன்னைய போகத்தில் சேர்த்து வைக்கப்பட்ட உணவுப்பொருள் குறைந்த நிலையிலும், புதிதாகச் சேர்க்கவேண்டியது ஏற்கப்படாத நிலையிலும், அரணுக்குரிய பாதுகாவல் செய்யப்படாத நிலையிலும் அப்பகைவனைக் குறித்து உண்டான பயிரின் விளைவை ஏற்றற்கு இடையூற்றைச் செய்வதும், புதிதாக விதை விதைத் தற்கு இடையூற்றைச் செய்வதுமான தீங்கை அப்பகைவனுக்கு விளைத்தற் பொருட்டு மேற்சேறல் வேண்டும் என்பது கருத்து.

[53] ஈண்டு மாரிக்காலத்தில் விதைக்கப்பட்ட பயிரினின்றும் உண்டான விளைபொருளை ஏற்பதை முதலில் கொண்டதும், பனிக்காலத்தில் விதை விதைத்தலை யுடையதுமான ஒருபோகமும், பனிக்காலத்தில் விதைக்கப் பட்ட பயிரினின்றும் உண்டான விளைபொருளை ஏற்பதை முதலில் கொண் டதும், வசந்தகாலத்தில் விதைவிதைத்தலை யுடையதுமான மறுபோகமும், வசந்தகாலத்தில் விதைக்கப்பட்ட பயிரினின்றும் உண்டான விளைபொருளை ஏற்பதை முதலிற் கொண்டதும் மாரிக்காலத்தில் விதைவிதைத்தலை யுடை யதுமான மற்றொரு போகமுமாக ஓராண்டில் மூன்று போகங்கள் உள்ளன. அவற்றுள் எந்தெந்த போகத்தைத் தடைப்படுத்தற் பொருட்டு எந்தெந்தத் திங்களில் மேற்சேறல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார். முதற்போகத் தைத் தடைப்படுத்தற்கு மார்கழி மாதத்திலும், இரண்டாவதைத் தடுக்கச் சித்திரையிலும், மூன்றாவதைத் தடுக்க ஆனியிலும் மேற்சேறலை ஏற்றல் வேண்டும் என்க. விதைவிதைத்தலைப் 'பிடியளவு' என்னும் பொருளின தாகிய 'முஷ்டி' என்னுஞ் சொல்லால் முதனூல் கூறும்.

பகைவனைக்குறித்து அவனுடைய இளவேனிற் காலத்துப் பயிரையும் மழைக்காலத்து விதைத்தலையும் அழித்தற்கு ஆனித்திங்களில் மேற்சேறலை ஏற்றல் வேண்டும்.

[54]மிக வெப்பமுள்ளதும், குறைந்த புல், விறகு, நீர் என்னும் இவற்றை யுடையதுமான நாட்டைக் குறித்துப் பனிக்காலத்தில் மேற்சேறல் வேண்டும்.

[55]பனியால் குற்றமுள்ள நாட்களையுடையதும் ஆழ்ந்துள்ள மிகுதியான தாழ்ந்தவிடங்களை யுடையதும் அடர்ந்த புல் மரங்களை யுடையதுமான நாட்டைக் குறித்து முதுவேனிற் காலத்தில் மேற்சேறல் வேண்டும்.

[56]தன் படையின் உடற்பயிற்சிக்குத் தகுந்ததும் பிறனுக்குத் தகாததுமானதைக் குறித்து மழைக்காலத்தில் மேற்சேறல் வேண்டும்.

[57]நீண்ட காலத்தைக் கொண்ட மேற்சேறலை மார்கழிக்கும்

---

[54] பகைவனுக்கு இடையூற்றைச் செய்தற்கு ஏற்புடைய மேற்சேறற்குரிய காரியங்கள் இதுகாறும் விளக்கப்பெற்றன. இனி மேற்சேறற்குரிய நாட்டிற்கு ஏற்புடைய செல்லுதற்குரிய காலங்களைக் கூறுகின்றார். எந்த நாடு இயற்கையிலேயே மிக உஷ்ணமானதும் மிகக்குறைந்த புல் முதலிய வற்றை யுடையதுமாக உள்ளதோ அந்நாட்டைக்குறித்துப் பனிக்காலத்திற் செல்லல்வேண்டும். அப்பொழுதுதான் அந்நாட்டின் வெப்பம், குளிர் காரணமாகச் சிறிது பொறுத்தற் குரியதாம் என்பதும், புல், விறகு, நீர் முதலியவற்றிற்கு அழிவு நேராதென்பதும் கருத்து.

[55] எப்பொழுதும் பனி பெய்துகொண்டிருப்பதும், ஆழமான குளங்களால் மிகுந்ததும், நெருக்கமுள்ள புல் மரங்களை யுடையதுமான நாட்டைக் குறித்து வேனிற்காலத்தில் செல்லல் வேண்டும். அதுபோதுதான் அங்குக் குளிர் பொறுத்தற்கியலும் என்பது கருத்து.

[56] பொதுவாக மழைக்காலத்தில் யாத்திரை விலக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு புறனடை கூறுகின்றார். எந்த நாட்டில் தன் படைகளின் இயக்கத்திற்கு ஏற்புடையதும், பகைவன் படைகளுக்கு மாறுபட்டதுமான இடமிருக்குமோ அந்நாட்டைக் குறித்து மழைக்காலத்திலும் செல்லலாம் என்பது கருத்து.

[57] யாத்திரைகளின் காலவளவு காரணமாக, முற்கூறப்பட்ட மார்கழி முதலிய காலங்களுக்கு ஒரு வரையறை கூறுகின்றார். நீண்டகால யாத்திரை

தைக்குமிடையிலும், [58]இடைக்காலத்ததைச் சித்திரைக்கும் வைகாசிக்குமிடையிலும், [59]அணுகிச் செய்பவனுகக் குறுகிய காலத்ததை ஆனிக்கும் ஆடிக்குமிடையிலும், [60]நான்காவதை விதனத்திலும் ஏற்றல் வேண்டும். [61]பொருதுமேற்சேறல் என்புழி விதனத்தில் மேற்சேறல் கூறப்பட்டது.

[62]பகைவன் விதனத்தில் மிகுதியாக மேற்சேறல் வேண்டும் என்று ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

[63]விதனங்களில் [64]மாறுபாடுண்மை பற்றி, ஆற்றல் உண்டானபோது மேற்சேறல் வேண்டும் என்பர் கௌடலியர்.

மார்கழித் திங்களில் செய்தற்குரியதென்பது. மழைக்காலம் மிகச் சேய்மையிலுள்ளதால், பயிர்த்தொழிற்கு அங்கமான தொழில்கள் காலந் தாழ்த்தப்படுதற்குரியன வாகலின் இடையூறு ஒன்றுமில்லாதது பற்றி நீண்டகாலத்திய யாத்திரையைச் செய்யலாம் என்றார் என்க.

58 மார்கழியில்போல, சித்திரையில் மிக நீண்டகாலத்திய யாத்திரையைச் செய்தல் கூடாதென்பது.

59 மழைக்காலம் அணிமையில் இருப்பதுபற்றி, பயிர்த்தொழில்களுக்குத் தடை ஏற்படுமாகலின், ஆனிமாதத்தில் செய்யும் யாத்திரை மார்கழியில் போல் நீண்டகாலத்ததாயும், சித்திரையில் போல் இடைக்காலத்ததாயும் இருத்தல் கூடாது என்பதும் பகைவன்நாட்டை யணுகிச்சென்று, விரைவில் எளிதாகச் செய்தற்குரிய தீயிடுதற்றொழிலே அந்நாட்டில் செய்யப் போகிறவன் அதுபோது யாத்திரையைச் செய்யலாமேயன்றி, அதிக காலத்தை யேற்கும் போர்த்தொழில் முதலியவற்றைச் செய்யப்போகிறவன் அக்காலத்து யாத்திரையை மேற்கொள்ளுதல் கூடாது என்பதும் கருத்து.

60 மார்கழி முதலிய திங்களில் செய்தற்குரிய மூவகை யாத்திரைகளை இதுகாறும் கூறினார். இனிப் 'பகைவன் விதனகாலத்தில் யாத்திரை' என்ற நான்காவதொன்றைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். பகைவனுக்கு விதனம் நேர்ந்துழி, மார்கழி முதலிய காலவரையறை யின்றியே மேற்சேறல் வேண்டும் என்பது.

61 பொருதுமேற்சேறல் என்ற பிரகரணத்தில் இந்த யாத்திரை விளக்கிக் கூறப்பட்டதென்பது கருத்து.

62 விதனத்தில் மேற்சேறல் என்ற இக்கொள்கை ஆசியர்களுடையதேயாம் என்பது.

63 கௌடலியர் தன் கொள்கையைக் கூறுகின்றார். வெற்றிவிருப்பமுள்ளவன், தன் பகைவனைவிடச் சக்தி முதலியவற்றால் தான் நிறைவை எய்தியபோது மேற்சேறல் நிச்சயமான பயன் விளைவுக்குக் காரணமேயன்றிப் பகைவனது விதனம் காரணமன்றென்பதாம்.

64 மாறுபாடு—பகைவனது விதனகாலத்தும் தனக்குச் சக்தி யில்வழி பயன் இட்டாமையானும், பகைவனுக்கு விதனமில்லாதபோதும் தனக்குச்

[65]எப்பொழுது பகைவனைத் துன்புறுத்தற்கும் களைதற்கும் இயலுமோ அப்பொழுது மேற்சேறல் வேண்டும்.

[66]மிகுந்த வெப்பத்தாலாற்றலற்ற காலத்தில் யானையற்ற படைகளால் மிகுந்தவனாகச் செல்லுதல் வேண்டும். [67]யானைகள் உள்ளே வேர்வையுடையனவாய்க் குட்டநோயை எய்துமன்றோ! நீராட்டமற்றும் நீரைக்குடிக்காமலும் உள்வெப்பமுள்ளவையாகக் குருடாகின்றன. [68]ஆகலின் நீர்நிரம்பிய நாட்டிலும் மழைக் காலத்திலும் யானைப்படையால் மிகுந்தவனாகவும், [69]மாறுபடின் கழுதை, ஒட்டகம், குதிரை என்ற படைகளால் மிகுந்தவனாகவும் செல்லுதல் வேண்டும். [70]மழை காரணமாகிய சேறு குறைவுள்ள பாலைநில மிகுதியான நாட்டைக் குறித்து மழைக்காலத்தில் நால் வகைப் படையை யுடையனாய்ச் செல்லுதல் வேண்டும்.

சக்தியிருந்தபோது பயன் விளைதலானும் பகைவன் விதனத்திற்கும் பயன் விளைவிற்கும் காரிய காரணத்தன்மை யின்றென்பது கருத்து.

65 சக்தியினால் மேன்மையில்லை யெனினும், பகைவனைத் துன்புறுத்தல் களைதல் என்பவற்றில் ஒன்றைச் செய்தற்குப் போதிய சக்தி தனக்குளது என்பதை யுணர்ந்தவன் மேற்சேறலை ஏற்கலாம் என்ற ஒரு சாரார் கொள்கையைக் கூறுகின்றார்.

66 இனிப் படைகளுக்கேற்பக் காலவரையறையைக் கூறுகின்றார். தாங்கவொண்ணாத வெப்பத்தாற் கொடிய முதுவேனிற் காலத்தில் யானையைத் தவிர மற்ற கழுதை, ஒட்டகம் முதலிய படைகளால் நிரம்பியவனாகச் செல்லுதல் வேண்டுமேயன்றி யானைப்படையுடன் செல்லலாகாதென்பது கருத்து.

67 அங்ஙனம் செல்லக்கூடாதென்பதற்குரிய காரணத்தைக் கூறுகின்றார். யானைகள் வெளிப்புறம் செல்லாது உட்புறமே தங்கிய வேர்வை நீரால் குற்றமெய்திய தோலையுடையனவாகக் குட்டநோயை யடைகின்றன என்பதும், நீராட்டமின்மையாலும் நீரைப் பருகாமையாலும் உள்வெப்ப முற்றுக் குருடாகின்றன என்பதும் கருத்து.

68 ஆகலின்—வெப்பநாளில் செல்லுதலால் யானைகளுக்குத் தீங்கு நேருமாகலின்.

69 மாறுபடின்—மிகுதியான நீரில்லாத நாட்டிலும் மழையில்லாத காலத்திலும்.

70 எந்த நாட்டில் மழைகாரணமாக உண்டாம் சேறு குறைவாயிருக்குமோ, பாலைபோன்று நீரில்லாத நிலங்களால் மிகுந்த அந்நாட்டைக் குறித்து மழைக்காலத்திலும் நால்வகைப் படையுடனும் செல்லுதல் குற்றமின்றென்பதாம்.

[71]வழியினுடைய [72]நேர்மை, மேடுபள்ளம், [73]தாழ்வு, [74]நில மாயிருத்தல், [75]குறுக்கம், [76]நீளம் என்பவற்றிற்கேற்ப மேற் சேறலை வகைப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

சுலோகம்

[77]செயல் மென்மை காரணமாகச் செல்லுதற்குரிய எல்லாம் குறுகிய காலங்களாயும் செயல் வன்மை பற்றி நீண்டதாகவும் ஆகின்றன. [78]மழைக்காலத்து வேற்றிடத்து வாழ்வும் (அது பற்றியே) ஆம்.

ஒன்பதாம் அதிகரணம் 1, 2-ஆம் பிரகரணங்கள்
'ஆற்றல் இடம் காலங்களின் வன்மை மென்மை யறிதல்',
'மேற்சேறற்குரிய காலங்கள்' என்னும்
நூற்றிருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

71 வழியின் தன்மைக்கேற்பவும், நீண்டகாலத்தது முதலிய யாத்திரையின் வரையறையைச் செய்துகொள்ளலாம் எனக் கூறுகின்றார்.

72 நேர்மை—மேடுபள்ளமில்லாது ஒத்ததாயிருத்தல்.

73 தாழ்வு—ஈண்டு நீர்நிலைகளையுடைய பள்ளமாயிருத்தல்.

74 நீர் வடிவமாயில்லாது நில உருவமாயிருத்தல்.

75 குறுகிய காலத்தது என்பது.

76 நீண்ட காலத்தது என்க.

77 காரியங்களைக்கொண்டு எல்லா யாத்திரைகளுக்கும் குறுகிய காலத்தது முதலியவற்றின் தன்மை உண்டாவனவாம் எனக் கூறுகின்றார். வழியின் நேர்மை நேர்மையின்மை காரணமாக யாத்திரைக்குக் குறுக்கம் முதலிய எத்தன்மைகள் கூறப்பட்டனவோ அவையனைத்தும் காரியங்கள் விரைவில் முடிக்கப்பட்டவிடத்துக் குறுகிய காலத்ததாம் என்பதும், காரியங்கள் தாமதப்பட்டு முடிக்கப்பட்டவிடத்து நீண்ட காலத்ததாம் என்பதும் கருத்து.

78 மேலும் மழைக்காலத்தில் தன்னாட்டிலேயே வசித்தல் வேண்டும் எனினும், அவசியமான காரியங் கருதிப் பிற நாட்டிலும் வசிக்கவேண்டியதாகும் என்பது கருத்து.

3, 4, 5-ஆம் பிரகரணங்கள்—[1]படைசெலுத்தற்குரிய காலங்கள், சந்நாககுணங்கள், எதிர்ப்படையின்செயல்

நூற்றிருபத்துமூன்றும் அத்தியாயம்

[2]மூலப்படை, கூலிப்படை, [3]குழுப்படை, நட்புப்படை, பகைப்படை என்னுமிவற்றைச் [4]செலுத்துதற்குரிய காலங்கள் (கூறப்படும்).

[5]தானியக் காவலுக்குரியதைவிட மிகுதியானது மூலப்படை என்பதும், [6]மிகுந்த தீய கருத்துள்ள மூலப்படை தானியத்தில் மாறுபாட்டை எய்தும் என்பதும், [7]எதிர்த்துப் போர்புரிபவன் மிகவும் அன்புபூண்ட மூலப்படையை யுடையவனாகவும் திண்மை யான படையை யுடையவனாகவும் இருத்தலின் முயன்று போர்

123-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மூலப்படை முதலிய படைகளுள் காரியங்களின் தகுதிக்கேற்ப இன்ன படையை இன்ன காலத்திற் செலுத்துதல் வேண்டும் என்பதைக் கூறுவது இப்பிரகரணமாகும். மேற்செல்பவன் தான் மேற்சேறற்குரிய காலத்தை யறிதல் இன்றியமையாதது போன்று படையைச் செலுத்தற் குரிய காலத்தை யறிதலும் இன்றியமையாதாகலின் அதன்பின் இப்பிர கரணம் வைக்கப்பட்டது. இதனால் பிரகரண இயைபுண்மை யறிக.

[2] மூலப்படை—தானியத்திலுள்ள படை.

[3] நாட்டிலுள்ள படைக்கலப் பயிற்சியுள்ளவரின் குழுவுருவமான படை.

[4] செலுத்துதல்—செயலில் ஈடுபடுத்தல்.

[5] அவற்றுள் மூலப்படையைச் செலுத்தற்குரிய காலத்தைத் துணிதற் குரிய காரணங்களைக் கூறுகின்றார். தானியத்தைப் பாதுகாத்தற்குப் போதிய படையைவிட அதிகமான மூலப்படை இருக்கிறது என்பது ஒரு காரணம்.

[6] மிக்க தீமையை விளைவிக்குங் கருத்துள்ள மூலமக்கள் தானியத்தில் மாறுபாட்டைச் செய்வர் எனக்கருதி இவர்களைத் தன்னுடன் கூடவே அழைத்துச் செல்லுதல் வேண்டும் என்பது மற்றொரு காரணம்.

[7] அதிகமானதும் தன்பால் அன்புகொண்டதுமான மூலப்படையுடன் எதிரி வந்திருக்கிறான் என்பதும், எதிரி திறமையுள்ள படைகளை யுடைய வன் ஆகலின் மிக முயன்று போர் புரிதல் வேண்டும் அதற்கு மூலப் படையே வல்லதாம் என்பதும் காரணங்களாம்.

புரிதல் வேண்டும் என்பதும், [8]செய்மையிலுள்ள வழி காலம் என்னுமிவற்றில் மூலப்படையே கேடு செலவுகளைப் பொறுக்கு மியல்பினது என்பதும், [9]மேற்சேறற்குரியானிடம் மிகவும் அன்பு பூண்டவரது அணுக்கத்தில் கூலிப்படை முதலிய மற்ற படைகளுக்கு வேறுபடுத்தலச்சங் காரணமான நம்பிக்கையின்மையுளதாம் என்பதும் [10]எல்லாப் படைகளும் ஆற்றலழிந்தன என்பதும் [11]மூலப்படைக் காலமாம்.

[12]என்னுடைய கூலிப்படை அதிகமானது, மூலப்படை குறைவானது என்பதும், [13]பகைவனுடைய மூலப்படை குறைந்தும் வெறுப்புற்றுமுளது [14]கூலிப் படை குறைந்தும் ஆற்றலற்றுமுளது என்பதும், [15]மந்திரத்தால் குறைந்த உழைப்புடன் போர்

---

[8] பல யோசனை தூரத்திலுள்ள நாட்டிலாதல், நீண்ட காலத்திலாதல் பகைவனுடன் போர் உண்டாம். அதில் உண்டாகக் கூடிய கேடு செலவுகளைப் பொறுத்தற்கு மூலப் படையே வல்லதாம் என்பது ஒரு காரணம்.

[9] தலைவனிடம் அன்புகொண்ட பகைவனுடைய தூதர்கள் வந்தெய்தினர். அவர்கள் வேறுபடுத்தலைச் செய்வது உறுதி. மூலப் படையைத் தவிர மற்றைய கூலிப்படை முதலியன நம்பிக்கைக்குரியனவல்ல. ஆகவே வேறுபடுத்தற்கியலாமை பற்றி மூலப்படையே அழைத்துச் செல்லுதற்குரியது என்பது மற்றொரு காரணமாம்.

[10] கூலிப் படை முதலிய எல்லாப் படைகளும் ஊர்தி முதலியவற்றின் ஆற்றல் கெட்டுப் புறங்காட்டி ஓடிவிடும் என்பது வேறொரு காரணம் என்க.

[11] மேற்கூறிய காரணங்கள் நேர்ந்துழி மூலப் படையைப் பயன் படுத்தற்குரிய காலம் வந்ததாகக் கொண்டு அதைச் செலுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[12] கூலிப் படையைச் செலுத்தற்குரிய காலம் இதுவெனத் துணிதற்குரிய காரணங்களைக் கூறுகின்றார். என்பால் கூலிப் படை மிகுதியாகவுள்ளன மூலப்படை குறைவாயுளது எனக் கருதும் நிலை ஒரு காரணம்.

[13] பகைவனுடைய மூலப்படை குறைந்ததாகவும் அன்பற்றதாயும் இருக்கிறது. ஆதலின் காரியத்தை நிறைவேற்றுதற்குக் கூலிப் படையே போதியதாகும் எனக் கருதும் நிலை ஒரு காரணம்.

[14] பகைவனுடைய கூலிப் படை குறைந்ததாகவும் ஆற்றலற்றதாகவும் உள்ளது என்பது மற்றொரு காரணம்

[15] குறைந்த முயற்சியால் ஏற்றற்குரிய மறைவுப் போர் செய்தற்குக் கூலிப் படையே போதுமானது என்பது வேறொரு காரணம்.

புரிதல் வேண்டும் என்பதும், [16]நாடு காலங்கள் குறுகியன குறைந்த கேடு செலவுகளையுடையன என்பதும், [17]என் படையானது குறைந்த அணுக்கமுள்ளவர், தணிந்த வேறுபடுத்தல், நம்பிக்கை என்னுமிவற்றை யுடையது என்பதும் [18]பகைவனுடைய இயக்கம் சிறிதே தடைப்படுத்தற்குரியது என்பதும் ஆகிய இவற்றைப் பற்றியது கூலிப்படைக் காலமாம்.

[19]என்னுடைய குழுப்படை மிகுதியானது. (எனவே) தானீயத்திலும் போரிலும் ஈடுபடுத்தற்குரியது என்பதும், [20]வேற்றிடச் செலவு குறுகியது என்பதும், [21]எதிர்த்துப் போர் புரிபவன் குழுப்படை மிக்கவன் என்பதும், [22]மந்திரத்தாலும் உழைப்பினாலும் எதிர்த்துப் போர் புரிய விருப்பமுள்ளவன் என்பதும், [23]தண்டப் படையின் செயலையுடையவன் என்பதும் ஆகிய இவற்றைப் பற்றியது குழுப்படைக் காலமாம்.

---

16 செல்லுதற்குரிய நாடு அணிமையிலுளது; காரியத்தை நிறைவேற்றுதற்குரிய காலமும் குறைவானதுபற்றிக் குறைந்த கேடு செலவுகளையுடையது என்பதும் காரணமாம்.

17 என் படைக்குச் சமீபத்தில் வந்த பகைப்படை மிகக் குறைந்தது. என் படையை வேறுபடுத்தல் முடியாது என்ற நம்பிக்கையும் காரணமாம்.

18 புல், விறகு முதலியவற்றைப் பகைவன் கொண்டு வராமல் தடுத்தல் என்ற சிறிய செயலே ஏற்றற்குரியது, அதற்குக் கூலிப் படையே போதியது என்ற இதுவும் காரணமாகும்.

19 குழுப் படையைச் செலுத்தற்குரிய காலமிதுவெனத் துணிதற்குரிய காரணங்களைக் கூறுகின்றார். என் குழுப்படை மிகுதியாக வுள்ளதாகலின், தானீயத்தைக் காத்தல் பகைவனைக் குறித்து மேற்சேறல் என்ற இரண்டு செயலிலும் ஈடுபடுத்தற்குப் போதுமானது என்பதும் ஒரு காரணமாகும்.

20 என் யாத்திரை அணுகிய நாட்டைக் குறித்ததும் குறுகிய கால வளவிலுளதுமாம் என்பதும் காரணமாகும்.

21 பகைவன் குழுப் படையால் நிறைந்தவன் ஆகலின் குழுப்படையாலேயே எதிர்த்துப் போர் புரிதற்குரியன் என்ற நிலையும் ஒரு காரணமாம்.

22 பகைவன் மறைவுப் போரையும், வெளிப்போரையும் செய்ய விருப்பமுள்ளவன் என்ற எண்ணமும் காரணமாகும்.

23 தண்டப் படை - தண்டத்தினின்றும் அஞ்சிய வேறு அரசனால் அனுப்பப்பட்ட படை. அப்படையால் முடித்தற்குரிய போர்த் தொழிலையுடையவன் பகைவன் என்ற நிலையும் காரணமாகும்.

மிகுந்த என் நட்புப் படை, தானியத்திலும் போரிலும் ஈடு படுத்தற்குரியது, [24]வேற்றிடச் செலவு குறைந்தது, [25]மந்திரப் போரை விட உழைப்புப் போர் அதிகமானது [26]என்பதும், [27]காட்டுப்படை நகரத்துள்ள நட்புப் படைஎன்னுமிவற்றுடன் நட்புப் படையைப் போர் புரியச் செய்து பின்னர் என்படையைப் போர்புரியச் செய்வேன் (என்பதும்) [28]என்னுடைய செயல் நண்பனுக்குப் பொதுவானது, [29]என் காரியத்தின் பயன் நண்பனுக்கு வயமானது (என்பதும்) என் நெருங்கிய நண்பன் அருளுதற்குரியவன் (என்பதும்) [30]இவனுடைய மிகுந்த தீய கருத்துக் கொண்டதைக் களைவேன் என்பதும் ஆகிய இவை பற்றியது நட்புப் படைக் காலம் (என்ப).

[31]என்னுடைய நகரத்திலுள்ள மிகுதியான பகைப் படையை யாதல் காட்டுப் படையை யாதல் பகைப் படையுடன் போர் புரியச் செய்வேன். [32]நாய் பன்றிகளின் சண்டையில் சண்டாள

---

24 இடம் காலங்கள் அணிமையிலுள்ளனவாகலின் செலவு குறைந்த தென்றார்.

25 மந்திரப் போர் — மறைவுப் போர்.

26 வெளிப் போர் அதிகமானதால் அதிகமான கேடு செலவுகளுக்கிட மின்றென்பதும் ஒரு காரணம் என்க.

27 பகைவனுடைய காட்டுப் படையையும், அவன் நகரத்தில் உள்ள நட்புப் படையையும் என்னுடைய நட்புப் படையுடன் முதலில் போர் புரியச் செய்து, பிறகு என் படையுடன் போர் புரியச் செய்வேன் என்பதும் ஒரு காரணம்.

28 என் செயலால் உளதாம் பயன் நண்பனுக்கும் உளதாதல்பற்றி அவனுக்குப் பொதுவானதென்றார்.

29 அவன் செயல் முறையைச் சார்ந்துளது என்பது.

30 நண்பனுடைய தூஷ்யப் படையைப் பகைப் படையால் கொல்லச் செய்வேன் என்பது.

31 படை வலியால் தாழ்த்தப்பட்டதும் என் நகரத்தில் உள்ளதுமான பகைப்படை எனக்கு அதிகமாக உள்ளது. இதைப் பகைப் படையுடன் போர் புரியச் செய்வேன் என்பது.

32 அவ்வாறு இரு பகைப்படைகளுக்கும் போர் உண்டாய விடத்து இரண்டில் ஒன்றின் அழிவு என்ற பயன் எனக்கு விரும்பத்தக்கதாம். நாய் பன்றி என்ற இரண்டையும் புசிக்கும் சண்டாளனுக்கு அவை யிரண்டும் சண்டையிடுங்கால் இரண்டில் ஒன்றின் கொலை எவ்வாறு அவனால் விரும்பற்பாலதோ அதுபோல் என்பது.

னுக்குள தாம் பேறு போல ஆண்டு எனக்கு இரண்டிலொரு பயன் விளையும். [33]நட்புப்படை காட்டுப் படைகளுள் இச் சிறுபகைகளை தலைச் செய்வேன் (என்பதும்) [34]உட்கோபம் பற்றிய ஐயமில்வழி மிகவும் நிறைவெய்திய பகைப் படையை வெகுளிக்கஞ்சி எப்பொழுதும் அணிமையிலிருக்கச் செய்தல் வேண்டும் (என்பதும்) [35]பகைவனது போருக்குப் பிந்தியது என் போர்க் காலம் (என்பதும்) ஆகிய இவற்றைக் காரணமாகக் கொண்டது பகைப் படைக்காலம் (என்க).

[36]இதனுல் காட்டுப் படைக் காலமும் கூறியபடியாம்.

[37]வழியை யறிவிப்பது, [38]பகைவன் நிலத்திற்குரியது, [39]பகைவன் போரில் முரணுனது, பகைவன் காட்டுப்படையால் நிரம்பியவன் (எனவே) [40]வில்வக்கனி வில்வக்கனியால் தாக்கப்

---

33 என்னுடைய நட்புப் படையிலும் காட்டுப் படையிலுமுள்ளவரும் பகைப் படையை யடைந்தவருமான சிறு பகையாயுள்ளவரை யழித்தற்குக் காரணமாயுள்ளது பகைப் படையைச் செலுத்துமிது என்பதும் ஒரு காரணம்.

34 மிக அதிகமான சிறப்பை எய்திய பகைப்படை எப்பொழுதும் என்னுல் அடையப்படாதிருப்பின் கருத்து வேறுபாட்டை எய்தும் என்ற ஐய மேற்பட்டவிடத்தும் மந்திரி புரோகிதன் சேனைத் தலைவன் இளவரசன் முதலியவரின் கருத்துமாறுபாடாம் உட் கோபம் நேராதபொழுதும் அப் படை எப்பொழுதும் தன்னருகிலேயே இருக்கச் செய்தற்குரியது என்பதும் காரணமாம்.

35 பகைப் படையைப் பயன்படுத்தற்குரிய காலத்தைத் துணிதற்கு மற்றொரு காரணமுங் கூறுகிறுர். தன் பகைவனுக்கு அவன் பகைவனுடன் போர் ஆரம்பிக்கப்பட்டு அது முடிவடைந்த காலமே போர்க்குரியதாகும் என்பதும் காரணமென்க.

36 பகைப் படைக் காலத்தைத் துணிதற்குரிய காரணங்களே காட்டுப் படைக் காலத்தைத் துணிதற்கும் காரணங்களாம் என்பது கருத்து.

37 அதில் ஒரு விசேடத்தைக் கூறுகின்றுர்; பகைவரின் நாட்டுக்குச்செல்லுதற்குரிய வழியை யறிவிப்பது என்பது.

38 பகைவரது நாட்டில் நிகழும் போருக்குரிய படைக்கலப் பயிற்சியுள்ளது என்பது.

39 பகைவனுடன் போர் புரிவதற்கு வெற்றி விருப்பமுள்ளவன் தூண்டு முன்பே நிலையான பகைமையை அப் பகைவனுடன் கொண்டதென்பது.

40 ஒரே இனமாகவுள்ள இருபடைக்கும் போர் நிகழ்தல் பற்றி வில்வக்கனியை எடுத்துக் காட்டாகக் கூறினுர்.

படுக. [41]சிறிய இயக்கம் தடுத்தற்குரியது என்னுமிவற்றைக் காரணமாகக் கொண்டது காட்டுப் படைக் காலமாம்.

[42]ஒருவனற்றதும், [43]பல பிரிவிலுள்ளதும் [44]கூறப்பட்டாதல் கூறப்படாமலர்தல் [45]தீங்கு குறித்து [46]இயக்கமுள்ளதும் ஆகிய படை [47]'ஔற்சாகிகம்' எனப்படும். [48]உணவு [49]வேதனங்களால் [50]தீங்கு, [51]உழைப்பு, [52]வன்மை என்னுமிவற்றைப் புரிவது பகைவரால் தகர்த்தற்குரியதாம். [53]நாடு, சாதி, சிற்பம் என்னுமிவற்ருல் ஒத்ததால் மிகுந்ததும் ஒன்று கூடியதும் பெரியதும் ஆனது தகர்த்தற்கியலாததாம். படை செலுத்தற்குரிய காலங்கள் இவ்வாறும்.

---

[41] பகைவன் நாட்டுக்குப் புல் விறகு முதலியவை யனுப்பப்படாது தடுத்தல் என்ற சிறு செயலே செய்தற்குரியது. அதைக் காட்டுப் படையே நிறைவேற்றும் என்பது கருத்து. இதுகாறும் மூலப்படை முதலிய அறு வகைப் படைகளைச் செலுத்தற்குரிய காலம் விளக்கிக் கூறப்பட்டது.

[42] இனி 'ஔற்சாகிகம்' என்று ஏழாவதாக ஒரு படையும் செலுத்தற்குரியதாகவுளது எனக் கூறுகின்ருர். ஒருவன் — இயக்குபவர்களிற் சிறந்தவன். அவனில்லாத படை ஔற்சாகிகம் எனப்படும்.

[43] பல விதமான நாடுகளிலிருப்பது என்க.

[44] அரசனுல் அநுமதிக்கப்பட்டாதல் அநுமதிக்கப்படாதாதல் என்பது.

[45] தீங்கு — பகைவன் நாட்டை யழித்தல்.

[46] தானே முயலுகின்ற படை என்பது.

[47] தன் உற்சாகங் காரணமாகவே செயலே யேற்பதுபற்றி இப் பெயர்த்தாயிற்று.

[48] அப்படை, தகர்த்தற்குரியது, தகர்த்தற்கியலாதது என இரு வகைப்படும் என்று கூறுகின்ருர். உணவு—நாடோறும் கொடுக்கப்படும் அரிசி முதலியன.

[49] வேதனம்—திங்கள் தோறும் கொடுக்கப்படும் பொன் முதலியன.

[50] பகைவர் நாட்டைத் தகர்த்து அழித்தல் என்பது.

[51] உழைப்பு—அரண் முதலியவற்றின் தொழில்.

[52] வன்மை—ஈண்டு அரசன் கட்டளையை நிறைவேற்றுதல்.

[53] ஒத்ததான நாடு முதலியவற்றை யுடையவர்களால் மிகுந்ததும் அது காரணமாகவே எப்பொழுதும் ஒன்றுசேர்ந்திருக்கும் நிலையிலுள்ளதும் அதுபற்றியே வன்மையினுற் சிறப்புற்றதுமாகிய படை அழித்தற்கியலாதது என்பதாம். ஆகையால் இப்படையும் காலத்திற்கேற்பச் செலுத்தற்குரியது என்பது பெறப்படும்.

[54]அவற்றுள் பகைப் படை காட்டுப் படைகளுக்குக் [55]குப்பியப் பொருள் வேதனத்தையாதல், [56]கவரப்படுபொருள் வேதனத்தையாதல் கற்பித்தல்வேண்டும்.

[57]பகைவனது படைக்குரிய காலம் நேர்ந்துழி [58]பகைவனைக் [59]கவர்தல் வேண்டும். [60]வேற்றிடத்திற்கும் அனுப்பலாம். [61]பயனற்றதாகச் செய்யலாம். [62]சிதைத்து இருக்கச் செய்யலாம். [63]காலங் கடந்த பின்னர் விட்டு விடுதலும் தக்கதே. [64]பகைவனுடைய படையியக்கத்தை யழித்தலையும், தனக்காயின் ஆக்கலையும் செய்தல்வேண்டும்.

---

54 மூலப் படை முதலிய எழுவகைப் படைகளுள் இரண்டு வகைகளுக்கு ஊதிய வகையில் ஒரு சிறப்பைக் கூறுகின்றார். அவற்றுள்—மூலப் படை முதலிய படைகளுள்.

55 குப்பியம்—ஆடை, விரிப்பு முதலியன.

56 பகைவரது நாட்டைத் தகர்க்குங்கால் அவரவரால் கவரப்பட்ட பொருள் அவரவர்க்குரிய வேதனமாம் என்பது.

57 பகைப் படையைப்பற்றி வேறொரு விசேடத்தைக் கூறுகின்றார். தன் பகைவனுடன் போர் செய்தற்குரிய காலம் நெருங்கியதால் தன் படையைச் செலுத்தற்குரிய சமயம் நேர்ந்தபோது என்பது.

58 பகைவனை—தன் உதவி குறித்து முன்னர் வந்த பகைப் படையை.

59 கவர்தல்—தன் காரியம் நிறைவேறவில்லை எனக் கூறித் தன்வயத்திலேயே இருக்கச் செய்தல்; எனவே, அச்சமயத்தில் திருப்பியனுப்பி விடுதல் கூடாதென்பது கருத்து.

60 'தனக்கு வேறொரு காரியத்தைத் தலைக்கீடாகக் காட்டி' என்பதனைக் கூட்டுக.

61 உதவி செய்தற்பொருட்டுச் சங்கேதஞ் செய்துகொண்ட பொருளைக் கொடுக்காதிருப்பதால் பயனற்றதாகச் செய்து விடலாம் என்பது கருத்து. 'பகைப் படையை உடனே திருப்பி விடுப்பவன்' என்பதைக் கூட்டுக என்ப.

62 உடனே எல்லாப் படையையும் ஒன்று சேர்த்தற்கியலாவண்ணம் பலவிடங்களில் பிரிந்திருக்கச் செய்யலாம் என்பது கருத்து.

63 உதவிக்குரிய காலங் கடந்த பின்னர் என்பது.

64 இதுகாறும் விளக்கப்பட்ட 'படை செலுத்தல்' பகைவனாற் கையாளப்பட்டவிடத்து வெற்றி விருப்பமுள்ளவன் அதற்குத் தீங்கு புரிதல் வேண்டும் என்பதும், தான் ஏற்றபோது பகைவனால் உண்டாம் தீங்கைப் பரிகரித்து, அப் படைசெலுத்தலை நிறைவுள்ளதாகச் செய்தல் வேண்டும் என்பதும் கருத்து.

[65]இவற்றுள் [66]கூறிய முறையே முன் முன்னுள்ளதனை இயங்கச் செய்தல் சிறந்ததாம்.

[67]அவனுண்மைகாரணமான உண்மை, [68]எப்பொழுதும் பெருமையின் தொடர்பு என்னுமிவை காரணமாகக் கூலிப் படையினும் மூலப்படை சிறந்ததாம்.

[69]எப்பொழுதும் மறைவுபடாததும் [70]விரைவிலியங்குவதும் வயப்பட்டதுமான கூலிப்படை [71]குழுப்படையினும் சிறந்ததாம்.

[72]நாட்டிலுள்ளதும் [73]ஒரே பயன் கருதி வந்ததும்

---

65 இனி 'சந்நாக குணங்கள்' என்ற அடுத்த பிரகரணம் கூறப்படும். சந்நாகம்—கவசம் முதலிய போர்க் கருவிகளை மேற்கோடல். ஈண்டு போர்ச் செயற்குரிய படைகளின் முயற்சியைக் குறிப்பதாகும். குணங்கள்—சிறப்பு முறைகள். ஏற்கப்பட்ட படைகளின் சந்நாகம் அங்கமாகச் செய்யப்பட வேண்டியது கருதி அதன் ஏற்றத் தாழ்வுபற்றிக் கூறுதல் இன்றியமையாதாகலின், இங்குக் கூறப்படுகின்றது. இதனுற் பிரகரணவியைபு புலனும்.

66 மூலப் படையை முதலாகக் கொண்டனவும் ஔற்சாகிகப் படையை இறுதியாகக் கொண்டனவுமான எழுவகைப் படைகளுள் வரிசைக் கிரமத்தில் பிந்தியுள்ள படையைச் சந்நாகப் படுத்துவதை விட முன்னுள்ள படையைச் சந்நாகப் படுத்துவது, காரியம் நிறைவேறுதற்குச் சாதகமாம் என்பது கருத்து.

67 மூலப் படை முதலியவற்றிற்கு முற்கூறப்பட்ட சிறப்பை முறையே கூறத் தொடங்கி மூலப் படைக்குரிய சிறப்பினை முதற்கண் கூறுகின்றூர்; தலைவனுண்மை காரணமான உண்மை—தலைவனிருந்தால் தாமும் இருத்தல். இதனுல் அவனின்மைகாரணமான இன்மையை யுடையது என்பது பெறப்படும்.

68 தலைவன் மூலப் படையின்பால் வைத்திருக்கும் ஆதரவு, அப் படை தலைவனிடம் வைத்திருக்கும் அன்பு என்னுமிவை எப்பொழுதும் தொடர்புள்ளனவாயிருக்கும் என்பதாம்.

69 எப்பொழுதும் அணிமையிலிருத்தல்பற்றி 'மறைவு படாதது' என்றூர்.

70 அணிமையிலிருத்தல்காரணமாகக் காலந் தாழ்த்தலின்றிச் செயலுக்கு ஏற்புடையராதல் என்பது.

71 கூலிப் படைக்குரிய இயல்பற்றதுபற்றி என்க.

72 நாடு—ஈண்டுத் தலைவனுடையது; எனவே நட்புப் படைபோல் வெளிநாட்டில் இல்லாதது என்பது பெற்றும்.

73 ஒன்றுசேர்ந்து நுகர்தற்குரிய பயன் கருதி வந்தது என்பது.

[74]வெறுப்பு, கோபம், பயன், ஊதியம் என்னுமிவற்றால் ஒத்தது மான குழுப்படை [75]நட்புப் படையினும் சிறந்தது. [76]ஒரே பயன் கருதி வந்ததை விட இடம் காலங்களின் வரையறையற்ற தும் சிறந்ததாம். நட்புப்படை பகைப் படையைவிடச் சிறந்தது.

[77]பெருமையுள்ளவனாலடையப்பட்ட பகைப் படை, காட்டுப் படையினும் சிறந்தது, [78]அவையிரண்டும் [79]அழிவு குறித்தன வாம். [80]அழிவின்மை குறித்தும், விதனத்திலும் அவற்றால் உட்கலாமுளதாம்.

[81]அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்னும் இப்படை

---

[74] எந்தப் பொருளில் தலைவனுக்கு வெறுப்பு முதலியன உளவோ, அப் பொருளில் அவற்றை யுடையதும், தலைவனுடன் ஒத்த பயன் முதலிய வற்றை யுடையதும் என்பது.

[75] நட்புப் படை—குழுப் படைக்குக் கூறப்பட்ட இயல்பற்றது.

[76] 'ஒரே பயன் கருதி வந்தது' என்பதாக நட்புப் படையிலும் ஒரு பிரிவுண்டு. எனவே குழுப் படைக்குக் கூறிய இவ்வியல்பையுடையதாக அந் நட்புப்படை இருத்தலின், நட்புப் படையைவிடக் குழுப்படை சிறந்த தென்றது எங்ஙனமெனத் தடை நிகழ்த்தி விடை கூறுகின்றார்; உதவி செய்தல் பற்றி இடங் காலங்களின் வரையறையை எதிர்பாராத குழுப் படை, அவ் வரையறையைப் பற்றியிருத்தல் பற்றி ஒரே பயன் கருதி வந்த நட்புப் படையைவிடச் சிறந்ததேயாம்.

[77] பெருமையுள்ளவன்—நற்குண முண்மை காரணமாக நம்புதற்குரிய நாயகன்.

[78] அவற்றை ஈடுபடுத்தலில் ஒரு சிறப்பைக் கூறுகின்றார். அவை—பகைப் படையும் காட்டுப் படையும்.

[79] பகைவனது நாட்டை யழித்தல் என்ற செயலைப் பயனாகக் கொண் டவை. அதாவது பகைவன் நாட்டை யழித்தற்றொழிலில் மட்டும் செலுத் தற்குரியன என்பது கருத்து.

[80] அழித்தல் தவிர ஏனைய போர்த் தொழில் முதலியவற்றிலும் தனக்கு இடுக்கண் நேர்ந்த காலத்தும் செலுத்தப் படின் தன் பக்கத்தில் கலாமுண் டாம் என்பது கருத்து.

[81] இனிப் பிறப்பு காரணமாகப் படைகளுக்கு அமைந்த சிறப்பைக் கூறுகின்றார்.

களுள் [82]பொலிவின் தலைமைபற்றி முறையே முன்னையது முன்னையதை [83]இயங்கச் செய்தல் சிறந்தது என்பர் ஆசிரியர்.

அன்றென்பர் கௌடலியர். அந்தணர்படையைப் பகைவன் வணக்கத்தால் [84]தகர்ப்பன். [85]படைக்கல அறிவில் தேர்ச்சியுள்ள அரசர் படையும், [86]மிகுந்த வன்மையுள்ள வணிகர் சூத்திரர் படைகளும் சிறந்தன [87]என்க.

[88]ஆகையால் பகைவன் இன்ன படையுடையவன், [89]அதற்கு இது எதிர்ப் படை என்று படை செலுத்தலைச் செய்தல்வேண்டும்.

[90]சிறந்த யானைகள் [91]பொறி வண்டிகளாகிய நடுப்பகுதி

---

82 பொலிவு என்பதற்கு வீரத்தன்மை என்னும் பொருள் கொள்ளுதல் கூடாது. என்னை? அந்தணரிடம் அஃதில்லையாகலான் என்க. எனவே பொலிவு என்பதற்கு 'அறவோனுயிருத்தல், நன்றியறிவு முதலிய குணங்களி னிறைவு' என்று பொருள் கொள்ளுதல் தகும் என்ப. 'பொலிவின் தலைமை பற்றி' என்பது 'பொலிவு சிறந்ததாக எண்ணுதற்குரியதாகலின்' என்னும் பொருட்டு.

83 இயங்கச் செய்தல்—சந்நாகஞ் செய்தல்.

84 தகர்த்தல்—ஈண்டுத் தன்வயமாக்குதல்.

85 ஆயின் எது சிறந்தது என்பதனைக் கூறுகின்றார்.

86 மிகுந்த ஆற்றலுள்ளவரால் நிறைந்த என்பது.

87 சிறப்பைப் பற்றிக் கூறும் செய்தி இத்துடன் முடிவுற்றது என்பார் 'என்க' என்றார்.

88 இனி 'எதிர்ப் படையின் செயல்' என்னும் பிரகரணம் கூறப்படும். எதிர்ப் படை—பகைப் படைகளோடு பொருதழிக்கும் ஆற்றலுடைய படைகள். சந்நாக குணங்கள் போன்று எதிர்ப்படையின் செயலும் படைக்கு அங்கமாகலின் அதன்பின் இது வைக்கப்பட்டது. 'ஆகையால்' என்பதற்கு ஈண்டு, 'முற்கூறியபடி சந்நாக குணங்களை யறிந்த பின்னர்' என்பதனைப் பொருளாகக் கொள்க.

89 அவனுடைய அப்படையை எதிர்த்துப் போர் செய்யவல்ல படை இன்னது என்றறிந்து, அதற்கேற்ற வகையில் படையைச் செலுத்தல் வேண்டும் என்பது கருத்து.

90 யானைப் படைக்கு எதிர்ப் படையைக் கூறுகின்றார்; சிறந்த யானைகளையுடைய படை என்பது.

91 பொறி குந்தம் முதலியவற்றின் விளக்கத்தை 39-ஆம் அத்தியாயத்திற் காண்க.

குந்தம் [92]ஈட்டி [93]ஆடகம் [94]மூங்கில் [95]முள் என்னுமிவற்றை யுடையது யானைப் படைக்கு எதிர்ப்படையாம்.

[96]பாறை [97]தடி கவசம் [98]அங்குசம் கோத்திழுக்கும் கருவி முதலியவற்றால் நிரம்பிய [99]அதுவே தேர்ப்படைக்கு எதிர்ப் படையாம்.

குதிரைகளுக்கு எதிர்ப்படையும் அதுவேயாம்.

கவசத்தையுடைய யானைகள், கவசமுள்ள குதிரைகள், கவசங்களையுடைய தேர்கள், கவசமுள்ள காலாட் படை என்னுமிவை [100]நால்வகைப் படைக்கும் எதிர்ப்படைகளாம்.

சுலோகம்

பகைவனுடைய படையைத் தடுத்தற்குரிய படைகளின் இயக்கத்தைத் [101]தன் படைகளின் பெருமைக் கேற்பவும்

---

[92] ஈட்டி—24 அங்குல அளவில் முழுதும் இரும்பினலியன்ற படைக் கலன்.

[93] 'ஹாடகம்' என்று முதனூல் கூறும்; மூன்று முள்முனைகளைக் கொண்டதும், குந்தத்தினுடைய அளவுள்ளதும் ஆகிய படை; சூலப் படையா யிருக்கலாம்.

[94] நீண்ட பிரம்பு.

[95] நாற்புறமும் இருப்பு முள்ளுள்ள இருப்புத் தடி.

[96] யானைப் படைக்கு எதிர்ப்படையாகக் கூறப்பட்டதே, பாறை முதலியவற்றால் நிரம்பியிருப்பின் தேர்ப்படைக்கு எதிர்ப்படையாம் என்பது.

[97] தடி—சிறுகதை (ருஜா).

[98] அங்குசம்—நீண்ட இரும்பினால் செய்யப்பட்டது.

[99] அது—யானைப் படையின் எதிர்ப்படை. அடுத்துள்ளதற்கும் இஃதொக்கும்.

[100] யானை குதிரை தேர் காலாள் என்ற நால்வகைப் படைகளுக்கும் முறையே பொதுவாக எதிர்ப் படைகளாம் என்பது.

[101] மூலப்படை முதலிய தன்னுடைய படைகளின் சிறப்புக் கேற்பவும் என்பது.

[102]பகுதிகளின் விகற்பத்திற்கேற்பவும் [103]இங்ஙனம் செய்தல் வேண்டும்.

ஒன்பதாம் அதிகரணம் 3, 4, 5-ஆம் பிரகரணங்கள்
'படை செலுத்தற்குரிய காலங்கள்', 'சந்நாக குணங்கள்'
'எதிர்ப்படையின் செயல்' என்னும்
நூற்றிருபத்து மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[102] பகுதி—அங்கம்; யானை குதிரை முதலிய சேனைப் பகுதிகளின் மிகுதி குறைவுகளின் பிரிவுக் கேற்பவும் என்பது.

[103] முற் கூறிய சந்நாக குணங்கள் எதிர்ப்படைச் செயல்களுடைய முறையின் அறிவை முதலாகக் கொண்டனவாம்.

ஒன்பதாம் அதிகாரணம்— போர்ச் செலவு மேற்கொள்வோன் செயல்

6, 7-ஆம் பிரகரணங்கள்—[1]பின்னர் நிகழும் கொடுஞ்செயல்களை யாராய்தல், அகப்புறப் பகுதிகளின் சினமடக்கல்

நூற்றிருபத்து நான்காம் அத்தியாயம்

[2]சிறியதாகப் பின்னர் நிகழும் கொடுஞ்செயல் மிக்கதா, பெரியதாக முன்னர் நிகழும் ஊதியம் மிக்கதா எனின், [3]சிறியதாகப் பின்னர் நிகழும் கொடுஞ்செயல் மிக்கதென்க. என்னை? [4]சென்றவனுடைய தூஷ்யர், பகைவர், காட்டில் வாழ்வோர் என்னுமிவர்களாதல் பகுதிகளின் கோபமாதல் சிறியதாகப் பின்னர் நிகழும் கொடுஞ் செயலை நாற்புறமும் மிகுதிப்படுத்துவன.

124-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] ஒருவன் போர்ச்செலவுடையனுகை அவற்குப் பக்கத்துறையும் பகைவர், காட்டில் வாழ்வோர், தூஷ்யர் முதலியவர் இழைக்கும் தீயிடல் அழித்தல் முதலிய தீங்குகளைப்பற்றிய ஆராய்ச்சி இதன்கட் கூறப்படும். படை செலுத்தப்படினும் பின்னர்க் கொடுஞ்செயல் முதலிய தீங்கின்மை துணியப் பட்டபின்பே செல்லுதல் வேண்டும் என்பதுபற்றி அவற்றை ஈண்டு ஆராய்கின்றூர். இதனுற் பிரகரணவியைபு புலனுதலறிக.

[2] செல்லுங்கால் பின்னர் நிகழுங் கொடுஞ்செயல் சிறியதாயினும் வலியதாகக் கருதுதற்குரியதா (முன்னர் நிகழும் ஊதியத்தையும் மதியாது குறிக்கொண்டு விலக்குதற்கேற்ற வன்மையுடையதா) அன்றி முன்னர் நிகழும் பெரிய ஊதியம் வலியதாகக் கருதுதற்குரியதா (பின்னர் நிகழும் கொடுஞ்செயலையும் மதியாது ஏற்றற்குரியதா) என்று ஆராய்ந்தால் என்பது.

[3] சிறியதாயினும் பின்னர் நிகழுங் கொடுஞ்செயலே முன்னர் நிகழும் பெரிய ஊதியத்தைவிட வலியதாம் என்று துணிகின்றூர்.

[4] அதற்குக் காரணத்தைக் கூறுகின்றூர். பக்கத்துறையும் பகைவனுல் மட்டும் உண்டாக்கப்படும் கொடுஞ்செயல் சிறியதாயினும், சென்றவனை வெற்றிவிருப்பமுள்ளவனுடைய தூஷ்யர், பகைவர், காட்டில் வாழ்வோர் என்பவர் எதிரிலும் பக்கங்களிலும் அதை மிகுதிப்படுத்துகின்றனர். மந்திரி புரோகிதர் முதலிய உட்பகுதிகளின் கோபம் அதை மிகுதிப்படுத்தும் என்பது கருத்து.

[5]முன்னர்ப் பெரிய ஊதியங் கிடைக்கப் பெறினும், இம்மாதிரி நிகழ்ந்தவிடத்து, அதைப் பணியாளர் நண்பர்களின் அழிவு செலவுகள் விழுங்குகின்றன. [6]ஆகலின் முன்னர் ஊதியத்தின் விளைவு ஆயிரத்தில் ஒன்றும். [7]பின்னர் நிகழும் கொடுஞ் செயல் நூற்றில் ஒன்று. [8]எனவே செல்லுதல் கூடா. [9]'தீங்குகள் ஊசியின் முனைகள்' என்பது உலக வழக்கு.

[10]பின்னர் நிகழுங் கொடுஞ் செயலில் இன்சொல், கொடை, வேறுபடுத்தல், ஒறுத்தல் என்னுமிவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். [11]முன்னர் ஊதியத்தில் சேனைத் தலைவனை யாதல் இளவரசனை யாதல் படையைச் செலுத்துபவராகச் செய்தல் வேண்டும்.

---

[5] பின்னர் நிகழும் கொடுஞ்செயலை எண்ணாது சென்ற வெற்றிவிருப்பமுள்ளவனால் எய்தப்படும் முன்னர் ஊதியம் பெரியதாயினும் முற்கூறியவாறு கொடுஞ்செயல் மிகுதியை அடைந்த நிலையில், கோபத்தைத் தணித்தற்பொருட்டு உண்டான பணியாளர் நண்பர்களைப்பற்றிய கேடு செலவுகள் அவ்வூதியத்தை மிகுதிப்படாவாறு அழிப்பனவாம் என்பது கருத்து.

[6] முன்னர் ஊதியம் பெரிதாயினும் பின்னர் நிகழும் கொடுஞ்செயலை விலக்குதற் பொருட்டு அதுகருதிச்செல்லும் செலவைத் தடுக்கின்றார். மேற்செலவால் உளதாகிய ஊதியம் எல்லாவற்றையும் அழித்தல் பற்றி, இறுதியில் ஆயிரத்தில் ஒரு மடங்கு மட்டுமே நிலைப்பதாம் என்பது கருத்து.

[7] ஆயிரத்தில் ஒரு மடங்கென்ற இம் மதிப்புக்குரிய பொழுதினைக் கூறுகின்றார். பின்னர் நிகழுங் கொடுஞ்செயலால் உண்டாம் தீங்கு நூறில் ஒரு மடங்கெனக் கருதப்பட்டபோதென்பது. எனவே பின்னர் நிகழுங் கொடுஞ்செயலைவிடப் பத்து மடங்கு நொய்மையுடையது ஊதியம் என்பது பெறப்படும் என்ப.

[8] முற்கூறிய காரணத்தால் பின்னர்க் கொடுஞ்செயல் நிகழுமென ஐயுற்றபொழுது செல்லுதல் கூடாதென்பது கருத்து.

[9] பின்னர் நிகழுங் கொடுஞ்செயல் சிறியதாயினும் பெரிதாகும் என்பதனை உலகவழக்கில் வைத்து விளக்குகின்றார். தொடக்கத்தில் மிகச் சிறியதாகவும் பிற்காலத்தில் மிக வதிகமாகவுமிருக்கும் என்பது கருத்து.

[10] பின்னர்க் கொடுஞ்செயல் நிகழக்கூடும் என ஐயுற்றபோதும் மேற்சேறலை ஏற்கு முறையைக் கூறுகின்றார். தான் செல்லாமலே இருந்து நால்வகை உபாயங்களையும் செய்து அதைத் தணித்தல் வேண்டும் என்பது கருத்து.

[11] முன்னர் ஊதியத்தைக் குறித்துச் செல்லுதற்குரியார் இன்னின்னார் எனக் கூறுகின்றார். அவர்களைப் படையைச் செலுத்துபவராகச் செய்து மேற்சேறலை ஏற்கச்செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[12]வன்மையுடைய அரசன் பின்னர் நிகழுங் கொடுஞ் செயலைத் தடுத்தற்கு ஆற்றலுடையனாயின் செல்லலாம். [13]உட் கலாம் பற்றி ஐயுறின் [14]ஐயுறப்பட்டவரை யழைத்துச் செல்லல் வேண்டும்.

[15]வெளியில் நிகழும் கோபம் பற்றி ஐயுறின் [16]இவர்களின் மனைவி மக்களை [17]உள்ளிருப்பவருக்கு வயப்பட்டவராகச் செய்து [18]பாழிடக் காவலனைப் [19]பல்வகைப் படைக் குழுவுடனும் பல [20]தலைவருடனும் நிலைப்படுத்திச் செல்லல் வேண்டும் [21]அல்லது

---

12 அரசன் அதிகமான படைகளை யுடையனாயின், பின்னருளதாம் கொடுஞ்செயலைத் தடுத்தற்கு ஆற்றலுள்ள படையின் ஒரு பகுதியை ஏவி விட்டு, முன்னர் நிகழும் ஊதியத்தை ஏற்றற்பொருட்டுத் தானே செல்லுதலையும் மேற்கொள்ளலாம் எனக் கூறுகின்றார்.

13 இதுகாறும் பின்னர் நிகழுங் கொடுஞ்செயலுக்கு மாற்றங்கூறினார். இனி அகப்புறப் பகுதிகளின் சினமடக்கல் என்னும் பிரகரணம் விளக்கப் படும். அகப்பகுதிகள் புறப்பகுதிகளென இயையும். அகப்பகுதிகள்—அமைச்சர் புரோகிதர் முதலியோர். புறப்பகுதிகள்—நாட்டின் எல்லையைக் காப்போர் முதலிய அதிகாரிகள். அவர்களுடைய சினமடக்கற்கு வேண்டுவன செய்தலைக் கூறுவது. அகப்பகுதிகளின் கோபத்தை உட்கலாம் என்ப. உட்கலாம்—மந்திரி, புரோகிதன், சேனைத்தலைவன், இளவரசன் என்னுமிவருள் ஒருவருடைய கோபம்.

14 கோபத்தையடைவர் என்று ஐயுறப்பட்டவர் யாவரோ அவரது கோபம் தன் அணுக்கத்தாலேயே தடுத்தற்குரியதாகலின் அவரைத் தன்னுடன் அழைத்துச் செல்லல் வேண்டும் என்பது கருத்து.

15 வெளியில் நிகழும் கோபம்—அரசியற்றலைவன், எல்லைகாவலன், காட்டில் வாழ்வோர், படைவலியாற் றாழ்த்தப்பட்டோர் என்னுமிவருள் ஒருவருடைய கோபம். (இது பின்னர்க் கூறப்படும்)

16 இவர்கள்—அரசியற்றலைவன் முதலாக மேற்கூறப்பட்டவர்கள்.

17 உள்ளிருப்பவர்—அமைச்சர் முதலியவர். 'வயப்பட்டவராகச்செய்து' என்பதைப் பின்வரும் 'செல்லுதல் வேண்டும்' என்பதோடு இயைக்க.

18 பாழிடக்காவலன்—பகைவனைக் குறித்துச் சென்ற தலைவனையுடைய தானியத்தின் காவலன்.

19 ஒன்றோடொன்று சேராதிருத்தற் பொருட்டு மூலப்படை முதலிய பல இனப்படைகளின் குழுவுடனும் செல்லுதல் வேண்டும் என்பது.

20 தலைவர்—படைத்தலைவர்.

21 இங்ஙனம் செய்தவிடத்தும் உட்கலகத்தைத் தணித்தல் ஒருதலையன்று என்ற கருத்துடன் கூறுகின்றார்.

செல்லாதிருத்தல் வேண்டும், '[22]உட்கலாம் வெளியில் நிகழும் கோபத்தைவிடக் குற்றமுடைத்து' என்பது முன்னர்க் கூறப் பட்டது.

[23]மந்திரி, புரோகிதர், சேனைத் தலைவர், இளவரசன் என்னு மிவருள் ஒருவரது கோபம் உள் நிகழும் கோபமாம். [24]தன் குற்றத்தை விடுத்தலாலும் பிறருடைய ஆற்றல் குற்றம் என்ப வற்றைப் பின்பற்றுதலாலும் அதைத் தணித்தல் வேண்டும்.

[25]புரோகிதன் பெருங்குற்றமுடையனுயினும் கட்டுதல் அல்லது [26]வெளியேற்றல் தண்டமாம். இளவரசனுக்காயின் கட்டுதல், [27]குணமுள்ள வேறு புதல்வனிருப்பின் கொலை (என்பன) [28]ஆம்.

[29]இவற்ருல் அமைச்சர் சேனைத்தலைவர்களுக்கும் விதி கூறிய வாருும்.

---

22 உள்நிகழுங் கோபத்தைத் தணித்தற்கியலாமை, செல்லாதிருத்தற்குக் காரணமாம் என்பதைக் குறித்தற்கு 'வெளியில் நிகழும் கோபத்தைவிட உள்நிகழும் கோபம் குற்றமுடைத்து' என்று முற்கூறப்பட்டதை நினை வுறுத்துகிருர்.

23 உள்நிகழும் கோபம் இன்னதெனக் கூறுகின்ருர்.

24 அக்கோபத்திற்குத் தன்பாலுள்ள குற்றங் காரணமாயின், அக் குற்றத்தை விடுத்தலாலும், அக்கோபத்திற்கு மந்திரி புரோகிதர் முதலிய வரின் குற்றங் காரணமாயின், கொலை, கட்டுதல், பொருட்டண்டம் என் பவற்ருலும் மாற்றம் புரிதல் வேண்டும் என்பது.

25 புரோகிதர் முதலியவர்களுக்குரிய தண்டத்தைக் கூறுகின்ருர்.

26 நாட்டினின்றும் வெளியேற்றுதல் என்பது. இதனுல் புரோகிதர் அந்தணராயிருத்தலால் அவர்க்குக் கொலைத்தண்டம் விதித்தல் கூடாது என்பது பெற்ரும்.

27 இளவரசனுக்குக் கொலைத்தண்டம் விதிக்க நேருங் காலத்தைக் கூறுகின்ருர்.

28 ஆம்—தண்டமாம்.

29 இவற்ருல்—கட்டுதல், கொலை என்பவற்ருல். புரோகிதன், இள வரசன் என்னுமிவர்களுக்குக் கூறிய விதிகளால் என்பாருமுளர். அந்தண ரல்லாதவிடத்து மந்திரி முதலியவர்களுக்கும் கட்டுதல் கொலை என்பவை குற்றத்திற்கேற்ற தண்டங்களாம் என்பது கருத்து.

[30]அரசைப் பற்றுபவரான புதல்வன், உடன் பிறந்தவன், [31]குடிப்பிறப்புள்ள வேறொருவன் என்னுமிவர்களை [32]ஊக்கத்தினால் வயப்படுத்தல் வேண்டும். [33]ஊக்கமின்றேல் [34]பகைவருடன் சந்தியின் அச்சங் காரணமாக [35]ஏற்கப்பட்டதின் தொடர்பு, சந்திகன்மம் என்னுமிவற்றால் வயப்படுத்தல் வேண்டும். [36]அவன் போன்ற பிறர்க்கு நிலக் கொடையால் அவனை நம்பிக்கையுறச் செய்தல் வேண்டும். [37]அவனுடன் கூடிய [38]தானே கவர்ந்து ஏற்கும் படையை யாதல், [39]சிற்றரசர், காட்டில் வாழ்வோர் என்போரையாதல் [40]அனுப்புதல் வேண்டும். [41]அவர்களுடன் விக்கிரகத்தை மேற்கொண்டவனை வஞ்சித்தல் வேண்டும். [42]தாழ்த்தப்பட்டவனை யேற்றலை யாதல், 'பாரக்கிராமிகம்' என்ற மறைவுச் செயலையாதல் செய்தல் வேண்டும்.

---

30 உள்நிகழும் கோபங்களின் பிற வகைகளைக் கூறுகின்றார். 'பற்றுபவர்' என்பது 'பற்ற விருப்பமுள்ளவர்' என்னும் பொருட்டு.

31 குடி—தன்குடி.

32 சேனைத்தலைவன் முதலிய பதவியில் நியமித்தல்வாயிலாக ஊக்கமூட்டி வயப்படுத்தலால் அக்கோபத்தைத் தணித்தல் வேண்டும் என்பது.

33 மேற்கூறியவாறு ஊக்கமளிக்க வியலாவிடின் என்பது.

34 வயப்படுத்தாதபோது பகைவருடன் சந்திசெய்து கொள்வர் என்ற அச்சம் என்க.

35 அவர்களால் கவரப்பட்ட நிலம் முதலியவற்றைத் தொடர்ந்து அநுபவித்தற்கு இசைதலாலும் சந்தியை யேற்றலாலும் என்பது.

36 தன்குடியிற் பிறந்த வேறு சிலருக்கு நிலத்தைக் கொடுத்தலால் அவனுக்கு நம்பிக்கையை யுண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

37 அவன்—தன்குடியிற் பிறந்தவன்.

38 'யாரால் எது கைப்பற்றப்படுமோ அது அவருக்குரியது' என்ற வரையறை செய்துகொண்டு போர்புரியும் படை என்பது.

39 'அவனுடன் கூடிய' என்பதை ஈண்டுங் கூட்டுக.

40 யாரேனும் ஒருவருடன் எதிர்த்துப் போர்புரிதற் பொருட்டென்க.

41 அவ்வாறு அனுப்பப்பட்ட, தானே கவர்ந்து ஏற்கும் படை, சிற்றரசர், காட்டில் வாழ்வோர் என்னுமிவர்களுடன் பகைமை கொள்ளும்படி செய்து கட்டுவித்தல் வேண்டும் என்பது.

42 மேற்கூறிய படை முதலியவற்றால் கட்டப்பட்ட அவனை ஏற்றலையோ அன்றி 13-ஆம் அதிகரணத்திற் கூறப்படும் 'பாரக்கிராமிகம்' என்ற மறைவுச் செயலை யேற்றலையோ செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[43]இதனால் அமைச்சர் சேனைத் தலைவர்களுக்கும் விதி கூறியவாறும்.

[44]மந்திரி [45]முதலியவர்களைத் தவிர மற்ற [46]அமைச்சருள் ஒருவரது கோபம் உள்ளமைச்சரின் கோபமாம். [47]ஆண்டும் தகுதிக் கேற்ப உபாயங்களைக் கையாளுதல் வேண்டும்.

[48]அரசியற் றலைவன், எல்லை காவலன், காட்டில் வாழ்பவன், படைவலியால் தாழ்த்தப்பட்டவன் என்னுமிவருள் ஒருவருடைய கோபம் வெளிக்கோபமாம். [49]ஒருவர்க்கொருவரால் அதைத் தணித்தல் வேண்டும். [50]வலிய அரணால் தடைப்பட்டவனைச் சிற்றரசர், காட்டில் வாழ்வோர், [51]அவன் குடியிற் பிறந்த தடைப்பட்டவன் என்னுமிவருள் ஒருவரால் [52]வயப்படுத்தல் வேண்டும். [53]பகைவனுடன் சேராவண்ணம் நண்பனாலும் வயப்படுத்தலாம்.

---

43 குடிப்பிறந்தவனை வயப்படுத்தற்கு மேற்கூறிய உபாயத்தையே மந்திரி சேனைத்தலைவன் பக்கமும் மாட்டேற்றிக் கூறுகின்றார். இதுகாறும் மந்திரி முதலிய நால்வருள் ஒருவருடைய கோபத்தையும் அதற்குரிய பரிகாரச்செயலையுங் கூறி முடித்தார்.

44 உள்நிகழும் கோபத்தில் மற்றொரு பிரிவான உள்ளமைச்சரின் கோபம் என்பதுபற்றி ஈண்டுக் கூறுகின்றார்.

45 முதலியவர் என்பதால் புரோகிதன், சேனைத்தலைவன், இளவரசன் என்ற மூவரைக் கொள்க.

46 வாயில்காப்போன், உவளகவினைஞன் முதலியோருள் என்பது.

47 அக்கோபத்தைத் தணித்தற் பொருட்டும் முற்கூறிய உபாயங்களைச் சமயத்திற்கேற்ப ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

48 இனி வெளியில் நிகழும் கோபத்தையும் அதற்குரிய மாற்றத்தையுங் கூறுகின்றார்.

49 அரசியற்றலைவன் கோபத்தை எல்லை காவலன் முதலியோராலும், அவர்களின் கோபத்தை அரசியற்றலைவனாலும் என்ற இம்முறையில் ஒருவர்க்கொருவரால் பரிகரித்தல் வேண்டும் என்பது கருத்து.

50 அவ்வாறு தணித்தற்கியலாதபோது செயற்பாலதிதுவெனக் கூறுகின்றார். தகர்த்தற்கியலாத அரணையடைந்த அவ்வரசியற்றலைவன் முதலியோரை என்பது.

51 அவன் குடியிற் பிறந்தவனும் அவனால் தடைப்படுத்தப்பட்டவனுமாயிருப்பவன் என்பது.

52 வயப்படுத்தல்—கட்டுவித்தல்.

53 தன் பகைவருடன் அவன் சேர்ந்துவிடாதிருத்தல் குறித்து அவனைத் தன் நண்பனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[54]அல்லது '[55]இவன் உன்னை வஞ்சகனெனக் கருதுகிறவனாகத் தலைவனிடத்தே வன்மையை ஏற்கச் செய்வான். [56]பயனை எய்திய பின் பகைவர்பாலாதல், காட்டில் வாழ்வோர்பாலாதல், கொடிய யாத்திரையிலாதல் படையுடன் செல்லுதற்குத் தூண்டப் போகிறான். [57]அல்லது இறுதியில் மனைவி மக்களின்றி இருக்கச் செய்வான். [58]வலி தடைப்பட்ட உன்னைத் தலைவனிடம் விலைப் பண்டமாகச் செய்வான். அல்லது [59]உன்னால் சந்தியைச் செய்து தலைவனை மகிழ்விப்பான். [60]இவனுடைய நெருங்கிய நண்பனை யாதல் அடைவான்' என்று பகைவனிடமிருந்து இவனைச் [61]சத்திரி வேறுபடுத்தல் வேண்டும்.

[62]உடன்பட்டவனை விரும்பிய கருத்துக்களால் பெருமைப் படுத்தல் வேண்டும்.

---

[54] பகைவனுடன் சேருவதைத் தடுத்தற்கு மற்றோர் உபாயங் கூறுகின்றார்.

[55] எவ்விதங்கூறி வேறுபடுத்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார். நீ யாரை அடைய விரும்புகிறாயோ அவன் உன்னைப் பகைவனுடைய ஒற்றன் என்று கருதி 'உன் தலைவனையே எதிர்த்துச் செல்' என்று தூண்டப் போகிறான் என்பது.

[56] தலைவனை எதிர்ப்பதால் பயனை யெய்திய பின்னர் முயன்று ஏற்றற்குரியதும் சேய்மையான இடத்தில் வசித்தலால் செய்தற்குரியதும் பகைவன் காட்டில் வாழ்வோர் என்பவர்களை வயப்படுத்தற்குரியதுமான மேற் சேறலில் தன் படையைச் செலுத்துபவனாக உன்னை ஏவப் போகிறான்.

[57] உன் மனைவி மக்களைத் தன் வயத்தில் வைத்து அவர்களின்றி உன்னை நாட்டு எல்லையில் வசிக்கச் செய்வான் என்பது.

[58] தலைவனது வன்மையால் தடைப்பட்ட உன்னைக்கண்டு தலைவனிடம் உன்னை விற்பான் என்பது.

[59] சந்திப் பொருளாக உன்னையே செய்து, தலைவனிடம் உன்னைக் கொடுத்து அவனுடன் சந்தியைச் செய்து அவனை மகிழ்விக்கப் போகிறான் என்பது.

[60] அத் தலைவனுடைய ஒரு நண்பனுடன் உன்னைச் சந்திப் பொருளாகக் கொடுத்துச் சந்தியைச் செய்யப் போகிறான் என்பது.

[61] சத்திரி – ஒரு வகை ஒற்றன்.

[62] மேற்கூறியபடி வேறுபடுத்தல்மொழியைக் கேட்டு வயப்பட்டவனை, அவன் விரும்பிய பொருட் கொடையால் பெருமைப் படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[63]உடன்படாதவனுக்குச் [64]சார்பாயுள்ளவனை [65]'இவன் உனக்கு வஞ்சக புருஷனாக ஏவப்பட்டவன்' என்று வேறுபடுத்தல் வேண்டும்.

சத்திரி [66]விடப்பட்டவரின் ஓலைகளாலாதல், ஒற்றர்களாலாதல் [67]இவனைக் கொல்லுதல் வேண்டும். [68]இவனுடன் கூடப் புறப்பட்ட வலிய மக்களின் கருத்துக் கேற்றதைச் செய்தலால் அவர்களைத் தன்வயப்படுத்தல் வேண்டும். [69]சத்திரிஅவனால் அனுப்பப்பட்டவராகக் கூறுதல் வேண்டும். [70]விளைவு இங்ஙனமாம். [71]பகைவனுக்கு இக் கொடுஞ் செயல்களை யுண்டாக்கல் வேண்டும். தனக்காயின் தணித்தல் வேண்டும்.

---

63 வேறுபடுத்தல்மொழியை யேற்காதவன் பகைவனுடன் சேருவதைத் தடை செய்தற்குரிய உபாயத்தைக் கூறுகின்றார்.

64 அண்டி வாழ்தற்குரியவனை என்பது.

65 எவன் உன்னை அண்டி வாழ வந்திருக்கின்றானோ, அவன் உன் பகைவனால் ஏவப்பட்ட ஒற்றனாவான் என்று கூறி அவனை வேறுபடுத்துமுகமாக அவனுடன் சேர்க்கையைத் தடைப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

66 விடப்பட்டவர்—கொல்லுதற்குரியராகத் துணியப்பட்டவர். அவர் கையில் மறைவாகக் கொடுத்தனுப்பப்பட்டதும் 'பகைவன் மறைவாக உன்னால் கொல்லப்படட்டும்' என்று வரையப்பட்டதுமான ஓலையை யனுப்பியும், பகைவனே அவ் வோலையை யறிந்து அவனைக் கொல்லுமாறும் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

67 இவனை—வேறுபடுத்தல்மொழியை ஏற்காதவனை.

68 தன் பகைவனை யடைதற் பொருட்டு வெளியிலுள்ளவனுடன் கூட எவர் புறப்பட்டனரோ, அந்த வீர மக்களுக்கு விருப்பமான பொருளைக் கொடுத்து அவர்களைத் தன்வயப்படுத்தல் வேண்டும் என்பது.

69 கூடச் செல்லுமவர்களை வயப்படுத்த இயலாதபோது செயற்பாலதைக் கூறுகின்றார். 'அம் மக்கள் வெற்றி விருப்பமுள்ளவனால் உன்னைக் கொல்லுதற் பொருட்டு அனுப்பப்பட்ட ஒற்றர்களாவர்' என்று பகைவனிடம் சத்திரி என்னும் ஒற்றன் அறிவுறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

70 கோபத்தைப் பரிகரித்தல் இங்ஙனமாம் என்பது.

71 உள் நிகழ்வது வெளியில் நிகழ்வது என்பனவாக இதுகாறும் கூறப்பட்ட கோபங்களைப் பகைவன்பக்கத்து உண்டாக்கல் வேண்டும் என்பதும், பகைவனால் தன் பக்கத்தில் உண்டாக்கப்படின் பரிகரித்தல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன.

[72]கோபத்தைச் செய்தற்கும் தணித்தற்கும் வல்லவனிடம் வேறுபடுத்தல் செய்தற்குரியது. [73]உண்மையாளனிடத்தும் [74]செயலிலும் பயனின் பேற்றிலும் உதவி புரிதல், இடுக்கண் நேர்ந்துழிப் பாதுகாத்தல் என்னுமிவற்றை யுடையவனிடத்தும் வேறுபடுத்தலை யேற்றல் செய்யத்தக்கது. [75]நற்கருத்தை யுடையனோ அன்றித் தீய கருத்துள்ளவனோ என ஆராய்தற்குரியவன் என்க.

[76]தலைவனைக் கொன்று என்னை ஏற்பனாயின் பகைவனழிவு, நிலப்பேறு என்ற இருவகை ஊதியம் எனக்குண்டாம் அல்லது பகைவன் [77]இவனைக் கொல்வானாயின் [78]கொல்லப்பட்டவனுடைய உறவினன் பக்கம், அல்லது [79]ஒத்த குற்றத்திற்குரிய தண்டத்தால் வெறுப்புற்றது என்ற அதிகமான தீயவர் பக்கம்

---

72 கோபத்தை உண்டு பண்ணுவதற்காக முற்கூறப்பட்ட வேறுபடுத்தல் மொழியை யாரிடம் பயன்படுத்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார்; கோபத்தை யுண்டு பண்ணுதல், உண்டானதைத் தணித்தல் என்ற விரண்டிலும் வல்லமை யுள்ளவனிடமே வேறுபடுத்தல் செய்தற்குரியது என்பது கருத்து.

73 வேறுபடுத்தல்மொழியை ஒப்புக்கொள்ளுதல் என்ற பிரதிஜாபத்தை ஏற்றற்குரியோன் இவனெனக் கூறுகின்றார். உண்மையாளன்—நம்புதற்குரியவன்.

74 தொழில்களைச் செய்யுங்காலும் பயனை யெய்திய பின்னரும் வேறுபடுத்தல் மொழியை ஏற்றவனுக்கு உதவிபுரிதற்கும் துன்பம் நேர்ந்துழிக் காத்தற்கும் வல்லவன் யாவனோ அவனிடத்தும், என்க.

75 வேறுபடுத்துபவன் வஞ்சகனாயிருத்தல் கூடுமாகலின் அவன் மொழியை யேற்பவன் முதலில் அவனை ஆராய்ந்தறிதல் வேண்டுமெனக் கூறுகின்றார்.

76 அக் கருத்துக்களின் வகைகளைக் கூறுகின்றார்; என்றால் வேறுபடுத்தப்பட்ட மந்திரி தலைவனைக் கொன்று என்னை அவன் பதவியில் நிலைப்படுத்துவானாயின் எனக்குப் பகைவனழிவு நிலப் பேறு என்ற இருவிதப் பயன்கள் உண்டாகின்றன என்று கருதுவது ஒரு வகையாம்.

77 இவனை—என்றால் வேறுபடுத்தப்பட்ட இம் மந்திரியை.

78 அம் மந்திரியினுடைய உறவினர் குழு என்பது.

79 மந்திரியின் கொலையால் வெறுப்புண்டதும், மந்திரியுடன் ஒத்த குற்றமுடையதுமான வெகுண்டவர் பொருணசையுடையவர் என்பவர்களுடைய குழு.

எனக்குக் கிடைக்கும். [80]இது போன்று ஏனையிடத்தும் ஐயுற்றவனுவான். இவனுடைய வெவ்வேறு தலைவனை, விடப்பட்டவனின் ஓலையால் கொல்வேன் என்று [81]தீய கருத்துள்ள வெளியிலுள்ளவன் உள்ளிருப்பவனை [82]இங்ஙனம் வேறுபடுத்துகிறான்.

[83]இவன் பொருளைக் கவர்வேன் அல்லது [84]படையைக் கொல்வேன், குற்றமுள்ள [85]தலைவனை இவனைக் கொண்டு கொல்வேன், [86]உடன்பட்ட வெளியிலிருப்பவனைப் பகைவர், காட்டில் வாழ்வோர் என்பவர்களிடம் வன்மையை யேற்கச் செய்வேன், இவனுடைய படை சேரும், இவனுடன் பகைமை நிலைக்கும், பின்னர் எனக்கு வயப்பட்டவனுவான், அதன் பின்னர் தலைவனையே மகிழச்செய்வேன், அல்லது [87]யானே அரசைப் பற்றுவேன். [88]கட்டியாவது வெளியிலிருப்பவனது நிலம், தலைவனது

---

80 வெற்றி விருப்பமுள்ளவன் அவ்வினத்தவரான மற்றவரிடமும் அவநம்பிக்கை யுடையனுதலின் அவ்வினத்தவருள் ஒருவனைக் கொல்லுதல் கட்டுதல் முதலியவற்றை யறிவிக்கும் வஞ்சக ஓலையை விடப்பட்டவன்மூலமாக அனுப்பி, வெற்றி விருப்பமுள்ளவனுடைய வெவ்வேறு தலைவனைக் கொல்லச் செய்வேன் என்பது.

81 வேறு படுத்துபவர், வெளியிலுள்ளவராக உள்ளிருப்பவரை வேறு படுத்துபவர் என்றும், உள்ளிருப்பவராக வெளியிலிருப்பவரை வேறு படுத்துபவர் என்றும் இரு திறப்படுவர். அவருள் வெளியிலிருக்கும் வேறு படுத்துபவரின் தீய கருத்துக்களைக் கூறுகின்றார்.

82 இங்ஙனம்—மேற் கூறப்பட்ட முறையால்.

83 உள்ளிருக்கும் வேறுபடுத்துபவருடைய தீய கருத்துக்களைக் கூறுகின்றார் ; இவன்—வெளியிலிருப்பவன்.

84 படையை—இவனுடைய படையை.

85 தலைவனை—என் தலைவனை.

86 என் தலைவனைக் கொல்லுதற்கு ஒப்புக்கொண்ட இவனை முதலில் பகைவர் முதலியோரிடத்தில் போர்புரியச் செய்து இவனுடைய படை அவருடன் சேர்ந்தும், இவன் பகைமை நன்கு வேரூன்றியுமிருந்தபோது இவன் எனக்குப் பணிவுள்ளவனுவான். இதுகாரணமாக என் தலைவனுக்கு என்னிடம் மகிழ்ச்சியுண்டாம் என்பது.

87 என்னிடம் பணிவுள்ள வெளியிலிருக்கும் அரசனுடைய அரசை நான் கைப்பற்றுவேன் என்பது.

88 வெளியிலிருக்கும் அவனைக் கட்டி அவன் நிலத்தையும் என் தலைவனது நிலத்தையும் என் ஆட்சிக்குரியனவாக அடைவேன் என்பது.

நிலம் என்ற இரண்டையும் அடைவேன், அன்றி [89]பகைவனை வயப்படுத்தி, நம்பிக்கையடைந்த வெளியிலுள்ளவனைக் கொலை செய்வேன், அல்லது [90]இவனுடைய பாழான தானியத்தைக் கவர்வேன் [91]என்று தீய கருத்துள்ள உள்ளிருப்பவன் வெளியி லிருப்பவனை இங்ஙனம் வேறுபடுத்துகிறான்.

[92]கூடி வாழுமியல்புள்ள நற் கருத்துள்ளவன் [93]நன்மையை மறைவாகக் கூறுவான். [94]நற்கருத்துள்ளவனுடன் சந்தியைச் செய்தல் வேண்டும். [95]'அங்ஙனமே யாகுக என்று தீய கருத் துள்ளவனை வஞ்சித்தல் வேண்டும் [96]என்க.

[97]இங்ஙனம் துணிந்து,

சுலோகம்

[98]பிறரிடமிருந்து பிறரும், [99]தமரிடமிருந்து தமரும், பிறரிட

---

[89] இவனுடைய பகைவருள் ஒருவனை அழைத்து, வெளியிலிருப்பவனுக்கு அவனிடம் நம்பிக்கையை யுண்டாக்கி அவன்மூலம் கொல்வேன் என்க.

[90] வெளியிலிருக்கும் இவன் வேறொருவனை எதிர்த்துப் போயிருக்குங் கால் தலைவனற்ற இவனுடைய தானியத்தைக் கவர்வேன் என்பது.

[91] மேற்கூறிய இவ் வகைக் கருத்துக்களாம் தீய கருத்துள்ள உள்ளிருப் பவன் வெளியிலிருப்பவனை வேறுபடுத்துவான் என்பது.

[92] கூடியே வாழும் இயல்புள்ளவன்; அல்லது பகைத்து வாழும் இயல் பற்றவன் என்க.

[93] அவ்வியல்புண்மை காரணமாகவே நன்மையை ரகசியமாகக் கூறுவா னன்றித் தீமையைக் கூறான் என்பது.

[94] ஆதலால் நற்கருத்துள்ளவனுடன் சந்தியைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[95] தீய கருத்துடையவன் வேறுபடுத்தல் மொழியைக் கூறும்போது 'நீ கூறுமாறு அங்ஙனமே செய்வேன்' என்று அவன் மொழியை யேற்றுக் கொண்டு பின்னர் அவனை வஞ்சித்தல் வேண்டும் என்க.

[96] 'என்க' என்பது உபாயங்களை அறிவுறுத்துவது முடிவுற்றது என் பதைக் குறிப்பதாம்.

[97] இதைப் பின்வரும் சுலோகத்துடன் இயைத்துக்கொண்டு பொருள் கொள்க; தீயகருத்து நற்கருத்துக்களை ஆராய்ந்து துணிந்து என்பது கருத்து.

[98] தீய கருத்து முதலியவற்றை யுடையராகத் தன்னாலறியப்பட்ட பிற ரைப் பற்றிப் பிறரிடம் தெரிவிக்கத் தகாதவர் என்பது கருத்து.

[99] அவ்வாறுள்ள தமரைத் தமரிடம் தெரிவித்தலாகா தென்பது.

மிருந்து தமரும், தமரிடமிருந்து பிறரும், [100] தமரிடமிருந்தும் பிறரிடமிருந்தும் தானும் எப்பொழுதும் அறிஞனுற் புரத்தற் குரியர்.

ஒன்பதாம் அதிகரணம் 6, 7-ஆம் பிரகரணங்கள்
'பின்னர் நிகழும் கொடுஞ்செயல்களை யாராய்தல்' 'அகப்புறப் பகுதிகளின் சினமடக்கல்' என்னும்
நூற்றிருபத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

[100] பிறரைப் பற்றியும் தமரைப் பற்றியும் தனக்குள்ள கருத்து அநுகூலமாயினும் மாறுபட்டதாயினும் அதைத் தமருக்கும் பிறருக்கும் ஒருபோதும் அறிவித்தலாகாதென்பது கருத்து.

எட்டாம் பிரகாணம்—[1] 'குறைவழிவூதியங்களின் ஆராய்ச்சி'

நூற்றிருபத்தைந்தாம் அத்தியாயம்

[2]ஊர்தி மக்கள் என்பவற்றின் குறைவு [3]குறைவாம். [4]பொன் கூலங்களின் குறைவு அழிவாம்.

[5]அவற்றைவிடப் பன்மடங்கு சிறந்த ஊதியங்கருதிச் செல்லுதல் வேண்டும்.

[6]ஏற்றற்குரியது, திரும்பப் பெறுதற்குரியது, மகிழ்விப்பது, கோபத்தைச் செய்வது, குறுகிய காலத்தது, சிறு குறைவுள்ளது, சிறு அழிவுள்ளது, பெரியது, மிகு தோற்றமுள்ளது, தீங்கற்றது, அறத்தின்பாற்பட்டது, முன் செல்வது என்னுமிவை [7] ஊதியத்தின் நிறைவாம்.

125-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] போர் குறித்துச் செல்லும் அரசன் அதனால் தன் ஊர்திகளுக்கும் போர்வீரர்களுக்கும் நேருங் குறையையும் தானியம் பொன் முதலிய பொருட் செலவையும், அப் போர்ச்செலவால் ஏற்படும் ஊதியத்தையும் சீர் தூக்கி அவற்றின் வன்மை மென்மைகளை யாராய்தல் வேண்டும் என்பதைக் கூறுவது இப்பிரகரணமாகும். அழிவு—பொருட்செலவு. போர்ச் செலவைக் காரணமாகக்கொண்டு வெளியிலும் உள்ளும் உளவாம் கோபங்களை முன்னர்க் கூறினர். குறைவழிவுகளும் அவ்வெகுளியைக் காரணமாகக்கொண்டனவாகலின் ஈண்டு இப்பிரகரணம் வைக்கப்பட்டது. எனவே பிரகரணவியைபு புலனும்.

[2] ஊர்தி—வாகனங்கள். மக்கள்—பணியாளர் முதலியோர்.

[3] குறைவு என்பதால் ஊர்தி முதலியவற்றின் குறைவைக் கொள்ளல் வேண்டும்.

[4] பொன் முதலிய பொருள், நெல் முதலிய தானியங்கள் என்னுமிவற்றின் குறைவு 'அழிவு' எனப்படும்.

[5] குறைவழிவுகளைவிட, அடுத்துவரும் பன்னிருவகைக் குணங்களுள் சிறந்த பல குணங்களால் நிறையப்பெற்ற மிகுந்த ஊதியம் கிடைக்கப் பெறின் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

[6] அக்குணங்களைப் பெயர்க் குறிப்பால் உணர்த்துகின்றார். இவற்றின் இயல்பு அடுத்துவரும் பகுதிகளாற் புலப்படும்.

[7] ஊதியத்தின் குணம் மேற்கூறியவாறு பன்னிரண்டு வகைப்படும் என்பது கருத்து.

[8]எளிதிற் கிடைத்தற்குரியதும், பிறர் திரும்பப் பெறுதற்கரியதுமானது ஏற்றற்குரியதாம்.

[9]மாறுபடின் திரும்பப் பெறுதற்குரியது. [10]அதைப் பெறுகிறவனும் அங்கேயே இருப்பவனும் அழிவை எய்துகிறான்.

[11]திரும்பப் பெறுதற்குரியதை எடுத்துக்கொண்டு பொருள், படை, குவியல், காவல் செய்தல் என்னுமிவற்றைக் குறையும்படி செய்வேன், [12]ஆகரம் மரக் காடு, யானைக் காடு, அணைக்கட்டு, வணிகர் வழி என்னுமிவற்றைப் பயன்களைக் கவர்ந்து சாரமற்றனவாகச் செய்வேன், [13]இவனுடைய பகுதிகளைத் துன்புறுத்தல், [14]வாழச் செய்தல், [15]ஊதியத்தால் போற்றுதல் என்னு

---

[8] எளிதில் அடைதற்குரியதும், அடைந்தபின் எளிதில் காத்தற்குரியதும், பிற்காலத்தில் பகைவரால் திரும்பப் பெறுதற்கரியதுமானது, ஏற்றற்குரியது எனப்படும் என்பது கருத்து.

[9] எளிதிலடைதற்கும் புரத்தற்குமுரியதும் பகைவரால் திரும்பப் பெறுதற்குரியதுமாயிருப்பது ‘திரும்பப் பெறுதற்குரியது’ எனப்படும்.

[10] திரும்பப் பெறுதற்குரிய நிலம் முதலியவற்றைப் பற்றுகிறவனும், அங்கேயே இருந்து வாழ்பவனும் அழிவை எய்துவான் என்பது கருத்து.

[11] திரும்பப் பெறுதற்குரியதையும் சில காரணம்பற்றி ஏற்றல் வேண்டும் எனக் கூறுகின்றார். திரும்பப் பெறுதற்குரிய நில முதலியவற்றையடைந்ததும், அவற்றாற் கிடைக்கும் ஊதியமழிதலால் பகைவனுடைய பொருள், படை, நெல் முதலிய தானியக்குவியல், அரண் மதில் முதலியவற்றைக் காத்தற்குரிய செயல்கள் என்னுமிவற்றைக் குறைவுபட்டதாகச் செய்வேன் என்பது. இத்தொடரை ‘என்று கருதப்படின்’ என இறுதியில் வரும் பகுதியுடன் இயைத்துப் பொருள் கொள்க. பின்வரும் பகுதிகளுக்கும் இஃதொக்கும்.

[12] ஆகரம் முதலியவற்றிலுள்ள சிறந்த பொருள்களைக் கவர்தலால் அவற்றைக் குறையும்படி செய்வேன் என்பது.

[13] என்னால் ஆகரம் முதலியவை கவரப்பட்டபடியால், அவற்றைக் கொண்டு வாழ்பவரும் பகைவனைச் சார்ந்தவருமான அமைச்சர் முதலிய பகுதிகளுக்கு, உயிர்வாழ்தற்குக் காரணமாயுள்ளவற்றை யழித்துத் துன்பத்தை யுண்டாக்குவேன் என்பது கருத்து.

[14] என்னாலடையப்பட்ட நிலத்திலேயே அதன் பயனை நுகர்தற்பொருட்டுப் பகைவனுடைய மக்களை யழைத்துவந்து வசிக்கச்செய்வேன் என்பது.

[15] அதனாற் கிடைக்கப்பெறும் எல்லாப் பொருள்களையும் அநுபவித்தற்கு அநுமதித்தலால் அம் மக்களை மகிழ்விப்பேன் என்பது.

மிவற்றைச் செய்வேன், [16]அவற்றைப் பகைவன் மாற்றச் செயலால் வெகுளச் செய்வான், [17]இவனுடைய எதிர்ப்பக்கத்தில் இவனை விலைப் பண்டமாகச் செய்வேன், [18]தடைப் பட்டவன் நண்பன் என்பவர்களை இவனது இடத்தில் நிலைப்படுத்துவேன், [19]இங்கிருந்துகொண்டு என்னுடையதும் நண்பனுடையதுமான நாட்டுக்குக் கள்வர் பகைவர் என்போரால் உண்டாம் துன்பத்தை யகற்றுவேன், [20]இவனுடைய நண்பன், சார்பாகவுள்ளவன் என்பவர்களை மாறுபாடடையச் செய்வேன், [21]பகைவனிடம் வெறுப்புண்ட அவன், அவன் குடியிற் பிறந்தவனை யடைவான், இன்றேல் [22]பெருமைப் படுத்தி இவனுக்கு நிலத்தைக் கொடுப்பேன், [23]இம் முறையால் சந்தியடைந்து, கூடி யியங்கும் பலநாள் நண்பனாக ஆவான் [24]என்று கருதுங்கால் திரும்பப் பெறுதற்குரிய ஊதியத்

---

[16] என்னால் கவரப்பட்ட நிலத்தைப் பகைவன் திரும்பப் பெற்றபின், என்னால் செய்யப்பட்ட அருளுதல் முதலியவற்றிற்கு மாறான செயலை ஏற்று அதன் காரணமாகத் தன் தீங்குக்குக் காரணமான மக்கட் கோபத்தை உண்டுபண்ணுவான் என்பது கருத்து.

[17] பகைவனுக்கு எதிர்ப்பக்கத்தவனிடம் என்னாற் பற்றப்பட்ட ஊதியத்தாற் குறைவுற்ற நில முதலியவற்றை விலைக்குக் கொடுப்பேன் என்பது.

[18] ஊதியத்தைப் பற்றியபடியால் குறைவெய்திய அந்த நிலத்தில் என் நண்பனையாதல், தடைப்பட்ட புதல்வன் முதலியவர்களையாதல் நிலைநிறுத்துவேன் என்பது கருத்து.

[19] புதிதாகக் கவர்ந்து அடையப்பட்ட நிலத்திலிருந்து கொண்டு நான், என் நண்பன் நாட்டிற்கும் என் நாட்டிற்கும் கள்வர் பகைவர்களால் உண்டாம் துன்பத்திற்கு மாற்றம் புரிதற்கு வல்லவனாவேன் என்பது கருத்து.

[20] பகைவனுடைய நண்பன் பகைவனுக்குச் சார்பாயுள்ள மத்தியமன் என்னுமிவர்களிடம், பகைவன், உரிய உல்குபொருளை யேற்றல் முதலிய குணமற்றவன் என்பதையும் குடிமக்களைத் துன்புறுத்துபவன் என்பதையும், கவரப்பட்ட இடத்திலிருந்துகொண்டு அறிவுறுத்துவேன் என்பது.

[21] அவ்வாறு அறிவுறுத்தப்பட்ட அந்நண்பன் பகைவனிடம் வெறுப்புடையவனாகிப் பகைவனுடைய குடியிற் பிறந்தவன் அல்லது தடைப்பட்ட புதல்வன் முதலியவர் என்னுமிவர்களைப் பகைவனது அரசை ஏற்பவர்களாகச் செய்தற்கு அடைவான் என்பது.

[22] பகைவனிடமிருந்து கவரப்பட்ட நிலத்தையே, சன்னிதானம் முதலிய பெருமைப்படுத்தல் மூலம் பகைவனுக்குக் கொடுப்பேன் என்பது.

[23] பெருமைப்படுத்தி நிலத்தைத் திருப்பிக்கொடுத்தல் என்ற இம்முறையால் என்னுடன் சந்தியைச் செய்துகொண்டு, என்னுடன் கூடித் தொழில் புரிந்து நெடுநாள் நிலைப்படக் கூடிய நண்பனாக ஆவான் என்பது.

[24] மேற்கூறிய காரணங்களுள்வழி திரும்பப் பெறுதற்குரிய ஊதியத்தையும் அடைதல் வேண்டும் என்பது கருத்து.

தையும் ஏற்றல் வேண்டும். [25]ஏற்றற்குரியது, திரும்பிப் பெறுதற்குரியது என்பன இங்ஙனம் கூறியவாறும்.

[26]மறவோனிடமிருந்து அறவோனல் பெறப்படும் ஊதியம், தமருக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியைச் செய்வதாம். [27]மாறுபட்டது, கோபத்தைச் செய்வதாம் என்க. [28]மந்திரிகளின் சொல்லால் அடையப் பெறுத ஊதியம் 'இவன் நம்மால் குறை வழிவுகளை ஏற்ருன்' என்று கோபத்தைச் செய்வதாம். தூஷ்யரான மந்திரிகளின் [29]வெறுப்பினல் அடையப்பெறும் ஊதியம் 'பயனை யெய்திய இவன் நம்மை யழிப்பான்' என்று [30]கோபத்தைச் செய்வதாம். [31]மாறுபட்டது மகிழ்ச்சியைச் செய்வதாம். மகிழ்ச்சியைச் செய்வது கோபத்தைச் செய்வது என்பன [32]இங்ஙனம் கூறியவாறும்.

---

25 ஏற்றற்குரியதும் திரும்பிப் பெறுதற்குரியதுமான ஊதியங்கள் பாவாபாவ (ஹாவாஹாவ) உருவமானவை பற்றி ஒன்றுசேர்ந்து விளக்கப் பட்டன என்ப.

26 அறவோனல்லாத மறவோனிடமிருந்து அறவோனல் அடையப்படும் ஊதியம் அறவோன் பக்கத்தவருக்கும் மறவோன் பக்கத்தவருக்கும் ஒப்ப மகிழ்ச்சியை உண்டுபண்ணுமாகலின் அவ்வூதியம் 'மகிழ்விப்பது' எனப் படும் என்பது.

27 அறவோனிடமிருந்து மறவோனல் அடையப்படும் ஊதியம் இரு பக்கத்தவருக்கும் வெறுப்பை யுண்டுபண்ணுமாகலின், அது 'கோபத்தைச் செய்வது' எனப்படும் என்பது கருத்து.

28 கோபத்தைச் செய்வது என்பதன் ஏனையிருவகைகளைக் கூறுகின்ருர். மந்திரிகளின் கருத்தை யநுசரித்து ஏதேனுமொரு ஊதியத்தைக் குறித்து முயற்சி செய்தும், அடையப்பெறுத அவ்வூதியம் தலைவனுக்கு வெறுப்பை யுண்டுபண்ணுவதாம் என்பதும், 'இத்தலைவன் பயனின்றி நம்மால் குறை வழிவுகளை ஏற்க நேர்ந்தது' என்று மந்திரிகளுக்கு அச்சத்தை யுண்டு பண்ணுவதுமாம் என்பது கருத்து.

29 வெறுப்பு—ஆதரவின்மை.

30 கோபம்—ஈண்டு அச்சம்.

31 மந்திரிகளின் ஆலோசனையால் அடையப்பெறும் ஊதியமும், தூஷ்ய மந்திரிகளின் அவமதிப்பால் அடையப்பெறுத ஊதியமும் மகிழ்ச்சியைச் செய்வனவாம் என்பது கருத்து.

32 முற்கூறியதுபோல் சேர்த்துக் கூறப்பட்டதற்குக் காரணத்தை யறிக. (25-ஆம் குறிப்பைக் காண்க).

[33]சென்ற அளவிலே விளைவது குறுகிய காலத்ததாம்.

[34]ஆலோசனையால் விளைவது சிறு குறைவுள்ளதாம்.

[35]உணவினால் மட்டும் அழிவுள்ளது சிறு அழிவுள்ளதாம்.

[36]அக்காலத்து விரிவுள்ளது பெரியதாம்.

[37]பயன் தொடர்புள்ளது மிகுதோற்றமுள்ளதாம்.

[38]இடரில்லது தீங்கற்றதாம்.

[39]சிறப்புற ஏற்பது அறத்தின்பாற் பட்டதாம்.

[40]கூடித் தொழில் புரிபவரிடமிருந்து எளிதில் அடையப் பட்டது முன் செல்வதாம்.

---

33 இனி ஊதியத்தையடைய விரும்புதற்குக் காரணமாயுள்ள 'குறுகிய காலமுடைமை' முதலிய குணங்களைக் கூறுகின்றார். அற்பகாலத்திய செயலாற் கிடைக்கப்பெறும் ஊதியம் 'குறுகிய காலத்தது' எனப்படும்.

34 வேறுபடுத்தலைச் சிறப்பாகக்கொண்டது சிறிய போரைக் கொண்டதுபற்றி ஊர்தி பணியாளர்களின் குறைந்த அழிவால் எய்தப்படுதலின் 'சிறு குறைவுள்ளது' என்னும் பெயர்த்தாம்.

35 பொருளை விரும்பாது உணவுக்கொடையால் மட்டும் திருப்தியடையும் படைகளைக்கொண்டு எய்தப்பெறும் ஊதியம் 'சிறு அழிவுள்ளது' எனப்படும் என்பது.

36 கிடைக்கப் பெறும் காலத்திலேயே அதிகமாக இருப்பது, பெரியது எனப்படும்.

37 கிடைக்கப் பெறுங்காலத்தில் உள்ள பொருளைத் தொடர்ந்து பிற்காலத்திய பொருளைக் கொண்ட ஊதியம் 'மிகு தோற்றமுள்ளது' எனப்படும்.

38 பிற்காலத்தில் எவ்வகைத் தீங்குமற்ற ஊதியம் 'தீங்கற்றது' எனப் படும்.

39 வெளிப்போர் காரணமாக ஏற்கப்படும் ஊதியம் அறத்தினின்றும் வழுவாதது பற்றி 'அறத்தின் பாற்பட்டது' எனப்படும்.

40 கூடித் தொழில் புரிபவருள் ஒருவருக் கொருவர் சிறப்புக்கூறு வரையறையின்றிக் கிடைக்கப் பெறும் சிறந்த ஊதியம் 'முன் செல்வது' எனப்படும்.

[41]ஊதியம் சமமாயின், இடம் காலங்களும் [42]ஆற்றல் உபாயங்களும், [43]அன்பு வெறுப்புக்களும், [44]விரைவு விரைவின்மையும், [45]அணிமை சேய்மைகளும், [46]அக்காலத்தது தொடர்புள்ளது என்பனவும், [47]திண்மையானது எப்பொழுதும் உள்ளது என்பனவும், [48]மிகுதியானவை சிறப்புக் குணமுள்ளவை என்பனவும் ஆகிய இவற்றை ஆராய்ந்து அதிக குணத்துடன் கூடிய ஊதியத்தையேற்றல் வேண்டும்.

ஊதியத் தடைகள்:—[49]ஆசை, [50]கோபம், [51]ஆற்றலின்மை,

---

41 ஒத்த ஊதியங்கள் பலவற்றுள் சிறப்புற்றதொன்றை யேற்றற்குக் காரணங்களைக் கூறுகின்றார்; இடங்காலங்கள் முதலிய காரணங்களை யாராய்ந்து, எந்த ஊதியத்தில் பல குணங்களின் சம்பந்தம் காணப்படுமோ அதை ஏற்றல் வேண்டும் என்பது கருத்து; அவற்றுள் இடம் காலம் என்பவற்றுக்கு ஒரே பொருளில் குணச்சிறப்பை யுண்டுபண்ணுதற்குக் காரணமாம் தன்மை வெளிப்படையாம்.

42 மந்திரசக்தி முதலியவற்றுள் முன்னையதால் உண்டாவது பின்னையதால் உண்டாவதை விடச் சிறந்ததென்பது; இன்சொல் முதலிய உபாயங்களிலும் அங்ஙனமேயாம்.

43 பொன் ஊதியம் எல்லோருக்கும் விருப்பமானது பற்றி மிகச் சிறந்தது. மற்றையதன் ஊதியம் அவ்வாறின்றாம்.

44 விரைவில் விளைவது தாமதமாக விளைவதை விடச் சிறந்ததென்பது கருத்து.

45 தன்னாட்டிற்கு அணுக்கமாயுள்ள நிலம் சேய்மையிலுள்ள நிலத்தை விடச் சிறந்ததாகலின், அணிமை சேய்மைகள் சிறப்புக் காரணங்களாம்.

46 அக் காலத்தில் மட்டும் முடிவெய்தும் ஊதியத்தைவிடப் பிற்காலத் தொடர்புள்ளது சிறந்த தென்பது.

47 அரதனம் முதலியன திண்மையானவை, உப்பு முதலியன எப்பொழுதும் உள்ளன.

48 மிகுதி—எண்ணிக்கையாலும் பரிமாணத்தாலும் அதிகமாயிருத்தல்; எண்ணிக்கை முதலியவற்றால் குறையினும் பல சிறப்புக் குணமுள்ளவை என்பது. இவையும் சிறப்புக் காரணங்களாகலின் ஆராய்தற்குரியன.

49 ஆசை—மகளிர் விருப்பம்; இது ஊக்கத் தடை யாகலின் ஊதியத் தடையாம் என்ப.

50 ஆராயாது முயற்சித்தற்குக் காரணமாதல் பற்றி இது தடையாயிற்று.

51 பகைவர் நண்பர் முதலியோரிடத்தில் உரிய செயலை யேற்றற்குத் தடையாயிருப்பது என்ப.

[52]தயை, [53]வெட்கம், [54]பெருந் தன்மையின்மை, [55]கர்வம், [56]அன்புடைமை, [57]மறுமை விருப்பம், [58]வஞ்சித்தல், [59]மிகு உணவு, [60]எளிமை, [61]வெறுப்பு, [62]கைப்பற்றப்பட்டதை மதியாமை, [63]குற்றமுடைமை, [64]அவநம்பிக்கை, [65]அச்சம், [66]வெறுப்பின்மை, [67]குளிர் வெப்பம் மழை என்னுமிவற்றைப்

---

52 உயிர்கள் பல இறத்தல் கண்டு நடுங்கிப் போர் புரிதற்குத் தடையாயிருப்பது என்க.

53 குற்றமுள்ளவனுயிருப்பினும், அவன் சமாதானச் சொல்லை யேற்றவிடத்து, வெட்கம், அவனை எதிர்த்தற்குத் தடையாயுள்ள தென்க.

54 பெருந்தன்மை யின்மை—கொடியனாயிருத்தல். இது நம்பிக்கைத் துரோகம் முதலியவற்றில் ஈடுபடுத்துவதென்ப.

55 கர்வம்—'நான் சிறந்தவன்' என்ற தருக்கு. இது துணைவரைத் தடுப்பதாகலின், ஊதியப் பேற்றுக்குத் தடையாம்.

56 கையுறைப் பொருள் முதலியற்றைக் கொடுத்தல் காரணமாயுண்டாவது. இது வன்கண்ணர்பால் ஆற்றலற்று அடங்கி யொழுகுதற்குக் காரணமாயுள்ளது.

57 இது மறுமையில் நற்பயனை யடைதற்குத் தடையான பாபம் உண்டாம் என்ற அச்சத்தால், தீயிடல், அழித்தல் முதலிய செயல்களில் வெறுப்புற்றிருத்தற்குக் காரணமாம்.

58 நம்பிக்கையடைந்தவனை வஞ்சித்தல் என்க.

59 முறையாக வந்ததைவிட அதிகமான ஊதியத்தை யநுபவித்தல் என்பது.

60 எளிமை—தாழ்ந்தவரை உதவிகுறித்து வேண்டல்.

61 வெளிப்படையாகக் கண்ட நற்குணங்களைக் கொண்ட மந்திரி முதலியவரிடம் குற்றஞ் சார்த்தல் என்பது.

62 கைப்பற்றப்பட்ட பொருளைப் பொருட்படுத்தாமை.

63 குற்றமுடைமை—துன்புறுத்தற்குரியவர், துன்புறுத்தற்குரியரல்லாதவர் என்பவர்களுக்குப் பொதுவாகத் துன்பத்தைச் செய்தல்.

64 நம்புதற்குரியவனையும் நம்பாதிருத்தல்.

65 எதிர்ப்பதால் தோல்வி வரும் என்ற அச்சம்.

66 வெறுப்பின்மை—பகைவனை அவமதியாமை ; ஈண்டு 'அநிகார:' என்று முதனூல் கூறும். 'அவநீகார:' என்ற பாடபேதத்தைக் கொண்டு 'பயன் விளைவுக்கு முன்னர் வந்தெய்திய இடையூறுகளுக்கு மாற்றம் புரியாமை' என்று கூறுவாருமுளர்.

67 குளிர் முதலியவற்றைப் பொருட்படுத்தாமை.

பொருதிருத்தல், [68]நல்ல திதி நாள் மீன் என்பவற்றில் விருப்பம் என்பனவாம்.

சுலோகங்கள்

(1) [69]நன்னுளை விரும்பிக் கேட்கும் சிறுவனைப் பயன் கடந்து செல்கிறது. பொருளன்றோ பயனுக்கு [70]நன்னுள்! நாள் [71]எது செய்யும்?

(2) [72]பொருளற்ற மக்கள் நூற்றுக்கணக்கான [73]முயற்சியாலும் பயனை எய்தார். [74]பழகிய யானைகளால் யானைகள் (பிணிப்புண்ணுதல்) போன்று பொருளாற் பயன்கள் யாக்கப் படுகின்றன.

ஒன்பதாம் அதிகரணம் எட்டாம் பிரகரணம்
'குறைவழிவூதியங்களின் ஆராய்ச்சி' என்னும்
நூற்றிருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[68] செயல்களைத் தொடங்குதற்கு அநுகூலமான நல்ல திதி நட்சத்திரங்களை எதிர்பார்த்திருத்தல். ஈண்டுக் கர்வம் முதலியவற்றிற்கு ஊதியத் தடையாயிருக்கும் தன்மை, 'துணையைத் தடை செய்தல்' 'முயற்சியைத் தடை செய்தல்' முதலியவற்ருல் தகுதிக் கேற்ற முறையில் உய்த்துணரத் தக்கது.

[69] கூறப்பட்ட இருபதுவகைத் தடைகளுள் இறுதியிலுள்ளது கடந்து போன காரியத்தைப் பற்றியதாம் என்பதைக் கூறுகின்ருர். வீட்டின் கூரையில் தீப் பற்றியபோது அத் தீயைத் தணித்தல் போன்று உடனே செய்தற்குரிய செயல்களுக்கும், நாள் முதலியன செயற்ருெடக்கத்திற்கு ஏற்றனவா ஏலாதனவா என்று வினவும் அறிவிலியைச் செயற்பயன் கடந்து செல்லும் என்பது கருத்து.

[70] நன்னுள் என்பது இலக்கணையால், காரியம் நிறைவேறுதற்குரிய சாதனத்தைக் குறிக்கும்.

[71] சாதனமாகாதென்பது கருத்து.

[72] ஊதியத்திற்குச் சாதனங்களாயுள்ளவற்றுள் பொருள் தலையாயது என்பதைப் புலப்படுத்துகின்ருர். பொருளாகிற சாதனமற்ற மக்கள் என்பது.

[73] முயற்சி—செய்யப்பட்ட முயற்சி.

[74] பொருளின்றேல் பயனின்ரும் என எதிர்மறுத்துக் காட்டி, பொருளிருப்பின் பயனுண்டாம் என உடன்பட்டு மொழிகின்ருர்; சாதனங்களாயுள்ள யானைகளால் மற்ற யானைகள் வயமாதல் போன்று, பொருளால் செயற்பயன்கள் வயமாகின்றன என்பது கருத்து.

ஒன்பதாம் அதிகரணம்—போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்

ஒன்பதாம் பிரகரணம்—[1]அகப்புற இடர்கள்

நூற்றிருபத்தாரும் அத்தியாயம்

[2]சந்தி முதலியவற்றைத் தகாமுறையில் ஏற்றல் அபநயம் (எனப்படும்). [3]அதனால் இடர்கள் உண்டாகின்றன.

[4]உள்ளிருப்பவனை வேறுபடுத்தப் படுபவனாகக் கொண்ட வெளியிலிருப்பவனிடமிருந்து உண்டானது, [5]வெளியிலிருப்பவனை வேறுபடுத்தப்படுபவனாகக் கொண்ட உள்ளிருப்பவனிடமிருந்து உண்டானது, [6]வெளியிலிருப்பவனை வேறுபடுத்தப் படுபவனாகக் கொண்ட வெளியிலிருப்பவனிடமிருந்துண்டானது,

---

126-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] அக இடர், புற இடர் என விரியும். இடர்—ஆபத்து. அக இடர், அமைச்சர் புரோகிதர் முதலியோரால் விளைவது. புறஇடர், எல்லை காவலர் முதலியோரால் விளைவது. அவற்றின் இயல்புகளையும் அவற்றைக் களைதலையுங் கூறுவது இப்பிரகரணமாகும்.

[2] இடர்களின் காரணத்தைக் கூறுகின்றார். சந்தி முதலிய அறு குணங்களை அவ்வவற்றிற்குரிய பொருளிலன்றி வேறு பொருள்களிலும் செலுத்தல் ‘ அபநயம் ’ என்ற சொல்லால் உணர்த்தப்படும்.

[3] அதனால்—அபநயத்தினால்.

[4] வேறுபடுத்துபவர் வேறுபடுத்தப் படுபவர்களின் வேற்றுமை காரணமாக அகப்புற இடர்கள் ஒவ்வொன்றும் இருவகைப்படும் என்பதையுணர்த்து முகமாக அவ்விடர்கள் நால்வகைப்படும் எனக் கூறுகின்றார். அரசயற்றலைவன் முதலிய வெளியிலிருப்பவன் வேறுபடுத்துபவனாக, அவனிடமிருந்துண்டானதும், மந்திரி முதலிய உள்ளிருப்பவர் அவ்வேறுபடுத்தலை ஏற்பவராக அவர்களை வேறுபடுத்தப்படுபவராகக் கொண்டதுமான இடர் ஒருவகை இடராம்.

[5] அரசியற்றலைவன் எல்லைகாவலன் முதலியவர்கள் வேறுபடுத்தப் படுபவராக மந்திரி முதலியவர்களால் உண்டான இடர் இரண்டாவதாம்.

[6] வெளியிலிருப்பவரே வேறுபடுத்தப்படுபவராக அவர்களிடமிருந்து உண்டானது மூன்றாவதாம்.

[7]உள்ளிருப்பவனை வேறுபடுத்தப்படுபவனுகக் கொண்ட உள்ளிருப்பவனிடமிருந்து உண்டானது என்னுமிவை இடர்களாம்.

[8]வெளியிலிருப்பவர்கள் உள்ளிருப்பவர்களை வேறுபடுத்துமிடத்தும், உள்ளிருப்பவர்கள் வெளியிலிருப்பவர்களை வேறுபடுத்துமிடத்தும் இருவரின் தொடர்பில் [9]வேறுபடுத்தப் படுபவனைப்பற்றிய விளைவு மிக்கதாம். [10]என்னை ? வேறுபடுத்தப்படுபவர் தலைக்கீட்டை எளிதிற் பெறுவர். [11]வேறுபடுத்துபவர் அவ்வாறிலர். [12]அவர்கள் தணிந்த பின் வேறுபடுத்துபவர் மற்றவரை வேறுபடுத்தற்கியலாதவராவர். [13]வெளியிலிருப்பவர் உள்ளிருப்ப

---

[7] மந்திரி முதலிய உள்ளிருப்பவர் வேறுபடுத்தப்படுபவராக அவர்களிடமிருந்து உண்டான இடர் நான்காவதாகும். இங்ஙனம் இருவகைப்பட்ட வேறுபடுத்தப்படுகிறவர் வேறுபடுத்துபவர்களையுடைய இடர்கள் இரண்டு, ஒருவகைப்பட்ட அவர்களையுடைய இடர்கள் இரண்டு எனவே இடர்கள் நால்வகைப்படும் என்பது கருத்து.

[8] அவ்விடர்களுள் இருவகையினரின் தொடர்புள்ள முன்னைய இரண்டு இடர்களைப் பரிகரித்தற்கு, வேறுபடுத்துபவனைச் சமாதானம் செய்வதைக் காட்டிலும், வேறுபடுத்தப்படுபவனைச் சமாதானஞ் செய்தலே சிறந்தது எனக்கூறுகின்றூர்.

[9] வேறுபடுத்துபவனை இன்சொல், கொடை முதலியவற்றுல் சமாதானஞ் செய்தல் மிக்கதென்பது கருத்து.

[10] மிகுதற்குரிய காரணத்தைக் கூறுகின்றூர். வேறுபடுத்துபவரால் செய்யப்படும் வேறுபடுத்தலை, வேறுபடுத்தப்படுபவர் ஏற்றற்குக் காரணம், எளிதிற் பெறுதற்குரியனவும் மிக அதிகமாயுள்ளனவுமாகிய பொருளைப் பெறுதலேயாம்.

[11] இன்னதென்று அறிய வியலாத வேறுபடுத்தற் காரணத்தை யுடையவர் என்பது.

[12] வேறுபடுத்தப்படுபவரை ஒவ்வொருவராகச் சமாதானம் செய்யினும் புதிய புதிய ஒவ்வொருவர் உண்டாகக் கூடுமாகலின் சமாதானப்படுத்தற்குரியவருக்கு முடிவின்மை ஏற்படும் என்ற ஐயத்திற்கு மாற்றங் கூறுகின்றூர் ; வேறுபடுத்தப்பட்ட சிலர் சமாதானப்படுத்தப்பட்டபின் வேறுபடுத்தற்றெழில் வெளிப்பட்டு விடும் என்ற அச்சங் காரணமாக, வேறுபடுத்துபவர் வேறுபடுத்தற்கியலாதவராகத் தாமே தணிந்து விடுவர் என்பது கருத்து.

[13] ஒரேவிடத்தில் இல்லாதவராகலின் வெளியிலுள்ளவர் உள்ளிருப்பவரையும் உள்ளிருப்பவர் வெளியிலிருப்பவரையும் வேறுபடுத்தல் முடியாதென்ற கருத்துடன் கூறுகின்றூர்.

வரையும் அவர் மற்றவரையும் முயன்று வேறுபடுத்தற்குரியராவர். [14]பெருமுயற்சியினழிவு, பிறருக்குப் பொருட் டொடர்பு, தனக்கு மற்றையது என்க.

[15]உள்ளிருப்பவர் வேறுபடுத்தப்பட்டவிடத்து, இன்சொல் கொடை என்பவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். [16]பதவி பெருமைப்படுத்தல் என்பவற்றின் செயல், இன்சொல்லாம். [17]அருளுதல், [18]விடுத்தல், [19]செயலில் ஈடுபடுத்தல் என்பன கொடையாம்.

[20]வெளியிலுள்ளவர்கள் வேறுபடுத்தப்படின், வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். [21]சத்திரிக

---

14 வேறுபடுத்தப்படுபவர் வேறுபடுத்தலை ஏற்காதபோதும் வேறுபடுத்தலை வெளிப்படுத்திய போதும் வேறுபடுத்துபவனுடைய வேறுபடுத்தற்றொழில் குறித்த பெருமுயற்சி பயனற்றதாகும். வேறுபடுத்தற்குரியவருக்குத் தலைவன் அருள் என்ற பயனின் தொடர்பும், வேறுபடுத்துபவனுக்குத் தலைவன்கோபம் என்ற தீங்கின் தொடர்பும் உண்டாவனவாம் எனக் கூறுகின்றார்.

15 வேறுபடுத்தப்பட்டவரைத் தணித்தற்குரிய உபாயங்களைக் கூறுகின்றார்; மந்திரி முதலியவர் வெளியிலுள்ளவராற் செய்யப்பட்ட வேறுபடுத்தலை யேற்பராயின், அவரிடம் இன்சொல் கொடை என்ற இரண்டு உபாயங்களைச் செய்து அவர்களைத் தணித்தல் வேண்டும் என்பது கருத்து.

16 அவற்றுள் இன்சொல் முறையைக் கூறுகின்றார்; பதவியின் செயல்-சிறந்ததொரு அதிகாரத்தில் நியமித்தல். குடம் சாமரம் முதலியவற்றைக் கொடுத்தல் பெருமைப்படுத்தலின் செயல் என்ப. இன்சொல்லைச் ‘சாந்துவம்’ என்று முதனூல் கூறும்.

17 கொடையைப் பற்றிக் கூறுகின்றார். அருளுதல் - பொருளைக் கொடுத்தல்.

18 விடுத்தல்—வாங்கிக் கொள்ளுதற்குரியதை வாங்காது விடுத்தல்; உல்கு பொருளை விடுத்தல் எனினுமாம்.

19 சிறந்த தொழில்களில் கிடைக்கப் பெறும் எல்லாப் பயனையும் எடுத்துக் கொள்ள அநுமதித்தல் என்பது.

20 உள்ளிருக்கும் வேறுபடுத்தப்படுபவரைப் பற்றிய தணித்தற்குரிய உபாயத்தைக்கூறி, ஈண்டு வெளியிலிருக்கும் அவரைப் பற்றிக் கூறுகின்றார்; அரசியற்றலைவன் காட்டில் வாழ்வோர் முதலியவர் வேறுபடுத்தப்படின், வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்றைச் செய்து அவர்களைத் தணித்தல் வேண்டும் என்பது கருத்து.

21 அவற்றுள் வேறுபடுத்தல் முறையைக் கூறுகின்றார்,

ளாதல் [22]இவ்வெளியிலுள்ளவர்தம் [23]நண்பருருவினராதல் 'இவ்வரசன் [24]தூஷ்யரின் உருவினரால் உங்களை வஞ்சித்தற்கு விருப்பமுள்ளவன், [25]அறிவீர்' என்று [26]கபடத்தைக் கூறுதல் வேண்டும். [27]அல்லது தூஷ்யர்களிடம் ஏவப்பட்ட தூஷ்ய உருவினர் வெளியிலிருப்பவரால் தூஷ்யர்களையும், [28]தூஷ்யர்களால் வெளியிலிருப்பவர்களையும் வேறுபடுத்தச் செய்தல் வேண்டும். அல்லது [29]தூஷ்யர்களுடன் [30]உட்புகுந்த தீக்ஷ்ணர்கள் படைக்கலம் நஞ்சு என்பவற்றால் கொல்லுதல் வேண்டும். [31]வெளியிலுள்ளவர்களை யழைத்தும் கொல்லலாம் என்க.

---

[22] இவ் வெளியிலுள்ளவர்—வேறுபடுத்தப்படுபவர்.

[23] நண்பராக நடிப்பவர் என்பது.

[24] அரசனுக்கு அன்பராயினும் அன்பற்றவரின் வேடமுள்ள மந்திரி முதலிய உள்ளிருப்பவரும், வேறுபடுத்தும் செயலை ஏற்கச் செய்யப்பட்டவருமான இவரால் என்க.

[25] இந்த ரகசியத்தை யறிந்து வேறுபடுத்தப்பட்டவர் செய்யும் செயலில் ஈடுபடாதிருங்கள் என்பது.

[26] கபடம்—அரசனது வஞ்சகச் செயல்.

[27] நண்பர் உருவை யேற்று வேறுபடுத்தலைக் கூறி, இனித் தூஷ்யர் உருவை யேற்று வேறுபடுத்து முறையைக் கூறுகின்றார். அரசனுக்கு விருப்பமில்லாத மந்திரி முதலிய உள்ளிருப்பவரும், அரசியற்றலைவன் முதலிய வெளியிலிருப்பவரும் வேறுபடுத்தப்பட்டிருப்பின், அவர்கள் விஷயத்தில் அரசனுக்குப் பிரியமில்லாதவர் உருவுடன் ஏவப்பட்ட ஒற்றர்கள், தூஷ்யர்களாயும் உள்ளிருப்பவராயுமுள்ள வேறுபடுத்தப்பட்டவர்களை, வெளியிலுள்ள வேறுபடுத்துபவரைக் கருவியாகக் கொண்டு, 'உங்களை வேறுபடுத்துமிவர்கள் அரசனால் ஏவப்பட்டவர்' என்ற வஞ்சக வார்த்தையினால் அவர்கள் வேறுபடுத்தப்பட்டவரின் தொழிலை ஏற்காமல் தடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[28] தூஷ்யர்களாகவும் உள்ளிருப்பவராகவுமுள்ள வேறுபடுத்துபவரைக் கருவியாகக் கொண்டு, வேறுபடுத்தப்பட்ட வெளியிலுள்ளவர்களிடம் முற்கூறியவாறு வஞ்சக வார்த்தையால் அவர்கள் வேறுபடுத்தப்பட்டவரின் செயலை ஏற்காவாறு தடுத்தல் வேண்டும் என்பது.

[29] ஒறுத்தலை யேற்கும் முறையைக் கூறுகின்றார்.

[30] ஏதேனும் ஒரு காரியத்தைத் தலைக்கீடாகக்கொண்டு அவர்களுடன் ஒன்றுசேர்ந்த தீக்ஷ்ணர்கள் என்க.

[31] நீங்கள் செய்யவேண்டிய தொழிலுக்குச் சார்பானதைச் செய்கிறேன் என்ற வார்த்தையால் நம்பிக்கையுறச் செய்தும் வெளியிலுள்ள வேறுபடுத்தப்பட்டவரைக் கொல்லலாம் என்பது கருத்து.

[32]எங்கு வெளியிலுள்ளவர் வெளியிலுள்ளவரையும், உள்ளிருப்பவர் உள்ளிருப்பவரையும் வேறுபடுத்துகின்றனரோ அங்கு [33]ஒருதலைத் தொடர்பில் [34]வேறுபடுத்துபவனைப் பற்றிய வினைவு மிக்கதாகும். [35]குற்றங் களைதலால் குற்றமுள்ளவர் இலராவர். [36]குற்றமுள்ளவர் களையப்படின் குற்றம் மீண்டும் மற்றவரைக் கெடுக்கிறது.

[37]ஆகலின் வெளியிலுள்ளவர், வேறுபடுத்துங்கால் வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்றைப் [38]பயன்படுத்தல் வேண்டும். [39]' இவ்வரசன், [40]தானே உங்களை ஏற்க விருப்பமுள்ளவன். இவ்வரசனுடன் விக்கிரகத்தை யடைந்தவராவீர், [41]விழிப்புடனிருங்கள் ' என்று நண்பருருவிலரான சத்திரிகள் [42]கூறுதல் வேண்

---

[32] இரு சாராரின் தொடர்பால் உண்டாய இருவகை இடர்களுக்குப் பரிகாரத்தைக் கூறி முடித்து, இனி ஒரு சாராராலுண்டாம் மற்ற இருவகை இடர்களுக்கு மாற்றங் கூறுகின்றார்.

[33] ஒரு சாராரால் உண்டாவது பற்றி என்பது.

[34] வேறுபடுத்துபவனைச் சமாதானஞ்செய்தல் சிறந்தது என்பது கருத்து.

[35] அதற்குக் காரணத்தை விளக்கிக் கூறுகிறார். குற்றம்—ஈண்டு வேறுபடுத்தல். வேறுபடுத்துபவனைத் தண்டித்து அடக்குதலால் அக்குற்றம் தடைப்பட்டவிடத்து வேறுபடுத்தப்பட்டவர் உளராகார். வேறுபடுத்தலாலன்றோ வேறுபடுத்தப்படுபவர் உண்டாகின்றனர். வேறுபடுத்தலின்றேல் அவர் எவ்வாறுளராவார் என்பது கருத்து.

[36] வேறுபடுத்தலாற் கெடுக்கப்பட்ட புத்தியை யுடையவர்களைச் சமாதானஞ் செய்தால் வேறுபடுத்தல் மற்றவரைக் கெடுக்கும். அதாவது வேறுபடுத்துபவர் தணியவில்லை யாகலின் புதிய புதிய தூஷ்யர்களை வேறுபடுத்தல் முகமாக உண்டாக்குவார்கள் என்பது கருத்து.

[37] ஆகலின்—வேறுபடுத்துபவரே களைதற்குரிய ராகலின்.

[38] இவ்விரு உபாயங்களையும் செய்தலால் வேறுபடுத்தலைத் தவிர்த்தல் வேண்டும் என்பது கருத்து.

[39] வேறுபடுத்தலை மேற்கொள்ளும் முறையைக் கூறுகின்றார்.

[40] 'வேறுபடுத்தப்பட்டவர் மூலமாக' என்பதை முன்னர்க் கூட்டிப் பொருள் கொள்க.

[41] ஒருவரையும் நம்பி வேறுபடுத்த முயலாதீர் என்பது கருத்து.

[42] வேறுபடுத்துபவரிடம் கூறுதல் வேண்டும் என்க.

டும். [43]வேறுபடுத்தப்படுபவனிடமிருந்து வேறுபடுத்துபவனைக் குறித்துச் செல்லும் தூதர், படைகளின் உட்புகுந்து அவர்களின் அற்றமுணர்ந்து தீக்ஷ்ணர்கள் படைக்கலம் நஞ்சு என்பவற்றால் தாக்குதல் வேண்டும். [44]பின்னர் சத்திரிகள் வேறுபடுத்தப் படுபவனை வெளிப்படுத்திக் கூறுதல் வேண்டும்.

[45]உள்ளிருப்பவர்களை உள்ளிருப்பவர் வேறுபடுத்துங்கால் தகுதிக்கேற்ற உபாயத்தைச் செய்தல் வேண்டும். [46]இனியது போன்று இன்னாதது, அல்லது இன்னாதது போன்று இனியது என்ற இந்த இன்சொல்லைப் பயன்படுத்தல் வேண்டும்.

[47] தூய்மை ஆற்றல் என்பவற்றைத் தலைக்கீடாகக் கொண்டாவது [48] துன்பம் இன்பங்களைக் காரணமாகக் கொண்டாவது பெருமைப்படுத்தல் கொடை என்க.

---

43 ஒறுத்தலை ஏற்கு முறையைக் கூறுகின்றார். வேறுபடுத்தப்பட்டவனிடமிருந்து வேறுபடுத்துபவனிடம் அளவளாவுதற் பொருட்டுச் செல்லும் தூதர் முதலியவர்களுடன் ஒன்று சேர்ந்தவராகி, வேறுபடுத்துகிறவர்களை அற்றம் பார்த்து வாள் நஞ்சு முதலியவற்றால் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

44 வேறுபடுத்துபவனைக் கொன்ற பின்னர் 'வேறுபடுத்துபவனைக் கொல்லச் செய்தவன் இவனே' என்று வேறுபடுத்தப்பட்டவன்மேல் பொய்யாகக் குற்றஞ் சார்த்தல் வேண்டும் என்பது; இங்ஙனஞ் செய்தல் வேறுபடுத்த விருப்பமுள்ளவனுக்கு வேறுபடுத்தப்படுபவரிடம் நம்பிக்கையில்லாதிருத்தற் பொருட்டென்க.

45 வெளியிலுள்ளவர் வேறுபடுத்தலை யேற்றபோது, வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்றைச் செய்தல் வேண்டும் எனக்கூறி, இனி உள்ளிருப்பவர் வேறுபடுத்துங்கால் இன்சொல் முதலியவற்றைத் தகுதிக்கேற்பச் செய்தல் வேண்டுமெனக் கூறுகின்றார்.

46 இன்சொல்லை ஏற்கும் முறையினைக் கூறுகின்றார். அன்புடன் கூடியதுபோல் தோன்றுவதும் உண்மையில் அன்பற்றதும், அல்லது மாறுபட்டதுமான இன்சொல்லைச் சொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

47 கொடையை ஏற்கும் முறையைக் கூறுகின்றார்.

48 உறவினரின் பிரிவுகாரணமாயுண்டான துன்பநிலையையும், புதல்வர்ப் பேறு முதலிய இன்பநிகழ்ச்சி நிலையையும் எதிர்பார்த்து ஆடை அணிகலன்களால் பெருமைப்படுத்தல் முதலிய கொடையைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[49]அரசன் கருத்தை யறிதற் பொருட்டு உங்களை உபதையால் ஆராய்வான். ஆகலின் உங்கள் கருத்தை இவனிடம் கூறுங்கள் என்று இவர்களிடம் நண்பருருவினர் கூறுதல் வேண்டும். [50]இன்னின்னார் இங்ஙனம் அரசனிடம் [51]உங்களைக் குறித்து வேறுபடுத்துகிறார்கள் என்று [52]இவர்களை ஒருவரோடொருவரை வேறுபடுத்தல் வேண்டும். [53]வேறுபடுத்தல் இங்ஙனமாம்.

[54]மறைவினொறுத்தலிற் போல் தண்டமாம்.

[55]இந்த நால்வகை இடர்களுள் உள் நிகழ்வதையே முதலில் தணித்தல் வேண்டும். 'பாம்பின் அச்சம்போல் வெளியில் நிகழும் கோபத்தைவிட உள் நிகழும் கோபம் குற்றமுடைத்து' என்று முன்னர்க் கூறப்பட்டது.

சுலோகம்

[56]இடர்களுள் முன் முன்னுள்ள இடரை [57]மென்மையுள்ள

---

49 வேறுபடுத்தன் முறையைக் கூறுகின்றார். உங்களுடைய கருத்தை யறிய அரசன் உங்களைப் பொருள் முதலிய உபதையால் பரீக்ஷிக்கப் போகிறான். ஆகலின் உங்கள் கருத்து வெளிப்படுத்தத்தக்கது என்று கூறுதல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் கூறுதலின் கருத்து வேறுபடுத்தப் படுபவர் அச்சத்தால் வேறுபடுத்தலை ஏற்காதிருத்தல் வேண்டுமென்பதாம்.

50 மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

51 உங்களிடம் குற்றமிருப்பதாக அரசனிடம் அறிவிக்கிறார்கள் என்க.

52 இவர்கள்—உள்ளிருப்பவர்கள்.

53 இம்மாதிரி வேறுபடுத்தன் முறையைக் கையாளவேண்டும் என்பது கருத்து.

54 ஒறுத்தன் முறையைக் கூறுகின்றார். இதைப்பற்றிய விளக்கத்திற்கு 91-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

55 இங்ஙனம் விளக்கப்பட்ட நால்வகை இடர்களுள், உள்நிகழும் இடர் மிக முயன்று பரிகரித்தற்குரியதாகலானும், மிகுந்த துன்பத்துக்குக் காரணமாகலானும் அதனை முதலில் பரிகரித்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

56 'உள்ளிருப்பவனை வேறுபடுத்துபவனைக் கொண்ட......' முதலியனவாகக் கூறப்பட்ட (4-ஆம் குறிப்புக்குள்ள மூலப்பகுதியைக் காண்க). நால்வகை இடர்களுள் என்பது.

57 அந்தந்த இடர்க்குப் பின்னுள்ள இடரைவிட மென்மையுள்ளதாகவும் என்று பொருள் கூறுக. எனவே, முன்னைய முன்னைய இடரைக் குறித்துப் பின்னைய பின்னைய இடர்கள் வலியனவாம் என்பது பெறப்படும். இது பொதுவிதியாகும்.

தாகவும், [58]வலியவரிடமிருந்து உண்டானதை வலியதாகவும், [59]மாறுபடின் மென்மையுள்ளதாகவும் அறிதல் வேண்டும்.

ஒன்பதாம் அதிகரணம் ஒன்பதாம் பிரகரணம் 'அகப்புற இடர்கள்' என்னும் நூற்றிருபத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

[58] சிறப்புவிதியொன்று கூறுகின்றார். வேறுபடுத்துபவன் ஆற்றன் மிக்கானாயின், அவனால் உண்டான இடர் முன்னையதாயினும் ஆற்றலற்ற வேறுபடுத்துபவனால் உண்டான பின்னைய இடரைக்காட்டிலும் வன்மையுடையதாக அறிதல் வேண்டும் என்பது கருத்து.

[59] ஆற்றலற்ற வேறுபடுத்துபவரால் உண்டானது பின்னையதாயினும், அது வலியவனொரு வேறுபடுத்துபவனால் உண்டாக்கப்பட்ட முன்னையதை விட மென்மையுடையதாக அறிதல் வேண்டும் என்பது கருத்து.

பத்தாம் பிரகரணம்—[1]வெறுக்கத்தக்கவரும் பகைவரும் விளைக்குமிடர்கள்

நூற்றிருபத்தேழாம் அத்தியாயம்

[2]வெறுக்கத் தக்கவரிடமிருந்தும் பகைவரிடமிருந்தும் (உண்டாவது பற்றிக்) கலப்பற்றன இருவகையாம்.

[3]வெறுக்கத்தக்கவரிடமிருந்துண்டான கலப்பற்றதில், நகரத்திலுள்ளவர் நாட்டிலுள்ளவர்பால், ஒறுத்தல் தவிர ஏனைய [4]உபாயங்களைப் பயன்படுத்தல் வேண்டும். [5]என்னை? [6]பெருமக்களை ஒறுத்தல் [7]ஏற்றற்குரியதன்று. [8]ஏற்பினும் அப் பயனைச்

127-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வெறுக்கத்தக்கவர்—அரசற்கு இடர் விளைப்பவராய் நாட்டிலும் நகரிலும் உள்ளவர். பகைவர்—இயற்கைப் பகைவரும் செயற்கைப் பகைவரும் என இரு திறத்தர். ஈண்டு முன்னைய சூத்திரத்தையும் சேர்த்துக்கொண்டு, வெறுக்கத்தக்கவர், பகைவர் என்பவர்களிடமிருந்துண்டாய அகப்புற விடர்களும் அதன் பரிகாரங்களும் கூறப்படும் என்று பொருள் கொள்ளல் வேண்டும் என்ப.

[2] அவ்விடர்கள், கலப்பற்றவை கலப்புள்ளவை என இருவகைப்படும். அவற்றுள் கலப்பற்றவற்றைப் பிரித்துக் கூறுகின்றார். வெறுக்கத்தக்கவரால் மட்டும் உண்டுபண்ணப்பட்டது என்றும், பகைவரால் மட்டும் விளைக்கப்பட்டது என்றும் கலப்பற்றவை இருவகையாம் என்பது கருத்து.

[3] தூஷ்யரிடமிருந்துண்டாய கலப்பற்ற இடர்க்குப் பரிகாரங் கூறுகின்றார்.

[4] இன்சொல், கொடை, வேறுபடுத்தல் என்ற மூன்று உபாயங்களை என்பது.

[5] ஒறுத்தலை விடுதற்குக் காரணங் கூறுகின்றார்.

[6] பெருமக்கள்—நாட்டுமக்கள் நகரத்துமக்கள் என்பவரது குழு.

[7] அவர்களால் பகைமை மூளும் என்பது பற்றி என்க.

[8] ஒறுத்தலை யேற்றாலும் விரும்பிய பயன் அதனால் விளையாதென்பது.

செய்யாது. [9]வேறு தீங்கையும் விளைக்கும். [10]இவர்களுடைய தலைவரிடம் மறைவினைறுத்தலிற் போல் செயல் புரிதல்வேண்டும்.

[11]பகைவரிடமிருந்துண்டாய கலப்பற்றதில் பகைவன், தலைவன், அமைச்சர் என்னுமிவர்களுக்குச் சார்பானவரிடம் இன்சொல் முதலியவற்றால் பயனையடைய விரும்புதல் வேண்டும்.

[12]தலைவனால் உண்டானதற்கு மாற்றம் அரசனைச் சார்ந்தது. அமைச்சரால் உண்டானதற்கு மாற்றம் மந்திரிகளைச் சார்ந்தது. [13]தலைவன் அமைச்சர் என்பவர்களாலுண்டானதற்கு மாற்றம் [14]இருவரையுஞ் சார்ந்தது.

---

9 பயன் விளையாதுபோதல் மட்டுமின்றி, புதியதொரு தீங்கையும் விளைக்குமென்க.

10 இன்சொல் முதலியவற்றால் தணியாதபோது செயற்பாலதனைக் கூறுகின்றார். நாட்டிலும் நகரத்திலும் வாழும் மக்களை வேறுபடுத்தும் தலைவர்களை 'மறைவினைறுத்தல்' என்ற பிரகரணத்திற் கூறுமாறு களைதல் வேண்டும். இதனால் அவர்கள் தணிந்துவிடுவர் என்பது கருத்து.

11 பகைவரால் உண்டாய கலப்பற்றதற்குப் பரிகாரங் கூறுகின்றார். பகைவரால் மட்டும் விளைக்கப்பட்டது; நண்பர்களின் கலப்பற்றது என்பது. பகைவன் நேராக விளைத்தது, அவன் மந்திரி விளைத்தது, அவன் அமைச்சர் விளைத்தது, அவன் மந்திரி அமைச்சர் என்ற இருவர் விளைத்தது என அவ்விடர் நால்வகைப் பிரிவுள்ளதாம். பகைவன் எவனுக்கு வயப்பட்டவனோ, மந்திரி எவனுக்கு வயப்பட்டவனோ, அமைச்சர் முதலியவர் எவனுக்கு வயப்பட்டவரோ அவர்களை இன்சொல் முதலியவற்றால் தன் பாற்படுத்தி மேற்கூறிய நால்வகை இடர்களுக்கும் முறையே பரிகாரத்தைச் செய்ய விரும்புதல் வேண்டும் என்பது கருத்து.

12 தலைவன் எவனுக்கு வயப்பட்டவன், அமைச்சர் எவனுக்கு வயப்பட்டவர் என்பவற்றை விளக்குகின்றார்.

13 மந்திரியும் அமைச்சரும் ஒன்றுகூடி இடர்விளைப்பின், அதற்கு மாற்றம் என்பது.

14 இருவர்—அரசனும் மந்திரியும். பகைவன் நேராக இடர்விளைக்குமிடத்து அவன் எவனுக்கு வயப்பட்டவனோ, அவனை ஈண்டுக் கூறாது விட்டது என்னையெனின், அவன் பகைவனுடைய நண்பன், நண்பனின் நண்பன், மத்தியமன் முதலியவர் என்போருள் இன்னார் என்று வரையறுத்துக் கூறவியலாது. அவரால் இடர் விளைதலும் ஒருதலையன்று. எனவே இடர் விளைப்போராகத் துணியப்பட்டவரே ஈண்டுக் கூறப்பட்டனர் என்க.

[15]வெறுக்கத் தக்கவர், வெறுக்கத் தகாதவர் என்பவர்களின் கலப்புண்மைபற்றிக் கலப்புள்ளதாம். [16]கலப்புள்ளதில் வெறுக் கத்தகாதவர்காரணமாக மாற்றமாம். [17]சார்பின்றேல் சார்ந்த வன் இல்லை. [18]நண்பர் பகைவர் என்பவர்களின் ஒன்றுந் தன்மையால் பகைக் கலப்புள்ளதாம். பகைக் கலப்புள்ளதில் [19]நண்பரிடமிருந்து மாற்றமாம். என்னை? நண்பனுடன் சந்தி எளிதிற் செய்தற்குரியது. [20]பகைவனுடனுயின் அவ்வாறின் றென்க.

[21]நண்பன் சந்தியை விரும்பாவிடில் மீண்டும் மீண்டும் வேறு படுத்தல் வேண்டும். பின்னர் சத்திரிகள்மூலம் பகைவனிட மிருந்து வேறுபடுத்தி நண்பனை யடைதல் வேண்டும். [22]நண்பர் பகைவர் என்பவர்களின் குழுவின் இறுதியிலிருப்பவனை யடைதல் வேண்டும். இறுதியிலிருப்பவன் அடையப்படின் இடையிலுள்ள வர் வேறுபடுகின்றனர். இடையிலிருப்பவனையாதல் அடைதல் வேண்டும். இடையிலுள்ளவன் அடையப்படின் இறுதியிலுள்ள

---

15 கலப்புள்ளதைப் பற்றிக் கூறுகின்றார். வெறுக்கத் தக்கவரும் வெறுக்கத்தகாதவருங் கூடி, அவர்களாலுண்டாக்கப்பட்ட இடர் கலப் புள்ளதாம் என்பது கருத்து.

16 கலப்புள்ள இடரில் வெறுக்கத் தகாதவரை வயப்படுத்தலால் பரி காரம் உண்டாம்.

17 தூஷ்யருக்குச் சார்பாகவுள்ளவர் தணிந்த பின்னர் அவரை யண்டித் தொழில் புரியும் தூஷ்யர் சார்பற்றிருத்தல் காரணமாகத் தாமே தணிந்து விடுவர் என்பது கருத்து.

18 கலப்புள்ள மற்றொன்றைக் கூறுகின்றார். நண்பரும் பகைவரும் ஒன்றுகூடி, அவர்களால் விளைக்கப்பட்டது 'பகைக் கலப்புள்ளது' எனப் படும் என்க.

19 நண்பர் மூலம் பரிகாரமுண்டாம் என்பது.

20 பகைவனுடன் சந்தி செய்தல் எளிதன்றென்பது.

21 நண்பன் சந்தியை ஏற்காவிடின், சத்திரிகளைக் கொண்டு பகைவனிட மிருந்து அந்நண்பனை வேறுபடுத்தித் தன்வயமாக்கல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

22 ஒரு நாட்டால் மறைவு, நாட்டை யடுத்திருத்தல் என்ற முறையில் நாடமைத்துக் கொண்ட நண்பர் பகைவர் என்பவர்களின் குழுவினுடைய இறுதியில் இருப்பவன் அடைதற்குரியன் எனக் கூறுகின்றார்.

வர் [23]ஒன்று சேரார். [24]இவர்களுடைய சார்புக்கு வேறுபாடுண்டாம் வண்ணம் உபாயங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

[25]அறவோனை, [26]சாதி குடி கல்வி [27]ஒழுக்கம் என்னு மிவற்றின் புகழ்ச்சியாலும் [28]முன்னவரின் தொடர்பாலும், [29]முக்காலத்துதவி தீங்குபுரியாமை என்பவற்றாலும் சமாதானஞ் செய்தல் வேண்டும்.

[30]ஊக்கமற்றவன், [31]போரில் களைப்புற்றவன், [32]தடைப்பட்ட உபாயத்தை யுடையவன், [33]குறைவழிவுகளாலும் [34]அயலிட வாழ்வாலும் தீங்குற்றவன், [35]தூய்மைபற்றிப் பிறனை யடைய விரும்புகிறவன், [36]பிறனிடமிருந்து ஐயுற்றவன், [37]நட்பைச் சிறந்ததாகக் கொண்டவன், [38]நல்லறிவுடையவன் என்னுமிவர்களை இன் சொல்லால் அடைதல் வேண்டும்.

---

23 ஒருவர்க் கொருவர் வேறுபடுகின்றனர் என்பது கருத்து.

24 நண்பரும் பகைவரும் எந்த உபாயத்தால் சார்பிலிருந்து வேறுபடுவரோ, அவ்வுபாயங்களைப் பயன்படுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

25 அறவோனைப் பற்றிய இன்சொல் முறையைக் கூறுகின்றார்.

26 கலப்பற்றுத் தூய்மையாயிருத்தல் முதலிய தன்மையுள்ள சாதி என்பது.

27 அறநூலால் விதிக்கப்பட்டவற்றை மேற்கொள்வதில் ஈடுபாடு என்பது.

28 முன்னவர்—தந்தை பாட்டன் முதலியோர்.

29 முக்காலத்தும் உதவிபுரிதல் தீங்கு புரியாதிருத்தல் என்னுமிவற்றாலும் சமாதானஞ் செய்யவேண்டும் என்பது கருத்து.

30 இன்சொல்லால் வயப்படுத்தற்குரியவனைக் கூறுகின்றார்.

31 நீண்ட நேரம் போர்புரிந்ததால் சோர்வடைந்தவன் என்பது.

32 பயன்படாது போன நால்வகை உபாயங்களை மேற்கொண்டவன்.

33 ஊர்தி பணியாளர் என்பவர்களின் அழிவாலும், பொன்கூலம் என்பவற்றின் அழிவாலும் என்ப.

34 அயலிடவாழ்வு—நெடுவழியிற் செல்லுதல் வருதல் என்பன.

35 தூய்மையை விரும்பி வேறுயாரேனுமொரு நண்பனை யடைய விரும்புபவன் என்பது.

36 பிறனை நம்பாதவன்.

37 எல்லோரிடமும் நட்புத் தன்மையுடனேயே வழங்குதல் சிறந்தது என்று கருதுகிறவன்.

38 நல்லறிவுடையவன்—தீய கருத்தற்றவன்.

பொருணசையுடையவன், குறைவுற்றவன் என்னுமிவர்களைத் தாபதர் தலைவர் என்பவர்களைப் [39]பிணையாளராக வைத்தல் மூலம் கொடையால் வயப்படுத்தல் வேண்டும்.

[40]கொடுத்தற்குரியதை விடுத்தல், [41]ஏற்கப்பட்டதை அநுசரித்தல், கவரப்பட்டதைத் திருப்பிக் கொடுத்தல், புதியதாகத் தன் பொருளைக் கொடுத்தல், [42]பிறர் பொருளில் அவரவர் கைப்பற்றியதைக் கொடுத்தல் என்பதாக அக் கொடைச்செயல் ஐவகைப்படும்.

ஒருவரையொருவர் [43]வெறுத்தல், [44]பகைத்தல், நிலத்தைக் கவர்தல் என்பவற்றால் ஐயுறப்பட்டவனை [45]இவற்றுள் ஒன்றாலும், [46]அஞ்சியவனைத் [47]தடையாலும் [48]சந்தியைச் செய்து, இவன் உன்பாற் செயலைச் செய்வான், [49]இவனிடம் நண்பனை விடுத்தான்

---

39 கொடையில் நம்பிக்கை யுண்டாதற் பொருட்டுத் தாபதர் முதலியோரைப் பிணையாளராக வைக்கவேண்டும் என்ப.

40 கொடையின் ஐவகைப் பிரிவினைக்கூறுகின்றார்; ஏற்கப்பட்ட நிலத்தில் பிரமதேயம் முதலியவற்றை முன்போல் விடுத்தல் என்பது.

41 முன்னவரால் முன்னர் அடையப்பட்ட நிலம் முதலியவற்றை யநுபவித்தற்குத் தடைசெய்யாமை என்பது.

42 பகைவர்நாட்டைத் தகர்க்குங்கால் 'அவர்களின் பொருள்களுள் உன்னாற் கவரப்பட்டது உனக்கே யுரியது' என்ற முறையில் கொடுத்தல் என்க.

43 அக்காலத்துச் செய்த தீங்கினால் உண்டான வெறுப்பு.

44 நெடு நாட்களாகத் தொடர்ந்து தீங்கு புரிதலால் நிலைத்துள்ள பகைமை.

45 இவற்றுள்—வெறுத்தல் முதலிய மூன்றனுள்.

46 வேறு சில வேறுபடுத்தன்முறைகளைக் கூறுகின்றார்.

47 பகைவன் வலியனாகலின், உன்னுடைய மேற்சேறல் தடைப்பட்டு விடும் என்று தடையைப் பற்றிய அச்சுறுத்தலாலும் என்பது.

48 வெற்றிவிருப்பமுள்ளவனுடன் சந்தியை யேற்று இவன் உன்னை எதிர்க்கப்போகிறான் என்பது.

49 சந்தி செய்யப்போவது எங்ஙனம் அறியப்பட்டது என்பதனைக் கூறுகின்றார்; வெற்றிவிருப்பமுள்ளவனிடம் சந்தி குறித்து நண்பனை அனுப்பியிருக்கிறான் என்பது.

[50]சந்திக்குப் புறம்பானவன்' [51]என்பதாலும் வேறுபடுத்தல் வேண்டும்.

[52]விலைப் பண்டம் தொகுக்குமிடம்பற்றி [53]எவனுக்குத் தன்னாட்டினின்றுதல் பிறநாட்டினின்றுதல் விலைப் பண்டம் வருமோ, அவை இவனுக்கு [54]மேற் சேறற்குரியானிடமிருந்து கிடைக்கப் பெற்றன என்று சத்திரிகள் பரப்புதல் வேண்டும். [55]மிகுதிப்பட்டதும் [56]'இவ் விலைப் பண்டம், [57]விலைப் பண்டம் தொகுக்குமிடங்கள் என்னால் உனக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. [58]கூடித்தொழில் புரிபவரிடம் [59]வன்மையை ஏற்பாய் அல்லது [60]விலகுவாய், [61]பின்னர் எஞ்சிய ஒப்பந்தப் பொருளை [62]அடைவாய்' [63]என்று [64]வெளிப்பட்டவன் [65]மூலமாகக் [66]கட்டளையை

---

[50] நண்பனும் பகைவனும் ஏற்கும் சந்தியில் நீ விலக்கப்பட்டாய் என்பது கருத்து.

[51] என்று கூறி வேறுபடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[52] மற்றொரு முறையைக் கூறுகின்றார்; 'தொகுக்குமிடம் பற்றி' என்பது தொகுக்குமிடத்திற்கு உறுப்பாதல் பற்றி என்னும் பொருளது.

[53] எவனுக்கு—நண்பர் பகைவருள் ஒருவனுக்கு.

[54] மறைவாகச் சந்தி செய்துகொண்ட மேற் சேறற்குரியானிடமிருந்து இவனுக்கு அனுப்பப்பட்டுக் கிடைக்கப் பெற்றன என்ற பொய்ச் செய்தியைச் சத்திரிகள் உண்டாக்கல் வேண்டும் என்பது.

[55] மிகுதிப்பட்டதும்—அச்செய்தி நாற்புறமும் பரவியதும்.

[56] இவ்விலைப்பண்டம்—ஏதோமிகக் குறைவான இப்பண்டம்.

[57] விலைப்பண்டம் தொகுக்குமிடங்கள்—அதிகமான விலைப்பண்டங்களின் தொகுதியை யுடைமை பற்றி, தொகுக்குமிடத்துக்குச் சமமான, விலைப்பண்டங்களடங்கிய வண்டி முதலியன.

[58] என் பகைவனுக்கு உதவிபுரிய ஒன்றுகூடித் தொழில்புரிபவரிடம் என்பது.

[59] வன்மையை ஏற்பாய்—எதிர்த்துச் செல்.

[60] விலகுவாய்—அவர்களிடமிருந்து விலகி எனக்கு உதவிபுரிவாயாக என்பது கருத்து.

[61] பின்னர்—எதிர்த்தல் விலகுதல் என்பவற்றுள் ஒன்றை நீ ஏற்ற பின்னர்.

[62] என்னிடமிருந்து அடைவாய் என்பது.

[63] என்ற பொருளை உணர்த்தும் கட்டளையை என்க.

[64] வெளிப்பட்டவன்—கொல்லுதற்குரியவன் என்று துணியப்பட்டவன்.

[65] மூலமாக—கையில் கொடுத்து.

[66] கட்டளை—பொய்க் கடிதம்.

யனுப்புதல் வேண்டும். பின்னர் சத்திரிகள் [67]பிறரிடம் '[68]இது [69]பகைவனாற் கொடுக்கப்பட்டது' என்று பிடிக்கச் செய்தல் வேண்டும்.

[70]பகைவனுடையதாகத் [71]தெளியப்பட்ட [72]விலைப்பண்டம் [73]மறைவாக வெற்றிவிருப்பமுள்ளவனை யடைதல் வேண்டும். [74]அவனுடைய [75]வணிக வுருவினர் அதைப் [76]பகைவருள் மிக்க வரிடம் விற்றல் வேண்டும். பின்னர் சத்திரிகள் 'இப் பண்டம் பகைவனாற் கொடுக்கப்பட்டது' என்று பிறரிடம் [77]அறிவித்தல் வேண்டும்.

[78]பெருங் குற்றமுடையாரைப் [79]பொருள், பெருமைப் படுத்தல் என்பவற்றால் வயப்படுத்தி, படைக்கலம், நஞ்சு, தீ என்னு மிவற்றாற் பகைவனிடம் மறைவில் அனுப்புதல் வேண்டும். [80]முன்னர் ஒரு அமைச்சனை [81]வெளியேற்றல் வேண்டும்.

---

67 கூடித் தொழில் புரிபவருள் எஞ்சியவரிடம் என்பது.

68 இது—வஞ்சகக்கடிதம்.

69 பகைவன்—வெற்றிவிருப்பமுள்ளவன்.

70 பகைவன்—ஈண்டுக் கூடித்தொழில் புரிபவருள் ஒருவன்.

71 எல்லோராலும் அறியப்பட்ட.

72 விலைப்பண்டம்—இரத்தினம் முதலியன.

73 இரகசியமாக வெற்றி விருப்பமுள்ளவனுடைய ஏதோ ஒரு உபாயத்தினால் வயமாதல் வேண்டும் என்பது.

74 அவன்—வெற்றி விருப்பமுள்ளவன்.

75 வணிகவுருவினர்—வணிகர்வேடம் பூண்ட ஒற்றர்.

76 கூடித் தொழில் புரிபவருள் தலைவனிடம் என்பது.

77 இங்ஙனம் செய்தலால் கூடித் தொழில் புரிபவருள் ஒருவன் வெற்றி விருப்பமுள்ளவனுடன் சந்திசெய்து கொண்டான் என்ற கருத்து, கூடித் தொழில் புரியும் மற்றவர்களுக்குண்டாம் என்பது கருத்து.

78 மற்றொரு முறையைக் கூறுகின்றார்; தன்னிடம் பெரிய குற்றத்தைச் செய்த அமைச்சர் முதலியவர்களை.

79 நிலம் பொன் முதலிய பொருளைக் கொடுத்தல், குடை சாமரம் முதலியவற்றாற் பெருமைப்படுத்தல் என்பவற்றைச் செய்தல்மூலமாக அவர்களைத் தன்வயப்படுத்தி 'நீங்கள் பகைவனைப் படைக்கல முதலியவற்றால் கொல்லுங்கள்' என்று கூறி மறைவாக அனுப்புதல் வேண்டும்.

80 அனுப்பும் முறையைக் கூறுகின்றார்; முன்னர்—முதலில்.

81 தன்னணிமையிலிருந்து கிளம்பிப் பகைவன் சமீபத்தை யடையச் செய்தல் வேண்டும் என்பது.

அவனுடைய மக்கள் மனைவியரைப் [82]பற்றி 'இரவிற் கொல்லப் பட்டார்' [83]என்று பரப்புதல் வேண்டும். [84]பின்னர் [85]அமைச் சன் [86]அவர்களை ஒவ்வொருவராகப் பகைவனுக்கு [87]விளக்கிக் கூறல் வேண்டும். [88]அவர்கள் கூறப்பட்டபடிச் செய்யின் அவர் களைப் பிடித்தல் கூடாது. [89]ஆற்றலற்றவரைப் பிடிக்கலாம். [90]அன்பனுந் தன்மையை யடைந்தவன் தலைவனிடமிருந்து தன்னைக் காத்தற்குரியனாகக் கூறுதல் வேண்டும். பின்னர் அழிவு குறித்துத் தலைவனுக்கு அனுப்பப்பட்ட பகைவன் கட்டளையை இருவேதன முள்ளவன் பற்றுதல் வேண்டும்.

---

82 பற்றி—மறைவாகக் காக்கப்பட்டவராகச் செய்து.

83 என்று பரப்புதல்—என்ற பொய்ச் செய்தியைப் பரப்புதல்; வெளி யேறியவனிடம் வெற்றி விருப்பமுள்ளவனுக்குள்ள வெறுப்பைப் பகைவன் நம்புதற் பொருட்டு இங்ஙனம் செய்தியைப் பரப்புதல் என்ப.

84 பின்னர்—பகைவனிடத்தில் தனக்குப் பதவி கிடைத்த பின்னர் என்பது.

85 முதலில் வெளியேறின அமைச்சன் என்பது.

86 அவர்களை—மற்ற அமைச்சர்களை.

87 வெற்றி விருப்பமுள்ளவனிடம் வெறுப்புகாரணமாக வெளியேறிய இவர்கள் உன்பக்கத்திலிருக்கச் செய்தற்குரியர் என்று விளக்கிக்காட்டல் வேண்டும் என்பது.

88 வெளியேறின அவ் வமைச்சர்கள், படைக்கல முதலியவற்றால் பகை வனைக் கொல்வார்களாயின், அவர்களை இருவேதனமுள்ளவர்மூலமாகப் பிடித்தல் கூடாதென்பது கருத்து.

89 பகைவரைப் படைக்கல முதலியவற்றாற் கொல்லுதற்கு ஆற்றலற்ற வராயின் அவர்களைப் பிடிக்கலாம் என்பது. பெருங் குற்றமுடைய அவர்கள் கொல்லப்படுதற்குரியராகலின் இங்ஙனங் கூறினர்.

90 வெற்றிவிருப்பமுள்ளவனிடமிருந்து வெளியேறின அமைச்சன் கூடித்தொழில் புரிபவரின் தலைவனை வேறுபடுத்து முறையைக் கூறுகின் றார்; பகைவனுக்கு அன்பனுந் தன்மையை யடைந்த அமைச்சன் 'கூடித் தொழில் புரிபவரின் தலைவனிடமிருந்து நீ உன்னுயிரைக் காத்துக் கொள் ளல் வேண்டும். அவன் நம்புதற்குரியனல்லன்' என்று பகைவனை வேறு படுத்தல் வேண்டும். பின்னர் தலைவனல்லாதாரைக் கொல்லும்படிக் கூறு வதும், தலைவனைக் குறித்தனுப்பப்பட்டதும் வஞ்சகமாகச் செய்யப்பட்டது மான பகைவனின் கட்டளையைக் காவலாளர் மூலம் இருவேதனமுள்ளவர் பிடித்தல் வேண்டும் என்பது கருத்து.

[91]'இவனுடைய அரசைப் பற்று, [92]உள்ளவாறு சந்தியின்று' என்று உற்சாகசக்தியுள்ளவனுக்கு [93]அனுப்புதல் வேண்டும். பின்னர் [94]பிறரிடம் சத்திரிகள் அறிவித்தல் வேண்டும்.

[95]ஏனையவரிடம் நட்பைக் கூறி [96]ஒருவனுடைய பாசறை [97]வருவாய், நட்புப் படை என்னுமிவற்றைத் [98]தடுத்தல் வேண்டும். 'நீ இவர்களாற் [99]கொல்லுதற்குரியவன்' என்று சத்திரிகள் அவனை வேறுபடுத்தல் வேண்டும்.

(இவர்களுள்) ஒருவனுடைய வீர மக்கள், யானை, குதிரை என்பன [100]இறப்பினும் அன்றி ஒற்றர்களால் கொல்லப்படினும் கவரப்படினும் [101]அவனிடம் [102]ஒருவர்க் கொருவரால் [103]கொல்லப்பட்டதாகக் கூறல் வேண்டும். பின்னர் [104]'மீண்டும் செய், அதன் பின் எஞ்சிய ஒப்பந்தப் பொருளையடைவாய்'

---

[91] மற்றொரு முறையைக் கூறுகின்றார்; இவனுடைய—கூடித் தொழில் புரிபவருள் தலைவனுடைய.

[92] இப்போதிருக்கும் வகையில் சந்தி ஒப்புக்கொள்ளப்படவில்லை.

[93] வஞ்சகமான கட்டளையை யனுப்புதல் வேண்டும் என்பது.

[94] பிறரிடம்—கூடித் தொழில் புரியும் மற்றவரிடம்.

[95] கூடித் தொழில் புரியும் மற்றவரிடம் தனக்கு நட்புண்மையைக் கூறி என்பது. இங்ஙனங் கூறுதல் அவர்களுக்கு மறைத்தற் பொருட்டென்க.

[96] கூடித் தொழில் புரிபவருள் ஒருவனுடைய.

[97] வருவாய்—தன்னாட்டினின்று தானியம் முதலியவற்றின் வருகை என்பது.

[98] தடுப்போர் சத்திரியாவர்.

[99] எனவே நீ இவருடன் ஏன் சந்தியுடனிருக்கிறாய்? என்பது உணர்த்தப்பட்டதென்க.

[100] இறப்பு—தானே நிகழ்வது.

[101] அவன்—கூடித் தொழில் புரிபவருள் ஒருவன்.

[102] கூடித் தொழில் புரியும் மற்றவருள் ஒருவர்க் கொருவரால் என்பது.

[103] வீரமக்கள் முதலியவர் கொல்லப்பட்டவராகக் கூறுதல் வேண்டும் என்க.

[104] வீரமக்கள் முதலியவரின் கொலையை மறுபடியும் செய்.

[105]என்று கட்டளையைப் [106]பதிதனுக்கு அனுப்புதல் வேண்டும். [107]இரு வேதனமுள்ளவர் அதைப் [108]பற்றச் செய்தல்வேண்டும்.

[109]வேறுபட்டவருள் ஒருவனையடைதல் வேண்டும்.

[110]சேனைத் தலைவன் இளவரசன் படையிலியங்குபவர் என்னுமிவர்களுக்கும் இதனால் விதி கூறியவாறாம்.

[111]குழுவைச் சார்ந்த வேறுபடுத்தலையும் மேற்கொள்ளல் வேண்டும். வேறுபடுத்தற்றொழில் இவ்வாறாம்.

[112]தீக்ஷ்ணன், [113]ஊக்கமுள்ளவன், [114]விதனமுள்ளவன், [115]நிலைப் பகைவன் என்னுமிவர்களைப் படைக்கலம், தீ, நஞ்சு என்னுமிவற்றாலும் [116]ஒற்றர்களாலும், [117]எளிமைபற்றி அவருள் ஒருவனாலும் களைதல் வேண்டும். [118]தீக்ஷ்ணன்,

---

105 என்றிவ்வாறு பொருளை யுணர்த்தும் கட்டளையை என்பது.

106 பதிதன் என்பது ஈண்டுப் பொய்யாகக் கொலைக் குற்றஞ் சாட்டப் பட்டவன் என்னும் பொருளது.

107 வெற்றி விருப்பமுள்ளவன், பதிதன் என்ற இருவரிடம் வேதனம் பெறுபவன்.

108 ஒற்றர்களாற் பற்றச் செய்தல் வேண்டும் என்பது.

109 மேற்கூறிய உபாயங்களால் வேறுபடுத்தப்பட்ட கூடித் தொழில் புரிபவருள் ஒருவனை வெற்றிவிருப்பமுள்ளவன் தன்வயப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

110 வேறுபடுத்தற்குரியனவாக இதுகாறும் கூறப்பட்ட உபாயங்களின் தொகுதியையே சேனைத் தலைவன் முதலியவர்களை வேறுபடுத்தற்கும் ஏற்ற வாறு உபயோகித்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

111 'குழூஉச் செயல்' என்னும் 11-ஆம் அதிகரணத்திற் கூறப்படும் உபாயங்களையும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து.

112 இனித் தண்டவிதிமுறையையும், அத்தண்டத்தைச் செலுத்தற் குரிய பொருளையுங் கூறுகின்றார்; தீக்ஷ்ணன்—மிகவதிகமான கோபமுள்ள வன்.

113 ஊக்கம்—வீரம்.

114 வேட்டை முதலியவற்றில் ஈடுபட்டவன் என்பது.

115 அரணையுடைய பகைவன் என்பது.

116 ஒற்றர்கள்—ஒன்று கூடிய ஒற்றர்கள்.

117 எவனொருவன் மிக வெளிதாக அவரைக் கொல்லும் ஆற்றலுடைய வனோ, ஒற்றருள் ஒருவனை அவனை என்பதை.

118 அவ்வொருவனைப் பற்றி விரித்துரைக்கின்றார்.

[119]ஒருவன், படைக்கலம், நஞ்சு, தீ என்னுமிவற்ருல் [120]களை வான். [121]இவன் எல்லாக் குழுவின் செயலையும் சிறந்த வினையையும் புரிகிருன். [122]உபாயங்கள் நான்கின் குழு இவ்வாரும்.

[123]இதில் [124]முறையே முன் முன்னுள்ளன எளியனவாம். [125]இன்சொல் ஒரு குணமுள்ளது. கொடை இன் சொல்லை முதலாகக் கொண்டு இரு குணமுள்ளது. இன்சொல் கொடை என்பவற்றை முதலாகக் கொண்டு வேறுபடுத்தல் முக் குணமுள்ளது. இன் சொல் கொடை வேறுபடுத்தல் என்பவற்றை முதலாகக் கொண்டு ஒறுத்தல் நான்கு குணமுள்ளது.

[126]மேற் செல்பவரைப் பற்றிய விதி இங்ஙனம் கூறப்பட்டது. தன் நிலத்திலிருப்பவர்பாலாயின் அவையே உபாயங்களாம். [127]சிறப்போவெனின் :— [128]தன்னிலத்திலிருப்பவருள் ஒருவனுக்கு [129]அறியப்பட்ட தலையாய தூதரைப் [130]பண்டத்

---

[119] துணையின்றித் தான் ஒருவனே செயல்புரிபவன் என்பது.

[120] களைதல்—தீக்ஷ்ணன் முதலியவரைக் கொல்லுதல்.

[121] பல்வகை ஒற்றர்களின் குழுவால் செய்தற்குரிய செயலையன்றி, அதைவிடச் சிறப்புற்ற செயலையும் இவன் ஒருவனே செய்வான் என்பது கருத்து.

[122] இன்சொல் முதலியவற்றின் குழு இங்ஙனம் விளக்கிக் கூறியபடியாம் என்பது கருத்து.

[123] நால்வகை உபாயங்களின் குழுவில் என்பது.

[124] பின்னுள்ள உபாயங்களைவிடக் குறைந்த அவயவங்களை யுடையதாகலின் எளிதில் மேற்கொள்ளுதற் குரியதென்பது கருத்து.

[125] அவயவங்களின் குறைவையே விளக்குகின்ருர் ; தானுகிற ஒரே அவயவத்தை யுடையதென்பது. குணம்—ஈண்டு அவயவம் ; பின்னுள்ளவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[126] மேற்சேறற்குரியானை எதிர்ப்பதற்குப் புறப்பட்டுப் பாசறையை யமைத்துக் கொண்ட நண்பர் பகைவர் என்பவர்களைக் குறித்து நால்வகை உபாயங்களை ஏற்கும் முறை இதுகாறுங் கூறப்பட்டது. அவர்கள் தத்தம் நாட்டில் இருக்கும் போதும் இம்முறை யொக்குமெனக் கூறுகின்ருர்.

[127] சிறப்பு முறையும் ஈண்டுக் கூறப்படும் என்பது.

[128] ஒன்றுகூடிப் புறப்படுதற்கு முன் தத்தம் நாட்டிலிருக்கும் நண்பர் பகைவர் என்பவருள் ஒருவனுக்கு என்பது.

[129] பிறரால் நன்கறியப்பட்ட என்பது.

[130] மிக அதிகமான முத்து இரத்தினம் முதலிய விலைப்பண்டங்களுடன் என்பது.

தொகுதியுடன் அடிக்கடி [131]அனுப்புதல் வேண்டும். [132]அவர்கள் [133]இவனைச் [134]சந்தியிலாதல் பிறர் துன்பத்திலாதல் ஏவுதல் வேண்டும். [135]ஒப்புக் கொள்ளாதவனை 'எங்களாற் சந்தி செய்யப்பட்டது' என்று அறிவித்தல் வேண்டும். [136]இரு வேதனமுள்ளவர்கள் [137]பிறரிடம் [138]'உங்கள் அரசன் குற்றமுள்ளவன்' என்று [139]அவனை யறிவித்தல் வேண்டும்.

[140]மற்றொருவன் பால் அச்சம், பகைமை, வெறுப்பு என்னுமிவை எவனிடமுள்ளனவோ, [141]அவனை 'இவன் உன் [142]பகைவனுடன் சந்தி செய்கிறான், உன்னை வஞ்சிப்பான், [143]மிக

---

131 வெற்றி விருப்பமுள்ளவன் அனுப்புதல் வேண்டும் என்பது.

132 அவர்கள்—தூதரிற் சிறந்தார்.

133 இவனை—நண்பர் பகைவர் என்பவருள் ஒருவனை.

134 'சந்தி செய்து கொள்' அவன் பகைவரை எதிர்த்துச் செல்' என்று வெற்றி விருப்பமுள்ளவன் தூண்டுதல் வேண்டும் என்பது கருத்து.

135 சந்தியை ஏற்க ஒப்புக்கொள்ளாத அவனைப்பற்றி 'நாங்கள் சந்தியைச் செய்தோம்' என்ற பொய்ச் செய்தியைச் சொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

136 நண்பர் பகைவர் என்பவருள் ஒருவனை அவனிடமிருந்தும் வெற்றி விருப்பமுள்ளவனிடமிருந்தும் வேதனம் பெறுபவர் என்பது.

137 பிறரிடம்—அவனைத் தவிர மற்ற நண்பர் பகைவர் என்பவரிடம். 'அறிவித்தல் வேண்டும்' என்பதனோடியைத்துப் பொருள் கொள்க.

138 ஒருவர்க்கொருவர் சந்தி செய்தற்குரிய உங்களுள் ஒருவனை அரசன் வெற்றி விருப்பமுள்ளவனுடன் சந்தி செய்துகொண்டு, அதை மறைக்குங் காரணமாகத் தீயவனானன் என்ற இம்முறையிற் கூறுபவராக என்பது; இங்ஙனம் அறிவிக்கப்பட்ட நண்பர் பகைவர் என்பவர்கள் தம்முள் ஒருவனிடமிருந்து வேறுபடுவர் என்பது கருத்து.

139 அவனை—வெற்றி விருப்பமுள்ளவனுடன் சந்தி செய்து கொண்டவனைப் பொய்யாக அறியப்படுத்தப் பட்டவனை.

140 வேறொரு முறையைக் கூறுகின்றார்.

141 அவனை—அச்சம் முதலியவற்றை யுடையவனை.

142 பகைவன்—வெற்றி விருப்பமுள்ளவன்.

143 விரைவில் நீ வெற்றி விருப்பமுள்ளவனுடன் சந்தியைச் செய்து கொள் என்பது.

விரைந்து சந்தி செய், [144]இவன் தீங்கில் மிகுதியான முயற்சி செய் என்று அவனிடமிருந்து வேறுபடுத்தல் வேண்டும்.

[145]கன்னியை ஏற்றல், [146]திருமணம் என்பவற்ருல் தொடர்பைச் செய்து கொண்டு தொடர்பற்றவரை வேறுபடுத்தல் வேண்டும்.

[147]சிற்றரசர், காட்டில் வாழ்வோர், [148]அக்குடிப் பிறப்புள்ளவர், [149]தடைப்பட்டவர் என்னுமிவர்களால் [150]இவர்களின் [151]அரசையாதல், [152]குழு [153]கொட்டில் [154]காடு என்னுமிவற்றையாதல், [155]ஈடுபட்ட படையை யாதல் [156]அழித்தல் வேண்டும். [157]ஒருவரையொருவர் அடைந்த [158]சாதிக் குழுவினர்

---

144 உன்னை வஞ்சிக்க விரும்பும் நண்பர் பகைவர் என்னுமிவருள் ஒருவனை இவனுக்குத் தீங்குபுரிய முயற்சிசெய் என்று கூறி, முற்கூறிய அச்சம் முதலியவற்றிற்குக் காரணமாயிருந்தவனிடமிருந்து ஒற்றர்கள் வேறு படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

145 தண்டத்தின் வேறொரு முறையைக் கூறுகின்ருர்.

146 திருமணம்—ஈண்டுக் கன்னியைக் கொடுத்தல்; இத்துடன் தம் நாட்டிலிருப்பவர்களை வேறுபடுத்தும் முறைகள் விளக்கப்பட்டன.

147 ஒறுத்தன் முறையைக் கூறுகின்ருர்; சிற்றரசர்—அடுத்த நாட்டிலுள்ளவர்.

148 நண்பர் பகைவர் என்பவரது குடியிற் ருேன்றியவர்.

149 தண்டிக்கப்பட்ட அவர்களுடைய புதல்வர்கள்.

150 இவர்களின்—நண்பர் பகைவர் என்பவர்களின்.

151 அரசு—நாடு நகர முதலியவை.

152 வணிகர்களின் பண்டங்களைச்சுமக்கும் விலங்குகளின் குழு என்பது.

153 'கொட்டில்' என்பது ஈண்டுப் பசு, எருமை முதலியவற்றைக் குறிப்பதாம்.

154 காடு—மரக்காடு, யானைக்காடு முதலியன.

155 ஈடுபட்ட—காடுகளில் வாழ்க்கைப்பொருள் குறித்துச் செல்லுதலில் ஈடுபட்ட.

156 வெற்றிவிருப்பமுள்ளவன் அழித்தல்வேண்டும் என்க.

157 ஒருவரையொருவர் அடைந்த-ஒருவரையொருவர் அண்டியிருக்கிற.

158 'குழுஉச்செயல்' என்னும் அதிகரணத்திற் கூறப்படும் 'லிச்சிவிகர்' முதலியோர் என்ப. விளக்கத்தை ஆண்டுக் காண்க,

[159]இவர்களின் அற்றத்தில், [160]மறைந்தவர் தீ நஞ்சு படைக்கலம் என்னுமிவற்ருல் [161]தாக்குதல் வேண்டும்.

சுலோகம்

[162]பகைவர் கலப்புள்ளதில், [163]தீய கருத்துள்ளவன் [164]மறைக்கும் ஆடை [165]உணவு என்பவை போன்ற வஞ்சகச் செயலே ஏற்றலால், [166]நம்பிக்கை நுகர்ச்சிப் பொருள் என்பவற்றின் மூலம் பகைவரைக் கொல்லுதல் வேண்டும்.

ஒன்பதாம் அதிகரணம் பத்தாம் பிரகரணம் 'வெறுக்கத் தக்கவரும் பகைவரும் விளேக்குமிடர்கள்' என்னும் நூற்றிருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

159 இவர்கள்—நண்பர் பகைவர் என்பவர்கள்.

160 மறைந்தவர்—தீக்ஷ்ணர் நஞ்சிடுவோர் முதலிய ஒற்றர்கள்.

161 இவர்களேத் தாக்குதல் வேண்டும் என்பது.

162 கூறுதற்குரிய எஞ்சியதைக் கூறிப் பிரகரணத்தை முடிக்கின்ருர். பகைவர் கலப்புள்ளதில்—நண்பர் பகைவர் கலந்து உண்டாக்கப்பட்ட இடரில்.

163 வெற்றிவிருப்பமுள்ளவன் இரகசியமாகச் செயல்புரிபவனுக இருந்து என்பது.

164 பறவைகளின் நம்பிக்கை குறித்து அவற்றின் உருவம் வரையப் பட்டதும், உடலே மறைத்துக்கொள்ளுதற் குரியதுமான ஆடை.

165 உணவு—இறைச்சி முதலியன.

166 தன்னிடத்தில் நம்பிக்கையை உண்டாக்குதலாலும், திண்மையான விலேப்பண்ட முதலியவற்றைக் கொடுத்தலாலும் பகைவரைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

ஒன்பதாம் அதிகரணம்—போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல்

11, 12-ஆம் பிரகரணங்கள்—[1]பொருளழிவையங்களோடமைந்த இடர்கள், அவற்றைக் களையும் உபாய விகற்பங்களாலுண்டாம் சித்திகள்

நூற்றிருபத்தெட்டாம் அத்தியாயம்

[2]காமம் முதலிய குற்றம், தம் பகுதிகளையும் அபநயம், வெளியிலுள்ளவரையும் வெகுளச் செய்கின்றன. [3]அவையிரண்டும் [4]ஆசுரச் செயலாம். [5]தம் மக்களின் மாறுபாடான கோபம், பகைவரது மிகுதிக் காரணங்களில் பொருளழிவையங்களாகிய இடராம்.

128-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பொருள்—ஈண்டு பொன், நிலம், நட்பு, உடல் முதலியன. அழிவு—இவற்றின் கேடு. ஐயம்—இவற்றையும் இவற்றின் அழிவையும் பற்றி நிகழ்வது. பயனுகவுள்ள பொருள் முதலியவற்றுடன் கூடிய இடர்களைப் பற்றிக் கூறுவது இப்பிரகரணமாகும். வெளியிலிருப்பவர் வேறுபடுத்தல், உள்ளிருப்பவர் வேறுபடுத்தப்படல் முதலாக முற்கூறியன பொருளழிவு களுக்குக் காரணமாதல் பற்றி இடராந்தன்மையை யுடையனவாதலின் அவை இடர்களாம் என்பதை விளக்குதற் பொருட்டு இப்பிரகரணம் தொடங்கப்படுகிறதென்ப.

[2] காமம், கோபம் முதலிய குற்றங்கள் மந்திரி முதலிய உட்பகுதிகளையும், நட்பாக்கல் பகையாக்கல் முதலியவற்றைத் தகாமுறையிற் பயன்படுத்தல் அரசியற்றலைவன் எல்லைகாவலன் முதலிய வெளிப்பகுதிகளையும் வெகுளச் செய்கின்றன என்பது கருத்து.

[3] அவை—காமமும் அபநயமும்.

[4] அசுரர்க்குரிய அறம்; மாயைச்செயலுமாம். எனவே இதை விடுத்தற் பொருட்டுப் பெரிய முயற்சியை அரசர் ஏற்றல் வேண்டும் என்பது கருத்து. தன் மக்களின் கோபத்துக்குக் காரணமான இது முன்னர்க் கூறப்பட்டிருப் பினும், ஈண்டு ஆசுரச்செயலாந் தன்மை குறித்து நிந்தித்தற்பொருட்டு மீண்டும் கூறப்பட்டதென்ப.

[5] பகைவனுடைய மிகுதிக்குரிய காரணங்களுண்டாயபோது, தம் மக்களின் கோபமே இடராந் தன்மையை எய்துகிறது என்பதும், அவ்விடர் பொருளுருவமாகவும், அழிவுருவமாகவும் அவ்விரண்டின் ஐயவுருவமாகவும் தோன்றும் என்பதும் கருத்து.

[6]அடையப்படாது பகைவற்கு மிகுதியைச் செய்வது, [7]அடையப்பட்டுப் பகைவரால் திரும்பிப் பெறுதற்குரியது, [8]அடையப்படும் நிலையில் கேடு செலவுகளையுடையதாக இருப்பது என்பன இடர்ப் பொருள்களாம். [9]அவையாவன [10]சிற்றரசர்களுக்கு நுகர்ச்சிப் பொருளாவது, [11]சிற்றரசர்களின் விதனத்தாலுண்டான ஊதியம், [12]இயற்கையிலடைதற்குரியதும் பகைவனால் கேட்கப்பட்டதுமான ஊதியம், [13]பின்னர் நிகழும் கோபம் பின்னணியைப் பற்றுபவன் என்னுமிவற்றால் தடைப்பட்ட முன்னர் ஊதியம், [14]நண்பனைக் களைதல் சந்தியை மீறுதல் என்பவற்றால் மண்டலத்துக்கு மாறுபட்ட ஊதியம் [15]என்பன இடர்ப் பொருள்களாம்.

---

6 இடர்ப்பொருள் இஃதெனக் கூறுகின்றார். பொருட்படுத்தாமை காரணமாகத் தன் கையை அடையாது பகைவனது மிகுதியைச் செய்வது எதுவோ அது ஒரு இடர்ப்பொருளாம் என்பது.

7 தன் கையை அடைந்தும் பகைவரால் திரும்பப் பெறுதற்குரியது எதுவோ அது மற்றொரு இடர்ப்பொருள் என்பது.

8 எப்பொருள் அடையப்படும் நிலையிலேயே மிகவதிகமான கேடு செலவுகளை யுடையதாக ஆகுமோ அது வேறோர் இடர்ப்பொருளாம் என்பது.

9 எடுத்துக்காட்டு வாயிலாக அதனை விளக்குகின்றார்.

10 சிற்றரசர் பலரால் நுகர்தற்குரியதும், சிற்றரசன் ஒருவனால் ஏற்கப்பட்டதுமான ஊதியம் என்க. ஒன்றுகூடி எதிர்க்கும் அவர்களால் அது திரும்பப் பெறுதற்குரியதாகலின் இடர்ப்பொருளாகிறது.

11 சிற்றரசனுக்கு குணத்தின் மாறுபாடு முதலிய விதனநிலையில் அவனிடமிருந்து கவரப்பட்ட ஊதியம் என்பது. அவ்விதனம் அகன்ற பின்னர் அது திரும்பப் பெறுதற்குரியதாகலின் இடர்ப்பொருளாம் என்க.

12 கேளாமலே அடைதற்குரியதும் பகைவனால் கேட்கப்பட்டதுமானது திரும்பப் பெறுதற்குரியதாகலின் இடர்ப்பொருளாம்.

13 தானியத்தில் தூஷ்யர் முதலியவர்களின் கோபத்தாலும், பிற்புறப் பகைவனாலும் தடைப்படுத்தப்பட்டதும் மேற்சேறற்குரியானிடமிருந்து அடைதற்குரியதுமான ஊதியம் இடர்ப்பொருளாம் என்பது.

14 நண்பனுடைய அரணைக் கவர்தல், செய்யப்பட்ட சந்தியைக் கடத்தல் என்பவை காரணமாக அரசமண்டலத்தால் அநுமதிக்கப்படாத ஊதியம் என்பது.

15 இன்னோரன்ன ஊதியம் இடர்ப்பொருள் எனவறிக என்பது கருத்து.

[16]தன்னிடமிருந்தாதல், பிறரிடமிருந்தாதல் அச்சத்தின் விளைவு அழிவாம்.

[17]பொருளா இல்லையா என்றும், [18]அழிவா இல்லையா என்றும், [19]பொருளா அழிவா என்றும், [20]அழிவா பொருளா என்றும் ஐயுறத்தக்கன ஐயங்களாம்.

[21]பகைவனின் நண்பனை ஊக்கப் படுத்தல், பொருளா இல்லையா என்ற ஐயமாம். [22]பகைவனது படையைப் பொருள் பெருமைப்படுத்தல் என்பவற்றால் அழைத்தல் அழிவா இல்லையா என்ற ஐயமாம். வலிய சிற்றரசனையுடைய நிலத்தையேற்றல் பொருளா அழிவா என்ற ஐயமாம். [23]சிறந்தவனுடன் ஒன்று கூடி மேற்சேறல் அழிவா பொருளா என்ற ஐயமாம்.

[24]அவற்றுள் பொருளையத்தை அடைதல் வேண்டும்.

---

16 அழிவைக் கூறுகின்றார். தன்னால் ஏற்கப்படும் பொருள்காரணமாகவாதல், பிறர் மூலம் ஏற்கப்படும் பொருள்காரணமாகப் பிறரிடமிருந்தாதல் அச்சம் தருவன அழிவாம் என்பது.

17 முற்கூறப்பட்ட பொருளழிவுகளின் ஐயத்தைக் கூறுகின்றார். பொருள் உண்டா இல்லையா என்று பொருளையும் அதனின்மையையும் கொண்ட ஐயம் ஒன்று.

18 அழிவு உளதா இலதா என்று அழிவின் உண்மையின்மையைக் கொண்ட ஐயம் இரண்டாவதாம்.

19 பொருளையும் அழிவையுங் கொண்ட ஐயம் மூன்றாவதாம்.

20 அழிவையும் பொருளையுங் கொண்ட ஐயம் நான்காவதாம்.

21 இவற்றை முறையே உதாரணத்தால் விளக்குகின்றார். பகைவனுடைய நண்பனைப் பகைவனிடம் எதிர்க்கச் செய்தல் பொருளின் உண்மையின்மைகளைக் கொண்ட ஐயமாம் என்பது.

22 பகைவனது படையை, நிலம் முதலியவற்றைக் கொடுத்தலாலும் பெருமைப்படுத்தலாலும் அழைத்தல், அழிவின் உண்மையின்மைகளைக் கொண்ட ஐயமாம் என்பது.

23 வன்மைமிக்கவனுடன் ஒன்றுசேர்ந்து மேற்சேறற்குரியானை எதிர்த்துச் செல்லல் அழிவா அல்லது பொருளா என்ற ஐயமாம் என்பது. ஈண்டு முதலாவதில் அழிவைப் பற்றியும், இரண்டாவதில் பொருளைப் பற்றியும், மூன்றாவதில் பொருளின்மையைப் பற்றியும் ஐயமில்லை என்றறிதல் வேண்டும்.

24 மேற்கூறப்பட்ட ஐயங்களுள் பொருளை விஷயமாகக்கொண்ட (அதாவது அழிவை விஷயமாகக்கொள்ளாத) பொருளா இல்லையா என்ற

[25]பொருள் பொருட்டொடர்புள்ளது, பொருள் தொடர் பற்றது, பொருள் அழிவுத் தொடர்புள்ளது, அழிவு பொருட் டொடர்புள்ளது, அழிவு தொடர்பற்றது, அழிவு அழிவுத்தொடர் புள்ளது என்பன தொடர்புபற்றி ஆறின் குழுவாம்.

[26]பகைவனைக் களைந்து பின்னணியைப் பற்றுபவனையேற்றல் பொருட்டொடர்புள்ள பொருளாம்.

[27]பயன் கருதி நொதுமலனுக்குப் படையால் உதவுதல் தொடர்பற்ற பொருளாம்.

[28]பகைவனுடைய [29]உட்புறக் களைதல் அழிவுத் தொடர் புள்ள பொருளாம்.

ஐயத்தை அடைந்து அவ்வாறுள்ள இடத்தில் முயற்சியை ஏற்றல்வேண்டும் என்பது கருத்து.

25 இனிப் பொருள் அழிவு என்னும் இரண்டிற்கும் தனித்தனியே தொடர்ச்சியுள்ளதின் உண்மை யின்மைகளைக்கொண்டு, தொடர்ந்ததைக் காரணமாகக் கொண்ட அறுவகைத் தொகுதி உண்டாம் எனக் கூறுகின்ருர். 'அடையப்படாது பகைவனின் மிகுதியை ......' என்பது முதலாக இடர்ப்பொருளாகக் கூறப்பட்ட பொருளுக்கு அவ்வாருன பொருளுடன் தொடர்பு என்றும் அப்பொருளுடன் தொடர்பின்மை என்றும், 'தன்னிட மிருந்தாதல்......' முதலியனவாகக் கூறப்பட்ட அழிவுடன் தொடர்பு என்றும் மூவகையாம். அங்ஙனம் அழிவுக்குப் பொருளுடன் தொடர்பு என்றும், அத்துடன் தொடர்பின்மை என்றும், அழிவுடன் தொடர்பு என்றும் மூவகையாம். எனவே மொத்தம் அறுவகைப்படும் என்க.

26 அவற்றுள் முதலாவதை உதாரணத்தாற் கூறுகின்ருர்; மேற் சேறற்குரிய பகைவனைக் களைந்து, பின்னர் பின்புறத்துப் பகைவனை யேற்றல் பொருட்டொடர்புள்ள பொருள் என்ப.

27 பொருள் முதலியவற்றை வாங்கிக் கொண்டு தன் படையைக் கொடுத்து நொதுமலனுக்கு உதவுதல், பொருளோ அழிவோ உண்டாகாதா கலின் தொடர்பற்ற பொருளாம்.

28 அழிவுத் தொடர்புள்ள பொருளை உதாரணத்தாற் கூறுகின்ருர்.

29 ஈண்டு 'உட்புறக்களைதல்' என்பது 'பகைவனுக்கும் தலைவனுக் கும்......' என்பது முதலியனவாகக் கூறப்பட்ட (111-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க) 'மறைபவனைக் களைதல்' என்பதனைக் குறிக்கும். அவனைக் களை தலால் வலிய பகைவனுக்குத் தடையின்மையால், அக்களைதல் அழிவுத் தொடர்புள்ள பொருளாம். இதுகாறும் பொருளைப்பற்றிய முக்குழு கூறப் பட்டது.

[30]பொருள் படைகளாற் பகைவனையடுத்தவனுக்கு அருளுதல் பொருட்டொடர்புள்ள அழிவாம்.

[31]குறைந்த ஆற்றலுள்ளவனை ஊக்கப்படுத்தித் திரும்புதல் தொடர்பற்ற பொருளாம்.

[32]சிறந்தவனைக் கிளம்பச் செய்து திரும்புதல் அழிவுத் தொடர்புள்ள அழிவாம்.

[33]அதில் முன் முன்னுள்ளதையேற்றல் சிறந்ததாம். [34]காரியத்தின் வரையறை இவ்வாறும்.

---

30 இனி அழிவின் முக்குழுவைக் கூறுகின்றார்; பகைவனுடைய நாட்டை யடுத்துள்ள நாட்டில் இருப்பவனுக்குப் பகைவனுடன் போரில் பொருள் படைகளைக் கொடுத்துதவுதல், அக்காலத்தில் அழிவு உருவமாயினும் பிற்காலத்தில் பகைவனைக் களைதற்குக் காரணமாயிருத்தல் பற்றிப் பொருட்டொடர்புள்ள அழிவு என்றார்; பொருளின் முக்குழுவில் பொருட்டொடர்புள்ள பொருள் பற்றி முதலில் கூறப்பட்டது. அம்முறையில் ஈண்டு அழிவுத் தொடர்புள்ள அழிவு முதலில் கூறப்படவேண்டுமேயன்றி, பொருட்டொடர்புள்ள அழிவன்று எனின், அங்ஙனம் ஆயினும் அதில் முன்னுள்ளது 'ஏற்றற்குச் சிறந்தது' என்பதாகப் பின்னர்க் கூறப்படுதலை யநுசரித்து அதற்கேற்ற முறையில் முறைமாற்றிக் கூறினர், என்க.

31 நான் உனக்கு உதவி புரிவேன் என்று கூறிப் பகைவனை எதிர்ப்பதில் ஊக்கப்படுத்தி, பின்னர் தான் விலகுதல் பொருட்செலவுக்குக் காரணமாதல் பற்றி அக்காலத்து அழிவு உருவமாம். அதனால் பகைவனைக் களைதல் ஏற்படாமையால் பொருட்டொடர்பு இன்று. தாழ்ந்தவனுடைய கோபம் பயனற்றதாகலின் அழிவுத் தொடர்புமின்று. ஆகலின் தொடர்பற்றது என்றார்.

32 வன்மை மிக்கானை 'நான் உனக்கு உதவிபுரிவேன்' எனக்கூறிப் பகைவனுடன் போர்புரிதலை மேற்கொள்ளச் செய்து பின்னர்த் தான் திரும்புதல், பொருளழிவு முதலியவற்றிற்குக் காரணமாகலான் அக்காலத்து அழிவு உருவமாகவும், வலியவனுடைய கோபத்துக்குக் காரணமாதல் பற்றி வேறு அழிவுடன் தொடர்புள்ளதாகவுமிருத்தலால் அழிவுத் தொடர்புள்ள அழிவு என்றார்.

33 தொடர்புள்ள அறு குழுவினுள், பொருள்முக்குழுவில் முன் முன்னுள்ளதை ஏற்றற் குரியதாகவும் அழிவுமுக்குழுவில் பரிகரித்தற் குரியதாகவும் அறிந்தொழுகுதல் வேண்டும் என்பது கருத்து.

34 காரியம்—பொருள் அழிவுகள்; அவற்றின் இயல்பைக் கொண்டு வரையறை செய்தல் என்பது.

[35]நாற்புறமும் ஒருங்கே பொருள்விளைவு 'நாற்புறப்பொருள் வருவாய்' எனப்படும்.

பின்னணியைப் பற்றுபவனால் தடைப்பட்ட [36]அதுவே 'நாற்புறப் பொருளைய விளைவு' எனப்படும்.

[37]நண்பன் பின்னுள்ள நண்பன் என்பவர்களின் [38]உதவியால் [39]அவற்றிற்குச் [40]சித்தியாம்.

[41]நாற்புறமும் பகைவரிடமிருந்து அச்ச விளைவு 'நாற்புற வழிவுத் தோற்றம்' எனப்படும்.

[42]நண்பனால் தடைப்பட்ட அதுவே 'நாற்புற அழிவைய. விளைவு' ஆகும்.

[43]நிலையற்ற பகைவன், பின்னுள்ள நண்பன் என்பவரின் [44]உதவியால் அவற்றிற்குச் சித்தியாம். [45]பகைக் கலப்புள்ளதின் மாற்றமுமாம்.

---

35 இனி இடத்தைக் கொண்டு வரையறை செய்தலைப் பற்றிக் கூறுகின்றார். முன்னும் பின்னும் இரு மருங்கிலும் என நாற்புறமும் ஒரே காலத்தில் பொருட்டோற்றம், 'நாற்புறப் பொருள்வருவாய்' எனப்படும்.

36 அதுவே — நாற்புறமும் ஒருசமயத்தில் உளதாம் பொருட்டோற்றமே.

37 பொருள் விளைவு, பொருளைய விளைவு என்று முற்கூறப்பட்ட இரண்டிற்கும் பரிகாரத்தைக் கூறுகின்றார் ; நண்பன்—நண்டு முன்னுள்ள நண்பன்.

38 சந்தி செய்தலால் உதவுபவராகச் செய்தலால் என்பது.

39 அவற்றிற்கு—நாற்புறப் பொருள் விளைவு, நாற்புறப் பொருளைய விளைவு என்பவற்றிற்கு.

40 சித்தி—மாற்றச் செயல்.

41 ஒரே சமயத்தில் நாற்புறமும் பகைவரால் அச்சவிளைவு 'நாற்புற வழிவுத்தோற்றம்' எனப்படும் என்பது கருத்து.

42 தன் நண்பனல் எதிர்ச் செயல் புரியப்பட்ட 'நாற்புற வழிவுத் தோற்றமே' 'நாற்புற வழிவையம்' எனப்படும் என்பது கருத்து.

43 அவையிரண்டிற்கும் பரிகாரங் கூறுகின்றார். நிலையற்ற பகைவன்—அரண் அற்ற பகைவன்.

44 தனக்கு அநுகூலர்களாகச் செய்தலால் என்பது.

45 பகைவர் கலப்புள்ள இடர்க்குப் பரிகாரமாக முற்பிரகரணத்திற் கூறப்பட்டதையாதல் அவற்றிற்குப் பரிகாரமாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[46]இவ்வாற்றல் ஊதியம், பிறவாற்றாலும் ஊதியம் என்பது 'இருபுறப்பொருள் விளைவு' ஆகும். [47]இதிலும் நாற்புறப் பொருளிலும் [48]ஊதியக் குணங்களுடன் கூடிய பொருளை யேற்பதற்குச் செல்லல்வேண்டும். ஊதியக் குணம் சமமாயின், [49]முக்கியமானது, [50]அணிமையுள்ளது, [51]காலந்தாழ்த்தலற்றது, [52]குறைவுக்குக் காரணமாகவுள்ளது என்னுமிவற்றை யேற்றற்குச் செல்லுதல் வேண்டும்.

[53]இவ்வாற்றல் அழிவு பிறவாற்றல் அழிவு என்பது இருபுற வழிவின் விளைவாம். [54]இதிலும் [55]நாற்புற வழிவிலும் நண்பரிடமிருந்து சித்தியையடைய விரும்புதல்வேண்டும்.

[56]நண்பரில்லையாயின் பகுதிகளுள் [57]மிகச் சிறியதால் ஒருபுற அழிவையும் [58]மிகச் சிறந்ததால் இருபுற அழிவையும் மாற்று

---

46 இப்புறத்தாலும் மறுபுறத்தாலும் என்று இருபுறமாக ஊதிய விளைவு என்பது.

47 இதிலும்—இருபுறப் பொருள் விளைவிலும் என்பது.

48 'ஏற்றற்குரியது......' என்பது முதலாக 125-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்ட ஊதியக் குணங்களுடன் கூடிய பொருளை என்க. நாற்புறப் பொருள் விளைவிற்குப் பரிகாரம் முன்னர்க் (37—39-ஆம் குறிப்புக்களில்) கூறப்பட்டது. ஈண்டு மற்றொன்று கூறப்பட்டதென்க.

49 முக்கியமானது—மிகச் சிறந்த பயனை யுடையது.

50 அணிமை—இடத்தாலென்க.

51 காலந்தாழ்த்தலைப் பொறுதது; காலத்தாலணிமையிலுள்ளது.

52 எந்தப் பொருளை யேற்றபின் தனக்குத் தாழ்வு அகலுமோ, அவ்வூதியத்தைப் பெறுதற்குச் செல்லல் வேண்டும் என்பது.

53 இருபுற அழிவிடரைப் பற்றிக் கூறுகின்றார்.

54 அதற்கு மாற்றங் கூறுகின்றார்; இது—இருபுறவழிவு.

55 'நிலையற்ற பகைவன்...' என்பதனால் முன்னர் இதற்கு மாற்றங் கூறப்பட்டிருப்பினும் (43-ம் குறிப்பைக் காண்க) ஈண்டு மற்றொரு மாற்றங் கூறப்பட்டதென்ப.

56 நண்பனை மூலமாகக் கொண்ட இப்பரிகாரமே ஒருபுற அழிவிற்குமாம் என்னுங் கருத்துக்கொண்டு, நண்பரில்வழி இதற்கும், இருபுறவழிவு, நாற்புறவழிவு என்பவற்றிற்கும் மாற்றத்தைக் கூறுகின்றார்; நண்பரின் உதவி கிடைக்கப் பெறுவிடின் என்பது.

57 சிறியதால்—சிறிய பகுதியை விடுத்தலால்.

58 மிகச் சிறந்ததால்—மிகச் சிறந்த பகுதியை விடுத்தலால்.

தல் வேண்டும். நாற்புற அழிவை [59]மூலத்தினால் தடுத்தல் வேண்டும். [60]இயலாவிடின் [61]எல்லாவற்றையும் விட்டு விலகுதல் வேண்டும். [62]நளன் உதயணன் போன்று உயிர்வாழ்பவரால் மீண்டும் அடையப்படுதல் காணப்பட்டதன்றோ!

[63]இவ்வாற்றால் ஊதியம், பிறவாற்றால் அரசுத் தீங்கு என்பது இருபுறப் பொருளழிவின் விளைவாம். [64]இதில் அழிவை மாற்றுதற்குரிய பொருளை யடைதற்குச் செல்லல் வேண்டும். [65]இன்றேல் அரசுத் தீங்கைத் தடுத்தல் வேண்டும்.

[66]நாற் புறப் பொருளழிவு விளைவிற்கும் இதனால் விதி கூறியவாறாம்.

[67]இவ்வாற்றால் அழிவு பிறவாற்றால் பொருளையம் என்பது

---

[59] 'மூலந்தினால்' என்பது 'தானியத்தை விடுத்தலால்' என்னும் பொருளது.

[60] இயலாவிடின்—மிகச் சிறியது முதலியவற்றை விடுத்தலால் மாற்றம் புரிய இயலாவிடின்.

[61] தன்னைத் தவிர மற்ற எல்லாவற்றையும் விடுத்து, வேற்றிடத்திற்குச் சென்று தன்னைக் காத்துக் கொள்ளல் வேண்டும் என்பது.

[62] அவ்வாறு தன்னைக்காத்துக் கொள்ளுதலால், நாளடைவில் மீண்டும் தன் நிலையைப் பெறுதல் என்னும் பயன் விளையக்கூடும் என்று கூறுகின்றார்; இடர்க்காலத்தில் வேற்றிடம் சென்று முயன்று தன்னைக் காத்துக் கொண்டவர் மீண்டும் தன் பதவியைப் பெற்றார்கள் என்பது. நளன், உதயணன் முதலிய அரசர்களின் வரலாற்றால் அறியப்படுகிறதன்றோ என்பது கருத்து.

[63] ஒருபுறத்தில் ஊதியமும்' மறுபுறத்தில் தன்னுட்டைப் பகைவர் முற்றுகையிடலாகிற அழிவும் என்பது.

[64] இதற்கு மாற்றங் கூறுகின்றார்; ஏற்கப்படும் பொருள் மறுபுறத்தில் நிகழும் அழிவிற்கு மாற்றம் புரிதற்குப் பயன்படுமாயின், அப்பொருளை ஏற்றல் வேண்டும் என்பது கருத்து.

[65] அப்பொருள், அழிவைப் பரிகரித்தற்குரிய ஆற்றலற்றிருப்பின் ஊதியப் பேற்றை விடுத்து அரசுத் தீங்குக்கு மாற்றம் புரிய முயலுதல் வேண்டும் என்பது கருத்து.

[66] இருபுறப் பொருளழிவுகளின் விளைவிற்குக் கூறிய மாற்றத்தை நாற்புறப் பொருளழிவுகளின் விளைவிற்கும் மாட்டேற்றிக் கூறுகின்றார்.

[67] அழிவின் துணிபு, பொருளையம் என்பவற்றையுடைய இடரைப் பற்றிக் கூறுகின்றார்.

இருபுற அழிவுப் பொருளையம் ஆம். [68]அதில் முன்னர் அழிவை யும், அதன் முடிவில் பொருளையத்தையும் விலக்குதல் வேண்டும்.

[69]நாற்புறவழிவுப் பொருளையத்திற்கும் இதனால் விதி கூறியவாறும்.

[70]இவ்வாற்றாற் பொருள், பிறவாற்றால் அழிவையம் என்பது இருபுறப் பொருளழிவைய வினைவு எனப்படும்.

[71]நாற்புறப் பொருளழிவையத்திற்கும் இதனால் விதி கூறிய வாறும்.

[72]அதில் [73]பகுதிகளுள் முன் முன்னுள்ளதை அழிவையத்தி னின்றும் விடுவித்தற்கு முயலுதல் வேண்டும். [74]அழிவையத்தி

---

68 இதற்கு மாற்றங் கூறுகின்றார்; அழிவிற்கு மாற்றச் செயலை முதலாகச் செய்து அதன் பின் பொருளையத்திற்கு மாற்றம் புரிதல் வேண்டும் என்பது கருத்து.

69 இருபுறவழிவுப் பொருளையங்களையுடைய இடர்க்குக் கூறிய மாற்றத்தை நாற்புறவழிவுப் பொருளையங்களையுடைய இடர்க்கும் மாட்டேற்றிக் கூறுகின்றார்.

70 இனி அழிவையம் பொருட்டுணிபுகளையுடைய இடர் பற்றிக் கூறுகின்றார்.

71 இருபுறப் பொருளழிவையம், நாற்புறப் பொருளழிவையம் என்னுமிவையிரண்டும் இலக்கணம் மாற்றச் செயல் என்பவற்றால் ஒத்தன வாம் எனக் கூறுகின்றார்.

72 மாற்றங் கூறுகின்றார்; அதில்—இருபுறப் பொருளழிவையங்களை யுடைய இடரில்.

73 அரசு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்ற எழுவகைப் பகுதிகளுள் முன் முன்னுள்ள பகுதிகளைப் பின்னைய பகுதி களுக்கு முன் அழிவையத்தினின்றும் விடுவித்தற்கு முயலுதல் வேண்டும். முன்னுள்ளவற்றைக் குறித்துப் பின்னுள்ளவை சிறந்தனவல்லவாகலின், அவற்றின் அழிவைத் தடுத்தல் பின்னர் நிகழினும் அதிகக் குற்றமின் றென்பது கருத்து.

74 சிறந்தனவல்லாத பகுதிகளினழிவைத் தடுத்தற்குக் காலந்தாழ்த் தலால் அதிகத் துன்பம் நிகழாது என்பதையும், சிறப்புடைய பகுதிகளின் அழிவைத் தடுத்தற்குக் காலந் தாழ்த்தலால் அதிகத்துன்பம் நிகழும் என் பதையும் உதாரண முகத்தால் விளக்குகின்றார்.

விருக்கும் நண்பன் [75]சிறந்தவனுவன்; [76]படை அவ்வாறின்றும். [77]படையும் அவ்வாறும்; பொருள் அவ்வாறன்று [78]என்க.

[79]முழுவதையும் விடுவித்தலின்றேல் பகுதிகளின் அவயவங்களை விடுவித்தற்கு முயலுதல் வேண்டும் [80]ஆண்டு மக்கட் பகுதிகளுள் தீக்ஷ்ணன் பொருணசையுடையவன் என்பவரை விட்டு, அதிகமானது, அன்புடையது என்ற மற்றையவைதையும், பொருட் பகுதிகளுள் [81]திண்மையானது, பேருதவி புரிவது என்பவற்றையும், நட்பாக்கல் இருத்தல் பிரித்தல் [82]என்பவற்றால் மென்மையானவற்றையும், [83]மாறுபட்டவற்றால் வன்மையானவற்றையும் விடுவித்தற்கு முயலுதல் வேண்டும்.

[84]குறைவொப்பு மிகுதிகளுள் பின் பின்னுள்ளதை அடைய

---

75 அதிகமான துன்பத்திற்குக் காரணமாகாமைபற்றிச் சிறந்தவனுவான் என்பது.

76 அழிவையத்திலிருக்கும் படை அதிகமான துன்பத்துக்குக் காரணமாகலின் சிறந்ததன்றென்பது.

77 அழிவையத்திலிருக்கும் படை சிறந்ததென்பதும், அதிலிருக்கும் பொருள் சிறந்ததன்றென்பதும் கருத்து.

78 'என்க' என்பது இம்முறையில், முன் முன்னுள்ள மற்றையதும் அழிவையத்திலிருக்குங்கால் விடுவித்தற்குரியது என்பதும், பின் பின்னுள்ளவற்றிற்கு அதனின்மையை அறிந்து கொள்ளவேண்டும் என்பதும் அறிவித்தற் பொருட்டு.

79 பகுதிகளாவன—மக்களும் பொருள்களுமாம். அவையனைத்தையும் விடுவிக்க இயலாவிடின் அவற்றின் அவயவங்களை விடுவிக்க முயலுதல் வேண்டும்.

80 அதில் ஒரு விசேடத்தைக் கூறுகின்றார்; ஆண்டு—அவயவத்தை விடுவித்தலில்.

81 அதிக விலையுள்ளது.

82 எளிதான இவற்றால்.

83 நட்பாக்கல் முதலிய மூன்றுக்கு மாறுபட்ட, பகையாக்கல் மேற்சேறல் கூட்டல் என்பவற்றால்; இவ்வாற்றான் விடுவித்தற்குரியனவும் விடுவித்தற் கருவிகளும் கூறப்பட்டன என்க.

84 இனி விடுக்கு முறையைக் கூறுகின்றார்; சக்தி சித்திகளின் அழிவு குறைவாம். ஒப்பு—ஒத்தநிலை; இயற்கையிலிருத்தல். மிகுதி—சக்தி சித்திகளின் வளர்ச்சி. இவற்றுள் குறைவினின்று ஒப்பையும், அதனின்று மிகுதியையும் அடைய விரும்புதல் வேண்டுமேயன்றி குறைவினின்றும் மிகுதியை யடைய விரும்புதல் கூடாதென்பது கருத்து.

விரும்புதல் வேண்டும். [85]குறைவு முதலியவற்றின் பிரதி லோமத்தானுமாம். [86]பிற்காலத்தில் சிறப்பைக் காண்டல் வேண்டும்.

[87]இடத்தின் வரையறை இவ்வாறும்.

[88]இதனால், யாத்திரையின் தொடக்கம், இடை, இறுதி என்பவற்றில் பொருளழிவையங்களை [89]ஏற்றற்கும் விதி [90]கூறிய வாறும்.

[91]யாத்திரையின் தொடக்கத்தில் பொருளழிவையங்களுக்கு [92]இடைவிடாது தொடர்பு பற்றிப் பொருளையேற்றல் சிறந்த தாம். [93]பின்னணியைப் பற்றுபவர் நட்புப் படைகளைத் தடுத்

---

85 மிகுதியை யடைந்தவன் (முறை மாற்றத்தால்) மிகுதியிலிருந்து ஒப்பையும் ஒப்பிலிருந்து குறைவையும் அடைய விரும்பலாம் என்பது கருத்து.

86 பிரதிலோமத்தால் அடையவிரும்புதல், பிற்காலத்தில் விசேடமான தொரு மிகுதியை யடைதற் பொருட்டெனக் கூறுகின்றார்; பிரதிலோம மான இம்முறையால் பின்னர் ஏதேனுமொரு சிறந்த மிகுதியை யடை வேன் என்று அறிவானாயின், இம்முறையை விரும்பலாம் என்பது கருத்து.

87 இதுகாறும் இடத்தைக் காரணமாகக் கொண்ட இடர்களைப் பற்றிய வரையறை விளக்கிக் கூறப்பட்டதென்பது கருத்து.

88 இடத்தைக் காரணமாகக்கொண்ட இடர்க்குக் கூறிய விதியைக் காலத்தைக் காரணமாகக் கொண்ட இடர்க்கும் மாட்டேற்றால் இயைத்துக் கூறுகின்றார். இதனால்—இடத்தைக் காரணமாகக் கொண்ட இடருக்குக் கூறப்பட்ட மாற்றத்தினால்.

89 ஏற்றற்கும் மாற்றம் புரிதற்கும் என்க.

90 நாட்டைப்பற்றியனவும் நாற்புறமும் ஒருங்கே பொருள் விளைவு முதலியனவுமான இடர்களும், பின்னணியைப் பற்றுபவன் பின்னுள்ள நண்பன் முதலியவர்களை வயப்படுத்தல் முதலிய இவற்றின் மாற்றங்களும், யாத்திரையின் தொடக்கம் இடை இறுதிகளில் ஒத்தன என்பது கருத்து.

91 யாத்திரையின் தொடக்கத்தில் ஒருங்கே பொருள் முதலியன உண் டாயின் செயற்பாலதனைக் கூறுகின்றார்.

92 ஒன்றற்கொன்று இடையின்றிச் சேர்ந்து உண்டான நிலையில் என் பது கருத்து.

93 பின்னணியைப் பற்றுபவர் பகைவனது நட்புப்படைகளைத் தடுத் தற்குச் சார்பாயிருத்தல்பற்றிப் பொருளுக்குச் சிறப்புளதாம் என்பது கருத்து.

தற்கும் கேடு செலவு [94]அயலிட வாழ்க்கை, [95]திரும்பப் பெறுதற் குரியது [96]மூலக் காவல் [97]என்னுமிவற்றிற்கும் (இஃது) ஆம். [98]அவ்வாறே தன் நிலத்திலிருப்பவனுக்கு அழிவையங்கள் பொறுத்தற்குரியனவாம்.

[99]யாத்திரையின் இடையில் பொருளழிவையங்களை யேற்றற் கும் இதனால் விதி கூறியவாறும்.

[100]யாத்திரையின் இறுதியிலாயின் துன்புறுத்தற்குரியவன் களைதற்குரியவன் என்னுமிவர்களைத் துன்புறுத்தியாதல் களைந்தா தல் பொருளை யடைதல் சிறந்தது. அழிவும் ஐயமும் பிறரால் நீங்கச்சம் காரணமாக அவ்வாறின்று.

[101]கூடித் தொழில் புரிபவருள் [102]முன் செல்லாதவனுக்

---

94 அயலிட வாழ்க்கை என்பது ஈண்டு நெடுவழிச்செலவு என்னும் பொருளது.

95 மேற்சேறற்குரியவனாற் கவரப்பட்டதும் அவனிடமிருந்து திரும்பப் பெறுதற்குரியதுமான நிலம் முதலியன.

96 மூலம்—தானியம்.

97 என்னுமிப்பயன் விளையுமிடத்துப் பொருளை யேற்றல் சிறந்தது எனக்கொள்க.

98 யாத்திரையின் தொடக்கத்தில் தன் நாட்டிலுள்ள வெற்றிவிருப்ப முள்ளவனுக்குப் பொருளை எளிதிற் பெறுவதுபோன்று அழிவு ஐயங்களும் எளிதிற் பெறுதற்குரியன என்பது கருத்து.

99 பின்னணியைப் பற்றுபவன் பகைவனுடைய நண்பன் என்னும் இவர்களைத் தடைசெய்தல் முதலிய பயன் பொருளழி வையங்களுக்கு யாத் திரையின் தொடக்கத்தில் போல் இடையிலுமுண்டாதலால் அவற்றை யேற்றல் ஒத்தது எனக் கூறுகின்றார்.

100 அற்றத்தைப் பார்க்கும் பகைவனிடமிருந்து தீங்கு நிகழக்கூடிய தாகலின், யாத்திரையின் இறுதியில் களைதற்குரியவன் துன்புறுத்தற்குரிய வன் என்பவர்களைக் களைந்தும் துன்புறுத்தியும் பகைவன் நாட்டிலிருக்கும் வெற்றிவிருப்பமுள்ளவனுக்கு அடைதற்குரியது பொருளே யன்றி யழி வாதல் ஐயமாதல் இன்று என்பது கருத்து.

101 முற்கூறிய விதி, கூடித் தொழில்புரிபவருள் தலைவனுக்குரியது. இனித் தலைவனல்லாதானைப் பற்றிக் கூறுகின்றார்.

102 முன்செல்லாதவன்—தலைவனல்லாதவன்.

காயின் [103]வரையறையின்றிச் செல்லுதல் பற்றி யாத்திரையின் இடை இறுதிகளில் அழிவையங்களை விலக்குதல் சிறந்ததாம்.

[104]பொருள் அறம் இன்பம் எனப் [105]பொருள்முக் குழுவாம். [106]அதில் முன் முன்னுள்ளதை யேற்றல் சிறந்ததாம்.

[107]அழிவு மறம் துன்பம் என அழிவின் முக்குழுவாம். அதில் முன்னையது முன்னையது விலக்குதற்குச் சிறந்தது.

பொருள் அழிவு என்றும், அறம் மறம் என்றும், இன்பம் துன்பம் என்றும் ஐய முக்குழுவாம். [108]அதன் பிற்பகுதியின் சித்தியில் முற்பகுதி ஏற்றற்குச் சிறந்தது.

[109]காலத்தின் வரையறை இவ்வாறும். [110]இடர்கள் இங்ஙனமாம்.

---

[103] தலைவன் பொறுப்புள்ளவனாதல் பற்றி, வேற்றிடம் செல்லுதற்கு இடையூற்றை யுடையவனாவான். எனவே, அவனுக்கு வேற்றிடம் செல்ல வியலாவிடினும், தலைவனல்லாதவன் தடையின்றி வேற்றிடம் செல்லுதல் கூடும் என்பது.

[104] பொருள் அழிவு ஐயங்களுக்குத் தனித்தனியே முக்குழுவையும், குழுவிலடங்கியவற்றிற்கு ஒன்றுக்கொன்றுளவாம் சிறப்பையுங் கூறுகின்றார்.

[105] ஏற்றற்குரிய முக்குழுவாம்.

[106] ஏற்றற்குரிய முக்குழுவினுள் இன்பத்தைவிட அறத்தை ஏற்றலும், அறத்தைவிடப் பொருளை ஏற்றலும் சிறந்ததென்பது.

[107] பரிகரித்தற்குரிய முக்குழுவைப்பற்றிக் கூறுகின்றார்.

[108] அது—ஐயமுக்குழு. ஈண்டுக் குழுவினுள் அடங்கியன மூன்றும்: அவையாவன—பொருள் அழிவு என்றவிரு பகுதிகளைக்கொண்டதும், அறம் மறம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதும், இன்பம் துன்பம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதும் என்பன. இவற்றுள் ஒவ்வொன்றிலும் பிற்பகுதிகளான அழிவு முதலியவற்றிற்குப் பரிகாரம் செய்யப்பட்டபின், பொருள் முதலிய முற்பகுதிகளை யேற்றல் சிறந்ததாம் என்பது கருத்து.

[109] யாத்திரையின் தொடக்கம் முதலிய காலத்தைச் சார்ந்த பொருளழிவு முதலியவற்றிற்குரிய வரையறை விளக்கப்பட்டதென்பது.

[110] இடர்களைச் சார்ந்த விதிகள் விளக்கிக் கூறியனவாம் என்பது. இனி, 'அவற்றைக்......சித்திகள்' என்ற அடுத்த பிரகரணம் கூறப்படும். அவற்றை—முன் 9, 10, 11-ஆம் பிரகரணங்களிற் கூறப்பட்ட இடர்களை. உபாயம்—இன்சொல் முதலியன. விகற்பம்—உபாயங்களைப் பிரயோகிக்கும்

[111]அவற்றின் சித்தியானது, புதல்வர் உடன் பிறந்தோர் உறவினர் என்பவரிடம் இன்சொல் கொடைகளினுலும், [112]நகர மக்கள், நாட்டு மக்கள், படைகளின் தலைவர் என்போரிடம் [113]கொடை வேறுபடுத்தல்களாலும், சிற்றரசர் காட்டில் வாழ்வோர் என்பவர்பால் [114]வேறுபடுத்தல் ஒறுத்தல்களாலும் உரிய சித்தியாகும்.

[115]இது [116]அநுலோமம் ஆம். [117]மாறுபடின் [118]பிரதி

வேறுபாடு. சித்திகள்—எதிர்ச் செயல்கள். முற் பிரகரணத்தில் நண்பர் முதலியவர்களை வயப்படுத்துதல் கருவியாகக் கூறப்பட்டது. வயப்படுத்தற் குரிய உபாயங்கள் ஈண்டுக் கூறப்படுகின்றன வாகலின் பிரகரண வியைபு புலனுதலறிக.

111 அவ்வுபாயங்களைப் பொருளுக்கேற்ப வரையறுக்கின்ருர். இடர்களின் எதிர்ச் செயல்களாக முற்கூறப்பட்டவை, புதல்வர் முதலியோர்க் காயின் இன்சொல் கொடைகளால் நிகழ்த்துதற்குரியன என்பது. அவர்கள் இயல்பாகவே அன்புடையவராகலின் பணிவுடையர் என்பது பற்றி அவர்களிடம் ஏனைய உபாயங்களைச் செலுத்தல் முறையன்றென்பது கருத்து.

112 நகரத்தலைவர், நாட்டுத் தலைவர், படைத்தலைவர் என்பவர்பால் என்பது ; நகரத்து மக்கள் நாட்டு மக்கள், படை, அரசியற்றலைவர் என்பவர்பால் எனினுமாம்.

113 அவர்களுக்கு இயற்கையில் அன்பில்லை யாகலின், இன்சொல், ஒறுத்தல் என்பவற்றைச் செலுத்துதல் கூடாது என்பது கருத்து.

114 இயற்கைப் பகைவர்பால் இன்சொல் கொடை என்பவற்றைச் செலுத்தல் முறையன்று.

115 இது—இன்சொல் முதலியவைமூலமாக வரையறையுள்ள எதிர்ச் செயல்.

116 அநுலோமம்—வரிசையின் வரையறையுள்ளது ; பொதுவாகத் தத்தம் குணங்களை மேற்கொள்ளுதலாகிய முறையை யுடைய புதல்வர் முதலியவர்களைப் பற்றியது.

117 புதல்வர் முதலியவர்களுக்கு உரிய முறையாகிற அநுலோமமாந் தன்மையின்றேல் என்பது.

118 வரையறையற்ற முறையை யுடைய எதிர்ச் செயல்களாம்; தீய கருத்துடைமைபற்றிப் பிரதிலோமமாந் தன்மையுடைய புதல்வர் முதலியோரிடமும் ஒறுத்தல் முதலியவற்றைச் செலுத்துதலாற் சித்தியை யடைய விரும்புதல் வேண்டும் என்பதும் புகழ்தற்குரிய குணங்களுடைமை காரணமாகப் பகைமையற்ற செயல்களை யுடையராதல் பற்றி அநுகூலரான சிற்றரசர்பாலும் இன்சொல்லை மேற்கொண்டும் சித்தியை யடைய விரும்புதல் வேண்டும் என்பதும் கருத்து.

லோமமாம். [119]நண்பர் பகைவர்களிடம் சித்தி கலப்புள்ளதாம். [120]உபாயங்கள் ஒன்றுக்கொன்று சாதனங்களன்றோ!

[121]பகைவனுடைய ஐயுறப்பட்ட அமைச்சரிடம் இன்சொல்லை மேற்கொள்ளல், எஞ்சியவற்றைத் தடுக்கின்றது. [122]வெறுக்கத்தக்க அமைச்சர்பால் கொடையும், [123]கூடியவர்பால் வேறுபடுத்தலும், வலியவர்பால் [124]ஒறுத்தலுமாம் என்க.

[125]இடர்களுக்கு வன்மை மென்மைகளின் தொடர்பு காரணமாக [126]வரையறை, விகற்பம், சேர்க்கை என்பன உண்டாகின்றன.

[127]இவ் வுபாயத்தினாலேயே யன்றிப் பிறிதொன்றாலின்று என்பது வரையறையாம்.

---

[119] நண்பரும் பகைவரும் கருத்துமாறுபாட்டை யடைந்தபோது, அந்தந்த மாறுபாட்டைப் பரிகரித்தற்கேற்ற எல்லாவகை உபாயங்களையும் தனித்தோ கலந்தோ வரையறையின்றிச் செய்தல் வேண்டும்.

[120] ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு உபாயங்களைச் சேர்த்துச் செய்யுங்கால் ஒரு பயனைக் குறித்துக் கருவியாந் தன்மை அவற்றுக்குளதாமியல்பினைக் கூறுகின்றார்; உபாயங்கள் ஒன்றுக் கொன்று முரண் பட்டனவாயினும் ஒருகாரியத்தை நிறைவேற்றும்போது அவை ஒன்றுக் கொன்று துணைக்காரணங்களாகின்றன என்பது கருத்து.

[121] உபாயங்களைப் பற்றிய ஒருவகை வரையறையைக் கூறுகின்றார்; பகைவனைச் சார்ந்தவரும் கோபம் முதலிய குற்றங்காரணமாகத் தீயவரென ஐயுறப்பட்டவருமான அமைச்சர்பால் இன்சொல்லை மேற் கொள்ளின், மற்றைய கொடை முதலியன விலக்கப்படுவனவாம். இன்சொல்லாலேயே காரியம் நிறைவேறுமானதால் எஞ்சியவற்றை விரும்புதல் வேண்டாவாம் என்பது.

[122] பகைவனுடைய' என்பதை முன்னர்க்கூட்டுக.

[123] கூடியவர்—குழுவினர்.

[124] ஒறுத்தலேயாம் என்ப; இங்ஙனம் பொருளைப் பற்றிய உபாயங்களின் வரையறை கூறிமுடிக்கப்பட்டது.

[125] இடர்களின் வன்மை மென்மை காரணமாக உபாயங்களுக்கு வரையறை முதலியவை உண்டாகின்றன எனக்கூறுகின்றார்.

[126] வரையறை முதலியவற்றின் விளக்கம் அடுத்துக் கூறப்படும்.

[127] இவ்வுபாயத்தால் மட்டும் சித்தியுண்டாகுமேயன்றி மற்றையதால் உண்டாகா என்பது வரையறை எனப்படும் என்பது கருத்து; பின்னுள்ள இடங்களிலும் 'சித்தி' என்ற சொல்லை வருவித்துக் கொண்டு இங்ஙனம் பொருள் கொள்ளல் வேண்டும்.

இதனாலாதல் மற்றையதாலாதல் என்பது விகற்பமாம்.

இதனாலும் மற்றையதாலும் என்பது சேர்க்கையாம்.

[128]அவற்றுள் [129]ஒன்றுந் தன்மையையுடைய செயன்முறைகளும் [130]மூன்றுந் தன்மையையுடைய் செயன்முறைகளும் நான்காகும். இரண்டாம் தன்மையையுடைய செயன் முறைகள் ஆறும், நான்காம் தன்மையையுடைய செயன்முறை ஒன்றும் என உபாயங்கள் பதினைந்தாம். [131]பிரதிலோமங்கள் அவ்வளவாம்.

[132]அவற்றுள் ஒருபாயத்தாலுண்டாம் சித்தி ஒரு சித்தியும்,

---

128 வரையறை முதலியவற்றின் தொடர்புகாரணமாக உபாயங்களுக்குப் பிரிவினைக் கூறுகின்றார்.

129 எந்தச் செயலில் ஒன்றுந் தன்மையும் இரண்டாம் தன்மையின்மையும் உளவோ அச்செயல் நான்கு வகையாம்; இன்சொல் முதலிய நான்கினையும் தனித்தனியே செலுத்துதல் என்ற வரையறையுள்ள செயல்முறை நான்காம் என்க.

130 மூன்று உபாயங்கள் சேர்ந்த பிரயோகங்கள் நான்காம். அவையாவன இன்சொல் கொடை வேறுபடுத்தல் என்பதும், இன்சொல் கொடை ஒறுத்தல் என்பதும், இன்சொல் வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பதும், கொடை வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பதுமாம். இரண்டு உபாயங்கள் சேர்ந்தவை அறுவகையாம். அவையாவன :—1–2, 1–3, 1–4, 2–3, 2–4, 3–4, என்பனவாம். எண்களால் அவ்வரிசையிலுள்ள உபாயங்கள் குறிக்கப்படுகின்றன. அதாவது—1. இன்சொல், 2. கொடை, 3. வேறுபடுத்தல், 4. ஒறுத்தல் என்பது. நான்கு உபாயங்கள் சேர்ந்தது ஒன்று. எனவே பதினைந்து வகையான உபாயங்களாயின. இவை அநுலோம முறையில் வகைபடச் செலுத்தற்குரியன.

131 பிரதிலோம முறையிற் பயன்படுத்தப்பட்ட போது முன்போல் பதினைந்து வகையாம் எனக் கூறுகின்றார். அஃதாமாறு :—4,3,2,1 என்று தனித்தனியாகப் பிரயோகித்தலால் நால்வகைகளாம். 4–3–2, 4–3–1, 3–2–1, 4–2–1 என்று மூன்று சேர்ந்தவை நான்காம். 4–3, 4–2, 4–1, 3–2, 3–1, 2–1, என இரண்டு சேர்ந்தவை அறுவகைகளாம். ஒறுத்தல் முதலிய நான்கையும் கொண்டது ஒன்று. ஆகப் பிரதிலோம வரிசையையுடையவை பதினைந்தாயின.

132 உபாயங்கள் தனித்தும், இரண்டு, மூன்று, நான்கு சேர்ந்தும் பிரயோகித்தல் பற்றி நால்வகைப்பட்டதின் காரணமாக அவற்றால் சித்திக்கும் எதிர்ச் செயல்களுக்கும் நால்வகையாந் தன்மை யுண்டாம் எனக் கூறுகின்றார்.

இரண்டால் இரு சித்தியும், மூன்றால் மூன்று சித்தியும், நான்கால் நான்கு சித்தியும் ஆம் என்க.

[133]அறத்துக்குக் காரணம் பொருள் ஆகலானும் [134]இன்பத்தைப் பயனாகக் கொண்டதாகலானும் [135]அறம் பொருள் இன்பங்களின் தொடர்புள்ள பொருட் சித்தி எல்லாச் சித்தியுமாம்.

[136]சித்திகள் இவ்வாறும்.

[137]தீ, நீர், நோய், [138]பிரமாரம், [139]ஓட்டம், வறுமை, [140]ஆசுரத்தோற்றம் என்பன [141]தெய்வத்தால் நிகழும் இடர்களாம்.

[142]தெய்வம் அந்தணர் என்போரின் வணக்கத்தால் அவற்றிற்கு மாற்றமாம்.

சுலோகம்

பெயலின்மை, மிகுபெயல், ஆசுரத்தோற்றம் என்னுமிவற்

---

133 எதிர்ச் செயல்களாம் சித்திகளாக ஈண்டு விரித்துக் கூறப்பட்டவற்றால் விளையும் பல்வகைப்பட்ட ஊதியங்களுள் பொருள் ஊதியமே சிறந்தது என அறிவுறுத்துகின்றார்.

134 இன்ப நுகர்ச்சிக்குச் சாதகமாயிருத்தலாலும் என்பது. உம்மையால் பொருளுக்குச் சாதகமாயிருத்தல் பெற்றாம் என்ப.

135 அறம் முதலிய தொகுதியின் பேறு உருவமான பயனை விளைவிக்கும் பொருளுடைய விளைவே எல்லாப் பொருளின் விளைவாம் என்பது. அறம் பொருள் இன்பம் என்ற முப்பொருளைத் தவிர இம்மையில் பெறுதற்குரியது பிறிதில்லை யென்பது கருத்து.

136 அபாயத்தாலுண்டாம் மக்களிடர்களுக்குரிய எதிர்ச் செயல்கள் இங்ஙனம் கூறி விளக்கப்பட்டன என்பது கருத்து.

137 தெய்வத்தால் நிகழும் இடர்களைக் கூறுகின்றார்.

138 பிரமாரம்—கொள்ளை நோய்.

139 ஓடுதல்—நாட்டினின்றும் ஓடுதல்.

140 எலி முதலியவற்றின் மிகுதோற்றம் என்ப.

141 தெய்வம்— முற்பிறப்பில் ஈட்டிய வினை.

142 தெய்வத்தால் நிகழும் இடர்களுக்குக் கடவுள் வழிபாடு, அந்தணரைப் பேணுதல் என்பவை எதிர்ச் செயல்களாம் என்பது கருத்து.

றிற்கு [143]அதர்வத்தைச் சார்ந்த செயலும், [144]சித்தர்களால் தொடங்கப்பட்ட செயலும் சித்திகளாம்.

ஒன்பதாம் அதிகரணம் 11, 12-ஆம் பிரகரணங்கள் 'பொருளழிவையங்களோடமைந்த இடர்கள்', 'அவற்றைக் களையும் உபாய விகற்பங்களாலுண்டாம் சித்திகள்' என்னும் நூற்றிருபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாம் அதிகரணம் முற்றிற்று.

---

143 அதர்வ மறையிற் கூறிய சாந்திகன்மம் முதலியன.

144 தவத்தினால் சித்திபெற்ற பெரியோரின் சாந்திகன்மங்களும் எதிர்ச் செயல்களாம் என்பது கருத்து.

பத்தாம் அதிகாணம்—[1]போர்நிகழ்ச்சி

முதற் பிரகரணம்—[2]பாசறையமைத்தல்

நூற்றிருபத்தொன்பதாம் அத்தியாயம்

மனை நூல்வல்லாராற் புகழப்பட்ட மனையில், தலைவன், தச்சன், [3]முக்காலமுணர்ந்தோன் என்னும் [4]இவர்கள் வட்டமாகவாதல் நீளமாகவாதல் நாற்கோணமுள்ளதாகவாதல் [5]நிலத்திற்கேற்றதாகவாதல் [6]நான்கு வாயிலுள்ளதும் [7]ஆறு வழிகளையுடையதும் ஒன்பது பிரிவுகளையுடையதும் [8]அச்சம் இருத்தல் என்பன காரணமாக அகழ், மதிற்சுவர்க்கு ஆதாரமான அடிப்படை, மதில், கோபுரம், [9]படைவீடு என்னுமிவற்றுடன் கூடியதுமான பாசறையை யமைத்தல் வேண்டும்.

[10]நடுவில் ஒன்பதாம் பகுதியில் நூறு விற்கிடை நீளமுள்ள

129-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இவ்வதிகரணம் போரைப்பற்றிய செய்திகளைக் கூறுவதாகும். வெற்றிவிருப்பமுள்ளவன், ஆற்றல் இடம் காலம் என்பவற்றின் வன்மை மென்மைகளை அறியுமுகமாக உட்புறவிடர்களுக்கு ஏற்ற மாற்றச்செயல்களைச் செய்த பின்னர் மேற்சென்று போர்புரியவேண்டிய நிலையில் போருக்கு முன்னும் பின்னும் செய்தற்குரிய செயன்முறைகள் இவ்வதிகரணத்திற் கூறப்படும்.

[2] பாசறை—பகைமேற் சென்ற படை தங்குமிடம்; இது போர்க்களத்துக்கணிமையில் அமைத்தற்குரியதாம்.

[3] பாசறை யமைக்கத் தொடங்குதற்குரிய நன்னாளைத் துணிபவன்.

[4] இவர்கள் ஒன்றுகூடி என்பது.

[5] அமைத்தற்குரிய நிலத்தின் தகுதிக்கேற்ப இவைதவிர வேறு வகையாகவாதல் என்பது.

[6] கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும் என்பது.

[7] இதன் விரிவு 25-ஆம் அத்தியாயத்திலுளது.

[8] பகைவர் தாக்குதல் கூடும் என்ற அச்சம் நேர்ந்த நிலையிலும், பல நாள் தங்கவேண்டிய அவசியம் நேர்ந்த நிலையிலும், அகழ் முதலியவற்றுடன் கூடியதாகப் பாசறையை யமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[9] படைவீடு—மதிற் சுவர்மேலுள்ளது.

[10] மனை நிலத்தின் நடுப்பகுதியிலுள்ள இடத்தில் என்பது.

தும் [11]அரை மடங்கு அகலமுள்ளதுமான [12]அரசனுக்குரிய இடத்தையும், [13]இதன் மேற்குப்பகுதியில் அந்தப்புரத்தையும், [14]அணிமையில் உவளக வினைஞர் படையையும் அமைத்தல் வேண்டும். [15]கிழக்கே [16]இருத்தற்குரிய இடத்தையும், தெற்கே [17]பொருள் [18]கட்டளை [19]காரியம் என்னுமிவற்றைச் செய்தற்குரிய இடத்தையும் இடப்புறமாக அரசன் ஏறிச் செல்லுதற்குரிய யானை குதிரை தேர் என்பவற்றின் இடத்தையும், [20]அதையடுத்து நூறு விற்கிடை இடைவெளியுள்ளனவாக [21]வண்டி [22]கிளைத் தொகுதி [23]தூண் மதில் என்னுமிவற்றாலாய [24]நான்கு சுற்றுக்களையும் [25]அமைத்தல் வேண்டும். [26]முதலாவதில் கிழக்கே மந்திரி புரோகிதர்களையும் வலப்புறத்தில் [27]உணவுப் பொருட்சாலை அடுக்களை என்பவற்றையும் இடப்புறத்தில் குப்பியப்பொருள் படைக்கலம் என்பவற்றின் நிலையத்தையும் அமைத்தல் வேண்டும். [28]இரண்டாவதில் மூலப்படை கூலிப்படை என்பவற்றிற்கும், குதிரை தேர்களுக்கும் சேனைத்தலைவனுக்குமுரிய இடத்தையும்,

---

11 அரைமடங்கு—ஐம்பது விற்கிடையளவு.

12 அரசன் வசித்தற்குரிய இடத்தையும் என்பது.

13 இது—அரசன் வசித்தற்குரிய இடம்.

14 அந்தப்புரத்தின் அணிமையில் அதைக் காக்கும் படை அமைதல் வேண்டும் என்க.

15 அரசன் வசிக்குமிடத்திற்கு முன்பக்கத்தில் என்பது.

16 இருத்தல்—அரசனைக் காண்டற்கு வருபவர் தங்குதல்.

17 பொருள்—பொன் மணி முதலியன.

18 கட்டளை—வரவு செலவுக் கணக்கு.

19 காரியம்—வழக்கு முதலியவற்றைப் பற்றித் துணிதல்.

20 அரசன் வசித்தற்குரிய இடத்துக்குப் புறத்தில் என்பது.

21 வண்டிகளாலாய கோட்டைபோன்ற வடிவமுள்ள ஒரு சுற்றுப் புறத்தையமைத்தல் வேண்டும் என்பது.

22 முட்களையுடைய மரக்கிளைகளாலாயது என்பது.

23 தூண்—மரங்கள்.

24 ஒவ்வொன்றுக்குமிடையே நூறு விற்கிடை இடைவெளியிருத்தல் வேண்டும் என்பது.

25 காவல் குறித்து அமைத்தல் வேண்டும் என்க.

26 முதலாவது—வண்டிகளாலாகிய சுற்று.

27 தானியம் முதலியவற்றை வைக்குமிடம்.

28 இரண்டாவது—மரக்கிளைகளாலாகிய சுற்று.

[29]மூன்றாவதில் யானைகள் குழு பாசறை யமைப்போன் சிறுபகைகளை தற் றலைவன் என்பவர்க்கும், [30]நான்காவதில் பணியாளர் [31]சேனைத்தலைவன் [32]தன் மக்களாலடையப்பட்ட [33]நட்புப்பகைக் காட்டுப்படை என்பவற்றிற்கும் உரிய இடத்தையும் அமைத்தல் வேண்டும். [34]பெருவீதியின் அணிமையில் வணிகர் வேசையர் என்பவரும், [35]வெளியில் வேடர் ஞமலிக்கூட்டத்தார், [36]வாச்சியம், தீ இவற்றையுடையவர், [37]ஒற்றர் காவலர் [38]என்பவரும் [39]இருத்தற்குரியர்.

[40]பகைவர் வரும் வழியில் கிணறு, வஞ்சகக்குழு, முள்ளுடையவை என்பவற்றை யமைத்தல் வேண்டும். [41]பதினெட்டுப் பிரிவுகளுக்கும் [42]காவலர் மாறி மாறி முறைப்படி காத்தலைச் செய்தல்

---

[29] தூண்களாலாயதில் என்பது.

[30] மதிலாலாகிய சுற்றில்.

[31] சேனைத் தலைவன்—ஈண்டு சேனைத்தலைவர் பதின்மர்க்குத் தலைவன்.

[32] தனக்கு நம்பிக்கை வாய்ந்த தன் மக்களைத் தலைவராகக் கொண்ட என்பது.

[33] நண்பர் படை, விலைக்கு வாங்குதல் முதலியவற்றால் அடையப்பட்ட பகைவர் படை, காட்டுப்படை என்பன இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[34] பெருவீதி—அரசவீதி.

[35] வெளியில்—எல்லாவற்றிற்கும் வெளிப்புறத்தில்.

[36] பகைப்படை வருவதாகத் தங்களுக்குப் புலப்பட்டதும் வாச்சிய ஒலியினாலும், தீயை மூட்டி அப்புகையினாலும் அச்செய்தியை அரசன் முதலியவர்க்கு அறிவிப்பவர் என்பது.

[37] ஒற்றர்—ஆயர் முதலியோரின் வேடம் பூண்டவர்.

[38] இவர்கள், பகைவனுடைய ஒற்றர்களைப் பிடித்தற் பொருட்டென்ப.

[39] இருத்தல்—அமைக்கப்படுதல்.

[40] பகைவர் வருதல் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட வழியெதுவோ, அவ்வழியில் புல் முதலியவற்றால் மூடப்பட்ட கிணறுகளையும் பள்ளங்களையும், முட்களையுடைய பலகைகளையும் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[41] மூலப்படை முதலிய அறுவகைப் படைக்கும் தனித்தனியே 'பதிகன்', 'சேனாபதி', 'நாயகன்', என மும்மூன்று தலைவருண்மையால் படை பதினெட்டு வகையாயின என்பது.

[42] பகைவரால் நிகழக் கூடிய வேறுபடுத்தலை விலக்குதற் பொருட்டுத் தலைவரை மாற்றி மாற்றி யமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

வேண்டும். [43]ஒற்றரை யறிதற்பொருட்டுப் பகலிலும் இயங்கச் செய்வித்தல் வேண்டும்.

[44]பூசல் [45]கட்குழு [46]சூது என்னுமிவற்றைத் [47]தடுத்தலையும் [48]இலச்சினைக் காவலையும் செய்தல் வேண்டும்.

[49]கட்டளை பெறாது படையினின்று திரும்பிய படைக்கல முள்ளவனைப் பாழிடக்காவலன் தொடர்தல் வேண்டும்.

சுலோகம்

[50]பாசறை யமைப்பவன் [51]முதலில் தச்சன் பணியாளர் களுடன் செல்லல் வேண்டும். [52]வழியில் காவல், நீர்நிலை முதலியவற்றை நன்கு செய்தல் வேண்டும்.

பத்தாம் அதிகரணம் முதற் பிரகரணம்
'பாசறை யமைத்தல்' என்னும் நூற்றிருபத்தொன்பதாம்
அத்தியாயம் முற்றிற்று.

---

43 பகைவரது ஒற்றரை யறிதற்காகப் பகலில் சஞ்சரித்தற்குரிய ஒரு நியமத்தையும் செய்தல் வேண்டும்.

44 பூசல்— ஒருவர்க் கொருவர் கருத்து வேறுபடுதல்.

45 கட்குழு—கட் குடித்தலில் உண்டாம் உவகைக் குழு.

46 சூது—சொக்கட்டான் முதலியவற்றால் நிகழ்வது.

47 தடுத்தல்—படைகளுக்கு நேராமல் தடுத்தல்.

48 உட்புகுதல், வெளியிற் செல்லுதல் என்பவற்றில் அநுமதிக்கு அடையாளமான அரசாங்க இலச்சினையைக் காட்டும் வரையறையை அநுசரித்தலையும் செய்தல் வேண்டும் என்பது.

49 போரிலிருந்து திரும்பி வருதற்குரிய உடன்பாட்டுக் கட்டளை பெறாது, போர் குறித்துச் சென்ற சேனையிலிருந்து திரும்பித் தானியத்தை யடைந்து படைக்கலத்தால் உயிர்வாழ்பவனை, அங்கங்களுடன் கூடிய அரசனில்லாத தானியத்தைக் காப்பவன் பிடித்தல் வேண்டும் என்பது கருத்து.

50 பாசறையமைப்பவன்—ஈண்டு சிறுபகைகளைதற் றலைவன் என்பர் உரையாசிரியர்.

51 சேனை முதலியவற்றுடன் அரசன் புறப்படு முன்னர் என்பது.

52 முதலில் செல்லுதலால் உண்டாம் பயனைக் கூறுகின்றார். வழியில் மேடு பள்ளங்களைச் சமமாக்கல், முள் முதலியவற்றைக் களைதல், கொடிய விலங்குகள் கள்வர் முதலியவர்களை விரட்டுதல், நீர் இல்லாத இடங்களில் நீரை உண்டாக்குதல் என்பவற்றைச் செய்தற் பொருட்டு முதலிற் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

2, 3-ஆம் பிரகரணங்கள்—[1]பாசறைநோக்கிச் சேறல், படைவிதனம் கடும்வழிச் செல்லுங்காலம் இவற்றினின்றும் படைகளைக் காத்தல்

நூற்றுமுப்பதாம் அத்தியாயம்

சிற்றூர் காடுகளின் வழியில் [2]புல் விறகு நீர் என்பவற்றைக் கொண்டு தங்குதற்குரிய இடங்களையும் [3]தானம் [4]ஆதனம் [5]செல்லுதல் இவைகளின் காலத்தையும் [6]கணக்கிட்டுச் செல்லல் வேண்டும். [7]அவற்றின் பரிகாரத்திற்கு இரு மடங்கு உணவினை யும் கருவிகளையும் அனுப்புதல் வேண்டும். [8]ஆற்றலற்றவன் சேனைகளுடன் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது [9]இடைவழியில் சேமித்தல் வேண்டும்.

[10]முன்னர் [11]நாயகனும் இடையில் மனைவியும் அரசனும்

130-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] முற் கூறப்பட்டவாறு அமைக்கப்பட்ட பாசறையைக் குறித்து, நலந் தருங்காலம் இடம் முதலியன நோக்கிப் போர் குறித்துப் பரிவாரங்களுடன் அரசன் புறப்படுதலைக் கூறுவது இப் பிரகரணமாகும்.

[2] புல் விறகு முதலியவற்றின் உண்மையைக் கொண்டு என்பது.

[3] தானம்—பக்கம் திங்கள் முதலிய கால வரையறையுடன் தங்குதல்.

[4] ஆதனம்—ஐந்தாறு நாட்கள் தங்குதல்.

[5] ஓர் இரவு மட்டும் இருத்தல்.

[6] கணக்கிடுதல்—இவ்வளவு எனத் துணிதல்.

[7] கணக்கிடப்பட்ட இடம் காலங்களுக்குப் போதிய உணவு, கருவி களின் இரு மடங்கை ஊர்திகளில் ஏற்றியனுப்புதல் வேண்டும் என்பது; உணவு—அரிசி முதலியன. கருவி—ஆடை முதலியன.

[8] ஊர்திகள் மூலம் அனுப்ப இயலாவிடின் சேனைகளிடம் கொடுத்துக் கொண்டுபோகுமாறு செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[9] தங்குதற்குரிய அந்தந்த இடங்களில் முன்னரே சேர்த்து வைத்திருத் தலும் நன்றென்பது கருத்து.

[10] செல்பவர் போக வேண்டிய முறையைக் கூறுகின்றார்; முன்னர்—சேனையின் முன்னணியில்.

[11] நாயகன்—சேனைத் தலைவர் பதின்மர்க்குத் தலைவன்.

இருமருங்கிலும் [12]கைகளால் விரட்டும் [13]குதிரைப்படையும் [14]படைகளின் இறுதியில் யானைகளும் செல்லல் வேண்டும் [15]பிரசார மிகுதி [16]நாற்புறமுமாம். [17]காட்டு வாழ்க்கைப் பொருள் பிரசாரமெனப்படும். தன்னாட்டினின்றும் [18]தொடர்ந்து வருவது வீவதமெனப்படும். நட்புப்படை ஆசாரமெனப்படும். [19]மனைவியிடம் அபசாரமெனப்படும். சேனைத்தலைவன் [20]பின்னர் முறையாக இருத்தல் வேண்டும்.

[21]முன்னர்த் தாக்குதலில் மகரத்தாலும், [22]பின்னர் சகடத்தாலும், [23]மருங்கில் வச்சிரத்தாலும் [24]நாற்புறமும் சர்வதோபத்திரத்தாலும் [25]ஒற்றடிப்பாதையில் சூசியாலும் செல்லுதல் வேண்டும்.

---

12 அணி வகுப்பில் இரு பக்கத்திலுமிருத்தல்பற்றிக் கைகளாக உருவகித்துக் கூறப்பட்டதென்க; பகைவரது தாக்குதலை இரு பக்கத்திலும் தடுத்தற் பொருட்டென்பது.

13 குதிரைப் படை—குதிரைகள் மிகுந்த சேனை.

14 படைகளின் இறுதி—சேனையின் பிற்பகுதி.

15 பிரசாரம் (ப்ரஸாரம்)—வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் காட்டில் தோன்றிய பொருள்; மிகுதி—அதிகமாகப் பரவியிருத்தல்.

16 சேனையின் நாற்புறத்திலும் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

17 'பிரசாரம்' முதலிய சொற்களுக்குப் பொருள் கூறுகின்றார்.

18 தொடர்ந்து வருதல்—எக்காலத்தும் இடைவிடாது வருதல்.

19 அரசனுடைய மனைவி முதலிய மகளிர் இருக்குமிடம். ஆஸாரம், அபஸாரம் என்னுமிவை யிரண்டும் நன்கு காக்கப்பட்டனவாகச் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

20 அந்தந்தச் சேனையின் பிற்புறத்தில் அந்தந்தச் சேனைக்குரிய தலைவன் செல்லுதல் என்ற முறையில் அமைந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

21 சேனைக்கு முன் பாகத்தில் பகைவரது தாக்குதல் உண்டாம் என்று ஐயுறப்படின் 'மகரம்' என்ற அணிவகுப்புடன் செல்லுதல் வேண்டும் என்பது. மகரம் முதலியவற்றின் விளக்கம் 134-ஆம் அத்தியாயத்திற் கூறப்படும்.

22 சேனையின் பின் பக்கத்தில் தாக்குதல் வரும் என்று ஐயுற்றால் 'சகடம்' என்ற அணிவகுப்புடன் செல்ல வேண்டும்.

23 இரு பக்கங்களிலும் தாக்குதல் உண்டாம் என்ற ஐயமேற்படின் என்க.

24 தாக்குதல் பற்றி ஐயமுண்டாயின் என்பது.

25 ஒற்றடிப்பாதை—ஒருவர் பின் ஒருவராகச் செல்லுதற்குரிய இடுகிய வழி.

[26]வழி யிரண்டுபடின் தன்னிலத்துக்கேற்பச் செல்லல் வேண்டும். [27]உரிய நிலத்தில் இல்லாதவர்க்குத் தன்னிலத்தில் உள்ளவர் போரில் மாறுபட்டவராவர். [28]கடையாயது [29]யோசனையளவும், இடையாயது [30]ஒன்றரை யோசனையளவும், தலையாயது இரு யோசனையளவுமான செலவாம். [31]உரிமைக் கேற்பவுமாம்.

[32]அணுகி யொழுகுதல் [33]நிறைந்ததை யழித்தல் [34]பின்னணியைப் பற்றுதல், நட்புப்படை மத்தியமன் நொதுமலன் என்பவர்க்கு மாற்றம் புரிதல், [35]நெருக்கடியான வழியைத் திருத்து

---

[26] செல்லுதற்கேற்ற இயல்பும் இயல்பின்மையுமாகிய நிலத்தின் தன்மைகளால் செல்லுதற்குரிய வழி இரண்டாக இருப்பின், தன்னுடைய தேர், குதிரை, காலாள் யானைகளின் போக்கு வரவுக் கேற்ற நிலத்தின் வழியாகச் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து; இந் நிலங்களைப் பற்றிய விளக்கம் 132-ஆம் அத்தியாயத்திற் கூறப்படும்.

[27] செல்லுதற்கேற்ற இயல்புடைய நிலத்தின் வழியாகச் செல்லுதலால் உண்டாம் பயனைக் கூறுகின்றார்; ஏற்புடையதல்லாத நிலத்தவர் ஏற்புடைய நிலத்தில் உள்ளவரைப் போரில் வென்று மேம்படுதல் இயலாதென்பது கருத்து.

[28] ஒரு நாளில் எத்துணை யளவு வழி செல்லுதல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[29] யோசனை—ஒரு பசுவின் குரல் செல்லுமளவின் ஆறு மடங்கு. எனவே ஒரு நாளைக்கு ஒரு யோசனை தூரம் செல்வது மிகக் குறைந்த அளவுள்ளதாம் என்பது கருத்து.

[30] ஒன்றரை யோசனை தூர வழிச் செல்வது இடைப் பட்டதாம் என்பது.

[31] ஈண்டுக் கூறப்பட்ட அளவை விட அதிகமாகவும் இடங் காலங்களுக் கேற்பச் செல்லுதல் கூடும் என்பது கருத்து.

[32] புறப்பட்டவன் மெதுவாகச் செல்லுதற்கும் விரைந்து செல்லுதற்கு முரிய காரணங்களைக் கூறுகின்றார்; தனக்கொரு சிறப்புண்டாதற் பொருட்டு ஒருவனைச் சார்பாகக் கோடற்குச் செல்பவன் அது காரணமாக விரைவின்றிச் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

[33] பகைவனுடைய நாடு, நிறைவை எய்திய பின் அதனை யழிப்பேன் எனக் கருதுபவன் அது காரணமாக மெதுவாகச் செல்லல் வேண்டும் என்பது. இவ்வாறே பின்னுள்ள பகுதிகளுக்கும் கருத்துரைத்துக் கொள்க.

[34] பின்னணியைப் பற்றுபவர் முதலியோரது வெகுளியைத் தணித்தல் காரணமாக மெதுவாகச் செல்லுதல் வேண்டும் என்பது.

[35] செல்லுதற்கியலாத வழியைப் பண்படுத்தல் கருதியும் மெதுவாகச் செல்லலாம்.

தல், [36]பொருள் [37]படை [38]நட்புப்படை பகைப்படை காட்டுப் படை பணியாளர் குழு, [39]பருவம் என்பவற்றை எதிர்பார்த்தல், [40]செய்யப்பட்ட அரண் தொழில், தொகுதிகள், காவல் இவற்றின் அழிவு, [41]விலைக்குக் கொள்ளப்பட்ட படையின் வெறுப்பும் [42]நட்புப்படையின் வெறுப்பும் [43]உளவாதல், [44]வேறுபடுத்து பவர் விரைவை ஏற்காமை [45]கருத்தைப் பகைவன் நிறைவேற்றப் போதல் என்னுமிவை காரணமாயவிடத்து மெதுவாகவும், [46]மாறு படின் விரைவாகவும் செல்லுதல் வேண்டும்.

[47]யானை, [48]தூண், பாலம், அணைக்கட்டு, ஓடம், [49]கட்டை, மூங்கிலின் தொகுதி என்னுமிவற்றாலும், சுரைக்காய்க் குடுவை, [50]தோற்பாண்டம், துருத்தி, தெப்பம், [51]கண்டிகை, கயிறு என்னுமிவற்றாலும் நீரைக் கடத்தல் வேண்டும்.

---

36 பொருளைச் சேர்த்தல்.

37 சிதறுண்ட தன் படையை ஒன்றுசேர்த்தல் என்பது.

38 நட்புப்படை முதலியவை உதவிகுறித்து வருதலை எதிர்பார்க்கும் வழி மெதுவாகச் செல்லலாம் என்பது கருத்து.

39 தன் படைகளின் ஆற்றலுக்கு ஏற்புடைய போர்க்குரிய காலத்தை எதிர்பார்த்தல் காரணமாக மெதுவாகச் செல்லலாம் என்பது.

40 பகைவனுடைய அழிவுற்ற அரணைப் பண்படுத்தற்றொழில், தானியம் முதலியவற்றின் சேமிப்பு, பாதுகாவல் என்னுமிவற்றின் அழிவு நெருங்கிவருதல் காரணமாக மெதுவாகச் செல்லலாம் என்பது.

41 பொருள் கொடுத்து ஏற்கப்பட்ட படையின் வெறுப்பு என்பது.

42 உதவி குறித்து வந்த நட்புப்படை யென்க.

43 உளவாதல்—பகைவனுக்கு நெருங்கி வருதல்.

44 பகைவனுடன் மேற்சேறற்பொருட்டு அறிவுறுத்துபவரும், பகைவனின் தூஷ்யருமானவர் (தங்களை வேறுபடுத்துபவர் என்பாருமுளர்.) விரைவில் மேற்செல்வதை ஒப்புக்கொள்ளாமை காரணமாக என்பது.

45 வெற்றிவிருப்பமுள்ளவனுடைய கருத்தைப் பகைவன், போர் இன்றியே பயனுறச் செய்யப் போகின்றான் என்பது காரணமாக என்பது.

46 மாறுபடின்—மேற்கூறிய காரணங்களில்லாவிடின்.

47 ஆறு முதலியவற்றைப் படைகள் கடத்தற்குரிய உபாயத்தைக் கூறுகின்றார்.

48 தூண்களின் மேல் பரப்பப்பட்ட மரப்பலகைகளால் உண்டாக்கப் பட்ட பாலம் என்பது.

49 கட்டை—ஒன்றாகப் பிணைக்கப்பட்ட பல கட்டைகள்.

50 தோலாற் போர்க்கப்பட்ட மூங்கிற்கூடைகள் என்பது.

51 கண்டிகை—நீரில் மிதக்கும் கட்டை என்ப.

[52]துறையில் தடையாயின் யானை குதிரை என்பவற்றால் [53]வேறுபுறமாக இரவிற் கடந்து [54]சத்திரத்தை அடைதல் வேண்டும்.

[55]நீரற்ற இடத்தில் வண்டி [56]நாற்கால் என்பவற்றைக் கொண்டு [57]வழியின் அளவுக்குத் தக [58]ஆற்றலை யநுசரித்து நீரைக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

[59]செல்லுதற்கரிய நீண்ட வழியை யுடையதும், [60]நீரற்றதும், புல் விறகு [61]நீர் என்பன இல்லாததும், [62]கொடிய வழியை யுடையதும், [63]மேற்சேறலாற் சோர்வுற்றதும், பசி தாகம் வழி நடை என்பவற்றாற் றுன்புற்றதும், [64]சேறு நீர் என்பவற்றால் ஆழ்ந்த ஆறு குகை மலை என்பவற்றில் ஏறுதல் இறங்குதல்களில் ஈடுபட்டதும், ஒற்றையடி வழி, மலை என்பவற்றால் மேடு பள்ள

---

[52] கடத்தற் பொருட்டு இறங்குமிடத்தில் பகைவரால் தடை உண்டாகும் என்று ஐயுறப்படின் என்க.

[53] வேறுபுறம்—துறையில்லாத பகுதி.

[54] சத்திரம் — நிலவரண் முதலியன; நிலவரண் முதலியவற்றைப் பற்றி 131–ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

[55] வழியில் நீர் இல்லாத போது செயற்பாலதைக் கூறுகின்றார்.

[56] நாற்கால்—காளை முதலியன.

[57] நீரில்லாத வழியின் அளவுக்குப் போதிய என்பது.

[58] சுமந்து செல்லும் கருவிகளின் ஆற்றலை யநுசரித்தென்பது. இத்துடன் ‘பாசறை நோக்கிச் சேறல்’ என்னும் பிரகரணம் முற்றும்.

[59] இனிப் ‘படைவிதனம்......காத்தல்’ என்னும் பிரகரணம் தொடங்கப்படும். படைவிதனம்—பெருமைப் படுத்தாமை முதலியவற்றால் உண்டாம் துன்பங்கள். கடும் வழி—நீரற்ற பாலைவனம் முதலியன. பகைப் படையை நோக்கிச் செல்லுங்கால் தன்படைக்கு இவற்றால் நேரும் துன்பங்களைப் போக்கிக் காத்தலைக் கூறுவது இப்பிரகரணமாகும்.

[60] நீரற்றது—வழியில் பருகுதற்கு நீரில்லாதது.

[61] இன்றியமையாமை பற்றி நீரை மீண்டுங் கூறினர் என்ப.

[62] முயன்று கடத்தற்குரிய வழியின் இடைப்பகுதியை அடைந்ததும் என்பது.

[63] நீண்ட நேரம் போர்செய்தமை பற்றிச் சோர்வுற்றதும் என்க.

[64] மிகுந்த சேற்றை யுடையதும் ஆழமான நீரையுடையதுமான ஆறு’

மாயும் இடம் சிறிதாயும் உள்ள வழியில் ஒன்று சேர்ந்ததும், இருப்பிடத்தில் யாத்திரைக்குரிய [65]சந்நாகமற்றதும், உணவில் ஈடுபட்டதும், நெடுவழிச் செலவாற் களைப்புற்றதும், தூக்கத்தையடைந்ததும், நோய் [66]மரகம் வறுமை என்பவற்றால் துன்புற்றதும், நோய்வாய்ப்பட்ட காலாட்படை குதிரை யானை என்பவற்றையுடையதும், [67]தகா நிலத்திலுள்ளதும், படைவிதனத்தில் உள்ளதுமான தன் படையைக் காத்தல் வேண்டும். [68]பகைப்படையைத் தாக்கல் வேண்டும்.

[69]ஒற்றையடி வழியிற் சென்றவன் படையியக்கம், கவளம், உணவு, படுக்கை, விரிப்பு, விறகு, கொடி, படைக்கலம் என்னுமிவற்றைக் கணக்கிடுதலால் பகைவன் படையின் அளவினை அறிதல் வேண்டும். [70]தன்னைச்சார்ந்த அவற்றை மறைத்தல் வேண்டும்.

சுலோகம்

[71]மலையரண் காட்டரண் என்பவற்றைப் பின்புறத்திலிருந்து

---

65 சந்நாகம்—படைக்கலம் கவசம் முதலியன.

66 மரகம்—கொள்ளை நோய்.

67 தகா நிலம்—போர்க்குத் தகுதியற்ற நிலம்.

68 மேற்கூறிய இயல்புடைய பகைவர் படையை என்பது.

69 பகைவனுடன் சந்தியையாதல் விக்கிரகத்தையாதல் மேற்கொள்ளுதற் பொருட்டு, அவன் ஆற்றல் இத்துணையது என்றறிதல் இன்றியமையாதாகலின், அதற்குரிய உபாயத்தைக் கூறுகின்றார். ஒவ்வொருவராய் மட்டும் செல்லுதற்குரிய வழியாகப் புறப்பட்ட பகைவனுடைய படைகளின் இயக்கத்தில், அதிலுள்ளாரைக் கணக்கிடுதலாலும், யானை முதலியவற்றின் உணவு படைவீரரின் உணவுப் பண்டம் படுக்கை விரிப்பு முதலியவற்றைக் கணக்கிடுதலாலும், பகைவனுடைய படை இத்துணையளவுள்ளது என்ற துணிபைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

70 தன் படைகளின் அளவைக் குறிப்பதான படைகளினியக்கம் முதல் படைக்கலம் ஈறுகவுள்ளவற்றைப் பகைவன் அறியாது மறைத்தல் வேண்டும் என்பது கருத்து.

71 மலையரண் முதலியவற்றைப் பற்றிய விளக்கத்தை 24-ஆம் அத்தியாயத்திற் காண்க.

[72]வெளியேறுதல் கவர்தல்களுடன் கூடியனவாகப் [73]பின்னர் செய்து, [74]தன்னிலத்தில் போர்புரிதலையாதல் இருத்தலையாதல் ஏற்றல் வேண்டும்.

பத்தாம் அதிகரணம் 2, 3-ஆம் பிரகரணங்கள் 'பாசறைநோக்கிச் சேறல்', 'படைவிதனம் கடும்வழிச் செல்லுங்காலம் இவற்றினின்றும் படைகளைக் காத்தல்' என்னும் நூற்றுமுப்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[72] தோல்வியுறின் வெளியேறுதற்குரிய இடம், உட்புகுந்த பகைப் படையை ஏற்றற்குரிய இடம் என்னுமிவற்றுடன் கூடியனவாக என்க.

[73] 'பின்னர் செய்து' என்பது ஈண்டு 'முன்னரே ஒழுங்கு செய்து' என்னும் பொருளது.

[74] தன்னிலம்—தனக்கு வாய்ப்பான நிலம்.

4, 5, 6-ஆம் பிரகரணங்கள்—[1]வஞ்சகப்போர் வகைகள், தன் படைகளை ஊக்கமுறுத்தல், தன் படைக்குப் பகைப்படையினும் விழுமிய அமைப்பு

நூற்றுமுப்பத்தோராம் அத்தியாயம்

[2]படைச்சிறப்பு, வேறுபடுத்தலைச் செய்து முடித்தல், [3]பருவத்தை யடைந்திருத்தல் என்னுமிவற்றை யுடையவன் [4]தன்னிலத்தில் வெளிப்போரையும் [5]மாறுபடின் மறைவுப் போரையும் ஏற்றல் வேண்டும்.

[6]படை விதனம் கடும்வழிச்செலவு என்பன நிகழுங் [7]காலங்களிற் பகைவனைத் தாக்குதல் வேண்டும்.

[8]தன்னிலத்திலிருப்பவன் [9]தகாநிலத்திலிருப்பவனையும் தாக்கலாம். [10]தன்னிலத்திலிருப்பவனைப் [11]பகுதியைக் கவர்தலாலும்

131-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 வஞ்சகப்போர்—பகைவன்படைகளுக்கு விதனம், கடும்வழிச்செலவு முதலியன நேர்ந்திருக்கும் அமையத்தை யுணர்ந்து அவற்றோடு பொருதழித்தல்.

2 வஞ்சகப் போர்க்குரிய காலத்தை யறிவுறுத்துகின்றார்; வீரத்தன்மையாலும் அளவினாலும் பகைப்படையை விடத் தன் படைக்குளதாம் சிறப்பு.

3 பருவம்—போர்க்குரிய காலம்.

4 தன்னிலம்—தனக்குத் தகுதியான நிலம்.

5 மாறுபடின்—படைச் சிறப்பு முதலியவை இல்லாவிடின்.

6 பகைவனைத் தாக்குதற்குரிய காலத்தைக் கூறுகின்றார்; படைவிதனம்—பெருமைப்படுத்தப் படாமை முதலியனவாக முற்கூறப்பட்டன.

7 இக்காலங்கள் முற்பிரகரணத்தில் விளக்கப்பட்டன.

8 தன் படைகளுக்குத் தகுதியான இடத்திலிருப்பவன்.

9 தன் படைக்கு ஒவ்வாத நிலத்தில் இருப்பவனைத் தாக்குதல் வேண்டும்.

10 தன் படைக்குத் தகுந்த நிலத்தில் இருப்பவனாயினும் அவனைக் கொல்லலாம் என்பது.

11 பகுதியைக் கவர்தல்—பகைவனைச் சார்ந்த அரசு முதலிய பகுதிகளை வேறுபடுத்து முகமாக அவற்றைத் தன்வயப்படுத்தல்.

மாறுபட்ட நிலத்தை யடைந்தவனைத் [12]தூஷ்யப்படை பகைப் படை காட்டுப்படை என்பவற்றால் தோல்வியைக் கொடுத்தலா லும் கொல்லுதல் வேண்டும். [13]ஒன்று கூடிய படையை யானை களாற் பிரித்தல் வேண்டும்.

[14]முதலில் தோல்வியைக் கொடுத்தலாற் பிரிந்து மறைந்ததை ஒன்று சேர்ந்து திரும்பிக் கொல்லுதல் வேண்டும். [15]முன்னர்த் தாக்கி இயங்கியதையாதல் [16]திரும்பியதையாதல் பின்புறமாக யானை குதிரைகளால் தாக்குதல் வேண்டும். பின்புறமாகத் தாக்கி [17]இயங்கியதை யாதல் [18]முன்னர்த் திரும்பியதை யாதல் [19]திண் மையான படையால் தாக்குதல் வேண்டும்.

[20]இவற்றால் இரு மருங்கிலும் தாக்குதல்கள் கூறப்பட்டன வாம். [21]தூஷ்யரின் நொய்மையான படையிருக்குமிடத்திலும் தாக்கலாம்.

---

[12] வெற்றிவிருப்பமுள்ளவன் தனக்குத் துணைபுரிவதற்கு வந்த தூஷ்யப்படை முதலியவற்றை முதலில் போர்புரியச் செய்து அவற்றிற்குத் தோல்வியை உண்டாக்கித் ' தனக்கு வெற்றி கிடைத்தது ' என்ற நம்பிக்கை யால் தகாநிலத்தை யடைந்திருக்கும் பகைவனைக் கொல்லுதல்வேண்டும் என்பது கருத்து.

[13] தன்னிலத்தில் ஒன்று சேர்ந்திருக்கும் பகைவனது படையை யானை களாற் சிதறச் செய்து கொல்லுதல் வேண்டும்.

[14] முதலில் பகைவனுக்குத் தோல்வி காரணமாக மறைந்ததும், கூட்டத்தினின்றும் பிரிந்து அங்குமிங்கும் சிதறியதுமான பகைவனது படையை, வெற்றி விருப்பமுள்ளவனது படை ஒன்று கூடித் திரும்பிக் கொல்லுதல் வேண்டும்.

[15] முதலில் தாக்குதல் நிறைவேறியதுகாரணமாகத் திரும்பிச் சென் றதையாதல் என்பது.

[16] திரும்பியதை—தோல்விபற்றி யோடியதை.

[17] இயங்கியது—திரும்பிச் சென்றது.

[18] முன்புறத்தில் புறங்காட்டி யோடியதை என்க.

[19] திண்மை—வலிமை.

[20] முன்னரும் பின்னரும் தாக்குதற்குக் கூறிய விதிமுறையால் இரு பக்கத்துத் தாக்குதற்கும் விதி கூறியவாறும் எனக் கூறுகின்றார் ; ஒரு பக்கத்தில் தாக்கித் திரும்பியதை மறுபுறத்தில் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

[21] பகைவனுடைய தூஷ்யரைச் சார்ந்த வன்மையற்ற படையிருக்கு மிடத்தில் தாக்கலாம்.

[22]முன்னர் மேடு பள்ளமாயின் பின்புறமாகத் தாக்கல் வேண்டும். பின்னர் மேடு பள்ளமாயின் முன்புறம் தாக்கல் வேண்டும். மருங்கில் மேடுபள்ளமாயின் [23]வேறுபுறமாகத் [24]தாக்குதல் வேண்டும்.

[25]தூஷ்யப் பகைக் காட்டுப் படைகளுடன் முதலில் போர் புரியச் செய்து களைத்த பகைவனைக் களைப்பற்றவனாகித் தாக்குதல் வேண்டும். [26]தூஷ்யப் படை காரணமாகத் தானே தோல்வியைக் கொடுத்து 'வெல்லப்பட்டது' என்று நம்பிக்கையுற்ற பகைவனை, நம்பிக்கையில்லாத வெற்றி விருப்பமுள்ளவன் சத்திரத்தை யடைந்தவனாகித் தாக்குதல் வேண்டும். வணிகர் குழூ, ஆனிரை, பாசறை என்பவற்றை [27]நன்கு காத்தல், தகர்த்தல் என்னும் இச் செயல்களில் விழிப்பற்றவனை விழிப்புள்ளவன் தாக்கல் வேண்டும். [28]நொய்மைப் படையால் மறைக்கப்பட்ட திண்மைப்படை பகை வீரரை உட்புகுந்து கொல்லுதல் வேண்டும். [29]பசுக்களைக் கவர்ந்

---

22 நிலம் காரணமாகத் தாக்குதலைக் கூறுகின்றார்.

23 வேறுபுறம்—மேடு பள்ளமில்லாத வேறுபக்கம்.

24 பகைவர் நிலத்திற்புகுந்து தாக்குதலால் உண்டாம் துன்பங்காரணமாக விரைந்து திரும்ப வேண்டிய வழி, மேடுபள்ளமுள்ள இடங்கள் இடர் விளைப்பன வாதலால் மேடுபள்ளமற்ற நிலத்தில் தாக்குதல் வேண்டும் என ஈண்டுக் கூறினர்.

25 'தன்னுடைய' என்பதை முன்னர்க் கூட்டுக.

26 அன்பில்லாது போர் புரியுமாகலின் எளிதில் தோல்வி யெய்தும் தூஷ்யப் படையைத் தானே முதலில் போரில் ஈடுபடுத்தி அதுகாரணமாக அதற்குத் தோல்வியை உண்டுபண்ணி 'வென்றுவிட்டோம்' என்ற நம்பிக்கை யடைந்த பகைவனைச் சத்திரம் என்னும் காவற் கருவியை யடைந்த வெற்றி விருப்பமுள்ளவன் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

27 நன்கு பாதுகாக்க வேண்டிய நிலையிலும், அவை யழிக்கப்படும் சமயத்திலும் விழிப்பற்றவனை என்க.

28 உட்புறத்தில் வலிய படையை அமைத்து வெளிப்புறத்தில் ஆற்றலற்றவரை யமைத்தலால் தனது படைவன்மையை மறைத்து அப் படையைப் பகைப்படையினுட் புகச்செய்து பகைவீரரைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

29 பகைவன் நாட்டில் பசுக்களை வலிந்து கவர்தல், புலி பன்றி முதலிய வற்றைக் கொல்லுதல் என்பவை காரணமாகப் பகைவனுடைய வீரரை, அவற்றிற்கு மாற்றம் புரியுமாறு இழுத்து, காடு முதலியவற்றில் மறைந்திருந்து அவர்களைக் கொல்லுதல் வேண்டும் என்பது.

தும் கொடிய விலங்கினைக் கொன்றும் பகை வீரரை இழுத்துக் காட்டில் மறைந்து தாக்கல் வேண்டும்.

[30]இரவிற் கொல்லுதலால் விழிக்கச் செய்து துயிலின்மையாற் சோர்வுற்றுத் தூங்குபவரைப் பகலில் கொல்லுதல்வேண்டும். காலில் [31]தோல்மூடியுள்ள யானைகளால் உறங்கினவர்களைக் கொல்வித்தல் வேண்டும். [32]பகல் சங்நாகத்தால் களைத்தவரைப் பிற்பகலில் கொல்லுதல் வேண்டும். [33]உலர்ந்த தோலாலாய உருண்டையான மணற் பைகளை யுடையதும் [34]அஞ்சுமியல்புடையதுமான பசு எருமை ஒட்டகங்களின் கூட்டத்தால் [35]நிலைப்படாத யானை குதிரைகளையுடையதும் [36]பிரிந்ததும் [37] திரும்பியதுமானதை ஒன்று கூடிக் கொல்லல் வேண்டும். அல்லது கதிரவன் காற்று என்பவற்றுக்கு [38]எதிராக எல்லாவற்றையுங் கொல்லலாம்.

[39]நிலவரண், காடு, [40]நெருக்கடியான இடம், சேறு, மலை, பள்ளமானது, மேடுபள்ளமானது, ஓடம் என்னுமிவையும், பசுக்

---

30 அங்குமிங்கும் உறங்கியவரைக் கவர்தலால் உண்டாம் அச்சங் காரணமாக இரவு முழுவதும் உறக்கமற்றவராகச் செய்து, உறக்கமின்மையாற் களைப்புற்றும், அதுபற்றிப் பகலில் உறங்கியுமிருப்பவரைக் கொல்லுதல் வேண்டும்.

31 தோல் மூடி—காவல் குறித்துத் தோலாற் செய்து அணியப்படுவது.

32 காலை முதற்கொண்டு நடுப்பகல் வரையிற் போர்ச் செயல் புரிந்தமையால் துன்புற்றவரை என்க.

33 உலர்ந்த தோலால் ஆக்கப்பட்டு உருண்டையான கற் (கூழாங்கற்) களைக் கொண்ட பைகளையென்பது.

34 மேற்கூறிய உலர்ந்த தோற்பையினின்றும் சத்தத்தைக் கேட்பது அஞ்சுதற்குக் காரணமாம்.

35 நிலைப்படாத—உரிய இடத்தில் அமைக்கப் பெறாத.

36 பிரிந்தது—அங்குமிங்கும் சிதைந்தது.

37 திரும்பியது—போரிலிருந்து திரும்பி வந்தது; என்றது பகைவன் படையை.

38 எதிர்முகமாகவுள்ள எல்லாவகைப் படைகளையும் கொல்லலாம் என்பது கருத்து.

39 முற்கூறப்பட்ட 'சத்திரம்' என்பது இன்னவென்பதை விளக்குகின்றார்; இவற்றின் விரிவை 24-ஆம் அத்தியாயத்திற் காண்க.

40 புதர், முட்கொடி, முள் முதலியவற்றால் அடைதற்கரிய இடம்.

கள், [41]சகடவியூகம், பனி [42]இரவு என்னுமிவையும் [43]சத்திரங்களாம்,

[44]முன்னைய தாக்குதற் காலங்களும் [45]வஞ்சகப் போர்க்குரிய காரணங்களாம்.

[46]குறிக்கப்பட்ட இடங் காலங்களையுடைய [47]போர் [48]அறத்தின் பாற்பட்டதாம்.

[49]ஒன்றுசேர்ந்த படையைக் கூறுதல் வேண்டும்:— 'ஒத்த [50]வேதனத்தை யுடையனுயிருக்கிறேன். [51]இவ்வரசு உங்களுடன் கூட நுகர்தற்குரியது. [52]என்றுற் [53]கூறப்பட்ட பகைவன்

---

41 சகட வியூகம்—இது 133-ஆம் அத்தியாயத்தில் விளக்கப்படும்.

42 இரவு—இருணிறைந்த இரவு.

43 சத்திரங்கள்—மறைவாகச் சஞ்சரித்தற்குச் சாதனங்கள்.

44 மேற் கூறப்பட்ட தாக்குதற்குரிய காலங்கள் என்பது.

45 உம்மையால் சத்திரங்களும் கொள்ளப்படும். இத்துடன் 'வஞ்சகப் போர் வகைகள்' என்னும் பிரகரணம் முற்றும்.

46 இனித் 'தன் படைகளை ஊக்கமுறுத்தல்' என்ற பிரகரணம் விளக்கப்படும். ஊக்கமுறுத்தலாவது, தன் படையின் வீரச் செயல் முதலியவற்றைப் பாராட்டி வெளிப் போரில் உற்சாகமுறச் செய்தல். இன்னவிடத்தில் இன்ன காலத்தில் தன் படைகளும் பகைவர் படைகளும் சேர்ந்து போர் புரிதல் வேண்டும் என்று ஒருவர்க்கொருவர் வரையறுத்துக்கொண்ட இடங் காலங்களையுடைய போர் அறத்தின்பாற் பட்டதாம்.

47 போர்—ஈண்டு வெளிப் (வஞ்சகமில்லாத) போர்.

48 வெளிப் போர் அறத்தின்பாற் பட்டதெனவே மறைவுப் போர் மறத்தின்பாற் பட்டதென்பது பெறும்.

49 ஊக்கப்படுத்தும் முறையைக் கூறுகின்றுர். எல்லாப் படையும் ஒன்று சேர்ந்திருக்கும்போது கூறுதல் வேண்டும் என்பது.

50 வேதனம்—ஈண்டு ஊதியம்; உங்களுக்கும் எனக்கும் ஊதியம் ஒத்ததாம் என்பது.

51 ஊதியம் சமமாயிருத்தலையே விளக்குகின்றுர்; போரில் வென்று அடையப்பட்ட நாட்டினை உங்களுடன் கூடியல்லது நான் மட்டும் தனித்து அநுபவிக்கப் போவதில்லை என்பது.

52 அதுபற்றி உங்களாற் செய்தற்குரியது இது என அறிவுறுத்தும் முறையினைக் கூறுகின்றுர்.

53 கூறப்பட்ட—குறிக்கப்பட்ட.

[54]கொல்லுதற்குரியவன்' [55]என்று. [56]நன்கு பெறப்பட்ட [57]தக்கிணையையுடைய வேள்விகளின் இறுதியில் மறைகளிலும் [58]'வீரர்க்குரிய செலவு உனக்குமாம்' என்று சொல்லப்படுகிறது. [59]ஈண்டு இரு சுலோகங்களுமுள:—

சுலோகங்கள்

(1) துறக்கத்தை விரும்பும் அந்தணர் [60]வேள்விக் கூட்டத்தாலும், [61]தவத்தாலும், [62]பாத்திரங்களின் தொகுதியாலும் [63]எவற்றை யடைகின்றனரோ அவற்றைவிடச் சிறப்புற்றதை, நற் போர்களில் உயிரைத் துறக்கும் வீரர்கள், கண நேரத்தில் அடைகின்றனர்.

(2) [64]தலைவனின் உணவுகாரணமாகப் போர் புரியாதவன், [65]நீரால் நிரம்பியதும் நன்கு பண்படுத்தப் பட்டதும் தருப்பையாற்

---

54 'உங்களால்' என்ற சொல்லை வருவித்துரைக்க.

55 'என்று' என்பதை முற் கூறப்பட்ட 'கூறுதல் வேண்டும்' என்பதோடு இயைத்துரைக்க.

56 இது காறும் தன் மொழியால் ஊக்கமுறுத்தலைக் கூறி, இனி மந்திரி முதலியவர் மூலமாகவும் ஊக்க முறுத்தலைக் கூறுகின்றார்.

57 தக்கிணை—வேட்பிப்போர்க்குக் கொடுக்கப்படும் பரிசிற் பொருள்.

58 நன்கு முடிக்கப்பட்ட வேள்வியை யுடைய உனக்குப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்குரிய இடம் உண்டாம் என வேள்வி செய்தவனை நோக்கி வேள்விப்பயன் கூறும் இது, வேதத்தின் ஒரு பகுதியாம். இதனால் போரில் உயிர்நீத்தற்கும், அதிகமான வேள்வி செய்தற்கும் பயன் ஒத்ததாம் என்பது பெறப்படும்.

59 மேற் கூறிய மறைப் பொருளை விரித்துக்கூறும் (உபப்ருஹ்மணஞ் செய்யும்) இருசுலோகங்களையுங் கூறுகின்றார்; ஈண்டு— இக்கருத்துப்பற்றி.

60 முறைப்படி அநுட்டிக்கப்பட்ட பல வகை வேள்விகளாலும் என்பது.

61 தவம்—உபவாசம் முதலியவற்றால் தன்னுடலைத் துன்புறுத்தல்.

62 பாத்திரம்—தகுதியுடைய ஏற்பவரால் நிறைவுபெறும் கொடை.

63 நல்ல போரில் உயிர் துறந்த வீரர்கள், பலவகை வேள்வி தவம் தானங்களால் எய்தப்பெறும் பயன்களைவிடச் சிறந்த பயனை எய்துவர் என்பது இச் சுலோகத்தின் கருத்து.

64 தலைவனிடமிருந்து தான் பெற்ற உணவுக்காக என்பது.

65 நீர்—மறை மந்திரங்கள் ஓதித் தூய்மைபெற்ற நன்னீர்.

செய்யப்பட்ட மேலாடையை யுடையதுமான அப் புதிய [66]சராவத்தைப் பெறுன் [67]நரகத்தையும் அடைவான்' [68]என்று மந்திரி புரோகிதர்களால் வீரர்களுக்கு ஊக்கத்தை யுண்டுபண்ணுதல் வேண்டும்.

இவனுடைய [69]சோதிடமுணர்ந்த குழு [70]அணிவகுப்பின் நிறைவாலும், [71]எல்லாவற்றின் அறிவு [72]தெய்வத்துடன் சேர்க்கை என்பவற்றை வெளிப் பரப்புதலாலும் தன் பக்கத்தை மகிழச் செய்தல் வேண்டும். பகைப் பக்கத்தை [73]வெறுப்புறச் செய்தலும் வேண்டும். [74]'நாளைக்குப் போர்' என்று, உபவாசம் செய்து படைக்கலம் ஊர்திகளின் அணிமையில் [75]படுத்தல் வேண்டும். [76]அதர்வங்களினுல் ஓமஞ் செய்தலும் வேண்டும். [77]வெற்றியுடன் கூடியனவும் துறக்கத்தைச் சார்ந்தனவுமான ஆசி

---

66 போரிற் பெற்ற வெற்றியைக் கொண்டாடுங் காலத்தில் கொடுக்கப் படும் நன்கலம்.

67 சராவம் கிடைக்கப் பெருமையால் இம்மைப்பயனையும் செய்ந்நன்றி கொன்றமையால் மறுமைப் பயனையும் ஒருங்கிழத்தல் நிகழ்வதாம் என்க.

68 என்று மந்திரி முதலியவர்களைக் கொண்டு கூறச் செய்து என்பது.

69 சோதிடம் சகுனம் முதலியவற்றை யறிந்தவரின் குழு என்பது.

70 அணிவகுப்பு—அரசரால் செய்யப்படும் படைகளின் வைப்பு முறை. அதற்கு நிறைவாவது :— எக்காலத்தும் வெற்றியே தரும் ஆற்றலிற் குறையாமை.

71 முக்காலத்தும் நிகழும் பயன்விளைவைப் பற்றிய அறிவை வெளிப் படுத்திக் கூறுதல்.

72 தெய்வத்தைக் கண்கூடாகக் கண்டலை வெளிப்படுத்திக் கூறுதல் என்பது.

73 வெறுப்புறச் செய்தல்—ஊக்கத்தைத் தடைப்படுத்துதல்.

74 மறுநாளைக்குப் போர்தொடங்கப்படும் என்று துணிபு செய்யப் படின் என்பது.

75 படைக்கலம் முதலியவற்றிற்குப் பூசை செய்தல் அருத்தாபத்தியாற் பெறப்படும் என்ப.

76 அதர்வம்—பகைவர்க்கு அழிவைத் தரும் அதர்வ மறையிலுள்ள மந்திரங்கள்.

77 பகைவருடன் போரில் வெற்றி பெறுதற்குச் சாதகமாயுள்ளனவும், இறத்தல் நேரின் துறக்கத்தை யடைதற்கு அநுகூலமானவையுமான ஆசிகளை அந்தணர் கூறுமாறு செய்தல் வேண்டும் என்பது கருத்து.

களைக் கூறச் செய்தல் வேண்டும். அந்தணர்பால் [78] தன்னைக் கொடுத்தலும் வேண்டும்.

ஆற்றல், சிற்பம், குடிப்பிறப்பு, அன்பு என்னுமிவற்றுடன் [79] கூடியதைப் [80] பொருள் [81] பெருமைப்படுத்தல் என்பவற்றால் அநுகூலமாக்கிப் படையின் நடுவில் [82] நிலைபெறுத்தல்வேண்டும். [83] தந்தை, புதல்வர், உடன் பிறந்தோர் என்பவர்களைச் சார்ந்த படைக்கலமுள்ளவருடையதும் இலச்சினையற்றதுமான தலைப் படை அரசனின் இடத்தை யுடையதாம். [84] குதிரைத் தொடர் பிருப்பின் யானையாதல் தேராதல் அரசனுக்கு வாகனமாம். [85] படையிற் பெரும்பான்மையாகவுள்ளதும் தனக்குத் தேர்ச்சி யுள்ளதுமாகிய ஊர்தியில் ஏறுதல் வேண்டும். [86] அரசவுருவினன் அணிவகுப்பின் தலையிடத்தை யடைவித்தற்குரியவன். புராணஞ் சொல்பவர், [87] மாகதர் என்பவர்கள் வீரர்களுக்குத் துறக்கத்தை யும் அஞ்சினவர்க்குத் துறக்கமின்மையையும், போர்வீரர்களின்

---

78 தன்னைக் கொடுத்தல்—தன்னைக் காத்தற் பொருட்டு அடைக்கல மாகக் கொடுத்தல்.

79 கூடியதை—கூடிய படையை.

80 பொருள்—நிலம் பொன் முதலியன.

81 பெருமைப்படுத்தல்—குடை அணிகலன் முதலியவற்றைக் கொடுத்து நன்கு மதித்தல்.

82 தன்னைக் காத்தற் பொருட்டென்க

83 அரசனுக்கு நெருங்கியவராகிய உறவினரைச் சார்ந்தவரும் அரசனைக் காத்தற் பொருட்டுப் படைக்கலங் கொண்டவரும், ‘அரசனைச் சார்ந்தவர்’ என்பதைக் குறிக்கும் அடையாளமற்றவரும், தலைபோல் முக்கியமாக இருப்பவருமான படையினரை அரசன் இருக்குமிடத்தில் வைத்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

84 காத்தற் பொருட்டுக் குதிரைகள் அணிமையில் இருப்பின் என்பது.

85 யானை குதிரை முதலிய ஊர்திகளுள் எந்த ஊர்தியினால் படை நிரம்பப் பெற்றிருக்குமோ அல்லது எந்த ஊர்தியில் ஏறுதற்கு அரசன் பயிற்சி பெற்றுள்ளானோ அவ்வூர்தியில் ஏறுதல் வேண்டும் என்பது கருத்து.

86 ஒருவன் அரசன் வேடம் பூண்டு அணிவகுப்பின் தலைப்பகுதிக்குரிய இலக்கணங்களெல்லாவற்றாலும் நிரம்பிய இடத்தை அடைந்து படையைச் செலுத்துதல் வேண்டும் என்பதும், அரசனயின் பகைவரால் காணப் பட்டவனாதல் கூடாதாகலின் படைப்பகுதியில் இருத்தற்குரியனல்லன் என் பதும் கருத்து.

87 மாகதர்—தோத்திரம் பாடுபவர்.

[88]சாதி, [89]குழு, குடி, [90]தொழில், ஒழுக்கம் என்னுமிவற்றின் புகழ்ச்சியையும் பெருமைப்படுத்திக் [91]கூறுதல் வேண்டும். புரோகிதரின் மக்கள் [92]அபிசாரகன்மத்தைக் கூறுதல் வேண்டும். சத்திரி, தச்சர், முக்கால முணர்ந்தோர் என்னுமிவர்கள், தம் செயற் சித்தியையும் பகைவருக்குச் சித்தியின்மையையும் கூறுதல் வேண்டும்.

[93]சேனைத் தலைவன், பொருள் பெருமைப்படுத்தல் என்பவற்றால் மதிக்கப்பட்ட படையைக் கூறுதல் வேண்டும்:- [94]அரசர் கொலை நூறாயிரமுள்ளது. [95]சேனைத் தலைவன் இளவரசர் என்பவர்தம் கொலை ஐம்பதினாயிரமுள்ளது. வீரருள் தலைவனது கொலை பத்தாயிரமுள்ளது. [96]யானை தேர்களினழிவு ஐயாயிரமுள்ளது. குதிரையின் அழிவு ஆயிரமுள்ளது. காலாட் படையின் தலைவனது அழிவு நூறுள்ளது. [97]தலை இருபதை யுடையது. [98]அநுபவப் பொருளின் இருமடங்கும் தன்னாற் பற்றப்பட்டது

---

88 அந்தணர் அரசர் முதலியவரின் சாதி என்பது.

89 அந்தந்த நாட்டினரின் குழுவுருவமாதல்.

90 தொழில்—வாழ்க்கைக்குரிய தொழில்.

91 அரசனுக்குக் கூறுதல் வேண்டும் என்க.

92 பகைவரைத் துன்புறுத்தும் தெய்வம் மூலமாகப் பகைவரைத் துன்புறுத்தற் பொருட்டு அதர்வ மந்திரங்களைப் புரோகிதர் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளார் என்று கூறுதல் வேண்டும் என்பது.

93 படைவீரரை ஊக்கப்படுத்தும் முறையை மீண்டுங் கூறுகின்றார்.

94 யாரேனுமொரு வீரன், பகையரசனைக் கொன்றானாயின், அவன் நூறாயிரம் பொன்னைப் பரிசிலாகப் பெறுதற்குரியவன் என்பது.

95 பகைவனுடைய சேனைத் தலைவன் முதலியோரைக் கொன்றவனுக்கு 50,000 பொன் கிடைக்கப் பெறும் என்பது. பின்னுள்ளவற்றிற்கும் இவ்வாறே கருத்துக் கொள்ளல் வேண்டும்.

96 பகைவனுடைய யானையை யாதல் தேரையாதல் அழித்தவன் ஐயாயிரம் பொன்னைப் பரிசிலாகப் பெறுவான் என்பது.

97 யாரேனும் ஒரு போர் வீரனின் தலையைத் துண்டித்து வருபவனுக்கு இருபது பணம் பரிசிலாம் என்பது.

98 எல்லா வீரர்க்கும் பொதுவாகப் போர்க்காலத்தில் கொடுத்தற்குரிய ஊதியத்தைக் கூறுகின்றார்; வரையறுக்கப்பட்ட உணவு வேதனம் என்பவற்றின் இருமடங்கும், போரில் பகைவனிட்டிலிருந்து அவரவர் பற்றும் பொருள் அவரவரைச் சாரும் என்ற ஒப்பந்தப்படி, அவரவர்களாற் கவரப்பட்டதும் போர்க்காலத்து வேதனமாம் என்பது கருத்து.

மாம் [99]என்றவாறு. [100]பதின்மர் குழுவின் தலைவர் இவற்றை யறிதல் வேண்டும்.

[101]மருத்துவர், கத்தி [102]பொறி மருந்து [103]எண்ணெய் [104]துணி இவற்றைக் கையில் கொண்டவராகவும், மகளிர், சோறு [105]பருகுதற்குரியவை என்பவற்றைக் காப்பவராகவும் ஆடவரைக் களிப்புறச் செய்பவராகவும் [106]பின்னர் இருத்தல் வேண்டும்.

[107]தெற்குத்திசையில் இல்லாத முகமுள்ளதும், பின்புறத்துக் கதிரவனையுடையதும், [108]துணைசெய்யுங் காற்றையுடையதுமான படையைத் [109]தன்னிலத்தில் வைத்தல் வேண்டும். [110]பகைவன் நிலத்து அணிவகுப்பில் குதிரைகளை இயங்கச் செய்தல் வேண்டும்.

---

99 'என்றவாறு' என்பது சேனைத் தலைவன் படையைக் குறித்துக் கூறுதன்முறை முடிவுற்றது என்னும் பொருட்டு.

100 முற்கூறப்பட்டபடி அரசர்கொலை முதலியவற்றைப் பற்றிய செய்திகளைச் சேனைத் தலைவர்களுக்கு நாயகனாய் உள்ளவர் அறிதல் வேண்டும்.

101 போர் புரிபவருக்கு வாள் முதலியவற்றால் உண்டாய காயம் முதலியவற்றை ஆற்றும் முறையினைக் கூறுகின்றார்.

102 பொறி—குறடு கத்தரிக் கோல் முதலியன.

103 எண்ணெய் என்பது நெய் முதலியவற்றையுங் குறிக்கும்.

104 துணி—காயத்தைக் கட்டுதற்குரியது.

105 வீரர்களுக்கு விருப்பத்திற்கேற்ற இனிய சோறு குடிநீர் முதலியவற்றைக் கொடுத்து அவர்களைக் களிப்புறச் செய்தல் மகளிர்தொழிலாம்.

106 பின்னர்—போர்க்களத்தின் பின்புறத்தில்; இதுகாறும் தன் படையை ஊக்கமுறுத்தும் முறைகூறி முடிக்கப்பட்டது.

107 இனி 'தன்படைக்குப் பகைப் படையினும் விழுமிய அமைப்பு' என்னும் பிரகரணம் தொடங்கப் பெறும். விழுமிய அமைப்பாவது:— பகைவர் படைவகுப்பினும் சிறப்பத் தன் படைகளைத் திசை, சூரியன், காற்று முதலியவற்றிற்கு அநுகுணமாக இருக்குமாறு வகுத்தமைத்தல். தெற்கு முகமாயிருத்தல் அமங்கலமாகலின், வேறுதிசை நோக்கியிருத்தல் வேண்டுமென்றார்.

108 துணை செய்யுங்காற்று—எதிர்த்து வராதிருக்குங் காற்று.

109 படைக்கு அநுகூலமான நிலத்தில் என்பது.

110 பகைப்படை அதற்கு அநுகூலமான நிலத்தில் அமைக்கப்படின், அதைத் தடுத்தற் பொருட்டுத் தன் குதிரைகளை அங்கு சஞ்சரிக்கச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

எந்த இடம் அணிவகுப்பினுடைய [111]இருத்தல் [112]விரைதல் என்பவற்றுக்கு [113]ஏற்றதன்றோ அவ்விடத்தில் [114]இருப்பவனும் விரைபவனும் இரு வழியாக வெல்லப்படுவான். [115]மாறுபடின் இரு வழியாக [116]இருத்தல் விரைதல்களிலும் வெல்கிறான்.

[117]சமமானது சமமல்லாதது கலப்புற்றது என்ற நிலங்கள் முன்னரும் பக்கங்களிலும் பின்னரும் அறியத்தக்கன. [118]சமமானதில் தண்ட மண்டல வியூகமும், [119]சமமல்லாததில் போக சங்கத வியூகமும், [120]கலப்புற்றதில் விடக வியூகமும் ஆம்.

[121]சிறந்த படையைத் தகர்த்து சந்தியைக் கேட்டல் வேண்

---

111 இருத்தல்—அதிககாலம் தங்குதல்.

112 விரைதல்—விரைவுள்ள செயலையேற்றல்.

113 ஏற்றது அன்மை—அவகாசங் கிடைக்கப் பெறுமை.

114 அதிககாலம் தங்குபவனும், விரைவுள்ள செயலை யேற்பவனும் பகைவனால் அவமதிக்கப்படுவான் என்பது கருத்து.

115 இருத்தல் விரைதல்களுக்குரிய இடமாயின் என்பது.

116 இருப்பவனும் விரைபவனும் பிறரை அவமதிக்கிறான் என்பது. எனவே இருத்தல் விரைதல் என்ற இரண்டிற்கும் தகுதியான நிலத்தில் அணிவகுப்பு செய்தற்குரியது என்பது பெற்றாம்.

117 அணிவகுத்தலின் தகுதியை நிலத்தின் சிறப்பைக் கொண்டு துணிய வேண்டுமாகலின், நிலத்தைப் பிரித்துக் கூறுகின்றார்; சமமானது முதலிய மூன்று நிலங்களும் முன்புறம் பின்புறம் இருபக்கங்கள் என்னுமிவைகளின் சம்பந்தங்காரணமாக ஒவ்வொன்றும் தனித்தனியே மும்மூன்று வகைகளாம் என்பது கருத்து.

118 அங்கு அணிவகுப்பின் வரையறையைக் கூறுகின்றார்; மூவகைப்பட்ட சமமான நிலத்தில் தண்டவியூகத்தையும் மண்டல வியூகத்தையும் அமைத்தல் வேண்டும் என்பது.

119 மூவகைப்பட்ட சமமில்லாத நிலத்தில் போக வியூகத்தையும் சங்கத வியூகத்தையும் அமைத்தல் வேண்டும்.

120 மூவகைப்பட்ட கலந்த நிலத்தில் விடம வியூகத்தை யமைத்தல் வேண்டும் என்பது. இங்குக் கூறப்பட்ட வியூகங்களைப் பற்றிய விளக்கம் இவ்வதிகரணத்திலேயே பின்னர்க் கூறப்படும்.

121 போரில் பகைவனுக்குத் தோல்வி காணப்படின் வெற்றி விருப்பமுள்ளவன் செயற்பாலதைக் கூறுகின்றார். தன்னைவிடச் சிறப்புற்ற வன்மையுள்ள பகைப்படையைத் தாக்கித் தோல்வியைக் கொடுத்துப் பின்னர் தொடர்ந்து தாக்காது, தானே சந்தியையும் கேட்டல்வேண்டும். வன்மை மிக்கானுடைய நட்பு சிறந்தமையின் அவனோடு சந்திசெய்தல் நன்றென்றார்.

டும். [122]ஒத்த வன்மையை யுடையவனால் கேட்கப்பட்டவன் சந்தியைச் செய்தல் வேண்டும். [123]தாழ்ந்தவனைத் தொடர்ந்து தாக்குதல் வேண்டும். [124]தன்னிலத்தை யடைந்தவனையும் தன்னை விட்டவனையும் தாக்குதல் அறவே கூடாதாம்.

சுலோகம்

[125]உயிரிற் பற்றற்று மீண்டும் திரும்பியவனுடைய விரைவு தாங்குதற்கியலாததாம். ஆகலின் தோல்வியுற்றவனைத் துன்புறுத்தல் கூடாது.

பத்தாம் அதிகரணம்—4, 5, 6–ஆம் பிரகரணங்கள் ‘வஞ்சகப் போர் வகைகள்’, ‘தன் படைகளை ஊக்கமுறுத்தல்’, ‘தன் படைக்குப் பகைப்படையினும் விழுமிய அமைப்பு’ என்னும் நூற்றுமுப்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

122 ஒத்த வன்மையுடையவன் தன்னுடன் போரில் தோல்வியடைந்தானாயின், அவன் தன்னுடன் சந்தியை யடைய விரும்பியபோது சந்தியை யேற்றல் வேண்டுமே யன்றித்தானே சந்தியைக் கேட்டல் கூடாதென்பது கருத்து.

123 தன்னில் தாழ்ந்த வன்மையுடையவன் தன்னுடன் போரில் தோற்றானாயின், மீண்டும் அவன் மேலோங்காதபடி தொடர்ந்து தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

124 ஈண்டு ஒரு சிறப்பினைக் கூறுகின்றார். தன்படைக்கு அநுகூலமான நிலத்தை யடைந்தவன் தன்னினுந் தாழ்ந்த வன்மையுடையனாயினும் அவனையும், தன் உயிரில் பற்றற்றவனையும், தொடர்ந்துதாக்குதல் அறவே கூடாதாம் என்பது கருத்து.

125 உயிர்ப் பற்றின்மை காரணமாகக் கிளர்ந்தெழுவானாயின் ‘சாவ விரும்பியவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவு’ என்பவாகலின், அவனது வேகம் தடுத்தற்கியலாதாகலின் தாக்கப்பட்ட அவனை மீண்டும் துன்புறுத்திக் கோபத்தை விளைத்தலாகாது என்பது கருத்து.

7, 8-ஆம் பிரகரணங்கள்—[1]போர்க்கள வியல்பு, யானை குதிரை தேர் காலாட்களின் செயல்கள்

நூற்றுமுப்பத்திரண்டாம் அத்தியாயம்

காலாள் குதிரை தேர் யானைகளுக்குப் போரைக் குறித்தும் [2]இருத்தலைக் குறித்தும் [3]தன்னிலம் விரும்பத் தக்கதாம்.

[4]நிலவரண் காடு [5]தாழ்விடம் நிலம் என்னுமிவற்றிற் போர் புரிதலையும், [6]தோண்டப்பட்ட இடம் [7]ஆகாசம் [8]பகல் [9]இரவு என்னுமிவற்றிற் போர் புரிதலையும் உடைய [10]மக்களுக்கும், ஆறு மலை நீர் மருங்கு ஏரி என்னும் [11]இவற்றைச்சார்ந்த யானை குதிரை களுக்கும், [12]போர்க்களமும் [13]காலமும் [14]தகுதிக்கேற்ப விரும்பத் தக்கனவாம்.

132-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 போர்க்களம் வெளிமிக்க ஒத்த நிலமாகவும் இறுகியதாகவும் இருத்தல் வேண்டும் என்பது முதலியன இப்பிரகரணத்திற் கூறப்படும்.

2 இருத்தல்—தங்கியிருத்தல்.

3 தன்னிலம்—தமக்கு அநுகூலமான நிலம்.

4 நிலவரண்—மருபூமி.

5 தாழ்விடம்—ஈண்டு நீர்.

6 நிலத்தைத் தோண்டி அதன் உள்ளிருந்து போர்புரிதற்குரிய இடம் என்பது.

7 ஆகாசம்—மதிலுக்கு வெளிப்புறம்; மரம் முதலியனவற்ற இடம் எனினுமாம்.

8-9 பகலில் மட்டும் போர்புரிதல், இரவில் மட்டும் போர்புரிதல் என்பது.

10 மக்கள்—காலாட்கள்.

11 ஆறு முதலியவற்றைச் சார்தலாவது—அவற்றின் தொடர்புள்ள விடத்தில் தோன்றி வாழ்ந்திருத்தல் என்க.

12 போர் செய்தற்குரிய நிலம் என்பது.

13 காலம்—அந்தந்த நிலத்திற்குத் தக்க பருவம்.

14 நிலவரணிற் போர்புரிபவருக்கு நிலவரண் என்ற முறையிலும், ஆற்றைச் சார்ந்தவற்றிற்கு ஆற்றுநிலம் என்ற முறையிலும் அந்தந்த வினத்திற்கேற்ற தகுதியுடையன என்பது.

[15]ஒத்ததும், நிலையானதும், [16]நாற் புறமும் விளங்குவதும், [17]தடங்கலற்றதும், [18]சக்கரம் குளம்பு என்பன இல்லாததும், [19]குடத்தை ஏற்காததும், மரம் புதர் கொடி [20]தூண் [21]செய் பள்ளம் புற்று மணல் சேறு [22]அழிவு என்னுமிவை யற்றதும், [23]பிளவற்றதுமானது தேர்க்குரிய நிலமாம்.

[24]யானை குதிரைகளுக்கும் மக்களுக்கும் ஒத்தவிடத்தும் பொருதல் இருத்தல் என்பன குறித்து ஏற்புடையதாம்.

[25]சிறுகற்கள் மரங்கள் என்பவற்றை யுடையதும் [26]குட்டையான உடம்புடையதாற் கடத்தற்குரிய பள்ளத்தை யுடையதும் [27]குறைவான பிளவுக் குற்றமுடையதுமானது குதிரைக்குரிய நிலமாம். [28]பெரிய முளை கல் மரம் கொடி புற்று புதர் என்பவற்றை யுடையது காலாட் படைக்குரிய நிலமாம். [29]செல்லுதற்

---

15 தேர்க்குரிய நிலத்தைக் கூறுகின்றார். ஒத்தது—மேடுபள்ளமற்றது.

16 புல் முதலியவற்றால் மூடப்படாமை காரணமாக நாற்புறமும் விளங்குவதென்பது.

17 தடங்கல்—வழங்குதற்கரியதாதல். வெடிப்பு மேடுபள்ளங்களுள்ளதாயிருத்தல் என்பது.

18 தேரின் சக்கரங்களும், காலை முதலியவற்றின் குளம்புகளும் ஆழ்ந்து போகாதிருத்தற்குரியது என்பது.

19 குடம்—ஆரக்கால்களுக்கு ஆதாரமாயுள்ள சக்கரத்தின் நடுப்பகுதி.

20 தூண்—ஈண்டு முளைபோன்ற மரத்தின் அடிப்பகுதி.

21 செய்—கூலம் விளைதற்குரியது.

22 அழிவு—ஈண்டு கோணலாயிருத்தல்.

23 பிளவு—நீண்ட வெடிப்பு.

24 தேர்க்குரியதாக ஈண்டுக் கூறப்பட்ட நிலமே, யானை முதலியவற்றிற்கு, சமமாயும் சமமற்றதாயுமான இடத்தில் பொருதல் இருத்தல் என்பவற்றைக் குறித்து ஏற்புடையதாம் என்பது கருத்து.

25 குதிரை முதலியவற்றிற்குரிய நிலத்தைப் பொதுவாகக் கூறிய ஆசிரியர் இனி அவற்றுக்குச் சிறப்பாக உரியவற்றைக் கூறுகின்றார்.

26 மிகக்குட்டையான உடம்பினையுடைய குதிரையாலும் தாண்டுதற்குரிய பள்ளத்தையுடையதும் என்பது.

27 பிளவினால் உண்டாய குற்றம் குறைந்துள்ளதும் என்க.

28 காலாட்களுக்குரிய நிலத்தைக் கூறுகின்றார். பெரிய முளை—பருத்த கட்டை.

29 யானைக்குரிய நிலத்தைக் கூறுகின்றார். யானைகள் செல்லுதற்குரிய மலை என்பது.

குரிய மலை [30]தாழ்ந்த விடம் மேடுபள்ளமானது என்பவற்றை யுடையதும், [31]அழித்தற்குரிய மரங்களை யுடையதும், வெட்டுதற் குரிய கொடிகளை யுடையதும், [32]சேறு அழிவு பிளவு என்பன அற்றதுமானது யானைக்குரிய நிலமாம்.

[33]முட்களற்றது [34]மிகுந்த மேடு பள்ளமற்றது [35]திரும்புதலை யுடையது [36]என்பன காலாட்களுக்குச் சிறப்பாம். [37]இரு மடங் கான திரும்புதலை யுடையது, [38]சேற்று நீர்த்தடங்கல் இல்லாதது, [39]மணலற்றது என்பன குதிரைகளுக்குச் சிறப்பாம்.

புழுதி சேற்று நீர் [40]நளம் [41]சரம் என்னும் [42]இவற்றை யுடையது, [43]ஞமலிக் கோரப்பல்லற்றது, பெருமரக் கிளைகளின் [44]தாக்குதலற்றது என்பன யானைகளுக்குச் சிறப்பாம்.

---

30 தாழ்ந்தவிடம் என்பது ஈண்டு நீர்நிலையைக் குறிக்கும்.

31 'யானைகளால்' என்ற சொல்லை முன்னர்க் கூட்டுக.

32 தேர் நிலமானது சேறு முதலியன இல்லாதிருத்தல் வேண்டும் எனக் கூறி, யானை குதிரைகளின் நிலத்திற்கும் அவ்விதியை மாட்டேற்றிக்கூறிய ஆசிரியர் 'சேறு முதலியவை யற்றிருத்தல்' என ஈண்டு மீண்டும் கூறுதல் அத்தன்மை யாண்டும் இருத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தற்பொருட் டாம். இதனால் குதிரை காலாட்களின் நிலம், சேறு முதலியவை யற்றதா யிருத்தல் வேண்டும் என்ற நியமமின்றென்பது பெற்றும்.

33 தேர் யானை குதிரை காலாள் என்பவற்றுக்குரிய நிலங்களுக்குச் சிறப்பாந் தன்மையினை எண்ணியமுறையானன்றி எதிர்முறையாற் கூறு கின்றார்.

34 மேடு பள்ளங்கள் அதிகமாக இல்லாதது.

35 திரும்புதற்குப் போதிய இடப்பரப்புள்ளது.

36 என்ற இம்மாதிரியான நிலப்பேறு காலாட்களுக்குச் சிறப்புக் காரணமாம் என்பது கருத்து.

37 முன்னே செல்லுதற்குரிய இடப்பரப்பின் இருமடங்கு அகலமுள்ள தென்பது.

38 சேறு, சேறு மிகுந்த நீர் என்னுமிவை யற்றதென்க.

39 மணல்—கற்கள் மிகுந்த மணல்.

40 நளம்—ஒருவகைப்புல்.

41 சரம்—முஞ்சம் என்பர் உரையாசிரியர். கயிறு திரித்தற்குரிய ஒரு வகைப் புல்.

42 நளம் முதலியவற்றின் தூறுகளையுடையதென்பது.

43 நாயின் கோரப்பல் போன்ற கூரிய முட்கள் (நெருஞ்சி) அற்றது.

44 தாக்குதல்—வழியிற் செல்லுங்கால் மேலிருந்து இடித்தல்.

[45]நீர்நிலை [46]இருப்பிடம் என்னுமிவற்றையுடையது, [47]தடங்கலற்றது, [48]செய்களற்றது, [49]திரும்புதற்குரியது என்பன தேர்களுக்குச் சிறப்பாம். [50]எல்லாவற்றிற்கும் நிலம் கூறிய வாறும்.

[51]எல்லாப் படைகளின் [52]இருத்தல் பொருதல் என்பன [53]இதனால் [54]விளக்கப்பட்டனவாம்.

[55]நிலம் [56]வசிக்குமிடம் [57]காடு என்னுமிவற்றைக் களைதல், [58]ஒவ்வாதது [59]நீர் [60]துறை [61]காற்று [62]ஒளி என்னுமிவற்றை

---

[45] நீர்நிலை—நீராடுதற்குரிய நீரையுடைய குளம் முதலியன.

[46] இருப்பிடம்—களைப்பாறுதற்குரிய இடம்.

[47] பதினேழாவது குறிப்பைக் காண்க.

[48] விதை விதைத்தலற்றது.

[49] திரும்புதற்குப் போதிய இடப்பரப்புள்ளது என்பது.

[50] நிலத்தைப்பற்றிய இப்பிரகரணத்தை முடிக்கின்றார்.

[51] எல்லாப் படைகள்—நால்வகைப் படைகள்.

[52] இருத்தல்—தங்கியிருத்தற் றொழில்களும் போர்த்தொழில்களும்.

[53] மேற்கூறிய முறையுள்ள நிலத்தைப்பற்றிய விதியினால் என்பது.

[54] மேற்கொள்ளவேண்டிய முறையுடன் கூறி விளக்கப்பட்டனவாகும் என்பது. 'போர்க்கள வியல்பு' என்னும் பிரகரணம் இத்துடன் முற்றுப் பெற்றது.

[55] இனி 'யானை......செயல்கள்' என்னும் அடுத்த பிரகரணம் விளக்கிக் கூறப்படும். ஈண்டு முதலில் குதிரைக்குரிய செயல்களைப்பற்றிக் கூறுகின்றார். நிலத்தைக் களைதலாவது—மறைந்த பகைப்படையை நிலத்தினின்றும் அகற்றல்.

[56] வசிக்குமிடத்தைக் களைதலாவது—படைகள் சுதந்தரமாக வாழுமிடத்தில் உண்டாம் தீங்கைப் பரிகரித்தல்.

[57] காட்டைக் களைதலாவது—வழிநடுவண் காடுகளில் கள்வரை யகற்றுதல்.

[58] ஒவ்வாததை ஏற்றலாவது—பகைவர் பற்றுதற்கு முடியாததும், தங்குதற்குரியதுமான இடத்தை முன்னரே பற்றுதல்.

[59] நீரை ஏற்றல்—நீரானிறைந்த குள முதலியவற்றையுடைய இடத்தை முன்னரே கைப்பற்றுதல்.

[60] ஆறு முதலியவற்றைக் கடத்தற்கு அநுகூலமான இடத்தை யேற்றல்.

[61] காற்றை யேற்றல்—தனக்கு அநுகூலமான காற்றை அநுபவித்தற் குரிய இடத்தைப் பற்றுதல்.

[62] தனக்கு எதிராக இல்லாத கதிரவன் ஒளியின் சாய்வுக்கு ஏற்ற இடத்தைப் பற்றுதல்,

யேற்றல், [63]உணவுப் பொருள் வருவாய் நட்புப் படை என்பவற்றின் அழிவு அல்லது காப்பு, படையின் [64]தூய்மை, [65]நிலைப்படுத்தல், [66]பரப்புதலின் மிகுதி, [67]கைகளால் விலக்குதல், [68]முதலிற்றுக்குதல், [69]புகுந்து கலக்கல், [70]பல்வாறு தாக்குதல், [71]சமாதானப்படுத்தல், [72]ஏற்றல், [73]விடுத்தல், [74]வழியநுசரித்தலின் மாற்றம், [75]பொருளையும் இளவரசனையுங் கவர்தல், [76]பின்னும் முன்னும் தாக்குதல், [77]தாழ்ந்தவர்களை யநுசரித்தல்,

---

63 பகைநாட்டினின்றும் தொடர்ந்து அவர்களுக்கு வந்துசேரும் உணவுப்பொருளைத் தடுத்து அழித்தல் என்பதும், அவர்களுக்கு உதவுமாறு வரும் நட்புப்படையை யழித்தல் என்பதும், தனக்குரியனவாகவுள்ள அவ்விரண்டினைக் காத்தல் என்பதுங் கருத்து.

64 'தூய்மை' என்பது ஈண்டுப் பகைப்படையினர் மறைவாகத் தம் படையினுட் புகுதலாகிற குற்றத்தைத் தவிர்த்தலைக் குறிக்கும்.

65 பகைப்படைகாரணமான கலக்கம் நேர்ந்துழி, கலங்காதிருக்கும்படிச் செய்தல்.

66 நாற்புறத்தும் காட்டில் உணவுப்பொருளை மிகைப்படுத்தல் என்பது.

67 பகைப்படையைத் தம் படையின் இருமருங்கானும் கைகளால் விலக்குதல் போன்று விரட்டுதல். ஈண்டுக் கைகள் என்றது தன் படையினிருமருங்கினும் உள்ள குதிரைப் படைகளின் இயக்கத்தைக் குறிக்கும்.

68 பகைப்படை தன் படையைத் தாக்குமுன், அதைத் தன் படையால் தாக்குதல் என்பது. இது விரைவுமிக்க குதிரைப்படைகளாலேயே இயல்வதென்பது கருத்து.

69 பகைப்படையினுட் புகுந்து அதைச் சிதைத்தல் என்பது.

70 பகைப்படைக்குப் பல்வகைத் துன்பங்களை யுண்டாக்கல் என்பது.

71 சோர்வு மிகுதியாற் களைப்புற்ற தன் படைக்குத் துணைப்படையைக் கொடுத்தல் என்பது.

72 ஏற்றல்—பகைவீரரைத் தொடர்ந்து எதிர்த்தல்.

73 பகைவராற் பிடிக்கப்பட்ட தன் படைவீரரை விடுவித்தல் என்பது.

74 தன் படையின் வழியைப் பகைவன் தொடருங்கால், பகைப்படையின் வழியைத் தன் குதிரைகள் மூலம் தொடர்தல்.

75 பகைவனாற் புரக்கப்படவேண்டியவற்றுள் சிறப்புடைய பொருளையும் இளவரசனையும் பகைவனுக்கு எதிரிலேயே கவர்தல்.

76 படையின் பிற்பகுதியிலும் முற்பகுதியிலும் இருமருங்கினும் தாக்குதல் என்பர் உரையாசிரியர்.

77 தோல்வியுற்ற குதிரைவீரர்களை யநுசரித்துச் செல்லுதல் என்பது.

[78]தொடர்ந்து மேற்சேறல், [79]குழுச்செயல் [80]என்னுமிவை குதிரைக்குரிய தொழில்களாம்

[81]முன்னர்ச் செலவு, [82]பண்படுத்தப்படாத வழி வசிக்குமிடம் துறைகளின் தொழில், [83]கைகளால் விலக்குதல், [84]நீரைக் கடத்தல், இறங்குதல், [85]இருத்தல், [86]செல்லுதல், [87]இறங்குதல், [88]ஒவ்வாதது, நெருக்கடிகளிற் புகுதல், [89]தீயிடுதல், தணித்தல், [90]ஒரு பகுதியால் வெல்லுதல், [91]பிரிந்ததைச் சேர்த்தல், [92]பிரியாததைப் பிரித்தல், [93]விதனத்திற் [94]காத்தல், [95]தகர்த்தல்,

---

78 திரும்பியோடும் பகைப்படையைத் தொடர்ந்து செல்லுதல்.

79 சிதைவுற்ற படையை ஒன்றுசேர்த்தல்.

80 இன்னோன்ன செயல்கள் குதிரைகளால் எளிதில் செய்தற்குரியன என்பது கருத்து.

81 இனி யானைகளின் தொழில்களைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றார். முன்னர்ச் செலவு—தன் படையின் முன்னணியிற் செல்லுதல்.

82 முன் ஏற்படுத்தப்படாத வழியையும் இருப்பிடத்தையும் ஆறு முதலியவற்றில் இறங்குதற்குரிய துறைகளையும் புதியனவாக அமைத்தல்.

83 தன் படையின் இருமருங்கிலும் இருந்துகொண்டு இரு கைகளைப் போன்று பகைப்படையை விரட்டுதல் என்பது.

84 ஆற்றுநீர் முதலியவற்றின் ஆழத்தை யறிதற்பொருட்டு இறங்குதலும் கடத்தலும் என்பது.

85 பகைப்படையின் எதிர்ப்பில் வரிசையாக விருத்தல் என்பது.

86 முற்கூறியவாறே வரிசையாகச் செல்லுதல்.

87 அங்ஙனமே உயர்ந்த இடம் முதலியவற்றினின்றும் இறங்குதல்.

88 புல் புதர் முதலியவற்றால் வழங்குதற்கரிய இடத்திலும் பகைப்படையின் அணிமையால் நெருக்கடியான இடத்திலும் புகுதல் என்பது.

89 பகைவரது பாசறையில் தீயிடுதல், தன் பாசறையில் பகைவரால் இடப்பெற்ற தீயைத் தணித்தல் என்பன.

90 குதிரை முதலிய பகுதிகளின்றி யானைகளாகிய ஒரே படைப்பகுதியால் பகைவரை வெல்லுதல்.

91 பலவிடங்களிலும் பிரிந்துபோன படைகளை ஒன்றுசேர்த்தல்.

92 ஒன்றுசேர்ந்துள்ள பகைப் படையைச் சிதையச் செய்தல்.

93 விதனம்—ஈண்டுப் பகைவர் எதிர்ப்பால் உண்டாவது; இரவு முதலியவற்றில் சத்திரம் முதலிய கன்மங்களால் உண்டாவதுமாம்.

94 யானைகளைக் கொண்டு புரத்தல் என்பது.

95 பகைப்படையை யழித்தல்,

[96]அச்சுறுத்தல், [97]விரட்டுதல், [98]பெருமை, [99]ஏற்றல், [100]விடுத்தல், மதில் [101]வழி படைவீடு என்பவற்றை யழித்தல், பொருளினியக்கம் [102]வெளியேற்றல் என்னுமிவை யானைக்குரிய தொழில்களாம்.

[103]தன் படையைக் காத்தல், [104]போரில் நால்வகைப் படையைத் தடுத்தல், [105]ஏற்றல், விடுத்தல், பிரிந்ததைச் சேர்த்தல், பிரியாததைப் பிரித்தல், விரட்டுதல், பெருமை, அச்சுறுத்தும் ஒலி என்பன தேர்த் தொழில்களாம்.

[106]எல்லாவிடத்தும் காலத்தும் படைக்கலத்தைத் தாங்குதல், [107]உழைப்பு என்பன காலாட்களின் தொழில்களாம்.

[108]பாசறை வழி [109]அணைக்கட்டு [110]கிணறு [111]துறை என்னுமிவற்றின் [112]தூய்மைச் செயல், பொறி படைக்கலம்

---

96 பார்க்கு மளவிலேயே பயத்தை யுண்டாக்கல் என்பது.

97 ஈண்டு செருக்கு (मद) முதலிய நிலைகளிலுண்டான செயல்களால் அச்சத்தையுண்டுபண்ணுதல் என்பது.

98 படையின் பெருந்தொகுதி.

99 பகைவனுடைய போர்வீரர் முதலியவரைக் கவர்தல்.

100 பகைவராற் கவரப்பட்ட தன் படைவீரர் முதலியவர்களை விடுத்தல் என்பது.

101 வழி—ஈண்டு கோபுரம்.

102 தோல்வி நிலையில் வெளியேற்றிக் கொணர்தல்.

103 மதில் போன்ற அமைப்பை யடைதல்காரணமாகத் தேர்கள் தன் படையைக் காப்பனவாம் என்ப.

104 போரிற் பகைவனுடைய நால்வகைப் படைகளையும் தடுத்தல்.

105 ஏற்றல் முதலிய அறுவகைகள் முன்னர் (99-முதலிய குறிப்புக்களால்) விளக்கப்பட்டன.

106 சமமானது மேடுபள்ளமானது முதலிய எல்லாவிடங்களிலும், கார் காலம் முதலிய எல்லாக் காலங்களிலும் என்பது.

107 உழைப்பு—போரில் ஈடுபட்டுத் தொழிலை மேற்கோடல்.

108 இனிப் பணியாளரின் தொழிலைக் கூறுகின்றார்.

109 அணைக்கட்டு—ஆறு முதலியவற்றில் நீரைத் தேக்குதற்குக் காரணமானது.

110 கிணறு வெட்டுதல் என்பது.

111 ஆறு முதலியவற்றில் இறங்குதற்குரிய இடம்.

112 தூய்மைச் செயலாவது :— ஆண்டுப் புல் முதலியவற்றைக் களைந்து சுத்தஞ் செய்தல்.

கவசம் உபகரணப் பொருள் உணவு என்பவற்றைத் [113]தாங்குதல், [114]போரிலிருந்து படைக்கலம் கவசங்களால் தாக்கப்பட்டவர்களை வெளியேற்றுதல் என்பன [115]பணியாளரின் தொழில்களாம்.

சுலோகம்

குறைந்த குதிரையுள்ள அரசன், தேர்களில் [116]காளை குதிரைகளின் சேர்க்கையையும், [117]அங்ஙனம் குறைந்த யானையுள்ளவன் கழுதை ஒட்டகங்களின் வண்டிகளால் நடுப்பகுதியையும் நிரப்புதல் வேண்டும்.

பத்தாம் அதிகரணம் 7, 8-ஆம் பிரகரணங்கள்
போர்க்களவியல்பு, யானை குதிரை தேர் காலாட்களின் செயல்கள்
என்னும் நூற்றுமுப்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

113 தூக்கிக் கொண்டு வருதல் என்பது.

114 போர்க்களத்திலிருந்து படைக்கல முதலியவற்றால் தாக்குண்டவர்களை வெளியே கொண்டு போதல்.

115 பணியாளர்—படைக்கலப் பயிற்சியின்றிப் பிற புறச் செயலில் ஈடுபட்டவர்.

116 குதிரைகளுடன் காளைகளையும் சேர்த்தல் வேண்டும் என்பது.

117 யானைகளால் நிறைக்கப்படுதற்குரிய படைநடுவை, யானைகளின் குறைவுபற்றி ஒட்டகம் கழுதைகள் பூட்டிய வண்டிகளால் நிறைந்ததாகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

9, 10, 11–ஆம் பிரகரணங்கள்—[1]பக்க கக்க நடுவிடங்களிற் படையளவிற்குத் தக வகுப்புக்களைப் பிரித்தமைத்தல், வன்படை மென்படைகளைப் பிரித்தமைத்தல், யானை குதிரை தேர் காலாட்களின் போர் வகைகள்

நூற்றுமுப்பத்து மூன்றும் அத்தியாயம்

[2]ஐந்நூறு விற்கிடை தூரமுள்ளதாகவாதல், [3]நிலத்திற்கேற்ட வாதல் [4]அரணை யேற்படுத்திப் [5]போரை யடைதல் வேண்டும் [6]சேனைத் தலைவன், [7]நாயகன் என்பவர் [8]பகுக்கப்பட்ட சேனைத் தலைவர்களைக் [9]கட் புலனுகாமல் மறையச் செய்து அணிவகுத்தல் வேண்டும்.

133-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பக்கம்—படைவகுப்பின் முன்புறத்து வெளிமருங்குகள் ; கக்கம்—அதன் பின்புறத்து உண்மருங்குகள் ; நடு—இவற்றின் நடு ; வகுப்பு—படை வகுப்பு ; வியூகம். படையை அணிவகுத்துப் போர் புரிபவனே வெற்றியை யடைவான் எனக் கொண்டு அணிவகுத்தலைப் பற்றிக் கூறுவது இப்பிர கரணமாகும்.

[2] போர்க் களத்திலிருந்து ஐந்நூறு விற்கிடையளவு தூரமுள்ளதாகப் பாசறையை யமைத்துப் போரைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[3] கிடைக்கப் பெறும் நிலத்தின் அளவிற்கேற்ப ஐந்நூறு விற்கிடை தூரத்திலோ அன்றி அதற்கு மேலாகவோ குறைந்ததாகவோ உள்ள தூர முள்ளதாகப் போர்க்களத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பது கருத்து.

[4] அரண்—ஈண்டுப் பாசறை.

[5] போர்க்களத்தை யமைத்தல் வேண்டும் என்பது.

[6] சேனைத் தலைவன்—வீரர் பதின்மர்க்குத் தலைவன்.

[7] நாயகன்—சேனைத் தலைவர் பதின்மர்க்குத் தலைவன்.

[8] பகுக்கப்படுதல்—சேனையின் பிற்புறம் பக்கம் கக்கம் நடுவிடங்கள் என்னுமிவற்றிற் பிரித்து அமைக்கப்படுதல்.

[9] பகைவன் கண்டு எதிரணி அமைக்காதிருத்தற் பொருட்டுக் கட் புலனுகாமல் பிரித்தமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[10]காலாட் படையை பதினான்கு அங்குல இடை வெளியுள்ள தாகவும், [11]குதிரையை நாற்பத்திரண்டு அங்குல இடை வெளி யுள்ளதாகவும், தேரையும் யானையையும் எழுபது அங்குல இடை வெளியுள்ளதாகவும் அமைத்தல் வேண்டும். [12]இரு மடங்கு இடை வெளியுள்ளதாகவும் மும் மடங்கு இடை வெளியுள்ளதாக வும் வகுக்கலாம்.

[13]இங்ஙனமாயின் நெருக்கடியின்றி எளிதிற் போர் புரியலாம்.

[14]ஐந்து முழம் வில்லெனப்படும். [15]அவ்வளவில் வில் வீரரையும், [16]மூன்று வில்லளவில் குதிரையையும், ஐந்து வில்லள வில் தேரையும் யானையையும் அமைத்தல் வேண்டும். [17]பக்க கக்க நடுவிடங்களிலுள்ளார்க்குப் [18]படைச் சந்தி ஐந்து வில்லாம்.

---

[10] காலாட் படையை அணிவகுக்கு முறையைக் கூறுகின்றார்; ஒரு வீரனுக்கும் மற்றொரு வீரனுக்கும் இடையேயுள்ள இடைவெளி பதினான்கு அங்குல மிருக்கும்படி அமைக்கவேண்டும் என்பது கருத்து.

[11] காலாட்களுக்குக் கூறியதின் மும்மடங்கு அதிகமான இடைவெளி குதிரைகட்கும், ஐந்துமடங்கு அதிகமான இடைவெளி தேர்களுக்கும் யானைகளுக்கும் இருக்குமாறு அமைத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[12] காலாட்கள் முதலிய படைகள் மிகுதியாக இருப்பின் கடையாய (गौण) முறைப்படி இடைவெளி முறையைக் கூறி, இனி இடையாயதும் தலையாயதுமாகிய இடைவெளியை வரையறுத்துக் கூறுகின்றார்; அந்தந்தப் படைகளுக்குக் கூறிய இடைவெளியளவின் இருமடங்கும் மும்மடங்கும் இடைவெளியுள்ளதாகக் காலாட்கள் முதலிய படைகளின் வியூகத்தை யமைக்கலாம் என்பது கருத்து.

[13] இடை வெளியின் அளவை மிகுதிப்படுத்தலால் உண்டாம் பயனைக் கூறுகின்றார்.

[14] இனி வில்வீரர்களுக்கும் மிக உயர்ந்த குதிரை முதலியவற்றுக்கும் உரிய இடைவெளிமுறையைப் பற்றிக் கூறுகின்றார்; 'வில்' என்பது ஐந்து முழ அளவைக் குறிக்கும்.

[15] வில் அளவு (ஐந்து முழம்) இடைவெளியுள்ளவராக வில்வீரர்களை யமைத்து அணிவகுத்தல் வேண்டும் என்பது.

[16] பதினைந்து முழ இடைவெளியில் குதிரைகளையும், இருபத்தைந்து முழ இடைவெளியில் தேர்களையும் யானைகளையும் அமைத்தல் வேண்டும் என்பது.

[17] பக்கமுதலிய ஐவகைப் படைகளுக்கு இடைவெளி எத்துணை இருத் தல் வேண்டும் என்பதை விளக்குகின்றார்.

[18] படைகளுள் ஒன்றுக்கொன்றுள்ள இடைவெளி இருபத்தைந்து முழ அளவாயிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

[19]குதிரை யொன்றினை எதிர்த்துப் பொருதற்குரியவர் மூவ ராவர். தேருக்கும் யானைக்கும் பதினைவராவர். [20]ஐந்து குதிரை களுமாம். [21]குதிரை தேர் யானைகளுக்கு அத்துணைக் காற் காவலர் அமைக்கத் தக்கவர்.

[22]மும்மூன்று தேர்களுள்ள மூன்று தொகுதிகளை நடுவில் அமைத்தல் வேண்டும். [23]கக்கம் பக்கம் இரு புறங்களில் அத் துணையாம். [24]இங்ஙனம் அணிவகுப்பொன்றுக்கு நாற்பத்தைந்து தேர்களாம்.

[25]இருநூற்றிருபத்தைந்து குதிரைகளும், [26]அறுநூற் றெழுபத்தைந்து வீரர்களும் [27]எதிர்த்துப் பொருதற்குரியர்.

---

19 குதிரை முதலியவற்றின் முற்பகுதியிலிருந்து பகைவரை எதிர்த்துப் போர்புரிபவரின் தொகுதியை வரையறுத்துக் கூறுகின்றார்.

20 ஒவ்வொரு தேர்க்கும் யானைக்கும் முற்செல்பவர் தவிர, ஐந்தைந்து குதிரைகளும் முற்செல்லவேண்டும் என்பது கருத்து.

21 குதிரை முதலியவற்றிற்கு ஐந்தைந்து பணியாளரை நியமித்தல் வேண்டும் என்பது கருத்து ; எனவே ஒரு தேர்க்கு முற்செல்பவர் பதினைந்து பேர்களும் ஐந்து குதிரைகளும், ஐந்து பணியாளர்களும் ஆவர் என்பது பெற்றாம்.

22 மேற்கூறியபடி மக்கள் முதலியவர்களுடன் கூடிய தேர்களைப் படை நடுவில் எத்துணை யமைத்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார். தேர்களை மும் மூன்றாக மூன்றினைத் தனித்தனியே ஒருவரிசையிலிருக்கும்படி அமைத்து, அதை நடுவிலுள்ள படையாகக் கற்பித்தல் வேண்டும். எனவே நடுப்படையில் ஒன்பது தேர்கள் இருக்கவேண்டும் என்றாயிற்று.

23 நடுப்படையிலுள்ள தேர்களின் அளவோடு ஒத்த தேர்களைக் கக்க முதலிய நான்கு படைகளிலும் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

24 இம்முறையில் கக்க முதலிய ஐந்து படைகளுருவமான வியூகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்பதொன்பது தேர்களுண்மை பற்றி மொத்தம் நாற்பத்தைந்து தேர்களாம்.

25 தேர்களின் எண் நாற்பத்தைந்து ஆனபோது ஒவ்வொரு தேர்க்கும் குதிரைகள் ஐந்தாகலான் நாற்பத்தைந்து தேர்களுக்கு 225 குதிரைகளாம் என்பது.

26 ஒவ்வொரு குதிரைக்கும் முன்செல்பவர் மூவராதல் பற்றி 225 குதிரைகளுக்கும் 675 மக்களாவர் என்பது.

27 பகைவரை எதிர்த்துப் போர்புரிபவர்களாம் என்பது.

[28]குதிரை தேர் யானைகளின் காற் காவலர் அத்துணைவராவர்.

[29]இது சம வகுப்பாம். [30]இதற்கு இரண்டிரண்டு தேர்களாக இருபத்தொரு தேர்கள் வரை ஒற்றைப்படையாக முறையே கூட்டிய பத்து வகைகளும் சம வகுப்பின் பகுதிகளாம்.

[31]பக்க கக்க நடுவிடங்களிலுள்ள அவற்றின் எண்ணிக்கை சமமின்றேல் விடம வகுப்பாம். [32]அதற்கும் இரண்டிரண்டு தேர்கள் மிக இருபத்தொரு தேர்களீறாக ஒற்றைப் படையாகக் கூடிய வகைகள் பத்தும் விடம வகுப்பின் பகுதிகளாம்.

[33]இவற்றுள் படைகளின் வகுப்பிலிருந்து எஞ்சியதை ஆவா

---

[28] குதிரைகளுக்கு முற்செல்பவர் எத்துணைவரோ அத்துணைவர் காற் காவலர். அங்ஙனமே தேர்களுக்கும் யானைகளுக்கும் முற்செல்லும் குதிரைகளும் மக்களும் எத்துணையரோ அத்துணையர் காற்காவலராவர் என்பது.

[29] மேற்கூறிய வியூகத்தில் மும்மூன்றாக வகுக்கப்பட்ட தேர்களின் எண் எல்லாப் பகுதியிலும் சமமாயிருத்தல் பற்றி 'சமவியூகம்' என்னும் பெயர்த்தென்பதாம்.

[30] வியூகத்தின் பகுதியான மூன்று தேர்கள் கொண்ட பாகங்களில் ஒன்றைவிட மற்றொன்றுக்கு இரண்டிரண்டு தேர்கள் மிகுதியாக்கும் முறையில் 21 தேர்கள் வரை மிகும்படிச் செய்தபோது தேர்களின் எண்ணிக்கை காரணமாக ஒற்றைப் படையான எண்களைக் கொண்ட பத்து விதமான பிரிவுகள் சமமான அவ்வியூகத்தில் உண்டாகின்றன. அஃதாமாறு:— மூன்று தேர்கள் கொண்ட பாகத்தில் இரண்டு தேர்களைச் சேர்க்க அது ஐந்து தேர்களைக் கொண்ட பாகமாம். ஐந்து கொண்டதில் இரண்டினைச் சேர்த்தால் ஏழு தேர்கள் கொண்டதாம். இம்மாதிரி 21 தேர்கள் வரை ஒரு பகுதியில் மிகுதிப்படச் செய்யலாமாகலின் வெவ்வேறாகப் பத்துப் பிரிவுகள் உண்டாதல் பெறப்படும்.

[31] சமமல்லாத (விடம) வியூகத்தைப் பற்றிக் கூறுகின்றார். பக்க முதலிய படைகளின் பகுதிகளுக்கு எண்ணிக்கை வேற்றுமைப்படின் அவ்வியூகம் விடம வியூகமாம் என்க.

[32] அவ்வியூகத்தின் பகுதிகளிலும் மேற்கூறியவாறு இரண்டிரண்டு தேர்களாக 21 தேர்கள் வரை மிகுதியாக்குதலால் தேர்களின் ஒற்றைப் படையான எண்களையுடைய பகுதிகள் பத்துப் பிரிவுடையனவாம் என்பது கருத்து.

[33] இனி சமவிடம வியூகங்களில் ஆவாபமுறையைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். ஆவாபம்—பல பகுதிகளிலும் புகுத்தல்; வியூகத்தையமைத்த பின்னர் எஞ்சிய சேனையை அவ்வியூகங்களிற் புகுத்தி அமைத்தல்.

பஞ் செய்தல் வேண்டும். [34]தேர்களின் மூன்றில் இரு மடங்கைப் பகுதிகளில் ஆவாபஞ் செய்தல் வேண்டும். [35]எஞ்சியதை நடுவில் உள்ளதாக அமைத்தல் வேண்டும், [36]தேர்களின் மூன்றில் ஒரு மடங்குக்குக் குறைவானதை இங்ஙனம் ஆவாபஞ் செய்தல் வேண்டும். [37]இதனால் யானைகளுக்கும் குதிரைகளுக்குமுரிய ஆவாபங் கூறியவாறாம்.

[38]குதிரை தேர் யானைகளுக்குப் போரில் நெருக்கடியைச் செய்யாதளவு ஆவாபஞ் செய்தல் வேண்டும்.

[39]படையை மிகுதியாக்கல் ஆவாபமாம். [40]காலாட்களை மிகுதியாக்கல் பிரத்யாவாபமாம். [41]ஒரு பகுதியால் மிகுதியாக்கல் அன்வாவாபமாம். தூஷ்யர்களை மிகுதியாக்கல் அத்தியாவாபமாம்.

---

[34] புகுத்து முறையைக் கூறுகின்றார். வியூகத்தை அமைத்த பின்னர் எஞ்சிய தேர்களை மூன்று கூறாகப் பிரித்து இரு கூற்றைப் பக்க கக்கங்களில் ஆவாபஞ் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[35] எஞ்சியது—மூன்றிலொரு கூறு.

[36] ஆவாபஞ் செய்தற்குரியதாக எஞ்சிய படை, அணிவகுக்கப்பட்ட படையைவிட அதிகமாகவாதல் குறைவாகவாதல் சமமாகவாதல் இருப்பின் எங்ஙனம் ஆவாபஞ் செய்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார். அணிவகுக்கப்பட்ட தேர்ப்படையினளவின் மூன்றிலொரு பங்குக்குக் குறைவாகவுள்ள தேர்ப்படையையே ஆவாபஞ் செய்யலாம் அன்றி அதற்கு அதிகமாகவோ சமமாகவோ உள்ள படையை ஆவாபஞ் செய்தல் கூடாதென்பது கருத்து.

[37] தேர்களுக்குக் கூறிய விதிமுறையை யானைகளுக்கும் குதிரைகளுக்கும் மாட்டேற்றிக் கூறுகின்றார்.

[38] ஆவாபஞ் செய்யுங்கால் குதிரை தேர் யானைகளுக்குப் போரில் நெருக்கடி யேற்படாதவாறு எத்துணைப் படையைப் புகுவித்தல் கூடுமோ, அதற்குமேல் புகுவித்தலாகாது என்பது கருத்து ; 'மூன்றிலொரு பங்குக்குக் குறைவாக விருத்தல் வேண்டும்' என்ற வரையறை எடுத்துக் காட்டாகக் காட்டிய ஓரளவாம் என்க.

[39] ஆவாபத்தின் விசேடமான பிரத்யாவாப முதலிய சிலவற்றை விளக்குதற் பொருட்டு, ஆவாபப் பொருளைக் கூறுகின்றார் ; அணிவகுத்தற் றொழிலிற் பயன்பெற்ற படையை அணிவகுத்து எஞ்சிய படையால் மிகுதியாக்கல் 'ஆவாபம்' எனப்படும்.

[40] காலாட்களால் மட்டும் மிகுதியாக்கல் 'பிரத்யாவாபம்' ஆம்.

[41] குதிரை தேர் யானைகளுள் ஒன்றால் மிகுதியாக்கல் என்பது.

[42]பகைவனது ஆவாபத்தைவிட நான்கு மடங்கிலிருந்து எண் மடங்கு வரை என்ற முறையாலாதல் பெருமைக்கேற்பவாதல் படைகளின் ஆவாபத்தைச் செய்தல் வேண்டும்.

[43]தேர்களின் வகுப்பால் [44]யானைகளின் வகுப்பும் கூறப்பட்டதாம். [45]யானை தேர் குதிரைகளுக்குக் கலப்புமாம். [46]படைகளின் எல்லைகளில் யானைகளும் மருங்கில் சிறந்த குதிரைகளும் நடுவிடத்தில் தேர்களுமாம். [47]யானைகளுக்கு நடுவிடம், தேர்களுக்குக் கக்கங்கள், குதிரைகளுக்குப் பக்கங்கள் [48]என்பது மத்தியபேதி

---

42 அணிவகுக்கப்பட்ட பகைப்படையில் ஆவாபஞ் செய்யப்பட்ட அளவின் நான்கு மடங்கிலிருந்து எண்மடங்குவரை என்ற முறையைக் கொண்டாதல், படை முதலியவற்றாலுண்டாய தன் பெருமையை யநுசரித்தாதல் படைகளைப் புகுத்துதல் வேண்டும் என்பது கருத்து. 'தேர்களின் மூன்றில் ஒருபங்கை...' என்பதாக முற்கூறிய விதிக்கும் ஈண்டுக்கூறிய விதிக்கும் விகற்பத்தைக் கொள்ளல் வேண்டும் என்பார் 'பகைவனது ஆவாபத்தைவிட......பெருமைக் கேற்பவாதல்...' என்று கூறினர். 'தேர்களின் மும் மூன்றாகவுள்ள மூன்றினை' என்பது முதலாக இதுகாறும் தேர்களின் வகுப்பு முறை கூறி முடிக்கப்பட்டது.

43 தேர்களின் அணிவகுப்புமுறையை யானைகளின் அணிவகுப்புக்கும் கொள்க என்று மாட்டேற்றிக் கூறுகின்றனர்.

44 யானைகளை முக்கியமாகக் கொண்ட வகுப்பை 'யானைகளின் வகுப்பு' என்பர். அதன்கண் யானைகளின் அளவு தேர் வியூகத்திற்குக் கூறிய தேரின் அளவுடன் சமமேயன்றி அதைவிட மிக்கதன்றென்பது கருத்து.

45 தேர் குதிரைகள் கலந்த நிலையிலும் யானைவியூகத்தை யமைக்கலாம் எனக் கூறுகின்றனர்.

46 மேற்கூறியவாறு கலப்புள்ள வியூகத்தை யமைக்கு முறையைக் கூறுகின்றனர்; படைகளின் பக்கங்களில் யானைகளையும், கக்கங்களில் முக்கியமான குதிரைகளையும், நடுவில் தேர்களையும் அமைத்து வகுத்தல் வேண்டும் என்பது. மேற்கூறியவாறு யானை முதலியவற்றை யமைத்து வகுப்பது யானை வியூகத்தின் ஒருவகை முறையாம்.

47 இரண்டாவதாக மற்றொரு முறையைக் கூறுகின்றனர்.

48 யானைகளை நடுவிடத்திலும் தேர்களைக் கக்கங்களிலும் குதிரைகளைப் பக்கங்களிலும் அமைத்து வகுக்கப்படும் இம்முறை. 'யானைகளை நடுவிலமைப்பது' என்ற சிறப்பையுடையதாகலின், 'மத்திய பேதி' என்னும் பெயர்த்தாம்.

(என்க). [49]மாறுபட்டது [50]அந்தர்ப் பேதி(யாம்).

[51]யானைகளால் மட்டும் நிரம்பியது கலப்பற்றதாம். [52]போர்க்குரியதற்கு நடுவிடமும் ஊர்திகளுக்குக் கக்கமும் கொடியவைகளுக்குப் பக்கமும் [53]ஆம் [54]என்க.

[55]குப்பாயமுள்ளவைகளுக்கு நடுவிடமும் [56]கலப்பற்றவை கட்குக் கக்கமும் பக்கமும் என்னுமிது குதிரைவகுப்பாம்.

[57]குப்பாயமுள்ளவர் முன்னரும், வில்வீரர் பின்னரும், என்னுமிது காலாட்களின் வகுப்பாம். [58]கலப்பற்றவை இங்ஙன மாம்.

---

49 மேற்கூறிய இருவகையினும் மாறுபட்ட அமைப்பு என்பது. அதாவது :— கக்கங்களில் யானைகளையும், பக்கங்களில் தேர்களையும் நடு விடத்தில் குதிரைகளையும் அமைத்து வகுத்தல் என்பது.

50 படையின் பின்புறத்து உண்மருங்குகளில் யானைகளை யமைத்து வகுத்தல் என்ற சிறப்பையுடையதாகலின் இம்முறை 'அந்தர்ப் பேதி' எனப்படும். இதனால் 'பக்கங்களில் யானைகளை யமைத்து வகுத்தல்' என்ற சிறப்புப்பற்றி முதன் முதலாகக் கூறப்பட்ட முறைக்குப் 'பக்கபேதி' என்னும் பெயர் உய்த்துணர வைத்தவாறறிக.

51 இனிக் கலப்பற்ற வியூகத்தைக் கூறுகின்றார். குதிரை முதலிய வற்றின் கலப்பின்றி யானைகளால் மட்டும் வகுக்கப்படும் வியூகம் 'சுத்த வியூகம்' எனப்படும்.

52 போர்க்குரியவை, ஏறிச் செலுத்தற்குரியவை, கொடியவை என்ற மூவகைப்பட்ட யானைகளுள் எங்கெந்த இடத்தில் எவையெவைகளை யமைத்தல் வேண்டும் என்பதை விளக்கிக் கூறுகின்றார்.

53 ஆம்—அமைத்தற்குரிய இடமாம்.

54 'என்க' என்பது கலப்பற்ற யானைவியூகத்தைப் பற்றிய செய்தி முடிவுற்றது என்னும் பொருட்டு.

55 கலப்பற்ற குதிரைவியூகத்தில் குதிரைகளை யமைக்கும் முறையைக் கூறுகின்றார்.

56 கலப்பற்றவை—கவசமற்ற குதிரைகள்.

57 கலப்பில்லாத காலாட்படைவகுப்பை யமைக்கும் முறையைக் கூறு கின்றார்.

58 கலப்பற்ற யானைவியூகம் முதலியன விளக்கிக் கூறப்பட்டனவாம் என்க.

[59]காலாட்கள் பக்கங்களிலும், குதிரைகள் மருங்கிலும், யானை கள் பின்னரும், தேர்கள் முன்னரும் அல்லது [60]பகைவனது அணி வகுப்பிற்கு மாறுபாடும் என்னுமிது [61]இரு பகுதிப்படையின் பிரிவாம். [62]இதனுல் முப்பகுதிப் படையின் பிரிவுக்கும் விதி கூறியவாறும்.

[63]படைச் சிறப்பு மக்களுக்குச் சிறந்த வன்மையாம். [64]குலம் சாதி, தைரியம், [65]ஆண்டிவிருத்தல், [66]பிராணன், [67]அளவு,

---

[59] இனிக் கலப்புள்ள வியூகத்தைக் கூறுவான் தொடங்கி, முதலில் இரு படைப் பகுதிகளின் சேர்க்கையுள்ளதைக் கூறுகின்றார். ஈண்டுக் 'குதிரை கள் மருங்கிலும்' என்பதீருக ஒரு பிரிவும், அதற்குப்பிறகு 'தேர்கள் முன் னரும்' என்பதீருக இரண்டாவது ஒருவகைப் பிரிவும், 'பகைவனது வகுப் பிற்கேற்ப' என்பது முதலாக வேருெரு பிரிவும் கூறப்பட்டனவாம் என்க.

[60] பகைவனது வியூகத்தைத் தகர்த்தற்கு ஏற்புடையதாயிருத்தலை யொட்டி மேற்கூறிய இருவகையினும் மாறுபட்டதாகவும் அமைத்துக் கொள்ளலாம் என்பது.

[61] இரு படைப்பகுதிகளைக் கொண்டு அமைக்கப்பெற்ற வியூகமுறையா மென்க.

[62] மூவகைப் படைப்பகுதியைக் கொண்டு அமைக்கப்பெற்ற வியூகத் திற்கும் இவ்விதியினுல் விதி கூறப்பட்டதாம் என்பது கருத்து. இத்துடன் 'பக்க......பிரித்தமைத்தல்' என்ற பிரகரணம் விளக்கி முடிக்கப்பட்டது.

[63] இனி 'வன்படை மென்படைகளைப் பிரித்தமைத்தல்' என்னும் பிர கரணம் விரித்துரைக்கப்படும். வன்படை—தந்தை பாட்டன் முதலிய குலவழி வந்த ஆற்றன்மிக்கது. மென்படை—அங்ஙனமல்லாதது; அச்ச முடையதூஉமாம். பிரித்தமைத்தலாவது—பிரித்துப் பக்கம் கக்கம் முதலிய இடங்களில் அமைத்தல். காலாட்படை முதலியவற்றிற்குத் திண்மையான ஆற்றலுடைமையை வரையறுத்துக் கூறுகின்றார். 'தந்தை பாட்டன் வழி யில் வந்தமை' முதலியனவாக 'பகுதிகளினிறைவு' என்னும் பிரகரணத்திற் கூறப்பட்ட தன்மையுடன் கூடியிருத்தலே காலாட்படைக்குச் சிறந்த வன்மையாம் என்பது கருத்து.

[64] யானை குதிரைகளுக்குக் குலம் சாதி முதலிய குணச்சிறப்பே வன் மைச்சிறப்பாம் எனக் கூறுகின்றார். குலம்—ஒரு வழித்தோன்றல்.

[65] ஆண்டு—தொழில் புரிதற்குரிய வயதை யடைந்திருத்தல்.

[66] பிராணன்—சரீரவன்மை.

[67] அளவு—உரிய உயரம், நீளம் பருமன் முதலியவற்றை யுடையதா யிருத்தல்.

விரைவு, [68]பொலிவு, [69]தேர்ச்சி, [70]நிலை, [71]உயர்வு, [72]பணிவு, [73]நன்னடை என்னுமிவை, குதிரை யானை என்னுமிவற்றிற்குச் சிறப்பாம்.

[74]காலாள், குதிரை, தேர், யானை என்பவற்றுள் திண்மையானவற்றின் மூன்றிலொரு பகுதியை நடுவிலும், [75]மூன்றிலொரு பகுதியைக் கக்கம் பக்கமிரண்டிலும், [76]அநுசாரத்தை அநுலோமத்திலும், [77]மூன்றாவதான திண்மையானதைப் பிரதிலோமத்திலும், [78]நொய்மையாயதைப் பிரதிலோமத்திலும்

---

68 பொலிவு—பகைவரைக் கவருமியல்பு. பிறரால் உண்டாம் அவமானத்தைப் பொறுத்திருத்தல் எனினுமாம்.

69 தேர்ச்சி—நன்கு பயிற்சியைப் பெற்றிருத்தல்.

70 நிலை—தாக்கப்படினும் தொடங்கின தொழிலை விடாதிருத்தல்.

71 உயர்ந்த முகத்தையுடைமை.

72 பணிவு—தலைவனுக்கு அடங்கியிருத்தல்.

73 நன்னடை—மாசற்ற தொழிலுடைமை. நல்விலக்கணமுடைமை எனினுமாம். ஈண்டுத் தேர்களுக்கு வன்மைச்சிறப்பு கூறப்படாமைக்குக் காரணம் என்னை ? எனின் கூறுவாம்:—செலுத்தும் மக்கள் மூலமாகவும் குதிரைகள் மூலமாகவுமன்றோ தேர்களுக்குச் சிறப்பு! அது மக்களுக்கும் குதிரைகளுக்கும் கூறிய சிறப்பினாற் பெறப்படுமாதலிற் கூறாராயினர்.

74 மேற்கூறிய இலக்கணமுடைய வன்மைமிக்க காலாட்படைகளை வியூகத்தில் எவ்வாறு பயன்படுத்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார்.

75 மூன்றில் இருபகுதியில் ஒன்றைப் பாதிபாதியாக இரு கக்கங்களிலும், மற்றொன்றைப் பாதிபாதியாகப் பக்கங்களிரண்டிலும் பிரித்தமைத்தல் வேண்டும் என்பது கருத்து. தலையாய வன்மைச் சிறப்பையுடையதைப் பயன்படுத்துமுறை இங்ஙனங் கூறப்பட்டது.

76 இனி அதைவிடச் சிறிது வன்மை குறைந்துள்ள 'அநுசாரம்' என்னும் படையைப் பயன்படுத்து முறையைக் கூறுகின்றார். அதனைத் தலையாய திண்மையான படையின் பிற்பகுதியில் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து. பிற்பகுதியை யடைவதுபற்றி அநுசாரம் 'அநுலோமம்' எனப்படுகிறது. அதனின் மாறுபட்டது 'பிரதிலோமம்—முற்பகுதியை யடைவது' எனப்படும் என்ப.

77 அநுசாரத்தைவிடச் சிறிது குறைந்த வன்மையுடையதைப் பயன்படுத்து முறையைக் கூறுகின்றார். இரண்டாவதான அநுசாரத்தைவிடச் சிறிது தாழ்ந்ததை முதலாவதான திண்மையையுடைய படையின் முற்பகுதியில் அமைத்தல் வேண்டும் என்க.

78 இனி நொய்மையான வன்மையுடைய படையைப் பயன்படுத்து முறையைக் கூறுகின்றார். அதை மூன்றாவதான திண்மைப் படையின் முற்பகுதியில் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

அமைத்தல் வேண்டும். [79] இங்ஙனம் எல்லாவற்றையும் பயனுறச் செய்தல் வேண்டும்.

[80] நொய்மையான படையை எல்லையில் அமைப்பின், விரைவு ஓமஞ் செய்யப்பட்டதாம். [81] திண்மையான படையை முன்னர் அமைத்து நுனிகளில் அநுசாரத்தையும், கக்கத்தில் மூன்றுவதான திண்மையையும், நடுவில் நொய்மையான படையையும் அமைக்குமிது பொறுத்தற்குரியதாம்.

[82] வகுப்பை நிலைப்படுத்திப் பக்க கக்க நடுவிடங்களுள் ஒன்றாலாதல் இரண்டாலாதல் தாக்குதல் வேண்டும். [83] எஞ்சியவற்றால் ஏற்றல் வேண்டும்.

[84] பகைவனைச் சார்ந்த எப்பகுதி [85] ஆற்றலற்றதும் [86] குதிரை

---

[79] மேற்கூறியவாறு எல்லா வகையான வன்மைச் சிறப்பையுடைய படைகளையும் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[80] திண்மையான படையிருக்குங்கால் நொய்மையான படையை முற்பகுதியில் அமைத்தற்குரிய காரணத்தை விளக்குகின்றார். நொய்மையான படையைப் பக்கமுதலிய படைகளின் முற்பகுதியில் அமைத்துப் போர்புரிபவனை எதிர்த்துவரும் எதிர்ப்படையின் முன்னைய விரைவு முற்பகுதியிலுள்ள நொய்மையான படையாகிற தீயிலிடப் பெற்றுத் தணிந்துவிடும் என்பதும் நொய்மையான படையை முன்னணியில் வைத்தல்காரணமாக அப்படையின் அழிவு சிறிதுண்டாயினும் திண்மையான படைக்கு ஏற்படுவது போன்ற பெருங்குற்றம் ஏற்படாதென்பது கருத்து.

[81] வேறுவகை வியூகத்தையும் அதன் பயனையுங் கூறுகின்றார்; திண்மையான படையை முன்னணியிலும், பக்கங்களில் அநுசாரத்தையும், கக்கங்களில் மூன்றுவதையும் நடுவில் நொய்மையானதையும் அமைத்து வியூகத்தைச் செய்யின், அவ்வாறு வகுக்கப்பட்ட படை பகைப் படையின் வேகத்தால் தாக்கப்பட்டதாம் என்பது கருத்து.

[82] இனி அணிவகுத்த பின்னர்ப் போர்புரியு முறையைக் கூறுகின்றார்; இரு கக்கங்கள் இருபக்கங்கள் நடு என்று ஐவகையாகப் பகுக்கப்பட்ட பகுதிகளுள் ஒன்றாலாதல் இரண்டாலாதல் வெற்றிவிருப்பமுள்ளவன் பகைப்படையைத் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

[83] தானே தாக்கத் தொடங்கிய பகைப் படையை எஞ்சிய இரு பகுதிகளால் எதிர்த்துத் தாக்குதல் வேண்டும் என்பது.

[84] பகைப் படையில் தாக்குதற்குரிய இடத்தைக் கூறுகின்றார்.

[85] ஆற்றலற்றது—அற்பமான ஆற்றலுடையது.

[86] ஆற்றலுடையதாயினும் குதிரை யானைகளற்றதும் என்பது.

யானைகளற்றதும் [87] தூஷ்யரான அமைச்சரையுடையதும் வேறுபடுத்தப்பட்டதும் ஆமோ அப்பகுதியை [88] மிகுந்த வலியுள்ளதால் தாக்குதல் வேண்டும். அல்லது பகைவனுடைய மிக்க ஆற்றலுற்றதை [89] இருமடங்கு ஆற்றலுள்ளதால் தாக்குதல் வேண்டும். தன்னுடைய குறைந்த வன்மையுடைய [90] பகுதியை அதிகமாக மிகைப்படுத்தல்வேண்டும். [91] பகைவனுக்குக் குறைவுள்ள இடத்தின் அணிமையிலாதல் அச்சத்திற்குரிய இடத்திற்கணிமையிலாதல் அணிவகுத்தல் வேண்டும்.

[92] முற்செலவு, [93] நாற்புறச் செலவு, [94] மிகு செலவு [95] விடு செலவு, [96] தாக்கியிருத்தல், [97] வலயம், [98] கோமூத்திரிகை, [99] மண்

---

87 தூஷ்யர்—வெகுண்டவர் அஞ்சியவர் முதலியோர்.

88 வன்மைமிக்க அதிகமான படையால் என்பது.

89 மிக்க ஆற்றலுள்ள பகைப்படையினிருமடங்கு ஆற்றலுள்ளதால் என்பது.

90 காலாட்படை முதலியவற்றுள் ஒன்றை அதிகமான பகுதியால் விருத்தி செய்தல் வேண்டும் என்பது.

91 பகைவனது தாக்குதலை யநுசரித்தும், தனக்குண்டாய அச்சத்தை யநுசரித்தும் வியூகத்தை யமைத்தல் என்ற ஒரு விசேடத்தைக் கூறுகின்றார். பகைவனுடைய வியூகத்தைச்சார்ந்த கக்க முதலிய பகுதிகளுள் எப்பகுதியில் படைப்பகுதிக்கு அழிவு புலப்படுமோ அதற்கு அணிமையிலாதல், கக்க முதலிய பகுதிகளுள் எப்பகுதியினிடமிருந்து தனக்கு அச்சமுண்டாம் என ஊகிக்கப்படுமோ அப்பகுதியின் அணிமையிலாதல் தன் படையை அணிவகுத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. இதுகாறும் இவ்வாறு இருவகையான அணிவகுத்தன் முறை கூறிமுடிக்கப்பட்டது. இனிப் போர்ச் செயல்கள் கூறுதற்குரியன.

92 காலாட்படை முதலியவற்றுள் முதலில் குதிரைகளின் பதின்மூன்று வகையான போர்ச் செயல்களைக் கூறுகின்றார். முற்செலவு—தன் படையினின்றும் பகைப்படையைக் குறித்து முதலில் எதிர்த்துச் செல்லல்.

93 நாற்புறச் செலவு—பகைப்படையின் முற்புறத்தும் பிற்புறத்தும் இருமருங்கிலும் தாக்கி நாற்புறமும் திரிந்து செல்லல்.

94 பகைப்படையை நடுவிற் பிளந்து ஊசிபோற் செல்லுதல் என்பது.

95 அதேவழியால் மீண்டும் வெளிவருதல்.

96 பல குதிரைகளுடன் இங்குமங்கும் தகர்த்து மீண்டும் ஓரிடத்திலிருத்தல்.

97 வலயம்—ஊசி போன்று இருவிதமாகச் செல்லுதல்.

98 கோணற் செலவால் இயங்குதலை, கோமூத்திரிகை என்ப.

99 பகைப்படையின் ஒரு பகுதியைத் தனியே பிரித்து, அதைச் சுற்றுதல் 'மண்டலம்' எனப்படும்.

டலம், [100]ஒழிபு, [101]வியாவிருத்த பிருட்டம், [102]அநுசரித்தல், [103]முற்புறம் பக்கம் பிற்புறங்களில் முறியடிக்கப்பட்டவரைக் காத்தல், [104]முறியடிக்கப்பட்டவர்பால் தொடர்ந்து வீழ்தல் என்பன குதிரைக்குரிய போர்களாம்.

[105]ஒழிபு ஒழிந்த மற்றைய இவை, பிரிந்தாதல் சேர்ந்தாதலிருக்கும் [106]நால்வகைப் பகுதியைத் தாக்கல், பக்க கக்க நடுவிடங்களிலுள்ளவற்றைத் தகர்த்தல், [107]தகைத்தல், உறங்குவோரைக் கோறல் என்னுமிவை யானைக்குரிய போர்களாம்.

[108]தாக்கியிருத்தலை நீக்கி (மற்றைய) [109]இவை, [110]தன்னிலத்தில் மேற்சேறல், தாக்கி விலகுதல், [111]நிலைப் போர் என்னுமிவை தேர்க்குரிய போர்களாம்.

[112]எல்லாவிடத்தும் காலத்தும் அடித்தல், மறைவினெறுத்தல் என்பன காலாட் போர்களாம்.

---

[100] எல்லாவகைச் செலவையும் கலப்புமுறையாற் கையாளுதல் ஒழிபாம்.

[101] விடுசெலவைச் செய்து மீண்டும் மிகுசெலவை ஏற்றல் என்பது.

[102] பகைப்படையை எதிர்த்த தன் படையை அநுசரித்தல்; தாக்குண்டு போரினின்றும் திரும்பித் தன் படையினுட் புகுதல் என்பாருமுளர்.

[103] தோல்வியுற்ற தன் படையின் முற்புறத்திலும் பக்கங்களிலும் பிற்புறத்திலும் சுற்றித் திரிதல் என்பது.

[104] தோல்வியுற்ற பகைப்படையைத் தொடர்ந்து செல்லுதல் என்பது.

[105] யானைகளின் போர்களைக் கூறுகின்றார். இலாகவமற்ற சரீரமுடைமை பற்றி ஒழிபு தவிர மற்றைய குதிரைச் செயல்களை யானைக்குரியனவாகக் கூறினார். 'இவை' என்பது முற்செலவு முதலியனவாக மேற் கூறப்பட்ட குதிரைச் செயல்கள் என்னும் பொருட்டு.

[106] காலாட்படை முதலிய நால்வகைப் படைகள் என்பது.

[107] அற்றத்தை யறிந்து தாக்குதல் என்பது.

[108] தேர்ச் செயல்களைக் கூறுகின்றார்.

[109] இவை—யானைச் செயல்கள்.

[110] தேர்க்குரியதாக ஒத்தது முதலியனவாக முன்னர்க் கூறப்பட்ட நிலத்தில் இருந்து கொண்டு பகைப்படையைக் கைப்பற்றுதல் என்பது.

[111] நாற்புறமும் காவலமைக்கப்பட்ட பகைவனுடைய மதில்களைச் சுற்றி நெடுநேரமிருந்து, அவனுடன் போர்புரிதல் என்பது.

[112] காலாட்களின் போர்களைக் கூறுகின்றார்.

சுலோகங்கள்

(1) [113]நால்வகைப் பகுதிகளின் பெருமைக்கு ஒக்குமாறு ஒற்றைப்படையாகவும் இரட்டைப் படையாகவும் வகுப்பை யமைப்பித்தல் வேண்டும்.

(2) [114]இருநூறு விற்கிடை சென்று சேனையின் பின்புறத்தில் அரசன் இருத்தல் வேண்டும். [115]அதனால் சிதைவுற்றதைச் சேர்த்தலுண்டாம். [116]சேனைக்குப் பின்புறத்திருந்தல்லது பொருதல் கூடாது.

பத்தாம் அதிகரணம்—9, 10, 11-ஆம் பிரகரணங்கள்
பக்க கக்ஷ நடுவிடங்களிற் படையளவிற்குத் தக வகுப்புகளைப் பிரித்தமைத்தல், வன்படை மென்படைகளைப் பிரித்தமைத்தல், யானை குதிரை தேர் காலாட்களின் போர்வகைகள் என்னும் நூற்றுமுப்பத்து மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

---

113 நால்வகை—யானை தேர் குதிரை காலாட்படை என்பன; நால்வகை அங்கங்களின் பெருமையை யநுசரித்து வியூகத்தை அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

114 போர் தொடங்கப் பெற்ற பொழுது, அரசன் எவ்விடத்திருத்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றார்; வியூகத்திலிருந்து இருநூறு விற்கிடை இடைவெளிவிட்டுப் படையின் பிற்புறத்தில் அரசன் இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

115 அவ்வாறிருத்தலால் உளதாம் பயனைக் கூறுகின்றார். பகைப் படையினால் தாக்குண்டு சிதைவுற்ற தன் படைகளை ஒன்றுசேர்த்தல் என்ற பயன், அரசன் மேற்கூறியவாறு இருத்தலால் உண்டாம் என்பது கருத்து.

116 சேனையின் பிற்பகுதியிலில்லாமல் போர்புரிதல் கூடாதென்பது கருத்து.

12, 13-ஆம் பிரகரணங்கள்—[1]தண்டம் போகம் மண்டலம் அசங்கதம் என்னும் படை வகுப்பமைத்தல், அவற்றுள் எதிர்ப்படை வகுப்பமைத்தல்

நூற்றுமுப்பத்துநான்காம் அத்தியாயம்

[2]பக்கங்கள், நடுவிடம், சேனைப் பிற்பகுதி என்ற வியூகப் பிரிவுகள் வெள்ளியைச் சார்ந்தனவாம். [3]பக்கங்கள், கக்கங்கள், நடுவிடம், சேனைப் பிற்பகுதி [4]என்பன வியாழனைச் சார்ந்தனவாம்.

[5]வகுக்கப்பட்ட பக்க கக்க நடுவிடங்களையுடைய தண்டம் போகம் மண்டலம் அசங்கதம் இருவருக்கும் பகுதிவியூகங்களாம். [6]அவற்றுள் [7]குறுக்காக விடுத்தல் தண்டமாம். [8]எல்லாவற்றிற்

134-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தண்டம் என்பதுமுதலாகக் கூறப்படும் நால்வகை வியூகங்களின் இயல்பை விளக்குவது இப்பிரகரணமாகும்.

[2] ஈண்டு வெள்ளி, வியாழன் என்ற பொருணூலாசிரியரின் கொள்கைகளைக் கூறுகின்றார்; இருபக்கங்கள் நடுவிடம் சேனையின் பிற்புறம் என்ற நான்கு பகுதிகளையுடையது வியூகம் என்பது வெள்ளியென்னும் சுக்கிராச்சாரியார் கொள்கையாம் என்பது கருத்து.

[3] இனிப் பிருகற்பதியாகிய் வியாழனது கொள்கையைக் கூறுகின்றார்.

[4] என்பதாக ஆறு பகுதிகளையுடையது வியூகம் என்பது வியாழனது கொள்கையாம்.

[5] பின்னர் வகுக்கப்படுமாறு இருபக்கங்கள், இரு கக்கங்கள் நடுவிடம் என்ற பகுதிகளையுடைய தண்ட முதலிய நால்வகை வியூகங்கள், வெள்ளி வியாழன் இருவர்க்கும் இயற்கை (பிரகிருதி) வியூகங்களாம் என்பது கருத்து.

[6] அவற்றின் இலக்கணங்களைக் கூறுகின்றார். அவற்றுள்—தண்ட முதலிய நால்வகை வியூகங்களுள்.

[7] குறுக்கான நிலையிலமைந்த வியூகம், தண்டவியூகம் என்னும் பெயருடையதாம்.

[8] வெள்ளியின் கொள்கைப்படி கக்கமல்லாத நான்கு பகுதிகளும், வியாழனின் கொள்கைப்படி கக்க பக்கங்களுடன் சேர்ந்துள்ள அறுவகைப் பகுதிகளும் சுற்றிச் சுற்றி வட்டமாயிருக்கும்படி யமையப் பெற்றது ‘போக வியூகம்’ எனப்படும்,

கும் தொடர்ந்து வட்டமாயிருத்தல் போகமாம். [9]செல்பவைகட்கு நாற்புறமிருத்தல் மண்டலமாம். [10]நிலையாயவற்றிற்குத் தனித் தனியே நிகழும் படைச் செயல் அசங்கதமாம்.

[11]பக்க கக்க நடுவிடங்களுடன் சேர்ந்து இயங்குவது தண்டமாம். [12]கக்கங்களால் எதிர்ப்பது 'பிரதரம்' ஆம். [13]பக்கங்களினால் பிரதிலோமமாக எதிர்ப்பதுவே 'திருடகம்' ஆம். [14]பக்கங்களினால் மிகவும் எதிர்ப்பதுவே 'அசக்யம்' ஆம். [15]பக்கங்களை நிலைப்படுத்தி நடுவிடத்தால் எதிர்ப்பது 'சியேனம்'

---

[9] பகைப் படைக்கு எதிர்முகமாகச் செல்லும் எல்லாவகைப் படைகளும் ஒருங்கு சேர்ந்து நாற்புறமும் செயலை யேற்றிருத்தல் 'மண்டலம்' எனப்படும்.

[10] பகைப் படையைக் குறித்து எதிர்த்துச் செல்லுதற்கு முன்னர் 'ஐந்து வில்......' முதலியனவாகக் கூறப்பட்ட இடைவெளிவரையறையுடன் அமையப்பெற்ற எல்லாவகைப் படைகளும் பகைப்படையை எதிர்த்துச் சென்றபோதும் கலப்பின்றி இயங்குதலை யுடையது 'அசங்கதம்' என்ற வியூகமாம். இவ்வாறு வெள்ளி வியாழன்களின் கொள்கைக் கேற்ப இலக்கணங் கூறினர்.

[11] இனி கக்கப் பகுதியை ஏற்காத வெள்ளியின் கொள்கைக்கு முரண்பட்டதும், வியாழன் கொள்கைக்கு ஏற்புடையதுமாகிய முறையில் தண்ட முதலிய வியூகங்களின் இலக்கணத்தைக் கூறுகின்றார். பக்க முதலிய ஐவகைப் படையுடன் வேறுபாடின்றி 'இருத்தல் செல்லுதல்' முதலியவற்றைச் செய்யும் வியூகம் தண்டம் எனப்படும் என்பது கருத்து. இது பிரகிருதி (இயற்கை) வியூகமாம்.

[12] இதன் விகாரங்களான 'பிரதரம்' முதலியவற்றின் இலக்கணத்தைக் கூறுகின்றார். கக்கப் பகுதிகளால் பகைப்படையை எதிர்த்துச் செல்லும் தண்ட வியூகமே 'பிரதரம்' எனப்படும் தண்ட வியூகத்தின் விகார வியூகமாம் என்பது.

[13] பக்கப் பகுதிகளால் பிரதிலோமமாகச் (அதாவது கக்கங்களுக்கு எதிர்முகமாக வரும் பகைப் படையைத் துன்புறுத்தற் பொருட்டுச்) செயல்புரியும் தண்ட வியூகமே 'திருடகம்' என்ற பெயருள்ளதாம் என்பது.

[14] பக்கங்களினால் பகைப் படையினுள் ஊடுருவிச் சென்று தாக்கும் திருடக வியூகமே 'அஸஹ்யம்' எனப்படும் என்பது.

[15] இரு பக்கங்களையும் தன்னிடத்தில் நிலைப்படுத்தி நடுப்பகுதியால் பகைப்படையை எதிர்ப்பது 'சியேனம்' என்று கூறப்படும்.

ஆம். (இவை) [16]மாறுபடின் (முறையே) சாபம், சாபகுக்ஷி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம் என்பனவாம். [17]விற்பக்கம் சஞ்சயமாம். [18]அதுவே நடுவிடத்தால் எதிர்த்தபோது விசயமாம். [19]பருத்த காது பக்கத்தையுடையது தூலகர்ணமாம். [20]இருமடங்கு பக்கப் பருமனுளது விசால விசயமாம். [21]மூன்றினால் எதிர்த்த பக்கமுள்ளது சமுமுகமாம். [22]மாறுபடின் சஷாஸ்ய'மாம். [23]மேற்குழுவையுடைய தண்டம் சூசியாம். [24]இரு

---

[16] மேற்கூறப்பட்ட பிரதரம் திருடகம் அஸஹ்யம் சியேனம் என்னும் நான்குவகை வியூகங்களுடன் மாறுபட்டிருப்பின், அவை முறையே சாபம் சாபகுக்ஷி பிரதிட்டம் சுப்பிரதிட்டம் என்று நால்வகை வியூகங்களாம் என்பது கருத்து. அவற்றுள் கக்கப் பகுதியால் எதிர்ப்பது பிரதரம். இதற்கு மாறாக கக்கங்களினால் பிரதிலோம முறையிற் செல்வது சாபவியூகம். பக்கங்களினாற் பிரதிலோமமாக எதிர்ப்பது திருடகம் எனப்பட்டது. இதற்கு மாறாக பக்கங்களினால் எதிர்ப்பது 'சாபகுக்ஷி' என்ற வியூகமாம். பக்கங்களினால் மிகவும் எதிர்ப்பது அசக்யம். இதற்கு மாறாகப் பக்கங்களினாற் பிரதிலோமமாக எதிர்ப்பின் 'பிரதிட்டம்' எனப்படும். பக்கங்களை நிலைப்படுத்தி நடுவிடத்தால் எதிர்ப்பது சியேனம். இதற்குமாறாக நடுவிடத்தாலும் பக்கங்களினாலும் எதிர்ப்பது 'சுப்பிரதிட்டம்' என்ற வியூகமாம்.

[17] இங்ஙனம் தண்ட வியூகத்திற்கு எண்வகை விகாரங்களைக் கூறி மற்றுமோர் விகாரத்தைக் கூறுகின்றார்; வில்லின் அமைப்பை யொத்த பக்கங்களை யுடையது சஞ்சயம் என்ற தண்டவியூக விகாரமாம்.

[18] தண்டவியூகமே நடுவிடத்தால் பகைப்படையினுட் புகின் 'விசயம்' என்ற பெயருடையதாம்.

[19] பருத்த காதுகள் போன்ற பக்கங்களை யுடையது தூலகர்ணம் எனப்படும்.

[20] விசய வியூகத்தைவிட இருமடங்கு பக்கப் பகுதிகளில் பருமனுளது விசால விசயமாம்.

[21] மூன்று—கக்க முதலிய மூன்று பகுதிகள்.

[22] மாறுபடின்—மூன்றினால் நடுவிடமாதல் கக்கங்களாதல் எதிர்க்கப்படின்.

[23] மேற்பகுதியில் பகைப்படைக்கு எதிர்முகமான படைக் குழுவையுடைய தண்டவியூகம் 'ஸூசி' எனப்படும்.

[24] பக்க கக்க நடுவிடங்களில் குறுக்காக விருக்கும் இரு தண்டங்களை யுடையது 'வலயம்' என்னும் பெயருடையதாம்.

தண்டங்கள் வலயமாம். [25]நான்காயின் துர்சயமாம். [26]தண்ட வியூகங்கள் இவ்வாறும்.

[27]பக்க கக்க விடங்களால் [28]ஒவ்வாது இயங்குவது [29]போக மாம். [30]அது [31]'சருப்பசாரி' யும் [32]'கோமூத்திரிகை' யும் [33]ஆம். [34]இரட்டையான நடுவிடத்தை யுடையதும், தண்ட பக்கத்தை யுடையதும் சகடம் எனப்படும். [35]மாறுபடின் 'மகர மாம். [36]யானை குதிரை தேர்களுடன் கலப்பற்றது 'பாரிபதந்தக மாம். [37]போக வியூகங்கள் இவ்வாறும்.

---

25 பக்க கக்க நடுவிடங்கள் ஒவ்வொன்றிலும் குறுக்காகத் தண்ட வியூகத்தின் அமைப்புள்ள படைக்குழுவை யுடையதாக விருப்பின் 'துர் சயம்' என்ற பெயரை யடையும் என்பது.

26 இங்ஙனம் தண்டம், பிரதரம், திருடகம் முதலியனவாகப் பதி னெட்டு வகைத் தண்ட வியூகங்கள் கூறப்பட்டனவாம் என்க.

27 போகவியூகங்களைக் கூறுகின்றார்.

28 ஒத்ததாக இருப்பது முன்னர்க் கூறப்பட்டது. ஒவ்வாதது—அத னின் மாறுபட்டது.

29 பாம்பின் உருவம் போல் கோணலான அமைப்பையுடைமை பற்றிப் 'போகம்' என்பது காரணப் பெயராயிற்று.

30 அது—போகவியூகம்.

31 பாம்பு போல் ஒரே யமைப்பையுடையது என்பது.

32 பசு நடந்து செல்லும்போது விடுகின்ற சிறுநீரின் ஒழுங்கு போன்ற அமைப்பையுடைமை பற்றிக் கோமூத்திரிகை என்றார்.

33 என்று இருவகையாம் என்க.

34 இரண்டாகப் பகுக்கப்பட்ட தண்டவடிவமுள்ள நடுவிடத்தை யுடையதும், ஒவ்வொரு தண்டத்தின் அமைப்பைக் கொண்ட பக்கங்களை யுடையதுமான போகவியூகம் சகடம் என்று கூறப்படும்.

35 இரண்டாகப் பகுக்கப்பட்ட தண்ட வடிவமுள்ள பக்கங்களையும் ஒரு தண்டவடிவமுள்ள நடுவிடத்தையும் உடையதாயின் 'மகரம்' எனப் படும்.

36 சகட வியூகமே யானை முதலியவற்றுடன் கலக்கப்படின் 'பாரி பதந்தகம்' எனப்படும் என்பது.

37 இவ்வாறாக சருப்பசாரி முதலிய ஐவகைப் போக வியூகங்கள் கூறப் பட்டனவாம் என்க.

[38]பக்க கக்க நடுவிடங்கள் ஒன்றாயிருத்தல் மண்டலமாம். [39]நாற்புறமும் முகமுள்ளது சருவதோபத்திரமாம். [40]எண்படையுள்ளது துர்சயமாம். [41]மண்டல வியூகங்கள் இவ்வாறும்.

[42]பக்க கக்க நடுவிடங்கள் ஒன்றுசேராதது அசங்கதமாம். [43]ஐவகைப்படைகளால் உருவை யமைத்தல்பற்றி அது 'வச்சிரம்' அல்லது 'கோதை' என்றாகும். [44]நான்கிலுலாயின் 'உத்தியானகம்' அல்லது 'காகபதி' எனப்படும். [45]மூன்றாலாயின் 'அருத்த சந்திரிகம்' அல்லது 'கர்க்கடக சிருங்கி' எனப்படும். [46]அசங்கத வியூகங்கள் இவ்வாறும்.

---

38 இனி மண்டல வியூகத்தின் இயல்பை விளக்குகிறார்; பக்க முதலியவைகளுக்கு முற்கூறப்பட்ட இடைவெளியின்றி ஒன்றுக்கொன்று தொடர்புண்டாயின் 'மண்டலம்' என்ற பெயர் கொண்ட வியூகமாம். 'செல்பவைகட்கு நாற்புறமிருத்தல் மண்டலமாம்' என முன்னர் இலக்கணத்துடன் விளக்கப்பட்டதற்கு ஒத்தவகையில் ஆசிரியர் கொள்கையை யநுசரித்தது இவ்விலக்கணம் என்க. (9-ஆம் குறிப்பைப் பார்க்க)

39 நான்கு திசைகளிலும் பகைப்படையை எதிர்த்துச் செல்லும் மண்டலமே 'சருவதோபத்திரம்' என்ற பெயருடையதாம்.

40 இரண்டு நடுவிடத்தை யுடையதும், நான்கு பக்கங்களை யுடையதும் இரு கக்கங்களையுடையதுமான மண்டலம் 'துர்ஜயம்' என்ற பெயரை யுடையதாம்.

41 இரண்டையே பன்மையுபசாரத்தால் பன்மை விகுதியுடன் முதனூலில் 'வ்யூஹா:' எனக் கூறினார்; கூறப்படாத சில பிரிவுகளை உய்த்துணர்ந்து கொள்க என்னும் பொருட்டு இங்ஙனம் பன்மைவிகுதியுடன் கூறினார் என்பாருமுளர்.

42 தன் கொள்கைக் கேற்ப அசங்கத வியூகத்திற்கு இலக்கணங் கூறுகின்றார். பக்கமுதலிய ஐந்து பகுதிகளும் பகைப் படையை எதிர்த்துச் செல்லின் 'அஸம்ஹதம்' என்ற பெயருள்ள வியூகமாம்.

43 அவ் அசங்கதமே பக்க முதலிய ஐவகைப் படைகளை வச்சிர முதலியவற்றின் வடிவமாக அமைத்தல் பற்றி வச்சிரம் என்றும் கோதை (गोधा) என்றும் பெயர் பெறும் எனக் கூறுகின்றார்.

44 இருபக்கங்கள் நடுவிடம் பிற்பகுதி என்னுமிவற்றின் வடிவத்தை யமைப்பின் உத்யானகம் என்றும் காகபதி என்றும் கூறப்படும் என்பது கருத்து.

45 இரு பக்கங்களும், பிற்பகுதி நடுவிடங்களில் ஒன்றும் ஆக மூன்றின் வடிவத்தை யமைப்பின் அர்த்த சந்திரிகமாம்.

46 மேற்கூறியவாறு அறுவகையாக அசங்கத வியூகம் கூறப்பட்டபடியாம்.

[47]தேரை நடுவிடத்தும் யானைகளைக் கக்கத்தும் [48]குதிரைகளைப் பிற்புறத்துங் கொண்டது 'அரிட்ட'மாம்.

[49]காலாள் குதிரை தேர் பிற்புறம் யானை என்பன (அமையின்) அசலமாம்.

[50]யானை குதிரை தேர் பிற்புறம் காலாள் என்பன (அமையின்) அப்பிரதிகதமாம்.

[51]அவற்றுள் பிரதரத்தைத் திருடகத்தாலும், திருடகத்தை அசக்யத்தாலும், சியேனத்தைச் சாபத்தாலும், பிரதிட்டத்தைச் சுப்பிரதிட்டத்தாலும், சஞ்சயத்தை விசயத்தாலும், தூலகர்ணத்தை விசால விசயத்தாலும், பாரிபதந்தகத்தைச் சருவதோபத்திரத்தாலும் தாக்குதல் வேண்டும். [52]துர்ச்சயத்தால் எல்லாவற்றையும் எதிர்த்து வியூகஞ் செய்தல் வேண்டும்.

---

47 இவ்வாறு தண்ட முதலிய வகைகளைக் கூறி வேறு மூவகைப் பிரிவுகளைக் கூறுகின்றார்.

48 குதிரைகளைப் பிற்புறத்தும், பொருள் பற்றிக் காலாட் படையைப் பக்கத்துங் கொண்டது அரிட்டமாம் என்று கொள்க. ரிட்டம் என்பது அமங்கலத்தைக் குறிப்பதால் 'மங்கலமானது' என்பதை இப்பெயர் விளக்குமென்க.

49 ஈண்டும் பொருள் பற்றி இவ்வாறு கொள்க :— காலாட்களைப் பக்கத்தும், குதிரைகளை நடுவிடத்தும், தேர்களைக் கக்கத்தும் யானைகளைப் பிற்புறத்துங் கொண்டது 'அசலம்' என்றவாறு.

50 ஈண்டும், யானைகளைப் பக்கங்களிலும் குதிரைகளை நடுவிடத்தும் தேர்களைக் கக்கங்களிலும் காலாட்களைப் பிற்புறத்துங் கொண்டது எனக் கொள்க ; இதுகாறும் தண்ட முதலிய வியூகங்களமைத்தலைப் பற்றிய செய்தி விளக்கப்பட்டது. இனித் தண்டமுதலிய வகுப்புக்களுள் இன்ன வியூகத்திற்கு இன்னவியூகம் எதிர் வியூகமாகும் என்பதைக் கண்டமைக்கும் முறைகூறப்படும்.

51 பிரதர முதலியனவாக மேற்கூறப்பட்ட வியூகங்களுள் எதை எந்த எதிர் வியூகத்தால் தகர்த்தல் வேண்டும் என்பதற்குரிய உபாயங் கூறுகின்றார்.

52 தண்ட வியூகத்தின் பிரிவாகவும் மண்டல வியூகத்தின் பிரிவாகவும் கூறப்பட்ட துர்ச்சயம் என்ற வியூகம் மற்றைய எல்லா வியூகத்தையும் தகர்த்தற்குரிய எதிர்வியூகமாம் என்பது கருத்து.

[53]காலாட்படை குதிரை தேர் யானைகளுள் முன் முன்னுள்ளதைப் பின் பின்னுள்ளதாலும், [54]குறைந்த பகுதியை யுடையதை மிகுந்த பகுதியை யுடையதாலும் தாக்குதல் வேண்டும் [55]என்க.

[56]பத்துப் [57]பகுதிக்கு ஒரு தலைவன் 'பதிகன்' என்றும் [58]பத்துப் பதிகனுக்கு ஒரு தலைவன் சேனைத்தலைவன் என்றும்,

---

[53] வியூகங்களுக்குத் தனித் தனியே பிரதிவியூக வரையறையைக் கூறி, படைப் பகுதிகளான காலாட்படை முதலியவற்றிற்கு எதிர்ப்படைகளின் வரையறையைக் கூறுகின்றார்; காலாட்படையைக் குதிரைப் படையாலும், குதிரைப் படையைத் தேர்ப்படையாலும், தேர்ப்படையை யானைப் படையாலும் எதிர்த்துத் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

[54] குறைந்த வன்மை அளவுகளையுடைய பகுதியை மிக்க வன்மை முதலியவற்றையுடைய பகுதியால் தாக்குதல் வேண்டும் என்பது.

[55] 'என்க' என்பது எதிர்ப்படை வரையறைமுறை இங்ஙனம் கூறி முடிக்கப்பட்டது என்னும் பொருட்டு.

[56] சேனைப் பகுதிகள் பிரிதல் சேர்தற்றொழில்களை யேற்றற்குரிய சங்கேதங்களை அவ்வப் பகுதித்தலைவன் கற்பித்துக் கொள்ளல் வேண்டும் எனக் கூறுவார் சேனைத் தலைவர்களை மூவகையினராகப் பகுத்து விளக்குகின்றார்.

[57] பகுதியாவது ஈண்டு தேர்யானைகளாகிய சிறப்புடைய சேனைப் பகுதிகளிரண்டுமாம். பத்துத் தேர்களுக்கும் பத்து யானைகளுக்கும் தலைவனை ஒருவன் 'பதிகன்' என்ற பெயருள்ளவனும் என்பது கருத்து. முக்கியமான பகுதிகள் பத்தாலாக்கப்பட்ட வியூகத்தில் குதிரை காலாட்கள் என்ற மற்றைய இரு பகுதிகளுமிருத்தல் இன்றியமையாதாகலின், அப்பகுதிகளின் எண்ணிக்கை கூறப்படாதிருப்பதன் காரணம் என்னை? எனின், அவற்றின் எண்கள் பொருளால் தானே பெறப்படுமாகலின் கூறப்படவில்லை. அஃதாமாறு:— ஒவ்வொரு தேர் அல்லது யானைக்கு முற்செல்வன ஐந்து, பணி செய்வன ஐந்து ஆகப் பத்துக் குதிரைகளுண்மையால், தேரின் பத்து எண்ணால் நூறு குதிரைகள் உண்மை தானே பெறப்படும். அங்ஙனமே ஒவ்வொரு குதிரைக்கும் முற்செல்பவர் மூவரும் பணியாளர் மூவரும் ஆகக் காலாட்கள் அறுவராவர் ஆகலின் நூறு குதிரைகளால் அறுநூறு காலாட்கள் உண்மை பெறப்படும் என்றவாறு. எனவே நூறு குதிரைகள் அறுநூறு காலாட்களுடன் கூடிய பத்துத் தேர்கள் அல்லது பத்துயானைகளுக்குத் தலைவனொருவன் பதிகன் எனப்படுவான் என்பது கூறப்பட்டதாம்.

[58] அவரவர் செலுத்தற்குரிய படைகளுடன் கூடிய பதிகர் பதின்மர்க்குரிய தலைவன் சேனாபதி எனப்படுவான் என்பதும், பத்து சேனாபதிகளுக்குரிய தலைவன் நாயகன் எனப்படுவான் என்பதும் கருத்து.

சேனைத்தலைவர் பதின்மருக்கு ஒருவன் நாயகன் என்றும் (கூறப் படுவர்). [59]அவன் வாச்சிய ஒலி இலச்சினை கொடிகளால் [60]வியூகப் பகுதிகளுக்குப் [61]பகுதியின்பிரிவு [62]சேர்க்கை [63]இருத்தல் செலவு [64]திரும்புதல் தாக்குதல் என்னும் இவற்றைக் குறித்துச் [65]சங்கேதத்தைக் கற்பித்தல் வேண்டும்.

[66]வியூகம் சமமாயின் இடம் காலம் திண்மைகளின் தொடர்பால் பயன் விளைவுண்டாகும்.

சுலோகங்கள்

(1—3) [67]பொறிகள் [68]மறைவுச் செயல்கள் [69]விழிப்பற்றவரைக் கொல்லும் தீக்ஷ்ணர்கள் [70]மாயைகள் [71]தெய்வத்தன்மையின் தொடர்பு [72]யானையணிகலனுள்ள வண்டிகள் [73]தூஷ்யர்

---

59 அவன்—அங்நாயகன்.

60 வியூகத்திலுள்ள யானை முதலியவற்றிற் கென்பது.

61 ஒன்று சேர்ந்த பகுதிகளின் பிரிவு என்பது.

62 சேர்க்கை—பிரிந்த பகுதிகள் ஒன்றுகூடுதல்.

63 இருத்தல்—செல்லுதலை விடுதல்.

64 போர்புரிதலினின்றும் திரும்புதல் என்பது.

65 இம்மாதிரியான வாச்சிய ஒலி கேட்கப்பட்டபோது பிரிதல் கூடுதல் முதலியவற்றுள் இன்ன இன்ன செயலை ஏற்றல் வேண்டும் என்பதாகவும், இம்மாதிரியான இலச்சினை கொடிகளைக் காட்டியபோது இன்ன இன்ன செயலை யேற்றல் வேண்டும் என்பதாகவும் சங்கேதத்தைக் கற்பித்துத் தொழில்புரியச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

66 தன் படையிலும் பகைப்படையிலும் தண்ட முதலிய வியூகங்கள் ஒத்திருப்பின், ஒத்தது மேடுபள்ளமானது முதலிய இடங்கள், இரவிற் போர்புரிபவர் முதலியோருக்கு இரவு முதலிய காலங்கள், வன்மை முதலியன என்னு மிவற்றால் வெற்றி பெறப்படும் என்பது கருத்து.

67 பொறிகள்—சாமதக்கினியம் முதலியனவாகக் கூறப்பட்ட இயந்திரங்கள்.

68 மறைவுச் செயல்கள்—நச்சுப்புகை, நீரைக் கெடுத்தல் முதலியன; இவற்றின் விரிவை பதினான்காம் அதிகரணத்திற் காண்க.

69 வேறு செயல்களில் ஈடுபட்ட மக்களைக் கொல்லும் தீக்ஷ்ணர் என்ற ஒருவகை ஒற்றர்கள் என்பது.

70 மாயை—இல்லாதனவற்றை இருப்பனவாகப் புலப்படுத்தும் இந்திரசாலக் கல்வி.

71 கடவுளைக் காணும் ஆற்றல் அரசன்பால் உளது என்னும் செய்தியைப் பரப்புதல் என்பது.

72 யானைக்குரிய வேடம் ஆடைகள் முதலியவற்றால் மறைக்கப்பட்ட உருவத்தையுடைய வண்டிகள்.

73 பகைவரின் தூஷ்யர்களுக்குக் கோபத்தை யுண்டாக்குதல்.

களை வெருளச்செய்தல் [74]பசுக்குழு பாசறையில் தீயிடல் [75]பக்க கக்கங்களில் தாக்குதல் [76]தூதவுருவினரால் வேறுபடுத்தல் என்னுமிவற்றாலும், அரண் தீயிடப்பட்டது கவரப்பட்டது [77]குடிப்பிறப்புள்ளவருக்குக் கோபமுண்டாயிற்று பகைவன் அல்லது காட்டிலுள்ளவன் போர்க் கெழுந்தான் என்னுமிவற்றாலும் [78]பகைவனுக்கு அச்சத்தைச் செய்தல் வேண்டும்.

(4) [79]வில்வீரரால் எய்யப்படும் அம்பு ஒருவனைக் கொல்லும் கொல்லாதுமிருக்கும். அறிஞனால் செலுத்தப்பட்ட அறிவோவெனில் கருவில் உள்ளிருப்பவர்களையும் கொன்றுவிடும்.

பத்தாம் அதிகரணம் 12, 13-ஆம் பிரகரணங்கள்
'தண்டம் போகம் மண்டலம் அசங்கதம் என்னும் படைவகுப்பமைத்தல்', 'அவற்றுள் எதிர்ப்படைவகுப்பமைத்தல்' என்னும் நூற்றுமுப்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

பத்தாம் அதிகரணம் முற்றிற்று.

---

[74] பசுக்குழு—முன்னர் ஆனினத்தை யமைத்தல்.

[75] பக்க முதலியவற்றில் திடீரெனத் தாக்குதல்.

[76] தூதர்களின் உருக்கொண்ட ஒற்றர்கள் மூலம் வேறுபடுத்தற் றொழிலைச் செய்தல் என்பது.

[77] உன்குடியிற் பிறந்த மக்களால், நாட்டில் தீயிடுதல் முதலிய தீமையாகிற கலக்கம் உண்டாயிற்றென்பது.

[78] மேற்கூறியவற்றைக் கொண்டு பகைவனுக்கு அச்சத்தை விளைவித்துத் தற்பயனை யடைதல் வேண்டுமே யன்றி, எடுத்தவுடனே போரிலிறங்குதல் கூடாது. போரினால் வெற்றியடைதல் ஒருதலையன்றும். ஏனையுபாயங்கள் பயன்படாத வழியே போரை மேற்கொள்ளுதல் வேண்டும் என்க.

[79] பயன் விளைவைக் குறித்து மந்திரம் (சூழ்ச்சி) போரைவிட ஆற்றலுடையது எனக் கூறுகின்றார். வில்வீரன் எய்த அம்பு பகைவனைக் கொல்லுதல் உறுதியெனச் சொல்லுதற்கில்லை. ஒருக்கால் கொன்றாலும் ஒருவனைத்தான் கொல்லுமே யன்றிப் பலரையுங் கொல்லும் வன்மையுடையதன்று. நீதிநூலுணர்ந்த அறிஞர்களது சூழ்ச்சியோ பகைவனையும் அவனைச் சார்ந்தவர்களையும், கருவிலுள்ளவரையும் ஒருங்கே கொல்லும் ஆற்றல் மிக்கதாகும். ஈண்டு,

'வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை' (குறள் 872)

என்ற குறளும் சிறப்புரையும் ஒப்பு நோக்கத்தக்கன ; 'அரசை விரும்பும் அறிஞனால் எவ்வாற்றானும் போர் விடுத்தற்குரியது. (எனவே) மூன்று உபாயங்களாற் பொருளை யேற்றல் வேண்டுமென்பர் வியாழன்' என்ற முதுரையும் இக்கருத்துக் கொண்டதேயாம்,

பதினோராம் அதிகாரணம்—[1]குழூஉச்செயல்

1, 2-ஆம் பிரகரணங்கள்—[2]வேறுபடுத்தலை மேற்கோடல், மறைவிற் கோறல்

நூற்றுமுப்பத்தைந்தாம் அத்தியாயம்

[3]ஒன்று சேர்ந்திருத்தல் பற்றிப் பகைவரால் தாக்குதற்கியலா தது குழூ. ஆகலின், [4]படை நட்புக்களின் பேற்றைவிடக் குழுவின் பேறு தலையாயதாம். [5]அநுகூலமான அவர்களை இன்சொல் கொடைகளாலும், [6]முரண்பட்டவரை வேறுபடுத்தல் ஒறுத்தல் களாலும் [7]பயன்கோடல் வேண்டும்.

135-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] குழூஉ—அம்பு, வாள் முதலிய படைகளையுடையராய்த் தம்மிற்கூடி அரசற்கடங்காமல் ஒழுகுவோர் கூட்டம். செயல்—அக் குழுவைக் குறித்து அரசன் மேற்கொள்ளுங் காரியம். வெற்றிவிருப்பமுள்ளவனுடைய நாட்டிலாதல் அதையடுத்துள்ள நாட்டிலாதல் வாழ்பவர் தனித்தனியே வலியற்றவராயினும், ஒன்றுகூடியிருத்தல்காரணமாக ஆற்றல்மிக்கவராகி உழவு பசுக்காவல் வாணிகம் படைக்கலம் முதலியவற்றால் உயிர்வாழும் போர்வீரரல்லாதாரை வேந்தன் தன்வயப்படுத்தற்குரிய உபாயங்கள் இவ்வதிகரணத்தில் இரு பிரகரணங்களாற் கூறப்படுகின்றன.

[2] கூட்டத்தைப் பிரித்தற்குரிய வேறுபடுத்தும் முறைகளை மேற்கோடல் என்க.

[3] படை நட்பு என்ற இரண்டின் பேறுகள் தம்முள் ஒத்தனவன்றி அவற்றுள் ஒன்று, மிக்கதாதல் யாங்ஙனம் என்பார்க்கு விடை கூறுகின்றார். குழுவினர் ஒன்றுகூடியிருக்கும் தன்மையால் உண்டாக்கப்பட்ட ஆற்றலுடையராகலின், பகைவரால் வெல்லுதற்கரியராவர். கூலிப்படை முதலியவற்றிற்குக் கூடியிருக்கும் தன்மை யிருப்பினும் அது வேறு காரணத்தாலாயது. குழுவினருக்காயின், அவர்தம் ஊக்கத்தாலாயது. எனவே ஏனையதைவிடக் குழுவினரின் ஆற்றல் மிக்கதெனக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[4] பல்வேறு வகைப்பட்ட, படை நட்பு என்ற இரண்டின் ஊதியங்களுள், மேற்கூறியவாறு ஒரு தலைவனையுடைய குழுவைப் படையாகவும், நட்பாகவும் பயன்படுத்திக் கொள்ளலாமாகலின், அதனாலுளதாம் பேறு மிகச் சிறந்ததாம் என்பது கருத்து.

[5] பகைமையின்றித் தனக்கு ஒத்தவரை யென்பது.

[6] முரண்பட்டவர்—தனக்கு மாறாக இருப்பவர்.

[7] பயன்கோடல்—ஈண்டுத் தன்வயப்படுத்தல்.

[8]காம்போசம் சுராட்டிரம் என்னும் நாடுகளில் உள்ள அரசக் குழுவினர் முதலியவர் உழவு பசுக்காவல் வாணிகம் படைக்கலங் களால் வாழ்பவராவர். [9]இலிச்சிவிகம், விரசிகம், மல்லகம், மத்திர கம், குகுரம், குரு, பாஞ்சாலம் முதலிய நாடுகளில் உள்ளவர் அரச ரெனும் பெயரளவில் வாழ்பவராவர்.

[10]சத்திரிகள் [11]எல்லாக் குழுவினரையும் [12]நெருங்கி [13]ஒவ் வொருவருடைய குற்றச்சொல், [14]வெறுப்பு, [15]பகை, [16]பூசலிடம் என்னும் [17]இவற்றை யறிந்து [18]முறையே அண்டிவந்தவனை 'இவன் உன்னைத் [19]தூற்றுகிறான்' என்று வேறுபடுத்தல் வேண் டும். [20]இருபக்கத்தும் இங்ஙனமாம். ஆசிரிய உருவினர் [21]ஊன்றிய கோபத்தை யுடையவர்களுக்கு [22]கல்வி, [23]சிற்பம்,

---

[8] குழுவினர் இவர் என விளக்குகின்றார். காம்போசம் சுராட்டிரம் என்ற நாடுகளிலுள்ள அரச குலத்தவர் குழுவும், (முதலிய என்பதால்) வணிகக் குழுவும் என்பது.

[9] இலிச்சிவிகம் முதலிய எழுவகை நாட்டில் வாழ்பவரும் (முதலிய என் பதால்) அந்தகம் விருஷ்ணி முதலியவரும் சொல்லளவில் அரசராயிருந்து கொண்டு குழுவை அண்டிப்பிழைப்பவராவர் என்பது கருத்து.

[10] சத்திரிகள்—ஒருவகை ஒற்றர்கள்.

[11] எல்லாக் குழுவினர்—மேற்கூறிய இருவகைக் குழுவினர்.

[12] நெருங்கி—ஏதேனுமொரு காரணத்தைக் கொண்டு நெருங்கிச் சென்று.

[13] ஒருவரையொருவர் குற்றங்கூறல் என்பது.

[14] கடுஞ்சொல் முதலியவை காரணமாக உண்டான கோபம் என்பது.

[15] தீங்குபுரிதல் முதலியவற்றிற்குக் காரணமான தீய நினைவு என்பது.

[16] பிறனால் விரும்பப்பட்டதொரு பொருளை வேறொருவன் விரும்புதல். (இது பூசற் காரணமாம் என்க).

[17] இவற்றையறிந்து—பிரித்தற்கு இன்றியமையாதவையான இவற்றை யடைந்து.

[18] நாளடைவில் தம்மை நெருங்கி வரும்படிச் செய்யப்பட்ட, குழுவி லுள்ளவனை என்பது.

[19] பலவகையாகப் பழித்துக் கூறுகின்றான் என்று கூறிக் குழுவினின் றும் அவனை வேறுபடுத்தல் வேண்டும் என்பது.

[20] மற்றொரு சாராரையும் இவ்வாறே வேறுபடுத்தல் வேண்டும் என் பது கருத்து.

[21] ஒருவர்பால் ஒருவர் கோபங் கொண்டவர்களுக் கென்க.

[22] கல்வி—ஆன்வீக்ஷிகீ முதலிய கலைகள்.

[23] சிற்பம்—படைக்கலப்பயிற்சி முதலியன.

சூது, [24]பந்தய விளையாட்டு [25]என்னுமிவற்றில் [26]சிறுவர்பூசலை யுண்டாக்கல் வேண்டும். [27]வேசையர் கள்விற்போர்கள் காரணமாகக் குழுத்தலைவரான மக்களுக்குத் [28]தீக்ஷ்ணர்கள் மாறுபட்ட புகழ்ச்சியாற் பூசலை யுண்டாக்கல் வேண்டும். [29]தீயவரைத் தன் வயப்படுத்தலாலுமாம்.

[30]குறைவுற்ற நுகர்தலையுடைய குமரர்களைச் [31]சிறந்த நுகர்ச்சியால் ஊக்கமுறச் செய்தல் வேண்டும்.

[32]சிறந்தவர்களுக்குத் தாழ்ந்தவருடன் ஒரு பாத்திரத்தையும்

---

24 வினுதல் விடை கூறுதல் முதலிய கலைகள்.

25 என்னுமிவற்றைப் பற்றி (என்னுமிவை காரணமாக) என்பது.

26 கல்வி கற்கும் சிறுவர்களுக்கு 'இவன் உன்னை அறிவீனனெனச் சொன்னான்' என்பது முதலாகக்கூறி வேறுபடுத்துதற்குப் பூசலையுண்டாக்கல் வேண்டும் என்பது.

27 வேசையர் முதலியவரிடம் ஈடுபட்டவரும் குழுவின் தலைவருமாக வுள்ளவர்களுக்கு என்பது.

28 தீக்ஷ்ணர்கள், தம்மால் ஏவப்பட்ட வேசையர் முதலியவர்களாற் செய்யப்பட்ட 'வியாஜஸ்துதி' என்ற வஞ்சப்புகழ்ச்சியால் ஒருவருக்கொருவர் இழித்துரைத்துக் கொள்ளும்படிச் செய்தல் வேண்டும் என்பது.

29 குழுத்தலைவருள் வெகுண்டவர் பொருணசை யுடையோர் அஞ்சியவர் அவமதிக்கப்பட்டவர் முதலியவரைத் தன்வயப்படுத்திக்கொண்டும் பூசலை யுண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

30 தமக்கு விருப்பமாயுள்ள பொருளை மிகக் குறைந்த அளவில் அநுபவிக்கும்படி தடைப்பட்ட குமரர்களை என்பது. குமரர்கள்—ஈண்டுக் குழுவில் முக்கியமாயிருப்பவரைவிடச் சிறிது தாழ்ந்தவராயும், அரசப் புதல்வருக்குச் சமமாயுமிருப்பவர்.

31 அவருக்குச் சமமான மற்றைய குமரர்களின் சிறப்புற்ற நுகர்ச்சியால் என்பது. குமரராயிருத்தல் சமமானபோது நீ குறைந்த நுகர்ச்சியையுடையவன் என்பது போன்றவற்றைச் சொல்லிப் பொருமையுறச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

32 சிறந்தவர்கள் தாழ்ந்தவருடன் ஒருங்கிருந்து உண்பதையும் (ஏககவஜபக்ஷிஹோஜநம்) கன்னியைக் கொள்ளல் கொடுத்தற் றொடர்புகளையும் செய்யாவண்ணம் தடுத்தல் வேண்டும். இம்முறையில் இருபாலார்க்கும் பகைமை யுண்டாம் என்பது கருத்து.

திருமணத்தையும் தடுத்தல் வேண்டும். [33]தாழ்ந்தவர்களைச் சிறந்தவர்களுடன் ஒரு பாத்திரத்திலும் திருமணத்திலும் சேர்ப்பித்தல் வேண்டும். [34]குலம் வன்மை பதவிவேறுபாடு என்னுமிவற்றால் தாழ்ந்தவருடன் சமமாந் தன்மையை ஏற்பதிலுமாம். [35]நிலையுற்ற வழக்கை முரண்படவமைத்து அறிவித்தல் வேண்டும். [36]தீக்ஷ்ணர்கள் இரவில் பொருள், பசு, மக்கள் என்பவற்றைத் தாக்குதலால் வழக்குரைகாரணமான பூசல்களை யுண்டாக்கல் வேண்டும். [37]எல்லாப் பூசலிடங்களிலும் அரசன் குறைவுற்ற பக்கத்தவர்களைப் பொருள் படைகளால் தன்வயப்படுத்தி எதிர்ப் பக்கத்தவரைக் கொல்லுதலில் ஏவுதல் வேண்டும். அல்லது [38]பிரிந்தவரை வெளியேற்றல் வேண்டும். [39]ஒருங்கே ஓரிடத்தில் அமைத்து இவர்களின் நிலத்தில் ஐந்து குடியையாதல் பத்துக் குடியையாதல் உழவுத் தொழிலில் அமைத்தல் வேண்டும். [40]ஒருங்

---

33 மற்றொரு முறையைக் கூறுகின்றார். தாழ்ந்தவரைச் சிறந்தவருடன் ஒருங்கிருந்து உண்ணவும் அவருடன் திருமணத்தொடர்பு செய்யவும் வற்புறுத்தல் வேண்டும். இம்முறையில் சிறந்தவர் தாழ்ந்தவர் கருத்துக்குக் கட்டுப்படாதவராய்ப் பிரிந்துபோவர் என்பது கருத்து.

34 குல முதலியவற்றால் தாழ்ந்தவரைச் சிறந்தவருடன் சமமான நிலையை யேற்கும் கட்டுப்பாடுடையவராகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

35 குழுவிலுண்டான வழக்கு, அக்குழுத் தலைவனால் ஒரு வகையில் துணியப்பட்ட பின், துணியப்பட்டதற்கு மாறான சில நியாயங்களை வழக்கினர்க்கு அறிவித்தல் வேண்டும் என்பது கருத்து.

36 தீக்ஷ்ணர்கள் குழுவினர்க்குரிய பொருள் முதலியவற்றைத் தாமே யழித்து, அவ்வழிவை அக்குழுவினருள் ஒருவர்க்கொருவர் செய்ததாகப் பொய்யாக வெளிப்படுத்தி, 'வன்செயல்' முதலிய வழக்குரைக்குக் காரணமான பூசல்களை ஒருவர்க்கொருவர் ஏற்கச் செய்தல் வேண்டும் என்பது.

37 மேற்கூறிய எல்லா வகையான பூசல் காரணங்களிலும்.

38 வேறுபட்டவரைக் குழுவினின்றும் வேற்றிடத்தை யடையச் செய்தல் வேண்டும் என்பது.

39 வேறுபட்டவ ரனைவரையும் ஓரிடத்தில் இருக்கச் செய்து, ஐந்து அல்லது பத்துக் குடிகளை உழவுத் தொழிலில் ஏவுதல் வேண்டும்.

40 எல்லோரும் ஓரிடத்தில் இருப்பதால் உண்டாம் பயனைக் கூறுகின்றார். சிதைவுறுதவர் படைக்கல மேற்பதற்குரிய காலத்து எளிதிலியங்குதற் குரியவராவர் என்பது கருத்து.

கிருப்பவரே படைக்கல மேற்பதற்குரியராவர். [41]இவர்கள் சேர்க்கையில் தண்டத்தை நிலைப்படுத்தல் வேண்டும்.

[42]அரசரெனும் பெயரளவினரால் தண்டிக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டுமுள்ள நற்குடிப் பிறப்புள்ளவன் நற்குணமுள்ளவன் என்பவரை [43]அரச புதல்வனாக நிலைப்படுத்தல் வேண்டும். [44]ஊழ்வினை யுணர்ந்தோர் முதலியவரின் இனம், குழுவினர்பால் இவனுடைய அரச இலச்சினைகளை வெளிப்படுத்தல் வேண்டும். [45]அறவோரான குழுத்தலைவரை 'இவ்வரசனுடைய புதல்வன் அல்லது உடன்பிறந்தான் என்பவரிடம் உங்கள் அறத்தையேற்கக் கடவீர்' என்று வேறுபடுத்தல் வேண்டும். [46]ஏற்றுக்கொண்டவருக்குத் தீயவரை வயப்படுத்தற் பொருட்டுப் பொருளையும் படையையும் அனுப்புதல் வேண்டும். [47]வன்மைக்குரிய காலத்தில் கள்

---

41 வேறுபடுத்தப்பட்டு ஓரிடத்திலமையப் பெற்றவர் மேற்கூறிய குழுவினராக மாறின் தண்டமேற்படும் என்பதை யறிவுறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

42 இனி அரச குலத்தவர் என்று சொல்லால் மட்டும் வழங்கப்படுபவரும் குழுவால் வாழ்பவருமான மேற்கூறிய இலிச்சிவிகர் முதலியவரைப் பிரித்தற்குரிய முறையைக் கூறுகின்றார்.

43 'இவன் அரசனின் புதல்வன்' என்று கற்பித்துக் கூறுதல் வேண்டும்.

44 சோதிட நூல் வல்லவரும், சாமுத்திரிகா நூல் வல்லாரும், அரசப் புதல்வனெனக் கற்பிக்கப்பட்டவனுக்கு அரசனுக்குரிய இலக்கண முண்மையை அக்குழுவில் அறிவுறுத்தல் வேண்டும் என்பது கருத்து.

45 அக்குழுவில் தலைவராயும் அறவோராயுமிருப்பவரை அரசச் சொல்லுடையவரால் தண்டிக்கப்பட்டவர் முதலியவரைப் பற்றி இங்ஙனம் வேறுபடுத்தல் வேண்டும். அதாவது—இன்ன அரசனுடைய புதல்வனிடத்தும் அல்லது உடன்பிறந்தானிடத்தும் தண்டித்தல் முதலியவற்றால் உண்டான துன்பத்தை யகற்றுதல் என்ற உங்கள் அறத்தை நீவிர் ஏற்கக்கடவீர் என்றவாறு.

46 மேற்கூறியவாறு வேறுபடுத்தலை ஏற்றபோது அத்தலைவருள் தீயவர் முதலியவர் தன் பக்கத்துப் புகுதற் பொருட்டுப் பொருள் முதலியவற்றை யனுப்புதல் வேண்டும் என்பது கருத்து. இம்முறையால் அரசச் சொல்லுடையவர் குழுவினின்றும் பிரிந்தவராவர் என்ப.

47 ஆற்றலை யேற்கவேண்டிய காலம் நெருங்கியபோது என்பது.

விற்போரின் உருவினர் [48]புதல்வர் மனைவியர் என்பவரது இறத்தலைத் தலைக்கீடாகக்கொண்டு 'நைடேசனிகம்' என்று மயக்க மருந்துடன் கூடிய நூற்றுக்கணக்கான கட்குடங்களைக் கொடுத்தல் வேண்டும்.

[49]கடவுண்மரம், தெய்வவாயில், காவலிடம் என்னுமிவற்றில் சத்திரிகள் [50]ஒப்பந்தச் செயலடைக்கலம் பொன் இலச்சினைகளுடன் கூடிய பொற்பாண்டங்களை வெளிப்படுத்தல் வேண்டும். குழுவினர் கண்டபோது 'அரசனைச் சார்ந்தவை' என்றறிவித்தல் வேண்டும். [51]பின்னர்ப் படைத்தாக்குதலைச் செய்தல் வேண்டும்.

[52]குழுவினருடைய ஊர்தி பொன் என்னுமிவற்றைக் [53]காலிகமாக ஏற்றுக் [54]குழுத்தலைவனிடம் பொருளை வெளிப்படையாகக் கொடுத்தல் வேண்டும். [55]இவர்கள் அதைக் கேட்ட

---

[48] தங்கள் புதல்வர் முதலியவரின் மரணத்தை நிமித்தமாகக் கற்பித்து, இக் கள் இறந்தவரைக் குறித்துக் கொடுத்தற்குரியதும் 'நைஷேசனிகம்' எனக் கூறப்படுவதுமாம் எனக்கூறி மயக்கத்தை யுண்டாக்கும் நஞ்சு கலக்கப்பெற்ற கட்குடத்தைக் குழுவினருக்கு நிறையக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[49] மற்றொரு உபாயத்தைக் கூறுகின்றார்.

[50] குழுத்தலைவனுடன் சந்தி முதலியவற்றால் ஒப்பந்தம் செய்தற்பொருட்டு ஈடாக வைக்கப்படும் பொருளையும், பொன்னுடனும் அடையாள முத்திரையுடனுங் கூடிய பொற்பாண்டங்களையும் குழுவினர் அறியுமாறு வெளிப்படுத்தல் வேண்டும். குழுவிலுள்ளவர் அவற்றைக்கண்டு 'இவை யாருடையவை' எனக் கேட்குங்கால் உண்மையை மறைத்தற் பொருட்டும் மேற்சேறற் பொருட்டும் 'அரசனைச் சார்ந்தவை' எனப் பகர்தல் வேண்டும்.

[51] இங்ஙனம் வேறுபடுத்தலைச் செய்தபின் படையால் குழுவைத் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

[52] மற்றொரு வேறுபடுத்தன் முறையைக் கூறுகின்றார்.

[53] கால வரையறையுடன் திருப்பிக் கொடுப்பதாக வாங்கிக்கொள்ளப் படும் பொருள் காலிகமெனப்படும் என்ப.

[54] உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டிய பொன் முதலியவற்றைக் குழுத்தலைவனிடம் பலர் முன்னிலையில் கொடுத்தல் வேண்டும் என்பது.

[55] குழுவினர், 'வாங்கிக்கொண்டதைத் திருப்பிக்கொடு' என்று கேட்டபோது 'அது முன்னரே தலைவனிடம் கொடுக்கப்பட்டது' எனக் கூறுதல் வேண்டும் என்பது. இம்முறையால் தலைவனுக்கும் குழுவினருக்கும் வேறுபாடுண்டாம் என்க.

போது 'இத்தலைவனிடம் கொடுக்கப்பட்டது' எனக் கூறுதல் வேண்டும்.

[56]இதனால் பாசறையிற் புக்க காட்டில் வாழ்வோனை வேறு படுத்தலும் கூறியவாறும்.

[57]குழுத்தலைவனுடைய தற்பெருமை யுணர்வுள்ள புதல்வனிடம் 'நீ இந்த [58]அரசனுடைய புதல்வன், பகைவரது அச்சங் காரணமாக [59]இங்கு வைக்கப்பட்டிருக்கிறாய்' என்று அறிவித்தல் வேண்டும். [60]ஏற்றுக்கொண்டவனை அரசன் பொருள் படைகளால் வயப்படுத்திக் குழுவினர்பால் வன்மையை யேற்கச்செய்தல் வேண்டும். [61]பயனை யெய்தியவன் அவனையும் விரட்டுதல் வேண்டும்.

[62]வேசையரைப் போற்றுபவர், கழைக்கூத்தன், நடன், கூத்தன், மாயவித்தை செய்பவன் என்னுமிவர்கள் [63]ஏவப்பட்டவராக உயர்ந்த அழகு இளமை என்பவற்றையுடைய மகளிரால் குழுத்

---

56 அரசச் சொல்லுடையவர் முதலியவர்களை வேறுபடுத்தற்குக் கூறிய உபாயங்களையே, பாசறையினுட் புகுந்த காட்டுத்தலைவனை வேறுபடுத்தற்குங் கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்றார். 'வேறுபடுத்தலை மேற்கோடல்' என்னும் பிரகரணம் இத்துடன் விளக்கிக் கூறி முடிக்கப்பட்டது.

57 இனி 'மறைவிற்கோறல்' என்னும் பிரகரணம் விளக்கப்படும். தற்பெருமை யுணர்வு—'யான் சிறந்தவன்' என்ற அகங்கார வுணர்ச்சி.

58 அரசன்—வெற்றிவிருப்பமுள்ளவன்.

59 இக்குழுவில் அடைக்கலமாக வைக்கப்பட்டிருக்கிறாய் என்பது.

60 மேற்கூறியவாறு வேறுபடுத்தலை ஏற்றுக்கொண்ட அவனுக்குப் பொருள் முதலியவற்றால் துணைபுரிந்து அவனைக் குழுவினருடன் போர் புரியச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

61 குழுத்தலைவனுடைய புதல்வனது ஆற்றலால் குழுவினரைத் தாக்குதல் என்ற தன் பயனை யடைந்த பின்னர் அப் புதல்வனையுங் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

62 மற்றொரு விதி கூறுகின்றார்.

63 'ஒற்றுத் தொழிலில்' என்ற சொல்லை முன்னர்க் கூட்டிப் பொருள் கொள்க.

தலைவரை மயக்குதல் வேண்டும். [64]காதலைப் பெற்றவருள் ஒருவனுக்கு நம்பிக்கையைச் செய்து வேற்றிடச் செலவு வலிந்து கவர்தல் என்பவற்றால் பூசல்களை யுண்டாக்கல் வேண்டும். [65]பூசலில் தீக்ஷ்ணர்கள் 'இக்காதலன் இவ்வாறு கொல்லப்பட்டான்' என்று செயல்புரிதல் வேண்டும்.

[66]மாற்றச் செயலுடையவனைப் பொறுத்தவனிடம் மகளிர் [67]சென்று 'இத் [68]தலைவன் உன்பாற் காதலுள்ள எனக்குத் [69]தீங்கு புரிகின்றான். அவன் வாழுமளவும் [70]இங்கிருக்கமாட்டேன்' [71]என்று அவன் கொலை குறித்துத் தூண்டுதல் வேண்டும்.

[72]வலிந்து கவரப்பட்டவள் காட்டினணிமை, விளையாட்டில்லம் என்னுமிவற்றில் கவர்ந்தவனை இரவில் தீக்ஷ்ணனாலாதல்,

---

[64] அம் மகளிரைக் காதலித்த தலைவருள் ஒருவனுக்கு, அவனால் விரும்பப்பட்ட மகளிரோடு சேர்தற்குரிய சங்கேதத்தில் நம்பிக்கையை யுண்டு பண்ணி, வேறொரு தலைவனை யடைதல் அல்லது 'உன்னுடன் சேர்தற் பொருட்டு வந்த இவளை இவன் வலிந்து கவர்ந்தான்' என்று பொய்யாகக் கற்பிக்கப்பட்ட வலிந்து கவர்தல் என்னுமிவற்றால் பூசல்களை யுண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

[65] குழுத்தலைவர்களுக்கு ஒருவருக்கொருவர் பூசல் உண்டானபோது குழுத்தலைவனை மறைவிற்கொல்லுதல் என்ற செயலைத் தீக்ஷ்ணர்கள் ஏற்றல் வேண்டும் என்பதும், கொன்றபின் 'இக் காமுகன் எதிர்க்காமுகனால் இவ்விதம் கொல்லப்பட்டான்' என்ற பொய்ச் செய்தியையும் பரப்புதல் வேண்டும் என்பதும் கருத்து.

[66] தனக்கு மாறாக மகளிரைக் காதலித்த தலைவனைப் பொறாத தலைவன் பாற் செய்தற்குரிய விதிமுறைகளைக் கூறி, இனிப் பொறுத்தவன்பாற் செய்தற்குரியதைக் கூறுகின்றார். மாற்றச்செயல்—ஈண்டுத் தான் காதலித்த மகளிரை அவனும் காதலித்தல்.

[67] தானே சென்று என்க.

[68] தலைவன்—குழுத்தலைவன்.

[69] தீங்குபுரிதல்—உன்னிடம் வரவொட்டாது தடுத்தல்.

[70] இங்கு—உன் அணிமையில்.

[71] என்று கூறி என்பது.

[72] மற்றொரு வகையினைக் கூறுகின்றார். ஒருவனோடு சங்கேதஞ் செய்து கொண்டவளும், மற்றொருவனால் வலிந்து கவரப்பட்டவளுமான ஒரு பெண் தன்னைக் கவர்ந்தவனைக் காட்டின் அருகாமையிலாதல், சங்கேத இடமான விளையாட்டில்லத்திலாதல் இரவில் மறைவாகத் தீக்ஷ்ணர்களால் கொல்லுவித்தல் வேண்டும் என்பதும், அல்லது நஞ்சு கலந்த பானம் முதலியவற்றால் தானே கொல்லவேண்டும் என்பதும் கருத்து.

நஞ்சினால் தானேயாதல் கொலை செய்தல் வேண்டும். [73]பின்னர் 'என் அன்பன் இவனாற் கொல்லப்பட்டான்' என வெளிப்படுத்தல் வேண்டும்.

[74]காதலுற்றவனைச் சித்தவுருவினன் வசிய மருந்துகளால் வெளியேற்றி நஞ்சினால் வஞ்சித்து விலகுதல் வேண்டும். [75]அவன் சென்றதும் சத்திரிகள் பிறரின் தூண்டுதலைப் பகர்தல் வேண்டும்.

பொருளுள்ள கைம்பெண் [76]கரவில் மறைந்தொழுகுபவள், [77]வஞ்சகமகளிர் என்பவர் [78]தாயம் அடைக்கலப்பொருள் என்பன பற்றி வழக்கிட்டும், [79]அதிதி, [80]நச்சு மருத்துவப் பெண், கூத்தாடுபவள், பாடுபவள் என்னுமிவர்களாக இருந்தும் குழுத் தலைவரை மயங்கச் செய்தல் வேண்டும். [81]ஒப்புக்கொண்டு மறை

---

73 அவ்வாறு கொலைசெய்த பின்னர், 'எதிர்க்காதலனை இவனால் என் காதலன் கொல்லப்பட்டான்' என்ற செய்தியைப் பரப்புதல் வேண்டும் என்பது கருத்து.

74 ஒருத்தியிடம் காதல் கொண்டவனைச் சித்தவுருக்கொண்ட ஒற்றன் வசீகரண மருந்துகளால் தனிப்படுத்தி நஞ்சினால் கொலை செய்து ஓடிப் போதல் வேண்டும் என்பது கருத்து.

75 சித்த வுருவினன் ஓடியபின்னர்ச் சத்திரிகள் 'எதிர்க்காதலனால் ஏவப் பட்டு வந்த சித்தன் அவன்' என்ற செய்தியைப் பரப்புதல் வேண்டும் என் பது கருத்து.

76 கணவனுள்ளவளாயினும், வறுமைகாரணமாகக் கூடாவொழுக் கத்தை மேற்கொண்டவள் என்பது.

77 வஞ்சக மகளிர்—பெண்ணுருக்கொண்ட ஆடவர்.

78 தாயப்பொருள் பற்றியும் அடைக்கலப்பொருள் பற்றியும் வழக்குத் தொடர்பவராக அவ்வழக்கைத் துணிதல் வேண்டுமென்பதைத் தலைக் கீடாகக்கொண்டு குழுத்தலைவனை யணுகி, அவனைத் தம்பால் மயங்கச் செய் தல் வேண்டும் என்பது கருத்து.

79 அதிதி—ஈண்டுப் பலவகைத் தெய்வங்களின் சித்திரங்களைக் காண் பித்துப் பிழைப்பவள் என்ப.

80 பாம்பு பிடிக்கும் பெண்டிர் என்பது. அத்தொழிலுள்ளவனின் பெண்டிர் எனினுமாம்.

81 மயங்கிய நிலையில் அவர்களுடன் கூடுதற்குச் சங்கேதஞ் செய்து கொண்ட குழுத்தலைவர், இரவில் கூட்டங்கருதி மறைவில்லங்களிற் புக்க போது அவர்களைத் தீக்ஷ்ணர்கள் கொல்லுதல் வேண்டும் அல்லது கட்டிக் கொணர்தல் வேண்டும் என்க.

வில்லங்களில் கூட்டங் கருதிப் புகுந்தவரைத் தீக்ஷ்ணர்கள் கொல்லுதல் வேண்டும் அல்லது கட்டிக் கொணர்தல் வேண்டும்.

[82]இச் சிற்றூரில் ஏழைக்குடி [83]வெளியேறிற்று. [84]அதன் மகளிர் அரசனுக்குரியவர். 'இவளை யேற்றுக்கொள்' என்று சத்திரி, மகளிர்மோகமுள்ள குழுத் தலைவனிடம் விரித்துரைத்தல் வேண்டும். [85]ஏற்கப்பட்டவிடத்து அரைத் திங்களிடையில் சித்தவுருவினனான தூஷ்யன், 'இவன் என்னுடைய முக்கியமான மனைவி, மருகி, உடன் பிறந்தாள் அல்லது புதல்வி என்னுமிவர் களை வலிந்து பற்றுகிறான்' என்று குழுத் தலைவரிடையில் அரற்று தல் வேண்டும். [86]குழு அவனைத் தண்டிப்பின், அரசன் அவனைக் கொண்டு மூரண்பட்டவர்பால் வன்மையை ஏற்கச் செய்தல் வேண்டும். [87]தண்டிக்கப்படாவிடின் சித்தவுருவினனை இரவில் தீக்ஷ்ணர்கள் கொல்லுதல் வேண்டும். [88]பிறகு அவ் வுருவினர் 'இவன் அந்தணனைக் கொன்றவன், பார்ப்பனியின் கள்ளக் கண வன்' என்று கூவுதல்வேண்டும்.

---

[82] மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[83] வாழ்க்கைத் தொழில்கருதி வேற்றுநாட்டுக்குச் சென்றதென்பது கருத்து.

[84] 'அக்குடித் தலைவனுடைய மனைவி அழகு முதலியவற்றால் அரசன் நுகர்தற்குரியவள், அவளை நீ மனைவியாக்கிக்கொள் என்று' என்க.

[85] அவ்வாறு அவனால் அவள் ஏற்கப்பட்டவிடத்து அரைத்திங்கள் கழிந்த பின்னர், சித்தவுருவினனான ஒரு தூஷ்யன் குழுத்தலைவர் முன்னிலை யில் 'இன்ன குழுத்தலைவன் என்னுடைய முக்கிய மனைவி முதலிய உற வுடைய பெண்ணை வலிந்து கவர்ந்து அநுபவிக்கிறான்' எனக் கூறி நிந்தித் தல் வேண்டும் என்பது.

[86] அவ்வாறு கவர்ந்தவனை அக்குழு தண்டித்தால், தண்டிக்கப்பட்ட அவனை அரசன் தன் பக்கத்திற் புகச்செய்து, தன் பகைவர்பால் எதிர்க்கச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[87] அக்குழு அவனைத் தண்டிக்காதிருப்பின், மேற்கூறியவாறு கவர்ந்த வனை நிந்தித்தவனும் சித்தவுருவினனுமான தூஷ்யனை இரவில் தீக்ஷ்ணர்கள் கொன்றுவிடுதல் வேண்டும் என்பது கருத்து.

[88] அவ்வாறு கொன்ற பிறகு சித்தவுருவினர் 'சித்த அந்தணனைக் கொன்றான், சித்த அந்தணன் மனை நயந்தான், என்பதாக தண்டிக்கப் படாத குழுத்தலைவனைப் பழித்துக் கூறல் வேண்டும் என்பது.

[89] ஊழ்வினை யுணர்ந்தோருருவினன் பிறனால் மணக்கப்பட்ட கன்னியை மற்றவனிடம் 'இவனுடைய கன்னி அரசனுக்கு மனைவியாயும், அரசனைப் பெறுபவளாயும் உள்ளவள். பொருள் முழுவதையும் கொடுத்தோ, கவர்ந்தோ இவளைப் பெறுவாய்' என்றறிவித்தல் வேண்டும். [90]பெற்றிலனேல் பிற பக்கத்தை ஊக்கமுறச் செய்தல் வேண்டும். [91]பெறுவானாயின் பூசல் விளைந்ததாம்.

[92] அன்புள்ள மனைவியையுடைய தலைவனிடம் 'இத் தலைவன் இளமைச் செருக்குற்று [93]உன்மனைவியிடம் என்னை யனுப்பினான்; நான் அவனுக்கஞ்சி [94]ஓலையையும் [95]அணிகலனையும் எடுத்து வந்துளேன் ; உன் மனைவி குற்றமற்றவள். இவன்பால் மறைவில் [96]மாற்றம் புரிதல்வேண்டும். [97]அதஃதாறும் நானும் நம்பிக்கை

---

89 வேறொரு வகையைக் கூறுகின்றார். சோதிட நூலுணர்ந்தவனது வேடம் பூண்டவன் குழுத்தலைவருள் ஒருவனால் மணக்கப்பட்ட ஒரு கன்னியை, மற்றொரு தலைவனிடம் பின்வருமாறு புகழ்ந்து கூறுதல் வேண்டும். இன்னானுடைய இக்கன்னி வேறொருவனால் மணக்கப்பட்டிருக்கிறாள். இவள் அரசனுடைய மனைவியாயும், அரசனை மகனாகப் பெறுபவளாயுமாகப் போகிறாள். அதாவது இவள் எவனைக் கணவனாக மணப்பாளோ, எவனைப் புதல்வனாகப் பெறுவாளோ அவ்விருவரும் அரசராவர். ஆகையால், எல்லாப் பொருளையுங் கொடுத்தோ, வலிந்து கவர்ந்தோ இவளைத் தன்வயமாக்கிக் கொள் என்றவாறு.

90 மேற்கூறியவாறு அறிவிக்கப்பட்டவனால் முயன்றும் அக்கன்னி அடையப்பெறாளாயின் முன்னர் மணக்க உறுதிசெய்தவர் பக்கத்தவருக்கு, பின்னர் மணக்க உறுதிசெய்து பயனற்ற கருத்துடையவனோடு பகைமையை உண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

91 அக்கன்னி பின்னவனாற் பெறப்படின், முன்னர் மணந்த தலைவனுக்கும், அவனிடமிருந்து அவளைப் பின்னர் அடைந்தவனுக்கும் பூசல் விளைவது திண்ணமே என்பது கருத்து.

92 மற்றொரு வகை கூறுகின்றார்.

93 உன் மனைவியைத் தன்வயப்படுத்தற் பொருட்டு என்னைத் தூதாக அனுப்பினான் என்பது.

94 ஓலை—காதற்கடிதம்.

95 அணிகலன்—காதற்காணிக்கையாகவுள்ளது.

96 மாற்றம் புரிதல்—கொல்லுதல்.

97 'அவனைக் கொல்லும் வரை உன்னணிமையிலேயே யிருத்தல் என்ற அன்பை உனக்குச் செய்வேன்' என்று கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

யுறச் செய்வேன் என்று கூறுதல் வேண்டும். [98]இவை முதலான பூசல் காரணங்களால் தானே யுண்டானதும் தீக்ஷ்ணர்களால் உண்டாக்கப்பட்டதுமான பூசல்களில் குறைந்த பக்கத்தைப் பொருள் படைகளால் அரசன் வயப்படுத்தி முரண்பட்டவர்பால் வன்மையை ஏற்கச் செய்தல் வேண்டும். வெளியேற்றவுஞ் செய்யலாம்.

இங்ஙனம் குழுவினர்பால் ஒரே அரசனுகச் செயல்புரிதல் வேண்டும். [99]குழுவினரும் இங்ஙனம் ஒரு அரசனிடமிருந்துண்டாய இந்த வஞ்சகச் செயல்களிலிருந்து காத்துக் கொள்ளல் வேண்டும்.

சுலோகம்

[100]குழுத் தலைவனும் குழுவினரிடம் அறச் செயல்களால் [101]இனியவனும் அன்புள்ளவனும், [102]அடக்கமுள்ளவனும் [103]சேர்ந்த மக்களை யுடையவனும், [104]எல்லோர் கருத்துக்களையும் அநுசரிப்பவனுமாக இருத்தல் வேண்டும்.

பதினோராம் அதிகரணம் 1, 2-ஆம் பிரகரணங்கள்
'வேறுபடுத்தலை மேற்கோடல்', 'மறைவிற் கோறல்' என்னும்
நூற்றுமுப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.
பதினோராம் அதிகரணம் முற்றிற்று.

---

98 மேற்கூறியவாறு கலகத்திற்குரிய காரணங்களால் கலகமானது ஒற்றர்களின் பேதோபாயமின்றித் தானே உண்டானபோதும் தீக்ஷ்ணர்களால் உண்டாக்கப்பட்டபோதும் தாழ்ந்த பக்கத்தை அரசன் பொருள் படைகளால் தன்வயப்படுத்தி, தன் பகைவரோடு அவர்களை எதிர்க்கச் செய்தல் வேண்டும் என்பதும் அங்ஙனம் எதிர்க்க இயலாதபோது தன் நாட்டினின்றும் வெளியேறச் செய்தல் வேண்டும் என்பதும் கருத்து.

99 இவ்வாறு செயல்புரியும் அரசனிடம் குழுவினர் ஒழுகவேண்டிய முறையைக் கூறுகின்றார். குழுவினரும் இம்மாதிரி அரசனாலுண்டாம் வஞ்சகச் செயலினின்று தம்மைக் காத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. இவ்வாற்றால் குழுவினர்பால் அரசனும், அரசனிடம் குழுவினரும் நடந்துகொள்ளவேண்டிய முறை வகைகள் கூறப்பட்டனவென்க.

100 இனிக் குழுத்தலைவன் குழுவினர்பால் ஏற்கற்பால செயன்முறையைக் கூறுகின்றார்.

101 பிற்காலத்துண்டாம் நன்மையைப் பயக்கும் செயல்புரிபவனும் என்பது.

102 அடக்கமுள்ளவன்—கர்வமற்றவன்.

103 தன்னுடன் சேர்ந்தும் தன் கருத்துக்கொத்த கருத்தை யுடையவருமான குழுவினரை யுடையவனும் என்பது.

104 குழுவினர் அனைவருடைய கருத்தை யநுசரித் தொழுகுபவனும் என்பது.

பன்னிரண்டாம் அதிகரணம்—[1] ஆற்றலிலான்செயல்

முதற் பிரகரணம்—[2] தூதுவன் செயல்

நூற்றுமுப்பத்தாரும் அத்தியாயம்

[3]வன்மைமிக்கானால் எதிர்க்கப்பட்ட வலியற்றவன் [4]எல்லாவிடத்தும் நாணற் புல்லினை யொத்துப் பணிந்தொழுகுதல் வேண்டும். [5]வன்மைமிக்கானிடம் வணங்குபவன் இந்திரனை யன்றோ வணங்குகிறான்' என்பர் பரத்துவாசர்.

[6]போரில் வெற்றியும் தோல்வியுமாகிய இது அரசனுக்குக் கடனும். வன்மையன்றோ துன்பத்தை யகற்றுகிறது. ஆதலின் படைகளின் எல்லாத் தொகுதியாலும் போர் புரிதல் வேண்டும் என்பர் விசாலாக்கர்.

136-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தன்னைக்காட்டிலும் வன்மை மிக்க பெருவேந்தன் சந்தியை விரும்பாதபோது சிறிதும் ஆற்றலிலாத அரசன் செயற்பாலன கூறுவது இவ்வதிகரணமாகும்.

[2] ஆற்றலுள்ளவனுடன் சந்திசெய்தல் இன்றியமையாததாகலானும், அச்சந்தி தூதுவன்முகமாக நடைபெற வேண்டுமாகலானும் 'சந்தியை யாசித்தல்' என்ற தூதுவன் செயலைப்பற்றிக் கூறுதலின் இயைபு புலனாதலறிக. தூதராவர் — சந்திவிக்கிரகங்கட்கு வேற்றுவேந்தரிடைச் செல்வோர்; தான் வகுத்துக்கூறுவானும், கூறியது கூறுவானும், ஓலைகொடுத்து நிற்பானுமென மூவகைப்பட்டுத் தலை இடை கடையாக எண்ணப்படுவர்.

[3] ஆற்றலிலான் செயலைப்பற்றிய பலருங்கூறும் கொள்கைகளைக் கூற விரும்பிய ஆசிரியர் முதலில் பரத்துவாசர் கொள்கையைக் கூறுகின்றார்.

[4] தனக்குண்டான எல்லாவகை அவமானத்திலும் வலியவனை யனுசரித்தொழுகுவதில் ஈடுபட்டவனாக, எத்தகைய பெருவெள்ளத்திலும் தணிந்திருந்து அவ்வெள்ளத்தைச் சார்ந்து நின்ற நாணற் புல்லானது, தான் அழியாது நிற்றல் போல வன்மையில்லாதவனும் வலியவனைப் பணிந்து உய்தல் வேண்டும் என்பது.

[5] ஆற்றலுடையவனிடம் தாழ்ந்தொழுகுதல் சிறுமையாகாதென்றும், ஆராயுங்கால் பெருமைக்குங் காரணமாம் என்றும் பரத்துவாசர் கூறுவர்.

[6] விசாலாக்கரின் கொள்கையைக் கூறுகின்றார். எல்லாவகைப் படைக்குழுவுடன் கூடிப் போர்புரிதலால், வெற்றி இறத்தல்களுள் ஒன்றை யடைதலே அரசனுக்கு உரிய கடமையாம். பகைவனைப் பணிந்தொழுகுதல் அரசதர்மமன்று என்பது கருத்து.

[7]அன்றென்பர் கௌடலியர். [8]எல்லாவிடத்தும் வணங்கியவன் [9]குல ஆடுபோல் உயிரிற் பற்றற்று வாழ்கின்றான். [10]குறைந்த படையுடன் போர் புரிபவன் கடலிற் புணையற்றவன் போல் ஆழ்ந்து அழிகிறான். [11]ஆகலின் சிறந்த அரசனையாதல் பொறுத்தற்கியலாத அரணையாதல் அடைந்து செயல் புரிதல்வேண்டும்.

[12]எதிர்ப்பவர், அறம் பொருணசை அசுரம் என்பவற்றால் வெல்பவர் என மூவகையாவர். [13]அவருள் தற்கொடையால் அறவெற்றியாளன் மகிழ்கிறான். [14]பகைவருடைய அச்சங் காரணமாகவும் அவனிடம் தற்கொடையைச் செய்தல் வேண்டும். நிலம் பொருள் என்பவற்றைக் கவர்தலால் [15]பொருணசை வெற்றியாளன் மகிழ்கிறான். [16]அவனைப் பொருளால் வயப்படுத்தல் வேண்டும். [17]அசுரத்தால் வெற்றி பெறுபவன் நிலம் பொருள் புதல்வர் மனைவி உயிர் என்னுமிவற்றைக் கவர்தலால் மகிழ்கிறான்.

---

7 மேற்கூறிய இரு கொள்கைகளையும் கௌடலியர் மறுக்கின்றார்.

8 தாழ்ந்தொழுகுதலால் வருங்குற்றங் கூறுகின்றார்.

9 தன் குழுவினின்றும் பிரிந்துபோன ஆடுபோல் அச்சங் காரணமாக உயிர்ப்பற்றற்று மிக முயன்று வாழ்கிறான் என்பது கருத்து.

10 வலியவனோடு போர் புரிதலால் வருங்குற்றங் கூறுகின்றார்.

11 ஆகவே, செயற்பாலதென் எனின் செய்தற்குரியதை விளக்கிக் கூறுகின்றார். தன் பகைவனைவிடச் சிறந்த ஆற்றலுள்ள வேறு அரசனையாதல், தாக்குதற்கரிய அரணையாதல் அடைந்து, எதிர்த்த அரசன்பாற் செயல் புரிதல் வேண்டும் என்பது.

12 செயல்வகைகளைக் கூறுவதற்காக, அவற்றிற்குப் பொருளாகவுள்ள எதிர்ப்போரை வகுத்துக் கூறுகின்றார். தர்ம விஜயீ, லோப விஜயீ, அசுர விஜயீ என்று முதனூல் கூறும்.

13 அம்மூவருள் முதல்வன் 'யான் உனக்குரியன்' என்று ஒருவன் தன்னைச் சார்ந்த வழி மகிழ்வான் என்பது.

14 அவனிடமிருந்துண்டாம் அச்சத்திற்காக மட்டும் அவனை மகிழ்விப்பவனல்லன். வேறு பகைவரிடமிருந் துண்டாம் அச்சத்திற்காகவும் அவனை மகிழ்விப்பான் என்பது. அதாவது அம்முதல்வன் தற்கொடை செய்தவனைத் தான் துன்புறுத்தாமலிருப்பது மட்டுமின்றி, மற்றைய பகைவனிடமிருந்தும் அவனைக் காப்பான் என்பது கருத்து.

15 இரண்டாவதாகக் கூறப்பட்ட 'லோபவிசயீ' என்பவன் என்பது.

16 பொன் முதலியவற்றைக் கொடுத்தலால் அவனைத் தன்வயப்படுத்தல் வேண்டுமென்பது.

17 'அசுரவிசயீ' என்னும் மூன்றாமவன் நிலம் முதலிய எல்லாவற்றையுங் கவர்ந்து கொள்ளுதலால் மகிழ்வான் என்பது.

[18]அவனை நிலம் பொருள் என்பவற்ருல் வயப்படுத்தி அவனுல் தான் கவரப்படாதவனுக மாற்றஞ் செய்தல் வேண்டும்.

[19]அவருள் எதிர்ப்பவனைச் சந்தி, அறிவுப்போர், வஞ்சகப் போர் என்பவற்ருல் எதிர்த்தல் வேண்டும். [20]இவனுடைய புகைப் பக்கத்தை இன்சொல் கொடை என்பவற்ருலும், [21]தன் பக்கத்தை வேறுபடுத்தல் ஒறுத்தல் என்பவற்ருலும் தன்வயப் படுத்தல் வேண்டும். [22]இவனுடைய [23]அரண் நாடு பாசறை இவற்றை ஒற்றர்கள் படைக்கலம், நஞ்சு, தீ என்பவற்ருல் வயப் படுத்தல் வேண்டும்.

இவனுடைய [24]பின்னணியை நாற்புறமும் பற்றச் செய்தல் வேண்டும். காட்டில் வாழ்வோரால் [25]அரசைத் தகர்த்தல் வேண்டும் அல்லது அவன் [26]குடியிற் பிறந்தவர் [27]தண்டிக்கப் பட்டவர் என்பவர்களால் [28]கவரச் செய்தல் வேண்டும்.

[29]தீச்செயலிறுதியில் இவனிடம் தூதனை யனுப்புதல் வேண்

---

18 ஆகவே அவனுக்கு நிலம் பொருள்களைக் கொடுத்து, வயப்படுத்தி, தான் அவனுற் கவரப்படாதவனுக இருந்து சந்தி முதலியவற்ருல் மாற்றம் புரிதல் வேண்டும் என்பது கருத்து.

19 அம்மூவருள் தன்னை எதிர்த்துவருபவனுக்குச் சந்தியாலும் பின்னர்க் கூறப்படும் அறிவுப்போர் முதலியவற்ருலும் தீமைபுரிதல் வேண்டும் என்பது.

20 அறிவுப்போர் முறையைக் கூறுகின்ருர். இவன்—தன்னை எதிர்த்த ஆற்றலுள்ளவன்.

21 தன்பக்கம்—அமைச்சர் முதலிய அங்கங்களின் குழு.

22 வஞ்சகப் போர் முறையைக் கூறுகின்ருர்.

23 அரண்—தானியம்.

24 பின்னணியிலுள்ள நட்புப்படை முதலியவற்றை என்க.

25 அரண் நாடு முதலியவற்றை என்பது.

26 குடியிற் பிறந்தவர்—கிளைஞர்.

27 புதல்வர் முதலியோர் என்பது.

28 ‘அரசை’ என்ற சொல்லை முன்னர்க் கூட்டுக.

29 மேற்கூறியவாறு தீமைகளைப் புரிந்தபின்னர், சந்தியின் பொருட்டுத் தூதரை யனுப்புதல் வேண்டும் எனக் கூறுகின்ருர். பகைவன் தீச்செயல் களால் துன்புறுத்தப்பட்டபோது சந்தியைச் செய்ய முயலுவது பழுத்த இருப்புத் துண்டுகளின் சேர்க்கைபோலப் பயனை விளைவிப்பதாம் என்பது கருத்து.

டும். [30]தீங்கு புரியாது சந்தியையும் (ஏற்கலாம்.)

[31]அங்ஙனமாயினும் எதிர்ப்பவனிடம் பொருள் படைகளில் நான்கிலொரு கூறு மிக்கதாயும், [32]ஒரு நாள் மிக்கதாயுமுள்ள சந்தியைக் கேட்டல் வேண்டும்.

[33]அவன் [34]சந்திபொருட்டுப் படை கேட்பின் [35]தாழ்ந்த யானை குதிரைகளையாதல் [36]நஞ்சுடன் கூடிய ஊக்கமுற்றதை யாதல் [37]அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்.

[38]சந்தியின் பொருட்டு மக்களை விரும்பினால் [39]வஞ்சக

---

[30] எவ்வகையினும் தீங்கு புரிய இயலாதபோது செயற்பாலதைக் கூறுகின்றார். தீங்கு புரியாமலே சந்தியைக் கேட்டல் வேண்டும் என்பது கருத்து.

[31] பொன் முதலிய பொருளாலும் படையாலும் சந்தியை விரும்பிய போதும் மேற்சேறலைக் கைவிடாதவனிடம் முன்னர் வரையறுத்துக் கூறிய பொன் முதலியவற்றுடன் கால்மடங்கு அதிகமாகத் தருவதாய்க் கூறிச் சந்தியைக் கேட்டல் வேண்டும் என்பது கருத்து. லக்ஷம் பொன் தருவதாய்க் கூறிக் கேட்கப்பட்ட சந்தியை ஏற்காதபோது 25,000 பொன் அதிகமாய்த் தருவதாகக் கூறி மீண்டும் சந்தியை யாசித்தல் வேண்டும் என்பதும், நூறு குதிரைகள் முதலியவற்றைக் கொடுப்பதாய்க் கேட்கப்பட்ட சந்தியை ஏற்காதபோது 125 குதிரைகள் முதலியவற்றால் மீண்டும் சந்தியை யாசித்தல் வேண்டும் என்பதும் கருத்து என்ப.

[32] 'இவ்வளவு திங்கள் இன்னதைச் செய்வேன்' என்று முதலிற் கூறி யாசிக்கப்பட்ட சந்தியை ஏற்காதபோது, இன்னும் சில நாட்களுடன் மிகுதிப்படுத்திக் கூறி யாசித்தல் வேண்டும் என்பது.

[33] சந்தி நிமித்தம் கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட பொருள் படை என்பவற்றைக் கொடுக்கு முறையைக் கூறுகின்றார். அவன்—ஆற்றலிலான்.

[34] சந்திக்குரிய பொருளாகப் படையைக் கேட்பின் என்பது. கேட்பவன் சந்திக்குரியவன் என்க

[35] தாழ்ந்த—தொழில் புரிதற்கு ஆற்றலற்ற.

[36] ஒருதிங்கள் அரைத்திங்கள் கழிந்த பின்னர் இறத்தலை யுண்டுபண்ணும் நஞ்சுடன் கூடிய ஆற்றலுடையதையாதல் என்பது.

[37] அவன்—சந்திக்குரியவன்.

[38] காலாட்படையை சந்திப்பொருளாக விரும்பினால் என்பது.

[39] நச்சுப்புகை முதலியவற்றால் தூஷ்யர் முதலியவர்களைக் கொலை செய்யும் ஆற்றலுள்ள வஞ்சக மக்களுடன் கூடிய தூஷ்யர் முதலியவர்களையுடைய படையை என்பது.

மக்களாலடையப்பட்ட தூஷ்யர் பகைவர் காட்டில் வாழ்வோர்களின் படையை அவனுக்குக் கொடுத்தல் வேண்டும் [40]இரண்டும் அழியுமாறு செய்தல் வேண்டும். [41]மதிக்கப்படாத நிலையில் மாறுபடும் தீக்ஷ்ணப் படையையாதல் விதனத்தில் அவனுக்குத் தீங்கு புரியும் அன்புள்ள மூலப்படையையாதல் அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்.

[42]சந்தியின் பொருட்டுப் பொருளை விரும்பினால் விலைக்குக் கொள்பவனை யடையாவண்ணம் சிறந்ததையாதல் போர்க்கு உதவாத குப்பியத்தையாதல் அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்.

சந்தியின் பொருட்டு நிலத்தை விரும்பின் திரும்பிப் பெறுதற்குரியதும், [43]எப்பொழுதும் பகைவரையுடையதும் அரணற்றதும் [44]பெருங்கேடு செலவுகளால் அமைத்தற்குரியதுமான நிலத்தை அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்.

[45]தலைநகரம் தவிர (ஏனைய) எல்லாப் பொருளானும் வன்மை மிக்கானுடன் சந்தியைக் கேட்டல் வேண்டும்.

---

40 இரண்டு—தூஷ்யர் முதலியவரின் படை, பகைப்படை என்னும் இரு படைகள்.

41 அவமதிக்கப்பட்டபோது வெகுண்டு தீங்கு விளைக்கு மியல்புடைய தீக்ஷ்ணப் படையையாதல் பகைவனுடைய விதனத்தை எதிர்பார்த்து அது போது அவனுக்குத் தீங்குபுரியக் கூடியதும் தன்பால் அன்புள்ளதுமான தன் மூலப்படையை யாதல் கொடுத்தல் வேண்டும்.

42 அவன் பிறரிடம் விற்றற்கியலாத விலைமதிப்புடைய பெரும் பொருளை யாதல், போர்த் தொழிலுக்குப் பயன்படாத ஆடை விரிப்பு முதலிய குப்பியப் பொருளையாதல் கொடுக்கவேண்டும் என்பது கருத்து.

43 எக்காலத்தும் பகைவரை அணிமையிற் கொண்டதும் என்பது.

44 மனை முதலியவற்றை யமைக்க நேர்ந்தபோது ஊர்தி மக்கள் கூல முதலியவற்றின் அழிவை உண்டுபண்ணுவதான நிலத்தை என்பது.

45 தான் வசித்தற்பொருட்டுத் தலைநகரத்தை வைத்துக்கொண்டு மற்ற பொருள்களால் வன்மை மிக்கானுடன் சந்தி செய்துகொள்ள வேண்டும்.

சுலோகம்

[46]பிறன் வலிந்து கவர்தற்குரியதை [47]உபாயத்தால் கொடுத்தல் வேண்டும். [48]தன்னுடலைக் காத்தல் வேண்டுமே யன்றிப் பொருளை யின்றும். அழிவுள்ள பொருளில் இரக்கம் ஏன்?

பன்னிரண்டாம் அதிகரணம் முதற் பிரகரணம்
'தூதுவன் செயல்' என்னும் நூற்றுமுப்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

46 பிறன்—ஆற்றலுள்ளவன்.

47 சந்தியைத் தலைக்கீடாகக் கொள்வதால்.

48 உடல் காப்பாற்றப்பட்டவிடத்து, அழிந்த பொருளை மீண்டும் பெறுதல் எளிதாகலின், அவ்வுடற்பற்று இன்றியமையாததாகும் என்பது கருத்து. 'இல்லை உயிருடையார் எய்தாவினை' என்னும் மூதுரையும் ஈண்டு ஒப்பு நோக்கத்தகுவது.

பன்னிரண்டாம் அதிகரணம்—ஆற்றலிலான் செயல்

இரண்டாம் பிரகரணம்—[1]அறிவுப்போர்

நூற்றுமுப்பத்தேழாம் அத்தியாயம்

[2]அவன் சந்திக்கு இணங்காவிடின், அவன்பாற் பின்வருமாறு கூறுதல் வேண்டும் :—‘ அறுவகைக் குழுவுக்கு வயப்பட்ட [3]இன்னின்ன அரசர்கள் அழிந்தனர். [4]தன்மையற்ற அவர்களின் வழியை (நீ) பின்பற்றத் தக்கவன் அல்லை. அறத்தையும் பொருளையும் பார். வன் செயல், மறம், பொருளை மீறுதல் என்னுமிவற்றையேற்கும்படி உன்னைத் தூண்டுபவர், [5]நண்பரது உருவமுள்ள பகைவராவர். [6]உடற் பற்றற்ற வீரர்களுடன் போர் புரிதல் வன் செயலாம் இரு புறமும் மக்களழிவைச் செய்தல் மறமாம். [7]கண்ட பொருளையும் குற்றமற்ற நண்பனையும் விடுதல் பொருளை மீறுதலாம். நண்பரை யுடைய அவ்வரசன் மீண்டும் [8]இப்பொருளால் உன்னை நாற்புறமும் எதிர்க்கும் நண்பரைத் தூண்டப் போகிறான். மத்தியமன் நொதுமலன் என்னுமிவர்களாலாதல்

137-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 அறிவினால் நிகழும் போராவது—காமம் வெகுளி முதலிய குற்றங்களின் வயப்படும் பல அரசர்கள் அழிவை எய்தினர் என்பது முதலிய எடுத்துக்காட்டுக்களால் பகைவரை வஞ்சித்தல். சந்தி செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட பகைவன் அதை யேற்காதபோது செயற்பாலது என்? என்பது பற்றி ஈண்டுக் கூறப்படும்.

2 சந்தி யாசிக்கப்பட்ட பகைவன், அச்சந்தியை ஏற்காதபோது அப் பகைவனிடம் பின்வருமாறு கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

3 இன்னின்ன அரசர்கள்—பெயர்களைக் குறித்துக் காட்டப்பட்டவர்கள்.

4 தன்மை—ஈண்டு ஆன்ம குணங்கள்.

5 வெளியில் நட்புத் தன்மையைச் சொல்லளவில் அபிநயித்துக் காட்டுபவரும் உண்மையில் பகைமை யுடையராயுமிருப்பவர் என்பது.

6 தன்னுடலைப் பொருட்படுத்தாது போர்புரியும் வீரர்களுடன் போர் புரிதல், ஆராய்ந்து துணியாது ஏற்கப்படும் செயலாம் என்பது கருத்து.

7 கண்டபொருள்—கைக்கு வந்ததும் சந்திப்பொருளாயுமுள்ள பொன் முதலியன.

8 இப்பொருள்—உன்னால் ஏற்கப்படாத இச் சந்திப்பொருள்.

மண்டலத்தாலாதல் [9]கைவிடப்படவில்லை. [10]மிக்க கேடு செலவு களை எய்துவான். நண்பனிடமிருந்தும் வேறுபடுவான். பின்னர் [11]மூலத்தால் விடப்பட்ட இவனை எளிதிற் களைவோம் என்று [12]முயன்ற உன்னைப் புறக்கணிப்பவரால் நீயே விடப்படுவாய். அத்தகைய நீ நண்பருருக் கொண்ட பகைவர் சொல்லை [13]யேற்ப தற்கும் நண்பரை வெறுக்கச் செய்தற்கும் பகைவரைச் சிறப்புறச் செய்தற்கும் உயிர்க்கு ஐயத்தை விளைக்கும் தீமையை ஏற்றற்கும் உரியவனல்லை என்றவாறு. [14]கொடுத்தல் வேண்டும்.

[15]ஆயினும் எதிர்க்கும் இவனுடைய [16]மக்கட் கோபத்தைக் 'குழூஉச் செய'லில் [17]விளக்கப்பட்டவாறும் [18]'உபாயத்தால் வெளிப்படுத்தலி'ற் போன்றும் உண்டாக்கல் வேண்டும். [19]தீக்ஷ்ணர் நஞ்சிடுவோர்களின் ஏவுதலையும் [20]ஆம். [21]தற்காப்பில் காத் தற்குரியதாகக் கூறப்பட்டதில் தீக்ஷ்ணர்களையும் நஞ்சிடுவோரை யும் ஏவுதல் வேண்டும்.

---

[9] உன்னால் எதிர்க்கப்படுதற்குரியனுயும் சந்தியை யாசிப்பவனுயுமுள்ள அரசன் கைவிடப்பட்டவனல்லன்.

[10] மத்தியமன், உதாசீனன், மண்டல முதலியவர் உன்னை எளிதில் தாக்குதற் பொருட்டு உன் ஆற்றலழிவைப் பல வழியாக எதிர்பார்த்துக் கொண்டு, பகைவன் மேற்சேரும் உன்னை மதியாதொழுகுகிருர்கள் எனக் கூறுகின்ருர்.

[11] மூலத்தால்—மூலப்படை முதலியவற்ருல்.

[12] பகைவனுடன் போர் தொடங்கிய உனக்கு உதவிபுரியாது வாளா விருப்பவரால் என்க.

[13] அவர்களின் உறுதிமொழிகளைக் கேட்பதும் என்பது.

[14] மேற்கூறிய உறுதிமொழிகளை யேற்றவனுக்குச் சந்தி நிமித்தம் பொருளைக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[15] அவ் வுறுதிமொழியையும் சந்திக்குரியவன் ஏற்காதபோது, ஏற்க வேண்டிய முறையைக் கூறுகின்ருர்.

[16] மக்கட் கோபம்—அமைச்சர் முதலியவரை வேறுபடுத்தல்.

[17] பதினேராம் அதிகரணத்திற் கூறப்பட்ட வேறுபடுத்தன்முறை யாலும் என்பது.

[18] இதனை 142-ஆம் அத்தியாயத்திற் கண்டுகொள்க.

[19] கொலைபுரிதலைக் கூறுகின்ருர்.

[20] ஆம்—செய்தல் வேண்டும்.

[21] முன்னர்க் கூறப்பட்டதை விரித்துரைக்கின்ருர். 'தற்காப்பு' என் னும் பிரகரணம் 21-ஆம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

[22]விலை மகளிரைப் பேணுபவர் சிறந்த அழகு இளமை என்பவற்றையுடைய மகளிரால் சேனைத்தலைவரை மயக்குதல் வேண்டும். ஒருத்தியிடம் [23]பல தலைவருக்காதல் இரு தலைவருக்காதல் காதலுண்டாயின் தீக்ஷ்ணர்கள் பூசல்களை யுண்டாக்கல் வேண்டும். பூசலில் தோற்ற பக்கத்தைப் [24]பிறவிடம் செல்லுதற்கும், [25]அரசன் யாத்திரையில் துணை புரிதற்கும் ஏவுதல் வேண்டும்.

[26]சித்த வுருவினர் காம வயப்பட்டவரை வஞ்சித்தற் பொருட்டு வசிய மருந்துகளால் வஞ்சித்துத் தலைவருக்கு நஞ்சைக் கொடுத்தல் வேண்டும்.

[27]வணிக உருவினன் அழகுள்ள பட்டத் தரசியின் [28]அணிமையில் பணி புரிபவளுக்குக் [29]காம நிமித்தமாகப் பொருளை [30]மிகுதியாக வழங்கி விடுத்தல் வேண்டும். [31]அவனுடைய பணியாளருருவினனால் ஏவப்பட்ட சித்த உருவினன் [32]'வணிகன் உடலில் போடுதற்குரியது' என்று வசிய மருந்தினைக் கொடுத்தல்

---

22 இனிப் 'படைத்தலைவர் கொலை' என்னும் பிரகரணத்தை விளக்கத் தொடங்குகின்றார். 'கொலை' என்பது ஈண்டு உபலக்கணத்தால் வேறுபடுத்தலையும் உணர்த்தும். முற்கூறப்பட்ட இவைகளுக்குப் படைத்தலைவரும் பொருளாதலால் இப்பிரகரணம் ஈண்டு வைக்கப்பட்டதென்க.

23 பல—மூன்று முதலிய எண்ணுள்ள.

24 முன்னிருந்த பக்கத்தைவிட்டு வெற்றிவிருப்பமுள்ளவன் பக்கத்தை யடைதற்கும் என்பது.

25 அரசன்—வெற்றிவிருப்பமுள்ளவன்.

26 கொலைபுரிதற்குரிய உபாயத்தைக் கூறுகின்றார். படைத்தலைவருள் எவர் காமத்துக்கு வயப்பட்டவரோ அவர்க்குச் சித்த உருக்கொண்டவர், மகளிரை வயப்படுத்தற்குரிய வசிய மருந்துடன் நஞ்சைக் கலந்து, ஙண்ப ருருக்கொண்டவர் மூலம் கொடுத்து உண்பித்தல் வேண்டும் என்பது கருத்து.

27 அரசனுக்கு நஞ்சைக் கொடுக்கும் முறையைக் கூறுகின்றார்.

28 அந்தரங்கப் பணிபுரிபவளுக் கென்க.

29 'காமம்' என்பது ஈண்டு 'நுகர்ச்சி' என்னும் பொருட்டு.

30 மிகுந்த பொருளைக் கொடுத்துக் கௌரவித்து, மறுமுறை செல்லாதிருத்தல் வேண்டும் என்பது.

31 அவன்—வணிக உருவினன்.

32 அவ்வணிகனை வயப்படுத்தற் பொருட்டு அவனுடலில் இதைப் போடவேண்டும் என்று கூறிக் கொடுத்தல் வேண்டும்.

வேண்டும். [33]விளைந்தபோது [34]அழகுள்ளவளுக்கும் 'அரசன் உடலிற் போடுதல் வேண்டும்' என்று [35]இம் முறையைக் கற்பித்தல் வேண்டும். [36]அதில் நஞ்சினால் வஞ்சித்தல் வேண்டும்.

[37]ஊழ்வினை யுணர்ந்தோனுருவினன் [38]முறையே அணுகிய அமைச்சனை [39]அரச இலக்கணம் நிறைந்தவனாகக் கூறுதல் வேண்டும். ஐய மேற்பவள் இவன் மனைவியிடம் 'அரச மனைவியாகவும், அரசனைப் புதல்வனாகப் பெறுபவளாகவுமாவாய்' என்று [40](கூறுதல் வேண்டும்).

[41]அரசன் என்னைக் [42]காவற் படுத்துவான். உன் அணிமையில் [43]இலை யோலையும் [44]இவ்வணிகலனும் தவப் பெண்ணால் கொணரப்பட்டன, என்று [45]மனைவியுருவினள் அமைச்சனிடம் [46]கூறுதல் வேண்டும்.

---

[33] மேற்கூறியவாறு வணிகனுடலில் மருந்தைப் போட்டபின் அவன் வயப்பட்டவன்போல் நடித்தபோது என்பது.

[34] பட்டத்தரசிக்கும் என்பது.

[35] வசிய மருந்தைக் கையாளும் முறையை உபதேசித்தல் வேண்டும் என்பது.

[36] அம்முறையில் நஞ்சைக் கலத்தலால் அரசனைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

[37] அமைச்சரை வேறுபடுத்தற்குரிய முறையைக் கூறுகின்றார். நிமித்தம், அங்கக்குறிப்பு முதலியவற்றால் எதிர்காலப் பொருளைக் கூறுவோருடைய உருக்கொண்ட ஒற்றன்.

[38] நாளடைவில், தன் வார்த்தை உண்மையாயிருத்தலைக் கண்டதால் தன்னை நம்பி அணுகிவந்த அமைச்சனை.

[39] 'நீ அரசனாவாய்' என்று கூறுதல் வேண்டும்.

[40] இம் முறையால் அமைச்சனுக்கு அரசாட்சியிற் பற்றுண்டாகுமாகலின், அரசனுடன் பகைமை யுண்டாம் என்பது கருத்து.

[41] மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[42] உவளகத்திற்குக் கொண்டுபோகப் போகிறான் என்பது.

[43] இலையில் வரையப்பட்ட காதற்கடிதம்.

[44] 'அரசனாற் கொடுக்கப்பட்ட' என்பதனை முன்னர்க் கூட்டுக.

[45] அழகு முதலிய தன் சிறப்புக் குணங்களால் அமைச்சனுக்கு மனைவியாந் தன்மையைப் பெற்று, அவனை வஞ்சித்தற்குரிய சமயத்தை எதிர்பார்த்து வரும் வேசைப் பெண் என்பது.

[46] இங்ஙனம் கூறுதலால் அமைச்சனுக்கு அரசனோடு பகைமை யுண்டாம் என்க.

[47]அடிசிலமைப்பவன், பண்ணியஞ் செய்வோன் என்னுமிவர்களின் உருவினன் [48]நஞ்சிடுதற் பொருட்டு [49]அரசன் சொல்லையும், [50]இது குறித்து [51]விரும்புதற்குரிய பொருளையும் [52]தெரிவித்தல் வேண்டும். [53]வணிக உருவினன் [54]இவனுடைய அச் சொல்லை [55]உறுதிப்படுத்திச் [56]செயல் விளைவையும் கூறுதல் வேண்டும். [57]இங்ஙனம் ஒன்று, இரண்டு, மூன்று என்ற உபாயங்களால் இவனுடைய ஒவ்வொரு அமைச்சரையும் வன்மை குறித்தாதல், விலகிச் செல்லுதற்காதல் தூண்டுதல் வேண்டும் என்க.

[58]இவனுடைய [59]அரண்களில் [60]பாழிடக் காவலர்களின்

---

47 மற்றொரு வகை கூறுகின்றார்.

48 அமைச்சனுடைய குடிநீர், கள் முதலியவற்றில் நஞ்சைக் கலத்தற் பொருட்டென்பது.

49 அரசன் சொல்—அரசன் கூறியதாகக் கூறப்படுஞ் சொல்.

50 இது—நஞ்சிடுதல்.

51 மிகுந்ததாயிருத்தல் காரணமாக விரும்புதற்குரிய பொருள் என்பது.

52 தனக்கு அரசன் கொடுத்ததாகக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

53 நஞ்சை விலைக்கு விற்பவனுடைய உருக்கொண்ட ஒற்றன் என்பது.

54 இவன்—அரசன்.

55 உறுதிப்படுத்தலாவது—' அரசன் கூறியதால், நான் உன்னுடைய அடிசிலமைப்பவனிடம் நஞ்சைக் கொடுத்தேன். அது எதற்காக என்பதை யறியேன் ' என்பது முதலியனவாகக் கூறி, அடிசிலமைப்பவன் முதலியோருடைய வார்த்தையில் அமைச்சனுக்கு நம்பிக்கை யுண்டாமாறு செய்தல்.

56 அந்த நஞ்சினால் உடனே இறத்தலுண்டாம் என்ற காரியசித்தியையுங் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

57 மேற்கூறியவாறு இன்சொல் முதலிய உபாயங்களைத் தனித்தனியேயாதல் இடத்திற்கேற்ப இரண்டு முதலியவற்றையாதல் கையாளுதலால் அரசனுடைய ஒவ்வொரு அமைச்சருக்கும் அரசனுடன் பகைமையை உண்டு பண்ணிப் போர்புரிதற்கோ அன்றி விலகிச் செல்லுதற்கோ உரிய ஏற்பாட்டைச் செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றார். இதுகாறும் அமைச்சரை அரசனுடன் வேறுபடுத்து முறை கூறப்பட்டது.

58 இனிப் பாழிடக் காவலனிடமிருந்து நகரத்துமக்களை வேறுபடுத்தற்குரிய முறையைக் கூறுகின்றார். இவனுடைய—பகையரசனுடைய.

59 அரண்—தானியம்.

60 பாழிடம்—ஈண்டு பகைவனுடன் போர் குறித்துச் செல்லுதல் காரணமாக அரசனின் நீங்கிய தானியம் அதைக் காப்பவனுக்கு நண்பராக அபிநயித்துவரும் சத்திரிகள் என்பது.

அணிமையிலுள்ள சத்திரிகள் நகரம் நாடு என்பவற்றின் மக்களிடம் [61]நட்பு குறித்து (பின் வருமாறு) அறிவித்தல் வேண்டும். "அரசன் துன்பநிலையை யெய்தினன்; உயிருடன் வருவானோ மாட்டானோ; வலிந்து பொருளை ஈட்டுங்கள்; [62]பகைவரையுங் கொல்லுங்கள்' என்று பாழிடக் காவலர்களால் படை வீரரும் கணக்கர்களும் கூறப்பட்டனர்" என்றவாறு. [63]பரவியபோது தீக்ஷ்ணர்கள் நகரத்து மக்களை இரவில் [64]கொள்ளையிடுமாறு தூண்டுதல் வேண்டும் 'பாழிடக் காவலனுக்குப் பணி புரியாதார் [65]இங்ஙனம் செய்யப்படுகின்றனர்' என்று தலைவர்களையும் தாக்குதல் வேண்டும். [66]பாழிடக்காவலனின் [67]இருப்பிடங்களில் குருதி தோய்ந்த படைக்கலம் பொருள் மூடிச்சுக்களைப் போட்டு வைத்தல் வேண்டும். [68]பின்னர் சத்திரிகள் 'பாழிடக் காவலன் கொல்கிறான், [69]அழிக்கின்றான்' என்றறிவித்தல் வேண்டும்

[70]வருவாய்த் தலைவனிடமிருந்து நாட்டினரை இவ்வாறு வேறுபடுத்தல் வேண்டும்.

---

[61] நட்பு குறித்து—பாழிடக் காவலனிடம் அன்புண்டாதற் பொருட்டு.

[62] தம் தம் பகைவரைக் கொல்லுங்கள் என்பது.

[63] பாழிடக் காவலர்களின் கட்டளைச்செய்தி நாற்புறமும் பரவியபோது என்க.

[64] வலிந்து கவரும்படித் தூண்டுதல் வேண்டும் என்பது.

[65] இங்ஙனம் வன்மையால் தாக்கப்படுகின்றனர் என்று சொல்லிக் கொண்டு தாக்குதல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் கூறுதல் பாழிடக் காவலர்பால் அபவாதத்தைச் சுமத்துதற் பொருட்டென்ப.

[66] பாழிடக் காவலனால் கொலைசெய்விக்கப்பட்டதென்று நம்பிக்கை யுண்டாக்குதற் பொருட்டுச் செய்யவேண்டியதைக் கூறுகின்றார்.

[67] இருப்பிடம்—இல்லம்

[68] பாழிடக் காவலனிடம் குற்றத்தை யறிதற்குரிய ஏற்பாட்டைச் செய்த பின்னர் என்பது.

[69] அழித்தல்—ஈண்டுப் பொருளைக் கவரச்செய்தல்.

[70] நகரத்து மக்களைப் பாழிடக் காவலனிடமிருந்து வேறுபடுத்தற்குக் கூறிய இம்முறையால், வருவாய்த் தலைவனிடமிருந்து நாட்டினரை வேறு படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[71]கிராமத்து நடுவண், வருவாய்த் தலைவனுடைய [72]மக்களை இரவில் தீக்ஷ்ணர்கள் கொன்று 'நாட்டை மறத்திஞல் துன் புறுத்துபவர் இங்ஙனம் செய்யப்படுகின்றனர்' என்று [73]கூறுதல் வேண்டும்.

[74]குற்றமுண்டாய போது பாழிடக் காவலனை யாதல் வரு வாய்த் தலைவனை யாதல் மக்கட் கோபத்தால் கொலையுறச் செய்தல் வேண்டும். அவனது குடியிற் பிறந்தாரையும், தண்டிக்கப்பட்ட வர்களையும் (அவன் பதவியில்) அமர்த்துதல் வேண்டும்.

சுலோகம்

[75]உவளகம், [76]நகர வாயில், [77]பொருள் கூலங்களைத் தொகுக்குமிடம் என்னுமிவற்றில் தீயிடல் வேண்டும். [78]அவற் றையுந் தகர்க்கலாம். [79]துன்புற்றவராகக் கூறி அவர்களுடைய தாகச் சொல்லுதல் வேண்டும்.

பன்னிரண்டாம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
'அறிவுப் போர்' என்னும்
நூற்றுமுப்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

71 இனி நாட்டினரிடமிருந்து வருவாய்த் தலைவனை வேறுபடுத்தற்குரிய உபாயத்தைக் கூறுகின்றூர்.

72 மக்கள்—ஈண்டுத் தாழ்மையுடன் ஏவல்புரியும் பணியாளர் முதலி யவர்.

73 இவ்வாறு கூறுதலால், தன்னைச் சார்ந்தவரின் கொலையாலும், தனக் குப் பழியை உண்டுபண்ணுவதாலும் நாட்டினரிடம் வெறுப்புற்று வரு வாய்த் தலைவன் வேறுபடுவான் எனக்கொள்ளல் வேண்டுமென்ப.

74 இங்ஙனம் சத்திரி முதலியவரால் ஏற்பட்ட குற்றம் நாற்புறமும் பரவியபோது, பாழிடக் காவலனையாதல் வருவாய்த் தலைவனையாதல் சத்திரி கள் நாட்டுமக்கள் மூலம், 'தலைக்கொரு கல்லால் எறிந்து கொல்லுதல்' என்ற முறையில் கொல்லுதல் வேண்டும் என்றும், பகைவனுடைய உற வினரையாதல், தண்டனையடைந்த (அவனுடைய) புதல்வன் முதலியவரை யாதல் நாட்டில் அமைத்தல் வேண்டும் என்றும் கருத்தாம்.

75 உவளகம்—அந்தப்புரம்.

76 நகரவாயில்—கோபுரம்.

77 விறகு முதலிய பொருள்களையும் நெல் முதலிய கூலங்களையும் தொகுத்து வைத்திருக்கும் இல்லங்களில் என்பது.

78 அவற்றை என்பதால் அவற்றின் காவலாளர்களைக் கொள்ளுதல் வேண்டும் என்பர்.

79 பிறரால் செய்யப்பட்ட தீயிடல் கொலை செய்தல் முதலியவற்றூல் தாங்கள் துன்புற்றவர்களாக நடித்து, தாம் செய்த அத் தீச்செயல்களை ஊரார் செய்தனவாக மாற்றிக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

3, 4-ஆம் பிரகாரணங்கள்—[1]படைத்தலைவர் கொலை, மண்டலத்தை யூக்குதல்

நூற்றுமுப்பத்தெட்டாம் அத்தியாயம்

அரசற்கும் அரசனுடைய அன்பர்க்கும் [2]அணிமையிலுள்ள சத்திரிகள், [3]காலாள் குதிரை தேர் யானை [4]தலைவர் என்னுமிவர்களின் [5]நட்புப் பாத்திரங்களில் நட்பு நம்பிக்கையால் [6]'அரசன் வெகுண்டான்' என்று கூறுதல் வேண்டும். [7]பரவியபோது தீக்ஷ்ணர்கள் [8]இரவியக்கக் குற்றத்துக்கு மாற்றஞ் செய்து [9]இல்லங்களில் 'அரசன் சொல்லால் வருக' என்று கூறுதல்வேண்டும். வெளிவரும்போதே [10]அவர்களைக் கொல்லுதல் வேண்டும். [11]'அரசன் கட்டளை' என்று அணிமையிலுள்ளவரிடங் கூறவும்

138-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] 'படைத்தலைவர் கொலை' என்ற பிரகரணத்தின் பொருள்களுள் முன் அத்தியாயத்தில் விளக்கப்பட்டதுபோக எஞ்சியவற்றை இவ்வத்தியாயத்தின் முதற்பகுதியால் விளக்குகின்றார்.

[2] 'நண்பர் வேடத்துடன்' என்பதை முன்னர் கூட்டிப் பொருள் கொள்க.

[3] காலாள் முதலிய நான்கு சொற்கள் இலக்கணையால் அவ்வத் தலைவனைக் கூறுவனவாம்.

[4] தலைவர்—ஈண்டு அமைச்சர்.

[5] நட்புப் பாத்திரம்—நட்புக்குரியவர்.

[6] காலாட்படைத் தலைவன் முதலியவரிடம் அரசன் கோபமுள்ளவனாயிருக்கின்றான் என்று கூறுதல் வேண்டும் என்பது.

[7] அரசன் கோபச்செய்தி நாற்புறமும் பரவியபோது என்க.

[8] இரவில் இயங்குதலால் உண்டாங் குற்றத்துக்குப் பரிகாரஞ்செய்து.

[9] வீடுகளிற் சென்று, 'உங்களை அரசன் தன் அணிமைக்கு அழைக்கிறான்' என்று கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

[10] அவர்கள்—காலாட்படைத் தலைவன் முதலியவர்கள்.

[11] அரசன் கட்டளையால் நாங்கள் இவ்வாறு செய்தோம் என்று அணிமையிலுள்ள நண்பருருவினரான சத்திரிகளிடம் கூறவேண்டும்.

வேண்டும். [12]' நாங்கள் முன் சொன்னது இதுவே. வாழ விரும்புகிறவன் வெளியேறல்வேண்டும்' என்று சத்திரிகள் வெளியேறினவரிடம் கூறுதல் வேண்டும்.

[13]அரசனை இரந்து நின்று அவன்பால் எதுவும் பெறாத இரவலரிடம் சத்திரிகள் [14]" இரத்தற்குத் தகாத பொருளை இன்னின்னார் என்னிடம் கேட்கின்றனர். என்னால் மறுக்கப்பட்டுப் பகைவனுடன் கூடினர். அவர்களைக் களைவதில் முயலுக' என அரசனால் பாழிடக் காவலன் கூறப்பட்டான்" என்று கூறுதல் வேண்டும். பின்பு [15]முன் போல் செயல் புரிதல் வேண்டும்.

[16]அரசனை இரந்து நின்று பொருளைப்பெற்ற இரவலரிடம் சத்திரிகள் " இரத்தற்குத் தகாத பொருளை இன்னின்னார் என்பால் கேட்கின்றனர். அப்பொருள் என்னால் அவர்களுக்கு நம்பிக்கை குறித்துக் கொடுக்கப்பட்டது. [17]பகைவனுடன் சேர்ந்தார்கள். அவர்களைக் களைவதில் முயலுக' என அரசனால் பாழிடக் காவலன் கூறப்பட்டான்" என்று கூறுதல் வேண்டும். பின்னர் முன்போல் செயல்புரிதல் வேண்டும்.

---

12 அவ்வாறு கூறப்பட்ட சத்திரிகள் அரசனிடமிருந்து விலகிச் செல்லாத தலைவர்களுக்குண்டான இந்நிகழ்ச்சியைக் காண்பித்து, அதற்கு முன் விலகிச் சென்றவரிடம் தன்னால் முன்னர்க் கூறப்பட்ட அரசக் குற்றம் கண்கூடாகக் காணப்பட்டது என்று, எஞ்சியவர்களும் விலகிச் செல்லுதற் பொருட்டுக் கூறுதல் வேண்டும் என்னுங் கருத்தினால் இங்ஙனங் கூறுகின்றார்.

13 வேறுபடுத்தலின் மற்றொரு வகையைக் கூறுகின்றார்.

14 யாசிக்கப்பட்ட பொருளைக் கொடுத்துக் கௌரவிக்கப்படாது மறுக்கப்பட்டு அதனால் வெகுண்டு பகைவனுடன் சேர்ந்துவிட்டார்கள் என்பது.

15 முன்போல் செயல்புரிவதாவது—சிலரைத் தீக்ஷ்ணர்கள் இரவில் கொல்லுதல், மற்றவரிடம் அக்கொலையை எடுத்துக்காட்டி, அரசனிடமிருந்து அவரை விலகச்செய்தல் என்பது. பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே பொருள் கொள்க.

16 யாசிக்கப்பட்ட பொருளைக் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டவர்பால் ஏற்குமுறையைக் கூறுகின்றார்.

17 'யாசித்தவர்கள்' என்பதனை முன்னர்க் கூட்டுக.

[18]இரத்தற்குரிய பொருளை அரசன்பாற் கேளாத இரவலரிடம் சத்திரிகள் "இரத்தற்குரியதை இன்னின்னர் என்னிடம் கேட்கவில்லை. [19]தன் குற்றத்தின் ஐயம் தவிர வேறு யாது? அவர்களைக் களைவதற்கு முயலுக' என அரசனால் பாழிடக்காவலன் கூறப்பட்டான்" என்று கூறுதல் வேண்டும். பின்னர் முன்போற் செய்தல் வேண்டும்.

[20]இதனால் தீயவர் பக்கம் எல்லாம் கூறியவாறும்.

[21]அணிமையிலுள்ள சத்திரி 'உன் அமைச்சரான இன்னின்னர் பகைவன் மக்களுடன் அளவளாவுகின்றனர்' என்று அரசற்கு அறிவித்தல் வேண்டும். [22]ஒப்புக்கொண்டபோது கட்டளையைக் கொணரும் தூஷ்யர்களை இவனிடம் 'அது(வே) இது' என்று காண்பித்தல் வேண்டும்.

சேனைத்தலைவர், [23]அங்கம், [24]மக்கள் என்னுமிவர்களை [25]நிலம் பொன் என்னுமிவற்றால் வஞ்சித்துத் தமரிடம் வன்

---

18 யாசித்தற்குரிய பொருளை யாசிக்காதவர் விஷயத்திலும் வேறுபடுத்தன் முறையைக் கூறுகின்றார்.

19 தன் குற்றத்தைப்பற்றிச் சந்தேகித்தல் தவிர வேறொன்றும், யாசிக்காததற்குக் காரணமாதற்கில்லை என்பது கருத்து.

20 தலைவரை வேறுபடுத்தற்குக் கூறிய விதிமுறைகளை வெகுண்டவர் முதலிய தீயவர் குழுவினர்க்கும் மாட்டேற்றிக் கூறுகின்றார்.

21 இதுகாறும் அரசனிடமிருந்து அமைச்சர் முதலியோரை வேறுபடுத்தற்குரிய விதிமுறைகளைக் கூறி, இனி அமைச்சரிடமிருந்து அரசனை வேறுபடுத்தற்குரிய விதிமுறைகளைக் கூறத் தொடங்குகின்றார். அணிமையிலுள்ள சத்திரி—அன்பனைக நடித்துவரும் சத்திரி.

22 சத்திரியின் வார்த்தையை அரசன் நம்பியபோது, அமைச்சரைக் குறித்துக் கட்டளை கொணர்ந்தவர் என்றும், வழிநடுவண் பிடிக்கப்பட்டவர் என்றும் 'நான் முன்னர்க் கூறியது கண்கூடாகக் காணப்பட்டது' என்றும் இங்ஙனம் கூறிக்கொண்டு தூஷ்யர்களைக் காண்பித்தல் வேண்டும் என்பது கருத்து.

23 அங்கம்—அமைச்சர் முதலியவர்.

24 மக்கள்—கூலியாளர்.

25 'நிலம் பொன் முதலியவற்றை உங்களுக்குத் தருவேன்' என்று கூறி வயப்படுத்தி, அவரைச் சார்ந்தவரிடம் வன்மையை யேற்கச் செய்தல் வேண்டும் அல்லது அவரிடமிருந்து விலகிப்போம்படி செய்தல் வேண்டும் என்பது கருத்து.

மையை யேற்கச் செய்தல் வேண்டும். அல்லது வெளியேறச் செய்தல் வேண்டும். [26]அணிமையிலாதல் [27]அரணிலாதல் வாழும் [28]இவனுடைய புதல்வனைச் சத்திரிகளால், [29]'நீ தன்மைநிறை வால் மிகுந்த புதல்வன்' ஆயினும் மறைக்கப்பட்டாய். ஏன் வாளாவிருக்கிறாய்? ஆகையால் வன்மையை ஏற்றுப் [30]பெறு வாய். [31]இளவரசன் உன்னை அழிப்பான் என்று வேறுபடுத்தச் செய்தல் வேண்டும்.

[32]அவன் குடியிற் பிறந்தவனையாதல் தண்டிக்கப்பட்டவனை யாதல் பொன்னால் வஞ்சித்து, [33]'இவனுடைய மூலப் படையை யாதல் நாட்டின் எல்லையிலுள்ள படையையாதல் [34]மற்றையதை யாதல் அழிப்பாய்' என்று அறிவித்தல் வேண்டும்.

[35]காட்டில் வாழ்வோரைப் பொருட்கொடை நன்கு மதிப்பு என்பவற்றால் வயப்படுத்தி இனது அரசை யழிக்கச் செய்தல் வேண்டும்.

[36]இவ்வரசன் என்னைக் களைந்து உன்னைக் களைவான். இவனுடைய பின்னணியைப் பற்று. [37]உன்பால் திரும்பியவனுடைய

---

26 அணிமையில்—தலைநகரத்தில்.

27 அரண், எல்லைகாவலனுடையதாகும்.

28 இவன்—அரசன்.

29 இளவரசைப் பெற்ற புதல்வனைவிட நீ அதிகமான ஆண்மகுணம் நிறையப்பெற்றவன். அப்படியிருந்தும் நீ தடைப்படுத்தப்பட்டிருக்கிறாய்.

30 அரசுப் பகுதியைப் பெறுவாய் என்பது.

31 மிகுந்த ஆண்மகுணம் நிரம்பப் பெற்றிருத்தல் பற்றி யுண்டாய பொறாமையால் இளவரசன் உன்னை யழிப்பான் என்க.

32 மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

33 இவனுடைய—அரசனுடைய.

34 மற்றையது—நாட்டின் எல்லையிலுள்ள படையைத் தவிர மற்றைப் படை.

35 மற்றொரு முறையைக் கூறுகின்றார். இதனுடன் 'படைத்தலைவர் கொலை' என்பதின் எஞ்சியபகுதி விளக்கி முடிக்கப்பட்டது. இனி 'மண்டலத்தை யூக்குதல்' என்னும் பிரகரணம் விரித்துரைக்கப்படும். மண்டலம்—நட்டோர் முதலிய குழு. ஊக்குதல்—தற்காப்பு நிமித்தம் போர்ச்செயலிற் புகுவித்தல்.

36 பின்னணியிலிருப்போரை யூக்கும் முறையைக் கூறுகின்றார்.

37 உன்பால் திரும்பியவன்—உன்னை எதிர்ப்பவன்.

பின்னணியை நான் பற்றுவேன் என்று இவனுடைய பின்னுள்ள வனைக் கூறுதல் வேண்டும். [38]அன்றி 'நான் உங்களுக்கு [39]அணைக் கட்டு. யான் தகர்க்கப்பட்டபோது இவ்வரசன் உங்களெல்லோ ரையும் [40]மிதக்கச் செய்வான்' என்று இவனுடைய நண்பர்க்குக் கூறுதல் வேண்டும். அல்லது [41]இவனுடைய மேற்சேறலை ஒன்று கூடிப் பயனற்றதாக்குவோம்' என்று (கூறவேண்டும்) [42]அவ னுடன் சேர்ந்தவரிடத்தும் சேராதவரிடத்தும் 'இவ்வரசன் என் னைக் களைந்து உங்கள்பால் [43]செயலை யேற்பான், விழிப்புடனிருங் கள். உங்களை இடுக்கணிற் போற்றுதற்கு யான் சிறந்தவன் என்று [44]அனுப்புதல் வேண்டும்.

சுலோகம்

மத்தியமனுக்காதல், நொதுமலனுக்காதல், [45]அணிமையி லுள்ளவனுக்காதல் [46]எல்லாப்பொருளானும், [47]விடுதலைகுறித்து [48]அவர்பால் கொடைப் பொருளை [49]அனுப்புதல் வேண்டும்.

பன்னிரண்டாம் அதிகரணம் 3, 4-ஆம் பிரகரணங்கள் 'படைத்தலைவர் கொலை', 'மண்டலத்தை யூக்குதல்' என்னும் நூற்றுமுப்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

38 நண்பனை யூக்கும் முறையைக் கூறுகின்றார்.

39 அணைக்கட்டு—பகைவரின் எதிர்ப்பைத் தடுப்பவன்.

40 மிதக்கச்செய்தல்—அழித்தல்.

41 கூடித் தொழில்புரிபவரை யூக்கும் முறையைக் கூறுகின்றார்.

42 பகைவனுடன் கூடித் தொழில்புரிபவரிடத்தும், மற்றவரிடத்தும் என்பது.

43 செயல்—களைதல்.

44 தூதரை யனுப்புதல் வேண்டும் என்பது.

45 தனக்கு அணிமையிலுள்ள அரசனுக்காதல் என்க.

46 எல்லாப் பொருளையும் சந்திப்பொருளாக உறுதி செய்தலாலும் என்பது.

47 விடுதலை—தன்னை எதிர்க்கும் வலியவனிடமிருந்து தான் விட்டு நீங்குதல்.

48 மேற்கூறியவரிடத்துத் தன்னையே கொடுத்தல்.

49 அனுப்புதற்கு வினைமுதல் ஆற்றலிலான் என்க.

5, 6-ஆம் பிரகரணங்கள்—[1]படைக்கலம் நெருப்பு நஞ்சு இவற்றை மறைவிற் பிரயோகித்தல், கூலம் முதலிய சுமப்போர் நட்புப்படை புல் விறகு கொணர்வோர் இவர்களைக் கோறல்

நூற்றுமுப்பத்தொன்பதாம் அத்தியாயம்

[2] இவனுடைய [3] அரண்களிலுள்ள வணிக உருவினர், சிற்றூரிலுள்ள இல்லத் தலைவருருவினர், நாடுகளின் சந்திகளிலுள்ள ஆனினக் காவலருருவினர், தாபதவுருவினர் என்னுமிவர்கள், [4]சிற்றரசர், காட்டில் வாழ்வோர், அவன் குடியிற் பிறந்தோர் தண்டிக்கப்பட்டோர் என்னுமிவர்களிடம் [5]விலைப்பண்ட இல்லம் முதலாக [6] ' இந்நாடு கவர்தற்குரியது ' என்று [7] அனுப்புதல் வேண்டும். [8]வந்தடைந்த இவர்களின் ஒற்றர்களை அரணில் பொருள் பரிசில்களால் கௌரவித்து [9]அங்கங்களின் அற்றத்தைக் காண்

139-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] படைக்கலம்—அம்பு வாள் முதலிய ஆயுதங்கள். ஊக்கப்பட்ட மண்டலம் பகைவருடன் போர் குறித்து இயங்காதபோதும் காலந் தாழ்த்த போதும் வெற்றிவிருப்பமுள்ளவன் செயற்பாலன இவையெனக் கூறுகின்றார்.

[2] படைக்கலப்பிரயோக முறையைக் கூறுகின்றார். இவன்—பகைவன்.

[3] அரண்—தானீயம்.

[4] ' தன் பகைவனுடன் இயற்கையிலேயே பகைமைபூண்ட ' என்பதனை முன்னர் இயைத்துப் பொருள் கொள்க.

[5] நடுவழியில் விரும்பப்படும் (அவசியமான) விலைப்பண்டங்களையுடைய இல்லங்களை யேற்படுத்துவதன் மூலமாக என்பது.

[6] அனுப்பப்படுதற்குரிய செய்தியைக் கூறுகின்றார். பகைவனுடைய இந்நாடு பல சோர்வுகளை யுடையதாகலின் உங்களால் கவர்தற்குரியது. எனவே உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கூறியனுப்புதல் வேண்டும் என்பது.

[7] ' தூதர்களை ' என்ற சொல்லை வருவித்துக்கொள்க.

[8] வந்தடைந்தவரும் சிற்றரசர் முதலியவரைச் சார்ந்தவருமான ஒற்றர்களை என்க.

[9] அங்கங்களின் அற்றமாவது—அமைச்சு முதலியவற்றுள் ஒன்றுக்கொன்றுளவாம் கோபம் பயம் முதலிய சோர்வுகள்.

பித்தல் வேண்டும். அவர்களுடன் [10]அவற்றில் தாக்குதல் வேண்டும்.

[11]இவனுடைய பாசறையில் கள் விற்போனுருவினன் [12]விடப்பட்ட புதல்வனை [13]யிருத்தி [14]அழிவு காலத்தில் நஞ்சினாற் கொன்று '[15]நைடேசனிகம்' என்று மயக்கும் நஞ்சுடன் கூடிய கட்குடங்களை நூற்றுக்கணக்காகக் கொடுத்தல் வேண்டும். [16]ஒருநாள் [17]தூய கள்ளையாதல் [18]கால்மடங்குடன் கூடிய கள்ளையாதல் கொடுத்தல் வேண்டும். [19]பின்னர் நஞ்சுடன் கூடியதைக் கொடுத்தல் வேண்டும். [20]படைத்தலைவர்களுக்குத் தூய கள்ளைக் கொடுத்து மயக்கக் காலத்தில் நஞ்சுடன் கூடியதைக் கொடுத்தல் வேண்டும்.

[21]படைத்தலைவனுருவினன் 'விடப்பட்ட புதல்வனை ....' என்பது (முதலியன ஏற்றல்) ஒத்ததாம்.

---

10 அவற்றில்—காண்பிக்கப்பட்ட அற்றங்களில்.

11 நஞ்சைப் பிரயோகிக்கும் முறையைக் கூறுகின்றார். இவனுடைய—பகைவனுடைய.

12 விடப்பட்ட—கொல்லுதற்குரிய.

13 தன் புதல்வன் என்று கூறி அவனை அங்கிருக்கச் செய்து என்பது.

14 அழிவுகாலம்—இரவு முதலிய தாக்குதற்குரிய காலம்.

15 இறந்தவனுக்குத் திருப்தியுண்டாதற் பொருட்டுச் செய்யப்படும் தானம் முதலியதை 'நைடேசனிகம்' என்பர்.

16 நம்பிக்கையுண்டாதற் பொருட்டு வேறொரு முறையைக் கூறுகின்றார்.

17 தூய—நஞ்சு கலக்கப் பெறாத.

18 கொல்லுதற்குரிய அளவின் கால்மடங்கு அளவுள்ள நஞ்சுடன் கூடிய என்க.

19 இரண்டாம் நாள் முதலியவற்றில் கொல்லுதற்குப் போதிய அளவு நஞ்டன் கூடியதைக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

20 படைத்தலைவர், தாம் பருகவேண்டியவற்றைச் சிறிது பிறனைப் பருகச்செய்து, பின்னர் பருகுவது வழக்கமாகலின், முதலில் தூய கள்ளைக் கொடுத்து, அதைக் குடித்து மயங்கியிருக்கும் நிலையில் நஞ்சு கலக்கப் பெற்றதைக் கொடுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

21 படைத்தலைவனுடைய உருக்கொண்ட சத்திரி கள் விற்போனுருவினன் செய்ததுபோல், விடப்பட்ட புதல்வனை அழிவு காலத்தில் கொன்று 'நைடேசனிகம்' என்பதைத் தலைக்கீடாகக் கொண்டு, விடங்கலந்த கட்குடங்களைக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சி விற்போன், சோறு விற்போன், கள் விற்போன், பண்ணியஞ் செய்பவன் என்னுமிவர்களின் உருவினன் [22]பண்ணியச் சிறப்பைப் பற்றிப் பரப்பியும், ஒருவர்க்கொருவர் பொருமை காரணமாகக் காலிகமென்றும். மிகவும் உரிய விலையுள்ளதென்றும் (கூறியும்) பகைவரையழைத்து நஞ்சுடன் தம் விலைப்பண்டங்களைக் கொடுத்தல் வேண்டும்.

[23]மகளிரும் சிறுவரும் கள் பால் தயிர் நெய் எண்ணெய் ஆகிய இவற்றை விற்பவரின் கைகளிலிருந்து வாங்கி நஞ்சுடன் கூடிய தம் பாண்டங்களில் ஊற்றிக் கொள்ளுதல் வேண்டும், [24]'இவ்விலைக்கோ அன்றி (இதனினும் மிகுந்த) சிறப்புடையதையோ கொடுங்கள் என்று அதன்கண்ணேயே ஊற்றுதல் வேண்டும்.

வணிகவுருவினரும் [25]இவற்றையே விற்பனைக்கு ஏற்றுக் கொள்பவராக அணிமையிலிருந்து யானை குதிரைகளின் [26]உணவுகளிலும் புற்களிலும் நஞ்சைக் கலத்தல் வேண்டும்.

பணியாளருருவினர் நஞ்சு பூசப்பெற்ற புல்லையோ நீரையோ விற்றல்வேண்டும். நீண்ட கால நண்பரான ஆனின வணிகர்

---

[22] தம்மிடமுள்ள பண்டங்களின் சிறப்பை எடுத்துக் கூறி, போட்டி காரணமாக, 'பிற்காலத்தில் விலைப்பொருளைக் கொடுத்தற்குரியது' என்றும் 'மிகவும் குறைந்த விலையுள்ளது' என்றுங் கூறிப் பகைவரை அழைத்துப் பண்டங்களில் நஞ்சைக் கலந்து கொடுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[23] மகளிர் முதலியவர், நஞ்சினால் பூசப்பெற்ற உட்புறத்தையுடைய பாண்டங்களை எடுத்துக்கொண்டுபோய், கள் முதலியவற்றை விற்பவரிடமிருந்து அவற்றைத் தம் பாண்டங்களில் வாங்கி நஞ்சுடன் நன்கு கலக்கச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[24] 'நீங்கள் கூறிய விலையைவிடக் குறைந்த விலைக்குக் கொடுங்கள் அல்லது அவ்விலைக்கு இன்னும் சிறந்ததும் அதிகமாக வுள்ளதுமாகிய பண்டத்தைக் கொடுங்கள்' எனக்கூறி, அவர்கள் உடன்படாதபொழுது தம் பாண்டங்களிலுள்ளதை அவர்களுடைய பாண்டங்களிலேயே ஊற்றிவிடல் வேண்டும் என்பது கருத்து. இங்ஙனம் செய்வதன் நோக்கம் தம் குற்றத்தை மறைத்துக்கொள்ளுதலும் வெளிப்பட்டால் பிறர்மேற் சுமத்தலும் கருதியென்க.

[25] இவற்றை—கள் முதலியவற்றை.

[26] உணவு—யானைகளுக்குரியது.

பசுக்கள் அல்லது செம்மறிகளின் குழுவை [27] அழிவு காலங்களிலும் பகைவரின் [28]மயக்கக் காலங்களிலும் [29]விடுத்தல் வேண்டும். குதிரை கழுதை ஒட்டகம் முதலியவற்றுள் மூஞ்சூரின் குருதியில் நனைத்த கண்களையுடைய [30]கொடியவற்றை விடுத்தல் வேண்டும். வேடவுருவினர் கூட்டினின்று கொடிய விலங்குகளையும், பாம்பு பிடிப்போர் கொடிய நஞ்சுள்ள பாம்புகளையும், யானையால் வாழ்பவர் யானைகளையும் (வெளியே) விடுத்தல் வேண்டும்.

[31]தீயால் வாழ்பவர் தீயைப் பரப்புதல் வேண்டும்.

ஒற்றர்கள் விழிப்பற்ற காலாட் படை குதிரை தேர் யானைகளின் தலைவரைக் கொல்லுதல் வேண்டும். அல்லது தலைவரில்லங்களில் தீயிடல் வேண்டும். [32]ஏவப்பட்ட தூஷ்யர் பகைவர் காட்டில் வாழ்வோர்களின் உருவினர், [33]பின்னணியில் தாக்குதலும் [34]கவர்தலும் [35]எதிர்த்தலும் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். காட்டில் மறைந்தவர், [36]எல்லைப் படையை [37]அணிமையிலிழுத்துக் கொல்லுதல் வேண்டும்.

[38]ஒற்றையடி வழியில் கூல முதலிய சுமப்போர் நட்புப்படை புல் விறகு கொணர்வோர் என்னும் இவர்களைத் தாக்குதலுமாம்.

---

27 அழிவு காலங்கள்—பகைவர் தாக்குதல் முதலிய நெருக்கடியான காலங்கள்.

28 மயக்கக் காலம்—இன்னது செய்வது என்ற அறிவற்ற நிலை.

29 இங்ஙனம் விடுத்தல், மீண்டும் அதிகமாகக் கலக்கமுண்டாதற் பொருட்டென்க.

30 கொடிய குதிரை முதலியவற்றை யென்பது.

31 தீயைப் பிரயோகிக்கும் முறையைக் கூறுகின்றார்.

32 பகைவர்பால் ஏவப்பட்ட என்க.

33 பின்புறமாகத் தொடர்ந்து சென்று தாக்குதல் என்பது.

34 கவர்தல் என்பது உறங்குவோரை யபகரித்தல் என்னும் பொருளது.

35 எதிர்த்தல்—எதிர்முகமாக வரும் பகைப்படையினை யெதிர்த்தல்.

36 எல்லைப்படை—நாட்டின் எல்லையில் காவல் குறித்து வைக்கப்பட்ட படை.

37 அணிமை—தாமிருக்கும் இடத்துக்குச் சமீபம்.

38 இனிக் 'கூல முதலிய சுமப்போர்.........' என்ற பிரகரணம் விரித்துரைக்கப்படும். கூல முதலிய சுமப்போர் முதலானோர் பகைவரைச் சார்ந்து, போர்க்காலத்தில் அவர்க்கு உதவிபுரிபவராவர். அவ்வுதவியைத் தடுத்தற் பொருட்டு அவர்களைக் கொல்லுதல் வேண்டும். ஒற்றையடி வழி—ஒருவர்பின் ஒருவர் செல்லுமாறு குறுகிய நெருக்கடியான சிறு வழி.

இரவுப் போரில் [39]சங்கேதத்துடன் அதிகமாக வாச்சியத்தை ஒலிப்பித்து [40]'உட்புக்கோம், அரசு அடையப்பட்டது' என்று கூறுதல் வேண்டும். அரசனிருக்குமிடத்தை யடைந்து [41]நெருக்கத்தில் அரசனைக் கொல்லுதல் வேண்டும்.

மிலேச்சர் காட்டில் வாழ்வோர்களின் படையில் இயங்குவோரும் [42]சத்திரத்தையடைந்தவரும் மரங்களையுடைய வேலியை யடைந்தவரும் நாற்புறமும் செல்லுமவனைக் கொல்லுதல் வேண்டும்.

வேட வுருவினர் [43]கவர்தல் நெருக்கடிகளில் வஞ்சகப் போர்க் [44]காரணங்களால் கொல்லுதல் வேண்டும்.

ஒற்றையடி வழியிலும் [45]மலை தூண் வேலி தடங்கல் உட்புற நீர் என்பவற்றிலும் தன்னிலப் படையால் [46]கொல்லுதல் வேண்டும். [47]ஆறு ஏரி குளங்களின் அணைக்கட்டினை விரைவில் தகர்த்தலால் மிதக்கச் செய்தல் வேண்டும். [48]நிலவரண் காடு சுரங்கம் என்பவற்றிலுள்ளவனை [49]வஞ்சத் தீ, புகை என்பவற்றால் அழித்தல் வேண்டும்.

---

39 சங்கேதம்—பகைப்படைக்கு அச்சம் விளைதற்பொருட்டு அதிகமாக வாச்சியத்தை யொலிக்குமுகமாகத் தம் பக்கத்து வெற்றியைப் பறைசாற்றுங் குறிப்பு.

40 உட்புகுதல்—அரசனது தலைநகரத்தை யடைதல்.

41 நெருக்கம்—போர் நெருக்கடி.

42 சத்திரம் — நிலவரண் முதலிய அரண்கள். (131-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.)

43 கவர்தல் காரணமான நெருக்கடிகளில் என்பது.

44 இக் காரணங்களை 131-ஆம் அத்தியாயத்திற் கண்டுகொள்க.

45 பாறை மயமான இடத்திலும், நிலைத்த மரங்களுடன் கூடிய வேலிகள் மிகுந்த விடத்திலும், உட்புறத்து நீரையுடைய விடத்திலும் என்பது.

46 பகைப்படையை என முன்னர்க் கூட்டுக.

47 ஆறு முதலியவற்றைத் தகர்த்தலாலுண்டாய வெள்ளத்தின் வேகத்தினால் இழுக்கப்பட்டவனாகப் பகைவனைச் செய்து, கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

48 நிலவரண் முதலிய அரண்களிலுள்ள பகைவனை என்க.

49 வஞ்சத்தீ—கபடோபாயத்தால் உண்டாக்கப்பட்ட தீ.

[50]நெருக்கடியை எய்தியவனைத் தீயாலும், நிலவரணை எய்தியவனைப் புகையாலும் [51]நிதியை அடைந்தவனை நஞ்சினாலும் [52]நீரிலமிழ்ந்தவனைக் கொடிய முதலை, [53]நீரில் இயங்குவன என்பவற்றாலும் தீக்ஷ்ணர்கள் வயப்படுத்தல் வேண்டும்

[54]தீயிடப்பட்ட இல்லத்தினின்று வெளியேறின,

சுலோகம்

[55]கூறப்பட்ட நிலங்களில் [56]ஈடுபட்ட பகைவனை [57]உபாயத்தால் வெளிப்படுத்தலும், [58]கபடங்களாலும், [59]வஞ்சகச் செயல்களுள் ஒன்றாலும் வஞ்சித்தல் வேண்டும்.

பன்னிரண்டாம் அதிகரணம் 5, 6-ஆம் பிரகரணங்கள்
'படைக்கலம் நெருப்பு நஞ்சு இவற்றை மறைவிற் பிரயோகித்தல்',
'கூலம் முதலிய சுமப்போர் நட்புப்படை புல் விறகு
கொணர்வோர் இவர்களைக் கோறல்' என்னும்
நூற்றுமுப்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[50] புகுதல் வெளிவருதல் என்பவற்றைச் செய்தற்கியலாத இடத்தையடைந்த பகைவனை என்பது.

[51] மறைவான கருவூலமிருக்குமிடத்தை யடைந்த பகைவனை என்பது.

[52] நீரில் மூழ்கி மறைந்த பகைவனை என்பது.

[53] நீரில் இயங்குவன—நீரில் சஞ்சரித்தற்குரிய கருவிகள். இவற்றைப் பற்றிய விளக்கத்திற்கு 141-ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

[54] இப் பகுதியைப் பின்வரும் சுலோகத்திலுள்ள 'பகைவனை' என்பதுடன் இயைக்க.

[55] கூறப்பட்ட—நிலவரண் முதலாக முற்கூறப்பட்ட.

[56] ஈடுபடுதல், தற்காப்பு நிமித்தமென்ப.

[57] 13-ஆம் அதிகரணத்திற் கூறப்படும் முறைகளால் என்பது.

[58] கபடங்கள்—140-ஆம் அத்தியாயத்தில் கூறப்படுவன.

[59] பகைவரை வஞ்சித்தற் குரியனவாக முற்கூறப்பட்ட உபாயங்களுள் ஒன்றால் என்பது.

பன்னிரண்டாம் அதிகரணம் ஆற்றலிலான் செயல்

7, 8, 9-ஆம் பிரகாணங்கள்—[1] கபடோபாயத்தாலழித்தல், தண்டத்தாலழித்தல், தனியனுய் வேறல்

நூற்றுநாற்பதாம் அத்தியாயம்

[2] தெய்வ வழிபாடு காரணமான யாத்திரையில் பகைவனுக்கு, அன்பு பற்றிய வழிபாட்டின் நிமித்தம் வருதற்குரிய காரணங்கள் பலவாம். [3] ஆண்டு அவனைக் குறித்து வஞ்சித்தலைப் பரப்புதல் வேண்டும்.

[4] திருக் கோயிலுட் புக்கவன் மேல் [5] பொறிகளை விடுத்தலும் மறைவான சுவரையோ பாறையையோ வீழ்த்தலும் [6] மேலறையிலிருந்து பாறை படைக்கலம் என்பவற்றைப் பொழிதலும் கதவைப் பொருத்தப்படாத நிலையில் தானே [7] விழச்செய்தலும் [8] சுவரிலமைக்கப்பட்டதும் ஒருபகுதியில் தொடர்புள்ளதுமான கழியை விடுத்தலும் வேண்டும். தெய்வத் திருமேனியில் அமைந்திருக்கும்

140-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] கபடோபாயம்—பகைவன், திருக்கோயில் முதலிய அறநிலையங்களிற் செல்லுங்கால் அவன்மேற் பொறிகளால் கல் வீழ்த்தல், சுவர் வீழ்த்தல் முதலியன.

[2] உபாயத்தைக் கையாளுதற்குரிய காலத்தைக் கூறத் தொடங்குகிறுர். திருவிழாக்காலங்களில் செல்லும் யாத்திரையில் பகைவன், தெய்வ வழிபாடு நிமித்தம் வருதற்குரிய சந்தர்ப்பங்களுண்டாம் என்பது கருத்து.

[3] அச்சந்தர்ப்பங்களில் அப்பகைவனைக் குறித்துக் கபடோபாயத்தைக் கையாளுதல் வேண்டும் என்பது கருத்து.

[4] உபாய வகைகளைக் கூறுகின்றுர்.

[5] மறைவான சுவர் பாறைகளுக்கு ஆதாரமாயுள்ள பொறியை நழுவச் செய்தலால் என்பது.

[6] மேலறை—இதனைச் சிரோகிருஹம் என்று முதனூல் கூறும்.

[7] பிடிப்புள்ள ஆதாரத்திலிருந்து நழுவச்செய்தலும் என்க.

[8] சுவரில் மறைவாக அமைக்கப்பட்டதும் ஒரு பகுதியில் பிடிப்புள்ளதும், அது காரணமாகவே எளிதில் விழுதற்குரியதுமான பெரிய தடியை என்பது.

படைக்கலங்களை [9]அவன் மேல் வீழ்த்துதல் வேண்டும். நிற்றல் இருத்தல் செல்லுதற்குரிய இடங்களில் [10]பசுவின் சாணத்தைப் பூசுதல், மணநீர் தெளித்தல், [11]மலர் பொடிகளின் காணிக்கை என்னுமிவற்ருல் நஞ்சைப் பிரயோகித்தல் வேண்டும். [12]மணத்தினுல் மறைந்த தீக்ஷ்ணமான புகையை அவன் நுகரும்படி செய்தல் வேண்டும். [13]படுக்கை இருக்கைகளின் கீழ் ஆணியை எடுத்தலால் பொறியாற் கட்டுண்ட தரையிலுள்ள அவனைச் சூலக் கிணறு படுகுழிகளிற் புகச் செய்தல் வேண்டும். [14]பகைவன் நெருங்கிய போது எதிர்த்தற்குரிய மக்களை நாட்டினின்றும் வெளியேற்றல் வேண்டும். [15]தகைதற்குத் தகாதவரை அரணினின்றும் வெளியேற்றுதல் வேண்டும் [16]திருப்பிப் பெறுதற்குரியவரைப் பகைவன் நாட்டிற்கு அனுப்புதல் வேண்டும். [17]ஒருவனிடமுள்ள நாட்டை மலை காடு ஆறு அரண்களாலாவது [18]காட்டினுல்

---

9 அவன்—பகைவன்.

10 அவ்விடங்களைத் தூயனவாய்ச் செய்வதன் நிமித்தம் பசுவின் சாணத்தால் மெழுகுதல் என்பது.

11 தெய்வத்தின் நிர்மால்யமான மலர்கள், குங்குமம் முதலியவற்றைக் காணிக்கையாய்க் கொடுப்பதைத் தலைக்கீடாகக்கொண்டு நஞ்சைப் பிரயோகித்தல் வேண்டும்.

12 நறுமணப் பொருளின் வாசனையினுல் மறைவுபட்ட மணத்தையுடைய விஷப்பொருளின் புகையை அவன் முகருமாறு செய்தல் வேண்டும்.

13 படுக்குமிடத்திற்கும் அமருமிடத்திற்கும் கீழ்ப்பகுதியில் பொறிகளாலாக்கப்பட்ட தளவரிசை யிருக்கும் நிலையில், யந்திரங்களின் ஆணிகளை விடுவித்துச் சூலங்கள் நாட்டப்பட்ட கிணற்றிலோ படுகுழியிலோ புகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

14 பகைவன் தனக்கு அணிமையிலிருக்கும்போது அவன் நாட்டிலுள்ளவரும் தடுத்தற்குரியவருமான மக்களை ஒருசேரத் தடுத்தற்பொருட்டு மிகுதியாகக் கொணர்தல் வேண்டும்.

15 பகைவனுல் தடுக்கப்பட்டவரும் அவ்வாறு தடுத்தற்குத் தகாதவருமான மக்களை விடுவித்தல் வேண்டும் என்பது.

16 பகைவர் நாட்டிலிருந்து கொணரப்படும் மக்கள் அப்பகைவனுல் திரும்பப் பெறுதற்குரியராயின், அவர்களை அவன் திரும்பப் பெருதிருத்தற்பொருட்டு அப்பகைவற்குப் பகைவனுடைய நாட்டிற்கு அனுப்புதல் வேண்டும் எனக் கூறுகின்ருர்.

17 பகைவனுயிருக்கும் ஒரு அரசனுடைய ஆட்சியிலுள்ள என்பது.

18 காட்டினுல் மறைந்தவை—காடுகளான் மறைந்த நாடுகள்.

மறைந்தவற்ருலாவது [19]புதல்வர் உடன் பிறந்தோர்களால் ஏற்கப் பட்டதாக நிலைப்படுத்தல் வேண்டும்.

[20]தகைதற் காரணங்கள் படைவலியால் தாழ்த்தப்பட்டோன் செயலிற் கூறப்பட்டனவாம்.

[21]புல் விறகுகளை யோசனை தூரம் வரை கொளுத்துதல் வேண்டும். [22]நீரையுங் கெடுத்தல் வேண்டும் [23]பெருகச் செய்தலும் வேண்டும். [24]வஞ்சகக் கிணறு, [25]வீழ்த்துங்குழி, [26]முட்கயிறு என்பவற்றையும் [27]வெளியிலமைத்தல் வேண்டும்.

[28]பகைவனிருப்பிடத்தில் சுரங்கத்தைப் பல வாயிலுள்ளதாகச் செய்து, தேடுதற் றலைவரையும் பகைவனையும் கலங்கச்

---

19 பகைவனுடைய புதல்வர் முதலியவர்களால் வயப்படுத்தப்பட்டதாக உறுதி செய்தல் வேண்டும் என்பது.

20 மேற்கூறியவை போன்றவையும் வலியவனல் தடுத்தற்குரியனவும் வேறு அதிகரணங்களிற் கூறப்பட்டனவுமான வேறு சில காரணங்களை நினைவூட்டுகின்ருர். அக்காரணங்கள் 'அறுவகைக் குணங்கள்' என்னு மதிகரணத்தில் 'படைவலியால் தாழ்த்தப்பட்டோன் செயல்' என்னும் பிரகரணத்தில் விளக்கிக் கூறப்பட்டனவாம்.

21 மீண்டும் கபட உபாயங்களைக் கூறுகின்ருர். பகைவனுக்கு வேண்டிய புல் விறகு முதலியவற்றை ஒரு யோசனை தூரமுள்ள இடங்களில் கொளுத்துதல் வேண்டும். இங்ஙனம் செய்வது பகைவன் அவற்றைப் பெறுதிருத்தற் பொருட்டென்க.

22 நஞ்சினல் நீரைக் கெடுத்துவிடுதல் வேண்டும் என்பது.

23 கரை, அணைக்கட்டுகளைத் தகர்த்தல்மூலம் நீரைப் புறத்தே பெருகச் செய்தல் வேண்டும் என்பது.

24 வஞ்சகக்கிணறு—மறைவான கிணறு.

25 புல் முதலியவற்ருல் மூடப்பட்ட குழிகள்.

26 முட்களையுடைய இருப்புச் சங்கிலிகள்,

27 மதிலுக்கு வெளியில் பகைப்படை வருதற்குரிய வழியில் அமைத்தல் வேண்டும்.

28 பகைவனிருக்குமிடத்தில் நிலத்தில் பல வாயில்களைச் செய்து, தேடுதற்ருெழிலில் ஈடுபட்ட தலைவரையும் பகைவனையும் மயங்கச் செய்தல் வேண்டும்.

செய்தல் வேண்டும். [29]சுரங்கம் பகைவனால் உண்டாக்கப் படின் நீருக்கு அணிமையான அகழைத் தோண்டுதல் வேண்டும். [30]மதிலுக் கருகில் கிணறு வரிசையையும் தோண்டலாம். [31]ஐயத்திற் குரிய இடங்களில் தோண்டப்பட்ட இடத்தை யறிவித்தற் பொருட்டு நீரற்ற குடங்களை யாதல் செப்புக் கலசங்களை யாதல் அமைத்தல் வேண்டும். [32]சுரங்கவழி யறியப்படின் எதிர்ச் சுரங்கத்தைச் செய்வித்தல் வேண்டும். நடுவண் தகர்த்துப் புகையை யாதல் நீரையாதல் புகச் செய்தல் வேண்டும்.

[33]காவல் செய்யப்பட்ட அரணையுடையவன் [34]மூலத்தில் [35]ஞாதியனை நிலைப் படுத்தி [36]அவனுக்கு முரணான திசையிற் செல்லல் வேண்டும். [37]நண்பருடனும் உறவினருடனும் காட்டில் வாழ்வோருடனும் பகைவற்குப் பகைவனுடனும் [38]பெரிய

---

[29] மதிலுக்கு உட்புறத்திற் புகுதற்பொருட்டுப் பகைவனால் சுரங்கம் செய்யப்பட்டிருப்பின், அதை யழித்தற்பொருட்டு நீர் தோன்றும் வரை ஆழமுள்ள அகழைத் தோண்டுதல் வேண்டுமென்பது கருத்து.

[30] அகழைத் தோண்டுதற்கு இயலாதுபோனால் மதிற்சுவரின் நீளத்தை யநுசரித்துக் கிணறுகளைத் தோண்டுதல் வேண்டும் என்பது.

[31] சுரங்கத்தின் வழியில் சந்தேகத்தைக் கொடுக்குமிடங்களில், அறிவுறுத்தும் அடையாளமாக வெறுங்குடங்கள் முதலியவற்றை வைத்தல் வேண்டும் என்பது.

[32] பகைவனுடைய சுரங்கவழி அறியப்படின் அதற்கு எதிர்ச் சுரங்கத்தையோ, சுரங்கவழி நடுவில் துவாரத்தையோ செய்து அதனுள் நச்சுப் புகையையும் நச்சு நீரையும் புகுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[33] ஆற்றலிலான் தனக்கு இயன்ற அளவு அரண் முதலியவற்றிற் காவலைச் செய்து, தானியத்தில் புதல்வனை வைத்துத் தன்னை எதிர்க்கும் பகைவனுக்குத் தீமையை விளைக்கும் திசையைக் குறித்துச் செல்லல் என்ற மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[34] மூலம்—தானியம்.

[35] ஞாதியன்—புதல்வன்.

[36] அவனுக்கு முரணான—பகைவனுக்குப் பிரதிகூலமான.

[37] பிரதிகூல வகைகளைக் கூறுகின்றார்.

[38] ‘பகைவனுக்குத் தீங்குபுரிதற்கு ஆற்றலுள்ள’ என்பதைக் கூட்டுக.

தூஷ்யர்களுடனும் [39]கூடுதற்குரிய இடத்திலும் [40]நண்பருடன் பிரிவைச் செய்தலும் பின்னணியைப் பற்றுதலும் [41]அவன் அரசைக் கவர்தலும் கூல முதலிய சுமப்போர் நட்டுப்படை புல் விறகு கொணர்வோர் என்னும் [42]இவர்களைத் தடுத்தலும் [43]சூதாடுபவன் போல் கபட உபாயத்தால் அவனைத் தாக்குதலும், தன் அரசு காத்தலும், [44]மூலத்தின் மிகுதியைச் செய்தலும் [45]விரும்பப் பட்ட சந்தியை யடைதலும் எங்கு இயலுமோ அவ்விடத்தை யடைதல் வேண்டும்.

[46]இவனிடம் உன்னுடைய பகைவனாகிய இவன் எங்கள் கையை எய்தினான். [47]விலைப் பண்டத்தையோ குற்றத்தையோ தலைக்கீடாகக்கொண்டு பொன்னையும் உட்டிண்மைப் படையையும் அனுப்பு. கட்டியோ கொன்றோ இவனைக் கொடுப்போம்' என்று, [48]கூடப் புறப்பட்டவர்கள் [49]அனுப்புதல் வேண்டும். [50]ஒப்புக் கொள்ளின் பொன்னையும் திண்மைப் படையையும் ஏற்றல் வேண்டும்.

---

39 பகைவனுக்குத் தீங்கு செய்தற்பொருட்டு எந்தத் திசையில் மேற் கூறியவர்களுடன் சேர்க்கையை அடைதல் கூடுமோ, அத்திசையைக் குறித்துச் செல்லல் வேண்டும் என்று முடிக்க. பின்னுள்ளவற்றிற்கும் இஃதொக்கும்.

40 பகைவனுடைய நண்பரிடமிருந்து பகைவனைப் பிரித்தல்.

41 அவன்—பகைவன்.

42 'பகைவனுக்கு உதவிபுரியும்' என்பதை முன்னர்க்கூட்டிப் பொருள் கூறுக.

43 சூதாடுபவன் கபடமாகக் காயைப் போடுதலால் வெற்றி பெறுதல் போல கபட உபாயத்தால் பகைவனைத் தாக்குதல் வேண்டுமென்பது.

44 தன் மூலப்படையை மிகைப்படுத்தலும் என்க.

45 தான் விரும்பிய வண்ணம் அடையும் சந்தியை என்பது.

46 மற்றொரு கபட முறையைக் கூறுகின்றார்.

47 விலைப்பண்டத்தைத் தலைக்கீடாகக் கொண்டு பொன்னையும் குற்றத்தை வியாஜமாகக் கொண்டு உள்வன்மையுடைய படையையும் அனுப்புதல் வேண்டும் என்று இயையும்.

48 மாறுபட்ட திசையைக் குறித்துச் சென்றவனுடன் கூடச் செல்லும் ஒற்றர்கள் என்பது.

49 பகைவனிடம் அனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

50 அனுப்பிய செய்தியை ஒத்துக்கொண்டு அவற்றை யனுப்பினால் அவை யிரண்டையும் தானே எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

[51]எல்லை காவலன் அரணைக் கொடுத்தலால் படைப்பகுதியை வருவித்து நம்பிக்கையுற்றபோது கொல்லுதல் வேண்டும்.

[52]ஓரிடத்துள்ள நாட்டைக் கொல்லுதற்குப் பகைப் படையைத் தருவித்தல் வேண்டும். அதைத் [53]தகையப்பட்ட விடத்திற் சேர்ப்பித்து நம்பிக்கையுற்ற நிலையிற் கொல்லுதல் வேண்டும்.

[54]நண்பருருவினன் இவ் வரணில் கூலம் எண்ணெய் அக்காரம் உப்பு என்னுமிவை குறைந்தன. அவை இன்ன விடத்தில் இன்ன காலத்தில் புகப் போகின்றன. அவற்றை [55]எடுத்துக் கொள்' என்று [56]வெளியிலுள்ளவனுக்கு அனுப்புதல் வேண்டும். [57]பின்னர் தூஷ்யர் பகைவர் காட்டில் வாழ்வோர் என்பவர்களோ அன்றி விடப்பட்ட ஏனையவர்களோ நஞ்சிடப் பெற்ற கூலம் எண்ணெய் பால் உப்பு என்னுமிவற்றைப் புகுத்தல் வேண்டும்.

[58]எல்லா வகைப் பண்டங்களையும் கூலங்களையும் ஏற்றற்கும் இதனால் விதி கூறியவாறும்.

---

[51] மற்றொரு முறையைக் கூறுகின்றார். தன்னுலடையப்பட்ட அரணைக் கொடுத்தலால் பகைப்படையின் ஒருபகுதியை வரவழைத்து, வெளியேறுதற்கியலாத இடத்திற்குப் போகச்செய்து நம்பிக்கையுற்ற நிலையில் அப்படையைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

[52] மற்றொரு முறையைக் கூறுகின்றார். ஒன்றுசேர்ந்து தனக்குப் பணியாதிருக்கும் நாட்டுமக்களை யென்பது.

[53] தகையப்பட்ட—வெளிச்செல்லுதற்கியலாத.

[54] மற்றொரு விதிமுறையைக் கூறுகின்றார்.

[55] கவர்ந்து எடுத்துக்கொள் என்பது.

[56] பகைவனுக்குச் செய்தியை யனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

[57] மேற்கூறியவாறு செய்தியை யனுப்பியபின், வெற்றிவிருப்பமுள்ளவனுடைய தூஷ்யர் முதலியவர்களோ கொல்லுதற்குரிய மற்றவரோ குறிக்கப்பட்ட இடங்காலங்களில் நஞ்சு கலக்கப்பட்ட கூல முதலியவற்றைப் புகுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[58] மேற்கூறிய முறைப்படியே பண்ட முதலியவற்றை நஞ்சு கலக்கப் பெற்றனவாகச் செய்து பகைவன் ஏற்றற்குரியனவாகச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[59]சந்தியைச் செய்து [60]பொன்னின் ஒரு பகுதியையும் எஞ்சியதைக் காலந் தாழ்த்தியும் அவனுக்குக் கொடுத்தல் வேண்டும். [61]ஆகலின் [62]காவன்முறைகளை [63]நழுவச் செய்தல் வேண்டும். தீ நஞ்சு படைக்கலங்களால் [64]தாக்குதல் வேண்டும். [65]பொன்னை யேற்கும் அவனுடைய அன்பர்களை [66]யருளுதல் வேண்டும்.

[67]குறைந்துள்ளவன் [68]அவனுக்கு அரணைக் கொடுத்துச் சுரங்கத்தின் வழியாக வெளியேறல் வேண்டும். [69]நடுவிடத்தைப் பிளந்தும் மதிலைத் தகர்த்தும் வெளியேறலாம்.

[70]இரவிற் [71]கவர்தலைச் செய்து [72]பயனெய்தியவன் இருத்தல் வேண்டும். பயனெய்தாதவன் [73]பக்கமாக வெளியேறல் வேண்டும். [74]பாசண்டியினுருவினனாகக் குறைந்த பணியாளருடன் வெளியேறல் வேண்டும். இறந்தவனுருவினனாக ஒற்றர்

---

59 வேறொரு முறையைக் கூறுகின்றார்.

60 ஒப்பந்தப் (சந்திப்) பொருளில் ஒரு பகுதியை என்பது.

61 எஞ்சியதற்குக் காலந் தாழ்த்தலாலுண்டாம் பயனைக் கூறுகின்றார். ஆகலின்—எஞ்சிய பகுதியைக் கொடுத்தற்குக் காலந்தாழ்த்துதல் காரணமாக.

62 'பகைவன் ஏற்றற்குரிய' என்பதை முன்னர்க் கூட்டுக.

63 எதிர்ப்பதற் குரியவன் சந்தியை அடைந்தான்' என்ற நம்பிக்கையை உண்டுபண்ணுவது மூலமாகக் கருத்தின்றி யொழுகும்படிச் செய்தல் வேண்டும் என்பது.

64 நழுவச் செய்யப்பட்ட காவன் முறைகளையுடைய பகைவனைத் தீ முதலியவற்றால் தாக்குதல் வேண்டும் என்பது கருத்து.

65 கைக்கூலி பெறும் இயல்புடையவரும் தன் பகைவருடைய அன்பருமான மக்களை என்பது.

66 'கைக்கூலியைக் கொடுத்தலால்' எனக் கூட்டுக.

67 எவ்வகையிலும் பகைவனைத் தடுக்க ஆற்றலற்றவன்.

68 அவன்—பகைவன்.

69 மதிலின் நடுவில் எந்தவிடத்தில் பிளவிருக்கிறதோ அதைத் தகர்த்துக் கொண்டு வெளியேறல் வேண்டும் என்பது.

70 மற்றொரு வகை கூறுகின்றார்.

71 கவர்தல்—உறங்குவோரைக் கவர்தல்.

72 செயற்பயனை யடைந்தவன் அங்கேயே இருத்தல் வேண்டும்.

73 குறுக்கு வழிகளால் வெளியேறிவிட வேண்டுமேயன்றி உயிர்க்கேடு அச்சமுண்டாம்படி அங்கிருத்தல் கூடாதென்பது கருத்து.

74 குறுக்கு வழிகளை விரித்துக் கூறுகின்றார்.

களால் [75]வெளியேற்றப்படலாம். [76]மகளிருருக் கொண்டு இறந்தவனைத் தொடர்ந்து செல்லலாம்.

[77]தெய்வக் காணிக்கை, பிதிர்க் கடன், [78]உண்டாட்டு என்பவற்றில் நஞ்சு கலந்த சோறு, [79]குடிநீர் என்பவற்றைக் கொடுத்து வேறுபடுத்தலைச் செய்து தூஷ்ய வுருவினருடன் [80]வெளிக்கிளம்பி [81]மறைந்த படையுடையனுய்க் கொல்லுதல் வேண்டும்.

[82]இங்ஙனம் கவரப்பட்ட அரணையுடையவன் [83]உணவுமிகுந்த திருக்கோயிலை யடைந்து தெய்வத் திருவுருவங்களின் [84]இடைவெளியில் புக்கிருத்தல் வேண்டும். [85]மறைவிடமுள்ள சுவரையோ தெய்வத் திருவுருவங்களுள்ள நிலத்துள்ள சுரங்கத்தையோ (அடைந்திருத்தல் வேண்டும்). [86]மறக்கப்பட்டபோது சுரங்கத்தின் வழியே இரவில் அரசனிருப்பிடத்திற் புக்கு, உறங்கும் பகைவனைக் கொல்லுதல் வேண்டும். [87]பொறியை நழுவச் செய்தற்குரிய

---

75 பாடையிற் கட்டப்பட்டு ஒற்றரால் பட்டணத்துக்கு வெளிப்புறம் கொண்டுபோகப்படலாம்.

76 பெண்வேடம் பூண்டு, இறந்தவனுடைய மனைவி முதலிய சுற்றத்தார் என்று சொல்லிக்கொண்டு வெளியேற்றப்படும் பாடையைத் தொடர்ந்து வெளியேறலாம்.

77 இதனைத் 'தெய்வபலி' என்று முதனூல் கூறும்.

78 உண்டாட்டு—உய்யானத்தில் உண்ணுதல்.

79 நீர் முதலியனவாகப் பருகுதற்குரியன.

80 தன் பக்கத்திலிருந்து பிறன் பக்கத்திற் புகுந்து.

81 மறைந்த தன் படைகளுடன் கூடியவனுக என்பது.

82 இனித் 'தனியனுய் வேறல்' என்னும் பிரகரணம் கூறப்படும். ஓரரசன், துணையின்றித் தன் பகைவனை வெல்லுதல் என்பது பொருள். பகைவனுற் கவரப்பட்ட அரணையுடையான் செயற்பாலதைக் கூறுகின்றூர்.

83 உண்ணுதற்குரிய பண்டங்களால் நிறைந்த என்பது.

84 துவாரத்தின் வழியாக உட்புகுந்திருத்தல் வேண்டும்.

85 மறைவாக இருந்து வசித்தற்குரிய துவாரத்தையுடைய சுவரிலாதல், தெய்வப் பிரதிமையுடன் கூடிய சுரங்கத்திலாதல் புகுந்து வாழ்தல் வேண்டும் என்பது.

86 தன்னைப்பற்றிய நினைவு தன் பகைவனுக்கு இல்லாது போனபோது பகைவனுலுண்டாம் அச்சத்தை மறந்து கவலையற்றிருக்கும்போது என்பது.

87 பொறியை நழுவச்செய்வதற்கு, ஆதாரமாயுள்ள இடத்தைப் பொறியினின்றும் பிரித்தென்க.

இடத்தை நழுவச் செய்து கீழே வீழ்த்தல் வேண்டும். [88] தீயை வளர்த்தற்குரியதால் பூசப்பெற்ற இல்லத்தையோ அரக்கு இல்லத்தையோ (அடைந்து) உறங்கும் பகைவனைக் கொளுத்தல்வேண்டும்.

பூங்கா, உய்யானம் என்பவற்றுள் ஒன்றிலோ விளையாட்டிடத்திலோ [89] மயங்கியவனை நிலத்திலுள்ள இல்லம், சுரங்கம், மறைவான சுவர் இவற்றிற்புக்க தீக்ஷ்ணர்களோ, மறைவாக ஏவப்பட்டவர்களோ [90] நஞ்சினாற் கொல்லுதல் வேண்டும். [91] தகையப்பட்டவிடத்தில் மறைந்த மகளிர் உறங்குபவன்மேல் [92] பாம்பு, நஞ்சு, தீ, புகை இவற்றை விடுத்தல் வேண்டும்.

[93] உவளகத்தையடைந்த பகைவனிடம் காரணம் தோன்றியபோது உரியவைகளை மறைவியக்கமுள்ளவனாகக் கையாளுதல் வேண்டும். பின்பு மறைவாகவே வெளியேறல் வேண்டும். தமர்களுக்குச் சங்கேதத்தையும் செய்தல் வேண்டும்.

சுலோகம்

[94] வாயிலிலுள்ளவர், [95] பேடிகள் பகைவனிடம் மறைவாக

---

[88] இம் முறையைப்பற்றிய விளக்கம் 147-ஆம் அத்தியாயத்திற் கூறப்படும். அதனை ஆண்டே காண்க.

[89] தோட்டம் முதலியவற்றில் ஈடுபட்டு மற்றைக் காரியங்களில் கவனமற்றிருப்பவனை யென்பது.

[90] அடிசிலமைப்பவன் முதலியவரின் உருவினரான ஒற்றர்கள் உணவு முதலியவற்றில் நஞ்சைக் கலந்து கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

[91] தடுக்கப்பட்ட மக்களியக்கத்தையுடைய இடத்தில் என்பது.

[92] இம்முறைகள் 14-ஆம் அதிகரணத்தில் விளக்கப்படும்.

[93] அவ்வப்போதுண்டாம் காரணங்களைக் கண்டு, கொல்லுதல் துன்புறுத்தல் என்பவற்றுக்குரிய உபாயங்களைப் பகைவன் அந்தப்புரத்திலிருக்கும்போது கையாளுதல் வேண்டும் என்றும், கையாண்டபின்னர் மறைவாகவே வெளியேறுதல் வேண்டும் என்றும், வெளியேறின பின்னர்த் தம்மைச் சார்ந்தவரும் ஒற்றுத்தொழிலைச் செய்துவருபவருமான மக்களை யழைத்தற்குரிய சங்கேதத்தைச் செய்தல் வேண்டும் என்றும் கருத்து.

[94] தம்மைச் சார்ந்தவர் யாவர்? அவர்களை யழைத்தற்குரிய சங்கேதம் யாது? அழைக்கப்பட்ட அவர்கள் செய்யவேண்டியவை யாவை? என்பவற்றைக் கூறுகின்றார். வாயிலிலுள்ளவர்—வாயில் காப்போரின் உருக்கொண்டவர்.

[95] பேடிகள்—உவளகத்திலியங்குபவராவர்.

ஏவப்பட்ட [96]மற்றவர் என்னுமிவர்களை [97]வாச்சிய அடையாளங் களால் அழைத்து [98]எஞ்சிய பகைவரைக் கொல்லுதல் வேண்டும்.

பன்னிர்ண்டாம் அதிகரணம் 7, 8, 9-ஆம் பிரகரணங்கள்
'கபடோபாயத்தாலழித்தல்', 'தண்டத்தாலழித்தல்',
'தனியனாய் வேறல்' என்னும்
நூற்றுநாற்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

---

96 சேனைத்தலைவர் முதலியவரின் வேடங்கொண்டவர் என்பது.

97 வாச்சிய ஒலியின் விசேடமான அடையாளங்களால்.

98 படையின் துணையின்றித் தன்னால் கொல்லப்பட்ட பகைவனுடைய மற்றைப் பரிவாரங்களைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

பதின்மூன்றும் அதிகாரணம்—[1]பகையரண் எய்தும் வழி

முதற் பிரகரணம்—வேறுபடுத்தல்

நூற்றுநாற்பத்தோராம் அத்தியாயம்

[2]பகைக் கிராமத்தையடைய விரும்பும் வெற்றி விருப்பமுள்ளவன் [3]எல்லாமுணர்தல், தெய்வத்தொடர்பு என்பவற்றை வெளிப்படுத்தலால் தன் பக்கத்தை யூக்குதலும் பகைப் பக்கத்தை யச்சுறுத்தலும் செய்தல் வேண்டும்.

[4]எல்லாமுணர்தலை வெளிப்படுத்தலாவது:— [5]இல்லத்து மறைவுச் செயலையறிவதால் தலைவரை விலக்குதல், [6]சிறுபகை களைதல், ஒற்றரின் வரவால் அரசனை வெறுப்போரை வெளிப்படுத்தல், [7]பிறரறியாத காமநூற் குறிப்புகள் [8]முதலியவற்றால்

141-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] பகைவருடைய அரணை அடைதற்குரிய உபாயத்தைக் கூறுவது.

[2] பகைக்கிராமம்—பகைவனுடைய கிராமம் நகரம் என்பன.

[3] எல்லாவற்றையும் அறியும் தன்மையும், தெய்வத்தைக் கண்கூடாகக் காண்டலும் அரசனுக்குள்ளன என்று அறிவித்தலால் தன் பக்கத்தவருக்கு உற்சாகத்தையும் பகைவனைச் சார்ந்தவருக்கு அச்சத்தையும் உண்டாக்கல் வேண்டும் என்பது கருத்து.

[4] எல்லாவற்றையும் அறியுந் தன்மையை வெளிப்படுத்து முறையைக் கூறுகின்றார். அத்தன்மையை வெளிப்படுத்தற்குரிய காரணங்கள் ஈண்டுக் கூறப்படும் என்பது கருத்து.

[5] இல்லத்து மறைவுச்செயலை யறிதலாவது, தலைவர்களின் இல்லத்தில் மறைவாக நிகழ்ந்த தீய செயலை ஒற்றர் மூலம் அறிதல்.

[6] 'சிறுபகை களைதல்' என்ற அதிகரணத்திற் கூறியவாறு ஒற்றர்களின் சொல்லால், அரசனுக்குத் தீமை புரிபவரை மறைவாக அறிந்து அவர்களை வெளிப்படுத்துதல் என்பது.

[7] அரசனைக் காணும் பொருட்டுப் பிறரால் கையுறையாகக் கொண்டு வரப்பட்டதும் அரசனிடம் அறிவித்தற்குரியதுமான காணிக்கைப் பொருளை 'இப்படிப்பட்ட இது வரப்போகின்றது' என்பதைப் பிறரறியாத கூத்து முதலிய கல்வியின் குறிப்புக்களால் முன்னரே அறிந்து கூறுதல்.

[8] 'முதலிய' என்றதால் ஒற்றர்களின் செயலையுங் கொள்க.

அறிவித்தற்குரிய காணிக்கைகளை யறிவித்தல் (வெளிப்படுத்தல்), [9]அந்நாளிலேயே [10]இலச்சினையுடன் கூடிய வீட்டுப் புறுவால் அயல் நாட்டுச் செயலையறிதல் (என்பதாம்).

[11]தெய்வத் தொடர்பை வெளிப்படுத்தலாவது :—[12]சுரங்க வாயிலாக அங்கி நிலையத் தெய்வ வடிவத்தின் துவாரத்தால் உட்புகுந்த அங்கி நிலையத் தெய்வ உருவினருடன் அளவளாவுதல் வழிபடுதல், நீரினின்றும் மேற்போந்த [13]நாகம் வருணன் இவர்களினுருவினருடன் அளவளாவுதல் வழிபடுதல், இரவில் [14]நீரின் நடுவில் [15]இலச்சினையுடைய மணற் பையை வைத்து அங்கி மாலையைக் காண்டல், [16]பாறையினாலும் உரியினாலும் பற்றப்பட்ட தெப்பத்திருத்தல், [17]நீராடை சராயு என்பவற்றால் தலையோடு மறைக்கப்பட்ட மூக்கையுடையவன் புள்ளிமான் நரம்பு நண்டு முதலை நீர்க்குரங்கு நீர்ப்பூனை என்னுமிவற்றின் கொழுப்புடன் [18]நூறுமுறை வேகவைத்த எண்ணெயை மூக்கில் செலுத்திக்

---

[9] தூர தேசங்களில் நிகழ்ந்த செய்தியை நிகழ்ந்த நாளிலேயே வீட்டுப் புறுவின் மூலம் பெறப்பட்ட ஓலையால் அறிந்து கூறுதல் எனக் கூறுகின்றார். அந்நாள்—செய்தி நிகழ்ந்த நாள்.

[10] இலச்சினை—ஈண்டு அன்றைய செய்தியைப் புலப்படுத்துவதும் முத்திரையிடப்பட்டதுமான கடிதம்.

[11] தெய்வத் தொடர்பைப் பற்றிக் கூறுகின்றார். தெய்வத் தொடர்பை வெளிப்படுத்தற்குரிய காரணம் ஈண்டுக் கூறப்படும் என்பது கருத்து.

[12] தீ வளர்க்குமிடத்திலுள்ள தெய்வ வடிவங்களின் துவாரங்களால் உட்புகுந்தவரும் அத்தெய்வத்தின் வேடம் பூண்டவருமான மக்களுடன் என்பது.

[13] சருப்பதேவன் வருணன் என்பவருடைய வேடம் பூண்டவருடன் என்பது.

[14] ‘குளம் முதலியவற்றின்’ எனக் கூட்டுக.

[15] மணல், வெளியில் வராதிருத்தற்பொருட்டு சணல் கயிறு முதலியவற்றால் செய்யப்பட்ட துணியாலமைந்த பை.

[16] பாறையின் அடியிற் கயிற்றால் பிணித்து நிறுத்தப்பட்ட தெப்பம் முதலியன நீரின் வேகத்தினால் இழுக்கப்படாது நிலையாயிருத்தல் என்பது.

[17] நீர் புகுவதைத் தடுக்கும் ஆடையின் நுனியாலும் கருப்பையாலும் தலையுடன் மூடப்பட்ட மூக்கையுடையவன் என்பது.

[18] மேற்கூறியவற்றின் கொழுப்புடன் நூறு முறை பாகஞ் செய்தலால் வடிக்கப்பட்ட எண்ணெயை மூக்கில் செலுத்திக்கொண்டவன் இரவிற் பல நாட்கள் நீரில் இயங்குவான் என்பதுபோன்ற உண்மைகள்.

கொள்வதால் இரவுக் குழுவிலியங்குவதாகிய நீரியக்கங்கள், [19]அவற்றால் வருணகன்னியர் நாககன்னியர் என்பவருடன் சொற்செயல் அளவளாவுதல், கோபக் காரணங்களில் முகத்தினின்றும் [20]தீயையும் புகையையும் விடுதல் (என்பனவாம்)

தன் நாட்டில், ஊழ்வினையுணர்ந்தோர், நிமித்திகர், முக்காலமுணர்ந்தோர், புராணஞ்சொல்லுவோர், குறிசொல்லுவோர், ஒற்றர் என்னுமிவர்கள் துணைபுரிபவராக அவற்றைக் கண்டு [21]அதை வெளிப்படுத்தல் வேண்டும். பகைவன் நாட்டில் இவனுடைய தெய்வக் காட்சி, தெய்வத்தன்மை, பொருள், தண்டம் என்பவைகளின் தோற்றத்தையுங் கூறுதல்வேண்டும். [22]குறிகேட்டல், [23]நிமித்தம், [24]காக்கை, [25]உடல்நூல், உறக்கம், விலங்கு புட்களின் சத்தம் என்பவற்றில் இவனுக்கு வெற்றியையும் பகைவனுக்கு [26]மாறுபட்டதையும் [27]துந்துபியுடன் கூறுதல்வேண்டும். பகைவனது நட்சத்திரத்தில் [28]உற்கையையும் காண்பித்தல் வேண்டும்.

பகைவனுடைய தலைவரை நண்பராகக் கூறும் தூத உருவினர் [29]அரசனது பெருமைப்படுத்தலைக் கூறுதல் வேண்டும்.

---

19 மேற்கூறியபடி நீரிற் சஞ்சரித்தலால் வருண கன்னி முதலியவர்கள் கூறும் வார்த்தைகளையும், அவர்கள் ஒருவர்க்கொருவர் அளவளாவும் மொழிகளையும் நீருள்ளிருந்து பொய்யே தோற்றுவித்தல் என்பது.

20 ஓடதிப்பிரயோகத்தின் மாயையால் தீயையும் புகையையும் வெளியே கக்குதல் என்பது.

21 அது—எல்லாவற்றையும் அறிதல் தெய்வத் தொடர்புகளை வெளிப்பரப்புதற்குரிய காரணங்களின் தொகுதி.

22 நலந்தருவன, தீங்கு பயப்பன என்னுமிவற்றைப் பற்றிய கேள்வி.

23 நிமித்தம்—சகுனம்.

24 காக்கையின் சத்தம் என்க.

25 உடலைத் தொட்டுப்பார்த்து நன்மை தீமைகளை யறிந்துரைக்குங் கல்வி யென்பது.

26 மாறுபட்டது—தோல்வி.

27 பேரி வாத்தியத்தின் ஒலியுடன் கூறுதல் வேண்டும்.

28 உற்கை—147-ஆம் அத்தியாயத்திற் கூறப்படும்.

29 வெற்றிவிருப்பமுள்ளவன் தன்னைப் பெருமைப்படுத்திய செயலை யென்பது. அப்பெருமையை யடைதற்குத் தலைவர் விரும்புதற்பொருட்டு இம்முறையைக் கையாளுவர்.

[30]தன் பக்கப்படையைச் சேர்த்தல், பகைப் பக்கத்துத் தடை என்பவற்றால் அமைச்சர் படைக்கலமுள்ளவர்களுக்குச் சமமான ஏமநலங்களையுங் கூறுதல் வேண்டும். [31]அவர்பால் விதனம் மேன்மைகளைக் கண்காணித்தல், புதல்வரைப் பேணுதல் என்பவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

[32]அதனால் முன்னர்க் கூறியவாறு பகைப்பக்கத்தை யூக்குதல் வேண்டும். மீண்டுங் [33]கூறுவாம்:— [34]ஆற்றலுள்ளவரைப் [35]பொதுக் கழுதையாலும், [36]படையிலியங்குவோரைப் பிரம்பு கோடரிகளாலும், [37]அஞ்சியவரைக் குல ஆட்டினாலும், [38]அவ

---

[30] தன்பக்கத்தில் படையை மிகுதியாக்குதல், பகைவர் பக்கத்துப் படையை யழித்தல் என்பவற்றாலுண்டாம் இலாபம் யோகமெனப்படும். கிடைத்தவற்றைப் பாதுகாத்தல் க்ஷேமம் எனப்படும். இவ்விரண்டாலுண்டாம் பயனை அரசனுடன் சமமாக அநுபவித்தலைக் கூறுதல் வேண்டும் என்றியைக்க.

[31] அமைச்சர் படைக்கலமுள்ளவர் என்பவர்களுடைய விதனகாலத்தில் அரசன் அருளுதலையும் மேன்மைக்காலத்தில் கொண்டாடுதலையும் செய்தல். அமைச்சர் முதலானவர் இறந்த பின்னரும் அவர்தம் புதல்வர் முதலியோரை யருளுதல் என்பவற்றைக் கூறுதல் வேண்டும் என்க.

[32] மேற்கூறிய முறையில் பகைப் பக்கத்தவரைப் பகைவனிடமிருந்து வேறுபடுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[33] வேறுபடுத்தற் குரியவற்றைக் கூறுவாம் என்பது.

[34] ஆற்றலுள்ளவர்—சோம்பலின்றித் தொழில்புரியும் இயல்புள்ளவர்.

[35] ஒரு சாதாரணமான கழுதை நாள்தோறும் தொழிற்பயனை யறியாது எவ்வாறு தொழில் புரிகின்றதோ அதுபோல் நீங்களும் பிறருடைய பயனைக் கருதிச் செயற்பயனை யறியாது செயல்களைச் செய்கின்றீர்கள் என்று கழுதையை உவமித்துக் கூறுதலால் என்பது.

[36] பிரம்பு கோடரி முதலியன தம் செயற்பயனைத் தாம் நுகராது, பிறர் அப்பயனை அநுபவிக்குமாறு எங்ஙனம் செயல்புரிகின்றனவோ அதேபோல் அவ்வசேதனப் பொருளுடன் ஒத்த தன்மையராக நீங்களும் செயல்புரிகின்றீர்கள் என்று பரிகசித்துக் கூறுதலால், சேனையிலியங்கித் தொழில் புரிபவரை வேறுபடுத்துதல் வேண்டும் என்பது.

[37] தன் குழுவினின்றும் விலகியதும் உயிர்ப்பற்றற்றதுமாகிய ஆட்டை உவமையாக எடுத்துக் கூறுதலால் என்பது.

[38] பலநாட்களாகப் பரிசிற்பொருளை விரும்பிய உங்களுக்கு இடிவிழுவது போன்ற அவமானம் பகைவனிடமிருந்து வந்தது என்று கூறுதலால் என்பது.

மதிக்கப்பட்டவரை இடிப்பொழிவாலும், அழிந்த கருத்துள்ள வரைப் [39]பயனற்ற வஞ்சுளம் [40]இருப்புப் பிண்டம் [41]பொய் முகில் [42]என்பவற்ருலும், [43]பெருமைப்படுத்தப்பட்டவரை வெறுப்புள்ளவனுற் கொடுக்கப்பட்ட பயனற்ற அணிகலத்தாலும், [44]உபதையால் வஞ்சிக்கப்பட்டவரைப் [45]புலித்தோல் [46]வஞ்சகக் காலன் என்று கூறுதலாலும், [47]எப்போதுந் தீங்கு புரிபவரைப் [48]பீலுக்கனியை யருந்துதல், [49]கரகை, [50]உட்டிரீ, [51]கழுதைப் பாலைக் கடைதல் என்பவற்ருலும் ([52]ஊக்குதல் வேண்டும்) [53]என்க.

---

39 கனியற்ற அசோக மரத்தை உவமித்துக் கூறுதலால் என்க.

40 உண்ணுதற்குத் தகாத இருப்புமயமான சோற்றுப் பிண்டத்தை உவமித்துக் கூறுதவால் என்பது.

41 பொய்யாக உண்டாக்கப்பட்டதும் நீரைப் பொழியாததுமான மேகத்தால் என்பது.

42 'என்பவற்ருலும்' என்பது, இவை போன்றவற்றை உவமித்துக் கூறுதலாலும் என்னும் பொருளது.

43 வளையல் மோதிரம் முதலியவற்றைக் கொடுத்தலாற் செய்யப்படும் பெருமையை எவர், தம் தொழிற்பயனுகக் கருதுகின்றனரோ, அவரிடம் 'பகைவனுற் கொடுக்கப்பட்ட அணிகலன் அழகற்றது' என்று இழித்துக் கூறுதலாலும், செயல் செய்யப்பட்டபோது அவன் அன்பற்றவன் என்று வேறுமுகமான வேறுபடுத்தலை யேற்றலாலும் அவரை வேறுபடுத்தல் வேண்டும்.

44 பகைவனுற் பிரயோகிக்கப்பட்ட உபதையால் என்க.

45 தூயவர்களைக் குற்றமுள்ளவராய் ஆக்குமியல்புடைமையால், துன் புறுத்துமியல்பினனுதல் பற்றிப் புலித்தன்மையன் என்னுங் கருத்துடையது, ஈண்டுப் 'புலித்தோல்' என்பது.

46 மேற்கூறிய குற்றத்தாலேயே பகைவனைக் 'கபடமிருத்யு' என்று கூறி யென்பது.

47 வெளிக்கிளம்பாது எப்போதும் பகைவனுக்குத் தீங்கு புரிபவரை வெளிப்படுத்தற் பொருட்டு இங்ஙனங் கூறுதல் என்ப.

48 துவர்ப்புச் சுவையுள்ள உகாய்ப்பழம் என்பர். அக் கனியை உண்பது வெறுப்பைக் கொடுப்பதுபோல் பகைவனை யண்டியிருத்தலும் வெறுப்பை விளைப்பதாம் என்று கூறுதலால் என்பது.

49 கரகை—துவர்ப்பான ஒருவகைக் கீரை.

50 உட்டிரீ—துவர்ப்பான ஒருவகை ஓடதி.

51 பகைவனை யண்டியிருத்தல், கழுதைப்பாலைக் கடைதற்கு ஒத்ததாம் என்று கூறுதலாலும் என்பது.

52 ஊக்குதல்—வேறுபடுத்தல்.

53 'என்க' என்பது 'வேறுபடுத்தன்முறைகள் கூறி முடிக்கப்பட்டன' என்னும் பொருட்டு.

[54]ஏற்றவர்களைப் பொருள் பெருமைப்படுத்தல் என்பவற்றுடன் சேர்த்தல் வேண்டும். [55]பொருளும் உணவும் பற்றிய இடர்களில் பொருளையும் உணவையும் கொடுத்தலாலும் இவர்களை யருளுதல் வேண்டும். [56]ஏற்காதவர்களுக்கு மகளிர் குமரர் என்போர்க்குரிய அணிகலன்களைக் கொடுத்தல் வேண்டும்.

வறுமை கள்வர் காடு இவைபற்றிய தீங்குகளில் 'அரசனிடம் அருளைக் கேட்போம், அருளற்றவராகப் பிறவிடம் செல்வோம்' என்று சத்திரிகள் நகரம் நாடுகளின் மக்களை [57]யூக்குபவராகக் கூறுதல் வேண்டும்.

சுலோகம்

[58]'அங்ஙனமே' என்று ஒப்புக்கொண்டவரைப் பொருள், கூலம், இருப்பிடம் என்பவற்றால் [59]அருளுதல் வேண்டும் என்னும் [60]இது பெரிய வேறுபடுத்தற் சிறப்பாம்.

பதின்மூன்றும் அதிகரணம் முதற் பிரகரணம்
'வேறுபடுத்தல்' என்னும்
நூற்றுநாற்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

[54] ஏற்றவர்கள்—வேறுபடுத்தன்மொழிகளை ஒப்புக்கொண்டவர்கள்.

[55] பொருளின்மை உணவின்மை காரணமான துன்பங்களில் என்பது.

[56] கொடுக்கப்படும் பொருள் முதலியவற்றைப் பெருமை யழிவு காரணமாக அவர்கள் ஏற்காதிருப்பின், மகளிரும் சிறுவர்களும் அணிதற்குரிய அணிகலன்களைக் கௌரவித்தலுடன் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

[57] வேறுபடுத்தற் பொருட்டுக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

[58] 'நீங்கள் கூறியவாறே செய்வோம்' என்று மேற்கூறிய சொல்லை நகரத்து மக்கள் முதலியோர் ஏற்றாராயின் (அதாவது தம் அரசனிடமிருந்து அருளை விரும்பாராயின்) அவர்களை என்பது.

[59] வெற்றிவிருப்பமுள்ளவனை அருளுதற் கருத்தாவாகக் கொள்க.

[60] இது புகழ்தற்குரிய விசித்திரமான வேறுபடுத்தன்முறையாம் என்பது கருத்து.

பதின்மூன்றும் அதிகரணம்—பகையரண் எய்தும் வழி

இரண்டாம் பிரகரணம்—[1]உபாயத்தால் வெளிப்படுத்தல்

நூற்றுநாற்பத்திரண்டாம் அத்தியாயம்

தலையினை மழித்துக்கொள்ளுதலோ அன்றிச் சடை வளர்த்தலோ மேற்கொண்டவனும், மலைக்குகையில் வாழ்பவனும், [2]நானூறு ஆண்டினையுடையனாய்க் கூறிக்கொள்பவனும், சடை வளர்த்த மாணாக்கர் பலரை யுடையவனுமான ஒருவன் நகரத்தின் அணிமையிலிருத்தல் வேண்டும். [3]அவனுடைய மாணாக்கர்கள் அவனுக்குக் கிழங்குகளையும் கனிகளையும் கொணருமுகமாக, அமைச்சரையும் அரசனையும் பெரியோரைக் காணுதற்குத் தூண்டுதல் வேண்டும். அரசனுலடையப்பட்ட அவன் முன்னைய அரசர்க்குரியனவும் நாடுகளுக்குரியனவுமாகிய அடையாளங்களைச் சொல்லி, 'நூறு நூறு ஆண்டுகள் நிறைந்தபோது நான் தீயினுட் புக்கு மீண்டும் சிறுவனாகிறேன்; ஆகலின் ஈண்டு உன் அணிமையில் நான்காவதான தீயில் புகப் போகின்றேன். என்னால் நீ பெரிதும் [4]மதித்தற்குரியவன், மூன்று வரங்களைக் கேட்பாயாக' என்றுங் கூறுதல் வேண்டும். [5]ஒப்புக்கொண்டவனிடம் 'புதல்வர் மனைவியரோடு [6]இங்கு [7]காட்சி உண்டாட்டு என்பவற்றுடன் ஏழு நாட்கள் வசித்தல் வேண்டும்' என்று கூறுதல் வேண்டும். வசிப்பவனைக் கொல்லுதல் வேண்டும்.

142-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] உபாயம்—ஈண்டுக் கபடோபாயம். பகைவரை அவர்தம் அரணினின்றும் கபடோபாயத்தால் வெளிப்படுத்தலைக் கூறுவது இப்பிரகரணமாகும்.

[2] தனக்கு நானூறு ஆண்டுகள் கடந்தன என்று தன் வயதினை மிகைப்படுத்திக் கூறுபவன்.

[3] புசித்தற்பொருட்டுக் கனி முதலியவற்றை இவனுக்குக் கொணர்தற்றொழிலையுடைய சீடர்கள், அரசன் முதலியவர்களைத் தம் ஆசிரியனாகிய இவனைக் காணும்படிச் செய்தல் வேண்டும் என்பது.

[4] வரத்தைக் கொடுத்தலால் கௌரவித்தற்குரியவன் என்பது.

[5] மேற்கூறியவற்றை ஒப்புக்கொண்ட அரசனிடம் என்பது.

[6] இங்கு—என்னணிமையில்.

[7] காட்சி—நாடகம் அபிநயம் முதலியவற்றைக் காண்டல்.

தலையினை மழித்துக் கொள்ளுதலையோ அன்றிச் சடை வளர்த்தலையோ மேற்கொண்டவனும் சடைவளர்த்த மாணக்கர் பலரையுடையவனுமான தாவிக உருவினன், செம்மறியின் குருதியாற் பூசப்பெற்ற மூங்கில் தடியைப் பொற்றுகளாற் பூசி எறும்புகள் [8]அநுசரித்தற் பொருட்டுப் புற்றில் வைத்தல் வேண்டும். பொன் நிறைந்த மூங்கிற் பாத்திரத்தையாதல் (வைத்தல் வேண்டும்.) பின்னர் சத்திரி, அரசனிடம் ' இச் சித்தன் [9]மலர்ந்த நிதியை யறிவான் ' என்று கூறுதல் வேண்டும். அரசனாற் கேட்கப்பட்ட அவன் 'ஆம்' என்று கூறுதல் வேண்டும். அவ் [10]வடையாளத்தையும் காண்பித்தல் வேண்டும். அதிகமாகப் பொன்னை [11]உள்ளே வைத்து இவனிடம் 'நாகத்தால் காக்கப்பட்ட இந்நிதி [12]வணக்கத்தாற் பெறுதற்குரியது' என்று கூறுதல் வேண்டும். ஒப்புக்கொண்டவனை [13]'ஏழு நாட்கள்' (எனக்) கூறுதல்வேண்டும் என்பது ஒத்ததாம்.

இரவில் [14]தேசனத் தீயையுடையவனும், தனிமையிலிருப்பவனும் முறையே வந்தவனுமாகிய தாவிக உருவினனை அரசனிடம்

---

[8] எறும்புகள் அநுசரித்தலால் 'செயற்கையல்லாதது' என்பது உணரப்படும் என்பர்.

[9] மலர்ந்த நிதி—விரைவில் வெளிவந்து பயன் தருதற்குரிய புதைபொருள்.

[10] மேற்கூறப்பட்ட, பொன்னாற் பூசப்பெற்ற மூங்கிற்கழி முதலிய அடையாளத்தை என்பது.

[11] புற்றின் உட்பகுதியில் வைத்து என்பது.

[12] நாகதேவதையை வழிபடுதலால் அடைதற்குரியது என்பது.

[13] புதல்வர் மனைவியரோடு இங்கு காட்சி உண்டாட்டுக்களுடன் ஏழு நாட்கள் வசித்தல் வேண்டும் என்று கூறுவதும் அதன்படி வசிப்பவனைக் கொல்லுதல் வேண்டும் என்பதுமாக முன்னர்க் கூறியதை ஈண்டுங் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. பின்னையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[14] சில ஓடதிகளின் பொடியை உடலில் தடவிக்கொள்ளுதலால் உடலுக்குத் துன்பமின்றியே எரியும் தீயை யுடையவனுமென்க. இதுபற்றிய விரிவை 147-ஆம் அத்தியாயத்திற் காண்க. 'தேசனத்தீயை யுடையவன்', 'தனிமையிலிருப்பவன்' என்ற அடைகள் 'தாபதன்' என்ற நம்பிக்கையை விளைப்பனவாம்.

'இச் சித்தன் [15]சாமேதிகன்' என்று கூறுதல் வேண்டும். அவனிடம் அரசன் எப்பொருளைக் கேட்கின்றானோ அப்பொருளை அவனுக்கு ஆக்கித் தருபவனாக 'ஏழுநாள்' (எனக் கூறுதல்) என்பது [16]ஒத்ததாம்.

சித்த உருவினன் மாய வித்தையால் அரசனை வஞ்சித்தல் வேண்டும். 'அவனை அரசன்' என்பது ஒத்ததாம்.

சித்த உருவினன் [17]சிறந்த நாட்டுத் தெய்வத்தை யடைந்து உண்டாட்டுக்களால் [18]அங்கத் தலைவரை [19]எதிர்ப்படச் செய்து [20]முறையே அரசனை [21]வஞ்சித்தல் வேண்டும்.

[22]நீர்நடுவண் வசிப்பவனும், எல்லாரினும்[23]வெளுத்தவனும், [24]கரைச்சுரங்கம் நிலவறைகளால் வெளிச்செல்பவனும், [25]முறையே வந்தவனுமான சடையினையுடையான் ஒருவன் வருணனாக வாதல் நாகதேவனாகவாதல் அரசனிடம் கூறிக் கொள்ளுதல் வேண்டும். [26]'அவனை அரசன்' என்பது ஒத்ததாம்.

[27]நாட்டின் எல்லையில் வாழும் சித்த உருவினன் பகைவனைக் காணும் பொருட்டு அரசனைச் சேர்ப்பித்தல் வேண்டும். [28]ஒப்புக்

---

15 சாமேதிகன்—பிற்காலத்திய மேன்மைகளைக் குறிபார்த்துச் சொல்பவன்.

16 ஒத்தது—13-ம் குறிப்பிற் கூறியதோடு ஒத்தது.

17 தெய்வங்களுள் சிறப்பு வாய்ந்ததை.

18 அங்கத்தலைவர்—அமைச்சர் முதலியோர்.

19 புகழ்ச்சியால் தன்னை விரும்பி நோக்கும்படி செய்து.

20 முறையே—அங்கத்தலைவர் மூலமாக.

21 'புகழ்தலால் தன்னை விரும்பச்செய்து' என்பதைக் கூட்டுக.

22 நீரிலியங்குதற்குரிய கல்விப்பயிற்சியால் நீரின் நடுவில் வசிக்கும் இயல்புள்ளவன்.

23 வெண்மை ஈண்டு தெய்வத்தின் நிறத்தைக் குறிப்பிப்பதாம்.

24 கரையினுள்ளே அமைந்த சுரங்கத்தின் வழியாகவோ, நிலவறையின் வழியாகவோ வெளியேறுதலை யுடையவன்.

25 நாளடைவில் தன்னை விரும்பி யடைந்தவன்.

26 பதின்மூன்றும் குறிப்பைக் காண்க.

27 பகைவனது நாடும் வெற்றிவிருப்பமுள்ளவனது நாடும் கூடும் எல்லை.

28 'பகைவனைக் காணுதற்கு' என்று முன்னர்க் கூட்டுக.

கொண்டபோது [29]அடையாளத்தைச் செய்து பகைவனை யழைத்துத் [30]தகையப்பட்ட இடத்தில் [31]கொல்லுதல் வேண்டும்.

குதிரையாம் விலைப்பண்டத்துடன் வந்த [32]வணிக உருவினர் [33]விலைப்பண்டக் காணிக்கை காரணமாக அரசனை யழைத்து, விலைப்பண்ட [34]ஆராய்ச்சியில் ஈடுபட்ட இடத்திலோ, அன்றிக் குதிரை நெருக்கடியிலோ கொல்லுதல் வேண்டும். குதிரைகளாலும் தாக்கலாம்.

நகரத்தின் அணிமையில் தீக்ஷ்ணர்கள் இரவில் கடவுண் மரத்திலேறி குடங்களில் [35]கூலத் தட்டைகளையோ அன்றி அரிதாள்களையோ புகைத்து, 'அரசனுடையதும் தலைவர்களுடையது மாகிய இறைச்சியைப் புசிப்போம். எமக்கு வழிபாடு செய்யப் படட்டும்' என்று [36]குழறிக் கூறுதல் வேண்டும். இவர்களுடைய [37]அதை, நிமித்திகன் முக்கால முணர்ந்தோன் என்பவர்களின் உருவினன் வெளிப்படுத்தல் வேண்டும்.

மங்களமான [38]மடுவிலாதல் குளத்தின் நடுவிலாதல் இரவில் [39]தேசன எண்ணெயால் பூசப்பட்ட நாக உருவினர், இருப்பு மயமான வேல் உலக்கை என்பவற்றை உராயச்செய்து [40]அங்

---

29 முன்னர் சங்கேதஞ் செய்துகொண்டவாறு, அழைத்தற்குரிய அடையாளமாகிய ஒருவகை ஒலிக்குறிப்பைச் செய்து என்பது.

30 நாற்புறமும், செல்லமுடியாதபடி தடை செய்யப்பட்ட இடத்தில்.

31 பகைவனால் கொல்லுதல் வேண்டும் என்பது.

32 குதிரை வியாபாரியின் வேடம்பூண்டவர் என்பது.

33 குதிரையாகிய விலைப்பண்டத்தைப் பார்த்தற் பொருட்டு அரசனை யழைத்து என்பது.

34 ஆராய்ச்சி—உயர்வு தாழ்வுகளைப் பார்த்தறிதல்.

35 தானியங்களுடைய தாளின் அடிப்பகுதிகளையாதல் மரங்களின் வெட்டுத் துணுக்குகளையாதல் புகையச் செய்து என்பது.

36 குழறிக் கூறுதல்—மக்கள் கூற்று என்றறியப்படாவாறு தெளிவின்றிக் கூறுதல்.

37 அதை—அச்சொல்லை.

38 மடு—ஆழமான நீர்நிலை.

39 தீயை யுண்டாக்கும் எண்ணெயால் என்பது.

40 அங்ஙனமே—'அரசன் தலைவர்களின் இறைச்சியை.........' என்பது முதலாக முற்கூறப்பட்டவாறு.

னமே கூறுதல் வேண்டும். தீ புகைகளை விடுப்பவரும் அரக்கவுருக் கொண்டவருமான [41]கரடித் தோற்குப்பாயமுள்ளவர், நகரத்தை மும்முறை இடப் புறமாகச் சுற்றி, நாய் நரி என்பவற்றின் சத்தத்தின் இடையில் அங்ஙனமே கூறுதல் வேண்டும். கடவுண் மரத்துத் [42]தெய்வ வடிவத்தைத் தேசன எண்ணெயாலாதல் அப்பிரக தாதுவால் மறைக்கப்பட்ட தீயாலாதல் இரவில் ஒளிரச்செய்து அங்ஙனமே கூறுதல் வேண்டும். [43]மற்றவர் அதை வெளிப்படுத்தல் வேண்டும்.

சிறந்த தெய்வ வடிவங்களுக்குக் [44]குருதியால் மிக அதிகமான பெருக்கத்தைச் செய்தல் வேண்டும். [45]அவரினும் மற்றவர் தெய்வக் குருதி பெருகின், போரில் தோல்வியைக் கூறுதல் வேண்டும்.

[46]சந்தி இரவிலோ, சுடலை யிடத்திலோ சிதைப் பகுதியை [47]மேற்பகுதி புசிக்கப்பட்ட மக்களால் அறிவித்தல் வேண்டும். பின்பு அரக்க உருவினன் மனிதனை [48]யாசித்தல் வேண்டும். [49]ஈண்டு வீரச் சொல்லுடையானொருவன் காண வருவானாயின், மற்றவர் அவனை இருப்புலக்கையால், அரக்கராற் கொல்லப்பட்டவனாக அறியப்படுமாறு கொல்லுதல் வேண்டும். அதைக் கண்ட

---

41 கரடியின் தோலால் ஆக்கப்பட்ட கஞ்சுகத்தைத் தரித்துக் கொண்டவர்.

42 தெய்வ வடிவத்தின் மேல் தேசன எண்ணெயைத் தடவுவதாலும், 'அப்பிரகம்' என்ற தாதுப்பொருளின் தூளால் மறைவுபட்ட தீயினாலும் இரவில் அவ்வடிவத்தை ஒளிரச்செய்து என்பது கருத்து.

43 மற்ற சத்திரிகள் அவ்வார்த்தையை எல்லோருமறியுமாறு பரப்புதல் வேண்டும் என்பது.

44 குருதி—ஆடு முதலியவற்றின் இரத்தம்.

45 இரத்தப் பெருக்கை உண்டாக்கியவரல்லாத ஏனைய சத்திரிகள்.

46 சந்தி இரவு—உவாநாட்களின் இரவு.

47 உடலின் மேற்பகுதி புசிக்கப்பட்டுச் சிதைந்த நிலையில் உடற்றுண்டத்தைச் சிதையிடத்துக் காண்பித்தல் வேண்டும் என்பது.

48 'புசித்தற் பொருட்டு' என்பதை முன்னர்க் கூட்டுக.

49 'மக்களைக் கேட்கும் அரக்கனை யான் கொல்வேன்' என்று யாரேனும் ஒருவன் வீரவாதம் செய்துகொண்டு வருவானாயின், அவனை மற்ற சத்திரிகள் இருப்புலக்கைகளால் தாமே கொன்றுவிட்டு, 'அரக்கனால் அவன் கொல்லப்பட்டான்' என்று அறிவித்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

சத்திரிகள் [50]அவ் வரிய செயலை அரசனுக்குக் கூறுதல் வேண்டும். பின்பு நிமித்திகன் முக்காலமுணர்ந்தவன் என்போருருவினர், சாந்தியாகப் பிராயச் சித்தத்தையும் இன்றேல் அரசனுக்கும் நாட்டுக்கும் பெருந் தீங்கு என்பதையுங் கூறுதல் வேண்டும். [51]ஒப்புக் கொண்டவனிடம், [52]இவற்றில் ஏழு நாள் ஒவ்வொரு மந்திரம் காணிக்கை ஓமம் என்னுமிவற்றை அரசன் தானே செய்தல் வேண்டும் என்று கூறுதல் வேண்டும். [53]பின்பு ஒத்ததாம்.

[54]இக்கபடங்களைப் பிறருக்கு அறிவித்தற் பொருட்டுத் தன்னிடம் காண்பித்து மாற்றம் புரிதல் வேண்டும். பின்பு கபடங்களைப் பிரயோகித்தல் வேண்டும். [55]கபடக் காட்சிக்கு மாற்றச் செயலாகப் பொருளை மிகுதியாகக் கொள்ளுதலையும் செய்யலாம்.

யானை [56]விருப்பமுள்ளவனை யானைக் காட்டின் [57]காவலர் [58]இலச்சினையுடைய யானையால் [59]வஞ்சித்தல் வேண்டும். ஒப்புக்

---

50 அவ் வரிய செயல்—வீரன் கொலைப்பட்ட அற்புதச் செயல்.

51 'சாந்தி கன்மம் முதலியவற்றைச் செய்ய' என்பதைக் கூட்டுக.

52 முற்கூறிய தீய நிமித்தங்களில் ஒவ்வொன்றிற்கு ஒவ்வொரு பலி காணிக்கை மந்திரமாகிய மூன்றையும் அரசன், தானே செய்தல் வேண்டும் எனக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து.

53 'அங்கு வசிப்பவனைக் கொல்லுதல் வேண்டும்' என்று முற்கூறிய தோடு ஒத்ததாம் என்பது.

54 இதுகாறும் கூறப்பட்ட கபடங்களைத் தம் துணைவருக்கு அறிவித்தற் பொருட்டு, அவற்றை முதலில் தன்னிடம் காண்பித்து மாற்றம் புரிதல் வேண்டும். பின்னர் உபதேசிக்கப்பெற்ற தமர்களை உதவியாகக்கொண்டு, பகைவரிடம் கையாளுதல் வேண்டும் எனக் கூறுகின்றூர்.

55 இத்தொடரின் பொருள், பொருளை மிகுதியாகக் கோடல் என்ற பிரகரணத்தில் விளக்கப்பட்டது. ஆண்டுக் காண்க. கபடங்களைக் கையாளுதல் மாற்றம்புரிதல் என்பவை பொருளை மிகுதிப்படுத்தற்குக் காரணங்களாம் என்று முற்கூறியதை வலியுறுத்தற் பொருட்டு ஈண்டும் இத்தொடர் கூறப்பட்டது.

56 விருப்பம்—மிகுவிருப்பம்.

57 வெற்றிவிருப்பமுள்ளவனைச் சார்ந்த காவலர் என்க.

58 இலச்சினை—சிறந்த யானைக்குரிய அடையாளம்.

59 அம்மாதிரியான யானையைப் பிடிப்பேன் என விரும்பச் செய்தல் வேண்டும் என்பது.

கொண்டவனை [60]புதரிலாதல், ஒற்றையடி வழியிலாதல் அழைத்துக் கொல்லுதல் வேண்டும். கட்டியும் கவரலாம்.

[61]இதனுல் வேட்டை விருப்பமுள்ளவனுக்கும் விதி கூறியவாருரும்.

பொருளிடத்தும் மகளிரிடத்தும் விருப்பமுள்ளவனைத் [62]தாயப்பொருள் அடைக்கலப்பொருள் குறித்து அழைத்து வரப்பட்ட பொருளுள்ள கைம்பெண், [63]சிறந்த அழகு இளமை என்பவற்றையுடைய மகளிர் என்பவர்களால் சத்திரிகள் வஞ்சித்தல் வேண்டும். ஒப்புக்கொண்டவனை இரவில் சத்திரியின் ஒற்றர்கள், [64]கூட்டத்தில் படைக்கலம் நஞ்சு முதலியவற்ருல் கொல்லுதல் வேண்டும்.

[65]சித்தர் துறவி திருக்கோயில் தூபிகளிலுள்ள தெய்வ வடிவம் என்பவற்றைக் குறித்து அடிக்கடிச் செல்லும் பகைவனை நிலவறை சுரங்கம் மறைவுச் சுவர் இவைகளிற் புகுந்த தீக்ஷ்ணர்கள் கொல்லுதல் வேண்டும்.

---

60 புகுதற்கியலாத காட்டிலோ ஒருவர்மட்டும் செல்லுதற்குரிய நெருக்கமான வழியிலோ அழைத்துச் சென்று கொல்லுதல் வேண்டும். அல்லது உயிருடன் கட்டி வெற்றிவிருப்பமுள்ளவனுக் கருகில் கொணர்தல் வேண்டும். 'பிரதிக்ஞா யௌகந்தராயணம்' என்ற நூலில் வத்ச அரசனை பிரச்சோதனனுடைய பணியாளராகிய சாலங்காயனன் முதலியோர் தம் அரசனுக்கருகில் கொணர்ந்ததை உவமையாகக் கொள்க.

61 யானை விருப்பமுள்ளவனுக்குக் கூறிய விதிமுறையை வேட்டை விருப்பமுள்ளவனுக்கும் 'கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்ருர்.

62 தாயப்பொருளையும் கவரப்பட்ட அடைக்கலப் பொருளையும் பெறுதற்பொருட்டு வழக்குத்தொடர்தல் மூலமாக அணிமையில் வருவிக்கப்பட்ட என்பது.

63 கைம்மையை அடைந்த செல்வமகள், பொருளின்றிச் சிறந்த அழகு இளமை என்பவற்றையுடைய மகள் என்னுமிவர்களால் வஞ்சித்தல் வேண்டும்.

64 அம்மகளிருடன் இணைவிழைச்சு நேருதற்குரிய காலத்தில் படைக்கலத்தால் தாக்குதல், நஞ்சை யருத்தச் செய்தல் என்பவற்ருற் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

65 சித்தர் முதலியோரை வழிபடுதற் பொருட்டுப் பகையரசன் அடிக்கடி வெளியிற் செல்ல நேர்ந்தபோது, நிலவறை முதலியவற்றிற் புகுந்திருக்கும் தீக்ஷ்ணர்கள் அவனைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

சுலோகங்கள்

(1—5) [66]எவ்வெவ்விடங்களில் எங்கெங்குக் காட்சிகளை அரசன் தானே [67]காண்கின்றானோ அவ்விடங்களிலும், எந்த யாத்திரை விளையாட்டுக்களிற் களிக்கின்றானோ அவற்றிலும், எங்கு நீர் விளையாட்டிலும் [68]அன்பு வார்த்தை முதலிய செயல்களிலும் வேள்வி உண்டாட்டுக்களிலும் கருவுயிர்த்தல் இறத்தல் நோய்கள் காரணமான மகிழ்ச்சி துக்கம் அச்சங்களிலும் சுற்றத்தார்க்குரிய விழாக்களிலும் [69]விழிப்பின்மையை அடைவானோ அங்கும், அவன் காவலரின்றி இயங்குமிடத்தும், [70]தீய நாள் நெருக்கடி [71]முரணுகப் புறப்படுதல் தீயிடப்படுதல் மக்களற்ற இடத்தில் புகுதல் [72]என்னுமிவற்றிலும், ஆடை அணிகலன் மாலை என்பவற்றின் [73]எஞ்சியவற்றாலும், படுக்கை இருக்கை எஞ்சிய கள் உணவுகளாலும், [74]தாக்கப்பட்ட வாச்சியங்களுடனும் முன் ஏவப்பட்டவர்களுடனும் கூடிய தீக்ஷ்ணர்கள் பகைவரைத் தாக்குதல் வேண்டும்.

---

[66] எஞ்சிய விதி முறைகளை ஐந்து சுலோகங்களாற் கூறுகின்றார்.

[67] காண்கின்றானோ என்பதன் பின்னும், அடுத்து வரும் தொடர்களிலும் இடத்திற்கேற்ப சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

[68] அன்பு வார்த்தை—புகழ்ச்சொல்.

[69] 'அன்பு காரணமாக' என்பதை முன்னர்க் கூட்டுக.

[70] தீய நாள்—மிகு பெயலையுடைய நாள்.

[71] தவறான வழியில் புறப்பட்டுச் செல்லுதல்.

[72] என்னுமிவற்றிலும் பகைவரைத் தாக்குதல் வேண்டும் என்றியைக்க.

[73] அரசனால் அநுபவிக்கப்பட்டு எஞ்சியவற்றாலும் என்பது ; பின்வரும் 'எஞ்சிய' என்ற சொல்லுக்கும் இவ்வாறே கொள்க, எஞ்சியவற்றாலும்... உணவுகளாலும் அன்புபூண்ட தீக்ஷ்ணர்கள் எனக் கருத்துரைக்க.

[74] அழைத்தற்கு அடையாளமாக ஒலிக்கப்பட்ட வாச்சியங்களுடன் கூடியவரும், அடையாளமான வாச்சிய ஒலியால் அழைக்கப்பட்டவரும், முன்னர் ஏவப்பட்டவருமான ஒற்றர்களால் துணை புரியப்பட்ட தீக்ஷ்ணர்கள் என்று கொள்க.

(6) [75]சத்திரக் காரணங்களால் எம்முறையிற் பகைவன் பாற் புகுகின்றனரோ, அம் முறையிலேயே விட்டு விலகுதல் வேண்டும். உபாயத்தால் வெளிப்படுத்தல் இவ்வாறு கூறப் பட்டது.

பதின்மூன்றும் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
உபாயத்தால் வெளிப்படுத்தல் என்னும்
நூற்றுநாற்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[75] கபடப் பிரயோகத்துக் குரியனவாகப் புலப்பட்ட காரணங்களால் சத்திரிகள் எந்த விதமாகப் பகை யரசனது நாட்டினுட் புகுந்தனரோ, அம் முறையாகவே பகைவனிடமிருந்து வெளி வருதல் வேண்டும் என்பதும், இன்றேல் பகைவனுற் பிடிக்கப்படுவர் என்பதுங் கருத்தாகக் கொள்க.

பதின்மூன்றும் அதிகரணம்— பகையரண் எய்தும்வழி

மூன்றும் பிரகரணம்—ஒற்றர்களை [1] நிலைப்படுத்தல்

நூற்றுநாற்பத்துமூன்றும் அத்தியாயம்

[2] அன்பனை குழுத் தலைவனை [3] வெளியேற்றுதல் வேண்டும். [4] அவன் பகைவனை யடைந்து [5] பக்கத்தைத் தலைக்கீடாகக் கொண்டு [6] தன் நாட்டினின்றும் [7] துணை புரியும் துணைவரை யேற்றல் வேண்டும். [8] ஒற்றரை மிகுதிப் படுத்திப் பகைவனை அநுமதிக்கச்செய்து அரசனது தூஷ்யக்குழு [9] போர்த் தகுதியற்ற யானை குதிரைகள், தூஷ்ய அமைச்சரையுடைய படை, பின்னுள்ள நண்பன் என்னு மிவர்களை வென்று பகைவனுக்கு அனுப்புதல் வேண்டும். [10] துணையை எய்தற்பொருட்டு [11] நாட்டின் ஒரு பகுதியையோ

143-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] நிலைப்படுத்தல்—ஈண்டுப் பகைவர் நாட்டிலிருக்கச் செய்தல்.

[2] அன்பன்—நம்புதற்குரியவன்.

[3] வெறுப்புக் காரணத்தை யேதுவாகக்கொண்டு தன் சமீபத்திலிருந்து வெளியேற்றல் வேண்டும் என்பது கருத்து. ஈண்டு வெளியேற்றுதலைச் செய்பவன் வெற்றி விருப்பமுள்ளவன் என்க.

[4] அவன்—பொய்க்காரணத்தால் வெளியேற்றப்பட்ட குழுத்தலைவன்.

[5] 'பகைவன் பக்கத்திற்காக' என வெளியில் சொல்லிக்கொண்டு என்பது.

[6] தன் நாடு—வெற்றி விருப்பமுள்ளவனுடைய நாடு.

[7] தனக்கு உதவி செய்தலையே பயனாகக் கொண்ட துணைவரை யழைத்து வருதல் வேண்டுமென்பது.

[8] இங்ஙனம் தன்னை யொத்த ஒற்றர்களாகிய துணைவர்பலரை யடைந்து, பகைவனது உடன்பாடு பெற்று, வெற்றி விருப்பமுள்ள வனுடைய தூஷ்யக் குழு முதலியவற்றை வென்று, அவற்றைப் பகைவனுக்கு அனுப்புதல் வேண்டும்.

[9] போர்த் தகுதியற்ற—வன்மையில்லாத.

[10] அரசனுக்குத் துணை செய்பவராக அடைதற்பொருட்டு.

[11] நாடு—பகைவனது நாடு.

குழுவையோ காட்டையோ [12]அடைதல் வேண்டும். [13]நம்பிக்கையை அடைந்தவன் அரசனுக்கு அனுப்புதல் வேண்டும். [14]பின்னர் அரசன் யானையைப் பிடித்தலையும் காட்டின் அழிவையும் தலைக்கீடாகக்கொண்டு மறைவாகவே தாக்குதல் வேண்டும்.

[15]அமைச்சருக்கும் காட்டில் வாழ்வோருக்கும் இதனால் விதி கூறியவாறும்.

[16]பகைவனுடன் நட்பைச் செய்து அமைச்சரை நிந்தித்தல் வேண்டும். [17]'எங்களுடைய அரசனை அருளச் செய்' [18]என்று [19]அவர்கள் [20]அப் பகைவனுக்கு [21]அனுப்புதல் வேண்டும் [22]அவன் எந்தத்தூதனை [23]அனுப்புவானோ அவனை 'உன் அரசன் என்னை அமைச்சர்களால் வேறுபடுத்துகிறான், மீண்டும் [24]இங்கு

---

12 மறைவில் சார்ந்தொழுகுதல் வேண்டும் என்பது.

13 அவ்வாறு துணைவராக ஏற்கப்பட்டவர் (நாட்டின் ஒரு பகுதியிலுள்ளார், குழு, காட்டில் வாழ்வோர் என்னுமிவர்)களிடம் தனக்கு நம்பிக்கையுண்டானபோது, அரசனுடைய உதவி குறித்து அவர்களை அவனருகில் அனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

14 மேற்கூறியபடி அனுப்பப்பட்ட துணைவரை யடைந்தபின் அரசன், தன் காட்டில் யானைகளைப் பிணித்தலையும், காட்டையழித்தலையும் ஏதுவாக வெளியே புலப்படுத்திக் கொண்டு, தன் போர் முயற்சியைப் பகைவனறியாத நிலையிலேயே அவனைத் தாக்குதல் வேண்டும் என்பது.

15 இவ்வாறே அமைச்சர் முதலியோரையும் பகைவரது நாட்டில் ஒற்றராக நிலைப்படுத்துதலை யுய்த்துணர்க என்பது கருத்து.

16 ஒற்றரை யனுப்புதற்கு வேறொரு முறை கூறுகின்றார்; வெற்றி விருப்பமுள்ளவன் தன் பகைவனுடன் நட்பைப் புலப்படுத்திக் கொண்டு, தன் அமைச்சரைப் பழித்துரைத்தல் வேண்டும்.

17 'எங்களிடம் கோபத்தையடைந்த' என்பதை முன்னர்க் கூட்டிப் பொருள் கூறுதல் வேண்டும்.

18 என்று—என்ற செய்தியைக் குறித்து.

19 அவர்கள்—அமைச்சர்கள்.

20 நண்பனாகச் செய்யப்பட்ட அப் பகைவனுக்கு என்பது.

21 அனுப்புதல்—தூதனையனுப்புதல்.

22 அவன்—அமைச்சரால் வேண்டப்பட்ட அப் பகைவன்.

23 ஈண்டுத் தூதனை யனுப்புதல் வெற்றி விருப்பமுள்ளவனை யருளச் செய்வதன் பொருட்டென்க.

24 என்னருகில் இங்ஙனம் தூதுவனாக வருதல் கூடா என வெற்றி விருப்பமுள்ளவன் கூறுதல் வேண்டும்.

வருதல் கூடா' என்று நிந்தித்தல் வேண்டும். [25]பின்னர் [26]ஒரு அமைச்சனை வெளியேற்றுதல் வேண்டும். [27]அவன் பகைவனை யடைந்து [28]கபட ஒற்றர் [29]வெறுப்புற்ற தூஷ்யர் ஆற்றலிலார் கள்வர் காட்டில் வாழ்வோர் இருவர்க்கும் தீங்கு புரிபவர் என்னு மிவர்களைப் பகைவன்பாற் [30]கொணர்தல் வேண்டும். [31]அன்பனுந் தன்மையை யடைந்தவன் [32]இவனுடைய வீரர்களுக்கு அழிவைச் செய்தல் வேண்டும். [33]"இவனும் இவனும் உன் பகைவனுடன் உறுதியாகச் சந்தி செய்கின்றனர்' [34]என்று எல்லை காவலன், காட்டில் வாழ்பவன், படையிலியங்குபவன் என்னுமிவர்களிடம் குற்றஞ் சார்த்தல் வேண்டும். பின்னர் [35]விடப்பட்டவரின் ஓலைகளால் இவர்களைக் கொல்லச் செய்தல் வேண்டும்.

[36]வலிய படையைக் கொடுத்தலால் பகைவனை ஊக்கப் படுத்திக் கொல்லுதல் வேண்டும்.

---

25 அமைச்சர் வேறுபாட்டை உண்மையென்று நம்புதற் பொருட்டுக் கையாளும் முறையைக் கூறுகின்றார்.

26 தன்னால் நிந்திக்கப்பட்டவருள் ஒரு அமைச்சனைத் தன் அணிமையி லிருந்து அகற்றுதல் வேண்டும் என்பது.

27 அவன்—அகற்றப்பட்ட அமைச்சன்.

28 அரசனால் ஒற்றுத் தொழிலில் ஏவப்பட்ட கபட ஒற்றர்கள் என்பது.

29 அரசனிடம் வெறுப்பை எய்திய அரசனுடைய தூஷ்யர்கள்.

30 இவர்கள் உனக்குத் துணை புரிவதன் பொருட்டு என்னால் அழைக்கப் பட்டவர்கள் என்று கூறிக் கொணர்தல் வேண்டுமென்க.

31 நம்பிக்கையை அடைந்தவன்.

32 இவன்—பகைவன்.

33 அழிவை யடைவித்தற்குரிய முறையைக் கூறுகின்றார்.

34 என்று—என்று கூறி.

35 வெற்றி விருப்பமுள்ளவனால் விடப்பட்டவர்களுடைய (அவனால் கொல்லுதற்குரியவர்களுடைய) கைகளிற் கொடுக்கப்பட்டதும், வெற்றி விருப்பமுள்ளவனுக்கும் எல்லை காவலன் முதலியோர்க்கும் ஒருவர்க்கொருவர் நட்பைப் புலப்படுத்துவதுமான வஞ்சகக் கடிதங்களைச் சான்றாகக் கொண்டு (மேற்கூறிய விடப்பட்டவரிடமிருந்து அக்கடிதங்களைப் பிறர் மூலம் கொணர்ந்து காட்டி) எல்லை காவலன் முதலியோரைக் கொல்வித்தல் வேண்டும் என்பது கருத்து.

36 துணைபுரிதற்கு உனக்குப்படையை யனுப்புவேன் என்று உறுதி கூறிப் பகைவனை அவனுடைய பகைவனுடன் போர் புரியச் செய்து, பின்னர்த் தன் படையைக் கொடாமல் அவனைப் பகைப் படையால் கொல்வித்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

[37]தீயவர் பக்கத்தை வயப்படுத்தலால் பகைவனுடைய பகையரசனைத் தன்பால் தீங்கு புரியச் செய்து எதிர்த்தல் வேண்டும். பின்னர் 'உன்னுடைய இப்பகைவன் எனக்குத் தீங்கு புரிகின்றான், வா, ஒன்று கூடி அவனைக் கொல்வோம், [38]நிலத்திலோ பொன்னிலோ உனக்குப் பங்குண்டு என்ற செய்தியைப் பகைவனுக்கு அனுப்புதல் வேண்டும். [39]கௌரவித்து ஒப்புக்கொண்டு வந்தவனைக் [40]கவர்தலாலும் [41]வெளிப் போரினாலும் பகைவனைக் கொல்லுதல் வேண்டும். [42]நம்பிக்கை யுண்டாக்குதற் பொருட்டு [43]நிலக்கொடை, புதல்வர்க்கு முடிசூட்டல், [44]காவல் என்னுமிவற்றைத் தலைக் கீடாகக் கொண்டு [45]கவரச் செய்தல் வேண்டும். [46]பொறுத்தற்கியலாதவனை மறைவினொறுத்தலாற் கொல்லுதல் வேண்டும். [47]அவன் படையைக் கொடுத்துத் தான் வராதிருப்பின், அதை அவனுடைய பகைவனைற் கொல்லுதல் வேண்டும்.

---

[37] பகைவனைச் சார்ந்த தீயவர்களைத் தன் வயப்படுத்தலால் என்பது.

[38] 'பகைவனை வென்றால் அதன் மூலம் கிடைக்கப்பெறும் நிலத்திலும் பொருளிலும் உனக்குப் பகுதியுண்டு' என்ற செய்தியைத் தூதர் வழியாகச் சொல்லி யனுப்புதல் வேண்டும் என்பது.

[39] தன் வார்த்தையை மதித்து, பகைவனை எதிர்த்தற்கு ஒப்புக்கொண்டு வந்தவனை என்பது.

[40] கவர்தல்—ஈண்டுத் தூங்கும்போது கொலை செய்தல்.

[41] வெளிப்போர்—எதிரே நின்று புரியும் போர்.

[42] ஒன்று கூடி எதிர்க்கப்பட்ட பகைவன் வெல்லப்படின் செயற்பாலது இதுவெனக் கூறுகின்றார்.

[43] முன் கூறிய உறுதி மொழிப்படி பூமியைக் கொடுத்தலை ஏதுவாகக் கொண்டு என்பது.

[44] காவல்—தன் காவல்.

[45] பகைவனைக் கவரும்படிச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[46] வஞ்சகத்தால் கவர்தற்கியலாதவனை என்பது; தன் சொல்லையேற்றுக்கொண்டு வந்தவனைப் பற்றிய விதிமுறைகள் இவ்வாறு கூறப்பட்டன.

[47] பகைவன் தன் படையை மட்டும் அனுப்பித் தான் வாராதிருப்பின் அப்படையை அவனுடைய பகைவனைற் கொல்லுதல் வேண்டும் என்பது.

[48]படையுடனின்றி வெற்றி விருப்பமுள்ளவனோடு விரும்பாவிடின், ஆண்டும் இவனை இருபுறத்தும் துன்புறுத்தலாற் கொல்லுதல் வேண்டும். [49]நம்பிக்கையுறாதவன் தனித் தனியே செல்ல விரும்பினும், மேற்சேறற்குரியானுடைய அரசின் ஒரு பகுதியை ஏற்க விரும்பினும், ஆண்டும் இவனைப் பகைவனாலோ, எல்லாத் தொகுதியினாலோ கொல்லுதல் வேண்டும். [50]பகைவனுடன் ஈடுபட்டவனுக்குப் படையை அனுப்புதலால் வேறு புறமாக மூலத்தைக் கவரச் செய்தல் வேண்டும்.

[51]பகைவனது நிலத்தால் நண்பனுடனே நண்பனது நிலத்தால் பகைவனுடனே ஒப்பந்தஞ் செய்தல் வேண்டும். ஆண்டுப் பகை நிலத்தை யடைய விரும்பின் [52]நண்பனால் தனக்குத் தீங்கு புரியச் செய்து எதிர்த்தல் வேண்டும். [53]என்பதாக எல்லாப் பிரயோகங்களும் முன்னையதோடு ஒத்தனவாம்.

---

48 ஒன்று சேர்ந்து கொல்லுதற்காக அழைக்கப்பட்ட பகைவன், தன் படைகளுடன் சேர்ந்தே போர் புரிதலின்றி, வெற்றி விருப்பமுள்ளவனுடன் கூடிப் போர் புரிய இணங்காவிடின், அப்பொழுது அவனை முற்புறத்தும் பிற்புறத்தும் துன்புறுத்தலாற் கொல்லுதல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

49 நம்பிக்கையின்மை காரணமாகப் பகைவன், வெற்றி விருப்பமுள்ளவனோடு சேராமல், தானே தனியாக மேற்செல்ல விரும்பிய போதும், மேற்சேறற்குரியானுடைய நாட்டின் ஒரு பகுதியை அடைதற்கு விரும்பிய போதும், பகைவனைக் கொண்டோ, தன்னுடைய எல்லாவகைப் படைத் தொகுதியாலோ அவனைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

50 பகைவனுடன் சேர்ந்து கொண்டு, அவனுடன் கூடிப் போரில் ஈடுபட்டிருக்கும் பகைவனுக்கென்பது.

51 என் பகைவனை வென்று அவன் நிலத்தில் உனக்குப் பங்கு தருவேன் என்று நண்பனிடம் மறைவில் ஒப்பந்தஞ் செய்தல் வேண்டும் என்பதும், அதேபோல் நண்பனது நிலத்தால் பகைவனிடம் மறைவில் ஒப்பந்தம் செய்தல் வேண்டும் என்பதுங் கருத்து.

52 நண்பனைத் தனக்குத் தீங்கு புரியச் செய்து, அதுகாரணமாக அவனை எதிர்த்தல் வேண்டும் என்பது கருத்து.

53 ' உன்னுடைய பகைவனாகிய இவன் எனக்குத் தீங்கு புரிகிறான்... என்பது முதலாக, ' நிலத்திலும் பொன்னிலும் உனக்குப் பங்காம் ' என்பதீறாகச் செய்தியனுப்புதல், ஒப்புக்கொண்டு வந்தவனைக் கவர்தல்முதலிய வற்றால் பகைவனைக் கொண்டு கொல்லச் செய்தல், பகைவனுடன் சேர்ந்தவனுக்குப் படையை யனுப்புதலால் மூலத்தை வேறு புறத்தில் கவரச் செய்தல் என்று முன்னர்க் கூறிய முறைகளை ஈண்டுங் கொள்க என்பது கருத்து.

நண்பனது நிலத்தை யடைய விரும்பியபோது [54]ஒப்புக் கொண்ட பகைவனைப் [55]படையால் அருளுதல் வேண்டும். [56]பின்னர் நண்பனை அடைந்தவனை வஞ்சித்தல் வேண்டும். [57]மாற்றச் செயலைச் செய்து தனக்கு விதனத்தைக் காட்டி நண்பனுல் பகைவனை ஊக்கப்படுத்தித் தன்னை எதிர்க்கச் செய்தல் வேண்டும். [58]பின்னர் நன்கு துன்புறுத்தலாற் கொல்லுதல் வேண்டும். உயிருடன் கவர்தலால் [59]அரசின் மாற்றத்தைச் செய்வித்தல் வேண்டும். நண்பனுல் [60]அழைக்கப்பட்ட பகைவன் ஏற்றற்குரியதல்லாத நிலையிலிருக்க விரும்பின் சிற்றரசர் முதலியோரால் அவன் மூலத்தைக் கவரச் செய்தல் வேண்டும். படையினுற் காக்க விரும்பின் [61]அவனுடையதைக் கொல்லவேண்டும்.

[62]அவர்கள் வேறுபடுத்தற்குத் தகாதவராயின் [63]வெளிப்

---

54 ஒன்று கூடிக் கொல்ல ஒப்புக்கொண்டவனை என்பது.

55 தன் படையைக் கொடுத்து உதவ வேண்டும் என்பது.

56 தன்னுற் கொடுக்கப்பட்ட படையை ஏற்றுக்கொண்ட பின்னர் நண்பனை எதிர்த்துப் போர் செய்பவனை நண்பனேடு சேர்ந்து கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

57 தனக்கு விதனம் நேராத பொழுதே அதன் பரிகாரச் செயலைத் தொடங்குதலால், அது நேர்ந்திருப்பதாக அபிநயித்துத் தன் நண்பன் மூலமாகப் பகைவனை ஊக்கித் தன்னை எதிர்க்கச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

58 தானும் தன் நண்பனும் சேர்ந்து செய்த துன்புறுத்தலால் அவனைக் கொல்லுதல் வேண்டும் என்பது.

59 அரசின் மாற்றம்—நாட்டின் கலக்கம். இதை வெற்றிவிருப்பமுள்ளவன் செய்வித்தல் வேண்டும் என்ப.

60 கூடிப் போர்புரிதற்கு அழைக்கப்பட்ட பகைவன், வெற்றிவிருப்பமுள்ளவன் பொய்யே ஏறிட்டுக்கொண்ட விதனத்தை உண்மையென நம்பி ஊக்கமடைந்து அவனை எதிர்க்க விரும்பினுனயினும், அவன் நண்பனுடன் சேர்ந்து எதிர்க்க உடன்படானுயின், அப்பொழுது சிற்றரசர் முதலியவர்களால் அப்பகைவனுடைய தானியத்தைக் கவரச்செய்தல் வேண்டும் என்பது கருத்து.

61 பகைவனுடைய அப்படையை என்க.

62 இதுகாறும் நண்பனையும் பகைவனையும் மறைவில் வேறுபடுத்த இயன்றபோது மேற்கொள்ளுதற்குரிய வஞ்சக முறைகளைக் கூறி, இனி அவர்களை அவ்வாறு வேறுபடுத்த முடியாத நிலைமைக்கண் வஞ்சித்தல் முறையைக் கூறுகின்றார்.

63 வெளிப்படையாக—எல்லா மக்களும் அறியுமாறு.

படையாகவே [64]ஒருவர்க்கொருவர் நிலத்தால் ஒப்பந்தஞ் செய்தல் வேண்டும். [65]பின்னர் பகைவனுடன் சந்தி செய்து கொண்ட இன்ன அரசன் உன் நிலத்தையடைய விரும்புகிறான் என்று நண்பருருவினராவது இருவேதன முடையவராவது [66]ஒருவர்க்கொருவர் தூதரை யனுப்புதல் வேண்டும். [67]அவருள் ஒருவன் ஐயத்தையும் வெகுளியையுமுடையவனாக [68]முன்போல் செயல் புரிதல் வேண்டும்.

[69]அரண் நாடு படைகளின் தலைவரைத் தீயவர் பக்கக் காரணங்களால் வெளிப்படுத்தி வெளியேற்றல் வேண்டும். [70]அவர்கள் பொருதல், கவர்தல், தகைதல், விதனம் என்னுமிவற்றில் பகைவனை வஞ்சித்தல் வேண்டும். இவனைத் தன்னினத்தவரிடமிருந்து வேறுபடுத்தல் வேண்டும். [71]விடப்பட்டவரின் ஓலைகளால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

[72]வேட உருவினர், இறைச்சி விற்பனைபற்றி வாயிலிலுள்ளவராகவும் வாயிற்காப்பவரை அண்டியராகவும் இருந்துகொண்டு

---

64 நண்பனுடைய நிலத்தால் பகைவனிடமும், பகைவன் நிலத்தால் நண்பனிடமும் ஒப்பந்தஞ் செய்தல் வேண்டும்.

65 வெளிப்படையாக ஒப்பந்தஞ் செய்துகொண்ட பின்னர் என்பது.

66 நண்பனையும் பகைவனையும் குறித்து மேற்கூறிய செய்தியுடன் கூடிய தூதரை அனுப்புதல் வேண்டும்.

67 அவருள்—நண்பன் பகைவன் என்ற இருவருள்.

68 மேற்கூறிய முறைப்படித் தன் பகைவனை வஞ்சித்தல் வேண்டும் என்பது.

69 வேறொரு கபடமுறையைக் கூறுகின்றார். தானியத்தலைவர், நாட்டுத் தலைவர், சேனைத்தலைவர் என்னுமிவர்கள் தீயவர்க்குத் துணையாவார்களென ஐயுறுதற்குரிய காரணங்களை யுடையராக வெளிப்படுத்தி நாட்டினின்றும் வெளியேற்றவேண்டும் என்பது.

70 வெளிப்பட்ட அவர்கள் பகைவனை அடைந்தவராகப் போர் முதலிய சந்தர்ப்பங்களில் பகைவனை வஞ்சித்தலும் அப் பகைவனைச் சார்ந்த அமைச்சர் முதலியவரிடமிருந்து அப் பகைவனை வேறுபடுத்தலும் வேண்டும் என்பது கருத்து.

71 கொல்லுதற்குரியவரது கையில் கொடுக்கப்பட்ட வஞ்சகக்கடிதங்கள் மூலம் தாம் ஊகித்துக் கூறிய பொய்ப்பொருளை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பது.

72 மற்றொரு முறையினைக் கூறுகின்றார்.

கள்வரின் வருகையைப் பகைவனுக்கு [73]இரு முறை மும்முறை என்று அறிவித்து அரசனது நம்பிக்கையை அடைந்து பகைவனுடைய படையைக் கிராம அழிவிலும் கவர்தலிலும் இரண்டாக அமைத்து 'கள்வர் குழு நெருங்கிவிட்டது, [74]கூக்குரல் பெரியது, அதிகமான படை வருதல் வேண்டும்' என்று கூறுதல் வேண்டும். [75]கிராம அழிவுப் படைக்கு அதைக் கொடுத்து மற்றைப் படையை அழைத்துக்கொண்டு இரவில் அரண்வாயிலில், 'கள்வர் குழு அழிக்கப்பட்டது, இப்படை [76]யாத்திரைப் பயனை யடைந்து வந்திருக்கிறது, [77]வாயில் திறக்கப் படட்டும்' என்று கூறுதல் வேண்டும், அன்றி முன்னர் [78]ஏவப்பட்டவராவது வாயில்களைத் திறத்தல் வேண்டும். [79]அவர்களுடன் தாக்குதல் வேண்டும்.

[80]காருகர், சிற்பி, பாசண்டி, இசை பாடுபவன், வணிகன் என்னுமிவர்களின் உருவினரையும் [81]படைக்கலமுள்ளவரையும் பகையரணில் ஒற்றராக்குதல் வேண்டும். இல்லற உருவினர் விறகு,

---

73 இரண்டு மூன்று முறை அறிவித்து, அதன் காரணமாக அவன் நம்பிக்கையைப்பெற்றுக் கிராமத்தின் அழிவைப் பரிகரித்தற்கும் கவர்தலைப் பரிகரித்தற்குமாகப் பகைவன் படையை இரண்டாகப் பிரித்தமைத் தென்பது.

74 மக்களின் கூக்குரல் மிகுதியாகிவிட்டது. கள்வர் குழுவைத் தாக்குதற் பொருட்டு அதிகமான படை வருதல் வேண்டும் எனக் கூறவேண்டு மென்க.

75 வந்தடைந்த படையைக் கிராம அழிவின் பரிகாரங் குறித்து அனுப்பிவிட்டு மற்றைப் படையை அழைத்துக் கொண்டு இரவில் அரண் வாயிலிற் சென்று 'கள்வர் கூட்டம்......' என்று கூறுதல் வேண்டும்.

76 பயனுள்ளதான யாத்திரையைச் செய்து வந்திருக்கிறது என்பது.

77 அச்சத்திற்குரிய காரணங்கள் நீங்கினமையால், இனி அரண் வாயிலைத் திறந்து விடலாம் என்பது. இங்ஙனம் வாயிலைத் திறக்கும்படி வேண்டுதல், தன்வயப்பட்ட பகைவனது படையைக் கொன்று வெளியே செல்ல விழையும் வீரர்கள் எளிதிற் செல்லுதற் பொருட்டென்க.

78 ஏவப்பட்டவர்—ஒற்றர்கள்.

79 இவ்வொற்றர்கள், வாயிலைத் திறந்து விடுதலில் துணை செய்வதுடன் வேட உருவினர் படையைத் தாக்குங்கால் அத் தாக்குதற்றொழிலிலும் துணையாதல் வேண்டும் என்பது கருத்து.

80 மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

81 படைக்கலமுள்ளவர் — படைக்கலப் பயிற்சியை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்.

புல், கூலம், விலைப்பண்டம் என்னுமிவற்றின் வண்டிகளாலும் தெய்வத்தின் கொடி வடிவுகளோடும், [82] இவர்களுக்குப் [83] படைக்கலம் கவசம் என்பவற்றைக் கொடுத்தல் வேண்டும். பின்னர் [84] அவர்களின் உருவினர் விழிப்பற்றவரின் கொலை, கவர்ந்து கோடல், நாற்புறமும் தாக்குதல் என்னுமிவை பிற்புறத்திற் புக்கன என்று சங்கு துந்துபிகளின் ஒலியால் அறிவித்தல் வேண்டும். மதில், வாயில், படைவீடு என்னுமிற்றைத் தாக்குதலையும், படைப் பிரிவு கொலை என்பவற்றையும் செய்தல் வேண்டும்.

[85] பொருளாளர், குழுவிலிருப்பவர், [86] வழி கடத்தலைப் பயனாக வுடையவர், கன்னியைக் கொணர்வோர், குதிரையாம் விலைப் பண்டத்தைக் கொள்ளல் விற்றல் செய்வோர், உபகரணப் பொருள் கொணர்வோர், கூலத்தைக் கொள்ளல் விற்றல் செய்வோர், தாபத உருவினரான தூதர்கள் என்னுமிவர்களால் படையைச் செலுத்தல், நம்பிக்கை குறித்துச் சந்திகன்மம் என்பவை அரசனுடைய [87] ஒற்றர்க்குரிய செயல் முறைகளாம்.

---

[82] காருகர் முதலியவரின் உருக்கொண்ட ஒற்றர்களுக்கு.

[83] போர்க்குரிய படைக்கல முதலியவற்றை மறைவிற் கொணர்ந்து கொடுத்தல் வேண்டும் என்பது.

[84] காருகர் முதலியவரின் உருவினர் மேற்கூறியவாறு படைக்கல முதலியவற்றைக் கொண்டு விழிப்பற்றவரைக் கொல்லுதல் வலிந்து கவர்தல் முதலிய செயல்கள் பிற்புறத்து நிகழ்வனவாகப் பகைவனுடைய அரணில் உள்ளவர்க்கு அடையாள ஒலியால் அறிவித்து, அதன்காரணமாக உண்டான கலக்கக் காலத்தில் மதில் முதலியவற்றை யழித்தலும், முன்போல் பகைப்படையை இரண்டாகப் பிரித்தலும், அதையழித்தலும் ஆகியவற்றைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

[85] அழித்தல் குறித்துப் பகைப் படையைப் பிரிப்பதைப்போல் நெடுந் தூரத்திற்கடத்திச் செல்வதையும் ஒற்றர் செய்யவேண்டும் என்று கூறுகின்றார். ஒற்றர்கள், பொருளாளர் குழுவில் வசித்தல் முதலிய தன்மைகளை மேற்கொண்டு தம் வழியைக் கடத்தற்குத் துணைபுரிதலைத் தொழிலாகக் காட்டிப் பகைப்படையை நெடுந் தொலைவிற்குக் கொண்டுபோகவேண்டும் என்பதும், பகைவனது நம்பிக்கையைப் பெறுதல் வேண்டிச் சந்தி குறித்து ஒப்பந்தஞ் செய்து கொண்ட செயலைச் செய்தல் வேண்டும் என்பதும் கருத்து.

[86] கடத்தற்கியலாத வழியைக் கடந்து அப்பாற் செல்லுதலையே பயனாகவுடையவர்; தாம் செல்லும் வழியில் பாதுகாவலைச்செய்ய வேண்டுபவர் எனினுமாம்.

[87] இம் முறைகளையுடையரான ஒற்றர்கள் கொள்ளத்தக்கவர் என்பது.

[88]இவர்களே காட்டில் வாழ்வோர்க்கும் ஒற்றர்களாவர்; சிறு பகைகளை தலிற் கூறப்பட்டோருமாவர். [89]காட்டின் அணிமையிலுள்ள கொட்டிலையும் [90]குழுவையும் ஒற்றர்கள் [91]கள்வர்களால் [92]கொல்லுதல் வேண்டும். [93]சங்கேதம் செய்யப்பட்ட உணவு குடித்தற்குரியவை என்பவற்றை அங்கு மயக்கு மருந்து, நஞ்சு, கள் என்பவற்றுடன் கலக்கச் செய்து விலகுதல் வேண்டும். பின்பு [94]ஆயர் வணிகர் என்போர் களவிடப்பட்ட பொருட்சுமையை யுடையராய் [95]மயக்கு மருந்தினுலும் நஞ்சினுலும் மாறுபாடுண்டாய காலத்தில் கள்வரைக் கொல்லுதல் வேண்டும். [96]சங்கர்ஷண தெய்வத்தைச் சார்ந்த, மழித்தல் நீட்டல்களையுடையவனுருவினன் உண்டாட்டுச் செயல் காரணமாக மயக்கு மருந்து நஞ்சு என்ப

---

88 அரசனுக் குரியராகக் கூறப்பட்டவரும், சிறுபகை களை தலிற் கூறப் பட்டவருமான இருவகை ஒற்றர்களும் காட்டில் வாழ்வோர்களைக் குறித்து ஒற்றுத் தொழிலைச் செய்தற்குரியர் என்பது கருத்து.

89 காட்டில் வாழ்வோரிடம் ஒற்றர்கள் செய்தற்குரியதைக் கூறுகின்ருர்.

90 குழு—வழிப்போக்கர் குழு.

91 கள்வர்—காட்டில் வாழ்வோர்; இவர்களே கள்ளத் தொழிலினர் என்ப.

92 காட்டில் வாழ்வோரிடையே புகுந்து அவர்களைக் கொல்லுதல் வேண்டும்.

93 இன்ன இடத்தில் இன்ன காலத்தில் உங்களுக்கு உணவு ஏற்பாடு செய்யப்படும் என்று சங்கேதம் செய்யப்பட்ட உணவு முதலியவற்றில் மயக் கத்தை யுண்டாக்கும் பொருளையும் நஞ்சையும் கலந்து விலகிச் செல்ல வேண்டும்.

94 அரசனது குடிமக்களாகவுள்ள ஆயர்.

95 மயக்கப் பொருளுடன் சேர்ந்த சோறு முதலியவற்றை உட் கொண்டதனுலுண்டான மதிமயக்க நிலையிலும் நஞ்சு கலந்த சோறு முதலிய வற்றைப் புசித்தலால் மூர்ச்சையுற்ற நிலையிலும் கள்வரின் அருகிலிருந்து, அவர்களால் களவிடப்பட்ட பொருளை வெளிப்படுத்திக் கொல்லுதல் வேண்டும் அல்லது விலங்கிட்டுக் கொணர்தல் வேண்டும்.

96 மயக்கப் பொருள் முதலியவற்றைச் செலுத்துதற்குரிய மற்ருெரு முறை கூறுகின்ருர்; சங்கர்ஷணன்—'பல பத்திரன்' என்ற பெயருள்ளதும் கள்ளுண்ணலை விரும்புவதுமான தெய்வம்; அத்தெய்வத்தைச் சார்ந்த—அத் தெய்வ பக்தனை.

வற்றைக் கலத்தலால் வஞ்சித்தல் வேண்டும். [97]பின்னர்க் கவர்தலைச் செய்தல் வேண்டும். [98]கள் விற்போனுருவினன் தெய்வத்தையும் இறந்தவர்களையுங் குறித்த செயல் திருவிழா கூட்டம் என்னுமிவற்றில். [99]கள்விற்றல் குறித்துக் கொண்டு வருதலைக் காரணமாகச் செய்து மயக்கு மருந்து நஞ்சு என்பவற்றைக் கலத்தலால் காட்டில் வாழ்வோரை வஞ்சித்தல் வேண்டும். பின்பு கவர்தலைச் செய்தல் வேண்டும்.

சுலோகம்

கிராம அழிவு குறித்துப் புகுந்த [100]காட்டைப் [101]பலவாறுக [102]மயக்கிக் கொல்லுதல் வேண்டும். [103]இங்ஙனம் திருடர்களுக்கு ஒற்றர்கள் கூறப்பட்டனர்.

பதின்மூன்றும் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
'ஒற்றர்களை நிலைப்படுத்தல்' என்னும்
நூற்றுநாற்பத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

[97] மயக்கப்பொருள் முதலியவற்றால் மதி மயங்கிய நிலையிற் கவர்தலைச் செய்தல் வேண்டும் என்பது.

[98] மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[99] கள் விற்றலைத் தொழிலாகச் சொல்லி வஞ்சித்தல் வேண்டுமென்க.

[100] காட்டை—காட்டில் வாழ்வோரை.

[101] பலவாறுக—பலவகைக் கபடப் பிரயோகத்தால்.

[102] மயக்குதல்—மன மாறுபாட்டையுண்டுபண்ணுதல்.

[103] காட்டில் வாழ்வோரிடம் ஒற்றரை நிலைப்படுத்தற்குரிய முறைகள் இவ்வாறு கூறி முடிக்கப்பட்டன என்பது கருத்து.

பதின்மூன்றும் அதிகரணம்—பகையரண் எய்தும்வழி

4, 5-ஆம் பிரகரணங்கள்—[1]சூழவிருக்கச் செய்தல், இடுக்கட்படுத்தல்

நூற்றுநாற்பத்துநான்காம் அத்தியாயம்

சூழவிருக்கச் செய்தல் [2]துன்புறுத்தலை முதன்மையாகக் கொண்டதாம். [3]நாட்டை முன்னர் அமைக்கப்பட்டவாறு அச்சமின்மையில் வைத்தல் வேண்டும். வெளியேறுதல்[4] இல்வழி [5]ஊக்கமுள்ளதை [6]அருளுதலாலும் அரசிறை ஒழித்தலாலும் அமைத்தல் வேண்டும். [7]மிகுதியானது வேறு நிலத்திலோ, ஓரிடத்திலோ இருத்தல் வேண்டும். [8]மக்களின்றி நாடும், நாடின்றி அரசுமில்லையன்றே என்பர் கௌடலியர்.

144-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] சூழவிருக்கச் செய்தல்—பகைவரது அரணைச் சூழ்ந்திருக்கும்படித் தன் படைகளை யமைத்தல்.

[2] துன்புறுத்தல்—ஈண்டுப் பொருள் படைகளை யழித்தலும் அமைச்சர் கொலை முதலியனவுமாம். இவற்றை முதலில் செய்வதன் மூலமாகச் சூழவிருக்கச் செய்தலை மேற்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

[3] பகைவனுக்குத் துன்புறுத்தலைச் செய்யுங்கால் நாட்டைத் துன்புறுத்தல் கூடாது. அதனைக் காத்தல் வேண்டும் என்பதனைக் கூறத் தொடங்குகின்றார். பகைவனால் முன் புரக்கப்பட்டிருந்த நிலையினைப் போலவே தானும் புரத்தலை மேற்கொள்ளல் வேண்டும் என்பது.

[4] இல்வழி என்றதனால் நாட்டைவிட்டு வெளியேறும் மக்களுக்கு அருளுதல் முதலியவற்றைச் செய்தல் கூடாதென்பது பெற்றாம்.

[5] ஊக்கமுள்ளதை—உழவு முதலியவற்றில் முயன்ற மக்களை.

[6] அருளுதல்—பொருளைக் கொடுத்தல்.

[7] அதிகமாக விருக்கும் மக்களை வெவ்வேறு நிலத்தில் தனித் தனியாகவோ ஓரிடத்திலோ அமைத்தல் வேண்டும் என்பது கருத்து.

[8] மக்களை யமைத்தல் முதலியவை முக்கியமாகக் கூறப்படுதற்குக் காரணம் என்னை ? எனின் கூறுகின்றார். மக்களின்றேல் நாடு என்ற பெயரும் நாடின்றேல் அரசு (ராஜ்யம்) என்ற பெயரும் இல்லையாதலின், மக்களை யமைத்தன் முதலியன இன்றியமையாதனவாம் என்பது கருத்து.

[9]ஒவ்வாத இடத்தில் இருப்பவனுடைய [10]பிடியையும் பயிரையும் அழித்தல் வேண்டும். கூலம் முதலியவற்றைக் கொணர்வோர் புல் விறகு கொணர்வோர் என்பவர்களையும் [11]ஆம்.

சுலோகம்

[12]புல் விறகு கொணர்வோரைத் தடுத்தலாலும் பிடி பயிர்களை யழித்தலாலும் [13]வெளியேற்றுதலாலும் மறைவினுறுத்தலாலும் [14]அங்கங்களின் அழிவு உண்டாகின்றது.

[15]மிகுந்த குணங்களை யுடைய கூலம் குப்பியம் பொறி படைக்கலம் [16]தடை பணியாளர் கடிவாளம் என்னுமிவற்றால் என் படை நிறைந்தது. பருவமும் [17]முன்னே யுள்ளது. பகைவனுக்கு [18]எதிர்ப் பருவமும் நோய் வறுமைகளால் தொகுதிக் காவலழிவும் [19]விலைக்குக் கொள்ளப்பட்ட படையின் வெறுப்பும் நட்புப் படையின் வெறுப்பும் உள்ளன [20]என்று சூழவிருக்கச் செய்தல் வேண்டும்.

---

[9] துன்புறுத்தல் முறையைக் கூறுகின்றார். பகைவனால் தடை செய்யப்பட்டிருத்தல் காரணமான நெருக்கடியில் இருப்பவனுடைய என்பது.

[10] பிடி—விதை விதைத்தல்.

[11] ஆம்—அழித்தல் வேண்டும்.

[12] அமைச்சர் முதலியவரின் அழிவுக்குக் காரணங்களைச் சுருக்கிக் கூறுகின்றார்.

[13] வேற்றிடத்திற்குச் செல்லச் செய்தலாலும் என்பது.

[14] அங்கங்கள்—அமைச்சர் முதலியவர்.

[15] சூழவிருக்கச் செய்தலை யேற்குங்காலம் இதுவெனக் கூறுகின்றார். என் படை மிகுந்த சாரத்தையுடைய கூலம் முதலிய எழுவகைப் பொருளால் நிறைந்துள்ளது என்பது.

[16] தடை, கவசம், வாளுறை, கிடுகு முதலியன.

[17] அநுகூலமாயுள்ளது.

[18] மூரணான காலமும், சேர்த்து வைக்கப்பட்ட கூலம் முதலியவற்றைக் காப்பவர்களுக்கு நோயினாலும் வறுமையினாலும் உண்டாம் அழிவும் என்பது.

[19] விலைக்குக் கொள்ளப்பட்ட படையினர், தம் உழைப்புக்குத் தக அவன் பொருள் முதலியன தராமையைக் கண்டு அவனுக்கு மீண்டும் உதவி புரிதலில் வெறுப்புற்றமை என்பது.

[20] என்று கருதும் இக் காலங்களில் சூழவிருக்கச் செய்தலை யேற்றல் வேண்டும் என்பது கருத்து.

[21]பாசறையையும் கூல முதலிய சுமப்போர் நட்புப் படையினர் செல்லும் வழிகளையும் காத்தும், [22]அகழ் மதில் என்பவற்றின் வழியாக அரணைச் சுற்றி நீரைக் கெடுத்தும், பெருக்கியும், அகழை நிரப்பியும், சுரங்கம் படைக் குடிசைகளுடன் மதிற்சுவருக்கு ஆதாரமான அடிப்படை மதில்களைப் [23]பற்றுதல் வேண்டும்.

பிளவுகளைக் [24]குளத்தாலும், தாழ்ந்ததை மணலுள்ள மேட்டுப் பிரதேசத்தாலும் மறைத்தல் வேண்டும். [25]மிகுகாவலையுடையதைப் பொறிகளால் தாக்குதல் வேண்டும். [26]வஞ்சகத்தால் அணிமையில் இழுத்துக் குதிரைகளாலும் தாக்குதல் வேண்டும். [27]அரணில் இருப்பவனுடைய வன்மைச் சிறப்புக்களில் உபாயங்களின் [28]வரையறை, விகற்பம், [29]தொகுதி என்பவற்றால் பயனை யடைய விரும்புதல் வேண்டும்.

கழுகு காக்கை சேவல் கோழி கிளி நாகணவாய் கோட்டான் புறு என்னுமிவற்றைப் பிடித்து வாலில் [30]தீப்பற்றுதலையுடைய

---

21 சூழவிருக்கச் செய்தன் முறையைக் கூறுகின்றார் ; பாசறை—வெற்றி விருப்பமுள்ளவனுக்குரியது.

22 அகழ் மதில்களை யநுசரித்துப் பகைவனுடைய தானியத்தைச் சுற்றிலும் நீர்நிலைகளிலுள்ள நீரைக் கெடுத்தும், அல்லது வெளிப்படுத்தியும், நீரற்ற நிலைகளில் நீரை நிரப்பியும், அடிப்படை மதில்களைப் பற்றுதல் வேண்டும் என்பது கருத்து.

23 பற்றுதல்—கைப்பற்றுதல்.

24 குளம்—மூடுதற்குக் கருவியான உருண்டை என்ப.

25 மிகு காவலையுடையது—பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகள் நிறைந்த இடம்.

26 வஞ்சகத்தால் அணிமையிலிழுத்து...... —யானைகளுடைய துதிக்கைகளை நீட்டச்செய்து அவற்றால் இழுத்து அவர்களைத் தாக்குதல் வேண்டும்.

27 அரணிலிருக்கும் பகைவன் தன்னுடைய சிறப்புற்ற வன்மையைக் கைக்கொள்ளுங்கால் என்பது.

28 வரையறை—உபாயங்களுள் இன்னதைத்தான் ஈண்டு ஏற்றல் வேண்டும் என்னும் நியதி.

29 இதனையும் மற்றொன்றையும் ஏற்கவேண்டும் என்பது தொகுதியாகும். தொகுதியை சமுச்சயம் என்று முதனூல் கூறும். எனவே அவ்வப் பொருளுக்கேற்ப உபாயங்களின் வரையறை முதலியவற்றைத் துணிதல் வேண்டும் என்பது கருத்து.

30 தீயை உண்டாக்குதற்குரிய உபாயங்களுடன் கூடியவைகளாக என்பது.

வைகளாகப் பகையரணில் [31]விடுத்தல் வேண்டும்.

[32]தாழ்ந்த பாசறையிலிருந்து [33]மேல் தூக்கப்பட்ட கொடி, வில் என்பவற்றையுடைய காவலர் [34]மக்களது தொடர்புடைய தீயால் பகையரணைக் கொளுத்துதல் வேண்டும்.

[35]ஒற்றரான எல்லையரண் காவலர் கீரி, குரங்கு, பூனை, ஞமலி என்பவற்றின் வால்களில் தீப்பற்றுதலைச் செய்து [36]அம்பு தொகுதிகளின் காவன் முறையையுடைய இல்லங்களில் விடுத்தல் வேண்டும்.

உலர்ந்த மீன்களின் வயிற்றிலோ உலர்ந்த இறைச்சியிலோ [37]தீயை அமைத்துக் [38]காக்கைகளின் காணிக்கையாகப் புட்களால் கவரச் செய்தல் வேண்டும்.

தேவதாரு, மரமஞ்சள், [39]பூதிப்புல், குங்கிலியம், தேவதாருவின் பிசின், [40]சருச்ச ரசம், அரக்கு என்னும் [41]இவற்றின் மாத்திரையும் பரற் கற்கள், கழுதை ஒட்டகம் வெள்ளாடு செம்மறி என்பவற்றின் சாணமும் தீயை யடக்கி வைத்திருப்பனவாம்.

---

[31] விடப்பட்ட கழுகு முதலியவற்றின் வாற்புறத்திலிருந்து விழுந்த தீயின் தொடர்பால் பகையரணைக் கொளுத்தவேண்டும் என்பது.

[32] தாழ்ந்த—கீழேயுள்ள.

[33] மேல் தூக்குதல் தீச்சுடரை வீசுதற் பொருட்டென்ப.

[34] பகைவனால் கொல்லப்பட்டவன் அல்லது சூலத்திலேற்றிக் கொல்லப்பட்டவனுடைய எலும்பில் பலவகை நிறமுள்ள மூங்கிலாற் கடைதலாலுண்டாய தீயை 'மக்களது தொடர்புடைய தீ' என்பர் உரையாசிரியர்.

[35] எல்லை காவலன் முதலியவரின் வேடம் பூண்ட ஒற்றர் என்பது.

[36] அம்புகளையும் குப்பியப் பொருளினங்களையும் தொகுத்து வைத்துக் காக்கப்பட்டுள்ள இடங்களில் என்பது.

[37] தீயைத் தரிக்கும் மாத்திரையை வைத்தல் முதலியனவாக, தீயை அமைக்கும் முறை அடுத்துக் கூறப்படும்.

[38] புட்களுக்குரிய பலியாக என்பது.

[39] பூதிப்புல்—தீ நாற்றமுள்ள ஒரு வகைப் புல்.

[40] சருச்சரசம்—தெய்வ வழிபாட்டுக்குரிய தூபப் பொருள்; சாம்பிராணி தசாங்கம் முதலியன என்ப.

[41] இவற்றாற் செய்யப்பட்ட தூளால் தீயுண்டாகும் என்பதும், பகைவரரணைக் கொளுத்துதற்காக இவை செலுத்துதற்குரியன என்பதுங் கருத்து.

பழமுண்ணிப் பாலையின் பொடி, எருமை யாட்டாங் கொடி, கரி நொச்சிலி, தேன் மெழுகு என்பவையும் குதிரை கழுதை பசுக்களின் சாணமும் வீசுதற்குரிய தீப் பிரயோகமாம்.

தீ வண்ணமுள்ள எல்லா உலோகப்பொடி, தேக்கு காரீயம் வெள்ளீயங்களின்பொடி, வேம்பு புரசு குருவேர் மடையெண்ணெய் தேன் மெழுகு தேவதாருவின் பிசின் என்னுமிவற்றுடன் கூடியது தீப் பிரயோகமாம். [42]நம்பிக்கையுடன் கொல்லுவதாம். அதனாற் பூசப் பெற்றதும் [43]சணம் [44]திரபுசம் என்னுமிவற்றின் தோலாற் சுற்றப்பட்டதுமான மருதமரம் தீப் பிரயோகமாம்.

[45]வன்மை இருக்கும்போது தீவைத்தல் அறவே கூடாது. என்னை? [46]தீ நம்புதற்குரியதன்று. சிறந்த துன்புறுத்தலுமாம். எண்ணில்லாத உயிர்கள், கூலம், பசு, பொன், குப்பியப் பொருள் என்னுமிவற்றின் அழிவைச் செய்வதாம். குறைவுற்ற [47]தொகுதியையுடைய அரசினை அடையப் பெற்றாலும் அழிவின் பொருட்டேயாம்.

சூழவிருக்கச் செய்தல் [48]இவ்வாறும்.

---

42 நம்புதற்குரியதாகவே காணப்படினும் கொல்லுந் தன்மையதாம்.

43 சணம்—குறுகிய கிளைகளையும் விழுதையுமுடைய சிறு மரம் என்று அமரநிகண்டு கூறும்.

44 திரபுசம்—இது ஒருவகைக் கொடி; மஞ்சளான மலர் கிளைகள் நிறைந்தது, கனி மிகுந்தது, முட்கனியுள்ளது என்று நிகண்டுகள் கூறும்.

45 மேற் கூறிய தீப் பிரயோக முறையைப் போராற்றலுள்ள வேந்தன் கையாளுதல் கூடாதெனக் கூறுகின்றார்.

46 தீ பெருகுமாயின், விரும்பியவற்றை மட்டுமல்லாமல் விரும்பாதவற்றையும் அழித்துவிடுமாதலின் அதனால் பகைவற்கேயன்றித் தனக்கும் தீங்குண்டாம் என அறிவுறுத்துகின்றார்.

47 உயிர்ப் பொருள் கூலம் முதலியவற்றின் தொகுதிகள் அழிந்த பின்னர் அவ்வரசினால் யாதொரு பயனுமில்லை என்பது கருத்து.

48 விளக்கிக் கூறி முடிக்கப்பட்டதாம்; இனி இடுக்கட்படுத்தல் என்னும் பிரகரணம் தொடங்கப்படும். இடுக்கட்படுத்தலாவது :—பகைவருடைய அரணைக் கைப்பற்று முகமாக அவர்க்கு இடுக்கண் விளைத்தல்; எப்பொழுது எவ்வாற்றால் அரண்கோடல் வேண்டும் என்பதைக் கூறுவது.

[49]எல்லாவற்றையும் தொடங்குதல், கருவி, பணியாளர் என்பவற்றால் நிறைந்தவனாயிருக்கின்றேன். நோய்வாய்ப்பட்டிருத்தல், உபதைக்கு மாறுபட்ட அங்கமுடைமை, அரணின் தொழில், தொகுதிகளைச் செய்யாதிருத்தல் என்பவற்றை யுடைய பகைவன் நட்புப் படை யற்றவனாயினும், நட்புப் படையுடையனாயினும் நண்பருடன் சந்தி செய்யப் போகிறான் என்னும் இந்நிலை இடுக்கட்படுத்தற்குரிய காலமாம்.

தீ தானே யுண்டாயபோதும், உண்டாக்கப்பட்டபோதும், உண்டாட்டு [50]காட்சி [51]படையைப் பார்த்தல் என்பவற்றிலீடுபடுதல் [52]கள் விற்போர் பூசல் என்னுமிவற்றிலும், [53]எப்பொழுதும் போரினால் களைப்புற்ற படையை யுடைமை [54]பெரும்போரில் தாக்கப்பட்டவரையும் இறந்த மக்களையும் உடைமை கண்விழித்து மெலிந்து உறங்குவோரையுடைமை என்பவற்றோடு [55]கூடியிருக்கும்போதும், [56]தீயநாளிலும், [57]ஆற்றுவேகத்திலும்,

---

[49] இடுக்கட்படுத்தற்குரிய காலத்தைக் கூறுகின்றார். பலவகைப் படைகளைக் கொண்டு செய்யும் போர் முயற்சியாலும், படைக்குரிய உணவு கவச முதலிய கருவிப் பொருள்களாலும் பணியாளராலும் நான் நிறைந்தவன், பகைவனோ நோய் வாய்ப்பட்டிருக்கிறான். உபதைகளாற் கண் கூடாகக் காணப்பட்ட தூய்மையின்மையையுடைய அமைச்சர் முதலியவருடன் கூடியுள்ளான். அரணுக்குரிய செப்பனிடுதல், பொருள் கூல முதலியவற்றைத் தொகுத்தல் என்பவற்றைச் செய்யாதவனாயிருக்கிறான். நட்புப் படையற்றவனாயிருக்கிறான். நட்புப் படையை எதிர்ப்பவனாயினும், நண்பருடன் இனிமேல் தான் சந்தியைச் செய்ய எண்ணுவதன்றி இதுகாறும் சந்தியைச் செய்து கொண்டானல்லன் என்றிவ்வாறு வெற்றி விருப்பமுள்ளவன் கருதுவானாயின், அப்பொழுது பகைவனை இடுக்கட்படுத்தலை மேற்கொள்ளலாம் என்பது கருத்து.

[50] நாடகம் முதலிய காட்சிகள்.

[51] படை வீரர்கள் தமக்குள் விளையாட்டாகப் பொருது மகிழும் போர்களைப் பார்த்தல் என்பது.

[52] கள் விற்பவரால் உண்டாக்கப்பட்ட கலகங்கள் என்பது.

[53] நாடோறும் போர் புரிதலாற் களைப்புற்ற என்க.

[54] பல போர்களில் எதிர்த்துத் தாக்கப்பட்டவரையும் இறந்த மக்களையுமுடைமை; இதனால் படையின் வலி குறைந்தமை காண்க.

[55] மேற்கூறிய மூவகை இயல்புகளையுடைய படைகளை யுடையனாய்ப் பகைவனிருக்கும்போதும் என்பது.

[56] 'தீயநாள்' என்பது மிகுபெயலையுடையநாள் என்னும் பொருட்டு.

[57] விரைந்து செல்லும் ஆறுகளைக் கடக்கும் காலத்திலும் என்பது.

[58]மூடுபனியால் மயங்கிய நிலையிலும் இடுக்கட்படுத்தல் வேண்டும்.

[59]பாசறையை விட்டுக் காட்டில் மறைந்த பகைவனைச் [60]சத்திரத்திலிருந்து வெளிக்கிளம்பும்போது கொல்லுதல் வேண்டும்.

நண்பன் நட்புப் படைத் தலைவன் என்பவர்களினுருவினன் தடைப்பட்டவனுடன் நட்பைச் செய்து, [61]"இது உனக்கு [62]இடைவெளி, [63]இவர் தூஷியர், [64]தடைசெய்தவனுக்கு இடைவெளி, இது உன் தீயவர் பக்கம்" [65]என்று [66]விடப்பட்ட தூதன் மூலமாக அனுப்புதல் வேண்டும். [67]அந்த எதிர்த் தூதையேற்று வெளி வருபவனை வெற்றி விருப்பமுள்ளவன் பிடித்துக் [68]குற்றத்தை வெளிப்படுத்திக் கொன்று [69]அங்கிருந்து வெளியேறுதல் வேண்டும். [70]நண்பன் நட்புப் படைத் தலைவன் என்பவருடைய

---

58 பனியினாலுண்டாகிய நோய்க் காலத்திலும் என்பது.

59 பகைவன் பாசறையிலிருந்து வெளிச்சென்று காட்டில் மறைவாக இருப்பின், அவன் காட்டினின்றும் வெளியே புறப்படும் சமயத்தை எதிர் பார்த்திருந்து, அப்போது வெற்றிவிருப்பமுள்ளவன் அவனைக் கொல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

60 சத்திரம்—ஈண்டுக் காடு.

61 இது முதல் உள்ள பகுதி அனுப்புதற்குரிய செய்தியைக் குறிக்கும்.

62 இடைவெளி—சோர்வு.

63 உனக்குத் தீங்கு புரியுமிவர்கள் உன் சோர்வினை யறிந்து புகுதற்கு விரும்பிய உன் பகைவனுக்குத் துணைபுரிய விழிப்புள்ளவராயிருக்கின்றனர் என்பது.

64 உன்னைத் தடைப்படுத்தியவனுடைய சோர்வறிந்து புக விரும்பும் உனக்குத் துணைபுரிய பகைவனுடைய தீயவர் குழு விழிப்புடனிருக்கின்றது என்பது.

65 என்ற செய்தியைக் குறிக்கும் ஓலையைக் கொடுத்து அனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

66 விடப்பட்டவன்—கொல்லுதற்குரியவன்.

67 விடையாக அமைந்த ஓலையைக் கொணர்ந்துவரும் அத்தூதனை யென்பது.

68 குற்றம்—வெற்றிவிருப்பமுள்ளவனுக்குத் தீங்கு புரிதல்.

69 தடைப்பட்டவனுடைய பக்கத்தை விட்டு விலகுதல் வேண்டும் என்பது.

70 மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

உருவினன் தடைப்பட்டவனிடம் 'என்னைக் காத்தற்கு வெளியேறி வா, என்னுடன் கூடித் தடை செய்தவனைக் கொல்' என்று கூறுதல் வேண்டும். ஒப்புக்கொண்டவனை [71]இரு புறத்தும் துன்புறுத்தலால் கொல்லுதல் வேண்டும். உயிருடன் கவர்ந்து [72]அரசுக் கலக்கத்தைச் செய்வித்தல் வேண்டும். இவனுடைய நகரத்தை யழித்தல் வேண்டும். இவனுடைய [73]திண்மைப் படையை வெளிப்படுத்திக் கொல்லுதல் வேண்டும்.

[74]படைவலியால் தாழ்த்தப்பட்டோன், காட்டில் வாழ்வோர் என்னுமிவர்களுக்கும் இதனால் விதி கூறியவாறும்.

[75]படை வலியால் தாழ்த்தப்பட்டோன், காட்டில் வாழ்பவன் என்பவருள் ஒருவன், தடைப்படுத்தப்பட்டவனுக்கு 'தடைப் படுத்திய இவன் நோய் வாய்ப்பட்டிருக்கிறான். பின்னணியைப் பற்றுபவனால் எதிர்க்கப்பட்டுள்ளான். வேறொரு சோர்வும் உண்டாயிற்று, வேறு நிலத்தில் வெளியேற விரும்புகிறான்' என்று அனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொண்டபோது தடைப்படுத்தியவன் பாசறையைக் கொளுத்தி விலகுதல் வேண்டும். பின்பு [76]முன்போற் செய்தல் வேண்டும்.

[77]விலைப்பண்டத் தொகுதியின் வரவாலும் நஞ்சு கலக்கப் பெற்ற விலைப் பண்டத்தாலும் வஞ்சித்தல் வேண்டும்.

---

[71] முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் என்பது.

[72] நாட்டில் குடிமக்களுக்குக் கலக்கத்தைச் செய்வித்தல் என்பது.

[73] வன்மையுள்ள படையை அரணிலிருந்து வெளிப்படச் செய்து அதைக் கொல்லுதல் வேண்டும் என்பது.

[74] படைவலியால் தாழ்த்தப்பட்டோன் முதலியவர் மூலமாகவும் மேற் கூறிய முறைகளைச் செய்யலாம் என்பது கருத்து.

[75] மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[76] இருபுறத்தும் துன்புறுத்திக் கொல்லுதல் முதலியனவாக முற்கூறப் பட்டவற்றைச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

[77] விலைப்பண்டத்தை விற்பவர்களின் கூட்டத்தை வரச் செய்தலாலும் என்பது.

[78]நண்பனுருவினன் [79]என்னால் தாக்கப்படும் பகைவனைத் தாக்குதற்கு வெளியில் வா என்று தடைப்பட்டவனுக்குத் தூதனை யனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொண்டவனை [80]முன் போல் செய்தல் வேண்டும்.

[81]நட்பு உறவு இவற்றை வெளிப்படுத்து முகமாக இலச்சினை யிடப்பெற்ற [82]கட்டளையைக் கைக்கொண்ட கபட மக்கள் புகுந்து அரணைக் கவர்தல் வேண்டும்.

[83]நண்பருருவினன் 'இன்ன இடத்தில் இன்ன காலத்தில் பாசறையை யழிக்கப் போகிறேன் உங்களாலும் போர் புரிதற் குரியது' என்று அனுப்புதல் வேண்டும். முற்கூறியதை ஒப்புக் கொண்டவனை [84]அழித்தல் நெருக்கடியைக் [85]காண்பித்து இரவில் அரணினின்றும் வெளி வரும்போது கொல்லுதல் வேண்டும்.

அல்லது நண்பனையாவது காட்டில் வாழ்வோனையாவது [86]அழைத்தல் வேண்டும். 'தடைப்படுத்தப்பட்டவன்பால் வன்மையை யேற்று அவனுடைய நிலத்தைப் பெறுவாய்' என்று அவனை யூக்கவேண்டும். வன்மையை யேற்றவனை [87]அங்கங்களா

---

78 மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

79 நான் முதலில் பகைவனை எதிர்த்துப் போர் புரியும்போது அவனை என்னுடன் தொடர்ந்து தாக்குதற் பொருட்டு அரணினின்றும் வெளி யேறுக என்ற செய்தியைத் தூதன் வாயிலாக அனுப்புதல் வேண்டும் என்பது கருத்து.

80 எழுபத்தாறும் குறிப்பைப் பார்க்க.

81 தனக்கு நட்பையோ உறவையோ காரணமாகக் கற்பித்து என்பது.

82 கட்டளை—பொய்ச்செய்தி யோலை.

83 நண்பனுருக் கொண்டவனால் செய்தற்குரிய மற்றொரு வஞ்சக முறையைக் கூறுகின்றார்.

84 வெற்றிவிருப்பமுள்ளவனுடைய பாசறையை யழித்தலாலுண்டாம் நெருக்கடியை.

85 இங்ஙனம் காண்பித்தல், தடைப்பட்டவன் நம்புதற் பொருட்டு என்ப.

86 பகைவனை எதிர்த்தற்கு முயலும்படி செய்தல் வேண்டும் என்பது.

87 அங்கங்கள்—அமைச்சர் முதலியோர்.

லாதல், தூஷ்யத் தலைவரைத் தன்வயப்படுத்தலாலாதல், தானே யாதல், நஞ்சினுலாதல் கொல்லுதல் வேண்டும். 'இவன் நண் பனைக் கொன்றவன்' [88]என்று பயனை யெய்தியவனும்.

[89]வன்மையை ஏற்க விரும்புபவனைக் குறித்துப் பகைவனுக்கு நண்பருருவினன் கூறவேண்டும். அன்பனுந் தன்மையை யடைந்த பின் இவனுடைய வலிய மக்களை யழித்தல் வேண்டும்.

[90]சந்தியைச் செய்து இவனை நாட்டில் நிலைப்படுத்தல் வேண் டும். வேறு நாட்டில் நிலை பெற்றவனை அறியப்படாதவாறு கொல்லவேண்டும்.

[91]தூஷ்யர் காட்டில் வாழ்வோர் என்பவரிடம் தீங்கு புரியச் செய்து படையின் ஒரு பகுதியைக் கடத்திக் கவர்தலால் அரணை யடையவேண்டும்.

[92]தூஷ்யர், பகைவன், காட்டில் வாழ்வோர், வெறுக்கப் பட்டவன், [93]விலகித் திரும்பி வந்தவன் என்னுமிவர்கள் [94]பொருள் கௌரவித்தல் அறிவிக்குமடையாளங்கள் செய்யப் பட்ட நிலையிற் பகையரணைக் கவர்தல் வேண்டும்.

---

[88] நண்பனைக் கொன்றவன் என்று பகைவனைக் கூறித் தன் பயனைப் பெறுதல் வேண்டும் என்பது கருத்து,

[89] வெற்றிவிருப்பமுள்ளவன் உன்னை எதிர்க்க விரும்புகிருன் என்று பகைவனுக்கு நண்பருருவினன் கூறி, நம்பிக்கை பெற்றுப் பின் பகைவனைச் சார்ந்த வீரர்களை யழித்தல் வேண்டும் என்பது.

[90] பகைவனுடன் சந்திபெற்றுத் தன்னுட்டில் அவனை வேறு நாடமைக் கும்படி செய்து பின் அவனை மறைவிற் கொல்லுதல் வேண்டும் எனக் கூறுகின்றுர்.

[91] தன்னுடைய தூஷ்யர் முதலியவரிடத்துப் பகைவனுடைய படைப் பகுதியைத் தீங்குபுரியச் செய்து, அதுகாரணமாக அதை நெடுந்தூரத்திற் செலுத்தி, அப் பகுதிக்குறைவால் எளிதிற் கைப்பற்றுதற் குரியதான பகை யரணை வலிந்து கவர்தல் வேண்டுமென்ற ஒரு முறையைக் கூறுகின்றுர்.

[92] வலிந்து கவர்தற்குத் துணைவராவார் யாவர் என்பதைக் கூறு கின்றுர்.

[93] பகைவனை விட்டுச் சென்று மீண்டும் அவனை யடைந்தவன்.

[94] பொருள் அணிகலன்களைக் கொடுத்து உபசரிக்கப்பட்டவரும் இடுக்கட் படுத்தற்குரிய காலத்தை யறிவித்தற்குரிய சங்கேதங்களைக் கற்பிக்கப்பட்டவரும் கவர்தல் வேண்டும்.

[95]பகையரணையாதல் பாசறையையாதல் கவர்ந்து பதிதன், திரும்பியவன், இடுக்கணெய்தியவன், [96]கேசத்தை விட்டவன், படைக்கல அச்சத்தால் மாறுபட்ட உருவமுடையவன் என்னு மிவர்களுக்கும் போர் புரியாதவர்க்கும் [97]அச்சமின்மையை அளித்தல் வேண்டும். பகையரணை யடைந்து [98]தூய பகைப் பக்கத்தை யுடையனாய் [99]உள்ளும் வெளியிலும் மறைவினெறுத்தற்கு மாற்றஞ் செய்து புகுதல் வேண்டும்.

[100]இங்ஙனம் வெற்றி விருப்பமுள்ளவன் பகைவன் நிலத்தைப் பெற்று மத்தியமனை யடைய விரும்பவேண்டும். அது வினையின் நொதுமலனை யடையலாம். நிலத்தை வெல்ல இது முதல் வழியாம்.

[101]மத்தியமன் நொதுமலன் என்பவரில்லையேல் [102]சிறப்புக் குணங்களால் [103]பகையங்கங்களை வயப்படுத்தல் வேண்டும். பின்பு [104]அடுத்த அங்கங்களை வயப்படுத்தலாம். இது இரண்டாவது வழியாம்.

---

95 பகையரணையோ பாசறையையோ கவர்ந்தபின் செயற்பாலதைக் கூறுகின்றார்.

96 தலைமயிரைச் சடையாக வளர்த்தலையோ அன்றி மழித்தலையோ செய்து கொண்டவன் என்பது.

97 அபயம் அளித்தல் வேண்டும் என்பது.

98 பகைவனைச் சார்ந்தவரை வெளியேற்றியவனாய் என்பது.

99 அரணுக்கு உட்புறத்தும் வெளிப்புறத்தும் மறைவினெறுத்தல் நிகழாவாறு பரிகாரச் செயல் புரிந்து புகுதல் வேண்டும்.

100 மேற்கூறியவாறு பகைவன் நிலத்தைப்பெற்றுப் பின்னர் மத்தியமன் நிலத்தையும், அதன்பின் நொதுமலன் நிலத்தையும் பெற விரும்புதல் வேண்டும் என்ற இம்முறை நில வெற்றிக்கு முதல் வழியாம் எனக் கூறுகின்றார்.

101 மேற்கூறிய முறை மத்தியமன் நொதுமலன் என்பவர் இருப்பின் ஏற்றற்குரியது. அவர்களிலராயின் ஏற்கும் முறை யிதுவெனக் கூறுகின்றார்.

102 பகைவன் குணத்தினும் மேற்பட்ட தன்குணச் சிறப்பால்.

103 பகைவனுடைய அமைச்சர் முதலியோரைத் தன்பால் அன்பு பூண்டவராகச் செய்தல் வேண்டும்.

104 அடுத்தவை—பொருள் படை முதலியன.

[105]மண்டலமில்லையேல் பகைவனால் நண்பனையும் நண்பனால் பகைவனையும் ஆக இரு புறமும் துன்புறுத்தலால் வயப்படுத்தல் வேண்டும். இது மூன்றாவது வழியாம்.

[106]இயன்ற அளவில் ஒரு சிற்றரசனையாவது வயப்படுத்தல் வேண்டும். [107]அவனால் இரட்டித்தவன் இரண்டாமவனையும் மும்மடங்கானவன் மூன்றாமவனையும் வயப்படுத்தல் வேண்டும். நிலத்தை வெல்லுதற்கு இது நான்காவது வழியாம்.

நிலத்தை வென்று [108]தன்னறத்தினால் பகுக்கப்பட்ட வருணாச்சிரம தருமத்தையுடையதாக நுகரவேண்டும்.

சுலோகம்

[109]வேறுபடுத்தல், ஒற்றர், வெளிப்படுத்தல், சூழவிருக்கச் செய்தல், வலிந்து கவர்தல் என்னுமிவ்வைந்தும் அரணை யடைதற் குரிய காரணங்களாம்.

பதின்மூன்றாம் அதிகரணம் 4, 5-ஆம் பிரகரணங்கள்
'சூழவிருக்கச் செய்தல்', 'இடுக்கட்படுத்தல்' என்னும்
நூற்றுநாற்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

105 மூன்றாவது வழியைக் கூறுகின்றார். மண்டலம்—பத்து அரசர்களை யுடையது.

106 நான்காவது வழியைக் கூறுகின்றார். தன் ஆற்றலுக்கியன்றவாறு எளிதில் வெல்லுதற்குரிய ஒரு சிற்றரசனை வென்று தன்வயப்படுத்தல் வேண்டும் என்பது.

107 வயப்படுத்தப்பட்டவனும் துணைபுரிபவனுமான அந்த ஒரு சிற்றரசனால் இரட்டித்த தன் படைவன்மையை யுடையவன் இரண்டாவதாக மற்றொரு சிற்றரசனையும் அவனால் மும்மடங்கான படைவன்மையை யுடையவன் மூன்றாவதாக மற்றொருவனையும் வயப்படுத்தல் வேண்டும் என்பது கருத்து.

108 அவ்வவற்றிற்கேற்ப மநு முதலியோரால் விதிக்கப்பட்ட வருணாச்சிரமங்களுக்குரிய அறத்தினால் என்பது.

109 பகையரணை எய்தற்குரிய மேற்கூறிய காரணங்களை இச்சுலோகத்தால் தொகுத்துக் கூறுகின்றார்.

பதின்மூன்ரும் அதிகாரணம்—பகையரண் எய்தும் வழி

ஆரும் பிரகாணம்—எய்திய [1]அரணை யினிதின் அடக்கல்

நூற்றுநாற்பத்தைந்தாம் அத்தியாயம்

காட்டை [2]முதலாக உடையதும் ஒரு கிராமத்தை [3]முதலாக உடையதும் என வெற்றி விருப்பமுள்ளவனுடைய [4]முயற்சி இரு வகைப்படும்.

[5]புதியதும் [6]முன்னிருந்ததும் [7]தந்தையைச் சார்ந்ததும் என இவனுக்கு மூவகை [8]ஊதியமாம்.

[9]புதிய ஊதியத்தை யடைந்து பிறர் குற்றத்தைத் தன் குணங்களாலும், குணங்களை [10]இருமடங்கு குணங்களாலும் [11]மறைத்தல் வேண்டும். [12]தனது அறச் செயல், [13]அருளுதல்,

---

145-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 அரண்—பகைவர்க்குரிய அரண். ஈண்டு இடவாகுபெயராய் அதன் கண் உள்ளாரை யுணர்த்தி நின்றது. அவரை இனிதின் அடக்கலாவது—முன்னில்லாத அரசன் இவன், எவ்வாறு ஆட்சி புரிவானே என்று தன்னைப் பற்றி அவர் கொள்ளும் ஐயுறவை ஒழித்து நம்பிக்கையுறச் செய்தலாம்.

2 முதலாக என்றதனுல் ஆகர முதலியவற்றைக் கொள்க.

3 ஈண்டு முதலாக என்பது நகர முதலியவற்றை யுணர்த்தும்.

4 முயற்சி என்பது முயன்று பெறப்படும் பயனை யுணர்த்துவது.

5 முன் உரிமையில்லாததாக இருந்து பின் வெற்றிவிருப்பமுள்ளவனுல் பகைவனிடமிருந்து பெறப்பட்டதென்பது.

6 தனக்குரியதாக இருந்ததும், பின்னர் பகைவன் வயப்பட்டிருந்ததும், பிறகு அப்பகைவனை வென்று மீண்டும் தன்வயப்பட்டதுமாம்.

7 தன் தந்தைக்குரியதாக இருந்து பின் பகைவனை அடைந்திருந்ததாக, அப்பகைவனை வென்று திரும்பிப் பெறப்பட்டதென்பது.

8 ஊதியம்—பெறப்பட்ட பொருள்.

9 இவற்றுள் 'புதியது' என்பதற்குரிய விதிமுறையைக் கூறுகின்ருர்.

10 பகைவன் குணத்தைவிடச் சிறந்தோங்குகிற தன் குணங்களைக் காட்டுதலால் என்க.

11 மறைத்தல்—மறந்துபோம்படிச் செய்தல்.

12 தனக்குரிய அறங்களைச் செய்தல்.

13 அருளுதல்—உழவுத்தொழில் முதலியவற்றிற்குக் கடன் கொடுத்தல் முதலிய உபகாரச்செயல்,

அரசிறை ஒழிவு, [14]கொடை, பெருமைப் படுத்தற்றொழில் என்பவற்றால் அங்கங்களின் அன்பு நலங்களை யநுசரித்தல் வேண்டும். [15]சங்கேதப்படி தீயவர் பக்கத்தை மகிழ்விக்க வேண்டும். [16]உழைத்தவரை மிகுதியாக மகிழ்வித்தலும் வேண்டும். [17]அங்கங்களுக்கு முரண்பட்ட செயலை யுடையவன், நம்புதற்குத் தகாதவனாகவும் தமர்க்கும் பிறர்க்கும் பகைமையைச் செய்பவனாகவுமாகிறான். ஆகலின் ஒழுக்கம் வேடம் மொழி நடை என்பவற்றால் ஒற்றுமையை அடைதல் வேண்டும். [18]நாட்டுத் தெய்வம் திருவிழா விளையாட்டு என்னுமிவற்றில் அன்பு செய்தல் வேண்டும்.

நாடு கிராமம் சாதி குழு என்னுமிவற்றின் தலைவர்களிடம் சத்திரிகள் அடிக்கடி [19]பகைவனது [20]தீச் செயலை யறிவித்தல் வேண்டும். [21]அவர்களிடம் தலைவனுக்கு உதாரத்தையும் அன்பையும் உண்மையாயுள்ள தலைவனது பெருமைப்படுத்தலையும் அறிவிக்கவேண்டும். [22]உரிய நுகர்ச்சி, அரசிறை ஒழிவு, [23]காப்புக் கண் காணித்தல் என்பவற்றால் இவர்களைப் பயன் கோடல் வேண்டும். எல்லாத் தெய்வங்களையும் ஆசிரமங்களையும் பெருமைப் படுத்தல், [24]கல்வி சொல் அறம் என்பவற்றில் சிறந்த வீரர்களுக்கு நிலம் பொருள்களைக் கொடுத்தல், அரசிறை ஒழிவு என்னுமிவற்

14 கொடை—நிலம் முதலியவற்றைக் கொடுத்தல்.

15 முன்னர் செய்துகொண்ட ஒப்பந்தத்தை யநுசரித்துப் பகைவனைச் சார்ந்துள்ளவரும் தனக்கு உதவி புரிந்தவருமாகிய வெகுண்டவர் முதலியோரின் குழுவிற்குப் பொருள் முதலியவற்றைக் கொடுத்து மகிழ்வித்தல் வேண்டும் என்பது கருத்து.

16 அதிகமாக முயன்று செயல்புரிந்த பணியாளர்களை மிக அதிகமாக மகிழ்வித்தல் வேண்டும்.

17 நாட்டு மக்களுக்கு முரண்பட்ட நடவடிக்கை வேடம் முதலியவற்றை யுடையவன் என்பது.

18 நாட்டு மக்களாற் போற்றப்படும் தெய்வம் என்பது.

19 பகைவன்—தன்னால் வெல்லப்பட்ட பகைவன்.

20 தீச்செயல்—மக்களுக்கு நன்மையற்ற செயல்.

21 அவர்கள்—தம் நாட்டிலுள்ள கிராமத்தலைவர் முதலியோர்.

22 நுகர்ச்சி—அரசபாகம். அரசனால் நுகர்தற்குரிய பொருட்பகுதி.

23 காப்புக் கண்காணித்தல்—சிறுபகை களைதல்.

24 கல்விவீரர்—புலவர். சொல்வீரர்—சொல் வன்மையுள்ளவர். அறவீரர்—அறவோர் என்ப.

றைச் செய்வித்தல் வேண்டும். [25]எல்லாக் கட்டுக்களின் விடுதலை, இழிந்தோர் பேணுநரில்லோர் பிணியாளர் என்னுமிவர்களை அருளுதல் என்பவற்றையும்[26]ஆம். [27]நான்கு திங்களில் அரைத் திங்களுக்கும் [28]நிறை உவாக்களில் நான்கு நாட்களுக்கும், [29]அரசற்கும் நாட்டிற்குமுரிய நட்சத்திரங்களில் ஒரு நாளுக்கும் கொலையின்மையை மேற்கொள்ளல் வேண்டும். [30]காரணத்தைக் கொல்லுதல் [31]சிறுவர்களைக் கொல்லுதல், [32]ஆண்மையை யழித்தல் என்னுமிவற்றைத் தடுத்தல் வேண்டும். பொருள் படைகளை யழிப்பதும் மறத்தின்பாற் பட்டதாகக் கருதப்படுவதுமான செயலை விலக்கி அறத்தின்பாற் பட்ட செயலை நிலைநிறுத்தல் வேண்டும். கள்வர் மிலேச்சக் குடியினர் என்னுமிவர்களுக்கும் அரண் நாடு படைகளின் தலைவர்களுக்கும் [33]இடமாற்றம் [34]பலவிடத்திருத்தல் என்பவற்றைச் செய்விக்க வேண்டும். பகைவனால் வயப்படுத்தப் பட்ட அமைச்சர் புரோகிதர் முதலியவர்களுக்குப் பகைவனுடைய எல்லைகளில் [35]பலவிடத்து இருப்பிடத்தைச் செய்தல் வேண்டும். தீங்கு புரியும் ஆற்றலுடையாரையும் அரசன் அழிவைக் குறித்து வாழ்பவரையும் மறைவினொறுத்தலால் அழித்தல் வேண்டும். தன்

---

[25] சிறைப்பட்ட எல்லா மக்களையும் விடுவித்தல் என்பது.

[26] செய்வித்தல் வேண்டுமென்பது.

[27] நான்கு நான்கு திங்கள் கழிந்ததும் 15 நாட்கள் உயிர்க்கொலையைத் தடைப்படுத்தல் வேண்டும்.

[28] ஓவ்வொரு பௌர்ணமியின்போதும் நான்கு நாட்கள் வரை கொல்லாமையை மேற்கொள்ள வேண்டும்.

[29] அரசனுடைய நட்சத்திரத்திலும், நாட்டைப்பெற்ற நாளின் நட்சத்திரத்திலும் ஓரிரவு அல்லது ஒருநாள் கொல்லாமையை மேற்கோடல் வேண்டும்.

[30] காரணம்—ஈண்டுக் கருவுயிர்த்தற்குக் காரணமான கோழி முதலிய உயிர்ப் பொருள்.

[31] சிறுவர்—புலாலுணவாகப் பயன்படும் சிற்றுயிர்களின் குஞ்சு முதலியன.

[32] ஆண்மையை யழித்தல்—பேடியாக்குதல்.

[33] வசிக்குமிடத்தை மாற்றியமைத்தல்.

[34] ஒன்றுகூடி யிராவாறு பிரித்தமைத்தல் என்பது.

[35] தனித்தனியே வெவ்வேறு இடங்களில் வசித்தற்குரிய இடத்தை யமைத்தல் வேண்டுமென்பது.

நாட்டினரையோ பகைவனல் தடைப்படுத்தப்பட்டவரையோ [36]விலக்கப்பட்டவரின் இடங்களில் அமைத்தல் வேண்டும்.

[37]அவனுடைய குடியிற் பிறந்த திரும்பிப் பெறுதற்குரியதை யடைவதற்கு ஆற்றலுடையவன், துன்புறுத்துதற்கு வல்லவனும் நாட்டின் எல்லையிலுள்ளவனுமாகிய நற்குடிப் பிறந்தவன் என்ப வர்களுக்குக் குணமற்ற நிலத்தையாவது நகரத்து நாட்டு மக்களை வெகுளச் செய்யும் பொருள் படைகளின் கொடையை நிலைப்படுத் திக் குணமுள்ளதின் நான்கிலொரு கூற்றையாவது கொடுத்தல் வேுண்டும். [38]வெகுண்ட அவர்களால் [39]இவனைக் கொல்லுதல் வேண்டும். மக்களால் பழித்துரைக்கப் பட்டவனை வெளியேற்று தல் வேண்டும். அன்றித் [40]தீங்குக்குக் காரணமான இடத்திலா வது அமைத்தல் வேண்டும் [41]என்க.

[42]முன்னிருந்தது எக்குற்றத்தால் [43]நழுவியதோ அந்த மக்கட் குற்றத்தை யழித்தல் வேண்டும். [44]மீண்டும் பெறுதற்குக் காரண மான குணத்தை உறுதிப் படுத்தவேண்டும் என்க.

---

36 பகைவனைச் சார்ந்தவரும் தம் தம் பதவியினின்றும் நழுவச் செய்யப் பட்டவருமான மக்களுக்குத் தலைவராம் பதவியில் அமர்த்தவேண்டும்.

37 பகைவனிடமிருந்து கவரப்பட்ட நிலத்தை அப் பகைவன் குடியிற் பிறந்த மற்றொருவன் திரும்பிப்பெற ஆற்றலுடையவன் என்றும், நாட்டி னெல்லையிலுள்ளவன் அந்நிலத்தைக் கெடுத்தற்கு வல்லவன் என்றும் ஐயுறப் படின் அவருக்குக் குணமற்ற ஏதேனுமொரு நிலத்தைக் கொடுக்கலாம். அல்லது பொருள் படைகளின் எத்துணைப் பகுதியைக் கொடாத நிலையில் அதைப்பெற விரும்பிய அவரால் நாட்டு மக்கள் வெகுளச் செய்யப்படுவரோ அதைத் தனக்காக வைத்துக் கொண்டு மற்ற பொருள் முதலியவற்றையும், குணமுள்ள நிலத்தின் நான்கிலொரு கூற்றையுங் கொடுக்கலாம் எனக் கூறு கின்றார்.

38 வெகுளச் செய்வதால் உண்டாம் பயனைக் கூறுகின்றார்.

39 இவன்—வெகுளச் செய்தவன்.

40 தீங்கு—அழிவு.

41 'என்க' என்றது 'புதியது' என்ற ஊதியத்தைப் பற்றிய விதி முறை முடிவுற்றதென்பதை யுணர்த்தற் பொருட்டாம்.

42 'முன்னிருந்தது' என்பதைப் பற்றிக் கூறுகின்றார்.

43 நழுவுதல்—தன் கையினின்றும் விலகுதல்.

44 மீண்டும் பெறுதல்—பகைவனிடமிருந்து தன் கைக்குத் திரும்பப் பெறுதல்.

[45]தந்தையைச் சார்ந்ததில் [46]தந்தையின் குற்றத்தை மறைத்தல் வேண்டும், குணங்களை வெளிப்படுத்தலும் வேண்டும் என்க.

சுலோகம்

[47]பிறராற் செய்யப்படாததும் அறத்தின்பாற் பட்டதுமான செயல்களையும் செய்யப்பட்டவைகளையும் செய்தல் வேண்டும். [48]பிறராற் செய்யப்பட்ட மறத்தின்பாற் பட்டதையும் தடுக்க வேண்டும்.

பதின்மூன்றும் அதிகரணம் ஆறும் பிரகரணம்
எய்திய அரணை யினிதின் அடக்கல் என்னும்
நூற்றுநாற்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

---

45 'தந்தையைச் சார்ந்தது' என்பது பற்றிக் கூறுகின்றார்.

46 தந்தைக்குரிய அப் பொருள் அவன் கையிலிருந்து விலகியதற்குக் காரணமான குற்றத்தை யழித்தல் வேண்டும் என்பது கருத்து.

47 பகைவரால் செய்விக்கப்படாத அறச் செயல்களையும் செய்விக்கப் பட்ட அறச் செயல்களையும் என்பது.

48 பகைவனாற் செய்விக்கப்பட்ட மறச் செயலைத் தடுத்தல் வேண்டும் என்பது கருத்து.

பதினன்காம் அதிகரணம்—[1]மறைவுச் செயல்

முதற் பிரகரணம்—[2]பகைக் கொலைப் பிரயோகம்

நூற்றுநாற்பத்தாறும் அத்தியாயம்

[3]நான்கு [4]வருணத்தவரையும் காத்தற் பொருட்டு அறமிலாரிடத்து மறைவுச் செயலைப் பிரயோகித்தல் வேண்டும்.

[5]நம்புதற்குரிய நாடு வேடம் சிற்பம் பாத்திரம் என்பவற்றைக் கூறுபவர், கூனன் குள்ளன் [6]கிராதன் என்பவர், [7]ஊமன் செவிடன் மூடன் குருடன் என்பவரின் வேடம் பூண்டவர், விரும்

146-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] இது காறும் பதின்மூன்று அதிகரணங்களால் 'தந்திரம்' 'ஆவாபம்' என்ற பொருள்களைப் பற்றிய விளக்கம் கூறி முடிக்கப்பட்டது. அவ்விரண்டுக்கும் சாதகமான 'மறைவுச் செயல்' என்ற பதினன்காம் அதிகரணம் ஈண்டுக் கூறப்படுகின்றது. இதனை 'ஔபநிடதிகம்' என்று முதனூல் கூறும். உபநிடதமே ஔபநிடதமாயிற்று. உபநிடதமாவது :—மருந்து மந்திரங்களின் இரகசியமாகும். ஆசிரியன் உபதேசத்தால் மட்டும் அறிதற்குரிய செயல் முறையை யுடைமையும் மறைத்தற்குரிமையும் பற்றி இரகசியமென்றூர். ஔபநிடதிகம்—மறைவுச் செயலைப் பற்றிக் கூறுவது. அதனுல் இவ்வதிகரணம் 'மறைவுச் செயல்' என்னும் பெயர்த்தாயிற்று. மறைவுச் செயல்—பகைவரை யழித்தற்குரிய மந்திரம் மருந்து இவைகளை அவர்கள் அறிந்து கொள்ளாதபடி மறைவாக உபயோகித்தலைப் பற்றிக் கூறுவது.

[2] பகைக் கொலைப் பிரயோகமாவது :—பகைவரைக் கொல்லுதற் பொருட்டு மருந்து முதலியவற்றை யுபயோகித்தல்.

[3] இம் மறைவுச் செயல் துன்புறுத்தலையுடையதாயிருத்தலின், இதை அறமிலாரிடத்தே உய்த்தல் வேண்டுமெனக் கூறுகின்றூர்.

[4] வருணம் என்பது உபலக்கணத்தால் ஏனைய சாதிகளையுங் குறிக்கும். வருணம் சாதிகளுக்கேற்ப பகுக்கப்பட்ட அறத்தையும் செயல்களையுமுடைய எல்லா மக்களையும் காத்தற்பொருட்டு அறமிலாரிடத்தே மேற்கொள்ளுதல் இன்றியமையாதாயிற்று. காத்தல்—மறைவுச் செயலன்றி மற்றையதால் பரிகரித்தற்கியலாததும் தீயோர்களால் உண்டாக்கப்பட்டதுமான இடுக்கணிலிருந்து பாதுகாத்தல்.

[5] தாம் பொய்யாக மேற்கொண்டு கூறும் நாடு முதலிய அடையாளங்களைப் பிறர் நம்புதற்குரியனவாகச் சொல்ல வல்லவர்.

[6] கிராதன்—சிறிய உடம்புடையவன்.

[7] ஊமை முதலிய தன்மையைப் பொய்யே மேற்கொண்டு நடிப்பவர்.

பப்பட்டவரும் மிலேச்ச சாதியினருமாகிய மகளிர் ஆடவர் என்னுமிவர்களால் [8]பகைவனுடைய உடலுக்குரிய பொருள்களில் காலகூடம் [9]முதலிய நஞ்சுவகை இடுதற்குரியது.

[10]அரசனுடைய விளையாட்டுப் பொருள், அணிகலன், பொருள் என்னுமிவற்றின் இருப்பிடங்களிலும் நுகர்ச்சிப்பொருள் களிலும் ஒற்றர் படைக்கல வமைப்பையும், சத்திரிகள் [11]தீயால் வாழ்பவர் இரவில் இயங்குபவர் என்னுமிவர்கள், தீயின் அமைப் பையும் செய்தல் வேண்டும்.

[12]பல வண்ணத் தவளை, [13]கௌண்டின்யகம், தித்திரி, கீழா நெல்லியின் [14]ஐம்பொருள், [15]பூரான் என்னுமிவற்றின் பொடி யும், நண்டு, [16]கம்பளி, தண்ணீர் முட்டான், [17]கிழங்கு, [18]சமித்து, ஓஞன் என்னுமிவற்றின்பொடியும், பல்லி, விலாங்குமீன், கவுதாரி, [19]பூதிப்புழு, [20]கோமாரிகை என்னுமிவற்றின் பொடியும், சேங்

---

[8] பகைவன் அணிதற்குரிய ஆடை முதலிய பொருள்களில் என்பது.

[9] முதலிய என்பதால் பச்சநாவி, ஆலாகலம் முதலியவற்றைக் கொள்க.

[10] அரசன் வந்து தங்குதற்குரியதும், விளையாட்டுப் பொருள் முதலிய வற்றையுடையதுமான இடங்களில் அரசனுக்கு ஊறிழைத்தற்குரிய படைக்கலங்களை ஒற்றர்கள் அமைத்து, அதன் மூலம் அரசனுக்குத் தீங்கு புரிதல் வேண்டும் என்பது கருத்து. அரசன், விளையாடுதல் முதலியவற் றைக் காணுங்கால் படைக்கலங்களை யுய்த்தல் வேண்டும் என்பாருமுளர்.

[11] தீயால் வாழ்பவர்—தீயின் உதவிகொண்டு தொழில் செய்து வாழும் கொல்லர் முதலியவர்.

[12] பலவகையான நிறங்களுடைய தவளை முதலியவற்றின் பொடியுடன் சேங்கொட்டை முதலியவற்றின் சாற்றைச் சேர்த்துப் பயன்படுத்துவ தாலும், மேற்கூறிய பொடிகளாற் புகையை யுண்டாக்குதலாலும் உயிரை உடனே கவர்ந்து விடலாம் எனக் கூறுகின்றார்.

[13] கௌண்டின்யகம்—சாணம் சிறுநீர் புரீடம் முதலியவற்றில் உண் டாம் ஒருவகைப் புழு.

[14] ஐம்பொருள்—பட்டை இலை மலர் கனி வேர் என்பன.

[15] செவிப் பூரான் என்பர்.

[16] கம்பளி—ஒருவகைப் புழு. முசுக்கட்டையெனினுமாம்.

[17] கிழங்கு—இதனைக் ' கண்டூரம் ' என்பர் குறிப்புரைகாரர்.

[18] சமித்து—புரசச் சமித்து.

[19] துர்நாற்றமுள்ள ஒரு வகைப் புழு என்க.

[20] ஒரு வகை ஓடதி என்ப-

கொட்டை மரம் எருமையாட்டங் கொடிகளின் சாற்றுடன் சேர்க் கப்படின் விரைவில் உயிரைக் கவர்வதாம். [21]இவற்றின் புகையு மாம்.

[22]ஒரு புழுவாதல் [23]கருநாகம் ஞாழற்பூ என்பவற்றுடன் கொதிக்கச் செய்யப்பட்டதாதல் என்ற இப் பிரயோகம் உலர்த்து வதாம். விரைவில் உயிரைக் கவர்வதாகக் கருதப்படுவது.

நாயுருவி [24]அரக்கன் என்னுமிவற்றின் வேர் ஞாழற்பூப் பொடியுடன் [25]கூடினதாயின் அரைத்திங்களில் கவர்வதாம்.

ஞாழற்பூப் பொடியுடன் கூடிய உகாய் (சேர்ந்த) [26]புழுப் பிரயோகம் ஒரு திங்களிற் கவர்வதாம். [27]மக்களுக்குக் [28]கலை யளவும், கழுதை குதிரைகளுக்கு [29]இருமடங்கும், யானை ஒட்டகங் களுக்கு நான்கு மடங்குமாம்.

தண்ணீர் முட்டான், [30]கர்த்தமம், நண்டு, அலரி, பேய்ச்சுரை, மீன் என்பவற்றின் புகையானது ஊமத்தை வரகுகளின் வைக்

---

[21] மேற் கூறிய பொடிகளின் புகையும் உடன் உயிரைக் கவர்வதாம் என்பது கருத்து.

[22] மேற் கூறியவற்றுள் ஒரு புழுவைக் கொதிக்க வைத்து, முகர்தல் முதலியன செய்யின் உடலை உலர்த்திவிடும் என்பது. இது தனித்து உப யோகப்படுத்து முறையாகும்.

[23] கலப்பு முறையைக் கூறுகின்றார். கொதிக்கச் செய்யப்பட்ட அதுவே கருநாக முதலியவற்றின் சேர்க்கையை அடைந்தபோது உடனே உயிரைக் கவரும் என்பது.

[24] 'ராக்ஷசன்' என்ற பெயர் கொண்ட ஒரு வகை ஓடதியென்ப.

[25] கலந்து பயன்படுத்தப்படின் 15 நாட்களில் இறத்தலை யுண்டு பண் ணும் தன்மையை யுடையதாம் என்பது.

[26] புழுவுடன் கூடிய கலப்பு முறையைப் பயன்படுத்தினால் ஒரு மாதத் தில் இறத்தலை யுண்டு பண்ணும் என்பது.

[27] மேற் கூறிய புழுப் பிரயோகத்தை ஆளுதற்குரிய அளவினைக் கூறு கின்றார்.

[28] கலை—சிறிய கூறு. ஒரு தோலாவில் பதினாறில் ஒரு கூறென்ப.

[29] இரு மடங்கு—இரண்டு கலையளவு.

[30] கர்த்தமம்—குங்குமம் அகில் கஸ்தூரி கற்பூரம் சந்தனம் என்னு மிவை சம அளவில் சேர்த்துக் கலக்கப்பெற்ற ஒரு வகை வாசனைப் பொருள் என்ப.

கோலுடனுவது கொத்தமல்லி [31]பலாசங்களின் வைக்கோலுடனு வது [32]மிகுந்த காற்றிலும் எதிர்காற்றிலும் வைக்கப்படின் அக் காற்று இயங்கும் வரை கொல்லுவதாகும்.

பூதிப் புழு மீன் பேச்சுரை தண்ணீர் முட்டான் கர்த்தமம் சமித்து [33]இந்திரகோபம் என்பவற்றின் பொடியாவது, பூதிப்புழு கொசு [34]அராலே ஊமத்தை நெரிஞ்சில் என்பவற்றின் பொடியா வது, ஆட்டின் கொம்பு குளம்புகளின் பொடியுடன் [35]கலக்கப் படின், அவற்றின் புகை, குருட்டுத் தன்மையைச் செய்வதாம்.

[36]பூதிகரஞ்ச இலே அரிதாளம் மனோசிலே குன்றிமணி செம் பருத்தி வைக்கோல் என்பவை, சிவப்பெருக்கு [37]லவணசாரம் பசுவின் சாணம் சிறு நீர்களுடன் அரைக்கப்படின், அவற்றின் புகை, குருட்டுத் தன்மையைச் செய்வதாம்.

[38]பாம்பின் உரி, பசு குதிரைகளின் சாணம், விலாங்கு மீன் தலே என்பவற்றின் புகை குருட்டுத் தன்மையைச் செய்வது.

[39]மாடப் புரு வாத்து கழுகு யானே மக்கள் பன்றி என்னு

---

31 பலாசம்—சிறு கச்சோலம். சிறு இண்டஞ்செடி எனினுமாம்.

32 அதிகமாக வீசும் காற்றிலோ எதிர்காற்றிலோ வைக்கப்பட்டு அதன் மணம் எவ்வளவு தூரம் செல்லுகின்றதோ அவ்வளவு தூரத்திலுள்ள உயிர் களேக் கொல்லுமென்பது கருத்து.

33 இந்திரகோபம்—மாரி காலத்துண்டாம் ஒருவகைப் பூச்சி. இது சிவப்பாக இருக்குமென்ப. வெளுப்பாகவுமிருக்கும் என நிகண்டு கூறும்.

34 அராலே—யக்ஷதூபம் எனப் பெயருள்ள ஒருவகைப் பிசின். தெய்வ வழிபாட்டுக் காலத்தில் நறுமணப் புகையாகப் புகைத்தற்குரியது.

35 கலக்கப்பட்டு அதனுல் உண்டாக்கப்பெற்ற புகை குருட்டுத் தன்மை யைச் செய்வதாம் என்பது.

36 பூதிகை என்ற ஒரு வகை மரத்தின் இலே என்க.

37 உவர் மண்ணிலிருந்து உண்டாய ஒரு வகை உப்பு.

38 பாம்புச் சட்டை, பசு குதிரை என்பவற்றின் சாணம், விலாங்கு மீன்தலே என்னும் இம்மூன்றினுலுண்டாக்கப்பட்ட புகையும் குருட்டுத் தன்மையைச் செய்வதாம்.

39 மாடப் புரு முதலிய அறுவகை உயிர்களின் சிறுநீரும் மலமும், பச்சைத் துத்தம் முதலிய மூன்று பொருள்கள், பருத்தி முதலிய மூன்றின் விதைகள், கோமூத்திரிகை முதலிய இரண்டின் வேர், வேம்பு முதலிய

மிவற்றின் சிறுநீரும் மலமும், பச்சைத் துத்தம் பெருங்காயம், யவத்தின் தவிடு அரிசி என்பவையும் பருத்தி [40]குடசம் நாயுருவி என்பவற்றின் விதைகளும், [41]கோமூத்திரிகை வல்லாரை இவற்றின் வேர், வேம்பு முருங்கை எலுமிச்சை [42]காக்ஷீபம் உகாய் இவற்றின் துகள், சர்ப்பம் சுறு மீன் இவற்றின் தோல், யானையின் நகம் கொம்பு என்பவற்றின் பொடி இவற்றுலாம் புகை தனித் தனியே ஊமத்தை வரகுகளின் வைக்கோலாலாவது கொத்தமல்லி பலாசங்களின் வைக்கோலாலாவது உண்டாக்கப்பட்டு, வீசிய அளவில் கொல்லுவதாகும்.

[43]காட்டு முல்லை கீழாநெல்லி நாணல் தண்ணீர் முட்டான் என்பவற்றின் வேராவது பாம்பு மயில் தோகை தித்திரி கீழா நெல்லியின் ஐம்பொருள் என்பவற்றின் பொடியாவது [44]முன்னைய முறைப்படி ஈரமுடையதும் உலர்ந்ததுமாகிய வைக்கோலினால் உண்டாக்கப்பட்டதும், போரில் இறங்குதல் வலிந்து கவர்தல்களால் உண்டாம் நெருக்கடிகளில் [45]தேசன நீர் [46]கண் மாற்றங்களைச் செய்தவரால் உண்டாக்கப்பட்டதுமான புகை எல்லா வுயிர்களுக்கும் கண்ணை யழிப்பதாம்.

ஐந்தின் பொடி, சர்ப்ப முதலிய இரண்டின் தோல் என்னுமிவற்றுள் ஒவ்வொன்றும் ஊமத்தை முதலியவற்றின் உலர்ந்த தண்டுடனுவது, கொத்தமல்லி முதலியவற்றின் உலர்ந்த தண்டுடனுவது சேர்த்துப் புகைக்கப்படுதலால் உண்டாம் புகை, பட்ட அளவிலேயே உயிரைக் கொன்றுவிடும் எனக் கூறுகின்றார்.

40 குடசம்—ஒருவகை மரம்.

41 கோமூத்திரிகை—ஒருவகைப் புல்.

42 காக்ஷீபம்—முள் முருக்கமரம்.

43 கண்ணைக் கெடுக்கும் புகைப் பிரயோகத்தைக் கூறுகின்றார்.

44 ஊமத்தை வரகு என்பவற்றின் உலர்ந்த தண்டுகளுடனுவது, கொத்தமல்லி பலாசங்களின் உலர்ந்த தண்டுகளுடனுவது என முன்னர்க் கூறப்பட்ட முறைப்படி என்பது.

45 தேசன நீர்—தன் கண்ணழிவை நீக்கி ஒளி தருதற்பொருட்டு ஏற்கப்படும் நீர். இது ஒரு மரத்திலிருந்து வடியும் நீர் என்பர். இதைப்பற்றிய விளக்கம் 149-ஆம் அத்தியாயத்திற் பெறப்படும்.

46 கண் மாற்றமாவது :—கண்ணழிவைப் பரிகரித்தற் குரியதும், மேற் கூறிய தேசன நீரை யொத்ததுமாகிய மருந்து.

நாகணவாய்ப்புள் மாடப்புறு கொக்கு நாரை என்னுமிவற்றின் எச்சம், எருக்கு தானி மரம் உகாய் கள்ளி என்னுமிவற்றின் பாலுடன் அரைக்கப்படின் குருட்டுத் தன்மையைச் செய்யும் [47]மையாகவும் நீரைக் கெடுப்பதாகவுமமையும்.

[48]யவகம் நெல்வேர் ஊமத்தைக் கனி சாதி மல்லிகையிலை மக்கட்சிறுநீர் என்னுமிவற்றின் தொகுதி, அத்தி வெள்ளை அலரி என்பவற்றின் வேருடனுவது, கலங்கிய நீர் செங்கரும்பு ஊமத்தை வரகு என்னுமிவற்றின் கொதி சாறுடனுவது கொத்தமல்லி பலாசங்களின் கொதி சாறுடனுவது கலக்கப்படின் [49]மயக்கப்பிரயோகமாம். பெருங்கயல் மீனின் கொழுப்பு உலோத்திரம் இலவம் [50]மயூரபதி என்னுமிவற்றின் கலப்பு, குன்றிமணி நீர்த்திப்பிலி [51]நஞ்சு மூலிகை மணிப்புங்கை என்பவற்றின் கலப்பு, அலரி தானி மரம் [52]பீலுகம் எருக்கு [53]மிருகமாரணீ என்பவற்றின் கலப்பு என்னுமிவை ஊமத்தை வரகுகளின் கொதி சாற்றுடனுவது யானைக் காது சிறுகச் சோலங்களின் கொதி சாற்றுடனுவது சேர்க்கப்படின் மயக்கப் பிரயோகமாம். [54]எல்லா வகைகளும் புல் விறகு நீர் என்பவற்றைக் கெடுப்பதாம்.

[55]ஓணனுடைய பக்குவஞ் செய்யப்பட்ட நரம்பு பல்லி குருட்டுப் பாம்பு என்பவற்றின் புகை கண்ணழிவையும் பைத்தியத் தன்மையையும் செய்வதாம்.

---

47 மை—கண்ணுக்குத் தீட்டப்படுவது.

48 அறிவு மயக்கத்தை யுண்டாக்கும் பிரயோகத்தைக் கூறுகின்றார். யவகம்—பார்லி என்ப.

49 அறிவு மயக்கத்தை யுண்டாக்கும் பிரயோகமாம்.

50 மயூரபதி—ஒருவகை ஓடதி.

51 நஞ்சு மூலிகை—காலகூட முதலியன.

52 பீலுகம்—ஒரு மரம். உகாய் எனினுமாம்.

53 மிருகமாரணீ—ஒருவகை ஓடதி. (மருந்துப்பொருள்).

54 எல்லா வகைகள்—மேற்கூறிய எல்லாவகைச் சேர்க்கைகள். (கலப்புகள்).

55 கண்ணழிவு, அறிவு மயக்கம் என்னுமிரண்டையும் உண்டாக்குதற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார். ஓணன் முதலியவற்றின் நரம்புத் தொகுதியைக் கொளுத்தலாலுண்டாம் புகை, கண்ணழிவையும் அறிவு மயக்கத்தையும் உண்டுபண்ணும் என்பது கருத்து.

ஓணன் பல்லிகளின் [56]கலப்பு குட்டத்தைச் செய்வதாம்.

பல வண்ணமுள்ள தவளையின் நரம்பு, [57]மது என்பவற்றுடன் சேர்ந்த [58]அதுவே [59]பிரமேகத்தையும், மக்கட் குருதியுடன் சேர்ந்தபோது க்ஷய (என்புருக்கி) நோயையும் உண்டு பண்ணும்.

[60]குற்றமுள்ள நஞ்சு ஊமத்தை வரகு என்பவற்றின் பொடி, கொள்ளிக் கோட்டான் எறும்பு என்பவற்றின் கலப்பும், [61]மாதிரு வாககம், [62]அஞ்சலிகாரம் மயில் தோகை தவளை தானி மரம் உகாய் என்பவற்றின் கலப்பும் கொள்ளை நோயைச் (காலராவைச்) செய்வதாம்.

கீழாநெல்லியின் [63]ஐந்து, கௌண்டின்யகம் கொன்றை இருப்பை என்பவற்றின் கலப்பும் சுரத்தைச் செய்வதாம்.

கள்ளிக்காக்கை கீரி மஞ்சிட்டை திப்பிலிவேர் என்பவற்றின் கலப்பு, கழுதைப் பாலுடன் அரைக்கப்படின், ஒரு திங்கள் அரைத் திங்களில் ஊமை செவிட்டுத் தன்மைகளைச் செய்வதாம். [64]மக்களுக்கு ஒரு பகுதி மட்டுமென்ற முன்னையதுடன் ஒத்ததாம்.

[65]ஓடதிகளை நசுக்கிக் கொதிசாற்றினாற் பண்படுத்தலும், உயிருள்ளவற்றிற்குப் பொடித்தலும் [66]அல்லது எல்லாவற்றிற்

---

56 கலப்பு என்பது ஈண்டுச் சேர்த்துப் புகைத்தலாலுண்டாய புகை என்னும் பொருட்டு.

57 மது—ஒருவகை ஓடதிப் பொருள்.

58 அது—ஓணன் பல்லிகளின் கலப்பு.

59 பிரமேகம்—சிறுநீர்ப் பெருக்கை மிகுதிப்படுத்தும் நோய்.

60 ஓடதிகளால் தடைப்பட்ட ஆற்றலையுடைய நஞ்சு என்பது.

61 மாதிரு வாககம்—ஒருவகைப் புள்.

62 ஒருவகை ஓடதி.

63 ஐந்து—பட்டை, இலை, மலர், கனி, கிழங்கு என்பன.

64 26—28 குறிப்புக்களைக் காண்க.

65 மேற்கூறிய பிரயோகங்களில் ஓடதிகளை நசுக்கிக் கொதிப்பித்தும் உயிர்ப்பிராணிகளைப் பொடித்தும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

66 இரண்டினையும் கொதிக்க வைத்தல் என்ற ஒரு முறையைக் கூறுகின்றார்.

கும் கொதி சாற்றினுற் பண்படுத்தலும் ஆம். [67] இம்முறை சிறந்த ஆற்றலுடையதாகும். பிரயோகச் சிறப்பு [68] இவ்வாறும்.

[69] இலவம் வெள்ளையலரி கொத்தமல்லி என்னுமிவற்ருல் உண்டாக்கப்பட்டதும், திப்பிலிவேர் [70] வச்சநாபத்துடன் (பச்சை நாவியுடன்) சேர்க்கப்பட்டதும், மூஞ்சூரின் குருதிப் பூச்சால் பூசப் பெற்றதுமான அம்பு, எவனைத் தாக்குமோ, தாக்கப்பட்ட அவன், பத்து மக்களைக் கடிப்பான். கடிக்கப்பட்டார் ஒவ்வொருவரும், வேறு பத்து மக்களைக் கடிப்பர்.

[71] சேங்கொட்டை அரக்கன் நாயுருவி மருதமரம் என்னு மிவற்றின் மலர்களோடு ஏலமரம் தானிமரம் குங்கிலியம் ஆலாலம் என்பவற்றின் கஷாயமும், செம்மறியின் குருதியுடனும் மக்கள் குருதியுடனும் கலக்கப்படின், [72] கடித்தற்பிரயோகமாம். [73] அதன் அரைத் [74] தரண' அளவுள்ளதை, [75] மாவு பிண்ணுக்குக்களுடன் நீரிற் கலந்தால், நூறு விற்கடை நீளமுள்ள நீர் நிலையைக் கெடுக் கிறது. [76] இதனுல் கடிக்கப்படுதல் சம்பந்தப்படுதல் என்பவற்றை யுடைய மீன் வரிசையும் நஞ்சாகின்றது. இந்நீரைக் குடிப்பவனும் தொடுபவனும் [77] நஞ்சாவர்.

---

67 கொதிக்க வைத்து உண்டாக்கப்பட்டதற்கு ஆற்றற் சிறப்பைக் கூறுகின்ருர்.

68 இவ்வாறும்--கூறி முடிக்கப்பட்டதாம்.

69 ஔடதங்களின் ஆற்றலைக் கூறுகின்ருர்.

70 வச்சநாபம்—ஒருவகை நஞ்சு.

71 கடித்தற் பிரயோகத்தின் மற்ருெரு வகையைக் கூறுகின்ருர்.

72 மேற்கூறிய கஷாயத்தை உபயோகித்தல், முற்கூறியதுபோல பல மக்களைக் கடிப்பித்தற்குரிய உபாயமாம் என்பது கருத்து.

73 அதன் ஆற்றலைக் கூறுகின்ருர்.

74 தரணம் முதலிய அளவைப்பற்றிய விளக்கத்திற்கு 40-ஆம் அத்தியா யத்தைப் பார்க்க.

75 மாவு—சத்துமாவு என்ப.

76 கடிப்பித்தற் பிரயோகத்தால் கெடுக்கப்படும் இம்முறையால் என்பது.

77 விஷமயமாகிருன் என்பது கருத்து.

[78]சிவப்புக் கடுகு வெண் கடுகு என்பவற்றுடன் உட்டிரிகைப் பாத்திரத்தில், தோண்டப்பட்ட நிலத்தில் மூன்று பக்கம் வைக்கப் பட்ட நீருடும்பு, கொல்லுதற்குரியவனால் எடுக்கப்பட்டுப் பார்க்கு மளவிலேயே கொல்லுகின்றது. [79]கரு நாகமுமாம்.

[80]மின்னலாற் கொளுத்தப்பட்ட சுடரற்ற தீ, மின்னலாற் கொளுத்தப்பட்ட கட்டைகளால் ஆக்கப்பட்டும் ஓங்கச் செய்யப் பட்டும் கார்த்திகையிலாதல் பரணியிலாதல் உருத்திரச் செயலால் ஓமஞ் செய்யப்பட்டும் போடப்பட்டபோது மாற்றச் செயலின்றிக் கொளுத்துவதாம்.

சுலோகங்கள்

(1—4) [81]மூங்கிலிலிருந்து கொணர்ந்த தீயைத் [82]தனியே [83]தேனாலும், கள் விற்போனிடமிருந்த [84]தீயைக் கள்ளாலும்,

---

[78] நீருடும்பை, வெண்கடுகு சிவப்புக்கடுகு என்பவற்றுடன் உட்டிரிகை என்ற பாத்திரத்தில் வைத்து, நிலத்தைத் தோண்டி அதனுள் 45 நாட்கள் வைத்துவிட்டு, அதனை எடுக்கச் செய்தால், எடுப்பவன் அதைப் பார்க்கும் போதே, அது அவனைக் கொன்றுவிடும் எனக் கூறுகின்றார்.

[79] மேற்கூறியவாறு இருவகைக் கடுகுகளுடன் உட்டிரிகையில் வைத்து 45 நாள் நிலத்தில் வைத்து எடுக்கப்படின் பார்க்குமளவிலேயே எடுப் பவனைக் கொல்லும் என்பது கருத்து.

[80] மாற்றச் செயலற்ற தீப்பிரயோகத்தைக் கூறுகின்றார். மின்னலால் கொளுத்தப்பட்ட கட்டையில் உள்ளதும், ஜ்வாலை யற்றதுமான அம் மின்னல் தீயானது, அக் கட்டைகளால் ஓங்கச் செய்யப்பெற்று, பரணி அல்லது கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய காலத்தில், உருத்திரனை முதன்மையாகக் கொண்டு செய்யும் கன்மத்தால் ஓமம் செய்யப்பட்டுப் பகையரண்களில் போடப்படின், எத்தகைய தடையையுங்கடந்து பற்றுதற் குரிய எல்லாவற்றையும் கொளுத்தும் என்பது கருத்து. அக் கன்மத்தை யநுட்டிக்கு முறையை அத்துறைவல்லாரிடமிருந்து அறிதல் வேண்டும் என்க.

[81] மற்றொரு பிரயோகத்தைக் கூறுகின்றார். ஒரு மூங்கிலுடன் மற் றொரு மூங்கில் உராய்வதால் உண்டாய தீயை என்பது.

[82] பிற கூறப்படும் தீயினின்றும் தனியாக வைக்கப்பட்டு அதில் ஓமஞ் செய்தல் வேண்டும் என்பது. 'தனியே' என்னுமிதைப் பின்வரும் தீயோடும் இயைக்க.

[83] 'ஓமஞ் செய்தல் வேண்டும்' என்ற பின்வரும் பகுதியோடு இயைக்க. பின்னுள்ளவற்றிற்கும் இஃதொக்கும்.

[84] கொணரப்பட்ட தீயை யென்க.

[85]இரும்பிலிருந்த தீயைச் சிறு தேக்கினாலும் அல்லது நெய்யாலும், [86]ஒருவற்கேயுரிய மனைவியின் தீயை ஆரத்தாலும், விலை மகளிரின் தீயைக் கடுகுகளாலும், கருவுயிர்த்தவர்களின் தீயைத் தயிராலும், [87]தீயைப் பேணுபவன் தீயை அரிசியாலும், சண்டாளன் தீயை இறைச்சியாலும், [88]சிதைத் தீயை மனிதனாலும், [89]கலப்புத்தீயை ஆட்டின் கொழுப்பு மனிதன் ஆலமரம் என்னுமிவற்றாலும் [90]தீ மந்திரத்தால் கொன்றைக் கட்டைகளாலும் ஓமஞ் செய்தல் வேண்டும். இத் தீ மாற்றமற்றதும் பகைவரின் [91]கண் மயக்கத்தைச் செய்வதுமாகும்.

[92]அதிதி! உனக்கு வணக்கம், அநுமதி! உனக்கு வணக்கம், கலை மகளே! உனக்கு வணக்கம், ஒளி பொருந்திய கதிரவ! உனக்கு வணக்கம், தீயினுக்குக் கொடுக்கிறேன், சோமனுக்குக் கொடுக்கிறேன், நில மகளுக்குக் கொடுக்கிறேன், ஆகாயத்துக்குக் கொடுக்கிறேன்.

பதினான்காம் அதிகரணம் முதற் பிரகரணம்
'பகைக்கொலைப் பிரயோகம்' என்னும்
நூற்றுநாற்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

85 'இரும்பு' என்பதால் இருப்புத்தொழில் புரிபவரைக் கொள்க. கொல்லரிடமிருந்து கொணரப்பட்ட தீயை யென்பது.

86 ஒருவற்கே யுரிய மனைவி—கற்புடைய பெண். பதிவிரதை என்க.

87 நாடோறும் தீவழிபாடு செய்பவன் என்பது.

88 சிதைத்தீ—பிணத்தைக் கொளுத்துவதற்கெனச் சிதையில் இடப்பட்ட தீ.

89 தனித்தனியே மேற்கூறியவாறு ஓமஞ்செய்யப்பட்ட ஒன்பது வகைத் தீயையும் ஒன்று சேர்த்து அதில் ஆட்டின் கொழுப்பு முதலியவற்றால் ஓமஞ் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

90 சம்பிரதாய முறையால் அறியப்பட்ட தீ மந்திரத்தால் என்பது.

91 தன் அரண் முதலியவற்றில் பற்றியிருக்கும் இத்தீயைப் பார்ப்பவன் இதற்கு மாற்றம் புரியும் ஆற்றலை யிழப்பதுடன், இதைப் பார்ப்பதால் மூடத்தன்மையையும் அடைவான் என்பது கருத்து.

92 மந்திரங்களின் சில பகுதிகளைக் கூறுகின்றார்.

பதினன்காம் அதிகாரணம்—மறைவுச் செயல்

இரண்டாம் பிரகாரணம்—[1]வஞ்சித்தல்—வஞ்சித்தலில் [2]வியப்புண்டாக்கல்

நூற்றுநாற்பத்தேழாம் அத்தியாயம்

[3]வாகை அத்தி வன்னி என்னுமிவற்றின் பொடியை நெய் யுடன் கலந்தால் அரைத் திங்களுக்குரிய பசிப் பிரயோகமாம்.

[4]கோரை, கருநெய்தற் கிழங்கு, கரும்பின் வேர், தாமரைத் தண்டு அறுகம்புல், பால், நெய், [5]மண்டம் என்பவற்ருல் உண்டா யது திங்களுக்குரியதாம்.

[6]உழுந்து, யவம், கொள்ளு, தருப்பையின் வேர் என்னுமிவற் றின் பொடியைப் பால் நெய்களுடன் அருந்தியும், ஒத்த அளவிற்

147-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] வஞ்சித்தல்—மருந்து மந்திரம் என்பவற்றைக் கையாளுதல் மூலமாக வேறுபட்ட உருவம், பசியின்மை முதலியவற்றை யுண்டாக்கிப் பகைவரை வஞ்சித்தல். இப் பிரகரணத்தை 'வியப்புண்டாக்கல்', 'மருந்து மந்திரப் பிரயோகம்' என வகுத்து இரு அத்தியாயங்களாற் கூறுவர்.

[2] வியப்பு—ஒரு பக்கம், ஒரு திங்கள் முதலிய காலம் வரை உணவின்றி யிருத்தல்.

[3] ஒரு பக்கம் (15 நாட்கள்) வரை உபவாசமிருத்தற்குரிய முறையைக் கூறுகின்ருர்.

[4] ஒரு திங்கள் (மாதம்) வரை உபவாசமிருத்தற்குரிய முறையினைக் கூறுகிருர்.

[5] மண்டம்—நெய் எண்ணெய் முதலிய திரவப்பொருளின் மேல் தெளிவு.

[6] மாத உபவாசத்திற்கு மற்ருெரு முறை கூறுகின்ருர். உழுந்து முதலிய நான்கின் பொடியைப் பால் நெய்களுடன் கலந்து உட்கொள்ளுதல் ஒரு முறையாகும். ஒத்த அளவுள்ள கொடி, பால், நெய் என்பவற்றை உட்கொள்ளுதல் இரண்டாம் முறையாகும். மருதமரம் சித்தர்மல்லிகளின் வேர் கசண்டுகளுடன் பாலைக் கலந்து உட்கொள்ளுதல் மற்ருெரு முறையாகும். சித்தர்மல்லி வேர் கசண்டு என்பவற்றுடன் கொதிக்க வைத்துத் தூய்மை செய்யப்பட்ட பாலைத் தேன் நெய் என்பவற்றுடன் கலந்து உட்கொள்ளுதல் வேருெரு முறையாகும். எனவே நான்கு முறை கள் விகற்பித்துக் கூறப்பட்டனவாம்.

செய்யப்பட்ட [7]கொடி, பால், நெய்யைப் பருகியும், மருதமரம், சித்தர்மல்லி என்பவற்றின் வேர் [8]கசண்டு என்னுமிவற்றைப் பாலுடன் அருந்தியும், அதனால் ஆக்கப்பட்ட பாலைத் தேன் நெய் என்பவற்றுடன் அருந்தியும் திங்கள் (வரை) உபவாசமாயிருக் கிறான்.

[9]வெள்ளாட்டின் சிறுநீரில் ஏழுநாட்கள் ஊற வைத்த கடுகு களால் ஆக்கப்பட்டதும், பேய்ச்சுரையில் [10]திங்களும் அரைத் திங்களும் இருந்ததுமான எண்ணெய், நாற்கால் உயிர்களுக்கும் இரு கால் உயிர்களுக்கும் உருவ மாறுபாட்டைச் செய்வதாம்.

[11]ஏழு நாட்கள், மோர் யவம் என்பவற்றை யருந்தியவனுக் குப் [12]பின்னர் வெண் கழுதையின் புரீடம் யவம் என்பவற்றால் ஆக்கப்பட்ட வெண்கடுகெண்ணெய், உருவமாறுபாட்டைச் செய்வதாம்

[13]இவற்றுள் ஒன்றின் சிறுநீர் புரீடம் என்பவற்றின் ரசத் தால் உண்டாக்கப்பட்டதும் ஊமத்தை முசுக்கட்டைச் செடி நெல் என்னுமிவற்றின் பொடியை [14]மாற்றுப்பொருளாகக்கொண்டது மான கடுகெண்ணெய் வெண்மையைச் செய்வதாம்.

[15]வெண்கோழி மலைப் பாம்புகளின் புரீடப் பிரயோகம் வெண்மையைச் செய்வதாம்.

[16]வெள்ளாட்டின் சிறு நீரில் ஏழு நாட்கள் ஊறிய வெண்

---

7 கொடி—'அஜமோதகம்' என்னும் ஒருவகைக் கொடியென்ப.

8 கசண்டு—நீர்மைப் பொருளின் அடியிற் படிந்திருப்பது.

9 விகாரரூபத்திற்குரிய பிரயோக முறையைக் கூறுகின்றார்.

10 ஒன்றரை மாதம் இருந்ததாகிய எண்ணெய் என்பது.

11 அதற்குரிய மற்றொரு முறை கூறுகின்றார்.

12 ஏழு நாட்களுக்குப்பின்னர் வெளுப்பான கழுதையின் மலத்துடனும் யவதானியத்துடனும் பக்குவஞ் செய்யப்பட்ட வெண்கடுகெண்ணெய் உட் கொள்ளப்படின் உருவமாற்றைச் செய்யும் என்பது கருத்து.

13 வெண்மையாக்குதற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார். இவற் றுள்—வெள்ளாடு வெண்கழுதை என்பவற்றுள்.

14 எதிராகச் செயல் புரிதற்குரிய (Counter action) ஔடதம் என்ப.

15 வெண்மையாக்குதற்குரிய வேறொரு முறையைக் கூறுகின்றார்.

16 மற்றுமோர் முறையைக் கூறுகின்றார்.

கடுகுகளும் பதினைந்து நாட்கள் தங்கிய மோர் ஊமத்தைப் பால் எருக்கு முசுக்கட்டைச் செடி கடுகம் மீன் [17]விலங்கம் என்பவையும் ஆகிய இப்பிரயோகம் வெண்மையைச் செய்வதாம்.

[18]கடல் தவளை சங்கு சுதை வாழை [19]உப்பு மோர் என்னு மிவற்றின் [20]பிரயோகம் வெண்மையைச் செய்வதாம்.

கள்ளுடன் சேர்ந்த வாழை கரு நொச்சிலி, உப்பு, பாதரசம், [21]சுக்தம் என்பவையும், மோர், ஊமத்தை, முசுக்கட்டைச் செடி, கள்ளி, உப்பு என்பவையும் புளிப்புக் காடியும் பதினைந்து நாட்கள் இருப்பின் (இப்) பிரயோகம் வெண்மையைச் செய்வதாம்.

[22]கொடியிலிருக்கும் பேய்ச் சுரையில் அரைத் திங்கள் வைக்கப் பட்ட சுக்கும், வெண்கடுகுமாவும் உரோமத்தை வெண்மையாக்கு வதாம்.

சுலோகம்

[23]ஊமத்தை, முசுக்கட்டைச் செடி, [24]மருதங்கள், [25]புழு, வெண்பல்லி என்னுமிவற்றின் மாவினுற் பூசப்பெற்ற தலைமயிர் சங்கு (போல்) வெண்மையாகும்.

---

17 விலங்கம்—'கிருமிக்னம்' (புழுவையழிப்பது) என்ற பெயருள்ள ஓர் ஓடதி.

18 வேறெரு முறையைக் கூறுகின்றுர்.

19 உப்புவிசேடம்.

20 இவைகளின் சேர்க்கையாலாக்கப்பட்ட பொருளைக் கையாளுதல் என்க.

21 சுக்தம்—மண்பானை முதலானவற்றில் தேன் வெல்லம் களி என்ப வற்றைக் கலந்து மூன்றிரவு வைத்த புளிப்புடைய காடி என்பர் நிகண்டுகர். கிழங்கு வேர் கனிகளைப் பிழிந்தெடுக்கப்பட்ட பொருள் என்பாருமுளர்.

22 உரோமத்தை வெண்மையாக்குதற்குரிய முறையைக் கூறுகின்றுர். கொடியினின்றும் பறிக்கப்படாதிருக்கும் பேய்ச்சுரைக்காய் என்பது.

23 உரோமத்தை வெளுப்பாக்குதற்குரிய மற்றெரு முறையைக் கூறு கின்றுர்.

24 'ககுபம்' என்றும் 'யவஸம்' என்றும் மருதம் இருவகைப்படும் என்பர்.

25 புழு—ஒருவகைப் புழு; இன்னதென்பதைச் சம்பிரதாயத்தாலறிதல் வேண்டுமென்ப.

[26]சேங்கொட்டை பாதரசங்களாற் பூசப்பெற்றதும் பசுவின் சாணம் அல்லது [27]திந்துகம் வேம்புகளின் கசண்டு என்பவற்ருல் தேய்க்கப்பட்டதுமாகிய உடலில் ஒரு திங்களில் குட்ட நோய் உண்டாகும்.

[28]கரு நாகத்தின் வாயிலாதல் பல்லியின் வாயிலாதல் ஏழு நாட்கள் வைக்கப்பட்ட குன்றிமணிகள், குட்டத்தை யுண்டு பண்ணுவன.

[29]கிளியின் பித்து அண்டநீர் என்பவற்ருற் [30]பூசுதல், குட்டப் பிரயோகமாம்.

[31]முறளஞ் செடியின் [32]பிசிஞலாக்கப்பட்ட [33]கொதிசாறு, குட்டத்திற்கு மாற்ருகும்.

[34]பெட்டைக் கோழி புடலை தண்ணீர் முட்டான் வேர்களுடன் கூடியதை உணவாகக் கொள்பவன் ஒரு மாதத்திற்குள் வெண்மையையடைகிருன்.

[35]ஆலின் கொதிசாற்றில் நீராடி ஓரிதழ்த் தாமரைக் கசண்டினைப் பூசிக் கொண்டவன் கரு நிறத்தை யடைகிருன்.

[36]கழுகு ஞாழற்பூ என்பவற்றின் எண்ணெயுடன் சோநத அரிதாளம் மனேசிலை என்பன கரு நிறத்தைச் செய்வனவாம்.

[37]கடுகெண்ணெயுடன் கூடிய மின்மினிப் பூச்சியின் பொடி இரவில் ஒளிர்வதாகும்.

---

26 குட்ட நோயை உண்டாக்குதற்குரிய முறையைக் கூறுகின்ருர்.
27 திந்துகம்—பச்சிலை மரம்.
28 குட்டத்தை யுண்டாக்குதற்கு மற்றுமொரு முறையினைக் கூறுகிருர்.
29 வேருெரு முறையைக் கூறுகின்ருர்.
30 பூசுதல்—உடலிற் பூசுதல்.
31 குட்டநோயை நீக்குதற்குரிய மாற்றுக் கூறுகின்ருர்.
32 ஈண்டு 'கல்கம்' என்று முதனூல் கூறும்.
33 கொதிசாறு—கஷாயம்.
34 வெண்மையை உண்டாக்கும் முறையைக் கூறுகின்ருர்.
35 கருமையாக்குதற்குரிய முறையைக் கூறுகின்ருர்.
36 அதற்கு வேருெரு முறையைக் கூறுகின்ருர்.
37 மற்ருெரு முறையைக் கூறத் தொடங்குகின்ருர்.

[38]கழுகு ஞாழற்பூ என்பவற்றின் எண்ணெயுடன் மின்மினிப் பூச்சி மண்ணுண்ணிப் பாம்பு என்னுமிவற்றின் பொடியும், [39]கடற்பிராணியின் பொடியும் குடுமிக்கடுவன், தலையெலும்பு களின் பொடியும், கருங்காலி கோங்கு மரங்களின் மலர்ப்பொடியும் மூங்கிற் பொடியும், தவளையின் கொழுப்புடன் கூடிய வேப்பம் பட்டைப் பிசினும் [40]தீயால் உடலில் ஒளியை யுண்டு பண்ணுவ தாம்.

வேப்பம்பட்டை, கள்ளி, வாழை, எள் கசண்டு என்பவற்றாற் பூசப்பெற்ற உடல் தீயால் ஒளிர்வதாம்.

உகாய்ப் பட்டைப் பிசின்மயமான உருண்டை கையில் [41]ஒளிர்வதாம். தவளைக் கொழுப்பாற் [42]பூசப் பெற்றது தீயால் ஒளிர்வதாம்.

[43]அதனாற் பூசப் பெற்றதும் தருப்பை மாம்பழங்களின் தைலத்தால் நனைக்கப்பட்டதும், கடல் தவளை நுரை [44]சருச்ச ரசங்களின் பொடியுடன் கூடியதுமான உடல் ஒளிர்வதாம்.

[45]தவளைக் கொழுப்பாலாக்கப்பட்ட பாலாலும், நண்டு முதலியவற்றின் கொழுப்பாலும் [46]ஒத்த பகுதியுள்ளதாக ஆக்கப் பட்ட எண்ணெய் உடலிற் பூசப்பெற்றுத் தீயின் ஒளியை உண்டு பண்ணுவதாம். தவளைக் கொழுப்பினால் [47]பூசப் பெற்றவன் தீயால் ஒளிர்வான்.

---

38 தீயால் உடலுக்குத் தீங்கு நேராவாறு உடலில் சுடர்விட்டெரிதற் குரிய முறைகளைக் கூறுகின்றார்.

39 கடற்பிராணி—கடலில் வாழும் உயிர்களுள் ஒருவகை.

40 மேற்கூறியவற்றுள் ஒவ்வொன்றும் உடலில் பூசப்பட்டபோது உட லுக்குத் தீங்கு இன்றியே தீ சுடர்விட்டெரிதற் குரியது என்பது.

41 பின் வாக்கியத்தில் ' தீயால் ஒளிர்வது என்று கூறப்பட்டிருத்தலால், ஈண்டுத் தீயின்றியே ஒளிர்வது என்பது பெறப்படும் என்ப.

42 பூசப்பெற்ற உருண்டை எனப் பொருள் உரைக்க.

43 அதனால்—அவ்வுருண்டையால்.

44 சருச்சரசம்—குங்கிலியம் முதலான தூபப்பொருள்.

45 தவளையின் கொழுப்புடன் சேர்ந்து பாகஞ்செய்யப்பட்ட வென்க.

46 பால் கொழுப்பு என்பவற்றின் அளவுடன் ஒத்த அளவுள்ளதாக என்பது.

47 மேற்கூறிய எண்ணெயாற் பூசப்பெற்றவன் என்பது.

மூங்கில் வேர் நீர்ப் பாசி என்பவற்ருற் பூசப் பெற்றதும் தவளைக் கொழுப்பினுல் பூசப் பெற்றதுமான உடல் தீயால் ஒளிர்வதாகும்.

தவளைக் கொழுப்பினுல் பூசப்பெற்ற வேம்பு, [48]பிரதிபலை, அசோகம், கள்ளி, வாழைவேர் என்னுமிவற்றின் கசண்டுடன் கூடிய எண்ணெயால் நனைக்கப் பெற்ற காலையுடையவன் நெருப்பில் நடப்பவனுவன்.

சுலோகங்கள்

(1—2) [49]உபோதகை, பிரதிபலை, அசோகம், வேம்பு என்னுமிவற்றின் வேர்க் கசண்டினுலும் தவளைக் கொழுப்பினுலும் எண்ணெயை இறக்கல் வேண்டும். அழுக்கற்ற கால்களை இதனுல் தேய்த்து, தீக் குவியலில் மலர்ப்பரப்பில் (செல்வதைப்)போல் இயங்கலாம்.

[50]அன்னம் நாரை என்பவற்றின் வால்களிலோ, நீரில் நீந்தும் மற்ற பெரிய [51]பறவைகளின் வால்களிலோ கட்டப்பட்ட [52]நள விளக்கு இரவில் [53]உற்கைக் காட்சியாம்.

[54]மின்னலைச் சார்ந்த சாம்பல் தீயைத் தணிப்பதாம்.

மகளிரது பூப்பினுல் நணைக்கப்பெற்ற உழுந்தும், தவளைக் கொழுப்புடன் கலக்கப்பட்ட [55]கொட்டிற் சிறு வழுதல் வேரும்,

---

48 பிரதிபலை—ஓடதி விசேடம்.

49 தண்ற்குவியலில் காலால் செல்லுதற்குரிய பிரயோக முறையைச் சுலோகங்களாற் கூறுகின்ருர். உபோதகை—'ஸூதா' என்ற ஓடதி விசேடம் என்ப.

50 தீவட்டி முதலியவற்றின் காட்சிக்குரிய முறையைக் கூறுகின்ருர்.

51 நீர்க்காகம் முதலிய பறவைகளின் என்பது.

52 நளம்—ஒருவகைப் புல். அதனுலாக்கப்பட்ட சிறு விளக்கென்பது.

53 உற்கை—பேய் பிசாசுகளினுலாக்கப்பட்ட கொள்ளி. அதைப் பார்ப்பது போன்ற காட்சியை மேற்கூறிய நளவிளக்கு இரவில் மக்களுக்கு உண்டுபண்ணி அச்சுறுத்துவதாம்.

54 மின்னல்தீயால் கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து உண்டாய சாம்பல் என்க.

55 கொட்டிலில் உண்டான சிறு வழுதற் செடியின் வேர்.

[56]எரியும் அடுப்பில் வேவாதிருப்பனவாம். [57]அடுப்பினின்றும் தூய்மைப் படுத்துதல் மாற்றச் செயலாம்.

[58]உகாய் மய்மாகித் தீயை உட்கொண்டதும் ஆளிவேர் அல்லது [59]நூல் முடிச்சினையுடையதும் பஞ்சால் சுற்றப் பெற்றதுமான சால், வாயினின்றும் [60]தீயையும் புகையையும் விடுவிப்பதாம்.

தருப்பை மாம்பழம் என்பவற்றின் எண்ணெயால் நனைக்கப் பெற்ற தீ, [61]மழையிலும் பெருங்காற்றிலும் ஒளிர்வதாகும்.

எண்ணெயுடன் கூடிய கடல் நுரை, நீரில் மிதந்து கொண்டு ஒளிர்வதாகும்.

குரங்குகளின் எலும்புகளில் பலவகை வண்ணமுள்ள மூங்கிலால் கடையப்பட்ட தீ நீரால் அணையாது. நீரால் கொழுந்து விட்டெரிவதுமாகும்.

படைக்கலத்தாற் கொல்லப்பட்டவன் அல்லது கழுவிலேற்றப் பட்டவன் என்பவருடைய இடப்பக்கத்திலுள்ள [62]பர்சு (என்னும்) எலும்பில் பலவகை வண்ணமுள்ள மூங்கிலாற் கடையப்பெற்ற தீயும், பெண் அல்லது ஆடவனுடைய எலும்புகளில் மக்களுடைய பர்சுகத்தால் கடையப்பெற்ற தீயும் எங்கு மும்முறை வலப்பக்கமாகச் செல்லுகின்றதோ அங்கு வேறு தீ ஒளிர்வதில்லை.

சுலோகம்

[63]மூஞ்சூர், வலியன், உவர்மண், நிலப்புழு என்னுமிவை

---

56 எரியும் அடுப்பில் வைக்கப்பட்டும், பாகத்தை யடையாதிருக்கும் என்பது.

57 அடுப்பிலிருந்து இறக்கி அவற்றைத் தூய்மைப்படுத்தல் அதனை நீக்குதற்குரிய மாற்று என்பது கருத்து.

58 உகாய் மரக்கட்டையிற் பற்றிய தீ.

59 நூல்—சணல்.

60 தீயையும் புகையையும்வெளிவிடுத்தற்குச் சாதனமாயுள்ளதென்பது.

61 மழை முதலியவற்றில் அவியாது ஒளிரும் தன்மையதென்பது.

62 ‘ பர்சுகா ’ எனப்படும் எலும்பு என்ப.

63 பூட்டப்பட்ட விலங்கை முறித்தற்குரிய முறையைக் கூறுகின்றார்.

[64]பிசையப்பட்டுக் குதிரையின் சிறுநீருடன் வைக்கப்படின் (இருப்பு) விலங்கினைத் தகர்ப்பதாகும்.

அயக்காந்தக் கல்லும் [65]ஆம்.

[66]நண்டின் அண்டம், தவளை, உவர்மண், நிலப்புழுக்களின் கொழுப்பு என்பவற்றால் பன்றிக் கருவை [67]இரு மடங்காகப் பூசி, நாரை கள்ளிக்காக்கைகளின் விலா [68]உற்பல நீர் என்பவற்றுடன் பிசையப்படின் நாற்காலிருகாலுயிர்களின் [69]காற்பூச்சாம். கோட்டான் கழுகு என்பவற்றின் கொழுப்பினால் ஒட்டைத் தோற் செருப்பினை நனைத்து ஆலிலைகளால் மறைத்து ஐம்பது யோசனை தூரம் களைப்பின்றிச் செல்லலாம். [70]சியேனம், நாரை, காகம், கழுகு, அன்னம், [71]கிரௌஞ்சம், [72]வீசிரல்லம் என்பவற்றின் கொழுப்பும் [73]விந்துவும் நூறு யோசனை [74]தூரத்திற்காம். சிங்கம், புலி, யானை, காகம், கோட்டான் என்பவற்றின் கொழுப்பு,

---

64 தனித்தனியே அரைக்கப்பட்டுப் பின்னர் குதிரை மூத்திரத்துடன் ஒன்று சேர்த்துக் கலக்கப்படின் என்பது.

65 ஆம்—இருப்பு விலங்குகளைத் தகர்த்தற்குரியதாம். அயக்காந்தம் பலவகையாவன—இரும்பை யிழுப்பன சில; இரும்பை இயங்கச் செய்வன சில; சில இரும்பை முறிப்பன. ஈண்டு இறுதியிற் கூறப்பட்டதைக் கொள்ளல் வேண்டும் என்ப.

66 ஐம்பது யோசனை தூரம் களைப்பின்றிச் செல்லுதற்குரிய முறையைக் கூறுகின்றார்.

67 இருமடங்களவு கனமாகும்படி பூசி யென்பது.

68 உற்பலம்—ஈண்டு ஒருவகை மீன்.

69 காலில் பூசுதற்குரிய பொருளாம் என்பது.

70 ‘சியேன’ என்ற வடசொல் கழுகைக் குறிப்பதாயினும், ‘கிருத்ர’ என்று அதைக் குறிக்கும் வேறு சொல் அடுத்து வருவதால் ஈண்டு அச் சொல் அவ்வினத்தைச் சார்ந்த மற்றொரு வகைப் பறவையைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும்.

71 கிரௌஞ்சம்—அன்றில்.

72 அலை போன்ற உருக்கொண்ட உரோமக்கோடுள்ள பிராணி என்பர் உரையாசிரியர். இதனால் அணிலைக் கொள்ளலாம் என்க. ஈண்டு ‘சில்ல’ என்று பாடபேதங்கொண்டு ‘வல்லூறு’ என்று பொருள் கொள்வாருமுளர்.

73 விந்து—‘ரேதஸ்’ எனக் கூறும் முதல்நூல்.

74 அத்துணை தூரம் செல்லுதற்குச் சாதனமாம் என்பது.

சுக்கிலம், [75]எல்லா வருணத்திலுமுண்டாகும் கருச்சிதைவு, சுடலையிலிருந்து இறந்த குழவி என்பவற்றுள் ஒன்றை உட்டிரிகையில் பிழிந்து அதனாலுண்டாய [76]மேதசு நூறு யோசனை [77]தூரத்திற்காம்.

சுலோகம்

இங்ஙனம் தீயவையான வியப்பு உற்பாதங்களால் [78]அரசின்மை குறித்துப் பகைவனுக்கு அச்சத்தைச் செய்தல் வேண்டும். [79]கோபத்தில் குற்றம் சமம் (ஆகலின்) கூறப்படுகிறது.

பதினான்காம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம்
'வஞ்சித்தல்-வஞ்சித்தலில் வியப்புண்டாக்கல்' என்னும்
நூற்றுநாற்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

[75] நால்வகை வருணத்தாரின், விழுந்த கரு என்பது.

[76] மேதசு—கொழுப்பு.

[77] தூரம் வரை செல்லுதற்குச் சாதனமாம் என்பது கருத்து.

[78] பகைவனுக்கு நாடு இல்லாமற் செய்வதற்கு என்பது.

[79] மேற்கூறியவாறு திடுக்கிடச்செய்யும் செயல்கள் இழிவுக்குக் காரணமாயினும் இங்கு மேற்கொள்ளத்தக்கன என்பதற்குரிய காரணத்தைக் கூறுகின்றார். வெற்றிவிருப்பமுள்ளவனும் பகைவனும் ஒருவர்க்கொருவர் கோபத்தை யடைந்தபோது மேற்கூறிய செயல்களை ஒருவரைக் குறித்து மற்றவர் ஏற்கக்கூடுமாதலின், அதைப் பரிகரித்தற் பொருட்டு மற்றவரும் அச்செயலை யேற்றல் குற்றமன்று. ஆகவே ஈண்டு அச் செயல்முறைகள் விளக்கிக் கூறப்பட்டன என்பது கருத்து.

பதினன்காம் அதிகரணம்—மறைவுச் செயல்

இரண்டாம் பிரகரணம்—வஞ்சித்தல்-வஞ்சித்தலில் மருந்து மந்திரப் பிரயோகம்

நூற்றுநாற்பத்தெட்டாம் அத்தியாயம்

[1]பூனை ஒட்டகம் ஓநாய் பன்றி முள்ளம்பன்றி [2]வாகுலீ [3]நப்தா காக்கை கோட்டான் என்பன, இரவிலியங்கும் வேறு பிராணிகள் ஆகியவற்றுள் ஒன்று இரண்டு பலவற்றுக்குரிய வலக் கண்களையும் இடக் கண்களையும் எடுத்து [4]இரு வகையாக அரைத்தல் வேண்டும். பின்னர் [5]வலப்பக்கத்திற்குரியதனை இடப் பக்கத்தாலும் இடப்பக்கத்ததை வலப் பக்கத்தாலும் நன்கு மையாகத் தீட்டிக்கொண்டு இரவில் இருளிலும் பார்க்கிறான்.

சுலோகம்

[6]ஓர் எலுமிச்சை, பன்றியின் கண், மின்மினிப் பூச்சி, கருத்த நன்னாரி என்னுமிவற்றால் தீட்டப்பட்ட கண்ணுடையான் இரவில் உருவங்களைக் காண்கிறான்.

[7]பூச நட்சத்திரத்தில் மூன்றிரவு உபவாசமிருந்தானொருவன், படைக்கலத்தால் கொல்லப்பட்டவன் சூலத்தேற்றப்பட்டவன் என்னுமிவருடைய மண்டையோட்டில் மண்ணில் [8]யவத்தை

148-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] மருந்தைப் பிரயோகிக்கும் முறையைக் கூறுகின்றார்.

[2] வாகுலீ—ஒருவகைப் பறவை.

[3] நப்தா—விட்கிரம் எனப்படும் பறவை யென்ப.

[4] வலக்கண்களைத் தனியாகவும் இடது கண்களைத் தனியாகவும் அரைத்தல் வேண்டும்.

[5] தன்னுடைய வலக்கண்ணில் மேற்கூறிய பூனை முதலியவற்றின் இடக்கண் மையையும் தன்னுடைய இடக்கண்ணில் வலக்கண்களின் மையையும் பூசிக்கொள்ளுதல் வேண்டும் என்பது.

[6] இருளில் உருவத்தைப் பார்த்தற்குரிய மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[7] மறைதற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார். பூசநட்சத்திரத்தைச் சார்ந்த மூன்று நாள் என்பது.

[8] யவம்—ஒருவகைத் தானியம்

விதைத்து ஆட்டுப் பாலால் நனைத்தல் வேண்டும். பின்னர் யவத்தினுடைய முளையின் மாலையை யணிந்து கொண்டு [9]நிழல் உருவங்களற்றவனாக இயங்குகின்றான்.

[10]பூசநட்சத்திரத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், நாய் பூனை கோட்டான் வாகுலீ என்பவற்றின் வலக் கண்களையும் இடக் கண்களையும் [11]இரண்டாகப் பொடித்தல் வேண்டும். பின்னர் [12]அவ்வவற்றிற்கேற்பத் தீட்டப்பட்ட கண்களையுடையவன் நிழலுருவமற்றவனாக இயங்குகின்றான்.

[13]பூச நட்சத்திரத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், ஆடவனைக் கொன்ற [14]அம்பினால் கோலையும் மைப் பாத்திரத்தை யும் செய்தல் வேண்டும். பின்னர் (அவற்றுள்) [15]ஒரு கண் மையால் தீட்டப்பெற்ற கண்ணையுடையவன் நிழல் உருவங்களின்றி இயங்குபவனாவன்.

[16]பூச நட்சத்திரத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன் இருப்பு மைப் பாத்திரத்தையும் எழுது கோலையும் செய்வித்தல் வேண்டும். பின்னர் இரவில் இயங்கும் [17]பிராணிகளுள் ஒன்றின் மண்டையோட்டை மையால் நிரப்பி, இறந்த பெண்ணின் யோனி யுட் புகுத்திக் கொளுத்தச் செய்தல் வேண்டும். அந்த மையைப் பூச நட்சத்திரத்தில் எடுத்து [18]அந்த மைப்பாத்திரத்தில் வைத்தல் வேண்டும். அதனால் தீட்டப்பட்ட கண்ணையுடையவன் நிழல் உருவங்களற்ற நிலையில் இயங்குபவனாவான்.

---

[9] தன் உடம்பின் நிழலையும் உருவத்தையும் பிறர் காண முடியாதபடி சஞ்சரிக்கின்றான் என்பது.

[10] மறைதற்குரிய வேறொரு முறையைக் கூறுகின்றார்.

[11] தனித்தனியே எனக் கூட்டுக.

[12] வலக்கண் மையினால் தன் வலக்கண்ணிலும், இடக்கண் மையினால் தனது இடக்கண்ணிலும் என்ற முறையில் தீட்டிக்கொள்ளுதல் வேண்டும் என்பது.

[13] மூன்றாம் முறையைக் கூறுகின்றார்.

[14] அம்பின் இரும்பால் மைதீட்டும் கோலையும் மையை உண்டுபண்ணும் பாத்திரத்தையும் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பது.

[15] ஞமலி பூனை முதலியவற்றுள் ஒன்றினது கண் மையினால் என்பது.

[16] நான்காம் முறையைக் கூறுகின்றார்.

[17] பிராணிகள்—நாய் பூனை முதலியன.

[18] முற்கூறப்பட்ட இருப்பு மைப் பாத்திரத்தில் என்பது.

[19]அங்கிவழிபாடு செய்த அந்தணன் கொளுத்தப்பட்டோ கொளுத்தப்படுகின்ற நிலையிலோ காணப்படும் இடம் எதுவோ, அவ்விடத்தின்கண்ணே பூச நட்சத்திரத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், தானே இறந்த ஒருவனுடைய ஆடையால் பையைச் செய்து சிதைநீற்றால் நிரப்பி [20]அதைக் கட்டிக்கொண்டு நிழல் உருவமற்று இயங்குபவனாவான்.

[21]அந்தணனுடைய உத்தரக் கிரியையில் கொல்லப்படும் பசுவினுடைய எலும்பு [22]மச்சைகளால் நிறைந்த பாம்புத்தோல், பசுக்களை மறையச் செய்வதாம்.

[23]பாம்பால் கடிக்கப்பட்டவனுடைய சாம்பலால் நிறைந்த மயில்தோல், விலங்குகளை மறைப்பதாகும்.

[24]கோட்டான் வாகுலீ என்பவற்றின் வால் புரீடம் முழங்கால் எலும்புகளின் பொடியால் நிறைந்த பாம்புத்தோல், பறவைகளை மறைப்பதாகும்.

எண்வகை மறைவுப் பிரயோகம் இவ்வாறும்.

சுலோகங்கள்

(1) [25]விரோசனன் புதல்வனை பலி, நூறு மாயையை

---

19 ஐந்தாவது முறையைக் கூறுகின்றார்.

20 அப் பையைத் தன் உடலிற் கட்டிக்கொண்டென்பது.

21 உரோமம் அடர்ந்த வால்களையுடைய நாற்கால் விலங்குகளின் மறைவிற்குரிய முறையைக் கூறுகின்றார்.

22 மச்சை—எழுவகைத் தாதுப் பொருள்களுள் ஒன்று.

23 பொதுவாக நாற்கால் விலங்குகள் எல்லாவற்றுக்குமுரியதும் ஏழாவதுமான மறைதற் பிரயோகத்தைக் கூறுகின்றார்.

24 பறவைகளுக்குரியதும் எட்டாவதுமான மறைதற் பிரயோகத்தைக் கூறுகின்றார். கோட்டான் முதலிய இரண்டின் வால் முதலிய நால்வகைப் பொருள்களாலாய பொடியால் என்பது.

25 இனிப் பகைவர் முதலியோர்க்கு உறக்கத்தை யுண்டுபண்ணும் நால்வகைப் பிரயோகங்களைக் கூறத் தொடங்கி முதலிரண்டிற்கும் பொதுவான மந்திரங்களைக் கூறுகின்றார். 'விரோசனன் புதல்வனை' என்பது முதலாக 'அலிதே வலிதே மநவே சுவாஹா' என்பது ஈறாகவுள்ளவை மந்திரங்களாம். இவற்றின் பொருளை, வல்லார்வாய்க் கேட்டறிதல் வேண்டும் என்பர் உரையாசிரியர். ஆயினும் சொற்றொடர் அமைதியை யொட்டி ஈண்டுப் பொருள் கூறப்பட்டது.

யுடைய சம்பரன், பண்டீரபாகன், நரகன், நிகும்பன், கும்பன் என்னுமிவர்களை வணங்குகின்றேன்.

(2) தேவலன் நாரதர் என்போரை வணங்குகின்றேன். சாவர்ணியான காலவரை வணங்குகின்றேன். இவர்களின் வழி பாட்டால் உனக்குப் பேருறக்கம் கொடுக்கப்பட்டது.

(3) மலைப் பாம்புகள் எப்படி உறங்குகின்றனவோ, சேனையில் இழிந்தவர் எப்படி உறங்குகின்றனரோ, கிராமத்தில் [26]ஊக்க முள்ள ஆடவர் அப்படி உறங்கட்டும்.

(4) ஆயிரம் வலியனுடனும் நூறு தேர்வட்டைகளுடனும் இவ்வில்லத்துட் புகுவேன். வலியன்கள் [27]மௌனமாயிருப்பன வாருக.

(5-6) மனுவை வணங்கியும் [28]இழிந்த ஏமலிகளைக் கட்டி யும் தேவலோகத்துள்ள தேவர்கள், மனித உலகிலுள்ள மறையோ தலில் தேர்ந்த அந்தணர்கள், கயிலாயத்துள்ள தாபதர், பலவகைச் சித்தர்கள் என்னுமிவர்களை வணங்கியும் உனக்குப் பேருறக்கம் செலுத்தப்பட்டது.

நான் சென்றதும் ஒன்றுசேர்ந்து வெளியேறுக.

அலிதே வலிதே மநவே சுவாஹா.

[29]இதை மேற்கொள்ளும் முறை:—மூன்றிரவு உபவாச மிருந்தவன் பூசத்துடன் கூடிய தேய்பிறை பதினான்காம் நாளில் சண்டாளியின் கையினின்றும் [30]பெருச்சாளியின் துண்டத்தை விலைக்கு வாங்குதல் வேண்டும். [31]அதை உழுந்துகளுடன் கூடை

---

26 ஊக்கம்—சுறுசுறுப்பு.

27 மௌனம்—கூவாதிருத்தல்

28 'இழிந்த' என்பது தனக்கு வெறுத்தற்குரியதாயிருத்தலை நோக்கி யென்க.

29 மேற்கூறிய மந்திரத்தைப் பிரயோகிக்கும் முறையைக் கூறுகின்றார்.

30 பெருச்சாளி என்பது, ஈண்டு அவ்வினத்தைச் சார்ந்த மற்ற பிராணி களையும் குறிக்கும்

31 அதை—அத்துண்டத்தை.

யில் வைத்துச் சுடலையில் [32]நெருக்கடியற்ற இடத்தில் புதைத்தல் வேண்டும். [33]இரண்டாவது சதுர்த்தசியில் எடுத்துக் கன்னியைக் கொண்டு பிசைந்து மாத்திரைகளைச் செய்வித்தல் வேண்டும். அவற்றில் ஒரு மாத்திரையை மந்திரித்து, இம் மந்திரத்தால் எங்கு போடுகின்றானோ, [34]அங்குள்ள எல்லாவற்றையும் உறங்கச் செய்கின்றான்.

[35]இம் முறையாலேயே முள்ளம்பன்றியினுடைய [36]மூன்று கரிய முள்ளையும் மூன்று வெளிய முள்ளையும் சுடலையில் நெருக்கடியில்லாத இடத்தில் புதைத்தல் வேண்டும். இரண்டாவது சதுர்த்தசியில் எடுத்துச் சுடலைச் சாம்பலுடன் கூட [37]இம் மந்திரத்தால் எங்கு [38]போடுகின்றானோ [39]அங்குள்ள எல்லாவற்றையும் உறங்கச் செய்கின்றான்.

சுலோகங்கள்

(1) நல்ல வண்ணமுடைய மலர்களையுடைய கலைமகளையும், பிரமனையும், குசத்துவசரையும், எல்லாத் தெய்வங்களையும் வணங்குகின்றேன். எல்லாத் தாபதர்களையும் வணங்குகின்றேன்.

(2) அந்தணர்களும் நிலத்தைக் காக்கும் அரசர்களும் எனக்கு வயப்படுவாராகுக. வணிகர்களும் வயப்படுவாராக. சூத்திரர்களும் யாண்டும் எனக்கு வயப்படுவாராகுக.

சுவாஹா அமிலே, கிமிலே, வசுசாரே, பிரயோகே, பக்கே, வயுஹ்வே, விஹாலே, தந்த கடகே சுவாஹா.

---

32 மக்கள்நெருக்கடி யில்லாத இடத்தில் என்பது.

33 பின் அடுத்துவரும் சதுர்த்தசியில் என்பது.

34 அது போடப்பட்ட இடத்திலுள்ள எல்லா உயிர்களையும் என்பது.

35 இரண்டாவது பிரயோகத்தைக் கூறுகின்றார். இம்முறை—பூசத்துடன் கூடிய தேய்பிறைச் சதுர்த்தசியில் மூன்று நாள் உபவாசமிருந்தவன் என்பது முதலாக மேற்கூறப்பட்ட முறை.

36 மூன்று இடங்களில் கருநிறமுடைய முள்ளையும் மூன்று இடங்களில் வெண்மை நிறமுடைய முள்ளையும் என்பது.

37 மேற்கூறிய மந்திரத்தால் என்பது.

38 'அம் முள்ளை' என முன்னர்க் கூட்டிக் கொள்க.

39 அவ்விடத்திலுள்ள எல்லா உயிர்களையும் என்பது.

சுலோகங்கள்

(1) [40]கிராமத்தில் ஊக்கமுள்ள ஞமலிகள் இன்பமாகத் துயிலுக. முள்ளம் பன்றியின் மூன்று வெளுப்புள்ள இம் முள் பிரமனுலுண்டாக்கப்பட்டது.

(2) [41]கிராமத்தில் எல்லை வரையிலும், கதிரவனுடைய தோற்றம் வரையிலும் எனும்படி உனக்குச் செய்த இவ்வுறக்கத்தால் எல்லாச் சித்தர்களும் ஆழ்ந்து உறங்கினர்.

சுவாஹா.

[42]இதை மேற்கொள்ளும் முறை :-முள்ளம்பன்றியினுடைய மூன்று வெளுப்புள்ள [43]முள்கள். ஏழுநாட்கள் உபவாசமிருந்தவன், தேய்பிறைபதினான்காம் நாளில் கருங்காலி சமித்துக்களால் இம் மந்திரத்தைக் கொண்டு நூற்றெட்டு முறை தீயில் ஓமஞ் செய்து (பின்னர்) தேன் நெய் என்பவற்றால் ஓமஞ் செய்தல் வேண்டும். [44]அவற்றுள் ஒன்று இம்மந்திரத்தால் ஊரின் வாயிலிலோ இல்லத்தின் வாயிலிலோ [45]எங்கு நாட்டப்படுகிறதோ, அங்குள்ள அனைத்தையும் உறங்கச் செய்வதாம்.

சுலோகங்கள்

[46]விரோசனன் புதல்வனான பலியையும் நூறு மாயைகளையுடைய சம்பரனையும், நிகும்பன், நரகன், கும்பன், பேரரக்கனான

---

[40] தூங்க வைத்தற்குரிய மூன்றாவது பிரயோகத்தைச் சார்ந்த மந்திரத்தைக் கூறுகின்றார்.

[41] கிராமத்துக் கடைசி எல்லை வரையிலுள்ள எல்லா உயிர்களும் கதிரவன் மறைந்தது முதற்கொண்டு உதிக்கும் வரையில் நன்றாக உறங்குவனவாகுக என்பது கருத்து.

[42] இம் மந்திரத்தைப் பிரயோகித்தற்குரிய முறையைக் கூறுகின்றார்.

[43] முற்கூறப்பட்டபடி சுடலையில் நெருக்கடியில்லாத இடத்தில் புதைக்கப்படுதல் வேண்டும் என்று பொருள் கூறுக.

[44] அவற்றுள்—சுடலையில் புதைத்து எடுக்கப்பட்ட முட்களுள்.

[45] எங்கு அம்முள் புதைக்கப்படுகின்றதோ அங்குள்ள எல்லா உயிர்களையும் உறங்கச்செய்யும் என்பது கருத்து.

[46] உறக்கத்தைத் தருதற்குரிய நான்காவது பிரயோகத்தைச் சார்ந்த மந்திரத்தைக் கூறுகின்றார்.

தந்துகச்சன், அர்மாலவன், பிரமீலன், மண்டோலூகன், கடோபலன், கம்சன் பணியாளருடன் சேர்ந்த கிருஷ்ணன், புகழ்வாய்ந்த இந்திராணி என்னுமிவர்களேயும் வணங்குகின்றேன். மந்திரத்துப் பயன் எய்தும் வரை இறந்த நாகணவாய்ப் பறவையை ஏற்கின்றேன். (இது) சிறப்புறுக. (சிறப்புற்றும்) விளங்குகிறது. சலக பூதருக்குக் கொடுக்கின்றேன். வணக்கம்.

கிராமத்தில் ஊக்கமுள்ள ஞமலிகள் இனிதே துயிலுக. [47]மாலேயிலிருந்து காலே வரையிலும், என் பயன் எப்பொருளேச் சார்ந்ததோ அது வரையிலும், எப்பொருளே யாம் தேடுகின்றோமோ அது கிட்டும் வரையிலும் பயனெய்தியவராக இன்பத்துடன் உறங்குக. இதி சுவாஹா.

இதனேச் செலுத்தும் முறை:-நான்கு நாள்; [48]உணவினுல் உபவாசமிருந்தவன் தேய்பிறைபதினுன்காம் நாளில் சுடலேயில் நெருக்கடியற்ற இடத்தில் பலியிட்டு இம்மந்திரத்தால் இறந்த நாகணவாய்ப் பறவையை எடுத்துச் சிறு ஆடையால் முடிந்து கட்டுதல் வேண்டும். [49]அதன் நடுவில் முள்ளம்பன்றியின் முள்ளினுற் கீறி இம்மந்திரத்தால் எங்கு புதைக்கப்படுகின்றதோ அங்குள்ளவை யனேத்தையும் உறங்கச் செய்வதாகும்.

சுலோகம்

[50]அங்கி, தெய்வங்கள், பத்துத் திசைகள் என்னுமிவற்றை யடைக்கலமடைகிறேன். எல்லாம் விலகிச் செல்வனவாகுக. யாண்டும் எல்லாம் எனக்கு வயமாகுக.

---

47 சூரியன் மறைந்ததிலிருந்து மறுநாள் விடியுமளவும் என்பதும், எப்பொருளே யடைந்த பின்னர் யான் பயனே எய்தியவனுவேனே அப்பொருளே யான் அடையும் வரையிலும் என்பதும் கருத்து.

48 நான்கு நாள் சோற்றைப் புசியாதிருத்தல் என்ற நியமத்துடன் கூடியவன் என்பது.

49 அம் முடிச்சின் நடுவில் முள்ளம்பன்றியின் முள்ளால் கீறிப் பிளந்து என்பது.

50 இனி வாயிலேத் திறப்பதற்குரிய பிரயோகத்தைச் சார்ந்த மந்திரத்தைக் கூறுகின்றுர்.

இதனைச் செலுத்தும் முறை:—பூசத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், [51]தலையெலும்புகளால் இருபத்தொரு [52]ஓமஞ் செய்து (பின்னர்) தேன் நெய் என்பவற்றால் ஓமஞ் செய்தல் வேண்டும். பின்பு சாந்தம் ஆரங்களால் [53]வழிபட்டுப் புதைத்தல் வேண்டும். இரண்டாவது பூசத்தில் எடுத்து ஒரு தலையெலும்பை மந்திரித்துக் [54]கதவில் அடித்தல்வேண்டும். [55]நான்கு தலையெலும்புகளுடைய இடைவெளியுள்ள துவாரம் திறக்கப்படுகின்றது.

[56]நான்கு நாள் உணவின்றி உபவாசம் இருந்தவன் தேய்பிறைபதினான்காம் நாளில், தோற்கடிக்கப்பட்டவனுடைய எலும்பினால் [57]எருதைச் செய்வித்தல் வேண்டும். [58]இதனால் மந்திரித்தலும் வேண்டும். [59]இரு எருதுகளுடன் கூடிய எருதுகளியக்கும் வாகனம் கொணரப்பட்டதாம். அதன் பின்னர் ஆகாயத்தில் வன்மையை ஏற்பவனும்.

[60]சதா ரவிரவி: சகண்டபரிகாதி சர்வம் பணதி. சண்டாளீ கும்பீத்தம்ப கடுக சாரிக: சநாரீபாகோசி சுவாஹா.

---

[51] ஏதேனும் ஒரு பிராணியின் தலையெலும்புகளால் என்க.

[52] 'தீயில்' என்பதைக் கூட்டுக.

[53] அவ்வெலும்புகளைப் பூசித்து அவற்றை நிலத்திற் புதைத்தல் வேண்டும் என்பது.

[54] அவ்வெலும்பைக் கதவிலறைதல் வேண்டும்.

[55] அவ்வாறு கதவில் அறைந்ததும் அக்கதவில் தலையெலும்புகள் நான்கின் இடைவெளி அளவுள்ள துவாரம் உண்டாகின்றது என்பது கருத்து.

[56] மேற்கூறிய மந்திரத்தைப் பிரயோகித்தற்கு மற்றொரு முறையைக் கூறுகின்றார்.

[57] ஒரு எருதின் உருவம்போல் உருவத்தை அவ்வெலும்பினாற் செய்தல் வேண்டும் என்பது.

[58] இது—மேற்கூறிய மந்திரம்.

[59] அவ்வாறு மந்திரித்த பின்னர், இரு காளைகளால் இயக்கப்படும் ஒரு வாகனம் வந்துசேரும் என்பதும், அவ்வாகனத்தில் ஏறி ஆகாயத்திற் செல்ல இயலும் என்பதும் கருத்து.

[60] வாயிலிலுள்ள பொறியைத்தகர்த்தல் உறங்கவைத்தல் என்னுமிரண்டைச் செய்தற்குரிய பிரயோகத்தைக் கூறுவார் முதலில் அப்பிரயோகத்திற்குரிய மந்திரத்தைக் கூறுகின்றார்.

[61]பொறியைத் தகர்த்தலும் உறங்கச் செய்தலுமாம்.

[62]பூசத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், படைக்கலத்தால் கொல்லப்பட்டவன் சூலத்தில் ஏற்றப்பட்டவன் என்பவருள் ஒருவனுடைய மண்டையோட்டில் மண்ணில் துவரையை விதைத்து நீரால் நனைத்தல் வேண்டும். [63]முளைத்ததால், பூச நாளில் எடுத்துக் கயிறாகத் திரித்தல் வேண்டும். [64]நாணையுடைய வில்களையும் பொறிகளையும் முன்னர்த் தகர்த்தல், [65]நாணைத் துணித்தல் என்பவற்றை அதனால் செய்கின்றான்.

[66]நீர்ப் பாம்பின் தோலை மகளிர் ஆடவர் என்னுமிவர்களுடைய [67]மூச்சுக் காற்று மண்ணால் நிரப்புதல் வேண்டும். [68]மூக்கைத் தடுத்தலும் வாயைத் தடை செய்தலுமாம்.

[69]பன்றியின் மூத்திரப் பையை [70]மூச்சுக் காற்று மண்ணால் நிரப்பிக் குரங்கின் நரம்பினால் கட்டுதல் வேண்டும். மலத்தைத் தடைப்படுத்தல் (இதனால்) ஆம்.

[71]தேய்பிறைச் சதுர்த்தசியில் படைக்கலத்தாற் கொல்லப்பட்ட கபிலைப் பசுவின் பித்தால் கொன்றை மரத்தாலாகிய பகைவ

---

61 வாயிலிலுள்ள பொறியைத் தகர்த்தல் உறங்கவைத்தல் என்னுமிரண்டும் இம் மந்திரத்தால் உண்டாம் பயன்கள் என்பது.

62 வில்லிலுள்ள நாணை யறுத்தற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

63 மண்டையோட்டில் போடப்பட்ட மண்ணில் விதைத்து முளைத்த துவரைச் செடிகளைப் பூசத்துடன் கூடிய நாளில் பிடுங்கி அவற்றால் சிறு கயிற்றைத் திரித்தல் வேண்டும்.

64 அக்கயிறு, நாணேற்றப்பட்ட வில்லையும் பொறிகளையும் தகர்த்தற்குக் கருவியாம் என்பது கருத்து.

65 நாண்—உபலக்கணத்தால் பொறியின் பகுதிகளையும் உணர்த்தும் என்பது,

66 மூக்கைத் (மூச்சுக்காற்றைத்) தடைப்படுத்தல், வாயைத் தடைப்படுத்தல் என்பவற்றுக்குக் காரணமான பிரயோகத்தைக் கூறுகின்றார்.

67 மூச்சுக் காற்றுப்பட்ட மண்ணால் என்பது.

68 அம் மூச்சுக்காற்றை விட்டவனுக்கு இத்தடைகள் உண்டாவன என்பது.

69 மலபந்தத்திற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

70 ஆடவர் பெண்டிர்களின் மூச்சுக்காற்று என்பது.

71 பகைவனுக்குக் குருட்டுத்தன்மையை யுண்டாக்குதற்குரிய பிரயோகத்தைக் கூறுகிறார்கள்

னுடைய பதுமைக்கு [72]மையைத் தீட்டல் வேண்டும். [73]குருட்டுத் தன்மையைச் செய்வதாம்.

[74]நான்கு நாள் உணவின்றி உபவாசமிருந்தவன் தேய் பிறைச் சதுர்த்தசியில் [75]பலியைக் கொடுத்து சூலத்தில் ஏற்றப்பட்டவனுடைய எலும்பினுல் மூளைகளைச் செய்வித்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று புரீடத்திலோ சிறு நீரிலோ புதைக்கப்படின் [76]மலத்தடையைச் செய்வதாம். இவனுடைய காலடியிலோ [77]இருக்கையிலோ புதைக்கப்படின், க்ஷயத்தால் [78]கொல்லுவதாகும். அங்காடி, செய், இல்லம் என்னுமிவற்றிலாயின் வாழ்க்கைத் தடையைச் செய்வதாம்.

[79]மின்னலாற் கொளுத்தப்பட்ட மரத்தின் மூளைகளுக்கும் இம் முறையால் விதி கூறப்பட்டபடியாம்.

சுலோகங்கள்

(1—2) [80]தலைகீழான [81]சாரடை, வேம்பு, [82]காகமது, குரங்

---

[72] அப் பதுமையின் கண்ணில் மையைத் தீட்டுதல் வேண்டும் என்பது.

[73] பகைவனுக்குக் குருட்டுத்தன்மை யுண்டாம் என்பது.

[74] மலபந்தத்திற்குரிய மற்றொரு பிரயோகத்தையும், க்ஷயநோயால் இறத்தலை யுண்டுபண்ணுதல் உயிர்வாழ்க்கைத் தொழிலைத் தடுத்தல் என்பவற்றுக்குரிய பிரயோகத்தையும் கூறுகின்றார்.

[75] விதிமுறைப்படிப் பூதபலியைக் கொடுத்தென்பது.

[76] புரீட முதலியவற்றுக்குரியவன் எவனோ அவனுக்கு மலபந்தம் முதலியன உண்டாகும் என்பது.

[77] இருக்கை—அமருமிடம்.

[78] காலடி இருக்கை என்பவற்றுக்கு உரியவன் எவனோ அவனைக் கொல்லும் என்பது கருத்து.

[79] சூலத்தில் ஏற்றப்பட்டவனுடைய எலும்பு மூளைகளுக்குக் கூறிய விதிமுறையை மின்னலாற் கொளுத்தப்பட்ட மரமூளைக்கும் மாட்டேற்றிக் கூறுகின்றார். மின்னலாற் கொளுத்தப்பட்ட மரமூளைகளுள் ஒன்று புரீட முதலியவற்றில் புதைக்கப்படினும் மேற்கூறிய அந்தப் பயன்களை யுண்டு பண்ணுவதாம் என்பது கருத்து.

[80] பின்வரும் இரு சுலோகங்களால் மற்றொரு முறையைக் கூறுகின்றார். தென்திசையிலுண்டான சாரடை எனினுமாம்.

[81] சாரடை—சோதக்னீ என்னும் ஒருவகைக் கீரை. அதன் மலர் என்பாருமுளர்.

[82] காக்கைக்கு விருப்பமான கனிகளையுடைய ஒருவகை மரம். இருப்பை என்பாருமுளர்.

கின் உரோமம், மக்களின் எலும்பு என்னுமிவை இறந்தவனுடைய ஆடையில் கட்டப்பட்டு ஒருவனுடைய இல்லத்தில் புதைக்கப் படினும், அன்றி பொடித்து அவனை உட்கொள்ளச் செய்யினும், [83]புதல்வர் மனைவி பொருள்களுடன் கூடிய அவன் மூன்று பக்கங்களைக் கடப்பதில்லை.

(3—4) [84]தலைகீழான சாரடை, வேம்பு, காகமது, பூனைக் காலி, மக்கள் எலும்பு என்னுமிவை ஒருவனுடைய காலடியிலோ, இல்லம் சேனை கிராமம் நகரம் என்னுமிவற்றிலோ புதைக்கப் படின் புதல்வர் மனைவியர் பொருள்களுடன் கூடிய அவன் மூன்று பக்கங்களைக் கடப்பதில்லை.

(5—5½) [85]ஆடு, குரங்கு, பூனை, கிரி, அந்தணர், நாயைப் பாகஞ் செய்பவர், காக்கை, கோட்டான் என்னுமிவற்றின் உரோமங்களைக் கொணர்தல் வேண்டும். [86]இவற்றுடன் அரைக்கப்பட்ட மலம் உடனே [87]அழிவைச் செய்வதாம்.

(5½—7) [88]இறந்தவனுடைய [89]நிர்மாலியம், மது மூலம், கிரியின் உரோமங்கள், தேள், [90]அலீ, பாம்புகளின் தோல் என்னுமிவை ஒருவன் காலடியில் புதைக்கப்படின் [91]அவை விலக்கப் படும் வரை அவன் உடனே ஆண்மையற்றவனுவான்.

---

83 புதல்வர் முதலியவர்களுடன் 45 நாட்களுக்குள் இறந்துவிடுவான் என்பது கருத்து.

84 45 நாட்களில் இறத்தலை யுண்டுபண்ணுதற்குரிய மற்றொரு முறையை இரு சுலோகங்களாற் கூறுகின்றார்.

85 காலந்தாழ்த்தலின்றி இறத்தலை யுண்டுபண்ணும் பிரயோகத்தை ஒன்றரை சுலோகத்தாற் கூறுகின்றார்.

86 இவற்றுடன்—ஆடு முதலியவற்றின் உரோமத் தொகுதியுடன்.

87 அம் மலம் எவனுடையதோ அவனுக்கு அழிவைச் செய்வதாம் என்பது.

88 ஆண்மையை யழித்தற்குரியதை ஒன்றரை சுலோகத்தாற் கூறுகிறார்,

89 நிர்மாலியம்—அணிந்து களையப்பட்ட ஆரம் முதலியன.

90 அலீ—வாயில் விஷமுள்ள தேளினத்தைச் சார்ந்த ஒருவகைப் பிராணி என்ப.

91 அவை—நிர்மாலியம் முதலியன,

[92]பூசத்துடன் மூன்றிரவு உபவாசமிருந்தவன், படைக்கலத்தாற் கொல்லப்பட்டவன் அல்லது சூலத்தில் ஏற்றப்பட்டவன் என்னுமிவருள் ஒருவனுடைய மண்டையோட்டில் மண்ணில் குன்றிகளை விதைத்து நீரினால் நனைத்தல் வேண்டும். முளைத்ததும் அமாவாசையிலோ, பூர்ணிமையிலோ [93]குன்றிக்கொடிகளை எடுத்து மண்டலங்களைச் செய்வித்தல் வேண்டும். அவற்றில் வைக்கப்பட்ட உணவு பருகுதற்குரியவை என்பவற்றையுடைய கலங்கள் குறைவதில்லை.

[94]இரவில் காட்சிகள் துவக்கப்பட்டபோது இறந்த பசுவின் மடியைத் துணித்து விளக்குத் தீயில் கொளுத்துதல் வேண்டும். கொளுத்தப்பட்டவற்றை எருதின் சிறுநீரால் பிசைந்து புதிய குடத்துள் பூசுதல் வேண்டும். அதைக் கிராமத்தில் [95]வலப்புறமாகக் கொணரச் செய்த பின்னர் அதில் வைக்கப்பட்ட வெண்ணெய் [96]இவற்றின் அவையெல்லாவற்றையும் வருவிக்கும் என்க.

[97]பூசத்துடன் கூடிய தேய்பிறைச் சதுர்த்தசியில் பைத்தியம் பிடித்த [98]நாயின் யோனியில் இருப்பு [99]இலச்சினையைப் புகுத்தல் வேண்டும். தானே வீழ்ந்த அதை எடுத்தல் வேண்டும். [100]அதனால் அழைக்கப்பட்ட (நிலையிலேயே) மரக்கனிகள் வருகின்றன.

---

92 சோறு, பருகுதற்குரிய நீர் முதலியவுள்ள பாத்திரங்கள் குறைவின்றியிருத்தற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

93 மண்டையோட்டில் மண் போட்டு அதில் விதைத்து முளைத்த குன்றிமணிக் கொடிகளால் புரிமணை செய்து, அதன்கண் வைத்த பாத்திரங்களிலுள்ள சோறு, குடிநீர் முதலியன குறைவற்றிருப்பன வென்பது கருத்து.

94 கிராமத்திலுள்ள எல்லா வெண்ணெயையும் கொணர்தற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

95 அப்பிரதக்ஷிணமாக என்பது.

96 கிராமத்திலுள்ள எல்லா வெண்ணெயையும் என்பது.

97 மரத்திலுள்ள கனிகளை வீழ்த்துதற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

98 நாய்—பெண்நாய் அல்லது ஆண்நாய்.

99 இலச்சினை—மோதிரம் முதலியன.

100 அது—அம் மோதிரம் முதலியன,

சுலோகம்

[101]மந்திரம் மருந்துகளுடன் கூடியதும் மாயையால் செய்யப் பட்டதுமான பிரயோகங்களால் பகைவரை யழித்தல் வேண்டும். [102]தம் மக்களைக் காத்தலும் வேண்டும்.

பதினான்காம் அதிகரணம் இரண்டாம் பிரகரணம் வஞ்சித்தல்–வஞ்சித்தலில் மருந்து மந்திரப் பிரயோகம் என்னும் நூற்றுநாற்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

101 மந்திரம் மருந்துகளாற் செய்யப்பட்டவையும் இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டனவுமான பிரயோகங்களாலும், மாயையால் செய்யப்பட்டன வும் உடலில் தீயை ஒளிரச்செய்தல் தணற்குவியலில் இயங்குதல் முதலிய வற்றிற்குக் காரணமான பிரயோகங்களாலும் பகைவரை யழிக்கவேண்டும் என்பது கருத்து.

102 பகைவரை யழித்தல் மூலமாகத் தம் மக்களையும் காத்தல் வேண்டும் என்க.

பதினான்காம் அதிகரணம்—மற்றவுச் செயல்

மூன்றாம் பிரகரணம்—[1]தன் படைக்குண்டாம் இடர்களுக்கு மாறுதலை

நூற்றுநாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

தன் பக்கத்தில் பகைவனால் பிரயோகிக்கப்பட்ட [2]குற்றமுள்ள விஷம் [3]நஞ்சுகளுக்குப் பரிகாரச் செயல் (விரும்பப்படின்) நறுவிலி, விளா, நாகத்திச் செடி, எலுமிச்சை, பிராயி, வாகை, பாதிரி, சித்தாமுட்டி, பெருவகை, சாரடை, [4]சுவேதை, மாவலிங்கை என்னுமிவற்றின் கொதி சாறுடன் கூடியதும், சந்தனம் நரியின் குருதி என்பவற்றுடன் கூடியதுமான தேசனை நீரால், அரசன் நுகர்தற்குரிய மகளிர் சேனை என்பவற்றின் மறைத்தற் குரிய இடத்தைக் கழுவுதல், நஞ்சை நீக்குதற்குரிய மாற்றச் செயலாம்.

[5]புள்ளிமான், கிரி, மயில், உடும்பு என்னுமிவற்றின் பித்துடன் கூடிய கருநொச்சிலி பெருங் கடுகுகளின் பொடியும், நொச்சி, மாவலிங்கை, அறுகு, தண்டுலீயகம், மூங்கில் நுனி, மறுக் காரை, என்னுமிவற்றின் கலப்பும் மயக்கக் குற்றத்தைத் தகர்ப்பதாம்.

149-ஆம் அத்தியாயக் குறிப்புரை

[1] தன் படைக்குப் பகைவனால் உண்டாக்கப்பட்ட நச்சுப் பிரயோகம், நீரைக் கெடுத்தல் முதலியவைகாரணமாக உண்டான இடர்களுக்கு மாற்றுச் செயல் புரிதல் என்பது கருத்து.

[2] குற்றம்—ஈண்டு ஓடதி முதலியவற்றால் ஆற்றலழியப் பெற்றிருத்தல்.

[3] உவளகத்துள்ளவரும் அரசன் நுகர்தற்குரியவருமான மகளிர், சேனை முதலியவர்களுக்குப் பகைவனால் விஷப்பிரயோகஞ் செய்யப்பட்டபோது, அவ்விஷத்தைப் பரிகரிக்க விரும்பின், அவர்களின் யோனியை நறுவிலி முதலிய பன்னிரண்டின் கஷாயத்துடனும், சந்தனம் நரிக்குருதிகளுடனும் கூடிய தேசன நீரால் கழுவுதல் வேண்டுமென்பது கருத்து.

[4] சுவேதை—அரிசி முதலிய உணவுப் பொருள்களிலிருந்து வடிக்கப் படும் ஒருவகைக் கள்.

[5] மயக்கத்தைப் போக்குதற்குரிய செயலைக் கூறுகின்றார். புள்ளிமான் முதலிய நான்கின் பித்துடன் கூடிய கருநொச்சி கடுகுகளின் பொடியும், நொச்சி முதலிய ஆறின் சேர்க்கையுமாகிய இரண்டும் மயக்கத்தைச் செய்யும் பொருளின் குற்றத்தைத் தகர்ப்பதாம் என்பது கருத்து.

[6]பெருமல்லிகை, ஊமத்தை, நொச்சி, மாவலிங்கை, யானைத் திப்பிலி என்னுமிவற்றின் வேர் கொதி சாறுகளுள் ஒன்றையாதல் தொகுதியையாதல் பாலுடன் சேர்த்துப் பருகுதல் மயக்கக் குற்றத்தைத் தகர்ப்பதாம்.

[7]தேக்கு, மயிலச்செடி, எள் என்னுமிவற்றின் எண்ணெயால் (செய்யப்படும்) [8]நசியச் செயல்அறிவு, மயக்கத்தைக் கவர்வதாம்.

[9]ஞாழல் புன்குகளின் [10]கலப்பு, குட்டத்தை மாற்றுவதாம்.

கீழாநெல்லி உலோத்திரங்களின் கலப்பு, [11]வெண்மை க்ஷயங் களை யழிப்பதாம்.

[12]தேக்கு, எலி ஆல், [13]விலங்கம் என்னுமிவற்றின் பொடி யால் செய்யப்படும் நசியச் செயல், தலைநோயை நீக்குவதாம்.

[14]ஞாழல், மஞ்சிட்டை, [15]தகரம், செம்மஞ்சி, இலுப்பை மஞ்சள், தேன் என்னுமிவற்றின் கலப்பானது, [16]கயிறு நீர் நஞ்சு தாக்குதல் வீழ்தல் என்னுமிவை காரணமாக அறிவிழந்தவர் மீண்டும் அறிவை யடைதற்குக் காரணமாம்.

---

6 மேற்கூறிய பரிகாரத்தின் மற்றொரு வகையைக் கூறுகின்றார். பெரு மல்லிகை முதலிய ஐந்தின் வேர்க்கஷாயங்களைச் சேர்த்தோ தனித்தோ பாலுடன் கலந்து பருகினால் மயக்கம் நீங்கும் என்பது கருத்து.

7 அறிவுமயக்கத் (உன்மாதத்) திற்கு மாற்றுக் கூறுகின்றார்.

8 நசியம்—மூக்கில் பிரயோகிக்கும் மருந்து.

9 குட்ட நோயை நீக்குதற்குரிய பிரயோகத்தைக் கூறுகின்றார்.

10 கலப்பு—சேர்த்துச் செய்யப்பட்ட மருந்து.

11 வெண்மை—ஈண்டுத் தலைமயிரின் வெண்மையாகிய நரை.

12 தலைநோயைக் களையும் நசியமருந்தின் ஒரு வகையினைக் கூறுகிறார்.

13 'கிருமிக்னம்' என்ற ஓடதி.

14 இழக்கப்பட்ட அறிவை மீண்டும் அடைவித்தற்குரிய பிரயோகத் தைக் கூறுகின்றார்.

15 தகரம்—நந்தியாவர்த்தம் என்று கூறப்படும் ஓர் ஓடதி.

16 கயிற்றால் கட்டப்படுதல், நீரில் மூழ்குதல், நஞ்சின் வேகம், அடித்தல், உயர்ந்த இடத்தினின்றும் கீழே வீழ்தல் என்னுமிவைகாரணமாக உணர் விழந்த பிராணிகளுக்கு மீண்டும் அறிவுண்டாதற்குக் காரணமாம் என்பது கருத்து.

[17]மக்களுக்குப் பதினறு மாடகமும், குதிரை பசுக்களுக்கு [18]இரு மடங்கும், யானை ஒட்டகங்களுக்கு [19]நான்கு மடங்குமாம்.

[20]இவற்றால் ஆயதும் பொன்னை உட்புறத்துக் கொண்டது மான மாத்திரை [21]எல்லா நஞ்சையும் அழிப்பதாம்.

சீந்திற் கொடி, காட்டுப் பருத்திச் செடி, தன்றிலெண்ணெய், [22]வந்தாகை, நுணு மரத்திலுண்டாய அரசமரம் என்னுமிவற்றின் மாத்திரை, எல்லா நஞ்சையும் தகர்ப்பதாம்.

சுலோகங்கள்

(1) [23]அவற்றாற் பூசப்பட்ட வாச்சியங்களின் ஒலி எல்லா நஞ்சையும் அழிப்பதாம். பூசப்பெற்ற [24]துவசம், [25]கொடி என்பவற்றைப் பார்த்தவனும் நஞ்சற்றவனாவான்.

(2) [26]இவற்றால் தன் படைகட்கும் தனக்கும் [27]மறுதலை செய்து, [28]நச்சுப்புகை, நீரைக்கெடுத்தல் என்பவற்றைப் பகைவரிடம் கையாளுதல் வேண்டும்.

பதினன்காம் அதிகரணம் மூன்றும் பிரகரணம்
'தன் படைக்குண்டாம் இடர்களுக்கு மறுதலை' என்னும்
நூற்றுநாற்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.
பதினன்காம் அதிகரணம் முற்றிற்று.

---

17 மேற்கூறப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தற்குரிய அளவைக் கூறுகின்றார்.

18 இரு மடங்கு—32 மாடகங்கள்.

19 அறுபத்துநான்கு மாடகங்கள்.

20 மேற்கூறிய ஞாழல் முதலியவற்றால் என்பது.

21 உடலில் அணிந்துகொள்ளப்படின் எல்லாவகை நஞ்சையும் பரிகரித்தற் குரியதாம் என்பது.

22 ஒருவகைக் கொடி.

23 மேற்கூறிய சீந்திற்கொடி முதலியவற்றாலுண்டாக்கப்பட்ட மருந்தினால் பூசப்பெற்ற.

24 'துவசம்' என்பது ஈண்டு அதைத் தாங்கும் கழியை யுணர்த்தும்.

25 கழியின் நுனியில் தொங்குவது.

26 இவை—மேற்கூறப்பட்ட மருந்துப் பிரயோகங்கள்.

27 மறுதலை—பரிகாரச்செயல்.

28 நச்சுப்புகைப் பிரயோகங்களையும் நீரைக் கெடுத்தற்குரிய பிரயோக முறைகளையும் பகைவர்பால் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து.

பதினைந்தாம் அதிகரணம்—[1] தந்திரயுக்தி

முதற் பிரகாணம் [2] தந்திர யுக்திகள்

நூற்றைம்பதாம் அத்தியாயம்

[3] வாழ்க்கை மக்களுக்குப் பொருளாகும். மக்களையுடையது நிலம் என்பது பொருள். அந்நிலத்தையடைதல் காத்தல் என்பவற்றுக்குக் கருவியாம் நூல், பொருணூல் என்க.

[4] அது முப்பத்திரண்டு யுக்திகளுடன் கூடியது :-[5] அதிகரணம், விதானம், யோகம், பதார்த்தம், ஏத்வர்த்தம் (காரணப் பொருள்), உத்தேசம், நிர்த்தேசம், உபதேசம், அபதேசம், அதிதேசம், பிரதேசம், உபமானம், அர்த்தாபத்தி, சம்சயம், பிரசங்கம், விபர்யயம், வாக்கியசேடம், அநுமதம், வியாக்யானம், நிர்வசனம், நிதர்சனம், அபவர்க்கம், சுவசம்ஞா (தற்பெயர்), பூர்வ பக்கம், உத்தர பக்கம், ஏகாந்தம், பின் வருவதைக் காண்டல், கடந்ததைக் காண்டல், நியோகம், விகற்பம் சமுச்சயம், ஊஹ்யம் என்றவாறு.

[6] எப்பொருளைப் பற்றிக் கூறப்படுகிறதோ அது அதிகரணம்.

150-ஆம் அத்தியாயக் குறிப்புரை

1 இதுகாறும் பதினான்கு அதிகரணங்களால் நிலத்தை யடைதல் காத்தல்களைப் பற்றிய பொருணூற் பொருள்களை விரிவாகக் கூறினார். இனி இந்நூலில் பொருள்துணிபுக்குக் கருவியாம் யுக்திகளை இலக்கணம் உதாரணங்களால் கூறுதற் பொருட்டுப் பதினைந்தாவதான தந்திரயுக்தி என்ற இவ்வதிகரணத்தைத் தொடங்குகின்றார்.

2 தந்திரம்—நூல். ஈண்டுப் பொருணூல்; அதை யடைந்துள்ள யுக்திகள் என்பது. யுக்தி—உத்தி; நூற் புணர்ப்பு.

3 பொருணூல் என்னும் சொல்லின் பொருளை விளக்குகின்றார்.

4 அது—பொருணூல்.

5 அந்த உத்திகளைப் பெயராற் குறித்துக் கூறுகின்றார். இவற்றைப் பற்றிய விளக்கம் அடுத்துவரும் பகுதிகளாற் புலப்படும்.

6 அதிகரணம் என்ற உத்தியை விரித்துக் கூறுகின்றார். முக்கியமான எப்பொருளைப்பற்றிப் பிற பொருள் கூறப்படுவதோ அம் முக்கியப் பொருளுடன் தொடர்ந்த பொருட் பகுதிகள் அதிகரணம் எனப்படும். இது தமிழில் அதிகாரம் என வழங்கும் படலத்தை யொத்ததாகும்,

[7]'நிலத்தைக் கொள்ளுதல், அதனைக் காத்தல் என்னுமிவை குறித்து முன்னையாசிரியர்களால் எத்துணைப் பொருணூல்கள் கூறப்பட்டனவோ அவற்றைப் பெரும்பாலும் திரட்டி இப் பொருணூல் ஒன்று செய்யப்படுகின்றது. (1—1.) [8]என்பது.

[9]நூலின் பிரகரணங்களுடைய வைப்பு முறை விதானம் :— வித்தை விளம்பல், பெரியோரிணக்கம், பொறியடக்கம், அமைச் சரை யமைத்தல் (1—1) என்னுமிவை முதலானவை என்பது.

[10]வாக்கியத்தை யமைத்தல் யோகம் :—[11]'நால்வகை வருணச் சிரமங்களையுடைய இவ்வுலகத்து மக்கள்' (1—4.) என் பது.

[12]பதத்தை எல்லையாகக் கொண்டது பதார்த்தமாம் :-முதலை யழிப்போன் என்பது பதம். எவன் தந்தை பாட்டன் வழி வந்த

---

[7] இந்நூலிலுள்ள பகுதியை உதாரணமாகக் கூறி விளக்குகின்றார். இப்பகுதி யிருக்குமிடத்தை ( )'இக்குறியிட்ட பகுதியிற் காணும் எண் கள் குறிக்கின்றன. முதல் எண் அதிகரணத்தையும் இரண்டாவது எண் அவ்வதிகரண அத்தியாயத்தையும், மூன்றாவது எண் குறிக்கப்படின், அது தொடர்ந்த அத்தியாயத்தையுங் குறிக்கும். நிலமாகிய முக்கியப்பொருளைத் தழுவிய பல்வகைப் பொருளைக் கூறும் இந்நூற் பகுதிகள் யாவும் 'அதி கரணம்' என்ற சொல்லால் குறிக்கப்படுவதாம் என்பது. இம்முறையில் 'பயிற்சி பகர்தல்' முதலிய உட்பொருள்கள் முக்கியமாகக் கூறுதற்குக் கருதப்பட்டபோது, அந்தந்தப் பொருள்களைச் சார்ந்துள்ள பொருள் களுடன் கூடிய அவை அதிகரணம் எனப்படும் எனக் கொள்க.

[8] என்னுமிது அதிகரணம் என்ற யுக்திக்கு உதாரணம் என்பது கருத்து.

[9] ஒவ்வொரு அதிகரணத்திலும் பிரகரணங்களை முறையே அமைத்தல் விதானம் எனப்படும் என்பது. இது ஒத்துமுறைவைப்பு என்னும் உத்தி யாகும்.

[10] பதங்களைச் செய்கை காரகத்தன்மை என்பவற்றுக்கும் பெயர்ச் சொல் அடைகளின் தன்மைக்குமேற்ப ஒன்றனோடொன்றை இயைத்துப் பொருள் கோடல்.

[11] முதலதிகரணத்தில் நான்காவது அத்தியாய இறுதியிலுள்ள சுலோக மிது. இதில் பதங்களின் அன்வயம், முறைப்படி அமைந்துள்ளதாகலின் இது உதாரணமாகக் காட்டப்பட்டது.

[12] சொல்லை எல்லையாகக்கொண்ட சொற்பகுதிக்குக் கற்பிக்கப்படும் பொருள் பதார்த்தம் எனப்படும். இது சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தியாகும்.

பொருளை நீதியின்றிப் புசிப்பவனே அவன் முதலையழிப்பவன் (2—9) என்பது பொருள்.

பொருளைத் துணியும் காரணம் ஏத்வர்த்தம். [13]அறமும் இன்பமும் பொருளால் அடையத்தக்கன வாகலின் (1-7) என்பது.

சுருக்கிக் கூறும் வாக்கியம் உத்தேசம். 'வித்தைகளாலாம் செம்மைக்கு ஏதுவாகிய [14]பொறியடக்கம்' (1—7) என்பது.

பிரித்துக் கூறும் வாக்கியம் நிர்த்தேசமாம். 'காது மெய் கண் வாய் மூக்கு என்னும் [15]பொறிகள் தத்தம் புலன்களாகிய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்பவைகளில் இயற்கையாகவே மாறுபடாமல் நிகழ்தல் பொறியடக்கம்' (1—6) என்பது.

இங்ஙனம் ஒழுகுதல் வேண்டும் என்பது உபதேசம். 'அறத்திற்கும் பொருளுக்கும் மாறுபடாமல் இன்பத்தை யடைதல் வேண்டும். இன்ப நுகர்ச்சியின்றி இருத்தலாகாது'. (1—7) என்பது.

[16]இவர் இங்ஙனம் கூறுகின்றார் என்பது அபதேசம். 'அமைச்சரவையில் அமைச்சர் பன்னிருவர் இருக்க வேண்டும் என்பர் மநுவைச் சார்ந்தோர். பதினறுவர் என்ப வியாழனைச் சார்ந்தோர். இருபதின்மர் என்பர் ஔசநசர். திறமைக்குத் தக்கவாறு என்பர் கௌடலியர் (1—15) என்பது.

[17]கூறப்பட்டதால் அறிவித்தல் அதிதேசம்:— 'கடன் கொண்டதைக் கொடாமைக்குரிய விதியே, நல்கியதை நல்காமைக்கும் கூறப்பட்டபடியாம் (3—16—73) என்பது.

[18]கூறுதற்குரியதால் அறிவித்தல் பிரதேசம்:—இடுக்கண்

---

13 பொருளே சிறந்ததென்பர் கௌடலியர் என்று பிரதிக்ஞை செய்யப்பட்ட 'பொருள் சிறந்தது' என்ற பொருளுக்கு 'அறம் இன்பங்கள் பொருளாற் கிடைக்கப் பெறுகின்றன' என்பது காரணமாகலின் அது ஏத்வர்த்தம் எனப்படும் ஏதுவின் முடித்தல் என்னும் உத்தி.

14 பொறி என்ற சொல், காது முதலிய ஐவகைப் பொறிகளைக் குறிப்பதாகலின் சுருக்கிக் கூறுதல் ஆயிற்றென்பது.

15 பொறிகள் காது முதலிய தனிப்பெயர்களால் விரித்துக் கூறப்பட்டிருத்தலின் பிரித்துக் கூறும் வாக்கியம் ஆயிற்று.

16 பிறர் கொள்கையை மறுத்தற் பொருட்டு எடுத்துக் கூறுதல் 'அபதேசம்' என்பதாம்.

17 முன் சொல்லப்பட்ட விதிகளைப் பின்வருவனவற்றுக்கு மாட்டேற்றிக் கூறும் முறை அதிதேசம் எனப்படும்.

18 பின்னர்க் கூறப்படப்போகும் பொருளால் துணிதல் என்பது.

களிற் கூறப்படுமாறு, இன்சொல் கொடை வேறுபடுத்தல் ஒறுத்தல்களாலுமாம்' (7—14—112) என்பது.

கண்டதால் காணுததை யறிவித்தல் உபமானம். 'குறை நீக்கப் பொருளைத் திருப்பித்தந்த பின்னர், அன்னுர்க்குத் [19]தந்தை போல அருள் புரிதல் வேண்டும் (2—1—22) என்பது.

கூறப்படாதிருப்பினும் எது பொருளாற் கிடைக்கப் பெறுமோ அது அர்த்தாபத்தி. ஆன்ம குணங்கள் அமைச்சர் முதலியோர் என்னுமிவற்றால் நிறைந்த அரசனை, உலகியலறிவுள்ளவன் இன்சொல்லுடையவன், அன்பன் (ஹிதன்) என்பவர்வாயிலாக அடைதல் வேண்டும் (5—4—94). இன்சொலிலான், அன்பிலான் என்பவர்வாயிலாகவின்று என்பது பொருள்ளாற் கிடைக்கப் பெறுகின்றதென்பது.

இருபக்கத்தும் காரணத்தையுடைய பொருள் சம்சயம். [20]குறைபொருணசைகளையுடைய மக்களையுடையவனையடைவதா, கௌரவிக்கப்படாத மக்களை யுடையவனையடைவதா (7—5—103) என்பது.

பிற பிரகரணத்துடன் ஒத்த பொருள் [21]பிரசங்கம். 'அவன் உழவுத் தொழிற்குரிய நிலத்தில் என்பது முன்னையதுடன் ஒத்ததாம். (1—11.) என்பது.

[22]பிரதிலோம முறையானறிவித்தல் விபர்யயம். 'மகிழ்ச்சியிலனுக்காயின் மாறுபாடாம்' (1—16) என்பது.

எதனுல் வாக்கியம் முடிக்கப்படுகிறதோ அது [23]வாக்கிய சேடம். [24]சிறகு ஒடிந்ததற்குப் போல் அரசனுக்கு இயக்கங்களின் அழிவாம்' (8—1—117) என்பது. அங்கு 'பறவைக்கு' என்பது வாக்கிய சேடமாம்.

---

[19] தந்தை புதல்வரிடம் அன்புள்ளவனுகவும் ஏமநலங்களைக் கண்காணிப்பவனுகவுமிருத்தல் உலகியலிற் கண்டதாகலின், அதை உவமானமாக்கியதால் அரசன் மக்களிடம் அன்பு முதலியவற்றை யுடையனுயிருத்தல் வேண்டும் என்பது கூறுமலே புலப்படுகின்றதாகலின், ஈண்டு கண்டதால் காணுததைத் துணிதல் ஆம்.

[20] 'குறை......' முதலிய பகுதியாற் குறிக்கப்பட்ட ஐயம் இருபக்கத்தும் காரணங்களை யுடையது என்பதை அப்பகுதியை விளக்கிக்கூறும் குறிப்பால் உணர்க.

[21] இதை 'ஏகதேசாதி தேசம்' என்ப.

[22] பிரதிலோமம்—முன்னர்க் கூறப்பட்டதற்கு மாறுபாடு.

[23] வாக்கியத்தின் பகுதியான ஒரு பதம் கூறப்படாதிருப்பினும் ஆற்றலாற் (ஸாமர்த்தியத்தாற்) கிடைக்கப்பெறுவது வாக்கியசேடம் என்பது.

[24] சிறகு ஒடிந்த பறவைக்கு என்று முடிக்கப்படுவது என்க.

மறுக்கப்படாத பிறர் வாக்கியம் அநுமதம்: இரு பக்கங்கள் நடுவிடம் பிற்புறம் என்பது வெள்ளியின் அணிவகுத்தற் பிரிவாம்' (8–6—134.) என்பது.

[25]சிறப்பான விளக்கம் வியாக்கியானம். குழுவிற்கும் குழுத் தன்மையுடைய அரசர் குடிக்கும் சூதுகாரணமான வேறுபாடும் அதுகாரணமான அழிவும் சிறப்பாம். அரசியலின் ஆற்றலின்மை பற்றி விதனங்களுள் தீயவரை ஏற்றல் மிகக் குற்றமுடைத்தாம் (8—3—119.) என்பது.

[26]பண்புபற்றிச் சொல்லை யுண்டாக்கல் நிர்வசனம். 'மேன்மையினின்றும் இவனை விலக்குவதாகலின் விதனம் (8—1—117).

[27]திருட்டாந்தத்தையுடைய திருட்டாந்தம் நிதர்சனம். [28]சிறந்தவனுடன் விக்கிரகத்தை யேற்பது, காலாள் யானையுடன் போர் புரிவதையொக்கும்' (7—3—101.)

[29]நாற்புறமும் பரவுவதை யிழுத்தல் அபவர்க்கம். [30]உள் மக்களுக்குக் கோபமுண்டாம் என்னும் ஐயமில்வழி, நிலையானதும் நெருங்கியதுமான பகைப்படையை இருக்கச் செய்தல் வேண்டும். (9—2—123.)

பிறரால் சங்கேதஞ் செய்யப்படாத [31]சொல் சுவசம்ஞை. 'அவனுக்கு மக்கள் முதலாவதாம். அடுத்த நிலத்துள்ளது

---

25 துணியப்பட்ட பொருளைச் சிறந்த முறையில் பல்வேறு யுக்திகளால் துணிதல் வியாக்கியானமாம். வியாக்கியானம்—விளக்கவுரை.

26 பொருளின் அன்வயத்தால் சொல்லைப் பிரயோகித்தல் நிர்வசனம் எனப்படும். முதனூலில் விதனத்தைக் குறிக்கும் 'வ்யஸனம்' என்ற சொல் 'மேன்மையினின்றும் விலக்குவது' என்ற பொருளைக் கொடுப்பதாகலின் இது நிர்வசனம் எனப்படும் என்பது கருத்து.

27 தன்பால் ஓர் உவமையை அடக்கிக்கொண்ட உவமை 'நிதர்சனம்' எனப்படும் என்பது.

28 இந்த உதாரணத்தில் யானையாகிற உபமானம் காலாள் என்ற மற்றொரு உபமானத்துடன் கூடியதாகக் கூறப்பட்டதெனக் கொள்க.

29 பொதுவாக ஒரு விதியை எல்லாவிடத்தும் பரவுமாறு விதித்து, இலக்கியமில்லாத சிலவற்றினின்றும் விலக்குதற் பொருட்டு விலக்கிக் கூறல் அபவர்க்கம் எனப்படும் என்பது.

30 இது முதல் 'இல்வழி' என்பதீறுய பகுதியால் சில இடத்தை விலக்குதல் பற்றி அபவர்க்கமாயிற்றென்க.

31 சொல்—சங்கேதச்சொல். ஈண்டு முதலாவது (அங்கம்) இரண்டாவது (அங்கம்) முதலிய சொற்கள் இந்நூலாசிரியரால் மட்டும் குறியீடுகளாகக் கற்பித்துக்கொள்ளப்பட்டன வென்க. ('அவனுக்கு.........மூன்றுவதாம்'. என மூலத்தில் குறித்த இத்தொடர், முதனூலில் அதி-6. அத்-2ல் காணப்படவில்லை. இது ஆராய்தற் குரியது.)

இரண்டாவதாம். ஒரு நிலத்தால் மறைந்தது மூன்றாவதாம்' (6—2—98).

மறுத்தற்குரிய வாக்கியம் பூர்வபக்கம் ;— அரசு அமைச்சரின் விதனங்களுள் அமைச்சரின் விதனம் சிறந்தது. (8—1—117.)

அதைத் துணியும் வாக்கியம் உத்தரபக்கம். அவனைச் சார்ந்தனவாகலின், தலைவன் அவர்களின் மூலகாரணமாம் தன்மையனன்றோ (8—1—117.)

[32]எல்லாவிடத்தும் வயமானது ஏகாந்தம் : 'ஆதலின் (அரசன்) தனக்குரிய [33]செயல்களைச் செய்தல் வேண்டும் (1—19) என்பது.

பின்னர் இங்ஙனம் விதிக்கப்படும் என்பது பின் வருவதைக் காண்டல். (அநாகதா வேக்ஷணம்.) 'நிறுத்தலளவை 'துலை முதலளவையின் நிலையாராய்தல்' என்னும் பிரகரணத்திற் கூறுவாம்" (2—13—34) என்பது.

முன்னர் இங்ஙனம் விதிக்கப்பட்டது என்பது கடந்ததைக் காண்டல். 'அமைச்சரின் நிறைவு முன்னர்க் கூறப்பட்டது' (6—1—97).

(இஃது) இவ்வாறே, வேறு வகையாயின்று என்பது நியோகம் : 'ஆகலின் அறத்தையும் நலத்தையும் இவனுக்குக் கூறுதல் வேண்டும் ; மறத்தையும் கேட்டையும் கூறலாகாது (1—17) என்பது.

அதனாலாதல் இதனாலாதல் என்பது விகற்பம். 'அறத் திருமணம் புரிந்து பெற்ற பெண்களாதல்' (3—5—62.)

அதனாலும் இதனாலும் என்பது சமுச்சயம். [34]'ஔரசன் என்னும் புதல்வன் தந்தை உறவினர் என்னும் இவர்தம் தாயப் பொருளுக்குரியவனாவான். (3—7—64) என்பது.

கூறப்படாதவற்றை உய்த்துணர்தல் ஊஹ்யம். 'கொடுப்

---

[32] எல்லா இடங்காலங்களில் விடுத்தற்கு ஆகாதது ஏகாந்தம் எனப் படும் என்பது.

[33] செயல்களைச் செய்தல் வேண்டும் என்பது ஏகாந்தத்திற்கு உதாரணமாம் என்பது.

[34] ஔரசன், தந்தையின் பொருளுக்கும் உறவினர் பொருளுக்கும் உரியவனாவான் என்பது கருத்தாகலின் இது சமுச்சயத்திற்கு உதாரணமாயிற்றென்க.

போர்க்கும் வாங்குவோர்க்கும் [35]கேடு நேராவண்ணம் திறமை யுடையோர் மாறுபடுத்தலைச் செய்யலாம்' (3—16—73) என்பது.

சுலோகங்கள்

(1) [36]இத் தந்திரயுக்திகளுடன் கூடிய இந்நூல் இம்மை யையும் மறுமையையும் அடைதல் [37]புரத்தல்களுக்கு இங்ஙனம் கூறப்பட்டது.

(2) [38]இந்நூல் அறம் பொருள் இன்பம் என்னுமிவற்றை யுண்டாக்குகின்றது. பாதுகாத்தலையுஞ் செய்கிறது. மறம் பொருட்கேடு வெறுத்தற்குரியது என்பவற்றைத் தடுத்தலையும் செய்கிறது.

---

[35] எந்த முறையை ஏற்றலால் கேடு நேராதிருக்குமோ, அம்முறை கூறப்படாமையால் அதை உய்த்துணரவேண்டுமாகலின், இது 'ஊஹ்யம்' எனப்பட்டது. ஊஹ்யம்—உய்த்துணரவைத்தல் என்னும் உத்தி.

[36] இதுகாறும் எல்லாக் கருவிகளுடன் கூடிய நூற்பொருளைக் கூறி முடித்து, இந்நூலைக் கற்பதாலுண்டாம் பயனைப் பின்வரும் இரு சுலோகங் களாற் கூறுகின்றார்.

[37] புரத்தல்—அடையப்பட்ட பின்னர் அப்பயனுக்கு அழிவு நேரா வண்ணம் அதைக் காத்தல்.

[38] இம்மை மறுமைகளில் ஏமநலங்களுக்குச் சாதகமாயிருத்தலை விளக்கிக் கூறுகின்றார். ஈண்டு அறம் முதலியவற்றுள் பொருள் இன்பங் கள் இம்மைப் பயன்கள் எனவும் அறம் மறுமைப்பயன் எனவும் உணர்க இந்நூலில் 'ஒற்றரை யமைத்தல்' முதலிய உபாயங்களால் பலவகையாகப் பிறரை வஞ்சித்தலும், மறைவிறுெத்தல் முதலிய தீய செயல்களும் விதிக்கப்படுகின்றன. எனவே அறத்தை யறிவுறுத்தல் புரத்தல் என்பன இந்நூலால் உண்டாவதெங்ஙனம் எனின் கூறுவாம் : குடிமக்களைக் காத்தல் அரசனுடைய அறமாம். அதை வெற்றிவிருப்பமுள்ளவன் முறைப்படிச் செய்து வருவானாயினும், அறவோராயிருந்தும் சிற்றரசர்கள் ஆசை காரண மாகப் பகைவராகிப் பிறன் நிலத்தை விரும்பிப் பலவகைப்பட்ட குற்ற முள்ள உபாயங்களின் பிரயோகங்களால் அவ்வறத்தை யழித்தற்கு இயற் கையிலேயே முயல்கின்றனர். இம்முறை அரசர்க்குப் பொதுவாயிருத் தலின், கல்வி, வணக்கம், ஆன்மகுணங்களுடன் கூடிய எந்த அரசராயினும் பகைவரால் துன்புறுத்தப்படாதவராகவோ, பகைவரைத் துன்புறுத்தாதவ ராகவோ, பகைவரால் உண்டாக்கப்பட்ட தன்னிடர்களைப் பரிகரிக்காதவ ராகவோ என்றும் நன்னிலையிலிருத்தல் இயலாது. பிறராலுண்டாம் தீங்கு களைப் பரிகாரஞ் செய்யாதவன் தன்னரசைச் சரியாகக் காத்தலும் முடி யாது. ஆதலால், தன் நாட்டைக் காத்தல் என்ற அறத்தைச் சரியாக நிறைவேற்றுதற் பொருட்டுப் பல்வகைப்பட்ட பகைவர்வஞ்சனை, பகை வரைத் துன்புறுத்தல் என்பவற்றை அரசர் அறிந்துகொள்வது இன்றி யமையாததாகும். எனவே அதை யறிவிக்கும் இந்நூல் தீங்கைப் பரிகரித் தல் மூலமாக முற்கூறப்பட்ட அறத்திற்குச் சாதனமாகலின் இந்நூல்

(3) [39]எவரால் [40]நூலும் படைக்கலமும் [41]நந்த அரசனை யடைந்த நிலமும் பொருமையால் களையப்பட்டனவோ அவரால் இந்நூல் இயற்றப்பட்டது.

பதினைந்தாம் அதிகரணம் முதற் பிரகரணம்
‘ தந்திரயுக்திகள் ’ என்னும்
நூற்றைம்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாம் அதிகரணம் முற்றிற்று.

சுலோகம்

[42]நூல்களுக்குப் பேருரை யியற்றுவோர்க்குப் பலவாறாகக் கருத்து மாறுபாட்டைக் கண்டு விட்டுணுகுப்தர், தானே சூத்திரத்தையும் பாடியத்தையும் இயற்றினார்.

கௌடலீயம் பொருணூல் முற்றிற்று.

அறத்தை யுண்டாக்குகின்றது புரக்கின்றது என்று கூறப்பட்டது பொருந்துவதேயாம் என்றவாறு.

39 மிகப்பெரிய இந்நூலைச் செய்த ஆசிரியரின் திறமை, இந்நூலிலுள்ள சொற்றொடரைத் தொகுத்ததோடு முடிவுற்றதா? அல்லது நூற்பொருள்களைச் செயலளவில் கையாளுவதிலும் பரவியுள்ளதா? என நூலைப் பயில்வோர் யாரேனுமொருவர் ஐயுறுதலியல்பாகலின், அங்ஙனம் தோன்றும் ஐயத்தை யகற்றக் கருதிய ஆசிரியர் நூற்பொருள்களைத் தாம் ஏற்றுப் பிறரை யேற்கச் செய்தலால் கண்கூடாக நிகழ்த்திக்காட்டிய தம் பொருணூற் றிறமையினை வெளிப்படுத்திக் கூறுகின்றார்.

40 நூல்—தாது கௌடலீயம் முதலிய பிறநூற்றொகுதி.

41 நந்த அரசன் நிலத்தைக் களைதல் பற்றிய செய்தியை விட்டுணு புராணம் வாயுபுராணங்களினின்றும் அறிக என்ப.

42 இந்நூலாசிரியர், தாமே சூத்திரம் பாடியம் என்னுமிரண்டனையு மியற்றியதற்குரிய காரணத்தை ஈண்டுக் கூறினமை காண்க.

அருமபதம் குறியீட்டுச் சொற்களின்

அகராதி

(எண், விளக்கம் தரப்பட்டிருக்கும் பக்கத்தைக் குறிக்கும்)

அக்கசாலை 5
அக்காரம் 153
அகக்கள்வர் 612
அகப்பகுதி 15
அகவிடர் 16
அகழ்வோன் 316
அங்கங்கள் 10
அங்கவித்தை 66
அங்காடி 581
அச்சமில்காடு 495
அச்சவுபதை 58
அச்சு 257
அசைவின்மை 53
அட்டாலம் 143
அடிமையாளர் 133
அத்தாணி மண்டபம் 117
அத்தியக்ஷர் 661
அத்தியாவாபம் 1081
அதருமம் 25
அதிகாரம் 78
அதிசந்தி 794
அதிதி 1107
அதிமாதம் 173
அநர்த்தம் 25
அநுமானம் 177
அநுலோமர் 472
அபாயம் 25
அபவித்தன் 470
அபிசாரம் 594
அயற்றேற்றம் 168
அர்த்தம் 25
அரசியற் புத்தமைப்பு 10
அரண் 660
அரமியம் 143
அலகிடுவோன் 270
அலி 1217
அழுக்காறு 31
அழுத்தகம் 244
அளி 75
அற்றைப் பிழைப்புடையோன் 193
அறக்கடமை 418
அறக்கோட்டம் 95, 388
அறங்கூறவையத்தார் 405
அறங்கூறவையம் 157
அறத்திருமணம் 450
அறமுணர்ந்தார் 134
அறவுபதை 57
அறிவுப்போர் 1117
அறிவுரை பகர்வோன் 695
அறுகுணம் 11
அன்வாவாபம் 1081

ஆக்கம் 131
ஆக்கியாயிகம் 37
ஆகரம் 5
ஆகாரம் 84, 703
ஆசுரத் தோற்றம் 1044
ஆட்சி 484
ஆடகம் 238, 984
ஆண்மை 52,
ஆணிப்பொன் 241
ஆதனம் 736
ஆப்பியப் பிரயோகம் 665
ஆம்பீயர் 102
ஆயர் 321
ஆராய்ச்சிக் கூலி 234
ஆராளிகன் 668
ஆலிநீர் 115
ஆவாபம் 1080
ஆற்றுணா 414
ஆன்ம குணங்கள் 695
ஆன்வீட்சிகீ 22
ஆனதர் 150
ஆனேறு 333

இகல் 301
இங்கிதம் 84, 697
இங்குலிகம் 308
இடைவெளி 1117
இதிகாசம் 26
இந்திரகோசம் 143
இந்திரகோபம் 1191

இயங்குவோர் 67
இயவாகு 624
இரதகாரன் 464
இராங்கவம் 312
இருது 28
இலச்சினைத் தலைவன் 6
இலண்டம் 369
இலிங்கி 606
இழிசினர் 199
இறை 130
இறைப்பொருள் 5
இறையிலி 922
இன்சொல்லன் 695

ஈடுபாடு 907
ஈமக்கடன் 618
ஈரிடத்தும் கூலி பெறுவோர் 71

உகிர் 137
உட்கலாம் 796
உட்பகை 747
உடனியைதல் 448, 538
உண்டாட்டு 517
உத்தம சாகச(தண்ட)ம் 158
உத்தவர் 50
உதரதாசன் 521
உதாகரணம் 39
உதாத்திதன் 62
உபகதன் 471
உபதை 3
உபவனம் 387, 475
உய்த்தற் கூலி 391
உரப்புதல் 202
உரிப்பட்டு 308
உருவம் 550, 575, 620
உருவிகம் 234
உரைத்தற்பொருள் 125
உல்கு 586
உல்கு பொருள் 6
உலகாயதம் 24
உவகைக்கொடை 261
உவளகம் 46
உவா 589
உழத்தி 523
உழைப்புப்போர் 852
உள்ளீடு 264
உற்சாக சக்தி 732

ஊர்தி 92
ஊழ்வினை யுணர்ந்தவன் 688
ஊழியர் 692

எழுத்து 38
எழுத்தாளன் 609

ஏமம் 726
ஏவறை 144

ஐந்து 1194
ஐம்பொருள் 1189

ஒதுக்கிடம் 478
ஒப்படைப் பொருள் 514
ஒப்பனை 124
ஒப்புரவறம் 506
ஒற்றுடல் 66
ஒற்று 177
ஒறுத்தல் 65
ஒழிபு 565
ஒளி நூல் 111

ஓதுநிலை 546

ஔசநசர் 24
ஔரசன் 469

கக்கம் 17
கட்டளைப் பொருள் 514
கடவுண்மரம் 152, 387
கடுங்குற்றம் 907
கடும்பற்றுள்ளம் 41
கடும்பற்றுள்ள முடையோன் 848
கடுவழி 16
கண்டிகை 257
கண்ணியதுணர்தல் 341
கண்ஞேட்டம் 174
கணையமரம் 144
கந்தளிகம் 230
கலப்பு 31
கலாயம் 265
கவந்தம் 658
கவறு 564
கழறுதல் 201
கழிகண்ஞேட்டம் 410
கழிவிரக்கம் 528
கழுத்துவழி 843
கழுவாய் 590
களர் நிலம் 140
களவு 548
களிப்பு 94

களியாட்டம் 440
கற்பம் 26
கறையின்மை 171
கன்று (யானை) 139

காகமது 1216
காட்டுப்படை 381
காடுறை நிலை 546
காணுதார் 50
காப்பு 417
காபடிகன் 58, 61
காமக் கொடை 542
காமநூல் 66
கார்வடிகம் 129
காரியங்கள் 51
காருகர் 8, 636
காருகன்மம் 27
கால்வழி 843
காலிகம் 1104
காலீடு 376
காவற்கூடம் 632

கிட்டம் 226
கிராதன் 1188
கிரீதன் 471
கிருகபதிகன் 62
கிருதகன் 471

குசிலவர் 27
குண்டம் 157
குப்பியம் 6
கும்பீபாகம் 658
குருவிந்தம் 256
குற்றப்புள்ளி 625
குற்றேவல் 523
குறும்பு 375
குறைநீக்கம் 131

கூட்டுப்பொருள் 328
கூடசன் 469
கூடம் 667
கூடித் தொடர்ந்து செல்வோர் 776
கூடி மேற்சேறல் 12
கூத்தர் 580
கூத்தன் 69
கூலிக்குழு 531

கேவணம் 243

கைக்குற்றம் 584
கைப்பிடித்தல் 537

கொட்டில் 163
கொற்றவை 152

கோட்டம் 155
கோப்பெருந்தேவி 126
கோபன் 387
கோவர் 130

கௌணபதந்தர் 50

சக்கரவழி 843
சகோடன் 470
சங்கிரகம் 129
சங்கேதக்குழு 134
சத்திரம் 1054, 1061
சதுக்கம் 391
சந்தசு 26
சந்தி 736
சந்தி இரவு 1155
சந்திகன்மம் 13
சந்தியின் விடுதலை 13
சந்நாகம் 15
சமசந்தி 794
சமாசிரயம் 736
சராவம் 1063
சரு 594
சருச்சரை 209
சருவ போகம் 817
சலபம் 592
சவரர் 129

சாங்கியம் 24
சாதகும்பம் 238
சாந்திரமானம் 165
சாம்பூநதம் 238
சாமேதிகன் 1153
சாரடை 1216
சாரணர் 340
சாலிநெல் 265

சிட்சை 26
சித்திரபோகம் 817
சிருங்கி சுத்திசம் 238
சிற்பி 636

சீவஞ்சீவகன் 116

சுங்கம் 161
சுடலைச் செயல் 598
சுருங்கை வழி 114

சுவபாகி 658
சுற்பநூல் 226
சூதன் 464, 668
சூழ்ச்சியறிவு 86
சூழ்தல் 908
சூளுறவு 420
செய்தி உய்த்தல் 97
சேர்க்கை 874
சோதிடம் 26
சோர்வு 341
சௌளகன்மம் 38
ஞார்ண் 243
தடை 280
தடைக்குழு 14
தத்தன் 471
தண்ட ஈடு 311
தண்ட நீதி 22
தண்டபாலன் 67
தண்டம் 17, 34, 130, 161
தந்திரவுத்தி 20
தரம் 310
தருமம் 25
தலைக்கீடு 568
தவம் 277
தவ முதுமகளிர் 67
தனித்தலைமை 10
தாபதன் 63
தாயப் பொருள் 605
தாயபாகம் 7, 453
தாயமுறை 453
தாலம் 233
தாழ்நிலம் 381
தானிகர் 130
தானிகன் 389
தானியம் 129
திண்மைப் பொருள் 158
திரிலிங்கம் 177
திருநாள் 177
திரையீ 22
தீக்ஷ்ணன் 663, 1023
துணிபு 874
துருவம் 509
துரோணமுகம் 129
துலாம் 269
துலை 288
துவைதீபாவம் 736
துன்பக்குழு 14
தூணி 267
தெய்வ இரவு 590
தெய்விகப் பேரச்சம் 8
தெற்றி 146
தெறல் 75
தேசன எண்ணெய் 1154
தேசனத்தீ 1152
தேசனநீர் 1192
தேவபதம் 144
தோல்வித் தண்டம் 415
நகரத் தலைவன் 67
நஞ்சிடுவோர் 67
நட்டம் 341
நட்புக்கொண்டிருத்தல் 11
நட்புக்கொண்டு மேற்சேறல் 111
நடன் 340
நடுவன் 13, 72
நடைவல்லார் 130
நயத்தல் 202
நயம் 25
நன்மரக்காடு 59
நன்மரம் 162, 276
நாட்டியம் 341
நாயகன் 67
நார்ப்பட்டு 308
நித்தியத்தோற்றம் 169
நிதியறை 155
நிமந்திரணம் 565
நிமித்த நூல் 54
நிமித்திகன் 688
நியமம் 38
நிர்மாலியம் 1217
நிருத்தம் 26
நிலச்சந்தி 822
நிலவழி 132, 141
நிலையினர் 68
நீட்டல் 63
நீர்வழி 132, 141
நீராசனம் 366
நீரோட்டம் 123
நெடும்பிரிவு 429

நெருக்கிக் கூறல் 46
நெறிகடத்தல் 9
நேயம் 262
நைடேசனிகம் 1104
நொதுமலன் 13
நொய்மைப்பொருள் 158
பக்கம் 17
பகுதிகள் 14
பஞ்சநதம் 139
படையாக்கம் 908
படைவிதனம் 14
பணம் 133
பணிக்களரி 151
பணிப்பொருள் 517
பணியாளர் 692
பதிதன் 409
பதினெண்பகுதிகள் 72
பயம்பு 373
பயன்மரம் 131
பரிகாரக்குறைவு 181
பரிகாரப்பேறு 172
பரியம் 339
பரிவாரதேவர் 152
பருவச்சந்திகள் 377
பருவம் 644
பலகணி 478
பலகறை 564
பாகமுறை 226
பாசண்டர் 95
பாசண்டி 393
பாசறை 16
பாதப்பிரட்சாளனம் 655
பார்கற்பத்தியர் 23
பாரசவன் 466
பாராசரர் 86
பிக்குணி 67
பிடியளவு 924
பிணைக்கடன் 542
பிணையாளன் 502
பிரத்யாவாபம் 1081
பிரதமசாகச(தண்ட)ம் 134
பிரதிலோமர் 473
பிரதோளி 143
பிரபுசக்தி 732
பிரமாரம் 1044
பிரயாமம் 290
பிரியங்கு 265
பிரியம் 784
பிருங்கராசன் 116
பின்மணப்பொருள் 436
புத்திரிகை 469
புதுநலம் 726
புரச்சரணம் 602
புராவிருத்தம் 39
புரீடம் 138
புருடவிதனம் 14
புரைநெறி 95
புழுக்கல் 360
புழுப்பட்டு 308
புளிஞர் 129
புறக்கென்றிருத்தல் 123
புறக்கள்வர் 612
புறப்பகுதி 15
புறப்படுத்தப்பட்டவர் 156
புறவிடர் 16
புன்னிலம் 6
பூதபலி 367
பூப்பு 101
பூர்வசாகச(தண்ட)ம் 153
பெருமை 52
பேச்சினால் பிழைப்பவர் 553
பொருதிருத்தல் 11
பொருதுமேற்சேறல் 11
பொருளாளர் 481
பொருளுபதை 57
பொன்வினைஞன் 5
போத்து 320
போகமிழத்தல் 337
பௌனர்ப்பவன் 470
மக்கட்டன்மை 463
மகிழ்ச்சிக்கொடை 542
மங்கலவாழ்த்து 111
மச்சரியாயம் 36, 75
மஞ்சிட்டை 574
மண்டலசரிதம் 13
மண்டம் 1198
மணப்பயிர் 320
மணப்பொருள் 585
மத்தன் 653
மத்தியமசாகச (தண்ட)ம் 158
மத்தியமர் 731

மதம் 41
மதிரை 152
மதுகம் 230
மதுமூலம் 230
மந்தணம் 91
மந்திர சக்தி 732
மந்திரப்போர் 852
மயக்கம் 174
மயங்கியல் இல்லம் 114
மரக்கரி 153
மரக்காடு 636
மரகம் 590
மருளன் 95
மழித்தல் 63
மறவி 552
மறைவொழுக்கம் 48

மாகதன் 464
மானவர் 23
மானம் 41, 77, 312

மிசைநிலைப்போர் 381
மிருகவனம் 636
மிலேச்சர் 522

முக்காலமுணர்ந்தவன் 688
முடங்கல் 5, 196
முண்டகவாயில் 148
முத்தலைக்கழு 144
முதலழிப்போன் 193

மூலம் 850

மேய்தனிலம் 137
மேல்விரிப்பு 123

யவகம் 1193

யானம் 736, 876
யானைக்காடு 162
யானைத்தாழ் 147
யானைநகம் 147

யூதபதி 139

யோகம் 24

லவணசாரம் 1191

வஞ்சகப்போர் 17
வஞ்சனைக்கல்வி 600
வண்ணக்கர் 195
வண்ணகம் 240, 250
வரிசை 30
வருணதர்மங்கள் 26
வலவன் 380
வலாககாந்தம் 284
வலைஞர் 129
வழக்கியற்பருவம் 457
வழக்கியற்பருவம் கடந்தவன் 409
வன்கண்ணர் 67
வன்செய்கை 548
வன்னிலம் 147

வாகனம் 876
வாகுதந்தீ புத்திரன் 51
வாசி 163, 234
வார்த்தை 22
வாருணயோகம் 890
வானப்பிரத்தன் 30

விக்கிரகம் 736
விகற்பம் 874
விடப்பட்டவர் 993
விடமசந்தி 794
விடுதலைப் பொருள் 556
விதனம் 14
விநயம் 38
வியாகரணம் 26
வியாசி 550
விரதம் 29
விராத்தியன் 464
விருத்தம் 233
விழிப்பின்மை 774
விளையாட்டுமக்கள் 579
விறலி 341
வினையொழிவு 30

வெகுளிக்கொடை 542
வெருட்டுதல் 206
வெளிப்பட்டவன் 1019
வெறுக்கத்தக்கவர் 16

வேணிகை 589
வேதித்தல் 228
வேரி 320
வேறுபடுத்தல் 18

வைணவம் 238
வைதேககன் 63

ஹிதம் 784

க்ஷேத்திரஜன் 467

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
xviii	9	ஔபநிடதம் என்ற அதிகரணம்	மறைவுச்செயல் என்ற அதிகரணத்தில்
2	2	இப்பொருள் நூல்	[5]இப்பொருள் நூல்
8	23	ஏமாற்றம்	ஏமாற்றல்
9	2	ஐயுறலுறுச்	ஐயுறலுருச்
,,	7	நெறிகடத்தல்	நெறிகடத்தற்றண்டம்
10	9	மண்டலயோளி	மண்டலயோனி
,,	12	வஞ்சிது	வஞ்சித்து
30	2	புதலவன்	புதல்வன்
36	10	கடைமை	கடமை
56	2	அமைச்சர்களின்	அமைச்சர் முதலியோரின்
64	14	[25]உடையார்க்கு	உடையார்க்கு
,,	16	இவர்களுடைய	[25]இவர்களுடைய
78	2	பகைநாட்டு	பகைவர்நாட்டு
112	13	முனிவரரையும்	முனிவரையும்
128	18	தானியம்	தானீயம்
129	8	சங்கிரகத்தையுப்	சங்கிரகணத்தையும்
,,	21	சங்கிரகம்	சங்கிரகணம்
146	28	அறை	அரை
147	32	மதிர்	மதிற்
148	5	ஆல்லது	அல்லது
,,	14	குந்தாவி	குந்தாலி
,,	18	இவற்லை	இவற்றை
,,	29	வாம்க்கால்	வாய்க்கால்
152	7	தெய்வங்கு	தெய்வங்க
166	28	6	67
169	13	முதலதி	இண்டாமதி
208	கடைசி	பற்பர	பப்பர
218	18	காபரூப	காமரூப
220	26	பிரேயகம்	பிரையகம்
222	23	பட்து	பட்டது
,,	33	பிங்கிசீ	பிங்கிசி
227	2	2	12
,,	13	நீரிற்	[21]நீரிற்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
247	4	கலட்	கலப்
271	2	பதிஞேராம்	பதிஞரும்
282	10	விசிரி	விசிறி
285	12	படைக்கலத்	படைக்கல் நிலையத்
288	28	பெயா	பெயர்
395	19	தெரியாவிட்டால்	தெரிவியாவிட்டால்
397	25	நேருட்பு	நெருப்பு
398	35	தேர்வீதியில்	தேர்வீதிகளில்
400	29	ஐந்து	ஐந்து
404	10	செய்	செய்ய
,,	37	என்னும் பிரகரணமும்	பிரகரணமும்
424	18	கெளியன்	கெளியள்
497	16	மச்களால்	மக்களால்
573	கடைசி	வேண்டெம்	வேண்டும்
588	2	பேரச்சம்	பேரச்சமாற்றம்
700	20	விகாரமாகக்	விகாரமாகச்
760	3	நட்புக்கொடு	நட்புக்கொண்டு
766	23	,,	,,
788	2	இயகக	இயக்க
850	6	வனது	வனுடைய
963	9	இப்பிரகரண	இவ்வதிகரண
998	14	9	1
1160	6	துனேவரை	துணேவரை
1170	18	மற்றெருரு	மற்றொரு
1215	26	நாண் —	நாண் என்பது
,,	26, 27	உணர்த்தும் என்பது,	உணர்த்தும்.
1220	31	கருநொச்சி	கருநொச்சியே